நாம் யார்

பேரா.க.கிருஷ்ணமூர்த்தி

கோயம்புத்தூர் - 18

1. உயிர் - 1
2. தமிழர் - 104
3. மெசபதோமியா - 216
4. சங்கம் - 370
5. தென்கிழக்கு ஆசியா - 477
6. வைணவம் - 577
7. திராவிடம் - 683
8. சேரளம் - 769
9. எம்.கே.காந்தி - 851
10.எம்.ஜி.இராமச்சந்திரன் - 983

உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீட்டலும் நீங்கிலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே.

1

உயிர்

இன்றைக்கு தமிழ்நாட்டின் முக்கிய அரசியல்வாதிகள் இருவர். தற்போதைய முதல்வர் ஜெ.ஜெயலலிதா அம்மா மற்றும் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி அய்யா. ஒருவரை வடக்கு என்றால் இன்னொருவரை தெற்கு எனலாம். இரண்டு பேரும் இரு துருவங்கள். ஒன்றுடன் ஒன்று சேரவே சேராது என்பதுபோல் அரசியல் நடத்துபவர்கள். எதிர்க்கட்சியாக மட்டுமின்றி தொண்டர்களும் அப்படியே. முன்னைக்கு தற்போது பரவாயில்லை. தொண்டர்களுக்குள்ளான அடிதடி, வெட்டுக்குத்து வெகுவாகக் குறைந்துவிட்டது. தொண்டர்கள் கொஞ்சம் விவரமாகிவிட்டார்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

1982-ல், அம்மா அ.இ.அ.தி.மு.க.வில் இணைந்ததிலிருந்து இவர்களுக்கிடையேயான யுத்தம் ஆரம்பமாகிறதெனக் கொள்ளலாம். எம்.ஜி.ஆரின் இறப்பிற்குப் பின் மிகவும் உக்கிரமாக யுத்தம் மூண்டுவிட்டது. 1989-ல் ஜெவா ஜாவா என உக்கிரப் போர். இரண்டு அம்மையார்களும் தங்களுக்குள் சண்டையிட்டு அய்யாவை சுலபமாக வெற்றிபெற வைத்தார்கள். 1991லிருந்து ஆரம்பமாகிறது இருவருக்குமான கால் நூற்றாண்டுக்கும் மேலான தொடர் யுத்தம். இருவரும் மாறி மாறி அரியணையில் அமர்வதும் எழுவதுமாகக் கோலோச்சுகிறார்கள். இடையில் அரியணையில் அமர்ந்து அழகு பார்க்க எத்தனையோ தலைவர்கள், தளபதிகள், இளவரசர்கள், அரசர்கள், முதலாளிகள் முயன்றும் இருவரையும் வெற்றி காண முடியவில்லை. இடையில் இருமுறை அரியாசனத்தில் பட்டும் படாமலும், ஒட்டியும் ஒட்டாமலும் உட்கார்ந்த பெருமைக்குரியவர் ஓ. பன்னீர் செல்வம் ஆவார்.

அய்யாவும், அம்மாவும் அரசியலில் குதித்தது எதற்காக எனத் தமிழக மக்களுக்கு நன்றாகத் தெரியும். மக்கள் நலன், சமுதாய முன்னேற்றம், ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வு, ஏழைகளுக்குப் பாடுபடுதல், உழைக்கும் மக்கள் நல்வாழ்விற்காகத் தம் உடல், பொருள், ஆவி உட்பட அனைத்தையுமே தியாகம் செய்தல் போன்ற காரணங்களன்றி பிரிதொரு காரணம் இருக்க இயலாது. அய்யாவைத் தூக்கிக் கடலிலே போட்டாலும் தமிழர்கள் பயணம் செய்து பத்திரமாகக் கரை சேர்வதற்குக் கட்டுமரமாக இருப்பார். அம்மா வாழ்வது மக்களுக்காகவே. மக்கள் சேவையே மகேசன் சேவையாக வாழ்பவர்.

தி.மு.க மற்றும் அ.தி.மு.க இரண்டு கட்சிகளும் ஒன்றா அல்லது வேறுவேறா? எழுத்தில் மட்டுமே வேற்றுமை இருப்பது போல் தெரிகிறது. ஒரு கட்சிக்கு அ- ஒன்று கூடுதலாக இருக்கிறது. இரண்டு கட்சியிலுமே கட்சித் தலைவர்கள்தான் கோலோச்சுகிறார்கள். இங்கே மகாராஜா. அங்கே மகாராணி. இருவருக்கும் எதிராக யாரேனும் சிறுவார்த்தையாவது பேசமுடியுமா? அடுத்த நொடியிலேயே கட்டம் கட்டி விடுவார்களல்லவா. இரண்டு கட்சிகளுமே ஜனநாயகப்படி நடந்து கொள்கிறார்களாம். தேர்தல்கள் வைத்தே தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். வாழ்க சனநாயகம். அம்மா கட்சியை விட அய்யா கட்சியில் மிகக் கொஞ்சமாக ஜனநாயகம் பரவாயில்லை எனச் சொல்லிக் கொள்ளலாம்.

இரண்டு கட்சிகளையும் அதன் தலைவர்களையும் உற்று நோக்கினாலே தமிழ்நாட்டின் அரசியலைப் பெருமளவில் புரிந்து கொள்ளலாம். இருவரையும் ஒருசேர சற்று உற்று நோக்குவோம்.

முதலில் அய்யா. வயதிலும் அனுபவத்தினும் மூத்தவரன்றோ. ஐந்துமுறை முதல்வராக இருந்த அய்யா பிறந்தது 03.06.1924 அன்று திருவாரூர் அருகே உள்ள திருக்குவளை என்னும் ஊரில். தற்போது திருவாரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவே உள்ளார். இயற் பெயர் தட்சிணாமூர்த்தி. பெற்றோர் முத்துவேலர், அஞ்சுகம் அம்மையார். வயது 91. தற்போது வசிப்பது சென்னை கோபாலபுரம். அந்தக் காலத்திலேயே திருடன் வந்து திருடும் அளவிற்கு வசதியான குடும்பம் என்று சொல்லிக் கொள்கிறார். நெஞ்சுக்கு நீதி புத்தகத்தை வைத்து எதிர்க்கட்சிகள் வேறு மாதிரி பேசுவார்கள்.

அய்யா முதல்வரானது மிகவும் வியப்பிற்குரியது. அண்ணா மறைவிற்குப்பின் தமது கனவில் வந்து அடுத்த வாரிசு தானே என குறிப்பிட்டுச் சொன்னதாகச் சொன்னாராம். கட்சியின் பொருளாளர் எனும் தகுதி அப்போது இருந்திருக்கிறது. எப்படியோ முதல்வர் நாற்காலில் அமர்ந்து விட்டார். எத்தனை முறை பதவி நாற்காலியில் அமர்ந்தாலும் ஆசை விடாது போல. ஆறாவது முறையாகவும் அவரே அமர்வதற்கு வரிந்து கட்டிக் கொண்டு தேர்தல் வேலைகளில் மும்முரமாக இருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்கம் தந்தை பெரியாரின் திராவிடர் கழகம். பெரியார் மணியம்மை திருமணம் தொடர்பான கருத்து வேறுபாட்டில்

அண்ணாத்துரை அவர்கள் 1949-ல் தி.மு.க.வை தனியாகத் தொடங்கினாராம். ஆனால் அதற்கும் முன்னதாக இவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்ததாகவே அறிய முடிகிறது. ஒரு நல்ல வாய்ப்புக்கு காந்திருந்தவர்கள் போலவே வரலாறு பதிவு செய்திருக்கிறது. பிரிந்து வந்து ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தது சாதனைதான்.

பெரியார் நீதிக்கட்சியிலிருந்து பிரிந்து வந்தே தி.க.வைத் தொடங்கியிருக்கிறார். ஆரம்பத்தில் காங்கிரசில் இருந்தவர் பின் நீதிக்கட்சியின் தலைவராகி பின்னர் 1944- ல் தி.க வை சமூக விழிப்புணர்வு இயக்கமாக ஆரம்பித்திருக்கிறார். இதை அரசியல் கட்சியாக உருவாக்குவது அவரது எண்ணமாக இல்லை. பகுத்தறிவுப் பிரச்சாரம், மூடநம்பிக்கைக்கு எதிரான விழிப்புணர்வு. கடவுள் மறுப்பு, பெண்கள் விடுதலை, சுயமரியாதை போன்றவையே பெரியாரின் செயல்பாடுகளாக இருந்திருக்கின்றன.

அய்யாவிற்கு பதினான்கு வயதிலேயே அரசியல் ஞானம் பழுத்ததுதான் வியப்பாக இருக்கிறது. அந்த வயதிலேயே நீதிக்கட்சியை ஆதரித்து திருவாரூர் வீதிகளில் பிரச்சாரம் செய்தாராம். கொஞ்சம் பொறுத்திருந்து அரசியலுக்கு வந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்குமல்லவா. நீதிக்கட்சியை ஆரம்பித்தது சர்.பி.தியாகராஜன், டி.எம்.நாயர், மருத்துவர் சி.நடேசனார் போன்றோர். நீதிக்கட்சிக்கு அன்றைக்கு வைந்த பெயர் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம். பிராமணர்களே அனைத்தையும் ஆண்டு அனுபவிக்கிறார்கள் எனும் கருத்தியலின் அடிப்படையில் பிராமணரல்லாதோர் சேர்ந்து சங்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் அன்று ஆரம்பித்த இந்த நலவுரிமைச் சங்கமே இன்று தமிழ்நாட்டினுள்ள அத்தனை கட்சிகளுக்கும் மூதாதைக் கட்சி என்றால் மிகையாகாது. நீதிக்கட்சியிலிருந்து திராவிடர் கழகம். பின் அதிலிருந்து தி.மு.க. பின் அதிலிருந்து அ.தி.மு.க. பின்னர் திராவிடர் என்ற அடைமொழியோடு ஆரம்பிக்கப்பட்ட பிற கட்சிகள். 1917லிருந்து ஒரு நாற்பதாண்டு காலம் பிராமணரல்லாத இந்த நீதிக்கட்சியினரே சென்னை மாகாண அரசியில் கோலோச்சியிருக்கிறார்கள். 1937 மற்றும் 1952இல் ராஜகோபாலாச்சாரியார் ஆட்சியதிகாரத்தில் இருந்துள்ளார்.

1920-ல் சென்னை மாகாண சட்டமன்றத்திற்கான முதல் தேர்தல் நடந்திருக்கிறது. சட்டமன்றத்திற்கான மொத்த இடங்கள் 98. அன்று இரட்டை ஆட்சி முறை. சட்டம், நிதி, உள்துறை போன்ற முக்கியத் துறைகள் பிரிட்டிஷ் ஆளுநரின்

கட்டுப்பாட்டில் இருந்திருக்கின்றன. கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்றவை தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய சட்டமன்றங்கள் மூலம் நடந்திருக்கின்றன. முதல் தேர்தலில் இரட்டை ஆட்சி முறைக்கு எதிராக காங்கிரஸ் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டிருக்கிறது. இது நீதிக்கட்சியாருக்கு நல்வாய்ப்பாக அமைந்து விட்டது. முதல் தேர்தலிலேயே 63 இடங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்து விட்டார்கள். ஏ.சுப்பராயலு ரெட்டியாரே சென்னை மாகாணத்தின் முதலாவது முதலமைச்சராக பதவி வகித்திருக்கிறார். அன்றைக்கு சென்னை மகாணம் என்பது இன்றைய தமிழ்நாடு, தெற்கு கர்நாடகாவின் சில மாவட்டங்கள், கேரளாவின் மலபார் பகுதி, இன்றைய ஆந்திரப் பிரதேசம் போன்றவை உள்ளடக்கியது. இவ்வளவு பரந்து விரிந்திருந்திருந்த சென்னை மகாணத்திற்கு முதலமைச்சர் என்பது மிகப்பெரிய கௌரவமாக இருந்திருக்கும்.

அன்றைக்கு சென்னை மாகாணத்தின் மக்கள் தொகை சுமார் நான்கு கோடி. இவர்களில் வாக்குரிமை பெற்றவர்கள் 12,48,156 பேர் மட்டுமே. அவர்களுள் வாக்களித்தவர்கள் 3,03,558 பேர். சராசரி வாக்குப் பதிவு 24.9 சதவிகிதம். இன்றைக்குப்போல் அன்று அனைவருக்கும் வாக்குரிமை கிடையாதாம். யாரெல்லாம் சொத்துவரி கட்டினார்களோ அவர்கள் மட்டுமே வாக்களிக்க இயலுமாம். அதனால்தான் ரெட்டியார்களும், செட்டியார்களும், நாயுடுகளும், ராவ்களும், அரசர்களும், ராஜாக்களும் முதலமைச்சர்களாக அரசாள முடிந்திருக்கிறது. இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் முன்னோடி நீதிகட்சியே. 1921-ல் நீதிக்கட்சியால் வகுப்பு வாரி பிரதித்துவத்திற்கான அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

ஒடுக்கப்பட்ட சமூகமாக இருந்து பல போராட்டங்களுக்குப்பின் தன்னெழுச்சி பெற்ற நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த காமராஜர் அவர்கள் 1954-ல் இந்திய தேசிய காங்கிரஸின் சார்பாக முதல்வராகிறார். முதலமைச்சராக இவர் இருந்த 1963 வரையிலான காலகட்டம் தமிழகத்தின் சிறந்த ஆட்சிக்காலம் என்றால் மிகையாகாது. மக்களது பாட்டை, சிரமங்களை, துயரை அறிந்திருந்ததால் முடிந்தவரைக்கும் மிக சிறப்பானதொடு ஆட்சியை கொடுத்திருக்கிறார். மீண்டும் காமராஜர் ஆட்சியை அமைப்போம் எனத் தற்போதும் ஒரு சிலர் பேசுகிறார்கள் என்பதே இவரது நல்லாட்சிக்கான அடையாளமாகக் கொள்ளப்படுகிறது.

அரசியல் மூத்தவர்கள் கட்சிப்பணியாற்ற வேண்டும், கட்சியை வளர்க்க வேண்டும் என்ற இவரது செயல்திட்டதின் அடிப்படையில் 1963 லிருந்து 1967 வரை பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராகிறார். 1967-ல் நடந்த தேர்தலில் தி.மு.க வெற்றிபெற்று திரு.சி.என். அண்ணாத்துரை முதல்வராகிறார். நமது அய்யா, இந்த அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார். 1969-ல் அண்ணா புற்றுநோயால் காலமானபின் 10.02.1969-ல் அய்யா முதல்வராகிறார். இந்திரா காந்தி அம்மையாரின் அவசரநிலைப் பிரகடனமான மிசாவால் ஆட்சி பறிக்கப்படுகிறது. பின்னர் நடந்த தேர்தலில் திரு.ம.கோ.இராமச்சந்திரன் வெற்றிபெற்று 30.06.1977 முதல் இறக்கும் காலமான 24.12.1987 வரை தொடர்ந்து ஆட்சியிலிருக்கிறார்.

எம்.ஜி.ஆர் ஆரம்ப காலத்திலேயே அரசியலில் ஆர்வம் கொண்டுவிடுகிறார். அவரது படங்களைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். வசனம், பாடல்கள், காட்சியமைப்புகளில் அரசியல் புகுத்தப்படுகிறது. நண்பர்களாக இருந்த அய்யாக்களுக்கிடையே மனவருத்தம் உண்டாகி, நாளடைவில் யார் பெரியவர் என்ற யுத்தம் நிகழ்கிறது. தம் பொருளாளர் பதவியைப் பெற்ற எம்.ஜி.ஆரின் செல்வாக்கு, அய்யாவுக்கு சற்று மனக்கலக்கத்தை கொடுத்ததாகத் தெரிகிறது. கட்சியிலிருந்து கட்டம் கட்டப்பட்ட எம்.ஜி.ஆர். 1972-ல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்து, மக்கள் செல்வாக்கால் 1977 முதலமைச்சர் நாற்காலியைப் பிடிக்கிறார். எம்.ஜி.ஆரின் மறைவிற்கு பின்னான நாட்களில் தமிழ்நாட்டின் அரசியல் மோசமான பாதைக்குச் செல்கிறது.

இப்போது அம்மாவின் வருகை. எம்.ஜி.ஆரின் காலத்திலேயே அரசியலுக்கு வந்துவிடுகிறார். 1984-ல் கொள்கை பரப்புச் செயலாளராக அடையாளம் காணப்படுகிறார். அதற்கு முன்பாக பாராளுமன்ற உறுப்பினராகி அண்ணாத்துரை அவர்கள் அலங்கரித்த அதே இருக்கையில் அமரவைக்கப்படுகிறார். எம்.ஜி.ஆரின் இறுதி ஊர்வலத்தின்போது வாகனத்திலிருந்து இறக்கி விடப்பட்டதாகச் சொல்வதுண்டு.

எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகியம்மாள் அவர்களுக்கும், இவருக்கும் கடும் போர் மூள்கிறது. அரசியலில் ஆர்வம் இல்லாதிருந்த திருமதி.ஜானகி இராமச்சந்திரன் அம்மையார் அரசியலில் நுழைக்கப்பட்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக, மிகக் குறுகிய காலத்திற்கு முதலமைச்சர் நாற்காலியை

அலங்கரிக்கிறார். அடுத்து வந்த 1989 தேர்தலில் மும்முனைப் போட்டி. அய்யாவா? அம்மையாரா? அம்மாவா?

அய்யா வாகை சூடி நீண்ட வருட இடைவெளிக்குப்பின் ஆட்சிக்கட்டிலில் அமர்கிறார். இடையில் உடன் பிறப்புகள் சேர்ந்து போகாத அளவிற்கு கட்டுக்கோப்பாக கட்சியை வைத்திருந்தது அய்யாவின் சாதனையென்றே சொல்லலாம். பெரும்பாடுபட்டு ஆட்சிக்கு வந்தும் அதனை அனுபவிக்க முடியாமல், ராஜிவ்காந்தி அவர்களின் கோரமுடிவை முன்னிட்டு ஆட்சி கலைக்கப்படுகிறது. 1991-ல் ஆட்சியைப் படிக்கும் அம்மாவிலிருந்து ஆரம்பிக்கிறது சுழல்நாற்காலி யுத்தம். ஒருவர் மாற்றி ஒருவர் தமிழகத்தை ஆள்கிறார்கள். இதோ அடுத்த நாற்காலிச் சண்டைக்குத் தயாராகிறார்கள் இருவரும். யார் வென்றாலும் ஆறாவதுமுறை என கணக்குச் சொல்லலாம். காலம் என்ன மாதிரியான கணக்கு வைத்திருக்கிறதென்பது ஒருவருக்கும் தெரியாது. தமிழ்நாட்டு மக்களின் மனங்களைப் போலவே. அய்யாவின் உதய சூரியனா? அம்மாவின் இரட்டை இலையா? அல்லது வேறா? இன்னொன்றால் முடியுமா?

அம்மாவின் பூர்வீகம் கர்நாடகா எனச் சொல்லப்படுகிறது. ஆனால் கடந்த தேர்தலின்போது முன்னோர்கள் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்தது. பிறந்தது 24.02.1948. வயது 67. பெயர் கோமளவல்லி. பெற்றோர் ஜெயராம், வேதவல்லி அம்மையார். தாத்தா மைசூர் சமஸ்தானத்தின் அரண்மனை மருத்துவராக இருந்ததாகத் தெரிகிறது. இவரது சில நகைகள் மைசூர் அரண்மனையார் அன்பாளிப்பாகக் கொடுத்தார்கள் எனவும் அம்மாவின் வருமானக் குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

பெங்களூர் ஆங்கிலப் பள்ளியில் படிப்பு. சிறுவயதிலேயே அப்பா இறந்து விடுகிறார். சந்தியா என்ற பெயர் மாற்றத்தோடு வேதவல்லி அம்மையார் சென்னைக்கு இடம் பெயர்ந்து படங்களில் நடிக்க ஆரம்பிக்கிறார். அம்மாவின் ஆங்கிலப் படிப்பு சென்னையிலும் தொடர்கிறது. பள்ளிப் படிப்பின் போதே திரைப்படங்களில் நடிக்க அழைப்பு வருகிறது. படிப்பிற்கு பாதிப்பு வரக்கூடாது என்ற உறுதியின் பேரில் விடுமுறை நாட்களில் படப்பிடிப்பிற்குச் செல்கிறார். கன்னடா, தெலுங்கு, தமிழ் எனத் தொடர்ந்து நடிக்க ஆரம்பிக்கிறார். படிப்பைத் தொடர இயலவில்லை. பின் வெண்ணிற ஆடை என்ற படத்தின் மூலம் தமிழில் கதாநாயகியாக அறிமுகமாகிறார். குறுகிய காலத்திலேயே முழுநேர நடிகையாக

மாற்றம் பெற்று அன்றைக்கு இருந்த முன்னணி நடிகர்களோடு பல திரைப்படங்களில் நடிக்கிறார்.

அம்மாவின் இருப்பிடம் போயஸ் கார்டன். தற்போது சென்னை ராதாகிருஷ்ணன் நகர் சட்ட மன்றத் தொகுதியின் உறுப்பினராக இருக்கிறார். ஆட்சியின் தொடக்கத்தில் திருவரங்கம் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளி என நீதிமன்றம் தீர்பளித்ததால் சட்டமன்ற உறுப்பினர், முதலமைச்சர் பதவியைத் துறக்க வேண்டி வந்தது. சிறைவாசத்திற்குப் பின் மீண்டும் இரண்டு பதவிகளிலும் தொடர்கிறார். உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து நடக்கிறது.

நடிகையாக, அரசியல்வாதியாக, முதலமைச்சராக தமிழ் மக்கள் அம்மாவை நன்கறிவார்கள். திரைப்படத் துறையில் இருந்ததால் சாதாரண மக்களின் வாழ்க்கை முறையை அறிந்திருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. நேரடியான வாழ்பனுவம் கிடைத்திருக்காது. அரசியல் ஆர்வம் இல்லாமல்தான் இருந்திருக்கிறார். அரசியலில் குதிக்க மாட்டோம் எனப் பேட்டிகளில் தெரிவித்திருக்கிறார். நடிப்பிற்கு இலக்கணம் வகுத்தவர் என அம்மாவின் நூறாவது படவிழாவில் அய்யா புகழ்ந்து பேசியிருக்கிறார். அய்யா கூடவேயிருந்த முரசொலிமாறன், நாடு போகிற போக்கைப் பார்த்தால் ஜெயலலிதா கூட முதலமைச்சர் ஆகிவிடுவார் போல எனப் பேசியிருக்கிறார். எம்.ஜி.ஆருக்கும் அம்மாவிற்கும் நல்ல நட்பு இருந்திருக்கிறது. அதன் அடிப்படையில் அவரது ஆலோசனையின் பேரில் அ.தி.மு.க.வில் இணைகிறார். அரசியல் நுழைவு மிக எளிதாகவே கிடைக்கிறது. எம்.ஜி.ஆர் கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து கட்சிக்காக உழைத்தவர்கள், அரும்பாடுபட்டவர்கள் எத்தனையோ பேர் இருக்க, அம்மா புதுவரவாக வந்தவுடனே, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், கொள்கை பரப்புச் செயலாளர் என உயர்கிறார். எம்.ஜி.யாரால் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் கட்சியிலும் செல்வாக்குக் கூடுகிறது.

அய்யாவின் அரசியல் இத்தனை இனிதாக இல்லை. சிறு வயது முதலே கட்சி, கொள்கை என வலம் வந்திருக்கிறார். மாணவர்களுக்கான கையெழுத்துப் பிரதி நடத்தியிருக்கிறார். பதினெட்டு வயதில் முரசொலி இதழைத் தொடங்குவதற்கு அபார தன்னம்பிக்கை இருந்திருக்க வேண்டும். நீதிக்கட்சி, திராவிடர் கழகம், பெரியார், அண்ணா என்று கலந்திருக்கிறார். பல தலைவர்களோடு பழகும் வாய்ப்பு

கிடைத்திருக்கிறது. சென்னைக்கு சென்று திரைப்படத் துறையில் பணியாற்றுகிறார். சேலம், கோயம்புத்தூர் என மாறியிருக்கிறார். திரைப்படத் துறையில் திருப்பு முனையாக 1952-ல் வந்த பராசக்தி படம் அமைந்திருக்கிறது. கதை, வசனம், நாடகம் எனத் திரைப்படத்துறையில் புகழ் பெறுகிறார். இவரது கதை, வசனத்தில் பல படங்கள் வெளிவருகின்றன. பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு பலரும் அங்கு செல்கிறார்கள். அந்த வகையில் அண்ணாவோடு நெருக்கமாகிறார். தி.மு.க ஆட்சியைப் பிடிக்கக் காரணமான இந்தி எதிர்ப்பில் தீவிரமாகப் பங்காற்றியிருக்கிறார். டால்மியாபுரத்தை கல்லக்குடியாகப் பெயர் மாற்றம் செய்வதற்கு நடந்த போராட்டத்தை உக்கிரமாக முன்னெடுத்திருக்கிறார். அதற்குக் கைமேல் பலனாக 1957 குளித்தலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக இடம் கிடைக்கிறது. தேர்தலில் வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினராகிறார். இன்றுவரை அத்தனை சட்டசபைகளிலும் உறுப்பினராக இருக்கும் ஐயா, இன்றைய தேதியில் தமிழ்நாட்டின் மூத்த அரசியல்வாதி. வாழ்வில் எத்தனையோ ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தபோதிலும் அனைத்தையும் திறம்படச் சமாளிக்கத் தெரிந்தவர். சமீபகாலமாக இந்த மூத்த அரசியல்வாதி, மகன்களிடமும் குடும்பத்தாரிடம் மாட்டிக் கொண்டு திணறுகிறார்.

அய்யாவின் குடும்பம் பெரியது. நிதிக் குடும்பம் என்று சொன்னால் சாலப் பொருந்தும். அக்கா பையன் முரசொலிமாறனை கூடவே வைத்துக் கொண்டது இரவது மிகச் சிறந்த சாமர்த்தியம். எம்.ஜி.ஆருக்குப் போட்டியாக மகன் மு.க.முத்துவை களம் இறக்கியது அதைவிடச் சாமர்த்தியம். அய்யாவின் முதல் மனைவி பத்மாவதி அம்மையார். வாரிசு தமிழரசு. தயாளு அம்மையாருக்கு மு.க.முத்து, மு.க.அழகிரி, மு.க.ஸ்டாலின் மற்றும் மகள் செல்வி. ராஜாத்தி அம்மையாருக்கு மகள் கனிமொழி. மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், பேத்திகள் மற்றும் முரசொலி மாறன் குடும்பத்திலிருந்து தயாநிதி மாறன், முரசொலிமாறன் மற்றும் அவர்களது வாரிசுகள் அய்யாவின் குடும்பத்தில் அடங்குவார்கள். நீதிகளின் தொலைக்காட்சி நிறுவனம் மூலம் பெற்ற பங்குத் தொகை பல கோடிகளாக அய்யாவிற்குக் கிடைத்தது. அதை குடும்ப உறுப்பினர்கள் பலருக்கும் பங்கு போட்டுக் கொடுத்ததில் அய்யாவின் ஈகைக் குணத்தை அறிந்து கொள்ளலாம். குடும்ப உறுப்பினர்கள் என்னென்ன தொழில் செய்கிறார்கள் எனப் பட்டியலிட்டால் நீண்டு கொண்டே போகும். உலகளவிலான பெரும் பணக்காரர்கள் பட்டியலில் அய்யாவைச் சேர்ந்தவர்களுக்கும் இடமுண்டு

என்பதே அய்யா குடும்பத்தாரின் வளர்ச்சிக்கு சான்று. சுமங்கலி வீடியோஸ் என ஆரம்பித்தவர்கள் இன்று தென்னிந்தியாவையே ஆள்கிறார்கள். ஒரு மகனை துணை முதல்வராகவும், இன்னொரு மகனை மத்திய அமைச்சராகவும், பேரனை மத்திய அமைச்சராகவும், மகளை நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவியில் அமர வைத்து அழகுபார்க்கும் பாசத்திற்குரிய குடும்பத் தலைவராக அய்யா இருந்தார் என்பது வரலாறு.

அம்மாவை செல்வி என அன்போடு விளித்தாலும், அம்மாவிற்கும் மிகப் பெரியதொரு குடும்பம் இருக்கிறது. மன்னார்குடிக் குடும்பம் என்று சொல்வது வழக்கம். இக்குடும்பத்தில் கரன்களின் ஆதிக்கம். வீடியோ கடை வைத்திருந்த திருமதி சசிகலாவுடன் பழக்கமாகி இன்று ஒரே வீட்டில் வாழும் அளவிற்கு நட்பு அதிகம். அந்த முறையில் திருமதி சசிகலா அவரது கணவர் திரு நடராஜன், இந்த இருவரது உடன் பிறந்த சொந்தங்கள் என அம்மாவின் குடும்பத்தார் பட்டியல் வளர்ந்து கொண்டே வருவது. இக்குடும்பத்திலிருந்து சுதாகரன் என்பவரை தமது மகனாக தத்தெடுத்தது, அவரது திருமணத்தை அதுவரை தமிழகம் கண்டிராத வகையில் ஆடம்பரமாக நடத்தியது, பின்னர் தத்துப் பிள்ளையை தமது பிள்ளை இல்லையென அறிவித்தது, வீட்டை விட்டு விரட்டியது, கஞ்சா வழக்குப் பதிவு செய்ததை எல்லாம் காலம் பத்திரமாக வைத்திருக்கிது.

தோழியின் குடும்பத்தை அம்மா பயன்படுத்திக் கொள்கிறாரா அல்லது அம்மாவைத் தோழி பயன்படுத்திக் கொள்கிறாரா என்பது விடை காண முடியாத கேள்வி.

அம்மாவின் ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் சிலரது பெயர்கள் அதிகமாக அடிபடுவதும், பின் மறைவதும் தொடர்ந்து நடக்கிறது. அரசியலில் ஆட்சி அதிகாரங்களில் தலையிடுகிறார்கள் என அதிகம் செய்தித்தாள்களில் வெளியான பெயர்கள் திவாகரன், சுதாகரன், தினகரன், பாஸ்கரன், மகாதேவன், வெங்கடேஷ், ராவணன், ராமச்சந்திரன், கலியபெருமாள் போன்றவை. இவர்களோடு ஒட்டும் உறவும் தமக்கு இல்லை எனும் அறிவிப்புகளும் அம்மாவிடமிருந்து அவ்வப்போது வந்திருக்கின்றன. சேர்த்துக் கொள்வதும் விலக்கி வைப்பதும் வாடிக்கையாக நடப்பது. கட்சியில் பலருக்கும் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன. அரசியல் தலையீடும், சிபாரிசுகளும் அதிகம். குறிப்பிட்ட சாதிக்காரர்கள் அம்மாவின் பின்னால் அணிதிரண்டதற்கு இக்குடும்பம் முக்கியக் காரணம்.

அய்யா கடவுள் மறுப்பாளர் என்றால் அம்மாவோ கோவில் கோவிலாகச் செல்பவர். வழிபாடுகள், யாகங்கள், நேர்த்திக் கடன்கள் அதிகம். ஒருவருக்குப் பிடித்தது மஞ்சள். இன்னொருவருக்கு எங்கும் எதிலும் பச்சை நிறம். ரமலான் நோன்புக் கஞ்சி குடிப்பதில் இருவருக்கும் ஒற்றுமை உண்டு. அய்யா இந்துக்கள் பண்டிகைகளுக்கு வாழ்த்துச் சொல்வதில்லையென்றாலும் மற்ற மதத்தவர் பண்டிகைகளுக்கு மறக்காமல் வாழ்த்துச் சொல்வார். மகாவிஷ்ணுவின் பெண் வடிவம் அம்மா என்றும், மேரிமாதாவின் வேறுவடிவம் என்றும், வாழும் மகாத்மா என்றும், சமீபமாக அன்னபூரணி எனவும் தொண்டர்களால் அழைக்கப்பெறும் பேறு பெற்றவர் அம்மா. இவரது தொண்டர்கள் உடன்பிறப்புகள். அவரது தொண்டர்கள் ரத்தத்தின் ரத்தங்கள். இங்கே அண்ணா நாமம் வாழ்க. அங்கே எம்.ஜி.ஆர் நாமம் வாழ்க. தேர்தல் வெற்றிக்காக தொண்டர்கள் வழங்கும் காணிக்கைகள் பயமுறுத்துபவை. விரலை வெட்டி உண்டியலில் போடுவது, நாக்கை அறுத்துக் கொள்வது, அலகு குத்துவது, காவடி தூக்குவது, மண்சோறு சாப்பிடுவது, பால்க்குடம் சுமப்பது, தீச்சட்டி ஏந்துவது அம்மாவின் கழக உடன் பிறப்புக்களுக்குக் கைவந்த கலை. சிறை வாசத்தை முன்னிட்டு கட்சிக்காரர்கள் செய்த அட்டுழியங்கள், அதைவிட அம்மாவிற்காக இறந்ததாகக் கூறப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களுக்கு ஆளுக்கு மூன்று லட்சம் எனக் கொடுத்தது கட்சிக்காரர்களுக்கே வெளிச்சம். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் கோவில்களில் கிடந்த தவவாழ்க்கை உலகிலுள்ள எந்த அரசியல் தலைவருக்கும் கிடைக்காதது.

அவர் எளிதில் அணுகக் கூடியவர். இன்றும் தொடர் வண்டிகளில் பயணிப்பவர். ஓரளவிற்கு அனைவரையும் அனுசரித்துப் போகக்கூடியவர். எளிமையானவர். இவர் இரும்புக் கோட்டை. கோட்டைக் கதவு யாருக்கும் எளிதில் திறக்காது. பூமியில் கால் படாது பறப்பவர். ஆணையிடக் கூடியவர். சொல்வதே வேதம். மாத ஊதியமாக ஒரு ரூபாய் வாங்கியவரின் எளிமையை மக்கள் அறிவார்கள்.

டான்சி நில பேர வழக்கில் தண்டணை பெற்றதற்காக தருமபுரியில் கோவை வேளாண்மை கல்லூரி மாணவிகள் எரிக்கப்பட்ட சம்பவம் இக்கட்சிக்கு பெரும் தலைக்குனிவு. தவறு செய்த கட்சிக்காரர்களை தண்டிக்காமல் குற்றவாளிகளின் வழக்கைப் பார்த்துக் கொண்டதும், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட போது

சிறைகளில் சென்று கட்சியின் தலைவர்கள் சந்தித்ததும், தொண்டர்களை ஊக்குவிக்கும் செயல். சம்பவத்தில் ஈடுபட்ட தொண்டர்களுக்கும் கட்சிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை எனக் கட்சித் தலைமை அறிவிப்புச் செய்திருக்க வேண்டும். நாம் என்ன செய்தாலும் கட்சித் தலைமை நம்மைக் காப்பாற்றும் எனத் தொண்டர்களை நினைக்க வைப்பது தவறாகும்.

கருத்துக் கணிப்பு வெளியிட்டதற்காக, தினகரன் நாளிதழ் ஊழியர்களை மதுரையில் எரித்துக் கொன்ற சம்பவம் அய்யா கட்சியின் தலைக்குனிவு. வேறு மாநிலத்திற்கு வழக்கை மாற்றியும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை எனத் தெரிகிறது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என ஆட்சிக்கு வந்த கட்சியும், ஆணையிட்டால் அது நடந்து விட்டால் ஏழைகள் வேதனைப் படமாட்டார் என ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த கட்சியும், யாருக்குப் பாடுபட்டது என்பது வெட்ட வெளிச்சம். தமிழ், தமிழர் என்று ஆட்சிக் கட்டிலில் ஏறியவர்கள் ஆங்கிலத்தை ஊட்டி வளர்த்ததும், தமிழைப் புறக்கணித்ததும் ஊரறிந்தது. ஓரளவிற்கு நேர்மையோடு இருந்த மக்களை எங்கும் ஊழல், எதிலும் ஊழல், ஊரெல்லாம் லஞ்சம் என மாற்றிய பெருமை, தொண்டர்களை எதிரிகளாக்கிய மாட்சிமை இரண்டு கட்சிகளையும் சாரும்.

நீதிக் கட்சியில் ஆரம்பித்த தமிழக அரசியல் இன்று சாதிக் கட்சிகளாய் நொறுங்கிக் கிடக்கிறது. தமிழர்களின் சாதித் தீயை நெய் ஊற்றி வளர்த்த பெருமை இருவரையும் சேரும். 1973 திண்டுக்கல் பாராளுமன்ற இடைத்தேர்தலில் முக்குலத்தோருக்கு டாக்டர் கலைஞர் அளித்த முக்கியப் பதவிகளும் சலுகைகளும் என ஒட்டிய சுவரொட்டிகளின் தொடர்ச்சியாகவே இன்றும் தேவருக்கு தங்கக்கவசம் வழங்கப்படுகிறது. எந்த கட்சி ஆண்டாலும் உண்மையில் ஆள்வது தேவர்களே என முக்குலத்தோரை மீசை முறுக்க வைக்கிறது. குறிப்பிட்ட சாதிகளுக்கு சாதகமாக இருப்பது, சாதித் தலைவர்கள் என அறியப்பட்டவர்களின் விழாக்களில் பங்குபெறுவது இரண்டு பேருக்கும் பொது. இரண்டு பேர் ஆட்சியிலும் சாதிக்கலவரங்கள், அடக்குமுறைகள் நடந்துள்ளன. சமீபகால உற்று நோக்கில் அய்யா பரவாயில்லை என்று வேண்டுமானால் கூறலாம்.

அன்று அய்யாவை சர்க்காரியா விசாரணை, வீராணம் ஊழல் என்று பேசுவார்கள். விஞ்ஞான ரீதியில் ஊழல் செய்வதில் கைதேர்ந்தவர்கள் தி.மு.க.வினர் என மேடைகளில் முழங்குவார்கள். சமீபமாக வந்த அலைக்கற்றை ஊழல் குற்றச்சாட்டு இந்தியா முழுமைக்கும் பேசப்படுகிறது. வழக்கு மகள், மனைவி என்று வேகமெடுப்பதில் அய்யாவுக்கு கவலை அதிகம்.

அம்மாவின் வழக்கறிஞர்கள் ஏறக்குறைய இருபது வருடங்களுக்கும் மேலாக வழக்காடு மன்றங்களுக்கு நடையாய் நடக்கிறார்கள். பறக்கிறார்கள் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். சுடுகாட்டு ஊழல் தொடங்கி, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச வேட்டி சேலை, கொடைக்கானால் பிளசன்ட் ஸ்டே விடுதி. டான்சி நில மோசடி. வருமானத்திற்கு அதிகமாக சொத்துக் குவிப்பு, வருமான வரி வழக்கு என பலப் பல வழக்குகள். பெரும்பாலானவற்றில் வழக்குகள் முடிக்கப்பட்டுவிட்டன. டான்சி நில பேரத்தில் குற்றம் ஏற்றுக் கொள்ளப்பட்டு தொகை திருப்பித் தரப்பட்டது.

வருமானவரி வழக்கு சமீபமாக நீதிமன்றத்திற்கு வெளியே வருமான வரித்துறையோடு சுமுகமாகப் பேசி முடிக்கப்பட்டது. அம்மாவுக்கு தீராத தலைவலியைக் கொடுத்துக் கொண்டிருப்பது சொத்துக் குவிப்பு வழக்கு. குற்றமற்றவர் எனில் எதற்காக இத்தனை வருட இழுத்தடிப்பு? எவ்வளவு வாய்தாக்கள்? வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றியும் உச்சநீதி மன்றம் வழிகாட்டியும் எவ்வளவு தாமதம்? நமக்கு நல்லது செய்வார்கள் என நம்பி ஓட்டளிக்கும் மக்களை இப்படியா ஏமாற்றுவது? ஐந்து வருடங்களில் கிட்டத்தட்ட முப்பது நிறுவனங்களுக்கும் மேல் தமது தோழி, தோழியின் குடும்பத்தார்களோடு சேர்ந்து தொடங்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பெயரளவிற்கே நிறுவனங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஏழைத் தொண்டர்களிடமிருந்து பிறந்தநாள் பரிசாகக் கோடிக்கணக்கான ரூபாய்களை யாரேனும் வாங்குவார்களா? ஒருவர் தங்குவதற்கு எத்தனை பங்களாக்கள்? வருமானத்திற்கு எவ்வளவு தோட்டங்கள்? ஆடம்பரமான மாளிகைகள் போக ஓய்வெடுக்க மலைத் தோட்டங்கள் வேறு. நமது எம்.ஜி.ஆர், ஜெயா வெளியீட்டு நிறுவனம், தொலைக்காட்சி சானல்கள் எனப் பரந்து விரிந்த அம்மாவின் சாம்ராஜ்யத்திற்கு அடிப்படை 1991லிருந்து 1996 வரை கிடைத்த ஆட்சி அதிகாரமே. அம்மா அரசியலுக்கு வந்தது மக்களுக்குச் சேவையாற்றவோ, மானுட குல உயர்விற்கோ என்றிருந்திருந்தால் வேறுமாதிரியான ஆட்சியைக்

கொடுத்திருப்பார். தமது வாழ்க்கையையும் வேறுமாதிரி வாழ்ந்திருப்பார். ஒரு வேளை இனி தாம்தான் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் என நினைத்திருந்தாரோ? நடிக்க வருவது கலைக்காக அல்ல, பணம் சம்பாதிக்கவே என்பது போல் இன்று அரசியலுக்கு வருவது ஆட்சி அதிகாரத்தைச் சுவைப்பதற்கும், கோடி கோடியாகச் சுருட்டவுமே என்று ஆகியிருப்பது இந்திய ஜனநாயகத்தின் மாபெரும் கறை.

அய்யாவும் அம்மாவும் மாறிமாறி சிறைகளில் இருந்தார்கள். அம்மாவின் தங்கம், வெள்ளி, கைக்கடிகாரங்கள், பட்டுப் புடவைகள், செருப்புகள் போன்றவற்றை காட்சிப்படுத்தி அய்யா கட்சிக்காரர்கள் கொண்டாடினார்கள். 2001ல் ஆட்சிக்கு வந்த கையோடு நள்ளிரவில் கைது செய்து, அய்யோ என அய்யாவை அலறவைத்து அம்மாவின் தொண்டர்களை மகிழ்ச்சிப்படுத்தினார்கள். அய்யாவுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதல் மரியாதை கொடுத்திருக்கலாம்.

இரண்டு பேரின் கட்சிப் பத்திரிக்கைகளும், தொலைக்காட்சிகளும் ஒருவர் மேல் ஒருவர் தூற்றிக்கொண்டிருக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. முரசொலிக்கும் நமது எம்.ஜி.ஆருக்கும் நல்ல போட்டி. அது போலவே சன், கலைஞர் மற்றும் ஜெயா தொலைக்காட்சிகள். அய்யாவுக்கு அறிவாலயம். அம்மாவுக்கு லாயிட்ஸ் சாலையிலுள்ள தலைமைக் கழகம்.

இரண்டு பேரின் அரசியல் வாரிசுகளும் அற்புதம். பெரும்பாலும் நடிகர்கள், நடிகைகள். இருவரும் கலைத்துறையிலிருந்து வந்தவர்களென்பதால், அத்துறை சார்ந்தவர்களுக்கே கட்சிப்பதவிகளில், ஆட்சியதிகாரத்தில் முன்னுரிமை. எங்கே தம்மை, தமது வாரிசுகளை மீறிய செல்வாக்கைப் பெற்றுவிடுவார்களோ என்ற எண்ணத்தில், ஒரளவிற்கு செல்வாக்குப் பெற்று வளரும் சமயம் அவர்களை இரு தலைமையுமே மட்டம் தட்டிவிடுவது, கட்சியில் ஓரங்கட்டி வைப்பது வாடிக்கை. இதற்கு பல உதாரணங்களைச் சொல்லலாம். திரைத்துறையினர் சட்டமன்ற, பாராளுமன்ற அமைச்சர் பதவிகளை அலங்கரித்தது நல்ல முன்னேற்றம். கட்சிக்காக உயிரைக் கொடுத்து உழைத்த அப்பாவித் தொண்டர்கள், கட்சிக் கொடி கட்டவே காசு கேட்க ஆரம்பித்தது இதன் பின்னரே.

அன்று இரு கட்சிகளின் பேச்சாளர்களின் மேடைப் பேச்சுக்களைக் கேட்பது காது கொள்ளா இன்பம். இத்தனை வருடங்கள் கழித்தும் அதே இன்பம். மரியாதைக் குறைவான சொற்களைப் பயன்படுத்துவது, ஒருமையில் பேசுவது, குடும்பத்தைச்

சாடுவது, தனிமனித வாழ்க்கையை அலசுவது, வீரச் சவால் விடுவது, கட்சியினரை ஆவேசம் கொள்ளைச் செய்வது, அவரவர் தலைவர்களை கடவுளுக்கும் மேலாகக் கொண்டாடுவது நாவந்த கலை. இன்றும் இரு கட்சிகளின் அந்தப் பாரம்பரியம் அப்படியே தொடர்கிறது.

மாற்றுக் கட்சியிலிருந்து வருபவர்களை அப்படியே அள்ளியெடுத்து வாரி அனைத்துக் கொள்வதில் இருவரும் சளைத்தவர்கள் அல்ல. பல உதாராணங்கள் உண்டு. பதவிகளும் சுடச்சுட கிடைக்கும்.

அய்யா மது அணையைத் திறந்து கால்வாயில் ஓட விட்டாரென்றால் அதை ஆறாக பெருக்கெடுக்க வைத்தவர் அம்மா எனத் தராளமாகச் சொல்லலாம். மதுபான ஆலைகளை நடத்துபவர்கள் யார் என்பதும், எந்தெந்த ஆலைகளிலிருந்து மதுபானங்கள் அதிகமாகக் கொள்முதல் செய்யப்படுகின்றன என்பதையும் குடிமகன்கள் நன்றாக அறிந்திருப்பார்கள். மிடாஸ் மதுபான ஆலை பற்றித் தெரியாதவர்கள் குறைவு.

அய்யா சற்றேறக்குறைய இருபது ஆண்டுகளும், அம்மா கிட்டத்தட்ட பதினான்கு ஆண்டுகளும் தமிழகத்தை ஆண்டிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர் பதின்மூன்று வருடங்கள் என மொத்தமாகச் சேர்த்தால் அரை நூற்றாண்டு காலம் திராவிடக் கட்சிகளே ஆட்சியில் அமர்ந்திருக்கின்றன. திராவிடக் கட்சிகளால் தமிழகத்தில் நிகழ்ந்த மாற்றங்கள் என்ன? தமிழர்கள் வாழ்வில் புகுத்திய நன்மைகள் யாவை? தமிழ் மொழிக்கு ஆற்றிய அரும்பணிகள் என்னென்ன? இந்திய தேசத்திற்கு திராவிடக் கட்சிகளின் கொடைகள் எவையெவை? உலகம் அன்பும், சமாதானமுமாய் திகழ இக்கட்சிகள் செயல்படுத்திய திட்டங்கள் யாது? அய்யாவும், அம்மாவும் நிகழ்த்திய சாதனைகளின் பட்டியல்கள் என்ன?

திராவிடக்கட்சிகளுக்குமுன் காமராஜர் ஒன்பது வருடங்கள்தான் முதலமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார். அவரது அந்த ஒன்பது வருடச் சாதனைகளையும், இவர்களின் ஐம்பது வருட சாதனைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எப்படியிருக்கும்? அவர் எத்தனை கல்விக் கூடங்களைத் திறந்தார்? எத்தனை தொழிற்கூடங்களை உருவாக்கினார்? எவ்வளவு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தினார்? எத்தனை அணைகளைக் கட்டினார்? ஒரு சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். தற்போது தமிழகத்தில் ஐஞ்ஞாற்றுக்கும் மேற்பட்ட

கல்வியியல் கல்லூரிகள் செயல்படுகின்றன. இத்தனை கல்லூரிகள் இருந்தும் அரசாங்கத்திற்கான ஒதுக்கீடு 1750 மட்டுமே. அரசிடம் ஏழு கல்வியில் கல்லூரிகள் மட்டுமே உள்ளன. அரசு உதவி பெறும் கல்லூரிகள் 14 மட்டுமே. மற்றவையெல்லாம் தனியாரால், கல்வி முதலாளிகளால் நடத்தப்படுவது.

கல்வித் தந்தைகளுக்கு, கல்விப் பெருமுதலாளிகளுக்கு, கல்வி வணிகர்களுக்கு எது முக்கியம் என்பதை அய்யாவும், அம்மாவும் அறிந்திருப்பார்கள்தானே. இத்தனை நூறு கல்லூரிகளை நடத்தும் கல்வி வள்ளல்கள் எந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்பது கூடாவா முதலமைச்சர்களுக்குத் தெரியாமல் இருக்கும்? பணம் மட்டும் கட்டினால் போதும், கல்லூரிக்கே போகவேண்டியதில்லை என்பதையும், இன்னும் கொஞ்சம் கூடுதலாகப் பணம் கட்டினால் தேர்வெழுதாமலேயே கல்வியாளர் பட்டம் வாங்கிவிடலாம் என்பதையும் முதல்வர்கள் அறிந்திருப்பார்கள். இப்படி ஆசிரியர் ஆவதற்குப் பணம் கொடுத்து, கல்லூரிக்குச் செல்லாமல், படிக்காமல், தேர்வெழுதாமல், பட்டம் வாங்கி, பணம் கொடுத்து வேலையில் சேரும் இந்த வெட்கக்கேடான ஆசிரியர், வருங்கால மாணவர்களுக்கு என்னத்தைச் சொல்லிக்கிழிப்பார் என்பதை மாண்புமிகு முதலமைச்சர்களின் கவனத்திற்கு நிச்சயம் கொண்டு போயிருப்பார்கள். அதற்குத் தானே இத்தனை அமைச்சர்கள், அலுவலர்கள் என ஆயிரமாயிரம், பல லட்சம் பேர் அரசு இயந்திரத்தில் இருக்கிறார்கள். இப்படி நடக்கும் கல்விக் கொள்ளைக்கு எதிராக அல்லது இவற்றை சரிப்படுத்த முதலமைச்சர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள்தான் என்ன? ஏன் முதலமைச்சர்கள் கல்வித்துறையைக் கையில் வைத்துக் கொள்ளாமல் காவல்துறையை தம் தோளில் சுமக்கிறார்கள்? எட்டு அமைச்சர்களின் அமைச்சரவை நிர்வாகத்திற்கும் முப்பதுக்கும் மேற்பட்ட அமைச்சர்களின் நிர்வாகத்திற்கும் ஏன் இவ்வளவு வேறுபாடு?

காலில் விழும் கலாச்சாரத்தை ஆரம்பித்து வைத்தது யார்? நினைத்தால் ஒரு அமைச்சரைத் தூக்கலாம், இன்னொருவரைச் சேர்க்கலாம் எனும் போக்கு யாருடைய ஆட்சிக் காலத்தில்? அமைச்சர்கள் கூனிக்குறுகி வாய்பொத்தி, செல்லாக்காசுகளாகத் தலைகுனிந்து கும்பிட்டு நிற்பதற்கு, நெடுஞ்சாண்கிடையாக மண்ணில் விழுந்து கிடப்பதற்கு என்ன காரணம்? சுயமரியாதை என்றால் என்ன வென்று இந்த அமைச்சர்களுக்குத் தெரியுமா? ஒரு துறையின் அமைச்சரெனில் தமிழ்நாடு முழுமைக்குமான தலைவர், ஆளுமை, பொறுப்பு அவரல்லவா. எவ்வளவு

பெருமைமிக்க, கடமையுள்ள பதவி அது. தமது பதவிக்காலத்தில் அவர் கணக்கிலடங்கா நன்மைகளை இச்சமூகத்திற்குச் செய்ய இயலுமே. அமைச்சரவை கூடி விவாதித்து முடிவெடுத்தாம். இந்த வாய்பொத்தி அமைச்சர், அமைச்சரவைக் கூட்டத்தில் எதைப் பேசியிருப்பார்? நேராக நின்று நிமிர்ந்து பார்க்கவே முதுகெலும்பில்லாத இந்த அமைச்சர் யாருக்கு அமைச்சர்? மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் ஒரு ஆயிரம் ரூபாய் திட்டத்தையாவது சுதந்திரமாக தொடங்கி வைக்க முடியுமா?

சட்டமன்ற சபாநாயகர் முதலமைச்சர் காலில் விழுவாரோ? கோட்டையில் இருப்பது சட்டம் இயற்றும் மன்றம்தானா அல்லது போற்றிப்பாடும் பஜனைக் கூடமா? ஒரு காலத்தில் எப்படிக் கம்பீரமாக இருந்த இந்த சட்டமன்றம் இன்றைக்கு எந்த லட்சனத்தில் செயல்பட வைக்கப்படுகிறது? எத்தனை எத்தனை தலைவர்கள் மக்களுக்காக, மக்களின் பிரச்சினைகளுக்காக முழுங்கிய சட்டமன்றம், இன்றைக்கு கேலிச் சித்திரமாக ஆகியதற்கு யார் காரணம்? சமூகப் பிரச்சினைகள் மீது விவாதித்து முடிவெடுக்காமல், வாக்குவாதம், வாய்ஜாலம், சண்டை, சச்சரவு என சட்டசபை கண்ணியக் குறைவாக நடப்பதற்குக் காரணம் யார்? சபாநாயகரின் குரலுக்கு மதிப்பில்லாமல் போனது யாருடைய ஆட்சிக் காலத்தில்? சபாநாயகரை தமது நாற்காலியின் மதிப்பை உணராமல் கட்சிக்காரர் போல் செயல்பட வைத்தது யார்? ஆளும்கட்சியாக இருந்தால் மட்டுமே சபை நடவடிக்கைகளில் பங்கு பெறுவோம் என இருக்கும் அரசியல் தலைவர்கள் யார் யார்? சட்டசபை என்றில்லாமல் மாநகராட்சி, நகராட்சி மன்றங்கள் வரை மல்லுக்கட்டு வந்ததற்கு என்ன காரணம்?

இத்தனை வருட ஆட்சியில் அய்யாவின் சாதனைகள் அம்மாவின் சாதனைகள் யாவை? அய்யா ஒரு ரூபாய்க்கு அரிசி கொடுத்ததையும் அம்மா விலையில்லாமல் அரிசி கொடுப்பதையும் சாதனைகளாகச் சொல்லி மகிழலாமா? விலையில்லாமல் கொடுக்கப்படும் பொதுவிநியோக அரிசியை உண்பவர்கள் யார்?

ஓட்டுமொத்தமாக உணவு, உடை, இருப்பிடம், போக்குவரத்து, மருத்துவம், கல்வி போன்றவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க இயலாது. அத்தனை துறைகளிலும் கோலோச்சுவது சில குடும்பங்கள் தானே. எப்படி ஒரு குடும்பம் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகளை நடத்த இயலும்? எப்படி ஒரு குடும்பம் நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகளை நடத்த முடியும்? எப்படி ஒரு

குடும்பம் ஒட்டு மொத்த பொழுதுபோக்குத் துறையையும் கட்டி ஆள முடியும்? எப்படி ஒரு குடும்பம் அரசுக்குச் சமமாக இருநூறுக்கும் மேற்பட்ட பேருந்துகளை இயக்க முடியும்? தனி ஒருவர் அயிரத்திற்கும் மேற்பட்ட லாரிகளை எப்படி சொந்தமாக்கிக்கொள்ள முடியும்? பல்கலைக்கழகம் எப்படி தனியொருவர் சொத்தாக ஆக முடியும்? தனியொருவர் மதுபான தொழிற்சாலையை உருவாக்கினால் உலக மக்களெல்லாம் மொடாக் குடியர்களாகி தமது தொழிலில் கொள்ளை லாபம் கிடைக்க வேண்டும் என்பதைத் தானே விரும்புவார்? அனைவரையும் குடிகாரர்களாக்குவதுதானே அரவது வாழ்வின் குறிக்கோளாக இருக்க இயலும்? எப்படியாவது தமது சரக்கை விற்று லாபம் பார்க்கத்தானே அந்த சாராய முதலாளி முயற்சிப்பார்?

முதியோர் உதவித்தொகையைத் திராவிடக் கட்சிகளின் சாதனை எனச் சொல்லலாமா? மகப்பேறு திட்டங்களைச் சாதனைகளாகச் சொல்லி பெருமைப்படலாமா? இலவச மின்சாரம் கொடுத்தது சாதனையாகுமா? இரண்டு ஏக்கர் நிலம் கொடுத்ததாகச் சொன்னது சாதனையாகுமா? விலையில்லா ஆடு, மாடு வழங்குவது சாதனைகளாக வருங்காலம் ஏற்றுக் கொள்ளுமா?

இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்ததை சாதனை என எடுத்துக் கொள்ள முடியுமா? இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் 69 சதவிகித இட ஒதுகீடு அமலில் உள்ளதல்லவா? இட ஒதுக்கீட்டில் அதிகமாகப் பயனடைந்தது யார்? குப்பனும், சுப்பனும், கருப்பனும் மருத்துவம் படிக்க முடிந்தது இட ஒதுக்கீட்டின் சாதனையாகுமா? தமிழ் நாட்டின் இட ஒதுக்கீட்டில் பொது இடங்களையெல்லாம் நிரப்புவது யார்? தமிழக இட ஒதுக்கீட்டின் பயனை முழுமையாக அனுபவித்தது, அனுபவித்துக் கொண்டிருப்பது யார்? இட ஒதுக்கீடு அமலாகி நூறாண்டு ஆகப்போகிறது. இந்த நூறு ஆண்டுகளில் தமிழகம் சாதித்தது என்ன? இட ஒதுக்கீடே தேவையில்லாத அளவிற்கு மக்களின் கல்வியை, வாழ்கைத் தரத்தை மாற்றியமைத்திருப்பதற்கு எதிராக ஒவ்வொரு சாதிக்கும் இட ஒதுக்கீடு, ஒள் ஒதுக்கீடு என ஒதுக்கீடுகளை வளர்த்துக் கொண்டே போவதன் மர்மம் என்ன? நூறுஆண்டுகளில் செய்ய இயலாத ஒன்றை அடுத்துவரும் ஆயிரம் ஆண்டுகளிலா செய்துவிடப் போகிறது தமிழகம்.

ஏரிகள் போல் பரந்து விரிந்து கிடக்கும் சாலைகளில் மின்னலென சீறிப்பாய்ந்து செல்லும் வாகனங்களை அய்யா, அம்மாவின் சாதனை எனச்

சொல்லலாமா? அய்யா, அம்மாவின் வாகனங்கள் மின்னலென சீறிப் பாய்வதுபோல் தெரியவில்லையே. தள்ளிக்கொண்டும், உருட்டிக் கொண்டுமல்லவா இவர்களின் ஓட்டை உடைசல் பேருந்துகளை இயக்க வேண்டியுள்ளது. ஒரேயொரு பேருந்து வைத்திருக்கும் முதலாளிகூட கோடிகோடியாகக் கல்லாக் கட்டும்போது, ஆயிரக்கணக்கான பேருந்துகளை வைத்திருக்கும் அய்யாவுக்கும், அம்மாவிற்கும் ஆயிரமாயிரம் கோடிகள் இழப்பு ஏற்படுவது எதனால் அல்லது யாரால்?

இவ்வளவு ஆள், அம்பு, சேனை, படைகள், வீரர்கள், தளபதிகள், சிற்றரசர்கள் இருந்தும் தனியாரிடம் மின்சாரம் விலைக்கு வாங்கி, தம் மக்களின் இல்லங்களில் ஒளியேற்றும் அய்யாவையும், அம்மாவையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். எத்தனை ஆயிரமாயிரம் கோடிகள் கடனாளியாக ஆனாலும் தமிழகத்தை ஒளிரச் செய்யும் மகத்தான முன்னோக்குத் திட்டத்தை மட்டும் அய்யாவும், அம்மாவும் ஒரு போதும் கைவிட மாட்டார்கள் என நம்பலாம்.

கல்வியைக் கடைக்சரக்காக்கியதை சாதனை என அய்யாவும், அம்மாவும் ஏற்றுக் கொள்வார்களா? இருவரின் கட்சிகாரர்களும் எவ்வளவு கல்விக் கூடங்களை நடத்துகிறார்கள் என்பதை நிச்சயம் தெரிந்து வைத்திருப்பார்கள். ஒரு மக்கள் நல அரசு, மக்கள் நன்மைக்காவே செயல்படும் அரசு, மக்கள் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட அரசு, மக்களால் மக்களுக்காகவே நடத்தப்படும் மக்களாட்சி அரசு, தனது மக்களுக்கு கல்வியைக் கூட கொடுக்கும் கடமையிலிருது தவறியதை மக்களுக்கான அரசு என்று எவ்வாறு அழைக்க முடியும்? கல்வி உட்பட அனைத்தையும் தனியாரிடம் தாரைவார்த்துவிட்டு அய்யாவும், அம்மாவும் தத்தமது அரசு மூலம் எதை சந்து பொந்தெல்லாம், மூலை முடுக்கெல்லாம், காடு மேடெல்லாம் கூவிக்கூவி விற்கிறார்கள் என்பதை மாட்சிமை தாங்கிய தமிழகக் குடிமக்கள் நன்கறிவார்கள்.

அய்யாவுக்கு தமிழ் மேல் தீராத காதல். கடிதங்கள் எழுதுவது கலைஞருக்கு கைவந்த கலை. உடன்பிறப்புகளை கடிதம் எழுதியே உசுப்பேற்றிவிடுவார். நெஞ்சுக்கு நீதி எனும் உலகிலேயே ஆகப்பெரும் சுயசரிதத்தை எழுதியிருக்கிறார். திருக்குறளை வைத்து குறளோவியம் படைத்திருக்கிறார். தொல்காப்பிய பூங்காவை வாங்குவதற்கு கட்சிக்காரர்கள் பயந்தது உண்மை. சங்கத் தமிழ், பொன்னர் சங்கர், ரோமாபுரி பாண்டியன் குறிப்பிடத்தக்க படைப்புகள். இன்னும் பல உண்டு.

அம்மா ஆங்கிலத்தில் புலமை பெற்றவராக அறியப்படுகிறார். புத்தகங்கள் ஏதும் எழுதியதாகத் தெரியவில்லை. இருவரும் போட்டி போட்டு உலகத் தமிழ் மாநாடு நடத்தினார்கள். மாநாடுகளால் தமிழுக்குக் கிடைத்த நன்மைகள் எவையென்று தமிழ் நல்லுலகம் நன்றாக அறியும். லட்சக்கணக்கான மக்களைத் திரட்டி மாநாடுகள் போடுவதில் இருவரும் திறமையானவர்கள். மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்ற அம்மா, முகம் தெரியா நபரிடம் தோற்ற வரலாறும் உண்டு.

புரட்சித் தலைவரின் வாரிசு என்பதால் அம்மாவுக்கும் புரட்சித் தலைவி பட்டம். கட்சிக்காரர்களுக்கு தெய்வம். அம்மாவே ஒரே நிரந்தர முதலமைச்சர். 1991 இல் சென்னைப் பல்கலைக் கழகம் சிறப்பு முனைவர் பட்டம் கொடுத்திருக்கிறது. திரைப்படத்துறையில் கலைமாமணி விருது வாங்கியிருக்கிறார். உக்ரைன் நாட்டின் தங்கத் தாரகைப் பட்டம் பெற்றிருக்கிறார். கலைத்தாய் பட்டமும் உண்டு.

அய்யாவுக்கு டாக்டர் கலைஞர் பட்டம். தமிழினக் காவலர், முத்தமிழ் அறிஞர் என்றெல்லாம் அழைப்பதுண்டு. அண்ணாமலைப் பல்கலையில் சிறப்பு முனைவர் பட்டம் பெறுகையில் மாணவர்களின் கடுமையான போராட்டம் நடந்திருக்கிறது. தமிழினக் காவலரது பேரன்கள் புகழ்பெற்ற டூன் பள்ளிகளில் படித்ததும், கொள்ளுப் பேரன்கள் அமெரிக்காவில் படிப்பதும் தனிச் சிறப்பு. அய்யா பாசத் தலைவன் பட்டமும் பெற்றிருக்கிறார்.

அய்யாவும், அம்மாவும் மக்களுக்குத் தொண்டு செய்யவே அரசியலுக்குள் குதித்ததாகத் தெரிகிறது. இருவருக்கும் மக்கள் தொண்டே பெரிதென்றால் எங்கிருந்து வருகிறது தனிநபர் விரோதம்? எதிரிக்கட்சியாகவும் நினைப்பது ஏன்? மக்களைப் பற்றி, அவர்களுக்கு ஆற்றவேண்டி பணிகள் குறித்து. முன்னெடுத்துச் செல்ல வேண்டிய திட்டங்கள் மேல் கவனம் செலுத்த இயலாமல் ஒருவருக்கொருவர் பற்றியே சிந்தித்து செயல்பட்டதால், ஒருவர் மற்றொருவரை எப்படி வெற்றி கொள்ளலாம் என அல்லும் பகலும் உழைத்ததால் ஏற்பட்ட விளைவுகளை இருவரும் உணரவில்லை. ஆட்சிக்கு வந்துவிட்டால் ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் முதலமைச்சராக இல்லாமல் கட்சிக்காரர்களுக்கு மட்டும் முதலமைச்சராக செயல்படுவது ஏன்? தன் கட்சிக்காரர் என்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாமென்ற அதிகாரத்தை வழங்குவது எப்படி? சொந்தக் கட்சிக்காரர் படுபாதகமான செயல்களைச் செய்தாலும் அவரையும் அவரது செயல்களையும் அதிகரிப்பது எதனால்?

ஒருவர் செயல்படுத்திய நல்ல திட்டங்களை, மக்களுக்குப் பயனுள்ள திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதுதானே முறையான செயலாக இருக்க முடியும். பெயர்களை மாற்றினாலாவது போகட்டும் பரவாயில்லை என எடுத்துக் கொள்ளலாம். திட்டத்தையே முடக்குவது, கைவிடுவது நல்லதல்லவே. எத்தனையோ உதாரணங்களைச் சொல்லலாம். ஒருவர் கட்டிய சட்டமன்றத்தை பல்நோக்கு மருத்துவமனையாக்குவது, உயர்தரமான நூலகத்தை மாற்றுவது, உழவர் சந்தைகளை முடக்குவது எனப் பல உதாரணங்கள் உண்டு.

திட்டங்களுக்குப் பெயர் வைப்பதற்குப் பஞ்சமோ பஞ்சம். இம்மண்ணில் பிறந்த ஒருவருக்கும் அதற்கான தகுதியில்லை போலும். அய்யாவுக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டம். அம்மாவுக்கு குடிநீரிலிருந்து அம்மா பெயரிலான வரிசை கட்டிய பல்வேறு திட்டங்கள். எங்களின் புண்ணிய நாடு அடிமைப்பட்டுக் கிடப்பதா என வெகுண்டெழுந்து இம்மண்ணுக்காக அடி, உதை, மிதிபட்டு, கம்படிபட்டு, துப்பாக்கிக் குண்டுகளை ஏந்தி, சிறைச் சாலைகளில் ரண வேதனைகளை அனுபவித்து, பல் உடைபட்டு, சதை தெறித்து, தலை கீழாகக் தொங்கி, இரத்தம் கக்கி, கல்லுடைத்து, களிதின்று, செக்கிழுத்து, தூக்குக்கயிற்றில் தொங்கி, குடும்பங்களை ஏழ்மையில் வாடவிட்டு வருங்காலத் தலைமுறைகளாவது சுதந்திரமாய் சுகமாய் வாழட்டும் எனும் உயர்ந்த உன்னதமாக நோக்கத்திற்காகத் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த ஆயிரமாயிரம் வீரர்களின் பெயர்கள் இருவருக்கும் நினைவில்லாமல் போனது இம்மண்ணின் பெருந்தன்மை. அய்யா சுதந்திரப் போராட்டத்தைப் பார்த்தவர்தானே.

இன்றைக்கு தமிழ் நாட்டில் எத்தனை கட்சிகள் இருக்கின்றன? இவற்றுள் திராவிடம் பேசும் கட்சிகள் எவை? தமிழ், தமிழர் நலன் நாடும் கட்சிகள் எத்தனை? தனித்தமிழகம் தங்கள் கொள்கை என முழங்கும் கட்சிகள் இருக்கின்றனவா? தமது சாதிக்காரர்களின் முன்னேற்றம் மட்டுமே குறிக்கோள் எனும் ஒற்றைக் குறிக்கோள் கொண்டு செயல்படும் கட்சிகள் உண்டா? தமிழர்களை சாதி, மதம் பாராமல் அனைவரையும் சமமாக நடத்தி அரவணைத்துச் செல்லும் கட்சிகள் எத்தனை? வெள்ளாளர்கள் கொண்டாடும் கட்சி எது? தேவர்கள் நிறைந்திருக்கும் கட்சி எது? வன்முறைகளைத் தூண்டும் கட்சிகள் எத்தனையிருக்கின்றன? சாதியை வளர்க்கும், போற்றிப் பாதுகாக்கும் கட்சி அமைப்புகள் எவையெவை? மக்களை மதத்தால் பிரிக்கும் கட்சிகள் எவை? பெண்களைச் சமமாக நினைக்கும் கட்சிகள் எத்தனை?

வெற்றுத் தாள்களில் மட்டுமே இயங்கும் கட்சிகள் எவை? தேர்தல் வந்தால் மட்டும் சுறுசுறுப்புக் காட்டும் கட்சிகள் எத்தனை? ஒரேயொருவருக்காக இயங்கும் கட்சிகள் எத்தனை? துதிபாடும் கட்சிகள் எத்தனை? சொத்துக்களைத் திரட்டும் கட்சிகள் உண்டா? இல்லையா? பணத்தை வாரியிறைக்கும் கட்சிகள் எத்தனை? சாதி இந்துக்களால் நடத்தப்படும் கட்சிகள் எவ்வளவு? சிறுபான்மையினருக்கு பாடுபடும் கட்சிகள் எவை? முஸ்லிம்கள் எத்தனை கட்சிகள் நடத்துகிறார்கள்? கிறித்தவர்களின் ஓட்டு எந்தக் கட்சிக்கு? குறிக்கோள் கொண்டு செயல்படும் கட்சிகள் எத்தனை? சந்தர்ப்பவாதக் கட்சிகள் எவ்வளவு?

தேசியத்தை, திராவிடத்தை, குறிப்பிட்ட பகுதியை, ஆண்ட பரம்பரையை, சாதியை, மதத்தை பெயரில் வைத்திருக்கும் கட்சிகள் எத்தனை? சமத்துவத்தைக் கொண்டாடும் கட்சிகள் எத்தனை? முற்போக்கினை வெளிப்படுத்தும் கட்சிகள் எவை? மூவேந்தர்களின் கொடி பிடிக்கும் கட்சிகள் பெயர் என்ன? பெண்களின் கட்சி, பெண்களால் நடத்தப்படும் கட்சிகள் இருக்கின்றனவா? கட்டப்பஞ்சாயத்துக் கட்சிகள் எவை? கந்துவட்டிக் கட்சிகள் எவை? கள்ளச் சாராயக் கட்சிகள் எவை?

தமிழகத்தில் எவ்வளவு பேரவைகள் இருக்கின்றன? அரசியல் கட்சிகளின் பேரவைகள் எத்தனை? சாதியை, சாதித் தலைவர்களைப் போற்றும் பேரவைகள் எத்தனையாயிரம் இங்குள்ளன? பேரவைகளின் நோக்கம் என்ன? சாதி, மதம் பாராமல் செயல்பட வேண்டிய அரசுகள் இப்பேரவைகளுக்கு அனுமதியளிப்பது எதனால்?

தமிழ்நாட்டில் நடிகர், நடிகையின் பெயரிலான சங்கங்கள் எத்தனை இருக்கும்? சாதி ரீதியாகத் தங்களை வெளிப்படுத்தும் நடிகர்கள் எத்தனை பேர்? சாதியைப் போற்றும் நடிகர்கள் யார்? சாதிக் கூட்டங்களில் பங்குபெறும் நடிகர்கள் எத்தனை பேர்? திரைப்படத் துறையில் நிரம்பி வழிவது எந்தச் சாதி? நாளைய சட்டமன்ற, பாராளுமன்ற, அமைச்சர், முதலமைச்சர் பெருமக்களாகிய இந்த நடிகர், நடிகையரின் உண்மையான நோக்கம்தான் என்ன? நாற்பது பேருக்கு நோட்டுப் புத்தகங்களும், நான்கு பேருக்கு இஸ்திரிப் பெட்டியும் கொடுத்து விட்டு, எப்படி இந்த நடிகர்களால் முதலமைச்சர் நாற்காலிக் கனவு காண முடிகிறது? முதலமைச்சர் ஆவது இவ்வளவு எளிதா? தமிழ் மக்கள் ஓட்டுப் போட்டுவிடுவார்கள் என்ற அளவிற்குத் தமிழர்களின் அறிவுத்திறத்தை வளர்த்தவர்கள் யார் யார்? நடிகராக வேடம் கட்டிய ஒரு தகுதியே அரசியல்வாதியாவதற்குப் போதுமா? மக்கள் திரளை

இந்தப் பாதையில் வழி நடத்திச் சென்ற கூட்டம் எது? தலைவர்கள் யார்? அற்புதமான நடிப்பும் திறமையான பேச்சும் மட்டுமே முதலமைச்சருக்கான தகுதியா? தன்னலமற்ற சேவை, நற்குணங்கள் போன்ற உயர்ந்த பண்புகள் வேண்டாமா?

தமிழகத்தில் எத்தனையோ கட்சிகள் செயல்படுகின்றன. தேசியக் கட்சிகள் என காங்கிரஸ், பாரதிய ஜனதா, ஜனதா தளம், பொதுவுடமைக் கட்சிகளைக் குறிப்பிடலாம். தமிழகத்தில் பெரிய கட்சிகளாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளன. மற்ற கட்சிகளில் மாநிலம் முழுக்க மக்கள் ஆதரவைப் பெற்ற கட்சிகளாக தேசிய முற்போக்கு திராவிட கழகம், மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் காணப்படுகிறது. காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் குறைவான அளவிலாவது அனைத்துத் தொகுதிகளிலும் ஆதரவைப் பெற்றிருக்கின்றன. தேசியக் கட்சியாக இருந்தும் பாரதிய ஜனதா தமிழ் நாட்டின் சில பகுதிகள் தவிர செல்வாக்கைப் பெற முடியவில்லை. பாட்டாளி மக்கள் கட்சி வடமாவட்டங்களில் கணிசமான ஓட்டு வங்கியைப் பெற்றுள்ளது. விடுதலைச் சிறுத்தைகளுக்கு வடமாவட்டங்களில் அதிகமும் தென் மாவட்டங்களில் குறைவான ஆதரவும் இருக்கிறது. சிறுத்தைகளுக்கு தமிழ்நாடு முழுக்கவே பரவலாக ஆதரவு இருந்தும், பா.ம.க போல் அணியாகத் திரள முடியாதது குறையே. புதிய தமிழகம் தென்மாவட்டங்களில் நல்ல ஆதரவைப் பெற்றுள்ளது. எனினும் தனித்து ஒரு தொகுதியில் நின்று வெற்றிபெறக் கூடிய அளவிற்கு எல்லோருக்கும் பொதுவான கட்சியாக வளர முடியவில்லை. ஒற்றுமை குறைவு. அட்டவணையினர் ஏதேனும் ஒரு பெரிய கட்சியோடுதான் தம்மை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்திய வரவான தமிழ் மாநில காங்கிரஸ், தாய் காங்கிரஸ் கட்சியின் தொண்டர் பலத்தையே நம்பியுள்ளது. மக்கள் செல்வாக்கைப் பெற்றதாகத் தெரியவில்லை. சமத்துவ மக்கள் கட்சி பிற கட்சிகளையே சார்ந்திருக்கிறது. நாம் தமிழர் கட்சி அதிரடியாலும் ஆவேச மேடைப் பேச்சுக்கள் மூலமும் வளர நினைக்கிறது. இந்திய ஜனநாயகக் கட்சி பொருளாதாரத்தை நம்பி செயல்படுகிறது. மனித நேய மக்கள் கட்சி வளர்ந்து வருகிறது. பார்வர்ட் பிளாக் பெயரளவிற்கே உள்ளது. தமிழக வாழ்வுரிமைக் கட்சி மற்றவர் புகழ்பாடும் கட்சியாக இருக்கிறது. நீண்ட பாரம்பரியம் கொண்ட முஸ்லிம் லீக் தனித்துவம் இல்லாமல் செயல்படுகிறது. தமிழக முன்னேற்றக் கழகம் கட்சியாக வளர முனைப்புக் காட்டுகிறது. நீதிக்கட்சின் தொடர்ச்சியான புதிய நீதிக் கட்சி ஒருவரது கட்சியாக செயல்படுகிறது. புதுவரவாக

காந்திய மக்கள் கட்சி காந்தியத்தை வளர்க்க வந்திருக்கிறது. மூவேந்தர் பெயரிலான கட்சிகள், நாடாளும் மக்கள் கட்சி போன்றவை புகழ்பாடும் கட்சிகளாக காட்சியளிக்கின்றன. கொங்கு பெயரிலான கட்சிகளின் செயல்பாடுகள் மக்களின் ஆதரவைப் பெறவில்லை. தமிழ், தமிழர் எனும் அடையாளத்திற்குள் இவர்களால் இணைய முடியவில்லை போலும். தமிழகத்தை முன்னேற்றவும் முன்னணியாக்கவும் ஏராளமான கட்சிகளும் கழகங்களும் இங்குண்டு. சில மக்களிடம் பிளவை உண்டாக்கும் விதத்தில் செயல்படுகின்றன. இவைபோக தமிழ் தேசியத்தை உருவாக்கத் துடிக்கும் சில கட்சிகளையும் தமிழ் மண்ணில் பார்க்க முடிகிறது.

ஐம்பது ஆண்டுகால தமிழக கட்சிகளின் வரலாற்றை அலசிப் பார்த்தால் இது தான் எங்கள் கட்சியின் கொள்கை, கட்சி ஆரம்பித்ததன் நோக்கம் இதுவே, எங்களின் லட்சியம் இவை இவை, எந்தச் சூழ்நிலையிலும் லட்சியப் பாதையிலிருந்து விலக மாட்டோம் என எந்த ஒரு கட்சியும் செயல்பட்டதாகத் தெரியவில்லை. அனைத்துமே சந்தர்ப்பவாதக் கட்சிகளாகவே இருந்திருக்கின்றன. தற்போதும் இருக்கின்றன. கட்சி ஆரம்பிக்கும் போது எல்லாக் கட்சிகளுமே அளப்பரிய குறிக்கோள்கள் கொண்டதாகவே தம்மை, தமது லட்சியக் கனவுகளை வெளியிட்டிருக்கின்றன. ஆனால் ஒரேயொரு தேர்தலுக்குள்ளாகவே தங்களது கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு லட்சியங்களைத் தூக்கி குப்பையில் வீசியதாகவுமே செயல்பட்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான உதாரணங்களைச் சொல்லலாம். ஆயிரக்கணக்கான சம்பவங்களைச் சுட்டிக் காட்டலாம்.

ஒரு கட்சி, அதிலிருந்து பிரிவு, மேலும் பிரிவு என்றே அனைத்துக் கட்சிகளும் தோன்றியிருக்கின்றன. எல்லாக் கட்சிகளுக்குமே எப்படியாவது வெற்றி என்பதே தாரக மந்திரம். என்ன செய்தாவது, யாருடன் சேர்ந்தாவது, கட்டாய வெற்றி என்பதே கட்சிகளின் கொள்கைகள். அத்தனை கட்சிகளுமே தேர்தல் கணக்கை கருத்தில் கொண்டே, கூட்டணியை மனதில் கொண்டே செயலாற்றுகின்றன. எந்த ஒரு சிறு வாய்ப்பையும் தவறவிடக் கூடாது என்பதே கட்சிகளின் கூட்டல் கணக்கு. கூட்டல் கழித்தல் கணக்குகளையே போட்டுக் கொண்டிருக்கும் கட்சிகள் மக்களிடம் எதையாவது சொல்லி, எதையாவது காட்டி, எதையாவது கொடுத்து ஓட்டுக்களை ஒட்டுமொத்தமாக அள்ளிவிடலாம் என்பதையே வெற்றியாகக் கருதுகின்றன.

தேர்தல்களைத் தாண்டி மிகப்பெரிய செயல் திட்டங்கள், மக்கள் முன்னேற்றக் கனவுகள், நீண்ட நெடுங்காலத்திற்கான பாதை இருப்பதாகத் தெரியவில்லை.

அவரவர் கட்சிகளின் தேர்தல் நேரத்து வாக்குறுதிகளே அத்தனைக்கும் சாட்சி. எங்களின் கனவு இது, எங்களின் லட்சியங்கள் இவை, இவற்றை ஏற்றுக் கொண்டால் எங்களுக்கு வாக்களியுங்கள் என்பது போய், எங்களுக்கும் ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்றே கட்சிகள் மக்களிடம் மன்றாடிக் கெஞ்சுகின்றன. தொன்னூறுகளிலிருந்து இன்றுவரைக்குமாக வரிசையாகத் தோன்றிய அத்தனை கட்சிகளின் ஆகச் சிறந்த லட்சியக் கனவு பொது விநியோக அட்டையை, சாதிச் சான்றிதழை தாமதமின்று உடனே கொடுப்பதுதான். இக்கொள்கைக்கு சற்றே உயர்ந்ததாக ஒரு கட்சி பொது விநியோகப் பொருட்களை தாங்களே வீடு தேடிக் கொண்டு வந்து கொடுப்போம் என அறை கூவல் விடுகிறது. இவ்வளவு பாடுபடும் மக்கள், பொது விநியோகக் கடைக்குச்சென்று அவர்களே வாங்கிக் கொள்ள மாட்டார்களா? கட்சித் தலைவர்கள் உட்பட அனைத்து மக்களும் விரும்பி உண்ணக் கூடிய அளவில் தரமான அரிசியை பொது விநியோகக் கடைகளில் வழங்குவோம் என எந்த ஒரு கட்சியும் அறை கூவல் விடுப்பதாகக் காணோம். தாம் மட்டும் எப்படி இவ்வளவு பணக்காரராக இருக்கிறோம், பாசுமதி அரிசியை பாலில் சோறாக்கிக் சாப்பிடுகிறோம், கட்சியின் அடிமட்டத் தொண்டர்களும், மக்களும் ஏன் நாற்றமடிக்கும் அரிசியை வாங்கிச் சாப்பிட வேண்டும் எனச் சிந்திப்பவரல்லவா நல்ல தலைவர். ஒன்று எல்லோரும் பாசுமதி சாப்பிட வேண்டும் அல்லது அனைவருக்கும் பொது விநியோக அரிசி. கட்சித் தலைவர்களான நீங்கள் மட்டும் உயர்வானவரெனில் எதில் உயர்வானவர்? பணக்காரரெனில் எப்படி உங்களால் மட்டும் பணம் சம்பாதிக்க முடிகிறது? பணக்காரர் எனில் மக்களிடம் போய் எதற்குச் கெஞ்ச வேண்டும்? மக்களுக்கு சேவை செய்கிறோம் எனில் உங்களது நோக்கம் உண்மையான மக்கள் சேவைதானா? சந்தேகத்திற்கிடமில்லாமல் பொது நலன் தானா? அல்லது இருக்கும் சொத்தைக் காப்பாற்ற அரசியல் கட்சியா? பதவி மோகமா? கூடுதலாகப் பணக்காரராகவேண்டுமென்ற லட்சியமா? தாம் சார்ந்த சாதிக்காரர்களுக்குத் தலைவராவதா? அல்லது யார் யாரோ அரசியலில் இருக்கிறார்கள் நாமும்தான் இருந்து பார்ப்போமே எனும் எண்ணமா?

சந்தர்ப்பவாத அரசியலுக்கு, பொருந்தாக் கூட்டணிக்குப் பெயர் பெற்றவை பெரிய கட்சிகளே. தேசிய, திராவிடக் கட்சிகள் என எந்த விதி விலக்கும் இல்லை. யாருடைய கட்டாய இந்திப் படிப்பை எதிர்த்து ஆக்ரோசம் காட்டினார்களோ, யாருடைய குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து வெகுண்டெழுந்தார்களோ, எந்த பிராமணர்களுக்கெதிராக ஒன்று சேர்ந்து பிராமணரல்லாதோர் கட்சியை

ஆரம்பித்தார்களோ, யாரை சாதியைச் சொல்லி மோசமாக வசை பாடினார்களோ, எந்த கவர்னர் ஜெனரலுக்கு கருப்புக் கொடி காட்டினார்களோ, அதே பிராமணரோடு கூட்டணி சேர்ந்து 1967ல் ஆட்சியைப் பிடித்தது எந்தக் கட்சி? நீர் பிராமணர், இந்தி ஆதரவாளர், ஆரியர், தமிழுக்கு எதிரானவர், எங்கள் கட்சியின் கொள்கைக்கு நீர் மாற்றுக் கருத்துடையவர், நமது கொள்கைகளும், கோட்பாடுகளும், வரலாறும், வாழ்க்கை முறையும் மாறுபட்டவை, நாம் கூட்டணி சேர இயலாது, மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள், நமக்குள் தேர்தல் கூட்டணி வேண்டாம் என அன்றைக்கிருந்த தலைமை ஏன் சொல்ல வில்லை?

இராஜாஜியின் சுதந்திரக் கட்சியோடு ஏன் கூட்டணி வைத்தார்கள்? எப்படியாவது காங்கிரஸை வீழ்த்தி ஆட்சிக்கு வரவேண்டும்? யாருடன் சேர்ந்தாலும் பரவாயில்லை. முதல்வர் அரியணையில் அமர வேண்டும். பதவிக்காகத்தான் தமிழைத் தூக்கிப் பிடித்தார்கள் என ஏன் குற்றம் சொல்லக் கூடாது? சக்கரவர்த்தி என்ற அடைமொழியோடு பெருமைப்படுத்தப்படும் இந்த இராஜகோபாலாச்சாரியர் யார்? இவருடைய சாணக்ய ராஜதந்திரம் எத்தகையது? பெரியார் முன்னெடுத்த சமூக சிந்தனை மாற்றத்தை இம்மண்ணில் விதைத்திருக்க வேண்டிய தி.மு.க.வை திசை மாற்றியது யார்? பெரியார் விதைத்த அந்த விதையை உலகெங்கும் நட்டு, பயிராக்கி, கோடி கோடி விதைகளாக வளர்த்தெடுக்காமல் முளைத்த பயிரைக் கருக்கியது யார்? அன்று சேர்ந்த சந்தர்ப்பவாதக் கூட்டணியின் தொடர்ச்சிதானே மிசா தழும்புகள் மறைவதற்குள் நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சியைத் தருக எனச் சொல்ல வைத்தது. திராவிட முன்னேற்றக் கழகமும், பாரதிய ஜனதா கட்சியும் எப்படி கூட்டணி சேர முடியும்? இரண்டு கட்சிக்குமே இது சந்தர்ப்பவாதக் கூட்டணி தானே. ஆரியர்கள், மனு தர்மத்தைப் பேணுகிறார்கள், வர்னாஸ்ரமத்தை வளர்க்கிறார்கள், தர்மத்திற்கு கொடி பிடிக்கிறார்கள், சாதியின் காவலர்கள், மூட நம்பிக்கையை விதைக்கிறார்கள், இந்திக்காரர்கள் என தொண்டை தெறிக்கக் கூவிக் கூவி ஆண்டாண்டு காலமாக அரசியல் செய்தவர்கள், மக்களை இத்திசை நோக்கி நகர்த்தி வந்தவர்கள், சட்டென மனமாற்றம் அடைந்ததற்கு என்ன காரணம்? தமிழ், தமிழர் எனப் பேசித்தானே மக்களின் நம்பிக்கையைக் பெற்றார்கள். நம்பி வந்த மக்களை நட்டாற்றில் விட்டு விட்டு நான்கைந்து அமைச்சர் பதவிகளுக்கு நாள் கணக்கில் பேரம் பேசியவர்கள் யார்? தமிழினக் காவலரின் சட்டமன்ற, நாடாளுமன்ற, மாவட்டத் தலைவர்கள், ஆட்சிக்குழு, பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்களுள் எத்தனை பேர் இச்சந்தர்ப்பவாதக் கூட்டணிக்கு எதிர்ப்புத்

தெரிவித்தனர்? அய்யா, நாம் கடந்து வந்த பாதை இதுவல்லவா, நமது நோக்கம் இத்தகையதல்லவா என நினைவூட்டத் தவிறனார்கள் எனில் மாயையில் சிக்குண்டது தலைவரா? உடன்பிறப்பா? உடன் பிறப்புக்களைக் குற்றம் சொல்ல இயலாது. அவர்கள்தான் யாரோடும் கூட்டணி சேர்வதற்கான அதிகாரத்தைத் தலைவரிடம் கொடுத்து விடுகிறார்களே? எவ்வளவு புத்திசாலித்தனம்..

புத்திசாலிகள் நிறைந்த கட்சி தி.மு.க.வா அல்லது பா.ஜ.க.வா? ஏமாந்தது யார்? தமது சுய கௌரவத்தை, கட்சியை, தொண்டர்களை அடகு வைத்தது எந்தக் கட்சி? ஒரே நோக்கம் இம்மண்ணிலிருந்து இந்திய தேசிய காங்கிரசை அகற்ற வேண்டும். முடிந்தால் பாரசீகத்திற்கோ, இத்தாலிக்கோ திரும்பவும் அனுப்பி விடவேண்டும். அதற்கு யாருடன் வேண்டுமானாலும் கூட்டணிக்குத் தயார். நீங்கள் கடவுள் மறுப்பாளராயிற்றே, கடவுள் மறுப்பு எனும் பெயரில் எங்கள் தெய்வங்களை என்னவெல்லாம் செய்தீர்கள், எதையெல்லாம் மாலையாகப் போட்டீர்கள், எப்படியெல்லாம் எழுதி வைத்திருக்கிறீர்கள், உங்களோடு ஒருபோதும் கூட்டணி சேரமாட்டோம் என்றா சொன்னார்கள்? ஆட்சி அமைக்க என்னவெல்லாம் செய்தார்கள்? எப்படியெல்லாம் கெஞ்சினார்கள்? இதெல்லாம் எதற்காக? எப்படியாவது வெற்றி என்ற அந்த ஒற்றை மந்திரச் சொல்லுக்காகத்தானே. தேர்தல் முடிவுகளோடு கூட்டணி முடிந்து விடுகிறதாம். ஆட்சியமைக்க யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி சேர்வார்களாம்.

இப்படி முட்டி மோதி, ஆளாய்ப் பறந்து கூட்டணி சேர்வது மக்களுக்கு சேவை யாற்றவே. மக்களுக்காகவே தன்மானத்தையும், சுயமரியாதையும் இழக்கிறார்கள். மக்களுக்காகவே தொண்டாற்றப் பிறந்தவர்கள் எதைச் செய்தாவது யாருடன் சேர்ந்தாவது மக்களைக் காப்பாற்றவே செய்வார்கள். மக்கள் என்றால் தம் மக்களா அல்லது சமூக மக்களா என்பதில் பல தலைவர்களுக்கும் குழப்பம் இருக்கும்போல. பலரும் தம்மக்களுக்காகவே அள்ளும் பகலும் அயராது பாடுபடுகிறார்கள். கட்சியின் அடுத்த வேந்தர்களாக, மன்னர்களாக, இளவரசர்களாக, தளபதிகளாக, தலைவர்களாக, அமைச்சர்களாக, ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களாக அவரவர் வாரிசுகளையே வளர்த்தெடுக்கிறார்கள். இந்தியா ஜனநாயக நாடாம். கட்சிகளில் தலைவர்களின் வாரிசுகளை விட்டால் வேறு தகுதியான ஆட்களே இல்லாமலிருப்பதன் காரணம் என்னவோ. தம்மக்களை மீறி கட்சிக்காரர்களில் ஒருவரும் செல்வாக்குப் பெறமுடியாமல் கனகச்சிதமாகக் காரியங்களை

ஆற்றுவதில் கெட்டிக்காரர்கள் இந்தத் தலைவர்கள். அன்றைய ராஜாக்களுக்கும் இன்றைய கட்சித் தலைவர்களுக்கும் எள்ளளவும் வேறுபாடு இல்லை. ஒருவர் வைத்திருப்பது தம் கட்சியா, தம் குடும்பத்திற்கான கட்சியா அல்லது மக்களுக்கான கட்சியா? தமது சொத்துக்களை கைமாற்றி விடுவது போலல்லவா அவரவர் கட்சிகளை அவரவர் வாரிசுகளுக்கு உயில் எழுதித் தருகிறார்கள். கடைக் கோடி தொண்டனுக்கும் அக்கட்சியின் சொத்தில் பங்கிருக்கிறதல்லவா? அந்த மனிதரது உழைப்பும் இச்சொத்தில் கலந்திருக்கிறதல்லவா? கொடி பிடிக்கவும், கோஷம் போடவும், பயன்படும் தொண்டர்களை, பதவிகளுக்கு மட்டும் தகுதியற்றவர்களாக வளர்த்தெடுத்தது கட்சித்தலைமைகளின் குற்றமல்லவா? வாரிசு அரசியலுக்கு எண்ணற்றவர்களை எடுத்துக்காட்டாகச் சொல்லமுடியுமே.

ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும் பொதுவாழ்வில் பெரியார், இராஜாஜி, காமராஜர் போன்றவர்கள் நேர்மைக் குறைவாக நடந்துகொண்டார்கள் என எங்கேனும் பதியப்பட்டிருக்கிறதா? பொதுவாழ்வில் நேர்மையைக் கடைபிடித்தார்கள் தானே. எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார்கள்தானே. அந்த நேர்மையை, எளிமையை அடுத்து ஆட்சிக்கு வந்தவர்களால் ஏன் முன்னேடுக்க முடியவில்லை? அரசியலைச் சேவையாகவும், மக்களுக்குச் செய்யும் தொண்டாகவும் கொண்டு கடமையாற்றிய அந்நாளைய சமூக சேவகர்கள் எங்கே. அரசியலை பணம் காய்ச்சி மரமாகவும் அதிகாரத்திற்கான பதவியாகவும் பார்க்கும் இந்நாளைய புத்திசாலி அரசியல்வாதிகள் எங்கே..

சட்டப் பேரவையின் மாண்பு கெட்டுப் போனது எப்போது? அடி, தடி, ரகளைக் காட்சிகளை, மல்லுக்கட்டுகளை, மைக்கு, நாற்காலி உடைப்புகளை அரங்கேற்றியது யார்? கைகலப்பு செய்வதற்கு சட்டப் பேரவை என்ன மல்யுத்தக் களமா? மண்டை உடைப்புக்கு உகந்த போர்க்களமா சட்டப்பேரவை? ஏன் சபை நாகரீகம் மீறப்பட்டது? எதனால் உறுப்பினர்கள் கண்ணியக் குறைவாக நடந்து கொண்டார்கள்? இரண்டு சபாநாயகர்களை சட்டப் பேரவையில் உட்கார வைத்து வேடிக்கை பார்த்தது யார்? பேரவைத் தலைவர் சட்டப்பேரவை உறுப்பினரைப் பார்த்து எழுந்து நிற்கும் அவலம் எப்போது தொடங்கியது? வரைமுறையற்ற பேச்சுக்களை, தனிநபர் தாக்குதல்களை, துதிப்பாடல்களை, புகழ்மாலைகளை அனுமதித்த, அங்கீகரித்த பேரவைத் தலைவர்கள் யார்? தனக்கிருக்கும் அத்தனை அதிகாரங்களையும் மறந்து, அந்த நாற்காலிக்கான பெருமைகளை அறியாமல்

தலைமைக்கும் கட்சிக்கும் மட்டும் விசுவாசமாய் சபாநாயகர்கள் நடந்து கொள்வது ஏன்? சட்டப் பேரவையின் வரலாறு தெரிந்த, தமிழக அரசியலின் பெருமைகளை உணர்ந்த சபாநாயகர் எனில் புதிய ஆத்திசூடியை சபைக்குறிப்பில் ஏற்றுவதற்கு எப்படி அனுமதித்திருப்பார்? வருங்கால தமிழகத் தலைமுறையினர் பேரவைப் பதிவுகள் அனைத்தும் அப்படியே உண்மை என நம்பி விடுவார்கள் என்ற நப்பாசையிலா இப்படியான மேடைப் பேச்சுக்களைப் பதிகிறார்கள்? ஒரு வேளை மிகச் சிறந்த அறிவு கொண்ட தமிழர்கள் சட்டப் பேரவையை அலங்கரிக்கும் காலம் ஒன்று மலருமேயானால் உங்கள் சட்டப்பேரவைக் காலத்தை எப்படி மதிப்பிடுவார்கள்? நீங்கள் தான் வருங்காலத் தலைமுறையினருக்கு முன்னோடிகளல்லவா?

எந்த மாநில சட்டப் பேரவை அதிகமாகக் கலைக்கப்பட்டது? மக்கள் ஓட்டுப் போட்டு ஆட்சிக்கு வந்த பின்பும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து சிந்திக்காமல் அடுத்தமுறையும் ஆட்சிக்கு வருவதெப்படி எனும் ஒற்றைக் குறிக்கோள் கொண்டு செயல்படுவது ஏன்? அந்த ஒற்றை நோக்கம் பற்றியே சிந்திப்பது எதற்காக?

கருத்துக்களை கருத்துக்களால் எதிர்க்காமல் அதிகாரம் கொண்டு அடக்குவது சரியாகுமா? வெளியேற்றமும், வெளிநடப்பும் தொடர்கதையாவது தகுமா? இடை நீக்கம் உகந்தது தானா? முறையான விவாதங்களின்றி அவசர கோலத்தில் நிறைவேற்றப்படும் மசோதாக்களின் நிலை என்ன? அமலாக்கினால் ஏற்படும் நன்மை எத்தகையது? சட்டப் பேரவையின் முதன்மை நோக்கமே இயற்றப்படும் சட்டம் மக்கள் நலனுக்கு உகந்ததுதானா என்பதை விவாதிப்பது தானே? பேரவைக் கூட்டத்தின் இறுதி அமர்வில் அத்தனையையும் குரல் வாக்கெடுப்பில் ஆம் என்க, இல்லை என்க, ஆம் அதிகமிருக்கிறது, நிறைவேற்றப்படுகிறது, அடுத்த மசோதா தாக்கலாகிறது எனச் சட்டமியற்றுவதற்கா இந்த மாண்புமிகு சட்டப் பேரவை? இதற்கா இத்தனை உறுப்பினர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், மாற்றுக் கட்சி உறுப்பினர்கள், ஆளுநர், அரசியல் சாஸசம், வாக்களித்த கோடிக்கணக்கான மக்கள்?

சட்டப்பேரவையின் மாண்பு குலைந்ததற்கு ஒரு நெடிய வரலாறு இருக்கிறதெனத் தெரிகிறது. என்றைக்கு நம்மவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார்களோ அன்றிலிருந்தே இப்படித்தான் போல. 1926-30 காலத்தில் அரசியல்

அணி மாற்றங்களால் சட்டசபை கடும் அமளிகளைச் சந்தித்திருக்கிறது. ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் முட்டி மோதி நின்றிருந்திருக்கிறார்கள். அடுத்து ஆட்சிக்கு வந்தவர்கள், பரவாயில்லை என்ற அளவிற்கு சபை நாகரீகத்தை கட்டிக் காத்திருக்கின்றனர். 1957 முதுகுளத்தூர் கலவரத்தை ஒட்டி கார சார, சூடான தனிப்பட்ட உரசல்களோடு சபை நடந்திருக்கிறது. அண்ணா அவர்கள் காலம் வரை சபை சற்று கண்ணியத்தோடே நடந்திருக்கிறது. அதன் பின்னர் ஆரம்பித்தது தமிழக சட்டசபைக்கான குந்தகச் செயல்கள். அடுத்து சபைக்கு வந்தால் முதலமைச்சராகத்தான் வருவோம் எனச் சபதமேற்றுச் சென்ற எம்.ஜி.ஆர் 1977 இல் முதல்வராகவே சபைக்குள் நுழைகிறார். சபையில் வாய்ச் சண்டைகள் வலுக்கின்றன. மோதல் போக்கும் அதிகரிக்கிறது. எனினும் சபாநாயகர்களின் திறமையால் ஓரளவிற்கு கட்டுக்குள் சபை நடந்திருக்கிறது. எம்.ஜி.ஆருக்கும் கருணாநிதிக்கும் அரசியல் பகை இருந்தாலும் சபை நடவடிக்கைகள் ஓரளவிற்கு பரவாயில்லையென்றே பதிவாகியிருக்கின்றன. பார்த்தால் இருவரும் நலம் விசாரிக்கும் அளவிற்குக் கொஞ்சமேனும் நட்பு இருந்திருக்கிறது. 1988-களில் ஆரம்பிக்கிறது சபை நடவடிக்கைகளின் வீழ்ச்சி. இன்று வரை எழுந்திருக்கவேயில்லை. மேலும் மேலும் மோசமாவதுதான் தொடர்கிறது. எதிர்கட்சியாக இருக்கும் போது சபைக்கே வருவதில்லை. எதிர்கட்சியாக இருக்கும் போதுதானே சபையில் அதிக வேலையிருக்கும்?

பிராமணர்களின் முன்னேற்றம், வாழ்க்கை வசதிகள் மற்ற மேல் சாதிக்காரர்களை பொறாமைப்படவைக்கிறது. இந்தியாவை ஆண்ட பிரித்தானியர்களின் ஆட்சியை இரு பிரிவுகளாகப் பிரிப்பார்கள். பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி. இது 1774லிருந்து 1858-ம் ஆண்டு வரையிலான காலகட்டம். வாரன் ஹேஸ்டிங்கில் ஆரம்பித்து காரன்வாலீஸ், வெல்லெஸ்லி, வில்லியம் பெண்டிங், டல் ஹௌசி எனப் பலருண்டு. பின் இந்தியாவின் அதிகாரம் நேரடியாக பிரித்தானிய வைஸ்ராய்கள் மூலம் கவனிக்கப்படுகிறது. இதன் காலம் 1858 முதல் 1947 வரை கானிங் பிரபுவில் ஆரம்பித்து நேப்பியார், ரிப்பன், கர்சன், செம்ஸ்போர்டு, இர்வின், வெலிங்டன், ஜார்ஜ் ஸ்டான்லி எனப் பலர் வழியாக பேட்டனில் முடிகிறது.

கம்பெனியின் காலத்தில் இந்திய மகாராஜாக்களுக்கு சேவகம் செய்து எண்ணற்ற தானங்கள் பெயரால் வசதியாக வாழ்ந்த பிராமணர்கள், பிரித்தானிய

ஆட்சியில் அவர்களுக்கும் சேவகம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். பிரித்தானிய ஆட்சியில் படித்தவர்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்குமல்லவா? மளமளவென மாவட்ட, வட்ட ஆட்சியர்களாக, முன்சீப்களாக, அரச அதிகாரிகளாக, அலுவலர்களாக எல்லா நிலைகளிலும் சேர்கிறார்கள். வெள்ளைக்காரர்களோடு ஆங்கிலத்தில் பேசவேண்டாமா? சமஸ்கிருதத்தை கைவிட்டு ஆங்கில மோகம் பற்றிக் கொள்கிறது. முதன் முதலாக கும்பகோணத்தில் ஆங்கிலக் கல்வி ஆரம்பமாகிறது. தஞ்சாவூர், கும்பகோணத்துப் பிராமணர்கள் கடகடவென ஆங்கிலத்தில் தேறி சடசடவென சென்னை மகாணம் மட்டுமல்லாது இந்தியா முழுமைக்கும் அதிகாரிகளாகப் பரவுகிறார்கள். கொஞ்சம் தாமதமாக விழித்துக் கொண்ட வெள்ளாளர்கள், தெலுங்கு பேசும் நாயுடுகள், ரெட்டியார்கள், செட்டியார்கள் ஆங்கிலத்தை கற்றுக்கொண்டு பிராமணர்களைப் போன்றே வெள்ளையர்களுக்குச் சேவையாற்ற அணிவகுக்கிறார்கள். என்னதான் இருந்தாலும் மனப்பாடக் கல்வியில் வல்லவர்களான பிராமணர்களோடு போட்டியிட முடியாதல்லவா? சற்றே பின்தங்குகிறார்கள். வெள்ளையர்கள் ஆட்சியில் அப்படியொன்றும் பிராமணர்களுக்கும், வெள்ளாள, நாயுடுகளுக்கும் பெருத்த வேறுபாடு ஒன்றும் இருந்ததாகத் தெரியவில்லை. பிராமணர்கள் எல்லா மட்டத்திலும் அனைத்து வேலைகளிலும் எண்ணிக்கையில் சற்று கூடுதலாக இருக்கிறார்கள். சென்னை மாகாணத்தில் மாவட்ட முன்சீப்களாக 32 பிராமணர்கள் இருந்தால் இந்த பிராமணரல்லாதார் 20 பேர் வரை இருக்கிறார்கள். ஆனாலும் இந்த கூடுதல் எண்ணிக்கையை ஏற்க மனம் இடந்தரவில்லைபோலும். மூன்று சதவீகிதம் கூட எண்ணிக்கையில்லாத பிராமணர்கள் இவ்வளவு பதவிகளில் இருப்பதா எனப் புழுங்கி, வெம்பி ஆரம்பித்ததுதான் தென்னிந்திய பிராமணரல்லாதார் நலச் சங்கம்.

தமிழக அரசியல் களத்தை, அரசியல் தலைவர்களின் செயல்பாடுகளை, இந்தப் பின்னணியிலிருந்து புரிந்து கொள்வதுதான் சுலபமாகவும், பொருத்தமாகவும் இருக்கும். சரியாகவும் தென்படும்.

பிராமணர்கள் ஏன் பரங்கியர்களின், வெள்ளையர்களின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கொதித்தெழவில்லை? இந்திய மகாராஜாக்கள், கோதானம், ஊர்தானம், பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் என பசுக்களையும், மூன்று நான்கு ஊர்களையும், கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியும் நிலங்களையும், வேலைக்காரர்களையும் அள்ளி அள்ளிக் கொடுத்தார்களே. அமைச்சர்களாகவும்,

ஆலோசகர்களாகவும் கூடவே வைத்திருந்து அழகு பார்த்தார்களே. வேதஞானம் கொண்ட, கல்வி கற்ற, சமூக அடுக்கின் உச்சியில் இருந்த, சொத்துக்கள் குவித்திருந்த இவர்களல்லவா முன் நின்று அந்நியர்க்கெதிராகப் போராடியிருக்க வேண்டும்? இராமனும், கண்ணனும் அவதரித்த புண்ணிய மண்ணல்லவா இது எனப் பொங்கியிருக்க வேண்டும். சங்கரர், இராமாநுஜர், மத்வர் மற்றும் இன்ன பிற ஞானியரின் பாதம் பட்ட மண்ணைக் காக்க மக்களைத் திரட்டியிருக்க வேண்டும்? குறைந்தபட்சம் அகிம்சை வழியிலாவது போராடியிருக்க வேண்டுமல்லவா. மற்ற சமூகத்தவரை விட இவர்களுக்குத்தானே பொறுப்பும் கடமையும் அதிகம். இஸ்லாமிய ஆட்சியையும் அதற்குப் பிறகான பிரித்தானியர் ஆட்சியையும் பிராமணர்களால் தடுத்திருக்க முடியுமா? தடுக்காததற்கு விதிப்படிதான் எல்லாம் நடக்குமென்ற சித்தாந்தம் காரணமாகுமா? யார் ஆட்சியிலும் எக்காலத்திலும் நாம் நன்றாகவே இருப்போம் எனும் எண்ணம் காரணமாகுமா?

1900ற்கு முன்பிருந்தே பிராமணர், பிராமணரல்லாதார் பிளவுகள் அனைத்து நிலைகளிலும் உண்டாகியிருக்கிறது. வரலாற்றின் நெடுங்காலம் தனித்தே செயல்படுகிறார்கள். சமூகத்தின் ஒவ்வொரு அடுக்கிலும், நிலையிலும் இந்த சாதிப் பாகுபாடு நீக்கமற நிறைந்திருக்கிறது. பிராமணர்களுக்கு தனியாக தங்குமிடங்கள், உணவுவிடுதிகள், சலுகைகள் தொடர்கின்றன. காசியில் பசியோடு அலைந்து திரியும் பெரியாரை பிராமணரல்லாதவர் எனும் ஒரே காரணத்திற்காக உணவுச் சத்திரத்திற்குள் அனுமதிக்காததை இதோடு பொருத்திப் பார்க்கலாம். அன்று சாதி, மதத்தை வைத்து அவ்வளவு பாகுபாடுகள். வெள்ளாளர், நாயுடு, செட்டி, ரெட்டிகளுக்கே இந்த நிலைமையெனில் அட்டவணையினரின் நிலைமை எப்படியிருந்திருக்குமோ?

பிராமணரல்லாதாருக்கு வசதியாய் வந்தது முஸ்லீம்களுக்கான ஒதுக்கீடு. நெருக்கடி கொடுத்தால் வெள்ளை அரசு வளைந்து கொடுக்கும் என்ற நிலையில் பிராமணரல்லாத மேல் சாதிக்காரர்கள் 1916-ல் சிமா எனும் இந்த தென்னிந்திய பிராமணரல்லாத நலச் சங்கத்தை உருவாக்குகிறார்கள். தலைவர்களாக தியாகராஜர், நாயர், பி.டி. ராஜன் இருக்கிறார்கள். இதற்கு முன்பாகவே நடேச முதலியார் செயலராக இருந்த சென்னை ஐக்கிய சபை தோற்றுவிக்கப்படுகிறது. இச்சபை 1912-ல் சென்னை திராவிடர் சங்கம் என்ற பெயரில் திருவல்லிக்கேணியில் பிராமணரல்லாதோருக்கான ஒரு விடுதியை ஆரம்பித்து நடத்துகிறது. உயர்

படிப்பிற்கு சென்னை செல்லும் பிராமண மாணவர்கள் தங்குவதற்கு பல விடுதிகள் இருந்திருக்கின்றன. பிராமணரல்லாதோரை இவ்விடுதிகளில் சேர்க்க மாட்டார்களாம். ஆகப் பெரிய கொடுமையாக, பிராமண மாணவர்கள் உள்ளே அமர்ந்து ருசித்துச் சாப்பிட, பிராமணரல்லாத மாணவர்களை உணவக வாசலில் நிறுத்தி கையில் இலை கொடுத்து அதில் சூடான உணவைக் கொடுத்திருக்கிறார்கள். வெள்ளைக்காரர் வந்து ஆட்சியைப் பிடித்தது ஒரு விதத்தில் நல்லது என்றேபடுகிறது. ஆயிரம் சாதி எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி எனப் பாடித் திரிந்த நம் பெருமைமிகு பாரதி கண்களில் இக்காட்சிகள் பட்டிருக்குமா எனத் தெரியவில்லை.

சென்னை திராவிடர் சங்கமே பின்னாளில் ஜஸ்டிஸ் பார்ட்டி என்ற நீதிக்கட்சியாக முப்பதிற்கும் மேற்பட்ட பிராமணரல்லாத தலைவர்களால் ஒன்றிணைந்து ஆரம்பிக்கப்படுகிறது. ஜஸ்டிஸ் என்ற ஆங்கில இதழும், திராவிடன் என்ற தமிழ் நாளேடும் தெடங்கப்படுகின்றன. பிராமணல்லாதார் கொள்கை அறிக்கையை வெளியிடுகிறார்கள். முக்கியக் கொள்கையாக பிரித்தானியர்களுக்கு விசுவாசம் என்பது முன்வைக்கப்படுகிறது. பிரித்தானியர்களுக்கு விசுவாசமாக இருந்து அவர்களோடு இணைந்து வாழ்க்கை நிலையினை மேம்படுத்திக் கொள்வதே சிறந்ததென தெளிவாக்கப்படுகிறது. இதற்கு ஏதுவாக வந்த மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்த விளைவான இரட்டை ஆட்சி முறையை திறமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடிவெடுக்கப்படுகிறது. பிராமணரல்லாதோர் முதல் மாநாடு 1970-ல் கோயம்புத்தூரில் கூட்டப்படுகிறது. இந்த பிராமணரல்லாதோர் அமைப்பு வரும் நாட்களில் பாரத சமுதாயத்தில் பிளவையும், பகையுணர்வையும் வளர்க்கும் என இந்து நாளிதழ் கட்டுரைகளை வெளியிடுகிறது.

1920 இல் இரட்டை ஆட்சிக்கான தேர்தல் வருகிறது. காங்கிரஸாரால் ஒத்துழையாமை இயக்கம் நாடு முழுதும் முன்னெடுத்துச் செல்லப்பட்டதால் அவர்கள் தேர்தல்களைப் புறக்கணிக்கிறார்கள். மாறாக நீதிக்கட்சியார் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு பெறாமல் தேர்தல்களில் போட்டியிட்டு மாற்று அணி இல்லாததன் காரணத்தால் 98 மக்கள் தொகுதிகளில் 63-ல் வென்று ஆட்சியைப் பிடிக்கிறார்கள். சுயேட்சைகள் 18 இடங்களில் வெற்றி பெறுகிறார்கள். பிரித்தானிய ஆளுநரால் நியமிக்கப்பட்ட 34 சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து 132 உறுப்பினர்கள் 01.09.1921 அன்று புனித ஜார்ஜ் கோட்டையில் கூடுகிறார்கள், இதன்

துவக்க விழாவிற்கு அன்றைக்கிருந்த இங்கிலாந்து அரசபரம்பரையின் பிரதிநிதியாக மாமா உறவுள்ளவரான கன்னாட் அவர்கள் வருகிறார். அன்றைய ஆளுநரான வெல்லிங்டன் பிரபு இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கிறார். 14.02.1921 இல் சட்டசபைக் கூட்டத்தில் ஆளுநர் சிறப்பானதொரு உரையுடன் இந்த சட்டசபை உறுப்பினர்கள் மக்கள் சேவையைத் தொடங்குகிறார்கள்.

தமிழ்நாடு சட்ட சபை நீண்ட பாரம்பரியம் கொண்டது. அன்றைக்கு இருந்த கவர்னர் ஜெனரலுக்கு நிர்வாகத்தில் உதவும் பொருட்டு குழு அமைக்கப்படுகிறது. குழுவின் உறுப்பினர்களை ஆளுநரே நியமிக்கிறார். அவரே அதன் முழு அதிகாரமும் படைத்தவராக செயல்படுகிறார். இப்படி 1833 காலகட்டத்திலேயே குழுக்கள் மூலமான நிர்வாகம் நடைமுறைக்கு வருகிறது. 1853-ல் 12 பேர் அடங்கிய குழு அமைக்கப்படுகிறது. 1861 வரை கவர்னர் ஜெனரலே குழுவை வழிநடத்தக் கூடியவராக இருக்கிறார். இந்தியக் கவுன்சில் சட்டம் 1861-ன் படி ஆறு பேருக்கும் குறையாத 12 பேருக்கும் மிகாத உறுப்பினர்களைக் கொண்ட சபை உருவாக்கப்படுகிறது. இச்சபை சட்டங்களைப் பரிந்துரைக்கலாம், நிறைவேற்றலாம். ஆனால் முடிவெடுக்கும் அதிகாரம் ஆளுநரைச் சார்ந்தது. இச்சட்டத்தின்படி, இந்தியாவின் அன்றைய முக்கியமான மாகாணங்களாக இருந்த சென்னை, கல்கத்தா, பம்பாயில் மக்கள் பிரதிநிதிகளுக்கான சட்டசபை அமைக்கப்படுகிறது. சென்னை மாகாணத்திற்கான சட்டசபை உருவாக்கப்படுகிறது. மக்களுக்கான அமைதியும் நல்ல அரசு அமைவதற்கான சட்டங்களை இயற்றுவதுமே இச்சபையின் முக்கியமான பணிகளாக வரையறுக்கப்படுகின்றன. சென்னை மகாண சட்டசபையோடு சேர்ந்து, சென்னை மாகாண சட்டக் குழுவும் அமைக்கப்படுகிறது. இக்குழு சட்ட சபைக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குவதைக் கடமையாகக் கொண்டிருக்கிறது.

இந்திய கவுன்சில் கூட்டம் 1892-ன்படி சென்னை மாகாண சட்டசபை உறுப்பினர்களுக்கான எண்ணிக்கை 16 ஆக உயர்கிறது. சட்டசபை குழுவிற்கான உறுப்பினர்கள் 20 ஆக இருக்கிறது. இக்குழுவில் அரசு சார்ந்த அதிகாரிகளும் அரசு சாராத பொதுவானவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அரசு சாராத குழு உறுப்பினர்களாக மாவட்டத் தலைமையால் பரிந்துரைக்கப்படுபவர்களும், பல்கலைக்கழகம், நகராட்சிகள், மற்ற சங்கங்களைச் சார்ந்தவர்களும் நியமனம் பெறுகிறார்கள். சட்டசபை இரண்டு வருடம் செயல்படுகிறது. வருடாந்திர நிதிநிலை

அறிக்கையை ஆராய்வதும் அது தொடர்பான சில கேள்விகளைக் கேட்பதற்கும் சட்டசபை உறுப்பினர்களுக்கு அதிகம் உண்டு. கேள்வி கேட்பதும் சில வரைமுறைகளுக்கு உட்பட்டதே. ஆளுநரின் அதிகாரமே அனைத்தையும் தீர்மானிக்கிறது.

1909-ல் வந்த மின்டோ மார்லி சீர்சிருத்தத்தின் பயனாக சட்டசபைக்கு தேர்தல்கள் மூலம் உறுப்பினர்களைத் தேர்தெடுப்பது நடைமுறைக்கு வருகிறது. பொது நலன் சார்ந்தவை குறித்து விவாதிக்கவும் அது தொடர்பான தீர்மானங்களை முன்மொழியவும் சபை உறுப்பினர்களுக்கு அதிகாரம் கிடைக்கிறது.

இந்திய அரசுச் சட்டம் 1919-ன் படி மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் முன்மொழியப்படுகிறது. இதன் முக்கிய அம்சமாக மக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மற்றும் அரசு சார்பிலான பிரதிநிதிகள் என மாகாணங்களில் இரட்டை அட்சிமுறை அமலாக்கப்படுகிறது. அனைத்து நடவடிக்கையிலும் மாகாண ஆளுநரின் கையே ஓங்கியிருக்கும் விதமாகவும், அமைச்சர்களை எல்லா நிலையிலும் கட்டுப்படுத்துபவராக ஆளுநர் இருக்குமாறும் சட்டசபை பார்த்துக் கொள்ளப்படுகிறது. மாகாணத்திற்குள் நடைபெறும் பணிகள், மாகாண வளர்ச்சி திட்டங்கள் மட்டுமே சட்டசபையால் நிறைவேற்றப்படும். ஒவ்வொரு சட்டமும், ஆளுநர் மற்றும் கவர்னர் ஜெனரலின் ஒப்புதல் பெற்றே அமுலாகும். சபாநாயகரை தேர்ந்தெடுப்பது ஆளுநரின் அதிகாரம். துணை சபாநாயகரை சட்டசபை தேர்ந்தெடுக்கலாம்.

1919-ன் சட்டப்படி, சென்னை மாகாண சட்டசபைக்கான தேர்தல் 1920-ல் நடக்கிறது. 132 உறுப்பினர்களில் 34 பேர் ஆளுநரின் தேர்வு. தியாகராஜர் தலைவராக இருந்தும் முதல்வராக சுப்பராயுலு அமர்கிறார்.

இந்திய அரசு சட்டம் 1935-ன் அடிப்படையில், சட்டசபையில் இரு அவைகள் அமைகின்றன. மேலவை உருவாக்கப்படுகிறது. இரு அவைகள் இருந்தாலும் முக்கியமான விவகாரங்களில் இவை ஆங்கிலேயர் அரசில் தலையிட முடியாது. முதலாவது நிதி தொடர்பான அனைத்திலும் ஆங்கில அரசுக்கே முழுப்பொறுப்பும் இருக்கும். இரண்டாவதாக, சட்டசபை, அமைச்சர்களின் கவனத்திற்கு வராத சில விவரங்கள் ஆளுநரால் மட்டுமே கவனிக்கப்படும். இரண்டிலும் சட்டமன்றம் கேள்வி கேட்க முடியாது. சட்ட மேலவை நிரந்தரமானது. மூன்று வருட இடைவெளியில்

அதன் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஓய்வு பெற வேண்டும். மேலவையில் 35 பொது இடம், முகம்மதியர்களுக்கு 7, ஐரோப்பியருக்கு 1, இந்திய கிறித்தவர்களுக்கு 3, ஆளுநருக்கு 8-ற்குக் குறையாமல் 10-க்கு மிகாமல் என மொத்த உறுப்பினர்கள் 54-ற்கு குறையாமல் 58-க்கு மிகாமல் இருந்திருக்கிறார்கள்.

கீழ் அவை என்ற சட்ட சபையின் மொத்த உறுப்பினர்கள் 215 பேர். 146 பேர் தேர்தல்கள் மூலமாக பொதுத் தொகுதியிலிருந்து தேர்வு. 30 இடங்கள் அட்டவணையினருக்கு. 1 இடம் பின்தங்கிய மற்றும் பழங்குடியினருக்கு. முகமதியர் 28, ஆங்கிலோ இந்தியர் 2, ஐரோப்பியர் 3, இந்தியக் கிறித்தவர் 8, வணிகம் மற்றும் தொழில் நிறுவனத்தினர் 6, நிலம் வைத்திருப்பவர் 6, பல்கலைக்கழகம் 1, தொழிலாளர் பிரதிநிதிகள் 6, பெண்கள் 8 பேர். அவர்களில் 6 பேர் பொது. மத்திய அரசுக்கும் மாகாண அரசுகளுக்குமான பொறுப்புகள் பகிர்தளிக்கப்படுகின்றன. 1935 இல் சட்டமியற்றப்பட்டாலும் 1937 தேர்தலிலேயே நடைமுறைக்கு வருகிறது. காங்கிரஸ் இத்தேர்தல்களில் பங்குபெற்று பல மாகாணங்களில் ஆட்சிக்கு வருகிறது. 1939-ல் மக்களின் கருத்தையறியாமல் இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்தியதால் காங்கிரசு மாகாண சட்டசபையினர் பதவி விலகியிருக்கின்றனர். 1946-ல் மீண்டும் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன.

இந்திய சுதந்திரச் சட்டம் 1947-ன் படி அன்றைக்கிருந்த மாகாணச் சட்டசபைகள் தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்பட்டன. மக்கள் பிரதித்துவச் சட்டம் 1950-ன் கீழ் சென்னை மாநில எல்லைக்கு உள்ளடங்கியிருந்த பகுதிகள் இணைந்து சென்னை மாநில கூட்டு சட்டமன்றம் செயல்பட்டது. 1952-ல் 375 இடங்களுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. 243 தொகுதிகளில் ஒரு உறுப்பினரும், 62 தொகுதிகளில் இரட்டை உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரட்டை உறுப்பினர்களில் ஒருவர் அட்டவணையினர். அட்டவணை பழங்குடியினருக்கு நான்கு இரட்டைத் தொகுதிகள். மூன்று தொகுதிகளில் யாரும் போட்டியில்லை. ஒரு உறுப்பினரை ஆளுநர் நியமனம் செய்தார். உறுப்பினர் பதவி காலம் 5 ஆண்டுகள். நீண்ட குழப்பங்களுக்குப்பின் மாகாண உறுப்பினரல்லாத இராஜாஜி முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

1953-ல் நடைபெற்ற மாநிலப் பிரிவினைகளின் காரணமாக சென்னை மாநில உறுப்பினர்களின் எண்ணிக்கை 205 ஆகக் குறைகிறது. 167 இடங்கள் பொதுவானவை. 37 இரு உறுப்பினர் தொகுதிகள். 1 பழங்குடியின உறுப்பினர். 1959-

ல் மாகாண மறுவரையறைகளால் சென்னைக்கு ஒரு இடம் கூடுதலாகக் கிடைத்து தொகுதிகளின் எண்ணிக்கை 206 ஆகிறது.

1961 இரட்டை வேட்பாளர் நீக்கம் சட்டத்தின்படி, ஒரு தொகுதியில் இரு வேட்பாளர்கள் போட்டிபோடுவது நீக்கப்பட்டு அட்டவணையினருக்கு தனித்தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன. 1965 தேர்தலில் சட்ட சபையின் எண்ணிக்கை 234 ஆக அதிகரிக்கப்படுகிறது. இதில் 42 அட்டவணையினருக்கும், 2 பழங்குடியினருக்கும், ஒன்று ஆங்கிலோ இந்தியருக்கும் ஒதுக்கப்படுகிறது.

1967 தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோற்று அண்ணா முதல்வராகிறார். சென்னை மாநில பெயர் மாற்றும் சட்டம் 1968-ன் படி சென்னை மாநிலம் எனும் பெயர் தமிழ்நாடு என 14.01.1969 முதல் அமலுக்கு வருகிறது. சென்னை மாநில சட்டப் பேரவையும் தமிழ்நாடு சட்டமன்றம் என மாற்றியமைக்கப்படுகிறது. தொகுதிகள் 234 மற்றும் ஒரு ஆங்கிலோ இந்தியர் என அதே எண்ணிக்கையில் தொடர்கின்றன.

1976-ம் ஆண்டு அமைந்த கலைஞர் ஆட்சி 356-ன் படி கலைக்கப்படுகிறது. 1977 தேர்தலில் எம்.ஜி.ஆர் ஆட்சியைப் பிடிக்கிறார். 1980-ல் மறுபடியும் விதி 365 குடியரசுத் தலைவரால் அமல்படுத்தப்படுகிறது. 1988-ல் மீண்டும் சட்டப் பேரவை முடக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி அமலாகிறது. 1986-ன் மேலவை ஒழிப்பு மசோதாவின் படி தமிழ்நாடு மேலவை நீக்கப்படுகிறது. 1991-ல் சட்டசபை கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. அம்மையார் முதல்வராகிறார். தற்போது நடந்து கொண்டிருப்பது சுதந்திரம் பெற்றதற்குப் பிறகான 14 வது சட்டமன்றம். ஆளுநர் டாக்டர் கே.ரோசையா. முதல்வர் செல்வி ஜெயலலிதா. சபாநாயகர் திரு பி. தனபால். துணைச் சபாநாயகர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன். விரைவில் அன்பான வாக்காளப் பெருமக்களே.. உங்களது பொன்னான வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் ... சின்னத்தில் போடுங்கள் என வேட்பாளர்கள் தமிழகத்தை திணறடிக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

முதல்வரிடமுள்ள பொறுப்புகள் ஆட்சிப்பணி, பொது நிர்வாகம், காவல், உள்துறை போன்றவை. இன்றைய சட்டசபை உறுப்பினருக்கான சம்பளம் மாதத்திற்கு 55,000 ரூபாய். இதில் சம்பளம் 8000. ஈட்டுப்படி 7000. தொலைபேசி படி 5000. தொகுதி படி 10000. அஞ்சல் படி 2500. தொகுப்பு படி 2500. வாகனப்படி 20000. இது போக ஏராளமாக சலுகைகள் அரசு சார்பில் வழங்கப்படுகின்றன. சட்டசபை

நடக்கும் போது அதற்கு முன்னர் இரு நாட்களும் பின்னர் ஒரு நாளும் என நாளொன்றக்கு 500 ரூபாய். பயணச் சலுகையாக இரண்டாம் வகுப்பு குளிர் சாதன வசதியுடன் தொடர் வண்டிப் பயணத்திற்கான கட்டணம். அத்துடன் 1கி.மீட்டருககு 10 காசுகள் படி. பயணச் சலுகையாக பேருந்தில் அடையாள அட்டையைக் காண்பித்து மாநில அரசுக்குச் சொந்தமான எந்த ஒரு பேருந்திலும் கணவன், மனைவி அல்லது வேறு ஒரு துணையுடன் எந்த நேரத்திலும் பயணிக்கலாம். பேருந்தில் வழித்தடம் இருந்தால் கி.மீ க்கு 25 காசுகளும், வழித்தடம் இல்லாதிருந்தால் 50 காசுகளும் பயணப் படியாகப் பெறலாம். மருத்துவ வசதியாக உறுப்பினருக்கும் குடும்பத்திற்கும் தங்குமிடத்துடன் அரசு நடத்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறலாம். வெளி அங்காடியில் வாங்கும் மருந்திற்கான தொகையை அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மாதத்திற்கு 250 செலுத்தி சட்டப்பேரவை உறுப்பினர்க்கான அடுக்குமாடிக் குடியிருப்பில் தங்கலாம். நேரடி தொலைபேசி வசதியும் உண்டு. இருப்பிடத்தில் தெலைபேசி நிறுவுவதற்கான கட்டணத்தை அரசே கொடுக்கும். எழுது பொருட்களாக சிறிய கடிதத்தாள் 3700, பெரிய கடிதத்தாள் 1500, பெரிய உறை 750, சிறிய உறை 1500, ஒரு ஷீரோ பேனா, நாட்காட்டி போன்றவையும் அரசு கொடுக்கிறது. சட்டசபை நடைபெறும் போது தமிழ், ஆங்கிலம் தட்டச்சு செய்ய உதவியாளர்கள் உண்டு. உணவு வசதி உண்டு. இலவச நாளிதழ் கிடைக்கிறது. முன்னால் சட்டப்பேரவை உறுப்பினருக்கு 12000 ஓய்வூதியம். குடும்ப ஓய்வூதியம், பயண, மருத்துவ சலுகைகளும் உண்டு.

ஓரே தேசமாக இந்தியாவை வெள்ளையர்கள் மாற்றியமைத்தார்கள் என்பது எவ்வளவு மறுக்க முடியாத உண்மையோ அவ்வாறே வேறு பல நன்மைகளும் இந்தியாவிற்குக் கிடைத்தது. முக்கியமாக போக்குவரத்து வசதிகள், தந்தி போன்ற தகவல் பரிமாற்ற முறைகளைக் குறிப்பிடலாம். சிறப்பான தந்தி பரிமாற்ற வசதிகள் இருந்ததாலேயே பற்றி எரிந்த முதல் சுதந்திரப் போரை ஆங்கிலேயர்களால் கட்டுக்குள் கொண்டு வர இயன்றது. அட்டவணையினருக்கு சட்டரீதியாக பாதுகாப்பு கிடைத்ததற்கும் ஆங்கிலேயர் காரணமாகிறார்கள்.

சென்னை மாகாண சட்ட மன்றத்தில் 1924-ம் ஆண்டு ஆகஸ்ட் இருபத்தி இரண்டாம் நாளில் மதிப்பிற்குரிய இரட்டைமலை சீனிவாசன் போன்றவர்களால் தாக்கலான தீர்மானத்தின் படி, மற்ற சாதிக்காரர்கள் பயன்படுத்தும் பொது வழிகளை அட்டவணையினரும் பயன்படுத்தலாம், பொதுக்குளத்தை,

பொதுக்கிணற்றைப் பயன்படுத்தலாம், அரசாங்க அலுவலகங்களினுள் போகலாம் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆதிக்க சாதியினரின் பெரும்பாலான ஊர்களில் இன்றைக்கும் பல கூடாதுகள், முடியாதுகள் நடைமுறையில் இருக்கின்றன என்ற போதிலும் சட்டப்படி உரிமையுள்ளது என்ற அளவிற்காவது அன்றைக்கு இந்த தீர்மானம் நிறைவேறியது ஆகப்பெரும் சாதனையே. அவ்வாறே பறையர், பள்ளர் என்பதற்குப் பதிலாக ஆதிதிராவிடர் என்றே குறிப்பிடப்படவேண்டும் என்பதும் சட்டடமாக 1922-ல் நிறைவேறியிருக்கிறது.

நீதிக்கட்சியின் முக்கியத் தலைவர்களாக கல்வியறிவு பெற்ற உயர்சாதியினரே இருந்தார்களெனத் தெரிகிறது. தேவர், நாடார், வன்னியர் போன்ற சாதிகளிலிருந்து குறிப்பிடும்படியான தலைவர்கள் நீதிக்கட்சியில் இருந்ததாகத் தெரியவில்லை. சென்னையைச் சுற்றிலும் முதலியார்கள் நிறைய இருந்ததால் அவர்களது பெயர்களே தமிழ்நாட்டின் முன்னோடி நிகழ்வுகளில் இடம்பெறுகின்றன. மேலும் அன்றைக்கு சென்னையிலிருந்த மெட்ராஸ் பல்கலைக்கழகமும் முக்கியக் காரணம். அது போலவே தெலுங்குமொழி பேசும் நாயுடு, செட்டியார், ரெட்டியார்களும் கல்விபெற்று முன்னேறிய சமூகத்தவராக இருந்திருக்கிறார்கள். கல்வி பெற்று, பொருளாதார நிலையில் உயர்ந்த நிலையிலிருந்தும் இவர்கள் அன்றைக்கு வாழ்ந்த அடித்தட்டு மக்கள், அட்டவணை சாதியினர் முன்னேற்றம் பற்றி அக்கறைப்பட்டதாகப் பதிவுகள் இல்லை. ஒரு சிலர் அன்புள்ளம் கொண்டவர்களாக இருந்திருக்கலாம். பெரும்பாலும் ஏழை மக்களைச் சுரண்டுவதும், அநியாயமாக வேலை வாங்குவதும், மிக இழிவான சாதி வேறுபாடு கடைபிடிப்பதும், பெண்களை போகப் பொருளாகப் பயன்படுத்துவதும் என அனைத்துத் தளங்களிலும் சமூகம் கீழ் நிலையிலேயே இருந்திருக்கிறது. பிராமணர்களின் சாதி வெறுப்பு உலகறிந்த ஒன்று. சில தலைவர்கள் குறிப்பிடுவது போல் 100 பேர் ஒரு பள்ளியில் படித்தார்களானால் 90 பேருக்கும் மேல் பிராமணர்களாகவே இருந்திருக்கிறார்கள். மற்ற சமூகத்தவரில் வசதியிருந்த வெகு சொற்பமானவர்கள் கல்லூரி வரை படித்திருக்கிறார்கள். அட்டவணை சாதியினரில் கல்லூரிக் கல்வி வரை சென்றவர்கள் வெகு அரிது.

ஆங்கிலேயர்களால் பல பள்ளிகள் தொடங்கப் பெற்றாலும் அவை வெள்ளையர்களுக்கே என இருந்திருக்கின்றன. பின்னர் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளாக மாற்றம் பெற்றாலும் எல்லோரும் படிக்க இயலவில்லை. கிறித்துவமும்

பள்ளிகளைத் தொடங்குகிறது. நாடார்களின் எழுச்சியில் கிறித்துவ மதத்தால் உண்டான கல்வி பெரும்பங்கு வகித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. முதலியார், வெள்ளாளர்களுக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரி மிகப்பெரியதொரு அடித்தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. திராவிட அரசியலுக்குள் நுழைந்த பெரும்பாலான அண்ணா காலத்தவர்கள் இக்கல்லூரியின் வார்ப்புகளே. வணிகத்தில் பெருஞ்செல்வம் ஈட்டிய பச்சையப்ப முதலியாரின் உயிலின் படி இக்கல்லூரி 1842-ல் அறக்கட்டளை மூலம் தொடங்கப்படுகிறது. பின் 1889-ல் கல்லூரியாகத் தகுதி உயர்த்தப்படுகிறது. ஆங்கிலேயர் நிதியுதவியின்றி தொடங்கப்பட்ட பழமையான இந்து கல்லூரி இது என அறியப்படுகிறது. இக்கல்லூரியில் 1927 வரை ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை எனக் குறிப்புகள் கிடைக்கின்றன. 1947 வரை இந்து மாணவர்கள் மட்டுமே படித்திருக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் கல்கத்தா, சென்னை, பம்பாய் என தலைவர்கள் படை படையாய் அணிவகுத்ததற்கு முக்கியக் காரணமாக அமைவது இந்த நகரங்களில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகங்களே என்றால் அது மிகையாகாது. தமிழர்கள் கல்வியறிவில் சிறந்து விளங்கியதிற்கு பெரிய அளவில் காரணமாக இருந்தது 1857-ல் தொடங்கப்பட்ட சென்னை பல்கலைக்கழகமே. மேலை நாட்டுக் கல்வியும் அதன் மூலமான அறிவுத் தேடலும் சிந்தனை வீச்சுமே நாம் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம் எனும் தன்னெழுச்சியை உண்டாக்கியிருக்கிறது. மாநிலக் கல்லூரியின் பங்கும் மகத்தானது. கிறித்துவக் கல்லூரிகளும் கல்வி மேம்பாட்டிற்கு சிறந்த சேவையாற்றியிருக்கின்றன. நீதிக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலை சுதந்திரத்திற்குப் பிறகான கல்வியில் பெரும்பங்காற்றியிருக்கிறது.

வெள்ளையர்களிடம் இட ஒதுக்கீடு கேட்டு விண்ணப்பித்த போது பஞ்சமர்களைச் சேர்த்துக் கொண்ட நீதிக்கட்சியர், ஆட்சிக்கு வந்தவுடன் தங்களுக்கு மட்டுமே தனி ஒதுக்கீட்டுச் சட்டம் இயற்றிக் கொண்டதாகச் தெரிகிறது. அன்றைக்கு நீதிக்கட்சியிலிருந்த திரு.எம்.சி. ராஜா போன்றவர்கள் அட்டவணையினருக்கு ஒதுக்கீடு செய்யாத நீதிக்கட்சியிலிருந்து 1923-ல் வெளியேறியதாக பதிவுகள் சொல்கின்றன.

நாயுடு, முதலி, செட்டி என பல சாதியினர் இணைந்து ஆட்சிக்கு வந்த போதிலும், ஆரம்ப ஆட்சி வருடங்களிலேயே இவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து விட்டன. தமிழர், தெலுங்கர் என்ற வேறுபாடு தலைதூக்குகிறது. ஆட்சி அதிகாரத்தில் தெலுங்குமொழி பேசுபவர்களுக்கே பெரும்பாங்கு கிடைக்கிறதென போர்க்கொடி உயர்த்தப்படுகிறது. 1923 தேர்தலிலேயே சுயராஜ்யக் கட்சியினர் ஆதிக்கம் பெறுகிறார்கள். உள்ளிருப்பு வெளிநடப்பு என சபை திணருகிறது. இரு தேர்தல்களில் வெற்றி பெற்ற நீதிக்கட்சி 1926-ல் தோற்கிறது. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் எக்கட்சியையும் சாராத டாக்டர் சுப்பராயன் காங்கிரஸ் ஆதரவோடு முதல்வராகிறார். காங்கிரஸ் எதிர்த்த சைமன் குழுவை சுப்பராயன் ஆதரிக்கிறார். காங்கிரஸ் ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட்டதால் நீதிக்கட்சியின் ஆதரவு பெறப்படுகிறது. புதிய அமைச்சர்கள் சேர்க்கப்படுகின்றனர். சுதந்திர இந்தியாவில் பின்னர் நிகழப்போகும் அரசியல் கூத்துக்களுக்கு கட்டியம் கூறுவது போல் அன்றைக்கே காட்சிகள் சீரும் சிறப்புமாக நடந்தேறுகின்றன. பின்னர் வந்த 1930 ஆட்சியிலும் பல குளறுபடிகள். ஆட்சி மாற்றங்கள்.

மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ் போன்றவர்கள் 1922-ல் ஸ்வராஜ் பார்ட்டி என்ற சுயராஜ்யக் கட்சியைத் தொடங்குகிறார்கள். தமிழகத்தில் சத்தியமூர்த்தி, ஸ்ரீநினிவாச ஐயங்கார் போன்றவர்களால் ஆரம்பிக்கப்படுகிறது. சுயராஜ்யக் கட்சியின் நோக்கமாக ஆங்கிலேயேரின் இரட்டை ஆட்சி முறை சட்டமன்றத்திற்குச் சென்று ஏதேனும் செய்து சபை நடவடிக்கைகளை முடக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டது. சத்தியமூர்த்தி அவர்கள் காமராஜரின் பெருமதிப்பைப் பெற்றவராகப் பின்னாட்களில் இருந்திருக்கிறார்.

ஆரம்பத்தில் முஸ்லிம்கள், அட்டவணையினரை அணைத்துக் கொண்ட நீதிக்கட்சியார், பதவிகள் வரும் போது முதலி, பிள்ளை, நாயுடு, ரெட்டி, செட்டி என தங்களுக்குள்ளேயே பிரித்துக் கொள்கிறார்கள். இதனால் முக்கியமான இந்த இரு சமூகத்தவரும் நீதிக்கட்சியிலிருந்து பின்வாங்குகிறார்கள். அன்னிபெசண்ட் அம்மையாரின் ஹோம்ரூல் இயக்கத்தோடும் நீதிக்கட்சிக்கு ஏகப்பட்ட முரண்பாடுகள். ஹோம்ரூல் இயக்கம் பிராமணர்களையும், அவர்களது மேட்டிமையையும் முன்நிறுத்துவதாகத் தொடர்ந்து குற்றஞ்சாட்டுகிறார்கள். நீதிக்கட்சியார் பேசுவதும், எழுதுவம் வரம்பு மீறியதாக இருக்கிறது. வழக்குகள் நடைபெறுகின்றன.

நீதிக்கட்சியாரின் இந்திய விடுதலையென்பது ஆங்கிலேயே ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு அவர்களது நாட்டின் கீழ் ஒரு தனி சுயாட்சி பெற்ற நாடாக இருப்பது எனும் அளவிலேயே பேசப்படுகின்றன. இந்திய தேசியம் என்ற மையத்தொகுப்பிலிருந்து வெகுதூரம் விலகுகிறார்கள். காங்கிரஸில் பிராமணர் ஆதிக்கம் அதிகம் என்று அக்கட்சியை வெறுக்கிறார்கள். காந்தி பிராமண ஆதரவாளர் என அவரையும் ஒதுக்குகிறார்கள். ஒத்துழையாமை, ஜாலியன் வாலாபாக், உப்புச் சத்தியாகிரகம் என எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. போதாக்குறைக்கு தங்களுக்குள்ளேயே தீராத கருத்து வேறுபாடுகள், முட்டல் மோதல்கள்.

முதல் தேர்தலில் அனைத்து இடங்களையும் வென்றவர்கள் 1937 தேர்தலில் வெறும் 18 இடங்கள் பெற்று தங்களது பதிமூன்று கால ஆட்சியை காங்கிரசிடம் இழக்கிறார்கள். இடையில் பெரியார் கொள்கைகளில் சமாதானமடைந்து அவரை நீதிக்கட்சி தலைவராக்குகிறார்கள். நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக மாற்றும் பெரியாரின் முயற்சியைத் தடுக்க முடியவில்லை. போட்டிக் கூட்டம் போடுகிறார்கள். பெரியாரின் தளபதியாக இருந்த அண்ணாத்துரை அவர்களின் மாணவர் ஈர்ப்பிற்கு முன் இவர்களால் ஏதும் செய்ய இயலவில்லை. 1944 திராவிடர் கழகத்தோடு நீதிக்கட்சி ஆதிக்கம் முடிகிறது. போட்டி நீதிக்கட்சியார் 1952தேர்தலில் ஒரு இடம் வெல்கிறார்கள்.

நீதிக்கட்சியின் தொடர்ச்சியாகவே திராவிடர் கழகம் இருக்கிறது. தி.மு.க. வைத் தொடங்கிய அண்ணா கட்சியின் பொதுச் செயலாளராகச் செயல்படுகிறார். திராவிடர் கழகமாகப் பெயர் பெற்ற நீதிக்கட்சி அரசியல் ஈடுபடாது என்றும், கட்சி சாராத சமுதாய பகுத்தறிவு விழிப்புணர்வு இயக்கமாக மட்டுமே பங்காற்றும் எனவும் பெரியார் அறுதியிடுகிறார். பெரியாரோடு சேர்ந்து பதவி சுகத்தைக் கண்டிருந்த நீதிக்கட்சியாருக்கும், கலைத்துறையில் தாகம் கொண்டிருந்த கழகத்தாருக்கும் இந்த அறிவிப்பு அவ்வளவு உவப்பானதாக இல்லை.

திராவிட இனம், தமிழ் மொழி எனத் தமிழர்கள் வீறு கொண்ட எழுந்ததின் பின்னணியில் அடிபடும் பலமான பெயர் கால்டுவெல். 1856-ல் ஆங்கிலத்தில் வெளியான அவரது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல், திராவிடர்களும் அவர்களது மொழியும், இந்தோ-ஆரிய மொழிக்குடும்பமான சமஸ்கிருதத்திலிருந்து, ஆரிய வெள்ளையர் இனத்திலிருந்து வேறானது என்பதை

ஆதாரங்களோடு எடுத்துரைக்கிறது. தமிழ்மொழி தனித்துவமானதெனவும் பறை சாற்றுகிறார் கால்டுவெல் ஐயர். ஐயர் என சிலரால் கொண்டாடப்படும் இந்த ராபர்ட் கால்டுவெல் மத போதனைகளுக்காக சென்னைக்கு 1838-ல் வந்த ஒரு அயர்லாந்து கிறித்தவ பாதிரியார். 1841-ல் தமிழ் குரு பட்டம் பெறுமளவிற்கு தமிழில் தேறினாராம். திருநெல்வேலி மாவட்டத்தில் இடையன்குடி என்ற ஊரில் நீண்ட வருடங்கள் தங்குகிறார். மதப்பணியையும், தமிழ் ஆராய்ச்சியையும் தொடர்ந்திருக்கிறார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்றதால், தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தமிழைப் பற்றிய உயர்வான எண்ணம் பீறிடுகிறது. கால்டுவெலுக்கு முன்னரே தமிழர்களுக்கு இந்த உயர்வு மனப்பான்மை உண்டெனினும் அதற்கு உரமிட்ட பெருமை கால்டுவெல் ஐயாவையே சேரும். அதனாலேயே திராவிட மொழியியலின் தந்தை எனப் போற்றப்படுகிறார். தமிழகத்தில் சுதந்திரப் போராட்ட காலத்திற்கு முன்பிருந்தே ஒருவரைச் சாதிப் பெயர் சொல்லி அழைப்பதே வழக்கத்தில் இருந்திருக்கிறது. நாயக்கரே, செட்டியாரே, முதலியாரே என சாதிப் பெயர் சொல்லி கூப்பிட்ட நிலையை மாற்றியவர் பெரியார் என்றே கூறலாம். செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் சாதி பெயர்களில் அழைப்பதை தவிர்க்க வேண்டும் எனத் தீர்மானமியற்றி அதுவரை இருந்த இராமசாமி நாயக்கரை இராமசாமியாக்குகிறார். அதன் பின்னர் ஓரளவிற்கு சாதி ஒட்டு குறைந்தது என்பதே வரலாறு. சமீப காலமாக சாதி ஒட்டு மீண்டும் புத்துயிர் பெற்று வருகிறதென்பது இது பெரியார்களுக்கான மண் அல்ல என்பதைக் காட்டுகிறது எனலாம்.

தந்தை பெரியார் என திராவிட இயக்கத்தவர் போற்றும் அளவிற்கு பெரியார் செய்த புரட்சிதான் என்ன? காந்தியையும், காங்கிரஸையும் புறம் தள்ளி வெற்றி பெற்ற திராவிடக் கட்சியாரின் சாதனைகள் எவை? நூறுவருடங்களுக்கு முன்னால் தென்தமிழகத்தை திராவிடம் பேச வைத்த, இன்றைய அரசியலுக்கு முன்னோடி இயக்கமான நீதிக்கட்சியை விமர்சனத்திற்கு உட்படுத்துவது சரியாக இருக்குமா? சுதந்திரம் வேண்டாம் எனக் கூறும் அளவிற்கு இவர்களின் கோட்பாட்டைக் கட்டமைத்தது எது? ஒரு வேளை நீதிக்கட்சி தோன்றாமல் இருந்திருக்குமேயானால் தமிழர்களின் சமூக, அரசியல், பண்பாட்டுக் கூறுகள் எப்படி இருந்திருக்கும்? இன்றைக்கு வட மாநிலங்களை விட அட்டவணையினர், முஸ்லிம்கள் தமிழ்நாட்டில் ஓரளவிற்காவது நல்ல நிலைமையில் வாழ்வதற்கு நீதிக்கட்சியார்தான்

காரணமென்றால் சரியாக இருக்குமா? செல்வந்தர்களால் நிறைந்திருந்த நீதிக்கட்சியார், அடித்தட்டு மக்களையும் அரவணைத்துச் சென்றிருந்தால், உட்கட்சிப் பூசலின்றி சிறப்பான ஆட்சியைக் கொடுத்திருந்தால் தமிழகம் இன்று எப்படி இருந்திருக்கும்?

இராமசாமி நாயக்கர், அன்னபூரணி ஆட்சி செய்யும் காசி வீதிகளில் ஒரு வாய் சோற்றுக்கு கட்டிப்புரண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்த போது, தமிழன் என்ற பெயரில் அதுவும் ஒரு பைசாத்தமிழன் என்ற பெயரில் தமிழ் இதழ் ஒன்றை எப்படியாவது வெளியிட வேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டிருந்தவரைப் பற்றி திராவிடமயமாக்கிய பாடப்புத்தகங்களில் இடம் பெறச் செய்யாமல் தடுத்தது யார்? எந்தச் சக்தி? திராவிடத்திற்கு முன்னோடியாக தமிழ், தமிழர், ஆதித்தமிழர் என்று கூப்பாடு போட்டுக்கொண்டிருந்த இந்த அற்புதமான போராளியை தமிழ் சமூகம் மறந்தது எதனால்? பெரியாரைக் கொண்டாடிய திராவிடத்தார்கள், அயோத்திதாசப் பண்டிதர் என்ற இந்த மாபெரும் மனிதரை மறந்தது ஏன்?

மதிப்பிற்குரிய அயோத்திதாசப் பண்டிதர் 1845 முதல் 1914 வரை சென்னையை மையமாகக் கொண்டு வாழ்ந்திருக்கிறார். தென்னிந்தியாவின் முதல் சாதி எதிர்ப்பு போராளி என அடையாளம் காணப்படுகிறார். சமூக சேவகராகவும், சித்த மருத்துவராகவும் வாழ்ந்திருக்கிறார். தமிழகத்தின் அரசியல், சமயம், மொழித்துறைகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்திருக்கிறார். ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவராக அறியப்படும் ஐயா, 1870களிலேயே கிறித்துவ மதமாற்றத்தை எதிர்த்திருக்கிறார். தமிழன் இதழை நடத்துகிறார். பள்ளிகளைத் தொடங்குகிறார். பிராமண எதிர்ப்பு பேசிய திராவிடர்கள், குறிப்பாக திராவிடர்களில் நிறைந்திருந்த தமிழ் சைவம் பேசிய வெள்ளாளர்கள் சாதி ஒழிப்பை பேசாததைக் கண்டிக்கிறார். அன்றைய மக்கள் தொகை கணக்கெடுப்பில் யாரெல்லாம் கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் இல்லையோ அவர்களெல்லாம் இந்துக்கள் எனக் குறிப்பிடுவதை எதிர்க்கிறார். அட்டவணையினரை ஆதித்தமிழர்கள் எனக் குறிப்பிடுமாறு வேண்டுகோள் விடுக்கிறார். 1891-ல் சாதியற்ற திராவிட மகாஜன சபையை நிறுவுகிறார். வடநாட்டுக் காங்கிரஸில் பிராமணர்களும், தென்னாட்டுக் காங்கிரஸில் வெள்ளாளர்களும் நிறைந்திருப்பதை அறிந்து, இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுத்தால் அதை ஆதித்தமிழர்களிடமே கொடுக்க வேண்டும் என அறைகூவல் விடுக்கிறார். பௌத்தக் கொள்கைகளில் சிந்தனை வளம் பெற்று

அதனை மீட்டுருவாக்கம் செய்வதில் முனைப்புடன் பணியாற்றுகிறார். நூல்கள் பல எழுதிய பண்டிதராகவும் அறியப்படுகிறார்.

1859-ல் பிறந்த திவான் பகதூர் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் வழக்கறிஞராக அறியப்படுகிறார். மதுராந்தகம் அருகே பிறந்த இவரது குடும்பம் அன்றைய சாதியக் கொடுமைகளால் தஞ்சாவூர், கோயம்புத்தூர் என இடம் பெயர்கிறது. கோவையில் படிப்பைத் தொடர்கிறார். நீலகிரியில் எழுத்தராகச் சில காலம் பணிபுகிறார். 1891-ல் பறையர் மகாசன சபையைத் தொடங்குகிறார். ஆயோத்திதாசரோடு இணைந்து பணியாற்றுகிறார். பறையன் என்ற மாத இதழையும் 1900-கள் வரை நடத்துகிறார். பிழைப்புத் தேடி தென்னாப்பிரிக்காவுக்குச் செல்கிறார். அங்கு காந்தியோடு பழக்கம் இருந்ததாகவும் அவரது தமிழ் கையெழுத்தை கற்றுக்கொடுத்தவராகவும் அறியப்படுகிறார். 1921-ல் திரும்பி வந்து சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு நியமன உறுப்பினராகச் செல்கிறார். நீண்ட காலம் சட்டமன்றத்தில் பணியாற்றுகிறார். அட்டவணையினர்கான பல தீர்மானங்களைக் கொண்டு வருகிறார். இலண்டனில் நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டில் அட்டவணையினப் பிரதிநிதியாகப் பங்குபெறுகிறார். பின்னர் சென்னை மாகாண அட்டவணையினர் அமைப்பை உருவாக்கி சமூக மாற்றத்திற்காகப் பாடுபடுகிறார். அட்டவணையினருக்கான சலுகைகள் கிடைக்கப் பெற்றதில் அய்யாவின் பங்கு மகத்தானது. திவான் பகதூர் என அழைக்கப்படும் எம்.சி. இராஜா அவர்களும் அட்டவணையினருக்கான முன்னோடித் தலைவராக அறியப்படுகிறார்.

தமிழகத்தில் அட்டவணையினர் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட இந்த இருமலைகளையும் திராவிட இயக்கம் எவ்வளவு பெருமைப்படுத்தியிருக்கிறது? அன்று நிலவிய சாதிக் கொடுமைகளிலிருந்தும், சமூக ஏற்ற தாழ்வுகளிலிருந்தும், அட்டவணையின மக்களைப் பாதுகாக்க முதல் குரல் எங்கிருந்து வந்திருக்க வேண்டும்? உண்மையிலேயே அன்று யாருக்கு இட ஒதுக்கீடு தேவையாய் இருந்தது? பிராமணரல்லாதோர் பிராமணர்களோடு போட்டியிட முடியாதென்றால், அட்டவணையினர் இந்த இருவரோடும் போட்டி போட முடியாதே? நாம் இந்தியர், நாம் திராவிடர், நாம் தமிழர் என எவ்வளவோ பேசியும், எழுதியும் நாடு சுதந்திரம் பெற்று இத்தனை நெடிய வருடங்களாகியும், அட்டவணையினருக்கான இவ்வளவு சட்டங்கள் இருந்தும் இன்னும் இருசக்கரவாகனத்தில் ஏறி உட்கார்ந்து சாதி இந்துக்கள் தெருவழியே போக முடியாமல் இருப்பது எதனால்? இன்றைக்கும்

தனிக்குவளை இருக்கிறதென்றால் அன்றைக்கிருந்த கட்டி தட்டிப் போன சமூகத்தில் எந்த அளவிற்கு சாதிப்பாகுபாடு தலைவிரித்தாடியிருக்கும்?

திராவிடர் எனும் போர்வையால்தானே நாயுடுவும், முதலியாரும், நாயரும் ஒன்றாக இணைய முடிந்தது. அதை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போனதற்கு என்ன காரணம்? தமிழர்க்கு அனைத்துமே சாதிதானா? திராவிடர் போய் நாம் தமிழர் என்ற கட்டமைப்பு வந்ததே அது என்னாயிற்று? திராவிடர், தமிழர் எனும் அடையாளத்திற்குள் வர விரும்பாதவர்கள், வெள்ளாள சாதி, முக்குலத்தோர், நாயக்கர், கவுண்டர் என ஒன்றாவதன் நோக்கம் என்னவாக இருக்கும்? செட்டியாரும், ரெட்டியாரும், கொங்கு வேளாளக் கவுண்டரும் ஒன்று என எதன் அடிப்படையில் அல்லது எதற்காகக் கொடிபிடிக்கிறார்கள்? வேளாளக் கவுண்டரும், வன்னியக் கவுண்டரும் ஒன்றாகும் காலம் விரைவில் வருமோ? நெல்லை சைவப் பிள்ளையும், புதுக்கோட்டை சோழிய வெள்ளாளரும், தஞ்சாவூர் பிள்ளையும், தொண்டை மண்டல செங்குந்தரும் வெள்ளாளர் எனப் பொதுவில் இணைய முடியுமென்றால், சிவகங்கை அகம்படியாரும், கும்பகோணம் அகமுடையாரும், காஞ்சிவரம் அகமுடையாரும் ஒன்று எனும் போது, நாம் அனைவரும் தமிழர்கள் எனும் அடையாளத்திற்குள் மட்டும் வர முடியாதது ஏன்? தமிழ் மண்ணில் வாழும் அனைவரும் தமிழர்கள் என்ற அடையாளம் இருந்திருந்தால் இளவரசனும், கோகுல்ராஜும் தண்டவாளத்தில் கிடந்திருக்கமாட்டார்களே? செம்புலப் பெயர் நீர்போல அன்புடை நெஞ்சம்தாம் கலந்ததுவே என காதலைக் கொண்டாடுவதாகச் சொல்லப்படும் இம்மண்ணும், இம்மொழியும், தலைவனைப் பிரிந்து அழுத காதல் பிரிவாற்றாமைக் கண்ணீர் தலைவியின் முலையில் குளம்போலத் தேங்கி அக்கண்ணீர் குளத்தில் மீன்கள் கிடைக்குமா எனத் தேடிய கொக்கின் கதை பேசும் இம்மக்கள் கூட்டத்தில், காதலித்த ஒரே காரணத்திற்காக எப்படி நூற்றுக்கணக்கான கொலைகள் நிகழமுடியும்? பேச்சுவராத கதாநாயகியை, பேசமுடியாத கதாநாயகன் மரக்கிளையில் அணைத்து பச்சக் என முத்தம் கொடுப்பதைக் காட்டியது யார்? மன்மதலீலையை வென்றவர் உண்டோ என ஊரெல்லாம் டமரா அடித்தது யார்? கதாநாயகி குத்துமுலையைத் தீட்டியும், ஈர ஆடையைக் காட்டியும் கோடிகளைக் குவித்தது யார்? முப்பது சாதித்தலைவர்கள் ஒரே மேடையில் முழங்க முடிந்தால் இங்கு எதை வேண்டுமானாலும் சாத்தியமாக்கலாம் எனும் நிலைமை எப்படி வந்தது? சாதித் தலைவர்களுக்கு தமிழ், தமிழர், திராவிடர், இந்தியர், மனிதர் என்பதா முக்கியமாக இருக்கும்? அவரவர் சாதியை வளர்க்க, சாதி வெறியைத்

தூண்ட, எது முக்கியம் என்பதை, எத்தனை கொலைகள் முக்கியம் என்பதை, அவர்கள் மிகத் தெளிவாகவே அறிவார்கள். காதலைத் தயாரித்தும், காதலை இயக்கியும், காதலைப் பாடல்களாக்கியும், காதலைச் சிரிப்பாக்கியும், காதலை காசு பணமாக்கியும், தோட்டம் நிலங்களாக்கியும், நகை வீடுகளாக்கியும், வாரிசுகளுக்கும் வளர்த்தெடுக்கும் இந்தக் காதல் மன்னர்கள், தம் சாதிப் பெண்ணைக் காதலித்தால் மட்டும் கழுத்தில் அருவாளைப் பாய்ச்சுவது ஏன்?

தமிழை காட்டு மிராண்டி மொழி எனப் பெரியார் வசை பாடியதற்குக் காரணம் என்ன? தள்ளாத வயதிலும் அவரைப் போராடத் தூண்டியது எது? பெரியார் ஏன் சுயமரியாதையே முக்கியமெனக் கண்டார்? மூலைமுடுக்கெல்லாம் கோவில், குளங்களாக நிறைந்திருக்கும் இம்மண்ணில் கடவுள் இல்லை என எப்படி அவரால் உறுதியாகக் கூற முடிந்தது? கொள்ளைக்காரர்களிடம் நாட்டைக் கொடுத்தால் என்னாகும் என்பதைத் தெரிந்தே தான் அவர் சுதந்திரம் வேண்டாம் எனச் சொன்னாரா? அன்றைக்கு முக்கியமாகத் தேவைப்பட்டது எது? இந்திய விடுதலையா? சமூக விடுதலையா? பெரியார் தம் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட அந்த சமூகவிடுதலைக்குத் தடையாக இருந்தது எது? தடையாக இருப்பது எது? அந்த மாமனிதர் கனவுகண்ட அந்த சமூக மறுமலர்ச்சி தமிழர் மனங்களில் மலருவதற்கான சாத்தியக்கூறு ஏதேனும் இருக்கிறதா?

பொருளியலிலும், தத்துவத்திலும் பட்டம் பெற்ற அண்ணாத்துரை அவர்கள் ஐந்தாம் வகுப்புவரை படித்ததாகச் சொல்லப்படும் பெரியாரை தம் தலைவராக ஏற்று கொண்டதே பெரியாரின் மாண்பையும், அண்ணாவின் சமூக சிந்தனையையும் தெளிவாகக் காட்டுகிறது. 1879-ல் பிறந்த பெரியாருக்கு படிப்பில் ஆர்வம் வளராமல் தந்தையின் வணிகத்தில் நாட்டம் கொள்கிறார். வைணவ தெலுங்குக் குடும்பம் என்பதால் பெரியாருக்கு வீட்டில் வைணவப் பண்டிதரின் உபதேசம் கொடுக்கப்படுகிறது. 13 வயதில் நாகம்மையாரோடு திருமணம். அந்தக் காலத்து மைனர் வாழ்க்கையை சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

காசியில் மீசை காட்டிக் கொடுக்க இந்தச் சமூகம் எத்தகைய கொடுமையானது என்பதை உணர்கிறார். பிராமணர்களின் சுயநல வாழ்க்கையைக் கண்டு வெதும்புகிறார். மக்களின் நம்பிக்கையை மூலதனமாக்கி, கடவுளை காசாக்கி வாழும் இந்த சிறு கூட்டத்தாரே இச்சமூகக் கேடுகளுக்கு, சாதிமதக் கொடுமைகளுக்கு, உழைப்புச் சுரண்டலுக்குக் காரணமாக இருக்கிறார்கள்

என்பதை தமது அனுபவத்தில் கண்டடைகிறார். எத்தனை பட்டங்கள் வாங்கினாலும் கிடைக்காத பேரறிவை இப்படி சமூகத்திலிருந்து கற்றுக் கொண்டவர்கள் வெகு சிலரே.

பிராமண வெறுப்பு இறைமறுப்பாக மாறுகிறது. காந்தியின் தலைமையை ஏற்று தேச விடுதலையில் ஈடுபடுகிறார். ஈரோடு நகராட்சித் தலைவராக இருந்து பல நல்ல காரியங்களை நிறைவேற்றுகிறார்.

காங்கிரஸ் கொள்கைக்கு ஏற்ப நகராட்சித் தலைவர் பதவியைத் துறந்தும், கதராடை உடுத்தியும், கள்ளுக்கடை மறியலில் குடும்பத்தோடு ஈடுபட்டும் தேச விடுதலைக்குப் பாடுபடுகிறார். தீண்டாமை ஒழிப்பில் முனைப்புக் காட்டுகிறார். 1922-ல் சென்னை இராஜதானியில் காங்கிரஸ் தலைவராகிறார். வைக்கம் ஆலய நுழைவுப் போராட்டம் பெரியாரை புகழ் உச்சியில் ஏற்றுகிறது. நாராயண குருவோடு அறிமுகமாகிறார்.

திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் கல்வி, அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு வேண்டும் என்ற தீர்மானத்தில் தோல்வி உண்டாக காங்கிரஸிலிருந்து விலகுகிறார். சமூக விடுதலையின் மீது முழுக்கவனமும் திரும்புகிறது. சுயமரியாதை இயக்கத்தை தீவிரமாக்குகிறார். 1925-ல் குடியரசு இதழை தொடங்கி சமூக மாற்றத்திற்குப் பயன்படுத்துகிறார். ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கென ஆங்கில இதழும் நடத்துகிறார். சுயமரியாதைத் திருமணங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஆணும் பெண்ணும் சமமென்கிறார். குழந்தை திருமணம் கூடாதென்கிறார், மக்கள் பெரியார் பின்னால் அணிதிரள்கிறார்கள்.

1909 செப்டம்பர் 15-ல் கைத்தறி நெசவாளர் குடும்பத்தில் பிறந்த காஞ்சிவரம் நடராசன் அண்ணாத்துரை படிப்பில் ஆர்வமாக இருக்கிறார். குடும்பச் சூழ்நிலை படிப்பிற்கு உகந்ததாக இல்லை. பரிமளம் அம்மையாரோடு இளம் வயதிலேயே திருமணம் நடக்கிறது. அறிஞர் அண்ணா என பிற்காலத்தில் போற்றப்பட்ட அண்ணாதுரை, சென்னை பச்சையப்பன் முதலியார் கல்லூரியில் பட்டப்படிப்பை 1934-ல் நிறைவு செய்கிறார். முதுகலையை அங்கேயே தொடர்கிறார். இங்கு படித்த பலரும் பின்னர் அண்ணாவோடு அரசியலில் ஈடுபட்டது வரலாறு.

பச்சையப்ப முதலியார் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணி கிடைக்கிறது. பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் நிரம்பப் பெற்றவராக உருவாகிக்

கொண்டிருக்கிறார். பத்திரிகைத் துறையில் ஆர்வம் கொள்கிறார். அரசியலிலும் நாட்டம் ஏற்படுகிறது.

வெளிநாட்டு சுற்றுப்பயணம் முடிந்து 1932-ல் வரும் பெரியார், ஆட்சியிலிருந்த நீதிக்கட்சியின் தள்ளாட்டத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார். தமது குறிக்கோள்களை ஏற்றுக் கொள்ளவைத்து 1935-ல் நீதிக்கட்சிக்கு தலைவராகிறார். நீதிக்கட்சித் தலைவர்களின் செயல்பாடுகள் தெரிந்திருந்தும் அக்கட்சிக்கு தலைவராகியது பெரியாருக்கு முதல் சறுக்கலாகவே அமைகிறது. பிராமணர் எதிர்ப்பு ஒன்றே இருவரையும் இணைத்தது போலும்.

பெரியார் நீதிக்கட்சித் தலைவராக இருக்கும் போது, அண்ணா நீதிக்கட்சியில் தம்மை இணைத்துக்கொள்கிறார். துடிப்புள்ள இந்த இளைஞர் குடியரசு விடுதலை இதழ்களை கவனித்துக் கொள்கிறார். எழுத்துப் பணி ஆரம்பமாகிறது.

குருவும், சீடனும், இராஜாஜியின் 1937-ன் இந்தித் திணிப்பை கடுமையாக எதிர்க்கிறார்கள். சென்னை மாகாணத்தின் அரசியல் களம் பெரியாரின் பிரதமப் படைத்தளபதியால் வேகமெடுக்கிறது. திராவிடப் பாசறை தமிழ் வெறியாக மாற்றமடைகிறது. மூடநம்பிக்கை, பெண் அடிமைத்தனம், மறுமலர்ச்சி சிந்தனைகள் குறித்து படைப்புகள் வெளியாகின்றன. 1939-ல் கோமளத்தின் கோபம் நாவலை குடியரசு இதழில் எழுதுகிறார் அண்ணா.

1944 சேலம் மாநாட்டில் நீதிக் கட்சியை திராவிடர் கழகமாக மாற்றியதில் அண்ணாவின் பங்கு அளப்பரியது. தமது பேச்சு சாமர்த்தியத்தாலும், வாதத்திறமையாலும் எதிர்த்தவர்களை எல்லாம் புறந்தள்ளி வெற்றி காண்கிறார். தோற்றவர்கள் பழைய நீதிக்கட்சியை மாற்று அணியாக நடத்தும் சூழல் உருவாகிறது. 1946-ல் குமரிக் கோட்டம் நாவலை திராவிட நாடில் வெளியிடுகிறார்.

படாதபாடுபட்டு எவ்வளவோ தியாகங்கள் செய்து கிடைக்கப்பெற்ற 1947 ஆகஸ்டு சுதந்திரத்தை பெரியார் கருப்பு தினமாக அனுஷ்டிக்கத் தயாராகிறார். அண்ணாவிற்கு உடன்பாடில்லை. இருவருக்குமான உறவு விரிசலடைகிறது. பெரியார், மணியம்மை திருமணம் கழகத்தார் அனைவரையும் திகைக்க வைக்கிறது. 1948-ன் மாநாட்டில் அண்ணா வெளிநடப்பு செய்கிறார். பெரியாரின் இரத்த உறவினரான ஈ.வி.கே.சம்பத் உட்பட அண்ணாத்துரை பின்னால்

அணிவகுக்கிறார்கள். குருவிடமிருந்து கண்ணீரோடு விடைபெறுகிறார் தலைமை சீடர்.

தேர்தல் அரசியல் கூடாதென்பது பெரியாரின் கொள்கை. அரசியல் கட்சிகள் மீதும் அரசியல்வாதிகள் மேலும் அவருக்கு நல்லவிதமான எண்ணம் இல்லை. பதவிக்காகவும், பணத்திற்காகவும், அதிகாரத்திற்காகவுமே பெரும்பாலானவர்கள் அரசியலில் நுழைகிறார்கள் என்ற அந்த மாமனிதரின் கணிப்பு சரியே என்பது வரலாறு. மாறாக அண்ணா, ஜனநாயகத் தேர்தலில் பங்பெற வேண்டும் என விரும்புகிறார். அரசியல் மூலம் பதவிகளைப் பெற்று மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் எனும் தெளிவு அண்ணாவிற்கு இருக்கிறது.

1949 இல் கொட்டும் மழையில் ராயபுரம் ராபின்சார் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்ததாகக் குறிப்பிடுவார்கள். அண்ணாத்துரை, இரா.நெடுஞ்செழியன், கே.ஏ.மதியழகன், ஈ,வே.கி.சம்பத், என்.வி.சோமு போன்றவர்கள் முக்கியமானவர்களாக இருந்திருக்கிறார்கள். கருணாநிதியும் ஒரு இருபத்தைந்து வயது இளைஞராக அங்கே இருந்ததாகத் தெரிகிறது. 1967-ல் அண்ணா ஆட்சியைப் பிடித்த போது இவர்களெல்லாம் பெரிய பெரிய மந்திரிகளாக ஆட்சிக் கட்டிலில் அமர்கிறார்கள். ஈ.வி.கே.சம்பத் இங்கும் இல்லாமல் 1961-ல் தமிழ் தேசிய கட்சியை ஆரம்பித்து, கடைசியில் நண்பர்களும் கைவிட, தமிழ்நாட்டு அரசியலில் சரியான இடமில்லாமல் போகிறார்.

நாடு சுதந்திரம் பெற்ற பின் 1951-ல் முதல் தேர்தல் நடக்கிறது. அபபோது சென்னை மாகாண முதல்வராக இருந்த ராமசாமி ரெட்டியாரே சுதந்திர இந்தியாவின் முதல் சென்னை மாகாண முதல்வராகத் தொடர்கிறார். 1949-ல் முதல்வரான குமாரசாமி ராஜா, 1952 ஏப்ரல் வரை தொடர்கிறார். இந்திய அரசியலும், தமிழ்நாட்டு அரசியலும் பல மாற்றங்களைக் காண்கிறது. குறிப்பாக தமிழக அரசியல் அதாவது சென்னை மாகாண அரசியல் பல கேலிக் கூத்துகளைச் சந்திக்கிறது.

முதலியார், செட்டியார், ரெட்டியார்களைப் பார்த்து வன்னியர்களிலும் சாதியெழுச்சி உருவாகிறது. 1896-ல் பிறந்த எம்.ஏ.மாணிக்கவேலு நாயக்கரும், 1918-ல் பிறந்த ராமசாமி படையாச்சியாரும் முக்கியமானவர்கள். மற்ற சாதியினரெல்லாம் ஒற்றுமையாக இருந்து காரியங்களைச் சாதித்துக் கொண்டபோது, அய்யாக்கள்

ருவருக்குள்ளும் சரியான புரிதலில்லை போலும். நாயக்கருக்கு வட ஆற்காட்டிலும், செங்கல்பட்டிலும் செல்வாக்கு என்றால், படையாச்சியாருக்கு தென் ஆற்காட்டிலும், சேலம் பகுதியிலும் அமோகமான மதிப்பு இருந்திருக்கிறது. நாயக்கர் காமன்வீல் கட்சியை ஆரம்பிக்கிறார். படையாச்சியார் தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியை 1951-ல் உருவாக்குகிறார். இரண்டு கட்சிகளுமே 1952 தேர்தலில் சட்டசபையிலும் நாடாளுமன்றத்திலும் குறிப்பிடத்தக்க இடங்களைக் கைப்பற்றுகின்றன.

அன்று விருதுபட்டியாக இருந்த விருதுநகரில் 1903-ல் பிறந்த காமாட்சி என அழைக்கப்பட்ட காமராஜர், ஆரம்ப காலங்களில் ஹோம்ரூல் இயக்கத்தில் இருந்து விட்டு, 1920களில் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து அதன் முழு நேர பணியாளராக ஆகிறார். 1921-ல் மதுரை வந்த காந்தியைச் சந்தித்தது வாழ்வின் திருப்பு முனையாகிறது. பின்னாட்களில் தமிழக அரசியலிலும் இந்திய அரசியலிலும் மகத்தான சக்தியாக வலம் வந்தது பெருமைப்படத்தக்கது.

1908-ல் பசும்பொன் எனும் சிறிய கிராமத்தில் பிறந்த உக்கிரபாண்டி முத்துராமலிங்கம் இளம் வயதிலேயே அரசியலுக்கு வந்துவிடுகிறார். அன்றைக்கு சென்னை மாகாணத்திலிருந்த மதுரை, இராம்நாட், நெல்லை பகுதியை உள்ளடக்கிய கிரிமினல் டிரைப்ஸ் ஆக்ட் அதாவது குற்றப் பரம்பரை சட்டத்திற்கு எதிராக முக்குலத்தோர் என அறியப்படும் கள்ளர், மறவர், அகமுடையாரை ஒன்று திரட்டுகிறார். இச்சாதியார் இரவில் காவல் நிலையத்தில் தங்கவைக்கப்படுவதை எதிர்த்து பல போராட்டங்களை முன்னெடுக்கிறார். 1934-ல் அபிராமத்தில் இச்சட்டத்தை கைவிடக் கோரி ஒரு கூட்டம் நடத்தப்படுகிறது. ஆனால் அப்போதிருந்த நீதிக்கட்சியார் அதனை விலக்குவதாக இல்லை. 1937-ல் இராம்நாட் தொகுதி மூலமாக சட்டசபை சென்று அப்போது முதல்வராக இருந்த இராஜாஜியிடமும் இக்கோரிக்கையை வலியுறுத்துகிறார். அவரும் அசைந்து கொடுப்பதாய் இல்லை. பின்னர் வந்த காலங்களில் மதுரை டி.வி.எஸ் தொழிலாளர் சங்கத்திற்கு தலைவராகி தொழிலாளர் இயக்கத்தை முன்னெடுக்கிறார். தொழிற்சங்கவாதியாக இருந்த போதிலும் பொதுவுடைமை கொள்கைகளில் இவருக்கு உடன்பாடில்லை எனத் தெரிகிறது. போகுமிடங்களிலும், மேடை பேச்சுக்களின் போதும் வன்முறை பரவுகிறது என்பதற்காக இராம்நாட்டை விட்டு வேறெங்கும் போகக் கூடாது என்றும், பேசக்கூடாது என்றும் இவருக்கு தடைவிதிக்கப்படுகிறது.

1939-ல் திரிபுரி காங்கிரஸ் மாநாட்டில் சுபாஸ் சந்திர போஸ் வெற்றி பெறுவதற்காக வாக்குச் சேகரிக்கிறார். போஸ் சென்னை வந்திருந்தபோது தமது தந்தையுடனான சொத்து தகராறில் சென்னையில் தங்கியிருந்த இளவயது முத்துராமலிங்கத்திற்கு அவருடன் ஏற்கனவே பழக்கமாகியிருக்கிறது. பின்னாட்களில் போஸ் காங்கிரஸிலிருந்து விலகி பார்வர்ட் பிளாக் தொடங்கிய போதும் இந்திய தேசிய படையை நிறுவிய போதும் இவர் பெருமளவில் உதவுகிறார். போஸை அழைத்து வந்து மதுரையில் பெரியதொரு கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்ததாகத் தெரிகிறது.

பசும்பொன் தேவர் எனத் தென்தமிழக மறவர்களால் கொண்டாடப்படும் தலைவராக முத்துராமலிங்கம் வேகமாக வளர்ந்து வருகிறார். காங்கிரஸிலிருந்து பார்வர்ட் பிளாக் கட்சிக்கு மாறியபின் தேவரின் அரசியல் களமும் மேடைப் பேச்சுக்களும் இன்னும் உக்கிரமடைகின்றன. 1940-ல் மதுரை பாதுகாப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் பதினெட்டு மாதங்கள் சிறை வைக்கப்படுகிறார். இந்திய பாதுகாப்பு சட்டத்தில் மறுபடியும் கைதாகி 1945 வரை சிறையிலிருக்கிறார். 1946-ல் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் காமராஜர் தமிழக காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் தேவரின் பங்கிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஜனவரி 1949-ல் போஸ் உயிருடன் இருப்பதாகவும் அவரை சந்தித்ததாகவும் பொது மேடையில் பேசி அனைவரையும் திகைக்க வைக்கிறார். 1952 தேர்தலில் அருப்புக்கோட்டை நாடாளுமன்ற தொகுதியிலும் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியிலும் போட்டியிடுகிறார்.

காமராஜருக்கு முன்பே நாடார் சமுதாயத்தில் ஒரு வித தன்னெழுச்சியை உருவாக்கியதில் சௌந்திரபாண்டியன் நாடார் முக்கியமானவராக இருக்கிறார். நீதிக்கட்சியாரான இவர் 1920-30களில் நாடார் மக்களை ஒன்று திரட்டியிருக்கிறார். நாடார் சமூகத்திற்கு அய்யா வைகுண்டரின் பங்களிப்பு அபரிமிதமானது. தமிழகத்தின் ஆரம்ப கால சீர்திருத்தவாதியாக அறியப்படும் இவர் 1810-ல் அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் அன்று சாணார் என அறியப்பட்ட குலத்தில் பிறக்கிறார். முடிசூடும் பெருமாள் எனும் பெயர் வைக்கப்படுகிறது. திருச்செந்தூரில் ஆன்மீக அனுபவம் ஏற்பட்டு தம்மை நாராயணரின் மகன் எனவும், கிருஷ்ணன் எனவும் அழைத்துக் கொள்கிறார். உலகில் கலியுகத்தை முடித்து வைத்து சத்திய மார்க்கத்தை ஆரம்பிப்பதே தமது

பிறப்பின் நோக்கம் என அறிவிக்கிறார். ஏக கடவுள், ஏக மதம், ஏக சாதி எனப் பேசுவதால் உயர் சாதியினர் கலவரமடைகிறார்கள். திருவிதாங்கூர் மன்னரால் சிறை வைக்கப்பட்டு மீள்கிறார்.

தென்தமிழக மக்களின் குறிப்பாக நாடார்களின் முன்னேற்றத்தில் கிறித்துவ மிசனரிகளின் பங்களிப்பும் அளப்பரியது. அன்றைக்கிருந்த தீண்டாமை கொடுமைகளில், மேல் சாதியினர் எதிரே வந்தால் இத்தனை அடி விலக வேண்டும், தொட்டால் தீட்டு, கண்டால் திட்டு என்றிருந்த நிலையில், அடித்தள மக்களுக்கு கல்வியறிவு கிடைத்தது அவர்களாலேயே என்றால் மிகையாகாது. கல்வியோடு கூடவே மதமாற்றமும் நடக்கிறது. அன்றைக்கு திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் குறிப்பிட்ட சில சாதியைச் சேர்ந்த பெண்கள், மார்பை மறைக்கும் வண்ணம் சேலை அணியக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்திருக்கிறது. மற்ற மேல்சாதிப் பெண்கள் மார்பை மறைத்து கொள்ள, சில சாதிப் பெண்கள் மற்றவர்களுக்குமுன் செல்லும் போது எவ்வளவு அவதிப்பட்டிருப்பார்களோ? பாதிரிகளும், படித்த நாடார்களும், பெண்களும் இதற்கெதிராக போர்கொடி உயர்த்துகிறார்கள். சென்னை மாகாணத்தில் வழக்கு தொடரப்படுகிறது. 1822-ல் தொடங்கி 1859 வரை போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. லண்டனில் வழக்கு நடந்து விக்டோரியா மகாராணி மூலமாக அனைத்து பெண்களும் தங்களது மார்புகளை மறைத்துக்கொள்ள உரிமை இருப்பதாக நீதி நிலைநாட்டப்படுகிறது. வரலாற்றில் தோள் சீலைப் போராட்டம் என அறியப்பட்ட இந்த நீண்ட போராட்டமும். வைகுண்டரின் ஆன்மீக மாற்றமும், அய்யாவழி தரிசனமும், கல்வி, பொருளாதார மேம்பாடும் சேர்ந்து சாணார், பனையேறி நாடார், சான்றோர் என அறியப்பட்ட இம்மக்களை நாடாராக உயர்த்துகிறது.

ஆதி திராவிடர், முதலியார், செட்டியார், ரெட்டியார், நாயுடுகள், வன்னியர்கள், நாடார், தேவர் என அனைத்து சாதிகளிலும் தலைவர்கள் உருவாகி மக்கள் செல்வாக்கைப் பெற்று அவரவர் சாதி சமுதாய மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு செயல்பட்டதை உள்வாங்கி, தென்தமிழகத்தில் பெருவாரியாக வசிக்கும் குடும்பர் சாதியிலிருந்தும் ஒருவர் தலைவராக முன்னேறி வருகிறார். ஆங்கில ஆட்சியில் இராணுவப் பணியிலிருந்த இம்மானுவேல் 1924இல் பரமக்குடி அருகே பிறந்தவர். தந்தை வேதநாயகம் பள்ளி ஆசிரியர். தேவேந்திர வேளாளர் சங்கம் ஒன்றையும் நிருவியதாகத் தெரிகிறது. 1946-ல் திருமணம் நடக்கிறது.

பேரையூரிலிருந்த பெருமாள் பீட்டருடன் பழக்கமாகிறார். பேரையூர் பீட்டர் இராமநாதபுரம் பகுதியிலிருந்த சாதிவெறிக்கு எதிராக செயல்பட்டவராக அறியப்படுகிறார். அவருடன் இணைந்தும் பின் தனியாகவும் சமுதாயப் பணிகளில் தீவிரமாக ஈடுபடுகிறார்.

தென்தமிழகத்தின் மூன்று முக்கியமான சாதிகள் நாடார், மறவர் மற்றும் குடும்பர். மற்ற சாதியினரெல்லாம் கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியலில் ஓரளவிற்குச் செல்வாக்குப் பெற்ற பின்னரே இந்த மூன்று சாதியிலும் தன்னெழுச்சி உண்டாகிறது. அவரவர்க்கான இடமிருந்தும் மூன்று பேருக்குள்ளும் மோதல்கள் உருவாகின்றன. சிவகாசி கலவரம் என அறியப்படும் ஒரு கலவரம் தேவருக்கும் நாடாருக்கும் இடையே சிவகாசிப் பகுதியை மையமாக்கி நடந்திருக்கிறது. ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட சுற்று வட்டாரத் தேவர்கள் சிவகாசியை முற்றுகையிட்டிருக்கிறார்கள். குறிப்புகளிலிருந்து போர்போலவே நடந்ததாகத் தெரிகிறது. தேவர் தரப்பில் உயிர் சேதம் ஏற்பட்டு பின்வாங்குகிறார்கள். நாடார்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்படுகின்றன.

மறவர் சாதி என அடையாளப் படுத்தப்படும் தேவர் சாதியினர் கல்வி, பொருளாதார, வேலை வாய்ப்புகளில் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள். சாதிய உணர்வும், மற்ற சமூகத்தவரை விட மேலானவர் எனும் முரட்டுக் குணமும் வரப்பெற்றிருக்கிறார்கள். நாடார்கள் வணிகத்தில் ஈடுபாடு காட்டியவுடன், முரட்டுக்குணம் பெருமளவில் குறைகிறது. மாறாக, குடும்பமார்களில் கல்வியும் அதன் மூலமான ஒற்றுமையும் சாதிப்பற்றும் வளர்கிறது. அதுவரை வாய் பேசாமல் அடங்கிக் கிடந்த குடும்பர்கள் தன்னெழுச்சியோடு சம உரிமை பெற்று வளர்வதை மறவர்களால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை போலும். அடிமை, அடிமையாக இருக்கும் வரை, எஜமானரோடு எந்த விதமான செயல்களிலும் முரண்படாத வரை நல்ல அடிமையே. ஏதேனும் எதிர்ப்புக் காட்டினால் என்னாகும்? விளைவாக, தேவர் பிறந்த பகுதியில் கொண்டையன் கோட்டை மறவர் எனவும், ஆப்ப நாட்டு மறவர் எனவும் தீவிர சாதிப் பற்றுடையவர்களாக இருந்த தேவர்களோடு ஆங்காங்கே முட்டலும், மோதலும் ஆரம்பமாகிறது. போதாக்குறைக்கு அரசியலும் சேர்ந்து கொள்கிறது. குடும்பமாரும், நாடாரும் பெருவாரியாகக் காங்கிரஸில் இருக்கிறார்கள். தேவர்கள் பெரும்பாலும் பார்வர்ட் பிளாக். தமிழ்நாட்டின் தேர்தல் அரசியலும் தேர்தல் கூட்டல் கழித்தல்களும் அனைவரும் அறிந்ததே. ஒன்றாகச்

சேர்ந்து திருடப் போன மறவரும், குடும்பரும் ஒருவருக்கொருவர் எதிர்ப்பானது காலத்தின் வினோதம்.

முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம் பகுதிகளில் குடும்பமார்கள் அதிகமாக இருந்ததால், அங்கு இம்மானுவேல் சேகரனின் தலைமைக்கு அங்கீகாரம் கிடைக்கிறது. மறவரான முத்துராமலிங்கத் தேவரும், குடும்பரான இம்மானுவேல் சேகரனும் சமுதாய அளவிலும், அரசியல் நிலைப்பாட்டிலும் நிறையவே வேறுபடுகிறார்கள். அதுவரையிலும்கூட குடும்பமார்களில் கணிசமானவர்கள் முத்துராமலிங்கத்தேவருக்கு பக்க பலமாகவே இருக்கிறார்கள். குடும்பமார்களைச் சேர்ந்த சிலர் தேவரோடு கூடவே இருக்கிறார்கள். பின்னர் வந்த முதுகுளத்தூர் கலவரம் தென் தமிழகத்தின் பொதுஅமைதிக்கும், வளர்ச்சிக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமையப்போகிறது என்பதைக் காலம் மட்டுமே அறிந்திருக்கும்.

தென் தமிழகத்தின் பெரும்பான்மை சாதியினரான இம்மூவருக்குள்ளும் ஏன் ஒற்றுமை வளராமல் போனது? இவர்களது ஒற்றுமையைத் தடுத்தது எது? இவர்கள் மூவரையும் இணைப்பதற்குத் தமிழ் ஒன்றே போதுமே. ஏன் இவர்களால் தமிழால்கூட இணைய முடியவில்லை? சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்கள் அரசாண்ட பகுதியில், ஆளாளுக்குத் தாங்கள்தான் பாண்டியர்கள் எனச் சொந்தம் கொண்டாடும் மண்ணில், இன்றைக்கும் தமிழராய் இருக்க இயலாமல், தமிழால் இணைய முடியாமல், வெட்டு குத்து என நித்தமும் மூன்று சாதியரும் தமக்குள் சண்டையிட்டுக் கொள்வது எப்படி சாத்தியமாகிறது? எப்போது இவர்களது சண்டைகள் தீரும்? சங்க காலத்திலாவது தமிழின் பெயரால், தமிழைக் கொண்டு மன்னர்கள் பலரை புலவர் பெருமக்கள் சண்டைகளிலிருந்தும், பெரும் போர்களிலிருந்தும் காப்பாற்றியிருக்கிறார்கள். தமிழரை தமிழ்ப் பற்றில், தாய்மொழி அன்பில் விஞ்சுபவர் உலகிலுண்டோ? இனிமேலும் ஒரு இனம் உருவாகி வர இயலுமோ? தமிழர்க்கு உயிரினும் பெரிது தமிழ் என்றல்லவா காலம் இங்கே எழுதிவிட்டுச் சென்றுள்ளது. உலகில் எது எதற்கோ போர்கள் நடந்திருக்கின்றன. மொழிக்காகப் போர் செய்வது தமிழில் மட்டுமல்லவா? தாயைப் பழித்தாலும் பொறுப்போம் தமிழைப் பழித்தால் தலையைக் கொய்வோம் என இங்கு வெகுண்டெழுவராம். இப்படியொரு எழுச்சி மிகுந்த இந்த மாநிலத்தில் எதனால் தமிழராய் ஒன்ற முடியவில்லை? எது தமிழர்களை ஒன்றாக விடாமல் தடுக்கிறது?

தமிழை விட அந்த ஒன்று பெரிதானதா? சிறப்பானதா? மதிப்பு மிக்கதா? தமிழையே வெற்றிகொள்ளும் ஆற்றல் படைத்த அந்த ஒன்றின் பெயர் என்ன? தமிழை விடப் பெரியதாக இருக்கும் அந்த ஒன்றைப் பற்றி எல்லோரும் அறிந்திருந்தும், தமிழ் எங்கள் உயிருக்கும் மேல் என்று எழுதி வைப்பது எதற்காக? யாரை ஏமாற்ற?

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டில் ஏன் இவ்வளவு சாதிவெறி? அன்றைக்குச் சங்கம் வைத்து தமிழை வளர்த்தார்கள் என்பது உண்மையெனில் இன்றைக்கெப்படி ஆயிரக்கணக்கான சாதிச் சங்கங்கள் இம்மண்ணில் முளைத்து வேர்பிடித்து பூத்துக் குலுங்கி ஆயிரக்கணக்கான நச்சு விதைகளை தமிழ் நிலமெங்கும் விதைக்க இயலும்? பாண்டிய குலத்தின் வழித் தோன்றலெனில் நாடார் மகாஜன சங்கம் எப்படி வைக்க முடியும்? முக்குலத்தோர் சங்கம் இம்மண்ணிலிருந்து முளைத்தெழ முடியுமா? தேவேந்திர குல வேளாளர் சங்கம் எப்படி சாத்தியமாகும்? பிள்ளைமார் சங்கம், சைவ வேளாளர் சங்கம், ரெட்டியார் நலச் சங்கம், வன்னியர் சங்கம், ஆதிதிராவிடர் நலச் சங்கம், கவுண்டர்கள் சங்கம்.. இத்தனையாயிரம் சங்கமும், பேரவைகளும், கழகங்களும் வைத்திருப்பது தமிழை வளர்க்கவா? தமிழரை முன்னேற்றவா? தமிழ்ப் பண்பாட்டைச் சிறப்பாக்கவா அல்லது சாதி வெறியை ஊட்டி வளர்க்கவா? எதற்கய்யா மூலை முடுக்கெங்கும் இத்தனை சங்கங்கள்? மூன்று சங்கங்கள் வைத்து தமிழை வளர்த்ததற்கே இன்று உலகப் பொதுமொழி எனப் போற்றப்படக் கூடிய தகுதி தமிழுக்கு வந்திருக்கிறதென்றால், இன்றைக்கிருக்கிற ஆயிரமாயிரம் சங்கங்களும் தமிழுக்கு என இருக்குமேயானால் தமிழ் என்றோ உலகப் பொதுமொழியாக அறிந்தேற்புப் பெற்றிருக்குமே? சாதி தமிழக மாணவர்கள் ஆங்கிலத்தோடு மல்லுக்கட்டுவது நின்று போய் வெள்ளைக்கார குழந்தைகள் தமிழோடு கொஞ்சி விளையாடுவார்களே.

பரிசில் பெற வந்த ஓர் புலவர் களைப்பில் அரசரது கட்டிலில் கண்ணயர்ந்து விட புலவரது தூக்கம் கலையலாகாது என்றெண்ணி, அவ்வரசன் கவரி வீசி நின்றானானால் அது தமிழ் மேல் கொண்ட காதலாலல்லவா? கவரி வீசியது தமிழுக்கா அல்லது மோசிகீரனார் புலவருக்கா? இவரைப் போன்ற மாமன்னரல்லவோ தமிழுக்காக அரசு, பட்டம், பதவிகளை, ஏன் உயிரைக் கூட துறக்க முடியும். அந்தச் சங்க காலம் எங்கே, எமது சாதி தலைவருக்கு முன்னால் கால்மேல் கால் போட்டு உட்காருவாயோ எனத் தலையை வெட்டும் இந்தக் காலச்

சங்கம் எங்கே? சங்கம் எனப் பெயரிட்டால் போதுமா? இரண்டு சங்கமும் ஒன்றாகிவிடுமா?

மூவேந்தர்களிலும் தமிழை ஒருபடி தூக்கிப் பிடித்தது பாண்டிய மன்னர்களல்லவா. முதல் சங்கமும், இடைச்சங்கமும் கடைச்சங்கமும் பாண்டியர்களால் பேணப்பட்டதல்லவா? தமிழ்மொழி அனைவருக்கும் பொதுவானது எனச் சொல்லக் கேட்ட பாண்டிய மன்னனொருவர், எம்மொழியை நீர் எப்படி பொதுமொழி எனச் சொல்லலாம் என வெகுண்டெழுந்து போருக்குக் கிளம்பினாராம். தாய் எமக்கு மட்டுமே தாய் என்று சொல்வதற்கு ஒப்பல்லவா பாண்டியரின் இச்செய்கை. மொழி உலகத்தார் அனைவருக்கும் பொதுவானது என்பதுகூட தெரியாமலா மன்னனாகியிருப்பார்.

தம்மைப் பற்றிப் பாடிய புலவருக்கு தமது அரசையே தானமாக அளித்தானாம் மன்னனொருவன். உண்மையைத்தான் சங்கப் புலவர் பாடினாரா? பத்தே பத்து பாடல்களுக்கு அரசையே எங்கேனும் யவரேனும் பரிசளிப்பரோ? அன்று புலவர் ஒருவரை மலைமேல் ஏற்றி கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரியும் அத்தனையையும் பரிசளித்தானாம் சங்க கால வேந்தன்.

நீண்ட ஆயுள் கொடுக்கும் கனியைத் தாம் உண்ணாது புலவர் பெருந்தகைக்குக் கொடுத்த அந்தத் தமிழ் வள்ளல் பிறந்த இம்மண்ணில், பெற்ற தாய் தந்தைக்கு உணவளிக்காத கயமை நிறைந்த ஒரு தமிழன் எப்படிப் பிறக்க முடியும்?

தமிழ் என்றால் இனிமையாம். தமிழ் என்றால் அழகாம். தமிழ் என்றால் குளிர்ச்சியாம். தமிழ் என்றால் அறிவாம். அமரர்கள் உண்ணுகிற அமிழ்தமும், தமிழின் இனிய சுவையும் ஒன்றாம். பொதிய மலையில் பிறந்ததாகச் சொல்லப்படும் இந்த தமிழுக்குத்தான் எத்தனை பெருமை.. எவ்வளவு சிறப்பு..

இவ்வளவு பெருமைபெற்ற தமிழரும் இத்தனை சிறப்புமிக்க தமிழும் அந்நியருக்கு அடிமையானது எதனால்? தமிழ் நிலமெங்கும் ஆங்கிலக் காளான்களாக முளைத்திருப்பது யாரால்? தமிழைப் பழித்தார்கள் என்பதற்காக அவர்களை வென்று தலையில் கல்லைச் சுமக்க வைத்து சிலை நிறுவிய மாமன்னர்களின் வழிவந்தவர்கள் முகலாயருக்கும், நாயக்கருக்கும், மராத்தியருக்கும், வெள்ளைக்காரர்களும் அடிமையான வரலாறு எப்போது வந்தது?

அயல் நாட்டு வீரர்களை காவல் காக்க வைத்த அரச பரம்பரையினர், காடுகளில் ஒளிந்து திரிந்த காலம் வந்தது ஏன்? உலகிற்கே நறுமணப் பொருட்களை வாரி வழங்கிய தமிழ் மலைகள் இன்று உருக்குலைந்து சிதைந்து கிடப்பது யாருக்காக? சோழனே ஐம்பதினாயிரம் யானைகள் வைத்திருந்தால் பாண்டியனும், சேரனும் எவ்வளவு யானைகள் வைத்திருந்திருப்பார்கள் என மலைப்பு மேலிடும் தமிழ்மண்ணில், யானைகள் போகக் கூட வழி விடாமல் அகழி வெட்டுவது எப்போதிலிருந்து? குளங்களையும் ஏரிகளையும் வெட்டி நீர்பாசனத்தைப் பெருக்கிய பண்டைய மன்னர்கள் அறிவில் உயர்ந்தவர்களா? அல்லது அவற்றை தூர் வாரக் கூட முடியாமல் சோம்பிக் கிடக்கும் இன்றைய மன்னர்கள் அறிவில் உயர்ந்தவர்களா? எந்த ஜே.சி.பி இயந்திரங்களை வைத்துக் கொண்டு இத்தனையாயிரம் குளங்களைத் தோண்டினார்கள் அன்றைய மக்கள்? அன்றைக்கு எத்தனை உலக வங்கிகளிலிருந்து கடன் வாங்கினார்கள் ஏரிகளை வெட்ட.. பராமரிக்க..

தமிழுக்காக யாரேனும் தங்களது இன்னுயிரைக் கொடுப்பார்களா? இப்பவோ, பிறகோ எனத் தொண்டைக்கும் நெஞ்சுக்கும் இழுத்துக்கொண்டிருக்கும் தொன்னூரு வயது முதியவர் கூட சிறுநீரக, கல்லீரல் மாற்றுச் சிகிச்சை செய்து கொண்டு இன்னும் ஒரு வருடமாவது கூடுதலாக வாழ மாட்டோமா என ஏங்கித் தவிக்கும் இம்மண்ணில் தமிழ் வாழட்டும், வளரட்டும் என்பதற்காக எத்தனை பேர் அரிதான மானிடப் பிறவியை தியாகம் செய்திருக்கிறார்கள்? மாபெரும் போர்களோடு மொழிக்காகவும் மாபெரும்போர் நடந்த மண்ணல்லவா இது? மொழிப் போர் தியாகிகள் என்றல்லவா இவர்கள் பாராட்டப்படுகிறார்கள்.

இந்தியாவின் அனைத்து மக்களையும் ஒருங்கிணைக்கும் மொழியாக இந்தியை முன்னெடுத்துச் சென்றவர்களுள் காந்தியும் மிக முக்கியமானவராக இருந்திருக்கிறார். நீதிக்கட்சியார் தோன்றிய அதே காலகட்டத்தில் சென்னையில் இந்தி சபாக்களும் காந்தியால் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. 1937-தேர்தல்களில் பங்கெடுத்த பின், பல மாநிலங்களிலும் ஆட்சியைப் பிடித்த காங்கிரஸ் அரசு, இந்தியை பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்குகிறது. சென்னை மாகாணத்திலும் முதல்வர் ராஜாஜி அமலாக்குகிறார். மறைமலையடிகள் போன்ற தமிழ் அறிஞர்கள் கொதித்தெழுகிறார்கள். திருச்சியில் இந்திக்கு எதிரான மாநாடு கூட்டப்படுகிறது. நீதிக்கட்சியாரும் போராட்டத்தில் குதிக்கிறார்கள். பிடிவாதமான

ராஜாஜியும் பள்ளிகளில் இந்தியை கட்டாயமாக்கி அரசாணை வெளியிடுகிறார். போராட்டங்கள் வெடிக்கின்றன. போராட்டங்களில் பெண்களும் பெருமளவில் பங்கு பெற்றதாகத் தெரிகிறது. தாளமுத்து, நடராஜன் இருவரும் காவல் நிலையத்தில் இறக்கிறார்கள். இரண்டாம் உலகப்போர் தொடங்கியதையடுத்து காங்கிரஸார் பதவி விலக ஆங்கில ஆளுநரால் 1940-ல் இந்தியை விருப்பப் பாடமாகக் கற்கலாம் எனும் அளவில் போராட்டங்கள் ஓய்கின்றன.

1948, 1950, 1952 எனத் தொடர்ந்து இந்தியைத் திணித்துவிடலாம் என மத்திய அரசு முனைகிறது. 1948-ல் கவர்னர் ஜெனரலான இராஜாஜி மீண்டும் இந்தியை கொண்டுவருகிறார். இம்முறையும் பலத்த எதிர்ப்பு. பெரியார், அண்ணாத்துரை போன்ற திராவிட கட்சியினர் மிகவும் முனைப்போடு இந்தித் திணிப்பை எதிர்க்கிறார்கள். பெரியாரிலிருந்து பிரிந்து செல்லும் அண்ணாவுக்கு வரிசை கட்டி வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நல்ல பெயரினை கொடுக்கின்றன. பெரியாரது திராவிட நாடு திராவிடர்க்கே என்ற முழக்கம் மாறி, தமிழ்நாடு தமிழர்க்கே எனும் முழக்கம் பரவலாகிறது. ஆட்சி அதிகாரம் வந்த பின்னர் இது மாநில சுயாட்சி என்ற அளவுக்குச் சுருங்குகிறது. தனித் தமிழ்நாடு போன்ற பிரிவினைவாத முழக்கங்களுக்கு எதிராக மத்திய அரசு கடுமையான பிரிவினைவாத தடைச் சட்டங்களை இயற்றுகிறது. 1962-ல் வந்த சீனப் போரும் இத்தகைய சட்டங்களுக்கு காரணமாக அமைகிறது.

1956-ன் தி.மு.க மாநாட்டில், தேர்தல் அரசியலில் பங்கெடுக்கலாம் என்பது முடிவாகிறது. 1957-ன் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க கணிசமான வெற்றிகளைப் பெறுகிறது. அண்ணா காஞ்சிவரத்திலிருந்தும் பொருளாளர் கருணாநிதி குளித்தலையிலிருந்தும் சட்டமன்றத்திற்குள் நுழைகிறார்கள். நெடுஞ்செழியன் தி.மு.க வின் பொதுச் செயலராக இருக்கிறார்.

1957-ல் அரசால் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற குழு, இந்தியை முதன்மை மொழியாகவும் ஆங்கிலத்தை துணை மொழியாகவும் அமல்படுத்த பரிந்துரைக்கிறது. அதனைத் தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள் தமிழ் மண்ணில் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. அண்ணாவும் கூட்டாளிகளும் தமிழ் தனலை தக்கவைத்தபடியே இருக்கிறார்கள். 1953-ல் ஏற்பட்ட மாநிலங்கள் மறுசீரமைப்பினால் சென்னை மாகாணத்தின் பரப்பளவு சுருங்கி தமிழகத்தின் எல்லைகள் சுருங்குகின்றன. எல்லைகளை தீர்மானிப்பது தொடர்பாகவும்

தமிழகத்தில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மா.பொ.சி என அழைக்கப்படும் சிவஞானம் போன்றவர்கள் இப்போராட்டங்களில் தீவிரமாக இருக்கிறார்கள். சென்னை யாருக்கு என்பதில் தமிழர்க்கும் ஆந்திரர்க்கும் பலத்த போட்டி. அடுத்து திருப்பதி யாருக்கென்று நீண்ட இழுபறி. தமிழர்க்கு சென்னையை விட்டுக் கொடுக்க மனமில்லை. திருமலையைக் கொடுத்துவிட்டு திருத்தணியை தக்கவைக்கிறார்கள். தென்குமரி முதல் திருவேங்கடம் வரை நீண்டிருந்த தமிழக எல்லை தென்குமரி தொடங்கி வடகுமரனோடு நிற்கும்படியானது பெரியாரின் கடவுள் மறுப்பு கோட்பாட்டின் விளைவு எனலாம். இல்லையெனில் ஏழுமலையான் எங்கள் சாமி என்று எப்படியாவது அவரை தமிழகத்தோடு தக்க வைத்திருப்பார்கள். நேஷமணி போன்றவர்களின் தீவிர முயற்சியில் கன்னியாகுமரி தமிழகத்தோடு இணைக்கப்படுகிறது. மாநில எல்லைகளின் சீரமைப்பின் போது முதலமைச்சராக இருந்த காமராஜரும் தேசிய ஒருமைப்பாட்டிற்கு முக்கியத்துவமளித்து பல பகுதிகளை விட்டுக் கொடுத்ததாகத் தெரிகிறது.

சுயமரியாதைக்கென்று இயக்கம் கண்ட தமிழ் மண்ணில், நடிகர்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம், நடிகர்களைக் கடவுள்களைப்போல் கொண்டாடியது, நடிகைகளுக்குக் கோவில் கட்டியது முற்றிலும் முரண்பட்ட ஒன்றாக இருக்கிறது. கடவுள் இல்லை, இல்லவே இல்லை என ஆணித்தரமாக அடித்துச சொன்னதால் வேறு வழியில்லாத தமிழர்கள் ரசிகர் கூட்டங்களாக மாறி நடிக, நடிகையருக்கு பாலாபிசேகம் பண்ணி, மாலை மரியாதை செய்து, பத்தி சூடம் காட்டி, தேங்காய் உடைத்து வழிபட அரம்பித்தார்களோ என்னவோ. சாமியைப் பார்க்கவும் தள்ளு முள்ளு. கூட்ட நெரிசல். நடிகையைப் பார்க்கவும் கூட்ட நெரிசல். அடி தடி. அறிவைப் போற்றிய பெரியார் பிறந்த மண்ணில், அறிவொன்றே தமிழர் தலைநிமிர சிறந்த வழி என மேடைதோறும் முழங்கிய பெரியார் பிறந்த மண்ணில், சீர்திருத்தம் பேசித் திரிந்த பெரியார் மண்ணில், பகுத்தறிவைப் பரப்பிய பெரியார் மண்ணில், திரைத்துறையினர் கொடிகட்டிப் பறக்கப் போகிறார்கள் என்பதை இம்மண்ணின் தெய்வங்கள் அறிந்திருந்து இதழோரம் புன்னகைத்திருப்பார்களோ என்னவோ. பெரியாரின் அத்தனை முயற்சியும் வீணானதாகச் சொல்ல முடியுமா? ஒரு திரைப்படம் உருவாவதில் ஆயிரமாயிரம் பேரின் கடின உழைப்பிருக்க, பவுடர் அப்பி, உதட்டுச்சாயம் பூசி, பொய் முடியை வைத்து, போடாத சண்டை போட்டு, பாடாத பாடல்கள் பாடி, எழுவது பேரை எட்டி உதைத்து, கட்டைகளை கைகளால் தாங்கி, இயந்திரத் துப்பாக்கி குண்டு மழைக்கு இடையில் நடந்து, ஓடும் பேருந்தை

ஒரு கையால் நிறுத்தி, வரிசை முறையில் வரும் உள்நாட்டு அயல் நாட்டு எதிரிகளை அந்தரத்தில் தாவித்தாவி அடித்து, காதலுக்காக குடித்து, காதலிக்காக கண்ணீர் வடித்து, காதல் பின்னாலும் காதலிகள் பின்னாலுமே ஓடித்திரியும் இந்த கதாநாயர்களின் பங்கு என்ன என்பதைப் பற்றிய பகுத்தறிவு தமிழர்க்கு இல்லாமல் போனது ஏன்? பகுத்தறிவு வளராமல் போனது ஏன்? ஆறறிவு உண்மையிலேயே உள்ளதா? தொல்காப்பியர் தமிழர் தானா? ஐம்பது ரூபாய் கட்டணச் சீட்டை ஐநூறு ரூபாய்க்கு வாங்க ஆலாய்ப் பறக்கும் இந்த ரசிகரால் அல்லவா ஒரு திரைப்பட நடிகர் ஆறு கோடிக்கு கார் வங்கி உல்லாசமாக சவாரி செய்து இன்புற முடிகிறது. 50 பைசா பேருந்துக் கட்டண உயர்விற்கு அல்லாடும் தமிழர்கள் வாழும் இதே மண்ணில், ஆறு கோடிக்கு ஒருவர் கார் வாங்குகிறார், வாங்க முடிகிறதெனில் இம்மண்ணிலிருப்பது எந்த மாதிரியான ஜனநாயகம்? நாளைக்கு இப்படியான நடிகர்கள் முதல்வர்களாகி ஐயாயிரம் கோடிக்கு உல்லாசக் கப்பல் வாங்குவதில் கவனம் கொள்வரா அல்லது உலகிலுள்ள பசிப் பிணியைப் போக்க முன்வருவரா? ஒருவர் திறமையாக நடிக்கிறார், எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதிப்பார் எனில் ஒருவர் திறமையாகத் திருடுகிறார் எதை வேண்டுமானாலும் திருடுவார் என்பது மட்டும் எப்படித் தவறாகும்? மூன்று மாதங்கள் நடக்கும் ஒரு திரைப்படத் தயாரிப்பில் தமது பங்கில் நடிக்கும் நடிகரொருவருக்கு பத்துக் கோடி, இருபது கோடி, ஐம்பது கோடி என எப்படி ஊதியம் கொடுக்க முடியும்? சொகுசு வாகன வசதியிலிருந்து ஆடம்பரத் தங்குமிடம், ஐந்து நட்சதிர உணவு, அசத்தலான உடைகள் உட்பட அனைத்தையும் ஓசியில் பெற்றுக்கொள்ளும் நடிகர், ஐம்பது கோடி ரூபாய்க்கும் மேல் சம்பளம் பெறுவது எந்த விதத்தில் நியாயமாக இருக்கும்? இவ்வளவு கொடுத்தும் ஒரு தயாரிப்பாளர் படமெடுக்க முன்வருகிறாரெனில் அவரது நோக்கம் என்னவாக இருக்கும்? நடிகருக்கு நூறுகோடி சம்பளம் கொடுத்துவிட்டு அதை ஆயிரம் கோடியாக அறுவடை செய்யும் மகா மந்திரவாதியல்லவா இந்தத் தயாரிப்பாளர். உமக்கெதற்கய்யா யாம் பத்துக்கோடி கொடுக்க வேண்டும் என எந்தத் தயாரிப்பாளராவது கேட்டதுண்டா? புழுவைப் போட்டு சுறாவை இழுக்கும் சூட்சுமம் தெரிந்தவரல்லவா இவர். இருவரும் எப்படி அவரவர் மனச்சாட்சியோடு வரிகளைக் கட்டுவர் என இச்சமூகம் எதிர்பார்க்கிறது?

பெரியாரோடு திரைத்துரையினருக்கு நட்பு இருந்த போதிலும், திரைத்துறையினரை அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டது அண்ணா என்றால் சரியானதே. பெரியாரோடு பழகியவர்களுக்கு கொள்கைப் பிடிப்பு இருந்தது.

அவர்கள் கடைசி வரை மாறவில்லை. மாறாக அண்ணாவோடு இருந்தவர்களுக்கு அரசியல் கனவு அபரிமிதமாக இருந்ததாகத் தெரிகிறது. அண்ணாத்துரையின் சமவயதினரான என்.எஸ் கிருஷ்ணன், எம.ஆர்.ராதா போன்றவர்கள் திராவிடக் கருத்துக்களை திரைப்படங்களில் பரப்பியதோடு மட்டுமல்லாமல் தமது சொந்த வாழ்விலும் கடைபிடித்தார்களெனத் தெரிகிறது. அவர்கள் யாரும் திருப்பதி கணேசா திரும்பிப்பார் போன்ற குரல்களைக் கேட்கவில்லை.

தென்னிந்திய பிராமணரல்லாதோர் சங்கம் உருவான அதே காலகட்டத்தில்தான் தமிழகத்திற்கு முதல் திரைப்படமும் வந்து சேர்கிறது. இதிலும் முதலாவது முதலியார்களே. 1916-ல் கீசகவதம் என்ற ஊமைப் படத்தை நடராஜ முதலியார் வெளியிடுகிறார். இந்திய அளவில் தாதே சாகிப் பால்கே அவர்கள் ராஜா ஹரிச்சந்திரா படத்தை 1913-ல் பம்பாயில் காட்சிப்படுத்துகிறார். உலக அளவில் உருவான இந்த தொழில் நுட்பம் அடுத்த பத்தே ஆண்டுகளில் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது உலகமகா சாதனை. இதே வேகத்தில் ஐரோப்பிய நாடுகளில் உண்டான தொழிற்புரட்சியை இந்தியாவிற்கு கொண்டுவர முடிந்திருந்தால், வாஸ்கோடகாமா கண்டுபிடித்த நன்நம்பிக்கை கடல்வழியை கடல் வாணிகத்தில் முதிர்ந்திருந்த தமிழர்கள் கண்டறிந்திருந்தால், இந்திய மண்ணின், மக்களின் சரித்திரம் வேறு மாதிரியாக நிகழ்ந்திருக்கும்.

1903-ல் அமெரிக்காவில் எடுத்த மாபெரும் தொடர்வண்டிக் கொள்ளை எனும் தகிரேட் டிரெயின் ராப்பரி படமே உலகின் முதல் படமாகிறது. 1905-ல் பென்சில்வேனியாவில் முதல் திரையரங்கு உருவாகிறது. மளமளவென அத்தனை நுட்பங்களும் இந்தியாவை குறிப்பாக சென்னை, பம்பாயை ஆக்கிரமிக்கின்றன. 1937-ல் சென்னையில் மட்டும் நூறு படங்களுக்கும் மேல் தயாராகிவிட்டது என்றால் இம்மண்ணின் சினிமா மோகம் எத்தகையது என்பதை அறியலாம். இம்மண்ணின் தெய்வங்களெல்லாம் ஆடல், பாடல், நடனம், இசையில் வல்லவர்களெனில் மக்கள் மட்டும் என்ன குறைந்தவர்களாகவா இருப்பார்கள்? வந்தாரய்யா தமிழகத்தின் முதல் அற்புத நட்சத்திரம் தியாகராய பாகவதர்.

1910-ல் பிறந்த மாயவரம் கிருஷ்ணமூர்த்தி தியாகராய பாகவதர் என்ற இந்த ஆசாரியின் குரலுக்கு மயங்காதவர்கள் ஒருவரும் இல்லையாம். 1934-ல் பவளக் கொடி என்ற திரைப்படத்தின் மூலம் அறிமுகமானாராம். ஹரிதாஸ் படம் மூன்று வருடங்கள் தொடர்ந்து ஓடியதாம். அன்றைக்கு அவரது பாகவதர் கிராப் என்ற

தலைமுடி அழகுக்கு அறிவு சார் சொத்துரிமை வாங்கியிருந்தாரெனில் மிகப்பெரும் பணக்காரராக ஆகியிருந்திருப்பார். இவரும் நண்பரான கலைவாணரும் சிக்கித் தவித்த, லண்டன் நீதிமன்றக் கதவுகளைத் தட்டிய லஷ்மிகாந்தன் வழக்கினால் இவரது திரைப்படச் செல்வாக்கு சரிந்ததாக வரலாறு சொல்கிறது.

கலைவாணரும், மதுரம் அம்மையாரும் நல்ல இணைகள். இது போலவே செங்கோட்டை கனகதார ஐயர் கிட்டப்பாவும் கே.பி.சுந்தரம்பாளும். சுந்தராம்பாள் காங்கிரஸில் சேர்ந்து சுதந்திரப் போரட்டங்களிலும் பங்கு பெற்றது சிறப்பு. 1951-ல் சென்னை சட்ட மேலவைக்கு தேர்வாகியிருக்கிறார். இவரது படங்களில் அவ்வையார் குறிப்பிடத்தக்கது. 1908-ல் பிறந்த இவர் 1973 வரை நடிப்பில் இருந்தது வியப்பானது.

ஆலம் ஆரா இந்தியாவில் வெளியான முதல் பேசும் படம். தமிழில் 1931-ல் வெளியான காளிதாஸ். அதற்கு முன் திரையின் காட்சிக்கு ஏற்ப மட்டைப்பந்து வர்ணையாளர் போல் வசனங்களைப் பேசுவார்களாம். இப்படியான வர்ணையாளர்களுக்கு அன்று நல்ல வரவேற்பு இருந்ததாகத் தெரிகிறது. படம் பேச ஆரம்பித்த பின் பாடலே படம் என்ற நிலை. சங்கீத ஞானமும் வளமான குரலும் உள்ளவர்களே அன்றைய நாயகன், நாயகிகளாக இடம் பெற முடியும். 1934-ல் வெளியான லவகுசா படத்தில் 63 பாடல்கள் என்றால் இன்றைய பாடல்களுக்கு எழுந்து வெளியே செல்லும் ரசிகர்கள் படத்தையே பார்த்திருக்க முடியாது. பேசும் படம் வந்த பின் பாகவதர், டி.ஆர்.மகாலிங்கம், விஸ்வநாத அய்யர், எம்.எஸ்.சுப்புலட்சுமி போன்ற கர்நாடக சங்கீதம் தெரிந்தவர்களுக்கு நல்ல காலம். இவை பெரும்பாலும் புராணப் படங்கள்.

1936-ல் வெளியான சதிலீலாவதி படத்தில் அறிமுகமான எம்.ஜி.ஆர் திரைப்படங்களில் மட்டுமின்றி அரசியலிலும் ஜொலித்தவர். நல்லவராக, வல்லவராக, ஏழைப்பங்காளராக நடித்தே மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம்பிடித்தவர். மலைக்கள்ளன் திருப்பு முனையை ஏற்படுத்திய படம். அலிபாபாவும் நாற்பது திருடர்களும் வண்ணப்படம். நாடோடியா மன்னனா என்ற நிலை வந்த போது மன்னன் என நிரூபித்தவர். பாடல்களை இயற்றியவர்களும் திராவிட பொதுவுடமை பாடல்களாக இயற்றி மக்களிடையே செல்வாக்குப் பெற்றார்கள். அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா எனத் திராவிடம் உச்சாணிக் கொப்பில் இருந்த காலகட்டம். மூன்றெழுத்தில் எம் மூச்சிருக்கும்

என்றவரின் உலகம் சுற்றும் வாலிபன் படம் வெளியாவதற்கு எத்தனை தடைகள் கொடுக்கப்பட்டது என்பதை காலம் பதிந்து வைத்திருக்கிறது.

வாய்பேசாதவர் வாயசைத்து, பாட்டுப்பாடி, வசனம் பேச ஆரம்பித்த போது, அதனை சாமர்த்தியமாக வளைத்துக் கொண்டவர்கள் அண்ணாத்துரையும், அவரது அன்புத் தம்பியான கருணாநிதியும் எனில் மிகையாகாது. 1952-ல் வெளியான பராசக்தி கருணாநிதி, சிவாஜிகணேசன் இருவருக்கும் திருப்புமுனையாக அமைந்தது. கருணநிதியின் வசனங்கள் சமூக அவலங்களை தோலுரித்துக்காட்டிய விதம் அருமை. வசனங்களை அழுத்தமான உச்சரிப்புடன் பேசி கைதட்டல்களை அள்ளிக் கொண்டவர் முன்னவரை விட நான்கு வயது இளையவரான சின்னையா பிள்ளை கணேசன். அடுத்த கால் நூற்றாண்டு திரைத்துறையை ஆண்டவர்கள் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும், நடிகர் திலகம் சிவாஜியும். எம்.ஜி.யாரும் அவரே சிவாஜியும் அவரே என மொட்டைத் தலையை தட்டிக் காட்டிய ரஜினியும், பிறவியிலேயே நடிகராகப் பிறந்த கமலும் 1975 தொடங்கி அடுத்த கால் நூற்றாண்டுகளை தங்களுக்கானதாக ஆக்கிக் கொண்டார்கள். முன்னால் வந்தவர்களோடு லட்சிய நடிகரென்று பாராட்டப்பட்டவரும், திராவிடர் கொள்கைகளுக்காக பாடுபட்டவருமான எஸ்.எஸ். ராஜேந்திரன், காதல் மன்னராக அறியப்பட்ட ஜெமினி கணேசன், ஜேம்ஸ்பாண்டாக புகழ் பெற்ற ஜெய்சங்கர், நவரசத்திலகம் முத்துராமன் போன்றவர்கள் புகழ்பெற்றவர்கள். இவர்கள் காலத்திய நடிகைகளின் முக அழகும், சிகை அலங்காரமும், ஆடை அணிகளும், நடனமும், காதல் நளினமும், வெட்கமும், துள்ளலும், போதையூட்டும் கண்களும், பொல்லாத சிரிப்பும் அழகோ அழகு. அந்தக் காலத்துப் பெரிசுகள் இவர்களைப் பார்த்து, திரை முழுவதும் விரியும் இவர்களது அண்மைக் காட்சிகளைக் கண்டு சொக்கித்தான் போயிருப்பார்கள். நாள் முழுக்க காட்டு வேலை செய்து, அடுப்படியோடு போராடி, பிள்ளைகுட்டிகளோடு மல்லுக்கட்டும் கண்ணம்மாவுக்கும், செல்லம்மாவுக்கும், திரையில் ஆடிப்பாடி மனதை மயக்கும் இந்த நட்சத்திரக் கனவுக்கன்னிகளுக்கும் இருந்த இடைவெளி அளக்க இயலாததல்லவா? தமிழக மனங்களை, இந்திய மக்களை திரைத்துறையினர் அப்படியே வசியம் செய்து விட்டார்கள். இன்னும் மயக்கம் தீரவில்லையென்பது திண்ணம். பின்னவர்களோடு நுழைந்தவர்களில் பாக்யராஜ் மற்றும் ராஜேந்தர் தங்களுக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டு கதை முதல் இயக்கம் வரை அத்தனையையும் வைத்துக் கொண்டு அரசியல் ஆசையோடு திரைத்துறையை கலக்கினார்கள். நடுவில் கடவுளாகவும்

ரோசாப்புக்காரராகவும் சிவக்குமார் தனி ஆளுமையாக வலம் வந்தது பாராட்டத்தக்கது. கிராமத்து நாயகனான ராமராஜன் புகழ் கண்டு கதிகலங்கிப் போனவர்கள் பலருண்டு. பாலசந்தர், பாரதிராஜா என திரையுலகம் பலரையும் அடையாளப்படுத்தியது.

1940களில் எஸ்.எஸ் வாசனின் ஜெமினி ஸ்டுடியோ திரையுலகத்தை வெற்றிகரமாக கையாண்டிருக்கிறது. சந்திரலேகா போன்ற பிரம்மாண்டமான படங்களை அந்தக்காலத்திலேயே எடுக்க முடிந்திருக்கிறது. ஏ.வி.எம் திரையுலகில் அதிகம் பேசப்படும் தயாரிப்பு நிறுவனம்.

1927-ல் பிறந்த கண்ணதாசன் தம்மை நிரந்தரமானவர் என அறிவித்துக் கொண்டவர். கவியரசர் காலம் கடந்தும் தமிழர் மனங்களில் வீற்றிருக்கிறார். திராவிடர் கழகத்தில் ஈடுபாடு காட்டி பின் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து விலகி அர்த்தமுள்ள இந்து மதம் படைத்தவர். வாலியின் பாடல்களும் மயக்கம் தருபவையே. ஸ்ரீனிவாஸ், டி.எம்.சௌந்தர்ராஜன், சீர்காழி கோவிந்தராஜன், பி.சுசிலா, ஜானகி என்று தமிழர் நெஞ்சங்களை தாலாட்டியவர்கள் பலர். கர்நாடக இசை மெல்லிசையாகி பட்டி தொட்டிகளில் மணம் பரப்பி இன்று மேலை நாடுகளுக்கும் குறைந்தல்ல என்ற அளவில் வளர்ந்திருப்பதன் பின்னால் ஜி.ராமநாதன், கே.வி.மகாதேவன், விஸ்வநாதன் ராமமூர்த்தி, இளையராஜா, ரஹ்மான் போன்றோரின் ஈடில்லா உழைப்பு இருக்கிறது.

பி.எஸ்.வீரப்பா, அசோகன், எம்.என்.நம்பியார் போன்றவர்களின் கதாபாத்திரங்கள் மேல் மக்கள் வசை மாரி பொழிந்தார்கள். டி.எஸ்.பாலையா, தங்கவேல், நாகேஷ், மனோரமா போன்றவர்கள் மக்களின் விலா எலும்புகளை குலுங்க வைத்தார்கள். எல்லீஸ், ஆர்.டங்கன், ஏ.பி.நாகராஜன், திரிலோக சுந்தர், பீம்சிங் போன்ற இயக்குனர்கள் அற்புதமான ஆரம்பகாலப் படங்களை இயக்கியிருக்கிறார்கள்.

அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா திரைத்துறையிலிருந்து வந்தவர்களென்பதால் அத்துறைக்கும், துறையினருக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் ஊரறிந்தது. 1967-ல் பெற்ற தோல்வியிலிருந்து காங்கிரஸ் இன்னும் மீண்டு வரமுடியாததற்குக் காரணம் தி.முக.வினரின் தமிழ் போராட்டங்களும் திரைத்துறை ஆதிக்கமும் என்றால் மிகையாகாது. இத்தனை

வருடங்கள் கழித்து தற்போதுதான் காங்கிரஸாருக்கு தீடீர் ஞானோதயம் ஏற்பட்டு நாயகிகளை இறக்கியிருக்கிறார்கள். விரைவில் அறுவடைக்குத் தயாராக வேண்டியதுதான்.

சுதந்திரத்திற்குப் பாடுபட்ட காங்கிரசால், தொடர்ந்து மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த காங்கிரசால், 1937 தொடங்கி 67 வரை அரியணையை அலங்கரித்த காங்கிரசு எதனால் ஐம்பது வருடங்கள் ஆகப்போகும் நிலையிலும் மீண்டும் அரியாசனத்தில் அமர முடியவில்லை? மத்தியில் ஆளும் கட்சியாக இருந்தும் ஏன் மாநிலத்தில் ஆட்சிக்கு வரமுடியவில்லை? அண்ணாவின் ஆட்சி அத்தனை சிறப்பாகவா இருந்தது? மக்களிடம் அத்தனை செல்வாக்குப் பெற்றவரா கலைஞர்? எத்தகைய தொலை நோக்குத் திட்டத்தோடு எம்.ஜி.ஆர் முதல்வரானார்? அவரை ஏன் வெல்ல முடியவில்லை? ஜெயலலிதா யாருக்காக ஆட்சி நடத்துகிறார்? எதனால் மக்கள் அவரை தேர்ந்தெடுக்கிறார்கள்?

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பின் நடந்த 1952 தேர்தலின் போது பிறந்த நடிகர் விஜயகாந்த், இன்று தமிழக அரசியலில் எதிர்க்கட்சித் தலைவர். கட்சி தொடங்கிய வருடம் 2005. 1952 தேர்தலில் 131 இடங்களில் போட்டியிட்டு 62 இடங்களைக் கைப்பற்றிய இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சிக்கு அன்று வாக்களித்த மக்கள் 26,40,337 பேர். இன்றைக்கு ஆயிரம் வாக்குகள் வாங்குவதே அரிதாகிவிட்டது. பெருந்திரளான மக்களில் ஆயிரம் பேர் கூட விரும்பாத கட்சியை யாருக்காகத் தொடர்ந்து நடந்த வேண்டும்? ஏன் மக்களுக்கு பொதுவுடமையில் விருப்பம் உண்டாகவில்லை? தமிழ் மண்ணில் பொதுவுடைமைக்கு ஈராயிரம் ஆண்டுகள் வரலாறு உண்டல்லவா?

ஐம்பதிற்கும் மேற்பட்ட கட்சிகள் போட்டியிட்ட நாடாளுமன்றத் தேர்தலில் அன்றைக்கு 17 இடங்களை வென்ற கட்சிக்கு இன்று மக்களவையில் ஒன்றும் மாநிலங்களவையில் ஒன்றும் என இடங்கள் இருப்பது ஏன்? ஒரு மாநிலங்களவை இருக்கைக்காக எவ்வளவு மோசமாகக் கெஞ்ச வேண்டியிருந்தது? 1925-ல் துவக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பொதுவுடைமைக் கட்சியினர் எவ்வளவு போராட்டங்களைச் சந்தித்தார்கள்? எத்தனை எத்தனை நெருக்கடிகள், தடைகள், கைதுகள், ஆர்ப்பாட்டங்கள.. எத்தனை தன்னலமற்ற தலைவர்களின் தியாகத்தால் வளர்ந்த கட்சி இது. கட்சியின் கொள்கைகள், கோட்பாடுகள், லட்சியங்கள் எவ்வளவு உயர்வானவை? எவ்வளவு உன்னதமானவை? ஏன் மக்களுக்குப்

பிடிக்கவில்லை? 1957-ல் கேரளாவில் ஆட்சியமைக்க முடிந்ததே? திராவிட முதலாளிகளின் கம்பெனிகளோடு பொதுவுடமை கட்சியினரால் எப்படி கூட்டணி போட முடியும்? எங்கே தவறு நடந்தது? நடக்கிறது?

பெரும் முதலாளிகளாகவும், நிலக்கிழார்களாகவும், ராஜாக்களாகவும், ஜமீன்களாகவும், மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் இருந்த பிராமணரல்லாத நீதிக்கட்சியார், இங்கு பிராமணர்களோடு பதவிகளுக்காக முட்டி மோதிக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில், ருஷ்யாவில் பொதுவுடமையின் பெயரால் ஆட்சி மாற்றமே நடந்ததே. அங்கு எப்படி முடிந்தது? ரஷ்யர்கள் போல் தமிழக மக்கள் சிரமங்களை அலுபவிக்கவில்லையா? யூதர்கள் மீதும் அங்கு பயங்கர வெறுப்பு வளர்ந்தது ஏன்? பிராமணர்களைப் போலவே யூதர்களும் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்ந்தார்களா? இருவரது எண்ணங்களும் வாழும் முறையும் ஒன்றுதானா?

மேலை நாடுகளிலிருந்து பாய்ந்தோடி வந்த சினிமா போல் ஏன் பொதுவுடமையும் மக்கள் புரட்சியும் உருண்டோடிக் கூட வரவில்லை? இதே காலகட்டத்தில் தானே சைனாவில் குயிங் பேரரசின் காலம் முடிந்து, குமிண்டாக்களின் புரட்சி வெடித்தது. இன்றைய நவீன சைனாவிற்கான அடித்தளம் அமைந்தது இக்காலகட்டமல்லவா? நீதிக்கட்சியார் போல் தானே குமிண்டாக்களின் தேசியக் கட்சியும் கீழவையில் 596 க்கு 269ம், மேலவையில் 274 க்கு 123 யையும் பெற்று அமோக வெற்றி பெற்றது. ஜனநாயகத் தேர்தலில் வெற்றி பெற்ற பின் அங்கு நடந்ததென்ன? தேசியத் தலைவரும், நவீன சைனாவின் தந்தையுமான சன்யாட் சென் எதற்காக ஜப்பானுக்கு அடைக்கலம் தேடி ஓடினார்? குமிண்டாக்களுக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் ஏன் உள்நாட்டுப் போர் மூண்டது?

1966-ல் பிறந்த சைனாவின் தந்தை என புகழப்படும் சன்யாட் சென்னுக்கும் இந்தியாவின் தந்தையென போற்றப்படும் 1869-ன் மோகன் தாஸ் காந்திக்கும் உள்ள ஒற்றுமைகள் என்ன? வேற்றுமைகள் எவ்வளவு? இரண்டு தலைவர்களுடைய நாடுகளும் இன்றைக்கு எப்படி இருக்கின்றன? இரண்டு பேரின் வழிவந்தவர்களான நேரு நவீன இந்தியாவிற்கு எந்தப் பாதையை தேர்ந்தெடுத்தார்? மாவோவின் நீண்ட நடைப்பயணம் எந்த பாதையில் பயணித்தது?

இந்திய சுதந்திர போராட்டங்களின் போதும் சுதந்திரம் பெற்ற பின்பும் இங்கு ஒரு ஜமின்தார் கூட பாதிக்கப்படவில்லை. விடுதலைக்கு முன் எதையெல்லாம் வைத்திருந்தார்களோ அவையெல்லாம் அப்படியே தொடர்ந்தன. ராஜாக்களிடமிருந்து பதவி மட்டுமே போனது. ஏராளமான சலுகைகள் காட்டப்பட்டன. சிந்தாமல் சிதறாமல் ஒருவரையும் விட்டு விடாமல் அப்படியே மாற்றம் நிகழ்ந்தது காந்தியாரின் மாயாஜாலாம். சீனாவில் ஜமீனாக நிலக்கிழாராக இருந்தவர்களின் கதி என்னவாகியதாக வரலாறு பதிவிட்டிருக்கிறது?

சுதந்திரம் பெற்றால் இந்த தேசத்தின் நிலம் அனைத்தும் பொதுவுடமையாக்கப்படும் என காந்தி ஏன் பேசவில்லை? சுதந்திரம் பெற்ற பின்பாவது நிலம் ஓரிரு தலைமுறைக்குப் பின்போ, குறிப்பிட்ட வருடங்களுக்குப் பிறகோ, 1947 வரை யாரெல்லாம் பிறந்திருக்கிறார்களோ அவர்களது ஆயுட்காலம் வரையோ அல்லது குறைந்த பட்சம் உலகப்புகழ்பெற்ற 99 ஆண்டுகால குத்தகைக்காலம் வரை மட்டுமோதான் இந்த தேசத்தின் மண் அவரவர்க்கு சொந்தமாக இருக்கும் என நேரு ஏன் அறிவிக்கவில்லை? அறிவித்திருந்தால் இன்று மாண்புமிகு ஆட்சியர் அலுவலகங்களையும், பெருமைமிகு நீதி மன்றங்களையும் உயிர்காக்கும் மருத்துவமனைகளையும், பொதுநலன் காக்கும் பொதுப்பணித்துறை கட்டிடங்களையும், குளம், குட்டை, ஏரிகளுக்குள்ளும், நாற்றமடிக்கும் சாக்கடை கால்வாய்களிலும், ஊருக்கு ஒதுக்குப் புறங்களிலும் கட்ட வேண்டிய அவலம் வந்திருக்குமா?

காந்தி ஏன் பேசவில்லை? ரஷ்யாவின் டால்ஸ்டாய் பெயரால் பண்ணை அமைத்தவருக்கு பொதுவுடமை சித்தாந்தங்கள் அதிகமாகவே தெரிந்திருக்கும் தானே. பேசியிருந்தால் முதலாளிகளும், நிலக்கிழார்களும், ஆன்மீகச் செம்மல்களும் காந்தி பின்னால் நடந்திருப்பார்களா? இந்த மண்ணில் காந்தியின் தலைமைக்கு செல்வாக்கு கிடைத்திருக்குமா? வாருங்கள் எல்லோரும் உழைப்போம், எல்லோரும் உண்போம், எல்லோரும் உடுப்போம் என்ற முழக்கத்தை காந்தி ஏன் முன்னெடுக்கவில்லை?

நீதிக்கட்சி உதயமான 1917-ல் பிறந்த இந்திராகாந்தி வங்கிகளைப் பொதுவுடமையாக்கியது போல் ஏன் நிலத்தை பொதுவுடமையாக்கவில்லை? அவசரநிலை செயல்பாட்டிலிருந்த காலகட்டத்தில் அனைத்தும் ஒழுங்காக நடந்ததாமே. தொடர்வண்டிகள் குறித்த நேரத்திற்கு வந்து குறித்த நேரத்திற்கு

புறப்பட்டதாமே. அனைத்தும் துல்லியமான ஒழுங்கு முறையில் நடந்தாமே. மக்கள் சாட்டைக்குத்தான் அடங்குவார்களா? அதிகாரத்திற்குத்தான் அடிபணிவார்களா? மிரட்டலுக்குத்தான் பயப்படுவார்களா? துப்பாக்கி முனைக்குத்தான் கட்டுப்படுவார்களா? சுயம்புலிங்கமும் சுயம்புமூர்த்திகளும் தோன்றியதாகப் பெருமை பேசும் இம்மண்ணிற்கு சுய நெறி, சுய அறிவு, சுய கட்டுப்பாடு பயனற்றதோ. மாசேதுங்கின் நீண்ட பயணமும் மாபெரும் முன்நகர்வும் அர்த்தம் நிறைந்ததோ. தார்க்குச்சிக்கும் அங்குசத்திற்கும் மிரண்டோடும் மாக்கள் போல மக்களுக்கு குச்சிகளும், வாள்களும், துப்பாக்கிகளும், சட்டங்களும் நிரந்தரத் தேவை தானோ.

தமிழகத்தின் மாபெரும் பேரரசரான இராஜராஜ சோழனும் (984-1014) ரஷ்யாவின் பேரரசரான விளாதிமீர் கிரேட்டும் (980-1015) சமகாலத்தில் அரசாண்டிருக்கிறார்கள். இந்தியாவின் தலை சிறந்த பல்கலைக்கழகமான நாளந்தா சிதைக்கப்பட்ட காலத்தில், இங்கிலாந்தில் புகழ்பெற்ற ஆகஸ்போர்டு பல்கலை உருவாகும் காலம் கனிகிறது. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்குக் கயிற்றை முத்தமிட்ட காலகட்டத்தில் நெப்போலியன் பிரான்ஸ் மன்னராக முடி சூட்டுகிறான். ஸ்பெயின் தனது குடியேற்றங்களில் அம்மை தடுப்பு ஊசியை அனைவருக்கும் போடும் முயற்சிகளில் தீவிரமாகச் செயல்படுகிறது.

மாறவர்மன் முதலாம் குலசேகரன் (1268-1310) ஆட்சிக் காலத்தில் வந்த ரோம் நாட்டு மார்கோ போலா, பாண்டிய நாடு போன்ற செல்வச் செழிப்பான நாடு உலகிலேயே கிடையாது என்று குறித்திருக்கிறாராம். அரேபிய வரலாற்றாசிரியரும் பாண்டியனின் காலத்தில் வந்து அவனது செல்வ வளத்தைப் போற்றுகிறார் என்றால் உண்மையாகத்தான் இருக்கும். மதுரை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதிகளை ஆண்ட பாண்டியனா இத்தகைய செல்வச் செழிப்பில் திளைத்தான்? கருவேலக் காடுகளும், பொட்டல் காடுகளும், தரிசுநிலங்களையும் தவிர இப்பகுதியில் ஒன்றுமே இல்லையே. இருக்கும் ஒன்றிரண்டு சாலைகளும், சத்திரங்களும் குளங்களும் நாயக்கர்கள் காலத்தில் குறிப்பாக ராணிமங்கம்மாள் காலத்தில் உருவாக்கப்பட்டதாகவல்லவா வரலாறு சொல்கிறது. எங்கிருந்து வந்தது பாண்டியனுக்கு இவ்வளவு செல்வம்?

இக்காலகட்டத்தில் குப்ளேகான் சைனாவை ஆக்ரமித்து யான் பேரரசை நிறுவுகிறார். ஜப்பானில் கமகுரா சொகுனேட் மங்கோலியர்களை தீவிரமாக எதிர்க்கிறது. இச்சமயத்தில் இந்த நாடுகளோடு பாண்டியன் வாணிபம் செய்து

செழித்திருக்க முடியாது. பைசாந்தியப் பேரரசு முடிவுற்று துருக்கிய ஒட்டமான பேரரசு உதயமாகிக் கொண்டிருக்கிறது. இவர்களோடு முழு வீச்சில் வாணிபம் செய்தானென்று சொல்ல முடியாது. டெல்லியை ஆண்ட கில்ஜி துருக்கியரான கில்ஜி வம்சத்தோடும் நல்ல உறவிருந்ததாகத் தெரியவில்லை. இருந்திருந்தால் பாண்டியன் மகன்களின் வாரிசுரிமைச் சண்டையில் தலையிட்டிருக்க மாட்டார்கள். மதுரையும் சுல்தான்களால் ஆளப்பட்டிருக்காது. மிளகையும், ஏலக்காயையும் ஏற்றுமதி செய்தா இத்தனை செல்வங்களைக் குவித்தான் பாண்டியன்? ஆயிரம் வருடங்களுக்கும் மேல் முத்துக் குளித்துமா கொற்கையில் முத்துகள் குவிந்து கிடந்தன? எவ்வளவு கொடுத்தும் முத்துக்களை வாங்க விரும்பும் கருப்பழகி களியோபாட்ராவும் முதல் நூற்றாண்டிலியே முடிந்து போனாளே.. ஒருவேளை முத்துக்கள் விளைந்திருந்தாலும் யார் அவற்றை பொன்னுக்கும் பொருளுக்கும் மாற்றாக வாங்கியிருப்பார்கள்?

படைதிரட்டி வந்த மங்கோலியர்களால் நடுநடுத்துக் கிடந்த ஆசிய, ஐரோப்பிய நாட்டவர் யார் பாண்டியனோடு வணிகம் செய்திருக்கக்கூடும்? தமிழகத்தில் தங்கமும் வெள்ளியும் எங்கே கிடைத்திருக்கும்? வாணிகத்திலும் கப்பல் கட்டுமானத்திலும் சிறந்திருந்த பாண்டியர்கள் அமெரிக்கா செல்லும் வழியை அறிந்திருந்திருப்பார்களோ. பாண்டியன் அங்கே கொட்டிக் கிடந்த தங்கத்தை அள்ளிக்கொண்டு வந்து மதுரையை செழிப்பாக்கினானோ. அறிந்திருந்த வழியை ஒருவருக்கும் சொல்லாமல் மறைத்து விட்டானோ. தமிழர்கள் ரகசியம் காப்பதில் மிகவும் வல்லவர்களாயிற்றே. அத்தனை ரகசியங்களையும் குடும்பத்திற்குள்ளேயே பூட்டி வைத்துக் கொள்வதில் தமிழர்க்கு இணை எவருமில்லையே.

செல்வச் செழிப்பில் சிறந்திருந்ததாக பறை சாற்றப்படும் பாண்டிய நாடு குற்றாலக் காடுகளுக்குள் ஒளிந்து கொண்டது எப்போதிருந்து? தமிழ் அறிஞர்களால் பத்தாயிரம் வருடங்களுக்கும் மேல் பாரம்பரியம் கொடுக்கப்படும் பாண்டிய அரசு, தகுந்த சான்றுகளோடு மூன்றாயிரமாண்டுகள் பாரம்பரியம் என நிருபிக்கக் கூடிய இந்த மாபெரும் வேந்தர் மரபு ஏங்கே போனது? இவர்களது அரண்மனைகள், கோட்டை, கொத்தளங்களெல்லாம் என்னவாயின? வேந்தர்கள் நிச்சயம் குடிசையில் வாழ்ந்திருக்க மாட்டார்களே? சேரனுக்கும், சோழனுக்கும் இதே கதியல்லவா?

தமிழகத்தை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கட்டிக்காத்த மூவேந்தர்களுக்கும் வாரிசு என ஒருவரைக் கூட அடையாளம் காண இயலவில்லையே. உறவுக் கூட்டம் இருந்திருக்குமல்லவா. பெண் எடுத்து பெண் கொடுத்த வழியில் சொந்தம் உண்டாகியிருக்குமே. பிற நாடுகளில் தற்போதும் மன்னர்களும், ராணிகளும், இளவரசர்களும் இருக்கும் போது மொழிக்கும், மண்ணுக்கும், நீதிக்கும், வீரத்திற்கும் ஓயாத போர்க்களங்களைக் கண்ட நம் வேந்தர்களும், வேளிர்களும், அரசர்களும், மன்னர்களும் எங்கே சென்றார்கள்?

போர்த்துகீசியர்தான் இந்தியாவிற்கு வந்த முதல் ஐரோப்பியரல்லவா? எத்தனையோ பேர் இதற்கு முன் இந்தியாவிற்குள் நுழைந்திருந்தாலும் இவர்கள் வந்த வழி வேறல்லவா? நோக்கமும் பெரிதல்லவா? எதற்காக இன்றைய தமிழ்நாட்டைவிட சிறிய நாடான போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த வாஸ்கோடகாமா 1498-ல் கள்ளிக் கோட்டையில் வந்திறங்கினார்? எதற்காக முதலாம் ஜோ அரசரின் மகனான இளவரசர் ஹென்றி நேவிகேட்டர், வாஸ்கோடகாமாவின் பயணத்திற்கு பெரிய அளவிலான பொருளுதவி செய்தார்? எப்படியாவது இந்தியாவிற்கு ஒரு கடல் வழியைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என ஐரோப்பியர்கள் தவியாய் தவித்தது ஏன்? என்ன விலை கொடுத்தாவது இந்தியாவிற்கு கடல் பாதையைக் கண்டடைய சபதமிட்டுக் கிளம்பிய ஸ்பெயின் நாட்டு கொலம்பஸ், 1492-ல் இந்தியாவைக் கண்டுவிட்டதாக அமெரிக்காவின் கடற்கரையில் கால் வைத்து களிப்படைந்து கிடந்தது எதற்காக?

இந்தியாவின் சரித்திரம் பூகோளம் என்ன? போர்ச்சுக்கல், ஸ்பெயின் நாடுகளின் சரித்திரம் யாது? அவர்கள் வரும் போது இந்தியா என்ற ஒரு தேசம் இங்கிருந்ததா? பாரதநாடு பழம் பெருநாடு என்ற போதிலும் இந்தியாவின் வயது எழுபது தானே. பாண்டிய நாடு பழம் பெரும்நாடு என்றல்லவா பாண்டி நாட்டு பாரதி பாடியிருக்க வேண்டும்.

இனியும் முடியாது என விட்டுப்போன ஆங்கிலேயரும் வைத்துக் கொள்ளுங்கள் என பெருந்தன்மை பாராட்டிய பிரெஞ்சுக்காரர்களும் பரவாயில்லை என்றல்லவா நினைக்கத் தோன்றுகிறது போர்த்துக்கீசியர்களின் பேராசை. பின்னால் வந்தவர்களெல்லாம் முன்னாலேயே சென்றுவிட, கடைசி வரை போக மாட்டோம் என அடம்பிடித்த போர்ச்சுக்கல்லை படை வலிமை கொண்டல்லலவா போக வைத்திருக்கிறது இந்திய அரசு. இந்தியாவோடு 1961 வரை மல்லுக்கட்டிய இந்நாடு

1820களிலேயே பிரேசில், மெக்ஸிகோ போன்ற நாடுகளை விடுவிடுத்தது ஏன்? தங்கம் அங்கு கொட்டிக் கிடக்கிறது என்பதை அறிந்து அந்தக் காலத்திலேயே ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட போர்த்துக்கீசியர்கள் பிரேசிலில் மட்டும் மளமளவென குடியேறினார்கள் எனில், சுதந்திர நாடானபோது பிரேசிலில் எந்த நாட்டுக்காரர்கள் எந்த இனத்துக்காரர்கள், எந்த மொழிக்காரர்கள் வசித்திருப்பார்கள்? அண்ணன் நாடான ஸ்பெயின், தம்பி நாடான பிரேசிலுக்கு சுதந்திரம் கொடுத்தது ஆச்சரியமில்லையே. இந்த உறவால் தானே கோவா விடுவிப்பின் போது போர்ச்சுக்கலுக்கு காயம்பட்டால் தமக்கு வலிக்கும் என பிரேசில் பேசியது. பிரேசிலுக்கு அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டவர்களின் பெருவலியை இந்த அண்ணன் தம்பிகள் அறிந்திருப்பார்களா. தம்பிக்கு தமது சொந்த வரலாறு மறந்ததெப்படி.

ஒருகோடி பேர் வசிக்கும் போர்ச்சுக்கல் நாட்டு மொழியான போர்த்து கீசியத்தைப் பேசுபவர்கள் இன்று இருபத்தைந்து கோடிக்கும் அதிகம். எப்படி இது சாத்தியமானது? லத்தீன் அமெரிக்க நாட்டவர்கள் மொழியற்றவர்களாகவா இருந்தார்கள்? நீடித்த மாயன் நாகரிகமும் இன்கா பேரரசும் அம்மண்ணில் செழித்திருந்ததாகவல்லவா வரலாறு பதிந்திருக்கிறது. கண்ணாடிகளையும், கத்தரிக்கோள்களையும், கோடாரிகளையும் விற்கப்போனவர்கள், அம்மண்ணின் மக்களையும், மொழியையும், மதத்தையும், கலாச்சாரத்தையும், இயற்கையையும் வேரறுத்தது எதற்காக? கூடி வாழ்வோம் என்ற எண்ணம் ஐரோப்பியர்களிடம் தோன்றாதது ஏன்? மக்களைக் கொன்றும், அடிமையாக்கியும், உழைப்பைச் சுரண்டியும்தான் அறிவாளிகள் என்றும் வீரமானவர்கள் என்றும் நிலைநாட்ட வேண்டுமா?

அடிமைத் தொழிலிலும் முதலில் ஈடுபட்டது போர்ச்சுக்கல்தானே. இப்படியுமா இந்த உலகம் இருந்தது? குடியேற்ற நாடுகளில் ஏன் ஐரோப்பியக் கனவான்கள் அவரவர் அப்பா, அம்மா, மனைவி, மாமன், மாமியார், மச்சினிகளோடு அவரவர் தோட்டங்களில் வேலை செய்யவில்லை? அதிக உற்பத்தி வேண்டும். அதிக லாபம் வேண்டும். பெரிய வீடு வேண்டும். சொகுசாக வாழ வேண்டும். இதற்குத்தானே இவ்வளவு அவலங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

ஆயிரமாயிரம் சிறப்புக்கள் மிக்கதல்லவா இந்த ஆப்பிரிக்க தேசம். ஆப்பிரிக்கா பெற்ற பிள்ளைகளல்லவா மனிதகுலம். அறிவியல் அப்படித்தானே

சொல்கிறது. பெற்றோரை பிள்ளைகள் விலை பேசி விற்பரோ? மனிதர்களுக்கு இப்படியுமா பேராசை வரும்?

தமிழ் நிலத்தில் மைசூர் போர்கள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில், வங்காளத்தில் கொடுமையான பஞ்சம் ஆரம்பித்த சமயத்தில், வரிகள் அதிகமாக விதிக்கப்படுகிறதே என அமெரிக்க வெள்ளையர்கள் கொதித்துக் கொண்டிருந்த நேரத்தில், மாவீரன் என அழைக்கப்படும் நெப்போலியின் பிறந்த 1769-ல், சரக்குக் கப்பலில் இளமையான உடல் நல மிக்க 39 ஆண்கள், 15 பையன்கள், 24 பெண்கள், 16 சிறுமிகள் என மொத்தம் 94 கருப்பர்கள் இப்போதுதான் வந்திறங்கியிருக்கிறார்கள், வந்து அள்ளிக் கொண்டு போங்கள் என அமெரிக்க பத்திரிகைகளில் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றால் அடிமைத் தொழில் எந்த அளவிற்கு மனிதத் தன்மை சிறிதும் இல்லாததாய் இருந்திருக்கும்?

எந்த நாட்டை முன்மாதிரியாகக் கொண்டு உலகத்தவர் ஓடிக் கொண்டிருக்கிறார்களோ அந்த நாட்டில் அடிமைகளை விற்பதற்கென்றே சந்தைகள் இருந்திருக்கின்றன. பொருட்கள் விற்கும் கடைகளிலும் அடிமைகளை விற்றிருக்கிறார்கள். பத்தாயிரம் அடிமைகள் வரை வைத்திருந்த முதலாளிகள் இருந்திருக்கிறார்கள். ஆடு, மாடு, கோழிகளை வாங்கிச் செல்வது போல் இந்த மக்களை கொஞ்சமும் மனச்சாட்சியில்லாமல் வாங்கிச் சென்றிருக்கிறார்கள். பிற நாடுகளை ஆக்கிரமித்து காலனியாதிக்கம் தொடங்கிய பதினைந்தாம் நூற்றாண்டு முதல் அடிமை வாணிகமும் பெருகிவிட்டதாகத் தெரிகிறது. அரேபிய அடிமை வணிகமும், அட்லாண்டிக் அடிமை வணிகமும் போட்டி போட்டு அடிமைகளை விற்றிருக்கின்றன. காலனியாதிக்கப் பேரரசுகளாக இருந்த போர்ச்சுக்கல், ஸ்பெயின், பிரிட்டன், நெதர்லாந்து போன்றவை அடிமைகளை விற்றுக் கொழித்திருக்கின்றன.

மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரை முழுதும் அடிமைத் தொழில் பெருவாரியாக நடந்திருக்கிறது. தொழில் முன்னேற்றம் காரணமாக அப்படியே மத்திய ஆப்பிரிக்காவிற்கும் பரவியிருக்கிறது. ஐரோப்பியர்களிடமும் அரேபியர்களிடமும் சிக்கிக் கொண்டு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த இம்மக்களை சரக்கு கப்பல்களில் ஏற்றி எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகவும் மலிவாகவும் கொண்டு செல்ல முடியுமா அப்படி கொண்டு போய் விற்றிருக்கிறார்கள். அமெரிக்காவின்

காப்பி, புகையிலை, கோகோ, கரும்பு, பருத்தி தோட்டங்ளிலும், தங்கம் வெள்ளி சுரங்கங்களிலும், கட்டுமானப் பணிகளிலும் இம்மக்களை வேலை வாங்கி கொடுமைப்படுத்தியது வரலாற்றில் இருண்ட காலமே. சீமான், சீமாட்டிகளுக்கு சேவகம் செய்யவும் ஏராளமான அடிமைகள் வாங்கப்பட்டிருக்கிறார்கள். அடிமைகளின் குழந்தைகளும் அடிமையாகியது கொடுமையிலும் கொடுமை.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே எத்தியோப்பியாவில் ஆஸியம் பேரரசையும், சோமாலியாவில் பெர்பெரா பேரரசையும், நைஜீரியாவில் பெனின் பேரரசையும் நிறுவியவர்கள் எப்படி அடிமைகளாக விற்கப்பட்டார்கள்? இன்னும் எவ்வளவோ சிறப்பான பேரரசுகளை நிருவியிருந்தார்களே. எகிப்திய பேரரசிற்கு சொந்தக்காரர்கள் இவர்களல்லவா. காலனியாதிக்கத்திற்கு முன்பு வரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பிரிவுகளைக் கொண்டிருந்த ஆப்பிரிக்கா, நாகரிகத்தில் செழித்திருந்த ஆப்பிரிக்கா, 1800களில் மொத்தமாக காலனியாதிக்க நாடுகளாக மாறிப் போனது ஏன்? 1980வரை ஸிம்பாப்வேயிற்கு சுதந்திரம் மறுக்கப்பட்டதன் காரணம் என்னவாக இருக்கும்?

உலக வரலாற்றில் ஆறுகளை அருகாமையாகக் கொண்டு எத்தனை எத்தனையோ நாகரிகங்கள் செழித்து வளர்ந்து மனித குல நாகரிகத்திற்கு, பண்பாட்டிற்கு எவ்வளவோ பங்களிப்புகளைக் கொடுத்திருந்தாலும், அனைத்திற்கும் முன்னால் நிற்பது சில நாகரிகங்களே என்றால் மிகையாகாது. எகிப்தின் நைல் நதி நாகரிகமும், யூப்ரடீஸ், டைக்ரீஸின் சுமேரிய நாகரிகமும், சிந்துநதியின் சிந்துச் சமவெளி நாகரிகமும், சீனாவின் மஞ்சளாறு நாகரிகமும் இன்றைக்கும் மனித மனங்களில் மனித குல நாகரீகத்தின் தொட்டில்கள் என்றல்லவா நீங்க இடம் பெற்றிருக்கின்றன.

சுமேரிய நாகரிகமென்றும், மெசப்டோமிய நாகரிகமென்றும் நினைவு கூறப்படும் இன்றைய ஈராக் பகுதியின் பண்பாட்டுக் கூறுகள் இன்றளவும் தொடர்கின்றனவே. கிறிஸ்துவுக்கு முன்னால் பத்தாயிரம் வருடங்களுக்கும் மேல் பாரம்பரியம் கொண்ட இம்மண்ணில் எத்தனை எத்தனை பேரரசுகள் பல்கிப் பெருகியிருந்திருக்கும்? எவ்வளவு மக்கள் பெருங்கனவுகளோடு வாழ்ந்திருப்பார்கள்? எங்கெல்லாம் சென்றிருப்பார்கள்? என்னவெல்லாம் பேசியிருப்பார்கள்? அவர்கள் உடைகள் வண்ணங்கள் மின்னியிருக்குமா? ஒன்றாக அமர்ந்து பேசி சிரித்துக்கொண்டே உண்டிருப்பார்களா? விருந்தினர்களை எப்படி

வரவேற்றிருப்பார்கள்? திருவிழாக்கள் கொண்டாடியிருப்பார்களா? ஆடலையும் பாடலையும் போற்றியிருப்பார்களா? கடவுளைப் பற்றி எந்த மாதிரியான கோட்பாடுகளை வைத்திருந்தார்கள்? வீடுகளை எப்படியெல்லாம் அலங்காரம் செய்திருப்பார்கள்?

சிந்து சமவெளி மக்கள் சுட்ட செங்கல் கொண்டு வீடுகள் கட்டியிருந்தார்களாம். ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் செங்கல் கொண்டு கட்டிய மாடி வீடுகளில் வாழ முடிந்திருக்கும் போது, நவீன அறிவியல் காலம் எனக் கொண்டாடப்படும் தற்போதும் குடிசைகளிலும், தகரக் கொட்டகைகளிலும், ஆஸ்பெஸ்டாஸ் கூரைகளிலும் மக்கள் வாழும் அவலத்தை என்னவென்று சொல்வது. நகருக்கு நடுவே பொதுக்குளம் அமைத்திருந்தார்களாம். புதிய நீர் வருவதற்கும் பழைய நீர் வெளியேறுவதற்கும் வசதிகள் இருந்தனவாம். அழகிய படிக்கட்டுகள் உள்ள குளமாமே. உடைமாற்றக் கூட அறைகள் கட்டியிருக்கிறார்கள்.

யார் அறிவானவர்கள்? எது உண்மையிலேயே அறிவான காலம்? துப்பாக்கியால் சுட்டால், டைனமைட் கண்டு பிடித்தால், ராக்கெட் விட்டால் அறிவானவர்கள் என்று அர்த்தமா? 4500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பிரமிடு இன்றைக்கும் கம்பீரமாக நிற்கிறது. நவீன அறிவியல் தொழில்நுட்பம் கொண்டு கட்டப்படும் பாலங்கள் பொத்தென்று விழுகின்றன. கட்டிடங்கள் சட்டென்று சரிகின்றன. பூமிக்குள் புதையும் கட்டிடங்களுக்கு எவ்வளவு வரைபடங்கள்? எத்தனை திட்டமிடல்கள்? ஏராளமான பொறியாளர்கள்.. ஏகப்பட்ட நிபந்தனைகள். ஒவ்வொரு நிலையிலும் கண்காணிப்பு. நூறு முறைக்கும் மேலா ஒரு கட்டிடத்தில் கண்ணாடி விழுந்து நொறுங்கும்?

தமிழர் மரபில் உலகம் என அழைக்கப்படும் இப்பூமி மிகப் பெரியதாக, மிகப் பரந்ததாக இருந்த போதிலும், அதன் உலக வரலாறு மிக மிகச் சிறியதாகவே இருக்கிறது. பூமியும், சூரியனும், சந்திரனும், தாவர விலங்குகளும் தோன்றி ஆறாயிரம் ஆண்டுகள்தான் ஆகின்றன என அறுதியிடும் மதங்களின் சிறப்பு படைப்புக் கொள்கை காலக்கணக்கும், ஒன்றுமில்லாதிருந்த ஒன்றிலிருந்து ஏதோ ஒன்று படீரென வெடித்துக் கிளம்பி இந்த அண்டவெளியையும், நட்சத்திரங்களையும், கோள்களையும், சந்திரன்களையும் உருவாக்கி, எளிய முதல் நிலை தாவர விலங்குகளிலிருந்து மனிதன் வரையிலான உயிரினங்களை

உண்டாக்கிய அறிவியல் காலக் கணக்கீடும் மிகப் பெரிய வேறுபாட்டைக் கொண்டுள்ளன.

எல்லையற்றதாகக் கூறப்படும் அண்டவெளியைப் பற்றி இன்னும் முழுமையாக அறியப்படவில்லை. இந்த அண்டம் மிக மிகப் பெரியது என அறிஞர்களால் கண்டறியப்பட்டுள்ளது. அண்டத்தின் தோற்றத்தில் மர்மங்கள் நிறைந்துள்ளன. அண்டம் எப்படித் தோன்றியது என்பதற்கு ஒருவேளை அறிவியல் பதில் வைத்திருந்தாலும், ஏன் அண்டம் தோன்றியது என்பதற்கான பதிலை ஒருபோதும் கண்டறிய இயலாது என்றே தெரிகிறது. எத்தனையோ தத்துவஞானிகளால், அறிஞர்களால், மதவாதிகளால் இந்த அண்டத்தைப் பற்றி எடுத்தியம்பப்பட்டாலும் இன்று பெரு வெடிப்புக் கொள்கையே பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அறிவியல் சிந்தனைகள், கண்டுபிடிப்புகள் மேலும் முன்னேற்றமடையும் போது அனைத்துக் கோட்பாடுகளும் மாற்றத்தைச் சந்திக்கலாம். அறிவியலைப் பொறுத்த மட்டில் முற்றான உண்மை என ஒன்றைச் சொல்ல இயலாது போலும்.

வானத்து கோள்களும், நட்சத்திரங்களும் மனிதர்களுக்கு என்றும் வியப்பிற்குரியதாகவே இருந்து வந்திருக்கின்றன. ஒவ்வொரு சமயமும் பண்பாடும் தங்களுக்கே உரித்தான தனித்த அடையாளங்களையும் கோட்பாடுகளையும் பெற்று வளர்ந்துள்ளன. குறிப்பாக கிரேக்கர்கள், பாபிலோனியர்கள் ஆதிகால வானவியல் சிந்தனைகளால் அண்டவெளியைப் பற்றிய பல புரிதல்களைப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இதனடிப்படையில் பல்வேறு சடங்குகளும் தோன்றியிருக்கின்றன. பண்டைய இந்தியாவின் வானவியல் ஞானமும் மதிப்பு மிக்கதே. கோள்களின் தாக்கம் பற்றி, அவை மனிதர்களில் உண்டாகும் விளைவுகள் பற்றி, இந்திய மண் பல முடிவுகளைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. பிறப்பு முதல் இறப்பு வரையிலான ஒவ்வொரு கட்டத்திலும் இன்றைக்கும் இந்தியர்களின் பெரும்பான்மையினர் வானத்தைச் சார்ந்தே வாழ்கிறார்கள் அல்லது முடிவுகளை எடுக்கிறார்கள். வானியல் சார்ந்த ஆராய்ச்சிகள், அதி நவீன தொலைநோக்கிகள், செயற்கைக்கோள் போக்குவரத்து என உலகம் மாறிக் கொண்டிருக்கும் இக்காலத்திலும் சோதிடரையும் ஜாதகத்தையும் நம்பியே முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றால் பண்டைய இந்தியர்களின் நிலை எப்படியிருந்திருக்குமோ?

நேரத்தில் நல்ல நேரம், கெட்ட நேரம் என இருக்க முடியுமா? ஒன்பது கோள்களின் இருப்பை அறுதியிட்ட பின்பும் ராகுவையும் கேதுவையும் இந்திய ஞானத்தில் விட முடியாததற்கு காரணம் என்னவாக இருக்கும்?

எகிப்தியர்கள், பாபிலோனியர்கள், இந்தியர்கள் எனப் பரந்து விரிந்த இந்த ஞானம் கிரேக்க தத்துவ ஞானிகளில் பலவாறாகப் பேசப்பட்டு பொது ஆண்டிற்கு முன்பான ஆறாம் நூற்றாண்டில் அறிவியலாக மலர்ந்ததாகச் கூறலாம். என்னதான் பகுத்தறிவு, அறிவியல் என்று பேசினாலும் புராணங்களையும் சமயங்களையும் விட முடியாமல் அறிஞர்கள் விழிக்கிறார்கள் என்றே படுகிறது. இயற்கையை, உலகை, பகுத்தறிவு கொண்டே காண வேண்டும் என்ற கிரேக்க பித்தகோரஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களால் கடவுள் தத்துவத்தையும் விட இயலவில்லை.

இப்பேரண்டத்திற்கு தொடக்கமும் முடிவும் உண்டென்று நம்பும் மதங்களும், பேரண்டம் என்றுமுள்ளது, அழிவில்லாதது என்று பேசும் மதங்களும், பேரண்டத்தை படைத்து, காத்து, அழித்து, மறுபடியும் படைத்து என அண்டத்தையும் வாழ்க்கையையும் பெரியதொரு சகடமாகப் பார்க்கும் மதங்களும் இங்குண்டு. இதையொட்டியே ஆயிரமாயிரம் தெய்வங்கள் இங்கே படைக்கப்பட்டிருக்கின்றன.

கோப்பர் நிக்கஸ், கெப்ளர், கலிலியோ என வேகமெடுத்த வான்வெளி அறிவியல், நியூட்டனின் விதிகளால் அதிக உத்வேகம் பெற்று, ஐன்ஸ்டீனால் முடுக்கி விடப்பட்டு, ரூதர்போர்ட் போன்றவர்களின் அணுக் கொள்கையால் ஆதாயம் பெற்று, ஆய்வுக்கூடத்திலேயே அண்டத்தை உருவாக்கி விட வேண்டும் என்னும் சென் மையமாக முன்னேற்றம் கண்டுள்ளது. இருந்தும் கடவுளையும் விட முடியவில்லை. கடவுள் துகளை அறிந்தால் கடவுளையும் புரிந்து கொள்ளலாமல்லவா?

கடவுள் எப்படி புதிரோ, அதைவிட அண்டமும் புதிராகவே இருந்து வந்திருக்கிறது. தற்போதும் இருக்கிறது. அறிவியல் அறிஞர்களால் இன்று வரை புரிந்து கொள்ளவே முடியாத ஒன்று ஏன் அண்டம் அனைத்து திசைகளிலும் ஒரே சீராக இருக்கிறது எனும் கேள்வி.

அண்டம் தொடர்ந்து விரிவடைகிறது என்ற எட்வின் ஹப்பிள் கண்டுபிடிப்பும் அறிஞர்களை குழப்புகிறது. எப்படி இந்தப் பேரண்டம் தொடர்ந்து விரிவடைந்து கொண்டே செல்கிறது? அப்படியெனில் முடிவு என்ற ஒன்று இருக்கவே முடியாதே..

முடிவு இல்லையெனில் தொடக்கமும் இருந்திருக்க இயலாதல்லவா.. இந்து புராணங்களில் ஆதியும் அந்தமும் இல்லாத, தெரியாத, கண்டுபிடிக்க முடியாத தெய்வங்கள் மட்டுமே ஆயிரத்திற்கும் மேல் இருக்கும்.

தொடக்க கால நெருப்புப் பந்திலிருந்து மாபெரும் வேகத்தில் இந்தப் பேரண்டம் தோன்றியதாம். பரந்து விரிந்து காணப்படும் இப்பேரண்டம் எவ்வளவு பெரியது? ஆயிரம் கோடி ஒளி ஆண்டுகள் விட்டமுடையது என அறிவியல் சொல்கிறது. வெற்றிடத்தில் ஒரு நொடிக்கு மூன்று லட்சம் கிலோ மீட்டர்கள் பயணமாகும் ஒளி, ஒரு வருடத்தில் பதினைந்தாயிரம் கோடி கிலோ மீட்டர்களுக்கும் மேல் பயணமாகுமே. ஏன் பேரண்டம் இவ்வளவு பெரியதாக இருக்கிறது? ஒரு புள்ளி அளவிற்கே, ஒரேயொரு மில்லி மீட்டர் அளவிற்கே இருந்த அந்த ஆதி அண்டமா இப்படி ஆயிரம் கோடி ஒளியாண்டுகள் விட்டமுடையதாக பெருவீக்கமடைந்தது? ஒரு சிறிய புள்ளியினுள்ளா இவ்வளவு பேராற்றல் பொதிந்திருந்தது? ஒரு சிறு புள்ளியை வரம்பற்ற இடைவெளியாக மாற்றிய சக்தி எது? எதற்காக? எப்படி? எப்போது?

அண்டக் கோளத்தின் படைப்பு ஆரம்பமாகிய 10^{43} விநாடியில் அதன் அளவு ஒரு மில்லி மீட்டராம். 10^{35} விநாடிக்குள் பல கோடி அளவிற்கு விரிந்து பெருகிவிட்டதாம். பெரு வெடிப்பில் வந்து நிற்கும் அறிவியல், அண்டத்தின் தொடக்கம் பெரு வெடிப்பு இல்லாமல் வேறொன்றாக இருந்தால் என்பதையும் விட்டு விடாமல் ஆராய்கிறது. ஒரு காரணத்தைத் தேடி ஓராயிரம் வழிகளில் அறிவியல் பயணிக்கிறது. இருப்பது ஒரேயொரு அண்டமா அல்லது இங்கு அண்டங்களின் கூட்டம் இருக்கிறதா என்பதிலும் அறிவியல் விழிபிதுங்கி நிற்கிறது.

ஆறிவியல்தான் ஆதாரமில்லாமல் பேச முடியாது. மதங்கள் எது குறித்தும் பேசக் கூடியவை. சிலது குறித்து பேசக் கூடாதென்றும் மறைத்து வைப்பவை.

உலகம் எப்படித் தோன்றியது? இவ்வுலகைப் படைத்தது யார்? விடை மிக மிக எளிது. ஆதிபுருஷனிலிருந்து ஆதி மனிதனிலிருந்து எல்லாம் தோன்றியது. பலிகொடுக்கப்பட்ட அந்த ஆதி மனிதனில் முன்பிருந்ததெல்லாம் அடக்கம். இனி வரப்போவதெல்லாம் அடக்கம். ஆதி மனிதனுக்கு ஆயிரம் தலைகள். ஆயிரம் கண்கள். ஆயிரம் கால்கள். ஒற்றைக் கண்ணும், ஒற்றைக் காலும் கொண்டிருந்த அந்த ஆதி மனிதன் எப்படி இருந்திருப்பார்? அந்த ஆதி மனிதனை பலியிடாமல்

உலகை உருவாக்கியிருக்க முடியாதா? ரிக் வேதம் மனிதனை பலியிட்டுத்தான் உலகைப் படைக்கிறது.

பலியிலிருந்து நெய் உண்டானது. அதைக்கொண்டு பூமி வாழ் விலங்கினங்கள் படைக்கப்பட்டன. தேவர்களுக்குத் தலைவரான இந்திரன், நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன் போன்றோரும் தோன்றினர். தொப்பூளிலிருந்து காற்று மண்டலம் வந்தது. தலையிலிருந்து தேவலோகமும், பாதத்திலிருந்து பூமியும் வந்தன. காதிலிருந்து வானம் வந்தது. அத்துடன் வாயிலிருந்தும், தோளிலிருந்தும், தொடையிலிருந்தும், பாதத்திலிருந்தும் நான்கு வர்ணங்களில் மனிதன் வந்தான்.

புராணங்களின்படி, தந்தையின் சொல்கேட்டு தந்தையான பிரம்மா இவ்வுலகைப் படைக்கிறார். தந்தையான மகாவிஷ்ணு சுயம்புவானவர். பேரனான மனு முதல் மனிதர். மனுவின் மகன்கள், மகள்களிலிருந்து சந்ததிகள் பெருகினர்.

இப்பேரண்டம் பிரளயம் என்ற நீர் சூழ்ந்து அழிந்து மறுபடியும் தோன்றி தனது ஓட்டத்தை இயக்கத்தை ஒருபோதும் விட முடியாததாகக் கூறப்படுகிறது. நான்கு யுகங்கள் மாறிமாறி வரும். நான்காவதின் முடிவில் முதலாவது தொடரும். 4800, 3600, 2400, 1200 தேவ ஆண்டு காலம் என்ற கணக்கில் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் வரிசையாக நீடித்திருக்கும். ஒரு தேவ ஆண்டு 360 மனித ஆண்டுகளுக்குச் சமம். ஓவ்வொரு ஆண்டிலும் மனிதர்களது ஞானமும் வாழ்க்கையும் குறைந்து வந்து கலியுகத்தின் கீழ்த்தரமான வாழ்க்கையின் முடிவில் மனிதர்களின் பொற்காலம் தோன்றும்.

இந்து மதக் கடவுளர்கள் பேரரறிவினர். பெருங்கருணை படைத்தோர். உலகின் முதல் குளோனிங்கும் சோதனைக் குழாய் குழந்தையும் இந்து மதத்திற்கு உரிமையானது. பிளாஸ்டிக் அறுவையியலும் இந்து மதச் சொத்து. பின்னே பிள்ளையார் எப்படி யானை முகமானார்? உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவரான ஒரு இறைவன் ஆடலில் வல்லவன். கூத்தில் ஒருவராலும் வெல்ல முடியாதவன். ஒரு வேளை இன்றைய முழு, அரைக்கால் சொக்காய் போடும் பெண் காலைத் தூக்கி தலையில் வைத்து தமது இறைவனை வெற்றி கொள்ளக் கூடும். அன்று இறைவி நாணமுற்றதால் ஆடலில் வல்லான் வென்றார். ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐவகைத் தொழிலையையும் விளையாட்டாகவே செய்து முடிப்பவர்.

கடமை என ஏதும் இல்லாதவொருவரும் இப்பேரண்டத்தை தமது சொத்தாகக் கொண்டிருக்கிறார். ஆயிரத்து ஐநூறு கோடி ஒளியாண்டுகள் விட்டமுள்ளதாகக் கூறப்படும் இந்தப் பெரிய்...ய அண்டத்தை, தமது சிறு கால் கொண்டு இரண்டே அடிகளால் அளந்தவர். பாற்கடலில் பாம்புப் படுக்கையில் படுத்திருப்பார். வைகுண்டத்திற்கு வரும் பக்தனை தொடைமேல் தூக்கி வைத்து வந்து விட்டாயா எனக் கொஞ்சிக் கொண்டிருப்பார். மாடு மேய்க்கவும் தயங்கமாட்டார். உலகம் யாவையும் உண்டாக்கவும், நிலைபெறச் செய்யவும், நீட்டவுவும் வல்லவரான இவரது விளையாட்டுக்களுக்கு அளவேயில்லை.

இந்து மதம் அறிவில் சிறந்ததாக இருக்கலாமோ? பிரம்மா, விஷ்ணு, சிவன் எனும் மும்மூர்த்திகளால் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பேரண்டத்திற்கும், புரோட்டான், நியூட்ரான், எலெக்ட்ரான்களால் உருவாக்கப்பட்டிருக்கும் பேரண்டத்திற்கும் உள்ள தொடர்புகளை அறிவியல் கவனத்தில் கொள்ளத் தவறியதா? அறிவியல் மதத்தை நோக்கிப் பயணிக்கிறதா?

அண்டம் என்ற சொல்லுக்கு முட்டை, பூமி, வானம், உருண்டை, மீசம், விதை எனப் பல பொருள்களைக் கொடுக்கும் தமிழிலும் அண்ட வெளியைப் பற்றிய சிந்தனைக்கு தொன்மையான வரலாறு இருப்பதாகத் தெரிகிறது. உலகின் தோற்றம் குறித்த ஞானம் பழந்தமிழிலங்கியங்களிலேயே விரவிக் காணப்படுகிறதெனில் தமிழரின் அண்டக் கோள அறிவு பாராட்டத் தக்கதே.

நவீன அறிவியல் முன்வைக்கும் பல்லண்டம் அல்லது பல உலகங்கள் உள்ளன எனும் எண்ணம் புறநானூறு சுட்டும் மூன்றாகியடுக்கிய உலகம் என்ற எண்ணத்தோடு ஒத்துப் போகிறது. ஐவகை பூதங்களிலால் ஆனது உலகம் என்பது பழந்தமிழரின் தெளிந்த சிந்தனை. உயிர்கள் வாழும் இந்நிலவுலகம் பற்றிய சிறந்த அறிவு தமிழர்க்கு இருந்திருக்கிறது. மண், ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் போன்றவற்றால் ஆனது இவ்வுலகம் என்பது தொல்காப்பியம் முதற்கொண்டு வழங்கப் பெறும் எண்ணம். வானத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றுகிறதென்பதை பரிபாடல் எடுத்துரைக்கிறது.

கதிரவன் குறித்தும், திங்கள் குறித்தும் பலவகையான எண்ணங்கள் தமிழருக்கு இருந்திருக்கின்றன. தமெக்கென ஒளியுடைய நட்சத்திரங்கள் நாள்

மீனெனவும் தமெக்கென ஒளியில்லாத கிரகங்கள் கோள் மீனெனவும் தமிழர்களால் அழைக்கப்பட்டுள்ளன. வெள்ளி, சனி, வால் நட்சத்திரம், எரி நட்சத்திரம் பற்றியும் தமிழர்க்கு கருத்துகள் இருந்திருக்கின்றன. தூமம் எனக் குறிக்கப்படும் வால் நட்சத்திரம் தோன்றுவது தீமையானது எனவும் குறித்திருக்கின்றனர்.

உலகை, அண்டத்தைப் படைத்தவன் உருவாக்கியவன் இறைவன் என்ற எண்ணம் பழந்தமிழரிடம் பரவலாகக் காணப்பட்டதற்கு ஏராளமான இலக்கியச் சான்றுகள் மேற்கோளிடப்படுகின்றன. ஒன்றானவனென்றும் உருவில் இரண்டானவனென்றும், இயல், இசை, நாடகம் என தமிழில் மூன்றானவன் என்றும் சுட்டப்படும் இறைவன் குணங்களற்றவனாகவும் இருப்பது வியப்பு. நிர் குண பரப்பிரம்மம் என அழைக்கப்படும் இது குணமுள்ளதா குணமற்றதா என்பதை வைத்து ஏராளமான விவாதங்கள் நடைபெற்றுள்ளன.

வேதங்களை அடிப்படையாகக் கொண்ட இந்து மதத்திற்கும், வேதங்களை மறுக்கும் சமண, பௌத்த மதங்களுக்குமிடையே கடுமையான வாக்குவாதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்து மதம் என்ற சொல்லே தவறெனத் தெரிகிறது. சைவமும், வைணவமுமே இன்று இந்து மதமாகக் கருதப்படுகிறது. வேதத்தையே முதன்மையாக வைத்திருந்த வேத மதமும் வடமொழியும் மாறி, பாணினியின் சமஸ்கிருத மொழியும் வேதங்களில் பெரிதாக இடம் பெறாத கடவுளர்களுமே இன்று இந்து மதத்தில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறார்கள். பொது ஆண்டிற்கு முன் 1500 - 1000 ற்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும் என அறுதியிடப்படும் வேதகாலம், நான்கு வேதங்களையே அடிப்படையாகக் கொண்டது. வேதகாலத்திய மாபெரும் இறைவன் இந்திரன். அக்னி, வருணன் போன்றவர்களும் சிறப்பானவர்கள். யாகங்கள் மூலம் தேவர்களைப் போற்றும் துதிப்பாடல்களே வேதங்கள். ரிக் வேதத்தின் பத்தாம் மண்டலமான புருஷ ஹூக்தம் உலகின் படைப்பை பற்றிப் பாடுகிறது. வேதங்களின் முடிவு வேதாந்தம். வேதங்களுக்கு மிகப் பெரும் பக்கபலம் இராமாயணம், மகாபாரதம் மற்றும் பல்வேறு புராணங்கள்.

இந்து மதம் என்பது பொதுவில் சைவம், சாக்தேயம், காணபத்யம், கௌமாரம், சௌரம், வைணவம் என்ற ஆறு வழிபாட்டு முறைகளின் அல்லது மதங்களின் கலவை என்றால் மிகையாகாது. குறிப்பாகச் சொன்னால் சிவன், உமையாள், கணபதி, சுப்ரமணி, சூரியன் மற்றும் பெருமாள்.

இந்தியாவின் வைதீக மதங்களுக்கும் அவைதீக மதங்களான அஜீவகம், சமணம், பௌத்தம் போன்றவற்றிற்கும் ஏரளாமான முரண்பாடுகள். வைதீக, இந்து மதங்களுக்கு ஆத்மாவே முக்கியமான பேசுபொருள். ஜீவாத்மா, பரமாத்மாவோடு இணைவதே முக்தி. முக்தி இல்லையேல் மறுபிறப்பு நிச்சயம். மீண்டும் பிறப்பு இறப்பென்னும் சக்கரத்தில் சுற்றிச் சுழன்று வதைபட வேண்டியதிருக்கும். விண்ணுலக வாழ்வு கூட நிரந்தரமல்ல. செய்த நன்மைகள் தீர்ந்தால் மறுபடியும் மண்ணுலகில் பிறக்க வேண்டும். தீமைகளுக்கு நரகம் முடித்து மறுபடியும் பிறப்பு தொடரும். மறுபடியும் புல்லாகி, பூடாகி, புழுவாகி, மரமாகி, பாம்பாகி, பறவையாகி பல்வேறு மிருகமாகி, மனிதராய், தேவராய் பிறந்து இளைக்க வேண்டும். பிறவாமை வேண்டுமெனில் நன்மையும் தீமையும் இல்லாமலாக வேண்டும். செயல்களைத் தவிர்க்காமலும் வாழமுடியாது. பின் எப்படித்தான் முக்தி பெறுவது? இருக்கவே இருக்கிறது மிகவும் எளியதொரு வழி. ஒரே ஒரு முறை இறைவனின் பெயரைச் சொன்னாலே போதும். ஒரு முறையாவது இறைவன் வாழும் கோவிலுக்குச் சென்று வழிபட்டால் நன்மை தீமைகளை விலக்கி இறைவன் முக்தியை அளிப்பான்.

இந்தியாவில் மெய்ஞானத்தை அளிக்கும் பல்வேறு வழிகள் இருந்திருக்கின்றன. தாம் யார்? உலகம் என்பது என்ன? உலகம் எதனால் ஆக்கப்பட்டுள்ளது? பிறப்பின் நோக்கம் எது? உலகம் எதனடிப்படையில் இயங்குகிறது? இயக்குவது யார்? உலகம் ஒன்றா? பலவா? எனப் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு பலவாறான பதில்கள் பெறப்பட்டு அவை பல்வேறு வழிகளாக, பாதைகளாக, மார்க்கங்களாக, தரிசனங்களாக, ஞானத் தேடல்களாக உண்டாகியிருக்கின்றன. பொதுவில் இவை ஆறு தரிசனங்கள் என அழைக்கப்பட்டாலும் தரிசனங்கள் பலவாகும். இந்திய மண்ணில் உருவான ஒவ்வொன்றும் ஒவ்வொரு தரிசனமே. ஒவ்வொரு வழிகளே. மக்கள் தேர்ந்தெடுப்பதற்கு இங்கு எப்போதும் பல வழிகள் இருந்துவந்துள்ளன.

இவ்வுலகம் எதனால் ஆக்கப்பட்டுள்ளது? பொருட்களால் ஆக்கப்பட்டுள்ளது எனச் சொல்வது எளிய விடையாக இருக்கும். பொருளை முதன்மைப் படுத்துவது பொருள் முதல் வாதம். பொருட்கள் எதனால் ஆக்கப்பட்டுள்ளன? நுண் பொருட்களால் என வாதிடலாம். நுண் பொருட்கள்? அதற்கும் நுண் பொருட்களால். இப்படியே போய்க் கொண்டிருந்தால் என்னாகும்? இங்குதான் ஆன்மீகம் வருகிறது. உலகம் ஆன்மிக ஆற்றல் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என்பது

ஆன்மீகவாதமாகும். பௌதிகமா ஆன்மிகமா என்பதில் நீண்ட விவாதங்கள் சாத்தியம். ஒரு வாரம் வரையிலும் கூட ஞானியர் விவாதித்ததாகப் பதிவுகள் காணக்கிடைக்கின்றன. தோற்பவர் வென்றவர் மதத்தை, தரிசனத்தை தழுவியாக வேண்டும். ஞானியர் பலரும் இதை செய்திருக்கிறார்கள். சங்கரர், இராமானுஜர் உட்பட. இதுவும் ஒரு வித அஸ்வமேகயாகம் போல்தானே.

இந்திய இறைவன் உருவமுள்ளவன், உருவமற்றவன் என இருப்பது போல அறிவியலாலும் எதனையும் முற்றாகக் கூறிட முடியவில்லை. பொருளா அலையா என்றால் பொருளும், அலையும் என்ற நிச்சயமற்ற பதிலையே அது தருகிறது. உலகம் தோன்றி சுமார் 600 கோடி ஆண்டுகள் ஆகியிருக்கலாம் எனக் கணக்கிடும் அறிவியல் கூடுதலாக இன்னுமொரு 600 கோடி வருடங்கள் இவ்வுலகம் நீடித்திருக்கும் எனக் கணக்குப் போடுகிறது. அதன் பின் என்னாகும்? உலகம் சுருக்கலாம். மறுபடியும் ஒன்றாகலாம். மீண்டும் வெடிக்கலாம். மீண்டும் பேரிடி நிகழ்ந்தால்..? மறுபடியும் சூரிய, சந்திர, பூமி உருவாகி எளிய உயிரிலிருந்து மனிதன் பரிணமித்து வருவதற்கான சாத்தியக் கூறுகளை ஒரு வேளை அறிவியல் அறிஞர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கலாம். எதற்கு இவ்வளவு ஆராய்ச்சிகள்.. பரிசோதனைகள்.. கண்டுபிடிப்புகள்.. திட்டமிடல்கள்.. விவாதங்கள்.. இந்திய ஞானம் அழகாகக் கைகொடுக்கிறது. ஆக்கியும், காத்தும், அழித்தும் பின் ஆக்கியும்.. இறைவனால் சும்மாவே இருக்க முடியாதோ. இப்படி எவ்வளவு முறைதான் உலகை ஆக்கியும், அழித்தும், உடைத்தும், அடைத்தும், காத்தும் விளையாடிக் கொண்டிருப்பது..? மண்பானை செய்யும் குயவர், ஒவ்வொரு பானைக்கும் அவரது செய்நேர்த்தி அதிகரிப்பது போல், தொழில் அனுபவம் கூடக் கூட வேலை நேரம் குறைவது போல் இறைவனும் பல்லாண்டு பல கோடி ஆண்டுகள் உலகை உருவாக்கி வருவதால், சட்டென உலகைக் படைத்து விடுவாரோ?

கடவுளை மறுதலித்த, ஆத்மாவைப் பற்றி ஒன்றும் பேசாத புத்தமதமும், கடவுளை மறுத்து, ஆத்மாவை உள்ளடக்கிய சமண மதமும் இந்திய ஞானத்திற்கு, தத்துவ மரபுக்கு பெருந்தொண்டாற்றியிருக்கின்றன. கடவுள் மறுப்பு என்பதை விட மக்கள் வாழ்க்கை முறையை நல்வழிப்படுத்துவதில் இம்மதங்கள் முனைப்புக் காட்டியிருக்கின்றன. அனைத்து உயிர்களும் சமம் என்று பேசும் புத்தமும், உயிர்களிலும், மனிதர்களிலும் வேறுபாடுகள் உண்டென்ற சமணமும் இந்தியா முழுமைக்கும் ஒரு காலத்தில் செல்வாக்குப் பெற்றவையாக இருந்திருக்கின்றன.

பெண்ணுக்கு ஆத்மா இல்லையென்றும் மறுபிறவியில் ஆணாகப் பிறந்தே முக்தி நிலையை அடைய முடியும் என்று பேசிய சமணமும், உடலில் சரிபாதியை பெண்ணுக்குக் கொடுத்த சைவமும் பெரிய அளவில் விவாதங்களை நிகழ்த்தியிருக்கக் கூடும்.

புத்தரின் நடுப்பாதை என்ற மத்திய கோட்பாடு ஆகச் சிறந்ததொரு கோட்பாடு. தத்துவங்கள் செறிந்த புத்த தரிசனம், புத்த மதமாக மாறியதும், புத்தரே கடவுளாகியதும் காலத்தின் விளையாட்டு. மகாவீரரின் அனேக வாதக் கொள்கை அற்புதமான ஒன்று. சாங்கிய முனிக்கும், மகாவீரர் உட்பட்ட தீர்த்தங்கரர்கள் என்ற வழிகாட்டிகளுக்கும் இப்பரந்த மண்ணில் பல்லாயிரம் வழிபாட்டுத் தலங்கள் இருந்தன என ஒருவர் கூறினால் மற்றவர் வியப்பர் என்பதே தற்போதைய நிலை.

சாங்கியம், யோகம், வைசேஷிகம், நியாயம், மீமாம்சம், வேதாந்தம் போன்றவை ஞானத்திற்கும் தத்துவக் கேள்விகளுக்கும் புகழ்பெற்றவையாக இருந்திருக்கின்றன. சார்வாகம் மரபும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றதாக இருந்திருக்கிறது. லோகாயதம், பொருள் முதல்வாத, அனுபவ முதல்வாத, நாத்திக மதம் எனப் பேசப்படும் இந்த வேத மறுப்பு சார்வாகம், வாழ்க்கையை அனுபவி, கொண்டாடு, பிறவி ஒன்றே, நன்மை, தீமை ஏதுமொன்றும் இல்லை என்றதனால் ஆரம்பத்தில் நல்ல வரவேற்பைப் பெற்று பின்னர் படிப்படியாகச் செல்வாக்கை இழந்ததாகத் தெரிகிறது. தற்போது இதன் மீட்டுருவாக்கமாக நவீன குருஜிகளில் சிலர் கொண்டாடலாம் வாருங்கள் என மக்களை அழைத்த வண்ணம் இருக்கிறார்கள். சார்வகத்தில் மறு உலக வீடுபேறை விட இவ்வுலக இன்பமே முதன்மையானது.

கபிலரால் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் சாங்கிய ஞானம், மிகவும் பழமையானதாக அடையாளம் காணப்படுகிறது. இந்திய தத்துவங்களில் சிறப்பானதும், முதன்மையானதும் இதுவென்றால் மிகையாகாது. பகவத்கீதையில் கண்ணனால் அர்ஜுனனுக்கு வியந்தோதப்படுவது சாங்கிய ஞானமே. உலகின் தோற்றத்திற்கும், இயக்கத்திற்கும் இருபத்து நான்கு தத்துவங்களை காரணங்களாக முன்வைக்கும் சாங்கியம், முக்குணங்களையும் இயற்கையின் பரிணாம வளர்ச்சியையும் காரணக் காரியங்களையும் விளக்க வல்லது. உலகம் ஏன் உண்டானது எனச் சாங்கியத்திடம் வினா எழுப்பினால் முக்குணங்களின் சமநிலை மாறியதால் என்றே பதில் கிடைக்கும்.

இந்திய ஞான மரபு யோகத்திற்கு சிறப்பானதொரு இடத்தை வழங்கியிருக்கிறது. இன்றைக்குப் போல் ஒரு நாளிலோ, ஒரு வாரத்திலோ யோகத்தை அன்றைய ஞானிகள் கற்றிருக்க மாட்டார்கள். கற்று கொடுத்திருக்கவும் மாட்டார்கள். இன்றைய யோகிகள், மகா யோகிகள், ஞான யோகிகள், பரமஹம்சர்கள், ஸ்ரீலஸ்ரீ யோகிகளின் ஒரு நாள் யோக வேள்வியில் பங்கு பெற ஆயிரம், ஐயாயிரம் கட்டணம் கொடுக்க வேண்டுமென்பதிலிருந்தே நமது யோகிகளின் யோக வலிமையை யோக சித்துவை அறிந்து கொள்ளலாம். நவீன யோகிகளும், குருமார்களும் ஆயிரத்திற்கும் மேலான நோய்களை தமது சுட்டு விரலில் தேக்கி வைத்திருக்கும் தவ வலிமை கொண்டு ஒரே தொடுதலில் குணமாக்கி விடுகிறார்களெனில் ஒரு ஐந்தாயிரம் கட்டணசீட்டு வாங்குவதில்தான் என்ன குறைந்து விடப்போகிறது? ஒரு விதத்தில் இந்த யோகிகள் பரவாயில்லை. தொட்டாவது நோய்களைப் போக்குகிறார்களே. பலர் பிரார்த்தனை செய்தே லட்சக்கணக்கானோருக்கு அத்தனை நோய்களையும் ஒரேயடியாக வீழ்த்தி விடுவதை என்ன வென்று சொல்வது? சக்கர நாற்காலியில் கொண்டுவரப்படுபவர், பிராத்தனையின் போதே துள்ளிக் குதித்து ஓடும் அற்புதத்தைக் காண இரு கண்கள் போதாது.

பதஞ்சலி யோக சூத்திரம் என்ற நூலினை எழுதிய பதஞ்சலி முனிவர், யோக மரபில் முக்கியமானவராக அடையாளம் காணப்படுகிறார். யோகத்தில் மனம் ஒரு நிலைப்படுதல் மிகவும் அவசியம். மனதை அடக்கப் பயிற்சிகள் கட்டாயம். அஷ்டாங்க யோகத்தில் எட்டு விதமான நிலைகள் கடந்தே யோகம் கைகூடும். யோகம் கற்பதில் யமம், நியமம் எனப்படும் வாழ்வியல் ஒழுக்க நெறிகள் மிக மிக முக்கியம்.

உலகம் பொருளால் உண்டாக்கப்பட்டிருக்கிறது என வைசேஷிகம் வாதிடுகிறது. பொருளுக்கு தனித் தன்மையும், சிறப்புத் தன்மையும் உண்டு. பொருட்களை தனித்தனியாகப் பிரித்தால் இறுதியில் பிரிக்க இயலாதது கிடைக்கும். இக்கொள்கை அறிவியலின் அணுவோடு ஒத்துப் போகிறது. பல கருதுகோள்கள் கொண்டு வைசேஷிகம் விளக்கப்பட்டுள்ளது.

நியாய மரபு காரண காரியங்களை அறிவுப் பூர்வமாக ஆராய்வது. இது இந்திய தருக்கவியலாக கருதப்படுகிறது. அன்று விவாதங்களில் பங்கெடுப்பவருக்கு நியாய சிந்தனையில் நல்ல தேர்ச்சி இருப்பது அவசியம். பௌத்தர்கள் இதனை

சிறப்பாக முன்னெடுத்திருக்கிறார்கள். பேரண்டம் அணுக்களால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதே நியாயத்தின் புரிதல். துக்கம், துக்க காரணம், அதை நீக்கும் வழி குறித்தும் நியாய மரபு எடுத்துரைக்கிறது.

மீமாம்சை மரபில் பூர்வ மீமாம்சை மற்றும் உத்தர மீமாம்சை இரண்டும் ஆன்மிக வாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. மீமாச்சைக்கு வேதங்களே அனைத்தும். வேள்விகளும், சடங்குகளும் அடிப்படை நோக்கங்கள். தர்மம், ஞானம் போன்றவைகளுக்கு சுருதி எனப்படும் வேதங்களை ஆதாரமாகக் காட்டுவது மீமாம்சை மரபு. ஒருவர் வேதங்களை ஒட்டியே வாழ வேண்டும் என்பது இதன் மையக் கோட்பாடு.

வேதத்தின் இறுதி அல்லது அந்தம் வேதாந்தம், வேதாந்தத்திற்கு உபநிடதங்கள் மூல நூல்கள். வேதங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இதற்கு உத்தர மீமாம்சை என்றும் பெயர். ஆனால் இது வேத சடங்குகளை ஏற்காமல் அதன் ஞானத் தேடல்களையே முன்நிறுத்துகிறது. வேதாந்தத்திற்கு பிரம்ம சூத்திரம் முக்கியமான நூல். பிரம்மத்தை பற்றிப் பேசும் இந்த வேதாந்த ஞான மரபு, இந்திய ஞானத்திற்கு உலகளாவிய மதிப்பு கிடைத்ததற்கு முக்கியமானதொரு காரணம். வேதாந்தம் ஞானத் தேடல் உள்ளவர்களுக்கு வரப்பிரசாதம்.

பண்டைய இந்தியாவில் செழித்திருந்த, அன்றைய மக்களின் சிந்தனைகளுக்குக் காரணமாக இருந்த, அவர்களின் அறிவுத் தளத்தில் இயங்கிய, இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேற்பட்ட பாரம்பரியம் கொண்ட இந்த தத்துவ தரிசனங்கள், அறிவு தேடல்கள், ஞான மரபுகளில் சாங்கியம், யோகம், வைசேஷிகம், நியாயம் போன்றவை தற்போது மறைந்து விட்டதாகவே கருதப்படுகிறது. நியாயத்திற்கு ஈடான இன்றைய மேற்கத்திய அறிவியல் கோட்பாடுகளை, சிந்தனைகளை இந்தியா ஏற்றுக் கொண்டு விட்டது. மீமாம்சை தலைவிதி, மறுபிறவி, விக்கிரக வழிபாடு போன்றவற்றை கட்டமைத்து இன்றைக்கும் மக்கள் மனங்களில் பெரும் தாக்கங்களை நிகழ்த்திய வண்ணம் இருக்கிறது. அறிவுப் பாதையை காட்டிலும், ஞானத் தேடலை விடவும், ஒரு சிறிய சடங்கை செய்வதையே மக்கள் விரும்புவரல்லவா. பிறப்பு முதல் இறப்பு வரை இன்னும் சொல்ல வேண்டுமெனால் பிறப்பிற்கு முன்னும், இறப்பிற்குப் பின்னும் சடங்குகளை இந்திய மக்களால் புறந்தள்ள இயலாதென்று நிலை உருவாகிவிட்டது. எள்ளும்,

தண்ணீரும் இறைக்காவிட்டால் இறந்து போன முப்பாட்டனார் முதற்கொண்டு பெற்றோர் வரை பசியோடிருப்பர் என்று சொல்லும் போது இளகிய மனம் கொண்ட எந்த இந்தியரால் தான் எள்ளையும், தண்ணீரையும் தவிர்க்க முடியும்? ஒரு ஹோமத்தைச் செய்தால் செல்வம் கொழிக்குமென்றும், கல்வி கரை காணுமென்றும் சொல்லும் போது இதற்குத்தானே மக்கள் ஈர்க்கப்படுவர். கடின உழைப்பையும், தொடர் கல்வியையும் எவர்தான் விரும்புவர்?

பண்டைய இந்தியாவின் அற்புத தரிசனங்களை, ஞானக் கேள்விகளை, பிரபஞ்ச உரையாடல்களை, அடியோடு மாற்றியமைத்ததில் பக்தி இயங்கங்களின் பங்களிப்பு ஆகப் பெரியது. கடவுளரின் திருவடிகளைப் பற்றிக் கொள்ளுங்கள், துக்கமெனும் கடலிலிருந்து கரை சேர்ப்பார் என்ற முழக்கம், இந்தியக் காதுகளில் தேனாய் பாய்ந்ததன் விளைவாக விண்ணையும், மண்ணையும் உற்றுப் பார்த்து, கூர்ந்து ஆராய்ந்து கண்டடைந்த அத்தனை செல்வங்களையும் கேள்விகளையும் காரண காரியங்களையும் மக்கள் விட்டொழித்தார்கள்.

நட்ட கல்லை சுற்றி வந்து, நாலு பூக்கள் சாத்தி கடவுள் என்று வழிபடுகிறாயே, உமக்கு வெட்கமில்லையா என மக்களை சாடிய சித்தர்களாலும் மக்களின் சடங்கு முறைகளை அகற்ற இயலவில்லை. காரணம் சடங்கு முறைகள் மிக எளிது. ஞானியருக்கு வேண்டுமானால் தத்துவ விசாரங்கள் இனிக்கலாம். பசியை மறக்கடிக்கலாம். சாதாரண மக்கள் தெளிவானவர்கள். தத்துவம் சோறு போடுமா? பெருவாரியான மக்கள் எளிமையை விரும்புபவர்கள். கோவில்களை, விக்ரகங்களைப் பற்றிப் பேசாத வேத மரபு, கோவில்களினுள் நுழைந்தவுடன் எல்லாம் அடியோடு மாறிவிட்டது. காடுகளில் தாம் யார், உலகம் ஏன், பிரம்மம் உண்மைதானா எனத் தேடித்திரிந்த ஞானம், கோவில்களின் கருவறையைத் தேடிக் கண்டடைந்த பின், மொட்டை போடுவதும், தேங்காய் உடைப்பதும், சூடம் ஏற்றுவதும் போதுமென்றாகிவிட்டது. மக்களுக்காக, மக்களை வழிநடத்த கருவறைக்குள் ஒருவர் நின்றும், அமர்ந்தும், கிடந்தும் சேவை சாதிக்கும் போது அவர்களுக்கென்ன கவலை. வாழ்க்கையைக் கொண்டாட வேண்டியதுதானே.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களையும் பெற்ற தமிழ் நிலமங்கை கொடுத்து வைத்தவள். தண்தமிழ், வண்தமிழ், ஒண்தமிழ், தென்தமிழ், முத்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், தெய்வத்தமிழ் எனப் போற்றப்படும் தமிழ்ப் பெண்ணுக்கு ஐந்து கடவுளர்கள் கிடைத்தது பெரும் பேறல்லவா? குறவர்கள்

வாழும் மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலத்திற்கு இறைவன் சேயோன் என்னும் முருகன். சிவந்தவன் எனும் பொருள் வருவதால் சிவன் எனவும் கூறுவதுண்டு. இடையர், ஆயர் வாழும் காடும் காடும் சார்ந்த நிலமும் முல்லை. இறைவன் மாயோன். மாயோனே திருமால்.

உழவர், உழத்தியர் வாழும் வயலும் வயல் சூழ்ந்த நிலத்திற்கு இறைவன் வேந்தன். அரசன், இந்திரன் என்றும் பொருளுண்டு. வருணன் கடலும் கடல் சூழ்ந்த இடத்திற்கு இறைவன். மக்கள் நுழையர், பரதவர். குறிஞ்சியும், முல்லையும் இயல்பில் திரித்து வறண்டு போவது பாலை. இறைவி கொற்றவை. மக்கள் மறவர், எயினர்.

பண்டைய தமிழ்நில முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை எனும் காளி கடவுளர்களில், இந்திர, வருண வழிபாடுகள் வழக்கத்திலிருந்து மறைந்துவிட்டதாகத் தெரிகிறது. இந்திரனுக்கு தமிழ் மண்ணில் சிறப்பான இடம் இருந்திருக்கிறது. பசி, பிணி, பகை போக்க இந்திர விழா நடத்துவது வழக்கத்தில் இருந்திருக்கிறது. விருந்தினர்களெல்லாம் ஒன்று கூடுவதால் விருந்தாட்டு விழா எனவும், காமன் விழாவாகவும் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மணிமேகலையில் இந்திரவிழா பற்றி சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அனைத்து மதங்களும் போற்றப்பட்டிருக்கின்றன. சாவகர், அருகர், ஆசீவகர் என்ற சமணருக்குப் பெருங்கோவில்கள் இருந்திருக்கின்றன. நாகபட்டினத்திலிருந்த புத்த விகாரம் மிக்க புகழ் பெற்றதாக விளங்கியிருக்கிறது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் எங்கு பார்த்தாலும் சமணருக்கும் பௌத்தருக்கும் கோவில்களாக இருக்கிறதே என மனம் வெதும்பியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இம்மதங்கள் மக்கள் செல்வாக்கைப் பெற்றிருந்திருக்கின்றன. அரசர்களின் மத மாற்றத்தைத் தொடர்ந்து மக்களும் இச்சமயங்களிலிருந்து மாறியதாகத் தெரிகிறது. சமண, பௌத்த கோவில்கள் பலவும் சைவ, வைணவக் கோவில்களாக மாற்றியமைக்கப்பட்டதாகப் பதிவுகள் இருக்கின்றன. பக்தி இயக்கத்தின் வலிமைக்கு ஈடு கொடுக்க முடியாமல் மெல்ல மெல்ல இரண்டு மதங்களும் மறையத் தொடங்கியிருக்கின்றன. சமணம் இன்றளவும் தமிழகத்தின் வடக்கில் சில மாவட்டங்களில் பேணப்பட்டே வருகிறது. பௌத்தத்தை பின்பற்றுவோர் அரிதாகிவிட்டனர்.

தமிழகத்தில் இன்று எண்ணிறந்த கடவுளர்கள் இருக்கிறார்கள். குல தெய்வம் முதற்கொண்டு பெருந்தெய்வங்கள் வரை பலருக்கும் கோவில்கள் எழுப்பப்படுகின்றன. குப்தர்கள் காலத்தில் வேதங்களுக்கு மிகச் சிறந்ததொரு ஆதரவு கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. விளைவு இந்தியா முழுவதையும் ஹரியும், ஹரனும் ஆக்ரமித்துக் கொண்டார்கள். அம்மன் வழிபாடு மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. தமிழகத்திற்குப் புதுவரவான பிள்ளையார் கோவில்கள் மூலை முடுக்கெல்லாம் நிறைந்திருக்கின்றன. கணபதி வழிபாடு திடீரென இவ்வளவு வேகமெடுத்ததற்கான காரணம் பாலகங்காதரத் திலகர் என்பது ஆச்சரியமளிக்கிறது. மராட்டியத்தில் வெள்ளையரை ஏமாற்றி மக்களை ஒன்று திரட்டத் திட்டமிடப்பட்ட பிள்ளையார் வழிபாடு, தமிழகத்தில் இவ்வளவு விரைவாகப் பரவும் என ஒருவரும் நினைத்திருக்க மாட்டார்கள். கணபதி ஹோமம் என்பது இன்று மிகச் சாதாரணம். சடங்குகளும், வேள்விகளும் பிராமணர்களின் பிழைப்பிற்கானது, ஆண்மைத்திறனும் அறிவாற்றலும் இல்லாதவர்க்கே வேதங்கள், வேள்விகள், சடங்குகள் என்று குற்றஞ்சாட்டும் சார்வாகம் சரிதான் என நினைக்க வைக்கிறது. எந்த வேதத்தின் அடிப்படையில் கணபதி ஹோமம் செய்யப்படுகிறது?

சித் என்றால் அறிவு என அர்த்தமாம். சித்தர்களின் தோற்றத்தைப் பார்த்தால் அறிவானவர்கள் என ஒருவரும் சொல்லமாட்டார்கள். ஆனாலும் இவர்களுக்கு யோகமும், சோதிடமும், மந்திரமும், மருத்துவமும், இரசவாதமும் தெரியும். சித்தர்கள் வளர்த்தெடுத்ததாகச் சொல்லப்படுவதே சித்த மருத்துவம். சித்தர்கள் சாதி, சமய, சடங்குகளைக் கடந்து மெய் ஞானத் தேடல்களில் ஈடுபட்டவர்கள். பதினெண் சித்தர்கள் எனக் கூறுவது மரபெனினும் எண்ணிக்கை அதிகம். அகத்தியர் தொடங்கி தமிழ்நாட்டில் அனைவருமே சித்தர்கள்தான். அட்டாங்க யோகமும் அதன் மூலமாக அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்கள் எனத் திருமூலர், போகர் போன்றவர்களைக் குறிப்பிடுவதுண்டு. பட்டினத்தாரின் பாடல்கள் மனதை உருக வைப்பவை. வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்துபவை.

அரபு நாடுகளுக்கும் தமிழகத்திற்கும் நீண்ட பாரம்பரியம் இருந்துள்ளது. அரபு நாட்டினர் தமிழகத்தில் தங்கியிருக்கிறார்கள். நபிகளுக்குப் பின் தமிழகத்தில் பள்ளிவாசல்கள் கட்டிக் கொள்ளவும் அனுமதி கிடைத்திருக்கிறது. மதுரை சுல்தான்களின் ஆட்சிக்குப் பின்னர் இஸ்லாம் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ந்திருக்கிறது. தமிழகத்தில் கிறித்தவம் பாதிரியார்களால் பரப்பப்பட்டு,

ஆங்கில ஆட்டசியாளர்களால் வளர்க்கப்பட்டு தற்போது குறிப்படத்தக்க வழிபாட்டு முறையாக வளர்ந்திருக்கிறது. தமிழர்கள் எப்படி மதம் மாறுவார்கள் என்பதற்கும், கடவுள்களை எப்படி சட்டென மாற்றிக்கொள்வார்கள் என்பதற்கும் சமீபத்திய கணபதி வழிபாடே சான்று.

சிவனை இறைவனாகக் கொண்ட சைவ சித்தாந்தம் சிந்து சமவெளி நாகரிகத்தோடு தொடர்புடையதாக அறியப்படுகிறது. ஹராப்பா நாகரிகத்தில் தோன்றி காஷ்மீரம் வழியே தென்னகத்திற்கு வந்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. தென்னாடுடைய சிவன் எனப் பெருமைப்படுத்தப்படும் சிவநெறி பழமையான இறைவழிபாட்டு முறையாகக் கருதப்படுகிறது. சமண, பௌத்த துறவிகளைப் போன்றே, சிவநெறி துறவிகளும் பல்லவர்கள் காலத்தில் தமிழகத்தில் இருந்திருக்கிறார்கள். இவர்களில் காளமுகர், கபாலிகர், பாசுபதர், மாவிரதர் எனப் பல பிரிவுகள் இருந்திருக்கின்றன. பல்லவர் காலத்தில் சிறப்புற்றிருந்த சமண பௌத்த மதங்களைப் புறந்தள்ளியதில், சைவ வைணவ மதங்களுக்கு முக்கியப் பங்குண்டு. குறிப்பாக அப்பர், திருநாவுக்கரசர் கூட்டணி சமணத்தை பல்லவர் நாட்டிலிருந்தும் பாண்டி நாட்டிலிருந்தும் வெளியேற்றியது. பிற்பாடு வந்த சோழப் பேரரசு, சமண, பௌத்த, வைணவ மதங்களை புறந்தள்ளி சைவத்தை மட்டுமே மிகப் பெரிய அளவில் முன்னெடுத்திருக்கிறது. அப்பர், திருநாவுக்கரசரால் உருவான வேளாளர், பிராமணர் கூட்டணி சோழர்கள் ஆட்சிக்காலம் முழுவதும் அசைக்க முடியாத சக்தியாக மாறியதோடு கோவில்களில் சிவனாரின் உருவமும் மாற்றமடைந்து சிவனும் வேதியரானார்.

சோழர் காலத்திலேயே அரசதிகாரமும் பிராமண அதிகாரமும் சாதியப் பிரிவுகளும் செல்வாக்கைப் பெற்றதாகத் தெரிகிறது. இஸ்லாமியரை எதிர்த்து உருவான விஜய நகரப் பேரரசும் பிராமணர்களுக்கு மிகுந்த செல்வாக்கைக் கொடுத்திருக்கிறது. பின்னர் வந்த நாயக்கர் ஆட்சியில் தெலுங்கும், தெலுங்கு பிராமணரும், வைணவத்தில் வெங்கடாஜலபதியும் சிறப்புப் பெற்றார்கள்.

பல்லவர்களின் சைவ மாற்றமும் நாயன்மார்கள் மற்றும் சோழர்களின் சைவ எழுச்சியும் தமிழகத்தில் சைவத்திற்கென்று தனித்ததொரு அடையாளத்தை பெற்றுத் தந்திருக்கிறது. மெய்க்கண்டாரின் சிவஞான போதமும், பசு பதி பாசம் எனும் தத்துவமும், இறைவன், உயிர், மலம் கோட்பாடும், சைவ உணவுப் பழக்கமும் சைவ சித்தாந்தத்தை தமிழ் சைவம் என்ற அடுத்த நிலைக்கு கொண்டு

சென்றதில் பெரும் பங்காற்றுகின்றன. புலால் மறுப்பு சமணரிடமிருந்து பிராமணருக்கும் பின்னர் வேளாளருக்கும் மாறி வந்தது வியப்பிற்குரியது.

இன்று ஆண் கடவுள்களால் நிறைந்திருக்கும் தமிழ் சமூகம், தாய் வழியையும், தாய்தெய்வ மரபையும் கொண்டதாகவே இருந்திருக்கிறது. இயற்கை வழிபாடே கடவுள் வழிபாடாக பேணப்பட்டிருக்கிறது. மரத்தை வணங்குவது மிக எளியதொரு வழிபாடல்லவா. காடே தெய்வமென்றால் மிகையாகாது. சாமி இறங்குவது, குறி சொல்வது, பலியிடுவது என இருந்த நம்பிக்கைகள் சடங்குகள் மெல்ல குறிப்பிட்ட வழிபாட்டு முறைகளாக மாறுகின்றன. மற்ற மதங்களைப் போல் தோற்றுவித்தவர் இவர், கொள்கை நூல் என எதுவும் இன்மையே தமிழ் நிலத்தின் வழிபாட்டு முறையின் தொன்மையைக் காட்டுகிறது.

சங்கம் தொட்டு முருகனைச் சிறப்பாக முன்னிலைப்படுத்திய தமிழ் நிலம், இடையில் முருகனை முற்றாக மறந்தே போனதாகத் தெரிகிறது. பல்லவர் பாண்டியர் சோழர் காலம் முடிந்து நாயக்கர் கால ஆரம்பத்தில்தான் அருணகிரிநாதர் திருப்புகழை அள்ளி இறைக்கிறார். முருகனது அருளால் பேச்சு வந்த குமரகுருபரர் அடுத்து வருகிறார். சமீபகாலத்தில் வாரியார் பேச்சுதிறமையால் முருகனுக்கு புகழ் சேர்த்தார். வேலன் என்று கொண்டாடப்பட்ட முருகனுக்கு, சைவத்தையும், வைணவத்தையும் இணைக்கும் பாலமான முருகனுக்கு, நிலமங்கையான வள்ளியையும் தேவமங்கையான தெய்வானையையும் மணந்த முருகனுக்கு, இளமைத் துடிப்பும் வீரமும் செறிந்த முருகனுக்கு முக்கியத்துவம் குறைந்தது ஆராய்ச்சிக்குரியது.

காஞ்சியின் பௌத்தத்தை வைணவமும், மதுரையின் சமணத்தை சைவமும் கைப்பற்றியது மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் நிறைந்தது. வணிகர்களின் மதங்களாகக் கோலோச்சிக் கொண்டிருந்த சமணமும் பௌத்தமும், அரசர்களின் ஆதரவையும் இழந்து, தொடர்ந்து சோழர் காலத்தில் வந்த வைதீகப் பிராமணர்களால் முற்றாக வீழ்ச்சியடையும் நிலை உருவாகிவிட்டது. பின்னர் வந்த நாயக்கர்கள் கால தெலுங்கு பிராமணர்களால் சைவமும், வைணவமும் கூட முற்றாக வைதீகமாக மாற்றப்பட்டதாகவே வரலாறு காணக்கிடைக்கிறது.

சைவமும் வைணவமும், பௌத்த சமண மதங்களின் பல்வேறு கூறுகளை, சடங்கு முறைகளை உள்வாங்கிக் கொண்டே இன்று இந்தியா முழுமைக்குமான

பெரும் மதங்களாக ஆட்சி செலுத்துவதாகக் கூறப்படுகிறது. இருந்தும் இரு மதங்களும் வைதீகத்தின் பிடியிலிருந்து மீள முடியவில்லை.

உலகிலுள்ள அனைத்து மதங்களுக்கும் அடிப்படையாக அமைவது உலகம், உலகிலுள்ள உயிர்கள், உலகையும், உயிர்களையும் படைத்த இறைவன். உலகம் என்றால் என்ன என ஆராயும் ஒருவரால் மதங்களை விட்டுவிட முடியவில்லை. உலகம் எப்படி இருக்கிறதென்பதை அறிய முடிகிறதேயொழிய ஏன் இருக்கிறது என்ற கேள்விக்கு ஒரு போதும் பதிலைப் பெற முடியாது என்றே தெரிகிறது. உலகம் இருக்கிறது அவ்வளவே. எந்த மூல ஆதாரங்களைக் கொண்டு மூல ஆற்றல்களைக் கொண்டு உலகம் இயங்குகிறது என்பதை அறிந்துகொள்ள இயலுமே தவிர ஏன் உலகம் இயங்குகிறது என்பதற்கு பதில் கிடைக்கப் பெற இயலவில்லை.

உலகம் என்பதும் இறைவன் என்பதும் இணை. பிரிக்க இயலாதவை. உலகைப் பற்றி அறிவது இறைவனைப் பற்றி அறிவதாகும். இறைவனைப் பற்றிய அறிவே உலகைப் பற்றிய அறிவு. அதுவே உண்மையான அறிவு. மதங்கள் சொல்வது இதுவே. ஏன் என்ற பல கேள்விகளுக்கு அறிவியலால் பதில் தர இயலவில்லை. மதங்கள் இங்குதான் தங்களது தரப்பை வலுவுள்ளதாக ஆக்குகின்றன.

ஒருவர் ஏன் பணக்காரராக இருக்கிறார்? அது அவர் போன பிறவியில் செய்த நன்மைகள். போன பிறவியில் செய்த நன்மைகள் இந்த பிறவியிலும் தொடர்ந்து வருமா? வரும் என்றே மதங்கள் சாதிக்கின்றன. வரும் என்றால் எப்படி வருகிறது எனத் தெரியாமல் அறிவியல் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

ஒருவருக்கு தீராத ஒரு நோய் வருகிறது. மதத்தின் படி அவர் பாவம் செய்தவர். போன பிறவியிலோ அதற்கு முந்தய பிறவிகளிலோ அவர் செய்த பாவமே தற்போதைய அவரது நோய்க்குக் காரணம். அறிவியல் இதைக் கேட்டுச் சிரிக்கும். ஒருவருக்கு நோய் வருவதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். முந்தைய பிறவிகளில் செய்த பாவத்திற்கு எங்கேனும் நோய் வருவதுண்டா? வரும் என்று தான் மதங்கள் சாதிக்கின்றன. பாவம் என்ற கோட்பாடு மட்டும் இல்லையேல் பல மதங்கள் காணாமல் போய்விடும். மனிதர்களே பாவங்களை மன்னிக்கும்போது, மன்னிக்கத்

தயாராக இருக்கும்போது, இறைவனால் மட்டும் ஏன் அனைத்துப் பாவங்களையும் மன்னிக்க முடியாது? முடியாதென்றால் இறைவனை மீறிய வேறொன்று இருக்குமா?

மதங்கள் எல்லையற்றதாக, எல்லாம் தெரிந்ததாக, எல்லாக் கேள்விகளுக்கும் பதில்களைக் கொண்டுள்ளதாகக் பறை சாற்றும் போது, அறிவியலிடம் எல்லாக் கேள்விகளுக்கும் பதில்கள் இல்லை. அறிவியலின் தீரமெல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவோடு நின்று விடுகிறது. உயிர் முதலில் எப்படித் தோன்றியது? அறிவியல் திணறுகிறது. அப்படித் தோன்றியிருக்கலாம், இப்படித் தோன்றியிருக்கலாம், அது காரணமாக இருக்கலாம், இதன் காரணமாக இருக்கலாம் என்றுதான் பதில்கள் வைத்திருக்கிறதே தவிர, முதலில் இது உண்டானது, பின்னர் இது, இதன் காரணத்தால், இவ்வாறு, இந்தக் காலத்தில், இப்படி, இதன் மூலம் என ஒரு போதும் அதனால் சொல்லத் தெரியவில்லை.

மதங்கள் அற்புதமான பதில்களை வைத்திருக்கின்றன. ஆதியில் ஒன்று மில்லாமல் இருந்தது. எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்? ஆம் ஆதியில் ஒன்றுமில்லாமல்தான் இருந்தது. பின்னர் அது வந்தது, அது என்றால்? அது முதலில் இல்லாமல் இருந்து பின் வந்ததல்ல. குழப்பமாக இருக்கிறது. அறிவியலுக்கு நேர்கோட்டில் பயணித்தே பழக்கம். அது விழித்தது. அது எப்போதும் உறங்கியதுமல்ல. அறிவியலுக்கு அது அல்லது இது. அங்கே அல்லது இங்கே. ஒன்று உறக்கம் அல்லது விழிப்பு. உறங்கியும் விழித்தும் எவ்வாறு? அது முதலும் முடிவும் இல்லாதது. அறிவியல் தலை சுற்றிப் பொத்தென மதத்தின் முன் விழுகிறது.

மதங்களின் வெற்றியே இறப்பிற்குப் பின் என்ன என்பதை மிகத் துல்லியமாகப் பேசுவதே. மதங்களைப் புறக்கணிப்பதற்கு மிகுந்த தீரம் வேண்டும். தூங்கி எழுவது போல் பிறப்பும் இறப்பும் எனப் பேசும் தமிழை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

உலகிற்கு தொடக்கமும் முடிவும் கிடையாது. இறைவனோ ஆதியும் அந்தமும் இல்லாதவன். வாழ்க்கை மட்டும் எப்படி முடிவுக்கு வரும்? உயிர்கள் மட்டும் எவ்வாறு முக்தியடைய முடியும்? எவ்வளவு காலம்தான் இறைவர்களுக்கு சேவை செய்து மகிழ்வது? அங்கும் போய் சேவைதானா? பசிக்காதமே. தூக்கம் என்பதே கிடையாதாமே.

இறைவனோடு ஒன்றாகச் சேர முடியுமா? முடியும் என்பதிலும், ஒருபோதும் முடியாது என்பதிலும், முடியும் ஆனாலும் முடியாது என்பதிலும் ஏகப்பட்ட தத்துவங்கள், கொள்கைகள், கோட்பாடுகள், பிணக்குகள், பூசல்கள், முட்டல்கள், மோதல்கள். கப்பியாசம் என்பதற்கு இப்படியா பொருள் சொல்லி உடையவர் கண்களிலிருந்து நீரை பெருக்கெடுக்க வைப்பார் யாதவப் பிரகாசர்?

காலம் என்பது என்ன? எல்லாம் மாயை என்றும், அனைத்தும் ஒன்றே என்றும் தத்துவங்களை முன்னெடுத்த ஆதி சங்கரர் (788-820) காலத்தைப் பொருளாக உருவகம் செய்திருக்கிறாரா? காலத்தைப் பொருளாக அவரால் பேசியிருக்க முடியுமா? காலம் பொருளென்றால் பிரம்மமும் பொருளாகி விடுவாரே. அப்படியெனில் பொருள் தன்மையில்லாதது பிரம்மம் இல்லையென்றல்லவா ஆகிவிடும்.

குடத்தின் உள்ளிருப்பதும், குடத்தின் வெளியிருப்பதும் வெளியல்லவா? குடத்தை எடுத்துவிட்டால் அப்போதும் வெளி இருக்கும்தானே. எங்கும் நிறைந்திருப்பது வெளியல்லவா? வெளியில் நேர்கோட்டில் காலம் பயணிக்கிறது என்றுதானே அத்தனை அறிஞர்களும், மேதைகளும், ஞானியரும் நினைத்தும் பேசியும், எழுதியும் வந்தார்கள்.

குளத்தில் தெரியும் சந்திரன் மாயை அல்லவா? ஒவ்வொரு குளமாக அகற்றினால் இறுதியில் எஞ்சி நிற்பது எது? பரமாத்மாவின் தோற்றங்களல்லவா ஜீவாத்மாக்கள். சந்திரன் மட்டும் எஞ்சுவது போல் பிரம்மம் மட்டுமல்லவா உண்மையானது. அழியாதது. பரமும், மனிதரும் ஒன்று. நீய் அதுவாக இருக்கிறாய். அனைத்து மனிதர்களும் அதுவாக ஆக முடியாது என்பதும் உண்மையன்றோ. அது ஆவதற்கு வேதம் அவசியமல்லவா? வேதம் ஓதக் கூடாதவரும், படிக்கக் கூடாதவரும், கேட்கக் கூடாதவரும் பிரம்மத்திலிருந்து வேரானவர்களெனில், ஒற்றைப் பிரம்மம் இருக்க முடியாதே. ஒற்றை பிரம்மம்தானே தஞ்சாவூரிலிருந்து பாலக்காடு வரை பெரியவாளை அந்த வயதிலும் நடக்க வைத்தது. காந்தியாரைப் பார்த்து கலங்கி நின்றது. ஆலயத்தினுள்ளேயே விடாத அந்தப் பிரம்மமா அனைவரையும் தன்னோடு ஒன்றாக ஐக்கியமாக்கிக் கொள்ளப் போகிறது?

உலகத்தையும், உலகைப் படைத்தவரைப் பற்றியும், பன்னெடுங்காலமாகவே தொடர்ந்து சிந்தித்து வந்த இந்திய மண்ணில் தோன்றாத அந்த ஞானம், 1921-ல் ஐன்ஸ்டீனுக்கு நோபல் பரிசு கிடைக்கும் படிச் செய்தது விந்தையிலும் விந்தை.

சுத்த வெளியென்றும் வெட்ட வெளி என்றும் கொண்டாடிய வெளியும் காலமும், ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை என்றும், காலவெளி என்பது வெற்றிடமன்று, அது ஒரு பருப்பொருள் என்றும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (1879-1955) விளக்கிய போது இப்பேரண்டத்தைப் பற்றிய அறிவு சட்டென்று அடியோடு மாறி விட்டது. காலம், வெளி இரண்டுமே ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை என்ற அவரது சார்பியல் தத்துவம் மனிதர்களின் சிந்திக்கும் முறையை மாற்றியமைத்தது எனில் மிகையாகாது.

விண்வெளியில் பயணிக்கும் ஒருவரின் காலமும், பூமியில் இருக்கும் ஒருவரின் காலமும் ஒன்று போல் இருக்குமா என்றால் இருக்காது என்பதே ஐன்ஸ்டீன் வாதம். பூமியில் இருப்பவரை விட விண்வெளியில் பயணிக்கும் மனிதருக்கு வயதாகும் வேகம் மாறுபடும் என்கிறார். ஒளியின் வேகத்தில் செல்ல முடிந்தால் என்னாகும்? காலத்தை வென்று விடலாம் என்பது அரிய கண்டுபிடிப்புத்தானே. அரிய கண்டுபிடிப்பு அணுகுண்டாக மாறாமல் இருந்திருந்தால் ஆல்பர்ட் இன்னும் புகழ் பெற்றிருப்பார்.

அணுவை அறிந்தது விஞ்ஞானத்தின், அறிவியல் அறிஞர்களின், ஆகப்பெரும் சாதனை. அறிஞர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆதி இல்லாதவன் என்றும் அனாதையானவன் என்றும் சொல்லிக்கொண்ட ஆண்டவனை அணுவாக இருக்கலாம் என அறிந்து கொண்டது அறிவியல். அணுவை உடைத்தால் என்னாகும்? அணுவுக்குள் மாபெரும் ஆற்றல் பொதிந்திருப்பதைக் கண்டு அறிஞர்கள் திகைத்தார்கள். எங்கிருந்து அணுவுக்கு இவ்வளவு ஆற்றல் கிடைத்திருக்கும்? அணு எதனால் ஆக்கப்பட்டுள்ளது? அணுவின் நிறை என்ன? குணம் என்ன? உட்பொருள் என்ன? அனைத்தையும் அறிவியல் அறிந்து கொண்ட போது ஆதியும் அந்தமுமில்லாத இறைவன் இவ்வளவுதானா என அறிவியல் நகைத்தது.

அணுக் கோட்பாட்டாளர்கள் ஆதியை விளக்கினார்கள் எனில் அந்தத்தோடு போராடியவர்கள் வானியல் அறிஞர்கள். போராட்டம் சாதாரணமானதல்ல.

உண்மையைக் கண்டறிந்தும் அதனை வெளியில் சொல்ல முடியாமலும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதும் வரலாறு.

வானியல் முன்னோடியான போலந்து நாட்டு நிக்கோலஸ் கோபர் நிக்கஸ்சும் (1473-1543), நவீன இயற்பியலின் தந்தை எனப் போற்றப்படும் இத்தாலியின் கலிலியோவும் (1564-1642) பூமியைச் சுற்றிக் கொண்டிருந்த அறிவியலை சூரியனுக்கு எடுத்துச் சென்ற பிதாமகர்கள். பூமி மையமல்ல, பூமி சூரியனைச் சுற்றிவரும் ஒரு கோள்தான் என்று சொன்ன போது மதம் சூழ்ந்து கொண்டது. அறிஞர்கள் திணறித்தான் போனார்கள். அறிஞர் புருனோவுக்கு நேர்ந்த கதி கொடுமையானது.

அறிவைப் பற்றிய மனிதர்களின் இடைவிடா முயற்சியே, தேடலே அண்டக் கோட்பாடாக விரிந்துள்ளது. மனிதர்கள் இரவு வானத்தைப் பார்த்து வியந்து வந்திருந்த போதிலும் கலிலியோவின் கையிலிருந்த கருவி கொண்டு பார்த்த போது நீள்விசும்பென்றும், பெருவெளியென்றும் சொல்லப்பட்ட அது தம்மைத் தெளிவாகக் காட்டியது. கோள்களையும், நட்சத்திரங்களையும், சமய சடங்குகளுக்கும், கால அமைப்பிற்கும், பஞ்சாங்கம் கணிக்கவும் பார்த்து வந்த பண்டைய மக்களைப் போல் அல்லாமல், அறிஞர்கள் வேறு மாதிரி வானத்தை அணுகினார்கள். விளைவு, நினைத்துப் பார்க்கக் கூட முடியாத தொலை தூரங்களிலுள்ள நட்சத்திரக் கூட்டங்களையும் இன்றைய மனிதர்களால் நேர்த்தியாகக் காண இயலும். வெகு தொலைவிலிருந்து வரும் மிக மங்கலான கதிர்வீச்சைக் கூட பல மடங்கு பெரிதாக்கி கூர்ந்து ஆராய முடியும். ஏதேனும் ஒரு நட்சத்திரக் கூட்டத்தில் இறைவனின் இருப்பை உறுதி செய்தாலும் ஆச்சரியமில்லைதான். பரந்த அண்டத்தில் எங்கேனும் மனிதர்களோ, தேவர்களோ, கடவுளர்களோ இருக்கிறார்களா என அறிவியல் சல்லடை போட்டுத் தேட ஆரம்பித்து வெகு காலமாகிறது.

கண்ணுக்குப் புலப்படும் இப்பேரண்டத்தின் அடிப்படை அமைப்பை அறிவியல் நன்றாக அறியும். ஆங்காங்கே நட்சத்திர மண்டலங்கள் உள்ள ஒன்றுமில்லாத பெருவெளி மிகமிகப் பரந்த அளவில் அண்டமாக இருக்கிறது. ஒவ்வொரு நட்சத்திர மண்டலத்திலும் பத்தாயிரம் கோடி நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றிற்கிடையே தூசும், வாயுவும் இருக்கின்றன. மேலும், இப்பேரண்டம் ஒரே சீராக விரிவடைந்து கொண்டே இருக்கிறது.

ஜெர்மன் அறிஞரான கெப்ளர் (1571-1630) கோள்களின் இயக்கம் பற்றிய கெள்கைகளை வெளியிட்டதும், பிரிட்டிஷாரின் நியூட்டன் (1642-1727) ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்ததும் அண்டக் கோட்பாடு வேகமெடுக்க முக்கியக் காரணங்கள். விண்மீன்கள், கோள்கள், நட்சத்திரங்கள் யாவும் ஈர்ப்பு விசைக்கு உட்பட்டு இயங்குகின்றன என்ற நியூட்டன் அதுவரைக்குமிருந்த அரிஸ்டாட்டிலின் பேரண்டக் கோட்பாட்டை மாற்றியமைத்தது அளப்பரிய சாதனை.

இயற்பியல் என்றால் இயற்கை என்று அர்த்தம். இயற்கையையும் இயற்கை நிகழ்வுகளையும் விளக்குவது இயற்பியல். ஆதிகாலம் தொட்டே மனிதர்கள் விண்வெளியை ஊற்று நோக்கி வந்திருக்கிறார்கள். இன்றைய அறிவியல் விண்வெளிப் பொருட்கள் மேல் ரேடார் கற்றைகளை அனுப்பி, எதிரொலிக்கச் செய்து, திரும்பி வரும் கற்றைகளைக் கொண்டு அவற்றின் தொலைவினை துல்லியமாகக் கணிக்கின்றன. ஆனால் அன்றைய அறிஞர்கள் ஒவ்வொரு சிறு கண்டுபிடிப்பிற்கும் எவ்வளவு கடின உழைப்பையும், புத்திக் கூர்மையையும் பயன்படுத்தியிருப்பார்கள் என்பது மலைக்க வைக்கக் கூடியது. நிலவுக்கும், பூமிக்குமான தூரத்தையும், பூமிக்கும் சூரியனுக்குமான தூரத்தையும் இன்றைய துல்லியத்தோடு முன்னோர்கள் கணித்திருக்கின்றனர் எனில் அவர்களின் ஞானம் எத்தகைய தெளிவானது என்பதை அறிந்து கொள்ளலாம். மற்ற அனைரையும் விட கிரேக்கர்களே இதில் முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள்.

கிரேக்க வானியலாளர் தாலமியால் முன்மொழியப்பட்ட புவிமையைக் கொள்கை பல நூற்றாண்டு காலம் பூமியை ஆட்சி செய்திருக்கிறது. அண்டத்தின் மையம் சூரியனே என்று சாதித்த கோப்பர் நிக்கஸ் காலத்திற்குப் பின்னும் பூமியே அண்டத்தின் மையம் என்ற கருத்திலிருந்து மக்கள் பின்வாங்கவில்லை. மாறாக, வான்கோள்கள் வட்டப்பாதையில் சுற்றி வருதல் என்ற அவரது புத்தகத்தையும், சூரிய மையம் என்ற நம்பிக்கையையும் கைவிட வேண்டும் என வற்புறுத்தப்பட்டார். புரட்சியாளர்களை உலகம் தாமதமாகத்தான் புரிந்து கொள்ளும் போல. பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்திலிருந்து எத்தனை முறை பொருட்களைக் கீழே போட்டுப் போட்டு கலிலியோ பரிசோதனைகள் செய்திருப்பார் எனத் தெரியவில்லை. அறிஞர்கள் உண்மையைச் சொல்லும் முன் பலமுறை பரிசோதிப்பரல்லவா? சூரியனே மையம் என்றதால் மத குருமார்களால் கடுந்துயரை அனுபவித்தார் என்றே

சொல்லவேண்டும். தொடர்ந்து பரிணமித்த பொது ஈர்ப்பியல் சாதனை என்றால் பொது சார்பியல் மைல்கல்.

சூரியனை மையமாகக் கொண்டு கோள்கள் நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன என்ற கெப்ளரின் கோட்பாடு இன்று உண்மையென நிருபணமாகியிருக்கிறது. கோள்கள், நிலவுகள், சிறு கோள்கள், வால்மீன்கள் போன்ற அனைத்து வகை வான்பொருட்களையும் தன்னுள் பிணைத்து வைத்திருக்கும் அண்டத்தின் ஒரு பகுதியே சூரியக் குடும்பம். குடும்பத் தலைவர் சூரியனார். நமது பூமி இருக்கும் சூரியக் குடும்பம் பால்வழித்திரளின் ஓரியன் கைப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. இது ஒரு விண்மீன்திரள். இப்படியான கோடிக்கணக்கான கேலக்ஸி எனப்படும் விண்மீன் திரள் கொண்டது ஒரு அண்டம். பல அண்டங்கள் இருக்கலாம்.

நமது சூரியக் குடும்பம், விண்மீன் குடும்பம், நட்சத்திரக் குடும்பம் அழகானது. கவித்துவமானது. நிலவின் அழகில் மயங்காதவரும், நிலவைப் பாடாத கவிஞரும் உண்டோ. திடக் கோள்களான புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வாயுக் கோள்களான வியாழன், சனி யுரேனஸ், நெப்டியூன் நமது குடும்பத்தில் அடக்கம். புளூட்டோ கோள் தகுதியை இழந்து சமீபத்தில் மீண்டும் தகுதியடைந்ததாகத் தெரிகிறது. கோள்கள் தங்களையும் சுற்றி, சூரியனையும் சுற்றி வருகின்றன. துணைக் கோள்கள் கோள்களைச் சுற்றி வருகின்றன. ஒவ்வொரு கோளுக்கும் வெவ்வேறான துணைக்கோள்கள். பூமிக்கு பெண்களின் முகத்தைவிட அழகிய வெள்ளை நிற நிலவு. செவ்வாய்க்கும், வியாழனுக்கும்மிடையே அதிக எண்ணிக்கையிலான சிறு கோள்கள் சுற்றி வருகின்றன. இவை உடைந்து போன ஒரு கோளின் எச்சமாக இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. கோமட் எனப்படும் வால்மீன்களும், மிட்டியோர் எனப்படும் எரிமீன்களும் சூரிய வான்வெளியில் உண்டு. எரிமீன் சிறு விண்வீழ் கற்களாக, பரு விண்வீழ் கற்களாக இருக்கின்றன. அருகாமையிலுள்ள அடுத்த விண்மீன் ஆன்ட்ரோ மிடா.

அதிகாலை கிழக்கு வானிலும், மாலை மேற்கு வானிலும் ஒளிபொருந்திய வெள்ளியைப் பார்க்கலாம். சூரியன் மறைந்த பின் மேற்கிலும், சூரிய உதயத்திற்கு முன் கிழக்கிலும் தெளிவான புதனைப் பார்க்கலாம். குறைந்த தூர நீள்வட்டப்பாதையில் வரும் போது செவ்வாய் கோளும் கண்களுக்குப் புலப்படும். சமீபத்தில் தெளிவாகத் தெரிந்தது 2003-ம் ஆண்டில்.

கான்ஸ்டலேன் என்று அறியப்படும் வடிவ வின்மீன் குழுக்கள் ஆதிகாலம் தொட்டே மனிதர்களுக்கு அறிமுகமானவை. துருவ நட்சத்திரங்களை கொண்டு திசையறிவது வழக்கம். விண்மீன் குழுக்கள் எண்பத்தியெட்டு வடிவங்களாக பிரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. விலங்கு அல்லது மனிதர் வடிவங்கள் தெளிவான, நிலவற்ற வடக்கு வானில் தெரியும் ஏழு விண்மீன் சேர்ந்த குழு கரடி ஜீலை, ஆகஸ்ட் மாதங்களில் தெளிவாகத் தெரியும். மேலும் வேடன், காளைமாடு, சப்திஷிக் கூட்டம் எனப் பலவுண்டு.

இந்திய சோதிடவியல், வானியல் அறிவு அபாரமானது. சோதிடக் குறிப்புகள் துல்லியமானவை. ஐந்தாம் நூற்றாண்டு ஆர்யப் பட்டர் பூமி தனது அச்சில் சுழல்வதாகக் குறிப்பிட்டது மேற்குலகின் பார்வையில் படவில்லை எனத் தெரிகிறது. கடல் வாணிகத்தில் சிறந்திருந்த தமிழர்களும் வானியல் தெளிவு பெற்றிருந்தார்கள்.

அண்டம் எப்படி உருவாகிருக்கும்? பெருவெடிப்புக் கோட்பாட்டை முன்னெடுத்ததில் ஜெர்மன் தத்துவ அறிஞர் இம்மானுவேல் கான்ட் (1724-1804) முன்னோடியாகத் தெரிகிறார். பேரரறிஞர் என்பதற்கு ஏதுவாக கான்ட் அண்டத்தின் தோற்றம், உயிர்களின் பரிணாம வளர்ச்சி குறித்து அதிகம் சிந்தித்திருக்கிறார். ஒரு மையப் புள்ளியிலிருந்து ஆதிப்பொருள் தோன்றி எல்லையில்லாப் பெரு வெளியில் பரவித் தோன்றின என்றும், ஒன்றிலிருந்து தோன்றிய மற்றொன்று ஒருநாள் மறைந்து போகுமென்றும், மறைந்தது மீண்டும் தோன்றுமென்றும் குறிப்பிடுகிறார். நவீன சிந்தனையாளர் கான்ட்டின் சிறப்பு அவர் காலத்திற்கு முன் படைத்தது அப்படியே மாறாமல் இருந்து வருகிறது என்ற கருத்தியலை மாற்றி, மாற்றங்கள் உண்டாவது தவிர்க்க இயலாதென்ற பரிணாமக் கூற்றை விதைத்ததே.

பெருவெடிப்புக் கொள்கை, பேரிடிக் கோள்கை, பெரும் பிரளயக் கொள்கை, நெபுலாக் கொள்கை என அழைக்கப்படும் இந்த பெருவீக்கக் கொள்கைப்படி, இப்பேரண்டம் தோன்றி ஆயிரம் கோடி வருடங்களுக்கும் மேலாகிறது. இன்னும் ஒரு ஆயிரம் கோடி வருடங்கள் வரைக்கும் இப்பேரண்டம் இருக்கும். நூறு ஆண்டுகள் வயதைக் கூட உறுதி செய்ய முடியாத நிலையிலிருக்கும் மனிதன், ஆயிரமாயிரம் கோடி வருடங்களுக்கு முன் நடந்ததையும், பின் நடக்கப் போவதையும் அறுதியிடத் துணிந்தது அறிவியல் மேல் உள்ள அசையாத நம்பிக்கையாலே எனலாம்.

துடிக்கும் அண்டக் கொள்கையும் உண்டு. இருதயம் சுருங்கி விரிவது போல் அண்டம் வரிவடைந்தும், சுருங்கியும் பின் மீண்டும் விரிவடைவதும் தொடர்ந்து இருக்குகிறதாம். தோராயமாக 800 கோடி ஆண்டுகளுக்கு ஒரு முறை இவ்வாறு விரிவும், சுருக்கமும் நிகழலாமாம்.

நிலைமாறாக் கொள்கையின் படி, அண்டம் தொடர்ந்து இருக்கக் கூடியது. விண்மீன்கள் சிதையும் போது ஒன்றுமில்லாத விண்வெளியிலிருந்து புதிய விண்கோள் பிறந்து அண்டத்தின் நிலைத்தன்மை மாறாதிருக்கும். விண்வெளி அமைப்பைப் பற்றியும் அதன் இயங்கு முறை பற்றியும் தற்போதைய மாபெரும் இயற்பியலறிஞர் ஸ்டீபன் ஹாக்கிங்ஸ் பல கருதுகோள்களை முன்மொழிந்திருக்கிறார். குறிப்பாக பெருவெடிப்பு, கருத்துளைகள், பரவெளிகள் எனும் வேர்ம்ஹோல்ஸ், கால இயந்திரம் போன்ற கருத்துக்கள் மீது இவரது கவனம் அதிகம்.

அறியப்படாத இனியும் அறிய முடியாத ஒரு சூழலில் அண்டம் தோன்றுகிறது. காலம், இடம் பற்றிய அனைத்து விதிகளும் தகர்ந்து விடக் கூடிய ஓர் அளவிறந்த அடர்த்தி நிலையிலிருந்து, ஓர் ஒருமை நிலையிலிருந்து அண்டம் தோன்றியது, இப்படிச் சொல்வது ஒரு கற்பனையே, கோட்பாடே தவிர முற்றான உண்மை அல்ல. பேரண்டம் எப்படி உண்டாகியிருக்கக் கூடும் என்பதை ஆய்வுக் கூடங்களிலலேயே கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஐரோப்பிய ஆய்வுக்கூடமான சேர்ன், ஒளியின் வேகத்தில் எலெக்ட்ரான்களை மோதவிட்டு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. வெடிப்பு நிகழந்த 10 விநாடிக்குள் அதாவது பிக்கோ வினாடிக்குள் இந்த நிலையை உருவாக்கிக் காட்டுவது உண்மையில் அதிசயமே. கடவுள் துகள் என அதிசயிக்கப்படும் அந்த ஆரம்பத் துகள்களை கண்டுபிடித்துவிட முடிந்தால் அண்டத்தைப் பற்றிய அடிப்படைக் கேள்விகளுக்கு விடை தெரியக் கூடும்.

பேரண்டத்தில் படைப்பு ஆரம்பமாகிய 10^{43} வினாடிகளில் இடம், காலம் வரையறைகள் பொருள் விளங்க இயலாதவையாக இருக்கின்றன. 10^{43} முதல் 10^{35} வினாடிகள் அதிவேகப் பெருக்க ஊழியாக சுட்டிக்காட்டப்படுகின்றன. விரிவாக்க வேகம் ஒளியின் வேகத்தை விட அதிகம். ஒரு மில்லி மீட்டருக்கும் குறைந்த வடிவளவுள்ள ஒரு நுண்ணிய பந்திலிருந்து, மிக முன்னேறிய தொலை

நோக்கிகளாலும் காண முடியாத தொலைவுகளுக்கு அப்பால் விரிவு நிகழ்ந்தது. விரிவாக்கத்தைத் தூண்டிய ஆற்றல் எதுவெனத் தெரியவில்லை.

10^{35} முதல் 10^{12} வினாடிகளில் பெருவீக்கம் நின்று விட்டது. வெடிப்பைத் தூண்டிய ஆதி ஆற்றல் ஏராளமான அடிப்படைத் துகள்களை அதாவது எலெக்ட்ரான்கள், நுண்துகள்கள், குளுவோன்கள், நியூட்ரினோக்கள் போன்றவற்றை விட்டுச் சென்றது. இத்துகள்கள் உயர்ந்த வெப்பநிலைகளில் 10^{27} டிகிரி சென்டிகிரேட் இருக்கின்றன. அண்டமளாவிய ஆதி ஆற்றல், ஈர்ப்பு விசையாகவும், பிற விசைகளாகவும் உடைந்து, அணுவிசை நிலையில் செயல்படுகின்றன. இப்போது ஐன்ஸ்டீன் விதிகள் செயல்படுகின்றன. அண்டம் தொடர்ந்து விரிவடைந்து குளிர்ச்சியடைகிறது.

10^{11} வினாடிகளில் வெப்பநிலை ஒரு பத்துலட்சம் நூறாயிரம் கோடி பாகை சென்டிகிரேடு அளவுக்குக் குறைகிறது. மின்காந்தம் தோன்றுகிறது. இயற்பியலின் அடிப்படை விசைகள் நான்கும், ஈர்ப்பியல், வலுவான அணுவிசை, வலுவற்ற அணுவிசை, மின்காந்தம் இப்போது செயல்படுகின்றன. மேலும் சிக்கலான துகள் உருவாவதற்குரிய காலம் கனிகிறது.

10^{6} வினாடிகள் நேரத்தில் நுண்துகள் மும்மூன்றாக ஒன்றொடொன்று ஒட்டிக் கொண்டு, முதல் புரோட்டான்களாகவும், நியூட்ரான்களாகவும் உருமாறுகின்றன. இவை, அணுக்களை உருவாக்கும் பொருள்களாகின்றன. எதிர்ப்பொருளும், பொருளும் சந்தித்து ஒன்றையொன்று அழிப்பதில் ஈடுபடுகின்றன. அண்டம் 100 கோடி பாகை சென்டிகிரேடு வெப்ப நிலைக்கு குளிர்ச்சியடைகிறது.

அண்டம் தோன்றிய 100 வினாடிகளில் நியூட்ரான்களும், புரோட்டான்களும் இணைந்து மிக அடிப்படையான அணுக்கரு மையமாக அமைக்கின்றன. இவற்றில் ஹைட்ரஜன், ஹீலியம், லித்தியம் அடங்கியுள்ளன. அளவிலா வேகத்தில் அண்டம் குளிர்ச்சியடைகிறது. அது குளிரடையும் வேகம் மற்ற கனமான பூதங்கள் உருவாவதற்குப் போதிய வெப்பம் உருவாகாத அளவிற்கு இருந்தது.

30,000 ஆண்டுகள் ஆன நிலையில் ஆதிஅண்டம், ஒளியையும் பிற ஆற்றல் அலைகளையும் கொண்டு செல்லும் எலக்ட்ரான்களும், ∴போட்டான்களும் அடங்கிய ஒரு கலவைக் குழம்பாக இருந்தமையால் அதில் ஒளி ஊடுறுவ இயலவில்லை. 3000 பாகை சென்டிகிரேட்டை எட்டியும், எலக்ட்ரான்கள் இறுதியாக

அடிப்படை அணுக்கரு மையங்களை ஒட்டிக் கொண்டும் நிற்கின்றன. இதனால் போட்டான்கள் விடுதலை பெறுகின்றன. அண்டத்தின் முதலாவது மின்காந்தவியல் சகையாக மாறுகின்றன. விண்வெளி இப்போது ஒளி ஊடுருவக் கூடியதாக இருக்கிறது.

200 அல்லது 300 கோடி ஆண்டுகளில் அண்டத்தின் அடர்த்தியான வாயுமேகங்களுக்கு மத்தியில் அண்டத்தின் முதல் விண்மீன்கள் தோன்றியதும் அண்டத்தின் இருட்காலம் முடிவுக்கு வருகிறது. இவற்றிலிருந்த ஹைட்ரஜன், ஈர்ப்பு விசையால் சுருங்கி, ஹீலியத்துடன் இணைந்து விண்வெளிக்குள் வெப்பத்தையும், ஒளியையும் பாய்ச்சுகிறது. சூடான, முரடான அணுக்கள் பூதங்களின் ஏணியில் மேலேறுகின்றன. கார்பன், ஆக்ஸிஜன், மக்னீசியம் உருவாகின்றன. பயங்கரமான வெடிப்புகளில் பிரம்மாண்ட விண்மீன்கள் மாண்டு போய் பரிணமித்துவரும் பால் வீதிகளில் கனமான பொருட்களை உமிழ்கின்றன.

சூரிய மண்டலத்தின் கோள்களுடன் நமது சூரியன் உருவாகிறது. தூசு, பாறை, வாயு ஆகியவை அடங்கிய கோள அமைப்புகள் படிப்படியாகத் திரண்டமையால் ஏற்பட்ட ஒரு பிரளய பெருவெடிப்பு காரணமாக இது நிகழந்திருக்கலாம். சூரியனுக்கு மிக அருகிலுள்ள புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகிய கோள்களில் பெரும்பாலான லேசான வாயு எரிந்ததாகவும், பூமியில் இரும்பு, நிக்கல், கார்பன், ஆக்சிஜன், மக்னீசியம் பெரும்பாலும் அடங்கிய ஒரு கலவை எஞ்சி நின்றதாகவும் கருதப்படுகிறது. வியாழன், சனி போன்ற தொலைதூரக் கோளங்கள் இலேசான வாயுக்களாலான பிரம்மாண்டக் கோளங்களாக அமைந்தன. இது 580-1050 கோடி ஆண்டுகளுக்கிடையில் நிகழ்ந்திருக்கலாம். துல்லியமான காலத்தைக் கண்டறிய இயலவில்லை.

620 அல்லது 1120 கோடி ஆண்டுகளில் உயிரினங்கள் தோன்றுவதற்கான முதல் உயிரணுக்கள் பூமியில் பரவுகின்றன. அமினோ அமிலங்கள் போன்ற உயிரினங்களின் அடிப்படை அமைப்பான்கள், நீர், மீத்தேன், ஹைட்ராஜன் ஆகியவை அடங்கிய ஓர் அடிப்படைக்கலவை மீது மின்னல் பாய்ந்து ஏற்பட்ட வினை மூலம் உயிர் உருவாகியதாகத் ஆரம்பக் கோட்பாடுகள் கூறுகின்றன. இதற்கு பதிலாக, பூமியின் மீது தாக்கிய விண்கற்கள் கரிம உயிர்களின் விதைகளைக் கொண்டு வந்தன என்று தற்காலத்தியக் கோட்பாடுகள் எடுத்துரைக்கின்றன.

பாலின இனப்பெருக்கம் தொடங்கியதால் பல உயிரணுக்களைக் கொண்ட உயிரிகள் வளர்ந்தன. ஆர்டோவிசியன் யுகத்தில் முதலாவது முதுகெலும்புப் பிராணிகள் தோன்றின. அடுத்து தாவரங்கள், ஊர்வன, பாலூட்டிகள் தோன்றின. ஏறத்தாழ 50 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு, ஆப்பிரிக்காவில் மனிதனை ஒத்த உயிரினங்கள் தோன்றலாயின. 100000 ஆண்டுகளுக்கு முன்பு மனித இனம் தோன்றியது. மொழி, பண்பாடு, மனித சமுதாயம் உருவாயின.

2

தமிழர்

இப்பேரண்டம் எவ்வாறு உருவானது என்பதற்கு அறிவியல் கொடுக்கும் விளக்கம் இதுவே. பல்வேறு அறிஞர்களின் அரிய கண்டுபிடிப்புகளை, கோட்பாடுகளை, விளக்கங்களை உள்ளடக்கியே இக்கோட்பாடு படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விண்மீனும் நமது சூரியனைப் போன்றது என்றும், வின்வெளி எல்லையற்றது என்றும் எதை வைத்து கியார்டானோ புருனோ அவ்வளவு திட்டவட்டமாகச் சொன்னார்? அறிவியல் கண்டுபிடிக்கும் கோட்பாடுகள் முன்பு தெரியாமலிருந்த பலவற்றையும் புரிய வைத்திருக்கிறது. சான்றுகள் அடிப்படையில் அறிவியல் கோட்பாடுகள் முன்வைக்கப்படுவதால், அறிவியலை நம்பலாம் என்பதே உலகினரின் பொதுக்கருத்து. ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாட்டின் அடிப்படையை வைத்துத்தானே கார்கள் தமது பயண வழிகளை சரியாகக் கண்டுபிடிக்கின்றன. படகுகள் காணமால் போவது தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஆதாரங்களே அறிவியலை ஒத்துக் கொள்ள வைக்கின்றன.

ஒரு மில்லி மீட்டர் அளவேயிருந்த அந்த ஆதிப்பேரண்ட மூலத்தில் பெருவீக்கத்திற்கு முன் என்ன நிகழ்ந்திருக்கும்? இப்பேரண்டம் எதனால் ஆனது? பெரு வெடிப்பு ஏன் நிகழ்ந்தது? இயற்பியல் விதிகள் எங்கிருந்து வந்தன? படைப்பு வரலாறு முழுவதையும் விளக்க முற்படுவது அறிவியலின் ஆகப்பெரும் சவால். ஒரு வேளை 1000 கோடி ஒளியாண்டுகள் தூரமுடைய அண்டம் என்பதே ஒரு மாயத் தோற்றமாக கானல் நீராக இருந்தால்? அறிவியல் அதனையும் ஆராய்கிறது. அறிவியலால் எந்த ஒரு சிறு பகுதியையும், சிறு சந்தேகத்தையும் புறந்தள்ள முடியாது.

அண்டம் அதன் உண்மை அளவை விடப் பெரியதாகத் தோன்றுவதற்கு வாய்ப்புகள் உள்ளனவா? ஆடிக் கூடத்தினுள் நுழையும் ஒருவர் பலவாகத் தெரிவது போல், அவரது பிரதிபலிப்புகள் எங்கும் தெரிவது போல், இப்பேரண்டம் மாயத் தோற்றம் காட்டுகிறதா? அறிவியலாளர்கள் இத்தகைய மாயத் தோற்றம் பற்றியும் அறிந்திருப்பார்கள். அறிவியலுக்கு முன் ஒருவராலும் பொய்யுருத் தோற்றத்தைக் காட்ட இயலாது. ஏனெனில் அறிவியலாளர்கள் கேள்வி கேட்பவர்கள்.

இயற்கையைப் பார்த்து வியந்து நிறை மனித இனம், இயற்கையை புரிந்து கொண்டோம் எனும் அளவில் இன்று வளர்ந்திருக்கிறது. பேரண்டத் தோற்றத்திற்கு

பெரு வெடிப்புக் கொள்கையை முன்நிறுத்தும் அறிவியல், உயிர்த் தோற்றத்திற்கு படிமலர்ச்சிக் கோட்பாட்டை வழிமொழிகிறது. உயிரினத் தோற்றத்தில் டார்வினின் பரிணாமக் கோட்பாடே தலைசிறந்து விளங்குகிறது.

அண்டக்கோளம் இப்படித்தான் உண்டாகியிருக்க வேண்டும், உண்டானது என்பதை ஓரளவிற்குப் புரிந்து வைத்திருக்கும் அறிவியலால் கூட, உயிர் என்பதனை இன்னும் புரிந்து கொள்ள இயலவில்லை என்று சொன்னால் மிகையாகாது. உயிர் என்றால் என்ன? உயிரினங்கள் ஏன் தோன்றின? உயிரினங்கள் ஏன் வந்து கொண்டே இருக்கின்றன? உயிரினங்கள் சத்தா, அசத்தா? மனிதனை மட்டும் தம்மைப் போல் படைத்த அவர் மற்ற உயிரினங்களை மட்டும் வேறாகப் படைத்தது ஏன்? பாக்டீரியா, பாசி போன்றவற்றிலிருந்து கடவுள் வேறானவரா?அவரது தோற்றம் வேறானதா? கடவுள் எப்படி இருப்பார்? அவரது உடலில் செல்கள் இருக்குமா? ஒரு வேளை விண்மீன்களையே செல்களாகக் கொண்டிருந்தால்? தலை விண்மீன் எதனால் ஆக்கப்பட்டிருக்கும்?

நிகழ்தற்கரிய அண்டத்தில் அதனினும் அரியதான முதல் உயிர் எப்படித் தோன்றியது? முதல் உயிர் ஒன்றா அல்லது முதலிலேயே இரண்டு இருந்ததா? ஒன்றிலிருந்து மற்றொன்று வந்ததா அல்லது இரண்டும் எப்போதுமிருப்பதா? ஒன்றும் இரண்டும் என்பதா அல்லது ஒன்றும் பூஜ்யமும் என்பதா? பூஜ்யத்திலிருந்து ஒன்று வந்ததா அல்லது ஒன்றே பூஜ்யமானதா? பூஜ்யம் என்பது தான் சூன்யமா? ஒன்று மில்லாத சூன்யத்திலிருந்து ஒன்று வந்ததா? அல்லது ஒன்றே வளைந்து பூஜ்யமானதா? எல்லையற்ற ஒன்று வளைந்து பூஜ்யமானதா? அல்லது பூஜ்யம் நேராகி ஒன்றானதா? ஒன்றும் பூஜ்யமும் சமமாக ஒன்றானதா அல்லது மாறுபட்டு வேறானதா? ஒன்றுக்குள் பூஜ்யமா அல்லது பூஜ்யத்திற்குள் ஒன்றா?

எல்லாம் தோன்றியபின் கடவுள் தோன்றினாரா அல்லது கடவுள் தோன்றிய பின் எல்லாம் தோன்றியதா? உண்டாகட்டும் என்றவுடன் உண்டாகுமா? சொல்ல வேண்டுமா? கடவுளுக்கு மொழி தேவைப்படுமா? கடவுளின் மனத்தை தெய்வீக மனம் எனலாமா? தெய்வீக மனம் எந்த மொழியில் சிந்திக்கும்? மூளை என்றால் என்ன? மனம் எங்கிருக்கிறது? பேரண்டப் படைப்பில் மனத்தின் பங்கு என்ன? அண்டத்தின் இருதயம் எது?

மூலத்திற்கு எல்லாம் மூலமான ஆதிமூலம் யார்? அண்டங்களுக்கு எல்லாம் தொடக்கமாக விளங்குபவர் யார்? ஒளி தரும் சூரிய சந்திரருக்கு ஒளி கொடுப்பது யார்? வேதமாகவும், வேள்வியாகவும் திகழ்பவர் யார்? முதன்மைப் பொருள் யார்? எண்ணிலடங்கா மாயங்கள் செய்வது யார்? பசுக்களை மேய்க்கும் கண்ணன் யார்?

உலகின் படைப்பு அற்புதமெனில் உயிரின் தோற்றம் அதிசயம். விண்மீன்களால் ஆன உலகிற்கும் செல்களால் ஆன உயிர்களுக்கும் உள்ள ஒற்றுமை என்ன? இரண்டுமே வேதியல் பொருட்கள் என்பதே வேதியியலின் சாரம். சேர்மம் அதாவது அணுக்களின் சேர்க்கையே இந்த உலகமும், உயிர்களும். உலகம் என்றால் உயிருள்ளவையும், உயிரற்றவையும் அடங்கும். உயிரற்றவை விண்மீன்கள், தாள், சமையல் பாத்திரம், எழுதுமை, நாற்காலி. உயிருள்ளவை நுண்ணுயிரிகள், தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள். எழுதுமை, தாள், எழுதுபவன் எதனால் ஆக்கப்பட்டுள்ளார்கள்? அணுக்களால். அணுக்கூட்டத்தால். அப்படியெனில் உயிருள்ளனவையும், உயிரற்றவையும் ஒன்றாகுமா? உயிருள்ளவற்றைப் பற்றிய புரிதல்கள், தெளிதல்கள், விளக்கங்கள், கொள்கைகள், உயிரற்றவற்றிடம் செல்லுபடியாகுமா? உயிர் புரியாத புதிரா? புரிந்து கொள்ளவே முடியாததா?

பரந்து விரிந்த இப்பேரண்டம் அணுக்களால் ஆனது என்பதும் அணுக்கள் என்பவை மேலும் பிளவுபட இயலாதவை எனும் கோட்பாடும் மிகப் பழமையானவை. உலகையும், பொருட்களையும் அணுக்களின் கூட்டமாக பல நாகரிகங்கள் சிந்தித்திருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான், அணுக்கள், அணுத்துகள்களால் ஆக்கப்பட்டுள்ளன என்ற அறிவியல் உண்மை கண்டறியப்படுகிறது.

ஜான் டால்டன் (1766-1844) அவர்களின் அரிய ஆராய்ச்சி முடிவுகளால் பிறந்ததே அணுயுகம் என்றால் மிகையாகாது. 1808-ல் அணுவை கண்டுபிடித்த இம்மேதை, அறிவியலில் ஒரு புதிய அத்தியாயம் பிறக்கக் காரணமாகிறார். அகிலத்தின் அனைத்துப் பொருட்களும் மிக நுண்ணிய துகள்களாகிய அணுக்களால் ஆனவை என்பது அணுக்கொள்கை.

டால்டனுக்கு வெகு காலத்திற்கு முன்பே அணுக்கொள்கையை உருவாக்கிய மேதை என கிரேக்கத்தின் லூசிபஸ் கொண்டாடப்படுகிறார். பொது ஆண்டிற்கு முன்

ஆறாம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கூறப்படும் காலத்தில் வாழ்ந்த இவரது கூற்றின் படி, இப்பேரண்டம் அணுக்களாலும் வெற்றிடத்தாலும் ஆக்கப்பட்டுள்ளது. இவற்றின் கூட்டால் பொருட்கள் உண்டாகின்றன. அணுவை அழிக்க இயலாது. அணுவைப் பார்க்கவும் இயலாது.

பொருளைக் கட்டமைக்கும் அணுவை ஆட்டம் என்ற அழகிய பெயரால் அழைத்தவர் எபிகுரஸ். இவரது சிந்தனை மரபு எபிகுரேனிசம் என அழைக்கப்படுகிறது. பொ.ஆ.மு. 341-ல் கிரேக்கத்தில் பிறந்த எபிகுரஸ் பொருட்களை பிரித்துக்கொண்டே வரும் போது, மேலும் பிரிக்க முடியாமல் இருக்கும் அந்த நுண்துகளை ஆட்டம், அணு என்றார். நுண் அணுக்களைச் சேர்த்தால் அணு உண்டாகும். அணுக்களைச் சேர்த்தால் பொருள் கிடைக்கும். இவை மினிமா என எபிகுரஸால் பெயரிடப்பட்டன. இறப்பு என்பதோடு உடலும், ஆன்மாவும் முடிந்து விடுகிறது. மறு உலகைப் பற்றிய பயம் வேண்டாம். கடவுள்கள் மனிதருக்கு நன்மையும் செய்யார், தீமையும் செய்யார் என்பது இவரது நம்பிக்கை. பேரண்டம் எல்லையற்றது, முடிவில்லாதது என்பது இவரது கூற்று.

பேரண்டத்தை ஆட்சி புரிபவை எண்களே எனச் சொல்லப்படுவதுண்டு. பேரண்டத்தின் சுருக்கமே எண்கள் எனவும் கூறப்படுவதுண்டு. அறிவியலுக்கு அடிப்படை கணிதமென்பதால் இதனை அறிவியலின் தாய் எனவும், மகுடமெனவும் குறிப்பிடுவதுண்டு. அனைத்தையும் எண்களாகப் பார்த்த ஞானிகள் எத்தனையோ பேர். கணிதம் கொண்டே நவீன அறிவியல் மேலெழுந்ததென்றால் மிகையாகாது. கணித மேதை பித்தகோரஸ் கூற்றின் படி, ஓர் ஒழுங்கில் அமைத்துச் சேர்க்கப்பட்ட எண்ணின் விளக்கமே இந்த உலகம். எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் கூட எண்களை அறிவார்கள். எண்ணும் எழுத்தும் கண்ணைப் போன்றது எனச் சொன்னது எண்களின் சிறப்பைக் கருதியே. எல்லாவற்றிற்கும் ஒரு கணக்கு இருக்கிறது என்பதும் இதனால்தான்.

ஞானியர் உலகை தொகுத்தும், பகுத்தும் அறிவர். அனைத்தையும் ஒவ்வொருன்றாகக் கூட்டி, தொகுத்து, ஒட்டுமொத்தமாகப் பார்ப்பது தொகுத்தல் முறை. அனைத்தையும் பகுத்துப் பகுத்து இறுதியில் எஞ்சுவதைப் பார்ப்பது பகுத்தறியும் முறை. ஒன்று கூட்டல். மற்றொன்று கழித்தல். இயற்கையும், இறைவனும் எளிமையானவர்கள் போல. மனிதர்கள்தான் ஆயிரமாயிரம் காரணங்களையும், விளக்கங்களையும், கோட்பாடுகளையும் சொல்லி இருவரையும்

குழப்புகிறார்களோ என்னவோ. தொகுத்தல் முறையில் இயற்கையை, ஆதி இயற்கையை அறிய முடியும். பகுத்தல் முறையில் அணுவை, ஆதியை அடையலாம். நதிகள் வேறாயினும் கடல் ஒன்றே என்பது போல், வழிகள் பலவாயினும் போகும் ஊர் ஒன்றே என்பது போல், தொகுத்தலும், பகுத்தலும் ஆதிக்கு அழைத்துச் செல்லும் இரு முறைகள் போலும்.

லூசிபஸ் வாழ்ந்த காலத்தவராகவோ அவருக்கு முற்பட்டவராகவோ கருதப்படும் கணாதரிஷி இந்திய அணுக் கொள்கையான வைசேஷிகத்தின் மூலகுரு என அறியப்படுகிறார். பொருட்களை அதாவது அணுவை பதார்த்தம் என்ற பெயரில் இம்மரபு அழைக்கிறது. பதார்த்தம் என்ற சொல்லின் தத்துவ அர்த்தம் கருதுகோள் என்பது. உலகின் பல்லாயிரம் தத்துவங்களை அறிவது சுலபமல்ல. ஆறு பொதுவான தத்துவங்களை அறிவதே போதுமானது. திரவியம் அதாவது பொருள், குணம் - இயல்பு, கர்மம் - செயல், சாமான்யம் - பொதுத்தன்மை, விஷேசம் -சிறப்புத்தன்மை, சமவாயம் - இணைவுத் தன்மை என்பவையே அந்த ஆறு பதார்த்தங்கள். கணாதரின் வைசேஷிக சூத்திரங்கள் நூலின் உரையாசிரியர்கள் அபாவம் அதாவது இன்மை என்ற ஏழாவது பதார்த்தத்தையும் சேர்த்துக்கொண்டதாகத் தெரிகிறது. திரவியங்களை நிலம், நீர், தீ, வாயு, வானம், காலம், திரை, ஆத்மா, மனம் என ஒன்பதாகவும், குணங்களை வடிவம், சுவை, தொடுகை, மணம், எண்ணிக்கை, திட இருப்புத்தன்மை, பிருதக்த்வம், கலப்பு, பிரிவு, பரத்வம், அபரத்வம், அறிவு, இன்பம், துயரம், விருப்பம், வெறுப்பு, செயலூக்கம் என பதினேழு வகையாகவும் பிரித்திருக்கிறார்கள்.

நவீன அறிவியலின் தந்தை எனப் போற்றப்படும் ஆளுமைகளில் ஒருவரான டெமாகிரிட்டஸ் (460-370) அனைத்தும் அணுக்களால் ஆனதே என வாதிடுகிறார். அணுக்களுக்கு பிறப்பும் முடிவும் இல்லையென்றும், அவை ஆதிபருப்பொருட்கள் என்றும் அறுதியிடுகிறார். அணுக்களுக்கிடையே வெற்றிடம் உள்ளதென்றும், அணுக்களை பிரிக்க இயலாதென்றும் வரையறுகும் டெமாகிரிட்டஸ், அணுக்கள் எப்போதும் இயக்கத்திலிருப்பவை என்பதையும் கருத்தாகக் கொண்டிருக்கிறார்.

மானுடவியல், உயிரியல், வானியல் போன்ற பல்வேறு துறைகளில் வியத்தகு ஞானம் பெற்றிருந்த இவர், பல உலகங்கள் இருப்பதை நம்பக்கூடியவராகவும் இருந்திருக்கிறார். சில உலகங்கள் வளர்ந்தும், சில உலகங்கள் அழிந்தும் வருகின்றன, ஒரே சூரியனைக் கொண்ட உலகங்கள் முதல் பல சூரியனைக்

கொண்ட உலகங்கள் வரை உள்ளன, ஒவ்வொரு உலகிற்கும் ஒரு ஆரம்பமும் முடிவும் உண்டு, ஒரு உலகமானது மற்றொரு உலகத்தினோடு ஒரு போதும் மோதாது என்னும் முடிவுகளைத் தரக்கூடியவராக வாழ்ந்திருக்கிறார்.

துளைக்க முடியாதது எனும் பொருளில் பெயரிடப்பட்ட கிரேக்கச் சொல்லை துளைத்து அதனுள் ஏழு கடல்களையும் புகுத்தமுடியும் எனக் கண்டு கொண்ட தமிழும், இறைவனை அணுவிற்கு அணுவானவன் எனப் பெருமைப்படுத்திய தமிழர்களும், அணுக்கொள்கை கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. பகுத்தறிவு கொண்டு இயற்கையை அறிய முற்பட்ட கிரேக்கர்களுக்கும், அறிவை உயிர்களை பகுத்தறிந்த தமிழர்களுக்கும் நிச்சயம் நல்ல தொடர்பு இருந்திருக்கவேண்டும் என்பது தெளிவு. கிரேக்கத் தொடர்பும், பின்னர் உண்டான ரோமப் பேரரசின் தொடர்பும் இரு வழிகளிலும் அறிவுப் பாதையில் துள்ளல் நடை போட்டிருக்க வேண்டும். ஒரேயொரு கேள்வி, ஒரேயொரு பதில், ஒரேயொரு சிந்தனை, ஒரேயொரு புத்தகம், ஒரேயொரு மனிதர் இவ்வுலகை மாற்றிவிடக் கூடுமல்லவா? அரிசிக்கும் ஒரைசாவிற்கும் உள்ள நெருக்கத்தை ரைஸ் சாப்பிடும் தமிழர்களுக்கு வெண்கலக் கும்பாவில் சாப்பிட்ட முன்னோர் சொல்லிச் சென்றுள்ளனர். நம்பாதவர் இலியட்டையும், இராமாயணத்தையும் வாசித்துப் பார்க்கலாம். இராமரையும், கோமரையும் பாராட்டவும் செய்யலாம். அவரவர் சாதனைகளுக்காக. இங்கேயும், அங்கேயும் இடிக்கடவுள் சிறப்பானவர். கிழக்கு மேற்கு என்றில்லாமல் தெற்கும் வடக்கும் கூட இந்த மின்னல் தலைவனை கொண்டாடி வந்திருக்கிறது.

மின் வேதியியலில் பெரும்புகழ் பெற்ற மைக்கேல் ∴பாரடே (1791-1867) பிறந்த போது, இளைஞராக இருந்த டால்டன் அறிவியல் ஆர்வம் மிக்கவராக இருந்திருக்கிறார். இவர் பிறப்பதற்கு ஒரு ஆண்டிற்கு முன் தான் உலகை இணைத்த நீராவி இயந்திரத்தை ஜேம்ஸ் வாட் உருவாக்கியிருக்கிறார். 1769களில் வாகனங்கள் வீதிக்கு வந்துவிட்டதாகத் தெரிகிறது. 1792-ல் தந்தி முறை கண்டறியப்படுகிறது. 1796-ல் கண்டுபிடிக்கப்பட்ட மயக்க மருந்தும், 1798-ல் எட்வர்ட் ஜென்னரால் உருவாக்கப்பட்ட நோய்த் தடுப்பூசியும் மருத்துவத்துறையின் மகத்தான சாதனைகள். 1709-ல் வடிவமைக்கப்பட்ட வெப்பமானியின் பயன்கள் பல. 1778-ல் கண்டறியப்பட்ட ஆக்ஸிஜன், 1783-ல் உருவாக்கப்பட்ட வெப்பக் காற்று பலூன் பிரான்சின் அறிவியல் சாதனைகள்.

வேதியலின் முன்னோடிகள் ரசவாதிகள் என்றால் மிகையாகாது. மதிப்புக் குறைந்த உலோகங்களை தங்கமாக மாற்றும் ஈராயிரமாண்டு முயற்சிகள் இன்னும் நடந்தேறவில்லை. ஏமாற்றுபவர்களும் ஏமாந்துபோகிறவர்களும் இன்றும் தொடர்கதை. தமிழர்களுக்கு தங்கத்தின் மீது அப்படி என்ன ஈர்ப்போ தெரியவில்லை. செப்புக் கலசங்களை தங்கமாக மாற்ற முடியுமா என கோவில், கோவிலாக நோட்டமிட்டுத் திரிகிறார்கள். சித்தர்களின் ரசவாதத்தைப் பற்றி ஏராளமான கதைகள் உண்டு. வைதீகத்திற்கெதிராக, மக்களின் மூடநம்பிக்கை களுக்கெதிராக, எவ்வளவோ பேசிய சித்தர்களின் போராட்ட வாழ்க்கை மூலிகைச் சாறெடுத்து ஊற்றினால் தங்கம் கிடைக்கும் எனும் அளவிற்குச் சுருங்கி விட்டது. பிற்கால சோழர்கள் ஆட்சிக் காலத்திய வைதிகத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்த இந்த சித்தர்கள் இறவாத்தன்மை கொடுக்கம் மூலிகைகளைப் பற்றி அறிந்திருந்தார்கள் எனவும், நோய்களைப் போக்கும் அதி உன்னத மூலிகைச் சாறுகளையும், நீரோடைகளையும் தெரிந்து வைத்திருந்ததாகவும் பேசப்படுவதுண்டு. உலகமெங்கும் சித்தர்கள் கதைகள் உண்டென்பதும் கவனிக்கத்தக்கது.

பூமிக்கும் வேதியியலுக்கும் உள்ள தொடர்பு என்ன? பூமியும் ஒரு வேதிப்பொருள்தானே. வேதியப் பொருட்களின் கலவைதானே பூமி. விண்மீன்? அதுவும் வேதியல் பொருள். வேதியல் பொருட்களின் உற்பத்தித் தொழிற்சாலையும் கூட. பூமியில் மனிதர்கள் பிறப்பது போல் கார்பனும் இரும்பும் முக்கியமாக தங்கமும் விண்மீனுள்ளேயே உருவாகிறதென அறிவியல் எடுத்துரைக்கிறது. வேதியல் எரிபொருள்கள் தீர்ந்ததும், பூதம் போல் பெருகி, சிவப்பாக மாறி, பட்டென வெடித்து, தன்னுள்ளே உற்பத்தி செய்த வேதியல் பொருட்களை விண்வெளியில் கொட்டி, விண்வெளி வேதியப் பொருட்கள் உருகி, இறுகி, பாறையாகி, திரண்டு, உருண்டு பூமி போன்ற கோளங்களாக மாறுகிறதாம். புத்திசாலிகளான மனிதர்கள் பாறைகளிலிருந்து தனிமங்களைப் பிரித்தெடுத்து, வீடு கட்ட இரும்பாகவும், தங்க அணியாகவும் பயன்படுத்துகிறார்கள்.

சமீபகால விஞ்ஞானிகளுக்கே தெரிந்த, தங்கம் எங்கிருந்து பூமிக்கு வந்தது என்ற இந்த உண்மை, தமிழர்களுக்கு எப்படித் தெரிந்திருக்கும் என்பது மிகவும் வியப்பானது. தங்கத்தின் அரிதினும் அரிதான இந்த பிறப்பைக் கொண்டாடத்தான், தங்கமாக உடலை மாற்றியும், தங்கமாக வாங்கிக் குவித்தும், தங்கத்தில்

முதலீடுகள் செய்தும், தங்கத் தோசைகள் சாப்பிட்டும், தமிழர்கள் மகிழ்கிறார்கள் போலும். எல்லாத் தமிழர்களும் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் திளைப்பதாகத் தெரியவில்லை. தங்கமான இளம் பெண்கள் தங்கம் இல்லாமல் தங்க மணமகனுக்காகத் தவமிருக்கிறார்கள். தாலிக்கு மட்டும் தங்க வராகன்கள் போதும் என எந்தத் தமிழ் வரனும் தலையசைப்பதாகக் காணோம்.

பூமியும், தங்கமும் இப்படித்தான் உருவாகியதா? அறிவியல் சொல்வது அத்தனையும் உண்மைகள் தானா? இதுதான் உண்மையென அறிவியலால் அறுதியிட்டுச் சொல்ல முடியுமா? அறிவியல் உண்மையைச் சொல்கிறதா அல்லது உண்மையாக இருக்கலாம் எனும் சாத்தியக் கூற்றை எடுத்துரைக்கிறதா? முற்றான உண்மை, முழு உண்மை, முடிவான உண்மை, உண்மையான உண்மை என ஏதேனும் இருக்க முடியுமா?

ஜான் டால்டன், லவாய்சியர், ஆன்டனி மேரி போன்ற அறிஞர்கள் வேதியலில் முன்னோடிகளாகக் கருதப்படுகிறார்கள். அணுக்களின் சேர்க்கையான தனிமங்களை கண்டறிந்ததிலும், அவற்றை வரிசைப்படுத்தியதிலும் பல அறிஞர்கள் பாடுபட்டிருந்தாலும், தனிம வரிசை அட்டவணையை நவீனமாக்கியும், எளிமையாக்கியும், ஆவர்த்தன தனிம வரிசை அட்டவணையைக் கட்டமைத்தவருமான ரஷ்யாவின் டிமிட்ரி இவனோவச் மெண்டலீப் (1834-1907) பெருமைக்குரியவராகிறார். கியூரி தம்பதியரின் பங்களிப்பும் சிறப்பானது.

1808-ல் அறிமுகப்படுத்தப்பட்ட அணுக்கொள்கை படி, எல்லா பொருட்களும் மிக நுண்மை துகள்களாகிய அணுக்களால் ஆனவை. அணுக்கள், அமைப்புகள் அற்ற, கடின, ஊடுருவாத துகள் பண்புடைய பிரிக்க முடியாத பொருட்களாகும். இம்முடிவு அன்றைய சோதனைகள் மூலம் பெறப்பட்ட முடிவுகளே. பின்னர் வந்த ஆராய்ச்சி முடிவுகளின் படி, ஓர் அணு மிகச் சிறிய துகள்களாகிய எலக்ட்ரான்கள், புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களால் ஆக்கப்பட்டுள்ளன என்பது நிருபிக்கப்பட்டது. அணுவின் உட்கருவிலுள்ள நேர்மின்னூட்டத் துகளே புரோட்டானாகும். உட்கருவில் நடுநிலைத் தன்மையுள்ள நியூட்ரானும் இடம் பெற்றுள்ளது. உட்கருவைச் சுற்றிவரும் எதிர் மின்னோட்டமுடைய துகள் எலக்ட்ரான் ஆகும்.

காற்றில் ஏன் மின்சாரம் பாய்வதில்லை? காற்று மற்றும் இதர வாயுக்களில் அதாவது வளிமங்களில் கட்டற்ற மின்னூட்டங்கள் கொண்ட துகள்கள் இல்லை. எனவே காற்று மற்றும் இதர வாயுக்கள் அரிதிற் கடத்திகளாக இருக்கின்றன. வாயுவில் மின்னூட்டம் கொண்ட துகள்கள் உருவாக்கப்பட்டால் மின்னோட்டத்தினை தன் வழியே அனுமதிக்கும். இத்தகைய ஆய்விற்குப் பயன்படும் எளியதொரு அமைப்பு மின்னிறக்கக் குழாய். 56 செ.மீ நிளமும் 4.0 செ.மீ விட்டமும் கொண்ட வாயு நிரப்பப்பட்ட, மூடப்பட்ட, தடித்த, கண்ணாடிக் குழாயான இந்த அமைப்பு, தாம்சன் எலக்ட்ரான்களையும், ராண்ட்ஜன் எக்ஸ் கதிர்களையும், கோல்ஸ்டீன் புரோட்டான்களையும் கண்டுபிடிக்கக் காரணமாக இருந்திருக்கிறது.

மின் இறக்கக் குழாயில் உண்டாக்கப்படும் அழுத்த வேறுபாடு காரணமாக ஆனோடு மற்றும் கேத்தோடு இடையே நிறமாற்றம் நிகழ்ந்து மின்னூட்டம் உண்டாகிறது. ஆனோடுவிலிருந்து உருவாகும் ஒளிக்கற்றை நேர்மின் கதிர்கள். இவை புரோட்டான்கள். கேதோடுவிலிருந்து உருவாகும் ஒளிக்கதிர்கள் எதிர்மின்னூட்டக் கதிர்கள். இவையே எலக்ட்ரான்கள். நேர்மின்னூட்ட, எதிர்மின்னூட்டக் கதிர்கள் குறிப்பிட்ட பண்புகளைப் பெற்றவை. முக்கியமாக இவை நேர்கோட்டில் பயணிக்கும்.

வாயுக்களின் வழியே மின் போக்கு என்ற சோதனையிலிருந்து, அணுவானது நேர் மற்றும் எதிர் மின்னூட்டங்களைக் கொண்டது எனக் கண்டறியப்பட்டது. ஜே. ஜே தாம்சன் (1856-1940) நேர் மற்றும் எதிர்மின்னூட்டங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதை வைத்து ஒரு அணுமாதிரியை உருவாக்கினார். இதன்படி, நேர் மின்னூட்டக் கோளத்தில் எதிர் மின்னூட்ட எலக்ட்ரான்கள் பொதிக்கப்பட்டுள்ளன. நேர், எதிர் மின்னூட்டங்கள் சமமாக இருப்பதால் அணு மின்நடுநிலையோடு இருக்கும். தாம்சனின் அணு மாதிரியில் குறைகள் இருந்தன. ஆல்பா துகள்கள் அதிக கோணத்தில் சிதறடிக்கப்படுவதற்கான விளக்கம் இல்லை. எதிர் மின்னூட்டத் துகள்களான எலட்ரான்களைக் கண்டுபிடித்ததற்காக தாம்சனுக்கு 1906-ம் ஆண்டின் நோபல் பரிசு கிடைத்தது. ஐசோடோப்புகளைக் கண்டறிந்தவரும் தாம்சனே. சிறந்த அறிஞராக மட்டுமல்லாது அறிவிற் சிறந்த பல ஆராய்ச்சியாளர்களை உருவாக்கியதிலும் தாம்சன் அவர்கள் முன் நிற்கிறார். ஆசிரியர்களின் மதிப்பை அவர்களது மாணவர்கள் வழி அறியலாம்தானே.

ஜெர்மானியரான ராண்ட்ஜன் X கதிருக்காக 1901 ஆம் ஆண்டின் நோபல் பரிசை வென்றிருக்கிறார். ஆல்பிரைட் நோபல் (1833-1896) டைனமைட் வெடிபொருளை கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால்? உலகின் போர்க்களங்கள் இவ்வளவு கொடூரங்களைச் சந்தித்திருக்காது. மனித குலம் கண்டுபிடித்த மிக மோசமானதொரு கருவி துப்பாக்கியே எனலாம்.

உலகின் சிறந்த சண்டையான மல்யுத்தத்தில் மட்டுமே உடல் பலம் வெளிப்படுகிறது. மற்ற அனைத்து முறைகளிலும் கருவிகளும், தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படுவதால் அவற்றில் வீரமும் வெளிப்படுவதில்லை, ஆண்மையும் தெரிவதில்லை. பண்டைய தமிழர்களைப் பாராட்டலாம். மல்லன் என்றும் மாமல்லன் என்றும் பெயர் வாங்கியிருக்கிறார்களே.

உடல் பலத்தில் நம்பிக்கையற்றவர் கல்லைத் தூக்கியிருப்பார். பின் கம்புச் சண்டை நடந்திருக்கும். சிலம்பாட்டம் அருமையான தற்காப்பும் உடல் வலிமையும் தரக்கூடியது. கல்லெறிந்த சண்டை, ஈட்டி எறிதலாகி, அம்பாக வளர்ச்சி பெற்று, துப்பாக்கியாக மாறி, ஏவுகணையாக நிற்பதில் எந்த ஒரு பெருமையும் இல்லை. அனைத்திலும் தேவைப்படுவது துல்லியமே. இது எவ்விதத்திலும் வீரமாகாது. சட்டென சண்டை போடுவது மாறி இன்று சண்டை போடுவதற்கே அதிக திட்டமிடலும் பணமும் தேவைப்படுகிறது. வலிக்குதா, ஏதோ கோபத்துல அடிச்சிட்டோம், மனசுல ஒண்ணும் வச்சுக்காத, பொறுத்துக்கோ என பட்டென தோளைத் தொட்டு சமாதானமும் பேச முடியாது. இன்று போய் நாளை வாயா.. ஒரு போதும் இயலாது. எதிரி அசந்திருக்கும் போது ஒரே அடி. என்னே வீரம்?

எறியப்பட்ட கல்லும், புறப்பட்ட அம்பும், வெடித்துக் கிளம்பிய ரவையும், வீசப்பட்ட குண்டும், ஏவப்பட்ட ஏவுகணையும் எதிரி யார் என்று பார்க்குமா? ஏவப்பட்ட நோக்கத்தை மறக்குமா? வாள் சண்டையில் கூட கடைசி நேர கைவிடுதல் சாத்தியமே. ஓங்கிய வாள், உயர்த்திய வாள், ஒரு வேளை கருணையும் காட்டக் கூடும். முகம் பார்த்து பாய்ச்சுவதால் ஒரு சிலரை பார்க்கும் போது பிழைத்துப் போகட்டும் என்றும் விட்டு விடக்கூடுமல்லவா. உடை வாளும், உருவிய வாளும், காதலில், காதலால் கரைந்து போன கதைகள் ஏராளமுண்டு.

எழுது தாள் போன்ற சிறப்பான கண்டுபிடிப்புகளுக்குப் பெயர் பெற்ற சீனாவே வெடி உப்புயையும் முதலில் அறிந்திருக்கிறது. தாளைத் தயாரித்து உலகினரின்

அறிவைப் பாதுகாத்த சீனர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அறிவின் திறவுகோள்களல்லவா புத்தகங்கள். ஞானத்தின் பொக்கிஷங்களல்லவா புத்தகங்கள். சிந்தனைகளின் இருப்பிடமல்லவா நூலகங்கள்.

ஆசியாவையும், ஐரோப்பாவையும் இணைக்கும் விதமாக ஆறாயிரம் கிலோ மீட்டர்கள் நீண்டிருந்த சீனாவின் பட்டுப்பாதை வழியாக பருத்தியும், பட்டும் மட்டும் பயணமாகவில்லை. மக்களின் அன்பும், அறிவும், நாடுகளின் பண்பாடும். கலாச்சாரமும் சங்கமித்தன என்றால் மிகையாகாது. அன்று சீனாவின் பொருட்களுக்கு ஐரோப்பிய சந்தையில் அமோக வரவேற்பு கிடைத்திருக்கிறது. கூடவே இந்தியப் பொருட்களுக்கும் நல்ல ஆதரவு கிட்டியிருக்கிறது. ஐரோப்பிய அறிவு மேட்டிமைக்கு அரேபியாவின் பொற்காலமும் அருங்கொடை ஆற்றியிருக்கிறது. பாக்தாத் எத்தனை புகழ் பெற்ற நகரம். எப்படியிருந்த பாக்தாத்..

ஒன்பதாம் நூற்றாண்டின் தாங் அரசாட்சிக் காலத்தில் வெடிஉப்பு கண்டுபிடிக்கப்படுகிறது. இது வெடிபொருளாக 1346-ல் இங்கிலாந்தில் பயன்படுத்தப்பட்டதாக சான்றுகள் கூறுகின்றன. கைத்துப்பாக்கி 1380-ல் முளைத்து விட்டது. தொடர்ந்து பீரங்கிகள் பெருகுகின்றன. வெடிமருந்தும், துப்பாக்கியும், பீரங்கியும், போர் பேரழிவுகளும் பெருக்கமடைகின்றன. தமிழ்நாட்டில் 1612-ம் ஆண்டுவாக்கில் வெடிமருந்து வியாபாரம் களைகட்டுகிறது.

பழவேற்காடு ஏரியில் ஐரோப்பியர்கள் போட்டி போட்டு வெடிமருந்து விற்றிருக்கிறார்கள் எனில் உலகெங்கும் எப்படியெல்லாம் விற்றிருப்பார்கள்? அதிக லாபம் ஈட்டும் தொழிலாக வெடிபொருள் வணிகம் மாறிப்போனது. ஐரோப்பிய நிலமெங்கும் வெடிமருந்து கம்பெனிகள். கம்பெனிகள் முழுவீச்சாக விளம்பரப்படுத்தப்படுகின்றன. சலுகைகளும் இறைக்கப்படுகின்றன. நோபலின் வெடிமருந்து கம்பெனிக்கு அமோகமான வரவேற்பு கிடைக்கிறது. வியாபாரம் குடும்ப உறுப்பினர்களால் சிறப்பாக வழிநடத்தப்படுகிறது. 1867-ல் கண்டறியப்பட்ட டிஎன்டி என்ற இந்த நைட்ரோ கிளிசரின் பயங்கர ஆற்றலுடன் வெடிக்கிறது. சேதம் மிக அதிகம். செலவோ வெகு குறைவு. சுரங்கங்களிலும், பாறை தகர்ப்பிலும் இதன் பயன்பாடு உணரப்படுகிறது. அதைவிட ஆயுதங்களுக்கான தேவையே நோபல் குடும்பத்தை பெரும் செல்வந்தர்களாக மாற்றுகிறது. ஆயுத வியாபாரிகள் போட்டி போட்டு வாங்குகிறார்கள். டைனமைட்டை வாங்குவதிலும், விற்பதிலும்

பெருவணிகம் நுழைகிறது. நோபலும் வியாபாரத்தில் மிகச் சிறப்பானவராக இருக்கிறார். முக்கியமாக போலிகள் நுழையா வண்ணம் பார்த்துக் கொள்கிறார்.

நோபலின் சகோதரர் மரணமடைந்த போது பிரான்சின் நாளிதழ் ஒன்று மரணத்தின் வியாபாரி இன்று மரணமடைந்தார் எனத் தலைப்பிட்டு ஒரு கட்டுரை வெளியிடுகிறது. தம்மை இவ்வுலகம் எவ்வாறு நினைவில் வைத்திருக்கும் என்பதை நினைத்து நோபல் திகைத்துவிட்டார் போலும். திருமணம் செய்யாமலும், எளிய வாழ்க்கையும் வாழும் நோபல் மனதை ஆறாத் துயரம் கவ்வுகிறது. சொத்தின் ஒரு பகுதியை வைப்புத் தொகையாய் வைத்து அதன் வட்டியிலிருந்து பெறப்படும் பெரும் பணத்தை உலகின் சிறந்த அறிவியல் சாதனைகளுக்கு வழங்க வேண்டும் என முடிவெடுக்கிறார். அதன்படியே சுவிடனால் நோபல் பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

நோபல் பரிசுக்கு முன் இங்கிலாந்தின் ராயல் பதக்கம் அதாவது மகாராணி பதக்கம் பெறுவது மிகப் பெரிய சாதனையாக இருந்திருக்கிறது. இயற்கை அறிவியலை முன்னெடுத்துச் செல்வதற்காக, மிகச் சிறப்பான பங்களிப்பைச் செய்வதற்காக, ராயல் சொசைட்டி, அறிவியல் அகாடமி 1660-ல் லண்டனில் தொடங்கப்படுகிறது. இதில் உறுப்பினராவது உயர்வானதாக கருதப்படுகிறது. உலக அறிவியலை வழிநடத்திச் சென்றதில் இந்த அமைப்பிற்கும் பெரும் பங்குள்ளது என்றால் மிகையாகாது.

1826-ல் நான்காம் ஜார்ஜ் மன்னரால் பொது நல நாடுகளை உள்ளடக்கி, அளிக்கப்பட்ட முதல் மகாராணி பதக்கத்தைப் பெற்றவர் ஜான் டால்டன். 1835-ல் மைக்கேல் பாரடேவுக்கும், 1853-ல் சார்லஸ் டார்வினுக்கும் இவ்விருது கொடுக்கப்பட்டிருக்கிறது.

அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்களின் முதன்மை நோக்கம் உண்மைகளைக் கண்டறிவதே. ஐரோப்பா அனைத்து நவீன கண்டுபிடிப்புகளிலும் அறிவியல் சாதனைகளிலும் முன்நிற்பதற்குக் காரணம், அது உருவாக்கிய, கட்டமைத்த கல்விக் கூடங்களே எனில் சரியே. ஐரோப்பாவின் கல்வியறிவை வளர்த்ததில் கிறித்துவ அமைப்பிற்குப் பெரும் பங்குண்டு. ஆரம்ப கால கல்விக் கூடங்களை அமைத்ததும், அர்ப்பணிப்போடு கல்வி புகட்டியதும் இவர்களே. இங்கிலாந்தின் அறிவை உயர்த்திப் பிடித்ததில் 1167-ல் தொடங்கப்பட்ட ஆக்ஸ்.்போர்டும், 1209-ன் கேம்ப்ட்ரிஜ் பல்கலையும் சிறப்பானது.

1150-ல் தொடங்கப்பட்டதாகப் பறை சாற்றும் பாரிஸ் பல்கலைக்கழகம் பிரான்சின் கல்விச் செல்வத்திற்கு பெரிய கொடையாக அமைந்திருக்கிறது. ஒன்றைப் பார்த்து இன்னொன்று.. ஒருவரைப் போலவே மற்றொருவர் என்ற கணக்கில் ஐரோப்பாவின் கல்வித் தரம் மளமளவென உயர்கிறது. 1400களிலேயே கிட்டத்தட்ட 30 பல்கலைகள் தோன்றிவிட்டன. பதினெட்டாம் நூற்றாண்டில் 143 பல்கலைக் கழகங்கள் ஐரோப்பாவில் இருந்ததென்றால் அது கல்வியில் சிறக்கும்தானே. ஜெர்மனி பேரரசில் மட்டும் 34 பல்கலைகள். பிரான்சில் 25. ஸ்பெயினில் 23. பல்கலைகளே இத்தனை எனில் கல்லூரிகள் இன்னும் அதிகமிருந்திருக்கும் அல்லவா.

கல்வி நிலையங்களில் பின்தங்கியிருந்த ரஷ்யா திடீரென வேகமெடுத்தது ஆச்சர்யமளிப்பது. புகழ்பெற்ற மாஸ்கோ பல்கலைக்கழகம் 1755-ல் ஆரம்பிக்கப்பட்டதாம். செயின்ட் பீட்டர்ஸ பர்க் மாகாண பல்கலை 1724லேயே ஆரம்பிக்கப்பட்டதாகவும் தகவல் சொல்கிறது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற ஹார்வேர்டு பல்கலை 1636லும், யேல் 1701, கொலம்பியா 1754, பென்சில்வேனியா 1755 களிலும் உருவாகின்றன. பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் ஆரம்பத்தில் பள்ளிகளாகத் துவங்கப்பட்டு, கல்லூரி, பல்கலை என்று படிப்படியாகவே வளர்ந்திருக்கின்றன. அமெரிக்காவின் அறிவியலை முன்னெடுத்ததில் 1780-ல் தொடங்கப்பட்ட கலை மற்றும் அறிவியலுக்கான அமெரிக்கன் அகாடமிக்கும் சிறப்பான பங்குள்ளது.

மறுமலர்ச்சிக்குப் பெயர் பெற்ற இத்தாலியிலும் கல்வி சிறந்திருக்கிறது. ரோமானியச் சட்டங்களைப் பயில்வதற்காக 1158-ல் ஆரம்பிக்கப்பட்ட பொலாக்னோ பல்கலைக்கழகமே உலகின் முதல் பல்கலையெனக் கொண்டாடப்படுகிறது. மாறாக 427-ல் ஆரம்பிக்கப்பட்ட கீழை நாடுகளின் சிறந்த பல்கலையாக இருந்த நாளந்தா 1197-ல் மூடுவிழா காண்கிறது.

பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டு காலத்தில் இந்தியாவில் சிறந்திருந்த தட்சசீலா பல்கலையும், கிரேக்கத்திலிருந்த ஏதென்ஸ் பல்கலையும் புகழ் மிக்கவையாக இருந்திருக்கும். கிரேக்கத்தின் கல்விச் சிறப்பு உலகினரை வியக்க வைப்பது. காரணம் பிளாடோனிக் அகாடமிகள். பொ.ஆ.மு. 200களில்

ஏற்படுத்தப்பட்ட அலெக்ஸான்ரியாவின் நூலகம் கிரேக்கக் கல்விக்கு மிகச்சிறந்த சான்று.

ஐரோப்பியர்களின் கல்விக்கு கத்தோலிக்கப் பள்ளிகள் காரணமெனில், இஸ்லாமியர்களுக்கு மதராஸாக்கள் எனப்படும் கல்வி அமைப்புகள் காரணமாகின்றன. மதராஸாக்களின் முக்கிய நோக்கம் மதரீதியிலான கல்வி என்பதாகவே இருந்திருக்கிறது. மேற்குலகைப் போல் கல்வியை முழு வீச்சாக அரபுலகம் முன்னெடுக்கவில்லை.

திண்ணைப் பள்ளிகளாக இருந்த இந்தியக் கல்வியை மாற்றியது ஆங்கிலேயர்களே. சென்னையில் மாநிலக் கல்லூரி எனப்படும் பிரசிடென்சி கல்லூரி 1840-ல் துவக்கப்படுகிறது. 1842-ல் பச்சையப்பா. 1837 லேயே ஆரம்பிக்கப்பட்டதாக சென்னை கிறித்துவக் கல்லூரி சொல்கிறது. பெண்கள் கிறித்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது 1915-ல். 1857-ல் மெட்ராஸ் பல்கலை. மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1835. ஸ்டான்லி 1938.

தமிழகத்தில், கிறித்துவ மிசினரிகளின் கல்விப்பணி போற்றுதலுக்குரியது. 1846-ல் நாகப்பட்டினத்தில் தோற்றுவிக்கப்பட்ட செயின்ட ஜோசப் கல்லூரி, தென்னிந்தியாவிலேயே மிகப் பழமையான கல்லூரியாகக் கருதப்படுகிறது. முதலில் பள்ளியாகத் துவங்கப்பட்டு பின்னர் கல்லூரியாக வளர்கிறது. 1883-ல் இக்கல்லூரி திருச்சிக்கு மாற்றப்படுகிறது. திருச்சிராப்பள்ளியின் நேசனல் கல்லூரி 1919-ல் தோன்றியது.

கல்விக் கூடங்களிலும் அரசு அலுவலகங்களிலும் நாகர்கோவில், நெல்லைக் காரர்கள் நிறைந்திருப்பதற்குக் காரணம் 1848-ல் நெல்லையில் தோன்றிய புனிதர் ஜான் கல்லூரியும், 1923-ல் உருவான புனிதர் சேவியர் கல்லூரியுமென்றால் மிகையாகாது. மதுரை அமெரிக்கன் கல்லூரி தன்னை தமிழ்நாட்டின் இரண்டாவது பழமையான கல்லூரி என அறிவிப்பதற்குக் காரணம் அது 1881-ல் தொடங்கப்பட்டதே. மதுரா கல்லூரி 1889 -ல் தொடங்கப்பட்டிருக்கிறது.

146-வது ஆண்டு கல்விப் பணியில் வீறுநடை போடும் கோயம்புத்தூர் அரசு கல்லூரியில் 1868-ல் முதன்மை கலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. 1852 ஆண்டின் மாவட்ட ஆட்சியர் திரு.தாமஸ் அவர்களால் ஆங்கிலோ வெர்னாகுலர் பள்ளியாக துவக்கப்பட்டது. 1861-ல் நடுநிலைப்பள்ளி, 1867-ல் உயர்நிலைப்பள்ளி. 1870-ல்

இக்கல்லூரியின் முதல் பட்டதாரியாக திரு. ஆர். கிருஷ்ணஜயார் பட்டம் பெறுகிறார். 1914-ல் திரு.கே.எஸ்.வைத்தியநாத ஜயர் முதல்வராகப் பொறுப்பேற்கிறார். அதுவரை முதல்வராக இருந்தவர்கள் எல்லோரும் ஆங்கிலேயர்கள். 1919-ல் தனியாரிடமிருந்து அரசின் கைகளுக்கு வருகிறது. 1932-ல் முதல் மாணவி சேர்க்கப்படுகிறார். 1946-ல் முதல்நிலைக் கல்லூரியாகத் தரம் உயர்கிறது. விலங்கியல் துறை துவக்கப்பட்ட ஆண்டு 1950.

1908-ல் நோபல் வென்ற எர்னஸ்ட் ரூதா.ர்போர்டு (1871-1937) தமது அணுமாதிரியை ஆல்பா துகள்கள் சிதறும் சோதனையை மையமாகக் கொண்டு 1911 ஆம் ஆண்டில் உருவாக்கினார். அணுவின் நேர்மின்னூட்டம் ஒரு குறிப்பிட்ட சிறிய பருமனில் செறிவுற்றிருப்பதால், அச்சிறிய பகுதிக்கு உட்கரு எனப் பெயரிட்டார். அணுவோடு ஒப்பிடும் போது உட்கரு மிகச் சிறியதாக இருக்கிறது. உதாரணமாக உட்கரு ஒரு மட்டைப்பந்து அளவு என்றால் அணுவின் ஆரம் ஏறத்தாழ ஐந்து கிலோ மீட்டர்களாக இருக்கும். அணுவின் மையமாக நேர்மின்னூட்டமுடைய உட்கரு இருக்கிறது. உட்கருவோடு புரோட்டான்களின் நிறை போலவே நிறை பெற்றுள்ள நடுநிலைத் துகள்களும் காணப்படுகின்றன. இவைகளின் நிறையே ஓர் அணுவின் நிறையாகும். உட்கருவை சுற்றி பல்வேறு வட்டப்பாதைகளில் எலக்ட்ரான்கள் சுற்றி வருகின்றன. இவை வளையங்கள், ஆர்பிட்கள் ஆகும். ரூதர் போர்டின் அணு மாதிரி, சூரியனைச் சுற்றிவரும் கோள்களை ஒத்திருப்பதாகக் கருதலாம். சூரியன் உட்கரு. கோள்கள் எலக்ட்ரான்கள்.

ரூதர் போர்டின் அணு மாதிரியில் எலக்ட்ரான்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அறிந்துகொள்ள இயலவில்லை. 1921-ல் ஜே.சி.மேக்ஸ்வெல் கண்டறிந்த மின் காந்த அலைக் கொள்கையின் படி, அதிவேகமாகச் சுழலும் எலக்ட்ரான்கள், கதிரியக்கத்தை வெளித்தள்ளி, ஆற்றலை இழந்து, வளையம் சுருங்கி, உட்கருவில் விழும். இது அணுவின் நிலைப்புத் தன்மையை கேள்விக்குள்ளாக்கியது. போர் அணுமாதிரி இதற்கு விடையளித்தது.

நீல்ஸ் போர் (1885-1962) குவாண்டம் கொள்கைகளைச் சார்ந்து தமது அணு மாதிரியை 1913-ம் ஆண்டில் வடிவமைக்கிறார். குவாண்டம் கொள்கையில் சிறந்த பங்களிப்பு செய்தவர்கள் மேக்ஸ் பிளாங் மற்றும் ஐன்ஸ்டின். மாக்ஸ் பிளாங் 1901 ஆம் ஆண்டில் கதிர்வீச்சு பற்றிய குவாண்டம் முடிவுகளை வெளியிடுகிறார். 1905-ம்

ஆண்டில் பிரௌணியன் இயக்கம் பற்றிய விதிகளை ஐன்ஸ்டின் நிருவுகிறார். 1827-ல் தாவரவியல் அறிஞர் ராபர்ட் பிரௌண் (1773-1858) விளக்கிய துகள்களின் இயக்கம் குறித்தான புரிதலே பின்னர் வந்த துகள் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தது. தண்ணீரில் விடப்பட்ட மகரந்தத் துகள்களை நுண்ணோக்கியில் காணும் போது அவை இடம்பெயர்கின்றன என்பதை அறிந்தார். ஆனால் எவ்வாறு என்பதை அறியவில்லை. நீர் மூலக்கூறுகளாலேயே மகரந்தத் துகள்கள் நகர்த்தப்படுகின்றன என்பதை 1905-ல் ஐன்ஸ்டீன் விளக்கி கட்டுரை வெளியிட்டார். மேக்ஸ் பிளாங்க் 1918 லும், ஐன்ஸ்டின் சார்பியல் கொள்கைக்காக 1921லும் நோபல் பெறுகிறார்கள்.

அணு எண் அணு நிறையை விட முக்கியமானது எனும் கருத்தை 1913-ல் ஹென்றி மோல்ஸ் வெளியிடுகிறார். தனிமங்களின் இயற்பியல், வேதியியல் பண்புகளுக்கு அவைகளின் அணு எண்களே அடிப்படையாக உள்ளன என்பதும் மோல்ஸ் அவர்களின் சிறந்த பங்களிப்பு.

நீல்ஸ்போருக்கு 1922-ல் நோபல் பரிசு கிடைக்கிறது. எலக்ட்ரான்கள் குறிப்பிட்ட வளையப் பாதைகளில் மட்டுமே அதாவது வட்டப்பாதைகளில் மட்டுமே உட்கருவைச் சுற்றிவருகின்றன. இவ்வளையப் பாதைகள் ஆற்றல்களைப் பெற்றுள்ளதால் இவை ஆற்றல் கூடுகள், ஆற்றல் மட்டங்கள், குவாண்டம் மட்டங்கள் என அழைக்கப்படுகின்றன. இம்மட்டங்கள் 1,2,3,4.. என்றோ K.L.M.N.. என்றோ குறிப்பிடப்படகின்றன. எலக்ட்ரான் குறிப்பிட்ட ஆர்ப்பிட்டில் இருக்கும் போது ஆற்றலை இழக்கவோ, ஏற்கவோ செய்யாது. எலக்ட்ரான் ஒரு நிலையான நிறையிலிருந்து மற்றொன்றிற்கு மாறினால் குறிப்பிட்ட அதிர்வெண் உடைய கதிர்வீச்சை உறிஞ்சும் அல்லது வெளித் தள்ளும்.

அறிவியல் விளக்கங்கள், கோட்பாடுகள், விதிகளை தகுந்த ஆதாரங்களோடு நிரூபிக்க வேண்டியதிருக்கும். போர் அணு மாதிரியும் அனைத்தையும் விளக்கப் போதுமானதாக இல்லை. நிறமாலை, நிறநிரல், மின்காந்தம், கதிர்வீச்சு போன்றவற்றின் ஆராய்ச்சி முடிவுகளைக் கொண்டே அணுக்கொள்கை வளர்ந்து வருவதால், அனைத்து கோட்பாடுகளையும் விதிகளையும் கருத்தில் கொண்டே ஆராய்ச்சியாளர்களும் அறிஞர்களும் அவரவர் கண்டறிந்தவற்றை முடிவுகளாக வெளியிடுகிறார்கள். ரூதர் போர்டின் குறைகளைக் களைய உருவாக்கப்பட்ட நீல்ஸ் போர் அணுமாதிரியும் குறைகளைக் கொண்டிருந்தது.

எலக்ட்ரான் உயர் ஆற்றல் மட்டத்திலிருந்து குறைந்த ஆற்றல் மட்டத்திற்குத் தாவும் போது ஆற்றல் வேறுபாடானது குறிப்பிட்ட அலைநீளம் கொண்ட கதிர்வீச்சாக வெளிப்படும். இதுவே நிறமாலை வரி. அணுவின் தன்மையைப் பொறுத்து அலை நீளங்கள் ஒரு வரிசையை ஏற்படுத்தும். போர் மாதிரி ஹைட்ரஜன் அணுவின் நிறமாலை வரிகளை விளக்கியது. ஆனால் ஹைட்ரஜன் அணுவை விட சிக்கலான அணுக்களின் நிறமாலை வரிகளை விளக்கப் போதுமானதாக இல்லை. அணுவின் மீது மின்புலம் அல்லது மின்காந்தப் புலத்தினைச் செலுத்தும் போது, நிறமாலை வரிகள் பல வரிகளாகப் பிரியும். மின் புலத்தின் விளைவு ஸ்டார்க் விளைவு என்றும், மின் காந்தப் புலத்தின் விளைவு சீமன் விளைவு என்றும் அழைக்கப்படுகிறது. இவ்விளைவுகளுக்கு போதிய விளக்கங்கள் போர் மாதிரியில் இல்லை.

உயர் பகுதிறன் கொண்ட நிறமாலைமானியைக் கொண்டு நிறமாலையைக் காணும்போது ஒவ்வொரு வரியும் பல வரிகளால் ஆன நுண் வரியமைப்பைப் பெற்றுள்ளது தெளிவானது. இதையும் போர் மாதிரி விளக்கவில்லை.

அணுக்களின் நிறமாலை நுண்வரிகளை விளக்க சாமர்பெல்ட் ஒரு அணுமாதிரியை வெளியிட்டார். இது சாமர்பெல்ட் அணு மாதிரி என அழைக்கப்படுகிறது. இம்மாதிரியில், நீள்வட்டப்பாதையில் செல்லும் எலக்ட்ரான் அணுக்கருவின் அருகே வரும்போது அதிக திசைவேகத்துடனும், தொலைவில் உள்ள போது குறைந்த திசைவேகத்துடனும் இருக்கும். எனவே எலக்ட்ரான் நிறையானது பாதையின் வெவ்வெறு பகுதிகளில் வெவ்வேறு மதிப்புகளைப் பெறும். சார்புக் கொள்கையின் படி திசைவேகத்தைச் சார்ந்து எலக்ட்ரான் நிறை மாறுபடும் நிறமாலை நுண்வரி அமைப்பை சாமர் பெல்ட் விளக்கினார். எனினும் நிறமாலை நுண்வரிகளில் எண்ணிக்கை கணக்கிடப்படவில்லை என்பதும், அணுவில் எலக்ட்ரான்களின் பகிர்வு மற்றும் அமைந்துள்ள விதம் பற்றி இக்கொள்கையும் விளக்கவில்லை.

ஓர் அணுவில் காணப்படும் எலக்ட்ரானை குறிப்பிடத் தேவைப்படும் குறிப்புகளே குவாண்டம் எண்கள். ஓர் அணுவில் பல எண்ணிக்கை உடைய எலக்ட்ரான் சுற்றுப்பாதைகள் இருக்கும். சுற்றுப்பாதையின் பாதைகள் குறிப்பிட்ட எண் தொகுதிகளாக அதாவது குவாண்டம் எண்களாக குறிப்பிடப்படுகின்றன. சுற்றுப்பாதையின் ஆற்றல், அளவு, வடிவம், திசை நோக்குப் பண்பு போன்றவற்றை

அறிய மூன்று குவாண்டம் எண்கள் தேவைப்படுகின்றன. இவை முறையே முதன்மை குவாண்டம் எண், துணை குவாண்டம் எண் மற்றும் காந்த குவாண்டம் எண்ணாகும். எலக்ட்ரான்களை முழுமையாக அறிய நான்காவதாக தற்சுழற்சி குவாண்டம் எண்ணும் தேவைப்படலாம்.

பௌலி ஆர்ப்பிட்டால்களில் எலக்ட்ரான்கள் எவ்வாறு நிரப்புதல் செய்கின்றன என்பதை விளக்கி வெளியிட்ட கோட்பாடுகள், பௌலியின் தவிர்ப்புத் தத்துவத்தின் அடிப்படையிலேயே அமைகிறது. இதன் பயனாக ஒரு குறிப்பிட்ட ஆற்றல் மட்டத்தில் இடம் பெறும் அதிகபட்ச எலக்டான்களின் எண்ணிக்கையைக் கண்டறியலாம்.

குவாண்டம் எந்திரவியல் உருவாகக் காரணமாக லூயிஸ் டி பிராலி துகள்களின் அலைகள் எனும் கருத்தியலை கட்டமைக்கிறார். ஒளியானது அலை போன்ற பண்பு கொண்டது என்றும், மற்றொரு வகையில் ஆற்றலும், திசைவேகமும் கொண்ட .்போட்டான் என்ற துகள் பண்பினைக் கொண்டது என்றும் சோதனைகள் மூலம் கண்டறியப்படுகிறது. எனவே ஒளியானது அலை துகள் என்ற இரட்டை பண்பைப் பெறுகிறது. பிராலி இக்கோட்பாட்டை துகள்களுக்கும் விரிவுபடுத்தி அலை இயக்கக் கோட்பாட்டை கட்டமைக்கிறார். இயற்கையானது பருப்பொருள், ஆற்றல் ஆகிய இருவகையாலானது. இரண்டிற்கும் சமச்சீரமைவு இருக்க வேண்டும். ஏனெனில் இயற்கை சமச்சீரமைவையே விரும்புகிறது. ஆற்றலுக்கு இரட்டைப் பண்பு இருந்தால் பருப்பொருளுக்கும் இரட்டைப்பண்பு இருக்க வேண்டும். ஆற்றலுக்கான ப்ளாங்கின் சமன்பாட்டையும் அதாவது அலையையும், ஐன்ஸ்டினின் சமன்பாட்டையும் அதாவது துகளையும் கொண்டு பிராலி பருப்பொருளின் அலை நீளத்தை சமப்படுத்துகிறார். எலக்ட்ரானுக்கும் டிபிராலி அலைநீளம் கண்டறியப்படுகிறது. 1929-ம் ஆண்டில் நோபல் பரிசும் பெறுகிறார்.

ஒளிமின் விளைவைக் கண்டறிந்தவர் ஹென்ரிக் ஹெர்ட்ஸ் ஆவார். சில உலோகப் பொருட்களில் மிது எக்ஸ் கதிர்கள், புற ஊதாக் கதிர்கள் மற்றும் கட்புலனாகும் ஒளிபடும் போது, அவை எலக்ட்ரான்களை உமிழும் என 1887-ல் கண்டறிகிறார். இது ஒளிமின் விளைவை விளக்க இயலவில்லை. ஆனால் மாக்ஸ் ப்ளாங்கின் மின் காந்தக் கொள்கை இதனை நன்றாக விளக்குகிறது. இதன் படி ஒளியானது தனித்தனியாக சிறு சிறு ஆற்றல் பெட்டகங்களாக உமிழப்படுகின்றன. ஒவ்வொரு பெட்டகமும் ஒரு குவாண்டம் அல்லது .்போட்டான்.

டிபிராலி அடிப்படையிலான அணுமாதிரி ஒன்றும் கூறப்பட்டுள்ளது. நீல்ஸ்போர் மாதிரியில் கூறப்பட்ட நிலைத்தன்மையுடைய பாதைகள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால் வெவ்வேறு பாதைகளில் செல்லும் எலக்ட்ரான்கள், அலைகளைப்போல இயங்கும் எனக் கருதப்படுகிறது.

1896-ல் ஹென்றி பெக்கொரல் கருப்புத் தாளினால் சுற்றி வைக்கப்பட்ட ஒளிப்படத் தகடு, யுரேனிய உப்பு உமிழும் ஊடுறுவும் திறன் மிக்க கதிர்வீச்சுகளால் பாதிப்படைந்ததைக் கண்டு கதிரியக்கம் என்ற நிகழ்வை அறிந்தார். இந்த கதிர்வீச்சுகள் வாயுக்களை அயனியாக்கும் தன்மை கொண்டவை என பிறகு ரூதர்.்போர்டு கண்டுபிடித்தார். பின் வந்த ஆண்டுகளில், மேரி கியூரி, கணவர் பியரி கியூரி இருவரும் அதிக கதிரியக்கத் தனிமங்களான ரேடியம் மற்றும் பொலானியத்தைக் கண்டறிந்தனர். தனிமங்களின் கதிர்வீச்சுக்குக் காரணம் ஆல்பா, பிட்டா, காமா என்ற மூன்று வெவ்வேறு விதமான கதிர்வீச்சுகளே. ஒவ்வொரு கதிரும் குறிப்பிட்ட பண்புகளைப் பெற்றுள்ளன. அணு எண் 82யைக் காட்டிலும் அதிகமான அணு எண் உடைய கனமான தனிமங்கள், தன்னிச்சையாக கதிர்களை வெளியிடும். இவையே கதிரியக்கத் தனிமங்கள்.

கதிரியக்கச் சிதைவின் போது, சிதைவுக்கு உட்படும் அணுக்கரு தாயணுக்கரு எனவும், சிதைவிற்குப் பின் உருவாகும் அணுக்கரு சேயணுக்கரு எனவும் கூறப்படும். 1913-ல் சாடி மற்றும் .்ப்ஜன் கதிரியக்கச் சிதைவு விதியைக் கூறினர். அனைத்து கதிரியத்தத் தனிமங்களின் ஆயுட்காலங்களும் முடிவிலியாக அமைவதால் தனிமங்களின் கதிரியக்கச் செயல்பாடுகளை வேறுபடுத்தி அறிய அரை ஆயுட்காலம், சராசரி ஆயுட்காலம் ஆகியவை பயன்படுத்தப் படுகின்றன. ஒரு கதிரியக்கத் தனிமத்தின் அரை ஆயுட்காலம் எனப்படுவது அதிலுள்ள அணுக்களில் பாதியளவு அணுக்கள் சிதைவடைய ஆகும் காலமாகும்.

வெர்னர் ஹெய்சன்பர்கின் நிலையில்லா கோட்பாட்டின் படி, ஒரு துகளின் இருப்பிடம் மற்றும் திசைவேகத்தை ஒரு சேர அறிய முடியாது. இதற்காக 1932-ன் நோபல் பரிசு இவருக்குக் கிடைத்தது.

ஜேம்ஸ் சாட்விக், பெரிலியம் தனிமத்தை ஆல்பா துகள்களை கொண்டு தாக்கிய சோதனையின் முடிவில், அணுவின் உட்கருவில் புரோட்டானின் நிறைக்குச் சமமான நிறை கொண்ட துகள்கள் அடங்கியுள்ளதைக் கண்டறிந்து அத்துகள்களை

நியூட்ரான்கள் என அழைத்தார். 1930-ம் ஆண்டே பொத்தே மற்றும் பெக்கர் என்ற ஜெர்மனி இயற்பியலாளர்கள் இச்சோதனையில் மிகுந்த ஊடுருவுத்திறன் கொண்ட கதிர்வீச்சை கண்டறிவது அவற்றை காமாக் கதிர்களாக இருக்கலாம் என்று கருதினார்கள்.

ஹைட்ரஜன் தவிர்த்து அனைத்து அணுக்களிலும் நியூட்ரான் காணப்படுகிறது. இது புரோட்டானை விட சற்றே நிறை அதிகமான நடுநிலையான துகள். மின் மற்றும் காந்தப் புலங்களால் விலக்கமடையாது. அணுவில் நிலைப்புத்தன்மை உடையது. அணுவிற்கு வெளியே புரோட்டான், எலக்ட்ரான், எதிர் நியூட்ரானாக சிதைவடையும். மின் நடுநிலைமை இருப்பதால் அணுக்களை எளிதாக ஊடுருவும்.

அணுக்கரு அடிப்படைத்துகள்களான புரோட்டான்களையும் நியூட்ரான்களையும் கொண்டுள்ளது. இவை அணுக்கருத் துகள்களாகும். புரோட்டான், எலக்ட்ரானின் மின்னூட்டத்திற்குச் சமமான நேர்மின்னூட்டத்தையும், எலக்ட்ரானின் நிறையைப் போல ஏறக்குறைய 1836 மடங்கு நிறையையும் கொண்டது. ஏறக்குறைய புரோட்டானின் நிறையைக் கொண்ட நியூட்ரான் ஒரு மின் நடுநிலைத் துகள். அணுக்கருவினுள் உள்ள அணுக்கருத் துகள்கள் அணுக்கரு விசை என்ற வலிமையான கவர்ச்சி விசையால் பிணைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள விசைகளில் அணுக்கரு விசையே வலிமையானது. இது ஈர்ப்பியல் விசையைவிட 10^{40} மடங்கு வலிமையானதாகக் கருதப்படுகிறது.

சமமான அணு எண்ணையும் வேறுபட்ட நிறை எண்ணையும் கொண்ட ஒரே தனிமத்தின் அணுக்கள் ஐசோடோப்புகள் எனப்படும். ஒரு தனிமத்தின் ஐசோடோப்புகள் சம எண்ணிக்கையுள்ள புரோட்டான்களையும் வேறுபட்ட எண்ணிக்கையுள்ள நியூட்ரான்களையும் கொண்டிருக்கும். இவைகளின் எலக்ட்ரான் அமைப்பு ஒரே மாதிரியாக இருப்பதால் ஒத்த வேதிப் பண்புகளைப் பெற்றிருக்கும்.

அணு அடிப்படை துகளன்று. அணு என்பது புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான் எனும் துணை அணு துகள்களால் உண்டானது. புரோட்டானும் அடிப்படைத் துகளன்று. இது குவார்க்குளால் ஆனது. குவார்க்குகளும் மேல்

குவார்க் கீழ் குவார்க் என அமைந்திருக்கின்றன. குவார்க்குகளை மேலும் பிரிக்க முடியாது என்பது நம்பிக்கை.

அணுக்கருவான புரோட்டான்களையும், நியூட்ரான்களையும் இணைத்திருப்பவை மீசான்கள் என்றும் இவற்றின் பரிமாற்றம் மூலமே அணுக்கருவிசை உருவாகிறது என்றும் 1935-ல் யுகாவா என்ற அறிஞர் கண்டறிந்தார்.

செயற்கையான கதிரியக்கத்தின் மூலம் கண்டறியப்பட்ட துகள் பாசிட்ரான். 1934-ல் ஐரெனி கியூரி மற்றும் ஜோலியட் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பபட்டது. இது ஓரலகு நேர் மின்னூட்டமும், எலக்ட்ரானின் நிறையும் கொண்டது. பாசிட்ரானும் எலக்ட்ரானும் எதிர்த் துகள்கள்.

காஸ்மாஸ் என அழைக்கப்படும் அண்டப் புறவெளியிலிருந்து பூமியை வந்தடையும் கதிர்கள் காஸ்மிக் கதிகள். இப்பெயர் மில்லிகன் என்பவரால் வழங்கப்பட்டது. முதன்மை காஸ்மிக் கதிர்கள் பூமிக்கு அப்பாலுள்ள வெளியிலிருந்து பூமியின் வெளிப்புற வளி மண்டலத்தில் நுழைவது. அதிக அளவு புரோட்டான்களும், குறைந்த அளவுள்ள ஹீலியமும், மற்ற கனமான அணுக்கருக்களும் இதில் அடங்கியுள்ளன. முதன்மை காஸ்மிக் கதிர்கள் பூமியின் வளிமண்டலத்தோடு வினைபுரிவதால் துணை காஸ்மிக் கதிர்கள் உண்டாகின்றன. இவை ஆல்பா துகள்கள், புரோட்டான்கள், எலக்ட்ரான்கள், பாசிட்ரான்ககள், மீசான்கள், ∴போட்டான்கள் போன்றவை.

காஸ்மிக் கதிர்களின் ஆய்வுகள் மூலமாக கண்டறியப்பட்ட அணுக்கருத் துகள்கள் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை ∴போட்டான்கள், லெப்டான்கள், மீசான்கள் மற்றும் பாரியான்கள்.

கனமான தனிமத்தின் அணுக்கரு இரு துண்டுகளாக உடைவதுடன் மிக அதிகமான ஆற்றலையும் வெளியிடும் நிகழ்வு அணுக்கருபிளவு. பிளவின் போது இரண்டு அல்லது மூன்று நியூட்ரான்களும் வெளிப்படும். இவை தொடர் வினையில் ஈடுபடக்கூடியவை.

அதிவேகமாக மோதும் துகள்கள், தாக்கும் துகள்கள் எனப்படுகின்றன. நியூட்ரான், புரோட்டான், டியூட்ரான், எலக்ட்ரான், பாசிட்ரான் போன்றவை சிறந்த தாக்கும் துகள்கள்.

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட இலேசான அணுக்கருக்கள் இணைந்து ஒரு கனமான அணுக்கருவை உருவாக்கும் நிகழ்வு அணுக்கரு இணைவு. வினையில் உருவாகும் அணுக்கருவின் நிறை அது உருவாகக் காரணமான லேசான அணுக்களின் மொத்த நிறையை விடக் குறைவாகவே இருக்கும். இந்த நிறை மாறுபாடு ஆற்றலாக மாற்றப்படுகிறது. அணுக்களின் இணைவு மிக உயர்ந்த வெப்ப நிலைகளில் மட்டுமே நடைபெறும். சூரியனில் நடைபெறுவது இத்தகைய இணைப்பே.

அணுக்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து மூலக்கூறு உருவாகிறது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அணுக்கள் பல விசைகளினால் பிணைந்துள்ளது வேதிப்பிணைப்பு எனப்படுகிறது. இவ்வாறு உண்டாகும் சேர்க்கை சேர்மம் அதற்கேயுரிய குறிப்பிட்ட பண்புகளைப் பெற்றிருக்கும். உதாரணமாக சோடியமும் குளோரினும் சேர்ந்து சோடியம் குளோரைடு என்ற உப்பாகிறது. வேதிப் பிணைப்புகள் பொதுவாக மூன்று வகைப்படும். அவை அயனிப் பிணைப்பு, சகப் பிணைப்பு மற்றும் ஈதல் சகப்பிணைப்பு.

அணுக்களின் சுற்றுப்பாதைகளான K,L,M,N,O வில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான எலக்ட்ரான்கள் இடம் பெறும். K சுற்றில் இரண்டு மடடுமே இருக்கும். L ற்கு எட்டு. M சுற்றில் 16. N சுற்று 32எலக்ட்ரானகள் கொண்டது. வெளிச் சுற்றில் நிறைவான அணுக்கள் கொண்டவை நிலைத்த அணுக்கள். அவ்வாறு இல்லாதவை நிலையற்ற அணுக்கள். இவை மற்றொரு அணுவோடு வெளிச்சுற்று எலக்ட்ரான்களை இழந்தும் ஏற்றும் தத்தமது நிலைத்தன்மையை அடையும். அணுக்கள் இணைவதை விளக்குவதற்காக 1916-ல் கோசல் மற்றும் லூயிஸ் என்ற அறிஞர்கள் தனித்தனியே கோட்பாடுகளை வெளியிட்டார்கள்.

கோசல் வெளியிட்டது அயணிப் பிணைப்பு. எலக்ட்ரான் பரிமாறப்படுவதால் உருவாகும் அயனிகளுக்கிடையே உள்ள நிலைமின் ஈர்ப்பினால் இப்பிணைப்பு உண்டாகிறது. எலக்ட்ரான்களை கொடுப்பது நேர்மின் சுமையைப் பெறுகிறது. வாங்குவது எதிர்மின் சுமையால் குறிக்கப்படுகிறது. அயனிப் பிணைப்பிற்கு சிறந்த உதாரணம் சோடியமும், குளோரினும் இணைந்து உருவாகும் சோடியம் குளோரைடு உப்பு. சோடியம் பதினோரு அணுக்களைப் பெற்றுள்ளதால் இதன் எலக்ட்ரான் மட்டம் k-2 l-8 m-1 என்பதாக அமைந்திருக்கும். குளோரின் 17

அணுக்களைக் கொண்டதென்பதால் அதன் சுற்று வட்டத்தில் k-2 l-8 m-7 என்று இருக்கும். சோடியத்தின் ஒரு எலக்ட்ரான் குளோரினுக்கு கொடுக்கப்படுவதால் சோடியம் Na^{+}என்ற அயனியாகிறது. குளோரின் ஒரு எலக்ட்ரானை ஏற்று cl^{-} என்னும் அயனியாகிறது. மெக்னீசியம் ஆக்ஸைடில் மெக்னீசியம் இரு எலக்ட்ரான்களைக் கொடுப்பதால் அது mg^{2+} எனக் குறிப்பிடப்படுகிறது.

லூயிஸ் பிணைப்பில் ஈடுபடும் அணுக்கள் எலக்ட்ரான்களைத் தங்களுக்குள் பங்கீடு செய்து, ஒவ்வொன்றும் நிலையான எட்டு எலக்ட்ரான் அமைப்பைப் பெறுகின்றன. எலக்ட்ரான்களை இரண்டு அணுக்கள் பங்கிட்டுக் கொள்வதால் எலக்ட்ரான் சுற்றுகள் மேற்பொருந்துவதால் உருவாகும் இப்பிணைப்பு சகப்பிணைப்பு என அழைக்கப்படுகிறது. இது இறுக்கமான பிணைப்பு. இதில் ஓர் அணுவிலிருந்து மற்றோர் அணுவிற்கு எலக்ட்ரான்கள் பரிமாற்றப்படாததால் அயனிகள் உருவாவதில்லை. மின் சுமையும் இல்லை. எளிய உதாரணம் ஆக்சிஜன் அணுக்களுக்கிடையே யான பிணைப்பு 0_2 (0=0)

அணுக்களுக்கிடையே பரிமாற்றமில்லாமல் ஓரிணை எலக்ட்ரான்களை ஒரு அணு கொடுக்க மற்ற அணு அதனை பெற்றுக் கெள்வது ஈதல் சகப்பிணைப்பு ஆகும்.

அணுக்களுக்கிடையேயான பிணைப்பு குறித்து முதலில் விளக்கியர் வண்டர் வால் (1873). மந்த வாயுக்களின் அணுக்களுக்கிடையே நிகழும் ஈர்ப்பு விசை குறித்து விளக்கினார். மூலக்கூறுகள் நெருங்கி அமைந்துள்ளன என்றும் கூறினார். உதாரணமாக ஹைட்ரஜன் பிணைப்பு.

பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை துகள்கள் நியூட்டன் இயக்க கொள்கை, மேக்ஸ்வெல்லின் மின்காந்தக் கொள்கை போன்றவற்றின் அடிப்படையில் இயங்குவதாகக் கருதப்பட்டது. ஆனால் 1905-ல் ஐன்ஸ்டின் துகள்களின் இயக்கம் குறித்த ஆய்வுகளும், மாக்ஸ் பிளாங்கின் கதிர்வீச்சைப் பற்றிய குவாண்டம் கொள்கைகளும் எலக்ட்ரான்களின் அலை, துகள் என்ற ஈரியல் கோட்பாடுகளும், அதுவரையிலுமிருந்த துகள் கொள்கைகளை மாற்றியமைத்தன. ஐன்ஸ்டின் தேற்றங்கள் குறித்த டி பிராக்ளேயின் ஆய்வுகளும் முக்கியமானவை. அலைத் தன்மையைப் பெற்றுள்ள ஒளியானது துகள் தன்மையைப் பெற்றிருப்பது போல் துகள்களும் அலைத் தன்மையைப் பெற்றிருப்பது டி பிராக்ளே அலைகளாகும்.

ஆர்பிட்டால்களில் எலக்ட்ரான்கள் நிரப்பப்பட்டுள்ள விதமே ஒரு மூலக்கூறின் எலக்ட்ரான் அமைப்பு எனப்படும். நூற்றி இருபது தனிமங்கள் வரை கண்டறியப்பட்டுள்ளன. அட்டவணையில் தொன்னூற்றி இரண்டு வரை உள்ள தனிமங்கள் இயற்கையில் கிடைப்பவை. எஞ்சியவை ஆய்வுக் கூடத்தில் கண்டுபிடிக்கப்பட்டவை.

ஓர் அணுவின் உட்கரு வினைகள் அதன் வேதி வினைகளிலிருந்து வேறானவை. அணுவின் வெளிக்கோளப் பாதையிலுள்ள எலக்ட்ரான்களின் இழப்பு, ஏற்பு, பங்கீடு மூலம் நிகழ்பவை வேதிவினைகள் எனப்படுகின்றன. அணுவின் உட்கருவில் நிகழும் ஆல்பா, பீட்டா, காமா கதிர்வீச்சுக்களே உட்கரு வினைகள். வேதியில் வினையில் நிறை மட்டுமே சமன் செய்யப்படும். உட்கரு வினையில் நிறையோடு ஆற்றலும் சமன் செய்யப்படும். வேதி வினையில் புதிய தனிமங்கள் உருவாகாது. ஆனால் உட்கரு வினையில் புதிய தனிமங்களும், ஐசோடோப்புகளும் உருவாகும்.

கதிரியக்க ஆய்வுகளுக்காக பிரான்ஸ் நாட்டின் ஹென்றி பெக்கோரல், பியரி கியூரி, மேரி கியூரி மூவரும் 1903ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்றனர்.

ஜீலியஸ் பிளக்கர் 1859-ல் கேதோடு கதிர்களை முதன் முதலாகக் கண்டுபிடித்தார். எலக்ட்ரான்களின் மின் சுமையை ராபர்ட் முல்லிகன் 1909-ல் நிர்ணயித்தார். பெர்மி என்பவரால் 1934-ல் எதிர் நியூட்ரினோ அறியப்பட்டது. 1950 களுக்குப் பின்னர் எதிர் புரோட்டானும், எதிர் நியூட்ரானும் கண்டுபிடிக்கப்பட்டன. 1927-ல் பாலி நியூட்ரினோவைக் கண்டுபிடித்தார். 1932-ல் நோபல் பெற்ற வெர்னர் ஹெய்சன்பெர்க்கின் நிலையில்லாக் கோட்பாட்டினை 1927 இல் வெளியிட்டு புகழ் பெற்றார்.

இன்றைய மாணவர்கள் வெகு எளிதாகப் படிக்கும், அணுவில் மூன்று அடிப்படைத் துகள்கள் அடங்கியுள்ளன எனும் இந்த ஒற்றை வாக்கியத்திற்காக எத்தனை எத்தனை அறிஞர்கள் அல்லும் பகலும் அயராது பாடுபட்டிருக்கிறார்கள்? எத்தனை ஆராய்ச்சியாளர்களின் ஈடு இணையற்ற அரும்பணி இதற்குப் பின்னால் இருக்கிறது? எவ்வளவு கடினமான திட்டமிடல்கள்.. எத்தனை பரிசோதனைகள்.. எவ்வளவு நீண்ட கால உழைப்பு.. அறிவுப் பசி கொண்ட எண்ணற்ற தியாகச்

சுடர்களாலேயே இது சாத்தியமாகியது. அத்தனை அறிஞர்களும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

அணுவைப் புரிந்து கொண்டது மனித குலம் செய்த நற்பயனே. கணிதவியல் வல்லுநர்களும், இயற்பியல் அறிஞர்களும், வேதியல் விற்பன்னர்களும் ஒன்றிணைந்து இந்த ஆகப்பெரும் சாதனையை நிகழ்த்தினார்கள் என்பது வரலாற்று உண்மை. ஏன், எப்படி என்ற கேள்விகள் இப்பேரரறிஞர்களின், பெரும் ஆராய்ச்சியாளர்களின் பகல் ஓய்வையும், இரவுத் தூக்கத்தையும், உடல் நலத்தையும், உள மகிழ்வையும், உலகியல் வாழ்வையும் பெருமளவில் பாதித்திருக்கும். அறிஞர்களின் விடாமுயற்சியே அனைத்தையும் சாதிக்கிறது.

கண்டுபிடிப்புகளின் தந்தை எனக் கொண்டாடப்படும் தாமஸ் ஆல்வா எடிசன் (1841-1931) ஒரு மின் விளக்கை கண்டுபிடிப்பதற்கு எவ்வளவு பாடுபட்டார்? 1879-ல் எரிந்த அந்த ஒற்றை பல்புக்குப் பின்னே எவ்வளவு வரலாறு ஒளிந்திருக்கிறது? எத்தனை பேருடைய உழைப்பு அது? ஐம்பது வருட பெருங்கனவை சுமந்தல்லவா, பெருமுயற்சியின் வளர்ச்சியாலல்லவா அந்த விளக்கு பளிச்சென எரிந்தது. வெளிச்சத்திற்கு வராத, தெரியாத அறிஞர்கள் எத்தனை பேரோ? உலகம் ஒரு சில பெயர்களையே நினைவில் கொள்வதும் ஏனோ?

மின்காந்தவியல், மின்வேதியியல் பெரும் புலமை பெற்றிருந்த ∴பாரடே, 1844 களிலேயே அணுக்கரு உள்ளதென்றும், அது அணுவொன்றின் மையப்புள்ளி எனவும் விளக்கமளித்திருக்கிறார். இவரது சீரிய முயற்சிகளைத் தொடக்கமாகக் கொண்டு தான் இன்றைய உலகம் மின்னொளியில் பளபளக்கிறது.

உலகம் முழுவதற்கும் ஒரே அறிவியல், ஒரே உண்மை, ஒரே தொழில், ஒரே சகோதரத்துவம் உருவாகும் காலம் வரப் போகிறது என அறிதியிட்ட வேதியியல் விற்பன்னர் டிமிட்ரி மென்டலீப்பின் கனவு நனவாகட்டும்.

1808 டால்டனில் தொடங்கிய அணுக் கொள்கை 1911-ல் ரூதர் ∴போர்டு அணுக்கரு கொள்கையாகி 1932-ல் சாட்விக் நியூட்ரான் கண்டுபிடிப்பு வரை எண்ணற்ற மாற்றங்களை சந்தித்தே மேம்பட்ட கொள்கையாக மாற்றமடைந்திருக்கிறது. இன்றைக்கு அணு என்றால் என்னவென்பதும், எப்படியிருக்குமென்பதும் உலகிற்குத் தெரியும். உலகினர் இன்று அதை உடைத்தும், வெடித்தும், சேர்த்தும், மோதவிட்டும் விளையாடிக்

கொண்டிருக்கிறார்கள். அணுவைப் பற்றித் தெரிந்து கொண்டது எதற்காக? யாருக்காக? மனிதர்கள் விளையாடுவது ஆபத்தில்லாத விளையாட்டுத்தானா?

அணு உயிருள்ளதா? அணுவுக்கு உயிர் இருக்கிறதா? அணு பிறப்பு இறப்பு கொண்டதா? அணுவுக்கென்று ஒரு வாழ்க்கை உள்ளதா? அணு, அது என்ன என்பதையோ தாம் யார் என்பதையோ அறியுமா? அணு காதல் வயப்படுமா?

அது ஏன் ஒன்றாக இல்லாமல் மூன்றாக இருக்கிறது? யார் இவர்கள்? மூன்று பேரும் நண்பர்களா? ஏன் இருவர் மட்டும் ஒன்றாக இருக்கிறார்கள்? அருகாமையும், தூரமும் இவர்களுக்கு ஒன்றா? இவர்கள் அனைத்தையும் அறிந்தவர்களா? நடந்தது, நடக்கிறது, நடக்கப்போவது இவர்களுக்குத் தெரியுமா? காலம் என்றால் என்ன என்பதை தெரிந்தவர்களா?

இவர்களுக்கு தன்னாட்சி உண்டா? விதிக்கு கட்டுப்பட்டவர்களா? இவர்கள் பேசிக் கொள்வார்களா? பொழுது எப்படி போகும்? மனிதர்களோடு கண்ணாமூச்சி விளையாடுகிறார்களா?

தந்தையரே வணக்கம் என்பதா? தோழர்களே நலமா என்பதா? ஒரு குடும்பமா அல்லது மூன்று குடும்பங்களா? தாய் யார்? தந்தை யார்? பிள்ளைகள் யார்? காதலன், காதலியாக இருப்பார்களோ? அண்ணன் தம்பியாக இருந்தால்?

முத்துக்கு முத்தாக, சொத்துக்கு சொத்தாக, அண்ணன் தம்பி பிறந்திருப்பார்களோ? ஒன்றுக்குள் ஒன்றாக பிறப்பதென்றால்? இவ்வளவு சொத்தும் இவர்களுடையதா?

தாயாரைப் பார்த்ததில்லையாமே. தந்தை முகம் அறிந்ததில்லையாமே. தானே எவரும் பிறந்ததில்லை எனும் போது தாயாரில்லாமல் எப்படி? தாயும், அம்மாவும், மாதாவும் ஒன்றா? மாதரும், மதரும், மேடரும், மேட்டரும் தொடர்புடையதாகுமா?

முத்துக்கு முத்தாக.. ஆகா.. இவர்கள் பாண்டியர்களா? சேரன், சோழன், பாண்டியன்.. யுரேகா.. தமிழர்களேதான். அப்படியென்றால் ஓ மை காட். உலகம் தமிழர்களுடையது. கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பே தோன்றியது தமிழ். எல்லாமே தமிழ். எதிலும் தமிழ். தமிழ், தமிழ், தமிழ். தமிழ் வாழ்க. தமிழ் வளர்க. தாயே போற்றி. தமிழே போற்றி.

அணுவுக்கு மனம் இருக்குமா? மனம் என்றால் என்ன? மனம் எங்கிருக்கிறது? மனதிற்கு காரணம் யார்? சிந்தனை.. சிந்திப்பது என்றால்? மொழி என்பது என்ன? மொழியும், சிந்தனையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதா? எண்ணம் என்பது என்ன? எங்கிருந்து எண்ணம் வருகிறது?

அணுக்களின் தொடர்வினையை, சங்கிலி வினையைப் போல் எண்ணங்களையும், மனதையும் நிறுத்த இயலாதோ? மனமில்லாத உயிர் வாழ்க்கை எப்படியிருக்கும்? எண்ணங்களில்லா மனிதன் எப்படி இருப்பான்? ஏன் மனிதர்கள் சிந்திக்கிறார்கள்? மனம் தான் மனிதனா?

உலகின் வரலாறு எத்தகையது? உலகம் எத்தகைய வரலாற்றைக் கொண்டிருக்கிறது? உலகின் வரலாறு எத்தனை பெரியது? உலகில் உயிர்கள் எப்போதிலிருந்து இருக்கின்றன? உலகில் மனிதர்கள் என்றிலிருந்து வாழ்கிறார்கள்?

பெரு வீக்கத்தின் படி, பேரண்டம் தோன்றி ஏறக்குறைய 1400 கோடி ஆண்டுகள் ஆகின்றன. விண்மீன்கள் 1200 கோடி ஆண்டுகளில் உருவாகின, முதல்நிலை விண்மீன்கள் சிதறி வேதியல் மூலக்கூறுகள் உண்டாகின. மூலக்கூறுகள் ஒன்றிணைந்து கோள்கள் உருவாகின. பூமியில் முதல் வகை உயிரினம் தோன்றி படிம வளர்ச்சி பெற்று சுமார் 2,50,000 வருடங்களுக்கு முன்பு ஹோமோ செப்பியன்ஸ் எனப்படும் மனித இனம் தோன்றியது. இதன் பின்னரே மனிதர்களின் வரலாறு தொடங்குகிறது. ஆதி மனிதர்கள் அல்லது இன்றைய மனிதர்களின் மூதாதையர்கள் ஆரம்பகட்ட நாகரிக வளர்ச்சியில் கற்களையே ஆயுதங்களாகப் பயன்படுத்தியிருப்பர். கூரான கற்களை வேட்டைக்குப் பயன்படுத்தியிருக்கலாம். அவர்கள் பயன்படுத்திய கல் பொருட்கள், கல் ஆயுதங்கள் கிடைப்பதால் இக்காலம் கற்காலம் எனப்படுகிறது. கற்காலத்தின் தொடக்கம் பழைய கற்காலமாகவும், பின்னர் வந்த காலம் புதிய கற்காலமாகவும் கருதப்படுகிறது. ஆங்கிலத்தில் பேலயோ லித்திக், மீசோலித்திக், நியோலித்திக் என கற்காலம் அறியப்படுகிறது.

கற்காலத்திற்குப் பின் எந்த வகையான உலோகப் பொருட்களை மனிதர்கள் பயன்படுத்தினார்களோ அவ்வுலோகத்தின் அடிப்படையில் வரலாற்றுக் காலம் பெயரிடப்படுகிறது. உதாரணமாக வெண்கலக் காலம். இக்காலத்தில் மனிதர்கள்

வெண்கலம், தாமிரம், செப்பு உலோகங்களை அதிகம் பயன்படுத்தினர். பின்னர் வந்த இரும்பு காலத்தில் இரும்பின் பயன்பாடு அதிகமிருந்தால் இதனை இரும்புக் காலம் என அழைக்கின்றார்.

பழைய கற்காலம் தொடங்கி இன்றைய நவீன காலம் வரை உலகின் வரலாறாகக் கொள்ளப்படுகிறது. உலக வரலாறு என்பது பொதுவில் மனித குல வரலாறே. எழுத்து முறை கண்டுபிடித்ததிலிருந்து உலகின் வரலாறு தொடங்குகிறது என்று சொல்வதே சரியாக இருக்கும். எழுத்து மூலங்களைச் சான்றுகளாகக் கொண்ட ஆவணங்களை ஆய்வு செய்தும், தொல்லியல் ஆய்வுகள் மூலமாகவும், உலக வரலாறு அறியப்படுகிறது. மனிதர்களின் இன்றைய அத்தனை அறிவு வளர்ச்சிக்கும் அறிவியல் புரட்சிக்கும் நவீன உலக வாழ்க்கைக்கும் அடித்தளமிட்டது எழுத்துக்களைக் கண்டுபிடித்ததே. மனிதர்கள் தங்களது அறிவை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கடத்த முடிந்ததற்குக் காரணம் எழுத்துகளே. நினைவுகள் பதியப்படுவது எழுத்துக்கள் மூலமே. எழுதி வைப்பதன் வாயிலாக அறிவை, ஞானத்தை அப்படியே சேமித்து வைக்க முடிந்தது. இன்னும் முக்கியமாக அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் வழி ஏற்பட்டது.

வரலாற்றுக் காலம் என்பது எழுதப்பட்ட அல்லது பதியப்பட்ட வரலாற்றிலிருந்து தொடங்குகிறது. அதற்கு முன் உள்ள காலம் வரலாற்றிற்கு முற்பட்ட காலம். பதிவுகளின்றி, ஆவணங்களின்றி, சான்றுகளின்றி தோரயமாகத்தான் வரலாற்றை கணிக்க முடியுமே தவிர இது தான் வரலாறு என எதையும் அனுதியிட முடியாது.

வரலாறு, வரலாற்றுக் காலம் பல்வேறு விதங்களில் பிரிக்கப்படுகிறது. பண்டைய வரலாறு, இடைப்பட்ட வரலாறு, பிந்தைய வரலாறு, நவீன வரலாறு என்பது ஒரு வகையான வரலாற்றுப் பிரிவு. ஒவ்வொரு பிரிவும் ஆரம்பகாலம், நடுக்காலம், பிந்தைய காலம் எனவும் பிரிக்கப்படுகிறது. ஆண்டுகளைப் பிரித்தும் வரலாற்றுக் காலத்தைக் கணக்கிடுவதுண்டு. கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட நான்காயிரம் ஆண்டுகளை பண்டைய வரலாறு அல்லது பண்டைய காலமாகக் கொள்வது ஓரளவிற்கு சரியானதாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. முன்னர் கிறிஸ்துவுக்கு முன், பின் என குறிப்பிடப்பட்ட வரலாற்றுக் காலம், தற்போது பொது ஆண்டிற்கு முன் மற்றும் பொது ஆண்டு எனவும், பொது யுகத்திற்கு முன், பின் எனவும் குறிக்கப்படுகிறது. இன்றைக்கு சுமார் ஆறாயிரம் ஆண்டுகள் முன்பு

வரையான வரலாறு ஓரளவிற்கு ஆதாரங்களுள்ள, எழுதப்பட்ட ஆவணங்கள் கொண்ட வரலாறாக மனித குலத்திற்கு கிடைக்கிறது.

பல முதல்களுக்குச் சொந்தம் கொண்டாடும், யூப்ரடீசு, டைகிரீசு நதிகளுக்கு இடைப்பட்ட மெசாதோமிய நிலமே எழுத்தையும் முதலாவதாக அறிந்திருக்கிறது. இப்பகுதியில் பொ. ஆ. நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நகரங்கள் இருந்ததாகத் தெரிகிறது. களிமண் தகடுகளில் மழுங்கிய புற்கள் கொண்டு பதியப்பட்ட ஆப்பெழுத்துகள் இப்பகுதியில் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை பொ.ஆ. முன் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என அறுதியிடப்பட்டுள்ளன. இவை ஆரம்ப கட்ட எழுத்துருக்கள். ஆரம்பகட்ட எழுத்துக்கள் பெரும்பாலும் வரிவடிவமே. வரிவடிவ எழுத்துமுறைக்கு சான்றாக கிரேக்க எழுத்துமுறை, சீன எழுத்துமுறை காணப்படுகின்றன. வட, தென் அமெரிக்காக்களுக்கு இடைப்பட்டதான மெக்சிகோ அமெரிக்கப் பகுதியிலும் ஆரம்ப நிலை எழுத்துருக்கள் வழக்கதிலிருந்திருக்கின்றன. சிந்து சமவெளியில் கிடைத்திருக்கும் ஆதாரங்களின் அடிப்படையில், அங்கு எழுத்துருக்கள் வழக்கத்திலிருந்தனவா அல்லது ஆரம்பநிலை எழுத்துக்கள் தோற்றம் பெற்று வந்தனவா என்பதை உறுதியாக அறிய முடியவில்லை போலும். மெசபடோமியவிலிருந்து எழுத்து முறை கிரேக்கத்திற்குச் சென்றிருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது. பட எழுத்து அல்லது சித்திர எழுத்து முறையானது, குறிப்பிட்ட சொல்லுக்கான படத்தை அப்படியே வரைவது. உதாரணமாக காகம் என்பதை குறிக்க காகத்தை வரைந்து விடுவது.

பொ.ஆ.முன் மூன்றாயிரம் வரை எழுத்துச் சான்றுகள் கிடைக்கின்றன. பொ.ஆ.மு. ஐந்தாயிரம் வரை தொல்லியல் ஆய்வுகள் மூலம் கிடைக்கும் சான்றுகளிலிருந்து மனிதர்களின் ஆரம்ப கால நாகரிக வளர்ச்சி அறியப்படுகிறது. மிகப் பழமையான பொருட்கள் பொ.ஆ.மு. ஏழாயிரம் வரை கிடைக்கப்பெற்றுள்ளன. இன்றையிலிருந்து அதிகபட்சமாக ஒரு பத்தாயிரம் வருடங்கள் வரையிலான மனித குல நாகரிக வளர்ச்சியை ஆதாரங்களின் அடிப்படையில் ஓரளவிற்கு அறிந்து கொள்ளலாம் என வரலாற்று அறிவியல் அறிவிக்கிறது.

உலகின் அனைத்துப் பகுதிகளிலும் நாகரிக வளர்ச்சி ஒன்று போல் நடைபெறவில்லை எனத் தெரிகிறது. சில பகுதிகள் உலக நாகரிகத்தின் தொட்டில்கள் என அழைக்கப்படுவதற்கான காரணம், அங்கே ஆரம்பகால நாகரிக

வளர்ச்சி காணப்பட்டதாலேயே. ஆரம்பகால மனிதர்கள் வேட்டையாடுதல் மூலமும், காடுகளில் கிடைக்கும் உணவுப் பொருட்களை சேகரித்தல் வழியாகவும், தங்களது உணவுத் தேவையை நிறைவு செய்திருக்க வேண்டும் என்பது தெளிவு. மேலும் ஓரிடம் விட்டு மற்றோரிடத்திற்கு நகர்ந்தபடியேயான நாடோடி சமூகமாகவே மக்கள் வாழ்ந்திருப்பார்கள்.

செழிப்பான ஆறுகள் மக்களின் வாழ்கைக்குப் பலவிதங்களிலும் பயனுள்ளதாக இருந்திருக்கும் என்பதால், ஆரம்பகால நாகரிகங்கள் அனைத்துமே ஆற்றுப்படுகைகளிலேயே அமைந்திருக்கின்றன. உதாரணமாக நைல் நதி, யூப்ரடீசு டைகிசு, சிந்து நதி, மஞ்சள் நதி போன்ற நதிக்கரையோரங்களில் மக்கள் குடியேறுவதன் வாயிலாக நாடோடி வாழ்க்கை மறைந்து நிரந்தரக் குடியேற்றங்கள் நிகழ்கின்றன. இதன் பின்னர் வேளாண் புரட்சி உண்டாகிறது. பயிரிடுதலைக் கற்றுக் கொண்டபின் மனிதர்களின் வாழ்க்கை பல மாறுதல்களைச் சந்தித்திருக்கிறது. தாவர வளர்ச்சியோடு, விலங்குகளின் வளர்ப்பும் நிகழ்ந்திருக்கிறது. 8500-7000 வருடங்களுக்கு முன் வேளாண்மைப் புரட்சி நிகழ்ந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

நிரந்தக் குடியேற்றம், வேளாண்மைத் தொழில் போன்றவற்றால் மக்கள் பெருக்கமடைந்து சமூக விரிவாக்கம் நடந்திருக்கும். உணவு உற்பத்தி அதிகரித்ததால் பிற தொழில்களும் வளர்ச்சி கண்டிருக்கும். பொருட்களின் பெருக்கம் வணிகத்திற்கு இட்டுச் சென்றிருக்கும். அன்றைக்கு பாதுகாப்பு என்பது மிகவும் முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும். குலங்கள் தோன்றி, குலத்தலைமை உருவாகி, நாளடைவில் ஒரு தலைமையின் கீழ் மக்கள் திரண்டு நகரங்களும் தோன்றி, பண்டைய பேரரசுகள் உருவாகி மக்கள் கூட்டம் முன்னேறி வந்திருக்க வேண்டும்.

வேளாண்மை வளர்ச்சி போன்றே போக்குவரத்து வளர்ச்சியும் மனிதகுல நாகரிக வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது. உருளை உண்டாக்கப்பட்டபின் தூரம் என்பது விரைவாகக் குறைந்து விட்டது. பொது யுகத்திற்கு முன் ஐந்தாயிரமாண்டுக் காலத்தில் உருளைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

ஆறுகளில் குடியேற்றம், பயிர்த்தொழில், இடப்பெயர்ச்சி முன்னேற்றம், உலோகங்கள் கண்டுபிடிப்பு, பல்வேறு தொழில்கள், நாடுகள், நகரங்கள், வணிகம், அச்சுக்கலை என்று வளர்ந்து வந்த சமூகம், கூடவே பிற நாடுகளையும் ஆக்ரமிக்க ஆரம்பித்து போர்களுக்கும் இட்டுச் சென்றுள்ளது. பிற நாடுகளை வெற்றி கொள்ளவும், நாடுகளை தற்காத்துக் கொள்ளவுமாக வரலாறு நெடுகிலும் போர்கள்.. போர்கள்.. போர்கள் மட்டுமே வரலாறு எனும் நிலையிலேயே மனிதகுல வரலாறு நிறைந்திருக்கிறது.

பொருள் வளர்ச்சியோடு, ஆன்மிக வளர்ச்சியும் சேர்ந்தே பரிணமித்து வந்திருக்கிறது. ஆதியில் இயற்கை வழிபாடே இருந்திருக்க முடியும். சூரியன், சந்திரன், வழிபாட்டுக்குரியவர்களாக இருந்திருக்கிறார்கள். அவ்வாறே பூமியும், வானமும், நெருப்பும், நீர், காற்று போன்றவையும் வணங்கத்தக்கவையாக இடம் பெற்றிருக்கின்றன. முன்னோர்கள் வணங்கப்பட்டிருக்கலாம். தாயை முதன்மையாகக் கொண்டு வழிபாட்டு முறைகள் தோற்றம் பெற்றிருக்கலாம். படிப்படியாக மாற்றம் பெற்று தந்தை வழிபாடாக மாறி, சமயங்கள் உருவாக்கம் பெற்றிருக்கின்றன. கோவில்கள், மதங்கள் தோன்றி, மதகுருக்களின் ஆதிக்கம் வருகிறது. விலங்குகள், மனித உருவங்கள், வழிபாடுகளில் கலந்து தேவர்களுக்கும் இடம் கிடைக்கிறது.

பழைய கற்காலத்தின் ஆரம்ப கட்டத்தில், முதுகுத்தண்டு நேரான, நிமிர்ந்த நடை கொண்ட மனித இனமான ஹோமோ எரக்டஸ், சுமார் இருபது லட்சம் வருடங்களுக்கு முன்னர் தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சுமார் எட்டு லட்சம் வருடங்களுக்கு முன்பான நடு, பழைய கற்காலத்தில், முன்னோடி மனிதர்கள் நெருப்பின் பயன்பாட்டை அறிந்திருக்கலாம். இரண்டு அல்லது இரண்டரை லட்சம் வருடங்களுக்கு முன் ஆப்பிரிக்காவின் எத்தியோப்பிய பகுதியால் பரிணமித்த ஹோமோ செப்பியன்ஸ் மனித இனம், அறுபதாயிரம், எழுபதாயிரம் வருடங்களுக்கு முன்பாக ஆப்பிரிக்காவிலிருந்து ஆசியாவிற்கு இடம் பெயர்ந்திருக்க வேண்டும். ஆசியாவின் தென்பகுதி, பின் அங்கிருந்து தென் கிழக்கு என்று பரவி, ஆஸ்திரேலியாவை அடைந்திருக்கலாம். ஐம்பதாயிரம் வருடங்கள் அளவில் ஆசியாவின் வடக்குப் பகுதி வழியாக ஐரோப்பாவை அடைந்திருக்கலாம். பழைய கற்காலத்தின் பின்பகுதியில் அதாவது பதினைந்தாயிரம் ஆண்டுகளுக்கு

முன்பாக ஆசியாவின் வடபகுதியிலிருந்து அமெரிக்காவை மனிதர்கள் அடைந்திருப்பார்கள்.

நவீன மனிதர்கள் என அழைக்கப்படும் இந்த ஹோமோ செப்பியன்களின் இடப்பெயர்ச்சிக்கு பனிப்பரவல் மிக முக்கியமானதொரு காரணியாக இருந்திருக்கும். பனியற்ற பகுதிகளிலேயே மனிதர்கள் முதலில் குடியேறியிருப்பார்கள். இதை கருத்தில் கொண்டால், கடைசி பனிக்கட்டி காலத்திலேயே அமெரிக்க இடப்பெயர்வு நிகழ்ந்திருக்க வேண்டும். 12 ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக அனேகமாக பூமியின் அனைத்துப் பகுதிகளுக்கும் மனித இனம் பரவி விட்டது என்பதை ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன.

மனித குல இடப்பெயர்ச்சிக்கு நீர் வழித்தடம் ஒரு பெரிய தடையாகவே இருந்திருக்கும். கடல்களைக் கடந்து போய் பரவியதென நிச்சயம் கருத இயலாது. தொடர்ச்சியான நிலப்பகுதி வழியாகவே மனிதர்கள் நகர்ந்திருப்பார்கள். இதையும் கருத்தில் கொண்டால், ஆப்பிரிக்காவிலிருந்து மெசபதோமியா, இந்தியா, இந்தோனேசியாவிலிருந்து சைனா, சைபீரியா, ஐரோப்பா, அமெரிக்கா என மனிதகுலம் பரவியிருக்கும்.

மனித குல நாகரிகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியில் நடுநிலக் கடல் எனவும் மத்தியதரைக் கடல் எனவும் அழைக்கப்படும் பகுதி மிக முக்கியமானதொரு மையமாகக் கருதப்படுகிறது. இதன் அமைவிடம் அத்தனை சிறப்பு. மூன்று கடல்கள் சூழ்ந்த பகுதி. மெசபதோமியா, எகிப்து, கிரேக்கம், ரோமன், அரேபியா, பாரசீகம் என உலகின் பெரும்பாலான நாகரிகங்கள் மடுதரை எனப்படும் இந்த மெடிட்டரேனியன் பகுதியைச் சூழ்ந்தே செழித்திருக்கின்றன. உலகின் மிகச் சிறந்த வணிகப் பாதையாகவும், பண்பாட்டு தொடர்புக்கான முக்கிய மையமாகவும், மதங்களின் பிறப்பிடமாகவும் இப்பகுதி அறியப்படுகிறது. உலகின் பெரும்பாலான வரலாறு இப்பகுதியைச் சுற்றியே அமைந்துள்ளது எனில் மிகையாகாது.

ஆப்பிரிக்கா, இந்தியா, சீனா போன்ற பழம்பெரும் நாடுகளின் அகழ்வாராய்ச்சிகள் மனித குலத் தோற்றம், பரவல் குறித்தான பல்வேறு தடயங்களையும், தகவல்களையும் அளித்த வண்ணமுள்ளன. ஐம்பதாயிரம் ஆண்டுகள், ஒரு லட்சம் ஆண்டுகள் என ஆதிகால மனிதகுல நாகரிகத்தை அடையாளம் காணும் தரவுகள் நிருவப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பதினோராயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன் மனிதர்களின் குடியிருப்புகள் இருந்த பகுதியாக ஆசியா மைனர் என அழைக்கப்படும் துருக்கியின் அனடோலியா பகுதியின் கோபெக்லிதெப்பே பகுதி அடையாளம் காணப்படுகிறது. மலை உச்சிப் பகுதியில் வேட்டைச் சமூகம் இருந்த அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே நெவாலி கோரி என்ற டாரஸ் மலையடிவாரப் பகுதியில் மிகப் பழமையான கட்டிடக் கோவில் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. இப்பகுதியிலேயே முதன் முதலாக கோதுமை பயிரிட்டிருக்கலாம் என்பதும் அறியப்பட்டுள்ளது. யூப்ரடீசு நதியின் துணைநதியான கன்டாராவின் இருகரைகளிலும் இந்த நெவாலி கோரி குடியிருப்பு புதிய கற்காலத்தின் தொடங்க நிலையில் பொ.ஆ.மு. 8400 வருடங்களில் அமைந்திருக்கலாம் என அறியப்படுகிறது. குடியிருப்புகளும் இறந்தோரை புதைக்கும் இடமும் தனித்தனியே கண்டறியப்பட்டிருக்கின்றன. இப்பகுதியிலேயே உருளைகளும், ஆரம்ப கட்ட எழுத்து முறைகளும் கூட உருவாகியிருக்கலாம்.

ஆயிரம் வருடங்கள் அதாவது மில்லினியம் என்றும் ஆண்டுக் கணக்கை பிரிப்பது வழக்கத்திலுள்ளது. புதிய கற்காலத்தின் தொடக்கமாக பத்தாவது ஆயிரமாண்டை எடுத்துக் கொண்டால், ஐந்தாவது ஆயிரமாண்டை புதிய கற்காலத்தின் பிந்தய ஆண்டுகளாக கருத்தில் கொள்ளலாம். உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் காலக் கணக்கு ஒரே மாதிரியாக அமைந்திருக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மெசபடோமியா, இந்தியா, எகிப்து பகுதிகளின் காலக் கணக்கு சற்றே மாறுதலுக்கு உட்பட்டதாக இருக்கும். உதாரணமாக இரும்புக் காலத்தை குறிப்பிடலாம்,

பொ.ஆ.மு ஏழாம் ஆயிரமாண்டு காலத்தைச் சேர்ந்ததாக சைனாவின் ஜிகு மற்றும் பெலிகாங் நாகரிகங்கள் மதிப்பிடப்படுகின்றன. ஜிகு நாகரிகம், மஞ்சளாற்றை ஒட்டிய பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளது. இவர்கள் எழுத்தை அறிந்திருந்தார்கள் என்பது, ஆமைகளின் ஓடுகளிலும் விலங்குகளின் எலும்புகளிலும் எழுத்துமுறைகள் உள்ளதை வைத்துக் கணிக்கப்படுகிறது. கொக்குகளின் இறக்கை எலும்புகளிலிருந்து இக்காலத்தில் உருவாக்கப்பட்ட ஜிகு வாய் இசை அதாவது ∴ப்ளூட் உலகின் பழமையான இசைக்கருவியாக இருக்கக்கூடுமென அறியப்படுகிறது. மேலும் இவர்கள் அரிசியை நொதிக்க வைத்து மதுவை தயாரித்ததாகவும் தெரிகிறது.

சைனாவின் ஹெனான் பகுதியில் பரவலாகக் காணப்படும் பழமையான பெலிகாங் நாகரிகத்தில் பல கல் ஆயுதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. சமைப்பதற்கு மட்பாண்டங்களை பயன்படுத்தியிருக்கின்றனர். மட்பாண்டங்களின் பயன்பாடு பெரிய அளவில் இருந்திருக்கிறது. தானியங்களையும் பயிரிட்டிருக்கிறார்கள். பொ.ஆ.முன் 2000 களில் சைனாவின் மத்திய பகுதியில் பேரரசு அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. கிடைக்கும் எழுத்து சான்றுகளிலிருந்து சாங் பேரரசு (பொ.ஆ.மு 1700-1100) சைனாவில் செழிப்புற்றிருந்த பேரரசாக அறியப்படுகிறது. சாங் பேரரசு, மஞ்சளாறு பகுதியிலிருந்த ஹோ பேரரசால் முடிவுக்கு வந்திருக்கிறது. ஹோ பேரரசர் வூ காலத்தில், வடக்கிலிருந்து அதிகப்படியான மக்கள் தென்சீனப் பகுதிக்கு இடம் பெயர்ந்ததாகத் தெரிகிறது. ஹான் பேரரசு எனவும் பின்னர் சின் பேரரசு எனவும் பட்டுக்கும் மண்பாண்டங்களுக்கும், உலோகங்களுக்கும் பெயர் பெற்றிருந்த சைனாவும் அதன் பட்டுப்பாதையும் வரலாற்றில் நிலைத்திருப்பவை.

வியட்நாமின் பதினைந்து தொல்குடிகள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும், அந்நியர்களின் ஊடுறுவலை எதிர்க்கவும், வணிகத்திற்காகவும் ஒன்றினைந்து லேக் வியட் தலைமையிலான தொல்குடியின் கீழ் ஒன்றாக இணைந்து பொ.ஆ.மு 2897-ம் ஆண்டில் ஹாங் பேங் பேரரசை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. இவ்வரசர்கள் ஹிங் அரசர்களாக வரலாற்றில் இடம் பெறுகிறார்கள். பொ.ஆ.மு 2000 காலத்திய டாங் சான் நாகரிகம் எனப் பெருமைப்படும் வெண்கலக் காலத்தைச் சேர்ந்தொரு நாகரிகம் வடபகுதி வியட்நாமின் சிவப்பு நதி பள்ளத்தாக்கில் செழித்து இருந்திருக்கிறது. இதன் தாக்கம் இந்தோ மலேயன் தீபகற்பம் உள்ளடக்கிய தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுமைக்கும் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பொ.ஆ.மு ஆறாம் ஆயிரமாண்டுகளிளான உபெய்த்து காலம் தொடங்கி, நான்காம் ஆயிரமான ஊர்க்கு காலம், மூன்றாமாயிரத்தின் அரசுகள் காலம், இரண்டாமாயிரத்தில் எழுச்சி பெற்ற பாபிலோனியர்களின் காலம் வரையிலுமாக மெசபதோமிய பகுதியில் மக்கள் திரள் செழித்திருந்ததற்குக் காரணம், இப்பகுதியின் நீர் வளமும், வண்டல் மண்ணுமே. உலகில் மற்ற பகுதியினர் கால் நடைகளின் பின்னால் அலைந்து திரிந்த காலகட்டங்களில், இப்பகுதியினர் நிலையான குடியிருப்புகளில் வசித்திருக்கின்றனர். மெசபதொனியர்கள், சுமேரியர்கள், அக்கேடியன்கள், பாபிலோனியர்கள் எனப் பலவாறாக

அழைக்கப்படும் இம்மக்கள், மூன்றாம் ஆயிரமாண்டு காலத்திலேயே ஐம்பதாயிரம் முதல் எண்பதாயிரம் மக்கள் வரை சுமேர் என்ற நகரத்தில் கூடி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதே மிகுந்த வியப்பைத் தருவதாய் உள்ளது. சிறப்பான முறையிலமைந்த வேலைப் பங்கீடு இவர்களிடையே இருந்திருக்க வேண்டும். அமைப்பாக, ஒரு அணியாகத் திரண்டபின் வளர்ச்சி மடமடவென பெருகியிருக்க வேண்டும். அதனால்தான் இவர்களால் மூன்றாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எழுத்தைக் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது.

இன்றைய ஈராக் பகுதியில் ஆறு, ஐந்து ஆயிரமாவது ஆண்டுகளில் சுமேரியர்களும், மூன்று நான்கு ஆயிரமாண்டுகளில் அக்காடியன்களும், இரண்டாவது ஆயிரமாண்டு காலத்தில் அசிரீயன்களும், பாபிலோனியர்களும், ஆர்மீனியர்களும் பின்னர் முதலாவது ஆயிரமாண்டில் சால்டியன்களும், பேரரசுகளை நிறுவியிருக்கிறார்கள். ஈராக்கின் தெற்கு பகுதியான பாபிலோனியா நெடுங்காலம் வரை புகழ்மிக்க நகராக விளங்கியிருக்கிறது. புகழ்பெற்ற பேரரசர் ஹமுராபி (பொ.ஆ.மு 1810-1750) சுமேரியன்களையும் அக்காடியன்களையும் இணைத்து பாபிலோனியப் பகுதியில் பேரரசு ஒன்றை நிறுவுகிறார். இதன் ஆட்சி மொழியாக அக்காடின் இருக்கிறது. சமய மொழியாக சுமேரின் இருந்த போதிலும் அதன் செல்வாக்கு சரியத் தொடங்கியதாக வரலாறு தெரிவிக்கிறது. பொ.ஆ.மு 2300 களிலேயே பாபிலோன் நகரைப் பற்றிய பதிவுகள் பெறப்பட்டுள்ளன. பண்டைய உலக அதிசயங்கள் எனப் போற்றப்படும் பாபிலோன் தொங்கும் தோட்டங்கள் முதல் நூற்றாண்டு வரையிலும் காணப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இத்தோட்டங்கள் பொ.ஆ.மு 600களில் வடிவமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பண்டைய எகிப்தின் பெருமையை, புகழை இன்றைக்கும் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது பொ.ஆ.மு 2584-2561 ஆண்டுகளுக்கிடையே கட்டப்பட்டதாகச் சொல்லப்படும் 455 அடிகள் உயரமும், 756அடிகளை அடித்தளமாகவும் கொண்ட காஜா பிரமிடு. ஆப்பிரிக்காவின் வட கிழக்கில் அமைந்திருந்த இந்த நாகரிகம் எகிப்தின் மேல்பகுதிகளை இணைத்து உருவாகியது. எகிப்தின் ஒன்றுபட்ட முதல் பேரரசை மெனசு பேரரசர் பொ.ஆ.மு 3150 களில் உருவாக்கியதாக அறியப்படுகிறது. பொ.ஆ.மு 3150 களிலிருந்து தொடர்ச்சியான பேரரசுகளைக் கொண்டிருந்த இந்த மாபெரும் பேரரசு, பொ.ஆ.மு 30-ல் நடந்த ரோமப்

பேரரசுகளுடனான ஆக்டேவியம் போரால் முடிவுக்கு வருகிறது. எகிப்தியப் பேரரசுகளின் கூம்பு வடிவங்களும், மம்மிகளும், அவர்களின் கணித முறைகளும், படஎழுத்து மொழியும், வானியல் அறிவும் போற்றத்தக்கவை. பண்டைய எகிப்தின் அறிவாற்றல் பல நாடுகளுக்கும் பரவியது என்பதில் மாற்றுக் கருத்து இருக்காது. முக்கியமாக கிரேக்கத்திற்கும் உரோமுக்கும்.

மால்டோவா, உக்ரைன் மற்றும் ரொமானியா போன்ற நாடுகளை உள்ளடக்கிய கிழக்கு ஐரோப்பா நிலப்பகுதியில் பொ.ஆ.மு 6000 முதல் 3500 வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்த குகுடெனி-டிபிரிலியன் நாகரிகம் சிறப்பாக பரவியிருந்ததாக ஆதாரங்கள் சுட்டுகின்றன. இப்பகுதியில் பொ.ஆ.மு 4900-4700 ஆண்டு காலத்திய களிமண்ணால் செய்த பழமையான பெண் சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளதே இந்நாகரிகத்தின் பழமைக்கும், செழுமைக்கும் சான்றாகும். இக்காலத்தவர் அணிந்த தாமிர கைய் வளையங்கள் அதிகமாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. குறைந்த எண்ணிக்கையில் மோதிர வளயங்களும், கொக்கிகளும் கிடைத்திருக்கின்றன. இடம் பெயர்ந்து கொண்டேயிருக்கும் இந்நாகரிகத்தவர் இடப்பெயர்தலுக்குமுன் தமது இருப்பிடங்களை அழித்துவிடுவர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அறுபது, எழுபது வருடங்கள் நிலையான வாழ்க்கைக்குப் பின் குடியிருப்புகளை எரித்து விட்டு அடுத்த இடப்பெயர்வை மேற்கொள்வர் எனவும் அறியப்படுகிறது.

ஆப்பிரிக்காவின் சூடான், எத்தியோப்பியா பகுதியிலும் பொ.ஆ.மு.மூன்றாயிரம் ஆண்டுகளில் நுபியா என்ற நாகரிகம் செழிந்திருந்தாக சான்றுகள் கிடைக்கின்றன. ஒன்றுபட்ட எகிப்திற்கு முன்பாகவே சூடானில் கெர்மா நாகரிகம் எனப் பெயரிடப்பட்டுள்ள நாகரீகம் தழைத்து காணப்பட்டிருக்கிறது. எத்தியோப்பியாவின் குஷைட் பேரரசு ஆப்பிரிக்கா மட்டுமின்றி, ஆசியா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளிலும் பரவியிருந்ததாகத் தெரிய வருகிறது. இவர்களின் பிரமிடுகளும் புகழ் பெற்றவையாக இருந்திருக்கின்றன. நுபியன்கள் காலத்தில் சகதிகளால் ஆனா செங்கல் கொண்டு கட்டப்பட்ட கோவில்கள் இருந்திருக்கின்றன.

இரண்டாம் ஆயிரமாண்டு கால கட்டடங்களில் பொ.ஆ.மு.(2000-3000), நடு அமெரிக்கப் பகுதியில் ஒலமெக்ஸ், மாயன் மற்றும் பல பெயர்களிளான நாகரிகங்கள் சிறப்புற்று விளங்கியிருக்கின்றன. இவற்றுள் டோல்டெக், அச்டெக் போன்ற நாகரிகங்கள் ஐரோப்பியர்கள் அமெரிக்காவினுள் நுழையும் காலம்

வரைக்கும் செழிப்புற்று இருந்திருக்கின்றன. மாயன் நாகரீகம் பொ.ஆ.மு.2600களில் ஆரம்பமானதாகவும் எழத்துமுறை கொண்டிருந்த நாகரிகமாகவும் அடையாளம் காணப்படுகிறது. மாயன்கள் கட்டிடக் கலை, வானியல், கணிதம், எழுத்துமுறை போன்றவைகளில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். இவர்களது நாட்காட்டி பொ.ஆ.மு.3114-ல் தொடங்குவதாகவும் சொல்லப்படுகிறது. சடங்குகள் நிறைந்த சமய நம்பிக்கையும் இவர்களுக்கு இருந்திருக்கிறது. தென் அமெரிக்கப் பகுதியிலும், முதலாமாயிரம் ஆண்டுகளைச் சேர்ந்த சவின் போன்ற நாகரிகங்கள் செழித்திருந்ததாகக் குறிப்புகள் கிடைக்கின்றன.

பெர்சியா, பாரசீகம் என அழைக்கப்படும் தற்போதைய ஈரான் பகுதியும் உலகிற்கு செழிப்பான நாகரிகங்களை அளித்திருக்கிறது. இதன் அமைவிடமும் மிகுந்த முக்கியத்துவம் நிறைந்த பகுதியாகக் கருதப்படுகிறது. கிழக்கு, தெற்கு ஆசியாவை மேற்குப்பகுதிகளோடு இணைப்பதால் இப்பகுதி பல்வேறு வழிகளிலும் உலக வரலாற்றோடு பிணைந்துள்ளது. இதன் நிலம் வழியாக பல்வேறு அரசுகள் படை நடத்திச் சென்றிருக்கின்றன.

பொ.ஆ.மு.5000 ஆண்டுகளில் தென்மேற்கு ஈரானில் தோன்றியதாகக் கூறப்படும் ஈலமிய நாகரீகம் உலகின் மிகச் சிறந்த நாகரிகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பொ.ஆ.மு. 3200களிலிருந்தே இந்நாகரிகத்திற்கு எழுதப்பட்ட சான்றுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. குடியன் பேரரசு காலத்தில் செழித்திருந்த இந்நாகரிகம், இலமைட் மொழியையும் செழிக்கச் செய்திருக்கிறது. அகமினிடு பேரரசு வரையிலும் இலமைட் மொழியே அலுவல் மொழியாக இருந்திருக்கிறது. பண்டைய பாரசீகர்கள் மெடாக்கள் என அழைக்கப்பட்டதால் இவர்களது பேரரசு மீடியன் பேரரசு எனவும் பெயர் பெற்றிருக்கிறது. மீடியன்களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்கள் ஆக்கிமிடியர்கள். இவர்களுடையது ஆக்கிமிடியப் பேரரசு. வேளாண்மை, கட்டிடக் கலை, நிலஅளவை போன்றவற்றில் பாரசீகர்களின் பங்களிப்பு மகத்தானது.

பண்டைய கிரேக்க நாகரிகம் செழுமையானது மற்றும் தொடர்ச்சியானது. கிரீட் தீவில் ஒரு லட்சம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த மனிதர்கள், கற்கால கருவிகள் பயன்படுத்தியமைக்கான சான்றுகள் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இத்தீவில் ஏழாவது ஆயிரமாண்டுக் காலத்திலேயே மனித குடியிருப்புகள் இருந்திருக்கின்றன. இப்பகுதியில் பொ.ஆ.மு. 3600 காலகட்டத்தைச் சேர்ந்த

மினோன்கள் நாகரிகம் பரவியிருந்திருக்கிறது. பொ.ஆ.மு. 1600களில் உண்டான மைசீனியன் நாகரிகம் கிரீட் தீவு உட்பட கிரேக்கத்தின் முக்கிய பகுதிகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக வளர்ந்திருக்கிறது. அதன் பின்னர் பெரியதொரு இடைவெளி கிரேக்க நாகரிக வளர்ச்சியில் நிகழ்ந்திருக்கிறது. பொ.ஆ.மு. எட்டாம் நூற்றாண்டிலிருந்து கிரேக்கம் சிறப்புற்றும், ஏதென்ஸ்சு நகரம் பெருமைமிக்கதாகவும் வளர்கிறது. போர்க்கலையில் சிறப்பானவர்களாக கருதப்படும் ஸ்பார்டாக்களும் வலிமை பெற்று விளங்குகிறார்கள். பொ.ஆ.மு. தொள்ளாயிரம் ஆண்டுகளில் எழுதப்பட்டதாக வரையறுக்கப்படும் பெருமைமிகு ஹோமரின் இலியட், ஒடிஸி காப்பிய காலம் கிரேக்கத்தின் மங்காப் புகழுக்கு நீடித்த புகழினைக் கொடுக்கக் கூடியவை. பொ.ஆ.மு. ஆயிரத்து முந்நூறுகளில், கிரேகத்தின் வெண்கலக் காலத்தில் நடந்ததாக கூறப்படும் டிரோசன் போர், கிரேக்கத்தின் வீரவரலாற்றிக்கும், தொன்மைக்கும், பெருமைக்கும், என்றென்றும் நினைவில் கொள்ளப்படுவதாகப் போற்றப்படுகிறது. உலகின் நாகரிக வளர்ச்சிக்கு கிரேக்க மக்கள் அளித்த கொடைகள் ஏராளம். மிக முக்கியமானது மக்களை முதன்மைப் படுத்திய குடியாட்சி அமைப்பிலான அரசியலதிகாரம். வரலாற்றுக் காலத்திலும். அதற்குப் பிறகான செவ்வியல் காலத்திலும் கிரேக்கத்தின் அறிவுத்திறன், சிந்தனை மேம்பாடு அற்புதமானது. உரோம மறுமலர்ச்சி, ஐரோப்பிய மறுமலர்ச்சி என உலகின் அத்தனை மறுமலர்ச்சிக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்தவர்கள் கிரேக்கர்களே என உலகம் கொண்டாடுவதற்குக் காரணம் கிரேக்க மண்ணில் பிறந்த ஞானிகளே எனில் மிகையாகாது.

முதலாம் ஆயிரமாண்டு இரும்பு காலத்தில் இஸ்ரேல், ஜூடா அரசுகள் தோன்றியதாக சான்றுகள் கூறுகின்றன. பொனிசியா என அழைக்கப்படும் லெபனான், சிரியா, இஸ்ரேலை உள்ளடக்கிய பகுதியில் பொ.ஆ.மு. 1500 காலகட்டத்தைச் சேர்ந்த பொனிசிய நாகரிகம் வளர்ச்சி பெற்றிருந்ததாக அறியப்படுகிறது.

இந்தியாவின் தொன்மையை, பண்டைய இந்தியாவின் பெருமையை நிலை நாட்டுவதில் பெரும்பங்காற்றுவது சிந்து சமவெளி நாகரிகம் ஆகும். அரப்பா, ஹராப்பா நாகரிகம் எனவும் வழங்கப்பெறும் இப்பழமையான நாகரிகம், சிந்து நதிக் கரைகளை ஒட்டிய பகுதியில் அகழ்வாய்வுகள் மூலம் கண்டறியப்பட்டிருக்கின்றன. பொ.ஆ.மு. 3000 ஆண்டுகளில் மிக்க செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும் என

கணிக்கப்படும் இந்நாகரிகத்தின் ஆரம்ப காலகட்டம் பொ.ஆ.மு.7000 ஆண்டுகளாக இருந்திருக்கக் கூடும் என அறுதியிடப்படுகிறது.

பண்டைய சுமேரிய எகிப்திய நாகரிகங்களோடு தொடர்பில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படும் சிந்து வெளி நாகரிகம், 1920களில் அகழ்வாய்வுகள் மூலம் உலகிற்குத் தெரிய வந்திருக்கிறது. சிந்து வெளியை வெளிக்கொணர்ந்ததில் சர். ஜான் மார்ஷல் மிகவும் குறிப்பிடத்தக்கவராக அறியப்படுகிறார். பொ.ஆ.மு. 6000 ஆண்டுகளிலேயே மக்கள் குடியேற்றங்களும், சிறிய அளவிலான நகரங்களும் இருந்ததாகத் தெரிகிறது. நகரங்களிடையே சிறப்பான ஒருங்கிணைவு இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. இரும்பை அறியாததால் இவர்கள் வெண்கலக் காலத்தை சேர்ந்தவர்களாகவும் குறிப்பிடப்படுகிறார்கள்.

சிந்துவெளி மக்கள் திராவிடர்களாக இருக்கலாம் என்ற கருத்தும் மேலோங்கி வருகிறது. அகழ்வாய்வின் மூலம் கிடைத்திருக்கின்ற, கிடைக்கின்ற சான்றுகள், இப்பண்டைய கால நாகரிகம், திராவிடர், தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டுக் கூறுகளையும் பெருமளவில் ஒத்திருப்பதாக ஆய்வுகள் நிரூபிக்கின்றன. பண்டைய இந்தியாவில் பரவலாகக் காணப்பட்டது தொல் திராவிட நாகரிகமே எனும் கருத்தும் இதனோடு ஒத்துப் போகிறது.

சிந்து நாகரிக மக்களே முதன்முதலில் சக்கரத்தை பயன்படுத்தியிருக்கக்கூடும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இது நகர நாகரிகமாகவும், வணிகத்தில் சிறந்தும் விளங்கியிருக்கிறது. இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள செராமிக் பொருட்கள், மட்பாண்டங்கள், முத்திரைகள், உருவங்கள், அணிகலன்கள் போன்றவைகளிலிருந்து இது பரந்து விரிந்த ஒரு பகுதியாக இருந்திருக்கலாமெனவும் அறியப்படுகிறது. இதே போன்ற பொருட்கள் மத்திய ஆசியா, மேற்கு ஆசியப் பகுதிகளிலும் கிடைப்பதால் இப்பகுதிகளிடையே வணிகவுறவு பெருமளவில் வளர்ந்திருக்க வேண்டுமெனக் கருத இடமுள்ளது.

கிடைத்திருக்கக் கூடிய சான்றுகளிலிருந்து, இந்து சமயத்தின் தொடக்கம் சிந்து சமவெளியாக இருக்கலாம் என்ற கருத்து வலுவாகியுள்ளது. பெண் தெய்வ வழிபாடு, லிங்க வழிபாடு போன்ற ஆதிகால சமயக் கூறுகள் இப்பகுதியிலேயே தோற்றம் பெற்றிருக்கக் கூடும்.

கிடைத்திருக்கும் சான்றுகளை வைத்து சிந்து மக்களின் மொழியை திட்டவட்டமாக அறிய முடியவில்லையெனினும், எழுத்து வடிவங்கள் என அடையாளம் காணப்படும் சில குறியீட்டு வடிவங்கள், சிறிய முத்திரை வடிவங்களாகக் கிடைத்திருக்கின்றன. இவைகளை ஆய்வு செய்த பெரும்பாலான அறிஞர்கள், இது திராவிட மொழிக் குடும்பத்தை சேர்ந்ததாக இருக்க வேண்டும் எனச் சான்றுரைப்பதால் சிந்து வெளி நாகரீக கால மக்கள் திராவிடர்களாகவும், பேசிய மொழி திராவிட மொழியாகவும் இருந்திருக்க வேண்டும்.

பண்டைக் கால சிந்து மக்களின் நகர அமைப்பும், கட்டிடக்கலையும் பெயர் பெற்றதாக இருந்திருக்கிறது. முக்கியமாக அரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள். இம்மக்களின் வடிகால் அமைப்பு முறை, அன்றைய உலகில் வேறெங்கும் இருந்ததாகச் சான்றுகள் இல்லை. மிக முக்கியமானதொரு கருத்தாக, இம்மக்கள் ஒருவித சமத்துவ சமுதாயமாக வாழ்ந்திருப்பதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளும் உள்ளதாகக் கருதப்படுகிறது.

சிந்து சமவெளி நாகரிகங்கள் தற்போதைய பாகிஸ்தானில் பெருமளவில் அமைந்திருந்த போதிலும், இந்தியாவின் குஜராத் மாநில லோத்தல் நகரமும் அதன் ஒரு பகுதியாக இருந்ததாக அகழ்வாய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் முக்கியமான தொல்லியல் களமான லோத்தல் 1954-ம் ஆண்டில் கண்டறியப்பட்டது. ஹரப்பா, மொஹெஞ்சதாரோ, மெஹெர்கர் போன்ற களங்களோடு, லோத்தலும் அரிய பண்டைய வரலாற்றைத் தன்னுள்ளே பொதிந்து வைத்திருக்கிறது. சிந்து நதியின் வெள்ளப் பெருக்கால் இந்நாகரிகம் மங்கியிருக்கலாம் எனும் கருத்தும் கூறப்படுகிறது.

கைபர், போலன் கணவாய்களின் பாதையில் அமைந்திருந்ததால் சிந்து நாகரிகம் முக்கியமானதாக அறியப்படுகிறது. பாரசீகர், கிரேக்கர், ஆப்கானியர், துருக்கியர், மொகலாயர் என அத்தனை பேரும் இந்தியாவினுள் நுழைந்தது இவ்வழியாகவே. ஆரியக் கொள்கையின் படி, ஆரியர்கள் இப்பாதை வழியாக வந்தவர்களென்றும், அதன்போது இவ்விரு தொல் குடியினரும் அறிமுகமாகியிருக்க வேண்டும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இருக்கு வேதத்தில் காணப்படும் ஆரிய எனும் சொல், அய்ரிய எனும் ஈரானிய சொல்லுடன் உறவுடையதாகச் சொல்லப்படுகிறது. இந்தோ-ஐரோப்பியர்

என அழைக்கப்படும் ஆரிய இனம், வட மேற்கு ஆசியப் பகுதிகளிலிருந்து புறப்பட்டு, ஈரானியப் பகுதிகளில் தங்கி, கைபர் போலன் கணவாய்கள் வழியாக, வட மேற்கு இந்தியாவினுள் நுழைந்தார்கள் என்பது பெரும்பாலானவர்கள் கருத்தாக உள்ளது. ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நீண்ட காலப் போர்கள் நடந்தன என்ற கருத்து மாறி, இரண்டும் ஒன்றோடொன்று நெருங்கி வளர்ந்திருக்க வேண்டுமென்ற கருத்தாக்கம் மேலோங்கி வருகிறது.

உலகின் பழமையான சாலைகளில் ஒன்று கைபர் கணவாய். 3510 அடி உயரத்தில் ஸ்பின் கர் மலைகளின் வடகிழக்கு பகுதி வழியாக ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளை இணைக்கும் ஒரு மலை வழிப் பாதையான இது, பண்டைய பட்டுப் பாதையின் ஒரு பகுதி. மத்திய ஆசியா மற்றும் தெற்கு ஆசியாவின் முக்கியமானதொரு வணிகச் சாலையாகவும் இது இருந்திருக்கிறது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தானத்தையும், ஆப்கானிஸ்தானின் காந்தகாரையும் இணைக்கும் மலைப் பாதை போலன் கணவாய். தெற்காசியாவினுள் நுழைவதற்கு கைபர் மற்றும் போலன் வழிகள் மட்டுமே வழிகளாக இருந்திருக்கின்றன.

பண்டைய காலத்திலிருந்தே இந்தியா, பாருக்குள்ளே நல்ல நாடாகவே திகழ்ந்திருக்கிறது. வரலாற்றுக்கு முற்காலத்திலிருந்தே இந்திய மண்ணில் மக்கள் வாழ்ந்து வந்ததற்கான தெளிவான சான்றுகள் காணக் கிடைக்கின்றன. சிந்து வெளி நாகரிகமும், வேத கால நாகரிகமும் இந்தியாவின் பெரும் செல்வங்கள் என்றே கூற வேண்டும். நிமிர்ந்த மனிதனான ஹோமோ எரக்டசு காலம் அதாவது ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து, நவீன மனிதர்களின் காலம் வரையிலும் பல்வேறு வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டு இந்தியா வெற்றி நடை போட்டு வருகிறது. பொது யுகத்திற்கு ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகக் கூறப்படும் வேதங்கள் இன்றும் இம்மண்ணில் ஒலித்துக் கொண்டிருப்பது இந்தியாவின் தவப்பயனே.

முதிர்ந்த அரப்பான் காலகட்டத்தில் அதாவது பொ.ஆ.மு. 2600 தொடங்கி 1900 வரையிலுமான காலத்தில், பண்டைய இந்தியாவின் நவீன வளர்ச்சியும், நகர நாகரிக வாழ்க்கையும் தொடங்குவதாகக் கொள்ளலாம். வெண்கலக் காலத்திய அரப்பா பண்பாடு மங்கத் தொடங்கிய காலத்தில், இருப்பு காலத்திய வேதப் பண்பாடு பல்கிப் பெருகி இந்தியக் கலாச்சாரத்தை நிறைக்கிறது. சிந்து சமவெளி என சிந்து

நதிப் பகுதியை மையமாகக் குறிப்பிட்டாலும், இப்பண்பாடு தென்கிழக்கு ஆப்கானிஸ்தான் தொடங்கி ஹக்காக்ர்-ஹக்ரா நதிப் பள்ளத்தாக்கு எனப்படும் சரஸ்வதி நதிப்படுகை, கங்கா-யமுனா பகுதிகள் மற்றும் குஜராத் வரையிலும் பரவியிருந்ததற்கு சான்றுகள் கிடைக்கின்றன. இன்றைய குஜராத், அரியானா, பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலங்களிலும், பாகிஸ்தானின் சிந்து, பஞ்சாப், பலுசிஸ்தான் மாகாணங்களிலும் இப்பண்பாடு பரவியிருந்தது. உலகின் முதன் முதலான நகர நாகரிகம் எனப் போற்றப்படும் அரப்பா நாகரிகம் மற்றும் சுமேரிய, எகிப்திய நாகரிகங்கள் உலகின் பண்பாட்டுக் கூரைகள் எனில் மிகையாகாது.

கற்காலம் பல்வேறுவிதமான தடயங்களையும், பகுதிகளையும் இந்தியாவில் விட்டு சென்றுள்ளது. கீழைக் கற்காலம், நடுக் கற்காலம், மேலைக் கற்காலம் என அனைத்து காலங்களிலும் மக்களின் நடமாட்டத்தை இந்திய மண் பார்த்தே வந்திருக்கிறது. பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண ரைவாட், முரே பகுதிகளின் அகழ்வாய்வுகள், கீழை கற்காலத்தைச் சேர்ந்த பத்தொன்பது லட்சம் வருடங்களுக்கு முன்பான, ஹோமோ வகையைச் சேர்ந்த மனித இன முன்னோர்கள், இப்பகுதியில் வாழ்ந்திருந்ததற்கான ஆதாரங்களை வைத்திருக்கின்றன. ஆப்ரிக்காவிற்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பழமையான மனித வரலாற்றுத் தடயமாக இப்பகுதி அறியப்படுகிறது.

சோனியன் கலாச்சாரம் என அறியப்படும் ஐந்து லட்சம் வருடங்களுக்கு முன்பிருந்த ஒரு கலாச்சாரப் பகுதி பாகிஸ்தானின் சோன் பள்ளத்தாக்குப் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நேபாளப் பகுதிகளை உள்ளடக்கிய சிவாலிக் பகுதிகளில் சோனியன் கலாச்சார இடங்கள் காணப்படுகின்றன. சோன் நதிப் பகுதியில் ஒரு கோடிக்கும் அதிகமான வருடங்களைக் கொண்ட பாலூட்டியின் புதைபடிவங்கள் கிடைத்துள்ளன. அருகாமையில் நூற்றுக்கணக்கான கற்காலக் கருவிகள் கிடைப்பதிலிருந்து இப்பகுதிகளில் வரலாற்றுக்கு முன்பிருந்தே மனித குல முன்னோர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அறியலாம்.

மத்திய இந்தியாவின் நர்மதை நதிப் பகுதிகளில், நடு கற்காலத்தைச் சேர்ந்த ஐந்து லட்சம் வருடங்களுக்கு முன்பான ஹோமோ எரக்டஸ் மூதாதைய மனித இனம் வாழ்ந்திருக்கலாம் என்பதற்கான தடயங்கள் கிடைத்திருக்கின்றன. கடைசி பனியுகத்திற்குப் பிறகான மேலை கற்காலத்திய மனிதர்களின் பதிவுகள்

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக அறியப்படுகின்றன. மத்தியப் பிரதேசத்தின் பிம்பெட்கா பாறைப்பகுதியில் ஒன்பதாயிரம் வருடங்களுக்கு முன்பான ஓரளவிற்கு நிலைத்த குடியிருப்புகள் கொண்ட சமூகம் வாழ்ந்திருப்பதற்கான தடயங்கள் கிடைக்கின்றன. பிம்பெட்கா பாறைகளில் முப்பதாயிரம் வருடங்களுக்கு முன்பான ஓவியங்கள் காணக்கிடைக்கின்றன. பொ.ஆ.மு. 7500 வருடங்களுக்கு முன்பானதாக அறியப்படும் அரியானாவின் பிர்ரானா கண்டுபிடிப்பும், ஒன்பதாயிரம் வருடங்களுக்கு முன்பான பலுசிஸ்தானத்தின் மெஹ்ஹார்க் கண்பிடிப்பும் தெற்காசியா முழுமைக்குமே மேலை கற்காலத்தில் மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கான சிறந்த உதாரணங்களாகக்க் சுட்டப்படுகின்றன.

அரியானாவின் பிர்ரான அல்லது பிர்ஹா கிராமத்தில் 2014-ல் இந்திய தொல்லியல் துறையால் கண்டறியப்பட்டுள்ள பழமையான சிந்து சமவெளி நாகரிகம் பொ.ஆ.மு. 7570-6200 காலகட்டத்தைச் சேர்ந்ததாக அறியப்படுகிறது. முன்னர் இப்பகுதியில் ஓடியதாக கருதப்படும் சரஸ்வதி நதிப் படுகையில் இந்த பிர்ரான கிராமம் வருவது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப கட்ட அரப்பான் கலாசாரத்திற்கு முன்னரே இப்பகுதியில் ஹக்ரா கலாச்சாரம் இருந்ததாக அகழ்வாய்வுகள் தெரிவிக்கின்றன. இயற்கையான பூமிக்கு அடியில் குறிப்பிடத்தக்க விதமாகத் தோண்டப்பட்ட குழிப்பகுதியில் இம்மக்கள் வாழ்ந்தது இவர்களின் முக்கியமானதொரு அடையாளமாகக் கருதப்படுகிறது. இக்குழிகளின் சுவர்களும், தரையும், சரஸ்வதி நதியிலிருந்து கிடைத்த ஒருவிதமான வண்டல் கொண்டு பூசப்பட்டிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தாமிர வளையல், தாமிர அம்புமுனை போன்றவையும் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. மிகச் சிறப்பான முறையிலமைந்த மட்பாண்டங்கள் பல்வேறு வண்ணங்களில் பரவலாக இருந்திருக்கின்றன. இப்பகுதி அகழ்வாய்வில் கிடைத்திருக்கும் நடனப்பெண், மண்பாண்ட கைவினைப் பொருள்கள், மொகஞ்சதரோவின் புகழ்பெற்ற வெண்கல நடனப்பெண் சிலைக்கு முன்னதாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. டெர்ரகோட்டா சக்கரங்கள் நிறமேற்றிய ஆரங்களோடு கிடைத்திருப்பது இப்பகுதியின் பழமைக்கு முக்கியமான தொரு சான்று. பத்து அறைகள், மூன்று அறைகள் கொண்ட குழி வீடுகள் இருந்ததாக அறியப்பட்டுள்ளதைக் கொண்டு இக்காலத்தில் தொழிற் கூடங்கள் போன்ற அமைப்பை வைத்திருந்தார்களா எனவும் ஆராயப்பட்டு வருகிறது.

இராஜஸ்தானின் சரஸ்வதி நதிப்படுகையில் கண்டறியப்பட்டுள்ள முக்கியமானதொரு அகழ்வாய்வுக் களமாக கலிபாங்கன் கருதப்படுகிறது. பஞ்சாபியில் கருப்பு வளையல் எனவும், மஞ்சள் வளையல் எனவும் பொருள்படும் தற்போதைய பிலிபாங்கன் நகருங்கு அருகாமையில் இந்த பழமையான சிந்து வெளி நாகரிகத்தைப் பற்றிய அகழ்வாய்வு முடிவுகளை இந்திய தொல்லியல் துறை வெளியிட்டுள்ளது. கலிபாங்கன் இப்பகுதியின் முக்கியமானதொரு இடமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் உலகிலேயே முதலாவதாக உழுது பயிர் செய்திருக்கக் கூடிய பகுதி என அகழ்வாய்வு முடிவுகள் இப்பகுதியை அடையாளம் காண்கின்றன. அரப்பா காலத்திற்கு முன்பான நாகரிகம் என அடையாளம் காணப்படும் இங்கே செங்கல் கோட்டைகள் இருந்ததாக அறியப்படுகிறது. அரப்பா, மொகஞ்சதோரா போன்றே இங்கும் நகர நாகரிகம் இடம் பெற்றுள்ளது. இங்கு நெருப்புச் சட்டிகள் கிடைத்திருப்பதால், அக்னி வழிபாடு இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. அரப்பா கால கட்டத்தைச் சேர்ந்த இப்பகுதியில் தாய் வழிபாட்டிற்கான தடயங்கள் எதுவும் கண்டறியப்படாதது வியப்பிற்குரியதாக இருக்கிறது. சரஸ்வதி நதியில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக இப்பகுதி பொ.ஆ.மு 2000 ஆண்டு வாக்கில் கைவிடப்பட்டிருக்கலாம் என தொல்லியல் துறை தெரிவிக்கிறது.

மேலை கற்காலத்திய மிகச் சிறப்பானதொரு பகுதியாக பலுசிஸ்தானின் மெஹ்ஹார் கிராமத்தில் நடத்தப்பட்ட ஆகழ்வாய்வு முடிவுகள் அறிவிக்கின்றன. 1974 முதல் இருகட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இப்பகுதி பொ.ஆ.மு 7000-2500 காலகட்டத்தைச் சேர்ந்தது என மதிப்பிடப்படுகிறது. இப்பகுதி மக்கள் மண் செங்கல் வீடுகளில் வாழ்ந்திருந்தனர். கால்நடை மேய்த்திருக்கிறார்கள். பார்லீ, கோதுமை போன்றவற்றையும் பயிரிட்டிருக்கிறார்கள். தாமிரத்தால் ஆன பல பொருட்கள் புழக்கத்தில் இருந்திருக்கின்றன. ஆரம்பகட்ட விவசாயப் பகுதியான இது, அரப்பா நாகரிகத்திற்கு முன்பான நாகரிகப் பகுதி என அடையாளம் காணப்படுகிறது. 2001-ல் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு, இப்பகுதி மக்களிடையே ஆரம்பநிலை பல் மருத்துவம் இருந்ததற்கான சான்றுகளை பதிவு செய்திருக்கிறது. தெற்காசியாவிலேயே மிகப்பழமையான செராமிக் உருவங்கள் இப்பகுதியிலிருந்து பெறப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆரம்பநிலையில் பெண் உருவங்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றதாகவும், பிந்தைய காலகட்டப் பகுதிகளிலேயே ஆண் உருவங்கள் கிடைத்ததாகவும் பதிவுகள் குறிப்பிடுகின்றன. குழந்தைகளோடு கூடிய பெண்

உருவங்கள் கிடைத்திருப்பதால், தாய் வழிபாடு இருந்திருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

இந்திய வரலாறு மேலை அல்லது புதிய கற்காலம் பொ.ஆ.மு.7600-3300, சிந்து சமவெளி நாகரிகம் பொ.ஆ.மு.3300-1700, சிந்துவெளியின் பிற்காலப் பகுதி பொ.ஆ.மு. 1700-1500 மற்றும் வேதகாலம் பொ.ஆ.மு. 1500-500 எனும் காலகட்டங்களாக அடையாளம் காணப்படுகிறது. இதன் பிறகான காலகட்டம் அரச பரம்பரையினராக அறியப்படுகிறது. பொது யுகத்திற்கு முன் 500 முதல் 300 வரை வளமான சிந்து-கங்கை பகுதிகளில் இருந்த பதினாறு முக்கியமான அரசுகள் மகாஜனபதாக்கள் என வரலாற்றில் குறிக்கப்படுகின்றன. மகாஜனபதாக்களைப் பற்றிய குறிப்புகள் வேத, சமண, புத்த இலக்கியங்களில் காணப்படுகின்றன. காசி, கோசலம், வைசாலி, அங்கம், அசகம், மகதம், மச்சம், சேதி, குரு, பாஞ்சாலம், அவந்தி, காந்தாரம், கம்போஜம், மல்லம், வத்சம் மற்றும் விருச்சி எனப் புகழ்பெற்ற மகாஜனபதாக்கள் தற்போதைய ஆப்கானிஸ்தான் தொடங்கி கிழக்கு வங்காளம் வரை பரந்து அரசாட்சி செலுத்தியிருக்கின்றன. வைசாலி நகரைச் சுற்றியிருந்த வாஜ்ஜி நாட்டில் குடியரசு போன்ற அமைப்பு நிலவியதாகத் தெரிய வருகிறது. பதினாறு மகாஜனபதாக்களின் எண்ணிக்கை பின்னர் வத்சலம், அவந்திகம், கோசலம் மற்றும் மகதம் என நான்கு பெரும் நாடுகளாக மாற்றமடைந்ததாக வரலாறு தெரிவிக்கிறது.

பொது யுகத்திற்கு முன்பான 1750 முதல் 500 வரையிலுமான காலகட்டம் வேதகாலமாக அறியப்படுகிறது. வேதகாலம் என்பது வடமேற்கு இந்தியாவிற்கு மட்டுமே பொருந்துவதாகும். கிழக்கு, தெற்கு, மத்திய இந்தியாக்களில் அவைகளுக்கேயான ஒரு கலாச்சாரப் பாரம்பரியம் இருந்திருக்கிறது. வேத ஞானியரால், ரிஷிகளால் கண்டறியப்பட்டது வேதங்கள். இவை எழுத்து வடிவமின்றி, வாய்மொழியாகவே தலைமுறை தலைமுறையாக எடுத்துவரப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாகவே இவற்றில் ஒலியும், உச்சரிப்பும், வரிகளும் இன்றைய நவீன காலம் வரை மாறாமல் காணப்படுவதாக சொல்லப்படுகிறது. இந்தியப் பண்பாட்டிலும், வரலாற்றிலும், மக்களின் வாழ்க்கை முறைகளிலும் பல்வேறு தாக்கங்களையும், மாற்றங்களையும் உண்டாக்கியதில் வேதங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

வேதங்களின் மொழி பழமையானதாகக் கருதப்படுகிறது. ஆரியமொழி, வேதமொழி, வடமொழி என அறியப்படும் வேதகால மொழியிலிருந்து கிளைத்ததாக சமஸ்கிருதமொழி கூறப்படுகிறது. தற்போது சமஸ்கிருதம் வழியாகவே வேதங்கள் அறியப்படுகின்றன. பிந்தைய வேத காலமாகக் கருதப்படும் பொ.ஆ.மு.400 லிருந்து பொது ஆண்டின் 400களில் சமஸ்கிருதம் பரவலாக அறியப்பட்டிருக்கிறது. இருப்பினும் இம்மொழி, அறிஞர்கள் மற்றும் மேல்தட்டு மக்கள் அளவிலேயே புழங்கியிருக்கிறது. மக்களின் மொழியாக பிராகிருதம், பாலி போன்ற மொழிகள் அதிகளவில் பயன்பட்டிருக்கின்றன. பிந்தைய வேத காலத்திலேயே இராமாயணம், மகாபாரதம் போன்ற காப்பியங்கள் சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்பது அறிஞர்களின் கருத்து. சமஸ்கிருதத்திற்கு இலக்கணம் வகுத்தவர் பாணினி.

வேதகலாச்சாரம் என்பது பஞ்சாப் மற்றும் மேலை கங்கைச் சமவெளிகளில் பரவியிருந்த ஒரு மக்கள் குழாம் கடைப்படித்த ஒன்று. சில வரலாற்றாய்வாளர்கள் வடமேற்கான பாரசீகம் மற்றும் அதற்கு அப்பாலிருந்து வந்த தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் மூலம் இது நிகழ்ந்திருக்கலாம் எனக் கணிக்கிறார்கள். வேதகாலத்தின் முக்கியத் தொழிலாக மேய்ச்சல் குறிப்பிடப்படுகிறது. மண்வேலைகள், நூல் நூற்றல், பருத்தி கம்பளி ஆடைகள் தயாரிப்பது துணை தொழில்களாக இருந்திருக்கின்றன.

வித் என்ற வேத சொல் அறிவு என்னும் பொருள் கொண்டிருப்பதால் அறிவு, அறிதல், உயர்வான அறிதல் எனும் அர்த்தங்களில் வேதம் கையாளப்படுகிறது. வேதங்கள் ஸ்ருதி அதாவது காதல் கேட்கப்பட்டது எனும் பொருளில் அழைக்கப்படுகின்றன. ரிக், யசூர், சாம, அதர்வண என நான்கு வேதங்கள் இருக்கின்றன. வேதங்கள் நான்கு எனினும் ரிக் அதாவது இருக்கு வேதத்தின் 1028 பாடல்களே பெரும்பாலும் அடிப்படையாக அமைகின்றன. வாய்மொழியாக கடத்தப்பட்டு பின்னர் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வேதப் பாடல்கள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு ரிஷிகளால் பாடப்பெற்றுள்ளன.

வேதங்கள் சமஹிதைகள் அதாவது கவிதைகள். வேத பாடல்கள் பிராத்தனைகளாக அமைக்கப்பட்டுள்ளன. புருசஷுக்தம் எனப்படும் பத்தாம் மண்டலப் பாடல்கள் அண்டத்தின் பிறப்பைப் பற்றி பேசுவதால் முக்கியமானதாக நவீன கால அறிஞர்கள் கருதுகிறார்கள். வேதங்களில் பல்வேறு கேள்விகள்

எழுப்பப்படுகின்றன. பதில்களை தேடியும் வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

ஒவ்வொரு வேதமும் நான்கு பகுதிகளைக் கொண்டது. அவை சம்ஹிதைகள், பிராம்மணங்கள், ஆரண்யகங்கள் மற்றும் வேதாந்தங்கள். சம்ஹிதை என்பதே வேதம். சம்ஹிதை பாடல்கள். மையப் பாடல்கள். பாடல்களின் தொகுப்பு. இதன் காலம் பொ.ஆ.மு 1500 முதல் பொ.ஆ.மு 1000 ஆக இருக்க வேண்டும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ரிக்வேத சம்ஹிதை, யசூர்வேத சமஹிதை, சாமவேத சம்ஹிதை மற்றும் அதர்வவேத சம்ஹிதை என நான்கு இருக்கின்றன. பிராமணங்கள் பொ.ஆ.மு 900, ஆரண்யகங்கள் பொ.ஆ.மு 800-700, உபநிடதங்கள் பொ.ஆ.மு 700-500 காலகட்டங்களில் இயற்றப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வேதங்களைத் தொகுத்தவர் வேதவியாசர் எனும் கிருஷ்ணதுவைபாயனர் என மரபாகச் சொல்லப்பட்டு வருகிறது. பொ.ஆ.மு 800-600 கால கட்டத்தில் வேதங்கள் தொகுக்கப்பட்டிருக்கலாமென்றும், பொ.ஆ.மு 200-ம் ஆண்டுகளில் தொகுக்கப்பட்டவை என்றும், வேதங்கள் தோன்றிய காலம் போலவே அவற்றின் தொகுக்கப்பட்ட காலமும் பலவாறாக பதியப்பட்டிருக்கிறது. வேதக் கடவுளர்களின் பெருமைகள், வேண்டுதல் முறைகள், வேள்விச் சடங்கு முறைகள், சடங்குகள், வேள்விகள், பலியிடல்கள் மூலம் வானத்துக் கடவுளர்களை மகிழ்வித்து அதன் மூலம் வலிமையையும், பொருட்களையும், நீண்ட ஆயுளையும், வெற்றியையும், உடல் நலத்தையும், மழையையும், இயற்கை மேன்மையும் வேண்டுவதற்கும் பெறுவதற்குமே சம்ஹிதைகள் எனும் துதிப்பாடல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. தேவர்களைப் போற்றி, புகழ்ந்து பாடுபவையே சம்ஹிதைகள் என்றால் மிகையாகாது.

சம்ஹிதைகளின் முக்கியக் கடவுளாக இந்திரன் இருக்கிறார். வானத்துத் தேவர்களின் தலைமைக் கடவுளாக இவர் கொண்டாடப்படுகிறார். வருணன், அக்னி, வாயு போன்ற முப்பதிற்கும் மேலான கடவுளர்கள் புகழப்படுகிறார்கள். நீர்க் கடவுளான வருணன் முக்கியத்துவம் நிறைந்தவராக இருக்கிறார். இவர் தா எனப்படும் அண்டத்தின் காப்பாளராக அறியப்படுகிறார். இவர் எங்கும் நிறைந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். வேதகாலத்தில் வருணன், ருத்ரன் தவிர அனைத்துக் கடவுளர்களும் நல்லன செய்பவர்களாக அறியப்பட்டிருக்கிறார்கள். பின்னர் வந்த கருத்தாங்களில் முக்கியமானது புருஷ உருவாக்கம். புருஷனை

பலியிட்டே அண்டம் உருவாக்கப்படுவதாகச் சொல்லப்படுவதால், பலியிடுதல், வேள்விகள் வேத கருத்துக்களில் அதிக இடம்பெற ஆரம்பிக்கின்றன. சம்ஹிதைகளில் இருந்த முப்பது அதாவது முப்பத்து மூன்று கடவுளர்கள் இன்று மூன்றாயிரத்திற்கும் மேலான கடவுளர்களாகப் பல்கி பெருகியிருப்பது விந்தையானது.

யசூர் சம்ஹிதைகள் சடங்கு முறைகளையும் அவற்றிற்கான வழிமுறைகளையும் பாடுகிறது. ஓசை நயத்தோடு பாடுவதற்கு ஏற்றவாறு ரிக் சம்ஹிதையிலிருந்து தேர்வு செய்து எடுக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பே சாம வேதம். இவை இசையோடு பாடக்கூடிய பாடல்கள். அதர்வ வேதம் குறிப்பிட்ட நோக்கத்திற்கான வேள்விச் சடங்குகளையும் அவற்றை செய்யும் முறைகளையும் கொண்டிருக்கிறது. இது பெரும்பாலும் மாயாஜால வித்தைகளோடு, தாந்த்ரீக முறைகளோடு தொடர்வுள்ளதாக அறியப்படுவதால் இதனைப் பின்பற்றுவோர் எண்ணிக்கை குறைந்து, நாளடைவில் மூன்று வேதங்கள் என்ற நிலையே உருவாகியிருக்கிறது.

பிராமணங்கள் என்பவை சம்ஹிதைகளுக்கான விளக்கங்கள், உரைநடைகள். ஒவ்வொரு வேதத்திற்கும் பிராமணங்கள் உண்டு. வேதத்தின் மையப்பொருளையும், சடங்குமுறைகளையும் தவறில்லாமல் விளக்கும் பொருட்டும் பிராமணங்கள் உருவாகியிருக்கின்றன. ஆரண்யகங்கள் காடுகளில் உருவாக்கப்பட்டவை. வேதங்களின் பொருளையும், தத்துவங்களையும் அறியும் பொருட்டு, காடுகளில் வாழ்ந்த ரிஷிகள் ஆழ்ந்து ஆராய்ந்து வெளியிட்ட விளக்கங்கள். சடங்கு முறைகளின் முக்கியத்துவத்தையும் அவற்றின் தேவைகள் குறித்தும் கேள்வி எழுப்புவை. வரைமுறையற்ற வேள்விகளும், பலியிடல்களும் நடந்த காலகட்டத்தில் இவை உருவாகியிருக்கலாம். இக்காலத்திலேயே வேத மரபான வைதீகத்திற்கு எதிராக வேத மறுப்பான அவைதீக கோட்பாடுகள் மக்களிடம் எடுத்துரைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் அறிஞர்களால் முன்வைக்கப்படுகிறது. இக்காலகட்டத்தில் வேதமும், வேதமுறையைப் பின்பற்றிய ஆரிய மக்களும் மேற்கு மற்றும் வட இந்தியா முழுவதையும் தமதாக்கி, கிழக்கிலும் பரவத் தொடங்கியிருந்தார்களெனக் கருதப்படுகிறது. .

அருகே அமர்தல் எனப் பொருள்படும் உபநிடதங்கள் உரைநடை வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. கேள்வியும், அதற்கான விளக்கமுமாக இவை உள்ளன.

உபநிடத வேதாந்தம் எனவும் அழைக்கப்படுகின்றன. வேதத்தின் இறுதிப் பகுதியாக வருவதால் இப்பெயர். புருஷ என்ற தத்துவம் உபநிடதங்களில் பிரம்மம் என்ற மைய கருத்தாக முன்மொழியப்படுவதாக, மாற்றமடைவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆத்மா பற்றிய தத்துவங்களும் அதிகம் இடம்பெறுகின்றன.

வேதங்களுக்கான தத்துவார்த்த விளக்கங்களே உபநிடந்தங்கள் எனில் மிகையாகாது. இந்த தத்துவங்கள் வேதாந்த முறையாக, ஒரு அறிவார்ந்த மரபாக தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது. வேதாத்தம் அதன் காலத்திய சமணம், புத்தம், ஆசிவகம் போன்ற நெறிகளோடு விவாதித்து விட்டுக் கொடுத்து இன்றைய காலம் வரையிலும் மேம்பாடடைந்து வந்துள்ளது. கால நேர இடமற்ற அந்த எல்லாம் வல்ல பரப்பிரம்மமே ஒரு தனி மனிதர் எனக் கண்டு பிடித்த, விளக்கிய, வேதாந்த முறை அறிதல், மனம், ஆழ்மனம் போன்றவை குறித்தும் அதிகம் பேசுகிறது.

இருநூறுக்கும் மேற்பட்ட உபநிடதங்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டாலும் பதினாறு உபநிடதங்கள் ஆதி சங்கரரால் வழி மொழியப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஐதரீயம், கௌஷிதகம், கடம், தைத்ரீயம், கைவல்யம், ஸ்வேதாஸ்வேதரம், நாராயணம், ஈசம், பிருகதாரண்யகம், ஜபலம், கேனம், சாந்தோக்யம், பிரஸ்னம், முண்டகம், மாண்டூக்யம் மற்றும் நரசிம்ம தாபனி போன்றவையே அவை.

முக்கியமான சில குறிப்பிட்ட உபநிடதச் சொற்களுக்கு, வேதாந்த மரபில் பலவகையான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய தத்துவங்களை, விளக்கங்களை ஆதாரமாகக் கொண்டு பல மரபுகள் உருவாகியிருக்கின்றன. தத்துவ மஸி - அது நீயே தான், அகம் பிரம்மாஸ்மி - யாமே பிரம்மம், கடவுள் போன்ற குறியீட்டுச் சொற்கள் மிகப் பரவலான விவாதங்களை இந்திய மண்ணில் நிகழ்த்தியிருக்கின்றன.

வேதங்கள் இறைவனால் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுவதால் மிகுந்த சமய முக்கியத்துவம் பெற்றவையாகக் கருதப்படுகின்றன. வேதங்களின் அத்தனை பெருமையும் நிறைந்ததாக காயத்ரி மந்திரம் கருதப்படுகிறது. யாகங்கள் மூலம் தேவர்களை மகிழ்வித்து அதன் மூலமாக பலனைப் பெறலாம் என்பதால் யாகங்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேதத்தை அறிந்தவர் வேதியர். மூன்று வேதமறிந்தவர் திரிவேதி. நான்கும் அறிந்தவர் சதுர்வேதி. வேதியர் பின்பற்றும் மதம் வேதமதம். பிரம்மம் உயர்வானது எனச் சுட்டப்படுவதால் அதனை அறிந்த பிராம்மணரும் உயர்வான இடத்தைப் பெறுகிறார். வேள்விச் சடங்குகளைச் செய்ய இவர்கள் மட்டுமே உரிமை பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆரம்ப நிலை வேதகாலத்தில் இவர்கள் எளிய தவ வாழ்வு வாழ்ந்திருந்து மக்களின் அரசுகளின் மனதில் இடம்பெற்றிருக்க வேண்டும். கால ஓட்டத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு மேல்நிலை, கீழ்நிலை, சாதியமைப்பு போன்ற உருவாக்கங்களுக்கு பிராமணர்களே காரணமாகிறார்கள் என்பதும் பல்வேறு அறிஞர்களினால் பதியப்பட்டிருக்கிறது.

உலகிலுள்ள தொன்மையான மொழிகளுள் தமிழ் சிறப்பானதொரு மொழியாக உலக அறிஞர்களால் ஏற்கப்பட்டிருக்கிறது. எழுத்து மொழியாக பதியப்பட்டுள்ள ஈராயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட மொழிகளுள் இன்றும் ஒப்புயர் பெற்ற மொழியாக தமிழ் ஒன்றே நிலைத்து வாழ்கிறது. செம்மொழிகளாக அறியப்பட்ட சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் வழக்கொழிந்து போக தமிழ் இன்றைக்கும் தமிழர் மனங்களில் மணம் வீசுவதற்குக் காரணம் அதன் நீண்ட, நெடிய பாரம்பரியமும், இலக்கண இலக்கியச் செழுமையும் எனில் மிகையாகாது. சங்கப் பாடல்கள் தமிழுக்கு என்றென்றும் மணிமகுடமாகத் திகழ்பவை.

எகிப்து, சுமேரியா, கிரேக்கம், சீனம் போன்றே தமிழ்நிலமும் தொன்மையும் பழமையும் பெருமையும் புகழும் கொண்டது. உலக நாகரிகங்களுள் ஒன்றாக தமிழ் நாகரிகம் கருதப்படுவதற்கு ஆதாரமாக ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் இம்மண்ணிலிருந்து கிடைக்கப்பெற்றள்ளன. உலக அறிஞர்கள் வாய்மொழி வரலாற்றை விடுத்து தகுந்த ஆதாரங்களையே ஏற்றுக் கொள்வர். தமிழ் அதன் பழமைக்கும் பழமையாக பலப்பல சான்றுகளை அள்ளித் தந்த வண்ணம் வீறு நடை போடுகிறது. இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் மதுரைக்கு அருகேயுள்ள கீழடி எனும் ஊரின் கீழடி தொல்லியல் களம், தமிழர் பழம்பெருமை பேசும் சங்க கால மக்களின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள உதவும் சமீபத்திய அகழாய்வு என்பது தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரியதொரு வரலாற்றுச் சான்றாகும்.

மனிதர்களின் பரிணாமத்தை உயிரியல் பரிணாமம், பண்பாட்டுப் பரிணாமம் எனப் பிரிப்பர். உயிரியல் பரிணாமம் என்பது கரிமப் பரிணாமம். வாலில்லாக் குரங்குகளிலிருந்து ஆதி மனிதர்களும், பின் அவர்களிடமிருந்து மூதாதை மனிதர்களும், அவர்களுக்குப் பின் வந்த மனிதர்களும் எவ்வாறு உடல் ரீதியான மாறுபாடுகளை படிப்படியாகப் பெற்று, தற்காலத்திய மனிதர்களாக பரிணாம மாற்றம் அடைந்தார்கள் என்பதை சான்றுகளுடன் விளக்குவது. உடலின் மாறுபாடுகள் அதாவது பண்புகளின் மாற்றங்கள் மிகவும் மெதுவாகத் தெரியும் அல்லது தோன்றுமென்பதால் மனிதர்களின் உயிரியல் பரிணாமம் மிகத் தொலைவான கால இடைவெளிகளில் நிகழ்ந்திருக்க வேண்டும். படிம வளர்ச்சியை, பரிணாமம் நிகழும் முறையை ஒருவராலும் காண இயலாதென்பர். அத்தகைய மிக மிக மெதுவான கால அளவிலேயே உயிரினங்களில் பரிணாமம் அதாவது படிம வளர்ச்சி உருவாகும். இதன் காரணமாகவே ஆதிமனிதர்களிலிருந்து மனித குலம் பரிணமித்து வந்ததை இலட்சக்கணக்கான வருடங்களில் குறிப்பிடுவர். மில்லியன் என்பது பத்து லட்சம் வருடங்கள். பில்லியன் என்பது பத்து மில்லியன் வருடங்கள் அதாவது தமிழில் நூறு கோடி வருடங்கள். பெரும்பாலும் உயிரினங்கள் படிம வளர்ச்சி பெற்று வந்ததை மில்லியன் வருடங்களாகக் கணக்கிடுவது நடைமுறை. இதில் மரபணுக்களில் உண்டாகும் மாறுபாடுகளே படிம வளர்ச்சிக்கு அடிப்படையானவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பண்பாட்டுப் பரிணாமம் அல்லது கலாச்சாரப் பரிணாமம் என்பது மனிதரது உயிரியல் பரிணாமத்திற்குப் பின் நிகழ்ந்தது. இது மனிதரது புறத் தேவைகளின் பொருட்டு தோன்றியது. உயிரியல் பரிணாமத்தின் ஆரம்ப நிலை முன்னோடி வாலில்லா குரங்கினத்திலிருந்து, தற்போதைய மனிதர்களின் தோற்ற அமைப்பு உருவாவதற்கு ஏறக்குறைய முப்பது மில்லியன் அதாவது மூன்று கோடி வருடங்கள் தேவைப்பட்டிருக்கின்றன. கிடைத்திருக்கும் ஆய்வுச் சான்றுகளிலிருந்து ஹோமோ எரக்டஸ் எனப்படும் நிமிர்ந்த நேரான மனிதர்கள் ஐந்து லட்சம் வருடங்களுக்கு முன்பு உருவாகியிருக்கலாம் எனத் தெரிகிறது. இந்த நேரான மனிதர்களே முதல் மனிதர்கள் எனக் கருதப்படுகிறார்கள். இவர்களுக்குப் பின்னும் பல மாறுபாடுகள் ஏற்பட்டு மனித குலம் முன்னேறி வந்திருக்கிறது. இருபது லட்சம் ஆண்டுகளுக்கு முன் உள்ள காலத்தையே கற்காலமாகக் கொள்கிறார்கள். இக்காலகட்டமே மனிதர்களின் கலாச்சாரப் பரிணாமம் துவங்கிய காலம். பழைய கற்காலத்தின் ஆரம்பத்தில் கற்கருவிகள், கல்லாயுதங்கள் பயன்பாட்டில் இருந்திருக்கும்.

தற்போதைய காலத்திலிருந்து பதினோராயிரம் வருடங்களுக்கு முன் வரையிலுமான காலம் புதிய கற்காலமாகும். இதன் பின்னரே வெங்கலக் காலம், இரும்புக் காலம் பரவலாகி நாகரிகத்தின் தொட்டில்கள் எனக் கருதப்படும் உலகின் பழமையான நாகரிகங்கள் உருவாகியிருக்கின்றன.

பண்பாட்டுப் பரிணாமத்தின் மிக முக்கியமானதொரு கூறாக மனித முன்னோடிகள் கருவிகளை கையாள கற்றுக் கொண்டதைக் குறிப்பிடலாம். முன்னங்கால்களை அதாவது கைகளை நடப்பதற்குப் பயன்படுத்தாமல் இரு கால்கள் மூலம் நடக்கத் துவங்கிய பின்னரே கைகளின் பயன்பாடு துவங்கியிருக்கும். கண்டெடுக்கப்பட்டுள்ள கற்கருவிகளில் ஆப்பிரிக்காவில் எடுக்கப்பட்டுள்ள பெப்பில்ஸ் எனப்படும் கூரான கல்லாயுதங்களே மிகவும் பழமையானவையாகக் கருதப்படுகின்றன. இவை மிகவும் கடினமான பாறைக் கற்களை வெட்டி, செதுக்கி, கூராக்கி செய்யப்பட்டுள்ளன.

நெருப்பை, நெருப்பின் பயன்பாட்டைக் கண்டு கொண்டது மூதாதை மனிதர்களின் அரியதொரு சாதனை. அதிலும் நெருப்பை உணவு சமைக்கப் பயன்படுத்தியது தனிச் சிறப்பு. மூதாதையர்கள் வேட்டையாடுதல் மூலமும், மீன் பிடித்தல் மூலமும் உணவுத் தேவையை ஈடுசெய்திருப்பர். உணவு சேகரிப்பதும் நடைமுறையில் இருந்திருக்கும்.

இறந்தோரை நல்லடக்கம் செய்வது அடுத்த நிலை கலாச்சாரப் பரிணாமமாக இருந்திருக்க வேண்டும். இருபத்தையாயிரம் ஆண்டுகளுக்குமுன் இவ்வாறான பண்பாடு உருவாகியிருக்கலாம் என அறியப்படுகிறது. தொடர்ந்து இறந்தோர் உடலோடு அழகு சாதனங்கள், மணிகள் போன்றவற்றையும் சேர்த்து நல்லடக்கம் செய்திருப்பது அக்காலத்திய மக்கள் இறப்பிற்குப் பின்னான வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டிருந்ததைக் காட்டுகிறது.

வாழிடங்களான குகைகளின் சுவர்களில் கோடுகளையும், எளிமையான ஓவியங்களையும் வரைந்து வைத்தது பின்னர் வந்த ஓவியக் கலைக்கு முன்னோடிப் பழக்கம்.

வேளாண்மையைக் கண்டுகொண்டது மனித குல வரலாற்றின் ஆகப்பெரும் கண்டறிதல். பயிர்த்தொழில் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கியதன் காரணமாக மற்ற தொழில்கள் மாற்றம் பெற்று, நாகரிக மாற்றங்கள் வேகமெடுத்தன

என்றால் மிகையாகாது. வேளாண்மையோடு கால்நடைகளைப் பழக்கியதும் முன்னோர்களின் அருஞ்செயல்.

ஆடைகள் நெய்யக் கற்றுக் கொண்டது மற்றொரு சாதனை. ஊர்களாக ஒன்றுபட்டு, ஒரு தலைமையின் கீழ் அணிதிரண்டது அருமையான நாகரிக மாற்றம். மொழியைக் கண்டறிந்தது மனிதர்களது மகத்தான முன்னேற்றம். எண்ணங்களை எழுத்தாக்கியது அருமையிலும் அருமையான கண்டுபிடிப்பு. உருளையும் அதன் பயன்பாடும் அறியப்பட்ட உடனேயே மனிதர்களால் சும்மா இருக்கமுடியவில்லை போலும். பயணங்கள் மக்களின் மனங்களைப் பெரிதாக்கியதோடு உலகத்தை சுருங்கச் செய்துவிட்டது. உலோகங்களின் பயன்பாடும், அதன் மூலமான போர் ஆயுதங்களும், மண்ணாசையும் சேர்ந்து கொள்ள அதன் பிறகான உலக வரலாறு முழுக்கவே போர்கள்.. போர்கள்..ஓயாத போர்கள். வரலாறு என்றாலே அது அரசகுல வரலாறே என்றாகிவிட்டது. இத்தனை போர்களுக்கிடையேயும் மக்கள் அடுத்தடுத்த வளர்ச்சி நிலைகளை நோக்கி பீடுநடை போட்டது முத்தாய்ப்பானது.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து முன்னேறி எடுத்து வந்த கலாச்சாரம், பரிணாமத்தை திறமையாக அறுவடை செய்து அனுபவிக்கும் இன்றைய நவீன மனதர்கள் கொடுத்து வைத்தவர்கள். பெரும் பேறு பெற்றவர்கள். காடுகளிலும், மலைகளிலும், ஆறுகளிலும், பனிகளிலும், பாலைநிலங்களிலும், எரிமலைகளிலும், கொடிய விலங்குகளிடையேயும், நச்சுத் தாவரங்களோடும் மல்லுக்கட்டி, முட்டி மோதி, அங்குமிங்கும் அலைந்து, அரும்பாடுபட்டு சேர்க்கப்பட்ட, கொண்டு வரப்பட்ட இந்த அறிவுக்கு, அருங்கொடைக்கு, அறத்திற்கு, ஞானத்திற்கு, காப்புரிமை - ராயல்டி கேட்கும் அறிவியல் மனிதர்களை என்னவென்று பாராட்டுவது? நமது அறிவு எப்படி வந்தது? எங்கிருந்து வந்தது? அறிவின் வரலாறு என்ன? அறிவு வந்த பாதை எது? அறிவை விதைத்தவர்கள் யார்?

அறிவியல் தமிழ் எனக் கொண்டாடப்படும் தமிழும் தமிழர்களும் அறிவில் சிறந்தவர்களென்பதற்கு பல சான்றுகள் கிடைத்திருக்கின்றன. பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்த இடங்கள் தமிழகத்தில் அறியப்பட்டுள்ளன. மெட்ராசியன் நாகரிகம் என அறியப்படும் தமிழகக் கற்காலம், தொல்லியல் ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளன. சென்னை பல்லாவரம் பகுதியின் அதிரம்பாக்கம் பகுதியின் அகழாய்வில் கற்கருவிகள், கற்கால மக்களின் ஆயுதங்கள்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தருமபுரி பகுதியிலுள்ள பர்கூர் மலைப் பகுதிகளிலும் மேலும் பல இடங்களிலும் கல்லாயுதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மதராசிய கலாச்சாரம் இருபது லட்சம் ஆண்டுகள் பழமையானதாக நிர்ணயிக்கப்படுவதால் இது பழைய கற்காலத்திற்கும் முன்னரே இருந்த கலாச்சாரமாகக் கருதப்படுகிறது. தொல்லியலாளரும் புவியியலாளருமான இராபர்ட் புருசு ∴பூட் என்ற ஆங்கிலேய அறிஞரால் 1863-ல் அதிரம்பாக்கம் கல் தொழிலகங்கள் கண்டறியப்பட்டன. இங்கே கற்கோடரிகள், மும்முக கருவிகள், வெட்டும் கற்கள், ஒற்றை முகக்கற்கள், பாறைச் செதில்கள் போன்ற சிறியதும், பெரியதுமான பல்வேறு வகையான தொல் பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. நூறுவருடங்களுக்கும் மேலாக இப்பகுதியில் பல்வேறு அகழாய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2011ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி மற்றும் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை அறிவியல் முறையிலான சோதனைகளுக்கு உட்படுத்தி, இவை பதினைந்து லட்சம் வருடங்களுக்கு முற்பட்டவை என நிரூபிக்கப்பட்டுள்ளது. மதராசிய கலாச்சாரத்தைச் சேர்ந்த மக்கள், குழுவாக வேட்டையாடியிருக்கின்றனர் என்றும், விலங்குகளை வளர்க்கவில்லை என்றும் அறியப்பட்டுள்ளது. பாறை குகைகளில் வாழ்ந்திருக்கின்றனர். கொற்றலையாற்றின் படுகையான அதிரம்பாக்கத்தின் அகழ்வாய்வு முடிவுகள், இந்தியாவிலேயே மெட்ராசியன் கலாச்சாரமே மிகப் பழமையான கற்காலம் எனச் சான்றுரைக்கின்றன. காஞ்சிபுரம், வேலூர், தருமபுரி போன்ற வட மாவட்டங்களிலேயே பெரும்பாலான கற்கருவிகள் கண்டறியப்பட்டுள்ளன. கருவிகள் மிகவும் கரடுமுரடாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பண்டைய மக்களின் கல்திட்டைகள், கல் வட்டங்கள் போன்றவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கண்டுபிடிப்புகள் மூலம் தமிழகத்தில் மிகப் பழைய காலத்திலேயே மக்கள் பரவலாக வாழ்ந்திருப்பது நிரூபணமாகிறது.

பெரிய சீனிக்கல் அதாவது குவாட்சையிட் பாறைகளில் நெருப்பை ஏற்றிச் சூடாக்கிய பின்னர் அதன் மேல் தண்ணீரை ஊற்றி பாறையைப் பிளந்து ஆயுதங்கள் செய்திருக்கின்றனர். காலம் செல்லச் செல்ல இவர்கள் உபயோகிக்கும் ஆயுதங்களில் செப்பனிடும் முறைகள் அதிகம் கையாளப்பட்டு செய்திறனில் ஒரு வித படி வளர்ச்சியைக் கண்டுள்ளனர். இவ்வளர்ச்சிக் காலங்களின் போது இவர்களின் ஆயுதங்கள் கூழாற்கற்களாலும், முழுக்கற்களாலும்,

முழுக்கற்களிலிருந்து உடைக்கப்பட்ட ஆயுதங்களாகவும் வளர்ந்திருக்கிறது. இந்த வளர்ச்சியை தழும்புரியில் இருந்து தழும்பழி என்று கூறுவர். தழும்பழி ஆயுதங்கள் பதினைந்து லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனில் தழும்புரி ஆயுதங்கள் அதனினும் பழமையானவை. தமிழக ஆய்வுகளில் இரண்டு விதமான ஆயுதங்களும் கிடைக்கப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழக மத்திய பழங்காலம் பொ.ஆ.மு. 50000 முதல் பொ.ஆ.மு. 20000 வரைக்குமான காலகட்டமாகக் கணிக்கப்படுகிறது. இக்ககாலத்தில் வேட்டையாடுதலில் மாற்றங்கள் தோன்றியிருக்கின்றன. தொழில் நுட்பமும் வளரத் தொடங்கியிருக்கிறது. கடினக் கல்லாயுதங்களான தழும்புரி, தழும்பழிக்கு மாற்றாக செதிற்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கோடரி, ஈட்டி போன்ற ஆயுதங்கள் குறைந்து, செதிற்கல்லிலிருந்து நீண்ட தூரம் செல்லும் வில் போன்றவற்றை தயாரிக்கும் நுட்பத்தை அறிந்துள்ளனர். சுரண்டும் கருவிகள், துளைக்கருவிகள், கூர்கருவிகள் போன்றவையும் செய்துள்ளனர். இக்காலத்திய மக்கள் மரவுரி ஆடைகளையும், மிருகத்தின் தோலையும் ஆடையாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

மேலைப் பழங்கற்காலம் பொ.ஆ.மு. 20000 முதல் பொ.ஆ.மு. 10000 வரைக்கும் கணிக்கப்படுகிறது. இக்காலத்திற்கான சான்றாக திருவள்ளூர் மாவட்ட குடியம் குகை சுட்டப்படுகிறது. இக்காலகட்ட மக்கள் இன்னும் சற்று மேம்பட்ட ஆயுதங்களை செய்ய கற்றுக் கொண்டிருப்பர்.

குறுனிக் கற்காலம் எனும் இடைக்கற்காலம் பொ.ஆ.மு. 10000 முதல் பொ.ஆ.மு. 3000 ஆண்டுகளாகவும், புதிய கற்காலம் பொ.ஆ.மு. 3000 தொடங்கி பொ.ஆ.மு. 1000 ஆண்டுகள் கால அளவாகவும் தமிழகத்தில் பிரிக்கப்படுகிறது. அழுதகன்னி ஆற்றுப்படுகை போன்ற சிறு ஓடைகளிலும் இடைக்கற்கால கருவிகளும் ஆயுதங்களும் கிடைக்கப்பெறுவதால். இக்காலகட்டத்தில் மக்கள் நிரந்தரமான குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர் என்பது தெளிவாகிறது. மட்பாண்டம் செய்தல் தமிழக புதிய கற்காலத்தின் மேம்பட்ட தொழிலாக இருந்திருக்கிறது. பயிர் செய்தலும், பிராணிகள் வளர்ப்பும் மிகுந்திருக்கிறது.

தமிழக மண்ணில் நடந்துள்ள நூற்றுக்கணக்கான அகழாய்வுகளில் சிறந்த தொல்லியல் களமாக அமைந்திருப்பது ஆதிச்சநல்லூர் தொல்லியல்களமே.

முந்தைய திருநெல்வேலி மாவட்டம், தற்போதைய தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டத்தின் பொருநை நதி என அழைக்கப்படும் தாமிரபருணி ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் இத்தொல்லியல் களம் தமிழர் நாகரிகத்தின் தொட்டில் எனக் கருதப்படுகிறது. இக்களம் முற்காலப் பாண்டியர்களின் தலைநகரான கொற்கை அருகே அமைந்திருப்பதால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியல் சான்றாகவும் இருக்கிறது.

1876-ம் ஆண்டில் ஜெர்மன் அறிஞர் ஜாகர் என்பவரால் ஆதிச்சநல்லூரில் முதன் முதலாக அகழாய்வு நடந்திருக்கிறது. கிடைத்த பல முக்கியமான தொல்லியல் அரும்பொருட்களை பெர்லினுக்கு கொண்டு சென்றிருக்கிறார். 1889ற்கும் 1905ற்கும் இடைப்பட்ட காலங்களில், தொல்லியல் ஆய்வாளரான அலெக்சாண்டர் ரெயா என்ற அறிஞர் ஆயிரக்கணக்கான தொல்பொருட்களை வெளிக்கொணர்ந்திருக்கிறார். இவற்றுள் மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள், ஆயுதங்கள், நகையணிகள், பொன், வெண்கலம் அரிய கல் வகைகளிளாலான மணிகள், எலும்புகள் அடங்கும். கிடைத்திருக்கும் பொருட்களிலிருந்து பண்டைய திராவிட நாகரிகத்தின் தொல்பழங்காலத் தொட்டிலாக ஆதிச்சநல்லூர் இருந்ததாக மதிப்பிடப்படுகிறது. 1904-ம் ஆண்டில் லூயிஸ் லெப்பிக்கு என்ற பிரான்சு அறிஞரும் அகழாய்வு செய்து அரிய தொல் பொருட்களை பாரிஸ் மாநகருக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்.

ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம் இறந்தோரை நல்லடக்கம் செய்யும் தாழிக்காடு என்பதால் பண்டைய முறையில் நல்லடக்கம் செய்யும் ஏராளமான சிறிய பெரிய ஈமத்தாழிகள் அதிகளவில் இருக்கின்றன. மேலும் இவை நெருக்கமான அளவில் இருப்பதால் இங்கே பெரியதொரு நகர நாகரிகம் இருந்திருக்க வேண்டும் என கணிக்கப்படுகிறது. இங்கு இரும்பின் பயன்பாடு பொ.ஆ.மு. 1500 ஆண்டளவில் சிறப்பாக இருந்திருக்க வேண்டும் என அகழாய்வுகள் தெரிவிக்கின்றன. இப்பகுதியின் மற்றுமொரு தனிச்சிறப்பாக இரும்பை உருக்கிச் செய்யப்படும் உருக்கு தொழில்நுட்பம் பெருமளவில் பயன்பாட்டில் இருந்திருக்கிறது. ஆதிச்சநல்லூரிலும், அரப்பா நாகரிகத்திலும் மட்டுமே இது போன்ற உருக்கு தொழில்நுட்பம் கையாளப்பட்டிருப்பதால் இந்த இரண்டு நாகரிகங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில் இருந்திருக்கலாம் என்ற கருத்தாக்கம் வலுப்பெறுகிறது. தமிழர்கள் நீண்ட காலமாக சொல்லி வரும் அரப்பா

நாகரிகம் திராவிட நாகரிகமே எனும் கூற்றுக்கு மிகுந்த வலு சேர்ப்பதாக தொல்லெச்சங்கள் சான்று பகர்கின்றன.

வுட்ஸ் ஸ்டீல் என மேலை நாடுகளில் பின்னர் அறியப்பட்ட உருக்கு, தென்னிந்தியாவில் குறிப்பாக ஆதிச்சநல்லூர் பகுதியிலேயே பொது யுகத்திற்கு முன் 600, 550களில் தோன்றியிருக்க வேண்டுமென உறுதியான சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் தயாரான உருக்கு அன்றைய கிரேக்க, சைன, உரோமப் பேரரசுகளுக்கு பெருவாரியாக அனுப்பப்பட்டதாக இந்நாடுகளின் இலக்கிய ஆதாரங்கள் சுட்டுவதாக பதிவுகள் சொல்கின்றன. இரும்புத்தாதுவை அதிக வெப்பத்தில் சூடாக்கி, கரி மூலப்பொருளைச் சேர்த்து ஒருவிதமான கொதிநிலையில் கரிமம் அதிகம் கொண்ட இந்த உருக்கினைச் செய்யும் தமிழக தொழில் நுட்பம், மற்ற பல நுட்பங்களை விட மேம்பட்டதாக இருந்திருக்கிறது. செவ்வியல் காலங்களில் ஐரோப்பா, அரேபியா போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் இவை அனுப்பப்பட்டிருக்கின்றன. இத்தொழில் நுட்பத்தை பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலும் கூட ஐரோப்பிய நாடுகள் அறிந்திருக்கவில்லை எனத் தெரிகிறது. 1790-ல் தமிழக உருக்கு மாதிரிகள் பிரிட்டிஷ் ராயல் அகாடமியால் தருவிக்கப்பட்டு அங்கு ஆய்வுக்கூடங்களில் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன.

1914-ல் மேற்கொண்ட அகழ்வாய்வில் பண்டைய பயன்பாட்டு பானை, ஓடுகள், புதைத்தல் தொடர்பான மட்கலங்கள், பொன் பொருட்கள், செம்பு வடிவங்கள், முனைவேல்கள், தொங்கும் விளக்குகள் போன்றவை கிடைக்கப் பெற்றுள்ளன. கருப்பு நிற மட்கலன், சிவப்பு நிற மட்கலன் போன்றவையும், தென்னிந்திய இரும்பு கால நாகரிகத்தின் அடையாளமான கருப்பு சிவப்பு நிற மட்கலனும் எடுக்கப்பட்டுள்ளன.

திருமூர்த்தி அவர்களின் தலைமையில் 2004-ல் இந்திய தொல்லியல் துறையால் நடத்தப்பட்ட ஆய்வுகளும் பல அரிய தொல்லெச்சங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. வரலாற்று காலத்திற்கு முன்பான இந்திய, தமிழ் நிலத்தை அறிந்து கொள்வதில் முக்கியப் பங்காற்றும் பல பொருட்கள் கிடைத்திருக்கின்றன. தொல் பொருட்களை கரியம் காலக் கணக்கீட்டு சோதனைக்கு ஆட்படுத்தியதில் பொ.ஆ.மு. 1570 ஆண்டுகள் அளவினதாக அறியப்பட்டுள்ளன.

2005-ம் ஆண்டு அகழ்வாய்வில், அறுநூறு சதுர மீட்டரில் 160 தாழிகளும், செப்பு வளையங்கள், செம்புக் கோடரிகள், இரும்பு வேல்கள், புதியகற்கால கற்கருவிகள், நெல்உமி, அரிசி, தானியங்கள், எழிலூட்டும் வேலைப்பாடுள்ள பானை ஓடுகள், அதிகமான வெண்கலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் புலி, எருமை, மான், சேவல் போன்றவற்றின் உருவங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

கிடைத்திருக்கும் தொல்லியல் சான்றுகளில் மிக முக்கியமானதாக, கீறல் குறியீடுகள் கொண்ட ஓடுகள் குறிப்பிடப்படுகின்றன. இக்குறியீடுகள் தமிழ் பிராமி எனும் தொல் தமிழ் மொழியின் மூல எழுத்துருக்களாக இருக்கலாமென்ற கருத்து அறிஞர்களிடையே பெரும் வரவேற்பையும், விவாதங்களையும் எற்படுத்தியிருக்கிறது. சில அறிஞர்கள் இக்குறியீடுகளை ஆராய்தறிந்து பொருள் விளக்கமும் தருகின்றனர்.

உடைந்த ஓடொன்றில் அழகியதொரு பெண்ணும், நெல்வயல்களும், கொக்கும், மான் மற்றும் முதலையும் அற்புதமாகப் பதியப்பட்டிருக்கின்றன. இது கிடைத்திருக்கும் சான்றுகளிலேயே ஆர்வத்தைத் தூண்டுவதும், ஏராளமான கதைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதுமாக அறிஞர்களால் புகழப்படுகிறது.

ஆதிச்சநல்லூர் பகுதி உள்நாட்டு வணிக மையமாகவும், பெரியதொரு நகரப் பகுதியாகவும் இருந்திருக்க வேண்டுமென்பதை நூற்றுக்கணக்கான அருகருகே அமைந்திருக்கும் தாழிகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் தமிழர்கள் எல்லா உலோகங்களையும் அறிந்திருப்பதன் வாயிலாகவும் அவற்றை பயன்படுத்தியிருப்பதன் மூலமாகவும் நாகரிக வளர்ச்சியின் அத்தனை படிநிலைகளும் தமிழ் மண்ணிலும் நிகழ்ந்திருக்கிறதென்றும் அறியப்படுகிறது. மேலும் கற்காலம், வெண்கலக் காலம், செம்புக்காலம், இரும்புகாலம் என அத்தனை வரலாற்றுக் காலங்களிலும் தமிழ் மக்களுக்கும் பங்கிருக்கிறதென்பதும் தெள்ளத்தெளிவாக தொல்பொருட்களைக் கொண்டு நிரூபிக்கும் விதமாக ஆதிச்சநல்லூர் அமைந்திருக்கிறதென்பது தமிழர் அனைவருக்கும் பெருமையே. எனினும் தமிழ் நிலத்தில் பண்டைக் காலத்திய வெண்கலப் பொருட்கள் அதிகம் கண்டறியப்படவில்லை என்றும் சுட்டப்படுகிறது.

அரப்பா மொகஞ்சதாரா தொல்லியல் களங்கள் போன்றே அதி முக்கியத்துவமிக்க இந்த ஆதிச்சநல்லூர் தொல்லியல்களத்தை அரசுகளும், அறிஞர்களும் திறமையாகக் கையாளவில்லை என்பது மிகவும் ஏமாற்றமளிப்பதாக உள்ளது. அரப்பா நாகரிகத்தை இந்திய மண்ணில் தேடுவதற்கு பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்யும் மத்திய அரசு, சிந்து வெளி நாகரிகத்தோடு மிக அதிகமான தொடர்புடைய சான்றுகளை அளிக்கும் ஆதிச்சநல்லூர் களத்தை சரியாகக் கையாளவில்லை என பல்வேறு தமிழறிஞர்களும், வரலாற்று ஆய்வாளர்களும் பதிவிட்டிருக்கிறார்கள். உலக பாரம்பரியச் சின்னமாக ஆதிச்சநல்லூரை அறிவிப்பதற்கு ஏன் முயற்சிக்கவில்லை எனவும் கேள்வியெழுப்புகிறார்கள். பிந்தைய அரப்பா நாகரிகமும், அதன் முடிவுக் காலமும் ஆதிச்சநல்லூரின் எழுச்சிக் காலமும் எத்தகைய தொடர்புடையது என்பதை தொல்லியல் தரவுகளே சான்றளிக்க முடியும். நூற்றிப்பதினான்கு ஏக்கர் நிலத்தை அடையாளம் கண்டிருக்கும் தொல்லியல் துறை மிக மிகச் சிறிய அளவிலான இடத்தை மட்டுமே ஆய்வு செய்திருக்கிறதென்பது இந்த மண்ணிற்கு, இந்திய வரலாற்றுக்கு, முன்னோர்க்கு எந்தளவிற்கு மதிப்பு இருக்கிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

சிறு அளவிலான அகழ்வாய்வே இவ்வளவு சான்றுகளை வரலாறுகளை அளிக்குமெனில் முழுவதுமாக அகழாய்வு செய்துமுடிக்கும் போது பல வரலாற்று உண்மைகள் வெளிவருமென்பது உறுதி. மாந்தர் வரலாற்றைப் பற்றிய புதிர்கள் பலவும் விடுவிக்கப்படலாம். தொல் பாண்டிய நாட்டின் பெருமைகள் அறியப்படலாம். தென்னிந்தியாவில் மிகப்பெரிய பழமையான நாகரிகமாகச் சிறந்து விளங்கியது திருநெல்வேலிச் சீமையின் பொருநைக் கரையே எனச் சான்றழித்த கால்டுவெல் அவர்களின் கூற்றும் மெய்யாகலாம்.

கற்கோடாரி, கைக்கோடாரி என அழைக்கப்படும் வரலாற்றுக்கு முற்பட்ட கற்கருவி, மனிதகுல வரலாற்றில் மிக அதிக காலம் பயன்படுத்தப்பட்ட ஒரு கருவியாக அடையாளம் காணப்படுகிறது. இது கீழைபழங்கற்காலம், நடு பழங்கற்காலம் போன்றவற்றின் சிறப்பான கருவியாக கருதப்படுகிறது. இது வேல் போன்று காணப்படக்கூடிய இருமுகக் கருவி. வேட்டையாடிய விலங்குகளைத் துண்டுபோடவும், கிழங்குகளைத் தோண்டவும், மரப்பட்டைகளைத் தரிப்பதற்கும், இரைகளை நோக்கி எறிவதற்கும் கற்கோடரி பெருமளவில் பயன்பட்டிருக்கலாம். இக்கல்லாயுதம், தீக்கற்கள், சீனிக்கற்கள் போன்ற கடினமான பாறைகற்களிலிருந்து

செய்யப்பட்டிருக்கின்றன. இவை அகழ்தல், வெட்டுதல், துரவுதல், கொத்துதல், துளைத்தல், அடித்தல், எறிதல் போன்ற பல்வேறு செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்பது தெளிவு.

பண்டைய தமிழகத்தில், இறந்தோரின் உடல்களை வைத்து மண்ணில் புதைக்கப்பட்ட மண்ணாலான புதைகலன்கள் முதுமக்கள் தாழிகள் எனப்படுகின்றன. இவை பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. மிகவும் பழமையான தாழிகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கிடைத்துள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் காவிரியோடு கலக்கும் நொய்யலாற்றின் கரையில் அமைந்துள்ள கொடுமணல் பகுதி இரும்புக்காலம், வரலாற்றின் தொடக்க காலம் மற்றும் சங்ககாலம் போன்றவற்றிற்கான தொல்லியல் களமாக அறியப்பட்டுள்ளது. மேலும் இவ்வூர் தொன்மையான தொழில் நகராகவும் இருந்திருக்கிறது. அகழ்வாய்வில் கண்டறியப்பட்ட ஆயிரக்கணக்கான பாசி மணிகளும், கருமாணிக்கம், நீலமணி, செவ்வந்திக்கல், மரகதம், வைடூரியம், நீலம், பச்சை, மங்கிய சிவப்புக் கல், கந்தகக் கன்மகி போன்ற நகை கற்களும் இவ்விடத்தில் அலங்காரப் பொருள் தொழிலகம் இருந்திருக்கலாம் என்பதற்கு சான்றளிக்கின்றன. இங்கு உருவாக்கப்பட்ட எ.ு.கு மற்றும் பாசி மணிகள், எகிப்து, உரோம் போன்ற நாடுகளுக்கு மேற்குக்கடற்கரையின் முசிறி துறைமுகம் வழியாக அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. இரும்பால் ஆன ஈட்டி முனைகள், வாள்கள், உருக்காலை, சிப்பி, கிளிஞ்சல் அழகு சாதன வளையல்கள், உரோமப் பேரரசின் பொன், வெள்ளி நாணயங்கள், செப்பால் ஆன சிங்கச் சிலை போன்றவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்பிராமி எழுத்துகள் கொண்ட மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழ் எழுத்து வடிவத்திற்கான சிறந்ததொரு சான்றாகக் கருதப்படுகிறது.

பெருங்கற்கால எச்சங்களின் களஞ்சியம் எனக் கூறப்படும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த புதைமேடுகள், கற்படுகைகள், கல்திட்டைகள், குத்துக்கல், நடுகல், கல்லரண், கல்வட்டம் போன்றவை கிடைக்கும் பரந்து பட்ட தொல்லியல் களமாக பழனி அருகேயுள்ள இரவிகுளம் தொல்லியல் களம் அறியப்படுகிறது. இங்கு கிரேக்க அம்ப்போரா மதுச் சாடிகள் கிடைப்பதால், பண்டைய காலத்தில் இது கிரேக்க வணிகப்பகுதியாக இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. மேலும் இரவிகுளம் அருகே கலையமுத்தூர் எனுமிடத்தில்

அறுபத்து மூன்று உரோமானிய தங்கக் காசுகள் கண்டெடுக்கப்பட்டதன் மூலம் இக்கருத்து மேலும் வலுப்படுகிறது இப்பகுதியில் கிடைக்கும் இரும்பு உருக்காலை தடயங்களையும், ஏராளமான இரும்பு அச்சுக்களையும் கொண்டு இப்பகுதி தமிழகத்தின் இரும்பு காலகட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாமென்பதும் ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

பொ.ஆ.மு. 200 முதல் பொ.ஆ. 200 வரையிலான காலகட்டத்தில் புகழ்பெற்ற வணிகத் தளமாக புதுச்சேரியின் அரிக்கமேடு பகுதி இருந்ததாக வரலாற்றியல் மற்றும் தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பண்டைய தமிழகத்தின் கிழக்கு கடற்கரை பகுதிகளிலிருந்த மாமல்லபுரம், எயில்பட்டிணம் என்ற மரக்காணம், அரிக்கமேடு, பூம்புகார், கொற்கை போன்றவை சிறப்பான துறைமுகங்களாகத் திகழ்ந்திருக்கின்றன என்பதை வரலாற்றுச் சான்றுகள் நிரூபிக்கின்றன.

பண்டைய காலத்தின் பெருமை மிக்க ஊரான அரிக்கமேட்டில் ஏறத்தாழ இருபத்தொரு ஏக்கர் நிலத்தை பாதுகாக்கப்பட்ட பகுதியாக தொல்லியல் துறை வைத்திருக்கிறது. பிரான்சு நாட்டின் லெழாந்தீய அவர்கள் 1769-ல் அரிக்கமேடு சிறப்பை விளக்கும் நூல் ஒன்றினை வெளியிட்டிருக்கிறார். 1908-ல் பிரெஞ்சுப் பேராசிரியர் புவோ துய்ப்ராய், பலவண்ண மணிகள், மட்பாண்ட ஓடுகளைச் சேகரித்திருக்கிறார். இவரது வேண்டுகோளின் படி 1936-ல் அகழாய்வு மேற்கொண்ட வியட்நாமிய அறிஞர் கொலுபேவ், உரோமப் பேரரசன் அகஸ்டசின் தலை பொறிக்கப்பட்ட கேமேதகப் பதக்கமும், ஒருபுறம் யானை உருவமும் மறுபுறம் சிங்கமும் பொறிக்கப்பட்ட உரோமானிய நாணயங்களைக் கண்டறிந்திருக்கிறார். 1980-ல் அமெரிக்காவின் பெல்சில்வேனிய பல்கலையைச் சேர்ந்த விமலா பெக்லி, அரிக்கமேட்டில் கிடைத்த சாயத்தொட்டி உறைகிணறு, மதுச்சாடி, பிராமி எழுத்து அமைந்த பானைஓடு, யவனக் குடியிருப்பு போன்றவற்றை ஆராய்ந்து, இவற்றின் பெருமைகளை நிலை நாட்டும் இரண்டு நூல் தொகுதிகள் வெளியிட்டிருக்கிறார் என்பது பெருமைக்குரியது.

அரிக்கமேட்டில் கிடைத்த தொல்பொருட்களில் முக்கியமானவையாக ஈமத்தாழிகள், பல வண்ண மணிகள், பல வகை ஓடுகள், மணி உருக்கும் சட்டங்கள், சாயக்கலவை படிந்த ஓடுகள், கேமேதகக்கல், பச்சை மணிக்கல், படிகமணிகள், அரைத்தான் ஓடுகள், உரோமானியக் காசு, மோதிரம், உறைகிணறுகள்

போன்றவை குறிப்பிடப்படுகின்றன. நீலமணி, பச்சைமணி, ஊதாமணி, கருப்பு மணி போன்றவை எராளமாகக் கிடைத்திருக்கின்றன. தங்கக் காசுகளும், செப்புக் காசுகளும் எடுக்கப்பட்டுள்ளன. எலும்பில் அமைந்த எழுத்தாணி, தங்கத்தில் செய்த கலைப்பொருள், மீன் முள்ளாலான கலைப்பொருள் போன்றவையும் கிடைத்துள்ளன. சுடுமண் பொம்மைகளில் கலை நுட்பத்துடன் கூடிய மனித உருவங்கள் சிறப்புடன் காணப்படுகின்றன. கிளிஞ்சல், சங்குப் பொருட்கள் மிகுதியாகப் பெறப்பட்டுள்ளன.

உறைகிணற்றில் சாயம் படிந்து காணப்படுவதால், துணிகளுக்கு சாய மேற்றும் தொழில் இப்பகுதியில் நடந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது. மேலும் பல்வேறு வடிவங்களில் மணிகள் கிடைப்பதாலும் அவற்றில் அழகிய வேலைப்பாடுகள் காணப்படுவதாலும், இங்கு மணி உருக்குத் தொழிற்சாலைகள் இருந்திருக்கலாமெனவும் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

அரிக்கமேடு போன்ற தொல்லியல் முக்கியத்துவமான பகுதிகளில் தொடர்ந்த ஆய்வுகள் செய்வதன் மூலம் பழந்தமிழரின் பெருமையும், தமிழ், தமிழர் பண்பாடும், வரலாறும் புதிய வெளிச்சத்திற்கு வருமென்பது திண்ணம்.

சங்க காலம் தொட்டே சிறந்த வணிக நகராகவும், துறைமுகப் பட்டினமாகவும் அறியப்படும் பழம் பாண்டியர்களின் கொற்கைப் பகுதியைப் பற்றிய அகழாய்வுகள் முழுவீச்சில் நடத்தப்படாதது ஏமாற்றமளிக்கும் செயலாக இருக்கிறது. 1968-69 களில் 12 அகழாய்வு குழிகள் தோண்டப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அகழாய்வில் பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடு கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் காலம் கரிம நாட்படுத்தல் காலக்கணக்கின் படி பொ.ஆ.மு 755-55 என கணக்கிடப்பட்டிருப்பது தமிழ் எழுத்து வரலாற்றிற்குக் கிடைத்த மிக முக்கியமானதொரு சான்றாகக் கொள்ளப்படுகிறது. மேலும் இங்கே பொ.ஆ.மு.850 ஆண்டு மதிக்கத்தக்க பழம்பொருட்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

தொல்லியல் அடிப்படையில் கொற்கையின் நாகரிகம் மூன்று கட்டங்களாக பிரிக்கப்படுகிறது. முதல் கட்ட நாகரிகம் பொ.ஆ.மு 800- பொ.ஆ.400 எனவும், இரண்டாம் கட்டம் பொ.ஆ. 401-1000 மாகவும், மூன்றாம் கட்ட நாகரிகம் பொ.ஆ.1001-1400 ஆகவும் வரையறுக்கப்படுகிறது. கொற்கையின் முதலாம் நாகரிகக் காலமே முக்கியமானதாக வரலாற்றில் இடம் பெறுகிறது.

மல்லச்சந்திரம் ஓவியங்கள் எனக் கொண்டாடப்படும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் மல்லச்சந்திரம் பகுதியில் கண்டறியப்பட்டிருக்கின்றன. இப்பகுதியிலுள்ள பெருங்கற்கால கற்திட்டைகளில், பத்திற்கும் மேலான கற்திட்டைகளில் ஓவியங்ள் வரையப்பட்டிருக்கின்றன. இவை வெள்ளை வண்ணத்திலும், ஒரு கல்திட்டையில் மூன்று வரிசை ஓவியங்களும் மற்றவைகளில் நான்கு வரிசை ஓவியங்களும் காணப்படுகின்றன. கோடுகளால் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் மனித உருவங்கள் அதிகளவில் இடம் பெற்றுள்ளன. மேலும் விலங்குகளின் மேல் அமர்ந்த நிலையிலுள்ள மனித உருவங்களும் உள்ளன. அம்பை வில்லில் வைத்து எய்துகின்ற நிலையிலுள்ள உருவங்கள் இரண்டு இடங்களில் வரையப்பட்டிருக்கின்றன. இவை வில், அம்பு போன்றுள்ளதால் பெருங்கற்கால மக்கள் வில்லைப் பயன்படுத்தும் அறிவு பெற்றிருந்தனர் என்பதற்குரிய சான்றாக இந்த ஓவியம் கருதப்படுகிறது.

மனித வரலாற்றில் பெரிய கற்களைக் கொண்டு அமைப்புகளை உருவாக்கிய காலப்பகுதி பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது. இவ்வகை அமைப்புகள் பெரும்பாலும் புதை குழிகளின் மேல் அமைக்கப்பட்டவையாக இருக்கின்றன. இவ்வாறான அமைப்புகள் உலகம் முழுவதிலும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மனிதர்களால் பல்வேறு காலகட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பெருங்கல் அமைப்புகள் கற்பதுக்கை, கற்கிடை, கற்குவை, பரல்உயர் பதுக்கை, தொப்பிக்கல், கிடைக்கல், நெடுநிலை நடுகல் எனப் பல்வேறு வகைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

மண்ணில் செய்யப்படும் பொருள் மட்பாண்டம், மண்பாண்டமாகும். மிகப் பழங்காலத்திலேயே மண்பாண்டங்கள் செய்யும் தொழில்நுட்பங்கள் அறியப்பட்டிருக்கின்றன. இது உலகின் மிகவும் பழமை வாய்ந்த தொழிலாக கருதப்படுகிறது. நீருடன் சேர்த்துக் குழைக்கப்பட்ட களிமண்ணை வேண்டிய உருவத்தில் செய்து அதனை சூளையில் இட்டு உயர்ந்த வெப்ப நிலைக்குச் சூடாக்கி மட்பாண்டங்கள் உருவாக்கப்படுகின்றன. சூடாக்குவதால் களிமண் இறுகி, அதன் படிவம் உறுதியாகிறது. களிமண்ணின் தன்மையைப் பொறுத்து மண்பாண்டங்களும் வேறுபட்டு அமையும்.

நீர் மற்றும் பிற பொருட்களை சேமித்து வைக்கப் பயன்பட்ட கொள்கலன் மண்பானை. சமீபகாலம் வரை மண்பானைகளின் பயன்பாடே அதிகமிருந்தது

என்பது குறிப்பிடத்தக்கது. கொள்கலன், சேமிப்பு பொருளாக மட்டுமின்றி, பானைகள் அழகுசாதனப் பொருட்களாகவும் வரலாறு நெடுகிலும் இடம்பெற்றுள்ளன. பல்வகையான நிறங்களிலும் பல்வேறு வடிவங்களிலும் இவை தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

தானியம் சேமிக்க அ.ˑ.கப் பானை, சோறாக்க அடிசிற்பானை, உறியில் வைக்க உறிப்பானை, கஞ்சிவடிக்க அகன்ற வாயுடைய கஞ்சிப்பானை, தண்ணீர் இருக்கும் கரகப் பானை, மிகச் சிறிய சில்லுப்பானை, சுடப்படாத பச்சைப் பானை, பொங்கல் வைக்கும் பொங்கல் பானை, பெரிய அளவான மொங்கம் பானை, துணி அவிக்கும் வெள்ளாவிப் பானை என தமிழகத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பானைகள் பயன்பாட்டில் இருந்ததாக அறியப்படுகிறது.

மனிதர்களது நாகரிக வளர்ச்சியின் ஒரு காலகட்டமாக வெண்கலக் காலம் அறியப்பட்டுள்ளது. உலகின் சில பகுதிகளில் கற்காலத்தையடுத்து வெண்கலக் காலமும் அதனைத் தொடர்ந்து இரும்புக் காலமும் அடையாளம் காணப்படுகிறது. ஆப்ரிக்கா, தென்னிந்தியா போன்ற பகுதிகளில் புதிய கற்காலத்தைத் தொடர்ந்து இரும்புக்காலம் இடம்பெற்றுள்ளதாக அறியப்படுகிறது. அரப்பா மக்கள் உலோகவியல் நுட்பத்தில் நிறைந்திருந்தார்களென்றும், செம்பு, வெண்கலம், ஈயம் மற்றும் தகரம் போன்றவற்றைப் பற்றிய தொழில்நுட்ப அறிவினை உருவாக்கினார்கள் என்றும் அறியப்படுகிறது.

செப்போடு வெள்ளியம் அதாவது தகரம் சேர்த்து உண்டாக்கப்படுவது வெண்கலம். இது மிகவும் கெட்டியானது. இதனால் இதனை ஆயுதங்கள், போர்க்கவசம், அழகுப்பொருள்கள் செய்ய பண்டைய மக்கள் அதிகளவில் பயன்படுத்தியிருக்கின்றனர். பாரசீக சொல்லாகிய பிரிஞ்ச் என்பதிலிருந்து ஆங்கிலச் சொல்லாகிய பிரான்ஸ் உருவானதாகச் சொல்லப்படுகிறது.

செப்பு, செம்பு, தாமிரம், காப்பர் என்பது ஒரு உலோகம். இது சிவப்பு நிறத்தில் இருப்பதால் செம்பொன் எனவும் அழைக்கப்படுகிறது. மிகப்பழங்கலத்திலிருந்தே மனிதர்கள் செப்பை அறிந்திருக்கிறார்கள். இயற்கையில் இது தனி உலோகமாகக் கிடைப்பதால் இதனை எளிதாகப் பிரித்தெடுக்க முடிகிறது. நாணயங்கள், சமையல் பாத்திரங்கள், கொதிகலன்கள் போன்றவற்றிக்கு செப்பு அதிகம் பயன்பட்டிருக்கிறது.

வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே அறியப்படும் பித்தளையானது செப்பு, துத்தநாகம் போன்ற உலோகங்கள் சேர்த்துச் செய்யப்படும் கலப்பு உலோகமாகும். தங்கத்தைப் போன்று மஞ்சள் நிறமுடையதால் பல்வேறு அலங்காரப் பொருட்களாக பித்தளை பயன்படுத்தப்படுகிறது. பாத்திரங்கள், விளக்குகள், வீட்டு உபயோகப் பொருட்கள் போன்றவை பித்தளையால் செய்யப்படுகின்றன.

வரலாற்றில் தங்கம், வெள்ளி போன்றவற்றின் பயன்பாடு மிகத் தொடக்க காலத்திலிருந்தே இடம் பெற்றிருப்பினும் வரலாற்றாய்வாளர்கள், தங்ககாலம், வெள்ளிக்காலம் எனக் காலத்தைப் பிரிப்பதில்லை. இவற்றின் பயன்பாடு மிகப்பரவலாக இருந்து இருக்கலாம். இந்தியா, தமிழ்நாடு போன்றவற்றில் இவற்றின் பயன்பாட்டை ஆரம்பநிலை நாகரிக காலங்களிலேயே அறிந்திருக்கின்றனர் என்பது தெளிவு.

தங்கம், வெள்ளியை ஆபரணங்களாகவும் நாணயங்களாகவும் பழங்காலத்திலிருந்தே மக்கள் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். அன்றைய நாட்களில் பொற்காசுகள், பொன்முடிப்பு, ஆயிரம் பொன் முடிப்பு, ஆயிரம் வராகன், தங்கப் புதையல் போன்றவை மதிப்பு மிக்க சொற்களாக விளங்கியிருக்கும். பரிசில்பெற வந்திருக்கும் புலவருக்கு பொன் முடிப்பு கொடுப்பதையே அன்றைய அரசங்கள் உயர்வாகக் கருதியிருக்கிறனர்.

தமிழக நாணவியலும், கல்வெட்டியலும், மிகப் பழமையானவையாக காணப்படுவதோடன்றி இவற்றில் ஆராய்ச்சி முடிவுகளும் எட்டப்பட்டிருப்பது தமிழ் நங்கையின் மகுடத்திற்கு கூடுதல் ஒளியும் சேர்க்கின்றன. இவ்விரண்டு துறைகளிலும் பயணமாக வேண்டிய தூரம் இன்னும் அதிகமிருப்பினும் இதுவரைக்குமான ஆராய்ச்சி முடிவுகள் தமிழ் மொழியின், தமிழ் நிலத்தின், தமிழ் இனத்தின் பழமையை அறிவிப்புச் செய்பவையாகக் கருதப்படுகின்றன. பெருமைக்குக் காரணமாக அறிஞர்கள் அத்தனை பேருக்கும் தமிழ்ப் பெண் என்றென்றும் நன்றி பாராட்டுவாள்.

தமிழக மக்களிடத்தில் வரலாற்றுணர்வு எந்த அளவிற்கு உள்ளதென்பது வேதனையானது. தமிழ்த் தாத்தா எனப் போற்றப்படும் வணக்கத்திற்குரிய கும்பகோணம் உ.வே.சாமிநாதையரின் (1855-1942) பெரு முயற்சியால்

கண்டெடுக்கப்பட்ட தமிழ் பொக்கிஷங்கள் மூலமாகவே தமிழின் இன்றைய பெருமையெல்லாம் கிடைத்திருக்கிறது என்பது மிகுந்த பாராட்டுதலுக்குரியது. வெந்நீர் போடுவதற்குப் பயன்பட்டுக் கொண்டிருந்த சான்றோர்களின் அரிய படைப்புகளை அரும்பாடுபட்டு திரட்டி வெளிக்கொணர்ந்த தாத்தாவின் பெருமை ஈடு இணையில்லாதது. தன்னலம் பாராது தமிழ் தொண்டாற்றிய இந்த தவப்புதல்வரின் புகழுக்கு கடற்கரையில் சிலை வைக்காவிட்டால் ஒன்றும் குறையாகாது. பாட்டனார் குன்றிலிட்ட விளக்கு.

சுவாமிநாத அய்யர் போன்றதொரு சிறந்த தமிழ் அறிஞர் உருவாகியிருந்தால் ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைச் சுமந்து நிற்கும் ஆனைமலை இந்தப்பாடு பட்டிருக்குமா? முற்காலப் பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், விஜயநகர மன்னர்கள் எனப் பல்வேறு வரலாற்றுக் காலகட்டங்களைப் பற்றிய கல்வெட்டுக்களைத் தன்னகத்தே தாங்கியுள்ள இம்மலையைப் பற்றி அறிந்திருந்துமா தமிழ் அறிஞர்கள் அமைதி காத்தார்கள்? இதுவே சங்க காலமெனில் தமிழ் தாத்தாக்கள் அறச்சீற்றத்துடன் புறப்பட்டிருப்பர். நாட்டின் வேந்தனையும் துணிவுடன் கேள்வி கேட்டிருப்பர்.

4000 மீட்டர் நீளமும், 1200 மீட்டர் அகலமும், 400 மீட்டர் உயரமும் கொண்ட இந்த யானைமலை மதுரை மாவட்டம் ஒத்தக்கடையில் அமைந்திருக்கிறது. தூரத்திலிருந்து பார்க்கும் போது யானையொன்று படுத்திருப்பது போல் தோன்றுவதால் இப்பெயர். நரசிங்க பெருமாளுக்கு குடைவரைக் கோவில் இருப்பதால் நரசிங்கமங்கலம் என்ற பெயரும் உண்டு.

மலை உச்சியின் குகை தளங்களில் சமணர் படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே தமிழ் பிராமி கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சமண சமயத்தோடு தொடர்புடைய புடைப்புச் சிற்பங்களும் இங்கே செதுக்கப்பட்டுள்ளன. தமிழ் வட்டெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள இந்த மலை, சைவம், சமணம், வைணவம் எனச் சமயங்கள் சார்ந்தும் முக்கியத்துவம் கொண்டதாக அறியப்படுகிறது.

கடினப் பாறையாலான இம்மலையைக் குடைந்து உலகின் சிற்பத் தலைநகரம் அமைக்கப் போவதாக அறிவிக்கப்பட அதைப் பெரும்பாடுபட்டுத் தடுத்த ஆர்வலர்கள் பாராட்டக்குரியவர்கள். மலையைச் குடையும் போது கிடைக்கும்

கிரானைட் கற்கள், கற்பாலங்கள், மணல் இவற்றை விற்பதன் மூலம் கிடைக்கும் ஐந்தாயிரம் கோடி ரூபாயில், ஆயிரத்து ஐநூறு கோடியில் சிற்ப நகரத்தை உருவாக்கிவிடலாம் எனத் திட்டம் தீட்டியவர்களின் முதன்மை நோக்கம் என்னவாக இருந்திருக்கம் என்பதை காலம் கடந்தாவது தமிழர்கள் அறிந்திருப்பார்கள்.

1882 ஆம் ஆண்டில் ராபர்ட் செவல் என்ற அறிஞரால் கண்டுபிடிக்கப்பட்ட மதுரை மேலூர் அருகேயான மாங்குளம் தமிழ் பிராமி கல்வெட்டு, தமிழ் கல்வெட்டில் சிறந்ததொரு இடத்தைப் பெற்றுள்ளது. இக்கல்வெட்டை பெருமுயற்சி எடுத்து படித்தவர் அறிஞர் வெங்கோபராவ். 1906-ல் கே.வி சுப்பிரமணிய ஐயரால் மீண்டும் கண்டறியப்பட்ட இக்கல்வெட்டு, பொ.ஆ.முன் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது தமிழின் தொன்மைக்கு சிறந்ததொரு உதாரணமாகக் காட்டப்படுகிறது.

மாங்குளத்தில் ஆறு கல்வெட்டுகளும், அரிட்டாப்பட்டியில் ஒரு கல்வெட்டும் அறியப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு கல்வெட்டுகள் தமிழக வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பிடிக்கின்றன. இங்கிருக்கும் பாறைக் குகைகளில் சமண முனிவர்கள் அமர்ந்து கொள்ளவும், படுத்து உறங்கவும், பாறைகளைச் செப்பனிட்டு வழவழப்பாகச் செய்து கொடுத்ததை செய்தியாகக் கூறுகின்றன. இக்கல்வெட்டுகள் சங்ககால தமிழ் எழுத்தான தமிழியில் பொறிக்கப்பட்டுள்ளன.

கணிய் நந்தஸிரிகுவன் கே தம்மம் ஈத்த நெடுஞ்செழியன் பணாஅன் கடலன் வழுதி கொட்டுபித்த பாளிய் என்ற தமிழிக்கு அர்த்தம் நந்த ஸிரிகுவன் என்ற சமண முனிவருக்குச் சங்க காலப் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் பணியாள் கடலன் வழுதி என்பவர் பாளிய் அமைத்துக் கொடுத்துள்ளார். பாறையை செப்பனிட்டுக் கொடுக்கும் செயலுக்கு பாளிப் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். பிணவு, பிளவு, கொட்டுதல் எனும் பொருளில் இந்த பாளிய் சொல் கையாளப்பட்டிருக்கிறது.

மற்றொரு கல்வெட்டு நெடுஞ்செழியனுடைய சகலனாகிய, இளஞ்சாடிகனின் தந்தை சடிகான் கணிய நந்தாஸிரியருக்கு பள்ளியைத் தர்மம் செய்துள்ளார் என்ற செய்தியை தெரிவிக்கிறது. பிறிதொரு கல்வெட்டு நிகமம் என்று அழைக்கப்பட்ட வணிகக் குழுக்கள் இருந்ததை தெரியப்படுத்துகிறது. மேலும் காவிதி போன்ற பட்டங்களும் வணிகர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளதையும் அறிவிக்கிறது.

நெடுஞ்செழியன் என்ற சங்ககாலப் பாண்டிய மன்னனின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதால் இக்கல்வெட்டுகள் மதிப்புமிக்கவையாக சுட்டப்படுகின்றன. சமணர் குகைகளில் இக்கல்வெட்டுகள் இடம்பெற்றிருப்பதும் முக்கியமானதாக கருதப்படுகிறது. மேலும் சங்க காலத்தில் முத்து வணிகம் சிறப்புற்று இருந்ததும் பாண்டிய நாட்டில் சமணத்திற்கு ஆதரவு இருந்துள்ளதும் இக்கல்வெட்டுகளில் வழி அறியலாகிறது.

பண்டையக் கால சேரர்களின் தலைநகரான கரூரின் புகழூர் பகுதியின் வேலாயுதம்பாளையம் ஊர் ஆறு நாட்டான் மலைக் குன்றில் சமணக் குகைகளில் கண்டு பிடிக்கப்பட்ட தமிழ் பிராமி கல்வெட்டுகள் புகழூர்க் கல்வெட்டு என அழைக்கப்படுகின்றன. சேர மன்னன் இளம் கடுங்கோ சமணத்துறவி ஒருவருக்கு குகை வாழிடம் ஒன்றைத் தானமாக வழக்கியதைக் குறிக்கவே இக்கல்வெட்டு பதியப்பட்டுள்ளது. கோ ஆதன் செல்லிரும்பொறை பெருங்கடுங்கோ, இளங்கடுகோ என மூன்று தலைமுறை சேரமன்னர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டள்ளது இக்கல்வெட்டின் தனிச்சிறப்பாகக் கருதப்படுகிறது. சமணத்துறவிகளுக்குக் கொடுக்கப்பட்ட படுக்கைகள் பிட்டன், கொற்றன் என இன்னின்னார்க்குக் கொடுக்கப்பட்டன எனும் விவரமும் சமணப்படுக்கை தலைமாட்டில் பதியப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளன.

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் வட்டத்தின் ஐம்பையில் 1981-ல் தொல் பொருள் ஆய்வுக் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்ட ஐம்பை கல்வெட்டு வரலாற்றுப் பெருமைமிக்கதாக அறியப்பட்டுள்ளது. தமிழியில் எழுதப்பட்டுள்ள அந்த கல்வெட்டுப் பாடம் ஸதிய புதோ அதியன் நெடுமான் அஞ்சி ஈத்த பாளி என்ற செய்தியைச் சொல்கிறது. இதன் பொருள் ஸத்திரிய புத்திரன் அதியன் நெடுமான் அஞ்சி தானமாகக் கொடுத்த சமணர் படுக்கை என்பதாகும்.

ஐம்பை கல்வெட்டின் சிறப்புகளாக, தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சங்ககாலச் சிற்றரசர் அதியமானைப் பற்றிய கல்வெட்டு என்பது சங்ககாலத்திற்கான நல்லதொரு சான்றாகக் கொள்ளப்படுகிறது. இச்சான்றிற்குரிய பெருமை அறிஞர் திரு.ஆர். நாகராஜ் அவர்களைச் சாரும்.

அதியமான், மலையமான் திருமுடிக்காரியுடன் போரிட்டு வெற்றி பெற்றதாகக் கூறும் இலக்கியத்திற்குச் சான்றாக இக்கல்வெட்டு, திருமுடிக்காரியின்

தலைநகரான திருக்கோவிலூர் பகுதியிலேயே கிடைக்கப்பெற்றுள்ளது. பேரரசர் அசோகரது கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள மூவேந்தர்களோடு அடையாளம் காணப்படாமல் இருந்த ஸதிய புதோ யார் என்பதற்கான ஊகங்களுக்கு மாற்றாக அவர் அதியமான்தான் என்பதை இக்கல்வெட்டு உறுதியாக நிரூபிக்கிறது.

பழங்காலத்தில் தெற்காசிய முழுவதும் வழக்கத்திலிருந்த எழுத்து முறையாக பிராமி கருதப்படுகிறது. அசோகரது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் பிராமி எழுத்துகளிலேயே எழுதப்பட்டுள்ளன. மேலும் இக்கல்வெட்டுக்களே காலத்தால் பழமையானவையாக குறிப்பிடப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் கண்டறியப்பட்ட ஆறாம் நூற்றாண்டு கல்வெட்டுகள், பிராமி எழுத்துருவை இன்னும் பழமையாக கருத வைத்திருக்கின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் எழுத்து முறைக்கு மூலமாகக் கருதப்படும் பிராமி எழுத்து முறையின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பிராமி எழுத்துமுறை செமிட்டிக் எழுத்துமுறையான அரமேயத்திலிருந்து உருவாக்கப்பட்டிருக்கலாம் என்றொரு கருத்து முன்வைக்கப்படுகிறது. ஏனெனில் அரமேயத்திலிருந்து தோன்றிய பிராமி போன்றதொரு பழமையான எழுத்தான காரோஷ்டி எழுத்துக்கள் அக்காலத்திய வடமேற்கு இந்தியாவில் புழக்கத்திலிருந்திருக்கின்றன.

பிராமிக்கும் காரோஷ்டிக்கும் நிறைய ஒற்றுமைகள் இருந்தபோதிலும் வேற்றுமைகளும் குறிப்பிடத்தக்க அளவில் இருந்திருக்கின்றன. பிராமி எழுத்துக்கள் இடமிருந்து வலமாக எழுதுபவை. கரோஷ்டி எழுத்துமுறை வலமிருந்து இடமாக எழுதப்படுவது.

வடமேற்கு இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் பகுதிகளில் புழக்கத்திலிருந்த கரோஷ்டி எழுத்துக்கள் சுவடு ஏதும் இல்லாமல் மறைந்து போக, இந்திய துணைக்கண்டம் முழுதும் பயன்படுத்தப்பட்ட பிராமியோ பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் பல்வேறு எழுத்து முறைகளாகத் திரிந்து உருமாறிவிட்டிருக்கிறது.

பிராமி எழுத்துமுறை ஆதிகால பிராகிருத மொழிகளை எழுதப் பயன்பட்டது. கல்வெட்டுக்களிலும், சமய நூல்கள் எழுதவுமே பிராமி எழுத்துமுறை பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சமஸ்கிருதம் பிராமிக்குப் பின்னரே எழுதப்படத்

தொடங்கியதால் சமஸ்கிருதத்திலுள்ள பல ஒலிகளுக்கு பிராமியில் எழுத்து வடிவங்கள் இல்லாமலிருந்திருக்கிறது.

பிராமிய மொழிக் குடும்பத்தில் தெற்காசிய, தென்கிழக்காசிய, திபெத், மங்கோலிய, மஞ்சூரியப் பகுதிகளில் பயன்படுத்தப்படும் பண்டைய இந்திய பிராமி மொழியிலிருந்து தோன்றிய மொழிகள் உள்ளடங்கியுள்ளன. இவை அபுகிடா எழுத்து முறை என அழைக்கப்படுகின்றன.

அபுகிடா என்பது உயிாமெய்யெழுத்துகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு எழுத்துமுறை. இதில் மெய்யெழுத்து உயிரெழுத்தை தன்னுள் கொண்டு வரும். ஏற்ற குறியிடுவதன் மூலம் அம்மெய்யெழுத்திலுள்ள உயிரெழுத்தின் ஒலியை மாற்றி அமைக்கலாம். உலகில் புழக்கத்திலுள்ள எழுத்து முறைகளில் பாதியளவு அபுகிடா வகையைச் சேர்ந்தவையாக உள்ளன.

பிராமிய எழுத்துமுறையின் முக்கியமான எழுத்து மொழியாக தேவநாகரி உள்ளது. இந்தி, கொங்கணி, மராத்தி, நேபாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகள் தேவநாகரி எழுத்து முறையில் எழுதப்படுகின்றன. இவை பொதுவில் வட பிராமி முறை என அழைக்கப்படுகின்றன. இதுபோலவே தமிழ் உள்ளிட்டவை தென் பிராமி என்றும் வங்காளம், அசாமி போன்றவை கிழக்கு பிராமி என்றும் கூறப்படுகின்றன.

திராவிட ஒலிகளுக்கான சில எழுத்துக்கள் தென் பிராமிய எழுத்துக்களுடன் சேர்க்கப்பட்டதாக அறியப்படுகிறது. தமிழ் பிராமியில் இருந்து வட்டெழுத்துக்களும், வட்டெழுத்துக்களிலிருந்து தற்கால தமிழ் எழுத்து முறையும் தோன்றியிருக்கிறது.

பிராமி எழுத்து முறை முற்றிலும் இந்தியாவிலிருந்தே தோன்றியது என்றும், சிந்து வெளி எழுத்துக்களிலிருந்து பிராமி முறை தோன்றியிருக்கலாமெனவும் கூறப்படும் கருத்துக்கு அறிஞர்களிடையே அதிகமாக ஆதரவு இருக்கிறது. தமிழ் எழுத்து முறையே பிராமி என்றும், அதை அசோகர் மாற்றம் செய்து பிராகிருதம் எழுத்து முறையாக மாற்றினார் என்றும் தமிழ் அறிஞர்கள் வாதிடுகிறார்கள் .

பிராகிருதம் என்பது ஒரு மொழியல்ல. பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. பத்தாம் நூற்றாண்டு வரை வட இந்தியாவில் பேசப்பட்டு வந்த மொழிகளைக் குறிக்க பிராகிருதம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. எனவே இது ஒரு மொழிக்குடும்பத்தைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. இது பாகதம் எனவும் அழைக்கப்படுகிறது.

பிராகிருத மொழிகள் சமூகத்தின் அடித்தட்டு மக்களால் பேசப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. பிராகிருதி என்றால் இயல்பு, இயற்கை எனப் பொருள் கொண்டு, சாதாரண மக்களால் இயல்பாக, இயற்கையாகப் பேசப்பட்ட மொழி என்னும் பொருளில் பிராகிருதம் என அழைக்கப்பட்டதாக மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். பிராகிருதத்தில் மகதி, மகாராஷ்டிரி, ஸௌரசேனி, பைஸாகி போன்ற நான்கு மொழி மரபுகள் உள்ளடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. பிராகிருத மொழிகளுள் ஒரு மொழியான பாளி மொழியிலேயே புத்தர் தமது போதனைகளை மக்களிடையே விளக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேதங்களும் தொன்மையான இலக்கியங்களும் கொண்ட இந்தியாவின் பழமையான மொழிகளுள் ஒன்று சமஸ்கிருதம். இம்மொழிக்கு சங்கதம் என்ற பெயரும் உண்டு. நன்றாகச் செய்யப்பட்டது என்றும், இலட்சணம், இலக்கணம் கொண்டது என்ற பொருளிலும் அழைக்கப்பட்ட இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சமஸ்கிருதம், தற்போது பேச்சு வழக்கில் இல்லாத மொழியாக அறியப்படுகிறது.

வேதகாலத்திலிருந்த முதல்நிலை சமஸ்கிருதம், ஈரானின் அவெஸ்தா மொழியை பெருமளவில் ஒத்தது என அறியப்படுகிறது. பொ.ஆ.மு. ஐநூறு வரை வழக்கிலிருந்ததாகக் கருதப்படும் வேதகாலத்துமொழி, பின்னர் முதலாம் நூற்றாண்டு காலத்தில் இரண்டாம் நிலை சமஸ்கிருதமாக மாற்றமடைந்து, சமயம், கல்வி, இலக்கியம் போன்றவற்றில் மிகுந்த செல்வாக்கு செலுத்தியிருக்கிறது.

வாய்மொழி மூலமாகவே சமஸ்கிருதம் கொண்டுவரப்பட்டதால் இதற்கான எழுத்து முறை இருந்ததில்லை. சமஸ்கிருதத்தில் எழுத்துமுறை அறிமுகப்படுத்தப்பட்டது மிகவும் பிற்காலத்தில்தான். தற்போது தேவநாகரி எழுத்து முறையே பெரும்பாலும் சமஸ்கிருத வரி வடிவமாகப் பயன்படுகிறது.

அபுகிடா எழுத்து வகையைச் சேர்ந்ததே தேவநாகரி. இது இந்தி, மராத்தி, காஷ்மிரி, நேபாளி மொழிகளை எழுதுவதற்குப் பயன்படுகிறது. கடவுளின் நகரத்தின் எழுத்து என பொருள்படும் தேவநாகரி, சமஸ்கிருத மொழிக்கான ஒலிகளை எழுதப் பயன்படும் ஒரு வரிவடிவம். உரோமானிய வரிவடிவத்தைக் கொண்டு ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிசு மொழிகள் எழுதப்படுவதைப் போல

தேவநாகரி வடிவத்தைக் கொண்டு அதாவது தேவநாகரி லிபியில் சமஸ்கிருதம் எழுதப்படுகிறது.

தேவநாகரிக்கு முன்னர் பிராமி, கிரந்த எழுத்துக்களில் சமஸ்கிருதம் எழுதப்பட்டு வந்துள்ளது. பல்லவ கிரந்தம் இடைக்காலத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றதாக விளங்கியிருக்கிறது. பல்லவ கிரந்தத்திலிருந்தே தென் கிழக்கு ஆசிய நாடுகளின் பல மொழிகள் வரி வடிவத்தைப் பெற்றிருப்பதாகச் சான்றுகள் தெரிவிக்கின்றன. மலையாளும், துளு போன்ற மொழிகளின் வரி வடிவங்களில் அதிகமாக கிரந்த எழுத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கிரந்தம் என்பது ஒரு எழுத்து முறை. கிரந்தம் என்ற வட்டெழுத்துக்களில் ஐ.ஸ.ஷ போன்ற வடமொழி எழுத்துக்களில் நெடுங்கணக்கில் எழுதப்படுகின்றன. தமிழில் வட எழுத்துக்களை நெடுங்கணக்காய் எழுதுவதில்லை. கிரந்தம் என்பது தனிப்பட்ட ஒரு மொழியல்ல. சமஸ்கிருதத்தை எழுதுவதற்கு பொ.ஆ. நான்கு முதல் பதிமூன்றாம் நூற்றாண்டு வரை பயன்பாட்டில் இருந்து வந்த ஒரு வரி வடிவம்.

கிரந்த எழுத்துகள் சமசுகிருதத்திலிருந்து உருவாக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. தமிழ் எழுத்துக்களே கிரந்தமாக எழுத்தப்பட்டன என தமிழ் அறிஞர்கள் உறுதிபடத் தெரிவிக்கின்றனர். ஓலைச் சுவடிகள் எழுத்தாணி கொண்டு பிராமி கோடுகளை எழுதும் போது, கிழிந்து போவதைத் தடுக்கும் பொருட்டு வட்டெழுத்தாக எழுதும் முறை தோன்றியது என்றொரு கருத்தும் பதியப்பட்டிருக்கிறது.

முதலில் சந்தஸ் எனும் வேதப் பெயரினைக் கொண்டிருந்த இந்த சமஸ்கிருதம் ஒலிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக் கூடிய மொழியாக உள்ளது. ஏனெனில் வேதங்கள் புனிதமானவை, மந்திரத்தன்மை நிறைந்தவை என்பதால் ஒலிப்புக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எழுத்தில், எழுத்தாகப் படிப்பதில் ஒலிக்கு அதிக முக்கியத்துவம் கிடைக்காது என்பதாலேயே வாய் மொழியாகவே பன்னெடுங்காலம் இவை சொல்லப்பட்டும் கற்பிக்கப்பட்டும் வந்துள்ளன. எழுத்தில் மொழியானது நிலைத்து நிற்குமேயொழிய உச்சரிப்பு மாறுபாடு அடைவது இயற்கை. சமஸ்கிருதத்திற்கு ஐம்பத்தியொரு அக்ஷரங்கள் அதாவது ஒலிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தென் மொழி தமிழென்பதால் சமஸ்கிருதம் வடமொழி என அழைக்கப்படுகிறது. இரண்டு மொழிக்கும் ஒலியமைப்பு மாறுபடுகிறது என்பதால் வடமொழிச் சொற்களை தமிழ்மொழியில் எழுவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு எழுத்து வடிவமே கிரந்தம். கிரந்தம் என்றால் புத்தகம் என்று பொருள். தமிழில் ஸ, ஜ, ஷ, ஸ்ரீ போன்றவை கிரந்த எழுத்துக்களாக அறியப்படுகின்றன.

முன்பு கிரந்தம் தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்திருக்கிறது. பல்லவர்கள் தமிழையையும் சமஸ்கிருதத்தையும் போற்றியதால் அவர்களது மொழிப் பயன்பாட்டில் இவை இரண்டும் பெருமளவில் கலந்த பல்லவ கிரந்தம் வழக்கத்திற்கு வந்திருக்கிறது. பர்மிய மொழி, தாய்லாந்தின் தாய் போன்றவை கிரந்த எழுத்து முறையிலிருந்து தோன்றியிருக்கின்றன. சிங்களமும் கிரந்த வடிவத்திலிருந்து உருவானதாகக் கூறப்படுகிறது.

பிற்காலத்தைய தமிழும், சமஸ்கிருதமும் கலந்த மணிப்பிரவாள மொழி நடையில், தமிழ்ச் சொற்களை வட்டெழுத்தலும் சமஸ்கிருதச் சொற்களை கிரந்த எழுத்திலும் எழுதியிருக்கிறார்கள். இன்றைய காலகட்டத்தில் கிரந்த எழுத்து முறை தமிழகத்தில் மறைந்து விட்டாலும் வடமொழிச் சொற்களைக் குறிக்க கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு வகை எழுத்து முறை வட்டெழுத்து. இது பொது ஆண்டின் நான்காம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை புழக்கத்திலிருந்த தமிழ் வரி வடிவம். வடடெழுத்துகள் பிராமி எழுத்து முறையிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது. வட்டெழுத்து தமிழரது பழங்கால எழுத்து முறையென்றும், அதிலிருந்தே தமிழ் பிராமி தோன்றியதாகவும் அறிஞர்கள் கூறுவதுண்டு. தமிழகத்தில் பதினோரம் நூற்றாண்டில் வழக்கொழிந்த இந்த பழமையான எழுத்துக்கள், கேரளாவில் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலும் பயன்பாட்டில் இருந்திருக்கின்றன. கோலெழுத்து பதினேழாம் நூற்றாண்டு வரையிலும் இருந்திருக்கிறது.

வட்டெழுத்திலிருந்து உருவாகியது கோலெழுத்து. இரண்டிற்கும் பெரிய அளவில் வேறுபாடு இல்லை. கோலால் எழுதப்படும் எழுத்து கேலெழுத்தெனவும், கோடு எழுத்து என்பதே கோலெழுத்தாக மருவியதாகக் கூறுவோரும் உண்டு.

கண்ணெழுத்து என்பது அடையாள எழுத்து அல்லது குறியீட்டு எழுத்து எனப் படுகிறது. அரசரது திருமுகங்களை எழுதி அதன் மேல் அரச முத்திரையிடுவோர் கண்ணெழுத்தாளர் என பண்டைக் காலத்தில் அழைக்கப்பட்டிருக்கின்றனர். அடையாளம் சுட்டிக் காட்டுவதை அடையாள எழுத்தாகக் கொண்டிருக்கலாம்.

தமிழ் எழுத்து முறையில் பன்னிரெண்டு உயிரெழுத்துக்களும், பதினெட்டு மெய்யெழுத்துக்களும், இருநூற்றிப் பதினாறு உயிர்மெய் எழுத்துக்களும், ஒரு ஆயுத எழுத்துமாக மொத்தம் இருநூற்றி நாற்பத்தி ஏழு எழுத்துக்கள் நெடுங்கணக்கில் உள்ளன. இம்முறை தமிழ் அகரவரிசை, தமிழ் அரிச்சுவடி, தமிழ் நெடுங்கணக்கு என அழைக்கப்படுகிறது. தற்போது வழக்கத்திலிருக்கும் கிரந்த எழுத்துக்கள் தமிழ்நெடுங்கணக்கைச் சாராது. தமிழ் எழுத்துகள் இடமிருந்து வலமாகவே எழுதப்படும்.

தமிழி, தமிழ்பிராமி, பழந்தமிழ் என அழைக்கப்பெறும் சங்ககாலத் தமிழ் எழுத்துக்களுக்கும், வட இந்தியாவில் வழக்கத்திலிருந்த வட இந்திய பிராமி எழுத்துக்களுக்கும் வேறுபாடுகள் இருந்ததாக சுட்டிக் காட்டப்படும் கல்வெட்டு ஆய்வு முடிவுகளே தமிழின் பழமையை நிறுவுவதற்கான பொருத்தமான சான்றுகளாக அமையக்கூடும். இவ்விரண்டிற்கும் ஒற்றுமை இருப்பினும், வேறுபாடுகள் உண்டென்றும், தமிழ் பிராமி தனித்துவமாக விளங்கியதென்பதையும் கல்வெட்டியல் அறிஞர்கள் தெளிவாக்குகின்றனர்.

இந்தியா முழுமைக்கும் கிடைக்கும் பிராமி கல்வெட்டுக்களில் பிராகிருத மொழியே இடம்பெறுவதாகவும், தமிழகத்தில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் அறிஞர்கள் சுட்டுகின்றனர். தமிழ் பிராமி எனப் பெயரிட்டவர் தமிழ் பிராமி பற்றியும், சிந்து சமவெளி குறியீட்டு மொழிகள் குறித்தும் பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள் வெளிவரக் காரணமாக இருந்த மதிப்பிற்குரிய ஐராவதம் மகாதேவன் என அறியப்படுகிறது. 1882 யிலேயே மாங்குடி கல்வெட்டு அறியப்பட்டிருந்தாலும் 1966-ல் அதை முழுமையாகப் படித்தறிந்து பாண்டிய அரசன் நெடுஞ்செழியன் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதை வெளி உலகிற்குக் கொண்டு வந்த பெருமைக்குரியவர் ஐராவதம் மகாதேவன். புகழூர் கல்வெட்டைப் படித்தறிந்து சேரர் பெயர்களுள்ளதையும், எடக்கல் குகையின் சேர என்ற எழுத்தைப் படித்ததையும் ஐராவதம் அவர்களின் சாதனைகளாகக் குறிப்பிடலாம்.

தமிழ்பிராமியின் தந்தை எனப் போற்றப்படும் பெருமைக்குரிய கே.வி சுப்ரமணிய ஐயர், தமிழகப் பகுதியில் கிடைத்த முப்பது கல்வெட்டுக்களைக் கொண்டு தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்களான ழ, ற, ன போன்றவை தமிழ் எழுத்துக்களே என்பதை கண்டறிந்திருக்கிறார்.

தமிழ்பிராமி எழுத்துக்கள் சமணர் குகைகளிலிருந்து பெறப்பட்டதால் இவை சமணரால் அறிமுகமாகியிருக்கலாம் என்ற கருத்தை மாற்றியமைத்ததில் அறிஞர் கா. ராஜனுக்கு பெரும் பங்குள்ளது. இவரது சீரிய முயற்சியாலேயே இந்தியாவிலேயே மிகப் பழமையான தமிழிக் கல்வெட்டான புலிமான் கோம்பை நடுகல் கல்வெட்டு கண்டறியப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அறிவார்ந்தவரான சமண முனிவர்கள் மட்டுமே எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்ற கருத்து மாறி, தமிழகத்தில் பரவலான எழுத்தறிவு இருந்ததென்பதையும் அறிய முடிந்திருக்கிறது.

பழைய சேர நாடான கேரள மாநில வயநாடு பகுதியில் உள்ள எடக்கல் குகையில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் அறியப்பட்டிருக்கின்றன. போசெட் என்ற ஆங்கிலேயரால் 1894-ல் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டியலாளரான ஹல்ச் அறிஞர் இதை வாசிக்க முயன்றிருக்கிறார். 1996-ல் ஐராவதம் மகாதேவனால் சேர என்ற சொல் கல்வெட்டில் பதியப்பட்டிருப்பதாக கண்டறிந்தது சேர என்ற சொல்லுக்கான மிகப் பழைய கல்வெட்டுச் சான்றாக எடக்கல் கருதப்படுகிறது. மேலும் தொல்காப்பியத்தில் இடம் பெறும் ஆகோள் என்ற சொல்லாட்சி இக்கல்வெட்டிலும் காணப்படுவதால் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றுக் காலம் பழமையானதாக அறியப்படும் சான்றும் கிடைத்துள்ளது. எழுத்துப் பொறித்து அறியப்பட்ட முதல் நெடுநிலைக்கல் என அறியப்படும் தாதாப்பட்டி கல்வெட்டும் இவரால் அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே, வைகையின் தென்கரையில் புலிமான் கோம்பை என்ற இடத்தில் ஈமச்சின்னத்தின் பகுதியாக 2006-ல் கிடைத்துள்ள மூன்று நடுகற்களில் சங்ககால பழந்தமிழ் எழுத்துக்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள தாதாப்பட்டியிலும் நடுகல் அறியப்பட்டள்ளது.

அசோகரது கல்வெட்டுகள் பிராமி மற்றும் கரோஷ்டி மொழிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. கரோஷ்டி எழுத்து வடிவம், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் பகுதிகளின் காந்தாரப் பிராகிருதமாக அறியப்படுகிறது. இது காந்தாரப்

பிராகிருதத்தையும் சமஸ்கிருதத்தையும் எழுதுவதற்குப் பயன்பட்ட வரி வடிவமாக குறிக்கப்படுகிறது. பொ.ஆ.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரை வாழ்ந்திருந்ததாக அறியப்படும் இம்மொழியை ஜேம்ஸ் பிரின்செப் என்ற அறிஞர் பதினெட்டம் நூற்றாண்டிற்கு கிரேக்க, பாளி மொழிகளில் எழுதப்பட்டிருந்த ஒரு இருமொழி நாணயத்தைக் கொண்டு வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

அசோகரது பிராமி எழுத்து மௌரியப் பிராமி, பாளி பிராமி, தம்மலிபி எனும் பெயர்களில் அறியப்பட்டிருக்கிறது. ஜேம்ஸ் பிரின்ஸப் என்ற ஆங்கில அறிஞரே 1837-ல் இக்கல்வெட்டுக்களை படித்தறிந்து, கிரேக்க மொழி எழுத்துகளோடு ஒப்பிட்டு அந்தந்த எழுத்துக்களுக்கான ஒலிகளையும் நிச்சயித்திருக்கிறார். அறிஞர் மிகுந்த பாராட்டுக்குரியவர் என்பது திண்ணம். வடபிராமி கல்வெட்டுகளை ஆந்திராவின் குண்டூர் மாவட்ட பட்டிபுரோலு ஊரின் புத்த ஸ்தூபியில் காணப்படும் பிராமி எழுத்துக்களை ஒப்பிட்டு பியூலர் என்ற அறிஞரும் கணித்திருக்கிறார். இந்தியாவின் புத்த, சமண இலக்கியங்களை ஆதாரமாக வைத்து 1886-ல் இதற்கு பிராமி எனப் பெயரிட்டவர் டெர்ரியன்-டி-லாக்கோப்பெரி என்ற பிரெஞ்சு அறிஞர். இப்பிராமி எழுத்துகளே அவற்றைப் பயன்படுத்திய அரசர்களது பெயரில் மௌரியப் பிராமி, குப்தப் பிராமி, குஷானப் பிராமி, சாதவாகனப் பிராமி எனப் பலவாறாக அழைக்கப்படுகின்றன. இவ்வெழுத்துக்களே தமிழ் மொழிக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன எனும் அடிப்படையிலேயே தமிழக கல்வெட்டுகள் 1903 முதல் ஆராயப்பட்டு வந்திருக்கின்றன. எனினும் சங்ககால தமிழ் எழுத்துக்கள் அசோகர் காலத்திற்கு முற்பட்டவை என்பதே தமிழ் கல்வெட்டு அறிஞர்களின் முடிவாக இருக்கிறது.

தொல்லியல் மற்றும் கல்வெட்டியலின் ஆய்வு முடிவுகள் சிந்து வெளிப் பண்பாடு திராவிடப் பண்பாடு என்ற கருத்தாக்கத்திற்கு வலு சேர்ப்பதாக அறிஞர்கள் உரைக்கிறார்கள். சிந்து வெளிக் காலத்திலிருந்த எழுத்துக்கள் பகுதி சித்திர எழுத்துக்களாகவும், பகுதி ஒலி எழுத்துக்களாகவும் இருக்கக்கூடும் என்பது தொல்லெழுத்து வல்லுநர்களின் கருத்தாக இருக்கிறது. சிந்து வெளி எழுத்திலிருந்தே பிராமி எழுத்துக்கள் தோன்றியிருக்க வேண்டுமென்பது பல அறிஞர்களின் கருத்து.

தமிழகத்தில் முப்பதிற்கும் மேலான இடங்களிலிருந்து ஏறக்குறைய நூறு கல்வெட்டுக்களும், இருபத்தைந்து தொல்லியல் வாழ்வியல் பகுதிகளிலிருந்து இரு நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட பானைக் கீறல்களும் கண்டு பிடிக்கப் பெற்றுள்ளன. இவை தவிர முத்திரைகளிலும், மோதிரங்களிலும், காசுகளிலும் தமிழ் எழுத்துக்கள் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் தமிழ் மொழியின் பழமைக்கும் பெருமைக்கும் தகந்த சான்றுகளாக அமைந்திருக்கின்றன என்பது பண்டைய தமிழரின் அருங்கொடையே.

ஒரு மொழிக்கு ஒலியும், வரி வடிவமும் அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. வரி வடிவமில்லாத எத்தனையோ மொழிகள் உலக வழக்கில் இருந்திருக்கின்றன. தற்போதும் வரிவடிவமான எழுத்துக்கள் இல்லாத மொழிகள் உலகிலுண்டு. எழுத்து மொழி, சித்திரக் கோடுகளாகவும், குறியீடுகளாகவுமே தொடக்க நிலையில் அறியப்பட்டிருக்கும்.

இந்தியாவில் கண்டறியப்பட்ட தொன்மையான எழுத்துக்களாக சிந்து வெளி எழுத்துக்களே உள்ளன. இவற்றை பெரும்பாலும் படித்தறிய முடியாத நிலையே இருக்கிறது. இவற்றிற்கும் பின் வந்தவையே பிராமி எழுத்துக்கள். பிராமி எழுத்துகள், தமிழ், பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளுக்குப் பொதுவாக இருப்பினும் தமிழோடு சற்று வேறுபடுவதாகவும் அறியப்பட்டுள்ளன. அசோகரது (பொ.ஆ.மு. 274 – 237) ஆட்சிக் காலத்தில் அறியப்படும் பிராமி எழுத்து, தமிழகத்திலும் கண்டறியப்பட்டுள்ளது. குஜராத் மாநிலம் கிர்நார் பதினாறாம் பாறைக் கல்வெட்டில் சேர, சோழ, பாண்டியர்களும் சத்ய புத்ரராகிய அதியமான் மரபினரும் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். அசோகரது காலத்திற்கும் முற்பட்டது மாங்குளம், புலிமான் கோம்பை, தாதாப்பட்டி கல்வெட்டுக்கள் என தொல்லியல் அறிஞர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

பொது யுகத்தின் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமஸ்கிருத கல்வெட்டுக்கள், ஹத்திபடா, அயோத்தி போன்ற பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளது அம்மொழியின் பழமைக்குச் சான்றாகும். சிந்துவெளி தவிர்த்து, பண்டைய இந்தியாவில் வழக்கிலிருந்த பழமையான மொழிகளாக தமிழ், பிராகிருதம், சமஸ்கிருதம் போன்றவையே உள்ள நிலையில் இதில் ஏதேனும் ஒன்றே சிந்து வெளி எழுத்திற்கும் பிராமி எழுத்திற்குமான இடைவெளியை, தொடர்பை நிறைக்கும் மொழியாக இருக்கும் என்பது தெளிவு.

தொல்காப்பியமும் சங்க இலக்கியப் பாடல்களும் தமிழிலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து. தொன்மையான சிந்து வெளிக் குறியீடுகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளன. பூம்புகார், மயிலாடுதுறை, செம்பியம், கண்டியூர் முதுமக்கள் தாழிகளிலும், சூலூர் மண் வட்டிலும் இடம்பெற்றுள்ளன என்பது தகுந்த சான்றுகளோடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மயிலாடுதுறைப் பகுதி அகழ்வாய்வில் சிந்து வெளி எழுத்துப் பொறிப்புகளுடன் 2006-ல் கிடைத்த கைக்கோடரி மேலும் தகுந்த சான்றாக அமைகிறது.

புதிய கற்காலத்தில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அதாவது விந்திய மலைப்பகுதி நீங்கலாக திராவிட இன மொழிகளே பேசப்பட்டன என பேராசிரியர் பி.டி சீனிவாச ஐயங்காரும் (இந்தியாவில் கற்காலம்- ஆங்கிலத்தில்) பேராசிரியர் டி.ஆர் சேஷ ஐயங்காரும் (திராவிடங்களின் இந்தியா- ஆங்கிலத்தில்) விளக்கியுள்ளனர். திராவிடமொழி தென்னிந்திய மொழி மட்டுமன்று, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பேசப்பட்ட மொழி எனச் சான்றுரைத்த அறிஞர் அம்பேத்கரின் கூற்றும் ஒப்பு நோக்கத்தக்கது.

அறிஞர் நாகசாமி அவர்களால் தமிழி எனப் பெயரிடப்பட்ட தமிழ் பிராமி எழுத்துருவுக்கும், சிந்து வெளி எழுத்துருவுக்குமான இணைப்புக் கண்ணிகளை தமிழ் நிலம் அளிக்கும் என்பது உறுதி.

தொல்பொருள், கல்வெட்டு, செப்பேடு போன்றே தமிழின் பழமைக்குக் கட்டியம் கூறுவது நாணயங்கள். பண்டையக்கால அரசுகளைப் பற்றியும், மக்களின் வாழ்க்கை முறையையும், அப்பகுதியின் வரலாற்றையும் கண்டறிவதில் நாணயங்களின் பங்கு மகத்தானது. நாணயத்தை ஆக்கும் உலோகம், வெளியிட்ட ஆண்டு, வெளியிட்ட அரசு, நாணயத்தின் கலையம்சம் போன்றவை வரலாற்றுத் தகவல்களுக்குப் பெரிதும் துணைபுரிபவை மற்றும் சான்றளிப்பவை. நாணயங்கள் மூலம் ஒரு நாட்டின் பொருளாதரத் தன்மையும் தெரிய வரும். தங்க நாணயம் வெளியிடும் நாட்டுக்கும், தங்க முலாம் பூசப்பட்ட செப்பு நாணயம் வெளியிடும் அரசுக்கும் பெருத்த வேறுபாடுகள் இருக்கும்.

வரலாற்றுக் காலத்தின் ஆரம்பநிலையில் ஒரு பொருளைக் கொடுத்து வேறொரு பொருளை வாங்கும் பண்டமாற்று முறையே இருந்திருக்கும் என்பதற்கு

சான்றாக இன்றைக்கும் சில இடங்களில் பண்டமாற்று முறை புழக்கத்திலுள்ளதை அறியலாம். ஆட்டுத்தோலையும், குதிரைகளையும் கூட நாணய அலகாக மக்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். சிப்பிகள், உலோகங்கள் போன்ற பலவிதமான பொருட்கள் நாணயங்களாகப் பயன்பட்டிருக்கின்றன. நாணயங்கள் சேகரிப்பும் பண்டைக் காலத்திலிருந்தே வழக்கத்திலிருக்கிறது.

தமிழகத்தில் சங்ககாலம் முதலே நாணயங்கள் பயன்பாட்டிலிருந்திருக்கின்றன. சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களும், குறுநில மன்னர்களும் நாணயங்கள் வெளியிட்டிருப்பது சான்றுகளோடு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நாணயங்கள் மூலம் தமிழக வரலாறும், பொருளாதாரமும் அறியப்படுகிறது. பிற அரசுகளின் நாணயங்கள் தமிழ் நாட்டில் கிடைப்பதன் மூலம் அந்நாடுகளைப் பற்றியும் தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன.

தமிழ் நிலத்தில் பெருவாரியான நாணயங்கள் கிடைப்பதிலிருந்து, பண்டைய காலத்திலேயே இங்கு நாணயங்கள் வழியாக வணிகம் சிறந்து விளங்கியிருப்பதை அறிய முடிகிறது. நாணயம் வணிகப் பொருளாக மட்டுமின்றி, அதன் காலத்திய நாகரிகம், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் வரலாற்றுத் தகவல்களை தெரிவிப்பதாகவும் உள்ளது. வைகை, நொய்யல், தென்பெண்ணை, பவானி, காவிரி ஆறுகளின் ஓரமாக மண் அரிப்பு செய்து காசுகளைத் தேடுபவர்களிடமிருந்தும், அமராவதி, சித்தூர், மைசூரு நகரங்களின் கோட்டை, கோவில் போன்ற இடங்களிலிருந்தும் பத்தாயிரத்திற்கும் அதிகமான காசுகள் கிடைத்திருக்கின்றன. தமிழகத்தில் ராஜராஜன் காலத்திய நாணயங்களே அதிகம் கிடைப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக முத்திரைக் காசுகள் பெரும்பாலும் பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டு காலத்தவையாக கண்டறியப்பட்டுள்ளன. தமிழக முத்திரைக் காசுகள் வட இந்தியாலிருந்து வந்தவை என்ற கருத்தியலைத் தவறாக்கும் விதத்தில் பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே பாண்டியர்கள் முத்திரைக் காசுகள் வெளியிட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் முத்திரைக் காசுகள் வெளியிடப் பயன்படுத்திய வார்ப்புக் கூடுகளும் தமிழகத்தில் கிடைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாக அமைகிறது.

தமிழக நாணயங்கள் குறித்து நூறு ஆண்டுகளுக்கும் மேலாகப் பலர் ஆராய்ந்து வந்துள்ளனர். 1888-ல் பாதிரியார் லோவன் தால் அவர்களால் வெளியிடப்பட்ட திருநெல்வேலி நாணயங்கள் என்ற நூலில் தொன்மையான பாண்டியர் நாணயங்கள் குறித்து தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் பாண்டியர்களின் செப்பு, சதுர நாணயங்களின் வரைபடங்களை வெளியிட்டிருக்கிறார். 1933-ல் சர்.டி தேசிகாச்சாரி வெளியிட்ட தென் இந்திய நாணயங்கள் என்ற நூலில் பாண்டியர்களின் நீள் சதுர நாணயங்கள் குறித்து விளக்கியிருக்கிறார். 1966-ம் ஆண்டில் காசி நாணயவியல் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட பாண்டியரது நாணயங்கள் என்ற நூலை எழுதிய ஆங்கில அறிஞர் புதெல்பு பாண்டியர்களது முப்பத்தைந்து செப்பு சதுர நாணயங்கள் குறித்து விளக்கியுள்ளார்.

எழுத்துக்களுடன் கூடிய நாணயங்கள் கிடைக்காததால் சங்ககாலத்தில் நாணயங்களே வெளியிடப்படவில்லை எனும் கருத்தை மாற்றியமைத்தவராக தினமலர் ஆசிரியர் திரு.இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாராட்டப்படுகிறார். 1984 ஆம் ஆண்டு மிகுந்த தேடலுக்கும், முயற்சிக்கும் சாதனையாக வைகையாற்று புது வெள்ளத்தின் மூலமாகப் பெறப்பட்ட பழைய காசிலிருந்து பெருவழுதி என்ற வார்த்தையை மிகுந்த அறிவுத்திறத்துடன் கண்டுபிடித்து விளக்கியது தமிழக தொல் வரலாற்றில் மிகப் பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. சங்க காலப் பாண்டிய மன்னரான பெருவழுதி நாணயம் பொ.ஆ.மு. மூன்றாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டாக ஆதாரப் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

செப்பு நாணயத்தின் நீளம் 1.7 செ.மீ, அகலம் 1.7 செ.மீ, எடை 4.100 கிராம். நாணயத்தின் முன்புறம், இடப்புறம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. குதிரையின் முகத்திற்குக் கீழாக இரண்டு தொட்டிகள் உள்ளன. அத்தொட்டிகளில் இரண்டு ஆமைகள் உள்ளன. குதிரை முகத்தின் அருகிலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்குகிறது. அச்சொல் தொன்மையான தமிழ் பிராமி எழுத்து வடிவத்தில் இருமுறை பொறிக்கப்பட்டுள்ளது. குதிரையின் முன்னங்கால்களின் கீழ் மூன்று கையுடைய ஒரு சின்னம் காணப்படுகிறது. பின்புறம் கோட்டு வடிவுடைய மீன் சின்னம் இடம்பெற்றுள்ளது.

காசுகள் காலத்தை வரையறுக்க உதவும் சான்றுகளாகின்றன. பழம் பாண்டியர்களுடைய சங்ககால நாணயங்கள் ஒரு புறம் மீன் சின்னத்தையும் மறுபுறம் யானை அல்லது எருதின் சின்னத்தையும் கொண்டிருக்கின்றன. பாண்டியர்கள் முதலில் முத்திரை நாணயங்களையும் தொடர்ந்து செப்பு நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

சங்க கால பாண்டிய மன்னர் செழியன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட செப்பு காசு தாமிரபரணி ஆற்றில் கண்டெடுக்கப்பட்டதாக 2011-ல் திரு.இரா. கிருஷ்ணமூர்த்தி பதிவிட்டிருக்கிறார். சங்ககால தமிழக வரலாற்றுக்கு அணிகலனாகத் திகழும் இந்த செப்புக் காசு 0.900 கிராம் எடையிலும், நாணயத்தின் முன் பகுதியில் தமிழ்-பிராமி எழுத்து முறையில் செழியன் என்று பெயர் பொறிக்கப்பட்டிருப்பதாகவும், நாணயத்தின் பின்புறம் தேய்ந்து இருப்பதால் ஒன்றும் தெரியவில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மன்னர் பெருவழுதி நாணயத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மன்னர் செழியன் நாணயத்தின் எழுத்து பொஆ.மு. இரண்டாம் நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்தது என உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆசிரியரால் சேரர் கால நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழுக்கு இனிப்பான செய்தியே. சங்ககால சேரமன்னர்கள் வெளியிட்ட மாக்கோதை, குட்டுவன் கோதை என்னும் பெயர் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் 1990 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் கரூர் அமராவதியாற்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சங்ககால இலக்கியமான புறநானூற்றில் காணப்படும் மன்னர்களின் பெயர்கள் உள்ள நாணயங்கள் வெளிப்படுவது அந்த இலக்கியத்தில் குறிப்பிட்ட மன்னர்களின் பெயர்கள் உண்மையானது என்பதும் உறுதியாகிறது.

அமராவதி ஆற்றுப்படுகையில் சங்ககால சோழர் காசு கிடைத்துள்ளது. காசின் முன்புறம் காளை உருவம் நின்ற நிலையிலும், பின்பக்கத்தில் புலி உருவம் கோடுகளினால் வரையப்பட்டும் இருக்கிறது. இந்த நீள் சதுர வடிவ செப்புக் காசில் காளையின் கீழே நாந்திபாதச் சின்னங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்ககால குறுநில மன்னர்களுள் ஒருவரான திருக்கோவலூர் மலையமான் காலத்திய செம்பு, இரும்பு நாணயங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரிக்கமேட்டில், உரோமப் பேரரசர் அகஸ்டஸ் மற்றும் அவரை அடுத்து வந்தவர்களின் நாணயங்கள் கிடைத்திருப்பது சங்க இலங்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ள அயல் நாட்டினருடனான வணிகத் தொடர்பை உறுதி செய்வதாக அமைகிறது. பொ.ஆ.மு. 300 காலத்திய பழமையான கிரேக்கக் காசுகள் கிடைக்கப் பெற்றுள்ளது தமிழுக்கு உவப்பானதே. கரூர் நகரில் இக்காசுகள் அதிகமாகக் கிடைத்துள்ளதை ஒப்பு நோக்கி, சேரர் தலைநகரான கரூருக்கும், கிரேக்கத் தீவுகளுக்குமிடையே முசிறித் துறைமுகம் வழியாக பழங்காலத்திலேயே வணிகத் தொடர்பு இருந்துள்ளமை ஆதாரங்களோடு நிரூபிக்கப்பட்டுள்ளது.

உரோமானிய வெள்ளிக் காசு, திருப்பூரில் கிடைக்கப்பெற்றுள்ளது. தமிழகத்தில் அகஸ்டஸ், டைமிரியஸ், கிளாடியஸ், நீரோ போன்ற உரோம மன்னர்களின் காசுகள் பெருமளவில் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் மூலம் உரோமக் காசுகள் மதிப்பு மிக்க பொருட்களாக இருந்திருக்கலாமென கருதப்படுகிறது. பிளினி என்ற உரோம ஆசிரியர், தங்கமும் வெள்ளியும் உரோமிலிருந்து அளவுக்கு அதிகமாக வெளியேறுவது நல்லதல்ல என அறிவுறுத்தும் அளவுக்கு தமிழ்நாட்டின் சேர மிளகிற்கும், பாண்டிய முத்துக்கும், சோழ நாட்டு துணிவகைகளுக்கும் உரோம நாட்டில் செல்வாக்கிருந்திருக்கிறது.

தமிழகத்திற்கும் சீனத்திற்கும் மிகப் பழமையான காலத்திலேயே வணிக உறவு இருந்ததாக ஆய்வாளர்கள் சான்றளிக்கிறார்கள். அந்நாட்டின் இலக்கியங்கள் தமிழக வணிகத் தொடர்பை பொ.ஆ.மு இரண்டாம் நூற்றாண்டிலிருந்து பதிந்துவந்துள்ளதாக அறியப்படுகிறது. தஞ்சாவூரில் பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன நாணயம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டை வட்டம் ஓலயக் குன்னம் என்ற ஊரிலும், மன்னார்குடி வட்டம் தாலிக்கோட்டை ஊரிலும் அதிக எண்ணிக்கையில் சீன நாணயங்கள் கிடைத்துள்ளன.

மேலை நாடுகளுடனான வணிகம் போன்றே கீழை நாடுகளுடனான கடல் வணிகத்திலும் பண்டையத் தமிழர் சிறந்து விளங்கியிருக்கின்றனர். சீனாவிலும், தாய்லாந்திலும் சோழர் கால காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தாய்லாந்தோடு சங்க காலம் தொட்டே சிறந்த தொடர்புகள் இருந்திருக்கின்றன என்பதற்கு ஆதாரமாக பல தொல்லியல் சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பழங்காலத்திலிருந்தே தமிழர்கள் கடல் ஆதிக்கத்திலும் கடல் வணிகத்திலும் சிறந்து விளங்கியிருக்கிறார்கள் என்பதற்கு பேரளவிலான சான்றுகள் தமிழ் மண்ணிலும், அயல் நாடுகளிலும் கிடைத்துள்ளன. சேர, சோழ, பாண்டியர் என மூன்று நாடுகளுக்குமே கீழை, மேலை என பல நாடுகளுடனும் வணிகத் தொடர்பு இருந்திருக்கிறது. தொடர்ந்து வந்த பல்லவர்கள், பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள் என தமிழகத்தின் வணிகம் உலக வணிகத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றே வந்திருக்கிறது.

பொருட்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு பரிமாற்ற அலகு நாணயம் எனப்படுகிறது. பண்டைய தமிழர் நாணயங்கள் அக்கம், மாடை, கழஞ்சு, அன்றாடு, நற்காசு, ஈழக்காசு போன்ற பல பெயர்களில் அழைக்கப்பட்டிருக்கின்றன. உலகில் பொ.ஆ.மு எட்டாம் நூற்றாண்டளவில் நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாமென மதிப்பிடப்படுகிறது.

தகடூர் எனும் தருமபுரியை ஆண்ட சங்ககால மன்னர் அதியமானைப் பற்றிய பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அதியமான் மழவர் இனத்தைச் சார்ந்தவரென்றும் இவரது முன்னோர் முற்றிலும் நீரால் சூழப்பட்ட பகுதியிலிருந்து வந்தவரென்றும் அறியப்படுகிறது.

சங்கப்பாடல்களால் புகழப்படும் அதியமான் பெயர் பொறித்த பொ.ஆ.மு மூன்றாம் நூற்றாண்டு நாணயமொன்றும் ஆசிரியர் திரு.இரா கிருஷ்ணமூர்த்தியால் கண்டறியப்பட்டு அதனைப் பற்றிய தகவல்களும் 2015-ல் வெளியிடப்பட்டிருக்கிறது. பல இடர்பாடுகளுக்கிடையில் மிகுந்த கவனத்துடன் இந்த நாணயத்தை சுத்தம் செய்த ஆசிரியரை தமிழுலகம் என்றென்றும் நினைவில் கொள்ளும்.

நாணயத்தின் முன்புறம் - யானை வலப்பக்கம் நோக்கி நிற்கிறது. அதன் முன் ஒரு கொடிக் கம்பம் உள்ளது. நாணயத்தின் மேல் விளிம்பின் இடப்பக்கத்தில் ஒரு ஸ்வஸ்திக் சின்னமும் அதன் அருகில் டவுரின் சின்னமும் உள்ளன. யானையின் மேல் பகுதியில் அதியமான் என்ற பெயரில் நான்கு எழுத்துக்கள் பிராமி எழுத்து முறையிலும், ஓர் எழுத்து தமிழ் பிராமி முறையிலும் உள்ளன.

பின்புறம் - நாணயத்தின் அடிப்பகுதியில் ஆறு ஒன்று அச்சாகியுள்ளது. தேய்ந்த நிலையில் இருப்பதால் முழுமையாகத் தெரியவில்லை. ஆற்றில் இரண்டு மீன்கள் இருக்கின்றன. நாணயத்தின் மத்தியில், குதிரை ஒன்று வலப்பக்கம் நோக்கி

நின்று கொண்டிருக்கிறது. குதிரையின் முன் பகுதியில், போர் வீரன் ஒருவன் நின்று கொண்டிருக்கிறான். போர் வீரன் ஒரு கையில் கேடயமும், மறு கையில் வாள் போன்ற ஆயுதத்தையும் வைத்திருக்கிறான். போர் வீரன் தன் தலையில் அணிந்திருக்கும் தொப்பி போன்ற கவசத்தில் கிரேக்கப் போர் வீரர்கள் அணியும் அலங்கார முடி அமைப்பு உள்ளது. அதியமான் என்ற பெயர் குதிரையின் பின்புறத்திலிருந்து துவங்கி, குதிரையின் மேல் பகுதி வழியாகச் சென்று வலப்பக்கத்தில் முடிகிறது.

2015-ல் மாறன் என்ற பெயர் பொறித்த நாணயமும் ஆசிரியரால் கண்டறியப்பட்டிருப்பது சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் மாறன் பெயருக்கான ஆவணமாகக் கருதப்படுகிறது. பொ.ஆ.மு. நான்கு அல்லது மூன்றாம் நூற்றாண்டாகக் கொள்ளத்தக்கதான இந்த நாணயம், வெள்ளியத்தால் செய்யப்பட்டிருப்பதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக கருதப்படுகிறது. டின் என அழைக்கப்படும் வெள்ளியம் தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற தென் கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து வணிகம் மூலம் தமிழகத்திற்கு கொண்டு வந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது.

நாணயத்தின் பின்புறம் வீரனொருவன் எருதை அடக்க முயற்சிப்பது போல் பதியப்பட்டிருப்பதால் சங்ககாலத்திலேயே எருது அடக்குதல் இருந்திருக்க வேண்டும் எனக் கணிக்கப்படுகிறது. சங்ககால மதுரை பாண்டியர்கள் வெளியிட்ட நாணயங்களில் இடம் பெறும் மீன் வடிவக் கோட்டுச் சித்திரம், இந்த மாறன் நாணயத்தில் இடம் பெறாததால் இது சங்ககால கொற்கைப் பாண்டியர்களால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்ற முடிவும் எட்டப்பட்டிருக்கிறது.

பண்டையத் தமிழர்களின் கடல் வாணிகம் குறித்தான தொடர்புகளுக்கு தொன்மை நாணயங்கள் ஆகப்பெறும் சான்றுகளாக அமைகின்றன. தமிழகத்தின் ஆற்றங்கரைகள், கடல்பகுதிகள், மலைகளின் அடிவாரங்கள் போன்ற பகுதிகளில் ரெம்பாலான தொல்லியல் சான்றுகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. தாமிரபரணி நதிப்படுகைகள் தொல்லியலில் மிகுந்த முக்கியத்துவம் பெற்ற பகுதியாக அறியப்படுவது போன்றே வைகைக் கரைப்பகுதிகளும் சமீபகாலங்களில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

வைகைச் சமவெளி, வைகை நாகரிகம் என அடையாளப்படுத்தப்படும் வைகையாற்றுப் பகுதி, வைகையாறு உற்பத்தியாகும் வள்ளிமலைப்பகுதி மேற்கு மலைத்தொடர் தொடங்கி, இராமநாதபுர மாவட்டத்தில் கடலில் கலங்கும் பகுதி வரைக்குமான ஆறும் அதன் கரைப்பகுதிகளும் என வரையறுக்கப்பட்டிருக்கிறது.

வைகையாற்றை ஒட்டிய பகுதிகளில் ஏறக்குறைய முன்னூறு தொல்லியல் எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. வருஷநாடு, அழகங்குளம் போன்ற பகுதிகளில் சிறு அளவிலான அகழாய்வுகள் செய்யப்பட்டிருந்தனவேயொழிய முக்கியமான அகழாய்வுகள் செய்யப்படாமலிருந்தன. 2015-ல் இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையால் தொடங்கப்பட்ட கீழடி அகலாய்வு மிகப்பெரிய வரலாற்று ஆய்வுக்களமாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பது வைகைச் சமவெளிக்கும், தமிழ் உலகுக்கும் மிகவும் பயன்தரக்கூடியதொன்றாகக் கருதப்படுகிறது.

பொ.ஆ.முன் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த வசிப்பிடமாக கீழடி கணிக்கப்படுவதன் மூலம் சங்ககாலம் பற்றியும், தமிழரின் தொன்மையான நகர நாகரிகம் பற்றியும் அருந்தகவல்களைக் கொடுக்கக்கூடியதாக இக்களம் கவனத்தைப் பெறுகிறது. மதுரைக்கு அருகே சிவகங்கை மாவட்டம் கீழடி என்ற ஊரின் பள்ளிச்சந்தை திடல் பகுதியில் என்பது ஏக்கர் நிலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வூரின் அமைவிடம் பண்டைய மதுரை அழகன்குளம் துறைமுக வணிகப்பாதையில் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கீழடி ஆய்வுக்களத்தில் பண்டைய உறைக் கிணறுகள் காணப்படுகின்றன. உரோமப் பேரரசுகளுடனான வணிகத் தொடர்பை மெய்ப்பிக்கும்படியான ரௌலட், அரிட்டைன் வகை மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. மேலும் வரலாற்றின் ஆரம்பநிலையைச் சேர்ந்தவையாகக் கருதப்படும் மட்பாண்டத் துண்டுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. செங்கல் கட்டிடம் இருப்பது வரலாற்று ஆய்வாளர்களை ஆர்வம் கொள்ளச் செய்கிறது.

ஆதன், உதிரன், திசன் என்றும் பெயர்களைக் குறிக்கும் தமிழி எழுத்துக்கள் கொண்ட மண்பாண்ட ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதும் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகுந்த கவனம் பெற்றுள்ளது. சூதுபவளம், அகேட் மணிகள், பச்சை, மஞ்சள், நீலநிறக் கண்ணாடி மணிகள் போன்ற அணிகலன்கள் எடுக்கப்பட்டள்ளன. யானைத் தந்தத்தினாலான தாயக் கட்டைகள், இரும்பு வேல், தாமிரத்திலான

கண்மை தீட்டும் கம்பி போன்ற அறுநூறு பொருட்கள் அகழாய்வின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளன. வைகைச் சமவெளி நாகரிகத்திற்கான அடித்தளத்தை நன்கு கட்டமைத்திருக்கிறதென்றே கூற வேண்டும். பல கட்ட அகழாய்வுகள் தொடரும் போது மேலும் பல அரிய தொல்லியல் சான்றுகள் கிடைக்கப் பெறலாம் என்பது வரலாற்றாய்வாளர்களின் நம்பிக்கை.

சிந்துவெளி நாகரிகத்திற்கும், கங்கைவெளி, வைகைவெளி நாகரிகங்களுக்குமான தொடர்புறவுகள் எத்தகையது என்பதைப் பற்றி பல்வேறு அறிஞர்களும் பல்வேறு விதமான முடிவுகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் நிகழ்ந்ததை கிடைத்திருக்கக்கூடிய மிகக் குறைவான சான்றுகளை வைத்துக்கொண்டு திட்டவட்டமாகக் கணிப்பது மிகவும் கடினமான காரியமல்லவா.

சிந்து வெளி நாகரிகத்தின் காலத்தைக் கணித்ததில் ஜெர்மன் மொழியியலாளர் அறிஞர் மாக்ஸ் முல்லரின் (1823-1900) பங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியவியலை மேற்கத்தியப் பல்கலைகளில் இடம்பெறச் செய்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு. மதங்களின் ஒப்பீட்டு ஆய்வுகளும் இவரது பெருமைகளுக்குக் காரணம். இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பமான சமஸ்கிருதத்தில் முல்லருக்கு இருந்த புலமையும் பற்றும் வியக்க வைப்பது. அதன் காரணமாகவே முல்லர் இந்தியாவே உலகில் மிக்க செல்வச் செழிப்பும், உறுதியும், அழகும் கொண்ட நாடு எனச் சான்றளித்திருக்கிறார்.

தொன்மைமிக்க சிந்து சமவெளி நாகரித்தை உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியவர் என்ற பெருமைக்குரியவர் சர். ஜான் ஹியூபெர்ட் மார்ஷல் (1876-1958). 1902 முதல் 1928 வரை அப்போதைய இந்தியாவின் தொல்லியல் துறைத் தலைவராக இருந்த பெருமதிப்பிற்குரிய மார்ஷல், அரப்பாமற்றும் மொகஞ்சதரோ அகழாய்வில் பெரும்பணியாற்றியிருக்கிறார். இந்தியப் பணிக்கு முன் கிரேக்கத்தில் சில முக்கியமான அகழ்வாய்வுகளை செய்திருந்தார். அசோகரது அட்சிக் காலத்தைக் காஞ்சி, சாரநாத் அகழ்வாய்வுகள் மூலம்வெளிக் கொணர்ந்ததிலும் மார்ஷல் அவர்களின் பணி உன்னதமானது.

இந்து நாகரிகத்தைப் பற்றி முதலில் குறிப்பிட்டவராக, அடையாளம் கண்டவராக, கிழக்கிந்தியக் கம்பெனியின் வாங்காளப் பிரிவு பீரங்கிப்

படையிலிருந்த ஜேம்ஸ் லெவிஸ் என்ற சார்லஸ் மே சன் (1800-1853) அறியப்படுகிறார்.

வாங்காள பொறியியல் படைப்பிரிவிலிருந்த பிரிட்டன் பொறியாளர் சர்.அலெக்ஸாண்டர் கன்னிங்காம் அவர்களுக்கு, இந்திய வரலாற்றிலும் தொல்லியலிலும் இருந்த அதீத ஆர்வமே காணிங்பிரபு கன்னிங்காமை 1861-ல் இந்திய தொல்லியல் சர்வேயராக நியமிக்கக் காரணமாக அமைந்தது என்றால் மிகையாகாது. இவரே இந்திய தொல்லியல் துறைக்கு அடித்தளமிட்டவராக அறியப்படுகிறார். அரப்பா நாகரிகத்தின் பெருமை பேசும், பிராமி எழுத்துக்களென அறியப்பட்ட அச்சுப் பதிவொன்றை முதன் முதலாக வெளியிட்டவர் கன்னிங்காமே.

அலெக்ஸாண்டர் கன்னிங்காம், பிரான்சிஸ் கன்னிங்காம், கன்னிங்காம் எனும் மூன்று சகோதரர்களை இந்திய மண்ணோடு பிணைக்க வைத்த ஸ்காட்லாந்து கவிஞரும், எழுத்தாளருமான ஆலன் கன்னிங்காம் அவர்கள் பாராட்டுக்குரியவரே. இவரது மற்றொரு மகனான கன்னிங்காமும் எழுத்தாளராக அறியப்படுவதும் சிறப்பே.

1944 முதல் 1948 வரை இந்திய தொல்லியல் துறைக்குத் தலைவராக இருந்த சர். இராபர்ட் எரிக் மார்டிமர் வீலர் (1890-1976) தமது மாணவர்கள் மேல் பேரன்பு கொண்டவராகவும், தொல்லியலில் பல குறிப்பிடத்தகுந்த அறிஞர்களை உருவாக்கியவராகவும் புகழப்படுகிறார். தென்னியப் பகுதிகள் மேல் கவனம் செலுத்திய வீலர் அரிக்கமேடு, கர்நாடகத்தின் பிரம்மகிரி அகழ்வாய்வுகளில் முக்கிய பங்காற்றியிருக்கிறார்.

ஹிராஸ் பாதிரியார் என அறியப்படும் ஸ்பெயின் நாட்டு ஹென்றி ஹிராஸ் (1888-1955), சிந்து சமவெளி எழுத்துக்கள் குறித்தான பல வரலாற்றுப் பார்வைகளை முன்வைத்திருக்கிறார். வரலாற்றாசிரியர் மற்றும் தொல்லியலாளரான ஹிராஸ் அவர்கள், சிந்துவெளி, சுமேரிய எகிப்திய நாகரிகங்களுகிடையேயான தொடர்புகள் குறித்து விளக்கியிருக்கிறார். சிந்து வெளிக்கும், சங்கத் தமிழருக்கும் உள்ள தொடர்புகளை எடுத்துக் காட்டியிருப்பதாகவும் புகழப்படுகிறார். இதன் பிறகே பழந்தமிழருக்கு சிந்து வெளியுடனான வரலாற்றுத் தொடர்புகள் குறித்தான கருத்தாக்கம் வலுப்பெற்றதாகக் குறிப்புகள் சொல்கின்றன.

சிந்துவெளி மற்றும் பழந்தமிழர் தொடர்பு குறித்தான வரலாற்றுப் பார்வைக்கு வலுசேர்க்கும் விதமாக, சங்ககால இலக்கியங்கள் இடம் பெறும் ஊர்களின் பெயர்கள், சிந்துவெளியெங்கும் பரந்து இருப்பதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சிந்து வெளியில் தமிழக துறைமுகங்கள், தலைநகரங்கள் மற்றும் ஊர்களின் பெயர்கள் அப்படியே இடம் பெற்றிருப்பதாக பல அறிஞர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

பாகிஸ்தானில் கொற்கை, வஞ்சி, தொண்டி, மத்ரை, உறை, கூடல்கட், கோனி, ஆப்கானிஸ்தானிலுள்ள கொற்கை, பூம்புகார் போன்ற பெயர்கள் தமிழக சங்ககாலத்திய துறைமுகப் பெயர்களாகவே இருக்கின்றன. பாகிஸ்தான், ஆப்ககானிஸ்தான் போன்ற வட மேற்கு ஆசியப் பகுதிகளில் எண்ணிறந்த ஊர்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாகவே இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள் என்றில்லாமல் கூகுள் வரைபடம் பயன்படுத்தி யாரும் எளிதாக இப்பெயர்களைக் கண்டுகொள்ள முடியும் என்பதும் குறிப்படத்தக்கது..

பாகிஸ்தானின் சாவேரி வாலா, பொர்னை, புரோனை, காரியாரோ போன்ற பெயர்கள் ஆப்கானிஸ்தானின் காவ்ரி, பொர்னை, புரோனை போன்ற பெயர்கள் தமிழகத்தின் காவிரி, பொருநை போன்ற ஆறுகளைக் குறிப்பதாகவே கருதப்படுகிறது. இந்திய ஆட்சிப் பணியாளரான திரு. பாலகிருஷ்ணன் சிந்துவெளி நாகரிகமும் சங்கத் தமிழ் இலக்கியமும் எனும் தலைப்பில் இது குறித்து அதிகமாக விவரித்திருப்பது பாராட்டுக்குரியது.

நாகரிகங்கள் தோன்றுவதற்கு முன்பே தோன்றிவிட்ட ஊர் பெயர்கள், அந்நாகரிகங்கள் பல்வேறு காரணங்களால் நலிவடைந்த பின்னரும் பிழைத்திருக்கின்றன என்பது மகிழ்ச்சிகுரிய செய்தியே. காலப் போக்கில் மொழி மாற்றங்கள், புலப்பெயர்வுகள், புதிய மக்களின் குடியேற்றங்கள் என எத்தனை நிகழ்வுகள் நிகழ்ந்தாலும் ஊர்ப் பெயர்களுக்கு சாகாத்தன்மை உண்டு எனச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் ஊர்ப் பெயர்கள், புலப்பெயர்வுகளின் நம்பிக்கைக்குரிய தடயங்களாக விளங்குவது தனிச் சிறப்பு.

புகார், பூம்புகார் என அறியப்படும் சங்ககால சோழமன்னர்களின் வணிக முக்கியத்துவமான காவேரிப் பூம்பட்டினம் பல்வேறு வரலாறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. காவிரி ஆறு கடலோடு சேருமிடத்திலுள்ள இப்பட்டினம் சங்க

காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் பெருநகரமாக விளங்கியதை இலக்கியங்கள் சுட்டுகின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்கள் பூம்புகாரை சிறப்பாகக் காட்டுபவை.

புகாரின் சிறப்பாக பட்டினப்பாலை கூறும் தகவல்களின் படி, கடல் வழியே வந்த சவாரிக் குதிரைகள், வண்டியில் வந்த மிளகு மூட்டைகள், வடமலையில் பிறந்த மணிக்கற்கள், மேற்கு மலையில் பிறந்த சந்தனம், அகில், தென்கடல் முத்து, கீழைக்கடல் பவளம், கங்கை, காவிரி விளைச்சல்கள், ஈழத்து உணவு, பர்மா தேக்கு முதலான பண்டங்கள் தெருக்களில் மண்டிக்கிடந்திருக்கின்றன.

இந்திய தொல்பொருள் துறையால் இங்கு 1963 முதல் 1967 வரை மேற்கொண்ட ஆய்வுகள் பல்வேறு தகவல்களைக் தரவல்லதாக அறியப்படுகிறது. மேலும் இந்திய கடலிலில் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு இங்கே ஒரு நகரம் இருந்ததற்கான ஆய்வுத் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

அன்றைய பூகார் நகரம், இன்று கடலுக்குள் அமிழ்ந்து இருப்பதாக தமிழ் அறிஞர்களும், வரலாற்று ஆய்வாளர்களும் அறுதியிட்டு உரைக்கிறார்கள். இது குறித்தான நல்ல ஆராய்ச்சிகள் இந்திய தொல்பொருள், கடலியல் துறைகளால் உரிய கவனம் செலுத்தி மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்திலிருக்கும் இப்புகார் நகரமே சுமார் பதினோராயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய உலகின் நவீன நகர நாகரிகமாக இருந்ததாக கிஹொம் ஹான்காக் என்ற அமெரிக்க ஆழ்கடல் ஆய்வாளர் தமது ஆய்வுகள் மூலமாகக் கண்டடைந்ததாக 2002-ல் சில நாளிதழ்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. ஹாக்கின் ஆய்வுகளை அறிவியல் உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது.

பண்டையக் கால மக்கள் விட்டுச் சென்ற சான்றுகளின் அடிப்படையில் அவர்களது வாழ்க்கை முறைகளைப் பற்றியும் அம்மக்களது நாகரிகத்தைப் பற்றியும் எடுத்துரைப்பது தொல்லியல் என்பதால், தமிழ் மக்களின் மேன்மையைப் போற்றும் புகாரில் தரமான ஆய்வுகள் வரும் காலங்களில் மேற்கொள்ளவேண்டமென்பது தமிழறிஞர்கள் கருத்து.

புகாரை கடல் மூழ்கடித்ததெனில் கொற்கையிலிருந்து கடல் பின்வாங்கிக் கொண்டது தமிழ் வரலாற்று ஆய்வுகளுக்கான பின்னடைவாகக் கருதப்படுகிறது.

கொற்கைப் பகுதியில் கடல் இருந்ததற்கான அடையாளமில்லாமல் பல கிலோ மீட்டர்கள் கடல் உள்வாங்கி இருக்கிறது.

கடல் கோள் எனும் சுனாமி நடந்தது குறித்து தமிழ் நிலம் தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்திருக்கிறது. தற்போதைய குமரி முனைக்குத் தெற்கே பரந்து விரிந்த நிலப்பகுதி இருந்ததாகவும். அங்குதான் மாந்தர் இனம் முதலில் தோன்றியதாகவும், அம்மனிதர் பேசிய மொழி தமிழ் எனவும் பல்வேறு பதிவுகள் காணக் கிடைக்கின்றன. முதல் மனிதர் தமிழர், முதல் மொழி தமிழ், முதல் மானுடரான ஆதாம் ஓர் தமிழர்.. இப்படி பல்வேறு முதல்கள் குறித்து தமிழ் மொழியில் ஓயாமல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கான ஒரே ஆதாரமாகக் கொள்ளப்படுவது சிலப்பதிகாரமே.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ப.ஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள, வடதிசைக் கங்கையும் இமையுமும் கொண்டு, தென்றிசையாண்ட தென்னவன் வாழி என்ற பாடல் வரிகள் மூலமே கடள்கோள் அறியப்படுகிறது.

பனிரென்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக அறியப்படும் அடியார்க்கு நல்லார் என்னும் சான்றோரின் உரையாக, விளக்கமாக அளிக்கப்படுவது, தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய ப.ஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவத வாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ்மதுரை நாடும், ஏழ்குணகாரை நாடும், ஏழ்பின்பாலை நாடும், ஏழ்முன்பாலை நாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்லம் முதலிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியும், தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் கானும் கடல் கொண்டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றா ரென்றுணர்க என்பதே.

அரிய பல விளக்கங்களைக் கொண்டதாக கருதப்படும் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ததாகக் கணிக்கப்படும் இறையனார் அகப்பொருள் என்ற இலக்கணநூலில் தான் முதல் முதலாக தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் பற்றிய முச்சங்க வரலாறு கூறுப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இலெமூரியாக் கண்டம் என அழைக்கப்படும் முதல் மனிதன் தோன்றிய இக் குமரிக் கண்டம் குறித்தும், பாண்டியர்கள் மூன்று சங்கங்கள் வைத்து தமிழ்

வளர்த்தார்கள் என்ற முச்சங்ககாலம் குறித்தும், இந்த இரண்டே பதிவுகளைக் கொண்டு மிகப்பெரியதொரு அளவில் முன்னெடுக்கப்படும் வரலாற்று முடிவுகளை அறிவியல் உலகம் எவ்வகையில் பார்க்குமென்பது ஆழ்ந்த விவாதங்களுக்குரியது.

கன்னியாகுமரி தொடங்கி கிழக்கே ஆஸ்திரேலியா முதல் மேற்கே மடகாஸ்கர் வரை விரவி இருந்ததாக அறியப்படும் குமரிக்கண்டம் பனியுகத்தின் போது உயர்ந்து காணப்பட்டிருக்கலாமென்றும், கடல் மட்டம் உயர்ந்ததால் கடலுள் அமிழ்ந்திருக்கலாமென்றும் கூறப்படுகிறது. ஓரிரு முறை மேற்கொள்ளப்பட்ட கடலாய்வுகள் மிக நீண்ட தொரு மலைத்தொடர் இருப்பதை உறுதி செய்திருக்கிறது. நிலவியல் சான்றாக, குமரிக்கடலின் ஆழம் குறைவாகக் காணப்படுவதால் முன்பு நிலமாக இருந்திருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாகக் குறிப்பிடுகிறது.

மொழியியலுக்கு ஆதாரமாக, தொன்மையான மொழியாகக் கருதப்படும் சுமேரிய மொழியின் கி ரி அ கி ப ட் டு ரி யா என்ற வாக்கியத்தின் தமிழ் உச்சரிப்பு கரியரவனட என்றும், இது குமரிக்கண்டத்தைக் குறிப்பதாகவும் மொழியியலாளர்கள் சான்றளிக்கிறார்கள். இலெமூரியா என்பற்கு இலை (சந்ததி) முரி அதாவது முரிந்த, அழிந்த எனப் பொருள் கொண்டு முரிந்த சந்ததி வாழ்ந்த இடம் எனும் விளக்கமும் கொடுக்கப்படுகிறது.

குமரிக்கண்டத்திற்கு புராண வரலாறும் கொடுக்கப்படுகிறது. பதினெட்டுப் புராணங்களில் அதிக பாடல்களைக் கொண்டதாக ஸ்கந்த புராணம் அமைக்கப்பட்டிருக்கிறது. வடமொழி ஸ்கந்த புராணத்தின் சங்கர சங்கிதையின் ஆறு காண்டங்களை தமிழ் படுத்தி, காஞ்சியிலிருந்த குமரக் கோட்ட அர்ச்சகர் கானத்தியப்ப சிவாச்சாரியாரால் இந்நூல் இயற்றப்பட்டிருக்கிறது. இயற்றப்பட்ட காலத்தைப் பற்றிய மாறுபாடுகள் இருப்பினும் பன்னிரெண்டாம் நூற்றாண்டாகக் கொள்ளலாமென்பது அறிஞர் கருத்து.

பற்பலவுஞ் சுருதிமுறை பயில்வுமேவி, மெய்ந்நெறிசேர் வதுகுமரி கண்டம் ஏனை என குமரிக்கண்டம் குறிப்பிடப்படுகிறது. முருகனின் இலக்கிய பெயர் குமரவேல் பாண்டியன் எனவும் குமரனின் மனைவி குமரியாதலால் இது குமரிக்கண்டமென பெயர் பெற்றிருக்கலாமெனவும் சுட்டப்படுகிறது.

கடைச்சங்கத்தில் புலவராக முருகன் இருந்தாரெனவும், அதன்படி முருகனது காலம் பொ.ஆ.மு. 16000-15000 எனவும் புரணக் குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

குமரிக் கண்டத்தில் வாழ்ந்த மயன் என்பவர் எழுதிய சுட்டிடக்கலை நூல் ஐந்திறம் எனவும், இந்நூலில் மய அறிவியல் குறித்தான கொள்கைகள் இடம் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. கடைச்சங்க காலத்தின்போது எழுதியிருக்கலாம் என கணிக்கப்படும் இந்நூலை கணபதி சிற்பி என்பார் 1986-ல் மீளுருவாக்கம் செய்தார் எனக் கூறப்படுகிறது. இந்நூலை அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் குறிப்புகள் சொல்கின்றன. மூலம், சீலம், காலம், கோலம், ஞாலம் எனும் ஐந்து கூறுகளைக் கொண்டதாக ஐந்திறக்கோட்பாடு கூறப்படுகிறது.

மக்கள் வாழும் உலகமாகிய இம்மாநிலம் ஞாலம் என்ற தென்சொல்லால் குறிக்கப்பட வேண்டும் என பேராவல் கொண்டிருந்த மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் (1902-1981) மிகச்சிறந்த தமிழறிஞரும் சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார். இவருடைய ஒப்பரிய தமிழறிவும், பன்மொழியியல் அறிவும் கருதி மொழிஞாயிறு எனப் போற்றப்படுகிறார். தமிழ்மொழி, தமிழர் குறித்தான மிகப்பற்றுள்ள பல ஆராய்ச்சி நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ள இந்த நெல்லைக்காரர் தமிழுக்காகவே வாழ்ந்தவர், தமிழ் தொண்டிற்கே தமது வாழ்வை அர்ப்பணித்தவர் எனில் மிகையாகாது.

தமிழ் உலக மொழிகளில் மூத்ததும் மிகத்தொன்மையான காலத்திலேயே செம்மையான வடிவம் பெற்றது எனவும் திராவிடத்திற்குத் தாயாகவும், ஆரியத்திற்கு மூலமாகவும் விளங்கியது தமிழென்றும், கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் உள்ளிட்டவைகளுக்குத் தன் சொற்கள் பலவற்றை அளித்தது என்றும் நிருவியவர் பேராசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியரின் தனித்தமிழ் சொற்கள் மிகுந்த உவகையூட்டக் கூடியவை. கோந்த்வானா கண்டத்தை காண்டவனமென்றும் போர்னியோவை பொருநையோ என்றும், சமத்ரா தீவை சுமதுரா என அழைப்பதும் மிக அருமை.

உலகின் நிலப்பகுதி இன்றைக்கிருப்பது போன்று பன்னெடுங்காலத்திற்கு முன்பு இருந்ததில்லை என்பதை அறிவியல் ஒப்புக் கொள்கிறது. பூமி என வடசொல்லால் குறிக்கப்படும் இந்த ஞாலத்தின் தோற்றக் காலத்தில் இரண்டு கண்டத்திட்டுகள் கண்டங்கள் அதாவது பெருநிலம் மட்டுமே இருந்திருக்கின்றன.

பின் நான்கு கண்டங்களும் சில தீவுகளுமாகி இன்று ஏழு கண்டங்களாக உருவாகியிருக்கிறதென்பதை கண்ட நகர்வுக் கொள்கை ஏற்றுக் கொள்கிறது.

காண்ட வனம், ஆப்பிரிக்காவையும், கடகத் திருப்பத்திற்குத் தெற்கிலுள்ள இந்தியாவையும், ஆத்திரேலியாவையும் உள்ளடக்கியிருந்த பெரு நிலப்பரப்பு ஆகும். அன்றைக்கு தற்போதைய பனிமலைத்தொடரான இமயம் கடலுள் மூழ்கியிருந்திருக்கிறது.

செடி கொடிகளிலும் உயிர்களிலும் ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்குமிருந்த ஒற்றுமைகளைக் கொண்டு முன்பொரு காலத்தில் இவ்விரு நிலத்தொகுப்புகளையும் இணைத்துக் கொண்டு ஒரு பெருநிலத் தொகுதி இருந்திருக்கவேண்டுமென்று பல அறிஞர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். லெமுரியையும் குமரியையும் இணைத்திருந்த இந்த நிலப்பகுதி வரலாற்றுக்கு முந்தைய காலங்களில் மூன்று முறை நிகழ்ந்த கடல்கோள்களால் மூழ்கடிக்கப்பட்டதென்பது தமிழர்களது பண்டைய தமிழ் நிலக் கருதுகோள். மூழ்கடிக்கப்பட்டது குமரி நாடென்ற பாண்டிய நாடென்பது தென் தமிழகத்தாரின் கூற்று. காரணம் பாண்டிய நாடு பழம்பெரு நாடென்பதும், தமிழ் தென்மொழி எனப்படுவதும், வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரவர தமிழ் மொழியும், பயன்பாடும், மாந்தர் நிறமும், பண்பாடும், பேச்சும், வழக்கும், பெருமளவில் வேறுபட்டிருப்பதும் எனலாம். வடவேங்கடத்திற்கும் தென்குமரிக்குமே ஏராளமான மொழி, பண்பாடு, மாறுபட்டிருப்பது இன்றைக்கும் கண்கூடு. இமயம் தொடங்கி குமரி வரை ஒப்பு நோக்கினால் தென் பகுதியை நோக்கி வர வரவே மொழி, மானுட, பண்பாட்டு, வாழ்க்கைக் கூறுகள் திராவிட ஆப்பிரிக்க ஆத்திரேலிய கூறுகளோடு நெருக்கம் கொள்வதை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளலாம். குமரியைத் தாண்டியும் செல்ல முடியுமேயானால் ஆப்பிரிக்க, ஆத்திலேரிய குமரிக் கண்டங்களுக்கிடையே மிக நெருங்கிய தொடர்பிருந்திருக்கும் என்பது வெளிப்படையே. இன்றைக்கும் நெல்லை சீமைக்காரர்களுடைய அடர் நிறமும், விருதுநகர் பகுதியினரின் நிறமும் ஒன்றல்லவே.

பண்டைய காலத்தில் நாவலந் தீவு, இறலித் தீவு, இலவந் தீவு, அன்றில் தீவு, குசைத் தீவு, தெங்கங் தீவு, தாமரைத் தீவு என ஏழு தீவுகள் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆப்பிரிக்காவிலிருந்து பிரிந்து போன நிலப்பகுதி நாவலந்தீவாக சுட்டப்படுகிறது. இத்தீவு மூன்று நிலைகளில் இருந்ததாக சுட்டிக்காட்டப்படுகிறது. பனிமலையும், வடஇந்தியாவும் இல்லாத இந்தியப் பகுதி. இதன் போது குமரிக் கண்டம் இருந்தது. அன்றைக்கு இது பழம்பாண்டிநாடாக அறியப்பட்டிருக்கிறது. பனிமலையோடு கூடிய இந்தியாவும் பழம்பாண்டிநாடும் இருந்த இரண்டாவது நிலை. மூன்றாவது நிலையான பழம்பாண்டிநாடு இல்லாத இந்தியா.

குமரிக்கண்டம் நான்கு நிலைகளில் இருந்ததாகவும் அறியப்படுகிறது. ஆப்பிரிக்காவோடும், ஆத்திரேலியாவோடும் கூடிய பழம்பாண்டி நாடு. ஆப்பிரிக்கா நீங்கிய பழம்பாண்டி நாடு. ஆத்திரேலியாவும் நீங்கிய பழம்பாண்டி நாடு. சிறுது சிறிதாகக் குறைந்து வந்த பழம்பாண்டி நாடு.

லெமூரியாவை முற்கால மாந்தரின் உறைவிடமாகக் கொண்டால் மாந்தர் இனங்கள் இடம் பெயர்ந்து ஆங்காங்கே குடியேறியிருக்கும் தன்மையை எளிதாக விளக்கிவிடலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. நண்ணிலக் கோடு ஊடே செல்லும் குமரிக்கண்டம் மாந்தன் பிறந்தகமாயிருக்க வேண்டும் எனவும் கணிக்கப்படுகிறது.

பனிமலை போலும் குமரிமலைத் தொடரும், கங்கைபோலும் ப.ற்றுளியாறுங் கொண்டு, பசியுந் தகையுங் தணிக்க, இனியனவும் வாழ்நாள் நீட்டிப்பனவுமான கனிகளுங் காய்களும், மாரியுங் கோடையும் விளையும் பல்வகைத் தவசங்களும், சுவைமிக்க பயறுகளும், எளிதாகக் கில்லியெடுங்குக் கிழங்குகளும், தேனும் தெங்கிளநீரும் கடுங்கோடையிலும் வற்றாச் சுனைபொய்கைத் தெண்ணீரும், உணவும் மருத்துமான பல்வேறு விலங்கு பறவை யூனும், ஆடு மாடுகளின் பாலும், இராத்தங்கி யுறங்க மலைக்குகைகளும் புடைகளும், அற்றம் மறைக்க இலையுந்தோலும் மடடையும் மரவுரியும் ஏராளமாகக் கிடைத்த குமரிநாடு போலும் இயற்கை வளநாடு இஞ்ஞாலத்தில் வேறேதேனுமுண்டோ?

கால மழையும் பொய்க்குமாறு முல்லையிலும் குறிஞ்சியிலும் முள்ள சோலைக்காடுகளெல்லாம் பெரும்பாலும் அழிக்கப்பட்டும், நிலந்தாங்ககூடிய அளவுபோல் இருமடங்கு மக்கள்தொகை பெருகியும் உள்ள இக்காலத்தும், ஐம்பதிற்கு மேற்பட்ட வாழைக்கனி வகைகளும், ஒட்டுமாவல்லாத இருபான் மாங்கனி வகைகளும், நால்வகைப் பலாக்கனிகளும், கொழிஞ்சி, குடகு, நாரத்தம், வெள்ளரி, விளா, பனை முதலிய பிற கனிவகைகளும், நெல், கம்பு, வரகு,

கேழ்வரகு, சோளம், சாமை, திணை, குதிரைவாலி, காடைக்கண்ணி என்னும் தொண்வகைத் தவசங்களும், அவரை, துவரை, உழுந்து, மொச்சை, பாசி(பச்சை), தட்டான்(தட்டை), கொள் (காணம்) என்னும் தொண்வகைப் பயிறுகளும் ஆகிய பதினெண் கூலமும் கறிசமைக்கவோ அவித் துண்ணவோ பயன்படும் பத்துவகைக் கிழங்குகளும் கிடைக்கின்றன. நெல்லில் மட்டும் அறுபான்வகைச் சம்பாவும் நாற்பான்வகை மட்டையுமாக நூறுவகையுள்ளன. பொன்தினை, செந்தினை, கருந்தினை எனத் தினை முத்திறத்தது. சோளம் ஐவகையது. காராமணி, வரிக்கொற்றான் என்பன தட்டானுக்கு நெருங்கிய வகைகள்.

இற்றைத் தமிழகத்திலேயே இத்தனை இயற்கையுணவு வகைகளெனில் பொது யுகத்திற்கு பத்தாயிரம் ஆண்டுகட்கு முன் தெற்கில் 2500 கல் தொலைவு நீண்டு பரந்திருந்த குமரிக்கண்டப் பழம் பாண்டிய நாட்டில் எத்தனை வகையிருந்தனவோ.. இறைவனுக்குத்தான் தெரியும்.

பிற நாடுகளிற்போல் என்றும் வற்றி வறண்டு கொதிக்கும் பாழ் மணற் பாலைவனமாகிய இயற்கைநிலம், தமிழகத்தில் எவ்விடத்தும் இருந்ததில்லை. இங்குள்ள பாலையெல்லாம் முல்லையுங் குறிஞ்சியும் முதுவேனிற் காலத்தில் நீர்நிலை வற்றி நிலைத்தினை (தாவரம்) பட்டு நிலங் காய்ந்த குறுங்கால நிலையினவே. கோடை மாறி மாரி பெய்தபின், அப்பாலைநிலம் புல்பூண்டு மரஞ்செடி கொடிகளும் தளிர்த்து முன்போல் முல்லையுங் குறிஞ்சியுமாக மாறிவிடும். இங்ஙனம் பாலையின் நிலையில்லா நிலை நோக்கியே அதனை நீக்கி ஞாலத்தை நானிலம் என்றனர் பண்டைத் தமிழறிஞர். தமிழறிஞர் தெய்வநிலைக்கு ஒப்புவர். தெய்வமேயாவர்.

பண்டைய இந்தியாவைப் பார்க்கவேண்டுமெனில், பழமையான இந்தியாவின் வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டுமெனில், இந்தியாவின் தெற்குப் பகுதியே சிறந்ததென்பது அறிஞர்கள் பலரது கூற்றாகும். தமிழ் சான்றோர்களின் கூற்றுப்படி தெற்கே இந்தியாவாக இருக்கிறது. தெற்கிலும் தமிழகமே சிறப்பு. தமிழகத்திலும் குமரிநாடே பழமையில் பெருமையுடையது. தமிழகத்தின் தென் கோடிப் பகுதியில் தான் முழுத்தூய்மையுள்ள மொழியாக தமிழ் வழங்கிவருகிறதென்பது தமிழறிந்த அனைவருக்கும் ஏற்புடையதே.

இந்தியாவைத் தெரிந்து கொள்ள, இந்திய வரலாற்றின் தொடக்கத்தை அறிந்து கொள்ள, தெற்கிலிருந்து தொடங்க வேண்டுமென்பது அறிஞர் பலரது கருத்து. அதுவே உண்மையுங் கூட. சிந்து, சரஸ்வதி, கங்கையிலிருந்தே இந்திய வரலாற்றை தலைகீழாக ஆராய்ச்சி பண்ணுவது மாறி தென்கோடியிலிருந்து தொடங்கும் காலமொன்று உருவாகும் போது மனுடவியலில் பல புதிய உண்மைகள் வெளிச்சம் பாயலாம். மொழியும் மொழிச் சான்றும் ஏற்புடையதே. அறிவியல் தன்மை உடையதே.

ஒரு நாட்டைப் பற்றிய வரலாற்று மூலங்கள் ஏழுவகைப்படும் எனக் கூறப்படுகிறது. தொல்பொருள்கள் - பழங்காலக் கருவி, ஏனம் (கலம்), கட்டடம், காசு, நடுகல், கல்லறை, மாந்தனெலும்பு போன்றவை. இலக்கியம் - வெட்டெழுத்து, பட்டையப் பொறிப்பு, களிமட் குழிப்பு, கல்வெட்டு, செப்புப் பட்டையம் போன்ற பலதிறத்தன, திரு முகம் அதாவது ராயல் லெட்டர், திருமந்திர வோலைச் சுவடி, நாட்குறிப்பு, வழிப்போக்கர் வண்ணனை, வரலாற்றுக் குறிப்புகள், வரலாற்றுப் பனுவல்கள் அல்லது பொத்தகங்கள் முதலியன, செவிமரபுச் செய்திகள், பழக்கவழக்கங்கள், மொழிநூற் சான்றுகள், நில நூற்சான்றுகள், கடல் நூற்சான்றுகள்.

எழுவகை வரலாற்று மூலங்களுள்ளும் தலைசிறந்தது மொழியியலே என்பதன் அடிப்படையிலேயே பேராசிரியரின் தமிழர் வரலாறு நூல் இயற்றப்பட்டுள்ளது. நிலம், தட்ப வெப்பநிலை பழக்கவழக்கம், தொழில், உணவு முதலியவற்றால் மக்கள் உடலமைப்பும், நிறமும் வேறுபடுமென்பதால், மாந்தன் மெய்யளவியனும் (ஆந்திரபோ மெட்ரி), குலவரைவியலும் (எத்னோகிராபி) மக்களின் வரலாற்றிற்கு அத்துணைத் தேற்றமாகப் பயன்படாது.

தமிழன் பிறந்தகமும் பழம் பாண்டி நாடுமாகிய தென்பெரு நிலப்பரப்பு மூழ்கிப்போனமையால் தொல்பொருளியற் சான்று அறவே இல்லாத தாயிற்று.

நீலமலை, ஆனைமலை, சேரவரையன்மலை முதலிய மலைகளிலுள்ள இன்றைய பழங்குடி மாந்தரெல்லாம், கொள்ளைக்கும் போருக்குந் தப்பிக் கீழிருந்து மேற்சென்றவரே. அவர் மொழிகளெல்லாம் செந்தமிழ்ச் சிதைவான கொடுந்தமிழுங் கொச்சைத் தமிழுமேயன்றிக் குமரிநாட்டுத் தமிழ் வளர்ச்சி காட்டும் முந்துநிலைகளல்ல. கற்றார் தொடர்பும் நாகரிக மக்களுறவு மின்மையால்

மலைநிலத்திற் கோற்றவாறு அவர்களின் வாழ்க்கை நிலையுள்ளது. தமிழரின் கற்கால நிலையெல்லாம் குமரிநாட்டிலேயே கழிந்துவிட்டது. மலைவாழ் குலத்தாரெல்லாம் முந்திய மாந்தரல்லர். புதைந்து கிடக்கும் கற்கருவிகளெல்லாம் கற்காலத்தன வல்ல.

பல்துறைப்பட்டனவும் அயற்சொல்லுங் கருத்தும் அறவேயில்லவுமான முதலிரு கழக ஆயிரக்கணக்கான தமிழ் நூல்களும் இயற்கையாலும் செயற்கையாலும் அழியுண்டு போனமையாலும் அவற்றிற்குப் பிற்பட்ட கிறித்துவுக்கு முன்னைத் தமிழ் நூல்களும் ஒன்றிரண்டு தவிர எனைய வெல்லாம், சிதலரித்தும் அடுப்பு லெரிந்தும் குப்பையிள் கலந்தும் பதினெட்டாம் பெருக்கில் வாரியெறியப்பட்டும் பல்வேறு வகையில் இறந்துபட்டமையாலும் முதுபண்டை வரலாற்றிற்கு அக்காலத்து இலக்கியச்சான்றும் இல்லாது போயிற்று.

ஆரியர் வருகைக்கு முற்பட்ட தனித்தமிழ் இலக்கியம் அனைத்தும் அழியுண்டு போயினும் தொல்காப்பியம் இறையனாரகப்பொருளுரை முதலிய நூல்களிலுள்ள வரலாற்றுக் குறிப்புகள் குமரிநாட்டுத் தமிழர் வாழ்க்கையையும் அந் நாட்டியல்பையும் பற்றியனவாதலால் அவை தமிழரின் முது பண்டை வரலாற்றிற்குதவுவனவே.

தொல்காப்பியம் பொ.ஆ.மு. ஏழாம் நூற்றாண்டு நூலேயாயினும் அதிற் சொல்லப்பட்டுள்ள செய்திகள் பொ.ஆ.மு. ஐம்பதாம் நூற்றாண்டிற்கு முந்தினவையாகும். தமிழிலக்கணம், தமிழிலக்கியப் பாகுபாடு, தமிழ் மரபு, குமரிநாட்டுத் தமிழர் வகுப்புகள், அவர் தொழில்கள், அவர் மணமுறை, அவர் பழக்கவழக்கம், அக்காலத்து அரசியல், அக்காலப் போர் முறை முதலியன தொல்காப்பியத்திற் சொல்லப்பட்டுள்ளன.

தமிழ்மொழி குமரிநாட்டு மாந்தர் தம் கருத்தையறிவித்தற்கு முதன் முதலாக வாய்திறந் தொலித்த காலந்தொட்டு இன்று வரை இடையறாது தொடர்ந்து வழங்கிவருவதனாலும். இயற்கையாலும் செயற்கையாலும் சிதைவுண்டு மிக வளங்குன்றிய இந்நிலையிலும், தமிழரின் கொள்கை கோட்பாடுகளையும் நாகரிகப் பண்பாடுகளையும் மதி நுட்பத்தையும் பேரளவு தெரிவிப்பதனாலும் மொழிகளிலும், இலக்கியங்களிலும், பழக்கவழக்கங்களிலும் போதிய அளவு தேர்ச்சி பெற்ற புலவரால் வரையப்பெறும் மொழிநூல் வரலாறு ஏற்புடையதே. சான்றானதே.

மொழி கொண்டு தமிழர்தம் வரலாற்றைக் கூறுதல் இயலுமோ? குமரி இருந்த கண்டம் லெமூரியா அல்லது லெமூரியாக் கண்டமே குமரிநாடு. அதாவது பழம்பெரும் குமரிநாடு. அதாவது பழைய பாண்டிநாடு.

குமரைய்யா பெயர் தற்போதும் வைக்கப்படுகிறது. குமரனய்யா, குமரியா, குமாரியா, குமெரியா, கொமரியா சொற்கள் வருமல்லவா. இன்றும் தென் பகுதியில் கொமரி, கொமரியா, கொமராயிட்டா என இளம் பெண்களைச் சுட்டுவதுண்டு. குமேரியா, சுமேரியா, அரேபியா என குமரிக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளைக் குறிக்கும் வார்த்தைகள் சுட்டுவதென்ன? குமேரியத்திற்கும் சுமேரியத்திற்கும் ஆரியத்திற்கும் உள்ள தொடர்புறவுகள் எத்தகையவை? சுமேரியத்திலேயே முதல் மொழிப்பதிவு உள்ளதெனில் அதன் தோற்றம் யாது? மூலமொழி ஏதேனும் இருந்திருக்குமா?

நாவலந்தீவாக இருந்த இந்திய நிலப்பகுதிக்கும், பழம் பாண்டி நாடாக இருந்த குமரிக்கும், மடகாசுகருக்குமுள்ள தொடர்புகள் எத்தகையவை?

பழம் பாண்டிய நாடான குமரிநாட்டை அழைக்கச் சுட்டப்பெறும் இலெமுரியா கண்டக்கொள்கைக்கு காரணமாக விளங்குவது ஆப்பிரிக்காவின் தென் கிழக்கிலுள்ள மடகாஸ்கர் தீவிலுள்ள லெமூர் என்ற ஒரு முதனி வகை பாலூட்டியே. முதனி என்றால் முதல்நிலை அதாவது பிரைமேட்ஸ்.

உயிரினப் பரிணாமத்தில் அண்மையில் தோன்றிய விலங்கினங்கள் பாலூட்டிகள். ஏறக்குறைய ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன் பூச்சிகள் போன்றவற்றை உணவாகக் கொண்டிருந்த மூதாதை பாலூட்டி இனங்களிலிருந்து பரிணமித்த உயர்வகைப் பாலூட்டிகளே குரங்குகள், வாலில்லாக் குரங்குகள், மனிதர்கள் உள்ளடக்கிய முதனிகள்.

பாலூட்டிகளிலேயே அண்மையில் தோன்றியவை பிரைமேட்கள். பிரமேட்களில் மிக அண்மையில் தோன்றியவை மனிதர்கள். மனித இனத்தின் உயிரியல் பெயர் ஹோமோ செப்பியன்ஸ் செப்பியன்ஸ். ஹோமோ செப்பியன்ஸ் என்ற இலத்தீன் பெயருக்கு அறிவுள்ளவன் என்று பொருள்.

உயிரியலில் வகைப்படுத்தலுக்கு மிகச்சிறப்பான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒத்த பண்புள்ள உயிரிகளை ஒரு இனமாகவும், ஒத்த பண்புகளுடைய இனங்களை பேரினமாகவும். ஒத்த பண்புகளுள்ள பேரினங்களை

ஒரே குடும்பமாகவும், குடும்பங்களை வரிசையமைப்பிலும், வரிசைகள் வகுப்பாகவும், வகுப்புகள் தொகுக்கப்பட்டதை ஒரு தொகுதி என்றும் வகைப்படுத்துவர். குடும்பம், வரிசைகளை பெருவரிசை, உள்வரிசை, பெருங்குடும்பம், துணை வரிசை, துணைக் குடும்பம் போன்ற உட்பிரிவுகளோடும் வகைப்படுத்துவதுண்டு.

உயிரினங்களை இருபெயரிட்டு அழைப்பர். இதில் இனம் மற்றும் பேரினம் அடங்கும். இது உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவியல் அடிப்படையிலான பெயரிடுதல் முறை. பெயரிடுதலின் அடிப்படை அலகு இனம். சிற்றினம், சிறப்பினம் எனும் பெயரிலும் இனம் குறிப்பிடப்படுவதுண்டு.

உருவ அமைப்பில் ஒற்றுமை கொண்டும் தங்களுக்குள்ளாக மட்டுமே இனப்பெருக்கமும் செய்து கொள்ளக் கூடிய ஒரு உயிரினக் குழுவிற்கு அதாவது கூட்டத்திற்கு இனம் என்று பெயர். உதாரணமாக, ஹோமோ செப்பியன்ஸில், செப்பியன்ஸ் என்பது இனத்தைக் குறிப்பது. ஹோமோ என்பது பேரினம். செப்பியன்ஸ் என்ற இனக் கூட்டத்திலும் நியாண்டர்தாலென்சிஸ் போன்ற பிரிவுகள் குறிக்கப்படுவதால் மனிதர்களை மட்டும் குறிப்பதற்காக செப்பியன்ஸ் செப்பியன்ஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இனத்திற்கு கீழேயும் வகைப்பாட்டியல் உண்டெனினும் இனம் என்பதே வகைப்பாட்டியல் ஏணியில் முதலாவதாக இடம் பெறுகிறது. ஒரே இனமென்றாலும் அவற்றிற்கிடையேயும் சிறு அளவிலான மாறுபாடுகள் காணப்படும். ஒரே இனமாக இருப்பினும் மலையின் அடிவாரத்தில் வாழும் விலங்கிற்கும், மலை உச்சியில் வாழும் விலங்கிற்கும் சிறு அளவிலான வேறுபாடு இருக்கும். ஆனாலும் இவ்வேறுபாடு அவைகளிடையேயான இனப்பெருக்கத்திற்குத் தடையாக இருக்காது. வேறுபாடுகள் அதிகரிக்கும்போது அவைகளிடையே இனப்பெருக்கத்தத் தடை ஏற்பட்டு இவை வெவ்வேறு சிற்றினங்களாக மாறக்கூடும். இனமே பரிணாமத்தின் தோற்றுவாய்.

பாலூட்டிகள் எனப் பொருள் தரும் இலத்தீன் மேம்மல்ஸ் வார்த்தை, பால்க்காம்பு, மார்பகம் எனும் பொருளைக் குறிக்கும் மெம்மா என்ற சொல்லைக் குறிப்பதாகிறது.

மனிதர்களைக் குறிக்கும் செப்பியன்ஸ் என்ற சொல் சப்புதல் என்னும் தமிழ் சொல் பொருளையும் கொடுக்கிறது. பாலை சப்புகிறது என்பதே வழக்குச் சொல். பாலை சப்பிக் குடிப்பதால் சப்பியன்ஸ். செப்பியன்ஸ் என்றும் பொருள் கூறலாம். செப்பு, செப்புதல் என்பதும் சொல்லுதல், பேசுதல் என்னும் பொருள் கொடுப்பதால் பேசக் கூடிய அல்லது பேசும் மொழியறிந்த பாலூட்டி விலங்கினம் மனிதரென்றும் பொருள் கொள்ளலாம். மொழியை சிறப்பாகக் கையாளக் கற்றுக் கொண்டதே மனிதர்களின் அனைத்துச் சிறப்புகளுக்கும் காரணமெனில் மிகையாகாது.

விலங்கின வகைப்பாடுகள் பல உள்ளன. அண்மைக்காலங்களில் மூலக்கூறுகளை, மரபணுக்களை அடிப்படையாக் கொண்டு வகைப்பாடு மேற்கொள்ளப்படுகிறது. 2006-ன் கணக்கீட்டின் படி, பாலூட்டிகளில் மட்டும் 5416 இனங்கள் இருக்கின்றன. இவை 1229 பேரினங்களாகவும் 153 குடும்பங்களாகவும், 29 வரிசைகளாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. பாலூட்டிகளின வகைபாடு பல வகையாக இருப்பினும், அனைத்துப் பாலூட்டிகளையும் முதல்நிலை பாலூட்டிகள், பையுடைய பாலூட்டிகள், தாய்சேய் இணைப்புத் திசு கொண்ட பாலூட்டிகள் என மூன்று வகுப்புகளாகப் பிரிப்பதுண்டு.

முதல் நிலை அதாவது ஆரம்பநிலைப் பாலூட்டிகள் பால் சுரப்பி பெற்றிருப்பினும் இவை குட்டிபோடுவதில்லை. இவ்வகைப் பாலூட்டிகள் முட்டை இடுவதால் இவை முட்டையிடும் பாலூட்டிகள் என்றே அழைக்கப்படுகின்றன. பிளாட்டிபஸ், எகிட்னா எனும் எறும்புதின்னி போன்றவை இப்பிரிவில் அடங்கும்.

கங்காரு போன்ற பையுடைய பாலூட்டிகள் மார்சுபியல்ஸ் என அழைக்கப்படுகின்றன. தமிழறிந்த அனைவருக்கும் எளிதாகப் புரியுமாறு கூறுவதனால் இவை மார் சப்பிகள். இவை குட்டியை ஆரம்பநிலை வளர்ச்சியிலேயே ஈன்று அடிவயிற்றுப் பையினுள் வைத்துக் கொள்ளும். குட்டிகள் நன்கு வளரும் வரை பையினுள்ளேயே இருக்கும் பால் காம்பே உலகமென்று சப்பிக் கொண்டிருக்கும்.

அணில் போன்ற கொறிப்பன முதற்கொண்டு, பறக்கும் வௌவால்கள், நீர்வாழ் திமிங்கலங்கள், தாவர ஊன் உண்ணி பாலூட்டிகள் போன்ற பிற பாலூட்டி விலங்குகள் கருவளர்ச்சியில் இணைப்புத்திசுவைப் பெற்றுள்ளதால் பிளசென்டல்ஸ் அதாவது தாய்சேய் இணைப்பித்திசு பாலூட்டிகள் என அழைக்கப்படுகின்றன.

இதில் வருபவையே லெமூர், தேவாங்கு, டார்சியர், புதுஉலகக் குரங்குகள், பழைய உலகக் குரங்குகள், வாலில்லாக் குரங்குகள் மற்றும் மனிதர்கள்.

அனைத்து அறிவியல் அறிஞர்களும் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர்களெனினும் சிலர் அனவரிலும் மிகுந்த போற்றுதலுக்குரியவர்களாக இருக்கின்றார்கள். அறிவியலுக்கு அவர்களது பங்களிப்பு, கொடை அத்தகையதாக இருப்பதே அதற்குக் காரணம். உயிரினங்களின் வகைப்பாட்டியலை உலகிற்கு நல்கிய சுவீடன் தாவரவியலாளரான கார்ல் வான் லின்னி அப்படியொரு சிறந்த அறிஞரே.

கரோலஸ் லின்னேயஸ் (1707-1778) என இலத்தீனில் அழைக்கப்படும் வகைப்பாட்டில் அறிஞரான லின்னி, தாவரவியல், விலங்கியல் மற்றும் சுற்றுச் சூழியலிலில் மிகுந்த தேர்ச்சி பெற்றவராக அறியப்படுகிறார். உயிரினங்களை எளிய முறையில் புரிந்து கொள்ளுமாறு பெயர்களைச் சுட்டிய இந்த இயற்கையியல்வாதி தாவரங்களின் இளவரசர் எனவும் புகழப்படுகிறார்.

சிஸ்டமா நேச்சுரே என்ற இவரது புத்தகம் 1735-ல் நெதர்லாந்தில் அச்சடிக்கப்பட்டு, 1758 ற்குள் பத்து பதிப்புகளைக் கண்டிருக்கிறது. பத்தாவது பதிப்பில் 4400 விலங்கின வகைகளும், 7700 தாவர வகைகளும் இடம் பெற்றன என்பதே அறிஞரின் உழைப்பு எத்தகையதென்பதைத் தெரிவிக்கிறது.

வகைப்பட்டியலின் தந்தை எனக் குறிப்பிடப்படும் லின்னேயசுக்கு முன்னரே காஸ்பாடு பாகின் (1560-1624) என்ற சுவிட்சர்லாந்து மருத்துவர், அயிரக்கணக்கான தாவரங்களை வகைப்படுத்தியிருக்கிறார். இவரது வகைப்பாட்டியலும் சிறந்ததென அறிஞர்கள் கொண்டாடுகிறார்கள். மரங்கள், புதர்கள், குறுஞ்செடிகள் என்று வழக்கமான முறையிலேயே தாவரங்களை வகைப்படுத்தியிருந்த போதிலும், இனம், பேரினம் போன்ற வகைப்படுத்தலையும் பயன்படுத்தியிருக்கிறார். தாவரங்களை வகைப்படுத்தியதில் ஆகஸ்ட் பாக்மென் என அறியப்படும் ஆகஸ்ட் குரினஸ் ரிவினஸ் (1652-1723) என்ற ஜெர்மானிய தாவரவியலாளரும் முதன்மையானவராகக் கருதப்படுகிறார். மருத்துவராகவும் குறிப்பிடப்படும் பாக்மென் பூக்களின் அமைப்பைக் கொண்டு தாவரங்களை வகைப்படுத்தியிருக்கிறார்.

தாவர, விலங்குகளைப் பற்றிய எளிமையான வகைப்பட்டியலை மேற்கொண்டவர் அரிஸ்டாட்டில். அண்மைக்காலங்களில் ஹெக்கல், விட்டேகர் போன்றவர்களும் விலங்கின வகைப்பட்டியலில் குறிப்பிடத்தக்கவர்களாக அறியப்படுகின்றனர்.

விலங்குகளனைத்தும் முதுகு நாணற்றவை மற்றும் முதுகு நாணுள்ளவை என இரண்டு பெருந்தொகுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இரண்டையும் இணைக்கும் விதத்தில் முதுகுநாணுள்ளவற்றின் முன்னோடி விலங்குகள் என்றொரு சிறிய பிரிவும் உண்டு. இவைகளின் உடலின் ஒரு பகுதியில் மட்டுமே முதுகு நாண் இருக்கும். மனிதர் போன்ற பாலூட்டிகளின் முதுகெலும்பே ஆரம்ப நிலை விலங்குகளில் முதுகுநாண் என அழைக்கப்படுகிறது. முதுகு நாணற்றவை பல்வேறு தொகுதிகள் மற்றும் துணை தொகுதிகளாகவும் பிரிக்கப்படுகிறது. ஒரு செல் உயிரியான அமீபா முதல், ஏராளமான கடல்வாழ் விலங்குகள், தட்டைப்புழுக்கள், மண்புழு போன்ற உருளைப் புழுக்கள், பூச்சிகள, நண்டுகள் போன்றவை இடம்பெறும் கணுக்காலிகள், நத்தை போன்ற மெல்லுடலிகள், கடல் வெள்ளரி போன்ற முட்தோலிகள் போன்றவை முதுகு நாணற்றவைகளுக்கு உதாரணங்கள். முதுகுநாணுள்ளவைகளின் ஒரு துணைத் தொகுதியாக முதுகெலும்புள்ளவை இடம்பெறுகிறது. முதுகெலும்புள்ளவை மீன்கள், தவளை போன்ற இருவாழ்விகள், ஓணான் போன்ற ஊர்வன, பறவைகள் மற்றும் பாலூட்டிகள் என ஐந்து வகுப்புகளாக வகைபடுத்தப்பட்டுள்ளது.

சமீப ஆண்டுகளில் படிம வளர்ச்சியை மரம் போல் உருவகித்து, அதனை தொல்லுயிரியல் மரம், பரிணாம மரம் என அழைக்கின்றனர். மரமொன்றில் பெருங்கிளை, சிறுகிளை, குறுங்கிளை, கிளை என இருப்பது போல் பரிணாம வளர்ச்சியிலும் விலங்குகள் கிளைகளாக அமைக்கப்படுகின்றன. கிளாடோ என்ற கிரேக்கக் சொல்லுக்கு கிளை எனப் பொருள். கிளாட் என்றால் ஒரு கிளை. ஒரு கிளையில் இடம்பெறும் விலங்குகள் அனைத்தும் உறவுடையன. அவை பொதுவான ஒரு மூதாதையரிடமிருந்து தோன்றியவையாக இருக்கும். இவை வாழும் விலங்காகவோ அழிந்த போன விலங்காகவோ இருக்கலாம். இரண்டு கிளைகள் அதனோடு தொடர்புடைய குறுங்கிளையோடு இணைப்பட்டிருக்கும். இவ்வாறு முழு விலங்கினங்களும் அவற்றின் மூதாதை மற்றும் வழித்தோன்றல்கள் அடிப்படையில் ஒரு பெரும் மரமாக கட்டப்படுகின்றன.

முதனி என்ற பிரைமேட்கள் மனிதப் பரிணாமத்தோடு தொடர்புடையன. புரட்டோ, ப்ரை, ப்ரைம் என்பது முதல், முதலாவது, முதன்மையானது, பழமையானது, எளிய, ஆரம்பம், மூதாதை, முன்னோடி போன்ற பல பொருள்களைக் கொடுக்கக் கூடியது. புரோட்டோசோவா எனில் முதன்மை விலங்குகள், முதலாவது தோன்றிய விலங்குகள், பழமையான விலங்குகள் என அர்த்தமாகிறது.

முதனிகளின் வகைப்பாட்டியலில் லெமூர், லோரிசு மற்றும் டார்சியர் இடம்பெற்றுள்ளன. பரிணாமத்தில் அல்லது தொல்லுயிரி மரத்தில் இவைகள் ஒரு நேர்கோட்டில் அமைந்திருக்கும். லெமூர்களும், லோரிசுகளும் முதலில் தோன்றியவை. பின்னர் டார்சியர்கள் தோன்றுகின்றன. இந்த மூன்று விலங்கினங்களும் முதனிகளிலேயே பழமையானவை. அதாவது பரிணாமத்தின் ஆரம்பநிலையில் தோற்றம் பெற்றவை. இவற்றிற்கு பின்னர் தோன்றியவை மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவிலுள்ள புதிய உலகக் குரங்குகள். பதினாறாம் நூற்றாண்டிலேயே அமெரிக்கா கண்டறியப்பட்டதன் காரணமாக அது புதிய உலகமென்றும், அங்குள்ள குரங்குகள் புதிய உலகக் குரங்குகளெனவும் அழைக்கப்படுகின்றன. இவை ஐந்து குடும்பங்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவைச் சேர்ந்த குரங்குகள் பழைய உலகக் குரங்குகள் எனப்படுகின்றன. இவற்றிற்குப் பின் தோன்றியவை வாலில்லாக் குரங்குகள். வாலில்லாக் குரங்குகள் அல்லது மனிதக் குரங்குகளில் சிறியவை, குள்ளமானவை என கிப்பனும், பெரியவை என உராங்குட்டான், கொரில்லா, சிம்பான்சி போன்றவையும் குறிப்பிடப்படுகின்றன. சிம்பான்சியிலும் சிறியது பெரியது என்ற வகைகள் உண்டு.

பழைய, புதிய உலகக் குரங்குகளும், வாலில்லாக் குரங்குகளும், மனிதர்களும் சிமியன்கள் எனவும், லெமூர்கள், லோரிசுகள், டார்சியர்கள் போன்றவை முன்னோடி அதாவது புரோமியன்கள் எனவும் அழைக்கப்படுவதுண்டு. சிறிய, பெரிய வாலில்லாக் குரங்குகளும், மனிதர்களும் ஹோமினிட்கள் என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றன.

தொகுதி முதுகுநாணுள்ளவை, துணைத்தொகுதி முதுகெலும்புள்ளவை, வகுப்பு பாலூட்டிகள். வரிசை முதனிகள், துணைவரிசை ஸ்ரெப்சிரைனி (ஈரமூக்கு, வளைந்த மூக்குள்ளவை), உள்வரிசை லெமூரிபார்ம்ஸ், மேல் குடும்பம்

லெமுராய்டியா, குடும்பம் லெமுரிடே என வகைப்படுத்தப்படும் லெமூர்களில் பல பேரினங்களும் சிற்றினங்களும் உள்ளன. மேல்குடும்பம் லோரிசாய்டியா, குடும்பம் லோரிசிடேவில் இடம் பெறுவது லோரிஸ்.

துணை வகுப்பு ஹேப்லோரைனியில் (உலர் மூக்கு, மூக்கு) இடம் பெறுபவை டார்சியர்கள், குரங்குகள், மனிதக் குரங்குகள் மற்றும் மனிதர்கள். புதிய உலகக் குரங்குகளை பிளாட்டிரைனி (தட்டை மூக்கு) மற்றும் பழைய உலகக் குரங்குகளை கேட்டாரைனி (கீழ் மூக்கு) என்ற வரிசையிலும் வைப்பதுண்டு.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2014-ன் படி, 2,24,34,363 மக்களைக் கொண்டு உலகில் ஐம்பத்தி மூன்றாவது இடமும், 5,87,041 சதுர கிலோ மீட்டருடன் உலகப் பரப்பளவில் நாற்பத்தி ஏழாவது இடமும், மக்கள் அடர்த்தியில் நூற்றி எழுபத்து ஏழாவது இடமும், உலகின் நான்காவது பெரிய தீவாகவும் அறியப்படும் மடகாசுகர், உயிரியல் பல்வகைமையில் மிகவும் சிறப்பானதொரு நாடாக அறியப்படுகிறது.

சுமார் ஐந்தாயிரம் கி.மீ கடற்பரப்பு கொண்ட இத்தீவில் மட்டும் உலகின் ஒட்டுமொத்த உயிரினங்களில் ஐந்து விழுக்காடு வாழ்வதாக அறியப்பட்டுள்ளது. மடகாசுகரின் தாவர விலங்கினங்களில், தொன்னூறு விழுக்காடு இத்தீவில் மட்டுமே காணப்படக்கூடியவை. உலகின் வேறு எப்பகுதியிலும் அவை பரிணமிக்கவில்லை. அவைகள் மடகாசுகருக்கு மட்டுமே சொந்தமானவை. உலகிலுள்ள அதீத பல்வகைமை உயிரினங்களைக் கொண்ட பகுதிகளில் ஒன்றாக அறியப்பட்டுள்ள மடகாசுகாரில் இருநூற்றி ஐம்பது தீவுகளும் அடங்கும்.

ஏறக்குறைய 15,000 தாவர இனங்கள் வாழும் இடமாக இத்தீவு உள்ளது. மடகாசுகரை பனைமரங்களின் நாடு எனில் மிகையாகாது. நூற்றி அறுபத்தைந்து வகையான பனை மரங்கள் இத்தீவிற்கே உரித்தானதாக அறியப்படுள்ளன. பயணிகளின் பனைமரம் என அழைக்கப்படும் பனை மரமே இத்தீவின் தேசிய மரமாகவும் இருக்கிறது.

மடகாசுகரின் செல்லப் பிராணி லெமூர். வெவவேறு விதமான லெமூர்கள் உள்ளன. இந்த்ரிடி லெமூர்கள் மிகப் பெரியவை. ஒன்பது கிலோ வரையிலும் வளருபவை. முப்பது கிராம் அளவேயுள்ள மூஞ்சுறு லெமூரும் இங்குண்டு. லெமுரெஸ் எனும் உரோமன் சொல்லுக்கு பேய், ஆவி என்றும் பொருள் வருவதால்,

லெமூர்கள் எனப் பெயரிடப்பட்டுள்ளன. லெமூர்கள் இரவு வாழ்க்கையுடையதால் இப்படியான பெயர் வந்திருக்கலாம். லிபியாவின் அழகிய இளவரசி எனும் பொருளான கிரேக்க லேமியாவிலிருந்து இந்த லெமூர் பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது. லேமியா எகிப்திய பெண் கடவுளென்றும் இவரது பெயராலேயே லிபியா நாட்டின் பெயர் வழங்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. லெமியா பிள்ளைகளை எடுத்துச் சென்றுவிடுமென்பதால் பேய், ஆவி எனப் பயமுறுத்தும் விதத்தில் இப்பெயர் இடம்பெறுகிறது.

இந்திரிடியை விடப் பெரிய உருவம் கொண்ட லெமூர்கள் மனிதர்களால் வேட்டையாடப்பட்டதால், குறைந்தது பதினேழு லெமூர் இனங்களாவது அழிந்திருக்கம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. மிகப்பெரிய லெமூர்களும், யானைப்பறவை என அழைக்கப்பட்ட மிகப்பெரியதொரு பறக்க இயலாப் பறவையும், பெரிய பூனை போன்றிருந்த பாசேக்களும், மடகாசுகர் நீர் யானையும், மனிதக் குடியேற்றங்களுக்குப் பின்னர் அழிந்து போனதாகப் பதியப்பட்டுள்ளது. வேட்டையும், வாழிடத்திற்காக காடுகள் அழிக்கப்படுவதும், விலங்குகள் அழிவதற்கான முக்கியக் காரணங்கள்.

மூதாதையர், தந்தையர், சிறுபையனின் தந்தை எனப் பல அர்த்தங்களைக் கொடுக்கும் பாபாகோட்டா விலங்கும் மடகாசுகாரில் அதிகம் வாழ்கின்றன. மூன்று முதல் ஆறு கிலோ எடையிருக்கும் சிப்பாகாஸ் பாலூட்டியும் இங்கு உள்ளது. இதனை வேட்டையாடும் வீதம் அதிகரித்து வருவதாகக் குறிப்புகள் கூறுகின்றன. புதர் குழந்தை எனும் பொருள்படும் புஷ்பேபி பாலூட்டியும், கீரிப்பிள்ளை போன்ற உருவமுடைய பாசேக்களும் இங்கு வாழ்வது குறிப்பிடத்தக்கது.

மடகாசுகரில் முந்நூறு வகையான இருவாழ்விகள் கண்டறியப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக இருவாழ்விகள் அடையாளம் காணப்பட்டும் வருகின்றன. லெமூர்களைப் போன்றே பச்சோந்திகளும் இத்தீவெங்கும் காணப்படுவதால் மடகாசுகரை பச்சோந்து நாடு எனக் குறிப்பிட்டாலும் பொருத்தமே எனக் கூறப்படுகிறது. உலகிலுள்ள பச்சோந்திகளில் மூன்றில் இரண்டுபங்கு மடகாசுகரில் வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பல்லி வகைகள், நச்சற்ற அறுபது வகையான பாம்புகள், ஐந்து வகையான நில ஆமைகள் போன்ற மேலும் பல ஊர்வன விலங்குகளும் இங்குண்டு. நைல் முதலைகள் அரிதாகி விட்டனவாம்.

முன்னூறுக்கும் அதிகமான பறவை இனங்கள் இங்கு வாழ்கின்றன. அவற்றுள் அறுபது விழுக்காட்டிற்கும் மேல் மடகாசுகரையே சார்ந்தவை. இத்தீவுக்கே உரித்தான மீன் இனங்களின் எண்ணிக்கை நூற்றி ஐம்பதிற்கும் மேல் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முதுகுநாணற்ற விலங்குகளும் இங்கு அதிகமுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இன்னும் இவற்றை பற்றிய ஆய்வுகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிகிறது. அறுநூற்றி ஐம்பது வகையான நத்தைகள் இத்தீவுக்கு மட்டுமே உரியனவாக அறியப்பட்டுள்ளன. மேலும் வண்ணத்துப் பூச்சிகள், சிலந்திகள், தட்டான்கள் போன்றவையும் பரவலாக காணக் கிடைக்கின்றன.

தற்போதைய மடகாசுகர் பெரியதொரு சூழலியல் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது. தனித்துவமான தாவர, விலங்குகள் மற்றும் சூழியல் தன்மை கொண்ட இத்தீவு மனிதக் குடியேற்றங்களுக்குப் பின் பெருமளவில் சிதைக்கப்பட்டுள்ளதாகவும், ஏறக்குறைய தொன்னூறு விழுக்காடு அளவிற்கு இத்தீவின் பழமைமிகுந்த காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

பொ.ஆ.மு. 350க்கும், பொ.ஆ. 550க்கும் இடைப்பட்ட காலத்தில் மனிதக் குடியேற்றம் இத்தீவில் நிகழ்ந்தாலும், பொது ஆண்டின் ஆறு ஏழாம் நூற்றாண்டுகளிலேயே அதிகமான குடியேற்றங்கள் நடந்துள்ளன. நம்பிக்கை முனையில் அமைந்துள்ள மிகப்பெரிய தீவென்பதால் இதன் முக்கியத்துவம் அளவிடற்கரியது.

மடகாசுகரில் பொது ஆண்டின் ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலங்களில் அரேபிய வணிகர்களின் ஆதிக்கம் இருந்திருக்கிறது. பத்தாம் நூற்றாண்டில் தென்கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து பாண்டு இன மக்கள் இங்கு குடியேறியிருக்கிறார்கள். கூடவே ஜிவு என்ற நீண்ட கொம்புடைய மாட்டு மந்தைகளையும் பாண்டு மக்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஜிபு மாடுகள் இந்திய வம்சாவளியைச் சார்ந்தவையாக அறியப்படுகின்றன.

தீவின் மத்திய பகுதி மேட்டு நிலங்களில் ஆயிரத்து அறுநூறுகளில் ஆரம்பிக்கப்பட்ட நெல் சாகுபடியும், ஜிபு மேய்ச்சலும் சேர்ந்து அடர்காடுகளாக

இருந்த மடகாசுகரை புல்வெளிப் பகுதியாக ஒரு நூற்றாண்டிற்குள் மாற்றியமைத்தது வியப்பானது.

அரபு வணிகம் கூடவே இசுலாத்தையும் கொண்டு வந்திருக்கிறது. பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துகீசியரும், பதினேழாம் நூற்றாண்டில் பிரான்சுகாரர்களும் இத்தீவினை சொந்தம் கொண்டாடியிருக்கிறார்கள். கடைசியாக 1960-ல் பிரான்சிடமிருந்து இத்தீவிற்கு விடுதலை கிடைத்திருக்கிறது.

மடகாசுகரில் அடிமை வணிகம் கொழித்திருக்கிறது. பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசுகள் தோன்றியிருக்கின்றன. மெரினா அரசாட்சி என அழைக்கப்படும் இதில், அரசர் ஆன்ட்ரியானம்பொய்னி மெரினா (1787-1810) புகழ்பெற்றவராகவும், மடகாசுகர் முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வர விரும்பியவராகவும் அறியப்படுகிறார். இவரது மகன் ரடமா அரசர் இதனை சாதித்திருக்கிறார்.

1818-ல் லண்டன் மிசனரி இத்தீவைத் தேடி வந்திருக்கிறது. மலகாசி மொழிக்கு உரோமன் எழுத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிகள் திறக்கப்பட்டு, பைபிள் அச்சடிக்கப்பட்டு, மேலை தொழில் நுட்பங்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

முதலாம் ரனவலோனா அரசி (1828-1861) பிரிட்டன் பிரான்சு நாடுகளின் மதம், அரசியல், பண்பாடு போன்றவற்றில் ஆக்கிரமிப்பு அதிகரிப்பதாகக் குற்றம் சாட்டி பல வெளிநாட்டவரை மடகாசுகரை விட்டு வெளியேற்றியிருக்கிறார். பின்னர் வந்த இளவரசி ஆட்சியில் (1863) இதில் தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மடகாசுகரை 1883-ல் பிரான்சு ஆக்கிரமித்து 1896-ல் காலனி நாடாக அறிவித்திருக்கிறது, அரச வம்சத்தார் நாடுகடத்தப்பட்டிருக்கிறார்கள். 1896-ல் அடிமை வணிகம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஐந்து லட்சம் பேர் அடிமைகளாக இருந்திருக்கிறார்கள். அடிமை மக்கள் அனைவரும் எஜமானர்கள் வீடுகளில் பணியாளர்களாக சேர்ந்திருக்கிறார்கள்.

பிரான்சின் காலனியாதிக்கத்தில் ஏற்றுமதிக்காக ஏராளமான வணிகப் பயிர்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன. பிரெஞ்ச் மொழி பரவலாக்கமும், கல்வி வளர்ச்சியும் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய மடகாசுகரின் மொழியாக மலகாசியும், பிரெஞ்சும் உள்ளன. தலைநகர் அன்டனனரிவோ.

லெமூர்கள் மரக்கிளைகளில் வாழ்பவை. பெரும்பாலான நேரங்களை மரங்களிலேயே கழிக்கின்றன. வளைய வால் கொண்ட ஒரு சில லெமூர்கள் நிலத்தில் பெரும்பாலான பொழுதை கழிப்பவையாக உள்ளன. கூட்டமாக வாழும் பெரும்பாலான லெமூர்கள் பகல் வாழ்க்கையை மேற்கொள்கின்றன. சிறிய உடலமைப்பைக் கொண்டுள்ள லெமூர்கள் இரவு வாழ்க்கை கொண்டுள்ளன.

குரங்குகளைப் போன்ற வளையும் வால்களை இவை பெற்றிருக்கவில்லை. இவற்றில் முகர்வு திறன் நுட்பமானது. பார்வைத் திறனும் அதிகம். பெண் லெமூர்களே ஆதிக்கம் மிகுந்தவை. லெமூர் குழுவிற்கு பெண் லெமூரே தலைமை ஏற்கும். இதுவே முதலில் உணவுண்ணவும் இனப்பெருக்கத்தில் ஈடுபடவும் செய்யும். கனிகள், இலைகள் இவற்றின் உணவு. சிறிய லெமூர்கள் பூச்சிகளையும் உண்ணும்.

இந்தியா, இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் மழைக்காடுகளிலும் மரக்காடுகளிலும் தேவாங்குகள் வாழ்கின்றன. மிக மெதுவாக இடம்பெயரக் கூடிய இந்த இரவு வாழ்க்கை தேவாங்கின் கண்கள் பளிச்சென்று துருத்திக்கொண்டிருக்கும். சில தேவாங்குகள் பூச்சிகளை மட்டுமே உண்ணுகின்றன. கனிகள், இலைகள் உண்ணும் தேவாங்குகளும் உண்டு.

தேவாங்குகளில் நூறு கிராம் எடை கொண்டது முதல் இரண்டு கிலோ எடை கொண்டது வரை உள்ளன. மெதுவாக நகரும் தேவாங்குகள் மிகவும் அரிதானவையாகக் கருதப்படுகின்றன. தேவாங்கு போன்று காணப்படக்கூடிய பல விலங்குகள் ஆப்பிரிக்காவில் வாழ்கின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டுமே காணப்படும் டார்சியர்கள், மிகச்சிறிய உடலமைப்பைப் பெற்றவை. கண்கள் பெரியதாகவும், காதுகள் தெளிவான கேட்கும் திறனுள்ளவையாகவும் உள்ளது. டார்சியர்கள் பூச்சிகளை முக்கிய உணவாகக் கொள்பவை. இரவு வாழ்க்கை மேற்கொள்பவை.

தென் அமெரிக்காவின் நிறவெறிக் காலத்தில், கருப்பின மக்களை பாண்டு என்றே அதிகாரப் பூர்வமாக அழைத்திருக்கிறார்கள். பாண்டு எனும் சொல் மக்கள் என்ற பொருளைக் குறிக்கிறது. பாண்டு மொழி பேசும் மக்களையெல்லாம் பாண்டு என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள். தென் ஆப்பிரிக்காவில் நிறவெறியைச் சுட்டுவதாக குறிப்பிடப்படும் பாண்டு சொல், ஆப்பிரிக்காவின் மற்ற பகுதிகளில் இயல்பானதாகப் புழங்கியிருக்கிறது.

பாண்டு மக்களுக்கு முன்னதாகவே ஆஸ்ரோனேசியன் மக்கள் என அறியப்படும் தென்கிழக்கு ஆசியா, ஒசானியா பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கட்டுமரம் முலம் வந்து மடகாசுகரில் குடியேறியிருக்கிறார்கள். இந்நாட்டின் தொல்லியல் சான்றுகள் பொ.ஆ.மு. 2000 ஆண்டுகளிலேயே மக்கள் வாழ்ந்ததாகக் தெரிவிக்கின்றன.

ஆப்பிரிக்காவின் நைஜர்-காங்கோ மொழியின் ஒரு பிரிவாக பாண்டு மொழி குறிப்பிடப்படுகிறது. ஏறத்தாழ இருநூற்று ஐம்பது பாண்டு மொழிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் 535 பாண்டு மொழிகள் புழக்கத்திலிருப்பதாக பதிவுகள் கிடைக்கின்றன. பாண்டு மொழிகள் மத்திய ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஆப்பிரிக்கா, தென்பகுதி ஆப்பிரிக்காவில் அதிகம் பேசப்படுகின்றன.

பாண்டு மொழி, ஆப்பிரிக்க பெரிய ஏரிப்பகுதியான தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் தாய் மொழியாகப் பேசப்படுகிறது. தற்போதைய தான்சானியா, கென்யா, உகாண்டா, ருவாண்டா, மொசாம்பிக், காங்கோ போன்ற நாடுகளை உள்ளடக்கிய நாடுகளின் சுவாகிலி மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர்.

ஐம்பது லட்சம் முதல் ஒன்றரை கோடிப் பேர் வரை பாண்டுவை முதல் மொழியாகக் கொண்டிருக்கின்றனர் என்றும் இரண்டாம் மொழியாகக் கொண்டவர்களின் என்ணிக்கை பதினைந்து கோடி இருக்குமென்றும் கூறப்படுகிறது. அரபு மொழியின் தாக்கம் சுவாகிலி மொழியில் அதிகம் எனவும் பதிவுகள் கூறுகின்றன.

சிகொமரி அல்லது சிமாசிவ என்றும் கொமரியன் மொழி, பாண்டு மொழியோடு நெருங்கிய தொடர்புள்ளதாக அறியப்படுகிறது. இந்திய மாவாரியில் மொசாம்பிக்கு மற்றும் மடகாசுகருக்கு இடையிலுள்ள தீவுக்கூட்ட நாடு கொமராஸ் என பெயரிரிடப்பட்டுள்ளது. அரபியில் குமர் (Qumar). அதிகாரப்பூர்வமாக உச்சிமாவ கொமரி (யூனியன் ஆப் கொமரி). இதன் வடமேற்கே சிசிலித் தீவுகள் உள்ளன.

பிரான்சிடமிருந்து 1975-ல் விடுதலையான கொமரி நாடு முதன் முதலில் பாண்டு மொழி பேசும் மக்களால் குடியேற்றமடைந்திருக்கிறது. இந்நாட்டின் அலுவலக மொழிகள் கொமரி, அரபு மற்றும் பிரெஞ்சு. கொமரோவின் தாவர, விலங்குகள் மடகாசுகரை ஒத்தே காணப்படுகின்றன. இங்கும் லெமூர் உண்டு.

இத்தீவிற்கேயுரிய இருபத்தியோரு பறவைகள், ஒன்பது வகை ஊர்வன, இரண்டு வகை பழவெளவால்களும் இங்கு காணப்படுகின்றன.

ஆப்பிரிக்காவின் பாண்டு மொழியைப் பேசுபவர்கள் பாண்டு எனக் குறிப்பிடப்படுகிறார்கள். முந்நூறு முதல் அறுநூறு வகையான மக்கள் திரளைச் சேர்ந்தவர்கள் பாண்டு மக்கள் என சுட்டப்படுகிறார்கள். இவர்கள் மத்திய ஆப்பிரிக்கா, தென்பகுதி ஆப்பிரிக்காவில் அதிகமிருக்கிறார்கள். காங்கோவின் லுபா, தென்ஆப்பிரிக்காவின் சுலு, கென்யாவின் கிகுகு போன்ற மக்கள் பாண்டு மக்களாக அறியப்படுகிறார்கள். பாண்டு என்ற சொல் மக்கள், மனிதர்கள் என்ற பொருளில் வழங்கப்படுகிறது.

ஆப்பிரிக்கக் கண்டத்திலிருந்தும், பின்னர் இந்தியக் கண்டத்தினின்றும், பிரிந்து சென்ற மடகாசுகர் தீவிலேயே இவ்வளவு உயிர்த்தொகுதி இருக்கும் போது, பழம் பாண்டிநாட்டில் எவ்வளவு தாவர விலங்குகள் இருந்தனவோ என்ற பாவாணரின் மெருமிதம் உண்மையாகத்தான் இருக்கவேண்டும். பிறவி ஞானம் பெற்றிருந்த பாவாணருக்கு ஆப்பிரிக்க, ஆத்திரேலியப் பகுதிகளில் குறைந்தது இரு வருடங்கள் தங்குவதற்கு வாய்ப்புக் கிடைத்திருந்தால், தெள்ளத் தெளிவாக தக்க சான்றுகளுடன் தமிழ் பாரம்பரியத்தை உண்மையாக்கியிருப்பார். அறிவுச் சான்றோர்களை தமிழ்ச் சமூகம் கண்டுகொள்ளாமல் போவது ஏனோ?

மனித இனம் உருவாகியதாகக் கூறப்படும் குமரிக்கண்டத்தில் ஏழுபத்தி இரண்டு நாடுகளும், தலைநகராக தென்மதுரையும் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. முதலில் தோன்றியவர்களும், நாகரிகமடைந்தவர்களும், அரசுரிமை அமைத்தவர்களும் பாண்டியர்கள் எனச் சொல்லப்படுகிறது. பாண்டு என்ற சொல் பண்டைய, பாண்டிய, பாண்டியர் எனத் திரிந்திருக்கலாம் என்பது அறிஞர் கருத்து. கடல்கோள்களில் குமரி நிலம் மூழ்க, பாண்டிய நாடு இந்தியப் பெருநிலத்தை நோக்கி இடம் பெயர்ந்து வந்ததாகக் குறிபிடப்படுகிறது. தென் மதுரைக்குப் பின் கபாடபுரம் தலைநகராக இருந்திருக்கிறது.

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் இருந்தன என்பது தமிழறிஞர்களின் திண்ணம். சங்கம் என்ற சொல், சங்ககாலத்திய இலக்கியங்களில் இடம்பெறாமையால், இதைப் பற்றிய மாற்றுக் கருத்துக்களும் உண்டு. எனினும் சங்கம் எனும் பொருளில் வரும் மன்றம், புணர்கூட்டு, தமிழ் நிறை

போன்ற சொற்களும் தொடர்களும் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தலைச்சங்கம் ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததாகக் கருதப்படுகிறது. விரிசடைக்கடவுள் அதன் தலைவராக இருந்தார் என்பர். குன்றெறிந்த முருகவேள் முரிஞ்சியூர் முடி நாகராயர், நிதியின் கிழவன் போன்ற புலவர்களும் இருந்துள்ளனர். பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை போன்ற நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அகத்தியம் இலக்கண நூலாக இருந்திருக்கிறது. நான்காயிரத்து நானூற்றி நாற்பது ஆண்டுகள் இந்த முதற்சங்கம் நடந்ததென்றும், நான்காயிரத்து நானூற்றி நாற்பத்தொன்பது புலவர்கள் தமிழாய்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. அகத்தியர் எனும் பெரும்புலவர் எழுதிய அகத்தியம் தலைச்சங்கத்தில் அரங்கேறியது என்பது பொதுவான கருத்தாக உள்ளது. எண்பத்தொன்பது பாண்டிய அரசர்கள் தென்குமரியை ஆண்டவர்கள். காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரையிலான பாண்டிய அரசர்கள் சங்கம் பேணியவர்கள்.

இடைச்சங்கம் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. இதன் தலைநகரம் கபாடபுரம். அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக் கோமான், கீரந்தை போன்ற புலவர் பெருமக்கள் உட்பட மூன்றாயிரத்து எழுநூறு புலவர்கள் இடைச்சங்க காலத்தில் இருந்தனர் என்பது மரபு. கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் முதலிய நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம் போன்ற இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திரு மாறன் வரையிலான ஐம்பத்தொன்பது அரசர்கள் தமிழ்சங்கத்தைப் பேணியவர்கள்.

தற்போதைய மதுரையைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்டது கடைச்சங்கம். சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடை அரனார், பெரங்குன்றூர் கிழார், இளந்திரு மாறன், மதுரை ஆசிரியர் நல்லத்துவனார், மதுரை மருதன், இளநாகனார், கணக்காயர் மகனார் நக்கீரனார் போன்றவர்களின் தொடக்கம் தொட்டு நானூற்றி நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

நெடுந்தொகை நானூறு, குறுற்தொகை நானூறு, நற்றினை நானூறு, ஐங்குநுறூறு, பதிற்றுப்பத்து போன்ற பல நூல்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. அகத்தியம், தொல்காப்பியம் இலக்கண நூல்களாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரையிலான நாற்பத்தொன்பது அரசர்கள் கடைச்சங்கத்தைப் பேணிய பாண்டிய அரசர்கள்.

முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பண்டைய புலவர்களும் அவர்களைப் பேணிய பாண்டிய அரசர்களும் பெருமைக்குரியவர்கள். அண்மையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஒன்றாம் ஆண்டில் பாலவனத்தம் ஐமிந்தார் தமிழ் வளர்த்த வள்ளல் திரு.பாண்டித்துரை அவர்களின் பெருமுயற்சியால் நான்காம் தமிழ்ச்சங்கம் மதுரையில் நிறுவப்பட்டிருக்கிறது.

மூவேந்தரும் போய் முச்சங்கமும் போய் பாவேந்தருங்குறைந்து பழைய நூலுரைகளும் மறைந்து படிப்பாருமின்றிக் கேட்பாருமின்றித் தமிழ்க் கல்வி மழுங்கிவரும் காலகட்டத்தில் மதுரை மாநகரில் தமிழ்ச்சங்கம் கூட்டியும், அருந்தமிழ் நூல்களை ஈட்டியும் படித்த வல்லவராவர்க்கு பரிசில் கொடுத்தும் செந்தமிழ் என்னும் மாசிக வாசிக பத்திரிகையை வெளிவிடுத்தும் இப்படிப் பலவாறான தமிழ் தொண்டினை திறம்படச் செய்த செந்தமிழ் ஆர்வலர் பாராட்டுக்குரியவரே.

3

மெசபதோமியா

தமிழ்நாட்டின் பண்டைய வரலாற்றுக் காலத்தை அறிந்து கொள்வதற்கு மொகஞ்சதாரோ, அரப்பா, அதிரம்பாக்கம், பையம்பள்ளி, காவேரிப் பூம்பட்டினம், அரிக்கமேடு, கொற்கை, கொடுமணல், ஆதிச்சநல்லூர், கீழடி முதலிய இடங்களின் தொல்பொருள் சான்றுகளும், கல்வெட்டுகளும், நாணயங்களும் மொழியியல் மூலங்களும் பெருமளவில் பயனாகின்றன என்பது பொருத்தமுடையதே. ஏற்புடையதே.

தற்போதைய காலத்திற்கு ஏறக்குறைய ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன், தமிழகத்தில் புதிய கற்காலமும், அதனைத் தொடர்ந்து நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக இரும்புக் காலமும் உண்டானதாகக் ஏற்றுக் கொள்ளப்படலாம் என்பது அறிஞர்களின் கருத்து. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கு பெருங்கற்காலம் பரவியிருக்கலாம் என்பதும் தேற்றமே. இந்தக் காலகட்டங்களிலேயே தமிழகத்தில் வேளிர்களும், மூவேந்தர் மரபும், சங்க இலக்கியங்களும் தொடங்கப்பட்டிருக்கவேண்டும் என்பதும் ஏற்புடையதாகவே தோன்றுகிறது.

மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து தொடங்கும் காலகட்டமே உலகின் செவ்வியல் காலகட்டமாக எடுத்தாளப்படுகிறது. குறிப்பாக, பொது ஆண்டிற்கு முந்தைய காலகட்டமான எழுநூற்று எழுபத்தி ஆறாம் ஆண்டில் நடைபெற்ற மாபெரும் விளையாட்டுப் போட்டியான கிரேக்க ஒலிம்பிக் போட்டியே செவ்வியல் காலத்தின் முதல்படியாகக் கொள்ளப்படுகிறது. மேலும் எழுநூற்றி ஐம்பத்தி மூன்றாமாண்டு காலத்தில் உரோம் நகரம் தோற்றுவிக்கப்பட்டது என மரபு வழியாக அறியப்படுவதும் ஒப்பு நோக்கப்படுகிறது. அடுத்து வந்த ஆயிரம் ஆண்டு காலத்தை கிரேக்க, உரோம சிந்தனைகளே செழுமை செய்தன என்றால் மிகையாகாது

பொது ஆண்டிற்கு முற்பட்ட ஆயிரம் ஆண்டு கால வரலாறு, உலகின் பழமையான பல நாடுகளிலும் சிறப்பாகவே காணக் கிடைக்கிறது. தற்போதைய சூடான் பகுதியைச் சேர்ந்த குஷ் அல்லது குசைட் அரசுரிமையைச் சேர்ந்த பேரரசர், எகிப்தைக் கைப்பற்றி அதன் பாரோவாக இருபத்தைந்தாவது அரசாட்சியை அமைத்திருக்கிறார். இக்காலத்திலேயே சைனாவின் நீண்ட ஷோ அரசாட்சி அரசுரிமையில் இருந்தது. மேலும் இக்காலகட்டத்திலேயே சைனாவின் உள்ளாட்சி

சீர்கெட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. வசந்தம் மற்றும் குளிர்கால வருடங்கள் காலமும் அதனைத் தொடர்ந்து கன்பூசியசின் அரசு, மக்கள், கடமைகள் தொடர்பான கருத்தாக்கமும் உருவாகியிருக்கிறது.

பழமையான அசூர் நகரைத் தலைநகரமாகக் கொண்டு மெசபதோமிய கிழக்குப் பகுதியில் ஆட்சி செலுத்திய மூன்றாம் திக்லெத் பெலிசர், அசிரியன்களின் புதிய அரசராக இக்காலகட்டத்தில் ஆட்சிசெய்திருக்கிறார். தற்போதைய ஏமனில் வாழ்ந்த சபீன் என்ற பழமையான மக்கள், உலகின் அதிசயம் என்று போற்றப்படத்தக்க மரிப் (மரிப்பு) அணை உட்பட மூன்று மண் அணைகளைக் கட்டியிருக்கிறார்கள். இந்த மரிப் அணைகள் காலத்தால் மிகவும் பழமையானவைகளாகவும் குறிப்பிடப்படுகின்றன.

யூதர்களுக்கும், கிறித்துவர்களுக்கும், இசுலாமியர்களுக்கும் முக்கியமானதாகக் கருதப்படும் இஸ்ரேல் பகுதியை மையமாகக் கொண்ட இஸ்ரேலியர்களின் அரசாட்சி பற்றிய குறிப்புகள் யூதர்களின் புனித நூல்களில் இடம் பெற்றுள்ளன. எபிரேயம் என அறியப்படும் ஹீப்ரு மொழியில் எழுதப்பட்டுள்ள தோரா (அறிவு, கற்பித்தல், சொன்னவை) மோசஸ் இறைத்தூதரின் ஐந்து நூல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. தோரா, நிவியம் (இறைத் தூதர்கள்), கிடுவிம் (நூல்கள்) என்ற இம்மூன்று பகுதிகளையும் உள்ளடக்கிய டனாக் (Tanakh) என்பதே எபிரேயர்களின் புனித நூலாக இடம்பெறுகிறது. மேலும் நாட்கணக்குப் புத்தகமும் புனித நூலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

தாவீதுராஜா என அறியப்படும் டேவிட் அரசர் செவ்வியல் காலத்தின் ஆரம்பத்தில் அரசாண்டிருக்கிறார் (1010-970). சிறுவனாக இருந்த போதே பேருருவம் கொண்ட கோலியாத்தை வீழ்த்தியதாகக் குறிப்பிடப்படும் தாவீது அரசர், சிறந்த போர் வீரராகவும், நெறியோடு ஆட்சி செய்தவராகவும் அறியப்படுகிறார்.

சிசெம், சமரியா என்ற நகரங்களை உள்ளடக்கிய வடபகுதியையும் (இஸ்ரேல் அரசாட்சி - இசுரவேலர் அரசு) ஜெருசலத்தை உள்ளடக்கிய தென்பகுதியையும் (ஜூடா அரசாட்சி - யூத அரசு) ஒருங்கிணைத்து, முதலாவது இஸ்ரவேல அரசை சால் பேரரசர் நிருவுகிறார். சால் அரசர் திறமையில்லாதவராக இருப்பதால், இஸ்ரேலின் கடவுள் தாவீதை அரசராக்குவதாக சாமுவேல் புத்தகங்கள், பழைய ஏற்பாடு போன்றவை குறிப்பிடுகின்றன.

தாவீது அரசரின் மகனாக அறியப்படும் சாலமோன் பேரரசர் (970-931), நுண்ணறிவு படைத்தவராக அறியப்படுகிறார். இவர் அரசுரிமை ஏற்றது தொடர்பாக பல வரலாறுகள் காணப்படுகின்றன. நாட்கணக்குப் புத்தகத்தின் படி, தாவீதுக்கு பல மனைவியரென்றும், சாலமோன் அரசுரிமையால் விரும்பத்தகாத பல நிகழ்வுகள் நடந்ததையும் அறிய முடிகிறது.

தேனீக்களை வைத்து அசல் பூவை கண்டுபிடித்தவரென்றும், குழந்தைக்கு சொந்தம் கொண்டாடிய இருபெண்களில் உண்மையான தாயை கண்டுபிடித்தவரென்றும் புகழப்படும் சாலமோன் அரசர், ஜெருசலேமில் எபிரேயர்களின் புனிதக் கோவிலான முதல் கோவிலை ஜியோன் மலையில் உருவாக்கியதாகவும் அறியப்படுகிறார். சாலமோன் மகன் ரிகபோம் அரசுரிமையை ஏற்றுக்கொள்ளாத தென் பகுதி மக்கள், ஜெரபோம் தலைமையில் ஜூடா அரசினை அமைக்கின்றனர்.

தாவீது அரசரின் வழிமரபினராக கிறித்து குறிப்பிடப்படுவதும் முக்கியமானது. விவிலியத்தின் படி யாக்கோபின் நான்காம் மகனாகிய யூதா என்பவரின் சிறப்புப் பெயராக விளங்கிய இசுரயேல் எனும் பெயரிலேயே இசுரவேல் நாடு அழைக்கப்படுகிறது.

ஜூடோயிசம், ஜுவிசம், யூதமதம் என அறியப்படும் இஸ்ரேலியர்களின் மதத்திலும், கிறித்துவ, இசுலாமிய மதங்களிலும் தாவிது, சாலோமோன் அரசர்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தாவீதை ஒரு இறைத்தூதரென்றும், சாலமனை இறைதூதர் சுலைமானாகவும் இசுலாம் ஏற்றுக் கொள்கிறது.

இசுரவேலர் என அழைக்கப்படும் யூதர்கள், நெடிய வரலாறு கொண்டவர்களாக அறியப்படுகிறார்கள். யூத மதத்தின் முதுபெரும் தந்தையாகக் கருதப்படுபவர் ஆப்ரகாம். பொது நூற்றாண்டுக்கு முன் இரண்டாயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என காலவரையறை செய்யப்படும் இவரது பெயராலேயே யூதம், கிறித்துவம், இசுலாம், பகாய் போன்ற சமயங்கள் ஆப்ரகாமின் மதங்கள் என அழைக்கப்படுகின்றன. கிறித்துவம் பொது ஆண்டுக் காலத்தில் இயேசு கிறித்துவாலும், இசுலாம் ஏழாம் நூற்றாண்டில் முகம்மது நபியாலும், பகாய் சமயம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பகாவுல்லாவாலும் தோற்றுவிக்கப்பட்டன.

யூதர்களது எபிரேயம், திருமறை என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டின் உலகத் தோற்றம் பற்றிய ஆதியாகமப் பகுதியில் (ஜெனசிஸ்) அபிரகாம் பற்றிய குறிப்புகள் கூறப்பட்டுள்ளன.

யூதா என்னும் எபிரேயச் சொல்லுக்கு இறைபுகழ் என பொருள் சுட்டப்படுகிறது. பழைய ஏற்பாட்டின் தொடக்க நூலில் குறிப்பிடப்படும் நாகோர் என்பவரின் மகனாக தேராகு குறிப்பிடப்படுகிறார். நோவாவின் பத்தாம் வழிமரபினர் தேராகு என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆபிரகாமிய சமய நம்பிக்கையின் படி, ஊழிவெள்ளம் வருவதற்கு முன் இருந்த பத்தாவதும், இறுதி பெருந்தந்தையுமாக நோவா அறியப்படுகிறார். நோவா என்ற எபிரேய சொல்லுக்கு ஆறுதல் என்று பொருள். நோவா நூஹ் எனும் பெயரில் இசுலாமியர்களின் திருமறையான திருக்குர்ரானின் நபிமார்களில் மூன்றாவதாகக் குறிப்பிடப்படுகிறார். நூஹ் நபியவர்களின் இயற்பெயர் அப்துல் க.ஃப்பார்.

திருக்குரானில் குறிப்பிடப்படும் இரண்டாவது நபியான இத்ரீசு என்பவரின் பேரன் நூஹ். நூஹ் தந்தை லாமக். தாயார் பன்யூஸ் .

சூரா. 19:56 (நபியே!) இவ்வேதத்தில் இத்ரீஸைப் பற்றியும் நினைவு கூர்வீராக! நிச்சயமாக அவர் ஸித்தீக்காக (மிக்க சத்தியவானாக) நபியாக இருந்தார்.

முதல் நபி ஆதம். ஆதம் முதல் மனிதனாகவும், முதல் நபியாகவும் அவ்வாவின் (ஏவாள்) கணவன் என்றும் இசுலாத்தில் குறிப்பிடப்படுகிறார். எபிரேய மொழியில் ஆதாமா என்றால் மண் என்றும், ஆதாம் என்றால் மண்ணால் ஆனவன் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. ஏவாள் என்பதற்கு மக்கள் அனைவருக்கும் தாய் எனப்பொருள். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஏராளமான பிள்ளைகள். ஆபேல், காயின் மற்றும் சேத் பெயர்கள் மட்டுமே தொடக்க நூலில் குறிப்பிடப்படுகின்றன.

மணணுலகப் பரப்பில் இருந்த வெள்ளம் வற்றியதும் ஆண்டவர் மனிதரை முன்னிட்டு நிலத்தை இனி யாம் சபிக்கவே மாட்டோம், இப்போழுது யாம் செய்தது போல இனி எந்த உயிரையும் அழிக்கவே மட்டோம், மண்ணுலகு இருக்கும் நாளளவும் விதைக்கும் காலமும் அறுவடைக் காலமும் குளிரும் வெப்பமும்

கோடைக்காலமும் குளிர்காலமும் பகலும் இரவும் என்றும் ஓய்வதில்லை என்று கூறி நோவாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டார்.

நோவாவின் புதல்வர்கள் சேம், காம், எப்பேத்து. இவர்களிலிருந்தே மண்ணுலகு முழுவதும் மனித இனம் பரவியதாக விவிலியம் கூறுகிறது. ஆபிரகாம், நாகோர், ஆரான் மற்றும் சாராள் ஆகியோரின் தந்தை தேராகு. தேராகு தொடக்க காலத்தில் விக்கிரக ஆராதனை செய்பவராகவும், சிலைகளை செய்து விற்பனை செய்யும் தொழிலை மேற்கொண்டுமிருந்தார். தமது தந்தையின் தொழிலில் விருப்பம் இல்லாத ஆபிரகாம், தந்தையின் சிலைக் கடையை எதிர்க்கும் விதமாக அவர் செய்த சிலைகளை அடித்து நொறுக்கி வரும் வாடிக்கையாளர்களை விரட்டியடித்தார்.

ஆபிரகாம் தனக்கு ஒன்றுவிட்ட தங்கையான சாராளை திருமணம் செய்கிறார். நாகோரின் மனைவி மில்கா. ஆரான் தான் பிறந்த ஊர் என்ற கல்தேயர் நகரில் தேராகுக்கு முன்பே இறந்துவிட்டார். ஆரான் மகன் லோத்து. ஆபிரகாம், சாராள் மற்றும் லோத்தை அழைத்துக்கொண்டு கல்தேயர் நகரை விட்டு கானான் நாட்டை நோக்கி தேராகு புறப்பட்டுச் சென்றார். காரான் என்ற இடத்திற்கு வந்ததும் அங்கேயே அவர்கள் தங்கி வாழலாயினர். தேராகு இருநூற்றி ஐந்து வயதாக இருந்தபொழுது காரானில் இறந்தார். கானான் என்பது தற்போதைய இசுரேல், லெபனான் நாடுகளை உள்ளடக்கிய பகுதி.

ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி அவரின் நாட்டிலிருந்தும் இனத்தவரிடமிருந்தும் புறப்பட்டு தான் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்ல கட்டளையிட்டார். அவ்வாறு செய்தால் ஆண்டவர் அவரை பெரிய இனமாக்கவும், ஆசி வழங்கவும் வாக்களித்தார். ஆண்டவர் ஆபிரகாமுக்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார். மனைவி சாராவையும், லோத்தையும் உடன் அழைத்துச் சென்றார். ஆபிரகாம் ஆரானைவிட்டுச் சென்றபொழுது வயது எழுபத்தைந்து.

கானான் நாட்டில் நுழைந்து செக்கேமில் இருந்த கருவாலி மரத்தை அடைந்தார். அங்கே கானானியர் வாழ்ந்து வந்தனர். கடவுள் ஆபிரகாமுக்கு தோன்றி உம் வழிமரபினர்க்கு இந்நாட்டைக் கொடுப்போம் என்றார். எனவே அங்கே ஒரு பலிபீடம் எழுப்பி ஆண்டவரது திருப்பெயரைத் தொழுதார்.

சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமனத்தினால் ஆபிராகாமுக்கும் ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தரிசனமான இந்த ஆண்டவர் பெயர் யேகோவா. ஆனாலும் யேகோவா பெயரில் அம்மூவரும் அவர்களது ஆண்டவரை அறிந்திருக்கவில்லை.

எபிரேய விவிலியத்தில் கடவுளை குறிக்கப் பயன்படும் சொல்லான JHVH (YHWH) என்பதை எவ்வாறு ஒலிப்பது அல்லது மொழிபெயர்ப்பது என்பதில் தொடர்ந்து கருத்து வேறுபாடு நிலவுவதாக அறியப்படுகிறது.

ஜெஹோவா, யெகோவா (Jehova) என்பது ஒரு கூட்டுச் சொல்லாக, ஒலிப்பாக இருப்பதால் அதனை கடவுளின் தனிப்பட்ட பெயராகக் கொள்வது சரியல்ல என்ற கருத்தும், இது சரியான ஒலிப்பல்ல என்றும், யாவே (Yehweh / yehveh) எனும் ஒலிப்பு சரியானதாக இருக்கும் என்ற கருத்தும் உண்டு. மொழியியல் அடிப்படையில் கடவுளின் பெயரை நிர்ணயிப்பது முறையாகாது எனக் கருதுவோர் எங்கெல்லாம் நாலெழுத்து வருகிறதோ அச்சொல்லுக்கு மாற்றாக ஆண்டவர் (LORD) அல்லது கடவுள் (GOD) என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

தமிழில் கூறப்படும் யாவே, யெகோவா என்பது யஹ்வே என்ற எபிரேய மொழிப் பதத்தின் தமிழ் எழுத்துப் பெயர்ப்பு. எபிரேய மொழியில் உயிரெழுத்துகள் கிடையாது என்பதால் அது மெய்யெழுத்துக்கள் மட்டுமே கொண்டு எழுதப்படுகிறது. வாசிக்கும் போது தேவையான உயிரெழுத்துக்கள் சேர்த்து வாசிக்க வேண்டும். யெஹ்வே என்பது இறை நாமம், திருநாமம்.

எபிரேய மொழி, ஆப்பிரிக்க - ஆசிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு செமிட்டிக் மொழியாகும். நோவாவின் மகள் சேம் (Shem) பெயரில் அழைக்கப்படுவதாகக் கூறப்படும் எபிரேயம், அரேபியா, எத்தியோபியா, இசுரேல் போன்ற நாடுகளில் மிகுதியாகப் பேசப்படும் மொழி. மேலும் இது பலவாறான பிரிவுகளையும் கொண்டது.

எபிரேய அரிச்சுவடி வலமிருந்து இடமாக எழுதப்படுவது. அரிச்சுவடியின் முதல் இரு எழுத்துக்களைக் கொண்டு அலி.ப்பெத் என எபிரேய அரிச்சுவடி அழைக்கப்படுகிறது. அலி.ப், பெத், கிமெல், டலட், ஹி, வ.வ், சயின், கெட், டெட், யொட், க.ப், லமெட், மெம், நன், சமெக், அயின், பே, ஸாடி, கு.ப், ரெஷ், சின், டாவ் எபிரேய அரிச்சுவடி எழுத்துக்கள்.

ஹே (He) என்பது அரபி மற்றும் எபிரேய மொழி உள்ளிட்ட செமித்திய மொழிகளின் அகரவரிசையில் ஐந்தாம் எழுத்தாகும். அரபு மொழியில் இது ஹா என்றும் எபிரேயம், சிரியம் போன்றவற்றில் ஹே என்றும் வரும். மெம் எழுத்து மீம், மிம் எனவும் வரும். இருபத்தி இரண்டு மெய்யெழுத்துகளை உயிரெழுத்துகளின் துணையின்றி ஒலிக்க இயலாதென்பதால், பொது ஆண்டிற்குப் பின்னான ஐந்நூறுகளில் எபிரேய அறிஞர்கள் எழுத்துச் சீர்திருத்தம் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மரபு பேணுபவர் எனும் பொருளுடைய இந்த மசோரெத்திய அறிஞர்கள் எபிரேய விவிலியத்தில் உயிரெழுத்துக் குறியீடுகளைச் சேர்த்ததோடு சில ஒலிப்பு விளக்கங்களையும் ஓரத்தில் எழுதினர்.

யாவே என்பதற்கு இருக்கிறவர் அல்லது வாழ்கிறவர் எனப் பொருள் கூறப்படுகிறது. கடவுளுக்குச் செலுத்த வேண்டிய வணக்கத்தை முன்னிட்டு கடவுளடைய பெயரை எபிரேய மக்கள் ஒலிக்க மாட்டார்கள். தமிழ் கிறித்துவ விவிலியங்கள், இறைவனை கர்த்தர் அல்லது ஆண்டவர் என்றே குறிப்பிடுகின்றன. இது மூலமொழியான எபிரேயத்தின் இறைவனைக் குறிக்கும் நான்கெழுத்து வார்த்தையாகும். எபிரேய மொழிப்பிரதிகளில் இறைவனின் பெயர் நான்கு மெய்யெழுத்துக்களால் எழுதப்பட்டு அடோனை (ஆண்டவர்) என்று வாசிக்கப்படவேண்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அடோனை என்பதற்குப் பதிலாக ஹஷெம் (திருநாமம்) என்றும் சில மொழிப்பிரதிகள் கூறுவதுண்டு.

யெருசலேம் தேவாலயத்தின் கருவறையில் பணியாற்றிய ஆசி அளிக்கும் குருக்களும், கோவில் தலைமை குருவும், யோம் கிப்பூர் திருநாளின் போது மட்டுமே திருநாமத்தை உச்சரிக்க அனுமதிக்கப்பட்டனர். தேவாலயம் இடிக்கப்பட்ட பின் திருநாமம் உச்சரிக்கப்படவில்லை.

கழுவாய் திருநாள் யோம் கிப்பூர் எனப்படுகிறது. கழுவாயும் வருத்தப்படுவதும் இந்நாளின் முக்கிய கருப்பொருட்கள். யூதப் புதுவருடத்தின் அதி பரிசுத்த முதலாவது நாளிலிருந்து பத்தாம் நாள்வரை வருத்தப்படுவதற்கான பத்து நாட்கள் என அறியப்படுகிறது. மனந்திரும்புதல் எனும் பெயரில் நோன்பு வேண்டுதல் போன்றவை நிகழ்த்தப்படுகின்றன.

அவர்கள் வாழ்ந்து வந்த நாட்டில் கடும் உணவு பஞ்சம் ஏற்படவே ஆபிரகாம் எகிப்து நாட்டிற்குச் சென்றார். உயர்நிலை என்ற பொருளில் குறிக்கப்படும் சாராய்,

கடவுளின் உடன்படிக்கையின் ஒரு பகுதியாக சாராய் என்னும் தமது பெயரை சாராள் என மாற்றினார். இவர் மிக்க அழகுள்ளவராக இருந்தமையால் எகிப்திய பார்வோன் மன்னரால் கவர்ந்திழுக்கப்படாமலிருக்க, அபிரகாம் சாராளை தமது சகோதரி எனக் கூறினார். சாரானிள் அழகைக் கண்ட பார்வோனின் மேலதிகாரிகள், அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

அவருக்கு ஈடாக ஆடு மாடுகளையும், கழுதைகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், பெண் கழுதைகளையும், ஒட்டகங்களையும் பார்வோன் ஆபிரகாமுக்குக் கொடுத்தார். ஆனால் ஆண்டவர் சாராவை முன்னிட்டு பார்வோனையும் அவர் குடும்பத்தாரையும் கொடிய கொள்ளை நோய்களால் துன்பப்படுத்தினார். பின் பார்வோன் மனைவியென ஏன் சொல்லவில்லை என ஆபிரகாமைக் கேட்டு அவருக்குரிய எல்லாவற்றுடனும் நாட்டைவிட்டு அனுப்பிவிட்டார்.

ஆபிரகாம் தம் மனைவியுடன் எகிப்திலிருந்து நெகேபை நோக்கிக் சென்றார். அவருடன் லோத்தும் சென்றார். அப்பொழுது ஆபிரகாம் கால் நடைகளும், வெள்ளியும், தங்கமும் கொண்ட பெரிய செல்வந்தராக இருந்தார். லோத்துக்கும் ஆட்டு மந்தைகளும், மாட்டு மந்தைகளும் கூடாரங்களும் இருந்தன. அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு இடம் போதவில்லை. ஆபிரகாமின் கால் நடைகளை மேய்ப்போருக்கும், லோத்தின் கால் நடைகளை மேய்ப்போருக்கும் இடையே தகராறு ஏற்பட்டதால், மேலும் பூசல் வலுக்காமலிருக்க இருவரும் பிரிந்தனர். ஆபிரகாம் கானான் நாட்டில் வாழ்ந்து வந்தார். லோத்து யேமர்தான் பகுதியில் இருந்தார்.

ஆண்டவரின் வாக்கு ஆபிரகாமுக்கு ஒரு காட்சி வழியாக வந்து வானத்து விண்மீன்களைப் போல அவரின் வழிமரபினர் இருப்பர் என்றும் அவர் குடியிருக்கும் நாட்டை உரிமைச் சொத்தாக அளிக்கவும் வாக்களித்து, ஆபிரகாமுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். எகிப்திலுள்ள ஆற்றிலிருந்து யூப்பிரத்தீசு பேராறு வரை உள்ள கேனியர், கெனிசியர், கத்மோனியர், இத்தியர், பெரிசியர், இரபாவியர், எமோரியர், கரனானியர், கிர்காசியர், எபூசியர் ஆகியோர் வாழும் அந்நாட்டை ஆபிரகாமின் வழிமரபினருக்கு வழங்குவதாகவும் வாக்களித்தார்.

ஆபிராமின் மனைவி சாராய்க்கு மகப்பேறு இல்லாததால் தமது எகிப்திய பணிப்பெண் ஆகாரை ஆபிராமுக்கு மனைவியாகக் கொடுத்தார். தாம்

கருவுற்றிருப்பதைக் கண்டதும் தம் தலைவியை ஏளனத்துடன் நோக்கினார். இதனால் சாராய் அவளைக் கொடுமைப்படுத்தினார். ஆகவே ஆகார் சாராயிடமிருந்து தப்பி ஓடினார். ஆண்டவரின் தூதர் ஆகாரை பாலை நிலத்தில் இருந்த ஒரு நீருற்றுக்கு அருகில் கண்டார். அவர் ஆகாருக்கு ஆறுதல் கூறி திரும்பிப் போகப் பணிந்தார். ஆகார் தமது எண்பத்தாறாவது வயதில் ஆபிராமுக்கு மகன் ஒருவனைப் பெற்றெடுத்தாள். ஆகார் பெற்ற தம் மகனுக்கு இஸ்மயேல் எனப் பெயரிட்டார் ஆபிராம்.

மூவரும் அமைதியான ஒரு வாழ்க்கை வாழ்ந்தாலும் அன்னை ஹாஜர்(அலை) அவர்கள் வாழ வேண்டிய ஊர் அதுவல்ல என்பதால் அவர்கள் வாழ வேண்டிய ஊருக்கு அவர்களை இடம் பெயர்ந்து போக வைப்பதற்காக அவர்களுக்கு மத்தியில் பிரச்சினையை உருவாக்கி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார் இறைவன்.

இபராஹீம் (அலை) அவர்களுக்கும் அவர்களின் மனைவி ஸாரா (அலை) அவர்களுக்குமிடையே மனத்தாங்கல் ஏற்பட்ட போது, இப்ராஹீம் (அலை) அவர்கள் இஸ்மாயில் (அலை) அவர்களையும், இஸ்மாயில் (அலை) அவர்களின் தாயாரையும் அழைத்துக் கொண்டு (மக்காவை நோக்கிச்) சென்றார்கள்.

அந்த நாளில் மக்காவில் எவரும் இருக்கவில்லை. அங்கு தண்ணீர் கூடக் கிடையாது. இருந்தாலும் அவ்விருவரையும் அங்கே இருக்கச் செய்தார்கள். அவர்களுக்கு அருகே பேரீச்சம் பழமுள்ள தோல்பை ஒன்றையும் தண்ணீருடன் கூடிய தண்ணீர்பை ஒன்றையும் வைத்தார்கள். பிறகு இப்ராஹீம் (அலை) அவர்கள் அவர்களை அங்கேயே விட்டு விட்டு ஷாம் நாட்டிற்கு திரும்பிச் சென்றார்கள். அப்போது அவர்களை அன்னை ஹாஜர்(அலை) அவர்கள் பின்தொடர்ந்து வந்து, இப்பாஹீமே மனிதரோ வெறெந்தப் பொருளுமோ இல்லாத இந்தப் பள்ளத்தாக்கில் எங்களை விட்டுவிட்டு நீங்கள் எங்கே போகிறீர்கள்? என்று கேட்டார்கள். இப்படிப் பலமுறை அவர்களிடம் கேட்டார்கள். இப்ராஹிம் (அலை) அவர்கள் அவரைத் திரும்பிப் பார்க்காமல் நடக்கலானார்கள். அதற்கு ஹாஜர் (அலை) அவர்கள், அப்படியென்றால் அவன் எங்களைக் கைவிடமாட்டான் என்று சொல்லிவிட்டு திரும்பிச் சென்றார்கள்.

எங்கள் இறைவா! எமது சந்ததிகளை உமது புனித ஆலயத்திற்கருகில் விவசாயத்துக்குத் தகுதி இல்லாத பள்ளத்தாக்கில் இவர்கள் தொழுகையை

நிறைவேற்றுவதற்காக குடியமர்த்தி விட்டோம். எனவே எங்கள் இறைவா! மனிதர்களில் சிலரது உள்ளங்களை இவர்களை நோக்கி விருப்பம் கொள்ள வைப்பீராக! இவர்கள் நன்றி செலுத்திட இவர்களுக்குக் கனிகளை உணவாக வழங்குவீராக!

இளையநங்கை ஹாஜிரா என்பார் இஸ்மாயில் என்னும் மகனைப் பெற்று பதினாறு ஆண்டுகள் கழிந்த பின்னர் மூத்தவரான சாரா, இஸ்ஹாக் என்னும் ஆண் மகனைப் பெற்றார். இஸ்ஹாக்கின் மகன் யாக்கூப். யாக்கூப்பின் பிள்ளை லேவி என்பவரின் வழியில் இஸ்ரேலிய மார்க்கத்தை நிறுவிய மூசா (மோசஸ்) நபியும், இன்னொரு பிள்ளையான யூதாவின் வழியில் யூத, கிறித்துவ மார்க்கங்களை நிறுவிய தாவீது (தாவீது ராசன்), ஈசா (இயேசு நாதர்) நபியைப் பெற்ற அன்னையாரும் தோன்றினர். தலைமகனான இஸ்மாயில் நபியின் மரபில் இஸ்லாம் சமயத்தைக் காட்டிய நபிகள் நாயகமும் பிறந்தார்.

இறைவன் இப்ராஹிம் நபிக்குச் சில கட்டளைகள் இட்டுச் சோதித்தார். அவற்றில் ஒன்று தலைமகனைப் பலியிடக் கூறியதாகும். இப்ராஹிம் நபி தம் மகன் இஸ்மாயிலை இறைவழியில் பலியிடக் கனவு கண்டார். பொழுது புலர்ந்ததும் அதனைத் தம் மகனிடம் கூறினார். மகனும் மகிழ்வுடன் மனம் ஒப்பினார். தந்தையும் மகனும் மோரியா மலைக்கு விரைந்தனர். மலையின் மேல் சிறிது தூரம் ஏறியதும் சமவெளி ஒன்றைக் கண்டனர். மகனைப் பலியிட அதுவே ஏற்ற இடம் என இப்ராஹிம் நினைத்தார். மகன் இஸ்மாயிலின் கைகால்களை கட்டிப் படுக்க வைத்தார். கத்தியைக் கூர்மையாகத் தீட்டினார். தம்முடைய கண்களையும் கட்டிக் கொண்டு கழுத்தில் கத்தியைச் செலுத்தினார். ரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. பகீரென்ற மனத்துடன் தன்னுடைய கண்களில் கட்டி இருந்த கட்டை அகற்றினார். அறுபட்ட இடத்தை நோக்கினார். ஆடு ஒன்று அறுபட்டுக் கிடந்தது. மகன் இஸ்மாயில் எவ்விதச் சேதமும் இன்றி அருகில் நின்றிருக்கக் கண்டார். இறையருள் பாலிப்பு எய்தப் பெற்றார்.

ஆண்டவர் மம்ரே என்ற இடத்தில் தேவதாரு மரங்களருகே ஆபிரகாமுக்குத் தோன்றினார். ஆபிரகாம் தம் கூடார வாயிலில் அமர்ந்திருக்கையில் கண்களை உயர்த்திப் பார்த்தார். மூன்று மனிதர் தம் அருகில் நிற்கக் கண்டார். அவர்களைக் கண்டவுடன் அவர்களைச் சந்திக்க கூடார வாயிலைவிட்டு ஓடினார். அவர்கள் முன் வணங்கி அவர்களுக்கு வெண்ணெய், பால், சமைத்த இளங்கன்று ஆகியவற்றைக்

கொண்டுவந்து அவர்கள் முன் வைத்தார். அவர்கள் உண்ட பின்பு அவரிடம் மனைவி சாராளுக்கு ஒரு மகன் பிறக்கப் போவதை முன்னறிவித்தனர்.

ஆபிரகாம் தம் மகன் ஈசாக்கை வெட்டுமாறு தம் கையை நீட்டி கத்தியைக் கையிலெடுத்தார். அப்போழுது ஆண்டவரின் தூதர் வானத்தினின்று அவரைத் தடுத்து நீர் கடவுளுக்கு அஞ்சுபவர் என்று இப்பொழுது தெரிந்தது என்றார். அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை உயர்த்திப் பார்த்தார். முட்செடிகளில் கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஒர் ஆட்டுகிடாயைக் கண்டு அதைப் பிடித்து தம் மகனுக்குப் பதிலாக எரி பலியாக்கினார்.

அவர் நகைப்பார் எனும் பொருளில் பெயரிடப்பட்ட ஈசாக்கின் பால் மறந்த நாளில், ஆபிரகாம் பெரிய விருந்தொன்றைக் கொடுத்தார். மெசபத்தோமியாவின் ரெபேக்காள் ஈசாக்கின் மனைவியாகி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றார். ஏசா ஈசாக்கின் ஆதரவையும், யாக்கோபு ரெபேக்காளின் ஆதரவையும் பெற்றனர்.

ஈசாக்கு முதயவரான பின் தமது மகன்களை ஆசிர்வதிக்கும் நோக்கில் மூத்தவரான ஏசாவை அழைத்தார். ஏசா வேட்டையாடச் சென்றிருந்ததால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ரெபேக்காள் யாக்கோபை அனுப்பி மூத்த புதல்வருக்குரிய ஆசிர்வாதத்தை பெற்றுக்கொள்ள வைத்தார். யாக்கோபின் மனைவியர் ராகேல் மற்றும் லேயாள். ராகேல் தங்கையான லேயாள் மேல் விரும்பமுடையவராக இருந்தார். இவர்களது மகன் யோசேப்பு. மற்றொருவர் பெஞ்சமின்.

கடவுளுடன் போராடியவர் எனப் பொருள்படும் யாக்கோபு, மூன்றாவது பிதாப்பிதாவாக கருதப்படுகிறார். மண்ணகத்தையும் விண்ணகத்தையும் இணைப்பதாகக் கனவு கண்டவரான யாக்கோபுக்கு, இரு மனைவியர் மூலம் பனிரெண்டு மகன்கள் பிறந்ததாகவும், அவர்கள் மூலமாகவே இசுரேலின் பனிரென்டு குலங்கள் உருவானதாகவும் குறிப்பிடப்படுகிறது. பின்னர் வழங்கப்பட்ட இசுரேல் என்பதிலிருந்தே, இவருடைய சந்ததியினர் இசுரவேலர்கள் என அழைக்கப்படுகிறார்கள். மகன் போசேப்பு சிறந்தவராக அறியப்படுகிறார்.

கானானில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின் காரணமாக கடைசி மகன் தவிர மற்ற பிள்ளைகள் எகிப்து செல்கின்றனர். பதினோராவது மகனாக யோசேப்பின் மீது நன்மதிப்பு வைத்ததால் மற்ற சகோதரர்களுக்கு அவர் மேல் பொறாமை

உண்டாகிறது. யோசேப்பை எகிப்தில் அடிமையாக விற்றுவிட்டு மற்ற சகோதரர்கள் கழுதைகளில் உணவுப் பொருட்களோடு கானான் திரும்புகின்றனர். யோசேப்பு பின் எகிப்திய அரசின் ஆளுநராக பதவியிலிருக்கும் போது, யாக்கோபும் சகோதரர்களும் எகிப்தில் ஒன்றாக இணைகின்றனர். எகிப்திலேயே இறக்கும் யோசேப்பு பின் கானானின் மூதாதையர் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படுகிறார்.

யோசேப்பும் அவர்தம் சகோதரர்களும் எகிப்தில் குடியேறுகின்றனர். அங்கே பல்கிப் பெருகி பெருந்திரளான மக்களாக வளர்கின்றனர். அவர்கள் பார்வோன்களின் ஆட்சியில் அடிமைகளாக வாழ்ந்து கடின வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

யாக்கோப்பின் முதல் மனைவி லேயா மூலமாக உண்டாகும் லேவி குலத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றில் பிறக்கும் ஆண்குழந்தை, எபிரேய ஆண் குழந்தைகளை வாழவிடக்கூடாது எனும் அரச கட்டளையினால், பேழை ஒன்றில் வைத்து, நைல் நதியில் விடப்படுகிறது. எகிப்திய அரசராகிய பார்வோனின் மகள், ஆற்றில் அக்குழந்தையைக் கண்டெடுத்து நீரிலிருந்து எடுக்கப்பட்டவன் எனும் பொருளில் மோசே எனப் பெயரிட்டு அவனைத் தம் மகனாக வளர்க்கிறார்.

மூசா(அலை) அவரை வளர்க்கும் பொறுப்பு சொந்த தாயார் வசமே வந்தது. எகிப்தியரோடு உண்டான விரும்பத்தகாக நிகழ்வுகளின் காரணமாக கிடைக்கவிருக்கும் தண்டனையிலிருந்து தப்பித்து மூசா (அலை) பாலைவனத்திற்கு சென்றுவிட்டார்கள்.

நீண்ட பயணத்திற்குப் பிறகு மதியன் நகரத்தை வந்தடைந்த மூசா (அலையை), மதியன் நகரத்து மக்களுக்கு இறைத்தூதராக அனுப்பப்பட்ட சுஹைப் (அலை) அவர்கள், இசுரவேலர்களை வழிநடத்திச் செல்ல இறைவனால் அனுப்பப்பட்ட இறைத்தூதர் இவரென்று கண்டு கொண்டார். தம்முடைய மகள் ஷ.ூராவையும் திருமணம் செய்து வைத்தார்.

மோசே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது மலைமீது எரியும் முட்செடி ஒன்றை கண்டு அதனருகே போனார். அப்போது கடவுளின் ஆவி முட்செடியின் நடுவிலிருந்து மோசேயை அழைத்து, அவர் நிற்பது புனித பூமி என்றும், மேசேயின் பாதணிகளை அகற்றுமாறும் கட்டளையிட்டு, அவர்

ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உம் பிதாக்களுடைய தேவானாயிருக்கிறோம் என தம்மை அறிமுகப்படுத்தினார்.

எகிப்தில் இசுரவேல மக்கள் படும் துன்பத்தை கண்களால் கண்டதாகவும் அவர்களின் துயரங்களை அறிந்திருப்பதாகவும் அவர்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக மோசேயை பார்வோனிடம் அனுப்புவதாகவும் அறிவித்தார்.

கடவுளே.. எம்மால் முடியாது, எமக்கு எந்தத் திறமையும் இல்லை. மோசே மறுத்தார். இல்லை இதைச் செய்வதற்கு சரியான ஆள் நீரே தான்.. எபிரேயப் பெரியவர்கள் சிலரைக் கூட்டிக் கொண்டு எகிப்திய மன்னனின் அரண்மனைக்குப் போவீர். அங்கு போய் மன்னனிடம் கடவுள் தாம் எம்மை உம்மிடம் அனுப்பினார், நீர் அடிமையாய் வைத்திருக்கும் எபிரேயர்கள் கடவுளுக்கு ஒரு பலி செலுத்த விரும்புகிறார்கள், அதற்காக அவர்கள் எகிப்தை விட்டு வெளியேற்றி பாலை நிலத்தில் கடவுளுக்குப் பலிசெலுத்தட்டும் என்று சொல் என்றார் கடவுள்.

ஆண்டவரே.. இது எப்படி முடியும். எபிரேயப் பெரியவர்களிடம் யாம் போய் கடவுள் அனுப்பினார் என்றால் எந்த கடவுள் என்று கேட்பார்கள். யாரும் நம்பப் போவதில்லை. யாம் என்ன சொல்வது.

இருக்கிறவர் யாமே.. என்பதே கடவுளின் பெயர் எனச் சொல். ஆண்டவரே யாம் சென்றால் எம்மை எகிப்திய மன்னன் கொன்று விடுவானே. மோசே பதிலுரைத்தார்.

எகிப்தில் உம்மைக் கொல்லச் சட்டம் இயற்றியவன் இறந்துவிட்டான். நீர் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவேண்டாம். அங்கே உமக்கு எந்த ஆபத்தும் வராமல் யாம் பார்த்துக் கொள்வோம். நீர் போய் யாம் சொன்னதைச் செய்யும். கடவுள் சொன்னார்.

கடவுளே.. எம்மை யாரும் நம்ப மாட்டார்கள். எம்மை எல்லோரும் கேலியாகப் பேசுவார்கள்.

மோசே! உம் கையில் வைத்திருக்கிறாயே, ஒரு கைத்தடி. அதை கீழே போடு என்றார் கடவுள். மோசே அதை கீழே போட்டார். அது ஒரு படமெடுத்தாடும் பாம்பாக மாறியது. மோசே சற்று பின்வாங்கினார். பயப்படாதே.. அதன் வாலைப் பிடித்து

தூக்கு. கடவுள் ஆணையிட்டார். மோசே அதன் வாலைப் பிடித்து தூக்க, அது மீண்டும் கைத்தடியாக மாறியது.

நீர் எகிப்திற்குப் போய் உம்மை நம்ப மறுப்பவர்களிடம் இதை காண்பி. அவர்கள் நம்புவார்கள் என்றார் கடவுள்.

கடவுளே.. இதெல்லாம் மந்திரம் தந்திரம் என்று சொல்லி எம்மை நம்ம மறுப்பார்கள். எம்மை விட்டு விடுங்கள். மேசே தப்பிக்கும் வழிதேடினார்.

இவற்றைப் பார்த்தும் அவர்கள் நம்பாவிடில், நீர் நைல் நதியில் தண்ணீரைக் கொஞ்சம் அள்ளி தரையில் ஊற்று. அது இரத்தமாக மாறும் என்றார்.

ஆண்டவரே.. எமக்குப் பேசவே தெரியாது. சபையில் நிற்கும் துணிச்சலும் எமக்கு இல்லை. வேறு யாரையாவது அனுப்புங்கள். மோசே விண்ணப்பித்தார்.

மோசே தொடர்ந்து மறுப்பதைக் கண்ட கடவுளுக்கு கோபம் வந்தது. உமக்கு வாயைக் கொடுத்தவரே யாம் தாம்.. எம்மிடம் நீர் பேச்சை மாற்றிப் பேசுகிறீரா.. கடவுளிடம் நீர் மறுத்துப் பேசுகிறீரா.. சரி, உமக்கு கூட்டாளியாக ஆரோனை அழைத்துப் போம் என்றார் கடவுள்.

கடவுள் இவற்றைச் சொன்னதும் எரிந்து கொண்டிருந்த தீய் சட்டென அணைந்து போயிற்று. மோசே ஏதும் புரியாதவராய் திரும்பிப் பார்க்க அவரை நோக்கி ஆரோன் வந்து கொண்டிருந்தார்.

இசுரயேல் மக்களை விடுவிக்க வேண்டும் என்று மோசே பார்வேனிடம் வேண்டுகிறார். ஆனால் அரசர் மறுக்கிறார். கடவுளின் வல்லமையால் மோசேயும் அவர் சகோதரர் ஆரோனும் அதிசய செயல்கள் பல செய்கின்றனர். இறுதியில் விடுதலை அளிக்க ஏற்பு கிடைக்கிறது.

விடுதலை விழாவாகிய பாஸ்கா எவ்வாறு கொண்டாடப்பட வேண்டும் என்று விவரிக்கப்படுகிறது. மக்களின் விடுதலைப் பயணம் தொடங்குகிறது. மக்கள் பாலை நிலைத்தைக் கடந்து செல்லும் போது பகலில் மேகத்தூணும் இரவில் நெருப்புத்தூணும் அவர்களுக்கு வழிகாட்டுகின்றன.

செங்கடல் திறந்து இசுரலேயருக்கு வழிவிடுகிறது. ஆனால் எகிப்தியர் அக்கடலைக் கடக்க முயன்றபோது நீர் அவர்களைச் சூழ்ந்து கொள்கிறது. மோசே இறைவனின் வல்லமையை வாழ்த்தி வெற்றிப்பாடல் பாடுகிறார்.

ஆண்டவரே.. தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் யார்? தூய்மையில் மேலோங்கியவர், அஞ்சத்தக்கவர், புகழ்ச்சிக்குரியவர், அருஞ்செயல் ஆற்றுபவர் ஆகிய உமக்கு நிகர் யார்? நீர் மீட்டுக்கொண்ட மக்களை உம் பேரருளால் வழிநடத்திச் சென்றீர். உம் ஆற்றலால் அவர்களை உம் புனித உறைவிடம் நோக்கி வழி நடத்திச் சென்றீர்.

மோசசு சிறந்ததொரு இறைவாக்கினரும், சமயத்தலைவரும், சட்டம் அளித்தவருமாவார். எபிரேய மரபுப்படி இவரே தோராவை எழுதியவராக அறியப்படுகிறார்.

மோசேயின் காலம் குறித்து வேறுபட்ட தகவல்களுள்ளன. பொது யுகத்திற்கு முன் 1391-1271 ஆக இருக்கலாமென்பது இரண்டாம் ராம்சீஸ் பேரரசரின் காலத்தையொட்டி கணிக்கப்படுகிறது. வரலாற்றில் எகிப்திலிருந்து யூதர்கள் வெளியேறிச் செல்வதற்கு தலைமை தாங்கிய பெருமைக்குச் சொந்தக்காரராக மோசஸ் இருக்கிறார். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து ஏடுகளும் மோசசுக்கு உரிமைப் படுத்தப்பட்டுள்ளன. தோற்றம், வெளித்தோற்றம், இனைமரபு, மக்கள் கணிப்பு, ஐந்தாம் ஏடு என்ற இந்த ஐந்தும் மோசசின் ஐந்தேடுகள் என அழைக்கப்படுகின்றன. இவை ஐந்தும் யூதர்களின் திருமறையாக அமைந்துள்ளன.

இந்த ஏடுகளில் மோசசின் இறைநீதித் தொகுதியும், யூதர்களின் வாழ்க்கையை நெறிப்படுத்திய நெறிமுறைகளும் உள்ளடங்கியுள்ளன. மோசசின் புகழ்பெற்ற பத்து கட்டளைகளும் இதில் அடங்கும்.

ஆபிரகாம் மூலமாக ஒரு கடவுள் கோட்பாடு உருவாகியிருந்தாலும், அதனை நிறுவியவர் மோசஸ் என்றால் மிகையாகாது. பின்னர் தோன்றிய கிறித்துவமும், இசுலாமும், யூதர்களின் ஒரு கடவுள் கோட்பாட்டிலிருந்தே தோற்றம் பெற்றன. இதற்கேற்ப இரண்டு மதங்களும் மோசேவை அதிகமாகவே கொண்டாடுகின்றன.

கடவுளால் அவரது பணிசெய்யப் படைக்கப்பட்ட மானிடர், உலகப் பொருட்களால் மயங்கி, கடவுளைப் புறக்கணித்தனர். அதன் விளைவாக

மானுடருக்கு மீட்பு தேவைப்பட்டது. எனவே உலக மீட்பருக்காக ஏங்குமாறு மானிடரின் உள்ளங்கள் அகத்துதூண்டுதல் பெற்றன.

கடவுள் தமது மீப்புத் திட்டத்தை இசுரேலியரின் குலமுதுவராகிய ஆபிரகாம் வழியாக செயல்படுத்த விரும்பினார். அவரது வழிமரபிலேயே உலக மீட்பர் தோன்றுவார் என்பதை ஆபிரகாமுக்கு தமது தேவதூதர் வழியாக முன்னறிவித்தார்.

இசுரேலியர் அனைவரும் கடவுளைத் தங்கள் மீட்பராகத் கருதும் வழக்கம் கொண்டிருந்தனர். எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து கடவுளின் ஆற்றலால் மீட்கப்பட்டு, பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டில் குடியமர்த்தப்பட்ட இசுரேலிய மக்களுக்கு கடவுள் மீட்பளிப்பவராகவே தெரிந்தார்.

இறைச் செய்தியை மக்களுக்கு வழங்குபவர் முன்னறிவிப்பவர், இறைவாக்கினர், தீர்த்ததரிசி என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இறைவனின் வார்த்தையைப் பேசுபவர்கள் அல்லது மக்களுக்கு எடுத்துரைப்பவர்கள். எதிர்காலத்தில் நடப்பதை முன்னறிவிப்பவர்கள்.

எகிப்திய அடிமைத் தளத்திலிருந்து மக்களை மீட்ட மோசே முதன்மையான இறைவாக்கினராக அறியப்படுகிறார். யூதமரபில் மக்களைக் கடவுளின் வழியில் நடத்திய பலரும் இறைவாக்கினராகக் கருதப்படுகிறார்கள்.

கடவுள் பண்டை நாட்களில் தமக்கென ஒரு மக்களினத்தைத் தெரிந்து கொண்டு அவர்களுக்குத் தாம் கடவுளாக இருப்பதாகவும், அவர்கள் தமக்கு நெருக்கமான மக்களாக வாழ்ந்து தம் கட்டளைகளைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டுமெனவும் அவர்களோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார் என்று யூதர்களும், கிறித்துவ மக்களும் நம்புகின்றனர்.

யூதர்களது உடன்படிக்கை அதாவது கடவுளின் ஏற்பாடு கிறித்துவுக்கு முற்பட்டது எனும் பொருளில் பழைய ஏற்பாடு எனப்படுகிறது. கிறித்துவின் மூலமாக மனிதகுலம் முழுவதற்குமாக உண்டாக்கப்பட்ட உடன்படிக்கை புதிய ஏற்பாடு என கிறித்தவர்களால் அழைக்கப்படுகிறது.

கிறித்தவர் ஏசுவை மெசியா என்றும் கிறிஸ்து என்றும் அழைக்கிறார்கள். மெசியா என்றால் விடுதலை அளிப்பவர், மீட்பு வழங்குபவர் என்று பொருள். ஏபிரேய விவிலியத்தில் மெசியா அல்லது மஷியா என்று வரும் சொல் எண்ணெயால்

திருப்பொழிவு (அபிசேகம்) செய்யப்பெறுகின்ற அரசன், பெரிய குரு போன்றோரைக் குறிக்கும்.

யூதர்களின் மெசியா என்பவர் தாவீது அரசரின் வழித்தோன்றலாக வருவார் என்றும், கடவுளிடமிருந்து திருப்பொழிவு பெறுவார் என்றும், இசுரேலியரின் பன்னிரு குலங்களையும் அரசாள்வார் என்றும், அமைதி நிலவுகின்ற ஒரு புதிய உலகைத் தோற்றுவிப்பார் என்றும் யூதர்கள் நம்பினர்.

மெசியா என்னும் எபிரேயச் சொல், பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் கிறிஸ்தோஸ் என்று மாற்றமடைந்தாகவும், இதனைக் கொண்டே கிறிஸ்து எனும் பெயர் இயேசுவுக்கு சிறப்புப் பெயராக அமைந்தது எனவும் கூறப்படுகிறது.

பழைய ஏற்பாட்டிலுள்ள இறைவாக்குகளும் முன்னறிவிப்புகளும் இயேசு கிறித்துவையே மெசியாவாகக் குறிக்கின்றன எனக் கிறித்தவர்கள் நம்புகிறார்கள். மிகப்பெரும்பான்மையான கிறித்தவ சபைகள் இயேசுவைக் கடவுளின் மகனாகவும் மனுவுருவெடுத்த இறை வார்த்தையாகவும் ஏற்று வழிபடுகின்றன. ஆனால் யூத சமயமும், இசுலாமும் இறைவனின் மகனாக இயேசுவை ஏற்பதில்லை.

இயேசுவுக்கு ஈராயிரம் வருடங்களுக்கு முன்னவரான ஆபிரகாம் சிலை உடைப்பதில் தொடங்கும் மத வேறுபாடுகள், இயேசுவிற்குப் பின் ஈராயிரம் வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருப்பது நிச்சயம் அமைதியைத் தோற்றுவிக்கப் போவதில்லை. சிலைகளை உடைத்த மரபிலிருந்து வந்தவராக அறிவிக்கப்படும் கிறித்து உலகெங்கும் சிலைகளாக நின்று கொண்டிருப்பது காலத்தின் விந்தையே.

உலகில் சிறந்த புத்திசாலிகளாகக் கருதப்படும் யூதர்களின் அறிவாற்றலுக்கு காரணம் அவர்களது முன்னோரின் நீண்ட பாரம்பரிய செழுமை மிக்க சிந்தனை மரபே காரணமாக இருக்கிறது. யூதர்கள் அதீத சமயப் பற்றாலர்களாக இருப்பதாகப் பல்வேறு பதிவுகள் காணக்கிடைக்கின்றன.

கன்றுக்குட்டியை வணக்குவதாகக் கோபப்பட்ட மோசே, விடுதலை பெற்றவர்களின் மோசமான செயல்களைக் கண்டு, பத்துக் கட்டளைகள் எழுதப்பட்ட கல்வெட்டை உடைத்தாகச் சொல்லப்படுவதுண்டு. மோசே ஆப்ரகாமுக்கு முன்பிருந்த சுமேரிய, அக்காடிய, பாபிலோனிய, அரேபிய. ஆலேமிய பகுதியான

இந்த கானான் நிலத்தில் எவ்வளவு கடவுள்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.. எத்தனை எத்தனை கோவில்கள் கட்டப்பட்டிருந்திருக்கின்றன..

பண்டைய மெசபதோமியப் பகுதியும், அமுறு என்ற முக்கியக் கடவுளை வழ்பட்ட அமோரைட் பகுதியும், கானானை உள்ளடக்கிய பகுதியுமான தற்போதைய சிரியாவின் மத்தியதரைக்கடல் பகுதியில் ஏறக்குறைய நான்காயிரம் ஆண்டுகள் பழமையான உகாரைட் எனும் நகரம் கண்டறியப்பட்டுள்ளது. உகாரைட் கடற்கரை நகரம் தற்போது ராஸ் ஷம்ரா என அழைக்கப்படுகிறது.

புது கற்காலத்தைச் சேர்ந்ததாக அறியப்படும் உகாரைட் நாகரிகம், இலத்தீன் அரிச்சுடியை ஒத்த உகாரைட் எழுத்துருக்களைப் பெற்றிருந்ததாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களின் மொழி எபிரேயம், அரமேயம், பொனிசியம் (கானானின் எபிரேயம்) போன்ற மொழிகளோடு தொடர்புடையதாக இருந்திருக்கிறது. உகாரைட் மொழி இலக்கணம் அரபியோடும் அக்காடியத்தோடும் ஒத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

குடியானவரொருவர் தமது நிலத்தை உழும் போது தற்செயலாகக் கண்ட புதைகுழி மூலமாக 1928-ல் கண்டறியப்பட்ட இந்த நாகரிகம், பொது ஆண்டுக்கு முன் ஆறாயிரம் ஆண்டுகள் காலத்தியதாக அறியப்படுகிறது. கிளாடி சா.ப்பர் எனும் தொல்லியலாளர் 1929 முதல் 1970 வரை மேற்கொண்ட பல்வேறு ஆய்வுகள் மூலமாக இந்நகரின் பெருமை உலகிற்கு அறியக் கிடைத்தது.

தொன்னூறு அறைகள் கொண்டிருந்த ஒரு அரசமாளிகையும், பால் மற்றும் டகன் என்ற கடவுளர்களுக்கான இரு கோவில்களும், இருபத்து மூன்று கல்வெட்டுகளும் அகழாய்வில் காணப்பட்டுள்ளன.

உகாரைட்டிலிருந்து பெறப்பட்ட ஆப்பெழுத்து பலகைகள் முக்கிய மானவைகளாகக் கருதப்படுகின்றன. ஆண்டவர், கடவுள் எனும் பொருள் வரும் பால் (Baal) கடவுளாகவும், இடி, மழை, காற்று போன்றவற்றோடு தொடர்புடையவராகவும் அறியப்படுகிறார். மேலும் வளமைக்கான கடவுளாகவும் இருக்கிறார். பால் சுழற்சி எனக் கூறப்படும் கதையோடு இக்கடவுளின் கதை பிணைக்கப்பட்டுள்ளதும் உகாரைட் மக்களின் எழுத்துக்கள் மூலம் தெரிய வந்திருக்கிறது. இங்கு கண்டெடுக்கப்பட்ட நிக்கல் எனும் நிலவு பெண்கடவுளுக்காகப் பாடப்பட்ட ஹிகுரின் பாடல்கள் மிகவும் மதிப்பிற்குரியவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

உலகிலேயே மிகப் பழமையான இசைக் குறிப்புகள் எனும் பெருமையையும் இவை பெற்றுள்ளன.

பண்டைய லேவண்ட் என அறியப்படும் மத்திய தரைக்கடல் கிழக்குப் பகுதி மற்றும் கானான் என அறியப்படும் மேற்குப் பகுதிகளில், பழமையான செமிட்டிக் சமயங்கள் வழக்கத்திலிருந்திருக்கின்றன. வெண்கலக்காலத்திலிருந்து பொது ஆண்டின் தொடக்கம் வரை பல்வேறு விதமான கடவுளர்கள் வழிபடப்பட்டு வந்திருக்கிறார்கள். இன்னும் சில பகுதிகளில் பொது ஆண்டுக்குப் பின்னான ஆயிரமாவது ஆண்டுகள் வரையிலும் கூட கோவில்களும் வழிபாடுகளும் இடம்பெற்றிருந்திருக்கின்றன.

தற்போதைய இஸ்ரேல், பாலஸ்தின், லெபனான், ஜோர்தான், சிரியா போன்றவை உள்ளடக்கிய கானான் பகுதியில் பலகடவுள் வழிபாடு இருந்திருக்கிறது. பல கடவுளர்கள் இருப்பினும் ஒரேயொரு கடவுளை வழிபடும் முறையும் இருந்திருக்கலாமெனக் குறிப்பிடப்படுகிறது. மூதாதையர் வழிபாடும், அரசரை கடவுளாக வழிபடுதலும் இருந்திருக்கிறது. பல்வேறு ஆண்கடவுள்களும், பெண்கடவுள்களும் வழிபடப்பட்டிருக்கிறார்கள்.

கானான் கடவுள்களில் தலைமைக் கடவுளாக இல் (EL அல்லது ll) இருக்கிறார். இல் எனும் வார்த்தை தொடக்க கால செமிட்டிக் மொழியிலிருந்து உருவாகியிருக்கலாமென்றும், இதன் அர்த்தம் கடவுள் என்றும் அறியப்படுகிறது. எபிரேய விவிலியத்தின் கடவுள் இல் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இலோகிம் (Elohim) என்ற வார்த்தை பன்மையைக் குறித்தாலும் எபிரேய மொழியில் ஒற்றைத் தன்மையையும் குறிக்கப் பயன்படுமென்பதால் பழைய ஏற்பாட்டில் வரும் கிலோகிம் வார்த்தை ஒரு கடவுளைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது.

செமித்திய மூலமான il லிருந்து அரபிய இலா ilah, அரமேய அலா Alah, இலாக் Elah, எபிரேய eloah போன்ற சொற்கள் உருவாகியிருக்கலாமென கருதப்படுகிறது. il என்பது ஒரு கடவுளையோ, கடவுளின் பட்டமாகவோ, பொதுப் பெயராகவோ இருக்கலாமெனவும் தெரிகிறது.

கானான் லேவன்ட்டின் தலைமைக் கடவுளாக எல் (இல்) இருக்கிறார். உகாரைட்டின் அச்செழுத்துக்களில் இவர் அஷிரா எனும் பெண்கடவுளின் கணவர். அஷிரா தாய் கடவுளாகவும், வளமை, சந்ததி, விருத்திக்கான கடவுளாகவும் அறியப்படுகிறார். பழைய ஏற்பாட்டின் சொர்க்கத்தின் ராணி இவராக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

பொது ஆண்டு தொடக்கத்திற்கு ஆயிரம் ஆண்டுகள் முன்பிருந்தும் அதனை தொடர்ந்து வந்த ஐந்தாம் நூற்றாண்டு நாடு கடத்தலுக்கும் இடைப்பட்ட காலத்தில் இஸ்ரேல் முழுவதும் பல கடவுள் வழிபாடு அதிகமிருந்ததாக பதியப்பட்டுள்ளது. மேலும் நாடு கடத்தலுக்குப் பின்னரே யோவே தனியொரு கடவுளாக நிலைநிறுத்தப்படுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பொது ஆண்டுக்கு முன்னான இருநூறு ஆண்டு காலத்திலேயே இஸ்ரேல் முழுமைக்கும் ஒரு கடவுள் தன்மை உருவாகியுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே சில விவிலிய அறிஞர்கள் யேவேயின் துணையாக அஷரா இருந்திருக்கலாம் எனக் கணிக்கிறார்கள். மேலும் இஸ்ரேல் தொல்லியல் மூலமாக அஷராவின் பல சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இல் கடவுளுக்கு எராளமான பிள்ளைகள் இருந்தாலும் ஹேடட், யாம் மற்றும் மோட் மூவரும் முக்கியமானவர்களாக அறியப்படுகிறார்கள். இல் காளை கடவுளாகவும், படைப்புகளைப் படைத்தவராகவும், கடவுளர்களின் தந்தையாகவும், மனிதர்களின் தந்தையாகவும், சொர்க்கத்தைப் படைத்தவராகவும் பல்வேறு விதமாக உகாரைட்டில் அழைக்கப்படுகிறார். இவ்வளவு பெருமையிருந்தும் இல் கோவில் இதுவரையிலும் அறியப்படவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

பல கடவுள்கள், தெய்வங்கள் நிறைந்த கானானிய சமயத்தில் எல், அஷிரா (அதிரா) பால் ஹேடட், அனட் (போரோடு தொடர்புடைய கன்னி பெண் கடவுள்), டேகன் (பயிர்க்கடவுள்), ஈஸ்முன் (நோய் தீர்க்கும் கடவுள்), கதிராட் (திருமணம், தாய்மை பெண் கடவுள்), கொதார் (கைத்தொழில் கடவுள்), மொலக் (நெருப்புக் கடவுள்), மொட் (இறப்புக் கடவுள்), குவாதெஸ்து (புனிதம், காதல் பெண் கடவுள்), ஷமயிம் (சுவர்க்கக் கடவுள்), ஷபாஷ் (சூரிய பெண்கடவுள்), யாரிக் (நிலாக் கடவுள்) போன்ற முக்கியக் கடவுள்களும் மேலும் பல்வேறு பெயரிலான கடவுளர்களும் வழிபடப்பட்டிருக்கிறார்கள்.

அண்மைக் கிழக்கு நாடுகளின் கடவுளர்களும், பெயர்களும், பெரும்பாலும் ஒன்றுக்கொன்று ஒத்தவையாகவே இருக்கின்றன. மெசபதோமியர்களின் கடவுள்களென்றாலும், சுமேரிய, அக்காடிய, ஹிர்ரிய (வடக்கு மெசபதோமியப் பகுதி), பாபிலோனிய, அசிரிய, அரேபிய, கானானிய பகுதிகளின் கடவுள்களென்றாலும், அவர்களின் சிறு சிறு பெயர் மாறுபாடுகளோடு இப்பகுதிகளில் வழங்கி வந்திருக்கின்றன. எகிப்திய, இலாமிய பகுதிகளிலும் இப்பெயர்கள் புழங்கியிருக்கின்றன. பின்னர் வந்த கிரேக்க, உரோமானிய கடவுகளோடும் தொடர்புள்ளதாக அறிய முடிகிறது. உதாரணமாக, கானானிய ஹேடட், யாம், மோட் மூவரும் கிரேக்க-உரோமானிய ஜீயஸ், பொசைடன், ஹேடிஸை ஒத்திருக்கிறார்கள். ஷபாஷ் அல்லது ஷாப்ஷு எனும் கானானிய சூரியக் கடவுள் (பெண்கடவுளென்று சொல்வதுண்டு) ஷிமேஸ் என்னும் மெசபடோமியக் கடவுளாக அறியப்படுகிறார்

உலகில் அதிகமானோரால் பின்பற்றப்படும் மதங்களாக கிறித்துவம் (210 கோடிப்பேர் - கத்தோலிக்க திருச்சபை 100 கோடி, சீர்திருத்தச் சபை 77.5 கோடி, கிழக்கு மரபு வழி திருச்சபை 24 கோடி), இசுலாம் (110 கோடி), இந்து சமயம் (105 கோடி), சீக்கியம் (3.0 கோடி), ஷிந்தோயிசம் (3.0 கோடி) யூதம் (1.2 கோடி), சமணம் (60 லட்சம்), பாபி, பாஹாய் மற்றும் சௌராட்டிரனிசம் போன்ற சமயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை தோராயமானதே. சீனாவின் பாரம்பரிய, நாட்டுப்புற நம்பிக்கைகளை கடைப்பிடிப்பவர்களாக ஏறக்குறைய நாற்பது கோடிப் பேர் இருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது. அவ்வாறே ஆப்பிரிக்காவின் பாரம்பரிய பழமையான சமய நம்பிக்கைகளைப் பின்பற்றுபவர்கள் பத்துக் கோடிக்கும் அதிகமிருக்கலாம் எனவும் கணிக்கப்படுகிறது. மேலும் இனம், மொழி அடிப்படையில் சமய நம்பிக்கை கொண்ட மக்கள் பிரிவும் ஏறக்குறைய 30 கோடிப்பேர் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆவியோடு தொடர்புடைய மாயஜால நம்பிக்கை கொண்டவரும் கணிசமானவர்களாக இருக்கிறார்கள். நடுநிலையாளர்கள், சமயம் சாராதவர்கள், சமயத்தை வெளிப்படுத்த விரும்பாதவர்கள், கடவுளை மறுப்பவர்கள் ஏறக்குறைய நூறுகோடிக்கும் அதிகமானோர் என்பதும் கவனத்தில் கொள்ளவேண்டியது.

ஒவ்வொரு சமயத்திலும் பல்வேறு விதமான உட்பிரிவுகள் உள்ளன. உலகெங்கிலுமுள்ள பல்வேறு விதமான மக்களின் நம்பிக்கைகள், வாழ்வியல் நிலைகள் போன்றவற்றிற்கு ஏற்றவாறு பல்வேறு வழிபாட்டு முறைகள் நிலவுகின்றன. மேலும் சமயங்களில் உட்பிரிவுகளும், நவீன சமய நெறிகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அத்தனை சமயங்களுக்கும் அடிப்படை கட்டமைப்பாக அமைவது கடவுள் கொள்கையே.

சில மதங்கள் கடவுள் ஒருவரே என அறை கூவுகின்றன. பல கடவுளர்களுக்கு இடமளிக்கும் மதங்களும் உண்டு. மக்களுக்கு நல்வழிகாட்டிய மனிதர்களுள் சிறந்தவர்களை கடவுளர்களாக்கியதும் நடந்துள்ளது.

உலகிலுள்ள சமய நம்பிக்கைகள் அவ்வவற்றின் இயற்கை நெறி சார்ந்தே உண்டாகியுள்ளன என்பது கண்கூடு. யூதம், கிறித்துவம், இசுலாம் மேற்கு ஆசியாவை மையங்கொண்டும், இந்து, சமணம், பௌத்தம், சீக்கியம் இந்தியாவைக் கொண்டும், கன்பூசியம், தாவோயிசம் சீனாவிலும், சௌராட்டிரம் மற்றும் பகாய் ஈரானிலும் தோற்றம் பெற்றிருக்கின்றன.

அனைத்து சமயங்களுக்குள்ளும் ஏராளமான ஒருமைப்பாடுகள் இருந்த போதிலும், வேறுபாடுகளும் உள்ளன. பெரும்பாலானவை கடவுள் கொள்கையை ஏற்றுக் கொள்கின்றன. கடவுள் ஒருவரா, இருவரா, மூவரா என்பதில் மதங்கள் வேறுபடுகின்றன. சில சமயங்கள் அவர்களது கடவுள் மட்டுமே உண்மையானவர் என்றும், ஒரேயொரு கடவுள் மட்டுமே இருக்கிறார் என்றும், அவரவர் மதங்களைப் பின்பற்றுபவர் மட்டுமே மனிதர் போன்ற கருத்துக்களைக் கொண்டிருப்பதும், அவற்றைப் பொது வெளிகளில் அதிகமாகப் பயன்படுத்துவதும் பல்வேறு மதரீதியான மோதல் போக்குகளை உருவாக்குகின்றன. உலக மனிதர்களிடையே அன்பையும் சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும் வளர்ச்சியையும் பேசுவதற்குப் பதிலாக, மையமாக ஆக்குவதற்குப் பதிலாக, மதங்கள் மனிதர்களை மதம் கொண்டு பிரிப்பதும், பயமும் ஆசையும் காட்டி தம்பால் ஈர்ப்பதையும், மனிதர்களுக்குள் கடவுள் குறித்து பிணக்குகளை உண்டாக்குவதிலும் ஈடுபடுகின்றன.

அனைத்திற்கும் காரணமான பண்டைய நாகரிகங்களே கடவுள்களுக்கும், மதங்களும் காரணமென்றால் மிகையாகாது. மெசபதோமியப் பகுதிகளில்

நூற்றுக்கணக்கான கடவுளர்கள் இருந்திருக்கிறார்கள். கடவுளர்களுக்குள்ளேயே மூலக்கடவுள்கள், தலைமைக் கடவுள், முக்கிய கடவுளர்கள், பாதியளவான கடவுளர்கள், வெற்றிக்காரர்கள், தீயசக்தியாளர்கள், கொடூர குணமுடையோர், மிருகங்கள் போன்றவர்கள் எனப் பல்வேறு வகையான கடவுளர்களும் உண்டு எனத் தெரிகிறது.

கடவுளர்களுக்குள்ளேயே போட்டி நிகழ்ந்ததையும், தலைமைக் கடவுளை வெற்றி கொண்டு மற்றொரு கடவுள் தலைமைக் கடவுளாக ஆவதையும், பின் அவரையும் வேறொரு கடவுள் வெற்றி கொள்வதையும் பரவலாகக் காணமுடிகிறது. இவ்வாறான மாற்றம் மெசபதோமிய, எகிப்திய வரலாறுகளில் பதியப்பட்டிருக்கிறது.

கடவுள்களுக்குக்கெல்லாம் கடவுளான தலைமைக் கடவுள் சில குறிப்பிட்ட பண்புகளைப் பெற்றிருப்பதாகக் கருதப்படுகிறது. முதல் நம்பிக்கை கடவுள்களுக்கெல்லாம் கடவுளே இவ்வுலகத்தைப் படைத்தாரென்பது. உயிர்களைப் படைத்ததும், சட்டங்களை, நியதிகளை உருவாக்கியதும் இவராகவே இருக்கிறார்.

தலைமைக் கடவுளின் குறிப்பிடத்தக்கதொரு பண்பு, வானத்தின் மீதான அதிகாரமாக இருக்கிறது. இவர் வானத்திலுள்ள அனைத்தையும் கட்டுப்படுத்துபவராக உள்ளார். வானிலை, மழை, இடி, காற்று, நட்சத்திரங்கள் போன்ற எல்லாமே இவரது ஆதிக்கத்தின் கீழுள்ளது. முழுவானம் மட்டுமின்றி பூமியிலும் இவரது செல்வாக்கு பெருகியிருக்கிறது. விளைச்சல், வளமை போன்றவற்றையும் தீர்மானிப்பவராக இருக்கிறார். இப்பெருங்கடவுள் சக்தி மிக்க ஆயுதங்களும் வைத்திருப்பவர். தலைமைக் கடவுளாக இருப்பவருக்கு மிகச்சிறந்த அறிவாற்றலும், ஞானமும் தேவையாக இருக்கிறது. வெற்றியை தமது வசமாகத் தெரிந்தவர். விதிகளைக் கட்டுப்படுத்துபவர். நேரம், காலம் என எல்லாம் அறிந்தவராக இருப்பது அவசியம். தலைமைக் கடவுளுக்கு மற்ற கடவுளர்களின் மீதான ஆதிக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மற்றவர்கள் இவரது தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிவிடுகிறது. கடவுளர்களின் வரலாறு முழுக்கவே போட்டியும் பகையும் இருந்து கொண்டே இருப்பதும், தலைமைக் கடவுள் போராடியே வெற்றிகாண்பதும் குறிப்பிடத்தக்கது.

சுமேரியர்களின் விண்ணுலகக் கடவுளான அன், அக்காடியன்களின் கடவுளானதாகக் குறிப்பிடப்படுகிறது. சுமேரியர்களின் ஆப்பெழுத்துப் பலகைகள்

மூலம் அறியப்படும் முதலாமாயிரமாண்டு எனுமா எல்லீஸ் காப்பியத்திலிருந்து அன்சர் மற்றும் கிஷரின் மகனாக அன் அறியப்படுகிறார்.

மூன்றாமாயிரம் காலத்தைச் சேர்ந்த சுமேரிய நூல்களிலிருந்து உராஸ் என்னும் பெண்கடவுள் அன்னுடைய இணையாக இருப்பது அறியப்பட்டிருக்கிறது. உராஸ் பூமித்தாய் என அறியப்படுகிறார். பெரும்பாலான சமயங்களில் வானத்துத் தந்தையும், பூமித் தாயுமே மூலக்கடவுளர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

உடன் பிறந்தோர் என அறியப்படும் அன் மற்றும் கீ இணைந்து அனுன்னாகி, என்லில் கடவுளர்களைப் பிறப்பிக்கிறார்கள். அனுன்னாகி, அன்னகி, அனுன்னகு, அனைகி என்போர் சுமேரிய, அக்காடிய, அசிரிய, பாபிலோனிய மரபில் ஒரு கடவுள் குழுவாக இருக்கிறார்கள். இவர்கள் வளமைக்கும் கீழுலக நீதிக்குமானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

கடவுளர்களின் தலைமைக் கடவுளாக என் (என்லில், எல்லில்), காற்று, உயரம், தூரத்திற்கான கடவுளாகக் கருதப்படுகிறார். என்லில் பிறப்பதற்கு முன், வானமும் பூமியும் ஒன்றாகவே இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

சுமேரியர்களால் நிப்ரு எனவும், அக்காடியன்களால் நிப்பூர் எனவும் பெயரிடப்பட்ட ஈராக்கின் நிப்பூர் பகுதியில், பென்சில்வேனியப் பல்கலையின் தொல்லியல் மற்றும் மானுடவியல் அருட்காட்சியத்தால் நிப்பூர் கோவில் நூலகப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கிடைத்த ஆப்பெழுத்துப் பலகை மூலமாக என்லில் பற்றிய பழங்கதையொன்று விளக்கப்பட்டிருக்கிறது. பதினேழு செ.மீ அகலமும், மூன்று செ.மீ தடிமனும் கொண்டிருந்த அந்த களிமண் அச்சு ஆப்பெழுத்துக்களை ஜார்ஜ் ஆரோன் பார்ட்டன் மொழிபெயர்த்து சுமேரியன் சமய நூல்கள் எனும் பெயரில் நூலாக 1918-ல் வெளியிட்டிருக்கிறார். அதன் பலகை என் 9205 ஆக குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்லில் பற்றிய இதே போன்றதொரு பழங்கதை அக்காடிய மொழிபெயர்ப்பில் 1911-ம் ஆண்டிலேயே தியோபிலஸ் என்பவரால் வெளியிடப்பட்டிருந்ததையும், இரு அச்சுப் பதிவுகளுக்கும் பொதுவான கருத்தொற்றுமை இருப்பதையும் பார்ட்டன் பின்னர் கண்டறிந்திருக்கிறார். மேலும் பல தொல்லியல் அறிஞர்களும் மொழியியல் வல்லுநர்களும் சுமேரிய இதிகாச புராணங்களைப் பற்றி பல்வேறு பதிவுகளைக் கண்டறிந்து வெளியிட்டிருப்பதாக பதியப்பட்டுள்ளது.

என்-EN-கடவுள், லில்-LiL-காற்று, புயல் எனும் பொருளில் பெயரிடப்பட்ட இக்கடவுளைப் பற்றி மெசபடோமியவின் அனைத்து நாகரிகங்களும் பதிவுகளைப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. என்லில் வேளாண்மை, தோண்டுதல் மற்றும் கோடாரியாகப் பயன்படும் மட்டக் எனும் கருவியைக் கண்டுபிடித்தவராக அறியப்படுகிறார்.

அங்காடியோடு தொடர்புடைய கடவுளுளான ஹயாக்குக்கும், பார்லிக்கான பெண்கடவுளான நுன்பர்செகுனுக்கும் மகளாகப் பிறந்தவர் நின்லில். திறந்தவெளிக் கடவுள், காற்றுக்கான பெண்கடவுள் என அறியப்படும் நின்லினை இளம் வயதான என்லில் மயக்கிவிடுகிறார்.

என்லில் ஊர் எகுர். சுமேரிய மொழியில் மலை வீடு. கடவுளர்களின் தோட்டம் இருக்கும் இவ்வீட்டில் கடவுளர்கள் கூடும் சபையுள்ளது. கிரேக்கர்களின் ஒலிம்பஸ் மலை போன்றதொரு சிறப்பான பகுதியாக பண்டைய சுமேரியரின் இப்பகுதி கருதப்படுகிறது.

நின்லிலை மயக்கியதற்காக, எகுரிலிருந்து சுமேரின் கிழக்குப் பகுதியிலிருந்த குர் என்ற அயல் பகுதிக்கு அல்லது கீழ் உலகத்திற்கு என்லில் அனுப்பப்படுகிறார். நின்லிலும் உடன் சென்று சின் அல்லது நன்னா எனும் நிலாக்கடவுளைப் பெற்றெடுக்கிறார். மேலும் மூன்று பிள்ளைகள் பெற்றுக்கொண்ட இவர்கள் மறுபடியும் எகுர் ஊருக்கு வருகிறார்கள்.

சுமேரியர்கள் சிறந்த இலக்கியங்களைப் படைத்தவர்களாகவும் அறியப்படுகிறார்கள். வெண்கலப் பகுதியின் மத்திய காலங்களில் இவை எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சுமேரியர்களின் இலக்கியங்கள் அசிரியர்கள் மற்றும் பாபிலோனியர்கள் மூலமாகவே பாதுகாக்கப்பட்டு கிடைத்திருக்கின்றன. பொது ஆண்டிற்கு முன்பான இரண்டாயிரத்து எழுநூறாம் ஆண்டளவில் சுமேரியர்களது முதல் இலக்கிய நூல் உருவாகியதாக அறியப்படுகிறது.

சுமேரிய மொழியின் புழக்கம் அடுத்தடுத்த மக்களுக்குப் பரவாமல் சுமேரியக்களோடு முடிந்து போனதாகக் கருதப்பட்டாலும், அக்காடியன், பாபிலோன் அரசுகள் சுமேரிய மொழியையே தங்களது அலுவல் மொழியாகத் தொடர்ந்திருக்கின்றன. இதன் காரணமாக பாபிலோனிய இலக்கியங்களில் சுமேரிய

இலக்கியங்களின் தாக்கம் அதிகமிருப்பதாக ஒரு கருத்தாக்கம் உண்டு. எனவே சுமேரிய இலக்கணம் அதன் சுமேரிய அசல் தன்மையோடு கிடைப்பதில்லை. பாபிலோனியர்களின் படியெடுத்த பிரதிகள் மூலமே அறியப்படுகிறது.

சுமேரிய இலக்கியங்கள் பெருவெள்ளம் பற்றிய தகவல்களைக் குறித்து வைத்திருக்கின்றன. மக்களின் நன்னடத்தை தொடர்பாக கடவுளர்களின் மூலமாக அனுப்பப்படும் வெள்ளத்தைப் பற்றி பல்வேறு பகுதிகளிலும் சமயங்களிலும் பதிவுகள் காணப்படுகின்றன. நீண்ட ஆயுளைப் பெற்றவர், நீண்ட நாட்களுக்கான வாழ்வைப் பெற்றவர் எனும் பொருளில் அழைக்கப்படும் ஜியுசுத்ரா அல்லது ஜின்சுத்து, சுமேரியர்களின் கடைசிப் பேரரசராக இருந்த போது வெள்ளம் வந்ததைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. குணமாக்கும் இடம் எனப் பொருள்படும் சுரப்பாக், யூப்ரடீசு நதிக்கரையில் நிப்பூருக்குச் தெற்கே அமைந்திருந்த பண்டைய சுமேரியன் நகரமாக அறியப்படுகிறது. தானியங்களின் கடவுளான என்லிலுக்கு சுரப்பாக் அளிக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொது ஆண்டுக்கு முன் மூவாயிரம் ஆண்டுகள் காலத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த இவ்வூர் அடுத்த ஓராயிரம் ஆண்டுகள் காலத்திற்குள்ளாக கைவிடப்பட்டதாகவும் பதிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

உபரு டுடு என்ற பேரரசர் சுரப்பாக்கத்தை அரசாண்டதாகவும் பதிவுகள் கிடைக்கின்றன. சில்காமேஷ் காப்பியத்தில் வரும் அழிவற்ற உதனாபிஸ்டிம், வெள்ளத்திற்கு முன்னான சுரப்பாக்கத்தின் கடைசி அரசரான வுட்ரு அடுவின் மகன் என அறியப்படுகிறார்.

சுமேரியர்களின் அரசாட்சிக் காலம் பொது ஆண்டுக்கு முன் இரண்டாயிரத்தி தொள்ளாயிரத்தில் ஆரம்பிப்பதாக குறிக்கப்படுகிறது. எனினும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே சுமேரிய நகரங்கள் இருந்ததாக அறியப்படுகிறது. புதிய கற்காலத்திலிருந்து தாமிரக்காலத்திற்கு மாற்றமடைந்த உபெய்து காலத்திலும், தாமிரத்திலிருந்து வெண்கலக் காலமாக மாறிய ஊர்க்கு காலத்திலும், சுமேரிய நாகரிகங்கள் சிறப்பான வளர்ச்சியடைந்திருக்கின்றன. உபெய்து நாகரிகம் பொது ஆண்டிற்கு முன் ஐந்தாயிரத்து முந்நூறு தொடங்கி நான்காயிரத்து நூறு வரையிலும், ஊர் நாகரிகம் நான்காயிரத்து முந்நூறு தொடங்கி இரண்டாயிரத்து தொள்ளாயிரம் வரையிலும் சிறப்புற்று விளங்கியிருக்கிறது.

சுமேரிய அரசுரிமைக்கு முந்தைய காலத்தில் எரிடு, பாத்-திபிரா, லர்சா, சிப்பர், சுரப்பாக் போன்ற பெரிய நகரங்களும், உர்க், கிஷ், உர், நிப்புர், உம்மா, மரி, போன்ற முக்கியமான நகரங்களும், குரா, மரத், குதா, தெர், நகர் போன்ற சிறிய நகரங்களும் இருந்ததாக அறியப்படுகின்றது.

எழுத்துச் சான்றுகள் மூலம் நான்காயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததாக அறுதியிடப்படும் சுமேர் நகரம், நவீன வரலாற்றாய்வாளர்களால் ஏழாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னதாக நிலையானதொரு வசிப்பிடமாக, மக்களின் குடியேற்றப் பகுதியாக இருந்திருக்கலாமெனவும் கணிக்கப்படுகிறது.

மெசபதோமியப் பகுதியில் வாழ்ந்த செமித்திக் அல்லாத பண்டைக்கால இனமே, மக்கள் கூட்டமே சுமேரியர்கள் எனப்படுகின்றனர். சுமேரியர்களுக்குப் பிறகான மக்கள் செமித்தியர்கள். இவர்கள் அக்காடியன்கள் என அழைக்கப்படுகின்றனர். சுமேரியர்கள் தங்களை கருப்பு மண்டை மக்கள் எனும் பொருளில் உன் சன் ஸிகா என்றும், அவர்களது நிலம் கடவுளர்களின் புனித இடம் எனும் பொருளில் கி-என்-ஜி என்றும் அழைத்துக் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. சுமேரு, சூமேர் போன்றவை அக்காடிய சொற்கள் எனவும் அறியப்படுகின்றன.

சுமேரிய அரசாட்சிக் காலத்தில் என்மெர்கர், இல்காமேஷ் போன்ற அரசர்கள் புகழ் பெற்றவர்களாக அறியப்படுகிறார்கள். என்மெர்கரைப் பற்றி இரண்டு காப்பியங்களும், இல்காமேஷ் குறித்து ஐந்து கதைகளும் எழுத்துப் பலகைகள் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளன. இளமையான அரசர் எனும் பொருள் தரும் உர்க்கின் இரண்டாவது அரசரான லுகல்பண்டா குறித்தும் இருகதைகள் இயற்றப்பட்டுள்ளன.

ஈராக்கின் அல்முத்தண்ணா மாகாணத்தில் அஸ் சமவாக் நகரிலிருந்து முப்பது கிலோ மீட்டர் கிழக்கே, யூப்ரதிசு நதிப் படுகையின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த பண்டைய கால சுமேரிய ஊர்க்கு நகரத்தைக் கட்டியவராக என்மெர்கர் அறியப்படுகிறார். சுமேரியருக்குப் பிறகான பாபிலோனிய ஊர்க்கு நகரும் இதுவே. இவரது தந்தை மெஸ்-கி-அக்-கா-சி-ர், ஊர்க்கின் முதல் அரசாட்சியை நிறுவியவராகவும், சூரியக் கடவுளான உதுவின் மகனாகவும் கருதப்படுகிறார்.

ஈராக்கின் தெற்கு மெசபதோமியாவிலுள்ள உலகின் மிகப் பழமையான நகராகக் கருதப்படும் எரிடு நகரை நிர்மாணித்தவராகவும், களிமண் அச்சுப்

பலகைகளைக் கண்டுபிடித்தவராகவும் என்மெர்கர் அறியப்படுகிறார். மேலும் ஊர்க்கைச் சுற்றியிருந்த சுபூர், ஹமாஷி, சுமோ, உருக்-கி, மார்டு பகுதி மக்களிடையே ஏற்பட்ட மொழிச்சிக்கல்களையும் இவரே தீர்த்து வைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மெசபதோமியாவின் ஊர், உர், உரு, உரிம் முக்கியமான ஊராக இருந்திருக்கிறது. இவ்வூர் தெற்கு ஈராக்கின் தற்போதைய டெல் இல் முகையார் நகரப் பகுதியில் அமைந்திருக்கிறது.

யூப்ரதிசு பெருசிய குடாவோடு கலக்கும் முகத்துவாரப் பகுதியில் இந்த உர் நகரம் இருந்திருக்கிறது. தற்போது கடல் உள்வாங்கியதால் நிலப்பகுதியாக காணப்படுவதாக அறியப்படுகிறது. ஊரிலிருந்து பனிரெண்டு கிலோ மீட்டர் தென்மேற்கு திசையில் எரிடு நகரம் இருந்திருக்கிறது. எரிடு நகர் எங்கும் கோவில்கள் கட்டப்பட்டிருந்ததாகவும், பெருசிய கடலுக்கு அருகே யூப்ரதிசு நதிக்கரையில் இந்நகரம் அமைந்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

சுமேரியர்களின் என்கி, அக்காடின்களின் இயா, எரிடு நகரத்தின் காவல் கடவுளாகக் கருதப்படுகிறார். இவர் கைத்தொழிலுக்கான கடவுளாகவும், கடல்நீர், நன்னீர், புத்திக்கூர்மை, படைப்பு போன்றவற்றின் முக்கியக் கடவுளாகவும் பின்னர் வந்த மெசபடோமிய இலங்கியங்களில் அறியப்படுகிறார். என்கியைப் பற்றிய கதைகள் பல்வேறு தொல்லியல் களங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. என்கி பூமிக்கடவுளாக இருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

என்கி, கில்காமேஷ் காப்பியத்தில் இடம் பெறும் உதனாபிஸ்டிமிடம் உயிர்காப்பு எனும் பெயரிலமைந்த மிகப்பெரியதொரு கப்பலைச் செய்யுமாறும், மனைவி, குடும்பம், உறவினர்கள், மற்றுமுள்ள கிராமத்தினர், தானியங்கள், விலங்குகள் முதலியவற்றை அக்கப்பலுக்குள் இடம்பெறச் செய்யுமாறும் தெரிவிக்கிறார். வரும் வெள்ளத்தில் கப்பல் பாதுகாப்பாக இருக்குமெனவும் கூறுகிறார்.

கடவுளர்களின் கோபத்தால் உண்டாக்கப்படும் வெள்ளத்திலிருந்து உதனா பிஸ்டினின் கப்பல் மீண்டு, மறுபடியும் பூமியில் தாவர விலங்கு மனிதர்கள் பெருகுவதாக கதை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இவரது செயலுக்கான

நன்றியாக உத்தனாபிஸ்டிம் மனைவி மற்றும் ஏனையோருக்கும் அழிவற்ற தன்மையும், மற்ற கடவுளர்களோடு வானுலகில் இடமும் கிடைக்கிறது.

சுருப்பாக்கம் மற்றும் உர், கிஷ், உருக், லகேஷ், நினவே போன்ற சுமேரிய நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுச் சான்றுகள் மற்றும் மண் அடுக்கிலிருந்து பெறப்பட்ட கரிம கணக்கீடு முறைச் சான்றுகள், பொது ஆண்டுக்கு முன் இரண்டாயிரத்து தொள்ளாயிரம் ஆண்டுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்பதை தெளிவுபடுத்துகின்றன. அனைத்து சுமேரிய நகரங்களிலும் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறதென்பதை சான்றுகள் அளித்தாலும் அவற்றின் காலம் வேறுபடுவதாகவும் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அறிஞர்களின் கூற்றுபடி, கடைசி பனிக்காலத்தில் உண்டான வெள்ளப்பெருக்கே அனைத்து புராணங்களிலும், நம்பிக்கைகளிலும் கலந்திருப்பதாகக் கருதப்படுகிறது. பனி உருகியதால் பெர்சியன் கடல் மட்டம் அதிகரித்து இவ்வாறான வெள்ளம் உண்டாகியிருக்கலாமெனவும் கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

ஊரின் மூன்றாம் அரசாட்சிக் காலத்தை சேர்ந்ததாகக் கணக்கிடப்படும் பில்காமேஷ் பற்றிய பண்டைய மெசபதோமியப் பாடல்களே மனிதர்களின் முதலாவது மிகச் சிறந்த இலக்கியமாக கருதப்படுகின்றன. உருக் அரசனான பில்காமேஷ் என்பவரைப் பற்றிய ஐந்து பாடல்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. பாடல்களில் கிடைத்த பில்காமேஷ் என்பவரைப் பற்றிய ஐந்து கதைகளை ஆதாரமாக கொண்டு, பில்காமேஷ் காவியம் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த காவியத்தின் சில அச்சுப் பலகைகள் பொது ஆண்டிற்கு முன்னான ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகள் காலத்தைச் சேர்ந்த பழைய பாபிலோனிய வடிவமாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. பொது ஆண்டிற்கு முன்னான ஆயிரம் ஆண்டுக்காலத்திய ஒருங்கிணைந்த காப்பியத்தின் பெரும்பாலான பாடல்கள் பன்னிரென்டு அச்சுப் பலகைகள் மூலமாகப் பெறப்பட்டுள்ளன.

மூன்றுபாகம் கடவுள் தன்மையும் ஒருபாகம் மனிதத் தன்மையும் கொண்டவரான இல்காமேஷ் உர்க்கின் மிக உயர்ந்த கோபுரத்தைக் கட்டியவராகவும் உயர்ந்த மதில் சுவரை எழுப்பியராகவும் அறியப்படுகிறார்.

உடலும், மனமும் கடவுளைப் போன்றிருந்தும் நடத்தை மாறுபட்டவராக இவர் சுட்டப்படுகிறார்.

இல்காமேஷ் காப்பியம் என்கிடுவிலிருந்து தொடங்குகிறது. உருக்கின் அரசன் இல்காமேஷ் மக்களுக்கு நல்லாட்சி தராததால் கடவுள்கள் சேர்ந்து என்கிடு எனும் விலங்கு மனிதனைப் படைக்கின்றனர். மலைகள், வளமை மற்றும் தாய்க் கடவுளான அருரா, களிமண் மற்றும் உமிழ்நீர் கொண்டு என்கிடுவை உருவாக்குவதாகக் கூறப்படுகிறது. என்கிடு காட்டு மனிதராகவும் விலங்குகளால் வளர்க்கப்பட்டு, மனிதர்களைப் பற்றி அறியாதவராகவும் இருக்கிறார்.

என்கிடு, ஷம்கட் (சம்கட்) என்ற பெண் மூலமாக தமது மிருகத்தன்மையை இழந்து நாகரிகமுடையவராக மாறுகிறார். இல்காமேஷ் மற்றும் என்கிடு இடையிலான மல்யுத்தத்திற்குப் பின் இருவரும் நண்பர்களாகிறார்கள். இருவரும் இணைந்து கடவுள்கள் வாழும் சிடர் காட்டின் கொடூரமான, மிகப்பெரிய காவலாளியான கும்பபாவை அழிக்கின்றனர். சூரியக் கடவுளான உதுவால் முடிவற்ற காலத்தில் உருவாக்கப்பட்ட பூதமான கும்பபா, என்லில் கடவுளின் முயற்சியால் உருவாக்கப்பட்டவராக கூறப்படுகிறது.

கும்பாவின் முகம் சிங்கம் போன்றது. கும்பபா யாரையேனும் பார்த்தால் அது இறப்பின் பார்வை. கும்பபாவின் குரல் வெள்ளம். அவரது பேச்சு இறப்பு. மூச்சு நெருப்பு. நூறு காத தூரத்திலிருந்தும் கும்பபாவால் கேட்க முடியும். சிங்கத்தின் பாதங்களும், முட்செதில்களால் மூடப்பட்ட உடலும், வல்லூறு நகங்களும், தலையில் காட்டெருதின் கொம்புகளும், வாலின் நுனியில் பாம்பின் தலையையும் கொண்டிருந்த கும்பபாவின் காவல் காட்டுக்குள் யாரால் போக முடியுமென கில்காமேஷ் காவியத்தில் கேட்கப்படுகிறது.

கில்காமேஷ், என்கிடு இருவரையும் தடுக்கும் பொருட்டு, இஷ்டர் பெண்கடவுள் விண்ணகக் காளைய ஏவுகிறார். இஷ்தர், அக்காடிய, அசிரிய, பாபிலோனிய வளமை, காதல் மற்றும் போர் கடவுளாகக் காட்டப்படுகிறார். இவரே சுமரியர்களின் உருக் நகரத்திலிருந்த காதல், வளமை, போர் தொடர்பான இ-அன்னா (இனன்னா) பெண்கடவுளெனவும் அறியப்படுகிறது. அரமேய, அஸ்டார்டே பெண்கடவுளோடு இஷ்டர் தொடர்புள்ளவராகவும் அறியப்படுகிறார். இஷ்தரின் வாகனமாக சிங்கம் சுட்டப்படுகிறது.

இஷ்டருக்கு கில்காமேஷ்மேல் வரும் விருப்பத்தை இல்காமேஷ் மறுக்கிறார். மறுத்தலுக்கு காரணமாக இஷ்டரோடு சேருபவர்களெல்லாம் துன்பங்களை அனுபவிப்பதாக கில்காமேஷ் பட்டியலிடுகிறார். இஷ்டரோ, தந்தையான அனுத கடவுளிடம் முறையிட்டு விண்ணகத்தின் காளையை கட்டவிழ்த்து விடுகிறார். மேலும், நடக்கும் சண்டையையும் உருக்கு நகர மதில் சுவரிலிருந்து பார்வையிடுகிறார்.

குகலன்னா எனும் இந்த காளை கடவுள், எரஸ்கிகல் அல்லது இர்கல்லா எனும் கீழுலகக் கடவுளின் முதல் கணவராக அறியப்படுகிறார். என்கிடுவும் கில்காமேசும் குகலன்னாவை அழித்துவிடுகின்றனர். என்கிடு இஷ்டருக்கு கடுமையான அச்சுறுத்தல் விடுகிறார். பின்னர் இதற்காக கடவுள்கள் ஒன்று சேர்ந்து என்கிடுவை அழித்துவிடுகின்றனர்.

காப்பியத்தின் முதல் பகுதி சாகசங்கள் நிறைந்ததெனில், இரண்டாவது பகுதி முடிவற்ற வாழ்க்கையின் தேடல்களாக அமைக்கப்பட்டிருக்கிறது. என்கிடுவின் முடிவு, கில்காமேஷை வாழ்க்கை, அதன் காரணங்கள், மறுவாழ்க்கை போன்றவற்றின் மீது திருப்புகிறது.

வெருவெள்ளத்திதிலிருந்து தப்பி முடிவற்ற நிலையை அடைந்தவரான உத்னபிஸ்திடம் வரும் இல்காமேசுக்கு, முடிவின்மையைத் தேடி அலைய வேண்டாமென்றும், வாழ்வின் உள்ளார்ந்த உண்மைகளைக் கண்டு கொள்ளுமாறும் உத்னபிஸ்து விளக்குகிறார். மீண்டும் இளமையைத் தரும் ஒரு தாவரம் பற்றி அவர் கூற, டெல்முன் கடலிலிருந்து (தற்போதைய பக்ரைன்) அத்தாவரத்தைக் சேகரிக்கிறார் கில்காமேசு. அதையும் வழியில் ஒரு பாம்பு களவாடிவிட முடிவின்மையைப் பற்றிய எண்ணங்களோடு உர்க் நகரை வந்தடைகிறார் கதா நாயகன் கில்காமேஷ்.

எனுமா எலிஸ் எனத் தொடங்கும் பாபிலோனிய காவியம் வெண்கலக் காலத்தில் இயற்றிப்பட்டிருக்கலாமென்றும், பேரரசர் ஹமுராபி காலத்தையோ அவருக்கும் முன்பான காலத்தையோ சேர்ந்ததாக இருக்கக்கூடுமென்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இக்காவியத்தைப் பற்றிய பல்வேறு படிகள் பாபிலோனிலும் அசிரியாவிலும் கிடைப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. காவியம் பொது

ஆண்டுக்கு முன்பான பதினெட்டு அல்லது பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

முதல் பாபிலோனிய அரசுரிமையின் ஆறாவது மன்னராக ஹமுராபி அறியப்படுகிறார். அமோரைட்டில் அமுராபி என குறிக்கப்படுகிறார். அம்மு என்றால் உறவினர். ராபி எனில் குணமாக்குபவர். இவரது காலத்தில் பாபிலோன் சிறப்பான நிலையிலிருந்ததாக அறியப்படுகிறது.

சிரியாவின் மன்னரான இவர் மிகுந்த புகழ்பெற்றவராக வரலாற்றில் அறியப்படுகிறார். ஹமுராபியின் நன்னடத்தை எனப் பரவலாக அறியப்படும் மக்களின் நடத்தை தொடர்பான பதிவு செய்யப்பட்ட நடத்தை விதி உலகின் முதலான நடத்தை விதியாகக் குறிப்பிடப்படுகிறது. பாசனத்திற்காக கால்வாயைத் திறக்கும் மனிதன் அடைக்க மறந்து போய் அடுத்தவர் வயலில் நீர் பாய்ந்துவிட்டால், அடுத்தவர் வயலின் விளைச்சலைக் கொண்டே இவரின் விளைச்சல் மதிப்பிடப்படும். மற்றொரு மனிதனின் தோட்டத்தில் அவருக்குத் தெரியாமல் மரத்தை ஒருவன் வெட்டினால் அவன் அரைமினா வெள்ளியை ஈடாகக் கொடுக்க வேண்டும்.

எனுமா எலிஸ் எனும் ஏறக்குறைய ஆயிரம் வரிகள் கொண்ட இக்காவியம், சுமேரிய அக்காடிய ஆப்பெழுத்து மொழியில் பதியப்பட்டுள்ள பாபிலோனின் ஏழு அச்சுப் பலகைகளிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பலகையும் நூற்றி பதினைந்து முதல் நூற்றி எழுபது வரையிலான வரிகளைக் கொண்டுள்ளன.

ஈராக்கின் டைகிரிசு ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ள பண்டைய மெசபடோமியாவின் நினவே நகரம், பொது ஆண்டிற்கு முந்தைய ஒன்பதாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையிருந்த புதிய அசிரியன் அரசிற்கு தலைநகரமாக இருந்திருக்கிறது. அசூர்பானிபால் அரசருக்குப்பின் இந்த அரசு முடிவுக்கு வந்திருக்கிறது. நினவே என்பதற்கு மீன் எனும் பொருள் சுட்டப்படுகிறது.

அசூர்பானிபாலின் அரச நூலகம் என அறியப்படும் புகழ்பெற்ற நூலகத்தில் அனைத்து வகை நூல்களையும் பற்றிய ஆயிரக்கணக்கான ஆப்பெழுத்துக் களிமண் பலகைகள், பலகைத் துண்டுகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்திருக்கின்றன. நூலகத்தை சரிவர கவனிக்காததன் காரணமாக

பெரும்பாலான மூல பலகைகள் அறிஞர்களால் படித்தறிய முடியாத அளவிற்கு மோசமடைந்ததாகக் தெரிகிறது.

பண்டைய பெர்சியன், ஆர்மினியன் வழக்கத்தின் படி, மகா அலெக்சாந்தர் அசூர்பானிபல் நூலகத்தை பார்வையிட்ட பின்பே, அவரது புகழ்பெற்ற அலெக் சாந்திரிய நூலகத்தை அமைக்க முடிவு செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இத்தகைய மதிப்புமிக்க அசூர்பானிபாலின் அரச நூலகத்திலிருந்தே கில்காமேஷ் காப்பியம் கண்டறியப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

சர் ஆஸ்டன் ஹென்றி லாயட் (1817-1894) என்ற புகழ்பெற்ற ஆங்கிலேய அகழ்வாய்வாளர், பயணி, தொல்பொருளாளர், ஆப்பெழுத்து அறிஞர், கலை வரலாற்றறிஞர், ஆட்சியாளர், அரசியல்வாதி, எழுத்தாளர் நிம்ருத் (பண்டைய அசிரியாவின் கல்கு நகரம்), மற்றும் நினவே தொல்லியல் களங்களின் ஆய்வாளர் எனப் பல்வேறு திறமைகளைக் கைவரப் பெற்றிருந்த இந்த அறிஞர், ஆயிரத்து எந்நூற்றி நாற்பத்தி ஒன்பதாம் ஆண்டு அசூருபானிபால் நூலகத்தில் கண்டெடுத்த உடைந்த துண்டுகளிலிருந்ததே எனுமா எலிஸ் காவியம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

திரு.ஜார்ஜ் ஸ்மித் (1840-1876) என்ற ஆங்கிலேயே அசிரியவியலாளர் (பண்டைய மெசபடோமியாவின் தொல்லியல், வரலாறு, மொழிகளைப் பற்றிய இயல்) இக்காவியத்தை வெளியிட்டவராக அறியப்படுகிறார்.

கடவுளர்களின் தலைமைப் பதவிக்கான போட்டியாகவே எனுமா எல்லிஸ் காவியம் படைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. நன்னீரைக் குறிக்கும் அப்சுவும், உப்பு நீரைக் குறிக்கும் தியமட்டும் முக்கியக் கடவுள்களாக இருக்கிறார்கள். இவர்களே படைப்பின் ஆரம்பமாகக் கருதப்படுகிறார்கள். இருவரும் இணைந்து மேலும் பல கடவுளர்களைப் படைக்கின்றனர். இயா மற்றும் அவரது சகோதர்கள் மிகப்பெரிய தியமட் உடலினுள் வாழ்கிறார்கள். இயாவும் அவரது உடன்பிறந்தோரும் போடும் சத்தத்தால் அப்சுவும் தியமட்டும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களின் உறக்கம் தடைபடுகிறது.

இளம் கடவுளர்களை அழிக்க அப்சு விரும்புகிறார். தியமட் அதற்கு சம்மதிக்கவில்லை. அப்சுவின் ஆலோசகரான மம்மு திட்டத்திற்கு உடன்படுகிறார். நிகழவிருக்கும் அழிவைத் தடுக்கும் விதமாக தியமட் சக்தி வாய்ந்த கடவுளான

இயாவை எச்சரிக்கிறார். அப்சுவை மயக்க நிலைக்கு ஆட்படுத்தி அவரை அழித்த இயா, மம்முவையும் அங்கிருந்து வெளியேற்றுகிறார்.

இயா தலைமைக் கடவுளாகிறார். இயா தம்கினாவோடு இணைந்து மர்டுக் கடவுளை உருவாக்குகிறார். மர்டுக் தமது தந்தையான இயாவை விட அதிகம் புகழ்மிக்கவராக அறியப்படுகிறார். இவர் காற்றைக் கொண்டு சூறாவளியையும் புயல்களையும் உண்டாக்குகிறார். இதனால் தியமட்டின் பெருத்த உடலினுள் வசிக்கும் மற்ற கடவுளர்கள் உறக்கமின்றி அல்லல்படுகின்றனர்.

கணவர் அப்சுவைக் கொன்றதற்கு பழிவாங்க வேண்டுமென தியமட்டை மற்ற கடவுளர்கள் தூண்டுகின்றனர். தியமட்டின் சக்தி கூடுகிறது. அவரோடு பல கடவுளர் களம் சேருகின்றனர். பதினோரு பூதங்களையும் அவர் படைக்கிறார். கின்கு என்ற தமது புதிய கணவரோடு சேர்ந்து மர்டுக்கை எதிர்க்கிறார்.

தியமட்டை கட்டுப்படுத்த இயலாமல் மற்ற கடவுளர்கள் மர்டுக்கை நாடுகின்றனர். தம்மை தலைமைக் கடவுளாக ஏற்க வைத்து தியமட்டை எதிர்கிறார் மர்டுக். தியமட்டை அழித்து அவரை இருகூறாக்கி பூமியையும், வானத்தையும் உருவாக்குகிறார். பின்னர் ஆண்டுக்கணக்கை படைத்து சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் உட்பட அனைத்தையும் ஒழுங்குபடுத்துகிறார்.

தியமட்டுடனான போரில் தோற்ற கடவுளர்களை மர்டுக்கின் பக்கம் நின்ற கடவுளர்கள் அவர்களுக்கு வேலை செய்ய கட்டாயப்படுத்துகிறார்கள். மர்டுக் தியமட்டின் கணவர் கின்குவை அழித்து கடவுளர்களுக்கு வேலை செய்ய மனிதர்களை உருவாக்குகிறார்.

எனுமா எல்லிஸில் மர்டுக் சிறப்பானவராகக் காட்டப்படுகிறார். பாபிலோனியர்களின் ஆட்சிக்காலத்தில் சுமேரியர்களின் தலைமைக் கடவுளாக இருந்த என்லிலுக்குப் பதிலாகவே மர்டுக் முன்னிலைப்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. மர்டுக், மருதுக் எனவும் உச்சரிக்கப்படுகிறது. வியாழன் கோள் மருதுக்கோடு தொடர்புடையதாகவும் எடுத்தாளப்படுகிறது. மருதுக்கு ஐம்பதிற்கும் மேற்பட்ட பெயர்கள் இக்காவியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அவரது புகழுக்கு வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது. மருதுக் வீனஸைக் குறிக்கும் சர்பானிட்டோடு இணைந்து, நபு என்ற மகனைப் படைக்கிறார். நபு அறிவாற்றலுக்கும் எழுத்திற்கும் உரியவராக அறியப்படுகிறார்.

இயற்கையின் நிகழ்வுகளோடும், மனிதர்களின் வாழ்வோடும் தொடர்புள்ளவராக கடவுள் அறியப்படுகிறார். கடவுளர்களோடு மனிதர்கள் தொடர்பு கொண்டு தங்களுக்கு வேண்டியதைப் பெறலாம் எனும் நம்பிக்கை உலகெங்கும் காணப்படும் வழக்கமாக இருந்து வருகிறது. கடவுளர்களிடம் உதவி கேட்பதும், சடங்குகளை ஏற்றுக் கொள்ள வேண்டுவதும், அவர்களின் ஆலோசனைகளை நாடுவதும், உலக மக்களின் பொதுவான அம்சங்களாக அமைந்துள்ளன.

பண்டைய எகிப்திய மக்கள் கடவுளர்களுடன் மிகச் சிறந்ததொரு தொடர்பினைக் கொண்டிருந்ததாக அறியப்படுகிறார்கள். எகிப்தியர்கள் மிகுந்த சமய நம்பிக்கையாளர்களாகவும் இருந்திருக்கிறார்கள். பாரோ மன்னர்களை கடவுளின் அம்சமாகவே கருதியிருக்கிறார்கள். மேலும் மன்னர்கள் கடவுளர்களுக்கும் மக்களுக்குமான தொடர்பு வழியாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

எகிப்திய கடவுட்கோட்பாடு சுமேரியர்களுடையது போல் மிகவும் தொன்மையானதாகக் கருதப்படுகிறது. எகிப்திய நாகரிகத்தில் கடவுள் நம்பிக்கையும் சடங்கு முறைகளும் பின்னிப் பிணைந்தே வளர்ந்து வந்திருக்கின்றன. எகிப்தின் வெண்கலக் காலம் தொடங்கி, பழைய, மத்திய மற்றும் புதிய அரசுரிமைக் காலம் வரையிலும் எகிப்திய நாகரிகம் சிறப்புடனேயே விளங்கி வந்திருக்கிறது. எனினும் பின்னர் வந்த அரசுகள் நிலைத்தன்மை இல்லாமல் அசிரியர்கள், பாபிலோனியர்கள், மாசிடோனியர்கள் என வீழ்ச்சியடைந்து, இறுதியாக உரோமர்களிடம் ஒரு மாகாணமாக மாறும் வரை பண்டைய சமய நம்பிக்கை நீடித்திருந்ததாக பதியப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வந்த இசுலாமியப் படையெடுப்புகளால் எகிப்திய கடவுளர்களும் சமய நம்பிக்கைகளும் பெருமளவில் மாற்றத்திற்குள்ளாகின என்பது வரலாறு.

பண்டைய எகிப்தின் வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் வழிவகுத்த நைல்நதி அவர்களது சமய நம்பிக்கைகளோடு நெடிய தொடர்புடையதாக அறியப்படுகிறது. நீர்ப்பாசனத்தைக் கட்டுப்படுத்தி விளைச்சலைப் பெருக்கியதால் உணவு நிறைந்து மக்களின் சமூக வளர்ச்சி பல வழிகளிலும் மேம்பட்டது. எழுத்து முறைகள் தோன்றி, கூட்டு வேளாண்மையும், கடுமானத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. சுற்றுப் பகுதிகளோடு வணிகம் பெருகியது. கணிதமும், மருத்துவ முறைகளும் ஏற்றம்

பெற்றன. கோவில்கள், பிரமிடுகள் கட்டியெழுப்பப்பட்டன. எகிப்தின் கலை வடிவங்களும் கட்டிடங்களும் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்தாளப்பட்டன.

எகிப்தின் ஆட்சியாளர்களான பாரோக்களுக்கு ஆட்சியதிகாரம் கடவுளிடமிருந்து கொடுக்கப்பட்டதாகவே நம்பப்பட்டது. இவர்களுக்காகவே மிகப் பெரிய பிரமிடுகள் கட்டப்பட்டன. எகிப்திய கடவுளான ஹோரசு வானுலகை ஆள்வது போல், எகிப்திய அரசர்கள் மணணுனுலகை ஆளும் கடவுளின் மறு வடிவமாக கருதப்பட்டனர்.

பண்டைய எகிப்தியர்களின் சமய நம்பிக்கைகளில் இறந்தோர் உலகு முக்கிய இடம் வகிக்கிறது. இதனடிப்படையில் இறப்புச் சடங்குகள் தொடர்பான பண்டைய எகிப்திய நூல் இறந்தோர் நூல் என அடையாளம் காணப்படுகிறது. இந்நூல் பொது ஆண்டிற்கு முன்பான ஐம்பது ஆண்டுகள் வரையிலும் புழக்கத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இந்நூல் நாள் கடந்து செல்லல், உரிய மந்திரங்கள், உரிய நூல், காலம் செல்லுக்கு உரிய நூல் எனப் பல்வேறு பெயர்களிலும் அறியப்படுகிறது. இந்த நூலில் பண்டைய எகிப்தியர்களின் நம்பிக்கைப்படி, இறந்து போகும் ஒருவர் டுவட் எனப்படும் கீழுலகத்தினூடாக அடுத்த பிறவிக்குள் பயணம் செய்வதற்கு உதவியாக அமையும் மந்திரங்கள் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இது ஒற்றை நூலோ அல்லது ஒரே ஒழுங்கு முறைப்பட்ட ஒரு நூலோ அல்ல. பொது ஆண்டிற்கு முன்பான மூவாயிரமாண்டு காலப்பகுதியைச் சேர்ந்த ஆக்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட மந்திரங்களாக இதன் உள்ளடக்கம் அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

இறப்புச் சடங்கு நூல் பொது ஆண்டிற்கு முன் இரண்டாயிரத்து நானூறாமாண்டு காலப் பகுதியைச் சேர்ந்த ஐந்தாம் வம்சத்து அரசரான உனாசு பிராமிடில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்புகள் கிடைக்கின்றன. பிரமிடு உரைகளின் நோக்கம் இறந்த அரசர் கடவுளருக்குள் தமது இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு குறிப்பாக அரசனது கடவுட் தந்தையான ரா எனும் கடவுளுடன் இணைந்து கொள்ள உதவுவதாகும் எனக் கூறப்படுகிறது. அரசனுக்கும் பின்னர் அரசிக்கும் கட்டமைக்கப்பட்ட பிரமிடுகள், பழைய அரசுரிமைக் காலத்திற்குப் பின், பகுதி ஆட்சியாளர்களுக்கும் உயர் அலுவலர்களுக்கும் கூட கட்டப்பட்டிருக்கின்றன.

ஆப்பிரிக்க-ஆசிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த எகிப்திய மொழி, பதினேழம் நூற்றாண்டு வரையிலும் கூட புழக்கத்திலிருந்ததாக குறிப்புகள் தெரிவிக்கின்றன. தற்போதும் சில நூறு பேர்களாவது அதில் தேர்ச்சியுள்ளவர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. கிறித்துவ சமய வழிபாட்டில் தற்போதும் காப்டிக் மொழி பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. எகிப்து மொழி காப்டிக் என அழைக்கப்படுகிறது. காப்டிக் என்றாலே எகிப்து எனப் பொருள். கிரேக்கத்தில் எகிப்டோஸ் எனவும், அரபியில் ஜிப்ட் எனவும் உச்சரிக்கப்படுகிறது. இசுலாத்திற்குப் பின் அரபி பெருமளவில் எகிப்திய வாழ்வோடு இணைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. எகிப்தின் தற்போதைய அலுவல் மொழியாக எகிப்தியன் அரபிக் பயன்பாட்டிலுள்ளது.

எகிப்திய எழுத்துக்கள் ஹைரோகிளைபிக் என அறியப்படும் பட எழுத்துக்கள். இவை சுவர்களிலும், கல்லறைகளிலும், பேப்பிரஸ் எனப்படும் ஏட்டிலும் எழுதப்பட்டு வந்துள்ளன. இவற்றின் பொருளை அறிந்து கொள்வதில் பல்வேறு அறிஞர்கள் ஈடுபட்டு வந்தபோதிலும், ஆயிரத்து எந்நூற்றி இருபத்தி இரண்டாமாண்டு ஜேன் பிராங்கோயிஸ் சம்போலியன் எனும் பிரெஞ்சு அறிஞரால் மொழிபெயர்க்கப்பட்ட ரொசெட்டாக் கல்வெட்டு மொழிபெயர்ப்பு மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது. கல்வெட்டு பொது ஆண்டிற்கு முன் நூற்றி தொன்னூற்றி ஆறாம் ஆண்டில் வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு பட எழுத்து முறையிலும் செவ்வியில் கிரேக்க மொழியிலும் பொறிக்கப்பட்டிருந்ததால், கல்வெட்டின் ஒப்பீட்டு மொழிபெயர்ப்பானது முன்னர் வாசித்து அறியப்படாத பட எழுத்துக்களை வாசித்து அறிவதற்கு பெருமளவில் உதவியிருக்கிறது. எகிப்தின் மத்தியதரைக்கடல் துறைமுகமான ரொசெட்டாவில் கண்டுபிடிக்கப்பட்ட இக்கல்வெட்டு, பலவித வரி நீக்கங்கள் பற்றியும், கோவில்களில் சிலைகள் அமைப்பது தொடர்பான விதிமுறைகளையும் கொண்ட ஒரு ஆணையாக இருக்கிறது.

பண்டைய எகிப்தின் இலக்கியங்கள் பெரும்பாலும் அறியப்படவில்லை என்றே தெரிகிறது. சுமேரிய காப்பியங்கள் போன்று எகிப்தில் கதைகள், காப்பியங்கள் காணப்படவில்லை. ஐசிஸ் மற்றும் ஒசிரிஸ் கதை எனப்படும் ஒரு கதைவழக்கம் பெருமளவில் பேசப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பண்டைய எகிப்தியக் கோவில்கள், பூமியில் கடவுள்கள் வாழ்வதற்கான இடங்களாகக் கருதப்பட்டிருக்கின்றன. எகிப்திய மொழியில் கோவில் என்பதற்கு கடவுள் மாளிகை என்றே பொருள். எகிப்தியக் கோவில்களைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் பாரோக்களின் கடமையாகும். கோவில்கள் கடவுளர்களது இல்லமாகக் கருதப்பட்டு, பலியிடல், விழாக்கள் போன்ற சமயச் சடங்குகளை எகிப்தியர்கள் மேற்கொண்டனர். பெரும்பாலான சடங்குகள் பாரோக்களில் நியமிக்கப்பட்ட பூசாரிகளால் நடத்தப்பட்டன. மக்கள் வேண்டுதல் செய்யவும், காணிக்கைகள் செலுத்தவும், கடவுள்களிடம் அறிவுரைகளைக் கேட்கவும் கோவில்களுக்குச் சென்றனர்.

கோவிலின் முக்கியப் பகுதியான கருவறையினுள் அக்கோவிலின் கடவுள் உருவச்சிலை வைக்கப்பட்டது. கருவறைக்கு வெளியே சிறியவையாக கட்டமைக்கப்பட்ட கோவில்கள், புதிய அரசுரிமைக் காலத்தில் மாபெரும் கட்டடங்களாகவும், நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்குமாறும் கட்டப்பட்டன.

எகிப்தில் கோவில் கட்டும் பணி எகிப்தின் வீழ்ச்சி மற்றும் உரோமப் பேரரசின் ஆதிக்கம் வரையிலும் தொடர்ந்திருந்தது. கிறித்தவ மதத்தின் வருகை எகிப்தியச் சமயத்தை பெருமளவில் பாதித்தது. எகிப்தின் கடைசிக் கோவில் பொது ஆண்டிற்குப் பின்னான ஆறாம் நூற்றாண்டில் மூடப்பட்டதாகச் சான்றுகள் உரைக்கின்றன. தொடர்ந்து வந்த பல நூற்றாண்டுகள் இக்கோவில்கள் அழிவையும், புறக்கணிப்பையும் சந்தித்ததால் அழிவின் உச்சத்தை அடைந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட எகிப்த்தைப் பற்றிய கண்ணோட்டமும், ஆய்வுகளும் எகிப்தியவியலாக அறியப்பட்டு, சில கோவல்களை வெளிக்கொணர உதவியிருக்கிறது.

நைல் நதியின் கரையில் அமைந்துள்ள சிறிய ஊரான கர்னக் மிகப் பழமையான எகிப்தியக் கோவில்கள் அமைந்துள்ள கோவில் தொகுதியாக பெரிதும் அறியப்படுகிறது. இவ்வூர் மிகப்பெரிய பண்டைய சமயம் சார்ந்த இடமாகவும், சிக்கலானதாகவும், பல்வகைமை கொண்டதாகவும் விளங்குகிறது. கர்னாக் பகுதியிலுள்ள கோவில்களின் மிக நீண்ட கால வளர்ச்சியும் பயன்பாடும், அதனை எகிப்திலுள்ள ஏனைய தொல்லியல் மற்றும் கோவில் களங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. இக்கோவிலின் ஆமொன் ரா வளாகம் புகழ்பெற்ற பகுதியாக இருக்கிறது.

எகிப்தியர்கள் ஆன்மாவில் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆன்மாவிற்கு பா எனப் பெயரிட்டும், அதனை மனிதத் தலையுள்ள பறவையாகவும் உருவகப்படுத்தியிருந்தனர். எகிப்திய சமய நம்பிக்கையில் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் மிகப் பெரியதொரு இடமுண்டு எனில் மிகையாகாது. மேலும் மர வழிபாடும் எகிப்தியர்களுக்கு இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

எகிப்தில் உள்ளவற்றிலேயே பெரியவையும் புகழ்பெற்றவையுமான விலங்கு, மனித உருவகம் நைல் நதியின் மேற்கு கரையிலுள்ள கீசாவின் பெரிய இசுபிங்சு (Sphine) என அறியப்படுகிறது. இசுபிங்சு என்பது சிங்கத்தின் உடலும், செம்மறி ஆடு, வல்லூறு, மனிதன் ஆகியவற்றுள் ஒன்றின் தலையுடனும் கூடிய ஒரு உருவத்தைக் குறிக்கும். எகிப்திய ஸ்பிங்க்கள் தொன்மம் சார்ந்த கற்பனை விலங்குகள். எகிப்திய சிற்ப மரபில் இவை காவலுக்குரியவையாகக் கருதப்படுகின்றன.

மேல் எகிப்தில் அமைந்துள்ள அபிடாஸ் என்னும் நகரம் மிக முக்கிய மானதொரு தொல்லியல் மற்றும் புனிதமான பகுதியாகக் கருதப்படுகிறது. இங்கே பழமையான கோவில்கள் இடம்பெற்றுள்ளன. பாரோக்களின் அடக்க இடமாக அபிடாஸ் இருந்திருக்கிறது. இவ்விடத்திலிருந்தே மம்மிகள், பிரமிடுகள் போன்றவற்றிற்கான சிந்தனை மற்றும் வளர்ச்சி உருவாகியிருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாக உள்ளது.

உலகிலுள்ள தொன்மையான சமூகங்கள் அனைத்துமே உலகம், உயிர்கள், மனிதர்கள் எவ்வாறு உண்டாகின என்பதை விளக்குகின்றன. எகிப்தியர்களும் உலகின் தோற்றம் பற்றிய பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்பதை அவர்களது கடவுளர்கள் மூலம் அறிய முடிகிறது.

பண்டைய எகிப்தியர்கள் பலகடவுள் வழிபாட்டை மேற்கொண்டிருந்தனர். ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட கடவுளர்களின் பெயர்கள் எகிப்தில் அறியப்பட்டுள்ளன. மாத் என்பது உண்மையை, தர்மத்தை, இயற்கையைக் குறிப்பதாகச் சுட்டப்படுகிறது. மாத் என்பதற்கு ஒத்திசைவு, சட்டம், நேர்மை, நீதி போன்ற பல பொருள்கள் காட்டப்படுகின்றன. மாத் என்றால் ஒரு பெண்கடவுளும் கூட. உலகில் ஒருவித ஒழுங்கமைதியை ஏற்படுத்துவது மாத் பெண்கடவுள் எனக் கருதப்படுகிறது. மாத் என்பதற்கு மாற்றாக இஷ்.்.பெட் அல்லது அஷ்.்.பெட்

சுட்டப்படுகிறது. மாத் போலவே பாரோ மன்னரும் சமூக அமைதியை ஒழுங்கைப் பேணக்கூடியவராகக் கருதப்படுகிறார்.

பெரும்பான்மையான கடவுளர்கள் இணையாக சுட்டப்படுவதால் மாத் கடவுளின் இணை தோத் என அறியப்படுகிறார். தோஸ்த், ஐபிஸ் பறவை அல்லது பபூன் குரங்கின் தலை பெற்றிருப்பதாகக் காட்டப்படுகிறார். உலகின் ஒழுங்கமைவுக்கு தோஸ்த்தின் பணி இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. மாயஜாலம், எழுத்து முறை, அறிவியல், இறந்தோர் தீர்ப்பு போன்றவற்றோடும் தோஸ்த் முக்கியமானவராகக் காட்டப்படுகிறார்.

அமுன், அமுன்ரா, அமுன்ரே, அமோன், அமென் எனப் பலவாறாக அறியப்படும் அமுன் கடவுள் பழைய அரசுரிமைக் காலத்திலிருந்து அறியப்படும் முக்கியமான கடவுளாக இருக்கிறார். அமுன் கடவுளின் பெண் துணை அமுனெட். அமுன் தலைமை கடவுளாகக் குறிப்பிடப்படுவதோடு எகிப்திய சமயத்தில் மிக முக்கியமான இடத்தையும் வகிக்கிறார். பண்டைய எகிப்தில் அமுன்ராவிற்கு ஏராளமான கோவில்கள் இருந்ததாக அறியப்படுகிறது. அமுன் என்றால் மறைந்த, பார்க்க இயலாத எனும் பொருள் குறிப்பிடப்படுகிறது.

அமுன்-அமனெட், நூ-நுனெட், குக்-குகெட், ஹக்-ஹஹெட் இணைகள் எகிப்திய கடவுள்களின் எட்டு இணைகளாகப் பெரிதும் சுட்டப்படுகிறார்கள். ஆண் கடவுள்கள் தவளையோடும், பெண் கடவுள்கள் பாம்போடும் இணைக்கப்படுகிறார்கள். நு இணை நீருக்கும், அமுன் இணை மறைவிற்கும், குக் இணை இருட்டுக்கும், ஹக் இணை முடிவின்மைக்குமான நான்கு மூலாதார கருத்துகளுக்கு காரணமாக அமைவதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்நான்குமே படைப்பின் ஆரம்பமாகவும் படைப்பிற்கான மூலமாகவும் கருதப்படுகிறது. இந்நான்கிற்கும் சமநிலை குலைவதன் காரணமாக புதிய கடவுள் படைக்கப்படுவதாக எகிப்திய கடவுள் கோட்பாடு கூறுகிறது.

எகிப்திய சமயத்தில் ரா மிகவும் முக்கியத்துவம் நிறைந்தவராக அறியப்படுகிறார். ரா எகிப்தியர்களின் சூரியக் கடவுள். பண்டைய எகிப்தின் பொது ஆண்டிற்கு முன்பான இரண்டாயிரத்தி ஐந்நூறாம் ஆண்டுகளில் ரா முக்கியத்துவம் மிக்க கடவுளாக மாற்றம் பெற்றதாகக் கருதப்படுகிறது. இவர் பருந்தோடு இணைக்கப்பட்டு காட்டப்படுகிறார். மனித உடலோடு கழுகின் தலையும், தலைக்கு

மேலே சூரிய வட்டமும், அதனைச் சுற்றியிருக்கும் பாம்பும் ரா வின் உருவமாகக் காட்டப்படுகிறது. படைக்கப்பட்டிருக்கும் உலகின் வானம், பூமி, கீழுலகம் என அனைத்தையும் ஆள்பவராக ரா சுட்டப்படுகிறார்.

உயிரினங்கள் அனைத்தையும் படைத்தது ரா எனவும், ஒவ்வொரு உயிரின் ரகசியப் பெயரைச் சொல்லி அழைக்குமளவுக்கு ரா அனைத்து உயிரினங்களையும் தெரிந்து வைத்திருப்பவர் எனவும் கூறப்படுகிறது. மனிதர்கள் ரா-வின் கண்ணீரிலிருந்தும் வியர்வையிலிருந்தும் படைக்கப்பட்டதால் எகிப்திய மக்கள் தங்களை ராவின் கால்நடைகள் என அழைத்துக் கொள்வதாகக் குறிப்பிடப்படுகிறது. வானியல் பசு தொடர்பான தொன்ம குறியீடும் ராவோடு இணைக்கப்பட்டிருக்கிறது.

எகிப்தியர்கள் சூரியனை ஒளி, வெப்பம் மற்றும் வளர்ச்சிக்கான குறியீடாகக் கொள்வதால், சூரியக் கடவுள் முக்கியமானவராகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறார். ராவின் இணையாக ராவின் கண் கருதப்படுகிறது. ராவின் கண், ராவின் பெண் தன்மைக்குரியதாக விளங்குகிறது. ராவோடு இணைந்திருப்பினும் ரா பெண்கடவுள் தனித்துவம் கூடியவராகவும் இருக்கிறார். ஹதோர், ஹெக்மெட், பாஸ்டெட், வாட்ஜெட், வாட் போன்ற பெண் கடவுளர்கள் ராவின் கண்ணாக கருதப்படுகிறார்கள். ரா-பெண்கடவுள் தாயாக, மகளாக, இணையாக, சொந்தமாக ரா-சூரியக் கடவுளோடு கலந்திருக்கிறார். இவரே ராவின் சக்தியாகவும் இருக்கிறார். ராவோடு பல கடவுள்கள் இணைந்துள்ளனர். அமுன்-அமுன்ரா, அட்டும்-அட்டும்ரா இவர்களில் முக்கியமானவர்கள். பாஸ்டெட், ஹெக்மேட், ஹதோர் போன்ற பெண்கடவுளர்களைப் படைத்தவராகவும் ரா அறியப்படுகிறார் ராவின் எதிர்க் கடவுள்களாக டாக், ஜசிஸ் போன்ற கடவுள்கள் சுட்டப்படுகிறார்கள்.

அட்டும் கடவுள் முடிவுக்கு காரணமானவராக சுட்டப்படுகிறார். உலகின் பெரும்பாலான கடவுளர்கள் இவரிலிருந்து தோற்றம் பெற்றதாகக் கருதப்படுவதால், ரா கடவுளோடு அட்டும் இணைந்தவராக இருக்கிறார். மேலும் அட்டும் சூரியக்கடவுளாகவும் கருதப்படுகிறார். அட்டும் தமது நிழலிலிருந்து சூ கடவுளையும், டெப்னெட் பெண் கடவுளையும் படைத்ததாகக் கூறப்படுகிறது.

நுட் பெண்கடவுள் வானுக்கும், நட்சத்திரங்களுக்கும், சூரியன், சந்திரன், ஒளி, சொர்க்கம், வானியல், காற்று போன்றவற்றிற்கும் கடவுளாக அறியப்படுகிறார். இவர்

நட்சத்திரங்களால் மறைக்கப்பட்ட பெண்ணாக அல்லது ஒரு பசுவாக இருப்பதாகவும் கருதப்படுகிறது. இவரது சகோதரும் கணவருமான ஜெப் பூமிக்கான கடவுளாக இருக்கிறார். இவர் பயிர்களின் வளர்ச்சிக்கு காரணமானவராகவும் அறியப்படுகிறார்.

அட்டும் கடவுளின் குடும்பமாக என்னீட் எனப்படும் ஒன்பது கடவுளர்கள் அறியப்படுகிறார்கள். இவர்களை படைப்பின் தொடக்கத்தில் அட்டும் உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. அட்டும் அவரது குழந்தைகள் சூ மற்றும் டெ.ப்னெட் , அவர்களது குழந்தைகள் ஜெப் மற்றும் நும், அவர்களது குழந்தைகள் ஒசிரிஸ், ஐசிஸ், செட் மற்றும் நெப்திஸ் என மொத்தம் ஒன்பது பேர் என்னீட் குடும்பத்தில் அடங்குவர்.

அரியணை எனும் பொருளில் அழைக்கப்படும் ஐசிஸ் பெண்கடவுள், எகிப்திய கடவுள்களில் மிகவும் மதிப்புமிக்கவராக அறியப்படுகிறார். பாரோக்கள் தங்களை ஐசிஸ் கடவுளின் பிள்ளைகளாக அறிவித்துக் கொண்டனர் எனக் குறிப்பிடும் அளவுக்கு பண்டைய எகிப்தின் கடவுள்களில் புகழ்பெற்றவராக இருந்திருக்கிறார். எகிப்தல் மட்டுமின்றி கிரேக்கம், உரோம் போன்றவற்றிலும் ஐசிஸ் கடவுள் செல்வாக்கானவராக அறியப்பட்டிருக்கிறார். அரசுரிமைக் காலத்திற்கு முன்பிருந்து தொன்மைக் கடவுளர்கள் முடிவுக்கு வந்த ஆறாம் நூற்றாண்டு கிறித்துவாக்கம் வரையிலான காலகட்டங்கள் வரை மிகவும் சிறந்ததொரு கடவுளாகவும் ஐசிஸ் வழிபடப்பட்டிருக்கிறார். இக்கடவுளின் உருவாக்கம் பல்வேறு சமய மரபுகளிலும் கலந்து இன்றளவும் பின்பற்றப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தாய்மைக்கான அடையாளமாக ஐசிஸ் வழிபடப்படுகிறார். சமூக அடுக்கின் அத்தனை பிரிவு மக்களும் வணங்கக் கூடியவராக இவர் கட்டமைக்கப்பட்டுள்ளார். செல்வத்திற்கும், திருமணத்திற்கும், அறிவாற்றலுக்குமான கடவுளாக இவர் அறியப்படுகிறார். தமது சகோதரரும் கணவருமான ஒசிரிஸை நினைத்து இவர் விடும் கண்ணீரே, நைல் நதியில் ஆண்டு தோறும் உருவாகும் வெள்ளமாக எகிப்தியர்களால் நினைவு கூறப்படுகிறது.

ஒசிரிஸ் இறப்பு மற்றும் இறப்பிற்குப் பின்னான வாழ்க்கை போன்றவற்றோடு தொடர்புடைய கடவுளாக அறியப்படுகிறார். அசிர், அசிரி, அசர் போன்ற பல பெயர்களில் சுட்டப்படும் ஒசிரிஸ், கீழுலகின் தலைமைக் கடவுளாகக்

கருதப்படுகிறார். நைல் நதியின் வருடாந்திர வெள்ளப்பெருக்கிற்கும், தானியங்கள் முளைவிடுவதற்கும் இவரே காரணமாக இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐசிஸ் மற்றம் ஒசிரிஸ் மகனான ஹோரஸ் சூரியக் கடவுளாகவும், போர், வேட்டையாடுதல் மற்றும் உறவின் முறைக் கடவுளாகவும் அறியப்படுகிறார். பண்டைய எகிப்தின் அரசுரிமைக் காலத்திற்கு முன்பிருந்தே அறியப்படும் கடவுளாக இவர் குறிப்பிடப்படுகிறார். ஹோரஸ் பெயரில் பல கடவுள்கள் இருப்பதாகவும் அறியப்படுகிறது. ஒசிரிஸ் காவியத்தின் முக்கியமான கதாப்பாத்திரமாக ஹோரஸ் கட்டமைக்கப்பட்டுள்ளார்.

வானம், ஆட்டம், காதல், அழகு, மகிழ்ச்சி, தாய்மை, இசை, அளவை போன்றவற்றோடு தொடர்புபடுத்தப்படும் ஹதோர், ஹோரஸின் மனைவி மற்றும் தாயாகக் கருதப்படுகிறார். பெண்களின் குழந்தைப் பேற்றின் போது உதவும் கடவுளாக இவர் அறியப்படுகிறார். எகிப்திய கடவுள்களில் ஹதோரும் மிக்க புகழ் பெற்றவராக இருக்கிறார். பசு கடவுளாகவும் ஹோரஸ் போற்றப்படுகிறார். இறப்பிற்குப் பின் அவரவர் நடத்தையைக் கருத்தில் கொண்டு, ஆணாக இருந்தால் ஒசிரிஸாகவும், பெண்ணாக இருந்தால் ஹதோராகவும் அடுத்த பிறவிச் சுழற்சி நிகழும் என்பது ஒரு நம்பிக்கையாக எடுத்தாளப்படுகிறது. இவர் ராவுடனும் இணையாகக் கூறப்படுவதுண்டு.

ஹோரஸ் மற்றும் ஹதோரின் நான்கு மகன்கள் ஒரு குழுவாகக் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்களின் தாய் ஐசிஸ் எனவும், மருத்துவம் மற்றும் மாயஜாலத்தோடு தொடர்புடைய செர்கெட் எனவும் குறிப்பிடப்படுகிறது. இவர்கள் நால்வரும் நான்கு ஜாடிகளின் காப்பாளர்களாக அறியப்படுகிறார்கள். ஜாடி மனித தலையும், டாமு டெப் குள்ள நரி தலையும், ஹபி குரங்குத் தலையும், குபெக்னெப் பருத்தின் தலையோடும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.

இறப்பு சேவை, இரவுக்காலம் மற்றும் ஆறுகளின் பெண்கடவுளாக நெப்திஸ் அறியப்படுகிறார். இவர் மக்களைப் பாதுகாப்பவராகவும் நல்ல தாதியாகவும் கருதப்படுகிறார். இவரது கணவர் செட்.

புயல்கள், பாலைவனம், குழப்பம் மற்றும் ஒழுங்கின்மை மற்றும் போருக்கான கடவுளாக செட் காணப்படுகிறார். இவர் தமது சகோதரர் ஒசிரிஸை அழித்தவராக

அறியப்படுகிறார். இவர் செட் விலங்கு என அறியப்படும் ஒரு விலங்காகவும், அபெட் எனும் கீழுலக பாம்பை தோற்கடித்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

பண்டைய எகிப்திய நம்பிக்கையின் படி, படைப்பின் ஆரம்பத்தில் உண்டாக்கப்பட்ட உலகம் தெளிவற்ற, உருவமற்ற, வானம் பூமி போன்ற வரையறைகளற்ற, குழப்பமானதொன்றாக உருவகிக்கப்படுகிறது. ஆரம்பகட்டக் குழப்பங்களுக்குப் பின் வானம், பூமி, இரவு, பகல், கடல், நிலம் என இவ்வுலகம் பிரிக்கப்படுகிறது.

பிறப்பின் மூலாதாரத்திலிருந்து எட்டு கடவுள்கள் தோன்றுகிறார்கள். இவர்கள் ஆண், பெண் என இணையாக இருக்கிறார்கள். இவர்களைப் படைத்தவராக ரா அல்லது அட்டும் இருக்கிறார். வான் கடவுளான நட்டும், பூமியான கெப்பும் இணைந்து ஐசிஸ், ஒசிரிஸ், நெப்திஸ் மற்றும் சேத் கடவுளர்களைப் படைக்கிறார்கள். எகிப்திய சமயத்தில் இந்த நான்கு கடவுளர்களும் மிகவும் மதிப்பு மிக்கவர்களாக அறியப்படுகின்றனர்.

எகிப்தின் வரலாற்றில் ஐசிஸ்-ஒசிரிஸ் காப்பியம் மிக முக்கியமானதாக இடம்பெறுகிறது. ஒசிரிஸ்-ஐசிஸ் கணவன் மனைவி. அதே போல் சேத்தும் நெப்திசும் கணவன் மனைவி. இந்நால்வரும் சகோதர, சகோதரிகளுமாவர். நால்வரும் எகிப்திற்கு வருகிறார்கள். ஒசிரஸ் எகிப்தின் அரசனாக ஆட்சி செய்வதுடன், விவசாயத்தின் தெய்வம் என்பதால் எகிப்தின் விவசாயம் தழைக்கிறது. ஒசிரஸ், சில காலம் ஐசிஸை ஆரசாளச் சொல்லிவிட்டு, உலகத்தின் மறற்றய நாடுகளில் வாழும் மனிதர்களுக்கு விவசாயத்தைக் கற்பிக்கச் சென்றுவிடுகிறார். மீண்டும் எகிப்திற்கு ஒசிராஸ் வந்த போது, ஐசிஸ் திறமையாக அரசாட்சி செய்வதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார்.

அரசுரிமையில் நாட்டம் கொண்ட சேத், கபடமாக ஒசிரஸை விருந்துக்கு அழைத்து உபசரிக்கிறார். அந்த விருந்தின் கேளிக்கைகள் நடந்து முடிந்த பின் அவரால் உருவாக்கப்பட்ட அழகிய பெட்டியைக் காண்பித்து அதில் ஒசிரஸைப் படுக்க வைத்து பெட்டியை மூடி நைல் நதியில் எறிந்து விடுகிறார். ஓசிரஸின் உடலை ஐசிஸ் கண்டெடுக்கவும், அதனை சேத் பதிமூன்று துண்டுகளாக கூறுபோட்டு நைல் நதியில் எறிந்து விடுகிறார். உடல் பாகங்களை ஐசிஸ் எடுத்து ஒசிரிஸை உயிர்த்தெழுப்பிவிடுகிறார். இதன் பின்னர் ஒசிரஸ் கீழலகத்தினரின்

கடவுளாகிறார். ஐசிஸின் மகனான ஹோரஸ், பெரியவனாகி சேத்தை போரில் தோற்கடிக்கிறார்.

கிரேக்கர்களுக்கும் பின்னர் உரோமானியர்களுக்கும் எகிப்து வசமானதால், பல எகிப்தியக் கடவுளர்களின் பெயர்கள், கிரேக்க உரோமானியப் பெயர்களாக மாற்றம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

கிரேக்க தொன்மவியல் மிகவும் சிறப்பான முறையில் அறியப்பட்டிருக்கிறது. கிரேக்கத்தின் புகழ்பெற்ற காப்பியக் கவிஞராக ஹோமர் போற்றப்படுகிறார். இலியட், ஒடிசி போன்ற மகா காவியங்களை எழுதியவராக ஹோமர் புகழப்படுகிறார். இவரது ஆக்கங்கள் கிரேக்கப் பண்பாட்டிற்கு உலகெங்கும் மிக்க மதிப்பைக் கட்டமைத்தன எனப் பாராட்டப்படுகின்றன.

பண்டைய கிரேக்க சமயம் பல கடவுள் கொள்கையுடையது. மக்கள் பல கடவுளர்களை நம்பினர். ஓவ்வொரு கிரேக்க நகரமும் வெவ்வெறு கடவுளர்களை வழிபட்டதாக அறியப்படுகிறது. ஏதென்சு நகர மக்கள் எதினா எனும் கடவுளையும், டெல்பி நகர மக்கள் அப்பல்லோ கடவுளையும் வழிபட்டனர். கிரேக்க சமயத்தில் பனிரென்டு கடவுளர்கள் முக்கியமானவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். சூசு, ஈரா, போசீடான், எர்மிசு, மெட்டர் மற்றும் எச்டியா போன்றவர்கள் சிறப்புற்றிருந்ததாக அறியப்படுகின்றனர். இவர்களில் சூசு என்ற ஜீயஸ் தலைமைக் கடவுளாக இருக்கிறார். இவர்கள் ஒலிம்பஸ் மலை உச்சியில் வாழ்வதால் இவர்களை ஒலிம்பஸ் கடவுள்கள் என அழைக்கின்றனர். ஒலிம்பியன் கடவுள்கள் அவர்களுக்கு முன்பிருந்த டைட்டன் கடவுள்களைத் தோற்கடித்து பதவிக்கு வந்தார்கள் என்பது வரலாறு.

கிரேக்கத் தொல்கதைகளின் படி கடவுள்களின் அரசராக, தலைமைக் கடவுளாக ஜீயஸ் புகழப்படுகிறார். இவரே ஒலிம்பஸ் மலையை ஆள்பவர். வானம், இடி, மின்னல், சட்டம், நீதி, பருவகாலம் ஆகியவற்றின் கடவுள். இடி, கழுகு, காளை, ஓக் மரம் இவருடைய சின்னங்கள். இவர் குரோனஸ்-ரியா வின் கடைசி மகன். மனைவி ஹீரா. அப்பல்லோ, ஆர்ட்டெமிஸ், அதீனா போன்றோர் இவரது மக்கள். ஜீயசுக்கு முன் தலைமைக் கடவுளாக இருந்தவர் குரோனஸ். அவருக்கு முன் யுரேனஸ் தலைமைக் கடவுள். சுருக்கமாக தாத்தா, மகன் மற்றும் பேரன். மூன்று பேருக்கும் ஏராளமான ஒற்றுமைகள்.

கிரேக்கமரபு உலகின் தோற்றம், கடவுளர்கள், தேவதைகள், மாவீரர்கள், காதநாயக நாயகிகள், அவர்களின் வாழ்வு, வீரம் போன்றவை குறித்து பரவலாகப் பேசுகிறது. முதல் யுகம் கடவுளர்களின் யுகமாகக் கருதப்படுகிறது. இதில் கடவுளர்களின் பிறப்பு குறித்துப் பேசப்படுகிறது. அடுத்து கடவுள்களும், மனிதர்களும் ஒன்று கலந்த யுகம் வருகிறது. இதில் கடவுள், மனிதக் கடவுள், மனிதர் என்ற நிலைகள் இருக்கின்றன. மூன்றாவது யுகமாக மாவீரர்களின் யுகம் கூறப்படுகிறது. இக்காலத்திலேயே புகழ்பெற்ற டிராஜன் யுத்தம் நடைபெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

உலகிலுள்ள அனைத்து மதங்களைப் போலவே கிரேக்கமும் உலகின் தோற்றத்தை விவரிக்கிறது. ஆரம்பத்தில் ஒன்றுமே இல்லாமல் இருந்தது. இந்த ஏதுமின்மையிலிருந்து யூரினமும் அதாவது வானமும் கெயி அதாவது பூமியும் உண்டாயின. யுரினஸ் அல்லது யுரேனஸ் வானத் தந்தையெனவும், கெயி பூமித்தாய் எனவும் கொண்டாடப்படுகிறார்கள். வானமும் பூமியும் இணைந்து ஆறு ஆண் மற்றும் ஆறு பெண் மக்களைப் பெற்றார்கள்.

ஆதிகால கிரேக்கத்தில் வானத்துக்கும் பூமிக்கும் போலவே மலைகளுக்கும் கடலுக்கும் கடவுளர்கள் கற்பிக்கப்பட்டனர். சூரியனும் சந்திரனும் கடவுளர்களாகத் தெரிந்தனர். நெருப்புக்கும் நீருக்கும் கடவுளர்கள் இருந்தனர். காட்டுக்கென்றும் கழனிக்கென்றும் கடவுள்கள் இருந்தனர். வயலில் விளையும் தானியங்களுக்கும், காய்த்துக் குலுங்கும் கனிகளுக்கும் கடவுள்கள் உண்டு. வேட்டைக்கும் போருக்கும் கடவுள்கள் இருந்தனர். கல்விக்கும், காதலுக்கும், செல்வத்திற்கும், உடல் நலத்திற்கும் கடவுள்கள் வழிபடப்பட்டனர்.

ஜீ, ஜீயா, கெ, கெயி எனப் பலவாறாக அறியப்படும் பூமியே கிரேக்கர்களின் ஆதி தெய்வமாக அறியப்படுகிறார். இவர் உலகமும் படைப்புகளும் உருவாகும் முன்பே தோன்றியவராக இருக்கிறார். இவருக்கு டார்டரஸ் எனும் சகோதரன் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பூமியாக இருந்த ஜீ, வானக் கடவுளான யுரேனஸையும், மலைகளின் கடவுளான ஊரியாவையும், கடல் கடவுளான பாண்டஸையும் பெற்றெடுக்கிறார். பின் யுரேனஸ் கடவுளை மணந்து கொள்கிறார்.

ஓற்றைக் கண்ணையுடைய அர்கஸ், ஸ்ட்ரோப்ஸ், புரோன்டஸ் போன்ற சைளோப்களையும், நூறு கைகளையுடைய பிரியாரா, காட்டஸ், கியாஸ்,

என்செலடஸ் போன்ற பெரு உடலுடையவர்களையும், பெரிய உடலும், அதிக ஆற்றலும் கொண்ட பன்னிரெண்டு டைட்டன்களையும் மற்றும் ஏராளமான பின்னைகளையும் இவர்கள் பெறுகிறார்கள்.

டைட்டன்களில் ஒஷனஸ், கோயஸ், சிரையஸ், ஹைப்பெரியன், இயபெடஸ், குரோனஸ் போன்ற ஆறு பேரும் ஆண் டைட்டன்கள். தியா, ரியா, தெமிஸ், நிமோசின், ∴போபே, தேத்திஸ் முதலான ஆறு பேரும் பெண் டைட்டன்கள்.

கிரேக்க காப்பிய வரலாற்றில் யுரேனஸ் கொடுமை நிறைந்தவராக சுட்டப்படுகிறார். மகன்களான சைக்ளோஸ்களையும், பருவுடல் கொண்டவர்களையும் பூமியின் வயிற்றில் அடைத்து வைக்கிறார். இது பூமித்தாய்க்கு வருத்தத்தை உண்டாக்குகிறது. டைட்டன்களையும் அவர்களது மாமாவான டார்டரஸிடம் விட்டு விடுகிறார். அங்கே அவர்கள் குற்றேவல் செய்பவர்களாக இருக்கிறார்கள்.

தந்தை யுரேனஸை வீழ்த்திவிட்டு, தலைமைக் கடவுளாக ஆக வேண்டுமென குரோனஸ் திட்டமிடுகிறார். இதையறிந்த தாய் ஜீயும் அவருக்கு உதவுகிறார். குரோனஸ் தந்தையின் இனப்பெருக்க ஆற்றலை சிதைக்கிறார். யுரேனஸை வீழ்த்துவதில் ஒஷனஸ் டைட்டனைத் தவிர மற்ற அனைத்து டைட்டன்களும் குரோனஸிற்கு உதவுகிறார்கள். தம் தந்தையான யுரேனஸை, குரோனஸ் தவறான வழியில் வீழ்த்தியதாக ஓஷனஸ் குற்றம் சாட்டுகிறார். கடலில் யுரேனஸின் பாகங்கள் விழுந்தவுடன் அலைகள் ஆர்ப்பரித்து நுரை பொங்கி அப்ரோடைட் எனும் அழகு தேவதை தோன்றுகிறார்.

யுரேனஸின் ஆதிக்கம் மறைந்து குரோனஸின் ஆட்சி உண்டாகிறது. ஜியா பாண்டுஸ் மூலமாக நீரஸ், தாவுமஸ், போர்சிஸ், செட்டோ, யூரிபியா மற்றும் ஏராளமான குழந்தைகளைப் பெறுகிறார்.

குரோனஸ் வானுலகம் உட்பட அனைத்து உலகங்களுக்கும் தலைவராகிறார். தங்கையான ரியாவை மணந்து கொண்டு அவரை பேருலகத்தின் பேரரசியாக்குகிறார். குரோனஸ் தமது தந்தையை வீழ்த்திவிட்டு ஆட்சியதிகாரத்திற்கு வந்தது போல், அவரது பிள்ளைகளில் யாரேனும் அவரை வீழ்த்திவிட்டு தலைமைப் பொறுப்பிற்கு வந்து விடுவார்கள் என எண்ணுகிறார். அதனால் அவருக்குப் பிறக்கும் குழந்தைகளை விழுங்கி விடுகிறார்.

ஜியாவின் அறிவுரையின் படி, ரியா தனக்குப் பிறந்த கடைசிக் குழந்தையான ஜீயஸிற்குப் பதிலாக துணியில் கல்லைச் சுற்றி குரோனஸிடம் கொடுக்கிறார். அக்கல்லையும் குரோனஸ் விழுங்கி விடுகிறார்.

ஜீயஸ் கிரீட் தீவில், அத்தீவின் மன்னனான மெலிஷியஸ் என்பவரின் மகள்களான இடா, அட்ரேஸ்டியா போன்றவர்களின் கவனிப்பில் வளர்கிறார். வாலிபனான ஜீயஸ், தமது தாய் ரியாவின் ஆலோசனையின் படி அரண்மனைக்கு வருகிறார்.

ஜீயஸால் குரோனஸிற்கு வாந்தி மருந்து கொடுக்கப்பட்டதால் அவரது வயிற்றிலிருந்து குழந்தைகள் வெளிவருகிறார்கள். சிலர் வாலிபப் பருவத்தையே அடைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. ஜீயஸைத் தம் மகன் என குவோனஸ் கண்டு கொள்ள, இருவருக்கும் போர் மூள்கிறது.

ஜீயஸின் சகோதரர்கள் ஹேடஸ், பொசிடான் மற்றும் சகோதரிகள் ஹெஸ்டியா, திமெதர், ஹீரா போன்றவர்கள் ஜீயஸிற்கு துணை நிற்கின்றனர். பாட்டி ஜீயாவின் பெருவுடல் கொண்ட சில மக்களும் ஜீயஸோடு சேர்கின்றனர்.

குரோனஸோடு, ஒஷனஸ் தவிர்த்த டைட்டன்களும், ஏராளமான பெருவுடல் கொண்டோரும், காவலர்களும் ஒன்று சேர்கிறார்கள். இருபடையினருக்கும் தெஸ்ஸாலி எனும் இடத்தில் போர் மூள்கிறது. குரோனஸின் படைகள் ஓரளவிற்கு வெற்றியை ஈட்டுகின்றன. ஜீயஸின் படை ஒலிம்பஸ் மலையைக் கைப்பற்றி அங்கே நிலை கொள்கிறது. குரோனஸ் மலையில் முகாமிடுகிறார். இரு படையினருக்குமான போர் பத்தாண்டுகள் நீடிக்கிறது.

டார்டரஸ் பிடியில் சிக்கியிருக்கும் சைக்ளோப்ஸ்களையும், நூறு கைகள் கொண்ட பெருவுடல்காரர்களையும் ஜீயஸ் தம் பக்கம் அணிதிரட்ட முடிந்தால் போரில் வெற்றிபெற்றுவிடலாமென்ற ஜீயாவின் திட்டத்திற்கேற்ப, கேம்ப் என்ற பூதத்தின் பொறுப்பிலிருந்த இவர்களை விடுவித்து ஜீயஸ் தமது படையோடு சேர்த்துக் கொள்கிறார்.

ஜீயாவின் திட்டம் வெற்றி பெறுகிறது. பத்தாண்டுகள் நடைபெற்ற போரில், ஜீயஸ் வெற்றிபெற்று, வான மண்டலத்திற்கும் பூவுலகத்திற்கும் தலைமைக் கடவுளாகிறார். சகோதரியான ஹீராவை மணமுடித்து, ஒலிம்பஸ் மலையிலிருந்து ஜீயஸ் இவ்வுலகை ஆள்வதாக கிரேக்க மரபு குறிப்பிடுகிறது. ஜீயஸிற்கு

துணையாக பனிரெண்டு ஒலிம்பியன்கள் இருக்கிறார்கள். முக்கியமான அலோசனைகளுக்கு, பனிரெண்டு பேரும் ஒன்று சேர்ந்து விவாதித்தே முடிவெடுப்பார்கள் எனக் கூறப்படுகிறது.

பாட்டி ஜீயா, திருமணப் பரிசாக தங்க ஆப்பிள் ஒன்றை ஹீராவிற்கு அளிக்கிறார். இந்த ஆப்பிளோடு தொடர்பு கொண்டே புகழ் பெற்ற காவியமான இலியட் இயற்றப்பட்டது. மிகப் பெரிய போரான டிராஜன் போரும் நிகழ்ந்தது.

ஒலிம்பியன்களின் வெற்றிக்குப் பின், கிரேக்கமெங்கும் இவர்களுக்கு கோவில்கள் எழுப்பப்பட்டதாகத் தெரிகிறது. ஒலிம்பஸ் கடவுள்களுக்கு முடிவில்லை எனச் சொல்லப்படுகிறது. இவர்களுக்கு நோய் வராது. இவர்கள் என்றும் இளமையானவர்கள். ஓவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட துறையில் புகழ்மிக்கவர்களாக அறியப்படுகிறார்கள். இவர்களுக்கு பல்வேறு புனைப் பெயர்களும் உண்டு.

ஹீரா மற்றும் லெடா, மையா செமிலி போன்ற பெண்கடவுளர்களோடு ஜீயசு இணைந்து பல பிள்ளைகளைப் பெறுகிறார். இவரது பெண் தொடர்புகள் ஹிராவிற்குப் பிடிப்பதில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது. ஹீராவிற்கு ஏரிஸ் மற்றும் ஹெபாஸ்டிசும், லெடாவிற்கு அப்பல்லோ மற்றும் ஆர்டிமிசும், மையாவிற்கு ஹெர்ம்ஸ்சும், செமிலிக்கு டையோனிஸசும் பிறக்கிறார்கள். ஜீயஸின் மணிமகுடத்திலிருந்து பிறந்தவராக அதினா கருதப்படுகிறார். ஜீயஸ், தீட்டிஸ் எனும் கடவுளோடு இணைந்து பெற்றவரே டிராய் போர்க்களத்தின் மாபெரும் வீரரான அக்கிலீஸ்.

பொஸைடன் கடல், ஆறுகள், வெள்ளம், வறட்சி போன்றவற்றின் கடவுளாகக் கருதப்படுகிறார். சூலம் இவரோடு தொடர்புடைய ஆயுதம். குதிரை, டால்பின் மீன், காளை, பொசிடனுக்கான சின்னங்கள். இவரது மனைவி ஆம்பிடிரைட்.

ஹேடஸ் இறந்தோர் மற்றும் பாதாள உலகிற்கான கடவுளாக அறியப்படுகிறார். இவரது துணைவி பெர்சிபோன். ஆந்தை இவருக்குப் புனிதமானதாகக் குறிப்பிடப்படுகிறது. சாவி, மூன்று தலையுள்ள நாய் போன்றவை ஹேடஸ்க்கான சின்னங்கள்.

ஹீரா கடவுளர்களின் அரசி. திருமணம், குழந்தைப்பேறு, அரசுரிமை, பெண்கள் போன்றவற்றிற்கான கடவுள். குயில், மயில் இவருக்கான புனித விலங்குகள்.

ஹெஸ்டியா அன்பு, அரவணைப்பு, இல்லம் மற்றும் கன்னித் தன்மைக்கான கடவுள். கிரேக்க மரபில் சிறந்ததொரு பெண்ணாக இவர் குறிப்பிடப்படுகிறார். செங்கல் அல்லது கல்லால் ஆன அடுப்போடு இவர் தொடர்புபடுத்தப்படுகிறார்.

டெமிடர் தானியங்கள், வேளாண்மை, அறுவடை, வளர்ச்சி மற்றும் ஊட்டம் போன்றவையோடு தொடர்புடைய பெண்கடவுள். இவர் இறப்பிற்குப் பின்னான வாழ்வோடு தொடர்புடையவர். கோதுமைக் கதிர்களும், ஒளிக்கற்றையும் கொண்டு தலையில் மகுடம் சூட்டியவராகவும் இவர் குறிப்பிடப்படுகிறார். தாமரை இறகுள்ள பாம்பு, கோதுமைக் கதிர்கள் இவரது சின்னங்கள். பாம்புகளும் பன்றிகளும் இவரது புனித விலங்குகள். இவர் ஜியஸோடு இணைந்து பெர்சிபோன் பிறக்கிறார்.

ஏரிஸ் போர் கடவுள். இளமையானவராக தாடியில்லாதவராக, தலைக்கவசத்தோடு ஈட்டி அல்லது வாள் ஏந்தியவராக ஏரிஸ் சுட்டப்படுகிறார். அதிராவிற்கு எதிரானவராக ஏரிஸ் கட்டமைக்கப்படுகிறார். மேலும் இவர் குழப்பத்தை உண்டாக்குபவராகவும் இருக்கிறார். கழுகு, நச்சுப் பாம்புகள், நாய்கள் மற்றும் கரடிகள் இவரது விலங்குகள்.

ஹெபஸ்டஸ் ஏரிஸின் சகோதரர். நெருப்பு, உலோக வேலைகள் மற்றும் கைத்தொழில்களின் கடவுள். பொற்கொல்லராகவும், அப்ரோடைட்டின் கணவராகவும் அறியப்படுகிறார். உலோக வேலைக்கான சுத்தியல் போன்ற உபகரணங்களோடும் தாடியோடும் ஹெபஸ்டஸ் சுட்டப்படுகிறார். இவரது விலங்குகள் கழுதை, நாய் மற்றும் கொக்கு. இவர் மாவீரர் அக்கலீஸின் கவசத்தைச் செய்து கொடுத்தவராக புகழப்படுகிறார். மேலும் இவர் நெருப்பை நல்லனவற்றிற்கு மட்டுமே பயன்படுத்தியவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

அப்பல்லோ இசை, கலைகள், அறிவு, குணப்படுத்தல், ஆலோசனை, கவிதை, அழகு மற்றும் வில்வித்தைகான கடவுள். அப்பல்லோ இளமையான, தாடியில்லாமல், நீண்ட தலைமுடியுடன், சிறந்த உடலமைப்பைக் கொண்டவராகக் சுட்டப்படுகிறார். இவருக்கான விலங்குகள் மான், அன்னம், கழுகு, காகம் சுன்டெலி மற்றும் பாம்பு.

ஆர்டிமிஸ் வேட்டை விலங்குகள், இளம் பெண்கள், குழந்தைப்பேறு போன்றவற்றிற்கான கன்னிக் கடவுள். அப்பல்லோவின் சகோதரி. வில் அம்பு வைத்திருப்பவர். வேட்டை, ஈட்டி, மான் மற்றும் பிற விலங்குகளோடு இவர் சுட்டப்படுகிறார். மான், கரடி, காட்டுப்பன்றி இவருக்கான விலங்குகள்.

ஹெர்ம்ஸ் நில எல்லைகள், பயணம், தொலைதொடர்பு, வணிகம், மொழிகள் மற்றும் எழுத்துக்கான கடவுள். இவர் கடவுளர்களுக்கிடையேயான தூதுவராகவும் குறிப்பிடப்படுகிறார். அழகிய உடலமைப்போடும், இளமையோடும், பயணியர் தொப்பியோடும் ஹெர்ம்ஸ் சுட்டப்படுகிறார். இவரது விலங்கு ஆமை.

டயோனிசஸ் ஒயின், விழாக்கள், கேளிக்கைகள், பானங்கள், காமம் போன்றவற்றோடு தொடர்புடைய கடவுள். இவரது விலங்குகள் டால்பின், பாம்பு, புலி மற்றும் கழுதை. இவர் ஹெஸ்டியாவிற்கு மாற்றாகவோ அல்லது கூடுதலாகவோ ஒலிம்பியனாக ஆனதாகக் குறிப்பிடப்படுகிறார்.

ஆதினா புத்திக் கூர்மை, நுட்பம், சமாதானம், போர், யுத்த வியூகம், கைத்தொழில்கள் மற்றும் ஞானத்திற்கான பெண்கடவுளாக இருக்கிறார். சாம்பல் நிற ஒளிரும் கண் கொண்டவராக இவர் அறியப்படுகிறார். ஆலிவ் மரம் அதினாவின் சின்னமாக இருக்கிறது. ஆந்தையோடு காணப்படுவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

அப்ரோடைட் அழகு, காதல், விருப்பம் மற்றும் மகிழ்ச்சியின் கடவுள். இவருக்கு பல காதலர்கள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. இவர் மிக்க அழகுள்ள பெண்ணாகவும், இவரது புன்னகையின் வீச்சையும், சிரிப்பையும் ஏராளமான கிரேக்க கவிகள் பாடியிருப்பதாகவும் தெரிகிறது. ரோஜாப்பூ போன்ற பூக்கள் இவரது அடையாளம். குருவிகள் மற்றும் புறாக்கள் அப்ரோடைட்டுக்கான விலங்குகள். இவர் ஜீயஸின் மகள் எனவும் கூறப்படுகிறார்.

கிரேக்க மரபில் பலநூறு கடவுளர்கள் உண்டு. கிரேக்க கடவுளர்களின் பிறப்பு குறித்து பல்வேறு கருத்துகள் காணப்படுகின்றன. பெரும்பாலான கடவுளர்களின் பிறப்பை ஜீயஸ் கடவுளோடு தொடர்புபடுத்துவது காணப்படுகிறது. பல நூறு கடவுளர்கள் பண்டைய கிரேக்கத்தில் வழிபடப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கான கோவில்கள் கிரேக்கம் முழுவதும் பேணப்பட்டிருக்கின்றன.

கிரேக்க இலக்கியங்களில் மிகவும் பழமையானதாக இலியட் கருதப்படுகிறது. இக்காப்பியத்தின் பாடல்கள் இலியன் அல்லது திராய் நகரில்

நடந்த டிரோஜன் போர் குறித்து இயற்றப்பட்டுள்ளன. திராய் நகரை ஆண்ட அரசர் பிரியம் படைக்கும், மைசீனியாவின் அரசர் அகமெம்னான் படைக்கும் நடைபெற்ற பத்தாண்டு போரின் கடைசி ஐம்பது நாட்களைப் பற்றி பதினைந்தாயிரத்து அறுநூற்றி தொன்னுற்று மூன்று பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

இலியட் மற்றும் ஒடிஸி என இருபெரும் கிரேக்க காப்பியங்களுக்கு கருப்பொருளாக அமைவது திராய் போர். இலியட் திராய் போரினை விவரிப்பதாகவும், ஒடிஸி திராய் போரில் பங்கு பெற்ற ஒடிஸி நாடு திரும்புகையில் பத்தாண்டுகள் வழி தவறி பின் மீண்ட கதையைக் கூறுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இக்காப்பியங்கள் கடவுள்கள், மனிதர்கள், பல வித உயிரினங்கள், இடங்கள், உலகங்கள், சக்திகள், இயற்கை வினோதங்கள், நிகழ்வுகள் என பல பரந்த கதைப் புலங்களைக் கொண்டவையாகப் பின்னப்பட்டுள்ளன.

ஹெலன் என்ற பெண்ணுக்காக நடந்ததே திராய் போர் எனவும் குறிப்பிடுவதுண்டு. ஸ்பார்த்தா எனும் நகரை ஆண்ட இரின்டர்யசுவின் மிக அழகிய மகள் கெலன். பல இளவரசர்கள் இவரை மணமுடிக்க விரும்புகையில், ஒடிஸியின் அறிவுரையின் படி நடக்கும் சுயம்வரத்தில் மெனலஸ் எனும் இளவரசரை தேர்வு செய்கிறார். இதற்கு கைம்மாறாக இரின்டர்யஸின் உறவினரான பெனலிப்பியை ஒடிஸி மணந்து கொள்கிறார். ஹெலன் ஜீயஸின் மகள் எனவும் கூறப்படுவதுண்டு.

திராய் நாட்டு இளவரசரான பாரிஸ், ஸ்பார்டாவிற்கு வருகை தரும் போது கெலனோடு காதலாகி அவரை திராய் நகருக்குக் கவர்ந்து செல்கிறார். கெலனை மீட்க, மெனலஸின் சகோதரர் அகமெம்னான் தலைமையில் மிகப்பெரும் படையொன்று திராய் நகரை முற்றுகையிடுகிறது. டிராய் நகரின் கோட்டை மிக வலிமையாக இருப்பதால் பத்தாண்டு காலத்திற்கு போர் நீள்கிறது.

டிராய் துருக்கியில் அமைந்திருப்பதாக கண்டறியப்பட்டள்ளது. வெண்கலக் காலத்தில் போர் நடைபெற்றிருக்கலாமென்றும், பொது ஆண்டிற்கு முன் ஆயிரத்து நூற்றி தொன்னூற்றி நான்கு முதல் ஆயிரத்து நூற்றி என்பத்தி நான்கு வரைக்குமான காலகட்டத்தில் இப்போர் நிகழ்ந்திருக்கலாமெனவும் மரபாகச் சொல்லப்படுகிறது. நவீன முறைகளின் அடிப்படையின் ஆயிரத்து இருநூற்றி அறுபதாம் ஆண்டுகளில்

நடந்திருக்கலாமெனவும் கணிக்கப்படுகிறது. டிராய் நகரம் அழிக்கப்பட்டு கிரேக்கர்கள் வெற்றி பெறுவதோடு இலியட் முடிகிறது.

போருக்கான காரணங்களில் ஒன்றாக, இளவரசர் பாரிஸின் தீர்ப்பு பற்றிய கதையொன்றும் வழக்கிலுள்ளது. பெலியஸ் எனும் மானுடருக்கும், தீட்டிஸ் எனும் கடவுளுக்கும் திருமணம் நடக்கிறது. இதை தலைமையேற்று நடத்துபவர் ஜீயஸ். தீட்டிஸிற்கு பிறக்கப் போகும் மகன் ஜீயஸை விட மிக்க புகழ்பெறுவார் என கணிக்கப்பட்டதால், பண்டைய கடல் கடவுள் நீரியஸின் மகளான தீட்டிஸை மானுடருக்கு மணமுடிக்க முடிவாகிறது. மானுடருக்குப் பிறக்கும் குழந்தையின் வாழ்வு முடிவுக்கு வந்தே தீரும் என்பதால் இந்த ஏற்பாடு. முதலில் திருமணத்திற்கு உடன்பட மறுக்கும் தீட்டிஸை, ஜீயஸ் மற்றும் பொசைடன் பேசி சம்மதிக்க வைக்கிறார்கள்.

திருமணத்திற்கு அனைவரும் அழைக்கப்பட்டாலும் ஈரிஸ் என்ற பெண்கடவுளுக்கு மட்டும் அழைப்பில்லை. இவர் குழப்பவாதி, எதையும் விவர்தித்துக்கொண்டே இருப்பவர், செல்லுமிடமெல்லாம் கலகம் மூளும் எனக் கூறப்படுகிறது. அழைப்பில்லாமல் திருமண அறங்கிற்குச் செல்லும் ஈரிஸ், ஒரு தங்க ஆப்பிளை உருட்டிவிட்டு மிக்க அழகுள்ள பெண் யாரோ அவருக்கான ஆப்பிள் இது என்கிறார்.

ஹீரா, அதினா மற்றும் அப்ரோடைட் இடையே யார் பேரழகி எனும் போட்டி வருகிறது. ஜீயஸிடம் தீர்ப்பு கேட்கப்பட, அவரோ பாரிஸை பரிந்துரைக்கிறார்.

ஹெர்மஸ் வழிகாட்டலோடு மூவருக்கும் இடா மலையில் போட்டி நடக்கிறது. மூன்று பேரழிகளும் பாரிசிடம் விலை பேசுகிறார்கள். ஹீரா அவரை மிகப் பெரியதொரு நாட்டிற்கு அரசராக்குவதாகவும், அதீனா போர்களின் போது ஞானத்தையும் நுட்பத்தையும் தருவதாகவும் ஆசை காட்டுகிறார்கள். அப்ரோடைட் உலகிலேயே பேரழியாகக் கருதப்படும் ஹெலனைத் தருவதாக ஆசை காட்டுகிறார். இறுதியில் அப்ரோடைட்டே பேரழகி என பாரிசு தீர்ப்பளிக்கிறார். இதனாலேயே பாரிசை ஸ்பார்த்தாவிற்கு வரவழைத்து ஹெலனுக்கும் காதல் உண்டாக்குகிறார் அப்ரோடைட்.

டிரோஜன் போரே கடவுளர்களுக்கிடையேயான போர் எனவும் கூறப்படுகிறது. கடவுளர்களுடைய வழிகாட்டல் மற்றும் அறிவுரைகளின் பேரிலேயே போர்

நிகழ்கிறது. ஒலிம்பசு மலையில் கூடும் கடவுள்கள், போர் நிலவரம் குறித்து அடிக்கடி விவாதிக்கிறார்கள். திட்டம் தீட்டுகிறார்கள். அவரவர் படைகளுக்கு உற்சாகமளிக்கிறார்கள்.

டிரோஜன்களுக்கு ஆதரவாக அப்பல்லோ, ஏரிஸ், அப்ரோடைட், ஆர்டிமிஸ், லெடோ, ஈரிஸ் போன்ற கடவுளர்களும், கிரேக்கர்களுக்கு ஆதரவாக ஹீரா, அதினா, பொசைடன், ஹெர்ம்ஸ், ஹெபாஸ்டஸ், தீட்டிஸ் போன்ற கடவுளர்களும் களமிறங்குகிறார்கள். கடவுள்களாக இருந்தாலும் இவர்களாலும் விதியை மீற இயலவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. விதியை மாற்றவோ நீக்கவோ இக்கடவுளர்களால் இயலவில்லை.

கடத்திச் செல்லப்பட்ட கெலனை மீட்க டிரோஜன்களின் பெரும் படை டிராய் கடற்கரையில் முகாமிடுகிறது. இரு பக்கங்களிலும் மாவீரர்கள் களமிறங்குகிறார்கள். டிரோஜன்களின் தளபதியும் மன்னர் பிரியாமின் மூத்த மகனும் மாவீரருமான ஹெக்டர், இளவரசர் பாரிஸ், சகோதரர் டைபோபஸ், தளபதி பாலிடாமஸ், அகெனார். ஜியாஸின் மகன் சார்பெடான், கிலாகஸ், பாலிடோரஸ் போன்ற மாவீரர்கள் டிரோஜன் தரப்பிலுள்ளனர்.

கிரேக்கர்களின் தரப்பில் தளபதியாக அகமெம்னான், இதகாவின் அரசர் ஒடிஸ்யஸ், சலாமிசின் அரசர் அஜாக்ஸ், ஸ்பார்ட்டாவின் அரசர் மெனிலியஸ், அர்காஸ் அரசர் டியோமேடுஸ், பைலோஸ் அரசர் நெஸ்டர் மற்றும் இவர்களோடு மாவீரர் அக்கிலிஸ் ,அவரது உறவினர் பெட்ரோகுலஸ் உள்ளனர்.

பீலியஸ்ஸின் மகன் ஆகிய அக்கீலியஸின் பெருங்கோபத்தை பாடு தேவதையே.. கோபசாபத்தினால் கிரேக்கர்களுக்கு பெரும் அழிவினைக் கொண்டு வந்தவன் என இலியட்டின் ஆரம்ப வரிகளில் புகழப்படும் அக்கீலிஸ், ட்ரோஜன் போரின் மாபெரும் கதாநாகயனாகப் புகழப்படுகிறார்.

மெர்மிடான்களின் அரசர் பிலியஸ். மெர்மிடான்கள் வீரத்திற்கும் போருக்கும் பெயர்பெற்றவர்கள். கிரேக்க மரபுப்படி, ஜீயஸ் கடவுள் எறும்பு கூட்டத்திலிருந்து இவர்களைப் படைத்ததாகக் கூறப்படுகிறது. மெர்மிக்ஸ் என்றால் கிரேக்க மொழியில் எறும்புகள் எனப் பொருள்.

அக்கிலீஸ் பிறந்தவுடன் அவருக்கு சாகாவரம் கிடைபதற்காக, பாதாள உலகின் இறவாமை தரும் ஸ்டிக்ஸ் ஆற்றில், அக்கிலீஸ் குதிகாலைப் பிடித்து

தீட்டிஸ் மூழ்கி எடுத்ததாகவும், குதிகால் மட்டும் நனையாமல் போனதால் அந்த இடம் அவரது பலவீனமான பகுதியாக மாறியதாகவும் ஒரு மரபு சொல்லப்படுகிறது.

அக்கிலிஸ் மற்றும் அகமெனான் இடையிலான முரண்பாட்போடு இலியட் துவங்குகிறது. அகமெனான் படைத்தளபதியாக இருந்தாலும், அக்கிலீஸ் மாபெரும் விரராக இருப்பதால் இவரை கட்டுப்படுத்த இயலவில்லை. அகமெனான் போடும் திட்டங்களை அக்கிலிசு ஏற்றுக் கொள்ளவில்லை. இருவருக்கும் கருத்து வேறுபாடு போர் முழுவதும் தொடர்கிறது.

போரின் ஆரம்பத்தில் அப்பல்லோ கோவில் பூசாரி மகளான சைரிசியஸ் சிறைபிடிக்கப்படுகிறார். இவரை விடுவிக்க மறுக்கவே கோபம் கொண்ட அப்பல்லோ பிளேக் நோயைப் பரப்புகிறார். ஒன்பது நாட்கள் நீடிக்கும் நோயை கட்டுப்படுத்தும் விதமாக பத்தாம் நாளில் அக்கிலீஸ் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்கிறார். வேண்டாவெறுப்பாக சைரிசியஸை விடுவிக்கச் சம்மதிக்கும் அகமெனான், அக்கிலீசு வசமிருக்கும் பிரிசைஸ் என்ற பெண்ணைக் கேட்கிறார். இதனால் இனி அகமெனான் படையோடு சேர்ந்து போரிடப் போவதில்லை என முடிவெடுக்கும் அக்கிலீஸ், ஐம்பது கப்பல்களில் உடன் வந்திருக்கும் மெர்மடான்களோடு நாடு திரும்பத் தயாராகிறார்.

நாடு திரும்பும் முடிவு குறித்து கடலலைகளிலிருந்து எழுந்து வரும் தீட்டிஸிடம் தெரிவிக்கிறார். மெர்மிடான்களுக்கு அரசராக இருந்து சாதாரணமாக வாழ்வை முடித்துகொள்ளும் அக்கிலீஸ் வேண்டுமா அல்லது டிராய் போரில் ஈடுபட்டு காலாகாலத்திற்கும் புகழப்படும் சாகாவரம் பெற்ற அக்கலீஸ் வேண்டுமா என்ற கேள்விக்கு விடையாக தீட்டிஸே மகனைப் போருக்கு அனுப்புவதாக காவியம் முன்னரே பதிவு செய்திருக்கிறது. தீட்டிஸ் போர் நடைபெறப் போவதை அறிந்து அதில் பங்குபெற விடாமல் அக்கிலிசை வளர்த்ததாகவும் மரபாகக் கூறப்படுகிறது.

தீட்டிஸ் ஜீயஸிடம் செல்கிறார். ஹீராவோடு தீட்டிஸிற்கு சிறப்பான நட்பு இருந்ததாகவும், அந்த நட்பைக் கருதி ஜீயஸின் ஆசைக்கு தீட்டிஸ் இணங்காமல் இருந்தாரெனவும் காவியத்தின் சில பகுதிகள் தெரிவிக்கின்றன. போரில் பங்கு பெற்று சாகாவரம் பெற்ற மாவீரராக அக்கிலீஸ் வாழ்வார் என ஜீயஸ் ஆசி வழங்குகிறார்.

காவியத்தில் ஹெக்டரின் வீரம் மிகவும் சிறப்பாகப் பேசப்படுகிறது. தளபதியாக இருந்து பல வெற்றிகளை ஈட்டுகிறார். நாடு திரும்புவதில் உடன்பாடில்லாத அக்கிலீஸின் உறவினர் பெட்ராகுலஸ், அக்கிலீஸின் கவசத்தை அணிந்து கொண்டு மாவீரர் ஹெக்டரோடு போரிடுகிறார். இதில் கெக்டர் வெற்றி பெற்றுவிட போரின் போக்கு சட்டென தடம் மாறுகிறது. ஓலிம்பியன் கடவுள்களை ஓரளவிற்கு கட்டுப்படுத்தி வைத்திருந்த ஜீயஸ், இதன்பின் அவரவர் விரும்பம் போல் செயல்பட விட்டுவிடுகிறார். பின்னர் கடவுள்களும் தங்களுக்குள் மோதிக் கொள்ளும் போக்கும் அதிகரிக்கிறது.

பெட்ரோகுலசிற்குப் பழிவாங்க அக்கிலீஸ் ஹெக்டரோடு மோதுகிறார். இதில் முடிவுக்கு வந்த ஹெக்டரை குதிரை வண்டியில் கட்டி இழுத்துச் செல்லும் அக்கலீஸ், பின்னர் பிரியாமின் கெஞ்சுதலுக்கு மனமிரங்கி அரண்மனைக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கிறார்.

திராயன் போரில் வீரத்தோடு புத்திக் கூர்மையுள்ளராகவும், அனைவராலும் மதிக்கப்படுபவராகவும் ஒடிஸியஸ் விளங்குகிறார். நீண்டு கொண்டே செல்லும் போரை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக இவர் ஒரு திட்டம் வகுக்கிறார். மிகப் பெரியதொரு மரக்குதிரை செய்து வீரர்களை அதனுள் ஒளித்து வைத்துவிட்டு கிரேக்கப் படைகள் கடலில் மறைந்து கொள்கின்றன.

குதிரையைப் பார்க்கும் டிரோஜன் படைகள், பாரிஸின் எரித்து விடலாம் எனும் பேச்சையும் மீறி நகரினுள் இழுத்துச் செல்கின்றன. பின்னர் குதிரையிலிருந்து வெளிப்படும் ஒடிஸி உள்ளிட்ட வீரர்கள், கோட்டைக் கதவைத் திறந்து மறைந்திருந்த படைகளை கோட்டைக்குள் வரவைக்கின்றனர்.

தோல்விக்குப் பயந்து கிரேக்கர்கள் ஓடிவிட்டனர் எனும் வெற்றிக் களிப்பிலிருந்த டிராய் நகர் மோசமான விளைவுகளைச் சந்திக்கிறது. பத்து வருட ஆத்திரத்தை டிராய் நகர் மீது கிரேக்கர்கள் கொட்டுகிறார்கள்.

இலியட்டில் கூறப்படாத பல கதைகள் மரபு வழியாக பேசப்படுவதுண்டு. அக்கலிஸின் முடிவும் அத்தகையதொன்றே. டிராய் நகருக்குள் செல்லும் அக்கிலிசின் குதிகாலில் பாரிஸ் அம்பெய்து வீழ்த்துவதாகக் கூறப்படுகிறது. இலியட்டின் கதாநாயகன் அக்கிலிஸே. இவரது வீரமும் தீரமும் பற்றியே இலியட் வெகுவாகப் புகழ்ந்துரைக்கிறது.

மாசிடோனியாவிற்கும் தெஸ்ஸாலிக்கும் இடையிலுள்ள ஒலிம்பிக் மலைத் தொடரின் உயர்ந்த மலையான ஒலிம்பிக், கிரேக்க மக்களின் புராணங்களிலும் மரபிலும் மிகமுக்கியமானதொரு இடத்தைப் பெற்றிருக்கிறதெனில் மிகையாகாது. ஒலிம்பஸ் மலை கடவுளர்களின் இருப்பிடமாகக் காட்டப்படுவதுடன், பல கதாப்பாத்திரங்கள் ஒலிம்பஸ் மலையோடு தொடர்புடையவையாகவே புனையப்பட்டுள்ளன.

ஒன்பாதாயிரத்து ஐந்நூற்றி எழுபத்து மூன்று அடிகள் ஓங்கி நெடிதுயர்ந்து நிற்கும் ஒலிம்பிக் மலை மிகவும் சிறப்பானதாக, நீண்டதாக, அறிவுடையதாக, பசுமையானதாக இலியட் காப்பியத்தில் கொண்டாடப்படுகிறது. கடவுளர்களின் அரண்மனைகள் நிறைந்திருந்ததாகப் புகழப்பட்ட ஒலிம்பிக் மலை, கிரேக்க அரசால் தற்போது தேசியப் பூங்காவாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மாவீரர் ஒடிஸியஸ் புகழ்பாடுவது ஒடிஸி காப்பியம். டிரோஜன் போரின் வெற்றிக்குப் பின்னர் இதக்காவிலுள்ள வீட்டிற்குப் பயணப்படும் ஒடிஸியஸின் பத்தாண்டு கால வழிப்பயணத்தை விவரிக்கிறது ஒடிஸி. இந்நூல் கிரேக்கத்தில் ஒடிஸிஸ் எனவும், உரோமானியத்தில் யுலிஸ்ஸஸ் எனவும் அழைக்கப்படுகிறது. ஒடிஸியின் பெற்றோர் லார்டெஸ் மற்றும் அன்டிக்லியா. ஓடிஸி மிக்க அறிவாற்றல் உள்ளவராகவும், அறிவுரை மற்றும் வழிகாட்டலில் தேர்ந்தவராகவும் புகழப்படுகிறார்.

டிரோஜன் போரில் ஒடிஸி முடிந்து விட்டதாகக் கூறி, ஒடிஸியின் மனைவி பெனிலோப்பை திருமணம் செய்து கொள்ளுமாறு பெரியதொரு கும்பல் அவரது வீட்டை சூழ்ந்து கொள்கிறது. ஒடிஸியின் மகன் டெலிமாசஸ் தமது தந்தையைத் தேடி அலைகிறார். இம்மூவரின் போராட்டமும், ஒடிஸிற்கு உதவும் அதினாவின் முயற்சிகளும், ஒடிஸியை சொந்த ஊருக்கு வரவிடாமல் பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்யும் பொசைடானும், இக்காப்பியத்தில் சிறப்பாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறார்கள். போருக்கு சென்று இருபது வருடங்களாகியும் ஒடிஸியசைக் காணாமல் பெலிசியஸ் தவிப்பதும், நூற்றுக்கும் மேற்பட்ட தடியர்கள் அவரது வீட்டைச் சூழ்ந்திருப்பதுமாக இதகாவிலிருந்து ஒடிஸி காவியம் தொடங்குகிறது.

ஒடிஸியஸின் பாதுகாவலரான அதினாவின் அறிவுரை மற்றும் வழிகாட்டலின் பேரில் இருபது வயதான டெலிமாசஸ், தந்தையைத் தேடி டிரோஜன் போரில் ஈடுபட்ட பலரையும் சந்திக்கிறார். நெஸ்டர், மெனிலாஸ், ஹெலன் போன்றவர்களின் சந்திப்பிலிருந்து கிரேக்கர்கள் மரக்குதிரையொன்றைச் செய்து அதன் மூலமாக டிராய் நகருக்குள் நுழைந்து வெற்றிபெற்றதையும், ஒடிஸி போர் முடிந்து சொந்த ஊருக்குப் பயணமானதும் தெரிய வருகிறது.

இதகாவிற்கு வரும் வழியில் கேலிப்சோ என்ற ஒற்றை கண்ணரால் ஒடிஸி பிடித்துச் செல்லப்பட்டதாக ஒரு தகவலை கேள்விப்பட்டதாகக் மெனிலியஸ் கூறுகிறார்.

காப்பியத்தில் கேலிப்சோவின் தீவு விவரிக்கப்பட்டு, ஒடிஸி ஏழு வருடங்கள் சிறைப்பட்டவராகக் காட்டப்படுகிறார். ஹெர்ம்ஸ் மற்றும் ஜீயஸின் அறிவுரையினால் விடுவிக்கப்படும் ஒடிஸி, பொஸைடானால் கப்பல் உடைக்கப்பட்டு ஒரு தீவில் கரை ஒதுங்குகிறார். அத்தீவின் இளம் பெண் நாஸிக்காவால் கண்டெடுக்கப்படும் ஒடிஸியை, தீவின் அரசர் அல்சினஸ் மற்றும் அரசி அரிட் அன்புடன் வரவேற்கிறார்கள். இவர்களிடையே போர் முடிந்து ஊருக்குத் திரும்பும் போது நேர்ந்த கதையை ஒடிஸி விவரிக்கிறார்.

பன்னிரெண்டு கப்பல்களில் வந்தவர்களை புயல் தாக்கியதையும், வழி மாறியதையும், பொசைடானின் மகனான ஒற்றைக் கண் பாலிபேம்ஸ் பிடிக்க வந்ததையும், நினைவுகளை அழிக்கும் உணவு வைத்திருக்கும் தாமரை தின்பவர்களிலிடமிருந்து தப்பியதையும், கடல் காற்று அரசன் ஆயோலஸ் உதவியால் இதகாவின் அருகாமையில் சென்றதையும், லேஸ்ட்ரைகோன்கள் எனும் மனிதர்களைத் தின்பவர்களிடமிருந்து பிழைத்துக் கொண்டதையும், சிர்சி எனும் பெண்கடவுளின் மாயஜாலத்திற்குத் தப்பி, பின் அவரையே மணம் செய்து மகனொருவரைப் பெற்றதையும் ஒடிஸி விவரிக்கிறார்.

ஒரு வருட காலம் விருந்திலும் கேளிக்கையிலும் கழிந்து விட, சிர்சியால் அன்னமாக மாற்றப்படாது மீதமுள்ள கிரேக்க வீரர்களோடு பயணமாகும் ஒடிஸி உலகின் மேற்குப்பகுதி முடிவுக்கு வருகிறார். அங்கே இறந்தோருக்கான படையல்கள் செய்து அவரது தாயையும் காண்கிறார். நீண்ட காலமாக ஒடிஸி வீடு

திரும்பாத ஏக்கத்தில் இறந்துபோன தாய், இதக்கா வீட்டின் நிலவரத்தையும் ஒடிஸிக்கு எடுத்துரைக்கிறார்.

சிர்சி மற்றும் வயதான டைர்சியஸ் வழிகாட்டல்களோடு தொடங்கும் அடுத்த பயணம் இன்னும் கடுமையானதாக இருக்கிறது.

பல தலைகள் கொண்ட ஸில்லா பூதங்கள், சூறாவளி, சாரிப்படிஸ் போன்றவர்களைச் சந்திக்கிறார். சிர்கா மற்றும் டைர்சியஸ் அறிவுரையையும் மீறி, சூரியக் கடவுள் ஹீலியோசின் கால்நடைகளைப் பலியிடவேண்டி வருகிறது. இதற்கான தண்டனையாக கப்பல் கவிழ்க்கப்படுகிறது. காலிப்ஸோவின் தீவிற்கு அடித்துச் செல்லப்படும் ஒடிஸி நாஸிக்காவின் காதலராக அங்கே தங்கவேண்டி வருகிறது.

காலிப்ஸோ தீவை ஆளும் பேஸியன்களிடமிருந்து விடைபெறும் ஒடிஸி, இதக்காவைச் சென்றடைகிறார். இரவில் கூலித் தொழிலாளியாக வேலை பார்க்கிறார். பகலில் மாறுவேடமிட்டு தெருக்களில் அலைகிறார். அவரது கதையை கற்பனை கலந்து அவரே சொல்லித் திரிகிறார். உள்ளூர்காரர் மூலம் வீட்டின் நிலையையும் அறிந்து கொள்கிறார்.

அதினாவின் உதவியோடு ஸ்பார்ட்டாவிலிருந்து திரும்பிவரும் மகன் டெலிமசஸை சந்தித்து, வீட்டிலிருக்கும் தடியர்களை அழிப்பது குறித்து ஆலோசிக்கிறார். அதினாவின் ஏற்பாட்டில் பெனிலோப் தம்மைத் திருமணம் செய்பவரை வில்வித்தைப் போட்டி மூலம் தேர்ந்தெடுக்கப் போவதாக அறிவிக்கிறார்.

ஒடிஸியின் வீட்டில் உண்டு கொழுத்திருந்த நூற்றுக்கும் மேலான தடியர்கள் வில்வித்தையில் பங்கு பெற அவர்களை ஒடிஸி அழித்து, பெனிலோப்புக்கும் தந்தைக்கும் தம்மை யாரென வெளிப்படுத்துகிறார். இதன் மூலம் அதீனாவுக்கும் இதக்காவிற்கும் அமைதி திரும்புகிறது.

உலக நாகரிகத்திற்கு கிரேக்கமும் உரோமும் அளித்த கொடைகள் ஏராளம். கிரேக்கம் போன்றே உரோம் மக்களும் பல கடவுள் வழிபாட்டாளர்களாக இருந்திருக்கிறார்கள். உரோம் வரலாறும் டிரோஜன் போரோடு தொடர்புடையதாக வரலாற்றில் பதியப்பட்டிருக்கிறது.

பண்டைய உரோம் என்பது பொது ஆண்டிற்கு முன்பான எட்டாம் நூற்றாண்டு காலத்திலிருந்து செழித்து வளர்ந்த நாகரிக காலத்தையும் மக்களையும் குறிக்கிறது. இந்நாகரிகம் பின்னர் வந்த காலங்களில் பரந்து விரிந்ததொரு பேரரசாகவும் எழுச்சியுற்றது. ஒரு தொல் மரபின்படி, இரட்டையர்களான ரேமஸ் இணைந்து பொது ஆண்டிற்கு முன் ஏழுநூற்றி ஐம்பத்தி மூன்றாம் ஆண்டில் உரோம் நகரத்தை நிறுவியதாகக் கூறப்படுகிறது.

டிராய் நகரிலிருந்து தப்பி வந்த ஒரு அரசர், லிதியம் எனும் ஆற்றின் கரையிலிருந்த ஒரு அரசரிடம் தஞ்சமடைந்ததாகவும், பிறகு அவ்வரசரின் மகளையே மணந்து கொண்டதாகவும் மரபாகப் பேசப்படுகிறது. இந்த மரபில் வந்த பெண் ரியாசில்வியா, செவ்வாய் கோளினால் கருவுற்று இரட்டை ஆண் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறார். அந்த நேரத்தில் அவரது மாமா அந்நகரத்தைக் கைப்பற்றியதால் குழந்தைகளை ஒரு கூடையில் வைத்து டைபர் ஆற்றில் விட்டுவிடுகிறார். ஆற்றில் மிதந்து சென்ற குழந்தைகளை ஓநாய் ஒன்று இழுத்து வந்து அதன் பாலைச் சொரிந்து காப்பாற்றியதாகவும், அவ்வழியே சென்ற மாடு மேய்ப்பவர் குழந்தைகளைக் காப்பாற்றி வளர்த்து வந்ததாகவும், அவர்களே ரோமுலசு மற்றும் ரேமசு எனவும் கூறப்படுகிறது.

பண்டைய உரோமானியர்களுக்கும் ஏராளமான கடவுளர்கள் இருக்கிறார்கள். அனைத்துக் கடவுளர்களையும் வழிபடக்கூடிய சகிப்புத்தன்மை பண்டைய உரோமானியர்களுக்கு இருந்திருக்கிறது. குடியரசு காலத்திலும், அதற்குப் பிறகான பேரரசு காலத்திலும், பல்வேறு நிலப்பரப்புகளுடன் உண்டான தொடர்புகள் காரணமாக, அன்றைய உலகிலிருந்த பெரும்பாலான கடவுளர்கள் ரோமில் வழிபடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. எகிப்திய, கிரேக்க, பாரசீக கடவுளர்களின் தாக்கம் அதிகமிருந்ததாகவும் பதிவுகள் சுட்டுகின்றன. இக்கடவுளர்கள் போக, உரோமானியர்களின் சொந்தக் கடவுளர்களும் நூற்றுக்கணக்கானோர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உரோமானியக் கடவுளர்களில் பன்னிரெண்டு பேர் முக்கியக் கடவுளர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் ஆறு இணையாக இருக்கின்றனர். ஜுபிடர்-ஜுனோ, நெப்டியூன்-மினர்வா, மார்ஸ்-வீனஸ், அப்பல்லோ-டையானா, வல்கன்-வெஸ்டா, மற்றும் மெர்க்குரி-செரிஸ் எனும் இந்த ஆறு

இணைக் கடவுளர்கள் பல்வேறு சிறப்புகள் அமையப் பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர்.

கிரேக்கமும், உரோமும் அருகருகே அமைந்திருப்பதால் கிரேக்கத்தின் தாக்கம் உரோமில் அதிகம். உரோமின் பன்னிரென்டு முக்கியக் கடவுள்களும் கிரேக்கத்தின் பன்னிரென்டு ஒலிம்பிக் மலை கடவுளர்களையும் அவர்களின் குண நலன்களையும் பெற்றிருப்பதாக அறியப்படுகிறது.

கிரேக்கர்களின் தலைமைக் கடவுள் ஜீயஸ் எனில் உரேமாரியர்களின் தலைமைக் கடவுளாக ஜுபிடர் இருக்கிறார். அவ்வாறே அப்பல்லோ கடவுள். போர்க்குரிய கிரேக்க ஏரஸ் உரோமானிய மார்ஸ். தூதுவ சேவை ஹெர்மிஸ் ரோமின் மெர்குரி. கடலின் தலைமைக் கடவுள் பொசைடன் உரோமில் நெப்டியூன். நெருப்புக் கடவுள் ஹெபஸ்டஸ் இங்கு வல்கன். தலைமைப் பெண் கடவுளான ஹீரோ உரோமில் ஜுனோ. வேளாண்மை தொடர்புடைய டிமெட்டர் இங்கு சிரஸ். வேட்டைக்கான ஆர்டிமிஸ் உரோமில் டயானா. கல்வி, அறிவுக்கான அதீனா உரோமர்களின் மினர்வா. காதல், அழகுக்கான அப்ரோடைட்டி ரோமில் வீனஸ். வீடு, குடித்தனத்திற்கான ஹெஸ்டியா உரோமில் வெஸ்தா.

மேலும் பல கிரேக்கர் கடவுளர்களும் உரோமானியர்களிடையே செல்வாக்கு பெற்றிருந்தார்கள். மதுக் கடவுளாக டையோனிசஸை உரோமர்கள் பக்கஸ் என்றழைத்தனர். ஈராஸ் கடவுள் உரோமின் கியுப்பிட் ஆனார். ஹேடஸ் போன்றே உரோமின் ப்ளுட்டோவும் பாதாள உலகக் கடவுள்.

உரோமின் முக்கியக் கடவுளர்கள் இருபது பேர் எனவும் கூறப்படுகிறது. உரோம் நகர் அமைக்கப்படுவதற்கு முன் பண்டைய இத்தாலியின் பழங்குடி மக்கள் சைபன்கள் என அழைக்கப்பட்டனர். இம்மக்களின் கடவுளர்களும் உரோமானியர்களால் வழிபடப்பட்டிருக்கின்றனர். புகழ் பெற்ற அரசரான நுமா பொம்பிலஸ் சைபன் வழிவந்தவராக அறியப்படுகிறார். சைபன்களுக்கும் உரோமர்களுக்கும் நீண்டகாலப் போர்கள் நடைபெற்றதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கிரேக்கப் புராணங்களில் காணப்படாத பல்வேறு கடவுளர்கள் உரோமானிய புராணங்களில் காணப்படுகின்றனர். ஏராளமான கோவில்கள் உரோமானியாவில் இருந்திருக்கின்றன. வழிபாடுகள், சடங்குகள், வேண்டுதல்கள், பலியிடல்கள், விழாக்கள் போன்றவை சிறப்பான முறையில் மக்களால் நடத்தப்பட்டிருக்கின்றன.

பொது ஆண்டிற்குப் பின்னான நான்காம் நூற்றாண்டு வரையிலும் கோவில் வழிபாட்டு முறைகள் இத்தாலியெங்கும் பரவலாக இருந்திருக்கின்றன. கோவில் பூசாரிகள் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கியிருக்கிறார்கள். பொது மக்களின் வேண்டுதல்கள் பூசாரிகளால் சத்தமாக கூறப்பட்டதாகத் தெரிகிறது. ஒவ்வொரு தேவைக்கும் அதற்குரிய கடவுளிடம் வேண்டுதல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. கடவுள் பெயரால் உறுதிமொழியும் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. சிலை வழிபாடும், விலங்குகள் பலி இடலும், இறந்தோர் சடங்கு முறைகளும், மறு பிறப்பு தொடர்பான நம்பிக்கைகளும் உரோமானியா முழுதும் பரவலாக இருந்திருக்கின்றன. மந்திர சத்தி, மாயாஜாலம் போன்றவையும் உரோமர்களின் வாழ்க்கையோடு தொடர்புடையவையாக பேணப்பட்டிருக்கின்றன.

பண்டைய உரோமில் ஒவ்வொரு துறைக்கும், நிகழ்வுக்கும், இயற்கை முறைக்கும், பல்வேறு கடவுளர்கள் போற்றப்பட்டிருக்கின்றனர். விவசாயத்தோடு தொர்புடையவர்கள் வேளாண்மைக் கடவுளர்கள். பயிரின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் அதனை கவனித்துக் கொள்ள கடவுளர்கள் உண்டு. செரிஸ், சாட்டன் கடவுள்கள் வேளாண்மைக்கான முக்கியக் கடவுள்கள். கான்சஸ், டெல்லஸ், பேல்ஸ் மற்றும் வொர்டும்னஸ் போன்ற வேளாண்மைக் கடவுள்களுக்கு சிறப்பான முறையிலமைந்த கோவில்கள் இருந்திருக்கின்றன.

மார்கஸ் டெரன்டியஸ் வேர்ரோ எனும் பண்டைய உரோமானிய அறிஞர், பொது ஆண்டிற்கு முன்பான நூற்றிப் பதினாறாம் ஆண்டைச் சேர்ந்த புகழ்மிக்க அறிஞர் மற்றும் எழுத்தாளர். அறுநூறுக்கும் மேற்பட்ட புத்தகங்களை இவர் எழுதியிருந்தாலும் வேளாண்மையின் மூன்று புத்தகங்கள் என்ற ஒரு புத்தகம் மட்டுமே முழுமையாகக் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. மற்ற புத்தகங்களின் சில பகுதிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேர்ரோ அவர் வாழ்ந்த காலத்திலேயே நுண்ணுயிரிகளையும் நோய்த்தொற்றையும் பற்றி அறிந்திருந்தாரென்பது அவரது புலமைக்கும், அறிவாற்றலுக்குமான சான்றாகக் குறிப்பிடப்படுகிறது. அவருடைய சகமனிதர்களை உப்பங்கழிகளையும், சதுப்பு நிலங்களையும் தவிர்க்கச் சொல்லும் வேர்ரோ, அதற்கான காரணமாக அங்கே மிகச் சிறய உயிரினங்கள் இருக்குமென்றும், கண்களால் அவற்றைப் பார்க்க இயலாதென்றும், அவை காற்றில் மிதப்பவை என்றும், வாய் மற்றும் மூக்கின் வழியே உடலுக்குள் சென்று நோய்த் தொற்றை

உண்டாக்கக் கூடுமென்றும் பொது ஆண்டிற்கு முன்பே அறுதியிட்டுக் கூறியிருப்பது விந்தையானது.

பயிர்த்தொழில் தொடர்பாக பன்னிரெண்டு கடவுள்கள் இருந்ததாக வேர்ரோ குறிப்பிடுகிறார். ஜீபிடர்-டெல்லஸ், சால்-லுனா, செரிஸ்-லிபர், ரோபிகஸ்-ப்ளோரா, மினர்வா-லீனஸ், லிம்ப்பா-போனஸ் ஈவன்டஸ் போன்றவர்கள் குழுவாக வணக்கப்பட்டிருக்கிறார்கள்.

செரிஸ் மற்றும் டெல்லஸ் கடவுளர்களுக்கு உதவி செய்ய சிறப்புத்தன்மை கொண்ட பன்னிரென்டு ஆண் கடவுளர்கள் இருந்ததாக சில குறிப்புகள் பட்டியலிடுகின்றன. உழுவதற்கு வெர்வேக்டர், மண்ணைத் தயார்படுத்த ரிப்பரேட்டர், விதைகள் ஊன்ற இன்சிடர், களையெடுக்க சப்ரன்சினேட்டர், அறுவடைக்கு மெஸ்ஸர், தானியங்களை சுமக்க கன்வெக்டர், சேமிக்க கன்டிடர், மக்களிடம் கொடுக்க புரோமிடர் என தனித்தனி கடவுள்கள் வழக்கிலிருந்திருக்கிறார்கள்.

வயல்வெளிகளுக்கான பெண்கடவுள் ருசினா, டெல்லஸ் மற்றும் டெல்லுமோ போன்ற பூமிக்கடவுள்களுக்கு பலியிடல் சடங்கு செய்யும் ருசர், விதைப்புக்கான சடர், மண்ணில் விதைக்கப்பட்ட விதையைப் பாதுகாக்கும் பெண்கடவுள் சியா, நாற்றுக்களைப் பாதுகாக்கும் செகஸ்டா பெண்கடவுள், பயிர்கள் ஒரே மாதிரி வளர்வதை உறுதிசெய்யும் பெண்கடவுள் ஹோஸ்டிலினா, பயிர்களின் நீர் மற்றும் பால் திரவத்திற்கான பெண் கடவுள் லேக்டன்ஸ், இலை உறைகளை உருவாக்கும் பெண்கடவுள் வோலுடினா, கணுக்களை உருவாக்கும் நோடுடஸ், தானியங்கள் திறந்து கொள்ள உதவும் பெண் கடவுள் படலானா, களைகளின் பெண் கடவுளாக ரன்சினா, தானியங்களின் முதிர்வுக்கான பெண்கடவுள் மெஸ்ஸியா, தானிய சேமிப்பை பாதுகாக்கும் பெண்கடவுள் டுடிலனா, வயல்களின் உரத்திற்கான ஸ்டெர்குலினஸ், தானியங்கள் பிரித்தெடுக்க உதவும் பெண்கடவுள் டெரன்சிஸ் உட்பட பல்வேறு கடவுளர்களும் உரோம மரபில் வேளாண்மையோடு அறியப்பட்டிருக்கிறார்கள்.

பண்டைய கிரேக்கமும் உரோமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த வரலாற்றைக் கொண்டவை. இவ்விரண்டு நாகரிகங்களையும் இணைத்து செவ்வியப் பண்டைக் காலம் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவதுண்டு. இவை இரண்டும் இணைந்து ஆட்சிமுறை, சட்டமுறை, போர்முறை, கலைகள், இலக்கியங்கள்,

அறிவியல், தொழில்நுட்பம், சமயம், மொழி எனப் பல்வேறு பொக்கிசங்களை உலக மக்களுக்கு வழங்கியுள்ளன.

மேற்கத்திய நாகரிகத்திற்கு அடிப்படையாக அமைந்தது கிரேக்கமெனில், அதை வளர்த்தெடுத்தது உரோமே. கிரேக்கப் பண்பாடு உரோமப் பேரரசின் மீது வலுவான செல்வாக்கைக் செலுத்தியது. மேற்று ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது கிரேக்கமெனில் அது மிகையாகாது.

வரலாற்று மூலாதாரங்களின் படி, மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரம்பக் குடிகளே அதாவது ஆரியர்களே பண்டைய கிரேக்கப் பண்பாட்டை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. துருக்கியின் வடமேற்குத் திசையிலிருக்கும் தீபகற்பம் பெலப்போனிஸ். ஜீயஸின் பேரன் பெல்ப்ஸ் நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டதாக மரபில் சொல்லப்படுகிறது. இத்தீபகற்பப் பகுதியில் மைசீனியர்கள் மற்றும் பெலாஸ்ஜியன்கள் குடியிருந்தார்கள். பொது ஆண்டிற்கு முன்பான இரண்டாயிரமாண்டு காலத்தில் கிரேக்கத்தை தாய்மொழியாகக் கொண்ட அக்கீனியர்கள் வடக்குப் பகுதியிலிருந்து கூட்டம் கூட்டமாக வந்து பெலப்போனிஸில் குடியேறியதாகக் குறிப்பிடப்படுகிறது. அக்கீனியர்கள் அவர்களது மொழி, மதம், பழக்கவழக்கங்களை மைசீனியர்களிடமும், பெலாஸ்ஜியர்களிடம் பரப்பியதால், நாளடைவில் அக்கினியர்களின் கலாச்சாரம் பெருமளவில் பரவியிருக்கிறது. இதுவே மைகீனிய நாகரிகமென அழைக்கப்படுகிறது.

பொது ஆண்டிற்கு முன்னான ஆயிரத்து நூறு ஆண்டுகளின் போது, வடக்கிலிருந்து டோரியன்கள் எனும் இனத்தவர் படையெடுத்து அக்கினியர்களை வெற்றிகொண்டதால் பெலப்போனிஸை விட்டு வெளியேறி மத்திய தரைக்கடல் அருகேயிருந்த கிரீஸ் தீவில் தங்களுக்கான நாட்டை உருவாக்குகிறார்கள். இங்கே பிறந்து வளர்ந்து செழித்ததே கிரேக்க நாகரிகம். கிரேக்க மொழியை ஹெல்லினிஸ்டிக் மொழி என்பதால் இது ஹெல்லினிஸ்டிக் நாகரிகமெனவும் கூறப்படுகிறது.

ஹெல்லினிக் குடியரசு (எல்லிநீக்கி டீமொக்ராத்தியா) என அழைக்கப்படும் கிரேக்கம், பண்டையக் காலத்தில் ஹெல்லாஸ் என்னும் பெயராலேயே அறியப்பட்டிருக்கிறது. எல்லாஸ், எல்லாட, எல்லினிகி, கிரீக் என பலவாறாகப்

பெயரிடப்பட்டுள்ள கிரீக் நாடு, ஆசியா, ஆப்பிரிக்க மற்றும் ஐரோப்பியக் கண்டங்களின் இணைப்பாகக் கருதப்படும் மத்தியதரைக் கடல் பகுதியின் முக்கியமானதொரு பகுதியில் அமைந்துள்ளது. கிரீஸ் ஒன்பது புவியியில் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஏராளமான தீவுகளை உள்ளடக்கியுள்ள இந்நாடு, மத்திய தரைக்கடலின் மிக அதிகமான கடற்பரப்பைக் கொண்டதாகவும் விளங்குகிறது. வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே கிரேக்கம் அறியப்பட்டு வந்திருந்த போதிலும் அச்சுக் காலமே இதன் பெருமைகளை உலகறியச் செய்தது.

கிரிக் அல்லது ஹெல்லினிக் மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்தின் முக்கியமானதொரு மொழியாகவும் மிக நீண்ட வரலாறு கொண்ட மொழியாகவும் அறியப்படுகிறது. துருக்கியைச் சுற்றியுள்ள பால்கன் பகுதியில் பொது ஆண்டிற்கு முன்னான மூவாயிரமாண்டு காலத்திலேயே கிரேக்க மொழி பேசப்பட்டு வந்ததாக குறிப்புகள் கிடைத்திருக்கின்றன. பொது ஆண்டிற்கு முன் ஆயிரத்தி நானூற்றி ஐம்பதிற்கும், ஆயிரத்து முந்நூற்றி ஐம்பதிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த மெஸ்ஸினியா பகுதியில் கண்டெடுக்கப்பட்ட களிமண் பலகை எழுத்து, கிரேக்க மொழியின் பழமைக்கு மிகச் சிறந்ததொரு சான்றாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் தற்போது புழக்கத்திலுள்ள மொழிகளிலேயே பதியப்பட்ட மிகப்பழமையான எழுத்து வடிவம் கொண்ட மொழியாக கிரேக்கம் பெருமை கொள்கிறது.

மூல கிரேக்கமொழி பதிவு செய்யப்படவில்லையெனினும் இந்த முதல் கிரேக்க மொழியிலிருந்து பல மொழிகள் உருவாகியதாகக் கருதப்படுகிறது. இந்தோ ஐரோப்பிய மொழி பேசுவோர் கிரேக்கத்தில் குடியேறிய பின்னர் தொடர்ச்சியாக கிரேக்கம் பேசப்பட்டு வந்துள்ளதாக அறிஞர்கள் குறப்பிடுகின்றனர்.

மைசீனியன் நாகரிகத்தைக் கொடுத்தது மைசீனியன் கிரேக்கம். இதுவே களிமண் பலகையில் பதிவு செய்யப்பட்ட கிரேக்கமொழி. இதற்குப் பின்னர் உருவாகி வந்தது பண்டைய கிரேக்க மொழி. இது பல்வேறு பேச்சுமொழிகளைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பண்டைய கிரேக்க பண்பாட்டுக் காலத்திலும், காப்பியக் காலத்திலும், பின்னர் வந்த ரோமப் பேரரசின் அதிகாரக் காலத்திலும் கிரேக்கம் பேணப்பட்டே வந்திருக்கிறது. இடைக்காலத்தில் கிரேக்கமொழி பயன்பாடு இல்லாமல் போய்விட்டது. எனினும் பைசாந்தியப்

பேரரசிற்கு உட்பட்ட பகுதிகளால் அலுவல் மொழியாக இருந்ததாக குறிப்புகள் கிடைக்கின்றன.

கிரேக்கப் பகுதிகளில் புழக்கத்திலிருந்த பல பேச்சு மொழிகளை ஒருகிணைந்து உருவானது கொய்னி கிரேக்க மொழி. இம்மொழியிலேயே புதிய ஏற்பாடு எழுதப்பட்டு உலகெங்கும் மொழி மாற்றம் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது. இடைக்கால கிரேக்கத்திற்குப்பின் பல மாறுபாடுகளுக்குட்பட்ட கிரேக்க மொழியே தற்போதைய கிரீஸில் பின்பற்றப்பட்டு வருகிறது.

பொது ஆண்டிற்கு முன்பு ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றாண்டு காலத்தில் கிரேக்க அரிச்சுவடி உருவாக்கப்பட்டிருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது. போனீசியன் அரிச்சுவடியை சற்றே மாற்றியமைத்து கிரேக்க அரிச்சுவடியை உருவாக்கம் செய்திருக்கின்றனர். பெரிய எழுத்துக்கள் மட்டுமே ஆரம்ப காலங்களில் இருந்திருக்கிறது. எழுத்துச் சீர்திருத்தம் மூலம் இடைக்காலத்திலேயே வேகமாக எழுதும் பொருட்டு சிறிய எழுத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

கிரேக்க மொழியில் இருபத்தி நான்கு எழுத்துக்கள் உள்ளன. ஆல்பா, பீட்டா, காமா, டெல்டா, எப்சிலான், ஜெடா, ஈடா, தீட்டா, ஆயோடா, கப்பா, லேம்டா, மியு, நியு, சி, ஒமைக்ரான், ட்பி, ரோ, ஸிக்மா, ட்டா, அப்ஸிலான், பை, ஸை, ஸி, ஒமேகா போன்ற எழுத்துக்கள் கொண்டது கிரேக்க அரிச்சுவடி. கிரேக்கம் என்பது ஒரே நாடாக இல்லாமல் பல நாடுகளின் கூட்டமைப்பாக இருந்ததது. அனைத்து நாடுகளையும் வேறுபட்ட பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்த மக்களை இணைத்தது கிரேக்க மொழியே.

கிரேக்கத்தை டோரியர்கள் வசமாக்கியபின் அங்கு என்ன நிகழ்ந்தது என்பதற்கான வரலாற்று ஆதாரங்கள் கிடைக்காததால், அதன் பின் வந்த காப்பிய காலம் வரையான பகுதி கிரேக்கத்தின் இருண்ட காலமாக வரலாற்று ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. இக்காலத்திற்குப் பின்னரே கலை, இலக்கியம், வணிகம், தத்துவம் என மிகப்பெரிய அளவிலான எழுச்சியை, அதன் உச்சத்தை கிரேக்கம் அடைந்திருக்கிறது.

கிரேக்கம் ஆறுகளும், மலைகளும், கடற்கரைகளும் நிறைந்த நகர நாகரிகம் கொண்ட நாடாக இருந்திருக்கிறது. பண்டைக் காலத்திலேயே வணிகம் செழிப்போடு நடந்திருக்கிறது. தென்சின் சந்தை முக்கியமானதாக

குறிப்பிடப்படுகிறது. இந்தியாவின் நறுமணப் பொருட்களும், ஆப்பிரிக்காவின் தந்தங்களும், ஆப்கானிஸ்தானின் பேரீட்சைகளும், கூடவே அடிமைகளும் கிடைத்ததாக குறிப்புகள் சொல்கின்றன.

கிரேக்கர்களுக்கு போர்களில் பெருவிருப்பம் உண்டானது வியப்பிற்குரியது. ஓயாத சண்டைகளால் ஆண்களில் பெரும்பாலானவர்கள் படைகளில் இருந்திருக்கிறார்கள். பெண்களின் நிலை குடும்ப நிர்வாகம் மற்றும் குழந்தை வளர்ப்பு. விவசாயம், கால்நடை மேய்த்தல், மீன் பிடிப்பு, இரும்புத் தொழில்கள் பரவலாக இருந்திருக்கின்றன. பின்னர் ஆசிரியர்கள், இசைக்கலைஞர்கள், நடிகர்கள் போன்றோர் உருவாகியிருக்கின்றனர்.

உலக மக்களின் சிந்தனைகளில், வாழ்க்கை முறைகளில், எண்ணங்களில் மிகப் பெரியதொரு மாறுபாட்டை உண்டாக்கிய அச்சாணிக் காலம் பொது ஆண்டிற்கு முன்பான ஏழாம் நூற்றாண்டில் தொடங்குவதாக ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். சமயக் கோட்பாடுகளிலும் மெய்யியல் கருத்தாக்கங்களிலும் நவீன வழிமுறைகள் இக்காலத்திலேயே தோற்றம் பெற்றன. இதே காலத்தில் உலகின் பல பகுதிகளிலும் தனித்தனியான சிந்தனை மரபுகள் முளைவிட்டது விந்தையிலும் விந்தை.

கிரேக்கத்தில் காப்பிய காலமும், அதனைத் தொடர்ந்த பகுத்தறிவுக் காலமும், பேரரசர் அலெக்சாந்தர் காலமும், உலகின் சிந்தனைப் போக்கையே மாற்றியமைத்தன எனில் வியப்பில்லை. இதே காலகட்டத்தில் இந்தியாவில் சமணமும், பௌத்தமும், பாரசீகத்தில் சோராஷ்ட்ரியமும், சீனாவில் கன்பூசியமும், தாவோயியமும், யூதர்களின் ஓரிறைவாதமும், உரோமர்களின் குடியரசு அமைப்பும் சேர்ந்து பூமிப்பந்தின் வளமையை செழுமையை பண்பாட்டை மேல் நோக்கிய நகர்விற்கு அழைத்துச் சென்றதாக இந்த அச்சாணிக் காலம் அறிஞர்களால் புகழப்படுகிறது.

மக்களாட்சி, குடியரசு உள்ளிட்ட பல முதன்மைகளுக்குச் சொந்தமான கிரேக்க மண்ணின் புகழுக்குரியவர்கள் பலர். சமயச் சடங்குகளிலும் கடவுட் சிந்தனைகளிலும் ஊன்றிக் திளைத்திருந்த கிரேக்கர்களை, பகுத்தறிவுப் பாதையை நோக்கி மடை மாற்றியவர்களுள் சிறந்தவராக தத்துவஞானி சாக்ரடீஸ் (பொ ஆ.முன் 469-399) அறியப்படுகிறார். வானத்தையும் நிலத்தையும் ஆராய்கிறார் என

குற்றஞ்சாட்டப்பட்ட சாக்ரடீஸின் வழியில், அறிவுப்பாதையில், பல அறிஞர்கள் நடைபோட்டனர். அறிஞர் எபிகுரியஸ், கடவுள் தீமைகளை அழிக்க விரும்புகிறார், ஆனால் அவரால் முடியவில்லை என்கிறீர்களா? அப்படியானால் அவர் வல்லமை அற்றவர் என அறிவிப்புச் செய்ததற்கு சாக்ரடிசே காரணமெனில் வியப்பில்லை.

சாக்ரடீஸின் சம காலத்தவராக அறியப்படும் ஹெரடோட்டஸ் (பொ.ஆ.முன் 484-425) வரலாற்றின் தந்தை என புகழப்படுகிறார். மிகையாக பதிவுசெய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டாலும் அன்றைய உலக நடைமுறைகளை அறிந்து கொள்ள, பொது ஆண்டிற்கு முன்னான நானூற்றி நாற்பதுகளில் இவர் எழுதியதாகச் சொல்லப்படும் குறிப்புகள், உலகின் முதல் வரலாற்று ஆசிரியர் என இவரைப் பெருமிதப்படவைக்கின்றன என்பது தெளிவு.

ஹெரடோட்டஸ் பதிவுசெய்த வரலாறு நவீனக் கண்ணோட்டமோ விஞ்ஞான அணுகுமுறையோ கொண்டதாக இல்லை எனக் கூறப்பட்டாலும், ஐதீகக் கதைகள் வரலாற்றுச் செய்திகள் போன்றவற்றை சான்றுகளைக் கொண்டு பல தகவல்களை அளித்துள்ளார். எகிப்திய மினோஸ் நான்காவது அரசமரபு, புத்த சாதக கதைகள், அசிரிய, ஹிட்டைட் பேரரசுகள் போன்றவற்றைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அளித்துள்ளார். ஆப்பிரிக்க நைகா நதி மீது போனிசியர்கள் சென்ற விதம், மத்திய ஆசியாவின் பழக்க வழக்கங்கள், கருங்கடல் பகுதிகளின் கதைகள், டெல்பிக் கதைகள், ஏதென்ஸ் ஜனநாயக முறைகள், ஸ்பார்ட்டா வரலாறு போன்ற பல்வேறு விபரங்களையும், சாதி, மொழி, பழக்கவழக்கங்கள், உணவு போன்ற பலவகை தகவல்களையும் ஹெரடோட்டஸ் அளித்துள்ளாரென குறிப்பிடப்படுகிறது. எகிப்திய கிரேக்கச் சமயச் சடங்குகளுக்கிடையிலான ஒற்றுமைகளையும் பதிவு செய்துள்ளதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

வரலாற்றின் பயன்பாடாக மூன்று விபரங்களை ஹெரபோட்டஸ் வகுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. முதலாவது பயன் மனித செயல், மானிடப் பயன் மதிப்பு ஆகியன பற்றிய விபரங்கள் அழித்தொழிந்து போகாமல் பேணப்படல். இரண்டாவதாக கிரேக்கர் உட்பட எவருடையதாயினும் அரும்பெருஞ் செயல்கள் பிற சந்ததியினரின் நலன் கருதி எழுத்தில் பொறித்து வைக்கப்படல். மூன்று அரும்பெருஞ் செயல்கள் தற்செயலாய் இடம் பெறுவதில்லை. ஏதோ சில நோக்கங்களுக்காகவே இவை இடம்பெறுகின்றன. இவற்றை நுணுகி ஆராய்தல்

மூலம் பழமையிலிருந்து புதுமை பிறக்கிறது. எதிர்கால வழிகாட்டியாகப் பழமை அனுபவங்கள் தொழிற்படுகின்றன.

சாசுவதமற்ற இவ்வுலகிலே மனித உயிரும் அழியக் கூடியது. பெருமை பிடித்தவர்கள், பேராசை பிடித்தவர்கள், கடவுளின் பொறாமைக்கு உட்பட்டு அழிந்து போவார்கள் எனக் குறிப்பிட்டுள்ள ஹெரடோட்டஸ், கடவுள் நம்பிக்கை கொண்டவராகவும் அறியப்படுகிறார். காப்பியக் கவிஞர் ஹோமரின் எழுத்து நடையை இவர் பின்பற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது. கவிதை நடையிலே ஒருமைப்பாடு, நாடகத் தன்மையிலமைந்த எடுத்துரைப்பு, விரிவுரைகள், விவாதங்கள், சண்டைகள், காட்சி விவரணைகள், தெய்வ தலையீடு போன்ற உள்ளடக்கங்களில் இருவருக்கும் ஒற்றுமையுள்ளதாக ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பொது ஆண்டிற்குப் முந்தைய ஐந்தாம் நூற்றாண்டில் ஏதென்ஸ் மற்றும் ஸ்பார்ட்டா எனும் இரு கிரேக்க நாடுகளுக்கிடையே நிகழ்ந்த பெலொப்பனேசியப் போர்களின் வரலாற்றை எழுதிய ஏதென்சுகாரரான துஸிடிடெஸ் (பொ.ஆ.முன் 460-400) ஹெரடோட்டஸிற்கு இணையாக வரலாற்றின் தந்தையெனப் போற்றப்படுகிறார். மேலும், சற்று சிறப்பாக அறிவியல் ரீதியிலான வரலாற்றின் தந்தை எனக் குறிப்பிடப்படுகிறார் என்பது பொருத்தமானது. போரில் நிவாரண உதவிப்படைத் தளபதியாக துஸ்டிடெஸ் பணிபுரிந்திருக்கிறார்.

அரசியலுக்கும் மனித நாகரிக வளர்ச்சிக்கும் அதிகார பலம் அவசியம் என்ற உண்மையைக் கண்டடைந்த துஸிடிடெஸ், அதீனியக் கிரேக்கர்கள் கடலிலும், பார்த்தன்கள் தரையிலும் வெற்றி வீரர்களாக விளங்கியதையும், வேறுபட்ட போர் முறைகளைக் கொண்டு அவர்கள் மோதிய விதத்தையும் உள்ளது உள்ளபடி பதிவு செய்துள்ளதாகப் புகழப்படுகிறார். போரிடும் எப்பக்கமும் சாராமல் நடுநிலைத்தன்மையோடு கண்ணாரக் கண்டதை, போரில் ஈடுபட்டவர்களை நேரில் சந்தித்து, உடன்படிக்கைகள் போன்றவற்றை ஆராய்ந்து, சமயம், கற்பிதம், கற்பனை போன்றவை சாராமல் உண்மை விவரங்களை மாத்திரம் வரலாற்றுச் செய்தியாக்கிய வரலாற்று மேதை பாராட்டுக்குரியவரே. மனித செயல்களுக்கு கடவுள் பொறுப்பாக மாட்டாரென்பதையும், விளைவுகளுக்கெல்லாம் மனிதனே பொறுப்பேற்க வேண்டுமென்பதையும் குறிப்பிட்ட துஸிடிடெஸ் நாடகாசிரியர்கள் பாங்கைச் சார்ந்தவராகவும் அறியப்படுகிறார்.

கிரேக்கர்கள் நாடகக் கலையை வளர்த்தெடுத்தவர்களாக அறியப்படுகிறார்கள். அதிலும் துன்பீற்று நாடகங்கள்மேல் கிரேக்கர்களுக்கு மிகுந்த ஈடுபாடென்பதை அவர்களது நாடகங்களே சான்றுகளாக உரைக்கின்றன. கிரேக்கக் கடவுள் டையோனிசஸ் கொண்டாட்டங்களின் போது கிரேக்கர்கள் நாடகம் போடுவதை மரபாகப் பேணியிருக்கிறார்கள். இசைக் கருவிகளோடும் முகமூடிகளோடும் போடும் நாடகங்கள் அரங்கு நிறைந்தவைகளாக நடந்திருக்கின்றன.

ஈஸ்கிலஸ் (பொ.ஆ.முன். 525-456), ஸோபாக்ளிஸ் (பொ.ஆ.முன் 497-406), மற்றும் யூரிபிடஸ் (பொ.ஆ.முன் 480-460) மூவரும் கிரேக்கம் மற்றும் உலகின் மிகச்சிறந்த நாடகாசியர்களாக அறியப்படுகிறார்கள்.

துன்பீற்று நாடகங்களின் தந்தை எனக் குறிப்பிடும் அளவிற்கு ஈஸ்கிலஸ் சிறந்த துன்பியல் நாடகங்களாக இயற்றியுள்ளார். எழுபதிலிருந்து தொன்னூறு நடகங்கள் வரை எழுதியுள்ளதாக அறியப்பட்டாலும், ஏழு நாடகங்கள் மட்டுமே கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. துன்பத்தின் எல்லையையும், மாட்சிமையின் மகோன்னதத்தையும் ஒருங்கே காட்டுவது துன்பீற்று நாடகத்துக்கே உரிய பண்பென்றால், ஈஸ்கிலஸ் துன்பீற்று நாடகாசிரியர்களிலேயே மிகவும் துன்பீற்று நாடகங்களைப் படைத்தவராக அறியப்படுகிறார். பல நடிகர்கள் கொண்டதாக நாடகத்தை விரிவாக்கியதாகவும் கருதப்படும் இவர், நாடக ஆசிரியராக மட்டுமல்லாமல், நடிகர், தயாரிப்பாளர், ஒப்பனை, உடையலங்காரம், காட்சியமைப்பு போன்ற நாடக மேடையின் அத்தனை நுட்பங்களையும் கவனித்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

ஆஜக்ஸ், ஈடிபஸ் அரசன், ட்ரேஜென் பெண் உட்பட நூற்றி இருபது நாடகங்களை இயற்றியவராக அறியப்படும் ஸோபோக்லிஸ், எதிலும் ஒழுங்கும் கட்டுப்பாடும் அவசியம் என்பதை வலியுறுத்தியவராகவும், நாடகங்களை சிறப்பாக வடிவமைத்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

நாடகங்களில் நவீனத்தைப் புருந்தியவராக யூரிபெடஸ் அறியப்படுகிறார். தொன்னூறுக்கும் மேற்பட்ட நாடகங்களை இயற்றியிருப்பினும், ஏறக்குறைய பதினெட்டு நாடகங்களே கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவர் கிரேக்கத்தின்

அதீத துன்பியல் நாடகங்களுக்கு சற்று மாற்றாக, நகைச்சுவை மற்றும் காதல் பாத்திரங்களை முன்னெடுக்க முயற்சித்தவராகவும் பாராட்டப்படுகிறார்.

தத்துவம், வரலாறு, நாடகம் போன்றவற்றிற்குத் தந்தையரை அளித்த கிரேக்கம், மருத்துவத்திலும் சிறந்ததோடு தந்தையை அளித்ததில் வியப்பில்லை. நல்லறிவு, இரக்கம், அன்பு, நேர்மை போன்ற சிறந்த பண்பு நலன்கள் கொண்டவராக மருத்துவர்கள் சேவை புரிய வேண்டும் என அந்தக் காலத்திலேயே வலியுறுத்தியவரான இப்போக்கிரட்டீசு (பொ.ஆ.முன் 460-377), மருத்துவத் துறையின் குறிப்பாக மேற்கத்திய முறையான அல்லோபதி மருத்துவத்தின் முன்னோடியாகப் போற்றப்படுகிறார்.

ஹிப்போகிரட்டீசுக்கு முன்பு, கிரேக்க மருத்துவம் மந்திரங்களையும் கண்மூடித்தனமாக நம்பிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. நோய்கள் உண்டாவது மனிதர்கள் மீது சினம் கொண்டு கடவுள் வழங்கும் தண்டனையாகவே கருதப்பட்டது. இவற்றை மறுத்து, மனிதருக்கு ஏற்படும் நோய்கள் இயற்கையாக வருபவை எனப் பேசிய ஹிப்போகிரேட்ஸ் மாமனிதர் என்பதில் ஐயமில்லை.

நோய்களின் மூலக் காரணங்களை அறிய முற்பட்ட முதல் மருத்துவராகவும், நோய்களுக்கு மிகச் சில மருத்துகளையே பயன்படுத்தியவராகவும், உணவு, தூய காற்று, உடல் பயிற்சி ஆகிய இயற்கை மருத்துவமே நோய்களைக் குணமாக்கப் போதுமானவை என்றும் மருத்துவ சேவையாற்றிய இந்த அறிஞர், அறுவைச் சிகிச்சையை திருத்தமாகவும், நேர்த்தியாகவும், விரைவாகவும், தூய்மையாகவும் முடிக்க வேண்டுமென கூறிய அறிவுரைகளே ஹிப்போகிரட்டீசின் கட்டளைகள் என தற்போதைய மருத்துவ உலகில் வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

கிரேக்க மண்ணில் தத்துவங்கள் மலர்ந்து கொண்டிருந்தபோதுதான் ஓயாத போர்களும் நடந்து கொண்டிருந்தன. குறிப்பாக பெர்சியப் படையெடுப்புகள். மாரத்தான் போர்களும், பெலிப்போனியப் போர்களும், உரோமர்களின் தாக்குதல்களுமாக பொது ஆண்டிற்கு முன் பொற்காலமாக விளங்கிய கிரேக்கம், பொது ஆண்டுக்கு சற்று முன்பாகவே முடிந்து போனது வரலாற்றின் ஈடுசெய்ய இயலாத இழப்பெனவே கருதவேண்டியுள்ளது. அனைத்திலும் பொதுவுடமை

பேணப்படவேண்டும் எனப் பேசிய கிரேக்கமும் அதன் சிந்தனை மரபும் போற்றுதலுக்குரியதே.

தமிழ் நிலத்தில் பாண்டியர்களும் வட இந்தியாவின் மகா ஜனபதாக்களும் தோன்றிய பொதுஆண்டிற்கு முன்பான ஆறாம் நூற்றாண்டில், பாரசீகமென்றும் பெர்சியா என்றும் ஈலாமியா எனவும் பார்த்தியர் எனவும் அழைக்கப்பட்ட இந்திய வடமேற்குப் பகுதியான ஈரானில் அமைந்த பாரசீகப் பேரரசு பெருமிதங்கொள்ளத்தக்க ஒன்று என வரலாற்று ஆய்வறிஞர்களால் புகழப்படுகிறது.

நிலப்பரப்பில் உலகின் பதினெட்டாவது இடமும், மக்கள் தொகையில் பதினேழாவது இடமும் தேரானை அதாவது டெஹ்ரானை தலைநகராகவும் கொண்டுள்ள ஈரான், ஆசியாவின் மேற்கு, நடு, தெற்கு பகுதிகளின் தொடர்புக்கான முக்கியமானதொரு புவியியல்சார் பகுதியில் அமைந்துள்ளது. ஈரான் என்ற சொல்லுக்கு ஆரியர்களுடைய நிலம் எனும் பொருள் சுட்டப்படுகிறது. இது முதனிலை ஈரானியச் சொல்லான ஆர்யானா என்பதிலிருந்து பெறப்பட்டதாக சான்றுகள் சுட்டுகின்றன. ஈரானியர்களை அர்யான் எனவும், ஈரான் பகுதி ஏரான் என்ற சொல் மூலம் குறிப்பிடப்பட்டதாகவும் சசானிய கல்வெட்டு சான்றளிக்கிறது.

இன்றைய ஈரானின் தென்மேற்கு, தூர மேற்கு பகுதிகளில் செழித்திருந்த பண்டையக்கால நாகரிகம் ஈலாம் எனக் குறிக்கப்படுகிறது. பண்டைய மெசபதோமியாவின் ஒரு பகுதியாகவும் இந்நாகரிகம் அமைந்திருந்தது. ஈல மக்களால் ஹல்தம்பி என அழைக்கப்பட்ட ஈலத்தை சுமேரியர்கள் ஈலம் எனவும் அக்காடியன்கள் ஈலமு எனவும் குறிப்பிட்டிருக்கின்றனர். ஹீப்ரூக்களும் ஈலம் என்ற பெயரை பைபிளில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஈலம், ஈலமைட்டு மக்களால் பேசப்பட்ட ஈலமைட்டு மொழியாகும். பேச்சுவழக்கற்றுப்போன இம்மொழியின் கடைசிப் பதிவுகள், அலெக்சாந்தர் படையெடுப்பு வரை இருந்ததாகக் கூறப்படுகிறது. மற்ற மொழிகளோடு தொடர்பற்று காணப்படும் ஈலமைட்டு மொழி, தொல் திராவிட மொழியோடு தொடர்புடையதாக ஒரு கருத்து சுட்டப்படுகிறது.

ஈலத்தின் வரலாறு சுமேரிய அக்காடிய பாபிலோனிய மூலங்களிலிருந்தே தெரிய வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. பொது ஆண்டிற்கு முன்பான மூன்றாயிரத்து இருநூறு தொடங்கி, முதனிலை, பழைய, நடு, புதிய ஈலக்காலம் என

பொது ஆண்டிற்கு முன்பான ஐந்நூற்றி முப்பத்தொன்பது வரை ஈல வரலாற்றுக் காலம் எனக் குறிப்பிடப்படுகிறது. பொது ஆண்டிற்கு முன் ஐநூற்றி ஐம்பதில் உருவான அகமனிட் பேரரசு அனைத்திலும் சிறந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அகமெனாய்டு பேரரசிற்குப் பின் செல்யூசியப் பேரரசும், பின்னர் பார்த்தியப் பேரரசும், அதன் பின்னர் சசானியப் பேரரசும் தோன்றி, பொது ஆண்டின் அறுநூற்றி முப்பத்தி யேழில், இசுலாமியரின் படையெடுப்போடு ஈரானில் காலிபாக்களின் ஆட்சி தொடங்கியதாக அறியப்படுகிறது.

செவ்வியல் காலத்தின் மிகப்பெரும் பேரரசாக விளங்கிய பாரசீகப் பேரரசு (பொ.ஆ.முன் 550-330) அகமனீட் பேரரசு, அகாமனிசியப் பேரரசு, அக்கீமெனிட் பேரரசு, ஹகாமனியப் பேரரசு, அகமனிதுப் பேரரசு என பலவாறாக அழைக்கப்படுகிறது. இப்பேரரசை நிறுவியவர் மகா சைரஸ். தென்மேற்கு ஈரானில் ஒரு சிற்றரசராக இருந்த மகா சைரசு, மெடிஸ், லிதியா, பாபிலோனியா போன்ற பெரும் பேரரசுகளை வெற்றிகொண்ட மாபெரும் வீரராக வரலாற்றில் இடம் பெற்றுள்ளார்.

பேரரசர் சைரசின் பாரசீகப் பேரரசு, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகியவற்றின் பகுதிகள், நடு ஆசியா, சின்ன ஆசியா ஆகியவற்றின் பகுதிகள், பெரும்பாலான கருங்கடல் கரையோரப் பகுதிகள், ஈராக், வடக்கு சவுதி அரேபியா, ஜோர்தான், இஸ்ரேல், லெபனான், சிரியா, எகிப்தின் குறிப்பிடத்தக்க குடியேற்றப் பகுதிகள், லிபியா ஆகியவற்றை உள்ளடக்கி ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா என மூன்று கண்டங்களிலும் பரந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

அரசர்களுக்கெல்லாம் அரசர், பெர்சியாவின் அரசர், அன்ஷானின் அரசர், மிடியாவின் அரசர், பாபிலோனின் அரசர், சுமேர் மற்றும் அக்காடின் அரசர் மற்றும் உலகின் நான்கு முனைகளுக்குமான அரசர் எனப் போற்றப்படும் மாக சைரஸின் (பொ.ஆ.முன் 590-529) இயற்பெயர் குரூஷ் எனவும் பார்ஷ் என அழைக்கப்படும் தென் மேற்கு ஈரானின் மெடிஸ் பேரரசின் ஒரு பகுதியான பெர்சிஸ் மாநிலத்தில் பிறந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

மெடியர்களும், பாரசீகர்களும் தோற்றத்தில் மொழியிலும் மிக நெருங்கிய உறவுடையவர்களாக இருந்ததால் ஒன்றுபட்ட பாரசீகத்தில் மெடிஸ்

சட்டங்களையும், நிருவாக நடைமுறைகளையும் சைரஸ் பின்பற்றியதாக கூறப்படுகிறது.

பேரரசர் சைரஸ் மிகச் சிறந்த திறமை வாய்ந்த போர்ப்படைத் தலைவராக விளங்கினாலும் அவரது நல்லாட்சியே அவருக்கு பெரும் புகழைக் கொடுத்ததாக வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றது. உள்நாட்டுச் சமயங்களிடமும், மரபுகளிடமும் மிகுந்த சகிப்புணர்வோடு நடந்து கொண்டாரென்றும், அவர் காலத்திலிருந்த அரசர்கள் அனைவரிலும் மிகவும் மனிதாபிமானம் வாய்ந்தவராக விளங்கினாறென்றும் வரலாற்றில் இடம் பெறுகிறார்.

உலகின் மிகத் தொன்மை வாய்ந்த நாகரிகமென புகழப்பட்ட மெசப்பதோமியாவும், எகிப்தும், மகா சைரஸ் வெற்றி வரைக்கும் தங்களது புகழினைக் கொண்டிருந்ததையும், இவரது வெற்றிக்குப் பின்னர் இந்நாகரிகங்கள் மீண்டும் தழைத்தெழ இயலாமலே போய்விட்டதையும் வரலாற்றாசிரியர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தவராகவும் தபால் சேவையை முதலில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தவராகவும் அறியப்படும் சைரஸ், யூதர்களாலும் மீட்டர் எனக் கொண்டாடப்படுகிறார். பாபிலோனியர்களில் இரண்டாம் நெபுசத்நேஸர் இஸ்ரேலியர்களின் ஜூடோவை பொ.ஆ.முன் ஐநூற்றி தொன்னூற்றி ஏழாம் ஆண்டிற்கும் ஐநூற்றி எண்பத்து ஏழாம் ஆண்டிற்கும் இடையில் ஆண்ட காலத்தில், ஜூடோவின் வசதியான மக்கள் அரசர் ஜெடசியாவோடு பார்லோனுக்கு கடத்தப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. பொ.ஆ. முன் ஐநூற்றி முப்பத்தொன்பதில் பாபிலோனியாவை வெற்றிகொண்டு, ஐநூற்றி முப்பத்தெட்டாமாண்டில் யூதர்களை விடுவித்தவராக சைரஸ் குறிப்பிடப்படுகிறார். ஹீப்ரு பைபிளின் எஸ்ரா-நெகமய்யா புத்தகம் இசுரேலியர் பாபிலோனியர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஜீயோனுக்கு திருப்பவும் வந்ததைக் குறிப்பிடுகிறது.

பேரரசர் சைரசின் அரசாட்சி உலக வரலாற்றல் குறிப்பிடத்தக்க அளவிலான மாறுதல்களுக்குக் காரணமாக அமைந்தது. பெர்சியர்களின் தத்துவமும், இலக்கியமும், மதமும் அடுத்து வந்த ஆயிரம் ஆண்டு காலத்திற்கு குறிப்பிடத்தக்க அளவிலான செல்வாக்கைச் செலுத்தின. பின்னர் வந்த இஸ்லாம் மதத்தின்

வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் இஸ்லாமியப் பொற்காலத்திற்கும் ஈரானின் பங்களிப்பு அபரிமிதமானதாகவும் அமைந்தது.

மகா சைரஸிற்குப் பிறகு அவரது மகன் இரண்டாம் கேம்பிசெஸ், பாரசீகப் பேரரசராகிறார். பொது ஆண்டிற்கு முன் ஐந்நூற்றி இருபத்தைந்தாம் ஆண்டு நடைபெற்ற எகிப்திய அரசர் மூன்றாம் சாம்திக்கோடு நடைபெற்ற பெலுசியம் போரில் வென்று, எகிப்து வரை அகமனிட் பேரரசை விரிவுபடுத்துகிறார். புகழ்பெற்ற சைரஸ் உருளை ஆப்பெழுத்து சாசனத்தில், தந்தை சைரிஸோடு மர்ட்டுக் கடவுளை கேம்பிசெஸ் வழிப்பட்டதாக பதியப்பட்டுள்ளது. வரலாற்றாசிரியர் ஹெரடோட்சும் இவர்களைப் பற்றி குறித்துள்ளார்.

வரலாற்றில் நேரடியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் மாரத்தான் போர், கிரேக்க நகர அரசுகள் மக்களாட்சி வழிமுறையைத் தேர்ந்தெடுக்கவும், ஐரோப்பாவில் நாகரிக வளர்ச்சி ஏற்படவும் வித்திட்டதாக குறிப்பிடப்படுகிறது.

அகமனாய்டு அரசாட்சியின் மூன்றாம் அரசரான முதலாம் டேரியஸ் (பொ.ஆ.முன் 550-486), இரண்டாம் கேம்பிசெஸ் இளைய சகோதரரை அரியணையை விட்டு கீழிறக்கி, அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய ஆறு பெர்சிய குடும்பத்தார்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்ததாக ஒரு வரலாற்றுத் தகவல் கூறப்படுகிறது. இவரது ஆட்சியின் முக்கிய நிகழ்வாக, கிரேக்கத்தின் அயோனின் மக்கள் பாரசீக அரசாட்சிக்கெதிராக ஏதென்ஸ் மற்றும் எரித்ரியா ஆதரவோடு கிளர்த்தெழுந்ததையும் அதனை அடக்க டேரியஸ் மேற்கொண்ட கிரேக்கப் படையெடுப்புகளும் குறிப்பிடப்படுகிறது.

திரேஸ், மாசிடோனியாவை வெற்றி கொண்டு எரித்ரியாவை அழிவுக்குள்ளாக்கிய டேரியஸ் படையால் ஏதென்சு நகரை கைப்பற்ற இயலவில்லை. பொது ஆண்டிற்கு முன் நானூற்றித் தொன்னூறாம் ஆண்டில் நடைபெற்ற மாரத்தான் போரில் பங்கு கொண்ட பத்து பழங்குடிகளில் ஒருபழங்குடித் தலைவரான மில்டியேஸ் இப்போரினால் பெரும் புகழ் பெறறது வரலாற்றின் உச்சம். கிரேக்கப் படைகளுக்கு தளபதியாக இருந்தவர் காலிமாக்கஸ். பாரசீகப் படைகளின் தளபதி டேடிஸ்.

மிகப்பெரிய பரசீகப் படையை வெற்றி கொண்ட கிரேக்கத்தின் வெற்றிச் செய்தியை ஏதென்ஸ் நகர மக்களுக்குச் சொல்லவும், மக்களை முன்னெச்சரிக்கை

செய்யவும் போர்க்களத்திலிருந்து இருபத்தாறு மைல் தொலைவிலிருந்த ஏதென்சுக்கு ஓடிவந்த ஓட்ட வீரரான மீடிப்பிடஸ் அந்த வெற்றிச் செய்தியை அறிவித்ததாக வரலாறு எழுதப்பட்டுள்ளது. இதே பீடிப்பிடிஸ் உதவிகேட்டு ஸ்பார்டாவிற்கும் முன்னர் நிற்காமல் ஓடியதாகவும் குறிப்பிடப்படுகிறார். இதனாலேயே இப்போருக்கு மாரத்தான் போர் என்றும் தற்காலத்தைய நீண்ட தூர ஓட்ட பந்தயம் மாரத்தான் என அழைக்கப்படுவதும் வரலாற்றுச் செய்தி.

கிரேக்கர்களுக்கும் பாரசீகர்களுக்குமிடையிலான போராட்டங்கள் மாரத்தான் போருக்கு முன்னரே தொடங்கிவிட்டன. பொது ஆண்டிற்கு முன் நானூற்றி தொன்னூற்றி ஒன்பதாம் ஆண்டு ஆரம்பித்த இருவருக்குமான தொடர் சண்டைகள் நானூற்றி நாற்பத்தொன்பது வரை சுமார் ஐம்பதாண்டுகள் தொடர்ந்து கொண்டேயிருந்திருக்கின்றன.

தெர்மோபைபைலே போர் எனப்படும் இரண்டாம் பெர்சியன் போரின் தளபதியாக இருந்த ஸ்பார்ட்டாவின் புகழ்பெற்ற அரசரான முதலாம் லியோனிடாஸ் முந்நூறு வீரர்களுடன் பாரசீகர்களின் பெரும்படையை எதிர்த்தவராக வரலாற்றில் புகழப்படுகிறார். துணிவுக்கும், தியாகத்திற்கும் பெயர்பெற்ற லியோனிடாஸ் கிரேக்கத் தொன்மமான ஹெரகிளிஸ் மரபில் வந்தவராகக் குறிப்பிடப்படுகிறது.

ஜீயஸ் மற்றும் அல்சிமின் மகனாகவும், ஆம்பிடிரையானின் வளர்ப்பு மகனாகவும் அறியப்படும் கிரேக்கத் தொன்மவியலின் கடவுள் ஹெர்கில்ஸ், மைசீனியாவை உருவாக்கியவரும், ஜீயஸ் மற்றும் டானேயின் மகனுமான புகழ்பெற்ற பெர்சியஸின் பேரன் மற்றும் சகோதரனாக அறியப்படுகிறார். தலைமுடிக்குப் பதிலாக நச்சுள்ள பாம்புகளையும், பார்த்தாலே சிலையாகிவிடுவரென்றும் கருதப்பட்ட கார்கான் மெடுசாவை அழித்தவராகவும், செடஸ் பூதத்திடமிருந்து அன்ட்ரோமீடாவைக் காப்பாற்றியவருமான பெர்ஸியஸ் போலவே ஹெர்குலிஸ் என உரோமப் பேரரசர்களால் கொண்டாடப்பட்ட ஹெர்குலிஸிம் பல வீர தீர செயல்களோடு தொடர்புடைய ஒலிம்பிக் கடவுளாக கிரேக்கத்தில் வழிபடப்பட்டிருக்கிறார். கொழுத்த கன்றின் கறியை பக்குவமாகச் சமைத்து பக்தியோடு படையலிடப்பட்ட இறைச்சியை ஹெர்குலிஸிம் மற்ற கிரேக்க கடவுளர்களைப் போல் விருப்பமுடன் உண்டிருப்பார்.

ஓலிம்பிக் மலையின் வாயிற்காப்பாளர், பலம், வீரதீரம், விளையாட்டு, உடல்நலம், வேளாண்மை, வளம், வாணிபம், மக்களைக் காக்கும் கடவுள் எனப் பலவாறாக அறியப்படும் ஹெர்கில்ஸ், பன்னிரெண்டு மிகப்பெரிய சாசக வேலைகளை முடித்தவராகப் புகழப்படுகிறார்.

கிரேக்கர்களின் பொற்காலத்தை முடிவுக்கு கொண்டு வந்த கிரேக்க உள்நாட்டுப் போர் பல வகைகளிலும் முக்கியமானதாக வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. கிரேக்கத்தின் மைய நிலம், ஆசியா மைனர், சிசிலித்தீவு போன்ற பகுதிகளில், ஏதென்சு குழுவிற்கும் ஸ்பார்ட்டன்களைத் தலைமையாகக் கொண்ட பெலிப்பனோசியக் குழுவிற்கும் நடைபெற்ற தொடர்ச்சியான போர்களில், பாரசீகத்தின் ஆதரவோடு ஸ்பார்டா வெற்றிபெற்ற போதிலும் பாதிக்கப்பட்டது அனைத்து கிரேக்கப் பகுதிகளுமே. குறிப்பாக ஏதென்சு நகர் போர்களால் ஏற்பட்ட இழப்புகளிலிருந்தே பின்னர் மீளவேயில்லை எனக் கூறப்படுகிறது. அதோடு ஜனநாயகம் செழித்து வளர்ந்து வந்த பண்டைய கிரேக்க முறைமைகளும் மாற்றமடைந்து அருகிலிருந்த மற்றொரு தீபகற்பமான உரோம் வரலாற்றில் பெருமிதங்கொள்ளும் படியாக மாறிக் கொண்டிருந்தது வரலாற்று அறிஞர்களுக்கு நற்செய்தியே.

பொது ஆண்டிற்கு முன்னர் நானூற்றி அறுபதாமாண்டில் கிரேக்கர்களிடையேயான உள்நாட்டுப் போர் தொடங்கியதாகக் குறிப்பிடப்பட்டாலும் நானூற்றி முப்பத்தி ஒன்று மற்றும் நானூற்றி நான்காம் ஆண்டுகளிடையே நடைபெற்ற போரினை மூன்று நிலைகளாகப் பிரிப்பர் வரலாற்றறிஞர். போரின் முடிவில் ஏதென்சில் வெளியேற்றப்பட்ட குடியரசு அமைப்பு, ஸ்பார்டாவில் மையங்கொண்டது வியப்பானது. மாசிடோனின் இரண்டாம் பிலிப் அரசர் கிரேக்கத்தைப் பிடிக்கும் வரை இவர்களுக்கிடையேயான மோதல் தொடர்ந்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அரசர் பிலிப் மகனே மிகக் குறுகிய காலத்தில் உலகையே வெற்றி கொண்ட மகா அலெக்ஸாந்தர்.

எங்கும் கடவுளர்களால் நிறைந்திருந்த கிரேக்கத்தில், கடவுள் என்பவர் யார் எனக் கேள்விகேட்ட முதல் பகுத்தறிவாளராக அறியப்படும் சாக்ரடீசு, உலகின் முதல் தத்துவஞானியாகப் புகழப்படும் சாக்ரடீசு, பெலிப்பனோசியப் போர்களில் பங்கு பெற்று, பின்னர் கல்லுடைக்கும் தொழில்செய்து தமது குடும்பத்தை காப்பாற்றியவராகக் குறிப்பிடப்படுகிறார்.

சிறுவனாக இருந்தபோதே கேள்விகள் கேட்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தாராம் இந்த மெய்யியலாளர். எதைப்பற்றியும் கேள்வி கேட்டு அது பற்றிய உண்மையை அறிந்து கொள்வதில் நாட்டம் கொண்டிருக்கிறார். நீதி, ஆத்மா, கடவுள், சமூகம், அரசு போன்ற அனைத்தையும் ஆய்வுக்கு உட்படுத்திய சாக்ரடீஸ், மக்களைச் சந்திப்பதிலும் அவர்களோடு உரையாடுவதிலும் ஆர்வமாக இருந்திருக்கிறார்.

சாக்ரடீஸின் கேள்வி கேட்கும் முறை ஏதென்சு நகர இளைஞர்களைக் கவர்ந்ததால் இவரது கேள்வி கேட்கும் முறை அவர்களிடமும் தொற்றிக் கொண்டது. விளைவு ஏதென்சு நகரமெங்கும் ஏன், எதற்கு, எப்படி என்ற கேள்விகள் ஒலிக்க ஆரம்பித்து விட்டன. சாக்ரடீசின் கொள்கையால் ஈர்க்கப்பட்ட பிளேட்டோவும் இளைஞர் கூட்டத்தில் இணைந்தார்.

அறிவின் மீதும், அறிஞர் மீதும் வெறுபுற்ற சிலர், இளைஞர்களைத் தூண்டிவிடுவதாகவும், மத எதிர்ப்பைக் கிளப்பி விடுவதாகவும் ஏதென்சு அரசுக்கு ஆபத்தை விளைவிப்பதாகவும் சாக்ரடீஸ் மீது குற்றம் சுமத்தி நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

இளைஞர்களைக் கெடுக்கிறார், கிரேக்கர்கள் தொழுது வணங்கும் கடவுள்களைத் தூற்றி ஒரு புதுக் கடவுளைத் தாமே உருவாக்குகிறார், வானத்தைப் பற்றியும் நிலத்தைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார், சந்திரனை மண் என்றும் சூரியனைக் கல் என்றும் சொல்கிறார், புதிய மதக் கோட்பாடுகளைப் புகுத்துகிறார், இவருக்கு கடுமையான தண்டனை தரவேண்டுமென்ற மெலிடாஸின் குற்றச்சாட்டுக்கு ஆதரவாக இருநூற்றி எண்பத்தியொரு வாக்குகளும், சாக்ரடீஸை மன்னித்து விடுமாறு இருநூற்றி இருபது வாக்குகளும் பதிவாகின.

கிரேக்கத்திற்கு நன்மையே செய்ததாகவும் தண்டனைக்குப் பதிலாக பாராட்டும் பரிசுமல்லவா கொடுத்திருக்கவேண்டும் எனவும் வாதிட்ட சாக்ரடீஸின் குரல் நீதிமன்றத்தின் எடுபடவில்லை. கண் கலங்காமல், சிரித்த முகத்துடன் ஒரு கோப்பை நச்சையும் தத்துவ ஞானத்தின் தந்தை குடித்து முடித்தார்.

தலைசிறந்த தத்துவஞானியாக, கணிதவியல் அறிஞராக அறியப்படும் பிளேட்டோ (பொ.ஆ.முன். 427-347) சாக்கிரட்டீசின் சீடர் மற்றும் அரிஸ்டாட்டிலின்

குரு. பிளாட்டோவே மேற்குலகின் முதல் கல்விக் கூடமான பிளோட்டோனிக் அகாதெமியை ஏதென்ஸ் நகரில் நிறுவியதாக அறியப்படுகிறார்.

சிறந்த எழுத்தாளராகப் புகழப்படும் பிளாட்டோ, சாக்ரடீஸின் கேள்வி பதிலான முப்பத்தாறு உரையாடல்களையும், பதின்மூன்று கடிதங்களையும் எழுதியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறார். இந்த உரையாடல்கள் தத்துவம், தர்க்கம், நெறிமுறைகள், சொல்வளம் மற்றும் கணிதம் உள்ளிட்ட பல துறைகளை கற்பிக்கப் பயன்பட்டிருக்கின்றன.

அநீதியை விட நீதி சிறந்ததா.. நேர்மையான மனிதன் நேர்மையற்ற மனிதனை விட நல்வாழ்வு பெறுகிறானா.. போன்ற வினாக்களை எழுப்பி பல விதமான உரையாடல்கள் மூலமாக, நீதி அநீதியைவிடச் சிறந்தது என்ற முடிவினை உரைத்த சாக்ரடீசின் உரையாடல் நூலான குடியரசு (பிளடோனிஸ் டி பைப்னிகா), பொது ஆண்டிற்கு முன் முன்னூற்றி எண்பதாமாண்டு பிளேட்டோவால் எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்நூல் பிளாட்டோவின் அறியப்பட்ட ஆக்கங்களிலே மிகவும் சிறந்ததொன்றாக ஆய்வாளர்களால் போற்றப்படுகிறது. மேலும் மெய்யியல், அரசியல், தத்துவம், வரலாறு போன்ற துறைகளிலும் மிகுந்த தாக்கமேற்படுத்திய நூலாகவும் அறியப்படுகிறது.

தே ரிபப்ளிக் நூல் நீதியை வரையறுப்பதுடன் நீதி மிகு மாந்தர், நகரம், அரசுகளின் தன்மையையும் ஒழுங்கையும் விவரிக்கிறது. நூலில் சாக்ரடீசும் பிற ஏதென்சு நகரத்தினரும் வெளிநாட்டவரும் நீதியின் பொருள் குறித்து உரையாடுகின்றனர். நேர்மையான மனிதன் நேர்மையற்ற மனிதனை விட மகிழ்ச்சியாக உள்ளானா என்பதை ஆராய்கின்றனர். அக்கால பல்வேறு ஆட்சிகளைக் குறித்தும் ஒப்பிட்டு பேசுகின்றனர். பங்கேற்போர் உயிரின் வெவ்வேறு வடிவங்கள் குறித்தும் அழியாமை குறித்தும் கலந்துரையாடுகின்றனர். சமூகத்தில் மெய்யியலாளர்கள் மற்றும் கவிஞர்கள் பங்கு பற்றியும் உரையாடல் மேற்கொள்கின்றனர்.

தனிநபர்களும் சமூகங்களும் ஒரே தன்மையுடையனவாக பிளாட்டோ கருதினார். மனம், உயிர் மற்றும் உடல் எனும் மூன்று வகையானவற்றால் மக்கள் இயக்கப்படுவதாக உணர்ந்தார். ஒன்றைக் குறித்து ஆராய்வதற்கும்

சிந்திப்பதற்குமான மனம். மனித உடலை மேற்பார்வை காணும் சுயம் அல்லது ஆவி. வேலை செய்ய, ஒன்றை விரும்ப, வெறுக்க, அனுபிக்க உடல்.

ஓர் நல்ல மனிதன் உடல், உயிர், மனம் என இவை எல்லாவற்றாலும் இயக்கப்பட்டாலும், இறுதியில் மனமே மற்ற இரண்டு தேவைகளையும் கட்டுப்படுத்தும். இந்த மூன்று கூறுகளின் தேவைகளை நிறைவேற்றாதவரும், மற்ற இரு கூறுகளை மனதால் கட்டுப்படுத்த இயலாதவரும் மகிழ்ச்சியின்றி வாழ்வர். மனதால் கட்டுப்படுத்த இயலாது மனநிலை பிறழவும் கூடும் என குடியரசு நூலின் உரையாடல்கள் தெரிவிக்கின்றன.

பிளேட்டோ மூன்று வகையான மக்களால் சமூகம் இயக்கப்படுவதாகக் கருதினார். சமூக நலனுக்காகச் சிந்திக்கும் மெய்யியலாளர்கள், அச்சமூக அமைப்பைக் காக்கும் படைவீரர்கள் மற்றும் அச்சமூகத்தின் பணியாளர்கள்.

சமூகத்திற்கு மூன்று வகையான மக்களும் தேவை. மெய்யியலாளர்கள் மட்டுமே நல்ல மனிதர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் தங்கள் மனம் கூறுவதை கேட்கமாட்டார்கள். பணியாளர்கள் மனம் மற்றும் சுயம் கூறுவதையும் கேட்க மாட்டார்கள். இதனால் மெய்யியலாளர்களே அரசாட்சி செய்ய வேண்டும். மற்றவர்கள் படைவீரர்களாகவும் பணியாளர்களாகவுமே இருக்க வேண்டும் என்பதும் பிளாட்டோவின் தீர்மானம்.

சாக்ரடீஸ், பிளேட்டோ வரிசையில் மூன்றாவதாக வரும் தத்துவஞானி அரிஸ்டாட்டில் (பொ.ஆ.முன் 384-322). பிளேட்டோவின் அகாதமியில் கல்வி பயின்றவராகக் குறிப்பிடப்படுகிறார். மாசிடோனிய மன்னர் இரண்டாம் பிலிப்பின் அழைப்பை ஏற்று அலெக்சாந்தருக்கு பாடம் கற்பித்திருக்கிறார். மாசிடோனிய ராயல் அகாதெமியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சிறந்த நோக்கம் எனப் பொருள்படும் பெயரைக் கொண்ட அரிசுட்டாட்டில், பல்துறை வல்லுநராக புகழப்படுகிறார். இயற்பியல், இசை, தருக்கம், சொல்லாட்சி, மொழியியல், அரசியல், ஒழுக்கவியல், உயிரியல், விலங்கியல் என அனைத்துத் துறை சிந்தனைகளிலும் செல்வாக்குச் செலுத்தக் கூடியவராக இருந்த அரிசுட்டாட்டில், மேற்கத்தியத் தத்துவத்தின் மிக முக்கியமான நிறுவனராகவும் போற்றப்படுகிறார்.

அறிவின் தத்துவத்தின் மெய்யியலின் இந்த மூன்று ஞானிகளுக்கு முன்னரே கிரேக்கத்தில் தத்துவ சிந்தனைகள் சிறப்புற்று விளங்கியதை அறிய முடிகிறது. கிரேக்கத் தொன்மத்தின் ஏழு ஞானியர்களுள் ஒருவரான தேலஸ் (பொ.ஆ.முன் 624-546) முதன்மையானதொரு மெய்யியல் ஞானியாகப் போற்றப்படுகிறார். முதல் கணிதவியலாளராக அறியப்படும் தேலஸ், அறிவியலின் தந்தை எனவும் நினைவு கூறப்படுகிறார். இயற்கை நிகழ்வுகளை விளக்குதல், அளவியல் வளர்ச்சி, கருதுகோள்கள் உண்டாக்குதல், வடிவக் கணிதவியல் போன்றவற்றில் தேலஸ் சிறப்புற்று விளங்கியிருக்கிறார்.

தேலஸின் மாணவரான அனாக்ஸிமான்டர் (பொ.ஆ.முன் 610-546) ஆய்வுகளை எழுத்தில் எழுதிவைத்தவராக அறியப்படுகிறார். நீரியல் சுழற்சி பற்றி முதலில் கூறியவராகவும், படிம வளர்ச்சிக் கொள்கையை முதலில் வெளியிட்டவராகவும், நிலவரைத் தகவல்களை கண்டறிந்தவராகவும் அனாக்சிமான்டர் புகழப்படுகிறார்.

அனாக்சிமான்டரின் மாணவராக அறியப்படும் பிதகோரஸ் (பொ.ஆ.முன் 570-495) எண்களின் தந்தை எனப் போற்றப்படுகிறார். குருவின் கட்டளைப்படி உயர் ஞானம் பெற எகிப்து சென்ற பிதகாரசு, நாற்பது நாட்கள் உண்ணாவிரதமிருந்து மத குருக்கள் நடத்திய எகிப்து மறை பள்ளிக் கூடங்களில் படித்தவராக அறியப்படுகிறார். பிதகாரஸ் அவரது புகழ்பெற்ற பிதகாரஸ் தேற்றத்திற்காக மிகவும் கொண்டாடப்படுகிறார். பூமி தட்டையானது எனும் கருத்தை மாற்றி கோள வடிவமானது என்ற கருத்தை முதலில் முன்வைத்தவராகவும் பித்தாகரஸ் அறியப்படுகிறார். வானியல், இசை சார் கோட்பாடுகள், மெய்யியல், அரசியல் போன்றவற்றிற்காக கணிதவியலாளர்களாலும் அறிவியலறிஞர்களாலும் மதிக்கப்படும் மேதையாக பிதகாரசு விளங்குகிறார். இவர் எழுதியதாகக் குறிப்பிடப்படும் நூல்களில் ஒன்று கூட கிடைக்கவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.

மிகச் சிறந்த கணித மேதையாக அறியப்படும் ஆர்க்கிமிடீஸ் (பொ.ஆ.முன் 287-212) கணிதம், இயற்பியல், பொருளியல், வானவியல், கண்டுபிடிப்புகள் போன்றவற்றில் மிக்க ஞானம் கொண்டவராகவும், ஆர்க்கிமிடீஸ் கொள்கை, ஆர்க்கிமடிஸ் திருகு, பாய்ம நிலையியல், நெம்புகோல், நுண்ணளவியல் போன்றவைகளுக்காகவும் புகழப்படுகிறார்.

அறிஞர் தேலஸ் காலத்தில் வாழ்ந்தவராக அறியப்படும் கிரேக்க நாட்டு ஈசாப், நீதிக் கதைகளுக்காக மிகவும் அறியப்படுகிறார். இவரது கதைகள் ஈசாப் நீதிக்கதைகள் என அழைக்கப்பட்டு பெரும் புகழைப் பெற்றிருக்கின்றன. விலங்குகள் வாயிலாக உணர்த்தப்படும் நீதிநெறிகள், மானுட சமுதாயத்திற்கும் ஏற்புடையதாக இருப்பதே ஈசாப் கதைகளின் சிறப்பம்சமாகக் கூறப்படுகிறது.

ஒரு சிங்கமும் கரடியும் கூட்டாக வேட்டையாடி ஒரு மானைப் பிடித்தன. மானைப் பங்கு போடுவதில் சிங்கமும் கரடியும் பயங்கரமாகச் சண்டை செய்தன. வெகு நேரம் சண்டை செய்ததால் இரண்டும் களைப்படைந்து விட்டன. அதனால் இரண்டும் தரையில் சாய்ந்தன. அந்த சமயம் வெகு தூரத்திலிருந்தே இவர்களின் சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு குள்ளநரி ஓடி வந்த அங்கிருந்த மானைத் தூக்கிகொண்டு ஓடிவிட்டது. சிங்கமும் கரடியும் ஒன்றும் செய்ய முடியாமல் குள்ள நரியைப் பார்த்தபடி கீழே தரையில் கிடந்தன. இரண்டும் வேட்டையில் கிடைத்த இரையை இழந்தோம் என்று வருத்தப்பட்டன. சிங்கமும் கரடியும் குள்ளநரியும் எனும் இக்கதையின் நீதி சண்டையும் சச்சரவும் என்றும் இரு தரப்பினருக்கும் தீமையே.

தத்துவ ஞானிகளும் அறிவியல் அறிஞர்களும் நிறைந்திருந்த கிரேக்கத்தில், மூடநம்பிக்கைகளும் குறி, சோதிடம், ராசி, பரிகாரம் என அனைத்தும் பரவலாக இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. இத்தகைய போக்கு கிரேக்கம் என்றில்லாமல் எகிப்து, மெசப்தோமியா, இந்தியா, சீனா எனப் பண்டைய கால நாகரிகங்கள் அனைத்திலுமே கடைபிடிக்கப்பட்டிருக்கின்றன.

கிரேக்கத்திலுள்ள கன்னி அதீனாவின் புகழ்பெற்ற பார்த்தினன் கோவில் கிரேக்கக் கட்டிடக் கலைக்கும், கிரேக்கத் தொன்மவியலுக்கும் கிரேக்கப் பழமைக்கும், நாகரிகத்திற்கும் தற்போதும் நல்லதொரு சான்றாக விளங்கிவருவதாக வரலாற்றாய்வாளர்களால் புகழப்படுகிறது. இக்கோவில் உலகின் புகழ்பெற்ற கட்டிடங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. நகர காவல் கடவுளான அதீனாவின் இக்கோவில் ஏதென்ஸின் அக்ரோபோலிஸில் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருவது சிறப்பிற்குரியது. பாரசீகப் போர்களில் கிரேக்கத்தையும் ஏதென்சையும் பாதுகாத்தற்காக பாரசீகர்களால் அழிக்கப்பட்ட பழைய கோவிலொன்றுக்கு மாற்றாக இந்த பார்த்தினன் கோவில் பொது ஆண்டிற்கு முன் 447 முதல் 438 வரையிலான

காலகட்டத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டதாக வரலாற்று அறிஞர்கள் பதிவிட்டிருக்கின்றனர்.

பாரசீகர்கள் கோவிலை அழித்ததற்குக் காரணம் அவர்களின் கடவுளும், மதமும், வழிபாடும், சடங்கு முறைகளும் வேறானது என்பதே.

மகா சைரஸ் பின்பற்றியது சொராஷ்ட்ரியமாக குறிப்பிடப்படுகிறது. சொராஷ்ட்ரிய மதத்தை உருவாக்கியவர் சொராஷ்டிரர். சரத்துஸ்திரர், சௌராஷ்டிரர், ஜோரோஸ்ட்ரியர், பார்சிகள், நெருப்பு வணக்கத்தார் எனப் பலவாறாக பெயரிடப்படும் பாரசீகர்களின் சொராஷ்ட்ரிய சமயம், பொது ஆண்டிற்கு முன்பான அறுநூறாம் ஆண்டிலிருந்து பொது ஆண்டிற்குப் பின்பான அறுநூற்றி ஐம்பதாம் ஆண்டுகள் வரை ஈரானின் ஆட்சி மதமாக சிறப்புற்றிருந்ததாக அறியப்படுகிறது.

கிழக்கு ஈரானான தற்போதைய ஆப்கானிஸ்தான் பகுதியில் புழங்கிய ஜெந்த் எனும் மொழியில் அதாவது சௌராஷ்டிர மொழியில் பேசியவராக அறியப்படும் சௌராஷ்டிரரின் போதனைகள் அவெஸ்தா எனும் புனித நூல்களாக இயற்றப்பட்டுள்ளன. இந்த ஜென்ந் அவெஸ்தா நூல்களே சௌராட்டிரிய சமயம் பற்றிய தொகுப்புகளுக்கான சிறந்த சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.

சொராட்டிரரின் காலம் பற்றி பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. வடகிழக்கு ஈரான் அல்லது வடக்கு ஆப்கானிஸ்தானில் வாழ்ந்தவராக அறியப்படும் சொரஷ்டிரர், பொது ஆண்டிற்கு முன் ஆயிரத்தி ஏழுநூறுக்கும், ஆயிரத்து முந்நூறுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கலாமென சொரஷ்ட்ரிய மத நம்பிக்கையாளர்கள் கணிக்கிறார்கள். எனினும் பொது ஆண்டிற்கு முன் ஆறாம் நூற்றாண்டுக் காலத்தை சேர்ந்தவராக இருக்கக் கூடுமெனவே பெரும்பாலான வரலாற்றறிஞர்கள் அறுதியிடுகிறார்கள்.

சௌராஷ்ரிய மதத்தின் புனித நூலான ஜென்ந் அவெஸ்தாவின் வழிபாட்டு பாடல்களான யாஸ்னாவின் யாஸ்னா ஹேப்டங்காய்டியை பாடியவராகவும், கதாவின் இருநூற்றி முப்பத்தி எட்டு வரிகள் கொண்ட பதினேழு பாடல்களை எழுதியவராகவும் அறியப்படும் சொராஷ்டிரர், இளமைக் காலத்தில் பாபிலோனிய ஆற்றுச் சமவெளிகளில் சுற்றித் திரிந்ததாக குறிப்பிடப்படுகிறது. முப்பது வயதில்

போதனைகளை ஆரம்பித்தாரெனவும், அஜரா அதாவது கேரா எனும் ஒற்றைக் கடவுள் கொள்கையை முன்மொழிந்தாரெனவும் கூறப்படுகிறது.

அவெஸ்தா மொழியின் ஜரதுஸ்ட்ரா எனும் பெயரே கிரேக்க மொழியில் சொராஷ்ரராக வழங்கப்படுகிறது. அஸ்ட்ரா என்பது இந்தோ ஈரானிய மொழியில் ஒட்டகத்தைக் குறிக்கும் சொல்லாக இருப்பதால் ஜரதுஸ்ட்ரா என்பதற்கு ஒட்டகத்தைச் சமாளிப்பவர் என்று பொருள் கூறப்படுகிறது. ஜர் என்பது கிழக்கு ஈரானியத்தில் தங்கத்தைக் குறிப்பதால் தங்க ஒட்டகத்தின் சொந்தக்காரர் எனும் பொருளும் பெயருக்கு காரணமாக்கப்படுகிறது.

சரதுஸ்த்தரின் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது சரதுஸ்ட்டிரிய மதம். இருமைப் பண்புகளைக் கொண்டு உலகின் தோற்றத்தை இம்மதம் விளக்குகிறது. நன்மைக்குக் காரணமான ஸ்பென்டா மென்யூசுவம், தீமைக்குக் காரணமான அங்கிர மென்யூவும் உலகப் படைப்பிற்குக் காரணங்களாக சுட்டப்படுகிறது. உலகின் தீமைகள் அனைத்தையும் படைத்ததாக அங்கிரமென்யு குறிப்பிடப்படுகிறது. உலகம் நிலைபெற்றிருப்பதற்குக் காரணம ஸ்பென்டா மென்யூ என்ற அகுடா மஜ்டா கடவுளே. எவ்வளவு முயன்றாலும் அங்கிர மென்யூவால் உலகை அழிக்க முடியாதென்பது இம்மதம் தரும் நம்பிக்கை.

ஒளியில் இருக்கும் அறிவின் அகுரா மஜ்டாவிற்கும், இருளில் இருக்கும் அறியாமையின் மெனயூவிற்கும் இடையே ஒருவித சமநிலை நிலவுகிறது. அகுடா மஜ்டா தொடர்ந்து வெற்றிபெற பிராத்தனைகள் அவசியம். எனவே சரதுஷ்டிர மதத்தைப் பின்பற்றியவர்களுக்கு ஒரு நாளில் ஐந்து காலங்களிலும் பிராத்தனைகள் உண்டாக்கப்பட்டன. மித்ரன் எனும் சூரியன், நீர், நெருப்பு, மற்றும் நிலவு போன்றவை முக்கியமானவைகளாகக் கருதப்பட்டன.

சரதுஷ்ட்ரிய சமயம் உலகின் பழமையான சமயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தியாவிலுள்ள சரதுஸ்த்திர சமயத்தவர் பார்சீக்கள் என அழைக்கின்றனர். இவர்கள் முஸ்லீம்களின் படையெடுப்புகளைத் தொடர்ந்து ஈரானை விட்டு வெளியேறி இந்தியாவிற்கு வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றனர். பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் வாழ்வதால் இந்திய பண்பாட்டோடு ஒன்றி விட்டனர். இருப்பினும் சமய நம்பிக்கைகளையும் மூலங்களையும் பாதுகாத்தே வருகின்றனர் எனவும் அறியப்பட்டிருக்கிறது. குஜராத் பகுதியில் அதிகளவில் வாழ்ந்ததாகவும்

பின்னர் சூரத் மும்பை போன்ற நகரங்களுக்கு இடம் பெயர்ந்ததாகவும் கூறப்படுகிறது.

இசுலாமியர்களின் இந்திய படையெடுப்புக் காலங்களில் குஜராத்தை விட்டு விஜய நகரப் பேரரசிற்கும், பின்னர் பாமினி பேரரசிடமும், அதன் பின் தஞ்சை மராத்தியர்களிடமும் தஞ்சமடைந்த தமிழக சௌராஸ்டிட்ரர்கள், இறுதியில் மதுரை, நெல்லை போன்ற பகுதிகளில் குடியேறி வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில் வாழும் சௌராட்டிரர்களின் மொழி சௌரஸேனி என அழைக்கப்படுகிறது. சௌரம் என்பது சூரியனைக் குறிப்பதால் சூரிய வழிபாடும், நெருப்பு வணக்கமும் இவர்களிடையே வழக்கத்திலுள்ளது. இச்சமய புரோகிதர்கள் யசூர் வேதத்தையும், ஆபஸ்தம்ப சூத்திரத்தையும் பயன்படுத்தியும் சமயச் சடங்குகளை மேற்கொள்வதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன. பார்சீக்கள் இறந்தோர் உடலை புதைக்கவோ, எரிக்கவோ செய்யாமல் கழுகுக்கு இரையாக்க வேண்டுமென்ற பழைய காலத்து வழக்கம் தற்போது பெருமளவில் மாறிவருவதாகக் கூறப்படுகிறது.

இஸ்லாமியப் படையெடுப்புகளுக்குப் பிறகான நூற்றி ஐம்பதாண்டு காலம் வரையிலும் கூட பாரசீக மொழியை எழுதுவதற்கு பஹ்லவி மற்றும் அசுவெதா போன்ற எழுத்து வடிவங்களே பயன்பட்டு வந்திருக்கின்றன. அதன் பிறகான காலத்திலேயே பாரசீக மொழி அரேபியே வடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. ஒன்பதாம் நூற்றாண்டு காலத்தில் படையெடுத்து புதுப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் பஹ்லவி இலக்கியங்கள், பாரசீக கடவுளர்களைப் பற்றிய விவரங்களை அளிக்கின்றன. அவ்வாறே அவஸ்தா இலக்கியங்களும் ஈரானிய தெய்வக் கூட்டங்களை விவரிக்கின்றன.

தீமையால் சூழப்பட்டுள்ள உலகில், நன்மை ஒளிபெற, தீய சக்திகளை அழிப்பதற்கென்றே தோன்றிய அகுர்மஜ்தாவிற்கு உதவி செய்ய ஆறு தோழமைக் கடவுள்கள் தோன்றியதாகக் கூறப்படுகிறது. தீமையின் வடிவான அங்ரமெய்ன்யூவை எதிர்பதற்காக அகுரா மஜ்டாவே ஸ்பென்டா மென்யூவாக தோற்றம் கொண்டு அனைத்தையும் பாதுகாப்பதாகக் கருதப்படுகிறது.

ஒகுமானகா, ஆஷா, ஷத்ரா, ஹர்வதத் ஆர்மதி, மற்றும் அமரேதத் போன்ற தோழமைக் கடவுளர்கள் முக்கியமானவர்கள். நல்லெண்ணம், நல்நோக்கத்தின்

கடவுள் ஒகுமனகா. வஹ்மான், பஹ்மான் எனவும் வழங்கப்பெறும் ஒகுமனகா, அமேஸா பென்டாவாக இருக்கும் அகுரமஸ்தாவின் ஆறுமுகங்களின், வடிவங்களின் ஒரு முகமாக இருக்கக் கூடியவர். சரதுஸ்த்திர இலக்கியங்களில் ஆண்கடவுளாக அறியப்படும் ஒருமனகா, யாகம் என அழைக்கப்படும் ஹோமத்திற்கு வேண்டிய அனைத்தும் வழங்கக் கூடியவர்.

ஆஷி அல்லது ஆஷிவாகினி சதுஷ்த்திர கதாக்களில் உண்மை, நல்லவைக்கான, நல்லவை எனும் பொருளில் குறிப்பிடப்படுவதாகக் கூறப்படுகிறது. பிந்தைய அவதாக்களில் மித்ராவின் தேரோட்டியாகவும் குறிப்பிடப்படுகிறார்.

அமேஸா பெண்டாவின் மூன்றாவது முகம் ஷத்ரா. படைகலன், போர்க் கடவுள் மற்றும் நாட்டைக் காப்பவர் ஷத்ரா. உலோகங்களை படைக்கருவியாகவும், உழவுக் கருவியாகவும் மாற்றுபவர் ஷத்ரா எனக் கூறப்படுகிறது.

நீருக்கும், மூலிகைகளுக்குமான கடவுள் ஹர்வதத். ஹர்வதத்தின் துணையாக இருப்பவர் பூமிக்கான ஆர்மதி. நல்ல குணமுடையவரான ஆர்மதி, விதைகளின் கடவுளாகவும், அமிர்தத்தின் குறியீடாகவும், ஹவோமா அதாவது சோமாவாகவும் குறிப்பிடப்படுகிறார். செல்வம், நல்வாழ்விற்கான பெண் கடவுள் அமரேதத். ஹர்வதத், அமரேதத் மற்றும் ஆர்மதி கூட்டாக இருப்பவர்களாக அறியப்படுகிறார்கள்.

ஈரானில் மித்ரன், மித்ர எனும் சூரிய வழிபாடு சிறந்திருந்ததாகக் கூறப்படுகிறது. நீதிக்கும் உடன்படிக்கைகளுக்கும் உண்மைக்கான பாதுகாவலராகவும், கால்நடை, அறுவடைக்கான கடவுளாகவும் மித்ர்ன் அறியப்படுகிறார். அவெஸ்தாவின் யாசனாக்களில் நீண்ட பாடல்கள் அடங்கிய பத்தாவது யாசிட் மித்ராவுக்கானதாகக் குறிப்பிடப்படுகிறது. ஜொராஷ்ரிய நாட்காட்டியில் மாதத்தின் பதிறாவது நாளும் வருடத்தின் ஏழாவது மாதமும் மித்ராவிற்கான ஒதுக்கப்பட்டுள்ளன.

பாரசீக மரபில் அட்டர் என்பது புனிதமான நெருப்பு. அட்டரில் பல வகையுண்டு. பர்ன் பாக் என்பது பூசாரியின் தீய். குஷ்நஸ்ப் என்பது போர் வீரர் தீய், படைத்தீ. பர்சின் மிஹிர் விவசாயிகளின் நெருப்பு. போடு.ர்ரைன் தாவரங்களின் நெருப்பு. வசிஸ்ட் மேகம் மின்னலின் தீய். ஆஷா வஹிஸ்ட் பஞ்சபூதங்களின் தீய். ஈரானிய மரபில் அனைத்துமே நெருப்பின் அம்சமாகக் கூறப்படுகிறது.

சொராஷ்டிரர்களின் இருமைக் கோட்பாடு போலவே, சீனாவிலும் யின் மற்றும் யான் எனும் இருமைப் பண்பு மெய்யியல் தத்துவமாகக் கொள்ளப்படுகிறது. சைனாவின் மெய்யியல் இயற்கையைப் போற்றுவது. அதனைப் பாதுகாப்பது. எனவே யின் மற்றும் யாங்க் ஒன்றுகொன்று எதிரானதாக இருப்பினும் இரண்டும் இணைந்தே காணப்படுகின்றன, செயலாற்றுகின்றன. நம்மை - தீமை, இரவு - பகல், ஒளி-இருட்டு போன்ற எதிரெதிர் பண்பு கொண்டவை யின் மற்றும் யான். இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே சீனாவின் மருத்துவப் பாரம்பரியமும், அறிவியல் மரபும் முன்னெடுக்கப்பட்டதாக அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இரண்டு தத்துவங்களும் வேறுபாடாக இல்லாமல் ஒன்றிணைவு, ஒன்றுடன் ஒன்று ஒத்திசைவு கொள்பவை. பகுதிகளை விட முழுமை சிறப்பானது என்பதன் அடிப்படையில் இரு பகுதிகளாக இருக்கும் யின், யான் ஒன்றாக இணைந்து இப்பேரண்டத்தை உருவாகுவதாகக் கருதப்படுகிறது. பேரண்டத்தின் அனைத்திலும் இவையிரண்டும் கலந்துள்ளன. ஒளி இல்லாமல் நிழல் இல்லையென்பது போல் யின், யான் இல்லாமல் உலகமில்லை என்பது சீனாவின் தத்துவ மரபு.

யின் நிலவை, பெண்மையை, எதிர்த்தன்மையை, இருளை, ஈரப்பதத்தை, குளிர்ச்சியைக் குறிக்கும் குறியீடு. சூரியன், ஆண்மை, நேர்த்தன்மை, ஒளி, உலர்வுத்தன்மை, வெதுமை போன்றவற்றைக் குறிப்பது யான். யின் - யாங் மற்றும் யான் - யிங் இணைவதும் உண்டு.

சீனாவின் சமய தத்துவ மரபு மிகச் செழிப்பானதக் குறிப்பிடப்படுகிறது. சீனாவின் மும்மத மரபாக கன்பூசியசம், தாவோயிசம் மற்றும் புத்தியிசம் உள்ளன. இவை எல்லாவற்றையும் இணைக்கக் கூடிய நாட்டுப்புற சமய மரபும் இவற்றோடு இரண்டாறக் கலந்துள்ளதாக அறியப்படுகிறது. இயற்கை சக்திகளை வணங்குதல், மனிதர்களில் தெய்வநிலைக்கு உயர்ந்தவர்களை வழிபடல், மூதாதையர் வழிபாடு மற்றும் சீனாவின் தொன்மை மரபில் உருவான கடவுளர்கள் வழிபாடு என பலவகையாக வழிபாட்டு முறைகளை சீனா பின்பற்றுகிறது.

சீனாவின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு வகையான மொழிகளும், நாட்டுப்புறக் கலைகளும், கடவுளர்களும் நிலவி வந்ததாகக் கூறப்படுகிறது. குறைந்தது பனிரென்டு தெளிவான குல மரபுகள் அறியப்பட்டுள்ளன. இக்குல

மரபுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாக இருப்பினும் ஒவ்வொன்றும் தனித்துவமிக்கதாகவும் இருக்கின்றன.

சீனாவின் வெண்கலக் காலத்தில், பொது ஆண்டுக்கு முன்பான ஆயிரத்து இருநூறாம் ஆண்டைச் சேர்ந்ததாக அறியப்படும் ஆமை கூடுகளிலும் விலங்குகளின் எலும்புகளிலும் எழுதப்பட்ட எழுத்து வடிவங்கள் சீன தொன்ப மரபிற்கு சிறந்த சான்றாகக் கொள்ளப்படுகிறது.

மலைகள் மற்றும் கடல்களின் செவ்வியல் அதாவது ஷான் ஹய் ஜின்ங் எனும் சீனாவின் செவ்வியல் படைப்பு பொது ஆண்டிற்கு முன்பான நான்காம் நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்த நூலாக அறியப்படுகிறது. இந்நூலில் ஐந்நூற்றி ஐம்பது மலைகளும், முந்நூறு ஆறுகளும் பதினெட்டுத் தலைப்புகளில் விவரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு என நான்கு திசைகளின் மலைகளும், ஒவ்வொரு திசையின் கடலுக்கு அப்பாலும் உள்ளேயும் உள்ள நிலப்பகுதி பற்றியும், நான்கு திசையின் வன அமைப்பு பற்றியும், அவற்றின் தாவர, விலங்குகள் பற்றியும், இருநூற்றி இருபத்தியேழு விலங்குகள் பற்றியும் குறிப்பிடும் இந்நூல் சீனாவின் தொன்மவியல் தொடர்பான மூலங்களையும் தகவல்களையும் அளிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

சீனாவின் தொன்மவியலில் சுட்டப்படும் சூரியக் கடவுளான சூலாங் எனும் சிவப்பு டிராகன், மனித முகமும் ஆயிரம் மைல் நீளமுள்ள பாம்பின் உடல் கொண்டதாகவும், அதன் கண்களைத் திறந்து மூடியதன் மூலம் பகல் இரவுகளைப் படைத்ததாகவும், அதன் சுவாசத்திலிருந்தே பருவகால காற்றுகள் படைக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. சூலாங் பற்றி மலைகள் மற்றும் கடல்கள் நூலில் குறிப்புகள் வருவதாக அறிஞர்களால் சுட்டப்படுகிறது.

சைனாவின் தொன்ம மரபில் டிராகன் எனும் கற்பனை விலங்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மிக வலிமையானதாகக் குறிப்பிடப்படும் டிராகன், கடவுளின் படைப்பாகவும், அனைத்து விதமான நீரையும் கட்டுப்படுத்துவதாகவும், டிராகன்களின் மூச்சுக்காற்றால் மேகங்கள் உண்டாக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. டிராகன்கள் கடவுளர்களுக்கும், நாயகர்களுக்கும் உதவி பண்ணக் கூடியவையாகவும் இருக்கின்றன.

மிகவும் புகழ்பெற்றதாக அறியப்படும் சிறகுள்ள டிராகன் மழைக்குக் கடவுளாக கருதப்படுகிறது. டிராகன்கள் ஆமை, மீன் மற்றும் கற்பனை வடிவங்களிலும் அறியப்பட்டாலும், நான்கு கால்கள் கொண்ட பாம்பு வடிவமே மரபாக உள்ளது. டிராகன்கள் வலிமைக்கும் அதிகாரத்திற்குமான குறியீடுகளாக சீன அரசர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. இவை நீர, மழை, புயல், வெள்ளம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் மந்திர சக்தி வாய்ந்தவையாக புராண, நாட்டார் மரபில் நம்பப்படுகிறது. கடல்களை ஆளும் டிராகன், அரச டிராகனாக குறிப்பிடப்படுகிறது. சீனாவின் நான்கு திசை கடல்களையும் நான்கு அரச டிராகன்கள் ஆட்சி செலுத்துவதாக வழிபடப்படுகின்றன. இவைகளுக்கு ஏராளமான கோவில்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. சீன மக்களில், சிறப்பானவர்களை டிராகனுக்கு ஒப்பீடாகச் சொல்வதும் மரபாகக் கூறப்படுகிறது.

பண்டைய சைனாவின் புகழ்பெற்ற செவ்வியல் இலக்கியங்களாக செவ்வியல் பாடல்கள் (கிளாசிக் ஆப் போயட்ரி), விவரணைப் புத்தகம் (புக் ஆப் டாகுமெண்ட்), சடங்குப் புத்தகம் (புக் ஆப் ரிட்ஸ்), மாற்றங்களின் புத்தகம் (புக் ஆப் சேஞ்சஸ்), வசந்தம் மற்றும் குளிர் வருடங்கள் (ஸ்பிரிங் அண்டு ஆன்டம் அனல்ஸ்) குறிப்பிடப்படுகின்றன. இவை குன் பேரரசு காலத்திற்கு முந்தியவையாக, கன்பூசியஸ் காலத்தோடு தொடர்புடையவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

செவ்வியல் பாடல்களில் நாட்டுப்புற பாடல்கள், அரசுரிமைப் பதிவியேற்பு பாடல்கள், கலாச்சாரப் பாடல்கள், அரசமரபினர் நாயகர்கள் மூதாதையரைப் பற்றிய பாடல்கள் என முந்நூற்று ஐந்து பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

விவரணைப் புத்தம் சைன மரபின் மிகவும் பழமையானதாக, பொது ஆண்டிற்கு முன்பான ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறியப்படுகிறது. ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் சட்டங்கள், பேச்சுக்கள் போன்றவற்றை பதிவு செய்த எழுத்துப் பிரதியாகவும், பழங்கால சைனாவின் மொழியை அறிந்து கொள்ளவும் இந்நூல் பயன்படுகிறது.

சடங்கு சம்பிரதாயங்களை விவரிப்பதாக சடங்குப் புத்தகம் உள்ளது. பண்டைய காலத்திய சடங்கு முறைகள், சமூக நிலைகள், அரச குல விழாக்கள் போன்றவற்றை இந்நூல் மூலம் அறிய முடிகிறது. பொது ஆண்டிற்கு முன்பான மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களால் தொகுக்கப்பட்ட நூலே தற்போது

உள்ளதாகவும் மூலநூல் கன்பூசியரால் தொகுக்கப்பட்டது என்றும் மரபாக குறிப்பிடப்படுகிறது.

மாற்றங்களின் நூலாக அறியப்படும் சீனமொழி ஐ சின்ங், ஒரு முன்னறிவிப்பு வகை நூலாகக் கருதப்படுகிறது. குறி சொல்வதைப் போன்றதும் தெய்வீக சடங்கு முறைகளைப் பேசுவதுமான இந்நூல், இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகால சீன வரலாற்றைப் பேசுவதாகவும், வணிகம், இலக்கியம், கலைகள் போன்றவற்றைப் பற்றிய குறிப்புகள் கொண்டதாகவும் அறியப்படுகிறது.

பொது ஆண்டிற்கு முன்பான ஆயிரமாண்டு காலத்தைச் சேர்ந்த ஹோ அரசுரிமையில் இருந்த கன்பூசியசின் மாகாணம் பற்றிய பதிவுகளை எடுத்துரைப்பது வசந்தம் மற்றும் குளிர் வருடங்கள் நூல். கன்பூசியஸால் தொகுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் இந்நூல் பொது ஆண்டுக்கு முன்பான எழுநூற்றி இருபத்தி இரண்டாம் ஆண்டிற்கும், நானூற்றி எண்பத்தோறாம் ஆண்டிற்கும் இடையிலான இருநூற்றி நாற்பத்தோறு ஆண்டுகளின் நிகழ்வுகளை வருடம் வாரியாகக் குறிப்பிடுகிறது.

கடவுள் நம்பிக்கையற்ற பொதுவுடைமைக் கட்சியால் ஆளப்படுகின்ற தற்போதைய சீனாவில் கடவுள், மதம் குறித்து பெரிய அளவிலான தாக்கம் காணப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டாலும், தற்போதும் பல்வேறு கடவுள்ர்களும் வணக்கப்பட்டு வருபதாகவே சான்றுகள் கூறுகின்றன. சிலை வணக்கமும் சடங்கு முறைகளும் தற்போதும் பின்பற்றப்பட்டே வருகின்றன. குறிப்பாக தாவோயிச மரபில், மாய ஜால சடங்கு சம்பிரதாயங்கள், வேண்டுதல்கள் நிறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் பல நாகரிகங்களில் காணப்பட்டது போன்றே தாவர, விலங்குகளை வழிபடல், ஆவியோடு பேசுதல், பூசாரிகளின் மேலாண்மை, குலக் கடவுள்கள் என அனைத்தும் சீனாவின் தொல் மரபிலும் பரிணமித்தே வந்திருக்கிறது. தற்போதும் இப்பழக்கவழக்கங்கள் சீன நாட்டுப்புற மரபிலும் தாவோயிசத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன. மூதாதையர் வழிபாடு, குல வழக்க வழிபாடு சீனாவில் சிறப்பாக பேணப்பட்டு வந்திருக்கிறது.

சீனாவின் தொன்மவியலில் தலைமைக் கடவுள் எனக் குறிப்பிடுமளவிற்கு டாய்டி அல்லது டாய் டி புகழ் பெற்றவராக அறியப்படுகிறார். அண்டத்தின்

மூலமென்றும், தலைமையாக இருப்பது என்றும், அதீத மனமென்றும், ஒழுங்கமைவின் தலைவரென்றும், முதல் கடவுள் என்றும் பல்வேறு மரபு வழிகளில் தாய் டி குறிப்பிடப்படுகிறார்.

டாய்டி என்றாலே பேரரசர், சிறந்த கடவுள், சிறந்த ஆவி, சிறந்த ஆற்றல் என்றே பொருளுரைக்கப்படுகிறது. சீனாவின் கடவுள் குடும்பத்தில் ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு கடமையும் சிறப்புத்தன்மையும் கொடுக்கப்பட்டுள்ளது.

பேரண்டத்தின் சட்டங்களான டாவோ அல்லது வழி முறைகள் மூலமாகவே கடவுளர்களுக்கான ஆற்றல், சிறப்புத்தன்மை கிடைக்கப்பெறுவதாகவும், இவ்வாற்றலை மிகப் பொறுப்பான விதத்திலேயே பயன்படுத்த வேண்டுமெனவும் இல்லையேல் அதன் மாற்று ஆற்றல் வெளிப்பட்டு பேரண்டத்தின் அமைதி குலையக்கூடும் எனவும் சீன மரபில் வலியுறுத்தப்படுகிறது. சமநிலையமைப்பைப் பேணுவது கடவுளர்களின் முக்கியப் பணி.

சீனப் புராணத்தில், தொல் மரபில், கலாச்சாரத்தில் முதல் கடவுளாக முதல் தலைமுறைக் கடவுளாக ஜேட் பேரரசர் குறிப்பிடப்படுகிறார். தாவோ மரபில் குறிப்பிடப்படும் மும்மூர்த்திகளில் ஒருவராக அறியப்படும் யான்ஷி டியன்சுன், ஜேட் பேரரசாக அறியப்படுகிறார். பல பெயர்களில் அறியப்படும் பேரரசர் ஜேட், சொர்க்கத்தின் தாத்தா எனவும் அழைக்கப்படுவதுண்டு. தொல் மரபின்படி, அனைத்துக் கடவுளர்களும் இவரிடம் தினமும் வருகை புரிந்தாக வேண்டுமென்றும் கூறப்படுகிறது.

காலத்தின் ஆரம்ப நிலையில் பூமியில் மனிதர்கள் வாழ்வது மிகவும் கடினமாக இருந்ததாகவும், பல்வேறு வகையான பூதங்களோடும் மக்கள் போராடி வந்த சூழலில், சாதாரண அழிவின்மை இல்லாதவரான ஜேடி கடவுள், மக்களுக்காக பல விதங்களிலும் உதவியதாகக் குறிப்பிடப்படுகிறது. அழிவற்றவர்களும், பூதங்களும், தீய சக்திகளும் ஒன்றிணைந்து பூமியை அழிக்க வந்தபோது, மற்ற கடவுளர்கள் ஒதுங்கிவிட ஜேடி கடவுள் தீரத்துடன் அவர்களை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற்றதாகக் கூறப்படுகிறது. இவ்வெற்றிக்குப் பின்னரே கடவுள்கள், அழிவில்லாதவர்கள் மற்றும் மனிதர்களின் தலைமைக் கடவுளாக, பேரரசராக, ஜேடி கடவுள் ஆனார் எனக் கூறப்படுகிறது.

சீனாவின் படைப்பு மரபில் வுஜிலிருந்து அதாவது ஒன்றுமில்லாததிலிருந்து உலகம் படைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஜேடி கடவுள் தலைமையில் படைப்பு நிகழ்ந்ததெனினும் அவர் படைப்பிற்குப் பொறுப்பாகமாட்டார் எனவும் கூறப்படுகிறது.

ஜேட் கடவுள் களிமண்ணிலிருந்து முதல் மனிதர்களைப் படைத்து அவர்களை கடினமாக்குவதற்காக சூரிய வெயிலில் வைத்ததாகவும், மழை பெய்து சிலரது உருவங்களைச் சிதைத்து விட்டதாகவும், மனிதர்களுக்கு உடல் நலக் குறையும், உடல் குறைபாடும் உண்டானதற்கு அதுவே காரணமென்றும் படைப்பைப் பற்றிய ஒரு தொல் மரபு கூறப்படுகிறது.

பாங்கு கடவுளின் உடலில் பூச்சிகளாக இருந்தவர்களே மனிதர்கள் என்றொரு தொல் மரபும் சீனக் கலாச்சாரத்தில் கூறப்படுகிறது. படைப்பின் ஆரம்பத்தில் ஒன்றுமில்லாமல் இருந்தது. ஒன்றுமில்லாதிருந்த, வடிவமில்லாதிருந்த அந்த ஒன்று சுமார் பதினெட்டாயிரம் வருடங்களில் அண்ட முட்டையாக உருவானது. முட்டையினுள் ஒன்றுகொன்று எதிரானதான யின் மற்றும் யான்ங் சமநிலையை அடைந்தவுடன் அண்டமுட்டையிலிருந்து பாங்கு வெளிப்பட்டார் அல்லது எழுந்தார். பாங்குவின் உடலில் மிகப்பெரிய உரோமங்களும், தலையில் கொம்புகளும் கொண்டு, கம்பளியால் உடலைப் போர்த்தியிருந்தார்.

பாங்கு உலகைப் படைக்க ஆரம்பித்தார். அவரது மிகப்பெரிய கோடரியால் யான் மற்றும் யின்னைப் பிரித்து யின்னான பூமியையும் யானான வானத்தையும் உருவாக்கினார். வானம் மற்றும் பூமியைப் பிரிக்கும் போது அவைகளுக்கு இடையே நின்று கொண்டு வானத்தைத் தள்ளினார். ஒவ்வொரு நாளும் வானம் பத்து அடிகள் அதாவது மூன்று மீட்டர் அதிகமாகவும், பூமி பத்தடிகள் தடினாகவும், பாங்கு பத்து அடிகள் உயரமாகவும் ஆனார்கள். பாங்கு உலகை உருவாக்கிய போது ஆமை, நெருப்பைக் கக்கும் குலின் விலங்கு, போனிக்ஸ் பறவை மற்றும் டிராகன் போன்றவை அவருக்கு உதவியதாகவும் மரபு வழியில் சொல்லப்படுவதுண்டு.

பதினெட்டாயிரம் ஆண்டுகள் கடந்த பின் பாங்கு முடிவுக்கு வருகிறார். பாங்குவின் மூச்சு காற்றாகவும், ஈரப்பதமாகவும், மேகங்களாகவும் ஆகின. குரல் இடியாகியது. இடது கண் சூரியனாகவும், வலது கண் சந்திரனாகவும் ஆனது. தலை

மலைகளாகின. குருதி ஆறுகள். தசைகள் வளமான நிலமாகின. முகத்திலிருந்த முடிகள் நட்சத்திரங்களாகவும் பால் வீதியாகவும் ஆகின. கம்பளி புதர்களாகவும் காடுகளாகவும் ஆயின. எலும்புகள் தனிமங்களாயின. எலும்பு மஞ்சை புனித வைரங்கள். வியர்வை மழை. கம்பளியிலிருந்த சிறு பூச்சிகள் காற்றால் அடித்துச் செல்லப்பட்டு விலங்குகளாயின.

சீன புராணமரபில் கற்பனை கலந்து பல்வேறு விலங்குகள் குறிப்பாக டிராகன்கன், பாம்புகள், பறவைகள், மீன்கள், பாலூட்டிகள் போன்றவையும், மனிதர்கள், தாவரங்கள் மற்றும் இடங்களும் குறிப்பிடப்படுகின்றன. புஸோ மலை, ஜேடி மலை, பெங்லை மலை, குன்லுன் மலை, இறகு மலை போன்றவையும் முக்கயமானவையாக புராண மரபில் குறிப்பிடப்படுகிறது.

புஸோ மலை சொர்க்கத்தைத் தாங்குவதாகக் கூறப்படுகிறது. சீனா மரபின் நீர்க் கடவுளான ஹோங்ஹோங், கோபத்தில் இம்மலை மீது தலையால் மோதிவிட, அதனால் சொர்க்கத்தின் தூண்களில் உண்டான சேதத்தை நூவா பெண்கடவுள் சீர் செய்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. இந்த நூவா மஞ்சலாற்று மண் கொண்டு ஆரம்பத்தில் சிறந்த மனிதர்களைச் செய்ததாகவும், பின்னர் தலையை மறைக்கும் துணியை மண்ணில் குழைத்து சுழற்றி எறிந்து மோசமான மனிதர்களைப் படைத்ததாகவும் கூறப்படுகிறது.

புத்தரையும், போதி சத்துவர்களையும், புத்த மதத்தையும் தொடர்புபடுத்தி பல்வேறு கடவுளர்கள் அறியப்படுகிறார்கள். லீகாங் இடிக் கடவுளாகவும், மட்சூ கடல் கடவுளாகவும், டாம் குங் வானிலை முன்னறிவிப்புக் கடவுளாகவும், குய் ஷிங் தேர்வுக்கான கடவுளாகவும், ஷாங்கி நிலவுக்கான பெண்கடவுளாகவும், போஷெங் டாடி மருத்துவத்திற்கான கடவுளாகவும் அறியப்படுகிறார்கள். டூ டி கோங் செல்வத்தின் கடவுள். வென் செங்வாங் கலாச்சாரத்தின் கடவுள். ஜியோ ஜின் சமையலறைக் கடவுள். ஜீ ரோங் நெருப்புக் கடவுள். காண்டி போர் மற்றும் வணிகக் கடவுள்.

சீனா முழுவதுமே தாய் வழிபாடு காணப்பட்டாலும் வடக்கு மாகாணங்களில் சிறந்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. தாய்க் கடவுள்களில் ஒன்பது பேர் முக்கியமானவர்களாகக் கூறப்படுகிறார்கள். இவர்கள் அனைவருமே சொர்க்கத்தின் பிஜியாவாக, இளவரசியாக, ஜி வாங்முவாக அறியப்படுகிறார்கள்.

பெண்கடவுள்கள் தாய் எனும் பொருளில் மு எனக் குறிப்பிடப்படுகிறார்கள். லாமு என்றால் மூத்த தாய். செங்மு எனில் புனித தாய். கான்மு பட்டுப் புழுவிற்கான தாய். உசெங் லாமு அல்லது உஜிமு பிறவாத முதல் தாய், அழிவற்ற ஆதித்தாய், எவ்லையற்ற ஆதித்தாய் எனும் பொருளில் அழைக்கப்படுகிறார். தாய் தெய்வ வழிபாட்டில் இவருக்கே சிறப்பான இடம் அளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சீனாவின் மெய்யியல் இயற்கையைச் சார்ந்தது. காரியத்தையும் நிர்வாகத்தையும் முக்கியப்படுத்துவது. சீனத் தத்துவங்கள் சமயத்தை அல்லது கடவுள்களை முன்னிலைப் படுத்துவதில்லை. வாழ்க்கைச் சுழற்சியில் இருந்து விடுதலை பெறுவதை விடுத்து, ஒத்திசைவுள்ள வளம்மிக்க சமுதாயத்தை இவ்வுலகில் உருவாக்குவதே சீன மெய்யியலின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது.

சீன மெய்யியல், சமுதாயம் மீது மிகுந்த அக்கறை கொண்டதாக இருக்கிறது. உலகிக்கும் மனிதனுக்குமான உறவு, சமூகத்தில் மனிதன் நிலை, மனித இயல்பு, குடும்ப உறவுகள், சமூக உறவுகள், முன்னோர்கள், சமூக இணக்கம், ஒழுங்கமைவு, அரசாட்சி, இயற்கையோடு இயைந்து வாழ்தல் போன்றவற்றில் சீன மெய்யியல் சிறப்பான பங்களிப்பை அளித்துள்ளது.

தொன்ம காலத்தில் கன்பூசியம், டாவோயிசம், மோகிசம், சட்டவியல் போன்ற சீன மெய்யியல்களும், இடைக்காலத்தில் இந்தியாவிலிருந்து சென்ற பௌத்த சமய மெய்யியலும், மறுமலர்ச்சிக் காலத்தில் மீண்டும் கன்பூசிய மெய்யியலும் முதன்மை செலுத்தியதாக அறிஞர்களால் குறிப்பிடப்படுகிறது.

பொது ஆண்டிற்கு முன் எழுநூற்றி எழுபதுக்கும் இருநூற்றி இருபத்தொன்றிக்கும் இடைப்பட்ட காலத்தில் தத்துவஞானிகளால் சீனாவின் சிந்தனைப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் நூறு சிந்தனைப் பள்ளிகள் என பொதுவில் அழைக்கப்படுகின்றன. இக்காலப் பகுதி போர்களையும் பல்வேறு சமூக நெருக்கடிகளையும் கொண்டிருந்ததெனினும் தத்துவ நோக்கில் சீனாவின் பொற்காலப் பகுதியாகக் கருதப்படுகிறது. சீனாவின் சிறந்த தத்துவ ஞானிகளான கான்பூசியசு, ஒசி, மோகி, யாங்சூ போன்றவர்கள் இக்காலப்பகுதியைச் சேர்ந்தவர்கள்.

டாவோயிசம் அல்லது தாவோயிசம் எனும் மெய்யியல் கோட்பாட்டை உருவாக்கியவரான லாவோ சீ அல்லது லாவோ சூ சீனாவின் முக்கியமானதொரு மெய்யியலாளராக அறியப்படுகிறார். சோ அரசுரிமைக் காலத்தில் பொது ஆண்டிற்கு முன் தோரயமாக அறுநூற்றி நான்காமாண்டு பிறந்தவராக அறியப்படும் லாவோ சீ தத்துவங்கள், இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாக கிழக்காசியா முழுவதும் புகழ்பெற்றதாக விளங்கிவருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

டாவோ டெ சின்ங் எனும் நூலின் ஆசிரியரான இந்த மூதிர்ந்த ஆசான் (லாவோ சீ) டாவோ எனும் மாற்றமடையாத வழியைக் காட்டிய கடவுளாகவும் வணங்கப்படுகிறார். சீனத் தத்துவத்தையும், சமயத்தையும், மற்ற சமயப் பள்ளிகளையும் அதிகம் பாதித்ததாக டாவோ டே சின்ங் குறிப்பிடப்படுகிறது. எண்பத்தொரு சிறு பகுதிகளாக ஐந்தாயிரம் சீன எழுத்துக்களைக் கொண்டிருக்கும் இந்நூல் அச்சு வடிவில் எழுத்தப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

டோ என்றால் வழி, சிந்தனை, கோட்பாடு, உண்மை, மாற்றமடையாதது எனப் பொருள். இப்பேரண்டம் டோ அதாவது ஒரு வழியைக் கொண்டிருக்கறது. மனிதன் அந்த வழியை அறிந்து ஒத்துப் போகும் போது முழுமையடைகிறான் என்பதை டாவோயிசம் கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

தாவோயிசம் கருணை, அடக்கம், பணிவு எனும் மும்மணிகள் குறித்துப் பேசுகிறது. தாவோயிசச் சிந்தனைகள் நலம், நீண்ட வாழ்நாள், இறவாமை, இயல்பான செயல்பாடு போன்றவற்றில் கவனம் செலுத்துகிறது. தத்துவங்களும் செறிவான சிந்தனைகளும் கொண்ட டாவோயிச சமயத்தில், இயற்கை வணக்கம், முன்னோரின் ஆவிகளை வணங்குதல் மிக இயல்பானதாகவும் காணப்படுகிறது.

சீன இரசவாதம், சோதிடம், சமையல், பல வகை சீனப் போர்க்கலைகள், சீன மரபு வழி மருத்துவம், பெங்சுயி, சிகொங் எனப்படும் மூச்சுப் பயிற்சி போன்றவை டாவோயிசத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தாவோயிசக் கடவுளர்களில், சுத்தமான மூன்றுபேர், மூன்று வானுலக ஆசிரியர்கள், தெய்வீகமான மூன்று பேர் என்றெல்லாம் அழைக்கப்படும் மூன்று கடவுளர்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறார்கள். இம்மூன்று பேருமே உச்சக் கடவுள்களாக, தலைமைக் கடவுள்களாக தாவோயிச மதத்தில் இருக்கிறார்கள். தா ஒன்றை உருவாக்கியது. ஒன்று இரண்டை உருவாக்கியது. இரண்டு மூன்றை

உருவாக்கியது. மூன்று அனைத்தையும் உருவாக்கியது எனக் கூறப்படும் தாவோ மரபில், தாவோ வுஜியையையும், வுஜி தைஜியையும், தைஜி யின் மற்றும் யானையும் உருவாக்கியது.

தாவோவாக, ஒன்றாக, குறிப்பிடப்படுபவர் யான்ஷி டியன்சுன். பேரண்டப் படைப்பிற்குக் காரணமானவர் இவர். ஆரம்பத்தின் மூலமாகவும் வானுலகின் அரசராகவும் குறிப்பிடப்படுபவர். பேரண்டத்தின் முதல் நிலைப் படைப்பிற்குப் பொறுப்பானதால் இவர் தாபோ என அழைக்கப்படுகிறார். இவர் ஜேடி. சுத்தமான ஒன்று. வானுலகில் இவர் வானத்தையும் பூமியையும் உருவாக்கியவராக அறியப்படுகிறார்.

ஒன்று இரண்டை உருவாக்கியது. யான்ஷி டியன்சுன், லிங்போ டியான்சுனாக உருவாகி, யாங்கை யின்னிலிருந்து பிரிக்கிறார். சட்டங்களைப் பாதுகாப்பவர் இவரே. ஜேடி பேரரசர். இயற்கையின் விதிகளை உருவாக்கி ஒவ்வொன்றும் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிப்பவர்.

லிங்போ டியான்சுன், டாவ்டி டியான்சுனாக உருவாகி நாகரிகத்தை அளிப்பவராகவும் சட்டங்களைப் போதிப்பவராகவும் இருக்கிறார்.

மூன்று டியான்சுகளுமே கடவுள்களாகவும் வானுலகமாகவும் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. யான்ஷி டியான்சு முதலாவது வானுலகமான யு சின்ங்கை ஆள்பவர். இது ஜேடி மலையில் இருக்கிறது. வானுலகின் நுழைவாயில் தங்க கதவு என அழைக்கப்படுகிறது. சூரியன் எவ்வாறு ஒளிக்கான மூலமாக இருக்கிறதோ அதேபோல் அனைத்து உண்மைகளுக்கும் மூலமாக இருப்பவர் யான்ஷி டியான்சு.

மூன்று சுத்தமானவை தனித்துவமானவைகளைக் கொண்டே, தாவோயிச ரசவாதமும் உடல் இயங்குமுறையும் விளக்கப்படுகிறது. மூன்று சுத்தமானவைகளும் உடலின் ஜின்ங், குய் மற்றும் சென் எனும் மூன்று பகுதிகளைக் குறிக்கிறது.

மூவரும் வானியல் ஆற்றல்களாக இருப்பதால், இவர்களுக்கு வடிவம் கிடையாது. எனினும் இவர்கள் படைப்பின் மூலமாக இருப்பதால் கடவுள்களாவும் சிவப்பு, நீலம் மற்றும் மஞ்சள் (பச்சை) நிறங்களைக் கொண்ட கயிறுகளோடு இவர்கள் காட்டப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கான்பூசியத்தின் நிறுவனரான கான்பூசியசு (பொ.ஆ.முன் 551-479) மிகச் சிறந்த சமூக மெய்யியலாளராக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளார். சிந்தனையாளர் கன்பூசியசின் கருத்துக்களும் போதனைகளும் தத்துவக் கோட்பாடுகளும் சீனா, கொரியா, ஜப்பான், வியட்நாம் போன்ற கிழக்காசிய நாடுகளின் வாழ்வியல் மற்றும் சிந்தனைப் போக்குகளில் ஆழமான செல்வாக்கைச் செலுத்தி வருவதாக அறிஞர்களால் குறிப்பிடப்படுகிறது.

தத்துவ அறிஞர் கன்பூசியசின் சிந்தனைகள் தனிமனித அரச நன்னடத்தை, சமூகத் தொடர்புகள், நீதி, நேர்மை போன்றவற்றை வலியுறுத்துவதாக அமைந்திருந்தன. கன்.ூசியஸின் சிந்தனைகள் ஒரு மதமாக வளர்ச்சியடைந்து, சட்டக் கோட்பாடுகள் மற்றும் தாவோ மதத்தைவிட பெருமதிப்பு பெற்றிருந்ததாகவும் வரலாற்றாசிரியர்களால் கூறப்படுகிறது.

பெற்றோரால் குங் சியு என்றும் சீடர்களால் குருநாதர் குங் எனும் பொருளில் குங்புட்சு எனவும், மேற்கத்திய நாட்டினரால் ஹன்பூசிஸ் எனவும் அழைக்கப்படும் கன்பூசியஸ் பிறக்கப் போவதை ஒற்றைக் கொம்புக் குதிரை சிலின் திடீரென்று தோன்றி பளிங்கு போன்ற தூய்மையான ஒரு குழந்தை பிறக்கப்போகிறதென்றும் அந்தக் குழந்தை எந்நாட்டையும் ஆட்சி செய்யாத ஓர் அரசராகத் திகழும் என்றும் முன்னறிவிப்பு செய்ததாக சீன மரபில் கூறப்படுகிறது.

சீனாவின் லு மாகாணத்தைச் சேர்ந்த ஹன்பூசியசு, படிப்பின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவராக அறியப்படுகிறார். புத்தகங்கள் அனைத்தையும் தேடித்தேடிப் படித்ததாக கூறப்படுகிறது. நீதிபதியாகவும் கிராம ஆட்சித் தலைவராகவும் இருந்த இவரது தந்தையின் மறைவால் சிறு வயதிலேயே வேலைக்குச் சென்ற கன்பூசியசு, ஆடு மாடு மேய்க்கும் தொழிலும், பூங்கா கவனிப்பாளராகவும், தானியக் களஞ்சிய காப்பாளராகவும் வேலைகள் பார்த்திருக்கிறார்.

மனைவி, மகன் என குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த கன்பூசியசிற்கு இயல்பிலேயே சமூகத்தின் மீதான அக்கறை இருந்திருக்கிறது. எது நல்லது, எது கெட்டது, கல்வியின் முக்கியத்துவம், கடவுள் வழிபாடு, சட்டம், அரசியல், ஆட்சிமுறை போன்றவற்றைப் பற்றி மக்களிடம் எடுத்துரைத்திருக்கிறார். இவற்றைத் தொகுத்து எழுச்சிப் பாடல் நூல், மாற்றம் பற்றிய நூல், சடங்குமுறை நூல், இசைத்

தொகுப்பு நூல், வசந்தம் மற்றும் குளிர் வருடங்கள் போன்ற நூல்களை எழுதியதாக குறிப்பிடப்படுகிறார். கல்வி நிலையத்தையும் உருவாக்கியிருக்கிறார்.

சுங் தூ நகரின் தலைமை அதிகாரியாகவும், பின்னர் பொதுபணித் துறை அதிகாரியாகவும், மாநிலத்தின் நீதித்துறை தலைமை அதிகாரியாகவும் பொறுப்புகள் வகித்திருக்கிறார். கன்பூசியஸ் காலத்தில் சீனாவிலிருந்த அரசர்கள் பதவி ஆசைகளால் மக்களைத் துன்புறுத்தியதாகவும், மக்களைக் காப்பாற்ற வேண்டிய மன்னர்களே மக்களை வதைத்தனர் எனவும் குறிப்பிடப்படுகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டே அரச நடத்தை பற்றியும் நல்லாட்சி, அரச நிர்வாகம், அரசர்களது கடமைகள் பற்றிய அறிவுரைகளை கன்பூசியஸ் வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

தத்துவ ஆசிரியர் கன்பூசியஸ் மக்களின் அன்றாடச் செயல்கள் மீது கவனம் செலுத்தியவராக இருந்திருக்கிறார். தனிமனிதனையும் சமூகத்தையும் நன்னெறிகளில் ஆழ்த்தும் முறைகளைப் பற்றி ஆராய்ந்திருக்கிறார். உலகின் தோற்றம் குறித்தும், கடவுள்கள், மறுபிறப்பு போன்றவற்றைப் பற்றியும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாரென ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சீடர்கள் நிறைந்திருந்தனர் எனக் குறிப்பிடப்படும் கன்பூசிஸ், ஏழைகள் ஆதரவற்றோர் முதியோர் மீதும் கருணை காட்டியவராக வாழ்ந்திருக்கிறார்.

மனிதரை மையங்கொண்டு வருக்கப்பட்டதே கன்பூசிய நெறி எனக் குறிப்பிடுகின்றனர். மனிதர்களுக்கு எப்படி சேவையாற்றுவது என்பதே இன்னும் தெரியாமலிருக்கும் போது கடவுளுக்கு எவ்வாறு சேவையாற்ற முடியுமென்றும், தற்போதுள்ள வாழ்வைப் பற்றியே இன்னும் அறிந்துகொள்ளாமல் இருக்கும் போது அடுத்த பிறவியைப் பற்றி எவ்வாறு அறிவது எனும் வினாக்களை எழுப்பி மக்களை சிந்திக்க வைத்திருக்கிறார் இந்த மெய்ஞானி. வயதான காலத்திலும் பயணங்கள் செய்து மக்களைச் சந்தித்து உரையாடிதாகக் குறிப்பிடப்படும் கன்பூசியஸ் அரிய தத்துவஞானி எனில் மிகையாகாது.

ஆட்சியாளர்களும், ஆசிரியர்களுமே ஒரு சமூகத்தின் முன் மாதிரி என்பதை வலியுறுத்தும் கன்பூசியஸ், நல்லது செய்ய வேண்டுமென ஆசைப்பட்டால் போதும். கெட்ட குணங்கள் தலைதெறிக்க ஓடி விடுமென்றும் சான்றளிக்கிறார். நல்லதைச் செய்வதற்கு நிறைய மன உறுதி வேண்டுமென்கிறார். நல்ல வழியிலேயே நடக்க

வேண்டும், நல்ல பண்புகளைக் கற்றுக் கொள்ள வேண்டும், உயர்ந்த குணங்களைப் பின்பற்ற வேண்டும் என அறிவுரை கூறும் கன்பூசியஸ், நல்லவர்கள் எத்தகைய குணங்கள் பெற்றிருப்பார்கள் என்பதையும் பட்டியலிடுகிறார்.

நல்லவர்களுடைய பேச்சில் புத்திசாலித்தனம் இருக்கும். சுறுசுறுப்பாகச் செயல்படுவார்கள். ஆர்வத்துடன் உழைப்பார்கள். பெரியவர்களை மதித்து நடப்பார்கள். புதிதாகக் கற்றுக் கொள்ள வேண்டுமென ஆர்வமாக இருப்பார்கள். அன்போடு பழகுவார்கள். நிலைமாறாமல் இருப்பார்கள். வேறுபாடு பார்க்க மாட்டார்கள். அனைவரையும் அரவணைப்பார்கள். எல்லோரிடமும் சமமாகப் பழகுவார்கள். தர்மத்தின் பாதையில் நடப்பார்கள். சட்டத்தை மதிப்பார்கள். சுதந்திரமாக வாழ்வார்கள்.

இவ்வளவு போதனைகள் செய்யக் கூடிய கன்பூசியஸை சூலாவோ சீயிடம் கல்வி பயின்ற மாணவராகக் குறிப்பிடுவதும் சீன மரபில் உண்டு. சீனாவில் கடவுளைப் போல வழிபடப்படும் கன்பூசியஸ் அவரது நீதி நூல்களுக்காகப் பெரிதும் போற்றப்படுகிறார். பன்முகத் தன்மை கொண்டவராக அறிஞர்களால் புகழப்படும் கன்பூசியஸ் தேர்ந்த அரசியல்வாதியாகவும் இருந்திருக்கிறார். சிறந்த நிர்வாகி. போர்வீரர். இலக்கிய நூல்களைப் பதிப்பித்தவர். சீன மரபினை வளர்த்தெடுத்தவர். நல்ல ஆசிரியர். சிறந்த குரு. உயர்ந்த மனிதர். வாழ்வியல் அனுபவங்களிலிருந்து ஞானத்தை வளர்த்துக் கொண்ட இந்த தத்துவஞானி உலகின் பொக்கிஷம்.

இருள் இருள் எனச் சொல்லி கொண்டு சும்மா இருப்பதை விட ஒரு சிறிய விளக்கை ஏற்றி வைப்பது சிறந்தது தானே.

இமயத்தின் வடக்கே டாவோ சீயும், கன்பூசியசும் மக்களின் மீது பேரன்பு பாராட்டியது போலவே, இமயத்தின் தெற்கேயும் இரண்டு ஞானியர் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்டார்கள். இந்த நான்கு ஞானியருக்கும் செறிவான பொருத்தப்பாடுகள் உண்டு. நால்வருமே கடவுள்களாக ஆகிப்போனார்கள். அவர்களின் கோட்பாடுகள் மதங்களாக மாற்றம் பெற்று விட்டன.

வடக்கே ஆட்சியாளர்களது கொடுங்கோன்மையால் மக்கள் துன்பங்களுக்கு ஆளானார்களெனில், தெற்கே கடவுளின் பெயரால், சடங்குகளின் ஏற்பாட்டால், சாதியின் உயர்வால் மக்கள் பெருத்துயர்களுக்கு உட்பட்டார்கள். மக்களின் துன்பங்களை, துயர்களை, அவலங்களை, அறியாமைகளை வேரறுத்து

சமூகத்திற்கு நல்வாழ்வு காட்டிய இந்த ஞனியருக்கு எவ்வளவு நன்றி பாராட்டினாலும் தகும்.

இருபத்து ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் இந்திய மண்ணில் நிகழ்ந்த சாதி சமய வேறுபாடுகள், இரண்டு மிகப்பெரிய மதங்களை உருவாக்கக் காரணமாக அமைந்தன. வேத காலத்தின் வைதீக நீட்சியான புரோகித மதத்தால் மக்களுக்குள் பல்வேறு வேறுபாடுகள் உண்டாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுப்படுகிறது. இவ்வேறுபாடுகளைக் களைவதன் பொருட்டும், மக்களின் சிந்தனை மாற்றத்தை முன்னெடுக்க வேண்டியும் தோன்றிய மதங்களாகக் கூறப்படுபவை சமணமும், பௌத்தவும். பொதுவில் இரண்டும் கடவுள் மறுப்பு சமயங்களெனக் கூறப்படுகிறது.

வேத சமயத்தின் சாதிப் பிரிவினை ஏற்ற தாழ்வும், புரோகிதர் ஆதிக்கமும், சமயச் சடங்குகளின் பெருக்கமும், உயிர் பலி வாங்கும் யாகங்களும், வேதத்தையும், வேதாந்தத்தையும் புரோகிதரல்லாதார் கற்க இயலாதபடி செய்யப்பட்டதும், சமஸ்கிருதம் மேம்படுத்தப்பட்டு மற்ற மொழிகள் வெறுக்கப்பட்டதும், கடவுளின் பெயரால் பொய்மையும், புரட்டும், மூட நம்பிக்கைகள் மலிந்ததும், சமண பௌத்த சமயங்கள் தோன்றுவதற்குக் காரணங்களாக அமைந்தன.

சமணத்தோடும் பௌத்தத்தோடும் வேத சமயத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டது பதினாறு மகாஜனபதர்களில் ஒன்றான மகதம். ராஜகிருகத்தையும் பின்னர் பாடலிபுத்திரத்தையும் தலைநகராகக் கொண்டு, பீகார் மற்றும் வங்காளத்தை உள்ளடக்கியிருந்த இந்த மகதப் பேரரசிற்கு, இந்திய வரலாற்றில் முன்னோடி இடமுள்ளதாக வரலாற்றறிஞர்களால் குறிப்பிடப்படுகிறது. முப்பது நூற்றாண்டுகளுக்கும் மேலான நீடித்த பாரம்பாரியம் கொண்டதாக அறியப்படம் மகதத்தின் சிறப்பு, அடுத்து வந்த மௌரிய மற்றும் குப்தப் பேரரசுகள் வழியாக இந்தியப் பண்பாட்டின் பொற்காலமாகவே கொண்டாடப்படுகிறது.

மகதப் பேரரசு சமண புத்த இலக்கியங்களிலும் இராமயணம், மகாபாரதம் மற்றும் புராணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இருபத்தி ஆறு நூற்றாண்டிற்கு முன்பே இது ஒரு பழங்குடி அரசாட்சியாக இருந்ததாக குறிப்புகள் தெரிவிக்கின்றன.

பிருகத்ரத அரசாட்சியைத் தோன்றுவித்த பிருகத்ரத மன்னரே மகதத்தின் முதல் அரசராகக் குறிப்பிடப்படுகிறார். இவர் குரு மரபின் சேதி அரசரான வசுவின் மூத்த மகனாக அறியப்படுகிறார்.

மகதத்தின் இரண்டாவது அரசாட்சி ஹர்யன்கரா. ஹர்யன்கரா அரசாட்சியைச் சேர்ந்த பிம்பிசாரர் (பொ.ஆ.மூன் 558-491) மகதத்தின் புகழ்பெற்ற அரசராக விளங்கியிருக்கிறார். இவர் போராலும் மண உறவுகளாலும் மகதத்தை விரிவுபடுத்தியிருக்கிறார். இவரது அட்சிக் காலத்தில் செழிப்பான பண்பாடு இருந்திருக்கிறது. புத்தருக்கு நண்பராகவும் புத்தமதத்தைப் பாதுகாத்தவராகவும் பிம்பிசாரர் புகழப்படுகிறார். சமண சமய இலக்கியங்களில் பேரரசர் ஸ்ரீரேனிகா எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் பிம்பிசாரர், அடிக்கடி மகாவீரரைச் சந்தித்து அறிவுரைகள் கேட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பிம்பிசாரரை சிறையிலடைத்துவிட்டு ஆட்சியதிகாரத்திற்கு வரும் மகன் அஜாதசத்ரு சிறந்ததொரு போர் வீரனாக அறியப்படுகிறார். கோசலம், வைசாலி போன்ற பகுதிகளை மகத்தோடு இணைத்திருக்கிறார்.

நந்த அரசமரபைத் தோன்றுபித்தவர் மகா நந்தர் (பொ. ஆ. முன். 367-345) இவர் ஹர்யன்கரா அரசமரபின் உதயண அரசனை வென்று சிஷீநாக அரசாட்சியை நிருவுகிறார். இவரது மகனான மகாபத்ம நந்தர் (பொ.ஆ.முன். 345-329) மிகச் சிறந்த போர் வீரராக அறியப்படுகிறார். கலிங்கத்தையும், தக்காணத்தையும் வென்றிருக்கிறார். கிழக்கே வங்காளம் முதல் மேற்கே பஞ்சாப் வரை பேரரசு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

குறுகிய காலமே நிலைத்திருத்த நந்தப் பேரரசின் தனநந்தரைத் தோற்கடித்து, சந்திர குப்த மௌரியர் பண்டைய இந்தியாவின் சிறந்த அரசாட்சியான மௌரியப் பேரரசிற்கு வழிகோலுகிறார். இவரது வெற்றிக்கு உதவியவராக அர்த்த சாஸ்திரம் என்ற நூலை எழுதிய கௌடில்யர் எனும் சாணக்கியர் (பொ.ஆ.முன். 350-275) அறியப்படுகிறார்.

இந்தியாவின் பண்டைச் சமயமான சமணத்தின் மையக் கருத்துக்களை நிறுவியவர் மகாவீரர் (பொ.ஆ.முன் 599-427). சமண மத வழக்கில் மகாவீரர் கடைசி மற்றும் இருபத்தி நான்காவது தீர்த்தங்கரர்.

தீர்த்தங்கரர் என்றால் ஆற்றைக் கடப்பவர். பிறவியெனும் ஆற்றைக் கடந்தவர்கள் தீர்த்தங்கரர்கள். இவர்களே மக்களுக்கு பிறவி எனும் ஆற்றைக் கடக்க உதவ முடியும். பிறவி எனும் சுழற்சியிலிருந்து விடுபடும் முக்திக்கான வழியையும் காட்ட முடியும்.

இருபத்தி மூன்றாவது தீர்த்தங்கரராகக் குறிப்பிடப்படுபவர் பார்சுவ நாதர் (பொ.ஆ.முன் 877-777). காசி நாட்டு வாரணாசியில் பிறந்தவராக அறியப்படும் பார்சுவ நாதர், தொடர்ந்து எண்பத்து நான்கு நாட்கள் தவமிருந்து முக்திக்கான வழியைக் கண்டைந்ததாகக் கூறப்படுகிறது.

ரிசபதேவர், ஆதிநாதர், தீபநாயகர், ஆதிபுருசர் என அழைக்கப்படும் சமண சமய முதலாவது தீர்த்தங்கரர், இச்வாகு குலத்தில் கோசல நாட்டு அயோத்யாவில் பிறந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். இவரது மூத்த மகன் பரதன் பெயராலேயே பாரதவர்சம், பரதகண்டம் என இந்தியா குறிக்கப்படுவதாக சமண மரபு கூறுகிறது. இவர் கயிலை மலையில் வீடுபேறு அடைந்ததாகவும், இவரது உபதேசங்கள் அடங்கிய தோகுப்பு பூர்வ வேதம் எனவும் கூறப்படுகிறது. ஆதிநாதரின் இன்னொரு மகனான பாகுபலி, துறுவறம் பூண்டு தென்னிந்தியாவில் சமணத்தைப் பரப்பியதாகக் குறிப்பிடப்படுகிறது. இவரது மிகப்பெரிய சிலை கொம்ம தேசுவர பாகுபலி (கோமதீஸ்வரர்) எனும் பெயரில், கர்நாடக மாநில சரவண வெள்ளைக் குளத்தில் அதாவது சரவணப் பெலகுளாவில் அமைக்கப்பட்டுள்ளது.

சமண சமயத்தின் நிறுவனராகக் குறிப்பிடப்படும் ஆதிநாதர், ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்து எண்பத்தி நான்கு லட்சம் பூர்வம் ஆண்டுகள் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறார். சமணர்களின் கணக்குப்படி, எண்பத்தி நான்கு லட்சம் ஆண்டுகள் ஒரு பூர்வாங்கம். எண்பத்தி நான்கு லட்சம் பூர்வாங்ம் ஒரு பூர்வம். இவரது வாகனம் காளை.

சமணர்களின் காலக் கணக்கீட்டில் ஆறு யுகங்கள் குறிப்பிடப்படுகின்றன. சுகமா சுகமா யுகத்தில் மகிழ்ச்சி மட்டுமே இருக்கும். துன்பம் அறவே இருக்காது. மக்கள் ஆறு மைல் நீளமுள்ளவர்களாக இருப்பார்கள். இக்காலம் 400 டிரில்லியன் சாகரோபமாக்களைக் கொண்டது. துக்கமா ஐந்தாவது. துன்பமும் மிகச் சிறிய அளவிலான இன்பமும் உண்டு. இருபத்தியோராயிம் வருடங்கள் கொண்டது இக்காலம். மக்கள் ஆறு அடி உயரம் கொண்டவர்கள். வாழ்நாள் அதிகபட்சம்

நூற்றிமுப்பது வருடங்கள். ஆறாவது துக்கமா துக்கமா யுகம். கடுமையான துக்கம். மனிதர்கள் இரண்டடியாக இருப்பார்கள். வாழ்நாள் பதினாறு முதல் இருபது ஆண்டுகள். அடுத்து முதலாவது தீர்த்தங்கரலிருந்து மறுபடியும் சுழற்சி துவங்கும்.

சமணம் மனிதர்களின் உயரம், அளவு, வாழ்நாள் குறித்து வேறுபட்ட கண்ணோட்டத்தைச் சுட்டுகிறது. மனிதர் போன்றே விலங்குகளும் தாவரங்களும் அளவில் மாறுபடுகின்றன. உயரமான, பருமனான, நீண்ட ஆயுட்காலம் கொண்ட உடல், சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆதி நாதர் பெரிய உடல் கொண்டவராகவும், மகாவீரர் சிறியதொரு உடல் கொண்டவராகவும் சமண சமயம் சுட்டிக் காட்டுகிறது.

இரண்டாவது தீர்த்தங்கரான அஜிதநாதர் ஆயிரத்து முந்நூற்றி ஐம்பது மீட்டர் நீளமுடையவர். அயோத்யாவின் மன்னராகக் குறிப்பிடப்படுகிறார். இவரது ஆயுள் எழுபத்தி இரண்டு லட்சம் பூர்வம் ஆண்டுகள். வாகனம் யானை.

அத்தினாபுர மன்னர் பரம்பரையில் பிறந்தவராண சாந்திநாதர் பதினாறாவது தீர்த்தங்கரர். ஒரு லட்சம் ஆண்டுகள் வாழ்நாள் உடையவர். வாகனம் மான். நேமிநாதர் இருபத்தி இரண்டாவது தீர்த்தங்கரர். யாதவகுலத்தின் துவாரகையில் பிறந்தவர். வாழ்நாள் ஆயிரம் ஆண்டுகள். வாகனம் பாம்பு.

சிங்கத்தை வாகனமாகக் கொண்டவர் மகாவீரர். வீரா, வீரப்பிரபு, சன்மதி, அதிவீரர், ஞானபுத்திரர், ஜினர், வர்த்தமானர், சிரமணர் எனப் பலவாறாக அறியப்படும் அருகரான மகாவீரர், பிகாரின் வேசாலியில், சத்திரியக் குண்டா எனும் ஊரில் சித்தார்த்த அரசருக்கும் திரிசாலா அரசிக்கும் பிறந்தவராக அறியப்படுகிறார். வளர்ப்பவர் எனும் பொருளுடைய வர்த்தமானை எனும் பெயர் சூட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மகாவீரர் இல்லறத்தில் ஈடுபடவில்லை எனவும், யசோதா என்பவரை மணந்து பிரியதர்ஷனா என்றொரு மகள் இருந்ததாகவும் கருத்துக்கள் கூறப்படுகின்றன. முப்பதாவது வயதில் அரசாட்சி மற்றும் குடும்பத்தைத் துறந்து, துறவியாக பன்னிரெண்டு ஆண்டுகள் தியானம் செய்து, ஆன்மிகத் தேடலில் ஈடுபட்டு, சாலா எனும் மரத்தடியில் ஞானம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறார். பின்னர் இந்தியா முழுமைக்கும் பயணம் மேற்கொண்ட மகாவீரர், ஆன்மிகத் தேடலின் விளைவாகப் பெற்ற கைவல்ய ஞானத்தை மக்களுக்கு எடுத்துரைத்திருக்கிறார்.

சியாத்வதர் எனக் குறிப்பிடப்படும் மகாவீரர் ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஓர் ஆத்மா உண்டென்றும், அது தமது நல்லது அல்லது கெடுதல் செயல்களின் விளைவாக கர்மா எனப்படும் வினைப் பயன்களை சேர்த்துக் கொள்வதாகவும் குறிப்பிடுகிறார். வாழ்வியல் முறைகளால் மேலும் கர்மா பளு கூடுவதாகக் கூறும் மகாவீரர், சரியான நம்பிக்கை, சரியான அறிவு மற்றும் சரியான நடத்தை மூலம் கர்மாவிலிருந்து விடுபடலாம் என வழியும் காட்டுகிறார்.

மகாவீரரின் மெய்யியலில் அநேகாத்வாதா, சியாத்வாதா, கர்மா எனும் மூன்று கருத்தியல் கொள்கைகளும், வன்முறை தவிர்த்தல் அதாவது அகிம்சை, வாய்மை, திருடாமை, பிரம்மச்சரியம், பற்றிலாதிருத்தல் எனும் ஐந்து நெறிவழிப்பட்ட கொள்கைகளும் முக்கியமானவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஆருக்த மதம், நிகண்ட மதம், அநேகாந்தவாத மதம், ஸியாத்வாத மதம், சிரவண மதம், ஜைனமதம், ஜெயினிசம் எனப் பல பெயர்களில் குறிப்பிடப்படும் சமணம், அகிம்சையை தலையாய கோட்பாடாக வலியுறுத்துகிறது. மனத்தாலோ பேச்சாலோ உடலாலோ எந்த ஒரு உயிரினத்திற்கும் தீங்கிழைக்கக் கூடாதென்பதை உறுதிமொழியாக எடுத்துக் கொள்ள சமணம் அறிவுறுத்துகிறது.

சமணத் தத்துவம் ஏழு அடிப்படைகளைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடுவர். தன்னுணர்வும் உள்ளுணர்வும் ஞானமும் கொண்ட உயிர்கள் (ஜீவ), பொருள் காலம் இடமான உயிரற்றவை (அஜீவ), உயிருள்ள மற்றும் உயிரற்றவையின் தொடர்பினால் உண்டாகும் ஆத்மாவின் கர்ம வினைப் பயன் (அஸ்ரவ), உயிர்களின் தன்னுணர்வையும் அறிவையும் முழுமையுணர்தலையும் மறைக்கும் பந்தம், நன்னடத்தையால் மேலும் கர்மாவைச் சேர்க்காத சம்வரம், வினைப்பயனைத் துறந்து கர்மாவைத் தொலைக்கும் நிர்ஜன, கர்மத்தளைகளிலிருந்து விடுபட்டு முழுமையான ஞானத்தையும் தன்னுர்தலையும் அடைந்த ஆத்மா போன்ற நிலைகளை, கர்மாக்களைத் தொலைப்பதை சமணம் பேசுகிறது.

சிரமப்படுத்திக் கொள்பவர்களது சமயமான சமணம், உண்மை ஒரே ஒன்றல்ல, உண்மைக்கு பல வழிகளுள்ளன என்பதை விளக்கும் அநேகாந்த வேதத்தை மிக முக்கியமான கருதுகோளாக முன்வைக்கிறது. எது ஒன்றிற்கும் ஒற்றைத் தன்மையைக் கூற இயலாதெனும் கருத்தை சமணத் தத்துவம் அறுதியிடுகிறது.

நிச்சயமற்ற தன்மை, முழுமையற்ற தன்மை எனக் குறிப்பிடப்படும் அநேகாந்த வாதம், எந்த ஒன்றினுக்கும் ஒரேயொரு வழிமுறை, பாதை மட்டுமே இருக்க இயலாதென்கிறது. மேலும், மனிதர்களால் ஒட்டுமொத்த முழுமையையும் ஒரு போதும் அறிய இயலாதெனவும் வாதிடுகிறது.

இருக்கலாம், இல்லாமலிருக்கலாம், இருந்தும் இல்லாமலிருக்கலாம், இல்லாமலிருந்தும் இருக்கலாம் போன்ற கருத்தாக்கங்களை மையமாகக் கொண்ட சியாவாதமும், உண்மையின் ஏதேனுமொன்றின் ஒரு பகுதியை மட்டுமே அறிய இயலும் என்பதை வாதிக்கும் நியவாதமும் சமணர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. இக்கருதுகோள்களுக்கு உதாரணமாக பார்வையற்றவர்கள் யானையைத் தொட்டுப் பார்த்து அதன் உருவத்தை விளக்க முயல்வது சுட்டிக்காட்டப்படுகிறது.

சமணத்துவத்தைப் பொறுத்தளவில் கேவல ஞானமே முழுமையான ஒரே ஞானம். உயர்ந்த ஞானம். அனைத்து ஆத்மாக்களுமே இந்த கேவல ஞானத்தைப் பெற்றுள்ளன என நம்பப்படுகிறது. கர்மாக்களினால் இந்த உயர் ஞானம் மறைக்கப்பட்டுள்ளது. கேவலஞானம் கைவரப் பெற்ற ஆத்மாக்களுக்கே, மனிதர்களுக்கே முழுமையான ஞானம் இருக்கும். மற்ற அனைத்தின் ஞானமும் குறைவுடையதே. முழுமையான ஞானம் பெற்றவர்கள் கேவலர்கள், ஜினர்கள், அரிஹன்ட்கள் என சமண மரபில் அழைக்கப்படுகின்றனர். மகாவீரரின் முக்கியமான பதினோரு சீடர்களில் ஒருவரான ஜம்பு என்பவரே கடைசியாக இந்த கேவல ஞானத்தைப் பெற்றவராக ஜைன மரபில் குறிப்பிடப்படுகிறார்.

ஜைன மதத்தின்படி, ஒவ்வொரு ஆத்மாவும் அதன் கட்டுக்களிலிருந்து விடுபட்டு கடவுளாகலாம். உடலைக் கொண்டுள்ள முழுமையடைந்த அரஹன்ட் (வெற்றியாளர்) எனவும், உடலை விட்ட முழுமையடைந்த ஆத்மா சித்தாஸ் எனவும் குறிக்கப்படுகிறது.

எந்த ஒரு கடவுளையும் உயர்ந்ததொன்றையும் முக்திக்கான மோட்சத்திற்கான நிர்வாணத்திற்கான வழியாக சமணம் குறிப்பிடவில்லை. தீர்த்தங்கரர்கள் நிர்வாணமடைவதற்கான வழிமுறைகளைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் அல்லது வழிகாட்டிகள் மட்டுமே. அரிகன்ட்களான ஜினர்கள் கேவல ஞானம் வாய்க்கப்பெற்று தங்களது முக்தியை எட்டலாம். இவர்கள் சாதாரண

வீரர்கள். தீர்த்தங்கரர்களாக அதாவது முத்திக்கான வழிகாட்டிகளாக மாறும் கேவலர்கள் மகாவீரர்கள். இவர்கள் மனிதர்களின் ஆன்மீக வழிகாட்டிகள். இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்களும் காலச்சுழற்சியின் ஒவ்வொரு பாதியிலும் தோன்றுவார்கள்.

அரிகன்ட்கள் முக்தி பெறுவது சித்திஸ்நிலை. இந்நிலையில் இவர்களது ஆன்மா அண்டத்தின் உச்சியிலுள்ள சித்த சீலா பகுதிக்குச் சென்று, முடிவற்ற ஆனந்தத்தோடும், முடிவற்ற தன்னுணர்வோடும், முடிவற்ற ஞானத்தோடும், முடிவற்ற ஆற்றலோடும் இருக்கும்.

அண்டத்தை யாரும் படைக்கவில்லை. இப்பேரண்டம் என்றும் இருப்பது அழிவில்லாதது என சமணம் குறிப்பிடுகிறது. காலச் சக்கரத்திற்கு முடிவில்லை. காலச் சக்கரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உட்சர்பினி அதாவது இன்பம் கூடும் ஏறு வரிசை. அவசர்பினி அதாவது துன்பம் கூடும் இறங்கு வரிசை. ஒன்றிருப்பின் மற்றொன்று தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும்.

ஒவ்வொரு அரை காலச்சக்கரத்திலும் அறுபத்தி மூன்று ஒளிமிக்க புகழ்மிக்க சலகபுருசர்கள் உருவாவார்கள். சலகபுருசர்களில் இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்கள், பன்னிரெண்டு சக்ரவர்த்திகள், ஒன்பது பலதேவர்கள் (நல்ல வீரர்கள்), ஒன்பது வசுதேவர்கள் (போரிடும் வீரர்கள்), ஒன்பது பிரதிவசுதேவர்கள் (எதிர்மறை வீரர்கள்) அடங்குவர். காலச் சக்கர மாற்றத்தில் இந்த அறுபத்தி மூன்று சலகபுருசர்களும் தோன்றி மதத்தையும் சமூக ஒழுங்கையும் ஏற்படுத்துவர்.

சமண இலக்கியங்களில் கல்ப சூத்ரம் முக்கியமானதாகக் குறிப்பிடப்படுகிறது. சமண மதத்தின் புனிதக் கொள்கைகள் அடங்கிய நூலாக கல்ப சூத்ரம் அறியப்படுகிறது. நூலில் தீர்த்தங்கரர்கள் பற்றிய குறிப்புகள் கூறப்பட்டுள்ளன.

சமணர்கள் இருபெரும் பிரிவுகளாக உள்ளனர். அம்மணசாமிகள் என அழைக்கப்படும் திகம்பரர்கள். இவர்கள் ஆடை அணியாத அதாவது திசைகளையே ஆடைகளாக அணிந்தவர்கள். வெண்ணிற ஆடை அணிபவர்கள் சுவேதாம்பரர்கள். சுவேதாம்பரர்களிலும் துணைப் பிரிவுகளுண்டு. ஸ்தானகவாசிகள் எனக் குறிப்பிடப்படும் சமணர்கள் உருவ வழிபாட்டை எதிர்க்கக் கூடியவர்களாக

இருக்கிறார்கள். இவர்கள் சமண ஆகம வழிபாட்டு முறையைக் கையாள்கின்றனர். மந்திர உச்சாடனமும் உண்டு.

கட்டிடக் கலைக்கும் ஓவியமரபிற்கும் சமணர்கள் சிறந்த பங்களிப்பை அளித்துள்ளனர். பண்டைய இந்தியாவில் புகழ்பெற்ற சமணக் கோவில்கள் இருந்திருக்கின்றன. மகாவீரர் உட்பட பல்வேறு தீர்த்தங்கரர்களும் கோவில்களில் வழிபடப்பட்டிருக்கின்றனர். தீர்த்தங்கரர்களுக்கு இறபுறமும் யட்சன், யட்சி எனும் பாதுகாவலர் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஜேடா தேவி, ஜேஷ்டா தேவி எனும் கல்விக்கான கடவுளும் சமணமதத்தில் குறிப்பிடப்படுகிறார். தீர்த்தங்கரர்களின் உருவங்கள் பெரும்பாலும் ஒன்றுபோல் அமைக்கப்பட்டிருப்பதால் அவரவர்களின் வாகனங்களை கொண்டு அடையாளம் காண்பதுண்டு. பூக்களும் அடையாளமாகக் குறிக்கப்படுகிறது. ஜைனர்களின் சின்னம் ஸ்வத்திக் ஆகும். மும்மணிகளை மூன்று புள்ளிகளும், மோட்சமடைதலை ஒற்றைப்புள்ளியும் குறிப்பதாகக் கூறப்படுகிறது.

சமணக் கோவில்கள் சமண ஆகம முறைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. யோக முறைகள் சமண மதத்தில் சிறப்பிடம் வகித்திருக்கின்றன. சமணர்களின் கல்விக் பணி முக்கியமானதாக போற்றப்படுகிறது. சமணர்களின் இலக்கியப் பணியும் சிறப்பானதே.

சமணர்கள் தவத்திற்கும், உண்ணாநோன்பிற்கும், வடக்கிருத்தல் அதாவது சல்லேகனை எனும் வாழ்வை முடித்துக் கொள்ளும் முறைக்கும் பெரிதும் அறியப்படுகிறார்கள். பயிர்த்தொழில் செய்தல், வேட்டையாடுதல், மீன் பிடித்தல் போன்றவை விலக்கப்பட்டதாக் கூறப்படுகிறது.

ஆசிவகத்தை நிருவிய மற்கலியும் மகாவீரரும் சமகாலத்தவர்களாகவும் நண்பர்களாகவும் குறிப்பிடப்படுகிறார்கள். பின்னர் இருவரும் கருத்து வேறுபாட்டால் பிரிந்தார்கள் எனக் கூறப்படுகிறது. ஒருவர் தலையை மழித்தார் எனில் இன்னொருவர் சடாமுடியை வைத்துகொண்டார்.

மகாவீரர் காலம் தொடங்கி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் கடந்த பின்னரும், மகாராட்டிஷ்ரம், குஜராத், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் சிறப்பான மதமாக சமணம் இன்றளவும் இருந்து வருகிறது. சமணம் வைதீகத்தோடும் புத்தத்தோடும் கடுமையாக முட்டி மோதியே அதனை

தக்கவைத்துக் கொண்டு வந்திருக்கிறது. அரசர்கள் மற்றும் வணிகர்கள் ஆதரவைப் பெற்று பல நூற்றாண்டுகள் மக்களின் வாழ்வோரு ஒன்றிணைந்துவிட்ட சமணம் இந்திய ஞானத்தின் கொடையாக இருக்கிறதெனில் மிகையாகாது.

ஆசியாவின் ஒளி என புகழப்படும் கௌதம புத்தர் (பொ.ஆ.முன் 563-483), சித்தார்த்தர், புத்தர், ததாகதர், போதிசத்துவர், சாக்கியமுனி எனப் பலவாறாக அழைக்கப்படுகிறார்.

பண்டைய இந்தியாவின் கபிலவஸ்து நகரை ஆண்ட சாக்கியர் மரபில் சுத்தோதனருக்கும் மகாமாயாதேவிக்கும் பிறந்தவர் சித்தார்த்தார். புத்தரின் பிறப்பைப் பற்றிய கனவொன்றைக் கண்ட மாயாதேவியார், அதன் விளக்கமாக பிறக்கப் போகும் மகன் இல்லற வாழ்வை மேற்கொண்டால் பேரரசர் ஆவாரென்றும் துறவு பூண்டால் உலக மாயைகளை ஒழிக்கும் பேரொளியாக, புத்தராக ஆவாரென்றும் கூறப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

மூப்பையும் பிணியையும் இறப்பையும் காண இயலாதவாறு புத்தர் கவனமாக வளர்க்கப்பட்டாரென்றும், பின் இவைகளைச் சந்தித்தபோது எழுந்த ஞானத் தேடல்களின் விளைவாக அரசுரிமை மனைவி மகனை விட்டுப் பிரிந்ததாகவும், சாக்கியர்களுக்குள் நடந்த நதிநீர்ப் பங்கீட்டு முரண்பாட்டில் போரில் ஈடுபடாமல் சமாதானம் பேசி அது ஏற்கப்படாமல் அதற்கான நிபந்தனையாக நாட்டை விட்டு வெளியேறியதாகவும், ஒரு ஞானத் துறவியைக் கண்ணுற்ற சித்தார்த்த கௌதமர், அவரது மெய்ஞ்ஞான ஒளிவீச்சைக் கண்டு அதைப் பற்றிய தேடலில் வீட்டைத் துறந்ததாகவும் பலவாறு கூறப்படுகிறது.

கானகம் சென்ற கௌதமர் கடுமையான தவ வாழ்க்கை மூலம் உண்மையை அறிய முயன்றிருக்கிறார். தவத்தின் முதன்மையான நோக்கம் வாழ்வின் உள்ளார்ந்த மெய்யறிவைக் கண்டடைவதாகவே இருந்திருக்கிறது.

கடுமையான தவம் உடலை அழித்து விடுமெனக் கண்டுணர்ந்து, உணவை மறுக்காமலும் விருப்புடன் உண்ணாமலும் தவநிலையைத் தொடர்ந்திருக்கிறார். இறுதியில் தமது முப்பத்தைந்தாவது வயதில் பீகாரின் கயாவில் போதிமரத்தடியில் ஞானநிலை எய்தும் வரை தொடர்ந்து தவமிருந்து ததாதகர் ஆனார். ததாதகர் எது உண்மையில் அதுவாக உள்ளதோ அந்த நிலையை எய்தியவர். மெய்நிலை அறிந்தவர். நிர்வான நிலை அடையப் பெற்றவர். பிறவிக் கடலை கடந்து சென்றவர்.

புத்தபிரானின் போதனைகள் மக்களைத் திரளவைத்தன. புத்தபெருமானின் அமைதியே அனைத்திற்கும் சான்றாய் விளங்கிற்று. சங்கம் அமைக்கப்பட்டது. உறவினர்களான ஆனந்தரும் அநிருத்தரும் சேர்ந்தனர். பிக்குகளும் பின்னர் பிக்குணிகளும் செறிந்தனர். அனைவரையும் தம்ம பதம் வழிநடத்தியது. புத்தம் சரணம் கச்சாமி, தம்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி வாழ்த்தொலிகள் இந்திய மண்ணை நிறைத்தன.

பாலி இலக்கியத்தில் ஸித்தபிடகம், விநயபிடகம், அபிதம்மபிடகம் எனப்படும் மூன்று நூல் தொகுதிகள் முக்கியமானவைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. இவை பௌத்த சமயத்தின் மூல நூல்களாக அறியப்படுகின்றன. ஸித்தபிடகத்தில் புத்தரும் அவருடைய முதன்மையான சீடர்களும் ஆற்றிய அறிவுரைகள் சிறப்பாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. விநயபிடகத்தில் பிட்சுக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி புத்தர்பிரான் வகுத்த நியமங்களில் செய்துள்ள மாறுதல்களும் அவ்விதிகளும் உரைகளும் தொகுக்கப்பெற்றுள்ளன. அபிதம்மபிடகத்தில் ஏழு பிரிவுகள் இடம்பெற்றுள்ளன. புத்தர் உபதேசித்த விடயங்கள் பற்றிய ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது.

புத்தரின் பரிநிர்வானத்திற்குப்பின் மகா காசிபர் தலைமையில் மகதத்தின் தலைநகர் இராஜகிருகத்தில் கூடிய முதலாவது தேரர்கள் அதாவது வயது முதிர்ந்த பிக்குகள் மூலம் தம்ம போதனைகள் தொகுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. வைசாலி நகரில் கூடிய பிக்குகள் மாநாட்டில் புதிய பழக்கவழக்கங்கள் கூடாதென தடுக்கப்பட, அதனை ஏற்காது பிக்குகள் தனிப் பிரிவாகப் பிரிந்ததாகக் கூறப்படுகிறது. புத்தரின் கொள்கைகளை அப்படியே பழமை மாறாமல் பின்பற்றியவர்கள் தேரவாதிகள். இவர்களுடையது தேரவாதப்பௌத்தம். புதிய கொள்கைகளை உருவாக்கிக் கொண்ட பிரிவு மகாயானப் பௌத்தம். இவ்விரு பெரும் பிரிவுகளிலும் நிறைய உட்பிரிவுகள் உண்டு.

இலங்கைத் தீவில் பொது ஆண்டிற்கு முன் மூன்றாம் நூற்றாண்டிலேயே நிலை கொண்டதாக தேரவாதப் பௌத்தம் குறிப்பிடப்படுகிறது. பொது ஆண்டிற்கு முன் இருபத்தி ஒன்பது முதல் பதினேழு வரையிலான கால கட்டத்தில் அரசாண்ட வட்ட காமினி அபயன் என்னும் அரசர் காலத்தில் திரிபிடகம் முதன்முதலாக நூல் வடிவமாக எழுதப்பட்டதாக இலங்கையின் வரலாறு கூறுகிறது.

புத்தர் என்பது முழுமையாக ஞானம் பெற்றவரைக் குறிக்கிறது. விழிப்புநிலையை அடைந்தவர் புத்தர். சுயமாகவே போதியைப் பெற்றவர் புத்தர். பௌத்த மரபில் இருபத்தியெட்டு புத்தர்கள் தோன்றியதாக ஒரு மரபு கூறப்படுகிறது. தன் ஹங்கர, மேதங்கர, சரணங்கர, நாரத, சித்தாத்த, கொனாகமன, கஸ்ஸப, கௌதம போன்ற இருபத்தியெட்டு பாளி மொழிப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. மகாயான, வச்சிராயன மரபுகளிலும் ஆதி புத்தர், மருத்துவ புத்தர் என பல புத்தநிலைகள் குறிப்பிடப்படுகின்றன.

நிர்வாண நிலை அடைந்தவர், பரிபூரணமான போதிநிலை அடைந்தவர், அறிவு மற்றும் நடத்தையில் பூரணமானவர், நன்றாகச் சென்றவர், அனைத்து உலகங்களையும் அறிந்தவர், அனைத்து மனிதர்களுக்கும் வழிகாட்டுபவர், தேவர்கள் மற்றும் மனிதர்களின் ஆசிரியர், போதியை உணர்ந்தவர், புனிதமானவர், மரியாதைக்குரியவர் போன்ற சிறப்பியல்புகள் கொண்டவராக புத்தர் போற்றப்படுகிறார்.

பௌத்தம் கடவுள் பற்றிய கொள்கையில் அமைதி காப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. கடவுள் உலகினைப் படைத்தாரா என்பதற்கு விடையாக உலகம் இருக்கிறது அவ்வளவே எனும் பதிலைத் தருகிறது. காரண காரியப்படி மனிதர்களை சிந்திக்க வலியுறுத்துகிறது. விதை இல்லாமல் மரம் வர முடியாதல்லவா. மண்ணிலிருந்தே பானை வருகிறது. கடவுள் பற்றிய சிந்தனைகளிலிருந்து, மனித மனங்களின்பால் கவனத்தைத் திருப்புவது புத்தத்தின் மிகச் சிறந்த கொடையாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கடவுளைப் பற்றி எண்ணாமல் சமூகத்தைப் பற்றி, அதன் மேன்மையைப் பற்றி, மக்களின் உயர்வைப் பற்றி எண்ணத் தூண்டுகிறது பௌத்தம். சுற்றிலும் நடப்பதை ஒரு கணம் கூர்ந்து நோக்கினாலும் போதும், கடவுள் இருக்கிறாரா, உலகம் கடவுளால் படைக்கப்பட்டதாக இருக்குமா என்பதில் தெளிவு பெற்று விடலாம் என்கிறது பௌத்தம். இவ்வளவு வேறுபாட்டோடு இவ்வளவு வன்முறையோடு உலகைப் படைப்பாரா கடவுள்.. மனிதர்களில் மேலோர் என்றும் கீழோர் என்றும் எழையென்றும் பணக்காரரென்றும் கடவுள் படைப்பாரோ.. ஒரு பகுதியினர் துன்பத்திலும் இன்னொரு பகுதியினர் இன்பத்திலும் இருக்கும்படியாகக் கடவுளால் எப்படி உருவாக்க இயலும்.. கடவுள் நல்லவர் என்றால் அவரால் படைக்கப்பட்ட மனிதர்கள் ஏன் தீயவர்களாக இருக்கிறார்கள்..

புத்தபகவான் நான்கு பேருண்மைகளைக் கண்டடைந்ததாகக் குறிப்பிடப்படுகிறார். துக்கம், துக்கம் வரும் காரணம், துக்கம் நீக்கல் மற்றும் துக்கம் நீக்கலுக்கான வழிமுறைகள். மனிதர்களால் துக்கத்தை தவிர்க்க இயலாது. நோய், பசி, முதுமை போன்றவை மனிதருக்கு துன்பத்தைக் கொடுப்பவை. மனிதர்களின் துன்பத்திற்கு மூலகாரணம் ஆசை அதாவது பற்று வைத்தல். ஆசையை விட்டுவிடுதலே துக்கத்தை நீக்குவதற்கான சிறந்த வழி.

துக்கத்தைப் போக்குவதற்கு எட்டுவிதமான வாழ்வியல் நெறிகளை, எண் வழிப்பாதையை புத்தர் வலியுறுத்துகிறார். நற்காட்சி, நல்லெண்ணம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நல்மனம் மற்றும் நற்தியானம்.

உலகம் துன்பமாக இருக்கிறது. காரணம் மனித இனத்தின் தீவிரமான இன்ப வேட்கையை. மனிதர்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் மனம், மொழி, மெய்யால் நல்லொழுக்கத்தோடும் வாய்மையோடும் அன்போடும் பரிவோடும் நடந்து கொண்டால் உலகில் அமைதி உண்டாகும். இதுவே நற்காட்சி.

ஆசைகளுக்கு புலனின்பங்களுக்கு அடிபணியாமலும், பிறரோடு முழு நட்புடன் பழகவும், பிறருடைய இன்பத்தையும் அமைதியையும் வளர்க்கவும், தூய சங்கற்பம் செய்து கொள்வது சாலச் சிறந்தது. இதுவே நல்லெண்ணம்.

பொய் பேசுதல், புறங்கூறுதல், இன்னா கூறுதல், பயனில சொல்லுதல் முதலிய தீய வாக்கினால் சமூகக் கட்டுப்பாடு சிதறுகிறது. சண்டை சச்சரவுகள் உண்டாகி அவை துன்பத்திற்குக் காரணமாகின்றன. அதனால் வாய்மையோடு ஒருவருக்கு ஒருவர் நட்பை ஏற்படுத்தும் படி அன்பாகவும் மிதமாகவும் பேசுவது நல்லது. இதையே நல் வாய்மை என்பர்.

திருட்டு முதலிய செயல்களால் சமூகத்தில் பெருந்தீங்குகள் உண்டாகின்றன. எனவே சமூகத்தால் கூடாது என விலக்கப்பட்டுள்ள செயல்களை விடுத்து மக்களுக்கு நன்மை விளைக்கும் உடற்செயல்களையே செய்ய வேண்டும். இதுவே நற்செய்கை.

நல்வாழ்க்கை என்றால் சமூகத்துக்குத் தீங்கு நேராதபடி நேர்மையாகப் பிழைப்பை நடத்துவது. மக்களுக்கு தீமை தரும் தொழில்களை விலக்கி தன்னறத்தோடு வாழ உறுதியெடுத்துகொள்ள வேண்டும்.

மனத்தில் தோன்றும் கெட்ட கருத்துக்களை அறவே வரவொட்டாமல் செய்வது, மனத்தில் தோன்றிய கெட்ட கருத்துக்களை அழிப்பது, மனதில் தோன்றாத நற்கருத்துக்களை உண்டாக்க முயல்வது, மனத்தில் தோன்றிய நற்கருத்துக்களை வளர்த்து அவற்றை முழுமையாக்க முயல்வது போன்றவை நன்முயற்சி.

உடலைப் பற்றிய அறிவை ஓங்கச் செய்வது, உடலில் நேரும் இன்பம் முதலிய உணர்வுகளை அடிக்கடி கவனிப்பது, தன் சித்தத்தை ஆராய்வது, பொறிபுலன்களிலிருந்து எத்தகைய பந்தனங்கள் உண்டாகின்றன, அவற்றை எப்படி நீக்குவது போன்ற மனத்தன்மைகளைப் பற்றி நன்றாகக் சிந்திப்பது நல்லமனம். மனத்தை ஒரு நிலைபடுத்தி ஒன்றில் நிலையாகச் செய்வது நல் தியானம். நல்லமைதி.

நடு நிலை, நடு வழி, மையப் பாதை, மத்திம மார்க்கம், மஜ்ஜிம பதிபாதம் என்று குறிப்பிடப்படும் முழுமையறிதலுக்கான ஒரு சிறந்த வழியை புத்தர் எடுத்துரைக்கிறார். நடுப்பாதை என்றால் எந்த ஒன்றினுக்கும் அதன் இரு முனைகளுக்கும் செல்லாமல் நடு வழியை மேற்கொள்ளவேண்டும். உண்டு குடித்து இன்பம் நுகர்வது கேளிக்கையாளர்களின் போக்கு. உபவாசம் முதலிய விரதங்களால் உடம்பை வாடச் செய்வது தபசிகளின் நோக்கு. இரண்டுக்கும் இடைப்பட்ட பார்வை மையப்பார்வை. நடுவழி. மையப்பாதையைத் தேர்ந்தெடுப்பதற்கு எட்டுநெறிமுறைகளும் பயன்படக் கூடியவை. இவற்றைக் கொண்டே அதற்கான ஞனத்தைப் பெற இயலும்.

பௌத்தம் சமன்வயம் என்பதைப் பற்றியும் பேசுகிறது. சமன் வயம் என்றால் சமரசம். ஒன்றை மட்டுமே சிறந்த ஒன்றாகக் கொள்ளாமல், கொண்டும் கொடுத்தும் ஒரு வித சமநிலையைப் பேணுவது. பௌத்தத்தின் சிறப்பான கொள்கையாகக் உயிர்களை வதையாமை, கொல்லாமை குறிப்பிடப்படுகிறது. ஊன் மறுத்தலும் கடைப்பிடிக்கப்படுகிறது. திபெத் போன்ற விவசாயம் சாராத நாடுகளில் ஊன் விலக்கம் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவு. புத்தம் ஊன் உண்ணாமையை மிகவும் அழுத்தமாக வலியுறுத்தியிருக்குமேயானால் இங்கெல்லாம் பௌத்த மதம் பரவியிருந்திருக்காது.

கடவுள் இருப்பைப் பேசாத பௌத்தம் ஆத்மா என்பதை மறுக்கிறது. கர்மா, வினை, செயல் என்பதே அனைத்திற்கும் காரணமெனக் குறிப்பிடும் புத்தம், மறுபிறப்பைப் பற்றியும், வீடு பேறு பற்றியும் பேசவில்லை. சொர்க்கம் போன்று எதையும் குறிப்பிடவில்லை. உலகம் மாறுதல்களுக்கு உட்பட்டே வருகிறதென்றும் அனைத்துமே மாறுதல்களைச் சந்திக்கின்றனவென்றும் குறிப்பிடும் பௌத்தம், வெவ்வேறு நிலைகளில் வாழ்க்கை பயணமாகிப் போகக் கூடுமென கருத்துரைக்கிறது. இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேல் தொடர்ந்து கொண்டிருக்கும் பௌத்தத்தில், புத்தரால் எதுவும் எழுதிவைக்கப்படாத பௌத்தத் கொள்கைகளில், பலவகையான மாற்றங்களும் கருத்துக்களும் சேர்த்தும் விலக்கியும் இடம் பெற்றிருக்கக்கூடும்.

வாழ்வியல் நெறியாக, வாழ்வியல் முறையாக இருந்த புத்தம், மதமான பின் அதுவும் பல்வேறு பிரிவுகளுடைய மதமாக மாறியபின், அனைத்துத் தரப்பிலான மக்களையும் வாழ்வியல் முறைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் தன்னுள்ளே உள்வாங்கிக் கொண்டே புத்தம் வளர்ந்து வந்திருக்கிறது.

இரண்டாயிரத்து ஐந்நூறு வருட ஞானமும், உலகியல் ஆன்மிகத் தத்துவங்களும் நிரம்பியது புத்த மதம். அகிம்சையையும் அறிவியலையும் முன்னெடுத்த புத்தரால் முன்மொழியப்பட்ட இந்த வாழ்வியல் நெறி. மக்களை அறியாமையிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் விலக்கி, முழுமையை நோக்கிய பயணத்திற்கு வழிகாட்டுகிறது. புத்தர் எனும் மகா ஆசிரியரின் ஞானத்தின் படி, அனைவரும் முழுமையான வாழ்நிலையை அடையலாம். நிப்பனாவாகலாம் அதாவது புத்தனாகலாம்.

மானுட இனம் அறியாமையிலும் வறுமையிலும் மூழ்கிக்கிடக்கும் போது, ஒருவன் மட்டும் சுகபோகங்களை நுகர்வதைப் போன்ற இழிவான செயல் வேறு என்ன இருக்கிறது என புத்தம் கேள்வி எழுப்புகிறது. மானுடரின் வாழ்வை மேம்படுத்தும் புத்தரின் சொற்பொழிவுகள் தர்மம், தம்மம் எனப்படுகின்றன. தம்மம் புத்த மதத்தின் ஒழுக்கவியல். புத்தரின் கொள்கைகள்.

எதையும் ஆராயாமல் ஏற்காதீர் என்றும் கண்ணுக்கும் மனதுக்கும் புலனாகுபவைகளை மட்டுமே ஏற்றுக்கொள்ளுங்கள் என்றும் புத்தர் கேட்டுக் கொள்கிறார். மரபு ரீதியானது என்பதற்காக எதையும் ஏற்காதீர், சமய நூல்களில்

இருக்கிறது என்பதற்காக எதையும் ஏற்காதீர், பெரும்பான்மையோரின் கருத்து என்பதற்காக எதையும் ஏற்காதீர், மதிப்பிற்குரிய பெரியோரார் போதிக்கப்பட்டது என்பதற்காக எதையும் ஏற்காதீர் என அறிவுறுத்தும் புத்தர், அவர் சொன்ன கருத்தையும் ஆராய்ந்து பார்க்காமல் ஏற்க வேண்டாம் எனவும் தெளிவுபடுத்துகிறார்.

செல்வங்கள் தரும் இன்பங்கள் மாயையானவை. அந்த இன்பங்கள் மனத்தில் ஆசையை உண்டாக்கி வெறியூட்டும். ஆசைக்கு இணையான பெருந்துன்பம் இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை.

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் தூய்மை நேர்மை நலலொழுக்கம் ஆகிய மூன்றையும் பின்பற்றி நடப்பானாயின் உலகிலுள்ள அனைத்துத் துன்பங்களுக்கும் ஒரு முடிவு வரும்.

மனிதன் நல்லவனாக இருக்க விரும்புவதே தூய்மைப் பாதை ஆகும். நற்பாதையில் நடக்க உயிர்களை துன்புறுத்தவோ கொல்லவோ கூடாது. பிறர் பொருளை திருடக் கூடாது. போதை உண்டாக்கும் பொருட்களை ஏற்கக் கூடாது. காமவெறியில் ஈடுபடக் கூடாது. பொய் உரைப்பதை கண்டிப்பாக ஒதுக்க வேண்டும்.

மனிதர்கள் நல் ஒழுக்கப் பாதையில் முன்னேற வேண்டும். தீமை செய்ய அஞ்சுவது சீலம். தீய செயல் செய்யாமல் இருக்கத் தீர்மானிக்க வேண்டும். நல்லன செய்ய மனதில் உறுதிகொள்ள வேண்டும். உலகியல் இன்பங்களைத் துறத்தல் நெக்கமம். வாழ்வதற்கான அடிப்படை ஆதாரங்களைத் தவிர இன்ப நாட்டங்களைத் துறக்க வேண்டும். சமூகத்திற்கு சமூக நலனிற்கு தன்னையே கொடுத்தல் தானம். செய்வதாக ஏற்றுக் கொண்ட செயலை எக்காரணம் கொண்டும் கைவிடாமல் முழு ஆற்றலோடு செய்து முடிப்பது வீர்யம். பகைமை கொண்ட ஒருவரை சாந்தத்தால் திருத்துவது காந்தி. இலக்கை அடைவதற்கான தீர்மானம் அத்தானம். மனிதர்கள் அனைவரிடமும் அன்பும் இரக்கமும் கொண்டு ஒழுகுவது கருணை. அனைத்து உயிர்களிடத்தும் பகைவர் உட்பட செலுத்துவது மைத்ரி. பற்றில்லாமல் இருப்பது உவேக்கம்.

புத்தம் தியானத்தை சிறப்பாக முன்னெடுத்து வந்துள்ளது. மனத்தை ஒரு முகப்படுத்தி நல்லதைச் சிந்திக்கும் பயிற்சியை அளிக்கும் தியான முறை பௌத்தத்தின் அருங்கொடையாகப் போற்றப்படுகிறது.

யாகங்கள், வேள்விகள், பலியிடல், பூசாரிகள் இல்லாத, கடவுளில்லாத, பக்தியில்லாத, சாதி மதபேதமில்லாத, பால் வேறுபாடற்ற, வர்க்க முரண்பாடில்லாத ஒரு வாழ்வியல் நெறியை அன்றைக்கிருந்த சமூக அமைப்பில் பேசுவதற்கு, புத்தபெருமானின் பேரறிவும் பெருநம்பிக்கையுமே அடிப்படைகளாக இருந்திருக்கும்.

கடவுள் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்ற புத்தர் கடவுளாகி பல கால மாகிவிட்டது. புத்தருக்கே இன்று அதிக சிலைகள். வானளாவிய சிலைகள். மிகப் பெரிய கோவில்களில் அமர்ந்தும், நின்றும், படுத்தும் புத்தக் கடவுள் சேவை சாதித்து வருகிறார். எண்ணத்தையும் மனதையும் செயல்களையும் மையமாகக் கொண்ட புத்தத்தில், வழிபாட்டு முறைகளே நடைமுறையிலுள்ள பௌத்தமாக இருக்கிறது.

தெற்கத்திய மரபான தேரவாத புத்த நெறி இலங்கை, மியன்மார், தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ் போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், கீழைப் பௌத்தம் என்றும் மகாயான பௌத்தம் (பெரிய வழி) என்றும் அழைக்கப்படும் வழிபாட்டு நெறிப் பவுத்தம் சீனம், கொரியா, ஜப்பான், வியட்நாம் போன்ற கிழக்காசிய நாடுகளிலும், வடக்கத்திய பௌத்தமான வஜ்ராயன அல்லது தாந்தீக நெறிப் பவுத்தம் திபெத், மங்கோலியா, நேபாளம் போன்ற நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

சாக்கிய முனி, தருமத் தலைவன் எனப் போற்றப்பட்ட புத்தரின் புத்த நெறி தமிழ் மண்ணில் தழைத்தோங்கி இருந்தது என்பதற்கு இங்கு கண்டெடுக்கப்படும் புத்தநாதரின் சிலைகள் மட்டுமே சான்றுகளாகிவிட்டன என்பது வியப்பிற்குரியது.

இந்தியாவில் பிறந்த புத்த நெறியை உலக மதமாக்கியவர் மௌரியப் பேரரசர் அசோகர் என வரலாறு பதிவு செய்கிறது. அசோகரின் தாத்தா சந்திர குப்த மௌரியர் (பொ.ஆ.முன். 340-297), தனநந்தரை வெற்றி கொண்டு மௌரியப் பேரரசை நிறுவியவராக அறியப்படுகிறார். அலெக்சாந்தர் பஞ்சாபில் விட்டு சென்ற படையை வெற்றி கொண்டு பஞ்சாபையும் சிந்து மாகாணத்தையும் மோரியப் பேரரசுடன் இணைத்து மாளவம் குஜராத் உள்ளிட்ட வட இந்தியப் பகுதிகள் அனைத்தையும் ஆண்ட பேரரசராக சந்திர குப்தர் விளங்கியிருக்கிறார்.

அலெக்சாந்தரின் படைத்தளபதியும் பாரசீக, பாபிலோனிய ஆட்சிப் பொறுப்பிலிருந்தவருமான செல்யூக்கஸ் நிகேடாரின் படையெடுப்பை

வெற்றிகொண்டு, அரவது மகளையும் மணமுடித்து, மெகஸ்தனிஸ் எனும் தூதுவரையும் பெற்றுக்கொண்டவராக சந்திர குப்தர் புகழப்படுகிறார். செல்யூக்கஸ் பாடலிபுத்திரத்தில் விட்டுச்சென்ற தூதுவரான மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா எனும் நூல் பண்டைய இந்தியாவைப் பற்றி அறிய உதவும் வரலாற்று நூலாக இருக்கிறது. இண்டிகாவில் கூறப்பட்டுள்ள குறிப்புகள், மக்களைப் பற்றிய விவரிப்புகள் நம்ப இயலாத அளவிற்கு கற்பனைத்தன்மை அதிகமுள்ளதாகக் கூறப்படுகிறது. ஒரு கால் உள்ள மக்கள், கொம்புடைய குதிரைகள் இருந்ததாக நூலில் கூறப்படுகிறது. குப்தரின் அமைச்சரான கௌடில்யர் எழுதிய பொருளாதார மற்றும் அரசியல் நிர்வாகத்துறை நூலான அர்த்த சாஸ்திரம் பல காலம் இந்திய வாழ்வியலைத் தீர்மானித்த நூலாக இருந்திருக்கிறது.

தட்சசீலப் பல்கலையில் பணியாற்றிய விசுணுகுப்தர் எனும் கௌடில்யர் மௌரியப் பேரரசின் முதன்மை அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார். அரசனது கடமைகளையும், பொறுப்புகளையும், அரச நிர்வாகத்தையும், சட்டங்களையும், போர்த் தந்திர முறைகளையும் விவரிக்கும் அர்த்த சாஸ்திரம், பதினைந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சந்திர குப்த அரசரின் காலத்தில் பொருளாதாரம் வலுப்பெற்று உள்நாட்டு அயல்நாட்டு வணிகம் சிறந்திருந்ததாகவும், பாரசீகத்தின் அகமனாய்டு மற்றும் கிரேக்கத்தின் ஹெல்லினிஸ்டிக் அரசுகளின் பண்பாட்டுத் தொடர்புறவுகள், இந்திய கலைகள் மற்றும் கட்டிட அமைப்புகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் வரலாற்றிஞர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தியாவின் சமுதாய மற்றும் சமயத் தொடர்பான மாற்றங்களுக்கும் மோரியப் பேரரசு குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் செய்துள்ளது. சமண, பௌத்த, வைதீக சமயங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்று வளர்ந்து வந்திருக்கின்றன. சமுந்திர குப்தர் தமது இறுதிக் காலத்தில் மகன் பிந்து சாரரிடம் அரசாட்சியை ஒப்படைத்து விட்டு சரவண பெலகோலாவில் சல்லேகனை மேற்கொண்டதாக சமண மரபு கூறுகிறது.

சிம்ஹசேனா எனப் பெயரிடப்பட்ட பிந்து சாரர் (பொ.ஆ.முன் 320-273) எதிரிகளே இல்லை எனும் பொருளில் அஜாதசத்ரு எனவும் அழைக்கப்படுகிறார். இருபத்தி இரண்டு வயதிலேயே அரசராகிவிட்ட பிந்து சாரருக்கு, சாணக்யரே

வழிகாட்டியாக இருந்திருக்கிறார். தென்னிந்தியாவின் மைசூரு வரை இவரது ஆட்சி பரந்திருந்ததாகக் கூறப்படும் நிலையில் கலிங்கம் மட்டும் தனித்திருந்திருக்கிறது. அதுவும் பின்னர் உஜ்ஜயினின் கவர்னராக இருந்த பிந்து சாரரின் மகன் அசோகரால் கைப்பற்றப்பட்டது. இந்திய வரலாற்றில் பெரும் பேரரசராகப் போற்றப்படுபவர் அசோகச் சக்கரவர்த்தி (பொ.ஆ.முன் 304-232).

உலக வரலாற்றில் மிகப் பெரும் பேரரசராக புகழப்படுபவர் மகா அலெக்ஸாந்தர் (பொ.ஆ.முன் 356-323). இந்தியாவின் வீரத்தைக் கண்டு திகைத்தவராக அறியப்படும் பேரரசர் அலெக்சாந்தர் மாசிடோனியாவின் அரசர், எகிப்தின் பாரோ, பாரசீகத்தின் அரசர், ஆசியாவின் அரசர் என்றெல்லாம் பெருமைப்படுத்தப்படுகிறார். இருபது வயதில் பட்டத்திற்கு வந்த அலெக்சாந்தர் முப்பத்தியிரண்டு வயதிற்குள் இத்தனையையும் சாதித்தது அவரது பெரும் வீரத்தால் என்றால் மிகையாகாது. அலெக்சாந்தருக்கு மருத்துவம், தத்துவம், நன்னெறி, மதம், தருக்கம், கலைகள் மற்றும் அனைத்து திசைகளிலுமிருந்த நாடுகளைப் பற்றியும் கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியர் அரிஸ்டாட்டிலும் பாராட்டப்பட வேண்டியவரே.

மக்கொடோனியா, மக்கெடான் என அழைக்கப்படும் மாசிடோனியா கிரேக்க மூவலந்தீவின் வடகிழக்குப் பகுதியில் மையங் கொண்டிருந்த ஒரு அரசுரிமையாகக் கருதப்படுகிறது. மேற்கில் எபிரசு நாட்டையும் வடக்கில் பையோனியா நாட்டையும் கிழக்கில் திராசு பகுதியையும் தெற்கில் தேசாலி நாட்டையும் எல்லைகளாக கொண்டது மாசிடோனிய அரசு.

மாசிடோனியாவின் அரசராக இருந்தஇரண்டாம் பிலிப் காலத்தில் எழுச்சி பெற்றதாக அறியப்படும் இவ்வரசு அலெக்சாந்தர் காலத்தில் உலகையே வெற்றி கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

யாழிசை மீட்டுவதிலும் படிப்பிலும் போர்க்கலையிலும் வேட்டையாடுவதிலும் வல்லவரான அலெக்சாந்தர், முரட்டுத்தனமான யாருக்கும் அடங்காமலிருந்த பூசிபலாஸ் எனும் குதிரையை அடக்கி அதனையே வாகனமாகப் பயன்படுத்தியும் வந்தாரெனக் கூறப்படுகிறது. அதன் நினைவாக நகரமொன்றிற்கு பூசி.்பலா எனப் பெயரிட்டிருக்கிறார்.

பதினாறு வயதில் கல்வியை முடித்த அலக்சாந்தர் அடுத்த பதினாறு வருடங்களும் போர்களிலேயே காலத்தைக் கழித்திருக்கிறார். போர்கள், துயரங்கள், அழிவுகள். இந்தியாவைத் தாண்டி கடல்களே இருப்பதாகவும், இந்தியாவைப் பிடித்து விட்டால் உலகத்தையே வென்றுவிடலாம் என அலெக்சாந்தர் எண்ணியதாகவும் கூறப்படுகிறது.

எகிப்து, பாபிலோன், பாரசீகம் தாண்டி, சிந்து நதிக்கரையில் முகாமிட்ட அலெக்சாந்தரின் படைகள், பஞ்சாபை ஆண்ட போரஸ் மன்னரின் யானைப் படையைப் பார்த்து முதன் முதலாகப் பின் வாங்கியதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். அனைத்துப் போர்களிலும் வெற்றியே பெற்று வந்த அலெக் சாந்தர், போரஸ் மன்னருடனான போரில் சற்று கடினப்பட்டே வென்றதாகவும் போரஸின் வீரத்தைப் பாராட்டி அவரிடமே நாட்டை திருப்பவும் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

பொ.ஆ.முன் 326-ல் ஹைட்ஸ்பேஸ் போரினைத் தொடர்ந்து, மேற்கொண்டு இந்திய நிலத்துக்கு முன்னேற மறுத்த அலெக்சாந்தப் படையினர், கங்கை ஆற்றைக் கடப்பதற்கும் அங்கு நிற்பதாகச் சொல்லப்பட்ட கங்கையாற்று மன்னர்களின் எண்பதாயிரம் குதிரைப்படையையும் ஆறாயிரம் யானைப் படையையும் நினைத்து அச்சம் கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. படையினர் நாடு திரும்ப வேண்டுமென்று கிளர்ச்சி செய்ததாகவும், முதலில் மறுத்த அலெக்சாந்தர் பின் படைத்தளபதியின் கருத்துக்களைக் கேட்டு அனைவரையும் நாடு திரும்ப அனுமதித்ததாகவும் கூறப்படுகிறது. அலக்சாந்தரின் நெருங்கிய தோழரான ஹைபெஷனன் முடிவால் துயருற்ற அலெக்சாந்தரின் வாழ்வு பாபிலோனில் நிறைவுற்றதாக வரலாறு குறிப்பிடுகிறது. நாடுகளையும் மக்களையும் கலாச்சாரங்களையும் ஒன்றிணைந்ததில் பேரரசர் அலெச்சாந்தரின் போர் வெற்றிகளுக்கு சிறப்பான இடமிருப்பதாகவும் அறியப்படுகிறது.

போர்கள், பெரும் போர்கள், மீண்டும் போர்கள் என வாழ்ந்த அலெக்சாந்தரைப் போல் அல்லாமல், ஒரேயோரு போரின் இழப்புகளைக் கண்டு மனம் தாங்காமல் அன்பு வழிக்குத் திரும்பிய மகா அசோகர் பாராட்டப்பட வேண்டியவர். போர் என்றாலே கொடூரங்கள் அரங்கேறுவது இயல்பாகக் கருதப்படும் நிலையில், நூற்றுக்கும் மேலான போர்களை வெற்றிகளைக் கண்ட பின்னரும், மக்களின் வீரர்களின் செல்வங்களின் நகரங்களின் பேரரசுகளின் அழிவைப் பார்த்த

பின்னரும் மேலும் முன்னேறிச் செல்ல முயன்ற அலக்சாந்தருக்கு, அசோகரைப் போல் சமண பௌத்தக் கோட்பாடுகளின் அன்பு அகிம்சை வழி தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்திய மரபில் தர்மத்திற்காகப் போரிடுவதையே உயர்வாகச் சொல்வர். மக்களைக் காப்பாற்ற, மண்ணைப் பாதுகாக்க, எளியவர்கள் நலன் காண, படையெடுத்து வரும் எதிரியைத் தடுக்கவே பெரும்பாலான போர்கள் நடைபெற்றிருக்கின்றன. வலிந்து அடுத்த நாட்டினர் மீது படையெடுத்துச் சென்றதாகக் குறிப்பிடப்படும் இந்திய அரசர்கள் வெகுசிலராகவே இருக்கிறார்கள்.

இந்திய மண்ணிற்கு போதும் என்ற குணமுண்டு. அரசர்கள் தமது நிலப்பகுதியைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்தியிருக்கின்றனர். சைரிஸ், அலெக்சாந்தர் போன்றவர்களின் படையெடுப்புகளே இந்திய மண்ணிலும் குறிப்பாக மௌரியர்களை இந்தியா முழுமைக்குமான பேரரசுகளை நிறுவிடத் தூண்டியதென்று குறிப்பிடுவது தவறாகாது.

போதுமென்ற மனமில்லாத பேராசைக்காரர்களால் இந்திய மண்ணில் நிகழ்ந்ததொரு மாபெரும் போரைப் பற்றி காலங்காலமாகப் பேசப்பட்டு வருகிறது. நீதிக்கும் அநீதிக்குமிடையே பாரத மண்ணில் நடைபெற்ற அந்த போரைப் பற்றி அனைத்து மன்னர்களும் அறிந்திருப்பார்கள் என்ற காரணத்தால் போரைப் பற்றியும் அதன் குணத்தைப் பற்றியும் அது கொண்டு வரும் அழிவுகளைப் பற்றியும் நன்கு சிந்தித்தே போர்களைத் தொடங்க விழைந்திருப்பார்கள் என்பது திண்ணம்.

போருக்கும் அழிவிற்கும் வேறுபாடில்லை. உணர்ந்தும் நன்கு தெரிந்தும் ஏன் போரிடுகிறார்கள்? ஆசையைத் தவிர அதுவும் ஒரு சிலரின் தனிபட்ட ஆசைகளைத் தவிர வேறென்ன நோக்கம் இருந்திருக்கப் போகிறது. மண்ணுக்கும் பெண்ணுக்குமே பெருமளவிலான போர்கள் நடந்துள்ளன. சிலர் பெயருக்கும் புகழுக்கும் போர்களைத் தொடுத்திருக்கிறார்கள். சும்மா இருக்க முடியாமல் போரிட்டவர்களும் இருக்கிறார்களென்றே கூறத் தோன்றுகிறது.

குறிப்பிட்ட எல்லையே போதுமென்றெண்ணி அந்த மக்களின் வாழ்க்கையை, பொருளாதாரத்தை, நாட்டை, கலைகளை வளமாக்கினாலே நிறைவென்று இருந்திருக்க முடியாதா மன்னர்களால்? பெரிய நாட்டை ஆளவேண்டுமென்ற பேராசை ஒரு புறமென்றால் அருகமைந்திருக்கும் நாடுகளால் ஏதேனும் அச்சுறுத்தல்

வருமோ என்றெண்ணி அந்நாடுகளின் மேல் போர்தொடுத்து கைப்பற்றிக் கொண்டவர்கள் ஏராளமானோர். மக்களுக்கு வரி மேல் வரியாகப் போட்டு பெரும்படைகளைத் திரட்டிக் கொண்டு தைரியமிருந்தால் தடுத்துப்பார் எனக் கிளம்பிய மன்னர்களை என்ன வென்று சொல்வது.

அடுத்த நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டின் மீதும் நகரங்கள் மீதும் தம் படையினரை நாட்கணக்கில் கொள்ளையடிக்க அனுமதித்த மாபெரும் மன்னர்களை என்னவென்று சொல்வது? வைத்திருக்கும் பொருட்களைக் கொடுத்து விடுங்கள் எனப் படையினர் அன்பாகவா கேட்டிருக்கப்போகிறார்கள்? எவ்வளவு கொடுமைகள்? எவ்வளவு துயரங்கள்? எவ்வளவு அழித்தொழிப்புகள்? குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், முடியாதவர்கள் என்னவெல்லாம் வேதனைகளை அனுபவித்தார்களோ?

தர்மத்திற்காகப் போரிடுவதே தலைசிறந்தது. வலிந்து வரும் போரை எதிர்த்து நிற்பதே வீரம். ஆயுதங்களைப் பெருக்கிக் கொண்டு கூலிக்கு சண்டையிடுபவர்களை கூட்டிக்கொண்டு அடுத்தவர் மேல் பாய்வது ஆண்மையற்றோரின் செயலே.

போரின் அழிவுகள் தெரிந்துதானே அவர்களுக்கு உரிமையுள்ள நாடென்று தெரிந்தும் ஒரேயொரு ஊர் கொடுத்தால்கூடப் போதுமானது எனச் சொன்னார்கள். அதுவும் முடியாதென்று மறுத்ததோடல்லாமல் மேலும் பதின்மூன்றாண்டுகள் காட்டிற்குச் செல்ல வேண்டுமென்றல்லவா பேரரசையுடையோரால் அறை கூவல் விடுக்கப்பட்டது. இந்திய மண் மிக்க பொறுமையுடையது. எனினும் ஒருபோதும் அவள் கோழைகளைப் பெற்றதில்லை.

மண்ணுக்காக நிகழ்ந்த மாபெரும் போரைப் பற்றிப் பேசுகிறது மகாபாரதம். பண்டைய இந்தியாவின் ஞானப்பெட்டகமாக மகாபாரதக் காவியம் போற்றப்படுகிறது. மகாபாரதத்தில் காணப்படாதவை வேறெங்கும் கணப்படாது எனப் போற்றுமளவிற்கு இக்காப்பியத்தில் கதைகள் பின்னப்பட்டிருக்கின்றன.

பாரதத்தின் பெருங்கதை எனவும் பாரதம் எனவும் குறிப்பிடப்படும் மகாபாரதத்தை இயற்றியவராக கிருஷ்ண துவைபாயனர் அறியப்படுகிறார். வேதங்களைத் தொகுத்து வழங்கியதால் வேத வியாசர் எனவும் போற்றப்படுகிறார். பல புராணங்களையும் உபநிடந்த தத்துவ போதனைகளையும் கொண்ட பிரம்ம

சூத்திரம் எனும் நூலையும், ஸ்ரீகிருஷ்ணரின் பெருமைகளைப் பேசும் ஸ்ரீமத் பாகவதம் என்ற நூலையும் இயற்றியதாகவும் கொண்டாடப்படும் வியாச முனிவரே மகாபாரதப் போரின் தொடக்கத்தில் அர்சுனருக்கு கிருஷ்ணர் நெறிப்படுத்திய தத்துவங்கள் கூறும் பகவத்கீதை செய்யுள்களையும் செய்திருக்கிறார்.

மனிதர்களின் அறம் பொருள் இன்பம் வீடு எனும் நால்வகை நோக்கங்களையும், உலகத்தோடும் சமூகத்தோடும் உள்ள உறவுகளையும் விளக்கும் நூலாக பாரதம் விளங்குகிறது. உலகின் மிக நீண்ட காப்பியமாக புகழப்படும் பாரதம், இந்து சமயத்தின் முக்கியமான நூல்களில் ஒன்றாகவும் இருக்கிறது.

மகாபாரதம் தொன்மையான காலத்தில் நடைபெற்ற போரைப் பற்றி பேசுவதாக அறிஞர்களால் குறிப்பிடப்படுகிறது. தொகுக்கப்பட்ட காலம் குறித்தும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. பாணினியின் இலக்கண நூலான அஷ்டத்யாயத்தின் மகாபாரதக் குறிப்புகளைக் கொண்டு மௌரியர்களின் காலத்தில் தொகுக்கப்பெற்றிருக்கலாமென்றும், அதற்கும் முன்னரே தொகுக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் பல குறிப்புகள் கிடைக்கின்றன.

ஆறாயிரம் ஆண்டுகளுக்கும் நான்காயிரமாண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் மகாபாரதம் நிகழ்ந்திருக்கலாமென்று தொல்வானியல் முறைகளைப் பயன்படுத்தி ஒரு காலக் கணிப்பும், மூவாயிரமாண்டுகளுக்கு முன்பான இரும்புக் காலத்தில் நடைபெற்ற போராக இருக்குமென்றொறு கணிப்பும் சொல்லப்படுகிறது.

கதைக்குள் கதை சொல்லல் எனும் முறையில் சொல்லப்பட்டுள்ள பாரதக் கதை, பதினெட்டுப் பர்வங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சாந்தி பர்வம் அதிக செய்யுள்களைக் கொண்டதாகவும், மகா பிரஸ்தானிக பர்வம் நூற்றி முப்பது செய்யுள்களைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

வெற்றி எனும் பொருளில் ஜெய எனப் பெயரிடப்பட்ட இந்த நூலை எழுதிய குரு வேதவியாசருக்கு கதை சொல்வதைக் காட்டிலும் கதை வடிவிலும் கதாப்பாத்திரங்களின் உரையாடல்கள் வாயிலாகவும் மனித சமுதாயத்திற்கு என்றைக்கும் பொருந்தும் தர்ம நெறிமுறைகளை எடுத்துரைப்பதே முக்கிய நோக்கமாக இருந்திருக்க வேண்டுமென அறிஞர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஐந்தாம் வேதம் என பெருமைப்படுத்தப்படும் மகாபாரதம் குருசேத்திரப் போர் எனப்படும் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே நடந்த போரை மையமாகக் கொண்ட கதையாக இருந்த போதிலும், மெய்யியல் விளக்கங்களும் பெருமளவில் கூறப்பட்டுள்ளன. நீதி நெறிகளும் வாழ்வியல் விளக்கங்களும் வழிகாட்டல்களும் நூல் முழுவதும் விவரிக்கப்பட்டுள்ளன.

சந்திர குலமான குரு மரபின் சகோதரர்களான மன்னர் திருராட்டிரரின் மகன் ததுரியோதனின் தலைமையிலான நூறு கௌரவர்களுக்கும், மன்னர் பாண்டுவின் மகன் யுதிட்டிரன் எனும் தருமரின் தலைமையிலான ஐந்து பாண்டவர்களுக்கும் இடையே நடைபெற்ற போரில் பாண்டவர்கள் அரசுரிமையை வெல்கிறார்கள். வெற்றியில் துவாரகை அரசன் கிருஷ்ணனின் பங்கு பெரியது.

பதினெட்டு நாட்கள் நடைபெற்ற போரில் பதினெட்டு அக்ரோணி சேனைகளும் அழிந்ததாகக் கூறப்படுகிறது. மன்னர்கள், படைத்தளபதிகள், இளவரசர்கள், வீரர்கள் என அனைவரையும் மண்ணோடு மண்ணாக்கிய இந்த மாபெரும் போர்க்கான காரணம் மண்ணாசையே.

அசோகர் இளமை காலத்தில் சண்டைக்காரர் என பெயர் வாங்கியிருக்கிறார். அசோகருடைய ஆட்சிக் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மூலமும், தூண்கள் மற்றும் குகைச் சுவர்கள் மூலமாகவும், அசோகவதனா எனும் புத்தரைப் பற்றிய நூல் வழியாகவும், இலங்கையின் வரலாற்று நூல்கள் மூலமும், முத்திரைக் காசுகள் கொண்டும் அசோகரின் வரலாறு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி வழங்கிய அசோகரது ஆட்சிக் காலத்திற்குப் பின்னரே இந்திய வரலாறு ஓரளவிற்கு தெளிவாக அறியப்பட்டிருக்கிறது. பேரரசர் காலத்தில் பிராமி கரோட்டி எழுத்துகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு குறிப்புகளே அதற்குக் காரணம்.

இந்திய வரலாறு அறியப்பட்டதற்கு முதன்மையான காரணம் பிரித்தானியர்களே. ஆங்கிலேயர்களோடு ஜெர்மனிக்காரர்களும், பிரான்சுக் காரர்களும் ஆற்றிய அர்ப்பணிப்புப் பணிகளாலேயே இந்திய வரலாறு வெளிக் கொணரப்பட்டிருக்கிறதென்பதே உண்மை. சாரநாத்தையும், சாஞ்சியையும் கண்டறிந்து அரும்பாடுபட்டு மீட்டு கொடுத்திருக்காவிட்டால் அசோகரும் புத்தரும் இந்திய வரலாறும் வெளிப்பட்டிருப்பது அரிது.

மக்களை குழந்தைகளே என அன்புடன் அழைத்தும், ஒரு தந்தையைப் போன்று மக்களின் விருப்பங்களை நிறைவேற்றித் தருவதாகவும் உறுதி கூறி கலிக்க கல்வெட்டைப் பொறித்த தேவனாம்பியாச பிரியதர்ஷன், உலக வரலாற்றில் மிகச் சிறந்த மன்னரென்பது சரியே. இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் விலங்குகளுக்கு மருத்துவமனைகள் கட்டியிருக்கிறாரெனக் குறிப்பிடுவதென்றால் எவ்வளவு கருணையுள்ளவராக இருந்திருக்க வேண்டும்.. சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. பயணங்களின் தங்குமிடங்களில் உணவுக் கூடங்கள் அமைத்தது அன்றைக்கு மிகப் பெரும் மக்கள் நலத் திட்டமாக இருந்திருக்கும்.

கலிங்கப் போரின் அவலங்களைக் கண்டபின் போரினை வெறுத்த அஸோகர் புத்த மதத்திற்கு மாறினாரென்றும் அதற்கு முன்னரே புத்த மதத்தோடு தொடர்பு இருந்ததெனவும் குறிப்பிடப்படுகிறது. புத்தரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட பேரரசர் பௌத்தத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். புத்தர் பிறந்த இடமான லும்பினி, ஞானம் பெற்ற கயா, முதல் உரையாற்றிய சாரநாத், புத்தர் போதனை செய்த சாஞ்சி போன்ற கோதமரோடு தொடர்புடைய இடங்களில் எல்லாம் ஸ்தூபிகளையும் சங்கிரகங்களையும் விகாரங்களையும் சைத்யங்களையும் அமைத்திருக்கிறார்.

அசோகர் புத்தமதப் புனித நூல்களைத் தொகுப்பதற்கும் புத்தகயாவின் மகா போதியைக் கட்டுவதற்கும் பெருமளவில் உதவி செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. புத்த பிட்சுகள் தங்குவதற்கும் பயணங்கள் மேற்கொள்வதற்கும் உதவிக்கரம் நீட்டியதோடு தட்சசீலம் நாளந்தா போன்ற கல்வி கூடங்கள் உருவாவதற்கும் ஆவண செய்திருக்கிறார்.

புத்தருக்கே இந்தியாவில் முதலில் கோவில்களும் சிலைகளும் உண்டாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. தம்மத்தின் சிறப்பைப் பற்றியும் சாக்கிய முனியின் பெருமைகளைப் பற்றியும் பல்வேறு நாடுகளுக்கும் தூதர்களை அனுப்பியிருக்கிறார். அசோக மௌரியரின் மகனான இளவரசர் மகேந்திரனும் இளவரசி சங்கமித்ரையும் புத்தமதம் தொடர்பான பணிகளுக்கு இலங்கைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். புத்த சமயத்தோடு நெருங்கிய உறவிருந்தாலும் மற்ற சமயத்தவரையும் பெருமையுடன் நடத்தியவராகவே சக்ரவர்த்தியின் வரலாறு கூறுகிறது.

அசோக சக்கரம் என அழைக்கப்படும் தம்மச்சக்கரம் காலச் சுழற்சியையும் கால மாற்றத்தையும் குறிப்பிடுவதாக அறிஞர்கள் உரைக்கின்றனர். இருபத்தி நான்கு ஆரங்கள் கொண்ட தர்மச் சக்கரம், இந்திய அரசின் தேசியக் கொடியில் இடம்பெற்றுள்ளது. அசோக முத்திரை எனக் குறிப்பிடப்படும் அசோகத் தூணில் இடம்பெற்றுள்ள நான்கு சிங்கங்களின் முகமுள்ள சின்னமே, தேசிய குறியீட்டு அடையாளமாகவும் இந்தியக் குடியரசால் எடுத்தாளப்பட்டுள்ளது. இக்குறியீட்டுச் சின்னத்திலுள்ள யானை, எருது, குதிரை மற்றும் சிங்கம் புத்தரின் வாழ்வோடு தொடர்புடைய நிகழ்வுகளை குறிக்கும் குறியீடுகளாக வடிவமைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடுவதுண்டு.

பெருமைகள் நிறைந்த அரசாட்சியை அளித்த மகா அஸோகருக்குப் பின்னான மௌரிய அரசர்களில் வரலாற்றில் நிலைத்த இடம் பெற்றவர்களாக ஒரு வரும் இல்லாதது வியப்பானது. பிருகத்ரத மோரியரை அழித்து விட்டு புஷ்யமித்திரர் என்ற சுங்க மன்னரோடு பொது ஆண்டிற்கு முன்பான நூற்றி எண்பத்தைந்தில் தொடங்கும் சுங்க அரசாட்சி குறுகிய காலத்திலேயே வீழ்ச்சியடைந்து விட்டது. சுங்கர்கள் பிராமணர்களெனக் குறிப்பிடப்படுவதுண்டு. சுங்கர் ஆட்சியில் இந்து சமய வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் பெற்றதாக ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. பாணினியின் அஷ்டத்திற்கான மகாபாஸ்ய உரையெழுதியவரான பதஞ்சலி முனிவர் இக்காலகட்டத்தவராக அறியப்படுகிறார்.

கலிங்கத்து ஆண்களெல்லாம் போரில் வீழ்ந்து விட, பெண்கள் குழந்தைகளைத் தூக்கி கொண்டு போரிட வந்ததைக் கண்ட அசோகர் திகைத்து நின்றார் எனக் குறிப்பிடப்படும் வீரம் வாய்ந்த ஒடிஸாவின் கலிங்கத்தை அசோகருக்குப் பின் காரவேலர் எனும் சேதியரசர் (பொ.ஆ.முன் 175-163) ஆண்டதாக கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. காரவேலர்கள் சமணத்தை பின்பற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது.

மகா மேக வாகன காரவேலர் எனக் குறிப்பிடப்படும் காரவேலர் அவரது படையெடுப்பையும் வல்லமையைப் பற்றியும் புவனேசுவருக்கு அருகேயுள்ள குமரிவர்தம் குமாரபர்வதம் (கந்தகிரி, உதயகிரி) குன்றுகளில் உள்ள ஹாத்தி கும்பா பாறைக் குடைவுகளில் பிராகிருத மொழியில் பிராமி எழுத்தில் கல்வெட்டாகப் பொறித்துள்ளார். பதினேழு வரிகளைக் கொண்டதாகக்

குறிப்பிடப்படும் ஹாத்தி கும்பா பொறிப்பில் தமிழக கூட்டுப்படை பற்றிய முக்கியக் குறிப்பு சொல்லப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மௌரியர்கள் குறித்தும் சங்கப்பாடல்களில் பதிவுகள் கிடைக்கின்றன. காரவேலருக்கு முன்னர் வடபுலத்தில் இருந்து தமிழகத்துக்கு மௌரியர் ஊடுறுவ முயன்றதை அகநானூறு 69, 251, 281 மற்றும் புறநானூறு 175 ஆகிய சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. மட்டூர் கிழார் மகனார் பரங்கொன்றனர் அகம் 69-ம் பாடல், 10-12 வரிகளில் " விண்பொரு நெடுங் குடை தேர் மோரியர் பொன் புனை திகிரி திரிதரக் குறைத்த - அறை இறந்து அகன்றனர்" என்று செய்யுள் இயற்றியுள்ளார். வானை முட்டும் மலை ஒன்று உயர்ந்த குடையை உடைய மோரியரின் தேர்ப்படையைக் குறுக்கிட்டு நின்றது. தேரானது தடையின்றி உருண்டு செல்ல அம்மலையில் பாறையைக் குடைந்து செம்மையான பாதையை அமைத்தனர் என்பது பொருள்.

புலவர் மாமூலனார் 251-ம் பாடலில் மோகூ மன்னன் பழையன், மோரியரின் தலைமையை ஏற்று பணியாததால், பெரும் படையுடைய புதியதாக எழுச்சியுற்ற மோரியர் பகைமை கொண்டு தென் திசை மேல் படையெடுக்க முனைந்தனர். அதற்காக அவர்கள் வெண்மையான அருவிகளை உடைய உயர்ந்த மலையைக் குடைந்து தேர்ச்சக்கரங்கள் தடையற்றுச் செல்வதற்காக வழியமைத்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

தமிழக அரசுகளுடன் நட்புப் பேணியவராக அசோகர் அறியப்படுவதால், அவரது தந்தை பிந்துசாரர் காலத்தில் தமிழ்நாட்டின் மீது படையெடுப்பு முயற்சிகள் நடந்திருக்கலாமென வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். மேலும் தமிழ் நிலத்தில் வணிகர்களின் அல்லது அரசுகளின் கூட்டுப்படையொன்று வலிமையோடு வட எல்லையில் குறிப்பாக வாரங்கல் போன்ற பகுதிகளில் நிலைப்படுத்தப் பட்டிருக்கலாமென்ற குறிப்பும் ஆராய்ச்சியாளர்களால் முன்வைக்கப்படுகிறது. அன்றைக்கு இருந்த வணிகப் பாதைகளைக் கருத்தில் கொண்டே இவவாறான கருத்தியல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பாண்டிய அரசரிடமிருந்து பெற்று வந்த யானைகள், குதிரைகள் மற்றும் நகைகள் மாணிக்கங்கள் முத்துப் பரல்கள் கொண்டு மிகச் சிறப்பான உள் அலங்காரத் தோற்றமுடைய அரண்மனையை ஏற்படுத்தியதாக காரவேலர்

குறித்துள்ளார். பணி செய்த சிற்பிகளுக்கும், கட்டுமானப் பணியாளர்களுக்கும் வரிவிலக்கு அளித்ததையும் குறிப்பிடத் தவறவில்லை.

ஆந்திராவை ஆண்ட சாதவாகனர்களின் அமராவதி பட்டணம் வரலாற்று முக்கியத்துவமுள்ள பகுதியாக அறிஞர்களால் சிறப்பிக்கப்படுகிறது. மௌரியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர், பொது ஆண்டிற்கு முன் இரு நூற்றி முப்பதிற்கும் பொது ஆண்டிற்குப் பிறகான இருநூற்றி இருபதுக்கும் இடையிலான காலப்பகுதியில் உண்டான சாதவாகனப் பேரரசு வெளிநாட்டினரின் தாக்குதல்களை முறியடித்து நாட்டில் அமைதியை நிலைநிறுத்தியாகப் புகழப்படுகிறது.

கங்கைச் சமவெளிக்கும் தமிழகத்திற்கும் இடைப்பட்ட பகுதியிலிருந்து இப்பேரரசு இரண்டு பகுதிகளின் கலாச்சாரத்தையும் இணைக்கக் கூடியதாக இருந்திருக்கிறது. தமிழ் அரசர்களோடு இணைந்து அயல்நாட்டு சித்தியன்களை வெற்றிகொண்டதாகவும் கூறப்படுகிறது.

சீமுகர் (பொ.ஆ.முன் 230-207) சாதவாகனப் பேரரசை தோற்றுவித்தவராக அறியப்படுகிறார். சிசுகா, சிந்துகா, கடபிலா எனப் பல பெயர்களால் குறிப்பிடப்படும் அரசர் சீமுகர், பிரதிஸ்தான், மால்வா பகுதிகளை அரசாட்சி செய்திருக்கிறார். சீமுகருக்குப் பின் அவரது தம்பி கன்கர் என்ற கிருஷ்ணர் (பொ.ஆ.முன் 207-189) தற்போதைய ஆந்திரப் பகுதிகளையும் உள்ளடக்கிய பேரரசை ஆண்டிருக்கிறார். அரசாட்சியின் பிந்தைய காலங்களில் ஸ்ரீகாகுளம், கிருஷ்ணா போன்றவற்றை தலைநகராக்கியதாகக் கூறப்படுகிறது.

சாதவாகன அரசர் முதலாம் சதகர்னி, காரவேலருக்குப் பின்னான கலிங்கத்தையும் வட இந்தியப் பகுதிகளையும் வெற்றி கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறார். மிகுந்த பொருட் செலவில் யாகங்கள் செய்தவராகக் கூறப்படும் சடகர்னி அரசர், அஸ்மேதயாகம் செய்தவராகவும் அறியப்படுகிறார்.

திரிசமுத்ரபிபடோகயவாகன (மூன்று கடல்களின் நீரைக் குடித்த குதிரைகளைக் கொண்டவர்) சகயுவன பல்லவ சூதன (சக, யுவன, பஹ்லபர்களை அழித்தவர்) எனும் பட்டப்பெயர்களைச் சூடிக்கொண்டவரான கௌதமிபுத்ர சதகர்ணி (பொ.ஆ.பின் 78-102) சாதவாகன அரசர்களில் மிகச் சிறந்தவராகப் புகழப்படுகிறார். சௌராட்டிர மால்வா பகுதிகளான குஜராத், மகாராட்டிர ராஜஸ்தான் பகுதிகளை

ஆண்ட இந்தோ-சிந்திய ஷத்ரப அரசரான நகப்பனாவை வெற்றி கொண்டவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

சாலிவாகனர் என அறியப்படும் சதகர்ணி, இந்தோ-கிரேக்கரான யவனர்களையும், இந்தோ-பார்த்தியன்களான பஹ்லவர்களையும், மேற்கு சத்ரபாக்களான சகாக்களையும் வெற்றி கொண்டிருக்கிறார். சமஸ்கிருதத்தின் மேல் பற்று கொண்டவரான சாலிவாகனர், உஜ்ஜயினி அரசர் விக்ரமாதித்யனை வெற்றி கொண்ட ஆண்டைக் கொண்டாடும் விதமாக சாலிவாகன ஆண்டுக் கணக்கு தொடங்குவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டுகள் நாணயங்கள் புராணங்கள் வழியாக சாதவாகனர்களைப் பற்றிய வரலாறு கிடைக்கிறது. சதகர்ணிகளான இவர்கள் பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்ட செப்பு, வெள்ளி நாணயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஸ்தூபா, யானை, சிங்கம், குதிரைகளோடு, உஜ்ஜயினி குறியீடு என அழைக்கப்படும் ஒரு வித குறியீடு கொண்ட அச்சுப்பதித்த நாணயங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

அமராவதி கலை எனப் புகழப்படும் கலையழகு கொண்ட சிறப்பானதொரு கலைமுறையை அறிமுகப்படுத்தியவர்களாக சாதவாகனர்கள் புகழப்படுகின்றனர். அமராவதியில் இந்திய நில அளவையியல் தலைவராக இருந்த கலோனல் மெக்கன்சி (1757-1821) எனும் பிரித்தானிய அறிஞர் தலைமையிலான குழுவினர் நடத்திய ஆய்வில் ஐம்பது மீட்டர் விட்டத்தில் மாபெரும் ஸ்தூபியின் அடிப்பாகம் கண்டறியப்பட்டிருக்கிறது. முப்பத்தேழு மீட்டர் உயரமிருந்திருக்கலாமென கணிக்கப்படும் மஹாசைத்யா எனும் ஸ்தூபியில் புத்த மதம் பற்றிய சான்றுகள் கிடைத்துள்ளன.

கிருஷ்ணா நதிக்கரையில் அமைந்துள்ள அமராவதி நகரில் புத்த மதம் சிறந்து விளங்கியதற்கு சான்றாக புத்த மத தொல்லாதாரங்கள் நிறைய கிடைத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இங்கு கண்டெடுக்கப்பட்ட சான்றுகள் சென்னை உட்பட உலகின் பல்வேறு அருட்காட்சியகங்களில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புத்தமதக் கலை மற்றும் கலாச்சாரத் தொட்டிலாக விளங்கியதாகக் குறிப்பிடப்படும் அமராவதி, காந்தாரக் கலை, நாளந்தா கலை போன்றவற்றிற்கு இணையாக அமராவதி கலை எனும் கலை மரபில் சிறந்து விளங்கியிருக்கிறது.

அமராவதி கலை மரபு தென்கிழக்கு ஆசிய நாடுகள் உட்பட பல நாடுகளுக்கும் பரவியிருக்கிறது.

அமராவதி தூண் பளிங்கினால் செய்யப்பட்டதாகவும், அதல் புத்தருடைய வாழ்க்கையைக் குறிக்கும் காட்சிகள் பொறிக்கப்பட்டிருந்ததாகவும், அதன் உடைந்த பகுதிகள் மெக்கன்சி அவர்களால் சேகரிக்கப்பட்டு இலண்டன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கிந்திய கம்பெனியைச் சேர்ந்த படை அதிகாரி மெக்கன்சி புகழ்பெற்ற நிலப்பட வரைவாளராகவும் நில அளவையியல் அறிஞராகவும் அறியப்படுகிறார். தென்னிந்தியப் பகுதிகளை சிறந்த முறையில் குறித்தவரான மெக்கன்சி, திப்பு சுல்தான் அரசருக்குப்பின் மைசூர் மகாணத்தை அளவிட்டு பதிவு செய்திருக்கிறார். இந்திய வரலாறு தொடர்பான ஆயிரக்கணக்கான ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள், மொழி பெயர்ப்புகள், நாணயங்கள், ஓவியங்கள் என சேகரித்து வைத்திருந்தவராக அறியப்படும் கர்னல் மெக்கன்ஸி, ஆயிரத்து எழுநூற்றி என்பத்தி மூன்றாமாண்டு சென்னை படையில் இணைந்திருக்கிறார்.

இந்தியாவின் தலைமை நில அளவையாளராக உயர்வு பெற்ற கோலின் மெக்கன்சி, 1816 முதல் 1820 வரையிலான காலகட்டத்தில் அமராவதி குறித்தான முறையான ஆய்வுகளை மேற்கொண்டு, அவரது வரைபடக்கலை உதவியாளர் ஜான் நியுமென் மூலமாக எண்பத்தைந்து வரைபடங்களை உருவாக்கியிருக்கிறார். அமராவதியில் ராபர்ட்சன்ஸ் மவுண்டு என அழைக்கப்படும் கல் திண்டுகளை மசூலிப்பட்டி துணை ஆட்சியராக இருந்த பிரான்சிஸ் டபின்யூ ராபர்ட்சன் உதவியோடு சென்னை மெட்ராஸ் அருங்காட்சியத்திற்கு கொண்டு சேர்த்திருக்கிறார்.

தமிழிலும் உருதுவிலும் புலமை பெற்றதற்காக ஆயிரம் பொற்காசுகளை பரிசாகப் பெற்றவரான ஸ்காட்லாந்தின் சர் வால்டர் எலியட் (1803-1887), மெட்ராஸ் மாகாண இந்திய ஆட்சிப்பணியாளராக இருந்ததோடு, கிழக்கத்தியவியல், மொழியியல் மற்றும் இயற்கையியலிலும் சிறந்த அறிஞராக பாராட்டப்படுகிறார்.

தென்னிந்தியாவின் நாணயங்கள் எனும் சிறந்தொரு நூல் வெளியிட்டுள்ள எலியட் அவர்கள், ஆந்திராவின் தாவரங்கள் குறித்து தெலுங்கிலும் ஆங்கிலத்தில் நூல் எழுதியுள்ளார். நீலகிரியின் மெகாலித்திக் கல்வடிவங்கள் குறித்து

குறிப்பிட்டுள்ள எலியட், அமராவதியின் அகழ்வாய்விலும் ஆர்வம் மிக்கவராக இருந்திருக்கிறார். அவரது வரைபடக்கலை உதவியாளர் ஜான் நியுமென் மூலமாக அமராவதியில் சேகரித்த எலியட் மார்பின்கள் என அழைக்கப்பட்ட கற்களை சென்னைக்கு கொண்டுவந்திருக்கிறார். இந்தியாவின் பண்டைக் கால எழுத்துக்கள், நம்பிக்கைகள், பண்பாடுகளை அறிய பேராவல் கொண்டிருந்தவராக அறியப்படும் எலியட், விலங்குகளைப் பற்றி அறிவதிலும் விருப்பமுடன் இருந்திருக்கிறார். சார்லஸ் டார்வின் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்தியா மற்றும் பர்மாவிலிருந்து சேகரிக்கப்பட்ட வீட்டுப் பறவைகளின் தோல்களைச் சேகரித்து அனுப்பியிருக்கிறார். மெல்லுடலிகள் திமிங்கலங்கள் டால்பின்கள் மற்றும் வேறுபல விலங்கு மாதிரிகளையும் சேகரித்திருக்கிறார். மெட்ராஸ் கலை மற்றும் இலக்கிய அறிவியலிதழில் தென்னிந்தியாவின் பாலூட்டிகளைப் பட்டியலிட்டதோடு புது வகை சிறய பாலூட்டிகளையும் கண்டறிந்துள்ளார். கொலுன்டா எலியோட்டி (இந்திய புதர் எலி) அனதான எலியோட்டி (மூங்கில் அணில்) போன்றவை எலியட் பெயர் கொண்டு அறியப்படும் சிற்றினங்களாகும்.

நாகைப்பட்டினத்திற்கு வடக்கே ஒன்று அல்லது இரண்டு கல் தொலைவில் புது வெளிக் கோபுரம் என்றும் சீனக் கோவில் என்றும் கறுப்புக் கோவில் என்றும் அழைக்கப்பட்ட ஒரு கோபுரம் இருந்ததென்றும், அக்கோபுரம் நாகைப்பட்டினத்துக்கு வருகிற கப்பல்களுக்கு ஒரு அடையாளமாகக் கடலில் தோன்றியதென்றும், 1846 ஆம் ஆண்டில் நேரில் அக்கோபுரத்தைக் கண்டதாகவும் சர் வால்டர் எலியட் குறிப்பிட்டுள்ளார்.

அமராவதியிலிருந்த அமராவதி மகா சைத்தியம் பொது ஆண்டிற்கு முன்பான முதலாம் நூற்றாண்டு காலத்தில் கட்டப்பட்டிருக்கலாமென அறிஞர்களால் கணிக்கப்படுகிறது. கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளுக்கு இடைப்பட்ட அமராவதி பகுதி புத்தர் காலத்திற்குப் பின் முக்கியமானதொரு புத்தமதப் பகுதியாக விளங்கியிருக்கிறது.

சாதவாகனர்களின் ஆட்சிக்குப் பின் பல்வேறு அரச மரபுகளால் தலைநகராகவும் முக்கியமான நகராகவும் அறியப்பட்டு வந்த இந்திரனின் தலைநகர் பெயர் கொண்ட அமராவதி, தற்போது அந்திராவின் சிறப்புமிக்க தலைநகராக புதுப் பொலிவு பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

முதலாம் நூற்றாண்டில் ஆப்கானிஸ்தானையும் வட இந்தியாவின் பெரும் பகுதியையும் உள்ளடக்கியிருந்த குஷானர்களின் குஷான் பேரரசு, மேற்கு சீனாவைச் சேர்ந்த பண்டைய இந்தோ-ஐரோப்பிய மரபைச் சேர்ந்த யாஷி இனத்தவரால் உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்து குஷ் மலைத்தொடரின் சமவெளியான பாக்ட்ரியா, பல்வேறு வரலாற்று முக்கியத்துவங்களைக் கொண்ட பண்டைக்கால பகுதியாகக் கருதப்படுகிறது.

கிரேக்க எழுத்துக்களைக் கொண்டு பாக்ட்ரிய மொழியில் எழுதப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானின் சுர்க் கொடல் அருகேயான ரபடாக் பகுதியின் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்றி மூன்றில் கண்டறியப்பட்ட ரபடாக் பாறைப் பொறிப்பின் வழியாக குஷானர்களின் அரசுரிமை தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

ரபடாக் கல்வெட்டைப் பொறித்தவரான கனிஷ்கர் தம்மை குஜீல காட்பீஸிஸின் கொள்ளுப் பேரனாகவும், விமுதக்குவின் பேரனாகவும், விமா காடபிஸிஸ் மகனாகவும் அறிவிப்புச் செய்திருக்கிறார்.

குஜீல காட்பீஸ் (அரசாட்சிக்காலம் பொ.ஆ.பின் 30-80) யாஷி மக்கள் கூட்டமைப்பை ஒருங்கிணைத்து அதன் அரசராக முடிசூட்டப்பட்டிருக்கிறார். பெஷாவரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த கட்பீஸஸ் அரசரிலிருந்து தொடங்கிய குசானப் அரசாட்சியின் தலை சிறந்த அரசராக கனிஷ்கர் புகழப்படுகிறார்.

சீனாவின் வரலாற்றுக் குறிப்புகளில் குஷாங்க்கு அரசாட்சியாகக் குறிக்கப்பட்டிருக்கும் குஷான அரசரான கனிஷ்கர் (ஆட்சிக்காலம் 127-163) மத்திய ஆசியப் பகுதியின் பெரும் பகுதியை அரசாட்சி செய்திருக்கிறார். கனிஷ்கரின் ஆட்சிப்பகுதி தெற்கு உஜ்பெகிஸ்தானத்திலிருந்து பாடலிபுத்திரம் வரை பரவியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பல போர்களில் பங்குபெற்றவராக அறியப்படும் பேரரசர் கனிஷ்கர் புத்தமதத்தைத் தழுவி சீனா உட்பட பல அயல்நாடுகளுக்கும் பரவச் செய்தவராக வரலாற்றில் இடம்பெறுகிறார்.

பௌத்த மதத்தோடு தொடர்புடையவராக இருந்தும் சமய நல்லிணக்கம் பேணியவராக பாராட்டப்படும் அரசர்களுக்கெல்லாம் அரசரான கனிஷ்கர் இந்திய, கிரேக்க, இரானிய, சுமேரிய கடவுளர்கள் உருவம் பொறித்த பல்வேறு

நாணயங்களையும் வெளியிட்டிருக்கிறார். அரசாட்சியின் ஆரம்ப கால கனிஷ்க நாணயங்கள் கிரேக்க மொழி பொறிக்கப்பட்டும் கிரேக்க கடவுளர் உருவம் அச்சாக்கப்பட்டும் வெளியிடப்பட்டிருக்கின்றன. பின்னர் வெளியிடப்பட்ட நாணயங்களில் இரானிய, பாக்ட்ரிய மொழிகளும், இரானிய கடவுளர்களும் பொறிக்கப்பட்டதாக அறியப்பட்டிருக்கிறது.

சாக்கிய முனி புத்தா, மைத்ரேய புத்தா என புத்தரின் பெயரில் வெளியிடப்பட்ட பல்வேறு நாணயங்களிலும் அபயமுத்திரை கொண்ட புத்தர் காது நீண்ட புத்தர் என பல வகையான நிலைகளில் புத்தரின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கனிஷ்கருடைய ஆட்சிக்காலத்தில் முப்பத்தியிரண்டு வகையான புத்தரின் உடல் தோற்றங்கள் வடிவமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

புருஷபுரம் என அழைக்கப்பட்ட பாகிஸ்தானின் பெஷாவரிலிருந்த கனிஷ்க ஸ்தூபி, ஏழாம் நூற்றாண்டு குறிப்புகளின் படி இந்தியாவிலிருந்த மிக உயரமான தூணாக அறியப்பட்டுள்ளது. பண்டைய சீன புத்தமத புனித பயணங்களின் வரலாற்றுக் குறிப்புகளிலிருநதுத பெசாவர் தூண் அறுநூறு அடி உயரத்திற்கும் அதிகமாக இருந்திருக்கிறது. சிதைந்து போன கனிஷ்க புத்தத் தூணின் சுற்றளவு இரு நூற்றி என்பத்தாறு அடிகள் என தொல்லியலாளர்கள் குறித்துள்ளனர்.

கனிஷ்கபுரம் எனும் நகரத்தை காஷ்மீரில் நிறுவியதாகவும் அங்கு நடைபெற்ற புத்த சமய மாநாட்டிலேயே மகாயானம் புத்தசமயத்தின் ஒரு பிரிவாக உருவாகியதாகவும் குறிப்பிடப்படுகிறது. பல்வேறு ஸ்தூபிகளையும் விகாரங்களையும் கட்டிய கனிஷ்கர் காலத்திலேயே இந்தோ-கிரேக்க கலவையான காந்தாரக் கலை உருவாகியிருக்கிறது.

தங்கநாணயம் வெளியிட்டவராக அறியப்படும் கனிஷ்கரின் அரசவையில் புத்தமத அறிஞரும் வடமொழிப் புலவருமான அஷ்வகோசர் (80-150) இடம் பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. செவ்வியல் சமஸ்கிருதத்தில் மிக்க புலமை பெற்றிருந்தவரான அசுவகோசர் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை விரித்துரைக்கும் காவியமான புத்தசரித செய்யுள்களை இயற்றியிருக்கிறார். மகாயான புத்த சமயத்திற்கு அரும்பணியாற்றியவராக அஸ்வகோஸர் கருதப்படுகிறார். புத்தமதத்தின் தத்துவ ஞானியாகவும் குறிப்பிடத்தக்க பல புத்த மத நூல்களை

எழுதியவராகவும் குறிப்பிடப்படும் அஸ்வசோசர் வாதப் போர் புரிவதிலும் வல்லவராக இருந்திருக்கிறார்.

ஆச்சார்யர் நாகர்ஜுனர் (150-250) பௌத்தத்தின் சூன்யதா அல்லது வெறுமைநிலை தத்துவத்தை உருவாக்கியவராக அறியப்படுகிறார். நாளந்தா பல்கலையின் தலைமைப் பொறுப்பிலிருந்தவராகக் குறிப்பிடப்படும் நாகர்ஜுனர் மகாயானப் பௌத்தத்தை தோற்றுவித்தவராக குறிப்பிடப்படுகிறார்.

சீனா மற்றும் திபெத்திய குறிப்புகளிலிருந்து அறியப்படும் நாகார்ஜுனர் சாதாவாகனர்களுக்கு அமைச்சராக இருந்தாரெனவும், பல்வேறு நூல்கள் நாகர்ஜுனரால் பல்வேறு நூல்கள் எழுதப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றன. முலமத்யமகாகாரிகா எனும் மைய வழியின் அடிப்படைச் செய்யுள்கள் நூல் நாகர் ஜுனரின் சிந்தனைகளை விவரிப்பதாகக் கூறப்படுகிறது.

நாகர்ஜுனரைப் போல் கனிஷ்கரின் காலத்தவராகக் குறிப்பிடப்படும் சரகர் ஆயுர்வேத மருத்துவத்தில் தலை சிறந்தவராக அறியப்படுகிறார். சரகர் எழுதிய சரகர் சம்ஹிதை புகழ் பெற்றதொரு மருத்துவ நூலாகக் குறிப்பிடப்படுகிறது. பேரண்டத்தின் உருவாக்கம் தொடங்கி, கரு உருவாதல், கருவின் வளர்ச்சி நிலைகள், நோய்கள், நோய் போக்கும் வழிமுறைகள், உணவுகள், உணவின் குணம், மண், இயற்கை, காலச் சுழற்சி என அனைத்தைப் பற்றியும் குறிப்பிடும் சிறந்த தொரு நூலாகவும் சம்ஹிதை போற்றப்படுகிறது.

பேரரசர் கனிஷ்கர் ஆட்சிப் பொறுப்பேற்றதாக அறியப்பட்ட பொது ஆண்டிற்குப் பிறகான எழுபத்தி எட்டாம் ஆண்டிலிருந்து இந்திய ஆண்டுக் கணக்கான சக அண்டு தொடங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது. பின்னர் கண்டறியப்பட்ட கல்வெட்டு ஆதாரங்களிலிருந்து சக ஆண்டின் தொடக்கம் வேறுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

உலகிற்கு குடியரசு அமைப்பை வழங்கிய நாகரிகமாக ரோம நாகரிகம் போற்றப்படுகிறது. கிறித்துக்கு முன்னால் ஐந்நூற்று எட்டாமாண்டில் குடியரசாகியதாகக் குறிப்பிடப்படும் ரோமாபுரி அடுத்த ஐந்நூறு ஆண்டுகளில் அதாவது கிறித்து பிறந்ததாகக் குறிப்பிடப்படும் ஆண்டுகளில் பெரும் நிலப்பரப்பை ஆளும் பெரிய ரோமப் பேரரசாக எழுச்சி பெற்றிருக்கிறது. இத்தாலி, பிரான்ஸ், கிரேக்கம், மாசிடோனியா, எகிப்து, வட ஆப்பிரிக்கா, அண்மை கிழக்கு ஆசியா என

மத்தியதரைக் கடலின் அனைத்துப் பகுதிகளையும் வெற்றி கொண்ட ரோம் மக்களாட்சி, அதன் பின்னர் பேரரசர் அகஸ்டஸால் ரோமப் பேரரசாக உருமாற்றமடைகிறது.

ரோம் குடியரசு கமிஷா க்யூரிட்டா எனும் மக்கள் அவையும் செனட் எனப்படும் பிரபுக்கள் அவையும் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் கோன்சல்கள் எனப்படும் இரு அதிகாரிகள் செனட் அவையினால் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு குடியரசை நிர்வகித்திருக்கின்றனர். பின்னர் பரந்த தொரு அரசியலமைப்புச் சட்டமும் உருவாக்கப்பட்டு அரசின் ஒவ்வொரு பிரிவின் அதிகாரங்களும் தெளிவாக வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு பிரிவிற்கும் மிகையான அதிகாரம் இல்லாதவாறு ஒரு வித சமநிலையில் சட்டங்கள் பேணப்பட்டிருக்கின்றன. நெருக்கடியான காலங்கள் தவிர அதிகாரிகளின் பதவிக்காலம் ஓராண்டாக இருந்திருக்கிறது.

தொடர்ந்த படையெடுப்புகளாலும் பிறநாட்டுக் கூட்டணிகளாலும் ரோமின் எல்லை விரிவடைந்ததால் குடியரசு ஆட்சிமுறை குழப்பம் கண்டு, செல்வாக்கான செனட்டர்களின் அதிகாரம் பெருகி, மோதல்களும் உள்நாட்டுப் போர்களும் அதிகரித்திருக்கின்றன. ரோமக் குடியரசின் கொன்சிலாகவும் மிகச் சிறந்த ஆட்சியாளராகவும் புகழ்பெற்று விளங்கிய ஜீலியஸ் சீசர் (பொ.ஆ.மு 100-44) ரோமின் அனைத்து அதிகாரங்களும் கொண்டவராக அறிவித்துக் கொண்டார்.

சீசர் எனும் பெயரை கெய்சர் என செருமானியர்களும், ஜார் என ரசியர்களும் பட்டங்களாகச் சூட்டிக் கொள்ளுமளவிற்கு ஆகச் சிறந்த போர்ப்படைத் தளபதியாகவும், வெற்றி வீரராகவும், அருமையான சொற்பொழிவாளராகவும், காதல் மன்னராகவும், நாட்டின் தலைவராகவும் விளங்கிய கேயஸ் ஜூலியஸ் சீசர் பல்வேறு போர்க் களங்களைக் கண்டவராகவும் அறியப்படுகிறார்.

படைத் தளபதியாகவும், ரோமக் குடியரசின் தலைவராகவும் அறியப்படும் பாம்பியஸ் மேக்னஸ் (பொ.ஆ.மு. 106-48) சீசரின் மகளான ஜூலியாவை திருமணம் முடித்திருக்கிறார். சீசர், பாம்பி மற்றும் கிராசஸ் மூவரும் இணைந்து சர் உடன்படிக்கையின் மூலம், மூவர் அரசாட்சியை ரோமில் ஏற்படுத்தியிருக்கின்றனர். கிராசஸ் முடிவிற்குப்பின் சீஸர் மற்றும் பாம்பியிடையே குடியரசின் தலைவராவதற்கு கடுமையான போட்டி நிகழ்ந்து உள் நாட்டுப் போராக மாறியிருக்கிறது. முடிவில்

பாம்பி வெற்றி பெற்று குடியரசின் தலைவராகவும், பின் அனைத்து அதிகாரங்களும் கொண்ட பேரரசராகவும் அழைத்துக் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

ரோமக் குடியரசின் எழுச்சி கிரேக்கத்தின் வீழ்ச்சியாக வரலாற்றாசிரியர்களால் கருதப்படுகிறது. குடியரசான முதல் இரு நூற்றாண்டுகளில் அமைதி தவழும் நாடாக இருந்த ரோம், அடுத்த வந்த மூன்று நூற்றாண்டுகள் காலத்தை போர்களிலேயே கழித்திருக்கிறது. மாசிடோனியர்களோடு, பொனிசியர்களோடு, பார்த்தியர்களோடு, எகிப்திய, கிரேக்கர்களோடு, கூடவே உள்நாட்டுப் போர்களும் சேர்ந்து குடியரசுக் காலம் போர்க்காலமாகவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இத்தனை போர்களிலும் ரோமானியர்கள் மதவழிபாடுகளையும் மறக்காமல் கடைபிடித்தே வந்திருக்கிறார்கள்.

பண்டைய ரோமர்கள் போரையும் மதத்தையும் போற்றியிருக்கிறார்கள். கணக்கிடலங்கா கடவுளர்களோடு, அருள் வாக்குக் கேட்பதிலும் ரோமர்களுக்கு பெருவிருப்பம் இருந்ததாகக் கூறப்படுகிறது.

அதிகாலை விழிப்பு, ஏழைகளுக்கு அன்னதானம், நிலபுலன், விவசாயம் பற்றி விசாரித்துத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்தல், அரசாங்கப் பணிகள், லேசான சாப்பாடு, தூக்கம், பொதுக் குளியலறைகளில் வெந்நீர் குளியல், பூங்காக்களில் உலா, உடற்பயிற்சிகள், புத்தகங்கள் படித்தல், மறுபடியும் வெந்நீர் குளியல், அடிமைகள் உடல்பிடித்து விட சுகமான தூக்கம் என வசதியுள்ள ரோமாபுரி வாசிகள் மிக நன்றாகவே வாழ்ந்திருக்கிறார்கள்.

போர்களங்களில் நேரத்திற்கு உணவு கிடைக்குமா எனத் தெரியவில்லை. வரைமுறையில்லாத நேரங்காலமில்லாத காட்டுமிராண்டித்தனத்திலேயே பெரும்பாலான போர்கள் நடந்திருக்கின்றன. போரில் முடிவில் நகரத்தை அழிப்பது, மக்களை வேட்டையாடுவது என உலகின் போர்கள் ஒன்று போலவே நடந்திருக்கின்றன.

ரோம் நகரத்திற்கும் கார்த்தேஜியர்கள் என அழைக்கப்பட்ட பொனிசியர்களின் கார்த்தேஜ் நகரத்தார்க்கும் நடைபெற்ற போர்கள் பூனிக் அல்லது பொனிக் போர்கள் என குறிப்பிடப்படுகின்றன. முதல் பூனிக் போர் பொ.ஆ.மு. 264-241 காலகட்டத்திலும், இரண்டு மற்றும் மூன்றாம் கால கட்டப் பூனிக் போர்கள்

முறையே பொ.ஆ.மு. 218-202 மற்றும் பொ.ஆ.மு. 149-146 ஆண்டுகளிலும் நடைபெற்றிருக்கின்றன.

வட ஆப்பிரிக்காவின் துனிஷியாப் பகுதியில் பொது ஆண்டிற்கு முன்பான எந்நூற்றிப் பதினான்காம் ஆண்டு லெபனானின் தைர் நகர மக்களான போனிசியர்களால் உருவாக்கப்பட்ட நகரமாக கார்த்தேஜ் குறிப்பிடப்படுகிறது. மேற்கத்திய மத்திய தரைக்கடல் பகுதியின் வணிகம், ஆதிக்கம் தொடர்பாக நடந்த மூன்று போர்களின் முடிவில் ரோமக் குடியரசு வெற்றி பெற்று மடுதரைக் கடலின் மேற்குப் பகுதி ஆதிக்கத்தை அதன் வசமாக்கியுள்ளது. மூன்றாம் பூனிக் போரின் போது கார்த்தேஜ் சமாதானத்திற்கு இறங்கி வந்தும் பலனில்லாமல் நகரம் அழிக்கப்பட்டிருக்கிறது. ரோம் குடியரசு கப்பல் படையை வெகு திறமையாக மேம்படுத்துவதற்கு பூனிக் போர்கள் பெரியளவில் காரணமாக அமைந்ததாக வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பூனிக் போர்கள் மூலம் கார்த்தேஜியர்களின் படைத் தலைவராக இருந்த ஹாமில்கர் பர்கா, அவரது இரு மகன்களான ஹஸ்ருபால் மற்றும் ஹன்னிபால் போன்றவர்களின் வீரம் பெருமளவில் பேசப்படுகிறது. இரண்டாவது பூனிக் போரில் ஹன்னிபால் அரசர் ஸ்பெனியிலிருந்து ஆல்ப்ஸ் மலைகளைக் கடந்து இத்தாலியினுள் நுழைந்திருக்கிறார். போர் யானைகளையும் பயன்படுத்தியிருக்கிறார். ஹன்னிபாலும் ஹஸ்ருபாலும் இணைந்து மாபெரும் வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்கள். ஹன்னிபால் வீரமிக்கவராக அறியப்பட்டாலும் ரோமர்களின் படைவியூகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் தோல்வியை சந்தித்திருக்கிறார்.

கிழக்கு மத்திய தரைக் கடலின் அதிகாரத்தைக் கைப்பற்றும் பொருட்டு கிரேக்க நாடுகள் மீது ரோம் குடியரசு வரிசையான தாக்குதல்களை தொடுத்திருக்கிறது. இவை மாசிடோனியப் போர்கள் என அழைக்கப்படுகின்றன. மாசிடோனியாவுடன் பொ.ஆ.மு. 214 முதல் பொ.ஆ.மு. 148 வரை நான்கு கட்டப் போர்களாலும், செலுக்கஸ் அரசோடு நிகழ்ந்த போரின் விளைவாகவும், கிழக்குக் மத்தியக் கடலின் ஆதிக்கத்தை ரோமக் குடியரசு நிலை நாட்டியுள்ளது. கிரேக்கத்தின் ஆதிக்கம் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்ததோடு, எகிப்திய கிரேக்க அரசும் பலவீனமடையத் துவங்கிவிட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

ரோமர்களின் எழுச்சி போன்றே, கிரேக்க செலுக்கஸ் பேரரசின் காலத்தில் பாரசீகத்தில் திடீர் எழுச்சி பெற்றவர்களாக பார்த்தியர்கள் அறியப்படுகின்றனர். பொது ஆண்டிற்கு முன் 247 தொடங்கி பொது ஆண்டிற்கு பின்னான 224 கால கட்டம் வரையிலும் ஆண்ட பார்த்தியர்கள், பாகிஸ்தான் முதல் மத்திய கிழக்கு துருக்கிவரையிலுமான நிலப்பகுதியை அரசாண்டுள்ளனர்.

முதலாம் அர்சசஸ் பார்த்தியரால் தொடங்கப்பட்ட பார்த்தியப் பேரரசு, முதலாம் மித்ரிடேட் அரசர் ஆட்சிக் காலத்தில் (பொ.ஆ.முன். 171-138) மீடியா மற்றும் மெசபதோமிய பகுதிகளை செலுக்கஸ் அரசரிடமிருந்து கைப்பற்றியிருக்கிறது. பட்டுப்பாதையின் மையத்தில் பார்த்தியப் பேரரசு அமைந்திருந்த காரணத்தால் ரோம் மற்றும் சீனா இடையிலான மத்திய தரைக் கடல் வணிகத்தின் மையப் பகுதியாகவும் பார்த்தியப் பேரரசு இருந்திருக்கிறது.

கலை, கட்டிட அமைப்பு, அரச மதிப்பீடுகள், மதம் போன்றவற்றில் பாரசீக, கிரேக்க கலவையிலான பண்பாட்டை மேற்கொண்டிருந்த பார்த்தியப் பேரரசு, ஈரானின் பழமையையும் கிரேக்கத்தின் புதுமைகளையும் கொண்டதாக விளங்கியிருக்கிறது.

மேற்குப் பகுதியில் செலுக்கஸ்களையும், கிழக்கில் சிந்தியாக்களையும் பகைத்துக்கொண்ட பார்த்தியர்கள், ஆர்மீனியாவோடு மோதி ரோமர்களையும் எதிரியாக்கிக் கொண்டதாகக் தெரிகிறது. ஆர்மீனியாவை முன்னிட்டுத் தொடங்கிய பார்த்திய ரோமப் போர்கள் பல தொடர்ச்சியான போர்களங்களைச் சந்தித்திருக்கின்றன.

மேற்கிலும் கிழக்கிலும் வெற்றிகளாகப் பார்த்து வந்த ரோமர்களுக்கு பார்த்தியர்களுடனான கேர்ரே போர் (பொ.ஆ.முன். 533) பெரும் இழப்பைக் கொடுத்த போராக வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. ரோமின் முக்கூட்டணியில் ஒருவராகவும், சிரியாவின் ஆட்சியாளராகவும் இருந்த மார்கஸ் லிசினியஸ் கிராசஸ் படைகளுக்கும், இரண்டாம் மித்ரிடேர் அரசரின் படைத் தளபதி சுரேனா படைகளுக்குமிடையே நிகழ்ந்த போர் ரோமக் குடியரசிற்கு மிகப்பெரும் அடியைக் கொடுத்திருக்கிறது. போரில் பார்த்தியர்களின் தனித்திறமை வாய்ந்த குதிரை வில்படை பற்றியும் அவர்களின் துணிச்சல் குறித்தும் பெருமையாகப் பேசப்படுகிறது. பின்வாங்குவது போல் செல்வதும் பின் திடீரென சூழ்ந்து தாக்குவதும் பார்த்தியர்

திட்டமாக இருந்திருக்கிறது. இப்போரினால் கிராசஸ் மற்றும் அவரது மகனும் முடிவுக்கு வந்து ரோமக் குடியரசின் சீசருக்கும் பாம்பிக்கும் அதிகாரப் போட்டி உச்சகட்டத்தை அடைந்ததாகவும், பார்த்தியர்கள் பாம்பியை ஆதரித்ததாகவும் கூறப்ப்படுகிறது.

சீசரின் ஆதரவாளரான மார்க் ஆன்டனி பார்த்தியாவோடு போர் செய்திருக்கிறார். பின்னர் வந்த ரோமப் பேரரசும் பார்த்தியர்களோடு தொடர்ச்சியாக முரண்பட்டு வந்திருக்கிறது. பார்த்தியர்கள் தீரம் நிறைந்திருந்தும் அவர்களிடையே நிகழ்ந்த அதிகாரப் போட்டியே அரசர்களுக்கெல்லாம் அரசராக அறிவித்துக் கொண்ட பார்த்தியர்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது.

மாசிடோனிய அலெக்சாந்தரின் இளமைக்கால நெருங்கிய நண்பரும், படைத் தளபதியும், பாதுகாவலருமான தாலமி லாஜிடெஸ் (பொ.ஆ.முன் 367-283), அலெக்சாந்தரின் மறைவிற்குப் பின் எகிப்தின் மன்னராக (பொ.ஆ.முன் 326) ஆட்சியமைத்திருக்கிறார். அடுத்த முந்நூறு ஆண்டுகாலம் தாலமியின் பரம்பரையைச் சேர்ந்தவர்களின் ஆதிக்கத்திலேயே எகிப்து ஆளப்பட்டு வந்திருக்கிறது.

தங்க யானை நாணயங்கள், யானைத்தலையை கவசமாக அணிந்த அலெக்சாந்தர் மற்றும் யானைகள் இழந்து செல்லும் தேர் கொண்ட அலெக்ஸாந்தர் நாணயங்கள் என அலெக்சாந்தரின் இந்தியா வெற்றியைக் கொண்டாடிய முதலாம் சாட்டராக அறியப்பட்ட தாலமி அதாவது காப்பாளர், பாரோவாக அறிவித்துக் கொண்டு, எகிப்தியக் கலாச்சாரத்தோடு பெருமளவில் இணக்கமாகியிருக்கிறார். தாலமிக்களின் ஆட்சிகாலத்தில் கிரேக்கக் கலாச்சாரம் எகிப்தில் பெருமளவில் பதவிதாகக் குறிப்பிடப்படுகிறது. கிரேக்கர்களின் எகிப்திய ஆட்சி வணிகநோக்கோடு நடந்ததாகவும் வரலாற்றறிஞர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

கிரேக்க எகிப்தியர்களின் பன்னிரெண்டாம் தாலமிக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் ஏழாம் கிலியோபட்ரா (பொ.ஆ.முன் 69-30). அக்கால உலகின் புகழ்பெற்ற அழகியாகக் குறிப்பிடப்படும் கிளியோபத்ரா, தம்பிகளை மணந்து எகிப்தின் அரசியாக இருந்திருக்கிறார். பல மொழிகள் அறிந்தவராகவும், மிக்க அறிவுடையவராகவும் குறிப்பிடப்படும் கிளியோபட்ரா, சீசரோடும் பின்னர் மார்க்

ஆன்டனியோடும் நட்புறவு பாராட்டி ரோமானியர்களின் அழிவிலிருந்து எகிப்தைப் பாதுகாத்தார் எனவும் வரலாற்றாசிரியர்களால் புகழப்படுகிறார்.

தொடர் வெற்றிகளைப் பெற்று வந்த ரோமக் குடியரசு பண்டையப் பெருமை வாய்ந்த எகிப்தின் மீதும் படையெடுத்திருக்கிறது. கால், கவுல் என அழைக்கப்படும் வடக்கு இத்தாலி, யூகோஸ்லோவாகியா மற்றும் தெற்கு பிரான்ஸ் பகுதியின் பழங்குடியின மக்களை அடக்கியதன் மூலம் பெரும் புகழ் பெற்றவரான சீசர், குடியரசு அதிகாரங்களைக் கொண்டு சமூக அரசியல் சீர்திருத்தங்களையும் மேற்கொண்டவராக அறியப்படுகிறார். நில வினியோகச் சட்டங்களை இயற்றியிருக்கிறார். செனட் அவையில் நடப்பவற்றைப் பதிவு செய்து பொது இடங்களில் வைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார். நாட்காட்டியில் திருத்தம் செய்திருக்கிறார்.

கிளியோபட்ராவை நாடு கடத்திவிட்டு எகிப்தின் ஆட்சியாளரான தாலமியை முடித்த சீசர், மீண்டும் கிளியோபட்ராவையே எகிப்தின் பாரோவாக நியமித்திருக்கிறார். இருவருக்கும் சிசேரியன் எனும் வாரிசு பிறந்ததாகவும், எனினும் சீசர் அவரது வாரிசாக சகோதரி மகன் ஆக்டேவியனையே உயிலெழுதி வைத்திருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

சிறந்த இலக்கியவாதியாகவும் அறியப்படும் சீசர் அவரது வாழ்க்கை வரலாற்றை மூன்று பாகங்களாகவும் படையெடுப்புகளை விவரித்து ஏழு பாகங்கள் கொண்ட நூலாகவும் எழுதியிருக்கிறார். ரோமாபுரியின் மக்களாட்சிக்கு எதிராக நிரந்தர சர்வாதிகாரியாக ஆகிவிடுவாரோ என்ற அச்சுறுத்தல் காரணமாகவே சீசர் அவரது நண்பரான புருட்டஸ் உட்பட்ட நெருங்கிய செனட்டர்களால் முடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஜூலியஸ் சீஸரால் அரசுரிமை வாரிசாக அறிவிக்கப்பட்ட ஆக்டேவியன் (பொ.ஆ.முன் 63 - பொ.ஆ.பின் 14) ரோம் வரலாற்றில் மிகவும் செல்வாக்குப் பெற்றவராகப் புகழப்படுகிறார்.

சீஸரின் மறைவின் போது ரோமிலிருந்த கிளியோபட்ரா மேல் கேயஸ் ஆக்டோவியஸ்கு கடுங்கோபமிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. சிஸரின் நெருங்கிய நண்பரும் கவுல் தாக்குதல்களின் போது ஒரு படைப்பிரிவின் தளபதியுமான மார்கஸ் அன்டோனியஸ் (பொ.ஆ.முன் 83-30) மற்றும் சீஸரின்

நெருங்கிய நண்பரும் பாரிஷ் தளபதியுமான மார்கஸ் அமிலியஸ் லெபிடஸ் (பொ.ஆ.முன் 89-13) ஆகியோருடன் இணைந்து பத்தாண்டு கால மூவர் கூட்டணியை ஏற்படுத்தி ரோமக்குடியரசில் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததில் ஆக்டேவியன் பங்கு மிகச் சிறந்ததாகக் கூறப்படுகிறது. மூவரும் ரோமக் குடியரசின் பகுதிகளுக்குப் பொறுப்பானவர்களாக செனட்டால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஒப்பந்தத்தின் படி, மார்க் அந்தோனிக்கு எகிப்து சிரியா உள்ளடக்கிய கிழக்கு ரோமின் ஆட்சியதிகாரம் கிடைத்திருக்கிறது.

ரோம் ஆட்சியாளர் ஆக்டோவியனின் தங்கை ஆக்டவியாவை மார்க் ஆண்டனி மணமுடித்திருந்திருந்தும் ஆக்டோவியன் மற்றும் ஆன்டனியிடையேயான உறவு குறிப்பிடத்தக்க அளவில் வளராமல் இருவருக்குமிடையேயான அதிகாரப் போட்டியாக மாறியிருக்கிறது. மூவர் கூட்டணியிலிருந்து லெபிடாஸ் வெளியேற்றப்பட்ட பின் பொது ஆண்டுக்கு முன்பான முப்பத்தி மூன்றாமாண்டில் இருவருக்குமிடையே வேற்றுமை பெருகி தனித்தனியே பிரிகிறார்கள். பிரிவுக்கு கிளியோபட்ராவும் ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது.

எகிப்தின் பொறுப்பாளரான ஆண்டனி, கிளியோபட்ராவை மீண்டும் எகிப்தின் அரசியாகவும் பாரோவாகவும் அறிவித்ததோடு அவர்களது குழந்தைகளுக்கும் ஆட்சியுரிமையை பகிர்த்தளிக்கிறார். சீசரின் வாரிசான சிசேரியனே ரோமின் உண்மையான வாரிசு என அறிவித்ததால் ஆக்டேவியன் எகிப்தின் மீது பொ.ஆ.மு 31-ல் ஆக்டோவியம் போர் தொடுத்து ஆன்டனியை வெல்கிறார். கிளியோபட்ராவின் முடிவினைப் பற்றி பல்வேறு மாறுபட்ட வரலாறுகள் கூறப்படுகின்றன.

பொது ஆண்டுக்கு முன்பான இருபத்தியேழாம் ஆண்டு அகஸ்டஸ் என பட்டம் சூட்டப்பட்ட ஆக்டேவியன் ரோமபுரியின் பேரரசராகவும் அரசியல், ஆட்சி, படைத்தலைமை என அனைத்தின் அதிகாரத்தையும் பெற்று ரோமப் பேரரசின் முதல் சக்ரவர்த்தியாக புகழ் பெறுகிறார்.

அகஸ்டஸ் சீஸரின் ஆட்சிக் காலம் ரோமபுரியின் பொற்காலமாகப் புகழப்படுகிறது. அடுத்த வந்த இரு நூற்றாண்டுகள் ரோமிக்கு அமைதியுண்டாகிய காலமாக வரலாற்றில் குறிக்கப்படுகிறது. அகஸ்டசும் அவரது நெருங்கிய நண்பர், மருமகன் மற்றும் ஆக்டேவியன் சண்டையின் வெற்றிக்குக் காரணமானவரும் புகழ்பெற்ற கட்டிடக் கலை அறிஞருமான மார்கஸ் அக்ரிப்பாவும் ரோமின்

கான்சல்களாக இருந்து, அதன் பெருமைக்கும் புகழுக்கும் அணிசேர்த்தாக வரலாற்றில் இடம்பெறுகிறார்கள்.

ரோமப் பேரரசை மேலும் விரிவாக்கம் செய்யாமல், அதன் நல்லாட்சிக்குப் பாடுபட்டவராகவே அகஸ்டஸ் அறியப்படுகிறார். இவரது ஆட்சிக் காலத்தில் பேரரசின் நிர்வாகம் சீர்பெற்றதாகவும் ஊழல் ஒழிந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் சிறப்பான சாலைகளும் போடப்பட்டிருக்கிறன்றன. ரோம் நகரம் நேர்த்தியான பல வகைக் கட்டிடங்களால் அழகும் பொலிவும் கொண்டதாக அமைக்கப்பட்டதாகவும் உழவும், வாணிபமும் செழித்து வளர்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. உலகின் அனைத்துப் பகுதிகளோடும் ரோமாபுரி வணிகத்தால் இணைக்கப்பட்டிருந்ததாகவும் அக்காலத்தில் ரோமபுரி நகரே உலகின் சிறந்த நகராக இருந்ததாகவும் கூறப்படுகிறது. பின் வந்த காலங்களில் ரோமாபுரி போன்றே வெனிஸ் நகரமும் பல நூற்றாண்டு காலங்களுக்கு புகழ்பெற்ற வணிக நகராக வரலாற்றில் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

குடியரசு மற்றும் முடியாட்சிக் காலங்களில் இலக்கியங்களும் ரோமில் செழித்து வளர்ந்திருக்கின்றன. லத்தின் மொழி இலக்கியங்களின் பொற்காலமென கூறத்தக்க அளவில் இலங்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

ரோமின் வரலாறு தெளிவாக அறியப்பட்டிருப்பதற்கு அவர்களின் கல்வெட்டுச் சான்றுகள், நீதிபதிகளின் நாட்காட்டிக் குறிப்புகள், அரசு ஆவணங்களைப் பொறித்து வைத்த கல்வெட்டு மற்றும் பித்தளைத் தகடுகள், நாணயங்கள் போன்றவை பெருமளவில் பயன்படுகின்றன.

தொல்லியல் அகழாய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ள புகழ் பெற்ற பண்டைய பாம்பி நகரம் இத்தாலியின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் மிகச் சிறந்ததொரு வரலாற்று ஆவணமாக அறிஞர்களால் குறிப்பிடப்படுகிறது. பொது ஆண்டிற்குப் பின்னான எழுபத்தியொன்பதாம் ஆண்டு நிகழ்ந்த வெசுவியஸ் எரிமலை வெடிப்பின் சாம்பல் மற்றும் தூசியால் மூழ்கடிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் பாம்பி நகரின் பெரும்பாலான எச்சங்கள் காற்றும் ஈரப்பதமும் இல்லாததன் காரணத்தால் சிதைவுகளுக்கு உட்படாமல் அப்படியே எஞ்சியவையாகக் கண்டெடுக்கப்படுகின்றன. பிளாஸ்டர் பயன்படுத்தி மனிதர்களின் அச்சுக்கள் அப்படியே வார்த்தெடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு பிறகு அறியப்பட்ட பாம்பி, பின்னர் ஆயிரத்து எழுநூற்றி நாற்பத்தி எட்டாமாண்டு ராக்கு ஜோகு டி அல்குபியர்ரி (1707-1780) எனும் ஸ்பெயின் இராணுவப் பொறியாளரால் கண்டறியப்பட்டு உலகின் கவனத்தை எட்டியது. அதனைத் தொடர்ந்து பாம்பி புகழ்பெற்ற வரலாற்று அகழாய்வு இடமாகவும் சுற்றுலாத் தலமாகவும் உலகமெங்கும் அறியப்பட்டுள்ளது.

பொது ஆண்டிற்கு முன்னான ஏழாம் அல்லது ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறியப்படும் பொம்பி, நான்காம் நூற்றாண்டுக் காலத்தில் ரோமக் குடியரசிற்கு உட்பட்ட நகரமாக இருந்திருக்கிறது. விடுமுறைக் கால தங்குமிடமாகவும் அதற்கேற்ற வகையிலான திட்டமிட்ட குடியிறுப்புகள் கட்டமைக்கப்பட்டிருந்ததாகவும் பாம்பியைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. பாம்பியைச் சுற்றிலுமிருந்த வளமான நிலங்களில் கோதுமை பார்லி மற்றும் பருப்பு வகைகள் விளைவிக்கப்பட்டிருக்கின்றன. ஒயினும் ஆலிவ் எண்ணெயும் பெருமளவில் ஏற்றுமதியானதாகச் சான்றுகள் கூறுகின்றன.

பொம்பி போன்றே புகழ்பெற்றிருந்த ஹெர்குலானியம் என்ற நகரும் சிதைவுக்கு உள்ளாகியிருக்கிறது. இரு நகரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொல்லெச்சங்கள் பண்டைய ரோம நாகரிகத்திற்கான மூலச்சான்றுகளாகக் குறிப்பிடப்படுகின்றன. அன்றைய ரோமர்கள் வீரத்திற்கு மட்டுமல்லாது காதலிலும் சிறந்து விளங்கியிருக்கின்றனர் என்பது ஆடம்பர மாளிகைகளிலும் நீச்சல் குளங்களிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்களே சான்றுகளாக விளங்குகின்றன.

மூத்த பிளினி மற்றும் இளைய பிளினி என வரலாற்றில் அறியப்படும் இரண்டு பிளினிகளும் பாம்பியோடு தொடர்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள். பாம்பியின் எரிமலை வெடிப்பின் போது ரோம் பேரரசின் கடற்படைத் தளபதியாக இருந்த மூத்த பிளினி (பொ.ஆ.பின் 23-76) குறித்து, அவரது மருமகனும் ரோமப் பேரரசின் நீதிபதியுமான இளைய பிளினியின் (61-113) கடிதங்கள் மூலமாக அறியப்பட்டிருக்கிறது.

எரிமலையில் சிக்கிக்கொண்ட நண்பர் பொம்போனியசையும் அவரது குடும்பத்தையும் காப்பாற்றச் சென்ற மூத்த பிளினி, அடிமைகள் உட்பட அனைவரையும் எரிமலைச் சிதறல்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு தலையணைகளை தலைக்கவசமாகக் கட்டிக் கொள்ள கொடுத்ததாகவும்,

எதிர்பாராத விதமாக காற்று அதிகம் வீசியதால் கப்பலை உடனே இயக்க முடியாமல் நச்சுக் காற்றால் பிளினி பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மற்றவர்களைக் காப்பாற்றி விட்டாலும் ஆஸ்த்துமா பாதிப்புக்கொண்ட பிளினி நச்சுப் புகைக்கு தப்ப இயலவில்லை போலும்.

வழக்குரைஞர், எழுத்தாளர், இயற்கை மெய்யியலாளர், இயற்கை ஆர்வலர், படைத் தளபதி, மாகாண ஆளுநர் எனப் பன்முகத்தன்மை கொண்டவராக அறியப்படும் பிளினி, ஹிஸ்டோரியா நேச்சுராலிஸ் எனும் இயற்கையின் வரலாறு நூலுக்காக பெரிதும் போற்றப்படுகிறார். இந்நூல் கலைக் களஞ்சியங்களுக்கெல்லாம் முன்னோடி நூலாக அறிஞர்களால் புகழப்படுகிறது.

அறிஞர் மூத்த பிளினி, பேரரசர் அகஸ்டஸிற்குப் பின்னான ஜூலியோ குளோடிய அரச மரபின் ஐந்தாவது மற்றும் இறுதி அரசரான நீரோ (பொ.ஆ. 37- 68) ஆட்சிக் காலத்தில் எழுத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டதாகவும், பலவிதக் கட்டுப்பாடுகள் நிலவியதால் இலக்கண நூல்கள் போன்றவற்றை எழுதியதாகவும் குறிப்பிடுகிறார்.

நீரோ மன்னர் அரசாட்சியின் போதே, யூதர்களுக்கும் ரோமர்களுக்குமான மோதல்கள் துவங்கிவிட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. நீரோ மன்னரின் முடிவுக்குப்பின் கல்பா, ஒதோ, வைட்டலியஸ் மற்றும் வெஸ்பாசியன் என நான்கு பேர் பேரரசர்களாகி, வெஸ்பாசினைத் (பொ.ஆ. 69-79) தொடர்ந்து அவரது மகன் டைட்டசும் (பொ.ஆ. 79 -81) ரோமாபுரியை அரசாண்டிருக்கிறார்கள்.

ரோமப் பேரரசின் அரசாட்சிக்கு சான்றாக உள்ள புகழ்பெற்ற கொலோசியம் அரங்கம், வெஸ்பாசின் அரசர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு டைட்டியஸ் அரசர் காலத்தில் நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஐம்பதாயிரம் பேர் வரை அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் வண்ணம் கட்டப்பட்ட கொலோசியம் உலக அதிசயமாக புகழப்பட்டிருக்கிறது.

ரோமப் பேரரசின் உள்நாட்டு சண்டைக்குப் பின் வெஸ்பாசியன் அரசரின் ஆட்சிகாலம் மதிப்பானதாக இருந்ததால் பிளினி கடற்படையில் மூத்த அதிகாரியாகச் சேர்ந்திருக்கிறார். இருவருக்கும் நல்லவிதமான நட்பிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆப்பிரிக்கா, ரோமின் ஆதிக்கத்திலிருந்த ஸ்பெயின் போர்ச்சுக்கல்

நாடுகளை உள்ளடக்கிய ஹிஸ்பேரினா போன்ற நாடுகளில் பிளினி வழக்குரைஞராகவும் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

தத்துவஞானி பிளினியின் இயற்கை வரலாறு களஞ்சியத் தொகுப்பு, பண்டைய உலகின் அனைத்து விதமான அறிவையும் எடுத்தாளக் கூடிய மிகச் சிறந்ததொரு அறிவுப்பெட்டமாகக் குறிப்பிடப்படுகிறது. பண்டைய ரோமப் பேரரசிலிருந்து நவீன கால கட்டம் வரையிலும் தொடர்ந்து வாழ்ந்து வந்திருக்கக் கூடிய மிகப் பெரியதொரு தொகுப்பு நூலாக அறியப்பட்டுள்ளது.

இயற்கை வரலாறு பத்து தொகுதிகளாகவும் முப்பத்தேழு நூல்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. பேரரசர் டைட்டஸ்க்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நூல் தொகுதியில் வானியல், கணிதம், நிலவியல், மானுடவியல், கலாச்சாரம், மனித உடற்செயலியல், விலங்குகள், தாவரங்கள், வேளாண்மை, தோட்டக்கலை, மருந்தியல், சுரங்கவியல், சிலை வடிப்பு, ஓவியம், அரியவளக் கற்கள் என அனைத்தையும் பற்றிய விரிவான தகவல்கள் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நூறு தேர்ந்தெடுத்த நூலாசிரியர்கள், இரண்டாயிரம் புத்தகங்கள் மூலமாக சேகரிக்கப்பட்ட இருபதாயிரம் தகவல்கள் என பிளினியால் குறிப்பிடப்படும் இயற்கை வரலாறு அல்லது உயிர் நூலில், நூற்றி நாற்பத்தாறு ரோமர்கள் மற்றும் முந்நூற்றி இருபத்தேழு கிரேக்க நூலாசிரியர்களின் பெயர்பட்டியலும் குறிப்பிடப்பட்டுள்ளது, இது பிளினி வாழ்ந்த காலத்தின் மிக அரிதான செயலாகவே கருதப்படுகிறது. வரலாற்று மூல ஆதாரங்களுக்கு வெர்ரோ அறிஞரை பிளினி சான்றாசிரியராகக் கொண்டிருக்கிறார். விலங்குகளைப் பற்றிய தொகுப்பிற்கு அரிஸ்டாட்டிலை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்.

எட்டாம் நூலிலிருந்து பதினொன்றாம் நூல் வரையிலும், விலங்குகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் பிளினி, நீலச் சாயமெடுக்கப் பயன்படும் முரெக்ஸ் சிப்பிகள் அதிகமாக விலை வைக்கப்பட்டதாகவும், முத்துக்கள் உண்டாவது பற்றியும், முத்துச் சிப்பி வளர்ப்பு, மீன் பண்ணைகள் குறித்தும் விளக்கியுள்ளார். நீர் யானை மற்றும் யானை குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ள பிளினி, ஆம்பர் பிசின் பற்றியும், தேனி வளர்ப்பு குறித்தும், தேன் சேகரிப்பு முறைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். நைட்டிங்கேல் பாட்டையும் வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்.

புத்தகங்கள் பன்னிரெண்டிலிருந்து பதினெட்டு வரை தாவரங்களை பற்றிக் கூறுகின்றன. பைபரஸ் செடியிலிருந்து தாள்கள் உண்டாக்கப்படும் முறையும், பல்வேறு வகையான மரங்கள் அவற்றின் மரக்கட்டைகள் குறித்தும், ஒயின் தயாரிப்பு குறித்தும் குறிப்பிடும் பிளினி, மிளகு இஞ்சி போன்ற வாசனைப் பொருட்கள் பற்றி தனிக் கவனத்துடன் விவரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. கரும்பின் பயன் குறைவாக இருந்ததாகவும், வாசனைத் திரவியங்களின் பயன்பாடு தேவையில்லாத ஆடம்பரம் எனவும் கேயஸ் பிளினியஸ் குறிப்பிட்டுள்ளார்.

பிளினியால் வளர்க்கப்பட்டவரும் கல்வி கற்பிக்கப்பட்டவருமான கேயஸ் பிளினியஸ் சீசிலியஸ் செகுன்டஸ் எனப்படும் இளைய பிளினி (பொ.ஆ.பின் 61-113), ரோமப் பேரரசின் வழக்குரைஞராகவும், நீதியளிப்பவராகவும், நூலாசிரியராகவும் அறியப்படுகிறார். இளைய பிளினி ரோமின் புகழ்பெற்ற அரச நீதிபதியாகவும் மாகாண ஆட்சியாளராகவுமிருந்த பேரரசர் டிராஜனுக்கும், வரலாற்றசிரியர் மற்றும் செனட்ரான டேசிடஸ் போன்றவர்களுக்கும் எழுதிய நூற்றுக்கணக்கான கடிதங்கள் பண்டைய ரோமப் பேரரசின் ஆட்சியதிகார நிர்வாக நடைமுறைகளுக்கான சான்றாக பாராட்டப்படுகின்றன.

முதலாம் நூற்றாண்டுக் காலத்தில் ரோமாபுரியின் அன்றாட நிர்வாக அமைப்பைக் குறிப்பிட்டு நண்பர்களுக்கும் பிளினியைச் சார்ந்தோருக்கும் எழுதப்பட்டுள்ள கடிதங்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ரோமப் பேரரசின் புகழ்பெற்றவரும் பேரரசின் எல்லைகளை விரிவாக்கிய அனடோலியாவின் பைத்னியா-பான்டுன் ஆளுநராக இருந்த பிளினி, கிறித்துவர்களின் மீதான கான் சுலின் நடவடிக்கைகள் குறித்து எழுதியுள்ள கடிதம் ஆரம்பகால கிறித்துவர்களின் நிலையை விளக்கும் ஆவணமாகக் குறிப்பிடப்படுகிறது.

எழுவதற்கென்றே அர்ப்பணித்துக் கொண்டவரென இளைய பிளினியால் புகழப்பட்ட கேயஸ் சுடோனியஸ் டிரான்குலியஸ் (பொ.ஆ.பின் 69-122) எனும் ரோமின் வரலாற்றாசிரியர், ஜீலியஸ் சீசர் முதல் டொமிடியன் (ஆட்சிகாலம் 81-96) வரையிலான பேரரசர்களின் வாழ்க்கையை விவரித்தவராகக் குறிப்பிடப்படுகிறார். ரோமின் அன்றாட வாழ்க்கை, அரசியல், பேச்சுக்கள், புகழ்பெற்ற நூலாசிரியர்களின் வாழ்க்கை போன்ற பல்வேறு வரலாற்றுத் தகவல்களையும் சுடோனியஸ் குறித்துள்ளார்.

கிரேக்கராகவும் பின்னர் லூசியஸ் மெட்ரியஸ் புளூடார்சஸ் என ரோமராகவும் குடியுரிமை பெற்ற புளூடார்ச் (பொ.ஆ.பின் 46-120) புகழ் பெற்ற வரலாற்றாசிரியராகவும் கட்டுரையாளராகவும் புகழப்படுகிறார்.

புகழ்பெற்ற கிரேக்க ரோமப் பேரரசர்களை ஒப்பிட்டு, கொய்னே கிரேக்க மொழியில் புளூடார்க் எழுதிய பாரல்லல் லிவ்ஸ் எனும் இணை வாழ்க்கை நூல் அவரது சிறந்த படைப்பாக குறிப்பிடப்படுகிறது. பேரசர்களான அலெக்சாந்தரையும், சீசரையும் வேறுபல இணைகளையும் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒப்புமைப் படுத்தி எழுதியுள்ளார்.

அகஸ்டஸ் முதல் வைட்டலியஸ் வரையிலுமான ரோமப் பேரரசர்களின் முழு வாழ்க்கையையும் எழுதியவராக புளூடார்க் குறிப்பிடப்படுகிறார். கல்பா மற்றும் ஒதோவின் வாழ்க்கை நூல் மட்டுமே கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. நல்லொழுக்கம் தொடர்பாக அறிஞர் புளூடார்க் எழுதிய எழுபத்தெட்டு கட்டுரைகளும், பேச்சு விபரங்களும், அடங்கியுள்ள நூல் தொகுதியும் குறிப்பிடத்தக்கதாக அறிஞர்களால் பாராட்டப்படுகிறது.

உரோமின் பெருங்கவிஞராக அறியப்படுபவர் பப்ளியஸ் வெர்ஜியஸ் மரோ எனும் விர்ஜில் (பொ.ஆ.முன் 70 - பொ.ஆ.முன். 19) எனிட் பெருங்காப்பியத்தைப் படைத்தவராகப் போற்றப்படுகிறார். எனிட் காப்பியத்திற்கு முன் குளோக்ஸ் ஜார்ஜிக்ஸ் எனும் தலைப்பிலமைந்த பாடல் தொகுப்புகளையும் வெளியிட்டிருக்கிறார்.

புகோலிகா (கால்நடைப் பராமரிப்பு) எனவும் அழைக்கப்படும் குளோக்ஸ், பத்து ஆயர் பாடல்களாக அமைக்கப்பட்டுள்ளன. குளோக்ஸ் படைப்பில் நிலம் கையகப்படுத்துதல், அதன் தாக்கம், ஆயர்களின் வாழ்வு, காதல் வாழ்க்கை, பொற்காலத்தில் பிறக்கப் போகும் ஒரு குழந்தை, போட்டிக்கான பாடல்கள் போன்றவை பாடப்பட்டுள்ன.

வேளாண்மை தொடர்பான பாடல்கள் கொண்ட நான்கு நூல்கள் ஜார்ஜிக்ஸ் (நான்கு நூல்களின் சுருக்கம்) எனப்படுகின்றன. விவசாயம் சார்ந்த பல்வேறு கடவுளர்களின் வழிபாட்டோடு குவங்கும் பாடல்களில், விவசாயம், பருவ காலங்கள், விவசாயத்தை மையமாக வைத்து மனிதர்களின் இயற்கையுடனான மோதல்கள்,

காடுகள், பழமரங்கள், இயற்கையை மாற்ற முயற்சிக்கும் மனித செயல்கள், வசந்த காலத்தின் புகழ்ச்சி போன்ற பல பாடல்கள் பாடப்படுகின்றன.

விலங்குகள் நலன் சார்ந்ததாக மூன்றாவது நூல் அமைக்கப்பட்டுள்ளது. குதிரைகள் மற்றும் கால் நடைகளின் வளர்ப்பு, ஆடுகளின் பராமரிப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள் குறித்தும் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. தேனிக்களை மையமாக வைத்து நான்காம் புத்தகம் பாடப்பட்டிருக்கிறது. பாடல், இசையோடு தொடர்புடைய ஆர்பியஸ் மற்றும் யூரிடைஸ் என்ற புகழ்பெற்ற கிரேக்க இணைகளை உட்கதையாகவும் கொண்டு நான்காம் நூல் புனையப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மகாகவி வெர்ஜின் ஆகச் சிறந்த படைப்பாக எனிட் காவியம் புகழப்படுகிறது. டிராய் நகரின் மன்னர் பிரியாமின் உறவினராகக் குறிப்பிடப்படும் அன்கைசஸ் இளவரசர் மற்றும் வீனஸ் மகனான அனிஸ் பற்றிய காப்பியமே அனீட். டிராய் போரில் பங்கு கொண்ட அனீட் போரின் இறதியில் அங்கிருந்து தப்பி ரோம் நகரை உருவாக்கும் மாபெரும் வீரராக வெர்ஜிலால் கட்டமைக்கப்படுகிறார்.

இலியட் காப்பியத்தில் இருமுறை கடவுளர்களால் காப்பாற்றப்படும் எனிட் அப்ரோடைட்டின் மகனாக அறியப்படுகிறார். ஜீயஸ் உட்பட அனைத்துக் கடவுளர்களுக்கும் மானுடப் பெண்களோடு காதலை உண்டாக்கும் அப்ரோடைட்டைப் பழிவாங்கும் நோக்கில் இடா மலைப் பகுதியில் கால்நடைகள் மேய்த்துக் கொண்டிருக்கும் டார்டானியாவின் இளவரசர் அன்கைசஸ் மேல் அப்ரோடைட்டின் இதயத்தில் காதலை உண்டாக்குகிறார் ஜீயஸ். கடவுள் என்பதை மறைத்து அன்கைசைஸை மணமுடிக்கும் அப்ரோடைட், பின்னர் அவர்களது குழந்தையான அனியஸை ஐந்து வயது வரை இடாவில் வளர்த்து அன்கைசிஸிடம் கொடுப்பதாக ஹோமரின் அப்ரோடைட் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

காப்பியத்தின் முதல் பகுதியில் இனிட் போருக்குப் பின் அலைக்கழிக்கப்பட்டு இத்தாலியின் லத்தியத்தை அடைவதும், பின் லத்தியத்தில் ரோமை நிறுவுவதையும் விவரிப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. டிராஜன் மக்களுக்கு எதிரான ஜுனோ கடவுளின் வெறுப்புணர்வு இனிட் பயணத்தையும் திசை திருப்புகிறது. ஒடிஸியஸ் போன்றே வழிதவறி சுற்றித் திரியும் இனிட் பல்வேறு போராட்டங்களுக்குப் பின் கார்த்தீஜியாவை அடைகிறார்.

ஜுனாவிற்குப் பிடித்தமான நகரம் கார்தீஜியாவாக இருக்கிறது. இனிட் இத்தாலியை அடைந்து விடுவாரெனவும் அவரது வம்சாவழியினர் நற்குணங்களும் வீரமும் நிரம்பியவர்களாக இருந்து உலகையே ஆள்வார்கள் எனவும் அவர்களால் கார்தீஜியா நகர் அழிவுக்கு உள்ளாகும் என்பதையும் அறிந்திருக்கும் ஜுனோ, கார்தீஜியாவின் காவல் கடவுளான டிடோவோடு இனியட்டிற்கு நெருக்கத்தை ஏற்படுத்துகிறார்.

ஜுபிடரால் அனுப்பப்படும் மெர்குரி மூலமாக கடமையை உணர்ந்து, டினோவைப் பிரியும் எனிட், சிசிலி தீவை அடைகிறார். அவரது தந்தையின் நினைவாக. விளையாட்டுப் போட்டிகளை நடத்தி போட்டிகளில் பங்கு பெற்ற அனைவருக்கும் பரிசளிக்கிறார். டிராயை விட்டு டிரோஜன் வீரர்களோடு தப்பும் போது அன்கைசஸ் கிரேக்கர்களோடு போரிடவே விரும்புகிறார். மருமகனான கிரேசாவால் மனம் மாறி இத்தாலிக்குப் பயணமாகிறார். அனிட் அன்கைசஸை தோளில் சுமந்தும், மகன் அஸ்கானியஸை அழைத்துக் கொண்டும் கப்பலுக்கு வரும் போது கிரேசா பின்தங்கி விடுகிறார். பின் கிரேசாவைத் தேடித் திரியும் அனிட் அவரது ஆவியோடு பேசுகிறார். இத்தாலியில் இன்னொருவரை மணம் புரிவார் எனும் கிரேசாவின் முன்னறிவிப்புக்குப் பின், தந்தையோடும் மகனோரும் டிராஜன் வீரர்களோடும் கப்பலில் தப்பிப்பதாக எனிட் காப்பியம் குறிப்பிடுகிறது.

விளையாட்டுப் போட்டிகளின் போது ஜுனோவின் தூண்டுதலால் அனிட்டின் கப்பல் எரிக்கப்படுகிறது. ஜுபிடரின் உதவியால் மழை பெய்து கப்பல் காற்றப்படுகிறது. கோபமாகும் அனிட்டை சமாதானாமாக்கும் அன்கைசஸ், பாதாள உலகிக்குக் சென்று அனிட் மற்றும் ரோமின் எதிர்காலத்தை அறிந்து வருமாறு கூறுகிறார். அனிட் பாதாள உலகிற்குப் பயணமாகி பின் மனிதர்கள் உலகிற்கு மீண்டு வருகிறார்.

லித்தியம் பகுதியில் டிரோஜன்களைக் குடியமர்த்தும் அனிட், அரசர் லேட்டினஸ் மகளான லேவினாவை மணந்து கொள்கிறார். ஜுனோ அமைதியைக் குலைக்கும் விதமாக, குடிலியாஸை ஆளும் டர்னஸிற்கே இளவரசி லித்தினஸை முணம் முடித்திருக்க வேண்டுமென்று லித்திய அரசியைத் தூண்டிவிட்டு போரை உருவாக்குகிறார்.

அனிட்டை எதிர்க்கும் விதமாக மாபெரும் படையை திரட்டி டர்னஸ் போரிடுகிறார். ருடிலியாவிற்கு எதிரான அர்கேடியாவின் அரசரான ஈபான்டரின் மகன் பல்லாஸ் ஆதரவைப் பெறும் அனிட், டர்னஸிற்கு எதிராகக் கடுமையாகப் போரிடுகிறார். இரு தரப்பிலும் சேதங்கள் அதிகமாகின்றன. மகன் போன்று கருதும் பல்லாவின் முடிவு அனிட்டை கொதித்தெழ வைக்கிறது.

படைகளின் சேதத்தை தவிர்க்க அனிட்டுக்கும் டர்னஸிற்கும் ஒற்றை யுத்தம் மூள்கிறது. காயம்படும் டர்னஸை அவரது தங்கையும், நீருற்று, கிணறுகள், குளங்களின் கடவுளுமான ஜூடுர்னா ஒப்பந்தத்தை மீறிக் காப்பாற்றுகிறார். காயம்பட்ட அனிட் லித்தியத்தின் மீது மீண்டும் போர் நடத்தி டர்னைஸ ஒற்றை யுத்தத்திற்கு அழைக்கிறார். போரில் தோற்றுப் போகும் டர்னஸை மன்னித்துவிடும் அனிட், டர்னஸ் தலையில் அணிந்திருக்கும் பல்லாவின் இடுப்பணியைக் கண்டு மனம் மாறி அவரை முடிப்பதோடு இனிட் காவியம் நிறைவடைகிறது.

மகா கான்ஸ்டான்டைன், புனிதர் கான்ஸ்டான்டைன், முதலாம் கான்ஸ்டன்டைன் எனப் பலவாறாக வரலாற்றில் இடம் பெற்ற பிளேவியஸ் வேலிரியஸ் அரிலியஸ் கான்ஸ்டான்டினஸ் அகஸ்டஸ் (272-337), ரோம வரலாற்றிலும் கிறித்துவ சமயத்திலும் முக்கியமானவராக இடம் பெறுகிறார். நான்கு பேரரசர்கள், ஐந்து பேரரசர்கள் என ரோமாபுரியின் பெருநிலத்தையாண்ட அரசமரபை மாற்றி, ரோமச் சாம்ராஜ்யம் அனைத்திற்கும் ஒரே பேரரசராக கிறித்துவிக்குப் பிறகான முந்நூற்றி இருபத்தி நான்காமாண்டு முடிசூட்டப்பட்டவராக கான்ஸ்டான்டைன் அறியப்படுகிறார்.

கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொண்டதாகக் குறிப்பிடப்படும் கான்ஸ்டன்டைன் பேரரசர், கிறித்துவர்களுக்கும் மற்ற மதத்தினருக்குச் சமமாக வழிபாட்டு உரிமையை வழங்கியவராகக் குறிப்பிடப்படுகிறார், கிறிஸ்துவ வழிபாட்டுக் கூடங்கள் கட்டுவதற்கு உரிமையும், பொருளுதவி செய்தவராகவும் பேரரசர் குறிப்பிடப்படுகிறார்.

ரோமர்களின் நகரமைப்பையொட்டி வடிவமைக்கப்பட்டிருந்த கிரேக்க நகரமான பைசாந்தியத்தை தலைநகராகத் தேர்ந்தெடுத்து முந்நூற்றி இருபத்தி நான்கில் பணிகள் துவங்கி முந்நூற்றி முப்பதில் கான்ஸ்டான்டிநொபிலிஸ் எனும் பெயர் மாற்றத்தோடு ரோமத் தலைநகராக உருவாக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு

ரோமாபுரி தலைநகராகவும், பின்னர் பைசாந்தியப் பேரரசின் தலைநகராகவும் வரலாற்றில் இடம் பெற்ற கான்ஸ்டான்டி நொபில், உதுமானியப் பேரரசு அமையும் வரை பெரும் புகழ் பெற்ற ரோமத்தலைநகராக வரலாற்றில் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

பைசாந்தியம் கிரேக்கமாகவும், ரோம் லத்தீனமாகவும் மாற்றமடைந்து, நான்காம் நூற்றாண்டுக் காலத்திலேயே கிழக்கு ரோமப் பேரரசு மற்றும் மேற்கு ரோமப் பேரரசு எனப் பிளவுபட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அரசியல் பொருளாதார ஆட்சிமுறைகளின் செயல்பாடுகள் காரணமாக மேற்கு ரோமப் பேரரசு நானூற்றி எழுபத்தி ஆறாமாண்டில் முடிவுக்கு வந்ததாக வரலாற்றாசிரியர்களால் அறுதியிடப்பட்டுள்ளது. மேற்குப் பேரரசு முடிவுக்கு வந்த பல காரணங்களில், கிறித்துவத்தின் எழுச்சியும் முக்கியமானதொரு காரணமாகக் கூறப்படுகிறது.

இயேசுவின் பிறப்பு முன்னறிவிப்புச் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. ஏரோது அரசன் காலத்தில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் கன்னிமரியாள் வயிற்றில் தூய ஆவியின் வல்லமையால் பிறந்தார். வளர்ப்புத் தந்தை யோசேப்பு. சிறு வயதிலேயே ஞானம் மிகுந்தவராகக் காணப்பட்டவர், முப்பது வயதில் யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். பாலை நிலம் சென்று நாற்பது நாள் நோன்பிருந்தார், மக்களுக்கு போதனைகள் செய்தார். சீடர்கள் சேர்ந்தனர். பல அதிசயங்கள் புரிகிறார். யூத மக்களால் எதிர்பார்க்கப்பட்ட மீட்பர் என அறிவிப்புச் செய்யப்படுகிறார். கடவுளைப் பழித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு சிலுவையேற்றப்படுகிறார். மூன்றாம் நாள் உயிர்தெழுந்ததாக சீடர்கள் அறிக்கையிடுகின்றனர்.

இயேசுவின் பிறப்பு இறப்பு குறித்து துல்லியமாகத் தெரியாததல் பொது ஆண்டிற்கு முன் 7-2 அல்லது 30-33 எனக் கணிக்கப்படுகிறது. பொது ஆண்டின் முப்பத்து மூன்றில் மறைந்தார் என்பது மரபாகக் கொள்ளப்படுகிறது.

பொது ஆண்டின் முப்பத்தி நான்காமாண்டில் சுமார் மூன்றாயிரம் மக்கள் இயேசுவில் நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெற்றனர் எனக் கூறப்படுகிறது. கிறித்து ஏற்படுத்திய பன்னிரு தூதர்களில் தலைமையானவராகக் குறிப்பிடப்படும் புனித பேதுரு அல்லது புனித இராயப்பர், கத்தோலிக்கத் திருச்சபையின் முதல் திருத்தந்தையாகக் கருதப்படுகிறார்.

ஐம்பதாமாண்டில் எருசலேம் கூட்டத்தில், கிறித்துவின் சீடராக விரும்பி திருச்சபையில் இணைவோர் புற இனத்தவராயினும் யூத சமயத்தின் பழக்க வழக்கங்களை கடைபிடிக்க வேண்டியதில்லை என முடிவெடுக்கப்படுகிறது. கிறித்தவத்திற்கும் யூத சமயத்திற்குமான வேறுபாடு சுட்டிக்காட்டப்படுகிறது. இயேசுவின் திருச்சபை கத்தோலிக்க திருச்சபையாக முதலில் இக்னாசியரால் குறிக்கப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிறித்துவர்களுக்கும் யூதர்களுக்கும், கிறித்துவர்களுக்கும் ரோமர்களுக்கும், யூதர்களுக்கும் ரோமர்களுக்குமான மோதல்கள், வன்முறைகள், சண்டைகள் வரலாற்றில் பல்வேறுவிதமாகக் குறிக்கப்பட்டுள்ளன. அறுபத்தி ஆறு முதல் முந்நூற்றிப் பனிரென்டு வரை கிறித்தவர்கள் பல்வேறு விதங்களில் ஒடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கிறித்து சமயம் உலகெங்கும் பரப்பப்பட்டதற்கு வழிவகுத்தவராக கான்ஸ்டான்டிநொபில் குறிப்பிடப்படுகிறார். பேரரசர் கான்ஸ்டான்டைன் மற்றும் இணைப் பேரரசர் லிசினியஸ் இணைந்து முந்நூற்றிப் பதின்மூன்றில் வெளியிட்ட மிலன் பேரரறிக்கை மூலம், கிறித்தவர்களைத் துன்புறுத்தும் செயல்கள் நிறுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. கிறித்தவர்கள் அவர்களது சமய நம்பிக்கையை அரசு தலையீடின்றி தொடரலாமென அறிவிக்கப்படுகிறது. திருச்சபை சொத்துக்களை உடைமையாகக் கொள்ளவும் கான்ஸ்டான்டைன் உரிமை வழங்குகிறார். முந்நூற்றி இருபத்தைந்தில் நிசேயா நம்பிக்கை அறிக்கையும், முந்நூற்றி எண்பத்தி ஒன்றில் விரிவாக்கம் செய்யப்பட்ட நிரேயா-கான்ஸ்டான்டி நொபில் நம்பிக்கை அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது.

தந்தை, மகன், தூயஆவி குறித்தான மாறுபட்ட நிலைப்பாடுகளால் கிறித்துவத்தில் பிளவுகள் உண்டாகியிருக்கின்றன. தூய ஆவி தந்தையிடமிருந்து புறப்படுகிறார் என்பதை, தூய ஆவி தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படுவதாக இலத்தீன் வழிபாட்டு முறை சார்ந்த திருச்சபைகள் மாற்றின. மாற்றத்தை கீழை மரபு வழித் திருச்சபை ஏற்றுக் கொள்ளவில்லை.

இரண்டாம் கான்ஸ்டன்டியஸ் (317-361) ஆதிகிறித்துவத்தை ரோமப் பேரரசின் மதமாக அறிவித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ரோமப் பேரரசின் முழுப்பகுதியையும்

ஆண்ட கான்டான்டியஸ் ஆட்சிக் காலத்தில், பேரரசு முழுவதுமே தீவிரமான மதக் கட்டுப்பாடுகள் உட்படுத்தப்பட்டிருக்கின்றன.

பண்டைய பாகானிய மதங்களின் சடங்கு முறைகள் அனைத்தையும் தடை செய்தும், முன்னறிவிப்பாளர்கள் பூசாரிகள் மந்திரக்காரர்களைத் தடைசெய்தும், கோவில்களை மூடவும் ஆணைகள் வெளியிட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. கிறித்தவம் தவிர்த்த மற்ற கடவுள் வழிபாட்டாளர்கள் மீது, மிகக் கடுமையான கொடூரங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. கிறித்துவ மதத் தலைவர்களுக்கு வரிவிலக்கு, கட்டாய உடல் உழைப்பிலிருந்து விலக்கு, தனிப்பட்ட சொத்துக்கள் வைத்துக்கொள்ள அனுமதி, ஆயர்கள் நீதிமன்றங்களுக்கு அழைக்கப்படுவதிலிருந்து விலக்கம் போன்ற பல்வேறு சலுகைகள் கிறித்துவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

மாறாக, யூதர்கள் கடுமையான நெருக்கடிகளைச் சந்தித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. கிறித்தவப் பெண்களை யூதர்கள் திருமணம் செய்வது தடை செய்யப்பட்டிருக்கிறது. யூதர்கள் கிறித்துவத்தை ஏற்கலாமென்றும், கிறத்துவர்களை யூத மதத்திற்கு மாற்றக் கூடாதென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சீசராகவும் அகஸ்டாஸாகவும் உயர்வு பெற்ற ரோமப் பேரரசர் ஜீலியன் (331 – 363) ஆட்சிக் காலத்தில் பாகானிய வழிபாடுகளுக்கான சுதந்திரம் மறுபடியும் அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. கிறித்துவர்களின் சில உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. பல சமயக் கொள்கைகளும் பின்பற்றப்பட்டிருக்கின்றன. ரோம் செனட்டிலிருந்து அகற்றப்பட்ட வெற்றிக்கான சிலையை ஜீலியன் மறுபடியும் செனட்டில் நிறுவியிருக்கிறார்.

ஆரம்பகால கிறித்தவக் கோட்பாடுகளில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவராக ஹிப்போவின் அகஸ்டீன் (354-430) அறியப்படுகிறார். திருச்சபையின் தந்தையருள் ஒருவராக இருந்த புனித அகஸ்டீன், கிறித்துவத்தின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்களித்திருக்கிறார். ஆசிரியர் பணியில் விருப்பம் கொண்டிருந்த அகஸ்டீன், சிறந்த நூலாசிரியராகவும் அறியப்படுகிறார். ஆரம்ப காலத்தில் மணிச்சேயிசம் எனும் சமயப்பிரிவில் இருந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

ஜீலியனுக்குப் பின்வந்த ஜோவியன், வேலன்ஸ், முதலாம் வேலன்டைன் அரசர்கள் காலத்தில் ஓரளவிற்கு மத சுதந்திரம் இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பின்னர் ஏற்பட்ட கிரேடியன், இரண்டாம் வேலன்டைன், முதலாம் தியோடோசியஸ் அரசாட்சிக் காலங்களில், மற்ற சமய வழிபாடுகளும் நம்பிக்கைகளும் கடுமையாக ஒடுக்கப்பட்டு, கிறித்துவ மதம் வளர்த்தெடுக்கப்பட்டதாகப் பதியப்பட்டிருக்கிறது. மக்கள் அவரவர் வீட்டளவில் கூட பிற சமயங்களை வழிபட தடை விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கோவில்கள் தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றன. கோவில்களை ஏறிட்டுப் பார்ப்பதே தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டிருக்கிறது. கோவில் இருந்த பகுதிக்கு எக்காரணம் முன்னிட்டும் செல்லக் கூடாது என மக்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர். மாறாக கிறித்துவ மதமும், கிறித்துவ சமய நம்பிக்கைகளும், கிறித்துவக் கோவில்களும் பெருகியிருக்கின்றன. ஆரம்ப காலங்களில் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்ததாகக் குறிப்பிடப்படும் கிறித்துவர்கள், அதைவிடக் கடுமையான கொடூரங்களை மற்ற சமயத்தவர் மேல் அரங்கேற்றினார்கள் என்றே வரலாறு சுட்டிக் காட்டுகிறது. நான்கு ஐந்தாம் நூற்றாண்டு முழுக்கவே கிறித்துவ சமய வளர்ச்சிக்காக, அறமற்ற செயல்கள் நிகழ்ந்தப்பட்டதில் கிறித்துவர்களின் பங்கு மிகப் பெரியதென வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அன்பையும் சமாதானத்தையும் விதைக்க வந்தவராகவும், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டுங்கள் என போதனைகள் செய்தவராகவும் குறிப்பிடப்படும் இயேசு கிறித்துவின் பெயரால் தொல்மரபு கடவுள் வழிபாட்டார்கள் மேல் நிகழ்ந்தப்பட்ட வன்முறைகள் ஏற்புடையதாகாது என்றே பொதுவில் குறிப்பிடப்படுகிறது.

எபர்சியாவின் பார்த்தியப் பேரரசில் பிறந்தவராக அறியப்படும் மணி அல்லது மனிஸ் (பொ.பின். 216-276) உருவாக்கிய சமய நம்பிக்கை மணியிசம் எனக் குறிப்பிடப்படுகிறது. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை பரவலான சமயமாக இருந்ததாகக் குறிப்பிடப்படும் மணியிசம், சொராஸ்துரரின் நல்லது-தீயது எனும் கோட்பாட்டை ஒட்டியதாக இருந்திருக்கிறது. சீனா முதல் மேற்கு ரோம் வரை திருச் சபைகள் காணப்பட்டதாகக் கூறப்படும் மனியிச சமயம், கிறித்துவ சமயத்தோடு பெரியளவில் போட்டியிட்டதாக பதிவுகள் குறிப்பிடுகின்றன. முதலாம்

தியோடோசியஸ் ரோமப் பேரரசரால் மணியிசம் கடுமையாக ஒடுக்கப்பட்டிருக்கிறது.

தந்தையின் பெயராலும் பின்னர் மகனின் பெயராலும் மெசபதோமியா, எகிப்து, கிரேக்கம், இலத்தீனம் என அனைத்து நாடுகளின் கடவுளர்களும், அவர்தம் கோவில்களும், வழிபாட்டு முறைகளும் அகற்றப்பட்டன என்பது வரலாறு. யூதமும் கிறித்துவமும் விட்டு வைத்திருந்த அரேபிய கடவுளர்களும், கோவில்களும், சிலைகளும் ஆறாம் நூற்றாண்டு அல்லாஹ் பெயரால் அழிக்கப்பட்டது என்பதும் வரலாற்றுச் சான்று.

4

சங்கம்

ஆறாம் நூற்றாண்டில் தமிழகம் எப்படி இருந்தது என்பது வரலாற்றுப் பார்வை கொண்ட தமிழர்கள் அறிந்ததே. மேற்குலகைப்போல் தமிழகத்திலும் மத மோதல்கள் உச்சகட்டத்தில் இருந்ததாகவே வரலாற்றுப் பதிவுகளும் இலக்கியங்களும் அறிவிக்கின்றன. பௌத்தர்க்கும் சமணர்க்கும், சமணர்க்கும் சைவர்க்கும், சைவர்க்கும் வைணவர்க்கும், வைதீக சமயத்தார்க்கும் வைதீக எதிர்ப்பாளர்க்கும் என கடும் மத மோதல்கள் நடந்திருக்கின்றன. உரோமையப் பேரரசர்கள் போன்றே தமிழக அரசர்களிலும் மதமாற்றங்கள் நிகழ்ந்தன. அரசன் மதம் மாறினால் மக்கள் மாறாமல் இருக்க முடியுமோ? ஒரு நாட்டை மதம் மாற்றுவதற்குப் பதிலாக அரசனை மட்டும் மதம் மாற்றுவது எளிதல்லவா.

ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவர்களின் சிம்ம விஷ்ணு (ஆ.கா. 575-600) அரியணையில் அமர்கிறார். சிம்ம விஷ்ணுவுக்கு முன்னரே காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் ஆட்சி நடைபெற்று வந்தாலும், சிம்ம விஷ்ணு அதுவரையிலுமான பல்லவர்களில் சிறந்தவராகவும், களப்பிரர், சேர, சோழ, பாண்டிய, சிங்களரை வென்று கும்பகோணம் வரை பல்லவ ஆட்சியை விரிவு படுத்தியவராகவும் அறியப்படுகிறார்.

களப்பிரர்களிடமிருந்து மீண்டும் பாண்டிய ஆட்சியைக் கைப்பற்றியவராக பாண்டியன் கடுங்கோன் (590-620) அறியப்படுகிறார். களப்பிரர் யார் என்பது குறித்து சரியான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்றே குறிப்பிடப்படுகிறது. சங்ககாலத்திற்குப் பின் சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றிய தகவல்கள், வரலாற்றுக் குறிப்புகள் மூலமாகக் கிடைக்கப் பெறாமையால் அக்காலகட்ட தமிழகத்தின் நிலை குறித்து அறிந்து கொள்ள இயலவில்லை எனக் கூறப்படுகிறது. எனவே தமிழகத்தின் இருண்ட காலமாக களிப்பிரர் காலம் குறிப்பிடப்படுகிறது. ஆயினும் களப்பிரர்கள் என்போர் சமண, பௌத்த சமயத்தவரென்றும், அவர்களது ஆட்சிகாலத்தையே இருண்ட பகுதியாகக் குறிக்கிறார்கள் எனவும் சொல்வதுண்டு. களிப்பிரர் காலத்திலும் தமிழ் மொழி சிறப்பாகவே பேணப்பட்டதாகக் கூறப்படுகிறது. களப்பிரர் காலத்திலே பதினெண் கீழ்கணக்கின் பல நூல்களும் தோற்றம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் சமயம் தொடர்பான எண்ணற்ற வாதப் போர்களும் சமயப் பிணக்குகளும் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவின் மிக நீண்ட பாரம்பரியம் கொண்ட அரச மரமாக பாண்டிய அரச மரபு விளங்குகிறது. பொது ஆண்டிற்கு முன்பான ஆறாம் நூற்றாண்டில் தொடங்கியதாகக் குறிப்பிடப்படும் பாண்டிய அரச மரபு, பதினாறாம் நூற்றாண்டு வரையிலும் தொடர்ச்சி பெற்று வந்திருப்பதாகவே வரலாறு போற்றுகிறது. தமிழையும் பாண்டியர்களையும் பிரிக்க முடியாததைப் போல் தமிழையும் மூவேந்தர்களையும், தமிழையும் சங்ககாலத்தையும் பிரித்துப் பார்க்கவும் இயலாது.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே என எட்டையபுர பெருங்கவியால் பெருமை பெற்ற தமிழ், பழமைக்கும் பழமையாய் புதுமைக்கும் புதுமையாய் என்றென்றும் வெற்றிநடை போடுவதற்குக் காரணம் தமிழ்மொழியின் இனிமையே என்றால் மிகையாகாது. தமிழ் என்றால் இனிமை என்றே சான்றோர் போற்றுவர்.

உலகின் மருங்கினில் உதித்துவாழ் மொழிகளுள் முதன்முதல் முகிழ்த்ததோர் மொழியெனும் பழமையள், உயர்தனிச் செம்மொழி உரைத்திடில் தமிழென உணர்ந்தோர் போற்றிடும் ஒண்மை சேர் நலத்தினள் என தமிழ்மொழியின் புகழினைப் போற்றுவர் பெரியோர்.

தமிழெனும் இவள்தன் தகுதிகள் என்றும் குன்றா வெழிலுடன் நின்றே நிலவிட, நன்றாம் இலக்கண நடைமுறை வகுத்தவள், அந்நாள் தமிழகத் தரும்புகழ் பெற்ற ஒல்காப் பெரும் பெயர்த் தொல்காப் பியனே எனப் போற்றும் பெரியோரின் புகழ்ந்துரைக்கு ஒப்ப, தமிழின் சங்ககாலப் பெருமைக்குப் பெரும் சான்றாக இருப்பது தொல்காப்பியமே.

தமிழின் முதுபெரும் நூலாக அறியப்பட்டிருப்பது தொல்காப்பியம். தொல்காப்பிய இலக்கண நூலை இயற்றியவர் பெயர் யாதென உறுதியாகக் கூறிட இயலாததால் காப்பியத்தின் பெயராலேயே தொல்காப்பியர் என அழைக்கப்படுகிறார். தமிழரின் உயர்வைப் போற்றும் தொல்காப்பியத்தின் காலம் குறித்து மாறுபட்டக் கணிப்புகள் கூறப்படுகிறது. பொது ஆண்டிற்கு முற்பட்டது என ஐயம் திரிபற ஒப்புக் கொள்வர் வரலாறு மற்றும் மொழியறிஞர்கள்.

தொல்காப்பியம் காலத்தினால் தொன்மையானது. கருத்தின் செழுமையினால் செப்பமானது. பழந்தமிழ் நாகரிகத்தின் செம்மையினையும் செம்மாந்த பெருநிலையினையும் தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டும் ஒப்பற்ற

ஒளிவிளக்கமாவது. மொழி இயலுக்கு மிக மிக முற்காலத்தேயே எழுந்து நிலவும் முதல் நூலாவது. வனப்புமிக்க வளமிகுந்த மொழியியக்கத்திற்கு ஒரு வரம்பாவது. ஏற்றமுடனும் திகழக் கூடியது. ஒப்பற்ற செழுந்தமிழ்ச் செல்வக்கடலாகவே விளங்குவது.

எழுத்து, சொல், பொருள் என அமைந்த மூன்று பெரும் அதிகாரப் பகுப்பினை உடையது தொல்காப்பியம். ஒவ்வொன்றும் ஒன்பது இயலாக இயலும் நெறியினைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் பெருநூலிற்கு உரைகண்ட பண்டைய உரையாசிரியர் பெருமக்கள் இளம்பூரணர், பேராசிரியர் சேனாவரையர், கல்லாடர், நச்சினார்கினியர், தெய்வச்சிலையார் போன்றோர். இவற்றுள் காலத்தினால் முற்பட்டதும் முற்றாகக் கிடைப்பதும் இளம்பூரணர் உரை ஒன்றேயாகும். எழுத்ததிகாரத்திற்கு நச்சினார்கினியர் உரையினை சிறப்பாகக் கொள்வது தமிழறிஞர் மரபாக கூறப்படுகிறது.

ஒரு வகுப்பார் அல்லது நாட்டார் தம் கருத்தைப் பிறருக்குப் புலப்படுத்துவதற்கு ஒரு கருவியாகக் கொள்ளும் ஒலித்தொகுதியே மொழி என்பர் ஆன்றோர். மனத்தின் உள்ளே ஏதாவது ஒன்றைப் பற்றிச் சிந்திப்பதும் மொழியின் ஒரு நிலை. பலர் சேர்ந்து ஓர் இனமாக வாழ்கிறார்கள் என்பதற்கு அவர்களின் நிறமோ, பழக்கவழக்கங்களோ காரணமில்லை என்றும், அவர்கள் ஒரு மொழி பேசுவோராக இருப்பதுதான் காரணமாகும் என்பர். மொழியை ஓர் இனத்தின் புற அடையாளம் எனலாம்.

மொழிதல் என்றால் சொல்லுதல் என்பது பொருளாம். பேச்சு மொழியே முதலில் தோன்றியதென்பர். பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி. ஆயினும், எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவைகளே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு. எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவைகளும் மொழியே ஆகும் என்பர் மொழியறிஞர்.

தமிழ் தனித்தன்மை வாய்ந்த மொழி. பிறமரபைக் சாராது, பிற மரபிலிருந்து தோன்றாது, சுய மரபை உடையது தமிழ். தமிழ் உலகிலுள்ள தொன்மையான மொழிகளுள் ஒன்று. உலகச் செம்மொழிகளுள் ஒன்று. தமிழ் இரண்டாயிரம்

ஆண்டுகட்கும் மேலான கால செறிவும் சிறப்பும் உடைய பழமையான இலக்கியச் செழுமை நிறைந்த உயர் தனிச் செம்மொழி.

உலகெங்கும் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் புழக்கத்திலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலகின் மொழிகள் பல்வேறு மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. நைஜர் - காங்கோ மொழிக் குடும்பம், ஆஸ்டோனேசியன் மொழிக்குடும்பம் போன்றவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் இடம் பெற்றுள்ளன. டிரான்ஸ் - நியுகினியா, சைனோ - திபெத்தியன், இந்தோ - யூரோப்பியன், ஆஸ்ட்ரேலியன், ஆப்ரோ - ஆசியாடிக், நைலோ - சகாரியன், ஒட்டோ - மான்குயின், ஆஸ்டோ ஆசியாடிக், வோல்டா காங்கோ, தாய் - கடைய், திராவிடியன், துபியன் எனப் பல்வேறு மொழிக் குடும்பங்கள் குறிப்பிடப்படுகின்றன.

இந்தியாவில் மட்டும் 122 பெருமொழிகளும் ஆயிரத்து அறுநூறு மற்ற மொழிகளும் வழக்கத்திலுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தியாவிலுள்ள மொழிகளுள் முப்பது மொழிகள் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையினரால் பேசப்படுவதாகக் தெரியவந்திருக்கிறது.

இந்தோ ஆரியா, திராவிட, அத்திரேலிய, ஆசிய, சைனா-திபெத்திய, தாய் - கடைய, அந்தமானிய எனப் பல்வேறு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளும் இந்தியாவில் பேசப்படுகின்றன. இந்தி, வங்காளம், உருது, குஜராத்தி, பஞ்சாபி, அஸ்ஸாமி, காஷ்மீர், கொங்கன், மைதிலி, மராத்தி, மணிப்புரி, சிந்தி, சமஷ்கிருதம் ஒடியா போன்ற வட இந்தியாவில் பேசப்படும் மொழிகள் இந்திய - ஆரியக் குடும்பத்தைச் சார்ந்தவை.

திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள், தென்னிந்தியா, கிழக்கு மற்றும் மத்திய இந்தியப் பகுதிகளில் பேசப்படுகின்றன. பாகிஸ்தான் நேபாளம் போன்றவற்றிலும் திராவிட மொழிக் குடும்பத்தின் பிரிவுகள் வழக்கத்திலுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற பெருவாரியான மொழிகள் உப்பட எண்பத்தைந்து மொழிகள் திராவிடக் குடும்பத்தில் இடம்பெற்றுள்ளதாக பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியம் நிறைந்துள்ள மொழிகள் செவ்வியல் மொழிகள், செம்மொழிகள் என பெருமிதப்படுத்தப்படுகின்றன. ஒரு மொழி

செம்மொழியாகக் கருதப்படுவதற்கு பல்வேறு தகுதிகளை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பழமையான இலக்கிய வளங்களும், கலைகளும் செவ்வியல் மொழிக்கான முக்கியமான வரையறைகளாகக் கருதப்படுகின்றன. மேலும் தொன்மை, தனித்தன்மை, பொதுமைப்பண்பு, நடுவு நிலைமை தாய்மைப் பண்பு, பண்பாட்டுக் கலை அறிவு பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கமில்லா தன்மை, உயர் சிந்தனை மொழிக் கோட்பாடு போன்றவையும் செவ்வியல் மொழிக்கான முக்கியமான பண்புகளாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

மிகத் தொன்மை வாய்ந்த மொழிகளாக, இலக்கியங்கள் நிறைந்த மொழிகளாக, செவ்வியல் மொழிகளாகக் குறிப்பிடப்படும் கிரேக்கம், இலத்தீனம், சமஷ்கிருதம், பாரசீகம், எபிரேயம், அரபியம், சீனம் மற்றும் தமிழ் மொழிகளில், தற்போதும் பெருமளவில் பயன்படுத்தப்படும் மொழியாக தமிழ் விளங்கிவருவதாக மொழியறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

சங்க இலக்கியம் என்பது பண்டைய காலத்தில் தமிழ் நிலத்தில் இயற்றப்பட்ட செவ்வியல் இலக்கியங்களைக் குறிப்பதாகும். முச்சங்க வகைப்பாட்டில் கடைச்சங்க காலம் சங்ககாலமாகக் குறிப்பிடப்படுகிறது. சங்க இலக்கியங்கள் என்பது, நானூற்றி எழுபத்து மூன்று புலவர்களால் எழுதப்பட்ட இரண்டாயிரத்து முந்நூற்றி எண்பத்தொரு பாடல்களைக் கொண்ட பாடல் தொகுப்பைக் குறிக்கிறது. சங்க இலக்கியங்கள் வாயிலாக தமிழரது நாகரிகமும் பண்பாடும் அறியப்படுகிறது. தமிழ் நிலத்தையாண்ட அரசர்களைப் பற்றியும் அறிந்து கொள்ள சங்க நூல்கள் பயனாகின்றன.

பாண்டியர்களைப் பற்றிய வரலாறு புராணங்களிலும், இலக்கியங்களிலும், காப்பியங்களிலும், நாட்டுப்புறக் கதைகளிலும் பரவலாகக் காணக் கிடைக்கிறது. தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டதால் இவர்கள் தென்னவர்கள் எனக் கூறப்பட்டனர். மாறன், வழுதி, வ்மன், செழியன், முதுகுடுமி போன்ற பெயர்களிலும் பாண்டியர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

பிறநாட்டவர் மூலங்ளிலிருந்தும் பாண்டியர் பற்றிய சான்றுகள் அறியப்படுகின்றன. மெகஸ்தனிஸ் பாண்டிய நாட்டைக் பற்றிய குறிப்புகளை எழுதியுள்ளார். உரோமானிய அகஸ்டஸ் அரசவைக்கு பாண்டிய மன்னர்

தூதனுப்பியதாக நிக்கோலஸ் தமாஸ்கஸ் எனும் புகழ்பெற்ற உரோம வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார்.

புகழ்பெற்ற புவியியலாளரும், வானியலாளரும், கணிதவியலாளரும், சோதிடருமான எகிப்தியக் கிரேக்கர் தாலமி (பொ.ஆ. 90-168) மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர் குறித்து குறிப்பிட்டுள்ளார். கிரேக்கப் பண்பாட்டைக் தழுவிக்கொண்ட எகிப்தியர் எனவும் தாலமியைப் பற்றிக் கூறப்படுகிறது. துறைசார் அறிவியல் நூல்கள் பலவற்றை எழுதியவராகக் கருதப்படும் தாலமி. ஜியோகிராபிய எனும் புவியியல் பற்றிய முழுமையான விளக்க நூலினை எழுதியிருக்கிறார்.

பெரிப்ளசு எனும் கடல்வழி கையேட்டு நூலிலும் பாண்டியர்களைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. செங்கடல் செலவு எனப்படும் எரித்ரியக் கடல் கையேட்டு நூலில் கடற்கரைத் துறைமுகங்களான தொண்யை திண்டிஸ் என்றும், முசிறியை முசிறிஸ் எனவும், கொற்கையை கொல்சி எனவும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

பாண்டியர்கள் அரசமரபு முற்காலப் பாண்டியர், இடைக்கால, பிற்கால, தென்காசிப் பாண்டியர் என வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது. முற்காலப் பாண்டியர் சங்ககாலத்தில் இடம்பெறுபவர்கள். பாண்டியர்கள் சந்திர குலத்தவர்கள். மீன்கொடியுடையவர். வேப்பம் பூவு மாலை அணிபவர்.

கைத்தொழில்களிலும் வாணிகத்திலும் பாண்டியநாடு சிறந்திருந்தது. பாண்டி நாட்டுத் துறைமுகமான கொற்கையில் முத்துக்களும், சங்குகளும் பெருமளவில் கிடைத்திருக்கின்றன. கொற்கை முத்து உலகளவில் நன்மதிப்புள்ளதாக இருந்திருக்கிறது. முத்து, பவளம், மிளகு மேனாட்டுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. குதிரை பெரியளவில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. உலகின் பல நாடுகளோடும் பாண்டியர்களுக்கு வணிகத் தொடர்பு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நெடியோன் என அறியப்பட்ட வடிம்பலம்ப நின்ற பாண்டியன் சங்ககாலத்திற்கு முன் ஆண்ட பாண்டிய அரசனாகக் குறிப்பிடப்படுகிறார். மூத்த குடியினன் எனும் பொருளில் முதுகுடுமி என அழைக்கப்பட்ட முதுகுடுமி பெருவழுதி ஆற்றல் மிக்க படைகொண்டவராகவும், பல அரசர்களையும் புறங்கண்டவராகவும், புலவர்களுக்கு வேண்டிய அளவு கொடுத்தவராகவும் சங்கப்பாடல் வழி அறியப்படுகிறார்.

பெருவழுதி அரசர் போருக்குப் போகும் முன், பசுக்கள், அந்தணர்கள், பிணியுடையோர், புதல்வரைப் பெறாதவர்கள் போன்றோரை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவித்த பின்னரே அறப்போர் செய்யத் துவங்குவார் எனவும் புகழப்படுகிறது.

முடத்திருமாறன், பசும்பூண் பாண்டியன், பொற்கைப் பாண்டியன், இளம் பெருவழுதி, அறிவுடை நம்பி எனப் பல பாண்டிய மன்னர்களும் பாண்டி நாட்டை ஆண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் மிகச் சிறந்த போர்வீரராகக் குறிப்பிடப்படுகிறார். சேர, சோழ, கொங்கு, குறுநில மன்னர் என பலரையும் வெற்றி கொண்டதாகக் கூறப்படும் நெடுஞ்செழியன், வட நாட்டு ஆரிய மன்னர்களையும் வெற்றிகொண்டதாகப் போற்றப்படுகிறார்.

பாண்டியப் பேரரசின் சிறந்த மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவராக தலையனங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் அறியப்படுகிறார். மிக இளமைக் காலத்திலேயே அரசராக முடி சூடப்பட்டவரான நெடுஞ்செழியனுக்கு எதிராக பெருநற்கிள்ளி சோழனும், சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்ரேசல் இரும்பொறையும், திதியன், எழினி, எருமையூரன், இளங்கோவேண்மான், பொருநன் என்னும் வேளிர் ஐவரும் ஒன்று கூடி பாண்டிய நாட்டின் மீது படையெடுத்திருக்கின்றனர். தலையனங்கானத்தில் நடந்த போரில் எழுவரையும் நெடுஞ்செழியன் வெற்றி கொண்டதை பொருதும் என்று தன்தலை வந்த - புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க - ஒருதான் ஆகிப் பொருதுகளத்து அடலே என புறநானூறு (76.11-13) புகழ்கிறது.

வளம் பொருந்திய காவிரி ஆற்றுப் படுகையில் தோற்றம் பெற்றது சோழநாடு. முற்காலச் சோழர்களில் சிறந்தவராக கரிகால் சோழன் புகழப்படுகிறார். நெல்லின் வளமை கருதி சோழ நாடு சோறுடைத்து என்பர். சங்க இலக்கியங்களில் சோழர்களும், சோழமன்னர்களும் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

சோழர்களின் தலைநகரம் உறையூர் மற்றும் பூம்புகார். கொடி புலிக்கொடி. சோழர் சூடும் மலர் அத்தி. சோழர் சூரிய குலத்தார் என கூறப்படுகிறது.

முற்காலச் சோழர் குலத்தின் முன்னோடியாக அரசர் செம்பியன் குறிப்பிடப்படுகிறார். இந்திர விழாவை செம்பியனே தொடங்கியதாகவும் கூறப்படுகிறது. கொடையிலும், போர்திறத்திலும் புகழ் பெற்றிருந்த சோழமன்னர்

இளஞ்செட் சென்னியின் மகனாக அறியப்படும் கரிகால் சோழன், பண்டைய சோழ அரசர்களின் சிறந்தவராகப் புகழப்படுகிறார். வெண்ணிப் பறந்தலையில் நடைபெற்ற போரில் பெருஞ்ரேசலாதன் எனும் சேர மன்னன் உட்பட பதினொருவரை வெற்றி கொண்டதாகவும், வகைப் பெருந்தலை என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் ஒன்பது குறுநில மன்னர்களை வென்றதாகவும் கரிகால் பெருவளத்தானை பாடல்கள் புகழ்கின்றன.

கரிகால் சோழ மன்னரால் காவிரியில் கட்டப்பட்ட கல்லனை பண்டைக் கால தமிழர் அறிவாற்றலுக்கு சிறந்ததொரு சான்றாக அறியப்படுகிறது. இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக அறியப்படும் கல்லணை, தற்போதும் பயன்பாட்டில் இருப்பது சாதனையே. காடுகளைத் திருத்தி கழனிகளாக்கியதால் சோழர் நாட்டில் செல்வ வளம் பெருகியது. பூம்புகார் துறைமுகத்தின் வழியாக வணிகத்திலும் சோழ நாடு சிறப்புற்று விளங்கியிருக்கிறது.

சங்க சோழ மன்னர்களில் மனுநீதி சோழன் குறிப்பிடத்தக்கவராக அறியப்படுகிறார். மனுநீதி சோழன் எல்லாலன் எனும் பெயரில் இலங்கையை ஆண்ட மன்னன் எனவும் கூறப்படுவதுண்டு. சேரமான் பாழுள்ளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன் போன்றவர்களைப் பற்றிய குறிப்புகளும் சங்கப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பற்றி சங்ககாலப் புலவருள் பலரும் பாடல்களை இயற்றியுள்ளனர். புலவர்களுக்கு பொன்னால் செய்த தாமரைகளைப் பரிசாக வழகியிருக்கிறார். கிள்ளிவளவன் சுடச்சுட அளித்த விருந்தின் வியர்வை அல்லாது புலவர்களுக்கு வேறு வியர்வை கிடையாதெனப் புகழப்பட்டிருக்கிறது. கிள்ளிவளவன் சேரன் தலைநகரான கரூரை கைப்பற்றியது மிகச் சிறந்த போர் வெற்றியாகவும் கூறப்படுகிறது.

சோழ மன்னர்கள் நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி மற்றும் கிள்ளிவளவன் இடையேயான உள்நாட்டுப் போர்கள் மூலம் சோழநாடு வளங்குன்றியதைப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். நெடுங்கிள்ளி ஆண்டு கொண்டிருந்த உறையூரைக் கைப்பற்ற நலங்கிள்ளி முற்றுகையிட்டிருக்கிறார். கோவூர்கிழார் எனும் சங்கப் புலவர் உலகத்து இயற்கையையும் நாட்டு நடப்பையும் சுட்டிக்காட்டி போரிடுவது

சேரனோ, பாண்டியனோ அல்ல என்றும், இரண்டு சோழர்களில் தோற்பது யாராயினும் இழிவு சோழனுக்கே என எடுத்துக் கூறி போரை கைவிடக் செய்திருக்கிறார்.

திருப்போர்ப்புறம் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் சோழ மன்னன் செங்கணான், சேர மன்னன் கணக்கால் இரும்பொறையை சிறையிலிட்டதாகப் புறநானூற்றுப்பாடல் வழி அறியப்படுகிறது.

பண்டைய தமிழகத்தின் மேற்குப் கரையிலிருந்து அரச மரபு சேரர்கள் என அழைக்கப்படுகிறது. கேரளாவையும், கொங்குப் பகுதியையும் அரசாண்ட சேர மன்னர்களை சேரமான் என்றே சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பதிற்றுப்பத்தில் சேரர்களைப் பற்றிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

சேரமான்களின் தலைநகரம் கரூர் அல்லது வஞ்சி. சேர நாட்டின் முக்கியமான துறைமுகம் முசிறி. தொண்டியும் சேரர்களின் துறைமுகமாக இருந்திருக்கிறது. சேரர்களுடையது விற்கொடி. பனம்பூவைச் சூடுபவர்கள்.

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், சேரன் செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், அந்துவஞ்சேரல் இரும்பொறை, மாத்தரஞ்சேரல் இரும்பொறை, பெருஞ்சேரல் இரும்பொறை, பெருஞ்சேரலாதன், கோப்பெருஞ்சேரல் இரும்பொறை, குட்டுவன் கோதை, மருதம் பாடிய இளங்கடுங்கோ உட்பட பல்வேறு சேர மன்னர்களைப் பற்றிய பதிவுகள் இலக்கியங்கள் வழி அறியப்படுகிறது.

சேரமான்கள் திருவஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய காலங்களில் சேரநாட்டை உட்பிரிவுகளாகப் பிரித்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. முதல் காலத்தில் எட்டு கப்பம் கட்டும் நாடுகளாகவும், பிற்காலத்தில் பன்னிரெண்டு சுதந்திர நாடுகளாகவும் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

குட்ட நாட்டை ஆண்ட சேர மன்னர் உதியஞ்சேரலாதன். கரிகால் சோழனோடு நடைபெற்ற போரில் சேரலாதனுக்கு தவறுதலாக முதுகில் புண்பட்டதால், அதற்காக நாணப்பட்டு வடக்கிருந்ததாகக் கூறப்படுகிறது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் பல்யானை எல்கெழுக் குட்டுவனும் சேரலாதனின் புதல்வர்களாக அறியப்படுகிறார்கள்.

பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில் பாடப்படும் நெடுஞ்சேரலாதன், இமயம் வரை படை நடத்திச் சென்றவர் எனும் பெருமையில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என புகழப்படுகிறார். போர்களத்தில் காயமுற்ற நிலையிலும், பாடல் பாடிய கழா அத் தலையார் எனும் புலவருக்கு கழுத்திலிருந்த தங்க மாலையைப் பரிசாக அளித்தார் என சேரலாதன் போற்றப்படுகிறார்.

சேர நாட்டை மிகவும் வலிமையானதாக்கியதாக சேரன் செங்குட்டுவன் புகழப்படுகிறார். சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. கண்ணகிக்கு கோவில் எடுத்தவராகவும் சேரன் அறியப்படுகிறார்.

சேர நாட்டின் ஒரு பகுதியாக இருந்த பொறைய நாட்டின் ஆட்சி மரபை ஏற்படுத்தியவராக அந்றுவஞ்சேரல் இரும்பொறை கருதப்படுகிறார். இளஞ்சேரல் இரும்பொறை சோழர்களின் உறையூரைத் தாக்கியவராகக் குறிப்பிடப்படுகிறார்.

மூவேந்தர்கள் மட்டுமல்லாது குறுநில மன்னர்கள், வேளிர்கள் குறித்தும், மற்றும் பொதுப்பாடல்களாகவும் பல்வேறு சங்கப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. பெரும்பாலும் மலைப்பகுதிகளே வேளிர்களின் ஆட்சியின் கீழ் இருந்திருக்கின்றன. செல்வம் மிக்க நகரங்களைச் சுற்றிக் கோட்டைகள் எழுப்பப்பட்டிருந்தன. சிற்றரசர்களான வேளிர்கள் இலக்கியத்தையும் கலைகளையும் போற்றி ஆதரித்தனர். கொடையில் நிகரற்று விளங்கினர். அதியமான் நெடுமானஞ்சி, மலையமான் திருமுடிக்காரி, நாஞ்சில் வள்ளுவன், வையாவிக் கோப்பெரும் பேகன், குமணன், கடுமான் கிள்ளி, சிறுகுடி கிழான் பண்ணன், இளங்கோவேள், நம்பி நெடுஞ்செழியன், பொறையாற்றுக் கிழான் உட்பட பல்வேறு குறுநிலமன்னர்களைப் பற்றிய செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன.

வேளிர்கள் என்போர் சங்க காலத் தமிழகத்தில் சுதந்திரமாக ஆட்சி செலுத்திய சிற்றரசர்களைக் குறிப்பிடுகிறது. வேளிர்கள் தமிழகத்திலேயே வாழ்ந்த மூத்த குடிமக்களா அல்லது வட இந்தியப் பகுதியினின்றும் புலம்பெயர்ந்து வந்தவர்களா என்பதைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் பதியப்பட்டிருக்கின்றன. மூவேந்தர்களுக்குக் கட்டுப்படாமலும் அவர்களுக்கு ஆதரவளித்தும் எதிர்த்தும் வேளிர்களுக்குள்ளாகவும் பல்வேறு போர்கள் நிகழ்ந்ததாகப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. பாண்டியநாட்டு வேளிர்,சோழநாட்டு வேளிர், சேரநாட்டு வேளிர், என வேளிர்களை பிரித்தும் குறிப்பிடப்படுகிறது. ஆய் அண்டிரன், பொதியிற்

செல்வன், திதியன் போன்றோர் பாண்டிய வேளிர்கள். நெடுங்கை வேண்மான், நெடுவேளாதன், நன்னன்சேய் நன்னன், பொருநன் உட்பட பலர் சோழநாட்டு வேளிர்கள். நன்னன் வேண்மான், வெளிமான், எருமையூரான் போன்றோர் சேர நாட்டு வேளிர்களில் சிலர். வேளிர்கள் புலவர்களுக்கு பொன்னும், பொருளும் வாரி வழங்கிய வள்ளல்கள் எனவும் இலக்கியங்களில் போற்றப்படுகின்றனர்.

கோசர் என்ற குடியினரைப் பற்றியும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கோசர்களுக்கும் வேளிர்களுக்கும் பகைமை இருந்திருக்கிறது. கோசர்கள் மூவேந்தர்களுக்கும் உறுதுணையாக இருந்திருக்கின்றனர். அகுதி, திதியன், குறும்பியன், ஆதன் எழினி, நமும்பன் ஆகியோர் கோசர்களில் சிறந்த வீரர்கள் எனப் போற்றப்பட்டுள்ளனர்.

புலவர்கள் அரசர்களையும் குறுநில மன்னர்களையும் பாடிப் பரிசில் பெறுவர். பழுத்த மரங்களைத் தேடிப் போகும் பறவை போல பிறர்க்கு பொருளை வழங்கும் வள்ளல்தன்மை உடையோரை நினைந்து, நெடுந்தொலைவு என்று கருதாமல் அரிய வழி பலவற்றையும் கடந்து பரிசிலர் செல்வர். சென்று பிழைபடாத நாவால், பிறரை அறிந்த வண்ணம் பாடிப் பரிசில் பெறுவர். பெற்ற பரிசிலை பாதுகாத்து வைத்துக் கொள்ளாமல் உள்ளம் வருந்தாது சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் அளிப்பர்.

பரிசில் துறை என்னும் துறை வகுக்கப்பட்ட பதினேழு பாடல்கள் புறநானூறில் பாடாண்திணைப் பாடல்களாக இடம் பெற்றுள்ளன. பாடப்படும் ஆண்மகனின் வீரம், கொடை பற்றிக் கூறுவது பாடாண் திணை. தோற்றவர், வென்றவர் என வீரம் வெளிப்படப் போர் செய்த இருதிறத்தாரின் வீரத்தையும் புகழ்வது தமிழர் நாகரிகமாய் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளதாகப் புகழப்படுகிறது.

சங்க புலவர்களைப் போலவே, பாணர்களும் அரசர்களிடமிருந்தும் வள்ளல்களிடமிருந்தும் பரிசில் பெற்றுள்ளனர். பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் பண் பாடுதல், இசைக்கருவிகளை வாசித்தல், நடனம் ஆகிய கலைகளைத் தொழிலாகக் கொண்டோர் பாணர் என அழைக்கப்பட்டிருக்கின்றனர். நாடோடிகள் போன்று பல ஊர்களுக்கும் சென்று கலைகளால் மக்களை மகிழ்விப்பார்கள். ஆடல், பாடல் கலைகளில் சிறந்த பெண்களை பாடினி, விறலியர் எனச் சிறப்பித்துள்ளனர்.

பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை என்ற இரு சங்நூல்களும் பாணர்களின் பெயரால் குறிக்கப்பெற்றுள்ளன. சங்ககாலத் தமிழகத்தில் இசை

மக்களின் வாழ்வில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. யாழ், முழவு போன்ற இசைக்கருவிகள் கொண்டு பண்ணோடு இசைத்துப் பாடுவார்கள் எனக் கூறப்படுகிறது.

பண்ணிசையுடன் பாடுபவர் பாணர். பண்ணிசை பொருந்த ஆடுபவர் பொருநர். பாடற்பொருளை மெய்ப்படுத்திக் காட்டி ஆடுபவர் விறலியர். கதைப்பாட்டுடன் ஆடுபவர் கூத்தர்.

கூத்துக் கலையிலும், அபிநயங்கள் காட்டி ஆடுவதிலும், இசை மீட்டுவதிலும், யாழிசைப்பதிலும் பாடினிகள் சிறந்து விளங்கியிருக்கின்றனர். பாண்மகள், விறலி, பாடினி, மதங்கி, பாடன்மகடு எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்ட பாடினியர், இனிய குரல் வளம் கொண்டவர்களாகவும், மென்மையான அழகுள்ளவர்களாகவும், மயில் போன்ற சாயல் கொண்டவர்களாகவும், அறிவுக் கூர்மை மிக்கவர்களாகவும் புகழப்படுகின்றனர்.

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனப் போற்றப்படும் சங்ககாலத்தில், ஆண்பாற் புலவர்களுக்கு ஈடாக பெண்பாற் புலவர்களும் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாக இருந்தது தமிழ் நிலத்தின் பெருமைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. தனிப்பாடல்களையும் பாடல் தொகுப்புகளையும் பெண்பாற் புலவர்கள் தமிழ் உலகிற்கு அளித்துள்ளனர். செய்யுள் இயற்றிய புலவர்களின் பெயர்கள் குறிப்பிடாமையால் பாடல்களில் அதிகம் பயன்படுத்திய சொற்களிலிருந்தே பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, நற்றினை போன்ற சங்கத்தொகை நூல்களில் முப்பதிற்கும் மேற்பட்ட பெண்புலவர்கள், நூற்றி ஐம்பது பாடல்கள் வரை இயற்றியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. புகழ்பெற்றவரான ஔவையார் மட்டும் அறுபது பாடல்கள் இயற்றியுள்ளார். அஞ்சில் அஞ்சியார், அள்ளூர் நன்முல்லையார், அணிலாடு முன்றிலார், காமக்கணி நப்பசலையார், குறமகள் இளவெயினியார். நல்வெள்ளியார், பெருங்கோப்பெண்டு, பொன் முடியார், முடத்தாமக் கண்ணியார், வெள்ளிவீதியார் உட்பட பலர் பெண்பால் புலவர்களாக அறியப்படுகின்றனர்.

ஆடுவதிலும் பாடுவதிலும் வல்லரான ஒரு விறலியை வேள்பாரியிடம் சென்று பாட்டுப்பாடி பரிசு பெறுமாறு கபிலர் கூறுவதாக புற நானூற்றுப் பாடல் (105)

ஒன்றுள்ளது. ஒளிபொருந்திய நெற்றியை உடைய விறலி! பெரிய சுனையில் தழைத்த கரிய இதழுடைய குவளை மலர்கள் மலர்ந்திருக்க, வண்டுகள் மொய்க்கும் புதுமலர்களில் குளிர்ந்த நீர்த்துளி சிதறிக் கலக்க, மழை பெய்தாலும், பெய்யாமல் போனாலும் அருவியானது கொள் பயிரிட உழுத பரந்த நிலத்திடத்தில் வாய்க்கால் ஆக ஓட, மூங்கில் ஏணிகள் உடைய நெடிய மலைச் சிகரங்கள் தோறும் விழுந்து வழியும் - நீரினும் இனிய சாயல் பாரி வேள்பால் பாடினை செலினே - என அறிவுறுத்துகிறார் கபிலர்.

புறநானூறு, சிறுபாணாற்றுப் படை போன்ற நூல்களில் கடையெழு வள்ளல்கள் பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மயிலுக்குப் போர்வையளித்த பேகன், முல்லைக்குத் தேர் தந்த பாரி, இனிய நன்மொழிகளுடன் அள்ளிக் கொடுக்கும் காரி, நீலநாகம் நல்கிய ஆடையை ஆலர் செல்வனுக்கு அளித்த ஆய், நீண்ட அயுளைக் கொடுக்கும் நெல்லிக்கனியை அவ்வைக்கு அளித்த அதிகன், வேறொருவர் பால் சென்று இராதவாறு அள்ளிக்கொடுக்கும் நள்ளி, குறும்பொறை நாடு முழுவதையும் யாழ் மீட்டும் பாணர்க்கு அளித்த ஓரி போன்ற வள்ளல்களை சிறுபாணாற்றுப்படைக் கூறுகிறது. தலையேழு வள்ளல்கள் என்பவர் பற்றியும் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

பொதினி என்ற பழனி மலைக்குத் தலைவர் பேகன். மழை வளம் மிக்க மலைக்காட்டில் திரிந்து கொண்டிருந்த மயிலொன்று அகவியதைக் கேட்டு குளிரால் நடுங்கி அகவியதாக நினைத்து உணர்ச்சி மேலிட தம்மிடமிருந்த போர்வையை மயிலுக்குப் போர்த்தியிருக்கிறார். காட்டு மயிலொன்றிற்குப் போர்வை தேவைப்படுமா என்பதை சற்றும் சிந்தியாமல் செய்த கொடையை கொடைமடம் என சிறப்பித்தனர் சான்றோர்.

வள்ளல்களில் உயர்ந்தவராகக் கூறப்படுபவரான பாரி, காட்டில் படர்வதற்குக் கொழுகொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிக்கு தாம் ஏறி வந்த தேரினையே ஈந்ததாகப் புகழப்படுகிறது. ஒரு முல்லைக் கொடிக்காக யாரேனும் தேரினை நல்குவரோ? கொடைத்தன்மையாலேயே பறம்பு மலையை ஆட்சி செய்த குறுநிலமன்னரான வேளிர் குலத்து பாரி, முந்நூறு ஊர்களைக் கொண்டு ஆண்டிருந்த போதும் மூவேந்தர்கள் போன்று பெரும்புகழ் பெற்றவராக சங்க இலக்கியங்கள் வழி அறியப்படுகிறார்.

அஞ்சி எனும் இயற்பெயரைக் கொண்ட அதியமான் நெடுமான் அஞ்சி, அதியர் என்ற சங்ககால குடிமக்களின் தலைவர். அதியமான் பற்றி பல்வேறு சங்ககாலப் பாடல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. தகடூரை ஆண்ட அதியமானின் வீரமும் கொடைச் சிறப்பும் ஔவையர் முதலிய புலவர்கள் இயற்றிய பாடல்களின் கருப்பொருட்களாக உள்ளன. சேரன், சோழன், பாண்டியன் என ஏழு அரசர்களை எதிர்த்து நின்று வென்றவராகவும், இல்லையென்று வருவோர்க்கு அடையாத வாயிலைக் கொண்ட அரண்மனையை உடையவரென்றும், அதியரின் கைகள் மழையைப் போல் ஈயும் தன்மையது என்றும் அஞ்சியைப் புகழ்ந்து பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

மழவர் பெருமகன் என்று போற்றப்பட்ட அதியனின் முன்னோரே வேற்று நாட்டிலிருந்து முதன் முதலாகக் கரும்பைக் கொணர்ந்தனர் எனப் பாடல் வழி அறியப்படுகிறது. அதியர் கோமான் ஒரு கால், தம் நாட்டு மலையொன்றின் உச்சிப்பிளவின் சரிவில் நின்ற அருநெல்லி மரத்தின் அருங்கனியொன்றைப் பெற்றார். அக் கனி தம்மை யுண்டாரை நெடிது நாள் வாழச் செய்யும் வலியுடையது. அதனைப் பெற்ற அதிகைமான் தாமே யுண்டொழியாது நல்லிசைப் புலமை சான்ற ஔவையார்க் கீந்து அழியா அறப்புகழ் பெற்றார்.

ஔவையார்பால் அதியமானுக்கு பெருமதிப்பும் பேரன்பும் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. புறநானூறு, அகநானூறு, நற்றினை, குறுற்தொகை ஆகிய நூல்களில் ஔவையாரின் பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. செல்வமும், உணவும் நிறைந்திருக்கும் பொழுது எல்லோருக்கும் உணவளித்த பின் உணவு உண்டும், இல்லாத பொழுது உணவை அனைவருக்கும் பங்கிட்டு உடன் சேர்ந்து உண்ணும் தலைவன் என அதியமானின் ஈகைக் குணத்தை சிறப்பித்துக் காட்டுகிறார் ஔவைப்புலவர்.

உழவர்கள் ஏரினைக் கொண்டு நிலத்தினை உழுது நல்ல பயிரினை விளைவிப்பதைப் போல புலவர்கள் சொற்கள் எனும் ஏரினைக் கொண்டு தமிழ்மொழியினை உழுது நல்ல செய்யுட்களை இயற்றியுள்ளனர் என்பதால் புலவர் பெருமக்கள் சொல்லேர் உழவர் எனச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

செவ்வியல் இலக்கியங்களான சங்கப் பாடல்கள் காலத்தால் மிகப் பழமையானவையாக அமைந்துள்ளன. தமிழரது சமூக, பொருளாதார, பண்பாட்டு

வரலாற்றினை அறிந்து கொள்ள பெருமளவில் பயன்படும் சங்க இலக்கியச் செய்யுட்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென் கீழ்கணக்கு நூல்கள் எனப் பெரும்பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

எட்டுத்தொகை தொகுப்பில் நற்றினை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற எட்டு நூட்களும், பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் பத்து நூல்களும் இடம்பெற்றுள்ளன. மொத்தமாக பதினெண்மேல் கணக்கு நூல்கள் எனவும் கூறுவதுண்டு. திருக்குறள், நான்மனிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, களவழிநாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, நாலடியார் முதலிய பதினெட்டு நூல்களும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களாகும்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் இரண்டு தொகுப்புகளை மட்டுமே சங்கப் பாடல்களாகக் கொள்வதும் மரபாகக் கூறப்படுகிறது. பதினென் கீழ்கணக்கு நூல்களை சங்கம் மருவிய காலத்தவை எனக் குறிப்பிடுவதும் உண்டு. சங்ககால நூல்களின் காலம் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

வரலாற்றிற்கு அடிப்படையாக அமைவது காலக்கணிப்பாகும். இன்ன ஆண்டில், இன்ன திங்களில், இன்ன நாளில், இன்னது நிகழ்ந்தது என்று கூறுதல் வரலாற்றின் இலக்கணமாகும். மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடும் பழந்தமிழ்ப் புலவர்கள், அம்மன்னர்கள் வாழ்ந்திருந்த காலத்தைத் தெரிவிக்கவில்லையாதலால் அம்மன்னர்களின் காலத்தை காலங்கணிக்கப்பட்ட வேறு நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தியும் அகச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும் கணிக்க வேண்டியுள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சங்ககால மன்னர்கள் தமிழ்ப்புலவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கிப் புரந்து வந்துள்ளனர். சங்ககால மன்னர்கள் எழுப்பிய எழலோங்கு அரண்மனைகள், கோவில்கள், அங்காடிகள், துறைமுகங்கள், அவர்கள் ஓட்டிய நாவாய்கள் என

அனைத்தும் மறைந்து விட்டன. ஆனால் அவர்கள் காலத்துப் புலவர்கள், மன்னர்களது அருமைகளையும், பெருமைகளையும், பண்புகளையும் பெருமைப்படுத்தும் விதமாக வெளிக்கொணர்ந்த பாடல்கள் இன்றும் எஞ்சி நிற்கின்றன. சங்கப் பாடல்களே தமிழர்களின் அக, புற வாழ்வு ஒழுக்கங்கள், அரசியல், வீரம், வழிபாடு, விழாக்கள், ஆடல் பாடல்கள், வணிகம், ஓவியம், சிற்பம், கட்டிடம் ஆகிய எல்லாவற்றிற்கும் சான்றாக நிலைத்து நிற்கின்றன.

பொது யுகத்திற்கு முன்பான மூன்றாம் நூற்றாண்டு முதல் பொது யுகத்தின் பின்னான மூன்றாம் நூற்றாண்டு வரை, பொது யுகத்திற்கு முன் இரண்டாம் நூற்றாண்டு முதல் பொது யுகம் இரண்டாம் நூற்றாண்டு வரை எனப் பலவேறாக சங்ககாலம் மதிப்பிடப்படுகிறது. அண்மைக்கால கல்வெட்டியல், காசுயியல், தொல்லியல் சான்றுகள், அயல் நாட்டுத் தொடர்புறவுச் சான்றுகள் போற்றவற்றினை கொண்டு, பொது யுகத்திற்கு முன் ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பொது யுகத்தின் மூன்றாம் நூற்றாண்டு வரை சங்ககாலம் எனக் குறிப்பிடலாம் என்பது பொருத்தமானது. சங்ககாலத்திற்கு அடுத்து சங்கம் மருவிய காலமாகக் குறிப்பிடப்படும் களப்பிரர் காலம் ஆறாம் நூற்றாண்டு வரை எனலாம்.

பாட்டும் தொகையும் சங்க இலக்கியமென்பர். எட்டுத்தொகை என்பது தனிப்பாடல்களில் தொகுப்பு. எட்டுத்தொகையில் மூன்றடி முதல் நூற்றி நாற்பது அடி வரையிலும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அகத்தையும், புறத்தையும் பற்றிய பாடல்கள் தொகைப் பாடல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளன.

சங்க இலக்கியம் அகம் புறம் என்ற பாடு பொருள்களை உடையது. அகம் என்பது மனதின் அக நிகழ்வாகிய காதலை மையப்படுத்துவதாகும். புறம் என்பது புறத்தில் வெளிப்படுவதாகிய பெருமைக்குரிய செயல்கள் பற்றியதாகும். அகம் காதல். காதல் தவிர்த்த அனைத்தும் புறம்.

பண்டைய தமிழர்கள் அகவாழ்வை காதலாலும், புறவாழ்வை வீரத்தாலும் கொடையாலும் சிறப்பாக்கியிருக்கின்றனர். ஆணும், பெண்ணும் காதலால் இணைந்து தமக்குள்ளே இன்பம் துய்த்து வாழ்தல் அக வாழ்வு அகத்துள் நிகழ்வதை அகத்திணை என பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன. களவியல், கற்பியல் எனப் பாடும் சங்கப்பாடல்களின் அகத்திணை, புறத்திணை பற்றி தொல்காப்பியம் விரிவாக விளக்குகிறது.

அக வாழ்வை அதாவது அகத்திணையை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என ஏழாகவும், புறவாழ்வை புறத்திணையை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழாகவும் பாகுபடுத்தியிருக்கின்றனர். புறப்பொருள் வெண்பா மாலை புறத்திணையை பன்னிரென்டாகப் பகுக்கிறது.

அகத்திணையில் ஒருவர் மட்டுமே விரும்பும் கைக்கிளை, பொருந்தாக் காதலான பெருந்திணை தவிர்த்து, மற்ற ஐந்து திணைகளுக்கும் பல்வேறு துறைகளை வகுத்து பாடல்கள் புனைவது புலவர் மரபு. முதல்பொருள், கரும்பொருள், உரிப்பொருள் என்ற தலைப்புகளில் பாடல்கள் இயற்றுவது புலவர் வழக்கு.

முதல்பொருள் நிலமும், பொழுதும் ஒட்டி அமையும் ஒழுக்கமாகும். ஐவகை திணை (நிலம்), ஒவ்வொரு திணைக்கும் பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது சிறப்பாக பகுக்கப்பட்டுள்ளன. கரும்பொருள் என்பன அந்தந்த திணைக்கு உரியனவும், அவற்றின் கண் உள்ளனவுமான கடவுள், மக்கள், புள், விலங்கு, ஊர், நீர், பூவு, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் போன்றவை.

உரிப்பொருள் என்பது உள்ளத்தே எழும் மன உணர்வுகள். குறிஞ்சியில் தலைவனும் தலைவியும் கூடி இருப்பர் (கூடல்). இருவரின் உள்ளமும், உடலும் இணைந்திருக்கும். முல்லையில் தலைவி, தலைவன் இருவரும் உள்ளத்தால் சேர்ந்திருப்பர். ஒருவருக்கொருவர் காத்திருப்பர். மருதத்தில் தலைவனது ஒழுக்கக் குறைபாட்டால் இருவரிடையேயும் உள்ளம் பிரிந்திருக்கும். இருவரிடையேயும் பிரிவு (ஊடல்) காணப்படும். உள்ளம், உடல் என இருவருக்கிடையேயும் பிரிவு உண்டாவது நெய்தல் திணையில். கடலிலே திமில் ஏறிச்சென்ற ஆடவர் பொழுதில் திரும்பாத போது பெண்டிர் இரங்குவர். பாலையில் காதலர் இடையே பிரிவும் அதனால் பெருந்துயரமும் உண்டாகும்.

அறம், பொருள், வீடு பற்றிக் கூறுவது புறத்தினை. வெட்சி நிரை கவர்தல், மீட்டல் கரந்தையாம், வட்கார் மேல் செல்வது வஞ்சி, உட்காது எதிர் ஊன்றல் காஞ்சி, எயில் காத்தல் நொச்சி, அது வளைத்தல் ஆகும் உழிஞை, அதிரப் பொருவது தும்பையாம், போர்களத்து மிக்கோர் செருவென்றது வாகையாம்.

ஒரு நாட்டை வென்று மண்கொள்ள நினைப்போர் முதலில் செய்வது வெட்சிப் பூவைச் சூடி அந்நாட்டின் ஆநிரைகளைக் கவர்ந்து வருவது வெட்சித்திணை. கரந்தைப் சூடி, வெட்சியினர் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை மீட்டு வருவது கரந்தைத்திணை. மண்ணாசை கொண்டு போரிட வருதல் வஞ்சி. வருபவர்களை எதிர் கொள்ளல் காஞ்சி. அரண்மனை, கோட்டை, கொத்தளங்களில் மதில் சூழ்ந்து போரிடுவது நொச்சி. மதில் காக்க போரிடுவது உழிஞைத்திணை. வீரத்துடன் தும்பை சூடிப் பொருதுவது தும்பைத்திணை. தும்பைப் பூவை அகற்றி, வாகை மலரணிந்து வெற்றியைக் கொண்டாடுவது வாகை.

திணை-துறை என்பவை எவ்வாறு பாடல்கள் இயற்றுவது என்பதற்கான நெறிமுறைகள் எனலாம். சங்கப் பாடல்கள் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் திணை, துறை பற்றிய குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. பரிசில் பெருவதை அடிப்படையாகக் கொண்டு, பரிசில், பரிசில் கடாநிலை, பரிசில் துறை, பரிசில் விடை போன்ற துறைகளை புறநானூறு சுட்டுகிறது.

குறுந்தொகையின் பாடல் (107). துறை - பொருள் முற்றி வந்த தலைமகனை உடைய கிழத்தி காமம் மிக்க கழிபடர் கிழவியால் கூறியது. பொருள் தேடச் சென்ற தலைவன் நீண்ட நாட்களுக்குப் பின்னர் திரும்பியுள்ளான். அவனோடு இனிது தூங்கும் தலைவி இரவு அப்படியே நீளவேண்டுமென நினைக்கிறாள். மாறாக சேவல் கூவுகிறது. சினம் கொண்ட தலைவி செங்காந்தள் மலரைப் போன்ற சிவந்த கொண்டையைக் கொண்ட அச்சேவல், காட்டுப் பூனைக் குட்டிகள் பல நாள் உண்ணும் உணவாகப் போகட்டும் எனப் பழிக்கிறாள்.

நற்றினை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு போன்ற தொகை நூல்கள் அகத்திணையிலும், பதிற்றுப்பத்து புறநானூறு புறத்திணையிலும், பரிபாடல் அகம் புறம் என இரண்டிலும் இடம் பெற்றுள்ளன, பாடல்களை திரட்டித் தொகுத்தவரும், தொகுக்கச் செய்தவரும் அறியப்பட்டிருக்கின்றனர். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனும் நான்கு வகையான பாக்கள் கொண்டு பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

பத்து நெடிய தனிப்பாடல்களின் தொகுப்பு பத்துப்பாட்டு. ஆசிரியப்பாவினால் பாடப்பட்டு பாடாண்திணையில் அமைந்துள்ளன. ஐந்து நூல்கள் ஆற்றுப்படையைச் சார்ந்தவை. பரிசில் பெற்ற புலவர் மற்றவர்க்கு வழிப்படுத்துதலே ஆற்றுப்படை.

சங்ககாலத்து தமிழ்ப்புலவர்களில் கபிலர், பரணர், மருதனிள நாகனார், பெருங்கடுங்கோ, நல்லந்துவனார், மாமூலனார் குறிப்பிடத்தக்கவர்களாக அறியப்பட்டிருக்கிறார்கள். சங்கப் பாடல்களுள் அதிகம் இயற்றியவராக கபிலர் புகழப்படுகிறார். கபிலர் குறிஞ்சித்திணை பாடுவதில் மிகவும் தேர்ந்தவராக இருக்கிறார். குறிஞ்சிப்பாட்டில் குறிஞ்சி நிலத்தின் தொன்னூன்றி ஒன்பது பூக்களை சிறப்பித்துக் கூறியுள்ளார். புறத்திணையிலும் அகத்திணையிலும் பாடல்கள் புனைந்துள்ளார். கபிலரும் வேள்பாரியும் மிக்க அன்புடையோராய் இருந்திருக்கின்றனர்.

உலகப் பொதுமறை, பொய்யா மொழி, முப்பால் எனப் பலவாறாகப் போற்றப்படும் திருக்குறள், காலத்தால் முற்பட்டதெனினும் பதினெண் கீழ் கணக்கு நூல்களுள் சேர்க்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் எனும் தெய்வப்புலவரால் இயற்றப்பட்ட திருக்குறள் சிறந்தொரு வாழ்வியல் நூலாக அறியப்படுகிறது.

அறம், பொருள், இன்பம் எனும் மூன்று பகுதிகள், ஏழு இயல்கள், நூற்றி முப்பத்து மூன்று அதிகாரங்கள், ஆயிரத்து முந்நூற்றி முப்பது குறட்பாக்களைக் கொண்டது திருக்குறள். பாடல்கள் அனைத்தும் குறள் என்ற வெண்பா வகையால் இயற்றப்பட்டிருக்கின்றன. அதனாலேயே குறள், திருக்குறள் எனப்படுகிறது.

திருக்குறள் ஒரு நீதி நூல். தனிமனிதருக்கு உரிமையானது இன்பவாழ்வு. அதற்குத் துணையாக உள்ளது பொருளியல் வாழ்வு. அவற்றிகெல்லாம் அடிப்படையாக விளங்குவது அறவாழ்வு. மனதே எல்லாவற்றிற்கும் ஆதார நிலைக்கலன். அறத்தால் வருவதே இன்பம். அறவழியில் நின்று பொருள் ஈட்டி அதனைக் கொண்டு இன்பமாய் வழ வேண்டும். அவ்வாறே உலக மாந்தரையும் இன்ப முறச்செய்ய வேண்டும். திருக்குறள் அறவாழ்வைப் போற்றுகிறது.

உலகின் பல்வேறு மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறள் உரைகளில் பரிமேலழகர் எழுதிய உரை சிறப்பானதாகக் குறிப்பிடப்படுகிறது.

சங்கப்பாடல்களில் அகத்திணைப் பாடல்களே அதிகமாக இயற்றப்பட்டுள்ளன. அவற்றில் தமிழரது பல்வேறு வாழ்முறை விவரங்களும் அடங்கியுள்ளதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளில் அரசர்களது வரலாறுகள், அவர்கள் நடத்திய போர் குறித்த மிக நுணுக்கமான விவரங்கள், ஆட்சியமைப்பு முறைகள், மேலாண்மை முறைமைகள் போன்றவை விரிவாகவும் விளக்கமாகவும் பதிவு செய்யப்பட்டிருக்க, சங்கப்பாடல்கள் வழி மிகப் பெரும் மொழியறிவும் மொழிவளமும் பெற்றிருந்த தமிழ் சமூகத்தில் அவ்வாறான பதிவுகள் இடம்பெறாதது வியப்பிற்குரியதாகவும் ஆராயத் தக்கதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கிரேக்க லத்தின் மொழிப் பதிவுகள் யாவும் இனக்குழு குடியமைவுக்கு அடுத்த வளர்ச்சிக் கட்டத்தில், அரசமைப்பு முறை உருவான பின்னர் தோன்றியதாகவும், சங்கப் பாடலகள் இனகுழு குடி அமைப்பு காலத்தில் பாடப்பட்டவையாகவும் அறிஞர்களால் எடுத்துரைக்கப்படுகிறது. கிரேக்க-ரோமானிய காலங்களுடன் ஒப்பிட்டு அவற்றுக்கு முன்னைய காலமாகச் சங்கப் பாடல்களை கணக்கிடுவது பொருத்தமாக அமையுமெனக் கருதப்படுகிறது. அவ்வாறாயின் பொது யுகத்தின் ஆறாம், ஐந்தாம் நூற்றாண்டுகளுக்கு மிக முந்தையதாகவே சங்கப் பாடல்கள் இருக்க முடியுமென்பது வலுப்படுகிறது. கிரேக்கம், உரோமம் போன்று பேரரசுகள் தமிழகத்தில் உருவாகாததற்கு காரணம், தமிழர் அறிவுடையோர் என்பதால் மாற்றாரை அடிமைப் படுத்துவதும், அடிமையாய் இருப்பதும் விரும்பார் என்பது துணிவு. உடன் பிறந்தோரேயாயினும் மேலாதிக்கம் கொள்வதை தமிழர் விரும்பார். தமிழகத்தில் பண்டைக் காலத்திலிருந்தே வேற்றுமைகளுக்கு எதிரான குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே வந்திருக்கிறது. தமிழ்ச் சமூகம் பொதுவுடமையைப் பேணும் சமூகம் எனில் மிகையாகாது. மாறாக கிரேக்கத்திலும் உரோமத்திலும் ஒவ்வொரு குடும்பத்தாரும், வீட்டிலும் தோட்டங்களிலும் நூற்றுக்கணக்கான அடிமைத் தொழிலாளர்களை வைத்திருந்தனர் என்பது வரலாறு. தமிழகத்தில் மூவேந்தர்கள் கோலோச்சிய காலத்திலும், மாற்றாரோடு போர் புரிந்தோரே தவிர, வெற்றி கொண்ட மண்ணையோ, மக்களையோ அடிமைப்படுத்தினர் போன்ற பதிவுகள் தமிழ் சமூக வளர்ச்சியில் காணப்பெறாதது ஒப்பு நோக்கத்தக்கது.

சங்க காலத்தில் மகளிரின் அழகை மகளிரே ஆராய்ந்து மதிப்பிட்டனர் என குறுந்தொகை (பாடல்-245) கூறுகிறது. இவ்வாறு ஆராய்ந்து மதிப்பிடுவதற்கு ஏதுவாக ஒப்பனை செய்து கொண்ட மகளிர் ஒய்யாரமாக நடந்து காட்டுவராம் (அகநானூறு- 261).

காதல், வீரம், போர், ஆட்சி உட்பட அனைத்தையும் விரிவாகப் பேசும் சங்கத் சித்திரம், சங்க காலத்தின் சமூக அமைப்பு, உணவு, உடை, திருமணம், கடவுள் கொள்கை, வணிபம் போன்ற பல்வேறு தகவல்களோடு பழந்தமிழர் விளையாட்டுக்களையும் வெகுவாகப் பதிவு செய்திருக்கிறது. விலங்குகளை வேட்டையாடுதலும், ஆயுதங்களைக் கையாலுதலும், உடல் வலிமையைப் பேணுதலும், விளையாட்டுக்களுக்கு வழிவகுத்திருக்கக் கூடுமென குறிப்பிடப் படுகிறது.

தொல்காப்பியம் குறிப்பிடும் கெடவரல், பண்ணை என்பவை முறையே நீர், நீலம் விளையாட்டுக்களைப் குறிக்கும் என்பர். சங்கத் தமிழர் விளையாட்டை சமூகம் சார்ந்த செயல்பாடாகவே கருதியிருக்கின்றனர். சமூக அங்கத்தவர் எல்லோரும் தத்தம் வயது, பால் என்பனவற்றிற்கேற்ப பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டனர். வெற்றியையும் தோல்வியையும் ஒத்த உணர்வோடு நோக்கும் பாங்கு இயல்பாய் இருந்திருக்கிறது.

சங்க இலக்கியங்கள் வழியாக, சிறுவர், சிறுமியர், மகளிர், காளையர், காதலர், முதியோர், மொழி, திளைப்பு, காட்சி விளையாட்டு என பல வகையாக விளையாடப்பட்டிருக்கின்றன. அசதியாடல், அம்புலி அழைத்தல், அலவன் ஆட்டல், உலாவல், ஊசல், எண்ணி விளையாடல், எதிரொலி கேட்டல், ஏறுகோள், கண் புதைத்து விளையாடல், கவண், கழங்கு, குதிரையேற்றம், யானையேற்றம், குரவை, சாம விளையாட்டுகள், குறும்பு விளையாட்டுகள், சூது, செடி கொடி வளர்ப்பு, பந்து விளையாட்டு, பறவைகளைக் காணுதலும் அவற்றை போலச் செய்தலும், பறவை வளர்ப்பும் விலங்கு வளர்ப்பும், பாவை விளையாட்டு, மணற் குவியலில் மறைந்து விளையாடல், மலர் கொய்தலும் மாலை தொடுத்தலும், மல், வட்டு, வில், வேட்டை என்பன அக்காலத்தே விளையாடப்பட்ட நில விளையாட்டுகள். தைய் நீராடல், நீச்சல் நடனம், நீச்சல் பந்து, பின்படகு, முன்படகு, வளிப்படகு, பாய்ச்சல், புனலாடல், மிதவை, மூழ்கல் போன்றவை நீர் விளையாட்டுகள்.

மன மகிழ்ச்சிகாகவே விளையாட்டுகள் நிகழ்ந்திருக்கின்றன. சங்க காலத்தில் பெரிதும் விரும்பி விளையாடப்பட்ட விளையாட்டு பந்தாட்டம். பெரும்பாலும் பெண்களே வீட்டு முற்றத்திலும், மாடங்களிலும், மணல் மேடுகளிலும் பந்தாட்டம் ஆடியிருக்கின்றனர். நூலினால் செய்யப்பட்ட பந்தில் பல வேலைப்பாடுகள் இருந்திருக்கின்றன. வானைத் தொடுமளவுக்குப் பந்தை எறிந்தும், காலால் உதைத்தும் விளையாடினராம்.

புனல் நயந்து ஆடல் என அழைக்கப்பட்ட நீர் விளையாட்டு சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கியிருக்கிறது. கழார் என்னும் ஊரிலுள்ள காவிரியாற்று நீர்த்துறையில் கரிகால் அரசர் மற்றும் அரசரது மகள் ஆதி மந்தி முன்னிலையில், ஆட்டனத்தி என்ற நீச்சல் வீரனும் காவிரி என்ற நீச்சல் மகளும் இணைந்து நீச்சல் நடனம் ஆடிக் காட்டினர் என அகநானூறு (பாடல்-376) குறிப்பிடுகிறது.

மகளிர் நீரில் பாயும் விளையாட்டான பண்ணை பற்றியும் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. சங்க காலத்தில் ஆற்றங்கரையிலிருந்த மருத மரத்தில் ஏறி பெண்ணொருத்தி பண்ணை பாய்ந்திருக்கிறாள். அது மயில் ஒன்று விண்ணிலிருந்து மண்ணுக்குத் தோகை விரித்தபடி இறங்குவதைப் போன்றிருந்ததாம். அப்பெண் அணிந்திருந்த அணிகலன்கள், மயிலின் தோகையில் காணப்பட்ட வண்ணப்புள்ளிகளைப் போன்றிருந்ததாக ஐங்குறுநூறு (பாடல்-74) பாடுகிறது.

சங்ககாலமான கடைச்சங்க காலத்திற்குப் பிறகு அதாவது மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி முதல், பல்லவர் ஆட்சி ஏற்பட்ட காலமான ஏழாம் நூற்றாண்டின் தொடக்ககாலம் வரையிலான கால கட்டத்தினை சங்கம் மருவிய காலம் என்பர். சங்க காலத்தில் முடியுடை மூவேந்தராலும் வேளிர் முதலான சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்த தமிழகம், அதன் பிறகு அயலார் ஆட்சிக்கு உட்பட்டதாகக் கூறப்படுகிறது.

சங்கம் மருவிய காலமென்றும், களப்பிரர் காலமென்றும். இருண்ட காவமென்றும் கூறப்படுவதற்குக் காரணம் மதக்காழ்ப்புணர்வு மற்றும் வரலாற்று இருட்டடிப்பு என பல்வேறு பதிவுகள் காணக்கிடைக்கின்றன. களப்பிரர் காலத்தில், புத்தம் சிறப்பாகவும் தொடர்ந்து சமணம் மேன்மை பெற்றிருந்ததாகவும் பல்வேறு வரலாற்றறிஞர்களால் குறிப்பிடப்படுகிறது.

களப்பிரர் காலத்திய தமிழகம் பற்றிய தகவல்கள் ஏதும் இல்லாமலிருந்த நிலையில், வேள்விக்குடி செப்பேடு மூலமே முதல் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. திரு கே.ஜி. சங்கரன் என்பார் வட்டெழுத்தில் எழுதப்பட்ட வேள்விக்குடி செப்பேட்டை தற்காலத்திய தமிழ் எழுத்தில் செந்தமிழ் இதழில் வெளியிட்டிருக்கிறார். அடுத்து இந்திய சாசன துறை, 1923 ஆம் ஆண்டு எபிகிராபியா இந்திகா எனும் ஆங்கில வெளியீட்டில், வேள்விக்குடிச் சாசனத்தை ஆங்கில (இலத்தீன்) எழுத்தில் வெளியிட்டிருக்கிறது. இதன் பின்னரே கடைச்சங்க காலத்திற்குப் பிறகு தமிழகத்தை ஆட்சிசெய்தவர்கள் களப்பிரர்கள் என்கிற செய்தி தெரிய வந்திருக்கிறது.

செப்பேடு என்பது செம்பினால் செய்யப்பட்ட ஏட்டுச் சுவடு. செப்பேடுகள் என்பவை அரசர்களின் கொடைகள், மரபு வழி, போர் வெற்றிகள், ஆட்சித்திறம் போன்றவற்றைப் பதிந்து வைத்திருந்த செப்புப் தகடுகள். செப்புப் பட்டயங்கள் எனவும் அறியப்படும் தகடுகளில், அரசர்களது புகழ்ச்சியுரைகளும் எழுதிப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பட்டயங்கள் பழங்காலத்தைப் பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றுகளாகக் கருதப்படுகின்றன. கல்வெட்டுக்களைப் போன்றே செப்பேடுகளும் தமிழகத்தில் அதிகமாகக் கண்டெடுக்கப் பெற்றுள்ளன.

பல்லவர்களின் முப்பத்தியிரண்டு செப்பேடுகளும், பாண்டிய மன்னர்களின் இருபது மற்றும் சோழர்களின் பத்தொன்பது செப்பேடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இயற்கையாக ஓலைச் சுவடிகள் அழிவது போல் செப்பேடுகள் அழிவதில்லை என்பதால் செப்பேடுகளை மண்ணுக்குள் புதைத்தும் வைத்திருந்தனர் எனக் கூறப்படுகிறது. கிடைத்த இடத்தைக் கொண்டு செப்பேடுகள் பெயரிடப்பட்டிருக்கின்றன.

பழங்கலத்தில் ஓலை என்றாலே உத்தரவு, ஆணை என்றே பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. பனை ஓலைகளில் எழுதப்பட்ட ஆணைகள் பின்னர் கல்வெட்டிலும், செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

எழுதுதாள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு வரை, தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் அனைத்திலும் பனையோலைகளில் எழுதும் முறையே இருந்திருக்கிறது. எழுத்தோலைகள் பல்வேறு வகைகளிலும், பல்வேறு வகையான செய்திகளைக் குறிப்பிடவும் பயன்பட்டிருக்கின்றன. பனையோலைகளை ஒன்றாக

இணைத்துச் சுவடிகள் உருவாக்கப்பட்டிருகின்றன. சுவடு உடையது சுவடி எனப்படுகிறது. எழுத்துக்கள் பதியுமாறு எழுதப்பெற்ற ஏடுகளின் தொகுப்பே சுவடி.

தெரிந்தவற்றை அழியாமல் பதிவு செய்து பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே எழுத்து வடிவம் தோன்றியது எனலாம். எழுத்துக்கள் கோடுகளாக, குறியீடுகளாக, படங்களாக படிப்படியாக மாற்றம் பெற்று தற்காலத்திய வடிவத்தை அடைந்துள்ளன.

பழங்காலத்தில் கல், களிமண் பலகை, உலோகத் தகடு, துணி, இலை, பனை ஓலை, மரப்பட்டை, மரப்பலகை, தோல், மூங்கில் பத்தை போன்றவை எழுதப்படு பொருட்களாகப் பயன்பட்டிருக்கின்றன. பண்டைய மத்தியதரைப் பகுதியினர் பேபரஸ் தாளையும் விலங்குகளின் தோலையும் எழுதப்படுவதற்குப் பயன்படுத்திய காலத்தில், தமிழகத்தில் பனை ஓலைகளில் எழுதியிருக்கின்றனர். பனை யோலைகளில் எழுதுவது எளிதென்பதாலும், சரியான முறையில் பராமரித்து வந்தால் நீண்ட காலம் அழியாமல் இருக்கும் என்பதாலும் பனையோலைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் மிகப் பெரிய நூல்களையும் ஒரு கட்டில் அடக்கிவிடலாம் என்பதும் தெளிவு.

அதிக முற்றலும் அதிக இளமையதும் இல்லாமல் நடுநிலையில் உள்ள பனை ஓலைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றைச் சீராக்கி தேவையான அளவு நறுக்கி பின்னர் பல்வேறு வகைகளில் அவற்றைப் பதப்படுத்தியுள்ளனர். ஓலைகளை தண்ணீர் அல்லது பாலில் வேகவைத்தல், நீராவியில் வேகவைத்தல், ஈரமணலில் புதைத்து வைத்தல், நல்லெண்ணைய் பூசி வைத்தல், ஈரமான வைக்கோற் போரில் வைத்திருத்தல், பனிபால் போட்டு வைத்தல், சேற்றில் புதைத்தல் போனற பல்வேறு வகைகளில் பதப்படுத்தியுள்ளனர். பனை ஓலைகளின் மேற்பரப்பு கடினமானதாக இருப்பதால் பதப்படுத்தாமல் எழுத முடியாது எனக் குறிப்பிடப்படுகிறது. ஓலைகளை எழுதுவதற்குக் தக்க மிருதுவாக்க வேண்டியது அவசியம். அப்போதுதான் எழுதுவதற்கு எளிதாகவும் சேதமுறாமலும், பூச்சிகளால் அரிக்கப்படாமலும் இருக்கும். பதப்படுத்தப்பட்ட ஓலைகளில், ஒன்று அல்லது இரண்டு துளையிடுவதும் சட்டங்கள் அமைப்பதும் வழக்கமாக இருந்திருக்கிறது.

ஓலைகளில் எழுதுவதற்குப் பயன்பட்ட எழுதுபொருள் எழுத்தாணி ஆகும். எழுத்தாணிகள் எலும்பு, தந்தம், பித்தளை, செம்பு, இரும்பு, தங்கம்,

போன்றவற்றினால் செய்யப்பட்டிருக்கின்றன. குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி போன்றவை எழுத்தாணிகளாகப் பயன்பட்டிருக்கின்றன.

பழங்காலத்தில் உருவாக்கப்பட்ட சுவடிகள் ஒரு காலத்திற்குப் பிறகு பாதுகாப்பின்றி அழியத் தொடங்கியிருக்கின்றன. ஏடுகளின் அழிவை இயற்கை அழிவு மற்றும் செயற்கை அழிவு எனக் குறிப்பிடுகின்றனர். மட்கியும், காற்று, மழை, வெயில் போன்ற இயற்கைச் சீற்றங்களாலும், கரையான், ஈரப்பதம், புகை, நெருப்பு போன்றவற்றாலும் ஏடுகள் அழிந்திருக்கின்றன.

மன்னர்களிடையே நிகழ்ந்த போர்கள், அரசியல் மாற்றம், மக்களின் குடிப்பெயர்ச்சி, அயல் நாட்டினர்க்கு விற்றல், தீயிலிடுதல், நீரில் எறிதல், சமயப் பூசல்கள் போன்ற செயற்கை அழிவுகளாலேயே பெருமளவிலான ஏடுகள் அழிந்திருக்கின்றன. இந்தியாவிற்கு வந்த வெளிநாட்டுப் பயணிகளும் ஏராளமான சுவடிகளை எடுத்துச் சென்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாட்பட்ட ஏடுகள் நொறுங்கியும் முறிந்தும் சிதைந்தும் போதல் இயற்கை ஆதலின், அத்தகைய ஏடுகளைப் படி எடுத்துக் கொண்டு ஆற்று வெள்ளத்தில் விடுவதும், நெய்யில் தோய்த்து நெருப்பில் இடுவதும் வழக்கத்தில் இருந்திருக்கிறது. எந்த ஏடாயினும் படியெடுக்காமல் போடுவதில்லை எனும் மரபு பின்பற்றப்பட்டிருக்கிறது. ஆனாலும் பின்னர் வந்த காலங்களில் படியெடுக்காமல் நீரிலும் நெருப்பிலும் போட்டு விட்டனர் என்பதை தமிழ் மூதறிஞர்கள் வருத்தத்துடன் பதிவிட்டுள்ளனர்.

பாண்டியர்களின் முற்கால மற்றும் பிற்கால செப்பேடுகளில், ஏழு செப்பேடுகள் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இளையன்புதூர், வேள்விக்குடி, திருவரமங்கலம், சின்னமனூர் (பெரிய செப்பேடுகள்), சின்னமனூர் (சிறிய செப்பேடுகள்), தளவாய்புரம் மற்றும் சிவகாசி செப்பேடுகள் மூலம் பாண்டியர்களின் ஆட்சிக் காலங்கள் கணிக்கப்பட்டுள்ளன. வேள்விக்குடி செப்பேடு மூலம் கடுங்கோன், அவனி சூளாமணி, செழியன் சேந்தன், அரிகேசரி, கோச்சடையான், முதலாம் இராசசிம்மன் மற்றும் பராந்தகன் ஆகிய பாண்டிய மன்னர்களின் ஆட்சிகால வரையறை அறியப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. சின்னமனூர் பெரிய செப்பேட்டின் வாயிலாக ஜடிலன் இரண்டாம் இராசசிம்மன், வரகுணன்,

சீவல்லபன், இரண்டாம் வரகுணன், மூன்றாம் இராசசிம்மன் போன்றோர் விவரமும் காணப்பட்டிருக்கிறது.

பிரித்தானிய அருங்காட்சியத்தில் பாதுகாக்கப்படும் வேள்விக்குடி செப்பேட்டில் பத்து ஏடுகள் முழுமையாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. நெடுஞ்சடையன் பராந்தகன் என்னும் முற்காலப் பாண்டிய மன்னரால் அவர் ஆட்சிக்கு வந்த மூன்றாவது ஆண்டில் வேள்விக்குடி செப்பேடு வெளியிடப்பட்டுள்ளது.

கொற்கைக்கிழான் நற்கொற்றன் என்பவருக்கு சங்க காலத்து பாண்டிய அரசர் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, மதுரை மாவட்ட வேள்விக்குடி எனும் ஊரை இறையிலியாக வழங்கியிருக்கிறார். பிற்காலத்தில் களப்பிரர் ஆட்சியின் போது வேள்விக்குடியை களப்பிரர் எடுத்துக் கொண்டனராம். பின்னர் ஆட்சிக்கு வந்த பராந்தகன், கொற்கைக் கிழான் வழிவந்த நரசிங்கன் என்பவருக்கு மீண்டும் வேள்விக்குடியை வழங்குவதாக செப்பேடு வெளியிட்டிருக்கிறார். அதில் பாண்டியர்களின் வரலாற்றுத் தகவல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. செழியன் சேந்தன் போன்ற சிறப்புப் பெயர்கள் பாண்டியர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததும், கோச்சடையான் ரண தீரன் பெற்ற வெற்றிகளும் செப்பேட்டால் அறியப்பட்டுள்ளது.

களப்பிரர்கள் பிராமணர்களிடமிருந்து நிலங்களைப் பறித்தார்கள் எனும் செய்திக்கு மாற்றாக பூலாங்குறிச்சி கல்வெட்டு, பிராமணர்கள் பிரம்மதாய நிலம் வைத்திருந்தார்கள் எனும் செய்தியை பதிவு செய்திருப்பதாக கல்வெட்டியல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. நாற்பத்தைந்தடி நீளமும் ஆறடி உயரமும் கொண்ட, தமிழகத்தில் கிடைத்திருக்கும் தொன்மையான கல்வெட்டுக்களிலேயே பெரிதான கல்வெட்டு, சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சி எனும் ஊருக்கு அருகமைந்துள்ள சிறு குன்றில் வடிக்கப்பட்டுள்ளது.

நிலம் தொடர்பான செய்திகளைக் கொண்டுள்ள பூலங்குறிச்சி கல்வெட்டின் காலம் பொது யுகத்திற்குப் பின்னான மூன்றாம் நூற்றாண்டு எனவும், ஐந்தாம் நூற்றாண்டு எனவும் கல்வெட்டியல் அறிஞர்களால் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில் வட்டெழுத்து உருவாகி வந்த காலத்தைச் சேர்ந்ததாக அறியப்படுகிறது. கல்வெட்டின் காலம் முறையாகக் கணிக்கப்படின், இன்னும் மேலே செல்லும் என்பதும் அறிஞர்களின் கருத்தாக உள்ளது. கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் சேந்தன் கூற்றன் எனும் மன்னர்களின் பெயரினை வைத்து அவர்கள் களப்பிரர்

அரசர்களாக இருக்கலாம் எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பௌத்த சமயத்தை ஆதரித்த களப்பிரர் ஆட்சியில் பிராமணர்கள் ஒடுக்கப்பட்டிருந்தார்கள் என்பதற்கு மாற்றாக, அவர்கள் நிலங்கள் வைத்திருந்தார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதால் களப்பிரர் மற்றும் பிராமணர்கள் ஒற்றுமையாகவும் வாழ்ந்திருக்கக்கூடும்.

தமிழ் காப்பியங்கள் நிறைந்த மொழி எனில் மிகையாகாது. காப்பியம் என்பது உயர்ந்த குறிக்கோள் உடைய தலைவனின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் தொடர்நிலைச் செய்யுள் எனக் கூறப்படுகிறது. காப்பியத்திற்குரிய இலக்கணம் எதையும் தொல்காப்பியம் வரையறுக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்காரம் எனும் நூல் காப்பிய இலக்கணத்தை வகுத்திருக்கிறது. தமிழின் ஐவகை இலக்கணங்களான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவற்றில் அணி இலக்கணத்தை விளக்கி எழுந்த நூல் தண்டியலங்காரமாகும். பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது தண்டியலங்காலம். நூலின் ஆசிரியர் புலவர் தண்டி.

காப்பியம் வாழ்த்து, வணக்கம், வருபொருள் ஆகியவற்றில் ஒன்றினைப் பெற்று வரும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் கொண்டதாகத் திகழும். தன்னேரில்லாத தலைவனை உடையது. மலை, கடல், நாடு, நகர், பருவம், இருசடர் ஆகியவற்றை உள்ளடக்கி வரும். நன்மணம் புரிதல், பொன்முடி கவித்தல், புனல் விளையாட்டு, சிறுவரைப் பெறுதல், புலவியில் புலத்தல், கலவியில் கலத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறுதல் வேண்டும். மந்திரம், தூது, செலவு, போர், வெற்றி ஆகியவற்றைப் பெற்று வரும். சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் உட்பிரிவுகளில் எதேனும் ஒன்றைப் பெறும். இலக்கிய நயமும், பாவமும் பெற்று விளங்கும். கற்றோரால் இயற்றப் பெறுவதாக அமையும்.

கவிதை கலை எல்லாக் கலைகளிலும் தலை சிறந்த கலை என உலகினர் போற்றுவர். காப்பியங்கள் மிகப் பெரிய உள்ளங்களிலிருந்து உருவாகும் உயர்ந்த கலையாக்கம் என்றும், மனித ஆற்றலின் மாபெரும் கலை வடிவம் என்றும் உயர்ந்த உள்ளங்களிலிருந்து தோன்றும் உயரிய செஞ்சொற் கலையாக்கம் என்றும் பல்வேறு அறிஞர்களும் புகழ் மொழிந்துள்ளனர்.

தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன பெருங்காப்பியங்கள் எனவும், உதயண குமார காவியம், நாக குமார காவியம், யசோதர காவியம், நீலகேசி, சூளாமணி ஆகியன சிறு காப்பியங்கள் எனவும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

காப்பியம் எனும் பெயரில் தமிழ்மொழியில் பல்வேறு படைப்புகள் ஆக்கப்பட்டுள்ளன. இதிகாசம், புராணம், பெருங்காப்பியம், சிறுகாப்பியம், மறைந்து போன தமிழ்க் காப்பியம், மொழிபெயர்ப்புக் காப்பியம், இசுலாமிய சமயக் காப்பியம், கிறித்துவ சமயக் காப்பியம், தற்காலக் காப்பியம் மற்றும் கதைப் பாடல் என பலவாறு காப்பியங்கள் பகுக்கப்பட்டுள்ளன.

ஐம்பெருங்காப்பியங்களும் அணிகளின் பெயரால் அமைந்துள்ளன எனக் குறிப்பிடுவர். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். தந்தை சேர அரசர் இமயவரம்பன் சேரலாதன் எனவும், தாய் சோழநாட்டு மணக்கிள்ளி எனவும், சேரன் செங்குட்டுவன் தம்பியாகவும் அறியப்படுகிறார்.

தமிழ் இலக்கிய உலகில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம். நாடகக் காப்பியமென்றும், முத்தமிழ்க் காப்பியமென்றும், தேசியக் காப்பிய மென்றும் அறிஞர்களால் பாராட்டப்பெறும் சிலப்பதிகாரம், குடிமக்கள் காப்பியமாகவும் அழைக்கப்படுகிறது.

சிலப்பதிகாரத்தின் காலம் குறித்து பல்வேறு கணிப்புகள் கூறப்பட்டுள்ளன. பொது யுகத்தின் இரண்டாமாண்டில் இயற்றப்பட்டிருக்கலாம் என்பதை பல்வேறு அறிஞர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். எனினும் அண்மைக் காலத்திய தமிழ்மொழி வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் சிலப்பதிகாரம் பொதுயுகத்திற்கு முன் தோன்றியதாகக் கொள்வதே பொருத்தமுடையதாக இருக்குமெனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சிலப்பதிகாரம் செம்மையான பெருங்காப்பியம். கண்ணகி என்னும் செம்மையான பெண்மணியின் சீரிய வாழ்க்கையையும், செயற்கரிய செயல்களையும் பற்றிக் கூறுவது சிலப்பதிகாரம். மாநாய்கன் என்பவரின் மகளாகத் தோன்றிய கண்ணகி, மாபெரும் மதுரை மன்னனையே மயங்கி விழச்செய்து மகத்தான பத்தினித் தெய்வகமாக மாறிய கதையே சிலப்பதிகார்ம்.

சிலம்பு எனும் அணியால் பெயரிடப்பட்டுள்ள சிலப்பதிகாரம், மூன்று காண்டங்கள், முப்பது காதைகள், முப்பெரும் வேந்தர்கள், மூன்று பெரும் உண்மைகள், முப்பெரும் நாடுகள், முப்பெரும் நகரங்கள் என மகத்தான ஆக்கமாகச் செய்யப்பட்டுள்ளது.

சோழ நாட்டு காவிரிப்பூம்பட்டினத்து பெருவணிகர் மாசாத்துவானின் மகனும், கலையுணர்வு, நற்பண்புகள் மிக்கவனான கோவலனும், அழகும், பெருங் குணச்சிறப்பும், கற்புத்திறமும் கொண்ட கண்ணகியும் மணம்புரிந்து இன்புற்று வாழ்கின்றனர்.

புகார் நகரில் ஆடலரசி மாதவியின் அரங்கேற்றம் நிகழ்கிறது. ஆயிரத்து எட்டுக் கழஞ்சு பொன்னையும், தலைக்கோலி பட்டத்தையும் சோழ மன்னனிடமிருந்து பெற்ற மாதவியின் மாலையொன்று பெருவீதியில் விற்கப்பட, அதனை ஆயிரம் பொன் கொடுத்து வாங்கும் கோவலன், மாலையோடே மாதவி மனைக்குச் சென்று, மாலையிலும் தங்குவாராகிறார்.

இந்திர விழாவின் போது இருவரும் யாழிசைத்து கானல்வரிப் பாடல்களைப் பாடுகின்றனர். பாடலில் ஊடல் கொள்ளும் கோவலன், முழுநிலவினைப் போன்ற முகத்தினளான மாதாவியைப் பிரிந்து, கண்ணகி வீட்டினைச் சேர்கிறார். இழந்த செல்வத்தை ஈட்ட எண்ணிய கோவலன், வணிகம் செய்தற்பொருட்டு, கண்ணகியுடன் மதுரைக்குச் செல்கிறார். வழித்துணையாக கவுந்தியடிகள் எனும் சமணத்துறவி உடன் சென்றதாக புகார் காண்டம் எடுத்துரைக்கிறது.

மதுரை நகர்புறத்தில் மாதரி என்ற இடைக்குலப் பெண்ணிடம் ஆற்றுப்படுத்தினார் சமணத்துறவி. மனைவியின் சிலம்பை விற்றுவரக் கிளம்பிய கோவலன், பொற்கொல்லனிடம் சிலம்பை விற்றுத்தர வேண்டுகிறார். சூழ்ச்சி செய்த பொற்கொல்லன், பாண்டிய அரசியின் காற்சிலம்பைத் களவாடியது கோவலன் என பொய்யான பழிசுமத்துகிறான். உண்மையை ஆராயாத பாண்டியன், களவாடியவனை முடித்து, காற்றிலம்பைக் கொண்டு வர ஆணையிடுகிறான்.

கோவலன் நிலையறித்து பெருந்துயருற்ற கண்ணகி, பாண்டியனின் அரசவைக்கு சென்று நீதி கேட்கிறார். கண்ணகியின் சிலம்பு மாணிக்கப் பரல்களையும், பாண்டிய அரசியின் சிலம்பு முத்துப் பரல்களையும் கொண்டதென அறியும் மன்னர் நெடுஞ்செழியன் நீதி தவறியதை அறிந்து உயிர் துறக்கிறார். கற்பு

நெறி தவறாத அரசியாரும் உயிர் விடுத்தார். அரசரோடு மட்டும் அமையாது நகரினை அழிக்கவும் வஞ்சினம் கூறி நெருப்பினை ஏவுகிறார் கற்புக்கரசி கண்ணகி. கண்ணகி மற்றும் கோவலனின் வரலாற்றைக் கூறும் மதுராபுரித் தெய்வம், அவரை திருச்செங்குன்றினைச் சேர்த்து கணவனுடன் ஒன்றுபடச் சொல்கிறது.

வஞ்சிக் காண்டம், கண்ணகி தெய்வமானதையும், அவருக்கு கோவில் அமைக்கப்பட்டதையும் விவரிக்கிறது. திருச்செங்குன்றத்தினை அடைந்த கண்ணகி வேங்கை மரத்தின் அடியில் நிற்க, வானுலகிலிருந்து பிற தேவர்களோடு வரும் கோவலன், கண்ணகியை அழைத்துக் கொண்டு வானுலகம் சென்றதை மலைக்குடியினர் கண்டனர்.

மலைவளம் காணச் சென்ற சேர வேந்தன், கண்ணகி தெய்வமானதை மலைக்குடியினர் வழி அறிந்தார். புலவர் சாத்தனார் மூலம் கண்ணகியின் கதை கேட்டறிந்த செங்குட்டுவன், இமயத்திலிருந்து கல்லெடுத்து பிற நாட்டு அரசர்களை அழைத்து, சிறப்பானதொரு விழா நடத்தி, கண்ணகி தெய்வத்திற்கு கோட்டம் அமைத்து வழிபட்டார். உலகோர்க்கான அறிவுரையுடன் சிலப்பதிகாரம் முற்றுப்பெறுகிறது.

சிலப்பதிகாரம் ஏராளமான சிறப்புக்களைப் பெற்ற காப்பியமாக அறிஞர்களால் புகழப்படுகிறது. மங்கல வாழ்த்துப் பாடலில் தொடங்கும் கதை, சோழ, பாண்டிய, சேர நாடுகளின் சிறப்புகளை அழகாகச் சித்தரிப்பதாகக் கூறப்படுகிறது. அரிதிற் புலவர் இளங்கோ சமணராகக் கூறப்பட்டாலும், சமயப் பிணக்குள்ள யாதொரு கருத்தையும் கதைக்குள் எடுத்தாளவில்லையென்றும், அனைத்து சமயத்தையும் சிறப்பாகக் காட்டியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறார். சிலப்பதிகாரம் பத்தொன்பதாம் நூற்றாண்டு காலம் வரை பலராலும் அறியப்படாமல் இருந்ததற்குக் காரணம் சமண சமயத்தைப் போற்றும் காப்பியமாக சிலம்பு அறியப்பட்டதே எனவும் அறிஞர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

தமிழ்க் கவிஞர்கள் விரிந்த உள்ளமும் விசாலமான பண்பும் உயர்ந்த கொள்கையும் உயரிய கோட்பாடும் கொண்டவர்கள். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்பது சங்ககாலக் கவிஞர்களின் உறுதிப்பாடு. சான்றோர் பலர் யாம் வாழும் ஊரே என்பது அன்றைய புலவர் பெருமக்களின் உறைவிடம். எல்லாவற்றிற்கும் மேலாக உலகம் உய்ய வேண்டும். உலகம் வாழ வேண்டும் என்ற எண்ணம் தான் அவர்கள்

கவிதையின் உண்மையான கருப்பொருள். உலகப் பொதுமைதான் அவர்கள் கவிதைகளில் வலம் வரும் பாடுபொருள்.

கவிஞர் கோமான் இளங்கோ, சிலம்பின் கவிதையாக்கத்தில் பல்வேறு சிறப்புக் கூறுகளைக் கையாண்டிருப்பதாக மெச்சப்படுகிறார். சிறந்த யாப்பு, செவிக்கு இனிமை பயக்கும் சொற்றொடர்கள், உவமங்கள், உருவகங்கள், தெறிக்கும் சொற்கள், செழுமையான வாக்கியங்கள், கவித்துவம் பொங்கும் நடை போன்ற எத்தனையோ சிறப்பான உத்திகளைக் கொண்டு கவிதைகள் இயற்றியுள்ளதாகச் சிறப்பிக்கப்படுகிறார்.

திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும், பூம்புகார் போற்றுதும் என மங்கல வாழ்த்தில் பாடியதன் மூலமாக இயற்கையைப் போற்றி மகிழ்பவர்கள் தமிழர்கள் என்பதற்கான அடையாளத்தை இளங்கோவடிகள் அற்புதமாகப் பதிவாக்கியிருக்கிறார் எனப் பெருமிதப்படுகிறார்கள் தமிழ் ஆன்றோர்கள். கானல் வரி, வேட்டுவர் வரி, ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் அழகின் உச்சம் எனவும் கொண்டாடப்படுகின்றன. தொன்மையான சிலம்புக்கு, அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் என இரு உரையாசிரியர்கள் எளிதில் புரியும் வண்ணம் உரை எழுதியிருக்கின்றனர். சிலப்பதிகாரம் இயற்றப்பட்டு ஆயிரமாண்டுகள் சென்ற பின்பே உரைகள் எழுதப்பட்டிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. சிலப்பதிகாரம் நெடுங்காலம் தமிழரிடையே நின்று நிலவுவதற்கும், தமிழர் அந்நூலைப் பயின்று இலக்கிய ஞானம் பெறுவதற்கும் உரைகளே பெரிதும் பயன்பட்டனவாகக் குறிப்பிடப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள மங்கலதேவி கோவில், தமிழர்களாலும் மலையாளத்தவர்களாலும் வழிபடப்படுகிறது. வனத்துறையின் பாதுகாக்கப்பட்ட பகுதியாக இருப்பதால், வருடத்தில் சித்திரை முழு நிலவில் மட்டுமே மங்கலதேவியைக் காண அனுமதி கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர் சி. கோவிந்தராசனார் அவர்கள், சிலப்பதிகாரத்தில் கண்ணகி பயணம் செய்ததாகக் குறிப்பிடப்படும் பாதை வழியாகவே பயணம் செய்து, சிலப்பதிகாரம் கற்பனைக் கதை அல்ல, அதுவொரு வரலாற்று நிகழ்வு என நிரூபித்தவராக பெருமைப் படுத்தப்படுகிறார்.

சிலம்பதிகாரத்தின் மேல் தணியாத தாகம் கொண்ட பேராசிரியர், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்தாம் ஆண்டு தொடங்கி, பதினெட்டாண்டுகள் இடையறாத முயற்சிகள் செய்து, கடும்பயணங்கள் மேற்கொண்டு, முடிவில் குன்றக்குரவை என்னும் காதையுள், கண்ணகி, மலை மேல் வேங்கை மர நிழலில் நின்று தெய்வமான இடத்தையும், அவ்விடத்தில் சேரன் செங்குட்டுவன் அமைத்த பத்தினிக் கோட்டம் என்னும் கண்ணகிக் கோவிலையும் கண்டுபிடித்து, உலகிற்கு அறிவித்த பெருமைக்கு உரியவராக பேராசிரியர் கோவிந்தராசனார் விளங்குகிறார்.

பேராசிரியர் கோவிந்தராசனர் அவர்கள் கண்ணகியின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி நான்கு கட்டங்களாகப் பயணம் செய்திருக்கிறார். காவிரிப் பூம்பட்டினம் முதல் காவிரியின் வடகரை வழியாக உறையூர் வரையிலும் முதல் கட்டமாகவும், உறையூர் முதல் கற்குடி, பூங்குடி, கொடும்பாளூர் வழியாகப் பிரான் மலை, அழகர் மலை, மதுரை வரை இரண்டாம் கட்டத்திலும், மதுரையை மூன்றாம் கட்டத்திலும், மதுரை வைகையின் தென்கரை வழியே நெடுவேள் குன்றம் வரையிலான பாதையை நான்காம் கட்டத்திலும், இளங்கோவடிகளின் விவரிப்புப் பாதையொட்டியே நடைபயணம் மேற்கொண்டிருக்கிறார்.

பதினேழு ஆண்டுகள் ஒரே சிந்தனையாய், நடையாய் நடந்து, மலைதனில் மறைந்த வரலாற்றிற்கு உயிர் கொடுத்து, உலகறியச் செய்த மாமனிதர் ஐயா கோவிந்தராசனார் போற்றுதலுக்கு உரியவரே.

சிலம்பு செல்வர் என அறியப்பட்ட திரு மா.போ சிவஞானம் அவர்களும், சிலம்பின் பெருமைகளை தமிழக மனங்களில் ஊன்றியவராகப் பாராட்டப்படுகிறார்.

இசை, நடனம், நாடகம், தொன்மை, மொழி இலக்கிய இலக்கண மரபுகள், திணை வகைகள், செடிகள், கொடிகள், மலர்கள், கட்டட அமைப்பு, நகர அமைப்பு, கோவில் அமைப்பு, பயிர் வகை, கனவு இயல், களவு இயல், மணி இயல், அரசியல், சமூக அமைப்பு, சமூகத்தினரில் தொழில் வேறுபாடுகள், நாடு முழுவதும் தழுவிய நிகழ்வுகள், நுண்கலைகள் ஆகிய எல்லாவற்றையும் பார்க்கும் போது, இந்திய மொழிகளின் முதல் கலை இலக்கியக் களஞ்சியமாக சிலப்பதிகாரத்தைத் தான் கூற முடியும் எனப் புலமை பெற்ற சான்றோர் சுட்டிக் காட்டுவது தமிழுக்கும், தமிழர்க்கும் பெருமையே.

மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை - அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும் - திருந்தாச் செய்கைத் தீத்தொழில் படாஅன் எனும் மாதவியின் குரலாக மணிமேகலை செய்யுள் இயற்றியவர் நன்னூற் புலவரென்றும், தண்டமிழ்ச் சாத்தரானென்றும், இளங்கோஅடிகளால் போற்றப்பட்ட மதுரை கூல வணிகரான பெரும்புலவர் சீத்தலை அதாவது சீர்தண்டலை சாத்தனார் அவர்கள்.

புகார் நகர இந்திர விழாவின் ஆடல் பாடல்களில் கலந்து கொள்ளாத மாதவிக்கு, அவரின் தாய் சித்ராபதி, வயந்தமாலை என்பவரை அனுப்பி விழாவில் ஆட வருமாறு அழைப்பு விடுக்க, அதற்கு மறுமொழி உரைக்கிறார் பௌத்தத் துறவியாகிவிட்ட மாதவி. கோவலனின் முடிவை அறிந்து துயருற்ற மாதவி, அறவண அடிகள் எனும் துறவியிடம் அறங்கேட்டுத் தெளிந்து துறவியாகிவிட்டிருக்கிறார்.

மணிமேகலையைச் கற்புக்கரசி கண்ணகியின் மகளென்றும், அவர் கணிகை எனும் தீத்தொழிலில் ஈடுபடமாட்டார் எனவும் உறுதியாகக் கூறிவிடுகிறார் மாதவி. துறவியாக்கப்பட்டிருந்த மணிமேகலை, தந்தை நிலை கேட்டு உகுத்த நீர், புத்த பெருமானுக்காக தொடுத்துக் கொண்டிருந்த மாலையில் பட, புதிய பூக்கள் பறித்துவர தோழி சுமதியோடு உவவனம் எனும் மலர்வனத்திற்குச் செல்கிறார்.

கோவலன், மாதவியின் மகளான மணிமேகலையின் பெயரில் பெருமைக்குரிய புலவர் சாத்தனாரால் முப்பது காதைகளில் இயற்றப்பட்ட மணிமேகலை காப்பியம், தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியமாகக் குறிப்பிடப்படுகிறது. புத்த வாழ்வியலின் பல்வேறு நீதிநெறிகளை மணிமேகலை காப்பியம் எடுத்துரைப்பதால் புத்த சமயப் பேரிலக்கியம் என மணிமேகலை அறியப்படுகிறது.

மணிமேகலை சிலப்பதிகாலத்தின் தொடர் காப்பியமாகும். ஆகவே இரண்டும் இரட்டைக் காப்பியங்கள் எனக் கூறப்படுகின்றன. இளங்கோவடிகளும் சாத்தனாரும் நண்பர்கள் என அறியப்படுவதால், சமகாலத்தில் இரண்டு காப்பியங்களும் இயற்றப்பட்டதாகவோ அல்லது மணிமேகலை சற்று தள்ளி இயற்றப்பட்டதாகவோ இருக்கலாமென்றும் கூறப்படுகிறது. எனினும் பொது யுகத்தின் இரண்டாம் நூற்றாண்டாகக் கொள்ளலாமென்பது அறிஞர் பலரின் கருத்தாக உள்ளது.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே போன்ற சிறப்பான பாடல் வரிகளைக் கொண்ட மணிமேகலை காப்பியத்தில், காப்பியத் தலைவி, பசிக்

கொடுமையைப் போக்கியவராகவும், சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றியவராகவும், நன்னெறிகளையும் நல்வழிகளையும் சுட்டிக் காட்டியவராகவும் நேர்த்தியாகக் காட்சிப்படுத்தப் பட்டிருக்கிறார்.

சோழ மன்னனின் மகன் உதயகுமாரன், மணிமேகலைமேல் மையல் கொண்டு மலர்ப் பூங்காவிற்கு வர, அங்கிருந்த பளிங்கறை மண்டபத்தில் மணிமேகலை ஒளிந்து கொள்கிறார். பின் இந்திரவிழா காண வந்த மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவத்தீவிற்கு எடுத்துச் செல்லப்படுகிறார். அங்கு புத்த பெருமானின் மறுவடிவான தரும பீடிகையால், முந்திய பிறவியையும் எதிர்காலத்தில் நடக்க இருப்பவற்றையும் அறிந்து கொள்கிறார். வேற்று உருவம் கொள்ளுதல், பசியைத் தாங்கிக் கொள்ளுதல், வான்வழிச் செல்லுதல் ஆகிய சிறப்புக்களையும் மணிமேகலை பெறுகிறார்.

தீவதிலகை எனும் தெய்வம் மூலம் அள்ள அள்ளக் குறையாமல் அமுதம் கொடுக்கும் அமுதசுரபியைப் பெற்று, புகார் நகருக்கு வரும் மணிமேகலை, அறவண அடிகள் மூலம் முன்னர் அமுத சுரபியை வைத்திருந்த ஆபுத்திரன் வரலாற்றை அறிகிறார். அமுத சுரபி பெற்று மக்களின் பசியாற்றிவரும் ஆபுத்திரன் மழைவளம் செழித்ததால் சாவசத்திற்கு பயணமாகி மணிபல்லவத் தீவில் தனித்து விடப்படுகிறார். அங்கு மக்கள் இல்லாததால் பொய்கையில் அமுத சுரபியை விடுத்து நோன்பின் மூலம் வாழ்வை முடித்துக் கொள்கிறார்.

பசிப்பிணி போக்கும் பேரறத்தை மேற்கொண்டு வரும் மணிமேகலையை சித்ராபதியால் தூண்டப்பட்ட உதயகுமாரன் சீண்டுகிறான். காய சண்டிகை எனும் பெண்ணாக மணிமேகலை மாற, பாதி இரவில் அவ்விடம் வரும் சோழ இளவலை மனைவியிடம் தவறாக நடந்து கொள்வதாக நினைத்து, காய சண்டிகையின் கணவன் முடித்து விடுகிறார். சிறை வைக்கப்படும் மணிமேகலை, அரசியாருக்கு அறநெறிகளை எடுத்துரைத்து அங்கிருந்து மீள்கிறார்.

ஆபுத்திரன் அடுத்த பிறவியில் சாவக நாட்டில் பிறந்து மன்னரால் தத்தெடுக்கப்பட்டு நாட்டின் அரசனாக இருக்கிறார். சாவகநாடு செல்லும் மணிமேகலை ஆபுத்திரனை மணிமல்லவத் தீவிற்கு அழைத்துச் சென்று வரலாற்றை அறியச் செய்கிறார்.

மணிபல்லவத்திலிருந்து வஞ்சி செல்லும் மணிமேகலையிடம், கண்ணகி அவரது பழம் பிறப்பு வரலாற்றை விரித்துரைக்கிறார். பின் மற்றவரது சமயக் கருத்துக்களை அறிய வேண்டி உருவம் மாறி அனைத்து சமயத்தவர் நெறிகளையும் மேகலை அறிந்து கொள்கிறார். பௌத்தப் பள்ளியில் மாசாத்துவானைக் கண்டு அவர் மூலம், மாதவியும் சுதமதியும் காஞ்சி சென்றதையறிந்து, மணிமேகலையும் கச்சிமாநகர் செல்கிறார்.

காஞ்சியின் சோழ இளங்கிள்ளிக்கு நல்லறம் கூறி, மக்களின் பசியைப் போக்கினார் மணிமேகலை. காஞ்சியில் தீவதிலகைக்கும், மணிமேகலா தெய்வத்திற்கும் படிமமும் கோவிலும் எழுப்பப்பட்டன. காவிரிப் பூம்பட்டினம் கடல்கோள் கொள்ளப்பட்டதை மாதவி கூறுகிறார். மற்ற அனைத்து நெறியையும் விட புத்த நெறியே சிறந்ததாக உணரும் மணிமேகலை, புத்த தவத்தினை மேற்கொள்வதோடு காப்பியம் முற்றுப் பெறுகிறது.

சங்க காலத்திலிருந்தே காஞ்சிபுரம் சிறப்புற்ற மாநகரமாக விளங்கியிருக்கிறது. நகர அமைப்பில் இணையற்றும், சமயத்துறையில் சிறப்புற்றும், வரலாற்றுத் துறையில் வளம் பெற்றும் திகழும் காஞ்சி, பல மரபுகளைச் சேர்ந்த முடி மன்னர்களைக் கண்டது. பல படையெடுப்புகளைப் பார்த்தது. அரசர் மறைந்தனர். மக்கள் மாறினர். ஆயினும் காஞ்சி தற்போதும் நின்று நிலவுகிறது. பண்டை வரலாற்றை, சிதைவுகள் வாயிலாகவும், கோவில்கள் மூலமாகவும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் காஞ்சி, பல்லவர்களின் வரலாற்றில் நீங்கள் இடம் பெற்றது எனில் மிகையாகாது.

பல்லவர்கள் ஏழு நூற்றாண்டுகள் வரை தமிழ்நாட்டில் மன்னர் மன்னர்களாக ஆண்டு புகழ் பெற்றும், கோவில்களும், பட்டயங்களும், கல்வெட்டுக்களும் உருவாக்கி, பிராகிருதம், வடமொழி, தமிழ் என அனைத்து மொழிகளையும் வளர்த்து, பல்வேறு சமயப் பணிகள் செய்து புகழ்பெற்றிருந்தும், பல்லவர்கள் யார் என்பதற்கு தமிழகத்தில் பதிலில்லை என்பது வியப்பினும் வியப்பே. ஒரு மிகப்பெரிய மன்னர் குடும்பத்தைப் பற்றி, அவர்களது பிறப்பிடம் பற்றி, தமிழர்கள் தெரிந்து கொள்ளாமலிருப்பது, அக்கறை இல்லாமலிருப்பது, தமிழரின் அறிவுத் திறத்திற்கு ஏற்புடையதாகாது. பல்லவர்கள் தமிழுக்கும் தமிழ் நிலத்திற்கும் தமிழ் பண்பாட்டிற்கும் ஆற்றிய பணிகள் மறக்கற்பாலதன்று.

பல்லவர்கள் தொண்டை மண்டலம் எனப்படும் தமிழகத்தின் வடகிழக்குப் பகுதியை இருநூற்றி ஐம்பது முதல் எந்நூற்றி ஐம்பது வரை ஆண்ட பெருமைமிகு மன்னர்கள். கிருஷ்ணா நதியிலிருந்து புதுக்கோட்டை வரை பல்லவப் பேரரசு அமைந்திருந்தது குறிப்பிடப்படுகிறது.

பல்லவரைப் பற்றி முதன் முதலில் குறிப்பிட்ட மேனாட்டு அறிஞராக சர் வால்டர் எலியர் குறிப்பிடப்படுகிறார். மகாபலிபுரத்திலுள்ள குகைக் கோவில்களை அமைத்தவர்கள் பல்லவர்கள் என்பதை கண்டறிந்திருக்கிறார். பல்லவர்களது கல்வெட்டுகளை படித்தறிந்து வெளியிட்டவர்களாக டாக்டர் பர்னெல், டாக்டர் பிளீட் போன்ற அறிஞர்கள் முன்னிலையில் இருக்கிறார்கள். பிரான்சு தொல்லியலாளர் துப்ராய் பல்லவர் வரலாற்றை வெளிக் கொணர்வதில் அரும்பாடுபட்டவராக அறியப்படுகிறார்.

பல்லவர் வெளியிட்ட பட்டயங்களின் காலத்தை அடிப்படையாகக் கொண்டு பிராக்கிருதப் பட்டயங்களை வெளியிட்ட முற்காலப் பல்லவர்கள் (250-340), சமஷ்கிருதப் பட்டயங்களை வெளியிட்ட இடைக்காலப் பல்லவர்கள் (340-575), கிரந்த தமிழில் பட்டயங்களை வெளியிட்ட பிற்காலப் பல்லவர் (575-900) என பல்லவர்கள் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

முற்காலப் பல்லவர்களின் சிறந்த பட்டயங்களாக அறியப்பட்டுள்ள மயிதவோலு, ஹிரஹத கல்லி, குணபதேயப் பட்டயங்களில், பல்லவர்களது பரம்பரை, அரசியல் போன்றவற்றைப் பற்றிய செய்திகள் குறிப்பிடப்படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் காஞ்சியிலிருந்து விடுக்கப்பட்ட பல்லவரது பழமையான மயிதவோலுப் பட்டயம், சிவஸ்கந்தவர்மன் இளவரசாக இருந்த போது விடுக்கப்பட்டிருப்பதால், அவரது தந்தையே காஞ்சியில் பல்லவரது ஆட்சியை நிலைப்படுத்திய முதலாவது அரசராக இருக்க வேண்டும் என வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பல்லவரது முதல் அரசர் முதலாம் சிம்மவர்மன் எனவும், அவருக்குப்பின் ஸ்கந்தவர்மன் ஆட்சிக்கு வந்ததாகவும் வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

இடைக்காலப் பல்லவருள் விஷ்ணுகோபர் (ஆ.காலம் 340-350) சிறந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். களபர்த்திரி என்பவரை குடும்பத் தலைமணி என்றும், இலக்குமி கணவன் என்றும் பட்டயங்கள் குறிப்பிடுவதால், இடைக்கால பல்லவருள் தலைமணி

போன்றவர் விஷ்ணு கோபர் எனும் குமார விஷ்ணு புகழப்படுகிறார். சமுத்திரகுப்தரின் தென்னகப் படையெடுப்பின் போது காஞ்சியை அரசாண்டவர் விஷ்ணுகோபன் என வரலாற்றாய்வாளர்கள் அறுதியிடுகின்றனர்.

இரண்டாம் கந்தவர்மன் ஆட்சிக்காலம் (370-385) வரலாற்றறிஞர்களால் வெவ்வேறாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாம் கந்தவர்மனுக்கு மூன்று வாரிசுகள் என்பதால் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்தவர் யார் என்பதைக் குறிப்பிடுவதிலும் பல்வேறு விதமான ஆராய்ச்சி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதாகக் குறிப்புகள் கிடைக்கின்றன. மேலும் நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் பல்லவர்கள் வடக்கிலும், தெற்கிலும் தொடர்ந்து பல்வேறு போர்களில் ஈடுபடவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானதால் பல்லவ அரசர்களின் வரிசையைத் தெளிவாக்குவதிலும் சிக்கல்கள் நிலவுகின்றன.

பிற்காலப் பல்லவர்கள் பற்றி சிறப்பாக அறியப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. புகழ்பெற்ற பெருவீரர்களான பல்லவர்கள் பிற்காலத்தைச் சேர்ந்தவர்களே. தெற்கே காவிரியையும் வடக்கே கிருஷ்ணா ஆற்றையும் உள்ளடக்கிய விரிவானதொரு பேரரசை அரசாண்டிருக்கின்றனர். வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடப்படும் பல்லவர் சாளுக்கியர் இடையேயான போர்கள் நடைபெற்றது பிற்காலத்திலேதான். அழியாக் காவியமாக நிலைத்து நின்று பல்லவர் புகழுக்கு கட்டியங் கூறிக்கொண்டிருக்கும் மாமல்லபுரச் சிற்பங்கள், கலைக்கூடங்கள், கோவில்கள், பிற்கால பல்லவர் காலத்தவையே. பிற்காலப் பல்லவர்களின் சமயப் பணியும் பெருமதிப்புக் கொண்டதே. பெரும்பாலான ஆழ்வார்கள், நாயன்மார்கள் பிற்காலப் பல்லவர்கள் காலத்தவர் என்பதும் வரலாறு.

பல்லவகுலம் என்ற உலகைத் தாங்கும் குலமலை போன்றவர் என சிம்ம விஷ்ணு, அவரது மகனாக புகழ்பெற்ற முதலாம் மகேந்திர வர்மனால் போற்றப்படுகிறார். வீரத்தில் இந்திரனைப் போன்றவராகவும், செல்வத்தில் குபேரனை ஒத்தவராகவும், அரசர் ஏறு எனவும் புகழப்படும் சிம்மவிஷ்ணு, களப்பிரர், மழவர், சோழர், பாண்டியர் என அனைவரையும் வெற்றி கொண்டவராக காசக்குடி பட்டயத்தில் புகழப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சிம்மவிஷ்ணுவின் மகனான முதலாம் மகேந்திரவர்மனும் (ஆ. காலம் 615-630), பேரனான முதலாம் நரசிம்மவர்மன் என்ற மாமல்லனும் (ஆ. காலம் 630-668)

பல்லவர்களுள் மிக்க புகழ் கொண்டவர்களெனில் மிகையாகாது. குணபரன், அவனிபாஜானன், லளிதாங்குரன், புருசோத்தமன், சத்திய சந்தன், விசித்திரசித்தன், நரேந்திரன், சேத்தகாரி, போத்தரையன், சத்துருமல்லன். மகாப்பிடுகு, நயபரன், விக்ரமன், மத்தவிலாசன், நரவாகனன், அலுப்தகாமன் போன்ற பல்வேறு பெயர்களாலும், மேலும் பல தெலுங்குப் பெயர்களாலும் குறிப்பிடப்படும் மகேந்திரவர்ம பல்லவன், இசை, நடனம், சிற்பம், ஓவியம், நடனம் போன்ற பல்வேறு கலைகளை நன்முறையில் வளர்த்தவராகவும் போற்றப்படுகிறார்.

மகேந்திரமன்னர் வடமொழியிற் சிறந்தவராகவும், இசைக்கலையை முறைப்படி வல்லாரிடம் கற்றவராகவும், சிற்ப, ஓவிய நடனக் கலைகளில் பேரார்வம் கொண்டவராகவும், போரிற் சிறந்தவராகவும், பல சமயங்களையும் ஆராய்ந்து அறிந்தவராகவும் கல்வெட்டுகள் வழியே அறியப்படுகிறார்.

மகேந்திரவர்ம பல்லவர் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியவராகக் குறிப்பிடப்படுகிறார். சமணராகயிருந்த திருநாவுக்கரசர் என்னும் அப்பர் அடிகளே, மகேந்திரரை சமணத்தின்றும் சைவத்திற்கு மாற்றியவராகக் குறிப்பிடப்படுகிறார். பௌத்தத்தையும் சமணத்தையும் பேணி வந்த பல்லவர்கள், சமய மாறுதலுக்குப்பின் சைவத்தையும் வைணவத்தையும் பெரியளவில் முன்னெடுத்துக் சென்றுள்ளனர். அதற்குச் சான்றாக மகேந்திரவர்மர் காலத்தில் சைவ, வைணவக் கோவில்கள் ஏராளமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. குகைகளைக் கோவில்களாகக் குடைந்தவர் மகேந்திரரே. பாறைகளை கலையழகு கொண்ட கோவில்களாகச் செதுக்கியவரும் மகேந்திரரே.

பல்லவ - சாளுக்கியப் போர்களின் உச்சநிலையில் ஆட்சி புரிந்தவர் பேரரசர் மகேந்திரப் பல்லவர். சாளுக்கியர்கள் கர்நாடகா மற்றும் ஆந்திராவின் பெரும்பகுதியை ஆண்ட (543-753) அரச மரபினர். பாதமி எனப்படும் வாதாபியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதால் வாதாபி சாளுக்கியர்கள் என அழைக்கப்பட்டனர்.

வாதாபி சாளுக்கியர்கள் முற்கால சாளுக்கியர் எனவும், பின்னர் உருவாகிய கல்யாணி எனப்படும் பசவகல்யாணை தலைநகராக் கொண்டு ஆட்சி புரிந்தவர்கள் மேலை சாளுக்கியர் (973-1189) எனவும், ஆந்திராவின் வெங்கிரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் கீழைச் சாளுக்கியர் (624-1189)

எனவும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். கீழைச் சாளுக்கியர்கள் வாதாபி சாளுக்கியரோடு நெருங்கிய உறவு கொண்டவராகவும், மேலைச் சாளுக்கியரோடு அதிகமான போர்களில் ஈடுபட்டவர்களாகவும் அறியப்படுகின்றனர். கீழைப் சாளுக்கியரின் பிற்கால ஆட்சியில், தெலுங்கு மொழி செழிப்பான வளர்ச்சி பெற்றதாகவும், ஆந்திராவின் இலக்கியம், பண்பாடு, கலைகள் சிறந்தோங்கியதால், ஆந்திர வரலாற்றில் கீழை சாளுக்கியர் ஆட்சி பொற்காலமாகக் குறிப்பிடப்படுவதாகவும் ஆய்வாளர்களால் கூறப்படுகிறது.

வாதாபி மற்றும் மேலைச் சாளுக்கியர் ஆட்சிக் காலத்தில், கன்னடமொழியும், இலக்கியமும், பண்பாடும், சமயநெறிகளும் ஏற்றம் பெற்றிருந்ததால், கருநாடகாவின் பொற்காலமாகக் குறிப்பிடப்படுகிறது. கட்டிடக் கலையும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. புகழ்பெற்ற பல கோவில்கள் மேலைச் சாளுக்கியர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்றன.

குப்தப் பேரரசின் (240-550) சரிவினை தொடர்ந்து, விந்திய மலைக்கு தெற்குப் பகுதியான தக்காணப் பீடபூமியில் சிற்றரசர்களாக இருந்த அரசுகள், அருகமைந்திருந்த பகுதிகளைக் கைப்பற்றி, வலிமையான அரசுகளை நிருவியிருக்கின்றனர். அவர்களுள் முக்கியமான அரசாக தக்காணத்தின் சாளுக்கிய அரசு கருதப்படுகிறது.

சாளுக்கியருக்கு முன், கன்னடப் பகுதியில் அரசாட்சி புரிந்தவர்கள் கடம்பர்கள் (345-525) என அழைக்கப்படுகின்றனர். கடம்பர்களைப் பற்றிய குறிப்புகள் பதிற்றுப் பத்தில் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பண்டைய சேர நாட்டின் வட எல்லையில் கடல் வணிகத்தில் சிறந்திருந்தவர்களாகக் கதம்பர்கள் கூறப்படுகின்றனர். கடம்பு மரத்தைக் சின்னமாகக் கொண்டிருந்த கடம்பர்கள், கடற்கடம்பர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றனர். வடக்கு கருநாடகா மற்றும் கொங்கன் பகுதிகளை ஆண்டதாகக் குறிப்பிடப்படும் கதம்பர்களின் தலைநகராக பனவசி எனும் நகரம் இருந்திருக்கிறது.

கதம்ப அரசர் சந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் (455-460), கன்னடமொழியால் வடிக்கப்பட்ட புகழ்பெற்ற தலகுண்டா தூண் கல்வெட்டில், கதம்பர்களின் முதல் அரசராகக் குறிப்பிடப்படும் மயூரசர்மன் (ஆ.காலம் 345-365)

பல்லவேந்திரபுரியாக இருந்த காஞ்சிக்கு கல்வி கற்க வந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காகுஷ்தசர்மன் (ஆ.காலம் 435-455), கதம்பர்களில் புகழ்மிக்கவராகவும், குப்தர்களோடு நல்லுறவைப் பேணியவராகவும் அறியப்படுகிறார்.

பனவசியில் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொன்மையான எழுத்துப் பொறிக்கப்பட்ட தாமிரக் காசு கண்டெடுக்கப்பட்டிருப்பது, கன்னட மொழியின் பழமைக்கு மிகச் சிறந்த சான்றாகக் கொள்ளப்படுகிறது. கன்னட இலக்கியத்தின் ஆதிகவி எனப் போற்றப்படும் புலவர் பம்பா, பனவசியில் பிறந்தவராகக் கருதப்படுகிறார்.

கதம்பர்களின் சமகாலத்தில், கருநாடகத்தின் தெற்குப் பகுதியில் கோலாரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தியவர்கள் மேலை கங்கர்கள் (350-1000) என அழைக்கப்படுகின்றனர். ஆட்சியின் பிற்காலத்தில் கோலாரிலிருந்து காவிரிக் கரையிலிருந்த தலக்காட்டிற்கு தலைநகரை மாற்றியிருக்கின்றனர்.

பல்லவப் பேரரசின் வலுகுன்றிய காலத்தில், அவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த சிற்றரசர்கள் தனி நாடுகளாக ஆயினர் எனக் கூறப்படுகிறது. கங்கர்களும் பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்து, பின்னர் தனி அரசுரிமையை அமைத்தவர்களாக இருக்கக் கூடுமென கூறப்படுகிறது. ஐநூற்றி ஐம்பது வரை தனி நாடாக இருந்த கங்கர்கள், சாளுக்கியரின் எழுச்சியால் அவர்களுக்கு அடங்கியும், பின்னர் இராட்டிர கூடர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குப் அடங்கியுமிருந்த குறு நில மன்னர்களாகவே வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றனர்.

கலிங்கத்தை ஆண்ட அரச மரபினர் கீழைக் கங்கர்கள் (1078-1434) எனக் குறிப்பிடப்படுகின்றனர். மேலை மற்றும் கீழை கங்கர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டவர்களென சுட்டிக்காட்டப்படுகிறது. கீழைக் கங்கர்களே புகழ்பெற்ற கோனார்க் சூரியனார் கோவிலைக் கட்டியவர்களாக அறியப்படுகிறார்கள்.

மேலைக்கங்கம் பரப்பளவில் சிறிய நாடாக இருந்த போதிலும், தென் கருநாடகத்தின் கலை, பண்பாடு, சமய நெறிக்கு மிகுந்த பங்களிப்பைக் செய்துள்ளதாகப் புகழப்படுகிறது. மேலைக் கங்கர்கள் சமண சமயத்தைப் பெரிதும் ஆதரித்தவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். கூத்துக் கலையைப்

பரப்பியவர்களாகவும், கன்னட இலக்கியங்கள் வளர துணைபுரிந்தவர்களாகவும் அறியப்படுகின்றனர்.

கருநாடக மாநில குல்பர்காவில் மன்யகேதா, மன்ன கேதா, மல்கேத் என அறியப்பட்ட நகரைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்ட இராட்டிரகூடர்கள், (735-982), தக்காணத்தின் குறிப்பிடத்தக்கவொரு பேரரசாக அறியப்படுகிறார்கள். இராட்டிரகூடர்கள் அரசாட்சி, அவர்களது மொழி மூலம் குறித்து பல்வேறு கருத்துகள் எடுத்தாளப்படுகின்றன.

கன்னடர், ஆந்திரர், மராத்தியர், பஞ்சாப் தொல்குடியினர் எனப் பலவாறாகக் குறிப்பிடப்படும் மன்யகேதா இராட்டிரகூடர்கள், கன்னட மொழிக்கு சமஷ்கிருதத்திற்கு இணையான முக்கியத்துவம் கொடுத்தவர்களாக அறியப்படுகிறார்கள். இராட்டிரகூட அரசமரபில் சிற்றரசராக இருந்த தந்திதுர்கன் (ஆ.காலம் 735-756), பல்லவமன்னன் நந்திவர்மனோடு மண உறவு கொண்டிருந்ததாகவும், நந்திவர்மண் சாளுக்கியரிடமிருந்து காஞ்சியை மீட்டெடுக்கும் போரில் உதவி செய்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. தந்திதுர்கனுக்குப் பின் அரசரான முதலாம் கிருஷ்ணா (ஆ.காலம் 756-774) கருநாடகம் மற்றும் கொங்கன் பகுதிகளை ஆட்சிக்கு உட்படுத்தியவராகக் குறிப்பிடப்படுகிறார்.

பிரபுத்துவர்சா, ஜகதுங்கா, அனுபமா, கீர்த்திநாராயண, பிருத்வி வல்லபா, விமலாதித்யா போன்ற பல்வேறு பட்டங்களால் அழைக்கப்பட்ட மூன்றாம் கோவிந்தன் (ஆ.காலம் 793-814), இராட்டிர கூடர்களில் மிகப்பெரும் வெற்றிகளைப் பெற்றவராகக் குறிப்பிடப்படுகிறார். கோவிந்தரின் குதிரை இமயமலையின் குளிர்ந்த நீரைக் குடித்ததாகவும், போர் யானை கங்கையின் புனித நீரைக் குடித்ததாகவும் பெருமைப்படுத்தப்படுமளவிற்கு வெற்றிகளைப் பெற்றிருக்கிறார். குறிப்பாக, வெற்றிகொள்ளப்படாமலிருந்த கன்னோஜ் நகரைக் கைப்பற்றியவராகவும் கோவிந்தர் புகழப்படுகிறார்.

முதலாம் அமோகவர்ஷர் எனும் முதலாம் நிருபதுங்கர் (ஆ.காலம் 814-878), கன்னடம் மற்றும் சமஷ்கிருதத்தில் புலமை வெற்றவராகவும், கவிராச மார்க்கம் எனும் கன்னட செய்யுள் நூலையும், பிரஸ்னோத்தார ரத்னமாலிகா எனும் சமஷ்கிருத நூலையும் இயற்றியவராக அறியப்படுகிறார். அமோகவர்சரின் மத நல்லிணக்கம், கலைகளில் ஈடுபாடு, அனைவர் மேலும் அன்பு செலுத்தியமை

போன்ற குணங்களால் தென்னகத்தின் அசோகர் எனப் பகழப்படுகிறார். ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறியப்படும் மகாராட்டிரத்திலுள்ள எல்லோரா குகைக் கோவில்களை சீரமைத்தவராகவும் அமோகவர்மர் குறிப்பிடப்படுகிறார்.

ஏலிபெண்டா பாறைகளை வடிவமைத்தவர்களாகக் கூறப்படும் இராட்டிர கூடர்கள், பட்டாடக்கல், அகோல் மற்றும் கல்பர்கா பகுதிகளில் பல்வேறு புகழ்வாய்ந்த கோவில்களையும் கட்டிடங்களையும் கன்னட திராவிட முறைமையில் உருவாக்கியவர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள்.

மத்திய கால இந்தியாவில் தெற்கிலிருந்த இராஷ்டிர கூடர்களுக்கும், கிழக்கின் பாலா பேரரசிற்கும், மேற்கின் பிரத்திகரப் பேரரசிற்கும் நிகழ்ந்த ஆதிகாரப் போட்டியில் பல்வேறு போர்கள் நடைபெற்றதாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

எட்டாம் மற்றும் பனிரென்டாம் நூற்றாண்டுகளுக்கிடையே (750-1200) வங்காளத்திலிருந்த காப்பவர் எனும் பொருளிலமைந்த பாலப் பேரரசு, மகாயான புத்தமதத்தைச் சார்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மிகப்பெரிய யானைப் படையை வைத்திருந்ததாகவும், வங்காள விரிகுடாவின் கடல் வாணிகத்தில் ஆதிக்கம் செலுத்தியவர்களாகவும் அறியப்படும் பால அரச மரபினர், பண்டைய வங்காள மொழியை வளர்தெடுத்தவர்களாகவும், நாளாந்தா, வீக்ரமசீலா பல்கலைகளுக்கு பெருங்கொடைகள் அளித்தவர்களாகவும், இந்தியத் தத்துவம், இலக்கியம், ஓவியம், சிற்பக்கலை போன்றவற்றின் வளர்ச்சிக்குப் பெரும்பணி ஆற்றியவர்களாகவும் புகழப்படுகிறார்கள்.

ஒன்பதாம் நூற்றாண்டின் பாலப் பேரரசு, கிழக்குப் பாக்கிஸ்தானிலிருந்து வடக்கு, வடகிழக்கு இந்தியா, நேபாளம் மற்றும் வங்கதேசம் வரையிலும் பரந்து விரிந்திருந்ததாக அறியப்படுகிறது. திபெத்திலும் தென்கிழக்கு ஆகிய நாடுகளிலும் பால அரசாட்சியின் தாக்கம் இருந்தாகக் கூறப்படுகிறது. பாலர்கள் குறித்து பல்வேறு கல்வெட்டுகளும் நாணயங்களும் கட்டிடங்களும் இலக்கியங்களும் அறியப்பட்டுள்ளன.

பாலப் பேரரசை நிறுவிய கோபாலர் (ஆ.காலம் 750-770), கோபாலர் மகன் தர்மபாலர் (770-810), கோபாலர் பேரன் தேவபாலர் (810-850), புகழ்பெற்றவர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். இரண்டாம் கோபாலர், மகிபாலர், இராமபாலர் , மதனபாலர்,

கோவிந்தபாலர் (1155-1159) உட்படப் பல்வேறு பால அரசர்கள் மூலம் தொடர்ந்த பால அரசு, பலபாலர் (1165-1198) காலத்தோடு முடிவுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

மன்னர் தேவபாலர், பாலர்களில் தலைசிறந்தவராக அறியப்படுகிறார். பிரஜ்யோதேசம் எனக் குறிப்பிடப்படும் அஸ்ஸாமையும், உத்தலமான ஒசிசாவையும் வெற்றி கொண்டவராகவும், மகதத்தில் பல்வேறு புத்த விகாரைகளை அமைத்தவராகவும் கூறப்படுகிறார். சாவகத்தின் சைலேந்திர அரசர், நாளந்தாவில் புத்தவிகார் எழுப்ப ஐந்து கிராமங்களைக் கொடையளித்தவராகவும் தேவபாலர் குறிப்பிடப்படுகிறார்.

வங்காளத்தின் பொற்காலமாகப் புகழப்படும் பாலா அரசர்கள், வங்காளத்தின் கலைகளையும், பண்பாட்டையும் முன்னெடுத்திருக்கிறார்கள். வங்காளத்தில் அரேபியாவின் இஸ்லாமிய அபா காலிபாவின் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதால், இருவரிடையேயும் வணிகம் சிறந்திருந்ததாகவும், இஸ்லாம் வங்காளத்திலேயே முதலாவதாக அறியப்பட்டதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு வங்காளத்திலிருக்கும் சோமபுர மகாவிகாரை, பாலப் பேரரசின் கட்டிடக் கலைக்கு மிகச் சிறந்ததொரு சான்றாக விளங்கிவருகிறது. இந்திய, பர்மிய சாவக, கம்போடியா என பல்வேறு கட்டிடக்கலையைத் திரட்டி, இருபத்தியேழு ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள சோமபுர மகாவிகார், புத்ததர்மம், சமண தர்மம், சனாதனதர்மம் என அனைத்து சமயங்களின் கூறுகளையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் வடகிழக்கில் எழுச்சி பெற்றிருந்தப் பேரரசு காமரூப அல்லது அஸ்ஸாம் பேரரசு (350-1140) என அழைக்கப்படுகிறது. குவகாத்தி, திசபூர், துர்சய முதலிய நகரங்களைத் தலைநகர்களாகக் கொண்டிருந்த காமரூபப் பேரரசு, அசாமின் பிரம்மபுத்திரச் சமவெளி, பூடான், வங்காளம் மற்றும் பீகாரின் சில பகுதிகளை உள்ளடக்கியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

புஷ்யவர்மன் (ஆ.காலம் 350-374), அசாமிய அரசாட்சியைத் தோற்றுவித்தவராகவும், வர்மன் அரசமரபின் தொடர்ச்சியாக சமுத்திர குப்தன், கல்யாணவர்மன், மகேந்திரவர்மன் போன்றவர்களும் குறிப்பிடப்படுகின்றனர். வர்ம அரசின் பாஸ்கரவர்மன் (542-566), தலைசிறந்தவராகவும், ஹர்ச வர்த்தனரோடு

நல்லுறவு பேணியவராகவும் அறியப்படுகிறார். வர்ம அரசகுலத்தாருக்குப்பின் மிலேச்சர் எனும் அரச மரபு (650-900) காமரூபத்தை ஆண்டிருக்கிறது. குமார் எனவும் அழைக்கப்பட்ட பாஸ்கரர் மன்னர் திருமணமாகாதவர் என்பதால் குழப்பம் ஏற்பட்டு, பின் அசாம் பகுதியின் பழங்குடியின மரபில் வந்த சலஸ்தம்பர் (655-750) எனும் மிலேச்சர் அரசராகி, மிலேச்ச அரச குலத்தை (655-900) தொடங்கியிருக்கிறார். பின்னர் பாலா அரச மரபு அரசாண்டிருக்கிறது.

உத்திரப் பிரதேசத்தின் கன்னோசியையும், பின்னர் இராஜஸ்தானின் ஜோத்பூரையும் தலைநகராகக் கொண்டிருந்த கூர்ஜர-பிரதிகாரப் பேரரசு (650-1036), குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின், வட இந்தியாவில் தோன்றியதாகக் குறிப்பிடப்படுகிறது.

ராஜபுதனத்தின் அக்னி குலத்தவர்களாக அறியப்படும் பிரதிகாரப் பேரரசின் முதலாம் நாகபட்டரிலிருந்து (ஆ.காலம் 730-760) தொடங்கும் கூர்ஜர-பிரதிகார அரச மரபில், இரண்டாம் நாகப்பட்டர் (800-833) காலத்தில், மிகவும் வலிமையுடையதாக விளங்கியிருக்கிறது. குவாலியர் கல்வெட்டுகள், ஆந்திர, கலிங்க, மத்சய, துருக்கிய அரசர்களை, நாகபட்டர் வெற்றி கொண்டதாகக் குறிப்பிடுகின்றன. ராஷ்ட்ர கூட மூன்றாம் கோவிந்தரால் தோற்கடிக்கப்பட்டாலும், பின்னர் மால்வா மற்றும் கன்னோசை மீட்டெடுத்தவராக அறியப்படுகிறார்.

அரசர் மூன்றாம் இந்திர ராட்டிரகூடர், கன்னோசைக் கைப்பற்றியதோடு பிரதிகாரப் பேரரசு வலிமை குன்றத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. கூர்ஜரபிரதிகார கட்டிடக் கலையில் உருவாக்கப்பட்ட புகழ்பெற்ற காஜிராகோ சிற்பக் கூடங்கள், பிரதிகார கட்டிடக் கலைக்கு சிறந்த சான்றாகக் கொள்ளப்படுகின்றன.

பல பேரரசுகளை எளிதாக வெற்றி கொண்ட அரேபியர்களால் இந்தியாவில் முன்னேற முடியாததற்கு முக்கிய காரணமாக சிந்துவைத் தொடர்ந்து நிலைகொண்டிருந்த கூர்ஜர-பிரதிகாரப் பேரரசர்களே எனக் கூறப்படுகிறது. மூன்று நூற்றாண்டுகள் தொடர்ந்து கொண்டிருந்த அரேபிய காலிபாக்களின் முற்றுகைகளைப் பற்றி கூர்ஜர, இராசபுதன மரபு விவரிப்பதாகக் கூறப்படுகிறது.

குசாணர்களுக்குப் பின் வட இந்தியாவில் அரசுரிமை அமைத்தவர்கள் குப்தர்கள் (240-550). குப்தர்கள் காலம் பண்டைய இந்திய வரலாற்றில் மிகச்

சிறந்ததொரு காலகட்டமாகப் போற்றப்படுகிறது. கலைகளும், அறிவியல் சிந்தனைகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்து மதம் செழிப்படைந்திருக்கிறது. இலக்கியங்களும், மருத்துவ முறைகளும், வானியல், கணிதவியல் போன்றவையும் உயர்வை அடைந்திருக்கின்றன. மூன்று நூற்றாண்டு காலத்தில் இந்தியாவில் பல வியத்தரு சாதனைகளை மேற்கொண்ட குப்பதர்களின் காலம், இந்தியாவின் பொற்காலமாகக் குறிக்கப்படுகிறது. நாணயங்கள், கல்வெட்டுக்கள் மூலம் குப்தர்களது ஆட்சிக்காலம் சிறப்பாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசம் ஆகிய நாடுகளை உள்ளடக்கியிருந்த குப்தர்களின் ஆட்சியாளர்களில், ஸ்ரீகுப்தர் (ஆ.காலம் 240-280) முதலாவது பேரரசர். ஸ்ரீகுப்தரே பிரயாகை எனப்படும் அலகபாத் பகுதியில் குப்தப் பேரரசிற்கு அடிகோலியவர். குப்தர்களின் மூலம் குறித்து பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. ஸ்ரீகுப்தரின் மகன் கடோத்கஜன். அரசர் கடோத்கஜன் மகன் சந்திரகுப்தர்.

பேரரசர் முதலாம் சந்திர குப்தர் (ஆ.காலம் 320-335), அவரது மகன் சமுத்திர குப்தர் (335 -375), பேரன் இரண்டாம் சந்திரகுப்தர் (380-415) ஆகியோர் குப்தர்களில் புகழ்பெற்ற அரசர்களாகப் போற்றப்படுகின்றனர். இரண்டாம் சந்திரகுப்தர் எனும் சந்திரகுப்த விக்ரமாதித்யன் ஆட்சிகாலம், மிக்க சிறப்புடையதாக வரலாற்று அறிஞர்களால் புகழப்படுகிறது.

மகாராஜாதிராஜா எனக் குறிப்பிடப்படும் முதலாம் சந்திரகுப்தர் போர்களினாலும், மணஉறவுகளினாலும், நாட்டின் எல்லையை விரிவு படுத்தியிருக்கிறார். சமுத்திர குப்தர் போர்களில் மிகச்சிறந்தவராகவும், பல வெற்றிகளைப் பெற்று பேரரசை விரிவுபடுத்தியவராகவும் அறியப்படுகிறார். மகதத்திலிருந்து ஆட்சி செலுத்திய குப்தப் பேரரசை அசாம், வங்காளம் என கிழக்கிலும், ஆப்கானிஸ்தான் வரை மேற்கிலும், காஷ்மீர், நேபாளம் என வடக்கிலும், விந்திய மலைகளைத் தாண்டி தெற்கிலும் பேரரசின் எல்லைகளை பரவலாக்கியிருக்கிறார்.

முப்பத்தைந்து அடி உயரமும் ஏறக்குறைய ஒரு மீட்டர் சுற்றளவும் கொண்ட அலகாபாத் தூண் எனப்படும் அசோகர் காலத்திய தூணில், பொது ஆண்டிற்கு

முன்னான மூன்றாம் நூற்றாண்டு அசோகர், பொது ஆண்டிற்குப் பின்னான நான்காம் நூற்றாண்டு சமுத்திரகுப்தர் மற்றும் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த முகலாய மன்னர் ஜகாங்கீர் போன்றோரின் கல்வெட்டு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அலகாபாத்தில் நிறுவப்பட்டிருந்த அசோகர் தூண், பல்வேறு வரலாறுகளைக் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. கோசலத்தின் கோசம்பி நகரில் முதலின் நிறுவப்பட்டதாகவும், முகலாய ஆட்சிக்குப் பின் அலகாபாத் நகருக்கு மாற்றப்பட்டிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. அசோகர் எழுதிய பிராமி நடையிலான பொறிப்புகள் தூணில் மேல் பகுதியிலும், சமுத்திர குப்தரின் செவ்வியில் சமஷ்கிருத மொழி எழுத்து நடுப்பகுதியிலும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

குப்தர்கள் ஆட்சிக் காலத்தின் மிக முக்கியமானதொரு சான்றாகக் கருதப்படும் அலகாபாத் தூணில், பிராமியின் திருந்திய குப்த வரி வடிவத்தில் சமுத்ரகுப்தரின் அமைச்சர் மற்றும் புலவரான ஹரிசேனரால் கல்வெட்டு பதியப்பட்டுள்ளது. செவ்வியல் கால இந்தியாவின் அரசியல், நிலவியல், அரசர்கள், மக்கள் குறித்த பல்வேறு செய்திகள் அலகாபாத் தூணில் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்திய தோல்லியல் துறையில் பணியாற்றிய புகழ்பெற்ற அறிஞரான தேவதத்த ராமகிருஷ்ண பந்தார்கர் (1875-1950) அவர்களால், அகமதாபாத் தூணின் செய்திகள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

பாடலிபுத்திரத்தையும் சிறிதுகாலம் உஜ்ஜயினியையும் தலைநகராகக் கொண்ட அரசாண்ட சந்திரகுப்தர், குப்தர்களில் தலைசிறந்த பேரரசராகக் பாராட்டப்படுகிறார். சிந்து நதி முதல் கங்கை வரையிலும், தெற்கே நர்மதை வரையிலும் விரிந்திருந்த பேரரசை திறம்பட நிர்வகித்தவராக அறியப்படும் குப்தர், இலக்கியம், சிற்பக் கலை, கட்டிடக் கலை போன்றவற்றை செழிப்பின் உச்சத்திற்குக் கொண்டு சென்றவராக இருக்கிறார்.

விக்ரமாதித்தியரான குப்தரின் உஜ்ஜயினி அவையை, நவரத்தினங்கள் எனப் புகழப்பட்ட ஒன்பது அறிஞர்கள் அலங்கரித்ததாக மரபாகக் கூறப்படுவதுண்டு. கவிஞர்களும், இலக்கியவாதிகளும், பல்துறை அறிஞர்களும் இடம்பெற்றிருந்த குப்தர் அரசவையில் சிகரமாக வீற்றிருந்தவர் காளிதாசர்.

சமஷ்கிருத இலக்கியத்தின் தலைமைக் கவிஞராகவும், நாடக ஆசியரியராகவும் புகழப்படும் மகாகவி காளிதாசரின் (415-450) வாழ்க்கையைப்

பற்றியும், அவரது காலம் பற்றியும் பல்வேறு தகவல்கள் குறிப்பிடப்படுகின்றன. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என பரவலாகக் கருதப்பட்டாலும், அவரது இளமைக் காலம் குறித்து பலவாறு கூறப்படுகிறது.

காளிதாசர், உஞ்சை எனத் தமிழில் குறிப்பிடப்படும் உஜ்ஜயினியை சேர்ந்தவர் எனவும், காஷ்மீரத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. காளிதாசர் இடம்பெற்றிருந்த நவரத்ன சபையின் அரசர் விக்ரமாதித்யன் யாராக இருக்கலாமென்பதிலும் அறிஞர்கள் வேறுபடுகிறார்கள். சாதவாகன சதகர்னி, அக்னிமித்ரர், யசோதர்மன், இரண்டாம் சந்திரகுப்தர் போன்றவர்களோடும், வேதாளத்தோடும், விக்ரமாதித்தன் என்பவரோடும் உஜ்ஜயினியின் அரசபை அடையாளம் சுட்டப்படுகிறது.

பண்டைய இந்தியாவின் புராண மரபில் வரும் விக்ரமாதித்தன், பவுசிய புராணத்தின் படி, உஜ்ஜயினியின் மன்னர் கந்தர்வ சேனிரின் இரண்டாவது மகனாகக் குறிப்பிடப்படுகிறார். அறிவாற்றல், வீரம் மற்றும் தயாள குணம் போன்றவற்றிற்கு புகழ்பெற்றவரான விக்ரமாதித்யரைப் பற்றி பல்வேறு செவிவழிக் கதைகள் சமஷ்கிருத இலக்கியங்களிலும், பிற மொழி இலக்கிய மரபிலும் சொல்லப்பட்டுள்ளன. வேதாளம் சொன்ன இருபத்தைந்து கதைகளும், சிம்மாசனத்தைப் பற்றிய முப்பத்தியிரண்டு கதைகளும் மிகவும் புகழ் பெற்றவைகளாக உள்ளன.

மத்தியப் பிரதேசத்தின் சிப்ரா ஆற்றில் அமைந்துள்ள உஜ்ஜயினி, காளி வழிபாட்டோடு தொடர்புடையதாக அறியப்பட்டிருக்கிறது. அவந்தி அரசின் தலைநகராகவும் இருந்த உஜ்ஜைன், இந்துக்களின் ஏழு புனித நகரங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது. காசி என்றும் பானாரஸ் என்றும் அழைக்கப்படும் வாரணாசி, அயோத்தி, காஞ்சிபுரம், மதுரா, துவாரகை, உஜ்ஜைன் மற்றும் ஹரித்துவார் போன்றவை முக்தி தரும் நகரங்களாக இந்துக்களால் போற்றப்படுகின்றன.

மகாகவியாகப் போற்றப்படும் காளிதாசர், மாளவிகாக்னிமித்ரம், விக்ரம ஊர்வசியம், சாகுந்தலம் எனும் நாடகங்களையும், இரகுவம்சம், குமார சம்பவம், மேக சந்தேசம் எனும் செய்யுள் காவியங்களையும் இயற்றியுள்ளார். கவித்திறத்தால் இந்தியாவிற்குப் பெருமையும், சமஷ்கிருத மொழிக்கு வளமையும் சேர்ந்த

காளிதாசர், உஜ்ஜயினி தேவியின் அருளால் அறிவாற்றல் பெற்று, பல அற்புதமான காவியங்களைப் படைத்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

புராணகால மகரிஷி விசுவாமித்ரர், தேவலோக கன்னிகை மேனகை ஆகியோரின் மகளான சாகுத்தலை மற்றும் அஸ்தினாபுரியின் இளவரசரான துஷ்யந்தனின் காதலைச் சொல்லும் நாடகக் காப்பியம் சாகுந்தலம். துஷ்யந்தன் - சாகுந்தலை மகன் பரதன் பெயராலேயே இந்தியா முன்னர் பரத, பாரதநாடு என அழைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. புருருவ அரசர் விக்ரமருக்கும், கந்தர்வ உலக ஊர்வசிக்குமான காதலைச் சொல்வது விக்ரம ஊர்வசியம். அரசர் அக்னிமித்ரருக்கும், மாளவிகா எனும் பணிப்பெண்ணுக்குமான காதல் நாடகம் மாளவிகாக்னிமித்ரம். அழியாத காவியங்களை அறங்கேற்றியுள்ள காளிதாசர், இராமனுடைய வம்ச வரலாற்றைச் சொன்ன காவியம் ரகுவம்சம். பார்வதியின் பிறப்பு, இளமைக் காலம், திருமணம் போன்றவற்றை விவரிப்பது குமார சம்பவம்.

காளிதாசரின் ரகுவம்சம், குமார சம்பவம், பாரவியின் கிராதார் ஜுனியம், மாகரின் சிசுபாலவதம், ஹர்சரின் நைஷச சரிதம் போன்ற நூல்கள், சமஷ்கிருதத்தின் ஐம்பெருங்காப்பியங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. காளிதாசர் காப்பியங்களின் பாதிப்பு அடுத்து வந்த பல்வேறு படைப்புகளிலும் காணக்கிடைப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாக மேக சந்தேசம் எனும் மேகதூதத்தில், காளிதாசர் கையாண்டுள்ள உவமைகள் அனைவராலும் பெரிதாக மெச்சப்படுகின்றன என்றால் மிகையாகாது. உவமைகள் சிந்தனையைத் தூண்டுவதாகவும் பொருத்தமானவையாகவும் அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. காளிதாசரின் கவிதைகளில் காதல் வருனணைகள் மிகுந்திருப்பதாகவும் பெண்களைப் பற்றிய சித்தரிப்புகள் நுணக்கமாகக் கையாளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தவறிழைத்து, குபேரனால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட ஒரு யக்ஷன், மழைக்கால மேகங்கள் மூலம் அவரது மனைவிக்கு தூதனுப்புகிறார். மேகம் போகும் வழியில் தென்படும் இயற்கைக் காட்சிகள் அழகு என்றும், மேகத்தின் மனம் நிறையுமென்றும், செல்லும் வழியெங்கும் மழை பொழிந்து கொண்டே போவதால் மக்கள் மேகத்தை மனங்குளிர வாழ்த்துவரென்றும் மேகத்திற்கு ஆசை காட்டி யக்ஷன் தூதுவிடுகிறார்.

ஹொரேஸ் ஹேமென் வில்சன் (1786-1860) எனும் பிரித்தானிய மருத்துவரால் மேகதூதம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சமஷ்கிருதத்திலும், ஆயுர்வேத மருத்துவ முறைகளிலும், இந்தியாவின் தொன்ம மரபிலும் பேரார்வம் கொண்டிருந்தவராக அறிஞர் வில்சன் போற்றப்படுகிறார். ஆங்கிலத்தை தொடர்ந்து லத்தீனம், ஜெர்மன், பிரெஞ்சு மொழிகளிலும் மேகதூத் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

இரண்டாம் சந்திர குப்தரின் அரசவையை அலங்கரித்த ஒன்பது அறிஞர்களாக, காளிதாசர், தன்வந்தரி, சபனகர், அமரசிம்கர், ஷன்கர், கடகர்பர், வேதாளபட்டர், வராருசியர் மற்றும் வராகமித்ரர் போன்றோர் குறிப்பிடப்படுகின்றனர்.

ஆர்யப்பட்டர் மற்றும் வராஹமித்ரர் போன்றோர் குப்தர்கள் காலத்தை சேர்ந்தவர்களெனவும், இருவரும் கணிதம், வான்வெளியியல், சோதிடவியல் போன்றவற்றில் சிறந்தவராகவும் குறிப்பிடப்படுகின்றனர். பூஜ்யத்தின் மதிப்பை அறிந்தவர்களாகவும், பூமியே சூரியனை சுற்றுவதாகவும், சூரிய, சந்திர கிரகணங்களைத் துல்லியமாகக் கணிக்கும் முறைகளை உருவாக்கியவர்களாகவும் போற்றப்படுகின்றனர்.

தன்வந்திரி மற்றும் சுஷ்ருதர் ஆயுர்வேதத்தோடு பெருமளவில் தொடர்பு படுத்தப்படுகின்றனர். சுஸ்ருத சமஹிதை, ஆயுர்வேதத்தின் அடிப்படை நூலாக அறியப்படுகிறது. நூற்றி எண்பத்தி நான்கு தலைப்புகளில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோய்களைப் பற்றிய குறிப்புகளுடன், எழுநூறு மருத்துவக் குணமுள்ள தாவரங்களைப் பற்றியும் விவரிக்கும் சமகிதை, தாதுக்களை மூலமாகக் கொண்ட அறுபத்தி நான்கு மருந்து தயாரிப்பையும், ஐம்பத்தி ஏழு விலங்கினத் தொடர்புள்ள மருத்துக்களைத் தயாரிப்பதையும் விளக்குவதாகக் குறிப்பிடப்படுகிறது. கண்புரை சிகிச்சை உள்ளிட்ட அறுவைச் சிகிச்சை முறைகளையும் சம்ஹிதை நூல் விவரிப்பதாக இருக்கிறது.

ஆயுர்வேதம் இந்தியாவில் உருவாகிய புகழ்பெற்ற மருத்துவ முறை. ஆயுர்வேதம் என்பதை நீண்ட வாழ்வுக்கான அறிவுத் துறை எனக் குறிப்பிடுகின்றனர். உடல், மனம் என இரண்டினோடும் தொடர்புடையதாக ஆயுர்வேதம் குறிப்பிடப்படுகிறது. உடலில் உண்டாகும் நோய்களைத் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் ஆயுர்வேதம் பயன்படுகிறது. முழு உடல் நலத்திற்கான

ஆயுர்வேத மருத்துவ முறையின் கடவுளாக, திருமாலின் வடிவமான தன்வந்திரி மரபாகக் குறிப்பிடப்படுகிறார்.

தக்காணப் பீடபூமியிலிருந்த வாகாடகப் அரசோடு (அரசாட்சிக் காலம் 250-500) குப்த பேரரசு நல்லுறவு கொண்டிருந்ததாகவும், இரண்டாம் சந்திரகுப்தரின் மகள் பிரபாவதிகுப்தரை வாகடேகர் அரசர் இரண்டாம் ருத்ரசேனருக்கு (ஆ.காலம் 380-385), திருமணம் செய்து கொடுத்ததாகவும் அறியப்படுகிறது. பிரபாவதி குப்தர் இருபது வருடங்கள் அரசுரிமையில் இருந்த போது, வகடேகர் அரசு ஏறக்குறைய குப்த அரசாக இருந்ததாகவும், அங்கிருந்து சாசர் - சத்ரபாக்கள் கூட்டினை சந்திரகுப்தர் தோற்கடித்ததாகவும் கூறப்படுகிறது.

வாகாடகர் அரசு, அஜந்தா மற்றும் எல்லோரா குகை ஓவியங்களோடு தொடர்புள்ளதாக அறியப்படுகிறது. மேலும் குப்தர்கால கலை மரபுகளும் குகைக் கோவில்கள் வளர்ச்சியில் பங்களிப்புள்ளதாக கூறப்படுகிறது. வாகாடகப் பேரரசர் ஹரிசேனர் காலத்தில் அஜந்தா குகைகள் குடையப்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிடப்படுகிறது.

உலகப்புகழ்பெற்ற வரலாற்றுச் சின்னங்களான அஜந்தா குகைகள் (பொ.ஆ.முன் 200 - பொ.ஆ 650), மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள புத்த மத சிற்பங்களும் ஓவியங்களும் அமைக்கப்பட்டுள்ள குடைவரைக் கோவில்களாகும். பெரியபாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டுள்ள குகைகளில், புத்தரின் வாழ்க்கை மற்றும் புத்த சமய வரலாறோடு தொடர்புபடுத்தப்படும் ஓவியங்களும், சிலைகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பொது ஆண்டுக்கு முன் இரண்டாம் நூற்றாண்டு தொடங்கி ஆறாம் நூற்றாண்டு வரை பல்வேறுகட்டங்களாக அஜந்தா குகைகள் உருவாகி வந்துள்ளதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். புத்தபிட்சுகள் வாழ்வதற்கும், கற்பதற்கும் மற்றும் வழிபாடு செய்வதற்காகவும் குகைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சாதவாகனப் பேரரசு காலத்தில் முதல் கட்டமாகவும், வாகாடகர் காலத்தில் இரண்டாம் கட்டமாகவும் குகைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம் எனவும் குறிப்பிடப்படுகிறது.

ஜான் ஸ்மித் எனும் பிரித்தானிய படை அதிகாரியால் 1819-ல் கண்டுபிடிக்கப்பட்ட அஜந்தா குகைகள், பின்னர் ஆராய்ச்சியாளர்களால் அறியப்பட்டு உலகினர் கவனத்தை ஈர்த்துள்ளது. அஜந்தா ஓவியங்கள் உலகின்

தொன்மையான ஓவியங்களாகவும், இந்திய ஓவிய அமைப்பிற்கு அடிப்படையாக அமைந்த ஓவிய முறைமை எனவும் குறிப்பிடப்படுகிறது. அஜந்தா குகை ஓவியங்கள், ஓவியக் கலைக்கான கலைக் களஞ்சியம் என்றே புகழப்படுகிறது.

ஆஜந்தாவில் முப்பது குகைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்பது பத்து, பத்தொன்பது, இருபத்தாறு, இருபத்தொன்பதாம் குகைகள், பௌத்த வழிபாட்டிடங்களாகவும், மற்றவை துறவியர் தங்குமிடமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மண்டபங்களும், கலைநயமிக்க பெரிய தூண்களும், அழகுமிக்க சிலைகளும், புத்தரின் பல்வேறு உருவ அமைப்பும் நயத்துடன் எழிலுற வடிவமைக்கப்பட்டள்ளன.

புத்த ஜாதகக் கதைகளை மையமாகக் கொண்ட ஓவியங்கள், மனதை நிறைக்கும் படியாக வரையப்பட்டுள்ளதாகவும், ஓவியங்கள் அனைத்தும் உயிரோவியங்களாக இருக்கின்றதாகவும், பெண்களின் பல்வேறு மனநிலைகளும், எண்ணற்ற அழகிய தோற்றங்களும், வெகு நேர்த்தியாக வரையப்பட்டுள்ளதாகவும் அறிஞர்களால் புகழப்படுகிறது.

இந்திய குடைவரை கட்டிடக் கலைக்கு மிகச் சிறந்த சான்றாக அமைந்துள்ள எல்லோரா குகைகள், பௌத்த, சமண மற்றும் இந்து சமயங்களின் புகழுக்கு பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளன. ஐந்தாம் மற்றும் பத்தாம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் செங்குத்தான பாறைகளில் குடையப்பட்டுள்ள முப்பத்து நான்கு குகைகளில், இந்து மதம் தொடர்பான பதினேழு குகைகளும், ஐந்து சமணக் குகைகளும் அருகருகே செதுக்கப்பட்டுள்ளன.

நர்மதை நதிக்கரையின் மகிஸ்மதியை தலைநகராகக் கொண்டு, மால்வா, வடக்கு மகாராட்டிரம், தெற்கு குஜராத், தெற்கு ராஜஸ்தான் பகுதிகளை அரசாண்டவர்களாக களசூரி அரச மரபினர் குறிப்பிடப்படுகின்றனர். நந்தியை அடையாளமாகக் கொண்டிருந்த களசூரி அரசர்கள், பெரிய மீசையுடன் கூர்மையான கத்தியையும் வைத்திருந்ததாலேயே களசூரி எனும் பெயரால் அழைக்கப்பட்டதாக ஆய்வாளர்களால் கூறப்படுகிறது. சேதி அல்லது கைகேய அரச மரபினர் எனவும் களசூரி மரபிற்கு பெயர் வழங்கியிருக்கிறது. ஆரம்ப கால களசூரி அரசு (550-620) மால்வா மகாராட்டிரம், தக்காணம் போன்ற பகுதிகளை அரசாட்சி செய்ததாகவும், பின்னர் தெற்கு களசூரி மரபினராக (1130-1184) வடக்கு கருநாடகா

மற்றும் மகாராஷ்டிர பகுதிகளை அரசாட்சி செலுத்தியதாகவும் கூறப்படுகிறது. தெற்கு களசூரி அரசர்கள் கல்யாணி சாளுக்கியர்களுக்கு சிற்றரசர்களாக இருந்தார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. வடக்கு களசூரி அரச மரபினர் (845-1211), மத்தியப்பிரதேச ஜபல்பூர் அருகிலுள்ள பண்டைய திரிபரியை தலைநகராகக் கொண்டு அரசாட்சி செலுத்தியவர்களாக அறியப்படுகின்றனர். வடக்கு களசூரி அரசு, புந்தல்கண்ட பகுதியை ஆண்ட சந்திர குல அரசான சாந்தெல் அல்லது சண்டால் அரச மரபால் முடிவுக்கு வந்ததாக வரலாற்றாய்வாளர்கள் குறிக்கப்பட்டுள்ளது. காஜுராகாவை தலைநகராகக் கொண்டு அரசாண்ட சாண்டர்கள் (850-1315), காஜுராகோ பகுதியின் பல புகழ்பெற்ற இந்து, சமண, புத்த கோவில்களை எழுப்பியவர்களாக அறியப்படுகின்றனர்.

கஜுராகோ, கலிஞ்சர், மகோபோ போன்ற நகரங்களை தலைநகராகக் கொண்டிருந்த சண்டேலா அரசர்களில், யசோவர்மன் அல்லது லக்ஷவர்மன் (925- 950), தங்கா (950-1017), கந்தா (1002-1017) போன்றோர் ஆட்சிகாலத்தில் சாந்தெல் அரசு புகழ்பெற்று விளங்கியிருக்கிறது.

வித்யாதர பேரரசரின் ஆட்சிக்காலத்தில் (1017-1029), புகழ்பெற்ற கந்தரிய மகாதேவா கோவில் கட்டப்பட்டிருக்கிறது. மகாதேவர் கோவில், மத்திய காலப் பகுதியைச் சேர்ந்த, பாதுகாக்கப்பட்ட, மிகச் சிறந்ததொரு கோவிலாக இருக்கிறது. மகாதேவர் கோவிலின் காமம் சார்ந்த சிற்பங்கள், மிகுந்த கலை நுணுக்கமுடையவையாக உலகினர் கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

காஜுராகோ தொகுதியில் உள்ள ஏறக்குறைய எண்பது கோவில்கள், அவற்றின் கட்டிடக் கலையின் அடிப்படையில், மேற்குத் தொகுப்பு கோவில்கள், கிழக்கு தொகுப்பு, மற்றும் தெற்கு தொகுப்புக் கோவில்கள் என அடையாளம் சுட்டப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட காஜுராகோ பகுதியின் கோவில்கள், இந்தியர்களின் கலைத்திறனுக்கு சிறந்த சான்றுகளாக நிலைபெற்று விளங்குகின்றன.

இந்தியர்கள் காதலையும் காமத்தையும் கொண்டாடியவர்களெனில் மிகையாகாது. காமம் தொடர்பான பல நூல்கள் இயற்றப்பட்டிருப்பினும், வாத்சாயனர் எழுதிய காம சூத்திரம் எனும் நூலே மிகவும் புகழ்பெற்றதாக விளங்குகிறது. காதலின் அறிவியல் எனப் போற்றத்தக்க நூலை எழுதிய

வாத்சாயனர் காலம் குறித்து, பல்வேறு கருத்துக்கள் பதியப்பட்டிருக்கின்றன. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும், குப்தர்கள் காலத்தில் வராகமிகிரர் குறிப்பிடும் காதல் குறித்தான விவரிப்புகள், வாத்சாயனர் நூலிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டிருக்கலாம் என்பதால் வராகமிகிரர் காலத்திற்கு முன்னரே வாத்யாயனர் காம சூத்ரம் நூலை இயற்றியிருக்க வேண்டும் எனவும், குப்தர் காலத்தில் நூல் வடிவம் பெற்றிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

ஆசை, விருப்பம், இன்பம் எனும் பொருளில் குறிப்பிடப்படும் காமம், மனிதர்கள் வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. மலரினும் மெல்லியதான காமத்தை, முப்பத்தாறு அத்தியாயங்களில் ஏழு பகுதிகளாகப் பிரித்து சமஷ்கிருத செய்யுள்களை இயற்றியுள்ளார். காமம் தொடர்பாக மட்டுமின்றி, அறம், பொருள், இன்பம், பேறு எனும் வகையிலேயே நூல் இயற்றப்பட்டுள்ளது. கற்க வேண்டிய கல்விகள், நுகரவேண்டிய இன்பங்கள், மனைவியைத் தேர்ந்தெடுக்கும் முறைகள், பெண்ணிடம் நம்பிக்கை வளர்த்தல் போன்ற பல்வேறு விளக்கங்களையும் குறிப்பிடும் வாத்சாயனர், சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை எனினும், அதையும் முறையாகக் கற்றுக் கொள்ள வேண்டும் எனவும், அவர் எழுதியது முன்னோர் நூலின் சிறு பகுதியே எனவும் குறிப்பிடுகிறார்.

பண்டைய கால வாத்சாயனர் நூலைப் பின்பற்றி, கொக்கோகா பண்டிதரால் ரதிரகசியம் எனும் நூல் இயற்றப்பட்டுள்ளது. பதினோராம் அல்லது பனிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் குறிப்பிடப்படும் கோக்கோ நூல், மத்திய கால இந்தியர்களின் காதல் களியாட்டங்களை விளக்கும் சிறந்ததொரு நூலாகக் கூறப்படுகிறது. காதலின் ரகசிய நூலில் பெண்கள் குறித்தான அழகிய வருணிப்புகள் இடம்பெற்றுள்ளன. காதல் கலைகள் சற்று இறுக்க மலைநிலைக்கு மாறிவிட்டிருந்த மத்திய கால இந்தியர்களின் மனங்களை மயக்கும் விதமாக, காம சூத்திரத்திலிருந்து சற்று மாறுபாடும் கோகோ சமஷ்கிருத நூல், பதினைந்து தலைப்புகளில் எந்நூறு செய்யுள்களில் புனையப்பட்டுள்ளது. கோகோ நூல் தமிழில் அதிவீர ராமபாண்டியரால் பதினேழாம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

களச்சூரி அரசமரபினர் இந்து மரபைச் சேர்ந்தவர்களென்பதால், எல்லோராவின் கைலாசநாதர் கோவில் அமைந்துள்ள பதினாறாம் எண் குகை,

சிறப்பான வடிவமைப்பிற்காகவும் கலைத் திறனுக்காகவும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. சிவபெருமானின் கையிலாய மலையைக் குறிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ள பதினாறாம் குடைவரை, பல அடுக்குகள் கொண்டதொரு கோவில் வளாகம் போல் மிக அருமையாக செதுக்கப்பட்டுள்ளதாகப் புகழப்படுகிறது. இராட்டிர கூட அரசர்களால் திராவிட, இராட்டிரகூட கலைப் பாணியில் பல நூறு ஆண்டுகால உழைப்பில் கையிலாய நாதர் கோவில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது. நூற்றி நாற்பத்தியெட்டு அடி நீளமும், அறுபத்தியிரண்டு அடி அகலமும், நூறு அடி உயரமும் கொண்டதாக கோவில் அமைக்கப்பட்டுள்ளது. நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட சமணர்களின் சிறிய கயிலாயம், இந்திர சபை, ஜகன்னாத சபை போன்றவையும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பண்டைய இந்தியாவின் கனிமவியல் சாதனைகளுக்கு ஆகப்பெறும் சான்றாக விளங்கிவரும் டெல்லி இரும்புத் தூண், இரண்டாம் சந்திர குப்தர் காலத்தைச் சேர்ந்ததாக தூணில் இடம்பெற்றுள்ள சமஷ்கிருத குறிப்புகள் எடுத்துரைக்கின்றன. இருபத்து மூன்று அடி உயரமும் ஆறாயிரம் கிலோ எடையும் கொண்ட இரும்புத் தூண், நானூற்றி இரண்டாமாண்டில் குப்த அரசரால் மத்தியப் பிரதேசத்தின் விதிசா அருகேயுள்ள உதயகிரி குகைகளில் நிருவப்பட்டிருக்கலாமென கணிக்கப்படுகிறது. பின்னர் ஆயிரத்து இருநூற்றி முப்பத்தி மூன்றாமாண்டில் டெல்லிக்கு எடுத்துக் செல்லப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பல நூறாண்டுகளாகியும் துருப்பிடிக்காமல், சிதையாமல் நின்று கொண்டிருக்கும் குப்தர் கால இரும்புத்தூண், பண்டைய கால இரும்புக் கொல்லர்களின் சாதனைக்கு சரியான சான்றாகப் புகழப்படுகிறது.

இரண்டாம் சந்திர குப்தரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்தவராக சீனாவின் பௌத்தமதத் துறவி பாகியான் (337-422) அறியப்படுகிறார். பாசியான் அல்லது பாஹியான் 349 கும் 412 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நேபாளம், இந்தியா மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பௌத்தம் தொடர்பான நூல்களுக்காகவும், புத்தரது வாழ்விடங்களைக் காண்பதற்காகவும், பட்டுப் பாதையின் மூலம் இந்தியாவின் வடமேற்குப் பாதை வழியே பாடலிபுத்திரத்திற்கு வந்திருக்கிறார். இலங்கையிலிருந்து கடல் வழியாக சாவகம் சென்று சீனாவை அடைந்திருக்கிறார்.

பாஹியானின் பயணக் குறிப்பில், பட்டுப்பாதை வழியே காணப்பட்ட பல நாடுகளின் புவியியல் மற்றும் வரலாற்றுத் தகவல்கள் இடம் பெற்றுள்ளன. பௌத்த நாடுகளைப் பற்றியும் பாகியான் குறித்துள்ளார்.

அ-யாங் கில் பிறந்த குங் எனும் இயற்பெயர் கொண்ட பாசியான், சட்டத்தின் ஒளி பொருந்தியவர் எனும் பொருளில் பாஹியான் என பெயர் மாற்றம் பெற்றிருக்கிறார். பட்டுப்பாதையின் வழியாகவும், வியட்நாம் வழியாக கடல் பாதையிலும், முதலாம் நூற்றாண்டு காலத்தில் சீனாவில் அறிமுகமான புத்தமதம், இந்தியர் பெர்சியர் மற்றும் மத்திய ஆசியாவினர் போன்ற சீனர் அல்லாதவர் மூலமாகவே சீனாவில் அறியப்பட்டு வந்திருக்கிறது.

பாகியானுக்கு முன்னரும் சிலர் இந்தியாவிற்கு வர முயன்றிருப்பினும் அவர்களது பயணம் முழுமையடையவில்லை எனக் கூறப்படுகிறது. புத்த மத வினய பீடகத்தை சீன மொழியில் மொழிபெயர்க்க வேண்டியதை முக்கியத் திட்டமாகக் கொண்டிருந்த பாகியானின் வெற்றிகரமான சுற்றுப் பணத்திற்குப் பின்னர், சீனாவிலிருந்து பலர் பாகியானை முன்மாதிரியாகக் கொண்டு புத்தமதப் புனித பயணங்களை மேற்கொண்டிருக்கின்றனர். பாகியானின் இந்தியப் பயணம், சீனப் புத்தமத வளர்ச்சியில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளதென வரலாற்றாய்வாளர்களால் சான்றளிக்கப்படுகிறது.

கொடூரமான கோபி பாலைவனத்தைக் கடந்து வந்ததை பாகியான் விவரித்திருப்பது அவருடைய மன உறுதிக்குச் சான்றாகக் கொள்ளப்படுகிறது. பாலைநிலத்தில் ஏராளமான கெட்ட ஆவிகளும், கடுமையான சூறாவளிகளும் நிறைந்திருந்ததாகவும், வானத்தில் பறவைகளோ நிலத்தில் விலங்குகளோ இல்லையெனவும் பாகியான் குறிப்பிட்டுள்ளார். எல்லாத் திசைகளும் ஒன்று போலவே தெரிந்ததில், காய்ந்து கிடந்த எலும்புகளைக் கொண்டே எத்திசையில் செல்வதென்பதைக் தீர்மானித்ததாகவும் பயணக் குறிப்பு கூறுகிறது.

வடகிழக்குச் சீனாவின் கோதான் நகரையடைந்து, உயரமான மலைகளைத் தாண்டி, நெடும் பயணத்திற்குப் பின் வடமேற்கு இந்தியாவை அடைந்திருக்கிறார். புத்தர் பிறந்த லும்பினி முதலான முக்கிய இடங்களைப் பார்வையிட்டிருக்கிறார். சமஷ்கிருதம் பயின்றிருக்கிறார். புத்த மதத்தின் பல பிரிவுகளிலிருந்தும் மூல நூல்களைத் திரட்டியிருக்கிறார். இலங்கையில் இரு ஆண்டுகள் தங்கியிருக்கிறார்.

சாவகத்தில் கப்பலேறி இருநூறு நாட்களுக்கும் மேலான கடற்பயணத்தின் முடிவில், வடக்கு சீனாவின் ஷாங்டங்கை அடைந்து, வினய பீடகத்தின் மொழிபெயர்ப்பில் மீதிக் காலத்தைக் கழித்திருக்கிறார். புத்தமதத்தின் மற்ற பல சிறந்த நூல்களையும் மொழிபெயர்த்தவராக அறியப்படும் பாசியான், புத்தமத நாடுகளின் ஆவணம் என்ற தலைப்பிலான நூலொன்றையும் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது. பெருமைக்குரியவராக அறியப்படும் பாகியானோடு, புத்தபத்தர் போன்ற இந்திய புத்தமத அறிஞர்கள் பலரும் உடன் சென்றதாகவும் குறிப்பிடப்படுகிறது. பாகியான் காலத்திற்கு முன்னர் வரை ஒருவழிப்பாதையாக மட்டுமேயிருந்த சீனப் பயணம், பின் இருவழிகளிலும் பரிமாற்றத்திற்கு வழி வகுத்திருக்கிறது. அவ்வகையில் பெருமதிப்பிற்குரிய பாஹியான், இந்தியா - சீன நல்லுறவின் முன்னோடி என்பதில் ஐயமில்லை.

சீனப் பயணி பாஹியான் இந்தியாவிற்கு வந்துசென்று இருநூறு ஆண்டுகளுக்குப்பின், இந்தியாவிற்கு வந்த புகழ்பெற்ற சீனப் பயணி சுவான்ஸாங் (602-664). அப்போது சீனாவை ஆண்டு கொண்டிருந்தது லீ அரச குடும்பம் தோற்றுவித்த தாங் அரச குலம் (618-907). தாங் அரசாட்சிக் காலத்தில், சீன இலக்கியங்கள் செழிப்படைந்ததாகவும், சீன நாகரிகம் சிறப்படைந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. சீனாவின் நான்காயிரமாண்டு அரச மரபில் முழு அதிகாரம் கொண்ட அரசியாக ஆட்சிபுரிந்தவரான ஷாவோ அல்லது வூ ஹேவ் அல்லது வூ ஜிசியன் பேரரசியார் (ஆ.காலம் 690-705), தாங் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தவராக அறியப்படுகிறார். வூ ஜிசியன் அரசியாரின் பேரன் பேரரசர் சுவாங்ஜோங், தாங் அரசமரபில் அதிக ஆண்டுகள் (நாற்பத்தி மூன்று) ஆட்சி புரிந்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

தாங் அரசாட்சி சீனாவின் பொற்காலமாகப் புகழப்படுகிறது. அனைத்து நிலைகளிலும் மக்களின் வாழ்வு மேம்பட்டிருக்கிறது. காகிதங்களில் பணம் அச்சிடப்பட்டிருக்கிறது. நெல் அதிகம் விளைவிக்கப்பட்டு மக்கள் தொகை பல்கிப் பெருகியிருக்கிறது.

தாங் அரச மரபின் கடைசிக் காலங்களில் கலகங்களும், உள்நாட்டுப் போர்களும் நடைபெற்றிருக்கின்றன. சீன நாடு பத்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஐந்து விதமான அரசமரபுகளால் ஆளப்பட்டு வந்த நிலையில், அடுத்து வந்த ஸாங் அரச மரபு (907-1279), நிலைத் தன்மையை ஏற்படுத்தியதோடு, சீனாவை நவீன

காலத்திற்கு அழைத்து வந்ததாகவும் வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. பேரரசர் ஜென்சாங் (ஆ.காலம் 997-1022) அரசாட்சியின் போது, சம்பா பேரரசிலிருந்து நெல்லைப் பெற்று, சீனாவில் அறிமுகப்படுத்தியவராகக் குறிப்பிடப்படுகிறார்.

சீனாவின் ஸாங் ஆட்சிகாலத்திலிருந்த ஹான் சீனரான சூ சாங் (1020-1101) மிகச் சிறந்த அறிஞராகப் புகழப்படுகிறார் அறிவியலாளர், கணிதவியலாளர், அரசியல்வாதி, வானியல் நிபுணர், நிலவியலாளர், மருத்துவர், மருந்தியலாளர், கனிமவியலாளர், விலங்கியல் நிபுணர், தாவர அறிஞர், இயந்திரவியல் மற்றும் வடிவமைப்பு பொறியாளர், கவிஞர், சாங் அரசின் நல்லெண்ணத் தூதுவர் என அனைத்துத் துறைகளோடும் தொடர்பு கொண்ட பேரறிஞராக அடையாளம் காணப்படுகிறார்.

ஸாங் அரச மரபை முடிவுக்குக் கொண்டு வந்தவர் மங்கோலியரான குப்ளகான் (1215-1294). மங்கோலியப் பேரரசை உருவாக்கியவரும் வரலாற்றில் மாவீரராகக் குறிப்பிடப்படுபவருமான செங்கிஸ்கானின் (1162-1227) பேரனாக குப்ளகான் அறியப்படுகிறார்.

மங்கோலியர்களின் தந்தை எனப் புகழப்படும் பேரரசர் செங்கிஸ்கான், வடகிழக்கு ஆசியாவிலிருந்த பழங்குடிகளை ஒன்றிணைத்து மங்கோலிய அரசினை உருவாக்கியிருக்கிறார். ஓயாத போர்கள் மூலம் ஆசியா மற்றும் ஐரோப்பாவின் பெரும்பகுதியை மங்கோலிய அரசுரிமையின் கீழ் கொண்டு வந்தவராக அறியப்படுகிறார். போர்களில் வரைமுறைகளற்ற கொடூரங்களை மக்கள் கூட்டத்தின் மேல் கட்டவிழ்த்து விட்டவராக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செங்கிஸ்கான், கைப்பற்றிய பகுதிகளை மகன்களுக்கும், பேரன்களுக்கும் பிரித்துக் கொடுத்திருக்கிறார். கிழக்கு ஐரோப்பா, தென்மேற்கு ஆசியா, சீனா என அனைத்துப் பகுதிகளிலும் மங்கோலியர் ஆட்சியே நிலவியதால், கான்களின் ஆட்சிக்காலத்தில் பட்டுப்பாதை வணிகம் எவ்விதத் தடையுமின்றி நடந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

சீனாவின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதியையும் ஒருங்கிணைத்து, யுவான் அரசாட்சியினை (1271-1368) அரசாண்ட குப்ளகான் அரசர் காலத்தில், மங்கோலியர் அனைத்து நிலைகளிலும் அதிகாரம்மிக்கவர்களாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

மங்கோலியருக்கு நிலங்கள் பெருமளவில் வழங்கப்பட்டிருக்கின்றன. யாங் பேரரசர் குப்ளேகான் ஆட்சியின் ஆயிரத்து இரு நூற்றி நான்காமாண்டில், வெனிஸ் நகரப் பயணியான மார்கோபோலோ சீனாவிற்கு வந்திருக்கிறார்.

மங்கோலியர்களின் யுவான் அரச வீழ்ச்சிக்குப் பின் சீனாவின் மிங் அரசாட்சி (1368-1644) ஆண்டிருக்கிறது. சீனாவின் ஆன் அரச மரபின் ஆட்சியான மிங் அரசு காலத்தில், நான்கிங்கிலிருந்து பெய்ஜிங் நகருக்கு தலைநகர் மாற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. சீன வரலாற்றில் மிங் அரசாட்சிக் காலம் மற்றுமொரு பொற்காலமாகவே குறிப்பிடப்படுகிறது. சீனாவின் இலக்கியங்கள், ஓவியங்கள், கவிதைகள், இசை, நாடகங்கள் போன்றவை மிங் பேரரசர்கள் காலத்தில் செழிப்படைந்ததாகக் கூறப்படுகிறது. கல்விகற்றவர்கள், வசதியானவர்களிடையே செவ்வியல் சீனமும், பெண்கள், வணிகர்கள், எழுத்தர்கள் போன்றோரிடையே மாண்டரின் மொழியில் எழுதப்பட்ட பேச்சு வழக்கு சீனமும் செல்வாக்குப் பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

மிங் ஆட்சிக் காலத்தில், நாட்டுப்புற கடவுள் நம்பிக்கை, மூன்று வழிகளான கன்பூசியம், தாவோயிசம், புத்தம் போன்றவற்றோடு, இஸ்லாமும், திபெத்திய லாமா புத்தமரபும் பரவலாக இருந்திருக்கிறது. தாங் அரசாட்சியின் போதே சீனாவிற்கு இஸ்லாம் அறிமுகமாகியிருக்கிறது. மிங் அரசின் ஆரம்ப காலங்களில் கிறித்துவம் தடைசெய்யப்பட்டிருந்தாலும் பின்னர் வந்த ஜெசூட் பாதிரியார்கள் மூலமாக மேற்கத்திய கல்வியும் அறிவியலும் நுழைந்திருக்கிறது. ஆயிரத்து ஐந்நூற்றி எழுபத்தி ஒன்பதில் மகா பகுதியில் புனித பால் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பியர் காய்கறி வகைகளும் சீன மண்ணில் புதிதாக பயிரிடப்பட்டிருக்கின்றன.

மிங் அரசை உருவாக்கியவரான ஜி யாங்ஷாங் எனும் ஹோங்வூ பேரரசர் (1328-1398) மிகச் சிறந்தவராக வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறார். மங்கோலியர்களை வெற்றி கொண்டதுடன், நிலச் சீர்திருத்தம், வேளாண்மை வளர்ச்சி என மக்களின் வாழ்வை மேம்படுத்துவதிலும், நிலையான அட்சி முறைக்கு, வழிவகுத்தவராகவும் புகழப்படுகிறார். ஹேங்வூ அரசரது பல மகன்களும், வடபகுதி சீனா முழுவதும் சிற்றரசர்களாக நியமிக்கப்பட்டு ஆட்சி முறை கவனிக்கப்பட்டிருக்கிறது.

மிங் அரசாட்சியின் மூன்றாவது பேரரசரும், ஹோங்வூ பேரரசரின் நான்காவது மகனுமான சூடி எனும் யோங்லி பேரரசர் ஆட்சிக் காலம் (1402-1424) பல வகைகளிலும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

யான் பகுதியின் அரசராக இருந்த சூடி, பேரரசராக இருந்த அண்ணன் மகன் சூ யான்வென் என்ற ஜீயன்வென் பேரரசருக்கு (1377-1402) எதிராகக் கிளர்ச்சி செய்து, எல்லையில்லா மகிழ்ச்சி எனும் பொருளில் யாங்லி பேரரசராக முடிசூட்டிக் கொண்டிருக்கிறார்.

யாங்லி பேரரசர் ஆட்சிக்கு வந்தவுடன் தலைநகரை நான்சிங்கிலிருந்து பீஜிங்க்கு மாற்றியிருக்கிறார். பீஜிங்கில் புகழ்பெற்ற பேரரண் நகரம் எனும் பீஜிங் அரண்மனையை (1406-1420) உருவாக்கி சாதனை புரிந்திருக்கிறார். மறைக்கப்பட்ட அல்லது அனுமதி மறுக்கப்பட்ட எனும் பொருளில் அழைக்கப்படும் பேரரசர்களின் அரண்மனை, மிங் அரசமரபிற்கும், அடுத்து வந்த கிங் அரசாட்சிக்கும் வசிப்பிடமாக இருந்திருக்கிறது. ஆயிரத்தித் தொள்ளாயிரத்து பதினொன்றாம் ஆண்டு வளர வசிப்பிடமாக புகழ்பெற்று விளங்கிய பீஜிங் அரண்மனை, அரசர்களின் வசிப்பிடமாக மட்டுமல்லாமல் அலுவலமாகவும், கருவூலமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

உலகின் மிகச்சிறந்த அரண்மனையாகப் புகழப்பெறும் பீகிங் அரண்மனைக் கட்டுமானத்தில், பத்து லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. சீனாவின் பழமை மாறாமல் கட்டப்பட்டுள்ள அரண்மனை, நூற்றி எண்பது ஏக்கர் பரப்பளவில், ஆயிரம் கட்டிடங்களையும், ஒன்பதாயிரம் அறைகளையும் கொண்டதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த மதில் சுவர்களையும் அகழிகளையும் கோபுரங்களையும் நுணுக்கமான கலை வேலைப்பாடுகளையும் கொண்ட பீகிங் அரண்மனை கட்டுவதற்கு பெருமளவிலான மரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

யாங்லி பேரரசர் காலத்தில் ஜெங் ஹி என அழைக்கப்பட்ட மா ஹி (1371-1435), கடற்பயணங்கள் மூலம் புகழ்பெற்றவராக அறியப்படுகிறார். ஏழு கடற்பயணங்கள் மேற்கொண்ட ஜெங்ஹி, ஆசிய ஆப்பிரிக்கப் பகுதிகளின் ஏறக்குறைய முப்பது நாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுவராகப் பயணம் புரிந்திருக்கிறார். முந்நூற்றிப் பதினேழு கப்பல்களும், இருபத்தியேழாயிரம் கப்பல் பணியாளர்களம் சூழ, நானூறு அடி நீள மிகப்பெரிய கப்பலில் பயணம் செய்த

செங்ஹியின் நட்புறவு பயணத்தில் சீன வணிகமும் முன்னெடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

மிங் அரசமரபு காலத்தில் சீனப்பெருஞ்சுவர் சிறப்பாக கட்டமைக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வந்திருக்கிறது. மிங் காலத்திய சுவர் நேர்த்தியாகக் கட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. உலகின் அதிசயமாகக் கருதப்படும் சீனப் பெருஞ்சுவர் மங்கோலியாவிலிருந்தும், மஞ்சூரியாவிலிருந்தும் வரும் படையெடுப்புகளைத் தவிர்க்கும் பொருட்டு, பல கட்டங்களாக கொரியாவின் எல்லையிலிருந்து கோபி பாலைவனம் வரை, சுமார் ஆறாயிரத்து நானூறு கிலோ மீட்டர் அளவுக்கு வலிமையானதொரு அரணாக, நீண்ட கோட்டையாக கட்டப்பட்டிருக்கிறது. பேரரசர் சின் சி ஹீவாங்கினால் கட்டப்பட்ட சுவரே மிகப் பெரியதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஒருங்கிணைந்த சீனாவின் முதல் பேரரசராக யிங் ஷெங் எனும் இயற் பெயர் கொண்ட சின் ஷி ஹுவாங் (பொ.ஆ.முன். 259-210) அறியப்படுகிறார். பண்டைய சீனாவின் சின் எனும் பகுதியின் அரசராக இருந்த சீன் ஷீ ஷீவாய், பரந்து விரிந்திருந்த சீனாவை, ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததற்கும், சட்டத்தின் மூலமான ஆட்சி என்பதனை செயல்படுத்தியதற்காகவும் புகழப்படுகிறார். சீன் பேரரசில் முதன்மை அமைச்சராக இருந்த லி ஸி (பொ.ஆ.முன் 280-208), சீன வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க ஆளுமையாக அறியப்படுகிறார். சட்டங்களை ஒருங்கிணைத்தும், பேரரசை சிறப்பாக வழிநடத்தியும், உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியும், சீன எழுத்துச் சீர்திருத்தம் செய்தும், கலாச்சார நீதியாகப் மக்களை ஒற்றிணைத்தும், சிறப்பான ஆட்சி நிர்வாகத்தை அளித்ததாகப் புகழப்படுகிறார்.

கன்பூசியத்தைத் தடைசெய்தும் அறிவுக் களஞ்சியங்களான புத்தகங்களை எரித்தும், அறிஞர்களை பழிவாங்கியும் முறையற்ற ஆட்சிசெய்தவராகவும் சின் ஷீ ஹுவாங் பேரரசர் குறிப்பிடப்படுகிறார். பேரரசரின் அடக்கத்தளமருகே கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் சிலைகள் அதிசயமாக வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. ஒருவருக்கொருவர் முக அமைப்பு மாறுபட்ட எட்டாயிரம் போர் வீரர்கள், அறுநூறு குதிரைகள், நூற்றி ஐம்பது தேர்கள் என அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏழு சிற்றரசர்களை வெற்றி கொண்டு, சீனாவை முழுமைப்படுத்திவராக அறியப்படும் சின் ஷு பேரரசர், சிற்றரசர்கள் கட்டிய சுவர்களை ஒன்றிணைத்தும் இணைப்புச் சுவர்கள் எழுப்பியும் பெருஞ்சுவரை கட்டமைத்திருக்கிறார்.

ஆரம்பகட்டத்தில் மண் கொண்டு கட்டப்பட்ட சுவர், பின்னர் கற்களும், செங்கலும் கொண்டு கட்டப்பட்டிருக்கிறது. குன்றுகள் மீதும், சரிவுகள் மீதும், வளைவுகள் மீதும் தொடர்சியாகக் கட்டப்பட்டிருக்கும் பெருஞ்சுவர், சுமார் எட்டு மீட்டர் நீளமும், ஆறு மீட்டர் அகலமும் உடையதாகக் கட்டப்பட்டிருக்கிறது. சுவரில் இடையிடையே வீரர்கள் தங்குவதற்கு அறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சின் அரச காலத்திற்கு முன் இருந்தது போரிடும் நாடுகள் காலம். பொது ஆண்டிற்கு முன் நானூற்றி எழுபத்தி ஆறாம் ஆண்டிலிருந்து இருநூற்றி இருபத்தோரம் ஆண்டுவரை, இளவேனில் மற்றும் குளிர் காலத்தினைத் தொடர்ந்து உருவானதாகக் குறிப்பிடப்படுகிறது. போரிடும் நாடுகளின் பதிவுகள் எனும் வரலாற்றுத் தொகுப்பிலிருந்தே, போரிடும் நாடுகளின் காலம் என்ற சீன அரச மரபுபெயரிடப்பட்டிருக்கிறது. சீனாவின் வெண்கலக் காலத்தினைத் தொடர்ந்து இரும்புகாலம் உருவாகிய காலகட்டமாக போரிடும் நாடுகள் காலம் அமைந்திருக்கிறது. இரும்பின் பயன்பாடு அதிகரித்ததும் போர்க் கலையில் பல மாறுபாடுகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. சீனாவின் மெய்யியில் கருத்துகள் வளர்ச்சிபெற்றதும் போரிடும் நாடுகள் காலத்திலேயே என்பதும் குறிப்பிடத்தக்கது.

போரிடும் நாடுகள் காலத்திற்கு முன்னிருந்தது சவு அரசாட்சிக் காலம் (பொ.ஆ.முன். 1045 - பொ.ஆ.முன் 256). சீனாவில் அதிக காலம் அரசாட்சி செய்த மரபாகக் கூறப்படும் சவு அரசாட்சி, பின் வூ ஜோ எனும் மன்னரால் தொடங்கப்பட்டிருக்கிறது. ஆசியாவின் மிக நீளமான யான்ஷி ஆற்றையும், மிக நீளமான மஞ்சள் ஆற்றையும் இணைக்கும் விதமாக, சீனாவில் தோண்டப்பட்டுள்ள உலகின் மிக நீளமான செயற்கைக் கால்வாயான சீன பெரிய கால்வாய், சவு அரசுரிமையின் வூ பேரரசர் ஆட்சிக் காலத்தில் (பொ.ஆ.முன் 495-473), நானூற்றி எண்பத்தி ஆறாமாண்டில் தொடங்கப்பட்டிருக்கிறது. ஹான் கோ வூ என அழைக்கப்படும் வடக்குப் பகுதி கால்வாயின் பெரும் பகுதி, வூ அரசாட்சியில் தோண்டப்பட்டிருக்கிறது.

ஆயிரத்து எழுநூற்றி எழுபத்தி ஆறு கிலோ மீட்டர் நீளமுள்ள பெரிய கால்வாய், சில இடங்களில் நாற்பத்தியிரண்டு மீட்டர் ஆழமுள்ளதாகக் கூறப்படுகிறது. சீன வரலாற்றின் மத்திய காலத்திலிருந்த சூ அரசாட்சி (பொ.ஆ.பின் 581-618) காலத்தில், பீகிங் நகரையும் காங்சவூ நகரையும் இணைக்கும் விதமாக பெரிய கால்வாய் தோண்டி முடிக்கப்பட்டு, தலைநகருக்கு தானியங்கள் கொண்டு செல்லவும், படைகளின் விரைவான இடம் பெயர்தலுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சூ அரசுரிமையைத் தோற்றவித்த யாங் ஜியாங் எனும் பெயர் கொண்ட பேரரசர் சூயின் வென் (541-604) மற்றும் அவரது மகன் பேரரசர் லோ யாங் (605-614), பெரிய கால்வாய் உருவாக்கத்தில் பெரும்பங்கு பெற்றவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். மிங் வம்ச யோங்லி பேரரசர் காலத்தில் பெரிய கால்வாய் முழுவதுமே சிறப்பாக திருத்தி அமைக்கப்பட்டதாகவும், கால்வாய் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டதாகவும் பாராட்டப்படுகிறது.

சவு அரச மரபுக்கு முன்பிருந்தது ஷாங் அரசாட்சி (பொ.ஆ.முன் 1600-1046). உயர்ந்தது எனும் பொருளில் பெயரிடப்பட்ட ஷாங் அரசுரிமையில் முப்பத்தியிரண்டு அரசர்கள் குறிப்பிடப்படுகின்றனர். ஷாங் அரசர்கள் நன்முறையில் அரசாட்சி நடத்தியவராகவும், நாடு பல விதங்களிலும் முன்னேற்றம் அடைந்ததாகவும் வரலாற்றாசிரியர்களால் அறியப்பட்டிருக்கிறது. சீன வரலாற்றின் படி, முதன் முதலாக அரசாட்சியை நிறுவியதாக சியா அரச மரபு (பொ.ஆ.முன் 2100-1600) குறிப்பிடப்படுகிறது.

சின் அரச மரபிற்குப் பின் ஒன்றுபட்ட சீனாவில் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததாக ஆன் அல்லது ஹான் அரசமரபு (பொ.ஆ.முன் 206 - பொ.ஆ.பின் 220) குறிப்பிடப்படுகிறது. ஆன் அரச மரபின் ஆட்சிக் காலம் சிறந்ததொரு பொற்காலமாகக் சீன வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது. கன்பூசிய கோட்பாடுகளே ஆன் அரசின் மதமாக விளங்கியிருக்கிறது. வேளாண்மையிலும், வணிகத்திலும் சிறப்பான முன்னேற்றங்களை சீனா அடைந்திருக்கிறது. ஆன் பேரரசர்களால் பட்டுப்பாதை உருவாக்கப்பட்டு வணிகம் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. பட்டுத் தொழில் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது. கல்வி நாட்டுடமை ஆக்கப்பட்டு, அரசாங்கப் பணிக்கு தகுதியானவர்கள் பொதுத் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்.

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த லியூ பாங் எனப் பெயர் கொண்ட பேரரசர் காசூ (பொ.ஆ.முன் 256 அல்லது 247 - 195) ஆன் அரச அரச மரபை உருவாக்கியவராக அறியப்படுகிறார். பேரரசினை பல்வேறு பகுதிகளாகப் பிரிந்து அங்கு குறிப்பிட்ட அளவிற்கான சுதந்திரம் கொண்ட சிற்றரசர் ஆளுமாறு நிர்வகித்திருக்கிறார். ஆன் அரசமரபின் வூ பேரரசர் (பொ.ஆ.முன் 156-87) பேரரசை மிகப் பரந்துபட்டதாக விரிவடையச் செய்தவராகவும், பட்டுப் பாதையை உருவாக்கியவராகவும், அயல் நாட்டுக் கொள்கைகளைத் திறமையாகக் கையாண்டவராகவும் புகழப்பட்டிருக்கிறார். ஆன் ஆட்சிக் காலத்தில் அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளும் சிறப்பாக முன்னெக்கப்பட்டதாகக் குறிப்புகள் காட்டுகின்றன. சீனர்களின் அனேகக் கண்டுபிடிப்புகளில் குறிப்பிடத்தக்கவையான திசைகாட்டி, வெடிமருந்து, காகிதத் தயாரிப்பு, அச்சுத் தொழில் போன்றவை ஆன் அரச மரபுக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஹான் அரசாட்சிக்குப் பின் வந்தது மூன்று அரசாட்சிகள் காலம் (பொ.ஆ. 220-280). சீன வரலாற்றில் மிகக் கடுமையான போர்கள் நடைபெற்ற கால கட்டமாக மூன்று அரசாட்சிக் காலம் குறிப்பிடப்படுகிறது. ஹான் அரசுரிமை வீழ்ச்சியுற்ற பின். வேய் அரசமரபு. சூ அரசமரபு மற்றும் வூ அரச மரபு எனும் முக்கியமான மூன்று அரசமரபுகள் உருவாகி, ஓயாத போர்களில் ஈடுபட்டிருக்கின்றன. சிறு காலப்பகுதியாக இருந்த போதிலும் பல முக்கியமான தொழில் நுட்பங்கள் உருவாகியதாக மூன்று அரசாட்சிக் காலம் புகழப்படுகிறது.

மூன்று அரசாட்சிக் காலத்திற்குப் பின் சிமா குலத்தைச் சேர்ந்த சிமா யான் என்ற பேரரசர் வூ ஜின் (239-290) என்பவரால், சீனாவை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட அரச மரபு யின் அரசமரபு (265-420) என சீனாவியல் வரலாற்றாசிரியர்களால் குறிக்கப்படுகிறது. வூ அரசரால் ஒன்றிணைக்கப்பட்ட யின் அரசாட்சிக் காலம், லியோ யாங்கைத் தலைநகராகக் கொண்ட மேற்கு யின் (265-316) அரசாட்சி எனவும், ஜியான் காங்கைத் தலைநகராகக் கொண்டு பேரரசர் யான் (273-323) மூலமாக உருவாக்கப்பட்ட இரண்டாம் கட்ட யான் அரசாட்சி, கிழக்கு யின் அரசாட்சி (317-420) எனவும் அழைக்கப்படுகிறது.

சீனாவில் பல புகழ்பெற்ற கல் குகைகள் செதுக்கப்பட்டுள்ளன. கல்குகைகள் மிகப்பெரிய அளவினதாகவும் கலை நேர்த்திமிக்க சிற்பங்களைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. லாங்மென் கல்குகை, முகௌ கல்குகை மற்றும் யுங்காங்

கல்குகை ஆசியவை சீனாவின் கல் கலைக்களஞ்சியங்கள் எனப் புகழப்படுகின்றன. மூன்று குகைகளும் பண்டைய புத்தமத சிற்பக்கலைக்கு சான்றுகளாக விளங்குவதாகக் குறிப்பிடப்படுகின்றன.

கான்சு மாநிலத்தின் மிங்சா மலையின் கிழக்கு அடிவாரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முகௌ கற்குகைகள், பொது ஆண்டின் முன்னூற்றி அறுபத்தி ஆறாம் ஆண்டில் புத்த தியானத்திற்கும் வழிபாட்டிற்கும் செதுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. டுஸ்காங் நகரின் தென்கிழக்காக இருபத்தைந்து கிலோமீட்டர்கள் தூரத்தில் சுமார் நானூற்று தொன்னூற்றி இரண்டு புத்த கோவில்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குகைள் பல்வேறு ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாங் யாங்லு (1849-1931) என்ற தாவோயிசத் துறவி பதினேழாம் எண் குகையான புகழ்பெற்ற நூல்நிலைய கல்குகையினைக் கண்டறிந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். குன்காங் எழுத்துவடிவங்கள் என அறியப்படும் பல புகழ்பெற்ற பண்டைய நூல்கள், நூல்நிலையக் குகையிலிருந்து சேகரிக்கப்பட்டிருக்கின்றன. புத்த மதத்தோடு தொடர்புடைய பல்வேறு புத்தகங்களோடு, தாவேயிசம், ஆரம்பகால கிறித்துவம், மணிச்சேயம் போன்ற பிற மதங்களின், பல்வேறு மொழிகளின் தொடர்புடைய, பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட நூல்களும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

பதினேழாம் எண் கல் குகையினுள் 406 மற்றும் 1002-ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த பல்லாயிரம் புத்தகங்களும் எழுத்து வடிவங்களும் பாதுகாக்கப்பட்டு, பதினோறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குகை அடைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. 1900மாவது ஆண்டில் கண்டறியப்பட்ட குகை நூலகத்திலிருந்து, புகழ்பெற்ற தொல்லியலாளரும் வரலாற்றாசிரியர்களுக்குமான ஆதெல் ஸ்டீன், பால் பெல்லியட், ஒடனி கோசுய், ஒல்டன்பர்க் போன்றவர்கள் ஏடுகளை வாங் யாங்லுவிடமிருந்து பணம் கொடுத்துப் பெற்றிருக்கின்றனர். எஞ்சியிருந்த ஏடுகள் பின்னர் பீசிங் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. ஏடுகள் மட்டுமின்றி பல அருமையான ஓவியங்களும் சிலைகளும் விற்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சைனாவின் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த லாங்மென் கற்குகை, ஹெனான் மாணத்தின் பழமையான லொயாங் நகரிலிருந்து பதிமூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. லுங்மென் பள்ளத்தாக்கின் இயற்கை எழில் கொஞ்சும் பகுதியில் அமைந்துள்ள ஏறக்குறைய இரண்டாயிரத்து முந்நூற்றி நாற்பத்தைந்து குகைகளில், ஒரு லட்சத்திற்கும் அதிகமான புத்தர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. நாற்பது சதவிகித கற்குகைகள் வடக்கு வேய் அரசாட்சிக் காலகட்டத்திலும், அறுபது சதவிகித கற்குகைகள் தாங் அரசாட்சிக் காலத்திலும் உருவாக்கப்பட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன.

ஐந்தாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் யீ ஆற்றையொட்டிய லாங்மென் மலையில் வடிக்கப்பட்டுள்ள குகைகளில், வுன்சியே கோவில் மிகப்பெரியதாக அறியப்பட்டிருக்கிறது. முப்பது மீட்டர் நீளமும் முப்பது மீட்டர் அகலமும் கொண்ட குகைக் கோவிலினுள்ளே, பதினேழு மீட்டர் நீளமுள்ள புத்தர் சிலை உயிர்ப்புடன் படைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. லுங்மென் கற்குகைகளும் சிலைகளும் சீன வரலாற்றோடு தொடர்புடைய அரிய கலைக்கோவிலாக விளங்குகின்றன.

வடக்கு சீனாவின் சாங்சி மாகாணத்தில் அமைந்துள்ளது யுன்காங் கற்குகை. சீனாவில் ஐந்தாம் மற்றும் ஆறாம் நூற்றாண்டு கால கட்டத்திய புத்தமத வளர்ச்சியை விளக்கும் சிறந்ததொடு கலைச் சின்னமாக யுன்காங் கற்குகை குறிப்பிடப்படுகிறது. வெவ்வேறு காலகட்டப் பகுதிகளில் செதுக்கப்பட்டுள்ள இருநூற்றி ஐம்பத்து இரண்டு கற்குகைகளினுள், மிகப்பெரியதும் சிறியதுமான ஐம்பத்தோராயிரம் புத்தர் சிலைகள் வடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சீனாவின் மெய்யியலிலும் மத வழிபாட்டிலும் பண்பாட்டிலும் குறிப்பிடத்தக்க தாக்கங்களை உண்டு பண்ணிய மலையாக டாய் மலை போற்றப்படுகிறது. புனிதமலையாகக் கருதப்படும் டாய் மலையில் சீனாவின் முதலாவதான ஷியா அரசர்கள் தொடங்கி, இறுதியான சிங் அரசர்கள் வரை, வழிபாடுகளும் சடங்குமுறைகளும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. அரசர்களது சடங்குகள், அரசமரபின் அலுவல்முறைச் சடங்காக பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன.

கிழக்குச் சீனத்தின் சான்டோங் மாகாணத்தின் தலைநகர் ஜினானுக்குத் தெற்கே கடல் மட்டத்திலிருந்து ஐந்தாயிரத்து இருபத்தொன்பது அடிகள் உயரத்தில்

அமைந்திருக்கும் டாய் மலை, சூரிய உதயம், பிறப்பு, மீட்சியோடு தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. மலையுச்சியின் பச்சைக்கல் பேரரசர் சிகரம், அரச சடங்குகளுக்கு முதன்மையானதாக இருந்து வந்துள்ளது. பேரரசர்கள் வானோர்களுக்கு சிகரத்திலும் (பெங்) பூமியிலுள்ளவர்களுக்கு அடிவாரத்திலும் (ஷான்) சடங்குகள் செய்திருக்கின்றனர். சடங்கின் ஒரு அங்கமாக, கற்கோவில் கட்டுவது பேரமைதி பெற்றதற்கான அடையாளமாகக் கருதப்பட்டிருக்கிறது.

ஏராளமான கோவில்களையும் கற்கோவில்களையும் கல்வெட்டுக்களையும் கொண்டுள்ள டாய் மலை, பௌத்தம் மற்றும் தாவோயிய சமயங்களின் வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அகவெழுச்சி தேடி பல புகழ்பெற்ற கவிஞர்களும் எழுத்தாளர்களும் தாய் மலைக்கு வந்ததாகவும் அறியப்பட்டிருக்கிறது.

பெரியவற்றிற்கெல்லாம் பெயர்பெற்று விளங்கும் சீனாவில் சிறுமிகளின் கால் விரல்களை வளைத்தும், ஒடித்தும், நீங்காத துன்பத்தையும், முடத்தையும் கொடுத்த குட்டைப்பாத வழக்கம் யாரால் உருவாக்கப்பட்டது என சரியாக அறியப்படவில்லை. நான்கு, ஐந்து வயதான சிறுமிகளின் கால் விரல் நகங்களைப் பிடுங்கி, விரல்களை பாதத்தினுள் பதிந்து, எலும்புகளை உடைத்து நொறுக்கி, பட்டுத்துணியால் மிக இறுக்கமாகக் கட்டி தாமரைப் பாதம் எனச் சொல்லக் கூடிய சிறு பாதத்தை உண்டாக்கும் நடைமுறை சாங் அரசாட்சிக் காலத்தில் வெகுசிறப்பாக நடந்தேறியதாகக் குறிப்பிடப்படுகிறது. முதலில் வசதிபடைத்தவர் வீட்டுப் பெண்களிடையேயும், பெண்கள் உழைக்கத்தேவையில்லை எனும் நிலையிலிருந்த வீட்டுப் பெண்களிடையேயும், பரவலாக இருந்த சிறுபாதப் பழக்கம், பின்னர் சீனாவின் அனைத்துப் பெண்களிடையேயும் பரவலாகியிருக்கிறது. அழகு எனும் பெயரில் பரவலான சிறு பாதப் பழக்கத்தால் வாழ்நாளெல்லாம் பெண்கள் அவதிப்பட்டதாக பதிவுகள் எடுத்துரைக்கின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கூட நாற்பதிலிருந்து ஐம்பது சதவிகிதப் பெண்களிடையே சிறுபாதப் பழக்கம் காணப்பட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன. சிறுபாதம் கொண்ட பெண்களுக்கு திருமணச் சந்தையில் நல்ல வரவேற்பு இருந்ததாகக் கூறப்படுகிறது. ஏழ்மை நிலையிலிருந்த சீனக் குடும்பங்களில் கூட குடும்பத்தின் மூத்த பெண்ணிற்கு சிறுபாதம் கட்டியிருக்கின்றனர். வாழ்நாள் முழுதும்

வேலை செய்ய இயலாமல் போகும் சிறுபாதக் கட்டமைப்பில், பாதம் கட்டிக்கொண்ட பெண்ணிற்கு மற்றவர்களின் பணிவிடை அவசியமானதாகவும் இருந்திருக்கிறது.

பத்து சென்டிமீட்டர் அளவிற்கான குள்ள பாதத்திற்காக, சீனப் பெண்கள் படாதபாடு பட்டிருக்கிறார்களென்பதும், அதனை ஒழிப்பதற்கு சமூகவியலாளர்களும் சின் அரசமரபும் பெருமுயற்சி செய்திருக்கிறார்கள் என்பதும் சீனாவின் வரலாற்றோடு இரண்டறக் கலந்துள்ளது.

கால்பாதம் கட்டிக் கொண்டவர்களால் நடமாட முடியுமென்றாலும் இயல்பான பாதமுள்ளவர்கள் அளவிற்கு செயல்பட முடியாமல் இருந்திருக்கிறார்கள். பணக்காரர்களைப் பார்த்து ஏழைப்பெண்களும் தாமரைப் பாதத்திற்கு ஆசைப்பட்டது வியப்பிற் குரியது. நடனமாடும் பெண்களிடையே சிறு பாதம் பெற்றிருப்பது மிகவும் வரவேற்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சீனாவின் ஹக்கா குலத்தைச் சேர்ந்த சீனப் பெண்களும், மஞ்சூரிய, மங்கோலியப் பெண்களும், திபெத்தியப் பெண்களும், சிறுபாதம் கட்டிக் கொள்ளவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. ஹுன் இன சீன முஸ்லிம்களும் சிறுபாதம் கட்டியிருந்ததாக பதியப்பட்டுள்ளது. சீனாவின் இனக்குழுவில் ஹான் சீனரே அதிகமென்பதும், ஹான் இனத்தாரே அனைத்திலும் முன்னணி வகுப்பதும் குறிப்பிடத்தக்கது. 1957 ற்குப் பின்னரே தாமரைப் பாதக்கட்டு முழுமையாக சீன சமூகத்திலிருந்து அகற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

சீனாவின் கடைசி அரச மரபான சிங் அரசமரவு (1644-1911), மஞ்சு அரச மரபென்றும் அழைக்கப்படுகிறது. வடகிழக்குச் சீனாவில் வாழ்ந்த சிறுபான்மை துங்குசிய இனக்குழுவான மஞ்சூரியர்கள், மிங் அரச மரபை அகற்றிவிட்டு சீனாவை முழுமையாகக் கைப்பற்றி அரசாண்டிருக்கின்றனர். மஞ்சூரியர்களையும், மங்கோலியர்களையும் சீனாவிற்குள் நுழையவிடாமல் தடுப்பதற்காகக் கட்டப்பட்ட பெருஞ்சுவர் வழியாக ஊடுறுவியே மஞ்சுபடை 1644-ல் பீகிங் நகரை கைப்பற்றியிருக்கிறது.

மஞ்சு பகுதியிலிருந்த மக்களை ஒன்றுதிரட்டி முதல் சிங் அரசாட்சியை நிறுவியவராக நுர்ஹசீர் (1559-1629) குறிப்பிடப்படுகிறார். மிங் அரசின் போது சிற்றரசராக இருந்த நுர்ஹசீர், மஞ்சு பழங்குடியினரிலிருந்த எட்டு குழுக்களை ஒன்றிணைத்து ஒரே அரசுரிமையின் கீழ் கொண்டுவந்திருக்கிறார். பின்னர் அவரது

மகனான ஹாங் டய்ஜி (1592-1643) மிங் அரசின் மீதும் போர் தொடுத்து, சீனாவின் முதல் மஞ்சு பேரரசான சிங் அரசமரபை நிறுவியிருக்கிறார்.

பீஜிங்கை கைப்பற்றியவராகவும், மஞ்சு அரசமரபை சீனா முழுமைக்கும் விரிவுபடுத்தியவராகவும், மஞ்சு அரசமரபின் மூளையாகச் செயல்பட்டவராகவும், இளவரசர் டோர்கான் (1643-1650) குறிப்பிடப்படுகிறார். ஹாங் டய்ஜிக்குப் பின் அரசரான ஆறுவயது ஷீன்ஷி பேரரசரின் மாமாவாகவும், பாதுகாவரலாகவும் இருந்த டோர்கான், ஷீன்ஷி அரசாட்சியின் தலைமை நிர்வாகியாகப் பணியாற்றியிருக்கிறார். படைகளை எட்டு கொடிகளின் கீழ் அணிவகிக்கும் முறைமையைக் கையாண்டு, ஹான் சீனர்களையும், மங்கோலியர்களையும் படையில் சேர்த்துக் கொண்டதன் மூலம், சீனாவின் பெரும்பான்மையினரான ஹான் சீனர்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறார். படையினரான கொடி அணியினர். அனைத்து விதமான சலுகைகளையும் பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் மஞ்சூரியப் பெண்களை ஹான் சீனர்கள் மணம் செய்துகொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஹான் சீனர்களோடு ஏற்படுத்தப்பட்ட நெருக்கமே மஞ்சு அரசமரபு நிலைபெற்று அரசாண்டதற்குக் காரணமாக ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. டோர்கான் அறிவிக்கை 1645-ன் படி, அனைத்து சீனர்களும் முன் நெற்றியை மழிப்பதும், மஞ்சூரியர்களைப் போல தலைமுடியை நீண்டதாகப் பின்னுவதும் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. எதிர்த்த தென்சீனர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. நீள்முடி பின்னப்படாத சீனர்கள், மஞ்சுக்களின் அரசாட்சியை ஏற்றுக் கொள்ளாத கிளர்ச்சியாளர்களாகக் கருதப்பட்டிருக்கிறார்கள். 1911 வரையிலும் நீள் தலைமுடியே சைனாவில் நீடித்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளும் பத்து மாதங்களும் நிரம்பியிருந்த போது, சைனாவின் பேரரசரான பனிரென்டாவது மஞ்சு பேரரசர் புயி (ஆ.காலம் 1908- 1912), மஞ்சு தலைமுடியை 1922-ல் இயல்பான தலைமுடியாக வெட்டிக் கொண்டதோடு, சீனாவின் இருநூற்றி அறுபத்து எட்டு வருட நீள் தலைமுடி பராமரிப்பு முடிவுக்கு வந்ததாக அறியப்படுகிறது.

இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலான நீண்ட பாரம்பரியம் கொண்ட சீனப் பேரரசின் இறுதிப் பேரரசரான புயி அவர்களின் வாழ்வு, அரசர்குல வரலாற்றில் மிக மோசமானதாக சுட்டிக்காட்டப்படுகிறது. பேரரசரின் பெயரை எழுதுவதே கடுங்குற்றமாகக் கருதப்பட்டு வந்த சீன மரபில், திரு புயி என அழைக்கப்படும்

அளவிற்கு, காங்டி பேரரசராக அறிவித்துக் கொண்ட புயி பேரரசரின் காலம் கடுமையானதாக இருந்திருக்கிறது. ஆங்கிலம் கற்ற பேரரசர், ஹென்றி புயி என்றும் பெயரை மாற்றியிருக்கிறார்.

பேரரண் அரண்மனையிலிருந்து, 1912 புரட்சியின் போது வெளியேற்றப்பட்ட புயி அரசர், ஜப்பானின் ஆதரவில் மஞ்சூகுவா பொம்மை அரசை நிறுவி, இரண்டாம் உலகப் போருக்குப் பின் ரஷ்யாவில் சிறை வைக்கப்பட்டு, பின் மாவோ சீனாவில் பத்தாண்டுகள் போர் கைதியாக இருந்து, சிறையில் மறுகல்வி கற்று, பீகிங் தாவரவியல் பூங்காவில் தொழிலாளியாகவும் வாழ்ந்திருக்கிறார் என வரலாறு குறிப்பிடுகிறது.

இந்தியா மற்றும் சீனாவில் பெரும் புகழ் பெற்றவராக அறியப்படும் சீனப்பயணி சுவான் சாங், இரு நாடுகளின் மத்திய கால வரலாற்றோடு தொடர்புடையவராக அறியப்படுகிறார். புத்த மதகுரு, கல்வியாளர், மொழிபெயர்ப்பாளர் என பல வகையாகக் கொண்டாடப்படும் யுவாங் சுவாங், தமது இந்தியப் பயணம் குறித்தான சுய வரலாற்று நூலில், முக்கியமான வரலாற்று நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருபதாவது வயதில் பௌத்த பிட்சுவானவராகக் குறிப்பிடப்படும் சுவான்சாங், பௌத்த நூல்களைக் கற்கவும், புத்தரோடு தொடர்புடைய இடங்களைப் பார்வையிடவும் பல கடும் சோதனைகளைத் தாண்டு இந்தியாவிற்கு வந்ததாகக் கூறப்படுகிறது. சுவான் சாங்கின் பயணம் குறித்து சீனாவில் புகழ்பெற்ற நூல்கள் எழுதப்பட்டுள்ளன. 629 முதல் 645 வரை இந்தியப் பயணத்திலிருந்த சுவான் சாங், இந்தியாவின் பல்வேறு அரசவைகளுக்கும் வருகை புரிந்திருக்கிறார். இந்திய அரசர்களும் அவரை மிகுந்த மரியாதையோடு வரவேற்றிருக்கிறார்கள்.

அறிஞர் சுவான் சாங் இரண்டு ஆண்டுகள் நாளந்தா பல்கலையில் தங்கியிருந்து புத்த மத நூல்களைக் கற்றறிந்ததாகவும், சமஷ்கிருதத்தை சிறப்பாகக் கற்றுத் தேர்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. புத்தபிரானோடு தொடர்புடைய பகுதிகளுக்கும் புனிதப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

வட இந்தியாவில் சிறப்பாக ஆட்சிசெய்தவராக அறியப்படும் ஹர்ஷர் எனும் ஹர்ஷவர்த்தனரால் (606-647) சான்சுவாங் வெகு சிறப்பாக வரவேற்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. குப்த அரசாட்சிக்குப் பின் வட இந்தியாவில் எழுந்த பல்வேறு

அரசுரிமைகளில், தானேஸ்வரத்தைத் தலைநகராகக் கொண்டு எழுச்சியுற்ற வர்த்தனப் பேரரசு சிறப்பானதாக விளங்கியதாக வரலாற்றாசிரியர்களால் புகழப்படுகிறது.

வர்த்தனப் பேரரசின் நான்காவது அரசராக ஹர்ஷரின் தந்தை பிரபாகரவர்த்தனர் குறிப்பிடப்படுகிறார். பிரபாகர வர்த்தனர் வடமேற்கின் ஹூனர்களை வெற்றி கொண்டதாகக் கூறப்படுகிறது. பிரபாகர வர்த்தனருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர், அவரது மூத்த மகனான ராஜ்யவர்த்தன். ஹர்ஷரின் தங்கை இளவரசி ராஜ்யஸ்ரீயை மணமுடித்த அரசர் கிரஹவர்மனை, மாளவ மன்னன் தேவகுப்தன் தீர்த்துவிட்டு, ராஜ்யஸ்ரீயையும் சிறைபிடித்திருகிறார். ராஜ்யவர்த்தனர் தேவகுப்தனை வென்றும், கிழங்கு வங்க கௌடா மன்னன் சசாங்கரின் சூழ்ச்சியால் முடிக்கப்பட்டிருக்கிறார். பதினாறு வயதில் அரியணையேறிய ஷர்ஷர், சசாங்கரை பழிதீர்த்து, தங்கையையும் மீட்டிருக்கிறார். பின்னர் கன்னோசியைத் தலைநகராக கொண்டு வட இந்தியா முழுவதும் அரசாண்டவராக பேரரசர் ஹர்ஷர் புகழப்படுகிறார்.

இந்தியாவில் வட மேற்கு மற்றும் மத்திய பகுதிகளை ஒன்றிணைத்து 606-ல், மகாராஜாவாக முடிசூட்டப்பட்ட ஹர்ஷவர்தனர், புத்த மதத்தை சிறப்பாக ஆதரித்தவராகக் குறிப்பிடப்படுகிறார். அனைத்து மதங்களைச் சார்ந்த தலைவர்களையும், கலைஞர்களையும், அறிஞர்களையும், பெருமைப் படுத்தியவராவும் பேரரசர் ஹர்ஷர் போற்றப்படுகிறார். ஹர்ஷரை பேரரசர் ஷீலதித்யா எனக் குறிப்பிடும் சான் சுவாங், அவரது பயண நூலில் ஹர்ஷரைப் பற்றியும், அவரது ஆட்சித்திறம் பற்றியும், நீதி வழங்கும் முறை, நாளந்தா பல்கலைக்கு அளித்த கொடைகள் குறித்தும், பெருமையோடு புகழ்வதாகக் குறிப்பிடப்படுகிறது. அண்டை நாடுகள் மட்டுமின்றி, சீனாவின் இரண்டாவது தாங் அரசரனான பேரரசர் தைஸாங்வுடனும் (598-649) நட்புறவு கொண்டிருந்ததாக பேரரசர் ஹர்ஷர் புகழப்படுகிறார்.

பேரரசர் ஹர்ஷரது இலக்கியப் பங்களிப்பும் வெகுவாகப் பாராட்டப்படுகிறது. நாகானந்தம், இரத்தினாவளி, பிரியதர்சிகா போன்ற புகழ்பெற்ற சமஷ்கிருத நாடகங்களை பேரரசர் இயற்றியிருக்கிறார். ஹர்ஷரது அவைப்புலவரான பாணபட்டரால் இயற்றப்பட்ட ஹர்ஷரின் வாழ்க்கை வரலாற்று நூலாக ஹர்ஷசரிதம் அறியப்படுகிறது. எட்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள ஹர்ஷசரிதம், கிராமப்புற

இந்தியாவைப் பற்றியும், அக்காலத்திய தொழில் வளத்தையும் சிறப்பாக எடுத்துக்காட்டுவதாகக் குறிப்பிடப்படுகிறது. பெரும்புலவர் பாணபட்டாரால் எழுதப்பட்டு, பின் அவரது மகனான புஷனபட்டரால் எழுதி முடிக்கப்பட்ட காதம்பரி எனும் காதலைக் கொண்டாடும் நாவல், உலகின் முதல் நாவலாக புகழப்படுகிறது.

மேற்குப் பகுதிகள் பற்றி பெருமைமிகு தாங்கின் பதிவுகள் எனும் பெயரில் (கிரேட் தாங் ரெக்கார்ட்ஸ் ஆன் வெஸ்டர்ன் ரிஜியன்ஸ்) சான்சுவாங்கின் பத்தொன்பதாண்டு காலப் பயணம், பையான்ஜி எனும் சீனரால் அறுநூற்றி நாற்பத்தாறாம் ஆண்டில் பயணநூலாக ஆக்கம் பெற்றிருக்கிறது. ஒரு லட்சத்து இருபதாயிரம் சைன எழுத்துக்களில், பன்னிரென்டு தொகுதிகளாக எழுதப்பட்டுள்ள பயணநூல், நூற்றிப்பத்து நாடுகளைப் பற்றிய புவியியல் நில அமைப்பு, கடற்பயணம், கால நிலை, உள்ளூர் பொருட்கள், மக்கள், மொழி, வரலாறு, அரசியல், பொருளாதார நிலை, மதம், கலாச்சாரம், பழக்க வழக்கம் போன்ற பல்வேறு வகைப்பட்ட தகவல்களை அளிக்கும் அரியத்தொடு கலைக் களஞ்சியமாகப் போற்றப்படுகிறது.

சீனாவின் வடமேற்கு மாநிலமான ஜின்ஜியாங் தொடங்கி பெர்சியா, தஜிகிஸ்தான், உஜ்பெகிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், இலங்கை போன்ற பகுதிகளிலிருந்த, பல்வேறு நாடுகளின் வரலாற்றுத் தகவல்களிலும் தொல்லியல் மூலங்களும், பெருமைக்குரிய சான்சுவாங் நூல் மூலமாக அறியப்பட்டுள்ளன. இந்தியாவின் வரலாற்று இடைவெளிகளை நிரப்பும் பல்வேறு தகவல்கள் சான் சுவாங்கின் நூல் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. பயண நூலின் குறிப்புகள் கொண்டே இந்தியாவின் புகழ்பெற்ற பல தொல்லியல் களங்கள் அகழாய்வு செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. அந்த அளவிற்கு சான் சுவாங்கின் பயண நூலில், இடங்களும் அவற்றின் தூரங்களும் துல்லியமாகக் குறிக்கப்பட்டுள்ளது சரித்திர சாதனை.

பல்லவ குலப் பேரரசர்களில் தலை சிறந்தவராகப் போற்றப்படும் முதலாம் நரசிம்ம பல்லவன் ஆட்சியின் போது (630-668), தலைநகர் காஞ்சிக்கு ஏறக்குறைய 642-ல் சான்சுவாங் வருகை புரிந்துள்ளார். புத்தமதத்தில் சிறந்தோங்கியிருந்த அன்றைய காஞ்சி, ஆறுகல் சுற்றளவுடையதென்றும், கடற்கரையை நோக்கி இருபது கல் விரிந்துள்ள நகரமென்றும், இலங்கையை நோக்கி பல கப்பல்கள் செல்கின்றன என்றும் சான்சுவாங் பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்.

நிலம் செழிப்புள்ளது, நல்லவிளைவு தருவது, நாடு வெப்பமானது, மக்கள் அஞசா நெஞ்சினர், உண்மைக்கு உறைவிடமானவர், கற்றவரையும் உயர்ந்த கொள்கைகளையும் மதிப்பவர், காஞ்சியில் நூறு சங்கிரகங்கள் இருக்கின்றன, பதினாராயிரம் பௌத்தத் துறவிகள் வாழ்கின்றனர், சைவ, வைணவ, சமணக் கோவில்கள் ஏறத்தாழ எண்பது இருக்கின்றன, திகம்பர சமணர் பலர் இருக்கின்றனர் என காஞ்சியைப் பற்றிய பல்வேறு குறிப்புகளை பயணநூல் கூறுகிறது.

தென்னிந்திய வரலாற்றில் சிறப்பானதாகக் குறிப்பிடப்படும் நரசிம்ம பல்லவர் ஆட்சிக்காலத்தில் வாதாபி சாளுக்கியரை வெற்றி கொண்டது, இலங்கையின் மீது படையெடுத்தது, ஏராளமான கோவில்களையும், கோட்டைகளையும், நீர்ப்பாசன வசதிகளையும் அமைந்தது போன்றவை பெரும் சாதனைகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

கீழ் மலையிலிருந்து கதிரவனும் திங்களும் தோன்றினாற்போல பல்லவர் மரபில் வந்தவரும், வணங்காமுடி மன்னர்தம் முடிமேல் இருக்கும் சூடாமணி போன்றவரும், எதிர்த்த யானைக் கூட்டத்திற்குச் சிங்கம் போன்றவரும், நரசிங்கப் பெருமாளே தோன்றினாற்போல வந்தவரும், சேர, சோழ, பாண்டிய, களப்பிரரை அடிக்கடி முறியடித்தவரும், பலநூறு போர்கள் புரிந்தவரும், பரியலம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடத்துப் போர்களிற் புலிகேசி தோற்று ஓடிய பொழுது வெற்றி எனும் மொழியை அவரது முதுகாகிய பட்டயத்தின் மீது எழுதியவரும் ஆகிய நரசிம்மவர்மன் என கூரம் பட்டயங்கள் கூறுகின்றன. விஷ்ணுவைப் போன்ற புகழுடைய நரசிம்ம வர்மர் பகைவரை அழித்து வாதாபியின் நடுவில் வெற்றித்தூணை நாட்டினார் என வேலூர் பாளையப் பட்டயங்கள் குறிப்பிடுகின்றன.

நரசிம்மவர்மன் வாதபிகொண்டான் எனும் பெயரால் புகழப்படுகிறார். வாதபி சாளுக்கியர்களில் புகழ்பெற்றவராக அறியப்படுவர் இரண்டும் புலிகேசி (ஆ.காலம் 609-642). ஏரேயா எனும் இயற்பெயர் கொண்ட புலிகேசி பேரரசர், முதலாம் கீர்த்திவர்மனின் (566-597) மகன். இளம் வயதினரான புலிகேசியின் பாதுகாவலராக இருந்தவர் சித்தப்பாவான ஆளுநர் மங்களேசன். ஆட்சிப் பொறுப்பை அவரது மகனுக்குக் கொடுத்ததால், மறைவு வாழ்க்கை நடத்திய புலிகேசி, பின்னர் ஆதரவாளர்களுடன் மங்களேசன் மீது போர் தொடுத்து வெற்றி பெற்று, இரண்டாம் புலிகேசி அரசராக முடி சூடியிருக்கிறார். ஹர்ஷர்வர்த்தனரது தென்னிந்தியப்

படையெடுப்பை நர்மதை நதிக்கரையில் முறியடித்து, ஹர்ஷரை வெற்றி கொண்டவராகவும் புலிகேசி புகழப்படுகிறார்.

சிவவெருமானின் புகழ் பரப்பிய அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான சிறுத்தொண்டர் எனும் பரஞ்சோதியார், நரசிம்மவர்மனின் வாதபிப் படையெடுப்பின் போது படைத்தளபதியாக இருந்தாரெனவும், அவரது அரிய வீர தீர செயல்கள் வாதபி வெற்றியில் பெரும் பங்கு வகித்தன எனவும் சேக்கிழார் பெருமான் எழுதிய பன்னிரெண்டாம் நூற்றாண்டு பெரிய புராணம் குறிப்பிடுகிறது.

பேரரசர் மகேந்திரவர்மனைப் போலவே நரசிம்மவர்மனும் பல்வேறு குகைக் கோவில்களை அமைத்திருக்கிறார். நாமக்கல் நரசிங்கப் பெருமாள் குகைக் கோவில், திருச்சிராப்பள்ளி குகைக் கோவில், திருவெள்ளறை குகைக் கோவில், திருமயம் வைணவக் குகைக் கோவில் போன்றவை நரசிம்மவர்மர் அமைத்த சில குகைக் கோவில்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

மகேந்திரர் மற்றும் நரசிம்மர் புகழுக்கு ஆகப்பெறும் சான்றுகளாக விளங்குபவை மகாபலிபுர சிற்பங்களும் ஓவியங்களும் எனில் மிமையாகாது. மகேந்திரர் பல்வேறு இடங்களில் அமைத்த கோவில்களுள் குறிப்பிடத்தக்கவையாக பல்லாவரம், சீயமங்கலம், திருவல்லம், திருக்கழுக்குன்றும், மண்டகப்பட்டு, மாமண்டூர், தளவானூர், சிங்கவரம், மகேந்திரவாடி, திருச்சிராப்பள்ளி, சித்தன்னவாசல் போன்றவை இடம்பெற்றுள்ளன. பேரரசர் மகேந்திரர் அமைத்த கோவில்களில் பெரும்பாலானவை மலைச் சரிவுகளைக் குடைந்து அமைக்கப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்லவர்களின் துறைமுக நகராக விளங்கிய மாமல்லபுரம் எனும் மகாபலிபுரம், பண்டைய காலத்தில் சிறப்புற்று விளங்கிய துறைமுக நகராக இருந்திருக்கிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு சிறந்த தொடர்பிலிருந்ததாக மகாபல்லவபுரம் துறைமுகம் குறிப்பிடப்படுகிறது. மாமல்லபுரத்தின் கடற்கரை கோவிலும், சிறபத்தொகுதிகளும், இந்தியாவின் பெருமைக்கும், தென்னகத்தின் சிறபக்கலைக்கும் என்றென்றும் அழியாத சான்றுகளாக நிலைபெற்றுள்ளன.

குகைகளைக் குடைந்து மகேந்திரர் கோவில்களை உருவாக்கினாரெனில், நரசிம்மரோ ஒரு கல்லையே கோவிலாகச் செதுக்கியிருக்கிறார். தேர்கள், ஐந்து கோவில்கள் எனக் குறிப்பிடப்படுவது ஒரு முழுக் கோவிலே என அறிஞர்கள்

சுட்டிக்காட்டுகின்றனர். தருமராசன் தேர், பீமசேனன் தேர், அர்ச்சுனன் தேர், திரௌபதி தேர், சகாதேவன் தேர் போன்ற தேர்க் கோவில்கள் நரசிம்ம பல்லவரால் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

படைப்புச் சிற்பங்களும், குகைக் கோவில்களும், ரதங்களுமாக இயற்கையான பறையைக் குடைந்து, கலைநயமிக்க காட்சிகளை உருவாக்கியுள்ளார். பாறைகளின் மீது புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்களும் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன. கோவர்த்தன மலையைத் தூக்கும் சிற்பம், அர்ச்சுனர் தபசு போன்றவை மிகவும் புகழ்பெற்றவையாக அறியப்படுகின்றன. மாமல்லபுரத்தின் அதிசயமாகக் குறிப்பிடப்படும் அர்ஜுனன் தபசு சிறபத் தொகுதியில் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

போரிலும், கலைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த மகேந்திரர், எழுத்திலும் முத்திரை பதித்துள்ளார். மகேந்திரர் காலத்து கபாலீகம், பாசுபதம், புத்தம், சமணம் போன்ற சமய நடைமுறைகளைச் கேலியாக சித்தரித்து, சமஷ்கிருதத்தில் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம் நாடகம், மகேந்திர பல்லவரின் சமயப் பொறைக்கு சான்றாகக் கூறப்படுகிறது. போதை, களிப்பு போன்றவை நிறைந்த கேலி நாடகம் புதுமுயற்சி என்ற அறிமுகத்துடன் தொடங்கும் நாடகத்தில், காஞ்சியின் வருனணைகளும், ஆடல் கலை, இசை பற்றிய நுணக்கங்களும் இடம்பெற்றுள்ளதாகப் புகழப்படுகிறது. பேரரசரான மகேந்திரர் சமுதாயத்தையும், சமுதாய இயங்கு முறைகளையும் நன்கு அறிந்தவராகவும் மத்தவிலாசம் வழியே அறியப்படுகிறார். மகேந்திரர் இயற்றிய பகவதஜ்ஜீகம் நாடக நூலும், இந்து சமய துறவிக்கும் அவரது சீடருக்கும் இடையேயான எள்ளல் வகை நாடகமாக அறியப்படுகிறது. சமுதாயத்தில் அன்றைக்கு நிலவிய மூடப் பழக்க வழக்கங்களைச் சாடுவதோடு, கற்றலின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகவும் பகவதஜ்ஜீகம் இயற்றப்பட்டுள்ளது.

சிறந்த பண்புநலன்களும், ஆளுமைத்திறனும், கலையாற்றலும் அறிவுத்தேடலும் கொண்டிருந்த பேரரசர் மகேந்திரர், தமிழ், சமஷ்கிருதம், தெலுங்கு என இருநூற்றுக்கும் அதிகமான புனைவுப் பெயர்களை கோவில்களிலும், கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் குறித்துள்ளார். நடிகர், காற்று, மேன்மையாளர், அனைத்துத் திசைகளிலும் பரவியவர், பண்புகளின் இருப்பிடம், அச்சமற்றவர், வெல்லமுடியாத அம்பு, பெருமின்னல், நிறைவான அறிஞர், மறுமலர்ச்சியாளர்,

புதியவர், நீரோடை, உத்தமர், பகைவரை அழிப்பவர், மயக்கர், வெள்ளி நாவினர், பலவும் பாடுபவர், கோவிலெழுப்பி, சுமை நீக்கி, தெப்பம், வில்லாளி என எத்தனையோ பெயர்களை மகேந்திரர் வைத்துக் கொண்டாலும், தமிழர்களின் நெஞ்சம் நிறைந்த மாமல்லன் எனும் பெயருக்கு ஈடாகவில்லை எனில் மிகையாகாது.

முதலாம் பரமேசுவர்ம பல்லவர் ஆட்சிக் காலத்தில் (670-685), மூன்றாவது சாளுக்கியப் போர் நடைபெற்றிருக்கிறது. பல்லவர், சாளுக்கியர் இருவருமே போரில் வெற்றிபெற்றதாகப் பட்டயங்கள் குறித்துள்ளனர். பரமேசுவர்மர் தமிழகத்தின் தொன்மையான கற்கோவிலான கூரம் சிவன் கோவிலைக் கட்டியவராக அறியப்படுகிறார்.

வீரத்தில் மகேந்திரரை ஒத்தவரான இராசசிம்மன் எனும் இரண்டாம் நரசிம்ம பல்லவன் (730-728) மாமல்லபுர கடற்கரைக் கோவிலையும் காஞ்சி கயிலாசநாதர் கோவிலையும் கட்டியவராகப் போற்றப்படுகிறார். தமிழகத்தின் முதல் கட்டுமானக் கோவிலாகக் குறிப்பிடப்படும் உலகப் புகழ்பெற்ற மாமல்லபுரம் கடற்கரைக் கோவில், திருமாலின் தலசயனக் கோவிலாக இருந்திருக்கிறது. பேரரசர் இராஜசிம்மனின் காலத்தைச் சேர்ந்த சமஷ்கிருதப் புலவர் தண்டி என்பாரின் கூற்றுப்படி, பெருமான் திருவடிகளைக் கடல் அலைகள் மோதி அலம்பிக்கொண்டிருந்தது கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்பட்டிருக்கிறது. தமிழகக் கட்டிடக் கலைக்கு சான்றாக விளங்கிவரும் கடற்கரை கோவிலில் சிலைகள் கலைநயம் மிக்கவையாக செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர்களின் சின்னமான சிங்கம் அழகிய வடிவத்துடன் காணப்படுகிறது. திருமால் கோவிலுக்கு இருபுறமும் சிவன் கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சுவர் முழுவதும் நந்தி உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

சிற்பக்கலைக் கூடமாக மாமல்லபுரத்தை செதுக்கிய பல்லவர்கள், ஆயிரம் கோவில்களின் நகரமாக காஞ்சியை அழகுபடுத்தியிருக்கின்றனர். நகரங்களுள் காஞ்சி எனப் போற்றப்பட்ட காஞ்சிபுரத்தில் பௌத்தக் காஞ்சி, விஷ்ணுக் காஞ்சி, சிவ காஞ்சி, ஜைன காஞ்சி அடையாளங்கள் சுட்டிக்காட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

தென்திசைக் கயிலாயம் என அழைக்கப்படும் கைலாசநாதர் கோவில் இராஜசிம்மேச்சரம் என கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது. முழுவதும் கல்லினால் கட்டப்பட்டுள்ள கைலாசநாதர் கோவில், பல்லவர்களின் உன்னதச் சிறப்பிற்கும், கட்டிடக் கலைக்கும் உயரிய சான்றாக குறிப்பிடப்படுகிறது.

திருக்கச்சியேகம்பம் என பழைய சமய நூல்களில் குறிப்பிடப்படும் ஏகாம்பரநாதர் கோவில், பல்லவர் காலம் தொட்டு நாயக்கர் காலம் வரை பல்வேறு அரசர்களார் திருப்பணிகள் செய்விக்கப்பட்டதாகக் குறிப்புகள் எடுத்துரைக்கின்றன. கோவிலின் உயர்ந்த தலைவாசல் கோபுரம், கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டிருக்கிறது. அருள்மிகு ஏலவார் குழலி உடனுறை தழுவக்குழைந்த நாதர் குடிகொண்டுள்ள ஏகாம்பரரேஸ்வரர் கோவில், பாடல் பெற்ற தலமாகப் போற்றப்படுகிறது.

பெரிய காஞ்சி எனக் குறிப்பிடப்படும் சிவகாஞ்சியில் சக்தி பீடங்களில் ஒன்றான பழைமையான காமாட்சி காமகோட்டம் புகழ்பெற்றதாக விளங்கிவருகிறது. ஆதிசங்கரரால் எட்டாம் நூற்றாண்டில் காமாட்சியம்மனுக்கு ஸ்ரீசக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. காஞ்சியில் ஏராளமான சிவாலயங்கள் இருந்தாலும், காமாட்சியம்மன் கோவிலைத் தவிர அங்கெல்லாம் வேறு அம்மன் கோவில்கள் கிடையாதெனக் குறிப்பிடப்படுகிறது. எனினும் ஒவ்வொரு சிவனார் கோவிலிலும் உற்சவ அம்மனுக்கு ஓர் கோவில் இடம்பெற்றிருக்கும் எனவும் கூறப்படுகிறது.

தொண்டை நாட்டின் தலைநகராகக் திகழ்ந்த காஞ்சியில் வைணவமும் அழியாத முத்திரைகளைப் பதித்துள்ளது. காஞ்சி ஸ்ரீவரதராஜப் பெருமாளின் கோவிலோடு தொடர்பு கொண்டவராக, வைணவ ஆச்சார்யார் இராமாநுஜரின் வாழ்வு அமைந்துள்ளது. பெருந்தேவித் தாயாரோடு வீற்றீருக்கும் வரதராஜர் கோவில் உருவாக்கப்பட்ட காலம் குறித்து தெளிவான வரையறைகள் கிடைக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. குலோத்துங்கச் சோழனும், விக்ரம சோழனும் கோவிலை விரிவுபடுத்தியதாக கூறப்படுகிறது. கோவிலின் திருமண மண்டலம் அழகிய சிற்பங்கள் உடையதாக இருக்கிறது. மண்டபத்திலுள்ள கற்சங்கிலிகள் நேர்த்தியான சிற்பக்கலைக்குச் சான்றாக உள்ளன.

கோவில்களும், விழாக்களும் மலிந்த காஞ்சியைச் சுற்றிலும் புகழ்பெற்ற ஏராளமான கோவில்கள் அமைந்துள்ளன. பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ள வைணவத் திருத்தலங்கள் திவ்ய தேசங்கள் என பெருமைப்படுத்தப்படுகின்றன. தொண்டை நாட்டில் மட்டும் இருபத்தி இரண்டு திவ்ய தேசங்கள் இடம் பெற்றுள்ளன. திருக்கச்சி என்றும், அத்தியூர், அத்திகிரி என்றும் அழைக்கப்படும் அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோவில், புகழ்பெற்ற திவ்யதேசமாகப் போற்றப்படுகிறது. திருக்கடல் மலையிலுள்ள உலகுய்ய நின்றான் பொருமாள் கோவிலும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டிருக்கிறது. காஞ்சிபுரம் உலகளந்தபெருமாள் கோவிலினுள்ளே, பன்னிரு ஆழ்வார்களில் இளையவரான திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்ற திருக்காரகம், திருப்பாடகம், திருஊரகம் மற்றும் திருநீரகம் என புகழ்பெற்ற நான்கு திவ்ய தேசங்கள் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பல்லவ மன்னர் இரண்டாம் நந்திவர்மன் (731-795), வைணவ சமயத்தைப் போற்றியவராகக் குறிப்பிடப்படுகிறார். நீண்டகாலம் அரசாட்சி செலுத்தியவராக அறியப்படும் நந்திவர்மப் பல்லவர் வரலாறு, பல்வேறு பட்டயங்கள் மூலம் அறியப்படுவதோடு, திருமங்கையாழ்வார் பாடல்கள் மூலமும் அறியப்படுகிறது. முகுந்தன் திருவடிகளைத் தவிர வேறு ஒன்றிற்கும் தலை வணங்காதவராக தண்டன் தோட்டப் பட்டயம் மூலம் அறியப்படும் இரண்டாம் நந்திவர்மர், வைகுந்தப் பெருமாள் கோவிலையும், கூரத்தின் கேசவப் பெருமாள் கோவிலையும் அமைத்தவராகக் குறிப்பிடப்படுகிறார். நந்திவர்மர் காலத்தில் கட்டுமானக் கோவில் கலை உச்சநிலையில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பேரரசர் நந்திவர்மர் காலத்தில் ஆற்காடு அருகிலுள்ள பஞ்சபாண்டவர் மலையில் சமணக் குகை அமைக்கப்பட்டதாகவும், காஞ்சியில் பௌத்தர்கள் வாழ்ந்திருந்ததாகவும் தெரிய வருகிறது. நந்திவர்மருக்குப் பின் ஆட்சிக்கு வந்த தந்திவர்மன் (795-846), இராட்டிரகூட வழிப் பெண்ணுக்கு பிறந்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

பாறைக்கற்களை கலைநயமிக்க சிலைகளாக வடித்த பல்லவர்கள் காலத்தில், சிறபக்கலையோடு ஓவியக்கலையும் திறம்படப் பேணப்பட்டிருக்கிறது. பல்லவப் பேரரசர்கள் தாம் எழுப்பிய கோவில்களின் கூரைகளிலும், தூண்களிலும் அழகு ஓவியங்களை வரைந்துள்ளனர். பன்னெடுங்காலமாக நிலைபெற்று வரும்

ஓவியங்கள் பல்லவர் விட்டுச் சென்ற பெருங்கொடையாகும். பல்லவர் கால சிந்தனைவாசல் ஓவியங்கள் காலத்தால் அழியாதவையாகப் புகழ்ப்படுகின்றன.

அஜந்தா ஓவியங்கள் போன்று தனிச்சிறப்புபெற்ற சித்தன்னவாயில் ஓவியங்கள், ஏழாம், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது.

நீர்நிலையொன்றின் காட்சிப்புலத்தை வெளிப்படுத்தியிருக்கும் தாமரைபூத்த தடாக சித்தன்னவாயில் ஓவியம், மீன்கள், பறவைகள், எருமைகள், யானைகள், தமரை, அல்லி, மனிதர் என அழகுபட வண்ணப்பூச்சுடன் வரையப்பட்டுள்ளது. கையில் தாமரை மலர்களைத் தாங்கியுள்ள சமணர் இருவரும், இடக்கையில் பூக் கூடைகொண்டு வலக்கையால் மலர் பறிக்கும் சமணர் துறவி ஒருவரும், ஓவியத்தில் இடம் பெற்றுள்ளனர். வண்ணங்கள் இயற்கைப் பொருட்களைக் கொண்டே தீட்டப்பட்டுள்ளன. நடனப் பெண் ஓவியங்கள் வெகு நேர்த்தியாக வரையப்பட்டுள்ளன. கோவில் முன்மண்டபத் தூணில் அமைக்கப்பட்டுள்ள அழகிய நடனமாதர் ஓவியங்கள், அக்கால நடனமங்கையின் முடி அலங்காரங்களையும் அணிகளையும், ஆடைகளையும், நாட்டிய முறைகளையும் விளக்குவதாக வரலாற்றாசிரியர்களால் புகழப்படுகிறது. அரசன், அரசி ஓவியங்களும் சிறப்பாக வரையப்பட்டுள்ளன. பெருந்தன்மையும் பெருந்தோற்றமும் கொண்ட அரசரின் முகம், ஆதிவராகர் கோவிலிலுள்ள மகேந்திரவர்மர் முகத்தைப்பெரிதும் ஒத்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. தொன்மையான கல்வெட்டுக்களுக்கும், சமணக் குகைகளுக்கும், சுவரோவியங்களுக்கும் புகழ்பெற்ற சித்தன்ன வாசலின் வரலாறு பல்லவர்களோடும், பாண்டியர்களோடும் தொடர்புடையதாக அறியப்படுகிறது.

பல்லவர் கால தமிழகத்தில் கோவில்களே பல்கலைப் பள்ளிகளாகவும் செயல்பட்டிருக்கின்றன. சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், சமயக் கல்வி போன்ற பல்வேறு கலைகளும் கோவில்களில் கற்பிக்கப்பட்டு வந்திருக்கின்றன. பெரிய கோவில்களில், படிக்கும் மணீயம், நடன மண்டபம், நாடகமண்டபம், தருக்க மண்டபம் போன்றவை இருந்திருக்கின்றன. கதைகள் சொல்லியதும், சமயநூல்களைப் பாதுகாத்ததும் கோவில்களே எனவும் போற்றப்படுகின்றன. அரசர், சிற்றரசர், செல்வர் போன்றோரால் அமைக்கப்பட்ட மடங்களும் கல்விக் கூடங்களாக சிறப்புற்று விளங்கியிருக்கின்றன.

பல்லவர் காலத்தில் மறையவர் எனப்படும் அந்தணர் ஏற்றம் பெற்றனர் என்பது தெளிவு. பெரும்பாலானவர்கள் வட நாட்டினின்றும் வந்தவராகக் குறிப்பிடப்படுகின்றனர். சமஷ்கிருதத்தைப் போற்றிய பல்லவர், பிராமணரையும் பல்லவ நாட்டில் குடியேற்றி பல்வேறு தானங்களையும் அளித்துள்ளனர். இரண்டாம் நந்திவர்மனால் விடப்பட்ட காசக்குடி பட்டயம், கொடுகொள்ளி என்ற சிற்றூர் ஏக தீரமங்கலம் எனப் பெயரிட்டு சோமயாஜி என்ற மறையவருக்கு கொடுக்கப்பட்டதைக் கூறுகிறது. மறையவரின் குணங்களைப் பட்டியலிடும் கல்வெட்டு, கடல்போன்ற வேதங்களைக் கற்றவர், சாமவேதம் பாடவல்லவர், ஆறு அங்கங்களையும் பழுதற உணர்ந்தவர், கரும காண்டம், ஞானகாண்டம் முதலியவற்றில் தேர்ச்சியுடையவர், உலகியலை நன்குணர்ந்து நடப்பதில் வல்லவர், எல்லாச் சமய செயல்களிலும் தேர்ந்தவர், நல்லொழுக்கம் உடையவர், உயர் கல்வி இருந்தும் அடக்க முடையவர், இருபிறப்பாளருள் முதன்மையானவர், வேத விதிப்படி நடப்பவர், சாந்தோக சூத்திரத்தைப் பின்பற்றுபவர், தொண்டைநாட்டில் பூனியம் என்ற சிற்றூரில் வாழ்பவர், சிறந்த மறையவர் எனப் பலவாறாக பட்டயத்தால் பாராட்டப்பட்டுள்ளார்.

பல்லவர் ஆட்சிக் காலத்தில் பாதிரிப்புலியூர் சிறந்த சமணத் தலமாக விங்கியிருக்கிறது. தேவராத் திருமறைகளைப் பாடிய அப்பர், சமண நூல்களைக் கற்று தருமசேனர் எனும் பெயரோடு மடத்தின் தலைவராகவும் இருந்திருக்கிறார். சமணக் காஞ்சி என அழைக்கப்பட்ட காஞ்சிபுரத்தையடுத்த திருப்பருத்திக்குன்றம், பல்லவர் காலத்திய உயர்ந்த நிலையிலிருந்த சமணர் பகுதியாகக் கூறப்படுகிறது. சமணர் கோவில்களில் பல்லவர் கால கலைநயமிக்க சிற்பம், ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. அப்பர் சைவராக மாறியவுடன், சமண மடத்தை ஆதரித்து வந்த மகேந்திரர் சைவ சமயத்தின் மேல் பற்று கொண்டவராக மாறியதாகக் குறிப்பிடப்படுகிறது. அரசரது ஆதரவை இழந்த சமணர்கள், பின்னர் தமிழகத்தில் பெரிய அளவில் நிலைபெறாமல் போய்விட்டனர் என்பதும் அறியத்தக்கது.

அப்பருக்கு முன்னரே சைவ சமயத்தவர்களும், நாயன்மார்களும் மக்கள் தொண்டின் மூலம் சைவ சமயத்தை வளர்க்க முனைந்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன. சமணரைப் பின்பற்றி தண்ணீர்ப் பந்தல் வைத்தல், அன்னமிடுதல், கல்விப் பணி போன்றவை மூலம், பொது மக்களை சைவ நெறியின் மீது ஈர்த்து வந்துள்ளனர். கோவில்களில் ஆடல், பாடல், நாடகங்களோடு, இறைவனுக்குப் படைத்த உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

திகம்பர சமணத் துறவியர் ஆடையின்றி இருந்தமை, நீராடாமை, துறவு மூலம் சமூகத்திலிருந்து தனித்து இருந்தமை, கடுமையான நோன்புமுறை, பெண்கள் புறக்கணிப்பு போன்றவை தமிழர் மரபுக்கு மாறுபட்டவையாக சுட்டிக் காட்டப்படுகின்றன. அகம், புறம் என வாழ்வை வகுத்துக் கொண்ட தமிழர்க்கு, சமணர் வாழ்நெறி ஏற்புடையதாக இல்லை போலும். சமணர் கல்வி கேள்விகளால் உவந்து சமணரான மக்கள், பின்னர் சைவராலும் வைணவராலும் மனம் மாற்றப்பட்டிருக்கின்றனர். உலக வாழ்க்கை இன்பமானது, ஆண் - பெண் இணைந்து வாழ்வதே இல்லறம், உலக இன்பங்களை நுகர்ந்து கொண்டே இறைவன்பால் பக்திபூண்டு அவரவர் நிலைக் கேற்பத் திருப்பணிகளும், தூய வாழ்வும் நடத்தி வாழ்தலே போதுமானது என்ற சைவ, வைணவ பற்றாளர்களின் அறைகூவலுக்கு மக்கள் செவிசாய்த்திருக்க வேண்டும் என்பது திண்ணம். முடிவில் சமணரும் பௌத்தரும் சைவராயும் வைணவராயும் மாற்றம் கண்டிருக்கின்றனர். விளைவாக, பக்தியுடன் தமிழும் தமிழகமெங்கும் பொங்கிப் பெருக்கெடுத்திருக்கிறது.

சமணர், பௌத்தர், ஆசீவகர், சைவர், வைணவர், வைதீகர் போன்றோரிடையே சமயப் பிணக்குகள் பெருமளவில் மையம் கொண்டிருந்தது ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் எனில் பொருத்தமானதே. பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டிருந்த சைவம், சிவன் எனும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்பட்டது அளப்பரிய சாதனையாகக் குறிப்பிடப்படுகிறது. தமிழ் நிலத்தின் இறைவன், இறைவிகளை வைதீக நெறியோடு பிணைத்தும், கதைகள் புனைந்தும், உயர்த்தியும். நூல்கள் இயற்றியும், வேள்வி சமயத்தோடு ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறது. வேத வேள்வியே இல்லாத பழைய தமிழ் சிவன், வேதத்தின் உருத்திரராகவும், வேள்விக்குரிய மகாதேவராகவும் மாற்றப்பட்டிருக்கிறார். தமிழ்க் கொற்றவை துர்க்கையாகியிருக்கிறார். குறிஞ்சித் தலைவனான முருகன் சுப்ரமணியராகிவிட்டார். நாட்டார் மரபில் கூறப்பட்ட சாமிகளெல்லாம் வேதநெயோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டிருக்கின்றனர். ஐயனாரும், சாத்தனாரும் சாஸ்தாவாகிவிட்டனர்.

பல்லவர்கள் முதலில் பௌத்தராகவே குறிப்பிடப்படுகின்றனர். முதலாம் மகேந்திரர் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. நரசிம்மரோ வைணவத்தை வளர்த்தவராக சுட்டப்படுகிறார். சைவ நெறியைப் போற்றிய பல்லவர்களும் உண்டு. பல்லவர்கள் சமஷ்கிருதத்தையும்

வேதநெறியையும் பெருமளவில் போற்றினர் என்பது வெளிப்படை. பல்லவர் காலத்து சமயத் தடுமாற்றமே தமிழகமெங்கும் நிலவியதாகக் கொள்வது சரியானதாகவே இருக்கும். தொண்டை நாட்டுச் சைவ மாற்றத்திற்கு அப்பர் எனும் திருநாவுக்கரசர் போல் பாண்டிய நாட்டிற்கு திருஞானசம்பந்தர்.

பாண்டிநாட்டு அரிகேசரி சமண சமயத்தைத் தழுவியவராகவே குறிப்பிடப்படுகிறார். பேரரசரின் அரசியார் மங்கையர்க்கரசி சிறந்த சிவபக்தராக இருந்துள்ளார். மாறவர்மன் அரிகேசரி மன்னர், சோழரின் உறையூரைக் கைப்பற்றியபோது. பாண்டிய-சோழர் உடன்பாடு ஏற்பட்டு, சோழ வேந்தனின் இளவரசியான மங்கையர்கரசியாரை அரிகேசரி மன்னர் மணம்புரிந்திருக்கிறார். மதுரை வந்த திருஞான சம்பந்தரால் சமணத்திலிருந்து சைவராக மாற்றப்பட்ட சுந்தரபாண்டியன் எனும் அரிகேசரி பராங்குச மன்னர், தமிழகத்தின் தென்பகுதியில் சைவம் தழைத்தோங்கச் செய்ததில் முதன்மையானவராகக் குறிப்பிடப்படுகிறார்.

சமண சமயத்தைத் தழுவியிருந்த போது கூன் விழுந்த முதுகினை உடைய காரணத்தால் கூன்பாண்டியன் எனப் பெயர் பெற்றிருந்தார் எனவும், திருஞானசம்பந்தர் துணையால் சைவ சமயத்திற்கு மாறியதும் சிவபெருமன் திருவருளால் கூனல் நீங்கி நிமிர்ந்து அழகிய வடிவத்தைப்பெற்றதால் சுந்தர பாண்டியன் என்ற பெயரினைப் பெற்றதாகவும் திருவிளையாடல் புராணம் சுந்தரமாக விளக்குகிறது.

பரலையுடைய பள்ள நிலத்தின் பரப்பிலே பாம்புகள் மறைந்து கிடக்கும் குழிகள் உள்ளன. அவற்றை மனத்தாலே குறித்துக்கொண்டு, செறிந்த வளையுடைய விறலியர், அப்பாம்பு மனம் மகிழும்படி கையால் தொழுது வணங்கிப் போவீராக எனப் பாணனின் கூற்றாகக் குறிப்பிடும் மலைபடுகடாம் (199-202), பழங்காலத் தமிழகத்தின் தெய்வ நம்பிக்கையைப் பற்றி எடுத்துரைக்கிறது.

வேட்டைச் சமூகமாக வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் இடி, மழை, மின்னல், புயல், வெள்ளம் போன்ற இயற்கை நிகழ்வுகளைக் கண்டும், ஆபத்து விளைவிக்கும் காட்டு விலங்குகளான சிங்கம், புலி, யானை, கரடி, முதலை போன்றவற்றை அச்சத்தால் வணங்கி வந்திருந்தலும் இயல்பாக இருந்திருக்கும். மலைகளிலும் மரங்களிலும் தெய்வம் உறைவதான நம்பிக்கை, சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

பெரிய மலைச்சாரல்களில் வீழும் அருவியின் இசைக்கு ஏற்ப தெய்வ மகளிர் ஆடுவர் எனவும் (நற்றினை-34), அச்சம் தரும் தெய்வம் உறைகின்ற மலையில் உள்ள பூக்களைச் சூடிக்கொண்டு தெய்வமகளிர், பலியுணர்வை ஏற்பதற்காக சோலைக்கு வருவார்கள் எனவும் (அகநானூறு-158), துன்பம் தரக்கூடிய அணக்கு மற்றும் அச்சம் தரும் சூர் என்ற இரு தெய்வங்களும் இரவில் தலைவியைத் தேடி காட்டின் வழியே வரும் தலைவனைப் பயமுறுத்தும் என்பதையும் தொகை நூல்கள் படம் பிடித்துக்காட்டுகின்றன. மேய்ச்சல் நிலத்தவரான முல்லைக்காரர்கள் எருதின் கொம்பை நட்டு தெய்வமாக வழிபட்டதாகவும், நெய்தல் மக்கள் சுறாவின் கோடு நட்டு வழிபட்டதையும், சங்கச் சித்திரங்கள் தெளிவாக்குகின்றன. தெய்வங்களின் சினத்தைத் தணிப்பதற்காக பலியும் படையலும் படைக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது.

பெண் தெய்வங்களையே போற்றி வந்த தாய்மை தமிழ் சமூகத்தில் பயிரிடுதலும் கால் நடைச் செல்வமும் பெருகியபின் ஆணாதிக்கம் மேலோங்கி ஆண் கடவுள்கள் முக்கியத்துவமடைந்ததாக, ஆய்வாளர்களால் எடுத்துரைக்கப்படுகிறது. தெய்வங்களின் பெயர்கள் ஆண்பாற் பெயர்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. வேதநெறி நுழைந்தவுடன் கடவுளர்களின் எண்ணிக்கையும் பல்கிப் பெருகியதாக குறிப்பிடப்படுகிறது. அணக்கு மற்றும் சூர் முக்கியத்துவமிழந்து, தினைப்புனக் காவலுக்குச் செல்லும் பெண்களை அச்சுறுத்தி வந்த முருகன், ஆற்றல் மிக்கவராக மாற்றம் பெற்றிருக்கிறார். திருப்பரங்குன்றத்து மலைச் சாரலில் அணங்கும், சூரும் சேவற்கொடியை வாழ்த்தியவாறு விளையாடிக் கொண்டிருப்பதாக திருமுருகாற்றுப் படை குறிப்பிடுகிறது

சேவல் மயில் போன்ற பறப்பன விலங்குகளோடு ஊர்வன விலங்கான பாம்போடும் முருகப்பெருமானுக்கு தொடர்புள்ளதாகத் தெரிகிறது. பாம்பு கண்ணில் பட்டால் வழிபாட்டினை முருகன் ஏற்றுக் கொண்டதாக ஒரு மரபு வழக்கத்திருந்ததாகக் கூறப்படுகிறது. முருகன் என்றில்லாமல் சிவன், விஷ்ணு, அம்மன் போன்ற முக்கியக் கடவுள்களோடும், கிழக்கு மற்றும் மேற்கத்தியச் சமயங்களோடும், நாகம் எனக் குறிப்பிடப்படும் பாம்புகள் தொன்மைக் காலத்திலிருந்தே தொடர்பு கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

உலகின் தொன்மையான குலங்களில் ஒன்றாக நாககுலம் கருதப்படுகிறது. பண்டைய காலத்து மக்கள் விலங்குகளையும், பறவைகளையும், மரங்களையும்

குல அடையாளங்களாகப் பெற்றிருந்தனர். பாம்புகளை அடையாளப்படுத்திய குலத்தினர் நாகர்களாக இருந்திருக்கலாம். நாகர்கள் பாம்புகளை வழிபடும் மரபினராகவும் அடையாளம் காணப்படுகின்றனர். தொன்மையான காலத்திய நாக வழிபாடு, நெடுங்காலமாக பின்பற்றப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் புற்றுக் கோவில்களிலும், வட இந்தியாவில் நாகபஞ்சமியாகவும் நாகவழிபாடு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

நாகர் என்னும் தொல்குடி மக்கள் பற்றி தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கிறது. நாகர்களின் நாடு செல்வச் சிறப்போடு விளங்கியதாக சிலப்பதிகாரமும், நாகத்தீவு பற்றி மணிமேகலையும் குறிப்பிடுகின்றன. சங்கத் தொகை நூல்களில் புறத்தினை நன்னாகனார், மருதன் இளநாகனார், முரஞ்சியூர் முடிநாகனார் போன்ற நாகர், நாகனார், நாகரியர் எனும் பெயர்கள் தாங்கிய புலவர்கள் அறியப்பட்டுள்ளனர். இலங்கைத் தீவோடும் நாகர்கள், நாகநாடு மரபு பெருமளவில் தொடர்பு படுத்தப்படுகிறது.

உலகின் பல்வேறு தொன்மவியல் மரபிலும் நாகங்கள் குறித்தான பதிவுகள் இடம் பெற்றுள்ளன. நாகங்கள் பற்றிய கதை மரபுகள், வழிபாடுகள் உலகமெங்கும் பரவியுள்ளன. செழுமைக்கான குறியீடாகவும், யோக ஆற்றலுக்கான குறியீடாகவும் நாகங்கள் குறிப்பிடப்படுவதுண்டு. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டவர்களாக அறியப்படும் நாகமக்கள் குறித்து பல்வேறு அறிஞர்களும் கருத்துக்கள் பதிவு செய்துள்ளனர். தமிழர்கள் நாகர்கள் என்பதும், குறிப்பாக பண்டைய இந்தியாவெங்கும் வாழ்ந்த மக்கள் நாகர் வழிவந்தவரென்பதும், பல புகழ்பெற்ற வரலாற்றறிஞர்களின் கூற்றாக உள்ளது.

மகாபாரத காப்பியமெங்கும் நாகர்கள் பற்றிய கதையாடல்கள் வெகுவாக சொல்லப்பட்டிருக்கின்றன. காப்பியத்தின் தொடக்கமான ஆதிபருவத்தில் நாகர்களின் அரசரான தட்சகன் குறித்தும் சிறப்பித்துக் கூறப்படுகிறது. காவியத்தில் வரும் பல்வேறு கதைமாந்தர்களும் நாகர்கள் மரபோடு தொடர்பு படுத்திக் காட்டப்படுகின்றனர். கண்ணனின் காளியன் நடனம் கண்ணைக் கவரும் காட்சி.

பக்தி நெறி தழைத்தோங்கச் செய்த ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவர்களாக அறியப்படுகின்றனர். மதுரை நான்மாடவீதியில் கண்ணனின்

அற்புதக் காட்சியைக் கண்ட ஆழ்வார்களில் பெரிய ஆழ்வார் எனச் சிறப்பித்துக் கூறப்படும் விட்டுச் சித்தர், பல்லாண்டு பாடிப் போற்றியதாகப் புகழப்படுகிறார். கண்ணன் பக்தியில் சிறந்து விளங்கிய பெரியாழ்வார், பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட ஐயம் தீர்த்து. பொற்கிழி அறுத்து, கண்ணனே பரம்பொருள் என நிருவவும் செய்திருக்கிறார். பெருமாளுக்கு பாமாலையும், பூமாலையும் சாற்றுவதே பிறவியின் நோக்கமாகக் கொண்டிருந்தவரான வில்லிபுத்தூர் கோன், சூடிக் கொடுத்த சுடர் கொடியாள் கோதைநாச்சியாரின் வளர்ப்புத் தந்தையாகும் அரிய வாய்ப்பினையும், அரங்கமா நகரிலுள்ள திருவரங்கருக்கு மாமனாராகும் சிறப்பினையும் பெற்றிருந்தார் என்பது வரலாறு.

காஞ்சியிலும், மதுரையிலுமாக பௌத்தம், சமணம் வெளியேற்றப்பட்டு, சைவமும், வைணவமும் ஒன்றோடொன்று மல்லுக்கட்டியிருக்கின்றன. ஏற்கனவே நடந்து கொண்டிருந்த மல்லுக்கட்டலில் பின்னர் இசுலாமும், கிறித்தவமும் சேர்ந்து கொண்டன. தமிழ் மண்ணில் யார் பெரிய கடவுள் என்பதிலும், உண்மையான கடவுள் யார் என மெய்ப்பிப்பதிலும் பல முனைப் போட்டி.

சிவனே உலகின் முழுமுதற்கடவுள் என்ற சைவர்களுக்கும், திருமாலே உலகைக் காக்கும் முழுமுதற்கடவுள் என்ற வைணவர்களுக்கும் மனப்பகையும், போட்டியும் ஏற்பட்டு, அவரவர் கடவுளை உயர்த்திக் காண்பிப்பதையும், மற்ற கடவுளரை குறைத்தும், தாழ்த்தியும் பேசியுள்ளதை அவரவர் சமய நூல்களில் காணலாம்.

பத்து அவதாரங்கள் எடுத்த பெருமாளாலும், பிட்டுக்கு மண் சுமந்த சிவனாராலும், குன்றுதோறும் நிற்கும் முருகனாராலும், ஐம்பத்தோறு சக்தி பீடங்கள் கொண்ட அம்மனாலும், சமயக் குருமார்களாலும், ஞானியராலும், முனிவராலும், தவசிகளாலும், பீடங்களாலும், சாதிக்க இயலாதவொன்றை திலகர் எனும் மாமனிதர் துணை கொண்டு, இந்தியாவின் தேசியக் கடவுளென போற்றக்கூடிய அளவிற்குப் பெரும்புகழ் பெற்றுவிட்ட பிள்ளையாரின் சாமர்த்தியம் ஒரு கடவுளுக்கும் இல்லையென்றே வரலாறு சுட்டிக் காட்டுகிறது. ஒரு நாளோடு முடிந்து போன சடங்கினை ஒருவாரம், ஒரு மாதம் என நீட்டிக்க வைத்து, ஒரு சாண் அளவாக இருந்தது மாறி பல அடிகளாக, மீட்டர்களாக ஆண்டுதோறும் பருத்துக் கொண்டே போகும் ஆற்றல் மற்ற கடவுளர்களுக்குக் கிட்டவில்லை. அரசர்களின் ஆணையாலோ, வாள் கொண்டோ, ஆசைகாட்டியோ மக்களின் மனங்கள்

மாற்றமடைந்ததாகத் தெரியவில்லை. இருந்தும் மாற்றம் நிகழ்ந்திருப்பது கண்கூடு. சந்து, பொந்து, இண்டு, இடுக்கு, மூலை, முடுக்கு, குளம், குட்டை, மரம் என எங்கும் பிள்ளையார் உருவம். யார் இந்தப் பிள்ளை? பிள்ளையின் வரலாறென்ன?

அயன், அரி, அரன் எனும் பிரம்மா, விஷ்ணு, சிவனாரில், அயனுக்கு இந்திய மண்ணில் சிறப்பான வழிபாடு இல்லாமல் போனதால், அரிக்கும் அயனுக்குமே நேரடிப் போட்டி நிலவியிருக்கிறது.

சைவ சமயத்தின் கடவுளான சிவபெருமானைப் போற்றி திருஞானசம்பந்த மூர்த்தி நயனார், திருநாவுக்கரசு நாயனார் மற்றும் சுந்தர மூர்த்தி நாயனாரால் பாடப்பட்ட பாடல்கள் தேவாரம் என அழைக்கப்படுகின்றன. தேவாரப் பாடல்களைப் பண்களாக வகைப்படுத்தி, ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய திருப்பதிகங்களையும் ஏழு திருமுறைகளாக வகுத்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. திருத்தலங்கள் வாரியாக மூன்று நாயன்மார்கள் பாடல்களையும் அடைவு செய்து தொகுத்தது அடங்கன் முறை என அழைக்கப்படுகிறது. மூவரில் ஒவ்வொருவர் பதிகங்களையும் தனித்தனியாக வைத்துக் தலங்கள் வாரியாக தொகுத்து அடைவு செய்த முறை தல முறை எனப்படுகிறது. இன்ன பதிகம், இன்ன ஊர் எல்லையில், இறைவன் திருமுன், வலம் வரும் போது என்ற காலமுறைப்படி பாடியவாறு எனும் பெயர் கொண்ட தொகுப்பும் இருந்திருக்கிறது. தேவாரம் பழந்தமிழ் இசையையொட்டிய பண்களுடன் பாடப்படுகிறது.

தேவார ஆசிரியர் மூவருள், இயலிசைத் தமிழாகிய திருப்பதிகங்களை முதன் முதலில் அருளிச் செய்த திருஞானசம்பந்தரைப் போற்றும் விதமாக, அவர் அருளிய திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் அருளியவை நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளியவை ஏழாம் திருமுறையாகவும் தொகுக்கப் பெற்றுள்ளன.

மாணிக்கவாசகர் பெருமான் அருளிய திருவாசகம் மற்றும் திருக்கோவையார் எட்டாம் திருமுறையயாகவும், ஒன்பது ஆசிரியர்களால் பாடப்பட்ட பாடல்கள் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும். காரைக்காலம்மையார், சேரமான் பெருமான் நாயனார், நம்பியாண்டார் நம்பி முதலிய பதினோரு ஆசிரியர்கள் பாடிய பாடல்கள் பதினொன்றாம்

திருமுறையாகவும், சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுரணம் பன்னிரெண்டாம் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

புகழ்பெற்ற இராஜராஜ சோழர் ஆட்சிகாலத்திலே, தமிழ் சைவர்களின் போற்றுதலுக்குரிய சிதம்பரம் கோவிலிலே, கவனிப்பாரற்றுக் கிடந்த தேவாரங்களையும் வேறுபல சமய இலக்கியங்களையும் எடுத்து, பூச்சிகளால் அரிக்கப்பட்டு அழிந்தவை போக எஞ்சியவற்றை நம்பியாண்டார் நம்பி எனும் பெருந்தகையார் பன்னிரண்டு திருமுறைகளாகக் தொகுத்தளித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பொது ஆண்டின் நான்காம் மற்றும் பத்தாம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருந்த சிறந்த சிவனடியார்களுள், குறிப்பிடத்தக்க அறுபத்து மூன்று பேர் நாயன்மார்கள் எனப் போற்றப்படுகின்றனர். சுந்தர மூர்த்தி நாயனாரால் பாடப்பட்ட திருத்தொண்டத்தொகை எனும் பதிகத்தில், நாயன்மார்களைப் பற்றிய பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. திருவாரூர் கோவிலின் இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட திருத்தொண்டத்தொகையினை விரிவுபடுத்தி நாயன்மார்களின் வரலாறு பெரியபுராணத்தில் விவரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் அறுபது நாயன்மார்களைக் குறிப்பிட்டிருப்பதாகவும், பின்னர் நம்பியாண்டார் நம்பி அவர்கள், சுந்தரமூர்த்தி நாயனார், நாயனாரின் அப்பா சடையனார், இசை ஞானியார் ஆகியோரைச் சேர்த்து நாயன்மார்களின் எண்ணிக்கையை அறுபத்தி மூன்றாக ஆக்கினாரெனவும் கூறப்படுகிறது. நாயன்மார்களில் சிலரே சமய நூல்களில் புலமை பெற்றவரென்றும் பெரும்பாலானவர்கள் சிறந்த சிவபக்தர்களாக இருந்தவர்களெனவும் குறிப்பிடப்படுகிறது. இறையருள் பெற பக்தி மட்டுமே போதுமானது என்பதும், எல்லோரும் இறைவன் திருவடிகளை அடையலாமென்பதும் நாயன்மார்களின் வாழ்விலிருந்து அறியப்படுகிறது.

நாயன்மார்களில் காலத்தால் மூத்தவராகக் குறிப்பிடப்படும் மூன்றாம் அல்லது நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த புனிதவதி எனும் இயற்பெயர் கொண்ட காரைக்கால் அம்மையார், நின்றசீர் நெடுமாற நாயனார் என நாயன்மாரில்

ஒருவராகக் குறிப்பிடப்படும் அரசர் கூன்பாண்டியனின் அரசியான மங்கையர்க்கரசியார், இசை ஞானியார் போன்றோர் பெண்களாக இருக்கிறார்கள்.

சைவக் குரவர்கள் நால்வருள் ஒருவரான சுந்தரரை காப்பியத் தலைவராகக் கொண்டு சைவ அடியார்களான நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றினை விவரிக்கும் நூல் திருத்தொண்டர் புராணம் என அறியப்படும் பெரியபுராணம. இரண்டாம் குலோத்துங்க சோழனின் (1133-1150) அரசவையில் அமைச்சராக இருந்த சேக்கிழார், அரசரின் வேண்டுகோளுக்கு இணங்க பெரியபுராணத்தை இயற்றியதாகக் கூறப்படுகிறது.

அருண்மொழித்தேவர் எனும் இயற்பெயர் கொண்ட சேக்கிழார் பெருமானார், தில்லையில் நூலை இயற்றும் போது சிவபெருமானே உலகெலாம் என அடியெடித்துக் கொடுத்ததாகவும், உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் எனத் தொடங்கி, நான்காயிரத்து இரு நூற்றி எண்பத்தி ஆறு செய்யுள்களில் பெரியபுராணம் பாடி முடிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. புராணத்தில் ஆளுடையபிள்ளையான திருஞான சம்பந்தரின் வரலாறு மட்டுமே ஆயிரத்து இரு நூற்றி ஐம்பத்தி ஆறு செய்யுட்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளதால் பிள்ளை பாதி, புராணம் பாதி என்னும் பழமொழியே ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பேரின்ப வீட்டை நல்குவதும், பொன்னுலக வாழ்வைத் தருவதும், ஞானியரும் தேவர்களும் வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்ளும் சிறப்புடையதும், சிட்டர்களாகிய அந்தணர்கள் வாழ்வதற்கு இடமளிப்பதும், மாட மாளிகைகள் சூழ்ந்ததும், தேனிறைந்த மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்ததும், திருச்சிற்றம்பலவானர் திருக்கூத்தாடியருள்வதுமான தில்லைமாநகர் சைவ சமயத்தாரின் தனிச் சிறப்புடைய கோவிலாகப் போற்றப்படுகிறது.

தில்லை மரங்கள் சூழ்ந்திருந்ததால் தில்லை, தில்லைவனம் என்றும், புலியூர் முனிவரால் புலியூர், பெரும்பற்றப் புலியூர் என்றும் அழைக்கப்பட்ட சிதம்பரம், நடராஜர் கோவிலால் பெயர்பெற்ற ஊர். தில்லை நடராஜர் கோவிலென்றும் சிதம்பரம் நடராஜர் கோவிலென்றும், சிதம்பரம் கோவிலென்றும், பூலோக கைலாயம் என்றும் அழைக்கப்படும் தில்லை, தேவார பாடல் பெற்ற இருநூற்றி எழுபத்தாறு சிவத்தலங்களுள், சைவத்தின் முதன்மைக் கோவிலாகப் புகழப்படுகிறது.

பஞ்சபூதத் தலங்களில் ஆகாயத்திற்குரியதான தில்லை நடராசர் திருக்கோவில், சேர, சோழ, பாண்டிய, பல்லவ, விஜய நகரப் அரசுகளால் பேணப்பட்டு வந்துள்ளது. பிற்காலச் சோழர்கள் காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கிய தில்லைக் கோவிலுக்கு, சோழ மன்னரால் பொற்கூரைவேயப்பட்டு பொன்னம்பலம் எனும் பெயரும் அளிக்கப்பட்டுள்ளது.

நடனக் கலைகளின் தந்தையாகக் குறிப்பிடப்படும் நடராசர், சிதம்பரம் கோவிலில் ஆனந்த தாண்டவம் ஆடுவதாக மரபுள்ளது. ஈராயிரம் வருடங்களுக்கு மேலான வரலாறு கொண்டதாகக் குறிப்பிடப்படும் தில்லை திருச்சிற்றம்பலம், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், கல்வெட்டுகள் வழியாக பெரிதும் அறியப்பட்டுள்ளது.

திருச்சித்ரக்கூடம் என அழைக்கப்படும் கோவிந்தராஜர் திருக்கோவில், தில்லை கோவிலினுள்ளே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. நந்தவர்ம பல்லவரால் அமைக்கப்பட்டதாகக் குறிபிடப்படும் கோவிந்தராஜப் பெருமாள், சைவ, வைணவ காழ்ப்போடு தொடர்புபடுத்தப்படுகிறார். பெருமாளை குலசேகராழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

செந்நெல் விளையும் அழகிய வயல்களை உடைய சோலைகளின் அயலிடங்களில், வளமையான புன்னை மரங்கள் உதிர்த்த பூக்கள் வெண்மையான துணியிற் பவளங்கள் பரப்பினாற் போல விளங்குவதும், எறிகின்ற தெளிந்த கடல் அலைகளில் ஏறிவந்த சங்குகளும் சிப்பிகளும் பொன்போல் விளங்கும் தாமரைகள் மலர்ந்த வயல்கள் வந்து புகுவதும், பாதுகாவலாக அமைந்த வலிய மதில்களும் பொன்னால் அழகுறுத்தப்பெற்ற அழகிய மாளிகைகளும் மிக உயர்ந்து மலர் மணம் கமழும் சோலைகள் சூழ்ந்துள்ளதும், நீர்ப்பள்ளங்களில் இருக்கும் மீன்களை இரையாகக் தேர்ந்து கொள்ளுதற்குத் திரியும் பிளந்த வாயை உடைய நாரைப் பறவைகள் நாள் தோறும் பல இடங்களில் வந்து தங்கும் பொழில்கள் சூழ்ந்ததும், அழகிய பெண்கள் ஆங்காங்கே நடனம் ஆடுவதும், ஊர் மருங்கெலாம் பூத்துள்ள அழகிய தாமரை மலர்கள் தம்மிடம் நிறைந்துள்ள தேனை ஒழுக விடுவதும் ஆகிய நீர்வளம் மிக்கதும், இனங்களோடு கூடிய ஆண் குரங்குகள் பெண் குரங்குகளோடு கூடி மரங்கள் தரும் கனிகளை வயிராற உண்டு மகிழும் சோலைகள் நிறைந்துள்ளதும், வளம் மிக்க வண்டல் மண்ணை உடைய வயல்களின் மடைகளில் வாளை மீன்கள் பாயும் நீர் நிறைகளில் தாமரைமலர்கள் மலர்ந்து

தேனைத் தரும் பெருமைமிக்க பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில் பிறந்தவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

ஞானசம்பந்தப் பிள்ளையார் மூன்றாண்டு நிறையப் பெற்ற பின்னர், ஒரு நாள் காலை தந்தையாருடன் சீர்காழி திருக்கோவிலின் திருக்குளத்திற்குச் சென்றார். சிவபாத இருதயர் மைந்தனைக் கரையில் அமரச் செய்து நீருள் மூழ்கி அகமருடஜெபம் செய்தார்.

தந்தையைக் காணாமையாலும் முன்னைத்தவம் தலைக்கூடியதாலும் திருத்தோணிச்சிகரம் பார்த்து அம்மே! அப்பா! என்று அழைத்தருளி அழுதருளினார். அப்பொழுது திருத்தோணிபுரப்பெருமான் உமாதேவியாரோடும் விடைமீதமர்ந்து காட்சிகொடுத்தார். உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞானமும் கலந்த திருமுலைப்பால் ஊட்டுவாயாக எனப்பெருமான் பணித்தார். அப்படியே பெருமாட்டியும் எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்தருளி உண் அடிசில் என ஊட்டினார். ஞானம் உண்ட பிள்ளையார் சிவஞானச்செல்வராய்த் திகழ்ந்தார்.

பிரம தீர்த்தத்தில் நீராடிய சிவ பாத இருதயர் பால்வழிய நின்ற பிள்ளையைப் பார்த்து யார் கொடுத்த பாலை உண்டாய் எனக் கோல் கொண்டோங்கினார். உடனே ஞானசம்பந்தர் தமக்குப் பால் கொடுத்த பரம்பொருளை அடையாளங்களுடன் சுட்டித் தோடுடைய செவியன் என்ற திருப்பதிகம் பாடினார்.

மூன்று திருமுறைகளிலும் மொத்தம் நான்காயிரத்து நானூற்றி நாற்பத்தியேழு பாடல்கள் இயற்றியிருக்கும் திருஞானசம்மந்த நாயன்மார், பல அற்புதச் செயல்களைச் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறார். கணவனாக வர இருந்த வணிகனை நச்சரம் தீண்டிவிட்டதால் கதறியழுதாள் நங்கையெருத்தி. அந்நங்கையின் துயரைத் துடைக்க எண்ணி, சடையாய் எனுமால் சரண்நீயெனுமால் என்ற திருமருகல் திருப்பதிகத்தைப் பாடி வணிகரை உயிர்பெற்று எழச்செய்ததாக பாடல் கூறுகிறது.

நீர்நிலைகளில் குவளை மலர்கள் மலர்ந்து மணம் செய்யும் திருமருகலைத் தனக்குரிய ஊராக உடைய பெருமானே! நங்கை சடையாய் என்றும் விடையாய் என்றும் தாமே புகலிடம் என்றும் கூறி அஞ்சி மயங்கிவிழுகின்றாள். உம்மையே நினைந்து புலம்பும் இவள் மனவருத்தைப் போக்காதிருத்தல் தமது பெருமைக்குத் தக்கதோ எனவும், அறிவற்ற சமணர்களும் எங்கும் பரவி வாழும் சாக்கியர்களும்

நெறியல்லனவற்றைச் செய்து நின்று உழல்பவராவர். மான்கன்றை ஏந்திய கையை உடையவரே! தம்மை நினையும் அடர்ந்த கூந்தலினளான நங்கையின் மனத்தைச் சிதறுண்ணச் செய்தீரே, இது தகுமோ! எனவும் கேட்டு பத்து பாடல்கள் இயற்றியுள்ளார்.

அறிவு சேரர் எனத் தமிழ்ப்படுத்தப்படும் திரு ஞானசம்பந்தர் ஏறக்குறைய ஒவ்வொரு பதிகத்திலும் ஒரு பாடலை சமணர் சாக்கியருக்கும், பிரமன் திருமாலுக்கும் ஒதுக்கியது அக்காலத்திய சமயப் பிணக்குகளைச் சுட்டுவதாக இருக்கிறது.

இசைத் தமிழில் மிகச்சிறந்த ஞானம் கொண்டிருந்த திருநாவுக்கரசு நாயனார், திருஞான சம்பந்தர் மேல் பேரன்பு பூண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. சம்பந்தப் பெருமானால் பெருமையாக அப்பர் அதாவது தந்தை என அழைக்கப்பட்ட மருணீக்கியார் என்ற இயற்பெயரைக் கொண்ட நாவுக்கரசர், கோவில்களின் சுற்றாடலை உழவாரங்கொண்டு தூய்மைப்படுத்தும் பணியும் செய்ததால் உழவாரத் தொண்டர் எனவும் போற்றப்படுகிறார்.

திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியார் சிறந்த சிவபக்தராக இருந்தார். தம்பி சமணத்தில் சேர்ந்ததை எண்ணி மிகவும் மனம் வருந்தி இறைவனிடம் முறையிட்டு வந்தார். அதனால் மருள்நீக்கியாருக்கு கடுமையான சூலைநோய் ஏற்பட்டது. சமண மடத்தில் செய்யப்பட்ட சிகிச்சைகள் ஏதும் பலனளிக்கவில்லை. பின்னர் தமக்கையிடம் முறையிட்டார். திலகவதியார் சிவனிடம் மனம் உருகிப் பாடச் சொன்னார். மருள்நீக்கியார் கூற்றாயினவாறு விலக்ககலீர் என்று தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடி முறையிட்டதில் நோய் தீர்ந்தது. சைவத்துக்கு மாறிய மருணீக்கியார் திருநாவுக்கரசரானார்.

சிவ சின்னங்கள் அணிந்து, உழவாரப்படை ஏந்தி, முக்கரணங்களாலும் பக்தி செய்ய முற்பட்ட தருமசேனரைக் கண்டு, சமணக்குருமார்கள் கொதித்தெழுந்தனர். சமணர்கள் பெருங்கூட்டமாகக் கூடி மன்னனைக் காண விரைந்தார்கள். அமைச்சரை நோக்கிய அரசன், அவைக்களத்திற்கு மருள் நீக்கியாரை அழைத்து வாருங்கள் என கட்டளையிட்டார். ஆணைக்கு அடிபணிந்த அமைச்சர்கள் சேனைகள் சூழ நாவுக்கரசர் எழுந்தருளியிருக்கும் திருவதிகையை அடைந்தனர்.

திருவெண்ணீற்றுப் பொலிவுடன் அமர்ந்திருந்த நாவுக்கரசரை அணுகி அரசர் அழைத்துவர உத்தரவிட்டுள்ளார் என அரச தோரணையில் ஆணை பிறப்பித்தனர். நஞ்சை அமுதாக உண்ட நீலகண்டரின் திருவடியில் தஞ்சம் புகுந்த திருநாவுக்கரசர், சற்றும் அஞ்சாது நெஞ்சு நிமிர்த்தி, நாமார்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம் எனத் தொடங்கும் மறுமாற்றத் திருத்தாண்டகத் திருப்பதிகத்தைப் பாடினார்.

திருப்பதிகத்தில் மெய் உருகிய அமைச்சர்கள் அவரது மலர்தாளினைப் போற்றி வணங்கி, தயை கூர்ந்து அரண்மனைக்கு எழுந்தருளவேண்டும் எனப் பணிவன்போடு வேண்டினர்.

நாவுக்கரசரைக் கண்டதும் சமணர்கள் பொங்கி எழுந்தனர். அரியாசனத்தில் அமர்ந்திருந்த அரசன், தருமசேனரை யாது செய்ய வேண்டுமெனக் கேட்க, வெண்ணீற்றை அணியும் தருமசேனரை சுண்ணாம்பு காளவாயில் தள்ள வேண்டும் என்றனர். நீற்றறையில் அடைபட்ட நாவுக்கரசர் இறைவன் அருளால், வெப்பம் மிகுந்த அந்த சுண்ணாம்பு நீற்று, இளவேனிற் காலத்தில் வீசும் குளிர் தென்றலைப் போல, குளிர்ச்சி பெருந்திய தடாகம் போல, யாழின் மெல்லிசை போல, தண்மை மிகும் குளிர் நிலவு போல நாவுக்கரசருக்கு இன்பத்தைக் கொடுத்தது. பிறைமுடி வேணியரை நினைத்து, மாசில் வீணையும் மாலை மதியும் எனத் தொடங்கும் திருப்பதிகம் ஒன்றைப் பாடினார்.

ஏழு நாட்கள் சென்ற பின்னர், கரிய மேகக் கூட்டம் திரண்டு வந்தாற்போல் நீற்றறைய வந்தடைந்த சமணர்கள், கதவைத் திறந்ததும் வியப்பிலாழ்ந்தனர். பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி அம்பலவாணரது பாதமலர்க் கமலங்களில் ஊறுகின்ற தேனமுதத்தை உண்டுகளிப்புற்றவர் போல் காணப்பட்டார் நாவுக்கரசர். ஆத்திரத்தோடு கொதித்தெழுந்த சமணர்கள், சமணநூல்களின் இறவாமை மந்திரங்களை கூறித் தப்பிவிட்டார் என மன்னனிடம் முறையிட்டனர்.

கொடிய நச்சுக்கும் மதயானை இடறலுக்கும் அஞ்சுவது யாதொன்றுமில்லை எனத் தப்பிய நாவுக்கரசரை, கல்லோடு கட்டி கடலில் போட வேண்டும் என்றனர். ஏவலாளர் நாவுக்கரசரைப் படலில் ஏற்றிக்கொண்டு சமணர்களுடன் புறப்பட்டனர். கல்லோடு நடுக்கடலில் வீழ்ந்த நாவுக்கரசர், நற்றுணையாவது நமச்சிவாயவே எனப் பதிகம் பாடி ஆழ்கடலுள் அருந்தமிழ் முத்தைக் கொடுத்தார். பைந்தமிழ் பாமாலை

கோர்த்தார். கல்லும் கனிய இன்மொழியில், நாவரசர் பாமாலை தொடுத்து, ஐந்தெழுத்தை ஓதியதும், அவரது உடலைப் பிணித்திருந்த கயிறு அறுபட்டு வீழ்ந்தது. கல்லும் தெப்பமாகக் கடல் மீது மிதந்தது. திருநாவுக்கரசர் அதன் மீது எழுந்தருளினார்.

அப்பரடிகள் நான்காயிரத்து அறுபத்தி ஆறு பாடல்கள் பாடியுள்ளார். முதிர்ந்த வயதிலும் பல்வேறு திருப்பதிகங்களுக்குச் சென்று பதிகங்கள் பாடியவராகப் புகழப்படுகிறார். பணிசெய்து கிடப்பதையே பெருவாழ்வாகக் கொண்டிருந்தவரான திருநாவுக்கரசு நாயனார், சிறந்த சைவத் தொண்டராகப் போற்றப்படுகிறார்.

சைவசமயக் குரவர்கள் நால்வருள், தொண்டருக்கும் தொண்டரானவரான சுந்தரமூர்த்தி நாயனார், ஆயிரத்து இருபத்தி ஆறு பாடல்களைக் கொண்ட ஏழாம் திருமுறையைப் பாடியவர். திருவாரூர் வீதிகளில் சிவபெருமானையே தூதுபோக வைத்தவராகக் குறிப்பிடப்படும் சுந்தரர், சிவனாரைத் தோழராகப் பாவித்தவராகக் அறியப்படுகிறார். முதியவர் தோற்றத்தில் வந்த இறைவனை, பித்தா என விளித்ததால் வன் தொண்டர் எனவும் கூறப்படுகிறார்.

சுந்தர மூர்த்தி நாயனார், ஆலால சுந்தரர் எனும் திருப்பெயரில் திருக்கயிலையில் சிவபெருமானுக்கு திருத்தொண்டு செய்து வரும் காலத்தில், மலர்வனத்திலிருந்த இரு கந்தர்வப் பெண்களைப் பார்த்து மையல் உற, சிவபெருமானும் அவர்கள் மூவரையும் பூலோகத்தில் பிறக்க வைத்தார். தகுந்த காலத்தில் தடுத்தாட்கொள்ளவேண்டுமென்றும் சுந்தரர் சிவபெருமானை வேண்டிக் கொண்டார்.

திருநாவலூரில் பிறந்த சுந்தரர் மணப்பருவம் அடைந்தபோது, திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. மணநாளன்று முதியவர் வடிவில் அங்கு வந்த சிவபெருமான், சுந்தரருடைய பாட்டனார் எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட ஒரு ஓலையைக் காட்டி, சுந்தரரும் அவர் வழித் தோன்றல்களும் அவருக்கு ஏவலர் என்றார். முதியவர் காண்பித்த ஓலையை ஆரூரார் கிழித்தெறிந்தார்.

மூல ஓலை திருவெண்ணை நல்லூரில் உள்ளதாக முதியவர் கூற, வழக்கு அவ்வூர்ப் பெரியவர்களிடம் சென்றது. அங்கும் முதியவருக்கு ஏற்ப தீர்ப்பு சொல்லப்பட்டு, திருவட்டுறை கோவிலை அடைந்தனர். கோவிலினுள் முதியவராக

வந்த இறைவன் மறைய, தடுத்தாட்கொள்ள வந்த இறைவனை சுந்தரர், பித்தா! பிறைசூடி! பெருமானே! எனும் பாடலை இனிமையான இந்தளப் பண்ணில் பாடினார்.

நம்பியாரூரர் எனும் இயற்பெயர் சுந்தரராகி, சிவத்தலங்கள் தோறும் சென்று இறைவன் பெருமைகளைப் பாடிய சுந்தர மூர்த்தி நாயனார், அற்புதங்கள் பல செய்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். சுந்தரருக்கும் சேரநாட்டை ஆண்ட சேரமான் பெருமாளுக்கும் சிறந்த நட்புறவு உண்டாகியிருக்கிறது. இருவரும் பல திருத்தலங்களுக்குச் சென்று அம்பலக் கூத்தனை, கறைகண்டனை, கங்கைமதிசூடியைப் போற்றி பல பதிகங்கள் பாடியுள்ளனர். சுந்தர நாயனார் வெள்ளை யானையிலும், சேரமான் நாயனார் குதிரையிலும் திருக்கயிலை திரும்பினர் என சைவ தொன்மரபு கூறுகிறது.

திருவாசகம் எனும் தேனைத் தந்தவரான திருவாதவூரடிகள், இரண்டாம் வரகுண பாண்டிய மன்னன் அவையில் தென்னவன் பிரமராயன் என்னும் பட்டம் வழங்கப்பெற்று அமைச்சராக விளங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. மன்னன் அளித்த பொருளை குதிரை வாங்கப் பயன்கொள்ளாது, திருப்பெருந்துறை எனும் ஆவுடையார் கோவில் திருப்பணிக்குச் செலவிட்டார். சிவபெருமான் குருவடிவம் காட்டி குருந்த மர நிழலில் ஆட்கொண்டு வாதவூராரை மாணிக்க வாசகராக மாற்றிவிட்டார்.

வந்த வேலை மறந்திருந்த மாணிக்கவாசகர் மேல் மன்னன் பிடியானை பிடிப்பிக்க, தந்தை என்பவர் மைந்தன் வாதை தவிர்ப்பதே கடனாதலால், இறைவனே குதிரைகளை ஓட்டிக் கொண்டு வந்தார். இரவே பரிகளனைத்தும் நரிகளாகி ஓடிவிட சுடுமணலில் நிறுத்தப்பட்டார் மாணிக்கவாசகர்.

வைகையில் வெள்ளம் பெருக்கெடுத்து கரைபுரண்டு ஓடியது. வீட்டுக்கு ஒருவர் கரையை அடைக்கும் பணிக்கு வரவேண்டுமென முரசறையப்பட்டது. யாருமற்ற செம்மனச் செல்வி என்ற வந்திக்கிழவியிடம் பிட்டை கூலியாகப் பெற இசைந்து மண் சுமக்கலானார் மகாதேவன்.

நன்று நன்று இன்னும் அன்னே, நயந்து பிட்டு அளிக்க வேண்டும் என உண்பதும், உறங்குவதும், சிறிது வேலை செய்வதும், பின் களைந்தவர் போல உறக்கம் கொள்வதுமாக விளையாடல் புரிந்து கொண்டிருந்ததால், மற்றவர் பகுதிகள் அடைபட்டும் திருவிளையாடல்காரர் பங்கு மட்டும் அடைபடாமலும்

இருந்தது கண்டு கோபம் கொண்ட பாண்டியன், கோல் தூக்க, கூடை மண்ணைக் கொட்டியவுடன் அத்தனை உடைப்பும் அடைபட, மன்னன் கலங்கி நிற்க, பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பித்தனோ, அனமர்த்தன பாண்டியனே.. மண் சுமக்கும் திருவிளையாடல் புரியவே வந்தோம் என வானொலியாய்ச் சொன்னார்.

பண் சுமந்து பாடற் பரிசு படைத்தருளும் - பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான் - விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன் - கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை - மண் சுமந்து கூலிகொண்டு அக்கோலால் மொத்துண்டு - புண் சுமந்த பொன் மேனி பாடுதுங்கான் அம்மானாய் என இறைவனை நினைந்து உருகி உருகிப் பாடுகிறார் மாணிக்கவாசகப் பெருமானார்.

திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் எனும் சிறப்பை பெற்றுள்ள அறுநூற்றி நாற்பத்தொன்பது பாடல்களை கொண்ட திருவாசகம், சைவ மரபினரால் வெகுவாகக் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக திருவாசகத்தின் தொடங்கமாக அமையும் சிவபுராணப் பாடல்கள் சிந்தையை நிறைப்பவையாகப் போற்றப்படுகின்றன.

தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று புகழும் மாணிக்கவாசகப் பெருமான், தேனே, அமுதே, கரும்பே, அம்மையே, அப்பா, ஒப்பிலா மணியே, அன்பினில் விளைந்த அரமுதே, செல்வமே, சிவபெருமானே என தண் தமிழில் அன்புறக் கொஞ்சுவது அழகோ அழகு. சமயக் குரவர்கள் தமிழுக்கும் பக்திக்கும் ஆகச் சிறந்த தொண்டாற்றியுள்ளனர் எனில் மிகையாகாது.

தமிழையும் சைவத்தையும் பேணி வளர்த்தவர்களாக அறியப்படும் பிற்காலச் சோழர்களின் காலம், ஆசிய வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது. பல்லவர்களின் ஆட்சி முடிவுற்று சோழர்களின் எழுச்சி தொடங்கியது.

சங்கம் மருவிய காலத்திற்குப் பின், பாண்டிய பல்லவ அரச மரபுகள் நிலைபெற்று இருந்த காலத்தில், சோழர்கள் குறித்து அறியப்பட முடியவில்லை என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். சோழமன்னர்கள் உறையூர் பழையறை போன்ற காவிரிக்கரைப் பகுதிகளில் செல்வாக்கற்ற நிலையில் சிற்றரசர்களாக வாழ்ந்திருக்கலாமென்று கூறப்படுகிறது. முற்காலச் சோழர்களின் வழிவந்தவர்களாகக் கூறிக் கொண்ட சோழர் குலத்தவர். தெலுங்கு கன்னட

நாடுகளுக்குச் சென்று குடியேறியதாகவும், அவர்கள் ரேனாட்டுச் சோழர்கள் என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

முற்காலச் சோழர்கள் காலத்திற்கு பின் ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை பகுதிகளில் செல்வாக்காக இருந்த குடியினராக முத்தரையர்கள் குறிப்பிடப்படுகின்றனர். பல்லவர்களோடும் பாண்டியர்களோடும் நட்புறவு கொண்டிருந்ததாக அறியப்படும் முத்தரையர் கால கல்வெட்டுகளும், கோவில்களும், கலைச் சின்னங்களம், தமிழக வரலாற்றை அறிந்துகொள்ள சிறந்த சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன. முத்தரையர்களின் மூதாதையர் தெலுங்கு, கன்னடப் பகுதிகளோடும் தொடர்புபடுத்தப்படுகின்றனர். முத்தரையர் தமிழகத் தொல்குடிகள் என்றும் வரலாற்றாளர்கள் சான்றளிகின்றனர். களப்பிரர் என்பார் முத்தரையர்களாக இருக்கலாமென்றொரு கருத்தும் சில வரலாற்றாசிரியர்களால் முன்வைக்கப்படுகிறது. தஞ்சைப் பகுதியிலுள்ள செந்தலை என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டிருந்த முத்தரையர்களில் குறிப்பிடத்தக்கவராக பெரும்பிடுகு முத்தரையர் எனும் சுவரன் மாறன் மன்னர் அறியப்படுகிறார்.

புதுக்கோட்டை பகுதியிலுள்ள நார்த்தாமலைப் பகுதி பல்லவர் சோழர், பாண்டியர் வரலாற்றோடு தொடாபுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. முத்தரையர்களின் ஆதிக்கத்திலிருந்த நார்தாமலை, வணிகத்தில் சிறந்திருந்ததாகக் கூறப்படுகிறது. நார்த்தா மலை குன்றுக் கூட்டத்திலிலுள்ள குன்றுகளில் சமணர் குடைவரைக் கோவில்களும், குகைகளும் அமைக்கப்பட்டள்ளன. மேல மலைக்குன்றிலுள்ள விஜயாலய சோழீஸ்வரம் எனும் கோவில், முத்தரையர் கட்டியதெனவும் சோழர் காலத்திய பழமையான கற்கோவில் எனவும் கருதப்படுகிறது. விஜயாலய சோழீசுரம் கோவில் தமிழகக் கோவில்களில் தனித்தன்மை கொண்டதாகப் புகழப்படுகிறது. கோவிலில் வட்ட வடிவக் கருவறையும், கலையழகு மிக்க வாயிற்காப்போர் சிலைகளும், அழகிய நடனமங்கையர் சிலைகளும், வண்ண ஓவியங்களும் இடம்பெற்றுள்ளன.

கல்வெட்டுகளுக்கும், குடைக்கோவிலுக்கும், அழகிய சிற்பங்களுக்கும், இசை கல்வெட்டுக்கும் பெயர் பெற்ற குடுமியான் மலையும், மிகச்சிறந்த வடிவமைப்பு மற்றும் வரலாற்று சிறப்புக் கொண்ட கற்கோவில்களுக்குப் புகழ்பெற்ற

கொடும்பாளூரும், புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்ன வாசல் அருகாமைப் பகுதிகளில் அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெருக்கெடுத்து ஓடும் வளம் பொருந்திய காவிரி ஆற்றுப் பகுதியில் ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை வலிமை பெற்று உயர்நிலையில் விளங்கிய மன்னர்கள் பிற்காலச் சோழர்கள் என அழைக்கப்படுகின்றனர். இந்தியாவை அரசாட்சி செய்த மன்னர்களுள் கடல் தாண்டியும் பேரரசை அமைத்தவர்கள் சோழர்களே. பிற்காலச் சோழர்களது ஆட்சிக் காலத்தில் கலைகளும் இலக்கியங்களும் செழிந்திருந்ததாக வரலாற்று அறிஞர்களால் புகழப்படுகிறது.

உறையூர் பகுதியில் சிற்றரசராக இருந்த விஜயாலய சோழர் (848-871), முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி, பிற்காலச் சோழ அரசுரிமையைத் தோற்றுவித்தவராக அறியப்படுகிறார். விசயாலய சோழர் காலத்தில் பல்லவர்களில் நிருபதுங்கவர்மனும் (850-882), பாண்டியர்களில சீமாறன் சீவல்லபனும் (835- 862) ஆட்சிபுரிந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பிற்காலச் சோழர்களின் வரலாற்றை அறிய ஏராளமான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக வரலாற்றாய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. ஏராளமான கல்வெட்டுகளும், மன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகளும், பட்டயங்களும், சோழர் காலத்திய இலக்கியங்களும், நூல்களும், சோழர்களது வரலாற்று மூலங்களாக எடுத்தாளப்படுகின்றன.

பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் நடைபெற்றதாகக் குறிப்பிடப்படும் பல்வேறு போர்களில் கொள்ளிடக் கரையிலுள்ள திருப்புறம்பியம் எனும் இடத்தில் நடைபெற்ற போர் வரலாற்றில் முக்கிய இடம்பெறுவதோடு, சோழர்களுக்கும் பெரும் திருப்புமுனையாக அமைந்ததாகக் கருதப்படுகிறது. நிருபதுங்கப் பல்லவரின் மகனும் கடைசிப் பல்லவருமான அபராஜவர்மருக்கும், சீவல்லபப் பாண்டியர் மகனான இரண்டாம் வரகுணருக்கும் இடையே நடைபெற்ற திருப்புறம்பியம் போரில், பல்லவர்களுக்கு ஆதரவாக விஜயலாய சோழன் மகன் ஆதித்த சோழனும் (871-907), நிருபதுங்கரின் பாட்டனாரும் கங்க அரசருமான முதலாம் பிருதிவீபதியும் சேர்ந்து கொண்டனர்.

தெள்ளாற்றுப் போர், குடமூக்குப் போர் என பல போர்கள் பல்லவ-பாண்டியரிடையே நடைபெற்றிருக்கின்றன. இருவரிடையேயும் சோழ நாடு மாறி மாறி வசமாகியிருக்கிறது. கொங்கு நாட்டின் மீதான ஆதிக்கம் தொடர்பாகவும் இருபடையினரும் பல போர்களைச் சந்திருக்கின்றனர்.

சிம்மக் கொடி பல்லவர், அரவக் கொடி கங்கர், புலிக்கொடி சோழர் ஒருபக்கமும், மீன்கொடி பாண்டியர் ஒரு பக்கமிருந்தும் பொருதிய குடமூக்கு அருகிலான திருப்புறம்பியம் போரைப் பற்றிய நினைவுகளாக, உதிரம் பட்ட தோப்பு எனும் குதிரைத் தோப்பு, சாட்சிநாதர் கோவில் போன்றவை விளங்கி வருவதாக ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. போரில் அபராசிதர் வென்றார். ஆதித்தருக்கு சோழநாடு கிடைத்தது.

ஆதித்த சோழர் தொண்டை மண்டலத்தை வென்றதை திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், அபராசிதப் பல்லவரை வெற்றிகொண்டதை கன்னியாகுமரிக் கல்வெட்டும் கூறுகின்றன. காளத்திக்கு அருகேயான தொண்டைமான் பேராற்றூர் என்னுமிடத்தில் உள்ள ஆதித்த சோழர் பள்ளிப்படைக் கோவிலை, புதல்வரான பராந்தக சோழர் (907- 950) கட்டியதாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

சோழப் பேரரசை விரிவாக்கும் நோக்கில் தீவிரமான போர்களில் ஈடுபட்டவராக பராந்தக சோழன் அறியப்படுகிறார். போர்களில் மட்டுமல்லாது ஆட்சிமுறையில் பல சீர்சிருத்தங்கள் செய்தவராகவும் பராந்தகர் புகழப்படுகிறார். இந்திய வரலாற்றில் குடியுரிமை மற்றும் வாக்குச் சீட்டு ஆகியவற்றை அறிமுகம் செய்தவராகவும், குடவோலை முறையில் ஊர் சபை உறுப்பினர்கள் தேர்ந்தேடுக்கப்பட்டதாகவும், ஊராட்சி முறை சிறப்பாக பேணப்பட்டதாகவும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார். பராந்தகரது ஆட்சி சிறப்பை உத்திரமேரூர் கல்வெட்டுகள் வெளிப்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஊராண்மை, நாட்டாண்மைக் கழகங்கட்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க பழங்காலத்தில் பயன்பட்ட தேர்தல் முறை குடவோலை எனப்படுகிறது. தேர்தல் விதிமுறைகளும் வேட்பாளர்களின் தகுதிகளும் கடுமையாக்கப்பட்டிருந்ததாக கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன. வாரியங்களுக்குக் கணக்குக் காட்டாது இருந்தவர் மட்டுமின்றி அவருக்கு சிற்றவை, பேரவை மக்கள், அத்தை மாமன் மக்கள், தாயோடு உடன்பிறந்தோர், தந்தையோடு உடன் பிறந்தார், பிள்ளை

கொடுத்த மாமன் என்று பல உறவு முறைகளிலும் தொடர்பிலும் வருவோரும் தகுதி இழந்தவராகக் கருதப்பட்டிருக்கின்றனர். வேட்பாளர் பொருள் சுத்தம் மனச் சுத்தம் உடையவராகவும் இருத்தல் அவசியம்.

குற்றமற்றோரும் தகுதியுள்ளோரும் மட்டுமே குடவோலைத் தேர்தலில் நிற்க இயலும். அவர்கள் பெயர்களை ஓலைகளில் எழுதி பொதுமக்கள் எதிரில் அவற்றை குடத்தில் இட்டுக் குலுக்கி, சிறு பிள்ளையைக் கொண்டு ஓர் ஓலையை எடுக்கச் செய்து, அதில் வரும் பெயருடைய ஒருவரையே தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கொள்ளப்பட்டது.

சோழப்பேரரசு மண்டலங்கள், கோட்டம், கூற்றம் அல்லது வளநாடு எனப்பட்ட பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கூற்றம், நாடுகள் எனும் சிறிய அலகுகளாகவும் பிரிக்கப்பட்டது. மண்டலங்களின் பாதுகாப்பு, ஒழுங்கு பராமரிப்பு, நிர்வாகப் பிரிவுகளின் கண்காணிப்பு போன்றவை மண்டல ஆளுநர்களின் கடமைகளாக இருந்தன. கோட்டங்களின் நிர்வாகிகள் ஆளுநருக்கு உதவியதுடன், கோட்டங்களில் அமைதி காத்து சமுதாயப் பணிகளையும் கண்காணித்தனர்.

குடியிருப்புகள் கிராமங்கள், ஊர்கள், நகரங்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தன. வணிகர்கள் நகரங்களில் குடியிருந்தனர். ஆடல் கலையிலும் இசையிலும் தேர்ச்சி பெற்றிருந்த ஆடல் மகளிர் ஏற்றம் பெற்றிருந்தனர். தேவரடியார் என அழைக்கப்பட்ட ஆடல் மகளிர், சோழர் காலத்தில் மதிப்பான இடம் பெற்றிருந்ததாகவும், அவர்களுக்கு ஏராளமான தானங்கள் வழங்கப்பட்டதாகவும் கல்வெட்டு செய்திகள் கூறுகின்றன.

சோழர்கள் காலத்தில் சிறிய அளவிலான அடிமை முறை இருந்தாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கோவில்களுக்கும், பெருநிலம் வைத்திருந்தவர்களுக்கும் அடிமைகள் விற்கப்பட்டதாகவும், பட்டினிக் காலங்களில் அவர்களாகவே அடிமைகளாக விற்றுக் கொண்டனரென்றும் குறிப்பிடப்படுகிறது. பிற்காலச் சோழர் காலத்தில் சமஷ்கிருதமும், சமஷ்கிருதக் கல்வியும், பிராமணர்களும் மிகுந்த ஏற்றம் பெற்றிருந்ததாக அறியப்படுகிறது. சோழர்களின் மெய்கீர்த்திகள் சமஷ்கிருதத்திலேயே வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது.

சாதியமும், சாதிய வேறுபாடுகளும் சோழர்காலத்தில் மிகுந்திருந்ததாக சான்றுகள் வழி அறியப்படுகிறது. குளம் தூர்வாருவதில் கூட மக்களில் ஒரு

பிரிவினர் தவிர்த்து மற்ற அனைவரையும் தூர் வாரப் பணிக்கப்பட்டனர் என கல்வெட்டு கூறுவதிலிருந்து சாதி வேறுபாடு எந்தளவிற்கு சமூகத்தில் புரையோடிப் போயிருந்ததென்பதை அறிந்து கொள்ளலாம்.

சோழர் படைப்பிரிவில் இருந்த வலங்கை - இடங்கை பிரிவு, நாளடைவில் சமுதாயத்தில் அனைத்து நிலைகளிலும் ஏற்பட்டு, பொதுமக்களும் வலக்கை சாதிகள், இடக்கை சாதிகள் எனப் பிரிந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்தவர்கள் இடங்கை சாதியினர் எனவும், வணிகத்தோடு தொடர்புடையவர் வலங்கை சாதியார் எனவும் பிளவுபட்டு இருந்ததாகத் தெரிகிறது. சாதியை வைத்து பல்வேறு உரிமைகளும் வழங்கப்பட்டதாக கல்வெட்டு சான்றுகள் தெரியப்படுத்துகின்றன. சோழ மன்னரின் வலப்புறமும் இடபுறமும் அமரும் உரிமை வரை வலது இடது வேறுபாடு ஆழமாக இருந்திருக்கிறது. வாயிற்படி அமைத்தல், வாத்தியம் வாசித்தல், சன்னல் அமைத்தல், மேலாடை அணிதல், நெருப்புப் பந்தம் பிடித்தல், குதிரை ஏறுதல், குடை பிடித்தல், காலணி அணிதல் போன்ற உரிமைகளும், சலுகைகளும் அரசர்களாலும் அதிகாரிகளாலும் சாதிகள் பார்த்து அளிக்கப்பட்டிருக்கின்றன.

காவேரி ஆற்றிற்கு கரைகளைக் கட்டிய கரிகாலச் சோழன் குலத்திலே, பராந்தக சோழன், கண்டராதித்த சோழன், சுந்தர சோழன், உத்தம சோழன் போன்ற பேரரசர்களுக்குப் பின் அரியணை ஏறியவர் வீரம்மிக்க சோழர் குலத்தின் விளக்குப் போன்றவரான புகழ்பெற்ற இராஜராஜ சோழன் (985-1014). பேரரசர் இராஜராஜ சோழரின் ஆட்சிக்காலமும், பேரரசர் இராஜேந்திர சோழர் ஆட்சிக்காலமும் (1018-1054) சோழ அரசுகளில் தலை சிறந்தவையாகப் புகழப்படுகின்றன.

சுந்தர சோழரின் (956-973) மகனாகிய இராசராசர், சிற்றப்பாவான உத்தம சோழரது ஆட்சிக்குப் பின்பே அரசுரிமை ஏற்றதாகக் குறிப்பிடப்படுகிறார். கலியின் வல்லமையால் ஏற்பட்ட காரிருளைப் போக்க, அருண்மொழிவர்மனை அரசனாகுமாறு குடிமக்கள் வேண்ட, சிற்றப்பன் ஆசை தீருமட்டும் அரசராக இருக்கட்டுமென அருண்மொழி வர்மன் கூறிவிட்டதாகச் செப்பேடுகள் சான்றளிக்கின்றன.

மும்முடிச்சோழன், செயங்கொண்டான், சோழேந்திர சிம்மன், சிவபாத சேகரன், நிகரிலிச் சோழன், சோழ மார்த்தாண்டன், சனநாதன், நித்திய விநோதன்,

இரவிகுல மாணிக்கம் போன்ற ஏராளமான பட்டங்களைப் பெற்றிருந்த இராஜராஜன் ஆட்சிக்காலத்தில், ஆட்சி முறை, படைத்திறன், நுண் கலைகள், கட்டிடக் கலை, இலக்கியம், சமயம் என அனைத்திலும் புதிய எழுச்சியும் மறுமலர்ச்சியும் உண்டானதாக வரலாற்றாசிரியர்களால் புகழப்படுகிறது.

மாமன்னர் இராஜராஜரின் வெற்றிகளுள் காந்தளூர் வெற்றி குறித்து மெய்க்கீர்த்திகள் சிறப்பாக விளங்குகின்றன. பாண்டிய, சோழர் அரச மரபைப் போலன்றி, பிற்காலத்திய சேரர் மரபு குறித்து தகவல்கள் கிடைக்கப்பெறவவில்லை என்றே வரலாற்றார்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். முதலாம் காந்தளூர் சாலைப் போரில் இராஜராஜனும், இரண்டாவது காந்தளூர்ப் போரில் முதலாம் இராஜேந்திரனும் பங்கு கொண்டிருக்கின்றனர். பிற்கால சேர அரசராகக் குறிப்பிடப்படும் முதலாம் பாஸ்கர ரவிவர்மரோடு நடைபெற்ற காந்தளூர் வெற்றி மூலம், சோழர்கள் பண்டையத் தமிழகம் முழுமையும் ஓரு குடைக்கீழ் கொண்டு வந்ததாக வரலாற்றில் குறிக்கப்படுகிறது.

காந்தளூர் சாலை கலமருதளிய ராஜராஜர், இலங்கை அரசரான ஐந்தாம் மகிந்தரை வென்று புலனருவா என்னும் புதிய நகரத்தையும் தோற்றுவித்ததாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஈழம் முழுதையும் கைப்பற்றியதாகவும், ஈழ வெற்றியைக் குறிப்பிடும் வகையில் பொலன்னருவையில் சோழர் காலத்திய கட்டடக் கலை நுட்பத்தைக் கொண்ட அழகியதொரு கற்றளி அமைத்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

படை நடத்தி பெரு வெற்றிகளைப் பெற்ற வெற்றி வேந்தரான பேரரசர் இராஜராஜர், மிகச் சிறந்த நிர்வாகியாகவும், கலைகளின் மீது தீராக்காதல் கொண்டிருந்தவராகவும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளார். இராஜராஜரை மக்கள் மனங்களிலும், உலக அரங்கின் புகழ் உச்சியிலும், என்றென்றும் நிலைக்கச் செய்திருப்பது பெருமை பொருந்தியதும், ஈடு இணையற்றதும், விண்தொட உயர்ந்து நிற்கும் இராஜராஜீசுவரத்தின் பெருங்கோவில் எனில் மிகையாகாது.

உயரிய கலைப் படைப்பாக ஓங்கி உயர்ந்து நிற்கும் பெருங்கோவில், கட்டிடக் கலையின் பல தனிச் சிறப்புடைய பெருமைகளைப் பெற்றுள்ளதாகப் போற்றப்படுகிறது. அதிசயமான கோபுர உச்சியினாலும், அற்புதமான கலைச்சின்னமாகத் திகழ்கிறது. அதிக எண்ணிக்கையிலான கல்வெட்டுகளையும்

பெருங்கோவில் பெற்றிருக்கிறது. சோழர்களின், இராஜராஜரின் மெய்ப்புகழைத் தாங்கிநிற்கும் இராசுராஜேஸவரம் சிவன் கோவில், பண்டைய இந்தியாவின் ஒப்பற்ற சாதனைக்கு மிகச் சிறந்த சான்றாகும்.

இராஜராஜன் வலிமைமிக்க கடற்படையைக் கொண்டு இலங்கையை வென்றதாக திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகழ்கின்றன. தொடர்ந்து இருநூறு ஆண்டுகள் ஈழ மண்ணில் சோழப் பேரரசு அரசாட்சி செலுத்தியதாகக் குறிப்பிடப்பட்டாலும், ஈழ வரலாற்றுக் களத்தில் சோழர் அரசாண்டதைப் பற்றி விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றே சுட்டிக் காட்டப்படுகிறது. இருப்பினும் சோழரால் சனநாத மங்கலம் எனப் பெயர் சூட்டப்பட்ட பொலன்னருவைப் பகுதிகளில் பொது ஆண்டின் ஆயிரமாவது ஆண்டுகளில், மிகச் சிறந்த நீர்பாசன முறைகள் உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றன.

பொன்னியின் உதவியால் நீர்ப்பாசனத்தில் கரைகண்டவர்கள் பெருமைமிகு சோழர்கள். தமிழர்கள் பண்டைய காலத்திலிருந்தே நீர்நிலைக் கட்டுமானங்களில் தலைசிறந்து விளங்கினர் எனப் புகழப்படுகின்றனர். இலஞ்சி, கயம், கேணி, கோட்டகம், ஏரி, மலங்கன், மடு, ஓடை, வாவி, சலந்தரம், வட்டம், தடாகம், நளினி, பொய்கை, குட்டம், கிடங்கு, குளம், கண்மாய் உட்பட முப்பதிற்கும் மேற்பட்ட பல்வேறு பெயர்களாலும் நீர் நிலைகள் குறிப்பிடப்பட்டு வந்துள்ளன.

வருவிசை புனலைக் கற்சிறை போல, ஒருவன் தாங்கிய பெருமையாளும் என்கிறது தொல்காப்பியம் (பொருள் 65). விசையொடு வரும் நீரை ஒரு கற்சிறை அதாவது அணைக்கட்டு தடுத்து நிறுத்துவது போல வேகமாக முன்னேறி வரும் ஒரு படையை முதல் ஆளாக முன் சென்று தடுத்து நிறுத்துவதன் மூலம் ஒரு வீரன் பெருமையடைகிறான் என்பது பொருள். தொல்காப்பியக் காலத்திலேயே கட்டுமானப் பாசனம் பற்றிய சிந்தனை தமிழ் மண்ணில் மலர்ந்துள்ளது.

அறையும் பொறையும் மணந்த தலைய - எண் நாள் திங்கள் அனைய கொடுங்கரைத் - தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ - கூர்வேல் குவைஇய மொய்ம்பின் - தேர்வண் பாரி தண்பிறம்பு நாடே. பாரியின் பறம்பு நாடு மூவேந்தர்களால் தாக்கப்பட்ட பின் பறம்பு நாட்டின் குளமொன்று கவனிப்பாரின்றி பாழ்படுவதை, பெரும் புலவர் கபிலர் ஆற்றாமையோடு பாடுகிறார். கூரிய வேலையும் திரண்டதோளையும் உடைய பாரியின் பறம்பு மலையில் உள்ள, எட்டாம் நாள்

பிறையை ஒத்த வளைந்த கரைகளையும் தெளிந்த நீரையும் உடைய சிறுகுளம், பாதுகாப்பார் இல்லாமையால் பாழ்படுகிறதே என்பது பொருள். எட்டாம் நாள் பிறைவடிவில் அமைந்த குளம், குறைந்த நீளம் உடைய கரையைக் கொண்டே அதிகளவிலான நீரைக் கொள்ளும் என்பது ஆழ்ந்த நுட்பமான ஒப்பீடு.

நீர் நிலைகளைப் பயன்படுத்தியதோடல்லாமல் அவைகளைப் பாதுகாத்தும், மராமத்துப் பணிகள் செய்தும் வந்துள்ளனர் பழந்தமிழர். குளம் அமைத்தல், மிகை நீர் வழிய கலிங்கு அமைத்தல், குளத்துக்கு நீர்வரும் வரத்துக்கால் பாசனம் செய்ய விடப்படும் மதகு கலிங்கிலிருந்து நீர் வெளியேறும் பாதை முதலியன அமைத்தல், பாசனம் பெறும் நிலப்பகுதியை உழுது வயலாக்குதல் மற்றும் நீர்பற்றாக்குறையைச் சமாளிக்க கிணறு வெட்டுதல் ஆகிய ஐந்தையும் செய்பவர் இன்ப உலகம் செல்வர் என்கிறது சிறு பஞ்சமூலம்.

குறிஞ்சி நில மக்கள் ஏர் கொண்டு உழாமல் வேளாண்மை செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. முல்லை நிலத்தார் எளிய கலப்பைகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர். மருத நிலத்திலோ அகன்று விரிந்து ஆழ உழும் திறன் கொண்டதான கலப்பை இருந்திருக்கிறது. பெண் யானையின் வாயைப் போன்று மடிந்து அகன்று இருந்த கலப்பையை ஆழமாக ஊன்றி இழுப்பவை வலிமையான பகடுகள். எவ்வளவு பள்ளம் இருந்தாலும் மண்டிபோட்டு இழுத்துவிடும் ஆற்றல் பெற்றவை பகடுகளான பெரிய மாடுகள். விளைச்சலும் மிக அதிகமாகவே விளைந்திருக்கிறது. ஒரு கைப்பிடியில் ஏழு எள்காய்கள் இருக்குமாறு விளைந்துள்ளது. கையில் வைத்துப் பிழிந்தாலே ஒழுகும் அளவிற்கு எண்ணெய் இருந்துள்ளது.

உழவின் பெருமை பற்றியும் அதன் இன்றியமையாமை பற்றியும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் யாவும் தவறாமல் குறிப்பிடுகின்றன. சுழன்றும் ஏர் பின்னது உலகென்றும், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்றும் உழவின் பெருமை பேசுகிறது வள்ளுவம்.

நீரின்றி அமையாது உலகு எனவும், மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் எனவும், வான் முகந்த நீர் மலைப் பொழியவும், மலைப் பொழிந்த நீர் கடற்பரப்பும் என மழையையும் இயற்கையையும் போற்றியுள்ளனர் தமிழர்.

நண்டுகள் சேற்றைக் குழைத்து வளைகளை அடைப்பதும், மரக்கிளைகள் சுழன்று காற்று அடிப்பதும், மேற்கிலும் கிழக்கிலும் மின்னல் சூழ்ந்து வெட்டுவதும், வானம் பாடிகள் மழைக்காக வானத்தில் பறப்பதும், மழைவருவதற்கான குறிகளாக முக்கூடல் பள்ளு தெரிவிக்கிறது.

ஓடும் ஆற்றின் போக்கைத் தடுத்து, அதை வேண்டிய இடத்தில் வேண்டிய முறையில் பயன்படுத்தத் தொழில் நுட்பம் கண்டது, மாந்தர் குல வரலாற்றில் அரியதொரு சாதனையென்றே போற்றப்படுகிறது. ஆற்றுப்பாசனப் பகுதி குறைவாக இருந்த தமிழ் நிலத்தில், நீரைச் சேமிக்க செயற்கையான குளங்களையும், ஏரிகளையும் பல்லாயிரக்கணக்கில் அமைத்துள்ளனர். நீர் நிலைகளை தமிழகத்தின் அனைத்து மன்னர்களுமே உருவாக்கியுள்ளனர் என்பது பெருஞ்சிறப்பு. தமிழகத்தின் உடபகுதி வேளாண்மைக்கு பல்லவர்கள் செய்த பாசனப் பணிகள் வெகு சிறப்பு. நெற்களஞ்சியமான நடுத்தமிழகத்திற்கு சோழர்கள் செய்த அருங்கொடைகள் அளப்பரியவை. வைகை, தாமிரபருணி எனப் பாண்டியர்களும், தொடர்ந்து வந்த நாயக்கர்களும் செய்த சேவைகள் எண்ணிலடங்கா, பாண்டியர்களின் சங்கிலித் தொடர் ஏரிகள் வியப்பில் ஆழ்த்துபவையாக இருக்கின்றன. அன்றைக்கு மன்னர்கள் மட்டுமல்லாது பொது மக்களும் நீர்ப்பாசனப் பணிகளில் திரளாகப் பங்கெடுத்துள்ளனா.

புகழ்வாய்ந்த திருமாவளவனாரால் கட்டப்பட்ட கல்லணையை மகத்தான அணை எனும் பொருளில் கிராண்ட அனைகட் என்று வியந்து பாராட்டியவர் இந்திய நீர்ப்பாசனத்தின் பெருமதிப்பிற்குரியவர் எனப் போற்றப்படும் சர் ஆர்தர் காட்டன் (1803-1899). பெருமைமிகு காட்டன் அவர்கள் இந்தியாவின் நீர்ப்பாசன வசதி மேம்பாட்டிற்காகவும், கால்வாய்களை அமைப்பதிலும் வாழ்வை நிறைவு செய்தவராகக் குறிப்பிடப்படுகிறார். பல்லாயிரம் இந்திய மக்களின் வறுமைக்கான ஒரே தீர்வு நீர்ப்பாசனத்தின் மூலம் விளைச்சலைப் பெருக்குவதே என்பதைக் கண்டுகொண்ட திரு ஆர்தர் காட்டன், அதற்கேற்ப திட்டங்கள் வகுத்து, ஆங்கிலேய அரசிடம் திறம்பட எடுத்துரைத்து தீரமான அணைக்கட்டுகளை உருவாக்கியிருக்கிறார்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னை பொறியாளர் படைப்பிரிவில் சேர்ந்து பின்னர் சென்னை மாகாண பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளராக உயர்வு பெற்ற சர் ஆர்தர் காட்டன், காவிரி, கிருஷ்ணா, கோதாவரி போன்ற

ஆறுகளில் அணைகளைக் கட்டி, பல இலட்சக்கணக்கான ஏக்கர் பாசன வசதிக்கு அடிகோலியிருக்கிறார். காவிரியின் முக்கொம்பு அணையும் கோதாவரியின் தவனேஸ்வர அணையும், காட்டனாரின் பெருமுயற்சியால் கட்டிப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. கோதவரி ஆற்றுப் பாசனத்தை ஆந்திராவின் நெற்களஞ்சியமாக மாற்றியமைத்த பெருமைகுரியவராக ஐயா காட்டன் புகழப்படுகிறார்.

ஓடும் நீரின் மீது அணை கட்டுவது கடினமான பணியாகவே கருதப்படுகிறது. காவிரி பாசன பகுதியில் பொறியாளராக இருந்தபோது கல்லணையைக் கண்டு, மணற்பாங்கான ஆற்றில் உறுதியான அணையை எவ்வாறு கட்டமுடியும் என்ற சிந்தனையிலிருந்த காட்டன் அவர்கள், ஒரு சமயம் மணற்போக்கிகள் அமைக்க கல்லணையையொட்டி ஆழமாகத் தோண்டியபோது, மிகப்பெரும் பாறைகள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டு அணை கட்டப்பட்டிருப்பதைக் கண்டு, பண்டைய தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்.

மணற்பாங்கான ஆற்றுப்படுகையில் மிகப்பெரிய பாறைகள் போடப்பட்டன. பாறைகளுக்கு அடியில் உள்ள மணல் ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டதால் பாறைகள் மெதுவாக மணலுக்குள் இறங்கின. அவைகளின் மேல் களிமண் பூசப்பட்டு, அப்பாறைகளின் மேல் மீண்டும் பெரிய பாறைகள் வைக்கப்பட்டன. அதனால் கீழுள்ள பாறைகள் மேலும் ஆழத்திற்குள் புதைந்தன. பின் மீண்டும் களிமண் பூசப்பட்டு பாறைகள் வைக்கப்பட்டன. கீழுள்ள பாறைகள் புதையப் புதைய தொடர்ந்து பாறைகள் வைக்கப்பட்டன. இறுதியில் கீழுள்ள பாறைகள் கடினத் தளத்தை அடைந்தவுடன் பாறைகள் இறங்குவது நின்று போனது. ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்பட்ட பெரும் பாறைகளும் அவைகளுக்கிடையேயான களிமண் பூச்சுகளும் இணைந்தே, கல்லணை என்னும் பண்டையக் கால பொறியியல் சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. கல்லணை கட்டுவதற்கும், பெரிய கோவில் கட்டுவதற்கும் புதுக்கோட்டை பகுதியின் கொடும்பாளூர் பகுதியிலிருந்தே பெருங்கற்கள் எடுத்துவரப்பட்டதாக வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழகத்தின் மிகச்சிறந்த அணையான மேட்டூர் அணை கட்டுவதற்கு சர் ஆர்தர் காட்டன் பெருமுயற்சிகள் எடுத்திருக்கிறார். ஆயிரத்து எந்நூற்றி ஒன்றாம் ஆண்டு முதலே காவிரி மேட்டூர் அணைக்கு முயற்சித்தும் மைசூர் சமஸ்தானத்தில் சம்மதம் கிடைக்காமல் இருந்திருக்கிறது. ஆயிரத்து எந்நூற்றி முப்பத்தைந்தில்

காட்டன் அங்கில அரசு சார்பாக அணைத்திட்டத்தை வளக்கியும் மைசூர் அசைந்து கொடுக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தி மூன்றாமாண்டில் தஞ்சை விவசாயிகள் திருவாங்கூர் சமஸ்தான திவான் பகதூர் சர்.சி.வி.ராமசாமி அய்யரிடம் அணை கட்டுவது பற்றி எடுத்துரைத்திருக்கின்றனர். தஞ்சைப் பகுதியில் பிறந்த முன்னோரைக் கொண்டிருந்த சர். ராமசாமி அய்யரும், மைசூர் திவனாக இருந்த விஸ்வேஸ்வரய்யா அவர்களிடம் பேசியதாகக் கூறப்படுகிறது. எனினும் அணைகட்ட இசைவு கிடைக்கவில்லை.

காவிரி விவசாயிகள் ஒன்றிணைந்து, புயலின் போதும் வெள்ளக் காலங்களிலும் பேரிழப்புகள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டு, ஆண்டுதோறும் முப்பது லட்ச ரூபாய் நட்ட ஈடு தரவேண்டுமென, தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் மைசூருக்கு கடிதம் அனுப்பியிருக்கின்றனர். சர். ராமசாமி அய்யரின் வழிகாட்டல்படி, அணைகட்ட மைசூர் அர்சிடமிருந்து உடன்பாடு கிடைத்திக்கிறது. ஆய்வுக் பணிகள் முடிந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி ஐந்தாம் ஆண்டு ஜீலை இருபதாம் நாளில் போற்றுதலுக்குரிய காவிரியின் குறுக்கே புகழுக்குரிய ஸ்டான்லி நீர்த்தேக்கத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

அணைக்கான தலைமை வடிவமைப்பாளராக பொறியாளர் எல்லிஸ் அவர்களும், நிர்வாகப் பொறியாளராக வெங்கட்ராமையரும், முதன்மைத் தலைமை பொறியாளராக முல்லிங்ஸ் அவர்களும் பணியாற்ற, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் அரிய உழைப்பில், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முற்பத்தி நான்காமாண்டு ஜீலை பதினான்கில் அணைக்கான கடைசிக் கல் வைக்கப்பட்டு கட்டுமானப் பணி நிறைவு பெற்றிருக்கிறது. சென்னை மாகாண ஆளுநர் ஜான் பெடரிக் ஸ்டான்லி அவர்களால் ஆகஸ்ட் இருபத்தியொன்றில் திறந்துவிடப்பட்ட காவிரி, என்றென்றும் தமிழக மக்களின் தாகம் தீர்க்கவும், வயிற்றை நிறைக்கவும், மண் வளத்தைப் பெருக்கவும், பயிர்கள் செழிக்கவும் ஆர்ப்பரித்து ஓடி வருகிறாள் அன்னையாக.

முல்லைப் பெரியாறு அணையைக் கட்டி, மதுரைப் பகுதி மக்களின் வயிற்றில் பால் வாத்தவர் போற்றுதலுக்குரிய கர்னல் ஜான் பென்னிகுவிக் (1841-1911. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களின் குடிநீர்த் தேவைக்கும், விவசாயத்திற்கும் பயன்படும் பெரியாறு அணையைக் கடுமையான

சூழ்நிலைக்களுக்கிடையே, அரிய பல தியாகங்கள் செய்து, மக்கள் தொண்டைப் பெரிதாக எண்ணி கட்டிமுடித்தார் என்பது தமிழ் மண் செய்த பெறும் பேறு. என்றே கூற வேண்டும்.

1858-ல் சென்னை பொறியாளர் படைப்பிரிவில் லெப்டினட்டாக சேர்க்கப்பட்ட பென்னிகுக், சென்னை மாகாண பொதுப்பணித்துறை பொறியாளரகவும், செயலாளராகவும், சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராகவும், சுகாதாரத்துறை தலைவராகவும், சென்னை பல்கலை பேராசிரியராகவும், சிறந்த மட்டைப் பந்தாளராகவும் இருந்திருக்கிறார்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி மேற்கு நோக்கி கேரளாவில் பாயும் பெரியாற்றின் மீது கட்டப்பட்ட முல்லைப் பெரியாறு அணைக்கு திருவாங்கூர் சமஸ்தானத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கிறது. 1886 ஆம் ஆண்டு சென்னை மாகாணம் மற்றும் திருவாங்கூர் இடையேயான ஒப்பந்தத்தின் படி, ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஐந்து ரூபாய் ஆண்டு வாடகையாக, தொள்ளாயிரத்து தொன்நூற்றி ஒன்பது ஆண்டு கால குத்தகை கையொப்பமாகியிருக்கிறது. ஏறக்குறைய இருபத்தி நான்கு ஆண்டுகள் தொடர் முயற்சிகளுக்குப் பின்னரே ஒப்பந்தம் ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

எந்நூற்றி எண்பத்தியேழாமாண்டு அணைகட்டும் பணி துவக்கப்பட்டிருக்கிறது. கர்னல் பென்னிகுக் தலைமையில் பிரித்தானிய இராணுவத்தின் கட்டுமானத் துறை அணைகட்டும் பணியை மேற்கொண்டிருக்கிறது. அடர்ந்த காட்டுப் பகுதியாக இருந்ததால் அதிக அளவில் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சுண்ணக்கல் மற்றும் சுர்க்கி கலவையுடன் கருங்கல் கொண்டு எடையீர்ப்பின் அடிப்படையில் அணை கட்டப்பட்டிருக்கிறது.

அடர்ந்த காடு, நச்சுப்பூச்சிகள், காட்டு விலங்குகள், கடும் மழை, காட்டாற்று வெள்ளம் போன்ற அனைத்தையும் சமாளித்து பாதியளவு கட்டப்பட்டிருந்த மூன்று ஆண்டுகால கடும் உழைப்பின் அணை, பெரு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது. தொடர்ந்து திட்டத்தை நிறைவேற்ற ஆங்கில அரசு மறுத்துவிட, மனம் தளராத பென்னிகுக் அவர்கள், இங்கிலாந்திலிருந்த குடும்பச் சொத்துக்கள் அனைத்தையும் விற்று சொந்தமாகவே முல்லைப் பெரியாறு அணையைக் கட்டி முடித்து, ஆகப்பெரியதோர் சாதனை படைத்திருக்கிறார்.

5

தென் கிழக்கு ஆசியா

அன்று புஷ்ய பௌர்ணமி நாள். ஸ்ரீலங்காவுக்குப் புறப்பட்டு விட்டார். ஏனென்றால் அங்கு புத்தமதம் கொடிகட்டிப் பறக்க வேண்டிய அவசியத்தை அவர் அறிந்திருந்தார். உடனடியாக அங்கிருந்த யக்கர்களை விரட்டியடிக்கவும் வேண்டியிருந்தது.

ஸ்ரீலங்காவின் மத்தியப் பகுதியில் ஆற்றங்கரை அருகே மகா நாகவனம் ஒன்று உண்டு. அது மூன்று யோசனை நீளமும் ஒரு யோசனை அகலமும் உடையது. அங்குதான் வழக்கமாக யக்கர்கள் கூடுவார்கள். இந்த விவரத்தை கௌதம புத்தர் அறிவார். அந்தக் கூட்டத்துக்கு அவரும் சென்றார். அவர் அந்த மகா சபையில் வருங்காலத்தில் அமையவிருக்கும் மஹியாங்கன ஸ்தூபிக்கு மேலே யக்கர்கள் தலைக்கு மேல் ஆகாய வெட்டவெளியில் அமர்ந்து கொண்டார். அந்த சபை முழுவதும் இருளில் மூழ்கச் செய்தார். புயல் வீசியது. பெருமழை பொழிந்தது. யக்கர்கள் மனதில் பயம் பரவியது. பயத்தில் மூழ்கிய யக்கர்கள், அச்சமற்ற அந்த பெருமகானின் பேரருளை வேண்டினர்.

யக்கர்கள் பயத்தைப் போக்கிட அந்த சபா மண்டபத்தில் அமர ஓர் இடம் மட்டும் தந்தருளப் பணித்தார். ஆனால் அவர்களோ அவருக்கு ஓர் இடம் மட்டுமல்லாமல் ஸ்ரீலங்காத் தீவு முழுவதையுமே அளிக்கத் தயாராகயிருந்தனர். அவர் அருளால் இருள் விலகியது, குளிர் விட்டது, அச்சம் அடியோடு அகன்றது. அவர்கள் அவருக்கு கனமான சால்வை ஒன்றைச் சமர்ப்பித்தனர். அவர் அதைத் தரையில் விரித்தார். அதன் மீது அமர்ந்து கொண்டார். சால்வையை மேலும் பெரிதாக விரித்து படரச் செய்தார். சால்வையைச் சுற்றிலும் தீய் சூழ்ந்தது.

தீயின் வெம்மை யக்கர்களுக்கு அச்சமூட்டியது. அப்போது அந்தக் கருணை வள்ளல் இனிய திரிதீபத்தை அவர்களருகே வரச் செய்தார். யக்கர்கள் அச்சம் நீக்கி வசதியாக அமர்ந்த பிறகு அதை அதன் பழைய இடத்திற்கே அனுப்பி வைத்தார். அப்போது அந்த சபையில் அவர் அவரது சமயக் கொள்கையை விவரித்தார். பல கோடி மக்கள் அவர் மதத்திற்கு மாறினர். பலர் மூன்று சரண தர்மங்களை மேற்கொண்டனர்.

இலங்கையின் வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சத்தின்படி, இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டு கால நீண்ட வரலாற்றைக் கொண்டதாக இலங்கை

உள்ளது. இலங்கையின் வரலாறு பொது ஆண்டிற்கு முன்பான ஆறாம் நூற்றாண்டு அளவில், இந்தியாவின் கலிங்க நாட்டிலிருந்த இளவரசர் விஜயன், அவரது எழுநூறு தோழர்களுடன் இலங்கைக்கு சென்றது முதல் தொடங்குவதாக அந்நூலால் குறிப்பிடப்படுகிறது. விஜயன் இலங்கைக்கு வரும் முன்னரே இயக்கர், நாகர் இனத்தவர்கள் இலங்கையில் வாழ்ந்திருந்ததைப் பற்றியும் மகாநூல் கூறுகிறது.

மகாநாம தேரர் எனும் பௌத்த பிக்குவால் பொது ஆண்டின் ஆறாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட பாளிமொழி மகா நூல், இலங்கையின் வரலாறு தொகுக்கப்பட்ட பழமையான நூலாகவும், அது தீபவம்சம் எனும் நூலைத் தழுவி தொகுக்கப்பட்டதாகவும் வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. பொது ஆண்டின் நான்காம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் மகா நூல், தீப நூலைக் காட்டிலும், எளிதில் புரிந்து கொள்ளுமாறு காலவரிசைப்படி செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

விஜயன் இலங்கைக்கு வந்த பொது ஆண்டிற்கு முன்பான ஐந்நூற்றி நாற்பத்தி மூன்றாம் ஆண்டிலிருந்து தொடங்கும் மகா நூல், பொது ஆண்டின் முந்நூற்றி அறுபத்து ஒன்றாம் ஆண்டின் மகா சேனன் என்பவரது ஆட்சி வரையிலான வரலாற்றுக் குறிப்புகளை அளிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையின் வரலாற்று கால தந்தையாகவும், சிங்களவர்களின் மூதாதையாகவும் குறிப்பிடப்படும் விஜயன் (பொ.ஆ.முன் 543-505), இலங்கையின் தொல்குடியினராக இருந்த இயக்கர்களின் இளவரசி குவேனியை மணம் புரிந்ததாகவும், பின்னர் அரசுரிமைக்காக பாண்டிய மன்னரின் இளவரசியை திருமணம் செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. பாண்டிய இளவரசியோடு, ஏராளமான பெண்களும், குதிரைகளும், யானைகளும், மக்களும், பிற பரிசுகளும் இலங்கைக்கு அனுப்பப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இலங்கைத் தீவின் முதல் அரசாட்சியான தம்பபாணியை விஜயன் ஏற்படுத்தியிருக்கிறார். சேசபதி எனவும் குவண்ணா எனவும் அழைக்கப்பட்ட குவேனி, ஜீவகத்தன் என்ற மகனோடும் திசள் எனும் மகளோடும் யக்கர்கள் நகருக்கு சென்றதாகவும் கூறப்படுகிறது. குவணிக்குப் பின் ஜீவகத்தனும், திசனும், ஆதம் முனை என அழைக்கப்படும் சுமனகுட்டா பகுதிக்குச் சென்று கணவன் மனைவியாக வாழ்ந்ததாகவும், அவர்கள் மூலம் வேடர்கள் எனும் லங்காபுரியின் தொல் குடியினர் உருவானதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையின் முதல் அரசரான விஜயனுக்கும் பாண்டிய இளவரசிக்கும் குழந்தைகள் இல்லாததால், இந்தியாவிலிருந்த விஜயனின் சகோதரர் சுமித்தாவின் மகன் பாண்டுவாசுதேவர் வரவைக்கப்பட்டு, இலங்கையின் இரண்டாவது அரசரானதாகக் குறிப்பிடப்படுகிறது. பண்டு வாசுதேவர் அரசுரிமை ஏற்பதற்கு முன் ஒருவருட காலம் அரசர் விஜயனிடம் அமைச்சராக இருந்த உபதீசர் அரசுரிமை பாதுகாவலராக இருந்திருக்கிறார்.

பாண்டு வாசுதேவன் (பொ.ஆ.முன். 504-474), கலிங்க நாட்டிலிருந்து வந்தவரென்றும், தீப நூல் பண்டுவாசன் எனும் பெயரில் குறிப்பிடுவதால், பாண்டி நாட்டினரென்றும் கூறப்படுகிறது. பாண்டா எனும் அரசருடைய இளவரசி புத்தகாஞ்சனாவை மணம் புரிந்த அரசர் பாண்டு வாசுதேவுக்கு, பத்து ஆண் மக்களும் உத்தம சித்தாள் எனும் மகளும் பிறந்ததாகவும், பாண்டு வாசுதேவருக்குப் பின் அவரது முத்த மகன் உபயன் (பொ.ஆ.முன் 474-454) ஆட்சிக்கு வந்ததாகவும், மகா நூல் குறிப்பிடுகிறது. பாண்டு வாசுதேவரின் மகன் உம்மதசித்தான் மகனான பண்டுகாபயன் (பொ.ஆ.முன் 437-367) இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்கவராக அறியப்படுகிறார். இலங்கையின் நீண்ட அரசுரிமை கொண்டதான அநுராதபுர அரசாட்சியை (பொ.ஆ.முன் 377-1077) தோற்றுவித்தவராகவும் பண்டுகாபயன் குறிப்பிடப்படுகிறார்.

அநுராத அரசாட்சியின் மிகவும் குறிப்பிடத்தக்க அரசர் தேவநாம்பியதீசன். அரசர் மூத்த சிவனின் (பொ.ஆ.முன் 367-307) மகனான தேநாம்பிய தீசன் (307-267), அசோகரோடு மிகுந்த நட்புறவு கொண்டிருந்ததாக மகா நூல் குறிப்பிடுகிறது. தேவநம்பியதீசரும், தம்மசொகர் என்ற பெயரைக் கொண்டிருந்த அசோகரும் ஒருவரையொருவர் நேரில் பார்த்துக்கொள்ளாமலேயே நீண்ட கால நண்பர்களாக இருந்ததாகவும், மௌர்யப் பேரரசருக்கு திசர் ஏராளமான பரிசுகளை அனுப்பியதாகவும் கூறப்படுகிறது. அசோகரும் பல பரிசுகளோடு, புத்தரின் உண்மைகளை ஏற்றுக்கொள்ளுமாறு திசருக்கு வேண்டுகோள் விடுத்ததாகவும், அதனை ஏற்றே, திசனாக இருந்தவர், கடவுளுடய அன்பிற்குரியவர் எனும் பொருளில் தேவனாம்பிய தீசர் என்று பெயர் மாற்றம் செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.

மிகிந்தேல் எனும் மலைக் குன்றுகளில் அடர்ந்த காடுகளில் படையினரோடு வேட்டையாடிக் கொண்டிருந்த தேவனாம்பியரை, இளவரசர் மகேந்திர தேரர் சட்டெனக் கண்டவுடன், இயக்கரோ, பூதமோ எனத் திகைத்ததாகக் குறிப்பிடுகிறது

மகா நூல். வந்திருந்த மௌரிய இளவல் மகேந்திர தேரர் புத்தபெருமானது பெருமைகளை எடுத்துக் கூறி தேவனாம்பியரை பௌத்தராக மாற்றியதாகக் கூறப்படுகிறது.

மகேந்திர தேரர் வருகையோடு, இலங்கை தீவிற்கு புத்தமதம் அறிமுகமாகி, பின் தேராவாதப் பௌத்தத்திற்கு முக்கியமானதொரு நாடாக இலங்கை நிலை கொண்டிருக்கிறது. மகேந்திரரைத் தொடர்ந்து, இளவரசியான சங்கமித்ர தேரரும் இலங்கைக்கு வந்ததாகவும், புத்தர் ஞானம் பெற்ற மகாபோதியின் சிறு துண்டு இலங்கைக்கு எடுத்து வரப்பட்டு அநுராதபுரத்தில் நடப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. இலங்கைத் தீவில் உருவாக்கப்பட்ட மகா விகாரை, தேராவாதப் பௌத்தின் மிக முக்கியமானதொரு வழிபாட்டுக் கூடமாகவும், புத்தமதக் கல்விக் கூடமாகவும் சிறப்புற்று விளங்கியிருக்கிறது.

பண்டைய இலங்கையின் சமயம் மற்றும் கலாச்சாரத்தைக் கட்டமைத்தவராக தேவனாம்பிய பேரரசர் கருதப்படுகிறார். புகழ் வாய்ந்த அரசராக மட்டுமின்றி பௌத்தம் தொடர்பான பல விகாரைகளையும், நீர்ப்பாசனத்திற்கான குளங்களை உருவாக்கியவராகவும் தீசர் குறிப்பிடப்படுகிறார்.

தேவநம்பிய தீசரால் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட மகாவிகாரையிலிருந்த பௌத்த பிக்குகளும், ஏனைய விகாரைகளில் இருந்த பௌத்த பிக்குகளும், பௌத்தத்தின் தோற்றம், இலங்கையில் பௌத்தத்தின் வளர்ச்சி, பொளத்தத்திற்கு ஆதரவளித்த அரசர்கள் மற்றும் அவர்கள் பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகள் குறித்த தகவல்களை, செய்யுள் வடிவில் ஏட்டுச் சுவடிகளில் காலவரிசையாகக் குறித்து, அவற்றை வாய்மொழியாகப் பேணியும் வந்துள்ளனர். அட்டகத்தா என அழைக்கப்பட்ட ஏட்டுச் சுவடிகளை மகாவிகாரையிலிருந்த பிக்குகள் ஒன்றிணைத்து அட்டகத்தா மகா நூல் என அழைத்திருக்கின்றனர். மகாவிகாரையின் அட்டகத்தா மகா நூலைக் கொண்டே பொது ஆண்டின் நான்காம் நூற்றாண்டில் தீப நூலும், ஆறாம் நூற்றாண்டில் மகா நூலும் தொகுக்கப்பட்டுள்ளன. இரண்டுமே பௌத்த மதக் கண்ணோட்டத்தில் இலங்கையின் வரலாற்றைச் சொல்வதாகக் குறிப்பிடப்படுகிறது. புத்தபிரான் மூன்றுமுறை இலங்கைக்கு வந்ததாகக் குறிப்பிடப்படுவதில் உண்மைத்தன்மை இல்லையென்றும், அசோகரது கல்வெட்டுகளில் இலங்கை பற்றிய தகவல்கள் குறிப்பிடப்படவில்லை என்றும் வரலாற்றாசிரியர்களால் எடுத்துரைக்கப்படுகிறது.

மகாவம்ச நூல் என்பது பௌத்தமத நம்பிக்கையாளர்கள் ஒதுவதற்கும், நினைவில் வைத்துக் கொள்ளவும், அவர்களுக்கு இன்பமும் பரவசமும் ஊட்டவும், புத்த மடாலயங்களில் அத்தகதா கதைகளின்றும் எழுதப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தீப நூலின் தொடர்ச்சியாகக் கருதத்தக்க சூளவம்சம், பொது ஆண்டின் நான்காம் நூற்றாண்டு தொடங்கி, இலங்கைத்தீவின் இறுதி அரசாட்சியான கண்டி அரசுரிமை பிரித்தானியர் வசம் செல்லும் பொது ஆண்டின் 1815 வரையிலான இலங்கை அரசர்கள் பற்றிய வரலாற்றைக் கூறுகிறது. சூள நூலும் பொளத்த பிக்குகளால் கால வரிசையில் தொகுக்கப்பட்ட ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

மகா நூல், ஆங்கிலம், ஜெர்மன் போன்ற பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புகழ்பெற்ற மொழியறிஞரான வில்ஹெம் லுட்விக் கெய்கர் (1856-1943) எனும் ஜெர்மனியர், பாளி மகாநூலை ஜெர்மன் மொழியில் மொழிமாற்றம் செய்திருக்கிறார். கெய்கர் மகாநூல் எனக் கூறத்தக்க சிறப்புடைய அம்மொழிபெயர்ப்பு, பின்னர் இலங்கை தொடர்பான பல வரலாற்று நூல்கள் வெளிவர முக்கியக் காரணமாக அமைந்ததாகப் புகழப்படுகிறது. வில்லெம் கெய்கரே, மாபெல் ஹெய்னஸ் போட் என்பாரின் உதவிகொண்டு அதன் ஆங்கில மொழிபெயர்பினையும் மேற்கொண்டிருக்கிறார்.

இலங்கையின் தொல்பொருளியல் ஆய்வுக் களங்கள், இலங்கையின் வரலாற்றை ஒரு லட்சத்திற்கும் அதிகமான வருடங்கள் வரை கொண்டு செல்கின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட மனித குடியேற்றத் திட்டங்களின் முக்கியமான இரண்டு காலகட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. பழைய கற்காலத்தைச் சேர்ந்த, சுமார் ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மனிதர்களால் பயன்படுத்தப்பட்ட கற்கருவிகள் கிடைத்துள்ளதாகவும், மேலும் இருபத்தெட்டாயிரம் வருடங்களுக்கு முந்தைய நடுகற்காலத்தின் குடியேற்றத் திட்டங்களும் அறியப்பட்டுள்ளதாகவும் இலங்கை தொல்லியல் துறை குறிப்பிடுகிறது. நடு கற்காலத்திய மனிதர்கள் மற்றும் விலங்குகளின் எச்சங்கள் இல்லாவிட்டாலும் நுண்ணிய கற்கருவிகள் பெருமளவில் கிடைத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை தொல்லியலாளர் எஸ்.எம்..பெரோஸ் அவர்கள் அநுராதபுரம் பொலனருவை பகுதிகளில் முதன் முதலாக ஒழுங்கு முறையிலான அகழாய்வுப்

பணிகளை மேற்கொண்டவராகக் குறிப்பிடப்படுகிறார். இந்தியாவில் பிறந்த ஹாரி சார்லஸ் புரீவிஸ் பெல் (1851-1937) எனும் பிரித்தானிய தொல்லிலாளரும் இலங்கையில் 1890-1912 வரையிலான காலகட்டங்களில், குறிப்பிடத்தக்க அகழாய்வினை மேற்கொண்டிருக்கிறார். பெல் அவர்கள் மாலத்தீவுகளிலும் பல அரிய தொல்லியலாய்வுகளை செய்தவராகக் குறிப்பிடப்படுகிறார். சமஷ்கிருதம், தமிழ், பாளி, சிங்களம் போன்ற மொழிகளை கற்றுத் தேர்ந்த ஆர்தர் மௌரிஸ் ஹோகார்ட் (1883-1939), இலங்கையின் தொல்லியல் ஆணையராக இருந்து, மாதொட்டம், பொம்பரிப்பு, அனுராதபுரம், அம்பலாந்தொட்டம் போன்ற பகுதிகளில் குறிப்பிடத்தக்க ஆய்வுப் பணிகளை மேற்கொண்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. திரு. ஹோகார்ட், பாலினேசிய, மெலனேசியப் பகுதிகளிலும் தொல்லாய்வுகளை செய்திருக்கிறார். புவியியலாளர் பி.இ.பி.தெரணியகலா தலைமையிலும் பல அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குறிப்புகள் கிடைக்கின்றன.

சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கையில், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய குகைகளில் மனிதர்கள் வாழ்ந்திருக்கக் கூடிய தடயங்கள் தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆய்வுகளிலிருந்து சுமார் நாற்பதாயிரம் வருடங்களுக்கு முன்பே இலங்கையில் மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளும், அம்மனிதர்களின் வித்தை முறைகளும் கண்டறியப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்காவின் தொல்லியலில் மூன்று குகைகள் முக்கியத்துவம் நிறைந்தவையாகக் குறிப்பிடப்படுகின்றன. குருவிட்ட பட்ட தொம்ப குகை, ஹொரண பாஹியான் குகை மற்றும் கேகாலை அலுலேனா குகை போன்றவை தொல்மனிதர்கள் வசித்த குகைகளாக ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன.

ஈழத்தின் குருவிட்டைக்கருகே கரங்கொடையில் இரத்தினக்கற்களுக்காகத் தோண்டப்பட்ட குழிகளில், ஆதிமனிதயினத்தவர் பயன்படுத்திய, படிகங்களை உடைத்துச் செய்யப்பட்ட கிழிப்பான்கள், சுரண்டிகள், கைக்கொத்திகள் போன்ற பழங்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கருவிகளைக் கொண்டு அக்காலமனிதர்களின் பண்பாட்டை இரத்தினபுரிப் பண்பாடு என மானுடவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆதிமனிதர்களின் எலும்புகள் கிடைத்த குருவிட்டைப் பகுயில், நீர்யானை, காண்டாமிருகம், சிங்கம் போன்ற விலங்குகளின் எலும்புகளும் கிடைத்திருப்பது மிகுந்த தொல்லியல் முக்கியத்துவம் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆப்பிரிக்காவிலும், ஆசியாவின் இந்தியா, நேபாளம் மற்றும் ஜாவாவில் வாழும் காண்டாமிருகம் போன்ற விலங்குகள், தென்னிந்திய இலங்கை தீபகற்பத்தின் தென் எல்லை வரை பரவி வாழ்ந்திருக்கின்றன என்பதை, இலங்கையில் எடுக்கப்பட்ட தொல்லெச்சங்கள் காட்டுகின்றன என ஆய்வாளர்களால் எடுத்துரைக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டம், சாத்தன் குளம் அருகே காரமணி ஆற்றின் கரையின் ஆழப்பகுதியில் எடுக்கப்பட்ட காண்டாமிருகத்தின் மண்டையோடும், திருநெல்வேலி மாவட்ட ஆயனிடுப்பில் கண்டெடுக்கப்பட்ட ஆதியானையான ஹிப்ஸ் எலிபாஸின் மண்டையோடும், இலங்கை தொல்லிய ஆய்விற்கு வலுசேர்க்கும் விதத்தில் அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தியாவின் நர்மதைப் பகுதிகளில் கண்டறியப்பட்ட நர்மதை மனிதரும், இலங்கையின் இரத்தினபுரி மனிதரும் சமகாலத்தில் வாழ்ந்தவராக இருக்கலாம் என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

தெற்காசிய தொல்மானிடக் கண்டுபிடிப்புகளில் மூத்தவை எனக் கருதத்தக்க பல தொல்மனிதர்களின் எச்சங்கள் இலங்கைத் தீவில் கண்டறியப்பட்டுள்ளன. தொல்மனிதர்களின் எச்சங்கள் கடற்கரைப் பகுதியில் அல்லாமல், பழங்காலத்தில் அதிகமான மழை பெற்றிருக்கக் கூடிய சமவெளிப்பகுதிகளில், ஹோமோ செப்பிய மனித இனத்தின் பல சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தற்காலத்திய மனிதயினத்தின் எலும்புகள், மண்டையோடுகள் இலங்கையின் கித்துக்கல்லாவுக்கருகில் உள்ள பெலிலேனா குகை, இரத்தினபுரிக்கு அருகிலுள்ள வெளவால் குகை, பலாங்கொடை மாவட்டத்திலுள்ள பெல்லான்பண்டி பலஸ்ஸா, உடுப்பியான் குகை, பட்டதொம்பை, பாகியான் குகை போன்ற குகைப்பகுதிகளை ஒட்டிய அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்றுள்ளன. குகைகளிலும் அக்காலத்தவர் பயன்படுத்திய கருவிகள் மணிகள் போன்றவை கிடைக்கப் பெற்றுள்ளன. பலாங்கொடைப் பகுதியை மையமாக வைத்து அக்காலத்திய மனிதர்கள் ஹோமோ செப்பியன் பலாங்கொடன்சிஸ் என உயிரினப் பெயர் நோக்கிலும், பலாங்கொடை மனிதர் என பொதுவான பெயரிலும் அழைக்கப்படுகின்றனர்.

கலுதாரையின் பாஹியான் குகை ஆய்வுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆதிமனித எலும்புகள், அப்பெரிய குகையில் முப்பத்தேழாயிரம் ஆண்டுகளுக்கு முன் துவங்கி ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை தொடர்ச்சியாகப் பல தலைமுறையினர் வாழ்ந்திருந்தனர் என்பதற்கான சான்றாகக் கண்டறிந்துள்ளனர். பெலிலேனா குகையில் முப்பதாயிரத்திலிருந்து நான்காயிரம் ஆண்டுகள் வரையிலும், ஆலுலேனா குகையில் பதினோறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பும், பெல்லாண்பாண்டியில் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்களின் எலும்புகளும், ஸ்ரீபாத மலையடிவாரத்திலுள்ள பட்டதொம்பையில் பதினாறாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களின் எலும்புகளும் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. காலக்கணிப்புகள் கரிமம் பதினான்கின் அடிப்படையிலும், வெப்ப ஒளி உமிழ்வு முறையிலும் கணிக்கப்பட்டதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவும் இலங்கையும் ஒன்றிணைந்த நிலப்பரப்பாக இருந்த காலத்தில், இலங்கையின் தொல் குடிகளான பலாங்கொடை மனிதர்கள் குடியேறியிருக்க வேண்டுமெனவும், பலாங்கொடை தொல் மனிதர்களின் வழித்தோன்றல்களாகவே வேடர்கள் இருக்க வேண்டுமெனவும் மானுடவியலாளர்களால் கருத்துரைக்கப்படுகிறது. வேடர்கள் தீவின் வடக்கு, கிழக்கு மற்றும் மத்தியப் பகுதிகளிலுள்ள காட்டு மலைப்பகுதிகளில் வாழ்வதாகவும், கடற்கரையோரப் பகுதிகளில் வேளாண்மை செய்து வாழ்வதாகவும் கூறப்படுகிறது.

மொழியின் அடிப்படையில் இலங்கை வேடுவர்கள், தமிழ் வேடுவர், சிங்கள வேடுவர் எனப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். சிங்களம் பேசும் வேடுவர்கள் உவா மற்றும் அனுநாதபுர மாவட்டங்களிலும், தமிழ் வேடுவர் பட்டிகலோ மற்றும் திரிகோணமலைக்கு இடையேயான கடற்கரைப் பகுதிகளில் வாழ்வதாகவும் கூறப்படுகிறது. முன்னர் வேடுவர்களுக்கென தனியானதொரு மொழி இருந்ததாகவும் ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. வன்னிய வேடர்கள் தமிழ் பேசுவோராக இருக்கின்றனர். ஆயிரத்துத் தொள்ளாயிரத்தி முப்பத்தியோராமாண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், ஐந்தாயிரத்து இருநூறு பேர் இருந்ததாகக் குறிப்பிடப்படும் வேடுவர்களின் எண்ணிக்கை, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஆறுபத்து மூன்றில் நானூறாக இருந்து, ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஒன்றில் ஒருவரும் இல்லையெனக் குறிப்பிடுகிறது இலங்கையின் மக்கள் தொகைக்

கணக்கெடுப்பு. எனினும் இலங்கையின் பழங்குடி மக்களைச் சார்ந்து சுற்றுலாக்கள் நிகழ்த்தப்படுவதாக குறிப்புகள் கிடைக்கின்றன.

தோளில் கோடரியும் அம்புவில்லும் இடுப்பில் கோவணமும் தாடி மீசையும் வளர்த்து, கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களான வன்னியலா எத்தோக்களை சந்திப்பதற்கும், அவர்களுடன் கைகுலுக்கி ஒன்றாக உட்கார்ந்து அளவளாவி தொன்றுதொட்டு அவர்கள் கடைபிடித்துவரும் பழக்கவழக்கங்கள், கலைகள், கலாச்சாரங்கள், சமய நம்பிக்கைகள், உணவுப் பாரம்பரியங்கள், அவர்களுக்கே உரித்தான கெட்டித்தனங்கள் போன்றவற்றைக் கண்டறியவும், இலங்கை அரசால் தம்பானை போன்ற ஆதிவாசி ஊர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

அநுராதபுர அரசாட்சியின் எல்லாளன் (பொ.ஆ.முன் 205-161) எனும் தமிழ் அரசர், முன்னிருந்த அரசர் அசேலனை (பொ.ஆ.முன் 215-205) வென்று இலங்கையை ஆண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. வரலாறு என்பது ஒரு நாட்டின் சமூகத்தின் பண்டைய இருப்பு, பெருமை, வீரம், கொடை போன்ற பல்வேறு சிறப்புகளை வெளிப்படுத்தும் சிறந்ததொரு சான்றாகக் கொள்ளப்படுகிறது. மாறாக இலங்கையின் வரலாற்றிலும், வரலாற்றாசிரியர்கள் ஆய்வாளர்கள் மத்தியிலும், எல்லாளன் போன்றவர்களை தமிழ் மன்னர்களாகக் கருதி இலங்கை வரலாற்றிலிருந்து ஒதுக்குவதாக தமிழ் அறிஞர்களால் பதிவிடப்பட்டிருக்கிறது. மேலும் யாழ்ப்பான, வன்னி அரசுகள் பற்றியும் வரலாற்றுத் தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை என்றும் குறிப்புகள் கிடைக்கின்றன.

எலாராவை வெற்றி கொண்டவராக மகா நூலால் போற்றி புகழப்படுபவர் சிங்கள அரசராகக் குறிப்பிடப்படும் துட்ட காமினி (பொ.ஆ.முன் 161-137). இலங்கையை ஆண்டு கொண்டிருந்த முப்பத்தியிரண்டு தமிழ் அரசர்களை வெற்றி கொண்டு இலங்கையை ஒரே பேரரசராக ஒன்றுபடுத்தியவராக குறிப்பிடப்படும் துட்டகாமினி அரசர், இலங்கை முழுவதும் புத்தமதம் பரவுவதற்கும் காரணமாக இருந்தாரெனவும் குறிப்பிடப்படுகிறார்.

பொது ஆண்டின் நூற்றி மூன்றாமாண்டுக்கும் எண்பத்தியெட்டாம் ஆண்டுக்குமிடையே பலஹத்தன், பகியன், பணயமாறன், பிலயமாறன், தத்திகன் எனும் ஐந்து தமிழ் அரசர்கள் இலங்கையை ஆண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொது ஆண்டின் அறுபத்தி ஆறு முதல் நானூற்றி முப்பத்தி ஆறாமாண்டு வரை முதலாம் இலம்பகண்ண அரசமரபினர் ஆண்டிருக்கின்றனர். அவர்களைத் தொடர்ந்து ஆறு தமிழ் அரசர்கள் அரசாட்சிக்கு வந்திருக்கின்றனர். பின் நானூற்று அறுபத்தி மூன்று முதல் அறுநூற்றித் தொன்நூற்றி ஒன்பது வரை மோரிய மன்னர்களும் அவர்களைத் தொடர்ந்து ஆயிரத்துப் பதினேழு வரை இரண்டாம் இலம்பகண்ண மரபினரும் இலங்கையை ஆண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

அநுராதகிராமம் என அழைக்கப்பட்ட அநுராதபுரம் இலங்கையின் தொன்மையான நகரமாகவும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகராகவும் விளங்குகிறது. பண்டைய காலதிலேயே நகரைச் சுற்றிலும் அமைக்கப்பட்ட நீர்ப்பாசனக் குளங்கள் மூலம் நீர்த்தேவை ஈடுசெய்யப்பட்டிருக்கிறது. நீர் நீலைகளைச் சுற்றிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தொல்பொருள் ஆய்வாளர்களால் வெளிக் கொணரப்பட்டுள்ள அரண்மனைகள், வழிபாட்டிடங்கள், பிக்குகளின் வசிப்பிடங்கள், வைத்திய சாலைகள், பயணிகள் தங்குமிடங்கள், அலங்காரத் தடாகங்கள் அனுராதபுரத்தின் பழமையை அறிவிப்க் குறிப்பிடப்படுகின்றன.

சிறப்பிற்குரிய மகாபோதிமரம், துட்டகைமுனுவால் அமைக்கப்பட்ட முந்நூறு அடி உயரமும், தொள்ளாயிரத்து ஐம்பது அடி சுற்றளவும் கொண்ட ருவான்வெலிசாய பௌத்தக் கோபுரம், இலங்கையின் வரலாறு பாரம்பரியம் வாழ்க்கைமுறை போன்றவற்றோடு தொடர்புடையதும் உலகின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்தும் பௌத்த அறிஞர்களை ஈர்த்ததுமான அபயகிரி விகாரை, மகாசென் அரசரால் கட்டப்பட்டதாகக் கூறப்படும் உலகின் இரண்டாவது பெரிய கட்டுமானச் சின்னமாகக் குறிப்பிடப்படும் நானூறு அடி உயரமும், முந்நூற்றி எழுபதடி விட்டமும் கொண்ட ஜேதவனாராமய கோபுரம் போன்றவை அநுராதபுரத்தின் முக்கியமான வரலாற்றுச் சின்னங்களாக புகழப்படுகின்றன.

இலங்கையைக் கைப்பற்றிய பிற்காலச் சோழர்களால் தரைநகராக்கப்பட்ட பொலனறுவை, பின்னர் சிங்கள மன்னர்கள் காலத்திலும் தலைநகராகப் பெயர்பெற்று விளங்கியிருக்கிறது. நகரைச் சுற்றிலும் உருவாக்கப்பட்ட பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மக்களின் உணவுத் தேவையையும் குடிநீர்த் தேவையையும் நிறைவு செய்திருக்கிறன்றன. நகரில் பௌத்த விகாரைகளும், இந்துக் கோவில்களும் கட்டப்பட்டிருக்கின்றன. பொலன்னறுவையின் வரலாற்றுப்

பெருமையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொல்லியல் ஆய்வுகளாலேயே வெளிக்கொணரப்பட்டிருக்கிறது.

மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ள நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள சிகிரியா என்ற சிங்க மலையும் அதில் அமைந்துள்ள முதலாம் காசியபரின் (பொ.ஆ 477-495) அரண்மனையும் இணையற்ற கலைக் கருவூலமாகப் புகழப்படுகிறது. உயரமான குன்றில் அமைக்கப்பட்டுள்ள அரண்மனையும் பிற கட்டமைப்புகளும் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகச் சிறந்த நகரமைப்புக்கான சான்றாகக் கருதப்படுகிறது.

திறந்த பாறைச் சுவர்களில் வரையப்பட்டுள்ள எழிலான ஓவியங்கள் அழகு மிக்கவையாகவும், ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெண்களின் தோற்றம், உடைகள், ஆபரணங்கள் அவர்களின் பண்பாடு தொடர்பான அழியாச் சான்றுகளைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது. நீர்ப்பாசன அமைப்பு, அழகிய தோட்டங்கள், குளியல் குளங்கள், நீரூற்றுகள், அகழி என அரண்மனை வளாகம் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. பாறைக்கற்கள் செதுக்கப்பட்டுள்ளன. கால்களின் விரல்கள், நகரங்கள் கூட வெகு நேர்த்தியாக வடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீபாதமென்றும், சிவனொளிபாதமென்றும், ஆதம் சிகரமென்றும், குறிப்பிடப்படும் ஏழாயிரத்து முந்நூற்றி ஐம்பத்தொன்பது அடி உயரமுள்ள கூம்பு வடிவ மலை, இலங்கைத் தீவின் புனிதமான மலையாகப் போற்றப்படுகிறது. பௌத்தம், இந்து மற்றும் இஸ்லாமிய மதங்களோடு தொடர்புபடுத்தப்படும் மலை உச்சியில் காணப்படும் ஐந்தடி பதினோரு அங்குலமுள்ள பாதச் சுவடு, புத்தருடைய பாதமெனவும், சிவபெருமானின் பாதத்தடமெனவும், ஆதாமின் பாத அடையாளமெனவும் கருதப்பட்டு, மலையுச்சிக்குச் சென்று பாதத்தை வழிபடுவது புனிதத்தன்மை நிறைந்ததாக இலங்கை மக்களால் வெகுகாலமாகவே கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிறது.

ஸ்ரீலங்காவின் ஹோர்டன் சமவெளிக்கு தெற்குப் பகுதியில் உள்ள ஸ்ரீபாத மலை, ரத்தினபுரி நகருக்கு நாற்பது கிலோ மீட்டர்கள் அண்மையில் அமைந்துள்ளது. மலைப்பகுதிகளில் கிடைத்த விலைமதிப்புமிக்க கற்களாலேயே

ஸ்ரீலங்காத் தீவானது பழங்காலத்தில் இரத்தின தீபம் எனவும், மலை இரத்தினகிரி எனவும் அழைக்கப்பட்டிருக்கிறது.

சிங்களத்தில் சமணளகந்தா என அழைக்கப்படும் ஸ்ரீபாதமலை, சமண் எனும் தெய்வத்தைக் குறிப்பதாகவும், வண்ணத்துப் பூச்சிகள் ஒவ்வோர் ஆண்டும் பெரும் எண்ணிக்கையில் மலையைச் சுற்றி இடம்பெயருவதால் வண்ணத்துப் பூச்சி எனும் பொருள் கொண்ட சமணாலயா எனவும் அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

மகுடமும், அணிகலன்களும், வலது கையில் தாமரையும், வெள்ளை யானையோடும் இருப்பவராக காட்சிப்படுத்தப்படும் மகா சுமன சமன் எனும் தெய்வம், சிங்கள மக்களாலும், பௌத்தர்களாலும் வழிபடப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. காலை எழும் சூரியன் எனும் பொருள் கொண்ட சமண், சுமனா, சமன்தா எனும் பெயரிலும் அழைக்கப்படுகிறார். சமன், நாதன், உபுல்வன், விபிசணன் மற்றும் கதரகாமன் போன்றவர்கள் இலங்கையின் காவல் தெய்வங்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். ஸ்ரீபாத மலையின் பாதுகாவலராகவும், சபரகமுவாவின் காவலாளியாகவும் சமன் கூறப்படுகிறார். இலங்கையின் பத்தினித் தெய்வமான கண்ணகி வழிபாடு கண்டி அரசாட்சியின் போது பரவலாகியதாகவும், விளைவாக சமன் கடவுள் முக்கியத்துவம் இழந்ததாகவும் கூறப்படுகிறது. தேராவாதத்தில் நிலத்தையும், பௌத்தத்தையும் காக்கும் கடவுளாகக் கருதப்படும் சமன், மகாயாணப் பிரிவில் சமன்தபத்ரா எனும் போதிசத்தவராக இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலுள்ள ஸ்கந்த முருகனின் ஆலயங்களில் மிகப்பழமையானதும் போற்றத்தக்கதுமாக கதிர்காம முருகன் கோவில் குறிப்பிடப்படுகிறது. லங்காவின் புத்தமத வழிபாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதினாறு புனித இடங்களில் ஒன்றாக கதிர்காமனின் கோவிலும் உள்ளது. கதிர்காமன் தொடர்பான தொன்மக் கதைகளும் வரலாற்றுச் செய்திகளும், தீவிலுள்ள இந்து, பௌத்த மக்களின் வழிபாட்டுக் குரியதொரு இடமாகவே கதிரகாமன் கோவில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

பௌத்தர்களால் கதிரகாம மகா தேவாலயம் என அழைக்கப்படும் கதிர்காம கோவிலின் வழிபாட்டு சடங்குகள், சிங்கள புத்த மதத்தோடு தொர்புடையதாகவும், கபூரலா எனும் பிரிவினரே வழிவழியாகச் சடங்குகளை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது. கருவறையிலுள்ளே எந்தவிதமான சிலையும் இல்லாமல், ஒரு

திரைச் சீலையால் மறைக்கப்பட்டுள்ளதாகவும், ஆண்டு விழாவில் அலங்கரிக்கப்பட்ட பேழையொன்று யானை மீது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தீவில் வாழும் சைவத் தமிழர்களின் முக்கியமான வழிபாட்டுக் கோவிலாகவும் கதிரமலை எனும் கதிர்காமம் உள்ளது. பதினைந்தாம் நூற்றாண்டின் அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களில் கதிர்காம முருகனைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளது தீவின் சைவ சமயத் தொடர்புக்கான பழமையாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இசுலாமிய மரபிலும் கதிர்காமம் முக்கியமானதாக குறிப்பிடப்படுகிறது. ஆதாம் அலை, செரண்டிப் எனப்படும் ஆதாம் மலையில் இறங்கியதாகக் கூறப்படுவதால், செரெண்டிப்பில் இருந்த புனிதப் பகுதியே கதிர்காமம் எனக் குறிப்பிடப்படுகிறது. இலங்கையின் முஸ்லிம் மக்களால் சிஜிர் - காமா எனவும், கிஜிர் மக்வாம் எனும் தொழுகைக்குரிய இடமாகவும் குறிப்பிடப்படுகிறது. கதிர்காமம் கோவிலுக்கு முந்நூறு மீட்டர்கள் தெலைவில் அல் - கிஜிர் எனும் எனும் இஸ்லாமிய ஞானியோடு தொடர்புள்ள இஸ்லாமிய கதிர்காமம் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சோழர்களின் பொலனருவையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட பரம்பரையினர் பொலனறுவை அரசுரிமையாகக் (1017- 1232) குறிப்பிடப்படுகின்றனர். இராஜராஜர், ஐந்தாம் மகிந்தனை வெற்றிகொண்டு சோழநாட்டில் சிறை வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. ஆயிரத்து எழுபதாமாண்டில் முதலாம் வீரபாகு பதினேழு ஆண்டு கால கடும் பேராட்டங்களுக்குப் பின் இலங்கையின் சோழ அரசாட்சியை முடிவுக்கு கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

முதலாம் பராக்ரமபாகு (1123-1186) இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ் அரசாண்ட கடைசிப் பேரரசராக அறியப்படுகிறார். தென்னிந்தியா மீதும் பர்மா மீதும் படையெடுப்பு நிகழ்த்தியவராகக் கூறப்படும் பராக்ரமபாகு அரசர், பொலன்னருவையின் நீர்த் திட்டங்களை சிறப்புற அமைந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். பராக்ரமபாகு பேரரசருக்குப்பின் பட்டத்திற்கு வந்த அரசியார் லீலாவதி ஆட்சிக் காலத்தில் பாண்டிய, சோழ மன்னர்களின் படையெடுப்புகள்

நிகழ்ந்திருக்கின்றன. பாண்டிய நாட்டின் இரண்டாம் பராக்ரம பாண்டியன் 1212 முதல் 1215 வரையிலான காலகட்டத்தில் பொலன்னருவை அரசராக இருந்திருக்கிறார்.

பாண்டியனை வெற்றி கொண்ட கலிங்க நாட்டு இளவரசரான கலிங்க மாகன் (1215-1236), ஜாப்னா அரசாட்சியெனவும், யாழ்ப்பான அரசு எனவும், சூர்யசக்ரவர்த்திகள் அரசாட்சி எனவும் (1215-1624) அழைக்கப்பட்ட அரசமரபை ஏற்படுத்தியவராக அறியப்படுகிறார். மாறவர்மன் குலசேகர பாண்டியனின் அமைச்சர் குலசேகர சிக்கையாரியனே, ஆர்ய சக்ரவர்த்தி எனவும் வரலாற்றுத் தகவல்கள் கூறப்படுகின்றன. 1736 ஆம் ஆண்டில் மயில்வாகனப் புலவர் என்பவரால் இயற்றப்பட்ட யாழ்ப்பானத்தின் வரலாற்றைக் கூறும் யாழ்ப்பான வைபமமாலையின் படி, ஆரியச் சக்கரவர்த்தி அரச மரபின் முதல் அரசராக கூழங்கைச் சக்கரவர்த்தி கூறப்படுகிறார்.

நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட யாழ்ப்பான அரசர்களில், போர்த்துகிசியர்களின் காலத்தில் அரசாட்சியிலிருந்தவரான சங்கிலியன் எனவும் முதலாம் சங்கிலி எனவும் அழைக்கப்படும் ஏழாம் செகராசசேகரன் (1519-1561), போர்த்துகீசியர்களின் இலங்கை ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

யாழ்ப்பான அரசின் கடைசி அரசரான சங்கிலி குமாரன் எனும் இரண்டாம் சங்கிலி (1617-1619), போர்த்துகீசியர் காலனியாதிக்கத்தை எதிர்த்ததால், அவரைக் கைது செய்து கோவாவிற்கு கொண்டு சென்று தூக்கு கயிறு மாட்டியதாகக் குறிப்பிடப்படுகிறது.

1505-ல் முதல் முதலாக இலங்கைக்கு வந்த போர்ச்சுகீசியர்கள், இலங்கையின் கோட்டை அரசையாண்ட பராக்கிரமபாகுவின் அனுமதிபெற்று வணிகம் செய்யலாகி, மேற்குக் கடற்கரைப் பகுதியில் வணிக சாலையொன்றையும் நிரூவி, பின்னர் 1620-ல் யாழ்ப்பாண அரசாட்சியையும் அவர்களது நோடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்திருக்கின்றனர். இந்தியாவின் கோவாவிலிருந்த போர்த்துகீசிய அரசும், இலங்கை ஆக்ரமிப்பில் பேருதவி புரிந்திருக்கிறது.

இலங்கையின் மத்திய மாகாணப்பகுதியில் அமைந்துள்ள கண்டி, வரலாற்று முக்கியத்துவமுள்ள நகராகக் குறிப்பிடப்படுகிறது. கம்பளை அரசாட்சியைச் சேர்ந்த மூன்றாம் விக்ரமபாகு அரசர் (1357-1374) கண்டி நகரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

பின்னர் கண்டியைத் தலைநகராகக் கொண்ட கண்டி அரசுரிமையை (1469-1815) முதலாம் விமலதர்ம சூரியன் எனும் அரசர் தோற்றுவித்திருக்கிறார்.

கோணப்பு பண்டாரன் என அழைக்கப்பட்ட தர்மசூரியன் (1591-1604), தந்துரே மற்றும் பலனே எனும் இடங்களில் நடந்த போர்களில் போர்த்துகீசியரைத் தோற்கடித்திருக்கிறார். கண்டி அரண்மனையை மேம்படுத்தியவராகவும் பௌத்த மதத்திற்கு பல்வேறு சிறப்புகள் செய்தவராகவும் தர்ம சூரியன் புகழப்படுகிறார்.

கண்டியின் அரண்மனையிலுள்ள தலதா மாளிகையில் புத்த பெருமானின் புனிதப்பல் இடம் பெற்றுள்ளதால், பௌத்த வழிபாட்டில் தலதா மாளிகை மிகுந்த முக்கியதுவம் நிரம்பியதாகப் போற்றப்படுகிறது. வரலாற்றுத் தகவலின் படி, பொது ஆண்டின் முந்நூற்றிப் பதின்மூன்றாம் ஆண்டில் இலங்கை நாட்டு இளவரசி ஹேமமாலியின் தலைமுடிக்குள் மறைந்து வைத்து புத்தரின் புனிதப் பல் இலங்கைக்கு எடுதுவரப்பட்டதாகக் கூறப்படுகிறது. அநுராதபுரம் பொலனறுவை போன்ற இடங்களுக்குப் பின் கண்டி அரண்மனைக்குள் வைத்து புனிதப்பல் பாதுகாக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. ஸ்ரீதலதா மாளிகையைக் கட்டியவராக முதலாம் விமலதர்ம சூர்ய அரசர் குறிப்பிடப்படுகிறார்.

கண்டி அரச மரபினர் மதுரை நாயக்கர் மற்றும் தஞ்சை நாயக்கர் மரபிலிருந்தே பெண் எடுக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்ததாகவும், கண்டி அரசர் வீரபராக்ர நரேந்திர சிங்கனுக்கு (1707-1739) வாரிசு இன்மையால் மருமக்கட்தாயம் எனும் முறைமையை ஓட்டி, மதுரை நாயக்க மரபைச் சேர்ந்த அரசியின் தம்பி விஜய ராஜசிங்கன் (1739-1747) இலங்கையின் கண்டி அரசராக முடி சூட்டப்பட்டிருக்கிறார். தொடர்ந்து கண்டி நாயக்கர் அரச மரபு 1739 லிருந்து வெள்ளையர் ஒட்டு மொத்த இலங்கையும் பிடித்த 1815 வரை அரசாண்டிருக்கிறது. இந்துகளாக இருந்த நாயக்க மன்னர்கள் பின் பௌத்தத்திற்கு மாறி அதன் வளர்ச்சிக்கும் துணைபுரிந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

கண்டியின் கடைசி அரசரான கண்ணுசாமி எனும் பெயர் கொண்ட விக்கிரம ராஜசிங்கன் (1780-1832) பிரித்தானியரால் தோற்கடிக்கப்பட்டு, கண்டி ஒப்பந்தத்தின் மூலம் வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

போர்த்துகீசியர், ஒல்லாந்தர் எனும் டச்சுக்காரர்கள் மற்றும் பிரித்தானியர்கள் என இலங்கைத் தீவின் அனைத்து அயலார் அரசுகளோடும் மாவீரம் காட்டிப் போர்

புரிந்தவர்களாக வன்னி நாட்டு வன்னிய அரசர்கள் (1200-1803) குறிப்பிடப்படுகின்றனர். குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியர் எனும் பெயர் கொண்ட பண்டார வன்னியர் (1777-1803) பிரித்தானியர்களை எதிர்த்து கடுமையாகப் போரிட்டவராகப் புகழப்படுகிறார்.

மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத் தீவு போன்ற பகுதிகளை உள்ளடக்கியிருந்த வன்னிமைப் பகுதி அரசர்களின் கடைசி அரசராகக் குறிப்பிடப்படும் பண்டார வன்னியரை, காக்கை வன்னியர் எனும் குறுநில அரசர் வெள்ளைக்காரரிடம் காட்டிக் கொடுத்து தோல்வியுறச் செய்ததாகவும் கூறப்படுகிறது.

நறுமணமிக்க ஏலக்காய்க்குப் பெயர் பெற்று விளங்கியதும், கடல்வணிகத்தில் மிகுந்த முக்கியத்துவமிக்க இடத்திலும் அமைந்திருந்த சிலோனை போர்த்துக்கீசியர்கள் 1597 முதல் 1658 வரை அரசாண்டிருக்கின்றனர். கோட்டை அரசாட்சியின் (1412-1597) ஸ்ரீதர்மபாலா பெரிய பண்டார அரசருக்கு (1551-1597) வாரிசு இன்மையால் கிறித்துவ மதத்திற்கு மாறியிருந்த அரசர் மூலம் போர்த்து கீசியர்களுக்கு அரசுரிமை கிடைத்து, ஜப்னா, ராய்காம, சிதவாகா போன்ற அரசுகளை கட்டுப்படுத்தக் கூடியவர்களாக வளர்ந்திருக்கின்றனர். 1621-ல் வன்னி அரசுகள் போர்த்துகீசியர்களுக்கு சிற்றரசுகளாக இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. கண்டி அரசுரிமையை வெற்றி கொள்ள முயன்று கொண்டிருந்த போர்த்துகீசியர்களுக்கு எதிரிகளாக டச்சுகாரர்கள் இலங்கைத் தீவிற்கு வந்து சேர்ந்திருக்கின்றனர்.

போர்த்துகீசியர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்காக 1638-ன் கண்டி உடன்படிக்கை மூலம் இரண்டாம் இர்ராஜசிங்கனால் வரவைக்கப்பட்ட டச்சுகாரர்கள், போர்த்துகீசியரை வெளியேற்றி டச்சு சிலோனாக 1656 முதல் 1796 வரை இலங்கையில் அதிகாரம் செலுத்தியிருக்கின்றனர்.

டச்சுக்காரர்களை வெளியேற்றி கண்டியையும் கைப்பற்றி, சிலோன் ஸ்ரீலங்காவாக ஆகும் வரை அரசாண்டவர்கள் பிரித்தானியர்கள் (1815-1948). ஸ்ரீலங்காவின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தவர்களாகக் குறிப்பிடப்படும் பிரித்தானியர்கள், தேயிலை காப்பித் தோட்டங்களின் வேலைக்கு ஏராளமான தென் தமிழக மக்களை அழைத்துச் சென்று, அவர்களை மலையகத்

தமிழர்களாக்கி, சொல்லொணத் துயரங்களுக்கு ஆளாக்கியவர்களாகவும் வரலாறு குறித்து வைத்திருக்கிறது.

இயற்கையின் பேரழகு கொண்ட இலங்கைத் தீவில் ஓடும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆறுகளில், மகாவலி கங்கை எனக் குறிப்பிடப்படும் முந்நூற்றி முப்பத்தைந்து கிலோ மீட்டர்கள் நீளமுள்ள மகாவலி ஆறு புகழ் மிக்கதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கைத் தீவு, பல்லின, பல் கலாசார மக்கள் வாழும் நாடு. பசுமை நிறைந்த இயற்கை அழகும். பெறுமதிமிக்க இயற்கை வளங்களும் நிறையப் பெற்ற இலங்கை நாட்புறமும் எழில் கொஞ்சும் வெண் கடற்கரைகள், தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த குறிஞ்சிப் பரல்கள், வனம் கொழிக்கும் வயற்பரப்புகள், பாரிய நீர்த் தேக்கங்கள், உயிரியல் பல்வகைத் தன்மை உடைய வனங்கள், சரணாலயங்கள் எனப் பல்வேறு அழகோவியங்களை ஒருங்கே பெற்று ஒப்பற்ற காட்சியளிக்கக் கூடியது எனில் மிகையாகாது.

கங்கை கொண்ட சோழன், கடாரம் கொண்டான், முடிகொண்ட சோழன், பாண்டித சோழன், வீர ராஜேந்திரன் எனப் பல்வேறு சிறப்புப் பெயர்களால் புகழப்படும் இராஜேந்திர சோழர் ஆட்சிக் காலத்தில், சோழநாடு மிகப் பெரிய அளவில் செல்வாக்குப் பெற்றிருந்ததாகப் புகழப்படுகிறது. பாண்டியர், சேரர், சிங்களவர், சாளுக்கியர், கங்கர், பாலர் என பல்வேறு அரசர்களுக்கெதிராக மாபெரும் வெற்றிகளைப் பெற்ற சோழர்கள், வலிமையான கப்பல் படை உதவியால் மலேயா, ஸ்ரீவிஜயம், கடாரம், சுமத்ரா போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளையும் வெற்றி கொண்டதாகக் கல்வெட்டுச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. சீனாவுடன் வணிகரீதியிலான நட்புறவு கொண்டிருந்த சோழ அரசு, வணிக வல்லமையை நிலைநாட்டவே தென்கிழக்கு ஆசியப் பகுதிகளின் மீது படையெடுப்பு நிகழ்த்தியதாகக் கருதப்படுகிறது.

தலைநகராக இருந்த தஞ்சாவூரை விடுத்து நிர்வாகக் காரணங்களுக்காக கங்கை கொண்ட சோழபுரம் எனும் புதிய தலைநகரை பேரரசர் ராஜேந்திரர் கட்டமைத்திருக்கிறார். கங்கை கொண்ட சோழீச்சுரத்தில், தஞ்சை பெரிய கோவிலைப் போன்றே, பெரியதொரு கோவிலையும் அழகுற அமைத்திருக்கிறார்.

சைவ சமயத்தைப் போற்றினாலும் அனைத்து மதங்ளையும் பேணியவராகவே ராஜேந்திரர் புகழப்படுகிறார்.

ராஜேந்திர சோழரின் ஆனைமங்கலச் செப்பேடுகள், நெதர்லாந்தின் லீய்டன் நகரக் காப்பகத்தில் பாதுகாக்கப்படுவதால் லீய்டன் செப்பேடுகள் என வரலாற்றில் குறிக்கப்படுகின்றன. சமஷ்கிருதம், தமிழ் என இருமொழிகளில் எழுதப்பட்டுள்ள செப்பேடுகள், சோழரின் ஆட்சிச் சிறப்பை அறிய உதவும் ஆவணமாகவும் திகழ்கின்றன. மேலும், ஓர் அரசாணை எவ்வாறு வழங்கப்பட்டது, ஆட்சியில் உள்ள நாட்டினை எவ்விதமாகப் பகுத்தனர், எத்தனை நிலையில் அரசு அதிகாரிகள் செயல்பட்டனர், அரசாணைகள் எத்துணை சீர்மையுடைய நடையில் எழுதப்பட்டன, அவை எவ்வெவ்வழியில் நிறைவேற்றப்பட்டன, சிற்றூர் அளவிலும் எத்தகைய நுண்ணிய குறிப்புகள் கையாளப்பட்டன, மன்னர் எவ்வாறு குடிகளையும் ஆட்சியின் கீழ்வரும் குறுநில மன்னர்களையும் மற்றும் பல்வேறு சமயநெறிகளையும் சீர்மிகப் போற்றினார் என்பதையும் செப்பேடுகள் மூலம் அறிய முடிகிறது.

லீய்டன் பெரிய செப்பேடு மாமன்னன் முதலாம் இராஜராஜன் வழங்கிய ஓர் அறத்தினை அவர் மகன் இராஜேந்திரன் தாமிரசாசனம் செய்ததை விளக்குகிறது. லீய்டன் சிறிய செப்பேடு முதலாம் குலோத்துங்கன் அவ்வறத்தையே மீண்டும் உறுதி செய்து மேலும் பிறவும் அளித்ததை விளக்குகிறது.

லீய்டன் பெரிய செப்பேடு - நாகப்பட்டினத்தில், முதலாம் இராஜராஜன், ஆட்சிக்கு உட்பட்ட, கடல் கடந்த தூர கிழக்கு நாடான, ஸ்ரீவிஜய நாட்டுத் தலைவனும் (சுமத்ரா - ஜாவா) கிடாரத்தை ஆளும் சைலேந்திர குல அரையனான மாற விஜயதுங்க வர்மன், தந்தையின் பெயரால் எடுப்பிற்கின்ற, சூடாமணிபன்ம விகாரம் எனும் பௌத்தர் வழிபாட்டுத் தலத்திற்கு, வேண்டும் நிவந்தங்களுக்கு, சத்திரிய சிகாமணி வளநாட்டு ஆனைமங்கலம் எனும் ஊரில் நிலம் தொண்ணூற்றேழே இரண்டுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் மூன்றுமா முக்காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்டு மாவானா இறைகட்டின காணிக்கடன் நெல், எண்ணாயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பது முக்கலனே இரு தூணிக்குறுணி ஒருநாழியும், தனதாட்சியின் கீழ் ஆண்டு 21வது நாள் தொண்ணூற்று ஆறில் தலைநகர் தஞ்சையில் இருந்த புரம்படிமாளிகை ராஜஸ்ரயன் தெற்குமண்டபத்தில் எழுந்தருளி இருந்தவாறு, பள்ளிச்சந்த இறையிலியாக வரியிலிட்டுக் கொடுத்த தானம்அளி ஆணையை விவரிக்கும் ஆவணமாகும்.

ஆணை நிறைவேற 2 ஆண்டுகளும் 18 நாட்களும் கடந்தன. ஆணை அவர் மகன் இராஜேந்திர சோழன் காலத்தில் தாமிர சாசனமும் செய்யப்பட்டுள்ளது.

லீய்டன் சிறிய செப்பேடு - முதலாம் குலோத்துங்க சோழன், மேற்கண்ட பௌத்தபள்ளிக்கு அளிக்கப்பட்ட தாளத்தை அவர்காலத்தில் உறுதிசெய்யவும், மேலும் விரிவாக்கிய தானத்தை அளிக்கவும் அக்காலத்திலிருந்த மேற்படி கிராரத்தரையனின் தூதன் ராஜவித்யாதர ஸ்ரீசாமந்தனும் அபிமானதுங்க ஸ்ரீசாமந்தனும் விண்ணப்பித்தபடி, மன்னன் தன் இருபதாவது ஆண்டில், ஆயிரத்தளியான ஆகவமல்ல குலகாலபுரத்து கோவில் (அரசன் இல்லம்) உள்ளால் திருமஞ்சன சாலையில் பள்ளிபீடம் காலிங்கராயனில் எழுந்தருளி இருந்தபோது சோழகுலவல்லி பட்டினத்து (நாகப்பட்டினம்) இராஜராஜ பெரும்பள்ளி (மேற்படி விகாரம்) மற்றும் இராஜேந்திரப் பெரும்பள்ளிக்கு அளித்திட்டதை விவரிக்கும் ஆவணமாகும்.

பண்டைய காலம் தொட்டே கிழக்கு ஆசியாவோடு தமிழகத்திற்கு மிகச் சிறந்த நல்லுறவு இருந்ததாக ஏராளமான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வணிகம் மற்றும் சமயத் தொடர்புகளும் சிறப்பான முறையில் பேணப்பட்டு வந்திருக்கின்றன. தென்கிழக்கு ஆசியாவின் அனைத்து நாடுகளோடும் தமிழர்களுக்கு தொடர்புறவுகள் நிலவிவந்திருப்பதை கல்வெட்டுச் சான்றுகளும் தொல்பொருட்களும் கட்டியம் கூறுகின்றன.

தென்கிழக்காசிய மற்றும் கிழக்காசிய நாடுகளில் இந்தியக் கலாச்சாரம், குறிப்பாக தமிழகச் கலாச்சாரம் பெருமளவில் பரவியிருந்திருக்கிறது. பல்லவர்களுக்கு முன்பே வணிகத் தொடாபுகளால் தமிழகத்திற்கு நெருக்கம் இருந்தபோதிலும், பல்லவர்களும் அவர்களைத் தொடர்ந்து வந்த சோழர்களும் தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசியாப் பகுதிகளில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியவர்களாக அறியப்படுகிறார்கள். பல்லவர், சோழர் கால கட்டிடக்கலையிலமைந்த ஏராளமான கோவில்கள் கிழக்காசியப் பகுதி முழுவதுமே பரவிக் காணப்படுவதாக அறிஞர்களால் எடுத்துரைக்கப்படுகிறது. ஆசியாவின் கிழக்குப் பகுதி முழுவதுமே முன்பு இந்து கலாச்சாரமும், தொடர்ந்து பௌத்தக் கலாச்சாரமும் பரவலாகப் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. அரபு நாடுகளுடனான வணிகத் தொடர்புகள் பழங்காலம் முதலே இருந்த போதிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி மலேயா, இந்தோனேசியா பகுதிகளில் இஸ்லாமிய

அரசுரிமைகள் உருவாகி பதினாறாம் நூற்றாண்டுக் காலத்தில் பெருவாரியான மக்கள் இசுலாமியர்களாக மாற்றமடைந்திருக்கிறார்கள். தொடர்ந்து வந்த ஐரோப்பியர்களால் கிறித்தவமும் அறிமுகப்படுத்தப்பட்டு கிழக்காசியப் பகுதியில் கிறித்துவக் கலாச்சாரமும் குறிப்பிடத்தக்க அளவில் பரவியிருக்கிறது.

தென்கிழக்காசியா என்பது ஆசியாக் கண்டத்தில் இந்தியாவுக்கு கிழக்கிலும், சீனாவிற்குத் தெற்கிலும், ஆஸ்திரேலியாவிற்கு வடக்கிலும் அமைந்த நாடுகளைக் குறிக்கும். மியான்மார், லாவோஸ், தாய்லாந்து, வியட்நாம் போன்ற பௌத்த சமய பெரும்பான்மை நாடுகளில் தாய் பேரின மக்களும், ஆஸ்திரோ-ஆசிய மக்களும் வசிக்கின்றனர். மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், புருணை, கிழக்கு திமோர் போன்ற இஸ்லாமிய கிறிஸ்துவ பெருன்பான்மை நாடுகளில் ஆஸ்திரோனேசிய மக்கள் வாழ்கின்றனர்.

தென்கிழக்காசிய நாடுகளின் பண்டைய காலத்தில் இந்துப் பேரரசுகள் செல்வாக்கோடு இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அரசியல், நீதித்துறை, கலை, கலாச்சாரம், நாகரீகம், மொழி, வணிகம் என அனைத்திலும் இந்து மதத்தின் தாக்கங்கள் இருந்திருக்கின்றன. புகழ் வாய்ந்த ஸ்ரீவிஜயம், கடாரம், லங்காசுகா, மயாபாகித்து போன்ற பேரரசுகள் இந்து சமய நாகரிகத்தோடு பேசப்படுகின்றன.

தமிழ் வணிகர்களால் சுவர்ணபூமி என பெயர் சூட்டப்பட்ட மலேய தீபகற்பத்தோடு, தமிழர்களுக்கு தொன்மைக் காலம் முதலே சிறந்ததொடு பிணைப்பு இருந்திருக்கிறது. மலேசியாவின் வடக்கிலுள்ள கெடா மாநிலமே பழங்காலத்தில் கெடாரம், கடாரம் என அழைக்கப்பட்டிருக்கிறது. மலேசியாவின் பச்சைப்பயிர் மாநிலமென்றும், அமைதியின் வாழ்விடம் என்றும் பெருமை கூறப்படும் கடாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பூஜாங் பள்ளத்தாக்குப் பகுதியில், மிகப் பழமையானதொரு தமிழ் நாகரிகம் செழிப்புற்று இருந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஆயிரத்தி தொள்ளாயிரத்து அறுபத்து மூன்றாமாண்டு வரை மலாயா என்றே குறிப்பிடப்பட்டு வந்த மலை நாடான மலேசியாவின் பேராக் மாநிலத்தின் லெங்கோங் எனும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட பதினோறாயிரம் வருடங்களுக்கும் மேல் பழமையானதாகக் கருதப்படும் பேராக் மனித எலும்பை சான்றாகக் கொண்டு,

மிகத் தொன்மைக் காலத்திலேயே மலாயாவில் மனித இனம் வாழ்ந்திருக்கலாம் என அறியப்படுகிறது.

சுண்ணாம்புக் குன்றுகளாலும், மலைகளாலும், சுமார் தொன்னூறு லட்சம் வருடங்கள் பழமையானதாகக் கருதப்படும் காடுகளாலும், சூழப்பட்டுள்ள லெங்கோங் நகரம் மலாயாவின் திறந்தவெளி கண்காட்சியகம் எனவும் அழைக்கப்படுகிறது. பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட மண்பாண்டங்கள், கல்லாயுதங்கள், ஆயுதங்கள் என பலவும் அகழாய்வில் கிடைக்கப்பெற்றுள்ளன. பல ஆயிரம் ஆண்டுகளாகவே மனித இனம் வாழ்ந்து வந்ததாக அறியப்பட்டுள்ள லெங்கோக் பகுதியில், பேராக் மனித எலும்புக் கூட்டிற்கு அருகேயே எட்டாயிரமாண்டு பழமையான ஒரு பெண்ணின் எலும்புக் கூடும் அகழாய்வில் எடுக்கப்பட்டள்ளது. எலும்புக் கூடுகள் ஆஸ்திரேலிய தொல் குடிகளான ஆஸ்திரேலோ மெலனோசாயிடு இனத்தைச் சேர்ந்ததாக ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது.

பேராக் மாநில ஈப்போ நகருக்கு அருகேயுள்ள பழமையான குகையொன்றில் நான்காயிரமாண்டுகளுக்கு முந்தைய தொல் ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மனித இனத்தின் புலம் பெயர் கோட்பாட்டின் படி இந்தோனேசியா, மேலனேசியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த மனித இனம், மலாயாவை ஒரு தங்கிச் செல்லும் உறைவிடமாகப் பயன்படுத்தியிருக்கலாமென தொல்லாய்வுகள் தெரிவிக்கின்றன.

மலாயாவின் தொல்குடியினர் ஓராங்அஸ்லி என அழைக்கப்படுகின்றனர். மலாய தொல் குடியினர் பலவகையினராக இருந்த போதிலும் மொழி மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் நெகிரிட்டோ, செனோய் மற்றும் ஆதி மலாய் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். செமாங் எனவும் குறிப்பிடப்படும் நெகிரிட்டோ பழங்குடியினர் மலாய் தீபகற்பத்தின் வட எல்லைப் பகுதியிலும், செனோய் இனத்தவர் மத்திய பகுதியிலும், ஆதி குடியினர் தென் பகுதியிலும் வாழ்வதாகக் கூறப்படுகிறது.

பொது ஆண்டின் தொடக்க காலம் வரையிலும் கூட வெளியுலக தொடர்புகள் இல்லாமல் உட்புறக் காட்டுப் பகுதிகளிலேயே வசித்த மலாய் தொல்குடிகள், பின்னர் தீபகற்பத்தில் வந்திறங்கிய இந்திய வணிகர்களோடு ஏற்பட்ட தொடர்பின்

விளைவாக பிசின், நறுமணக் கட்டைகள், தோகைகள் போன்றவற்றிற்கு மாற்றாக உப்பு, துணிமணி மற்றும் இரும்புக் கருவிகளைப் பண்ட மாற்றாகப் பெற்றிருக்கின்றனர். மலாயப் பேரரசுகளாலும் அதன் பிறகான காலனியாதிக்க காலத்திலும், மலாய தொல்குடிகள் அடிமைகளாக ஆக்கப்பட்டு பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இயற்கை வழிபாடும், ஆவி வழிபாட்டு நம்பிக்கையும் கொண்டிருந்த அஸ்லி தொல்குடியினர், இசுலாமியர்களாகவும் கிறித்தவர்களாகவும் மதம் மாற்றப்பட்டதால் அவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஆறு உட்பிரிவுகள் கொண்டதாகக் குறிப்பிடப்படும் நெகிரிட்டோ குடியில் மூன்றாயிரத்து ஐந்நூறு பேர் மட்டுமே உள்ளதாகப் பதியப்பட்டுள்ளது ஒப்பு நோக்கத் தக்கது.

மலேய வரலாற்றில் கற்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் போன்றவை பதியப்பட்டுள்ளன. மலாயாவின் வெண்கலக் கால கலாச்சாரத்தை டோங் சோன் கலாச்சாரம் எனக் குறிப்பிடுகின்றனர். டோங் சோன் கலாச்சாரம் இந்தோனேசியாவின் சுமத்ராவினின்றும் வியட்நாமிலிருந்தும் பரவியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. வியட்நாமில் புகழ்பெற்றுக் காணப்பட்ட சோன் கலாச்சாரத்தில், முறையாக நெல் சாகுபடி செய்தல், நெல் பயிரிட எருமை மாடுகளை முறையாகப் பழக்குதல், அதிக இறைச்சி தரும் பன்றிகளை வளர்த்தல், வலை பின்னி மீன் பிடித்தல், பாய்மரங்கள் மூலம் படகு விடுதல், மரத்தைக் குடைந்து படகுகள் செய்தல் போன்றவை பெருமையாகக்குறிப்பிடப்படுகின்றன.

இந்தியர்களோடுமு, சீனர்களோடும், ரோமாபுரியோடும் சிறந்த வணிக உறவுகளைக் கொண்டிருந்த மலாயாவில், இந்து மற்றும் புத்தமதத் தொடர்புடைய லங்கசுகா எனும் அரசு பொது ஆண்டின் இரண்டாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரை அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இன்பத்தின் உறைவிடம் எனும் பெயரில் இருந்த லங்க சுகா அரசு குறித்து குறைவான தகவல்களே கிடைத்திருக்கின்றன.

சீனாவின் லியங் அரசுரிமையின் (பொ.ஆ. 502-557) லியாங்சு பதிவுகளிலிருந்து, லங்கசுகப் பேரரசு இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தொடங்குவதாகக் அறியப்படுகிறது. லங்கசுக அரசுரிமையின் அரசர் பகதத்தர் ஐநூற்றி பதினைந்தில் சீனாவிற்கு தூதுவரை அனுப்பியதாகக் கூறப்படுகிறது. சீன மற்றும் அரபு மூலங்களிலிருந்து மலாயாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில்

லங்கசுகா அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் லங்கசுகா அரசில் கற்பூரமும் பெருமளவில் கிடைத்திருக்கிறது.

ஸ்ரீவிஜயப் பேரரசாலும் (650-1377), மயபாகித் பேரரசாலும் (1293-1527) ஆளப்பட்ட மலாய் தீபகற்பம், பின்னர் முஸ்லிம் சுல்தான்களின் ஆட்சிக்குப்பட்டதாக இருந்திருக்கிறது. மலாயாவோடு சிங்கபுரம் என்ற சிங்கப்பூரின் வரலாறும் பின்னிப் பிணைந்திருக்கிறது. மலாயா, சிங்கப்பூரோடு இந்தோனேசியாவின் ஸ்ரீவிஜயப் பேரரசும் நெருங்கிய தொடாபுடையதாக விளங்குகிறது.

தென்கிழக்கு ஆசியப் பகுதியிலும் ஓசியானியப் பகுதியிலும் அமைந்துள்ள பதினான்காயிரத்திற்கும் மேற்பட்ட தீவுகளை உள்ளடக்கிய ஒரு தீவுக்கூட்டமாகவும் உலகில் அதிக இசுலாமிய மக்கள் வாழும் நாடாகவும் அறியப்படும் இந்தோனேசிய தீவுக்கூட்டம், பண்டைய காலம் முதலே இந்தியாவோடும், சீனாவோடும் நெருங்கிய உறவு கொண்ட நாடாக வணிக மற்றும் பண்பாட்டு உறவுகளைப் பேணி வந்திருக்கிறது. பண்டையக்கால இந்தோனிசிய அரசுகள் இந்து மற்றும் புத்தமத தொடர்பானவையாகவே அறியப்பட்டிருக்கின்றன. மத்திய காலத்திற்குப் பின் இசுலாமிய சுல்தானங்கள் அமைந்திருக்கின்றன. வாசனைப் பெருட்களுக்காகப் பெரிதும் அறியப்பட்ட இந்தோனேசியா, பின்னர் டச்சுக்காரர்களின் காலனி நாடாக மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேல் இருந்திருக்கிறது.

ஆயிரத்துத் தொள்ளாயிரமாவது ஆண்டுகளுக்குப் பின்னரே இந்தோனேசியா எனும் பொதுப்பெயர் புழக்கத்திற்கு வந்திருக்கிறது. அதற்கு முன் இந்தியத் தீவுக் கூட்டம் அல்லது மலாய் தீவுக்கூட்டம் என்னும் பெயரே உலகினர் மத்தியில் பரவலாக அறியப்பட்டு வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இந்துனேசியர், மலாயுனேசியர், இண்டீ, கிழக்கு, இன்சுலிந்தே போன்ற பெயர்களாலும் குறிப்பிடப்பட்ட இந்தோனேசியா, மிகத் தொன்மையான மானுட வரலாறு கொண்ட பகுதியாக அறிஞர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் கண்டெடுக்கப்பட்ட புதைபடிவங்களும், தொல்லுயிர் எச்சங்களும், தொல் காலத்திய கருவிகளும், பதினைந்து லட்சம் வருடங்களுக்கு முன்பிருந்தே மனித குல மூதாதையர் இங்கு வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தோனேசியாவின் கிழக்கு சாவகத்திலுள்ள பெநுரவன் சோலோ ஆற்றங்கரையில், தற்காலத்திய ஹோமோ செப்பியன்ஸ் மனிதர்களின்

மூதாதையான ஹோமோ எரக்டஸ் மனிதரின் எலும்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சாவகத்தீவில் கண்டெடுக்கப்பட்டதால் சாவக மனிதர் எனப் பெயரிடப்பட்டுள்ள நிமிர்ந்த நடை மூதாதை மனிதர் வாழ்ந்திருப்பது இந்தோனேசியாவின் பழமைக்கு சிறந்ததொரு சான்றாகக் குறிப்பிடப்படுகிறது.

யூஜின் டுபாய்ஸ் (1858-1940) எனும் புகழ்பெற்ற டச்சு தொல்மானுடவியலாளரால் கண்டுபிடிக்கப்பட்ட ஜாவா மனிதன், டுபாய்ஸ் அவர்களால் நிமிர்ந்த மனிதக் குரங்கு என்றே அழைக்கப்பட்டது. பின்வந்த அறிஞர்களால் நிமிர்ந்த மனிதன் என வகைப்படுத்தப்படும் ஜாவா மனிதர்கள், சீனாவின் பீகிங் நிமிர்ந்த மனிதரோடு நெருங்கிய தொடர்புறவுகள் கொண்டவர்களாக அறியப்படுகின்றனர்.

1891 மற்றும் 1892 இல் கண்டுபிடிக்கப்பட்ட சாவக மனித எலும்புகள், முழுமையான மாதிரியாகக் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு மண்டையோட்டு மூடி, ஒரு தொடை எலும்பு, சில பற்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டதால் சாவக மனிதர் குறித்து பல்வேறு ஐயங்களும் அறிஞர்களால் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆனாலும் நடுப்பகுதி சாவகத் தீவின் சங்கிரான் பகுதியில், புகழ்பெற்ற ஜெர்மன் - டச்சு தொல்லுயிரியல் மற்றும் மண்ணியல் அறிஞர் ஜ.ஹெச்.ஆர். கோனிங்ஸ்வால்ட் (1902-1982) என்பவரால் 1931 மற்றும்1933 க்கு இடையில் கண்டெடுக்கப்பட்ட மனித புதைபடிவங்கள் மூலம் சாவகப் பகுதியில் மிகத் தொல்காலத்திலிருந்தே மனித இனத்தின் முன்னோடிகள் வாழ்ந்திருந்தது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. சங்கிரான் இரண்டு எனும் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மேல் மண்டையோட்டுப் பகுதி, பதினாறு லட்சம் முதல் ஏழு லட்சம் வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாமென நவீன ஆய்வறிக்கைகள் அறுதியிடுகின்றன.

சாவகத்தீவின் சங்கிரான் பகுதியில் கிடைத்திருக்கும் அறுபதிற்கும் மேற்பட்ட மனித புதைபடிமங்களின் மூலம் சாவக மனிதரின் பண்புகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. சாவாக மனிதர்கள் சுமார் நூற்றி எழுபது சென்டி மீட்டர்கள் உயரமானவர்களாகவும், நிமிர்ந்த நடை கொண்டவர்களாகவும், அவர்களது தொடை எலும்பு தடித்திருந்ததாகவும், முகம் நாவாய் அற்று முன்புறும் துருத்தியிருந்ததாகவும், துருத்திய கண்பட்டை மற்றும் பெரிய தாடைப்பகுதி கொண்டிருந்ததாகவும், மற்ற நிமிர்ந்த மனிதரைக் காட்டிலும் குறைவான

மூளைப்பெட்டகம் கொண்டிருந்ததாகவும், நீண்ட கோரைப் பற்கள் பெற்றிருந்ததாகவும், இறைச்சித் துண்டுகளை வெட்டுவதற்கு சிப்பி ஓடுகளைப் பயன்படுத்தியதாகவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் நெருப்பின் பயனை அறிந்திருந்தவர்களாகவும் சாவக மனிதர்கள் இருந்திருக்கிறார்கள். சுமார் முப்பத்தைந்தாயிரம் வருடங்களுக்கு முன்பு வரையிலும் சாவக மனிதர்கள் வாழ்ந்திருந்ததாக அய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தோனேசியாவில் பெரும்பான்மையாக வாழும் தற்காலத்திய ஆஸ்திரோனேசிய மக்கள், தாய்வானிலிருந்து தென்கிழக்கு ஆசியாவிற்குள் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்களாக அறியப்படுகிறார்கள். புதிதாக வந்தவர்கள் முன்னரே குடியேறியிருந்த மெலனேசிய மக்களை தூர கிழக்குப் பகுதிகளுக்குள் முடக்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. பின்னர் ஈரநில நெல் பயிரிடுதலில் சிறப்புப் பெற்று, முதலாம் நூற்றாண்டுக் காலகட்டத்தில் ஊர்களும் நகரங்களும் உருவாகி கடல் வணிகத்தில் சிறப்புற ஆரம்பித்ததாகவும் கூறப்படுகிறது.

ஆயிரம் கிலோமீட்டர் நீளமும், இருநூற்றிப்பத்து கிலோமீட்டர் அகலமும் கொண்ட சாவகத்தீவு எரிமலைக் குழம்புகளால் உருவானது. கிழக்கு மேற்காக முப்பத்தெட்டு மலைகளைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படும் சாவகத்தில் எரிமலைகள் குமுறி வெடிப்பது இயல்பானதாகக் கூறப்படுகிறது. சீமேரு எரிமலையும் மெராபி எரிமலையும் இடம்பெற்றுள்ள சாவகம் நெல்வயல்களுக்குப் பெயர்பெற்றதாக இருக்கிறது.

இந்தோனேசியாவின் அரசியல் பொருளாதார மற்றும் கலாச்சாரத்தில் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தியதாக ஜாவாத் தீவு குறிப்பிடப்படுகிறது. உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட தீவாகக் குறிப்பிடப்படும் ஜாவாவில் நான்காம் நூற்றாண்டில் தருமா அரசாட்சியும், ஏழாம் நூற்றாண்டில் சுந்தா அரசாட்சியும், கலிங்க அரசாட்சியும் இருந்திருக்கின்றன. எட்டாம் நூற்றாண்டில் எழுந்த சைலேந்திர அரசுரிமை மகாயானப் புத்த மதத்தைப் பேணியதோடு புகழ்பெற்ற பல கோவில்களையும் உருவாக்கியிருக்கறது.

உலகின் ஆறாவது பெரிய தீவான சுமத்ரா வழியே நிலநடுக்கோடு செல்வதால் வெப்பமண்டல மழைக்காடுகள் அதிகமிருந்திருக்கின்றன. எனினும்

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் ஐம்பது பங்கிற்கும் அதிமான காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அரிதான பல தாவர விலங்கு வகைகள் மிக மோசமான அழிவுநிலையில் உள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. சுமத்ரா புலி, சுமத்ரா யானை, சுமத்ரா காண்டாமிருகம், சுமத்ர உராங்குட்டான் போன்றவை எண்ணிக்கையில் குறைந்து வருவதாக சுற்றுச் சூழலியலாளர்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது. இந்தோனேசியப் பெருந்தீவுகளில், காப்பித் தோட்டங்களுக்காக பெருமளவிலான காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும், காடழிப்பு மற்றும் எரிமலை வெடிப்பு போன்றவற்றால் இந்தோனேசியா முழுவதுமே ஒருவித புகை மூட்டம் சூழ்ந்து காணப்படுவதாகவும் பதிவுகள் சுட்டுகின்றன.

சுமத்ரா தீவின் வடமுனை அந்தமான் தீவுகளோடு கடற்பகுதியை பகிர்ந்து கொள்கிறது. தென்முனைப் பகுதியில் சுந்தா நீரிணையால் சாவகத்திலிருந்து பிரிக்கப்படுகிறது. சுவர்ணபூமி, சுவர்ணதீபம் என அறியப்பட்ட சமுத்ர தீவு பண்டைக் காலத்திலிருந்தே தமிழகத்தோடு நெருங்கிய உறவு கொண்டிருந்திருக்கிறது. கிழக்கு சுமத்ராவின் பாலம்பெங் நகரை மையமாகக் கொண்டு உருவான ஸ்ரீவிஜயப் பேரரசு புகழ்வாய்ந்ததாக விளங்கியதாக வரலாற்றில் நிலைபெற்றுள்ளது.

ஏழுலட்சத்தி நாற்பத்து மூன்றாயிரத்து முந்நூற்றி முப்பது சதுர கிலோ மீட்டர்கள் கொண்ட போர்னியோ, உலகின் மூன்றாவது மிகப்பெரிய தீவு. மலேசியாவின் சபா மற்றும் சரவாக் மாநிலங்களும், புருணே நாடும் இடம்பெற்றுள்ள போர்னியோ தீவு, மாழக்காடுகளுக்காக மிகவும் அறியப்பட்ட பகுதியாக குறிப்பிடப்படுகிறது. வருணா எனும் பெயரே போர்னியோ என மருவியதாகக் கூறப்படுகிறது. மேலும் சுட்டெரிக்கும் தீவு எனும் பொருளில் கலிமந்தான் எனவும் போர்னியோ குறிப்பிடப்படுகிறது. சீனப் பதிவுகள் போ-நி எனும் பொருளில் கலிமந்தான் திவினை அழைக்கின்றன. மலேசியப் போர்னியோவிலுள்ள சபா பகுதியின் கினபாலு மலைச்சிகரம், பதின்மூன்றாயிரத்து நானூற்றி முப்பத்தைந்து அடிகள் உயரமுள்ளதாக அமைந்திருக்கிறது. மேற்கு கலிமந்தானில் ஓடும் கபுஸ் ஆறு ஆயிரத்து நூற்றி நாற்பத்தி மூன்று கிலோ மீட்டர்கள் நீளமுள்ளதாக இருக்கிறது.

போர்னியோவில் ஏராளமான குகைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. மான் குகை என அறியப்பட்டுள்ள ஒரு குகை, சுமார் முப்பது லட்சம் வெளவால்களுக்கு

இருப்பிடமாக விளங்குகிறது. வெளவால்களின் எச்சம் மட்டும் நூறு மீட்டர்களுக்கும் அதிகமாக குவிந்து கிடப்பதாகக் கூறப்படுகிறது. பனியுகத்தில் ஜாவா, சுமத்ரா, போர்னியோ போன்ற தீவுகள் ஆசியாவின் நிலப்பகுதியோடு இணைந்திருந்தாக குறிப்பிடப்படுகிறது.

கற்பூரத்தீவு என அறியப்பட்ட போர்னியோ தீவின் கிழக்கு கலிமந்தான் பகுதியின் மககாம் ஆற்றுப்பகுதியிலுள்ள குடய் எனும் இடத்தில், நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர்களின் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளதன் மூலம், பண்டைய காலத்திலிருந்தே தமிழகத்தோடு போர்னியோ பகுதி நல்லுறவு கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் பொருநை எனும் பெயரும் தமிழ் பெயராகக் கூறப்படுகிறது.

உலகிலேயே மிகவும் தொன்மையான மழைக்காடுகள் கொண்டுள்ள பகுதியாக போர்னியோ போற்றப்படுகிறது. சுமார் பதினான்கு கோடி ஆண்டுகளுக்கும் மேலான வயதுடைய பழங்காடுகள் நிறைந்துள்ள போர்னியோவில், பதினைந்தாயிரம் வகைகளுக்கும் மேலான பூக்கும் தாவரங்களும், மூன்றாயிரம் வகைகளுக்கும் அதிகமான மரங்களும், இருநூற்றி இருபத்தியோரு வகை நிலவாழ் பாலூட்டிகளும், நானூற்றி இருபது வகைப் பறவைகளும், நானூற்றி நாற்பது நன்னிர் மீன் வகைகளும் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பரிணாமத்தில் மிகவும் முக்கியமானதொரு பகுதியாகக் குறிப்பிடப்படும் போர்னியோ பகுதி, போர்னியோ உராங்குட்டான்களுக்கும், போர்னியோ யானைகளுக்கும், போர்னியோ சிறுத்தைகளுக்கும், கிழக்கு சுமத்ரா காண்டாமிருகங்களுக்கும் வசிப்பிடமாகவும் இருக்கிறது.

அன்பின் தீவு, அமைதியின் தீவு, இந்து சமயத்தின் தீவு என பல அடைபெயர்களால் அழைக்கப்படும் பாலித்தீவு, இந்து சமயத்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் தீவாகவும், இந்தோனேசியாவின் முக்கியமான சுற்றுலா மையமாகவும் திகழ்கிறது.

தெற்கு சுமத்ராவில் அமைந்திருந்த ஸ்ரீவிஜயம் பேரரசு குறித்து ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினெட்டாம் ஆண்டு வரை உலகினருக்கு மட்டுமல்லாது பெரும்பாலான இந்தோனேசியர்களுக்கும் தெரியாமல் இருந்திருக்கிறது. பெருமை மிகு வெற்றி எனும் பொருளில் அமைந்திருந்த பழைய மலாய் பேரரசான சிறீவிஜயப்

பேரரசு, தென்கீழக்காசியாவின் பெரும்பான்மையான பகுதிகளில் பரவியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. சுமத்ராவின் பாலம்பாங் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஏழாம் நூற்றாண்டு கெடுகான் புகிட் கல்வெட்டில் சிறீவிஜயம் எனும் பெயர் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். சிறீவிஜயப் பேரரசு லாவோஸ், தாய்லாந்து, தெற்குவியட்நாம் பகுதியில் அமைந்திருந்த கெமர் பேரரசோடும், கம்போடிய மற்றும் மத்திய வியட்நாம் பகுதியில் அமைந்திருந்த சம்பா பேரரசரோடும், நட்புறவும் சில நேரங்களில் பகைமையும் பாராட்டியதாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. மேலும் மத்திய சாவகப் பகுதியிலிருந்த மெடாங் அல்லது பூமி மதராம் பேரரசோடு (732-1006) சிறீவிஜய் போரரசு அதிகாரப் போட்டியில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

சஞ்சயப் பேரரசரால் (732-746) தோற்றுவிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் சஞ்சயப் பேரரசு குறித்து வரலாற்றாசிரியர்களால் பல்வேறு விதமாகக் கூறப்படுகிறது. சில வரலாற்றாசிரியர்களின் படி, மத்திய சாவகத்தில் சைவ நெறியைப் போற்றிய சஞ்சயப் பேரரசும் மகாயானத்தைப் பின்பற்றிய சைலேந்திரப் பேரரசும் அமைந்திருக்கிறது. மத்திய சாவகத்தின் குனுங் உகிர் எனும் கோவில் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட எழுநூற்றி முப்பத்தியிரண்டாமாண்டு வெளியிட்ட பல்லவர் காலத்திய சமஷ்கிருத சங்கார் கல்வெட்டின் மூலம் மேடாங் பகுதியின் அரசராக சஞ்சயா இருந்ததாகவும், சஞ்சய அரசர் வழிபாட்டிற்காக லிங்கம் ஒன்றை நிறுவியதாகவும் அறியப்படுகிறது. கல்வெட்டின் மூலம் சாவகப் பகுதியில் தானியங்கள் மிகுந்திருந்ததாகவும் தங்கச் சுரங்கங்கள் நிறைந்திருந்ததாகவும் அறிய முடிகிறது.

இந்தோனேசியா யோககர்தா பகுதியிலுள்ள கலசன் எனும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட எழுநூற்றி எழுபத்தி எட்டாமாண்டு கலசன் கல்வெட்டு, பனங்கரன் (ஆ.காலம் 760-780) எனும் அரசர் பௌத்தப் பெண் கடவுளான தாரதேவிக்கு கலசன் கோவிலும், பௌத்தத் துறவிகள் தங்குவதற்கு ஒரு விகாரையும் அமைத்ததைக் குறிப்பிடுகிறது. எழுநூற்றி எண்பத்தியிரண்டாமாண்டு கெலுராக் கல்வெட்டின் படி, பனங்கரன் பேரரசருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவராக இந்திரா எனும் தரனிந்திரா (780-800) குறிப்பிடப்படுகிறார். இந்திரப் பேரரசர் ஏராளமான வெற்றிகளைப் பெற்றவராகவும் பல கோவில்களை எழுப்பியவராகவும் புகழப்படுகிறார்.

இந்தோனேசியாவின் மதராம், ஸ்ரீவிஜய மற்றும் சைலேந்திரப் பேரரசுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு குறிப்பிட்ட அரசமரபைச் சார்ந்தவர்களாலேயே மூன்று பேரரசுகளும் ஆளப்பட்டிருக்கின்றன. மதராமின் பனங்காரன் அரசர் முதல் பலிடுங் அரசர் வரையிலான காலப்பகுதி (760-900) சாவகத்தின் பொற்காலமாக வரலாற்றாசிரியர்களால் புகழப்படுகிறது. சாவகத்தீவின் கலை வளர்ச்சிக்கும், பல்வேறு புகழ்பெற்ற கோவில்கள் உருவாவதற்கும், மக்களின் அமைதியான வாழ்க்கைக்கும் காரணமாக அமைந்ததாக மதராம் பேரரசர்கள் புகழப்படுகின்றனர்.

ஸ்ரீவிஜய பேரரசை கண்டறிந்தவராக தென்கிழக்கு ஆசியாவின் தொல்லியலாளரும் வரலாற்றறிஞருமான பிரெஞ்சு நாட்டு ஜார்ஜ் செடஸ் (1886-1969) புகழப்படுகிறார். தென்கிழக்கு ஆசியாவின் இந்திய மயமான அரசுகள் (தீ இந்தியனைஸ்டு ஸ்டேட்ஸ் ஆட் சௌத்ஈஸ்ட் ஏசியா) மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் உருவாக்கம் (தி மேக்கிங் ஆப் சௌத் ஈஸ்ட் ஏசியா) போன்ற புகழ்பெற்ற புத்தகங்கள் மூலம், தென்கிழக்காசியப் பகுதியில் பரவியிருந்த பேரரசுகளில் இந்தியாவின் பங்களிப்பு குறித்து பல்வேறு சான்றுகளை அளித்துள்ளார். ஜார்ஜ் செடஸ் அவர்கள் கம்போடியாவின் ஆயிரக்கணக்கான சமஷ்கிருத மற்றும் பழைய கெமர் கல்வெட்டுகளை மொழிபெயர்த்தவராகவும் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

அறிஞர் செடஸ், சாவகம், சுமத்ரம் மற்றும் மலாய் பகுதியில் பரவியிருந்த ஸ்ரீவிஜயப் பேரரசினை கண்டறிந்து அதுபற்றி தகவல்களை டச்சு மற்றும் இந்தோனேசிய செய்தித்தாள்களில் இடம்பெறச் செய்திருக்கிறார். அதன் பின்னரே விஜயம் பற்றி அறிஞர்களின் கவனம் கிடைத்திருக்கிறது. 1984 ஆம் ஆண்டில் வானிலிருந்து எடுக்கப்பட்ட பலம்பங் புகைப்படங்கள் மூலம், பண்டைக் காலத்தில் அப்பகுதியில் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட கால்வாய்களும், குளங்களும், செயற்கைத் தீவுகளும், ஒரு காலத்தில் அங்கே நெருக்கமான மக்கள் வாழ்ந்த நகர அமைப்பும் வெளிக் கொணரப்பட்டிருக்கிறது. மேலும் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுத் துண்டுகளும், புத்தரின் சிலைகளும், மணிகளும், மட்பாண்டங்களும், சீனப் பீங்கான்களும் விஜயத்தின் வரலாற்றிற்கு சான்றுகளாக அமைந்திருக்கின்றன. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் மூலமாக,

பதாங் ஹரி ஆற்றுப் பகுதியிலுள்ள ஜாம்பி பகுதியில் ஆரம்பகால விஜயப் பேரரசு அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

விஜயப் பேரரசு பற்றிய தகவல்கள், சீனாவின் தாங் அரசாட்சியில் வாழ்ந்த புகழ் பெற்ற பௌத்தத் துறவி யீஜிங் (பொ.ஆ. 635-713) மூலமாக பெருமளவில் அறியப்பட்டிருக்கிறது. புத்த சமயக் கொள்கைகளை அறிந்து கொள்வதற்காக இந்தியாவின் நாலந்தா பல்கலைக்குப் பயணமான ஷாங் வெங்மிங் எனும் இயற்பெயர் கொண்ட யிசிங், அவரது இருபத்தைந்தாண்டு கால பயணம் குறித்து அரிய பல நாட்காட்டி குறிப்புகளை எழுதியிருக்கிறார்.

பதினான்கு வயதில் பௌத்தத் துறவியான ஷாங் வெங்மிங், பாகியான் சுவாங்சாங் போன்ற புகழ்மிக்க இந்திய சீனப் பயணிகள் குறித்து அறிந்திருந்ததால். அவரும் பௌத்த நூல்களைத் கற்கவும் மொழிபெயர்க்கவும் சீனாவில் கிழக்குக் கடற்கரை காங்ஷோவிலிருந்து புறப்பட்ட ஒரு பெர்சியன் படகில் நாலாந்தாவிற்குப் பயணமாகியிருக்கிறார். இருபத்தியிரண்டு நாட்களில் விஜயத்தின் பலம்பங் நகரை அடைந்து, அடுத்த ஆறு மாதங்கள் அங்கே சமஷ்கிருதமும் பழைய மலே மொழியும் கற்றிருக்கிறார். மலாய் மற்றும் கேடாக் போன்ற பகுதிகளுக்குப் பயணம் செய்த வெங்மிங், மலாய் மக்களை குன்லுன் மக்கள் என சீன மொழியில் குறிப்பிடுகிறார். குன்லுன் மக்கள் சுருள் முடியுடன் கறுப்பாக வெறும் பாதங்களுடன் சராங் உடை (லுங்கி) அணிந்திருந்ததாக பதிவிட்டிருக்கிறார். பின்னர் விஜயத்திலிருந்து இந்தியாவின் கிழக்குக் கடற்கரையை அடைந்து பிற பௌத்தத் துறவிகளோடு சேர்ந்து ஓராண்டு சமஷ்கிருதம் பயின்றிருக்கிறார். பின் நாளந்தாவில் பதினோரு ஆண்டுகள் கல்வி கற்றதாக ஷாங் குறித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து அறுநூற்றி எண்பத்து ஏழில் ஸ்ரீவிஜயம் அடைந்த யிஷிங், அங்கு ஈராண்டு தங்கி சமஷ்கிருத பௌத்த நூல்களை சீன மொழிக்கு மொழிபெயர்த்திருக்கிறார். அன்று பலம்பங் பௌத்த மதத் கோட்பாடுகளை கற்றுக்கொள்வதற்கும், ஆராய்வதற்கும் உலகளாவிய முக்கிய மையமாகத் திகழ்ந்ததாக யிஷிங் குறிப்பிடுகிறார். உலகெங்கிலுமிருந்து வந்திருந்த பௌத்தத் துறவிகள் அங்கே குழுமியிருந்ததாகக் கூறப்படுகிறது. அறுநூற்றி எண்பத்தி ஒன்பதில் சீனா சென்று காகிதமும், மையும் வாங்கி வந்து பலம்பெங்கிலேயே மொழிபெயர்ப்பைத் தொடர்ந்திருக்கிறார்.

அறுநூற்றி தொன்னூற்றி ஐந்தில் சீனாவின் லுயோயாங் திரும்பிய யிஷிங்குக்கு தாங் அரசு சிறப்பான வரவேற்புக் கொடுத்திருக்கிறது. இருபத்தைந்தாண்டு பயணத்தில் சுமார் நானூறு புத்தமத மொழிப்பெயர்பு புத்தகங்களை சீனாவிற்குக் கொண்டு சென்று சீன புத்த மத வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்தவராக யிசிங் போற்றப்படுகிறார்.

தென் கடல்களிலிருந்து கடந்து வந்த பௌத்தப் பதிவுகள் (அக்கவுன்ட் ஆப் புத்திசம் சென்ட் ப்ரம் த சௌத் சீஸ்) மற்றும் தாங் அரசுரிமை பௌத்தத் துறவியின் புனிதப் பயணம் (புத்திஸ்ட் மாங்ஸ் பில்கிரிமேஜ் ஆட் த தாங் டைனஸ்டி) போன்ற புத்தகங்கள் யிஜீங்கின் மிகச்சிறந்த பயண நூல்களாக புகழப்படுகின்றன. அக்காலத்திலிருந்த புத்த மத உட்பிரிவுகள் குறித்து மிக நுட்பமான தகவல்கள் கூட யிங்சியின் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வட இந்தியாவிலும், சாவகம், சுமத்ரம் போன்ற தென்கடல் தீவுகளிலும் தேராவாதப் பௌத்தம் பெருமளவில் பின்பற்றப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீவிஜயப் பேரரசு பற்றிய பல்வேறு தகவல்களும் யிசிங் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீவிஜயப் பேரரசை தோற்றுவித்தவராக தபுங்க கயாங் ஸ்ரீ ஜெயனேசர் அறியப்படுகிறார். தெற்கு சுமத்ரா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல கல்வெட்டுகள் சித்தயாத்ரா எனும் புனிதப் பயணங்களை பற்றிக் குறிப்பிடுகின்றன. டச்சு அறிஞர் எம்.பேடன்பர்க் என்பவரால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதில் முசி ஆற்றின் துணை ஆறான தடாங் ஆற்றின் கரையிலுள்ள கெடுகன் புசிட் என்னுமிடத்தில் கண்டறியப்பட்ட கெடுகன் புசிட் கல்வெட்டு, மலாய்மொழியின் பழமைக்கு மிகச் சிறந்த சான்றாகப் புகழப்படுகிறது. நாற்பத்தைந்துக்கு எண்பது செ.மீ எனும் அளவில் சிறிய கல்லில் பல்லவ வரி வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு பழைய மலாய் மொழியில் எழுதப்பட்டிருப்பினும், நிறைய சமஷ்கிருத சொற்களும் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. கல்வெட்டு சக ஆண்டு 11.02.605 ல் (பொது ஆண்டு 01.05.683) எழுதப்பட்டருக்கறது. ஸ்வஸ்தி ஸ்ரீ சகவர்சத்தித ஏகாதசி சுக்லபட்ச வைகாசி எனத் தொடங்கும் கல்வெட்டு, இருபதினாயிரம் படை வீரர்களோடு சித்தயாத்திரை புறப்பட்ட மன்னரை பற்றிக் கூறுகிறது. யாத்திரைக்கு சென்ற மன்னர் ஜெயனேசராக இருக்கலாமென பெரும்பாலான அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பாலம்பெங் பகுதியைச் சுற்றிலும் சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட சித்தயாத்திரைக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தோனேசியத் தலைநகர் ஜகார்தாவிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில், சபோகிங்கிங் பகுதியில் ஆயிரத்தி தொள்ளாயிரத்து ஐம்பதுகளில் கண்டுபிடிக்கப்பட்ட தலகா படு கல்வெட்டு விஜயப் பேரரசு பற்றி குறிப்பிடுகிறது. 118 செ.மீ உயரமும் 148 செ.மீ அகலமும் உடைய ஏழு நாக தலைப்பகுதிகள் நீட்டிக் கொண்டிருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ள கல்வெட்டு, பல்லவ வரிவடிவத்தில் பழைய மலே மொழியில் எழுதப்பட்டுள்ளது. நீண்ட வரிகளில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டில் புனித நீர் ஊற்றி சடங்குகள் செய்யும் வழக்கமிருந்ததால் எழுத்துகளின் சில பகுதிகள் அரிப்பினால் அழிந்து விட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தலகாபடு கல்வெட்டின் மூன்றிலிருந்து ஐந்தாம் வரிசை வரையிலான வரிகளின் படி, அக்கால சமூகத்தில் பல படிநிலைகள் வழக்கத்திலிருந்தது அறியப்படுகிறது. கமு வன்யக்மமு (நீங்கள் அனைவரும்) ராஜபுத்ர, காயஸ்த, புரஸ்தர, பூபதி, சேனாபதி, நாயக, பிரத்யாய, ஹாஜி பிரத்யாய, தண்ட நாயக, நீசவர்ண, வாசீகரண, குமரமத்ய, காட்டபாத, ஆதிகரண, கிராம, ஸ்தாபக, புகாவம், வணியாக போன்ற பல்வேறு அலுவல் தொடர்புடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டு, அரசருக்கு உண்மையாக இல்லாவிட்டால் முடிக்கப்படுவார்கள் எனும் எச்சரிக்கை விடும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

சாவகத் தீவிலிருந்த பண்டைய தருமணக்காரர் அரசாட்சியின் (பொ.ஆ. 358-669) வீழ்ச்சியோடு விஜயப் பேரரசின் எழுச்சி தொடங்கியதாக குறிப்பிடப்படுகிறது. சுந்தனேசிய மொழியில் எழுதப்பட்டுள்ள பழமையான கல்வெட்டு சுந்தேனிய மக்களின் பண்பாடு குறித்தான பழமையான சான்றாகக் கருதப்படுகிறது. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்வேறு கல்வெட்டுகள் கிழக்கு சாவகத்திலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. நீல நிற மைய் தயாரிக்கப்படும் இன்டிகோ செடியிலிருந்து தரும எனும் சுந்த மொழிப் பெயர் வழங்கியதாகக் கூறப்படுகிறது. நுசன்தரா எனும் புத்தகத்தின் அடிப்படையில் மகரிஷி ராஜாதிராஜகுரு ஜெயசிங்கவர்மன் எனும் அரசரால், தருமநகரர் அரசுரிமை பொது ஆண்டின் முந்நூற்றி ஐம்பத்தி எட்டாம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

தருமணக்கார மூன்றாவது அரசரான பூர்ணவர்மன் (ஆ. கா. 395-434), நாற்பத்தி எட்டு சிற்றரசர்களைக் கொண்டிருந்ததாகவும், சுந்தபுரம் எனும் புதிய தலைநகரை அமைத்ததாகவும் பல்வேறு கல்வெட்டுகள் வழி அறியப்படுகிறது. பின்னர் வந்த லிங்க வர்மன் அரசருக்கு (628-650) ஆண்வாரிசு கிடையாதெனவும் அவரது இரண்டாவது இளவரசி ஷோப காஞ்சனாவை ஸ்ரீவிஜயத்தின் தபுங்க கயாங் ஜெயசேனர் மணமுடித்ததாகவும் கூறப்படுகிறது. சில வரலாற்றாய்வாளர்களின் படி அறுநூற்றி எண்பத்தாறாம் ஆண்டு வாக்கில் தருமணக்கார அரசாட்சி விஜயத்தால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

மத்திய சாவகத்தின் வடக்குக் கடல் பகுதியிலிருந்த கலிங்க அரசாட்சி, இந்திய மரபில் வந்த ஒரு அரசாக, ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்திருக்கிறது. இந்தோனேசியாவின் ஆரம்ப கால இந்து-பௌத்த அரசாட்சியாகக் குறிப்பிடப்படும் கலிங்க அரசு பற்றி யிங்ஷியின் குறிப்புகள் கிடைக்கின்றன. துக்மாஸ், சோசோமெர்டோ போன்ற கல்வெட்டுகள் மூலமாகவும் கலிங்கம் பற்றி அறியப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. பெகலாங்கன் (பெ - கலிங்கன்) பகுதியில் கலிங்க நாடு இருந்திருக்கலாமென கருதப்படுகிறது.

அறுநூற்றி ஏழுபத்தி நான்கில் கலிங்கத்தை ஆண்ட மகாராணி ஷிமா பற்றியும் திருட்டுக்கு எதிரான அவரது கடுமையான சட்டங்கள் குறித்தும் மரபாக புகழ்ந்து பேசப்பட்டு வருவதாகத் தெரிகிறது. கலிங்க நாட்டு மக்களின் நேர்மையைச் சோதனை செய்யும் விதமாக, வெளிநாட்டு மன்னனொருவர் தங்க மூட்டையொன்றை கலிங்கத்தில் போட்டு வைத்ததாகவும், மூன்று ஆண்டுகள் வரை அதை ஒருவரும் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை எனவும் கூறப்படுகிறது. அரசியின் மகன் தங்க மூட்டையை காலால் தொட்டதற்காக அரசியார் வழங்கிய கடுந்தண்டணையை அமைச்சர் தலையிட்டு தடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மகாராணியாரின் பேரனே மேடாங் அரசுரிமையைத் தோற்றுவித்த சஞ்சய பேரரசர் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தோனேசியத் தீவுகளுக்கு பொது ஆண்டின் இரண்டாம் மற்றும் நான்காம் நூற்றாண்டு காலப் பகுதியிலேயே சமயங்கள் பரப்பப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. தொன்மையான பதிவுகள் கிடைக்கும் கிழக்கு கலிமந்தான் பகுதியிலிருந்த இந்திய அரசாட்சியான குத்தாய் அரசுரிமை, இந்தோனேசியாவின் பழமையான அரசுரிமையாகக் கருதப்படுகிறது. குத்தாய், தருமணக்காரர் மற்றும் கலிங்கம்

போன்றவையே தீவின் பண்டைக்கால அரசுகள் என்பது குறிப்பிடத்தக்கது. மகாகம் ஆற்று குடய் கல் தூண்களின் படி, மனிதர்களின் கடவுள் எனும் பொருள் கொண்ட குடுங்கா அவரது மகன் அஸ்வவர்மன் மற்றும் பேரன் மூலவர்மன் போன்றோர் அறியப்பட்டிருக்கின்றனர். குடுங்கா நரேந்திரன் எனவும், மூலவர்மன் இராஜேந்திரன் எனவும் சமஷ்கிருத சொற்களால் குறிப்பிடப்பட்டிருகின்றனர்.

தென்கிழக்கு ஆசியாவின் வலிமை வாய்ந்த கடலரசாக விளங்கிய ஸ்ரீ விஜயப் பேரரசில் பல புகழ்பெற்ற பேரரசர்கள் அரசாண்டதாக அறியப்பட்டுள்ளது. இந்திரவர்மன் (702), ருத்ரவிக்ரமன் (728), தர்மசேது எனும் விஷ்ணு (775), தரணிந்திரன்(775), சமரக்வீரன் (782), சமரதுங்கன் (792), பால புத்ரதேவன் (835), ஸ்ரீ சூளாமணிவர்மதேவன் (988), ஸ்ரீமாறவிஜயதுங்கவர்மன் (1008), சங்கர விஜயதுங்கவர்மன் (1025), முதலாம் குலோத்துங்க சோழன் (1078), இரண்டாம் இராஜராஜ சோழன் (1156), ஸ்ரீமத்திரிபுவனராஜ மௌலி வர்மதேவன் (1286) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாக கண்டறியப்பட்டுள்ளனர்.

விஜயத்தின் சங்கரம விஜயதுங்கவர்மன், இராஜேந்திர சோழனால் வெற்றி கொள்ளப்பட்டு விஜயம் சோழ நாட்டின் ஒரு பகுதியாக ஆளப்பட்டிருக்கிறது. ஸ்ரீ மாற விஜயதுங்க வர்மர் நாகப்பட்டினத்தில் புத்த விகாரை நிறுவியவராக அறியப்படுகிறார். சோழர்களின் ஆளுமை ஸ்ரீவிஜய வரலாற்றில் முக்கியமானதாக குறிப்பிடப்படுகிறது. சோழர்களால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புகளே விஜயத்தின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாக சுட்டிக்காட்டப்படுகிறது. தமிழ் வணிகர்களால் கட்டுப்படுத்தப்பட்ட சோழர் கால இந்தோனேசிய கடற்பகுதி, விஜயத்தின் ஆளுமையின் கீழ் இருந்தது போல் கட்டுக்கோப்பாக இல்லை எனக் குறிப்பிடப்படுகிறது. பிறகாலத்திய மலாய் வருடாந்திரக் குறிப்புகள் போன்றவை கூட சோழர்களின் பெருமை குறித்து பேசுவதாகக் கூறப்படுகிறது. மலாயாவில் சோழன், சூளன் எனும் பெயர்கள் தற்போதும் கூட அரசகுடும்பங்களில் சூட்டப்படுவதே சோழர்களின் தாக்கத்திற்கு சிறந்த சான்றாகக் கொள்ளப்படுகிறது.

பண்டைய ஸ்ரீவிஜயத்தின் ஆட்சி, இந்தோனேசியாவின் பொற்காலமாக இருபதாம் நூற்றாண்டு காலத்தில் கட்டமைக்கப்பட்டு இந்தோனேசிய மக்களின் மன எழுச்சிக்கு வித்திட்டதாக அறிஞர்களால் கட்டிக்காட்டப்படுகிறது. இந்தோனேசியா என்றில்லாமல் மலேயா, தெற்கு தாய்லாந்து போன்ற பகுதிகளிலும் விஜயத்தின் செல்வாக்கு அதிகளவில் இருந்திருக்கிது. பல சிறப்புகளைப் பெற்றிருந்த

விஜயத்தின் ஆட்சிகாலத்தில் கலைகள், மதங்கள் வளர்ச்சி பெற்றதோடு, மலாய் மொழியும் மிகப் பரந்த அளவில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. கடல் வணிகத்தினால் மலாய் மொழி இந்தோனேசியா, புருணே, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற தற்காலத்திய பகுதிகள் முழுவதுமே புழக்கத்திலிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தோனேசியா, மலேசியா, புருணேயில் ஆட்சிமொழியாக உள்ள மலாய், சிங்கப்பூரிலும் நான்கு ஆட்சி மொழிகளில் ஒன்றாக உள்ளது. பகாசா கெபாங்சான், பகாசா நேசனல், பகாசா மலாயு, பகாசா மலேசியா, பகாசா இந்தோனேசியா என பல பெயர்களில் அழைக்கப்படும் மலாய் மொழி, சுமத்ராவில் தோற்றம் பெற்றதாக வரலாற்று அறிஞர்களாலும், மேற்கு போர்னியோ பகுதியே மலாயின் பிறப்பிடமாக மொழி அறிஞர்களாலும் கூறப்படுகிறது.

ஆஸ்த்ரோனேசிய மொழிக் குடும்பத்திலிருந்து பிரிந்த தொல் மலேயோ பாலினேசிய மொழியிலிருந்தே மலாய்மொழி உருவாகியதாகக் குறிப்பிடப்படுகிறது. பொது ஆண்டிற்கு முற்பட்ட ஆயிரமாவது ஆண்டில் தோற்றம் பெற்ற தொல் மலேயோ பாலினேசிய மொழியிலிருந்து புருணே கடற்பகுதியை மையமாகக் கொண்டு மலாய மொழிகள் பேசப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

மலாய் மொழியின் வரலாற்றில், பழைய மலாய், மாறுபாட்டுக் காலம், செவ்வியல் காலம், பிந்தைய மலாய், நவீன மலாய் என ஐந்து கட்டங்கள் குறிப்பிடப்படுகின்றன. பழைய மலாய் மொழியில் இந்து, பௌத்த சமயங்களின் சமஷ்கிருத மொழியின் தாக்கம் அதிகமிருப்பதாகவும், செவ்வியல் மலாயில் அரபி, தமிழ், இந்தி போன்றவற்றின் கலப்பு பெருமளவில் காணப்படுவதாகவும் மொழியறிஞர்களால் சுட்டப்படுகிறது. சுமத்ரா தீவை மையங்கொண்டு வந்துள்ளதால், சுமத்ராவினின்றே மலாய் மொழி பிற பகுதிகளுக்குப் பரவியதாகவும் அதில் விஜயப் பேரரசின் பங்கு அளப்பரியது எனவும் குறிப்பிடப்படுகிறது.

ஸ்ரீவிஜயத்திற்குப் பின் ஜாம்பி மற்றும் மேற்கு சுமத்ராவின் பதன்ஹாரி ஆற்றை மையமாக கொண்டு தோன்றிய இந்து-புத்தமத தர்மஸ்ரேய அரசாட்சியின் காலத்தில் (1183-1347), மலாய் மொழி சிறப்பாக பேணப்பட்டிருக்கிறது. தர்மஸ்ரேயத்தின் அரசர் ஆதித்யவர்மன் ஆட்சிக்காலத்தில் (1345-1377) கெரின்சி மக்களுக்கு அளிக்கப்பட்ட பல்லவ கிரந்த தஞ்சோங் தனக் சட்டப் பனுவல், மலாய் மொழியில் எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து மலாய் சுல்தானத்தாலும் மலாய்

சிறப்பாகப் பேணப்பட்டிருக்கிறது. 1521-1522 ஆம் ஆண்டைச் சேர்ந்த இந்தோனேசிய தெர்னேட் சுல்தானத்திலிருந்து போர்ச்சுக்கல் மன்னருக்கு மலாய் மொழியில் எழுதப்பட்ட மிகப் பழமையான கடிதமொன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

தற்போதைய மலாய் மொழி, ரூமி எனும் இலத்தின் வரிவடிவத்திலும் ஜாவி எனும் அரபு வரிவடிவத்திலும் எழுதப்படுகிறது. ரூமி வடிவம் இந்தோனேசிய, மலேசிய, சிங்கப்பூரின் அதிகாரப்பூர்வ வரிவடிவமாக விளங்குகிறது. ஜாவி வரிவடிவத்தை பரவலாக்குவற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன. அரபிக் வரிவடிவம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு வரை, பல்லவ மற்றும் காவி எழுத்துமுறைகளே பயன்பாட்டில் இருந்திருக்கின்றன. தற்போதும் கம்போடியா மற்றும் வியட்நாமின் சம்பா பகுதியில் பல்லவ காவி வரிவடிவங்களே மலாய் மொழிக்குப் புழக்கத்திலுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தென் சுமத்ராவில் ஆடப்படும் சென்டிங் ஸ்ரீவிஜய நடனமும், தாய்லாந்தின் செவிசா நடனமும் விஜயத்தின் புகழுக்கு பெருமை சேர்க்கின்றன எனில் மிகையாகாது.

விஜயமும், சைலேந்திரமும் தென்கிழக்குப் பகுதியில் பல புகழ்பெற்ற கட்டிடங்களை சான்றாக விட்டுச் சென்றுள்ளன. அரசர் எனும் சமஷ்கிருதப் பொருள் கொண்ட சைலேந்திர அரசுரிமை (650-1025), விஜய அரசரிமையோடு பிணைப்பைக் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இரு பேரரசுகளுக்கும் இடையே மண உறவுகளால் இணக்கமான சூழல் நிலவியிருக்கிறது.

பதாங் பகுதியில் சோசோமெடோ கல்வெட்டு (725), கலசன் கல்வெட்டு (778), கெலுராக் கல்வெட்டு(782), கரந்தெங்கா கல்வெட்டு (824) போன்ற இந்தோனேசியக் கல்வெட்டுகளும், மலயாவின் லிகர் கல்வெட்டு (775) மற்றும் இந்தியாவின் நாளந்தா கல்வெட்டு (860) போன்றவையும் ஷைலேந்திர அரசாட்சி குறித்து சான்றுகள் அளிக்கின்றன.

சாவகத்தின் செழிப்பான கெது சமவெளியில் உண்டான கடலாதிக்க செலந்திரப் பேரரசு ஜாவாவிலும் பின்னர் சுமத்ரா பகுதியிலும் ஆட்சி புரிந்ததாக குறிப்பிடப்படுகிறது. பௌத்த சைலேந்திரத்திற்கும் இந்து சஞ்சயத்திற்கும் ஒன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலங்களில் பிணக்குகள் உண்டாகி சைலேந்திரத்தின்

பாலபுத்திர அரசர், சுமத்ராவின் விஜயப் பகுதிக்கு இடம் பெயர்ந்திருக்கிறார். பேரரசர் இராஜேந்திரரால் சைலேந்திர அரசுரிமை முடிவுக்கு வந்திருக்கிறது. வேளாண்மையை மிகச் சிறப்பாகப் பேணிய சைலேந்திர அரசு, வணிகத்திலும் கலைகளை வளர்ப்பதிலும் புகழ்பெற்றிருந்ததாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் பழமைக்கும் பெருமைக்கும் சான்றாகத் திகழ்ந்துவரும் போரோபுதூர் பௌத்த நினைவுச் சின்னம் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றதாகப் புகழப்படுகிறது. மத்திய சாவகத்தில் எழுநூற்றி அறுபதாம் ஆண்டில் தொடங்கப்பட்டு எண்நூற்றி இருபத்தைந்தாம் ஆண்டில் முடிக்கப்பட்ட போரோபுதூர் விகாரம் சைலேந்திரப் பேரரசின் ஆகச் சிறந்த சாதனையாகப் போற்றப்படுகிறது.

மகாயாணப் பௌத்தர்களின் புனிதத் தலமாகக் கருதப்படும் போரோபுதூர், சுமார் இரண்டு லட்சம் கற்களைப் பயன்படுத்தி பத்து அடுக்குகளில் கூம்பு வடிவமாகக் கட்டப்பட்டிருக்கிறது. சுவர்களில் புத்தபிரானின் வாழ்க்கை நிகழ்வுகள் மிக அழகுற வடிக்கப்பட்டுள்ளன. மூன்று தளங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள கோவில் காமதாது, ரூபதாது மற்றும் அரூபதாது எனும் பௌத்த அண்டக் கோட்பாடு நிலைகளைக் குறிப்பிடுவதாகக் கூறப்படுகிறது.

போரோபுதூர் எனும் பெயருக்கு பல்வேறு பொருள்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. சாவக மொழியில் பெயரா பெகுதூர் என்பதே போராபுதூர் என மருவியதாகவும், சமஷ்கிருதத்தின் விகார புத்தர் ஊர் என்பதே போரோபுதூர் ஆனாதாகவும், புத்தரின் ஊர் என்பதே போராபுதூரானதாகவும் பலவாறு கூறப்படுகிறது. இந்தோனேசியாவின் பண்டைய கோவில்கள் சாண்டி அதாவது பழங்கால கல் நினைவுச் சின்னங்கள் எனும் பெயரில் அழைக்கப்படுகின்றன. சாவகத்தின் வரலாறு எனும் புத்தகத்தை எழுதிய சாவகத்தின் புகழ்பெற்ற பிரித்தானிய ஆளுநர் சர் தாமஸ் ராப்.ஃபில் (1781-1826) அவர்களே, போரோபுதூர் எனும் பெயரை முதன் முதலாகப் பயன்படுத்தியவராகக் குறிப்பிடப்படுகிறார். போரோபுதூர், பரம்பனான் போன்ற பல புகழ்பெற்ற கோவில்களை மீட்டுருவாக்கம் செய்ததில் ராப்பில்ஸ் அவர்களின் பங்களிப்பு மிகப் பெரியது எனப் புகழப்படுகிறது. சிங்கப்பூர் எனும் நவீன நகரைக் கட்டமைத்த சர் தாமஸ் ஸ்டாம் ஃபோர்டு பிங்லே ரா.ஃப்பில், சாவகம் மற்றும் மலாய் பகுதிகளில் கொடிகட்டிப் பறந்த சேவல் சண்டைகளையும் பெருமளவில் கட்டுப்படுத்தியவராகவும் அறியப்படுகிறார். அடிமை முறையை தடை செய்த ராப்.ஃபில் தாவர, விலங்கியலிலும் பேரார்வம்

கொண்டிருந்திருக்கிறார். லண்டன் விலங்கியல் சங்கம் மற்றும் லண்டன் விலங்குகாட்சியகம் போன்றவற்றை நிறுவிய ரா.்.பில், ஆயிரத்து எண்ணூற்றி இருபத்தி ஆறில் லண்டன் விலங்கியல் சங்கத்தின் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். பரம்பனானுக்கு கோலீன் மெக்கன்சியும், போரோபுதூருக்கு ஹெச்.சி.கோர்னிலியசும் பெரும்பங்காற்றியதாகவும் புகழப் படுகின்றனர்.

இந்தோனேசியாவில் முன்னர் சுதந்திரமான சுல்தான் பகுதியாகவும், விடுதலைப் போராட்டக் காலத்தில் தலைநகராகவும், பின்னர் தாமாக முன்வந்து இந்தோனேசியாவோடு இணைந்து சிறப்புப் பகுதியாகவும் தொடரும் யோக்யகர்த்தாவிலிருந்து நாற்பது கிலோ மீட்டர்கள் தொலைவில் அமைந்துள்ள போரோபுதூர், சுந்தோரோ - சம்பிங் மற்றும் மெர்பாபு - மெரபி எனும் இரட்டை எரிமலைப் பகுதியின் மேட்டு நிலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. கேட்டு போராபுதூர் அமைந்திருக்கும் கெடி பகுதியிலேயே, பவாண் மற்றும் மென்துத் என மேலும் இரு பௌத்த விகாரங்கள், நேர் கோட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

போராபுதூர் விகாரையில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட புத்தர் சிலைகள் வைக்கப்பட்டிருந்தனவாம். உச்சியில் அமைந்துள்ள குவிமாடமும் அரசர்களுக்குப் பின் கவனிப்பாரின்றி மெல்ல மெல்ல மண்ணுக்குள் புதைந்திருக்கிறது. சாவகத்தின் இசுலாம் ஆட்சிகாலத்தில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு எரிமலைச் சாம்பலிலும் காடுகளுக்குள்ளும் புதைந்து கிடந்த கோவில், பிரித்தானிய மற்றும் டச்சு ஆட்சியாளர்களாலும் ஆர்வலர்களாலும் சிறிது சிறிதாக மீட்டெடுக்கப் பட்டிருக்கிறது. அதற்குள் சுற்றுப் பகுதி மக்களால் பெருமளவிலான கற்கள் வேறு பயன்பாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டும், கொள்ளையர்கள் மற்றும் கலைப் பொருட்கள் சேகரிப்பாளர்களால் கலைநயமிக்க சிலைகள் கடத்தப்பட்டும் பெரியளவிலான இழப்புகளை போரோபுதூர் சந்தித்திருக்கிறது.

இந்தோனேசிய அரசு 1965-ல் யுகனஸ்கோவின் உதவி கேட்டும், 1960 களில் அனைத்துலக நாடுகளின் பங்களிப்பை வேண்டியும் மேற்கொண்ட நல்லெண்ண நடவடிக்கைகளால் ஓரளவிற்கு மறுகட்டமைப்பு செய்யப்பட்ட போராபுதூர், 1970 முதல் 1982 வரை யுனெஸ்கோ மேற்கொண்ட அரியதொரு முழுமையான மறுகட்டமைப்பினால் பழந்தன்மை மாறாத புதுப்பொலிவுமிக்க போரோபுதூராக மீட்டுருவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீவிஜய மற்றும் சைலேந்திர கடல் பேரரசுகள் பயன்படுத்திய எட்டாம் நூற்றாண்டு மரக்கலங்களின் மாதிரிகள், தாரா தேவி, சுரசுந்தரி, அப்சரசுகள், கந்தர்வர்கள், மாயாதேவியின் ரதம், சாக்கியமுனியின் புறப்பாடு போன்ற பல்வேறு எழில்மிகு தோற்றங்கள் கொண்ட போரோபுதூர், இந்தோனேசியர்களின் பெருமைக்கு சான்றாக விளங்கியிருக்கிறது.

சைலேந்திரருக்குப் போட்டியாக சைவ சமயத்தவராகக் குறிப்பிடப்படும் சஞ்சயர்களால் கட்டப்பட்ட மிகப் பெரிய கோவிலாக பரம்பனான் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. மத்தாரம் அரச மரபின் சஞ்சய மன்னர் ராகை பிகடனால் எண்ணூற்றி ஐம்பதுகளில் தொடங்கப்பட்ட கோவில் கட்டுமானம், மன்னர் லோகபாலர் மற்றும் மன்னர் பாலிதுங் மகா சம்பு போன்றோரால் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இருநூற்றி நாற்பது பரிவாரக் கோவில்களுடன் நூற்றி ஐம்பத்து நான்கு உயரமுள்ள மைய கோபுரத்துடன் எழில்மிக்க கோவிலாக கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

பிரம்பானன், சண்டி பிரம்பானன், சண்டிராரா ஜொங்ராங் எனப் பல பெயர்களில் அழைக்கபடும் கோவில் சிவபெருமானுக்காக கட்டப்பட்டதால் முதலில் சிவக்கிரகம் என அழைக்கப்பட்டதாக ஜோங்ராங் கல்வெட்டு (856) குறிப்பிடுகிறது. பின்னர் சிவன் கோவிலின் இருபுறமும் திருமால் பிரமன் கோவில்கள் எழுப்பப்பட்டு, மும்மூர்த்திகள் கோவிலாக புகழ்பெற்று விளங்குகிறது பரம்பானன் திருக்கோவில், மும்மூர்த்திகளின் வாகனங்களாக நந்தி, கருடன் மற்றும் அன்னம் போன்றவைகளுக்கும் பெருங்கோவில் வளாகத்திற்குள் தனிக் கோவில்கள் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பு.

பத்தாம் நூற்றாண்டில், மாத்தாரம் அரசு கிழங்கு சாவகத்திற்கு இடம்மாறியதைத் தொடர்ந்து பரம்பானான் கோவில் பொலிவிழக்கத் தொடங்கியிருக்கிறது. பதினாறாம் நூற்றாண்டில் நிகழ்ந்த பூமி அதிர்வால் கோவில் பெருத்த சேதமடைந்திருக்கிறது. காட்டுக்குள் சிதைந்து கிடந்த பெருங்கோவிலின் கற்களும், சிலைகளும் உள்ளூர்வாசிகளால் கட்டுமானப் பயன்பாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பதினெட்டாம் ஆண்டில் எஞ்சிய சிதைவுகளைப் பாதுகாத்து சீரமிக்கும் பணியை டச்சு அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தி மூன்றில் மைய

சிவனார் கோவில் முற்றாக மீளமைக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

கோவிலின் சுற்றுப்பகுதியில் இராமாயணம் மற்றும் பாகவத புராணத்தின் பல்வேறு கதைகள் மிக ஆழகுற வடிக்கப்பட்டுள்ளதாகவும், கின்னரர்கள் அப்சரசுகள், தேவதைகள் போன்றோரால் மும்மூர்த்தி கோவில்களின் சுவர்கள் அழகுபடுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

சிவனார் கோவிலுக்கு வடக்கே இடம்பெற்றுள்ள துர்க்கை அம்மன் கோவில் குறித்தும், பரம்பானான் கோவில் தொகுதிக்கு அருகே அமைந்துள்ள செவு எனும் ஆயிரம் கோவில் தொகுதி குறித்தும், சாவக மக்களிடையே அழகியதொரு கதையாடல் வழக்கத்திலுள்ளதாகக் கூறப்படுகிறது. ராரா ஜோங்ரங் நாட்டுப்புறக் கதையில், இளவரசர் பாண்டுங் போண்டோவுசோவுக்கு போகோ மன்னரின் அழகிய இளவரசியான ராரா ஜோங்ரங் மேல் காதல் உண்டாகிறது. போகோ மன்னரை முடித்து, அவரது அரசையாளும் பாண்டுங்கை இளவரசிக்குப் பிடிக்கவில்லை. காதலை மறுக்கும் இளவரசி பின்னர் பாண்டுங்கின் கெஞ்சல் மற்றும் மிரட்டல்களால் ஒரு நிபந்தனையோடு திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறார்.

ராரா இளவரசியின் நிபந்தனையின் படி, பாண்டுங் ஒரே இரவுக்குள் ஆயிரம் கோவில்களை கட்டிமுடிக்க வேண்டும். ராரா மீதுள்ள தீராக் காதலால் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளும் பாண்டுங், தீவிரமான தியானம் மேற்கொண்டு பூமியிலிருந்த பல்வேறு பூதங்களின் துணையுடன் கோவில்களைக் கட்டத்தொடங்குகிறார். அதி அற்புத ஆற்றல் கொண்ட பூதங்களின் உதவியால் ஒரே இரவுக்குள் தொள்ளாயிரத்து தொன்னூற்றி ஒன்பது கோவில்கள் கட்டி முடிக்கப்பட்டு ஆயிரமாவது கோவிலின் வேலைகள் தொடங்குகின்றன.

ஆயிரமாவது கோவிலும் தொடங்கப்பட்டுவிட்டதை அறிந்த ராரா, அரண்மனைப் பணியாளர்களை எழுப்பி கிராமத்திலிருந்த பெண்களை விடியலின் வேலைகளைத் துவக்குமாறு ஆணையிட வைக்கிறார். பெண்கள் நெல் குத்துகிறார்கள். கட்டுமானம் நடந்து கொண்டிருக்கும் கோவிலின் கிழக்கே பெரியளவில் நெருப்பு முட்டப்பட்டு சூரியன் எழுதற்கான நேரம் வந்துவிட்டதைப் போன்ற தோற்றம் உண்டாக்கப்படுகிறது. வெளிச்சத்தையும், பெண்களின் காலைநேரப் பரபரப்பையும், சேவல் கூவுவதையும் கண்ட பூதங்கள்,

விடிந்துவிட்டதாக எண்ணி ஆயிரமாவது கோவிலை முடிக்காமலேயே பூமிக்குள் மறைந்துவிடுகின்றன. இளவரசின் தந்திரங்களை அறியும் பாண்டுங் அவரை கல்லாகப் போகுமாறு சபிக்கிறார். கல்லான இளவரசி ஆயிரம் தெய்வங்களிலேயே மிக்க அழகுகொண்ட துர்காவாக, ராரா ஜோங்ரங்காக, அழகிய கன்னியாக பரம்பனான் கோவிலினுள் இருக்கிறார்.

இந்தோனேசியாவின் ஜோககர்த்தா பகுதிகளில் ஏராளமான இந்து மற்றும் பௌத்த சமயக் கோவில்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. பாலித்தீவிலும் பல கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பாலித்தீவில் அசிந்திய வழிபாடு முக்கியத்துவம் நிறைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பண்டைக்காலம் முதலே பௌத்த மரபுகள் வேர்கொண்டிருந்த இந்தோனேசியாவில் இசுலாம் பரவி, பின் மதப் பிணக்குகள் உண்டானதாகக் கூறப்படுகிறது. இசுலாம் ஓரிறைக் கோட்பாட்டை முன்னிறுத்துவதால் மற்ற மதங்களும் ஓரிறைக் கோட்பாட்டை பின்பற்றுமாறு வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. சுதந்திரம் பெற்ற இந்தோனேசியக் குடியரசு பஞ்சசீலம் எனும் ஐந்து மதங்களை அதாவது இசுலாம், பௌத்தம், கத்தோலிக்கம், சீர்திருத்தச் சபை மற்றும் இந்து மதங்களை அங்கீகரித்திருக்கிறது. கன்பூசியமும் அரசு அங்கீகாரம் பெற்றதாகவே குறிப்புகள் கிடைக்கின்றன. இருப்பினும் இந்து மதத்தின் ஏராளமான கடவுள்களை ஏற்றுக் கொள்ளாமையால் இந்து மரபின் அனைத்துக் கடவுளர்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் விதமாக பிரம்மம் எனும் பொருள் கொண்டதான அசிந்தியன் எனும் ஒற்றை இந்து இறைக்கோட்பாடு முன்மொழியப்பட்டு அது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அசிந்திய கொள்கையை முன்னிறுத்தியவராக புகழ்பெற்ற இந்தோனேசிய சைவ நெறியாளர் துவியேந்திரர் போற்றப்படுகிறார்.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்து மறு மலர்சியாளரான டாங்யாங் நிரார்த்தா அல்லது டாங்யாங் துவியேந்திரா அவர்கள் பேடாந்த சக்தி வவு ரசு மற்றும் துவான் சுமேரு, பாலித்தீவின் பண்டிட் போன்ற பெயர்களாலும் குறிப்பிடப்படுகிறார். பாலியில் சைவ பக்தி இயக்கத்தை முன்னெடுத்த அருளாளரும் கவிஞருமான துவான் சுமேரு வரலாற்றை, துவியேந்திரதத்வ மற்றும் பபப்பிராமண போன்ற பாலி நாட்டு நூல்கள் விவரிப்பதாகக் கூறப்படுகிறது. பாலி சைவ பூசாரிகளின் முன்னோடியான துவியேந்திரர் வெற்றி அரியணை ஒன்றை

தூணொன்றின் உச்சியில் அமைத்து, அதை பரம்பெருளின் வடிவமாக வழிபடும் பம்மாசன வழக்கத்தை ஏற்படுத்தியவராகவும் அறியப்படுகிறார்.

அசிந்தியன், அதிந்தியன் எனும் சமஷ்கிருதச் சொல்லுக்கு நினைவுக்கு எட்டாதது, சொற்பதம் கடந்த பொருள் எனவும், பாலி மொழியில் ஐக்கியம் எனவும் பொருள் கொள்ளப்படுகிறது. யாவும் ஒன்றான கடவுள் எனும் பொருள் கொண்ட சங்யாங் விதி வாசா எனும் சொல்லாடலை இந்தோனேசிய சீர்த்திருத்த சபையினர் பயன்படுத்தியதாகவும் அச்சொல்லாடலையே அசிந்தியன் எனும் பெயரில் துபயேந்திரர் அறிமுகம் செய்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

முன்னர் ஆகம இந்து நெறியாக இருந்த அசிந்தியம் கோட்பாட்டின் படி, அசிந்தியரின் பல்வேறு தோற்றங்களே இந்து சமயத்தின் அனைத்துக் கடவுளர்களும் ஆவர். அசிந்தியரிடமிருந்தே உலகங்கள் யாவையும் உருவாயின. அசிந்தியனை சூரியனோடு தொடர்புபடுத்துவதும் உண்டு. அசிந்தியரின் அம்மணம், மானிட உணர்வுகளைக் கடந்த நிலையிலுள்ளவர் அவர் என்பதைக் காட்டுவதாகக் கூறப்படுகிறது. இந்தோனேசியாவில் மிக வேகமாகப் பரவி கொண்டிருந்த இசுலாமுக்கெதிராகப் போராடிய டாங்யாங் நிரார்த்தர், இந்து சமயத்திலும் ஒரு கடவுள் கொள்கையைப் புகுத்தி சிவனாரையே அசிந்திய வழிபாடாக உருமாற்றியதாகக் குறிப்பிடப்படுகிறார்.

பொது ஆண்டின் இரண்டாம் நூற்றாண்டுக் காலத்தில், பாண்டிய நாட்டினின்று கப்பல்கள் சாவகம் சுமத்திரா முதலிய நாடுகளுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள துறைமுகத்தின் வழியாகச் சென்றதாக மணிமேகலை முதலிய நூல்களில் சான்றுகள் கிடைக்கின்றன. சாவகத்தின் அரச பரம்பரையினர் தமிழர்களோடு நெருங்கிய உறவுடையவர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். மீனினை குலச் சின்னமாகக் கொண்டிருந்த சைலேந்திர அரசர்கள், மலையத்துவச பாண்டியன் வழிவந்தவராக இருக்கலாமென அறிஞர்களால் கூறப்படுகிறது. சுந்தரபாண்டியன் எனும் பட்டப்பெயர் சூட்டிக்கொண்ட சாவக மன்னர் பற்றியும் குறிப்புகள் கிடைக்கின்றன.

இந்தோனேசிய செலிபிஸ் தீவிலும், தமிழரது பண்பாடுக் கூறுகள் பரவலாகக் காணப்படுவதாக தொல் பொருள் சான்றுகள் தெரிவிக்கின்றன. பல்லவர் காலச் சின்னங்கள் மட்டுமின்றி, அவர்களுக்கு நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே தமிழர்

குடியேற்றங்களும் வணிகத் தொடர்புகளும் செலிபிஸ் தீவில் உண்டாகியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

தமிழ்நாட்டை போலவே சுடுமண்ணால் கோவில் கட்டப்பெற்றும், சுண்ணத்தல் மேற்பூச்சு பூசப்பட்டும் வந்த கோவில் கட்டும் இந்தோனேசிய மரபு, பின்னர் கல்லால் கட்டப்பட்ட போது, தமிழகத்திலிருந்து கல்தச்சர்களும், தபதிகளும், குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். தென்னிந்தியக் கோவில்களைப் போன்றே பேரழகு வாய்ந்த சிற்பங்கள் இந்தோனேசியக் கோவில்களிலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்தோனேசிய பாவைக் கூத்தும், இராமாயண, மகாபாரத நாட்டியங்களும், இசையும் தமிழகத்தோடு கொண்டிருந்த உறவின் அடையாளங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஜாவாவின் புகழ்பெற்றவர்களாக அறியப்படுபவர்கள் அர்ஜுனனும் ஸ்ரீகண்டியும். மகாபாரத சிகண்டி, ஸ்ரீகண்டியாக, அர்ஜுனரின் மனைவியாக மாற்றமடைந்திருக்கிறார். கவி எனும் பண்டைய மொழியில் எழுதப்பட்டுள்ள ஜாவானிய மகாபாரதம், பல்வேறு கிளைக் கதைகளுடன் இந்தோனேசிய மரபிற்கேற்றவாறு சற்று மாறுபட்டு அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. வயாங் குலித் எனும் தோல் பாவைக் கூத்தில், கண்டியின் கதை அழகாக எடுத்தாளப்படுவதாக இருக்கிறது. கண்டியின் பழைய பிறவியாகக் கருதப்படும் அம்பை, சாவகப் பெண்களால் அதிகம் விரும்பப்படுவதாகவும் கூறப்படுகிறது.

பன்னெடுங்காலமாகத் தமிழ்நாட்டோடு தொடர்பு கொண்டிருந்த இந்தோனேசிய மொழியில், தமிழ் சொற்கள் பலவும் இடம் பெற்றுள்ளன. அப்பம், இடம், கஞ்சி, கட்டில், மணி, மாமா, மாமி, முகம், முத்து, வட்டில் போன்ற தனிச் தமிழ் சொற்கள் பண்டைய சாவகக் கவிதைகளில் ஆளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கப்பல், குதிரை, கூடை, தாலி, பிட்டு, பெட்டி, கலம், கடலை, கண்டு முதலிய சொற்களும் புழங்கி வருவதாகத் தெரிய வருகிறது.

அதிகளவிலான மக்களால் பேசப்படும் மொழிகளுள் ஒன்றான இந்தோனேசிய மொழி, மலாய் மொழியைப் பெருமளவில் ஒத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தோனேசிய மொழியில் சாவக மொழியின் செல்வாக்கு அதிகமிருப்பதோடு அரபு, தமிழ், சமஷ்கிருதம், சிங்களம், டச்சு, சீனம், ஆங்கிலம் உள்ளிட்டவற்றின் தாக்கமும் அதிகமிருக்கிறது. இந்தோனேசிய மொழியில் பால், எண், இடம், காலம்,

ஒருமை, பன்மை போன்ற வேறுபாடுகள் காணப்படுவதில்லை எனவும் கூறிப்படுகிறது. அனைத்துப் பள்ளிகளிலும் இந்தோனேசியம் கற்பிக்கப்படுகிறது. வணிகம், அரசியல், ஊடகம் என பயன்படுதப்படும் மொழியும் இந்தோனேசியமே.

இந்தோனேசிய, மலேசிய மொழிகள், ஒரே மொழியின் இருவேறு தரப்படுத்தல்கள் என்றே கருதப்படுகின்றன. இந்தோனேசியாவில் அதிகம் பயன்பாட்டிலுள்ள மொழியாக சாவக மொழியே குறிப்பிடப்படுகிறது. இந்தோனேசியாவில் காணப்படும் பல நூற்றுக்கணக்கான மொழிகளையும் பல்லாயிரக்கணக்கான பண்பாடுகளையும் இணைப்பதாக இந்தோனேசிய மொழி புகழப்படுகிறது. தீவுகளின் பல்வேறு மொழிக்காரர்களும் அவரவர் சொற்களைப் புகுத்திப் பேசுவதன் காரணமாக சாவம், சுண்டா, மதுரா, பாலி, பத்தா, படாங், அச்சே, கொரன்தானோ, மகசார், பஞ்சார் போன்ற பல்வேறு மொழிகளின் சொற்களும் இந்தோனேசிய மொழியை வளமாக்குகின்றன.

சாவக இலக்கியத்தில் பெரும்பங்கு வகித்த கேடிரி அரசுரிமைக் காலத்தில் (1045-1221), வாசனைப் திரவியங்கள் ஏற்றுமதியும் நீர்ப்பாசன வசதிகளும் பெருமளவில் நடைபெற்றிருக்கின்றன. பாஞ்ஞாலு எனவும் அழைக்கப்பட்ட பண்டைய சாவக இந்து அரசான கேதிரி அரசாட்சியின் முதல் மன்னராக ஸ்ரீ ஜெயவர்ஷ திக்ஜெய ஹஸ்தப்ரபு அறியப்பட்டிருக்கிறார். இரண்டாம் மன்னரான காமேசுவரன் காலத்தில் எழுதப்பட்ட சுமராதகனா அல்லது சுமராதனா எனும் சாவக நூல், சிவனாரோடு தொடர்புடைய காமன் - காமரதியாக, காமேசுரனையும் அவரது தேவி ஸ்ரீகிரணாவையும் உருவகப்படுத்தி இயற்றப்பட்டுள்ளது. காமதகனத்தைக் குறிக்கும் விதத்திலேயே தலைநகருக்கு தகனா எனும் பெயர் சூட்டியதாகக் கூறப்படுகிறது. காமேசுரன் மற்றும் கிரணா அரச இணையின் பேரழகு, அழகுடன் வருணிக்கப்பட்டிருப்பதாகவும், அக்கதையே பின்னர் பஞ்சி வட்டம் எனும் நாட்டார் கதையாக சயாம் உட்பட தென்கிழக்காசியா முழுவதும் புகழ்பெற்று விளங்குவதாகவும் கூறப்படுகிறது. கேடிரி அரசுரிமையைத் தொடர்புபடுத்தி லுப்தக, விருத்தஞ்சய, கிருஷ்ணாயன, சுமணசந்தக போன்ற பல புகழ்பெற்ற நூல்கள் உண்டாகியிருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தூங்கும் சிங்கம், சிங்கத்தையொத்த நகர் எனும் பொருளில் அமைந்த சாவக சைவ-பௌத்த சிங்கசாரி அரசாட்சியை (1222-1292) உருவாக்கியவராக கென் அரோக் (1182-1127) குறிப்பிடப்படுகிறார். கேதிரியின் மரபில் பிறந்த கென் அரோக்,

துமாபெல்லை ஆண்ட துங்குல் அமேதுங்கன் எனும் மன்னரை முடித்து, துமாபெல்லில் சிங்கசாரி எனும் பெயரில் அரசுரிமையை நிருவியதாகக் கூறப்படுகிறது. பின் துங்குல் அரச மரபினர்க்கும், கென் அரோக் மரபினருக்கும் தீராத பகை உண்டாகி பழி வாங்கும் படலங்கள் நடந்திருக்கின்றன. பரராத்தன் எனும் நூலிலும், கிழக்கு சாவக நாட்டுப் புறக்கதைகளிலும் கென் அரோகின் வாழ்க்கை சிறப்பாக பேசப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொது ஆண்டின் 1275 இல் சிங்கசாரியன் ஐந்தாவது மன்னரான கர்த்த நகரன் பாலியையும், ஸ்ரீவிஜயத்தையும் அவரது ஆளுகைக்கின் கீழ் கொண்டு வந்திருக்கிறார். மங்கோரிய குப்ளகானுக்கு திறை செலுத்த மறுத்து, அவரது தூதரையும் இழிவுபடுத்தி அனுப்பியதாகக் கூறப்படுகிறது. கேதிரியின் கொடிவழியில் வந்த செயகாதவாங்கன் எனும் இளவரசன், ஆரிய வீரராசன் எனும் மதுராத் தீவு திக்கதிபனுடன் இணைந்து, சிங்கசாரியின் மீது போர் தொடுத்திருக்கிறார். கர்த்தநகர மன்னரை முடித்த செயகாதவாங்கன், அவரின் மறுமகனான நராரிய சங்கிராம விசயனை மன்னித்து அருச்சுன மலையருகே தன்னாட்சியுள்ள குறுநில மன்னராக ஆட்சிபுரிய அனுமதித்திருக்கிறார்.

இழிவுபடுத்தப்பட்ட தூதனால் வெகுண்டெழுந்த குப்ளேகானின் கடற்படை சாவகத்தை முற்றுகையிட்டிருக்கிறது. மங்கோலியப் படையோடு சேர்ந்து கொண்ட சங்கிராம விசயன், அவர்களோடு இணைந்து கேதிரி அரசின் தகனாவைச் சூறையாடி காதவாங்கனின் முடிவுக்கும் காரணமாக இருந்திருக்கிறார். பின் மங்கோலியப் படைக்கெதிராகத் திருப்பிய சங்கிராம விசயன் அவர்களை விரட்டிவிட்டு, கர்த்தராயச செயவர்த்தனன் எனும் பெயருடன் ஆயிரத்து இருநூற்றி தொன்னூற்றி மூன்றாமாண்டில் மயாபாகித்தில் முடி நாட்டிக் கொண்டிருக்கிறார்.

தென் கிழக்காசியா மற்றும் இந்தோனேசியாவில் உச்சம் பெற்றிருந்தாகக் குறிப்பிடப்படும் மயாபாகித்து பேரரசு (1293-1527), தொன்னூற்றி ஆறு திறை நாடுகளுடன் சுமத்ராவிலிருந்து நியூகினி வரை பரவியிருந்ததாகக் கூறப்படுகிறது. இந்தோனேசியாவின் தற்காலத்திய எல்லைகளுக்கு மயாபாகித்து பேரரசின் பண்டைய ஆட்சி எல்லைகளும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது.

சிங்கசாரி அரசரான மகிச செண்பகனின் மகள் வழிப் பேரனாகக் குறிப்பிடப்படும் ராடன் விஜயன் நாராரியன் சங்கிராம விஜயன் (1294-1309)

உறுதியான மயாபாகித்து அரசை உருவாக்கி திறம்பட அரசாண்டதாகக் குறிப்பிடப்படுகிறார். அரசர் ராடன் விஜயனுக்கு கண்டி சிம்பிங் எனும் பள்ளிப்படைக் கோவில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் விஜய அரசரின் மகன் செயநகரன் எனும் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவதீசுவர விக்கிரமோத்துங்க தேவன் ஆட்சிக்கு வந்திருக்கிறார். கலகங்களைச் சந்தித்த அவரது ஆட்சியின் போது, பயங்கரம் எனும் மயாகித்து அரச காவலர் படையின் தளபதியாக இருந்த புகழ்பெற்ற கயாமடா (1329-1364), திறம்பட பேசப்பட்டிருக்கிறார். திட்டமிட்டு முடிக்கப்பட்ட செயநகரனுக்குப் பின் அவரது தங்கை திரிபுவன விஜயதுங்கதேவி (1328 -1350) அரியணை ஏறியிருக்கிறார்.

திரிபுவன விஜயதுங்க தேவி, திரிபுவனோத்துங்க தேவி, செயவிஷ்ணுவர்த்தினி மற்றும் டியா கிதர்யா எனும் பெயர்களைத் தாங்கிய மகாராணி திரிபுவனா, தீரத்துடன் போர்க்களங்களுக்கு படைநடத்திச் சென்றவராகவும் புகழப்படுகிறார். திரிபுவன பேரரசியின் மகாபதி எனும் முதன்மை அமைச்சராக இருந்த கயாமடா, புகழ்பெற்ற சூளுரையொன்றை மேற்கொண்டிருக்கிறார். பலபா சூளுரை எனக் குறிப்பிடப்படும் அதில், மலாய் தீவுகள், செராம், தஞ்சாங்கபுர, கரு, பகாங், டொம்பு, பாலி, தண்டா, பலம்பெங், துமாசிக் முதலான நுசாந்தரங்கள் அதாவது இந்தோனேசிய தூரதேச எல்லைகள் மயபாகித்தின் ஆளுகையின் கீழ் இருக்கும் வரை பழங்களையோ, சுவையூட்டிகளையோ உண்ணப்போவதில்லை எனும் சூளுரையை மேற்கொண்டிருக்கிறார். சூளுரைத்தவாறே பாலி, ஸ்ரீவிஜயம், மலாயு, துமாசிக் முதலான பகுதிகளை மயாபாகிதின் ஆளுமைக்கு கொண்டுவந்ததாகவும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளார். புகழ்மிக்க ஹயாம் புரூக்கின் ஆட்சிக் காலத்தில் மேலும் கடுமையாகப் போராடி தூர எல்லை நாடுகளையும் வெற்றி கொண்டதாகவும் புகழப்படுகிறார்.

திரிபுவன தேவிக்கும், சிங்கசாரி இளவரசன் கர்த்த வர்தனருக்கும், ஆயிரத்து முந்நூற்றி முற்பத்தி நான்காமாண்டில் ஹயாம் புரூக் (ஆட்சிக் காலம் 1350-1389) பிறந்த போது, கெலும் எரிமலை குமுற ஆரம்பித்ததாக சாவக நூல் நகரகிரேதாகமம் குறிப்பிடுகிறது. மேலும் சாவக மன்னனாக பதாரா குருநாதன் அதாவது சிவன் அவதரித்ததன் தெய்வீக முன்னறிவிப்பே எரிமலை வெடிப்பு எனவும் அந்நூல் பதிவிட்டிருக்கிறது. இராயசநகரன் மற்றும் மதாரா பிரபு என அழைக்கப்பட்ட

ஹயாம் புரூக் பிறந்த ஆண்டிலேயே கயாமடா சூளுரை மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

பதினாறு வயதில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பேரரசர் ஹயாம்புருக், கயா மடாவால் வழிநடத்தப்பட்டு நல்லாட்சி புரிந்தவராகப் புகழப்படுகிறார். அரசியல் காரணங்களுக்காக, சுண்டா நாட்டு இளவரசி டியா பிதாலோக சித்திரரேஸ்மியை பேரரசர் மணமுடிக்க விரும்பி இளவரசியை அழைத்துவரும் பொறுப்பு கயாமடாவிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. பேரரசியாக இல்லாமல் துணைவியாகவே இருக்கவேண்டுமென இளவரசியிடம் கயாமடா சொன்னதாகவும், ஹாயம் மீதிருந்த காதலால் இளவரசி ஒத்துக் கொண்டதாகவும், அதனை ஏற்க மறுத்த அரச குடும்பத்தார் புபாத் போர் எனும் பெயரில் முடிக்கப்பட்டதாகவும் வரலாற்றில் பதிவாகியிருக்கிறது. மனமுடைந்த இளவரசி முடிவைத் தேடிக்கொள்ள, பேரதிர்ச்சியுற்ற ஹயாபுருக் முதன்மை அமைச்சராக இருந்த கயாமடாவை பதிவி நீக்கியிருக்கிறார். எஞ்சிய வாழ்க்கையை சாவகத்திலிருந்த மடகாரிபுரம் எனும் தோட்டத்தில் கழித்த கயா மடாவின் முகமூடி பாலியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் எழுச்சியுற்ற இந்தோனேசிய தேசியவாத இயக்கத்தால் கயாமடா பெருமளவில் முன்னிலைப்படுத்தப்பட்டு இந்தோனேசிய ஒற்றுமை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நெதர்லாந்திலிருந்து இந்தோனேசியா விடுதலை பெறுவதற்கு கயாமடா அவர்களின் பெயர், பெரும் உந்து சக்தியாக இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பல ஆண்டுகளுக்குப் பின் கடுகா சோரி எனும் உறவுப் பெண்ணை மணந்த ஹயாம் புருக் பேரரசருக்கு, குஷாமாவர்த்தினி எனும் மகளும், துணைவி மூலம் வீரபூமி எனும் மகனும் பிறந்திருக்கிறார்கள். ஹயாம் புரூக் மறைவிற்குப் பின் குஷாவர்த்தினியின் கணவர் விக்கிரமவர்த்தனுக்கும் வீரபூமிக்கும் அரியணைச் சண்டை நடந்திருக்கிறது.

பேரரசர் ஹயாம் புரூக் ஆட்சிக் காலத்தில் தென்கிழக்காசியாவின் பெரும்பகுதியை கொண்டிருந்த மஜாபாகித் பேரரசு, இந்தோனேசியாவின் பொற்காலமாக புகழப்படுகிறது. பின்னர் வந்த சில மஜாபாகித் அரசர்களின் துணைவியர் வாரிசுகளால் பேரரசின் ஆட்சித் திறம் கீழ்நிலைக்குச்

சென்றிருக்கிறது. மயோபாகித்தின் வீழ்ச்சிக்குப் பின் எழுந்த எதமாகு இசுலாமிய சுல்தானம் (1475-1548), இந்தோனேசியாவின் குறிப்பிடத்தக்க சுல்தானமாக இருந்திருக்கிறது. மயபாகித்து காலத்திலேயே வணிக நோக்கோடு இசுலாமியர்கள் பெருமளவில் தீவுப்பகுதிகளுக்கு வருகை புரிந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

1292 ஆம் ஆண்டில் சீனாவிலிருந்து பாரசீகம் பயணமான மார்கோபோலோ, சுமத்ரா பற்றிய சில குறிப்புகளை எழுதியுள்ளதாகவும், (1405-1407) ஆம் ஆண்டிற்கு இடையே நிகழ்ந்த சீன செங்ஹேயின் குறிப்புகள் அடங்கிய யிங்யாய் செங்லான் எனும் சீன நூலும், 1318-1330 ஆம் கால கட்டத்தில் மயாபாகித்து வந்ததாகக் குறிப்பிடப்படும் இத்தாலிய பிரான்சிசுகன் பாதிரியான மத்தியுசியின் பயணக் குறிப்புகள் வழியும் மயாபகித்து பேரரசின் ஆட்சி முறைகளும் சிறப்புகளும் அறியப்பட்டிருக்கின்றன.

யிங்யாய் செங்லான் நூல், மன்-சே-போ-யி என மயாபகித்தைக் குறிப்பிடுகிறது. விக்கிரம வர்த்தன மன்னன் பற்றிக் குறிப்பிடும் செங்லான், மன்னன் யானை மற்றும் மாட்டு வண்டிகளில் பயணித்ததாகவும், பூணூல் அணிந்து பட்டாடை புனைந்து தங்க மலர்களால் அலங்கரித்த மகுடம் அணிந்து உலவியதாகவும் விவரிக்கிறது.

மயாகித்து மக்கள் முகங்களைப் புனிதமாகப் பேணியதாகவும், முகத்தை எவரேனும் வலுக்கட்டாயமாகத் தொட்டால், தொட்டவரை கத்தியால் குத்துமளவிற்குப் புனிதம் பேணும் வழக்கம் கொண்டிருந்ததாகவும் அறியப்படுகிறது. குத்தியவர் மூன்று நாட்கள் தலைமறைவாக வாழ்ந்தால் தண்டணையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் எனும் நடைமுறையும் இருந்திருக்கிறது. வளமான மொழியைக் கொண்டிருந்த மயாபாகித்து மக்கள் சோழி எழுத்தை அதாவது சோழர் எழுத்தைப் பயன்படுத்தியதாகவும், மென்மையாகவும், அழகாகவும் பேசுவதாகவும், தகவல்கள் பதிவு செய்திருக்கிறது யிங்யாய் நூல்.

இந்தோனேசியாவின் பழமையான முஸ்லிம் அரசுகளில் ஒன்றான தெர்னாத்தே சுல்தானகம், ஆயிரத்து இருநூற்றி ஐம்பத்தியேழு முதல் தற்போது வரை தொடர்ந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. கிழக்குத் தீவுகளின் பெரும்பகுதியையும் பிலிப்பைன்சின் தென்பகுதியையும் கொண்டிருந்த தெர்னாத்தே அரசு, அக்காலத்தில் அதிக அளவு கிராம்பு உற்பத்தி செய்யும் நாடாக

இருந்திருக்கிறது. சுல்தான் பாபுல்லாஹ் (1570-1583) சிறந்த ஆட்சி நடத்தியவராகப் புகழப்படுகிறார். இசுலாமியப் பரவலின் தொடக்க காலத்திலேயே முன்னர் காப்பி அரசாட்சியாக அழைக்கப்பட்ட தெர்ணாத்தே மரபினர், இசுலாத்திற்கு மாறியதாகக் குறிப்பிடப்படுகிறது.

சுமத்ராவின் வடகேயிருக்கும் அச்சே மாநிலத்தை மையமாகக் கொண்டிருந்த அச்சே சுல்தானகம் (1496-1903), பதினாறு மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் அப்பகுதியில் வலுவானதாக இருந்திருக்கிறது. மிளகு மற்றும் வெள்ளிய ஏற்றுமதி வணிகத்தில் டச்சுக்காரர்களோடு போட்டி போட்டதாக அச்சே குறிப்பிடப்படுகிறது. மக்காவின் தாழ்வாரமென அழைத்துக்கொண்ட அச்சே சுல்தானத்தில், புகழ்பெற்ற பல இசுலாம் அறிஞர்கள் இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

சாதிக்காய், கிராம்பு, வால்மிளகு, பாக்கு போன்ற நறுமணப் பெருட்களுக்காக 1522-ல் பிரான்சிஸ்கோ செராவோ என்பவர் தலைமையில் வந்த போர்த்துகீசிய வணிகர்கள் மூலம் ஐரோப்பா அறிமுகமாகியிருக்கிறது. தொடர்ந்து வந்த டச்சுக்காரர்களின் வி.ஒ.சி எனப்படும் வெரினிட்ஜ் ஓஸ்ட் இன்டிஸி கம்பெக்னி அதாவது டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி, இந்தோனேசியாவை குடியேற்ற நாடாக ஆக்கியிருக்கிறது. நெப்போலியப் போர்களைத் தொடர்ந்து பிரித்தானியர்களும், இரணடாம் உலகப் போரில் ஜப்பானியர்களும், இந்தோனேசியாவை பதம் பார்த்திருக்கின்றனர். கூடவே சுதந்திரப் போராட்டமும் முழுவீச்சல் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

நெதர்லாந்திடமிருந்து சுதந்திரம் பெற்றதில் சுகர்னோ (1901-1970) அவர்களின் பங்கு முக்கியமானதாகப் புகழப்படுகிறது. முகம்மது ஹட்டாவோடு (1902-1980) இணைந்து ஆகஸ்ட் பதினேழு ஆயிரத்துத் தொள்ளாயிரத்தி நாற்பத்தி ஐந்தில் சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பின் நாற்பத்தி ஒன்பதில் முழுமையான சுதந்திர நாடாக அறிந்தேற்பு பெற்றிருக்கிறது.

இந்தோனேசியர்களால் அன்புடன் சகோதரர், தோழர் எனும் பொருளில் பங்கர்னோ என அழைக்கபபடும் சுகர்னோ 1945 முதல் 1967 வரை குடியரசுத் தலைவராக இருந்து, இந்தோனேசியத் தீவுக் கூட்டங்களின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டவராகப் போற்றப்படுகிறார். துணை குடியரசுத் தலைவராகவும்

பிரதமராகவும் பதவிவகித்த முகம்மது கட்டாவின் பங்களிப்பும் அளப்பரியதாக பாராட்டப்படுகிறது.

இயற்கை வளங்கள் கொட்டிக்கிடக்கும் இந்தோனேசியக் குடியரசு, பழம்பெருமை கொண்ட இந்தோனேசிய மண், பண்பாடும் காலச்சாரமும் நிறைந்த மக்கள் என அனைத்துப் பெருமைகளும் நிறைந்ததது இந்தோனேசிய தீவுக் கூட்டம் எனில் மிகையாகாது.

மலேசியத் தீபகற்பத்தின் தென் முனையில் அமைந்துள்ள தீவுக்கூட்டம் சிங்கப்பூர் குடியரசு. சிங்கத்தின் ஊர் எனும் பொருளில் அழைக்கப்படும் சிங்கப்பூர் அறுபத்து மூன்று தீவுகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் முதன்மைத் தீவாக சிங்கப்பூர் தீவு இருக்கிறது. சுமார் எழுநூற்றி நான்கு சதுர கீலோமீட்டர் பரப்பளவு கொண்டு தென்கிழக்காசியாவின் சிறிய நாடாக இருக்கும் சிங்கப்பூர் நகர நாடு, ஜொகூர் நீர்ச்சந்தியால் மலேசியாவிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூரை மையமாகக் கொண்டிருந்த சிங்கபுரம் அரசாட்சி (1299-1398) புகழ்பெற்ற சாங் நிலா உத்தம மன்னரால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. பலம்பங், பிந்தான் மற்றும் சிங்கபுரம் எனும் மூன்று பகுதிகளை அரசாண்டதால் திரிபுவன சக்ரவர்த்தி எனும் பெயரிலும் அழைக்கப்பட்ட ஸ்ரீமகாராஜா சங் உத்தம பரமேசுவரர் (1299-1347), புதிய நிலப்பகுதியில் அரசாட்சி அமைக்கும் விதமாக சிங்கப்பூரில் சிங்கபுர அரசை நிறுவியதாகக் குறிப்பிடப்படுகிறது. சாங் நிலாவுக்கு முன் தெமாகி எனும் சிற்றரசர் சயாம் நாட்டின் ஆதரவோடு துமாசி என அறியப்பட்ட சிங்கப்பூரை ஆண்டிருக்கிறார். தெமாகியை வெற்றி கொண்ட சாங் நிலா சிங்கப்பூரை உருவாக்கியுள்ளார்.

சாங்நிலா பற்றி மலாய் இலக்கியங்களில் சிறப்பாக பேசப்படுவதாகக் கூறப்படுகிறது. மலாய் அன்னல்ஸ் எனப்படும் மலாய் வரலாற்றுப் பதிவேடுகள், மலாய் சுல்தானகத்தின் ஆட்சி பற்றி, மன்னர்களின் வரலாற்றுத் தகவல்கள் பற்றி, மலாய்மொழியில் எழுதப்பட்டுள்ள சிறப்பான மலாய் இலக்கியப் பதிவேடு எனும் பெருமை கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பல கதை மரபுகளை எடுத்துக் கூறும் மலாய் பதிவேட்டில், சாங்நிலா சிங்கபுரம் அரசுரிமையை ஏற்படுத்திய வரலாறு சிறப்பாக விவரிக்கப்பட்டிருக்கிறது. மயபாகித்து அரசின் அதிகார மோதலால்

ஸ்ரீவிஜயத்தின் இளவரசராக இருந்த சாங் நிலா சிங்கபுரத்திற்கு தப்பி வந்ததாகவும் கூறப்படுகிறது.

சாங் நிலா மன்னரின் கொள்ளுப் பேரனாக அறியப்படும் ஸ்ரீமகாராஜ பரமேஸ்வரர் (1344-1414) ஆட்சிக் காலத்தில் சிங்கபுரா மீது மயாபாகித்து பேரரசு தாக்குதல் தொடுத்திருக்கிறது. மயபாகித்தின் தாக்குதலிருந்து தப்பிக்கும் நோக்கில் சிங்கப்பூரிலிருந்து வெளியேறி மலாயாவின் பெருநிலப் பகுதிக்குள் நுழைந்த பரமேஸ்வர், அக்காலத்தில் பெர்த்தாம் என அழைக்கப்பட்ட மலாக்கா ஆற்றின் துறைமுகப்பகுதியில் புதிய அரசினை நிறுவியிருக்கிறார். அன்று மீன்பிடிக்கும் ஊராக இருந்ததே பின்னர் மலாக்கா மாநகராக உருவாகியிருக்கிறது.

பரமேஸ்வர் அரசர் இசுலாம் சமயத்தை ஏற்று பாரசீகத் தொடர்புடைய இஸ்கந்தர் ஷா எனும் பெயரை சூட்டிக் கொண்டது பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் பலவாறாக கூறப்பட்டிருக்கின்றன. வட சுமத்ராவிலிருந்த பாசாய் இளவரசியை மணந்து பின்னர் இசுலாமியராக மாறியதாகவும் ஒரு குறிப்பு எடுத்துரைக்கிறது.

பரமேஸ்வர மன்னரின் ஆட்சிக் காலத்தில் மலாக்கா புகழ் பெற்ற வணிகத் துறைமுகமாக சிறப்புற்று விளங்கியிருக்கிறது. போர்த்துகீசிய வணிகரும் எழுத்தாளருமான தோம் பைரஸ் மலாக்காவின் செல்வ வளத்தைப் புகழ்ந்திருக்கிறார். சீனாவின் யோங்லி அரசரோடு நட்புறவு கொண்டிருந்தவராக அறியப்படும் பாய்-லி-மி-சு-லா என சீனப் பதிவுகளில் இடம் பெற்றுள்ள பரமேஸ்வரர், ஆயிரத்து நானூற்றி பதினோறாராம் ஆண்டில் அரசியார் பரமேஸ்வரி மற்றும் ஐந்நூற்றி நாற்பது அரசு அதிகாரிகளுடன் யோங்லி அரசரை கண்டு நட்புறவு பாராட்டியிருக்கிறார். மிங் அரசருக்கு மாணிக்கக் கற்கள், முத்து, காண்டாமிருகக் கொம்பு, மேற்கத்திய துணிகள், யானைத் தந்தங்கள், வாசனைப் பொருட்கள், தங்க வெள்ளிக் கம்பிகள் போன்ற பல்வேறு பரிசுகளை அளித்ததாக பதிவுகள் சுட்டுகின்றன.

பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே இசுலாமிய சுல்த்தான்களின் பரவலான ஆட்சிக்கு வந்த மலேசியாவில், இசுலாம் தீவிரமாகப் பரப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. 1511-ல் போர்த்துகீசியர் வசமாகி, பின்னர் 1641-ல் டச்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்டிருக்கிறது. கெடா சுல்தான் மூலம் 1786 இல் பினாங்கைப் பெற்ற ஆங்கிலேய கிழக்கந்திய கம்பெனி, மலேசியாவையும்

தொடர்ந்து சிங்கப்பூரையும் குடியேற்ற நாடாக்கியிருக்கிறது. இரண்டாம் உலகப் போரில் 1943-1945 வரை ஜப்பான் ஆதிக்கத்திலிருந்த மலேசியா, ஆகஸ்ட் முப்பத்தி ஒன்று, ஆயிரத்தி தொள்ளாயிரத்து ஐம்பத்தி ஏழில் பிரித்தானியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றிருக்கிறது.

1963-ல் மலேசியா, சரவாக், வடக்கு போர்னியோ இணைந்து மலேசியக் கூட்டமைப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. 1965-ல் சிங்கப்பூர் தனிக் குடியரசாக பிரிந்திருக்கிறது. வெப்ப மண்டல மழைக்காடுகளுக்குப் பெயர் பெற்ற மலேசியா, உலகிலுள்ள மிகச்சிறந்த பல்லுயிர்தன்மை கொண்ட பகுதிகளில் ஒன்றாக புகழப்படுகிறது. எனினும், பொருளாதார முன்னேற்றம் எனும் பெயரில் பெருவாரியான காடுகள் அழிக்கப்பட்டு விட்டதாக ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. சரவாக் பகுதியில் கிட்டத்தட்ட எண்பது விழுக்காடு காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதாக புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.

சிங்கபுரத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருக்கும் இருவர் ராப்.ஃபிஸ், மற்றும் புகழ்பெற்ற லீ குவான் யூ. சிங்கபுரா அமைந்திருக்கும் பகுதியின் முக்கியத்துவத்தை உணர்ந்த ராப்.ஃபில்ஸ், சிறிய மீன் படி ஊராக இருந்த அதனை துறைமுக நகராக உருவாக்கி சாதனை படைத்திருக்கிறார். சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டவுடன் சிங்கபுரா துறைமுகத்தின் அமைவிட முக்கியத்துவம் பன்மடங்கு கூடியிருக்கிறது. ஆழமான இயற்கைத் துறைமுகத்தைப் பெற்றிருந்த சிங்கபுரம், கப்பல் போக்குவரத்தில் முக்கிய இடம் பெற்று வணிகம் சார்ந்த பெருவளர்ச்சி பெற்றிருக்கிறது.

லீகுவான் யூ (1923-2015) சிங்கப்பூரின் தந்தை எனப் போற்றப்படுகிறார். மக்கள் செயல் கட்சியின் தலைவராகவும், குடியரசின் முதல் பிரதமராகவும் இருந்த லீகுவான் அவர்கள், சிங்கப்பூரின் பொருளாதாரத்தை உயர்த்தியதோடு ஹொங்கொங், தாய்வான், தென்கொரியா போன்ற பொருளாதார ஆசியப் புலிகள் போன்று, சிங்கப்பூரையும் ஆசியப் புலியாக மாற்றிக் காட்டியவராக புகழப்படுகிறார். ஆங்கிலம், சினம், மலாய் மற்றும் தமிழை ஆட்சி மொழிகளாகக் கொண்டிருக்கும் சிங்கப்பூர், நிலமின்மையால் கடலிலிருந்து நிலத்தை மீட்கும் நாடாகவும் அறியப்படுகிறது.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் கலாச்சாரத்தில் தமிழர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பர்மா, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், கொரிய போன்ற நாடுகளோடு பண்டைக் காலத்திலிருந்தே தமிழர்களுக்கு நெருங்கிய கலாச்சார வாணிப உறவு நிலவி வந்திருக்கிறது. அந்நாடுகளிலெல்லாம் தமிழரது பண்பாட்டுக் கூறுகள் தற்காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

தென்கிழக்கு நாடுகளுக்கு வங்காளம், பர்மா பாதையில் நிலவழியாகவும், வங்காள விரிகுடா கடல் வழியாகவும் பண்டைக் காலத் தொடக்கம் முதலே தமிழர்கள் சென்று வந்துள்ளனர். பாண்டியர் பல்லவர் சோழர் அரசுரிமைக் காலங்களில் தென்கிழக்கு திசை வழிப் பயணம் குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பெற்றிருந்திருக்கிறது. ஆரம்ப காலங்களில் பாண்டியர்களது தாக்கமும், பின் பல்லவ சோழர் ஆதிக்கமும் தாய்லாந்து கம்போடியா வியட்நாம் பகுதிகளில் கோலேச்சியதாகத் தொல்பொருள் சான்றுகள் காட்டுகின்றன.

வியட்நாமின் வோ-சான் எனுமிடத்தில் ஒரு பாறையின் இரு பக்கங்களில் செதுக்கப்பட்டுள்ள இரண்டாம் நூற்றாண்டினதாக இருக்கலாம் எனக் குறிப்பிடப்படும் கல்வெட்டில், ஸ்ரீமாறன் எனும் அரச குடும்பத்தார் செய்த நன்கொடை பொறிக்கப்பட்டுள்ளது. ஒன்பது வரிகள் தவிர மற்ற எழுத்துக்கள் தேய்ந்து அழித்துவிட்டதாகக் குறிப்பிடப்படும் அக்கல்வெட்டில், மன்னருக்குச் சொந்தமான வெள்ளி, தங்கம், தானியக் குவியல் மற்றுமுள்ள அசையும் அசையா சொத்து வகைகள் அனைத்தையும், மக்களுக்கு பொதுவுடைமையாக்குவதாகவும், எதிர்கால மன்னர்கள் அதை மதித்து நடக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டின் ஸ்ரீமாற ராஜகுல எனும் சொற்கள் முக்கியதுவம் நிறைந்ததாக இருக்கின்றன. கல்வெட்டு குறிப்படும் அரசர் வியட்நாமின் சம்பா பகுதியை அரசாண்ட திருமாறனாக இருக்கலாமெனவும், பொது ஆண்டின் நூற்றி தொன்னூற்றி இரண்டில் திருமாறனது ஆட்சி சம்பாவில் நடந்திருக்கலாமெனவும், கியு எனும் குடும்பப் பெயர் கொண்ட வியட்நாமிய மன்னர் லியன் என்பவரும் திருமாறனும் ஒருவரே எனவும் குறிப்பிடப்படுகிறது. மாறனுக்குப் பின் வந்த மன்னர்களின் பெயர்கள் பான் என அமைந்திருப்பதால், அது வர்மன் என்பதன் உச்சரிப்பாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. வோ-சான் கல்வெட்டைக் கொண்டு ஸ்ரீ மாறன் வர்மன் எனும் பெயர்களைச் சூடிக் கொண்ட பாண்டியர்கள், முற்காலத்தில்

வியாட்நாம் பகுதி வரையிலும் பரவியிருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது. பண்டைக் காலத்திலேயே கடல் பயணத்தில் வலிமை பெற்றிருந்த பாண்டியர்கள் வியட்நாம் பகுதிக்கும் சென்றிருக்கக் கூடுமென்பது சாத்தியமே.

வியட்நாமின் சம்பா பேரரசு, கம்போடியாவின் கெமர் பேரரசு, பர்மாவின் பாகன் பேரரசு மற்றும் தாய்லாந்தின் சுகத்தோய், அயோத்தியா அரசுரிமைகள் பல்வேறு பெருமைகளையும் சிறப்புகளையும் பெற்றவையாகப் புகழப்படுகின்றன.

பழம்பெருமை கொண்ட வியட்நாம் சமவுடைமைக் குடியரசு, வடக்கில் சீனாவும், வட மேற்கில் லாவோசும், தென்மேற்கே கம்போடியாவும், கிழக்கே தென்சீனக் கடலும் எல்லைகளாக அமையப்பெற்றுள்ளது. தெற்கு வியட் எனும் பொருளில் வியட்நாம் எனக் குறிப்பிடப்படும் நிலப்பகுதி, வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளைக் கொண்டிருக்கிறது.

பொது ஆண்டிற்கு முற்பட்ட ஆயிரத்து நூற்றி ஒன்று முதல் பொது ஆண்டின் தொள்ளாயிரத்து முப்பத்தி ஒன்பது வரை சீனப் பேரரசுகளுக்கு கட்டுப்பட்டிருந்த வியட்நாமை, நுஙோ கொயீன் (897-944) புகழ்பெற்ற பதாங் ஆற்றுப் போரில் வெற்றி பெற்று சீனர்களிடமிருந்து விடுவித்திருக்கிறார். வியட்நாமிய வரலாற்றில் மிகவும் கொண்டாடப்படும் பேரரசரான நுஙோ கொயீனால் சுதந்திரமடைந்த வியட்நாமில், பின்னர் பல்வேறு அரசுரிமைகள் ஆட்சி செலுத்தியிருக்கின்றன. லீவான் ஹு (1230-1322) எனும் வரலாற்று ஆசிரியரால் எழுதப்பட்ட வியட்நாமின் வரலாறு புத்தகத்தில், கொயீன் பேரரசரின் வெற்றி சிறப்பாக பதியப்பட்டுள்ளது.

சுதந்திர வியட்நாமின் தந்தை எனப் போற்றப்படும் அரசர் கொயீன் தம்மை பேரரசர் என அறிவித்துக் கொள்ளாமல் அரசர் என அறிவித்துக் கொண்டது பற்றி, வியட்நாம் பற்றிய முதல் வரலாற்று ஆசிரியர் லீவான் ஹு குறையாகப் பதிவிட்டிருக்கிறார். கொயீன் அரசருக்குப் பல காலம் முன்பே தருங் சகோதரிகள் (பொ.ஆ. 12-43) எனும் வீரத்திற்குப் பெயர் பெற்ற தருங் தராக் மற்றும் தருங் நிஹி சகோதரிகள், சீன ஹான் அரசுரிமையை அதாவது முதலாவது சீன ஆதிக்கத்தை எதிர்த்து போரிட்டுள்ளனர். பான்யீ (398-445) எனும் சீன வரலாற்று ஆசிரியரால் எழுதப்பட்ட பிற்காலத்திய ஹான் புத்தகம் (புக் ஆன் தி லேட்டர் ஹான்) எனும் நூலில் தருங் சகோதரிகள் பற்றிய வரலாற்றுத் தகவல் இடம்பெற்றுள்ளது. மேலும் லீவான் புத்தகமும் சகோதரிகள் குறித்த சிறப்பான தகவல்களை அளிக்கின்றன.

சீன மிங் அரசுரிமை ஆளுகையின் போது லீவான் புத்தகம் உட்பட பல புத்தகங்கள் சீனாவிற்குக் கொண்டு செல்லப்படதாகக் குறிப்பிடப்படுகிறது. எனினும் லீ அரச மரபின் லீ நான்ங் தோங் அரசரின் (1441-1459) ஆணைப்படி, பான் பூ தியான் (1370-1482) எனும் வரலாற்றறிஞர், லீவான் குறிப்புகளோடு வியட்நாமின் முழுமையான வரலாறு எனும் பொருள் கொண்ட தாய் - வியட் - சூ -கை-தோன்-து நூலை இயற்றியிருக்கிறார்.

மிங் அரசின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி பிற்காலத்திய லீ அரச மரபை (1428-1788) உருவாக்கியவராகப் பேரரசர் லீ லோய் புகழப்படுகிறார். வியட்நாமின் வரலாற்றில் மிகச் சிறந்தவராகப் போற்றப்படும் பேரரசர் லீ லோய் (1384-1433), மிங் அரசிடமிருந்து வியட்நாமிக்கு சுதந்திரம் பெற்றுத் தந்திருக்கிறார். மேலும் லீ தாய் தோ பேரரசரது சுதந்திரப் பிரகடனம் வியட்நாமின் பெருமையையும் தேசபக்தியையும் போற்றிப் பாடுவதாகவும் அமைந்திருக்கிறது. லீ பேரரசர் குறித்துப் பல்வேறு கதைகள் கூறப்படுவதாகவும் அவற்றுள் சிறப்பிடம் பெற்றதாக அவரது மந்திர வாள் பற்றிய கதையாடல் அமைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. லீ அரசின் தாங் தோங் காலம் (1442-1477) வியட்நாமிய வரலாற்றில் மிகச் சிறந்த ஆட்சிக் காலமாகப் புகழப்படுகிறது.

பதினைந்து தொகுதிகளைக் கொண்ட வியட்நாமின் முழுமையான வரலாற்றுப் புத்தகம், ஹோங் பாங் அரசரிமைக் காலம் தொடங்கி (பொ.ஆ.முன் 2879-258) லீ தாங் தோங் பேரரசர் அரியணை ஏறிய 1428 ஆம் ஆண்டு வரையிலுமான வியட்நாம் வரலாற்றைச் சொல்லும் செவ்வியல் சீன மொழி நூலாக புகழப் படுகிறது.

வரலாற்றுக் காலத்திய ஹோங் பாங் அரசுரிமையைத் தோற்றுவித்தவர் வியட்நாமின் முதலாவது பெருமை மிகு அரசராகப் புகழப்படும் ஹோங்கு வாங்கு மன்னர் (2879-2794). சீனாவின் யுனான் மாநிலத்தில் தொடங்கி வியட்நாமின் தலைநகர் ஹனோய் வழியாக பாயும் செந்நிற மண் படிவு கொண்ட ஆயிரத்து நூற்றி நாற்பத்தொன்பது கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஸாங் ஹோங் எனப்படும் சிவப்பு ஆற்றுச் சமவெளியின் வடபகுதியிலிருந்த பல தொல்குடியினை ஒன்றிணைத்து கோங்கு வாங்கு அரசாட்சியை நிறுவியிருக்கிறார். வியட்நாமின் தொன்மக் கதைகளில் குறிப்பிடப்படும் என்றும் நிலைத்திருக்கும் நான்கு புகழுக்குரியவர்களோடு தோங் வாங் மன்னரும் இணையாகப் பேசப்படுகிறார்.

தோங் வாங் மன்னரின் வாரிசான லாக் லாங் கொயின் மற்றும் கொயினின் மனைவி ஆகோ குறித்து தொன்மக் கதைகள் வழக்கத்திலுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆகோ அரசி ஈன்றெடுத்த நூறு முட்டைகள் கொண்ட சாக்கிலிருந்து நூறு குழந்தைகள் உண்டானதாகவும், அவர்களிலிருந்தே நூறு வியட்நாமிய குடும்பப் பெயர்கள் வழக்கத்திற்கு வந்ததாகவும் தொன்மக் கதையொன்று வியட்நாமிய மரபிலுள்ளது.

லாங் லாங் மன்னர் தம்மை டிராகனிலிருந்து வந்தவரென்றும், ஆகோ தேவதையிடமிருந்து வந்ததாகவும், நீரும் நெருப்பும் ஒன்றாக இருப்பது இயலாதது போல் இருவரும் சேர்ந்திருக்க முடியாது எனவும் ஆகோவிடம் கூற, இருவரும் ஆளுக்கு ஐம்பது குழந்தைகளோடு பிரிந்து செல்வதாகவும், முத்த மகன் ஆகோவோடு சென்று கொயின் அரசாட்சியைத் தோற்றுவித்ததாகவும் தொல் கதையொன்று வழங்கப்பெறுகிறது.

லாங் காலத்தில் கிழக்குக் கடற்கரையில் மிகப்பெரிய உருவம் கொண்டிருந்த ங்கு டின்ங் (பூத மீன்) பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்திருந்து அவ்வழியே செல்லும் கப்பல்களையும் மனிதர்களையும் விழுங்கியதாகவும், கப்பலையும் பத்து மீனவர்களையும் ஒருங்கே விழுங்கும் வண்ணம் மிக அகன்ற வாய் கொண்டிருந்த மீன், கிழக்குக் கடலையே இரண்டாகப் பிரித்திருந்த பெருமலையின் அடியிலிருந்த குகையில் வசித்ததாகவும் கூறப்படுகிறது.

மீனிடமிருந்து மக்களைக் காக்க விரும்பிய லாங், மிகப் பெரியதொரு கப்பலைக்கட்டி அதில் மனிதர் போன்ற தோற்றத்தில் கனிமத்தால் செய்த மனித பொம்மையை மிகவும் சூடாக்கி குகைப்பகுதிக்கு எடுத்துச் சென்றதாகவும், மனிதர் என நினைத்து சூடான பொம்மையை விழுங்க வந்த மீனின் வாய்க்குள் லாங் பொம்மையைத் தள்ளி விட்டதாகவும், சூடு தாங்காத மீன் லாங்கின் கப்பலை உடைக்க முயற்சிக்க லாங் வாளை எடுத்து மூன்று துண்டுகளாக மீனை வெட்டியதாகவும் தொன்மக் கதையொன்று பேசப்படுகிறது.

சோன் டின்ங்கும் தூய் டின்ங்கும் என்றொரு தொன்மக் கதையும் ஹோங் பாங் அரசாட்சியோடு இணைத்துப் பேசப்படுகிறது. ஹோங் அரசின் பதினெட்டாவது மன்னரின் பேரழகு மிக்க இளவரசி மை நுயாங்கிற்குப் பொருத்தமான மண மகனைத் தேர்ந்தெடுக்க நடக்கும் சுயதேர்வில், பலரும் திறமைகளை

வெளிப்படுத்தியிருக்கின்றனர். அவர்களுள் மலைக் கடவுளான சோன் டின்ங் மற்றும் நீர்க் கடவுளான தூய் டின்ங் இடையே மிகக் கடுமையான போட்டி நிலவியிருக்கிறது.

சோன் கையை அசைத்ததற்கே, மரங்கள் வளர்ந்து பெருங்காடு உண்டாகியிருக்கிறது. ஒரேயொரு வார்த்தை சொன்னதற்கே பல மலைகள் உருவாகியிருக்கின்றன. தூய் கையசைப்பிற்கு காற்று வீசியிருக்கிறது. வார்த்தைக்கு கடல் மேலெழுந்திருக்கிறது. இருவரில் ஒருவரைத் தேர்வு செய்ய இயலாதிருந்த நுயாங், அடுத்த நாள் காலையில் முதலாவதாக திருமணப் பரிசு கொண்டுவருபவரை மணம் செய்வதாக அறிவித்திருக்கிறார். திருமணப் பரிசில் ஏழு தந்தங்கொண்ட யானை, ஏழு கொண்டை கொண்ட சேவல், எழு பிடரி கொண்ட குதிரை போன்றவையும் உண்டு.

காலையில் சோன் முதலாவதாக திருமணப் பரிசுகள் கொண்டு வந்து நுயாங்குடன் அவரது வசிப்பிடமான தான் வியான் மாலைக்கு சென்று விடுகிறார். பரிசுகளோடு சற்று தாமதமாக வந்த தூய் பெருங்கோபம் கொள்கிறார். அவரது பணியாளர்களுடன் நுயிங்கை கைப்பற்ற முயல்கிறார். பெருமழை, பெரும்புயல், பெருஇடியோடு கடலையும் உயர்த்துகிறார். சோன் அவரது மந்திர சக்தி மூலம் மலையை உயர்த்திக் கொண்டே போகிறார். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தூய் மீது கோபம் கொள்கின்றனர். சோன் மக்களையும் அவர்களது உடைமைகளையும் காப்பாற்ற முயல்கிறார். சோன் - தூய் இடையேயான சண்டை தினமும் நடந்ததாகவும், இறுதியில் தூய் நீரை திரும்பப் பெற்றதாகவும், ஆனால் நுயோங்கை கைப்பற்றியே திருவது எனும் முடிவோடு இருவருக்குமான சண்டை தொடர்வதாலேயே வியட்நாமில் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் தொன்மக் கதை புனையப்பட்டுள்ளது.

வியட்நாம் மொழியை செம்மைப்படுத்தியதிலும், வியட்நாமிய இலக்கியங்களை செழுமைப்படுத்தியலும், டிரான் அரசுரிமையின் ஆட்சிக் காலம் மிகுந்த பங்களிப்பை ஆற்றியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. பிற்காலத்திய லை அரசாட்சியும் (1009-1225), பின்னர் உருவான டிரான் அரசாட்சியும் (1122-1225) வியட்நாமின் பொற்காலமாக வரலாற்று அறிஞர்களால் புகழப்படுகிறது.

வியட்நாம் மக்களைக் குறிக்க நீண்ட காலமாகப் பயன்பட்டு வந்த வான் லாங் என்பதற்கு மாற்றாக, சிறந்த வியட் எனும் தாய்வியட் வார்த்தையைப்

பயன்படுத்தியவராக மூன்றாவது லை அரசரான தான்ங் தோங் (1054-1072) குறிப்பிடப்படுகிறார். 1070 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கன்பூசியஸ் கோவில், வியட்நாமின் முதல் பல்கலைக் கழகம் எனச் சிறப்பிக்கப்படுகிறது. கன்பூசியஸ் மற்றும் அவரது புகழ்பெற்ற சீடர்களான யான் கூ, ஜென்ஜி, ஸிசி மற்றும் மென்சியஸ் போன்றோருக்கான உருவாக்கப்பட்ட வழிபாட்டுக் கூடம் 1876-ம் ஆண்டிலிருந்து அரச மரபினரும் உயர் வகுப்பினரும் பயிலும் கல்விக் கூடமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

லை அரசுரிமைக்குப் பின் உருவான டிரான் மரபு, மங்கோலியங்களின் மூன்று படையெடுப்புகளை முறியடித்து வியட்நாமிய வரலாற்றில் நீங்கா இடம் பெற்றிருக்கிறது. டிரான் தாய் தோங் (1226-1258), டிரான் தாங் தோங் (1258-1278), டிரான் நாங் தோங் (1278-1293), டிரான் ஆங் தோங் (1293-1314), டிரான் மிங் தாங் (1314-1329) போன்ற அரசர்கள் காலத்தில், வியட்நாம் அனைத்துத் துறைகளிலும் செல்வாக்குடன் விளங்கியதாகக் கூறப்படுகிறது. டிரான் அரசர்கள் அரச பதவியை மகன்களிடம் விட்டுக் கொடுத்த பின்னும் அரசாட்சியில் சிறப்பான இடத்தை வகித்திருக்கின்றனர்.

டிரான் குலத்தவர் மீனவ சமூதயாத்தார் எனவும் அதிகம் படித்திராத டிரான் குலத்தின் அரசர்கள், கல்வியை பெரியளவில் முன்னெடுத்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. டிரான்கள் காலத்தில் பௌத்தம் தொடர்புடைய இலக்கியங்களும், தேசபக்தி இலக்கியங்களும் உருவாகியிருக்கின்றன. டிரான் அரசு காலத்தில் புத்த மதம் வியட்நாமில் சிறப்பாகப் பேணப்பட்டு, அரச மதமாகவும் பின்பற்றப்பட்டிருக்கிறது.

வியட்நாம் மொழி சூ நோம் எனும் வரிவடிவத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சீன எழுத்துமுறைகளையும் சீன-வியட்நாமிய உச்சரிப்பு முறைகளை ஒருங்கிணைத்தும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் நிகுயீன் துயீன் எனும் வியட்நாமிய புலவரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. சீனாவின் புகழ்பெற்ற ஹான் யூ (768-824) புலவரின் நினைவாக, வியட்நாமிய மொழியில் முதன் முதலாகப் பாடல் இயற்றிய துயீன் புலவருக்கு டிரான் நாங் தோங் பேரரசரால் ஹான் (ஹான் துயீன்) எனும் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது.

சீனாவின் பொது ஆண்டிற்கு முன்பான முதலாவது ஆதிக்க காலத்திலிருந்தே சீன மொழியின் பயன்பாடே வியட்நாமில் வழக்கத்திலிருந்திருக்கிறது. டிரான் காலத்தில் உருவாக்கப்பட்ட வியட்நாமிய சூ நோம் பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரை சிறப்பிடம் பெற்றிருந்திருக்கிறது. உடைந்த இதயத்திலிருந்து ஒரு புதிய அழுகை எனும் பொருள் கொண்ட கியூவின் கதை எனும் 3254 பாடல்கள் கொண்ட நூல், நுகுயீன்து (1766-1820) புலவரால் சூ நோம் மொழியில் இயற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆஸ்திரோ ஆசியாடிக் மொழியாகக் குறிப்பிடப்படும் வியட்நாமின் அலுவல மொழியான வியட்நாமியம், பதினேழம் நூற்றாண்டில் வந்த பிரான்சின் அலெச்சாந்தர் டி ரோட்ஸ் (1591-1660) எனும் ஜெ சூட் பாதிரியாரால் லத்தீன் எழுத்தில் எழுதும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வியட்நாமியம் தவிர தாய், சாம், கெமர், சைனீஷ் போன்ற பிற பகுதிகளில் பெருவாரியாக பிரெஞ்சு மொழியும் புழக்கத்திலுள்ளதாகக் குறிப்பிடப்படுகிது. ஆங்கிலமும் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்து வருவதாகக் குறிப்புகள் கூறுகின்றன. கல்வியும், கலைகளும், கலாச்சாரமும், இசையும், அறிவியலும், தொழில்நுட்பமும், மருத்துவமும், பொருளாதாரமும், இலக்கியங்களும் அமைதியும் வளமும் செழித்திருந்த வியட்டின் லை - டிரான் மரபுகள் சிறப்பானவையே.

பதினாறாம் நூற்றாண்டு காலத்திற்குப் பின் எழுந்த அதிகாரப் போட்டியும் அரசியல் நிலையின்மையும் உள்நாட்டுக் குழப்பங்களும் வியட்நாமை பாதகமான நிலைக்கு தள்ளியிருக்கிறது. 1858 முதல் 1885 வரை பிரான்சு நிகழ்த்திய தொடர் தாக்குதல்களால், வியட்நாம் முழுவதுமே கொச்சின் சைனா என அழைக்கப்பட்ட பிரான்சின் குடியேற்ற நாடாக ஆக்கப்பட்டிருக்கிறது. பிரெஞ்சின் ஆதிக்கத்தில் வியட்நாமின் அரசியல், பண்பாடு, கல்வி, போக்குவரத்து, மதம் போன்றவை பெருமளவில் மாற்றம் கண்டிருக்கின்றன.

வியட்நாமிய மக்களிடையே தாய் தெய்வ வழிபாடு புகழ்பெற்று விளங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது. நாட்டுப் புறங்களில் பெருமளவில் பின்பற்றப்படும் தாய் வழிபாடு தா மா எனும் பெயரால் அழைக்கப்படுகிறது. ஆகோ தருங் சகோதரிகள் போன்றோருக்கும் தாய் வழிபாட்டில் சிறப்பிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூ நகர் பெண் (லேடி போ நகர்) என அழைக்கப்படும்

தெயீன் யா நா, வியட்நாமிய பெண்களால் அதிகம் விரும்பப்படும் தா மா வாகக் குறிப்பிடப்படுகிறார்.

வியட்நாமின் தொன்மை அரச மரபாகக் குறிப்பிடப்படும் சம்பா அரசாட்சி, இந்தியாவை மூலமாகக் கொண்ட இந்து அரசாட்சி என ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. மத்திய வியட்நாமின் சாம் மக்களால் புகழ்பெற்றிருந்த் சம்பா பேரரசின் காலத்தில் (192-1832), இந்துக் கலாச்சாரமும், இந்து மத வழிபாடும், கோவில்களும் சம்பா பகுதியில் பரவலாகக் காணப்பட்டிருக்கின்றன. சியம் தாங், நகர சம்பா, சாம் பா, ஷாங்செங் என பலவாறாகக் குறிப்பிடப்படும் சாம் பேரரசு, ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகளில் புகழோடு விளங்கியிருக்கிறது. சமஷ்கிருத மொழியும், சைவமும் தழைத்தோங்கிய சம்பா வியட்நாமில், பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் ஏற்பட்ட அரபு தொடர்பால் இஸ்லாமின் தாக்கம் நிகழ்ந்திருக்கிறது. ஸ்ரீவிஜயம், மயபாகித்து மற்றும் மலாக்காவோடு நல்லுறவு பேணி வந்த சம்பா அரசு, பண்டைக்காலத்தில் கடல் ஆதிக்கத்தில் புகழ்பெற்று விளங்கிய இந்திய அரசமரபால் உண்டானதாக உறுதியான சான்றுகள் அளிக்கப்படுகின்றன.

கல்வெட்டுகள் வழியாக சம்மாவின் முதல் மன்னராக பத்ரவர்மன் (380-413) அறியப்படுகிறார். வியட்நாமின் சம்பா பகுதியில் நான்காம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை கட்டப்பட்ட மை சோன் கோவில் தொகுப்பு, வரலாற்று முக்கியதுவம் நிறைந்த டிரா கீயூ எனும் சிங்கபுரம் அருகே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மை சோன் கோவில் வளாகம் தென்கிழக்கு ஆசியாவிலேயே முதன்மையான இந்து மரபு பகுதி எனவும், வியட்நாமின் பழமையான பாரம்பாரியப் பகுதி எனவும் புகழப்படுகிறது. யுனெஸ்கோவால் கலாச்சார மாற்றத்திற்கான உதாரணமாகக் குறிப்பிட்டு பாதுகாக்கப்படும் மை சோன் கோவில் தொகுதி, முன்பு சம்பா அரசர்களின் சமயச் சடங்குகள் நடைபெறும் பகுதியாக இருந்திருக்கிறது. ஏழுபது கோவில்களால் நிரம்பியிருந்த மை சோன் வளாகத்தில், சமஷ்கிருத, சாம்மொழி கல்வெட்டுத் தூண்களும் நிறைந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

வியட்நாமிய தென்புற கடற்பகுதியின் மேற்கு மலைப்பகுதிகளில் அமைந்திருந்த சம்பா, சில சமயங்களில் லாவோஸ் வரையிலும் பரவியிருந்ததாகக்

குறிப்பிடப்படுகிறது. கம்போடியாவின் கெமர் பேரரசோடும் வியட்நாமியப் பேரரசுகளோடும் ஓரளவிற்கு நல்லுறவு பேணிவந்ததாகக் கூறப்படும் சம்பா அரசின் வரலாறு, செங்கல் கட்டிடங்களாலும் கல்தூண் பொறிப்புகளாலும் பெருமளவிற்கு அறியப்பட்டிருக்கிறது. சீன மற்றும் வியட்நாமிய வரலாற்றாசிரியர்களாலும், தூதரக உறவுகளாலும், சில புத்தகங்களாலும் சம்பா அரச வரலாறு மீட்டெடுக்கப்பட்டிருக்கிறது. தாங் பேரரசு காலத்திய புகழ்பெற்ற புவியலாளர் மற்றும் வரலாற்றாசிரியரான ஜியா டான் (730-805) நாற்பது தொகுதிகளில் ஒருக்கிணைத்த 801 ஆம் ஆண்டின் நூலில், சம்பா பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. சீனாவின் கடல்வணிகத்தை பற்றிக் குறிப்பிடும் நூல், சீனக் கப்பல்கள் மலாக்கா, நிகோபர், இலங்கை, இந்தியா, அராபியாவின் கிழக்கு மற்றும் வடக்கு கடற்கரை வழியாக பாக்தாத்தின் யூப்ரடிஸ் ஆற்றில் பயணிகளையும் சரக்குகளையும் இறக்கிவிட்டதைக் குறிப்பிடுகிறது. மேலும், சீனக் கப்பல்கள் பெரியவைகளாக இருந்ததால் யூப்ரடீஸ் நதியினுள் பயணிக்க முடியாமல் இருந்திருக்கின்றன.

ஸ்ரீமாறனிலிருந்து தொடங்கும் சம்பா பேரரசில் பல புகழ்பெற்ற மன்னர்கள் தோன்றியிருக்கின்றனர். பதினைந்து அரசாட்சிக் காலமாகப் பகுக்கப்பட்டுள்ள சம்பா பேரரசு, அதன் பிற்காலத்தில் தெற்கு அரசாட்சியாகவும் இறுதியாக போ அரசாட்சியாகவும் குறிப்பிடப்படுகிறது. பத்ரவர்மன், ருத்ர வர்மன், இந்த்ரவர்மன், ஹரிவர்மன், சிங்கவர்மன், விக்ராந்த வர்மன், பரமேஸ்வர வர்மன் எனும் பெயர்களில் மன்னர்கள் குறிப்படப்படுகின்றனர். தெற்கு மற்றும் போ அரசாட்சிக் காலத்தில் போ பெயரை முன்னொட்டாகக் கொண்டு பல பெயர்கள் காணப்படுகின்றன. சம்பாவின் கடைசி மன்னராக போ ஷோங் ஷான் குறிப்பிடப்படுகிறார்.

வியட்நாமின் மத்திய காலத்தில் புகழ்பெற்றிருந்த கௌதாராவில் கண்டறியப்பட்டுள்ள போ நகர் சம்பா கோவிலின் போ, இந்து மதக் கடவுளான பார்வதியாகவோ மகிஷாசுரமர்த்தினியாகவோ இருக்கலாமென அடையாளம் காணப்பட்டிருக்கிறது. கோவிலின் கல் தூணின் படி, கோவில் சாம் மன்னர் சத்யவர்மனால் மறுஆக்கம் செய்யப்பட்டிருக்கிறது. கோவில் இருந்த பகுதி தற்காலிகமாக அயல் நாட்டினர் வசமிருந்ததாகவும், அவர்கள் கோவிலை சூறையாடியதாகவும் கல்தூண் தெரிவிக்கிறது. பிற கல் தூண் பொறிப்புகள் மூலம், கோவிலில் விலையுயர்ந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட முகலிங்கம்

இருந்ததும் அறியப்படுகிறது. சாப்பிடுவதற்கென்றே வாழ்ந்த கருப்பான பயங்கரமான காட்டு மிராண்டிகள் கப்பல்களில் வந்ததாகவும், நகைகளை கொள்ளையடித்ததோடு முகலிங்கத்தை சிதைத்து விட்டதாகவும் கல்வெட்டு கூறுகிறது. கொள்ளையர்கள் விரட்டப்பட்டு பின்னர் எழுநூற்றி எண்பத்தி நான்கில் லிங்கம் மீள் உருவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

தொள்ளாயிரத்து பதினெட்டாமாண்டின் கல்தூண் செய்தியின் படி, சாம் மன்னர் மூன்றாம் இந்திரவர்மர் பகவதி அம்மனுக்கு தங்கச்சிலை அமைக்க ஆணையிட்டிருக்கிறார். தங்கச் சிலையை, மெகர் பேரரசின் இரண்டாம் இராஜேந்திர வர்மன் தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டில் தூக்கிச் சென்றுவிட்டதாகவும் கல்வெட்டு கிடைத்துள்ளது. பின்னர் சாமின் முதலாவது ஜெய இந்திரவர்மனால் போ கோவிலில் கற்சிலை நிறுவப்பட்டிருக்கிறது. சம்பா மன்னர்கள் போ கோவிலுக்கென்று மிகத் தாரளமாகக் கொடைகள் அளித்ததையும், கெமர் மன்னர்கள் அவற்றை எடுத்துச் சென்றதையும் பற்றி பல்வேறு கல் தூண் பொறிப்புகள் குறிப்பிடுகின்றன.

போ அம்மனோடு இந்து மற்றும் புத்த சமயத்தின் முக்கியக் கடவுளர்கள் இடம்பெற்றிருந்த போ நகர் கோவிலில், பல்வேறு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன. பதினேழாம் நூற்றாண்டில் வியட்நாமியர்களின் ஆளுமைக்குள் சம்பா பகுதி வந்ததால், போ நகர் கோவிலைப் பற்றி வியட்நாமிய மக்களிடையே செல்வாக்கு அதிகரித்திருக்கிறது.

பூ நகர் கோவில் வளாகம் சூ லாவோ மலையில் அமைந்திருப்பதாகவும், முக்கியக் கோபுரம் சுமார் இருப்பத்தைந்து மீட்டர்கள் உயரமுள்ளதாகவும், உள்ளே நான்கு அடி உயரம் கொண்ட யான் போ நகர் கற்சிலை உட்கார்ந்த நிலையில் கால்களைக் குறுக்காக வைத்து பத்துக் கைகளுடன் தோற்றம் தருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கோவில் நுழைவாயின் மேலே ஆயுதம் ஏந்திய நான்கு கைகளுடன் எருமையின் மீது நின்று கொண்டிருக்கும் சிலை வடிக்கப்பட்டிருப்பதால் மகிஷாசுரமர்த்தினி கோவிலாக இருந்திருக்கலாமெனவும் கூறப்படுகிறது. சம்பா பேரரசு ஐந்து முக்கியப் பகுதிகளைக் கொண்டிருந்திருக்கிறது. 875 முதல் 1000 வது ஆண்டு வரை, சம்பாவின் தலைநகராக இந்திரபுரம் புகழ்பெற்று

விளங்கியிருக்கிறது. தற்காலத்திய தா நாங் நகருக்கு அருகிலிருக்கும் தோங் துவாங் கிராமப்பகுதியில் அன்றைய சிங்கபுரம் அமைந்திருந்ததாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. சாமின் சிங்கபுரம் அமைந்திருந்த டிரா குயூ மற்றும் மை சோன் பள்ளத்தாக்கும், தா நாங் பகுதியிலேயே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய குவாங் நாம் பகுதியில் சாமின் அமராவதியும், பின்ங் டின்ங் பகுதியில் விஜயாவும், ஹான்க் ஹோ பகுதியில் கௌதராவும், நிங் தூண் பகுதியில் பாண்டுரங்கமும் அமைந்திருந்தது போ கோவில் கல்வெட்டுக்கள் மூலம் அறியப்பட்டிருக்கிறது.

வியட்நாமிய ஆதிக்கத்தால் ஆயிரமாவது ஆண்டுகளில் இந்திரபுரத்திற்குப் பின் விஜயமே சாம்பாவின் கலாச்சார அரசியல் வணிக முக்கியத்துவம் நிறைந்த பகுதியாக 1000-1471 ஆம் ஆண்டு காலங்களில் விளங்கியிருக்கிறது. சம்பாவின் அமராவதி மற்றும் விஜயத்தில் துயா குலத்தவரும், கௌதர மற்றும் பாண்டுரங்கத்தில் கயு குலத்தவரும் முதன்மையாக இருந்ததால், இரு குலத்தவரிடையேயும் போட்டிகளும், சண்டைகளும், சில சமயங்களில் போர்களும் நடந்திருக்கின்றன. இரு குலத்தவரிடையே நிகழ்ந்த பிணக்குகள் பெரும்பாலும் மண உறவுகளால் சீர்செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தெற்கு வியட்நாமின் தற்போதைய பான் ரங் பகுதியில் அமைந்திருக்கும் போ குளோங் கரை கோவில், சம்பாப் பேரரசின் மூன்றாவது ஜெய சிம்ம வர்மனால் (1285-1307) கட்டப்பட்டிருக்கிறது. ஜெய சிம்மர் முன்னரே இருந்த கோவிலை மறுகட்டமைப்பு செய்தார் எனவும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. பூகுளக் கரையில் அதாவது போ குளோங்கரையில் பண்டைய சம்பா மன்னரின் நினைவாகக் கட்டப்பட்ட கோவில், செங்கலால் கட்டடப்பட்ட மூன்று அடுக்குகள் கொண்ட முக்கிய கோபுரத்தையும் முக சிவலிங்கத்தையும் கொண்டிருக்கிறது. பூகுளக்கரை மன்னர் படையெடுத்து வந்த கெமர் மற்றும் கம்போடிய மன்னர்களோடு போர் புரியாமல், கோபுரம் கட்டும் போட்டிக்கு அழைத்து அப்போட்டியில் வெற்றி பெற்றதாகவும், தோற்ற கெமர் கம்போடிய மன்னர்கள் சம்பாவை விட்டு அகன்றதாகவும் பூ குளக் கரை மன்னரின் அறிவாற்றல் புகழப்படுகிறது.

சாம் மக்களின் பூ நகர் கடவுள் கம்போடியா, லாவோஸ் மற்றும் தாய்லாந்து நாடுகளின் நெல் இறைவியோடு தொடர்புடையவராக அறியப்படுகிறார். கெமரின்

போ இனோ நோகர், போ யான் இனோ நோகர், கம்போடிய போ நகர், லாலோஸின் நாங் கோசோப், இந்தோனேசியாவின் சாவகம், சுந்தா மற்றும் பாலியின் தேவிஸ்ரீ எனும் நிய் பொகசி, தாய்லாந்தின் போசோப் அல்லது பைசோப் போன்றோர் நெல் விளைச்சலின் பெண் கடவுள்களாகப் போற்றப்படுகிறார்கள்.

தாய்லாந்து மற்றும் இந்தோனேசியாவின் நாட்டுப்புற வழக்கத்தில் கடவுளுக்கு மிகுந்த செல்வாக்குள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தாய்லாந்தில் மா குவான் கோ அதாவது அரிசி வளத்தின் தாய் குறித்து பல தோன்மக் கதைகள் பேசப்படுகின்றன. தென் கிழக்கு ஆசியா முழுவதுமே நெல் வயல்கள், அரிசி ஆகியவற்றோடு தொடர்புடைய வழிபாட்டுச் சடங்குகளும், விழாக்களும், ஆடல் பாடல்களும் சிறப்பிடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. தாய்லாந்தின் அரச ஏர் திருவிழா வருடந்தோறும் நடத்தப்படுவதும், மகாராணியாரின் ஈடுபாடும், தாய் மக்களின் நெல் வளங்களோடு பிணைந்த வாழ்வியலின் முக்கியத்துவத்திற்கு சான்றாக உள்ளன.

வியட்நாம், தாய்லாந்து, கம்போடியா மற்றும் மியன்மார் பகுதிகளின் மீகாங் பகுதியை மையமாகக் கொண்டு (தென்கிழக்காசியாவின் தெற்குப் பகுதி) பொது ஆண்டின் தொடக்க காலத்தில் பரவியிருந்த இந்து சமய .ுனான் பேரரசு (பொ.ஆ. 68-550) குறித்து தெளிவான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. பூ நாம் பேரரசு, நோகோர் பூனோம் என்றெல்லாம் அழைக்கப்பட்ட புனான் பேரரசின் தெற்கு வியட்நாம் ஊ கோயோ (கண்ணாடி கால்வாய்) பகுதியின் அகழ்வாய்வில் ரோமாபுரி, சீன, பெர்சிய, எகிப்திய மற்றும் இந்தியப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதால், புனான் சிந்ததெரு வணிகப் பேரரசாக இருந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.

இந்து நாகரிகத்தையும், சமஷ்கிருதத்தையும் சிறப்பாகப் பேணிய புனான் மக்கள், பொது ஆண்டின் நான்காம் நூற்றாண்டு காலத்தில் தென் வியட்நாமின் மீகாங் பகுதியில் செழிப்புற்று இருந்ததாகக் கூறப்படுகிறது. சீன வரலாற்றுப் பதிவுகள் மூலமும் அகழ்வாய்வு பொருட்கள் மூலமும் அறியப்படும் புனான் பேரரசு, வியட்நாமின் தோங் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்தாம் நூற்றாண்டின் மத்திய காலத்திய பல்லவ கிரந்த சமஷ்கிருத கல்வெட்டு மூலம் உறுதி செய்யப்படுகிறது. கௌண்டிய மரபைச் சேர்ந்த குணவர்மன் எனும் இளவரசர் விஷ்ணுவுக்கு அளித்த

கொடையை, ஹோசி மின் நகரின் அருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கல் தூண் குறிப்பிடுகிறது.

தெற்கு வியட்நாமின் சாய்கோன் நகரம் புகழ்பெற்ற தலைவர் ஹோ சி மின் (1890-1969) பெயரால் அழைக்கப்படுகிறது. வியட்நாம் புரட்சியை முன்னின்று நடத்தி, பிரெஞ்சின் குடியேற்றத்திலிருந்து வியட்நாமிற்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி ஐந்தாம் ஆண்டு, செப்டம்பர் இரண்டில் விடுதலை பெற்றுத் தந்தவரான நியுவென் சின் சுங் எனும் இயற்பெயர் கொண்ட ஹோ சி மின், வடக்கு வியட்நாமின் பிரதமராக (1946), அதிபராக (1946-1969) இருந்து நாட்டை வழி நடத்தியிருக்கிறார்.

வியட்நாமின் சுதந்திரப் போராட்டம் மிகவும் கடுமையான முறையிலேயே நடந்திருக்கிறது. 1945 இல் சுதந்திரம் பெற்றதாக அறிவித்துக் கொண்டாலும் 1954 வரை இந்தோ சீனா சண்டைகள் தொடர்ந்திருக்கின்றன. இந்தியாவிற்கு கிழக்கேயும் சீனாவிற்குத் தெற்கேயும் உள்ள பெருநிலப் பகுதியான தென் கிழக்கு ஆசியா பிரெஞ்சுக்காரர்களால் இந்தோசைனா எனும் பெயரில் அழைக்கப்பட்டிருக்கிறது. இந்தோ சைனாவில் இந்திய, சீன நாகரிகங்களின் தாக்கம் பெருமளவில் காணப்படுகிறது. கம்போடியா, லோவோஸ், தாய்லாந்து, மலேசியா போன்ற இந்தோ சைனாவில் இந்தியாவின் தாக்கம் அதிகமாகவும் சீனாவின் பங்கு குறைந்தும் காணப்படுகிறது. வியட்நாமில் பெரும்பாலும் சீனாவின் தாக்கமே மிகுந்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. 1954-ம் ஆண்டின் ஜெனிவா உடன் படிக்கையின் படி, ஹோ சி மின் அவர்களது பகுதி வடக்கு வியட்நாமாகவும், வியட்நாமிய கடைசிப் பேரரசர் போ தாய் பகுதி தெற்கு வியட்நாமாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. முந்நூறு நாட்களுக்குள் மக்கள் நாடு மாறுவதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. வடக்கு பொதுவுடைமை வியட்நாமிலிருந்த பெருமளவிலான கத்தோலிக்க மக்கள் தென் பகுதிக்கு இடம் பெயர்ந்திருக்கிறார்கள். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் கம்யூனிச வடக்கும் சோஷலிச தெற்கும் மோசமான சகோதர சண்டையை மேற்கொண்டிருக்கின்றன. மக்கள் அடைந்த துன்பங்கள் சொல்லி மாளாதவை. 1964 ஆம் ஆண்டில் தெற்குக்கு ஆதராகக் களம் புகுந்த அமெரிக்கா, ஒரு வருடத்திற்குள்ளாகவே சுமார் ஐந்து லட்சம் தரைப்படை வீரர்களோடு மகிவும் கொடுமையான குண்டு வீச்சுகளை நிகழ்த்தியிருக்கிறது. 1973-ல் பாரிஸ் சமாதான உடன்படிக்கை மூலம் தென்வியட்நாமை விட்டு அமெரிக்கா வெளியேற வடக்கு வியட்நாமினால் 1975-ல்

தென் பகுதி முழுமையாகக் கைப்பற்றப்படுகிறது. 1976 ஆம் ஆண்டு வடக்கு, தெற்கு வியட்நாம்கள் ஒன்றாக இணைந்திருக்கின்றன. ஒன்றான வியட்நாமிய படைகள் 1978-ல் கம்போடியா சிவப்பு கெமர்கள் மீது படையெடுத்துச் சென்றது தனிக்கதை.

கம்போடியாவின் கெமர் ரூச் எனும் சிவப்பு கெமர் ஆட்சியை அகற்ற வியட்நாம் சோசலிசக் குடியரசின் படையெடுப்பு முக்கிய காரணமாக அமைத்திருக்கிறது. கம்போடியாவின் பொதுவுடைமை அரசியல் கட்சியாக இருந்த கெமர் ரூக், நாட்டை மக்களாட்சி கம்பூச்சியா என்ற பெயரில் அழைத்திருக்கிறது. மக்களாட்சி எனும் பெயர் சூடப்பட்டாலும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளின் ஆரம்பிக்கப்பட்ட கிமப் செம்படை காலம், கம்பூச்சிய வரலாற்றின் கடினமான காலகட்டமாகவே வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. சிவப்பு கிமரின் தலைவராகவும், 1976 முதல் 1979 வரை கம்பூச்சியாவின் பிரதமராகவும் இருந்த போல் போட் (1928-1998) கம்போடிய மக்களை பேரழிவுக்கு ஆட்படுத்திய சர்வாதிகாரியாக பதிவு செய்யப்பட்டிருக்கிறார். மக்கள் திரளை மிக அவலமான கொடூரங்களுக்கு ஆட்படுத்தியதில் சலோத் சர் என்ற போல் பாட்டுக்கும் (பிரதர் எண் ஒன்று), இரணடாம் எண், மூன்றாம் எண் பிரதர்களுக்கும், பல நாடுகளின் அரசியல் தந்திரங்களுக்கும் பங்குள்ளது என்பது உண்மையே.

கம்போடியா, கம்பூசியா எனக் குறிப்பிடப்படும் பகுதி பண்டைக் காலத்தில் காம்போஜம் எனும் பெயராலேயே பெருமையாக அழைக்கப்பட்டிருக்கிறது. கொட்டிக் கிடக்கும் இயற்கை வளங்களும், உயரிய பல்லுயிர்ப் பெருக்கமும் நிறைந்த கம்பூச்சியாவின் வரலாறு தமிழகத்தோடும் இந்தியாவோடும் நெருங்கிய தொடர்புறவுகள் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. கம்போடியாவின் அழியாப் புகழுக்குச் சான்றாக விளங்கி வரும் அங்கோர்வாட் ஆலயம், இந்திய உறவிற்கு ஆகச் சிறந்த சான்றெனில் மிகையாகாது.

வலிவும், துணிவும், அறிவும், வீரமும் நிறைந்திருந்த தமிழ் மன்னர்கள் குறிப்பாக பல்லவ, சோழப் பேரரசர்கள், காம்போஜம் போன்ற பகுதிகளிலும் படை வலிமையைக் காட்டி படைத் தளபதிகளை அரசராக நியமித்துவிட்டு வந்தார்களென்றும், அவர்களின் வழிவந்தவர்களே காம்போஜம் போன்ற பகுதிகளை ஆண்ட தமிழ் மன்னர்கள் எனவும் கூறப்படுகிறது. ஒன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மன்னன் ஜெயவர்மனுடன் துவங்கிய காம்போஜ அரசுரிமை, அக்காலத்திய தென்கிழக்காசிய நாடுகளில் மிக வலுவானதொரு பேரரசாக உருவாகியிருக்கிறது.

தொடர்ந்து பல நூற்றாண்டுகள் தமிழ் மன்னர்களின் ஆட்சியில் இருந்த காம்போஜம் கொஞ்சம் கொஞ்சமாகத் தாய்த் தமிழ்நாட்டுடன் இருந்த தொடர்பை இழந்துவிட்டதாகவும், படையெடுப்பின் போது போய் குடியேறிய தமிழர்களைத் தவிர பிறகாலங்களில் அதிகம் பேர் தமிழ்நாட்டிலிருந்து குடிபெயராததே தொடர்பு அழிந்ததற்கு முக்கியக் காரணமெனவும் கூறப்படுகிறது. காம்போஜத்தைச் சுற்றிலுமிருந்த லாவோஸ், வியட்நாம், தாய்லாந்து போன்ற நாடுகளின் ஆதிக்கத்தில் சிறிது சிறிதாக தமிழ் மணத்தையும், இந்து மதப் பழக்கவழக்கங்களையும் இழந்து சுற்றியிருந்த நாடுகளைப் போல் காம்போஜமும் பௌத்த நாடாகியதாகக் குறிப்பிடப்படுகிறது.

கம்பூச்சியாவில் கெமர் எனும் குறியீடு சிறப்பு வாய்ந்ததாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. கெமர் இனக் கம்போடியர்கள் கெமர் எனும் பெயராலேயே அழைக்கப்படுகின்றனர். கெமர் மொழி நாட்டு மொழியாகவும் தேராவாதப் புத்தம் நாட்டு மதமாகவும் இருக்கிறது. சம்பா நாகரிகம் போன்றே கெமர் நாகரிகமும் இந்திய மயமானதாகப் காணப்படுகிறது. பண்டைய காலம் முதலே கம்பூச்சியாவின் மீகாங் ஆற்றுப்படுகை நாகரிகம் சிறப்பானதாக இருந்திருக்கிறது. கம்பூச்சியாவின் நெல் விளைச்சலுக்கு பெயர் பெற்ற மேக் கொங் ஆற்றுச் சமவெளிப் பகுதியிலேயே புனான் பேரரசும், அதனைத் தொடர்ந்து சென்லாம் பேரரசும், பின்னர் வந்த கெமர் பேரரசும் புகழ்பெற்று விளங்கியிருக்கின்றன.

நான்காயிரத்து முந்நூற்றி ஐம்பது கிலோ மீட்டர்கள் பாய்ந்தோடும் உலகின் பதினோறாவது நீண்ட தூர ஆறான மீகாங், திபெத்தில் தொடங்கி, சீனாவின் யுனான் மாநிலம், மியான்மர், லாவோஸ், தாய்லாந்து, கம்போடியா மற்றும் வியட்நாம் நாடுகளைச் செழுமையாக்கி தென்சீனக் கடலோடு கலக்கிறது.

உலகின் மிகப்பெரிய உள்நாட்டு மீன் வளப் பகுதியாகக் குறிப்பிடப்படும் மேகாங் ஆறு, மிக உயர்ந்த ஆற்று நீர் பல்லுயிர் பன்மய வளமை பெருக்கத் தளமாகவும் புகழப்படுகிறது. உயிரின வளம் மிக்க மேகாங் ஆற்றில், எண்நூற்றி ஐம்பது வகை நன்னீர் மீனினங்கள் வாழ்வதாகவும், ஏராளமான பாலூட்டிகள், ஊர்வன, பறவை வகைகளுக்கு மேகாங் இருப்பிடமாக அமைந்திருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. கெண்டை இனங்களில் மட்டும் முந்நூற்றி எழுபத்தேழு

வகைகளும், கெளுத்தியில் தொன்னூற்றி இரண்டு வகைகளும் உள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மேக்கொங் ஆறு உணவு பங்களிப்பிற்கான சிறந்த சான்றாக அமைகிறது. பெரிய உடலமைப்பைக் கொண்டதும் (10 அடி, 300 கிலோகிராம்), மிகவேகமாக நீந்தக் கூடியதுமான மேக்கொங் மாகெளிறு (பூத பூனை மீன்), மேக்கொங் ஆற்றின் மிகப்பெரிய நன்னீர் மீனாகக் குறிப்பிடப்படுகிறது. மத்திய மேக்கொங் பகுதியில் சிறிய அளவிலும் பரவலாகவும் காணப்படும் மாகெளிறு மீன் இனம் அருகி வருவதால் தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகள் மாகெளிறைப் பிடிக்க தடை விதித்திருப்பதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

மேகாங்கின் கீழ்படுகையில் அமைந்துள்ள ஆறும், ஏரியுமான தொன்லே சாப் தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய நன்னீர் ஏரி எனும் பெருமைக்கு உரியதாக புகழப்படுகிறது. யுனெஸ்கோவால் உயிரினப் பாதுகாப்புக் கோளமாக அறிவிக்கப்பட்டுள்ள தொன்லே சாம், இரு நூற்றி ஐம்பது கிலோ மீட்டர் நீளமும் நூறு கிலோ மீட்டர் அகலமும் கொண்டதாக உள்ளது. ஆறு மாதங்களுக்கு மீகாங்கிலிருந்து தொன்லே சாப் ஏரிக்கும், மீகாங்கில் நீர் குறையும் போது அடுத்த ஆறு மாதங்களுக்கு தொன்லே ஏரியிலிருந்து மீகாங் ஆறுக்கும் நீர் பாய்வது குறிப்பிடத்தக்கது. தொன்லே ஏரி கம்பூச்சிய மக்களின் உணவுப் பாதுகாப்பில் முக்கிய இடம் வகிப்பதோடு பண்டைய கெமர் பண்பாட்டிலும் சிறப்பிடம் வகித்திருக்கிறது. மீன் வளத்திலும் நெல் விளைச்சலிலும் பெரும் பங்கு வகிக்கும் தொன்லே ஏரி, வெள்ளக் காடாக ஆகாமலும், வறண்டு போகமால் இருப்பதற்காகவும் பல்வேறு கடவுள்களின் வேண்டுதல்களும் கொண்டாட்டங்களும் அப்பகுதி மக்களிடையே மரபாகப் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

கெமர் பேரரசிற்கு முன் மீகாங் பகுதியிலிருந்ததாக சென்லாப் பேரரசு (550-706) குறிப்பிடப்படுகிறது. சீனக் குறிப்புகளிலிருந்து புனான் பேரரசு காலத்தில் சிற்றரசாக இருந்த சித்திர சேனன் எனும் மகேந்திரவர்மன் புனானைக் கைப்பற்றி சென்லாப் பேரரசை நிறுவியதாகக் குறிப்பிடப்படுகிறது. உறவினரான முதலாம் பவவர்மனோடு இணைந்து புனான் பேரரசை வீழ்த்திய சித்திர சேனர் (590-611), முதலாம் மகேந்திரவர்மர் எனும் பெயரில் அரசாட்சி புரிந்திருக்கிறார். மகேந்திரவர்மரின் மகன் முதலாம் ஈசானவர்மன் (616-637 ஈசானபுரம் எனும் தலைநகரிலிருந்து காம்போஜத்தின் சென்லாப்பை ஆண்டிருக்கிறார். தொன்லே சாப்

ஏரியின் கிழக்குக் கரையில் அமைந்திருந்த ஈசானபுரம் எனும் சம்போர் பிரெக் குக் (பிராவிகார், பிரஹாரம்) பகுதியில் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட கோவில்கள் மற்றும் கட்டிடங்களின் சிதைவுகள் அறியப்பட்டிருக்கின்றன. செங்கல் மற்றும் கற்கள் கொண்ட கட்டப்பட்ட கோவில்கள், எண்கோன கோபுரங்கள், ஏராளமான லிங்கங்கள், குளங்கள், சிங்கத்தின் சிற்பங்கள் போன்றவை அகழாய்வில் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன.

சென்லாப் என சீனாவிலும், சான்லாப் என வியட்நாமிலும் குறிப்பிடப்பட்ட சென்லாப் பேரரசு பற்றி சீனாவின் மங்கோலிய யான் அரசுரிமையின் இரண்டாவது பேரரசர் தெமூர் கான் (1265-1307) அரசின் தூதுவரான புகழ்பெற்ற ஷோ தகுயான் மூலம் அறியப்படுகிறது. 1296 மற்றும் 1297 ஆம் ஆண்டுகளின் சீனாவின் தூதராக அங்கோர்வாட் வந்த தகுயான், அந்நாளைய காம்போஜத்தின் அங்கோர்வாட் கோவில் மன்னர் மற்றும் மக்களின் பழங்கவழக்கங்கள் குறித்து ஏராளமான தகவல்களைப் பதிவு செய்திருக்கிறார். தகுயான் தூதர் வருகையின் போது காம்போஜத்தை ஆண்ட மன்னர் மூன்றாம் இந்திரவர்மன் எனும் ஸ்ரீ இந்திரவர்மன்.

இந்திர வர்மனுக்கு முன் கிமர் பேரரசின் அரசராக இருந்தவர் எட்டாம் ஜெயவர்மன் (1243-1295) எனும் பரமேஸ்வரபாதர். ஜெயவர்மர் மங்கோலிய குப்ளேகானுடன் அமைதி உடன்படிக்கை கண்டு திறை செலுத்தியதாகவும் தாய்லாந்தின் சுகத்தோய் அரசாட்சியுடன் (1238-1583) கடுமையான போர்களைச் சந்தித்ததாகவும் அறியப்பட்டிருக்கிறார். ஜெயவர்மரின் மூத்த பெண் ஸ்ரீஇந்தர பூபேஸ்வரசுதாவை மணம் புரிந்த இந்திரவர்மன், ஜெயவர்மரை அகற்றி விட்டு அரியணை ஏறியதாகக் கூறப்படுகிறது. மாமனார் தீவிரமான சிவ பக்தரென்றும், மறுமகன் இலங்கையிலிருந்து வந்த தேராவாத புத்த சமயத்தை அரச மதமாக்கியதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து மற்றும் தெற்கு வியட்நாம் பகுதிகளை உள்ளடக்கியிருந்த கெமர் பேரரசு (802-1431), தென்கிழக்கு ஆசியாவின் புகழ்பெற்ற பேரரசாக விளங்கியிருக்கிறது. சீனாவின் சென்லாப் பேரரசு காலத்தில் சிற்றரசாக இருந்த கெமர் எனும் அங்கோரியன் அரசு, பின்னர் முதலாம் ஜெயவர்மரால் ஆட்சியுரிமை கொண்டதாகத் தோற்றம் பெற்றிருக்கிறது.

காம்போஜத்தின் கெமர் பேரரசு குறித்து அங்கூர் கோவிலின் கல்தூண் பொறிப்புகள் மூலமும், கோவில் சுவர்களின் கலை வேலைப்பாடுகள் மூலமும், சீன

வணிகர்கள், பயணிகள், தூதர்கள் மூலமும் பெருமளவில் அறியப்பட்டிருக்கிறது. அங்கோர் கோவில் வளாகம் தவிர, கம்போடிய எல்லைப் புறத்திலுள்ள அரண்யாபிரதீட் எனும் நகருக்கு, முப்பத்தி நான்கு கிலோ மீட்டர் தொலையில் தாய்லாந்து பகுதியினுள் இடம்பெற்றுள்ள ஸ்டோக் கொக் தாம் எனும் சிவன் கோவில் கல்வெட்டும், கெமர் பேரரசர்கள் பற்றிய தகவல்களை அளிப்பதில் முக்கியப் பங்காற்றுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஸ்டோக் கொக் கோவில் வளாகத்தில் இடம்பெற்றிருந்த 151 செ.மீ உயரமுள்ள சாம்பல் நிற மணற்கல்லில் எழுதப்பட்டுள்ள முந்நூற்றி நாற்பது வரிகள் கொண்ட, சமஷ்கிருத மற்றும் பண்டைய கெமர் மொழியில் 1053 ஆம் ஆண்டு எழுதப்பட்ட கல்வெட்டு, முந்தைய கெமர் பற்றிய சுமார் இருநூற்றி ஐம்பது வருடங்களின் தகவல்களை அளிக்கிறது. கொக் கோவில் கல்வெட்டு, இரண்டாம் ஜெயவர்மர் கெமர் பேரரசை உருவாக்கியவராகக் குறிப்பிடுகிறது. கோவில் பூசாரிக் குடும்பத்தின் ஒன்பது தலைமுறைகளைப் பற்றிய விவரணைகளும் அதில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக கெமர் அரசர்கள், தேவராஜா எனும் சடங்கை மேற்கொண்டது பற்றிய குறிப்பையும் ஸ்டோக் கொக் கோவில் கல்வெட்டு சுட்டுக்காட்டுவதாக பிரித்தானிய சார்லெஸ் ஹிகாம் போன்ற தென்கிழக்காசியப் பகுதி தொல்லியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மகேந்திர பர்வதம் என அழைக்கப்பட்ட போனம் குலன் (குலன் மலை) மலைப் பகுதியை மையமாகக் கொண்டு சக்கரவர்த்தியாக, அரசர்க்கெல்லாம் அரசராக, தேவ அரசராக முடி சூட்டிக் கொண்டவரான இரண்டாம் ஜெயவர்மர் (802-835), கெமர் பேரரசிற்கு சிறப்பான தொடக்கம் அமைத்துக் கொடுத்தவராகப் புகழப்படுகிறார். ஆங்கோட் வாட்டிலிருந்து நாற்பது கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள மகேந்திர பர்வதமும், பின்னர் சியாம் ரீப் பகுதியிலுள்ள ஹரிஹராலயமும் தலைநகராக விளங்கியிருக்கின்றன.

மூன்றாம் ஜெயவர்மன் (835-877), முதலாம் இந்திரவர்மன் (877-889), முதலாம் யசோவர்மன் (889-910) என பல பேரரசர்களால் ஆளப்பட்ட அங்கோரியன் பேரரசில், முதலாம் சூர்யவர்மன் (1006-1050) அரசாட்சிக்காலம் முக்கியமானதாகக் குறிப்பிடப்படுகிறது. சோழ அரசோடு நல்லுறவு கொண்டிருந்ததாகவே அங்கோரியன் அரசு குறிப்பிடப்படுகிறது. பேரரசர் இராஜராஜருக்கு தேர் ஒன்றை முதலாம் சூர்ய வர்மன் பரிசளித்தாகக் கூறப்படுகிறது. தாம்ரலிங்க பேரரசு சூர்ய வர்மனோடு

முரண்பட்டதாகவும், தாம்ரலிங்கத்திற்கு ஸ்ரீவிஜயம் ஆதரவளித்ததாகவும், சோழர்களிடம் உதவி கேட்ட சூர்யவர்மனுக்கு ஆதரவாகவே இராஜேந்திர சோழனின் ஸ்ரீவிஜயப் படையெடுப்பு நிகழ்த்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அங்கோரும் சோழமும் சைவ மரபாலும், தாம்ரலிங்கமும் விஜயமும் பௌத்தத்தைப் பின்பற்றிதாலும் நெருங்கிய நட்பு கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

புகழ் பெற்ற பேரரசர் இரண்டாம் சூரியவர்மர் ஆட்சிக் காலத்தில் (1113-1145) கட்டப்பட்ட உலகப் புகழ்பெற்ற அங்கோர் வாட் பெருமாள் கோவில் கம்பூச்சியாவின் வரலாற்றிற்கும் பெருமைக்கும் ஆகச்சிறந்த சான்றாக போற்றப்படுகிறதெனில் மிகையாகாது. பரம விஷ்ணுலோகர் எனச் சிறப்பிக்கப்பட்ட சூர்யவர்மன் ஆட்சிக் காலம் கலைகளுக்கும், கட்டிடங்களுக்கும், ஆட்சித் திறனுக்கும், படைவெற்றிகளுக்கும் புகழ் பெற்றிருந்தாக வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது.

கெமர் மொழியில் அங்கோர் என்பது நகரத்தையும் வாட் என்பது கோவிலையும் குறிப்பதாகக் கூறப்படுகிறது. அங்கோர்வாட் எனும் பெயருக்கு சமஷ்கிருத மூலமும் சுட்டப்படுகிறது. கோவில் நகரம் எனும் பொருள் கூறப்படும் அங்கோர்வாட், முன்பு யசோதாபுரம் எனும் பெயரில் கெமர் பேரரசின் தலைநகராகவும் விளங்கியிருக்கிறது. புகழ்பெற்ற ஏழாம் ஜெயவர்மர் (1125-1218) அங்கோர்வாட் பகுதியிலேயே பெரு நகரம் என அழைக்கப்படும் அங்கோர்தாம் எனும் நகரை உருவாக்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. கெமர் பேரரசர்களில தலை சிறந்தவராக வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படும் ஏழாம் ஜெயவர்மன் காலத்தில் சாலைகள், தங்குமிடங்கள், கட்டிடங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் போன்ற பொதுப் பணிகள் சிறப்புற்று விளங்கியிருக்கின்றன. இந்திரபாதம் என அறியப்பட்ட பெருநகரான அங்கோர் தாம், அங்கோர் தாமின் மையமாக அமைக்கப்பட்ட அவலோகிதேஸ்வரர் எனும் ஏராளமான புத்தர் முகங்கள் கொண்டதும், நேர்த்தியான பல்வேறு புடைப்புச் சிற்பங்களுக்குப் பெயர் பெற்றதுமான பேயான் கோவில், தா பிரோம் போன்ற கோவில்களையும் நிறுவியிருக்கிறார். முக்கியச் சாலையில் பதினைந்து கிலோ மீட்டருக்கு ஒன்று என சமையல் செய்யும் வசதியுடன் பயணிகள் தங்கும் இடங்களைக் கட்டி வைத்த ஜெயவர்மர் போற்றுதலுக்குரியவரே.

குலேன் மலைக் கற்களைக் கொண்டு தான்லே சாப் பகுதியில் கட்டப்பட்ட ஏராளமான அங்கோர் வாட், பேயான் முறைக் கோவில்களில், சூர்ய வர்மரால் இந்தியக் கலையில் கட்டப்பட்ட வானளாவிய கோவிலான அங்கோர் வாட் மிகப் பெரிய கோவிலாக அமைக்கப்பட்டுள்ளது. விஷ்ணுவுக்காகக் கட்டப்பட்ட கோவிலில் பின்னர் வந்த அரசர்களால் புத்தருக்கும் சிறப்பிடம் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

அங்கூர் பெருங்கோவில் மேருமலையைக் குறிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. உயர்ந்த கோபுரங்களும் சுவர்களும் அகழியும் கொண்டு சுமார் நானூறு ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள பெருங்கோவில், இந்தியத் தொன்மைக் கதை மரபில் வரும் பல்வேறு கதைகளின் கலையழகு மிக்க புடைப்புச் சிற்பங்களையும், விலங்குகள், தேவதைகள், கடவுள்களின் உருவங்களையும் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. தேராவாத புத்த மரபில் முக்கிய வழிபாட்டிடமாகவும் அங்கோர் கோவில் புகழ்பெற்று விளங்குகிறது.

புகழ்பெற்ற ஹென்றிமொகாட் (1826-1861) எனும் பிரெஞ்சு நாட்டு இயற்கையியலாளர் மற்றும் கண்டுபிடிப்பாளரால் அங்கோட்வாட் பெருங்கோவில் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அவருக்கும் முன்னரே அங்கோர் கோவிலைப் பற்றி கெமர் மக்கள் அறிந்திருந்ததாகவே வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. பதினாறாம் நூற்றாண்டு முதல் கவனிப்பாரின்றி புறக்கணிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் கோவில், இருபதாம் நூற்றாண்டில் இந்தியா போன்ற பல நாடுகளின் கூட்டு முயற்சியாலும், யுனெஸ்கோவின் பெருமுயற்சியாலும் செம்மை செய்யப்பட்டு மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பெற்று வருகிறது.

மூன்றாம் இந்திரவர்மரின் (1295-1308) அரசவைக்கு வந்த ஷோ தகுயான் இரண்டு வருடங்கள் அங்கோர் வாட்டில் தங்கியிருந்து அங்கோரியன் பேரரசு பற்றி, கம்போடியா மக்களின் பழக்க வழக்கங்கள் (தி கஸ்டம்ஸ் ஆப் கம் போடியா) எனும் நூலை எழுதியிருக்கிறார். அங்கோர் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பற்றியும் அரசர்களைப் பற்றியும் சமய நடைமுறைகள், வணிகம், நகர வாழ்க்கை, வேளாண்மை, அரண்மனை வாழ்க்கை மற்றும் அக்கோர்வாட,. பேயன், பபூயான்

போன்ற கோவில்கள் குறித்தும் பல்வேறு தகவல்களையும் தகுயான் விவரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு சுருக்கப்பட்ட வடிவத்தில் கிடைக்கப் பெற்றுள்ள மிங் பேரரசு கால புத்தகம் பால் பெல்லியட்ஸ் அவர்களால் பிரெஞ்சில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அங்கோரை மையமாக்கி உருவாக்கப்பட்ட தலைநகர் யசோதரபுரம் பற்றி சிறப்பாக விவரிக்கும் நூல், பேரரசர் இந்திரவர்மனின் நகர்வலத்தை சிறப்பாக விவரிக்கிறது.

அரசரின் மெய்க்காவல் படைக்கு முன்னே காவல் படையும், தொடர்ந்து கொடிகளும், பதாகைகளும், மேளங்களும், அதற்குப் பின்னே முன்னூறிலிருந்து ஐந்நூறு வரையிலான பூவேலைப்பாடு கொண்ட ஆடைகள் அணிந்த அரண்மனைப் பெண்கள் தலையில் மலர்கள் சூடி கைகளில் விளக்குகள் ஏந்தி வந்ததாகவும், பகலிலும் விளக்கேந்தும் நடைமுறையை ஊர்வலம் கொண்டிருந்ததாகவும், அரச குலப் பெண்கள் தங்கம் வெள்ளியாலான அணிகலன்களுடன் வந்ததாகவும், அவர்களுக்குப் பின்னே வேல்களும் கேடயங்களும் கொண்ட வீராங்கனைகளும், தொடர்ந்து அரசரின் மெய்காவலர்கள் வந்ததாகவும், குதிரைகள் பூட்டப்பட்ட தங்க ரதங்கள் வந்ததாகவும், அமைச்சர்களும், இளவரசர்களும் யானைகளில் வந்ததாகவும், அவர்களுக்கு முன்னே ஏராளமான சிகப்பு நிற குடைகள் கொண்டுவரப்பட்டதாகவும், அவர்களுக்கும் பின்னே அரசிகளும், துணைவிகளும் யானை, தேர்கள், குதிரைகள் மற்றும் பல்லக்குகளில் தங்கத்தாலான குடைகளோடு வந்ததாகவும், அவர்களுக்கும் பின்னே தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட தந்தங்களைக் கொண்ட பட்டத்துயானை மீது நின்ற வண்ணம் கைகளில் வாளேந்தி மாமன்னர் நகர்வலம் வந்ததாகவும் சோ-த-குயன் அழகுற காட்சிப்படுத்தியிருக்கிறார்.

கெமர் பேரரசின் கடைசி அரசராகக் குறிப்பிடப்படுபவர் பொன்சியா யாட் எனும் இரண்டாம் பரோம் ரீசியா (1405-1463). சம்பா மற்றும் அகன்ற தாய் பேரரசுகள், தாய்லாந்தின் அயோத்யா மற்றும் சுகத்தோய் பேரரசுகளின் மோதல்கள், ஆக்ரமிப்புகள், இயற்சை சீற்றங்கள் போன்றவற்றால் முடிவுக்கு வந்த கெமர் பேரரசோடு கம்போடியாவின் வளமான வரலாற்றுக் காலம் முடிவுக்கு வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

கெமர் பேரரசின் முடிவுக்கும் பிரெஞ்சின் குடியேற்றத்திற்குமான இடைப்பட்ட காலம், கம்போடியாவின் இருண்ட காலமெனவே வரலாற்றாசிரியர்களால் கூறப்படுகிறது. கம்போடியா அரசர் அங் வோடி எனும் நோரோடாம் அவர்களால் கம்போடியாவை தாய்லாந்து மற்றும் வியட்நாமின் படையெடுப்புகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, பிரான்சு அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் பிரான்சின் ஆதிக்கத்திற்கு பணிந்தே நோரோடோம் மன்னர், கம்போடியாவை பிரான்சின் பாதுகாப்பில் விடச் சம்மதித்து கையெழுத்திட்டார் என்றே வரலாறு பதிவு செய்திருக்கிறது. அரசர் நோரோடோம் புரோம்பாரிராக் (1834-1904) பிரான்சுடனான வரலாற்று முக்கியத்துவமான உடன் படிக்கையை 1863 ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினோராம் நாள் கையெழுத்திட்டிருக்காவிட்டால் தாய் மற்றும் வியட்நாமால் கம்போடியா முழுமையாக ஆக்ரமிக்கப்பட்டு வரலாற்றிலிருந்தே மறைந்து போயிருக்கும் என கணிக்கப்படுகிறது.

கம்போடியாவின் இருண்ட காலத்தில் தொன்னூற்றி ஏழு அரசர்கள் அரசாண்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. கம்போடிய வரலாற்றில் இடம் பெற்றுள்ள ஒரு சில பெண் ஆட்சியாளர்களுள் ஒருவரான அங்மே (மதிப்பிற்குரிய சாம்தேக் ப்ரே மகா ரஜினி அங்மே) கம்போடியாவின் அரசியாக 1834-1840 காலகட்டத்தில் அரசாண்டிருக்கிறார்.

போனேம் பென் நகரிலிருந்து வடமேற்கே போனம் உதாங் மலையடிவாரத்தில் அமைந்துள்ள உதாங் பகுதியை அண்ட ஸ்ரீசோர்யபூர் எனும் அரசர் 1601 ஆம் ஆண்டில் உதாங் தலைநகரை உருவாக்கியிருக்கிறார். தாய்லாந்து அயோத்தியா பேரரசின் முதல் மன்னரான உதாங் எனும் முதலாம் இராமதிபதி (1350-1369) நினைவாக உதாங் தலைநகர் உருவாக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. உதாங் மரபில் வந்த அங்தங் எனும் பிரயாக் ராஜா சாம்தக் பிரயாக் ஹிரிரக்ஷ ராம சூர்ய மஹா ஈஸ்வர அதிபதியின் ஆட்சிக்காலத்தில் (1840-1860), உதாங் தலைநகரில் புகழ்பெற்ற பல கட்டிடங்களும் நூற்றுக்கணக்கான கோபுரங்களும், கால்வாய்களும், பாலங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. நோரோடாம் அரசர் காலத்தில் போனம் பென் நகருக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமாக உதாங் தலைநகர் கைவிடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாங்காங்கில் படித்தவரான நோரோடோம் இளவரசர் ராயல் சயாமிஸ் படையில் படை ஆலோசகராகப் பணியாற்றி வெள்ளையானைப் பதக்கம்

பெற்றிருக்கிறார். கம்போடியாவிலிருந்து வெளியேறி பங்காங்கில் அடைக்கலம் புகுந்திருந்த இளவரசருக்கு சயாம் நீதிமன்றம் அரச சின்னம் வழங்குவதை தடை செய்திருக்கிறது. சயாமின் ஆலோசகராகவே நோரோடோம் அரசர் செயல்பட வேண்டுமெனவும் உத்தரவிட்டிருக்கிறது. அரச சின்னம் இல்லாமலேயே நீதி மன்ற உத்தரவுப் படி, 1863 இல் அரசராக முடிசுட்டப்பட்ட நோரோடோம் கம்போடியாவின் பாதுகாப்பை பிரான்சிடம் விட்டுவிட்டார்.

அரசர் நோரோடோம் ஆட்சிக் காலத்தில் கம்போடியாவின் முன்னேற்றத்திற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நீதிமுறைகளில் பல சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஒரு சிலரின் வணிக ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வந்தும், அடிமை முறையை ஒழித்தும், அரண்மனைப் பணியாளர்களை வெகுவாகக் குறைத்தும் பல செயல்திட்டங்களை முன்னெடுத்திருக்கிறார். வெற்றிலை, மிளகு, சக்கரை போன்றவற்றின் விலையையும் குறைத்திருக்கிறார்.

கலைகள் மேல் பெருங்காதல் கொண்டிருந்தவராக அறியப்படும் நேரோடோம் அரசர், போனம் பென் அரண்மனையையும் புகழ்பெற்ற வெள்ளிக் கோவிலையும் உருவாக்கியிருக்கிறார். அரண்மனை வளாகத்திலுள்ள வெள்ளி புத்த விகாரத்தில் மதிப்பு மிக்க தங்கத்தாலான புத்த சிலைகள், ஆபரணங்கள், எமரால்ட் புத்தர் சிலை போன்றவை இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அரண்மனை சுவர்களில் ராம் சீர் (இராம கீர்த்தி) எனப்படும் இராமயணக் கதை ஓவியங்கள் அழகுற வரையப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கம்பூச்சிய நாடு 1863 முதல் 1941 வரையிலும் ஜப்பான் ஆக்ரமிப்பிற்கு உட்பட்டு, பின் 1845 முதல் 1953 வரையிலும் பிரெஞ்சின் குடியேற்ற நாடாக இருந்திருக்கிறது. வியட்நாம் போன்றே கம்பூச்சியாவிலும் பிரெஞ்சின் தாக்கம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசியாவின் முத்து எனப் போற்றப்பட்ட போனம்பென் அழகிய நகராகவும் பிரெஞ்சின் கட்டிடக் கலையில் ஏராளமான பாரம்பரிய கட்டிடங்கள் கொண்டதாகவும் அறியப்படுகிறது. போனம் பென் வழியே மீகாங், தொன்லே சாப் மற்றும் பசாக் போன்ற ஆறுகள் ஓடுவது கண்கொள்ளாக் காட்சியாகக் புகழப்படுகிறது.

கம்பூச்சியாவின் அரச மொழியான கெமர் மொழியில் சமஷ்கிருத, பாளி மொழிகளின் தாக்கமும், இந்து, பௌத்த மரபுகளின் செல்வாக்கும் அதிகமிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆஸ்திரோ-ஆசிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த கெமர், பழமையான எழுத்து வடிவம் கொண்ட மொழியாகவும் புகழப்படுகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை கூட சுமார் எழுபது சதவிகிதம் காடுகள் கொண்டிருந்த கம்பூச்சியா தற்போது பத்து சதவிகிதத்திற்கும் குறைவான அளவே காட்டுவளம் பெற்றிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

தாய்லாந்து நாட்டு மன்னர்களின் முடிசூட்டு விழாவின் போது இந்துக் கடவுள்களின் ஆசிகளைப் பெறுவதற்காக திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பாசுரங்கள் ஓதப்படுவதாகக் குறிப்பிடப்படுவதிலிருந்தே, தாய்லாந்தில் இந்து பண்பாட்டின் தாக்கத்தை அறிந்து கொள்ளலாம். தாய்லாந்தின் இராமகீயான் புகழ்பெற்றதெனக் கூறப்படுகிறது. மன்னரது அரண்மனையில் இராமாயணத்தின் பல்வேறு காட்சிகளும் அழகுமிக்க ஓவியங்களாக வரையப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. எண்ணற்ற இந்து கோவில்களைக் கொண்ட தாய் நாட்டில், பல்லவர் மற்றும் குப்தர் தாக்கத்தோடு பண்டைத் தமிழரின் தாக்கமும் அதிகம் என்பது கவனிக்கத்தக்கது.

தென் கிழக்கு ஆசியாவிலேயே ஐரோப்பிய குடியேற்றம் நிகழாத நாடாகப் புகழப்படும் தாய், பிரெஞ்சு இந்தோ சீனாவிற்கும், பிரித்தானியப் பேரரசிற்கும் இடையேயான ஆதிக்கப் போட்டியை ஓரளவிற்குத் திறமையாகக் கையாண்டதாக அறியப்படுகிறது. குடியேற்ற நாடாக ஆகாமலிருப்பினும் மேற்கத்தியத் தாக்கம் உள்ளடக்கிய நாடாகவே தாய் இருந்திருக்கிறது.

தாய் மற்றும் லாவோ மொழிகள், தாய் - கடை, கிர - டாய், கடை எனும் மொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததாக அறியப்பட்டிருக்கிறது. தென் கிழக்கு சீனா, ஹனான், இந்தோ சைனா, வடகிழக்கு இந்தியா போன்ற பகுதிகளில் பேசப்படும் தாய் - கடை மொழிக் குடும்பத்தில், தாய் மொழி குறிப்பிடத்தக்கதாகப் புகழப்படுகிறது. தாய் மொழி தாய் எழுத்துகள் மூலம் எழுதப்படுகிறது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தி ஒன்பதாம் ஆண்டு வரையிலும் கூட சயாம் எனும் பெயராலேயே தாய்லாந்து அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. சயாம், சியெம், சியாம், சியாமா எனப் பலவாறாகக் குறிப்பிடப்பட்டு வந்த தாய்லாந்து,

கருமை அல்லது பழுப்பு எனும் சொல்லான சியாம என்பதற்கு மாற்றாக, விடுதலை மற்றும் மக்கள் எனும் பொருளைக் கொடுப்பதாகக் கூறப்படும் தாய் மொழியின் தாய் (டாய்) எனும் சொல்லையே நாட்டைக் குறிக்கப் பயன்படுத்தியதாகத் தெரிய வருகிறது. இடையில் 1945 முதல் 1949 வரை சியாமா என மாற்றம் பெற்றிருந்ததாகவும் வரலாறு கூறுகிறது.

மிகப் பண்டையக் காலம் தொட்டே தாய்லாந்தில் மக்கள் வாழ்ந்திருப்பதற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சுமார் நாற்பதாயிரம் வருடங்களுக்கு முன்பான வேட்டைச் சமூகம், வடக்கு தாய்லாந்தில் வாழ்ந்திருந்ததன் அடையாளமாக தாம்லாடு பாறைக் குகைகள் கண்டறியப்பட்டுள்ளன. மா ஹோங் சான் பகுதியில் பொது ஆண்டிற்கு முன் தொள்ளாயிரம் ஆண்டுகளிலிருந்து ஐந்தாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் வரையிலான காலத்தில் வாழ்ந்திருந்த பண்டைய மனிதர்களின் தடயங்கள் ஆவிக் குகையில் அதாவது ஸ்பிரிட் கேவ் பகுதியில் அறியப்பட்டிருக்கின்றன. செஸ்டர் கோர்மேன் (1938-1981) எனும் அமெரிக்க மானுடவியல் மற்றும் அகழாய்வாளர் ஆவி குகையையும், சிவப்பு நிற மட்பாண்டங்களுக்குப் பெயர் பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தொல்லியல் களமான பான் ஷியாங்கையும் கண்டறிந்தவராகப் புகழப்படுகிறார்.

முன்னர் கிலாங் நகோன் எனும் பெயரில் அழைக்கப்பட்ட லம்பங் பகுதியின் வாங் ஆற்றுப் படுகையில் பழைய கற்காலத்தைச் சேர்ந்த லம்பாங் மனிதர் எனும் இனத்தின் தொல்லெச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பத்து லட்சம் வருடங்களுக்கு முற்பட்டவர்களாக அறியப்படும் லம்பக் மனிதர்களின் பண்பாட்டுப் பரிணாமக் கூறுகள், கற்காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் என அனைத்துப் படிநிலைகளிலும் பரவியுள்ளதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. லம்பக் மனிதர்கள் தாய்லாந்து, கம்பூச்சியா, பர்மா போன்ற பகுதிகளோடும் தொடர்புள்ளவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

தாய்லாந்தின் துவராவதி பண்பாடு பழமையும் பெருமையும் மிக்கதாகப் புகழப்படுகிறது. துவராவதியின் மோன் அரசுரிமை தாய்லாந்து மற்றும் பர்மாவின் தெற்குப் பகுதியில் வாழ்ந்த மோன் குலத்தவரால் உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பர்மாவின் ஐராவதி சமவெளி, மோன் மாநிலம் போன்றவற்றில் வாழும் மோன் மக்கள், இந்தோ சைனாவில் தேராவாதப் பௌத்தம் பரவியதில்

முக்கியப் பங்காற்றியவர்களாக அறியப்படுகின்றனர். பர்மிய கலாச்சாரத்தைப் பேணியதில் முக்கியப் பங்காற்றிய மோன் மக்கள், கெமர் மொழியோடு தொடர்புடைய மோன் மொழி பேசுகிறார்கள். மோன் மொழி பிராமி வரிவடிவில் எழுதப்படுகிறது.

தாய்லாந்தின் மையப் பகுதியில் பாயும் புகழ்பெற்ற சாவோ பிரயா ஆற்றின் கிழக்குப் பகுதியில், ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை துவராவதி நாகரிகம் செழிப்புற்று விளங்கியிருக்கிறது. முந்நூற்றி எழுபத்தியிரண்டு கிலோ மீட்டர்கள் ஓடும் சாவோபிரயா ஆறு, மீனம், மாநம் எனத் தாய் மொழியில் அழைக்கப்படுகிறது. மாக் என்பது தாய், நீர் போன்றவற்றைக் குறிக்கும் சொல்லாக கூறப்படுகிறது. பா சக், சகே கிராங், நன் போன்ற துணை நதிகளைக் கொண்டுள்ள சாவோ பிராயா, சயாமின் முக்கியமான ஆறாகவும், ஆற்றப் படுகையாகவும், மீகாங் ஆற்றைப் போன்றே உயிரியல் வளம் நிறைந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. ஏராளமான மீன் வகைகளைக் கொண்ட சாவோ பிராயாவில் வாழ்ந்த அறுநூறு கிலோ எடை கொண்ட பூதக் கெண்டை இனம் அழிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. சாயோ பிரயாவின் கரையிலமைந்துள்ள தலைநகர் பாங்காங் தாய்லாந்தின் புகழ்பெற்ற நகராகத் திகழ்கிறது.

சீன மூலங்களில் தோலோபோதி எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் துவராபதி குறித்து ஜார்ஜ கோட்ஸ் அவர்கள் அகழாய்வு மேற்கொண்டிருக்கிறார். சமஷ்கிருத பட்டயங்களால் உறுதி செய்யப்பட்டுள்ள துவராபதி, நகோர்ன் மற்றும் உதாங் பகுதிகளில் பரவலாகக் காணப்பட்டதாக அறியப்பட்டிருக்கிறது.

துவராபதியை அரசாண்டவர்களாக சூர்ய விக்ரமர் (675-688), ஹரிவிக்ரமர் (688-695), சிவவிக்ரமர் (695-718) பற்றிய குறிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. தொள்ளாயிரத்து முப்பத்தியேழாம் ஆண்டின் கெமர் பதிவுகளின் படி, துவராபதி அரசாட்சி பகதத்தர் தொடங்கி சுந்தரவர்மர் அவரது மகன்கள் நரபதிசிம்மவர்மன் மற்றும் மங்களவர்மனோடு முடிவுற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. கெமர்களின் எழுச்சியாலேயே துவராபதி முடிவுக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது. இந்தியமயமாக்கப்பட்டிருந்த துவராபதி புத்த கலையை வளர்த்ததிலும் சிறப்புற்று விளங்கியதாகப் புகழப்படுகிறது.

தாய் நாட்டின் லோப்புரியை கொண்டிருந்த லாவோ அரசுரிமை (450-1388) சாயோ பிராயோ ஆற்றின் தென் கரையில் உருவாகியிருக்கிறது. லாவோ நாகரிகம் என அழைக்கப்படும் லாவோ அரசாட்சி பிராயா கலமாத் அரசரால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

மகா தேரர் போதிராம்சியால் 1410 ஆம் ஆண்டில் ஒன்றிணைக்கப்பட்ட பாளி அரச மரபு நூலான காமதேவி வம்சம், துவராபதி மற்றும் ஹரிபுஞ்சை அரசுகள் பற்றிய தகவல்களைக் கொடுக்கிறது. தாய்லாந்தின் லம்பூன் நகரைத் தலைநகராகக் கொண்டிருந்த ஹரிபுஞ்சை அரசுரிமை (611-1292) காமதேவி மகாராணியாரால் ஆளப்பட்டிருக்கிறது. ஹரிபுஞ்சை அரசாட்சியின் புகழ் பெற்றவராக அறியப்படும் காமதேவி அரசியாரின் இரட்டை மகன்களில் மூத்தவர் லம்புன் பகுதியையும், இளையவர் லம்பாங் பகுதியையும் அரசாண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஜாமதேவி அதாவது காமதேவி அரசியார் தொடங்கி குமன்ஜரை, ருதன்ர, சம்சார, தசராஜ், சேர, யுவராஜ, வாசுதேவ், தமிகரஜ் உட்பட பல்வேறு அரசர்களின் பட்டியல் தெரிவிக்கப்பட்டுள்ளது. துவராபுரி, லாவோ ஹரிபுஞ்சை போன்றவை மோன் அரசுரிமைகளென்றும், துவராபுரியின் வழிவந்தவர்களே லாவோ மற்றும் ஹரிபுஞ்சையை அரசாண்டதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

ஓலைச் சுவடிகளில் தாய் தம் வரிவடிவத்தைப் பயன்படுத்தி பாளி மொழியில் எழுதப்பட்டுள்ள காமதேவி அரசமரபு தாய், பிரெஞ்சு மற்றும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பண்டைய மோன் ஹரிபுஞ்சை அரசின் சமய, கலாச்சாரத்தைப் பதிவு செய்துள்ள காமதேவி அரசமரபு, தாய்லாந்தின் புத்தமத வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையதாகவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் வடக்கு தாய்லாந்தின் வரலாற்றைக் குறிப்பிடும் ஜினகாலமாலி நூல் பற்றிய குறிப்புகளையும் சுட்டிக் காட்டுகிறது. தாயலாந்தின் நாட்டுப்புற மரபில் காமதேவி குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ளது.

வடக்கு தாய்லாந்தின் லன் னா அல்லது லன்னாவை மையமாகக் கொண்டு பல அரசுரிமைகள் உருவாகியிருப்பதாக தாய் வரலாறு குறிப்பிடுகிறது. லன், லன்னா என்பதற்கு பல்லாயிரம் நெல் வயல்கள் கொண்ட நாடு எனப் பொருள் கூறப்படுகிறது. லன்னா மக்களின் கலாச்சாரத்தில் முக்கியப் பங்காற்றியதாகக்

கூறப்படும் லன்னா பகுதியில் பண்டைய கால ஹிரன் அரசுரிமை அல்லது நகோன்யாங் அரசுரிமை (638- 1292) நிறுவப்பட்டிருக்கிறது.

தாய் மக்களின் தொன்மக் கதைகளில் நெல் பயிரிடவும், வீடுகள் கட்டவும், சடங்கு முறைகளை ஏற்படுத்தவும், மக்களை வழிநடத்தி செழிப்பானவர்களாக ஆக்கவும், தேவ உலகிலிருந்து மூன்று தேவதைகளும் ஒரு எருதும் அனுப்பப்பட்டதாகவும், தாய் மக்களிடையே எழும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு இந்திரனின் மகனான குன் போரோம் அல்லது குன் பூளம் அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. குன் போரோம் லாவாவாக தாய் மக்களின் மூத்தவராக பெரிதும் மதிக்கப்படுகிறார். குன் போரோமின் ஒரு மகனான குன் சைபோங் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் வடக்கு தாய்லாந்தின் சிங்கவதி அரசுரிமை, நாற்பதிற்கும் மேற்பட்ட அரசர்களால் ஆளப்பட்டதாகக் கூறப்படுகிறது. பொது ஆண்டின் எழுநூற்றி எழுபத்து மூன்றாமாண்டில் குன் போரோவின் மாமாவான சிங்கனாவதி அவர்களால் நாகர்களின் உதவியோடு நாகபுந்து - சிங்கனாவதி நகரம் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

சிங்கனாவதிப் பேரரசின் தொடர்ச்சியாக கருதப்படும் லன்னா அரசுரிமையைத் (1296-1558) தொடங்கியவராக, நகோன்யாவ் அரசுரிமையின் இருபத்தைந்தாவது அரசரும் லன்னாவின் முதல் அரசருமான மாங்கரை அரசர் (1238-1317) குறிப்பிடப்படுகிறார். மாங்கரை அரசர் 1291-ல் ஹரிபுஞ்சையை தோற்கடித்து மாங்கரை பேரரசோடு இணைத்துக் கொண்டதோடு ஹரிபுஞ்சை அரசுரிமை முடிவுக்கு வந்திருக்கிறது. சிறந்த அரசராகக் குறிப்பிடப்படும் மாங்கரை பேரரசரின் பேரன் கம் ∴பூ மாங்கரை அரசை ஒன்றிணைத்து வலிமையான அரசாட்சியாக நிலைப்படுத்தியவராகக் புகழப்படுகிறார்.

தாய்லாந்தின் வட மத்தியில் தோற்றவிக்கப்பட்ட சுகத்தோய் அரசுரிமை (1238-1583) புகழ்பெற்றிருந்ததோடு, தாய் வரலாற்றில் முக்கியமானதாகவும் அறியப்பட்டிருக்கிறது. சுசத்தோய் நகரையும் அதையொட்டிய பகுதிகளையும் உள்ளடக்கியிருந்த சுகத்தோய், கிமர் பேரரசிலிருந்து விடுபட்டு சுதந்திரமான நாடாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இன்பத்தின் தொடக்கம் எனும் பொருள் கொண்டதான சுகத்தோய் பேரரசு, இந்த்ராதியத்திய மன்னரால் (ஆ.காலம் 1238-1270) தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. வானத்தை அரசாள்பவர் எனும் பொருளில் போ குன் பாங் கிலாங் ஹயோ என அழைக்கப்படும் இந்த்ராதித்யர், அறிவாற்றலும்

வீரமும் நிரம்பியவராகக் புகழப்படுகிறார். பர ரூங் அதாவது பெருமைக்குரிய இளவரசர் எனும் பெயரில் அழைக்கப்பட்ட இந்திரருக்குப் பின், மூத்த மகன் பான் மியூங் ஓராண்டு ஆட்சி செலுத்தியிருக்கிறார். பான் மியூங்கிற்குப் பின் இளைய மகன் ராம்ஹாம்ஹோங் ஆட்சிக்கு வந்திருக்கிறார்.

சயாமின் மிக்க புகழ் பெற்றவராகக் குறிப்பிடப்படும் ராம் ஹாம்ஹேங் பேரரசர் (1279-1298) குறித்து பல தொன்மக் கதைகள் தாய் மக்களிடையே வழக்கத்திலுள்ளதாகக் கூறப்படுகிறது. கிமர் பேரரசின் சிற்றரசராக இருந்த இந்திராதித்யர் சுகத்தோய் நகர் மீது படையெடுத்த போது இளவரசரான கிராம் வீரதீரமாக போர் புரிந்திருக்கிறார். வணக்கத்திற்குரிய அரசர் எனவும் அரசராக முடிசூட்டப்பட்டவர் எனவும் பொருள் கொள்ளும் பரா அல்லது பரோ அல்லது பாயா எனும் அடைமொழியும், ஹாம் ஹேங் அதாவது வீரமானவர் எனும் அடைமொழியும் கொண்டு பரா இராம் ஹாம் ஹோங் என அழைக்கப்பட்ட இளவரசர், பின்னர் மன்னராக மிக்க புகழுக்குரியவராக ஆட்சி செலுத்தியிருக்கிறார்.

போ குன் ராம்ராஜ் எனும் பெயரிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் ஹாம் ஹேங் அரசர், அண்டை நாட்டு மாங்கரை அரசரோடும், நுகம் மியுங் அரசரோடும், நட்புறவு கொண்டிருந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். சமஷ்கிருத பாளி மற்றும் கிரந்த எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தாய் எழுத்தை வடிவமைத்தவராக பேரரசர் ராம்ராஜர் போற்றப்படுகிறார். சீன யாங் அரசோடு தூதரக உறவுகளைப் பேணியவராகவும், சாங்கோலக் எனும் பெயரால் குறிப்பிடப்படும் பீங்கான் தொழில் நுட்பத்தை சீனாவிலிருந்து தருவித்தவராகவும், புத்த மதத்தை தாய் மதமாக்கியவராகவும் பரோ ராம் பேரரசர் குறிப்பிடப்படுகிறார்.

அரசர் பரா இராமரின் பேரனான முதலாம் மகாதம்மராஜர் எனும் லீதாய் அரசரின் ஆட்சிக் காலம் வரை (1347-1368) சுதந்திரமான அரசாக இருந்த சுகத்தாய் அரசு, பின்னர் வந்த இரண்டாம் தர்மராஜர் (1368-1399) காலத்திற்குப் பின் அயோத்திய அரசுடன் ஒன்றாக இணைந்துவிட்டதாக அறியப்படுகிறது.

முதலாம் தம்மராஜர், புத்த அண்டவியல் தொடர்பான மூன்று உலகங்கள் - பராரூங் எனும் வரலாற்று முக்கியத்துவமுள்ள நூலினை எழுதியுள்ளதாகக் புகழப்படுகிறார். மூன்று உலகங்களும் கர்மங்களால் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ளதை விளக்கும் பேரரசர், அரசர்களுக்கான பத்து நற்பண்புகளையும்

முன்மொழிகிறார். த்ரை பூமி நூல், அயல்நாட்டு அரசியல் மாற்றங்களைப் பதிவு செய்துள்ள முக்கியமானதொரு அரசியல் நூலாகவும் குறிப்பிடப்படுகிறது. தர்மராஜாவான லிதாய், பல புத்தபாதங்களையும் (புத்தரின் கால்தடங்கள்) பிரபுத்த சின்னம் எனும் மிகப்பெரிய புத்தரின் சிலையும் அமைத்தவராக வரலாற்றில் நினைவு கூறப்படுகிறார்.

சயாமின் அயூத்திய அரசுரிமை (1351-1767) உலகின் பல்வேறு நாடுகளுடனான வணிகத் தொடர்பாலும் செல்வ வளத்தாலும் சிறப்புற்று விளங்கியிருக்கிறது. லாவோ அரசுரிமையின் தொடர்ச்சியாகக் கருதப்படும் அயோத்யப் பேரரசு சுவர்ணபூமி, உதாங், சுகத்தோய் மற்றும் தம்மசோன் அரச மரபைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. சுகத்தோய் மரபு அயோத்தியப் பேரரசோடு இணைந்து விட்டிருந்தாலும், அயோத்திக்கு உட்பட்டிருந்த சுகதோய் அரச மரபு நீடித்தே வந்திருக்கிறது.

மாங்கரை பேரரசரின் வழிவந்தவரான தங்கத் தொட்டில் எனும் பொருள் கொண்ட உதாங் அரசர், முதலாம் இராமாதிபோதியாகவும் குறிப்பிடப்படுகிறார். சிறப்பான அரசராகக் கூறப்படும் உதாங் காலத்தில் (1314-1369) உள்துறை, கருவூலம், அரண்மனைக் கவனிப்பு மற்றும் வேளாண்மைக்கு என நான்கு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அயோத்தியப் பேரரசை நிறுவியதோடு அயோத்யா நகரையும் வடிவமைத்த உதாங் பேரரசர், மிங் அரச மரபோடு நல்லுறவு பேணியவராகவும் புகழப்படுகிறார். அயோத்தியாவின் உதாங் மரபு (1350-1370) மற்றும் (1388-1409) கால கட்டங்களிலும், சுவர்ணபூமி (1370-1388) மற்றும் (1409-1569) காலகட்டங்களிலும், சுகத்தோய் (1569-1629), பிரசாத் தோங் மரபு (1630 -1688), பான் புலு லான்ங் மரபு (1688-1767) காலங்களிலும் அயோத்தி அரசர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

அயோத்தியின் இராமாதிபோதி அரசரின் மகனான சோம்தேவ் பர ராமசுயனைத் (1339-1395) தோற்கடித்து, சுபன்பூரி சுபன்னபூம் என அழைக்கப்படும சுவர்ணபூமியின் அரசர் முதலாம் சோம்தேவ் போரோமாரசா (1370-1388) அயோத்தியின் அரியணை ஏறியிருக்கிறார். சிறந்த வீரரான போரோ மகாராஜா சயாமின் வடபகுதியில் அயோத்தியப் பேரரசை விரிவுபடுத்தியவராகக் குறிப்பிடப்படுகிறார். உதாங் எனவும் குறிப்பிடப்படும் சுபன் பூரி, பர்மியர்களுடனான பல போர்களில் முக்கிய இடம் பெற்றுள்ளது. முக்கியமாக சயாமின் மாவீரர்

நரசயனுக்கும், பர்மாவின் அரியணை இளவரசர் மிங்யி ஸ்வா விற்கும் இடையே 1593-ல் சுபன் பூரியில் நடைபெற்ற நேருக்கு நேர் யானைச் சண்டை, தாய் வரலாற்றில் மிகவும் புகழ்பெற்றது எனில் மிகையாகாது.

யானைகளுக்கு, குறிப்பாக வெள்ளை யானைகளுக்குப் பெயர் பெற்ற நாடு தாய்லாந்து. வெள்ளை யானை பூமி என்றே குறிப்பிடப்படும் தாய் நிலத்தில் வெள்ளை யானைகளுக்கு மிகுந்த மரியாதை அளிக்கப்படுகிறது. தேவ உலகின் தலைவரான இந்திரரின் வாகனம் ஐராவதம் எனும் வெள்ளையானை என்பதும், புத்தர் வெள்ளை யானையின் முதுகில் ஏறி மாயாதேவியின் கருவில் நுழைந்தவர் என்பதும், வெள்ளை யானைகளை தாய் இந்து மற்றும் புத்த சமயங்களில் மதிப்பு மிக்கவையாக மாற்றியிருக்கலாம் எனும் கருத்தும் குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்திற்கு அடுத்த படியாக வெள்ளை யானைகள் அதிகம் கொண்ட நாடாக மியான்மர் இடம் பெறுகிறது. வெள்ளை யானை உள்ள நாடு செழிப்பாக இருக்குமென்றும், மக்கள் அமைதியாக வாழ்வரென்றும் மியான்மர் மக்கள் நம்புவதாகக் கூறப்படுகிறது.

பர்மா எனும் மியான்மார் பழங்காலம் முதலே அறியப்பட்டு வந்திருக்கிறது. பர்மியர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ள ஐராவதி ஆறு இயற்கையின் அழகான கொடை எனில் மிகையாகாது. கிழக்கு இமயமலையில் உற்பத்தியாகி பர்மாவின் வடக்கு தெற்காக பாய்ந்தோடி வரும் போற்றுதலுக்குரிய ஐராவதி, இரண்டாயிரத்து நூற்றி எழுபது கிலோமீட்டர்கள் பூமியை நனைத்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது. ஐராவதி டால்பின்கள், ஐராவதி சிற்பிகள் மற்றும் ஏராளமான மீன் வகைகளுக்கும் புகழ்பெற்ற ஆறு, ஐராவதி நீர்ப்பாசனம் மூலம் உலகின் அதிகம் நெல் விளையும் மண்ணாக பர்மாவை செழிக்க வைப்பதோடு, சிறந்ததொரு நீர் வழிப் போக்குவரத்தையும் பெற்றிருப்பது சிறப்பிற்குரியது.

பர்மாவில் சுமார் பதின்மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனித இனம் வாழ்ந்து வருவது அகழாய்வுகளால் கண்டறியப்பட்டிருக்கிறது. மண்டேலே பகுதியில் வெங்கல இரும்பு கலாச்சாரம் செழுமைபெற்றிருந்ததும், சமோன் பள்ளத்தாக்குப் பகுதிகளின் அரிசி பொது ஆண்டிற்கு முன்பிருந்தே சீனா மறறும் இந்திய வணிகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

பொது ஆண்டிற்கு முன்பான இரண்டாம் நூற்றாண்டில், சீனாவின் யுனான் பகுதியிலிருந்து வந்த பியு மக்கள் ஐராவதி சமவெளியில் குடியேறியிருக்கின்றனர். பியு மக்கள் கன்சூ மாநிலத்தவராக இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. பர்மாவின் தொல் குடியினரான பியு மக்கள் குறித்து பதிவுகள் உள்ளதெனக் குறிப்புகள் சுட்டுகின்றன. பியு மக்கள் காலத்தில் பர்மா நிலப்பகுதி வழியாக சீன-இந்திய வணிகம் சிறப்புற்று விளங்கியதாகக் கூறப்படுகிறது. தென்னிந்தியாவுடனான வணிகத் தொடர்புகளால் புத்த மதம் பர்மாவில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. நான்காம் நூற்றாண்டிற்குள்ளாகவே ஐராவதி சமவெளியில் புத்தம் பெருவாரியாகப் பரவிவிட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

வடக்கு பர்மாவில் பொது ஆண்டிற்கு முன்னான இரண்டாம் நூற்றாண்டு தொடங்கி பதினோறாம் நூற்றாண்டு வரை நகர வளர்ச்சியைக் கொண்டிருந்த பல்வேறு புயு நகர அரசுகளில், ஆயிரமாவது ஆண்டில் புயு, இரண்டாம் மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டதான ஸ்ரீஷேத்ர அரசுரிமை, புகழ்பெற்றதாக விளங்கியிருக்கின்றன. திபெத்திய-பர்மிய மொழி பேசிய புயு மக்களின் பண்பாட்டில், இந்தியாவின் தாக்கம் மிகவும் மிகுந்திருந்ததாகக் அறியப்படுகிறது. பர்மிய நாள்காட்டி, பர்மிய மொழி, புத்த மதம், கலைகள் என பண்டைய பர்மாவில், இந்தியா மிகுந்த செல்வாக்குச் செலுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சைனோ-திபெத்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பர்மிய மொழி, பல்லவ கிரந்தத்திலிருந்து உருவான மோன் அல்லது புயி வரிவடிவத்தில் பர்மிய அரிச்சுவடியில் எழுதப்படுகிறது. புயி பர்மிய மொழியில் சமஷ்கிருதம் மற்றும் பாளியின் தாக்கம் அதிகம் எனக் கூறப்படுகிறது. பர்மாவின் அலுவல் மொழியான பர்மியம் சீனத்தைவிட திபெத்தோடு அதிகம் நெருங்கியதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கிழக்கு ஆசிய மரபைச் சேர்ந்த திபெத் - சீன மொழி பேசிய பாமர் மக்கள் வடக்கிலிருந்தும், இந்திய-சீன எல்லைப்பகுதியிலிருந்தும் வடக்கு பர்மாவின் ஐராவதி பகுதியில் சுமார் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் குடியேறியதாகக் கூறப்படுகிறது. அடுத்த ஆயிரம் வருடங்களில், ஏற்கனவே அப்பகுதியில் வசித்து வந்த புயி மக்களை, ஆஸ்த்ரோ ஆசிய மொழியின் மோன் மொழி பேசிய மோன்

மக்களை வெளியேற்றியும் அவர்களோடு ஒன்றிணைந்தும் அப்பகுதியின் முதன்மை மரபினராக உண்டானதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பர்மாவின் முதன்மையான மரபாக இருப்பது பாமர்களே. தேராவாதப் பௌத்தத்தைப் பின்பற்றும், பர்மிய மொழி பேசும், பர்மிய லுங்கி உடையனியும், பர்மிய கலாச்சாரம் பேணும் பாமிய மக்கள், பர்மா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளில் அதிகம் வாழ்வதாகக் குறிப்பிடப்படுகிறது. பர்மாவின் மற்ற முக்கிய இனங்களாக ரக்கைன், மர்மா, சக்மா, யி, நகி, திபெத்தியர் போன்றோர் இடம் பெற்றுள்ளனர்.

நல்வாய்ப்பின் நிலம், பெருமையின் நிலம் எனக் குறிப்பிடப்பட்ட ஸ்ரீஷேத்ர அரசு பொது ஆண்டிற்கு முன்பான நானூற்றி எண்பத்தி நான்கு மற்றும் பொது ஆண்டின் தொன்னூற்றி நான்காம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்ததாக பர்மிய வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. பர்மாவின் வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் மோன் பேசிய மக்களில், தென் பர்மா பகுதியில் தடோன் அரசுரிமை (ஒன்பதாம் நூற்றாண்டு முதல் 1057 வரை), ஹன்தவாடி அரசுரிமை (1287-1539 மற்றும் 1740-1757) போன்றவை நிறுவப்பட்டிருக்கின்றன.

தென் பர்மாவின் அரசமரபு காலக்கணக்கு விரிவாகவும் தொடர்ச்சியாகவும் காலவரிசைப்படி பாதுகாக்கப்பட்டும் வந்துள்ளது. பர்மாவின் புகழ்பெற்ற மன்னர்களைப் பற்றி பதிவிட்டுள்ள பர்மாவின் காலக் கணக்கு குறிப்புகள், தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகச் சிறப்பான வரலாற்றுக் குறிப்புகள் கொண்ட நாடு எனும் பெருமையை பர்மாவிற்கு அளித்திருக்கிறது. பனை ஓலைகளிலும், மணிகளிலும், கற்களிலும் பரபைக்ஸ் எனப்படும் தடிமனான தாள்களிலும் செய்யுள், பாட்டு, காலக் கணிப்பு எழுத்துக்கள், போன்ற வடிவங்களில் எழுதப்பட்ட பதிவுகள் மேல் பர்மா, கீழ் பர்மா, அரகான் மற்றும் ஷான் அரசுகளில் (பர்மாவை ஆண்ட தாய் அரசுரிமைகள்) பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றன.

அதிகமும் சுவடிகளில் பதியப்பட்டுள்ள காலக் கணக்குகள், அரசர்களின் ஆட்சிக் காலத்தைப் பற்றி அதிகம் விவரிப்பதாகவும், ஓரளவிற்கு அரசுகளின் பொதுத் தகவல்களைக் கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. மியான்மரின் புகழ்பெற்ற பாகன் பேரரசுக்கு (849-1297) முன், தொன்மக் கதைகளும் புகழ்ச்சிகளும் அதிகம் கொண்டிருக்கும் பதிவுகள், பாகன் காலத்திற்குப் பின் ஓரளவிற்கு சரியான

தகவல்களுடன் பதியப்பட்டுள்ளதாகவும் வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது.

யஜாவின்ஸ் (பாளியில் ராஜமரபு) அய்டவ்பான்ஸ் (அரச நினைவுகள், போராட்டங்கள்) எனும் பெயர்களில் அழைக்கப்படும் காலக்கணக்கு புத்தகங்களில் புகழ்பெற்றதான மகாயஜாவின் 1724 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. டோங்கூ அரசவையின் யுகலா (1678-1738) எனும் வரலாற்றாசிரியர் மற்றும் காலக்கணக்காயரால் தொகுக்கப்பட்ட மகாயஜாவின், பர்மாவின் பண்டைய கால வரலாற்றைச் சொல்வதில் முக்கியமானதாக அறியப்பட்டிருக்கிறது. பர்மாவின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்த காலக் கணக்கு வரலாற்றைத் தொகுத்தவரான யு கலா, மகாவம்சம் மற்றும் அயோத்யா காலக்கணக்கு விவரங்களையும் கணக்கிலெடுத்திருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது. டோங்கூவின் பிந்தைய காலத்தில் தொகுக்கப்பட்ட நூலில், முக்கியத்துவம் நிறைந்த பல தகவல்கள் தேதிகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

1798 ல் எழுதப்பட்ட யஜாவின் திட் அதாவது புதிய காலக் கணக்குப் புத்தகம், அறுநூறுக்கும் மேற்பட்ட கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு மகா யஜாவின் தகவல்களை சரிபார்க்கும் விதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மகா யஜாவின் தகவல்களை குறை கூறும் விதத்தில் எழுதப்பட்ட யகாவின் திட், அரசரால் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹமன்னன் யஜாவின் (கண்ணாடி அரண்மனை காலக்கணக்கு), துடியா யஜாவின் (இரண்டாவது காலக்கணக்கு) போன்றவை பிற்காலத்திய காலவரிசை கணக்காகக் கொள்ளப்படுகின்றன.

மியான்மர் வரலாற்றில் பாகன் அரசாட்சிக்காலம் பொற்காலமாகக் புகழப்படுகிறது. தற்காலத்திய பர்மாவின் சிறப்புக்களுக்கெல்லாம் காரணமாகக் குறிப்பிடப்படும் பாகன் பேரரசு, பர்மாவின் வரலாறு, கலை, மொழி, சமயம், பண்பாடு என பாமியர்களின் அனைத்து நிலைகளிலும் செறிவான தாக்கங்களை விட்டுச் சென்றுள்ளது. மிரான்மா, பர்மன், பாமர் என பலவாறாகக் குறிப்பிடப்படும் பர்மிய பாகன் மூதாதையர், தெற்கு சீனாவின் நன் சாவோ பகுதியிலிருந்து, ஐராவதி சமவெளிக்கு குடியேறியவர்களாகக் கருதப்படுகின்றார். ஒன்பதாம் நூற்றாண்டில் சிறு அளவிலான குடியேற்றமாகக் தொடங்கிய பாகன்கள், அடுத்த நூறு ஆண்டுகளுக்குள் அருகிலிருந்த பகுதிகளையெல்லாம் உள்ளடக்கி பெரியதொரு

அரசாக தோற்றம் பெற்றிருக்கின்றனர். பாகன்களின் முதன்மையான அரசராகக் கருதப்படும் அனவ்ரத்தா மின்சா அரசர் (1014-1077), பாகன் பேரரசை உருவாக்கியவராகவும் பர்மியர்களின் தந்தையாகவும், பர்மிய வரலாற்றின் தொடக்கமாகவும் புகழப்படுகிறார். அனவ்ரத்தா பேரரசர் ஐராவதி சமவெளியை நெற்களஞ்சியமாக மாற்றியதாகப் புகழப்படுகிறார்.

பேரரசர் அனவ்ரத் உருவாக்கிய பாகன் பேரரசு, அடுத்து வந்த இருநூற்றி ஐம்பது ஆண்டுகள் புகழ்பெற்றதாக விளங்கியிருக்கிறது. தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் மிகுந்த செல்வாக்கு செலுத்திய பாகன் பேரரசு, வடக்கு தாய்லாந்து வரையிலும் பரவியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அன்றைய காலத்தில் பாகன் மற்றும் கிமெர் பேரரசுகளே வலிமையான பேரரசுகளாக இருந்திருக்கின்றன.

அனவ்ரத் பேரரசர் தொடங்கி வைத்த பாகன் பேரரசை அரவரது மகன் கயன்சித்தா சிறப்பாக முன்னெடுத்திருக்கிறார். பேரரசர் கயன்சித்தா ஆட்சிகாலத்தில் (1084-1112/13) பர்மிய மொழியும், பர்மியக் காலச்சாரமும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. மோன் கலாச்சாரத்தின் மீதும் காதல் கொண்டிருந்த பேரரசர், பர்மன், மோன், புயி மற்றும் புத்த மத கலாச்சாரங்கள் பர்மிய மண்ணில் செழித்து வரை வழிவகை செய்தவராகவும் புகழப்படுகிறார்.

கயன்சித்தா காதலுக்காக இருமுறை நாடுகடத்தப்பட்டிருக்கிறார். பாகனுக்கு உட்பட்டிருந்த ஹன்தவாடி என அறியப்பட்ட பெகு (பாகு) நாட்டை, தாய்லாந்தின் சியாங்மை அரசு முற்றிகையிட்டதாகவும், அங்கு அனுப்பப்பட்ட இளவரசர் காயன்சித்தா சியாங்மையை வெற்றி கொண்டு பெகு அரசுரிமையை மீட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. அதற்கு நன்றிக் கடனாக பாகு அரசர் அவரது அழகிய இளவரசியை அனவரத் பேரரசருக்குக் கொடுத்திருக்கிறார். நீண்ட தூரப் பயணத்தில் வந்த கயன்சித்தாவுக்கும் மணிசத்தாவுக்கும் காதல் மலர்ந்து விட்டது. கோபம் கொண்ட பேரரசர் கயன்சித்தாவை நாடு கடத்திவிட்டு வளர் இளம் பருவத்திலிருந்த மணிசத்தாவை அரசிகளுள் ஒருவராக ஆக்கியிருக்கிறார்.

அனவ்ரத் பேரரசருக்குப் பின் பேரரசரான சவ்லு (1077-1084) மணிசத்தாவை அவருக்குச் சொந்தமாக்கியிருக்கிறார். அரசாட்சி செலுத்துவதில் விருப்பமில்லாதவராகக் குறிப்பிடப்படும் சவ்லு பேரரசர், அனவ்ரத் பேரரசருக்கும்

அவரது துணையாவியான விதாலி இளவரசி பியின்சா கல்யாணிக்கும் பிறந்த கயன்சித்தாவை, அரகன் பகுதி கலவரங்களை அடக்கும் விதமாக தண்டனையிலிருந்து விலக்கியிருக்கிறார். அரண்மனைக்கு வந்த கயன்சித்தா-மணிசத்தா காதல் புதுப்பிக்கப்பட கோபமாக சவ்லு, கயன்சித்தாவை யாங்கூ பகுதிக்கு நாடு கடத்திவிட்டார்.

பெகு மன்னருக்கு பின், சவ்லு பேரரசரின் நெருங்கிய நண்பராக இருந்த யமன்கான் அரசராகியிருக்கிறார். பாகன் பேரரசரிடமிருந்து பெகுவை விடுவித்துக்கொள்ள யமன்கான் முயற்சி செய்ய, நண்பர்களுக்குள் சண்டை உருவாகியிருக்கிறது. பாகன் முற்றுகையிடப்பட உதவிக்கு கயன்சித்தா அழைக்கப்பட்டிருக்கிறார். பாகன் படைத்தளபதியாக நியமிக்கப்பட்ட கயன்சித்தா பேச்சை மீறி, சவ்லு பேரரசர் யமன்கான் படையை நோக்கி முன்னேறியதாகவும், பின்னர் யமன்கானால் சாவ்லு மன்னர் பிடிக்கப்பட்டு, பெகுவில் சிறை வைக்கப்பட்டதாகவும் காலக்கணக்கு நூல்கள் குறிப்பிடுகின்றன. எவ்வளவோ முயற்சிகள் செய்தும் சாவ்லுவை மீட்க இயலவில்லை எனவும், சாவ்லு மற்றும் யமன்கான் முடிந்து போக, மணிசத்தாவை அரசியாக்கி, பாகனின் மூன்றாவது பேரரசராக கயன்சித்தா முடி சூட்டப்பட்டிருக்கிறார். காதலில் மட்டுமல்லாது பர்மாவின் புகழ்பெற்ற ஆனந்தா புத்த விகாரையைக் கட்டியவராகவும் காயசிந்தர் புகழப்படுகிறார்.

பேரரசர் அலௌங்சித்து அல்லது முதலாம் சித்து அல்லது முதலாம் கன்சு (1112-1167) அதிகளவில் நீர்ப்பாசனத் திட்டங்களை முன்னெடுத்தவராகவும் கட்டிடங்கள், பகோடாகள் எழுப்பியராகவும், நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தவராகவும், மோன் நாகரிகத்திலிருந்து பாமிய நாகரிகத்திற்கு மக்களை வழிநடத்தியவராகவும் புகழப்படுகிறார். தேராவாத புத்தத்தைப் போற்றிய அலௌங்சித் பேரரசர், புகழ் பெற்ற தட்பியுன்னு விகாரையை பர்மிய கட்டடக் கலையில் உருவாக்கியவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

மங்கோலியர்களின் படையெடுப்புகளால் நிலை குலைந்த பாகன் பேரரசு, அதன் அளவுக்கு அதிகமான கொடைகளால் குறிப்பாக வரியில்லாமல் நிலங்களை விகாரங்களுக்கு வாரி வழங்கியதில், அரசிற்கு வருவாய் இல்லாமல் பேரரசை நிர்வகிக்க முடியாமலும், சிற்றரசர்கள் தனிநாடாகக் செல்வதை தடுக்க

முடியாமலும், மோன் மக்களின் எழுச்சியை அடக்க இயலாமலும், வீழ்ச்சியுற்றதாக வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

பாகன் பேரரசின் பெருமைகளைப் போற்றும் எண்ணற்ற புத்த விகாரங்கள் பாகன் தலைநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ன. பர்மாவின் மத்திய பகுதியான மண்டேலாவுக்கு தெற்கே அமைக்கப்பட்டிருந்த பாகன் தலைநகரின் ஐராவதி ஆற்றை ஒட்டிய பகுதிகளில் பத்தாயிரத்திற்கும் அதிகமான புத்தக் கோவில்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. கெமர்களின் அங்கோர்வாட் போல் புகழ்பெற்று விளங்கும் பர்மாவின் புத்தக் கோவில் வளாகத்தில், இரண்டாயிரத்து இருநூறு புத்தக் கோவில்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பல்வேறு மன்னர்களால் உருவாக்கப்பட்ட பாகன் புத்தக் கோவில்கள், பாமியர்களின் பெருமைக்கும் புகழுக்கும் வரலாற்றிற்கும் சான்றுகளாக நிற்கின்றன எனில் மிகையாகாது.

பாகன் வீழ்ச்சிக்குப் பின் எழுந்த மியன்சைங், பின்யா, சகைங் போன்ற சிறு அரசுகளுக்குப் பின் உருவான அரசு அவா அரசுரிமை (1364-1558) என அழைக்கப்படுகிறது. பாகன் வழிவந்தவராக அறிவித்துக்கொண்ட தடோ மின்ப்யா (1345-1367) அரசரால் தோற்றுவிக்கப்பட்ட அவா அரசாட்சி, மத்திய பர்மாவை ஒன்றிணைத்ததில் முக்கியப் பங்கு வகித்திருக்கிறது.

கிழக்கு மியான்மர் பகுதிகளில் குறு நில அரசர்களாக இருந்த ஷான் அரசர்கள் சொர்க்கத்தின் தலைவர்கள் எனும் பொருளில் ஷான் சவோபா, சவோ பா, சா-பா எனும் பெயரில் குறிப்பிடப்பட்டு வந்திருக்கின்றனர். பர்மாவை ஆட்சிபுரிந்த பிரித்தானியர் காலத்திலேயே பதினான்கு முதல் பதினாறு ஷான் குறுநில அரசர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் ஆங்கிலப் பேரரசின் சமஸ்தானங்களாக மாற்றப்பட்ட ஷான் 1215 முதல் 1563 வரை குறிப்பிடத்தக்க பகுதியாக பர்மிய வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

அவா அரசாட்சியின் வீழ்ச்சிக்குப்பின் எழுச்சி பெற்ற பெரு அரசுரிமை எனும் ஹன்தவாடி பெரு அரசுரிமை, 1420 முதல் 1530 வரை பர்மாவின் முக்கியமானதொரு அரசாட்சியாக, பொற்கால ஆட்சியைக் கொடுத்ததாகப் புகழப்படுகிறது. அரசர்க்கெல்லாம் அரசராக அறியப்படும் பேரரசர் ரஜாதாரித்து (ஆ.கா. 1384-1421), தெற்கு பர்மாவின் மோன் பகுதிகளை மறுபடியும் ஒன்றிணைத்தவராகவும் போர்களில் சிறந்தவராகவும் புகழ்ப்படுகிறார். பின்வந்த பேரரசர் முதலாம் பின்யா

ரான் (1424-1446), பேரரசி ஷின் சௌபு (1454-1471), பேரரசர் தம்மசேதி (1471-1492) போன்றோர் ஆட்சிகாலத்தில், ஹந்தவாடிப் பேரரசு வணிகத்திலும் நிர்வாகத்திறனிலும் சிறப்புற்று விளங்கியிருக்கிறது.

வங்காள விரிகுடாவின் கிழக்குக் கடற்கரை பகுதியில், வங்காளதேசம் மற்றும் அரகான் எனும் ரக்கின் பகுதியில் அரசாண்ட மருக்-உ அரசுரிமை (1429-1785) அரக்கானிசை தலைநகராகக் கொண்டு வணிகத்தில் சிறப்புற்று விளங்கிய பர்மியப் பேரரசாகக் குறிப்பிடப்படுகிறது. பதினைந்தாம் நூற்றாண்டில் நரமெய்க்கலா அரசரால் (1404-1434) தோற்றுவிக்கப்பட்ட மருக்உ அரசுரிமை, அவரது வங்காளத் தொடர்புகளால் இஸ்லாமிய சுல்தானமாகக் குறிப்பிடப்படுகிறது. நாடு கடத்தப்பட்டிருந்த நரமெய்க்கல அரசர், வாங்காள சுல்தானத்தின் உதவியுடன் அரசுரிமையை 1430 இல் மீட்டதால், சுல்தானத்திற்கும் இஸ்லாமியர்களுக்கும் மருக்-உ அரசுரிமையில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பௌத்தர்களாக இருந்தும் மருக்-உ அரசர்கள் இஸ்லாமிய பட்டங்களையே சூட்டிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

டோன் கூ, பெரு, அவா எனும் இன்வா நகரங்களைத் தலைநகராகக் கொண்டிருந்த டேன்கூ பேரரசு (1510-1752) பாமியன் வரலாற்றில் புகழ்பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. டோன் கூ பேரரசு மணிப்பூர், ஷான் பகுதிகள், சியாம், லான் ஷாங் போன்ற பகுதிகள் வரை பரந்து விரிந்திருந்திருக்கிறது. தென் பர்மாவின் மோன் மக்கள் இழந்த ஹனதவாடி அரசை மீண்டும் ஏற்படுத்தும் வரை, டோன் கூ மிகுந்த செல்வாக்குடன் விளங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. டோன் கூ பேரரசிற்குப் பின் உருவான பர்மியர்களின் மூன்றாம் மற்றும் கடைசிப் பேரரசாகக் குறிப்பிடப்படும் கோன்பான் அரசுரிமை (1752-1885) டோன் கூ அரசர்களின் நிர்வாகத்திறனைப் பின்பற்றி பல சீர்திருத்தங்கள் மேற்கொண்டு அரசாண்டிருக்கிறது. எனினும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஈடு கொடுக்க முடியாமல், பர்மிய பிரித்தானிப் போர்களின் முடிவில் (முதலாம் போர் 1824-1826, இரண்டாவது 1852-1853, மூன்றாவது 1885-1886) பர்மா முழுவதும் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு பிரித்தானிய நாடளுமன்றத்தால் 1886 ஜனவரியில், விக்டோரியா மகாராணியாருக்கு புத்தாண்டு பரிசாக அளிக்கப்பட்டிருக்கிறது. ஐராவதி சமவெளியை நெற்களஞ்சியமாக மாற்றிய ஆங்கிலேயருக்கு உதவ தமிழர்களும், வட்டித் தொழில் நடத்த செட்டியார்களும் பர்மா சென்றது தனிக்கதை.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் ஆட்சிக்குப்பட்டிருந்த போது, சயாமிலிருந்து பர்மா வரை ஜப்பானியர்களால் அமைக்கப்பட்ட ரயில்பாதை, வரலாற்றின் துயரம் நிறைந்த நிகழ்வுகளுள் ஒன்றாக நினைவுகூறப்படுகிறது.

நவின பர்மாவின் தந்தையாக புகழ்பெற்ற ஆங் சான் (1915-1947) போற்றப்படுகிறார். பர்மிய பொதுவுடைமைக் கட்சியின் நிறுவனரான ஆங் சான் அவர்கள், பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து பர்மா விடுதலை பெற்றதற்கான போராட்டங்களை முன்னெடுத்தவராக அறியப்படுகிறார். இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகவும், பின்னர் 1937-ம் ஆண்டிலிருந்து பர்மிய அரசாகவும் இருந்து வந்த பர்மாவோடு, ஸ்காட்லாந்தின் ஜேம்ஸ் ஸ்காட் (1851-1935) மிகவும் நெருக்கமானவராகப் அறியப்படுகிறார். பிரித்தானியக் குடியேற்ற நாடாக பர்மாவை மாற்றியதில் முக்கியப் பங்காற்றியவராகவும் குறிப்பிடப்படும் ஸ்காட், பர்மாவைப் பற்றி ஏராளமான நூல்களை எழுதியிருக்கிறார். பர்மனது வாழ்கையும் விருப்பங்களும் (தி பர்மன் .ஹிஸ் லை.ப் அண்டு நோசன்ஸ்) எனும் ஸ்காட்டின் நூல், பர்மியர்களின் வாழ்க்கையையும் கலாச்சாரத்தையும் விருப்பு வெறுப்பின்றி மிகவும் அழகாகப் படம்பிடித்துக் காட்டுவதாகப் புகழப்படுகிறது.

1948 ஜனவரி நான்காம் நாள் சுதந்திரமடைந்த பர்மா நாடு, தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்களும், இன மோதல்களும், இராணுவப் புரட்சி ஆட்சிகளும் கொண்டதாகவே வரலாற்றில் இடம் பெற்று வருகிறது. பழைய தலைநகராக இருந்த புகழ்பெற்ற பண்டைய நகரான இரங்கூன் தமிழர் வாழ்வோடு மிகவும் நெருக்கமானதாக இருந்து வந்துள்ளது. நாட்டின் பெயரையும் தலைநகரையும் மாற்றிய மியன்மாரில் ஜனநாயக நடைமுறைக்காக மிக நீண்டகாலமாகப் போராடி வருபவரான ஆங்சான் அவர்களின் மகள் புகழுக்குரிய ஆங்சாங் சூகி (பிறப்பு 1945) பர்மிய மக்களின் அன்பிற்குரியவராகத் திகழ்கிறார்.

தாய்லாந்தின் அயோத்தியப் பேரரசு (1351-1767), லாவோஸின் லான் ஷாங் பேரரசு (1354-1707) மற்றும் மியான்மரின் துன்கூ பேரரசு (1510-1752) சம காலத்தவையாக இருந்ததால், ஆட்சி அதிகாரங்களில் எல்லை விரிவாக்கங்களில் முரண்பட்டு பல போர்களில் ஈடுபட்டிருக்கின்றன.

அமைதி, சுதந்திரம், மக்களாட்சி, ஒன்றியம், செல்வம் முதலியவற்றைக் குறிக்கோளாகக் கொண்ட லாவோஸ் எனப்படும் லாவ் மக்களின் மக்களாட்சிக்

குடியரசு, வடமேற்கில் சீனா மற்றும் மியான்மரையும், கிழக்கில் வியட்நாமையும், தெற்கில் கம்போடியாவையும், மேற்கில் தாய்லாந்தையும் எல்லைகளாகக் கொண்ட நிலம் சூழ் நாடாக இருக்கிறது. பிரெஞ்சு குடியேற்ற நாடாக இருந்து 1953 அக்டோபர் இருபத்தி இரண்டில் சுதந்திரம் பெற்ற லாவோஸ், பண்டைய காலம் முதலே அறியப்பட்டு வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

லாவோ மொழியையும் பெரும்பான்மையான லாவோ மக்களையும் கொண்ட வாவோ நாடு, மியுங் எனும் பெயராலேயே நீண்ட காலம் அறியப்பட்டு வந்திருக்கிறது. லாவோவின் வடக்கு மாநிலங்களில் வாழும் கமு சிறுபான்மை மக்கள், குறிப்பிடத்தக்க தனித்த அடையாளம் கொண்டவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். கமு, காமு, கெமு, ஹாம்மு என்ற பெயர்களில் அழைக்கப்படும் மக்கள், ஆஸ்திரேலிய-ஆசிய மொழிக் குடும்பத்தில் வரும் கமு மொழியைப் பேசுவதாகவும், கமு மக்களின் மொழி, கலாச்சாரம், வரலாறு கொண்டு வடக்கு இந்தோ சைனாவில் குடியேறிய தொல்மரபினராக கமு குலத்தவர் இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. வேளாண்மை சமூகமான கம்மு மக்கள், அதிக விளைச்சல் வேண்டி நெல் கடவுளுக்கு அழகான நடனமாடுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

மனித நாகரிகத் தொட்டிலான மீகாங் ஆற்றுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள லாவோவின் மனித தொல்லெச்சங்கள், நற்பத்தாராயிரம் ஆண்டுகளிலிருந்து அறுபத்து மூன்றாயிரம் ஆண்டுகள் வரை பழமையானதாக இருக்கக்கூடும் என கண்டறியப்பட்டுள்ளது. லாவோ மண்ணில் கோடிக்கணக்கான வெடி பொருட்கள் புதைந்து கிடப்பதாலும், பொதுவுடமை மற்றும் உள்நாட்டுப் போர்களாலும், சிறந்த முறையிலான அகழ்வாய்வுகள் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாயிரத்து ஐந்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் நகு மீகுங் தொல்லியல் திட்டம் மூலம், மீகிங் மற்றும் அதன் துணை நதிகளில் ஏராளமான மனிதக் குடியிறுப்புகள் அறியப்பட்டிருப்பது மீகிங் பள்ளத்தாங்கின் தொல் மனிதக் குடியேற்றத்திற்கு சான்றுகளாக அமையலாம் எனக் கருதப்படுகிறது. அவர்களிலிருந்து வடக்கு லாவோவின் கம்மு, தெற்கு லாவோவின் பிரயோ மற்றும் கடங் குடிகள் போன்ற லாவோ மக்கள் உருவாகியிருக்கலாம் எனும் கருத்து குறிப்பிடத்தக்கது.

தென்சீனக் கடலில் வியட்நாம் கடற்கரைக்கு இணையாக, லாவோ, வியட்நாம் மற்றும் வடகிழக்கு கம்போடியாவின் சிறிய பகுதி வழியாக அமைந்திருக்கும் ஆயிரத்து நூறு கிலோ மீற்றர்கள் கொண்ட அன்னமைட் அல்லது அன்னமீஸ் மலைத் தொடர் முக்கியத்துவம் நிறைந்ததாகக் கருதப்படுகிறது. சீன மொழியில் தெற்கைக் குறிக்கும் அன் - னம் எனும் பெயரில் அழைக்கப்படும் மலைத் தொடரில், தெற்கு வியட்நாமின் கூரையாகக் கருதப்படும் நுகோக் லின்க், எட்டாயிரத்து ஐந்நூற்றி இருபத்தி நான்கு அடிகள் உயரமுள்ளதாக இருக்கிறது.

லாவோவில் அன்னமைட் மலைத்தொடரின் வடபுற முடிவுப் பகுதியில் அமைந்துள்ள ஜியங் கோவுங்க் பீடபூமியில், நடுகற்காலத்திய ஆயிக்கணக்கான கல்குடுவைகள் காணக்கிடைக்கின்றன. பெரும்பாலும் தொகுப்பாக அமைந்திருக்கும் நூற்றுக்கணக்கான குடுவைகள், பல்வேறு உயரங்களில் மூன்று அடியிலிருந்து பத்து அடிகள் வரை விட்டம் கொண்டவையாகவும், அகன்ற கீழ்ப்பகுதி உள்ளவையாகவும், மூடியோடும் வடிக்கப்பட்டுள்ளன. பிரெஞ்சு லாவோ மற்றும் ஜப்பானிய தொல்லியல் ஆய்வுகளின் படி, குடுவைகள் முது மக்கள் தாழி போன்று பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. பொது ஆண்டிற்கு முன் ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பொது ஆண்டின் இரண்டாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதாகக் கணிக்கப்படும் லாவோ கற்குடுவைகள், தென் கிழக்கு ஆசியாவின் முக்கியமானதொரு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய அடையாளத்திற்கான சான்றாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

புத்தமதமும் தாய்லாந்து கலாச்சாரமும் லாவோவில் பரவுவதற்கு முன் லாவோ மக்களுக்கென்று தனித்துவமான பண்பாட்டு அடையாளம் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. லாவோ மக்களிடையே முதல் லாவாவான குன் போரோம் பற்றி பல்வேறு பழங்கதைகள் நாட்டுப்புற வடிவங்கள் வழக்கத்திலுள்ளதாகக் கூறப்படுகிறது.

லாவோவின் வரலாறு தாய்லாந்து, வியட்நாம், கம்போடியா மற்றும் சீனாவோடு பின்னிப் பிணைந்துள்ளது. தென்கிழக்காசியாவில் குறிப்பிடத்தக்க பேரரசுகளுள் ஒன்றாக விளங்கிய லான் ஸாங் பேரரசு லாவோ நாட்டின் பெருமிதமாகப் புகழப்படுகிறது.

வெண்குடை கொண்ட பல்லாயிரம் யானைகளின் நாடு அதாவது லான் ஸாங் ஹோம் ஹபோ எனும் பெயரில் அழைக்கப்பட்ட லான் ஸாங் பேரரசு, ∴பா நுகும் பேரரசரால் (ஆ.கா. 1353-1372) தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. லாவோ வடமத்தியப் பகுதியின் லுவாங் பிரபாங் பகுதியை ஆண்ட மியுங் சுவா மன்னரின் மகனான பா நுகும், கிமரின் ஒன்பதாம் ஜெயவர்மனின் தத்து மகனாக கெமர் அரண்மனையில் வளர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மாவீரரான சோம்தேக் பிருகதன்ய பலதூரன்ய ஸ்ரீ சாதன கயுத மகாராஜா பிருகத் இராஜதரண்ய ஸ்ரீசுதன நேகரர் எனும் ∴பாநுகும் பேரரசர், வியட்நாமியன் சிவப்பு பள்ளதாக்கு, தாய்லாந்தின் இசன் பகுதி, மியிங்சிங் மற்றும் சியாங் ஹங் போன்ற பகுதிகளை வெற்றி கொண்டு லான் பேரரசை அமைத்திருக்கிறார். கெமர் பேரரசைச் சேர்ந்த மனைவியின் விருப்பத்திற்கிணங்கி, லானில் தேராவாத புத்த மதத்தை அரச மதமாகவும் பின்பற்றியிருக்கிறார்.

பதினைந்தாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் வெள்ளையானை ஒன்று லாவோ சக்பாத் மன்னருக்குக் கிடைக்க, அதன் முடிகளை வியட்நாமின் லீ தாங் தோங் கேட்க, லாவோ மன்னர் அதன் சாணத்தை அனுப்ப, கோபம் கொண்ட வியட் மன்னர் பெரும்படையுடன் கிளம்பி வர, லாவோ பூமியே பெரும் போர்களமாக மாறியிருக்கிறது. தலைநகர் லுவாங் பிரபாங்கைக் கைப்பற்றிய வியட்படை, மீகங் ஆற்றுப் பகுதியிலிருந்த வியன் பகுதிக்குள்ளும் நுழைந்திருக்கிறது. லாவோவின் இளவரசர் தான் காம் படையினரால், வியட்படை தடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. யானை முடிக்கான படையெடுப்பிற்குப்பின், அடுத்து வந்த இருநூறு ஆண்டுகளுக்கு லான் ஸாங் மீது வியட்நாம் பேரரசு போர் தொடுக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

லான் பேரரசர் விசோன் எனும் விசோன்ரை ஆட்சிக்காலத்தில் (1500-1520) கலைகளும் புத்த சங்கங்களும் புத்த நூல்களும் சிறப்புற்று விளங்கியிருக்கின்றன. லாவோ மொழியில் திரிபிடகம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இராமரை புத்தரின் முன் பிறப்பாகக் கொண்ட பிரலக் பிர ராம் எனும் லாவோ இராமாயணம் இயற்றப்பட்டிருக்கிறது. புத்த ஜாதகக் கதை வடிவம் கொண்டுள்ள லாவோ இராமாயணம் கெமர் நாட்டிலிருந்து வந்த ∴பா நுகும் பேரரசரால் லாவோ நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

சகோதரர் லக் மக் சகோதரர் ராம் எனும் இராமாயணத்தில், இராமர் தட்டரதரின் மகனாகவும் பிர லக்கின் சகோதராகவும் நங் சீதாவின் கணவராகவும்

இருக்கிறார். தூட்சகன் அல்லது ஹப்மனசானே என இராவணனையும் ஹனுமான் அல்லது ஹன்லமான் என அனுமனையும் குறிப்பிடும் பிர லக் பிர ராம், லாவோவின் நடனம், நாடகம், பாடல்கள், ஓவியம், சிற்பம், சமயம் என அனைத்திலும் ஊடுறுவியுள்ளதாகப் புகழப்படுகிறது.

பேரரசர் விசோன்ரைத் மகனான போதிசத் (1501-1547) லான் அரசர்களுள் குறிப்பிடத்தக்கவராக அறியப்படுகிறார். அயோத்தியாவின் சையசைதிரட் பேரரசர் (1534-1546) லான் ஸாங் மீது படையெடுத்ததாகக் கூறப்படுகிறது. தாய்லாந்தின் பேரரசராக விளங்கிய மகா சக்ரபத் ஆட்சிக் காலத்தில் (1548-1564, 1568-1569) முதலாவது பர்மிய-சயாமிய போர் (1548-49) நடந்திருக்கிறது.

பர்மிய அவாவின் ஆளுநராக இருந்த மிங்யி நியோ (1459-1530), பர்மிய அரசியல் குழப்பங்களை பயன்படுத்தி 1510 ஆம் ஆண்டில் சுதந்திரமான துங்கூ அரச மரபை உருவாக்கியிருக்கிறார். 1530-ல் பதினான்கு வயது நிரம்பிய தபின்ஸ்வேதி (ஆ.கா. 1530-1550) அரசராக முடிசூடப்பட்டு துங்கூ பேரரசை விரிவுபடுத்தி வலிமையானதாகவும் மாற்றியிருக்கிறார். பர்மிய மோன் மக்களோடு நெருக்கம் பேணிய பேரரசர், மோன் குலத்திலிருந்து மணம் முடித்தும், மோன் படைத்தலைவர்களை உருவாக்கியும் பர்மிய நிலைத்தன்மையை உருவாக்கியிருக்கிறார். சயாமின் மீது போர் தொடுத்து லான் ஸோனின் போதிசரத் பேரரசரையும் துணைக்கு அழைத்திருக்கிறார்.

பேரரசர் தபின்ஸ்வேதி, இளவரசர் பயின்னாங், புரோமின் வைசிராய், பாசின் ஆளுநர் கொண்ட பர்மன் படையினரை, பேரரசர் மகா சக்ரபாத், அரசியார் ஸ்ரீசூரியோதை, இளவரசர்கள் ராமசுன், மகிந்தரதித் கொண்ட தாய் அரச குடும்பத்தார், தலைநகர் அயோத்யா அருகில் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர். புரோமினை எதிர்கொண்ட மகா சக்ரபத் அரசரின் யானை ஓட, கணவரை காப்பாற்றப் பாய்ந்த அரசியார் வைசிராயால் முடிக்கப்பட்டிருக்கிறார். தாய் இளவரசர்கள் தீரத்துடன் மோதி பர்மன்களை பின்வாங்க வைத்திருக்கின்றனர். சாவோ பிரயோ ஆறு வழியாக துரத்திச் சென்ற தாய் இளவரசர்கள் பர்மியன்களிடம் பிடிபட்டு, அவர்களை விடுவிக்க வேண்டுமெனில் தாய் அரசர் இரண்டு ஆண் போர் யானைகளைக் கொடுக்க வேண்டுமென பர்மியன்கள் நிபந்தனை விதித்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

பர்மாவுக்கும் சயாமுக்கும் இடையில் ஏராளமான போர்கள் நடைபெற்ற போதிலும், அயோத்ய அரசரான நரசுன் (1555-1605) மற்றும் பர்மிய மிங்யி சுவா (1558-1592) இடையிலான யானை யுத்தம் பெரும் புகழ்பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

பேரரசர் மகாசத்ரபத் மகளான ஸ்வாதித்ரத்தை மணந்து கொண்ட சுகத்தோயின் பிட்சனோலோக் அரசர் மகா தம்மரசதிரட் பின்னர் அயோத்தியின் அரசராக (1569-1590) இருந்திருக்கிறார். பர்மிய பேரரசர் தபின்ஸ்வேதிக்குப் பின் அரியணை ஏறிய பயின்னாக் கியாவ்தின் நவ்ரத்தா (ஆ. கா. 1550-1581), 1563 இல் பிட்சனோ மீது படையெடுத்து, மகாதம்மரசதிரர் மகனான இளவரசர் நரசுனனை பிடித்துச் சென்றிருக்கிறார்.

மகாசத்ரபத் அரசருக்குப் பின் அவரது மகன் மகிந்தரதித் அயோத்தியின் அரசராக (1564-1568, 1569) அரியணை ஏறியிருக்கிறார். 1568 இல் மறுபடியும் படையெடுப்பு நிகழ்த்திய பர்மாவோடு, பிட்சனோக் மகாதம்மரசதிரட் அரசர் இணைந்து, அயோத்தியின் மகிந்தரதித்தை எதிர்த்திருக்கிறார். மகிந்திரதத், லான் ஸாங்கின் சேத்திரதித் பேரரசரோடு (1534- 1572) இணைந்து, சேத்திரத் பர்மிய சுகத்தோய் படைகளை எதிர்த்திருக்கிறார். போரில் வெற்றி பெற்ற பயின்னாக் பர்மிய படை, சுகத்தோயின் மகாதம்மரசதிரட்டை அயோத்யாவின் அரசராக 1569 இல் ஆக்கியிருக்கிறது. மகாதம்மரசதிரட் அரசர் அவரது இளவரசியை பயின்னாக்கின் துணைவியாக்கி, பின்னர் இளவரசர் நரசயனை பர்மியரிடமிருந்து மீட்டிருக்கின்றார். அயோத்தியப் பேரரசு பர்மியருக்கு திறை செல்லும் அரசாகத் தொடர்ந்திருக்கிறது.

பயின்னாக் பேரரசருக்குப் பின் அரியணைக்கு வந்த நந்தா பயின் பேரரசர் (ஆ. கா. 1581-1597) ஆட்சியின் போது, பர்மிய மோன் குழப்பத்தை அடக்க சிற்றரசர்களை அழைத்ததாகவும், அயோத்தியின் நரசுன் மெதுவாகச் சென்றதாகவும், கோபம் கொண்ட பர்மியப் பேரரசர், இளவரசர் மிங்யிசுவாவிடம் நரசுனை முடித்துவிடுமாறு கூறியதாகவும் குறிப்பிடப்படுகிறது. பர்மிய பெருவை அடைந்த நரசுன், மோன் பகுதியோடு அயோத்தி எப்போதும் நட்பாகவே இருக்கும் என பொற்குடத்திலிருந்து பூமியில் நீரை ஊற்றி உறுதி கூறியதாகவும் கூறப்படுகிறது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சயாமியர்களை விடுவித்து நாடு திரும்பிய நரசன், அயோத்தியின் சுதந்திரமான பேரரசராக அறிவித்துக் கொண்டதாகவும், சினம் கொண்ட நந்தாபயின் பேரரசர், மிங்யி சுவா தலைமையில்

மூன்று அணியாக பெரும்படையை அனுப்பியதாகவும், நோங் சாரைப் பகுதியில் வழிமறித்த பேரரசர் நரசன், மிங்யி சுவா இளவரசரை நேருக்கு நேரான யானைப் போருக்கு அழைத்ததாகவும், கடுமையாக நடந்த போரில் அயோத்தியப் பேரரசர் பர்மிய இளவரசரை முடித்ததாகவும், அப்போரினாலேயே நரசுன் பேரரசர் தாய்லாந்தின் பெரும்புகழ் பெற்றவராக இருக்கிறார் எனவும் வரலாறு கூறுகிறது. பர்மாவில் பிடிபட்டிருந்த நரசுன் பர்மிய இளவரசர்களோடு போர்பயிற்சியில் ஈடு பட்டதாகவும், பர்மிய நாட்டைப் பற்றி, போர்முறைகளைப் பற்றி, நன்றாக அறிந்திருந்தார் எனவும் கூறப்படுகிறது. பர்மிய-தாய் போர்களில் பல நவீன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன.

லான் ஸாங்கின் பேரரசர் சேத்தாதிரர் பர்மியர்களின் தொடர்ச்சியான தாக்குதல்களால் தலைநகரை லுங் பிரபாங்கிலிருந்து வியன்தைன்னுக்கு 1560 யில் மாற்றியிருக்கிறார். 1573-ல் நடத்தப்பட்ட மூன்றாவது பர்மியத் தாக்குதலில் லான் ஸாங், கைப்பற்றப்பட்டு பர்மியருக்கு அடங்கிய சிற்றரசாக மாறியிருக்கிறது. பின் சேத்தாதிரர் மகன் நோகியோ குமான் பர்மியரிடமிருந்து நாட்டை விடுவித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பேரரசர் சௌரிக்னா வோங்சா ஆட்சிக் காலம் (1637-1694) லாவோஸின் பொற்காலமாக போற்றப்படுகிறது. எல்லைகளை விரிவுபடுத்தியதிலும், வலிமையிலும், நாட்டை வளமாக்கியதிலும் வோங்சா பேரரசர் திறமையுடன் செயல்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறார். அவரது ஆட்சிக்காலத்தில் ஐரோப்பிய வணிகமும் கிறித்துவமும் லாவோவில் நுழைந்திருக்கிறது. வோங்கா பேரரசருக்குப் பின் எழுந்த ஆட்சியுரிமை போராட்டங்களால் லாவோவின் மூன்று நகரங்களை மையமாகக் கொணடு லுங் பிரபாக் பேரரசு, வியந்தைன் பேரரசு மற்றும் சாம்பசக் பேர்ரசு என மூன்று பேரரசுகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. எனினும் சயாமியர்களின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல், பின்வந்த வருடங்களில் சயாமின் அரசுரிமைக்குட்பட்ட சிற்றரசாகவே லாவோ இருந்திருக்கிறது. லாவோ மக்கள் கடும் உழைப்புக்கு உட்படுத்தப்பட்டதும், பெருமளவில் இடம் பெயரச் செய்யப்பட்டதும், லாவோ தொல்குடியினரை பல நாட்டினரும் வேட்டையாடி அடிமைகளாக விற்றதும் லாவோவின் கொடுமையான காலங்கள்.

வியந்தைனின் நான்காம் ஜைய்யா சேத்திராத் எனப்படும் சாவோ அனோவாங் அவர்களது லாவோ புரட்சி (1826-1829) லாவோ நாட்டின் தேசப்பற்றை எழுச்சியுறச் செய்ததில் முக்கியப் பங்காற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது. வியட்நாம், சீனா எனப் பல ஊடுறுவல்களைச் சந்தித்த லாவோ, இறுதியில் பிரான்சின் குடியேற்ற நாடாக மாற்றப்பட்டிருக்கிறது. பிரான்சின் ஆகஸ்டி ஸீன் - மேரி பவி (1847-1925) லாவோவின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்திருக்கிறார். பிரான்சின் பாதுகாப்பில் 1893 முதல் 1953 வரை இருந்த லோவோ, சுதந்திரமான பின்பும் பல உள்நாட்டுக் கலவரங்களை (1953-1975) சந்தித்திருக்கிறது. லாவோவின் அருகாமை நாடுகளின் அரசியல் தாக்குதல்களால் பல்வேறு குழப்பங்கள் ஊடாக முன்னேறி வந்த லாவோ, வியட்நாம் போரில் மிகக் கொடூரமான குண்டு மழையைச் சந்தித்திருக்கிறது. வெடிக்காமல் மண்ணுள் புதைந்து கிடக்கும் கோடிக்கணக்கான குண்டுகளால் லாவோ மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாமல் பாதிக்கப்படுகிறார்கள் எனில் எந்த அளவிறகு குண்டுகள் வீசப்பட்டிருக்கும் என்பதை கணித்துக் கொள்ளலாம். பொதுவுடமை அரசான லாவோ, நீர் மின்சாரத்தை அண்டை நாடுகளுக்கு விற்பதன் மூலம் பெருமளவு வருவாய் ஈட்டுவதாகக் கூறப்படுகிறது. ஏராளமான காட்டு வளம், நீர் வளத்தைப் பெற்றிருக்கும் லாவோ நாடு வரலாற்றுப் பெருமையும் நிரம்பப் பெற்றுள்ளது.

பிற்காலத்திய லாவோ வரலாறு தாய்லாந்தின் வரலாற்றோடு நெருக்கமானது. பர்மிய தாக்குதல்களில் நிலைகுலைந்த தாய்லாந்தில், சீன மரபைச் சார்ந்த தக்சின், பாங்காங் அருகிலிருந்த தோன்பூரியை தலைநகராகக் கொண்டு தோன்புரி அரச மரபை உருவாக்கியவராக அறியப்படுகிறார். பர்மியா, லாவோ, லன்னா, கம்போடியா என பல முனைத் தாக்குதல்களையும் சமாளித்த அரசர் தக்சின், அரசியல், நிர்வாகம், பொருளாதாரம், அயல்நாட்டு வணிகம், சீனா பிரிட்டன் நெதர்லாந்து போன்ற நாடுகளுடன் நல்லுறவு, போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தியவராகக் குறிப்பிடப்படுகிறார். நீண்ட தூர சாலைகள் அமைத்தும், கால்வாய்கள் வெட்டியும், கோவில்களைப் புதுப்பித்தும் மக்கள் நலத் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார். இலக்கியங்கள் செழிக்கவும், கலைகள் வளரவும், கட்டிடக் கலை உயரவும், கல்வி மேம்பாட்டிற்கும், சமய நோக்கிலும் ஏராளமான முயற்சிகளை மேற்கொண்ட தக்சின், தாய்லாந்து வர்லாற்றில் புகழ் பெற்ற பேரரசராக மட்டுமல்லாது தாய் மக்களால் மகாராஜா தக்சின் (ஆ. கா. 1767-1782) எனவும் புகழப்படுகிறார்.

தாய்லாந்தின் நான்காவது பேரரசான ரத்தகோசின் அரசுரிமையை (1782-1932) உருவாக்கியவராக, சக்ரி பட்டத்தைச் சூடியிருந்த புத்தயோத்வா குலலோக் (1737-1809) அரசர் அறியப்படுகிறார். தக்சின் பேரரசருக்குப்பின் பாங்காங்கைத் தலைநகராகக் கொண்டு சக்ரி மரபைத் தோற்றுவித்தவரான புத்தயோத்வா, தக்சின் பேரரசரின் முக்கியமான படைத்தளபதியாகவும் பணியாற்றியிருக்கிறார். சோம்தேட் சயோ பிரயா எனவும், பின்னர் இராமாதிபோதி எனவும் அழைக்கப்பட்ட புத்தயோத்வா குலலோக் அரசர் காலத்தில் நடந்த பர்மா சயாம் போர் (1785-1786) குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கிறது. போரில் பெரு வெற்றி பெற்ற சயாம் அரச படை, இராமாதி போதி அரசருக்கு பேரரசர் எனும் புகழைக் கொடுத்திருக்கிறது.

விஷ்ணுவின் சக்கரத்தை அடையாளமாக கொண்ட சக்ரி பேரரசர் புத்தயோத்வா குலலோக், இராமரின் அவதாரம் எனும் பொருளில் முதலாவது இராமாவாகவும், அவரது வழிவந்தவர்கள் இராமா எனும் பெயரிலேயே அழைக்கப்பட்டும் வருவது குறிப்பிடத்தக்கது. தாய்லாந்தின் தற்போதைய அரசர் பூமிபால் அதுல்யாதெச் ஒன்பதாம் இராமாவாகக் குறிப்பிடப்படுகிறார். தாய்லாந்தின் சனநாயக நடைமுறைகளுக்கு உறுதுணையாக இருந்தவராகப் புகழப்படும் ஒன்பதாம் இராம அரசரின் மிக நீண்ட அரசாட்சிக் காலத்தில் பல இராணுவப் புரட்சிகளும் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அரசரின் உடனுறைத் துணைவியாக அரசியார் சிரிக்கித் இருக்கிறார். புகழும் பெருமையும் நிறைந்த தாய் போலவே மக்களும் பெருமை நிறைந்தோர் எனில் மிகையாகாது.

6

வைணவம்

கடாரம் வென்ற பேரரசர் இராஜேந்திர சோழருக்குப் பின், அரியணைக்கு வந்தவர் முதலாம் இராஜாதிராஜன் (1018-1054). இராஜாதிராஜன் ஆட்சிக்காலத்தில் ஈழம், பாண்டிய நாடு, சேர நாடு போன்ற பகுதிகளில் கிளர்சிகள் ஏறபட்டதாகக் கூறப்படுகிறது. சாளுக்கியருடனான போரில் முடிந்த இராசாதிராஜ மன்னருக்குப் பின், இரண்டாம் இராஜேந்திர சோழர் (1051-1063) அரசராகியிருக்கிறார். அதன் பின் வீர ராஜேந்திர சோழர் (1063-1070), அதிராஜேந்திர சோழர் (1067-1070) போன்றோர் சோழ அரசர்களாக இருந்திருக்கின்றனர்.

அதிராசேந்திரருக்கு வாரிசு இல்லாததால் இரண்டாம் இராசேந்திர சோழரின் மகள் வழிப் பேரனான கீழை சாளுக்கிய இளவரசர் முதலாம் குலோத்துங்கன் சோழனாகி சாளுக்கிய சோழ மரபை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

முதலாம் குலோத்துங்க சோழர் (1070-1122) இராஜராஜ சோழர் மற்றும் இராஜேந்திர சோழர் போன்று மிகுந்த புகழ்பெற்றவராக அறியப்படுகிறார். இளமைக் காலத்தை ஸ்ரீவிஜயத்தில் கழித்தவராக அறியப்படும் குலோத்துங்க சோழர், சீனாவோடு வணிய உறவை மேம்படுத்தியதாகவும், கெமர் இரண்டாம் சூர்யவர்மரோடு தூதரக உறவு கொண்டிருந்ததாகவும், பாகன் பேரரசின் கயன்சித்தாவுக்கு சோழ தூதுவர்கள் சென்றதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

குலோத்துங்க சோழர் காலத்தில் சோழநாட்டின் எல்லைகள் சுருக்கியதாகவும் குறிப்பிடப்படுகிறது. சாளுக்கியர்களும் போசலர்களும் வடபகுதியில் பலமுறை படையெடுப்பு நிகழ்த்தியதாகவும், ஈழம் சோழர் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டதாகவும், பாண்டியர்களும் அவ்வப்போது கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வந்ததாகவும் சான்றுகள் சுட்டுகின்றன. நிலத்தைச் சீர்திருத்தி அளவை செய்து வரிவிதிப்பில் மாற்றங்களைக் கொண்டு வந்தது குலோத்துங்கர் ஆட்சியின் மகத்தான சாதனை என்றே புகழப்படுகிறது. சுங்கம் தவிர்த்த சோழன் எனப் புகழப்படும் குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்தில் பெற்ற கலிங்க வெற்றியும் மிகவும் சிறப்பிற்குரியதாக கூறப்படுகிறது. கலிங்க வெற்றி குறித்து செயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணி நூல் பரணி நூல்களிலேயே புகழ் வாய்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி முதலாம் குலோத்துங்கனின் படைத்தலைவர் கருணாகரத் தொண்டைமான் வடகலிங்கத்தின் மன்னர் அனந்தவர்மரை வென்ற திறத்தைப் பாடுகிறது. குலோத்துங்க சோழரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட கலிங்கத்துப்பரணி, பரணி நூல்களில் முதலாவது நூலாகக் குறிப்பிடப்படுகிறது.

பரணி என்பது போரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப்பாடும் சிற்றிலக்கிய வகை நூலாகும். பரணி நூல்களுக்கு தோற்றவர் பெயரிலேயே தலைப்பு வைப்பதும் முறையாகக் கொள்ளப்பட்டிருந்தது. நூலில் அக்கால அரசர் இயல்புகளும் அக்காலத்தியப் போர் முறைகளும் சமுதாய நிலைகளும் சிறப்பாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

முதலாம் குலோத்துங்க சோழருக்கு பின் சோழ நாடு வீழ்ச்சியை நோக்கிச் சென்றதாகக் குறிப்பிடப்படுகிறது. குலோத்துங்கருக்குப் பின் அவரது மகன் விக்கிரம சோழன் (1133-1150), இரண்டாம் இராஜராஜன் (1146-1163), இரண்டாம் இராஜேந்திரன் (1163-1178), மூன்றாம் குலோத்துங்கன் (1178-1218), மூன்றாம் இராஜராஜன் (1216-1256) மற்றும் மூன்றாம் இராஜேந்திரன் (1246-1279) போன்றோர் அரசாண்டிருக்கின்றனர்.

இரண்டாம் இராஜராஜ சோழரால் கட்டப்பட்ட தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோவில், சிற்பக்கலையின் உன்னதம் என்றே புகழப்படுகிறது. கும்பகோணம் அரசலாற்றின் அருகே அமைந்துள்ள தாராசுரம் கோவில், நிரம்பி வழியும் சிற்பங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. தேர் போன்ற அமைப்பில் வடிக்கப்பட்டுள்ள கோவிலில் இராமாயணம், மகாபாரதம், ரதி மன்மதன், சிவபுராணக் கதைகள், நாயன்மார் கதைகள், பரதநாட்டிய அடவுச் சிற்பங்கள், சிற்பத் துண்கள், சிற்பக் கூரைகள் என எங்கெங்கும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ள கலையழகி மிளிரும் தாராபுரம் திருக்கோவில், சோழர் காலத்தின் பெருமைக்கு அழகிய சான்றாக வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

பிற்கால சோழர் காலத்தில் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் சீவக சிந்தாமணி விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் எனும் பெருமை பெற்று விளங்குகிறது. திருக்தகு முனிவர், திருத்தக்கத் தேவர் எனும் சமண முனிவரால்

இயற்றப்பட்ட சீவக சீந்தாமணி, சீவகனின் வரலாற்றை முழுமையாகக் விவரிக்கிறது.

கச்சந்தன் விசையை என்போர் சீவகனின் பெற்றோர். கட்டியங்காரன் எனும் அமைச்சரின் சூழ்ச்சியால் கச்சந்தன் முடிக்கப்பட்டு ஏமாங்கத நாடும் கைப்பற்றப்படுகிறது. பறக்கும் மயிற்பொறி ஒன்றின் மூலம் தப்பிக்கும் சீவகன், கந்துக்கடன் என்னும் வணிகரால் வளர்க்கப்படுகிறான். உரிய பருவம் எய்திய பின் தாயின் அறிவுரையோடு மாமன் கோவிந்தன் துணையோடு ஏமாங்கத நாட்டை வெற்றி கொள்கிறான்.

சீவக சிந்தாமணி பேரிலக்கியம், நாமகள் இலம்பகம் முதலாக முக்தி இலக்கியம் ஈறாக, பதிமூன்று இலம்பகங்களைக் கொண்டு மூன்றாயிரத்து நூற்றி நாற்பத்தைந்து பாடல்களால் இயற்றப்பட்டுள்ளது. சீவகனின் வீரதீரச் செயல்கள், பேரழகு, பேராற்றல், போராற்றல், அரச குடும்பத்தின் செயல்கள், அரசியல் நெறிமுறைகள், மனித குல மேம்பாட்டிற்குத் தேவையான அறக்கருத்துக்கள் போன்றவை நூலில் விளக்கப்படுகின்றன. சீவகன் காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை எனும் எட்டுப் பெண்களை மணமுடித்துக் கெள்வதால் சீவக சிந்தாமணிக்கு மணநூல் காப்பியம் எனும் பெயரும் உண்டு.

விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா மற்றும் இராசராச சோழன் உலா எனும் பாட்டன், தந்தை, மகன் மூவர் உலா நூல்களை இயற்றிய ஒட்டக்கூத்தர், மூன்று சோழர்களின் ஆட்சிக்காலத்திலும் அரசவைப் புலவராக இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறார். மூவர் உலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் ஈட்டியெழுபது, தக்கயாகப் பரணி, நாலாயிரக் கோவை உட்பட பல நூல்களைப் படைத்துள்ள பெரும் புலவர் ஒட்டக் கூத்தர், பூந்தோட்டம் எனும் பெயரைக் கொண்ட கூத்தனூரில் உள்ள புகழ்பெற்ற சரஸ்வதி கோவிலைக் கட்டியவராகவும் குறிப்பிடப்படுகிறார். தமிழகத்தில் சரஸ்வதி தேவிக்கு என்று உள்ள ஒரே தனிக்கோவில் கூத்தனூர் சரஸ்வதி கோவில் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஓட்டக்கூத்தர் இயற்றிய இராசராச சோழன் உலா, கவிநயம் வாய்ந்த பாடல்களைக் கொண்டதாகச் சிறப்பிக்கப்படுகிறது. பாட்டுடைத் தலைவனான இராசராசனின் சிறப்புகளும், சோழன் உலாப் போகும் காலத்தில் ஏழு பருவ

காலங்களைச் சேர்ந்த மகளிரின் காதல் செயல்களும் நூலில் இடம்பெற்றுள்ளன. மேலும் உலாவில் இராசராசருடைய முன்னோர்களின் புகழும் வெகுவாகக் கூறப்படுகிறது.

சோழேந்திர சிம்மன், கண்டன், இராஜகம்பீரன், திரிபுவனச் சக்ரவர்த்தி எனப் பல பெயர்களைக் கொண்டிருந்த இராசராசன், மனித குலத்தில் பிறந்து மேருமலை போன்ற உயர்ந்த புகழினை உடையவன், ஏழ்ஏழ பதினான்கு உலகையும் வென்று தன் கீழ் வருமாறு செய்தவன், சக்கரப் படையை உடைய கண்ணன், சூரியனையும் குளிர வைக்கும் குளிர்ச்சி பொருந்திய வெண்கொற்றக் குடையை உடையவன், சூரிய குலத்திற்குத் திலகம் போன்றவன் என்றெல்லாம் பாடல் அடிகள் போற்றுகின்றன.

பாட்டுடைத் தலைவன் வீதியில் உலாப் போவதைக் காணும் பெண்கள் பேசிக் கொள்வதாய் அமைக்கப்பட்ட இரண்டு அடி கண்ணிகள், சோழனை வெகுவாகப் புகழ்கின்றன. பேதைப் பருவம் உடைய பெண்மகள் ஒருத்தி மன்னனைக் கண்டு பணியும் நிகழ்வொன்று கூத்தரால் மிகவும் அழகுற விவரிக்கப்பட்டுள்ளது.

பேதைப் பெண் அண்மையில் பிறந்த கிளிக் குஞ்சு போன்றவள். தாய்ப்பாலை அண்மையில் மறந்த இளமான் போன்றவள். தோகை வளராத மயில் போன்றவள். சுற்றத்தார்க்கு மகிழ்ச்சி உண்டாக்கும் கரும்பு போன்றவள். முல்லை மாலை போன்ற பற்களை உடையவள். பாவைபாட்டுப் பாடும் விதம் அறிந்தவள். அவ்வாறே மங்கையின் காதல் எண்ணமும், பேரிளம் பெண்ணின் காம மனநிலையும் சிறப்பாக வருணிக்கப்படுகிறது. பேரிளம் பெண் உலா வரும் சோழ மன்னனை நேர் நின்று நோக்கினாள். அவளது பரந்த வழிகளின் வெண்மை சிவப்பு நிறமாக மாறியது. அவள் நெற்றித் திலகம் குறுவியர்வையால் மறைந்தது. அவளது மழலைச் சொற்கள் தடுமாற்றம் அடைந்தன. மனத்தெளிவு மனமயக்கமாக மாறியது. நாணம் தொலைந்து கூந்தலாகிய மேகம் அவிழ்ந்து தொங்கியது.

விடியல் பொழுதையே அறியாத இரவினை உடையோம். கொங்கையினை இறுக்கி நில்லாத கச்சினை உடையோம். ஓரிடத்திலும் தங்காத மேகலை அணியை உடையோம். மனத்தாலும் நினைப்பதற்கு அரிய பெருமைகளை உடைய சோழனே.. ஏற்றுக்கொள்ளுங்கள் என விண்ணப்பித்த பேரிளம் பெண்ணிடம் சிறுநகை செய்த சோழன், முத்துமாலை முதலான பல்வேறு அணி மணிகளும் அவளுக்குத் தர

ஏவலர்க்கு ஆணையிட்டார். ஆனாலும் அப்பெண் அவற்றை ஏற்காமல் காதல் துயரால் வாடிச் செவிலியர் மீது மயங்கி வீழ்ந்தாள்.

தேவர்கள் இருக்கின்ற வீதிகளே நாணுமாறு நாற்பெருந் தெருக்கள் அமைத்தும், பற்பல மண்டபங்கள் கட்டுவித்தும், தில்லை நகரைச் சிறப்பித்த இரண்டாம் குலோத்துங்கள் பற்றி, குலோத்துங்கன் உலாவில் ஒட்டக் கூத்தர் குறிப்பிடுகிறார். சோழன், சிற்றம்பலத்தை பொன்னாலும் பற்பல மணிகளாலும் அலங்கரித்தான். பேரம்பலத்தையும் உள் கோபுரத்தையும் பொன் மாமேரு போலப் பொன் மயமாக்கினான். எழுநிலைக் கோபுரங்கள் எடுப்பித்தான். உமாதேவியார் அவர் பிறந்த இமய வெற்பை மறக்கும்படி சிவகாமி கோட்டம் அமைத்தான். அம்மையார் விழா நாளில் உலா வருவதற்குப் பொன்னாலும் மணியாலும் அழகுறுத்தப் பெற்ற தேரொன்று செய்தளித்தான். திருக்கோவிலில் பொன்னாலான கற்பகத் தருக்களை அமைத்தான். நாற்புறமும் கூடங்களோடு திகழும் திருக்குளம் ஒன்றையும் கட்டினான்.

பிற்கால சோழர்கள் சைவநெறிக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களாகவே அறியப்பட்டுள்ளனர். சோழர்கள் சமயக் காழ்புடன் நடந்து கொண்டதாகக் குறிப்புகள் இல்லையெனினும் சிவபெருமானுக்கும் சைவத்திற்கும் முதன்மையளித்தார்கள் எனக் கருதப்படுகிறது. சோழர்கள் ஆட்சியில் சங்கதமும், வேதத்தை முதன்மையாகக் கொண்டிருந்த ஸ்மார்த்தப் பிராமணர்களும், நிலவுடைமையாளார்களாக மாறிக் கொண்டிருந்த சைவ வெள்ளாளர்களும் சிறப்பிடம் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்மார்த்தம் பழங்காலம் முதலே இருந்து வரினும் ஆதி சங்கரரே சிவன், சக்தி, திருமால், கணேசர், சூரியன் மற்றும் முருகனை ஒன்றிணைத்து அனைவருக்கும் பொதுவான ஒரு சமயப் பிரிவாக ஸ்மார்தத்தை முன்னெடுத்தவராக அறியப்படுகிறார். தத்துவப்படி, ஸ்மார்த்தர்களுக்கு ஆதிசங்கரரின் அத்வைதமே முக்கியமானது.

சுமார்த்தர்கள், முக்தி அடைவதற்கான வழியாக ஞானமார்க்கத்தையை முன்னிறுத்துபவர்கள். சுமார்த்தர்களின் அன்றாடச் செயல்பாடுகளில் சந்தியா வந்தனம், ஜபம், பூஜை, உபாசனை, வேள்வி, தர்ப்பணம், சிராத்தம் போன்றவை முக்கியமானவை.

இந்து மதத்தின், இந்து சமூகத்தின் ஏணியில் பிராமணர்களே உச்சியில் இருப்பவர்கள். உணவு முறையில் தொடங்கி, பழக்கவழக்கம், நம்பிக்கைகள், குணநலன்கள் என எல்லாமே மற்ற சமூகத்தவரிடமிருந்து அதிகளவில் வேறுபடுகின்றன. பிராமணர்கள் ஆச்சாரமானவர்களாகவும் மத நம்பிக்கையாளர்களாகவும் இருக்கிறார்கள். நிலவுடைமையாளர்களான பிராமணர்கள் நிலத்தை குத்தகைக்கு விடுவர். அய்யரும், வைணவ அய்யங்கார்களும், தெலுங்கு நியோசிகளும், மலையாள நம்பூதிரிகளும் பிராமணர்களில் அடங்குவர்.

இந்து சமய மும்மூர்த்திகளுள் ஒருவரான சிவபெருமான், சைவ சமயத்தின் முழுமுதற்கடவுளாக வழிபடப்படுகிறார். சிவம் என்றும் சிவன் என்றும் அழைக்கப்படும் சிவனார், அழிக்கும் கடவுளாகக் குறிப்பிடப்படும் ருத்ரனாகவும், தேவர்களக்கெல்லாம் தேவர் எனும் பொருளில் மகா தேவர் எனவும், மகா ஈஸ்வரர் எனும் பொருளில் மகேஸ்வரர் எனவும் கூறப்படுகிறார். செம்மையானவர், மங்களமானவர் எனும் பொருளில் அழைக்கப்படும் சிவன் யோகி, சித்தன் எனவும், பித்தன் எனவும், முக்கண்ணன் எனவும் பல்வேறு பெயர்களைக் கொண்டிருக்கிறார். சிவ வழிபாடு வரலாற்றிற்கு முற்பட்டதெனவும், சிந்து சமவெளிப் பண்பாட்டிலேயே சிவனார் வழிபாடு இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. சிவபெருமான் நடனம், யோகம் போன்றவற்றில் சிறப்பானவராகவும், உமையம்மையுடன் கயிலையில் வசிப்பதாகவும் சைவமத நம்பிக்கை குறிப்பிடுகிறது.

சிவபெருமானின் துணையாக சக்தி, தாட்சாயிணி, பார்வதி, காளி, துர்க்கை, கொற்றவை போன்ற அம்மன்கள் குறிப்பிடப்படுகின்றனர். பிராஜாபதியான தட்சனின் மகளாகப் பிறந்த தாட்சாயிணி எனும் ஆதி சக்தியே பர்வதராஜனின் மகளான பார்வதியாக அறியப்படுகிறார்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட நச்சை சிவபெருமான் பருகி நீல கண்டராகியதும், பகீரதன் தவத்திற்கு இணங்கி ஆகாயத்திலிருந்து பாய்ந்து வந்த கங்கையைத் தாங்கி காங்கேயனானதும் சிவபெருமானின் புகழ்மிக்க அரிய செயல்களாகக் கொண்டாடப்படுகின்றன.

தெய்வத் தம்பதியரான சிவன்-பார்வதி குழந்தைகளாக, கணபதி எனும் பிள்ளையார் மற்றும் கார்த்திகேயன் எனும் முருகன் அறியப்படுகின்றனர். கயிலை மானோசரோவர் ஏரியில் பார்வதி தேவியார் குளிக்கச் செல்லும் பொழுது, மானசீகமாக ஒரு குழந்தையை உருவாக்கி காவலுக்கு வைத்ததாகவும், அங்கு வந்த சிவனாரைத் தந்தை என அறியாது அக்குழந்தை சண்டையிட சிவனாரின் கோபத்திற்கு ஆளான அக்குழந்தைக்குப் பின்னர் யானைத் தலை பொருத்தப்பட்டு ஆனைமுகன் எனும் பெயர் நிலைத்ததாகவும் புராண வரலாறு கூறுகிறது. சிவகணங்களின் தலைவரான ஆனைமுகன், கணபதி எனும் பெயரால் பரவலாக அறியப்படுகிறார். நரசிம்மவர்மப் பல்லவரின் வாதவிப் போரின் போது படைத்தளபதியான பரஞ்சோதியரால் தமிழகத்தில் முதன் முதலாக கணபதி அறிமுகமானதாகக் கூறப்படுகிறது. காரைக்குடி அருகிலுள்ள பிள்ளையார் பட்டி பழமையானதும், முதன்மையான பிள்ளையார் கோவிலாகவும் அறியப்படுகிறது. கணபதியின் வாகனமாக மூஞ்சுறு எனும் சுண்டெலி குறிப்பிடப்படுகிறது.

சிவபெருமானின் ஆறுமுகங்களிலும் உள்ள ஆறு நெற்றிக் கண்களிலிருந்து நெருப்பு பொறிகளைத் தோற்றுவித்ததாகவும், சரவணப் பொற்கையில் அவை ஆறு குழந்தைகளாக உருவானதாகவும், கார்த்திகைப் பெண்கள் அறுவரால் வளர்க்கப்பட்ட ஆறு குழந்தைகளையும் பார்வதி அன்னை அணைத்து ஒருமுகமும், பன்னிரு கைகளும் கொண்ட குமரனாக ஒன்றிணைத்ததாகவும் புராண வரலாறு குறிப்பிடுகிறது. சரவணன், கார்த்திகேயன், ஆறுமுகன், கந்தன், குமரன், சுப்ரமணி, வேலன் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் முருகன், அன்னை கொடுத்த வேல் கொண்டு சூரபத்மன் எனும் அசுரரை அழித்தவராகவும், தேவேந்திரரின் மகளான தெய்வானையையும், வள்ளி எனும் மலை நாட்டுக் குறத்தியையும் மணமுடித்தவராகவும் அறியப்படுகிறார். தமிழ் கடவுள் என அறியப்படும் முருகப்பெருமானுக்கு திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமி மலை, பழமுதிர்ச்சோலை, திருத்தணி எனும் அறுபடை வீடுகளும், மேலும் சில குறிப்பிடத்தக்க வழிபாட்டு இடங்களும் அமைந்துள்ளன. குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனிருக்கும் இடமாகக் கருதப்படும் தமிழகத்தில், பழங்காலந் தொட்டே முருக வழிபாடு இருந்து வந்துள்ளதும், தமிழ் மரபில் முருகனுக்கென்று தனித்த சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்கள், பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பால தேவராய சுவாமிகளால் சென்னிமலை அருள்மிகு சுப்புரமணியர் மேல் இயற்றப்பட்ட கந்த

சஷ்டிக் கவசம் புகழ் பெற்றவையாகத் திகழ்கின்றன. முருக வழிபாட்டில் காவடி எடுத்தல் சிறப்பிடம் வகிக்கிறது. தைப்பூசத் திருவிழா புகழ்பெற்றது. பதினேழாம் நூற்றாண்டு குமரகுருபர சுவாமிகளும் முருக வழிபாட்டில் சிறந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். முருகன் மயிலை வாகனமாகக் கொண்டிருக்கிறார்.

சிவனது பல்வேறு வடிவங்களில் வழிபாடுகளில் ஒன்றான லிங்கம் அல்லது சிவலிங்கம் மிகவும் தொன்மையானதாகக் குறிப்பிடப்படுகிறது. பரமசிவனாரின் அருவம், உருவம், அருவுருவம் எனும் நிலைகளில் அருவுருவமான லிங்கமே சிவன் கோவில்களில் முக்கியமானதாக வழிபடப்பட்டு வருகிறது. சிந்து வெளி கால நாகரிகத்திலேயே வழக்கத்தில் இருந்ததான லிங்க வழிபாடு, ஆண் பெண் கூடல் நிலையைக் குறிப்பதாகவே குறிக்கப்படுகிறது. ஆவுடைலிங்கம் எனப் பொதுவில் குறிக்கப்படும் லிங்கங்கள் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன. லிங்கத் திருமேனியில் சிவமுகம் இருப்பது முகலிங்கம் என அழைக்கப்படுகிறது.

சிவபெருமானின் இருபத்தைந்து சிவ மூர்த்தங்கள் மகேசுவர மூர்த்தங்கள் என அழைக்கப்படுகின்றன. சிவ-பார்வதி தெய்வீகத் தம்பதியர் கந்தனோடு காட்சியளிப்பது மோமஸ்கந்தர் எனப்படுகிறது. திருவாரூர் தியாகராஜ சுவாமி கோவில், காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோவில், தென்காசி காசி விஸ்வநாதர் போன்ற திருக்கோயில்களில் சோமனாகிய சிவன் ஸ்கந்தன் எனும் முருகனோடும் உமையோடும் வீற்றிருக்கிறார்.

கூத்தன் எனும் நடராஜன் தோற்றம், சிவபெருமான் நடனக் கலையில் வல்லவரென்பதைக் குறிக்கிறது. ஒற்றைக் காலைத் தூக்கி நின்று ஆடும் நிலையிலேயே பரவலாக நடராஜர் தோற்றம் அமைந்திருக்கிறது. நடனத்துக்கு அரசர் எனும் பொருளில் அழைக்கப்படும் நடராஜன், சபேசன் எனவும் குறிப்பிடப்படுகிறார். சபைகளில் ஆடும் ஈசன், பொற்சபை, வெள்ளி சபை, தாமிர சபை, இரத்தன சபை மற்றும் சித்ர சபை என்னும் ஐந்து விதமான நடனத் தோற்றம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழிலகளைக் குறிப்பிடுவதாக சைவநூல்கள் பொருள் கொள்கின்றன. ரிஷபாரூடர், கல்யாண சுந்தரர், சந்திரசேகரர், தட்சிணாமூர்த்தி, அர்தநாரீஸ்வரர் போன்ற தோற்றங்களும் சிறப்பு வாய்ந்தவையாகக் கூறப்படுகின்றன.

சிவ வழிபாடு, சிவநெறி சைவ நெறி எனவும் குறிப்பிடப்படுகிறது. சைவசமயம் சுருக்கமாக சைவம் என அழைக்கப்படுகிறது. சைவத்துள் காஷ்மீர சைவம், வீர சைவம், சைவ சித்தாந்தம் உட்பட ஏராளமான பிரிவுகள் வழக்கிலுள்ளன.

ஒன்பதாம் நூற்றாண்டுக் காலத்தில், கபாலிகம், காளாமுகம் போன்ற சைவப் பரிவுகளைச் சார்ந்து வசுகுப்தர் (பொ.ஆ. 875-925), அவரது மாணவர் கல்லாடர் (850-900) போன்றோரால் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் காஷ்மீர சைவம், அபினவகுப்தரின் (975-1025) எழுத்துக்கள் மூலம் பரவலாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. வசுகுப்தரின் சிவ சூத்ரம், உத்பலதேவரின் பிரத்யாபிஜனம், அபினவகுப்தரின் தந்தரலோகம், தந்தரசாரம், ஜெயரதரின் (1150-1200) தந்தரலோக உரைகள் போன்றவை காஷ்மீர சைவத்தின் வளர்ச்சிக்கு பெருமளவில் துணை புரிந்திருக்கின்றன.

வீர சைவம் கன்னடப் பகுதியில் சிறப்புற்று விளங்குகிறது. வீர சைவம் அல்லது லிங்காயதம் சைவ சமய பிரிவினர் கழுத்திலே லிங்கம் அணிபவர்களாக இருக்கின்றனர். சிலை வழிபாட்டினையும் சடங்கு முறைகளையும் மறுப்பவர்களாக அறியப்படும் லிங்காயத்தார் அதாவது லிங்க உடம்பினர், ஏதேனுமொரு வீரசைவ மடத்தைச் சேர்ந்திருப்பவர்களாகவே குறிப்பிடப்படுகின்றனர்.

கன்னடப் பிராமணரான பசவர் அல்லது பசவண்ணரால் (பொ.ஆ 1125-1165) தோற்றுவிக்கப்பட்ட வீர சைவம், தமிழ்நாட்டில் பதினான்காம் நூற்றாண்டுக் காலத்தில் பரவத் தொடங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. வீர சைவம் தக்கிண மத சித்தாந்தம் எனும் தனிக் கோட்பாட்டினைக் கொண்டதாகக் கூறப்படுகிறது. சைவம் பொதுவில் சிவ ஆகம முறைகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

சைவம், வைணவம், சக்தம் போன்ற சமயங்களின் கோவில் அமைப்பு, கோவில் வழிபாடு, மந்திர மொழிகள் போன்றவற்றை வரையறுக்கும் நெறிமுறைகள் ஆகமங்கள் எனப்படுகின்றன. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள ஆகமங்கள் வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை அல்ல எனினும் வேதங்களிலிருந்து மாறுபட்டவையும் அல்ல. தொன்று தொட்டு வரும் அறிவு என்றும் இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் ஞானநூல் என்றும் குறிப்பிடப்படும் ஆகமங்கள், சரியை - உடம்பினால் செய்யும் இறைப்பணிகள், கிரியை - பூசித்தல், வாசித்தல் போன்ற நற்செயல்கள், யோகம் - உடலையும் உள்ளத்தையும் பேணுவது மற்றும்

ஞானம் எனும் நான்கு வழிபாட்டு முறைகளை அதாவது நாற்பாதங்களை உள்ளடக்கியதாகவும் குறிப்பிடப்படுகிறது. சிவ ஆலயங்களின் கோவில் அமைப்பு, பூசை முறைகள், நீராட்டு, அலங்காரம், சிவாச்சாரியார்கள் தேர்ந்தெடுப்பு போன்றவற்றை விளக்குவது சைவ ஆகமங்கள் எனப்படுகின்றன. திருமூலரின் திருமந்திரம் சைவ ஆகமம் என்றும் அழைக்கப்படுகிறது. சிவபேத ஆகமங்கள், ருத்ரபேத ஆகமங்கள் என மொத்தம் இருபத்தி எட்டு சைவ ஆகமங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

சுத்த சைவம், தமிழ் சைவம், சைவ சித்தாந்தம் என அறியப்படும் சைவ நெறி பிற்கால சோழர் ஆட்சிக் காலத்திலேயே பெருமளவில் வளர்த்தெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. சைவ சித்தாந்தத்தின் தலையாய நூலாகக் கருதப்படும் சிவஞான போதத்தை இயற்றிய மெய்க்கண்டார், பதிமூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது. பன்னிரென்டாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையிலுமான கால பகுதியில், பல சைவ அறிஞர்களால் எழுந்த பதினான்கு சைவ சித்தாந்த நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் என குறிக்கப்படுகின்றன.

சைவ சித்தாந்தத்திற்கு பொது நூலாக நான்மறையும், சிறப்பு நூல்களாக சிவாகமங்களும் விளங்குகின்றன. மெய்கண்ட சாத்திர நூல்கள் சைவசித்தாந்தத்தின் சாத்திர நூல்கள் எனவும், பன்னிரு திருமுறைகள் தோத்திர நூல்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றன. சைவ சித்தாந்தம் சிந்தனையின் முடிந்த முடிபாகக் கொள்ளப்படுகிறது.

சைவசித்தாந்தத்தை சிவபெருமான் திருநந்திதேவருக்கு உபதேசித்து அருளினார். திருநந்தியிடமிருந்து சனற்குமாரரும், சனற்குமாரரிடமிருந்து சத்திய ஞானதரிசினியும், சத்திய ஞானதரிசினியிடமிருந்து பரஞ்சோதிமுனிவருக்கும் உபதேசிக்கப்பட்டது. சிவ பெருமானிடமிருந்து உபதேசம் பெற்ற நால்வரும் அகச் சந்தான குரவர் என்று போற்றப்படுவர்.

பரஞ்சோதி முனிவர் ஒருமுறை அகத்தியரைக் காண்பதற்காக ஒளியை விமானமாக்கி வான்வழியாக பொதிகை மலை நோக்கி சென்று கொண்டிருந்தபோது திருவெண்ணெய் நல்லூரில் அவரது விமானம் திடீரென நின்று விட்டது. அங்கு

சுவேதவனப் பெருமான் என்னும் சிவஞானம் பெருகியிருந்த குழந்தையைக் கண்டார். அக்குழந்தைக்கு மெய்யுணர்வு அருளி மெய்கண்டார் என்று பெயரிட்டார்.

மெய்கண்டார் அவரது தந்தையாரின் குல குருவாக விளங்கிய அருள் நந்தி சிவாச்சாரியாரை சீடராக, தலை மாணாக்கராக ஆட்கொண்டார். அருள் நந்தி சிவாச்சாரியாரிடம் மறைஞானசம்பந்தர் உபதேசம் பெற்றார். மறைஞான சம்பந்தரிடம் உமாபதி சிவாச்சாரியார் உபதேசம் பெற்றார். மெய்கண்டார் தொடங்கி மற்ற நால்வரும் புறச்சந்தான குரவர் எனப் போற்றப்படுவர்.

சைவ சித்தாந்தத்தில் பதி பசு பாசம் சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது. பதி இறைவனையும், பசு உயிர்களையும், பாசம் தளைகளையும் குறிக்கிறது. பதிபசு பாசம் எனும் முப்பொருள்களில், பதி பேரரவு உடையதெனவும், பசு சிற்றறிவுடையது எனவும், தளை உயிரற்றதாகவும் அறியப்படுகிறது.

பதியாகிய இறைவன் எங்கும் இருப்பவராகவும், உலகம் முழுவதும் அதற்கு அப்பாலும் நிறைந்தவருமாகக் கூறப்பெறுகிறார். கடவுள் தோற்றமும், அழிவும் இல்லாதவராக, எட்டுவகைக் குணங்களுடன் இருப்பவராக, சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது. சைவத்தின படி, உயிரானது உடலினைப் பெறும் முன்பு, அறிவு, இச்சை, செயல் என்பவை இன்றி அறியாமை நிலையில் மூழ்கியிருக்கும். உயிரும் இறைவனைப் போன்று தோற்றமும் அழிவும் இல்லாதது. பாசம் அல்லது தளை உயிர்களை அடிமை செய்யும் போகப் பொருள்களாகும்.

சைவம், பாசத்தின் கூறுகளென ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் அதாவது அழுக்குகள் குறித்து பேசுகிறது. இறைவனைச் சென்றடைவதே உயிர்களின் நோக்கம். ஆயினும் குறையறிவு கொண்ட உயிர்களை இறைவனோடு சேர விடாமல் அறிவற்ற சடப் பொருட்களான மலங்கள் மறைந்துக் கொண்டிருக்கின்றன. அதனால் ஏற்படுகின்ற அறியாமையே உயிர்களின் துன்பங்களுக்குச் காரணம். சைவத்தின் படி, உயிர்கள் மலங்களின் பிணைப்பிலிருந்து விடுபட இறைவனின் அருள் வேண்டும்.

தளைகளுள், கட்டுகளுள், அழுக்குகளுள், மலங்களுள் முதன்மையானது ஆணவம் என்பதால் அது மூல மலம் எனப்படுகிறது. ஆணவம் இருளைக் கொடுக்க கூடியது. மனத்திமிர், தவமில்லாச் செயல், மனமலம், ஆள்வதும், ஆள நினைப்பதும் ஆணவம் எனக் குறிப்பிடப்படுகிறது. கன்மம் என்பது அவரவர் செய்யும் வினைகளின்

பயனாகக் கூறப்படுகிறது. வினை எனக் குறிப்பிடப்படும் கன்மம் உயிர்களின் நல்வினை, தீவினைக்கு ஏற்ப பலனை அடைய நேரிடும் என்கிறது. வினையும் முற்பிறவி, தற்பிறவி, வினையின் வினை எனப் பலவாறாகப் பிரிக்கப்படுகிறது.

உடல், உலகு மற்றும் உலகில் காணும் எல்லாப் பொருட்களையுமே மாயையைக் கொண்டே இறைவன் படைப்பதாகக் கூறப்படுகிறது. மாயை மிக நுண்ணியதெனவும், அது இறைவனடியிலேயே இருக்கிறதெனவும், சிறு விதை பெருமரமாவதற்கு காரணமாக அமைவது போல் மாயையும் பெரும் அண்டத்தின் உற்பத்திக்குக் காரணமாக அமைவதாகவும் தமிழ்சைவம் எடுத்துரைக்கிறது. மாயையும் சுத்த மாயை, அசுத்த மாயை, விரகிருதி மாயை என மூன்றாக உள்ளதும் கூறத்தக்கது.

இந்தியா மற்றும் தமிழகத்தில் புகழ்பெற்ற பல சிவன் கோவில்கள் உள்ளன. குறிப்பாக பனிரெண்டு ஜோதிர்லிங்கத் தலங்கள் மற்றும் பஞ்சபூதத் தலங்கள் சிவ வழிபாட்டில் முக்கியத்துவம் நிறைந்தவையாகக் உள்ளன. வாரணாசி எனும் காசியில் அமைந்துள்ள காசி விசுவநார் கோவில், இராமேசுவரம் இராமநாத சுவாமி கோவில் போன்றவை பண்டைக் காலத்திலிருந்தே புனிதப் பயணங்களால் செல்வாக்குப் பெற்றவைகளாக இருக்கின்றன.

பஞ்சபூதத் தலங்கள என்பவை நீர், நெருப்பு, காற்று, நிலம் மற்றும் ஆகாயம் எனும் ஐம்பூதங்களுக்கும் உரிய சிவாலயங்கள். பிருத்வி அல்லது நிலத்திற்கான கோவில்களாக காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மற்றும் திருவாரூர் தியாகராசர் கோவில்கள் இடம்பெறுகின்றன. திருவாரூர் கோவிலின் ஆழித்தேர் மிகவும் புகழ்பெற்றதாக இருக்கிறது. சிதம்பரம் ஆகாயத்திற்கும், அப்பு அல்லது காற்றுக்கு ஆந்திர மாநிலம் காளகத்தியிலுள்ள காளத்தீசுவரர் கோவிலும், அக்னி அல்லது நெருப்பிற்கு திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலும் புகழ் பெற்றவைகளாக விளங்குகின்றன.

இலிங்க புராணத்தன் படி, ஒரு முறை திருமாலுக்கும் பிரம்மனுக்கும் யார் உயர்ந்தவர் என வாதம் உண்டாகியதாகவும், அப்போது சிவன் இலிங்கோத்பவர் எனும் அக்னி உருக்கொண்டு அதன் அடியையோ, முடியையோ யார் முதலில் காண்கிறாரோ அவரே உயர்ந்தவர் எனக் கூறியதாகவும், திருமால் வராகம் உருக்கொண்டு அடியினையும் பிரம்மன் அன்னப்பறவை உருக்கொண்டு

முடியினையும் காணத் துணிந்ததாகவும் எனினும் இருவராலும் அடியையோ முடியையோ காணமுடியவில்லை எனவும், அவ்வாறு அடிமுடி காணமாட்டாமல் சிவன் எழுந்தது திருவண்ணாமலையில் எனவும் அந்நாளே மகாசிவராத்திரியாகக் கொண்டாடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

சிவபெருமானின் விழாக்களில் மகாசிவராத்திரியும், தமிழகத்தில் திருவண்ணாமலை கார்த்திகை தீபமும், சிதம்பரம் ஆருத்ரா தரிசனமும் புகழ் பெற்றவைகளாக இருக்கின்றன. சமீப ஆண்டுகளில் திருவண்ணாமலை அருணாச்சல மலையைச் சுற்றிவரும் கிரிவலமும் பிரதோச வழிபாடும் முக்கியத்துவம் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. நாட்டார் மரபில் சிறுதெய்வங்களாக, கிராமத் தெய்வங்களாக வணங்கப்படும் பெரும்பாலான சாமிகள் சிவனின் அம்சமாகவும் அம்மன் பெயரிலுள்ள பெரும்பாலான கோவில்கள் பார்வதி தேவியாகவும் கருதப்படுகின்றனர்.

சிவபெருமானின் வாகனமாக அறியப்படும் நந்தி, திருநந்தித் தேவரெனவும் முதல் குருவாகவும் போற்றப்படுகிறார். சிவன் கோவில்களில் சிவலிங்கத்தைப் பார்த்துக் கொண்டிருக்குமாறு நந்திதேவரின் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது.

நெற்றியில் திருநீறு அல்லது விபூதி அணிதல் சைவர்களால் புனித அடையாளமாகக் கருதப்படுகிறது. ஞானம் எனும் நெருப்பில் அனைத்தும் சுட்டெரிக்கப்பட்ட பின் எஞ்சுவது சுத்தமான சிவதத்துவமே என்பதைக் விளக்குவதாக திருநீறு பூசுதல் குறிப்பிடப்படுகிறது. பசுவின் சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் திருநீற்றை உடலில் பதினெட்டு இடங்களில் பூசலாமென சைவம் குறிப்பிடுகிறது.

உருத்திராக்கம் எனும் உருத்திராட்சம் மரங்கள் நேபாளத்தில் அதிகமாகவும் தென்கிழக்காசியாவில் பரவலாகவும் காணப்படுகின்றன. உருத்திரரின் கண்ணையும் அவரது அருளையும் குறிப்பதாகக் கூறப்படும் உருத்திராட்சத்தை அணிவது சைவ நெறியில் முக்கியத்துவம் நிறைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. உருத்திராட்ச மணியிலுள்ள வரிகள் எண்ணிக்கை அதாவது முகங்கள் கொண்டு அவை ஒருமுகம், இருமுகம் என இருபத்தொன்று முகம் வரையிலும் முக்கியத்தவம் நிறைந்தவையாகக் கூறப்படுகின்றன. பதினான்கு முகமுடைய உருத்திராக்கம்

விலைமதிப்பற்ற தெய்வீக மணியாகவும், ஒன்றாக இணைந்திருக்கும் இருமணிகள் கௌரி சங்கர் மணியாகவும் குறிப்பிடப்படுகின்றன.

சைவ சித்தாந்தத்தை வளர்க்கும் நோக்கில் பல்வேறு சைவ சமய மடங்கள் அல்லது ஆதீனங்கள் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. சைவநெறியோடு தமிழ் வளர்ச்சி, அறப்பணிகள் போன்றவற்றையும் மேற்கொள்ளும் நோக்கத்துடன் மடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆதீனங்களின் கட்டுப்பாட்டில் பல கோவில்களும், கிளைகளும், ஏராளமான நிலங்களும் உள்ளன. திருக்கயிலாய பரம்பரை திருவாடுதுறை ஆதினம், தருமபுரம் அல்லது தருமை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதினம், மதுரை ஆதீனம் போன்றவை குறிப்பிடத்தக்க ஆதினங்களாக இருக்கின்றன.

திருமால், பெருமாள், இராமர், கிருஷ்ணர், கோவிந்தர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படும் விஷ்ணு, வைணவ சமயத்தின் முழுமுதற் கடவுளாக அறியப் பெறுகிறார். திருமால் சங்கு, சக்கரம், வில், வாள், தண்டம் எனும் ஐந்து ஆயுதங்கள் கொண்டவராகவும் இருக்கிறார். கருடாழ்வாரை வாகனமாகக் கொண்டுள்ள திருமால், நேபாளத்தின் கண்டகி ஆற்றங்கரைகளில் காணப்படும் சாளக்கிராமம் எனும் கருங்கற்களிலும் அருவமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

உலகினைக் காக்கும் கடவுளான திருமாலின் நாபியிலிருந்து படைப்புக் கடவுளான பிரம்மன் தோன்றியதாகவும், அதன் அடிப்படையில் பெரும்பாலான பெருமாள் கோவில்களில் அவரது நாபியிலிருந்து எழும் தாமரையில் பிரம்மர் இடம் பெற்றிப்பதும் குறிப்பிடத்தக்கது. புராணங்களின் படி திருமாலின் மகனாகவே பிரம்மன் கூறப்படுகிறார்.

கல்விக்கும் அறிவுக்கும் கலைகளுக்கும் கடவுளாகக் கருதப்படும் சரஸ்வதி தேவியோடு பிரம்ம லோகம் எனும் சத்திய உலகத்தில் இருப்பவராகக் குறிப்பிடப்படும் பிரம்மா, வேதங்களின் துணை கொண்டு படைப்பினை மேற்கொள்வதாகக் கூறப்படுகிறார். நான்கு முகங்களைக் கொண்டிருப்பதால் நான்முகன் எனவும் அழைக்கப்படுகிறார். பிரம்மாவின் மனத்திலிருந்து மரீசி, அத்திரி, ஆங்கிரசர், புலத்தியர் புலகர், கிருது மற்றும் வசிட்டர் எனும் சப்தரிஷிகளையும் படைத்ததாகக் குறிப்பிடப்படுகிறார். ராஜசிக புராணம் பிரம்மாவின் புகழ் பேசும் மகாபுராணங்களை உள்ளடக்கியதாகக் கூறப்படுகிறது.

பிரம்ம புராணம், பிரம்மாண்ட புராணம், பவிசிய புராணம், பிரம்ம வைவர்த்த புராணம், மார்க்கண்டேய புராணம் போன்றவை ராஜசிக புராணமாகக் குறிப்பிடப்படுகின்றன. ராஜஸ்தானின் ஆஜ்மீர் மாவட்டத்திலுள்ள நீலத்தாமரை எனும் புஷ்கர் கோவில் பிரம்மாவுக்கான பதழ்பெற்ற கோவிலாகக் கருதப்படுகிறது. எனினும் அங்கு வழிபாடு நடைபெறுவதில்லை எனவும் கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் கும்பகோணம் நகரில் சரஸ்வதி - காயத்திரி உடனுறையும் அருள்மிகு பிரம்மன் திருக்கோவிலில் தினசரி வழிபாடுகள் நடைபெறுவதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

திருமாலின் அவதாரங்கள் தசாவதாரம் எனப்படுகிறது. உலகில் அதர்மம் ஓங்குகிறபோது எளியவர்களைக் காக்கவும் தர்மத்தினை நிலைநாட்டவும் திருமால் அவதாரம் எடுப்பதாக வைணவர்கள் நம்புகின்றனர். திருமாலின் முதல் அவதாரம் மச்ச அவதாரம். மீனாகத் தோன்றி வேதங்களையும் உலகையும் காத்ததை மச்சாவதாரம் குறிக்கிறது. அமிர்தம் வேண்டி தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்த போது மேரு மலை மத்தாகவும் வாசுகி அரவம் கயிறாகவும் இருக்க திருமால் கூர்மம் எனும் ஆமை வடிவெடுத்து மேருவைத் தாங்கியதாகவும் புராணக்கதை விவரிக்கிறது.

பூமாதேவியை கடலுக்குள் மறைத்து வைத்த இரண்யாட்சனிடமிருந்து மீட்க வேண்டி எடுத்தது வராகம் எனும் பன்றியின் அவதரரமாகக் குறிப்பிடப்படுகிறது. இரணியனிடமிருந்து பிரகலாதனைக் காக்க வேண்டி மனித உடலும் சிங்க முகமும் கொண்டு எடுத்தது நரசிம்ம அவதாரம் எனப்படுகிறது.

உலகை வெல்ல யாகம் நடத்திய மகாபலிச் சக்ரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு ஓரடியால் மண்ணுலகையும் இரண்டாவது அடியில் விண்ணுலகையும் அளந்தது திருமாலின் வாமன அவதாரமாக அழைக்கப்படுகிறது.

சத்திரியர்கள் மேல் கோபம் கொண்டு கர்த்தவீரிய அருச்சுனன் போன்ற பல்வேறு சத்திரியை அரசர்களை அழித்தவராக பரசுராமர் அவதாரம் குறிப்பிடப்படுகிறது.

அயோத்தியின் அரசரான தசரதருக்கு மகனாய்ப் பிறந்தது இராமவதாரம். இராமரைக் கொண்டாடும் விதமாக வால்மீகி முனிவரால் இராமாயணம் எனும் பெருங்காப்பியம் இயற்றப்பட்டுள்ளது. வால்மீகி இராமாயணத்தைத் தழுவி

கவிச்சக்கரவர்த்தி கம்பரால் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட கம்ப இராமாயணம் தமிழின் மிகப்பெரும் காப்பியமாகப் புகழப்படுகிறது. இராம பக்தராகவும், தத்துவஞானியாகவும், பாடலாசிரியராகவும் மதிக்கப்படும் துளதிதாசரால் (1532-1623) இந்தியில் இயற்றப்பட்ட இராம சரித மானஸ், வட இந்தியாவில் மிகவும் புகழ்பெற்றதாக அறியப்படுகிறது. துளசிதாசர் அனுமனின் பெருமைகளைப் புகழ்ந்து அவாதி மொழியில் இயற்றிய அனுமன் சாலிசா பாடல்களும் இந்தி பேசும் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதாக் குறிப்பிடப்படுகிறது.

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி எனப் போற்றப்படும் இராமனது கதையை இராமகாதை எனும் பெயரில் காப்பியமாக்கியவர் கம்பர் (1180-1250). கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும், கல்வியில் பெரியவர் கம்பர் என்றெல்லாம் புகழப்படும் கம்பர், ஆழமான கவிதை அனுபவமும் கற்பனை ஆற்றலும் புலமைத்திறனும் கொண்டவராகவும் போற்றப்படுகிறார். தேரழுந்தூரில் பிறந்த கம்பரை சடையப்பர் எனும் வள்ளல் ஆதரித்ததாக கம்பரே குறிப்பிடுகிறார்.

சமஸ்கிருத மூலத்திலிருந்து கதை எடுக்கப்பட்டிருப்பினும், தமிழ் நிலத்திற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஏற்றவாறு இராமனின் கதை சொல்லப்பட்டிருப்பது சிறப்பாகும். இரகு குலத்து இராமனின் கதை பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்யா காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் ஆறு காண்டங்களாகவும், ஒவ்வொரு காண்டமும் பல்வேறு படலங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. கம்ப இராமாயணம் சாதி, மதம் கடந்து தமிழர் வாழ்வோடு ஒன்றிணைந்து விட்ட அழகோவியம் எனில் மிகையாகாது.

மிக அழகியதும் உயர்ந்த மதில்களால் நாற்புறமும் சூழப்பட்டதுமான அயோத்தியா நகரிலே, அனைத்து உலகங்களையும் விளங்கச் செய்கிற ஒளி போன்ற சூரிய குலத்திலே, ஒப்பற்ற தொரு விளக்காய், தேவர்களையெல்லாம் துன்பம் தீர்ந்து வாழச்செய்த மாவீரனும், சிவந்த கண்களை உடையவனும், கருமுகில் போன்ற நிறமுடையவனுமான ஸ்ரீஇராமன் கோசலை மைந்தனாய் அவதரித்தான். செருக்கி வந்து எதிரிட்ட தாடகையை முடித்து, எல்லா மந்திரங்களையும் வேதங்களையும் கொண்ட மகரிஷி விசுவாமித்திரர் வேள்வியைக் காத்து, இடையுறு செய்த பெருவுடல் கொண்டவர்களின் கதையை

முடித்தவன், சிவந்த தளிர்களின் நடுவே மலர்ந்த பூக்களில் வீற்றிருக்கும் பேரழகு பொருந்திய ஸ்ரீராமனாவான்.

செவ்வரியோடிய கருநிற நீள அழகிய கண்களையுடைய மிதிலாபுரியின் மைதிலியை மணம் புரிதற் பொருட்டு மாபெரும் வில்லை முறித்தவன், அடக்கியாளுதற்கு அரியதும் பகைவருக்கு அச்சத்தைத் தரவல்லதுமான வீரமிகு வில்லை ஏந்திய பெரிய கைகளையுடைய ஸ்ரீஇராமனாவான். கொத்துக் கொத்தாக மலர்ந்த பூக்களைச் சூடியிருக்கும் சுருண்ட கூந்தலையுடைய சிற்றன்னை கைகேயினுடைய சொல்லின் படி, அரசுரிமையைக் கைவிட்டு, கங்கையின் துறையில் குகனை உடன்பிறந்தானாக்கி, ஆருயிர் இளவல் சுமத்ரை மைந்தன் இலட்சுமணனோடு காட்டிற் போய் சேர்ந்து, பரதாழ்வானுக்கு மரவடியும் அரசாட்சியையும் சத்ருக்கனையும் அளித்து, திருச்சித்ர கூடத்தில் எழுந்தருளி கண் குளிரும் படி காட்சி கொடுத்தவன் ஸ்ரீராமபிரான்.

மலை போன்ற பெரிய தோள்களையுடைய விராதனை ஒழித்து, உயர்த்த தமிழ் அகத்திய முனி கொடுத்த வில்லைப் பெற்று, மானின் பார்வையைத் தோற்பிக்கும் படியான பார்வையழகை உடையவளாய் வந்த சூர்ப்பநகையை வெறுத்து, மாரீசனாகிய மிருகத்தை அழித்து, பூமாதேவியை பெருமையுடைதாய் ஆக்கியவன், சிறந்த வில்லை வளைத்து தொடுக்கும் ஸ்ரீஇராமனாவான். வைதேகியைப் பிரிந்து வருத்த முற்று, ஐடாயு எனும் கழுகரசை பரமபதத்திற்கு செலுத்தி, காட்டில் மறைந்து வசித்த வனராஜன் சுக்ரீவனுடன் நட்புக் கொண்டு, அவன் விருப்பத்தின் படி வாலியை வதைத்து, இலங்காபுரி இராவணனின் செருக்கு ஒழியும் படி அந்நகரை அனுமனைக் கொண்டு எரித்தவன் அனைத்து உலகங்களுக்கும் தலைவனான ஸ்ரீராமனாவான்.

ஓலிக்கின்ற கடலை அம்பால் அடக்கி, அணைகட்டி, அக்கரை சேர்த்து, அரசன் உட்பட அனைவர் உயிரையும் அகற்றி, விபீடணனுக்கு அரசபதவியை அளித்து, எல்லா வகைச் செல்வங்களும் நிறைவாகப் பெற்ற பிராட்டியுடன் இனிமையாக உலகத்தை உய்வித்தருளியவன் ஸ்ரீராமபிரான். உயர்ந்த பொன்னையும் இரத்தினங்களையும் கொண்டு அமைக்கப்பட்ட மாட மாளிகைகளையுடைய அயோத்யா நகரில் உலகு உய்ய மிதிலை செல்வியின் திருவயிற்றில் வாய்த்த தவப் பிள்ளைகளான குசலவர்களுடைய சிவந்த

பவளத்துண்டு போன்ற வாயினால் இனிய அமுதம் போன்ற இராமகாதையைக் கேட்டருளியவன் உலகத்தை நன்னெறியில் உய்த்த வந்த ஸ்ரீராமனாவான்.

அன்று சர அசரங்களை வைகுந்தத்து ஏற்றி, அடல் அரவம் பகை ஏறி அசுரம் தம்மை வென்று, இலங்கும் அணி நெடு தோள் நான்கம் தோன்ற, விண்முழுதும் எதிர் வர தன் தாமம் மேவி சென்று இனிது வீற்றிருந்த அம்மான் அடியவர்கள் நாளும் வணங்கும் ஸ்ரீஇராமனே. திறல் விளங்கும் மாருதியோடு அமர்ந்தான் தன்னை, எல்லை இல்சீர் தயரதன் தன் மகன் ஆய் தோன்றிற்று அது முதல் ஆதன் உலகம் புக்கது ஈறு ஆ வல்லார், நலம் திகழ் நாரணன் அடிகீழ் நண்ணுவார்.

பலராமரும், கிருஷ்ணரும் அடுத்த அவதாரங்கள். பலராமன் ஆதிசேடனின் வடிவமாகவும் கருதப்படுகிறார். வசுதேவருக்கும் ரோகிணி தேவிக்கும் பிறந்தவரான பலராமன் கலப்பையை ஆயுதமாகக் கொண்டிருக்கிறார். யது குலத்து மன்னர் சூரசேனர் மகனான வாசு தேவருக்கும் மதுரா மன்னன் உக்கிரசேனரின் தம்பியான தேவகனின் மகள் தேவகிக்கும் ஆவணி மாதம் அட்டமி திதி, ரோகிணி நட்சத்திரத்தில் உதித்தவர் வாசுதேவ கிருஷ்ணர். வாசு தேவக் கிருஷ்ணனை வளர்த்த பெற்றோர் நந்தகோபால் மற்றும் யசோதை தாயார். கிருஷ்ணர் பலராமரின் செல்லத் தங்கை சுபத்ரா தேவி. வசுதேவரின் தங்கையும் பாண்டவர்களின் தாயாருமான குந்தி தேவி கிருஷ்ணரின் அத்தை. வாசுதேவ கிருஷ்ணனின் மாமா உக்கிரசேனரின் மகனான கம்சன்.

கிருஷ்ண துவைபாயனர் எனும் வியாச மாமுனிவரால் எழுதப்பட்ட ஸ்ரீமத் பாகவதம் எனும் மகாபாகவதம், கிருஷ்ணனின் பெருமைபாடும் இனிய காவியமாக வைணவர்களால் கொண்டாடப்படுகிறது. முப்பதாயிரம் பாடல்கள் கொண்டதாகக் குறிப்பிடப்படும் ஸ்ரீமத் பாகவதத்தை பதினாறாம் நூற்றாண்டில் திருவரங்கத்தில் வாழ்ந்த வரதராஜ ஐயங்கார் நூற்றி முப்பது படலங்களில், ஒன்பதாயிரத்து நூற்றி நாற்பத்தி ஏழு பாடல்களில் நூலாக அருளிச் செய்துள்ளார். கண்ணனின் வரலாற்றுக் கதையை பக்தி மணம் கமழுமாறு அருளிய வரதர் அருளாள தாசர் என்றும், அவரது கோபாகவதம் புராண பாகவதம், வாசு தேவ-கதை, அருளாளதாசர் பாகவதம் எனவும் அழைக்கப்படுகிறது.

விதர்ப்ப நாட்டு உருக்குமணி தேவி மணப்பருவம் அடையும் போது அங்கு வரும் நாரத மாமுனிவர் கிருட்டிணனின் வரலாற்றைக் கூறும் விதமாக, முன்னர்

நிகழத்திய அவதாரங்களின் பெருமைகள், கண்ணனின் பிறப்பு, யசோதையிடம் வளர்த்தல், வெண்ணெய் திருடுதல், கோபியர் ஆடை கவர்தல், கம்சனின் அசுரர்களை அழித்தல், கம்சனின் கதை முடித்தல், ருக்மணி, சத்யபாமா, சாம்பவதி உட்பட எட்டு திருமணங்கள் நடைபெற்றது, தேவலோக பாரிஜாத மலர் கொண்டுவந்தது, மகன் சாம்பனின் மணமுடிப்பு, குசேலர் அருள், பாண்டவர் கதை, மகாபாரதப் போர், பேரன் அநிருத்தன் பிறப்பு, கல்கி வரலாறு, கலியுகத் தர்மம், வைணவப் பதிகள் என கிருட்டிணனின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கும் அனைத்தும் மகாபாகவதத்தில் விவரிக்கப்படுகிறது.

பாரதப் பண்பாட்டின் முதன்மைக் காவியமாகப் போற்றப்படும் மகாபாரதம் கிருஷ்ணரை முதன்மைப்படுத்தியே வேதவியாசரால் இயற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. குரு மரபைச் சார்ந்த இளவரசர்களிடையே நிகழும் அரியணைப் போட்டியை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள பாரதக் கதை, பண்டைய இந்தியாவின் வரலாற்றைச் சொல்லும் கருவூலமாகவும் கருதப்படுகிறது. பெரும் போரைப் பற்றி பேசும் பாரதக் கதைக்குள், ஏராளமான மெய்யியல் கருத்துக்கள், நீதிநெறி விளக்கங்கள், வாழ்வியல் நுட்பங்கள் எடுத்தாளப்பட்டிருப்பது தனிச் சிறப்பானது.

ஐந்தாம் வேதமாகக் புகழப்படும் மஹாபாரதம், பதினான்கம் நூற்றாண்டில் திருவில்லிபுத்தூரில் பிறந்த வில்லிபுத்தூராழ்வாரால் தமிழில் வில்லிபாரதமாக, நான்காயிரத்து முந்நூற்றி ஐம்பத்தொரு அழகிய பாடல்களுடன் இயற்றப்பட்டுள்ளது. பதினெட்டாம் நாள் போரின் முடிவில் தருமருக்கு முடி சூட்டுதல், பாண்டவர் அரசாட்சி ஏற்றல் என்பதோடு பாரதம் முற்றுப் பெறுமாறு வில்லிபுத்தூரார் பாடல்கள் புனைந்துள்ளார்.

வைணவக் காப்பியங்களுள் ஒன்றான பதினெட்டாம் நூற்றாண்டின் நல்லாப் பிள்ளை பாரதம், வியாச பாரதம் முழுவதையும் தமிழ்படுத்தி பதினான்காயிரம் பாடல்களால் பாடப்பட்டிருக்கிறது. மீனவ வியாசரின் மகாபாரதத்தை அரும்பாடுபட்டு உரைநடையில் மொழியாக்கம் செய்வதவராக கும்பகோணம் ம.வி இராமானுஜச்சாரியார் போற்றப்படுகிறார். குருசேத்திரப் போரின் தொடக்கத்தில் அர்ஜுனரைத் தேற்றும் விதமாக பகவான் கிருஷ்ணர் அருளிய பகவத்கீதை, இந்திய தத்துவ ஞானத்தின் சுருக்கமாகப் புகழப்படுகிறது. கர்ம யோகம், பத்தி யோகம், ஞானயோகம் போன்றவற்றினூடாக பகவானின் பாடல்கள் எனும்

பகவத்கீதையின் உட்பொருளாக சரணாகதி தத்துவம் விளக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

புல்லாங்குழலிசைத்து, கறவைகள் பின் சென்று, தோழர், தோழியரோடு குதூகளித்து, குறும்புத்தனங்கள் ஏராளமாகச் செய்து, உரலில் கட்டுண்டு, உலகைக் காட்டிய பிருந்தாவனத்தின் செல்லக் கிருஷ்ணன், கோபாலன், கோவிந்தன், கோவர்தனன், கேசவன், மாதவன், தாமோதரன், வாசுதேவன், ஜெகன்னாதன், விட்டலன், குருவாயூரப்பன், துவரகாதீசன், பார்த்தசாரதி, கோகுலக் கண்ணன் உலகினர் அனைவர் உள்ளங்களையும் கொள்ளை கொள்பவன் எனில் மிகையாகாது.

வைணவ சம்பிரதாயத்துக்கு ஸ்ரீஇராமானுஜர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. இராமானுஜரின் விசிஷ்டாத்வைதத்தில், ஸ்ரீவைஷ்ணவத்தில் ஸ்ரீஎன்றும் தாயார் என்றும் குறிப்பிடப்படும் மகாலட்சுமிக்கே முதன்மை இடம் அளிக்கப்பட்டள்ளது. ஆதி பரம்பொருளான நாராயணனின் திருமார்பில் உறைபவராகக் குறிப்பிடப்படும் திருமகளின் அருளை, கருணையைப் பெற்றாலே போதுமென்பது ஸ்ரீவைணவர்களின் வழக்கத்திலுள்ளது.

ஸ்ரீவைணவத்தின்படி இறைவனுக்கெல்லாம் இறைவன் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனான நாராயணனே ஆவார். உலகமும் உலகிலுள்ள அனைத்தும் நாராயணரின் வடிவங்களே. அனைத்தும் நாராயணரே. உலகத்தை உய்வித்தருளும்படிக்கு பலப்பல அவதாரங்களை எடுக்கும் நாராயணர், கோவில்களில் அர்ச்சாவதார மூர்த்தியாகவும் காட்சியளிக்கிறார். மனித குலத்திற்கு தாயும் தந்தையுமாக இருக்கும் நாராயணரை அடைய எளிய வழி அவரிடம் சரணாகதி அடைவதே. நாராயணரின் அடியவராகிவிட்ட ஒருவரை உய்விக்க வேண்டியது நாராயணரின் பொறுப்பு.

வைணவத்தின்படி படைத்தல் மாயை அல்ல. அது ஒரு உண்மை. உலகப் பொருள், ஜீவன், ஈஸ்வரன் ஆகிய மூன்று தத்துவங்களும் மூன்று படிகளிலுள்ள உண்மைகள். பொருள் அல்லது அசித் அறிவற்றது எனவும் உயிர் அல்லது ஜீவன் அல்லது சித் அறிவுள்ளது எனவும் குறிப்பிடப்படுகிறது. இரண்டுமே நாராயணருடைய ஒரு துளியிலும் துளியே. முந்தைய பிறவிகள் தொடர்கின்றன. பிறவியற்ற நிலை அல்லது மோட்சம் என்பது வைணவக் கொள்கையின்படி

நாராயணனுடன் வைகுந்தத்தில் வாசம் செய்வதே. பிறவிப் பெருங்கடலை கடப்பதே மோட்சம். அதற்கு ஸ்ரீமந் நாராயணரின் அருட்பார்வை வேண்டும். நாராயணனின் திருவருள் கிடைக்க தன்னலமற்ற பக்தி செலுத்துவதும், அடியவராவதும், ஸ்ரீவைணவத்தின்பால் ஆசை வைப்பதும் போதும்.

நாராயணரின் பெருமைக்கு நிகரில்லை என்பர். அவரது பெருமைகளை யாராலும் அளவிட முடியாதெனவும் கூறுவர். உலகிலுள்ள அனைத்து உயிர்களையும் உய்விக்க நாராயணர் ஐந்து நிலைகளில் வீற்றிருந்து அருள் செய்வதாகக் குறிப்பிடுவர். ஸ்ரீவைகுந்தத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி தாயார்களுடன் நித்ய சூரிகள் முக்தர்கள் சூழ வீற்றிருந்து உலகிற்கு அருளினை வாரி வழங்கும் திருக்கோலம் பரம். அனந்தாழ்வான் மீது சயனத் திருக்கோலத்தில் தாயார்கள் பாதம் பற்ற பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பது வியூகம். பூவுலகில் அவதரித்த அவதாரங்கள் விபவம். ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்தருளிய திவ்ய தேசங்களிலும் திருக்கோவில்களிலும் அடியவர்களுக்கு காட்சி தந்து அருளும் திருக்கோலம் அர்ச்சை. உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவனின் இருதயத்துள் வீற்றிருந்து அருளுவது அந்தர்யாமித்துவம்.

மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் தலைவனான நாராயணன், மக்களுக்கு நல்வழி காட்ட வேண்டியும் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் நோக்கிலும் பல அவதாரங்கள் செய்தார். மக்களோடு மக்களாகப் பிறந்து அவர்களுடன் வாழ்ந்து நல்வழிகாட்ட விரும்பி அவரே ஆழ்வார்களாகவும் தோன்றினார். அவரின் பெரிய திருவடியான கருடாழ்வாரின் தோற்றமாக பெரியாழ்வாரும், திருமார்பை அலங்கரிக்கும் கௌஸ்துவமணியின் தோற்றமாக குலசேகராழ்வாரும், திருக்கரத்திலுள்ள ஆழியின் தோற்றமாக திருமழிசை ஆழ்வாரும், நாந்தக வாளின் தோற்றமாக பேயாழ்வாரும், கதாயுதமான கௌமோதகியின் தோற்றமாக பூதத்தாழ்வாரும், பாஞ்சன்ய திருச்சங்கின் தோற்றமாக பொய்கையாழ்வாரும், வனமாலையின் தோற்றமாக தொண்டரடிப்பொடியாழ்வாரும், சாரங்க வில்லின் தோற்றமாக திருமங்கையாழ்வாரும், திருமார்பில் இருக்கும் திருமறுவின் தோற்றமாக திருப்பாணாழ்வாரும் தோன்றினர். நாராயண சேனையின் தலைவரான விஷ்வக்சேனரின் தோற்றமாக நம்மாழ்வார் தோன்றினார். மண்ணுலகின் மலர்ச்சிக்காகத் தோன்றிய ஆழ்வார்கள், நாராயணரை போற்றிப் புகழ்ந்தனர். நாராயணர் குடிகொண்டிருக்கும் திருக்கோவில்களுக்கெல்லாம் சென்று

மங்களாசாசனம் பாடினார். பல்லாண்டும் பள்ளியெழுச்சியும் படைத்தனர். அந்தாதி செய்தனர். தூது அனுப்பினர். நாயகியாக மாறினர். எப்படியும் அடியவர்களைக் கரை சேர்த்தே தீருவது எனும் நாராயணரின் எண்ணம் ஈடேறும் விதமாக நானிலம் போற்றும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் எனும் நாற்றங்காலை பயிர்செய்தளித்தனர். ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் போற்றி!

ஆச்சார்யார்களின் அருந்தொண்டுகள் போற்றி! ஆழ்வார்களின் அவதாரம் முடிந்த பின்னர் காலப்போக்கில் அவர்களது அருளிச் செயல்களான பாடல்கள் மறையும் நிலை ஏற்பட, ஆழ்வார்களின் தேமதுரத் தெள்ளு தமிழ் பிரபந்தங்களை வெளிக்கொணர்ந்து உலகை வாழ்விக்க திருவுளம் கொண்ட ஸ்ரீமந் நாராயணன் உண்டியே, உடையே என உகந்து ஓடுகின்ற உலகத்தார்க்கு, உறுபொருளைத் தெளிவிக்கும்படிக்கு ஆச்சாரியர்களாக அவதாரம் செய்தான்.

ஸ்ரீவைணவத்தின் வரலாற்றினையும், பெருமையையும் அறிந்து கொள்வதற்கு குருபரம்பரை வைபவம் எனும் நூல் வழிகாட்டியாகக் கொள்ளப்படுகிறது. ஆழ்வார்களின் அருளிச் செயலின் சிறப்பிற்கும், ஆசார்யார்களது அருளுரைகளின் ஏற்றத்திற்கும், பெருமாளின் கல்யாண குணங்களை நன்கு அறிந்து சம்சாரமாகிற பெருங்கடலிலிருந்து கரையேறி மோட்ச சாம்ராஜ்யமாகிற பேரின்பம் அடைவதற்கும், இன்றியமையாத துணையாகக் குருபரம்பரை இருக்கிறது.

ஸ்ரீவைணவக் குருபரம்பரையில் பெரிய பெருமாள், பெரிய பிராட்டியார், சேனை முதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, எம்பெருமானார், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியார், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள் ஆகிய பதினெண்மர் ஆச்சார்யர்களாகக் கொள்ளப்படுகின்றனர்.

குருபரம்பரையில் எம்பெருமானார், உடையவர் எனக் குறிப்பிடப்படும் இராமானுஜருக்கு முன்னவராகத் தோன்றியவர்களான ஆளவந்தாரின் சீடர்கள் திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், பெரிய திருமலை நம்பி, திருவரங்கப் பெருமாளரையர், திருக்கச்சி நம்பி போன்ற ஆச்சார்யர்களுக்கும், உடையவருக்குப் பின்புள்ளவரான கூரத்தாழ்வான், முதலியாண்டான், பெரியவாச்சன் பிள்ளை,

அழகிய பெருமான் நாயனார் போன்ற ஆச்சார்யர்களுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

திருமகளும் மண்மகளும் சிறக்க, செய்ய விடைத்து ஆய் மகள் சேவிக்க, பெருகி வரும் பொன்னி நடுப்பின் துயிலும் பெரிய பெருமாள் முதல் ஆசார்யராகவும், பங்கயப் பூவில் பிறந்த பாவை நல்லாள், மங்கையர்கள் திலகமென வந்த செல்வி, செங்கமலச் செய்யரங்கம் செழிக்க வந்த சீரங்கத் தாயார் ஆசார்ய மரபில் இரண்டாவதாகவும் ஜீவாத்மாக்களுக்கு முதல் ஆசார்யராகவும் குருவருள் பொழிகின்றனர்.

தேங்கு புகழ் அரங்கரையே சிந்தை செய்வோனாகிய சேனை முதலியார், நாராயணரின் தெய்வீகப் படைகளுக்கு தலைவராகவும் மூன்றாவது ஆச்சாரியராகவும் சடகோபரான நம்மாழ்வாருக்கு மரபு வழி ஞானத்தை உரைத்தவராகவும் அறியப்படுகிறார். முதல் மூன்று ஆச்சார்யர்களும் விண்ணுலக ஆச்சார்யர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

வேதம் தமிழ் செய்த மாறன் எனப் புகழப்படும் நம்மாழ்வார், திருநெல்வேலி-திருச்செந்தூர் வழித்தடத்திலுள்ள ஆழ்வார் திருநகரி அருகிலுள்ள திருக்குருகூர் எனும் ஊரில் பிறந்தவராகவும், நம்மாழ்வாரின் ஞானத்தாலும், பக்தியாலும் கவரப்பெற்ற மதுரகவியாழ்வார் அவருக்கு தொண்டுசெய்து வந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. சடகோபன், மாறன், பராங்குசன், குருகைப்பிரான், வகுளாபரணன், ஞான பிரான், தொண்டர் பிரான், குருகைப்பிரான், முனிவேந்து, திருவாய்மொழி பெருமாள் உட்பட ஏராளமான பெயர்களால் போற்றப்படும் நம்மாழ்வார் ஸ்ரீவைணவத்தின் பெருமைக்குரியவராகவும் திகழ்கிறார்.

ஸ்ரீநாத முனிகள் (824-924) குருபரம்பரையின் முதலாவது ஆச்சார்யராகப் போற்றப்படுகிறார். காட்டுமன்னார்கோவில் பகுதியில் வீரநாராயணபுரம் மன்னனார் பெருமாளுக்கு தொண்டு செய்து வந்த நாத முனிகள், வைணவர்களில் சிலர் பெருமாளுக்கு முன் திருவாய்மொழி ஐந்தாம் பத்தின் எட்டாம் பதிகமான "ஆராவமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே - நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே - சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த்திருக்குடந்தை - ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டேனெம்மானே" எனத் தொடங்கி ஆயிரத்துள் இப்பத்தும் என முடித்தது கண்டு, திருவாய்மொழி ஆயிரத்தையும் பெற

வேண்டுமென்ற பேராவலில், அரிய முயற்சிகள் செய்து, ஆழ்வார் திருநகரை அடைந்து, மதுரகவி ஆழ்வார் பாடிய கண்ணிநுண் சிறுத்தாம்பு பாசுரம் கொண்டு, நம்மாழ்வார் பாடிய ஆயிரம் மட்டுமல்லாது அவரது மற்ற பாசுரங்களையும், அனைத்து ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்களையும் உளம் மகழப் பெற்று, பெருமாளின் நியமனப்படி பாசுரங்களை வரிசைப்படுத்தி, இயலும் இசையுமாக்கி, அவரது மருமக்களான மேலையகத்தாழ்வான் மற்றும் கீழையகத்தாழ்வான் முதலானோர் மூலமாகத் திவ்யபிரபந்தங்கள் திக்கெட்டும் பரவ பாதை அமைத்தவராகப் போற்றப்படுகிறார்.

நாதமுனிகளின் திருக்குமாரரான ஈசுவரமுனிகளுக்கு மகனாக அவரித்தவர் யமுனாசார்யர் எனும் ஆளவந்தார் (916-1041). வைணவ மரபுக்கு ஆளவந்தார் ஆற்றிய தொண்டுகள் ஏராளம். கீதாத்த ஸங்க்ரஹம், ஸ்தோத்ர ரத்னம் போன்ற பல அரிய நூல்களை இயற்றியும், இரண்டாற்றின் கரையில் ஆயிரந் தலைப் பாம்பினால் காக்கப்படும் பெருஞ்செல்வமான ஸ்ரீரங்கருக்கு அளப்பரிய சேவைகள் செய்தும், ஆம் முதல்வன் என இராமானுஜரைக் கண்டடைந்தும், புகழ்மிக்க பல சீடர்களை உருவாக்கியும், திருவரங்கப் பெருமாள் அரையர் முதலிய நன் மக்களைப் பெற்றும் வைணவத்திற்கு அரும்பணியாற்றியுள்ளார். கோயிலாழ்வாரே (ஸ்ரீரங்கநாதனே) உயிர் நிலையாகவும் தஞ்சமாகவும் கொள்ளுங்கோள்! மேலும் பெரிய பெருமாள் (அரவணையில் துயிலும் ஸ்ரீரங்கநாதன்) திருவடிகளின்கீழ் வீணையும் கையுமாக நிற்கும் திருப்பாணாழ்வார் விக்ரகத்தைத் திருவடி முதல் திருமுடிவரை சேவித்துக் கொண்டிருங்கோள்! திருவேங்கடமுடையான் காஞ்சிப் பேரருளாளன் திருவரங்கப் பெருமாள் நிலையிலே நில்லுங்கோள்! என்றருளிய ஸ்ரீஆளவந்தார் போற்றுதலுக்குரிய பெருமானாவார்.

ஆளவந்தாரின் சீடர் பெரிய திருமலை நம்பியவர்களின் மூத்த சகோதரி பூமிப்பிராட்டி என்கிற காந்திமதி அம்மையாருக்கும், ஸ்ரீபெரும்புதூர் கேசவ சோமயாஜி அய்யாவுக்கும், பிங்கல ஆண்டு, சித்திரை மாதம், சுக்ல பட்சம், பஞ்சமி திதி, வெள்ளிக்கிழமை கூடிய திருவாதிரைத் திருநாளில் உலகம் செய்த தவப்பயனாய் கலி இருள் நீங்கிக் கிருதயுகம் போல சாது தர்மம் தழைக்க மிகுந்த ஒளியோடு விளங்கும் ஆண்குழவி பிறந்தது. சர்வ லட்சணங்களும் ஒருங்கே அமைந்த அக்குழந்தைக்கு, இளையாழ்வார் எனும் திருநாமத்தை பெரிய திருமலை நம்பி சூட்டினார். இளையாழ்வரே பின்னர் இராமனுஜமுனி எனவும் உடையவர்

எனவும் பாஷ்யக்காரர் எனவும் எம்பெருமானார் எனவும் பெரும்பேறு பெற்று ஸ்ரீவைணவத்தை வானளாவிய புகழ் கொண்டதாக வளர்த்தெடுத்தவர்.

பெருமானின் ஐந்தாயுதங்களும் ஒருசேர எம்பெருமானாராக ஆயினவோ என்றும், ஆதிசேஷனோ, சேனை முதலியாரோ அல்லது லட்சுமிநாதனான எம்பெருமான்தானோ என்று பேரறிஞர்கள் வியந்து போற்றும் படிக்கு பெருங்கீர்த்தியுடைய உடையவரின் வைபவம் சொல்லிலடங்காது.

ஊரும் நாடும் நன்கறிய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ பெருகி ‘‘பொலிக பொலிக - போயிற்று வல்லுயிர்ச் சாபம்’’ என ஆழ்வார் மங்களாசாசனப்படி கலியுகம் நீங்கிக் கிருதயும் தோன்றச் செய்தார் பரமபதத்தை அளிப்பவரான ஸ்ரீஇராமானுஜர்.

இராமானுஜரின் சீடர்களுள் கூரேசர் எனும் கூரத்தாழ்வார் (1009-1133), முதலியாண்டான் (1027-1132), சிற்றன்னையின் மகனான எம்பார் எனும் கோவிந்தப் பெருமான் (1021-1140) குறிப்பிடத்தக்கவர்களாக அறியப்படுகின்றனர். இராமானுஜர் காலத்தில் எழுதப்பட்ட திவ்யசூரி சரிதம், யதிராஜ வைபவம் போன்ற நூல்கள் ஆச்சார்யர்களை அறிந்து கொள்ள உதவுபவை. திருவரங்கத்தமுதனார் இயற்றிய ப்ரபந்த காய்த்ரீ எனப் புகழப்படும் இராமானுஜ நூற்றந்தாதி பெருடையுடையது.

இராமானுஜரால் பாராசரபட்டர் எனப் பெயரிடப்பட்டவரும், அருளிச் செயல் நிர்வாகம் அளிக்கப்பட்டவரும், நம்பெருமாளின் ஸ்வீகார புத்ரர் எனும் பெருமை பெற்றவரும், கூரத்தாழ்வார் ஆண்டாள் அம்மையார் தவப்புதல்வருமான பட்டர், ஸ்ரீவைணவ மரபில் மிகச் சிறந்த ஞானம் கொண்டிருந்தவராகப் போற்றப்படுகிறார். நாராயணரின் ஓராயிரம் திருப்பெயர்களைப் போற்றும் விஷ்ணு ஸகஸ்ர நாமத்திற்கு சிறப்பான உரை எழுதியவராகவும் பட்டர் புகழப்படுகிறார். பட்டரால் திருத்தப்பட்ட வேதாந்தி, பின்னர் நஞ்சீயர் (1113-1208) எனும் பெயர் பெற்று திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி உரை எழுதியவராக அறியப்படுகிறார். திருக்குருகைப் பிரான் (1026-1131) அருளிய ஆறாயிரப் படி உரையை அடிப்படையாகக் கொண்டு ஒன்பதினாயிரப்படி எழுதப்பட்டிருக்கிறது.

நஞ்சீயரின் உரையை அழகு தமிழில் எழுதியவராகவும், நம்முடைய பிள்ளை என நஞ்சீயரால் தழுவப் பெற்றவருமான வரதாசார்யர் எனும் நம்பிள்ளை (1147-1252) சிறந்த ஆச்சாரியராகவும் ஸ்ரீவைஷ்ணவத்தில் சிறந்த ஞானம் பெற்றிருந்தவராகவும் அறியப்படுகிறார்.

ஒருவருக்கு ஸ்ரீவைஷ்ணவத்வம் (ஸ்ரீவைஷ்ணவனாயிருக்குந்தன்மை) உண்டென்று அறிவது எப்படி எனும் கேள்விக்கு ‘‘அர்சாவதாரத்திலே பரத்வ புத்யும் (அர்ச்சா மேனியும் பரவஸ்துதான் என்ற எண்ணம்), சொந்தப் பிள்ளை முதலானாரிடம் உண்டாகும் அன்பின் அளவாகிலும் ஒரு ஸ்ரீவைஷ்ணவரிடம் பிறக்கையும், ஒரு வைஷ்ணவர் கோபித்து வார்த்தை சொன்னால் அந்த வார்த்தை ஆனந்தமாயிக்கையும் உண்டானால் ஸ்ரீவைஷ்ணவத்வம் உண்டென்று அறியலாம்’’ என்று நம்பிள்ளை அருளியிருக்கிறார்.

ஸ்ரீவைஷ்ணவர்கள் என்று பெயர் வரக் காரணம் யாது? ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீயப்பதி (லட்சுமி நாயகன்) புத்ரர்களாகையாலும், ஸ்ரீயோடு கூடின பெருமாள் பிதாவாகையாலும், ஸ்ரீ(திருமகள்) மாதாவாகையாலும், ஸ்ரீமானுடைய பெருமைகளை அறிகையாலும், ஸ்ரீமாந் புத்ரர்களின் பெருமைகளை அறிகையாலும், பிராட்டியோடு கூடிய பெருமானுக்கு அடிமை என்று ‘ஸ்ரீமத்’ என்ற பதத்திலே உண்டாகையாலும், ஸ்ரீ(பிராட்டி) புத்ரர்களை புருஷகாரமாக (புத்ரர் குறைகளைக் கண்டு பெருமாள் வெறுக்காமல் பண்ணி அங்கீகரிக்கும்படிச் செய்து) வளர்க்கையாலும், ஸ்ரீவைஷ்ணவர்கள் என அழைக்கும்படி ஆயிற்று.

ஸ்ரீமந் நாராயணன் அனந்தகோடி கல்யாண குணங்களைக் கொண்டவன். அடியோம் ஒரு சின்னஞ்சிறு துளியிலும் சிறுதுளி எனும் அடிப்படை மனப்பான்மை கொண்டோரே ஸ்ரீவைஷ்ணவர்கள்.

லோகாசார்யர் என்று புகழப்பட்ட நம்பிள்ளையிடத்து பெரியவாச்சான் பிள்ளை (1161-1262), வடக்குத் திருவீதிப் பிள்ளை (1167-1264), பின்பழகிய பெருமாள் ஜீயர், ஈயுண்ணி மாதவப்பெருமாள் போன்ற பெருமைக்குரிய பல சீடர்கள் இருந்திருக்கின்றனர். வியாக்கியானச் சக்ரவர்த்தி எனப் புகழப்படும் பெரியவாச்சான் பிள்ளை, நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முழுமைக்கும் உரை எழுதியவராக அறியப்படுகிறார். பிள்ளை திருவாய்மொழிக்கு எழுதியுள்ள இருபத்திநாலாயிரப்படி என்ற உரையும் குறிப்பிடத்தக்கது. வடக்கு திருவீதிப் பிள்ளை திருவாய்மொழிக்கு ஈடு முப்பதாயிரம் படி எனும் உரையினை எழுதியிருக்கிறார். திருவீதிப் பிள்ளையின் புதல்வர்கள் பிள்ளை லோகா சார்யார் (1205-1311) மற்றும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். பிள்ளை லோகாசாரியாரின் ஸ்ரீ வசநபூஷணம், நாயனாரின் ஆசார்ய க்ருதயம் போன்ற நூல்கள் சிறப்பானவைகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

காஞ்சிபுரம் தூப்பில் எனும் ஊரில் பிறந்ததால் தூப்பில் பிள்ளை என அறியப்படும் வேதாந்த தேசிகர் (1268-1369) காலத்தில் வடகலை தென்கலை என வைணவம் இரண்டு பிரிவானதாகக் குறிப்பிடப்படுகிறது. வேதாந்த தேசிகர் வடகலைப் பிரிவைப் பின்பற்றியவராகவும், பிள்ளை லோகாச்சாரியார் தென்கலை மரபைப் பின்பற்றியவராகவும் அறியப்படுகின்றனர்.

வைணவத்தில் திருமண் என்னும் திருநாமம் இட்டுக்கொள்வது மரபாகக் கடைபிடிக்கப்படுகிறது. திருமண் ஸ்ரீமந்நாராயணின் திருப்பாதங்கள் என்றும், அவரது திருப்பாதங்களைப் பற்றிக் கொள்வதே உயிர்கள் உய்வதற்கான ஒரே வழி எனும் சரணாகதி தத்துவத்தின் அடிப்படையில் திருநாமம் காப்பு இடப்படுகிறது. வடகலை, தென்கலை இருவருமே திருமண் காப்பு தரிக்கின்றனர். எனினும் சிறு வேறுபாடாக, தென்கலையார் பாதம் வைத்த திருநாமத்தையும், வடகலையினர் பாதம் இல்லாமல் போடும் நிருநாமத்தையும் இடுகின்றனர். தென்கலையினருக்கு தமிழ் வேதமான நான்காயிரம் பாடல்களும், வடகலையார்க்கு சமஸ்கிருத வேதங்களும் முக்கியமானவை. சித்தாந்த ரீதியில் வடகலை வைணவர்கள் மர்கட வழியினர். குட்டிக் குரங்கு அதன் தாய் குரங்கை எவ்வாறு இறுக்கமாகப் பற்றி கொள்கிறதோ அதே போல் வைணவர்களும் நாராயணன் பாதங்களை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். முதலில் பற்றிக் கொள்ள வேண்டும். பின்னரே நாராயணரின் அருட்பார்வை கிடைக்கும். தென்கலை வைணவர்கள் பூனை வழியினர். தாய் பூனையொன்று அதன் குட்டிப் பூனையை எவ்வாறு பாதுகாப்பாகக் கவ்விக் கொள்கிறதோ அவ்வாறே நாராயணன் அவரது அடியவர்களுக்குப் பாதுகாப்பளிப்பான். அடியவர் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. நாராயணனின் பாதங்களுக்கே அடிமை கொள்வதாக உறுதி கொண்டால் போதும்.

சிறந்த ஆசார்யராகப் போற்றப்படும் பிள்ளை லோகாசாரியார் காலத்தில் துருக்கி ஆப்கானிய இணைப்பு மரபில் வந்த டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் (1290-1316) நம்பிக்கையைப் பெற்றவரான மாலிக்கபூர் என்பவரின் தலைமையில் 1311-ல் நிகழ்ந்த மதுரை படையெடுப்பு இந்து நெறிக்கும் பெரும் இழப்பைக் கொடுத்ததாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

பாண்டியர்கள் எழுச்சியுற்றதே சோழர்களின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாக அமைந்தது. மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் என்று புகழப்படும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216-1238) சோழப் பேரரசினை வென்று,

சோழர்களை திறை செலுத்த வைத்தவராகக் குறிப்பிடப்படுகிறார். மாபெரும் வீரராகவும் சிறந்த மன்னராகவும் திகழ்ந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன், சோழநாட்டிற்கு மிகப்பெரும் அழிவைக் கொடுத்தவராக அவரது மெய்க்கீர்த்தி குறிப்பிடுகிறது. கூடமும் மாமதிலும் கோபுரமும் ஆடரங்கும் மாடமும் மாளிகையும் மண்டபமும் பலவிடித்துத் தள்ளப்பட்டனவாம். சோழ அரண்மனைகள், அவற்றின் தூண்கள் இடித்துப் பொடியாக்கப்பட்டனவாம். சோழர்களை வீழ்த்த பலகாலமாக முயன்று கொண்டிருந்த பாண்டியர்களின் சினத்திற்கு ஒன்றுமே தப்பவில்லை எனக் கூறப்படுகிறது.

பாண்டியனால் சோழநாட்டில் பறித்து வீழ்த்தப்படாத தூண் ஒன்றுகூட இல்லாமல் இருந்த நிலையில், பட்டினப்பாலை இயற்றிய உருத்திரங் கண்ணனாருக்கு தமிழுக்காக வழங்கப்பட்ட மண்டபத்தின் பதினாறு கால் தூண்கள் மட்டுமே நின்றனவாம். பழி வாங்கத் துடித்து நடத்திய போரில்கூட தமிழ்ப்புலவரின் மண்டபத்தை இடிக்காமல் இருந்த பாண்டியரின் பைந்தமிழ் பற்று வியந்தோதச் செய்கிறது.

சுந்தரபாண்டியனுக்குப்பின் அரசு பரிந்த பாண்டியர்களில் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (ஆ.காலம் 1251-1271) சிறந்தவராகப் புகழப்படுகிறார். மகாராஜாதிராஜ ஸ்ரீபரமேசுவரன், எம்மண்டலமும் கொண்டருளியவன், எல்லாம் தலையானான் பெருமாள் என பல பட்டப்பெயர்களில் அழைக்கப்பட்ட பாண்டிய மன்னர், சோழர் மரபை முடிவுக்குக் கொண்டுவந்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

சடையவர்மன் சிதம்பரம் தில்லையம்பதியிலுள்ள திருமால், சிவன் கோவில்களுக்குத் துலாபாரம் வழங்கியவராகவும், நடராஜரின் மேற்குக் கோபுரமான சுந்தரபாண்டியன் கோபுரதைக் கட்டியவராகவும், திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள பெருமானின் கோபுரத்தை வேய்ந்தும், ஏராளமான நிலங்களைக் காணிக்கையாக அளித்தும், கோவிலிலேயே முடிசூடிக் கொண்டவராகவும் அறியப்படுகிறார். மேலும் காஞ்சியை வென்று காஞ்சீபுரங்கொண்டான் எனும் பட்டம் பெற்றவராகவும், கச்சிக் கோவில் மற்றும் வாதராஜருக்கு திருப்பணிகள் செய்தவராகவும் கூறப்படும் பாண்டியனைப் பற்றிய வாழ்த்துப்பாடல், திருப்புட்குழித் திருமால் கோவிலில் பொறிக்கப்பட்டுள்ளது.

முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (ஆ. காலம் 1268-1308) பிற்காலப் பாண்டியர்களின் கடைசிப் பேரரசராகக் குறிப்பிடப்படுகிறார். கேரளம், கொங்கு, சோழமண்டலம் போன்ற பகுதிகளை வெற்றி கொண்ட பாண்டியன் மாறவர்மருக்கு பின், மகன்கள் சுந்தரபாண்டியன் மற்றும் வீரபாண்டியன் இடையே எழுந்த அரசுரிமை சண்டையைப் பயன்படுத்தி, மாலிக்கபூரின் படை மதுரையை கைப்பற்றியிருக்கிறது. 1323-ல் முகமது-பின்-துக்ளக்கான உலூப்கான் தலைமையிலும் படையெடுப்பு நிகழ்ந்திருக்கிறது. 1327-ல் மதுரை, தில்லி சுல்தானத்தின் இருபத்தி மூன்றாவது மாநிலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜலாவுதீன்-ஆசன்-கான் 1333-ல் மதுரையை தில்லி சுல்தானத்திலிருந்து விடுவித்து, தனி சுல்தானமாக ஆட்சி செலுத்தியிருக்கிறார். அலாவுதீன் சிங்கந்தர்ஷா காலத்தில் படையெடுத்து வந்த விஜயநகரத்தின் இளவரசன் குமார கம்பணன், சிக்கந்தரை வென்று மதுரையை விஜய நகரப் பேரரசின் கீழ் கொண்டு வந்ததாக வரலாறு குறிப்பிடுகிறது.

சுல்தான்கள் ஆட்சியில் மக்கள் பெரும் இன்னலுக்கு உள்ளானார்கள். சிலை வழிபாடு தவறெனக் கருதப்பட்டதால் கோவில்கள் சில இடிக்கப்பட்டன. சில இழுத்து மூடப்பட்டன. மக்கள் தெய்வச் சிலைகளைக் காக்க அவற்றை மண்ணில் புதைத்தனர். கோவில் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. திருவிழாக்கள் தடை செய்யப்பட்டன. மக்கள் பலர் மற்ற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்.

முகலாயர்கள் தென்னாட்டின்மீது படையெடுத்துக் கொண்டு சமயபுரத்திற்கு அருகில் வந்துவிட்டனர் என்ற விவரம் திருவரங்கத்தார்க்கு தெரிய வந்திருக்கிறது. அவ்வமயம் பெருமாள் விழாவில் இருந்திருக்கிறார். குழுமியிருந்த பெரியோர்களையெல்லாம் அப்படியே இருத்தித் திரையிட்டு, பெருமாளைச் சிறுபல்லக்கில் எழுந்தருளப்பண்ணி, ஓர் அர்ச்சகரையும் பல்லக்குத் தூக்குவாரையும் ரகசியமாக வெளியே புறப்படச் செய்திருக்கின்றனர். பெருமானைப் பிரிந்திருக்க மாட்டாத பிள்ளை லோகாச்சாரியாரும் அவர்களுடனேயே தொடர்ந்து போயிக்கிறார். பெருமாள் பல்லக்கில் புறப்பட்ட பின், மூலவருக்கு முன் சுவரெழுப்பி முன்னால் வேறு ஒரு சிலையை வைத்திருக்கிறார்கள். அப்படியே தாயார் மாடத்திலும் செய்தனராம்.

திருவரங்கத்திலிருந்து புறப்பட்ட அழகிய மணவாளர் கேரளா, ஆந்திரா என வலசல் செய்து ஆயிரத்து முன்னூற்றி எழுபத்தி ஒன்றாமாண்டில் பரிதாபி வருடம் வைகாசி மாதம் பதினேழாவது நாளில் ஸ்ரீரங்கத்தில் நம்பெருமாளாகக் சேர்ந்து

விழாக்கோலம் கொண்டார். ஆங்காங்கே வெளியே சென்றிருந்த ஸ்ரீவைணவர்களெல்லாம் திருவரங்கத்தையடைந்து நம்பெருமாளான அழகிய மணவாளருக்கு சேவை சாதித்துக் கொண்டிருந்தனர்.

வேதங்களிலும் நாலாயிரத் திவ்ய பிரபந்தத்திலும் விசிஷ்டாத் வைதத்திலும் பெரும்புலமை பெற்றிருந்த வேதாந்த தேசிகர் பாதுகா ஸகஸ்ரம், கோதாஸ்துதி, யதிராஜ சப்ததி உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட அரிய நூல்களைச் செய்தருளியிருக்கிறார். வடகலைப் பிரிவின் முதல் ஆச்சார்யராகக் கருதப்படும் தேசிகரின் தேசிகபிரபந்தம் வடகலை வைணவக் கோவில்களில் ஓதப்படுகிறது. ஆழ்வார்கள் பாசுரங்களின் முடிவும் வேதங்களின் முடிவும் ஒன்றே எனும் கொள்கையின் அடிப்படையில், பாசுரங்கள் உபய வேதாந்தமாக பெருமாள் கோவில்கள் பாடப்படுவதற்கு பெருமுயற்சி எடுத்தவராக தேசிகர் புகழப்படுகிறார். அதனாலேயே தேசிகர் உபய வேதாந்தாச்சாரியார் எனும் பெயரிலும் அறியப்படுகிறார்.

அடியார்கள் வாழ, அரங்கநகர் வாழ, சடகோபன் தண்தமிழ் நூல் வாழ, கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ மணவாள மாமுநியே.. இன்னும் ஒரு நூற்றாண்டிரும்! என ஸ்ரீவைணவர்கள் திருவடிதொழும் மணவாளமாமுனி எனும் அழகிய மணவாளப் பெருமான் நாயனார் (1370-1443) இராமானுஜர் போன்றே பெரும்புகழ் கொண்டவராகப் போற்றப்படுகிறார். நாதமுனிகள் கொண்டு தொடங்கும் வைணவப் பெரியோர்களின் பரம்பரையில் இறுதியானவராகக் குறிப்பிடப்படும் மணவாள மாமுனிகள், ஆழ்வார் திருநகரியில் அவதரித்து, அதன்பின் திருவரங்கத்தையடைந்து, தென்கலையை வளர்த்து, ஸ்ரீவைணவத்தின் இரண்டாவது பொற்காலத்தைத் தோற்றுவித்தவராகப் புகழப்படுகிறார்.

ஜீயர், பெரிய ஜீயர், பட்டன்பிரான் ஜீயர், வரவரமுனி, இராமானுஜர் பொன்னடி என்றெல்லாம் சிறப்பிக்கப்பெறும் மணவான மாமுனிகள், பிள்ளை லோகாசாரியாரின் சீடரான ஸ்ரீசைலேசர் என்ற திருவாய்மொழிப் பிள்ளையை (1290-1410) ஆச்சாரியராகக் கொண்டிருக்கிறார். இராமானுஜர்மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்த முனிகள், நாதமுனி தொகுந்த ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தத்தோடு இராமானுஜ நூற்றந்தாதியையும் சேர்த்து நாலயிரத் திவ்வியப் பிரபந்தம் என அழைக்கப்படும்படி அருளியிருக்கிறார். ஜீயர் மரபை உருவாக்கி வைணவத்தை மக்களிடையே பெருக்கும் பொருட்டு, வானமாமலை ஜீயர்,

திருமலை எம்பெருமானார் ஜீயர், பட்டர்பிரான் ஜீயர், கோவில் கந்தரடை யண்ணன், எறும்பியப்பா, அப்பிள்ளை, அப்பிள்ளான் மற்றும் பிரதிவாதி பயங்கரர் அண்ணான் எனும் எட்டு ஜீயர்கள் அதாவது அஷ்ட திக்கஜங்களை நியமித்திருக்கிறார்.

மாமுனிகள், அரங்கனின் முன்னிலையில் ஆயிரத்து நானூற்றி முப்பதாம் ஆண்டில் திருவாய்மொழிக்கு விரிவுரை செய்தருளியிருக்கிறார். எம்பெருமானாருக்கு திருக்குறுங்குடி நம்பி சீடராகியது போல், மாமுனிகளுக்கு திருவரங்கனும் சீடராகியதாக வைணவ மரபில் குறிப்பிடப்படுகிறது. ஜீயருடைய உபந்யாஸப் பெருக்கை பெருமாள் மிகவும் உகந்து கேட்டதாகக் கூறுவர்.

மாமுனிகள் அருளிச் செய்துள்ள பல நூல்களுள் உபதேச இரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப் பிரபந்தம் போன்றவை புகழ்பெற்றவையாக அறியப்படுகின்றன. எழுபத்தி நான்கு வெண்பாக்களால் ஆன உபதேச இரத்தின மாலை, வைணவத்தின் நாயகர்களான ஆழ்வார்கள் சிறப்புக்களைக் கூறுகிறது. ஆச்சார்யர்களின் வசனமாகக் கொள்ளப்படும் வசனபூடணத்தை மாமுனிகள் சிறப்பாகக் கொண்டாடுகிறார். முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் மொழிக என்றும் பூருவாசிரியர்கள் கூறும் வார்த்தைகளை கொள்க என்றும் அறிவுறுத்துகிறார் பெரிய ஜீயரான முனிகள்.

இந்திய மண்ணில் வைணவம் சிறப்பான முறையில் மக்கள் மனங்களில் வீற்றிருக்கிறதெனில் மிகையாகாது. இந்தியா முழுவதுமே ஏராளமான ஞானியரும் பக்தர்களும் அடியவர்களும் நாராயணரின் புகழ்பாடி வந்திருக்கின்றனர். சங்கரர், இராமானுஜர் போன்ற மிகப்பெரும் ஞானியர் வரிசையில் வைத்துப் போற்றத்தக்கவராக மத்வர் எனும் மத்வாச்சாரியார் (1238-1317) அறியப்படுகிறார். கருநாடகாவின் உடுப்பிக்கருகில் உள்ள பாசக சேத்திரம் எனும் ஊரில் வாசுதேவர் எனும் இயற்பெயரில் அவதரித்த மத்வர், இளவயதிலேயே துறவியாகி மிகுந்த ஞானம் பெற்று பூர்ணப் பிரக்ஞர் எனும் பெயர் பெற்றிருக்கிறார். உடல் பலத்திலும் மந்திர சக்தியிலும் சூட்சும செய்கையிலும் கைதேர்ந்தவராகக் கருதப்படும் மத்வர், அனுமன், பீமன் போன்றோருக்குப் பின் வாயு தேவனின் தோற்றமாக வந்தவராகக் கூறப்படுகிறார். மத்வர் இயற்றியுள்ளதாக அறியப்படம் முப்பத்தி ஏழு நூல்களிலும் ஆனந்த தீர்த்தர் என்றே மத்வர் அறியப்படுகிறார்.

மத்வாச்சாரியார் தோற்றுவித்தது துவைதம் எனும் பெயரில் வழங்கப்பெறுகிறது. துவைதம் என்றால் இரண்டு. பிரம்மமும் ஆன்மாவும் வேறு வேறு. பரமாத்மாவும் சீவாத்மாவும் தனித்தனியானவை. இறைவனிலிருந்து உலகும், உயிர்களும் வேறானவை. இறைவனுக்கு மட்டுமே சுதந்திரம் உண்டு. கர்மத்தை நீக்கினால் வீடுபேறு அடையலாம். பிரம்மமும் ஆன்மாவும் வேறானவை போன்றே ஆன்மாவும் ஆன்மாவும், பிரம்மாவும் உலகும், ஆன்மாவும் உலகும், உலகிலுள்ள பொருளும் பொருளும் வேறானவை.

பிரம்மம் எனும் நாராயணின் அணுவளவு பாகமே ஆன்மாக்கள். ஒரு மரத்திற்கும் அதன் இலைக்குமான ஸ்வகத்பேதம் போன்றோ, மரத்திற்கும் ஒரு மலைக்குமான விஜாதீய பேதம் போன்றோ வேற்றுமைகள் இருந்தே தீரும். சுதந்திரமுள்ளவரான நாராயணர் ஒரு பகுப்பாகவும், சுதந்திரமற்றதெல்லாம் ஒரு பகுப்பாகவும், எக்காலத்தும் நிரந்தரமான வேற்றுமையுடையன. உலகம் இரண்டாக அதாவது துவைதமாக இருக்கிறது.

பிரம்ம சூத்திரம், சில உபநிடதங்கள், பகவத்கீதை முதலிய நூல்களுக்கு உரை எழுதியுள்ள மத்வாச்சாரியார், உடுப்பி கிருஷ்ணமடத்தை ஏற்படுத்தியவராகவும், உடுப்பி கிருஷ்ணர் சிலையை நிறுவி கிருஷ்ண வழிபாட்டிற்காக எட்டு மடங்களை நிறுவியவராகவும் அறியப்படுகிறார். நாராயணப் பண்டிதர் இயற்றிய மத்வ விஜயம், மத்துவரின் அற்புதச் செயல்களை விளக்கும் முக்கியமானதொரு நூலாகக் குறிப்பிடப்படுகிறது.

உடுப்பி கிருஷ்ணர் கோவிலோடு தொடர்புடையவராக பக்த கனகதாசர் (1509-1609) அறியப்படுகிறார். கிருஷ்ண பக்திக்கும் கர்நாடக இசைக்கும் பெயர் பெற்ற திம்மப்பா எனும் பெயர் பெற்றிருந்த கனகதாசர், கன்னட பக்தி இலக்கியத்தில் குறிப்பிடத்தக்கவராகப் புகழப்படுகிறார். இருநூற்றி நாற்பது இசைப்பாடல்கள் இயற்றியுள்ள கனகதாசர், மோகன தரங்கினி, நள சரித்ரே, ராமதான்ய சரித்ரே போன்ற சில படைப்புகளையும் உருவாக்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஒரு மனிதரது உயர்வுக்கு சாதியும் மத நம்பிக்கைகளும் காரணமாக முடியாது என்பதை கனகதாசர் பாடல்கள் அழுத்தமாகப் பதிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மோகன தரங்கினி, கிருஷ்ணரின் பேரனும் பிரத்யும்னரின் மகனுமான அநிருத்தன் மற்றும் பாணாசுரரின் மகளான உஷாவின் காதலை மையமாக வைத்து

சைவ வைணவ ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் ஆக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. கேழ்வரகுக்கும் அரிசிக்கும் இடையே நடக்கும் யார் பெரியவர் எனும் போட்டியில், ராமபிரான் தீர்ப்பு வழங்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டது ராமதான்ய சரித்ரே படைப்பு.

மத்வாச்சாரியாருக்குப் பின் துவைத மரபில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவராக ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் (1595-1671) புகழப்படுகிறார். புவனகிரியில் பிறந்த வேங்கடநாதன் எனும் வெங்கண்ணா பட்டர், கும்ப கோணத்தில் குடியேறி, தஞ்சையில் ராகவேந்திர தீர்த்தராகி, மந்த்ராலய பிருந்தாவனத்தில் தியானம் மேற்கொண்டவராக அறியப்படுகிறார். ஸ்ரீமத்வ ஆச்சாரியாரைப் போன்று ஏராளமான அதிசயங்களைச் செய்தவராகக் குறிப்பிடப்படும் ஸ்ரீஇராகவேந்திரர், சரியான வாழக்கை நடத்தையின்றி சரியான சிந்தனை வராது, சரியான ஞானத்தை மிஞ்சிய எந்த அதிசயமோ, அற்புதங்களோ கிடையாது, கடவுள் என்று கூறிக்கொண்டு அதிசயங்களை செய்பவர்களிடமிருந்து விலகி இருங்கள், கடவுள் மேல் நல்ல பக்தி இருக்க வேண்டும், எனினும் அப்பக்தி மூட நம்பிக்கையாக இருந்தல் கூடாது போன்ற பல அறிவுரைகளையும் மக்களுக்கு வழங்கியிருக்கிறார். இசையில் நல்ல தேர்ச்சியும், வீணை வாசிப்பில் சிறந்தவராகவும், கலைவாணியின் அருளைப் பெற்றவராகவும் அறியப்படும் இராகவேந்திரர், வைணவ நெறியையும் துவைதக் கோட்பாட்டையும் சிறப்புறச் செய்தவரெனில் மிகையாகாது.

தமிழகத்தில் தோன்றிய பக்தி, நெறி வடஇந்தியா மட்டுமின்றி கிழக்கு, மேற்கு இந்தியா என ஒட்டுமொத்த இந்தியாவிலும் பக்தியையும் கடவுள் மீதான அன்பையும் தழைக்கச் செய்ததெனில் மிகையாகாது. தூய பக்தியோடு, காதலோடு, இசையும் சேர்ந்து கொள்ள, இந்திய மண்ணில் பக்தியும் ஞானமும் சங்கீதமும் சிறப்புற்று விளங்கியிருக்கின்றன.

உலகின் தொன்மையான இசைவடிவங்களில் ஒன்றான கர்நாடக சங்கீதம் தமிழ் மண்ணில் விளைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. தமிழர்களின் செவ்விய இசை தமிழிசை எனப்படுகிறது. தமிழர்களின் வாழ்வியலோடு ஒன்றிணைந்து காணப்படும் தமிழிசை. நீண்ட நெடிய வரலாறு கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. வாய்மொழி மற்றும் எழுத்து இலக்கியங்கள், கல்வெட்டுகள், அயல் நாட்டார் குறிப்புகள் மூலமாக தமிழிசை பற்றிய குறிப்புகள் அறியப்படுகின்றன. சங்க நூல்களான

தொல்காப்பியம், கூத்துநூல், பரிபாடல், புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு போன்ற நூல்களில் தமிழிசை பற்றிய பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. சிலப்பதிகாரம், குறிப்பாக அதன் உரையாசிரியர்களின் விளக்கங்கள், தமிழிசை பற்றிய அரிய தகவல்களை அளிக்கிறது. பெருநாரை, பெருங்குருகு, பேரிசை, சிற்றிசை, இசைநுணுக்கம், பஞ்சமரபு போன்ற பண்டைய கால நூல்கள் தமிழிசையைப் பற்றிய குறிப்பிடத்தக்க நூல்களாக இருப்பினும், அவை கிடைக்கப்பெறாதது தமிழர் இசைக்கான பேரிழப்பாகக் கருதப்படுகிறது.

தமிழ் பக்தி இயக்க காலத்தில் மிகுந்த ஏற்றம் பெற்று புகழ் மணம் பரப்பிய தமிழிசை, பின்னர் வந்த காலங்களில் நலிவடைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. விஜயநகர ஆட்சிக் காலத்தில் தமிழிசை மரபுகள் உள்வாங்கப்பட்டு, கர்நாடக இசையாக மாற்றியமைக்கப்பட்டு, தெலுங்கு மொழியில் பாக்கள் இயற்றப்பட்டு, இசை ஞானம் வளர்த்தெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. தெலுங்கிலும் பிற மொழிகளிலும் பாடல்கள் பாடுவதற்கு மாற்றாக தமிழிசையில் பாடல்கள் பாடப்பட வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்ட தமிழிசை இயக்கம் தமிழிசையை ஓரளவிற்கு மீட்டெடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி போன்று, தமிழ் இசையும் சிறப்பான முன்னேற்றம் பெற்றிருக்கிறது. புகழ்பெற்ற ராவ் சாகிப் ஆபிரகாம் பண்டிதரின் (1859-1919) தமிழிசை குறித்த ஆராய்ச்சி நூலான கருணாமிர்த சாகரத் திரட்டு, தமிழ் இசை வரலாறு, தமிழிசை இராகங்கள், தமிழ் மருத்துவம் மற்றும் இசைவாணர்கள் பற்றிய ஒரு கலைக்களஞ்சியமாகப் பெருமைப்படுத்தப்படுகிறது.

தமிழ் இலக்கியத்திலும் தமிழ மருத்துவத்திலும் பேராவல் கொண்டிருந்த பண்டிதர், இசையில் தேர்ச்சியும் இசைக் கருவிகள் இயக்குவதில் புலமையும் பெற்றிருந்தவராக அறியப்படுகிறார். தெலுங்கு மொழியை முக்கியமாகக் கொண்டு விளங்கிய கர்நாடக சங்கீதம் தமிழிசையின் வடிவமே என்பதை இந்திய இசை ஆராய்ச்சி மற்றும் இலக்கிய ஆராய்ச்சியின் வாயிலாக நிரூபித்தவராக இருக்கிறார். கர்நாடக சங்கீதம் என்றில்லாமல் இந்தியாவில் வழங்கிவரும் இசை வடிவங்கள் அனைத்தும் பண்டைய காலத்திய தமிழிசையின் மறு வடிவங்கள் என்பதும் பண்டிதரின் ஆராய்ச்சி முடிவாக உள்ளது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பதினேழாமாண்டில் பண்டிதரால் வெளியிடப்பட்ட கருணாமிர்த சாகரம், தேக்க நிலையிலிருந்த தமிழிசையை மீண்டும் தழைக்குமாறு செய்திருக்கிறது. பல ஆண்டுகள் இசை பயின்றும், இசை நூல்களைக் கற்றும், இசையறிஞர்களோடு கலந்துரையாடியும், பழந்தமிழப் பனுவல்களைத் திரட்டியும், தமிழிசை குறித்த நீண்ட வரலாற்றை வெளிக்கொணர்ந்தும், அகில இந்திய இசை மாநாடுகளை நடத்தியும், கவிகள் இயற்றியும், பண்டிதர் தோட்டம் அமைத்தும், வேளாண் துறை ஆராய்ச்சிகள் செய்தும், மருத்துவக் கூடம் தொடங்கியும் சமூகப் பணி ஆற்றிய திரு ஆபிரகாம் பண்டிதர் மிகுந்த போற்றுதலுக்குரியவராக வாழ்ந்திருக்கிறார்.

பெரும்பான்மையான தமிழக உள்ளங்களைக் கொள்ளை கொண்டது நாட்டுப்புற இசை எனில் மிகையாகாது. நாடோடி இசை, கிராமிய இசை, நாட்டார் இசை எனப் பலவாறாகக் குறிப்பிடப்படும் நாட்டுப்புற இசை, மனதின் உற்சாகத்திற்குப் பாடப்படுவது குறிப்பிடத்தக்கது. தொட்டில் தொடங்கி பல்லக்கில் போவது வரை, வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் மக்கள் மனங்களில் மகிழ்ச்சியை ஊற்றெடுக்க வைக்கும் நாட்டுப்புற இசையும் பாடல்களும், தமிழர்களின் அரிய சொத்தாகவே மதிக்கப்படுகிறது. உழவுப்பாட்டு, நடவுப்பாட்டு, ஏற்றப்பாட்டு, தெம்மாங்குப் பாட்டு எனத் தமிழர் வாழ்வோடு ஒன்றிணைந்து விட்டதாகவே நாட்டுப்புறப் பாட்டு இருந்து வருகிறது.

நாட்டுப்புற மக்களால் வேலை செய்யும்போது களைப்பு தெரியாமல் இருக்கவும், மன மகிழ்விற்காகவும் நடவுத்தொழிலின்போது பாடப்படுவது நடவுப்பாட்டு. நாற்று நடும்போது என்றில்லாமல் ஏர் ஓட்டுதல், ஏற்றம் இறைத்தல், வண்டி ஓட்டுதல் எனப் பலநிலைகளிலும் பாடல்கள் பாடுவதுண்டு.

நாற்று நடுவது பெண்கள் என்பதால் அவர்களின் வாழ்வியல் நிகழ்வுகள் பாடல்களில் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது. நடவை விவரிப்பதோடு, இயற்கையின் அழகு, நிலத்தின் கொடை, மழை, வெயில், காதல், வீரம், தெய்வங்கள், இல்லறம், மக்கள் பெருமை, மாமியார் மருமகள் சண்டைகள், கூலி கொடுமைகள், ஆண்களைப் பற்றிய கிண்டல்கள் என எல்லா நிகழ்வுகளும் பாடுபொருள்களாக நடவுப் பாடல்களில் இடம்பெறுவது வழக்கம்.

தமிழிசை, நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, மேற்கத்திய இசை, அரபு இசை போன்ற பல்வேறு இசை முறைகளில், தென்னிந்தியாவிற்கு உரியதாக கர்நாடக இசையும், வட இந்தியாவிற்கு உரியதாக இந்துஸ்தானி இசையும் கருதப்படுகின்றன.

கர்நாடக இசைக்கு அடிப்படையாக அமைவது இராகம் மற்றும் தாளம். இராகங்கள் சுரங்களை அடிப்படையாகக் கொண்டவை. தமிழிசையில் ஏழிசை எனக் குறிப்பிடப்படும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் போன்றவையே கர்நாடக இசையில் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதமம், நிஷாதம் என அழைக்கப்படுகின்றன. சுருக்கமாக ச ரி க ம ப த நி. இவை சப்த ஸ்வரங்கள் என அழைக்கப்படுகின்றன. தமிழில் சுரங்கள் எனவும் கோவை எனவும் குறிப்பிடப்படுகின்றன. இயற்கையான ஒலிக்கு இனிமையைக் கொடுக்கும் தொனியே சுரம் எனலாம். குறிப்பிட்ட சில சுரங்களின் சேர்க்கையே இராகம். கர்நாடக இசையில் ஏழு ஸ்வரங்களையும் சரியான வரிசையில் கொண்டுள்ள ஏழுபத்தியிரண்டு இராகங்கள் இருப்பதாகவும் அவை மேளகர்த்தா இராகங்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றன.

ஸ்வரங்கள் படிப்படியாய் கீழேயிருந்து மேலே செல்லுவதற்கு (ஸ ரி க ம ப த நி ஸ) ஆரோஷணம் என்றும், படிப்படியாக மேலிருந்து கீழே இறங்குவதற்கு (ஸ நி த ப ம க ரி ஸ) அவரோஹணம் என்றும் பெயர். ஏழு ஸ்வரங்களையும் கொண்டுள்ள இராகங்கள் சம்பூர்ண இராகங்கள் என அழைக்கப்படுகின்றன.

இசையில் கால அளவுகளை ஒழுங்கு முறையில் அமைப்பது தாளம். பாட்டில் கால அளவை சேர்த்து, கையினாலாவது வேறு கருவிகளினாலாவது தட்டுவது தாளமெனப்படுகிறது. த்ருவ தாளம், மட்டிய தாளம், ரூபக தாளம், ஜம்ப தாளம், த்ருபுட தாளம், அடதாளம் மற்றும் ஏக தாளம் என தாளங்கள் ஏழு வகையாகக் குறிக்கப்படுகின்றன. ஏழு வகை தாளங்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட தாளங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

செவிக்கு இனிமை கொடுக்கும் ஒலி, நாதம் எனப்படுகிறது. சங்கீதத்திற்கு மூலாதாரமாக விளங்குவது நாதம். ஒருவித ஒழுங்கு முறையில் எழுப்பப்படும் ஒலியே நாதமாகிறது. ஓலி ஒழுங்கற்று இருப்பின் அது இரைச்சல் என்றே கூறப்படுகிறது. நாதத்திலிருந்து சுருதியும், சுருதியிலிருந்து ஸ்வரமும், ஸ்வரத்திலிருந்து இராகமும் உண்டாகிறது. மனித முயற்சியினால்

உண்டாகப்படுவது ஆகதநாதமென்றும், இயற்கையில் உண்டாவது அநாகத நாதமென்றும் கூறப்படுகிறது.

சுரத்தைத் தொடங்குவதற்கான அடிப்படையான ஒலியமைப்பு சுருதி எனப்படுகிறது. சுருதி கேள்வி எனவும் அழைக்கப்படுகிறது. சுருதி சுத்தமாக இசைக்கப்படும் சங்கீதமே கேட்பதற்கு இனிமை தரும். சங்கீதத்திற்கு சுருதி தாய் போன்றும் லயம் தந்தை போன்றும் குறிப்பிடப்படுவதுண்டு. சுருதிக்குப் பயன்படும் சிறந்த இசைக்கருவியாக தம்பூரா கருதப்படுகிறது. மத்திமஸ்தாயி ஸட்ஜத்தை ஆதாரமாகக் கொண்டு பாடப்படுவது பஞ்சம சுருதி எனப்படுகிறது. மத்திமஸ்தாயி மத்திமத்தை ஆதாரமாகக் கொண்டு பாடப்படுவது மத்திம சுருதி.

பாட்டின் வேகத்தை ஒரே சீராகக் கொண்டு செல்வது லயம் எனப்படுகிறது. இனிமையான பாட்டிற்கு சுருதியும் லயமும் மிகவும் மதிப்புமிக்கவை. விளிம்பித லயம், மத்திம லயம், துரித லயம் என லயம் மூவகையாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழிசையின் பண் வடிவமும், கர்நாடக இந்துஸ்தானி மரபின் இராகமும் இணை வடிவமாகக் கருதப்படுகின்றன. மொத்தம் நூற்றி மூன்று பண்கள் குறிப்பிடப்படுகின்றன. தமிழிசையின் குறிஞ்சிப் பண் கர்நாடக சங்கீதத்தில் ஹரிகாம்போதி எனவும் தக்கேசி எனவும் அறியப்படுகிறது.

கர்நாடக இசை உலகின் மும்மூர்த்திகளாகப் புகழப்படுபவர்கள் தியாகராஜர் (1767-1848), முத்துசுவாமி தீட்சிதர் (1776-1835) மற்றும் சியாமா சாஸ்திரிகள் (1762-1827). கர்நாடக சங்கீதத்திற்கு உயிர்நாடியாக விளங்கும் மும்மூர்த்திகளுக்கு முன்னரே இசையில் சிறப்புற்றிருந்த சீர்காழி முத்துத்தாண்டவர் (1525-1625), அருணாச்சலக் கவிராயர் (1712-1779) மற்றும் மாரிமுத்துப் பிள்ளை போன்றோர் ஆதி மும்மூர்த்திகள் எனவும் தமிழிசை மூவர் எனவும் சிறப்பிக்கப்படுகின்றனர்.

கீர்த்தனை மரபின் பிதாமகராகவும் கர்நாடக சங்கீதத்தின் முன்னோடியாகவும் கருதப்படும் முத்துத்தாண்டவர், பல்லவி அநுபல்லவி, சரணம் என்கிற திரிதாது முறையை முழுமைப்படுத்திக் கொடுத்தவராகவும் அறியப்படுகிறார். நாட்டியத்திற்குப் பயன்படும் பதம் எனும் வகையைச் சார்ந்த பல பாடல்களை தமிழிசையில் அழகுறத் தந்தவராகவும் தாண்டவர் சிறப்பிக்கப்படுகிறார்.

அருணாசலக் கவிராயர் இனிய இராகங்களில் அமைந்த இசைப்பாடல்கள் இயற்றியதோடு இசை நாடக நூல்களையும் இயற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனை இருநூற்றி ஐம்பத்தியெட்டு இசைப்பாடல்கள் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் கீர்த்தனைகளால் தமிழில் படைக்கப்பட்ட முதல் இசைநாடகமாகவும் புகழப்படுகிறது.

கர்நாடக சங்கீதத்தில் மிகப் பெரும் ஞானியாக விளங்கிய திருவாரூர் தியாகராஜ சுவாமிகள், தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் அரிய இராகங்களில் அமைந்த ஏராளமான கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இராம பக்தியில் திளைத்திருந்த தியாகராய சுவாமிகள், பிரகலாத பக்தி விஜயம் முதலிய இசை நாடகங்களையும், இரண்டாயிரத்து நானூறு உருப்படிகளையும் செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறார். கீர்த்தனைகளால் இராமாயணத்தைப் பாடியிருப்பதாக அறிப்படும் தியாகராஜருக்கு எண்ணிறைந்த சீடர்கள் இருந்திருக்கின்றனர். ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் நினைவாக திருவையாறில் இசைக்கலைஞர்கள் கூடி பஞ்சரத்னக் கீர்த்தனைகளைப் பாடி தியாகபிரம்மத்திற்குப் புகழ் சேர்க்கின்றனர்.

திருமலை ஸ்ரீநிவாசப் பெருமாளோடு நெருங்கிய தொடர்புடையவராக அறியப்படும் தாள்ளபாக்கம் அன்னமாச்சாரியார் (1408-1503) திருவேங்கடவன் மீது பாடியுள்ள சங்கீர்த்தனைகள் மிகப் புகழ் பெற்றவையாக அறியப்படுகின்றன. கர்நாடக இசை மரபின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படும் அன்னமய்யா, முப்பத்தியிரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியவராகப் புகழப்படுகிறார். சிருங்கார ரசம், வைராக்கியம், பக்தி எனப் பாடல்களைப் புனைந்துள்ள அன்னமய்யாவின் கீர்த்தனைகளில் பல நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தை, பிரதிபலிப்பை சுட்டுவதாகக் குறிப்பிடப்படுகிறது. எளிமையாகவும் தெளிவாகவும் பாடல்கள் இயற்றியுள்ள அன்னமய்யா நூலாசிரியராகவும் அறியப்படுகிறார்.

கர்நாடக இசையின் தந்தை எனப் போற்றப்படுபவர் புரந்தரதாசர் (1484-1564). ஆரம்ப இசைப் பயிற்சிக்கான ஸ்வர வரிசைகள், ஜண்டை வரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள் முதலியவற்றை இயற்றியுள்ள புரந்தரதாசர் மாயாமாளவகௌளை எனும் இராகமே ஆரம்ப பயிற்சி பெறுவதற்கு ஏற்ற இராகமாகவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

ஸ்ரீனிவாச நாயக் எனும் இயற்பெயரிலும், சீனப்பா, திம்மப்பா, திருமலையப்பா போன்ற பிற பெயர்களிலும் அழைக்கப்பட்ட புரந்தரதாசர், பண்டரிநாதன் மீது ஏற்பட்ட பக்தியால் புரந்தரவிட்டலர் எனும் பெயரையும் பெற்றிருக்கிறார்.கன்னடத்திலும், சமஸ்கிருதத்திலும் எளிய நடையிலமைந்த உபநிடந்தங்களின் சாரத்தை கீர்த்தனைகளில் கொடுத்தவராகவும், ஆபூர்வ ராகங்களில் உருப்படிகள் செய்தவராகவும் விளங்கிய புரந்தரதாசர், இந்துஸ்தானி இசையிலும் சிறந்தவராக புகழப்படுகிறார்.

மகாராட்டிரத்தின் பந்தர்ப்பூர் எனும் பண்டரிபுரம், கிருஷ்ண பக்திக்கும் இசைக்கும் அபங்கப் பாடல்களுக்கும் புகழ்பெற்றது. பண்டரிபுரத்தில் கோவில் கொண்டுள்ள ருக்மணி உடனுறை விட்டலர், விதோபர் பாண்டுரங்கர் பல்வேறு பெருமைகளையும், புகழ்பெற்ற பக்தர்களையும் கொண்டவராக அறியப்படுகிறார். விட்டலா விட்டலா.. பாண்டுரங்கா விட்டலா.. பண்டரிநாத விட்டலா.. என விண்ணதிர எழும் விட்டல பக்தர்களின் கானம் சொல்லவொண்ணா ஆனந்தத்தைத் தரவல்லதாக புகழப்படுகிறது. தலைப்பாகையுடன், கைகளை இடுப்பில் வைத்து கொண்டு செங்கல் மீது நிற்கும் விட்டோபாவை, பக்தர்கள் உச்சி முதல் பாதம் வரை தொட்டு அனுபவிக்கலாம் என்பது சந்திரபாஹா நதிக்கரையில் அமைந்துள்ள பண்டரிநாதரின் தனிச்சிறப்பு.

மகாராச்திராவின் வைணவ பக்தி இயக்கத்திற்குப் பெரும் புகழ் அளித்தவராக துக்காராம் (1598-1649 அல்லது 1608-1650) போற்றப்படுகிறார். பக்த துக்காராம் அவர்களுக்கு முன்னரே பக்தி நெறியையும் சமூக அக்கறையையும் மராத்தாவின் மண்ணில் விதைத்தவர்களாக பல ஞானியர்கள் அறியப்படுகின்றனர். குறிப்பாக தியானேஸ்வர் (1275-1296), நாம் தேவ் (1270-1350), ஏக்நாத், ஜனாபாய், முக்தாபாய், சொக்கமேலா, சோயரபைய் போன்றோர் புகழ்பெற்ற வர்காரி மரபு விட்டல பக்தர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். வீர சிவாஜியின் ஆன்மீகக் குருவாகக் கருதப்படும் சமர்த்த ராமராசும் மராத்தாவின் புகழ்பெற்ற ஆன்மிகவாதியாக குறிப்பிடப்படுகிறார்.

வர்க்காரி என்பது விட்டலரை மையப்படுத்தி மராத்தாவிலும் வடக்கு கர்நாடகத்திலும் மேற்கொள்ளப்படும் வைணவப் பக்தி இயக்க வாழ்க்கை முறையாக அறியப்படுகிறது. வர்க்காரி எனில் மராத்தியில் புனித நடைபயணி அதாவது பாதயாத்தீகர் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. பண்டரிநாதனின்

பக்தர்கள் வருடம் தவறாமல் புனித நடை பயணம் மேற்கொள்வதாகக் கூறப்படுகிறது. பஜனையும் இசையுமாக விட்டலரை வழிபடும் வர்க்காரிகள், அவர்களுக்கென்று ஒழுக்கத்தையும் நன்னெறியையும் கொண்ட வாழ்க்கை முறையைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

வார்க்காரி குருக்களாக அறியப்படும் ஏக்நாத், துக்காராம் போன்ற பலரும் அபங்கம் (அபங்) எனப்படும் புகழ்பெற்ற பாடல்களை இயற்றியுள்ளனர். அபங்கம் என்றால் குற்றமில்லாதது. இறைவனுடன் பேசுதல் எனவும் பொருள் கொள்ளப்படும் அபங் பாடல்கள், எளிமையானவையாகவும், விட்டலரோடு நேரில் பேசுவது போன்ற பொருளில் பாமரரும் புரிந்து கொள்ளுமாறு எழுதப்பட்டுள்ளன.

அபங்கப் பாடல்களை இயற்றியுள்ளவர்களுள் மிகவும் புகழ்பெற்றவராக துக்காராம் மஹராஜ் அறியப்படுகிறார். சுமார் நான்காயிரம் அபங்கங்களை எழுதியுள்ள பக்த துக்காராம், அவற்றில் அவரது வாழ்க்கை நிகழ்வுகளையும் ஆன்மீகக் கருத்துக்களையும் சாதுக்களின் பெருமை மற்றும் நாம பக்தியையும் வெளிப்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனந்தம் தரும் பண்டரிநாதனின் அபங்கப் பாடல்கள் மராத்தாவின் பெருமை எனில் மிகையாகாது.

மேற்கில் பண்டரிநாதனாக அபங்கங்களைப் பாட வைத்த கண்ணன், கிழக்கே ஜெகன்நாதனாக பக்தர்களின் இதயங்களில் பக்தியையும் பஜனையையும் இசையையும் ஊற்றெடுக்கச் செய்திருக்கிறார். ஒடிசாவின் பூரி கடற்கரை நகரில் அமைந்துள்ள புரி ஜெகன்நாதர், பாலபத்திரர் மற்றும் சுபத்திரை திருக்கோவில் பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் தேர் திருவிழாவிற்கு மட்டுமின்றி, ஜெயதேவர், சைதன்யபிரபு, ஸ்ரீல பிரபு பாதர் போன்ற புகழ்பெற்ற பல கிருஷ்ண பக்தர்களுக்கும் பெயர் பெற்றது எனில் மிகையாகாது.

ஜெயதேவ கோஸ்வாமி எனும் ஜெயதேவர் (1101-1173) இந்தியாவின் இணையற்ற கவிகளுள் ஒருவராகப் புகழப்படுகிறார். சமஸ்கிருதத்தில் மிக்க ஞானம் கொண்டிருந்த ஜெயதேவரின் முக்கியப் படைப்பாகக் கருதப்படுவது கீத கோவிந்தமாகும். கண்ணனுக்கும் இராதைக்குமான தெய்வீகக் காதலை அற்புதமான வரிகளுடன் அழகான இசையுடன் விவரிக்கும் மகா காவியம் கீத கோவிந்தம்.

பன்னிரண்டு அத்தியாயம், ஒவ்வொரு அத்தியாயமும் இருபத்திநான்கு பிரபந்தங்கள், ஒவ்வொரு பிரபந்தத்திலும் எட்டு இருவரிச் செய்யுள்கள் என அஷ்டபதியாக அமைக்கப்பட்டுள்ள கீத கோவிந்தத்தில் ராதை, கிருஷ்ணன், சசி அதாவது கோபியர் ஆகியோர் பற்றியே கீர்த்தனைகள் பாடப்பட்டுள்ளன. இந்தியாவின் மிகவும் தொன்மையான இசை நூலாகக் குறிப்பிடப்படும் கீத கோவிந்தம், சிருங்காரத்தை வெளிப்பொருளாக வைத்து உட்பொருளாக ராதை கண்ணனை அடைவதுபோல் ஜீவாத்மாக்கள் பரமாத்மாவான கண்ணனை அடைய வேண்டுமென்பதையே வலியுறுத்துவாகக் கூறப்படுகிறது.

கண்ணனின் ராதை, கௌடிய வைணவ மரபிலும், நிம்பர்கர் மரபிலும் முதன்மைப்படுத்திச் சிறப்பிக்கப்படும் பெண் தெய்வமாக, சக்தியாக இருக்கிறார். ராதை, ராதா, ராதிகா, ராதாராணி, ராதிகாராணி எனப் பலவாறாக அழைக்கப்படும் இராதை குறித்து பாகவத புராணம், பிரம்ம வைவர்த்த புராணம் போன்றவை குறிப்பிடுகின்றன.

பன்னிரெண்டு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் குறிப்பிடப்படும் ஆந்திராவில் பிறந்த நிம்பர்கர், வட இந்தியாவில் குறிப்பாக மதுரா பகுதியில் இராதா-கிருஷ்ண வழிபாட்டைப் பெருமளவில் முன்னெடுத்தவராக அறியப்படுகிறார். இராதா மேல் ஆழ்ந்த பக்தி செலுத்தும் நிம்பர்கர் சம்பிரதாயம், பேத அபேதம் அதாவது துவைதாத்வைதம் என்னும் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

நிம்பர்க்கள் நிறுவிய துவைத அத்வைதத்தில், சித்தும் அசித்தும் ஈஸ்வரனிலிருந்து வேறானவையாகக் குறிப்பிடப்படுகின்றன. எனினும் அவற்றிற்கு ஈஸ்வரனைப் போல் தனிந்து இயங்கும் தன்மை இல்லை எனவும் கருதப்படுகிறது. நிம்பர்க்கர் மரபில் பிரம்மன், கிருஷ்ணன் அல்லது ஹரியே முதன்மையானவர். நிம்பர்கர் மரபு குமார சம்பிரதாயம் எனக் குறிப்பிடப்படுகிறது.

துவைதஅத்வைதத்தை நிறுவி ராதாகிருஷ்ண பக்தியில் சிறந்து விளங்கிய நிம்பர்காசாரியர் போன்றே, சுத்தாத்வைதத்தை முன்னெடுத்த வல்லபாச்சாரியாரும் (1479-1531), அசைந்திய பேத அபேத மரபைத் தோற்றுவித்த சைதன்ய மகாபிரபும் (1486-1534), இராதா-கிருஷ்ண வழிபாட்டை முன்னெடுத்ததில் பெரும்பங்காற்றியவர்களாகச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

ஸ்ரீகிருஷ்ணர் மீதான தூய அன்பு எனும் புஷ்டிமார்க்கத்தை மேற்கொண்டவரான வல்லபாசாரியார், இந்தியா முழுக்க ஆன்மீகப் பயணம் மேற்கொண்டவராகவும், ஏராளமான நூல்களும், பகவத்கீதை போன்றவற்றிற்கு விளக்க உரைகள் எழுதியவராகவும் அறியப்படுகிறார். கிருஷ்ண அன்பையும், கிருஷ்ண சேவையையும், கிருஷ்ண பக்தியையும், கிருஷ்ண ஆனந்தத்தையும் முதன்மைப்படுத்திய புஷ்டிமார்க்கம், சுத்த அத்வைதம் எனும் கொள்ளையைப் பின்பற்றுகிறது. சுத்த அத்வைதத்தின் படி, படைத்தவரும் படைப்பும் ஒன்றே. கடவுளைப் போன்று அனைத்தும் முதன்மையானவையே. ஸ்ரீவல்லபர் கோகுலத்தில் இருந்த போது, ஸ்ரீநாத்ஜி எனும் வடிவத்தில் கிருஷ்ணரைக் கண்டதாகவும், கிருஷ்ணர் பிரம்மசம்பந்தம் எனும் பஷ்டிமார்க்க மந்திரத்தையும், சடங்கு முறைகளையும் உபதேசித்ததாகவும் புஷ்டி மார்க்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. எளிய ஜீவாக்களை புஷ்டிமார்க்க ஜீவாக்களாக மாற்றும் விதத்தில், வல்லபாச்சாரியாரின் வழிவந்தவர்களாகக் கூறப்படும் கோஸ்வாமிக் பாலக்குகள் அல்லது வல்லப்குகள் மூலமாக வல்லப வைணவர்களாக மாற்றும் சடங்கு மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

வடஇந்திய பக்தி மரபில் சிறப்பான இடம் பெற்றுள்ள வல்லபாச்சாரியார், உயர்ந்த ஞானமுடையவராகவும், மெய்யியலாளராகவும், கிருஷ்ண பக்தராகவும், கர்நாடக இசை மரபை வட இந்தியாவில் புகழ்பெறச் செய்தவராகவும், ஸ்ரீமதி ராதாவின் புகழை எங்கும் பரவச் செய்தவராகவும் போற்றப்படுகிறார்.

சங்கராச்சாரியார், இராமானுஜாச்சாரியார், மத்வாச்சாரியார், நிம்பர்காசாரியார், வல்லபாச்சாரியார் போன்றே சைதன்யாச்சாரியாரும் இந்திய பக்தி மார்க்கத்திற்கு அளப்பரிய தொண்டு செய்தவராகப் புகழப்படுகிறார்.

கௌடிய வைணவம் அல்லது சைதன்ய வைணவம் அல்லது ஹரே கிருஷ்ணா எனும் வைணவ மரபைத் தோற்றுவித்த சைதன்யர், ராதை கிருஷ்ணர் மற்றும் சுயம் பகவான் எனப்படும் கிருஷ்ணரின் அவதாரங்கள் வழிபாட்டிற்கு மிகுந்த மதிப்பளித்தவராகப் போற்றப்படுகிறார். கௌடிய மரபில் கிருஷ்ணரே முதன்மையானவர். கிருஷ்ணரைப் போன்று இராதையே அனைவரிலும் மதிப்பு மிக்கவர். அத்வைதத்தையும் துவைதத்தையும் மறுக்கும் கௌடியம், கடவுள் படைப்பாகவும், படைப்பிலிருந்து வேறுபட்டவராகவும் இருக்கிறார் எனும் கருத்தை

வலியுறுத்துவதாக சைதன்யரின பேத அபேத தத்துவம் (ஒன்றாகவும் வேறாகவும்) அமைந்திருக்கிறது.

புரி ஜெகன்நாதர் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த ஸ்ரீசைதன்யர், கிருஷ்ணர் மேல் அளப்பரிய அன்பும் நம்பிக்கையும் கொள்ளவேண்டுமென்றும், சடங்குகளிலிருந்து விடுபட்டு ஆடிப்பாடி பஜனைகள் செய்து கிருஷ்ணனின் அருள் வெள்ளத்தில் திளைக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்துகிறார். ராதையும் கிருஷ்ணரும் ஒன்றே என்பதும் சைதன்யரின் நம்பிக்கையாக இருக்கிறது.

சைதன்ய மகாராஜ் மரபில், கிருஷ்ணர் மீதான ராதாவின் அன்பு மிகவும் உயர்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ராதாவின் அன்பு முடிவற்றதும் நிபந்தனையற்றதுமாகக் கருதப்படுகிறது. கிருஷ்ணரின் இதயம் போன்றவர் ராதை. கிருஷ்ணரின் நெருங்கிய தோழி ராதை.

அழகு, அறிவு மற்றும் சிறந்த நற்பெயரைக் கொண்டவரான ராதிகா, கைதேர்ந்த பாடகரான காந்தாவரி, கோவிந்தருக்கு மனநிறைவைக் கொடுப்பவரான கோவிந்த நந்தினி, கோவிந்தரை மகிழ்ச்சிப்படுத்தும் கோவிந்த மோகினி, கிருஷ்ணரின் உள்ளும் புறமுமான கிருஷ்ணமயி, கிருஷ்ண வழிபாட்டில் சிறந்தவரான ஆராதனா, பிருந்தாவனத்தின் அரசியான பிருந்தாவனேஷ்வரி, தாமோதரை விரும்புகிறவரான தாமோதரதி, கிருஷ்ணரின் வடிவமான ராதாகிருஷ்ணா என பல்வேறு சிறப்புப் பெயர்களில் குறிப்பிடப்படும் வடக்கின் ராதை வழிபாடு, கிருஷ்ணபக்தியோடு இரண்டறக் கலந்துள்ளது.

மிகுந்த அன்புக்குரிய ஸ்ரீமதி ராதாராணியின் முகம், இரவு மற்றும் பகல் இரண்டின் போதும் ஒளியுடனும் அழகாகவும் விளங்குகிறது. ஸ்ரீமதி ராதாராணி சிரிக்கும் போது மகிழ்ச்சி அலைகள் அவர் கன்னங்களைக் கடந்து செல்லும். அவரது வில்லைப் போன்ற வளைந்த கண்புருவங்கள் அழகு மிக்க வானவில்லைப் போல் நடனமிடும். அவரின் கடைக்கண் பார்வையின் வசீகரம் மதிமயக்கத்தின் காரணமாக தடுமாறித் திரியும் பெரிய வண்டின் நடனத்தைப்போல இருக்கும். ராதை, கிருஷ்ணனின் இதயத்தில் மட்டுமின்றி, இந்தியர் உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்றவரெனில் மிகையாகாது.

வட இந்திய பக்தி மரபில் மிகவும் செல்வாக்குப் பெற்றவராக இராமானந்தர் (1300-1400 அல்லது 1380-1475) புகழப்படுகிறார். ஜகத்குரு ரமானந்தச்சார்யர்

இராமானுஜரின் ஸ்ரீவைணவத்தைப் பின்பற்றியவராக அறியப்படுகிறார். இசுலாமிய தாக்கத்திற்கு உட்பட்டிருந்த வட இந்தியாவில், இராம பக்தியின் மூலம் இந்து சமயத்தை மீட்டெடுத்தவராகக் குறிப்பிடப்படும் இராமானந்தர், புகழ்பெற்ற ஏராளமான பாடல்களை இயற்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. பக்தியையும் சமூகப் பணியையும் முன்னெடுத்த இராமனந்தரின் வழியில் துளசிதாசர், கபிர், ரவிதாசர், ராஜா பிபாஜி, சுகானந்தர் போன்ற பல சீடர்கள் உருவாகியிருக்கின்றனர்.

தென்னிந்திய ஸ்ரீவைணவத்தைப் போன்று இராமானந்தி சம்பிரதாயம், வட இந்தியாவிலும் மத்திய மற்றும் மேற்கு இந்தியப் பகுதிகளிலும் புகழ்பெற்றதொரு சமயப் பிரிவாகக் குறிப்பிடப்படுகிறது. சமயச் சடங்குகள், வைதீக நெறிமுறைகள் போன்றவற்றை வலியுறுத்தாவிட்டாலும் முக்தியடைவதற்கு இராமா அல்லது விஷ்ணுவின் அருள் அவசியம் என்பதை இராமானந்தி சம்பிரதாயம் குறிப்பிடுகிறது.

இராமாந்தரின் மரபில் வந்தவராகக் குறிப்பிடப்படும் நபதாஸ் (1570-1662) அவர்களால், இந்திய மேற்குப்பகுதி இந்தி மொழியான பிரஜ் பாஷா மொழியில் இயற்றப்பட்ட பாடல் தொகுப்பான பக்தமால் நூல், இருநூறுக்கும் மேற்பட்ட வடஇந்திய ஞானியரின் வரலாற்றுச் சுருக்கங்களைத் தருகிறது. பக்தமால் நூல் வட இந்திய பக்தி நெறியையும் பக்தி இயக்கத்தையும் நம்பகத்தன்மையுடன் விவரிக்கும் சிறந்ததொரு நூலாக அறியப்படுகிறது. இராமானந்தி வைணவர்களுக்கு பக்தமால் முக்கியத்துவம் நிறைந்த நூலாகவும் கூறப்படுகிறது.

இராமானந்தர் முயற்சியால் இந்தியாவின் வடக்குப் பகுதியில் வைணவம் சிறப்புற்று விளங்கியதாகக் கூறப்படுகிறது. இராமர் சீதை வழிபாட்டை முன்னெடுத்தவராகவும், இறைவன் முன்னால் அனைவரும் சமம் எனும் கருத்தைப் பரப்பியவ்ராகவும், இந்தி மொழி வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தவராகவும் குரு இராமானந்தர் போற்றப்படுகிறார்.

இந்து - இசுலாமியர் ஒற்றுமைக்குப் பெரிதும் பாடுபட்டவராக அறியப்படும் குரு கபீர் (1398-1448 அல்லது 1440-1518) சிறந்த கவிஞராகவும், ஞனியாகவும் புகாப்படுகிறார். இந்துக்கள் வேதங்களையும், இசுலாமியர்கள் குரானையும் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் எனச் சாடிய கபீர் மகான், கடவுளை அறிந்து கொள்வதற்கு ராமா ராமா எனும் மந்திரமே போதுமானது எனும் எளிய வழியையும் அருளியிருக்கிறார். அவந்தி, பிராக் போஜ்பூரி போன்ற மொழிகளின் சொற்களை

உள்ளடக்கி, பேச்சு வழக்கு இந்தியில், கபீர் இயற்றிய பாடல்கள் வாழ்க்கையின் பல்வேறு வழிமுறைகளையும் கடவுள் மீது அன்பு செலுத்துவதற்கான அழைப்பாகவும் இருக்கின்றன. கபீரது பாடல்கள் தோஹே எனப்படும் இருவரியிலான பாடல்களாக அமைந்துள்ளன. கபீரின் பாடல்கள் எனும் மொழிபெயர்ப்பு இரவீந்திரநாத் தாகூரால் வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடவுளிடம் அன்பு செலுத்துவதே நற்கதி அடைய வழி என அறுதியிட்ட கபீர், உண்மையே இயல்பானது, அது எல்லோர் இதயத்திலும் உறைக்கின்றது, அவ்வுண்மை அன்பினால் வெளிப்படுகிறது எனவும் குறிப்பிடுகிறார். கபீரின் போதனைகள் கபீரின் பாதை எனப் பொருள் படும் கபீர் பாந்த் அமைப்பு மூலம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. கபீர் பாந்தீஸ் எனக் குறிப்பிடப்படும் அதன் உறுப்பினர்கள், வட மற்றும் மத்திய இந்தியாவில் அதிகமிருப்பதாகக் கூறப்படுகிறது. சீக்கிய மதப் புனித குருகிரந்சாகிப் நூலில், கபீரது பல பாடல்கள் இணைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குரு கிரந்த சாகிப் நூலில் வட இந்தியாவின் மேலும் பல புகழ்பெற்ற ஞானியரது பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

உயர்ந்த ஞானியாகவும், சீர்திருத்தவாதியாகவும் புகழப்படும் சூர்தாசர் (1478 -1581), மிகச் சிறந்த இந்தி நூல்களை எழுதியவராகவும் குறிப்பிடப்படுகிறார். சூர்தாசரின் புகழ்பெற்ற நூலான சூர் சாகர், அன்பு மற்றும் பக்தியின் மேன்மையையும், குழந்தை கண்ணனின் சிறப்புக்களையும் அழகுபட விவரிப்பதாகப் புகழப்படுகிறது. ஒரு இலட்சம் பாடல்கள் கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படும் சூர் சாகர் நூலின் எட்டாயிரம் பாடல்களே கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இனிமைக் கடலான சூர் சாகர் தவிர, ஸ்ரீஹரியின் தாமரைத் திருவடிகள் சரணம், ஹோலி கொண்டாத்தின் தோற்றுவாயை விளக்கும் சூர் சரவாளி, சாகித்ய லகிரி எனும் தெய்வீகப் பாடல்கள் போன்றவற்றையும் சூர்தாசர் இயற்றியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ராதா மற்றும் கிருஷ்ணரின் லீலைகள் குறித்து சூர்தாசர் எழுதியுள்ள பாடல்கள், அவர்களது லீலைகளை நேரில் கண்டுகளித்தது போல் மிக அருமையாகப் பாடப்பட்டுள்ளதாகப் புகழப்படுகின்றன. வாழ்வு ஒரு விளையாட்டு, வீர தீரச் செயல், ஆனால் போராட்டமன்று, ஏமாற்றம் மிக்க கதையும் அன்று எனக் குறிப்பிடும் சூர்தாஸர், கொச்சை மொழியாக இருந்த இந்தியை இனிமையானதாக மாற்றியமைத்தவராகவும் புகழப்படுகிறார்.

குரு, பகத், சந்த் என அழைக்கப்படும் ரவிதாசர் (1450-1520), மிகச் சிறந்த துறவியாகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும், புலவராகவும் புகழப்படுகிறார். இயற்கையாகவே கவியாற்றலும், இசையாற்றலும் மிகுந்தவரான ரவிதாசர், கண்ணன் குறித்து அருமையான கீர்த்தனைகள் இயற்றியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. குரு ராமானந்தரின் சீடராக அறியப்படும் குரு ரவிதாசர், புகழ்பெற்ற கிருஷ்ண பக்தையான மீராவின் குருவாகவும் குறிப்பிடப்படுகிறார்.

வட இந்திய வைணவ பக்தி மரபில், மீரா எனும் மீராபாய் (1498-1547), ஆகச் சிறந்த கிருஷ்ண பக்தையாகப் போற்றப்படுகிறார். இராஜபுத்ர இளவரசியான மீரா, கிருஷ்ணர் மேல் தீராத காதல் கொண்டு இயற்றிய பாடல்கள் மிகவும் புகழ்பெற்றவையாகக் கொண்டாடப்படுகின்றன.

சிறுவயது முதலே கண்ணன் மேல் மாறாத அன்பு செலுத்திய மீரா, எத்தனையோ இன்னல்கள் நேர்ந்த போதும் மாதவன் மேல் கொண்டிருந்த பக்தியையும் அன்பையும் விடவேயில்லை. பின்னாட்களில் கிரிதர கோபாலன் வாழ்ந்த பிருந்தாவனத்தை அடைந்து, கோபியரில் ஒருவராகவே மாறிவிட்ட மீரா, வட இந்தியா முழுவதும் புனிதப் பயணம் மேற்கொண்டு பக்தி மழையோடு இசை வெள்ளத்தையும் பெருக்கெடுக்கச் செய்திருக்கிறார்.

பிறப்புச் சுழற்சியினின்றும் விடுபட்டு பேரின்ப நிலையை அடைய கிருஷ்ணபக்தி அவசியம் என்பதை வலியுறுத்திய மீராபாய், எளிய பக்தியே அதற்குப் போதுமானது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். மீராவின் பாடல்கள் மிகவும் இனியானவை எனப் புகழப்படுகின்றன. இறுதிக் காலத்தில் துவரகாதீசரைச் சரணடைந்த மீரா, கிருஷ்ண பக்தியை நாடெங்கும் கொண்டு சென்றவர் எனில் மிகையாகாது.

அகில உலக கிருஷ்ண பக்தி கழகத்தை (இஸ்கான்) நிறுவியவரான தெய்வத்திரு ஸ்ரீல பிரபுபாதா (1896-1977), உலகெங்கும் கிருஷ்ண பக்தியை எடுத்துச் சென்றவராகப் புகழப்படுகிறார். சைதன்யர் மரபில் வந்த பிரபுபாதர், தத்துவ ஞானத்திற்கும், ஆழ்ந்த கிருஷ்ண பக்திக்கும், சமூகத் தொண்டிற்கும் பெயர் பெற்றவராகக் குறிப்பிடப்படுகிறார்.

பக்தி வேதாந்த சுவாமி எனக் குறிப்பிடப்படும் பிரபுபாதர், ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா எனும் மந்திரங்கள் மூலம் தெய்வீகத் தன்மையை உணரமுடியும்

என்பதை விளக்கியிருக்கிறார். வேத தத்துவம், சமயம், இலக்கியம் மற்றும் பண்பாடு தொடர்பாக ஏராளமான நூல்களை எழுதியுள்ள ஸ்ரீபிரபுபாதர், இஸ்கான் கோவில்கள் மூலம் கிருஷ்ணரின் புகழினை உலகம் முழுக்க கொண்டு சென்றவராகவும் புகழப்படுகிறார்.

வைணவ மரபில் கோவில் என்றால் திருவரங்கத்தையே குறிக்கும். காவிரி ஆற்றால் சூழப்பட்டதும், நூற்றியெட்டு வைணவத் திருத்தலங்களுள் முதலாவதும், தலையாயதுமான திருவரங்கம், மிக நீண்ட நெடிய வரலாறு கொண்டிருக்கிறது. சங்க காலம் தொட்டே புகழ்பெற்று விளங்குவதான திருவரங்கம், ஆழ்வார்கள் மற்றும் ஆச்சார்யர்களின் பெருமதிப்பை பெற்ற திவ்யதேசமாகும்.

உயர்ந்த கோபுரங்களும், மதில் சுற்றுகளும் தீர்த்தங்களும், உள்கோவில்களும் நிறைந்து காணப்படும் பூலோக வைகுந்தமான திருவரங்கம், ஏராளமான கல்வெட்டுக்களையும் கொண்டிருக்கிறது. திருவரங்கம் கோவில் பற்றிய வரலாற்று நூலாக கோயிலொழுகு எனும் நூல் தொகுதி குறிப்பிடப்படுகிறது. ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீகிருஷ்ணாமாச்சாரியார் எழுதியுள்ள கோயிலொழுகு நூலின் முதல் தொகுதியில் புராணக் குறிப்புகள் முதல் இராமானுஜர் காலம், முத்துவீரப்ப நாயக்கர் (1623) வரையிலுமான வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. தொகுதி இரண்டில் 1623 தொடங்கி 1803 வரைக்குமான வரலாற்றுத் தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மூன்றாம் தொகுதியில் 1803 முதல் 2003 வரையிலான வரலாறு கூறப்பட்டுள்ளது. மேலும் சித்திரை தொடங்கி பங்குனி வரையிலான கோவில் விழாக்களும் கூறப்பட்டுள்ளன.

திருவரங்கத்தில் இராமானுஜர் மேற்கொண்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள் சிறப்பானவையாகக் குறிப்பிடப்படுகின்றன. கோவில் பணிகள் செம்மையாக நடைபெறும் வண்ணம் அதிகாரத்தைப் பரவலாக்கியும் வேலைகளைப் பங்கிட்டும் முறையான திட்டமிடலோடு ஒழுங்கு செய்த இராமானுஜரின் கைங்கர்யம் மிகச் சிறப்பானதாகப் புகழப்படுகிறது.

திருப்பதியார், திருப்பணி செய்வார், நம்பிகள், உள்ளூரார், விண்ணப்பம் செய்வோர், திருக்கரக்கையார், ஸ்தானத்தார், பட்டர்கள், ஆரியபட்டர்கள், தாச நம்பிகள் எனப் பத்து விதமான குழுக்களை உருவாக்கியிருக்கிறார். ஏகாங்கிகள், சத்தாத முதலிகள் எனும் வைணவத் துறவிகள், வேத்திரபாணிகள் எனும் குழுக்கள்

போன்றவையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தளிகைச் சாமான்கள் எடுத்துக் கொடுப்பவர், கோவில் கதவுகளுக்கு முத்திரை இடுபவர், களிமண் அரக்கு தயாரிப்பவர், சிற்பங்கள், கொடிகள் தோரணங்களுக்கு வண்ணம் தீட்டும் சம்மியார்கள், பொற்கொல்லர்கள், கோவில் விளக்குகள், பாத்திர பண்டங்கள் செய்வோர், தினமும் மண்பாண்டங்கள் செய்து கொடுப்போர், பெருமாளின் உடைகளைத் துவைக்கும் ஈரங்கொல்லிகள், தச்சர்கள், நெசவாளர்கள், தையல்காரர்கள், தொங்கும் விதானங்கள் மற்றும் திரைச் சீலைகளுக்கு சரிகை வேலைபாடு செய்பவர்கள், ஒட்டடை நீக்கி, கோவில் மற்றும் கோபுரங்களில் வளரும் புல்லுருவிச் செடிகளைக் கவனித்து அகற்றுவோர், காவிரியின் அக்கரையிலிருந்து மடைப்பள்ளிக்கு பால் தயிர் கொண்டுவருவோரை அழைத்துவர படகோட்டிகள் என ஒவ்வொன்றையும் உற்று நோக்கி அதற்குரிய ஆட்களை நியமித்து ஸ்ரீரங்கனுக்கு நேர்த்தியான சேவைகள் ஆற்றியிருக்கிறார் ஸ்ரீஇராமனுஜ மகான்.

பெரிய பெருமாளான அரங்கநாதரும் பெரிய பிராட்டியான ஸ்ரீரங்க நாயகியும் எழுந்தருளியிருக்கும் திருவரங்கம் விழாக்களால் வருடந்தோறும் சிறப்புற்று விளங்கும் திருக்கோவிலெனில் மிகையாகாது. வைகுண்ட ஏகாதசி, மாசித் தெப்பம், பங்குனித் தேரோட்டம் புகழ்பெற்றவை.

அரங்கமா நகரின் உற்சவரான அழகியமணவாளர் நம்பெருமாளாகக் கொண்டாடப்படுகிறார். நம்பெருமாள் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் குறிப்பாக டெல்லி வரை சுற்றி வந்தவராகக் குறிப்பிடப்படுவது தனிச்சிறப்பு. நம்பெருமாள் மற்றம் நாச்சியாரின் சேர்த்திச் சேவையைக் காண கண்கோடி வேண்டுமெனப் போற்றப்படுகிறது. திவ்யத் தம்பதியராக அருள் பாலிக்கும் நம்பெருமாள் - நாச்சியார் சேர்த்தி சேவை ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

நாச்சியாரும் கொள்ளை அழகு. பூர்வாசாரியார்கள் நாச்சியாரை தலைக்குமேல் தூக்கிவைத்துக் கொண்டாடியிருக்கின்றனர். குமரிப் பருவத்திற்கும் யௌவனப் பருவத்திற்கும் இடைப்பட்ட பருவத்தில் நாச்சியார் என்றும் இருப்பதாக ஸ்ரீகுணரத்ன கோஸத்தில் பட்டர் கூறுகிறார். மேலும் நம்பெருமாளுக்கு ஏற்ற இளமையுடன் நாச்சியார் உள்ளார் என்றும், நாச்சியாருக்கு ஏற்ற ஆண்மையுடன் நம்பெருமாள் இருப்பதாகவும் புகழ்கிறார்.

அனைவருக்கும் தாயாக இருக்கும் ஸ்ரீரங்க நாயகியே! உங்களது அன்புக் கணவரான ஸ்ரீரங்கநாதர் குற்றங்கள் புரிகிற மக்களிடம் அவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு ஒரு தந்தை போன்று கோபம் கொள்வார். அதுபோன்ற நேரங்களில் நீங்கள் அவரிடம் உலகில் குற்றம் செய்யாதார் யார் என இதமாகப் பேசி குற்றங்களை மறக்குமாறு செய்கிறீர்கள்.

தாமரை மலரில் அமர்ந்துள்ள ஸ்ரீரங்க நாயகியே! உங்கள் கணவரான ஸ்ரீரங்கநாதருக்கு உள்ள ஆயிரம் திருக்கைகள் என்ன.. அழகிய திருவடிகள் என்ன.. ஒளிரும் அழகிய திருமுகம் என்ன.. நீண்ட பெரிய கரிய பரந்த தாமரைக் கண்கள் என்ன.. அவர் எப்படியான விச்வரூபம் எடுத்த போதிலும், பல அவதாரங்கள் எடுத்த போதிலும், உங்களது காதல் எனும் பெருவெள்ளத்தில் உண்டான ஒரு சுழலில் சிக்கி மூழ்கியுள்ளவராகக் கிடக்கிறார்.

தாயே மகாலட்சுமி! ஸ்ரீரங்க நாயகி! பிறந்த இடம் என்பதால் திருப்பாற்கடலை மிகவும் மதிக்கிறீர்கள். புகுந்த இடம் என்ற காரணத்தாலும், கணவர் மீதுகொண்ட தீராக் காதலாலும் அனைவரும் போற்றும் பரமபதத்தை மிகவும் விரும்புகிறீர்கள். ஆயினும் இரண்டையும் மறந்து தங்களது பூலோகப் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக ஸ்ரீரங்கத்தில் என்றும் மகிழ்வுடன் அமர்ந்திருக்கிறீர்கள்.

ஸ்ரீரங்கத் தாயாரே! உங்களுக்கு முன்பாக ஒருவன் இருகரங்களையும் தலைக்குமேல் தூக்கி வணங்கினால் நீங்கள் துடித்துப் போகிறீர்கள். அவன் கைகள் நோகுமே என்றும் அந்தப் பாரத்தை அவன் தாங்குவானா என்றும் எண்ணுவதே காரணம். அதனால் அவன் கைகளைத் தூக்கும் முன்பே மிகுந்த செல்வமும் கைங்கர்யம் செய்யும் வாய்ப்பும் உயர்ந்த மோட்சத்தையும் அளித்து விடுகிறீர்கள். அதன் பின்னரும் எதனை நினைத்து நம்மிடம் குழந்தை வந்தானோ, நாம் அளித்தது போதுமானதாக இருந்ததோ, குறைவாகக் கொடுத்து விட்டோமோ எனப் பலவாறு எண்ணியபடி தாமரைக் கண்களை சற்றே தாழ்த்தி அமர்ந்திருக்கிறீர்கள்.

பெருமைமிகு ரங்கநாயகிக்கும், சிறப்புக்கள் மிகுந்த ரங்கநாதருக்கும் இடையை நடக்கும் பிரணவ கலகம் எனும் மட்டையடி உற்சவம் அதாவது தெய்வீக ஊடல் சிறப்பானது. அழகும் உயர்வுமிக்க ஸ்ரீரங்கநாயகியை கோவிலிலேயே இருக்கும்படி செய்துவிட்டு, அவ்வப்போது ஊர் சுற்றக் கிளம்பவிடுகிறார் நம்பெருமாள். வெறுமனே ஊர் சுற்றி வந்தால்கூட திருவரங்கநாயகி விட்டு விடுவார்.

அழகுமிகு நம்பெருமாள் போவதோ உறையூரிலிருக்கும் ஸ்ரீகமலவல்லி நாச்சியாரைப் பார்க்க.

இரவெல்லாம் கமலவல்லி நாச்சியாரோடு களியாட்டம் போட்டுத் திரும்பும் நம்பெருமாளை வாசலிலேயே தடுத்து விடுகிறார் நாச்சியார். கோபப் பார்வையோடு பூமாலைகள், பூப்பந்துகள், பழங்கள் பறந்து வருகின்றன. நம்பெருமாள் பின்வாங்குவதும், கெஞ்சுவதும், நாச்சியார் கதவை சாத்திக் கொள்வதும், பின் நம்பெருமாளுக்காக அரையர்களும், நாச்சியாருக்காக பண்டாரிகளும் தூது போவதும் நிகழ்கிறது.

புதுமாப்பிள்ளைபோன்று உடையுடுத்திக்கொண்டு வாயிற்காப்போனுக்கும் தெரியாமல் எங்கே போனீர் என நாச்சியார் கேட்க, கள்ளத்தனமும் குறும்பும் நிறைந்த நம்பெருமாள் மனதிற்குள் சிரித்துக்கொண்டு வேட்டைக்குப் போனதாகப் பதிலளிக்கிறார்.

அந்தரங்கத் திருச்சேவடிமார்கள் நம்பெருமாள் காலடித் தடம் கண்டு தேடி வர அது உறையூரில் கொண்டு போய் விட்டதாகவும், அங்கே நம்பெருமாள் முறைமை சொல்லி பெண்களை அழைத்ததாகவும், கனிவாய் கொடுத்ததாகவும், கார்மேனியில் பசுமஞ்சள் நிறம் ஒட்டியதாகவும், தேடி வந்த பெண் ஓடி வந்து சொல்லியதாக நாச்சியார் பேசி, போம் போம் என்று கதவடைத்துக் கொள்கிறார்.

வேர்க்க விறுவிறுக்க வேட்டையாடி விட்டுத் திரும்பும் வழியில் காலன் எனும் திருமங்கையாழ்வாரிடம் மாட்டிக்கொண்டதாகவும், நகைகளையெல்லாம் கொள்ளையடித்த காலனிடம், ஏதேதோ பேசி, நகைகளை மீட்டு வரத் தாமதமாகிவிட்டதாகவும் கதை அளக்கிறார் நம்பெருமாள். கணையாழி எங்கே எனக் கேள்வி வர, அழகு கமலவல்லி நாச்சியாரின் காதலுக்கு மயங்கி திருமணப் பரிசாகக் கொடுத்து விட்ட நம்பெருமாள், திருதிருவென விழிக்கிறார். காவிரிக் கரையில் தொலைந்து விட்டதாகவும் இரவெல்லாம் தேடிப்பார்த்ததாகவும் கதை விடுகிறார்.

ஸ்ரீரங்கநாயகி நாச்சியாரிடம் விளையாட்டுக் காட்டும் பெருமாள், பெண்களை மயக்குவதில் மகா சமர்த்தர். பெருமாள்மேல் பெரும்பற்றுக் கொண்டிருந்தவரான குலசேகர ஆழ்வார் இயற்றிய பெருமாள் திருமொழி பாடல்களும், முகுந்த மாலையும் அற்புதமானவை. ஆழ்வாரின் புதல்வியான ஸ்ரீகுலசேகரவல்லி எனும்

சேரகுல வல்லியை காதல் வலையில் வீழ்த்தி, அன்பெனும் வார்த்தையால் மயக்கி, ஸ்ரீராம நவமியன்று மணம் புரிந்திருக்கிறார்.

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்த ஸ்ரீஆண்டாள் நாச்சியாரை மயக்கி கற்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ, திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ எனக் களிப்பூட்டி, மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே என உருக வைத்து, உள்ளத்தில் காதலை வளர்த்து, உயிரில் அன்பை நிறைத்து, மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத, நிறைகொள்ளாத முத்துப் பந்தல் நாட்டி, கண்ணனெனும் கரும்பாய் கவர்ந்து சென்றவர் நம்பெருமாளே.

நாச்சியாரோடு நிறுத்தினாரா.. நந்தவனத்தில் தோழியரோடு விளையாடிக் கொண்டிருந்த நங்க சோழ மன்னரின் அழகிய செல்வியான ஸ்ரீகமலவல்லி, அவ்வழியாக குதிரையில் சென்ற நம்பெருமாளைப் பார்த்து பரவசமாகியிருக்கிறார். இளநங்கையான கமலவல்லியின் காதல் பார்வையில் மனதைப் பறிகொடுத்த நம்பெருமாள், பெரிய வேட்டைக்காரர்போல் நாடகமாடி, கமலவல்லி நாச்சியாரோடு இரவெல்லாம் விளையாடித் திரிந்து, பின் நல்லவர் போல் சோழ மன்னர் கனவில் தோன்றி நாச்சியாரை அழைத்துக் கொண்டு அரங்கம் வந்துசேரும் என அருளியிருக்கிறார்.

கமலவல்லி நாச்சியாரின் காதலில் என்ன குறை கண்டாரோ.. வேண்டுமென்றே டில்லி சுல்தானின் படையை வரவழைத்து அவர்களோடு சேர்ந்து சுல்தான் மகளான மணம் வீசும் சுரதானியைப் பார்க்கக் கிளம்பிவிட்டார். பின் தொடர்ந்த வள்ளி மட்டும் பெருமாள் பின்னாடியே சென்று இருப்பிடம் அறியாமல் இருந்திருந்தால், டெல்லியிலேயே டேரா போட்டிருந்தாலும் ஆச்சரியமில்லை. அழகிய சுரதானியிடம் என்னென்ன ஆசை வார்த்தைகளை அள்ளி விட்டாரோ, அவரிடமிருந்து பெருமாளை மீட்டு வருவதற்குள் அரையர்களுக்கு போதுமென்றாகி விட்டது. பெருமாள் வந்து சேர்வதற்குள் சுரதா அரங்கமா நகருக்கு ஓடோடி வந்துவிட்டாரெனில், அவர்களுக்குள் எத்தனை ஆழமான காதல் இருந்ததோ. இளவரசி சுரதாவை ஸ்ரீதுலுக்க நாச்சியராக ஆட்கொண்டுவிட்டார் நம் மலர்விழியனும், மயக்கும் மன்மதனுமான பெருமாள். அதோடு விட்டிருந்தாலும் பரவாயில்லை. அவரது காதலுக்கு மயங்கி லுங்கி கட்டிக்கொள்வதும், ரொட்டியும் வெண்ணெயும் திருவமுது செய்வதும் நம்பெருமாளுக்கு கொஞ்சம் அதிகம்தான். அதிலும் துலுக்க நாச்சியாரைப் பார்க்க, நடை அழகரான நம்பெருமாள் அலுங்கி,

குலுங்கி படியேறிச் செல்லும் அழகு, என்னத்தைச் சொல்ல. பின் ஏன் திருவரங்கத்து நாயகிக்கு கோபம் வராது? பூப்பந்தைத் தூக்கி எறிய மாட்டார்?

பெண்கள் மட்டும் எப்படி எல்லையில்லா அன்பைப் பொழிகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள, பெருமாள் மோகனாவதாரம் செய்திருக்கிறார். திருவரங்கத் தாயாக வேடமணிந்து, தழையத் தழைய புடவை கட்டி, பூச்சூடி, ஏகப்பட்ட நகைகளை அள்ளிப்போட்டு, அசைந்தாடி வந்த பெருமாள், பட்டரிடம் வேடம் பொருந்துகிறதா எனக் கேட்டிருக்கிறார். உற்றுப் பார்த்த பட்டர் உதட்டைச் சுழித்திருக்கிறார். காரணத்தை துருவிக் கேட்க, தாயார் தாமரைக் கண்களில் தெரியும் அளவு கடந்த கருணை, பெருமாளின் பரந்து விரிந்த குவளை நிறக் கண்களில் காணவில்லை எனப் பட்டர் சொல்லிவிட்டாராம். கருணை என்ன.. கருணைக் கடலையே வரவழைத்துக் காட்டுகிறோம் எனக் கங்கணம் கட்டிக் கொண்ட பெருமாள், வைகுந்த ஏகாதசியின்போது மோகனரங்கமாகக் காட்சி கொடுப்பது அடியார்களின் தவப்பயன்.

நம்பெருமாள் நடையாய் நடந்தும், புகழ்மாலைகள் சூட்டியும், பொய்கள் பல உரைத்தும், வேண்டியும், விரும்பியும், திறவாத ஸ்ரீரங்க நாயகியின் திருவாயிற்கதவு, பெண்ணின் மனமறிந்த நம்வாழ்வார் தூது மொழிகளால் திறக்கப்படுகிறது. என்னே ஆழ்வார்களின் பெருமை. எங்கே திருக்கதவை திறக்காமலேயே இருந்துவிடுவாரோ என சற்று திகைப்போடு காத்திருந்த நம்பெருமாளும், நல்ல வேளையாகக் கதவு திறந்தது என எண்ணி, ஸ்ரீரங்கநாயகியைக் குளிர்விக்கும் விதமாக, கமலத்தைப் பார்க்க போகவில்லையெனவும், உறையூரில் பிறந்து பத்தே பாடல்களில் பெருமானின் ஆனந்தத் தோற்றத்தை வெளிப்படுத்திய திருப்பாணாழ்வாருக்குப் பெருமை சேர்க்கவே, ஏற்றம் கொடுக்கவே, உறையூருக்கு எழுந்தருளியதாகச் சொல்ல, கூட்டத்தினர் சிரிக்க, ஸ்ரீரங்கநாயகியும், பிரம்மாக்களுக்கும் கருடருக்கும் வேதங்களுக்கும் வைகுந்தத்திற்கும் மூவுலகிற்கும் அகில உலகிற்கும் ஸ்ரீரங்கத்திற்கும் இராஜாதி இராஜனான ஸ்ரீரங்கநாதனை, அனைவர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டிருக்கும் தேவாதிதேவனை, அழகிய ஸ்ரீமணவாளனை, துழாய் மணக்கும் தாளையும் தோளையும் உறுதியாகப் பற்றி, வாஞ்சையும் அன்பும் மிகுந்து ஆரத்தழுவிக் கொள்கிறார்.

கணவன் மனைவிக்குள் என்னதான் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் யாரேனும் ஒருவர் விட்டுக் கொடுத்து, பொறுமையும் அன்பும் நிறையப் பெற்று, என்றென்றைக்கும் இணைந்திருக்க வேண்டுமென்பதை, நம்தாயார் நம்பெருமாளுடன் சேர்த்தி கண்டருளுவதன் மூலம் உலகுக்கெல்லாம் உணர்த்துகிறாரன்றோ. தெய்வீகத் தம்பதியரின் சேர்க்கை தரிசனம் பெற்றுத் திளைத்த நம் இராமானுஜர் ஸ்ரீரங்ககத்யம், சரணாகதிகத்யம், வைகுண்டகத்யம் எனும் மூன்று ரத்னங்களாகிய பாசுரங்களை அர்ப்பணித்து, திருவிடமும் திருவரங்கனிடமும் தஞ்சமடைந்தது போற்றுதலுக்குரியதன்றோ.

அரங்கன்மீது ஆராக்காதல் கொண்ட பிராட்டியாரும், திருமகள் மேல் தீராக்காதல் கொண்ட திருவரங்கனும், அவர்களது சொத்தான மண்ணுயிர்களெல்லாம் கரைசேர, உய்வு பெற, சங்கல்ப்பம் கொண்டு, தெய்வத் தம்பதியராய் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்றனர். அளவற்ற அன்பும் எல்லையில்லாக் கருணையும் கொண்ட தாயும் தந்தையும் அவர்தம் பிள்ளைகளும் வாழ்க பல்லாண்டு!

ஆதிபுருஷனும் ஒரே புருஷனுமான கிருஷ்ணர், பசுக் கூட்டங்களை மேய்ப்பவர். புல்லாங்குழல் இசைப்பதில் தன்னிகரற்றவர். மொட்டு விரிந்தது போன்ற மலர்க்கண்கள் கொண்டவர். அழகுமிக்க மயிற்பீலி அணிந்தவர். நீல மேகம் போன்ற நிறத்தவர். பூமாலைகள் சூடியவர். முரளியும் அணிகலன்களும் தரித்தவர். கோபியர்களால் கொஞ்சப்படுபவர். ஈடு இணையற்றவர். எண்ணமுடியாத குணாதிசயங்கள் கொண்டவர். தீராத விளையாட்டுகளில் ஈடுபடுபவர். கற்பகத்தரு வானவர். கோவிந்தர். வாமனனாகவும் இராமனாகவும் அவதாரம் எடுத்தவர்.

எப்போதெல்லாம் தர்மம் வலுக்குறைந்து அதர்மம் ஓங்குகிறதோ அப்போதெல்லாம் தோற்றம் பெறுபவர். நல்லவர்களைப் பாதுகாக்கவும், தீயவர்களை அழித்திடவும், தர்மத்தை நிலைநாட்டவும் யுகந்தோறும் அவதரிப்பவர்.

கலியுகத்தை முடிவுக்குக் கொண்டுவர கண்ணன் கல்கி எனும் அவதாரமெடுத்து தர்மத்தை மேலோங்கச் செய்வார் எனக் கருதப்படுகிறது. கலியுகம் எப்படியிருக்கும் என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் சொல்லப்பட்டுள்ளன. திருடர்கள் அரசர்களாவார்கள். அரசர்கள் திருடர்களாவார்கள். ஆட்சியாளர்கள் மக்களின் செல்வங்களைத் திருடுவார்கள்.

ஆட்சியாளர்கள் மக்களைக் காத்திடமாட்டார்கள். சிறிதளவே கல்வியறிவு பெற்றவர்கள் ஞானிகள் எனக் கருதப்படுவார்கள். எவரையும் நம்ப முடியாமல் போகும். மக்கள் பொறாமை நிறைந்திருப்பார்கள். வணிகர்கள் நேர்மையற்ற வணிகத்தில் ஈடுபடுவார்கள். பிச்சைக்காரர்களும் வேலையற்றோரும் நிறைந்திருப்பார்கள். செல்வம் சேர்ப்பதையே மக்கள் குறிக்கோளாகக் கொள்வார்கள். பணக்காரர்களே அனைத்திலும் ஆதிக்கம் செலுத்துவார்கள்.

ஸ்ரீவைணவத்தின்படி, எம்பெருமானாரான ஸ்ரீஇராமானுஜர் தோன்றியவுடனேயே கலியுகம் முடிந்து விட்டது. மிச்சம் மீதியிருந்த கலியனும் மணவாளமாமுனிகள் பாதம்கண்டு ஓடியே போனது. இனி சத்திய உலகமே என்றென்றும் நிலைத்திருக்கும்.

அடியார்களை என்றும் காக்கும் திருமாலின் இணையடித் தாமரை என்ற பொன்மலர்களில் எப்பொழுதும் பெறும்பற்று கொண்ட ஆச்சாரியார், பகவான், கருணைக்கு இருப்பிடமான ஒரே பெருங்கடல் ஸ்ரீஇராமானுஜரின் இணைத் திருவடிகளைப் புகழாகப் பற்றுகிறோம். ஸ்ரீஇராமானுஜர் அருளுகிறார் - ‘‘உங்கள் ஆச்சாரியரைப் போலவே ஸ்ரீ வைஷ்ணவர்களை மதித்துப் போற்றுங்கள். பழமையான பெரிய ஆச்சாரியர்களின் உபதேசங்களில் மனமார்ந்த ஆழ்ந்த நம்பிக்கை கொள்ளுங்கள். விஷயபோகங்களுக்கு ஒருபோதும் அடிமையாகாதீர்கள். உலக ஞானத்தைக் கொண்டு களிப்படையாதீர்கள். இறைவனுடைய மகிமை பற்றியும் அவருடைய படைப்பின் அதிசயங்களைப் பற்றியும் கூறும் நூல்களையே திரும்பத் திரும்பப் பயிலுங்கள். ஒருவேளை ஆச்சாரியரின் அருளினால் உத்தம ஞானம் பெறுவீர்களானால் விஷயங்களிலுள்ள பற்று உங்களை விட்டுத் தானே நீங்கிவிடும். உணர்ச்சிகளைப் பற்றற்று வைத்துக் கொள்ளப் பயிலுங்கள். பரமனுடைய அடியார்களின் திருநாமங்களையும் மணிமொழிகளையும் செவியுற்று மகிழுங்கள். பரமனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்கிறவர்கள் விரைவில் பரமனை அணுகுகிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு அறிவாளிகளாக இருந்தாலும் பரமனுக்கும் அவரது அடியார்களுக்கும் தொண்டு இயற்றினாலன்றி உய்வு பெற முடியாது. ஒரு வைணவனுடைய வாழ்வு ஏதேனும் தன்னலம் பெறுவதற்காக இருக்கிறது என்று ஒருபோதும் கருதாதீர்கள். நாள்தோறும் குறைந்தபட்சம் ஒரு மணிநேரமாவது ஆச்சாரியர்களுடைய பெருமைபற்றி தியானம் செய்யுங்கள்.

தினமும் சிறிதுபொழுதாவது ஆழ்வார்கள் ஆச்சாரியர்களின் அமுத வாக்குகளைப் படியுங்கள். பரமனைச் சரணடைந்த வழியில் செல்லும் பெரியோர்களுடன் பழகுங்கள். நீங்கள் ஆற்றும் கடமைகள் உலகப் பயன்களைப் பெறுவதற்காக என்று கருதாமல் அவற்றைப் பரமனின் தொண்டாகக் கருதிச் செய்யுங்கள். நீங்கள் வேண்டும் எதையும் தாராளமாக அளிக்க கருணைக் கடலான பரமன் எப்போதும் சித்தமாக இருக்கிறான் என்பதை நினைவில்கொண்டு அயலாரிடம் எதையுமே யாசிக்காதீர்கள்.

கண்ணா!

நீர் புகலடைந்தவர்களின் வசமாகியிருப்பவன். உன்னையே பிறர்க்கு நல்கும் பெருவள்ளல். எளிமையானவன். நேர்மையானவன். தூயவன். அடியார்களின் பிரிவைப் பொறுக்கமாட்டாத மென்மையன். இரக்கமுடையவன். இனியன். அசைக்க முடியாதவன். பட்சபாதமில்லாதவன். தன்னில் தானே நிறைந்தவன். அன்புக்கும் வழிபாட்டுக்கும் நன்றியுள்ளம் கொண்டவன். இயல்பிலேயே எல்லாக் கல்யாண குணங்களும் நிறைந்த அழுதக் கடலாக விளங்குகிறாய்.

கிருஷ்ணா!

மலர்ந்த புதிய தாமரை போன்ற திருக்கண்கள். தெறிப்புடன் கூடியவையும் கொடி போன்றவையுமான திருப்புருவங்கள். மிக்க ஒளிவீசும் அதரம். தூய மென்சிரிப்பு. அழகிய கன்னங்கள். எடுப்பான மூக்கு. நெற்றி வரையில் தொங்கும் திருக்குழல். ஆகா! என்னே உனது எழில்.

மாதவா!

நீய் நினைக்கவும் முடியாத தெய்வீகமான, வியப்பான, என்றுமுள்ள, இயல்பான இளமை வாய்ந்தவன். எழில் நிறைந்த அமுதக்கடல். திருவுக்கும் திருவானவன். அடியார்களுக்கு ஓர் உயிர். அடியார்களின் அறிவுக்கு ஏற்றபடி, உம்மை அறிவிக்கும் ஆற்றல் படைத்தவன். துன்பத்தில் உதவுகிற நண்பன். இரப்பவர்களுக்குக் கற்பகம்.

கோவிந்தா!

உலகமனைத்துக்கும் தந்தையும் நீயே; தாயும் நீயே; அன்புள்ள மகனும் நீயே; நல்ல மனமுடைய நண்பனும் நீயே; இரகசியங்களைச் சொல்லத்தக்க தோழனும் நீயே; ஆச்சாரியனும் நீயே; உபாயமும் நீயே. யாமோ உன்னுடையவன்; உன் அடிமை; உன் கூட்டத்தை சார்ந்தவன்; உன்னையே பேற்றாகக் கொண்டவன்; உன்னிடம் அடைக்கலம் புகுந்தவன். எம்மைக் காத்துக் கடைத்தேற்றும் முழுப்பொறுப்பும் உன்னைச் சார்ந்ததாகும்.

கண்ணனை, வாசுதேவனை, தேவகி மைந்தனை, நந்தகோபர் மகனை, கோவிந்தனை, மீண்டும் மீண்டும் வணங்குகிறோம்!

நாபியில் தாமரையுடையவனை வணங்குகிறோம்! தாமரைமாலை அணிந்தவனை வணங்குகிறோம்! தாமரைக் கண்ணனை வணங்குகிறோம்! கமலப்பாதங்களுடையவனை வணங்குகிறோம்!

திருமால் பெருமைக்கு நிகர் ஏது...

இசுலாம் என்பதற்கு சாந்தியளித்தல், கீழ்ப்படிதல், அடிபணிதல், ஒப்படைத்தல், இறைவனை மட்டுமே வழிபடுதல் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. பொதுவாகக் குறிப்பிட வேண்டுமானால், முகம்மது நபியவர்கள் எடுத்துரைத்த மார்க்கத்தை ஏற்று அதை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதே இஸ்லாம். இஸ்லாமைக் கடைப்பிடிப்பவர் முஸ்லிம் எனப்படுகிறார்.

அளவற்ற அருளாளரும் நிகரற்ற அன்புடையவருமான அல்லாஹ், இஸ்லாம் சமயத்தின் ஒரே இறைவனாகவும், முகம்மது (ஸல்) அவர்கள் அவரின் இறுதித் தூதராகவும் கருதப்படுகின்றனர். வணங்கப்படுகிற எதனையும் இலாஹ் சொல் குறிப்பதாகவும், அல் இலாஹ் என்பதற்கு வணக்கத்திற்குத் தகுதியான ஒரே இறைவன் என்னும் பொருள் கொண்டு, அல்லாஹ் எனும் பதம் அழைக்கப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. குட்டிக் கடவுள்களையெல்லாம் களைந்து விட்டு (இலாஹ்) மாபெரும் சக்தியான, ஒரே கடவுளான, அல்லாஹ் மக்காவில் நிலைபெறச் செய்யப்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இசுலாத்தின் தீர்க்கதரிசியாகவும் அல்லாஹ்வின் திருத்தூதராகவும் இறைவாக்கினராகவும் போற்றப்படும் அபூ - அல் - காசிம் முகம்மது இப்னு அப்தல்லா இப்னு அப்தல் - முத்தாலிக் இப்னு ஆசிம் - சுருக்கமாக முகம்மது இப்னு அபது அல்லா அல்லது முகம்மது நபியவர்கள் (570-632), சௌதி அரேபியாவின் புனித நகரான மக்காவில், மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் அவர்களுக்கும் (அப்து அல்லா இப்னு அப்து அல் - முத்தாலிக்), அமீனா அம்மையாருக்கும் (அமீனா பிந்த் வாகுப்) மகனாகப் பிறந்தவர். சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்து, சிறிய தந்தை ஆபூ தாலிப்பின் பொறுப்பில் வளர்ந்திருக்கிறார். முகம்மது நபியவர்களின் தாத்தாவான சைபா இப்னு ஹாசிம் (497-578) எனும் அப்துல் முத்தாலிக், மக்கா நகரின் மதிப்புமிக்க தலைவர்களுள் ஒருவராக இருந்திருக்கிறார். இளவயதில் முகம்மது நபியவர்கள் சிறிய தந்தையாரோடு வணிகத்தில் ஈடுபட்டிருக்கிறார். வணிகத்தில் நேர்மையாளராக இருந்ததன் காரணமாக அல் - அமீன் என்று மற்றவர்களால் புகழப்பட்டிருக்கிறார். நபியவர்களின் நற்பண்புகளால் ஈர்க்கப்பட்ட கதீஜா அம்மையாரோடு நபியவர்களின் இல்லற வாழ்வு மகிழ்ச்சி நிறைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

நபியவர்களின் வாழ்க்கை இறைத்தூது கிடைக்கும் முன் மற்றும் இறைத்தூதர் நபியவர்கள் என இரு நிலைகளில் அறியப்படுகிறது. நபியவர்கள் பிறப்பதற்கு முன்பு வரை அரேபியத் தீபகற்பம் முழுவதுமே பலவிதமான கடவுளர்களும் அவர்களுக்குரிய சிலை வணக்கமும் பெருமளவில் காணப்பட்டிருக்கிறது. பல்வேறு சமயப் பிரிவுகளும் அரபு மக்களிடையே செல்வாக்குப் பெற்றவையாக இருந்திருக்கின்றன.

இசுலாமியர்கள் மிகப் புனிதமாகக் கருதும் காபா, நபியவர்களுக்கு முன்னரே அரேபியாவின் முக்கியமானதொரு வழிபாட்டிடமாகவும், புனிதப் பயணம் மேற்கொள்ளும் இடமாகவும் இருந்து வந்திருக்கிறது. இறைவனின் இருப்பிடமாகக் கருதப்படும் காபாவில், நபியவர்கள் வாழ்ந்த காலத்திலேயே வருடத்தின் ஒவ்வொரு நாளையும் குறிக்கும் விதமாக முந்நூற்றி அறுபது சிலைகள் நிறுவப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. முதன்மைக் கடவுளும் ஏராளமான பிற கடவுளர்களும் இடம்பெற்றிருந்த காபாவில், சிலை வணக்கமும், பலிச் சடங்குகளும், வேண்டுதல் நிறைவேற்றங்களும், குறி சொல்வதும், காணிக்கைகள் செலுத்துவம் பெருமளவில்

நடந்திருக்கிறது. நபியவர்களின் இறுதி ஆண்டுகளிலேயே அனைத்து சிலைகளும் அகற்றப்பட்டு சடங்குகள் நீக்கப்பட்டு ஓரிறைக் கொள்கை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தின் வரலாறும் முகம்மது நபியவர்களின் வாழ்வும் பின்னிப்பிணைந்தவை. நபியவர்களே இஸ்லாம் எனில் மிகையாகாது. உலக வரலாற்றில் மிக முக்கியமானவராக இடம்பெற்றுள்ள நபியவர்களின் இசுலாத்தை கோடிக்கணக்கானோர் பின்பற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறுகிய காலத்திற்குள் ஒட்டு மொத்த அரேபியாவும் இஸ்லாத்தின் பால் கொண்டுவரப்பட்டது ஆகப்பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. நபியவர்களின் மறைவிற்குப் பிறகான ஒரு நூற்றாண்டு காலத்திற்குள், மிகப்பெரியதொரு இசுலாமியப் பேரரசு, ஸ்பெயின் தொடங்கி, தென்கிழக்கு ஐரோப்பா, மத்திய ஆப்பிரிக்கா, இந்தியா, சீனா வரை பரவியது குறிப்பிடத்தக்கது. கோடிக்கணக்கான இசுலாமிய மக்களால் அபரிமிதமான அன்பு செலுத்தப்படும் நபியவர்களின் வாழ்க்கை, பல்வேறு போராட்டங்களையும் போர்க்களையும் சந்தித்திருக்கிறது.

முகம்மது (ஸல்) அவர்கள், மக்கா நகரில் வாழ்ந்திருந்த காலங்களில் மதிக்கப்பட்டவராகவும் நேர்மையாளராகவும் உண்மையாளராகவும் மிகச் சிறந்த பண்பாளராகவும் அறியப்பட்டிருக்கிறார். நபியவர்களின் நாற்பதாவது வயதில், இறைச் செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் இறையறிவிப்பாளராக, நபியாக, இறைவனால் தேர்தெடுக்கப்பட்டு, இறைச் செய்தி இறக்கப்பட்டிருக்கிறது.

மக்காவிலுள்ள ஹிரா எனும் மலைக் குகையில் வருடத்தின் பெரும் வாரங்களை வேண்டுதல் செய்து கழிப்பது நபியவர்களின் வழக்கமாக இருந்திருக்கிறது. பொது ஆண்டின் அறுநூற்றி பத்தாம் வருடம் நபியவர்கள் ஹிரா மலைக்கு சென்ற போது, ஜிப்ரயீல் எனும் வான தூதர் மூலமாக நபியவர்கள் இறைத்தூதராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி கிடைக்கப்பெற்றிருக்கிறது. வான தூதரின் மறு தோற்றம் மூன்று ஆண்டுகளுக்குப் பின் நிகழ்ந்ததாகவும், அப்போது வானதூதர் நபியவர்களைப் பார்த்து "உம்முடைய இறைவன் உம்மைக் கைவிடவுமில்லை; அவர் (உம்மை) வெறுக்கவுமில்லை" என அறிவிப்பு செய்திருக்கிறார்.

மணியடிப்பது போல வாசகங்கள் தோன்றியதாகவும், ஒவ்வொரு தெய்வ வாசகம் தோன்றிய பிறகும், நபியவர்களின் நெற்றியில் வியர்வைத் துளிகள்

தோன்றுமென்றும், நபியவர்களின் எண்ணங்களையும் தெய்வ வாக்குகளையும் பிரிக்கும் ஆற்றல் நபியவர்களுக்கு இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. முகம்மது நபியவர்களை நபிகள் என முதலில் நம்பியவராக கதீஜா அம்மையார் அறியப்படுகிறார். தொடர்ந்து சிறிய தந்தை மகன் அலி இப்னு அபி தலிப், நெருங்கிய நண்பரான அபுபக்கர் போன்றோர் நபியாக நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். அறுநூற்றிப் பதின்மூன்றாம் ஆண்டில், நபியவர்கள் பொது மக்களுக்கு போதனைகள் புரிய ஆரம்பித்திருக்கிறார். புறக்கணிப்பிற்கும், கேலிக்கும் ஆளான நபியவர்கள், போதனைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க, பலமான எதிர்ப்பு உருவாகியிருக்கிறது. சிலை வழிபாட்டையும், பல இறைவர் வழிபாட்டையும் கண்டித்த நபியவர்களுக்கு, பல்வேறு குலங்களிலிருந்தும் குறிப்பாக காபாவின் காப்பாளர்களாக இருந்த நபியவர்களின் குலத்தாரிடமிருந்து அதீதமான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. மூதாதையர் பின்பற்றிய பாதையிலிருந்து மக்களை திசை திருப்புகிறார் மஹம்மது (ஸல்) என்று கொந்தளித்த மக்காவாசிகள், நபியவர்கள் மட்டுமின்றி அவரைப் பின்பற்றியவர்களையும் துன்பங்களுக்கு உள்ளாக்கியிருக்கின்றனர்.

நபியவர்கள் இறைவனின் வசனங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களை எச்சரித்ததோடு, தீயவைகளைத் துறப்பவர்களுக்கும், தெய்வீக வசனங்களைக் கேட்பவர்களுக்கும், இறைவனுக்கு தொண்டு செய்பவர்களுக்கும் நற்செய்திகளை அறிவித்திருக்கிறார். ஓரிறை வாதத்தை முதன்மைப்படுத்தியும், அல்லாஹ்வின் பெயரை அறிவித்தும், படைத்தவரிடம் காட்ட வேண்டிய பொறுப்புகள், இறைவனின் கடைசித் தீர்ப்பு, சொர்க்கம் நரகம் பற்றிய விளக்கங்கள், இறை நம்பிக்கை, தொழுதல், உதவிபுரிதல், பிறரை ஏமாற்றாமல் இருத்தல், செல்வத்திடம் நாட்டமில்லாமல் இருத்தல், பெண்கள் பாதுகாப்பு, முன்னேற்றம் போன்ற பல்வேறு போதனைகளையும் அறிவிப்புச் செய்திருக்கிறார்.

அறுநூற்றி இருபதாமாண்டு இஸ்ரா மற்றும் மிராஜ் என்றழைக்கப்படும் பயணங்களை நபியவர்கள் மேற்கொண்டதாக இசுலாமிய வரலாறு குறிப்பிடுகிறது. நபியவர்களின் ஓரிறைக் கொள்கையை ஏற்க மறுத்து ஏராளமானோர் அணிதிரண்டதால், பாதுகாப்புக் கருதி அவரைப் பின்பற்றிய கூட்டத்தாரோடு அறுநூற்றி இருபத்தியிரண்டாமாண்டில் மக்காவிலிருந்து மதினாவுக்கு இடம் பெயறுகிறார். மதினாவிலேயே நபியவர்களின் வெளிப்பாடுகள் இசுலாம் சமயமாகி,

இசுலாமிய அரசிற்கான அடித்தளம் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மக்காவிலிருந்து மதினாக்கு புலம் பெயர்ந்த நிகழ்வு ஹிஜ்ரா என அழைக்கப்பட்டு இசுலாமிய நாட்காட்டியான ஹிஜ்ரி உருவாக்கப்படுகிறது.

மதினாவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோட்டை கொத்தளங்களில் ஒளிந்திருக்கவில்லை எனவும், வாயிற்காப்போன் கூட இல்லாத குடிசையில் வசித்ததாகவும், வீதிகளில் சாதாரணமாக நடமாடியதாகவும், எந்தக் கொள்கையிலும் சமரசம் செய்து கொள்ளவில்லை எனவும், போர்க்களங்களில் முன்னணியாளராகப் பங்கெடுத்ததாகவும் புகழப்படுகிறார்.

மதினாவிலிருந்த பல்வேறு குலத்தாருடன் சமாதான உடன்படிக்கை கண்டு மதினா அரசியலமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. ஜெருசலேம் நோக்கி நிகழ்ந்து வந்த தொழுகையை, மக்கா இருக்கும் திசை நோக்கியதாக மாற்றியமைத்து, தொழுகைக்கான நெறிகளையும் நபியவர்கள் உருவாக்கியிருக்கிறார். பின்னர் வந்த வருடங்களில் மதினாவின் இசுலாமியர்களுக்கும் மெக்காவின் குறைஷியர்களுக்கும் இடையே பல போர்கள் நடந்து, இறுதியாக அறுநூற்றி இருபத்தியெட்டாம் ஆண்டு ஹீதைபியா உடன்படிக்கை மூலம், பத்து ஆண்டுகளுக்கான அமைதித் தீர்வு காணப்படுகிறது. மதினாவாசிகள் மக்காவுக்கு புனிதப்பயணம் மேற்கொள்ள உடன்படிக்கை உண்டாகிறது. எனினும் மெக்காவாசிகளால் உடன்பாடு மீறப்பட, நபியவர்களின் படை மக்காவை நோக்கி முன்னேறுகிறது. அறுநூற்றி முப்பதாம் ஆண்டில் மக்கா வெற்றி கொள்ளப்பட்டு காபாவிலும் அதனைச் சுற்றியிருந்த அனைத்து கடவுளர்களின் சிலைகளும், சித்திரங்களும் முற்றாக அழிக்கப்படுகின்றன. அடுத்து ஒரு வருடத்திற்குள் அரேபியாவிலிருந்த அரசுகள் இசுலாமை ஏற்றுக்கொண்டதாகவும், கடவுளர்களை அப்புறப்படுத்துவதாகவும் ஒப்புக்கொண்டு, போர்களிலிருந்தும் அழிவிலிருந்தும் தப்பிப் பிழைக்கின்றன. கிழக்கு மற்றும் மேற்கு அரேபியாவில் அனைத்து அரேபியக் கடவுளர்களும் அகற்றப்பட்டு முழு அரேபியத் தீபகற்பமும் இசுலாமியப் பேரரசின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அறுநூற்றி முப்பத்தியிரண்டில் நபியவர்கள் மக்காவிற்கு முழுமையான புனிதப் பயணம் அதாவது ஹஜ் மேற்கொண்டு புனிதக் கடமையாற்றுகிறார்.

நபிகள் பெருமானார் இறுதி ஹஜ்ஜின் போது மக்கா அருகிலிருக்கும் திர்காம் குன்றின் மீது நின்றவராய், அங்கு திரளாகக் குழுமியிருந்த மக்களைப் பார்த்து

ஆற்றிய உரை இறுதிப் பேருரையாகக் கொள்ளப்படுகிறது. இஸ்லாத்தின் பல்வேறு சிறப்புக்களையும் கூறிய பெருமானார், இசுலாமியர் ஆற்ற வேண்டிய கடமைகளையும், அவரது பணி முடிவுற்றதையும் எடுத்து கூறி மக்களை இறைவனுக்கு சாட்சியாய் வைத்து முடித்திருக்கிறார்.

நபிகள் பெருமகனார் அதிகம் பணிவுடையவர்களாகவும், பெருமை கொள்வதை விட்டு விலகியவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அரசர் முன்பு மக்கள் எழுந்து நிற்பது போன்று, நபியவர்கள் முன் எழுந்து நிற்பதை தடை செய்திருக்கிறார்கள். நலிந்தோர்களையும், நோயாளிகளையும் நலம் விசாரிப்பதும், ஏழைகளுடன் சேர்ந்திருப்பதும், கடைசி நிலையிலுள்ளவர் விருந்துக்கு அழைத்தாலும் இன்முகத்துடன் ஏற்றுக் கொள்வதுமாய் இருந்திருக்கிறார்கள். காலணிகளையும் ஆடைகளையும் பெருமானாரே தைத்துக்கொள்வாரெனவும், வீட்டு வேலைகளைச் செய்பவாரெனவும், பெருமானார் வேலைகளை அவரே செய்து கொள்வார் எனவும் அறியப்பட்டிருக்கிறது.

பெருமகனார் எப்பொழுதும் மலர்ந்த முகமும், இளகிய குணமும், நளினமும் பெற்று இருப்பார்களெனவும், நன்மையானவற்றைத் தவிர வேறெதுவும் பேசமாட்டார்கள் எனவும், அவர்கள் பேசினால் தலைமீது பறவை அமர்ந்திருப்பது போல் சபையோர்கள் அமைதி காப்பார்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமைச் செயலகமாக இருந்த பள்ளிவாசலின் மூலையில் ஸகாத் பொது நிதிக்குச் சொந்தமான பேரீச்சம் பழங்கள் குவிந்து கிடந்தன. ஒருமுறை நபிகள் நாயகத்தின் பேரன் அவற்றிலிருந்து ஒரு பேரீச்சம்பழத்தை எடுத்து வாயில் போட்டு விட்டார். அதை நபிகள் பார்த்து விரைந்து வந்து துப்பு, துப்பு எனப் பேரனிடம் கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும், ஆதரவு வைத்து அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது. (குர்ஆன் 33 ; 21)

குரான் அல்லது திருக்குரான் (குர்-ஆன், அல்-குர்-ஆன்) இஸ்லாமியர்களின் புனித நூலாகப் போற்றப்படுகிறது. குரான் இசுலாமிய கலாச்சாரத்தில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. குரானில் உள்ளவை இறைவனின் நேரடி வார்த்தைகள் என்பது இசுலாமியர்களின் நம்பிக்கை. இறைவனின் கடைசிக்

கொடையாகக் குறிப்பிடப்படும் திருக்குரான், இசுலாமிய வாழ்வியல் மற்றும் சட்டம் (ஷரியத்) ஆகியவற்றின் மூல நூலாகவும் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

நபியவர்களின் நாற்பதாவது வயது தொடங்கி குரானின் பல பகுதிகளை சிறுகச் சிறுக மற்றவர்களுக்குக் கூறியதாகவும், அவை மனனம் செய்யப்பட்டும் எழுத்திலும் மற்றவர்களால் பாதுகாக்கப்பட்டதாகவும், நபியவர்களுக்குப் பின் இசுலாமிய ஆட்சிப் பொறுப்பேற்ற அபூபக்கர் அவர்கள் காலத்தில், சைத் பின் சாபித் என்பவரின் தலைமையில் குரான் எழுத்துப் பிரதியாகத் திரட்டப்பட்டு, பின் உதுமான் (ரலி) ஆட்சிக்காலத்தில் குரான் வரிசைப்படி தொகுக்கப்பட்டு நகலெடுக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

திருக்குரான் என்பதற்கு ஓதுதல் அல்லது ஓதப்பட்டது எனும் பொருள் கொள்ளப்படுகிறது. இறைவனால் இறக்கப்பட்டது, நினைவு கூறத்தக்கது, ஞானத்தின் திறவுகோல், வழிகாட்டி, அல்லாஹ்வின் கயிறு, உறுதியான அத்தாட்சி போன்ற பல பொருள்களிலும் குறிப்பிடப்படும் குரான், அரபு உச்சரிப்பில் கிதாப் என அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

நபியவர்களால் பல்வேறு காலங்களில் கூறப்பட்ட வசனங்களின் தொகுப்பான திருக்குரானில் நூற்றிப் பதினான்கு அத்தியாயங்கள் (சூரா) உள்ளன. அத்தியாயங்கள் அளவில் ஒத்ததாக இல்லாமல், சிறியதும் பெரியதுமாக அமைந்துள்ளன. மக்காவில் வைத்து அருளப்பட்ட வசனங்கள் இறைநம்பிக்கை, ஒற்றுமை, வாழ்வு, சொர்கம், நகரம் ஆகியவற்றைப் பற்றியும், மதினாவின் வசனங்கள் இறை வணக்கம், மனித உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, சட்டதிட்டங்கள் ஆகியவற்றையும் அதிகம் குறிப்பிடுகின்றன.

நபியவர்களுக்குப் பிறகு, இசுலாமிய ஆட்சி செலுத்திய ஆபூபக்கர் (ரலி) (632-634), உமர் (ரலி) (634-644), உதுமான் (ரலி) (644-656) மற்றும் அலீ (ரலி) (656-661) போன்றவர்கள் ராஷிதீன் கலிபாக்கள் (632-661) அல்லது ராஷிதீன் நேர்வழிநின்ற கலிபாக்கள் என அழைக்கப்படுகின்றனர். ராசிதீன் கலிபாக்கள் ஆட்சி அரசியலை விட, இசுலாம் சமயத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

நபியவர்களின் நெருங்கிய தோழரும், மாமனாருமான அபூபக்கர் (ரலி), ஆரம்பகாலதிலேயே இசுலாம் மார்க்கத்தைத் தழுவியவராகவும், நபிகளாரின் உற்ற

தோழராகவும், முதல் கலிபாவாகவும் அறியப்படுகிறார். நபிகளோடு பல போர்களில் இடம் பெற்ற அபூபக்கர் ஆட்சிக் காலத்தில், அரபியாவையும் தாண்டி இசுலாம் சமயம் பரவியதாகக் குறிப்பிடப்படுகிறது. நபிகளின் ஹதீஸ்களை தொகுக்கும் பணியும் அபூபக்கர் (ரலி) காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஹதீஸ் அல்லது நபிமொழிகள் என்பது நாயகம் முகமது நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், தீர்ப்புகள், முன்னெடுத்துக் காட்டுகள், நடைமுறைகள், விவர்சனப் பதிவுகளைக் கொண்ட தொகுதியாக இருக்கிறது. ஹதீஸ் மரபு வழி இசுலாமியச் சட்டவியலுக்கும், இறையியலுக்கும், குர்ஆனுடன் சேர்ந்து சான்றாகக் கொள்ளப்படுகிறது. எட்டாம் மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தொகுக்கப்பட்ட நபிமொழிகளுள், சஹீஹ் சித்தாஹ் என்று அழைக்கப்படுகிற புஹாரி, முஸ்லிம், திர்மிதி, இப்னு மாஜா, நஸயீ, அபூதாவூத் போன்றவை சிறப்பானவைகளாகவும், மூல ஹதீஸ்களாகவும் குறிப்பிடப்படுகின்றன. மூல ஹதீஸ்களிலிருந்து வேறுபல ஹதீஸ்களும் உருவாக்கப்பட்டுள்ளன. நபி மொழிகளின் வசன அமைப்பும் பொருளும் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப்பெற்றவை போல் தோன்றினாலும் அவை முஹம்மது அவர்களுக்கே உரியவையாகக் கருதப்படுகின்றன. எனினும் இறைவன் கூறுவதாகக் குறிப்பிடப்படுவதும், நேர் கூற்றாகக் கூறப்படுவதும், நபி மொழிகளின் சிறப்பு பண்புகளாக அமைகின்றன.

ஹதீஸ் எனும் அரபுச் சொல்லுக்கு செய்தி எனும் பொருள் கொள்ளப்படுகிறது. நபியவர்களின் வாழ்க்கை முறை, அவரைப் பார்த்த மற்றும் அறிந்த தோழர்கள் நபியவர்களையப் பற்றி சொன்ன செய்திகள் மற்றும் விளக்கங்கள் போன்றவை ஹதீஸ் எனும் பொருளில் குறிப்பிடப்படுகின்றன. ஒரே ஹதீஸ் புகாரியிலும் முஸ்லிமிலும் இடம் பெற்றிருந்தால், அது ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களில் முதல் தரமானதாகக் கருதப்படுகிறது. அதாவது இமாம் புகாரி அவர்களும், இமாம் முஸ்லிம் அவர்களும் ஒன்றுபட்டுள்ளனர் என்பது பொருள்.

நபிமொழிகள் பல்வேறு நிலைகளில் சரிபார்க்கப்பட்டே தொகுக்கப்பட்டிருக்கின்றன. அன்றைய காலத்தில் நபியவர்களைப் பற்றி நபித்தோழர்கள் சொன்னதாக ஒரு செய்தியை ஒருவர் சொல்ல வேண்டும் என்றால் அவர் யாரிடம் இருந்து கேட்டார், அவருக்கு சொன்னவர் யார், அவருக்கு முன் உள்ளவர்க்கு சொன்னவர் யார், எந்த நபித்தோழர் சொன்னாரோ அந்த நபித்தோழார் வரை அத்தனை பேர்களையும் சொல்லி, இவருக்கு இன்னார்

சொன்னார், இவருக்கு இன்னார் சொன்னார் என அந்த செய்தியை கொண்டு முடித்தால்தான் அதை உண்மையான செய்தி (ஹதீஸ்) என ஏற்பார்கள். அதை புத்தகத்தில் பதிவும் செய்வார்கள்.

ஒருவர் பின் ஒருவராக அறிவிக்கும் செய்தியையும் வடிகட்டி, செய்தியாளர்கள் அனைவரும் முஸ்லிமாக இருக்கிறார்களா, செய்தியைக் கூட்டாமல் குறைக்காமல் சொல்லக் கூடியவர்களா, பொய் சொல்லுபவர்களா, மறதியினால் மாற்றிச் சொல்லக் கூடியவர்களா எனப் பலகட்டங்களாக ஆராய்ந்து, செய்தியை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்பது முடிவெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஹதீஸ்களின் நம்பகத்தன்மை கொண்டு, நான்கு வகையான ஹதீஸ்கள் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஸஹீஹ் - ஆதாரப்பூர்வமானது. மவ்ளூவு - இட்டுக்கட்டபட்டது. மத்ருக் - விடப்படுவதற்கு ஏற்றது. ளயீப் - பலவீனமானது. பெரும்பாலும் நபிகளார் வரை சங்கிலித் தொடராகச் செல்லும் ஹதீஸ்களே நம்பகத் தன்மை கொண்டதாக இசுலாம் மரபில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மேலும் குரானுடன் மாறுபட்டும் இருக்கக் கூடாது.

உமறு இப்னு அல் - கத்தாப் எனும் இயற்பெயர் கொண்ட உமர் அவர்கள், நபிகளாரின் நெருங்கிய தோழராகவும், அலோசகராகவும், மாமனாராகவும், இரண்டாவது கலிபாவாகவும் இருந்திருக்கிறார். இரண்டாவது கலிபா ஆட்சிக் காலத்திலே தான் அராபியர்களின் முக்கியமான வெற்றிகள் ஈட்டப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. பைசாந்தியப் பேரரசின் பகுதிகளாக இருந்த சிரியாவும் பாலஸ்தீனமும் அராபியர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக ஆக்கப்பட்டிருக்கின்றன. ஜெருசலம் கைப்பற்றப்பட்டு, அரபுப் படைகள் துருக்கியை நோக்கியும் முன்னேறியதாக வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. எகிப்து முழுமையாகக் கைப்பற்றப்பட்டதாகவும், பாரசீகம் முழுவதும் ஆக்ரமிக்கப்பட்டதாகவும், ஆப்பிரிக்காவிலுள்ள அராபியப் படைகள் முன்னேறிச் சென்றதாகவும் குறிப்பிடப்படுகின்றன. அராபியப் படைகள் வெற்றிகொண்ட பகுதிகளில் முறையாக ஆட்சியதிகாரம் செலுத்த பல்வேறு சட்ட திட்டங்களை வகுத்தவராகவும் உமர் அவர்கள் அறியப்படுகிறார்.

ஆடு மேய்த்தவராகவும், மல்யுத்த வீரராகவும், இறுதித் தூதரை முதலில் எதிர்த்து பின் உற்ற நண்பராகவும் உறவினராகவும் மாறிய உமறு அவர்கள், அவர் காலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்திருந்த பதினேழு பேர்களுள் ஒருவராகவும் புகழப்படுகிறார். யூதர்களுக்கும், கிறித்தவர்களுக்கும், இசுலாமியர்களுக்கும் முக்கியத்துவம் நிறைந்த ஜெருசலேம், அரபுப் படையால் கைப்பற்றப்பட, அந்நகரின் பாதுகாவலர், கலிபா நேரில் வந்தால் மட்டுமே சரணடைவதாக வேண்டுகோள் விடுத்திருக்கிறார். வேண்டுகோளுக்கு இணங்கி ஜெருசலம் சென்ற கலிபா உமர் அவர்கள், ஒட்டுப்போட்ட ஆடையும், தோலறுந்த காலணியும் அணிந்திருந்ததாகவும், அராபிய ஆட்சியின் தலைவராக இருப்பவரின் எளிமையைக் கண்டு மக்கள் உள்ளம் நெகிழ்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஒருமுறை ஆளுநராக நியமனம் செய்யப்பட இருந்த ஒருவர், நியமன ஆணையைப் பெற்றுக் கொள்ள கலிபாவிடம் வந்திருக்கிறார். அது சமயம் கலிபா அவர்களின் இளையமகன் ஓடிவந்து அவர் மடியில் அமர்ந்து கொள்ள, அதைக் கண்ட அம்மனிதர் உங்கள் மகன் சிறிதும் பயமில்லாமல் உங்கள் மடியில் அமர்கிறாரே, எமது மகன் எமதருகில் வருவதற்கே பயப்படுகிறார் எனக் கூறியிருக்கிறார். அவரது நியமனத்தை ரத்து செய்து விட்ட கலிபா, காரணமாக உங்கள் குழந்தைகளே உங்களைப் பார்த்துப் பயப்படுகிறார்கள் என்றால் பொது மக்கள் இன்னும் அதிகமாக அல்லவா அச்சப்படுவார்கள் என்றும், உங்களைப் போன்றவர் முன்பாக புகார் கூற பொது மக்கள் பயப்படுவார்கள் என்றும், உமக்கு அளுநராகும் தகுதியில்லை என்றும் கூறியிருக்கிறார்.

கலிபா உமர் அவர்கள் அதிகாரிகளை நியமிக்கும் போது சில உறுதிமொழிகளை அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்வார் எனக் குறிப்பிடப்படுகிறது. உயர்தரமான துருக்கிக் குதிரைகளின் மீது பயணிக்கக் கூடாது, அழகிய மிருதுவான ஆடைகளை அணியக் கூடாது, மிருதுவான மாவைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவை உண்ணக் கூடாது, யாரையும் வாயில் காப்போனாக நிறுத்தக்கூடாது, பொதுமக்கள் எளிதில் அணுகும் வண்ணம் வீட்டு வாசல் கதவு எப்போதும் திறந்திருக்க வேண்டும், அளவுக்கு அதிகமாக சொத்து சேர்க்கப்பட்டிருந்தால் அது பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் சேர்க்கப்படும் போன்றவை குறிப்பிடத்தக்கவை. அனைத்தும் நல்லாட்சி நடைபெறுவதற்கான அறிவுரைகளும் ஆலோசனைகளுமாக கூறப்பட்டுள்ளன.

உமர் கலிபா காலத்திலேயே, இசுலாம் அதிகளவில் பரப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. அமீருல் மூமினீன் அதாவது நம்பிக்கையாளர்களின் தளபதி எனப் புகழப்படும் கலிபா உமர் அவர்கள், இஸ்லாத்திற்குக் கிடைத்த அருங்கொடை எனில் மிகையாகாது.

மூன்றாவது கலிபாவான உதுமான் இப்னு அப்வான், நபியவர்களின் மறுமகனாவார். மிகவும் மென்மையானவராக அறியப்படும் உதுமான் கலிபா காலத்தில், அரபுப் பேரரசு மேலும் விரிவாக்கம் பெற்றிருக்கிறது. இசுலாமிய இராணுவத்திற்கு கப்பல்படையும் உருவாக்கப்பட்டிருக்கிறது. மிகப்பெரிய செல்வந்தராக விளங்கிய போதும் எளிமையாக வாழ்ந்தவராக உதுமான் கலிபா புகழப்படுகிறார். வேண்டியவர்களை ஆட்சியின் உயர்மட்ட அதிகாரிகளாக நியமிக்கிறார் எனும் குற்றச்சாட்டின் அடிப்படையில் கலிபாவிற்கு எதிராக கிளர்ச்சிகள் நடைபெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

அண்ணல் நபிகளாரின் உறவினரும், மகள் பாத்திமா அவர்களின் கணவருமான அலி இப்னு அபீதாலிப் அவர்கள், ராசிதீன் கலிபாக்களில் கடைசிக் கலிபாவாகக் குறிப்பிடப்படுகிறார். தலைநகரை மதினாவிலிருந்து கபாவிற்கு மாற்றிய அலி அவர்கள், சில ஆளுநர்களை பதவிநீக்கம் செய்திருக்கிறார். பதவி நீக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த சிரியாவின் ஆளுநரான முஆவியா என்பவர், அலி கலிபாவிற்கு எதிராகப் படையெடுப்பு நடத்தியிருக்கிறார். உள் நாட்டு குழப்பங்களும் பெருமளவில் நடந்திருக்கினறன.

ரஷிதீன் கலிபாக்களின் அபுபக்கர் சித்தீக் கலிபா தவிர்த்து, மற்ற மூன்று பேரின் முடிவும் இயற்கையாக நிகழவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. கலிபா அலி மற்றும் சொர்க்கத்தின் பெண்மணியாக நபியவர்களால் குறிப்பிடப்பட்ட பாத்திமா அவர்களின் குழந்தைகளான ஹசன் இப்னு அலியும், ஹுஸைன் இப்னு அலியும் நபிபெருமானால் மிகவும் விரும்பப்பட்டவர்களாக இருந்திருக்கின்றனர். பின்னர் வந்த வருடங்களில், இமாம் ஹுஸைன் அலி அவர்கள் உமையாத் கலிபாக்களால் கர்பாலா என்னுமிடத்தில் குடுமபத்தாரோடு கொடூரமாக முடிக்கப்பட, அந்நிகழ்வு மொகரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கலிபா அலி அவர்களை மையமாக வைத்து சன்னி, ஷியா எனும் பெரும் பிரிவுகள் இசுலாம் சமயத்தில் உண்டாகியிருக்கின்றன. நபிகள் நாயகத்திற்குப் பின்

இசுலாமிய ஆட்சியாளராக யாரைத் தேர்ந்தெடுப்பது எனும் குழப்பம் நிலவியிருக்கிறது. நபிகளாரும் அவருக்குப் பின் யார் என்பதனை வெளிப்படுத்தவில்லை எனக் கூறப்படுகிறது. அபுபக்கர் சித்திக் கலிபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், மருமகனான அலி அவர்களே உண்மையான கலிபா என்றும், நபியவர்களின் வாரிசு என்றும் கருத்துகள் நிலவி வந்திருக்கின்றன. அதனடிப்படையில் உதாரண நபிவழிக் கூட்டம் எனும் பொருள் கொண்டதான சூன்னி அல்லது சன்னி முஸ்லிம்கள், நபியவர்கள் தொடங்கி அலி அவர்கள் வரை கலிபாக்களாக ஏற்கின்றனர். சன்னி இசுலாமியப் பிரிவின் படி, அலி அவர்கள் நபியின் தோழர் மற்றும் உறவினர் மட்டுமே. வேறு சிறப்புத் தகுதிகள் கிடையாது.

ஷியா பிரிவினரோ நபிகளாரின் ஒரே வாரிசு அலி அவர்களே எனக் குறிப்பிடுகின்றனர். சன்னிக்களுக்கும் சியாக்களுக்கும் அல்லாஹ் ஒருவனே. குர்ஆனும் ஒன்றே. இறுதித் தூதரும் ஒன்றே. மக்கா இறையில்லமும் ஒன்றே. நபிகளாருக்குப் பின் இசுலாமிய ஆட்சியாளராக யாரை ஏற்பது என்பதிலேயே வேறுபடுகின்றனர். சிய பிரிவினர் தொழுகைக்கான அழைப்பில் அதாவது பாங்கில் முஹம்மது நபி அல்லாஹ்வின் இறுதித் தூதர், அவரது வாரிசு அலி என்னும் வாசகம் இடம் பெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஐந்து வேலைத் தொழுகையை மூன்று வேளைத் தொழுகையாகவும், தொழுகையில் கர்பாலாவின் மண்ணில் செய்யப்பட்ட ஓடு ஒன்றை வைப்பதையும் ஷியா பிரிவினர் கடைப்பிடிக்கின்றனர். ஈரான், ஈராக், லெபனான், கத்தார், பாஹ்ரைன் போன்ற நாடுகளில் ஷியா பிரிவினரும், மற்ற இசுலாமிய நாடுகளில் சன்னி பிரிவினரும் அதிகமாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாம் நம்பிக்கை அல்லது விசுவாசத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இறைவனை நம்புவது, இறைவனது கட்டளைக்குச் கீழ்படிவதன் மூலம் முடிவற்ற மறுமை வாழ்வின் சுகங்களைப் பெறுவது போன்றவை இசுலாமியர்களின் நம்பிக்கைக் கொள்கையாக இருக்கிறது. அல்லாஹ்வை நம்புவது, அல்லாஹ்வின் மலக்குகள் எனும் தேவதூதர்களை நம்புவது, அல்லாஹ்வால் அருளப்பட்ட வேதங்களை நம்புவது, அல்லாஹ்வின் தூதர்களை நம்புவது, மறுமையை நம்புவது மற்றும் விதியின் படியே நம்மை, தீமை அனைத்தும் ஏற்படுவதை நம்புவது போன்றவை இசுலாத்தின் நம்பிக்கை அதாவது ஈமானாகக் கருதப்படுகிறது.

இசுலாமியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து கட்டாயக் கடமைகள் இசுலாத்தின் ஐந்து தூண்களாகக் குறிப்பிடப்படுகிறது. இறைவன் ஒருவனே, முகம்மது நபி இறைவனது தூதர் எனும் உறுதிமொழியை அதாவது கலிமாவை கொடுப்பது முதல் கடமையாகக் கொள்ளப்படுகிறது. இறைவணக்கம், தொழுகை இசுலாத்தில் சிறப்பிடம் பெறுகிறது. புனித கபாவை நோக்கி ஒரு நாளில் ஐந்து வேளை தொழுவது இசுலாமியருக்கு கடமையாக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசல் அல்லது மசூதி (மஸ்ஜித்) இசுலாமியர்களின் தொழுகைக்கான இடமாக உள்ளது. சமூக மற்றும் சமய முக்கியத்துவம் நிரம்பிய பள்ளிவாசல்கள் குவிமாடங்கள் மற்றும் மினார்களுக்குப் புகழ்பெற்றவையாக இருக்கின்றன. ரமலான் மாதத்தில் நோன்பு மேற்கொள்வது முக்கிய கடமையாகக் கருதப்படுகிறது. சூரிய உதயம் முதல் அந்திசாயும் வரை உணவு மற்றும் நீர் ஆகியவை எடுத்துக்கொள்ளாமல் நோன்பு நிறைவேற்றப்படுவது குறிப்பிடத்க்கது. ரமலான் சிறப்பைக் கருதியே இசுலாமியர்களின் பெருவிழாவான ஈகைத் திருநாள் அல்லது நோன்புத் திருநாள் கொண்டாடப்படுகிறது. பொருள் தானம் அதாவது ஸக்காத் இசுலாமியக்கு கட்டாயக் கடமையாக்கப்பட்டுள்ளது. வசதி வாய்ப்பு படைத்த ஒவ்வொரு இசுலாமியரும் காபாவை கண்டு வருவதற்கு மேற்கொள்ளும் புனிதப் பயணம் ஹஜ் ஐந்தாவது கடமையாகக் குறிப்பிடப்படுகிறது.

இசுலாத்தில் சரியத் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட எந்த ஒரு செயலையும், பொருளையும், அலால் அல்லது ஹலால் எனும் சொல் சுட்டுவதாகக் குறிப்பிடப்படுகிறது. அதனடிப்படையில் ஹலால் - அனுமதிக்கப்பட்டது, அராம், ஹராம் - விலக்கப்பட்டது என்று அழைக்கப்படுகின்றன. உணவிலும் ஹலால், ஹராம் ஏற்கப்பட்டு, உட்கொள்ளத்தக்க உணவு வகைகள், உட்கொள்ளத்தகாத உணவு வகைகள் என வகுக்கப்பட்டுள்ளன. சில உணவுகள் திட்டவட்டமாகத் தடுக்கப்பட்டவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

இசுலாமியப் பேரரசின் கலீபமான உமையா காலிபகம் (661-750), உமையா குலத்தைச் சேர்ந்த முயாவியா (ஆட்சிக்காலம் 660-680) கலிபாவால் உருவாக்கப்பட்டிருக்கிறது. சிரியாவின் தெமாஸ்கஸ் நகரத்தை தலைநகராகக் கொண்டிருந்த உமையா கலீபகம், மிகப் பரந்திருந்த இசுலாமியப் பேரரசைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

ஈராக் பகுதியில் உருவாக்கப்பட்ட அப்பாசியக் கலீபகம் (750-1258), மூன்றாவது இசுலாமியக் கலீபகமாக் குறிப்பிடப்படுகிறது. அப்பாசியக் கலீபகத்தின் காலகட்டத்தில், ஜெருசலேமை முன்னிட்டு கிறித்தவர்களுடன் தொடர்ச்சியாக புனிதப் போர்கள் நடைபெற்றிருக்கின்றன. அறுநூற்றி இருபத்தொன்பதில் அரபுப் படைகள் செருசலமைக் கைப்பற்றியதிலிருந்து தொடங்கும் புனிதப் போர்கள், பதினைந்தாம் நூற்றாண்டு வரைத் தொடர்ந்திருக்கின்றன. தொடக்கத்தில் எருசலேமையும் அங்கிருந்த புனிதப் பகுதியையும் திருத்தளங்களையும் மீட்கும் நோக்கோடு நடைபெற்றாலும் (1096-1249), பின்னர் வேறு பல சமய பொருளாதார அரசியல் நோக்கங்களுக்காகவும் முதலாவது புனிதப் போர் தொடங்கி, எட்டாவது, ஒன்பதாவது புனிதப் போர்கள் வரை நடைபெற்ற போர்களில், சிறுவர்கள் புனிதப் போர், பெண்கள் ஆதரவு புனிதப் போர் என்றெல்லாம் மதச்சண்டைகள் வலுதிருக்கின்றன. பிரான்சில் ஒன்பதாம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட புனித ரோமப் பேரரசு புனிதப் போர்களைப் பெருமளவில் முன்னெடுத்ததாக அறிப்படுகிறது.

அப்பாசியக் கலீபாக்களின் தலைநகராக இருந்த பாக்தாத் மிகப்பெரும் முன்னேற்றம் கண்டு, அதன் விளைவாக இசுலாமியக் கலாச்சாரம் ஏற்றம் கண்டு இசுலாமிய பொற்காலமாகத் திகழ்ந்திருக்கிறது. அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் ஏராளமான சாதனைகள் நிகழ்த்தியதாகப் புகழப்படும் இசுலாமியப் பொற்காலம், இலக்கியத்திலும் அருங்கொடை ஆற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஞானத்தின் இல்லம் - பைத் அல் இக்மா எனும் அரியதொரு நூலகம் ஏற்படுத்தப்பட்டு, உலகின் பழமையான புத்தகங்களும், இலக்கியங்களும், அரபு மற்றும் பாரசீக மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. இயற்கணிதவியலின் தந்தை எனப் புகழப்படும் அல் - குவாரிஸ்மி (780-850), அரபு - இந்திய எண்களை ஐரோப்பாவிற்கு அறிமுகம் செய்தவராக அறியப்படுகிறார். கணிதவியலாளரும் வானியல் மற்றும் புவியியலாருமான முகம்மது இப்னு மூசா அல் - கவாரிஸ்மி, வானியல் சோதிடம் உட்பட ஏராளமான நூல்களையும் எழுதியுள்ளார்.

மருத்துவம், வானியல், வேதியியல், நிலவியல், தொல்லுயிரியல், கணிதம், இயற்பியல், உளவியல் போன்ற பல துறைகளில் வல்லுனராகவும், போர் வீரர், அரசியலாளர் மற்றும் ஆசிரியராகவும் புகழ்பெற்று விளங்கிய பாரசீகத்தின் இப்னு

சீனா (980-1037) எழுதிய நானூற்றுக்கும் மேற்பட்ட நூல்களுள் இருநூற்றி நாற்பது நூல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. நாற்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை எழுதியுள்ள இப்னுசினா (அவிசென்னா), நவீன மருத்துவத்தின் தந்தை எனவும் புகழப்படுகிறார். உடலியக்கவியல் ஆராய்ச்சியில் முறைப்படியான பரிசோதனைகளையும் அளவீடுகளையும் முதன் முதலில் பயன்படுத்தியவராக அறியப்படும் இப்னு சீனு அவர்கள், தொற்று நோய்களைக் கண்டறிந்து அவை தொற்றும் முறைகளை வகைப்படுத்தியும், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கண்டறிந்தும், மருத்துவத் துறைக்குப் பெரும் பங்களிப்புச் செய்தவராகக் குறிப்பிடப்படுகிறார். இடைக்காலத்திய பல்கலைக் கழகங்களில் இப்னுசீனு எழுதிய மருத்துவ நெறிமுறைகள் எனும் நூல் செந்தர பாடநூலாக வைக்கப்பட்டிருந்ததாகவும் அறியப்படுகிறது.

பாரசீகத்தின் கவிஞரும் கணிதவியலாளரும் வானியல் மற்றும் மெய்யியலாளருமான ஒமர் கய்யாம் (1048-1131), இசுலாமியப் பொற்காலத்தில் குறிப்பிடத்தக்கவராகக் கருதப்படுகிறார். ஒமர் அல் கய்யாமி அவரது சிறந்த கவிதைகளுக்காக அதிகம் அறியப்படுகிறார். தெளிந்த மதுவும் தேனும் ஓடும் சொர்க்கம் உண்டென்றும் அதில் தேவகன்னியர் இருப்பார்கள் என்றும் உறுதியளிக்கிறார்கள். மாறாக மதுவையும் காதலரையும் தேர்ந்து கொள்வோமெனில் தீங்கென அதில்? இறுதியில் கிடைப்பது இவைதானே?

மதத்தின் நீதிமான்களே.. உங்களை விட நன்றாக உழைக்கிறோம் நாங்கள். எவ்வளவு போதையிலும் நிதானமானவர்கள் நாங்கள். நீங்கள் குடிப்பது மனித இரத்தத்தை. நாங்கள் குடிப்பது திராட்சையின் இரத்தத்தை. உண்மையாக சொல்லுங்கள்.. நம்மில் யார் அதிக ரத்த வெறி பிடித்தவர்கள்? கவிஞர் ஒமர் கய்யாமின் கவிதை அதாவது ருபாய் யத் அவர் வாழ்ந்த காலத்தில் புரட்சிகரமான முயற்சி என்பதற்கு அவரது கவிதைகளே சான்று.

அரபு மொழியில் எழுதப்பட்ட உரைநடை மற்றும் கவிதைத் தொகுப்புகள் அரேபிய இலக்கியமாகக் கொள்ளப்படுகின்றன. அதாப் என அழைக்கப்படும் அராபிய இலக்கியங்கள், பண்டைக் காலத்திலிருந்தே வாய்மொழியாக சொல்லப்பட்டு வந்த போதிலும், ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிறகே வளர்ச்சி பெற்று இசுலாமிய பொற்காலத்தில் உச்சத்தை அடைந்ததாகக் கருதப்படுகிறது. அரபு

இலக்கியத்தின் மிகச் சிறந்த படைப்பாக திருக்குரான் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது.

அரபு மொழி, ஆப்பிரிக்க ஆசிய மொழிக் குடும்பத்தின் செமிட்டிக் கிளையில் புகழ்பெற்றதொரு மொழியாக அறிப்படுகிறது. இருபத்தியோரு நாடுகளில் ஆட்சிமொழியாக விளங்கும் அரபு மொழி, இசுலாமிய சமயத்தோடும் குரானோடும் தொடர்புள்ளதாக இருப்பதால், இசுலம் பரவிய பகுகளிளெல்லாம் அரபுமொழியும் பரவியிருக்கிறது.

பாரசீகமொழி, துருக்கியம், வங்காளி, உருது, இந்தி, மலாய் போன்ற பல மொழிகளுக்கு சொற்கள் வழங்கியும் எபிரேயம், பாரசீகம், கிரேக்கம், சிரியக்கு போன்ற மொழிகளிலிருந்து சொற்களை வாங்கியும் அரபு மொழி சிறப்புற்று அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அரபு மொழி ஆரம்பகாலத்தில் நுக்தா எனும் புள்ளி அமைப்பிலான எழுத்துகள் இல்லாத முறையிலேயே எழுதப்பட்டு வந்திருக்கிறது. அரபு மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் குரானைப் படிப்பதில் பிழை ஏற்பட வாய்புள்ளதை கருத்தில் கொண்டு, பின் வந்த காலங்களில் அரபில் எழுத்துச் சீர்திருத்தமாக புள்ளி வைக்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டிருக்கிறது. அத்துடன் உயிர்மெய் அடையாளக் குறிகளும் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. குரான் தவிர்த்து, ஏனைய புத்தகங்கள், அன்றாடப் பயன்பாட்டு நடைமுறைகள் போன்றவற்றில் உயிர்மெய்க் குறியீடுகள் அடையாளமிடப்படாமலேயே எழுதப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. குழந்தைகளின் தொடக்க கல்விப் புத்தகங்களில் இடம் பெறும் உயிர்மெய் குறிகள், மற்ற எதிலும் எங்கும் இடப்படுவதில்லை எனவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அரபு அரிச்சுவடி அப்ஜதிய்யா அரபிய்யா என்றழைக்கப்படுகிறது. ஆசியா, ஆப்பிரிக்காவின் பல மொழிகளை எழுதுவதற்கு அரபு எழுத்து முறை பயன்படுத்தப்படுகிறது. அரபு மொழி பயன்பாட்டில் உள்ள செமித்திய மொழிக் குடும்பத்தைச் சாராத பாரசீகம், உருது, பிராகுயி, சிந்து போன்ற மொழிகளில் அரபு வரிவடிவில் சிறிய அளவிற்கான மாற்றம் செய்து எழுதப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அரபு எழுத்துக்கள் மொத்தம் இருபத்தி எட்டு. அவை முதலெழுத்தாகவும், சொல்லின் இடையேயும், கடைசியாகவும் வரும் பொழுது வடிவங்கள் மாறுபடுவதாகக் குறிப்பிடப்படுகிறது. அரபு வலமிருந்து இடமாகப் படிக்கும் மொழி என்பதால் முதல் எழுத்து என்பது வலது கோடியிலும், கடைசி எழுத்து இடது கோடியிலும் அமைந்திருக்கும்.

அலி.்ப், பா, தா, ஸா, ஜீம், ஹா, க்ஹா, தால், .்தால், ரா, ஸா, ஸீன், ஷீன், ஸாத், ளாத், தா, ளா, ஐன், கைன், .்பா, .்கா.்ப், கா.்ப், லாம், மீம், நூன், வாவ், ஹா, யா போன்ற எழுத்துக்கள் அரேபிய அரிச்சுவடியில் இடம்பெற்றுள்ளன.

ஆயிரத்தொரு இரவுகள், அராபிய இலக்கியங்களில் மிகவும் புகழ்பெற்றதாக விளங்குகிறது. கதைக்குள் கதை எனும் நடையமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள ஆயிரத்தொரு இரவுகள் கதைத் தொகுப்பு, மிகுபுனைவாக்க வகை நூல்களுள் சிறந்ததொரு நூலாகக் கருதப்படுகிறது. எட்டாம் நூற்றாண்டில் அரபு மொழியில் தொகுக்கப்பட்ட அலி.்ப் லைலா (ஆயிரம் இரவுகள்) எனும் நூலே ஆயிரத்தொரு இரவுகள் நூலாக அறியப்படுகிறது.

இசுலாமிய பொற்காலத்தில் தொகுக்கப்பட்ட ஆயிரத்தொரு இரவுகள் நூல், மையக்கிழக்கு மற்றும் தெற்காசியாவைச் சேர்ந்த நூல்களிலிருந்து கதைகள் மொழிபெயர்க்கப்பட்டு, பின் ஒரே நூலாகத் தொகுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. தொகுப்பிலுள்ள கதைகளின் மூலங்கள் பண்டைய அராபியா, யேமன், பண்டைக்கால இந்திய இலக்கியங்கள், பாரசீக, எகிப்திய இலக்கியங்கள், மெசபதோமியத் தொன்மங்கள், பண்டைச் சிரியா, துருக்கி மற்றும் கலீபாக்கள் காலத்திய அராபிய நாட்டர் கதைகள் போன்றவற்றிலிருந்து எடுத்தாளப்பட்டவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

உலகப் புகழ்பெற்றதான ஆயிரத்தொரு இரவுகள், ஆயிரத்து எழுநூற்றி நான்காமாண்டில் இரவுகள் எனும் பெயரில் பிரெஞ்சு மொழியிலும், ஆயிரத்து எழுநூற்றி ஆறாம் ஆண்டில் அரேபிய இரவுகள் எனும் பெயரில் ஆங்கிலத்திலும், பிற ஐரோப்பிய உலக மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த பல கலாச்சாரப் பின்னணி கொண்ட ஆயிரத்தொரு இரவுகள் நூல், பாரசீக அரசர் சாரியாரையும், அவரது புது

மனைவு செகர்சதாஷவையும் முதன்மையாகக் கொண்டே கதைகள் பின்னப்பட்டுள்ளன.

அரசர் சாரியாரின் மனைவி அவருக்கு நம்பிக்கைத் துரோகமிழைத்ததால் அவரது கதையை முடித்துவிடுகிறார். பின்னர் பெண்மீது அதீத வெறுப்புக்குள்ளான சாரியார், ஒவ்வொரு நாளும் ஒரு கன்னிப்பெண்ணை மணந்து, காலையில் முடித்து விடுவதை வழக்கமாகக் கொள்கிறார். அரசர் மணம் செய்வதற்கு நாட்டில் பெண்களே இல்லாத நிலை ஏற்பட, அமைச்சரின் மகளான செகர்சாதா அரசரை மணம் புரிய சம்மதிக்கிறார். மணநாள் இரவில் அவரது தங்கை கதை கேட்டால்தான் தூக்குவாள் என அரசரிடம் சம்மதம் பெற்று, தங்கைக்கு கதை சொல்ல ஆரம்பிக்கிறார். விடியும் வரை கதை பல்வேறு திருப்பங்களுடன் நீடிக்கிறது. கதையின் மிக முக்கியமான திருப்பு முனையில. அடுத்து என்னவோ என ஆர்வம் பொங்கும் நிலையில், சூரியனின் உதயமாக, கதையை இன்னொரு கதையுடன் முடிச்சிட்டு பாதியிலேயே நிறுத்திவிடுகிறா ஷாஹராஜத்.

கதையில் மனம் பறிகொடுத்த அரசர், கதையின் விடையை அறிவதற்காக செகர்ச்தாவை முடிக்காமல் விட்டுவிடுகிறார். மறுநாளும் தொடரும் கதை, வழக்கம் போல் முக்கியத் திருப்பத்தில் நிறுத்தப்படுகிறது. தொடர்ந்து ஆயிரத்தி ஒரு இரவுகள் சொல்லப்பட்ட கதைகளே நூல் வடிவமாக தொகுக்கப் பெற்றுள்ளன.

நூலில் விதவிதமான கதைகள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. வரலாற்றுக் கதைகள், மிகுபுனைவுக் கதைகள், காதல், துன்பியல், நகைச்சுவை, கவிதைகள் என ஏராளமான கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கற்பனை, புனைவு, மாயம் போன்றவை கதைகளில் மிகுதியாக இருப்பினும், பேசும் மலைகள், நல்ல விலங்குகள், கெட்ட விலங்குகள், விந்தை விலங்குகள், விநோதங்கள், சாகசப் பயணங்கள், திடீர்த் திருப்பங்கள் என கற்பனையின் அத்தனை சாத்தியங்களையும் உள்ளடக்கிய ஆயிரத்தியொரு இரவுகளின் கதைகள் அற்புதமானவை எனில் மிகையாகாது.

ஆயிரத்தியொரு இரவுகள் தொகுப்பில், பெரிதும் அறியப்பட்டவையாக சிந்துபாத் கதைகள், அலாவுதீனும் அற்புத விளக்கும், அலிபாபாவும் நாற்பது திருடர்களும் போன்றவை அறியப்படுகின்றன. பறக்கும் கம்பளமும் மந்திர

விளக்கும் வேலைக்காரப் பூதமும் பெருமளவில் அறியப்பட்டவைகளாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் பாஸ்ரா பகுதியைச் சேர்ந்தவராகக் குறிப்பிட்டு பின்னப்பட்டுள்ள சிந்துபாத் கதைகள் உலகப் புகழ் பெற்றவை. சிந்துபாத் மேற்கொண்டதாகக் கூறப்படும் ஏழு கடற்பயணங்களும் அவற்றின் அனுபவங்களும், சிந்துபாத் என்னும் கதாபாத்திரத்தை உலமறியச் செய்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொர் அனுபவம். புதுப்புது தேடல்கள். புதிய ஆபத்துகள். புதிய சாகசங்கள். சிந்துபாத் கடலை மிகவும் ரசித்தவன். வைரங்களையும் மகரகத் கற்களையும் நவரத்தினங்களையும் மலை மலையாகக் குவித்த போதும், மறுபடியும் பயணத்தைத் தேடிப்போன சிந்துபாத் சிறந்த வீரனே.

அரபு மூலக்கதையையொட்டி வடிக்கப்படும் கன்னித்தீவின் கதாநாயகனான சிந்துபாத், ஓர் அரசனின் தளபதி. கன்னித்தீவு அழகிகள் நிறைந்த தீவு. உலகின் சிறந்த அழகிகளையெல்லாம் கன்னித்தீவில் அடைத்து வைத்து உல்லாசமாக இருக்கிறான் மந்திரவாதி மூசா. புது அழகியை அறிய மந்திரக் கண்ணாடி மூலம் தேடி கதாநாயகியான லைலாவைக் கண்டு கொள்கிறான். லைலாவை அளவில் சிறியவளாக மந்திரவாதி மாற்றிவிட, மந்திரவாதியைப் பிடிக்கும் பொறுப்பு சிந்துபாத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. மூஸாவைத் தேடி பயணம் மேற்கொள்ளும் சிந்துபாத் நிகழ்த்தும் சாகசங்களே கன்னித்தீவு.

உலக இசுலாமியர்களின் தலைமைப்பீடமாகவும், இசுலாமிய அரசாட்சியின் தலைநகராகவும், புகழ்பெற்ற நகராகவும் விளங்கிய பாக்தாத், ஆயிரத்து இருநூற்றி ஐம்பத்தியெட்டாம் ஆண்டில் மங்கோலியர்களால் படுகோரமாகச் சிதைக்கப்பட்டிருக்கிறது. உலகிற்கு அறிவுச் செல்வத்தை வாரி வழங்கிய பாக்தாத்தின் மாபெரும் நூலகம் அழிக்கப்பட்டிருக்கிறது. உலக முஸ்லிம்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய பாக்தாத் முற்றுகைக்குப் பின்னர் அதன் இழந்த பெருமையானது மீட்டெடுக்கப்படவே இல்லை என்றே வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது.

பாக்தாத்தின் வீழ்ச்சிக்கு பின்னர் உலக இசுலாமியர்களின் கவனத்தைப் பெற்றதாக துருக்கியில் உருவான உதுமானிய அல்லது ஒட்டோமானிய அல்லது துருக்கியப் பேரரசு (1299-1922) குறிப்பிடப்படுகிறது. பதினாறாம் மற்றும்

பதினெட்டாம் நூற்றாண்டுகளில் உலகளவில் புகழ்பெற்றதாகவும் முக்கியத்துவம் நிறைந்ததாகவும் விளங்கிய உதுமானியப் பேரரசு, ஆசியா ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா என மூன்று கண்டங்களிலும் செல்வாக்குச் செலுத்தியதாக அறியப்படுகிறது.

ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் விதத்தில் அமைந்திருக்கும் துருக்கி பழம்பெருமை கொண்ட நாடாகப் புகழப்படுகிறது. வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே அறியப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படும் துருக்கி அல்லது அனடோலியா அல்லது ஆசியா மைனர் பகுதி, வரலாற்று முக்கியத்துவம் நிறைந்தது. பொது ஆண்டுக்கு முன்னான ஹிட்டைப் பேரரசு தொடங்கி, பிரிஜியர்கள், லிடியர்கள், காரியர்கள், லிசியர்கள், எயோலியக் மற்றும் அயோனியக் கிரேக்கர்கள், அக்கமெனிட் பேரரசு, ரோமப் பேரரசு எனக் கடைசியில் புதிய ரோம் எனும் கிழக்கத்திய ரோமப் பேரரசாக அறியப்பட்ட துருக்கியில், பத்தாம் நூற்றாண்டுக் காலத்தில் துருக்கிய-பாரசீக சன்னி இசுலாமியப் குழுவினரான செல்யூக்குகளால் குறிப்பாக செல்யூக் என்பவரால் செல்யூக் பேரரசு (1037-1194) அமைக்கப்பட்டிருக்கிறது. இந்துகுஷ் முதல் அனத்தோலியா வரையிலும், மத்திய ஆசியாவிலிருந்து பாரசீக வளைகுடா வரையிலும் பரவியிருந்த செல்யூக் பேரரசு, அப்பாசியக் காலிபாத்தை வெற்றிகொண்டதாகவும், இசுலாமியர்களை ஒன்றுபடுத்தி முதல் மற்றும் இரண்டாம் சிலுவைப் போர்களில் முக்கியப் பங்காற்றியதாகவும் குறிப்பிடப்படுகிறது.

துருக்கிய - பாரசீக மரபைப் பேணிய செல்யூக்கள், மங்கோலியர்களிடம் தோற்றபின், துருக்கியின் சிறுபகுதியை ஆண்டுகொண்டிருந்த முதலாம் உதுமான் அல்லது ஒட்டோமான் அல்லது உஸ்மான் (1258-1326) எனும் குறுநில மன்னரால் உதுமானியப் பேரரசு நிறுவப்பட்டிருக்கிறது. சிறு இசுலாமிய அரசாட்சியாகத் தோற்றுவிக்கப்பட்ட உதுமானிய அரசு, அடுத்து வந்த ஆறு நூற்றாண்டு காலம் வரை உலகின் பெரும் பேரரசகளுள் ஒன்றாக நீடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உதுமானியப் பேரரசின் புகழ்பெற்ற இரண்டாம் முகம்மது (1432-1481) பைசாந்தியப் பேரரசின் கான்ஸ்டான்டிநொபிளை ஆயிரத்து நானூற்றி ஐம்பத்தி மூன்றாமாண்டில் கைப்பற்றிய பின்னரே, பேரரசு என்னும் வல்லமையை உதுமானிய அரசாட்சி பெற்றிருக்கிறது. சிறந்த கப்பல் படையையும் பீரங்கிப் படையையும் வைத்திருந்த பேரரசர் இரண்டாம் முகம்மது சிரிசு, பால்க்கன் போன்ற பல

பகுதிகளை வென்றதோடல்லாமல், மத சுதந்திரம் குறித்தான புகழ்பெற்ற ஒரு உறுதிமொழி ஆணையையும் வெளியிட்டிருக்கிறார். மரபு வழி தேவாலயங்களை அவற்றின் நிலங்களில் தன்னாட்சியாக இயக்குவதற்கு அனுமதியளித்து உதுமானியம் பேரரசின் ஆட்சியதிகாரத்தை நிலைப்படுத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது.

விரிவடைந்து வந்த ஒட்டோமான் பேரரசு வழியாகவே ஆசிய ஐரோப்பிய வணிகம் நடைபெற்றதால், ஒட்டோமான் பேரரசு வணிகத்திலும் பொருளாதாரத்திலும் மேலோங்கித் திகழ்ந்திருக்கிறது. வலுவான கடற்படையும், செங்கடல் ஆதிக்கமும், வணிகச் சிறப்பும் பெற்ற ஒட்டோமான் பேரரசிற்கும் போர்த்துக்கேசிய பேரரசிற்கும், போட்டியும் பொறாமையும் அதிகரிக்கத் துவங்கியிருக்கிறது.

ஒட்டோமானின் பத்தாவது சுல்தானான முதலாம் சுலைமான் (ஆ.காலம் 1520 - 1566) மேலை நாடுகளில் பெருஞ்சிறப்புபெற்ற சுலைமான் எனவும், கீழை நாடுகளில் பேரரசின் சட்ட முறைமையை மாற்றியமைத்தவர் என்ற முறையில் சட்டவாக்குனர் எனவும் புகழப்பட்டிருக்கிறார். கானூனி சுல்தான் சுலைமான் ஆன் எனும் பேரரசர் முதலாம் சுல்தானின் நீண்ட ஆட்சிக் காலத்தில், ஒட்டோமான் பேரரசு படைத்துறை, அரசியல், பொருளாதாரம் போன்றவற்றில் மிகவும் சிறப்புற்று விளங்கியதாகவும் நிலநடுக்கடல், செங்கடல் மற்றும் பாரசீக வளைகுடா போன்றவை ஒட்டோமான் ஆதிக்கத்தின் கீழாக இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஆயிரத்து நானூற்றி எண்பத்தி எட்டாம் ஆண்டில் போர்த்துகீசியர்களால் நன்னம்பிக்கை கடற்பயண வழி கண்டறியப்பட்டவுடன், ஒட்டோமான்களுக்கும் போர்த்துக்கீசியர்களுக்கும் பல போர்கள் நடைபெற்றிருக்கின்றன. பின்னர் ரஷ்யா, ஸ்பெயின், ஆஸ்திரியா, வியன்னா, ஹங்கேரி என பல நாடுகளோடும் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. இடையில் நூறு வருடங்களுக்கும் மேலாக, வயதில் இளைய சுல்தான்களுக்கு மாற்றாக அரச குடும்பத்துப் பெண்களே அரசாட்சியை நடத்தியதாகவும் அறியப்படுகிறது.

பதினாறாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் தேக்க நிலையை அடைந்ததாகக் குறிப்படப்படும் ஒட்டோமான் பேரரசு, பின்னர் வந்த காலங்களில் பல்வேறு சீர்திருத்தங்களையும் மேற்கொண்டிருக்கிறது. துருக்கியின்

சீர்திருத்தக்காலம் எனக் குறிப்பிடப்படும் டான்சிமாத் சீரமைப்புக் காலத்தில் (1839 முதல் 1876 வரை) அரசமைப்பு சட்டம் துவங்கியிருக்கிறது. பேரரசு நவீனமாக்கப்பட்டு பல்வேறு இனக் குழுக்களிடையே ஒற்றுமை மேம்படுத்தப்பட்டிருக்கிறது. முஸ்லிம் அல்லாதவரையும் துருக்கியர் அல்லாதவரையும் உதுமானியச் சமூகத்தில் ஒருங்கிணைத்து குடியுரிமையும் சமவாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

உதுமான் பேரரசிலிருந்த கிறித்துவர்கள் இசுலாமியர்களை விடக் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறி இருந்ததால், இசுலாமியர்கள் மத்தியில் கிறித்தவர்கள் மீதான மனக்கசப்புகள் உருவாகியிருக்கின்றன. பலமிழந்து வந்த உதுமான் பேரரசு மீது ஐரோப்பிய அரசுகளின் ஆதிக்கமும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. விளைவாக, உதுமான் பேரரசு, பிரான்சு பிரித்தானிய மற்றும் சார்டினியப் படைகளுக்கும் ரஷ்யாவிற்கும் இடையே கிரிமியப் போர் (1853-1856) நடைபெற்று, உதுமானின் பொருளாதாரம் பெரும் நெருக்கடியை சந்தித்திருக்கிறது. காக்கேசியர்கள், ஆர்மீனியர்கள், கிரேக்க அசிரியர்கள் எனப் பல்வேறு இனங்களுக்கு எதிராகவும் கொடுரங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எட்டாமாண்டில் நடத்தப்பட்ட இளம் துருக்கியர் புரட்சி குறிப்பிடத்தக்க நிகழ்வாகக் கருதப்படுகிறது. இரண்டாவது அரசியலமைப்பைச் சட்டமும், நாடாளுமன்ற நடைமுறையும், மீட்டெடுக்கப்படக் காரணமாக இருந்த இளம் துருக்கியர் புரட்சி, துருக்கிய அரசியல் வரலாற்றில் முக்கியமானதாகக் குறிப்பிடப்படுகிறது.

முதல் உலகப் போரில் (1914-1918) மைய சக்திகள் எனக் குறிப்பிடப்படும் ஜெர்மன் பேரரசு, ஆஸ்திரிய அங்கேரியப் பேரரசு, பல்கேரிய அரசுரிமை போன்றவற்றோடு இணைந்து உதுமானியப் பேரரசும் போர் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது. முதலாம் உலகப் போரின் போது, பிரித்தானியா, பிரான்சு போன்ற நேச நாடுகள், துருக்கியின் கொன்சுதாந்திநோபிள் நகரைக் கைப்பற்ற மேற்கொண்ட கலிப்போலி போர் (1915, 1916) துருக்கிக்கு சாதகமாக இருந்திருக்கிறது. எனினும் பின்னர் நிகழ்ந்த உக்கிரமான போர்களில் மைய நாடுகளின் படைகள் தோல்வியை சந்திந்ததன் காரணமாக, உதுமான் பேரரசு கடுமையான விளைவுகளைச் சந்தித்திருக்கிறது.

போரின் போது நடைபெற்ற அரபுப் புரச்சி (1916-1918), முக்கியத்துவமானதாகக் கருதப்படுகிறது. உதுமானியப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து அராபியர்கள் விடுபட மேற்கொண்ட புரட்சி, பிரித்தானியம் போன்ற ஐரோப்பிய நாடுகளால் ஆதரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக பிரித்தானிய அகழ்வாய்வாளரும் படைத்தளபதியுமான டி. இ. லாரண்சு (1888-1935) மேற்கொண்ட சினாய் மற்றும் பாலஸ்தீன் போர் நடவடிக்கைகள், அராபியர்களுக்கு ஆதரவாகவும் துருக்கியர்களுக்கு பெரும் இழப்பாகவும் குறிப்பிடப்படுகின்றன. அராபியாவின் லாரன்சு எனப் புகழப்பெறும் லாரன்சு, டெமாஸ்கசு நகர் கைப்பற்றப்பட்டதிலும் பெரும் பங்காற்றியவராகக் கருதப்படுகிறார்.

ஆஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து படைகளும் ஈடுபட்ட கலிப்போலி போரின் போது, துருக்கியப் படையில் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய முஸ்தபா கெமால் அத்தாதுர்க் (1881-1938), புரட்சிகர அரசியலாளராகவும், துருக்கிக் குடியரசின் நிறுவனராகவும் அதன் முக்கிய முதல் குடியரசுத் தலைவராகவும் அறியப்படுகிறார். உலகப் போரில் தோல்வியடைந்த உதுமான் பேரரசிடமிருந்து விடுதலைப் போரை முன்னெடுத்த கெமால் அவர்கள், பெரிய அளவில் துருக்கியின் அரசியல் பொருளாதார பண்பாட்டுச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியவராக புகழப்படுகிறார்.

துருக்கியை நவீனப்படுத்தி மேற்கத்திய பாணியில் கல்வி, கலாச்சாரம், மதச்சார்பின்மை போன்றவற்றை வலியுறுத்தியதாக அறியப்படும் கெமால் அரசு, சிறுபான்மை இனங்களை அடக்கி ஒடுக்கியதாகவும், துருக்கிய மொழியை அனைத்து மட்டங்களிலும் திணித்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. ஆர்மீனியர்களின் சொல்லொணாத் துயரம் வரலாற்றில் நீங்கா கறை. மலை நாட்டுத் துருக்கியர் என்றழைக்கப்பட்ட குர்து மொழி பேசும் குர்தியர்களும், துருக்கியர்களின் கடுமையான ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியிருக்கின்றனர்.

வரலாற்றுப் புகழ் பெற்ற இஸ்தான்புல் நகரத்தையும், மேற்குப் பகுதியில் ஐரோப்பிய நிலத்தையும், கிழக்குப் பகுதியில் ஆசிய நிலத்தையும் பெற்றிருக்கும் துருக்கி, மேலைதேயக் கலாச்சாரத்தையும், கிழக்கத்திய கலாச்சாரத்தையும், முற்போக்குச் சிந்தனையுள்ள இசுலாமிய கலாச்சாரத்தையும் கொண்டிருக்கும் பழம் பெருமை கொண்ட நாடெனில் மிகையாகாது.

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களுக்குக் காரணமாக அமைந்தது ஐரோப்பாக் கண்டமே. உலகப் போர் எனக் குறிப்பிட்டாலும் முதலாம் போர் நடைபெற்றது ஐரோப்பாவிற்குள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. உலகப் போர்கள் நடைபெற்றதற்கு மூலக் காரணம் தொழிற்புரட்சியே. தொழில் புரட்சி ஏற்பட்டதற்கு அடிப்படையாக அமைந்தது காலனியாதிக்கமே. பொருட்களை விரைவாகவும், அதீத எண்ணிக்கையிலும் உற்பத்தி செய்வதற்கு இயந்திரங்களே துணையாகக் கொள்ளப்பட்டன. உலக வணிகமும், அதன் காரணமான போட்டியும், நாடு பிடிக்கும் பேராசையும், அபரிமிதமான பொருட்தேடலும், பேராசைத்தனமான வாழ்க்கை வசதிகளும், அரசியல் தந்திரங்களும், ஆதிக்க வெறியும் சேர்ந்து உலகப் போர்களாக உருவெடுத்து, ஐரோப்பியரை மட்டுமல்லாது உலகத்தார் அனைவருக்கும் ஈடு செய்ய இயலாத மனித, பொருள் இழப்புகளைக் கொடுத்தது உலகறிந்த உண்மை.

முன்னர் நடந்த போர்களுக்கும் உலகப் போர்களுக்கும் பெருத்த வேறுபாடுகள். போர்களில் ஈடுபட்டோர் மிக அதிகம். இழப்புகளும் மிக அதிகம். உயர்தரமான தொழில்நுட்பங்களின் உதவியோடு உருவாக்கப்பட்ட அதிநவீன துப்பாக்கிகள், இயந்திரங்கள், கனரகப் பீரங்கிகள், வான் வழிப் போர்கள், நீர்மூழ்கிகள், கப்பல்கள் என அனைத்து முனைகளிலும் போர் உக்கிரம் பெற்றதற்கு, அறிவியல் கண்டுபிடிப்புகளும் ஆகப்பெருமளவில் உதவியதெனில் மிகையாகாது.

பிரித்தானியா போல் உலகையை கட்டி ஆளாவிட்டாலும், ஜெர்மனியின் தொழிற்புரட்சி பிரித்தானத்தை விட வேகமெடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ஜெர்மனிக்கும் பிரித்தானியாத்துக்கும் போட்டி. ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் தகராறு. ஜெர்மனிக்கும் ருஷ்யாவிற்கும் பகை. கப்பல்களின் அளவு பெருத்துக் கொண்டே போயிருக்கிறது. கூடவே விமானங்களின் வடிவமைப்பு ஆற்றலும் மெருகூட்டப்பட்டிருக்கிறது. படைகளின் விரைவான நகர்வுக்கு விரைந்தோடும் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. ஆயுதத் தொழிற்சாலைகள் ஆண்டுமுழுதும் ஆயுதங்களைத் தயாரித்து குவித்திருக்கின்றன. தளபதிகள் முழுநேரமும் போர்த் திட்டங்களை விவாதித்துக் கொண்டு இருந்திருக்கின்றனர். முதலாம் உலகப் போருக்கு முன்னர் பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்சு, ருசியா, ஆத்திரியா,

அங்கேரி, இத்தாலி போன்ற பெரிய வல்லரசுகளின் ஆயுதச் செலவு ஐம்பது சதவிகிதம் கூடியதாகக் குறிப்பிடப்படுகிறது.

பிரான்சிற்கும் பிரித்தானியாவிற்கும் அப்படி என்ன பகையோ.. ஓயாத போர்கள். தீராத சண்டைகள். நூறு ஆண்டுகளுக்கு தொடர்ந்து சண்டையிடுவதென்றால் எவ்வளவு வெஞ்சினம் இருந்திருக்க வேண்டும்? பிரான்சிற்கு எதிரியாக இருந்த பிரித்தானியா, ஜெர்மனியை வளர்த்து விட்டிருக்கிறது. ஜெர்மனியோடு மோதல் வந்ததும் பிரான்சோடு சேர்ந்து கொண்டு ஜெர்மனியை எதிர்த்திருக்கிறது. பலவிதமான கூட்டணிக் கணக்குகள்.. இரகசிய ஒப்பந்தங்கள்.. உறுதிமொழிகள்..

கிரேக்கம் மற்றும் உரோமைத் தொடர்ந்து பிரான்சில் சிறப்பான நாகரிக வளர்ச்சி மலர்ந்திருக்கிறது. பிரான்சில் உருவாகிய புனித ரோமப் பேரரசு, பிரான்சின் வரலாற்றிற்கும், கலாச்சாரத்திற்கும், பெருமைக்கும் பல்வேறு வகைகளில் வழிகோலியதாக அமைந்திருக்கிறது. உலக நாடுகளைக் கண்டடைந்ததும், அவற்றை குடியேற்ற நாடகளாக மாற்றியதும், ஐரோப்பிய நாடுகளை அடியோடு மாற்றியிருக்கின்றன. போர்ச்சுக்கல் மற்றும் ஸ்பெயின் நாடுகளைத் தொடர்ந்து, பல ஐரோப்பிய நாடுகளும் புதிய குடியேற்ற நாடுகளைத் தேடி உலகெங்கும் பாய்தோடியிருக்கின்றன.

தொழிற்புரட்சி இங்கிலாந்தை உலகின் பேரரசாக்கியதென்றால், தொழில்நுட்பம் ஜெர்மனியை பெரும் வல்லரசாக மாற்றியிருக்கிறது. கலைகளையும், காதலையும் வாரி வழங்கிய பிரான்சும், ஆட்சியமைப்பு நிர்வாகம் போன்றவற்றில் சாதனைகள் புரிந்த இங்கிலாந்தும், தத்துவ ஆராய்ச்சியில் செழித்திருந்த செருமானியும், உலகப் போர்களை முன்னெடுத்ததற்குக் காரணம் பேரரசுவாதமே எனில் மிகையாகாது. விரிவடைந்த உலகளாவிய சந்தைப் போட்டிகள், உலகம் முழுவதையும் ஆள வேண்டுமென்ற பேராசையும், அதன் விளைவாகப் பிணக்குகளையும் உருவாக்கியிருக்கிறது.

உலகின் இரண்டு சதவிகித நிலப்பரப்பைக் கொண்டிருப்பதாக அறியப்படும் ஐரோப்பியத் தீபகற்பம், உலகின் மிகப்பெரிய பேரரசுகளைக் பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. போர்த்துகீசிய பேரரசு, எசுப்பானியப் பேரரசு, செருமானியப்

பேரரசு, ருஷ்யப் பேரரசு, காண்டினேவியப் பேரரசு மற்றும் இத்தாலியக் குடியேற்றங்கள் என உலகமெங்கும் ஐரோப்பியரின் ஆதிக்கம்.

பிரான்சு அல்லது பிரெஞ்சுக் குடியரசு, மேற்கு ஐரோப்பாவின் மிகப் பெரிய நாடாகவும், ஐரோப்பிய நாடுகளில் மூன்றாவது பெரிய நாடாகவும் குறிப்பிடப்படுகிறது. பொது ஆண்டிற்கு முன்பான ஆறாம் நூற்றாண்டுக் காலத்திலிருந்து அறியப்பட்டு வரும் பிரான்சு, கடந்த ஐந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஐரோப்பாவிலும் உலகிலும் பண்பாடு, பொருளாதாரம், படைத்துறை, அரசியல் போன்றவற்றில் வலுவான செல்வாக்குச் செலுத்திய நாடாக அறியப்படுகிறது. பைசாந்தியப் பேரரசு, உதுமானியப் பேரரசிடம் வீழ்ச்சியுற்ற பின்னர், பைசாந்தியப் பேரரசிலிருந்து பெருவாரியான அறிஞர்களும் பிரான்சு நாட்டிற்கு இடம் பெயர்ந்ததாகவும், அவர்களின் அறிவாற்றலும் தத்துவ ஞானமும் பிரான்சின் எழுச்சிக்கு பெரியளவில் துணைபுரிந்ததாகவும் கூறப்படுகிறது.

ஐரோப்பாவில் பண்டைய காலத்திலிருந்த கவுல் அரசுரிமையின் வழித்தோன்றலாகவே பிரான்சு பார்க்கப்படுகிறது. ஜூலியஸ் சீசரால் வெற்றி கொள்ளப்பட்ட கவுலியர்கள், அவர்களது கவுலிய மொழியை விட்டுவிட்டு, உரோமன் கலாச்சாரத்தையும் இலத்தின் மொழியையும் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இலத்தீனமே பின்னர் பிரெஞ்சு மொழியாக மாற்றம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. நான்காம் நூற்றாண்டுக் காலத்தில் கிறித்தவம், பிரான்சில் சிறப்பான இடம் பெற்றிருந்ததாகவும், மேற்கு உரோமப் பேரரசு மறைந்த பின்னர், மத்திய கால கட்டங்களில் பிரான்சே கிறித்துவத்தை சிறப்பான முறையில் முன்னெடுத்ததாகவும் அறியப்படுகிறது.

பிரான்சு ஆதி கிறித்துவ அரசாட்சி எனவும், தேவாலயத்தின் மகள் எனவும் பெருமைப்படுத்தப்படடிருக்கிறது. கிறித்தவ, கவுல் - ரோமன் பண்பாட்டின் மூலம் சிறப்புற்று வந்த பிரான்சின் நடுக்காலகட்டத்தில், பிரான்சின் அரசரென்றும் முதலாம் சார்லசு எனவும் அறியப்படும் சார்லமேக்ன அரசர் (742-748 அல்லது 747-814), புகழ்பெற்ற கரோலிங்கியன் பேரரசினை (800-924) நிறுவியிருக்கிறார். பிரான்சு அரசுரிமைக்கும் செருமன் அரசுரிமைக்கும் வழிகோலிய சார்லமேக்ன அரசர், எண்நூறாவது ஆண்டில் மூன்றாம் லியோ போப் அவர்களால் முடிசூட்டப்பட்டிருக்கிறார். புனித ரோமப் பேரரசராகவும், ரோமாவின் அகஸ்தசாகவும்

பட்டம் சூட்டப்பட்ட சார்ல மேக்ன பேரரசரின் புனித ரோமப் பேரரசு, ஆயிரத்து எண்நூற்றி ஆறாமாண்டு வரை ஆதிக்கம் செலுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு காலகட்டங்களைக் கடந்து வந்த பிரான்சில், பதினாறாம் லூயி மன்னரின் ஆட்சிகாலத்தில் (1774-1792) நிகழ்ந்த பிரெஞ்சு புரட்சியும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட முதலாம் நெப்போலியன் என அழைக்கப்படும் மாவீரன் நெப்போலியன் பொனபார்ட் (ஆ.காலம் 1804-1814) பிரெஞ்சு பேரரசரானதும் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

பேரரசர் பதினாறாம் லூயியின் ஆட்சியை முதலில் மக்கள் விரும்பியிருந்தாலும், பின்னர் பிரான்சில் நிலவிய வறுமை பட்டினி போன்றவைகளால் மக்கள் மிகுந்த ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர். அதன் விளைவாக பல நூற்றாண்டுகளாக நீடித்து வந்த பிரான்சின் மன்னராட்சி முறை வீழ்த்தப்பட்டு, நிலமானி, நிலபிரபுத்துவ, கிறித்தவ திருச்சபை அதிகாரங்கள் சரிந்து, பிரெஞ்சு சமூகத்தில் மிகப்பெரும் மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. பிரெஞ்சுப் புரட்சி (1789-1799) பிரான்சு மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளின் அரசியல் களங்களிலும் பண்பாட்டிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

பெரும் சமூக மாற்றங்களையும் மக்களாட்சியையும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கருத்துக்களையும் ஊன்றச் செய்த பிரெஞ்சு புரட்சியில், மெய்யியலாளரும் அறிவொளிக் கோட்பாட்டாளருமான ரூசோ (1712-1778) அவர்களின் கருத்துக்களுக்கும் முக்கியமான பங்கிருப்பதாகக் கருதப்படுகிறது. இழான் இழாக்கு உரூசோவின் அரசியல் தத்துவம் பிரெஞ்சு புரட்சியிலும், சமூகவுடைமைக் கோட்பாடுகளிலும், செல்வாக்குச் செலுத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது. சமுதாய ஒப்பந்தம் எனும் சிந்தனைக் கருவூலத்தை எழுதிய ரூசோ மிகவும் போற்றுதலுக்குரியவரே.

பிரெஞ்சு புரட்சியின் போது வெளியிடப்பட்ட மனிதர்கள் மற்றும் குடிமக்களின் உரிமைகளின் சாற்றுரை, உலகளாவிய அனைத்துத் தட்டு மக்களுக்கும் தனிநபராகவும் மற்றும் கூட்டாகவும் வரையறுக்கப்பட்ட உரிமைகளைக் கொண்ட அடிப்படை ஆவணமாகக் கருதப்படுகிறது. பிரெஞ்சு உரிமைகள் சாற்றுரையே பன்னாட்டு மனித உரிமைகள் ஆவணங்களுக்கு முன்னோடியாக அமைந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரான்சின் மெய்யியலாளரும், அறிவொளி இயக்க எழுத்தாளரும், குடிசார் உரிமை பாதுகாப்பாளராகவும் அறியப்பட்ட வால்டயர் (1694-1778), சமூக சீர்த்திருத்தத்திற்கு பெரிதும் ஆதரவானவராகப் புகழப்படுகிறார். சாதாரண மக்களால் முன்னெடுக்கப்பட்ட பிரெஞ்சு புரட்சியில், அக்காலத்திய அறிஞர்கள் பலரது தாக்கமும் இருந்ததாகக் கருதப்படுகிறது. விக்டர் மாரீ ஹியூகோ (1802-1885) புகழ்பெற்ற எழுத்தாளராகவும், மனித உரிமைகள் ஆர்வலராகவும் அறியப்படுகிறார். அறிஞர் ஹியூகோவின் எழுத்துகள் எளிய மக்களைப் பற்றியும் அவர்களின் வாழ்க்கை முறை, துயரங்கள் மற்றும் வேதனைகளையும் எடுத்துக் கூறியிருக்கின்றன. முறையான வரிவிதிப்பு, ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சமூக மாற்றங்கள், போர்களற்ற அமைதியான வாழ்க்கை ஆகியவற்றிற்காகப் பாடுபட்டவராக ஹியூகோ அறியப்படுகிறார்.

பிரான்சு நாட்டின் படைத் தலைவராகவும், அரசியல் தலைவராகவும், பிரெஞ்சுப் புரட்சியின் போது தளபதியாகவும், பிரெஞ்சுக் குடியரசின் ஆட்சியாளராகவும், பிரெஞ்சு பேரரசராகவும், இத்தாலியின் மன்னராகவும் இருந்தவர் மாவீரன் நெப்போலியன். ஐரோப்பிய வரலாற்றிலும் உலக நாடுகளின் வரலாற்றிலும் தாக்கங்களை ஏற்படுத்திய பேரரசர் நெப்போலியன், ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளின் மீது படையெடுத்தது குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சியான பல போர் வெற்றிகளாலும், விரிவான கூட்டணிகளாலும் ஐரோப்பாக் கண்டம் முழுதும் அவரது மேலாண்மையின் கீழே கொண்டுவரப்பட்டிருக்கிறது. நெருங்கிய நண்பர்களையும் உறவினர்களையும் ஆக்கிரமிப்பு நாடுகளின் ஆட்சியாளர்களாகவும், அதிகாரிகளாகவும் நியமித்திருக்கிறார். நெப்போலியனது ருஷ்யா படையெடுப்பு அவருக்கு மிகப்பெரும் இழப்பினைக் கொடுத்ததோடல்லாமல், அதிலிருந்து நெப்போலியப் படைகளால் மீள இயலவில்லை என்பதும் வரலாறு. பின்னர் பிரித்தானியர்களால் வெற்றி கொள்ளப்பட்ட பேரரசர் நெப்போலியனின் பிந்தைய வாழ்க்கை சென் ஹெலெனாத் தீவில் கழிந்தது.

உலகையே வெற்றிகொள்ள முயன்ற நெப்போலியப் பேரரசர், பிரெஞ்சு மொழியைப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் கற்றுக் கொள்ள கடினப்பட்டதாகக் குறிப்புகள் குறிப்பிடுகின்றன. இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பிரெஞ்சு மொழி, ஒரு உரோமானிய மொழியாக அறியப்படுகிறது. உலகின்

இருபத்தொன்பது நாடுகளில் அலுவல் மொழியாக உள்ள பிரெஞ்சை தாய்மொழியாகவும், இரண்டாம் மொழியாகவும் கொண்டோர் மிக அதிகமானோர் எனக் கூறப்படுகிறது.

வேறு பல ஐரோப்பிய மொழிகளைப் போன்றே பிரெஞ்சும் பேச்சு வழக்கு இலத்தீனத்திலிருந்து உருவாகியிருக்கிறது. பிரெஞ்சு மொழி இலத்தீன் அரிச்சவடியையே பயன்படுத்துகிறது. இனிய மொழியெனப் புகழப்படும் பிரெஞ்சு மொழி, இலக்கியச் செழுமை நிறைந்த மொழியாக இருக்கிறது. புகழ்பெற்ற ஏராளமான எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாடகாசிரியர்கள், கட்டுரையாளர்கள் படைத்த இலக்கியப் படைப்புகள், உலகின் செல்வங்களாகத் தரப்பட்டுள்ளது பிரெஞ்சு மண்ணின் பெருமை எனில் மிகையாகாது.

பிரெஞ்சின் முதல் இலக்கியப் படைப்பாக பதினோறாம் - பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோலண்டின் காப்பியம் குறிப்பிடப்படுகிறது. சார்ல மாக்ன மன்னர் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த ரோன்சுவாக்கசு போர் பற்றிய தகவல்களை, பழைய பிரெஞ்சு மொழியில் நான்காயிரம் பாடல்களாக எழுதப்பட்ட காவியமாக ரோலண்டின் காப்பியம் அறியப்படுகிறது.

இலக்கியத்திற்கான நோபல் பரிசை அதிகம் பெற்றிருக்கும் பிரெஞ்சு இலக்கியம் சிறப்புடையதே. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பதினைந்தாமாண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற ரோமன் ரோலந்த் அவர்கள் (1866-1944), இந்திய மரபின் மீது, குறிப்பாக விவேகானந்தர், தாகூர் மற்றும் காந்தி போன்றோரால் ஈர்க்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. போர்களுக்கும் இனவெறிக்கும் எதிராக, உலக சமாதானத்தையும் அன்பையும் வலியுறுத்தியும், செயல்பட்டும் வந்த திரு ரொமன் ரோலண்ட் போற்றுதலுக்குரியவரே.

நெப்போலியப் போர்களின் போது இசுக்காட்லாந்தியரும், வேல்சு மக்களும், இங்கிலாந்து மக்களுடன் உணர்வுப்பூர்வமாக ஒன்றிணைந்து, உண்மையான பிரித்தானிய நாட்டுப்பற்று உருவானதாகவும், அதன் காரணமாகவே பிரெஞ்சுப் படைகளை நிலத்திலும் நீரிலும் இங்கிலாந்தால் வெற்றிகொள்ள முடிந்ததெனவும் குறிப்பிடப்படுகிறது.

அறுபத்து மூன்று ஆண்டுகள் மகாராணியாக இருந்த பேரரசி விக்டோரியா (1819-1901) ஆட்சிக் காலத்தில், இலண்டன் மாநகரமும் இங்கிலாந்தும் சிறப்புற்று

விளங்கியிருக்கின்றன. பெரிய பிரித்தானியாவும் அயர்லாந்தும் இணைந்த ஐக்கிய அரசுரிமையின் பேரரசியாகத் திகழ்ந்த அலெக்சாண்டரினா விக்டோரியா மகாராணி ஜெர்மானிய வழியினராக அறியப்படுகிறார். ஒன்பது பிள்ளைகளுக்கும் நாற்பத்தியிரண்டு பேரப்பிள்ளைகளுக்கும் ஐரோப்பாக் கண்டம் முழுதும் மணமுடித்து, ஐரோப்பாவின் செல்லமான பாட்டியாகப் பெயர் வாங்கிய பேரரசியரின் ஆட்சிகாலம், விக்டோரியா காலம் என்றே வரலாற்றில் நிலைபெற்றுள்ளது. விக்டோரியா காலம் நீண்ட கால சமாதானம், செழிப்பு, தேசிய சுய நம்பிக்கை போன்றவற்றைக் கொண்டிருந்ததாகவும், இங்கிலாந்து அதன் தொழிற்புரட்சியின் உயர்நிலையில் இருந்ததாகவும், சமூக பொருளியில் தொழில்நுட்ப வளர்ச்சியில் சிறப்பிடம் பெற்றிருந்ததாகவும், பிரித்தானியப் பேரரசு பெரிதும் விரிவடைந்து உலக வல்லரசாகத் திகழ்ந்ததாகவும் அறியப்படுகிறது.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்து இணைந்த பகுதி ஐக்கியப் பேரரசு அதாவது யுனைடெட் கிங்டம் என அழைக்கப்படுகிறது. அயர்லாந்து தீவின் வடக்கு அயர்லாந்து தவிர்த்த பிற மாகாணங்கள் ஒன்றிணைந்து அயர்லாந்து குடியரசாக உள்ளன. அயர்லாந்து குடியரசில் ஆங்கில மொழியே பேச்சு மொழியாக இருப்பினும், முதல் மொழி, கற்பித்தல் மொழியாக, ஐரிச் மொழி உள்ளதாகவும் அறியப்படுகிறது.

பிரித்தானியா அல்லது பெரிய பிரித்தானியா தீவு (இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ்) மற்றும் அயர்லாந்து தீவுகளோடு, கால்வாய் தீவுகள், மான் தீவு மற்றும் வேறு பல தீவுகளும் ஐரோப்பாவின் வடமேற்கே கரைக்கு அப்பால் அமைந்துள்ளன. தீவுகள் வடக்குக் கடல் ஆங்கிலக் கால்வாய், செல்டிக் கடல், ஐரியக் கடல் மற்றும் அட்லாண்டிக் கடலினால் சுழப்பட்டுள்ளதும், மேலும் அவை நீண்ட வரலாறு கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சுமார் பதினோறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் பிரிட்டன் தீவும், அயர்லாந்து தீவும், ஆசியா மற்றும் ஐரோப்பாவின் ஒன்றிணைந்த நிலப் பகுதியாகக் குறிப்பிடப்படும் யுரேசியாவோடு இணைந்திருந்ததாகவும், பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் கடல்மட்டம் உயர்ந்த பொழுது அயர்லாந்து தனித் தீவாகவும், எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிரித்தானியா தனித்தீவாகவும், யுரேசியாவிலிருந்து பிரிந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு

முன்னர் தீவுப் பகுதிகளில் நிலையான குடியிறுப்புகள் தோற்றுவிக்கப்பட்டதாகவும் கருதப்படுகிறது.

பொது ஆண்டிற்கு முன்பான முதலாம் நூற்றாண்டுக் காலத்தில் உரோமர்களின் படையெடுப்பும், நான்காம் நூற்றாண்டுக் காலத்தில் கிறித்துவ அறிமுகமும் நிகழ்ந்திருக்கின்றன. ஏழாம் நூற்றாண்டுக் காலத்தில் பத்து முதல் பன்னிரெண்டு அரசுரிமைகள், தீவுப்பகுதிகளில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐந்தாம் மற்றும் ஆறாம் நூற்றாண்டுகளில் ஆங்கில்கள் எனும் செருமானியப் பழங்குடிகள் இங்கிலாந்தின் மைய, வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் குடியேறியிருக்கின்றனர். ஆங்கில்களை ஒத்த சாக்சன்கள் எனப்பட்ட பழங்குடியினர், இங்கிலாந்தின் தென் பகுதியில் குடியேறியிருக்கின்றனர். இங்கிலாந்தின் வரலாற்றில் ஆங்கில்கள் மற்றும் சாக்சன்கள் குடியேறிய காலப் பகுதி ஆங்கிலோ- சாக்சன் காலகட்டம் என அழைக்கப்படுகிறது. துவக்கத்தில் நார்த்தம்ரியா, மெர்சியா, வெசெக்ஸ், கிழக்கு ஆங்லியா, எசெக்ஸ், கென்ட், சசெக்ஸ் போன்ற பல்வேறு குறுநில அரசுகளாக இருந்த இங்கிலாந்தை, ஆங்கிலோ-சாக்சன் அரசராக இருந்த எதெல்சுதன், தொள்ளாயிரத்து முப்பத்தியேழாமாண்டில் இங்கிலாந்தாக ஒன்றிணைத்து, தொள்ளாயிரத்து முப்பத்தொன்பது வரை ஆட்சி செலுத்தியிருக்கிறார்.

மன்னர் எதெல்சுதன் ஆட்சிகாலத்தில், நார்வே, சுவிடன், டென்மார்க், ஐசுலாந்து போன்ற ஸ்காண்டினேவியப் பகுதியில், செருமானிய நோர்சு மொழி பேசிய மக்கள், எட்டாம் நூற்றாண்டுக்கும் பதினோராம் நூற்றாண்டிற்குமிடையில் வணிகத்திலும் கடல் பயணங்களிலும் சிறப்புற்று விளங்கியிருக்கின்றனர். வரலாற்றில் வைகிங் காலமெனவும், வைகிங் மக்கள் எனவும் குறிப்பிடப்படுகின்ற வைகிங்கியர்கள், ஸ்காண்டினேவியா, பிரித்தானியத் தீவுகள், பிரான்சு, இத்தாலி, ருஷ்யா, வட அமெரிக்கா போன்ற நாடுகளின் மத்திய கால வரலாற்றில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தியவர்களாக அறியப்படுகினறனர்.

வைகிங் வழிவந்தவரான பிரான்சு நிலத்தின் நார்மாண்டி முதலாம் வில்லியம் அரசர் (1028-1087), 1066 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் எஸ்செக்ஸ் மன்னரான எட்வர்டு (1003-1066) மீது படையெடுத்து, இங்கிலாந்தின் நார்மாண்டி அரசராக

ஆட்சி புரிந்திருக்கிறார். முதலாம் வில்லியம் அரசருக்குப் பின், அவரின் நான்காவது மகனான முதலாம் ஹென்றி (1068-1135), இங்கிலாந்தின் மன்னராகியிருக்கிறார். முதலாம் ஹென்றி மன்னருக்குப் பின் அவரது மகள் பேரனான இரண்டாம் ஹென்றி (ஆ.காலம் 1154-1189) இங்கிலாந்தை ஆண்டிருக்கிறார்.

இரண்டாம் ஹென்றி பேரரசரால் தோற்றுவிக்கப்பட்ட அஞ்சுவின் பேரரசு (1154-1214), இங்கிலாந்தின் முழுப்பகுதியிலும், பிரான்சின் சரிபாதியிலும், அயர்லாந்து மற்றும் வேல்ஸ் பகுதிகளிலும் அரசாட்சி செலுத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது. பிரான்சின் அன்ஜோ நிலப்பகுதியிலிருந்த பிளான்டாஜெனட் மரபின் ஒரு கிளையாகக் கருதப்படும் அஞ்சுவின் ஆட்சி மரபில், முதலாம் ரிச்சர்டு (ஆ.காலம் 1189-1199), முதலாம் எட்வர்டு (ஆ.காலம் 1272-1307), மூன்றாம் எட்வர்டு (ஆ.காலம் 1327-1377), நான்காம் ஹென்றி (ஆ.காலம் 1413-1422) போன்ற புகழ்பெற்ற மன்னர்கள் இங்கிலாந்தை அரசாண்டிருக்கின்றனர்.

இங்கிலாந்தும், போப் அவர்களால் இங்கிலாந்திற்கு தானமளிக்கப்பட்ட அயர்லாந்தும் (1177-1542), அஞ்சுவின் காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடைந்ததாக அறியப்படுகிறது. முக்கியமாக, சட்டத்துறையில் மேக்னா கார்டா (1215) போன்ற உடன்படிக்கைகள், அவற்றின் சமாதானத்திற்கும் நல்லுறவிற்கும் அடித்தளமிட்டவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

இங்கிலாந்தின் சுதந்திரங்களுக்கும் வனங்களின் சுதந்திரங்களுக்குமான பெரும் சாசனம் எனக் குறிப்பிடப்படும் மாக்ன கார்ட்டா சாசனம், இங்கிலாந்தின் ஜான் மன்னருக்கும் (ஆ.காலம் 1199-1216) மக்களுக்குமான ஓர் உடன்படிக்கை. முதலாம் ரிச்சர்டு மன்னருக்குப் பின்வந்த ஜான் மன்னர் காலத்தில் எதிரி நாடான பிரான்சிடம், நார்மாண்டி பகுதியை இழந்ததுடன், ஆட்சியும் சீராக நடக்கவில்லை எனக் கூறப்படுகிறது. வெகுண்டெழுந்த பிரபுக்கள், வியாபாரிகள், செல்வந்தர்கள் மற்றும் பொதுமக்கள், மன்னருக்கு எதிராகக் கலகம் விளைவித்திருக்கின்றனர். கடுமையான வரிவிதிப்பு மற்றும் போப் அவர்களுடனான தகராறுகளும் மக்களைக் கோபம் கொள்ளச் செய்திருக்கிறது. கலகக்காரர்கள் லண்டனைக் கைப்பற்றிய பின்னர், பல்வேறு கட்டங்களில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு மேக்ன கார்டா உடன்படிக்கை அமலுக்கு வந்திருக்கிறது.

இங்கிலாந்தின் வரலாற்றில் முக்கியமான அத்தியாயமாகக் குறிப்பிடப்படும் மேக்ன கார்டா உடன்படிக்கையின் படி, மன்னரால் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்க இயலாது போயிற்று. மன்னர் மகாசபையின் அனுமதி பெற்றே செயல்பட முடியும். மேலும் மன்னரால் சட்டத்தின் வழிமுறைகளைப் பின்பற்றாது சுதந்திர மனிதர்களைத் தண்டிக்கவும் இயலாது. அரசரின் ஆட்சியதிகாரங்களைக் குறைத்து, மக்களின் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள உண்டான மாக்ன கார்டா, கடவுளுக்குச் சமமாகக் கருதப்பட்ட மன்னரை, சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவராக ஆக்கியதோடல்லாமல், பின்னர் நடைமுறைக்கு வந்த நாடாளுமன்ற ஆட்சி முறைக்கும் வழிகோலியது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அரச மரபின் பிளான்டா ஜெனிட் அரண்மனையாருக்கும், பிரான்சு அரச மரபின் வேலியோஸ் அரண்மனையாருக்கும் 1337 ற்கும் 1453 ற்கும் இடையில் நிகழ்ந்த தொடர்ச்சியான போர்கள், நூற்றாண்டுப் போர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இரண்டு பக்கமும் பல கூட்டாளிகள் இணைத்துக் கொள்ளப்பட்டு, ஐந்து தலைமுறைகளாக நிகழ்த்தப்பட்ட கொடுமையான நூற்றாண்டு போர்களால், இரு தரப்பிலும் நாட்டுப்பற்று மிகப் பெரியளவில் முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. நூற்றாண்டுப் போரின் போது பிரான்சின் ஏழாம் சார்லசு மன்னருக்காக (ஆ.காலம் 1422-1461) போரிட்ட ஜோன் ஆப் ஆர்க் (1412-1431) பிரான்சின் தேசிய உணர்வை மிகப்பெருமளவில் தட்டியெழுப்பியவராக அறியப்படுகிறார். புனிதராகவும் பிரான்சின் அடையாளமாகவும் சுட்டப்படும் ஜோன் ஆப் ஆர்க், பிரான்சின் வெற்றிக்கு உந்து சக்தியாக விளங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது.

நூற்றாண்டுப் போருக்குப் பின்னர், இங்கிலாந்து அரச குடும்பத்தின் அரியணைச் சண்டையான ரோஜாக்களின் போர் 1453 முதல் 1487 வரை நடந்திருக்கிறது. யோர்கிட்கள் தோற்று, லன்கஸ்டிரியன்களின் ஹென்றி டூடர் தலைமையிலான அணி வெற்றி பெற்று, டூடர் அரசாட்சிக் காலத்தை (1485-1603) இங்கிலாந்து மற்றும் வேல்சில் நிறுவி, எலிசபெத் மகாராணியார் காலத்தையும் உள்ளடக்கிய அரச மரபாக, முதலாம் எலிசபெத் மகாராணியாரின் மறைவு வரை நிலவி வந்திருக்கிறது. ஹென்றி டூடர் அல்லது ஏழாம் ஹென்றி மன்னர் (1457-1509) இங்கிலாந்தின் மன்னராகவும், வேல்ஸ் மற்றும் அயர்லாந்தின் ஆட்சியாளராகவும் இருந்திருக்கிறார். மன்னர் டூடர் காலத்தில், இத்தாலிய அறிஞர்கள் மூலமாக

இங்கிலாந்தில் மறுமலர்ச்சி உண்டானதாகக் கூறப்படுகிறது. கலைகளிலும், கல்வியிலும், அறிவுத்துறையிலும் மிகச் சிறப்பாக வளர்ச்சியுற்ற இங்கிலாந்து, கப்பல் துறையிலும் புகழ்பெற ஆரம்பித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பத்தாம் நூற்றாண்டுக் காலத்திலிருந்தே, இங்கிலாந்தும் கொட்லாந்தும் தனித்தனி அமைப்புகளாகவே செயல்பட்டு வந்திருக்கின்றன. ஆயிரத்து இருநூற்றி எண்பத்து நான்காமாண்டு முதல் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் இருந்த வேல்ஸ், ஒன்றியச் சட்டங்கள் 1536-1543 வாயிலாக, இங்கிலாந்து அரசுரிமையோடு இணைத்திருக்கிறது. ஆயிரத்து அறுநூற்றி மூன்றாமாண்டு முதல் ஒரே மன்னரைக் கொண்ட தனித்தனி அரசுகளாக இருந்த இங்கிலாந்தும் கொட்லாந்தும், ஒன்றியச் சட்டம் 1707 இன் வாயிலாக ஒரு நிரந்தர ஒன்றியமாக இணைந்திருக்கின்றன. 1169 முதல் 1691 வரை படிப்படியாக இங்கிலாந்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட அயர்லாந்து, அரசாட்சி ஒன்றியச் சட்டம் 1800 வாயிலாக இங்கிலாந்து அரசுரிமையுடன் இணைந்து, பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்து ஐக்கிய அரசுரிமை உருவாகியிருக்கிறது. இங்கிலாந்துடனான கொட்லாந்து ஒருங்கிணைப்பும், அயர்லாந்தும் ஒருங்கிணைப்பும், பெரும்பாலான மக்களின் விருப்பமின்றியே நிகழ்ந்ததாக அறியப்படுகிறது.

டூடர் காலத்தின் இரண்டாவது மன்னரான எட்டாம் ஹென்றி (ஆட்சி காலம் 1509-1547), இங்கிலாந்து வரலாற்றில் குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்தியவராக அறியப்படுகிறார். உரோமன் கத்தோலிக்க மரபைப் பின்பற்றி வந்த ஹென்றி மன்னர், அவரது மணமுறிவை ஏற்க மறுத்த திருச்சபைக்கு எதிராக, ஆங்கிலிக்கன் திருச்சபை எனும் புதிய மரபினை, இங்கிலாந்து முழுமைக்கும் ஏற்படுத்தியிருக்கிறார். சீர்திருத்த திருச்சபையாகக் குறிப்பிடப்படும் ஆங்கிலிகன் திருச்சபையை நிறுவி மணமுறிவை ஏற்படுத்திக் கொண்ட ஹென்றி மன்னர், உரோமன் கத்தோலிக்கத்தை கடுமையாக எதிர்த்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தின் அரசியாக இருந்த முதலாம் எலிசபெத் அரசியார் (1533-1603), கன்னி அரசி குளோரியானா, நல்ல அரசி பெஸ் எனவும் அறியப்படுகிறார். நல்ல அலோசனைகளின் பேரில் நல்லாட்சி செலுத்தியவராகப் புகழப்படும் எலிசபெத் அரசியார் ஆட்சிக் காலத்தில் பெற்ற எசுப்பானிய அர்மடா வெற்றி, வரலாற்றுப் பெருமை கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் அரசியார் காலத்தில் ஆங்கில நாடகங்கள் செழிப்படைந்ததாகவும் கூறப்படுகிறது.

ஆங்கிலக் கவிஞரும், நாடக ஆசிரியருமான உலகப்புகழ்பெற்ற சேக்சுபியர் (1564-1616) இங்கிலாந்தின் தேசியக் கவியாக அறியப்படுகிறார். நகைச்சுவை, வரலாறு, துன்பியல் நாடகங்கள் எனப் பல வகையான நாடகங்களை இயற்றியுள்ள சேக்ஸ்பியர், ஹேம்லட், கிங்லியர், மெகாபெத், ஜூலியஸ் சீசர், ஒத்தல்லோ, ரோமியோ ஜீலியட் போன்ற சிறந்த படைப்புகளுக்காகப் பெரிதும் போற்றப்படுகிறார். சேச்சுபியர் அவரது காலத்திற்குப் பிறகான நாடகம் மற்றும் இலக்கியத் துறையில் நீடித்த தாக்கம் செலுத்தியவராகவும் அறியப்படுகிறார்.

கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் புகழ்பெற்ற பிரித்தானியாவில், புகழ்பெற்ற கவிஞர்கள் பலருண்டு. கவிதை மூலம் இங்கிலாந்து மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வை வளர்த்த ஜான் மில்டன் (1608-1674), கவிதைகளுக்கும், காதல்களுக்கும் பெயர் பெற்ற ஜார்ஜ் கோர்டன் பைரன் (1788-1824), காதல் காலப்பகுதியின் முக்கியக் கவிஞரான ஜோன் கீட்ஸ் (1795-1892), புனைவியல் இயக்கத்தின் முக்கியக் கவிஞரான பெர்சி பைச்சு ஷெல்லி (1792-1822), இங்கிலாந்தின் அரசவைக் கவியாக இருந்த வில்லியம் வேட்ஸ்வொர்த் (1770-1850), விக்டோரியா காலத்திய இராபர்ட் பிரௌனிங் (1812-1899), லார்டு டென்னிசன் (1809-1892) உட்பட பல புகழ்பெற்ற கவிஞர்கள் ஆங்கில மொழியையும் கவிதையையும் அழகுறச் செய்தவர்களெனில் மிகையாகாது.

புகழ்பெற்ற இயற்கையியல் அறிஞரான சார்லஸ் இராபர்ட் டார்வின்(1809-1882) முன்வைத்த படிவளர்ச்சிக் கொள்கை உலகின் சிந்தனைப் போக்கை மாற்றியமைத்ததோடு, இயற்கை பற்றிய மேம்பட்ட புரிதல்களையும் வெளிக்கொணர்ந்ததாக அறியப்படுகிறது. டார்வின் வெளியிட்ட உயிரினங்களின் தோற்றம் எனும் நூல் அறிவியல் உலகில் பெருமதிப்புக் கொண்டதாக விளங்குகிறது.

உலகப் போர்களில் ஒட்டுமொத்தப் போர் எனும் கோட்பாட்டிற்கு இணங்க, ஒவ்வொரு நாடும் அதன் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தி, தொழில், படைத்துறை மற்றும் அறிவியல் வளங்களை முன்னிறுத்தி, பிற நாடுகளை அழிக்க முற்பட்டிருக்கின்றன. கொடூரங்கள் நிறைந்த உலகப் போர்களில் இரு முறையும் வென்ற நாடாக இங்கிலாந்து அறியப்படுகிறது.

முதல் போரின் போது ஒரு படைப்பிரிவின் தளபதியாகவும், இரண்டாம் போரின் போது ஐக்கிய அரசுரிமையின் பிரதமராகவும் பதவி வகித்த சர் வின்ஸ்டன் லியோநார்ட் ஸ்பென்சர் சர்ச்சில் (1874-1965), பிரித்தானிய அரசியல்வாதிகளுள் மிகவும் மதிப்புமிக்கவராக குறிப்பிடப்படுகிறார். ஐக்கிய அரசுரிமையின் பெருமையை உலகிற்கு உயர்த்திய சர்ச்சில் அவர்கள், மிகச் சிறந்த பேச்சாளராகவும், நாடாளுமன்றவாதியாகவும், போர்த்தந்திரமிக்கவராகவும், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவராகவும் அறியப்படுகிறார்.

உலகெங்கும் பரவலாகப் பேசப்பட்டு வரும் மொழியான ஆங்கிலம், ஒரு மேற்கு செருமானிய மொழியாகக் குறிப்பிடப்படுகிறது. உலகின் பல்வேறு அமைப்புகளில் அலுவல் மொழியாக உள்ள ஆங்கிலம், ஆங்கிலோ-சாக்சன் காலத்தில் உருவானதாகக் கருதப்படுகிறது. பண்டைய ஆங்கிலம், மத்தியகால ஆங்கிலம், நவீன ஆங்கிலம் என வளர்ந்து வந்த ஆங்கில மொழியில், இலத்தீன் போன்ற பல ஐரோப்பிய மொழிகளின் தாக்கம் அதிகம் எனக் குறிப்பிடப்படுகிறது. உலகப் பொது மொழியாக அறியப்படும் ஆங்கிலம், அறிவியல், கனிணி, வணிகம், தகவல் தொழில் நுட்பம், அரசியல், இலக்கியம் என அனைத்து துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தி வருகிறது.

மத்திய காலம் தொட்டே செருமானிய இலக்கியம் வளர்ச்சி பெற்று வந்த போதிலும், உயர் செருமானிய மொழிக்கு வித்திட்டவராக இறைமையியலாளர் மார்ட்டின் லூதர் (1483-1546) அறியப்படுகிறார். செருமன் மொழி அல்லது இடாய்ச்சுகு மொழி ஏராளமான கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. கிரிம் சகோதரர்கள் என அறியப்படும் ஜேக்கப் கிரிம் (1785-1863) மற்றும் வில்லெம் கிரிம் (1786-1859) இருவரும் பழைய நாட்டுப்புறக் கதைகளையும், தேவதைக் கதைகளையும் சேகரித்து வெளியிட்ட கிரிம்மின் தேவதைக் கதைகள், இடாய்ச்சு மொழியில் புகழ்பெற்றவையாக அறியப்படுகின்றன.

குழந்தைகளுக்கான மகிழ்ச்சிக் கதைகளாகத் தொகுத்து வெளியிடப்பட்ட தேவதைக் கதைகள், விசித்திரமான கதைகளையும், விநோதமான உயிரிகளையும், மாய மந்திரங்களையும் கொண்டிருந்ததால், குழந்தைகளால் பெரிதும் விரும்பப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. சிண்ட்ரெல்லா, தூங்கும் அழகி, தவளை இளவரசன் போன்ற பல தேவதைக் கதைகள் உலகப் புகழ் பெற்றவை.

உலகிலுள்ள முதன்மை மொழிகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் செருமன் மொழி, செருமனி, ஆத்திரியா போன்ற நாடுகளில் அலுவல் மொழியாகவும், பெல்சியம் சுவிட்சர்லாந்து லக்சம்பர்க் போன்ற நாடுகளில் வரையறுக்கப்பட்ட அலுவல் மொழிகளுள் ஒன்றாகவும், இத்தாலி, அங்கேரி, போலந்து போன்ற பல நாடுகளில் சிறுபான்மை மொழியாகவும் இடம் பெற்றுள்ளது. இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலிருந்து சொற்களைப் பெற்றும் கொடுத்தும் வளர்ச்சியுற்ற செருமன் மொழி, இலத்தீன் அரிச்சுவடியைப் பின்பற்றி எழுதப்படுவது குறிப்பிடத்தக்கது. செருமன் இலக்கணம் சற்று சிக்கலானதாகவும், சொற்கள் பால், இடம், காலம் போன்றவற்றைப் பொறுத்து மாறும் எனவும் கூறப்படுகிறது. யேர்மானிய மொழியில், பதிமூன்று கலைஞர்கள் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றுள்ளனர் என்பதே அம்மொழியன் வளத்திற்கான சான்றாக எடுத்தாளப்படுகிறது.

பழங்காலப் பெருமை கொண்ட நாடாகக் குறிப்பிடப்படும் செருமனியில், பொது ஆண்டில் துவக்க காலத்திலேயே மக்கள் குடியேற்றம் அமைந்திருந்ததாக சான்றுகள் சுட்டப்படுகின்றன. பத்தாம் நூற்றாண்டுக் காலத்தில் செருமனியப் பகுதிகள் புனித ரோமப் பேரரசின் மையப்பகுதியாக இருந்திருக்கின்றன. பதினாறாம் நூற்றாண்டில், வடக்கு செருமனியில் புரட்டசுதந்து சீர்திருத்தக் கிறித்துவமும், தெற்கு மற்றும் மேற்கு செருமனியில் கத்தோலிக்கக் கிறித்துவமும் புகழ் பெற்று விளங்கியிருக்கின்றன.

செருமனியின் தேசிய அடையாளமாகக் கொண்டாடப்படும் ஆயிரத்து இருநூற்றி முப்பது கிலோமீட்டர்கள் நீளமுள்ள ரைன் ஆறு, ஐரோப்பாவின் முக்கியமான ஆறாகப் புகழப்படுகிறது. நீர்வழிப் போக்குவரத்திற்கு அதிகம் பயன்படும் ரைன் ஆற்றின் கரையில், பல புகழ்பெற்ற கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பல நாடுகளுக்கும் எல்லையாக விளங்கியதான ரைன் ஆறு, சுவிட்சர்லாந்து, செர்மனி, பிரான்சு, லக்சம்பெர்கு, நெதர்லாந்து போன்ற நாடுகளின் வழியே பாய்ந்தோடுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மிக நீளமானதும், ஐரோப்பாவின் இரண்டாவது மிக நீளமான ஆறாகவும் புகழப்படும் தான்யூங் ஆறும், செருமனியில் உற்பத்தியாகி ஆத்திரியா சுலோவாகியா, அங்கேரி, குரோசியா, செர்பியா, ரோமானியா, பல்கேரியா, மால்டோவா, மற்றும் உக்ரைன் என பத்து நாடுகளின் வழியாகப் பாய்ந்து சென்று கருங்கடலில் கலக்கிறது. சுமார் இரண்டாயிரத்து எண்நூற்றி

அறுபது கிலோமீட்டர்கள் ஓடும் தான்யூப் ஆறு, குடிநீர் தேவைக்கும், நீர்வழிப் போக்குவரத்திற்கும், மீன் வளத்திற்கும், சுற்றுலாவிற்கும் பெருமளவில் பயன்படுகிறது.

செருமனியில் கண்டெடுக்கப்பட்ட புதைபடிமங்கள் மூலமாக, ஆறுலட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செருமானியப் பகுதியில் மனிதர்கள் வாழ்ந்து வந்தது அறியப்பட்டிருக்கிறது. நியாண்டர்தால் மனிதர் எனக் குறிப்பிடப்படும் மனிதர்களின் தொல்லுயிர் எச்சங்கள், செருமனியின் துசல் ஆற்றுப் பகுதியின் நியாண்டர் சமவெளியில், ∴பெல்தோபர் குகையில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ள நியாண்டர்தால் மனிதர்களின் தொல்லுயிர் எச்சங்கள் மூலமாக, தற்காலத்திய ஹோமோ செப்பியன் மனித இனத்தின் மூதாதை இனமாக, நியாண்டர்தால்கள் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. நெருப்பை பயன்படுத்திய, குகைகளில் வாழ்ந்த, தோலாடை அணிந்த நியாண்டார்தால் மனிதர்கள், நாற்பதாயிரம் ஆண்டுகள் முதல் இருபத்தி நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பான காலப் பகுதியில், ஐரோப்பா முழுவதிலும் அழித்து போனதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அழிவிற்கான காரணமாக சுற்றுச் சுழல் தொடங்கி, இனக் கலப்பு வரை பல்வேறு காரணிகள் விவாதிக்கப்படுகின்றன.

செருமனியின் மத்திய கால வரலாறு, புனித ரோமப் பேரரசோடு தொடர்பு கொண்டுள்ளது. ஒட்டோனியன் அல்லது சாக்சன் அரசுரிமை (919-1024), முதலாம் ஒட்டோ (912-973) எனும் செருமானிய மன்னரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. புனித ரோமப் பேரரசின் மன்னராகவும், இத்தாலிய மன்னராகவும் (961-973) இருந்த முதலாம் ஒட்டோ அரசர், பைசாந்தியப் பேரரசோடு நல்லுறவைப் பேண விரும்பியவராக அறியப்படுகிறார்.

ஒட்டடோனியன் பேரரசை உருவாக்கியவராக முதலாம் ஹென்றி குறிப்பிடப்பட்டாலும், அவர் அரசாக இருக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. முதலாம் ஹென்றி, முதலாம் ஒட்டோ மன்னர், இரண்டாம், மூன்றாம் ஓட்டோ மன்னர்கள், இரண்டாம் ஹென்றி மன்னர் எனத் தொடர்ந்த ஓட்டடோனியன் அரசுரிமை, வாரிசின்மையால் முடிவுக்கு வந்திருக்கிறது.

சாலியன் பேரரசர்கள் (1024-1125), ஹொகென்ஸ்டா.்பின் பேரரசர்கள் (1138- 1254) போன்ற செருமானியப் பேரரசுகளின் காலத்தில், செருமானியக் குடியேற்றங்கள் வளர்ச்சிபெற்றும், செருமானியப் பேரரசின் எல்லைகள் விரிவுபடுத்தப்பட்டும் வந்திருக்கின்றன. வட செருமானிய நகரங்கள் வளமிக்க நகரங்களாகவும் மாற்றம் கண்டிருக்கின்றன.

நான்காம் சார்லசு பேரரசலால் (1316-1378), 1356-ல் வெளியிடப்பட்ட தங்கு எருது அரசானை, செருமானியப் பேரரசிற்கு ஒருவித அரசியலமைப்பைக் கொடுத்ததோடு, செருமனியின் ஒற்றுமைக்கும், பேரரசரைத் தேர்வு செய்யும் முறைக்கும் வழிகாட்டியதாகக் கருதப்படுகிறது. பஞ்சம் கொள்ளை நோய் என்று தவித்துவந்த செருமனியில், 1517 ஆம் ஆண்டில் மார்டின் லூதரால் விற்றன்பேர்க்கில் வெளியிடப்பட்ட தொன்னூற்றைந்து வாசகங்கள் அடங்கிய சீர்திருத்தக் கிறித்துவ அறிக்கை, செருமனி என்றில்லாமல் அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் தொடர் போராட்டங்களுக்கு வித்திட்டிருக்கிறது. கத்தோலிக்கக் கிறித்துவத்தின் அதிகாரத்திற்கு எதிராக லூதரனியம் எனும் சீர்த்திருத்த கிறித்துவ சபையைத் தோற்றுவித்த லூதர், செருமனி வரலாற்றில் குறிப்பிடத்தக்கவராகக் கருதப்படுகிறார்.

சீர்திருத்தத் துறவியும், மதகுருவும், பல்கலைப் பேராசிரியரும், புரட்டஸ்தாந்தின் தந்தையும், திருச்சபை சீர்திருத்தவாதியுமான மார்ட்டின் லூதர், பணம் பெற்று கொண்டு மன்னிப்பு வழங்கிய கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராகத் தொடுத்த புரட்சி, ஐரோப்பா முழுவதிலும் மதம் தொடர்பான பெரும் அழிவுகளுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. சமய முரண்பாடு காரணமாக செருமனியில் நிகழ்ந்த முப்பதாண்டுப் போர் (1618-1648) செருமானியப் பகுதியின் மக்கள்தொகை சுமார் முப்பது சதவிகிதம் குறைந்ததற்கு முக்கிய காரணியாகக் குறிப்பிடப்படுகிறது. 1648 ஆம் ஆண்டின் வெஸ்ட்.்பாலியா அமைதி ஒப்பந்தம் மூலம் ஐரோப்பாவின் சமயப் போர்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன

அமைதி உடன்படிக்கைக்குப் பின் செருமனி பல்வேறு சுதந்திரமான சிற்றரசுகளாகப் பிரிந்திருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் புனித ரோமப் பேரரசில் ஆயிரத்து எண்நூறு பகுதிகள் நிலவிவந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. நெப்போலியப் போர்களுக்குப் பின்னர் 1814 ஆம் ஆண்டில் இறையாண்மையுடைய முப்பத்தொன்பது நாடுகள் இணைந்த செருமானியக் கூட்டமைப்பு

ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவில் நிகழ்ந்த பல்வேறு புரட்சிகள் செருமனியிலும் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

செருமன் பேரரசை (1871-1918) உருவாக்கியதில் முக்கியப் பங்காற்றியவராக ஒட்டோ எடுவார்ட் லியோபோல்ட் .ஃபொன் பிஸ்மார்க் (1815-1898) அறியப்படுகிறார். செருமன் பேரரசின் முதன்மை நாடாக இருந்த புருசியா மற்றும் செருமானியின் அரசியலாளராக இருந்த பிஸ்மார்க், செருமனியை ஒன்றிணைத்து, அதன் தலைவராகவும் இருந்த இரும்புத் தலைவராக வரலாற்றில் இடம்பெற்றுள்ளார்.

புருசியாவின் மன்னராகவும் (1861-1888), செருமன் பேரரசின் முதலாவது பேரரசராகவும் (1871-1888) விளங்கிய முதலாம் வில்லியம் மன்னருக்கும், முற்போக்கான நாடாளுமன்றத்திற்கும் இடையே எழுந்த சிக்கல்களைத் தீர்த்ததோடு, வரலாற்றுச் சிறப்புமிக்க பல வெற்றிகளையும் பெற்ற பிஸ்மார்க் அவர்கள், செருமனியின் புகழ்பெற்ற அரசியல் தலைவராகவும் கொண்டாடப்படுகிறார்.

செருமன் பேரரசர் இரண்டாம் வில்லியம் (ஆ.காலம் 1888-1918) காலத்தில் முதல் உலகப் போரும் அதனைத் தொடர்ந்து செருமன் புரட்சியும் நடந்திருக்கிறது. பேரரசரோடு அனைத்து செருமானிய அரசுகளும் பதவியைத் துறந்திருக்கின்றன. தோல்வியடைந்த செருமனிக்கும், கூட்டணி நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட வெர்சாய் உடன்படிக்கை செருமனிக்கு பலவித கட்டுபாடுகளையும் விதித்திருக்கிறது.

புரட்சிக்குப் பின்னர் செருமனி குடியரசானதும், நாசிக் கட்சியின் தலைவரான இட்லர் (1889-1945) இரண்டாம் உலகப் போருக்குக் காரணமானதும், இனம், மொழி, மதம் என செருமானியர்களைப் பாகுபடுத்தி, அனைத்துத் துறைகளிலும் முன்னணியிலிருந்த செருமனியை, செருமானிய மக்களை, கொடுமையான போர்களில் ஈடுபடுத்தியதும் உலக வரலாறு.

ஏராளமான தத்துவ ஞானியரும் அறிவியலாளர்களும் மேதைகளும் நோபல் பரிசு பெற்றோரும் இடாய்ச்சுலாந்தில் பிறந்திருந்தாலும், அகில உலகமெங்கும் பொதுவுடமை மலரவேண்டும் எனக் கனவு கண்ட கார்ல் என்ரிச் மார்க்சு (1818 -1883) அனைவரிலும் முதன்மையானவராகத் திகழ்கிறார் எனில் மிகையாகாது. சிறந்ததொரு மெய்யியலாளராக மட்டுமல்லாது, அரசியல் பொருளாதார

வரலாற்றியல் வல்லுனராக, தலைசிறந்த ஆய்வறிஞராக, எழுத்தாளராக, சிந்தனையாளராக, புரட்சியாளராக கார்ல் மார்க்சு அறியப்படுகிறார்.

கார்ல் மார்க்ஸ் மற்றும் ஜென்னி அம்மையாரின் காதல் வியந்து போற்றப்படுவது போன்றே கார்ல் மார்க்சு மற்றும் பிரெட்ரிக் எங்கெல்சு இடையேயான உள்ளார்ந்த நட்பும் பெரிதும் புகழப்படுகிறது. பொருளாதார ரீதியாக பல உதவிகள் செய்த எங்கெல்சு, பொதுவுடமை சித்தாந்தத்தை உருவாக்கியதிலும், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளியிடப்பட்டதிலும், பெரும்பங்காற்றியவராகப் புகழப்படுகிறார். மூலதனத்தைத் தொகுத்து அதனை வெளியிடுவதற்கு பெருமுயற்சிகள் மேற்கொண்ட எங்கல்சு அவர்கள், மார்க்சை முன்னிலைப்படுத்தி பொதுவுடமைக் கருத்துக்களை வளமுள்ளதாக ஆக்கிட முயற்சிகள் மேற்கொண்டவராகவும் அறியப்படுகிறார்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என அறை கூவல் விடுத்த மார்க்சு, அவர்களுக்காக பொன்னுலகமொன்று காத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். உலகை உழைப்பின் மூலம் காணுமாறு, புரிந்து கொள்ள முயலுமாறு விளக்கிய மார்ச்சு, உலகினை மாற்றுவதற்கான சிறந்த முயற்சிகளை மேற்கொண்டவராகவும் இருக்கிறார்.

அரசியல், அறிவியல், கலை, மதம் ஆகியவற்றை நாடிச் செல்வதற்கு முன்னால், ஒரு மனிதனுக்கு முதலில் உணவும் நீரும் உடையும் இருப்பிடமும் தேவைப்படுகிறது எனவும், அந்த அடிப்படைத் தேவைகள் கூட மனிதனுக்கு ஏன் மறுக்கப்படுகிறது எனக் கேள்வி எழுப்பி, அதற்கு விடை காண முயன்ற மார்க்சும் மார்க்சியமும் உலகின் அரிய சொத்து எனில் மிகையாகாது.

உரோமப் பேரரசிற்குப் பின் சிறு சிறு பகுதிகளாகச் சிதறுண்டு கிடந்த இத்தாலியை, ஒரே ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தவராக நெப்போலியன் அறியப்பட்டாலும், இத்தாலியர்கள் எனும் உணர்வை ஊட்டி, ஒன்று பட்ட இத்தாலியை, ஐக்கிய இத்தாலியை உருவாக்கியவர்களாக புகழ்பெற்ற இத்தாலியத் தலைவர்களான மாஜினி (1805-1872), கரிபால்டி (1807-1882) மற்றும் காவர் (1810-1861) புகழப்படுகின்றனர்.

அடிமைப்பட்ட இத்தாலி நாட்டின் பகுதிகளை விடுதலை செய்யவும், மக்களாட்சியை நிறுவவும், ஒன்றுபட்ட நாட்டை குடியரசு ஆக்கவும், வாழ்வை

அர்ப்பணித்த ஜோச.்.ப் மாஜினி அவர்கள், இத்தாலியின் உணர்வாக இருந்து அதன் விடுதலைக்கு வழிகாட்டியவராக அறியப்படுகிறார். உலகின் கவனத்தை ஈர்த்த இளம் இத்தாலி இயக்கமும், மாஜினியின் குடியரசு கருத்துக்களும், பல நாடுகளிலும், பல புகழ்பெற்ற தலைவர்களிலும், பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது.

இத்தாலியின் போர்க் கருவியாகவும், நவீன இத்தாலியின் தந்தையாகவும் புகழப்படும் கரிபால்டி அவர்கள். புகழ்பெற்ற தொண்டர்படையை அமைத்ததோடல்லாமல் ஒன்றுபட்ட இத்தாலியையும் மீட்டெடுத்தவராகக் கருதப்படுகிறார். பிரேசிலில் பிறந்த அனிதா கரிபால்டி அல்லது அன்ன மரியா (1821 - 1849) மற்றும் கரிபால்டி ஆகியோரின் காதலும் சிறப்பாகப் பேசப்படுகிறது

இத்தாலியின் பழம்பெருமையை நிலை நாட்டுவதாகக் கூறி, பாசிச ஆட்சிக்கு வழிகோலிய இத்தாலியின் பெனிட்டோ அமில்கார் அன்டிரியா முசோலினி (1883-1945), இத்தாலிய மக்களால் சர்வாதிகார ஆட்சி நடத்தியவராக அறியப்படுகிறார். 1922-1943 இடையே நாட்டின் தலைவராக இருந்த முசோலினி, இத்தாலிப் பேரரசை அமைக்க விரும்பி பல போர்களிலும் ஈடுபட்டவராகவும், இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டு இத்தாலியின் புகழைக் கெடுத்தவராகவும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளார்.

இத்தாலியின் ஆதிக்கத்திலிருந்து லிபியாவை விடுவிக்க மகத்தான போராட்டங்களை முன்னெடுத்தவராக உமர் முக்தார் (1862-1931) அறியப்படுகிறார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பன்னிரெண்டு முதல் இத்தாலியின் காலனியாதிக்கத்திற்கு எதிராக சுமார் இருபது ஆண்டுகள் எதிர்ப்பு இயக்கம் நடத்தி, பாலைவனங்களில் தந்திரமான போர் முறைகளைக் கையாண்டு, இத்தாலிப் படைகளை நிலைகுலைய வைத்த ஓமர், லிபிய மக்களை கிளர்ந்தெழச் செய்தவராகப் புகழப்படுகிறார்.

வடக்கு ஜெர்மானிக் மரபில் வரும் பழைய நோர்சு மொழி பேசிய ஸ்காண்டி நேவியப் பகுதியான சுவீடன் , நார்வே, டென்மார்க், பின்லாந்து, ஐசுலாந்து போன்ற நிலப்பகுதியில் பரவலாகக் காணப்படும் தோர் வழிபாடு குறிப்பிடத்தக்கது. உரோமக் கடவுளான ஜீபிடரைப் போன்றவராகக் கருதப்படும் தோர் கடவுள், வியாழனைக் குறிக்கும் தோர்ஸ்டே எனும் நாளைக் குறிப்பவராகவும் கருதப்படுகிறார்.

வலிமையின் அடையாளமாகக் கையில் சுத்தியலோடு காணப்படும் தோர் கடவுள், செருமானிய நாட்டுபுற மரபில் வெகு மதிப்புடைய கடவுளாக அறியப்பட்டு வந்திருக்கிறார். இந்திய மரபில் வரும் இந்திரனைப் போன்று, கிரேக்க ஜீயசு போன்று, தோரும் இடி, மின்னல், வளமை, வலிமை போன்றவற்றோடு தொடர்புள்ளவர்.

நோர்சு தொன்மையில், தோர் குறித்து ஐசுலாந்து பகுதியில் பல்வேறு கதைகளும் புராணங்களும் நிலவி வந்ததாகக் கூறப்படுகிறது. பதினான்கு பெயர்களால் குறிப்பிடப்படும் தோர் கடவுள், செந்நிற முடியும் தாடியும் உள்ளவராக, சி.்.ப் பெண் கடவுளின் கணவராக, ஜோடுன் ஜார்ன் சாக்ஸாவின் காதலனாகக் கருதப்படுகிறார்.

பொன்நிற தலைமுடிக்குப் பெயர்போன கடவுளான சி.்.ப், பூமியோடு தொடர்புபடுத்தப்படுகிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பழைய நோர்சு எட்டா கவிதைகளில் சி.்.ப் கடவுள் குறிப்பிடப்படுகிறார். நோர்சு தொன்மவியலில், நடுக்காலத்திய ஐசுலாந்தின் கோடக்ஸ் ரிசியஸ் எனும் எழுத்துப்பிரதி முக்கியத்துவம் நிறைந்ததாகக் அறியப்பட்டிருக்கிறது. ஸ்காண்டிநேவிய இலக்கியத்தில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தியதாக கருதப்படும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் கோடக்ஸ் ரிசியஸ், நவீன காலத்திய பல எழுத்தாளர்களது படைப்புகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது.

நோர்சு தொன்மத்தில், தோர் மற்றும் சி.்.ப் கடவுள்களுக்குப் பிறந்தவராக வலிமையின் குறியீடான புருடர் அல்லது துருட் பெண் கடவுள் அறியப்படுகிறார். எட்டா பாடல்களின் படி, போர்களில் வீரத்தோடு முடிந்தோரை, ஓடின் கடவுளால் ஆளப்படும் வலஹல்லா அதாவது தியாகிகளின் உலகிற்கு அழைத்துச் செல்லும் ஒரு வல்கைரியாக புருடர் பெண் கடவுள் குறிப்பிடப்படுகிறார். செருமானிய தொன்மவியலில் ஓடின் கடவுள் பல்வேறு சிறப்புகள் நிறைந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். அறிவு, போர், கவிதை போன்ற பலவற்றோடும் தொடர்புடைய ஓடின், தோரின் தந்தையாகவும், .்ப்ரைடேயை அதாவது வெள்ளி நாளைக் குறிக்கும் பெண்கடவுளான .்ப்ரிக்கின் கணவராகவும் அறியப்படுகிறார். இவர்களுக்கு ஏராளமான குழந்தைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. தோர்

கடவுளின் மகன்களாக அறியப்படும் மூடி மற்றும் மாக்னி கடவுளர்கள் வலிமையின் குறியீடாகச் சுட்டப்படுகின்றனர்.

செருமானிய நாட்டுப்புற மரபில் ஏராளமான கடவுளர்கள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஒன்று முதல் ஐந்தாம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில், வடமேற்கு ஐரோப்பாவில் நிலவிய பெண் கடவுள்களைக் குறிப்பிடும் மேட்ரஸ் அண்டு மேட்ரோனி அதாவது தாயார்கள் மற்றும் தாதிகள் எனும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்தூண் பதிவுகளின் படி, ஏராளமான கடவுளர்கள் புழக்கத்திலிருந்ததாக அறியப்பட்டிருக்கிறது.

ஒளிரும் நாளைக் குறிக்கும் கடவுளான பால்டிர் கடவுளின் இணையாக நன்னா பெண்கடவுளும் அவர்களின் மகனாக நீதிக்குரிய ∴பொர்செட்டியும் குறிப்பிடப்படுகின்றனர். கவிதைக்கான கடவுளாக பிராஜியும், அவரது இணையாக வளமை, இளமை மற்றும் ஆப்பிளோடு தொடர்புடைய இதுன் பெண்கடவுளும் அறியப்படுகின்றனர். பகல், நல்ல கால நிலை, அரச மரபு, ஆண்மை போன்றவற்றின் கடவுளாக ∴ப்ரியரும், காதல், அழகு, வளமை, தங்கம், போன்றவற்றின் பெண் கடவுளாக ∴ப்ரியாவும் அறியப்படுகின்றனர்.

பசுமாடு, தேனி போன்றவற்றோடு தொடர்புடைய ஜெய்லா, அமைதி, கருணை, உதவி போன்றவற்றின் ஐர், கிழக்குத் திசையின் இயோஸ்ட், கருவூலத்தின் ஜெர்செமி, நீண்ட தலைமுடிக்கான ஹரியசா, புகழ்ச்சிக்கான லோ∴ப்ன் போன்ற பெண் கடவுளர்கள் நோர்சு தொன்மவியலில் இடம் பெற்றுள்ளனர்.

இந்தியாவின் மத்திய கால வரலாற்றோடு தொடர்புடைய இரண்டு முக்கியமான பெயர்கள் கஜினி முகமது மற்றும் கோரி முகமது. தற்காலத்திய ஆப்கானித்தான் நாட்டைச் சேர்ந்த இருவரும், வட இந்தியப் பகுதிகளில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, இசுலாமியப் பரவலுக்கும் அடித்தளமிட்டவர்களாக அறியப்படுகின்றனர்.

இந்தியாவின் மீது பதினேழு முறை படையெடுத்தவராகக் குறிப்பிடப்படும் ஆப்கானித்தானின் கசினி எனும் நகரைச் சேர்ந்த கசினியின் மகுமூ (971-1030), கஜினி அரசுரிமையை (977-1186) அமைத்தவராக அறியப்படுகிறார். வலுவான உயர்ரக அரபுக்குதிரைப் படையை வைத்துக் கொண்டு, தொடர் வெற்றிகளைப்

பெற்ற கசினி முகமது, ஆப்கானித்தானை இசுலாமிய நாடாக மாற்றியவராகக் குறிப்பிடப்படுகிறார். இசுலாமிய புனிதப் போர் எனும் பெயரில் பல படையெடுப்புகளை நிகழ்த்தி, கிழக்கு பாரசீகப் பகுதிகள், ஆப்கானித்தான், பாகித்தான், பஞ்சாப் உள்ளடக்கிய இந்தியாவின் வடமேற்குப் பகுதிகள் போன்றவற்றை கசினி அரசுரிமையின் கீழ் கொண்டு வந்த கசினி அரசர், படையெடுப்புகளின் போது கொள்ளையடித்தும், மன்னர்களிடம் கப்பம் பெற்றும் கசினி நகரத்தையும், நாட்டையும் செல்வ வளமிக்கதாக மாற்றியதாகக் குறிப்பிடப்படுகிறார்.

கசினி முகமதுவின் படையெப்புகள் மதசகிப்புத்தன்மை அற்றிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இசுலாமிய சன்னி பிரிவு மக்களைத் தவிர பிற அனைத்துப் பிரிவு மக்களையும் வெறுத்தவராகக் கூறப்படும் கசினி, உருவ வழிபாடு கொண்டிருந்த இந்து, சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக மிகக் கடுமையோடு நடந்து கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. மக்களை மதம் மாறக் கட்டாயப்படுத்தியதாகவும், மதம் மாறாத மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றியும், அதிக வரி விதித்தும் கொடுமைகள் செய்ததன் காரணமாக, ஆப்கானித்தான், பாகித்தான், வட மேற்கு இந்தியா போன்ற பகுதிகளிலிருந்த மக்கள், மகாராட்டிரம், உத்திரப் பிரதேசம், பீகார், வங்காளம் மற்றும் தென்னிந்தியா போன்ற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. கசினி முகமதுவின் படையெடுப்புகளால் அதிகம் பாதிக்கப்பட்டதாக குசராத்தின் சோமநாதபுரம் வரலாற்றில் நினைவு கூறப்படுகிறது.

அப்பாசித் கலீபாவால் சுல்தான் என சிறப்பு விருது வழங்கி பெருமைபடுத்தப்பட்ட கசினி அரசர், பாரசீக மொழியையும் அதன் இலக்கியங்களையும் பெரிதும் ஆதரித்தவராகக் குறிப்பிடப்படுகிறார். இந்திய சமூக மக்கள் மற்றும் அவர்களது நம்பிக்கைகள் குறித்தும், கஜினியின் இந்தியப் படையெடுப்புகள் குறித்தும் வரலாற்று அறிஞர் அல் பிருனி (973-1048) எழுதிய, தாரிக் அல் - ஹிந்த் அதாவது இந்திய வரலாறு எனும் நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கருதப்படுகிறது. மத்திய கால இசுலாம் வரலாற்றையும், இந்திய சமூகங்களையும் விளக்கும் அல் பிருனி, இந்துகளுக்கும், இசுலாமியருக்கும் இடையே நிலவும் பல்வேறு வேறுபாடுகளைக் குறிப்பிடுகிறார். மதம், வரலாறு, புவியியல், அறிவியல், கணிதம், கலாச்சாரச் செழுமை போன்ற அனைத்தையும்

விவரிக்கும் அல்பரூனி, இந்துக்கள் ஏன் இசுலாமியரை வெறுக்கிறார்கள் என்பதையும் குறிப்பிடத் தவறவில்லை.

கசினி முகமதுவின் இந்தியப் படையெடுப்புகள், துருக்கியர்களுக்கும் அரேபியர்களுக்கும் இந்தியாவை எளிதாக வெற்றி கொள்ள முடியும் என்ற எண்ணத்தை விதைத்திருக்கிறது. அதன் காரணமாகவே கசினியைத் தொடர்ந்து கோரி முகமதுவும், பின்னர் துருக்கிய, பாரசீக இசுலாமியர்களும் இந்தியாவின் மீது தொடர் ஆக்ரமிப்புகளைச் செய்ய முடிந்திருக்கிறது.

பாரசீக மொழியை ஆட்சிமொழியாக அறிவித்த கசினி முகமதுவின் ஆட்சிகாலத்தில், பாரசீக மொழியும் பாரசீகப் பண்பாடும் ஆப்கானித்தான் முழுவதும் பரவியதாகக் கூறப்படுகிறது. மேலும் அக்காலத்திலேயே புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர் ∴பிர்தௌசி (940-1020) அவர்களால், அரசர்களின் புத்தகமான ஷாநாமா இயற்றப்பட்டிருக்கிறது.

ஈரானின் தேசிய காவியமாக பெருமைப்படுத்தப்படும் சுமார் அறுபதினாயிரம் பாடல்களைக் கொண்ட ஷாநாமா காப்பியம், பாரசீக இலக்கியத்தில் பெரும்புகழ் கொண்டதாகக் கருதப்படுகிறது. ஈரானின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி, இசுலாமிய ஆக்ரமிப்புக் காலமான ஏழாம் நூற்றாண்டு வரையிலுமான வரலாற்றைச் சொல்லும் மகாகாவியமான ஷாநாமா, ஈரான், ஆப்கானித்தான், அசர்பய்சான், ஆர்மீனியா, துருக்கி, சார்சியா போன்ற நாடுகளில் செல்வாக்குப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படும் ஷாநாமா, பாரசீகக் கலாச்சாரத்தில் பெரும் பங்கு வகிப்பதாகவும், சரதுஷ்த்தான மதத்தின் ஆரம்பம் மற்றும் இசுலாமிய ஆக்ரமிப்பால் ஏற்பட்ட அதன் இறுதிக்கட்டம் வரையிலான வரலாற்றுத் தகவல்களும் இடம்பெற்றுள்ளதாகவும் அறியப்படுகிறது.

புராதனக் காலம், மாவீரர்கள் காலம் மற்றும் வரலாற்றுக் காலம் என மூன்று அடையாளங்களைப் பெற்றுள்ள ஷாநாமா, 977 மற்றும் 1010 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இயற்றப்பட்டாதாகக் குறிப்பிடப்படுகிறது. பழைய அல்லது புராதனக் காலம், கடவுள் மற்றும் ஞானத்தின் புகழ்ச்சி தொடங்கி சசானியர்களின் நம்பிக்கை மரபில் வரும் உலகில் தொடக்கம், மனிதரின் தொடக்கம், முதல் மனிதரான கெயுமார்கள், அவர்கள் அரசர்களான கதை, அவர்களது மகன்கள், பேரன்கள் கதை, நெருப்பைக் கண்டறிந்து, விழாக் கொண்டாடியது, துர், இராச்

மற்றும் மனுசர் வரையிலான பல்வேறு அரசர்களது கதைகள் வரை இடம் பெற்றுள்ளன.

உலகின் முதல் மனிதர் அல்லது அரசர் அல்லது ஷா-வான கெயுமர், இரண்டாம் ஷாவான குசான்க், மூன்றாம் ஷா வான தமுராசு, நான்காவது ஷாவான சாம்சித் போன்றோர் ஈரானின் புராண மரபில் பல்வேறு பெருமைகள் நிறைந்தவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

மனூசர், மனோசிர், மனுசியோரா என அறியப்படும் ஈராசின் பேரன் தொடங்கி, இஸ்கந்தர் எனும் மகா அலச்சாந்தர் படையெடுப்பு வரைக்குமான காலம் மாவீரர்களின் அல்லது நாயர்களின் காலமாகக் குறிப்பிடப்படுகிறது. ஈராசிலிருந்தே நவீன ஈரான் எனும் பெயர் வந்ததாகவும் கூறப்படுவதுண்டு. மூன்றில் இரண்டு பங்கு பாடல்களைக் கொண்டிருக்கும் நாயகர்களின் காலப் பகுதி, கிழக்கு ஈரானின் சாகா எனும் மாவீரர்களைப் பற்றி அதிகம் குறிப்பிடுகின்றன. பூதங்களைக் கொடூரமாக முடிக்கும் நாயகரான கர்சாப், கர்சாப்பின் மகன் நரிமான், நரிமானின் மகன் சாம் போன்றோர் முக்கியமான பலாடின் அல்லது மனுசராகக் குறிப்பிடப்படுகின்றனர். சாம் மகன் ஸால், ஸால் மகன் மாவீரரான ரஸ்தம் குறித்தும் நாயகர்கள் காலத்தில் சிறப்பாகக் கூறப்படுகிறது.

ஸால் மற்றும் ருதபாவின் மகனான ரசுதம், வீரர்க்கெல்லாம் வீரராகப் புகழப்படுகிறார். ஈரனின் புனித வீரராக அதாவது பல்லாடினாகக் குறிப்பிடப்படும் ரசுதம், ஈரானிய நாட்டுப்புற மரபிலும் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க ஒருவராக அடையாளப்படுத்தப்படுகிறார். பார்த்தியன் பேரரசுக் காலத்தில், ராசுதம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

நாயகர்கள் பகுதியில் புகழ்பெற்ற பல காதல் கதைகளும் ∴பிர்தௌசியால் இயற்றப்பட்டுள்ளன. ஸால் மற்றும் ருதாபா காதல், பைஸன் மற்றும் மனிஜெக் காதல் சிறப்பானவைகளாகக் கூறப்படுகின்றன. அரண்மனை மேல் தளத்தில் நின்றுகொண்டிருக்கும் ருதாபாவின் அழகில் சொக்கிப்போய், அவரது ஐடைப் பின்னலைக் கயிறாகப் பிடித்துக் கொண்டு மேலே ஏறிச் செல்லும் ஸாலின் காதல் அருமையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ராசுதம் மற்றும் அவரது மகனான சோரபு இடையேயான பிரிவும், இறுதி சண்டைக் காட்சிகளும், மகன் எனத் தெரியாமல் சோரபை முடித்துவிட்டு, கழுத்துச் சங்கிலியைக் கொண்டு மகன் என

அறிந்துகொள்வதும், சிங்கத்தின் இருதயம் கொண்டிருந்த ராசுதமின் இதயத்தை ஒரே பார்வையில் ஆச்சரியத்தால் நிரப்பிய சோரபின் அம்மாவும், ராசுதமின் மனைவியுமான தமினா அல்லது தக்மீனா, சோரபின் முடிவைக் கண்டு கலங்குவதும், ஷநாமாவில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஈரானின் கயானியன் அரச மரபில் வந்த எஸ்பான்டியர் அல்லது செபான்டியர் அல்லது சிபான்டியாருக்கும் ராசுதமுக்கும் இடையேயான சண்டை ஷாநாமா காப்பியத்தின் நீளமான பகுதிகளில் ஒன்றாகவும், இலக்கியத்தரம் மிகுந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. இரண்டு பூத ஓநாய்கள், மனிதர்களைத் தின்னும் இரண்டு சிங்கங்கள், ஒரு டிராகன், கொடூர மந்திரவாதிப் பெண், பெருத்த சிமுராக் பறவை மற்றும் அதன் இரு குஞ்சுகள் போன்றவற்றை முடித்தவரும், மூன்று நாட்கள் நீடித்த புயலுக்குத் தாக்குப்பிடித்தவரும், பாலைவனத்தைக் கடந்தவருமான செபான்டியரின் வீரம் நிறைந்த சண்டையும், சொராட்டிரத்தைப் பரப்ப அவர் மேற்கொண்ட முயற்சிகளும் ஷாநாமா காவியத்தில் அழகுற படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஷா-நாமாவின் வரலாற்றுக் காலம், அலெக்சாந்தரின் படையெடுப்பு, பார்த்தினிய அல்லது அர்சசிட் அரசுரிமையைப் பற்றிய சுருக்கமான வரலாறு தொடங்கி, சசானியப் பேரரசை (பொ.ஆ 224-651) தொடங்கியவரான முதலாம் அர்தாஷிர் (180-242) காலம் வரைக்குமான வரலாற்றைக் கூறுகிறது. சசானிய வரலாறு தொடங்கி சரியான சான்றுகளோடு விவரிக்கப்படும் ஈரான் அரசர்களின் வரலாறு, சசானியப் பேரரசின் முடிவை, ஈரானை அரபு இசுலாமியர்கள் வெற்றி கொண்டதை எடுத்துரைக்கிறது. அழகுற விளக்கும் சொற்களின் தலைவரான பிர்தௌசியின் ஷாநாமா ஈரானின் மதிப்பு மிக்க பொக்கிசம் எனில் மிகையாகாது.

அப்பாசித்து கலீபாவிற்கு உட்பட்டிருந்த சன்னி ஈரானிய சமானிடு அரசுரிமை அல்லது சமானிட் எமிரேட் (819-999) அரசாலும், கசினி முகமது அரசாலும் உதவி செய்யப்பட்டே பெர்தௌசி புலவரால் ஷாநாமா இயற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

கஜினி முகம்மதுவுக்கு இந்தியாவில் நிலையான ஆட்சியதிகாரத்தை நிறுவுவது நோக்கமாக இல்லையெனக் கூறப்பட்டாலும், ஆப்கானித்தானின் கோர் பகுதியைச் சேர்ந்த முசாத்தீன் முகமது, ஷிஹாபுதீன், என அறியப்படும்

கோரிமுகமதுவுக்கு (1149-1206), வட இந்தியாவில் இசுலாமிய ஆட்சியை நிறுவும் நோக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆப்கானித்தான், பாகித்தான், தஜிகித்தான், இந்தியா போன்ற பகுதிகளில் இசுலாமிய ஆட்சிக்கு அடிகோலிய கோரிமுகமது, கோரி சுல்தானிய ஆட்சி மரபில் (879-1215) வந்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

பௌத்த மரபைப் பின்பற்றி வந்த கோரி சுல்தானத்தை, ஆயிரத்துப் பதினோறாம் ஆண்டில் கசினி முகமது வென்று சன்னி இசுலாமிய அரசுரிமையாக மாற்றியவராக அறியப்படுகிறார். பின்னர் ஆயிரத்து நூற்றி எண்பத்தாறாமாண்டில் கோர் சுல்தானத்தின் கோரிமுகமது, கசினி அரசுரிமையைத் தோற்கடித்து, கோர் அரசுரிமையை நிலைநாட்டியதாக வரலாறு தெரிவிக்கிறது.

கோரியின் இந்தியப் படையெடுப்பின் போது அவரை தீரத்துடன் எதிர்த்த இராசபுத்திர சௌகான் மரபைச் சேர்ந்த பிருதிவிராச் சௌகான் (1149-1192) இந்திய மண்ணின் வீரத்திற்கு சிறந்த அடையாளமாகக் சுட்டப்படுகிறார். ஆஜ்மீர் மற்றும் தில்லியின் அரசராக இருந்து சௌகான், இசுலாமிய ஆக்ரமிப்பிற்கு எதிராக இராசபுத்திரர்களை ஒன்றுபடுத்தியவராக அறியப்படுகிறார்.

கன்னோசி நாட்டின் மன்னர் செயச்சந்திரரின் (ஆ.காலம் 1173-1193) மகளான சம்யுக்தா மற்றும் சௌகான் காதல் புகழ்பெற்றதாகக் கருதப்படுகிறது. சம்யுக்தாவின் சுயம்வரத்திற்கு அழைக்கப்படாத சௌகான், கன்னோசியிலிருந்து கம்யுக்தாவை அழைத்து வந்த காதல் கதை வட இந்திய பகுதிகளில் பல நூறு ஆண்டுகள் கழித்தும் நினைவு கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

1191 ஆம் ஆண்டில் நடைபெற்ற கோரியுடனான முதல் தரைன் போரில் வெற்றி கொண்ட பிருத்திவிராச் மன்னர், அடுத்த ஆண்டு நடைபெற்ற இரண்டாம் தரைன் போரில் தோல்வியடைந்துவிட்டார். மகளைப் பறித்துக் கொண்ட கோபத்தில் பிருதிவி அரசருக்கு உதவாமல் இருந்த செயச்சந்திர அரசரும், பின்னர் கோரி அரசரின் படையெடுப்பால் அழிந்தது குறிப்பிடத்தக்கது.

உடன் பிறந்தவரான கியாசுதீன் முகமதுக்குப் பின் தனி உரிமையுடைய அரசரான கோரி முகமதுக்கு வாரிசு இல்லாததால், துருக்கிய மரபைச் சேர்ந்த குப்புதீன் ஐபெக்கிடம் தில்லியின் ஆட்சியுரிமை (1206-1210) அளிக்கப்பட்டிருக்கிறது. இல்பாரி துருக்கி மரபு அல்லது மாம் மூத் மரபு அல்லது அடிமை மரபாகக் கருதப்படும் குப்புதீன் அரச மரபில் (1206-1290), இல்டுமிசு (1211-

1236), சுல்தானா இரசியா (1236-1240) போன்றோர் தில்லி சுல்தானத்தின் ஆட்சியாளர்களாக இருந்திருக்கின்றனர்.

கோரிமுகமதுவின் தில்லி ஆட்சியுரிமை தொடங்கி (1194), சுதந்திரப் போரட்டத்தின் சிப்பாய் கலகம் என அறியப்படும் முதல் இந்திய சுதந்திரப் போர் வரை (1857) தில்லி, முகம்மதியர்களின் ஆட்சிக்கு உட்பட்டே இருந்திருக்கிறது.

துருக்கிய அடிமை அரசுரிமைக்குப் பின் கில்சி அரசுரிமையும் (1290-1320), அதன் பின்னர் துக்ளக் அரச மரபும் (1320-1414), அதற்குப் பின் சையது அரசாட்சியும் (1414-1451), தொடர்ந்து ஆப்கன் லோடி அரசும் (1451-1526), கடைசியாக மொகலாயப் பேரரசும் (1526-1707) பாரத மண்ணில் ஆட்சி செலுத்தியிருக்கின்றன.

7

திராவிடம்

பொது ஆண்டின் ஏழாம் நூற்றாண்டிற்கும் பன்னிரெண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வடமேற்கு இந்தியப் பகுதியில் புகழ்பெற்று விளங்கியவர்களாக ராஜ்புத் எனும் ராஜபுத்திரர்கள் அறியப்படுகினறனர். சிறு அரசர்களாகவும், குறு நில மன்னர்களாகவும் விளங்கிய ரஜபுத்திரர்கள், வீரத்திற்கும், பண்பாட்டிற்கும், கோட்டைகளுக்கும், கோவில்களுக்கும் பெரிதும் புகழப்படுகிறார்கள். சூர்ய, சந்திர, அக்னி குலத்தவர்களாகக் குறிப்பிடப்படும் இரஜபுத்திர அரசுகள் மொகலாயர் ஆட்சிக் காலத்தில் வீழ்ச்சியுற்றதாகக் கருதப்படுகிறது.

ஜெய்சால்மர், கலிஞ்சர், ஜோத்பூர், ஜெய்ப்பூர், உதய்பூர், சித்தோர்கார் போன்ற புகழ்பெற்ற கோட்டைகள், இராஜபுத் மன்னர்களின் பெருமைக்கு சான்றுகளாகப் புகழப்படுகின்றன. மேவார் நாட்டின் தலைநகரான சித்தோர்கார் நகரக் கோட்டை அலாவுதீன், கில்ஜி, பகதூர் ஷா மற்றும் அக்பருக்கு எதிரான போர்களைச் சந்திந்ததாகக் குறிப்புகள் சுட்டுகின்றன.

180 மீட்டர் உயரத்தில் 280 ஹெக்டர் பரப்பளவில் மலைப்பாங்கான பகுதியில் கட்டப்பட்டிருக்கும் சித்தூர் கோட்டை, உலகப் பாரம்பரியச் சின்னமாக அடையாளம் பெற்றிருக்கிறது. சித்தூர் மன்னர் ராணா சாத்தன் சிங்கின் மனைவியான ராணி பத்மாவதி ரஜபுத்திரர்களால் பெருமைக்குரியவராக மதிக்கப்படுகிறார்.

முப்பத்தியொரு மெய்கள், பத்து உயிர்கள், இரண்டு கூட்டுயிர்கள் கொண்ட மேவாரி மொழி இராஜஸ்தானி மொழியின் முக்கியமான கிளை மொழிகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது. ராஜ் சமந்த், பில்வாரா, உதய்ப்பூர், சித்தோர்கார் போன்ற மாவட்டங்களில் மேவார் மொழி பேசப்படுகிறது. ராஜஸ்தானத்தின் மார்வாரி அல்லது மார்வாடி மொழி அதிகமாக மக்களால் பேசப்படுவதோடு பல உட்பிரிவுகளையும் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

வடஇந்தியாவில் சுல்தான்கள் வலிமைபெற்று இருந்த போதிலும், தென்னிந்தியாவில் சுதந்திரமான அரசுகள் நிலைபெற்று இருந்திருக்கின்றன. முகமது பின் துக்ளக் ஆட்சிக் காலத்தில் தக்காணப் பகுதியின் ஆளுநராக இருந்த அலாவுதீன் ஹாசன் பாமினி ஷா (1347-1358) என்பவரால் கருநாடக மராத்தா எல்லைப் பகுதியான அசன்பாத்தை தலைநகராகக் கொண்டு நிறுவப்பட்ட பாமினி

அரசு (1347-1527), தென்னிந்தியப் பகுதியிலிருந்த குறிப்பிடத்தக்க இசுலாமிய அரசாகக் கருதப்படுகிறது. விசய நகரப் பேரரசோடு போர்களில் ஈடுபட்டுவந்த பாமினி அரசாட்சி, பின்னர் பிரார், அகமத் நகர், பீஜப்பூர், கோல்கொண்டா மற்றும் பிடார் எனும் ஐந்து தக்காணச் சுல்தானங்களாகப் பிளவுபட்டு, அவர்களுக்குள்ளும் ஓயாத போர்களை மேற்கொண்டு வந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. ஔரங்கசீப் காலத்திலேயே பீஜப்பூரும் அகமது நகரும் முகலாயப் பேரரசோடு இணைக்கப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

தக்காணப் பகுதியில் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் எழுச்சியுற்ற ஹோய்சால அல்லது போசளப் பேரரசு தென்னிந்தியப் பகுதிகளில் இசுலாமியப் பரவலை வலிமையாக தற்காத்ததாகக் கூறப்படுகிறது. தற்காலத்திய கருநாடகா, தமிழகத்தின் வடக்கு காவிரிப் பகுதி மற்றும் ஆந்திரத்தின் தென் பகுதியில் பரவியிருந்த போசளப் பேரரசு (1026-1343) தென்னிந்தியாவின் முக்கியமான அரசுகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது. பேளூரையும் பின்னர் ஹளபேடையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த போசளர்கள், தென்னிந்திய கலை, கட்டிடக் கலை, சமயம் போன்றவற்றின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்தவர்களாகப் புகழப்படுகின்றனர். குறிப்பாக கருநாடகாவில் மட்டும் நூற்றுக்கணக்கான கோவில்களை போசள மன்னர்கள் கட்டியெழுப்பியிருக்கின்றனர். அவைகளுள் பெருமை வாய்ந்தவையாக பேளூர் சென்னகேசவ கோவில், ஹளபேடு ஹோய்சாலசுவரா கோவில், சோமநாதபுரம் கேசவர் கோவில் போன்றவை அவற்றின் உயர்தரமான கட்டிடக்கலைக்காகப் பெரிதும் அறியப்படுகின்றன.

பஞ்ச நாராயண கோவில்கள் அமைத்த போசள மன்னர் விட்டுணுவர்தனரால் (ஆ.காலம் 1108- 1152), 1117 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படும் வேலபுரி என அழைக்கப்பட்ட பேளூரின் யாகாச்சி ஆற்றங்காரையில் அமைந்துள்ள சென்ன அழகிய கேசவப் பெருமாள் கோவில், சாளுக்கிய கடட்டிடக் கலை முறையில் அமைந்திருந்தாலும் போசாளர்களின் பழமையான கோவிலாகக் கருதப்படுகிறது.

தென்னிந்தியாவிலுள்ள பெரிய சிவன் கோவில்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் துவாரசமுத்திரம் என அறியப்பட்ட ஹளபேடின் ஹோய்சாலேசுவரர் கோவில் 1121 ஆம் ஆண்டில் ஒய்சாள விட்டுணுவர்தன மன்னராலும் நகரின் செல்வந்தர்களாலும் கட்டிமுடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்திய கட்டிடக் கலையின் சிறந்ததொரு சான்றாகக் குறிப்பிடப்படும் ஹோய் சாலேசுவரர் மற்றும் சாந்தலேசுவரர் இரட்டைக் கோவில்கள், நுணுக்கமான அரிய பல சிற்ப வேலைப்பாடுகளுக்குப் புகழ்பெற்றவையாக விளங்குகின்றன. சிற்ப வேலைப்பாடுகளுக்காகவே கோவில்கள் மாக்கல் எனப்படம் ஒருவிதமான உருமாறிய பாறைக் கற்களைக் கொண்டு ஹளபேடு கோவில்கள் கட்டப்பட்டதாகவும் குறிப்புகள் சுட்டுகின்றன. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்ந்த தில்லி சுல்தானியப் படையெடுப்பால் ஹளபேடு கோவில் அழிவுக்கு உள்ளானதாகக் குறிப்பிடப்படுகிறது. தில்லி சுல்தானிய ஆட்சிகாலம் (1206-1526) கோவில் இடிப்பிற்கும் பெயர்பெற்று விளங்கியதாக வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறது. போசளர்களின் கட்டிடக் கலையில் திராவிட கட்டிடக் கலையின் தாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளதாக அறியப்படுகிறது.

தில்லி சுல்தானத்தால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட குறிப்பிடத்தக்க அரசுரிமையாக, ஆந்திராவின் வீரத்திற்குப் பெயர் பெற்ற காகதீய அரசுரிமை (1163-1323) அறியப்படுகிறது. ஒரு கல்லு அல்லது வாரங்கல்லை தலைநகராகக் கொண்டு ஆந்திராவின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கி ஆட்சி செலுத்திய காகதீயர்கள், ஆரம்பத்தில் அரசரைக் குறிக்கும் ரேடு, ரெட்டி எனும் பெயரிலும் பின்னர் தேவா, தேவி எனும் பெயரிலும் ஆட்சி செலுத்தியிருக்கின்றனர். முதலில் சமண சமயத்தவராக இருந்து பின்னர் இந்து சமயத்தவராக மாறியதாகக் குறிப்பிடப்படும் காகதீய அரசுரிமை, மேலை சாளுக்கியர்களுக்கு சிற்றரசாக இருந்து பின்னர் முதலாம் பிரதாப ருத்திரரால் (ஆ.காலம் 1158-1195) ஆயிரத்து நூற்றி அறுபத்தி மூன்றாம்மாண்டில் காகதீய அரசாட்சியாக நிலைபெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. காகதீய அரசர்களில் ருத்ரம்மா தேவி (1261-1289 அல்லது 1262-1295) மற்றும் இரண்டாம் பிரதாப ருத்திரர் புகழ்பெற்றவர்களாக அறியப்படுகின்றனர்.

காகதீயர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட ஆயிரக்கணக்கான நீர்த்தேக்கங்கள் வாயிலாக விவசாயம் செழிப்படைந்ததாகக் கூறப்படுகிறது. இராமப்பா கோவில் அல்லது இராமலிங்கேசுவரர் கோவில் போன்ற புகழ்பெற்ற கோவிலை கட்டியதாக அறியப்படும் காகதீய அரசுரிமை, மாலிக்கபூரின் முற்றுகைக்கு தாக்குப்பிடிக்க இயலாமல் 1309-ல் தில்லி சுல்தானகத்திற்கு திறை செலுத்தும் சிற்றரசாக ஒப்புக் கொண்டிருக்கிறது. சுல்தான் வாரங்கலிலிருந்து

இருபத்தியோரு கிராம் எடை கொண்டிருந்த புகழ்பெற்ற கோகினூர் வைரம் உட்பட இருபதாயிரம் குதிரைகளையும், நூறு யானைகளையும் பெற்று கொண்டு தில்லி சென்றிருக்கிறார். பின்னர் மூன்று முறை திறை செலுத்த மறுத்த இரண்டாம் ருத்ரரை முற்றுகையிட்ட தில்லி படைகள், இறுதியாக 1323-ம் ஆண்டில் காகதீயப் படைகளை வெற்றி கொண்டு, முழுமையான அழிவிற்கு வித்திட்டிருக்கின்றன. காகதீய அரசின் முடிவிற்குப் பின் அதன் வழித்தோன்றலாக ரெட்டி, வேலமா, விசயநகர நாயக்க அரசுகள் தோற்றம் பெற்றிருக்கின்றன.

தில்லி சுல்தானகத்தின் இசுலாமிய ஆக்கிரமிப்பிற்கு அரணாக இருந்து, தென்னிந்தியாவைப் பாதுகாத்த பெருமைக்குரியதாக விசயநகரப் பேரரசு புகழப்படுகிறது. தக்காணப் பகுதியில் அமைந்த விசயநகரப் பேரரசு (1336-1646), பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிக்குள் தென்னிந்தியா முழுமைக்கும் ஆட்சியதிகாரத்திற்கு வந்திருக்கிறது.

ஹரிஹரர் அல்லது முதலாம் ஹரிஹரர் அல்லது முதலாம் ஹரிஹர ராயர் (ஆ.காலம் 1336-1356) தொடங்கி, மூன்றாம் ஸ்ரீரங்க மன்னர் (ஆ.காலம் 1642-1646) வரை நீளும் விசயநகர மன்னர் ஆட்சியுரிமையில், சங்க மரபு, சாளுவமரபு, துளுவ மரபு மற்றும் அரவீடு மரபு எனும் நான்கு மரபினைச் சேர்ந்த மன்னர்களது பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

சங்கம மரபில் சங்கம் சகோதரர்கள் எனக் குறிப்பிடப்படும் அரிகரர், புக்கர் இருவராலும் சிருங்கேரி சாரதா பீடத்தின் பன்னிரெண்டாவது (1380-1386) தலைவராக இருந்த குருவித்யாதரண்யரின் வழிகாட்டுதலோடு, இசுலாமிய ஆக்ரமிப்பைத் தடுக்கவும், இந்து மதம் தழைக்கவும், துங்கபத்திரை ஆற்றின் தென்கரையில் தோற்றுவிக்கப்பட்ட அபிநவ விஜயநகரம் எனும் விஜய நகரப் பேரரசு, போசளப் பேரரசின் பெரும் பகுதியை வெற்றிகொண்டு விரைவிலேயே மதுரை வரை ஆட்சியதிகாரத்தை நிலைப்படுத்தியது வியப்பளிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. அரிகரருக்குப் பின் ஆட்சிக்கு வந்த முதலாம் புக்கரே விஜய நகரத்தை பெரும் பேரரசாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டவராக அறியப்படுகிறார்.

விசய நகரத்தோடு தொடர்பு படுத்தப்படும் வித்யாரண்யர் அல்லது மாதவ வித்யாரண்யர், ஆதிசங்கரரால் எட்டாம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட சிருங்கேரி

மடத்தின் பீடாதிபதியாக இருந்து, இசுலாமியப் பரவலைத் தடுத்து நிறுத்த முயற்சித்தவராக வரலாற்றில் அறியப்படுகிறார். முதலாவது பீடாதிபதியான ஸ்ரீசங்கர பகவத்பாதருக்குப் பின், இரண்டாவது பீடாதிபதியான ஸ்ரீசுரேஷ்வராச்சார்யர் தொடங்கி (820-834), முப்பத்தாறாவது பீடாதிபதியான ஸ்ரீபாரத தீர்த்த சுவாமிகள் (1989-லிருந்து) வரை நீண்ட பாரம்பரியம் கொண்ட சாரதாபீடம், அத்வைதக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதை முக்கியக் கடமையாகக் கொண்டிருக்கிறது.

பீகாரின் மதிலையில் எழுநூற்றி ஐம்பதாம் ஆண்டுக்காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் மந்தன மிசுரர், சங்கரருடன் நடந்த வாதப்போரில் தோல்வியடைந்து அவரது மீமாம்சை தத்துவத்தை விட்டொழித்து, இல்லறத்தைத் துறந்து, சுரேசுவரர் எனும் அத்வைதத் துறவியாகி, சங்கரரின் முக்கியச் சீடராகி, சாரதா மடத்தை நிறுவியவராகக் குறிப்பிடப்படுகிறார். சுரேசுவரர் அத்வைத வேதாந்தத்தை எளிமையாகவும் விளக்கமாகவும் புரிந்து கொள்ளுமாறு சங்கரரின் பல உரைகளுக்கு விளக்க நூல்கள் எழுதியவராகவும் அறியப்படுகிறார்.

காலடியில் பிறந்த ஆதிசங்கரர், சமய மெய்ஞான வாதப் போர்களில் அனைவரையும் வெற்றி கொண்டவராகவும், ஈடு இணையில்லாதவராகவும் புகழப்படுகிறார். கடவுள் ஒருவரே எனும் கோட்பாட்டை, அனைத்தும் ஒன்றே, பிரம்மம் ஒன்றே எனும் தத்துவத்தை, அத்வைதமாக நிறுவிய ஸ்ரீசங்கரர், கண்ணில் தெரியும் உலகம் ஒரு மாயத் தோற்றமே எனும் கருத்தைப் பரப்பிய கௌடபாதரின் மாணாக்கரான கோவிந்த பகவத்பாதரைக் குருவாகக் கொண்டவராக அறியப்படுகிறார். நர்மதை ஆற்றங்கரையில் கோவிந்த பாதரைச் சந்திந்த சங்கரர், அவரது ஆணைப்படி உபநிடந்தம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதைக்கு உரை எழுதி அத்வைத வேதாந்தத்தை இந்தியா முழுவதும் பரப்ப முயற்சிகள் செய்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

இரண்டற்றது எனும் அத்வைத ஞானம் இந்திய மெய்யியலில் உண்டாக்கிய தாக்கம் அளவிடற்கரியது. இந்திய மண்ணில் ஏராளமான ஞானியர் உண்டானதற்கும். சமூக சமய மறுமலர்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டதற்கும், அத்வைத் தத்துவம் பல்வேறு வழிகளிலும் துணைபுரிந்துள்ளது. சங்கர மகானின் பேரறிவும், இந்திய மண்ணின் மீது அவருக்கிருந்த பெருமதிப்பும் முயற்சியும்,

இந்திய அறிவிலும், தத்துவ விசாரணைகளிலும், ஞானத் தேடலிலும், வழிபாடுகளிலும் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியது எனில் மிகையாகாது.

இந்து மதத்தின் மாபெரும் சிற்பியாகக் கொண்டாடப்படும் சங்கரர் இந்தியாவின் நான்கு திசைகளிலும் நான்கு வேதங்களுக்கும் நிறுவிய சிருங்கேரி, துவாரகை, ஜோதிர் (பத்ரி) மற்றும் புரி மடங்கள், சங்கரபாதரை வழிகாட்டியாகக் கொண்டு, சங்கர ஜகத்குருவின் புகழ்பெற்ற சீடர்களான பத்மபாதர், சுரேசுவரர், அசுதாமலகர் மற்றும் தோடகர் போன்றோரால் சிறப்பாக பேணப்பட்டிருக்கிறது.

சங்கர ஆச்சாரியரின் வாழ்க்கையை விவரிக்கும் பல நூல்கள் காணப்பட்டபோதிலும், அனைத்துமே காலத்தால் மிகவும் பிந்தியவையாவே கருதப்படுகின்றன. எட்டாம் நூற்றாண்டைச் சோர்ந்தவராகக் குறிப்பிடப்படும் சங்கரரின் எழுதப்பட்ட வரலாறு பதினான்காம் நூற்றாண்டுக் காலத்திலேயே கிடைப்பதாகக் கூறப்படுகிறது. இடைப்பட்ட காலத்தில் சங்கரரைப் பற்றிய தகவலகள் புராணங்களாக உருமாறிவிட்டதாகவும் வரலாற்றாய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது.

சங்கர விஜயம், சங்கர திக் விஜயம், குருவிஜயம் எனப் பல பெயர்களால் வெளியிடப்பட்டுள்ள சங்கரரின் வாழ்க்கை வரலாற்று நூல்களில், வித்யாரண்யர் எழுதியதாகக் குறிப்பிடப்படும் மாதவிய சங்கர விஜயம் அல்லது சம்க்சேப சங்கர விஜயம் எனும் நூலே சிறப்பானதாக அறியப்படுகிறது. சங்கரரின் வாழ்கையை, அவரது காலடி பிறப்புத் தொடங்கி, காசுமீரில் சர்வஞ்சர் பீடத்தில் அமர்ந்தது, இறுதிக் காலங்களை இமாசலத்தில் கழித்தது வரையிலுமான வரலாறு அளிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் மூலங்களிலிருந்து அறியப்படும் ஆனந்தகிரிய சங்கர விஜயம், சித்விலாசிய சங்கர விஜயம், கேரலிய சங்கர விஜயம், ஆனந்தனந்தகிரிய விஜயம் போன்ற பல நூல்களில் சங்கர வரலாறு குறிப்பிடப்பட்டாலும், அவற்றில் மிகையான தகவல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வித்யாரண்யரின் மிகச் சிறந்த படைப்பாக, அவர் காலத்திலிருந்த சார்வகம், பௌத்தம், சமணம், பூர்ண பிரஞ்ஞானம், நகுலிச பாசுபதம், சைவம், காசுமீர சைவம், ரசேசுவரம், வைசேசிகம், நியாயம், ஜைமினியம், பாணினியம், சாங்கியம், யோகம், வேதாந்தம் எனும் பதினைந்து தத்துவதரிசனங்களை விரிவாக ஆராய்ந்து,

அவை எல்லாவற்றையும் விட பதினாறாவது தத்துவமான சங்கரரின் அத்வைதமே சிறந்தது என நிறுவும் சர்வதர்சன சங்கிரம் எனும் நூல் குறிப்பிடப்படுகிறது.

பஞ்சதசீ எனும் வேதாந்த சாத்திர நூலில், ஐந்து பூதங்களின் சேர்க்கையான பஞ்சீகரணம் எனும் ஐம்பூதப் பொருளால், பருப்பொருட்கள் உருவாகும் விதத்தையும் வித்யாரண்யர் விளக்குவதாகக் குறிப்பிடப்படுகிறது.

விசய நகரம், விருபாட்சபுரம், அம்பி, ஹம்பி, ஹம்பே எனப் பலபெயர்களால் குறிப்பிடப்படும் விசயநகரமும் அதன் நினைவுச் சின்னங்களும் விசயநகரப் பேரரசின் வரலாற்றையும் புகழையும் தற்போதும் அறியும் முக்கியமான சான்றுகளாக இருக்கின்றன. ஹம்பி நினைவுச் சின்னங்களின் தொகுதி எனும் பெயரில் பாதுகாக்கப்பட்டு வரும் விஜயநகரப் பேரரசின் வரலாற்று இடங்கள், கட்டிடங்கள், பம்பபதி விருபாட்சர் கோவில், அசரா இராமர் கோவில், விட்டலர் கோவில் போன்றவை விசயநகரப் பேரரசின் பெருமைகளை எடுத்துக் கூறும் விதமாக காணக்கிடைப்பதாகக் கூறப்படுகிறது.

விஜயநகரின் இடிபாடுகள், தொல்லியல் ஆய்வுகள், இலக்கிய மூலங்கள் மட்டுமின்றி, போர்த்துகீசியப் பயணிகளான மோமிங்கோ பயசு, பெர்னாவோ நுனிசு, இத்தாலிப் பயணி நிக்கோலோ டா கான்டி போன்றோரின் பயண நூல் விவரணைகள் மூலமாகவும், விசயநகரப் பேரரசின் பல்வேறு தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

சாளுவ மரபைச் சேர்ந்த நரசிம்ம தேவராயரிடம் (1485-1491) தளபதியாக இருந்த துளுவ நரச நாயக்கர் (1491-1503) மூலமாகத் தோற்றுவிக்கப்பட்ட துளுவ மரபில் வந்த கிருஷ்ண தேவராயர், விஜய நகரப் பேரரசில் மிகவும் புகழ்பெற்ற அரசராகவும், இந்தியப் பேரரசர்களுள் மிகவும் புகழ்பெற்ற அரசர்களுள் ஒருவராகவும் போற்றப்படுகிறார்.

கிருஷ்ண தேவராயரின் தலைமையின் கீழ், விசயநகரப் படைகள் சென்ற இடமெல்லாம் வெற்றிகளைக் குவித்ததாகக் கூறப்படுகிறது. கிருஷ்ண தேவராயரின் ஆட்சிகாலத்தில் பேரரசு அதன் உச்ச நிலையில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. போர் வெற்றிகள் மட்டுமின்றி கலைகளிலும் இலக்கியங்களிலும் கோவில்கள் கட்டுவதிலும் பெரும் சாதனைகள் நிகழ்த்தியதாகவும் தேவராயரின் ஆட்சிகாலம் புகழப்படுகிறது.

திம்மருசு என்னும் மந்திரியின் சிறப்பான ஒத்துழைப்போடு நல்லாட்சி நடத்தியதாகக் கூறப்படும் இராயர், தெலுங்கு மற்றும் சமஸ்கிருதத்தில் நல்ல புலமை பெற்றிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறார். வைணவத்தில் பற்று கொண்டிருந்த இராயர், எல்லா மதங்களையும் அரவணைத்துச் சென்றவராகவே அறியப்படுகிறார்.

கோதாநாயகியாகக் குறிப்பிடப்படும் ஆண்டாள் மற்றும் ஸ்ரீரங்கநாதரின் காதலை அடிப்படையாகக் கொண்டு கிருஷ்ணதேவராயர் இயற்றிய ஆமுக்த மால்யதா அதாவது சூடிக் கொடுத்தவள் எனும் தெலுங்கு நாடகம், மிகச் சிறந்த படைப்பாகப் புகழப்படுகிறது. கோதை நாச்சியாருக்கு தெலுங்கு மண்ணில் மிகுந்த வரவேற்பினை நல்கிய ஆமுக்த மால்யதாவில், உச்சி முதல் பாதம் வரையிலான ஆண்டாளின் வர்ணனை தேவராயரால் சிறப்பாக எடுத்தாளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

விஷ்ணுசித்தீயம், விஷ்ணு சித்துடு எனும் பெயர்களாலும் குறிப்பிடப்படும் ஆமுக்த மால்யதாவில், விஷ்ணுசித்தரும் முக்கியமான கதாபாத்திரமாக வந்து பாண்டிய மன்னனுக்கு முக்தியடைதலைப் பற்றி விளக்குவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கோதாதேவியின் புகழை தேவராயர் பரப்பியதற்குக் காரணமாக, கலிங்க கஜபதி அரசர்களுக்கு எதிரான படையெடுப்பின் போது ஆந்திராவின் ஸ்ரீகாகுளம் மகாவிஷ்ணு ஆலயத்தில் ஏகாதசி விரதமிருந்ததாகவும், இராயரின் கனவில் தோன்றிய மகாவிஷ்ணு, ஆண்டாள் நாச்சியார் பற்றிய கதையை தெலுங்கில் இயற்றுமாறு ஆணையிட்டதாகவும் தேவராயராலேயே கூறப்பட்டிருக்கிறது. கனவில் தோன்றிய மகாவிஷ்ணுவின் தோற்றத்தை தேவராயர் விவரிப்பது அருமை. மழைமேகத்தை விட மகாவிஷ்ணு கருமையாக இருந்தாராம், கண்கள் ஞானம் நிறைந்தும் ஒளியோடும் தாமரையே வெக்கப்படும் அளவிற்கு அழகாகவும் விளங்கியதாம். தெலுங்கு இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க படைப்பான ஆமுக்த மால்யதா தவிர, ஜாம்பவதி கல்யாணமு மற்றும் உஷாபரிணயம் எனும் சமஸ்கிருதப் படைப்புகளும் தேவராயரால் இயற்றப்பட்டள்ளது குறிப்பிடத்தக்கது.

பேரரசர் கிருஷ்ணதேவராயரின் அவையை அலங்கரித்த அஷ்டதிக்கஜங்கள் எனப்படும் எட்டு புலவர்கள் (புவன விஜயமு), புலமையும் அறிவுக் கூர்மையும்

மக்களின் நலனில் அக்கறையும் கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றனர். எட்டுத்திசைக்கும் யானைகளாகக் குறிப்பிடப்படும் அல்லசணி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, மதயாகரி மல்லண்ணா, துர்ஜதி, அய்யல ராஜி ராம பத்ருடு, பிங்கலி சுரண்ணா, இராமராசு பூஷனடு மற்றும் தெனாலி இராம கிருஷ்ணன் போன்ற எட்டு புலவர்களுள், பெத்தண்ணா தலைசிறந்தவராகவும், ஆந்திர கவிதையின் பிதாமகராவும் குறிப்பிடப்படுகிறார்.

மார்க்கண்டேய புராணத்திலிருந்து எடுத்தாளப்பட்ட மனு சரித்ரமு எனும் அறுநூறு பாடல்கள் கொண்ட பெத்தண்ணாவின் மனுசரிதம் நூல், திக்கண்ணா புலவரின் சீடரான மாரண்ணா (1291-1323) எனும் புலவரின் படைப்பிலிருந்து விரிவாக்கம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

கிருஷ்ணதேவராயரின் அரசாட்சிக் காலத்திலிருந்த எட்டுப் புலவர்களும் பல்வேறு புகழ்பெற்ற நூல்களை இயற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. நந்தி திம்மண்ணாவின் பாரிஜாத ஆபரணமு, மல்லண்ணாவின் இராஜசேகர சரித்ரமு, துர்ஜதியின் காலஹஸ்தி மகாத்யமு, இராம பத்ருடுவின் இராம அப்யுதாயமு, சூரண்ணரின் இராகவ-பாண்டவீயமு, இராமராசு பூசனடுவின் காவ்யாலங்கார சங்கிரகமு, வாசசரித்ரமு, ஹரிச்சந்திர நளபாக்யணமு, தெனாலியின் உத்பாதராதைய சாத்ரமு, பாண்டு ரங்க மகாமித்யமு, கடிகாசல மகாசல மகாமித்யமு போன்ற நூல்கள் அஷ்டதிக் கஜங்களின் புகழினைப் பரப்பி வருகின்றன.

தெலுங்கின் ஐம்பெருங்காவியங்களாக மனு சரித்ரம், பாண்டுரங்க மகாமித்யம், ஆமுக்த மால்யதா, வாசு சரித்தம் மற்றும் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த செமகுர வேங்கடகவியின் (தஞ்சை இரகுநாத நாயக்கரின் அவைப் புலவர்) விஜயவிலாசமு போன்ற நூல்கள் அறியப்படுகின்றன. வாசுசரித்ரம் விஜயநகரத்தின் திருமலை தேவராயர் ஆட்சிக் காலத்தில் (1565-1572), இயற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அஷ்டதிக் புலவர் பெயர்களும் சற்று காலத்தால் மாறுபட்டிருக்கலாம் எனக் குறிப்பிடப்படுகிறது.

எட்டு அரசவைப் புலவர்களுள் விகடகவியாகவும், குமாரபாரதியாகவும், நகைச்சுவை, புத்திக் கூர்மை, தந்திரம், மக்கள் நலன் போன்றவற்றிற்காகவும் பெரிதும் அறியப்பட்டவராக தெனாலி இருக்கிறார். தெனாலி இராமனை வைத்து

உருவாக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான கதைகள், இந்தியா முழுமைக்கும் புகழ்பெற்றவையாக உள்ளன.

ஒரு சமயம் கிருஷ்ண தேவராயலு அரச சபைக்கு, அனைத்துத் தத்துவங்களும் அறிந்த தத்துவஞானி ஒருவர் வந்தார். தத்துவம் பற்றி சிறந்ததொரு உரை நிகழ்த்திவிட்டு இறுதியில் கண்ணால் காண்பது, நாவினால் சுவைப்பது, மூக்கினால் நுகர்வது போன்ற அனைத்துமே அனுபவிப்பதாக அதாவது பிரம்மையாக மாயையாகக் தோன்றுமே தவிர, உண்மையில் அவ்வாறு செய்வதில்லை என்பதாகக் கூறி, சபையோர் அனைவரும் அதனை ஏற்கவேண்டுமென வேண்டுகோளும் விடுத்தார்.

தத்துவஞானி பேசியதை பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த தெனாலிராமன் எழுந்து, சாப்பிடுவது கூட பிரமை தானா, உண்மையில் சாப்பிடுவதற்கும் சாப்பிடுவதாக நினைத்துக் கொள்வதற்கும் வேறுபாடு இல்லையா என வினவினார். தத்துவஞானியோ வேறுபாடு இல்லை என ஆணித்தரமாகக் கூறினார்.

பதிலுக்கு தெனாலிராமன் இன்றைக்கு மாமன்னர் அளிக்கும் அறுசுவை விருந்தில் அனைவரும் கலந்து கொண்டு மகிழ்ச்சியோடு சாப்பிடப் போவதாகவும், தத்துவ ஞானி மட்டும் விருந்தை சாப்பிடாமல் சாப்பிடுவதாக நினைத்துக் கொண்டு மகிழ்ச்சியடையட்டும் என்றும் சிரித்துக் கொண்டே கூறினார். தத்துவ ஞானியின் தலை குனிந்தது.

பாசன வசதிகளைப் பெருக்கியவராகவும், சங்கீதம் நாட்டியம் போன்ற கலைகளை மேன்மையுறச் செய்தவராகவும், முக்கியமான பல தென்னிந்தியக் கோவில்களின் உயரமான ராஜகோபுரம் எனும் முதன்மைக் கோபுரங்களை கட்டுவித்தவராகவும், நவராத்திரி எனும் விழாவை மிகச் சிறப்பாக முன்னெடுத்தவராகவும், போர்ச்சுகீசியருடன் நட்புறவு கொண்டு அவர்களை அரண்மனை கட்டிக் கொள்ள அனுமதித்தவராகவும், கங்கா தேவி போன்ற பெண் கவிஞர்களைப் பேணியவராவும், பெண்களுக்குப் பல்வேறு உரிமைகள் அளித்தவராகவும், பல கலைகளிலும் வல்லவராகவும் அறியப்படும் கிருஷ்ணதேவராயரின் ஆட்சிகாலம், தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலமாகவும் புகழப்படுகிறது.

துளுவத்தை அடையாளமாகக் கொண்ட பேரரசர், கன்னடத்திற்கும் தெலுங்கிற்கும் பெரும் புகழ் சேர்த்தவராகக் குறிப்பிடப்படுகிறார். குறிப்பாக தெலுங்கு இலக்கியங்கள் ராயரின் ஆட்சியில் உயர்நிலையை அடைந்ததாக கூறப்படுகிறது.

திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த துளு எனும் துளுவம், கேரளத்தின் வடபகுதியிலும் கருநாடகத்தின் தென்பகுதியிலும் அதாவது துளுநாடு பகுதியில் பேசப்படுகிறது.

திராவிட மொழிக் குடும்பம் மரபு வழியாக இணைந்த சுமார் எண்பத்தைந்து மொழிகள் உள்ளடக்கிய குடும்பமாக அமைந்திருக்கிறது. திராவிட மொழிகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவையாகவும், மற்றை இந்திய மொழிகளிலிருந்து வேறுபட்டவையாகவும் அறியப்படுகின்றன.

திராவிட மொழிகள் அவற்றின் புவியியற் பரம்பலைக் கொண்டு, தென் திராவிடம், தென் நடுத் திராவிடம், நடுத் திராவிடம், வட திராவிடம் மற்றும் வகைப்படுத்தப்படாதவை என ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும், அதிகபட்சமாக தென் திராவிடப் பிரிவில் முப்பத்தி நான்கு மொழிகள் இடம் பெற்றுள்ளதாகவும் அறிப்படுகிறது.

தென் திராவிடப் பிரிவில், தமிழ் - கன்னடப் பிரிவு (படகு, ஹோலியா, கன்னடம், ஊராலி), தமிழ் - குடகுப் பிரிவு (குடகு, குறும்பா), தமிழ்- மலையாளம், (காடர், மலையாளம், மலவேடன், பனியா), தமிழ் (இருளா, முதுவன், கைக்காடி, பெட்டாக்குறும்பா, தமிழ்) மன்னான் (தோடா, கோட்டா), துளுப்பிரிவு (பெல்லாரி, குடியா, கொரகா, துளு) போன்ற முக்கியமான மொழிகள் இடம் பெற்றுள்ளன.

தென் நடுத் திராவிடத்தில் கோண்டி-கூய் (கோண்டி-முரியா, கோண்டி, கிர்வார், பர்தான்), கொண்டா-கூய் (கொண்டா, கோயா, கூடப், குவி, மண்டா, பெங்கோ), தெலுங்கு (செஞ்சு, மன்னாடோரா, சவாரா, தெலுங்கு, வட்டர்) போன்றவை குறிப்பிடத்தக்க மொழிகளாகும்.

நடுத் திராவிடத்தில் கோலமி - நைக்கி (வடமேற்குக் கோலமி, தென்கிழக்குக் கோலமி) பார்ஜி - கடாபா (மூதிலி கடாபா, பொட்டங்கி ஒல்லார் கடாபா, துருவா) போன்ற மொழிகள் குறிப்பிடத்தக்கவை.

வட திராவிடத்தில் பிராகுலி, குமர்பாக் பஹாரியா, குறுக்ஸ், நேபாளி குறுக்ஸ், சௌரிய பஹாரியா போன்றவையும், வகைப்படுத்தப்படாதவற்றில் அல்லர், பாசிகர், பாரியா, காமர், கணிக்காரன், குறிச்சியா, மலங்குறவன், விஷாவான் போன்ற மொழிகளும் அடங்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தென் திராவிட மொழிகளுள் ஒன்றான படகு அல்லது படுக மொழி, நீலகிரி மலைப் பகுதிகளில் வாழும் படுகர் அல்லது படகர் மக்களால் சேசப்படுகிறது. தனி எழத்து வடிவம் பெற்றிராத படுக மொழி, பெரும்பாலும் தமிழ் எழுத்துருவைப் பயன் படுத்தி எழுதப்படுகிறது. சமவெளிகளில் வாழ்ந்த மக்களே வேண்டாத சில சூழல்களில் மலைப்பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து மறைவான வாழ்க்கை வாழ்ந்ததாகவும் கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன. படுகர்கள் ஐதர் அலி மற்றும் திப்பு சுல்தான் காலத்தில், அவர்களுக்கு அஞ்சி, மைசூர் பகுதிகளிலிருந்து வெளியேறி நீலகிரிக்கு வந்தவரென்றும், கொடைக்கானல் மலைப் பகுதியில் வாழும் மன்னான் பழங்குடியினர், பாண்டிய நாட்டுக் கலவரத்தின் போது, நீலகிரி மலைப்பகுதிக்கு இடம் பெயர்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. படுக இன மக்கள் நீலகிரி மலையில் வாழ்ந்தாலும் அவர்களிடம் பட்டியலிட்ட பழங்குடியினருக்கு உரிய அடையாளங்கள் இல்லை எனக் கூறப்படுகிறது. மேலும் படகர் அல்லது படுகர் மொழி, தமிழ் மற்றும் கன்னடத்தின் கலவையான மொழியாகவும் கருதப்படுகிறது.

நீலகிரி மலைப்பகுதிகளில் ஆதிகாலம் தொட்டே வாழும் பழங்குடியினராக தோடர்கள், காடர்கள், இருளர்கள் போன்றோரே குறிப்பிடப்படுகின்றனர். தமிழகத்தில் மட்டும் நாற்பதிற்கும் மேற்பட்ட பழங்குடியினர் வாழ்வதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. காடும் காடு சார்ந்த நிலங்களிலும் வாழும் பழங்குடிகள், அவர்களுக்கென தனிமொழியும் குடும்ப மற்றும் சமூகப் பழக்க வழக்கங்களையும் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. பெரும்பாலானவர்களுடைய மொழிகள் தமிழோடு நெருங்கிய தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

தென்னிந்திய மானுடவியலின் அடிப்படை நூலாகக் கருதப்படும் எட்கர் தர்ஸ்டன் அவர்களின் (1855-1935), தென்னிந்தியாவின் சாதிகளும் பழங்குடிகளும் எனும் புகழ்பெற்ற நூல் தென்னிந்திய பழங்குடிகளது விவரங்களை அளிக்கும் சிறந்ததொரு ஆக்கமாகக் கருதப்படுகிறது. ஏழு தொகுதிகளாகக்

தொகுக்கப்பட்டுள்ள நூல் வரிசையில், தென்னிந்தியாவைச் சேர்ந்த இரண்டாயிரம் சாதிகள் மற்றும் பழங்குடிகளது தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் கோவை, நீலகிரி, சேலம் மாவட்டங்களிலும், கேரளாவின் பாலக்காடு பகுதியிலும் வசிக்கும் முதற்குடியினரான இருளர்கள், பாம்பு, எலி போன்றவற்றைப் பிடிப்பதில் கைதேர்ந்தவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். தமிழ்நாடு, கேரளா, கருநாடகா மற்றும் ஆந்திரப் பகுதிகளில் பேசப்பட்டு வரும் இருளர்களின் இருளா மொழி, எரவல்லன், எருக்கலா, இரவா, இருளவன், இருளிகா, இருளிகர், கொரவா போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதப்படும் இருளா மொழியை தனிமொழியாகக் கருதலாம் எனும் கோட்பாட்டை முன்மொழிந்தவராக புகழ்பெற்ற அயல்நாட்டுத் தமிழறிஞர் காமில் சுவெலபில் (1927-2009) அறியப்படுகிறார். ஐரோப்பாவின் செக் குடியரசில் பிறந்த அறிஞர் காமில், நீலகிரிப் பகுதியில் பேசப்படும் இருளர் மொழியில் ஈடுபாடு கொண்டு, மொழியியல் நோக்கில் ஆராய்ச்சி செய்தது போற்றுதலுக்குரியது. கிரேக்கம், இலத்தீன், செருமன், ஆங்கிலம், உருசியன், சமஹ்கிருதம், தமிழ, மலையாளம், இந்தி, பிரெஞ்சு, இத்தாலியன், போலந்து போன்றே பல மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த சுவெலபில், திராவிட மொழியியல், சங்க இலக்கியம், யாப்பிலக்கணம், முருகக்கடவுள், தமிழ் வழக்குச் சொற்கள் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க எழுத்துப்பணியை ஆற்றியுள்ளதாகப் புகழப்படுகிறார்.

தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் உயர்ந்த பகுதிகளில் வாழும் பளியர் பழங்குடிகள், தென்னிந்தியாவின் மிகப் பழமையான சமூகங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுகின்றனர். பழனி மலைப்பகுதிகளிலும், வருசநாடு மலைகளிலும் குறிப்பிடத்தக்க அளவில் வசிக்கும் பளியர்கள், தேனெடுப்பதில் வல்லவர்களாகவும், மரங்களின் மீது பரண்களை அமைத்தும், பாறை இடுக்குகளிலும், குகைகளிலும் வசிப்பவர்களாகவும் கூறப்படுகின்றனர். குட்டையான உருவம், சுருண்ட முடி, தடித்த உதடு, கருப்பு நிறம் போன்ற உடற்கூறுகளைப் பெற்றிருக்கும் பளியர் குடியினர், காட்டுப்பளியர், புதைப்பளியர் என இருபிரிவாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

பளிச்சியம்மனைக் குலதெய்வமாக வழிபடும் பளியர்கள், முன்னோர் வழிபாட்டையும் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. குறிஞ்சி மலர்கள் பூக்கின்ற காலத்தை வசந்த காலமாகக் கொண்டாடும் பளியர்கள், குறிஞ்சி மலர்கள் பூக்கத் தொடங்கியதும் அவற்றை முறத்தில் வைத்து பளிச்சியம்மனுக்கு பூசைசெய்து, ஒன்று கூடி பாட்டுப்பாடி, நடனம் ஆடுவதாகவும் அறியப்படுகிறது.

தென் - நடுத்திராவிட மொழிகளுள் முக்கியமானதொரு மொழியாக கோண்டி மொழி குறிப்பிடப்படுகிறது. மத்தியப் பிரதேசம், ஒரிசா, தெலுங்கானா, மகாராட்டிரம், சத்திசுகர் போன்ற பகுதிகளில் பேசப்பட்டு வரும் கோண்டு மொழி, கோண்டு இனத்தவரின் தாய்மொழியாக அறியப்படுகிறது. எழுதப்பட்ட இலக்கியம் இல்லையெனக் குறிப்பிடப்படும் கோண்டு மொழிக்கு, நாட்டார் இலக்கியங்களும், திருமணப் பாடல்களும், கதை மரபுகளும் சிறப்பாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் நடுப்பகுதியான கோண்டுவனத்தில் வாழும் கோயிதோர் மக்களால் பேசப்படும் கோண்டு மொழி, அதற்கென எழுத்துவளம் இல்லாததல் தெலுங்கு மற்றும் தேவநாகரி வரி வடிவத்தல் எழுதப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. கோண்டி மொழிக்கான இலக்கண நூல் எழுதியவராக வில்லியம் சன் ஹென்றி டிரம்மண்ட் (1854-1926) அறியப்படுகிறார்.

வட திராவிட மொழியாக அறியப்படும் குறுக்கு மொழி, பீகார், சார்க்கண்டு, சத்தீர்கர், மேற்கு வங்காளம் போன்ற இந்திய மாநிலங்களிலும், வங்காள தேசத்திலும் பேசப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஓராவோன் மற்றும் கிசான் எனும் குழுவினரால் பேசப்படும் குறுக்கு மொழி தேவநாகரி வரிவடிவத்தில் எழுதப்படுவதாகக் கூறப்படுகிறது.

சுந்தரத் தெலுங்கு அதாவது அழகான தெலுங்கு எனக் குறிப்பிடப்படும் தெலுங்கு மொழி, தென் - நாடு திராவிட மொழி துணைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியாகும். பழந்திராவிட மொழியில் இருந்து தோன்றியதாகக் கருதப்படும் தெலுங்கு மொழி, ஒரு செவ்வியல் மொழியாக நடுவண் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ரேனாட்டுச் சோழர்களால் வெளியிடப்பட்ட தெலுங்கு மொழிக்கான கல்வெட்டுச் சான்றுகள், பொது ஆண்டின் ஐந்நூற்றி எழுபத்தைந்தாம் ஆண்டு காலத்தைச் சேர்ந்ததாக அறியப்படுகிறது.

மேலும் அக்கால கட்டத்திலேயே தெலுங்கு இலக்கியங்களும் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன.

தெலுங்கு இலக்கியத்தின் குறிப்பிடத்தக்க படைப்பாக நன்னயப் பட்டரின் ஆந்திர மகாபாரதம் கொண்டாப்படுகிறது. தெலுங்கின் ஆதிகவியாகப் போற்றப்படும் நன்னயப் பட்டர் (1022 -1063) எனும் நன்னையா பட்டார குடுக்குக்கு முன்பு தெலுங்கின் இலக்கண நூல்கள் காணப்படவில்லை எனவும், பொது ஆண்டிற்கு முன்பாகத் தோன்றியதாகக் குறிப்பிடப்படும் தெலுங்கு மொழிக்கான இலக்கண அமைப்பாக நன்னன பட்டரின் மகாபாரதம் மற்றும் சாங்கதத்தில் அவர் இயற்றிய ஆந்திர சப்த சிந்தாமணி எனும் நூல்களிலேயே காணப்படுவதாகவும் அறியப்படுகிறது.

கீழை சாளுக்கிய அரசரான ராஜ ராஜ நரேந்திரர் (1022-1061) வேண்டுகோளுக்கு இணங்க நன்னய கவியால் ஆரம்பிக்கப்பட்ட தெலுங்கு மகாபாரதம், பின்னர் வந்த திக்கண்ணா எனும் திக்கண்ணா சோமயாஜி (1205-1288) கவியாலும், அவரைத் தொடர்ந்து எர்ரணா எனும் எர்ரபிரகதா கவியாலும் (1325-1353), நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. தெலுங்கு பாரதத்தில், ஆதிபர்வம், சபாபர்வம் மற்றும் ஆரண்யபர்வத்தின் முற்பகுதி மட்டுமே நன்னையரால் இயற்றப்பட்டது எனக் கூறப்பட்டலும், அதன் கவிதை நயம், ஒலி அழகு சிறப்பானது எனக் கருதப்படுகிறது. தெலுங்கு பாரதத்தில் நள தமயந்தி கதை நன்னயாவின் நடைக்கும், விராட பர்வம் திக்கண்ணரின் நடைக்கும், சத்யவான் சாவித்ரி கதை எர்ரணாவின் நடைக்கும் சிறந்த எடுத்துகாட்டாகக் கூறப்படுகிறது. தெலுங்கும், சமற்கிருதமும் கலந்து இன்பமான ஒலியமைப்போடு இயற்றப்பட்ட தெலுங்கு மகாபாரதம், தெலுங்கு கவிதைகளின் தந்தை எனும் பெயரை நன்னயப்பட்டருக்கு வழங்கி சிறப்பித்துள்ளது.

தெலுங்கில் பிரபந்த வகைப் பாடல்களை அறிமுகப்படுத்தியவராக ஸ்ரீநாதர் (1365-1450) அறியப்படுகிறார். பிராகிருதத்தில் இயற்றப்பட்ட சாலிவாகன கதா சப்தசஷ்டியை, சிவராத்திரி மகாத்யம், பீமகண்டா, ஹரிவிலாசம், சிருங்கார நைசைதம் உட்பட பல பகழ்பெற்ற நூல்களைப் படைத்தவராகவும், கவி சர்வபௌமர் எனச் சிறப்பிக்கப்பட்டவராகவும் ஸ்ரீநாதர் குறிப்பிடப்படுகிறார்.

சாங்கத பாகவத புராணத்தை, தெலுங்கில் ஆந்திர மகா பாகவதமு என மொழிபெயர்த்த பம்மேர போதனாமத்யர் (1450-1510), தெலுங்கு மற்றும் சங்கத

அறிஞராகக் புகழப்படுகிறார். இனிமை கருதி கிழக்கின் இத்தாலிய மொழி எனப் புகழப்பட்ட தெலுங்கு மொழி, விசயநகரப் பேரரசு காலத்தில் மிகச்சிறப்பாக வளர்ச்சி பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலமாகக் அறியப்படும் கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக் காலத்தில், தெலுங்கு மொழியும், தெலுங்கு இலக்கியமும், உயர்ந்த நிலையினை அடைந்ததாக அறியப்படுகிறது. விசய நகரப் பேரரசிற்குப் பின் வந்த மதுரை மற்றும் தஞ்சை நாயக்கர்கள் ஆட்சிக் காலத்திலும், தெலுங்கு மொழி சிறப்பான இடத்தைப் பெற்றிருந்ததாக குறிப்பிடப்படுகிறது. தியாகராயரின் தெலுங்குக் கீர்த்தனைகள் மற்றும் சங்கீத மரபிலும் தெலுங்கு மொழிக்கு சிறப்பானதொரு இடத்தை வழங்கியதும் கூறத்தக்கதே.

மீகு தெலுகு தெலுசா (உங்களுக்குத் தெலுங்கு தெரியுமா), மீ பேரு ஏமிடி (உங்கள் பெயர் என்ன) போன்று, உயிர் எழுத்துகளில் முடிவதே தெலுங்கின் இனிமைக்குக் காரணமென சுட்டிக்காட்டப்படுகிறது. யார் என்பதைவிட எவரு என்பது இனிமையாவும், அழுத்தமான உச்சரிப்போடு, தெளிவானதாகவும் தெரிவதற்குக் காரணம், அச்சொல் உயிரெழுத்தாக முடிவதே காரணமெனில் மிகையாகாது.

தித்திக்கும் தெலுங்கில் முன்னர் ‘ழ’கரம் இடம்பெற்றிருந்ததாகவும், பின்னர் மறைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. திராவிட மொழிகளுக்கே உரிய எகர, ஒகர ஒலிகளுடன், சமற்கிருதத்திலுள்ள அனைத்து உயிரெழுத்துக்களையும் கொண்டிருக்கும் தெலுங்கு மொழி, பல்லவ கதம்ப எழுத்துக்களிலிருந்து தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது. கன்னட மற்றும் கோலமி எழுத்துகளுக்கும் நெருக்கமானதான தெலுங்கு எழுத்து முறை, வெவ்வேறு காலகட்டங்களில் மாற்றம் பெற்றும் வந்துள்ளது.

நாட்டிற்கும், மக்களுக்கும், மொழிக்கும் பொதுவானதாக, ஆந்திரம் எனும் பெயரே முன்பு பழக்கத்திலிருந்ததாகவும், பின்னர் மொழியைக் குறிக்கும் தெலுங்கு எனும் சொல்லும், தெலுங்கு பேசும் மக்களான தெலுங்கர் எனும் பதமும் தோற்றம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. தெலுங்கு எனும் சொல்லின் மூலத்திற்கு தேன், தெனுகு, தெலுகு போன்ற பல வேர்ச்சொற்களும் குறிப்பிடப்படுவதாகத் தெரிகிறது.

தென்னிந்தியாவிற்கும் வட இந்தியாவிற்கும் கலாச்சார இணைப்புப் பாலமாக விளங்கும் தெலுங்கு நாடு, தென்னகத்தின் நெற்களஞ்சியமாகவும், பருத்தி,

மிளகாய், புகையிலை போன்றவற்றிற்குப் பெயர் பெற்றதாகவும் திகழ்கிறது. சுதந்திரத்தின் போது சென்னை மாகாணத்துடன் ஆந்திரத்தைச் சேர்ந்த பன்னிரென்டு மாவட்டங்களும், ஐதராபாத், நிசாம் பகுதியோடு ஒன்பது மாவட்டங்களும் உள்ளடங்கியிருந்திருக்கின்றன. பின்பு முதல் மொழிவாரி மாகாணமாக இருபத்தியொரு மாவட்டங்களும், பிரெஞ்சு ஆளுகையிலிருந்த ஏனாம் மாவட்டமும் இணைந்து புதிய ஆந்திர மாநிலம் 1953- ல் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆந்திர மக்களால் அமரஜீவி என அழைக்கப்படும் பொட்டி ஸ்ரீராமுலு (1901-1952) என்பவரே ஆந்திர மாநிலம் அமைவதற்கு மூலகாரணமாகக் குறிப்பிடப்படுகிறார். சுதந்திரப் போராட்ட வீரராகவும், காந்தியவாதியாகவும் அறியப்படும் சிறிராமுலு, சென்னை மகாணத்திலிருந்த தெலுங்கு பேசும் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் விதமாக, ஆந்திரம் எனும் தனிமாநிலக் கோரிக்கையை வலியுறுத்தி சென்னையில் உண்ணாவிரத அறப்போராட்டத்தை துவக்கியிருக்கிறார். மொழிவாரி மாநிலக் கோரிக்கையை ஏற்காத நேருவின் மத்திய அரசு, பின்னர் தொடர் உண்ணாவிரதமிருந்த ஸ்ரீராமுலு அவர்களின் மறைவினால் எழுந்த மோசமான கலவரங்கள் காரணமாக, மொழிவாரி மாநிலப் பிரிவினைக்கு சம்மதம் அளித்து, கர்னூலைத் தலைநகராகக் கொண்டு ஆந்திர மாநிலத்தை உருவாக்கியிருக்கிறது.

வடபகுதியான தெலுங்கானம், தென்பகுதி ராயலசீமை மற்றும் கடற்கரைப் பகுதிகள் இணைந்து உருவான ஆந்திரத்திற்கு, பின்னர் ஐதராபாத் தலைநகராக மாற்றப்பட்டிருக்கிறது. நிசாமுக்கு உட்பட்டிருந்த தெலுங்கர்களின் நாடு எனும் தெலுங்கானாப் பகுதி, இரண்டாயிரத்திப் பதினான்காம் ஆண்டில் தனி மாநிலமாகப் பிரிக்கப்பட்ட பின், இராயலசீமா மற்றம் கடற்கறை மாவட்டங்களை உள்ளடக்கிய ஆந்திரம் அதாவது சீமாந்திரம் பழைய ஆந்திரப் பிரதேசமாகப் குறிப்பிடப்படுகிறது.

ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்ட போதே, தெலுங்கு மொழி பிறந்ததாகக் குறிப்பிடப்படும் தெலுங்கானாப் பகுதியை, தனி மாநிலமாக அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்திருக்கிறது. பின்தங்கிய பகுதியாக இருந்த தெலுங்கானா பகுதி மக்களுக்கு சமமான அதிகாரப் பகிர்வு மற்றும் நிதிப் பகிர்வுகளை உறுதி செய்யும் பெருந்தகையாளர் உடன்பாடு (1956) ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனினும் தெலுங்கானாவைப் பிரிக்கும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. கல்வகுன்ட்ல சந்திரசேகர ராவ்

அவர்களால் தொடங்கப்பட்ட தெலுங்கான இராட்டிர சமிதி (2003), தெலுங்கானா போராட்டத்தைப் பல வழிகளிலும் முன்னெடுத்துச் சென்றிருக்கிறது. கடைசியாக சந்திரசேகர் ராவ் மேற்கொண்ட கடுமையான உண்ணாவிரதப் போராட்டத்தின் காரணமாக, திரு. மன்மோகன் சிங் தலைமையிலிருந்த நடுவண் அரசு, 2009-ல் தெலுங்கானாவைத் தனி மாநிலமாக அமைக்கும் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது.

மாநில பிரிவினைக்குப் பின் 2014-ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில், தெலுங்கானம் மாநிலத்திற்கு சந்திரசேகர் ராவ் அவர்களும், ஆந்திரப் பிரதேசத்திற்கு தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த சந்திரபாபு நாயுடு அவர்களும் முதலமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். இரு மாநிலங்களுக்கும் ஐதராபாத் பத்து வருட காலத்திற்கு, பொது தலைநகராக இருக்குமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

முத்துக்களின் நகரமென்றும் நிஜாம்களின் நகரமென்றும் புகழ்பெறும் ஐதராபாத்து சார்மினார், கோல்கொண்டா கோட்டை, உசேன் சாகர் போன்ற வரலாற்று இடங்களுக்கும், தகவல் தொழில் நுட்பத்திற்கும், கூடவே பிரியாணிக்கும் பெயர்பெற்றதாக இருக்கிறது. செகந்திராபாத்தோடு இரட்டை நகரமாக இருந்து வரும் ஐதர்-ஆ-பாத் அதாவது உருது மொழியில் ஐதர் - நீடுழி வாழ்க, ஆந்திராவின் முதன்மை நகரமாகவும் தென்னிந்தியாவின் முக்கியமான நகராகவும் விளங்குகிறது.

ஆந்திரத்தின் ஐதராபாத் மாநில முதலமைச்சர்களாக எம்.கே.வெள்ளோடி (1950-1952) மற்றும் புர்குல இராமகிருஷ்ணராவ், சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்த ஆந்திராவிற்கு தங்குதரி பிரகாசம் (1953 -1955) மற்றும் கோபால ரெட்டி போன்றோர் முதலமைச்சர்களாகப் பணியாற்றி உள்ளனர். ஒன்றுபட்ட ஆந்திரத்தின் முதலமைச்சராகவும் (1956-1960, 1962-1964), பின்னர் இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் (1977-1982) நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் இருந்திருக்கிறார்.

இந்தியப் பிரதமராகப் பதவி வகித்த (1991-1996) பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள், ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராகப் (1971-1973) பணிபுரிந்துள்ளார். தெலுங்கானாப் போராட்டத்தில் முக்கியமானவராக அறியப்படும் சென்னா ரெட்டி ஆந்திரப் பிரதேச முதல்வராகவும் (1978-1980, 1989-1990) தமிழகத்தின் ஆளுநராகவும் (1993-1996) பதவி வகித்துள்ளார்.

புகழ்பெற்ற திரைபட நடிகராக இருந்து, பின்னர் அரசியல்வாதியாகி 1982-ல் தெலுங்கு தேசம் எனும் கட்சியைத் தொடங்கி, குறுகிய காலத்திலேயே ஆந்திரப்பிரதேசத்தின் முதல்வருமான என்.டி. ராமராவ் எனும் நன்டமுரிதாரக ராமாராவ் அவர்கள் (1923-1996), மூன்று முறை முதலமைச்சராக (1983-1984, 1984-1989, 1994-1995) பதவி வகித்திருக்கிறார். ஆந்திர மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட ராமராவ் அவர்களின் இரண்டாவது திருமணமும், அதனைத் தொடர்ந்த அரசியல் நிலவரமும் குழப்பத்தை உண்டாக்க, அவரின் மருமகனான திரு நா. சந்திரபாபு நாயுடு (பிறப்பு-1950) முதலமைச்சராகப் பதவி வகித்திருக்கிறார். 1995 முதல் 2004 வரை முதல்வராக இருந்த சந்திரபாபு நாயுடு, தெலுங்கானாப் பிரிவினைக்குப் பின் 2014-ம் ஆண்டு முதல் ஆந்திராவின் முதல்வராக இருந்து வருகிறார்.

ஆந்திராவில் 1950 முதல் 1983 வரை, தெலுங்கு தேசம் ஆட்சிக்கு வரும் வரை, இந்திய தேசியக் காங்கிரசு கட்சியே தொடர்ந்து ஆட்சியில் இருந்து வந்திருக்கிறது. தொடர்ந்து இரு முறை முதலமைச்சராகப் பதவி வகித்த மருத்துவர் எ. சா. ராஜசேகர ரெட்டி (2004-2009), ஆந்திர காங்கிரசின் செல்வாக்குள்ள தலைவராக இருந்திருக்கிறார். ராஜசேகர ரெட்டி அவர்கள் உலங்கு வானூர்தி விபத்தில் சிக்க, அடுத்த முதல்வர்களாக கோனியேட்டி ரோசையா (2009-2010), நல்லாரி கிரண் குமார் (2010 -2014) போன்றோர் முதல்வர்களாக மக்கள் பணியாற்றியிருக்கின்றனர்.

ஆந்திராவின் ஆதிக்க சாதிகளாக ரெட்டி, நாயக்கர் போன்ற சாதிகள் குறிப்பிடப்படுகின்றன. இரண்டிலுமே பல்வேறு உட சாதிகள் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவின் நடுப்பகுதியில் பாயும் ஆயிரத்து நானூற்றி ஐம்பது கிலோமீற்றர்கள் நீளமுள்ள மிகப்பெரிய ஆறான கோதாவரி, ஆந்திராவின் முக்கியமான ஆறாக போற்றப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள திரிம்பாக் (நாசிக் அருகே) உற்பத்தியாகி, மகாராட்டிரம் மற்றும் ஆந்திரத்தை வளப்படுத்தும் கோதவரி ஆறு, சிறந்த நீர்வழியாகவும் அமைந்திருக்கிறது.

மகாராட்டிரத்தில் உற்பதியாகி கர்நாடகா, ஆந்திரா வழியே பாயும் ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறு கிலோ மீற்றர்கள் நீளமுடைய கிருஷ்ணா ஆறு, ஆந்திராவின் வளமைக்கும் உணவு உற்பத்திக்கும், பொருளாதாரத்திற்கும், அதிகளவில் பயன்படும் ஆறாக புகழப்படுகிறது. துங்கபத்திரை, பீமா, மலபிரபா,

முஷி உட்பட பல்வேறு துணை ஆறுகளைக் கொண்டுள்ள கிருஷ்ணா ஆற்றில், ஸ்ரீசைலம், நாகார்சுன சாகர் போன்ற புகழ்பெற்ற அணைகள் கட்டப்பட்டுள்ளன.

ஆந்திரப் பிரதேசத்தின் விசயவாடாவிலிருந்து, தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டம் வரை சோழமண்டலக் கடற்கரைக்கு இணையாக, நானூற்றி இருபது கிலோ மீட்டர்கள் நீளமுடைய பக்கிங்காம் உப்பு நீர் கால்வாய், பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் முக்கியமானதொரு நீர் வழியாக இருந்திருக்கிறது. ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட கால்வாய், பொருட்களை கொண்டு செல்வதற்கு பயன்பட்டிருக்கிறது.

தமிழகத்தில், விசய நகரப் பேரரசின் தொடர்ச்சியாக, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மதுரை நாயக்கர்கள் ஆட்சி (1529-1739) நடந்திருக்கிறது. விசய நகரப் பேரரசின் இளவரசர் குமார கம்பண்ணரின் மனைவியான கங்காதேவி என்பவரால் எழுதப்பட்ட மதுரா விஜயம் அல்லது வீர கம்பராய சரித்திரம் எனும் சமஹ்கிருத கவிதை நூல், மதுரை சுல்தானகத்தின் கொடுங்கோலாட்சியிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட்டதை விவரிப்பதாகக் கூறப்படுகிறது.

பண்டிதர் என். ராம்சாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு, ஜி. ஹரஹர சாஸ்திரி மற்றும் வி. சீனிவாச சாஸ்திரி ஆகியோரால் 1924-ல் முதன் முதலாக அச்சிடப்பட்ட மதுரா விஜயம் நூல், ஒன்பது பகுதிகளை உள்ளடக்கியிருக்கிறது. நூலில், விசய நகரப் பேரரசின் பின்புலம், முதலாவது புக்கராயரின் ஆட்சி சிறப்புகள், குமார கம்பண்ணரின் பிறப்பு மற்றும் வளர்ப்பு, கம்பண்ணர் காஞ்சியை கைப்பற்றுதல், மதுரை சுல்தான் மீதான படையெடுப்பு, சிங்கந்தார் ஷாவை தனித்து போரிட்டு வெல்லுதல், திருவரங்கம் கோவிலைப் புதுப்பித்தல் போன்றவற்றை கங்காதேவி அல்லது கங்காபிகா விவரிப்பதாகக் கூறப்படுகிறது.

விசயநகரின் அச்சுத தேவராயர் காலத்தில், தமிழ்நாட்டு ஆட்சி முறையை மேம்படுத்த 1535-ம் ஆண்டில் செஞ்சி, தஞ்சை மற்றும் மதுரை என மூன்று மண்டலங்களாகப் பிரித்து (மகா நாயக்க தளங்கள்), செஞ்சிக்கு வையப்ப நாயக்கரும், தஞ்சைக்கு செவ்வப்ப நாயக்கரும், மதுரைக்கு விசுவநாத நாயக்கரும் மண்டல ஆளுநர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விசய நகரப் பேரரசால் மதுரைக்கு அனுப்பப்பட்ட நாகமநாயக்கர் என்பவரின் மகனான விசுவநாத நாயக்கரிடமிருந்து (1529-1564) தொடங்கும் மதுரை நாயக்கர் அரசுரிமை, தமிழ் மண்ணில் பல அரசியல், சமூக பொருளாதார, சமய, கலாச்சார மாற்றங்களுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. கிருட்டினதேவராருக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் அடைப்பைக்காரராக இருந்த விசுவநாத நாயக்கரே, பின்னாட்களில் மதுரை ஆளுநராக நியமிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. புகழ்பெற்ற தளவாய் அரியநாதர் எனும் படைதளபதி மற்றும் அமைச்சரோடு இணைந்து பணியாற்றிய விசுவாதர், நெல்லை, திருச்சி, தஞ்சை போன்ற பகுதிகளையும் நாயக்க அரசோடு இணைத்தவராக அறியப்படுகிறார்.

பரந்த நிலப்பரப்பில் செம்மையான ஆட்சி நடத்தியவராகக் குறிப்பிடப்படும் விசுவநாத அரசர், மக்கள் நலத்திட்டங்கள் பலவற்றைச் செய்தவராகவும், குறுநில மன்னர்களை பாளையக்காரர்களாக நியமித்தவராகவும், கோவில்களைச் செப்பனிட்டவராகவும் அறியப்படுகிறார். எழுபத்தியிரண்டு பாளைக்காரர்கள் நியமிக்கப்பட்டதாகவும், அவர்களுள் பலர் கன்னடர், தெலுங்கர் இனத்தவராகவும், பாண்டியர் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவும் குறிப்பிடப்படுகின்றனர்.

பாளையக்காரர்கள், அவர்கள் ஆளும் பாளையங்களிலிருந்து கிடைக்கும் வரிவருவாயில் மூன்றில் ஒரு பகுதியை மதுரை நாயக்கருக்கும், மற்றொரு பகுதியை படைவீரர்களுக்கும், இன்னொரு பகுதியை சொந்தச் செலவுக்கும் பிரித்துக்கொள்வதோடு, போர்காலங்களில் மதுரை படைக்கும் துணைபுரிய வேண்டுமெனவும், பாளையத்திற்குள் நடக்கும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கவேண்டுமெனவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

விசுவநாதருக்குப் பின் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1564-1572), வீரப்ப நாயக்கர் (1572-1595), முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் (1601-1609), திருமலை நாயக்கர் (1623-1659), சொக்கநாத நாயக்கர் (1659-1682), இராணிமங்கம்மாள் (1689-1706), ராணி மீனாட்சி (1731-1739) உட்பட பலர் அரசாட்சி செலுத்தியுள்ளனர்.

மதுரை நாயக்க அரசர்களுள் தலைசிறந்தவராக திருமலை நாயக்கர் புகழப்படுகிறார். திருமலை சவுரி நாயுனு அய்யலுகாரு எனும் இயற்பெயரைக் கொண்டிருந்த திருமலை பேரரசர், தலைநகரை திருச்சிராப்பள்ளியிலிருந்து மீண்டும் மதுரைக்கு மாற்றியதோடு, மதுரையை விழாநகராகவும், கலைநகராகவும்

மாற்றியமைத்தவராகவும் அறியப்படுகிறார். திருவில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியாரின் தீவிர பக்தராகக் கூறப்படும் திருமலை அரசர் கட்டிடக்கலை, இலக்கியம், ஓவியம் போன்றவற்றைச் சிறப்புறச் செய்தவராகவும், மதுரை திருமலை நாயக்கர் மகால், புதுமண்டபம், தெப்பகுளம் போன்றவற்றைக் கட்டுவித்தவராகவும் பெருமைப்படுத்தப்படுகிறார்.

பல போர்களில் ஈடுபட்டடவரான திருமலை அரசர், விசயநகரப் பேரரசிலிருந்து முழுமையாக விடுபட்டு மதுரை சுதந்திரமான அரசாவதற்காக, விசய நகரப் பேரரசின் படைகளோடும் போர் செய்திருக்கிறார்.

மதுரை அரசிற்கும் மைசூர் அரசிற்கும் நடைபெற்ற மூக்கறுப்புப் போர்கள் குறிப்பிடத்தக்கவை. இருபடையினரும் எதிர்த்தரப்பினர் மற்றும் மக்களின் மூக்குகளை அறுத்து மூட்டையாகக் கட்டி எடுத்துச் சென்றது அவர்களின் வன்மையைக் காட்டுவதன்றி வேறில்லை. நாயக்கர் காலத்தில் சேது நாடு எனப்படும் சேதுபதி அரசர்களுக்கும், நாயக்கர்களுக்கும் ஒத்துழைப்பும், பகையும் இருந்ததாக வரலாற்றுப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. மதுரையில் மைசூர் படைகள் செய்த அட்டூழியத்திற்கு, சேதுப்படை ஒத்துழைப்போடு மைசூர் சென்ற மதுரை படைகள், மைசூர் மக்களின் மூக்கறுத்தாகக் கூறப்படுகிறது,

திருமலை நாயக்கரின் பேரரான சொக்கநாத நாயக்கர் காலத்தில் கொடிய பஞ்சங்கள் எற்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. தஞ்சை மீதும், சேதுபதி சீமையோடும் போர் புரிந்த சொங்கநாதர், பெண் கொடுக்க மறுத்த தஞ்சையின் விசயநகர நாயக்கரோடு வன்மமாகப் போர் செய்தவராகவும் அறியப்படுகிறார்.

சொக்கநாத நாயக்கரின் மனைவியான மங்கம்மாள், பேரனான விசயரங்க சொங்கநாதன் சார்பாக ஆட்சி புரிந்தவராக அறியப்படுகிறார். முகலாய பேரரசர் ஔரங்கசீப்போடு ஒப்பந்தம் செய்து கொண்ட இராணி மங்கம்மாள் மைசூர், தஞ்சை, கேரள இரவிவர்மர் அரசுகளோடு போர் செய்தவராகவும், கிறித்துவ, இசுலாம் மதங்களோடு நல்லுறவு பேணியவராகவும், பல்வேறு அறச்செயல்கள் செய்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். நாட்டு மக்களுக்கு ஏராளமான நலத்திட்டங்களை மேற்கொண்ட மங்கம்மாள் அரசியார், கோவில்கள் கட்டியவராகவும், குளங்கள் வெட்டி கால்வாய்களை அமைத்தவராகவும், சாலைகளையும், சத்திரங்களையும் அமைத்து வணிகத்தை மேம்பாடு

அடையச்செய்தவராகவும், பயணிகளுக்குத் தண்ணீர் பந்தல்கள், சோலைகள் ஏற்படுத்தியவராகவும் புகழப்படுகிறார்.

தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட நாயக்க அரசர்களில் பெரும்பாலோனோர் வைணவ சார்புடையவர்களாக இருந்த போதிலும், சைவ சமயத்தையும் போற்றியவர்களாகவே குறிப்பிடப்படுகின்றனர், கோவில்களில் உயர்ந்த கோபுரங்களைக் கட்டிய நாயக்க அரசர்கள், அழகிய வேலைப்பாடுகளுடைய பல மண்டபங்களையும் அமைத்திருக்கின்றனர்.

கோவில் நகரம் எனப் போற்றப்படும் மதுரையின் பெருமைக்கும், அழகிற்கும் சிறப்புச் சேர்ப்பது மீனாட்சியம்மன் திருக்கோவில் எனில் மிமையாகாது, உலக அதிசயமாக இடம்பெறத்தக்கதான மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக் கோவிலுக்கு, பாண்டி மன்னர்கள் காலம் தொடங்கி, நகரத்தார் சமூகம் உட்பட பல்வேறு காலகட்டங்களில் அறப்பணிகள் செய்யப்பட்டிருப்பினும், நாயக்கர்களின் ஆட்சிகாலத்தில் மிகச் சிறப்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போதைய கோவில் தோற்றத்திற்கு விசுவநாத அரசர் தொடங்கி, திருமலை அரசர் மற்றும் இராணி மங்கம்மாள் போன்றோர், போற்றத்தக்க அளவில் மீனாட்சிக்கும், கூடல் நகருக்கும் திருப்பணிகள் செய்திருப்பதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

உயர்ந்த கோபுரங்களும், ஆயிரமாயிரம் அழகு மிக்க கவித்துவமான சிற்பங்களும், மண்டபங்களும், பொற்றாமரைக் குளமும் மீனாட்சிக்கு அழகு சேர்ப்பவை எனில் மிகையாகாது. மதுரையை அரசாளுடம் மரகதவல்லி மீனாட்சி, மீனைப் போன்று கண்ணிமைக்காது உயிர்களைக் காத்து வருவதாகக் கருதப்படுகிறது, அங்கயற் கண்ணியான அன்னை மீனாட்சி பச்சைத் தேவி, தடாதகை, அபிடேக வல்லி, அபிராம வல்லி, கயற்கண் குமாரி, கற்பூர வல்லி, குமரித்துறையவள், கோமகள், சுந்தர வல்லி, பாண்டிப்பிராட்டி, மதுராபுரித்தலைவி, மாணிக்க வல்லி உட்பட ஏராளமான பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மீனாட்சியை அழகுறப் பாடுகிறது. தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றான பிள்ளைத்தமிழ், கடவுளைரையேனும், மக்களுள் சிறந்தோரையேனும் குழந்தையாக வைத்து, காப்பு முதலிய பத்து பருவங்களை அமைத்துப் பாடுவது ஆகும். திருமால் காப்புக்

கடவுளாதலின் முதல் செய்யுளை அவரது காப்பாக அமைத்தல் மரபாகக் கூறப்படுகிறது. பொருள் தெரியாத ஒலியை எழுப்பும் செங்கீரை, தாலே தாலேலோ எனும் தாலப் பருவம், கையோடு கைசேர்த்துக் கொட்டும் படி அமைக்கும் சப்பாணிப் பருவம், குழந்தையை முத்தம்தா என வேண்டும் முத்தப் பருவம், தளர் நடையிட்டு வரும் குழந்தையை வாவா என அழைக்கும் வருகைப் பருவம், நிலவை குழந்தையோடு விளையாட அழைக்கும் அம்புலிப் பருவம், பாட்டுடைத் தலைவியை அம்மானை ஆடக் கூறும் அம்மானைப் பருவம், நீராட அழைக்கும் நீராடல் பருவம், ஊசல் ஆடும் ஊசல் பருவம் என பெண் பிள்ளைகளுக்கான பத்துப் பருவங்கள் பிள்ளைத் தமிழில் அமைக்கப்படுவது வழக்கமாகக் கூறப்படுகிறது. மீனாட்சியம்மன் கோவிலுக்கும், மதுரைக்கும் பெருமை சேர்த்த திருமலை மன்னர் முன்னிலையில், ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளால், மீனாட்சி கோவிலில் அரங்கேற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படும் பெண்பால் பிள்ளைத் தமிழ் நூல்களில் தலை சிறந்ததான மீனாட்சி பிள்ளைத்தமிழில், மீனாட்சியம்மையின் பத்துப் பருவங்கள் அழகு தமிழில் சொற்சுவையுடன் அமைக்கப்பட்டுள்ளதாகப் புகழப்படுகிறது.

மீனாட்சி அம்மனின் பெருமைகளை உரைக்கும் பிள்ளைத் தமிழ் நூல், பாண்டிய நாட்டையும், தமிழ் மொழியையும் சேர்த்து பெருமைப்படுத்துகிறது. கங்கைமுடி மகிழ்நர் திருவுளமசைந் தாடக் கலந்தாடு பொன்னூசலக் - கடவுடிரு நோக்கத்து நெக்குருகி யிடநின் கடைக்கணோக் கத்துமற்றச் - செங்கண்விடை யவர்மனமு மொக்கக் கரைந்துகுருகு செய்கையவர் சித்தமே பொற் - றிருவூச லாவிருந் தாடுகின் றாயெனும் செய்தியை யெடுத்துரைப்ப -அங்கணெடு நிலம்விடர் படக்கிழித் தோடுவேர் அடியிற் பழுத்தபலவின் - அளிபொற் சுளைக்குடக் கனிப்புடைந் தூற்று தேன் அருவிபில மேழுமுட்டிப் - பொங்கிவரு பொழின் மதுர மதுரைநா யகிதிருப் பொன்னூச லாடியருளே - புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி பொன்னூச லாடியருளே (மீ.பி.தமிழ் 10-4).

சொக்கர், சொங்கநாதர், சோமசுந்தர், சுந்தரேசுவரர், ஆலவாய் அண்ணல் எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறும் சிவபெருமானோடு கோவில் கொண்டுள்ள கிளியேந்திய மீனாட்சியம்மனுக்கு, ஆண்டு முழுக்கவே விழாக்கள் நடைபெற்றாலும், சித்திரைத் திருவிழா மிகவும் சிறப்பானது. சித்திரைத் திருவிழாவின் தேரோட்டமும், மீனாட்சி திருக்கல்யாணமும், அழகர் ஆற்றில் இறங்கும் விழாவும் மக்கள் மனதில் நீங்க இடம் பெற்றவையாகப் புகழப்படுகின்றன.

சித்திரைத் திருவிழா சைவமும் வைணவமும் இணைந்த திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது, சமயங்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தும் விதமாக திருமலை மன்னரால் ஒருங்கிணைக்கப்பட்டதாகக் கருதப்படும் சித்திரை விழாவில், கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் நிகழ்வு முக்கியமானதாக விளங்குகிறது.

மதுரையின் அருகே அழகர் மலையில் அமைந்திருக்கும் அழகர் கோவில், புகழ்பெற்றதொரு திவ்யதேசமாகக் கருதப்படுகிறது. சோலைமலை, திருமாலிருஞ்சோலை, மாவிருங்குன்றம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறும் அழகர் மலையின் திருமால், மீனாட்சியின் அண்ணனாகக் குறிப்பிடப்படுகிறார். தங்கையின் திருமணத்திற்கு வரும் அண்ணன் கள்ளழகர், வழியெங்கும் நிரம்பி வழியும் மக்கள் கூட்டத்தால் சற்று தாமதமாக வருவதாகவும், அதற்குள் மீனாட்சி-சுந்தரேசுவரர் திருமணம் முடிந்துவிடுவதால், வைகை ஆற்றோடு திரும்பிவிடுவதாகவும் கூறப்படுகிறது, மேலும் துர்வாச முனிவரால் மண்டூகமாக அதாவது தவளையாக மாற்றப்பட்ட சுதப முனிவருக்கு அருள் புரியும் விதமாக மாலிருஞ்சோலை நம்பியான கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருள்வதாகவும் தொன்ம வரலாறு குறிப்பிடுகிறது.

வாராரு வாராரு அழகர் வாராரு என எட்டுத்திக்கும் அதிரும் வண்ணம் இரண்டு செவிகளுக்கும் வயிரக் கடுக்கன் இசையும்படி தானணிந்து, கைதனிலே பாசிபந்து கரியமால் வண்ணன் கணையாழி தானணிந்து, இடுப்பிலே ஒட்டியாணம், இருபுறமும் பொன்சதங்கை, காப்பு கொலுசுமிட்டு கரியமாலுக்கே காலில் பாடகமிட்டு, கோவிந்தா கோவிந்தா என மக்கள் வெள்ளத்தில் சீர்பாதங்களால் அழைத்து வரப்படும் திருமாலிருஞ்சோலை சுந்தரராஜபெருமாள், கள்ளழகராக கண்டாங்கிப் பட்டுடுத்தி, கையில் நேரிக்கம்பு ஏந்தி, தங்கக் குதிரையில் மதுரைக்கு எழுந்தருளும் போது, கோபுரத்தின் கீழ சந்தனக்கதவில் குடியிருக்கும் காவல் தெய்வமான பதினெட்டாம்படி கருப்பண்ணசாமியிடம் அனுமதி பெற்று புறப்படுவதாகவும், கருபண்ணரிடம் நகை கணக்குகளை ஒப்படைப்பதாகவும், அழகுமலைக்குத் திரும்பும் போதும் அவ்வாறே நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது.

உலகைக் காப்பவருக்கு காப்பு தெய்வமாக, காவல் தெய்வமாக அறியப்படும் கருப்பண்ண சாமி, தமிழகத்தில் பரவலாக அறியப்பட்ட ஊர் காவல் தெய்வமாக இருக்கிறார், ஒருங்கிணைந்திருந்த மதுரை, இராமநாதபுரம் பகுதிகளில் மிகவும் புகழ்பெற்ற காவல் தெய்வமாக, குலதெய்வமாக பல்வேறு சமூகத்தவர்களால்

வழிபடப்படும் அருள்மிகு கருப்பசாமின் வரலாறு, இராமாயணத்தோடு தொடர்புடையதாகக் கூறப்படுகிறது.

வால்மீகி இராமாயணத்தின் உத்தர காண்டத்தின் படி, சீதைப்பிராட்டியார் தொட்டிலில் குழந்தையை வைத்து வால்மீகி மாமுனிவரை சற்று நேரம் பார்த்துக் கொள்ளச் சொன்னதாகவும், பின்னர் மாமுனி தியானித்திலிருந்த போது பிராட்டியார் குழந்தையை எடுத்துக் கொண்டதாகவும், தியானம் முடித்த மாமுனிவர் குழந்தையைக் காணாது தர்பைப் புல்லிருந்து குழந்தையை உருவாக்கியதாகவும், அவரே கருப்பசாமி எனவும் ஒரு தொன்மக்கதை கூறப்படுகிறது.

நாட்டார் தெய்வங்கள், கிராம தெய்வங்கள், காவல் தெய்வங்கள், குல சாமிகள் என தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுவதும் ஏராளமான சாமிகள் வழிபடப்பட்டு வருகின்றனர். சிறு தெய்வங்கள் எனக் குறிப்பிடப்படும் நாட்டுப்புற கடவுளர்கள், தொன்மையான வழிபாட்டு முறைக்கு அடையாளங்களாக இருந்து வருகின்றனர். மூத்தோர்களின் வழிபாட்டு முறைப்படியும், நம்பிக்கையின் அடிப்படையிலும், மரபாக வழிபடப்பட்டு வரும் கிராமிய வழிபாடு உலகின் தொன்மையான வழிபாடாகக் குறிப்பிடப்படுகிறது.

பண்டைய தமிழர்களது தொன்மைக் கூறுகளின் எச்சமாகத் தற்போதும் விளங்கிவரும் நாட்டார் வழிபாட்டில், மண் காத்த வீரர்களும், மக்களுக்காகப் போராடி உயிர் நீத்த வீரர்களும், நடுகல்லாக வழிபடப்பட்டு, பின்னர் காவல் தெய்வங்களாக, குல சாமிகளாக, முன்னோடிகளாக மாற்றமடைந்ததாகக் கருதப்படுகிறது. பெண் தெய்வங்களில் பெரும்பாலும் அநீதியால் உயிர் துறந்தவர்களும், கன்னிப்பெண்களும், வீட்டுத் தெய்வங்களாகவும், ஊர்த்தெய்வங்களாகவும் வழிபடப்படுகின்றனர், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, சமயபுரம் மாரியம்மன், இருக்கண்குடி மாரியம்மன், தாயமங்கலம் முத்துமாரியம்மன், கோட்டை மாரியம்மன் போன்ற புகழ்பெற்ற அம்மன் கோவில்கள், ஆரம்ப காலங்களில் சிறுதெய்வ வழிபாடாக இருந்து பின்னர் புகழ்பெற்ற கோவில்களாக மாற்றம் கண்டவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

குலம், இனம், மொழி எனப் பலவாறாக மக்கள் வாழ்வதால், அதற்கேற்றாற் போல் நாட்டார் தெய்வங்களின் எண்ணிக்கையும் அதிகமிருக்கின்றன. கருப்பு, கருப்பசாமி, கருப்புசாமி, கருப்பண்ண சாமி, கருப்பராயன் எனப் பலவாறாகக்

கூறப்படும் கருப்பர் வழிபாட்டிலேயே ஏராளமான கருப்பனார் கோவில்கள் காணப்படுகின்றன. சங்கிலிக் கருப்பன், பெரிய கருப்பன், சின்னக் கருப்பன், ஆகாயக் கருப்பன், சமயக் கருப்பன், சந்தனக் கருப்பன், தூண்டிக் கருப்பன், சோணைக் கருப்பன், குலக் கருப்பன், ஒண்டிக் கருப்பன், முன்னோடிக் கருப்பன், கோட்டை வாசல் கருப்பன், வீரக் கருப்பன், மாரக் கருப்பன், சோலைக் கருப்பன், மலைக் கருப்பன், வேட்டைக் கருப்பன், முத்துக் கருப்பண்ண சாமி, மடைக் கருப்பன், மலையாளக் கருப்பு எனப் பல பெயர்களில் அழைக்கப்படும் கண் கண்ட காவல் தெய்வமான கருப்பசாமி, தமிழகத்தின் தலை சிறந்த காவல் தெய்வமாப் போற்றப்படுகிறார்.

காவலுக்கும் வேட்டைக்கும் பெயர் பெற்ற கருப்பசாமியின் தோற்றம் சிறப்பானது. நின்ற கோலத்தில், பெரிய உருமால் கட்டி (தலைப்பாகை), கொண்டை போட்டு, மிரட்டும் விழிகளும், முறுக்கிய மீசையும், ஓங்கிய வீச்சருவாலோடு கச்சை கட்டி, கதை வைத்து நெற்றியில் திருமண் அல்லது திருநீறு அணிந்து கருப்பசாமி காட்சி தருவார். கருப்பசாமிக்கு குடும்பம் உள்ளதென்றும் அவரது தங்கை ராக்காயி எனவும் கூறப்படுகிறது.

வாராரு வாராரு கருப்பசாமி வாராரு - வானத்துக்கும் பூமிக்கும் புது வடிவம் தாங்கி வாராரு - வீச்சருவா கையிலேந்தி வேகமாக வாராரு - வீரபத்ர சாமிகூட விருவிருன்று வாராரு - காடுமலை மேடுகளை கடந்து கடந்து வாராரு - சின்னக் கருப்பும் பெரிய கருப்பும் சேர்ந்து வர வாராரு - சிவக்க வெத்தலை போட்டு சீறி பாய்ந்து வாராரு - வாராரைய்ய வாராரு நம்ம கருப்பசாமி வாராரு.

தமிழகத்தின் நாட்டுபுறத் தெய்வங்களில் புகழ்பெற்றவர்களாக கருப்பசாமி, முனிஸ்வரன், அய்யனார், சுடலைமாடன், மதுரைவீரன், அண்ணன்மார் சாமி போன்ற சாமிகள் குறிப்பிடப்படுகின்றனர். சுடலை மாடன் சாமி நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் போன்ற பகுதிகளில் குறிப்பிட்ட சில சமுதாயத்தினர்களால் சிறப்பாக வழிபடப்படுகிறார். காவல் தெய்வமான சுடலை மாடனுக்கு நடத்தப்பெறும் கொடைவிழாவும், இரவுப் பூசையும், பலி முறையும் குறிப்பிடத்தக்கவை.

அண்ணன்மார் சாமி எனப்படும் பொன்னர் சங்கர் வழிபாடு அல்லது பெரிய நோம்பி, தமிழக மேற்கு மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைப்

பெற்றிருக்கிறது. பெரிய குதிரைகளில் அமர்ந்திருக்கும் பொன்னர் சங்கர் சிலைகள் கொங்கு கிராமப் பகுதிகளில் தவறாமல் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது,

தமிழகமெங்கும் பரவலாகக் காணப்படும் சிறப்பான வழிபாடாக முனி, முனியன், முனியப்பன், முனியசாமி எனப்படும் முனிஸ்வரர் வழிபாடு அறியப்படுகிறது. முனியப்பசாமியின் தோற்றம் பற்றி பல்வேறு வரலாறுகள் கூறப்படுகின்றன. ஒரு கதையின் படி, அசுரர்களை அழிப்பதற்காக லாட முனி, முத்து முனி, செம்முனி, வாழ்முனி, கும்பமுனி, சடைமுனி,

வேதமுனி எனும் ஏழு புதல்வர்களை அன்னை பராசக்தி உருவாக்கியதாகவும், அசுரர்களை அழித்தபின், கலியுகத்தில் மக்களைக் காக்க வேண்டி ஒரே வடிவாகிப் பூமிக்கு வந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

அகன்ற கண்களும், முரட்டு மீசையும், பருத்த உடலும், வலது கையில் நீண்ட கத்தியும், இடது கையில் கதையும், ஒற்றைக் காலை மடித்து அமர்ந்த நிலையில் காணப்படும் முனியப்பபர் சிலைகள் தமிழ் மண்ணில் ஏராளமாகக் காணப்படுகின்றன.

தமிழர்களிடையே ஐயனார் அல்லது அய்யனார் வழிபாடும் புகழ்பெற்றதாக இருக்கிறது. வெள்ளைக் குதிரையிலே அய்யானாரே.. வேகமாக வந்தருளும் அய்யனாரே.. எனப் பாடப்படும் ஐயனார், பெரும்பாலும் கண்மாய் கரைகளில் அமைக்கப்பட்டிருக்கும் குதிரையின் மீது அமர்ந்து வீச்சரிவாள் ஏந்தியவராக இருக்கிறார். அய்யனாரோடு மற்ற துணை தெய்வங்களும் யோகிகளும் அமைக்கப்படுவதுண்டு. ஐயனாருக்கு முன்னே இரு பக்கங்களிலும் இரு குதிரைகள் முன்னங்காலைத் தூக்கியவாரும், தூக்கிய கால்களை இரு பூதங்கள் தாங்கியவாறும் மரபாக அமைக்கப்படுகிறது. அடைக்கலம் காத்த அய்யனார், வெட்டுடைய அய்யனார், வேம்புலி அய்யனார், வீரமுத்து அய்யனார், நிறை குளத்து அய்யனார், கரையடிகாத்த அய்யனார், சொரிமுத்து அய்யனார், வழிவிட்ட அய்யனார், கற்குவேல் அய்யனார், நீர் காத்த அய்யனார் உட்பட பல்வேறு அய்யனார்களும் வழிபடப்பட்டு வருகின்றனர்.

சாஸ்தா, சாத்தன் அல்லது சாத்தனார் எனும் பெயர் புத்தரைக் குறிப்பதாகவும், புத்தரான சாத்தரின் வழிபாடே அய்யனார் வழிபாடாக மாற்றம் பெற்றிருப்பதாகவும் கூறப்ப்படுகிறது. மேலும் தமிழகப் பௌத்தர்களிடையே சாத்தன்

எனும் பெயர் பரவலாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. சாஸ்தா எனும் புத்தர் கோவில்கள் ஐயனார் கோவில்களாக்கப்பட்டது போன்றே, முனீசுவரர் மற்றும் தர்மராசர் கோவில்களும் புத்தரோடும் தொடர்புபடுத்தப்படுகின்றன. மேலும் சமணர்களோடு தொடர்புடைய தெய்வங்களும் நாட்டுப்புற வழக்கில் கலந்திருப்பதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

தமிழ் நிலமெங்கும் பெருவாரியாகக் காணப்படும் சிறுதெய்வ வழிபாடும், தெய்வங்களும், உயர்வு கருதி, சிவன் மற்றும் விஷ்ணுவோடு இணைக்கப்படுவது அண்மைக் காலங்களில் பரவலாகி வருவதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன, சிவனார் மற்றும் விட்டுணுவின் அடையாளமாகச் சுட்டப்படும் ஐயப்பன் வழிபாடு அதிகரித்து வருவது அதற்கான சிறந்ததொரு சான்றாகச் சுட்டப்படுகிறது. தமிழ்நாடு, கேரளா என்றில்லாமல் தென்னிந்தியா, இலங்கை எனப் புகழ்பெற்று வரும் சபரிமலை ஐயப்பன் வழிபாடு சைவ, வைணவ ஒற்றுமைக்கான அடையாளமாகவும் கருதப்படுகிறது.

பந்தள அரசரால் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் மணிகண்டனோடு தொடர்புபடுத்தப்படும் ஐயப்பன் சாஸ்தா, தர்ம சாஸ்தா எனவும் குறிப்பிடப்படுகிறார். ஐயப்பனோடு கருப்பசாமியும் இணைத்துக் கூறப்படுவதுண்டு. மேலும் ஐயப்பனை கருப்பன், சுடலை, முனி போன்ற சாமிகளாகப் பாவிப்பதும் கிராமங்களில் பரவலாக உள்ளது. ஐயப்பன் வழிபாடு பெருந்தெய்வ வழிபாடாக மாறிவிட்ட நிலையில் ஐயனார் போன்ற கிராம தெய்வங்கள், கிராமிய மணத்தோடு தொடர்ந்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழர்களின் பொருளாதார வளர்ச்சி குலசாமிகளின் கோவில் கட்டுமானங்களிலும், திருவிழாக்களிலும் சிறப்பாக எதிரொலிப்பதாகக் கருதப்படுகிறது. மண் பீடங்களிலும், குத்துக் கல்லிலும், மரங்களிலும் வழிபடப்பட்டுவந்த குலதெய்வங்கள் தற்போது சிலைகளாகவும், பெருங்கட்டிடங்களாகவும், ஆகமக் கோவில்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றன. மேலும் கெடா வெட்டு போன்ற உயிர் பலி, சாராயம் தவிர்க்கப்பட்டு சைவப் படையல்கள் இடுவதும், குல முறைப் பூசாரிகளைத் தவிர்த்து வைதீகர்களைக் கொண்டு பூசைகள் மேற்கொள்வதும், குல சாமிகளை பெருந்தெய்வ ஒற்றை மத அடையாளமாக ஆக்க முயற்சிப்பதும் நடைபெறுகிறது. வைதீகக் கட்டிடமாக்கத்தின்

போதே கிராமக் கோவில்களில் பெருந்தெய்வங்களின் சிலை வைப்பதும், தனிச் கோவில்கள் கட்டுவதும், அதற்கேற்ப புராணக் கதைகள் பரப்பப்படுகின்றன.

கிராமிய ஆண் தெய்வங்களில் கருப்பசாமி, முனியசாமி, ஐயனார் போன்ற முதன்மை தெய்வங்களோடு ஏராளமான துணை தெய்வங்களும் சுட்டப்படுகின்றன. வீட்டுத் தெய்வம், குல தெய்வம், இனத் தெய்வம், ஊர்த் தெய்வம், பொதுத் தெய்வம் எனப் பலவாறாகக் குறிப்பிடப்படும் கிராமியத் தெய்வங்களில் மல்லாண்டார், பெரியாண்டார், மாடசாமி, இருளப்பசாமி, தன்னாசி, மாயாண்டி, சடையாண்டி, பாண்டி, மதுரை வீரன், வேடனார், இடும்பன், சோலையப்பன், வெள்ளைச்சாமி, காத்தவராயன், கூத்தாண்டவர் எனப் பல்வேறு தெய்வங்களும் வணங்கப்படுகின்றனர்.

தாய்த் தெய்வத்திற்கு தமிழ் மண்ணில் சிறப்பான இடம் வழங்கப்பட்டிருக்கிறது. குடும்பங்களில் வணங்கப்பெறும் வீட்டுச் சாமி, குடும்ப தெய்வம், கன்னித்தெய்வம், வாழ்வரசி தாய் தெய்வமாகவே இருக்கும். தாய்த் தெய்வங்கள் மற்றும் கன்னித் தெய்வங்கள் என வழிபடப்படும் பெண்கடவுள்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். தாய் தெய்வங்கள் செழுமையின், வளமையின், பெருக்கத்தின் குறியீடாகத் திகழ்கின்றன. உயிர்கள் அனைத்தையும் பெற்றெடுப்பவளாகவும், அழியாத கன்னித் தன்மை உடையவளாகவும் வழிபடப்படும் பெண் தெய்வங்கள் உலகம் முழுவதும் காணப்படுவது சிறப்பானது.

யாரு கடன் தீர்ந்தாலும் மாரி கடன் தீராது எனக் குறிப்பிடப்படும் மாரியம்மாள் வழிபாடு, தமிழ் மண்ணுக்கு சிறப்புச் சேர்ப்பதாக விளங்கி வருகிறது. மழையாகப் பொழிந்து மண்ணுயிர்களையெல்லாம் காப்பவராகக் கருதப்படும் அருள்மிகு மாரியம்மாள் வழிபாடு, கிராமங்களில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. மழைத் தெய்வமான மாரியம்மனுக்கு முளைப்பாரி எடுத்தல், தீச்சட்டி எடுத்தல், மாவிளக்கு எடுத்தல், ஆயிரங்கண் பானை எடுத்தல், ஆடு, சேவல் பலியிடல், காது குத்துதல், கரும்பு தூக்கல், மொட்டை போடுதல், கால் நடையாகச் செல்லுதல், பசு காணிக்கை அளித்தல் போன்றவை சடங்குகளாகவும் நேர்த்திக்கடனாகவும் செய்யப்படுகின்றன. அம்மை உட்பட அனைத்து நோய்களுக்கும் காப்பாகக் கருதப்படும் இருகண்முடி மாரியம்மன் கோவில், தென் மாவட்டங்களில் புகழ்பெற்றதாகத் திகழ்கிறது. வைப்பாறு, அர்ச்சுனன் ஆறு எனும்

ஆறுகளுக்கு நடுவில் அமைந்துள்ள கோவில், பழம் பெருமை உடையதாகவும் அறியப்படுகிறது.

நாட்டுப்புறத் தெய்வங்களான மாரியம்மன், காளியம்மன், சீலக்காரியம்மன், பேச்சியம்மன், துர்கையம்மன், அங்காளம்மன், இசக்கியம்மன், முத்தாலம்மன், முத்தாரம்மன், எல்லையம்மன், நாச்சியம்மன், திரௌபதியம்மன், சக்கம்மாள், ஏழு கன்னிமார். வாழவந்தம்மன், சோலையம்மன், மாசாணியம்மன், செல்லாண்டியம்மன், நல்லதாங்காள், கண்ணகியம்மன், பிடாதியம்மன், பெரியாண்டிச்சி அம்மன், கொங்காயி அம்மன், வெள்ளையம்மன், கருப்பாயம்மன், காத்தாயி அம்மன், பாப்பாத்தியம்மன், மந்தையம்மன், பச்சை வாழையம்மன், பாலம்மன், குளத்து அம்மன், குழந்தையம்மன், பெத்தம்மன், கங்கம்மன், கன்னியம்மன், இடைச்சியம்மன் உட்பட ஏராளமான கிராம தேவதைகள், தெய்வங்கள், தமிழ்நாடெங்கும் நிறைந்து காணப்படுகின்றனர். கிராம தெய்வங்கள் தவிர அம்மனுக்கென்றே அமைந்த கோவில்களும் இருக்கின்றன. மேலும், பெருந்தெய்வங்களின் பெயரிலமைந்த கோவில்களும் ஏராளமாக உள்ளன.

கொடையளிக்கும் அன்பு பாராட்டும் தாய்மைத் தெய்வங்கள் போன்றே, கோபத்திற்கும், ஆவேசத்திற்கும், வீரத்திற்கும் பெயர் பெற்ற காளி, பராசக்தி, கொற்றவை, துர்கை, சக்தி, பார்வதி, உமை எனப் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படும் காளியம்மன் வழிபாடும் புகழ்பெற்றதாகக் காணப்படுகிறது. உஜ்ஜயினி மாகாளியம்மன் எனத் தென் மாவட்டங்களில் பரவலாக வழிபடப்படும் காளியம்மன் வழிபாடு, தொன்மை இலக்கியங்களில் குறிப்பிடப்படும் கொற்றவையோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது.

ஆதிபராசக்தி எனப் போற்றப்படும் துர்க்கை வழிபாடு, இந்தியாவெங்கும் பரவலாகத் காணப்படுகிறது. மேதியவுணன் கொல்பாவையாக அதாவது மகிசாசுரவர்தினியாக மைசூரின் தசரா வழிபாடும், வங்கத்தின் துர்க்கா வழிபாடும், விசயவாடாவின் கனகதுர்க்கை வழிபாடும், கேரளத்தின் பகவதியம்மன் வழிபாடும், காசுமீரத்தின் சாரிகை வழிபாடும், நவராத்திரி வழிபாடும் துர்க்கையின் பெருமையைப் போற்றும் விதமாக அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

நாட்டார் தெய்வங்கள், மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்பவையாகவும், மக்களைப் பாதுகாப்பவையாகவும் கருதப்படுவதால்,

கிராமங்களில் நாட்டார் தெய்வங்களே பெரிதும் வணங்கப்படுகின்றன. கிராம மக்கள் பெருந்தெய்வங்களை வணங்கிய போதிலும், அவரவர் நாட்டுத் தெய்வங்களிலேயே மிகுந்த பற்றுள்ளவர்களாகவும் இருக்கின்றனர்.

காவல் தெய்வங்கள் ஊர்களையும், ஊரில் குடியிருக்கும் மக்களையும் காக்க, இரவு வலம் வருவதாகக் கூறப்படுவதன் காரணமாகவே, அத்தெய்வங்கள் குதிரையோடு தொடர்புடையவர்களாக வடிவமைக்கப்படுவதாகவும் கருதப்படுகிறது.

தொண்டை நாட்டின் புகழ்பெற்ற செஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்டு அரசு புரிந்த விசயநகரப் பேரரசின் வழிவந்தவர்கள் செஞ்சி நாயக்கர்கள் என அழைக்கப்படுகின்றனர். விசய நகர மற்றும் நாயக்கர் ஆட்சிக்கு முன் செஞ்சி மற்றும் காஞ்சி பகுதிகளில் சிற்றரசர்களாக இருந்தவர்கள் சம்புவரையர்கள் என அழைக்கப்பட்டிருக்கின்றனர், வட மாவட்டங்களான திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருள்ளூர் போன்ற பகுதிகளை உள்ளடக்கியிருந்த சம்புவரையர்கள், படைவீடு மற்றும் விருஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டம் போளூரை அடுத்துள்ள படவேடு பகுதியை தலைநகராகக் கொண்டு 1236 முதல் 1375 வரை சம்புவராய மன்னர்கள் அரசாண்டதாகக் கருதப்படுகிறது. சம்புவராய அரசர்களாக ராஜகம்பீரர் (1236-1268), மண்கொண்டார், மூன்றாம் ராஜநாராயணர் (1356-1375) போன்றோர் குறிப்பிடப்படுகின்றனர். சம்புவராயர்களால் மருதரைசர் படைவீடு எனவும் விசய நகரப் பேரரசால் படைவீடு ராச்சியம் எனவும் அழைக்கப்பட்ட படைவீடு பகுதியில் கோட்டை மற்றும் கோவில்கள் காணப்பட்டதாகவும், பின்னர் அவை காலமாற்றத்தால் அழிவுக்கு உள்ளானதாகவும் கூறப்படுகிறது. படவேட்டில் அமைத்துள்ள பரசுராமரோடு தொடர்புடைய அன்னையாகக் கருதப்படும் படவேடுரேணுகாம்பாள் கோவில் பழமையானதாகவும் புகழ்பெற்றதாகவும் விளங்கி வருகிறது.

பதினான்காம் நூற்றாண்டில் வலிமையான சிற்றரசர்களாக விளங்கிய திருவண்ணாமலைப் பகுதி சம்புவரையர்களும், விழுப்புரம் மாவட்டம் சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய காடவராயர்களும் வன்னியர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். பிற்காலச் சோழர்களின் ஆளுமையின்

கீழிருந்த சம்புவர்களும் காடவர்களும், சோழர்களின் வீழ்ச்சிக்குப் பின் சுதந்திரமான சிற்றரசர்களாக விளங்கியதாகவும், போசளர்களின் படையெடுப்புகளுக்கு ஆளாகியதாகவும் கூறப்படுகிறது. பல்லவர்களின் வழித்தோன்றல்களாக அறிவித்துக் கொண்டவர்களான சம்புவ மற்றும் காடவ அரசுகள் கல்வெட்டுகளையும் கோவில்களையும் சான்றுகளாக விட்டுச் சென்றுள்ளன.

சேந்தமங்கலத்தில் உள்ள நான்கு வாசல்களையுடைய சதுர்முகதுர்க்க கோட்டையான சேந்தமங்கலம் கோட்டை, காடவராய மன்னர்களுள் ஒருவரான மணவாளப்பெருமான் மற்றும் அவரது மகன் கோப்பெருஞ்சிங்க காடவராயன் காலத்தில் (ஆ.காலம் 1229-1278) கட்டப்பட்டதாகக் கல்வெட்டுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. மாறவர்மன் குலசேகர பாண்டியனால் காடவர் குல ஆட்சி 1279 இல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டாலும், காடவர்கள் கட்டியெழுப்பியதாகக் கூறப்படும் கெடிலம் நதியை நோக்கியவாறு அமைந்துள்ள வாணிலைக் கண்டேசுவரா கோட்டை சிவன் கோவில் தற்காலத்திலும் அவர்களது புகழினைப் பரப்பியவாறு வரலாற்றில் நிலைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

படையாச்சி, பள்ளி, கவுண்டர், நாயக்கர், வன்னிய குல சத்திரியர் உட்பட பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படும் வன்னியர் குல மக்கள், வட தமிழ் தமிழ்நாட்டில் பெருவாரியான மக்கள் கூட்டமாக அறியப்படுகின்றனர். அக்னி குலத்தவராகக் குறிப்பிடப்படும் வன்னியர், இலங்கை வன்னிப் பகுதியிலும் செல்வாக்குடன் இருந்ததாகக் சான்றுகள் கூறுகின்றன. போர்த்தொழில் புரிந்தவராகக் கூறப்படும் வன்னியர், தற்காலத்தில் பெரும்பாலும் பயிர்தொழில் செய்பவராகவே காணப்படுகின்றனர். வறுமையான சூழல் காரணமாகவே வன்னிய குலத்தைச் சார்ந்த ஏராளமான குடும்பத்தவர்கள் அயல் நாடுகளுக்கு கடும் உழைப்பாளிகளாக இடம் பெயர்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. வடபகுதியில் பெரும்பான்மையாக வாழும் முதலியார், நாயுடு மற்றும் ரெட்டி போன்ற சாதியினர் நிலவுடமையாளர்களாகவும் தொழில் முனைவர்களாகவும் வணிக முதலாளிகளாகவும் சமூக மேம்பாட்டோடு இருக்க, பெருவாரியான வன்னிய குலத்தவர், நிலங்களில் பாடுபடும் கூலித் தொழிலாளர்களாகவும், சிறிதளவு நிலம் வைத்திருப்பவர்களாகவும் அறியப்படுகின்றனர்.

தமிழகத்தின் பெருமையைப் போற்றும் சிறந்ததொரு சான்றாக திருவண்ணாமலை அருகேயான செஞ்சிக் கோட்டை விளங்குகிறது. ஏராளமான வரலாற்று நிகழ்வுகளைத் தன்னுள்ளே பொதித்து வைத்திருக்கும் செஞ்சியும் அதன் கோட்டைக் கொத்தளங்களும், தமிழகத்தில் எஞ்சியிருக்கும் வரலாற்று ஆவணவாகக் கருதப்படுகின்றன. மராத்திய சிவாஜியால் சிறந்த அரண் கொண்ட கோட்டை என்றும், பிரித்தானியரால் கிழக்கின் திராய் எனவும் புகழப்பட்டதாகக் குறிப்பிடப்படும் செஞ்சிக் கோட்டை இயற்கையோடு ஒன்றிய கிருஷ்ணகிரி, சந்திரகிரி, ராஜகிரி எனும் மூன்று பெரிய மலைகள், இரண்டு சிறிய குன்றுகள், சுமார் பன்னிரெண்டு கிலோ மீட்டர்கள் நீளமுள்ள மதில் சுவர்களால் இணைத்து முக்கோண வடிவமாகக் கட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தரையில் கட்டப்பட்டவை, தண்ணீரால் சூழப்பட்டவை, மலைமீது கட்டப்பட்டவை, காடுகளுக்கு இடையில் அமைக்கப்பட்டவை என நான்கு விதமான கோட்டைகள் இருந்துள்ளன. சங்க காலம் தொடங்கி அய்ரோப்பியர் காலம் வரை, தமிழ் நிலத்தில் ஏராளமான கோட்டைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அவற்றுள் காலத்தால் முந்தையவை வரலாற்றுத் தடம் கூட இல்லாமல் முற்றாக பெரும்பாலும் அழிந்துவிட்ட போதிலும், ஒரு சில கோட்டைகளின் தடையங்கள், சிதைவுகள் தற்காலத்திலும் காணக்கூடியவையாக இருக்கின்றன. பிற்காலத்தைய கோட்டைகளுள் பெரும்பாலானவை விசய நகர நாயக்க மன்னர்களால் கட்டடப்பட்டவையாகவே குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. நல்ல நிலையில் காணப்படும் கோட்டைகளாக செஞ்சிக் கோட்டை, வேலூர் கோட்டை, புனித ஜார்ஜ் கோட்டை உட்பட சில கோட்டைகளே குறிப்பிடப்படுகின்றன. மேலும் திண்டுக்கல், வந்தவாசி, உதயகிரி, கன்னியாகுமரி (வட்டக் கோட்டை), திருச்சி போன்றவற்றின் கோட்டைகளும் சிறப்பானவையாகக் கூறப்படுகின்றன.

தமிழகத்தில் பழம்பெருமை பேசும் அரண்மனைகள் பெரியளவில் இல்லாவிடினும் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படும் அரியலூர் மாவட்டம் உடையார்பாளையும் அரண்மனை பழமையும் பெருமையும் மிகுந்த அரண்மனையாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

செஞ்சிக் கோட்டையை காடவரையர் அரசர் செஞ்சியர் கோன் காடவன் கட்டியதாகவும், ஆனந்த கோன் எனும் இடையர் குல அரசர் கட்டியதாகவும் குறிப்பிடப்படுகிறது. ஆனந்த கோன் அரசர் செஞ்சிக் கோட்டையின் கட்டுமானப்

பணியினை முதலில் துவக்கியவராக கல்வெட்டுச் சான்றுகள் அறியப்பட்டிருக்கின்றன. ஆனந்தகோன் அரசர் மரபில், பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து பதினான்காம் நூற்றாண்டின் துவக்கம் வரை கிருஷ்ணா கோன், கோனேரி கோன், கோவிந்த கோன், வலிய கோன், கோட்டியலிங்க கோன் (1320-1330) எனப் பல அரசர்கள் ஆட்சிபுரிந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

காஞ்சியை சம்புவரையர்களிடமிருந்து வெற்றி கொண்ட குமார கம்பணர், படைவீடு இராஜநாராயண சம்புவரையரையும் வெற்றி கொண்டு, சோழர் காலத்திலிருந்தே புகழ்பெற்று விளங்கிய செஞ்சியை விசயநகரப் பேரரசின் ஆளுக்கைக்குள் கொண்டு வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. கோனேரி நாயக்கர் தொடங்கி, பெத்த கிருஷ்ணப்பர், முத்து கிருஷ்ணப்பர், முத்து வேங்கடப்பர், செஞ்சி வரதப்பர், இராமபத்ரர் போன்ற அரசர்கள் செஞ்சியை அரசு புரிந்திருக்கின்றனர்.

செஞ்சியை அரசுபுரிந்த நாயக்கர்களில் துப்பகுல கிருஷ்ணப்ப நாயக்கர் எனும் பெத்த கிருஷ்ணப்ப நாயக்கர் குறிப்பிடத்தக்கவராக அறியப்படுகிறார். தற்காலத்தைய செஞ்சிக் கோட்டையின் வடிவமைப்பை நிர்மாணித்தவராகவும் செஞ்சி இராஜகிரி கோட்டையில் சொத்தளங்கள், தானியக் களஞ்சியங்கள், மதில்களைக் கட்டியவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

சிங்கபுரி, சிங்கபுரி கோட்டம், சிங்கவரம் எனப் பலபெயர்களில் அறியப்பட்ட செஞ்சிக்கோட்டை கோவில்கள், மண்டபங்கள், குளங்கள், பாசறைகள், நெற்களஞ்சியங்கள், கருவூலங்கள், அகழிகள், மதில்கள் எனச் சிறப்பான கட்டிடக்கலையில் அமைக்கப்பட்டிருக்கிறது, 1645 இல் பீஜப்பூர் ஆட்சிக்கு பின்னர் மராத்தியர், முகலாயர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என மாறி மாறி வந்த செஞ்சிக் கோட்டையின் புகழ்பெற்ற அரசர் ராஜா தேசிங்கு எனில் மிகையாகாது.

தேசிங்கு ராஜாவைப் பற்றியும் அவரது வீரத்தைப் பற்றியும் ஏராளமான கதைகள் நாட்டுப்புற வழக்கில் கூறப்படுகின்றன. தேசிங்குராஜன் கூத்தும் மக்கள் மனங்களில் நீங்கா இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. ஔரங்கசீப் படைகளால் மராத்தியரிடமிருந்து கைப்பற்றப்பட்ட செஞ்சிக்கு, சொரூப்சிங் என்பவர் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கிறார். சொரூப் சிங்கிற்கும் ராமாபாய் என்பவருக்கும் மகனாகப் பிறந்த தேசிங்கு, பின் செஞ்சியின் தலைமைப் பொறுப்பிற்கு வந்திருக்கிறார்.

நீலவேணி எனும் சிறப்புமிக்க குதிரையையும், முகமத்கான் எனும் படைத் தளபதியையும் பெற்றிருந்த ராஜா தேசிங்கு, முகலாயரின் மண்டல ஆளநராக இருந்த ஆற்காடு நவாப்பிற்கு திறை செலுத்த மறுத்திருக்கிறார். 1713 இல் ஆற்காட்டு நவாப் சாதத் உல்லாகானின் திடீர் படையெடுப்பிற்கு ஈடுகொடுக்க முடியாமல் தீரத்துடன் போரிட்டும் தேசிங்கு ராஜாவால் வெற்றிபெற இயலவில்லை. ஆற்காடு நவாப்பால் பிடிக்கப்பட்ட செஞ்சிக் கோட்டை, பின்னர் 1750-ல் புஸ்ஸி எனும் பிரெஞ்சுத் தளபதியால் கைப்பற்றபட்டிருக்கிறது.

சடையவர்ம குலசேகர பாண்டியனுக்கு நெருக்கமானவராகவும், வீர பாண்டியனோடு 1207 ஆம் ஆண்டில் போரில் ஈடுபட்டவராகவும், பாண்டிய நாட்டின் ஒரு பகுதியை அரசுபுரிந்தவராகவும் கூறப்படும் மெரொக்கோ நாட்டில் பிறந்த சய்யிது இப்ராகீம் (1142-1207), மாறவர்மன் குலசேகர பாண்டியனது தலைமை அமைச்சராக இருந்ததாகக் கூறப்படும் ஷேக் ஜக்கியுத்தீன், சுந்தரபாண்டியனுக்குப் பின் காயல்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய சுல்தான் செய்யிது ஜமாலுதீன் (ஆ.காலம் 1293-1306) மற்றும் பாண்டிய மன்னர்களின் அலோசகர்களாக, அமைச்சர்களாக, படைத் தலைவர்களாக, பின்னர் மதுரை சுல்தான்களாக ஏராளமான இசுலாமியர்கள் வரலாற்றில் இடம் பெற்றிருப்பினும், ஆற்காடு பகுதியைத் தலைநகராகக் கொண்டு தென்னிந்திய கருநாடகப் பகுதிகளை ஆட்சி செலுத்திய ஆற்காடு நவாப்புகள் ஆட்சிகாலமே (1692-1867) தமிழகத்தில் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவமுள்ள இசுலாமிய ஆட்சியாகக் குறிப்பிடப்படுகிறது. கருநாடக நவாப்புகள் எனவும் அழைக்கப்பட்ட ஆற்காடு நவாப்புகள், மொகாலயப் பேரரசர் ஔரங்கசீப்பால் தென்னிந்தியப் பகுதிகளில் வரிவசூல் செய்ய நியமிக்கப்பட்டிருக்கின்றனர். நவார் சுல்பிகர் அலிகான் (1692-1703) தொடங்கி, நவாப் குலம் முகம்மது கவுஸ்கான் (1825-1855) வரையிலும், பின்னர் ஆங்கில ஆட்சியிலும், சுந்திர இந்தியாவிலும் ஆற்காடு இளவரசர்களாகத் தொடரும் நவாப்புகள் மரபு, தமிழகத்தின் வடமாவட்டங்களிலும், ஆங்கில - பிரெஞ்சு - மைசூர் - கர்நாடகப் போர்களிலும் குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தியிருக்கின்றனர்.

ஔரங்கசீப் காலத்திற்குப்பின் (1618-1707) சுதந்திரமாகச் செயல்பட்ட ஆற்காடு நவாப், ஐதராபாத் நிஜாம் போன்ற அரசுகளுக்கிடையே நிகழ்ந்த மோதல் போக்குகளில் பிரெஞ்சு மற்றும் பிரித்தானியப் படைகள் உள் நுழைந்திருக்கின்றன.

நிசாமின் ஆளுகையின் கீழ், கருநாடகப் பகுதியின் நவாப்பாக இருந்த தோஸ்து அலியின் மறைவிற்குப் பின், நிசாமின் மருமகன் சாந்தா சாகிப்பிற்கும், ஆற்காடு நவாப் அன்வருதீன் முகமதுக்கும் இடையே கருநாடக ஆட்சியாளராவதில் கடும் போட்டி நிலவியிருக்கிறது. சாந்தாசாகிப்புக்கு ஆதரவாக பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பனியும், அன்வருதீனுக்கு ஆதரவாக பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியும் களம் புகுந்திருக்கின்றன. ஆற்காடு நவாப்புக்கு ஆதரவாகப் போரிட்ட பிரிதானியக் கம்பனி, விரைவிலேயே வரிவசூல் செய்யும் உரிமைபெற்று, பின்னர் ஆட்சிப்பகுதி முழுவதையும் ஆங்கிலேயர் வசமாக்கியிருக்கிறது.

ஆற்காடு நவாப்களில் புகழ்பெற்றவராக முகமது அலி வாலஜா (1749-1795) குறிப்பிடப்படுகிறார். முகலாயர்களுக்கு திறை செலுத்துவதை மறுத்து, நவாப் நல்லாட்சி செய்தவராகவும், சமய சகிப்புத்தன்மை கொண்டவராகவும், ஆட்சிப் பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் செய்தவராகவும் அறியப்படுகிறார்.

ஆற்காடு படைவீரராகவும், பின்னர் பிரித்தானிய படைத்தலைவராகவும், மதுரை சுல்தானாகவும் இருந்த மருதநாயகம் எனும் முகம்மது யூசுப்கான், குறிப்பிடத்தக்கவராக வரலாற்றில் நினைவு கூறப்படுகிறார். சிவகங்கை மாவட்டம் பனையூரில் வேளாளர் குலத்தில் பிறந்து பின்னர் இசுலாமியராக மாறியதாகக் கூறப்படும் யூசுப் கான், ஆற்காடு நவாப் மற்றும் ஆங்கிலேயருக்கு ஆதரவாக, அவர்களை எதிர்த்த பாளையக்காரர்களுடன் போரில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்படுகிறார்.

பிரித்தானியப் படைப்பிரிவில் சேர்ந்து, பிரெஞ்சுப் படையினருக்கு எதிராக தீரத்துடன் போர்புரிந்து வெற்றிகளை ஈட்டிய யூசுப்கானின் வீரத்தைப் பாராட்டி, கான் சாகிப் எனும் பட்டத்தை இராபர்ட் கிளைவ் வழங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. 1755 ஆம் ஆண்டுகளில் மதுரை, நெல்லை பகுதிகளின் பாளையக்காரர்களை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட கான்சாகிப் யூசுப்கான், கட்டாலங்குளத்தின் ஆட்சியாளர் வீர அழகு முத்துக் கோனையும், நெற்கட்டும் சேவல் பாளையக்காரர் புலித்தேவனையும் வெற்றி கொண்டிருக்கிறார்.

தாய் மண்ணின் உரிமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடிய மாவீரர்களில், தமிழகத்தின் பங்கு அளிப்பரியது. ஆரம்ப கால சுதந்திர வேட்கையை முன்னெடுத்த மாவீரர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக வீரத்திற்கும்,

போருக்கும் பெருமைபெற்ற தமிழ் மண்ணின் ஆட்சியாளர்கள் இருந்துள்ளனர். ஒரு சிலர் ஆங்கிலேயே அரசோடு நட்புறவு கொண்டிருந்தாலும், பல ஆட்சியாளர்கள் வெகு தீரத்துடன் அந்நியரை, கும்பினியரை எதிர்த்து தீரத்துடன் போர் புரிந்துள்ளனர். அவ்வகையில் இந்திய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த பாளையக்காரர்களின் பங்கு மகத்தானது எனில் மிகையாகாது.

ஆங்கிலேயப் படைகளைப் பயன்படுத்தியதால் ஆற்காடு நவாபிற்கு அதிக செலவு ஏற்பட்டதாகவும், அதற்கு ஈடாக நவாப் ஆட்சிப் பகுதிகளில் வரிவசூல் செய்யும் உரிமை ஆங்கிலேயருக்கு அளிக்கப்பட்டதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன. நவாப் சாந்தாசாகிபின் தந்திரத்தால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட மதுரை நாயக்க மரபிற்குப் பின், பாண்டியப் பகுதிகள் அனைத்தும் நவாபின் மேலாண்மைக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. வரிவசூலில் ஈடுபட்ட ஆங்கிலேயர்கள் பாளையக் காரர்களின் ஆதிக்கத்தை ஒடுக்க நினைத்திருக்கின்றனர். பாளையக்காரர்களுக்கு ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகள் கடுமையான எதிர்ப்புணர்வை அளித்திருக்கின்றன.

வணிக நோக்கங்களை முதன்மைப்படுத்திய ஆங்கிலேயர், உள்நாட்டுத் தொழில்களை நசுக்கியதோடு, வரிகளைவும் கடுமையாக உயர்த்தி, ஈவிரக்கமற்ற வசூலிலும் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. விளைவாக, ஆங்கிலேயருக்கும் பாளையக்காரர்களுக்கும் மோதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. பாளையக்காரர்களின் ஆதிக்கத்தை வெறுத்த நவாப்புகள், ஆங்கிலேயருக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றனர். ஆங்கிலேயே எதிர்ப்புணர்வு கொண்ட பாளையக்காரர்கள் ஒன்றிணைந்து, ஆங்கில-நவாப் கூட்டணியை எதிர்த்திருக்கின்றனர். அவர்களுக்கு பிரெஞ்சு மற்றும் டச்சுக்காரர்களின் ஆதரவும், திப்புசுல்தான் போன்ற அரசர்களின் ஒத்துழைப்பும் கிடைத்திருக்கிறது. எனினும் பாளையக்காரர்களிடையே சரியான புரிந்துணர்வும், ஒற்றுமையும், நம்பிக்கையும் அமையாத காரணத்தால், கடுமையான போர்கள் மற்றும் கொடூரமான தண்டனைகள் மூலம், பாளையக்காரர்களை அடக்கியும் மக்களை அச்சுறுத்தியும், ஆங்கிலேயர்களின் கம்பெனி தொடர்ந்து வலிமைபெற்று வந்திருக்கிறது.

மாவீரம் காட்டி ஆங்கிலேயரை எதிர்த்த வீர அழகு முத்துக்கோன் (1728-1757), படைத்தளபதிகளோடு பீரங்கியால் சுடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் ஏராளமான படை வீரர்களும் கொடூரமாக முடிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்தால் என்னாகும் என்பதைக் காட்டவே கொடூர தண்டனைகள் தரப்பட்டிருக்கின்றன. பீரங்கியில் கட்டப்பட்ட போதும் நெஞ்சுரத்துடன் இருந்தவராகப் புகப்படும் அழகுமுத்துக் கோன், தமிழ் மண்ணின் பழமை வாய்ந்த இடையர் சமூகத்தவராகக் கூறப்படுகிறார்,

முல்லை நிலத்திற்குரிய மக்களாகக் குறிப்பிடப்படும் இடையர்கள், ஆயர்கள், கோனார்கள், கீதாரிகள் போன்ற பல பெயர்களால் குறிப்பிடப்படுகின்றனர். குறிஞ்சிக்கும் மருதத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்ததால் இடையர் என அழைக்கப்பட்டதாகக் கூறப்படும் இடையர் குலத்தவர், யாதவர் எனவும் அழைக்கப்படுகின்றனர். வட இந்தியாவில் பெரும்பான்மையாக வாழும் யாதவர்களும், தமிழ் நிலத்தின் ஆயர்களும், கால்நடை வளர்த்தல் மற்றும் அது தொடர்பான தொழில் முறையில் ஒன்றுபட்டவர்களாக இருக்கின்றனர். தற்காலத்தில் யாதவர் என அழைக்கப்படுவதைப் பெருமையாகக் கருதும் ஆயர்கள், பெரும்பாலும் வைணவர்களாக இருப்பதோடு ஸ்ரீகிருஷ்ணரையும் முதன்மையாகக் கருதுகிறார்கள்.

சங்க இலக்கியங்களில் முல்லைநிலம் தொடர்பாகவும் முல்லை நில வாழ்க்கை குறித்தும் ஏராளமான பாடல்கள் புனையப்பட்டிருக்கின்றன. பத்துப்பாட்டின் முல்லைத் திணைக்குரிய நூலான முல்லைப்பாட்டு, நல்பூதனார் எனும் நப்பூதனார் இயற்றியதாக அறியப்படுகிறது. கால்நடைச் செல்வங்களைப் போற்றிய ஆயர்கள் வாழ்வு, தமிழ் மணம் நிரம்பியதாக இருப்பது கண்கூடு. மதுரை, இராமநாதபுரம், நெல்லை பகுதிகளில் அதிகமாக ஆயர்கள் வாழ்கிறார்கள். குறும்பர், குறும்ப இடையர் அல்லது குறுமன்கள் ஆடு மேய்பவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

கும்பினியாருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த அழகுமுத்துக் கோன் அவர்கள், எட்டயபுர ஜமீன் ஜெகவீரராமபாண்டிய எட்டப்பருக்கு நெருங்கிய நண்பராக இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. நாயக்கர்கள் ஆட்சிகாலத்தில் மிகப்பெரிய பாளையமாக விளங்கிய எட்டயபுரம், மிகப் பழமையானதாகவும் வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன. ஜெகவீரராம பாண்டியர் காலத்தில் சிறப்பான விரிவாக்கம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் எட்டயபுர பாளைய அரசர்கள், பல கோவில்களைக் கட்டியதாகவும், திருப்பணிகள், அன்னதானம், நிலதானம் போன்றவற்றைச் செய்ததாகவும் புகழப்படுகின்றனர். மேலும் தெலுங்கை தாய்மொழியாகக்

கொண்டிருந்த போதிலும், தமிழுக்கு சிறப்பான தொண்டு செய்தவர்களாகவும், தமிழ் புலவர்களை ஆதரித்தவர்களாகவும், கல்விச்சேவை ஆற்றியவர்களாகவும் எட்டயபுர பாளையத்தார் குறிப்பிடப்படுகின்றனர். எட்டயபுர அரண்மணையில் தமிழுக்குப் பெருமை சேர்த்த பாரதி அவைப்புலவராக இருந்திருக்கறார்.

வீரத்திற்குப் பெயர்பெற்ற நெல்லைச் சீமையில் ஆங்கிலேய கும்பனிப் படையை மாவீரத்துடன் எதிர்த்தவராக நெற்கட்டும் சேவல் புலித்தேவன் (1715-1767) புகழப்படுகிறார். பூலித்தேவன் நண்பராக கொல்லங்கொண்டான் பாளையக்காரர் வாண்டயத்தேவன் மற்றும் படைத்தளபதிகளாக இருந்தாரென வெண்ணிக்காலாடி, ஒண்டிவீரன், பொட்டிப் பகடை போன்றோர் குறிப்பிடப்படுகின்றனர். வீரத்துடன் போரிட்டவராக அறியப்படும் புலித்தேவன் பல வெற்றிகளைப் பெற்ற போதும், ஆங்கிலேயரின் நவீன ஆயுதங்களுக்கும் ஒருங்கிணைந்த தாக்குதல்களுக்கும் ஈடு கொடுக்க முடியாமல் பின்வாங்கியிருக்கிறார். 1761-ம் ஆண்டில் யூசுப்கான் தலைமையில் நடைபெற்ற பேய்வாய் பீரங்கித் தாக்குதலில், நெற்கட்டும் சேவல் கோட்டை சிதைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆற்காடு நாவப்புகளாலும் ஆங்கிலேயராலும் கொண்டாடப்பட்ட யூசுப்கான் பின்னர் அவர்களுக்கே பகையாக மாறியிருக்கிறார். மதுரை மற்றும் நெல்லையின் ஆளுநராக இருந்த யூசுப்கான், அதிகமான வரி வசூல் செய்து கொடுத்தும், அவர் மக்களிடையே செல்வாக்குப் பெற்று வருவது ஆட்சியாளர்களுக்குப் பிடிக்கவில்லை எனத் தெரிகிறது. மதுரையின் சுதந்திர ஆட்சியாளராக, சுல்தானாக அறிவித்துக் கொண்ட யூசுப்கான் மீது கம்பனிப் படை தாக்குதல் தொடுத்திருக்கிறது. கம்பனியாரோடு, தஞ்சை, திருவிதாங்கூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை பாளையங்களும் கைகோர்த்ததாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. பின்னர் நவாப்பின் படைகளும் சேர்ந்து கொள்ள, உடன் இருந்தவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு, கான் சாகிப் மருதநாயகம், சம்மட்டிபுரத்திலுள்ள ஒரு மரத்தில் முடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மைசூரின் ஹைதர் அலியும், அவரது மகன் திப்பு சுல்தானும் ஆங்கிலேயரை எதிர்த்து மாவீரத்துடன் போரிட்டவர்களாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளனர். விசயநகரப் பேரரசு மற்றும் பாமினி சுல்தானகத்தால் ஆளப்பட்டு வந்த மைசூர் அரசு, யதுராய உடையாரால் (1399-1423) உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. விசய நகரத்திற்கு உட்பட்டிருந்த மைசூர் அரசு, பின்னர் இரண்டாம் திம்மராச

உடையார் (1553-1572) காலத்திலிருந்து, தன்னாட்சி பெற்ற அரசுரிமையாக இருந்து வந்திருக்கிறது. ஐதர் மற்றும் திப்பு அரசர்கள் காலத்தில், அவர்களது ஆட்சியதிகாரத்திற்கு உட்பட்டிருந்த உடையார் அரசர்கள் (1734-1796), பின்னர் பிரித்தானியருக்கு அடங்கிய அரசுரிமையாகவும் (1796-1950), இந்திய சுதந்திரத்திற்குப் பின் சிறப்புத் தகுதிகொண்ட அரச மரபாக இருந்து வருவதாகவும் அறியப்படுகிறது.

உடையார் அரசமரபின் (1399-1950) செல்வ வளத்திற்குச் சான்றாக மைசூரு அரண்மணை குறிப்பிடப்படுகிறது. கருநாடகாவின் கலாச்சாரத் தலைநகராகப் புகழப்படும் மைசூரு, நீண்ட பாரம்பரியம் கொண்ட நகராக விளங்குகிறது. காவிரிக்கும் அதன் துணை ஆறான கபினிக்கும் நடுவில் அமைந்துள்ள மைசூரு தசரா விழாவிற்குப் புகழ்பெற்றது.

1897 ஆம் ஆண்டில் தொடங்கி 1912 இல் கட்டி முடிக்கப்பட்ட பிரம்மாண்டமான மைசூர் அரண்மனை, கருநாடகத்திற்கு மட்டுமின்றி இந்தியாவிற்கே புகழ் சேர்ப்பதாகக் கூறப்படுகிறது. மைசூரின் தசராக் கொண்டாட்டங்களின் போது வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் அரண்மணை பார்க்கத் திகட்டாத ஒரு காட்சியாக வருணிக்கப்படுகிறது. மெய்யியலாளராக அறியப்படும் நான்காம் கிருஷ்ணராஜ உடையார் ஆட்சிக்காலத்தில் (1884-1940) மிகுந்த பொருட்செலவில் கட்டப்பட்ட (1897-1912) மைசூர் அரண்மனை மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் கொண்டதாக, தர்பார் மண்டபம், திறந்தவெளி அறைகள், மல்யுத்த மைதானம், வேட்டை அறை என பல்வேறு வசதிகள் கொண்டதாக ஆடம்பரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. சாமுண்டி குன்றின் மீது அமைந்துள்ள சாமுண்டீஸ்வரி அம்மனை குல தெய்வமாக கொண்டவராகக் குறிப்பிடப்படும் உடையார் அரசர்கள் காலம் தொட்டு, தசரா திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்படுவதாகக் கூறப்படுகிறது. விழா காலங்களில் அரண்மனையின் மின்னொளி அலங்காரம் சிறப்பானது.

மைசூரு முன்னர் மகிசூர் என அழைக்கப்பட்டு வந்ததாகவும் மைசூரின் புகழ்பெற்ற சாமுன்டேஸ்வரி மகிஷாசுர வதம் செய்ததால் அவரது பெயராலேயே மகிசூரு என அழைக்கப்பட்டதாகவும் பழங்கதை கூறப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து ஆயிரத்து அறுபத்தைந்து அடிகள் உயரம் கொண்ட சாமுண்டி மலை மீது அமைந்துள்ள சாமுண்டீஸ்வரி கோவில், பன்னிரெண்டாம் நூற்றாண்டுக்

காலத்தில் ஹொய்சாளர்களால் கட்டப்பட்டதாகவும், பின்னர் விசய நகர அரசர்களால் மேம்படுத்தப்பட்டு, உடையார்களால் சீரமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கருநாடக மாநிலத்தின் பண்டிகை எனும் பொருள் கொண்ட நாடஹப்ப அதாவது மைசூரு தசராவின் போது, நகரின் முக்கிய வீதிகளில் சாமுண்டீஸ்வரி தேவி அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வலம் வருவது சிறப்பு. ஊர்வலத்தில் நடனக் குழுக்கள், இசைக் குழுக்கள், அழகு செய்யப்பட்ட யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், அழகுக்கு அழகு சேர்ப்பவை.

மைசூருக்கு அருகே பொங்கி வரும் காவேரிக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள கண்ணம்பாடி என்னும் கிருஷ்ணராஜ சாகர் அணையும், அதனை அடுத்து வடிவமைக்கப்பட்டுள்ள பிருந்தாவன் தோட்டமும் மைசூருக்குப் பெருமை சேர்ப்பவை எனில் மிகையாகாது. கண்ணம்பாடி அணையை உருவாக்கியதில் பெரும் பங்காற்றியவராக பாரத ரத்னா சர்மோக்குண்டம் விசுவேசுவரய்யா (1860-1962) புகழப்படுகிறார். இந்தியாவின் தலைசிறந்த பொறியாளராகக் கருதப்படும் திரு. விசுவேசுவரய்யா, இந்திய பாசன ஆணையத்திற்காக பல்வேறு வடிவமைப்புகளைக் கண்டறிந்து, திறன்பட செயல்படுத்தியவராக அறியப்படுகிறார். விருப்ப ஓய்வில் மைசூரு திவானாகப் பணியாற்றிய விசுவேசுவராய்யா, அங்கும் ஏராளமான பொதுப்பணிகளுக்கு அடித்தளமிட்டவராகக் குறிப்பிடப்படுகிறார்.

மைசூருக்கு அருகிலமைந்துள்ள ஸ்ரீரங்கப்பட்டிணம் ஆன்மீக கலாச்சார வரலாற்று சிறப்புமிக்க நகராகக் கருதப்படுகிறது. காவிரியின் மிகப்பெரிய தீவான சிறீரங்கப்பட்டிணத்தில் அமைந்துள்ள அரங்கநாதசுவாமி திருக்கோவில் தொன்மையானதாகப் புகழப்படுகிறது. மேலைக் கங்கர்களால் தொள்ளாயிரத்து எண்பத்து நான்காமாண்டில் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படும் திருக்கோவிலுக்கு போசள மற்றும் விசய நகர அரசுகள் ஏராளமான திருப்பணிகள் செய்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. உடையார் அரசின் முதலாம் இராஜ உடையாரால் (1578-1617) 1610 ஆம் ஆண்டில் விசய நகரத் தளபதி இரங்கநாயரிடமிருந்து கைப்பற்றப்பட்டு சிறீங்கப்பட்டிணம் ஐதர் அலி திப்பு அரசர்கள் காலத்தில் அவர்களது தலைநகராகவும் இருந்திருக்கிறது.

பொது ஆண்டின் எண்நூற்றி ஐம்பதுகளில் எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்படும் கவிராஜமார்க்கம் எனும் கன்னட நூலே, கன்னட மொழியில் கிடைக்கும் பழமையான நூலாக அறியப்படுகிறது. நிருபதுங்க எனும் முதலாம் அமோகவர்சரால் எழுதப்பட்டதாக அறியப்படும் கவிராஜமார்க்க நூலுக்கு முன்னரே, பல கன்னட நூல்கள் இயற்றப்பட்டதாக கவிராசமார்கத்தில் குறிப்புகள் இருப்பினும், அந்நூல்கள் கிடைக்கப் பெறாதது குறிப்பிடத்தக்கது. கன்னடத்தின் பேச்சு வழக்கு, செய்யுள் மற்றும் இலக்கணத்திற்குப் பெரும்பங்காற்றியதாகப் புகழப்படும் கவிராசமார்க்கம், காவியதர்சா எனும் சமஸ்கிருத நூலினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பபட்டிருக்கிறது.

அரண்மனைப் புலவரை துணை ஆசிரியராகக் கொண்டு அமோசவர்சரால் இயற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படும் கவிராச மார்க்கம், அக்காலத்திலிருந்த பல்வேறு கன்னட பேச்சு வழக்குகளை இணைத்து, ஒரு திட்டமான கன்னட மொழி இலக்கணத்தை வரையறுக்கும் விதமாக உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கன்னட புராதன கவிகள் உருவாக்கியிருந்த பேதந்தே, சட்டனா மற்றும் காத்யகதா போன்ற எழுத்து முறைகளை உள்வாங்கி அமைக்கப்பட்ட கவிராஜ மார்க்கத்தை வழிகாட்டியாகக் கொண்டு அதாவது ராஜ வழியாகக் கொண்டு, ஏராளமான கன்னட இலக்கிய ஆளுமைகள் உருவானதாகக் குறிப்பிடப்படுகிறது. கவிராசமார்க்கத்தால் அறியப்படும் முக்கியமான ஆளுமைகளாக, ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படும் புலவர் துர்வினிதர், ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர்களான விமலர், நாகர்சுனர், ஜெயபோதி, உதயர், கவிசுவரர், பண்டிதர், சந்திரர், லோகபாலர் போன்றோர் குறிப்பிடப்படுகின்றனர்.

கன்னட இலக்கிய உலகின் முதல் கவியாக ஆதிகவி பம்பா புகழப்படுகிறார். பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரும், சாளுக்கிய இராண்டாம் அரிகேசரியின் அரண்மனைப் புலவராக இருந்தவருமான பாம்பா புலவரால் இயற்றப்பட்ட பம்பா பாரதம் அல்லது விக்ரமார்ஜுன விஜயம் மற்றும் ஆதி புராணம் நூல்கள், கன்னட இலக்கிய உலகின் முன்மாதிரியாகக் சிறப்பிக்கப்படுகின்றன.

சமணத்தின் முதல் தீர்த்தங்கரரான ரிசபர் வாழ்க்கையை ஜினசேனர் சமஹ்கிருதத்தில் எழுதியதாகவும், அதன் கன்னட வடிவத்தையே பிராமணராகக் குறிப்பிடப்படும் ஆதிகவி பம்பா ஆதி புராணமாக எழுதியதாகவும் குறிப்பிடப்படுகிறது. வியாசரின் மகாபாரதத்தை விக்ரமார்ஜுன விஜயமாக மொழி

பெயர்த்த புலவர் பம்பா, அதில் அரிகேசரி மன்னரை அர்ஜுனராகப் புகழ்வதோடு, அர்ஜுனரைச் சுற்றியே கதை நிகழ்வதாகவும் வடிவமைத்திருக்கிறார்.

இராட்டிரகூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணரால் கவிச்சக்ரவர்த்தி எனப் பெருமைப்படுத்தப்பட்ட ஸ்ரீபொன்னா, பதினாறாவது சமண வழிகாட்டியான சாந்திநாதர் குறித்து இயற்றிய சாந்திபுராணம் சிறந்த கன்னட நூலாகப் புகழப்படுகிறது. புவனைக்க ரமாப்யுதயா எனும் சமண நூலையும், இந்து மத இராமகதையையும் இயற்றியவராக அறியப்படும ஸ்ரீபொன்னர், கன்டை இலக்கிய வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றியவராகப் போற்றப்படுகிறார்.

கீழைச் சாளுக்கிய மன்னரான இரண்டாம் தைலப்பரின் அரசவைக் கவியாக அறியப்படும் புலவர் ஸ்ரீரன்னா, அஜிதநாத வழிகாட்டி குறித்து இயற்றிய அஜிதபுராணம், சிறந்ததொரு கன்னட நூலாகக் கருதப்படுகிறது. அட்டி மப்பி எனும் சமணப் பெண்மணியின் ஆதரவில் இயற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படும் அஜிதபுராணம், அஜிதரின் வாழ்க்கையை பன்னிரண்டு பாகங்களில் விளக்குவதாகக் கூறப்படுகிறது. சாகசபீமா விஜயம் அல்லது கதா யுத்தம் மற்றும் ரன்ன காண்டம் போன்ற நூல்களை இயற்றியவராகவும் ரன்னா புலவர் புகழப்படுகிறார். மேலும் பரசுராம சரிதம், சக்ரேசுவர் சரிதம் போன்ற நூல்களின் எழுத்துக்கள் கிடைக்கப்பெறவில்லை எனவும் கூறப்படுகிறது.

சம்பு எனும் எழுத்துருவில் எழுதிய பெரும்புலவர்களான பம்பா, பொன்னா மற்றும் ரன்னா மூவரும் பண்டைய கன்னட இலக்கியத்தின் மும்மணிகளாகப் புகழப்படுகின்றனர்.

கன்னட இலக்கியம், பழையகாலம் (பொ.ஆ. 450-1200), நடுக்காலம் (1200-1700) மற்றும் நவீன காலம் (1700 முதல்) என மூன்று காலகட்டங்களாகக் குறிப்பிடப்படுகிறது. பழைய காலத்தில் சமண இலக்கியங்களும், பன்னிரெண்டாம் நூற்றாண்டின் வீரசைவ இயக்க காலத்தில் சைவ சமய இலக்கியங்களும், பதினான்காம் நூற்றாண்டில் தொடங்கிய விஜயநகரப் பேரரசு காலத்தில் வைணவ இலக்கியங்களும் பெருமளவில் வளம் பெற்றிருக்கின்றன.

விசயநகரத்திற்குப் பின் மைசூர் அரசுரிமையும், சிமோகா மாவட்டத்தில் அமைந்த கேலடியின் நாயகர்களும் (1499-1763) கன்னட இலக்கியத்தை மேம்படுத்தியவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில்

மிகப்பெரும் இலக்கிய வளர்ச்சி கண்ட கன்னட இலக்கிய உலகம், எட்டு ஞானபீட விருதுகளையும், ஐம்பத்தி எட்டு சாகித்ய அகாடமி விருதுகளையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திர இந்தியாவில் இலக்கியத்திற்காக வழங்கப்படும் உயரிய விருதாக ஞானபீட விருது மதிக்கப்படுகிறது. தி டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ் குடும்பத்தினரின் பங்களிப்புடன், 1954-ல் தோற்றுவிக்கப்பட்ட பாரதீர ஞானபீட பண்பாட்டு இலக்கியக் கழகம், 1965 முதல் விருதுகளை வழங்கி வருகிறது. 1982 வரை ஓர் எழுத்தாளரின் குறிப்பிட்ட படைப்பை பாராட்டி அளிக்கப்பட்ட ஞான பீட விருது, அதன் பின்னர் எழுத்தாளரின் வாழ்நாள் இலங்கிய பங்களிப்பைப் போற்றும் விதத்தில் அளிக்கப்படுகிறது. முதல் ஞான பீட வீருது 1965-ல் ஜி. சங்கர குருப் (1901-1978) எழுதிய, ஓடக்குழல் அதாவது புல்லாங்குழல் எனும் மலையாள ஆக்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. கன்னட இலக்கியத்திலிருந்து முதன் முதலாக, குவெம்பு எனும் புனைப்பெயரில் எழுதிய புகழ் பெற்ற எழுத்தாளரும் கவிஞருமான கே.வி. புட்டப்பா எனும் குப்பாலி வெங்கடப்ப கௌடா புட்டபாவிற்கு (1904-1994), அவரது ஸ்ரீஇராமாயண தரிசனம் எனும் நூலிற்கு 1967-ல் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக்காக 1954-ல் சாகித்ய அகாதமி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம் போன்ற பல வகையான சிறந்த எழுத்தாக்கங்களுக்காக ஒரு இலக்கிய படைப்பாளிக்கு அளிக்கப்படும் சிறந்ததொரு விருதாக சாகித்ய அகாதமி விருது மதிக்கப்படுகிறது. தமிழில் ரா.பி சேதுப்பிள்ளை (1955), கல்கி கிருஷ்ணமூர்த்தி (1956), சக்கரவர்த்தி இராஜ கோபாலச்சாரி (1958) போன்றோர், ஆரம்ப கால சாகித்ய அகாதமி விருது பெற்றிருக்கின்றனர்.

நடுக்கால கன்னட இலக்கியத்தையும், ஆன்மீகத்தையும், சமூகத்தையும் வடிவமைத்தவர்களில் முதன்மையானவர்களாக பசவண்ணர், அல்லமா பிரபு மற்றும் அக்கமா தேவி போன்றோர் புகழப்படுகின்றனர். வீர சைவம் அல்லது லிங்காயத்தின் மூன்று தூண்களாகக் குறிப்பிடப்படும் மூவரும், கன்னட இலக்கிய வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியதாகக் குறிப்பிடப்படுகின்றனர். 1180-ல் பசவண்ணரைப் பற்றி ஹரிஹரர் எழுதிய பசவராஜதேவர ரகலே எனும் கன்னடப் படைப்பும், பல்குருகி சோமநாதார் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தெலுங்கில் இயற்றிய பசவபுராணமும்,

பசவண்ணரைப் பற்றிய குறிப்பிடத்தக்க படைப்புகளாகக் கருதப்படுகின்றன. பசவரின் வசனப் பாடல்களும் சிறந்தவையாகப் புகழப்படுகின்றன.

சிவபெருமான் மேல் பேரன்பு கொண்டிருந்த கன்னடப் பெண் கவிஞர் அக்கா மகாதேவியின் (1130-1160) பாசுரங்கள், தனித்துவமிக்கவையாகக் குறிப்பிடப்படுகின்றன. மகாதேவியக்கா என்று அன்பு பாராட்டப்பட்ட அக்கமா தேவியின் வசனங்கள், எளிய சொற்களையும் அழகிய உவமைகளையும், கொண்டுள்ளதாகப் புகழப்படுகின்றன. வாழ்கையின் மறைபொருளை மக்களுக்குத் தெளிவாக விளக்கியவராகக் கூறப்படும் அக்கா மாதேவி, வீரசைவ வசன இலக்கிய மரபில் இணையற்றவராகப் புகழப்படுகிறார்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வசனக்காரரான அல்லமா பிரபு சிறந்த கவிஞராகவும், ஞானியாகவும் புகழப்படுகிறார். அக்காலத்திய சமூக பழக்கவழக்கங்களையும், சடங்குமுறைகளையும், சமூகத் தடைகளையும் கேள்விக்குட்படுத்திய அல்லமா பிரபு, நற்குணங்களையும் சிவ வழிபாட்டையும் வலியுறுத்திய பாடல்களைப் புனைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பதினாறாம் நூற்றாண்டைச் சோந்தவராக இருக்கலாம் எனக் கணிக்கப்படும் கன்னட மொழிப் புலவர் சர்வக்ஞரின் வாழ்வு குறித்து அதிகம் குறிப்புகள் கிடைக்கவில்லையெனினும், திரிபதி எனப்படும் மூன்றடிகளைக் கொண்டு அவரால் இயற்றப்பட்ட வசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. படிப்பறிவற்றவர்களும் புரிந்துகொள்ளக் கூடிய எளிமையான பாடல்களை இயற்றிய சர்வக்ஞர், நாடோடித் துறவியாக வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. முற்போக்குச் சிந்தனையாளர், தத்துவவாதி என்றெல்லாம் புகழப்படும் கவி சர்வக்ஞர் சமயம், பண்பாடு, ஒழுக்கம் , சமூகம் குறித்தான பல்வேறு செய்யுள்களைக் கொடுத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. நாம் அனைவரும் ஒரே மண்ணை மிதிக்கிறோம், ஒரே நீரைக் குடிக்கிறோம், அடுப்புத் தீயும் பிரிப்பதில்லை, எங்கிருந்து சாதி வந்தது கடவுளே.. எனக் கேட்ட சர்வக்ஞரின் பாடல்கள் வாய்மொழியாகவே மக்களைச் சென்றடைந்தாகவும் கூறப்படுகிறது.

நவீன கன்னட இலக்கியத் துறையின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியவர்களாக கவிஞர் குவெம்பு, கவிஞர் (வரகவி) த.ரா பிந்திரே எனும் தத்தாத்ரேய இராமச்சந்திர பிந்த்ரே (1896-1981) கவிஞர், எழுத்தாளர்,

சமூகவியலாளர், சூழியல் பாதுகாவலர் மற்றும் சினிமா இயக்குனர் கொட ஷிவராம் கராந்த (1902 -1997), புதின சிறுகதை எழுத்தாளர் மற்றும் கன்னடத்தின் சொத்தாகப் புகழப்படும் மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் (1891-1986), பேராசிரியர் மற்றும் எழுத்தாளருமான வி.கே.கோகாக் எனும் விநாயக கிருஷ்ண கோகாக் (1909-1992), எழுத்தாளரும் சிறந்த இலக்கியவாதியுமான யூ. ஆர் அனந்தமூர்த்தி எனும் உடுப்பி இராஜகோபாலாச்சார்ய அனந்த மூர்த்தி (1932-2014), நவீன கன்னட இலக்கியத்தின் தந்தை எனப் புகழப்படும் பெல்லுரு மைலரைய்ய ஸ்ரீ கந்தையா (1884-1946), கன்னட கவியமைப்பிற்கு புதுவடிவம் அளித்ததாகப் புகழப்படும் மொகரி கோபால கிருஷ்ண அடிகா (1918-1952) உட்பட பலரும் குறிப்பிடப்படுகின்றனர்.

கன்னட வசன இலக்கியத்தின் முன்னோடியாக பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த தேவர தாசிமய்யன் அறியப்படுகிறார். ஒவ்வொரு புளியம்பூவும் பழமாக முடியுமா இராமநாதா போன்ற இயல்பான பாடல் வரிகள் மூலம் மக்களின் மனங்களைத் தொட்டவராகக் குறிப்பிடப்படும் தாசியம்மன், ஒவ்வொரு வசனத்தின் இறுதிலும் இராமநாதா எனும் வரியோடு முடிப்பதையே வழக்கமாக்கியிருக்கிறார்.

அறிவினும் மேலானது வேறில்லை என்பதைக் குறிக்கோளுரையாகக் கொண்ட கருநாடகத்தின் முதல் பல்கலைக் கழகமான மைசூரு பல்கலைக்கழகம் 1916 ஆம் ஆண்டில் நான்காம் கிருஷ்ணராஜ உடையாரால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. சென்னை பல்கலையில் பயின்ற விசுவேசுவரய்யா, மைசூர் பல்கலை உருவாகக் காரணமாக இருந்திருக்கிறார். மேலும், இந்தியப் பொறியாளர் தினமாக நினைவு கூறப்படுவதற்கும் காரணமாக இருப்பது சிறப்பு.

இந்தியாவின் தோட்ட நகரம் எனவும் இந்தியாவின் சிலிகன் பள்ளத்தாக்கு எனவும் புகழப்படும் பெங்களூரு, கருநாடகத்தின் தலைநகராகவும், இந்தியாவின் முன்னணி நகராகவும், மகிழ்ச்சியாக வாழ்வதற்கேற்ற காலநிலையையும் பெற்றிருப்பதாகப் புகழப்படுகிறது. பல புகழ்பெற்ற கல்வி கூடங்களையும் ஆராய்சி நிலையங்களையும தொழிற்கூடங்களையும் கொண்டுள்ள பெங்களூர் நகரை நிறுவியவராக விசயநகரப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த யெலயெங்கா குறநில மன்னரான கெம்பெ கவுடா (1510-1569) புகழப்படுகிறார். பெங்களூரு நகரைச் சுற்றிலும் ஏரிகளையும், கோவில்களையும் அமைத்ததாகக் கூறப்படும் கெம்ப கெவுடா மன்னர், பெரும் சமூக சீர்திருத்தவாதியாகவும் குறிப்பிடப்படுகிறார்.

இந்திய நகரங்களில் முதன் முதலாக மின்சாரம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் பெங்களூரின் வளர்ச்சிக்கு அதன் அமைவிடமும் முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது. தக்காணப் பீடபூமியின் ஒரு பகுதியான மைசூரு பீடபூமியில் அமைந்திருக்கும் பெங்களூரு, கடல் மட்டத்திலிருந்து சுமார் மூன்றாயிரத்து பதினெட்டு அடிகள் உயரமாக இருப்பதால், ஆண்டு முழுவதும் நகரில் குளுகுளு காலநிலை நிலவுகிறது. கோடை வெப்பநிலை மிகவும் அரிதாகவே 36 -37 டிகிரி செல்சியசைத் தொடும் எனப் பதிவுகள் கிடைக்கின்றன.

மைசூரு மகாராஜா சாம்ராஜ் உடையார் பொறுப்பில், இங்கிலாந்தின் வின்ட்சர் கேஸ்டில் அரண்மனையை முன்மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்டுள்ள பெங்களூரு அரண்மனை, நகரின் முக்கியமான சுற்றுலாத் தளமாக விளங்குகிறது. ஹைதர் அலி காலத்தில் நிறுவப்பட்டதாகக் குறிப்பிடப்படும் பெங்களூருவின் லால் பாக் தாவரவியல் பூங்கா, நகரின் அழகுக்கு அழகு சேர்க்கிறதெனில் மிகையாகாது.

பெங்களூருவில் அமைந்துள்ள இந்திய அறிவியல் கழகம் நாட்டின் மிகத் தரம் வாய்ந்த முதுநிலைக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாக மதிப்பிடப்படுகிறது. இந்தியத் தொழில்துறையின் தந்தை எனப் புகழப்படும் ஜாம்செட்ஜித் நுசர்வாஞ்சி டாட்டா (1839-1904) அவர்களால் தொடங்கப்பட்ட இந்திய அறிவியல் கழகத்தின் முதல் இந்திய இயக்குனராக, புகழ்பெற்ற இயற்பியலாளர் சர் சந்திரசேகர வெங்கட் ராமன் (1888-1970) பொறுப்பு வகித்திரக்கிறார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டிற்கான இயற்பியல் நோபல் பரிசு வழங்கப்பட்ட சர்.சி.வி இராமன் அவர்கள், இந்திய அறிவியல் முன்னேற்றத்திற்கு பெரும்பங்காற்றியவராகப் புகழப்படுகிறார். திருச்சிராப்பள்ளியில் பிறந்து சென்னை மாநில கல்லூரியில் கல்வி பயின்ற சர்.சி.வி. இராமன், இந்தியாவிலேயே முழுமையாகக் கல்வி பயின்று, அறிவியலின் உச்ச சாதனையான நோபல் பரிசு வென்றது குறிப்பிடத்தக்கது. ஒளியலைகளில் ஏற்படும் அலை நீள மாற்றத்தைக் கண்டறிந்த சர்.சி.வி இராமன், அதனை இராமன் சிதறல் அல்லது இராமன் விளைவாக வரலாற்றில் பதிந்துள்ளார். இராமன் விளைவு கண்டுபிடிப்பிற்கு உறுதுணையாக இருந்தவராக, சர். சி.வி. இராமனுடன் இணைந்து பணியாற்றிய க.சீ.கிருட்டிணன் எனும் சர். கரியமாணிக்கம் சீனிவாச கிருட்டிணன் புகழப்படுகிறார். ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தி நான்காம் ஆண்டில்

வழங்கப்பட்ட முதலாவது பத்ம பூசன் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்ட சர். க. சீ, கிருஷ்ணன், இயற்பியல் ஆராய்சியில் சிறந்து விளங்கியிருக்கிறார்.

பகலில் வானம் ஏன் நீலமாகத் தெரிகிறது என்பதை விளக்கிய சர்.சி.வி. இராமன், இந்திய இயற்பியல் ஆய்விதழ், இந்திய அறிவியல் அறிவுக்கழகம் (இந்தியன் சயின்ஸ் அகாதமி), தற்காலத்திய அறிவியல் கழகம் (கரன்ட சயின்ஸ் அசோசியேசன்), கரன்ட் சயின்ஸ் ஆய்விதழ் போன்றவற்றை நிறுவியும், தலைமை வகித்தும், புதுக் கண்டுப்பிடிப்புகள் செய்தும், இந்திய அறிவியல் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்தவராகப் போற்றப்படுகிறார்.

சென்னை மாநிலக் கல்லூரியில் இயற்பியல் பயின்றவரும், சர்.சி.வி இராமனை சித்தப்பாவாகப் பெற்றவரும், இந்திய அரசின் உதவியோடு கேம்பிரிட்சு பல்கலையில் பயின்றவரும், ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்றாம் ஆண்டில் நோபல் பரிசு வழங்கப்பட்டவருமான சுப்பிரமணியன் சந்திர சேகர் (1910- 1995) அவர்களும், இந்திய அறிவியல் சிந்தனையை மேம்படுத்தியவராகப் புகழப்படுகிறார். வானியல் இயற்பியலாளரான திரு. சந்திரசேகர், விண்மீன்களின் நிறை குறித்தான ஆய்வுகளை சந்திரசேகர் எல்லை என்பதாக பதிந்துள்ளார்.

இந்தியாவின் அறிவியல் வளர்ச்சிப் பாதைக்கு அடிகோலியவர்கள் எனப் பலர் குறிப்பிடப்பட்டாலும், பிரதமர் ஜவகர்லால் நேருவின் உழைப்பும், திட்டமிடலும் சாலச் சிறந்தது. அறிஞர்களையும், அறிவியல் கூடங்களையும், ஆராய்ச்சித் திட்டங்களையும் ஊக்குவித்து, அவற்றிற்கான நிதிகளை ஒதுக்கீடு செய்து, தனிப்பட்ட ஆர்வம் காட்டி, அறிவியல் கல்வியை வளர்த்தெடுத்ததில் பிரதமர் நேருவின் பங்கு அளப்பரியது. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுக் கழகத்தின் தலைவராக இருந்த நேரு அவர்கள், தேசிய இயற்பியல் ஆய்வுக்கூடம் போன்ற ஏராளமான ஆய்வுக் கூடங்களையும், இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களையும், பல்கலைக்கழகங்களையும் உருவாக்கி, இந்தியாவின் அறிவியல் சாதனைகளுக்கு வித்திட்டிருக்கிறார். அன்றைய விதையே ஏறத்தாழ இருநூற்றுக்கும் மேலான ஆய்வுக் கூடங்களை இந்தியாவின் அறிவியல் துறை பெற்றிருப்பதற்கு காரணமாகக் கருதப்படுகிறது.

பண்டைய காலம் தொட்டே இந்தியர்களுக்கு வானவெளியில் ஆதீத காதல் இருந்துவந்த போதிலும், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வானவியல்

சாத்திரத்தை வகுத்துக் கொடுத்த போதிலும், நவீன வானவியல் துறையில் இந்தியா வெற்றி நடை போடுவதற்குக் காரணமாகச் சுட்டப்படுவது இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடம்.

விண்வெளித் துறையிலும், அணுவியல் துறையிலும், இந்தியாவின் சாதனைகள் மேலை நாட்டினருக்குச் சளைத்ததல்ல. இரண்டு துறைகளிலும் இந்தியா சாதித்ததெனில் அதற்கு முக்கியமான காரணமாகச் சுட்டப்படுவது இரண்டு பெயர்கள், அதாவது இரண்டு தந்தையர்கள். இருவரின் ஆராய்ச்சி வழிகாட்டியாகவும் குறிப்பிடப்படும் பெயர் அறிஞர் சர்.சி.வி இராமன்.

இந்திய அணுக்கருவியலின் தந்தை எனப் புகழப்படும் ஓமி யெகாங்கிர் பாபா (1909-1966), இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை எனப் புகழப்படும் விகரம் அம்பாலால் சாராபாய் (1919-1971) பெயர்கள் இந்திய அறிவியலில் நீங்கா இடம் பெற்றவை.

இயற்பியல் மீதும் கணிதத்தின் மீதும் தீராத ஆர்வம் கொண்டிருந்த ஹோமி பாபா, ஆக்ஸ்போர்ட் பல்கலையின் அழைப்பை நிராகரித்தவராகவும், இந்தியாவில் மிகச்சிறந்ததொரு ஆராய்ச்சிக் கூடத்தை நிறுவ வேண்டுமென்ற லட்சிய வேட்கை கொண்டிருந்தவராகவும் அறியப்படுகிறார். அணு ஆற்றல் மூலமாக இந்தியாவின் ஆற்றல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயலும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்த ஓமி பாபா, அணுத்துறையில் இந்தியா தற்சார்புள்ள நாடாக விளங்கவேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்டவராக அறியப்படுகிறார்.

சந்திராயன், மங்கல்யான் என இந்தியா வெற்றி மேல் வெற்றிகளாகக் குவித்துக் கொண்டு வருவதற்கு காரணம் அறிஞர் சாராபாய் தொடங்கி வைத்த பயணம் எனில் மிகையாகாது. இயற்பியல் ஆய்வுக் கூடம் முதல் பல்வேறு ஆய்வுக் கூடங்களையும் நிறுவனங்களையும் தொடங்கியவராக அறியப்படும் திரு சாராபாய், கலைத் துறையிலும் ஆர்வம் நிரம்பியவராக இருந்திருக்கிறார்.

இந்தியாவின் முதல் செயற்கைக் கோளான ஆர்யப்பட்டாவின் விண்ணேற்றத்திற்கு முழுக்காரணமாகப் புகழப்படும் சாராபாய், இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவராக இருந்து, அதனை விரிவாக்கி, அண்டவெளிப் பயணங்களுக்கு அடிகோலி, வளரும் படிச் செய்து, பெருகும் படி வழிகாட்டி, இந்தியாவை விண்வெளி யுகத்திற்கு இட்டுச் சென்றது ஒப்பற்றது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் துவங்கப்பட்ட இஸ்ரோ எனும் இந்திய விண்வெளி ஆய்வு மையம், விண்வெளித் தொழில் நுட்பத்தில் மேம்பாடுகளை ஆராய்வதையும், அவற்றை நாட்டு நலனுக்காகப் பயணப்படுத்துவதையும் முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. நிறுவனக் காலத்திலிருந்து தொடர்ந்து பல சாதனைகளைச் செய்து வரும் இசுரோ, மறு பயன்பாட்டு ஏவுகலம், இந்திய தேசிய செயற்கைகோள் தொகுதித் திட்டம், புவிக்கப்பால் ஆராய்தல், செவ்வாய் கோளிற்கு ஆளில்லா கலங்களை அனுப்புதல், புவி அண்மித்த விண்கற்கள் மற்றும் வால் வெள்ளிகளைத் துழாவும் ஆய்வுக்கலங்களை அனுப்புதல் எனப் பல்வேறு திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறது.

ஏறக்குறைய ஐந்தாயிரம் ஆராய்சியாளர்களைக் கொண்டிருக்கும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (டி.ஆர்.டி.ஓ) மிகப் பெரியதொரு விண்வெளித் தொழில் துறை மற்றும் ஆயுத உற்பத்தி நிறுவனமாகக் செயல்படுகிறது. ஐம்பதிற்கும் மேற்பட்ட கிளைகளுடன், பாதுகாப்பு சார்ந்த எல்லாத் துறைகளிலும் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வரும் டி,ஆர்.டி.ஓ, வானூர்தி இயல், மின்னணுவியல், கணினியியல், மனித வள மேம்பாடு, ஏவுகணை, கவச தாங்கி போன்ற துறைகளில் சிறப்பான முன்னேற்றம் கண்டு வருகிறது.

பதின்மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட வீரர்களைக் கொண்டிருக்கும் இந்திய இராணுவம், பூமியின் மூன்றாவது மிகப்பெரிய படைப்பிரிவாகக் கருதப்படுகிறது. இந்தியக் குடியரசின் படைகள் தரைப்படை, வான்படை, கடற்படை, கடலோரக் காவல் படை எனும் பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளன. மேலும் எல்லை பாதுகாப்புப் படை போன்ற துணை இராணுவப் படைகள் இருக்கின்றன. உலகில் மிக அதிகமாக ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடு எனப் பெயர் பெற்றுள்ள இந்தியா, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இராணுவத்திற்கே அதிகம் செலவிடுகிறது.

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையில் அதிக வீரர்களை இடம் பெறச் செய்துள்ள இந்தியாவிடம், பேரழிவு ஆயுதங்கள் கொட்டிக் கிடப்பதும் குறிப்பிடத்தக்கது. அணு ஆயுதங்கள், அணு ஆற்றலுடன் கூடிய விமானங்கள், ஏவுகணைகள், கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் என ஏராளமான பேரழிவு ஆயுதங்களைப் பெற்றுள்ள இந்திய இராணுவம், அக்னி- 6 எனும் பத்தாயிரம் கி.மீ

வரம்பிக்கும் சென்று தாக்கவல்ல ஏவுகணைகளை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்புகள் கூறுகின்றன.

முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அறிஞர்களை உறுப்பினர்களாகப் பெற்றிருக்கும் இந்திய அறிவியல் காங்கிரஸ் கழகம் (ஐ.எஸ்.சி.எ.) இந்திய அறிவியில் வளர்ச்சியில் சிறப்பான பங்காற்றியதாக் குறிப்பிடப்படுகிறது.

கல்கத்தாவில் 1914 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட அறிவியல் கழக மாநாட்டில் இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட அறிவியல் அறிஞர்கள் பங்கு பெற்றதாகவும், முப்பத்தைந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் பதிவுகள் கூறுகின்றன. கழகத்தின் நூறாவது மாநாடு கொல்கத்தாவில் 2013 ஆம் ஆண்டு பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. ஆண்டின் முதல் வாரத்தில் நடைபெறும் அறிவியல் கழக மாநாட்டில், ஆயிரக்கணக்கான அறிஞர்கள் கூடி விவாதிப்பதும் கட்டுரைகள் சமர்ப்பிப்பதும், பல்வேறு தலைப்புகளில் நிகழும் உரையாடல்களும் நாட்டின் அறிவியல் வளர்ச்சிக்கு வழி காணும் என்பதில் ஐயமில்லை. மேலும் குழந்தைகள் அறிவியல் மாநாடு. பெண்கள் அறிவியல் மாநாடு என தனியாக அறிவியல் மாநாடுகள் இடம் பெறுவதும் தனிச் சிறப்பு.

வாழ்வின் ஒற்றுமை எனும் பெயரில் 1927-ம் ஆண்டு லாகூரில் நடந்த பதினான்காவது மாநாட்டிற்கு, தாவரங்களுக்கும் உயிர் உண்டு எனும் அரிய உண்மையை உலகிற்கு அளித்த ஜகதீஷ் சந்திர போஸ் (1858-1937) தலைமையேற்றிருக்கிறார். வானொலி (ரேடியோ அலைகள்) அறிவியலின் முன்னோடி என அறிவிக்கப்பட்ட திரு. போஸ் உலகின் மிகச்சிறந்த அறிவியல் ஆய்வாளர்களில் ஒருவர் எனப் பாராட்டப்படுகிறார்.

உயிருள்ளவை மற்றும் உயிரற்றவைகளின் துலங்கல் தன்மை மற்றும் தாவரங்களின் நரம்புச் செயலமைப்பு போன்ற புகழ்பெற்ற நூல்களை வெளியிட்ட ஜே.ச.போசு, புறத்தூண்டுதலகளுக்கு தாவரங்கள் எவ்வாறு பொறுமையுடன் நடந்து கொள்கின்றன என்பதை, தாமே வடிவமைத்த கருவிகள் உதவியுடன் செயல்முறை விளக்கமளித்தது குறிப்பிடத்தக்கது.

தாவரங்களும் மனிதர் போன்றே உணவு உண்டு செரிக்கின்றன, அவைகளும் மனிதர்களைப் போன்றே இரவில் உறங்கி காலையில் விழிக்கின்றன,

அவைகளுக்கும் மனிதரைப் போன்றே மகிழ்ச்சி, துன்பம் உள்ளன எனக் கண்டறிந்த அறிஞர் போஸ், எல்லா உயிரினங்கள் மீதும் பேரன்பு கொண்டவராகப் புகழப்படுகிறார்.

எல்லா உயிரினங்களுக்கும் உயிர் ஒன்றே. மனித உயிரும் அத்தகையதே. எனவே அனைத்து உயிரினங்களும், பொறுமை, ஒற்றுமை, இணைந்து வாழ்தல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும். இதில் மனிதர்களின் பங்கு மகத்தானது. எல்லா நாட்டு மக்களும் ஒருவர் மீது ஒருவர் பகைமை பாராட்டாமல், அவநம்பிக்கை கொள்ளாமல் வாழ கற்றுக்கொள்ள வேண்டும் என விரும்பிய சந்திர போஸ் அவர்கள் மானுடம் போற்றும் அறிஞர் எனில் மிகையாகது.

முப்பத்தியிரண்டாவது மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவர் எஸ்.எஸ். பட்நாகர் என அழைக்கப்படும் சாந்தி சுவரூப் பட்நாகர் (1894-1955). நன்கறியப்பட்ட இயற்பியலாளரும், அறிஞருமான பட்நாகர், இந்தியாவின் பல்வேறு ஆய்வுக் கூடங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறார். அறிஞர் பட்நாகரின் சேவையை அங்கீகரிக்கும் விதமாக அறிவியல் சாதனைகளுக்கு அவரது பெயரில் விருது அளிக்கப்படுவது சிறப்பு.

இந்திய நாட்டின் ஆய்வு மற்றும் தொழில் வளர்ச்சியில் முன்மாதிரி அமைப்பாக அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் திகழ்கிறது. அறிஞர் பட்நாகரை முதல் இயக்குனராகக் கொண்டு தொடங்கப்பட்ட சி.எஸ்.ஐ.ஆர் என அழைக்கப்படும் இந்த ஆய்வு மன்றத்திற்கு, நாடு முழுவதும் முப்பத்தி எட்டு ஆய்வுக் கூடங்களும், நான்காயிரத்து அறுநூறு ஆராய்ச்சி அறிஞர்களும், ஆயிரக்கணக்கான தொழில்நுட்பவியலாளர்களும் இருப்பது பெருமையானது.

புதிய இந்தியாவிற்கான புதிய சி.எஸ்.ஆர்.ஐ உருவாக்குவோம் என்பதனை இலக்காகக் கொண்டு செயல்படும் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம், இரண்டாயிரத்து பதிமூன்றாமண்டில் ஏறக்குறைய ஐந்தாயிரத்து எண்பத்தாறு ஆராய்ச்சிக் கட்டுரைகளை உலகின் முக்கியமான ஆராய்ச்சி இதழ்களில் வெளியிட்டுள்ளதாகக் குறிப்புகள் கட்டியம் கூறுகின்றன. ஒவ்வொரு வருடமும் சுமார் 200 இந்தியக் காப்புரிமைகளும் 250 வெளிநாட்டுக் காப்புரிமைகளும் பெறும் சி.எஸ்.ஐ.ஆர் அமைப்பு, இந்தியாவின் முதல்தரமான ஆராய்ச்சிக் கூடமாகத் திகழ்வது இந்தியருக்குப் பெருமையானதாகும்.

மத்திய கட்டிட ஆய்வு நிறுவனம் - ரூர்கோலா, உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் - ஐதராபாத், மத்திய மருந்துகள் ஆய்வு நிலையம் - லக்னோ, மத்திய மின் வேதியல் ஆய்வு நிறுவனம் - காரைக்குடி, மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் - சென்னை, மத்திய சுரங்க ஆய்வு நிறுவனம் - தான்பாத், இந்திய வேதி உயிரியல் நிறுவனம் - கொல்கத்தா, தேசிய விண்வெளி ஆய்வகம் - பெங்களூரு, தேசிய சூழியல் பொறியியல் ஆய்வு நிறுவனம் - நாக்பூர் போன்ற பல்வேறு ஆய்வு நிறவனங்கள் மூலம் மூலக்கூறு உயிரியல், சூழலியல், கனிமம், உணவு அறிவியல் போன்ற பல்வேறு துறைகளில் காத்திரமான ஆய்வுகள் நிகழ்த்தி வருவது பாராட்டுக்குரியது.

இந்தியாவின் முதன்மையான தொழிலதிபராகப் புகழப்படும் ஜே.ஆர்.டி டாடா எனும் ஜஹாங்கிர் ரத்தன்ஜி தாதாபாய் டாட்டா (1904-1993) அவர்களின் ஆதரவுடன், இந்திய அறிவியல் கழக வளாகத்தில் 1945-ல் தொடங்கப்பட்ட டாட்டா அடிப்படை ஆராய்ச்சிக் கழகம், இந்தியாவின் முக்கியமானதொரு ஆய்வுக் கூடமாகக் திகழ்கிறது. தற்போது மும்பை மற்றும் ஐதராபாத் நகரங்களில் அமைந்துள்ள இந்த ஆராய்ச்சிக் கூடத்தில், இயற்பியல், கணிதம், உயிர் அறிவியல், கோட்பாட்டு கணினி அறிவியல் போன்ற துறைகளில் தரமான ஆய்வுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்திய மக்களின் வயிற்றை நிரப்பிய இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் (ஐ.சி.எ.ஆர்) நடுவண் அமைச்சகத்தின் வேளாண் ஆய்வு மற்றும் கல்வித்துறையின் கீழ் இயங்குகிறது. 1990 களில் தொடங்கிய இந்திய விவசாய வளர்ச்சியில் பெரும்பங்காற்றியதுடன், நாட்டின் உணவு தானிய உற்பத்தி, தோட்டப்பயிர் பெருக்கம், பால் மற்றும் முட்டை உற்பத்தி, மீன் உற்பத்தி போன்றவற்றிலும் பல மடங்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ஐ,எ.ஆர்.ஐ) இந்திய வேளாண் வளர்ச்சியில் நெருங்கிய தொடர்புடையதாக அறியப்படுகிறது. 1905 இல் பிகாரின் புசா என்ற இடத்தில் அமெரிக்காவின் திரு, ஹென்றி பிப்ஸ் என்பவரது பேராதரவுடன் தொடங்கப்பட்ட ஐ.எ.ஆர்.ஐ, பசுமைப் புரட்சிக்கு வித்திட்டதோடு அதிக மகசூல் தரும் பயிர் வகைகளையும் கண்டறிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

விடுதலைக்குப் பிறகான இந்தியாவின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்காக, திறமைமிக்க மனித வளத்தை வளர்த்தெடுக்கும் நோக்குடன் அறிவியலாளர்களையும் பொறியாளர்களையும் உருவாக்க நிறுவப்பட்டவை இந்திய தொழில் நுட்பக் கழகங்கள் (ஐ.ஐ,டி). நாட்டின் இன்றியமையாத கல்விக்கழகங்கள் என அறிவிக்கப்பட்டு, காரக்பூர், பம்பாய், கான்பூர், சென்னை, தில்லி ஆகிய ஐந்து இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. தற்போது பதினெட்டாக இருக்கும் இக்கழகங்கள், இந்திய அறிவுத் துறைக்கான அடித்தளமாக அமைந்திருப்பது கூடுதல் சிறப்பு. ஐ,ஐ.டி-களில் வருடந்தோறும் எட்டாயிரம் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

சென்னையில் அமைந்துள்ள இந்திய தொழில் நுட்பக்கழகம் மேற்கு செருமனி அரசின் நிதி மற்றும் நுட்ப உதவியுடன் 1959 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டிருக்கிறது. சுமார் 620 ஏக்கர்கள் பரப்பளவில் அமைந்துள்ள வளாகத்தின் பெரும்பகுதி பாதுகாக்கப்பட்ட காடுகளால் சூழப்பட்டுள்ளது. கிண்டி தேசிய பூங்காவால் சிறப்பு பெற்றிருக்கும் இப்பகுதியினுள் புள்ளி மான்கள், கலைமான்கள், புல்வாய் மான்கள் போன்றவை சுற்றிதிரிவது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ 15 துறைகளும் பல்வேறு பொறியியல் மற்றும் அடிப்படை அறிவியல் துறைகளின் மேம்பட்ட ஆய்வு மையங்களும், 100 ஆய்வகங்களும் கொண்டு இயங்கும் சென்னை ஐ.ஐ.டி, ஒரு சிறிய நகரத்தின் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. பயிலும் அனைத்து மாணவர்களும் கட்டாயமாக விடுதியில் தங்கியிருந்து பயில வேண்டுமெனக் கூறப்படுவதால் வளாகத்தில் நதிகளின் பெயர்களைத் தாங்கிய பல்வேறு விடுதிகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களால் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சாஸ்த்ரா எனும் தொழில் நுட்பத் திருவிழா மிகவும் சிறப்பானதாக புகழப்படுகிறது.

பொறியியல் மற்றும் தொழில் நுட்பத்தில் கல்வி வழங்கும் கல்லூரிகளாக தேசிய தொழில்நுட்பக் கழகங்கள் (என்.ஐ.டி) விளங்குகின்றன. தற்போது வரை முப்பது என்.ஐ.டி கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள அனைத்து உயர்கல்வி நிலையங்களையும் ஒருங்கிணைக்கும் அமைப்பாகக் யு.ஜி.சி எனப்படும் பல்கலைக்கழக மானியக் குழு அல்லது நிதி நல்கைக் குழு செயல்படுகிறது. பல்கலை கழகங்களை மேற்பார்வையிடவும், தரப்படுத்தவும் நடுவண் அரசால் பாராளுமன்றச் சட்டம் மூலம் நிறுவப்பட்ட யு.ஜ.சி.

இந்திய உயர்கல்விக்கு ஏராளமான பணிகளைச் செய்திருக்கிறது. மத்தியப் பல்கலைக்கழகங்கள், மாநில, நிகர்நிலை, தனியார் பல்கலைக்கழகங்கள், அரசு, தனியார் கல்லூரிகள், சமுதாயக் கல்லூரிகள் என அனைத்து விதமான பல்கலைகள் மற்றும் கல்லூரிகள் குறித்தான முடிவுகள் எடுக்கும் அதிகாரமும், விதிகளை வகுக்கும் அதிகாரமும், யு.ஜி.சி.க்கு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், தரக்கட்டுப்பாட்டிற்கு பல்வேறு துணை அமைப்புகளையும் யு.ஜி.சி கொண்டுள்ளது.

உலகின் மூன்றாவது மிகப்பெரிய கல்வியமைப்பைக் கொண்டுள்ள இந்தியாவில் (அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் சீனாவிற்கு அடுத்து) 2016 ஆம் ஆண்டு யூ.ஜி.சி விபரத்தின் படி, 799 பல்கலைக்கழகங்கள் (44 மத்திய பல்கலைகள், 540 மாநிலப் பல்கலைகள், 122 நிகர்நிலைப் பல்கலைகள், 80 தனியார் பல்கலைகள், 5 தன்னாட்சி பெற்ற மாநில பல்கலைகள், 75 தேசிய மதிப்புமிக்க நிறுவனங்கள்), 39071 கல்லூரிகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 2013-14 ஆம் ஆண்டில் மட்டும் 22849 முனைவர் பட்டங்கள் பெறப்பட்டுள்ளன. உலகின் மிக அதிக மாணவர் கொண்ட அமைப்பாக இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலை இருப்பதும் குறிப்பிடத்தக்கது. உலகெங்கும் இதற்கு 35 லட்சம் மாணவர்கள் இருப்பது சிறப்பு.

இந்திய ஆய்வுக் கழகத்தின் அங்கமாக 1967 இல் நிறுவப்பட்டட மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் (சி.எம்.எப்.ஆர்.ஐ) கடல் மீன் வளம், உற்பத்திப் பெருக்கம் போன்ற பல பணிகளைச் செய்து வருகிறது. கொச்சியைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் மீன்வள ஆராய்ச்சி நிலையத்திற்கு, வட்டார மையம், ஆய்வு மையம், களப்பணி மையம், படிப்பு மையம் எனப் பல்வேறு பகுப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன,

சீரான தரமான மருத்துவக் கல்வியை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு இந்திய மருந்துவக் கழகம் (ஐ. எம். ஐ). இந்தியாவின் மருத்துவக் கல்வியை ஒழுங்குபடுத்துதல், மருத்துவ பல்கலைக் கழகங்களுக்கு அங்கீகாரமளித்தல், மருத்துவப் பணிகளை ஒழுங்குபடுத்துதல் போன்ற பணிகளைச் செய்து வரும் ஐ.எம்.ஐ, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் கீழ இயங்கி வருகிறது.

ஆயுர்வேதம், யோகம் மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஓமியோபதி மருத்துவத் துறைகளை உள்ளடக்கி 2003-இல் உருவாக்கப்பட்ட ஆயுஷ் துறை, இந்தியப் பாரம்பரிய மருத்துவத் துறையில் கல்வி, தரநிர்ணயம், மேம்பாடு, ஆய்வுகள் போன்றவற்றை நிகழ்த்தி வருகிறது. லக்னோவில் இடம்பெற்றுள்ள தேசிய மருந்து ஆராய்சி நிறுவனம், மருந்தியல் துறையில் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது.

தருமத்திற்கான முதன்மையான கருவி உடலேயாகும் - என்பதனைக் குறிக்கோளுரையாகக் கொண்டு செயல்படும் அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் (எயிம்ஸ்), மருத்துவக் கல்லூரியாகவும், தன்னாட்சி பெற்ற மருத்துவப் பல்கலைக்கழகமாகவும் செயல்படுகிறது. உயர் சிறப்பு மருத்துவக் கல்வி மையங்களாக இருக்கும் எம்ய்சு, நாடு முழுவதும் ஏழு மையங்களில் செயல்படுகிறது. மேலும் மதுரை உட்பட பத்து எம்ய்சு மருத்துவமனைகளுக்கான திட்டங்களும் முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்திய மருத்துவக் கழகத்தால் 1976 முதல் சிறப்புமிக்க மருத்துவர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதாக பி.சி.ராய் விருது குறிப்பிடப்படுகிறது. மேற்கு வங்க மாநிலத்தின் இரண்டாவது முதலமைச்சராக இருந்த திரு. பிதான் சந்திர ராய் (1882-1962) நினைவாக பி.சி.ராய் விருது கொடுக்கப்படுகிறது. சிறந்த மருத்துவராகவும், விடுதலை இயக்கப் போராளியாகவும், மேற்கு வங்கத்தின் வளர்ச்சிக்கு அடிகோலிய அரசியல்வாதியாகவும் புகழப்படும் பாரத ரத்னா ராய், மருத்துவப் படிப்பில் சாதனை புரிந்தவராகவும் கொண்டாடப்படுகிறார்.

ஆரவல்லி மலைத் தொடரின் ஆயிரம் ஏக்கர் பரப்பில் பசுமை போத்திக் காட்சியளிக்கும் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம் 1969-ல் பிறந்திருந்தாலும் இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கும் ஒரு உயர் கல்வி நிறுவனமாக புகழ்பெற்றிருப்பது சிறப்பு. பத்து மாணவர்களுக்கு ஒரு பேராசிரியர் எனும் விகிதாச்சாரம் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படும் ஜே.என்.யு, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மாணவர்களை ஈர்த்து வருவது கண்கூடு.

வேளாண்மை, தொழிலியல், விஞ்ஞான வளர்ச்சி, இயந்திரமயமாக்கம், விண்வெளி அறிவியல் போன்றவற்றில் சோவியத் யூனியன் நிகழ்ந்திய சாதனைகள் அளப்பரியவை. ஸ்புட்னிக் எனும் முதல் செயற்கைக் கோளை விண்ணுக்கு

அனுப்பிய சேவியத் ஒன்றியம், யூரி அலெக்சியேவிச் காகரின் அவர்களை (1934-1968) முதல் விண்வெளி வீரராக்கி, பூமியை வலம் வர வைத்து பெரும் புகழடைந்தது. 1961 ஏப்ரல் 12 அன்று முதலாவது வசுத்தோக் விண்கலத்தில் பயணித்த காகரின், சுமார் 108 நிமிடங்கள் விண்ணில் பயணமானது மனித குல வரலாற்றில் சரித்திர சாதனையாகக் கொண்டாடப்படுகிறது.

யூரி காகரினுக்கு முன்பாக 1957, நவம்பர் மூன்றில், பூமியின் சுற்றுப்பாதையை ஸ்புட்னிக் - இரண்டு மூலம் வலம் வந்த குதிரியாவ்கா எனும் பெயர் கொண்ட லைக்கா, பிரபஞ்சத்தினுள் சென்ற முதற்பயணியாகப் புகழப்படுகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க பிரபஞ்சப் பயணத்தில் லைக்கா உயிர்த்தியாகம் செய்து, மனிதர்கள் விண்ணுக்குச் செல்லும் பெருமுயற்சிக்குத் துணைபுரிந்தது பாராட்டத்தக்கது.

வட ஆசியா மற்றும் ஐரோப்பா கண்டங்களில் அமைந்துள்ள உருசியக் கூட்டமைப்பு பூமியின் மிகப்பெரிய நிலப்பரப்பு கொண்ட நாடாக அறியப்படுகிறது. அதிகமான காட்டு வளத்தையும், நன்னீர் நிலைகளையும் பெற்றுள்ள ருஷ்யா, கனிமவளத்திலும், எண்ணெய் வளத்திலும் பாரிய நாடாகவே குறிப்பிடப்படுகிறது.

புவியின் வட முனையில் அமைந்துள்ள பகுதி ஆர்டிக் என அழைக்கப்படுகிறது. ஆர்டிக் வட்டதிற்கு வடக்கே அமைந்துள்ள பெரும்பகுதி பனிக்கட்டி கடலையை கொண்டுள்ளது. ஆர்க்டிக் பெருங்கடலால் சூழப்பட்டுள்ள ஆர்க்டிக் பகுதியானது கனடா, கிரீன்லாந்து, ரஷ்யா, அமெரிக்கா, ஐஸ்லாந்து, நார்வே, சுவிடன், பின்லாந்து ஆகிய நாடுகளின் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. கரடி என்னும் பொருளில் குறிப்பிடப்படும் ஆர்க்டிக் பகுதி, பனிக்கரடிகளுக்குப் பெயர் பெற்றதாக இருப்பது சிறப்பு.

உருசிய மொழியை அதிகாரப்பூர்வ மொழியாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருபத்தியேழு இணை அதிகாரப்பூர்வ மொழிகளையும் கொண்டுள்ள ரஷியா, கூட்டாச்சி அரை சனாதிபதி அரசியலமைப்புக் குடியரசாகக் குறிப்பிடப்படுகிறது. அதிகாரம் நிரம்பிய பதவியாக குடியரசுத் தலைவர் இருந்தாலும், நாட்டை நிர்வகிப்பவராக பிரதமர் செயல்படுகிறார். ருஷ்யா அரசுத் தலைவர் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது எனும் அளவில் சட்டங்கள் இயற்றப்படுள்ளன. எனினும் உருசியக் கூட்டமைப்பின்

தற்போதைய அரசுத் தலைவரான விளாதிமிர் புட்டின் (பிறப்பு-1952) 1999 (தற்காலிகம்), 2000, 2004 இல் அரசுத் தலைவரானார். 2008 வரை அதிபராக இருந்து விட்டு, பின்னர் 2008-2012 வரை நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தார். 2012 முதல் மீண்டும் நாட்டின் குடியரசுத் தலைவரான புடின் பனிப்போர் காலத்திற்குப் பிறகான ருஷ்ய கூட்டமைப்பின் அதிகாரமிக்க தலைவராக நீண்ட காலம் பதவியிலிருக்கிறார்.

உலகின் போக்கை திசை மாற்றிய ரஷ்யப் புரட்சிக்கு மூல காரணமாகக் கருதப்படுபவர் விளாதிமிர் லெனின் (1870-1924). மக்கள் கமிசார்கள் அமைப்பின் தலைவராகவும் சோவியத் ஒன்றியத்தின் முதல் அதிபராகவும் அறியப்படும் லெனின் சோவியத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவராகப் புகழப்படுகிறார். மிகச் சிறந்த மார்க்சியவாதியாக அறியப்படும் லெனின் மார்க்சின் பெரும்பாலான கொள்கைகளை ஏற்றுக் கொண்டவராகவும், அவர் மேல் பேரன்பு பூண்டிருந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

தொழிலாளர் விடுதலை இயக்கத்தைத் தொடங்கி, ரஷ்யாவில் மார்க்சின் கொள்கைகளைப் பரப்பி வந்த லெனின், பல்வேறு போராட்டங்களுக்குப் பின், ருஷ்யாவில் பொதுவுடமை ஆட்சியை நிறுவச் செய்திருக்கிறார். 1917 புரட்சி ரஷ்யாவில் மன்னராட்சிக்கு முடிவு கட்டியதோடு போல்ஷ்விக் கட்சியினர் ஆட்சி ஏற்படவும் வழிகோலியது. புரட்சியில் லியோன் திரொட்ஸ்சி (1879-1940) போன்றோரும் பெரும் பங்கு வகித்ததாக அறியப்படுகிறது. சோவியத் ஒன்றிய பொதுவுடமைக் கட்சியான போல்ஷ்விக் உருவாக்கிய செஞ்சேனை அமைப்பின் பொறுப்பாளராகச் செயல்பட்ட திராட்ஸ்கி, புரட்சிக்குப் பிறகான அரசில் வெளிவிவகாரத் துறை அமைச்சராகப் (1917-1918) பணியாற்றியிருக்கிறார்.

லெனின் மறைவிற்குப்பின், ரஷ்யாவின் அடுத்த அதிபராக திராட்ஸ்கியே தேர்தெடுக்கப்படுவார் எனும் நிலையில், மூன்றாவது தலைவராக இருந்த ஜோசப் ஸ்டாலின் (1878-1953), சோவியத் ஒன்றியப் பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளராக (1922-1953) தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். ஸ்டாலினோடு கருத்து வேறுபாடு கொண்ட ட்ராஸ்கி பின்னர் நாடு கடத்தப்பட்டு, மெக்சிகோவில் அடைக்கலம் பெற்றதாக அறியப்படுகிறது.

மகா விளாதிமிர் (பொது ஆண்டு 980-1015) ரஷ்யாவின் புகழ்பெற்ற அரசராகக் குறிப்பிடப்படுகிறார். முன்னதாக, மூன்று முதல் எட்டாம் நூற்றாண்டுக் காலம் வரை கிழக்கு சிலேவ் எனும் தொல்குடிகளால் உருவாக்கம் பெற்ற ரஷ்யாவின் வரலாற்றில் பைசாந்தியப் பேரரசு மூலமாகப் பரவிய பழமைவாதக் கிறித்துவம் குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்தியதாக அறியப்படுகிறது.

பல்வேறு காலகட்டங்களில் மங்கோலியர்கள், ஹூணர்கள், கசார்கள் எனும் துருக்கியர்கள் போன்றோரின் ஆதிக்கத்திற்கு உள்ளான ருஷ்யா நிலப்பரப்பு பின்னர் உக்ரைனின் கீவ் பகுதியின் நிலைபெற்றிருந்த கீவியர்களால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. கீவியா ரஷ்யா, பத்தாம் நூற்றாண்டுக் காலத்தில் சிறப்பான வளர்ச்சியுற்று, மகா விளாதிமிர் அவரது மகன் யரோஸ்லாவ் (1019-1054) போன்றோர் ஆட்சிக் காலத்தில் புகழ் பெற்று விளங்கியிருக்கிறது. 988 இல் பழமைவாத கிறித்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தனித்துவமான ருஷ்யப் பண்பாடு வளரத் துவங்கிய காலகட்டமாக கீவ்ருஷ்யா அறியப்படுகிறது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் மங்கோலிய எழுச்சி, கீவ் ரஷ்யாவையும் புரட்டிப் போட்டிருக்கிறது. பின்னர் கீவின் வழிவந்த மாஸ்கோவின் பெரும் டச்சி அரசு, பலம் வாய்ந்ததாக இருந்ததோடு பதினேழாம் நூற்றாண்டில் மத்திய ரஷ்யாவில் புகழடைந்து படிப்படியாக ரஷ்யாவை ஒன்றிணைத்து மிகப்பெரும் சக்தியாக உருவெடுத்திருக்கிறது.

மங்கோலியர்கள், துருக்கியின் தசார்களுடன் இணைந்து உருவாக்கிய கோல்டன் ஹோர்டின் எனும் பகுதியை மையமாக்கி ருஷ்யாப் பண்பாட்டை முன்னெடுத்திருக்கிறார்கள். சுமார் இருநூறாண்டு காலம் நீடித்த கோல்டன் ஹோர்ட் பின்னர் பல்வேறு கார்னேட்டுகளாக சிதைவுற்றதாகக் கூறப்படுகிறது.

ஹோல்டன் ஹோர்டின் சிற்றரசராகவும் (1283-1480), பின்னர் சுதந்திரமான அரசுரிமையாகவும் (1480-1547) விளங்கிய மாஸ்கோவின் டச்சி அல்லது மாஸ்கோ அல்லது கிராண்ட் டியுக் எனும் அரசுரிமையை மாஸ்கோவின் இளவரசர் எனும் மாஸ்கோவின் டேனியர் (1261-1303) அமைத்திருக்கிறார். தொடர்ந்து மூன்றாவது மகா இவான் (1462-1505), கடைசியாக நான்காம் இவான் (1533-1543) தம்மை ரஷ்யாவின் பேரரசராக, சீசராக, ஜார் மன்னராக அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு செய்திருக்கிறார்.

ரசியாவின் முதலாவது ஜார் மன்னரான நான்காம் டியூக் காலத்தில் ரஷ்ய மான்ய முறை உருவாக்கப்பட்டதோடு கிராமப் பகுதிகளுக்கும் சுயாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. கோல்டன் ஹோர்டின் சிதறிய பகுதிகளான வோல்கா நதிக்கரை கசான், அஸ்ட்ராகான் மற்றும் தென் மேற்கு சைபீரியாவின் சைபீரின் கர்னேட்டுகளை ஒன்றிணைத்து, மிகப் பரந்துபட்ட ரஷ்யப் பேரரசை உருவாக்கியதோடு, நாட்டை பல்லின பல்சமய மற்றும் கண்டம் கடந்த நாடாக மாற்றியவராகவும் நான்காம் டியூக் புகழப்படுகிறார்.

உருசியாவின் முதலாம் பேரரசராகப் புகழப்படுபவர் மகா பீட்டர் அல்லது பியோட்டர் வெலிகிய் (1682-1725). 1682 இல் பேதுருவாக முடிசூட்டப்பட்ட மகாபீட்டர் நாட்டை விரிவாக்கியதுடன், மேற்கத்திய கொள்கைகளை ரஷ்யாவில் இடம்பெறச் செய்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். ரசியாவை ஐரோப்பாவின் முக்கியமான வல்லரசாக மாற்றிய மகா பீட்டர், சுவீடனை வென்று பால்டிக் கடலை மையமாக்கிய கடல் வணிகத்தை உருவாக்கியதோடல்லாமல் பால்டிக் கடற்கரையில் செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் எனும் புதிய தலைநகரையும் நிர்மாணித்தது குறிப்பிடத்தக்கது. பெட்ரோகிராட், லெனின்கிராட் எனும் பெயர்களிலும் குறிப்பிடப்படும் பீட்டர்ஸ்பர்க், ஐரோப்பாவுக்கான நுழைவாயிலாகவும் பெயர் பெற்று விளங்கியிருக்கிறது.

மகா பீட்டரின் முயற்சிகளால் மேற்கு ஐரோப்பாவின் நாகரிகம் ரஷ்யாவில் பரவியதாகக் கருதப்படுகிறது. பின்னர் அவரது மகளான எலிசபெத் (ஆ.காலம் 1741-1762) ஆஸ்த்ரியாவுடனான ஏழாண்டு வாரிசுரிமைப் போரை நடத்தியிருக்கிறார்.

இரண்டாம் காத்திரின் மகாராணியார் ஆட்சிக் காலம் (1762-1796) ரசியாவின் அறிவொளிக் காலமாகப் புகழப்படுகிறது. துருக்கி ஒட்டமான்களைத் தோற்கடித்து ரஷ்யாவின் தென் எல்லையை கருங்கடல் வரை விரிவுபடுத்தி பல்வேறு நிர்வாகச் சீர்திருத்தங்கள் மேற்கொண்டவராகவும் மகாராணியார் குறிப்பிடப்படுகிறார்.

நெப்போலியப் படையெடுப்பின் போது ரஷ்யப் பேரரசின் ஜாராக இருந்தவர் முதலாம் அலெக்ஸாந்தர் (ஆ. காலம் 1801-1825) நெப்போலியனோடு உடன்பாடு செய்தும் பிற ஐரோப்பிய நாடுகளை ஒன்றிணைத்தும், நெப்போலியப் படையெடுப்பிலிருந்து ரஷ்யாவைப் பாதுகாக்க முனைந்திருக்கிறார். எனினும் ரஷ்யாவின் மீது படையெடுப்புகளை நிகழ்ந்திய நெப்போலியனுக்கு, வீரம்மிக்க

ரசியர்களும் குளிர்காலமும் சேர்ந்து பெரும் தோல்வியைத் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

உலகப் புகழ்பெற்ற ருஷ்ய எழுத்தாளரான லியோ டால்ஸ்டாஸ் (1828-1910), எழுதிய போரும் அமைதியும் புதினம், நெப்போலியப் படையெடுப்பின் நிகழ்வுகளை வெகு சிறப்பாகப் பேசுவதாகப் புகழப்படுகிறது. ஆரம்பத்தில் 1805 ஆண்டு எனக் குறிப்பிடப்பட்ட போரும் அமைதியும் நாவல், 1865 க்கும் 1867 க்கும் இடையில் தொடராக வெளியிடப்பட்டு, பின்னர் 1869 இல் முழுமையாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

கட்டுரையாளர், நாடகாசிரியர், கல்விச் சீர்திருத்தவாதி, சமூக மேம்பாட்டாளர் எனப் பன்முகத்தன்மை நிரம்பியவராக அறியப்படும் தால்ஸ்தாய் உலகின் மிகச் சிறந்த எழுத்தாளர்களுள், சிந்தனையாளர்களுள் ஒருவராகப் போற்றப்படுகிறார். உலகில் அகிம்சை தழைக்க வேண்டுமென விரும்பிய தால்ஸ்தாய், போரில்லாத சமதர்ம சமுதாயம் படைக்க வேண்டும் எனும் ஆவல் கொண்டிருந்தவராகவும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டவராகவும் புகழப்படுகிறார்.

காந்தியின் அகிம்சை கோட்பாடுகளிலும், வன்முறையற்ற சுதந்திர போராட்டங்களிலும் பெரும் செல்வாக்கு செலுத்தியவராகக் குறிப்பிடப்படும் தால்ஸ்தாய், காந்தியடிகள் திருக்குறள் பற்றி அறிந்து கொள்ளவும் காரணமானவராகக் குறிப்பிடப்படுகிறார். ஜெர்மன் மொழி பெயர்ப்பு மூலமாக திருக்குறளை அறிந்த நிக்கோலோவியச் டால்ஸ்டாய், திருக்குறள் மீது பெருமதிப்பு வைத்திருந்தவராகவும் அறியப்படுகிறார்.

சிறுகதைகள், நாவல்கள் என ஏராளமான ஆக்கங்களை வெளியிட்ட டால்ஸ்டாய்க்கு அன்னா கரேனினா (1978) நாவல் பெரும் புகழைக் கொடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

ருஷ்யா இலக்கியம் உலகின் பெரும்பாலான இலக்கிய நடைமுறைகளில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியதாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ருஷ்ய இலக்கியவாதிகள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுபவர்களாகவும், வியந்தோதப்படுபவர்களாகவும் இருக்கின்றனர். தால்ஸ்தாய், தாஸ்தாயெஸ்கி (1821-1881), துர்கனேவ் (1818-1883), ஆன்டன் செக்காவ் (1860-1904), மாக்சிம் கார்க்கி (1868-1936), விளாதிமிர் நபக்கோவ் (1889-

1966) உட்பட ஏராளமான எழுத்தாளர்கள் ரஷ்ய இலக்கியத்தின் பொற்காலத்தை உருவாக்கியவர்களாகப் புகழப்படுகின்றனர்.

பியோதர் தஸ்தயெவ்ஸ்கியின் கரமசோவ் சகோதரர்கள், குற்றமும் தண்டனையும், அலெக்சி மாக்சிகோவிச் பெசுகோவ் எனும் மாக்சிம் கார்க்கியின் தாய் நாவல் போன்றவை பெரும் படைப்புகளாகவும் உலகிலுள்ள பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

நவீன ருஷ்ய இலக்தியத்தை உருவாக்கியவராக அலெக்சாந்தர் செர்கேயெவிச் புஷ்கின் (1799-1837) புகழப்படுகிறார். சிறந்த கவிஞராகவும், நாடகாசிரியராகவும், எழுத்தாளராகவும் குறிப்பிடப்படும் புஷ்கின், இயுஜின் ஒனேகின் எனும் படைப்புக்காக பெருமளவில் கொண்டாடப்படுகிறார். ருஷ்யா இலக்கியத்தில் உடைநடை வடிவத்தைக் கையாண்டதில் முன்னோடியாகக் கருதப்படும் புஷ்கின், பிற்காலத்திய ருஷ்யா எழுத்தாளர்கள் மேல் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியவராகவும் கூறப்படுகிறார்.

சிறந்த இலக்கிய மொழியாக வளர்ச்சி பெற்றிருக்கும் ருஷ்ய மொழி, பத்தாம் நூற்றாண்டிற்கும் பதினைந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் அதாவது மத்திய காலகட்டப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி பெற்றதாகக் கருதப்படுகிறது.

ருசியக் கூட்டமைப்பு, பெலாரசு, உக்ரைன், கசகசுத்தான் மற்றும் கிர்கிசுத்தான் போன்ற நாடுகளின் முதன்மை மொழியான ருஷ்ய மொழி, சிலாவிய மொழியாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் முக்கியப் பிரிவான சிலாவிய பிரிவைச் சேர்ந்த ருஷ்யா மொழி, ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியின் வாழ்ந்த சிலேவிக் மக்களால் பெருமளவில் பேசப்படும் மொழியாக அறியப்படுகிறது.

ஐரோப்பாவின் மிகப்பெரிய மொழித் தொகுதியாகக் குறிப்பிடப்படும் சிலேவிக் மொழி பேசும் மக்கள், பெலாருஷ்யர்கள், ரசியர்கள் மற்றும் உக்ரேனியர்கள் கொண்ட கிழக்கு சிலேவிக் அல்லது சிலோவேனியர்கள் என்றும், செக், ஸ்லோவாக், சொர்ப், செலிசியர், போல்கள் (போலந்து) அடங்கிய மேற்கு சிலோவானியர்கள் என்றும், போஸ்னியர்கள், பல்கேரியர்கள், குரோசியர்கள், மாசிடோனியர்கள், செர்பியர்கள், சிலோவேனியர்கள் அடங்கிய தெற்கு

சிலோவேனியர்கள் என்றும் அடையாளப் படுத்தப்படுகின்றனர். பரந்துபட்டிருக்கும் சிலோவேனியப் பகுதியில் ஏராளமான மொழிகளும் அவற்றின் வேறுபட்ட மொழி வடிவங்களும் பின்பற்றப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பா, பால்டிக் கடல் அமைந்துள்ள பால்கன் பகுதி, ருசியா நிலப்பகுதி மற்றும் உலகின் பல்வேறு குறிப்பிட்ட பகுதிகள் என உலகமெங்கும் முப்பது கோடிக்கும் அதிகமான மக்கள் சிலோவேனிய மொழிகளைப் பேசுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பழைய ரசியம் அல்லது சிலோவேனிய மொழிக்கு பத்தாம் நூற்றாண்டு முதல் எழுதப்பட்ட சான்றுகள் உள்ளதாக அறியப்படுகிறது. இடைக்காலத்திலும் தொடர்ந்து வந்த அறிவொளிக் காலத்திலும் சிறப்புற்று வந்த ருஷ்ய மொழிக்கு ருஷ்யப் பெருங்கவிஞரான வசிலி அன்ட்ரியாவிச் ஜுகோஸ்வி (1783-1852) மிகப்பெரிய ஏற்றம் தந்தவராகப் புகழப்படுகிறார். பியோதர் இவனோவிச்யுச்செவ் (1803-1873) போன்ற ஆரம்ப கால கவிஞர்கள் முதல் மரினா இவனோவா ஸ்வெட்னவே (1892-1941) போன்ற சில்வர் காலத்து கவிஞர்கள் வரை ஏராளமான கவிஞர்களால் ருஷ்ய மொழி வளம் பெற்றிருக்கிறது.

33 எழுத்துக்கள் கொண்ட ரசிய மொழி, கிரேக்க எழுத்துக்களைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளதாகவும், 21 மெய்யெழுத்துக்களும், 10 உயிரெழுத்துக்களும், 2 ஒலியற்ற எழுத்துக்களும் கொண்டதாகவும், ஆங்கிலம் போலவே ரஷ்யத்திலும் பெரிய, சிறிய எழுத்து வடிவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் அறியப்படுகிறது.

ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையில் அமைந்துள்ள மலைத்தொடர் காக்கேசிய மலைத்தொடர் எனப்படுகிறது. ஜார்ஜியா, ஆர்மேனியா, அசர்பைசான் போன்ற நாடுகளுடன் ருஷ்யாவின் தென் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ள காக்கஸ் மலைப்பகுதியின் மக்கள் காக்கசாய்டுகள் அதாவது வெள்ளை இனத்தவர் என அழைக்கப்படுகின்றனர். இரு கண்டங்களுக்கும் எல்லைக் கோடாகக் குறிப்பிடப்படும் காக்கேசிய மலைப்பகுதியில் ஐரோப்பாவின் மிக உயர்ந்த மலைச் சிகரமான 18510 அடிகள் உயரம் கொண்ட எல்புரூஸ் மலை அமைந்துள்ளது.

உலகின் மிகச் செழுமையான மொழியியல் மற்றும் பண்பாட்டுப் பகுதியாகப் பெருமைப்படுத்தப்படும் காக்கஸ் பகுதி, ஒரு மொழியியல் பல்வகைமை பகுதியாகக் கருதப்படுகிறது. மேலும் சூழலியல் முக்கியத்துவம் நிறைந்த உயிரினப் பல்வகைமை கொண்ட பகுதியாகவும் அறியப்படுகிறது.

வரலாற்றுக் காலம் தொடங்கி, பல்வேறு அரசியல், சமய, படை மற்றும் பண்பாட்டு மாற்றங்களைக் கண்டுவரும் காக்கேசியப் பகுதி, பாரசீகப் பேரரசு, பைசாந்தியப் பேரரசு, ஒட்டமான் பேரரசு, பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் ரஷ்யப் பேரரசு என மாற்றம் கண்டதோடு மதம் சார்ந்தும் பல்வேறு மாற்றங்களை சந்தித்திருக்கிறது. ஆர்மேனியா, அல்பேனியா, ஜார்ஜியா உட்பட பல காக்கேசிய பகுதிகளில் முன்னர் சொராட்டிரம் புகழ் பெற்றிருந்ததும், பின்னர் கத்தோலிக்க மதம் பரப்பப்பட்டதும், தொடர்ந்து இசுலாம் மதம் முன்னெடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. முதலாம் உலகப் போர்க் காலத்தில் இளம் துருக்கியரால் (ஐக்கிய முன்னேற்ற ஒன்றியம்) ஆர்மீனியாவின் கிறித்தவர்கள் மேல் நிகழ்த்தப்பட்ட கொடூர தாக்குதல்கள் இன அழிப்பு என்றே வரலாற்றில் பதிவு பெற்றிருக்கிறது. பத்துலட்சம் பேருக்கும் மேல் அழிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் ஆர்மீனிய இன அழிப்பில் ஆர்மீனியர்கள், அசிரியர்கள் மற்றும் கிரேக்கர்களும் அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆர்மேனியா நாட்டின் எல்லைக்கு முப்பத்தியிரண்டு கி.மீ தெற்காகவும், ஈரான் நாட்டின் எல்லைக்கு பதினாறு கி.மீ மேற்காகவும் அமைந்துள்ள துருக்கியின் அரராத் மலை, 5137 மீட்டர் உயரமுள்ளதாகவும் துருக்கியின் உயர்ந்த மலையாகவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் ஆதியாகமம் குறிப்பிடும் நோவாவின் பேழை தங்கிய இடமாக அராரத்மலை இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

கருங்கடலுக்கும், காசுப்பியன் கடலுக்கும் இடைப்பட்ட பகுதியான காகசஸ், வடக்கு காகசஸ் (பெரிய காகசஸ்), தெற்கு காசசஸ் (டிரான்ஸ் காகசஸ்) எனப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பெரிய மற்றும் சிறிய காகசார் பகுதிகளை ஒட்டி அமைந்துள்ள உலகின் பெரிய ஏரிகளான காஸ்பியன் மற்றும் கருங்கடல் பகுதிகளின் கரையோரங்களில் ஏராளமான மக்கள் வசித்து வருவதும் சிறப்பான பல நகரங்கள் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நாற்புறமும் நிலத்தால் சூழப்பட்டுள்ள கருங்கடல், தென் கிழக்கு ஐரோப்பாவுக்கும் அனதோலியாவிற்கும் இடையில் அமைந்துள்ளது. ஆஸ்த்ரியா, பெலாரஸ், பல்கேரியா, ருமேனியா, உக்ரைன், ரஷ்யா, ஜார்ஜியா மற்றும் துருக்கி போன்ற நாடுகளில் அமைந்துள்ள கருங்கடல், 1175 கி.மீ நிளமும், சராசரியாக 1253 மீட்டர் ஆழமும் பத்துக்கும் மேற்பட்ட தீவுகளை உள்ளடக்கியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. சமீபகாலங்களில் முக்கிய விடுமுறைத்தளமாகவும், சுற்றுலாத்

தளமாகவும் புகழ்பெற்று வரும் கருங்கடல் பகுதியில், ஏராளமான கடல்வாழ் உயிரிகளும் இடம்பெற்றுள்ளன.

உப்புநீர் கொண்டுள்ள பெரிய ஏரியே காஸ்பியன் கடல் எனப்படுகிறது. உலகின் மிகப்பெரிய ஏரியான காசுபியன் கடல், 3,17,000 சதுர கி.மீ பரப்பளவும், மிக அதிகபட்சமாக 3,363 அடிகள் ஆழம் உள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. ரஷ்யா, ஈரான், துர்க்மெனிஸ்தான், அசர்பைஜான் மற்றும் கசகஸ்தான் நாடுகளை எல்லையாகக் கொண்டுள்ள காஸ்பியன் கடலின் முதன்மையான நீர்வரத்து வோல்கா ஆறு.

ருஷ்யாவின் பெருமை எனப் போற்றப்படும் 3,692 கி.மீ நீளமுள்ள வோல்கா ஆறு, ருஷ்யாவின் தேசிய ஆறாகப் போற்றப்படுகிறது. மாஸ்கோ உட்பட ருஷ்ய நாட்டின் பதினோறு பெரிய நகரங்கள் அமையப் பெற்றுள்ள வோல்கா நதி, உருசியக் கலாச்சாரத்தின் முக்கிய அடையாளமாகவும், உருசிய இலக்கியம் மற்றும் நாட்டுப்புறக்கலைகளில் சிறப்பிடம் பெற்றுள்ளதாகவும் புகழப்படுகிறது. வேலால்காவின் கனிமவளம் செறிந்த நீர்பாசனம் கோதுமையின் மிகை உற்பத்திற்கும் துணைபோவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இராகுல்ஜி எனும் இராகுல் சாங்கிருத்தியாயன் (1893-1963) இந்தியில் எழுதிய வோல்காவிலிருந்து கங்கை வரை நூல் பொது ஆண்டிற்கு முன் 6000 இல் துவங்கி பொது ஆண்டின் 1942 இல் முடியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. வரலாற்றுப் புனைவாக அறியப்படும் நூலில், இருபது கதைகள் வாயிலாக, ஆரியர் எனப்படும் இந்தோ-அய்ரோப்பிய இனக்குழு வோல்காவின் நதிக்கரையில் ஒரு சமூகமாய் வளர்ச்சி பெற்று மத்திய ஆசியா வழியாக கங்கை கரையில் வந்தமைந்ததையும், அதன் பிறகான இந்திய வளர்ச்சியை சுதந்திரப் போராட்டக் காலம் வரை தத்துவார்த்தமாக விளக்குவதாகவும் நூல் அமைக்கப்பட்டுள்ளது.

மகாபண்டிதராகப் புகழப்படும் ராகுல்ஜி, இந்தி பயண இலக்கியத்தின் முக்கியமான ஆளுமையாக அறியப்படுகிறார். பல்வேறு துறைகளில் 146 புத்தகங்கள் எழுதியுள்ளவராகக் குறிப்பிடப்படும் ராகுல்ஜி, மிக நீண்ட பயணங்கள் செய்தவராகவும், பன்மொழிப் பலவராகவும் புத்த துறவியாகி பின்னர் மார்க்சியவாதியாக மாற்றம் பெற்றவராகவும், ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக எழுதியதால் மூன்றாண்டுகள் சிறை சென்றவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

வால்காவிலிருந்து கங்கை வரை நூலை 1949-ல் தமிழில் மொழிபெயர்த்தவராக கண. முத்தையா (1913-1997) அறியப்படுகிறார். தமிழ் பதிப்புலக முன்னோடிகளுள் ஒருவராகப் புகழப்படும் முத்தையா, இந்திய தேசிய விடுதலைப்படையில் இணைந்து பணியாற்றியவராகவும் கூறப்படுகிறார்.

கயானா முதல் காஸ்பியன் கடல் வரை புத்தகம் எழுதிய அ.க. செட்டியார் எனும் அ.கருப்பன் செட்டியார் (1911-1983) தமிழில் பயண இலக்கியம் எனும் புதிய இலக்கியவகைக்கு முன்னோடியாகப் புகழப்படுகிறார். நாடு காண் பயணி, இதழாசிரியர், எழுத்தாளர் என அறியப்படும் செட்டியார், மகாத்மா காந்தி இருபதாம் நூற்றாண்டின் தூதர் எனும் பெயரில், மகாத்மா காந்தியின் வரலாற்று ஆவணப்படத்தை 1940 இல் வெளியிட்டு காந்த்திக்குப் புகழ் சேர்த்திருக்கிறார். தென்னாப்பிரிக்கா உட்பட பல்வேறு நாடுகளுக்கும் பயணம் செய்து, சுமார் மூன்றாண்டு கால கடும் உழைப்பில் தயாரான ஆவணப்படம் 1948 இல் சுதந்திர தினத்தன்று புது தில்லியில் திரையிடப்பட்டிருக்கிறது. உலகம் சுற்றும் தமிழன் உட்பட பல பயண நூல்களை எழுதிய கருப்பண் அவர்களின் நூல்கள் சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன.

சைபீரியாவின் முத்து என அழைக்கப்படும் பைக்கால் ஏரி, இயற்கை ஏரியாகவும், உலகின் மிகவும் ஆழமான ஏரியாகவும் (5,387 அடிகள்) அறியப்படுகிறது. ருஷ்ய மொழியல் சிபீர் எனக் குறிப்பிடப்படும் சைபீரியா, வடக்கு ஆசியாவை உள்ளடக்கிய மிகப்பெரிய நிலப்பரப்பாக இருக்கிறது. ரஷ்யாவின் அதிகமான நிலத்தைக் கொண்டுள்ள சைபீரியாவில் மிகக் குறைவான மக்களே வசிப்பதாகக் கூறப்படுகிறது. ரஷ்யாவின் டிரான்ஸ்-சைபீரியன் இருப்புப்பாதை உலகிலேயே மூன்றாவது மிகப்பெரிய இருப்புப்பாதையாக (9,289 கி.மீ) அறியப்படுகிறது. மாஸ்கோவையும், விளாடிவோஸ்டாக் நகரையும் இணைக்கும் இருப்புப்பாதை 1891-1916 காலகட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. மாஸ்கோ-பொயிங்யாங் இருப்புப்பாதை 10,267 கி.மீ நீளமும், கீவ்-விளாடிவோஸ்டாக் பாதை 11,088 கி.மீ நீளமும் கொண்டவையாகக் குறிப்பிடப்படுகின்றன. டிரான்ஸ்-சைபீரியா இருப்புப்பாதையிலிருந்து மங்கோலியா, சைனா, வடகொரிய நாடுகளுக்கும் இருப்புப் பாதை பிரிவுகள் செலகின்றன.

உலகின் பழமையான, தூய, நன்னீர் பேரேரியாகப் புகழப்படும் பைக்கால் ஏரி அதிகபட்சமாக 636 கி.மீ நீளமும், 79 கி.மீ அகலமும் கொண்டதாகக்

குறிப்பிடப்படுகிறது. சிக்கோய், கில்லோ, உடா, பார்குசன், வட அங்காரா போன்ற பெரிய ஆறுகள் உட்பட சுமார் முந்நூறு ஆறுகளால் நீர் பெரும் பைக்கால் ஏரியில் சிறுதும் பெரிதுமான சுமார் இருபத்தியிரண்டு தீவுகள் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தனிச்சிறபபு வாய்ந்த உயிரினங்களைக் கொண்டுள்ள பைக்காலியா ஏரி 1996 இல் பாரம்பரிய களமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜோசப் விசாரியோனவிச் ஸ்டாலின் ஆட்சிக் காலத்தில் (1924-1953) ரஷ்யா மிகப்பெரும் வல்லரசாக மாற்றம் பெற்றதாகக் கருதப்படுகிறது. 1928 முதல் 1942 வரை செயல்படுத்தப்பட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் ரஷ்யாவில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை சார்ந்த வளர்ச்சியும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சியும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

இட்லருக்கு எதிரான ரஷ்யர்களின் வெற்றிக்குப் பின்னால், ஸ்டாலினின் மிகுந்த திட்டமிடலும், அயராத உழைப்பும் இருப்பதாக வெகுவாகப் பாராட்டப்படுகிறது. செம்படையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஸ்டாலின் மிகச் சிறப்பான வெற்றிகள் பெற்றதோடு, இட்லரின் பேராசைக்கும் முடிவு கட்டினார். போருக்குப் பின் மீண்டும் ரஷ்யாவைக் கட்டியெழுப்பிய ஸ்டாலின், போர் முனையில் காட்டிய அதே வீரத்தை ரஷ்ய மறுநிர்மாணத்திலும் காட்டியதாகப் புகழப்படுகிறார். வளமான ரஷ்யாவாக மாற்றம் பெற்றதோடு உலகப அரங்கிலும் ரஷ்யாவின் புகழ் பெருகியது. வாழ்ந்த காலத்தில் வெகுவாகப் போற்றப்பட்ட ஸ்டாலின், அவரது மறைவிற்குப் பின் பரவலாக விமர்சிக்கவும் படுகிறார்.

1922 முதல் 1991 வரை சோவியத் ஒன்றியம் எனும் சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியமாக ருஷ்யா நாடுகள் இருந்தன. ஓன்றியத்தில் இரசியா, பெலரஸ், உக்ரேன், மால்தோவா, ஜார்ஜியா, ஆர்மேனியா, அசர்பைஜான், கசக்ஸ்தான், உஸ்பெகிஸ்தான், துருக்மேனிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தானந், எஸ்தோனியா, லிதுவேனியா, லாத்வியா போன்ற பதினைந்து நாடுகள் இணைந்திருந்தன.

1953 முதல் 1964 வரை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராகவும், 1958 முதல் 1964 வரை சோவியத்தின் பிரதமராகவும் இருந்த நிக்கிட்டா செர்கேவிச் குருசேவ் (1894-1971), ஸ்டானின் ரஷ்யாவை,

ரஷ்யாவாக மாற்றியதாகக் கூறப்படுகிறது. குருசேவுக்குப்பின் கட்சியின் தலைவராகவும் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் தலைவராகவும் (1964-1982) பதவி வகித்தவர் லியோனிட் இலீச் பிரெஷ்னேவ்.

1960 இல் சுப்ரீம் சோவியத்தின் அதிபர் ஆனதாகக் குறிப்பிடப்படும் பிரெஷ்னேவ் (1906-1982) அனைத்தும் அனைவருக்கும் சொந்தம் எனும் கொள்கையில் உறுதியாக இருந்தவராகப் புகழப்படுகிறார். ஸ்டாலினுக்குப் பின் அதிக காலம் பதவியிலிருந்த பிரெஷ்னேவ் ஆட்சிக்காலத்தில் உலகம் முழுவதும் சோவியத்தின் தாக்கம் மிகுந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

1991 இல் அதிபர் பதவிக்கு வந்த மிகயில் செர்கேயேவிச் கார்பச்சேவ் (பிறப்பு - 1931), சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொண்டவராக அறியப்படுகிறார். 1985 முதல் 1991 வரை பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த கார்பசேவ், மேற்கொண்ட அரசியல் மற்றும் சமூக நலம் சார்ந்த நடவடிக்கைகள் சோவியன் ஒன்றியத்தின் பிடிமானத்தை, இறுக்கத்தை தளர்த்தியது. இரும்புத்திரை அகற்றப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் மீது மேற்குலகின் வெளிச்சம் குறிப்பாக அமெரிக்க நாகரிகத்தின் தாக்கம் அதிகமாகி சோவியத் ஒன்றியம் தளர்வுற ஆரம்பித்ததாகக் கருதப்படுகிறது.

தாராளவாதக் கொள்கைகளை அமல்படுத்திய கார்பசேவ், பொருளாதாரத்தை மேம்படுத்தவும், அரசை சனநாயகப் படுத்தவும் மேற்கொண்ட முயற்சிகள், நடவடிக்கைகள் அதிகம் பயனில்லாமல் போனதாகக் குறிப்பிடப்படுகிறது. 1990களில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் கொந்தளிப்புகள், பிரிவினைவாதப் போராட்டங்கள் காரணமாக ஒன்றிய குடியரசுகளிடையே ஒன்றுமையின்மை நிலவியதைத் தொடர்ந்து 1991, டிசம்பர் இருபத்தியாறில் சோவியத் ஒன்றியம் கலைக்கப்படுவதாக கார்ப்சேவ் அறிவிப்பு வெளியிட்டார்.

முன்னர் பதினைந்து நாடுகள் இணைந்திருந்த ரஷ்ய ஒன்றியத்தில் பெரிய நாடாகவும், செல்வாக்கான நாடாகவும் விளங்கிய ரஷ்யா, 1991 திசம்பர் 25 முதல் ரஷ்யக் கூட்டாச்சியாக மாற்றம் பெற்றது. ரஷ்யாவின் முதலாவது அதிபராகவும் (ஜூலை 10, 1981-டிசம்பர் 31, 1999), ரஷ்யாவின் முதலாவது பிரதமராகவும் (நவம்பர்

6, 1991-ஜூன் 15, 1992) செயல்பட்டவர் போரிஸ் நிக்கொலாயவிச் யெல்ட்சின் (1931-2007).

ருஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து சீனாவில் நிகழ்த்தப்பட்ட புரட்சி ஆசிய அளவிலும் தொடர்ந்து உலக அளவிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கருதப்படுகிறது. சீனாவின் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகியவை புதிதாக மாற்றப்பட வேண்டுமென்று விரும்பிய மாவோ, கன்பூசிய சீனாவை கம்யூனிஸ்ட் சீனாவாக மாற்றிய தலைவராக அறியப்படுகிறார்.

நவீன சீனத்தை கட்டமைத்தவராக புகழப்படும் மாவோ எனும் மா-சே-துங் (1893-1976), சீனப் பொதுவுடமைக் கட்சியின் தலைவராக (1943-1976) நீண்ட வருடங்கள் இருந்ததோடு, விவசாயத்தில் முதன்மையான நாடாக இருந்த சீனாவை தொழில்வளமிக்க நாடாக மாற்றியவராகவும் அறியப்படுகிறார்.

நவீன சீன சட்டத்தின் படி, சீனப் பொதுவுடமைக் கட்சியே மக்கள் சீனக் குடியரசு எனும் சீன நாட்டை ஆள முடியும். 1921 இல் ஆரம்பிக்கப்பட்டு, அன்றைய சீனாவின் தேசிய அரசாங்கத்திற்கு எதிராகப் போரிட்டு, சீனா புரட்சி மூலம் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிய சீனா பொதுவுடமைக் கட்சி உலகின் மிகப்பெரிய அரசியல் கட்சியாக மாற்றமடைந்திருக்கிறது.

சீனாவின் மிக அதிகாரம் கொண்ட அமைப்புகளாக சீனப் பொதுவுடமைக் கட்சி, அரச இயந்திரம் மற்றும் மக்கள் விடுதலைப் படை எனும் சீன இராணுவம் உள்ளன. அரச அதிகாரம் மூலம் நாடு நிர்வகிக்கப்பட்டாலும், அரசின் முக்கியப் பதவிகள் அனைத்தையும் சீனப் பொதுவுடமைக் கட்சியே தீர்மானிக்கிறது.

1949 இல் சீனாவில் நிகழ்ந்த உள்நாட்டுப் போர் சீனப்புரட்சி எனவும், விடுதலைப் போர் எனவும் அழைக்கப்படுகிறது. மாவோவின் சீனப் பொதுவுடமைக் கட்சிக்கும் குவோமின்டாங் எனும் சீனத் தேசியவாதக் கட்சிக்கும் இடையே நடந்த போரில் (1927-1950) ருஷ்யாவின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கப்பட்ட பொதுவுடமைக் கட்சி மாவோவின் சிறப்பான வழிகாட்டலில் வெற்றி பெற்று ஆட்சியதிகாரத்தைப் பிடித்தது வரலாறு.

சீனக் குடியரசின் தந்தையாகப் போற்றப்படும் சன் - இ - சியன் (1866-1925), குவாமிங்டாங் கட்சியின் (1912) தலைவராகவும், மருத்துவர், புரட்சியாளர், எழுத்தாளர் மற்றும் அரசியல் தலைவராகவும் குறிப்பிடப்படுகிறார். சீனக் குடியரசு

(ஆர்.ஓ.சி) எனும் தைவானிலும், மக்கள் சீன குடியரசிலும் (பி.ஆர்.சி) செல்வாக்கான அரசியல் தலைவராக மதிக்கப்படும் டாக்டர் சன் யாட் சென், மக்களாட்சி முறை பற்றியும் குடியரசாக்கம் குறித்தும் தெளிந்த சிந்தனைகள் கொண்டிருந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலான சீன அரச மரபை குடியரசு அமைப்பிற்குள் கொண்டு வந்தவராக சன்யாட்சென் புகழப்படுகிறார். 1911 இல் மேற்கொள்ளப்பட்ட சீனப் புரட்சி சிங் அரசை முடிவுக்குக் கொண்டு வந்ததோடு, சீனாவை குடியரசு நாடாக மாற்றியதாகவும் குறிப்பிடப்படுகிறது. உலோகப் பன்றி புத்தாண்டு எனும் பொருளைக் கொண்ட ஷின்கை புத்தாண்டில் நிகழ்த்தப்பட்ட புரட்சி, சீன வரலாற்றில் ஷின்கை புரட்சி என்றே அழைக்கப்படுகிறது.

1911/12 முதல் 1949 வரை சீனாவை ஆண்ட கட்சியாக குவோமின்டாங் குறிப்பிடப்படுகிறது. நான்கிங்கை தலைநகராகக் கொண்டு டாக்டர் சுன் - இ - சியனும், பீகிங்கை தலைநகராகக் கொண்டு சிங் அரசின் படைத் தளபதி யுவான் ஷிக்காயும் அரசு புரிந்ததாகக் கூறப்படுகிறது. சீனக் குடியரசின் முதல் அரசத் தலைவராகப் பதவி ஏற்ற ஷிக்கா (1912-1915) பின்னர் சீனப் பேரரசை மீண்டும் நிறுவும் முயற்சியில் இறங்கியிருக்கிறது.

1912 முதல் 1949 வரை வரையிலான காலகட்டம் சீன வரலாற்றின் கொந்தளிப்பான காலமாகக் குறிப்பிடப்படுகிறது. ஷிக்காயின் பெயாங் அரசு (1912-1978) மாவோவின் சீனப் பொதுவுடமைக் கட்சி நிறுவிய சீன சோவியத் குடியரசு (1931-1937), ∴புஜீயான் மக்கள் அரசு (1933 – 1934), மஞ்சுகோ பொம்மையாட்சி (1932-1945), வாங் ஜிங்வெயின் சப்பானியராதிக்க பொம்மை அரசு (1940–1945) போன்ற குறிப்பிடத்தக்க அரசாட்சிகள் சீனத்தை ஆள்வதற்கு முயன்றிருக்கின்றன.

படைத்தளபதிகளாய் இருந்தவர்கள் அரசமைக்க முயன்றதும், சப்பானியர்களின் படையெடுப்பும் (1937-1945) கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் குவோமின்டாங்களுக்கு இடையேயான உள்நாட்டுப் போரும் சீனாவை பெரும் சீரழிவுக்கு ஆட்படுத்தியிருக்கிறது.

சுன் - இ - சியனுக்குப் பின் குவோமிங்டாங்கின் தலைவரான ஷங் - கை ஷெக் (1887-1975), மாசேதுங்கை கட்டுப்படுத்த பெருமுயற்சி செய்ததாகக் கூறப்படுகிறது. சங்-கை-செக்கின் மிகப்பெரும் படையுடன் மோதாமல் மாவோவும், கூட்டாளிகளும்,

செம்படையும், பொதுவுடமைவாதிகளும் 1934 இல் மேற்கொண்ட நெடும் பயணம், சீன வரலாற்றில் வெகு தீரமானதாகக் கருதப்படுகிறது. நிரந்தரமாகப் பணி மூடியிருந்த ஐந்து மலைத் தொடர்கள் உள்ளிட்ட பதினெட்டு மலைத்தொடர்களையும், இருபத்தி நான்கு ஆறுகளையும், அறுபத்தியிரண்டு மாநகரங்கள் மற்றும் நகரங்களையும் கடந்து ஷென்சியை அடைந்த பெரும் பயணம் சீன கம்யூனிஸ்டுகளின் மன உறுதிக்கு சான்றாக அமைந்திருக்கிறது.

எதிரும் புதிருமாக இருந்த சீன தேசியவாதக் கட்சியும், சீனப் பொதுவுடமைக் கட்சியும், சப்பானியர்களை எதிர்க்கும் விதமாக ஒன்று சேர்ந்தது ஆச்சரியமானது. சங்கை செக்கின் அழைப்பை ஏற்று சப்பானியர்களை எதிர்த்துப் போர் நடத்திய மாவோவும், செம்படையினரும், சப்பானிய வெற்றிக்குப் பின்னர் மீண்டும் சியாங்கே ஷேக்கின் கோமின்டாங் படையுடன் உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து நடத்தியிருக்கின்றன.

சீனத்தின் மத்திய நிலப்பகுதியிலிருந்து முன்னேறி, சீனப் பெருநிலம் முழுவதையும் பிடித்துக் கொண்ட மாவோவின் கம்யூனிஸ்ட்டு படையை வெற்றி கொள்ள இயலாமல், தைவான் தீவிற்கு வெளியேறிய சியாங்கே ஷேக், தைவானில் சீனக் குடியரசை நிறுவிக் கொண்டதுடன், சீனப் பெருநிலமும் சீனக் குடியரசிற்கே சொந்தம் என உலக நாடுகளிடம் ஆதரவு திரட்டியிருக்கிறார்.

சன் - யாட் - சென்னின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு குமிங்டோங் கட்சியில் சேர்ந்த மாவோ பின்னர் ருஷ்யப் புரட்சியின் வெற்றியால் உந்தப்பட்டு பொதுவுடமை கட்சியில் பணியாற்ற விழைந்ததாகக் கூறப்படுகிறது. 1911-ன் சீனப் புரட்சியின் போது மாணவராக இருந்ததாகக் குறிப்பிடப்படும் மாசே துங், 1921 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சீன பொதுவுடமைக் கட்சியின் முக்கியமான தலைவர்களுள் ஒருவர் எனும் அளவிற்கு செல்வாக்குப் பெற்றிருக்கிறார்.

1949 முதல் 1976 வரை சைனாவை வடிவமைத்தது மாவோயியம் எனில் மிகையாகாது. குடும்பத்தின் மேல் பெரும்பற்று கொண்டிருந்த சீனர்களை, விவசாயத்தை மட்டுமே பெருமளவில் நம்பியிருந்த, படிப்பறிவற்ற சீனர்களை, மேற்கத்திய நாடுகளோடு போட்டியிடும் அளவிற்கு கல்வியிலும், தொழில் துறையிலும், வணிகத்திலும், அறிவியல் தொழில் நுட்பத்திலும் படைபலத்திலும் முன்னேற்றிய மா - சே - துங் சீனத்தின் பெருத்தலைவராகப் போற்றப்படுகிறார்.

சீனத்தின் பெருந்திரளான மக்கள் சக்தியைப் பயன்படுத்தி, விரைவான தொழில்மயமாக்கத்தின் மூலம் வேகமான முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு மா-சே-துங்கால் திட்டமிடப்பட்ட பெரும் முற்போக்குப் பாய்ச்சலும் (1958-1961) பாட்டாளிகளின் பண்பாட்டுப் புரட்சியும் (1966-1976) பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டதாக அறியப்படுகிறது. பெரும் பாய்ச்சல் சீனத்தை வளப்படுத்தும் என்பதற்கு மாற்றாக விவசாயம் நலிவுற்று பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மடிந்ததாகக் கூறப்படுகிறது.

1950-ல் சீனப்படைகள் திபெத்தை ஆக்ரமித்ததும், 1959 இல் ஏற்பட்ட திபெத் கிளர்ச்சி வெற்றி பெறாமல் திபெத்தின் 14 வது தலாய் லாமா டென்சிங் கியாட்சோ (பிறப்பு-1935) இந்தியாவிடம் அடைக்கலம் புகுந்ததும் இந்தியாவின் மீது 1962 இல் சீனா போர் தொடுக்க முக்கியக் காரணமாகக் குறிப்பிடப்படுகிறது. எல்லைச் சிக்கல்களைக் காரணம் காட்டி தொடுக்கப்பட்ட சீனப் போருக்குப் பின்னே, பல்வேறு அரசியல் காரணங்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது. சீனாவை ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெறச் செய்ய பெரிதும் பாடுபட்டவரான நேரு, சீனா திடீரென்று இந்தியா மீது போர் தொடுக்கும் என கிஞ்சித்தும் நினைக்கவில்லை எனக் கூறப்படுகிறது. கம்யூனிஸ்ட்டு சீனா, சனநாயக இந்தியா மீது தொடுத்த போரே இந்தியாவை உலகின் மிகப்பெரும் படை ஆளுமை நாடுகளுள் ஒன்றாக மாற்றியது எனில் மிகையாகாது.

கடலைக் குறிக்கும் தலாய் என்பதன் மங்கோலியச் சொல்லும், ஆசான் என்பதைக் குறிக்கும் திபெத்திய லாமா சொல்லும் இணைந்த தலாய் லாமா எனும் பெயர் திபெத்திய புத்த மதத்தின் தலைமை பதவியை குறிப்பிடுகிறது. திபெத்திய லாமா, அவலோகிதர் எனும் புத்த வடிவத்தின் அவதாரமாகக் கருதப்படுகிறார். தாமரையைக் கையில் ஏந்தியவர் எனும் பொருளில் அவலோகிதர் பத்மபானி என்ற குறிப்புப் பெயரிலும் அழைக்கப்படும் அவலோகிதர் கருணை வடிவானவராகவும், சிறந்த அன்பு கொண்டவராகவும் சிறப்பிக்கப்படுகிறார். திபெத்திய மொழியில் சென்ரெட்ஸிக் என அழைக்கப்பெறும் அவலோகிதர், மகாயான பௌத்த மரபில் தாமரை சூத்திரத்தோடு தொடர்புடையவராகக் குறிப்பிடப்படுகிறார்.

போதிசத்துவ தருமத்தின் வெளிப்பாடுகளாக் கருதப்படும் தலாய்லாமாக்கள், திபெத்திய ஆன்மீகத் தலைவர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். பதினேழாம் நூற்றாண்டிலிருந்து 1959 வரை தலாய் லாமாவும் அவரது

பிரதிநிதிகளும், லாசாவை இருப்பிடமாகக் கொண்டு திபெத்திய பீடபூமியின் அரசியல் அதிகாரம் பெற்றவர்களாக, மதம் மற்றும் நிர்வாகப் பணி செய்து வந்தவர்களாக அறியப்படுகின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியத்திற்கும், ருஷ்யாவிற்கும் இடையே நடைபெற்ற மத்திய ஆசியா ஆதிக்கப் போட்டியில், 1904 இல் பிரித்தானியப் படை லாசாவைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது. பிரித்தானிய-திபெத் ஒப்பந்தம், 1911 இல் சீனாவிடமிருந்து விடுதலை அறிவிப்பு, 1949-50களில் சீன மக்கள் குடியரசின் ஆக்கிரமிப்பு, பின்னர் 1951 இன் பதினேழு அம்ச சீனா – திபெத் உடன்படிக்கை, என நீண்ட போராட்டங்களில் சீனாவின் செல்வாக்கை மீறி பன்னாட்டு அளவில் திபெத்தால் ஆதரவு திரட்ட இயலவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. தனி நாடு கேட்கவில்லை எனவும், தன்னாட்சியே கேட்கப்படுவதாகவும் பதினான்காவது தலாய் லாமா வேண்டியும், திபெத் குறித்தான சீனாவின் மௌனம் தொடர்வதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன.

பௌத்தம் அதன் நெகிழ்வுத் தன்மையால் பல்வேறு பண்பாடுகளுடன் இணைந்து பல்வேறு வழிபாட்டு முறைகளாக மாற்றம் பெற்றுள்ளது. இந்தியப் பௌத்தத்திற்கும் திபெத்திய பௌத்தத்திற்கும் வேறுபாடுகள் இருப்பது போலவே திபெத்திய வழிபாட்டு முறைக்கும் சீனா பௌத்த வழிபாட்டிற்கும் மாறுபாடுகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. சீனாவில் தாவோயிசத்தின் தாக்கம் அதிகமிருப்பது போலவே, ஜப்பானிய பௌத்தத்தில் சிந்தோ மதத்தின் தாக்கம் மிகுந்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. பௌத்தமும். ஷிண்டோயிசமும் ஒன்றிணைந்து ஜென் பௌத்த மரபாக வளர்ந்திருப்பதாகவும் குறிப்புகள் சுட்டுகின்றன.

சின் - கடவுள், தோ - வழி எனும் சப்பானிய சொல்லான சின்தோ அதாவது கடவுளின் வழி மதம், முன்னர் சப்பானின் முதன்மையான மதவழிபாடாகவும், பல கடவுள் கோட்பாட்டு மதமான ஷிண்டோ, சப்பானின் அரச மதமாகவும் இருந்திருக்கிறது.

சப்பானிய கடவுள் நம்பிக்கையில் தக்கமகாரா தொன்மவியல், இசூமோ தொன்மவியல், இயூகோ தொன்மவியல் போன்றவையும், சப்பானிய தொன்ம நூல்களாக கோசிகி, நிகான் சோகி, புடோக்கி, குசிக்கி, கோகோசுயி, சின்டோசு போன்ற பல நூல்களும் குறிப்பிடப்படுகின்றன. யப்பானிய பெருங்கடவுள்களாக

கோடாஅமாசுகாமி, காமியோநயனா, குனியுமி, காமியுமி, இசநமி, இசநகி, ககுட்சூசி, வாதாசுமி, சினிகாமி போன்றோர் அறியப்படுகின்றனர். தக்கமாரா தொன்மத்தில் அமதெரசு, சுசானவோ, சுக்குயோமி போன்றோர் சிறப்பிடம் பெற்றுள்ளனர். இசூமோவில் யமத்தா-நோ-ஒரொச்சி எனும் மாபெரும் எண்தலைநாகம் முக்கிய இடம் பெற்றுள்ளது. கொடிய எண்தலை நாகத்தை சுசனோ கடவுள் முடித்ததாவும் அதையொட்டிய கதையாடல் யப்பானில் மேடையேற்றப்படுவதாகவும் கூறப்படுகிறது.

யப்பானின் பழங்காலம் முதலே பின்பற்றப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படும் சின்டோ மதத்தில் பல்வேறு சடங்கு முறைகள், நம்பிக்கைகள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. சிந்தோ மரபில் அறியப்படும் கமி கடவுள்களுக்கு ஆயிரக்கணக்கான வழிபாட்டிடங்கள் யப்பானிய நிலத்தில் அமைந்திருப்பதாகவும் சுட்டப்படுகிறது.

கமி எனும் சப்பானிய வழிபாட்டு முறையில், ஏராளமான கடவுள்கள் இடம் பெற்றுள்ளனர். ஈசாநாகி ஆண்முதற்கடவுளாகவும், ஈசாநாமி பெண் முதற்கடவுளாகவும் போற்றப்படுகின்றனர். இனாரி நெல் கடவுளாகவும், அமெதரசு சூரிய பெண் கடவுளாகவும், சூச-நோ புயலின் கடவுளாகவும் அறியப்படுகின்றனர்.

ஈசாநாகியும் ஈசாநாமியும் வேல் கொண்டு கடலைக் கடைந்தபோது, அந்த வேலின் நுனியில் இருந்து வடிந்த துளியே சப்பானிய தீவுகள் என காமி மதத்தினர் நம்புவதாகக் கூறப்படுகிறது.

சப்பானியத் தொன்மத்திலும், சின்டோ மத வழக்கத்திலும், ஏழாவது தெய்வீக மரபைச் சேர்ந்தவராக இசநகி அறியப்படுகிறார். இசநகியின் சகோதரியும் மனைவியுமாகக் கருதப்படுபவர் இசறமி. இசநமி-நொ-மிக்கொட்டோ, இசநமி-நொ-கமி போன்ற பெயர்களிலும் அழைக்கப்படும் இசநமி படைப்பு மற்றும் இறப்பின் தெய்வமாக அறியப்படுகிறார்.

இசநமி மற்றும் இசநகியை எனும் தெய்வீகப் பிறவிகளை உருவாக்கிய ஆதி கடவுள்களாக குனிதோ-கொடாசி மற்றும் அமெ-னோ-மினா-கனுஷி குறிப்பிடப்படுகின்றனர்.

இசநகியை பாதாள உலகம் சென்று பார்த்து வந்ததன் பொருட்டு, இசநமி செய்த சுத்தப்படுத்தும் சடங்கில், இடது கண்ணைக் கழுவிய போது அமதெரசுவும்,

வலது கண்ணைக் கழுவிய போது சுக்குயோமியும், மூக்கைக் கழுவிய போது சுக்குயோமியும் பிறந்ததாகக் கூறப்படுகிறது.

நிலாக்கடவுளான சுக்குயோமி உடன்பிறந்தவரான கதிரவக் கடவுள் அமெதெரசுவுடன் சேர்ந்து வானத்தை சரிநிகராக ஆண்டு வந்ததாகவும், பின்னர் இருவருக்குமிடையே கோபம் உண்டாகி சுகயோமி பாதாளத்திற்குச் சென்றதால் அவரது ஒளி குன்றியதாகவும் பின்னர் அமதெரசு காலை நேரத்திலும், சுக்குயோமி இரவு நேரத்திலும் வானத்தை ஆட்சி செய்ததாகவும் கூறப்படுகிறது. அமதெரசு சுக்குயோமி போன்றே அமதெரசு-சுசானவோ இடையேயும் பகை மூண்டிருக்கிறது. இருவரும் பொருட்களிலிருந்து கடவுள்களைப் பிறக்க வைத்ததாகக் கூறப்படுகிறது. சுசானவோவின் வாளின் மூலம் மூன்று பெண்கடவுள்களை உருவாக்கிய அமதெரசுக்கு மாற்றாக, அமெதரசுவின் அணிகலன் கொண்டு ஐந்து ஆண்கடவுள்களை சுசானவோ உருவாக்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. இருவருக்குமிடையே நடந்த சண்டையில் அமதெரசின் வயல்களை சுசானவோ அழித்ததாகவும், கோபம் கொண்ட அமதெரசு அம-னோ-இவாடோ எனும் குகையில் ஒளிந்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. உலகில் இருள் சூழ்ந்ததாகவும், அதற்குத் தண்டனையாக சுசானவோ விண்ணுலகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அமதெரசுவை குகையிலிருந்து வெளிக்கொணர அனைத்துக் கடவுள்களும் சேர்ந்து திட்டம் தீட்டியதாகவும், அதன்படி யாடா-நோ-ககாமி என்னும் கண்ணாடியையும், யசகானி-நோ-மகடமா என்னும் முத்து நகையையும் குகையின் வாயிலுக்கு நேர் எதிரே ஒரு மரத்தில் கட்டி வைத்ததாகக் கூறப்படுகிறது. புதிய சூரியக் கடவுள் கிடைத்துவிட்டதாக கடவுள்கள் ஆடிப்பாடியதாகவும், கோபம் கொண்ட அமதெரசு, குகை வாயிலை உடைத்துக் கொண்டு வெளியே வந்ததாகவும், கண்ணாடியில் அவரது முகம்பட்டு, பூமியெங்கும் போரொளி பிரதிபலித்ததாகவும், பூமியின் இருள் நீங்கியதாகவும், பூமி பழைய நிலைக்குத் திரும்பி, பயிர்கள் செழித்து உயிரினங்கள் பெருவாழ்வு பெற்றதாகவும் கூறப்படுகிறது. பிற்காலத்தில் அமதெரசுவோடு சமாதானமாகிய சுசானவோ, அதற்கு அடையாளமாக சூசநகி-நோ-சுரகி எனும் வாளை பரிசளித்ததாகவும் சப்பானிய தொன்ம மரபு குறிப்பிடுகிறது.

அமதெரசு, மகனான அமா-னோ-ஒசிகோ-மிமியிடம் பூமியை ஆளுமாறு கேட்டுக் கொண்டதாகவும் விண்ணுலகையும் மண்ணுலகையும் இணைக்கும் பாலமான அமா- னோ-அசித்ததேயில் நின்று கொண்டு பூமியைப் பார்த்த மிமி, பூமியில் நிகழும் கொடுமைகளைக் கண்டு ஆள மறுத்ததாகவும், தொடர்ந்து பலரும் பூமியை ஆட்சி செய்ய மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. இறுதியாக அமதெரசுவின் பேரனும் மிமியின் மகனுமான நினிங்கி பூமியை ஆள சம்மதித்ததாகவும் பெரு மகிழ்ச்சியுற்ற அமெதரசு, நினங்கிக்கு மகடமா நகை, ககாமி நகை மற்றும் சுரகி வாள் மூன்றையும் பரிசாகக் கொடுத்து அனுப்பியதாகவும் நினிங்கியின் நினைவுச் சின்னங்களான முத்து, கண்ணடி மற்றும் வாளை அரசு சின்னங்களாக ஆக்கிக்கொண்டே, நிப்பானிய அரசர்கள் அரசாண்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கதிரவன் மற்றும் விண்ணகத்தின் கடவுளாக அமதெரசு கருதப்படுகிறார். விண்ணகத்தில் ஒளிவீசும் எனும் பொருள் உடைய அமதெரு எனும் சொல்லிலிருந்து அமதெரசு என்ற பெயர் தோன்றியதாகக் கூறப்படுகிறது. ஒளிவீசும் பெரும் மாட்சிமையுள்ள கடவுள் எனும் பொருளில் அமெதரசு – ஒமிகாமி என அழைக்கப்படும் அமதெரசு, கோசிகி மற்றும் நிகோன்சோசி தொன்ம நூல்களின்படி, சப்பானியப் பேரரசர்களின் மூதாதையாகக் கருதப்படுகிறார். அமெதரசின் நேரடி வாரிசுகளே சப்பானியப் பேரரசர்கள் என்பது நம்பிக்கை. ஜப்பானிய அரச மரபு வழி வரிசையின் படி 120 வது பேரரசராக அறியப்படும் பேரரசர் நின்கோ (ஆ.காலம் 1817 - 1846), சின்ந்தோ மதத்தவராகக் குறிப்பிடப்படுகிறார். 121 வது பேரரசர் கிமுகி எனும் கோமேர் பேரரசர் (ஆ.காலம் 1846-1867). எடோ காலத்தின் கடைசிப் பேரரசராகக் கருதப்படுபவர் புகழ்பெற்ற பேரரசர் மைஜி (ஆ.காலம் 1868-1912.)

சப்பான் வரலாற்றில் 1603 முதல் 1868 ஆம் ஆண்டு வரைக்குமான ஆட்சிக் காலம் எடோ காலம், டோகுகாவா காலம் என அழைக்கப்படுகிறது. பழமையான சப்பானிய மக்கள், நவீன காலகட்டத்திற்குள் நுழைந்த காலமான எடோ காலத்தில், சப்பான் மிகப்பெரிய எழுச்சியையும், பொருளாதார வளர்ச்சியையும், கடுமையான சமூக ஒழுங்கமைப்பையும், கலை மற்றும் கலாச்சாரத்தில் மிகுந்த மாற்றங்களையும் சந்தித்திருக்கிறது.

டோகூகாவா அரசாட்சியை நிறுவியவராக டோகககவா ஐயசு (1543-1616) அறியப்படுகிறார். ஷோகுன் எனப்படும் இராணுவத் தலைமை பதவியை வகித்த

டோகுகாவா, ஷோகுனேட்டை திறமையாக ஒருங்கிணைத்தவராகவும், அடுத்து வந்த இரண்டரை நூற்றாண்டுக் காலத்தின் அரசியல், சமூக, பொருளாதார, இராணுவ கொள்கைகளுக்கு அடித்தளமிட்டவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

சப்பானிய பேரரசின் விரைவான மாற்றங்களுக்குத் தலைமை தாங்கியவராக சக்ரவர்த்தி மைஜி புகழப்படுகிறார். தனித்து சுதந்திரமாக இயங்கிய சப்பானை, நிலப்பிரபுத்துவ சப்பானை முதலாளித்துவ மற்றும் ஏகாதிபத்திய சப்பானாக மாற்றியிருக்கிறார். தொழில்துறையில் புரட்சிகள் செய்த சப்பானாக மாற்றிக் காட்டியதும், சப்பானை உலக வல்லரசாக்கியதும் பேரரசர் மேஜியின் சாதனைகளாகக் கொண்டாடப்படுகின்றன.

அறிவொளியூட்டப்பட்ட ஆட்சி எனும் பொருளில் னமஜி என அழைக்கப்படும் பேரரசர், 1968 இல் கியோட்டோ எனும் எடா நகரத்தின் பெயரை டோக்கியோ (கிழக்கின் மூலதனம்) என மாற்றியதாகக் கூறப்படுகிறது. ஒரு புதிய உலக சக்தியின் அன்பான அரசரான மைஜி பேரரசர், சப்பானை தொழில்துறை நாடாக்கியதோடு, படைத்துறையிலும் வலிமையான நாடாக மாற்றியிருக்கிறார். சீன-சப்பானியப் போர் (1894-1895), ரசிய-சப்பானிய போர் (1904-1905) போன்றவை சப்பானிய படைத்துறையை உலகுக்குக் காட்டியதாகக் கூறப்படுகிறது.

ஹிஸ் இம்பீரியல் மெஜஸ்டி பேரரசர் மைஜி, 1889 இல் மீஜி அரசியலமைப்பை அறிமுகம் செய்ததன் விளைவாக சப்பானின் முதல் பிரதமராக ஜட்டோ ஹி-ரோபூமி (1841-1909), பதவியேற்க முடிந்திருக்கிறது. நாட்டின் ஒன்றாவது, ஐந்தாவது, ஏழாவது மற்றும் பத்தாவது தலைமை அமைச்சராகச் செயல்பட்ட இடா ஹிரேபூமி, ஜெர்மனி, அமெரிக்கா, பிரித்தானியா உட்பட பல மேற்கத்திய வல்லரசுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்தியவராக அறியப்படுகிறார்.

1868 லிருந்து, 1947 இல் தற்போதைய சப்பானின் அரசியலமைப்பு சட்டம் நிறைவேற்றப்படும் வரை அமைந்திருந்த டாய் நிப்பான் டென்கோகு எனும் பெரும் சப்பானியப் பேரரசு, நாடாளுமன்ற முடியாட்சி பேரரசாக அறியப்படுகிறது. உலகம் ஒரு கூரையின் கீழ் என்பதனைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த சப்பானியப் பேரரசு, உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை நிகழ்த்தியதாகவும், மேற்கத்திய நாடுகளைப் போல கிழக்கிலும் பெரும் பேரரசை உருவாக்கும் வேட்கை கொண்டிருந்ததாகவும் சுட்டப்படுகிறது.

நீண்ட வரலாற்றுப் பாரம்பாரியம் கொண்ட சப்பான் நாட்டில், எடோ காலத்திற்கு முன், அசூச்சி-மொமோயாமா காலமும் (1568-1603) அதற்கும் முன் முரோமாச்சி காலமும் (1336-1573) செல்வாக்கோடு இருந்திருக்கின்றன. பேரரசர் ஜிமு சப்பானின் முதலாவது பேரரசராகக் குறிப்பிடப்படுகிறார். அமெதெரசின் வாரிசாகக் கருதப்படும் ஜிமு, பொது ஆண்டிற்கு முன் 660 பிப்ரவரி பதினோறாம் நாள் பேரரசராக முடி சூட்டப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு, தொடர்ச்சியாக பேரரசர்கள் அறிவிக்கப்பட்டு வருவது சிறப்பு.

நிப்பொன், யப்பான், நிப்பன், ஜப்பான் என அழைக்கப்படும் சப்பான் நாடு, சூரியன் முதலில் எழும் நாடாக அறியப்படுகிறது. ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழங்காலத்திலேயே சப்பானில் மனிதர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பொது ஆண்டிற்கு முன்பான முப்பதாயிரம் ஆண்டுகளில் பழங்காலப் பண்பாடு இருந்ததாக அறியப்படும் சப்பான் தீவுகளில், பின்னர் படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டு, பொது ஆண்டிற்கு முன்பான நான்காம் நூற்றாண்டுக் காலத்தில் அரசுகள் தோன்றியிருக்கின்றன. யயோய் காலம் (பொ.ஆ.முன் 400 - பொ.ஆ.பின் 250). கொ.ுன் காலம் (பொ.ஆ 250-538), அசுக்கா காலம் (538-710), நாரா காலம் (710-794), எய்யன் காலம் (794-1185), கமக்குரா காலம் (1185-1333) போன்ற அரசுரிமைகள் சப்பானிய வரலாற்றில் செல்வாக்கு செலுத்தியிருக்கின்றன.

பொது ஆண்டின் 710 இல் நாராசி சப்பானின் தலைநகராகவும் புத்தமதத்தின் கலை, மதம் மற்றும் கலாச்சாரம் மையமாகவும் விளங்கியிருக்கிறது. 700 முதல் 1868 வரையிலுமான சப்பானியப் பேரரசர்கள் அதிகாரம் குறைந்தவர்களாகவும், மிகப் பெருமை நிறைந்தவர்களாகவும் இருந்துள்ளனர். பேரரசர்களால் நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய குழுக்களுக்கு அரசியல் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும், அவ்வாறான குறுநில ஆட்சியாளர்கள் சாமுராய் வீரர்கள் மூலம் அவர்களது நிலங்களைப் பாதுகாத்ததாகவும் கூறப்படுகிறது.

பொது ஆண்டின் ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொழில்மயமாக்கத்திற்கு முன்பு வரை சப்பானிய படைத்துறையின் சிறப்பான பட்டத்திற்குரியதாக சாமுராய் எனும் பட்டம் இருந்துள்ளது. பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டவர்களாக இருந்த சாமுராய்கள், சப்பானிய சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்ததாகவும் இடா காலத்தின் போது

நாட்டில் அமைதி நிலவியதால் போர் தொழில் இல்லாமல் சாமுராய்கள் உழவுத் தொழிலுக்கும் பின்னர் வேறு தொழில்களுக்கும் மாறியதாகக் கூறப்படுகிறது.

பேரரசர்கள் மெய்ஜி காலம், மகன் தாய்சோ காலம் (1912-1926), பேரன் சோவா காலம் (1926-1945) நவீன சப்பானின் காலமாகக் குறிப்பிடப்படுகிறது. 6852 தீவுகளை உள்ளடக்கியதும், ஒக்கைடோ, ஒன்சு, சிகொக்கு மற்றும் கியுசூ எனும் பெரிய தீவுகளையும் உள்ளடக்கியுள்ள சப்பான் நாட்டில், மிக நீண்ட காலம் ஆட்சியிலிருந்தவராக பேரரசர் சோவா (ஆ.காலம் 1926-1989) அறியப்படுகிறார்.

சோவா என்பது ஒரு காலப்பகுதியின் பெயராகக் கருதப்படுகிறது. சப்பானியப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தோடு பொருந்தும் காலப்பகுதியின் பெயர் அவர்கள் இறந்ததும் அவர்களுக்கும் பெயராவதாகக் குறிப்பிடப்படுகிறது. 124 வது சப்பானியப் பேரரசராக இருந்த இடா ஹிரோகிட்டா (1901-1989) இறப்பிற்குப் பின்னர் பேரரசர் சோவா எனும் பெயரிலேயே அழைக்கப்படுவதும் அறியத்தக்கது. சப்பான் நாட்டின் 125 வது பேரரசராக அசிகிட்டோவும் ஆ.காலம் (1989 தொடக்கம்), முடிசூட்டப்பட்ட இளவரசராக நருகிட்டோவும் (பிறப்பு-1960) அறியப்படுகின்றனர்.

பாட்டனார் இறந்தபோது, முடிக்குரிய இளவரசராக இருந்த இறாசித்தோ பேரரசரின் ஆட்சிக் காலத்தில், சப்பானிய சமூகத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விவசாயம் சார்ந்ததும், பெரும்பகுதி நாட்டுப்புறமாகவும் இருந்த சப்பான், பேரரசரின் ஆட்சிக் காலத்தில் நகரப் பகுதியாகவும் தொழில் முன்னேற்ற நாடாகவும் மாற்றம் பெற்றிருக்கிறது. உலக வல்லாதிக்கம் பெரும் முயற்சியில் மேற்கத்திய நாடுகளோடு போட்டியிட்ட சப்பான், இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியோடு கூட்டணி கண்டு ஏராளமான நாடுகளையும் ஆக்கிரமித்திருக்கிறது.

ஆரம்பத்தில் மேற்கு நாடுகளுக்கு கதவை சாத்திக் கொண்ட சப்பான், கருப்பு கப்பல்கள் போன்ற பல்வேறு முயற்சிகளுக்குப் பின்னர் சற்றே கதவைத் திறந்திருக்கிறது. கோமேர் போன்ற பேரரசர்கள் மேற்கத்திய வல்லரசுகளுக்கு எதிராக சப்பானை பாதுகாத்தவர்களாக அறியப்படுகின்றனர். போர்துகீசியர், பிரெஞ்சுகாரர், பிரித்தானியர், ஆங்கிலேயர் போன்றவர்களை எதிர்த்த சப்பானிய பேரரசர்கள், டச்சுக்காரர்களோடு வணிக உறவு கொண்டிருந்ததாகவும் குறிப்புகள் சுட்டுகின்றன. எனினும் மேற்கு நாடுகளின் தொடர் முயற்சிகளால் நிப்பானுக்குள் நுழைந்த மேற்கின் வணிகமும், நாகரீகமும், கிறித்தவமும், கல்வியும்,

சப்பானியர்களின் வாழ்வியல் முறையை பெருமளவில் மாற்றியிருக்கின்றன. கூடவே மேற்குலகினரைப் போல் பேரரசையும் கிழக்கின் நிப்பனைப் பிடித்துக் கொண்டது.

இரண்டாம் உலகப் போரில் பெருமளவில் பாதிக்கப்பட்ட சப்பான் நாட்டை, மீளமைப்பு செய்து, நகர்ப்புற, தொழில்துறை, தொழில்நுட்ப மற்றும் முன்னேற்றமடைந்த நாடாக மாற்றியதில் ஷிரோஹிட்டா பேரரசர் பெரும்பங்காற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜப்பானில் மிக அதிக காலம் பிரதம அமைச்சராக இருந்தவராக இளவரசர் கட்சுராடாரோ (1848-1913) அறியப்படுகிறார். 1901 தொடங்கி 1913 வரை மூன்று முறை (2883 நாட்கள்) தலைமை அமைச்சர் பதவி வகித்த டாரோவுக்குப் பின், 1964 தொடங்கி அதிக காலம் பிரதமராக இருந்தவர் எசகு சடோ (2797 நாட்கள்). ஜப்பானின் 57 வது தலைமை அமைச்சராகப் பணியாற்றும் சின்சோ அபே (பிறப்பு - 1954), 2006 தொடங்கி 2012, 2014, 2017 பொதுத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று, நான்காவது முறையாக தலைமை அமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றுகிறார்.

சப்பான் நாட்டின் ∴புஜி மலை, சப்பானிய கலாச்சாரத்தில் சிறப்பான இடம் பெற்றுள்ளதாகப் புகழப்படுகிறது. சப்பானின் ∴புஜி (12,389 அடிகள்), டேட் (9,892 அடிகள்) மற்றும் ஹகு (8,865 அடிகள்) மலைகள் புனித மலைகளாகக் கருதப்படுகின்றன.

டோக்கியோவிலிருந்து தென் மேற்கே நூறு கி.மீ தூரத்தில் அமைந்திருக்கும் பியுஜி மலை, மூன்று எரிமலைகளின் தொகுப்பாக அறியப்படுகிறது. கீழே கோமிடெக் மலையும், மத்தியில் கோ.∴புஜி மலையும், மேலே ∴புஜி மலையும் அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. மேலே வெண்பனித் தொப்பியுடன் அலங்காரமாய்க் காட்சியளிக்கும் பியுஜி மலை, உலகெங்குமுள்ள இயற்கை ஆர்வலர்களை ஈர்த்து வருவதாகக் கூறப்படுகிறது. மலையில் ஏறுவதும், மலையிலிருந்து சூரிய உதயத்தைக் காண்பதும் சப்பானியர்களால் புனிதமாகக் கருதப்படுகிறது. சிந்தோ கலாச்சாரத்தில் மிகவும் மதிப்புமிக்கதாக விளங்கி வரும் பியுஜி மலை சப்பானியங்களின் மனம் கவர்ந்தமலை எனில் மிகையாகாது.

சப்பானில் இராகனா, கதகனா, மற்றும் காஞ்சி எனும் மூன்று எழுத்துக்கள் வழக்கத்திலுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. கன்ஜி அல்லது காஞ்சி எழுத்து முறை சீனாவின் பண்டைய எழுத்து முறையாகவும், கொரியா, வியட்நாம் மற்றும் ஜப்பான்

போன்ற நாடுகளில் அவரவர் பண்பாட்டிற்கேற்றவாறு சிறிது மாற்றியமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. ஜப்பானில் பயன்படுத்தப்படும் ஹன்ஜி எழுத்துக்கள் ஜப்பானிய கன்ஜி என அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானிய மொழியான நிஹோங்கோ (சப்பானியம்), தமிழைப் போன்ற ஒரு ஒட்டுச் சேர்க்கை மொழியாகக் குறிப்பிடப்படுகிறது. தமிழ் இலக்கணத்திற்கும், சப்பானிய இலக்கணத்திற்கும் மிகுந்த ஒற்றுமை இருப்பதாகவும் கூறப்படுகிறது. பேராசிரியர் சுசுமு ஓனோவின் ஆய்வு முடிவுகள், தமிழுக்கும் சப்பானியத்திற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை உறுதிப்படுத்துவதாக அறியப்படுகிறது. நம்பு - நம,யாறு - யற, நீங்கு - நிகு, உறங்கு - உரகு, கறங்கு - கரகு, அகல் - அகரு, அணை - அணி, கல் - கர போன்ற ஏராளமான சப்பானிய சொற்களுக்கு, தமிழ் மொழியே வேர்ச் சொல்லாக இருக்கலாம் என ஆய்வுகள் சுட்டுகின்றன. நெல் பயிரிடுதல், உறவுமுறைகள் போன்ற ஏராளமான கலாச்சார ஒற்றுமை கொண்ட சப்பானிய தமிழர்களிடையே பொங்கல் பண்டிகையிலும் ஒற்றுமை உள்ளதாக அறியப்பட்டிருக்கிறது. தமிழரைப் போன்றே பொங்கல் கொண்டாடும் சப்பானியர்கள், பொங்கலோ பொங்கலுக்குப் பதிலாக கொங்கரா கொங்கரா எனக் குரல் எழுப்பது வியப்பானது.

சமீபத்திய ஆய்வுகள் தமிழுக்கும் கொரிய மொழிக்கும் நெருங்கிய உறவிருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றன. நீண்ட வரலாறு கொண்ட கொரிய தீபகற்பம், சப்பானால் 1910 இல் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது. இரண்டாம் உலகப் போரின் முடிவு வரை சப்பானின் ஆதிக்கத்திலிருந்த கொரியா, பின்னர் சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்காவின் பிடியில் சிக்கி, 1948 இல் வடகொரிய மற்றும் தென்கொரியா எனப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பனிப்போரில் வடகொரியா சோவியத் ஆதரவையும், தென்கொரியா அமெரிக்க ஆதரவையும் மேற்கொள்ள, கொரியாக்களிடையே போட்டியும், பகையும், வெறியும் ஊக்குவிக்கப்பட்டு ஒன்றுக் கொன்று பகை நாடுகள் போல் மாற்றப்பட்டிருக்கின்றன.

பொது ஆண்டின் இரண்டாம் நூற்றாண்டில் சீன மொழியும், நான்காம் நூற்றாண்டில் பௌத்தமும் கொரிய தீபகற்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கொரிய தீபகற்பத்தின் கலை, பண்பாடுகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கொரிய தீபகற்பத்தின் முப்பேரரசு காலம், கொரிய மக்களின் பழமைக்கும், பண்பாட்டுச் செழுமைக்கும் அடையாளமாகக் கூறப்படுகிறது. பொது ஆண்டின் முன்னான 57 தொடங்கி பொது ஆண்டின் 668 வரை கொரிய தீபகற்பத்தையும் மஞ்சூரியாவின் சில பகுதிகளையும் உள்ளடக்கியிருந்த கோகுர்யியோ, பைக்யே மற்றும் சில்லா நாடுகள், கொரியாவின் மூன்று அரசுகள் எனப் புகழப்படுகின்றன. கொரியாவின் முப்பேரரசு காலகட்டமாக அழைக்கப்படும் மூன்று அரசுகள் காலகட்டத்திற்குப் பின், கொரிய தீபகற்பம் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளாகப் பிரிந்ததாகவும், வடக்குப் பகுதி பைக்யே அரசின் கட்டுப்பாட்டிலும், தெற்கு சில்லா அரசின் கட்டுப்பாட்டிலும் இருந்திருக்கிறது. கொரிய வரலாற்றில் செழுமையான தாக்கங்களை ஏற்படுத்திய முப்பேரரசிற்கு முன் கோஜோசியன் அரசுரிமை இருந்திருக்கிறது.

1945 ஆகஸ்டு 15 இல் ஜப்பானிடமிருந்து விடுதலையடைந்த வட கொரியாவிற்கும் ஜப்பானுக்கும் தற்போதும் எல்லைத் தகராறு நிலவுவதாகக் கூறப்படுகிறது. தங்கம் எனும் பொருள் கொண்ட கொரிய சொல்லின் அடைமொழியுடன் அழைக்கப்படும் கிம் இல் சுங் (1912 -1994) வட கொரியாவின் தந்தை என அழைக்கப்படுகிறார். 1948 முதல் 72 வரை வட கொரியாவின் தலைவராகவும், 72 முதல் 94 வரை சனாதிபதியாகவும் இருந்த கிம் இல் - சுங்கிற்குப் பின்னர், வட கொரிய தேசிய பாதுகாப்பு ஆணையக் குழு, வட கொரிய மக்கள் இராணுவம் போன்ற அமைப்புகளின் தலைவராகவும், வட கொரிய தொழிலாளர் கட்சியின் பொது செயலாளராகவும் வந்தவர் கிம் ஜொங் இல் (1941-2011). கிம் ஜொங் இல்லின் மறைவிற்குப் பின் தாத்தா, மகன், பேரன் வரிசையில் வட கொரியத் தலைவரானவர் கிம் - ஜொங் -உன் (பிறப்பு 1983 அல்லது 1984).

கொரிய சனநாயக மக்கள் குடியரசு என அழைக்கப்படும் வட கொரியா பரப்பளவில் சிறிய நாடாக இருந்தாலும் முன்னேறிய நாடுகளுக்கு இணையான வலிமையான படைபலத்தை வைத்திருப்பதாகக் கருதப்படுகிறது. சமீபமாக அணு ஆயுத நாடாகவும் மாற்றம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. டேடோங் ஆற்றின் கரையிலிருக்கும் பியொங்யாங் நாட்டின் தலைநகராகவும் மிகப்பெரிய நகராகவும் அறியப்படுகிறது.

தென்கொரியாவின் ஹான் நதிக்கரையில் அமைந்துள்ள சியோல் தென்கொரியாவின் தலைநகராகவும், மிகுந்த மக்கள் தொகை உள்ள நகரமாகவும்

குறிப்பிடப்படுகிறது. மிக நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள சியோல் நகரம் ஹான் நதியின் அதிசயம் எனவும் பெயர் பெற்றிருக்கிறது.

பௌத்தத்தையும் கிறித்துவத்தையும் முக்கிய மதங்களாகக் கொண்டுள்ள தென் கொரியா, 1950 முதல் 1953 வரை நடந்த கொரியப் போரில் பெரும் அழிவைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது. சோவியத் ஒன்றியத்தாலும் சீனாவாலும் ஆதரிக்கப்பட்ட வட கொரியாவும், அமெரிக்கா ஆதரவு பெற்ற தென் கொரியாவும் மோதிக் கொண்டதில், லட்சக்கணக்கான கொரிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். 1963 முதல் 1979 வரை தென் கொரிய அதிபராக இருந்த பர்க் சுவங்-ஹு (1917-1979) ஆட்சிக் காலத்தில் நாடு மிகப்பெரும் முன்னேற்றம் கண்டதாகவும், கட்டுப்பாடுகள் மிகுந்திருந்த காலமாக இருப்பினும் தென் கொரியாவை மறு நிர்மாணம் செய்வித்ததில் பர்க்சின் பங்களிப்பு அளப்பரியது எனவும் கூறப்படுகிறது. உலகின் முன்னணி தொழில்நுட்ப நாடுகளில் ஒன்றாக வளர்ச்சி பெற்றுள்ள தென் கொரியா, ஏராளமான பன்னாட்டு நிறுவனங்களை உருவாக்கியிருக்கிறது. மூன்று விண்மீன்கள் எனும் கொரிய வார்த்தையின் அர்த்தமான சேம்சங் பன்னாட்டு நிறுவனத்தின் தலைமையகம் சியோலில் இடம் பெற்றுள்ளது.

கொரியாக்களின் கொரிய மொழி எழுத்துக்கள் ஹான் கோல் எழுத்து முறையாகக் குறிப்பிடப்படுகிறது. பதினான்காம் நூற்றாண்டின் சேயோங் அரசரால் உருவாக்கப்பட்ட கன்குவல் எழுத்து முறை, 1945 முதல் அரச ஒப்புதலோடு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆங்குவல் எழுத்துக்களின் நெடுங்கணக்கில் 51 எழுத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும், அவற்றில் 24 எளிய எழுத்துக்களும் 27 கூட்டெழுத்துக்களும் உள்ளதாகவும் கூறப்படுகிறது. சாமா என அழைக்கப்படும் கொரிய எழுத்துக்களில் சா- சேய் எழுத்தாகவும் மா-தாய் எழுத்தாகவும் கூறப்படுகிறது. எளிய எழுத்துகள் 24 இல், சா- எழுத்துக்கள் பதினான்கும், மா- எனும் தாய் அல்லது உயிர் எழுத்துக்கள் பத்துமாகக் குறிப்பிடப்படுகின்றன.

சாமா எழுத்துக் கூட்டுக்களால் எழுதப்படும் கொரிய மொழியின் வார்த்தைகளில் தமிழ் சாயால் இருப்பதாக மொழியியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். கனடா நாட்டின் ஜுங்நாம் கிம் ஆய்வின் படி கொரிய மொழியில்

ஐந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ் வார்த்தைகள் கலந்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ் - கொரிய மொழிகளில் உரம் - உரம், கண் - நுகண், மூக்கு - கோ, பல் - இப்பல், புல் - புல் கொஞ்சம் - சொங்கும், கொஞ்சு - கொஞ்சு, அப்பா - அப்பா, அம்மா- அம்மா, அப்புச்சி - அபொஜி, அண்ணி - எண்ணி, இது - இகோ, அய்யோ - ஐகோ போன்ற ஏராளமான வார்த்தைகள் கொரிய மொழியில் பயன்பாட்டில் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. தோசை, கொழுக்கட்டை போன்ற உணவுகள் கொரியாக்களில் பரவலாக இருப்பதும், உணவு முறை, மத நம்பிக்கை, கலாச்சார ஒற்றுமை, பழக்க வழக்கங்கள் போன்றவற்றிலும் நிறைய ஒற்றுமைகள் நிலவுவதும் ஒப்புநோக்கத் தக்கது.

8

சேரளம்

அமிழ்தின் இனிமைகொண்ட தமிழை, மலையாளிகள் கொஞ்சிப் பேசி, கொஞ்சு தமிழாக மாற்றிவிட்டாச்கள். சேர மன்னர்கள் கட்டித் தழுவி போற்றிப் பாதுகாத்த எழில்கொஞ்சும் இந்த கேரளப் பேரழகிக்கு, மலைச் சாரல்களாய் பொழியும் மலையாளம் தாய்மொழியாக இருக்கிறது. இன்று தமிழ் வேறு, மலையாளம் வேறு என இருந்தாலும் தமிழன்னையோடு பின்னிப் பிணைந்த உறவாக மலர்ந்ததே மலையாளமெனில் மிகையாகாது. தமிழும் சமற்கிருதமும் கூடிக் கலந்த மலையாளத்தில் தூய தமிழ் சொற்கள் இடம் பெற்றிருப்பதும்தனியழேகே.

கேரளக் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தது விஷு கைநீட்டம். வீட்டிலுள்ள பெரியவர்கள் மலையாளப் புதுவருடமான விஷு அன்று குழந்தைகளுக்கு பணம் வழங்குவது கைநீட்டம். முன்பு கைநீட்டத்தில் நாணயங்கள், கொன்னை மலர்கள், அரிசி மற்றும் தங்கம் வழங்குவது மரபு. கைநீட்டத்தின் நோக்கம் எல்லோரும் இன்புற்றிருப்பதே. கல்வியில் சிறந்த மாநிலமாகக் திகழும் கேரளம் பல பெருமைகளைக் கொண்டிருப்பது சிறப்பு. கடவுளின் சொந்த நாடாகவும், எழில்மிகு தேசமாகவும் போற்றப்படும் கேரளம், பழம் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்கது எனில் மிகையில்லை.

இயற்கையின் ஈடு இணையில்லாத பகுதியான கேரளா, பசுமைப் போர்வை போர்த்தி உலகத்தவரின் மனங்களைக் கொள்ளைக் கொள்வது தனித்த அழகு. மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள், கடற்கரைகள், காயல்கள், ஆறுகள் என அழகு கொட்டிக்கிடக்கும் மலையாள நாட்டில் மக்களும் பண்பாடு நிரம்பியவர்களாகத் திகழ்வது மகத்தானது.

பரசுராமரின் தவவலிமையால் உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் நெடிய தென்னை மரங்களின் நாடான கேரளம், மகாபலிச் சக்கரவர்த்தியோடு தொடர்புடைய ஓணம் பண்டிகைக்கும், கண்களைக் கவர்த்திழுக்கும் படகுப் போட்டிகளுக்கும், கருத்தைக் கவரும் கதகளிக்கும், மனதை மயங்கவைக்கும் மோகினியாட்டத்திற்கும், வீரத்தைப் பறை சாற்றும் களிரிக்கும், யானை அலங்கார அணிவகுப்புகளுக்கும், ஆட்டம் போடவைக்கும் செண்டை மேளத்திற்கும், சுவை கூட்டும் மசாலாக்களுக்கும், சாயாக்களுக்கும் பெயர் பெற்றது.

இன்றைய தமிழ் பேச்சு வழக்கில் அதிகம் பயன்படுத்தப்படாத, ஆனால் எழுத்துத் தமிழில் இடம் பெறும் ஏராளமான சொற்கள் மலையாளப் பேச்சு வழக்கில் வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது. உதாரணமாக காது-செவி, உள்ளே-அகத்து, வெளியே-புறத்து, கூப்பிடு-வளி, வெட்கம்-நாணம், பார்-நோக்கு. தமிழ் வல்லின ஒலிகள் மலையாளத்தில் மென்மையாக ஒலிக்கும் எனவும் சுட்டப்படுகிறது. உதாரணமாக 'ன்ற' ஒலி 'ன்ன' என மாறும். ஒன்று - ஒன்னு, தென்றல் - தென்னல். மேலும் தமிழின் பழைய மணிப்பிரவாள நடையைக் காட்டிலும் மலையாளத்தில் அதிகமாக சமற்கிருதச் சொற்கள் கலந்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

கேரளத்திலும், இலட்சத்தீவிலும் பேசப்படும் மொழியான மலையாளம், தமிழுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும், திராவிட மொழிகளில் தமிழுக்கு அடுத்து வைத்து எண்ணப்படும் மொழியாகவும் இருக்கிறது. அறிஞர் கால்டுவெல்லின் கூற்றுப்படி, தமிழின் மிகத் திரிந்தமொழி மலையாளம் ஆகும். பண்டைய மலையாள இலக்கியங்கள் தமிழைப் பின்பற்றி இருப்பதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

மலையாள இலக்கியம் தற்காலத்தில் சிறப்புற்று வருவதாகப் புகழப்படுகிறது. மலையாள மொழிக்கு இலக்கண நூலும் அகராதியும் எழுதியவராக முனைவர் குண்டர்ட் அறியப்படுகிறார். 1946 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற திரு. ஹெர்மன் கார்ல் ஹெஸ்ஸேயின் தாத்தாவாக அறியப்படும் பல்துறை அறிஞர் ஹர்மன் குண்டர்ட் (1814-1893), மலையாள மொழிக்கு பெரும் சேவை செய்தவராகப் போற்றப்படுகிறார்.

கேரளத்தின் வரலாற்றைக் கூறும் உற்பத்தி அல்லது கேரளோல்பத்தி எனும் நூலை, 1843-ல் குண்டர்ட் அச்சு வடிவத்தில் கொண்டு வந்திருக்கிறார். பரசுராமரின் காலம், பெருமாக்கன்மாரின் காலம், தம்புராக்கன்மாரின் காலம் என மூன்று பகுதிகளைக் கொண்ட கேரள உற்பத்தி நூல், நம்பூதிரி சமுதாயத்தவரின் முன்னோர் பற்றி பேசுவதாகக் கூறப்படுகிறது. 1851-ல் பதிப்பித்த மலையாள பாஷா வியாகரணம் எனும் மலையாள மொழி வரலாறு நூல், குண்டர்ட் அவர்களின் சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது. அறிஞரது நூல்களைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏராளமான மலையாள நூல்கள் வெளியிடப்பட்டதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. தல சேரியை மையமாகக் கொண்டு செயல்பட்ட குண்டர்ட் பாதிரியர்,

சிறந்த மொழியியல் அறிஞர் மட்டுமல்லாது வரலாறு, புவியியல் மற்றும் வானியல் துறைகளிலும் பங்களிப்புச் செய்தவராகப் புகழப்படுகிறார்.

மலையாள நாட்டில் முதலில் தோன்றிய இலக்கண நூலாக லீலாதிலகம் எனும் நூல் குறிப்பிடப்படுகிறது. இந்நூல் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் எழுதப்பட்ட இலக்கண நூலாகக் கருதப்படுகிறது. இதன் பிரதியொன்று 1908 இல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மணிப்பிரவாள மொழிநடையில் எழுதப்பட்ட லீலாதிலகம், மலையாள இலக்கியத்தின் இடைக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பற்றி அறிந்து கொள்ள துணைபுரிவதாகவும் குறிப்புகள் கிடைக்கின்றன. மேலும் தமிழிலிருந்து மலையாளத்தை வேறுபடுத்திக் காட்டிய முதல் நூல் லீலாதிலகம் எனவும் கூறப்படுகிறது.

மலையாள இலக்கியத்தின் ஆரம்பகாலம் நாடோடிப் பாடல்களாக அறியப்படுகின்றன. நிலமங்கையைப் புகழ்வதாகவும், வீரத்தைப் போற்றுவதாகவும், குலம் போன்றவற்றை பெருமைப்படுத்துவதாகவும், பல்வேறு வகைப்பட்ட பாட்டு மரபுகள் அக்காலத்தில் இருந்திருக்கின்றன. பத்ரகாளி பாட்டு, தோட்டம் பாட்டு, சாஸ்தாங்க பாட்டு, நிழல் கூத்து பாட்டு, மன்னர் பாட்டு, பாணர் பட்டு, தம்புரான் பாட்டு, ஓணப்பத்து, கும்மி என ஏராளமான பாட்டு வகைகள் நிறைந்திருந்த பாட்டுக் காலமே மலையாள மொழியின் ஆதிகாலமாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழ் மரபை ஒட்டிய பாட்டு இலக்கியங்கள், வடமொழி மரபை ஒட்டிய மணிப்பிரவாள இலக்கியங்கள், மலையாள தூது காவியங்கள், சம்பூக்கள் போன்றவை மலையாள இலக்கியத்தின் ஆரம்பகால படைப்புகளாகக் குறிப்பிடப்படுகின்றன. பொது ஆண்டிற்குப் பின்னான 830 களில் எழுதப்பட்டதாக அறியப்படும் வாழப்பள்ளி கல்வெட்டே, மலையாளத்தில் கிடைத்திருக்கும் பழமையான கல்வெட்டாகக் கருதப்படுகிறது. கிரந்த எழுத்துக்களில் உள்ள வாழப்பள்ளி கல்வெட்டு, சேரப் பெருமக்கள்மார்களுடைய மரபு பற்றியும் நிலவிவரங்கள் பற்றியும் குறிப்பிடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பாட்டிலக்கியத்தில் பழமையானதாக ராமசரிதம் குறிப்பிடப்படுகிறது. இராமாயணத்தின் யுத்த காண்டத்தைப் பெருமளவில் கூறும் ராமசரிதம், சீராமன் எனும் புலவரால் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பதினான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படும் கண்ணச்ச ராமாயணம் குறிப்பிடத்தக்க படைப்பாகக் கூறப்படுகிறது. மேலும் பதினைந்தாம் நூற்றாண்டின் கிருஷ்ணகாதை தமிழ் மரபிற்கே முதலிடம் கொடுப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது. நாடோடிப் பாடல்களும் தெளிவான மலையாளமும் சேர்ந்த கிருஷ்ணகாதை, மலையாளப் பாடல்களுக்கு புதிய பிறவியை நல்கியதாகவும் கூறப்படுகிறது. ஏ.ஆர் ராஜராஜவர்மா அவர்களால் (1863-1918) ஏழு பகுதிகளை உள்ளடக்கிய 194 நூற்பாக்கள் கொண்டு 1895 இல் வெளியிடப்பட்ட கேரள பாணினீயம், மலையாள இலக்கியத்தின் சிறந்ததொரு இலக்கண நூலக அறியப்படுகிறது.

கேரள பாணினீயத்தில், மலையாளம் சமற்கிருதத்திலிருந்து அல்லாமல் பழந்தமிழிலிருந்தே தோன்றியதாகக் குறிப்பிடும் ராஜவர்மா, தமிழில் இருந்தே மலையாளம் தனிமொழியானதற்கான அடையாளங்களையும் சுட்டிக்காட்டுவதாகக் குறிப்பிடப்படுகிறது. எட்டுப் பிரிவுகளைக் கொண்டுள்ள ராஜவர்மாவின் பாணினீயம், மலையாள மொழி தோன்றிய வரலாறு, எழுத்துக்கள், வாக்கிய அமைப்பு, சொற்கூட்டங்கள், பால், உரிச்சொல், எதிர்மறை, கூற்று வாக்கியங்கள், முன்னொட்டு, பின்னொட்டு, இணைப்பு சொற்கள், சொற்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு இலக்கணக் குறிப்புகளை எழுதியதாகக் கூறப்படுகிறது.

மலையாளம் என்பது தமிழ் சொல்லாகவும் அது மொழியைக் குறிப்பதாகவும் பொருள் கொள்ளப்படுகிறது. கேரளம் எனும் சொல் நாட்டைக் குறிப்பதாகவும் அது சேரலன் என்ற தமிழ் சொல்லின் வேறுவடிவமாகவும் தமிழ் சான்றோர்கள் எடுத்துரைக்கின்றனர். ச-எழுத்தின் போலீயாக க-எழுத்து வருவது இயல்பாகக் கருதப்படுகிறது. உதாரணத்திற்கு சீர்த்தி என்பது கீர்த்தியாக வரும். சேரநாட்டை ஆண்டவர் சேரர் எனவும் சேரலர் எனவும் அழைக்கப்பட்டு, சேரலன் கேரலன் ஆகி, பின் அதுவே கேரளன் ஆகியதாக தமிழறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். பத்தாம் நூற்றாண்டு வரை செந்தமிழாகவும், பதினாறாம் நூற்றாண்டு வரை கொடுந்தமிழாகவும், தமிழ் கொஞ்சி விளையாடிய மலைகள் ஆளும் மலையாள நாட்டில், பின்னர் அரசியல் பண்பாட்டு வணிகக் காரணங்களால் தமிழ் குறைந்து, வடமொழித் தொடர்பு மிகுந்து, தமிழுக்கு அயல்மொழியாக மலையாளம் மிகுந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், பக்திப் பாடல்களுக்குப் புகழ்பெற்றவருமான துஞ்சத்து இராமனுஜன் எழுத்தச்சன், மலையாள மொழியின் தந்தை எனப் புகழப்படுகிறார். மலையாளத்தின் அச்சனான புலவர் எழுத்தச்சன் அவர்கள், தற்போது வழங்கும் மலையாள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தியவராக அறியப்படுகிறார். அச்சன் காலத்திற்கு முன்பு வரை மலையாள மொழியில் பல எழுத்து முறைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. வட்டெழுத்துக்களால் ஆன தமிழை ஒத்த மலையாள அரிச்சுவடி, சமற்கிருதத்தை ஒத்த அரிச்சுவடி, நம்பூதிரிகள் பயன்படுத்திய அரிச்சுவடி, வட்டெழுத்தும் கிரந்தமும் கலந்த பல்வேறு எழுத்து முறைகள் எனப் பலவாறாகப் புழங்கிய மலையாளத்தை ஒருங்கிணைத்து, ஐம்பதியோரு எழுத்துக்கள் கொண்ட அரிச்சுவடியை, மலையாள எழுத்து வழக்கத்தை அச்சன் இயற்றிய அத்யாத்ம ராமாயணம் எனும் காப்பியத்தில் பயன்படுத்தியிருக்கிறார். பல நூல்களை இயற்றியவராகக் குறிப்பிடப்படும் அச்சன், மகாபாரதத்தையும் மொழிபெயர்த்தவராக அறியப்படுகிறார்.

மலையாளத்தின் முதல் மகாகாவியமாக செருசேரி அவர்கள் நீண்ட பாடல்களால் இயற்றிய கிருஷ்ண கதை அறியப்படுகிறது. வட கேரளத்தின் கொளத்து நாட்டை ஆண்ட உதயவர்மனின் (1446-1475) அரசவைப் புலவரான செருசேரி நம்பூதிரியின் கிருஷ்ண கதை, மலையாள இலக்கியத்தின் முக்கியமானதொரு படைப்பாகப் புகழப்படுகிறது. மஞ்சரி எனும் இனிமையான செய்யுள்களால் இயற்றப்பட்ட கிருஷ்ணகதை, ஸ்ரீமத்பாகவதத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டிருக்கிறது.

திருவல்லா நகருக்கு அருகிலுள்ள நிரணம் கிராமத்தை மையமாகக் கொண்டு, பதினான்காம் நூற்றாண்டில் எழுந்த புலவர் மரபு, நிரணம் அல்லது கண்ணசம் என அழைக்கப்படுகிறது. மாதவப் பணிக்கர், சங்கரப் பணிக்கர் மற்றும் இராமப் பணிக்கர் என அறியப்படும் மூன்று தலைமுறை புலவர்களில், இராம பணிக்கர் புகழ்மிக்கவராகக் கருதப்படுகிறார். அவரது இராமாயணம், பாரதம், பாகவதம், சிவராத்ரி மகாமித்யம் போன்றவை கேரள பக்தி இயக்கத்தில் குறிப்பிடத்தக்கவை.

பாட்டு, மணிப்பிரவாளம், நிரணம், பக்தி இயக்கம் என வளர்ந்து வந்த மலையாள இலக்கியத்தில், எழுத்தச்சனுக்குப்பின் நவீன மலையாள இலக்கியம் தொடங்கியதாகக் கருதப்படுகிறது. நவீன மலையாள இலக்கிய உலகின்

மும்மூர்த்திகளாக குமரன் ஆசான் (1873-1924), உள்ளூர் சு. பரமேசுவர அய்யர், (1877-1949) மற்றும் வள்ளத்தோள் நராயண மேனன் (1878-1958) புகழப்படுகின்றனர்.

சமூக சீர்திருத்தவாதியாகவும், மெய்யியலாளராகவும், ஸ்ரீநாராயண குருவின் முதன்மைச் சீடராகவும், மகாகவியாகவும் அறியப்படும் குமரன் ஆசான், தமிழிலும் மலையாளத்திலும் பெரும்புலமை பெற்றவராக அறியப்படுகிறார். நளினி, லீலா, கருணா, சாண்டலபிக்சுசி போன்ற ஏராளமான படைப்புகளை இயற்றிய ஆசான், எட்வின் ஆர்னால்டு எழுதிய புகழ்பெற்ற ஆசிய ஜோதி நூலைத் தழுவி, புத்த சரிதம் எனும் பாடல்தொகுப்பை இயற்றியுள்ளார்.

கவிஞர்களே சாதி, மத வேறுபாடுகளுக்கு எதிரான குரல் கொடுப்பதில் முன்னணியில் இருந்தவர்கள் எனும் வழக்கத்திற்கு ஏற்ப, ஆசான் அவர்களும் சாதி வேறுபாட்டிற்கு எதிராக துரவஸ்த எனும் நூலை வெளிக்கொணர்ந்துள்ளார்.

உள்ளூர் பரமேசுவரர், மலையாள மரபுக் கவிதை மறு மலர்ச்சிக்கு வித்திட்டவராகப் புகழப்படுகிறார். கேரள இலக்கியத்தின் வரலாற்றைக் கூறும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான பாடல்களைக் கொண்ட உமா கேரளம் எனும் காவியத்தையும் இயற்றியுள்ளார். திருவிதாங்கூர் அரசின் தலைமைச் செயலாளர் வரை பதவி வகித்த பரமேசுவரன், காதலே உண்மையான சமயம் என விவரித்திருப்பது கூடுதல் சிறப்பு.

நாட்டுப்பற்று மற்றும் சமூக நீதிப் பாடல்களை இயற்றிய வள்ளத்தோள் நாராயண மேனன், கதகளியின் மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்டவராக அறியப்படுகிறார். காதல் கவிதைகளின் தொகுப்பான சாகித்யமஞ்சரி உட்பட ஏராளமான படைப்புகளை எழுதிய திரு. மேனன், கேரள கலாமண்டலத்தை நிறுவி பண்டையக் கலைகளின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தவராகவும் புகழப்படுகிறார்.

கேரளத்தின் சமூகநீதிக்குப் பெரும் பாடுபட்டவர்களாக அய்யன் காளி மற்றும் நாராயணகுரு போற்றப்படுகின்றனர். கேரளாவின் சமநீதிக்கும், சமூக மாற்றத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிந்த பெரியோர்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமை கிடைப்பதற்காகவும் அரும்பாடு பட்டவர்களாகவும் புகழப்படுகின்றனர்.

கேரளத்தின் சாதியமைப்பு இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து வேறுபட்டிருந்ததாக வரலாறு பதிவு செய்திருக்கிறது. குறிப்பாக, தென் கேரளமான திருவிதாங்கூர் பகுதியில், மிகக் கொடுமையான சாதிய அடக்குமுறைகள் கடைபிடிக்கப்பட்டிருக்கின்றன. தீண்டாமை, காணாமை, நடவாமை, கல்லாமை போன்ற சமூகக் கட்டுப்பாடுகள் பெருந்திரளான மக்கள் கூட்டத்தின் மேல் வலிந்து திணிக்கப்பட்டிருக்கின்றன. சாதிக் கொடுமைகளின் உச்சகட்டமாக, ஒரு மனிதரைப் பார்ப்பதே தீட்டு எனும் அளவிற்குக் கூட சாதிவன்முறை நிலவியிருக்கிறது. வாழும் இடங்களிலிருந்து பிற சாதியினரை ஒதுக்கிவைத்தல், பொது குளங்கள், கிணறுகள், சந்தைகள், சாலைகள் போன்றவற்றை தடைசெய்தல், ஆடை அணிவதற்கும், பாண்டங்கள் பயன்படுத்துவதற்கும், அணிகலன் அணிவதற்கும் கட்டுபாடுகள், ஊதியமின்றி பணிசெய்யக் கட்டாயப்படுத்துதல், கல்வி மறுப்பு, அரசுப் பணிகளிலிருந்து விலக்கு, அபராதம், வரி என ஒடுக்கப்பட்ட மக்கள் மீது பலவிதமான கட்டுபாடுகளும் தண்டணைகளும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

உயர் சாதியினரைப் போன்று ஆடைகள் அணியக் கூடாது என்பதோடு மல்லாமல், மாராப்பை மூடக்கூடாது, கால் முட்டிக்குக் கீழும், இடைக்கு மேலும் ஆடைகள் அணியக் கூடாது என்றெல்லாம் தடை செய்திருக்கிறார்கள், பால் கொடுக்கும் பசுக்கள் வளர்ப்பதைக் கூட தடை செய்திருக்கிறார்கள் எனில் எத்தனை எத்தனை கட்டுப்பாடுகள் அக்காலத்தில் நிலவியதோ.. பெண்கள் இடுப்பில் வைத்து தண்ணீர்க் குடத்தை எடுத்துச் செல்லக் கூடாதாம். குடத்தைத் தலையில் வைத்து இரு கைகளாலும் அதை தாங்கி பிடித்துச் செல்ல வேண்டுமாம்.

சமயக் கட்டுப்பாடு, பொருளாதாரக் கட்டுப்பாடு என ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் போட்டும், ஓசி வேலைகள் செய்யக் கட்டாயப்படுத்தியும் மக்களை வதைத்திருக்கிறார்கள். அரசோடு தொடர்புடைய பலவிதமான வேலைகளையும் இலவசமாகச் செய்யச்சொல்லி ஆணையிட்டிருக்கின்றனர். வேலைகள் செய்வதோடு மட்டுமல்லாமல், அரச குடும்பத்தினருக்கும் பிற உயர் சாதியினருக்கும் உணவுப் பொருட்களையும், பிற பொருட்களையும் விலையில்லாமல் கொடுக்கும் நடைமுறையும் இருந்திருக்கிறது.

நம்பூதிரி பிராமணரிடமிருந்து நாயர் பதினாறு அடி தூரமும், ஈழவர் முப்பத்திரண்டு அடி தூரமும் விலகி நிற்க வேண்டும் என்ற பாகுபாடு கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. நாயரிடமிருந்து ஈழவர் பதினாறு அடி தூரமும்,

புலையர் முப்பதி இரண்டு அடி தூரமும், ஈழவரிடமிருந்து புலையர் ஆறடி தூரமும் விலகி நிற்க வேண்டுமாம்.

சமூகப் போராளி எனவும் ஆத்மஞானி எனவும் காந்தியடிகளால் பாராட்டப்பட்ட அய்யா திரு. அய்யன் காளி (1863-1941), புலையர் சமூதாய மக்களின் வாழ்வு மேம்பாடு அடையவும், சாதிக் கொடுமைகளுக்கு எதிராக, அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பாக, உழைக்கும் மக்களுக்கு ஆதரவாக, பல்வேறு போராட்டங்களை வழிநடத்தியவராகவும் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். சாலையில் நடக்க அனுமதியில்லை, தலைப்பாகை கட்ட அனுமதியில்லை, மேலாடை அணிய அனுமதியில்லை எனப் பல்வேறு அனுமதி மறுப்புகள் நிலவிய காலத்தில், கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்த அய்யன் காளி அவர்கள், நம்பூதிரிகளுக்கும், நாயர்களுக்கும் அடிமைகளாக இருந்த புலையர் மக்களுக்கு, கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியவராக அறியப்படுகிறார்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறை வேண்டும் என முழுங்கிய அய்யன், விவசாயத் தொழிலாளர்களுக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கிறார். புலையர் குழந்தைகள் படித்தால் வயல்களில் யார் வேலை செய்வது எனக் கேட்ட ஆதிக்க சாதியினருக்குப் பதிலாக, புலையர் குழந்தைகள் கல்விகற்க முடியாதென்றால், ஆதிக்க சாதியினர் வயல்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் வேலை செய்ய மாட்டார்கள் எனவும் அறிவித்திருக்கிறார். சாது சன் பரிபாலன சங்கம் எனும் அமைப்பை நிறுவியும், திருவிதாங்கூரின் மக்கள் சபை உறுப்பினராகப் பதவி வகித்தும், அட்டவணை மக்களுக்கும், மீனவ மக்களுக்கும், பிற ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பெரும்சேவை புரிந்த அய்யன்காளி போற்றுதலுக்குரியவர்.

கோவக்காரரான அய்யன்காளியை ஆற்றுப்படுத்தியவராக அறியப்படும் சதானந்த சுவாமிகள் எனும் அய்யாவு சுவாமிகள் (1814-1909) கேரள அத்வைத மரபின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். தமிழகத்தின் நாகலாபுரம் எனும் ஊரில் பிறந்ததாகக் குறிப்பிடப்படும் சதானந்தர், வைகுந்த சுவாமியிடம் யோகம் பயின்றதாகக் கூறப்படுகிறது. இந்த உலகத்திலே ஒரே ஒரு மதம், ஒரே ஒரு சாதி, ஒரே ஒரு கடவுள் என்பதைக் கொள்கை விளக்கமாக வெளியிட்ட திரு.சதானந்தர், கேரள சமூக ஆன்மிக வரலாற்றோடு நெருங்கிய தொடர்புள்ளவராகக் குறிப்பிடப்படுகிறார்.

வித்யாதிராஜா சட்டம்பி சுவாமிகள் (1853-1924) புகழ்பெற்ற வேதாந்தியாகவும் இந்து மதச் சீர்திருத்தவாதியாகவும், பிராமணச் சடங்குகளுக்கு எதிராகப் போராடியவராகவும் புகழப்படுகிறார். தைக்காடு அய்யாவு ஆசானிடம் ஹடயோகம் கற்றவராகக் கூறப்படும் சட்டம்பி சுவாமிகள், தீண்டாமைக்கும், சாதி வேறுபாடுகளுக்கும், கிறித்துவ மதமாற்றத்திற்கு எதிராகவும் கடுமையான குரல் கொடுத்தவராக அறியப்படுகிறார். வேதாந்த வகுப்புகள் மூலம் பன்னாட்டு அளவில் புகழ்பெற்ற திரு. ஆத்மானந்தர் (1883-1959) சட்டம்பி சுவாமிகளின் சீடராக அறியப்படுகிறார்.

ஆன்மிக வழியில் புதிய நடைமுறைகளை உருவாக்கி பிற்படுத்தப்பட்ட மற்றும் அட்டவணை வகுப்பினருக்கு புதிய வழியைக் காட்டிய ஸ்ரீநாராயண குரு (1856-1928), நவீன கேரள வரலாற்றில் நீங்கா இடம் பிடித்தவராகப் புகழப்படுகிறார். சத்யம் - தர்மம் - தயை எனும் சொற்களையே கருவறைத் தெய்வமாக்கிய நாராயண குரு, இந்து ஆன்மிகவாதியாவும், சமூக சீர்திருத்தவாதியாகவும், இந்தியாவெங்கும் அறியப்பட்டவராகவும் இருந்திருக்கிறார். திருவனந்தபுரத்தை மையமாகக் கொண்டு 1903 இல் நிறுவப்பட்ட ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன சபை, கேரள மக்களின் எழுத்தறிவிற்குப் பெரும் பங்காற்றியதாகப் புகழப்படுகிறது.

இந்திய சமூக சீர்திருத்தப் பெரியார்களில் ஒருவராக அறியப்படும் நாராயணண குரு, மலையாளம், தமிழ், சமற்கிருத மொழிகளில் ஏராளமான படைப்புகளை வெளியிட்டிருக்கிறார். கடவுளின் கண்களுக்கு அனைத்து மனிதர்களும் சமம் என்பதையும், அனைத்தும் ஒன்றே என்பதையும் வலியுறுத்திய நாராயணகுருவின்பால் காந்தியடிகள் பேரன்பு கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

சாதி, மதம், இனம், மொழி என எல்லாவற்றையும் கடந்து எல்லோருக்கும் எல்லாமும் பெறவேண்டும் என மக்கள் மேல் பேரன்பு கொண்டிருந்த நாராயண குருவை, பாரதத்தில் தோன்றிய மகாரிஷிகளில் ஸ்ரீநாராயணகுருவும் ஒருவர் என தாகூர் புகழ்ந்க்கிறார். கல்வி, செல்வம், ஆன்மீகம் என ஆக்கப்பூர்வமான வழிகளில் சமுதாயத்தை முன்னேற்றம் காண விழைந்த நாராயண குரு, கேரள மறுமலர்ச்சியின் தந்தை எனில் மிகையாகாது.

மகான் நாராயண குருவை, பன்னாட்டு அளவில் புகழ்பெறச் செய்தவராக நடராஜா குரு (1895-1973) அறியப்படுகிறார். கேரளத்தின் முக்கியமான தத்துவ

அறிஞராகப் புகழப்படும் திரு. நடராஜ குரு, நாராயண குருவின் போதனைகளை உலகமெங்கும் கொண்டு சென்றவராகப் புகழப்படுகிறார். ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன சபையைத் (எஸ்.என்,டி.பி) தோற்றுவித்த மருத்துவர் பத்மனாப்பல்பு (1863- 1950) என்பாரின் மகனாக அறியப்படும் நடராஜா குரு, நாராயண குருகுலம் எனும் அமைப்பை நிறுவி பல புகழ்பெற்ற நூல்களை எழுதியிருக்கிறார். நாராயண குருவின் வாழ்க்கை மற்றும் போதனைகளை எழுதிய குருவின் வார்த்தைகள் எனும் புத்தகம், தன்வரலாற்று நூலாக எழுதிய முழுமை பெற்றவரின் சுயசரிதை (ஆட்டோபயோகிராபி ஆ.ன்.ப அன் அப்சலுடிஸ்டு), பகவத் கீதைக்கான உரை நூல் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகக் கருதப்படுகின்றன.

உலகக் குடிமகன், உலகக் கடவுச் சீட்டு, எந்த நாட்டிற்கும் குடியுரிமை கொள்ளாத கலாச்சாரம் போன்ற பன்னாட்டு சமூக சிந்தனைக் கொள்ளைகளைக் கொண்டிருந்த கேரி டேவிஷ் (1921-2013) என்பவரின் நட்பைப் பெற்ற நடராஜ குரு, அவரோடு இணைந்து பன்னாட்டு அரசுக்கான முன்வரைவை உருவாக்கியவராகக் குறிப்பிடப்படுகிறார்.

உலகின் சிந்தனைகள், தத்துவங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்ந்து கற்கும் நோக்குடன், ஈஸ்ட் வெஸ்ட் பல்கலைக்கழகம் எனும் அமைப்பை உருவாக்கியவராகவும், ஏறக்குறைய ஐம்பது ஆண்டு காலம் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டவராகவும் குறிப்பிடப்படும் திரு. நடராஜ குருவின் புகழ்பெற்ற சீடராக நித்ய சைதன்ய யதி அறியப்படுகிறார்.

ஜெயச் சந்திரன் எனும் இயற்பெயர் கொண்டிருந்த திரு. நித்ய சைதன்ய யதி (1923-1999), ஸ்ரீநாராயண குருவின் பாதையில் வந்த அத்வைதியாகவும், உளவியல் மற்றும் தத்துவ அறிஞராகவும் குறிப்பிடப்படுகிறார். ஊட்டி .ன்ப்ரெனஹில் குருகுலத்தில் நடராஜ குருவின் நேரடிச் சீடராக விளங்கிய யதி, நாராயண குருவின் நூல்களுக்கு நவீன அறிவியல் தத்துவ நோக்கில், மலையாளத்திலும், ஆங்கிலத்திலும் என ஏராளமான நூல்களை எழுதியிருக்கிறார். அன்பு மற்றும் ஆசிர்வாதங்கள் (லவ் ஆண்டு பிளஸ்ஸிங்ஸ்) எனும் தன் வரலாற்று நூல், தனித்தது (தட் அலோன்), ஞானத்தின் மையம் (தி கோர் அ.ன்.ப விஸ்டம்), சுயத்தின் தியானம் போன்ற பல்வேறு புகழ் பெற்ற நூல்களை வெளியிட்டிருக்கும் யதி அவர்களுக்கு, புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. ஜெயமோகன் போன்றோர் மாணவராக இருந்து புகழ் சேர்க்கின்றனர்.

நாராயண குருவின் வழிவந்தவராகக் குறிப்பிடப்படும் சகோதரர் அய்யப்பன் (1889-1968) சமூக சீர்திருத்தவாதியாகவும், பத்திரிக்கையாளர் மற்றும் அரசியல்வாதியாகவும் அறியப்படுகிறார். புலையர் மக்களின் உயர்வுக்குப் பாடுபட்ட திரு. அய்யப்பன், சகோதர சங்கத்தை நிறுவியவராகவும், பகுத்தறிவாளராகவும் குறிப்பிடப்படுகிறார். மனுசருக்கு சாதி வேண்டாம், மதம் வேண்டாம், கடவுள் வேண்டாம் என முழுங்கிய சகோதரன் அய்யப்பன் கேரளாவின், வர்த்தக சங்கங்களின் உருவாக்கதில் பெரும் பங்காற்றியிருக்கிறார்.

சங்ககாலச் சேரர்களுக்குப் பின், கேரள மண்ணில் பல்வேறு குறுநில மன்னர்கள் அரசு புரிந்ததாகக் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவைகளாக, கொல்லத்தைத் தலைமையிடமாகக் கொண்ட கொல்லம் அல்லது வேனாடு அரசாட்சி (12-ம் நூற்றாண்டு -1729), கொச்சி அரசாட்சி (6-ம் நூற்றாண்டு -1949), கோழிக்கோடு சமூத்திரி அல்லது சமோலின் அரசாட்சி (12-ம் நூற்றாண்டு-1806), திருவிதாங்கூர் அரசாட்சி (1729-1949) போன்றவை கேரள மக்களின் வாழ்வியலில் குறிப்பிடத்தக்க செல்வாக்குச் செலுத்தியவைகளாக அறியப்படுகின்றன.

எட்டாம் நூற்றாண்டு முதல் பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை கேரளத்தின் பெரும் பகுதியை ஆண்ட இரண்டாம் சேரர் எனப்படும் மகோதையபுர குலசேகர அரச மரபு, கேரள வரலாற்றின் உன்னதமான காலமாகக் குறிப்பிடப்படுகிறது. தற்காலக் கேரளத்தின் முழுப்பகுதியையும் ஆண்ட இரண்டாம் சேரப் பேரரசை நிலிவையவராக குலசேகரப் பெருமாள் அறியப்படுகிறார். குலசேகரப் பெருமாள் வைணவ உலகில் குலசேகர ஆழ்வாராகக் குறிப்பிடப்படுவது சிறப்பு. குலசேகரின் ஆட்சிக் காலத்தில் கேரளாவின் கலை, இலக்கியம், வணிகம் மற்றும் பத்தி இயக்கத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இரண்டாம் சேர அரசாட்சி நலிவுற்று, வடக்கே கோழிக்கோடு சமூத்திரிகளும், மத்தியில் கொச்சி மரபினரும், தெற்கே திருவிதாங்கூர் மரபினரும் கேரளத்தை ஆண்டு வந்திருக்கின்றனர். மேலும் அரக்கல் அரசுரிமை, எடப்பள்ளி ராஜாக்கள், கடத்தநாடு, கவளப்பாறை, கோட்டயம் அரசுரிமை, தன்னூர் அரசுரிமை, கொளத்து நாடு, குறும்பநாடு, ஓடநாடு, வள்ளுவநாடு, பரப்பநாடு உட்பட பல்வேறு சிற்றரசு மரபுகளும் இருந்துள்ளன,

தென்மேற்குப் பருவக்காற்றின் பேராதரவால் கோழிக்கோட்டிற்கு வந்திறங்கிய போர்த்துகீசிய பயணியான வாஸ்கோட காமாவின் (1460கள்-1524) வருகையோடு, கேரளத்தின் நவீன காலம் தொடங்குகிறது. வாஸ்கோடகாமா, 20.05.1498 இல் மலபார் கடற்கரையில் இறங்கியதாகக் கருதப்படுகிறது. நன்னம்பிக்கை கடல் வழியால் ஏராளமான நாடுகள் பயனடைந்திருக்கின்றன. முக்கியமாக கடல் வழியைக் கண்டறிந்த போர்ச்சுக்கல் செல்வச் செழிப்பான நாடாக மாறியதோடல்லாமல், இந்தியப் பெருங்கடலைச் சுற்றி ஏராளமான குடியேற்றங்களையும் நிறுவியிருக்கிறது. அதுவரை வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த இசுலாமியர்களின் வணிகம் ஒடுக்கப்பட்டதோடு, இந்தியாவிற்கு, ஐரோப்பாவுடனான நேரடித் தொடர்பும் உண்டாகியிருக்கிறது.

அரேபியரோடும், சீனரோடும் வணிக உறவு கொண்டிருந்த கோழிக்கோடு, ஐரோப்பியருடனான புது உறவால் சடுதியான மாற்றம் பெற்று வளர்ந்திருக்கிறது. கடலை எல்லையாகக் கொண்டவர் எனும் பொருள் கொண்ட கோழிக்கோடு சாமூத்திரி மகாராஜாவின் அனுமதியின் பேரில் தொழிற்சாலைகள், கோட்டைகள் அமைத்து வணிகத்தைப் பெருக்கிய போர்த்துகீசயர்கள், அரேபியர்களுடனான போட்டியின் காரணமாக, நாளடைவில் மகாராஜாவுடனேயே மோதல் போக்கைக் கடைபிடித்திருக்கின்றனர். சமூத்திரிகளோடு சண்டை போட்டு வந்த கொச்சி மரபினர், கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்தி போர்த்துக்கீசியர்களுக்கு ஆதரவளிக்க, விளைவாக மொத்தக் கேரளமும் போர்த்துக்கீசியர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் என கைமாறிப் போனது. பின்னர் சுதந்திரக் காலம் வரை திருவிதாங்கூர், கொச்சி என இரண்டு சமஸ்தானங்கள் இருந்து, பின் அவையும் 1949 இல் திருவிதாங்கூர் - கொச்சி என ஒன்றாகி, 1956 நவம்பர் ஒன்றாம் தேதியன்று கேரள மாநிலமாக உருமாறியிருக்கிறது. 1957-ல் கேரள சட்டமன்றத்திற்கு நடந்த தேர்தலில், பொதுவுடமைக் கட்சி வென்று, உலகின் முதன் முதலாக ஜனநாயகத்தில் வென்ற பொதுவுடமை அரசாங்கம், ஏலங்குளம் மனக்கல் சங்கரன் நம்பூதிரிப்பாடு எனும் ஈ.எம்.எஸ். நம்பூதிரி அவர்கள் (1909-1998) தலைமையில் பதவிக்கு வந்தது கேரள வரலாற்றின் மிகச்சிறந்த அத்தியாயம் எனில் மிகையாகாது.

படைவரி, முலைவரி, மீசைவரி என வரிசை வரிசையாக வரிகள் போட்டதாக வசைபாடப்படும் திருவிதாங்கூர், ஆங்கிலேய அரசாட்சியை ஏற்றுக் கொண்ட அரச

மரபாக இருந்திருக்கிறது. நெல்லைச் சீமை வெள்ளையருக்கு எதிராக வீறு கொண்டு எழுந்த போது, பக்கத்தில் இருந்த குமரி ஆங்கிலேயருக்குச் சாமரம் வீசியது விசித்திரம்.

நீண்ட பாரம்பரியம் கொண்ட கேரளாவில், மனுதர்ம விதிப்படி ஆட்சி நடத்தியதாக அறியப்படும் திருவிதாங்கூர் கேரளப் பண்பாட்டிற்கு வழிகோலியதாகவும் புகழப்படுகிறது. தாலிக்கு ஆயம், சருகு முதல் ஆயம், கம்புத் தடிக்கு ஆயம், தாளமேறும் சான்றோருக்கு ஆயம், அரிவாள் தூர்வெட்டிக்கு ஆயம், வட்டிக்கு ஆயம், வலங்கை சென்றோர் கருப்புக் கட்டிக்கும் ஆயம் என வரலாற்றில் பதியப்பட்டுள்ள திருவாங்கூர் அரச மரபு, விலைமதிப்பில்லாத தங்க. வைர, வைடூரிய ஆபரணங்களைப் பாதுகாத்து, அதன் அத்தனை சொத்துக்களையும் பத்மநாபர் சொத்தாக அறிவிப்பும் செய்திருக்கிறது.

உலகின் பெரும்பணக்காரராக இருப்பவர் பள்ளிகொண்ட புரத்தாராகிய பத்மநாபரே. திருவிதாங்கூர் அரசமரபினரின் முடிசூட்டு விழாக்களின் போது ஏராளமான தங்கம் அன்பளிப்பாக கிடைத்ததாகக் கூறப்படுகிறது. மேலும் இரண்யகர்ப்பம், துலாபுருஷதானம் போன்ற பல்வேறு சடங்கு முறைகளுக்கு, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருமளவு தங்கம் வாங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதேபோல் வெற்றிகொண்ட பகுதிகளிலிருந்தும் தங்கம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அத்தனை தங்க வைரங்களையும் மொகலாயர், பிரெஞ்சுகாரர் போன்றோரிடமிருந்து பாதுகாக்க அனந்தர் பள்ளியின் இரசிய அறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

நாபிக்கமலம் கொண்டாரின் பள்ளிக்குச் செல்லும் திருவிதாங்கூர் அரசர், கால்மண் தூசியைக் கூட தட்டிவிட்டே வெளிவருவதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. எத்தனையோ நிதி நெடுக்கடிகள் வந்தும் திருவனந்தரின் பொற்களஞ்சியங்களை தொடாமல் சமாளித்த மன்னர் பரம்பரையினர், ஓரிருமுறை களஞ்சிய அறைகளை திறந்து பார்க்க முயற்சித்ததாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

சீதேவியும் பூதேவியும் அருகருகே அமர்ந்திருக்க, நாபிச்சுழியில் முளைத்து நிற்கும் பத்மத்தில் நான்முகன் வீற்றிருக்க, அனந்த சர்பத்தின் ஆனந்த மெத்தையில், திருவல்லத்தில் சிரஸ், அனந்தன் காட்டில் திருவுடல், திருப்பாம்பூரில்

ஸ்ரீபாதம் என வீற்றிருக்கும் பள்ளிகொண்ட பெருமாளின் அனந்தன் காட்டைச் சுற்றி ஏராளமான பாடல் பெற்ற தலங்கள் இருப்பது சிறப்பு.

முன்னர் அனந்தன்காடு என்றழைக்கப்பட்ட திருவனந்தபுரம் பத்மநாப சுவாமியைப் போன்றே, மலைநாட்டுத் திருப்பதியான திருவெட்டறை ஆதிகேசவப் பெருமாளும் திருவிதாங்கூர் மன்னர்களின் குலதெய்வமாகக் குறிப்பிடப்படுகிறார். அனந்தரைப் போன்றே ஆதிசேடனைப் படுக்கையாகக் கொண்டு அறிதுயிலில் ஆழ்ந்துள்ள பெருமாளைக் காண திருமுகம், திருக்கரம், திருப்பாதம் என மூன்று வாயில்களைக் கடக்க வேண்டும். திருவட்டாறும் அனந்த பத்மநாப சுவாமி கோவிலும் நெருங்கிய தொடர்புடையவை எனக் கூறப்படுகிறது.

அரவணை மேல் கண்வளரும் பெருமாள்களை ஆராதித்த திருவாங்கூர் அரச மரபைத் தோற்றுவித்தவராக, ஸ்ரீகார்த்திகைத் திருநாள் இராமவர்மா எனும் தர்மராஜா குறிப்பிடப்படுகிறார். 1758 முதல் 1798 வரை அரசு புரிந்த மன்னர் இராம வர்மன், திப்புசுல்தானின் படைக்கு எதிராக ஆங்கிலேயே அரசின் உதவியை நாடி, அவர்களின் ஆதிக்கத்திற்கு வழிகோலியவராக அறியப்படுகிறார். திருவாங்கூரின் மகாராஜாவாக இருந்த இராமவர்மர் ஆட்சிக்காலத்தில், சமஸ்தானம் சீர்செய்யப்பட்டதுடன், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு தர்மத்தின் படி ஆட்சி நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

வேணாட்டின் கடைசி மன்னராகக் கருதப்படும் மார்த்தாண்ட வர்மன் (1728-1758) காலத்திலேயே, திருவாங்கூர் அரச மரபிற்கு அடிக்கல் நாட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. வேணாட்டின் புகழ் பெற்ற இறுதி அரசராகக் குறிப்பிடப்படும் பாலமார்த்தாண்டவர்மன், டச்சுக் கிழக்கிந்திய கம்பெனியோடு 1741 இல் நடத்திய குளச்சல் போர், மலபார் கடற்கரையில் டச்சுக்கார்களின் ஆதிக்கத்திற்கு முடிவுகட்டி ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு வழிவகுத்திருக்கிறது. மார்த்தாண்டர் காலம் வரை அடங்கியிருந்த நாயர் - நம்பூதிரி கூட்டணி, பின்னர் அட்சியதிகாரத்தில் தலையிட்டு, நாட்டின் பெயரையும் திருவிதாங்கூர் என மாற்றியதாகக் கூறப்படுகிறது. தலைநகரும் கல்குளத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. அவிட்டம் திருநாள் பாலராம வர்மர் ஆட்சிக்காலத்தில் (1782-1810), ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக, திருவாங்கூர் சமஸ்தான திவான் வேலுத்தம்பி தலைமையில் நடைபெற்ற புரட்சி குறிப்பிடத்தக்கதாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. மகாராஜா பலராமவர்ம

குலசேகரப் பெருமாள் ஆட்சிக்காலத்தில் வெள்ளையரின் ஆதிக்கம் மிகுந்திருந்ததாகக் கருதப்படுகிறது. நாஞ்சில் நாட்டில் பிறந்த வேலாயுதன் செண்பகராமன் தம்பி (1765-1809) திருவிதாங்கூரின் தளவாய் அதாவது முதல் அமைச்சர் பதவி வகித்து மக்கள் ஆதரவைப் பெற்றவராகப் பணியாற்றியிருக்கிறார்.

கொச்சியில் அமைச்சராக இருந்த பவியாத்தச்சன் ஆதரவுடன் ஆங்கிலேயரை எதிர்த்த தளவாய் வேலுத்தம்பி, வியாபாரம் செய்ய வந்தோர் நாடாள முயல்வதையும், அரசு நிர்வாகத்தில் தலையிடுவதையும் கடுமையாகச் சாடியிருக்கிறார். அந்நியரை இம்மண்ணிலிருந்து வெளியேற்ற போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை என குந்தாராப் பிரகடனம் வெளியிட்ட வேலுத்தம்பி தீரத்துடன் போரிட்டும் ஆங்கிலேயப் படையை வெற்றிகொள்ள இயலவில்லை. ஆங்கிலேயப் படையோடு சமாதன உடன்படிக்கை செய்துகொண்ட மன்னர் பலராமவர்மர், தளவாயை கைது செய்ய உத்தரவிட, தலைமறைவாக இருந்த தளவாய் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டதாக சரித்திரம் பதிவு செய்துள்ளது.

மகாராணி ஆயில்யம் திருநாள் கவுரி லட்சுமி பாய் (1791-1815) ஆட்சிக்குப் பின், அவரது மகன் ஸ்ரீசுவாதித் திருநாள் இராமவர்மன் பிறந்த ஆண்டிலேயே அரசராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். இளவயது காரணமாக அரசருக்குப் பதிலாக உத்தராடம் திருநாள் கவுரி பார்வதி பாய், பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்தின் உதவியுடன் ஆட்சி புரிந்திருக்கிறார். பின்னர் இராம வர்மர் 1829 முதல் 1846 வரை முழு அரச அதிகாரத்தோடும் ஆட்சிபுரிந்திருக்கிறார். சிறந்த ஆட்சியாளராக விளங்கிய இராமவர்மர், இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும், பல்வேறு மொழிகள் கற்றவராகவும், திருவனந்தபுரத்திலுள்ள வானியல் ஆய்வகம், அருங்காட்சியகம், விலங்கியல் தோட்டம், அரச அச்சகம், பொது நூலகம், நீதித் துறை, நவீன மருத்துவம் போன்ற பல்வேறு அமைப்புகளை உருவாக்கியவராகவும் புகழப்படுகிறார்.

திருவிதாங்கூரின் பத்தாவது மன்னராக அறியப்படுபவர் மூலம் திருநாள் இராமவர்மர் (1885-1924). மன்னரது ஆட்சிக்காலத்தில் கல்வி, மருத்துவம், சட்டம் ஒழுங்கு சிறப்புற்றிருந்ததாக குறிப்பிடப்படுகிறது. பல பள்ளிகளையும், கல்லூரிகளையும் திறந்த மகாராஜா இராமவர்மர், பெண்கள் கல்வி கற்க அனுமதித்தவராகவும் புகழப்படுகிறார்.

ஸ்ரீபத்மான்பதாச ஸ்ரீசித்திரைத் திருநாள் மூன்றாம் பலராமவர்மர் (1912-1991), பன்னிரெண்டாவது வயதிலேயே திருவிதாங்கூர் மகாராஜாவாக (1924-1949) பதவியேற்றிருக்கிறார். மன்னருக்கு கல்வி கற்பித்த குழுவின் தலைமை ஆசிரியரான கேப்டன் ஹார்வியின் கூற்றுப்படி, மன்னர் கல்வி கற்பதில் அதிக நாட்டம் கொண்டவராகவும், சிறந்த புத்திக் கூர்மை பெற்றவராகவும், ஆளுமைத் திறன் நிறைந்தவராகவும், முடிவெடுப்பதில் தேர்ந்தவராகவும் இருந்திருக்கிறார். மைசூர் நான்காம் கிருஷ்ணராஜ உடையாரின் நேரடி கண்காணிப்பில் பதினைந்து மாதங்கள் ஆட்சிப்பணி குறித்தான செய்முறைப் பாடம் கற்றவராக அறியப்படும் சித்திரை திருநாள் மகாராஜா, வெல்லிங்டன் பிரபுவுடனான நேரடி சந்திப்பிற்குப்பின், சர் சேத்துப்பட்டு பட்டாபிராமன் ராமஸ்வாமி ஐயரின் (1879-1966) வழிகாட்டலோடு அரியணை ஏறியிருக்கிறார்.

சி.பி என சுருக்கமாக அழைக்கப்பட்ட திரு.சி.பி. இராமஸ்சுவாமி ஐயர், சட்டம், ஆட்சிப்பணி தொடர்பான பல்வேறு உயர் பொறுப்புகளை வகித்திருக்கிறார். 936 முதல் 1947 வரை திருவிதாங்கூரின் திவானாகப் பதவிவகித்த ஐயர், பல்வேறு சமூக மாற்றங்கள் நிகழக் காரணமாக இருந்திருக்கிறார். எனினும் பொதுவுடமைக் கட்சியினரின் புன்னம்புரா - வயலார் புரட்சியை மிகக் கொடுரமாக அடக்கியதில் பல்வேறு விமர்சனங்களுக்கும் உள்ளானதாக குறிப்பிடப்படுகிறார். ஒரே சமயத்தில் பனாராஸ் இந்துப் பல்கலைக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கும் (1954-1956) துணைவேந்தராகப் பதவிவகித்த இராமசாமி ஐயர், அவரது மிகச்சிறந்த நிர்வாகத்திற்காக நினைவு கூறப்படுகிறார்.

மேஜர் ஜெனரல் ஷிஸ் ஹைனஸ் ஸ்ரீ பத்மனாபதாச வஞ்சிபால சர் மூன்றாம் பலராம வர்மா மன்னே சுல்தான் மஹாராஜ ராஜ ராமராஜ பகதூர் ஷாம்ஹெர் ஜங், மகாராஜா ஆ.ர்.ப திருவாங்கூர் கிராண்ட் கமாண்டர், நைட் கமாண்டர் என்பதே மகாராஜாவின் பட்டப் பெயர்.

திருவாங்கூரின் மகாராஜா, பத்மனாப சுவாமி கோவிலின் வாழ்நாள் அறங்காவலர், திருவாங்கூர் - கொச்சியின் கவர்னர் (இராஜபிரமுகர்), அஸ்பின்வால் நிறுவனத்தின் சேர்மன், திருவாங்கூர் பல்கலையின் நிறுவனர் மற்றும் வேந்தர், ஆந்திரப் பல்கலையின் வாழ்நாள் செனட் உறுப்பினர், திருவனந்தபுரம் டென்னிஸ் கிளப் தலைமைப் புரவலர், ஸ்ரீசுவாதி திருநாள் சங்கீத சபையின் புரவலர், திருவாங்கூர் விளையாட்டுக் கழகப் புரவலர், திருவாங்கூர் மாணவ சாரணர் இயக்கப்

புரவலர், திருவனந்தபுரம் உதவிக்கு நண்பர் கழகத்தின் புரவலர், ஸ்ரீமூலம் கிளப்பின் புரவலர், திருவனந்தபுரம் கிளாப் மற்றும் கொல்லம் ராமவர்ம கிளப் புரவலர் போன்றவை மகாராஜா வகித்த சில பதவிகள்.

மகாராஜா திருமணம் செய்து கொள்ளவில்லை எனக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. மகாராஜா காலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், ஏராளமான பிரச்சினைகளும் தொடர்ந்திருக்கின்றன. குறிப்பாக வைக்கம் போராட்டம். அட்டவணையினர் கோவிலுக்குள் நுழைவதை ஆதரித்து நடைபெற்ற போராட்டத்தில், காந்தியடிகள் பங்கு பெற்றதால், போராட்டம் தேசிய அளவில் பேசப்படுவதாக உருமாறியிருக்கிறது. தொடர்ந்து வந்த ஆண்டுகளில் ஆலய நுழைவு உரிமைச் சட்டம் இயற்றப்பட அது மகாராஜாவின் பெருமைகளுள் ஒன்றாக ஆகியிருக்கிறது. சட்டத்தின் உதவியுடன் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்ட எந்தக் கோவிலினுள்ளும் யாரும் நுழைந்து வழிபடலாம் எனும் நிலை ஏற்பட்டது சிறப்பு.

பத்மநாபர் மேல் பேரன்பு கொண்டவர் எனக் குறிப்பிடப்படும் சித்திரைத் திருநாள் மகாராஜா, சுதந்திரத்திற்குப் பிறகான இந்திய அரசோடு திருவாங்கூர் சமஸ்தானத்தை இணைக்க விருப்பமில்லாமல் இருந்ததாக் கூறப்படுகிறது. சுதந்திரமான நாடாக இருக்க விரும்பிய திருவாங்கூருக்கு எதிராக, காங்கிரசார் போராட்டங்களை முன்னெடுக்க, பல கட்டப் பேச்சுவார்த்தைக்குப் பின் சமஸ்தானத்தை இந்திய அரசோடு இணைக்க மகாராஜா சம்மதித்திருக்கிறார். இந்திய ஆர்மியின் மதிப்புறு கர்னல் பட்டம் மகாராஜாவுக்கு வழங்கப்பட்டு, திருவிதாங்கூரின படைகள் மெட்ராஸ் படையணியோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. சுதந்திர இந்தியாவிடமிருந்து மான்யம் எதுவும் வேண்டாமென மறுத்த மன்னர், பத்மநாபர் திருக்கோவிலின் மீதான உரிமை மட்டும் போதும் எனக் கேட்டுக்கொண்டதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

திருவாங்கூர் சமஸ்தானத்தையும் கொச்சி சமஸ்தானத்தையும் ஒன்றாக இணைத்ததில் முக்கியப் பங்காற்றியவராகக் குறிப்பிடப்படுபவர் ராவ் பகதூர் வப்பல பங்குண்ணி மேனன் எனப்படும் திரு.வி.பி மேனன் (1893-1965). சர்தர் வல்லபாய் படேலுக்கு வலதுகரம் போன்றவர் எனக் குறிப்பிடப்படும் மேனன், சுதேசி சமஸ்தானங்களை இந்தியோடு இணைத்ததில் பெரும்பங்காற்றியவராகக் கருதப்படுகிறார்.

திருவாங்கூரைப் போல் முரண்டு பிடிக்காமல் இந்தியாவோடு சேர முதலில் சம்மதித்த சுதேசி சமஸ்தானமாகக் கொச்சி சமஸ்தானம் குறிப்பிடப்படுகிறது. போர்த்துகீசியர்கள் (1503-1663), டச்சுக்காரர்கள் (1663-1773), மைசூர் ஆக்கிரமிப்பு என வரலாற்றில் தொடர்ந்து வந்த கொச்சி அரசுரிமை பின்னர் ஆங்கில ஆதிக்கத்திற்கு (1814-1947) உட்பட்டதாக இருந்து வந்திருக்கிறது.

கொச்சி மகாராஜா வழிகாட்டலில் மட்டன் சேரி, எர்ணாகுளம் என விரிவடைந்து வந்த கொச்சி, கொச்சி துறைமுகம் உருவாக்கப்பட்ட பின், மிகப் பெரியளவில் விரிவாக்கம் கண்டிருக்கிறது. சென்னை ஆளுநராக இருந்த வெலிங்டன் பிரபுவின் வழிகாட்டலில் 1920 இல் கொச்சிக்கு அனுப்பப்பட்ட புகழ்பெற்ற துறைமுகப் பொறியாளர் இராபர்ட் பிரிஸ்டோ (1880-1966), அடுத்த இருபத்தியோரு வருடங்களில், கொச்சி துறைமுகத்தை திறம்படக் கட்டமைத்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

முதலாம் உன்னிராமன் கோயிகள் (1500-1503) தொடங்கி, அய்க்க கேரளம் தம்பிரான் என அழைக்கப்பட்ட ஏழாம் கேரள வர்மன் (1946-1947) வரையிலும் தொடர்ந்து வந்த கொச்சி அரச மரபு, சுதந்திரத்திற்குப் பிறகும் கொச்சனியன் தம்புரான் (2014 முதல்) எனத் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

கொச்சியின் கடைசி மகாராஜாவாகக் குறிப்பிடப்படுபவர் பதினெட்டாம் இராம வர்மன் எனும் பரிக்ஷித் தம்புரான் (1948-1964). இந்தியாவோடு இணைவதில் விருப்பம் கொண்டிருந்த கொச்சி, திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு இணைவதில் பல்வேறு எதிர்ப்புகளை மேற்கொண்டதாகக் பதிவுகள் கிடைக்கின்றன. எதிரும் புதிருமாக இருந்து சமஸ்தானங்கள், திரு-கொச்சியாக இணைவதில் ஆலய நுழைவும் முக்கிய சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. ஆலய நுழைவுக்கு அனுமதித்த திருவிதாங்கூருக்கு எதிராக, திருவாங்கூர் சமஸ்தான மக்கள் அனைவரையும் கொச்சி பகுதியிலிருந்த கோவில்களுக்குள் நுழைய கொச்சி சமஸ்தானம் தடை விதித்திருக்கிறது. திருவிதாங்கூருக்கு அடங்கிய சிற்றரசாக இருந்த கொச்சி மன்னரை, உபஇராஜபிரமுகராக ஏற்றுக்கொள்ள சித்திரை மன்னர் மறுத்ததாகவும் கூறப்படுகிறது.

வெள்ளி நிறத்தில் வலம்புரிச்சங்கு பொறித்த செந்திறக் கொடியைக் கொண்டு ஆட்சி நடத்திய திருவிதாகூர் மன்னர்கள், காலத்தால் அழியாத பல்வேறு

வரலாற்றுத் தடங்களை விட்டுச் சென்றுள்ளனர் என்றால் மிகையாகாது. கேரளக் கட்டிடக் கலைக்கு மிகச்சிறந்த உதாரணமாகக் குறிப்பிடப்படுவது பத்மனாபபுரம் அரண்மனை. திருவிதாங்கூர் மன்னர்கள் ஏராளமான அரண்மனைகளைக் கொண்டிருந்த போதிலும், மேற்குச் தொடர்ச்சி மலையின் வேளிமலையடிவாரத்தில் அமைந்துள்ள பத்மநாபபுர அரண்மனை தனிச் சிறப்பு பெற்றதாகக் கருதப்படுகிறது.

வேணாட்டின் இரவிவர்ம குலசேகரப்பெருமாள் மன்னரால் (ஆ.கா. 1592-1609) கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படும் அரண்மனை, மார்த்தாண்ட வர்மரால் (1706-1758) விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. 1795 வரை திருவாங்கூரின் தலைநகரமாக விளங்கிய பத்மநாபபுர அரண்மனை, நுட்பமான மரவேலைப்பாடுகள் நிரம்பியதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. நானூறு ஆண்டு கால அரண்மனையைச் சுற்றி, கோட்டை அமைக்கப்பட்டிருப்பதும், ஏறத்தாழ பதினான்கு மாளிகைகளை உள்ளடக்கிய மாளிகைத் தொகுதியாக அரண்மனை காணப்படுவதும், அரண்மனைக்கே உரித்தான செல்வச் செழிப்பு காணப்படுவதும், மரச் செதுக்கல் வேலைப்பாடுகளும், சூரிய ஒளியை நன்கு உள்வாங்கும் வண்ணம் சலாகைகள் அமைக்கப்பட்டிருப்பதும், பளிச்சிடும் கரியநிறத் தரை உருவாக்கப்பட்டிருப்பதும், பத்மநாபுரம் அரண்மனையின் தனிச் சிறப்புகள் எனப் புகழப்படுகிறது.

கோட்டயம் - மலபார் பகுதியில் மன்னராக இருந்த திப்பு காலத்தவரான வீரபழசி இராசா (1774-1805), ஆங்கிலேயரை எதிர்த்து தீரமுடன் போராடியவராகப் புகழப்படுகிறார். வரிவசூல் செய்வதில் ஆங்கிலேயருடன் பிணக்கு ஏற்பட்டு, அதன் காரணமாக பிரித்தானியப் படையுடன் மோதி, இறுதியில் மோதிரத்தை விழுங்கி வாழ்வை முடித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

கேரள அரசுரிமைகளில் காணப்பட்ட வாரிசுரிமை முறை மருமக்கதாயம் என அழைக்கப்படுகிறது. தாய்வழி வாரிசுரிமையாகக் காணப்பட்ட மருமக்கதாயத்தில், மன்னரது சகோதரியின் குழந்தைகளே வாரிசுகளாகக் கருதப்பட்டிருக்கின்றனர். பல கணவர் முறை வழக்கத்திலிருந்த சமுதாய அமைப்பில், குழந்தைகளின் தாயாரையே உறுதியாகக் கூற இயலும் எனும் உண்மையின் அடிப்படையில் மருமக்கதாயம் உருவானதாகக் கருதப்படுகிறது. அரசமரபு என்றில்லாமல் சொத்துரிமை கருதி பொதுமக்களிடமும் குறிப்பாக நாயர்களிடம் மருமக்கதாயம் பெருமளவில் இருந்ததாக அறியப்படுகிறது.

பொதுவுடமை கொள்ளைகளுக்குப் பெயர் போன திரு. இ.எம்.எஸ், ஒன்றுபட்ட கேரள மாநிலத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்தது குறிப்பிடத்தக்கது. விடுதலை இந்தியாவின் காங்கிரசு அல்லாத முதலாவது முதலமைச்சராகக் கருதப்படும் இ.எம்.எஸ், பெருமளவிலான நிலச் சீர்திருத்தம் மேற்கொண்டதாக அறியப்படுகிறது. சீன ஆதரவைக் காரணம் காட்டி விதி 356 இன் கீழ், 1959-ல் இந்தியாவில் முதன் முதலாகக் கலைக்கப்பட்ட பொதுவுடமை ஆட்சி (1957-1959), பின்னர் 1967 முதல் 1969 வரையிலும் இ.எம்.எஸ் அவர்களையே முதல்வராத் தேர்வு செய்திருக்கிறது.

தோழர் இ.எம்.எஸ் மாநிலத்தின் முதல்வராக, கட்சியின் பொதுச்செயலாளராக, சிறந்த எழுத்தாளராக, மக்களுக்காக பல்வேறு மகத்தான பணிகளை நிறைவேற்றியவராகக் கொண்டாடப்படுகிறார். பிற்காலத்திய வாழ்வின் பெரும்பகுதியை எழுத்திற்கே செலவழித்த தோழர், இந்திய நாட்டின் மகத்தான மார்க்கிய சிந்தனையாளராகப் புகழப்படுகிறார். குடும்பத்திற்கென்று சொத்துச் சேர்க்காமல், பெருத்த சொத்துக்களை விற்று கட்சிக்குக் கொடுத்து விட்டு, கட்சி கொடுத்த சிறு வீட்டில் வாழ்நாளெல்லாம் எளிமையாக வாழ்ந்த தோழர் மாமனிதர் எனில் மிகையாகாது.

மார்க்சிய பொதுவுடமைக் கட்சி தொடர்ந்து கேரள மண்ணில் வெற்றிவாகை சூடுவதற்கு தோழர் இ.எம்.எஸ் அமைத்த அடித்தளமே காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது. தோழரின் வரிசையில் செ. அச்சுமேனன், பி.கே வாசுதேவன் நாயர், ஈ.கே நாயனார், வி.எஸ். அச்சுதானந்தன் மற்றும் பினராய் விஜயன் எனப் பலரும் முதலமைச்சராக இருந்து கேரள மக்களின் முன்னேற்றத்திற்கு உழைத்திருக்கின்றனர்.

பொதுவுடமைக் கட்சியினர் போன்றே இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல முதல்வர்கள் கேரள நாட்டை முன்னேற்றப் பாடுபட்டிருக்கின்றனர். பட்டோம் தானுப்பிள்ளை தொடங்கி கே. கருணாகரன், அ.கு. அந்தோணி, உம்மண்சாண்டி போன்றோரும் முதலமைச்சர்களாக இருந்திருக்கின்றனர்.

பெரியாறு, நெய்யாறு, பம்பா, மணிமாலா. பாரதப்புழா, மலம்புழா, சித்தாறு, முவாற்றுப்புழா என பல்வேறு ஆறுகள் ஓடும் கேரளத்தில் நீர்ப்பாசனம் சிறப்புற்று வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆழப்புழா, எர்ணாகுளம், கோட்டயம்

மாவட்டங்களை எல்லையாகக் கொண்ட வேம்பநாட்டு ஏரி அல்லது வேம்பநாட்டுக் காயல், இந்தியாவின் மிக நீளமான ஏரியாகக் கருதப்படுகிறது. 1512 சதுரகிலோ மீற்றர்கள் பரப்பளவு கொண்ட வேம்பநாடு ஏரியை மையமாக்கி நடைபெறும் குமரகம் படகு இல்லச் சுற்றுலா மற்றும் புத்துணர்வு முகமைகள், கேரளாவின் புகழை உலகெங்கும் பரப்புவதாக வளர்ச்சி கண்டுள்ளன. மேலும் ஓணத்தின் போது குமரகத்தில் நடைபெறும் ஒடி வள்ளம், கொச்சு ஒடிவள்ளம், சுருளான் வள்ளம், இருட்டுக்குத்தி வள்ளம் மற்றும் சுண்டன் வள்ளம் போன்ற பல்வேறு வடிவ படகுப் போட்டிகள் சிறப்பானவை.

இயற்கையன்னை பெருமையுடன் கோலோச்சும் அமைதிப் பள்ளத்தாக்கு, கேரள மாநிலத்தின் விலை மதிப்பில்லா பொக்கிஷமாகக் கருதப்படுகிறது. மேற்குச் தொடர்ச்சி மலையில், இயற்கை எழில் சூழ்ந்து கிடக்கும் மழைக்காடுகள் நிறைந்ததாக அமைதிப் பள்ளத்தாக்கு இருக்கிறது. கேரளாவிற்கு இயற்கை கொடுத்த வரமாகக் குறிப்பிடப்படும் அழகிய அமைதி சைரந்திரி வனம், இராபர்ட் ஒயிட் என்னும் ஆங்கிலேயரால் 1847 இல் கண்டறியப்பட்டு, அதன் நிசப்தம் காரணமாக சைலன்ட் வேலி என அழைக்கப்பட்டிருக்கிறது. சோலை மந்திகளின் முக்கிய வாழிடமான அமைதிப் பள்ளத்தாக்கு, யானைகள் வழித்தடத்தின் இறுதிப் பகுதியாகவும் குறிப்பிடப்படுகிறது. எண்பத்தொன்பது சதுர கிலோமீட்டர் பரப்பு கொண்ட பள்ளத்தாக்குப் பகுதியில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிரின வகைகள் இருப்பது அதிசயம்.

அமைதிப் பள்ளத்தாக்கு போன்றே கேரளாவின் மற்றொரு இயற்கை எழில் கொஞ்சும் பகுதி மூணாறு. மலைச்சிகரங்கள் செழித்த மரங்கள், பச்சைப்பசேல் தேயிலைத் தோட்டங்கள், வளைந்து நெழியும் சாலைகள் என கண்ணுக்கெட்டும் தூரம் வரை பரந்து விரிந்திருக்கும் மூணாறு, தென்னகத்தின் காசுமீரமாக புகழப்படுகிறது.

கிழக்கு வெனிசு என அழைக்கப்படும் ஆலப்புழை, தேசியப் பூங்காக்கள் நிறைந்த வயநாடு, காட்டுயிர் வாழ்க்கைக்கு பெயர்போன தேக்கடி, காண்போரை மகிழ்விக்கும் அதிரப்பள்ளி நீர்விழ்ச்சி, மனதை மயக்கும் கடற்கரைகள் என எங்கும் வாரி இறைக்கப்பட்டிருக்கும் அழகோவியம் கேரளா.

கேரளத்தின் திரைப்பட நட்சத்திரங்களும் கொள்ளை அழகு. அடியும் உதையும் பட்டாலும் பரவாயில்லை, ஒரு அரை நொடியாவது தரிசனம் கிடைக்கப் பெறமாட்டோமா என ஏங்கித் தவிக்கும் தமிழ் இளைஞர்களின் மனதைக் கொள்ளை கொண்ட கேரளத்துப் பைங்கிளிகள் பலர்.

ஆரம்பகால மலையாள சினிமா உலகம், தமிழ் திரையுலகத்தைச் சார்ந்தே இயங்கியிருக்கிறது. 1950களுக்குப் பிறகே தனித்துவமான மலையாள திரை உலகம் உருவாக்கம் பெற்றதாகக் கூறப்படுகிறது. மலையாள திரைத்துறையின் முதல் படமாக, ஜோசப் செல்லப்ப டேனியல் எடுத்த தொலைந்த மகன் எனப் பொருள்படும் விகத குமரன் எனும் குரலில்லாத படம் குறிப்பிடப்படுகிறது. வரலாற்றில் மறைக்கப்பட்டவராகக் கருதப்படும் டேனியல் பெயரில் திரைத்துறை வாழ்நாள் சாதனை விருதை 1992 இல் கேரளா அறிவித்திருக்கிறது.

பி.வி. ராவ் இயக்கத்தில் சி.வி இராமன் பிள்ளை என்பவரின் நாவலைத் தழுவி 1933-ல் எடுக்கப்பட்ட மார்த்தாண்ட வர்மா, இரண்டாவது மலையாளப் படமாகக் குறிப்பிடப்படுகிறது. உரிமைப் பிரச்சினையில் சிக்குண்டு புனேயில் பாதுகாக்கப்பட்ட மார்தாண்டவர்மா படம், பேசாப்பட காலகட்டத்தின் ஒரே தென்னிந்திய படச்சுருள் சான்றாகக் குறிப்பிடப்படுகிறது. 1954-ல் நடந்த கேரள திரைப்பட விழாவில் மார்த்தாண்ட வர்மா திரையிடப்பட்டிருக்கிறது.

மலையாளம் பேசிய முதல் படமாக 1938-ல் வெளிவந்த பாலன் படம் குறிப்பிடப்படுகிறது. எஸ். நோட்டாரி இயக்கிய பாலன் படத்தைத் தயாரித்தவர் சேலம் மாடர்ன் தியேட்டர் திருச்செங்கோடு இராமலிங்கம் சுந்தரம் அவர்கள் (1907- 1963). மலையாளத்தின் முதல் கதாநாயகனானவர் கே.கே.அருர் எனப்படும் கே. குஞ்சுநாயர் (1907-1984). முதல் கதாநாயகி எம்.கே. கமலம் (1923-2010). பேசிய முதல் வசனம் ஹலோ மிஸ்டர். திரைக்கதை, வசனம் முத்துக்குளம் இராகவன் பிள்ளை (1910-1979).

1950 தொடங்கி 1970கள் வரை, மலையாள இலக்கியங்கள், நாடகங்கள், அரசியல் நிகழ்வுகள் போன்றவற்றிலிருந்து கதைக்களம் எடுத்தாளப்பட்டிருக்கிறது. 1954 இல் வெளிவந்த நீலக்குயில் படம் அனைத்து வகையிலும் ஒரு தேர்ந்த முழு முழுமையான மலையாளப் படமாகப் புகழப்படுகிறது. குடியரசுத் தலைவரின் வெள்ளிப்பதக்கம் வென்ற நீலக்குயிலை இயக்கியவர்கள் புல்லூத்துபட்டத்து பி.

பாஸ்கரன் (1924-2007) மற்றும் இராமு கா்யத் (1927-1979). இருவரும் மலையாளத்தில் சிறந்த இயங்குனர்களாகப் புகழப்படுகின்றனர். கதை கொடுத்தவர் உருப் என அழைக்கப்படும் பருத்துள்ளி சாலப்புரம் குட்டிக்கிருஷ்ண மேனன் (1915-1979). கேரளத்தின் புகழ்பெற்ற கதாசிரியராகக் குறிப்பிடப்படும் திரு.பி.சி. மேனன், சுந்தரிகளும் சுந்தரன்மாரும் உட்பட பல புகழ்பெற்ற ஆக்கங்களைப் படைத்துள்ளார்.

மலையாளத் திரைத்துறைக்கு மகுடம் சூட்டியதுபோல் அமைந்தது சென்மீன் (1965) எனில் மிகையாகாது. இயக்கியவர் இராமு கா்யத். மலையாளத்தின் புகழ்பெற்ற எழுத்தாளரும் ஞானபிடப்பரிசு (1984) பெற்றவருமான தகழி சிவசங்கரப் பிள்ளையின் செம்மீன் நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட செம்மீன் படம், தேசிய விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்ற படமாகப் புகழப்படுகிறது. ஷீலா, மது, கொட்டாராக்கரை சிறீதரன், சத்யன் போன்ற செம்மீன் நட்சத்திரங்கள் மலையாளத் திரைத்துறையில் வெகுகாலம் புகழ்பெற்றிருந்தனர்.

மலையாள சினிமா உலகின் சூப்பர் ஸ்டாராக அப்துல்காதர் எனும் இயற்பெயர் கொண்ட திரு. பிரேம் நசீர் (1927-1989) புகழப்படுகிறார். நித்ய ஹரித நாயகன் என்றும் நித்ய வசந்தம் என்றும் குறிப்பிடப்படும் திரு. நசீர், எழுநூறுக்கும் மேற்பட்ட படங்களில் முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறார். நடிகை ஷீலாவோடு மட்டும் நூற்று முப்பது படங்களுக்கு மேல் சேர்ந்து நடிததுள்ளார். வயலார் இராமவர்மா (1928-1975) அவர்களின் பாடல்களுக்கு, பரவூர் கோவிந்தன் தேவராஜன் (1927-2006) இசையமைத்து, கட்டசேரி ஜோசப் யேசுதாஸ் குரலில் நசீர் வாயசைக்க, திரையில் காணும் மலையாளிகள் சொக்கிப் போவார்கள் எனக் கூறப்படுகிறது.

நசீர், சத்யன் எனும் மானுவல் சத்யனேசன் (1912-1971) மற்றும் ஜெயன் எனும் கிருஷ்ணன் நாயர் (1939-1980) போன்றோர் மலையாள திரையுலகின் புகழ்மிக்கவர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். நடிப்பில் தேர்ந்தவரென சத்யன் பெயரெடுக்க, ஜெயனோ அதிரடிக் காட்சிகளுக்காக பெயர் பெற்றிருக்கிறார். பிரேம் நசீருக்குப் பின் மோழிவுட்டின் காதல் மன்னனாக வலம் வந்தவர் சங்கர் என்பது குறிப்பிடத்தக்கது. கிருஷ்ணன் நாயர், குஞ்சக்கோ, சுப்ரமணியம் போன்றோர் மலையாள திரைத்துறைக்குப் பெரும் பங்காற்றிவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். குறிப்பாக குஞ்சக்கோ (1912-1976) அவர்கள், ஆலப்பழையில் உதயா ஸ்டுடியோவைத் தொடங்கி (1947), கேரளத்திலேயே படவேலைகள் நிறைவுற

வழிகண்டிருக்கிறார். அதுபோலவே சுப்ரமணியமும் மேரிலேண்ட எனும் ஸ்டுடியோவைத் திருவனந்தபுரத்தில் தொடங்கி (1951) குஞ்சக்கோவோடு போட்டி போட்டு படங்களை எடுத்திருக்கிறார்.

எம்,ஜி.ஆரின் பாசம் (1962) மூலம் திரைத்துறைக்கு வந்த கிளாரா ஆப்ரகாம் எனும் பெயர் கொண்ட ஷீலா, மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி என 475 படங்களுக்கும் மேல் நடித்துப் புகழ்பெற்றுள்ளார். திருவிதாங்கூர் சகோதரிகள் எனக் குறிப்பிடப்படும் லலிதா, பத்மினி மற்றும் ராகினி, ஏராளமான தென்னிந்தியப் படங்களில் நடித்துப் புகழ் பெற்றிருக்கிறனர். காவியூர் பொன்னம்மா, பங்கஜவல்லி, அடூர் பவானி, பிரேமா, ஜெயபாரத போன்றோரும் குறிப்பிடத்தக்க மலையாள மொழி நடிகையராக அறியப்படுகின்றனர். ஜெயனுடன் அதிக படங்களில் நடித்தவராக நடிகை சீமா அறியப்படுகிறார். மலையாளத்தின் புகழ்பெற்ற இயக்குனரான ஐ.வி. சசி எனப்படும் இருப்பம் வீடு சதிதரனனை மணந்த சீமா, 250 படங்களுக்கும் மேல் நடித்திருக்கிறார். துலாபாரம் (1968) மற்றும் ஸ்வயம்வரம் (1972) போன்ற மலையாளப் படங்களுக்கு தேசிய விருது பெற்ற சாரதா அவர்களும், ஏராளமான மலையாள, தெலுங்கு படங்களில் நடித்திருக்கிறார்.

1970களில் நவீன மலையாள சினிமா உலகம் பிறந்ததாகக் கூறப்படுகிறது. சங்கர், மம்முட்டி, மோகன்லால் போன்றோர் மலையாள திரையுலகின் புகழ்மிக்க கதாநாயகர்களாகப் பெயர் பெற்றிருக்கின்றனர்.

இந்தியாவின் குறிப்பிடத்தக்க திரைப்பட இயக்குனராக அறியப்படும் அடூர் கோபால கிருஷ்ணன் உன்னித்தானின் முதல் படமான சுயம்வரம், பன்னாட்டு அளவில் பேசப்பட்ட படமாக புகழப்படுகிறது. பல புகழ்பெற்ற படங்களை இயக்கி மலையாள திரைத்துறையை, செறிவான கதைச் சிறப்புக் கொண்டதாகவும், உலகத் தரத்திற்குக் கொண்டு சென்றதிலும், அடூர் அவர்கள் பெரும்பங்காற்றியவராகப் புகழப்படுகிறார். திரைத்துறைக்கு அடூர் ஆற்றிய சேவையைப் பாராடடிடு 2004 ஆம் ஆண்டிற்கான தாதா சாகிப் பால்கே விருது வழங்கப்பட்டிருப்பதும் சிறப்பிற்குரியது.

மலையாளத் திரைத்துறையின் போக்கையே மாற்றியவராகப் புகழப்படுபவர், மிகச்சிறந்த கதாசிரியரும் ஞானபீட விருது (1995) வென்றவருமான திரு.எம்.டி.வாசுதேவன் நாயர். எம்.டி. என சுருக்கமாக அழைக்கப்படும் வாசுதேவன், ஐம்பதிற்கும் மேற்பட்ட திரைக்கதைகளை எழுதியவராக அறியப்படுகிறார்.

திரைப்படங்களை இயக்கியும் வெற்றி கண்ட திரு. வாசுதேவன், மிக அழகிய நடை கொண்ட பல நாவல்களை எழுதியவராகப் பாராட்டப்படுகிறார். எளிய பின்புலம் கொண்டவர்களையும், கூட்டுக் குடும்ப முறைகளையும் கதைகளில் உணர்ச்சிப் பூர்வமாக வெளிப்படுத்தியவராக அறியப்படும் மாடத்து தெக்கேகாட்டு வாசுதேவன், மலையாள மொழிக்கும் திரைத்துறைக்கும் சீரிய பங்களிப்புச் செய்தவராக புகழப்படுகிறார்.

அடூர் வரிசையில் அரவிந்தன், ஜான் ஆப்ரகாம், அப்பச்சன், சசி, ஜார்ஜ், மது, பரதன், பத்மராஜன், பிரியதர்ஷன், பாசில், ஜோஷி, கமல், சிபிமலையில், ஹரிஹரன், சத்யன், சித்திக் உட்பட ஏராளமான இயக்குனர்கள் மாலிவுட்டை முன் நகர்த்தியவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். எம்.டி.யோடு, தாமோதரன், லோகிததாஸ், ஸ்ரீனிவாசன் போன்ற திரைக்கதாசிரியர்களும் பல நல்ல கதைகளைக் கொடுத்தவர்களாக அறியப்படுகிறன்றனர்.

மலையாளத்தின் புகழ்பெற்ற திரைப்பட பாடலாசிரியராக கிரீஷ் புத்தன் சேரி (1957-2010) அறியப்படுகிறார். ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளதாகக் குறிப்பிடப்படும் திரு. கிரிஷ், அவரது இனிய பாடல்களுக்காக என்றும் நினைவு கூறப்படுபவராக இருப்பது சிறப்பு.

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது வரை புகழ்பெற்ற தமிழ், இந்தி படங்களின் மெட்டுக்களையே பெரிதும் பயன்படுத்திய மலையாள திரைப்படங்கள், தேவராஜன் தக்ஷிணாமூர்த்தி, பாபுராஜ், ராகவன் போன்ற மலையாள இசையமைப்பாளர்களால், கொஞ்சும் மலையாள மொழிப் பாடல்கள் பிறந்திருக்கின்றன. 1948-ல் உருவான நிர்மலா எனும் படத்தோடு தொடங்கும் மலையாள திரைப்பட இசை, லீலா, கோவிந்தராவ், வாசுதே குருப், ராகவன், சரோஜினி மேனன், விமலா பி.வர்மா போன்ற பின்னணிப்பாடர்களால் புகழ்பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது. மலையாள திரைப்பாடல்களின் பொற்காலமாகக் கருதப்படும் 1960-70களில், பல புகழ்பெற்ற மனதை மயக்கும் பாடல்கள் இயற்றப்பட்டு பாடல்களாக உருமாற்றப்பட்டிருக்கின்றன. 1961-ல் பாடகராக திரைத்துறைக்கு வந்த யேசுதாஸின் குரல், மலையாள இசையுலகை கட்டிப் போட்டதென்றால் மிகையாகாது. இந்தியாவின் பெரும்பாலான மொழிகளிலும், உருசிய, அராபிய, இலத்தீனம் மற்றும் ஆங்கிலம் உட்பட பல்வேறு மொழிகளிலும் நாற்பதாயிரத்திற்கும் மேலான பாடல்களைப் பாடியுள்ள கட்டசேரி

ஜோசப் திரு.யேசுதாஸ் மிகசிறந்த கர்நாடக இசைப்பாடகராக அறியப்படுகிறார். கான கந்தர்வன் என புகழப்படும் திரு. யேசுதாசு, ஏராளமான ஆன்மிகப்பாடல்களைப் பாடியவராகவும், இசை தொகுதிகள் வெளியிட்டவராகவும், ஏராளமான விருதுகளைப் பெற்றவராகவும் புகழப்படுகிறார். யேசுதாசும், ஜெயச் சந்திரனும், தொடர்ந்து வந்த சின்னக்குயில் சித்ராவும், மலையாள திரை இசைக்கு பெரும் விருந்து வைத்தவர்களாகப் புகழப்படுகின்றனர். மலையாள தேசத்திலிருந்து ஹரிஹரின், உன்னி கிருஷ்ணன் போன்ற எண்ணற்ற பாடகர்களும், பாடகிகளும் மலையாளம் என்றில்லாமல் இந்தியா முழுமைக்குமே இசைவிருந்து படைத்திருக்கின்றனர். இசை ஞானி இளையராசாவைத் தொடர்ந்து புயலென நுழைந்த ஆசியாவின் மொசார்ட் ஏ,ஆர். ரகுமானும், பல இளம் பாடக படகியரை அறியமுகப்படுத்தி, இந்திய இசைக்குப் புதுவடிவம் கொடுத்தவராகப் புகழப்படுகிறார்.

1998-ல் பாபா சாஹேப் அம்பேத்கார் திரைப்படத்திற்காக மூன்றாவது முறையாக தேசிய விருது பெற்ற முகமது குட்டியை மலையாளிகள் மம்மூக்கா, மக்மூஸ் என அழைப்பதாகக் கூறப்படுகிறது. 1982 முதல் 1986 வரையிலான ஐந்து வருடங்களில் அதிகமான திரைப்படங்களில் கதாநாயகனாக நடித்த மம்முஸ் நடிப்பைப் பார்த்து மலையாளிகள் பூரித்திருக்கிறார்கள் என்பது ஆச்சரியம்.

1971 இல் கே.எஸ் சேது மாதவன் இயக்கத்தில் முதன் முதலாகத் திரையில் தோன்றினாலும், 1980களிலேயே காதநாயகன் எனும் நிலைக்கு மம்முட்டி உயர்ந்திருக்கிறார். அன்றிலிருந்து கால் நூற்றாண்டிற்கும் மேலாக மலையாளத் திரைத்துறையில் மிகப்பெரிய நட்சத்திரமாக வலம் வரும் மம்முட்டி, பல்வேறு மனிதநேயச் செயல்களில் ஈடுபடுபவராகவும் புகழப்படுகிறார்.

திரைப்பட நடிகர், தயாரிப்பாளர், வினியோகஸ்தர், தொழிலதிபர் எனப் பல்வேறு ஆளுமைகளைக் கொண்டுள்ள லாலு, லாலேட்டன் எனும் செல்லப் பெயர்களுள்ள மோகன்லால் விசுவநாதன் நாயர், ஐந்து முறை தேசிய விருதுகளைப் பெற்றிருக்கிறார். 1980 இல் மஞ்சில் விரிஞ்ச பூக்கள் எனும் மாபெரும் வெற்றிப்படத்தோடு திரையுலக வாழ்க்கையைத் துவக்கிய மோகன்லால், ராஜாவிண்டே மகன் போன்ற படங்கள் மூலம் பெரிய நட்சத்திரமாக உயர்ந்திருக்கிறார், மரபு சாந்த அழகிய திரைப்படங்களில் நடித்தவராகப்

புகழப்படும் திரு. மோகன்லால், இந்திய இராணுவத்தின் சிறப்புகளை வெளிப்படுத்தும் பாத்திரங்களை சிறப்புற நடித்தவராகவும் புகழப்படுகிறார்.

களியாட்டம் படத்திற்கான தேசிய விருது பெற்ற (1997) சுரேஷ் கோபி, இருநூறுக்கும் மேற்பட்ட மலையாளப் படங்களில் நடித்து புகழ்பெற்றவராக அறியப்படுகிறார். கலகலப்பான பாத்திரங்கள் மூலம் மக்கள் மனங்களில் இடம் பெற்ற ஜெயராம், பலகுரல் கலைஞராக இருந்து பின் திரைத்துறைக்கு வந்த திலீப், மலையாளத்தின் நவீன முகமாக வலம் வரும் பிரித்விராஜ் போன்ற ஏராளமான கதாநாயகர்களும் மலையாளக் கரையின் புகழ்பெற்ற நடிகர்களாக அறியப்படுகின்றனர்.

1980களில் திரைத்துறை பயணத்தைத் தொடங்கிய அம்பிகா, ராதா சகோதரிகள், நாட்டிய நடிப்பின் மூலம் உள்ளங்களைக் கொள்ளையிட்ட ஷோபனா, கேரள சேட்டன்களின் மனதில் நீங்க இடம் பெற்ற மஞ்சுவாரியார், கேரளத்தின் நவீன முகமாகப் பவனிவரும் வித்யாபாலன் போன்ற மலையாள நாட்டு கதாநாயகிகளும் உள்ளம் கவர்ந்தவர்களே. தரத்தாலும், நடிப்பாலும், நுட்பத்தாலும் சிறந்து விளங்கிய மலையாளத் திரைஉலகம், பத்து லட்ச ரூபாய் முதல் போட்டு நான்கைந்து கோடிகளை அள்ளும் வணிக நுட்பம் கொண்ட படங்களுக்கும் பெயர் பெற்றதாக விளங்கியது. இந்தியா என்றில்லாமல் பல நாடுகளிலும் திரையிடப்பட்ட அஞ்சரைக்குள்ள வண்டி, கிண்ணாரத் தும்பிகள் போன்ற இரண்டாம் தரப் படங்கள் ஓடுவதற்கென்றே திரையரங்குகள் அடையாளம் காணப்பட்டதும் மலையாள தேசத்தின் மகிமை.

நவீன மலையாள இலக்கியம் மிகச் சிறப்பானதாகப் புகழப்படுகிறது. உலகத்தரத்துடன் ஒப்பிடக்கூடிய அளவிற்கு மலையாளத்தில் காத்திரமான படைப்புகள் நிகழ்ந்திருப்பதாக இலக்கிய அறிஞர்கள் பாராட்டப்படுகின்றனர். மலையாள நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட பள்ளிகள், கல்லூரிகள் வழியே ஆங்கிலம் அறிவும், மேலை நாட்டுச் சிந்தனை மரபும், பைபிள் மொழிபெயர்ப்பும், மற்ற ஆன்மீக மொழிப்பெயர்ப்புகள், செய்தித்தாள்கள் பெருக்கமும், ஊடக வளர்ச்சியும், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஏற்றமும், தொழில்மயமும், அவைகளினூடாக எழுந்த சமூகப் பொருளாதார அரசியல் எழுச்சியும், ஒட்டுமொத்தமாக மலையாள இலக்கியத்தை இந்திய அளவில் முதன்மைப்படுத்தியதாகக் கருதப்படுகிறது.

திருவிதாங்கூர் மன்னர்கள் அனைவரும் எழுத்தையும் இலக்கியத்தையும் பெருளவில் நேசித்தவர்களாக, வளர்த்தவர்களாக அறியப்படுகின்றனர். குண்டர்டைத் தொடர்ந்து பல்வேறு மேலை நாட்டு அறிஞர்களும், உள்ளூர் மலையாளிகளும், ஏராளமான படைப்புகளை உருவாக்கியிருக்கின்றனர். வைக்கம் பட்சு மூத்தது, கோவுண்ணி நெடுங்காடி போன்றோர் ஆரம்பகால படைப்புகளை முன்னெடுத்தவர்களாகக் கூறப்படுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இறுதிக் காலகட்டங்களுக்குள்ளாகவே மலையாளத்தில் மேலை மரபு மற்றும் கிழக்கு அல்லது பழமை மரபு எனும் இரு வேறுபட்ட மலையாள ஆக்க மரபுகள் தோன்றிவிட்டதாக குறிப்பிடப்படுகிறது. வேறு பலர் இரண்டு மரபுகளை இணைத்தும், மற்றும் பலர் அனைத்து விதமான ஆக்கங்களை ஆதரித்தவர்களாகவும் இருந்துள்ளனர்.

கேரள காளிதாசராகப் புகழப்படுபவர் கேரள வர்ம வலிய கோயிதம்புரான் (1845-1914). அரச மரபோடு தொடர்புடைய கோயிதம்புரான், சாகுந்தலையை மொழியாக்கம் செய்தவராகவும், மேகதூதை மயுரா சந்தேசம் அதாவது மயில் தூது எனும் பெயரில் மொழிபெயர்த்தவராகவும் அறியப்படுகிறார். ஆங்கில மற்றும் சமஷ்கிருத மொழிப்புலமை மிகுந்த திரு. தம்புரான் பாஷா போதினி சபா, மலையாள மனோரமா, வித்யா வினோதினி போன்றவற்றோடும் தொடர்பு கொண்டவராகக் குறிப்பிடப்படுகிறார்.

அபிஞான சாகுந்தலையைத் தொடர்ந்து பல்வேறு சமற்கிருத மற்றும் ஆங்கில மொழியாக்கங்கள் மலையாளத்தில் நிகழ்ந்திருக்கின்றன. பின்னர் வந்த காலங்களில் ரஷ்ய, பிரெஞ்சு, ஜெர்மன் இலக்கியங்களும் மொழியாக்கம் செய்யப்பட்டு, மலையாள மொழிக்கு செழுமை செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. கேரள வர்மரின் மறுமகனான ராஜ ராஜ வர்மா (1863-1918), அவரது மலையாள இலக்கணப் புலமைக்காக, கேரள பாணினி எனப் புகழப்படுகிறார். கேரள பாணினீயம், பாஷாபோஷனம், விருத்த மஞ்சரி, சாகித்ய சாக்யம் போன்ற பாடல் தொகுப்புகளையும், காளிதாசர் படைப்புகளின் மொழிபெயர்புகளையும் வெளியிட்ட திருவனந்தவும் மகாராஜா கல்லூரிப் பேராசிரியரான திரு. ராஜ வர்மா, உலகிலிருந்த பல்வேறு விதமான இலக்கியப் போக்குகளையும் மலையாளத்தில் புகுந்த முனைந்தவராக அறியப்படுகிறார். கர்நாடக சங்கீத அறிஞராகவும், கவிஞராகவும் அறியப்படும் கே.சி.கேசவ பிள்ளையின் மகா காவியமான கேசவியம்

மற்றும் ஏராளமான அட்டக்கதாக்கள், அழகாத்து பத்மனாப உரூப்பின் ராமச்சந்திர விலாசம், பந்தளம் கேரள வர்மாவின் ருக்மாங்கத சரிதம், கட்டக்காயம் செரியன் மாப்பிள்ளாவின் ஸ்ரீயேசு காவியம், உள்ளூர் பரமேஸ்வரின் உமா கேரளம் மற்றும் வல்லத்தோளின் சித்ரயோகம் போன்ற படைப்புகள், மலையாள நவீன செவ்வியல் தன்மைக்கு அணி சேர்த்தவைகளாகப் பராட்டப்படுகின்றன.

கேசரி எனும் புனைப்பெயரில் குறிப்பிடப்படும் வெங்காயில் குங்கிராமன் நாயனார் (1861 -1895), கேரள சந்திரிகா, கேரள பத்ரிகா, கேரள சஞ்சரி போன்ற பல்வேறு ஏடுகளைத் தொடங்கியவராகவும் மலையாளத்தின் முதல் சிறுகதை எனக் குறிப்பிடப்படும் வசனவிக்ரிதி எனும் கதையைப் படைத்தவராகவும் புகழப்படுகிறார்.

திரு. அப்பு நெடுங்காடியின் (1866-1934) குண்டலதா, மலையாளத்தின் முதல் நாவலாகக் குறிப்பிடப்பட்டாலும், சாந்து மேனனின் (1847-1899) இந்துலேகா புதினமே மிகச் சிறந்த புதினமாகக் கூறப்படுகிறது. மலையாள புதின வரலாற்றில் ஒரு சிறந்த அடையாளமாக அழைக்கப்படும இந்துலேகா, அழகிய படித்த பதினெட்டு வயது நிரம்பிய ஒரு நாயர் மங்கையைப் பற்றிய கதையாக வழங்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலேய கல்வியால் பிரித்தானிய இந்தியாவில் பல்வேறு வாய்ப்புகளைப் பெற்று அனைத்து துறைகளிலும் மேலெழுந்து வந்த நாயர்களுக்கும், பழமையில் ஊறின நம்பூதிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை, பெண் உறவுகளைச் சுட்டிக் காட்டுவதோடு, நம்பூதிரிகள் நாயார் பெண்களோடு கொண்டிருந்த சம்பந்தம் உறவையும் கேள்விக்குட்படுத்துவதாக புதினம் தீட்டப்பட்டிருக்கிறது. இந்து லேகாவையும், நாயகன் மாதவனையும் சுற்றிச் சுழலும் கதை, வங்காளத்தையும் சென்னையையும் தொட்டுச் செல்வதாக கூறப்படுகிறது.

பி. கேசவ பிள்ளை (1904-1983), தகழி சிவசங்கரன் பிள்ளை மற்றும் வைக்கம் முகமது பஷீர் (1908 -1994) மூவரும், மலையாள இலக்கியத்தில் பெரும் புலமை பெற்றவர்களாகவும், மலையாள இலக்கியத்தை நவீனமாக வளர்த்தெடுத்ததில் பெரும் பங்காற்றியவாக்ளாகவும் புகழப்படுகின்றனர். சமூகசீர்திருத்தவாதியாகவும், புதின எழுத்தாளராகவும், சிறந்த பேச்சாளராகவும் அறியப்படும் திரு.பி. கேசவதேவ் புதினம், நாடகம், சிறுகதை, திரைத்துறை என பன்முகத்தன்மை கொண்டவராகக் குறிப்பிடப்படுகிறார். ஓடையில் நின்னு, நதி, ஸ்வப்னம், ஸ்நேகிக்கன் வேண்டி, அதிகாரம், பிராந்தலயம், அயல்கார், ஒரு சுந்தரியோடே ஆத்மகதா உட்பட 128 இலக்கிய ஆக்கங்களைப் படைத்த கேசவன், முடிக்காமல் விட்டுச் சென்ற படிச்ச

கள்ளன்மார் கதையை அவரது மனைவி சீத்தாலெட்சுமி அம்மையார் திருத்தம் செய்து வெளியிட்டிருக்கிறார்.

மலையாள இலக்கிய உலகை வடிவமைத்ததில், செழுமை செய்ததில், முன்னெடுத்ததில், பொதுவுடமைக் கட்சியின் பங்கு அளப்பரியதாகக் குறிப்பிடப்படுகிறது. பெரும்பாலான எழுத்தாளர்களும், ஆக்கங்களும் பொதுவுடமைச் சித்தாந்தத்திலிருந்தே முளைத்தெழுந்ததாகக் கருதப்படுகிறது.

மலையாள தேசத்தை ஒட்டுமொத்தமாக மாற்றியமைத்ததில் கேரள இடது சாரிகளின் பங்கு மிகப் பெரியதெனக் கூறப்படுகிறது. இந்தியர்களிடம் முதலாம் உலகப் போர் முடியும் வரை பெரிதாக அறியப்படாதிருந்த மார்ச்சு, ஏங்கெல்சு எனும் பெயர்கள், ரஷ்யப் புரட்சிக்குப் பின்னரே பெருமளவில் புழங்கியதாகக் கருதப்படுகிறது. லெனினையும் அவரது சகாக்களையும், சாதனைகளையும் பெருமளவில் வெளியிட்ட இந்திய நாளேடுகள் வழியாவே, இந்திய உள்ளங்களில் சோவியத் ருஷியா மீதும், மார்ச்சிய சித்தாந்தத்தின் மீதும், அவற்றின் காரண கர்த்தாக்கள் மேலும், படித்த இந்திய உள்ளங்களில் கவனம் பிறந்திருக்கிறது. எம்.என்,ராய் என அழைக்கப்படும் மேற்கு வங்க மனபேந்திர நாத் ராய் (1887-1954), சமூகப் போராளியாகவும், சிந்தனையாளராகவும், பகுத்தறிவாளராகவும் அறியப்படுவதோடல்லாமல், இந்தியாவில் பொதுவுடமைக் கருத்துக்களை விதைத்த முன்னோடியாவும் புகழப்படுகிறார். இந்தியாவிலும் மெக்சிகோவிலும் பொதுவுடமைக் கட்சியைத் தொடங்கிய திரு. ராய், ருஷ்யாவிற்குப் பயணமாகி லெனின், டிராடச்சி, ஸ்டாலின் போன்றோரிடம் நட்பு பாராட்டியவராகவும் அறியப்படுகிறார். பொதுவுடமைக் கொள்கைத் திட்டதில் பங்கு வகித்த ராய் (1923), சீன போன்ற நாடுகளுக்கும் சென்று பொதுவுடமைக் கருத்துகளைப் பரப்பியவராகக் குறிப்பிடப்படுகிறார்.

திசம்பர் இருபத்தி ஆறு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து ஐந்தில் இநதியப் பொதுவுடமைக் கட்சி தோன்றியதாகக் கூறப்பட்டாலும், அதற்கும் முன்னதாகவே பொதுவுடமைச் சிந்தனைகள் வேர்விடத் தொடங்கியது. தொழிலாளர்கள் - விவசாயிகளை ஒன்று திரட்டி 1928 இல் நடைபெற்ற மீரட் மாநாடு, பொதுவுடமை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒருபுறம் காந்தியும் அவரது காங்கிரசும் சுதந்திரத்தை முன்னெடுக்க, பொதுவுடமைத் தோழர்கள் சுதந்திரத்தோடு எளிய மக்களுக்கும் சுதந்திரம் கிடைத்தாக வேண்டும் என மக்கள்

போராட்டங்களை முன்னெடுக்க, பிரித்தானிய அரசோ, பொதுவுடமைவாதிகளை தேடித்தேடி இரும்புக்கரம் கொண்டு அடக்கியிருக்கிறது. கைதுகளும், தலைமறைவு வாழ்க்கைகளும் பரவலான காலத்திலும், ஆயுதப் போராட்டம் மூலம் சுதந்திரத்தையும் மக்கள் உரிமைகளையும் மீட்டெடுக்க முடியும் எனத் தோழர்கள் திரெண்டெழுந்திருக்கிறார்கள்.

1934 வரை கம்யூனிஸ்டுகளின் முக்கிய மையங்களாக பம்பாய், கல்கத்தா மற்றும் பஞ்சாப் இருந்திருக்கின்றன. சென்னையில் தமிழக மற்றும் ஆந்திர மாணவர்களிடையே கம்யூனிஸ்டு இயக்கம் பரவத்தொடங்கியிருக்கிறது. பின்னாட்களில் பி,எஸ் என அழைக்கப்பட்ட புச்சலப்பள்ளி சுந்தரய்யா (1913-1985), மாணவப் பருவத்திலேயே இயக்கத் தோழராக இருந்து, தெலுங்கானாப் புரட்சியில் முக்கியத் தலைவராக இருந்து, மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக (1964-78) கட்சிப் பணி செய்தவராகவும், ராஜ்யசபா மற்றும் ஆந்திர சட்டசபை உறுப்பினராகச் செயல்பட்டவராகவும் அறியப்படுகிறார்.

பொதுவுடமைவாதிகளையும் காங்கிரசாரையும் இணைக்கும் விதமாக ஜெயப்பிரகாஷ் நாராயணனை பொதுச் செயலாளராகவும், ஆச்சார்யா நரேந்திரதேவை தலைவராகவும் கொண்டு 1934-ல் தொடங்கப்பட்ட காங்கிரஸ் சோஷலிசக் கட்சி, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பொதுவுடமையின் மீது ஈடுபாடு கொண்டவர்களால் ஒரு குழுவாக இயங்கி வந்திருக்கிறது. காங்கிரஸ் சோஷலிசக் கட்சியைச் சேர்ந்த பி. கிருஷ்ணபிள்ளை, இ,எம்,எஸ், என்.சி. சேகர், கே. தாமோதரன் மற்றும் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய சபை உறுப்பினராக இருந்த மெட்ராஸ் எஸ்.வி காதே ஆகியோரால் 1937-ல் கோழிக்கோடு மாநாட்டில் இந்திய பொதுவுடைமை கட்சி- கேரளத்தின் முதல் கிளை துவக்கப்பட்டிருக்கிறது. 1935 முதலே சுந்தரய்யா மற்றும் கதே பலமுறை கேரள காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியினருடன் நடத்திய பல சுற்று பேச்சுவார்த்தைக்குப் பின்னரே சி.பி.ஐ யின் கிளை துவங்கப்பட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன. மேலும் காங்கிரஸ் மற்றும் அனைத்திந்திய விவசாயிகள் சங்கமும் இணைப்பிற்குத் துணைப்புரிந்திருக்கின்றன.

1931-ல் பொன்னார எஸ். ஸ்ரீதர், என்.பி.குருக்கள், திருவட்டாறு தாணுப்பிள்ளை, சிவசங்கர பிள்ளை, ஆர்.பி.ஐயர், தையக்காடு பாஸ்கரன் மற்றும் என்,சி.சேகர் போன்றோர் இணைந்து திருவனந்தபுரத்தில் கம்யூனிஸ்ட்டு சபையை உருவாக்கியிருக்கின்றனர். 1937களில் கம்யூனிஸ்ட்டு கட்சியின் கேரள ரகசியக்

கிளை துவங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. தொன்னூறுக்கும் மேற்பட்ட கேரள காங்கிரஸ், கம்யூனிஸ்ட்டு கட்சியினர் பினராயி எனுமிடத்தில் இரகசியக் கூட்டம் கூட்டியதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டதிலும், அதன் இந்திய விரிவாக்கத்திலும் ஏராளமான இசுலாமியர்கள் இணைந்திருந்ததாக அறியப்படுகிறது. துருக்கியின் கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவாகவும் மேற்குலகிற்கு எதிர்ப்பாகவும் கல்வி கற்ற முஸ்லிகள் மத்தியில் பொதுவுடமைக் கருத்திற்கு நல்ல வரவேற்பு இருந்ததாகக் கூறப்படுகிறது. இ.எம்.எஸ் மற்றும் இசட். எ. அகமது போன்றோர் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியின் அகில இந்திய துணைச் செயலர்களாக இருந்திருக்கின்றனர்.

இரண்டாம் உலகப் போரின் போது பிரித்தன் - ரஷ்யா கூட்டிற்கு ஆதரவு தராமல் ஆயுதப் புரட்சி மூலம் இந்திய சுதந்திரம் பெற வேண்டுமென 1940 ராம்கார்க் மாநாட்டில் சி.பி.ஐ தீர்மானிக்க, காங்கிரஸ் சோஷலிசக் கட்சி அனைத்து சி.பி,ஐ தோழர்களையும் கட்சியிலிருந்து வெளியேற்ற முடிவெடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

1946 இல் நடைபெற்ற மாநில சட்டசபை தேர்தல்களில் சி.பி.ஐ பங்குபெற்று 666723 ஓட்டுக்களைப் பெற்றிருக்கிறது. ஏறக்குறைய எண்பது சதமானத்திற்கும் அதிகமானோர் ஓட்டுரிமை இல்லாதிருந்த காலத்தில், ஆறுலட்சம் ஓட்டுகள் பெற்ற பொதுவுடமை இயக்கத்தார், மேற்கு வங்கம், சென்னை மாகாணங்களில் செல்வாக்குப் பெற்று வளர்ந்திருக்கின்றனர்.

சுதந்திரத்திற்குப் பிறகான 1952 தேர்தலில் திருவாங்கூர் - கொச்சு சட்டசபைத் தேர்தலில் போட்டியிட கம்யூனிஸ்ட்டு கட்சிக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. பின்னர் வந்த காலங்களில் பொதுவுடமைக் கட்சிகுள்ளேயே இடது, வலது சிந்தனைகள் தோன்றி, சீன ஆதரவு மற்றும் இந்திய ஆதரவு நிலைகளில் கருத்து வேறுபாடுகள் உண்டாகி, 1964 இல் இந்திய பொதுவுடமைக் கட்சி (சி.பி.ஐ) எனவும், இந்தியப் பொதுவுடமைக் கட்சி (எம்) அல்லது மார்ச்சிஸ்ட் பொதுவுடமைக் கட்சி எனவும் இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது. மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் சுந்தரய்யா, ஜோதிபாசு, ஹர்கிசன் சிங் சுர்ஜித் போன்றோர் புகழ்பெற்ற தலைவர்களாக அறியப்படுகின்றனர்.

கேரள கம்யூனிஸ்ட்டு வளர்ச்சியில் என்.இ.பலராம், எம்.என். கோவிந்தன் நாயர், அச்சுதமேனன், தாமஸ் போன்றோர் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தவர்களாக அறியப்படுகின்றனர். கேரளம், மேற்கு வங்கம், திரிபுரா போன்ற மாநிலங்களில் செல்வாக்குள்ள கட்சியாகச் செயல்படும் மார்ச்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கொள்கையளவில் பெரிய வேறுபாடுகள் கிடையாது எனக் கூறப்படுகிறது. இருகட்சியினரின் சித்தாந்த முறையும் எம்.எல் எனப்படும் மார்ச்சியம் லெனினியமே. இருகட்சிகளுமே மாணவர், இளைஞர், பெண்கள், தொழிலாளர், விவசாயி அணிகளை வைத்துள்ளனர். மார்ச்சிஸ்ட்டுகளின் மாணவர் அமைபிற்கு எஸ்.எ.்.ப்.ஐ (ஸ்டூடன்ஸ் .்.பெடரேசன் ஆ.்.ப் இந்தியா) என்றும், இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் மாணவர் அணிக்கு ஏ.ஐ.எஸ்.எ.்.ப் (ஆல் இந்திய ஸ்டூடன்ஸ் பெடரேசன்) என்றும் பெயர். எம்.மின் தொழிலாளர்அமைப்பிற்கு சி.ஐ.டி.யூ (சென்டர் ஆப் இந்தியன் டிரேட் யூனியன்) என்று பெயர். ஐ. யின் தொழிலாளர் அணிக்கு ஏ.ஐ.டி.யூ.சி (ஆல் இந்திய டிரேட் யூனியன் காங்கிரஸ்) என்று பெயர். ஒருவர் மிகத் தொலைவான இடது. இன்னொருவர் தொலைவான இடது.

1957 கேரள சட்டமன்றத் தேர்தலில், மாநில பிரிவினை, கேரள காங்கிரசிற்கு பாதகமாகவும், கம்யூனிஸ்ட்காரார்களுக்குச் சாதகமாகவும் அமைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்திய மார்சிஸ்ட்டுகளின் மீதான சீன ஆதிக்கம் அதிகளவில் இருந்ததாக ஆதாரங்கள் சுட்டுகின்றன. இந்திய அளவிலான பிற கட்சிகளின் கூட்டணி தொடர்பானவற்றில் கூட, சீன கம்யூனிஸ்ட் கட்சி (கம்யூனிஸ்ட்டு பார்ட்டி ஆ.்.ப் சைனா- சி.பி.சி) தலையிட்டதாகக் கூறப்படுகிறது. மார்சிஸ்ட்டுகளின் மேற்கு வங்க மற்றும் கேரள வெற்றி, கட்சிக்குள்ளேயே சீன ஆதரவு நிலைமையை ஆதரிப்பவர்களின் எண்ணத்திற்கு வலு சேர்த்திருக்கிறது. கூிளைவாக, 1967-ல் மேற்கு வங்கத்தின் வடக்குப்பகுதியிலிருந்த சிலிகுரி பகுதியின் நகஸல்பாரி எனும் கிராமத்தில் நடந்த விவசாயிகள் போராட்டம், சாரு மஜீம்தார், கானு சன்யால் போன்ற மாவட்ட அளவிலான சி.பி.எம். கட்சியினரால் நக்ஸ்பாரி இயக்கமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் நக்ஸலைட் இயக்கமாகி, இந்தியாவின் வடக்கு, வடகிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் நீடித்த வன்முறைப் போராட்டமாகத் தொடர்வது குறிப்பிடத்தக்கது. சீனாவின் சி.பி.சி, நக்ஸல்பாரி

இயக்கத்தை ஆதரிக்க, இந்திய சி.பி.ஐ.எம் அதனை ஒடுக்க, இந்திய சீன கம்யூனிஸ்ட்டுகளிடையே உறவு சீர்கெட ஆரம்பித்திருக்கிறது. சி.பி.ஐ.எம் கட்சிக்குள்ளேயே நக்ஸல்பாரியை ஆதரிப்போர், எதிர்ப்போர் என பிளவுகள் தோன்றி, இந்தியாவெங்கும் மார்ச்சிஸ்ட்டுகளுக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இருப்பினும் நக்ஸல்பாரி இயக்கம் தோன்றிய மேற்கு வங்கத்தில், அதனை மேற்கொண்டும் முன்னகர்த்த இயலாத அளவிற்கு மிகக் கடுமையாக ஒடுக்கப்பட்டிருக்கிறது. நக்ஸலைட்டுகளின் வேட்டை எனும் பெயரில் லட்சக்கணக்கான இந்திய இளைஞர்களும், இளைஞிகளும், பொதுவுடமை சிந்தனைவாதிகளும், கொடூரமான முறையில் மத்திய, மாநில அரசகளால் முடிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

1960களில் துவங்கிய நக்சல்பாரி இயக்கம், உழுபவருக்கே நிலம் எனும் முழக்கத்தை முன்னெடுத்ததால், அது அதிகாரத்தில் இருந்தவர்களால் நசுக்கப்பட்டு வன்முறையாக வளர்ந்திருக்கிறது. வன்முறையாலேயே பொதுவுடமையை பிறப்பிக்க இயலும் எனும் கருத்தாக்கம் ஆழமாக வேரூன்றிய நக்சலைட், மாவோயிஸ்ட், சிபிஐ எம்-எல் போன்ற அமைப்புகள் மிகுந்திருக்கும் பீகார், ஜார்கண்ட, சத்திஸ்கர், ஒரிசா, தெலுங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்கள், சிவப்பு தாழ்வாரமாக அடையாளம் சுட்டப்படுகின்றன. சுரண்டலுக்கு எதிராகவும், பழங்குடியின ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகவும், பட்டியலினத்தவருக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராகவும் போராடும் போராளிகளும் நக்சலைட் முத்திரைக்குள் வருவதாக குறிப்பிடப்படுவதாகவும், ஆழ்ந்த சிந்தனையோ சமூக வரலாறோ அறியாமல் ஏழ்மை, படிப்பறிவின்மை, அறியாமை கொண்டோர் கூட நக்சலைட்டுகளாக மாற்றப்படுவதாகவும் கூறப்படுகிறது. இந்தியாவில் ஏறத்தாழ எண்பத்து மூன்று மாவட்டங்கள் சிவப்பு தாழ்வாரத்திற்குள் வருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

தெலுங்கானா விவசாயிகளின் ஆயுதப் போராட்டம், சுதந்திர இந்தியாவின் நிலச் சீர்திருத்தச் சட்டம், நில உச்சவரம்புச் சட்டம் போன்றவற்றிற்கு வழிகோலியதாகக் குறிப்பிட்டாலும், அதன் மூலம் நிகழ்ந்த வன்முறை வெறியாட்டங்கள், அகிம்சை விளைந்த மண்ணாகப் போற்றப்படும் இந்தியாவிற்கு உகந்ததாக இருக்கவில்லை. வசந்தத்தின் இடி முழக்கம் என வருணிக்கப்பட்ட உடனடி ஆயுதப் போராட்டத்தால் பலன்கள் கிடைக்கப்பெற்றாலும்,

லட்சக்கணக்கான தோழர்களின் நல்வாழ்வு பாழாகியிருக்கிறது. இன்னுயிர் முடிக்கப்பெற்றும், கைது செய்யப்பட்டும், வதைக்கப்பட்டும், வாழ்க்கையைத் தொலைத்த ஆயிரமாயிரம் தோழர்கள், அரைநூற்றாண்டுக்கும் மேல் சிந்தும் குருதி இந்திய நிலத்திற்கு பேரிழப்பாகக் கருதப்படுகிறது.

நாற்பது நாவல்களும் அறுநூறுக்கும் மேம்பட்ட சிறுகதைகளும் எழுதிய பிள்ளையவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றி, ஏழைகளின் துயரங்களைப்பற்றி, எழுத்தில் பதிவு செய்தவராக குறிப்பிடப்படுகிறார். தோட்டியுடே மகன், ரெண்டிடங்காழி (இரண்டுபடி), செம்மீன், கயிறு போன்ற நாவல்கள் அவரது புகழைப் பேசுபவைகளாகப் பாராட்டப்படுகின்றன.

பிள்ளையால் மூன்று வருடகாலம் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் கயிறு நாவல், மூன்று பாகங்கள் கொண்டதாகவும், சுமார் இருநூற்றி ஐம்பதாண்டு கால கேரள நாட்டு நிகழ்வுகளை, நூற்றுக்கணக்கான கதாப்பாத்திரங்கள் வாயிலாக, பல்வேறு தலைமுறைகளாகக் சித்தரித்துப் பேசுவதாகவும், பல்வேறு உணர்வுநிலை கொண்ட மனிதர்களைக் காட்டுவதுடன், அக்காலத்திய சாதியமைப்பு, நிலப்பிரபுகள், அடித்தட்டு மக்களின் அவலங்கள், சமூக மாற்றங்கள் மற்றும் அரசியல் பொருளாதார நிலைகளைச் சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் எனப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் புகழப்படுகிறது. நார்களை ஒன்றாக்கி பெரியதொரு கயிறு உருவாவது போல், பல தனிமனித வாழ்க்கைகளால் இணைந்த ஒரு சமூகத்தை நீட்டிச் செல்லும் நாவல், கேரள இலக்கியத்தில் காத்திரமான படைப்பாகப் புகழப்படுகிறது.

பேய்பூர் சுல்தான் என நினைவு கூறப்படும் வைக்கம் முகமது பஷீர், சுதந்திரப் போரட்ட வீரர், நாவலாசிரியர், சிறுகதை எழுத்தர், கட்டுரையாசிரியர், சமூக நலவிரும்பி என பன்முகத்தன்மை நிரம்பியவராகக் குறிப்பிடப்படுகிறார். மலையாள இலக்கிய உலகின் முதன்மைப் படைப்பாளிகளில் ஒருவராகப் புகழப்படும் திரு. பஷீர், பல்வேறு வாழ்க்கைப் போராட்டங்களைச் சந்திந்தவராகவும், இடதுசாரி, சூபி மற்றும் காந்தியவாதி என வாழ்க்கையைக் கடந்து வந்தவராகவும் கூறப்படுகிறார்.

ஆங்கிலத்திலும், தமிழ் உட்பட ஏராளமான இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள முகம்மது பஷீரின் எழுத்துக்கள் மிகுந்த நகைச்சுவை கொண்டவையாகக் குறிப்பிடப்படுகின்றன. எம்,டி போன்றோரால் ஆசானக்

கருதப்படும் பஷீர் அவர்கள், இந்தியா, ஆப்பிரிக்கா, ஆரேபியா, ஐரோப்பா எனச் சுற்றித்திரிந்து பெற்ற பல்வேறு வாழ்நிலை அனுபவங்களே, பெரும்பாலும் அவரது கதை மாந்தர்களில் ஒரு வித எள்ளல் தன்மையுடன் வெளிப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஜெயகேசரி எனும் செய்தித்தாள் அலுவலகத்தில் வேலை கேட்டுச் சென்ற பஷீரிடம், பதிப்பாளராகவும் பணியாளராகவும் இருந்த ஜெய கேசரியின் ஆசிரியர், செய்தி அலுவலகத்தில் வேலையில்லை என்றும், கதை எழுதிக்கொடுத்தால் பணம் தருவதாகவும் சொல்ல, செய்தித் தாளுக்காக 1937-ல் எழுதிய என்டே தங்கம் எனும் சிறுகதையே அவரது முதல் கதையாக இருந்திருக்கிறது.

பிரேமலேகனம் (காதல் கடிதம்), பால்யகால சசி (1944), பாத்துமாயுடே ஆடு(1959), மதிலுகள் (1965), ஓர்மையுடே அளவுகள் (1873), சிரிக்குந்ந மரப்பாவ (1975) உட்பட ஏராளமான நூல்களைப் படைத்துள்ள பஷீர், இந்தியாவை மிகவும் நேசித்தவராகவும் அனைத்துக் கோள்களையும் எல்லாப் பிரபஞ்சங்களையும் ஒரு தடவையாவது சுற்றிப்பார்க்க வேண்டுமென பெருவிருப்பம் கொண்டிருந்தவராகவும் அறியப்படுகிறார்.

வைக்கம் முகமது பஷீர் அவர்களின் விஷ்வவிக்யாதமாய மூக்கு அதாவது உலகப் புகழ்பெற்ற மூக்கு, மூக்கனை மையமாக் கொண்டு மக்களின் மனநிலைகளை அங்கதத் துள்ளலுடன் எள்ளி நகையாடிய அழகான சிறுகதையாகப் பாராட்டப்படுகிறது. சமைப்பதும், சாப்பிடுவதும், உறங்குவதும், மறுபடியும் சமைப்பதும் சாப்பிடுவதுமாக காலம் கழித்துக் கொண்டிருந்த படிப்பறிவற்ற மூக்கனின் வளரும் மூக்கைக் காண மக்கள் மொய்ப்பதும், பத்திரிக்கை, தொலைக்காட்சி ஊடகங்கள் முண்டியடிப்பதும், அறிஞர்களும் தத்துவவாதிகளும் விளக்கங்கள் சொல்லி மாய்வதும், முத்தாய்ப்பாக அரசியல் கட்சியினர் மூக்கனின் வீட்டில் தவம் கிடப்பதும்.. மூக்கனின் மூக்கிற்கு என்னவொரு மகத்துவம்.

சக மனிதர்களிடம் அன்பையும், கனிவையும் ஏற்படுத்தத்தான் இலக்கியப் படைப்புகள் ஏற்படுகின்றனவாம். பஷீர் போன்ற மகத்தான ஞானிகள் ஆயிரமாயிரம் படைப்புகள் நிகழ்த்தியும், இன்னும் பெருவாரியான மக்கள் பணம் ஈட்ட, பொருள் ஈட்ட மட்டுமே கற்றிருக்கிறார்களேயொழியே அன்பை ஈட்டுவது எக்காலமோ.

மலையாளத்தின் புதிய அலை இலக்கியம் உருவாகக் காரணமாக இருந்தவராக கோவிந்தன் அறியப்படுகிறார். நவசக்தி, கோபுரம், சமீக்ஷா போன்ற இதழ்களின் பதிப்பாசிரியராக இருந்து ஏராளமான இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தவராகக் கருதப்படும் திரு. மணக்கால் கோவிந்தன் (1919-1989), தீவிரமான பொதுவுடமைவாதியாக இருந்து, பின்னர் எம். என்.ராயின் கருத்துக்கள் மீது ஈர்க்கப்பட்டவராகக் கூறப்படுகிறது. சென்னையில் வாழ்ந்ததால் ஏராளமான தமிழ் எழுத்தாளர்களோடு கோவிந்தன் அவர்களுக்கு நல்ல நட்பு இருந்ததாகவும், அன்னாரது இல்லம் எழுத்தாளர்களாலும் கலைஞர்களாலும் பெரிதும் விரும்பப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மலையாள மொழியின் முக்கியமான இலக்கியத் திறனாய்வாளராகவும், நாவலாசிரியராகவும், இதழியல் முன்னோடியாகவும் அறியப்படும் பி.கே. பால கிருஷ்ணன் (1926-1991), எழுத்தாளர் பத்திரிக்கையாளர் மற்றும் கேலிச் சித்திர ஓவியர் ஒ.வி. விசயன் எனப்படும் ஒட்டுபுலக்கல் வேலுக்குட்டி விசயன் (1920-2005) மற்றும் ஆற்றூர் ரவிவர்மா போன்ற புகழ்பெற்ற பலரும் கோவிந்தன் அவர்களின் மாணாக்கர்களாகப் குறிப்பிடப்படுவது சிறப்பு.

ஆற்றூர் ரவிவர்மா கேரளத்தின் முன்னோடிப் புதுக்கவிஞர் என அறியப்படுவது குறிப்பிடத்தக்கது. மலையாளத்தைத் தமிழுடன் சிந்திக்கக்கூடிய மரபைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்படும் திரு. ஆற்றூர் ரவிவர்மா நிறைய தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளையும், கம்பராமாயணம் போன்ற செவ்வியல் ஆக்கங்களையும் மலையாளத்தில் மொழிபெயர்த்திருப்பதாகப் பாராட்டப்படுகிறார்.

கேரள புதுக்கவிதையின் முன்னோடிகளாக அய்யப்ப பணிக்கர், சுகதகுமாரி, ஆர்.ராமச்சந்திரன், சச்சிதானந்தன், என்.என், கக்காடு, ஆற்றூர் ரவிவர்மா போன்றோர் குறிப்பிடப்படுகின்றனர். 1962-ல் வெளிவந்த புதுமுத்ரகள் எனும் புதுக்கவிதை தொகுதி, மலையாளக்கரையில் புதுக்கவிதை இயக்கத்தை ஆரம்பித்து வைத்ததாகக் கூறப்படுகிறது.

மலையாளக் கவிதைகளின் மரபுத் தரத்தை நவீனப்படுத்திய புதுமையாளராகப் புகழப்படும் அய்யப்ப பணிக்கர் (1930-2006), மலையாள இலக்கியத்தின் முக்கியமான கவிஞராகவும், இலக்கிய விமர்சகராகவும் அறியப்படுகிறார். குருஷேத்திரம் எனும் புகழ்பெற்ற நூலும், அய்யப்ப பணிக்கரின்

கிருதிகள் மற்றும் சிந்தனைகள் எனும் கட்டுரைத் தொகுப்பும் சிறப்பானவையாகக் குறிப்பிடப்படுகிறன. இருபத்தைந்து படைப்புகளும் குரு கிரந்த்சாகிப் உட்பட பல மொழியாக்கங்களும் மேற்கொண்ட பணிக்கர், கேரளப் பல்கலையின் ஆங்கிலத்துறை தலைவராகவும், டீனாகவும் இருந்திருக்கிறார்.

சிற்றுஞ் ஞர் குஞ்சுண்ணி ராஜாவுக்கும், நாலப்பாட்டு கொச்சுகுட்டியம்மைக்கும் பிறந்த பாலாமணியம்மா (1909-2004), இந்திய இலக்கிய விருது, சரசுவதி சம்மான் விருது, பத்மபூசன் விருது போன்ற பலவிருதுகள் பெற்ற கவிஞராகப் புகழப்படுகிறார். தாய்மையின் உன்னதங்களைப் பற்றி அற்புதமாகப் பாடிய கவிதாயினியாக அறியப்படும் பாலாமணி, அவரது குழந்தைகளின் கரிசனப்பாடல்களுக்காக, மலையாளக் கவிதைகளின் அம்மா, மூத்தச்சி அதாவது மூத்த ஆச்சி எனவும் பாராட்டப்படுகிறார். பாலாமணியம்மாவின் 1959-1986 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட கவிதைகள், நிவேத்யம் எனும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.

மாதவிக்குட்டி எனும் புனைப்பெயரில் ஆங்கிலம் மற்றும் மலையாளத்தில் ஏராளமான சிறுகதைகள், கவிதைகள் எழுதியுள்ள கமலா எனப்படும் கமலா தாசு, பாலாமணியின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது. புகழ்பெற்ற நாலாப்பட்டு நாயர் (மாத்ருபூமி நாளிதழைத் தொடங்கிய கே.பி கேசவமேனன், கவிஞரான நாலாப்பட்டு நாராயண மேனன்) குடும்பப் பிண்ணணி கொண்ட கமலா சுரையாவின் சுயசரிதை புகழ்பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

2012 இல் சரசுவதி சம்மான் விருதி உட்பட ஏராளமான விருதுகளைக் குவித்த சுகதாகுமாரி அவர்கள், கவிஞராகவும், சமூக சேவராகவும், பெண்ணிய மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பாளராகவும் அறியப்படுகிறார். அமைதிப் பள்ளத்தாக்கை காப்பாற்றியதில் பெரும்பங்காற்றிய திருமதி குமாரியின் தந்தை கேசவன் எனும் போதேசுவரன், கவிஞராகவும், காந்தியச் சிந்தனையாளராகவும், அவரது அம்மா கார்த்தியாயினி சமஸ்கிருத அறிஞராகவும் புகழப்படுகின்றனர்.

மலையாளத்தின் புகழ்பெற்ற புனைவெழுத்தாளராகவும் சிறுகதை மற்றும் கவிஞராகவும அறியப்படுபவர் முட்டத்து வர்கீஸ் (1913-1989). உணர்ச்சிப் பூர்வமான காதல் கதைகள் எழுதியவராகக் குறிப்பிடப்படும் வர்சீசு, 65 நாவல்கள் உட்பட 132 புத்தகங்களை ஆக்கியிருக்கிறார்.

திரைப்படம், தொலைக்காட்சி தொடர்கள் மூலம் கேரள மக்களிடையே புகழ்பெற்றவராக அறியப்படும் பாலச்சந்திரன் சுள்ளிக்காடு, சிறந்த கவிஞராகவும் குறிப்பிடப்படுகிறார். பாலக்காடு சுள்ளிக்காடின்டே கவிதைகள் எனும் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளன. சுள்ளிக்காடுவின் மனைவி விஜயலட்சுமியும் புகழ்பெற்ற பெண்ணியக் கவிஞராகக் குறிப்பிடப்படுகிறார்.

மரபுக் கலையான கதகளியையும், நாட்டார் கலையான கூத்தையும் இணைத்து, பாட்டும் ஆட்டமும் கலந்து ஓட்டந்துள்ளல் எனும் அற்புதமான கலையை உருவாக்கியவராகப் புகழப்படும் குஞ்சன் நம்பியார் (1705-1770) புகழ்பெற்ற கவிஞராகவும் குறிப்பிடப்படுகிறார். மலையாள பக்தி மார்க்கத்தின் புகழ்பெற்ற எழுத்தச்சன், செருசேரி நம்பூதிரியோடு மூன்றாமவராகக் குறிப்பிடப்படும் குஞ்சம் நம்பியார், கேரள நையாண்டி வகை கவிதைகளுக்காகப் பெரிதும் புகழப்படுகிறார்.

ஏழைகளின் கதகளி எனக் குறிப்பிடப்படும் ஒட்டன் துள்ளல் நாட்டுப்புற நடனம் பழங்காலத்திலிருந்தே கேரள மண்ணில் புழங்குவதாகக் கூறப்படுகிறது. ஒட்டன், (கணியர்) சீதங்கன் (புலையர்), பறையன் எனும் மூவகை நடனத்தில், ஒட்டன் துள்ளல் நடனமே மக்களால் பெரிதும் விரும்பப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. மூவகை நடனங்களுக்கும் குஞ்சன், பாடல்கள் இயற்றியும், சாக்கியர் கூத்து நடனங்களை ஒழுங்கு செய்து, துள்ளல் பாடல்களை எளிய நடையில் நகைச்சுவையோடும் வடிவமைத்திருக்கிறார்.

கேரளப் பண்பாட்டைக் கட்டியமைத்ததில் அதன் கலைகளுக்கு மிகப்பெரும் பங்குள்ளது எனில் மிகையாகாது. ஆடலுக்கும், பாடலுக்கும் தற்காப்பிற்கும் ஏராளமான கலைகள் மலையாள மண்ணில் புழங்குவதோடு, பிறப்பிற்கு முன்பிருந்தே ஏராளமான சடங்குகளும், சம்பிரதாயங்களும் அம்மண்ணில் பின்பற்றப்படுகின்றன.

மலையாளிகள் கூத்து வகைகளை மிகவும் கொண்டாடுபவர்களாகக் கூறப்படுகின்றனர். கேரளத்தின் பாரம்பரிய நடனமாகக் கொண்டாடப்படும் தெய்வீக கலையென கதகளி புகழப்படுகிறது. ஒரு நாட்டிய நாடகமாக ஆடப்பெறும் கதகளி, பேச்சு இல்லாத அபிநயத்தோடு, முகபாவனைகளையும், கையசைவுகளையும் முக்கியமாகக் கொண்ட ஆடல் வகை என்பது சிறப்பிற்குரியது. கதகளிக்கென்றே

சிறப்பான ஒப்பனையும் உடையலங்காரமும் அமைக்கப்படுவதோடு, பெருபாலும் புராணம் தொடர்பான பாத்திரங்களே கதகளியில் இடம்பெறுகின்றன.

அத்தனை கதைகளையும், இரவிரவாகக் கதகளி நாட்டிய நாடகமாக நடித்து, அத்தனை புராண இதிகாச அறிவையும் கலைஞானத்துடன் ஊட்டி, மக்களை தெய்வீகக் கலையின்பத்தில் கதகளிக் கலைஞர்கள் ஆழ்த்தி விடுவதாகப் புகழப்படுகின்றனர். கதையை அடித்தளமாகக் கொண்ட ஆடலான கதகளி, கண்ணுக்கு விருந்தான வண்ண அலங்காரத்தில், கர்நாடக சங்கீத இசையமைப்போடு சுத்த மங்களம், செண்டை, இடக்கை, குறுங்குழல், சல்லாரி, எலத்தாளம் போன்ற இசைக் கருவிகளின் சங்கமத்தில் ரசிகப் பெருமக்களை மெய்மறக்கச் செய்துவிடுமென அறிஞர்களால் பாராட்டப்படுகிறது. ஆங்கிக, ஆகார்ய, வாச்சிக மற்றும் சாத்வீக என நான்கு வித அபிநயங்களைப் பின்பற்றும் கதகளி, ஆண்கள் மட்டும் பங்கேற்கும் குழு நடனமாகக் கூறப்பட்டாலும், சமீபகாலங்களில் பெண்களும் இடம் பெறுவது அறியத்தக்கது.

நிகழ்த்துக் கலை அதாவது பெர்.ஃபாமிங் ஆர்ட் என்பது அரங்கொன்றில் கலைஞர் ஒருவர் அல்லது பலர் தமது முகம் உடல் அல்லது இருப்பு கொண்டு நிகழ்த்துவதற்குரியதான கலைவடிவம் எனப்படுகிறது. நிகழ்த்து கலை பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாயினும் பார்வையாளர்கள் முன்னிலையில் நேரடியாகக நிகழ்த்திக் காட்டும் கலைவடிவத்தையே குறிப்பதாகவும் கூறப்படுகிறது. நாடகம், கூத்து, இசை, நடனம், மாயவித்தை, மேடை நகைச்சுவை, பொம்மலாட்டம், கழைக்கூத்து போன்றவை நிகழ்த்துக்கலை வடிவங்களாகக் கருதப்படுகிறன்றன.

மேலை நாடுகளில், கிரேக்கமே நிகழ்த்துக்கலையின் ஊற்றுவாயகக் கருதப்படுகிறது. நவீன நிகழ்த்துக்கலை இத்தாலியை மையமாக்கி வளர்ந்ததாகக் கூறப்படுகிறது. சியா இசுலாமிய நாடுகளில் பொம்மலாட்டம் (கைப்பாவைக் கூத்து, தோல்பாவை கூத்து) சிறப்பான வரலாற்றைப் கொண்டிருந்திருக்கிறது.

இந்திய நாடகக் கலையின் தந்தையான பரதமுனி எழுதிய பரத நாட்டிய சாஸ்திரம் (பொ.ஆ.முன்.ஐந்து - இரண்டாம் நூற்றாண்டு) இந்தியாவில் நாடகம், நடனம், நடிப்பு, இசை ஆகியவற்றை ஆய்வு செய்து எழுதப்பட்ட நூலாக புகழப்படுகிறது.

இராமாயணம் மகாபாரதம் போன்ற காவியங்கள், இந்திய மண்ணில் முதல் நாடகங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. அவைகளில் கூறப்பட்டுள்ள கதைகள் மற்றும் இணைக்கதைகள் நாடகங்களின் முக்கியக் கருவாக இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்தியாவின் சிறந்த நாடகாசிரியராகப் புகழப்படுபவர் காளிதாசர்.

இந்தியாவில் ஏராளமான நிகழ்த்துக் கலைகள் நிகழ்த்தப்பட்டு வந்தாலும், பரதநாட்டியம், கதகளி, மோகினியாட்டம், குச்சுப்புடி, ஒடிசி, கதக், மணிப்புரி ஆகிய ஏழும் செவ்வியல் நடனங்களாகப் புகழப்படுகின்றன. இந்தியக் கலாச்சாரத்தில் பல்வேறு வகையான நடனங்கள் பல இடங்களில் பாரம்பரியமாகத் தோன்றி மக்கள் மனங்களில் நீங்கா இடம் பெற்றுள்ளன என்பதும் அறியத்தக்கது.

இந்தியா தெருக்கூத்துக்களுக்குப் பெயர்பெற்றதெனில் மிகையாகாது. தெருவில் நடத்தப்படும் கூத்து என்பதால் அதற்கு தெருக்கூத்து என்று பெயர். இரவு முழுவதும் நடைபெறும் தெருக்கூத்துகள், மிகப் பழமையான கலை வடிவம் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் மிகப்பரவலாக நடைபெற்று வந்த தெருக்கூத்துகள், தற்காலத்தில் கோவில் திருவிழாக்களின் போது மட்டுமே நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆடல், பாடலோடு கதை சொல்லும் கூத்துக்களை ஆதாரமாகக் கொண்டே பல்வேறு நவீன நடனமுறைகளும் உருவானதாகக் கருதப்படுகிறது.

கேரளத்தில் பெண்கள் மட்டுமே ஆடும் பாரம்பரிய நடனம் மோகினியாட்டம். மிக அழகான பெண் அல்லது கவர்ந்திழுக்கும் பெண் ஆடும் ஆடல் எனும் பொருள் கொண்ட மோகினி ஆட்டத்தில், மெதுவான கவர்ச்சியான உடல் அசைவுகள், உணர்வு பூர்வமான கண் மற்றும் கையசைவுகள் போன்றவை தனித்தன்மை வாய்ந்ததாகக் கூறப்படுகிறது. எளிய நேர்த்தியான வெண்மை நிறத்தில் தங்கச் சரிகை வேலைப்பாடுள்ள ஆடை, மோகினி ஆட்டத்தின் பாரம்பரிய உடையாகக் கூறப்படுகிறது.

பரதநாட்டியமும், கேரள நாட்டுப்புற ஆட்டமும் சேர்ந்து, மோகினியாட்டமாக உருவானதாக அறியப்படுகிறது. நீண்ட பாரம்பரிய மோகினியாட்டம், சுவாதித் திருநாள் மன்னரால் சிறப்பாக பேணப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. மன்னர், அவரது அவையிலிருந்த வித்துவான் வடிவேலுவைக் கொண்டு, மோகினியாட்டத்திற்குப் புத்துயிர் கொடுத்ததாகக் பாராட்டப்படுகிறார். அவரே

மோகினியாட்டத்தின் நாட்டிய உருப்புகளை அமைத்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

தஞ்சை மராட்டிய அரசவையில் பணியாற்றிய தஞ்சை நால்வர் எனப்படும் சின்னையா, பொன்னையா, சிவானந்தம் மற்றம் வடிவேலு (1810 -1845) எனும் நான்கு சகோதரர்களும் தஞ்சை நால்வர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். நால்வரும் பரத நாட்டியத்திற்கும் கர்நாடக இசைக்கும் மிகப்பெரிய பங்களிப்புச் செய்தவர்களாக பாராட்டப்படுகின்றனர்,

பரத நாட்டியத்தைப் போன்ற பயிற்சி முறையும் அரைமண்டியில் அமர்ந்து ஆடும் ஆட்டத்தையும் கொண்டுள்ள மோகினியில், பாதத்தைப் பக்கவாட்டில் வைத்து உடலை அசைத்து ஆடப்படுவதாவும், பரதநாட்டியத்தில் காணப்படாத சொற்கட்டு பந்தாட்டம் என்ற உருப்படிகள் மோகினியின் முக்கிய ஆடல் வகைகளாக இருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது. கேரள நங்கையரின் நளின நடனமாகிய (லாசிய நடனம்) மோகினி, சிருங்காரத்தின் நல்ல படைப்பாகப் புகழப்படுகிறது.

சாக்கையர் ஆடும் கூத்து சாக்கைக் கூத்து. பண்டைய தமிழகத்தில் ஆடப்பட்டு வந்த சாக்கை கூத்து, வட திருவாங்கூர் கோவில் விழாக்களில் தற்போதும் சிறப்பாக ஆடப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. கதை, நகைச்சுவை, நடிப்பு ஆகியவற்றில் சிறந்தவராகக் கூறப்படும் சாக்கையர், பிராமண வகுப்பாராகக் கூறப்படுகின்றனர். கேரளத்தில் கோவிற்பணி செய்வோர் அம்பலவாசிகள் எனும் பொதுப் பெயரால் குறிப்பிடப்படுவதாகவும், படிநிலையில் நம்பூதிரிக்கும் நாயருக்கும் இடைப்பட்டவராகவும் கூறப்படுகின்றனர்.

வட நாட்டிலிருந்து கண்ணகி சிலைக்கான கல்லைக் கொணர்ந்த சேரனின் களைப்பைப் போக்க, சாக்கையர் நடனமாடியதாக சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுவதிலிருந்து, சாக்கையர் கூத்தின் தொன்மையை அறிந்து கொள்ளலாம்.

தொல்வழக்கான கூடியாட்டம், ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பழமை கொண்டதாகக் கருதப்படுகிறது. நிலவிளக்கைச் சுற்றி பெண்கள் கைகொட்டிப் பாடும் திருவாதிரைக்களி, சிங்க வேடமிட்டு ஆடும் பூரக்களி, வேண்டுதல்கள் நிறைவேற்றப்பட்டவுடன் கோவில்களில் ஆடப்படும் தெய்யம் எனும் தெய்யாட்டம்,

தலையில் வழிபாட்டுக் கடவுளின் சிலையை வைத்துக் கொண்டு ஆடும் திடம்பு நிருதம், ஆரியன்மாலா, தீயாட்டு, தலையாட்டு, காளியூட்டு, மாரியாட்டம், பரிசகளி, பரிசமுட்டுகள், பள்ளுகளி, மலைமக்களி, புலிக்களி, பொட்டிக்களி, பொறாட்டான்களி, சங்கக்களி, வடக்கன்பாட்டு, தெக்கன்பாட்டு என நூற்றுக்கும் மேற்பட்ட கேரள நிகழ்த்துகலைகள் புழக்கத்தில் இருப்பது பாராட்டத்தக்கது.

இசைப்பாட்டு நாடகமாக இருந்த கேரள நாடக உலகை, சரியான முறையில் புதுமைப்படுத்தியவராக திரு.சி.வி இராமன் பிள்ளை பாராட்டப்படுகிறார். பிள்ளையின் மார்த்தாண்டவர்மா தர்மராஜா, ராஜராஜ பகதூர் போன்ற புதினங்கள் மேடை நாடகமாக மாறி, மலையாள நாடகங்களின் தரத்தை உயர்த்தியிருக்கின்றன. இ.வி கிருஷ்ணபிள்ளை (1894-1938) நகைச்சுவையோடு கூடிய நாடகங்களை எழுதியவராகக் குறிப்பிடப்படுகிறார். மலையாளிகளை நாடகத்தின் பாத்திரங்களோடு அப்படியே ஒன்ற வைத்தவராகக் குறிப்பிடப்படும் பிள்ளையின் நாடகங்களில் குறிப்பிடத்தக்கவைகளாக கவிதா வழக்கு, பெண்னரசு நாடு, சீதாலட்சுமி, மாயாமனுசன், இரவிகுட்டிபுள்ளா போன்றவை குறிப்பிடப்படுகின்றன. கம்யூனிசத் தோழர்கள்உருவாக்கிய கேரள மக்களின் கலை மன்றம் (கே.பி.ஏ.சி) நிகழ்த்திய நிங்களின்னே கம்யூனிஷ்டாக்கி போன்ற நாடகங்கள் வரலாற்று முக்கியத்துவமானவையாகக் கருதப்படுகிறன்றன.

கோழிக்கோடு, கொச்சி, திருவனந்தபுரம் என வரலாற்று முக்கியத்துவமுள்ள நகரங்கள் இருந்த போதிலும், கேரளத்தின் பண்பாட்டுத் தலைநகரமாக திருச்சூரே குறிப்பிடப்படுகிறது. தேக்கின்காடு எனும் கோவில் பெயரே மருவி திருச்சூராகியதாகக் கூறப்படுகிறது. கேரள அரசால் த்ரிஸ்ஸுர் என சமஸ்கிருதப் பெயரில் அழைக்கப்படும் திரிசூர் நகரைச் சுற்றிலும் அதிகமான எழுத்தாளர்கள் வாழ்வதாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் கேரள கலாமண்டலம், கேரள சங்கீத நாடக சாகித்ய அகாதமி போன்றவையும் அமையப்பெற்று கேரளத்தின் கலை, இலக்கிய, கலாச்சார மையமாக திருச்சூர் திகழ்வதாகவும் புகழப்படுகிறது.

புகழ்பெற்ற பல இந்துக் கோவில்கள் அமையப்பெற்றுள்ள திருச்சூர் மாவட்டம் வழியாகவே யூதம், கிறித்தவம், இசுலாம் போன்ற சமயங்கள் கேரளாவினுள் நுழைந்ததாகவும், அரேபியர்கள், ரோமானியர்கள், போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயருக்கும் நுழைவாயிலாக இருந்தது திருச்சூர் மாவட்டமே எனவும் கூறப்படுகிறது.

மலையாளிகளின் பல்வேறு நிறுவனங்களுக்கும், பொருளாதார செயல்பாடுகளுக்கும், வணிகத்திற்கும் முக்கியத் தளமாகக் கருதப்படும் திருச்சூர், சௌத் இந்தியன் வங்கி, கத்தோலிச் சிரியன் வங்கி மற்றும் தனலட்சுமி வங்கிகளின் தலைமையிடமாகவும் இருக்கிறது. மணப்புரம் போன்ற ஏலச்சீட்டு நிறுவனங்களுக்கும் அதாவது சிட் பண்ட்டுக்கும் திருச்சூர் அடையாளம் காணப்படுகிறது. ஏலச்சீட்டு நிறுவனங்களுக்கும் நகைக்கடன் மற்றும் நகைக்கடைகளுக்கும் கேரள மாநிலம் புகழ்பெற்று வருவது கவனிக்கத்தக்கது. உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு வாய்ப்பில்லாத கேரள மாநிலத்தில் பெருமளவிலான முதலீடுகள் நிலத்திலும், தங்கத்திலும் குவிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

சர்வலோக சாட்சியாகி சகலவேத சாரமாகி சகலயோக சித்தியாகி நின்ற மூர்த்தியாக நின்றகோலத்தில் அருள்புரியும் ஸ்ரீகுருவாயூரப்பன், கண்களில் அன்பும் கருணையும் திகழ, மேலிரண்டு கரங்களில் சங்கு சக்கரமும், கீழரண்டு கரங்களில் கதையும் தாமரையும் கொண்டு துளசி, முத்து மாலைகள் கழுத்தில் தவழ, கீரீடம், மகர குண்டலம், கேயூரம், கங்கணம், உதர பந்தனம் பூண்டு, வலப்பக்க மார்பில் ஸ்ரீவத்ஸம் எனும் சந்தனமும், வைஜயந்தி மாலையும், கௌஸ்து மணியும் அணிந்து திருக்காட்சி தருபவராகப் போற்றப்படுகிறார்.

குருவும், வாயுவும் வழிபட்டதாகக் கருதப்படும் குருவாயூரப்பன் கோவில், மிகுந்த பாரம்பரியம் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. கண்ணன், உண்ணிக் கிருஷ்ணன், பால கிருஷ்ணன், ஸ்ரீகிருஷ்ணன் எனும் பல பெயர்களால் அன்போடு அழைக்கப்படும் குருவாயூரப்பன், துவாபர கிருஷ்ணரோடு தொடர்புடையவராகக் கூறப்படுகிறார்.

ஸ்ரீகிருஷ்ணரின் மகிமைகளைக் கூறும் முக்கியமான நூல்களாக நாராயணப்பட்டத்திரியின் நாராயணீயம் மற்றும் பூத்தானத்தின் ஞானப்பன நூல்கள் புகழப்படுகின்றன. 1560 ஆம் ஆண்டில் பிறந்தவராகக் கூறப்படும் நாராயணப் பட்டத்ரியால், ஸ்ரீமத்பாகவத்தின் சுருக்கமாக 1036 சமஷ்கிருத செய்யுட்களில் பாடப்பட்டுள்ள ஸ்ரீமந்நாராயணீயம், எங்கும் பரந்து எல்லாமாய் பரம்பொருள் இறைவன் என ஆரம்பித்து கண்முன் கிருஷ்ணனாகக் காட்சியளித்தார் என்று முற்றுப் பெறுவது சிறப்பு. உடல் நோயைப் போக்கி மனமாற்றம் வருவித்து நாத்திகனையும் பக்தனாக்கும் அருள் சக்தி குருவாயூருக்கு உண்டு என்பதை

நிரூபித்தவரான மேல்மத்தூர் நாராயண பட்டத்ரி, அளவற்ற மகிமையுடையவரான குருவாயுரப்பன், வியாதிக் கூட்டத்தை அடக்கியருள வேண்டுமென வேண்டுகோள் விடுத்தது குறிப்பிடத்தக்கது.

பக்தகவி பூந்தானம் (1547-1640) எழுதிய ஞானப்பனை, எளிய மலையாள நடையில் உயர்ந்த தத்துவக் கருத்துகளால் எழுதப்பட்டதாகப் புகழப்படுகிறது. மலையாள கிருஷ்ண கீதை எனச் சிறப்பிக்குமளவிற்கு முந்நூற்று அறுபது வரிகளைக் கொண்ட ஞானப்பனை, சரணாகதி தத்துவத்தையும் நாம சங்கீர்த்தனத்தின் மேன்மையையும் சிறப்புறச் செய்வதாகப் புகழப்படுகிறது.

கிருஷ்ண கிருஷ்ணா! முகந்தா! ஜனார்த்தனா! கிருஷ்ணா! கோவிந்தா! நாராயண! ஹரே! அச்யுதானந்தா! கோவிந்தா! மாதவா! ஸச்சிதானந்தா! நாராயண! ஹரே! ஒன்னொன்னாயி நினைக்கும் ஜனங்கள்க்கு, ஒன்ன கொண்டறிவாகுன்ன வஸ்துவுமாய, ஒன்னிலுமொரு பந்தமில்லாதெயாய், நின்னவன்தன்னெ விஸ்வம் சமச்சுபோல்.

உண்ணிக்கிருஷ்ணன் மனஸில் களிக்கும் போள் உண்ணிகள் மற்று வேணமோ மக்களாய் என்ற பூந்தானத்தின் உண்ணிகிருஷ்ணன், அன்று அனைத்து மக்களும் கண்குளிரக் கண்டுகளிக்க முடியாதவராய் காட்சிகொடுத்திருக்கிறார். ஒடுக்கப்பட்ட மக்கள் கோவிலிருந்து சுமார் அரைகிலோமீட்டர் தள்ளியிருக்கும் தியயரம்பலம் எனும் இடம் வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். கேரளாவின் காந்தியாக அறியப்பட்டவரும் அப்போதைய காங்கிரசு கமிட்டியின் தலைவராகவும் இருந்த கேளப்பன் (1889-1971) அவர்கள், அனைத்து மக்களும் ஆலயத்திற்குள் நுழைய வேண்டி கோவிலின் முன் உண்ணாவிரதம் மேற்கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. 1931-32களிலேயே தொடங்கப்பட்ட போராட்டம் பெரியளவில் பலன் தராமல், 1947 ஆம் ஆண்டே அனைத்து மக்களும் நுழைந்து வழிபட குருவாயூர் கோவிலின் கதவு திறந்திருக்கிறது.

கேரள காங்கிரசு கட்சியின் வளர்ச்சிக்குப் பெருமளவில் துணைபுரிந்ததாக வைக்கம் போராட்டம் குறிப்பிடப்படுகிறது. வைக்கம் போன்றே குருவாயூர் ஆலய நுழைவுப் போராட்டமும் மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கைக் கொடுத்ததாக கூறப்படுகிறது. கோவில் நிர்வாகத்தாரும், சாதி வெறியர்களும், எத்தனையோ வழிகளில் துன்பங்கள் நிகழ்த்தியும், காங்கிரசார் பொறுமையாக மழை, பனி,

வெயில், பட்டினி எனப் பாராமல் தொடர்ந்து போராடி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதாக அறியப்படுகிறது.

வைக்கம் மற்றும் குருவாயூர் சத்யாகிரகங்களில் பங்கு பெற்றவரும், சுதந்திர போரட்ட வீரரும், சமூக சீர்திருத்தவாதியாக அறியப்பட்டவருமான மன்னத்து பத்மநாபன் (1878-1970) தலைமையில் 1814 தொடங்கப்பட்ட நாயர் சர்வீஸ் சொசைட்டி ஏராளமான கல்வி நிறுவனங்களை உண்டாக்கி கேரள மக்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பெருமளவில் துணைபுரிந்ததாகக் கருதப்படுகிறது.

நம்பூதிரிகளுக்கு இணையாகவும், அவர்களுக்கு ஒருபடி மேலேயும், கல்வி, அரசியல், பொருளாதாரத்தில் முன்னேறி வந்த சிரியன் கிறித்தவர்களுக்குப் போட்டியாகத் துவக்கப்பட்டதாகக் கூறப்படும் நாயர் சொசைட்டி, கேரள மக்களின் வாழ்வியலை குறிப்பாக நாயர்களை முன்னேற்றமடையச் செய்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. கேளப்பன் போன்றோர் நாயர் சொசைட்டின் தலைவர்களாக இருந்திருக்கின்றனர். முரட்டு சாதியாகக் கூறப்படும் நாயர்களை, படிப்பின் மீது அக்கறை கொண்டவர்களாக்கியது நாயார் சொசைட்டின் பெரும்பணி எனப் பாராட்டப்படுகிறது.

நாயர் போன்றே புலையர் மகாசபை, பறையர் அமைப்பு போன்றவையும் கேரளத்தில் தோற்றம் பெற்றிருக்கின்றன. 1914 ஆம் ஆண்டில் கேரள பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை நாயர் 70,712, புலையர் 2017, பறையர் 1097 என இருந்ததாகக் குறிப்புகள் கூறும் நிலையில், சுதந்திர இந்தியாவில் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக கேரளத்தை மாற்றிய கேரள சமூக சீர்த்திருத்தவாதிகளின் பங்கும் கேரளத்தவரின் கல்வித்தாகமும் அளப்பரியது எனில் மிகையாகாது.

கவிஞராகவும், அட்டவணை இனப் போராளி எனவும், சமூக சமய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டவராகவும் அறியப்படும் பொய்கையில் அப்பச்சன் எனும் பொய்கையில் குமரகுரு தேவன் (1879-1939), பத்தனம் திட்டா இரவிப் பேரூர் எனும் ஊரில் பிறந்தவராக அறியப்படுகிறார். அவரது குடும்பம் சங்கரமங்கலம் எனும் சிரியன் கிறித்தவக் குடும்பத்திற்கு அடிமையாக இருந்ததால், குமரன் எனப் பெயரிடப்பட்ட அப்பச்சன் கிறித்துவ சமயத்தைப் பின்பற்றியதோடு, யோகன்னன் எனும் பெயரிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறார்.

அட்டவணை கிறித்துவச் சமூகங்களின் ஒற்றுமைக்குப் பாடுபட்ட ஜோகன்னன், கேரளத்திலிருந்த பறையர், புலையர், குறவர் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களிடையே பணியாற்றியதாகப் புகழப்படுகிறார். மறுமலர்ச்சி கிறித்தவச் சபையான மார்த்தோபா தேவாலயத்திலும், பின்னர் பிரத்ரன் மிசனிலும் சேர்ந்த திரு. ஜோகன்னன், தேவாலயங்களில் கிறித்தவர்களாக இருப்பினும் அட்டவணை இனத்தவர்கள் மிகவும் மோசமாக நடத்தப்படுவதைக் கண்டு வெதும்பியிருக்கிறார். கிறித்தவமதத்திற்கு எதிராக, இந்தியச் கிறித்தவர்கள் சபைகளில் சாதிரீதிலேயே செயல்படுவதை எதிர்த்து, 1909-ல் தேவாலயத்தை விட்டு வெளியேறிய ஜோகன்னன், பின்பு பிரத்யட்ச ரக்ச தெய்வ சபை எனும் அமைப்பை நிறுவி அட்டவனையினருக்கு சமய விடுதலையும், அடிமைத்தளைகளிலிருந்து விடுதலையும், அதிகாரம் கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டிருக்கிறார்.

அய்யன்காளியின் சாதுசன பரிபாலன சங்கத்தின் உறுப்பினராக இருந்த திரு. பொய்கையில் அப்பச்சன், சங்கத்தின் சார்பாக 1921 மற்றும் 1931-ல் திருவாங்கூர் சமஸ்தானத்தின் சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கிறித்துவத்தையும் இந்துத்துவத்தையும் வெறுத்த பொய்கையில் குமரகுரு, அடிமைகளை விடுவிக்க கடவுள் ஒரு அவதாரத்தை அனுப்புவார் என்பதை பிரத்யச்ச சபையின் கொள்கையாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞராகவும், நாடகாசிரியராகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் அறியப்படும் திரு.பண்டிட் கருப்பன் (1885-1938), தீண்டாமைக்கு எதிராகவும் சமூகத் தீமைகளுக்கெதிராகவும் கடுமையாகப் போராடியவராகப் புகழப்படுகிறார். சமூகப் பொருளாதாரத்திலும் கல்வியிலும் மிகவும் பின்தங்கியிருந்த சமுதாயத்திலிருந்து வந்த பண்டிட் கருப்பன், சமஸ்கிருதத்தில் பெரும் புலவராக இருந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

கொச்சி சமஸ்தானத்தின் எர்ணாகுளத்திற்குள் நுழையக்கூட தடை விதிக்கப்பட்டிருந்த மீனவர் சமூகத்தவரான கருப்பனின் சமஸ்கிருதப் புலமையை அறிந்த கொச்சி மகாராஜா, அவருக்கு எர்ணாகுளம் சாதி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் சமஸ்கிருத ஆசிரியர் பணியிடம் வழங்கியதாகவும், பண்டிட் சொல்லிக் கொடுத்தால் பிள்ளைகளை அனுப்பமாட்டோம் என சாதிப் பிள்ளைகளின் பெற்றோர்

மறுப்புத் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. ஆனாலும் மகராஜா பெற்றோரின் கோரிக்கையை ஏற்கவில்லை எனத் தெரிகிறது.

1975 இல் கொச்சி சட்டசபைக்குத் தேர்வான பண்டிட் அய்யா, ஒடுக்கப்பட்ட மீனவர் மக்களின் நலன்காக்க பல்வேறு கோரிக்கைகளை எழுப்பி அரசின் கவனத்தை ஈர்த்தவராகக் குறிப்பிடப்படுகிறார். முல குழுக்களில் இடம் பெற்ற திரு. கருப்பன், பின்னர் மகாராஜா கல்லூரியின் சமஸ்கிருதப் பேராசிரியராகவும் பணிபுரிந்திருக்கிறார்.

சமூக நலனுக்குப் பாடுபட்டவரான பண்டிட், மீனவ சமூகத்தவரை பல்வேறு சபைகளாகப் பிரித்து, அவர்களது கல்விக்கும் மேம்பட்ட வாழ்க்கைக்கும் பாடுபட்டிருக்கிறார். புலையருக்காக கொச்சின் புலைய சபையையும் உருவாக்கியிருக்கிறார். புலையர் பொது இடங்களில் கூடக் கூடாது எனும் சட்டம் இருக்க, அவர்களைப் படகுகளில் வரவைத்து காயல் சம்மேளனம் எனும் சபைகளை நடத்தியிருக்கிறார்.

ஆச்சார்ய பூஷனம், பாஷாபைமீபரிணயம் சித்தலேகா, துருவசரிதம், ஜாதிக்கும்மி, லலிதோபாகரம், மங்களமாலா, ஸ்ரீபுத்தன், வஞ்சிப்பாட்டு உட்பட ஏராளமான நூல்களைப் படைத்துள்ளவராகவும் பேராசிரியர் பண்டிட் கருப்பன் பாராட்டப்படுகிறார்.

தமிழகம் போல் கேரளத்தில் பூடகமாகச் சாதிவெறி தெரியவில்லையாயினும் கேரளமும் சாதி எனும் நோயிலிருந்து, அதன் முழுமுற்றான பிடியிலிருந்து விடுபட முடியவில்லை என்றே கூறப்படுகிறது. பல்வேறு உப சாதிகளாகக் கிடந்த நாயர்கள், நாயர் எனும் ஒரு குடையின் கீழ் வந்து ஆட்சியதிகாரத்தைப் பெற்றது வரலாறு. தமிழகத்தில் பெண்கள் சாதிப்பெயரை ஒட்டாகக் கொள்ளாத நிலையில் (சமீபகாலமாக தமிழகத்திலும் குறிப்பாக கிறித்தவத்துக்கு மாறிய பெண்களிடையே வேகமாக முளைத்து வருகிறது) கேரளாவில் நாயர், மேனன் போன்ற ஒட்டுக்களோடு பெரும்பாலான பெண்கள் அறியப்படுவது குறிப்பிடத்தக்கது. இஸ்ரோ போன்ற உயர் ஆராய்ச்சிக் கூடத் தலைவராய் இருந்தும் நாயர் பெயரிலிருந்து விடுபட முடியாமல் இருப்பதும், குடியரசுத் தலைவராக இருந்தவர் சாதி ஒட்டில்லாமல் இருந்ததும் அறியத்தக்கது.

சாதிக்கு பெருமுக்கியத்துவம் கொடுத்து வந்ததாக அறியப்படும் மலையாள தேசத்தில், பெண்களின் நிலையும் படுமோசமாக இருந்ததாகவே பதிவுகள் உறுதிசெய்கின்றன. 1905 ஆம் ஆண்டில் கொச்சி மகாராஜா முன்னிலையில் நடைபெற்ற ஸ்மார்த்தவிசாரம், மலையாள சமூக பண்பாட்டு உலகங்களில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாகப் பேசப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது. விசாரத்திற்கு உட்பட்டவர் குறியேடத்து தாத்ரி எனும் நம்பூதிரிப்பெண்.

நம்பூதிரிப் பெண்களின் நடத்தையில் சந்தேகம் உண்டானால் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தி தண்டனை வழங்கும் குற்ற விசாரணை முறைக்கு சுமார்த்த விசாரணை எனப் பெயர் வழங்கியிருக்கிறது.

ஏராளமான சடங்கு, குலவழக்க முறைகளைப் பின்பற்றிய நம்பூதிரிகள் என அழைக்கப்பட்ட கேரளப் பிராமணர்கள், பெண்கள் மீது மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்ததாகவும் அறியப்படுகிறது. மாறாக நாயர் பெண்களோ கெட்டுக் கல்யாணம் எனும் சடங்கின் மூலம் ஆண்களுடன் பழகுவது நடைமுறையில் இருந்திருக்கிறது.

நம்பூதிரி இல்லங்களில் மூசாம்பூரி என அழைக்கப்பட்ட மூத்த ஆண்பிள்ளை மட்டுமே நம்பூதிரிப் பெண்ணை திருமணம் செய்யலாம் எனவும் மற்ற ஆண்பிள்ளைகள் கோவில் பணியாளரான அம்பலவாசிகள் மற்றும் நாயர் வீட்டுப் பெண்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளலாமென்றும் நடைமுறை இருந்திருக்கிறது. அதன் மூலம் நம்பூதிரி சொத்து பரம்பரையாக ஒரு மகனுக்கு மட்டுமே கடத்தப்பட்டு வந்திருக்கிறது.

அந்தர்ஜனம் அதாவது உள்ளே இருப்பவள் எனும் பெயரில் நம்பூதிரிப் பெண்கள் வீட்டிற்குள்ளேயே வைக்கப்பட்டிருக்கின்றனர். முறை தவறியப் பெண் எனக் குற்றம் சாட்டப்படும் பெண், சாதனமாகக் அதாவது பொருளாகக் கருதப்பட்டு, விசாரணை முடிவில் பிண்டம் வைத்து இல்லத்திலிருந்து விலக்கப்பட்டதாகவும், தொடர்புடைய ஆண்கள் குல விலக்கம், நாடு கடத்துதல் போன்ற பல்வேறு தண்டனைகளுக்கு உட்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அறுபத்தி நான்கு ஆண்களை அடையாளம் காட்டி அனைவரையும் சாதி விலக்கம் செய்யவைத்த தாத்ரி குட்டியின் விசாரணையோடு சுமார்த்தவிசாரனை விலக்கிக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் வந்த ஆங்கில கல்வி, சமூக

நீதிப் போராட்டங்கள் போன்றவற்றால் நம்பூதிரி இளைஞர்களிடையே மனமாற்றம் ஏற்பட்டு, நம்பூதிரி பிராமண சடங்குமுறைகளில் மிகப்பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. 1996 ஆம் ஆண்டு பதினாறு வயதுடைய இளம்பெண்ணை நாற்பது ஆண்கள் சீரழித்தனர் என நடைபெற்ற சூரிய நெல்லி பலாத்கார விசாரணை கேரள உயர்நீதி மன்றத்தில் நடந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. தாத்ரியோடு இணைத்துச் சொல்லப்பட்ட சங்கப் பணிக்கர், பின்னர் திருனந்தபுர சமஸ்தானத்திற்கு இடம் பெயர்ந்து, நம்பூதிரி வீடுகளிலும் கோவில்களிலும் மட்டுமே நிகழ்ந்து வந்த கதகளி நடனத்தை, எளிய மக்களிடமும் எடுத்துச் சென்றவராகக் கூறப்படுகிறார்.

கேரள நிலமெங்கும் நிறைந்திருந்த கண்ணகி வழிபாட்டை பகவதியம்மன் வழிபாடாக மாற்றியதில் நம்பூதிரிப் பிராமணர்களுக்குப் பங்கிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆண்வழிச் சமூகமான நம்பூதிரிகளுக்கும் பெண்வழிச் சமூகமான நாயர்களுக்குமிடையே ஏற்பட்ட கூட்டு, நாயர்களுக்கு ஆன்மீக முன்னேற்றத்தை அளித்ததாகக் கூறப்படுகிறது. விளைவாக கோவில்கள் முக்கியத்துவம் நிறைந்தவையாக மாற்றப்பட்டிருக்கின்றன. இறைவனை பகவான் எனும் சொல்லால் சுட்டியது போன்றே இறைவியை பகவதி எனும் சொல்லால் சுட்டியிருக்கின்றனர். அன்னை தெய்வங்களை அம்மாள், அம்மன் என தமிழில் அழைக்க மலையாளமோ பகவதி எனக் குறிப்பிடுகிறது.

கொடுங்கல்லூர் பகவதி கோவில், சோட்டானிக்கரை பகவதி கோவில், ஆற்றுக்காள் பகவதி கோவில், கன்யாகுமாரி பகவதி அம்மன் கோவில் போன்றவை கேரள மக்களின் புகழ்பெற்ற அம்மன் கோவில்களாகக் குறிப்பிடப்படுகின்றன. மேலும் ஆவனம் காட்டு பகவதி, சூரக்கோடு பகவதி, செங்கனம் குன்னு பகவதி, சேரநல்லூர் பகவதி, கண்ணனூர் பகவதி, குட்டநெல்லூர் பகவதி, கொத்தகுளங்கரா பகவதி, நெல்லூர் பகவதி, பந்தல்லூர் பகவதி, திரிச்சாம்பரம் பகவதி, தொட்டப்பள்ளி பகவதி, தொழுவனூர் பகவதி, வெளியெண்ணூர் பகவதி, வெள்ளத்தாட்டு பகவதி, மீன்குளத்திப் பகவதி, மாங்கோட்டுக்காவு பகவதி உட்பட ஏராளமான பகவதி அம்மைகள் கேரளாவில் நிலைத்திருக்கின்றனர்.

கள்போல் மயக்கும் சிரிப்பை உடையவள், சிரிக்கின்ற மலர்ந்த கண்ணை உடையவள் எனப் பொருள் காணப்படும் பெயரான கண்ணகி, மங்கலதேவியாகி,

தமிழ்நாடு, கேரளம், இலங்கை போன்ற பகுதிகளில் இறைவியாக வழிபடப்படுவது சிறப்பிற்குரியது.

கொடுங்கல்லூரம்மை எனச் சிறப்பித்துக் கூறப்படும் கொடுங்கல்லூர் பகவதி, குரும்பா பகவதி அம்மை காவு எனும் பெயர் கொண்டு, திருச்சூர் மாவட்டம் கொடுங்கல்லூரியில் அருள்பாலிக்கிறார். குடும்பி குலத்து மக்களால் பராமரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படும் பகவதி, பண்டைய சேர நாட்டுத் தலைநகரான மகோதையபுரத்து அரச மரபினரின் குலதெய்வமாகவும் கூறப்படுகிறார்.

சோட்டானிக்கரை, சோட்டாணிக்கரா, சோற்றானிக்கரை, ஐயோதின்னக்கரை என்ற பெயர்களால் குறிப்பிடப்படும் பகவதி கோவில், பெண்களின் சபரிமலை எனச் சிறப்பிக்கப்படுகிறது. எர்ணாகுளத்திற்கு அருகிலுள்ள சோட்டானிக்கரை அம்மன், காலையில் அறிவாற்றலை வளர்க்கும் அன்னை சரசுவதியாவும், மதியம் செல்வங்களை வாரிவழங்கும் அன்னை மகாலட்சுமியாவும், மாலையில் வீரத்தை விதைக்கும் அன்னை பார்வதியாகவும் அருள் மழைபொழிகிறார். மேலும் தேவியின் வலப்பக்கம் மகாவிஷ்ணு இருப்பதால் அம்மே நாராயணா, தேவி நாராயணா, லட்சுமி நாராயணா, பத்ரி நாராயணா என அம்மன் பாடப்படுவதாகவும் கூறப்படுகிறது. மாசி மகம் அன்னைக்கு சிறப்பான நாளாகக் குறிப்பிடப்படுகிறது.

திருவனந்தபுரம் பத்பநாபசுவாமி கோவிலுக்கு அருகே வீற்றிருக்கும் ஆற்றுக்கால் பகவதியம்மன், நாடிவரும் பக்தர்களின் நலன் காப்பவராகப் போற்றப்படுகிறார். கொடுங்கல்லூருக்குப் போகும் முன் கண்ணகிக்குப் பொங்கல் கொடுத்து ஆற்றுப்படுத்திய இடமாகக் கூறப்படுவதால், அம்மனுக்கு பொங்கல் வைத்து வழிபடப்படுவதாகக் கூறப்படுகிறது. லட்சக்கணக்கான பெண்கள் ஒன்று கூடி அம்மனுக்கு வைக்கும் பொங்கல் விழா மிகவும் சிறப்பானதாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழகத்தைப் போல் அல்லாமல் கேரளாவில் தாந்த்ரீக மரபு வழக்கிலிருப்பதாகக் கருதப்படுகிறது. குறியீட்டுச் சடங்கு முறைகள் கொண்ட தாந்ரீகமுறைகளும், ஆகம முறையும் கேரளக் கோவில்களில் பின்பற்றப்படுவதாகக் கூறப்படுகிறது. சோதிடம், மாந்த்ரீகம், பிரசன்னம் போன்றவைகளுக்குப் பெயர் பெற்ற கேரளாவில், மந்திர தந்திரங்கள் நிரம்பிய தாந்த்ரீக வழிபாட்டு முறைக்கும் மக்களிடையே செல்வாக்கிருப்பதாக பதிவுகள் சுட்டுகின்றன.

தாந்த்ரீகம் என்பது குறியீடுகள் மற்றும் குறியீட்டுச் செயல்பாடுகள் மூலம் ஆழ்மனதைப் பயிற்றுவித்து அதன் வல்லமையைப் பெருக்கிக் கொள்ளும் ஒரு ஆன்மீக முறையாகக் கூறப்படுகிறது. தாந்த்ரீக மரபிற்குப் பெயர் பெற்றதாக சாக்தம் இருந்த போதிலும், சைவ மரபுகளிலும் தாந்த்ரம் கடைபிடிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. தொல்குடியினரிடையே பல்வேறு சடங்குமுறைகளாக, வழிபாடுகளாகப் புழங்கி வருவதும் தாந்ரீக முறையாகக் கூறப்படுகிறது.

சிவ வடிவைக் கடவுளாகக் கொண்டு குண்டலினி யோகம் வாயிலாக பேரின்ப இறைநிலையையும், மெய்ஞானத்தையும் அடைவது தட்சிணாச்சாரம் எனவும், சக்தி வடிவங்களைக் கொண்டு காமத்தின் மூலம் குண்டலினியை எழுப்பி பேரின்ப யோகத்தை அடைவது வாமாச்சாரம் எனவும் அழைக்கப்படுகிறது. தட்சிணாச்சாரம் துறவிகளுக்கும் வாமாச்சாரம் இல்லறத்தவர்க்கும் உரியதாகக் கருதப்படுகிறது.

யந்த்ரங்கள், சக்கரங்கள், மண்டலங்கள் எனப்படுகிற வரிவடிவ வரைகலை தாந்ரீகத்தில் முக்கியமானவைகளாக் கூறப்படுகின்றன. மேலும் மந்திரம் யந்திரம் தந்திரத்தைக் கொண்ட தந்தீரிக யோகத்தில் படிவம், குறியீடு, உருவகம் போன்றவற்றை உள்ளடக்கி மிகுந்த இரகசியம் காக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

மாத்ரிகா எனப் பெண்கடவுளர்களை ஏற்றுக் கொள்ளும் வஜ்ராயன புத்தத்தில் தாந்ரீகத்திற்கு பெரும் செல்வாக்கிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. யோகம், தந்திரம், குண்டலினி சக்தி பற்றி மேலைநாடுகளில் அதிகம் பேசியும் எழுதியும் வந்த ஆர்தர் அவலான் எனும் புனைப்பெயர் கொண்ட ஜான் வுட்ரோ.ப் (1865-1936), இந்திய யோக, தந்தர மரபின் பெருமைகளை சிறப்பித்தவராகப் பாராட்டப்படுகிறார். காமத்திலிருந்துதான் கடவுளுக்கான பயணம் தொடங்குவதாகக் கூறிய ஓசோ, தாந்த்ரா குருவாக அறியப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

சோதிடம், மாந்த்ரீகம், பிரசன்னம் போன்றவைகளுக்கு மட்டுமன்றி ஆன்மீகக் தலைவர்களுக்கும் கேரளம் பெயர்பெற்றதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. எர்ணாகுளத்தில் பிறந்த பாலகிருஷ்ண மேனன், ஆன்மீகத் துறையில் அக்கறைகாட்டி, சுவாமி சிவானந்தரிடம் சந்நியாசத் தீட்சை பெற்று, சுவாமி சின்மயானந்தராக ஆன்மிகப் பணி செய்திருக்கிறார். வேதாந்தத்தை உலகமெலாம் பரப்பியவராகப் புகழப் பெறும் சுவாமி சின்மயானந்தா (1916-1993), உலகெங்கும் ஆசிரமங்களையும், கல்வி நிலையங்களையும், மருத்துவமனைகளையும் நிறுவி,

ஆன்மீகத்தோடு, சமூகப் பணியும் செய்தவராக அறியப்படுகிறார். கிராமங்கள் முன்னேற்றத்திற்கும் பாடுபட்ட சின்மாயானந்தர் 1953 இல் உருவாக்கிய சின்மயா மிசனுக்கு, முந்நூறுக்கும் மேற்பட்ட கிளைகள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. கல்வி, சமூக சேவை மற்றும் பண்பாடுகள் தொடர்பான பணிகளைக் கொண்டுள்ள சின்மயா மிசன், இளைஞர் மற்றும் இளைஞிகளுக்கான ஆளுமை வளர்ப்பு பயிற்சிப் பட்டறைகளும் நடத்துகிறது.

பத்தமடையில் பிறந்து ரிசிகேசத்தில் வாழ்ந்த சுவாமி சிவானந்தர் (1887-1963), புகழ்பெற்ற அத்வைத வேதாந்தியாகப் புகழப்படுகிறார். தஞ்சையில் மருத்துவம் பயின்று மலேசியாவில் பணியாற்றிய திரு. குப்புசாமி, ஆன்மீக நாட்டம் மேலோங்கி ரிஷிகேசத்தில் விஸ்வானந்த சரஸ்வதி எனும் குருவால் தீட்சை பெற்று, சுவாமி சிவானந்த சரஸ்வதியாக மாற்றமடைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ரிஷிகேசத்தின் முக்கியத்துவமான பகுதியாகக் கருதப்படும் துறவிகள் மணல் (முனி கி ரிடி) பகுதியில் 1936 ஆம் ஆண்டு சிவானந்தர் ஆசிரமம் எனும் தெய்வ நெறிக் கழகம் (டிவைன் லை.ஃப் சொசைட்டி) நிறுவி, ஆன்மிக வேட்கை கொண்ட இளைஞர்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாக இருந்துள்ளார்.

இந்தியா முழுமைக்குமான சுற்றுப்பயணங்கள், சொற்பொழிவுகள் மூலம் ஆன்மிகத்தைப் பரப்பிய சிவானந்தர் யோகம், மதம், கல்வி, கலைகள், சுயசரிதம், கதைகள், நாடகங்கள், கட்டுரைகள் என ஏறக்குறைய முந்நூறு புத்தகங்கள் எழுதியவராகவும் அறியப்படுகிறார். செயல் முறை யோகத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தவராக அறியப்படும் சிவானந்த சுவாமி, புகழ்பெற்ற சீடர்களை உருவாக்கியவராகவும் பாராட்டப்படுகிறார்.

உலகெங்கும் முந்நூறுக்கும் அதிகமான கிளைகளைக் கொண்டுள்ள தெய்வ நெறிக் கழகம், சிவானந்தரின் ஆன்மீகப் பணிகளைத் தொடர்வதாகக் குறிப்பிடப்படுகிறது. யோகா மற்றும் வேதங்கள் கற்றுக் கொடுப்பது, ஆன்மிகக் கலந்துரையாடல் மற்றும் இந்திய பண்பாடு கலாச்சாரத்தைப் பாதுகாப்பது உட்பட ஏராளமான பணிகளில் ஆன்மிகச் சேவையும், தொண்டும் ஆற்றிவருவதாக தெய்வ நெறிக்கழகம் பாராட்டப்படுகிறது.

சிவானந்தர், அப்பைய தீட்சிதரின் குடும்ப வழியில் பிறந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். வடஆற்காடு வேலூருக்கு அருகே திரிவிருஞ்சிபுரம் எனும்

ஊரில் பிறந்தவராகக் குறிப்பிடப்படும் திரு. அப்பையா தீட்சிதர் (1520-1593), புகழ்பெற்ற அத்வைத வேதாந்தியாகக் கூறப்படுகிறார். பாமர மக்களுக்கெல்லாம் சிவ தத்துவத்தையும் அத்வைதத்தையும் புரியவைப்பதற்காக தொண்டர்களைத் திரட்டி இயக்கம் நடத்தியவராகக் கூறப்படும் தீட்சிதரின் அறுபது நூல்கள் புழக்கத்தில் உள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

சின்மயானந்தரிடம் துறவு பெற்ற சுவாமி தயானந்த சரசுவதி (1930-2015), புகழ்பெற்ற அத்வைத வேதாந்தியாக அறியப்படுகிறார். உலகம் முழுவதும் சுற்றி அத்வைத வேதாந்த சொற்பொழிவு ஆற்றிய தயானந்தர் வேதாந்தம், சமஸ்கிருதம் மற்றும் யோகம் பயில அர்ஷ வித்யா பீடத்தை ரிஷிகேசத்திலும், கோவை ஆணைக்கட்டியிலும் அமைத்தவராகக் குறிப்பிடப்படுகிறார். புகழ்பெற்ற பல வேதாந்த மாணவர்களை உருவாக்கிய சுவாமி தயானந்தர், சமூக அக்கறை நிரம்பியவராகவும் புகழப்படுகிறார்.

ஹரிஷிகேஷ், ரிஷிகேஷ் எனக் குறிப்பிடப்படும் ரிசிகேசு, ஆசிரமங்களுக்கும் தியான வகுப்புகளுக்கும் உலகப் புகழ்பெற்ற நகரமாக அறியப்படுகிறது. உத்தர காண்டின் டேராடூன் மாவட்டத்திலுள்ள ரிஷிகேசம், உலக யோகா தலைநகரமாகவும் கருதப்படுகிறது. அடர்காடுகளையும், இமயத்தொடர்களையும், புனித ஆறுகளையும் பெற்றுள்ள ரிஷிகேஷ், ஹரித்துவாருக்கு இருபத்தைந்து கிலோமீட்டர்கள் தொலைவில் இருப்பதாகக் கூறப்படுகிறது. பத்ரிநாத், கேதர்நாத், கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி அடங்கிய சார்தாம் யாத்திரை செல்வதற்கான துவக்க இடமாகவும் ரிஷிகேஷ் குறிப்பிடப்படுகிறது.

ரிஷிகேஷிலிருந்து சிவாலிக் இமயப்பகுதிக்கும், வடஇந்தியச் சமவெளிக்கும் பாய்ந்தோடும் கங்கை ஆற்றை, இமயப் பின்புலத்தில் அறிவது மனதிற்குப் பிடித்த காட்சியாக விதந்தோதப்படுகிறது. கங்கைக் கரையில் அமர்ந்து தியானம் செய்வது ஆழ்நிலைப் பரவசத்தை அளிப்பதாகவும் யோகிகளால் கண்டறியப்பட்டுள்ளது. சமீப காலமாக இமயமலை மீதான மலையேற்றத்திற்கும், நதியின் மீதான சாகசப் பயணங்களுக்கும் ரிசிகேஸ் உலகம் முழுக்க புகழ்பெற்று வருகிறது.

ஆண்கள் உலகமாக இருக்கும் ஆன்மிகத் துறையில் கொல்லம் மாவட்டத்தின் பறைகடவு எனும் சிறிய கிராமத்தின் மீனவக் குடும்பத்தில், 1953 இல் பிறந்த சூடாமணி இடமன்னேல், மாதா அமிர்தானந்தமயி தேவி எனும் பெயரில்

புகழ்பெற்ற ஆன்மீகத் தலைவராகவும், சமூக சேவகராகவும் அறியப்படுகிறார். மாதா அம்ருதானந்தமயி அறக்கட்டளை மூலம் கல்வி, மருத்துவம், ஆன்மீகம் போன்ற துறைகளில் சேவையாற்றிவரும் அம்ருதானந்தமயி, பக்தர்களால் அம்மாச்சி மற்றும் அம்மா என அன்போடு அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. மேலைநாட்டுப் பக்தகோடிகளால் அரவணைக்கும் அன்னை என விளிக்கப்படும் அம்ருதானாந்த மயி, அவரது பக்தர்களை ஒரு தாயைப்போல கட்டி அரவணைத்து ஆறதல் கூறுவதாகக் கூறப்படுகிறது. அவ்வாறு அரவணைக்கும் போது அவரது ஆன்மீக ஆற்றலின் ஒரு துளியை பக்தர்கள் பெறுவதாகவும், அவர்கள் அதை வளர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் கூறப்படுகிறது. 1987 முதல் அடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்கி பல்வேறு உலக நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்துவரும் மாதா அமிர்தானந்த மயி, உலகிலிருந்து அடிமைத்தனம் முற்றாக ஒழிய வேண்டுமென முயற்சிகள் மேற்கொள்பவராகவும் புகழப்படுகிறார்.

நிறுவனர் மற்றும் தலைவர் - மாதா அமிர்தானந்த மடம், தலைவர் - உலகை செஞ்சோடு அணைத்துக் கொள்ளுதல் (எம்பிராசிங் த வேல்டு), வேந்தர் - அம்ருதா விஸ்வ வித்யா பீட பல்கலைக்கழகம், நிறுவனர் - அம்ருதா மருத்துவக் கழகம், உலக மதங்களின் நாடாளுமன்ற அவை ஆலோசனை உறுப்பினர் எனும் பதவிகளை வசிக்கும் மாதா அமிர்தானந்தமயி, பிறந்த ஊரை அமிர்தபுரியாக மாற்றியதோடு, சுவாமி ராமகிருஷ்ணானந்த புரி, சுவாமி அமிர்த ஸ்வரூபனந்தபுரி, சுவாமி அமிர்தானந்தபுரி, சுவாமி பிரணவமிர்தானந்தபுரி, சுவாமி பூர்ணமிந்தானந்தபுரி போன்ற சீடர்களையும் பெற்றிருப்பது சிறப்பு.

கேரள மக்கள் சமயப்பொறை கொண்டவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். நீண்ட பாரம்பரியம் கொண்டவர்களாகக் குறிப்பிடப்படும் கேரளக் கிறித்தவர்களும், இசுலாமியர்களும் மலையாளத்தையே தாய்மொழியாகக் கொண்டிருப்பதோடு, மலையாளப் பண்பாட்டையும் பேணுபவர்களாகக் கருதப்படுகின்றனர். கேரளத்தின் வடக்குப் பகுதியான மலபாரில் 1921 இல் நிகழ்ந்த மலபார் கலவரம் அல்லது மலபார் கிளர்ச்சி, பிரித்தானியர் மற்றும் இந்துக்களுக்கெதிரான இசுலாமிரியன் தாக்குதலாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. 1836 ஆம் ஆண்டுகளிலிருந்தே மலபார் பகுதியில் நிகழ்ந்துவந்த விவசாயப் போராட்டங்கள், ஜமீன்களுக்கெதிரான கலகங்கள், காலனியாதிக்க எதிர்ப்பு, பின்னர் கிலாபத் ஆதரவாக மாறி, பிரித்தானியர் மற்றும் இந்துக்களுக்கெதிரான கலவரமாக உருமாறியதாகக் குறிப்பிடப்படுகிறது.

கேரள முஸ்லிம்கள் மாப்ள, மாப்ளா அல்லது மாப்பிள்ளை என அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. கேரளத்தோடு மிகப் பண்டையக் காலம் தொட்டே வணிக உறவு வைத்திருந்த அரபு, முகமது நபிக்குப் பின் இசுலாமியர்கள் எனும் பெயரோடு உறவைத் தொடர்ந்ததாகக் கூறப்படுகிறது. மலபார் பகுதியில் தங்கி வணிகம் செய்ய கோழிக்கோடு சாமோதிரி மன்னர்களிடம் அனுமதி பெற்ற அரேபியர்கள், பின்னர் அங்கேயே தங்கி, மலையாளத்தவருடன் மண உறவுகள் ஏற்பட்டு மலையாள முஸ்லிம்களாக மாற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது

கேரளத்தின் பழமையான மசூதியாக கொடுங்கல்லூர் தாலுக்காவிலிருக்கும் சேரமான் ஜும்மா பள்ளிவாசல் குறிப்பிடப்படுகிறது. கேரளத்தையாண்ட சேரமான் பெருமாள் எனும் மன்னர் மெக்கா சென்றதாகக் கூறப்படுவதை ஒட்டி சேரமான் பள்ளிவாசல் உருவானதாகக் கூறப்படுகிறது. கிழக்கு நோக்கி அமைந்திருந்த பள்ளி வாசல் பின்னர் மேற்கு நோக்கியதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி, கேரளத்தில் 54.73% இந்துக்களும், 26.56 % முஸ்லிம்களும் 18.38 % கிறித்தவர்களும் வாழ்வதாகக் குறிப்பிடப்படுகிறது. கோழிக்கோடு மன்னர்களின் ஆதரவில் கோழிக்கோட்டிலும், பின்னர் மலப்புரம் பகுதிகளிலும் இசுலாம் பரவியிருக்கிறது. கேரள இசுலாமியர்களில் சன்னி பிரிவுனரே அதிகம் இருப்பதாகவும், இராதவுத்தர் பிரிவினர் சிறிய எண்ணிக்கையில் உள்ளதாகவும் அறியப்படுகிறது.

இசுலாமியர்கள் அதிகமாக வாழும் பகுதியாக மலப்புரம் இருக்கிறது. கேரளத்தின் வடதிசை மாவட்டமான மலப்புரம் மலைகளாலும், குன்றுகளாலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. மாவட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கும் வற்றாத பாரதப்புழா, சாளியாறு மற்றும் கடலுண்டு ஆறுகளே மலப்புரத்தின் மண் வளத்திற்கும் கலாக்சார மேன்மைக்கும் முக்கியக் காரணமாகக் குறிப்பிடப்படுகின்றன. சாமுத்ரி மன்னர்கள் படையின் தலைமையிடமாகக் குறிப்பிடப்படும் மலப்புரம், கேரள இசுலாமியர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகவும் கருதப்படுகிறது.

அலாவி தங்ஙளின் மாம்புரம் தர்கா கேரள இசுலாமியரின் புகழ்மிக்க தர்காவாகக் குறிப்பிடப்படுகிறது. சயித் அலாவி மௌலாதவீல் அல்ஹிசைனி தங்ஙள் (1752-1845), மாம்புரத்தில் தங்கிய ஏமன் நாட்டு இசுலாமிய அறிஞராகக்

கருதப்படுகிறார். ஹஜிரா 1183 ரமதான் 19 இல் பதினேழு வயதில் ஹசன் ஜெப்ரி மற்றும் ஷேக் ஜெப்ரி எனும் மாமன்களோடு, கோழிக்கோடு கடற்கரைக்கு வந்ததாகக் கூறப்படும் சயித் மாம்பரம், தங்ஙள் எனவும் சயித் தங்ஙள் எனவும் பெயர் பெற்றிருக்கிறார். மாப்ளாக்களின் அரசியல் தலைவராகவும், அற்புதங்கள் செய்பவராகவும் அறியப்பட்ட சயித் தங்ஙள் காலத்திலேயே மலப்புரம் பகுதியில் நிலவுடமையை எதிர்த்தும், ஆங்கிலேயரை எதிர்த்தும் கிளர்ச்சிகள் தொடங்கியதாகக் கூறப்படுகிறது.

சயித் தங்ஙளின் மகனாக அறியப்படும் பாசல் பூக்கோயா (1820-1901), அவரது இருபது வயதிலேயே பிரித்தானியருக்கு எதிரான இயக்கத்தில் உறுப்பினராக இருந்தவராகக் கூறப்படுகிறா. இசுலாமியர்களை இந்து நிலக்கிழார்களுக்கு எதிராகப் போராடத் தூண்டியதாக அறியப்படும் பாசல் தங்ஙள் மாஞ்சேரி கலவரம் (1948), குளத்தூர் (1851), மட்டன்னூர் கலவரம் (1852) போன்றவைகளோடு தொடர்புபடுத்தப்படுகிறார்.

மாப்ளா கலவரத்தின் தலைவராகக் குறிப்பிடப்படுபவர் சக்கிபரம்பன் வாரியன் குன்னத்து குஞ்சகமது ஹாஜி. சுமார் எழுபத்தைந்தாயிரம் உள்ளூர் படையினரைக் கொண்டு பிரித்தானிய அரசின் நிலத்தை பறித்து மலபாரில் மாற்று அரசை உருவாக்கிய குஞ்சகமதுக்கு, அவரது சமகாலத்தவரும் நண்பரும் மத அறிஞருமான அலி முஸ்லியார் பெருமளவில் உதவி செய்தவராகக் குறிப்பிடப்படுகிறார். திருரங்காடி இமாமாக இருந்த அலிமுசுலியார், கிலாபத் இயக்கத்தின் சிறந்த சொற்பொழிவாராகப் கூறப்படுகிறார். கிளாபத் இயக்கத்தை ஆதரித்து மலபாரில் இயக்கம் தொடர்ந்த எரிக்குன்னன் பாலாட்டு முஸ்லியார் அலியும், மாப்ளா கலவரத்தின் முன்னோடித் தலைவராகக் குறிப்பிடப்படுகிறார்.

மாப்ளா கலகத்தோடு தொடர்புடையதாக மாம்புரம் மஞ்சி குறிப்பிடப்படுகிறது. தினமும் ஐந்தாயிரம் பேர் வரை வரக்கூடியதாகக் கூறப்படும் மலப்புரம் மாவட்டத்திலுள்ள மாம்பரம் தர்கா, கேரளா மாநிலத்திலுள்ள தங்ஙள் எனப்படும் ஏமான் முஸ்லிம்களோடு தொடர்புள்ளதாகக் கருதப்படுகிறது. முகம்மது நபியோடு மரபுரீதியாகத் தொடர்புபடுத்தப்படும் தங்ஙள், சையத் எனும் அரபு வார்த்தைக்கு சமமானதாகக் கூறப்படுகிறது. பதினேழாம் நூற்றாண்டில் வணிகத்தின் பொருட்டு கேரளத்திற்கு வந்த ஏமன் நாட்டு இசுலாமியர், பின்னர் கேரளமெங்கும் பரவியதாகக்

கூறப்படுகிறது. மலப்புரம் மாவட்டம் பனங்காடு தங்ஙள்கள், கேரள இசுலாமியரிடையே மிகுந்த செல்வாக்குள்ளவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

கலவரங்களுக்கு மணப்பறம் தங்ஙளே காரணம் எனக் கண்டறிந்த பிரித்தானிய அரசு, பாசல் தங்ஙளை ஐம்பத்தேழு குடும்ப உறுப்பினர் மற்றும் வேலைக்காரர்களோடு 1852 இல் நாடு கடத்தியதாக குறிப்பிடப்படுகிறது. ஏமன் மெக்கா, துருக்கி எனச் சென்ற ∴பாசல் மீண்டும் மலபாருக்கு வர எவ்வளவோ முயன்றும் பிரித்தானிய அரசு மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. தங்ஙளை நாடு கடத்துவதற்கு எதிராக மலபார் கலெக்டர் ஹென்றி வேலன்டைன் கனாலி 1855 இல் சுடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

சுதந்திரப் போராட்ட வீரராகவும், மார்க்க அறிஞராகவும், கவிஞராகவும் அறியப்படும் வாளியன்கோடு உமர் ஹாசி, சையத் தங்ஙள் மீது பேரன்பு கொண்டிருந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். திரு. சையத் அலாவி தங்ஙளை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்ட உமர் ஹாசி, பிரித்தானியரின் வரிவசூலிக்கும் அம்சம் அதிகாரியிடம், வரிகொடுக்காமல் போராடியவராகவும் அறியப்படுகிறார். அரபியும் மலையாளமும் கலந்து பல்வேறு தலைப்புகளில் ஏராளமான பாடல்களை இயற்றிய உமர் காசிம், முகம்மது பற்றிய அழகிய பாடல்கள் புனைந்தவராகவும் புகழப்படுகிறார்.

நிலவுடமையாளர்களுக்கெதிராகவும் பிரித்தானியர்களுக்கு அடங்காமலும் கிளர்ச்சி செய்ததாகக் குறிப்பிடப்படும் மாப்ளைகளின் வீரம் செறிந்த வரலாறு நினைவு கூறத்தக்கது.

வைக்கம் மௌலாவி என அழைக்கப்படும் வைக்கம் முகம்மது அப்துல் காதிர் மௌலாவி (1873-1932), கேரள இசுலாமிய சமூக சீர்திருத்தத்தின் முன்னோடியாகப் புகழப்படுகிறார். சுதந்திரப் போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி, ஆசிரியர், எழுத்தாளர், மார்க்க அறிஞர், ஊடகவியலாளர், செய்தித்தாள் நிறுவனர் என பல்வேறு ஆளுமைகளைக் கொண்டிருந்த மௌலாவி அவர்கள், சுவாதேச அபிமானி எனும் வார இதழை 1905-ல் தொடங்கி, ஜனநாயக உரிமைகளுக்காக குரலெழுப்பியவராக அறியப்படுகிறார். அரபி - மலையாளத்தில் முஸ்லிம், அல் இஸ்லம், மலையாளத்தில் தீபிகா போன்ற இதழ்களையும் வெளியிட்ட மௌலாவி, மத அடிப்படைத்தன்மைக்கு எதிராகக் குரல் கொடுத்தவராகவும்

குறிப்பிடப்படுகிறார். இசுலாமியரின் கல்விக்கும் பெண் கல்விக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்த வைக்கம் மௌலாவி, திருவாங்கூர் அரசின் பள்ளிகளில் உருது கற்கவும் நடவடிக்கை மேற்கொண்டவராகக் கூறப்படுகிறார்.

இசுலாமியர்களிடையே ஒற்றுமையை உண்டாக்க, திருவாங்கூர் அனைத்து முஸ்லிம் மகாசன சபா, முஸ்லிம் ஐக்கிய சங்கம் போன்ற அமைப்புகளைத் தோற்றுவித்தவராகக் குறிப்பிடப்படும் வைக்கம் மௌலாவின் மகன் முகம்மது பெசாவும் (1929-1899) சிறந்த கல்வியாளராகவும், எழுத்தாளராகவும், வைக்கம் மௌலாவி அறக்கட்டளையை வடிவமைத்தராகவும் அறியப்படுகிறார்.

கொடுங்கல்லூரைச் சேர்ந்த அப்துல் ரகுமான் (1898 -1945) சுதந்திர போராட்ட வீரராகவும், அல் அமீன் செய்தித்தாளின் பதிப்பாசிரியராகவும், இந்திய காங்கிரசின் கேரளத் தலைவராக இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறார். இந்தியப் பிரிவினையை எதிர்த்த திரு.ரகுமான், நேதாஜியின் கருத்துக்களால் கவரப்பட்டவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

கேரளத்தின் புகழ்பெற்ற மார்க்க அறிஞராக மலப்புரம் பனக்காடு சையது அய்தர் அலி சாகிப் தங்ஙள் (1936-2009) அறியப்படுகிறார். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராக இருந்த திரு. தங்ஙள், பல்வேறு இசுலாமிய அமைப்புகளுடனும் கல்வி நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவராக அறியப்படுகிறார்.

சையது தங்கலின் சகோதரர் சையது உமராலி சாகிப் தங்ஙள், கேரள வ.்.க்பு வாரியத் தலைவராகவும், வளநாடு பகுதியின் காடியாக (ஷிரியத் தீர்ப்பாளர்) இருந்தவராகவும் அறியப்படுகிறார். சன்னி யுவஜன சங்கத்தின் தலைவராகவும் இருந்த திரு. சையது தங்கல் (1940-2008), கேரள முஸ்லிம் சமூகத்தின் குறிப்பிடத்தக்க ஆளுமையாகவும் இருந்துள்ளார்.

மார்க்கத் தலைவராகவும், சமய அறிஞராகவும் இருந்த வரக்கல் அப்துல் ரகுமான் முல்லோ கோய தங்ஙள் உருவாக்கிய சமஸ்த கேரள ஜமியாத்துல் உலமா சங்கம், கேரள இசுலாமியர்களின் மிகப்பெரிய அமைப்பாகக் குறிப்பிடப்படுகிறது. அதிகமான நபர்களையும், மகால் களையும் (நிலப்பகுதி), மதராசாக்களையும், கல்வி நிறுவனங்களையும் கொண்டு செயல்படும் சமஸ்தம், மாப்ளா கலகத்திற்குப் பின் 1926 இல் கோழிக்கோட்டில் தொடங்கப்பட்டிருக்கிறது.

திரு. தங்ஙளை தலைவராகவும், மவுலான பங்கில் அகமது குட்டி முசலியார், முகமது மீரான் முசலியார், அப்துல் காதர் முசலியார் போன்றோரை துணைத் தலைவர்களாகவும், பி.வி. முகமது முசலியார், பி.கே. முகமது முசலியர் ஆகியோரை செயலர்களாவும் கொண்டிருந்த முதலாவது சமஸ்தம், கேரள இசுலாமிய சமூகத்தவரின் உரிமைகளையும் அதிகாரங்களையும் கவனித்துக் கொள்ளல், மதக்கல்வியை ஊக்குவித்தல், மார்க்கத்தைப் பரப்புவதற்கான உரிமை உட்பட பல முக்கிய கொள்கைகளை நோக்கமாகக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

சமஸ்தத்திற்குக் துணை அமைப்புகளாக சமஸ்த கேரள இசுலாமிய கல்வி வாரியம், சன்னி யுவசன் சங்கம், சமஸ்த கேரள சன்னி மாணவர் கூட்டமைப்பு, சமஸ்த கேரள சன்னி பால வேதி, ஜமியாதுல் மௌலவிமீன் (மத ஆசிரியர்), மகால்லு கூட்டமைப்பு போன்றவை குறிப்பிடப்படுகின்றன,

கேரள இசுலாமியர்களின் நடன வடிவமான ஒப்பனா, மலப்புரா மாவட்டத்தில் தோன்றியதாகக் கூறப்படுகிறது. மாப்ள வீட்டுத் திருமணங்களில் நடத்தப்படும் ஒப்பானாவும், ஒப்பனா பாட்டும் (ஒப்பனைப் பாட்டு), இசைப்பவர் உட்பட பதினைந்து எண்ணிக்கை வருமாறு கணக்கிடப்பட்டு பாடப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மக்கள் சனநாயகக் கட்சியின் நிறுவனரான அப்துல் மதானி சிறப்பான பேச்சாளராகக் குறிப்பிடப்படுகிறார். இசுலாமியக் கல்வியில் மதானி பட்டம் பெற்றவரான ஆப்துல் நாசர், 1989-ல் இசுலாமிய சேவா சங்கம் எனும் அமைப்பைத் தொடங்கியவராகவும், பின்னர் 1992-ல் இயக்கம் தடை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. கோவை குண்டுவெடிப்பிற்கு வெடி பொருட்கள் கிடைக்கக் காரணமானவர் எனும் குற்றச்சாட்டில் கைது செய்யபட்ட மதானி, குற்றம் நிரூபிக்கப்படாமல் ஒன்பதரை ஆண்டுகள் சிறைக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டதும், பின்னர் பெங்களூர் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. 2016 சட்டமன்ற தேர்தலில் 60 இடங்களில் போட்டியிட்ட மக்கள் சனநாயகக் கட்சி, 47950 வாக்குகள் பெற்றிருக்கிறது.

அட்டவணை இன, இசுலாமிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் அதிகாரம் கிடைக்கச் செய்வதற்காக தொடங்கப்பட்டதாக கூறப்படும் மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு, கேரள அரசியல் கட்சிகள் ஆதரவு அளித்ததும், மதானி

சிறையிலிருந்த போது அவரை விடுவிக்க அரசியல் கட்சியினர் முயன்றதும் வரலாறு.

கேரள அரசியியலில் இரு துருவங்களாகக் செயல்படுபவை மார்ச்சிஸ்ட்டு தலைமையிலான இடது சாரி சனநாயக முன்னணி (லெப்ட் டெமாக்ரடிக் ப்ரண்ட் - எல்.டி.எப்) மற்றும் காங்கிரசு தலையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யூனியன் டெமாக்ரடிக் ப்ரன்ட் - யூ.டி.எப்). 2011-ல் வென்றது யூ.டி.எப். 2016-ல் வென்று ஆட்சியமைத்தது எல்.டி.எ.ப்.

கடந்த சில பத்தாண்டுகளாக மாறி மாறி ஆட்சிக்கு வரும் கேரள இடதுசாரி சனநாயக முன்னணியில் இடம் பெற்ற கூட்டணிக் கட்சிகளாக, கொடியேரி பாலகிருஷ்ணன் தலைமையிலான இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்ச்சிஸ்ட்) இந்திய பொதுவுடமைக் கட்சி, மதசார்பற்ற ஜனதா தளம், தேசியவாத காங்கிரசு கட்சி, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி (லெனினிஸ்ட்), கேரள காங்கிரசு (சக்கரிய தாமசு), காங்கிரசு (எஸ்), இந்திய தேசிய லீக், கம்யூனிஸ்ட் மார்ச்சிஸ்ட் கட்சி, கேரள காங்கிரசு (பி). பெற்ற இடங்கள் தொன்னூற்று ஒன்று.

ஐக்கிய சனநாயக முன்னணியில் இடம் பெற்ற கூட்டணிக் கட்சிகள் ரமேஷ் சென்னிதலா தலைமையிலான காங்கிரசு, இந்திய ஒன்றிய முஸ்லிம் லீக், கேரள காங்கிரசு (எம்), ஐக்கிய ஜனதா தளம், புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி - ஏ.ஏ.அசிஸ், கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி-சி.பி ஜான், கேரள காங்கிரசு (ஜேக்கப்). பெற்ற தொகுதிகள் நாற்பத்தி ஏழு.

2016 தேர்தலில், பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணியில் பாரத தர்ம சன சேனை, கேரள காங்கிரசு (தேசியம்), கேரள காங்கிரசு (தாமஸ்), சனாதிபத்திய (சனநாயக) சம்ரக்சன சமிதி (ராஜன் பாபு), சனாதிபத்திய ராஷ்ட்ரிய சபா, லோக் சனசக்தி (ஜே.பி), கேரள விகாஸ் காங்கிரசு, பிராஜா சோசியலிஸ்ட் கட்சி, சோசியலிஸ்ட் ஜனதா பார்ட்டி, பிரவசி நிவாசிகட்சி போன்றவை இணைந்து போட்டியிட்டு ஒரு தொகுதியில் வென்றிருக்கின்றன.

நூற்று நாற்பது உறுப்பினர்கள் கொண்ட கேரள சட்டசபைக்கு 2016 மே -பதினாறில் நடந்த தேர்தலில் 77.35 சதவித வாக்குகள் பதிவாகியிருக்கின்றன. மூன்று முக்கியமான கூட்டணிகள் தவிர, அவர்களை ஆதரித்த கட்சிகளும், அ.தி.மு.க, பகுஜன் சாமஜ், ஆம் ஆத்மி, சிவ சேனா உட்பட தனித்து நின்ற பல்வேறு

கட்சிகளும் போட்டியிட்டிருக்கின்றன. திருவனந்தபுரம் மாவட்டம் நேமம் தொகுதியில் வென்று முதன் முறையாக கேரள சட்டமன்றத்துக்குள் நுழைந்துள்ள பாரதீய ஜனதா கட்சி, மாநிலத்தின் மூன்றாவது பெரிய கட்சியாக (21,29,726 ஓட்டுக்கள்) (10.58%) வளர்ந்துள்ளது. நேமம் தொகுதியில் வென்ற மருத்துவர் ராஜசேகர் மத்திய இணை அமைச்சர் உட்பட பல்வேறு பதவிகளை வகித்திருக்கிறார்.

கோடானகோடி இந்திய உள்ளங்களைக் கவர்ந்த உலகப் புகழ் பெற்ற ஓவியர் ராஜா ரவிவர்மா (1848-1906), கிளிமானூர் எனும் ஊரில் பிறந்தவர். சமஸ்கிருதம், மலையாளம், ஓவியம் வரைதல் போன்றவற்றை உறவினர் ராஜா வர்மாவிடம் கற்ற ரவிவர்மா, ஆயில்யம் திருநாள் மன்னரின் நன்மதிப்பைப் பெற்றவராகவும் இருந்திருக்கிறார். இந்தியப் புராணங்களுக்கு முகம் கொடுத்தவராகப் புகழப்படும் ரவிவர்மா, கிளியனூரிலும் பின்னர் பரோடா சமஸ்தானத்திலும் தங்கி ஏராளமான உயிர்ப்புள்ள ஓவியங்களை வரைந்தவராகவும் அறியப்படுகிறார்.

நவீன இந்திய ஓவியத்தின் முகமாகக் கூறப்படும் ரவிவர்மா, சகுந்தலை தமயந்தி, இராமாயணம், மகாபாரதம், கடவுளர் ஓவியங்கள் என காலத்தால் அழியாப் புகழுடைய உருவச் சித்திரங்களை நித்திய அழகுள்ள கலைப்படைப்புகளை தோற்றுவித்தவராகப் பாராட்டப்படுகிறார்.

எண்ணெய் சித்திர முறைமை அதாவது ஆயில் பெயிண்டிங் பற்றி தெரிந்துகொள்ள கடுமையாக முயன்றவராக திரு.ரவி வர்மா குறிப்பிடப்படுகிறார். திருவிதாங்கூர் அரச மரபோடு தொடர்புடையவராகவும், எழுநூறுக்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்திருப்பவராகவும் அறியப்படும் ரவி வர்மா, இந்திய ஓவியக்கலைக்கு புத்துயிர் கொடுத்தவரெனில் மிகையாகாது.

இந்திய சனநாயக முறைமையில், முதன் முதலாக வாக்களித்த குடியரசுத் தலைவர் எனும் பெருமைக்குரியவர் நாட்டின் பத்தாவது குடியரசுத் தலைவராக இருந்த திரு.கே.ஆர் நாராயணன். 1992 முதல் 1997 வரை துணைக் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்த கொச்செரில் ராமன் நாராயணன் (1921-2005), கோட்டயம் மாவட்டம் உழவூரில் கொச்செரில் ராமன் வைத்தியருக்கும் புன்னத்துறவீட்டில் பாப்பியம்மாவுக்கும் நான்காவதாக மகனாகப் பிறந்திருக்கிறார்.

அன்றைய திருவாங்கூர் பல்கலையில் ஏம்.ஏ. ஆங்கில இலக்கியத்தில் முதல் மாணவராகத் தேறிய நாராயணன், தி இந்து, டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்களில் பணியாற்றி, பின் டாட்டா நிதியுதவியில் லண்டன் சென்று பொருளாதாரம் பயின்றிருக்கிறார்.

1948 இல் இந்தியா திரும்பிய நாராயணன், லண்டன் பொருளாதாரப் பள்ளியின் பேராசிரியரும் புகழ்பெற்ற அறிஞருமான திரு. ஹரால்டு லஷ்கியின் பரிந்துரைக் கடித்ததோடு நேருவைக் சந்தித்ததாகவும். பின்னர் நேருவின் பரிந்துரையில் இந்திய அயலகப் பணியில் இணைந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஜப்பான், இங்கிலாந்து, தாய்லாந்து, துருக்கி, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் இந்தியத் தூதரக அதிகாரியாகப் பணியாற்றிய நாராயணன், நாட்டின் மிகச் சிறந்த அரசியல் நிபுணர் என நேருவிடம் பாராட்டுப் பெற்றவராக அறியப்படுகிறார். சீனப் போருக்குப் பின் சீர் கெட்டிருந்த இந்திய - சீன உறவை ஓரளவிற்குச் செம்மையாக்கியதில் நாராயணனின் பங்கு அளப்பரியதாகக் கருதப்படுகிறது.

இரங்கூனில் பணியாற்றிய போது மா டின்ட் டின்ட் என்பவரோடு காதல் மலர்ந்து, நேருவின் ஆலோசனையின் பேரில் டின்ட் அம்மையார், உஷா நாராயணனாகி 1951 இல் திருமணம் நடைபெற்றிருக்கிறது.

ஓய்விற்குப்பின் (1978) ஜவகர்லால் நேரு பல்கலையின் துணை வேந்தராகப் பணியாற்றிய திரு. நாராயணனை, அமெரிக்காவுக்கான இந்தியத் தூதரக (1980-84) இந்திராகாந்தி அம்மையார் மறுபடியும் பணியமர்த்தியிருக்கிறார். பணிக்காலத்தில் அமெரிக்க இந்தியா உறவில் நல்ல முன்னேற்றம் மலரச் செய்தவரான நாராயணன் பின்பு இந்திராவின் ஆலோசனையின் பேரில் ஓடப்பள்ளம் (பாலக்காடு) மக்களவைத் தொகுதியிலிருந்து 1984, 89, 91 ஆம் ஆண்டுகளில் காங்கிரசு சார்பில் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றப் பணிகளைச் சிறப்பித்திருக்கிறார். ராஜிவ் காந்தி காலத்தில் திட்டம் (1985), வெளியுறவுத் துறை (1985-86), அறிவியல் தொழில் நுட்பம் (1986-89) போன்ற துறைகளில் இணை அமைச்சராகப் பதவி வகித்த நாராயணன் அவர்கள், வி.பி.சிங் அவர்களின் முயற்சியில் துணைக்குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

சிறந்த குடியரசுத் தலைவராகப் பணியாற்றியதாகப் புகழப்படும் திரு.கே.ஆர் நாராயணன், அவரது பதவிக் காலத்தில் உச்சபட்ச அரசியல் கொந்தளிப்புகளைச் சந்தித்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். நடுநிலையோடும், சுதந்திரமாகவும், திடமாகவும், குடியரசுத் தலைவர் பதவியை அலங்கரித்த திரு. நாராயணன், அரசியலமைப்பின் நான்கு சுவர்களுக்குள் நின்று செயல்பட்ட சனாதிபதியாக அறிவித்துக் கொண்டவராகவும் கூறப்படுகிறார். முப்படைகளின் தலைவராக இருந்து கார்கில் (1999) வெற்றியைக் கண்டவரான திரு. நாராயணன், குடிசையிலிருந்து இந்தியாவின் முதல் குடிமகனாக உயர்ந்த கோமான் எனில் மிகையாகாது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழு கூட்டத்தில், காஷ்மீர் பிரச்சினை தொடர்பான சுமார் எட்டு மணி நேரம் முழுங்கியவரான வெங்காலில் கிருஷ்ண கிருஷ்ண மேனன் எனும் வி.கே.கிருஷ்ணமேனன் (1896-1974). இந்தியாவின் காஷ்மீர் உரிமையைத் தெள்ளத் தெளிவாக விளக்கி, காஷ்மீர் நாயகன் எனும் புகழுக்குரியவரானதாகக் குறிப்பிடப்படுகிறது.

சென்னை சட்டக் கல்லூரியில் படித்த போது அன்னி பெசன்ட் அம்மையாரின் அன்பைப் பெற்று, அவரது ஆதரவில் 1924-ல் லண்டனுக்கு கல்வி கற்கச் சென்றிருக்கிறார். லண்டன் பல்கலையின் பொருளாதாரப் துறையில் பயின்ற மேனன், லண்டனிலிருந்த இந்தியன் லீகின் துடிப்பான பேச்சாளராக செயல்பட்டிருக்கிறார். கே.ஆர் நாராயணன் போன்றோரும் மேனனோடு இணைந்து இந்தியாவின் சுதந்திரத்திற்கு இங்கிலாந்து மக்களிடையே ஆதரவு திரட்டியிருக்கின்றனர். நேருவைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்ற மேனன், 1947 முதல் 1952 வரை இங்கிலாந்து தூதராகப் பணியாற்றியிருக்கிறார்.

அசகாய சூரராகவும், அறிவுக்கூர்மை, மனவுறுதி மிகுந்தவராகவும், கடும் உழைப்பாளியாகவும், அதிரடி நடவடிக்கைகளுக்குப் பெயர் பெற்றவராகவும், கண்டிப்பானவராகவும் குறிப்பிடப்படும் திரு.வி.கே.கே மேனன், மேற்கத்திய உலகில் இந்தியாவின் இரண்டாவது வலிமையான மனிதர் என டைம்ஸ் பத்திரிக்கை எழுதும் அளவிற்கு பெயர் பெற்றிருந்த மேனன், பண்டித நேருவின் வலதுகரமாகச் செயல்பட்டவராகக் கருதப்படுகிறார்,

1949 முதல் 1962 வரை ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியப் பிரதிநியாகச் செயல்பட்ட கிருஷ்ணா மேனன் ராஜதந்திரியாக, சாதுர்யமாக செயல்பட்டவராகப்

புகழப்படுகிறார். நேருவின் பல்வேறு அரசியில் நிலைப்பாடுகளிலும் துணை நின்றவராகக் கூறப்படும் மேனன், அணி சேராக் கொள்கை, சீனாவை ஐ,நா.வில் சேர்க்க ஆதரித்தமை, சூயசு கால்வாய் பிரச்சனை, கோவா மீட்பு, இந்திய-சீனா போர் என ஏராளமான கொள்கை முடிவுகளில் ஆதிக்கம் செலுத்தியவராகவும் பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றி (1957-1962), நவீன இந்திய இராணுத்தைக் கட்டமைக்க முயற்சி மேற்கொண்டவராகவும் குறிப்பிடப்படுகிறார். சைனிக் பள்ளிகளைத் தோற்றுவிக்க மூளையாகச் செயல்பட்டவரான திரு. மேனன், இந்திராவால் எரிமலை எனவும், கே.ஆர். நாராயணனால் சாணக்யர் எனவும் புகழப் பெற்றிருக்கிறார்.

படிப்பில் நாட்டம் கொண்டவர்களாகக் குறிப்பிடப்படும் மலையாள தேசத்தவர்கள், சாதுர்யம் நிறைந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது. சுதந்திர இந்தியாவிற்கு முன்பிருந்தே டெல்லியில் லாபி செய்வதில் அதாவது அரசியல் காய் நகர்த்தல்களில் வல்லவர்களாகக் குறிப்பிடப்படும் மலையாளிகள், ஆட்சியதிகாரம், நிர்வாகம் போன்றவற்றில் சாமர்த்தியம் நிரம்மியவர்களாகவும் அறியப்படுகின்றனர். வி.கே மேனன், பி.சி. அலெக்சாந்தர் என நீளும் பட்டியலில், சமீபத்தில் ஓடப்பள்ளத்தில் பிறந்த மயன்கோட்டில் கேலத் நாராயணன் எனும் எம்.கே நாராயணன், ஓய்வுக்குப் பின்னரும் பிரதமரின் உள்நாட்டுப் பாதுகாப்பு சிறப்பு ஆலோசகர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எனும் பதவிகளில் அமர்ந்து இந்திய - அமெரிக்க அணு ஒப்பந்தம் போன்ற முக்கியமான கொள்கை முடிவுகளில் பெரும் பங்காற்றியவராகவும், அரசியல் சாதுர்யம் நிறைந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

சுதந்திர இந்தியாவின் இந்திய ஆட்சிப் பணி தேர்வில் முதன் முறையாக வென்ற பெண்மணியாகவும், இந்திய அயலகப் பணித் தேர்வில் வெற்றிபெற முதலாவது பெண்ணாகவும் சிறப்பிக்கப்படும் கொனிர பெல்லியம்ப முத்தம்மாள் எனும் சி.பி முத்தம்மா அவர்கள் தொடர்ந்த வழக்கில், இந்திய அயலகப் பணியில் பணிபுரியும் பெண்கள் திருமணம் புரிய இந்திய அரசின் அனுமதி தேவை இல்லை என்றும், பணிகளில் ஆண், பெண் தொடர்பான பழைய சட்டமுறைகளை நீக்க வேண்டும் எனவும் 1979-ல் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கிய இந்திய உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு.வி.ஆர். கிருஷ்ண அய்யர் (1915-2014), இந்தியாவின் தலைசிறந்த நீதிபதிகளுள் ஒருவராகப் பாராட்டப்படுகிறார்.

இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தை சீர்சிருத்தம் செய்தவராவும், சமூக நிதி, மனித உரிமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் மூப்பராகவும் கருதப்படும் பாலகாடு கிருஷ்ண அய்யர், முதலாவது இ.எம்.எஸ் அரசில் சட்டத்துறை அமைச்சராகச் செயல்பட்டவராகவும், பின்னர் 1968 இல் கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், 1971-73 இல் சட்ட ஆணையத்தின் உறுப்பினராக இருந்து சட்ட உதவி தொடர்பான கருத்துக்களை வடித்தவராகவும், பின்னர் 1973 இல் உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவி வகித்தவராகவும் அறியப்படுகிறார். நீதி மன்றமும் சாமான்ய மனிதனும் எனும் தமிழ் புத்தகம் உட்பட சட்டம் தொடர்பான ஏராளமான நூல்களை எழுதியவராக அறியப்படும் வைத்ததியநாதபுரம் ராமகிருஷ்ண அய்யர், 1987-ல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில், ஆர். வெங்கட்ராமனை எதிர்த்துப் போட்டியிட்டிருக்கிறார்.

திரு.கே.ஆர்.நாராயணின் பள்ளித் தோழராகவும் வைக்கம் முன்சீப் கோர்டில் எழுத்தாளராகவும் பணிபுரிந்த திரு. கோபிநாதனின் மகனான கொனக்குப்பக் காட்டில் கோபிநாதன் பாலகிருஷ்ணன், உச்ச நீதி மன்றத்தின் 37வது தலைமை நீதிபதியாகப் பணியாற்றியவராக அறியப்படுகிறார். மூன்று வருடங்களுக்கும் மேல் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய திரு.கே.ஜி. பாலகிருஷ்ணன். தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவராகவும் பணியாற்றுகிறார்.

இந்திய உச்சநீதிமன்றத்தின் முதலாவது பெண் நீதிபதியாகப் பெறுப்பேற்றவர் செல்வி. பாத்திமா பீவி. கேரள உயர்நீதி மன்ற நீதிபதியாகப் பணிபுரிந்து 1989-ல் ஓய்வுபெற்ற பீவி அவர்கள், ராஜிவ் காந்தியின் முயற்சியில் உச்சநீதி மன்ற நீதிபதியாக பணியமர்த்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஏராளமான மூத்த நீதிபதிகள் இருந்தும், இசுலாமிய பெண்கள் சட்டம் (விவாகரத்து பாதுகாப்புச் சட்டம்) இயற்றப்பட்டதால் உண்டான நெருக்கடியைச் சமாளிக்க, பாத்திமா பீவி அவர்களை உச்சநீதிமன்ற நீதிபதியாக ஆக்கியதாகக் கூறப்படுகிறது. 1992 வரை அப்பதவியில் இருந்த பீவி, பின் 1997 முதல் 2001 வரை தமிழக ஆளுநராகவும் பதவி வகித்தார்.

இந்திராகாந்திக்கு முதன்மைச் செயலாளராகவும், அவரது நிழல் போன்றவராகவும், அரசியல் அலோசகராகவும் குறிப்பிடப்படும் பாண்டியன் சரிதலக்கல் செரியன் அலெக்சாந்தர் (1921-2011). 1988 முதல் 1990 வரை தமிழக ஆளுநராகப் பணிபுரிந்துள்ளார். ஐ.நா.வில் பணியாற்றிக் கொண்டிருந்த

அலெக்சாந்தர், இந்திரா காந்தியால் விருப்பப்பட்டு டெல்லி அரசியலுக்குள் கொண்டுவிடப்பட்டவராக கூறப்படுகிறார். காந்தி அம்மையாரின் மறைவுக்குப் பின் இங்கிலாந்தின் தூதரக அதிகாரி (1985- 87), மகாராட்டிர ஆளுநர் (1993-2002), பாராளுமன்ற மேலவை உறுப்பினர் (2002-2008) போன்ற பொறுப்புகளில் இருந்த திரு. பி.சி. அலெக்சாந்தர் எழுதிய இந்திரா காந்தியுடனான எமது வருடங்கள் (மை இயர்ஸ் வித் இந்திரா காந்தி) எனும் புத்தகம், அவர் காலத்திய அரசியல் வரலாற்றுப் பதிவுகளாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவின் பால்காரர் அதாவது தூத்வாலா என்றும் வெண்மைப்புரட்சியின் தந்தை என்றும் புகழப்படும் திரு.வர்கீஸ் குரியன் (1921-2012), மதிப்பு மிக்க அமுல் நிறுவனத்தை உருவாக்கியவராக அறியப்படுகிறார். இந்தியாவின் வெண்மைப் புரச்சிக்கு வித்திட்ட இடமாக குசராத்தின் அமுல் நகரம் பாராட்டப்படுகிறது. ஆனந்த் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (ஆனந்த மில்க் புரடியூசர்ஸ் லிமிடெட்) என்பதே 1946 இல் அமுலாகி, தற்போது இருபத்தி எட்டு லட்சம் பால் உற்பத்தியாளர்களை உள்ளடக்கிய விலை மதிப்பற்ற கூட்டுறவு நிறுவனமாக குரியன் அவர்களது கடும் உழைப்பில் உருவாகியிருக்கிறது. பால் கொள்முதல், பதப்படுத்தல், குளிரூட்டல் மற்றும் விற்பனை ஆகிய பணிகளைச் செய்யும் அமுல் நிறுவனத்தை முன்மாதிரியாகக் கொண்டு, ஆவின் தூத்சாகர், மில்மா போன்ற எண்ணற்ற நிறுவனங்கள் உருவாகியிருக்கின்றன.

அமுல் வெற்றியைத் தொடர்ந்து தேசிய பால் பண்ணை மேம்பாட்டு அமைப்பு செயல்படுத்திய மில்மா எனப்படும் கேரள மாநிலக் கூட்டறவு பால் விற்பனைக் கூட்டமைப்பு 1980-ல் ஆரம்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. மில்மா திட்டத்தில் கறவைமாடுகள் சுனந்தினி எனப்படும் கலப்பினப் பசுக்களாக மாற்றப்பட்டு பால் உற்பத்தி பத்துமடங்காக உயர்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கோழிக்கோட்டில் பிறந்து இயற்பியல், இயந்திரவியல் பொறியியல் பட்டம் வென்ற டாக்டர்.குரியன் பால்பண்ணை மேம்பாட்டிற்காக ராமன் மாக்சேசே, பத்ம விபூசன்உட்பட ஏராளமான விருதுகளைப் பெற்றவராகச் சிறப்பிக்கப்படுகிறார்.

லட்சக்கணக்கான ஏழை மக்களின் ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, அவர்களை சமுதாயத்தின் ஆக்கதிறன் படைத்த அங்கத்தினர்களாக மாற்ற வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என ரத்தன் டாடாவால்

பாராட்டப்பட்ட டாக்டர் வர்கீசுவின் புகழ்பெற்ற வாசகம், எமக்குமொரு கனவு இருந்தது. அந்தக் கனவு அவர் ஒருவரது கனவல்ல, பல்லாயிரம் எளிய மக்களின் கனவென்பதே சாலப் பொருத்தம்.

ஜாம்ஷெட்பூர் டாட்டா ஆலையில் சில காலம் பணியாற்றிய குரியன், அவரது மாமாவான ஜான் மாத்தாயின் சிபாரிசின் பேரில் அந்த வேலை கிடைத்ததை அறிந்து, உடனே வேலையை விட்டு விலகியதாகக் கூறப்படுகிறது. ஜான் மாத்தாய் (1886-1959), பொருளாதார அறிஞராகவும், சுதந்திர இந்தியாவின் முதல் இரும்புவழி வரவு செலவு கணக்கை அதாவது இரயில்வே பட்ஜெட்டை தாக்கல் செய்தவராகவும், பின்னர் நிதியமைச்சராக இருந்தவராகவும் (1949) அறியப்படுகிறார்.

1922-1925 ஆண்டு வரை சென்னைப் பல்கலையில் பொருளாதாரத் துறையின் தலைவராக பணியாற்றிய திரு. ஜான் மாத்தாய், நிதித்துறையில் மகலனோபிஸ் அவர்களின் தாக்கம் அதிகமாக இருப்பதாகக் கூறி, நிதியமைச்சர் பதவியை விட்டு விலகியதாகக் கூறப்படுகிறது. 1955 இல் உருவாக்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கியின் (எஸ்.பி.ஐ) தலைவராக இருந்த மாத்தாய், கேரளப் பல்கலையின் துணை வேந்தராக (1957-59) இருந்திருக்கிறார்.

சுதந்திர போராட்ட வீராங்கனையான அக்கம்மா செரியன் (1909-1982), திருவாங்கூரின் ஜான்சிராணி என காந்தியால் புகழப்பட்டிருக்கிறார். 1938-ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெறுவதற்காக ஆசிரியர் வேலையை உதறித் தள்ளிய அக்கம்மா, திருவாங்கூர் சமஸ்தானத்தில் தடை செய்யப்பட்டிருந்த காங்கிரசுக்கான தடையை விலக்கச் சொல்லி, மகாராஜா அரண்மணையை நோக்கி மாபெரும் பேரணி நடத்தியவராகக் கூறப்படுகிறார். காங்கிரசின் தலைவராக இருந்த பட்டம் தாணுப்பிள்ளை உட்பட பதினோரு முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டும், மிகத் தைரியத்துடன் அக்கம்மா தலைமையில் ஊர்வலம் நடந்திருக்கிறது. திவானால் சுடும் உத்தரவு பெற்ற படையினரிடம் தலைவரான தம்மை முதலில் சுடுமாறு முழங்கிய அக்கம்மா செரியனின் வீரம் வெகுவாகப் பாராட்டப்பெற்றிருக்கிறது. சுதந்திர இந்தியாவின் முதலாவது கேரள சட்டசபை காங்கிரசு உறுப்பினரான திருமதி. செரியன், பின்னர் சுதந்திர போராட்ட வீரர்களின் ஓய்வூதிய ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்ததாகவும் அறியப்படுகிறது.

கேரள அரசியலில் பீஷ்மாச்சாரியாராகப் புகழப்படுபவர் பட்டம்.ஏ. தாணுப்பிள்ளை (1885-1970). வரதராச அய்யர் மற்றும் ஈசுவரியம்மாளின் மகனான தாணுப்பிள்ளை, திருவிதாங்கூர் சமஸ்தான், திருவதாங்கூர் - கொச்சி, கேரள மாநிலம் என கேரளத்தின் வரலாற்றோடு பயணப்பட்டவராகவும், காங்கிரசு, பிரஜா சோசியலிஸ்ட் கட்சி என கேரள அரசியலில் சாதுர்யமாகக் செயல்பட்டவராகவும் குறிப்பிடப்படுகின்றார். சுதந்திர திருவிதாங்கூர் முதல் முக்கிய மந்திரி (1947-48 பிரைம் மினிஸ்டர்), திருவிதாங்கூர்-கொச்சியின் நான்காவது முதலமைச்சர் (1954-55), கேரள மாநிலத்தின் இரண்டாவது முதலமைச்சர் (1960-1962), பஞ்சாப் ஆளுநர் (1962-64), ஆந்திர ஆளுநர் (1964-68) என பல்வேறு பதவிகளை வகித்திருக்கிறார்.

1956 மார்ச், 23 வரை திருவாங்கூர் - கொச்சியின் முதல்வராகப் பதவியிலிருந்த போதும், பின்னர் 1957 ஏப்ரல் 5 வரை குடியரசுத் தலைவர் ஆட்சியின் போதும் தாணுப்பிள்ளை கேரள மாநில உருவாக்கத்திற்கு ஆதரவாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார். மாநில மறுசீரமைப்புக் குழுவில் (1953) சையத் பசல் அலி, பண்டிட் எச்.என் குன்ஸ்ரு மற்றும் கே.எம் பணிக்கர் இடம் பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மொழியை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்ட மொழிவாரி மாநிலக் கொள்கையில், மொழியோடு பூகோள, சரித்திர, நிர்வாக, பொருளாதாரக் காரணங்களும் கொண்டே மாநிலப் பிரிவினை நிகழ வேண்டுமென கேரளம் சாதித்திருக்கிறது. திருவாங்கூர் - கொச்சி ராஜ்யத்திலுள்ள சித்தூர், தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை, நெய்யாற்றின் கரை, விளவங்கோடு, கல்குளம், அகஸ்தீசுவரம் மற்றும் தோவாளை ஆகிய ஒன்பது மாவட்டங்களை சென்னை மாகாணத்தோடு சேர்க்க வெண்டுமென தமிழகமும், ஒன்பது மாவட்டங்களையும் கேரள மாநிலத்தோடு சேர்ப்பதோடல்லாமல் கோவை மாவட்டத்தின் மேற்குப் பகுதியான கூடலூர், ஊட்டி போன்றவற்றையும் ஐக்கிய கேரளத்துடன் இணைக்க வேண்டுமென கேரளமும் சாதித்திருக்கின்றன. இந்தியாவெங்கும் மொழிவாரி மாநிலப் பிரிவினை எல்லைகள் தற்போது வரை தீர்ந்தபாடில்லை. மாநில எல்லை பிரச்சனைகளுக்கு, எந்தமொழி பேசுவோர் அதிகம் வசிக்கிறார்களோ, அந்தப் பகுதிகள் எல்லாம் அந்த மொழிக்கான மாநிலத்துடன் இணைக்கப்படும் என்ற விதி முறையாக அமல்படுத்தப்படாததே காரணமாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் குறிப்பிடத்தக்க வரலாற்று அறிஞராகவும், சிறந்த நிர்வாகியாகவும், சீனா , எகிப்து பிரான்சு போன்ற நாடுகளின் வெளிநாட்டுத் தூதராகவும் பணியாற்றிய கவலம் மாதவ பணிக்கர் (1895-1963), புகழ்பெற்ற பாடலாசிரியர் மற்றும் நாடக ஆசிரியரான கவலம் நாராயண பணிக்கரின் தாய்மாமாவாகக் குறிப்பிடப்படுகிறார். ஆக்ஸ்போர்டில் வரலாறு பயின்ற பணிக்கர், 1914 போர்ச்சுக்கல் மற்றும் ஹாலந்து போன்ற நாடுகளுக்குச் சென்று, மலபாரோடு அந்நாட்டவர் உறவு குறித்தான ஆராய்ச்சிகள் செய்தவராகவும் அறியப்படுகிறார்.

இந்தியா திருப்பிய கே.எம் பணிக்கர், அலிகார் முஸ்லிம் பல்கலையிலும் பின்னர் கல்கத்தா பல்கலையிலும் கற்றுக் கொடுத்திருக்கிறார். 1925 இல் டைம்ஸ் ஆப் இந்தியா பதிப்பாசிரியராக இருந்த பணிக்கர், பின்பு பட்டியாலா, பைகானிர் சமஸ்தானங்களின் வெளியுறவு அமைச்சராகவும் பணியாற்றியிருக்கிறார்.

மலையாள இலக்கியத்தின் மீது அளப்பரிய பற்றும், வள்ளத்தோள் கவியோடு ஆழ்ந்த நட்பும் கொண்டிருந்தவராகக் கூறப்படும் பணிக்கர், கேரள சாகித்ய அகாதமியின் முதல் தலைவராகவும் இருந்திருக்கிறார். மலையாளம் மற்றும் ஆங்கிலத்தில் ஏராளமான நூல்களை எழுதியுள்ள பணிக்கர், ஏராளமான கட்டுரைகளும் வெளியிட்டிருக்கிறார். சீனாவில் கம்யூனிட்ஸ்டுகள் ஆட்சிக்கு வந்த காலத்தில் அங்கிருந்த பணிக்கர், 1955-ல் வெளியிட்ட இரு சீனாக்களில் (இன் டூ சீனாஸ்) புகழ் பெற்ற படைப்பாகக் குறிப்பிடப்படுகிறது. ஆசியாவும் மேலைநாடுகளின் ஆத்திகமும் (1953) எனும் படைப்பு, பணிக்கரின் அறிவுக்கும் உழைப்பிற்கும் சான்றாகப் புகழப்படுகிறது. இந்தியாவில் கல்வி மறுகட்டமைப்பிற்கான கடிதங்கள் (1920), இந்திய மாநிலங்கள் மற்றும் இந்திய அரசு (1932), இந்துத்துவம் மற்றும் நவீன உலகம் (1938), வரலாற்றுக் காலங்களில் இந்தியா (1947), இந்தியாவின் வரலாறு ஒரு ஆய்வு (1954,) கேரள வரலாறு 1498-1801 (1960), இந்தியர் வாழ்க்கையில் இமயமலை (1963), இருபதாம் நூற்றாண்டு (1986), உட்பட பணிக்கரின் ஐம்பதிற்கும் மேற்பட்ட புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அறிஞராகவும் எழுத்தாளராகவும் அறியப்படும் வெட்டம் மணி (1921-1987), மலையாளத்தில் தொகுத்த புராண கலைக்களஞ்சியம் மிகவும் புகழ்பெற்றதாகக் கூறப்படுகிறது. பன்மொழி அறிஞராகவும் செவ்விலக்கியங்களில் தேர்ந்தவராகவும் அறியப்படும் திரு. வெட்டம் மணி, மிகக் கடுமையாக பல ஆண்டுகள் உழைத்து

புராண அகராதியை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. கவிதை, கதை, நூல்கள் என எழுதிய வெட்டம் மாணி, நல்ல பாடகராகவும், கதாபிரசங்கியாகவும் இருந்ததோடு, சிறந்த ஆசிரியர் எனப் பெயரெடுத்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். காந்தி பற்றி குழந்தைகளின் காந்தி எனும் நூலையையும் எழுதியுள்ள மாணி, மத பக்தி கொண்ட சிரியன் கிறித்துவராகக் கூறப்படுகிறார்.

அரசியலில் சிறந்து விளங்கிய மலையாளிகள், விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகள் படைத்திருக்கிறார்கள். குறிப்பாக கால்பந்து விளையாட்டில் கேரள தேசம் புகழ்பெற்றதாக விளங்குவது சிறப்பு. தடகளத்திலும் கேரளத்தவரின் சாதனைகள் சிறப்பானவை.

ஓட்டத்திற்குப் பெயர் பெற்ற கலோ ஹரின் (பிளாக் பக் - இந்தியன் ஆன்டிலோப்) எனும் மானின் பெயரால் செல்லமாக அழைக்கப்படும் திரு. இனிவள்ளப்பில் மணி விஜயன், இந்தியாவின் சிறந்த கால்பந்தாட்ட முன்கள வீரராகப் புகழப்படுகிறார். திருச்சூர் நகராட்சி விளையாட்டரங்கில் சோடா விற்பவராக இருந்து, பின்னர் கேரள காவல் துறை அணிக்காக விளையாடி, இந்தியாவின் மதிப்புமிக்க கால்பந்தாட்டக்காரராக மாறிய ஐ.எம் விசயன், 1999-ல் நடைபெற்ற பூடானுக்கெதிரான ஆட்டத்தில் பன்னிரெண்டு நொடிகளில் கோல் அடித்தவராகக் குறிப்பிடப்படுகிறார். பன்னாட்டு அளவில் 79 ஆட்டங்களில் 40 கோல்கள் அடித்த விஜயன், ஓய்விற்குப் பின்னர் கால்பந்தாட்ட பயிற்சி மையம் மூலம் இளையவர்களுக்கு பயிற்சி அளித்து வருவதாகக் கூறப்படுகிறது.

பய்யோலி எக்சுபிரசு எனக் குறிப்பிடப்படும் தங்க மங்கை பி.டி.உஷா, தடகள விளையாட்டில் இந்தியாவின் மதிப்பை உயர்த்தியவராகப் புகழப்படுகிறார். ஓட்டப்பந்தயத்தில் மாபெரும் சாதனைகள் நிகழ்த்திய பிலாவுள்ளகண்டி தெக்கப்பரம்பில் உஷா, துரோணாச்சாரியார் விருதுபெற்ற தடகள பயிற்சியாளர் ஒ.எம் நம்பியார் மூலம் பயிற்றுவிக்கப்பட்டு, 1980 மாஸ்கோ ஒலிம்பிக்கில் பங்கேற்று தகுதிச் சுற்றில் 100 மீட்டர் ஓட்டத்தை 12.27 நொடிகளில் கடந்திருக்கிறார். 1982 ஆசிய விளையாட்டில் 100 மீட்டரை 11.67 நொடிகளில் கடந்து வெள்ளிப் பதக்கம் வென்ற உஷா , 1983 ஆசிய கோப்பை விளையாட்டில் 400 மீட்டர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றார். 1984 லாஸ் ரஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் நான்காவதாக வந்து நூலிழையில் பதக்க வாய்ப்பை நழுவ விட்டவர், 1985-ஆசியப் போட்டியில் 200 மீ, 400 மீ தடை ஓட்டம், 400 மீ தொடர் ஓட்டங்களில் தங்கப்

பதக்கமும், 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலமும் வென்றிருக்கிறார். ஆசிய விளையாட்டுகள், ஆசியக் கோப்பை, உலகக் கோப்பை, ஒலிம்பிக் என 1980 முதல் 1998 வரை தொடர்ந்து நூற்றி ஒரு பன்னாட்டு பதக்கங்கள் வாங்கியவரான திருமதி உஷா, ஓய்விற்குப்பின் தடகள பயிற்சிப் பள்ளி தொடங்கி பயிற்சியளித்து வருவது பாராட்டத் தக்கது.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற முதல் மலையாளியாக திரு. செருவாரி கோட்டியத் லட்சுமணன் (1898-1872) குறிப்பிடப்படுகிறார். 1924 பாரிசு ஒலிம்பிக்கில் பிரித்தானிய இந்திய சார்பாகக் கலந்து கொண்ட எட்டுப் பேரில், திரு.லட்சுமணன் 100மீ. தடை ஓட்டத்தில் பங்கு கொண்டதாகக் கூறப்படுகிறது. 1940-50களில் கால்பந்தில் சிறந்த தடுப்பாட்டக்காரராக அறியப்படும் தென்மாடம் வர்கீசு 1948 கோடை ஒலிம்பிக்கில் இந்திய கால்பந்து அணியின் கேப்டனாகப் பங்கேற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. அணியில் பங்கு பெற்ற மற்ற வீரர்கள் உசில், வரதராஜ், மண்ணா, மொகம்மது, பஷீர், கெயிசர், நந்தி, பிரசாத், வஜ்ரவேலு, தாஸ், தன்ராஜ், கான், மெவலால், எஸ். நந்தி, பரப், ராமன் உள்ளிட்டோர். அணியின் பயிற்சியாளர் சட்டர்ஜி.

1956 ஒலிம்பிக் கால்பந்து விளையாட்டில் அரையிறுதி வரை சென்ற இந்திய அணியில் விளையாடியவராக தலத்தேரி அப்துல் ரகுமான் (1934-2002) அறியப்படுகிறார். ஹாக்கியில் மானுவேல், ப்ரடெரிக், நீளம் தாண்டுதல் சுரேஷ் பாபு, யோகன்னன், தடகளம் ஷைனி வில்சன், வலசம்மா, மாத்தேயு குட்டன், பீனாமோள், பினு, அஞ்சு பாப்பி ஜார்ஜ், டின்டுலூகா என கேரள மண்ணில் விளையாட்டில் தடம் பதித்தோர் பட்டியல் வளர்ந்து கொண்டே செல்கிறது.

புத்தாண்டை ஷோ.ூபார் எனும் ஊதுகுழலை நூற்றியொருமுறை ஊதி வரவேற்கும் யுதர்கள், கேரளத்தோடு நீண்ட வரலாற்றுத் தொடர்பு கொண்டவர்களாக அறியப்படுகின்றனர். இந்தியாவின் முதல் மற்றும் பழமையான யூத வழிபாட்டுத் தலமாக மட்டன் சேரியிலிருக்கும் பர்தேசி சைனகாக் குறிப்பிடப்படுகிறது. யூதர்கள் குடியிறுப்புக்கும், கலாச்சாரத்திற்கும் பெயர் பெற்ற கொச்சி-மட்டன்சேரியில் உள்ள பர்தேசி யூதர்கள், 15 மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளில் ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கலிருந்து வெளியேற்றப்பட்ட செபாத்து யூதர்களாகக் கூறப்படுகின்றனர். கேரளாவிலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் பாரம்பரியமாகத் தங்கியிருந்த ஏராளமான யூதர்கள், இசுரேலின்

உருவாக்கத்திற்குப் பின் அந்நாட்டிற்குச் சென்றுவிட்டதாகவும், இந்திய மண்ணையும் மக்களையும் பண்பாட்டையும் நேசிக்கும் சிலர் இந்தியாவிலேயே தங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கொச்சி யூதர்கள் அல்லது மலபார் யூதர்களின் பாரம்பரிய மொழீயாக யூத-மலையாளம் குறிப்பிடப்படுகிறது. யூதர்களில் ஏராளமான இனப்பிரிவுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. கல்கத்தாவின் யூதர்கள் பாக்காதி யூதர்கள் எனவும், மும்பையில் பெனிஇசுரேலியர் எனவும் கூறப்படுகின்றனர். இருபதாம் நூற்றாண்டின் கொச்சி யூதர்களில் செல்வாக்கானவராக ஆப்ரகாம் பாரக் சலம் (1882-1967) அறியப்படுகிறார். கொச்சி சமஸ்தானத்தில் இருமுறை சட்ட மன்ற உறுப்பினராகவும், இந்திய தேசியவாதியாகவும், வழக்கறிஞராகவும், யூத மத நம்பிக்கையாளராகவும் இருந்த திரு. சலம், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தி ஐந்தில் கொச்சி யூதர்கள் இசுரேல் செல்வதற்கு பெருமுயற்சி மேற்கொண்டவராகக் கூறப்படுகிறார். எனினும் சலீம் அவர்கள் இசுரேல் செல்லாது கொச்சியிலேயே இறுதிவரை வாழ்ந்திருக்கிறார்.

நவீன மலையாள பத்திரிகை உலகம் குண்டர்ட்டின் வழிகாட்டுதலில் 1847 இல் வெளியிடப்பட்ட ராஜ்ய சமாசாரம் மற்றும் பாட்சி மோதயம் போன்ற செய்தித்தாள்களிலிருந்து தொடங்குவதாகக் கருதப்படுகிறது. தலசேரியிலிருந்து வெளியிடப்பட்ட அவை கிறித்தவ மிசனிகளால் மதரீதியில் வெளியிடப்பட்டவையாகக் கூறப்படுகின்றன.

1887 இல் வெளியிடப்பட்ட மிகப் பழமையான தீபிகா செய்தித்தாள் தற்போதும் வெளிவருவதாகக் குறிப்பிடப்படுகிறது. மலையாள மனோரமா, மத்யாமம், மாத்ருபூமி, தேசாபிமானி, சிறாஜ் டெய்லி சந்திரிகா, வர்த்தமான் மற்றும் கேரள கௌமுதி போன்றவை கேரளத்தின் முக்கியமான நாளிதழ்களாக அறியப்படுகின்றன. 1957 முதல் கோழிக்கோட்டிலிருந்து வெளிவரும் பிரதீபம், மலையாளத்தின் பழமையான மாலைப் பத்திரிக்கையாகக் கருதப்படுகிறது.

கண்டத்து வர்சீசு மாப்பிள்ளையால் 1888-ல் தொடங்கப்பட்ட மலையாள மனோரமா நிறுவனம், 1890-ம் ஆண்டில் கோட்டயத்தில் நான்கு பக்க அளவில் வெளியிடப்பட்டு, பின்னர் சனிக்கிழமை தோறும் வெளியாகும் வாரப்பத்திரிகையாக இருந்திருக்கிறது. வாரம் இருமறை, மும்முறை என வெளியிடப்பட்டு, 1938 முதல்

நாளிதழாக வெளிவருகிறது. 1960களிலிருந்து கேரளா முழுமைக்கும் வெளிவரும் மனோரமா நாளிதழ், இருபது லட்சத்திற்கும் மேல் விற்பனையாகும் மலையாள முதன்மையான நாளிதழாகப் புகழப்படுகிறது. மலையாள மனோரமா நிறுவனம் சார்பில் இருபதிற்கும் மேற்பட்ட பிரிவுகளில், பிற வெளியீடுகளும் வருகின்றன.

பதினைந்து லட்சம் பிரதிகள் விற்பனையாகும் மாத்ருபூமி மலையாளத்தின் இரண்டாவது பெரிய நளேடாகப் புகழப்படுகிறது. தாய்மண் எனும் பொருள்படும் மாத்ரு பூமி நாளிதழ், 1923-ல் கோழிக்கோட்டிலிருந்து வெளியிடப்பட்டிருக்கிறது.

மலையாளத்தின் முதலாவது தனியார் தொலைக்காட்சியாக சசிகுமார் அவர்களால் 1990-ல் ஆரம்பிக்கப்பட்ட ஆசியா நெட் அறுபதிற்கும் மேற்பட்ட நாடுகளில், மலையாளிகளின் இல்லங்களை மகிழ்வித்து வருகிறது. ஆசியா நெட் தொலைக்காட்சி, மத்திய கிழக்கு நாடுகளில் மிகப் புகழ் பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாயர்களின் மருமக்கதாயம் மக்கதாயமாக மாற்றப்பட்டதன் பின்னணியில் ஏராளமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நாயர் வீடுகளான தறவாடுகளின் தலைவர்களாக தாய்வழியில் வந்த மூத்த மாமாக்கள் இருக்க, நம்பூதிரி வீடுகளான இல்லங்களில் நம்பூதிரியே குடும்பத் தலைவராக இருந்திருக்கிறார். இல்லங்களில் நம்பூதிரி, அவரது மூத்த மகன், மருமகன், பேரன் பேத்தி என இருக்க, தறவாடுகளில் நாயர் பெண், அவரது சகோதரி, சகோதரர், நாயர்பெண்ணின் மகள்கள், மகன்கள், நாயர்பெண்ணின் சகோதரிகளின் மகன்கள், மகள்கள், அவர்களது வழியில் வரும் மகள்களின் மகள்கள் என பெண்களை மரபாகக் கொண்ட கூட்டுக் குடும்பங்கள் வாழ்ந்திருக்கின்றன.

நாயர் தறவாடுகளின் தாய்வழி மூத்தமாமா, கர்னவன் என அழைக்கப்பட்டதாகவும், அவரே தறவாட்டின் நிர்வாகியாகவும் குறிப்பிடப்படுகிறார். ஆண் சத்ரியர் - பெண் நாயர், ஆண் நம்பூதிரி - பெண் நாயர், ஆண் நாயர் - பெண் நாயர் எனும் அளவில், ஒரு நாயர் பெண் எந்த அளவு முறையில் பிறக்கிறாரோ அதை கொண்டே அப்பெண்ணின் மதிப்பு அளவிடப்பட்டதாகக் கருதப்படுகிறது. அதற்கேற்ப ஒரு நம்பூதிரிக்குப் பிறந்தவர் எனும் நிலையே மதிப்பிற்குரியதாகவும் இருந்திருக்கிறது.

பிரித்தானிய ஆட்சி, ஆங்கிலக் கல்வி, உலகளாவிய தொழில் வாய்ப்புகள், பணப்பயிர், புதிய கலாச்சார மாற்றங்கள், பொருளாதாரம், ஆட்சிப் பணிகள், அதிகார மையங்கள் என நிகழ்ந்து வந்த இருபதாம் நூற்றாண்டில், நிலவுடமையாளர்களாகவும், திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களின் போர்வீரர்களாகவும் மலபார் பிரித்தானியப் பகுதியில் பல்வேறு பணிகளிலும் இருந்த நாயர்கள், கூட்டுக் குடும்பங்களாகப் பொருளாதாரத்தில் திணறிக் கொண்டிருக்க, சிரியன்கள், மலையாளக் கிறித்தவர்கள், முஸ்லிம்கள், ஈழவர்கள், அவர்ணர்களாக ஒதுக்கப்பட்டிருந்த சாணார்கள் போன்றோர் பெரும் பாய்ச்சலில் அனைத்துத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

கல்வியில் முன்னேறிக் கொண்டிருந்த நாயர் இளைஞர்களுக்கும் நாயர்களது பழமை வாதம் ஏற்புடையதாக இல்லாதிருந்திருக்கிறது. இந்தநிலையில் சர்.சி. சங்கரநாயர் கொடுத்த வழக்கில், 1896-ல் மலபார் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. மருமக்கதாயத்தை சட்டப்பூர்வமாக பதிவு செய்துகொள்ள வழிவகுக்கும் மலபார் சட்டத்தினால் பெரும்பயன் நிகழவில்லை எனக் கூறப்படுகிறது. கேரளத்தில் பெரும் பாய்ச்சலாக நிகழ்ந்த சமூக மத ரீதியான மாற்றங்கள் நாயர் தறவாடுகளிலும் எதிரொலித்திருக்கின்றன.

மலபாரைத் தொடர்ந்து திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும், திருவாங்கூர் நாயர் ஒழுங்கமைவுச் சட்டம் 1912 மற்றும் 1925 போன்ற முக்கியமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பின்னர் கொச்சி சமஸ்தானத்திலும் கொச்சின் நாயர் சட்டம் 1920 நிறைவேறியிருக்கிறது. தொடர்ந்து மெட்ராஸ் (மலபார்) மருமக்க தாயச் சட்டம் 1932, மெட்ராஸ் நம்பூதிரிச் சட்டம் 1933, மாப்பிள்ளை மருமக்கதாயச் சட்டம் 1938, நம்பூதிரி சட்டம் மற்றும் கொச்சின் நாயர் சட்டம் 1937-38 போன்ற பல்வேறு சட்டங்கள் மூலம் திருமணங்கள் உறுதி செய்யப்பட்டதுடன், விவாகரத்துச் செய்வதும் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக விவாகரத்து சாத்தியமே இல்லை எனும் அளவிற்குச் சட்டவிதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சட்டங்களின் குறிப்பிடத்தக்க அம்சமாக, தறவாடு மற்றும் இல்லங்களின் உறுப்பினர்கள் விரும்பினால் சொத்துக்களைப் பிரித்துக் கொள்ளலாம் எனும் சட்ட உரிமை கிடைக்கப் பெற்றிருக்கிறது. 1925 மற்றும் 1935-ற்கு இடைப்பட்ட காலத்தில் மட்டும் லட்சத்தி இருபதாயிரம் குடும்பங்களில் சட்டரீதியாகச் சொத்துக்கள் பிரிவினை செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஏராளமான நாயர்கள் நீதிமன்றக்

கதவுகளைத் தட்டியதாகவும் அறியப்படுகிறது. கரவான்களின் இறுகிய பிடிகளிலிருந்து தப்பியதாகக் கூறப்படும் நாயர் குழந்தைகள், பின்னர் அப்பா-அம்மாவின் பொறுப்பில் வளர்க்கப்பட்டிருக்கின்றனர். தொடர்ந்து பலதாரமணம் தடைசெய்யப்பட்டு, திருமண வயது பெண்ணிற்கு பதினாறாகவும், ஆணுக்கு இருபத்தியொன்றாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

நம்பூதிரி இல்லங்களிலும் அனைத்து மகன்களுக்கும் சமமான சொத்துரிமை கிடைத்ததோடு, தந்தை பின் மகன் என சொத்துக்கள் கையாளப்பட்டிருக்கின்றன. பின்னர் கேரள சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட கேரள நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் 1963 மற்றும் 1969 மூலம் தறவாடுகள் மற்றும் இல்லங்களின் ஆதிக்கம் முழுமையாக அகற்றப்பட்டதாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

எங்கேனும் நாயர் வீட்டில் திருமணம் நடந்தால் நம்பூதிரியின் மூக்கு வியர்த்து விடுமென்றும், ஏதேனும் அழகிய நாயர் பெண்ணைப் பார்த்தால் எந்தத் தறவாடு எனக் கேட்டு, இரவில் வீட்டிற்கு வருவதாக அம்மையிடம் சொல்லுமாறும் நம்பூதிரிகள் சுக போக வாழ்க்கை நடத்தியதாகப் பதிவுகள் சுட்டுகின்றன. நம்பூதிரிகள் அவர்களை பூத்தேவர்கள் எனக் கூறிக் கொண்டதாகவும், அவர்களுக்குச் செய்யும் சேவை தேவர்களுக்குச் செய்யும் சேவை எனவும், மேலுலகம் போவதற்கும் நம்பூதிரியின் துணை அவசியம் எனவும் கேரளத்தவர்களை நம்பவைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது

இந்தியப் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டு 1956 இல் நடைமுறைக்கு வந்த இந்து மரபு வழி சட்டம் (தி இந்து சஸ்ஸசன் ஆக்ட்), இந்து ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை வழங்குகிறது. மேலும் இந்து மதத்தின் அனைத்துப் பிரிவிற்கும் ஒருதார மணத்தையே சட்டமாக்குகிறது. கேராள சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கேரள இந்து கூட்டுக் குடும்ப முறை (நீக்கம்) சட்டம் - 1975, மருமக்கதாயத்தை முற்றிலும் நீக்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. தறவாடுகளின் எச்சமாக, தற்போதும் பெரும்பாலான மலையாளிகள் அம்மாவின் பெயரையே முதல் எழுத்தாக வைப்பது தொடர்வதாகவும் கூறப்படுகிறது.

நாவலாசிரியை, அரசியல் கட்டுரையாளர் என அறியப்படும் சுசான அருந்ததி ராய், கேரளத் தாய்க்கும் வங்கத் தந்தைக்கும் பிறந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். கோட்டயத்திலும், நீலகிரியிலும், தில்லி பல்கலையிலும் பயின்ற ராய்,

சிறியவைகளின் கடவுள் (காட் ஆம் ஸ்மால் திங்ஸ்) எனும் புகழ் பெற்ற எழுத்திற்கு புக்கர் பரிசு (1997) வென்றது குறிப்பிடத்தக்கது. சாகித்ய அகாதமி விருதை மறுத்தவராகக் கூறப்படும் ராய், தேர்ந்த இலக்கிய விமர்சகராகவும், சமூக அக்கறை கொண்டவராகவும் புகழப்படுகிறார்.

இங்கிலாந்து எடின்பர்க் பல்கலையில் எம்.எஸ்.ஸி படிப்பிற்கு, நவீன இந்தியாவில் மொழியும் அரசியலும் எனும் தலைப்பில் ஆய்வேட்டைச் சமர்ப்பித்த பிரகாஷ் காரட், பலக்காட்டின் இலாப்புள்ளியைச் சேர்ந்தவராக அறியப்படுகிறர். 1964 டோக்யோ ஒலிம்பிக் தொடர்பான மாணவ கட்டுரைப் போட்டியில் வென்று, பத்து நாட்கள் ஜப்பானை சுற்றிப் பார்த்தவரான காரத், ஜே.என்.யூ.வில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்திருக்கிறார் (1970). புகழ்பெற்ற பொதுவுடமைவாதியான எ.கே. கோபாலனின் தொடர்பு கிடைக்கப்பெற்ற திரு. காரத், பின்னர் பொதுவுடமை இயக்கத்தில் சேர்ந்து பொதுவுடமைக் கட்சியில் இந்திய மாணவர் கூட்டமைப்பு (எஸ்.எப்.ஐ) உருவாக மூளையாகச் செயல்பட்டவராகக் குறிப்பிடப்படுகிறார். 1974 முதல் 79 வரை கூட்டமைப்பின் இந்தியத் தலைவராக இருந்த காரத், 1992-ல் மார்ச்சிஸ்ட் பொதுவுடமைக் கட்சியின் ஆற்றல் வாய்ந்ததான பொலிட்பீரோ உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். 2005 முதல் 2015 வரைஇந்திய பொதுவுடமை (மார்ச்சிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவி வகித்த தோழர் பிரகாஷ் காரத், இந்திய பொதுவுடமைச் சிந்தனைக்கு பெரிதும் பாடுபட்டவராகக் புகழப்படுகிறார்.

2005 இல் மார்ச்சிஸ்ட் பொலிட்பீரோவில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்ட திருமதி பிருந்தா காரட், பொதுவுடமை சார்ந்தும், பெண்ணியம் குறித்தும் பல போராட்டங்களை முன்னெடுத்தவராக அறியப்படுகிறார். உயிர் வாழ்தல் மற்றும் அடிமைத்தன அறுப்பு - இந்திய பெண்களின் போராட்டங்களிலிருந்து குறிப்புகள் (சர்வைவல் அண்ட் எமான்சிபேசன் நோட்ஸ் ட்ரம் இன்டியன் வுமன்ஸ் ஸ்ட்ரகிள்) எனும் பிருந்தா காரத்தின் புத்தகம், இந்தியப் பெண்களின் போராட்டங்களை இடது சாரிப் பார்வையில் படம் பிடித்துக் காட்டுவதாகப் புகழப்படுகிறது.

அந்தக் காலத்தில் கேரளாவில் குண்டாகுரஸ் என்ற ஒரு மன்னர் ஆட்சி செய்து வந்தார். மன்னருக்கு மரத்தாலேயே அழகானதொரு அரண்மனை கட்ட வேண்டுமெனும் ஆசை வர, சிறந்ததொரு தச்சர் வேணுமென அமைச்சரிடம் கேட்டிருக்கிறார். அவருக்கு மிகச்சிறந்ததொரு தச்சரை தெரியுமென்றும் அவர்

செருசெலம் நாட்டில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அவர் எங்கிருந்தாலும் உடனே வரச் சொல்ல மன்னர் ஆணையிட்டாராம்.

அந்தச் செய்தியை அறிந்து வாசுகோடகாமா வழியாகக் கேரளா சென்றார் தோமையர். அங்கே மன்னரைச் சந்தித்து அரண்மனை கட்ட எவ்வளவு காலம் ஆகும், எவ்வளவு செலவாகும் எனப் பேசி, அதற்கான தொகையும் மரமும் பெற்றுக் கொண்டார் தோமையர்.

தோமையர் அந்தப் பணம் முழுவதையும் கிறித்தவ தேவாலயங்கள் கட்டவும் ஏழை எளிய மக்களுக்கும் வாரி வாரி வழங்கிவிட்டார். காலம் சென்றது. மீண்டும் தோமையரை அழைத்தார் மன்னர்.

அரண்மனை கட்டி முடித்தாயிற்றா? என மன்னர் வினவ ஆம்! கட்டியாயிற்று மன்னா எனப் பதிலுரைத்தார் தோமையர். எங்கே! எங்கே! என மன்னர் கேட்க கையை மேலே காட்டி மேல்லோகத்தில் என்றார் தோமையர். மன்னருக்கு வந்ததே கோபம். சிறையிலடையுங்கள் எனக் கட்டளையிட்டார். அவர் சிறை சென்றும் சும்மாயிராமல் உள்ளேயிருந்த கைதிகளுக்கு இயேசுவைப் பற்றி போதனை செய்துள்ளார். மன்னருடைய தம்பி கார்ட்சு கதை முடிந்து விட்டார். ஒரு நாள் மன்னரின் கனவில் வந்த காட்சு, அண்ணா உண்மையிலேயே அவர் அரண்மனை கட்டியிருக்கிறார், அந்த பளிங்கு மாளிகை வார்த்தைகளால் வருணிக்க முடியாத அளவிற்கு உள்ளது என்றாராம்.

மனம் மாறிய மன்னர் தோமையரை விடுதலை செய்யும் படி கட்டளையிட்டார். அங்கிருந்து வெளியேறிய தோமையர் அப்படியே கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை நடந்தே வந்திருக்கிறார்.

சென்னையில் சின்னமலை என்ற இடத்தில் அவர் கிறித்துவ மதத்தைப் பற்றிய போதனை செய்து வந்துள்ளார். பார்ப்பனர்கள் அதிகம் வசிக்கும் அங்கே அவரை எங்கு கண்டாலும் கதை முடிக்கும் படி, கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அவர் உயிருக்கு அஞ்சி, சின்ன மலையிலுள்ள ஒரு குகையில் ஒளிந்து கொண்டு பிரார்தனை செய்து கொண்டிருந்தார். அதனைப் பார்த்த ஒரு ஆசாமி அவரை ஓங்கி ஈட்டியால் அவருடைய முதுகில் குத்தியிருக்கிறான்.

குத்துப்பட்ட அவர் அங்கிருந்து கத்திக் கொண்டே சுமார் எட்டு கிலோ மீட்டர் தூரம் ஓடி, பரங்கிமலை என்றழைக்கப்படும் மலைமீது ஏறி உயிரை விட்டிருக்கிறார். அதற்குப் பின்புதான் அந்த மலை செயின்ட் தாமஸ் மவுண்ட் என்றழைக்கப்பட்டது.

இந்தியாவின் பாதுகாவல் புனிதர் என இந்தியக் கிறித்தவர்களால் அழைக்கப்படும் புனித தோமா (செயின்ட் தாமசு) கேரளம், தமிழ்நாடு என வந்ததற்கான சான்றுகள் இல்லை எனக் கருதப்படுகிறது. எனினும் இயேசுவின் திருத்தூதர்களில் ஒருவராகக் குறிப்பிடப்படும் தோமா, பொது ஆண்டின் ஐம்பத்து இரண்டாமாண்டில் இந்தியாவிற்குப் பயணமானார் எனவும், கேரளாவில் கிறிந்தவத்தைப் பரப்பியதாகவும், பின்னர் சென்னையில் பழிவாக்கப்பட்டதாகவும் கிறித்தவர்கள் நம்புகின்றனர்.

கேரளாவில் உள்ள கிறித்தவர்கள் புனித தோமா கிறித்தவர்கள், சிரியன் மரபு வழி கிறித்தவர்கள், நஸ்ரானிகள் எனும் பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். தோமாவின் வழிவந்தவர்களாகக் குறிப்பிடப்படும் கேரள கிறித்தவர்கள், சிரியா வழிபாட்டு முறையைக் பின்பற்றுபவர்களாக இருக்கின்றனர். சிரியன் கிறித்தவர் என அழைக்கப்படும் அவர்களது சர்ச்சுகள், சிரியோ-மலபார் கத்தோலிக்கச் சர்ச்சு என அழைக்கப்படுகிறது. கீழைத் தேவாலயங்கள் மரபு வழிக்கு உட்பட்ட சிரியோ-மலபார் சர்ச்சுகள், தோமாவின் மலன்கரா எனும் பெயரின் அடிப்படையில் அழைக்கப்படும் சிரியோ-மலன்கரா கத்தோலிக்கச் சர்ச்சுகள் உட்பட ஏராளமான தோமா-கிளையில் வந்த சர்ச்சுகளும் கேரளத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

யூதம், கிழக்கு சிரியா, மேற்கு சிரியா, இந்து மதம் போன்றவற்றின் தாக்கங்கள் அதிகம் கொண்ட சிரியன் கிறித்தவர்கள், மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்றும் அய்ரோப்பிய காலனியத் தாக்கத்தால் மேலை நாகரிகத்தில் மிகந்த நாட்டம் உள்ளவர்களென்றும் அறியப்படுகிறது.

சிரியன் - மலபார் வழிபாட்டு முறையைச் சேர்ந்த குரியக்கோஸ் எலியாஸ் சவறா அவர்களுக்கு (1805-1871), திருத்தந்தை பிரான்சிசு - ஆல் இரண்டாயிரத்து பதினான்காம் ஆண்டில், புனிதர் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே முதன்முதலாக மாசற்ற மரியாள கார்மல் சபை (சி.எம்.ஐ) எனும் பெயரில் ஆண் துறவியர் சபையை நிறுவிய திரு. குரியக்கோஸ், பின்னர் பெண் துறவியருக்கென்று கார்மல் அன்னை சபை (சி.எம்.சி) எனும் சபையையும் தொடங்கியிருக்கிறார்.

சமயத்துறையில் மட்டுமல்லாது சமூகம் சார்ந்தும் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்தவராகப் புகழப்படும் புனித குரியக்கோஸ், ஏராளமான பள்ளிகளைத் திறந்து கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டதோடு, பள்ளிகளில் நண்பகல் உணவும் கிடைக்கச் செய்திருக்கிறார்.

உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் புனிதர் பட்டம் (முக்திப்பேறு) பெற நான்கு படிநிலைகள் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இறை ஊழியராக அறிவிக்கப்படுதல் (சர்வென்ட் ஆப் காட்) முதல் நிலை. வணக்கத்திற்குரியவர், அருளாளர், புனிதர் என அறிவித்தல் அடுத்த நிலைகள்.

கிழக்கு மரபுவழி திருச்சபையின் சிரியன் - மலபார் கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த புனித அல்போன்சா முட்டத்துபடத்து (1910-1946), புனிதர் பட்டம் பெற்ற முதல் இந்தியர் என பகழப்படுகிறார். உடல் நோய் பாதுகாவலராகக் கூறப்படும் புனித அல்போன்சா, பாப்பரசர் பதினாறாம் பெனடிக்ட்டால் இரண்டாயிரத்து எட்டாமாண்டில் புனிதராக அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

கன்னியர் மடத்திற்கு உதவி செய்தவர்களிடம் மரிச்சாலும் மறக்கலாட்டோ எனக் கூறிய புனித எவுப்ராசியா (1877-1952), இரண்டாயிரத்து பதினான்காம் ஆண்டில் புனிதர் பட்டம் பெற்றவராக அறியப்படுகிறார். செபிக்கும் அன்னை என மக்களால் அழைக்கப்பட்ட யூப்ராசியா எலுவத்திங்கள், தாமஸ் தரகன் என்பவருடைய உடலிலிருந்த கட்டியை அகற்றியது உட்பட பல அற்புதங்கள் செய்து புனிதராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். மலையாள சிரியன் - கத்தோலிக்க மரபிலிருந்து ஜோசப் பாறேக்காட்டில், வர்க்கி விதயத்தில் உட்பட சிலர் கர்தினால் பதவி வகித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கேரளக் கடவுள்களில் மிகப் புகழ்பெற்று வருபவர் சபரிமலை ஐயப்பன். ஐயப்ப வழிபாடு தமிழ்நாடு, கேரளா என்றில்லாமல் உலகம் முழுவதும் பெயர்பெற்றதாக மாறிவருவது குறிப்பிடத்தக்கது. கடுமையான விரத நெறிகள் இருந்தும் ஐயப்பனைத் தரிசிக்க மக்கள் வெகு ஆர்வம் காட்டி வருவதும் கூறத்தக்கது.

சாஸ்தா, மணிகண்டன், ஹரிஹரன், பந்தளவாசன், பம்பாவாசன், ராஜசேகரன் என ஏராளமான பெயர்களில் அழைக்கப்படும் ஐயப்பன், மகிஷி எனும் பெருவுடல் கொண்ட நங்கையை அழிக்க அவதாரம் எடுத்தவராகக் குறிப்பிடப்படுகிறார். பந்தள அரசரால் கண்டெடுக்கப்பட்டு, பின் பந்தள அரசிக்கு புலிப்பால் கொண்டுவர

காட்டுக்குச் சென்றவராக அறியப்படும் ஐயப்பன், அங்கு மகிசியை வதம் செய்து, மலைகளாலும் அடர்ந்த காடுகளாலும் சூழப்பெற்ற சபரிமலையில் கோவில் கொண்டுள்ளதாகக் கருதப்படுகிறது. பின்னர் மாளிகைப்புரத்தம்மன் எனும் பெயரில், ஐயப்பன் கோவிலின் இடதுபுறம் மகிசிக்கும் கோவில் கட்டப்பட்டிருகிறது.

பதினெட்டு மலைகளால் சூழப்பட்டதாகக் குறிப்பிடப்படும் சபரிமலைக்கு எரிமேலியிலிருந்து செல்லும் பயணம் மலைகளின் ஏற்ற இறக்கங்களோடு கடினமானதாகக் கூறப்படுகிறது. எரிமேலி தொடங்கி பம்பை வரை பெரியபாதை எனவும் பம்பை முதல் கோவில் வரை சிறியபாதை எனவும் அழைக்கப்படும் அறுபத்தைந்து கிலோ மீட்டர் சபரிமலைப் பயணத்தில், பம்பை வரை பேருந்து வசதி இருப்பதும் குறிப்பிடத்தக்கது. புனிதமான பம்பை நதியின் சில்லிடும் நீரில் குளிப்பதும் இருமுடியோடு பதினெட்டுப் படிகளில் ஏறி ஜொலிக்கும் அய்யனைக் காண்பதும் மிகுந்த பக்திப் பரவசத்திற்கு உரியதாகப் போற்றப்படுகிறது. 1535 அடிகள் உயரமுள்ள சபரிமலையின் மகரவிளக்குத் திருவிழாவும், மாதப் பிறப்பு மண்டல பூசைகளும் சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன. ஐயப்பனுக்கு அலங்கரிக்க பந்தளத்திலிருந்து வருடந்தோறும் ஆபரணங்கள் எடுத்து வருவதும், வாபர் எனும் இசுலாமியருக்கு அளிக்கப்படும் மத நல்லிணக்க வழிபாடும், சாமியே சரணமய்யப்பா எனும் சரணங்களும், நெய் மணக்கும் சபரிமலையும், கன்னி சாமிகள் கூட்டமும் சபரிமலைக்கே உரித்தானவை.

9

எம்.கே.காந்தி

தங்கத்தாலான துணியை அணிந்தவன் எனப் பொருள்படும் இரணியகசிபு அல்லது இரணியன் வழிமரபினராகக் குறிப்பிடப்படும் மாவலி எனப்படும் மகாபலி சக்கரவர்த்தியோடு தொடர்புடைய ஓணம் பண்டிகை, கேரளா முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கடவுள் எங்கும் பரந்துள்ளார், கடவுள் தமது பக்தர்களை எப்போதும் காப்பார் எனும் கருத்துக்களை மையமாக்கிய புகழ்பெற்ற விஷ்ணு பக்தரான பிரகலாதனின் பேரனாகக் குறிப்பிடப்படும் மகாபலி, வலிமை வாய்ந்த அரசராகவும், அன்பானவராகவும், கற்றறிந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

ராஜசூய யாகத்தின் ஒரு பகுதியாக யார் எதைக் கேட்டாலும் அதைத் தருவதாக உறுதியளித்த மாவலியிடம் மூன்றடி மண் கேட்டு அந்தணச் சிறுவனாக வந்து நிற்கிறார் வாமன அவதாரமான நாராயணர். மண்ணுலகை ஓரடியிலும் வானுலகை இரண்டாவது அடியிலும் அளந்த வாமன மூர்த்தி, மூன்றாவது அடியை வைக்க இடம் கேட்க, மகாபலியோ தலையால் அதைத் தாங்கி தமது அகந்தையை விட்டொழிந்ததாக வாமன வரலாறு எடுத்துரைக்கிறது.

மகாபலி மன்னர், ஒவ்வொரு ஆண்டும் தமது மக்களைக் காண வருவதற்கு வரம் பெற்றதாகவும், அதன்படி கேரளத்திற்கு வரும் மகாபலியை வரவேற்கும் விதமாகவே ஓணம் திருநாள் கொண்டாடப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. கேரளாவிலுள்ள திருக்காட்கரை காட்கரையப்பன் திவ்யதேசம், வாமன அவதாரத்தோடு தொடர்புடையதாகவும், ஓணம் பண்டிகை கொண்டாடப்படும் முதன்மையான திருத்தலமாகவும் அறியப்படுகிறது.

மலையாள ஆண்டின் சிங்கம் மாதம் ஹஸ்தம் நட்சத்திரத்தில் துவங்கி திருவோணம் வரை பத்து நாட்கள் கொண்டாடப்படும் ஓணம் விழாவில் ஒவ்வொரு நாளும் பூக்களாலான கோலம் இட்டு ஆடிப்பாடி மகிழ்கின்றனர். குறிப்பாக, வாசலில் இடப்படும் அத்தப்பூக்கோலம் சிறப்பானதாகக் குறிப்பிடப்படுகிறது. கேரளத்தின் அறுவடைத் திருநாளாகவும் கொண்டாடப்படும் ஓணத்தில், ஓண சாத்யா எனப்படும் சிறப்பு உணவுகள், புத்தாடைகள், பரிசுகள், படகுப் போட்டிகள், யானைத் திருவிழா, புலிக்களி என மலையாள தேசமெங்கும் மகிழ்ச்சி வெள்ளம் நிரம்பி வழியும் எனப் புகழப்படுகிறது. ஒற்றுமையை வளர்க்கும் ஓணம் பண்டிகை கேரளத்தவரின் மனம் கவர் திருவிழா எனில் மிகையாகாது.

பெண்ணை ஆற்றங்கரையிலுள்ள திருக்கோவிலூர் தமிழகத்தின் புகழ்பெற்ற வாமனர் திருக்கோவிலாகப் புகழப்படுகிறது. ஏறக்குறைய நானூறு கிலோமீட்டர்கள் பாய்ந்தோடும் தென்பெண்ணை ஆறு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை செழிப்பாக்கி வங்காளக் குடாவில் கலக்கிறது. மார்கண்ட நதி, பம்பாறு, வன்னியாறு, கல்லாறு, கெடிலம் போன்ற சிற்றாறுகளைக் கொண்டுள்ள பெண்ணையாற்றின் குறுக்கே, கிருஷ்ணகிரியிலும், சாத்தனூரிலும் கட்டப்பட்டுள்ள அணைகள் மூலமாக நீர்ப்பாசனம் ஓங்கியுள்ளது. மேலும் ஏராளமான சிறு அணைகளும் தடுப்பணைகளும் பெண்ணையின் வழியெங்கும் கட்டப்பட்டுள்ளன.

நிலவுலகு, விண்வெளி என அனைத்துலகையும் ஈரடியால் அளந்த மாலவனுக்குக் கட்டப்பட்டுள்ள திருக்கோவிலூர் ஸ்ரீஉலகளந்த பெருமாள் கோவில், புன்னை மரத்தை தல விருட்சமாகக் கொண்டுள்ளது. சங்க காலம் தொட்டு அறியப்பபட்டு வரும் திருக்கோவிலூரோடு, முதலாழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் தொடர்புள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.

காஞ்சியிலுள்ள திருவெ.்.கா என்னுமிடத்திலுள்ள பொய்கையில் தோன்றியதால் பொய்கையாழ்வார் எனப் பெயரிடப்பட்ட முதலாவது ஆழ்வாரான பொய்கையார், வைணவர்களால் கவிஞர் தலைவன் எனச் சிறப்பிக்கப்படுகிறார். மாமல்லபுர தலசயனப் பெருமாள் கோவிலின் மல்லிகைத் தோட்டத்தில் நீலோத்பவ மலரின் நடுவே தோன்றியவராகக் கூறப்படும் பூதத்தாழ்வார், திருமாலிடத்தில் நீங்காப் பக்தி பூண்டவராகப் புகழப்படுகிறார். மயிலாப்பூர் ஆதிகேசவப் பெருமாள் கோவில் குளத்தின் செவ்வல்லி மலரில் தோன்றியவராகக் குறிப்பிடப்படும் பேயாழ்வார், திருமாலை ஆடிப்பாடி தொழுவார் எனப் புகழப்படுகிறார்.

காலத்தால் முற்பட்டவர்களான முதல் ஆழ்வார்கள் மூவரும் ஒருவரையொருவர் அறியாமல் இருந்ததாகவும், அவர்களை ஆட்கொள்ள விரும்பிய திருமால், திருக்கோவிலூருக்கு வரவைத்ததாகவும் கூறப்படுகிறது. திருக்கோவலூர் மிருகண்டு முனிவர் திருமாளிகைக்குச் சென்ற பொய்கையாழ்வார், மாளிகையின் இடைகழியில் படுத்ததாகக் கூறப்படுகிறது. சிறிது நேரத்தில் அங்கு வந்த பூதத்தாழ்வார் பொய்கையாழ்வாரோடு நட்பானதாகவும், ஒருவர் படுக்காமல் இருவர் இருக்கலாம் என அவர்களிடையே உரையாடல் நிகழ்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. சற்று நேரத்தில் அவ்விடம் வந்த பேயாழ்வாரோடு நட்பு பேணிய

ஆழ்வார்கள், இருவர் இருக்கலாம் மூவர் நிற்கலாம் என்றதாகவும் கூறப்படுகிறது. சட்டென பெருமழை பொழியவைத்த பெருமாள், மூவரிடையே புகுந்து நெருக்குதலை உருவாக்கியதாகவும், நெருக்குதலுக்குக் காரணம் என்ன எனத் திகைத்த ஆழ்வார்கள், திருமாலே என்பதையறிந்து அந்தாதிகளால் பெருமானைப் போற்றியதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பொய்கையாழ்வார் இருளை ஓட்டிட விளக்கேற்ற விரும்பினார். இம்மண்ணுலகத்தையே அகலாகக் கொண்டு, உலகை வளைத்துக் கிடக்கும் கடலையே நெய்யாக வார்த்து, கதிரவனையே சுடராகக் கொளுத்தினார். பூதத்தாழ்வாரும் விளக்கேற்றினார். அவர் அன்பையே தகழியாக்கினார். ஆர்வத்தையே நெய்யாக ஊற்றினார். உருகும் தம் சிந்தையையே திரியாக அமைத்தார். ஞானத் திருவிளக்கை ஏற்றினார். பெருமாக்கள் ஏற்றிய விளக்குகளின் ஒளி இருளை ஓட்டியது. அதன் வெளிச்சத்தில் மூவரும் மாலவனைக் கண்டனர். அவனது பொன்மேனியைக் கண்ணாறக் கண்டுகளித்தனர். பொன்னாழியையும் புரிசங்கையும் கண்டனர். வியப்பிற்கு உரிய அந்த இறைக்காட்சியைப் பொருளாக வைத்து மூன்று அந்தாதி நூல்களைப் படைத்தனர். வைணவத் திருதலங்களில் பூசைகளும் திருவிழாக்களும் மூவருக்கும் ஒன்றாகவே செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

பக்தி சாரர், உறையில் இடாதவர், குடமூக்கிற்பகவர், திருமழிசைபிரான் எனப் பல பெயர்களால் குறிப்பிடப்படும் திருமழிசையாழ்வார், முதலாழ்வர்களின் சமகாலத்தவராகக் குறிப்பிடப்படுகிறார். நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் என அந்தாதி பாடிய ஆழ்வார், பல்வேறு சமயங்களிலும் உண்மைத் தத்துவத்தை அறிய முயன்று திருமாலை முதற்கடவுளாக ஏற்றுக்கொண்டவராகக் குறிப்பிடப்படுகிறார். திருச்சந்த விருத்தம் எனும் இனிய பாடல்களையும் இயற்றியுள்ள திருமழிசையாழ்வார் திருமாலின் மீது தீராத பக்தி செலுத்தியவராகப் போற்றப்படுகிறார்.

பொதியமலையில் பல கால்களாகத் தோன்றி பேயாறு, பாம்பாறு, உள்ளாறு, களரியாறு, சேர்வையாறு என ஒன்றுகூடி, பொருநையாக பாய்ந்தோடிவரும் தாமிரவருணி, நூற்றிமுப்பது கிலோமீட்டர்கள் ஓடி, புன்னைக்காயல் என்னுமிடத்தில் வங்காள விரிகுடாவோடு கலக்கிறது. பொருநையின் கொடை எனப் புகழப்படும் தென்பாண்டி நாடான நெல்லையைச் செழிப்பாக்கும் பருணியின் கரையிருக்கும்

ஆழ்வார் திருநகரியில் தோன்றிய நம்மாழ்வார் வைணவத்தின் புகழுக்குரிய ஆழ்வாராகச் சிறப்பிக்கப்படுகிறார்.

பிரம்மாவுக்கு குருவாக பெருமாள் வந்த திருத்தலம் எனும் பெயரில் திருக்குருகூர் எனவும் அழைக்கப்பெறும் ஆழ்வார் திருநகரியைச் சுற்றிலும் நவதிருப்பதிகள் எனும் ஒன்பது திவ்யதேசங்கள் இடம்பெற்றிருப்பது சிறப்பு. திருக்குருகூரின் ஆதிநாதன் திருக்கோவிலின் புளியமரத்தில் பதினாறு ஆண்டுகள் தவம் செய்தவராகக் குறிப்பிடப்படும் நம்மாழ்வார், வேதங்களுக்கு இணையாக வைத்துப் போற்றப்படும் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி எனும் அற்புதமான படைப்புகளைச் செய்தவராகப் போற்றப்படுகிறார். ஆயிரத்து நூற்றி இரண்டு பாடல்களைக் கொண்ட திருவாய்மொழி திராவிட வேதம் என்றே புகழப்படுகிறது. பாட்டுடைத் தலைவராக திருமாலைப் போற்றிய நம்மாழ்வார் பிற சமயக் கோட்பாடுகளுக்கும் மிகுந்த மதிப்பளித்தவராகப் புகழப்படுகிறார்.

அவரவர் தமதம தறிதறி வகை வகை, அவர் அவர் இறையவர் என அடி அடைவர்கள் என அறுதியிடும் நம்மாழ்வார், எந்தக் கடவுளை வணங்கினாலும் அக்கடவுளின் அந்தராத்மாவாக இருந்து அருள் புரிபவர் திருமாலே எனவும் அறிவுறுத்துகிறார். பல ஆச்சாரியர்களால் உரை எழுதப்பெற்றுள்ள திருவாய்மொழி பாசுரங்கள் இராமானுஜ முனியால் மிகவும் விரும்பப்பட்டிருக்கின்றன.

அகத்திணைத் துறைகளாகவும் பல பாடல்களை இயற்றியுள்ள நம்மாழ்வார், பராங்குச நாயகியாக கண்ணன் மேல் பல்வேறு இனிய பாடல்களைப் புனைத்துள்ளார். நாயகியாய் மாறி நாரணனை நயந்த நம்மாழ்வார், கங்குலும் பகலும் கண் துயிலறியாளாக, கண்ண நீரை கைகளால் இறைத்தவராகக் கருதப்படுகிறார். நம்மாழ்வாரைப் போற்றி கண்ணிநுண் சிறுத்தாம்பு பாடிய மதுர கவியாழ்வார், பெருமாள் மீது பாடல்கள் இயற்றாமல் நம்மாழ்வர் மீதான பக்தியால் அவரை வணங்கி பதினோறு தனியன்கள் இயற்றிவராகப் புகழப்படுகிறார்.

பன்னிரு ஆழ்வார்களில் இளையவராகக் குறிப்பிடப்படும் திருமங்கையாழ்வார், சோழ நாட்டின் திருவாலி திருநகரிக்கு அருகிலுள்ள திருக்குறையலூரில் பிறந்தவராக அறியப்படுகிறார். நீலன் எனும் இயற்பெயர் பெற்றிருந்த திருமங்கையாழ்வார், கள்வனாக இருந்து வையம் அளந்தானை

வழிப்பறி செய்து, அவனால் ஆட்கொள்ளப்பட்டு, திருமங்கை மன்னனாகி, வைணவத்தின் மீது தீராத பற்றுகொண்டு, ஆழ்வாராகி, பாசுரங்கள் இயற்றியதாகப் போற்றப்படுகிறார். ஆயிரத்து இருநூற்றி ஐம்பத்தி மூன்று பாடல்களை இயற்றியுள்ள திருமங்கையாழ்வார் குமுதவல்லி எனும் மங்கை மீது தீராத காதல் கொண்டிருந்ததாகவும், அவரின் விருப்பத்தின் பேரில் அடியார்களுக்கு தினமும் அன்னம் இடும் பணி செய்தவராகவும் சிறப்பிக்கப்படுகிறார்.

திருவெழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம், பெரிய திருமொழி எனும் பெயர்களில் தொகுக்கப்பெற்றுள்ள திருமங்கையாழ்வாரின் பாடல்கள், பக்திச் சுவை நிரம்பியவையாகப் புகழப்படுகின்றன. ஆயிரத்து எண்பத்து நான்கு பாசுரங்கள் அடங்கிய பெரிய திருமொழி, திருமாலின் மந்திர உபதேசமாகப் புகழப்படுகிறது. ஆழ்வார் பல்வேறு யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தியவராகவும், பரகால நாயகியாகி பக்தியின் உச்சநிலையைத் தொட்டவராகராகவும் அறியப்படுகிறார். பக்தி இலக்கியத்திற்கும், தமிழ் வளத்திற்கும், இலக்கிய வகைப் பெருக்கத்திற்கும் வித்திட்டவரான திருமங்கை ஆழ்வார் அதிகமான திவ்ய தேசங்களை மங்களாசாசனம் செய்திருப்பது பெருமைக்குரியது. மேலும் ஆழ்வாரின் பாடல்கள் ஆலயங்களின் பழமையை அறிவிக்கும் சான்றுகளாகவும் அறியப்படுகின்றன. நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணவென்னும் நாமம் என அறுதியிட்ட ஆழ்வாரும் ஆழ்வாரின் பாசுரங்களும் காலத்தால் அழியாதவை எனில் மிகையாகாது.

மும்மூர்த்திகளுக்கும் முதல்வன், உலகத்தை விழுங்கிய தலைவன், குடந்தையின் மணித்திரள், இன்பப் பாட்டு, பச்சைத்தேன், பசும்பொன், தேவர்களின் தலைப்பூ.. இப்படி என்னவெல்லாம் சொல்லித் தொண்டர்கள் அவனைப் புகழ முடியும்! வலந்திகழும் குமுதவல்லி மணவாளன் வாழியே ! வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே!

கொங்கர் கோமான் எனப் புகழப்படும் குலசேகர ஆழ்வார், பெரிய பெருமாளான இராமபிரானிடத்தில் மிகுந்த அன்பு பூண்டவராகப் போற்றப்படுகிறார். கேரளத்தின் திருவஞ்சைக் களத்தில் பிறந்த குலசேகரர், மன்னனின் மகனாய் பிறந்தும் வைணவப் பக்தியில் திளைத்தவராக அறியப்படுகிறார். இராம காதையை பத்துப் பாசுரங்களில் இயற்றிய ஆழ்வார், தில்லை திருசித்ரகூடப் பெருமாளுக்கு

அவற்றை அர்ப்பணித்திருக்கிறார். திருமலையின் மீது பெருங்காதல் கொண்டிருந்த குலசேகர ஆழ்வார், அங்கு மீனாகவோ, மரமாகவோ, ஏதேனுமாகவோ, திருக்கோவிலின் படியாகவோ இருந்து, திருமாலை கண்டு கொண்டே இருக்கவேண்டுமென விரும்பியிருக்கிறார். திருவரங்கத்திற்கு பல்வேறு சேவைகள் செய்தும் பெருமானை பூமாலையாலும் பாமாலையாலும் பெருமைப்படுத்திய குலசேகரர் பெருமான், திருமொழி எனும் பாசுரங்களை இயற்றி வைணவ அடியார்கள் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றுள்ளார். மன்னு புகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனான ஸ்ரீஇராமனின் மேல் ஆழ்வார் இயற்றிய தாலாட்டுப் பாடல்கள் அமுதத் திரட்டாகத் தித்திக்கக் கூடியவை எனில் மிகையாகாது.

திருவில்லிபுத்தூரில் கோவில் கொண்டுள்ள ஆலிலைக் கண்ணனுக்கு அன்றலர்ந்த மலர்களைக் கொண்டு பூமாலைகள் சாற்றி வந்த விஷ்ணு சித்தர் நாராயணனே பரம்பொருள் என அறுதியிட்டு அவனுக்கு பல்லாண்டு பாடி புகழ் சேர்த்தவராகப் போற்றப்படுகிறார்.

தமிழகத்தில் பழமை வாய்ந்த ஊர்களில் ஒன்றான திருவில்லிபுத்தூர் வடபத்ரசாயி திருக்கோவிலுக்கும், நெடிதுயர்ந்த கோபுரத்திற்கும், தெய்வீகத் தமிழமுதான ஆண்டாளுக்கும், மார்கழி மாத நோன்பிற்கும், பால்கோவா இனிப்பிற்கும் பெயர்பெற்றதாகக் திகழ்ந்து வருகிறது. தென்னிந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க முக்கிய இடம் வகிக்கும் திருவில்லிபுத்தூர், மதுரை நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தில் சிறப்புற்ற நகரமாக விளங்கியிருக்கிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள திருவில்லிப்புத்தூர் வில்லி என்பவரால் காடு திருத்தி ஊராகக் கட்டமைக்கப்பட்டதால் திருவில்லிபுத்தூர் என அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. முன்னர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்ததாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஆங்கிலேயர் ஆட்சியில் மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும், பின் திருநெல்வேலி மாவட்டத்தோடும் இணைக்கப்பட்ட திருவில்லிப்புதூர், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பத்து முதல் இராமநாதபுர மாவட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஐந்து மார்ச் ஐந்து முதல், காமராசர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இடம்பெற்ற திருவில்லிபுதூர், ஆயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்றி ஏழாம் ஆண்டு முதல் விருதுநகர் மாவட்டத்தின் ஒரு நகரமாக இடம் பெற்றும் தொடர்கிறது.

பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான வீரபாண்டிய கட்டபொம்மன் படையில் தளபதியாக இருந்தவராகக் குறிப்பிடப்படும் வீரன் சுந்தரலிங்கனார் நினைவாக, வீரர் சுந்தரலிங்கனார் போக்குவரத்துக் கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. தேவேந்திர குலத்தவராக அறியப்படும் வீரன் சுந்தரலிங்கம் பெயரை போக்குவரத்து கழகத்திற்கு எவ்வாறு வைக்கலாம் என விருதுநகர், இராசபாளையம் பகுதியிலிருந்து சில சாதி வெறியர்கள் பேருந்துகளுக்கு நெருப்பு வைத்தும், பேருந்துகளை உடைத்தும் வன்முறையில் இறங்கியிருக்கிறார்கள். பாண்டியன், நேசமணி, சேரன், பல்லவன், திருவள்ளுவர், அம்பேத்கார், தந்தை பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி, எம்ஜிஆர், சோழன், தீரன் சின்னமலை, மருதுபாண்டியர், வீரன் அழகுமுத்துக்கோன், ஜீவா, அண்ணா, அன்னை சத்தியா, கட்டபொம்மன், ராணி மங்கம்மாள், ராஜிவ்காந்தி என்றெல்லாம் போக்குவரத்துக் கழங்களுக்குப் பெயர்வைத்தபோது வராத எதிர்ப்பு, வீரன் சுந்தரலிங்கம் எனும் பெயர் சூட்டப்பட்டதற்கு மட்டும் ஏன் வந்தது என்பதை தமிழக வரலாறு நன்கறியும்.

1971 ஆம் ஆண்டில் பேருந்து நிறுவனங்கள் பொதுவுடமையாக்கப்பட்டதன் விளைவாக, டி.வி.எஸ் நிறுவனத்தாரின் பேருந்துகளையும் பணியாளர்களையும் கொண்டு பி.ஆர்.சி எனப்படும் பாண்டியன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேசன் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்ட பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், அழகிய வெள்ளை நிறத்தில் காணப்பட்டன.

வீரன் சுந்தரலிங்கம் எனும் பெயர் பொறித்த பேருந்தின் இருக்கையில் நாங்கள் எப்படி உட்காருவோம் என்றும், எங்களது ஊர்கள் வழியே அந்தப் பெயர் பொறித்த பேருந்துகள் ஓடக்கூடாது என்றும் அக்கிரமான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட, அன்றைக்கிருந்த அரசோ வீரன் சுந்தரலிங்கம் உட்பட அனைத்துத் தலைவர்களின் பெயர்களையும் நீக்கி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் என பெயர் மாற்றம் செய்து விட்டது. அதோடு காமராசர் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், என இருந்த மாவட்டங்களின் பெயரையும் எடுத்து விட்டு, விருதுநகர், தூத்துக்குடி என அந்தந்த மாவட்டத் தலைநகர்களின் பெயரையே சூட்டியதும் வரலாறு.

பெரியாழ்வார் மற்றும் ஆண்டாள் நாச்சியாரோடு தொடர்புடைய ஸ்ரீவில்லிபுத்தூர் ஆலிலைப் பெருமாள், அரவணை மேல் கண்வளரும்

திருக்கோலத்தில் காட்சி தருகிறார். பூதேவி, ஸ்ரீதேவி அடிவருட சயனக் கோலத்தில் அருள்பாலிக்கும் ஆலிலைத் திருமாலைச் சுற்றிலும் வர்ணம் திட்டப்பட்ட சுதை சிற்பங்களாக கருடன், சேனைத் தலைவர், சூரியன், தும்புருநாரதர், சனத்குமாரர், வில், கதை, சக்கரம், சங்கு பெருமாளின் நாபிக்கமலத்திலிருந்து உண்டான பிரம்மா, சந்திரன், பிருகு, மார்க்கண்டேயர், மதுகைடபர், கந்தர்வர்கள் இடம் பெற்றுள்ளது சிறப்பு. பதினோரு நிலைகள், பதினோரு கலசங்கள், நூற்றித்தொன் னூற்றி ஆறு அடிகள் உயரம் என வானுயர்ந்து நிற்கும் வடபெருங்கோவிலுடையான் கோபுரம், கோதையூருக்கு தனிப்பெரும் அழகாகக் காட்சி கொடுக்கிறது.

கண்ணன் மேல் பேரன்பு கண்ட தந்தையும், மகளும், தமிழை ஆண்டவர்கள் எனில் மிகையாகாது. சூடிக்கொடுத்த சுடர் கொடியான ஆண்டாள், புனித மாதமான மார்கழியில் நோன்புக்காகப் பாடிய திருப்பாவைப் பாடல்கள் அமிழ்தினும் இனியவை. நாச்சியார் திருமொழி காதலின் உச்சம்.

கோதை நகரில் ஆண்டாளுக்கும் தனிக் கோவில் அமைக்கப்பட்டிருப்பது பெருமைக்குரியது. ரங்கமன்னார், கருடாழ்வாரோடு அருள்புரியும் நாச்சியார், இடது கையில் கல்காரபுஷ்பம், கிளியும், வலக்கையால் பூமியைக் காட்டியும் திருக்கோலம் சாதிக்கிறார். முன்மண்டபத்தில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், கொள்ளை அழகு கொண்டவை. ஆண்டாளின் மடியில் தலை சாய்ந்து சயனத் திருக்கோலத்தில் காட்சிகொடுக்கும் ரங்கமன்னார், ஆடிப்பூரத்தில் வலம் வரும் திருத்தேர், திருப்பாவை விமானம், மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல் மேல் நுழைந்த வண்டு இன்னிசைக்கும் வில்லிபுத்தூருக்குப் பெருமை சேர்ப்பவை.

கடற்படையிலும், கடல் வணிகத்திலும் சிறந்து விளங்கிய தமிழர்கள், ஐரோப்பியரின் கடல் ஆதிக்கத்திற்குப்பின், முற்றாக இழந்துவிட்டார்கள் எனக் கருதப்படுகிறது. நாயக்கர் காலத்திற்கு முன்னரே இசுலாமும், கிறித்தவமும் தமிழகத்தில் அறியப்பட்ட போதிலும், நாயக்க ஆட்சிக் காலத்தில் இரண்டு மதங்களும் வேகமாக வளர்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது. சைவ, வைணவ சச்சரவுகள் குறைந்து போனாலும், இசுலாமிய, கிறித்தவ மதமாற்றங்கள் பெருமளவிற்கு நடந்ததாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. பாளையங்கள் மூலம் வரிவசூல் திறம்பட பெறப்பட்ட போதிலும் வணிகம் வளர்சியுறாமல் தேங்கமடைந்ததாகக் கூறப்படுகிறது.

தமிழர்களால் பறங்கியர் என அழைக்கப்பட்ட போர்த்துகீசியரே முதலில் வந்த ஐரோப்பியர். கள்ளிக்கோட்டை வந்திறங்கிய வாசுகோடகாமா மூலம் கடற்கடைப் பகுதிகளில் வணிகம் செய்து வந்த போர்ச்சுகிசியர்கள், பின்னர் கடற்கரையொட்டிய பகுதிகளில் கோட்டை கொத்தளங்கள் அமைத்து உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டனர். ஜெசூட் பாதிரிகள் மூலம் கிறித்தவ மதத்தைப் பெருமளவில் பரப்பும் முயற்சிகளிலும் போர்த்துகீசியர் ஈடுபட்டிருக்கின்றனர். தமிழகத்தில் 1592 ஆம் ஆண்டிலேயே நாயக்க மன்னர் ஆதரவோடு தமிழகத்தில் ஜெசூட் பாதிரி சங்கம் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

இராணி மங்கம்மாள் காலத்தில் இராமநாதபுரம், மதுரை, திருச்சி, தஞ்சை, செஞ்சி உள்ளிட்ட பகுதிகளில் மதமாற்றம் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. போர்த்துகீசியரைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள் தமிழகத்திற்கு வர இருவருக்குமிடையே பலமான போட்டி நிலவியிருக்கிறது. டச்சுக்ககாரர்களோடு நடைபெற்ற சண்டைகளில் தூத்துக்குடி, நாகப்பட்டினத்தை இழந்த போர்ச்சுகீசியர்கள், கோவா, டையூ, டாமன் பகுதிகளில் அரசமைத்திருக்கின்றனர்.

டச்சுக்கார்களைத் தொடர்ந்து வந்த பிரெஞ்சுக்காரர்கள், பாண்டிச்சேரியில் வாணிகத்தில் சிறந்து விளங்கி, சந்திரா நாகூர், ஏனாம், மாகி காரைக்கால் உள்ளிட்ட பகுதிகளில் நிலைத்தனர். இந்திய மன்னர்களது சண்டைகளில் தலையிட்டு வந்த பிரெஞ்சுக்காரர்கள், அதன் மூலம் அரசியல் ஆதாயம் அடைந்திருக்கின்றனர். இறுதியாக இந்தியா வந்த ஆங்கிலேயர்கள், மொத்த இந்திய நிலத்தையும் தமதாக்கிக் கொண்டது வரலாறு.

பூமிப்பந்தின் பரப்பளவில் 92,345 கிலோமீட்டர் கொண்டு நூற்றிப் பத்தாவது நாடாக இடம் பெறும் போர்ச்சுகல், ஐரோப்பாக் கண்டத்தின் மேற்குக் கோடியில் அமைந்திருக்கிறது. வடக்கு மற்றும் கிழக்கில் ஸ்பெயின் நாடும், மேற்கில் அட்லாண்டிக் கடலும் எல்லைகளாகக் கொண்டுள்ள போர்ச்சுக்கல் நாடு, 1128 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. 1910 முதல் குடியரசாக விளங்கிவரும் போர்ச்சுக்கல், ஐரோப்பாவின் மிகப் பழமையான அரசாகவும், உலகின் முதல் உலகப் பேரரசாகவும், நீண்ட காலம் நிலைத்திருந்த போரரசாகவும் அடையாளம் பெற்றிருக்கிறது. உலகின் ஐம்பத்தி மூன்று நாடுகளை உள்ளடக்கியிருந்த போர்ச்சுக்கல் பேரரசின் மிகப்பெரிய குடியேற்ற நாடாக இருந்தது பிரேசில்.

போர்த்துகீசிய வரலாற்றில் இளவரசர் ஹென்றி என அறியப்படும் ஹென்றி த-நேவிகேட்டர் (1394-1460) முக்கியமானவராகக் குறிப்பிடப்படுகிறார். கடற்பயணங்களை ஊக்குவித்த ஹென்றி அரசர், கண்டுபிடிப்புக் காலத்திற்கு வித்திட்டவராகவும் புகழப்படுகிறார். வாசனைப் பொருட்களின் வணிகத்தில் சிறந்து விளங்கிய போர்ச்சுக்கல், கண்டுபிடிப்புக் காலத்தின் மிகப்பெரிய வல்லரசாகத் திகழ அடித்தளமிட்டவராகவும் ஹென்றி இளவரசர் அறியப்படுகிறார். அட்லாண்டிக் கடற்பயணங்கள் (1415-1488), இந்திய பெருங்கடல் கடற்பயணங்கள் (1497- 1542) மூலம் இந்தியா, பிரேசில், ஜப்பான் என உலகினை வலம் வந்த போர்ச்சுக்கல் கப்பல்கள் உலக நாடுகளின் மக்களையும் மனங்களையும் ஒன்றிணைத்தன எனில் மிகையாகாது.

உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளில் ஆறாம் இடம் வகிக்கும் பொர்த்துகேய மொழி, இலத்தீன் அரிச்சுவடியைப் பின்பற்றுகிறது. தென்னமெரிக்காவில் அதிகம் பேசப்படும் மொழியாகக் கூறப்படும் போர்த்துகீசியம் காலனித்துவ காலத்தில் வெகுவாகப் பரவியது குறிப்பிடத்தக்கது.

5,04,030 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட ஸ்பெயின் நாட்டின் ஸ்பெயின் மொழியைப் பேசுபவர்கள் முப்பத்தைந்து கோடிப் பேர் எனக் கூறப்படுகிறது. ரோமானிய மொழிக் குடும்பத்திலுள்ள எசுப்பானிய மொழி தென்னமெரிக்க நாடுகளில் பெருவாரியாகப் பேசப்படுகிறது. உலகில் இருபத்தியோரு நாடுகளில் அலுவல் மொழியாக இடம்பெற்றுள்ள எசுப்பானியம், லத்தின் அரிச்சுவடியை ஒட்டி எழுதப்படுகிறது. ஒலிப்பொழுக்கம் (பொனடிக்) மிக்க மொழியாவும், எளிதாகவும் துல்லியமாகவும் ஒலிக்கும் வண்ணம் சொற்களைக் கொண்டுள்ள மொழியாகவும் புகழப்படும் எசுப்பாசிய மொழியில் மொத்தம் இருபத்தொன்பது எழுத்துக்கள் இடம்பெற்றுள்ளன. ஆங்கிலத்தில் வழங்கும் பல சொற்கள் ஸ்பானிய மொழிவழி பெற்றதாகக் கூறப்படுகிறது.

எசுப்பானிய மொழியில் எஸ்ப்பானா எனவும், ஆங்கிலத்தில் ஸ்பெயின் எனவும் அழைக்கப்படும் எசுப்பானிய நாடு, ஐபீரியப் பழங்குடிகள், ரோமர்கள், செருமனியர், இசுலாமியர் எனப் பல்வேறு மக்களாலும் உருவாக்கப்பட்டு, இறுதியில் கிறித்தவர்களால் ஸ்பெயின் எனும் நாடாக மாற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. குறுகிய காலத்திலேயே உலகம் தழுவிய பேரரசாக உருமாறிய ஸ்பெயின்,

ஏறத்தாழ முன்னூறு ஆண்டு காலம் மிகப் பெரிய கடல் பேரரசாகவு ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது.

பதினைந்தாம் நூற்றாண்டில் ஒன்றிணைக்கப்பட்ட ஸ்பெயின், நெப்போலியப் போர்களாலும், இங்கிலாந்தின் ஆதிக்கத்தாலும் நிலைகுலைந்திருக்கிறது. பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டும், உள்நாட்டு போர் சர்வாதிகார ஆட்சி, பொருளாதார வீழ்ச்சி என அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தும் இறுதியில் அரசியல் சட்ட முடியாட்சியின் கீழ் நாடாளுமன்ற குடியாட்சியாக மலந்திருக்கிறது.

வடமேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள நெதர்லாந்து, வடக்கு மற்றும் மேற்கில் வடகடலும், தெற்கில் பெல்ஜியமும், கிழக்கில் ஜெர்மனியும் எல்லைகளாக அமையப் பெற்றுள்ளது. ஹாலந்து, டச்சு எனவும் குறிப்பிடப்படும் நெதர்லாந்து, தமிழில் ஒல்லாந்து எனவும் குறிப்பிடப்படுகிறது.

41,543 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பளவு கொண்ட நெதர்லாந்து, புவியியல் அடிப்படையில் தாழ்நிலப் பகுதியாக அமைந்திருக்கிறது. 50 சதமானப் நிலப்பகுதி ஒரு மீட்டருக்கும் குறைவான உயரத்தில் அமைந்திருப்பதாகக் குறிப்பிடப்படும் ஹாலத்து, ஸ்பெயின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று 1581-1795 காலகட்டங்களில் டச்சுக் குடியரசாக ஒன்றிணைக்கப்பப்பட்டிருக்கிறது. 1568 முதல் நிகழ்ந்த எண்பதாண்டு போர்கள் டச்சு வரலாற்றில் முக்கியத்துவம் நிறைந்ததாகக் கருதப்படுகிறது.

பதினேழாம் நூற்றாண்டில் முக்கியமான கடல் வல்லரசாகவும் பொருளாதார வல்லரசாகவும் வளர்ச்சிபெற்ற டச்சு, உலகின் பல பகுதிகளிலும் வணிக மையங்களையும் குடியேற்றங்களையும் நிறுவியிருக்கிறது. 1650 ஆண் ஆண்டளவில் 16,000 வணிகக் கப்பல்களைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படும் டச்சு நாடு, வடஅமெரிக்கா, தென்னாபிரிக்கா என உலகின் அனைத்துப் பகுதிகளிலும் பரந்து விரிந்திருக்கிறது. 1795-1814 ஆண்டுக் காலத்தில் பிரெஞ்சின் நெப்போலிய ஆதிக்கத்தின் கீழ் வந்த டச்சு, பின்னர் 1815 இல் முதலாம் வில்லியம் அரசரால் கட்டமைக்கப் பட்டிருக்கிறது. இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் படிப்படியாக செல்வாக்கை இழந்து வந்த நெதர்லாந்தில், தற்போது மன்னராட்சி முறை நடைபெற்ற போதிலும், நாடளுமன்ற ஆட்சி முறையே பின்பற்றப்படுவதாகவும், நாட்டின் தலைவராக மன்னர் இருந்த போதிலும்

வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதமரே அதிகாரம் நிரம்பியவராகவும் அறியப்படுகிறது.

இங்கிலாந்துக்குப் பின் உலகின் பெரு வல்லரசாகக் குறிப்பிடப்படும் அமெரிக்கா எனும் அமெரிக்க ஐக்கிய நாடு, முன்னர் கொலம்பியா எனும் பெயரால் அறியப்பட்டிருக்கிறது. இத்தாலிய நாடு காண் பயணியும், வணிகரும், காலனித்துவவாதியுமான கிறித்தோபர் கொலம்பசு (1451-1506) எசுப்பானியப் பேரரசு சார்பில் நான்கு கடற்பயணங்களை மேற்கொண்டவராக அறியப்படுகிறார். அதன் விளைவாக, புதிய உலகம் என அறியப்பட்ட வட, தென் அமெரிக்காவில் எசுப்பானியக் குடியேற்றம் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. கொலம்பசுக்கு முன்னரே வட அமெரிக்கா கண்டறியப்பட்டிருப்பினும், கொலம்பசு கண்டுபிடித்த பின்பே ஐரோப்பிய ஆதிக்கம் நிகழ்ந்ததாக அறியப்படுகிறது. ஐரோப்பியர்களின் நாடுகாணுதல், கைப்பற்றுதல், குடியேறுதல் போன்ற தாக்கங்களுக்கு கொலம்பசின் கண்டுபிடிப்பு திரும்பு முனையாக அமைந்திருக்கிறது.

இந்தியாவிற்கு புதிய வழியைக் கண்டறியப் புறப்பட்ட கொலம்பசு, வட அமெரிக்காவை கண்டு எசுப்பானிய மொழியில் இன்டியோசு எனக் குறிப்பிட்டதாகவும் அதன் காரணமாக அமெரிக்காவில் வாழ்ந்து வந்த தொன்மையான மக்கள் இந்தியர்கள் அல்லது செவ்விந்தியர்கள் என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ஐரோப்பியர்களின் அமெரிக்கப் பயணத்திற்கு வழிவகுத்த கொலம்பசின் பயணம் உலக வரலாற்றில் முக்கியமான நிகழ்வு எனில் மிகையாகாது.

1507 ஆம் ஆண்டில் செருமனியின் வரைபட நிபுணரான மார்டின் வால்ட்ஸ்முல்லரால் இத்தாலிய வரைபட நிபுணரும் ஆய்வுப் பயணியுமான அமெரிக்க வெஸ்புகியின் நினைவாக அமெரிக்கா கண்டப்பகுதிக்கு அமெரிக்கா எனப் பெயரிட்டதாகக் கருதப்படுகிறது. பிரித்தானியக் குடியேற்ற நாடாக இருந்து பின்னர் சுதந்திரம் பெற்ற அமெரிக்கா, அதன் 1776 ஆம் ஆண்டு சுதந்திரப் பிரகடனத்தில் அமெரிக்கா எனும் பெயரைப் பயன்படுத்தியதாகவும், 1777 நவம்பர் பதினைந்து முதல் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா எனும் பெயர் வழங்கி வருவதாகவும் அறியப்படுகிறது.

அமெரிக்காவின் பூர்வீக குடிகள் ஆசியாவிலிருந்து குடியேறியவர்களாகக் கருதப்படுகின்றனர். அமெரிக்க இந்தியர்கள் என அழைக்கப்பட்ட தொன்மை அமெரிக்கர்கள், 40,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அங்கு குடியேறியவர்களாகவும், கடைசி பனியுகமான சுமார் 11,000 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு குடியேறியிருக்கலாம் எனவும் பல்வேறு கருத்துக்கள் முன்மொழியப்படுகின்றன.

பெரிங் நீரிணைப்பு முன்பு நிலமாக இருந்ததாகவும், அந்த நில இணைப்பு வழியாக வட ஆசியப் பகுதிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்திருக்கக் கூடும் எனவும் கூறப்படுகிறது. இந்தோனேசியா, பிலிப்பைன்சு போன்ற நாடுகளின் கலாச்சாரத்தோடு அமெரிக்கப் பூர்வக் குடிகளின் கலாச்சாரம் ஒப்பிடப்பட்டு, தென்கிழக்கு ஆசியப் பகுதிகள் வழியான கடற்பயணங்கள் மூலமாகவும் மக்கள் இடம் பெயர்ந்திருக்க கூடுமெனவும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. மெக்சிகோ, அமெரிக்கா, கனடா பகுதிகளின் பூர்வீகக் கலாச்சாரத்தை தமிழர் கலாச்சாரம் எனக் குறிப்பிடும் போக்கும் முன்னெடுக்கப்படுவது ஆராயத்தக்கது. மேலும் மத்திய அமெரிக்கப் பகுதியான மெக்சிகோ பகுதியிலிருந்து இந்தியர்கள் வட அமெரிக்கப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்ததாகவும் வரலாற்றுக் குறிப்புகள் சுட்டுகின்றன.

தங்களுக்கென ஒரு வாழ்வையும், கலாச்சாரத்தையும், மொழியையும் கொண்டு செழித்திருந்த வட, மத்திய மற்றும் தென் அமெரிக்கக் தொல் குடிகள், ஐரோப்பியரது நாடு பிடிக்கும் பேராசையால் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆட்பட்டது மானுடகுல வரலாற்றின் கருப்பு பக்கங்கள். அமெரிக்க நிலப்பகுதியெங்கும் பரவியிருந்த மாயன், ஏஸ்டெக், டொல்டெக், இன்கா, சபோடெக் உட்பட ஏராளமான நாகரிகங்கள் முற்றாக அழிக்கப்பட்டதில் போர்த்துகீசியர், எசுப்பானியர், டச்சுக்காரர், பிரெஞ்சுகாரர், ஆங்கிலேயர் என பெரும்பாலான ஐரோப்பிய நாட்டவருக்கு பெரும் பங்கிருக்கிறது. அமெரிக்கா என்றில்லாமல் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற நிலங்களின் தொல்குடிகள் அழிக்கப்பட்டதற்கும் ஐரோப்பிய நாடுகளின் பேராசையே காரணம். அமெரிக்க பெருநிலத்திற்கு தோட்டவேலை செய்ய விற்கப்பட்ட ஆப்பிரிக்க மக்களின் அவலங்களோ வார்த்தைகளில் விவரிக்க இயலாதவை.

பிரித்தானியா போன்ற நாடுகள் குற்றச் செயல்களில் ஈடுபட்ட பல்லாயிரம் பேரை அமெரிக்கா போன்ற குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பியதாகக் வரலாறு பதிவிட்டிருக்கிறது. கொடூர குற்றவாளிகளிடம் மாட்டிக் கொண்டு எளிய மக்கள் எத்தனை எத்தனை துன்பங்களை சந்தித்தார்களோ.. மிகப்பரந்த நிலமெங்கும் பரவியிருந்த முதன்மைக் குடிகள், மிகக் குறுகிய காலத்திற்குள்ளாக அழித்தொழிக்கப்பட்டது வரலாற்றின் கறை.

ஐரோப்பாவில் இருந்து அமெரிக்காவில் குடியேறி, முதற்குடிகளை அழித்து, பின்னர் தாய் நாட்டிடமிருந்து சுதந்திரம் வாங்கிய அமெரிக்கா, தற்போது உலகின் மிகவும் சுதந்திரமான நாடாக அறியப்படுகிறது. உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளின் தொல் குடிகளும், நாகரிகத்தில் முன்னேற்றமடைந்த, ஆயுதப் பலத்தில் முன்னேறிய மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, ஒன்றோடொன்று முட்டி, மோதி, கலந்து அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து வந்ததாக வரலாறு சுட்டிக் காட்டுகிறது. மேலும் இயற்கையைப் பேணிய, வழிபட்ட, பழங்குடிகள் ஒரு கடவுளை மட்டும் வணங்குமாறு மாற்றப்பட்டதும் வரலாறு. இன அழிப்பு செய்து கொண்டே அன்பையும் சமாதானத்தையும் மன்னிப்பையும் போதித்த மதங்களும் அவர்தம் கடவுள்களும்.. விந்தை உலகமெனில் மிகையாகாது.

கலாச்சாரத்தை, மொழியை, கடவுளை, திணித்த ஐரோப்பியர்கள், அழகான பூமியையே ஆயுதக் குவியல்களாக மாற்றிவிட்டதும் உண்மை. ஒவ்வொரு தேசமும் ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கிறது. ஒரு பொத்தானை அழுத்தினால் எதிரியென நினைக்கும் நாட்டையே உருத்தெரியாமல் அழித்துவிட முடியும் எனும் அளவிற்கு ஆயுதப் பெருக்கம் நிகழ்ந்திருக்கிறது. அனைத்து நாடுகளும் மக்களின் பாதுகாப்பு எனும் பெயரிலேயே ஆயுதப் பெருக்கத்தில் ஈடுபடுகின்றன.

கொலம்பஸ் வருவதற்கு முன் அடினா கலாச்சாரம், கோகோகாம் கலாச்சாரம், பியூப்லோன் கலாச்சாரம், மிசிசிப்பியன் கலாச்சாரம் உட்பட ஏராளமான கலாச்சாரங்களைக் கொண்டிருந்தவர்களாகவும், நவஜோ, யூபிக், அபாசி, சோடக், அடை, அல்சிக், சினுகன், கருக், குடினை உட்பட நூற்றுக்கணக்கான மொழிகளைப் புழக்கத்தில் வைத்திருந்தவர்களாகவும் சிவப்பிந்தியர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

பிரித்தானிய அரசுக்கு எதிராக வட அமெரிக்க நிலத்திலிருந்த பதின்மூன்று குடியேற்றப் பகுதிகள் நடத்திய போராட்டங்கள் அமெரிக்க சுதந்திரப் போராகக்

குறிப்பிடப்படுகிறது. 1775 முதல் 1783 வரை சுமார் 8 ஆண்டுகள் நடைபெற்ற போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாக பிரான்சு, ஸ்பெயின், நெதர்லாந்து போன்ற நாடுகள் செயல்பட்டிருக்கின்றன. 1776 இல் அமெரிக்க விடுதலைச் சாற்றுரை வெளியிடப்பட்டிருக்கிறது. தீர்மானத்தின் படி பெரிய பிரித்தானியப் பேரரசுடன் போரில் ஈடுபட்டிருந்த பதிமூன்று அமெரிக்கக் குடியேற்றங்கள் பதின்மூன்று சுதந்திரமான இறைமையுள்ள நாடுகளாகவும், பிரித்தானிய ஆட்சியின் கீழல்லாதவையாகவும் அறிவித்துக் கொண்டன. அவை இணைந்து ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்ற புதிய நாட்டையும் உருவாக்கின. புதிய நாடு உருவாவதற்கு ஜான் ஆடம்ஸ் (1735-1826) முதன்மையான பங்காற்றியவராகக் குறிப்பிடப்படுகிறார். ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் முதல் குடியரசு துணைத் தலைவராகவும், இரண்டாவது குடியரசுத் தலைவராகவும் (1797-1801) பதவி வகித்திருக்கிறார்.

உலகின் மிக நீண்ட குடியரசு ஆட்சிமுறையை உருவாக்கிய பெருமைக்குரியவராக சியார்ச் வாசிங்டன் (1732–1799) அறியப்படுகிறார். அமெரிக்க சுதந்திரப் போருக்குத் தலைமை தாங்கிய திரு. ஜார்ஜ் வாசிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் தந்தை எனப் புகழப்படுகிறார்.

1776-ன் ஐக்கிய அமெரிக்க விடுதலை அறிவிப்பின் முதன்மையான ஆசிரியராகக் குறிப்பிடப்படும் தாமஸ் ஜெபர்சன் (1743-1826), ஐக்கிய அமெரிக்காவின் மூன்றாவது குடியரசுத் தலைவராக (1801-1809) பதவி வகித்திருக்கிறார். அனைத்து மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டுள்ளார்கள் என்றும், குறிப்பிட்ட அந்நியப்படுத்த முடியாத உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், பிரகடனப்படுத்திய வரைவு, ஜீலை நான்கு ஆயிரத்து எழுநூற்றி எழுபத்து ஆறு அன்று வெளியிடப்பட்டதன் நினைவாக, அந்நாளே அமெரிக்காவின் சுதந்திர நாளாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

வடக்கு மகாணங்கள் அடிமை முறைக்கு எதிராக தடை விதிக்க, கிழக்கு மகாணங்களோ அடிமை வணிகத்தை ஆதரிப்பவையாக இருந்திருக்கின்றன. ஸ்பெயின், மெக்சிகோ இங்கிலாந்து உடனான போர்கள் ஐக்கிய அமெரிக்கர்களை மேலும் விரிவுபடுத்தியிருக்கின்றன. கலிபோர்னிய தங்கவேட்டை, தொடர்வண்டி இருப்புப்பாதையால் உண்டான விரைவான இடப்பெயர்ச்சி, பூர்வீகக் குடிகளுடனான மோதல்கள் சேர்ந்து அமெரிக்க உள்நாட்டுப் போராக வெடித்திருக்கிறது.

1854 இல் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்காவின் குடியரசுக் கட்சி (ரிப்ப்ளிகன்) சார்பில் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட ஆப்ரகாம் லிங்கன் அமெரிக்க வரலாற்றில் தனித்துவமிக்கவராக அறியப்படுகிறார். எதிர்த்துப் போட்டியிட்ட கட்சியாக 1820களில் தோற்றம் பெற்ற மக்களாட்சிக் கட்சி (டெமாக்ரடிக்) குறிப்பிடப்படுகிறது. 1792 இல் தாமஸ் ஜெபர்சனால் துவக்கப்பட்ட டெமாக்ரடிக் கட்சி, உலகிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளினும் தொன்மையானது என்பதும் குறிப்பிடத் தக்கது. 1820 முதல் தற்காலம் வரைடெமாக்ரடிக் கட்சி தொடர்ந்து அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும் புகழ்பெற்றுள்ளது. அமெரிக்காவின் மூன்றாவது கட்சியாக சுதந்திரவாதக் கட்சி (லிபர்டேரியன்) கூறப்படுகிறது.

அடிமை முறையை ஒழிக்க அரும்பாடுபட்டவராக அறியப்படும் ஆப்ரகாம் லிங்கன் (1809-1865) ஐக்கிய அமெரிக்காவின் பதினாறாவது குடியரசுத் தலைவராக (1861-1865) இருந்திருக்கிறார். 1863-ல் அடிமைகள் விடுதலை பெற விடுதலை எழுச்சி அறிவிப்பை வெளியிட்ட திரு. லிங்கன், 1865ல் ஐக்கிய அமெரிக்காவின் பதின்மூன்றாவது அரசியில் சட்டத்திருத்தத்தின் வழியாக அடிமை முறையை ஒழித்தவராகப் புகழப்படுகிறார். அடிமைத் தளையை ஏற்காத ஏழு தென் மாநிலங்கள் பிரிந்து சென்று வட பகுதி மாநிலங்களோடு உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருக்கின்றன. விவசாயத்தை முன்னெடுத்த தென் மாநிலங்கள் பண்ணைகளில் வேலை செய்ய அடிமைகள் வேண்டும் எனப் போரிட, தொழில்வளத்தை முன்னெடுத்த வட மாநிலங்கள் அடிமைத்தனத்தை அகற்ற வேண்டுமென போரிட்டிருக்கின்றன. நான்கு ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போரில் லிங்கனின் வடபகுதி வெற்றி பெற்று அடிமைத் தனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது.

மக்களால் மக்களுக்காக நடத்தப்படுவதே மக்களாட்சி என முழங்கிய ஆப்ரகாம் லிங்கன், 1864 ஆம் ஆண்டு தேர்தலில் இரண்டாவது முறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். மிகச் சாதுர்யமாக உள்நாட்டுப் போரை நடத்தியவராகவும், அரசியலில் சாமர்த்தியமாகச் செயல்பட்டவராகவும் குறிப்பிடப்படும் லிங்கன், ஐக்கிய அமெரிக்காவின் ஒற்றுமையை நிலைநாட்டியவராகவும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளார். வரலாற்றின் கரும்புள்ளியான அடிமை முறையை சட்டப்பூர்வமாக ஒழித்தவராக ஆப்ரகாம் லிங்கன் போற்றப்படுகிறார்.

அமெரிக்காவின் மார்ட்டின் லூதர் கிங் இளையவர் (1929-1968), சமூக உரிமைக்காகவும் கருப்பின மக்களின் சம உரிமைக்காகவும் அரும்பாடுபட்டவராகக் கொண்டாடப்படுகிறார். எமக்கொரு கனவிருக்கிறது என முழங்கிய லூதர், அமெரிக்க முற்போக்கு வரலாற்றின் குறிப்பிடத்தக்க ஆளுமையாகப் போற்றப் படுகிறார். காந்தியத்தின் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்த லூதரின் இந்தியப் பயணம் (1959) அறப்போராட்டத்தின் வலிமையை அவருக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது. வன்முறையற்ற எதிர்ப்பு, அறப்போராட்டம் போன்றவை மூலம் தலைவராக உருவாகி வந்த லூதர் கிங், அமெரிக்க மக்கள் என்றில்லாமல் உலகமக்களின் உள்ளங்களிலும் நீங்க இடம் பெற்றவராக விளங்குகிறார்.

முதல் உலகப் போரிலும் இரண்டாம் உலகப் போரிலும் முதலில் நடுநிலை வகித்து பின்னர் நேசநாடுகளுக்கு ஆதரவாகக் களம் கண்டிருக்கிறது அமெரிக்கா. போர் என்றாலே இழப்பும் வறுமையும் என்பதற்குப் மாறாக, இரண்டாம் உலகப் போரினால் அமெரிக்கா வளம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. அறிவியலில் பெரும் பாய்ச்சல் நிகழ்த்திய அமெரிக்கா, ஜப்பான் மீது நிகழ்த்திய அணுவெடிப்பு மனித குலம் மறக்கவியலாத கொடூரம்.

இரண்டாம் உலகப் போர் முடிந்து சோவியத் ருஷ்யா பிளவுபட்ட 1990 வரை, அமெரிக்கா மற்றும் ருஷ்யாவை மையமாக்கி உலக அரசியலில் நிகழ்ந்தவை பனிப்போர் (1947-1991) என அழைக்கப்படுகிறது. இரண்டாம் உலகயுத்தம் வரை மிகப்பெரிய வல்லரசுகளாக இருந்த அத்தனை நாடுகளையும் பின்னுக்குத் தள்ளி உலகின் அனைத்து நடவடிக்கைகளிலும் எதிரும் புதிருமாக இருந்த நாடுகளாக அமெரிக்கா-ரஷ்யா அறியப்படுகின்றன. இராணுவம், தொழில் நுட்பம், விண்வெளி என இரு நாடுகளிடையேயும் பலமான போட்டி நிலவியிருக்கிறது. ரஷ்யா பொதுவுடமையைப் பேணியதென்றால், அமெரிக்காவோ முதலாளித்துவத்தை முன்னெடுத்திருக்கிறது. அனைத்து நாடுகளின் அரசியலிலும் தலையிட்ட இரு நாடுகளாலும், உலகமெங்கும் போட்டிகள், சண்டைகள். இந்தியா-பாகிஸ்தான், வட,தென் வியட்நாம், வட கொரியா-தென் கொரியா, கிழக்கு-மேற்கு ஜெர்மனி, ஈரான் - ஈராக் என பல நாடுகளின் பங்காளிகளிடையேயும் பலமான போட்டிகள் ஊக்குவிக்கப்பட்டிருக்கின்றன. ஆதரவு நாடுகளுக்கு தொழில் நுட்பங்களை சலுகைகளை, நிதியுதவிகளை வழங்கிய இரு நாடுகளும், ஐக்கிய நாடுகளின் மூலமாகவும் பல்வேறு அரசியல் சாதுர்யங்களை அறங்கேற்றியிருக்கின்றன.

ஐக்கிய சபையின் செல்வாக்கை சீர் குலைக்கும் விதமாக வீட்டோ அதிகாரத்தை இருநாடுகளும் பயன்படுத்தியிருக்கின்றன. இசுரேல், ஈரான், ஆப்கானித்தான் போன்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிட்ட நாடுகள், தற்போதைய இசுலாமிய பயங்கரவாதம், தாலிபான், அல்கொய்தா பயங்கரவாதம் போன்றவற்றின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் பெரும் பங்குபெற்றுள்ளன. ருஷ்யாவிற்கு எதிராக தாலிபான்களை வளர்த்த அமெரிக்கா, பினனர் அவர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டதும், ஈராக்கின் சதாம் உசேனைக் கொண்டாடிய அமெரிக்கா, பின்னர் வளைகுடாப் போரை நிகழ்த்தியதும் அரசியல் நோக்கங்களுக்கன்றி வேறில்லை என்பதே நடுநிலையாளர்களின் கருத்தாக உள்ளது.

1945ற்கும் 1992ற்கும் இடைப்பட்ட காலத்தில் 1054 அணுவெடிப்பு சோதனைகளை மேற்கொண்டதாகக் குறிப்பிடப்படும் அமெரிக்காவிலும், ரஷ்யா, சீனா, இந்தியா உட்பட பிற நாடுகளிலும் குமிக்கப்பட்டுள்ள அணு அயுதங்கள், உலகின் அமைதிக்கும், மக்களின் வளர்ச்சிக்கும் ஆகப்பெரும் அச்சுறுத்தல்கள் என அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன.

குறுகிய காலமே குடியசுத் தலைவராக இருந்த போதிலும், அமெரிக்க மக்களால் கொண்டாடப்படும் தலைவராக ஜான் பிட்ஸ்ஜெரால்டு கென்னடி அறியப்படுகிறார். ஐக்கிய மாநிலங்களின் முப்பத்து ஐந்தாவது குடியரசுத் தலைவராகப் பதவி வகித்த திரு. ஜான் எப் கென்னடியின் ஆட்சிக் காலத்தில் (1961-1963) ருஷ்யாவுடனான பதற்றம் அதிகரித்திருக்கிறது. கியூபாவின் ஆதரவோடு ருஷ்யா அங்கு ஏவுகணைகளை நிறுவியது, விண்வெளிப் போட்டிகள், வியட்நாம் போர் என இரு நாடுகளுக்குமிடையே பதற்றமான சூழல் நிலவியிருக்கிறது.

2002 இல் அமைதிக்கான நோபல் விருது பெற்ற ஜிம்மி கார்டர் (39 வது குடியரசுத் தலைவர் 1877-1981), திரைப்பட தொலைக்காட்சி நடிகராக இருந்து பின்னர் 40 வது குடியரசுத் தலைவர் பதவி வகித்த ரொனால்டு ரீகன் (1981-1989), 41 வது குடியரசுத் தலைவர் ஜார்ஜ் வாக்கர் புஷ் (1989-1993) போன்றோர் குறிப்பிடத்தக்க ஆளுமைகளாக அறியப்படுகின்றனர்.

1993 முதல் 2001 வரை அதிபர் பதவியிலிருந்த வில்லியம் ஜெபர்சன் கிளிண்டன் எனும் பில் கிளிண்டன் புதிய சனநாயக முறையின் அடையாளமாக குறிப்பிடப்படுகிறார். 2001 முதல் 2009 வரை அதிபராக இருந்த ஜார்ஜ் வாக்கர் புஷ்

காலத்தில் உலகளாவிய தீவிரவாததிற்கு எதிரான போரை அமெரிக்கா முன்னெடுத்தது. அமெரிக்க இரட்டைக் கோபுர பயங்கரவாதத்திற்குப் பின் சமூகப் பாதுகாப்பு போன்ற விசயங்களில் அமெரிக்க அரசு அதிக கவனம் செலுத்தவும் ஆரம்பித்தது.

அமெரிக்காவின் நாற்பத்து நான்காவது அரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பராக் உசைன் ஒபாமா (2009-2017) அமெரிக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்கவராய் அடையாளம் காணப்படுகிறார். ஆப்பிரிக்க - அமெரிக்க இனத்தைச் சேர்ந்தவராக அறியப்படும் திரு. ஒபாமா, பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொண்ட அதிபராகவும், மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட ஆளுமையாகவும், அனைத்துலக முன்னேற்றம், வளமை, அமைதி குறித்து சிந்திப்பவராகவும் பாராட்டப்படுகிறார்.

அறிவியல், தொழில்நுட்பம், வணிகம், விளையாட்டு, இலக்கியம், சினிமா என அனைத்துத் துறைகளிலும் மின்னும் புகழ்பெற்ற ஏராளமான அமெரிக்க ஆளுமைகள், உலகமெங்கும் கொண்டாடப்படுபவர்களாக இருக்கின்றனர். ஆப்பிரிக்க - அமெரிக்க பாப் பாடகரான மைக்கேல் ஜாக்சன் (1958-2009), குத்துச் சண்டை வீரர் முகம்மது அலி (1942-2016), நடிகையும் பாடகியும், திரைப்பட இயக்குனருமான மார்லின் மன்றோ (1926-1962) போன்றோர் புகழ்பெற்றவர்களாக அறியப்படுகின்றனர். உலகின் கணினி தொழில் நுட்பத்தில் சாதனை புரிந்த பில் கேட்ஸ் உலகம் புகழும் சாதனையாளர் எனில் மிகையாகாது.

1875 இல் கட்டுமானம் தொடங்கப்பட்டு, 1884 இல் முழுமையடைந்து, 1886 இல் நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட அமெரிக்க விடுதலைச் சிலை, பன்னாட்டு அளவில் நட்பையும், விடுதலையையும், மக்களாச்சியையும் வெளிப்படுத்தும் சின்னமாகப் புகழப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவின் நியூயார்க் துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள சுதந்தர தேவி சிலை, அமெரிக்க விடுதலைப் போரில் பிரான்சு நாட்டவரின் உதவியை நினைவு கூறும் விதமாக, இரு நாட்டவராலும் இணைந்து உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. 93 மீட்டர்கள் உயரமுள்ள சுதந்திர தேவி சிலையின் வலது கையில் தீப்பந்தமும், இடது கையில் ஜூலை 4, 1776 என எழுதப்பட்ட புத்தகமும் இடம் பெற்றுள்ளது. தலைமகுடத்தின் ஏழு முனைகள் ஏழு கண்டங்களைக் குறிப்பதாகவும் கூறப்படுகிறது.

மினசோட்டாவில் உற்பத்தியாகி மெக்சிகோ குடாவில் கலக்கும் மிசிசிப்பி ஆறும் (3,734 கி.மீ), மிசிசிபியின் துணை ஆறாகக் குறிப்பிடப்படும் மிசௌரி ஆறும் (3767 கி.மீ), வட மற்றும் மத்திய அமெரிக்க நிலத்தின் முக்கியமான ஆறுகளாகப் போற்றப்படுகின்றன. உலகின் மிகப்பெரிய ஆற்றுத் தொகுதிகளுள் ஒன்றாகக் புகழப்படும் மிசிசிப்பி ஆறு, அமெரிக்காவின் பத்து மாநிலங்கள் வழியாகப் பாய்தோடுவது சிறப்பு.

கனடாவின் ஒன்டாரியோ மாநிலத்திற்கும் ஐக்கிய அமெரிக்காவின் நியுயார்க் மாநிலத்திற்கும் இடையேயான எல்லைப்பகுதியில் ஓடும் ஐம்பத்தாறு கிலோமீட்டர் நயாகரா ஆற்றின் நீர்வீழ்ச்சி உலகப்புகழ் பெற்றது. கனடாப் பகுதியின் குதிரை லாட வடிவ அருவி 792 மீட்டர் அகலமும், அமெரிக்கப் பகுதியின் அருவி 305 மீட்டர் அகலமும் நயாகரா பேரருவியின் காட்சி, கண்ணுக்கு விருந்தளிப்பது எனப் புகழப்படுகிறது.

உலகின் இரண்டாவது பெரிய நாடகக் குறிப்பிடப்படும் கனடா, பல்இன நாடாக வளர்ந்து வருவது பாராட்டத்தக்கது. பத்து மாநிலங்களையும் ஆட்சிக்குட்பட்ட மூன்று நிலப்பகுதிகளையும் கொண்டுள்ள கனடாவின் ஆட்சி மொழிகளாக ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு உள்ளன. இலங்கைத் தமிழர்களை அரவணைத்துக் கொண்ட கனடா தேசம், தமிழர்க்கும் தமிழ்மொழிக்கும் சிறப்புச் சேர்த்து வருவதாகவும் புகழப்படுகிறது.

கனடிய ஆதிகுடிகளாக இனுவிட் மற்றும் மெய்டிஸ் எனும் கனடிய செவ்விந்திய மக்கள் அடையாளம் காணப்படுகின்றனர். மேலும் ஆதிகுடிகள் வாழும் நிலப்பகுதிகளின் அடிப்படையில், அவர்கள் பல்வேறு வகையினராகவும் குறிப்பிடப்படுகின்றனர்.

கனடாவின் மிகக் குளிரான வட பகுதியில் இனுட் எனும் எஸ்கிமோ மக்கள் வாழ்கின்றனர். வடதுருவப் பகுதியில் வாழும் எஸ்கிமோக்கள் இறைச்சியை பச்சையாகச் சாப்பிடுபவர்கள் எனும் பொருளில் எஸ்கிமோ என அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. உயரம் குறைவாகவும், குட்டையான கால்களையும் பெற்றிருக்கும் எக்கிமோ மக்கள், குளிர்காலத்தில் இக்லு எனப்படும் பனிக்கட்டி வீடுகளை உருவாக்கிக் கொள்கின்றனர்.

பிரெஞ்சுக்காரர்கள் 1605 ஆம் ஆண்டு ராயல் துறைமுகத்திலும், 1608 ஆம் ஆண்டு கியூபெக்கிலும் முதன் முதலாகக் குடியேறியிருக்கின்றனர். 1610 இல் நியு பவுண்ட்லாந்தில் குடியேறிய ஆங்கிலேயர்கள், பின்னர் ஒன்றாரியோ, கியுபெக், பிரன்ஸ் விக், நோவா ஸ்கோஷியா பகுதிகளை இணைத்து 1867 இல் கனடிய கூட்டரசை உருவாக்கியிருக்கின்றனர். படிப்படியாக பிற மாநிலங்கள் இணைக்கப்பட்டு 1948 இல் கனடியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியர், ஆப்பிரிக்கர், சீனர், தமிழர், தெற்காசியர் எனப் பல்வேறு மக்களும் சேர்ந்து வாழும் கனடா, 1971 ஆம் ஆண்டு, பல்லின பண்பாட்டுக் கொள்கையை ஏற்றுக் கொண்ட உலகின் முதலாவது நாடாக புகழப்படுகிறது.

வட அமெரிக்க நிலப்பகுதிக்கும் தென்னமெரிக்க நிலப்பகுதிக்கும் இடையேயுள்ள நிலப்பகுதி நடு அல்லது மத்திய அமெரிக்கா எனப்படுகிறது. அகலத்தில் குறுகியும், நீளமாகவும், இறபுறமும் கடல்களால் சூழப்பட்டும் இருப்பதால் இடைநிலம் (இஷ்துமஸ்) எனவும் குறிப்பிடப்படும் இடை அமெரிக்காவில், பெலீசு, கோஸ்டாரிக்கா, குவாத்தமாலா, எல் சல்வேடார், ஓந்துரசு, நிகரகுவா மற்றும் பனாமா எனும் ஏழு நாடுகள் இடம் பெற்றுள்ளன.

வட, தென் அமெரிக்கக் கண்டங்களைத் தரைவழியாக இணைக்கும் பனாமா, வடக்கே அட்லாண்டிக் கடலையும் தெற்கே பசிபிக் கடலையும் கொண்டுள்ளது. உலக நன்மைக்காக (புரோ முண்டி பெனி.்.பிசியோ) என்பதனை குறிக்கோளாகக் கொண்டுள்ள பனாமா நாடு, ஸ்பெனியினிடமிருந்து 1821 ஆம் ஆண்டிலும் பின்னர் கொலம்பியாவிடமிருந்து 1903 ஆம் ஆண்டிலும் விடுதலை பெற்றுள்ளது. மொத்தம் எழுபத்தைந்தாயிரத்து நானூற்றி பதினேழு சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவு கொண்ட பனாமா நாட்டில் 2014 ஆம் ஆண்டின் கணக்குப்படி 36,08,431 பேர் வசிக்கின்றனர்.

அமெரிக்காக்களின் பாலம் எனப்படும் பனாமா கால்வாய், உலக அதிசயமாகவும், மிகவும் கடினமான பொறியியல் சாதனையாகவும் புகழப்படுகிறது. தென்னமெரிக்கக் கண்டத்தைச் சுற்றிச் செல்லும் ஆபத்தான கடற்பயணத்திற்கு மாற்றாக பசுபிக் மற்றும் அத்திலாந்திக் கடல்களை இணைக்கும் பனாமா கால்வாய் திட்டத்திற்கு பதினாறாம் நூற்றாண்டு முதலே முயன்று வந்தள்ளனர். எனினும் பிரான்சுக்காரர்களே 1881 இல் ஆதிகாரப்பூர்வமாக கால்வாய் வெட்டும் பணியை

தொடங்கியிருக்கின்றனர். 77 கி.மீ நீளம் கொண்ட பனமாக் கால்வாயைத் தோண்டும் பணியில் மிகப் பெரிய பொறியியல் திட்டங்களும், மிகுந்த பொருள் செலவும், தொழிலாளர் இழப்பும் எற்பட்டதாகக் குறிப்புகள் எடுத்துரைக்கின்றன.

பிரெஞ்சு கம்பனியால் துவக்கப்பட்ட பணி, பின்னர் ஐக்கிய அமெரிக்கா மூலம் 1904 இல் தொடரப்பட்டு 1914 ஆகத்து 15 அன்று கப்பல் போக்குவரத்திற்கு கால்வாய் திறக்கப்பட்டிருக்கிறது. 78 கி.மீ நீளமும் 33.5 மீட்டர் அகலமும் கொண்ட கால்வாய் ஐக்கிய அமெரிக்கா, பிரான்சு, கொலம்பியா போன்ற நாடுகளின் கட்டுப்பாட்டில் இருந்திருக்கிறது. பின்னர் 1959 இல் பனமா அரசு கையகப்படுத்தி, பனாமா கால்வாய் ஆணையத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆணையம் மூலம் நிர்வகிக்கப்படும் பனாமா கால்வாயில் ஐந்து இடங்களில் சுங்கம் வசூலிக்கப்படுவதாக் குறிப்பிடப்படுகிறது. 1914 இல் 1000 கப்பல்கள் சென்று வந்தது, 2008 இல் 14,702 கப்பல்களாக உயர்ந்திருக்கிறது. 2008 வரை, எட்டு லட்சத்திற்கும் அதிகமான கப்பல்கள் பதினொன்றரை மணி நேரம் பயணம் செய்து கால்வாயைக் கடந்திருக்கின்றன. உலகின் அதிசயமாகப் புகழப்படும் பனாமாக் கால்வாயை வடிவமைத்த தலைமைப் பொறியாளர்களாக ஜான் .ஃபின்லே வாலஸ் (1904-05), ஜான் .ஃப்ராங்க் (1905-07), ஜார்ஜ் வாஜிங்டன் கோத்தேல்ஸ் (1907-14) போன்றோர் சிறப்பிக்கப்படுகின்றனர்.

மத்திய அமெரிக்கப் பகுதியில் செழித்திருந்த நாகரிகமாக மாயன் நாகரிகம் புகழப்படுகிறது. மெக்சிகோ, குவாத்தமாலா, ஹோண்டுரஸ் போன்ற நாடுகளில் விரவியிருந்த மாயன் நாகரிகம், கொலம்பசுக்கு முந்தைய அமெரிக்காவில் பரவலாகக் காணப்பட்டிருக்கிறது. எழுத்து மொழியைக் கொண்டிருந்த மாயன் நாகரிகம், பொது ஆண்டிற்கு முன் இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளில் தோன்றியதாகக் கருதப்படுகிறது.

மாயா மக்கள் கணிதம், எழுத்துமுறை, வானியல், கட்டிடக் கலை, சமயம் போன்றவற்றில் மேம்பட்டு இருந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. தொடக்க காலம், இடைக்காலம் (பொ.ஆண்டு 250-1000) பிற்காலம் (பொ.ஆண்டு 1000-1697) எனப் பிரிக்கப்படும் மாயா நாகரிகத்தின் தொடர்ச்சியாக, தற்காலத்திலும் சுமார் ஆறு லட்சம் மாயா மக்கள் மெக்சிகோ, கௌதிமாலா போன்ற நாடுகளில் வாழ்வதாகக் கூறப்படுகிறது. மாயா நாகரிகத்தின் பெரிய அளவிலான கட்டுமானங்களும், நகரமயமாக்கலும் நடைபெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. நினைவுச் சின்னங்கள், கோவில்கள், அரண்மணைகள் என கட்டடக் கலையை மாயா மக்கள் சிறப்பாக

முன்னெடுத்திருக்கின்றனர். படியமைப்பு பிரமிடுகளைக் கட்டிய மாயன்கள், நுணுக்கமான செதுக்கு வேலைப்பாடுகளோடு கூடிய கற்களால் குறிப்பிட்ட கடவுளுக்கென்று தனித்தனியான பிரமிடுகளை அமைத்திருக்கின்றனர். மெக்சிகோவின் யுகாட்டான் மாநிலத்தில் இடம் பெற்றுள்ள எல் காஸ்டீயோ பிரமிட், மாயன்களின் பிரமிட் கட்டிடக் கலைக்கு சிறந்த சான்றாகக் கொள்ளப்படுகிறது. கோட்டை எனும் பொருள் கொண்ட எல் காஸ்டிலோ எனும் ஸ்பானியச் சொல்லால் குறிப்பிடப்படும் எல் பிரமிட், புகழ்பெற்ற தொல்பொருளியல் பகுதியான சிச்சென் இட்சாவின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. பிரமிடின் உச்சியில் குகுல்கன் கோவிலும் இடம் பெற்றுள்ளது.

ஒப்பியல் முறையைப் பயன்படுத்தி மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு வரும் மாயன் மொழிகள் மிகவும் தொன்மையானவைகளாக அடையாளம் காணப்பட்டு வருகின்றன. மொழியியலில் ஒப்பியல் முறை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளை எடுத்து ஒவ்வொரு அம்சமாக ஒப்பிடுவதன் மூலம் அவற்றின் வளர்ச்சியை ஆய்வு செய்யும் ஒரு முறையாகக் கொள்ளப்படுகிறது. ஒப்பியல் ஆய்வுகள் ஏறக்குறைய ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் பேசிய முந்து மொழியிலிருந்து மாயன் மொழிகள் உருவாகியிருக்கலாம் எனத் தெரிவிக்கின்றன. மெக்சிகோ மற்றும் கௌதமாலா நாடுகள் ஏராளமான மாயன் மொழிகளை அங்கீகரித்திருக்கின்றன.

வேளாண்மைத் தொழிலில் சிறந்து விளங்கிய மாயா மக்கள், மழையையும், சூரியனையும், முக்கியக் கடவுள்களாக வழிபட்டிருக்கின்றனர். கினிசாசௌ எனும் சூரியக் கடவுளையும், சாக்சு எனும் மழைக் கடவுளையும், குல் குல் கான் என்ற பாம்புக் கடவுளையும் வணங்கிய மாயர்கள், பல்வேறு சடங்கு முறைகளையும், வேண்டுதல் முறைமைகளையும், இறுதிச் சடங்குகளையும், பலியிடல்களையும் கொண்டிருந்திருக்கின்றனர்,

மாயர்கள் சோளத்தை சோளக்கடவுளாகவே வழிபட்டதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. சோளத்தை உயிர்ப்பு சக்தியாகக் கருதிய மாயர் மக்கள், கடவுள்களையும் சோளத்தோடு தொடர்புடையவர்களாக வடிவமைத்திருக்கின்றனர். மனிதர்கள் சோளத்திலிருந்தே உருவாக்கப்பட்டதாக நம்பிய மாயர்கள், சோளத்தை பெண் கடவுளாக, எழுத்துக் கலைக்கான கடவுளாக உருவகம் செய்திருக்கின்றனர்.

நடுத்தர உருவமும், அகலமான நெற்றியும், எடுப்பான மூக்கும் கொண்டிருந்த மாயன் மக்கள், தமிழகத்திலிருந்து சென்றவர்களாகக் தமிழ் அறிஞர்களால் சுட்டப்படுகிறது. மாயன் நாகரிக அழிவுக்கு சகோதரச் சண்டையும் முக்கிய காரணமாக கருதப்படுகிறது. சேர, சோழ , பாண்டிய குலத்தவர் போல் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்ட மாயன்களை, சேர குலத்தவர் என்றும், சோழ குலத்தவர் என்றும் சில தமிழ் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மயன், மாயன் எனும் சொல்லாட்சி கொண்டும், சமய, சமூகப் பழக்கங்களைக் கொண்டும், குமரிக் கண்ட கருதுகோளின் அடிப்படையிலும் அவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படு கின்றன. உலகின் முதல் சிற்பியாகக் குறிப்பிடப்படும் மயன், பாதள உலகம் சென்றதாகக் குறிப்பிடப்படும் வரலாற்றின் அடிப்படையில், பண்டைய சேர நாட்டோடு மாயன்கள் தொடர்புபடுத்தப்படுகின்றனர். சூரிய வழிபாடு, பாம்பிற்கான முக்கியத்துவம் போன்றவற்றினாலும் மாய நாகரிகம் தமிழகத்தோடு அடையாளம் காணப்படுகிறது.

மயன்கள் போன்று சூரியனையே முதன்மைக் கடவுளாகக் கொண்டிருந்த இன்கா நாகரிகத்தினர், தென்னமெரிக்கப் பகுதியில் மிகப் பெரிய பேரரசாக விளங்கியிருக்கின்றனர். கொலம்பசு காலத்திற்கு முன், அமெரிக்க கண்டப் பகுதியிலிருந்த மிகப்பெரும் பேரரசாக இன்கா பேரரசு (1438-1533), பதின்மூன்றாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் பெரு நாட்டின் உயர் பகுதிகளில் அமைக்கப்பட்ட இன்கா பேரரசு, பெரு, எக்குவடோர், பொலிவியா, அர்ஜென்டினா, சிலி மற்றும் கொலம்பிய நாடுகளின் மேற்கு நிலப்பகுதிகளில் பரவியிருந்திருக்கிறது.

சூரியனின் மகன் என அழைக்கப்பட்ட இன்கா அரசர் பெருமதிப்பிற்குரியவராகக் கருதப்பட்டிருக்கிறார். இன்கா மக்கள் உயர்ந்த மலைப்பகுதிகளில் வாழ்ந்ததால் மலைப் பகுதிகளைச் சரிவாக வெட்டி வேளாண்மை செய்திருக்கின்றனர். சோளம், பருத்தி, தக்காளி போன்றவற்றோடு உருளைக் கிழங்கை முதன்மையாகப் பயிரிட்டிருக்கின்றனர். சிறந்த படையையும் விரைவான தகவல் தொடர்பையும் பெற்றிருந்த இன்காக்கள், அவர்களது காலத்தில் வலிமையானவர்களாக இருந்திருக்கின்றனர். போருக்குச் செல்லும் போது முரசு கொட்டி கொம்பூதிச் செல்வதை வழக்கமாக்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இன்கா நாகரிகத்தின் முதன்மை மொழியாக கெச்வா மொழி குறிப்பிடப்படுகிறது. பெரு, பொலிவியா, எக்குவடோர் போன்ற நாடுகளில் அலுவல்

மொழியாக உள்ள கெச்சுவா மொழி, அமெரிக்க தொல் குடிகளின் பெரும்பாலான மக்களால் பேசப்படும் மொழியாகவும் அறியப்படுகிறது.

இன்கா நாகரிகத்தின் கட்டிடக்கலைக்கு சான்றாக மாச்சு பிச்சு அமைந்துள்ளது. மாச்சு பிச்சுவின் இன்டிகுவாட்டான சூரியக் கோவில் முக்கியத்துவம் நிறைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டிருந்த இன்காக்கள், பச்சாமாமா மற்றும் விரகோச்சா போன்ற முக்கிய கடவுள்களையும் வழிபட்டதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இன்காக்களின் தொலைந்த நகரம் என அழைக்கப்பட்டு வந்த மச்சு பிச்சு, எசுப்பானியர்களின் இன்கா ஆக்கிரமிப்பிற்குப்பின் கைவிடப்பட்ட நகராக இருந்திருக்கிறது. எசுப்பானியர்களின் ஆதிக்கத்தோடு புகழ் பெற்றிருந்த இன்காப் பேரரசும், இன்கா நாகரிகமும் முடிவுக்கு வந்திருக்கிறது.

இன்கா நாகரிகம் என்றில்லாமல் தென் அமெரிக்கா முழுவதுமே தமிழ் சொற்களும் தமிழர் நாகரிகமும் விரவிக் கிடப்பதாக தமிழ் ஆர்வலர்கள் சான்றுகள் அளிப்பது, ஒரு காலத்தில் உலகெங்கும் தமிழர் நாகரிகம் விரவியிருந்தது என்பதற்கு சான்றாகக் குறிப்பிடப்படுகிறது.

பூமியின் தெற்கு அரைக்கோளத்தில் அமைந்துள்ள தென்னமெரிக்கக் கண்டத்தில் பன்னிரெண்டு நாடுகள் இடம் பெற்றுள்ளன. தெற்கு-வடக்காக ஏறக்குறைய 7600 கி.மீ நீளமும், கிழக்கு-மேற்காக ஏறக்குறைய 5300 கி.மீ அகலமும் உடைய தென்னமெரிக்காவில், கடற்கரையோரங்களிலேயே பெருவாரியான மக்கள் வசிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. கண்டத்தின் பெரும்பகுதி வெப்ப மண்டலத்தில் அமைந்திருப்பதால் ஆறுகளும், காடுகளும் பல்வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளும், மக்கள் தொகையும் இடம் பெற்றிருக்கின்றன. ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் நாடுகளின் மொழியும், பண்பாடும் பரவிய காரணத்தால் தென் அமெரிக்கக் கண்டம் இலத்தீன் அமெரிக்கா எனவும் அழைக்கப்படுகிறது.

உலகின் மிக நீளமான மலைத்தொடராக குறிப்பிடப்படும் அந்தீசு ஆண்டிஸ் மலைத்தொடர் ஏராயிரம் கிலோ மீட்டர்கள் நீளமும், சில பகுதிகளில் ஐந்நூறு கி.மீ அகலமும் கொண்டு தென்னமெரிக்காவின் புகழுக்குரிய மலையாக இருக்கிறது. சராசரியாக நான்காயிரம் மீட்டர்கள் உயரம் கொண்ட ஆந்திசு மலையின் உயரமான மலைமுகடான இருபத்து இரண்டாயிரத்து எந்நூற்றி நாற்பத்து நான்கு

அடிகள் உயரம் கொண்ட அன்கோன்காகுவா, அர்சென்டினா நாட்டில் அமைந்துள்ளது. உலகின் ஒவ்வொரு கண்டங்களிலும் அதிக உயரமுள்ள ஏழு கொடுமுடிகளில் ஒன்றெனப் புகழப்படும் அக்கோன்காகுவா, மலையேற்றத்திற்குப் பெயர் பெற்றதாக புகழப்படுகிறது. ஆன்டிஸ் எனும் பெயர், கெச்வா மொழிச் சொல்லான ஆண்டி என்பதிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கிறது.

சுமார் இருபத்து மூன்று மில்லியன் வருடங்களுக்கு முன்பு ஆப்பிரிக்க பெருநிலத்திலிருந்து பிரிந்ததாக நில அறிவியலாளர்களால் குறிப்பிடப்படும் தென்னமெரிக்க நிலத்தில், ஆப்பிரிக்காவின் தொல்லுயிர் புதைபடிவங்களை ஒத்த புதைபடிவங்கள் கிடைப்பதும் ஒப்பு நோக்கத்தக்கது. சுமார் பதினைந்தாயிரம் வருடங்களுக்கு முன்பு ஆசியாவையும் வட அமெரிக்காவின் அலாஸ்கா நிலத்தையும் இணைத்திருந்த பெரிங் பகுதி மூலமாகவோ அல்லது அமைதிக் கடலின் தெற்குப் பகுதி வழியாகவோ தென்னமெரிக்காவுக்கு மக்கள் வந்திருக்கக் கூடுமெனக் கூறப்படுகிறது.

தென்னமெரிக்காவில் பொது ஆண்டிற்கு சுமார் ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மனிதர் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அமேசான் படுகையில் விவசாயம் நடைபெற்றதாகவும் மண்டே சான்றுகள் மூலம் சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மரவள்ளிக் கிழங்கு பயிர் செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. வேளாண்மையும் மீன்பிடித்தலும் பரவலாகக் காணப்பட்டதாகவும், பின்னர் பாசன அமைப்புகள் பெருகி ஆண்டிசு மலைத்தொடர் முழுமையும் வேளாண் மக்கள் பரவியதாகவும் கூறப்படுகிறது. ஒட்டக வகையைச் சேர்ந்த லாமாக்கள், விக்குன்யா, குவானக்கோ மற்றும் அற்பாக்கா போன்ற விலங்குகள், வீட்டு விலங்குகளாகப் பழக்கப்பட்டு இறைச்சியும் கம்பளியும் பெறப்பட்டிருக்கின்றன. மேலும் இவ்விலங்குகள் போக்குவரத்திற்கும் பயன்பட்டிருக்கின்றன. பெருவின் கடலோர நார்டெசிக்கோ நாகரிகம் தென்னமெரிக்காவின் தொன்மையான நாகரிகமாகக் குறிப்பிடப்படுகிறது. நார்டெ சிக்கோ மக்கள் எகிப்தின் தொன்மையான பிரமிடுகளைக் ஒத்த பிரமிடுகளை உருவாக்கியிருக்கின்றனர்.

அர்கெந்தீனா, பொலிவியா, பிரேசில், சிலி, கொலம்பியா, எக்குவடார், கயானா, பராகுவே, பெரு, சுரிநாம், உருகுவே, வெனிசுலா போன்ற இறையாண்மை நாடுகளையும், பிரான்சின் பிரெஞ்சு கயானா, ஐக்கிய அரசின் யோர்சியா மற்றும்

சான்ட்விச் தீவுகள், ஐக்கிய அரசிடமிருந்து 1962 இல் விடுதலை பெற்ற டினிடாட் டொபாக்கோ பகுதிகளும் தென் அமெரிக்க நாடுகளாக விளங்குகின்றன.

நெப்போலியப் போர்களால் நிலைகுலைந்த ஸ்பெயின், போர்ச்சுக்கல் நாடுகளிலிருந்து தென்னமெரிக்கப் பகுதிகளை விடுவித்ததில் பெரும்பங்காற்றியவர்களாக வெனிசுலாவின் சிமோன் பொலிவர் (1783–1830) மற்றும் அர்ஜென்டினாவின் ஜோஸ் தெ சான் மார்ட்டின் (1778-1850) புகழப்படுகின்றனர்.

அமேசான் ஆறும் அதன் துணை ஆறுகளும் பாயும் தென்னமெரிக்காவின் அமேசான் படுகை, உலகின் மிகச் சிறந்த பல்லுயிர் பகுதியாகப் புகழப்படுகிறது. பிரேசில் மற்றும் பெரு நாடுகளில் பரந்துள்ள அமேசான் மழைக்காடுகள் உலகிலேயே மிகப்பரந்த மழைக்காடுகளாக அறியப்படுகின்றன. சுமார் எண்பத்தி இரண்டு லட்சம் சதுரகிலோமீட்டர்கள் பரப்பளவு கொண்ட அமேசான் காடுகள் உயிரினங்களின் சொர்க்கம் எனில் மிகையாகாது.

உலகின் மிகப்பெரும் ஆற்றுப் படுகையை உருவாக்கும் அமேசான் ஆறு, ஆறாயிரத்து நானூறு கிலோ மீட்டர்கள் பாய்ந்தோடி அட்லாண்டிக் கடலில் நொடிக்கு மூன்றுலட்சம் கனமீட்டர் நன்னீரைக் கலப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆயிரத்திற்கும் மேலான துணை ஆறுகளைக் கொண்டுள்ள அமேசான் ஆறு, ஆண்டி மலைத்தொடரின் பனிமூடிய நவாடோ மிசிமி சிகரத்தின் பனி ஏரியில் உற்பத்தியாவதாகக் கூறப்படுகிறது.

உலகிலுள்ள காட்டு உயிர்களில் மூன்றில் ஒரு பங்கு அமேசான் காடுகளில் வாழ்வதாக அறியப்படுகிறது. அமேசான் நதியில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மீன் வகைகள் இருப்பதே அதன் உயிரினப் பலவகைமைக்கு சிறந்த சான்றாகும். அனகோண்டா போன்ற பெரியவகைப் பாம்புகள் உட்பட ஏராளமான விலங்குகளின் வாழிடமாக அமேசான் பகுதி விளங்குகிறது. மனிதர்களால் இன்னும் அறியப்படாத பல்லாயிரம் தாவர விலங்கின வகைகளைக் கொண்டிருக்கும் போற்றுதலுக்குரிய அமேசான் ஆற்றுப்பகுதி உலகின் அருங்கொடை எனில் மிகையாகாது.

போர்த்துக்கீசியர், எசுப்பானியர் போன்ற ஐரோப்பியர்களின் மிகப்பெரிய குடியேற்ற பகுதியாக விளங்கிய தென்னமெரிக்காவில், குடியேற்றக்காரர்களுக்கும் தொல்குடியினருக்கும் பிறந்த வாரிசுகளும் அவர்தம் தலைமுறைகளும்

பெருவாரியான மக்கள் தொகையாக உருவாகியுள்ளனர். மேற்கத்திய கலாச்சாரக் கூறுகளைப் பின்பற்றும் இம்மக்கள், தென்னமெரிக்காவின் ஒட்டுமொத்தமான பண்பாடாக மாற்றம் கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

உருகுவே, அர்ஜென்டினா போன்ற நாடுகளால் முன்னெடுக்கப்பட்ட தென்னமெரிக்க கால்பந்து விளையாட்டு, பின்பு தென்னமெரிக்க நாடுகளின் ஆகப்பெறும் விளையாட்டாக மாறியது வரலாறு. உலகின் மிகச்சிறந்த கால்பந்தாட்ட வீரர்களைப் பெற்றுள்ள பிரேசில், அர்ஜென்டினா போன்ற நாடுகள், பல குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டியிருக்கின்றன.

உலகிலேயே மிகப் பிரபலமான விளையாட்டாக அறிப்படும் கால்பந்து விளையாட்டை கட்டுப்படுத்தும் நிர்வகிக்கும் அமைப்பாக பிபா எனப்படும் பன்னாட்டுச் கால்பந்துச் சங்கங்களின் கூட்டமைப்பு செயல்படுகிறது. சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் அமைந்துள்ளன பிபா, உலகக் கோப்பை போட்டிகளை ஒழுங்கு செய்கிறது.

பொது ஆண்டிற்கு முன்பே சீனாவில் விளையாடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டாலும், நவீன கால்பந்து விளையாட்டையும் அதற்கான விதிகளையும் உருவாக்கியதாக இங்கிலாந்து புகழப்படுகிறது. 1863 இல் இங்கிலாந்து கால்பந்து சங்கத்தினால் உருவாக்கப்பட்ட விதிகளே தற்போதைய கால்பந்தாட்டத்திற்கு அடிப்படையாகக் கருதப்படுகின்றன.

உலகின் மிகவும் பழமையான கால்பந்துப் போட்டியாக இங்கிலாந்தின் உள்நாட்டுக் கால்பந்துக் கழக அணிகளுக்கிடையே 1872 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டிகள் குறிப்பிடப்படுகின்றன. இருநூறுக்கும் அதிகமான நாடுகளில் சுமார் இருபத்து நான்கு கோடிக்கும் அதிகமானவர்களால் விளையாடப்பட்டு வரும் கால்பந்து விளையாட்டு, சிறந்ததொரு உடற்பயிற்சியாகவும் இருப்பது சிறப்பு.

தென்னமெரிக்க கால்பந்தாட்டத்தோடு அதிகம் தொடர்புடைய அமைப்பாக கோபா கால்பந்து கூட்டமைப்பு அறியப்படுகிறது. தென்னமெரிக்காவின் பத்து நாடுகளோடு, மெக்சிகோ, கோஸ்டாரிகா மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் இரு அணிகள் சேர்ந்து பன்னிரண்டு நாடுகளுக்கிடையே ஆடப்படும் கோபா கால்பந்து போட்டிகள், தென்னமெரிக்க கால்பந்தாட்ட வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியிருக்கிறது.

1914 முதல் பன்னாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வரும் பிரேசில் தேசிய கால்பந்து அணி, 1916 முதல் தென்னமெரிக்க கால்பந்து கூட்டமைப்பில் (கோபா) உறுப்பினராக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஐந்து முறை உலக் கோப்பை வென்றுள்ள பிரேசில் நாட்டின் பெலே, கால்பந்து உலகின் மன்னன் எனப் புகழப்படுகிறார். கருப்பு முத்து எனும் அடைமொழி கொண்ட பீலே இருபத்தியிரண்டு கால கால்பந்தாட்ட வாழ்க்கையில், ஆயிரத்து இருநூற்றி எண்பத்தியிரண்டு கோல்களை அடித்து சாதனை நிகழ்த்தியிருக்கிறார். ரொனால்டோ, ரொனால்டினோ, சாகா, நெய்மர் போன்ற பல புகழ்பெற்ற காற்பந்தாட்ட வீரர்களை உருவாக்கிய பிரேசில், கால்பந்து உலகின் தனித்துவமான ஆட்டத்திற்குச் சொந்தக்கார நாடு எனில் மிகையாகாது.

நூற்றாண்டின் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான விருதை பீலேவுடன் பகிர்ந்து கொண்ட அர்ஜென்டினாவின் டீகோ மரடோனா, அர்ஜென்டினா தேசிய அணிக்காக விளையாடி தொன்னூற்றியோரு கோப்பைகளை வென்றதாகப் புகழப்படுகிறார். நூற்றாண்டின் ஆகச் சிறந்த கோலை அடித்தவர் எனச் கொண்டாடப்படும் மாராடோனா, வலிமையாக கால்களோடு மைதானத்தின் மையப்பகுதியில் திறமையாக பந்தை விளையாடுபவராகவும் குறிப்பிடப்படுகிறார். அர்ஜென்டினா தேசிய அணிக்காகவும் பார்சிலோன கிளப் அணிக்காவும் விளையாடி வரும் லியோனல் மெஸ்ஸி இளைய தலைமுறையின் மிகச் சிறந்த கால்பந்தாட்டக்காரர்களுள் ஒருவராகப் புகழப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

பிரேசிலின் மிகப் புகழ்பெற்ற நடனமாக சம்பா நடனம் அறியப்படுகிறது. ஆப்பிரிக்க அய்ரோப்பிய மூலங்களை கொண்டு உருவானதாகக் குறிப்பிடப்படும் சம்பா நடனம், பிரேசிலின் தேசிய அடையாளமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தென்னபிரிக்கா நாடுகளின் தொன்மையான திருவிழாவாகக் கூறப்படும் சம்பா, தெரு நடனமாக ஆரம்பித்து, இசை, துள்ளலான ஆட்டம் அணிவகுப்பு என மிகப் பெரியளவில் உலகின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

சுமார் ஒரு லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட உலகின் மிகவும் வறண்ட பாலைவனமாகக் குறிப்பிடப்படும் அட்டகாமா பாலைவனம் தொடங்கி, தெற்கு வடக்காக 4,630 கி.மீ நிளமும், கிழக்கு மேற்காக 430 கி.மீ அகலமும் கொண்டுள்ள சிலி நாடு, ஸ்பெயினிடமிருந்து 1810 ஆம் ஆண்டில் விடுதலையடைந்திருதாகக் குறிப்பிடப்படுகிறது. பசிபிக் எரிமலை வளையத்தில்

அமைந்துள்ள சிலி நாட்டில் எரிமலை குமுறல், நிலநடுக்கம் போன்றவை நிகழ்வதாகக் கூறப்படுகிறது.

ஆண்டிஸ் மலைகளால் நிறைந்துள்ள சிலி நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் ஸ்பானிய கலப்பினால் உருவான மெஸ்திசோக்களாக அறியப்படுகின்றனர். நகரமயமாக்கல் அதிகம் கொண்ட நாடாகக் குறிப்பிடப்படும் சிலியில் குடியரசு ஆட்சி முறையும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டதாக அறியப்படுகிறது. சிலி, பொலிலியா, பெரு போன்ற நாடுகளில், ஐமாரான் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஐமாரா மொழியை சுமார் இருபத்தியிரண்டு லட்சத்திற்கும் அதிகமானோர் தாய் மொழியாகப் பேசுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஸ்பெயினின் பிரான்சிஸ்கோ பிசாரோ (1476-1541) அமைதிப் பெருங்கடலைக் கண்டறிந்த நாடாய்வுக் குழுவினரில் ஒருவராக இருந்தவராகவும், இன்காப் பேரரசை வெற்றி கொண்டவராகவும் அறியப்படுகிறார். பெருநாட்டின் தளபதியாக இருந்த (1529-541) பிசாரோ புதிய உலகமான தென்னாமெரிக்காவில் பொருளும் புகழும் தேடிக் கொண்டவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

போரற்ற உலகம், பசி, நோய், கல்லாமை இல்லாத சமத்துவ சமுதாயத்திற்காகப் போராடியவராகப் பாராட்டப்படும் வெனிசுலாவின் முன்னாள் அதிபர் ஊகோ சாவெசு (அதிபர் காலம் 1999-2013) தென்னமெரிக்காவின் பூர்வக்குடி பின்புலத்திலிருந்து குடியரசுத் தலைவராகி வரலாறு படைத்திருக்கிறார். எண்ணெய் வளம் நிரம்பப் பெற்ற நாடாக அறியப்படும் வெளிசுவேலா நாடு, உலகின் பெரும் பல்லுயிர்ப்பெருக்கம் கொண்ட நாடுகளுள் ஒன்றாக இருப்பதும் கூடுதல் சிறப்பு.

மூன்றாயிரத்து இருநூற்றி பன்னிரென்டு அடிகள் உயரம் கொண்ட உலகின் மிக உயரமான ஏஞ்சல் அருவியைக் கொண்ட வெனிசுவேலா, எசுப்பானிய ஆதிக்கத்திலும், பின்னர் வெனிசுலா - பொலிவியா கூட்டாச்சியின் ஒரு பகுதியாகவும் இருந்து, பின்னர் 1830 இல் தனி நாடாகச் சுதந்திரம் பெற்றிருக்கிறது. 1999 இன் பொலிவியா புரட்சி மூலம் இடதுசாரிக் கருத்துகள் மேலோங்கிய ஆட்சிமுறை ஏற்பட்டு, நாட்டின் பெயரும் வெனிசுலாவின் பொலிவாரியன் குடியரசு (ரிபப்ளிகா பொலிவியா டி- வெனிசுலா) என மாற்றப்பட்டிருக்கிறது. காப்பி, கோகோ போன்ற பணப்பயிர்களுக்குப் பெயர் பெற்ற வெனிசுலா, சமீப காலங்களில் ஐக்கிய அமெரிக்க பண்பாட்டிற்கு எதிரான போக்கை முன்னிருத்தி வருகிறது.

அமெரிக்க ஐக்கியத்தின் எதிர்ப்பு சிந்தனை கொண்டவராகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான போராளியாகவும் சமூக விடுதலை வீரராகவும் புகழப்படும் சேகுவேரா (1928-1967) தென்னமெரிக்கா மற்றும் கியூபா நாடுகளின் வரலாற்றோடு நெருக்கமாக அறியப்படுகிறார். சோசலிசப் புரட்சியாளர், மருத்துவர், பொதுவுடமை அரசியல்வாதி எனப் பல்வேறு ஆளுமையாகக் குறிப்பிடப்படும் சே குவேரா, கியூபா பொலிவியா நாடுகளின் புரட்சிகளிலும் பங்குபெற்றிருக்கிறார்.

அர்ஜென்டினாவில் பிறந்த சேகுவேரா, அர்ஜென்டினாவிலும் பின்னர் பெரு, கொலம்பியா, வெனிசூலா போன்ற நாடுகளிலும், தொடர்ந்து மத்திய அமெரிக்க நாடுகளிலும் மேற்கொண்ட பயணங்கள் வரலாற்றுப் புகழ் கொண்டவையாகக் குறிப்பிப்படுகின்றன. இரு சக்கர வாகனத்தில் லத்தின் அமெரிக்க நாடுகளில் மேற்கொண்ட பயணங்களை விவரித்து ஈருருளிக் குறிப்புகள் (த மோட்டார் சைக்கிள் டயரிஸ்) எனும் புத்தகத்தையும் எழுதியிருக்கிறார்.

மிக அரிதாகவே குளிக்கும் பழக்கம் கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படும் சேகுவேரா, கியூபாவின் புகழ்பெற்ற பிடல் காஸ்ட்ரோவோடு (1926-2016) நட்பாகி, பின்னர் கியூபாவின் புரட்சியிலும் இணைந்து கொண்டிருக்கிறார். தோழர் எனும் அர்ஜெந்தின வார்த்தையான சே வார்த்தை முன்னொட்டாகக் கொண்டு சே குவேரா அதாவது தோழர் குவேரா என அழைக்கப்படும் எர்னெஸ்டோ குவேரா, பொலிவியா நாட்டில் புரட்சிக்கான முன்னேற்பாடுகளை செய்தபோது, அமெரிக்காவின் புலனாய்வுத் துறை துணையுடன் பிடிக்கப்பட்டு, முறையற்ற முறையில் முடிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் தோழர், முடிந்தாலும் வரலாற்று நாயகனான தோழர் எல் சே வின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

கரிபியக் கடல் வெளியில் கரும்புக் காடாக விரிந்து கிடக்கும் அழகிய தேசமாக கூபா புகழப்படுகிறது. உலகின் சர்க்கரைக் கிண்ணமாக குறிப்பிடப்படும் கியூபா, பொதுவுடமைச் சிந்தனைக், பிடல் காஸ்ட்ரோ எனும் மாபெரும் மனிதருக்கு புகழ் சேர்ப்பதாகவும் விளங்குகிறது. பனிப்போர் காலத்தில் ருஷ்ய ஆதரவு நிலையெடுத்த கியூபா, ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிரி நாடு போல் ஆனதும், மிகச் சமீப காலத்திலேயே இரு நாடுகளுக்குமான உறவுகள் மேம்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்பானிஷ் ஆக்ரமிப்பில் இருந்த கியூபா பின்னர் 1898 இல் நிகழ்ந்த ஸ்பெயின் அமெரிக்கப் போருக்குப் பின், அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் வந்திருக்கிறது. 1902 இல் சுதந்திரம் வழங்கப்பட்டாலும், அமெரிக்காவின் ஆதிக்கமே மேலோங்கி இருந்ததாகக் கூறப்படுகிறது. ∴பெலன்சியோபாடிஸ்டா (1901-1973) தலைமையிலான அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு பிடல் காஸ்ட்ரோ தலைமையில் கியூபாவின் பொதுவுடமைக் கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது.

1965 இல் கியூபா பொதுவுடைமைக் கட்சியின் முதல் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிடேல் காஸ்ட்ரோ சிறந்த பொதுவுடமை அரசியல்வாதியாகப் புகழப்படுகிறார். சர்வாதிகார ஆட்சியாகக் குறிப்பிடப்படும் பாடிஸ்டாவின் ஆட்சியை அகற்றி பொதுவுடமை ஆட்சியை மலரச் செய்ததில் வெற்றிபெற்ற காஸ்ட்ரோ, கியூபாவின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டியவராக அறியப்படுகிறார். அரை நூற்றாண்டு கால காஸ்ட்ரோ ஆட்சியில், பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, கல்வியிலும் மருத்துவத்தில் சிறப்புற்ற நாடாக வளர்ந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சேகுவேராவும் காஸ்ட்ரோவும் இணைந்து கொரில்லாத் தாக்குதல்கள் மூலம் மீட்ட கியூபா தேசம், வேளாண்மைக்கு உகந்த நிலத்தைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேற்கிந்தியத் தீவுகளுள் பெரிய தீவான கியூபா, இயற்கை வளங்கள் நிரம்பிய நாடகவும் இருக்கிறது. வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் முக்கியத் தொழிலாகக் குறிப்பிடப்படும் கூபா, புகையிலைக்கும் பெயர்பெற்றதாக விளங்குகிறது. கைகளால் தயாரிக்கப்படும் சிகார் எனப்படும் சுரட்டுகளுக்குப் பெயர் பெற்ற கூபா நாட்டில், நெல், காப்பி, பழங்கள் போன்றவையும் முக்கியப் பயிர்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஒரு சிறிய வளரும் நாடான கியூபா, அண்டை நாடான சர்வவல்லமை பொருத்திய அமெரிக்காவின் பல்வேறு பொருளாதாரக் தடைகளையும் தாங்கி வளர்ந்து வந்தது வியப்பளிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆப்பிரிக்கா மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு பல போர்களிலும் பங்குபெற்றறதாகக் குறிப்பிடப்படும் கியூபாவிற்கு, ருஷ்யா பல வழிகளிலும் ஆதரவளித்திருக்கிறது.

அல்மென்டாரேஸ் ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஹவானா நகரம், எசுப்பானியர்களால் வரலாற்று முக்கியத்துவமுள்ள நகராகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலாவிற்குப் பெயர்பெற்றதாக அறியப்படும் ஹவான துறைமுக நகரம், உலகின் மிகச்சிறந்த துறைமுக நகரங்களுள் ஒன்றாகவும் புகழப்படுகிறது.

தென்னமெரிக்காவின் மிகச் சிறந்த எழுத்தாளராகப் புகழப்படும் ஜார்ஜ் லூயிஸ் போர்கேஸ் (1899-1986), சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு என பன்முகத்திறமை நிரம்பியவராக புகழப்படுகிறார். அர்ஜெந்தினாவில் பிறந்த போர்கே, ஸ்பானிய இலக்கிய உலகில் முக்கியமானவராக அடையாளம் காணப்படுகிறார். பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளையும் அறிந்தவராகக் குறிப்பிடப்படும் போர்கேவின் நூல்கள், பல்வேறு உலக மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

கொலம்பியாவின் கபிரியேல் கார்சியா மார்க்கோஸ் (1927-2014) புகழ்பெற்ற புதினம், சிறுகதை, திரைக்கதை எழுத்தாளராக அறியப்படுகிறார். கபோ எனப் பெருமையாக அழைக்கப்படும் மார்க்கோஸ், இருபதாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க படைப்பாளியாகப் புகழப்படுகிறார். 1982 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெறக் காரணமான ஒரு நூற்றாண்டுத் தனிமை எனும் மார்க்கோஸின் ஸ்பானிய மொழிநூல் உலகப் புகழ்பெற்ற நூலாகக் கூறப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவராகப் புகழப்படும் சிலி நாட்டின் பாப்லோ நெருதா (1904-1973), பொதுவுடமைத் தத்துவங்களில் ஈடுபாடு கொண்டவராகவும் குறிப்பிடப்படுகிறார். ரிகார்டோ இலீசர் நெப்டாலி ரீயஸ் பொசால்தோ எனும் இயற்பெயர் கொண்ட நெருதா, செக்கோசுலாவாக்கியாவின் புகழ்பெற்ற எழுத்தாளரான ஜோன் நெருதாவின் பெயரால் உந்தப்பட்டு, பாப்லோ நெருதா எனும் புனைப்பெயரை வைத்துக் கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஸ்பானிய மொழியில் வெளிவந்த வைகறைக் கதிர்கள் (புக்ஸ் ஆப் டுவிலைட்ஸ்) ஸ்பானிய இலக்கிய உலகில் கிளர்ச்சியையும் பரபரப்பையும் ஊட்டியதாகக் குறிப்பிடப்படுகிறது. சிலி நாட்டின் தூதராக இலங்கை, மியன்மார், சிங்கப்பூர் போன்ற நாடுகளின் பணியாற்றிய பால் நெருடா பூமியின் தோல் உலகெங்கும் ஒன்றேதான் எனப் பாடிய உலகக் கவிஞராகக் கொண்டாடப்படுகிறார்.

1971 ஆம் ஆண்டில் இலக்கிய நோபல் பரிசு பெற்ற நெருதாவின் கவிதைகள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதும் சிறப்பு.

ஆப்பிரிக்காவின் மேற்கு நடுப்பகுதியில் பாய்ந்தோடும் காங்கோ ஆறு, உலகின் மிக ஆழமான ஆறு எனப் புகழப்படுகிறது. சயர் ஆறு எனவும் அழைக்கப்படும் காங்கோ, நான்காயிரத்து முந்நூற்றி எழுபது கிலோ மீட்டர்கள் நீளம் கொண்டதாகவும், ஆப்பிரிக்காவின் மிகப்பரந்த ஆற்றுப்படுகையை உருவாக்கியிருப்பதாகவும் போற்றப்படுகிறது.

நைல், காங்கோ ஆறுகளுக்கு அடுத்து ஆப்பிரிக்காவில் ஓடும் மிகப்பெரிய நதியாக நைஜர் நதி புகழப்படுகிறது. நான்காயிரத்து நூற்றி எண்பது கிலோமீட்டர்கள் பாய்ந்தோடும் நைஜர் ஆறு, தென்கிழக்கு கினியாவின் உயர்நிலப் பகுதிகளில் உருவாகி, மாலி, நைகர், பெனின், நைஜிரியா போன்ற நாடுகளூடாகப் பாய்ந்து நைஜர் கழிமுகத்தை அடைகிறது.

உலகின் அதிக ஒளிபெரும் ஆப்பிரிக்காவை இருண்ட கண்டம் என அழைத்தது பெரியதொரு முரண் நகை. ஆதிமாந்தர் பிறந்த இடமாக அறியப்படும் ஆப்பிரிக்கா கண்டத்து மக்கள், கடந்த ஐந்நூறு ஆண்டுகளாக அனுபவித்துவரும் துயர்கள், வேதனைகள், வலிகள், இழப்புகள் சொல்லி மாளாதவை. தற்போதைய உலகளாவிய ஊடக வெளிச்சத்திலும், ஆப்பிரிக்க நாடுகள் பற்றி அதிகம் அறியமுடியவில்லை எனும் போது ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முன் அரங்கேற்றப்பட்ட அவலங்கள் வெளிச்சத்திற்கு வராதது ஆச்சரியமில்லை.

பத்தாம் நூற்றாண்டுக் காலத்தில் ஐரோப்பியர் எப்படி தங்களுக்குள் அடித்துக் கொண்டு பகையாளிகளாக சண்டையிட்டதாக வரலாறு கூறுகிறதோ, அதைவிட கொடூரமான இனக்குழு சண்டைகளில் ஆப்பிரிக்க தேசத்தவர் நவீன காலத்திலும் சிக்குண்டு மாய்வது அவலம். ஆப்பிரிக்க சகோதர சண்டைகளில் முன்னர் பனிப்போரின் தாக்கம் அதிகம் எனில், தற்போது ஐரோப்பியர், சீனர், இந்தியர் தாக்கம் அதிகம் என்பது வெளிப்படை.

உலகில் தீவிரவாதமும், போரும் நீடிப்பது சில நாடுகளுக்கு நல்ல வருமானம் கொடுக்கும் வாய்ப்பாக இருப்பது கண்கூடு. உலக சமாதானத்தைப் பேசி கொண்டே ஆயுதத் தயாரிப்பிலும், ஆயுத ஏற்றுமதியிலும் கொள்ளை லாபம் ஈட்டும் நாடுகள் அனேகமுள்ளன.

இயற்கையன்னை கொஞ்சித் தழுவும் ஆப்பிரிக்காவில், தண்ணீர் பெருக்கெடுத்துப் பாயும் ஆப்பிரிக்காவில், நிலவளம் செழித்திருக்கும் ஆப்பிரிக்க மண்ணில், பசியும், பஞ்சங்களும், போர்களும், யாரால் எப்போதிலிருந்து என்பது உலக அரசியல் அறிந்த யாவரும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதே. ஆப்பிரிக்காவின் பெரும்பாலான அரசியல்வாதிகளையும் ஆசைகாட்டி அடிபணிய வைத்து, கனிமம் தோண்டும் உரிமைகளையும், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களையும் திறமையாகப் பயன்படுத்திக் கொண்ட நாடுகளும், ஆப்பிரிக்க வளத்தையெல்லாம் சுரண்டிக் கொழுத்த நாடுகளும் ஏராளம்.

உலகின் பல நாடுகளும் ஆப்பிரிக்காவில் சல்லிசாக நிலம் வாங்கி விவசாயம் செய்து அவரவர் நாட்டு மக்களின் வயிற்றை நிரப்புவதாகக் குறிப்புகளும், செய்திகளும் காணக்கிடைக்கின்றன. உலகின் ஒரு சில நாடுகளின் நிலவெறிக்கு ஒட்டுமொத்த பூமியையேக் கொடுத்தாலும் அடங்காது. பூமி போதாதென்று நிவுக்கும், சந்திரனுக்கும் கிளம்பிவிட்டார்கள்.

ஆப்பிரிக்காவின் பரந்துபட்ட இயற்கை வளமும், கொட்டிக் கிடக்கும் கனிம வளங்களும் உலகினர் கண்களை உறுத்துகின்றன. விவசாயம் செய்கிறோம், ரயில்ரோடு போடுகிறோம், ஆப்பிரிக்காவை முன்னேற்றுகிறோம் என்பதெல்லாம் பேருக்குச் செய்வது. அவரவர் நாட்டை கான்கிரீட் காடுகளாக மாற்றிவிட்டு ஆப்பிரிக்காவில் போய் காடு வளர்க்கிறார்களாம். எளிய மக்கள்.. அன்பான மக்கள்.. இனிமையான மக்கள்.. அவர்களை இப்படியுமா ஏமாற்றுவது. ஆப்பிரிக்கர் புத்திசாலி மக்களெனில் உலகம் இவ்வளவு முன்னேற்றமடைந்த பின்னரும் தங்களுக்குள் ஓயாத சண்டையிட்டுக் கொள்வார்களா. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக கிறித்துவ, இசுலாமிய மதங்களைப் பின்பற்றவைக்கப்பட்ட ஆப்பிரிக்கர்களை, உயர்ந்தவராகக் கருதும் பிற மக்கள் கூட்டத்தார், கருப்பின மக்களாகத்தான் கருதுகிறார்களோயொழியே அவர்களை கிறித்துவராகவோ, இசுலாமியராகவோ நடத்துவதில்லை. அவர்களை மனிதர்களாகவே நடத்தவில்லை என்றே வரலாறு முழுக்கப் பதிந்து வைத்திருக்கிறது.

சயர் என்றும் சயீர் என்றும் காங்கோ மக்களாட்சிக் குடியரசு என்றும் அறியப்படும் காங்கோ நதி பாயும் இந்த வளமான நாட்டில்தான் எவ்வளவு முரண்பாடுகள், சண்டைகள், யுத்தங்கள். அனைவரும் சகோதர மக்கள் தானே. நாம் அனைவரும் ஒன்று எனும் எண்ணம் வளராமல் போனது ஏன்?

தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகியது போல் துப்பாக்கி தூக்கியவனெல்லாம் தலைவனாகியது ஆப்பிரிக்கத் தாயின் துரதிஷ்டம். காங்கோ, ருவாண்டா, உகாண்டா, அங்கோலா, நமீபியா. ஜிம்பாப்வே உட்பட ஒன்பது நாடுகள் பங்கேற்ற காங்கோ யுத்தங்கள் வரலாற்றின் கறையே.

வரலாற்றுப் பெருமை கொண்ட காங்கோ மக்களாட்சிக் குடியரசு, மத்திய ஆப்பிரிக்கா நாடாகவும், உலகின் மிகப்பெரிய நாடுகளுள் ஒன்றாகவும் குறிப்பிடப்படுகிறது. எண்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே மக்கள் குடியேற்றம் இருந்ததாகக் கருதப்படும் காங்கோ மக்களாட்சிக்குடியரசு, 1879 இல் குடியேற்ற நாடாக மாறியிருக்கிறது. 1908-ல் பெல்ஜியன் காங்கோ என அறிவித்துக் கொண்ட பெல்சிய நாட்டிடமிருந்து 1960 இல் விடுதலை அடைந்திருக்கிறது. விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அரசியல் நிலையற்ற தன்மையால் பெரும் இன்னல்களை அடைந்த காங்கோ குடியரசில் உள்நாட்டுப் போர்களில் மட்டும் ஐம்பது லட்சத்திற்கும் அதிகமானோர் பலியானதாகக் கூறப்படுகிறது. உலகின் முப்பது சதவிகிதத்திற்கு மேல் வைரமும், மூன்றில் ஒரு பாகம் யுரேனியமும், விலையுயர்ந்த மரங்களும் கொண்டுள்ள காங்கோ குடியரசின் காடுகளும் கனிம வளங்களும் பெருமளவில் சுரண்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஊழல் நிறைந்த நாடாகக் குறிப்பிடப்படும் காங்கோவின் ஏற்றுமதியில் ஐம்பது சதவிகிதம் சீனாவிற்குச் செல்வதாக குறிப்பிடப்படுகிறது. சமீப ஆண்டுகளாக சீனா ஆப்பிரிக்காவில் மிகப்பெருமளவிலான முதலீடுகளைச் செய்து வருவதாக அறியப்படுகிறது. அதிக செல்வவளம் நிறைந்திருந்தும், வறுமையிலும், படிப்பறிவு குறைந்தும், ஊழலில் மலிந்தும் காணப்படும் ஆப்பிரிக்க நாடுகளில்தான் விலையுயர்நத தனிமங்களான தங்கம், வைரம், பிளாட்டினம், யுரேனியம் கொட்டிக் கிடப்பதும் ஒப்பு நோக்கத்தக்கது. சமீபமாக பெட்ரோலியம், இயற்கை எரிவாயும் ஆப்பிரிக்காவிலிருந்து ஏற்றுமதியாகிறது. பெட்ரோலிய இருப்பு அதிகம் உள்ளதாகக் கண்டறியப்பட்டதும் நைஜிரிய நாட்டில் உள் நாட்டுக் கலகங்களும், மத வெறியும், போதைப்பழக்கமும், ஊழலும் பெருமளவு பரவியதும் அல்லது பரப்பப்பட்டதும் கூர்ந்து நோக்கத்தக்கது.

ஒன்றுபட்ட வலிமையான ஆப்பிரிக்கா என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு ஐம்பத்தி நான்கு ஆப்பிரிக்க நாடுகளால் உருவாக்கப்பட்டுள்ள ஆப்ரிக்க ஒன்றியம் ஒரே அரசியல், பொருளாதார பாதுகாப்பு குடையின் கீழ் ஆப்பிரிக்க நாடுகளைக்

கொண்டு வருவதை தொலைநோக்குத் திட்டமாகக் கொண்டு செயல்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆப்பிரிக்க கண்டத்தில் மக்களாட்சியை நிறுவுவது, மனித உரிமைகளைப் பாதுகாப்பது, தாங்குகிற பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவது, உள்ளுர் சண்டைகளுக்கு இணக்கம் காண்பது, ஆப்பிரிக்க பொது சந்தையை உருவாக்குவது போன்றவை ஆப்பிரிக்க ஒன்றியத்தின் (ஆப்ரிக்கன் யூனியன்) பொது நோக்கங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஆப்ரிக்க ஒன்றயத்தின் அலுவல் மொழிகளாக அரபிக், ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துகீசியம் போன்றவற்றுடன் முடிந்தவரையில் ஆப்ரிக்க மொழிகளும் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. 2006 ஆம் ஆண்டை ஆப்பிரிக்க மொழிகளுக்கான வருடமாகவும் ஆப்பிரிக்க ஒன்றியம் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

மொராக்கா தவிர்த்து மற்ற அனைத்து ஆப்பிரிக்க நாடுகளும் இடம் பெற்றிருக்கும் ஆப்பிரிக்க ஒன்றியத்தில் 2009-2010 ஆண்டுகளில் தலைவராக இருந்தவர் முஅம்மர் அல்காதாபி. லிபியாவின் அதிகாரமிக்க தலைவராக இருந்த முவாம்மர் முகம்மது அடி மின்யார் அல்கதாபி (1942-2011) ஏறத்தாழ ஐம்பதாண்டு காலம் லிபியாவின் வரலாற்றோடு (1961-2011) நெருங்கிய தொடர்புடையவராக அறியப்படுகிறார்.

மத்தியதரைக் கடலை வடக்கு எல்லையாகக் கொண்ட லிபியா நாடு, மனித வளக் குறியீட்டில் ஆப்பிரிக்காவிலேயே மிகக் கூடுதலான நாடாகக் குறிப்பிடப்படுகிறது. உலகின் செல்வமிக்க பத்து எண்ணெய் உற்பத்தி நாடுகளுள் லிபியாவும் ஒன்றென அறியப்படுகிறது. பிரித்தானியரிடமிருந்தும் பின்னர் பிரெஞ்சு நாட்டினரிடமிருந்தும் 1951 இல் விடுதலைபெற்ற நவீன லிபியாவின் பழைய வரலாறு ரோமானியம், இசுலாமியர், ஒட்டோமான், மற்றும் இத்தாலியப் பேரரசுகளோடு தொர்புடையதாக அறியப்படுகிறது.

சகாரா பாலைவனச் சோலைகளில் மட்டுமே குறைந்த விவசாயம் செய்யப்படுவதாகக் குறிப்பிடப்படும் லிபியாவின் அதிகாரப்பூர்வ மொழியாக நவீன அரபு மொழி குறிப்பிடப்படுகிறது. தற்போதைய இளம் தலைமுறையினரால் ஆங்கிலமும் வேகமாகப் பரவிவருவதாகக் கூறப்படுகிறது.

வடக்கு, மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்காவின் பெரும்பாலான நாடுகளில் பரவியுள்ள சஹாரா பாலைநிலம் உலகிலேயே மிகப்பெரிய பரப்பு கொண்ட சுடு

பாலைநிலமாகக் குறிப்பிடப்படுகிறது. ஏறத்தாழ தொன்னூறு லட்சம் கிலோ சதுர மீட்டர்கள் பரப்பளவு கொண்டதாகக் குறிப்பிடப்படும் சகாரா பாலைநிலம், எகிப்து, சூடானின் வளமான நைல்நதிப்படுகை தவிர்த்து வட ஆப்பிரிக்காவின் பெரும்பகுதியைக் கொண்டிருப்பதும், மேற்கு அட்லாண்டிக் கடற்கரையை நோக்கி செல்லச் செல்ல பாலைவனத்திலிருந்து கடலோர சமவெளியாக மாறுவதும் குறிப்பிடத்தக்கது.

சுமார் இருபத்தைந்து லட்சம் ஆண்டுகள் பழமையானதாகக் குறிப்பிடப்படும் சஹாரா பாலை, மேற்கு சஹாரா, அய்ர் மலைகள், டெனெரெ பாலைவனம், லிபிய பாலைவனம் போன்ற பல பகுதிகளாகப் பிரித்துக் கூறப்படுகிறது. முன்னர் ஏரிகளும், ஆறுகளுமாக இருந்த சகாரா பாலை, தற்போது பாலை நிலமாகக் காட்சியளிப்பதாகவும், வரும் காலங்களில் பூமியின் சாய்மானத்தைப் பொருத்து சகாரா பாலையின் இயல்பு மாறக் கூடும் எனவும் கணிக்கப்படுகிறது.

காலத்திற்குக் காலம் மாறிவரும் பரப்பையும் சூழலையும் கொண்டுள்ள சகாரா, ஏறக்குறைய 600 அடிகள் உயரம் கொண்ட மணற்குன்றுகளையும், எரிமலைகளையும், சவன்னாப் புல்வெளிகளையும், பாளைக் கற்களையும், தாவரங்களுடன் கூடிய கலப்பு நிலப்பகுதி, சிதறிய புல்வெளிகள், பாலைவன சிறு புதர்காடுகள், உயரமான புதர்கள் மற்றும் மரங்கள் போன்றவற்றையும் கொண்டுள்ளது. ஒட்டகங்களும் ஆடுகளும் அதிகளவில் காணப்படும் சஹாராவில் நெருப்புக்கோழி போன்ற பாலைவனப் பறவைகளும், நரி, தேள் போன்ற விலங்குகளும் இடம்பெற்றுள்ளன.

உலகின் தொன்மையான மனிதர்களின் கால்தடயங்கள் ஆப்பிரிக்காவின் கடற்கரையோர நிலங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. உலகின் மற்றைய பகுதி மக்களை விட ஆப்பிரிக்க மக்களின் வரலாறே காலத்தால் மிகவும் தொன்மையானது என ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாக, கிழக்கு ஆப்பிரிக்காவில் தோன்றிய மனித இனமே உலகின் பல்வேறு பகுதிகளும் இடம் பெயர்ந்து பரவியுள்ளதாக டி.என்.ஏ மூலக்கூறு அடிப்படையிலான நவீன ஆய்வுளும் உறுதிசெய்கின்றன.

பொது ஆண்டிற்கு முன்பு சுமார் பதினாறாயிரம் ஆண்டுக் காலத்திலேயே ஆப்பிரிக்காவில் வேளாண்மை செய்ததற்கான தடயங்கள் அறியப்பட்டுள்ளன.

மேலும் உலோகத்தின் பயன்பாடு ஆப்பிரிக்காவிலேயே முதலாவதாக அறியப்பட்டிருக்கிறது.

நைல் நதியோடு நெருங்கிய தொடர்புடைய எகிப்து மூலமாக பண்டைய ஆப்பிரிக்காவின் வரலாறு அறியப்பட்ட போதிலும், நைல் பள்ளத்தாக்கிற்கு அப்பாலும் மிகப் பழமையான பலதரப்பட்ட சமூகங்களும் மேம்பட்ட நாகரிகங்களும் காணப்பட்டிருக்கின்றன. ஆரம்பகால வரலாற்றாய்வாளர்கள் எகிப்து, சூடான் போன்ற பகுதிகளைத் தாண்டி, உள் ஆப்பிரிக்காவிற்குள் நுழையாததால் அந்நாகரிகங்களைப் பற்றிய விவரங்கள் வெளியுலகிற்கு தெரியவில்லை எனவும் கூறப்படுகிறது.

கற்கருவிகளும், கருவிகள் கொண்டு உழவுத் தொழில் செய்ததற்கான ஆதாரங்களும் கண்டறியப்பட்டுள்ளன. ஏறக்குறைய ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்கப் பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்ததற்கான உறுதியான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பொது ஆண்டிற்கு முன்பான பன்னிரெண்டாம் ஆண்டுவாக்கில் ஆப்பிரிக்காவிலிருந்து மனிதர்களின் இடப்பெயர்வு பெருமளவில் நிகழ்ந்திருக்கலாம் என மொழியியல், பரிணாம, மற்றும் மரபணு சான்றுரைகள் எடுத்துரைக்கின்றன. சில மரபணு ஆய்வாளர்களால் பொது ஆண்டிற்கு முன்பான நாற்பதாயிரம் ஆண்டுகள் அளவில் மனிதப் பயணம் துவங்கியிருக்கலாம் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

பொது ஆண்டின் ஏழாம் நூற்றாண்டுக் காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் இசுலாம் பரவியதைத் தொடர்ந்து, ஆப்பிரிக்கக் கண்டத்தின் முன்னைப் பண்பாடு, சமயம் மொழிவளம், வாழக்கைத்தரம் மாற்றும் காண ஆரம்பித்திருக்கிறது. கிறித்தவத்தின் பரவலும் பின்னர் ஏற்பட்ட பதினெட்டாம் நூற்றாண்டு குடியேற்றக் காலத்தின் கிறித்தவ மத மாற்றமும் ஆப்பிரிக்காவின் வரலாற்றைப் பெருமளவில் மாற்றி அமைத்திருக்கின்றன. அரபு ஐரோப்பிய அடிமை வணிகமும் அப்பிரிக்க மக்களை உலகின் பல்வேறு பகுதிகளுக்கு பலவந்தமாகக் கொண்டு செல்லப்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற முதலாவது நாடாக லிபியா புகழப்படுகிறது. 1951 தொடங்கி 1960 வரை பல்வேறு நாடுகளும் விடுதலை பெற்றிருக்கின்றன. பிரான்சின் பிடியிலிருந்து வெளியேறி மேற்கு ஆப்பிரிக்கா

நாடுகளும் விடுதலைக் காற்றை சுவாசித்திருக்கின்றன. அங்கோலா, மொசாம்பிக் போன்ற நாடுகள் 1975 ஆம் ஆண்டுகளிலேயே போர்ச்சுக்கல் நாட்டிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றன. டிஜிபோடு நாடு 1977 லிலேயே பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்றிருக்கிறது. விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகள் முதல் வேளையாக தங்களது பெயர்களை மாற்றியதாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

மனித நாகரிகத்தின் தொட்டிலாக இருந்திருக்கக் கூடும் எனக் கருதப்படும் கிழக்கு ஆப்பிரிக்காவின் எத்தியோப்பிய நாடு, ஐரோப்பிய காலனியாதிக்கத்திற்கு உட்படாத ஒரே நாடு எனப் புகழப்படுகிறது. இத்தியோப்பியப் படுதியிலிருந்துதான் தற்கால மனித இனம் மத்திய கிழக்கு, ஆசியா என உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

பொது ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலேயே முடியாட்சி வரலாறு கொண்டிருந்த எத்தியோப்பிய பகுதியில் டிமெட் எனும் அரச மரபு (பொ.ஆ.முன் 980-400) தோன்றியிக்கிறது. பொது ஆண்டின் முதல் நூற்றாண்டில் அக்சும் நகரைத் தலைநகராகக் கொண்டு அச்சும் அல்லது அக்குமைட் பேரரசு (பொ.ஆ 100- 940) புகழுடன் இருந்திருக்கிறது. ஆக்ஸம் நகரம் புகழ் வாய்ந்த நகராகும் திகழ்ந்திருக்கிறது. ரோமப் பேரரசோடும் பண்டைய இந்தியாவோடும் வணிகப் பாதை கொண்டிருந்த அக்சும் பேரரசு அக்குமைட் நாணயங்களை வெளியிட்டிருக்கிறது. பொது ஆண்டுக் காலத்திலிருந்த ரோம், பெர்சிய, சீனப் பேரரசுகளோடு ஒப்பிடும் அளவிற்கு அக்குமைட் பேரரசு சிறப்புற்று இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. நான்காம் நூற்றாண்டில் நிறுவப்பட்டுள்ள எசான கற்தூண்கள், ஆக்ஸத்தின் எசான மன்னர் (பொ. ஆ. 320-360) இசைட்டு மன்னர் மெரோவை வெற்றிகொண்டதை விவரிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

எத்தியோப்பியாவின் வடபகுதியையும் தற்போதைய எரித்ரியா நாட்டையும் உள்ளடக்கியிருந்த எத்தியோப்பியப் பேரரசு (1137-1974) மிகச்சிறப்பான படை வலிமை கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ஐரோப்பிய ஆக்ரமிப்பிலிருந்து தமது நிலத்தை பாதுகாத்துக் கொள்ளுமளவிற்கு சுதந்திர நாடாக இருந்த எத்தியோப்பியப் பேரரசு, சாக்வி அரச மரபோடு தொடர்புடையதாகக் குறிப்பிடப்படுகிறது. வரலாற்றில் அபிசீனியர்கள் எனவும் அரபுலகில் ஹபாசுகள் எனவும் அறியப்படும் எத்தியோப்பியப் பேரரசு, 1945 இன் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கத்திலும் முக்கிய பங்காற்றியிருக்கிறது.

அம்காரியம் எனும் செமித்திய மொழியை அதிகாரப்பூர்வ மொழியாகக் கொண்ட எத்தியோப்பியாவின் கிஇஷ் எழுத்துமுறை உலகின் பயன்பாட்டிலுள்ள பழமையான எழுத்து முறைகளில் ஒன்றாகப் புகழப்படுகிறது. பன்மொழி நாடாக அறியப்படும் எத்தியோப்பியக் கூட்டாச்சி சனநாயகக் குடியரசில் ஏறக்குறைய எண்பது இனக்குழுக்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவற்றுள் பெரிய இனக்குழுக்களாக ஒ்மிபியா, அமரா, சோமாலி, டிக்ரேயனஸ் போன்றவை குறிப்பிடப்படுகின்றன.

அதிகமான உலக பாரம்பரரியச் சின்னங்கள் இடம் பெற்றுள்ள எத்தியோப்பியாவிலிருந்தே காபி கொட்டைகள் தோன்றியதாகவும் குறிப்பிடப்படுகிறது. மேலும் எத்தியோப்பிய நாட்டில் தொடர்ச்சியான மலைத் தொடர்கள் உள்ளதும் அறியத்தக்கது. ஆரம்பகாலத்திலேயே கிறித்துவம் பரவியதாகக் குறிப்பிடப்படும் எத்தியோப்பிய நாடு, இராணுவத்திற்கு அதிகம் செலவிடும் நாடாகவும் உள்ளது. 1886 இல் அமைக்கப்பட்ட தலைநகர் அடிஸ் அபாபா, கடல்மட்டத்திலிருந்து ஏழாயிரத்து ஐநூற்றி நாற்பத்தாறு அடிகள் உயரம் கொண்டதும் ஆப்பிரிக்காவின் அரசியல் பொருளாதாரத் தாக்கங்களின் அடிப்படையில் மிகப் புகழ்பெற்ற ஒரு நகரமாகவும் அறியப்படுகிறது.

எத்தியோப்பியப் பேரரசின் மன்னரான ஹெலி செலாசி (ஆ.காலம் 1930- 1974), ராஸ்தப்பாரை சமயத்தவரால் கடவுளாக வழிபடப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. மன்னர் செலாசியை கடவுளின் அவதாரம் எனவும், கிறித்துவின் இரண்டாம் வருகையாகவும், தந்தையாம் கடவுளாகவும் நம்பும் ராஸ்தப்பா இயக்கம் ஆப்ரோ - ஜமைக்கா மக்களால் ஜமைக்காவில் தோற்றுவிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. உலககெங்கும் எழு லட்சம் முதல் பத்து லட்சம் வரையிலான ராஸ்தபாரி மக்களின் பெரும்பகுதியினர் ஜமைக்கா நாட்டில் வாழ்வதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கு ஆப்பிரிக்காவின் தீபகற்பப் பகுதி ஆப்பிரிக்காவின் கொம்பு என அழைக்கப்படுகிறது. வடகிழக்கு ஆப்பிரிக்கா என்றும் சோமாலியத் தீபகற்பம் என்றும் குறிப்பிடப்படும் இப்பகுதியில், சோமாலியா, எரித்ரியா, சியூட்டி, எத்தியோப்பியா போன்ற நாடுகள் அமைந்துள்ளன. அரேபியத் தீபகற்பத்தோடு முன்னர் நெருங்கிய நிலப்பரப்பாக இருந்திருக்கலாமென்றும், அரேபிய மற்றும் சோமாலிய தீபகற்பங்களுக்கிடையே முன்பு குறைவான ஆழம் கொண்ட கடல்பகுதி இருந்திருக்கலாமென்றும், இரு தீபகற்பங்களுக்குமிடையே ஆழம் குறைந்த சிறுசிறு

தீவுகள் இருந்திருக்கவேண்டும் எனவும் பல்வேறு புவியியல் கருத்தாக்கங்கள் அறிஞர்களால் முன்வைக்கப்படுகின்றன.

1869 இல் சூயசு கால்வாய் திறக்கப்பட்டதில் இருந்து ஆப்பிரிக்க கொம்புப் பகுதி மிக முக்கியத்துவமான பகுதியாக மாறியது வரலாறு. ஐரோப்பியக் கப்பல்கள் தங்கிச் செல்ல வசதியாக இருக்குமெனக் கருதிய ஐரோப்பிய நாடுகள், நிலம் பிடிப்பதில் போட்டியில் இறங்கியிருக்கின்றன. விளைவாக சூயல் கால்வாயை ஒட்டி பல்வேறு அரசியல் மாற்றங்களும் நிகழ்ந்திருக்கின்றன. 1890 இல் எரித்ரியாவைக் கைப்பற்றிய இத்தாலியை மேலும் பரவவிடாமல் எத்தியோப்பியப் படைகள் தடுத்திருக்கின்றன. எனினும் 1935 இல் நடைபெற்ற இரண்டாம் எத்தியோப்பிய - இத்தாலிப் போரில் இத்தாலி வெற்றிபெற்று, எரித்ரியா, எத்தியோப்பியா, சோமாலியா பகுதிகளை உள்ளடக்கிய கிழக்கு ஆப்பிரிக்க இத்தாலி மாநிலத்தை உருவாக்கியிருக்கிறது. இரண்டாம் உலகப்போரில் இத்தாலியை வென்ற இங்கிலாந்து 1952 வரை எரித்ரியப் பகுதியை அதன் கட்டுப்பாட்டில் வைத்திருந்திருக்கிறது. பின்னர் எரித்ரியாவை தமது மாநிலமாக அறிவித்து ஆளுமை செய்த எத்தியோப்பியாவை எதிர்த்து எரித்ரிய மக்கள் விடுதலைப் போராட்டம் தொடங்கி 1991 வரை சுமார் முப்பதாண்டுகள் நீண்ட போராட்டங்களை முன்னெடுத்திருக்கின்றனர். 1993 இல் உலக நாடுகளால் சுதந்திர நாடாக அங்கிகரிக்கப்பட்ட எரித்ரியா நாட்டோடு, 1998 இல் எல்லைப் பிரச்சினையில் எத்தியோப்பியா போர் தொடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

எகிப்தின் கட்டுப்பாட்டிலுள்ள சுயஸ் செயற்கைக் கால்வாய் அதன் அமைவிட முக்கியத்துவத்தால் உலக வரலாற்றோடு மிகவும் தொடர்புடையதாகக் குறிப்பிடப்படுகிறது. செங்கடலையும் மடுதரைக் கடலையும் இணைக்கும் 163 கி.மீ. நீளமும் 300 மீட்டர் அகலமும் கொண்டதாக வெட்டப்பட்ட சூயஸ் கால்வாயால் ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்லும் ஏழாயிரம் கிலோமீட்டர் கப்பல் பணயம் குறைந்து ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நேரடியான பயணம் சாத்தியமாகியிருக்கிறது.

பெர்டினார்ட்-டி-லெஸ்ஸிப்ஸ் (1805-1894) எனும் பிரெஞ்சு பொறியாளரால் வடிவமைக்கப்பட்ட கால்வாய் அமைக்கும் பணி, பிரெஞ்சு நிறுவனத்தால் 1859 இல் ஆரம்பிக்கப்பட்டு 1869 இல் முடிக்கப்பட்டிருக்கிறது. கால்வாய் வெட்டும் பணியை

பத்தாண்டு காலத்திற்குள் முடித்த வெற்றியைத் தொடர்ந்தே பிரெஞ்சு நிறுவனம் பனாமாக் கால்வாயைத் தோண்டும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது.

ஓராண்டில் ஏறக்குறைய பதினைந்தாயிரம் கப்பல்கள் சுயசு கால்வாயைக் கடக்கின்றன. சூயல் கால்வாய் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் கால்வாயில் சமாதானக் காலத்திலும் போர்க் காலத்திலும் ஒவ்வொரு கப்பலும் வர்த்தகத்துக்கோ அல்லது பயன்பாட்டிற்கோ கொடி பாகுபாடு இல்லாமல் பயன்படுத்தலாம் என்ற விதிமுறை பின்பற்றப்படுகிறது.

பானவன மண் சேர்ந்து விடுவதால் மண்ணை அள்ளுவது பெரும் குறையாக சுட்டிக் காட்டப்படும் சூயசு கால்வாய் இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் பிடியில் சிக்கியிருந்தால் உலகின் வரலாறே மாறியிருக்கும் என வரலாற்றாசிரியர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

வாலில்லா பெரிய மனிதக் குரங்கு இனமான கொரில்லாக்கள், சிம்பான்சிகளுக்கு அடுத்து மனிதரோடு மிக நெருங்கிய தொடர்புடையவர்களாக அறியப்படுகின்றனர். கைகளால் ஊன்றி நடக்கும் கொரில்லாக்கள் பெரும்பாலும் ப்பி இரத்த வகையைச் சார்ந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்காவின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் வாழும் கொரில்லாக்கள் அவற்றின் அமைவிடம் கருதி கிழக்கு கொரில்லா மற்றும் மேற்கு கொரில்லா என அழைக்கப்படுகின்றன. காங்கோ மக்களாட்சிக் குடியரசின் கிழக்குப் பகுதியில் வாழும் கிழக்கு கொரில்லாக்களை விட அங்கோலா, கேமருன் மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு உள்ளிட்ட நாடுகளில் வாழும் மேற்கு கொரில்லாக்கள் அதிக எண்ணிக்கையில் (ஏறக்குறைய ஒரு இலட்சம் 2016 ன் கணக்குப்படி) வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

கிழக்கு தாழ்நிலக் கொரில்லாக்களின் ஒரு வகையாகக் குறிப்பிடப்படும் மலை கொரில்லாக்கள், மத்திய ஆப்பிரிக்காவின் விருங்கி எரிமலை மலைப்பகுதியின் பூங்காங்களான தென்மேற்கு உகாண்டாவின் மகிங்கா, வடமேற்கு ருவாண்டாவின் எரிமலைகள், காங்கோ மக்களாட்சிக் குடியரசின் எரிமலைகள், காங்கோ மக்களாட்சிக் குடியரசின் கிழக்குப் பகுதியான விருந்த மலை போன்றவற்றில் வசிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் உகாண்டாவின் பிவிண்டி தேசியப் பூங்காவிலும் குறிப்பிட்ட இனக்குழுவாக வாழும் மலைக் கொரில்லாக்கள்,

பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கத்தில் வழங்கப்படும் பட்டியலில் அருகிய இனமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மலைக் கொரில்லா (கொரில்லா பெரிங்கி பெருங்கி), கிழக்கு கொரில்லா (கொரில்லா பெரிங்கி கிராரி), மேற்கு தாழ்நிலக் கொரில்லா (கொரில்லா கொரில்லா கொரில்லா), மற்றும் மேற்கு கொரில்லா (கொரில்லா கொரில்லா தெக்லி) போன்ற நான்கு வகைக் கொரில்லாக்கள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.

நைஜீரியா மற்றும் காமருன் நாடுகளின் எல்லைப் பகுதியில் காணப்படும் வெப்ப மண்டலப் பகுதியின் அகன்ற இலைக் காடுகளில் வாழும் தெக்லி வகை கொரில்லாக்களின் எண்ணிக்கை முந்நூறுக்குள்ளேயே இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

நான்கு கொரில்லா வகைகளுள் மேற்கு தாழ் நிலக் கொரில்லாக்கள் உருவத்தில் சிறியவையாகவும் மலைக் கொரில்லாக்கள் உருவத்தில் பெரியவையாகவும் அறியப்படுகின்றன. மேலும் 2016 ஆம் ஆண்டின் கணக்குபடி, ஆயிரத்திற்கும் குறைவாகவே மலைக் கொரில்லாக்கள் வசிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது

அமெரிக்காவின் முதனிவகை ஆய்வாளரும் மலைக் கொரில்லாக்கள் குறித்து சிறப்பான ஆராய்ச்சிகள் செய்தவருமாக டயன் பாஸ்ஸே (1932-1985) அம்மையார் புகழப்படுகிறார். வாழ்நாளின் இறுதிவரை சுமார் இருபத்தியோரு ஆண்டுகள் கொரில்லா ஆராய்சி மேற்கொண்ட பாஸ்ஸே, புகழ்பெற்ற மானுடவியலாளர் எல்.எஸ்.பி லீக்கேயால் (1903-1972) கொரில்ல ஆய்வுகளுக்கு உந்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

லீக்கே அவர்களால் கொரில்ல ஆய்வுகளுக்கு பாஸ்ஸேவும், சாதாரண சிம்பான்சிகள் குறித்தான ஆய்வுகளுக்கு ஜேன் மோரிஸ் குட்ஆல் அம்மையாரும், உரங்குட்டான் ஆய்வுகளுக்கு பிருட் மரிஜா பிலோமினா கால்டிகாசு அம்மையாரும் வழிகாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. மூவரும் மனிதக் குரங்குகளின் ஆராய்சிகளில் புகழ்பெற்று மூன்று முத்துக்களாக விளங்குவது போற்றுதலுக்குரியது.

புகழ் பெற்ற மானுடவியலாளர் லூயிஸ் லீக்கியின் கருத்துப்படி, மனித மூதாதையர்களின் வரலாற்றை அறிவதற்கு முதனிகளின் நடத்தையை அறிவது

அவசியமாகும். மனிதர்களோடு மிகவும் நெருங்கிய பரிணாம உறவுகொண்டுள்ள முதனிவகைப் பாலூட்டிகளை அறிவதன் மூலம், அவற்றின் நடத்தை இயல்புகளைத் தெரிந்துகொள்வதன் மூலம், மனித இன முன்னோடிகளின் பரிணாமப் பாதையை ஓரளவிற்கு விளங்கிக்கொள்ள இயலும் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் உலகமெங்கும் பல்வேறு ஆய்வாளர்களும் அறிஞர்களும் முதனி வகைப்பாலூட்டிகளின் நடத்தைகளைப் பற்றி அறிந்துகொள்ள பேரார்வம் காட்டுகிறார்கள். அந்த வகையில் முதனிகளான மனிதக் குரங்குகளைப் பற்றிய புரிதல்களை உலகின் கவனதிற்குக் கொண்டுவந்தவர்களாக புகழ்பெற்ற பல பெண் அறிஞர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

தான்சானியவின் காடுகளில் சிம்பான்சிகளை ஆராய்ந்த குட் ஆல் அவர்களின் ஆராய்ச்சி ஐம்பது ஆண்டுகளைத் தாண்டியும் தொடர்வது வியற்பிற்குரியது. சிம்பன்சிகளின் சமூக நடத்தையை அறியத் தலைப்பட்ட ஜேன் குட் ஆல் அம்மையார் தமது ஆராய்ச்சி நுட்பங்களால் முதனிவகை ஆராய்ச்சிகளின் முதன்மையான முன்னோடியாகப் புகழப்படுகிறார்.

கொரில்லாக்களைப் பற்றிய நுணுக்கமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டவரான டயன் .ஃபாஸ்ஸே, காங்கோ பகுதியின் புரட்சிக் காலங்களில் மிகவும் தைரியமாகப் பணியாற்றியவராகப் புகழப்படுகிறார். 1963 இல் கடினமான பொருளாதார சூழ்நிலையில் ஆப்பிரிக்காவுக்குப் பயணமான பாஸ்ஸே, கென்யா, தான்சானியா, சிம்பாப்வே மற்றும் காங்கோ போன்ற நாடுகளில் பயணம் செய்து காட்டுயிர் கண்டு மலைத்திருக்கிறார். மிகச் சிறந்த அறிவியல் இணையாகக் கருதப்படும் லூயிஸ் லீக்கிமேரி லீக்கியோடு அறிமுகமாகிய பஸ்ஸே, பின்பு கொரில்லாக்களின் சமூக வாழ்வு மற்றும் குடும்ப வாழ்வை அறிவதற்கென்றே தமது வாழ்வை அர்பணித்திருக்கிறார். குவாண்டா காடுகளில் ஆராய்ச்சி மேற்கொண்ட பாஸ்ஸே கொரில்லா வேட்டைக்கு எதிராகவும் காட்டுயிர் இறைச்சியாகப் பயன்படுத்துவதற்கு எதிராகவும் குரல் கொடுத்ததற்காக கொடூரமாக முடிக்கப்பட்டது அநாகரிகத்தின் உச்சம்.

கிளாடிகாஸ், முதனிகளின் முப்பெரும் தாயார்களின் ஒருவராக அறியப்படுகிறார். மலேசிய, இந்தோனேசியக் காடுகளில் அழிவு நிலையிலிருந்த உரான்குட்டான் மனிதக் குரங்குகளைக் காப்பாற்றிய பெருமைக்குரியவரான

கிளாடிகஸ், 1971 ஆம் ஆண்டு உராங்குட்டன்களின் சமூக சூழியல் நடத்தைகள் குறித்து ஏராளமான தகவல்களை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆரம்பகாலங்களில் தேசிய புவியமைப்புக் கழகத்தால் (நேசனல் ஜியோகிராபிக் சொசைட்டி) நிதியுதவி பெற்ற அம்மையார்கள், பின்னர் தங்களது தனிப்பட்ட ஆராய்ச்சி வெற்றிகளால் ஜானே குட்ஆல் நிறுவனம், உராங்குட்டான் பௌண்டேசன் இன்டர்நேசன் போன்றே அமைப்புகள் மூலம் நிதியாதாரங்கள் பெற்று, அவற்றின் மூலம் விலங்கினப் பாதுகாப்புத் திட்டங்களையும் முன்னெடுத்தது பாராட்டுதல்களுக்குரியது.

மூன்று பெருந்தாயார்களின் வழியில் தற்போது பல இளம் ஆராய்சியாளர்களும் முதனிகள் குறித்தான நடத்தையியலில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள துடிப்போடு களம் கண்டு வருவது பெருமையானது. குறிப்பாக மலை விலங்குகள், வேட்டைக்காரர்கள் போன்ற ஆபத்துகளும் சவால்களும் நிரம்பிய துறையில் பெண்கள் துணிச்சலாக களம் புகுவது வியப்பிற்குரியது. மற்ற துறை ஆராய்ச்சிகள் போல் அல்லாமல் விலங்குகளின் நடத்தைகள் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு உற்று நோக்குதலும், பொறுமையும், விலங்குகள் மீதான அன்பும், கனிவும் அதிகமாகத் தேவைப்படும். அதனால்தான் என்னவோ அன்பும் பரிவும் கொண்ட சாதனைப் பெண்கள் விலங்கின நடத்தை அறியும் துறையில் வைரமென மின்னுகிறார்கள் போலும்.

காங்கோ காடுகளில் போனபோ சிம்பன்களின் நடத்தைகளை ஆராயும் ஆஸ்த்திரேலியாவின் வரிஸ்சா வுட்ஸ், தாழ்நில கொரில்லாக்களின் சைகை மொழியை ஆராயும் ப்ரான்சைன் பீட்டர்சன், முப்பது வருடங்களுக்கும் மேலாக பொனாபோக்களின் மொழி ஆசிரியராக வாழ்நாளைக் கழிக்கும் சூ-சாவேச்-ரும்பக், காங்கோ மக்களாட்சி குடியரசில் பொனபோ ஆராய்ச்சியும் பாதுகாப்பு மையமும் போனபோக்களின் நண்பர்கள் எனும் அமைப்பும் நடத்தும் கிளாடைன்ஆந்ரே இந்தியாவின் ஹனுமார் லங்கூர் எனப்படும் கருங்குரங்குகளைப் பற்றிய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து, முதனிகளின் தாய்மைக்கும் மனிதர்களின் தாய்மைக்குமுள்ள தொடர்பு குறித்தான ஆய்வுகள் நிகழ்த்தும் சாரா ஹெர்டி, சிம்பான்சிகளின் உளம் சார்ந்த வளர்ச்சியை ஆராய்ந்தவரும், சிம்பான்சிகளை படிக்கவும் எண்ணவும் பழக்குவதற்காக முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தவரான சல்லி போய்சன், உலகின் மிகச்சிறிய முதனியாகக் கருதப்படும் மௌஸ் லெமூரை

மடகாஸ்கர் தீவில் கண்டுபிடித்தவரும் நேசஷன் ஜியோகிராபியின் காட்டுயிரி நிகழ்ச்சியாளருமான மிரோயா மேயர் போன்ற ஆய்வாளர்கள் காணுயிர் குறித்து பல்வேறு ஆராய்ச்சி முடிவுகளை வெளிப்படுத்திவருவது பெருமைக்குரியது.

பாலூட்டிகளையும் மனிதர்களையும் இணைக்கும் முதனிகள் பற்றிய அறிவு மேற்கு முதனியியல் மற்றும் ஜப்பான் முதனியியல் என இரு பெரும் பிரிவுகளாகக் குறிப்பிடப்படுகிறது. தென்னமெரிக்கா மற்றும் ஐரோப்பா சார்ந்த முதனி அறிஞர்களை உள்ளடக்கிய மேற்கு முதனியியல் மருத்துவம் சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதாகவும் அறியப்படுகிறது.

கின்ஸி இமானிஷி (1902-1992) மற்றும் ஜினிகைரோ இடானி (1926-2001) போன்ற முதனியலாளர்களால் உருவாக்கம் பெற்ற ஜப்பானிய பிரமட்டாலஜி, சூழியல் சார்ந்த முதனி நடத்தையியலுக்கு மிகுந்த முக்கியத்துவம் தருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எத்தாலஜி என அழைக்கப்படும் விலங்கு நடத்தையியல் இருபதாம் நூற்றாண்டில் கிளைத்த உயிரியல் பிரிவாகக் கருதப்படுகிறது. ஆரம்பநிலையில் சோதனைச் சாலைகளில் வைத்து விலங்குகளின் நடத்தைகளை ஆராய்ந்து வந்த அறிஞர்கள் பின்பு காணுயிராக விலங்குகளின் வாழ்விடத்திற்கே சென்று ஆராயும்போக்கு பெருமளவில் வளர்ந்து, தற்காலத்தில் உயிரினங்களின் நடத்தையோடு அவற்றை அழிவிலிருந்து பாதுகாக்கும் ஒரு நல்வாய்ப்பாகவும் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது.

சார்லஸ் டார்வின் போன்ற பரிணாமவாதிகளை முன்னோடிகளாகக் கொண்ட நடத்தையியலில், சார்லஸ் ஓவிட்மன் (1842-1910), ஆஸ்கார் ஹென்ராத் (1871-1945), வால்லஸ் கிரைக் (1875-1954) போன்றோர் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தவர்களாக அறியப்படுகின்றனர். 1930களில் பரவலாக அறியப்பட்டு வந்த நடத்தையியல், 1973 ஆம்ஆண்டில் மருத்துவத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற டச்சு நாட்டு நிக்கோலஸ் டின்பெர்சன் (1907-1988), ஆஸ்த்திரிய நாட்டு கொன்ரட் சகாரியஸ் லோரன்ஸ் (1903-1989) மற்றும் கார்ல் வான் ப்ரிஸ்க் (1886-1982) போன்றோரின் அரிய பல கண்டுபிடிப்புகளுக்குப் பின் நடத்தையியல் மிகப்பெரிய அளவில் தனித்துறையாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. நோயியல், உடற்செயலியல், உயிர் வேதியியல் போன்ற தனித்துவமான சாதனைகளுக்கு மட்டும் கொடுக்கப்பட்டு

வந்த மருத்துவத்திற்கான நோபல் பரிசை விலங்குகளின் நடத்தை தொடர்பான சீரிய ஆராய்ச்சிகளுக்குப் பெற்ற மூவரும் மிகக் காத்திரமான நடத்தையியல் அறிஞர்கள் எனில் மிகையாகாது.

வாஷிங்டன் நகரில் 1888 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நேஷனல் ஜியோகிராபி குழுமம், அறிவியல் மற்றும் கல்வி தொடர்பாகச் செயல்படும் உலகின் மிகப்பெரிய வணிக ரீதியில் செய்லபடாத அமைப்பாகப் புகழப்படுகிறது. பூமியைப் பற்றிய பல்வேறு தகவல்களை, புவியியல், இயற்கை அறிவியல், தொல்லியல், கலாச்சாரம், வரலாறு போன்ற பல்வேறு அரிய தகவல்களை, புத்தகமாகவும், காணொளியாகவும், தொலைக்காட்சி வடிவிலும் அளிக்கும் நேஷனல் ஜியோகிராபி, மனிதர்களின் மனங்களை காட்டுயிர் நோக்கி மடைமாற்றுவதில் பெரும் பங்காற்றுவது பாராட்டத்தக்கது. நேஷனல் ஜியோகிராபி (இந்தியா) தமிழ் உள்ளிட்ட ஐந்து மொழிகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

டிஸ்கவரி கம்யூனிகேசன்ஸ் நிறுவனத்தின் ஒரு அங்கமான டிஸ்கவரி தொலைக்காட்சி 1985 இல் ஒளிப்பரப்பைத் தொடங்கியிருக்கிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்கள் சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் டிஸ்கவரி தொலைக்காட்சியின் காட்டுயிர் சார்ந்த உயிரினங்களின் நிகழ்ச்சிகள் உலகம் முழுவதும் விருப்பிப்பார்க்கப்படுகின்றன. சர்வதேச அளவில் 170 நாடுகளில் ஒளிபரப்புச் செய்யும் டிஸ்கவரி தொலைக்காட்சி, 2011 ஆம் ஆண்டு முதல் தமிழிலும் நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. சமீபமாக அனிமட் பிளானட் போன்ற தொலைக்காட்சிகளும் காணுயிர் தொடர்பான பல்வேறு சிறப்பான நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதும் கவனிக்கத்தக்கது.

1922 முதல் இலண்டனை மையமாகக் கொண்டு செயல்படும் உலகின் மிகப் பழமையான ஒலிபரப்பு நிறுவனமான பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கம்பெனி தற்போது வானொலி, தொலைக்காட்சி, கணினி, நேரலை போன்றவை மூலம் செய்திகளை, உலகின் நடப்புகளை மக்களுக்குத் தெரியப்படுத்தும் பெரும் சேவை செய்யும் அமைப்பாகக் புகழப்படுகிறது. இசை, அறிவியல் வளர்ச்சி போன்ற பல்வேறு துறைகளிலும் வணிகம் சார்ந்த விளம்பர சேவைகளும் செய்வதாகக் குறிப்பிடப்படும் பி.பி.சியின் காட்டுயிர் நிகழ்ச்சிகள் உலகப்புகழ்பெற்றவையாக அறியப்படுகின்றன.

பி.பி.சி. யின் காணுயிர் நிகழ்ச்சி மூலம் இயற்கையை ஆவணமாக்கி அனைத்துலக மக்களின் இதயங்களை கொள்ளை கொண்ட அறிஞராக அட்டன்பரோ போற்றப்படுகிறார். காட்டுயிர் பற்றிய ஏராளமான தொகுப்புகள் மூலம் இயற்கையின் அற்புதங்களை ஆவணமாக்கிய இயற்கையியல் ஆய்வாளர் சர் டேவிட் ப்ரடெரிக் அட்டன்பரோ (பிறப்பு-1926) ஆர்டர் ஆப் மெரிட், ஆர்டர் ஆப் த கம்பானியன்ஸ் ஆப் ஹானர், ராயல் விக்டோரியன் ஆர்டர், ஆர்டர் ஆப் பிரிட்டிஷ் எம்பயர், பெல்லோஷிப் ஆப் ராயல் அகாதமி, தி லின்னேயன் சொசைட்டி ஆப் லண்டன், சுவாலாஜிக்கல் சொசைட்டி ஆப் லண்டன், பெல்லோஸ் ஆப் தி சொசைட்டி ஆப் ஆன்டிகுயரிஸ் போன்ற பட்டங்களால் சிறப்பிக்கப்படுகிறார். பி.பி.சி இயற்கை வரலாறு அலகுக்காக உயிர்த் தொகுப்பு எனும் இயற்கை வரலாற்று ஆவணப்படங்கள் மூலம் அடர்ந்த காடுகள், ஆழமான கடற்பகுதிகள், பாலை நிலங்கள் உள்ளிட்ட அனைத்து விதமான வாழிட உயிர்வாழ்க்கையை, தாவர விலங்குகளை, இயற்கையுடனான அவற்றின் உறவுகளை, வெகு நேர்த்தையாக வெளிக் கொணர்ந்த அட்டன்பரோ குழுவினர் பெரிதும் பாராட்டுக்குரியவர்கள்.

விலங்குகளைப் பற்றிய நேர்த்தியான தகவல்களை வெளிப்படுத்திய அட்டன் பரோ, பரிணாமத்தின் பாதை (பாத் ஆப் எவலூசன்) போன்ற புகழ்பெற்ற புத்தகங்களையும் படைத்துள்ளார். ஆட்டன் பரோ அவர்களின் தந்தை ப்பிரடெரிக் அட்டன் பரோ (1887-1973) வரலாற்றுப் பேராசிரியர் என்பதும், சகோதரர் ரிச்சர்ட் அட்டன் பரோ (1923-2014) காந்தி எனும் திரைப்பட்டதை இயக்கி உலகப் புகழ் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏறக்குறைய இருபது வருடங்களுக்கும் மேலாக காந்தி பற்றிய திரைப்படமெடுக்க பெருமுயற்சி மேற்கொண்டும், நிதி நெருக்கடி, அரசியல் எதிர்ப்பு எனப் பல்வேறு சவால்களை சமாளித்து, காந்தி எனும் மனிதரின் மகத்தான ஆளுமையை மூன்று மணி நேர திரைப்படமாக செதுக்கிய அட்டன் பரோ மிகுந்த பாராட்டுக்கும் நன்றியுணர்விற்கும் உரியவர் எனில் மிகையாகாது.

அண்மைக் கால ஆய்வுகள் கொரில்லாக்களைக் காட்டிலும் சிம்பன்சிகளே மனித இனத்தோடு மிக நெருங்கிய உறவுடையவர்கள் எனத் தெரிவிக்கின்றன. சிம்பன்சிகளிலும் பொதுவான சிம்பன்சியை விட, முன்னர் உயரம் குறைவான எனும் பொருளில் பிக்மி சிம்பன்சி என அழைக்கப்பட்ட போனபோ சிம்பன்சிகளே மிகமிக

நெருங்கியவர்களாக உடற்கூறியல் மற்றும் மரபணு சான்றுகள் உறுதி செய்கின்றன.

பான் பேரினத்திலும் ஹோமினிடே எனும் பெரிய குரங்குகள் குடும்பத்திலும் இடம் பெற்றுள்ளன சிம்பன்சிகள், சகாரா பாலை நிலத்திற்கு தென் பகுதியில் மத்திய ஆப்பிரிக்காவின் காங்கோ காடுகளில் வசிக்கின்றன. 1928 ஆம் ஆண்டுவரை ஒரே சிற்றினமாகக் கருதப்பட்ட சிம்பன்சிகள் பின்னர் பான் ட்ரோக்லோடைட்ஸ் மற்றும் பான் பனிஸ்கஸ் (போனபோ சிம்பன்சிகள்) என இரண்டு சிற்றினங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. பொது சிம்பன்சிகள் பான் ட்ரோக்லோட்ஸ், பான்.டி, எல்லியோட்டி, பான்.டி, ட்ரோக்லோடைட்ஸ் மற்றும் பான்.டி ஸ்வென்.்.பர்தி என நான்கு துணை சிற்றினங்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பொது சிம்பன்சிகள் அல்லது சிம்பன்சிகள் காங்கோ ஆற்றின் வடக்குப் பகுதி காடுகளிலும், போனபோ சிம்கள் காங்கோ ஆற்றின் தெற்குப் பகுதிகளிலும் வாழ்கின்றன. இரண்டு சிம் வகைகளும் ஏறக்குறைய பத்து லட்சம் வருடங்களுக்கு முன் இரண்டு சிற்றினங்களாகக் கிளைத்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. போனபோக்கள் காங்கோ மக்களாட்சிக் குடியரசின் மத்தியக் காடுகளில் மட்டும் வசிப்பதாகவும், பொது சிம்பன்சிகள் மேற்கு கடற்கரைப் பகுதிகள், மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்கா பகுதிகளின் மழைக்காடுகளில் வாழ்வதாகவும் அறியப்படுகிறது.

ஜெர்மானிய விலங்கியல் அறிஞரும் பாலூட்டியியல் நிபுணருமான எர்னர்ஸ் ஸ்வாட்ஷ் (1889-1962) குட்டி சிம்பன்சியினுடையது எனக் கருதப்பட்ட ஒரு மண்டையோட்டை ஆராய்ந்து அது போனபோ சிம்பான்சியின் மண்டையோடு எனக் கண்டறிந்திருக்கிறார். லைபீரியா, பெல்ஜியன் காங்கோ காடுகளில் (7926-27) ஆரய்ச்சிகள் செய்து, 1933 இல் போனபோக்களைப் பற்றிய சிறப்பியல்புகளை ஆராய்ச்சிக் கட்டுரையாக வெளியிட்டவராக ஹெரால்டு ஜெப்சன் கூலிட்ஜ் (1904-1985) எனும் புகழ்பெற்ற விலங்கியல் நிபுணர் அறியப்படுகிறார்.

சிம்பன்சிகள் ஆண் அல்லது தந்தை வழி சமூகமாகவும் போனபோக்கள் பெண் அல்லது தாய் வழி சமூகமாகவும் அறியப்பட்டுள்ளன. காங்கோ ஆற்றின் இருகரைகளிலும் வாழ்ந்தாலும் இரண்டு இனங்களும் நீச்சல் தெரியாததால்

இவர்களிடையே இனக் கலப்பு ஏற்படுவது தடுக்கப்பட்டு இரண்டு வேறுபட்ட சிற்றினங்கள் தோன்றியதாகக் கருதப்படுகிறது. சமீப கால ஆய்வுகள், சிற்றினங்கள் தோன்றுவதற்கு ஆறுகள், மலைகள், கடல்கள், பாலைகள் போன்ற புவியியல் தடைகளும் முக்கியப் பங்காற்றுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பாண்டு மொழியில் முன்னோர் எனும் பொருள்படும் சிம்பன்சி எனும் வார்த்தையிலிருந்து சிம்பன்சி பெயர் உருவாகியிருக்கலாமெனக் கூறப்படுகிறது. போனபோக்கள் சிம்பன்சிகளை விட மெலிந்தும், சிறிய தலையுடனும், எடுப்பான புருவமேடுகள் கொண்டதாகவும், கறுத்த முகம், சிவந்த உதடுகள், சிறிய காது மடல்கள், அகலமூக்கு, தலையில் நீண்ட உரோமங்கள் உடையவையாகவும் அறியப்படுகின்றன. போனபோக்கள் அமரும் தோற்றம் சிம்களை விட மனிதரையே மிகவும் ஒத்திருக்கின்றன.

போனபோக்கள் பிறர்நலம் பேணுபவர்களாகவும், கனிவு, தம்மைப்போல் பிறரையும் பாவித்தல், கருணை, பொறுமை மற்றும் மெல்லிய உணர்வு கொண்டவர்களாகவும் ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது. ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை குழந்தை பெற்றுக் கொள்ளும் போனபோக்கள், குழவியை ஐந்து ஆண்டுகள் வரை சுமந்தும் பாலூட்டியும் வளர்ப்பவர்களாகக் கண்டறியப்பட்டுள்ளது. பெண் போனோபோக்கள் ஒரு குழுவாக செயல்படுவதாகவும், தாய்க்கும் மகனுக்குமான ஒட்டுறவு வாழ்நாள் முழுமைக்கும் நீடிப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது. கனி வகைகளை விரும்பி உண்ணும் போனபோக்கள், பூச்சிகளையும், சில நேரங்களில் சிறு பாலூட்டிகளையும் உணவாகக் கொள்வதும் அறியப்பட்டிருக்கிறது.

பொது சிம்பான்சிகள் மற்றும் போனபோ சிம்பான்சிகளை வைத்து கற்றல் தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் ஆராயத்தக்கது. கான்சி மற்றும் பான்பனிசா எனப் பெயரிடப்பட்டுள்ள இரு போனபோக்களுக்கு மூன்றாயிரத்திற்கும் மேலான சொற்களை பயிற்றுவித்ததாகவும் அவற்றை வரைகணிதக் குறியீடுகளைக் கொண்டு அடையாளம் காட்டும் வல்லமையை அவர்கள் பெற்றதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அருகிவரும் இனங்களாக அறியப்படும் கொரில்லா மற்றும் சிம்பன்சிகளைக் காப்பதில் ஆப்பிரிக்க மக்களும் உலக நாடுகளும் பெருமளவில் ஆதரவளிக்க

வேண்டும் என உலகின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் குரல் ஒலிக்கத் துவங்கி இருப்பது வரவேற்கத்தக்கது.

பன்மொழி மிகுந்த நாடான தான்சானியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. கிழக்கு ஆப்பிரிக்காவிலேயே மொழியியல் ரீதியாக மிகவும் வேறுபட்ட நாடாகக் குறிப்பிடப்படும் தான்சாயா நாட்டின் அதிகாரப்பூர்வ மொழிகளாக சுவாஹியும் ஆங்கிலமும் உள்ளதாகவும், பள்ளிகளில் கற்றல் மொழியாக சுவாசிலியை ஊக்கிவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

தான்சானியாவின் வடகிழக்கே உயர்ந்த மலைகளும் அடர்ந்த காடுகளும் காணப்படுவதாகவும், ஆப்பிரிக்காவின் மூன்று பெரிய ஏரிகளின் ஒரு பகுதி தான் சானியா நிலப்பகுதியில் இடம் பெற்றுள்ளதாகவும் அறியப்படுகிறது. ஆப்பிரிக்காவின் உயர்ந்த சிகரமாகப் புகழப்படும் கிளிமஞ்சாரோ, புகழ்பெற்ற விக்டோரியா ஏரி தான்சானியாவின் பெருமைகளுள் குறிப்பிடத்தக்கவை.

உலகிலுள்ள தனிமலைகள் யாவற்றிலும் மிக உயர்ந்த மலையாகப் புகழப்படும் கிளிமஞ்சாரோ, கடல்மட்டத்திலிருந்து 19,340 அடிகள் உயரம் கொண்டதாகவும், மலை முகடு அதன் உகுரு என அழைக்கப்படுவதாகவும், சிபோ, மாவென்சி மற்றும் சிரா எனும் மூன்று எரிமலை முகடுகள் சமீபகாலமாக வேகமாக உருகி வருவதாகவும் சூழலியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பண்டு மொழியில் விக்டோரியா நியான்சா என அழைக்கப்படும் விக்டோரியா ஏரி ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய ஏரியாகவும், அமெரிக்காவின் சுப்பீரியர் ஏரிக்கு அடுத்ததாக உலகின் இரண்டாவது மிகப்பெரிய நன்னீர் ஏரியாகவும் புகழப்படுகிறது. கென்யாவில் ஐந்து சதவீதமும், உகாண்டாவில் நாற்பத்தைந்து சதவீதமும், தான்சானியாவில் நாற்பத்தொன்பது சதவீதமும் அமைந்துள்ள விக்டோரியா ஏரி, மழையையே பெரிதும் சார்ந்துள்ளது. சியோ, நோசியா, யலா, நிண்டோ, சோன்டு மிரியு, மோகுதி, மிக்ரி எனும் ஏழு சிறிய ஆறுகள் மூலமும், ககேரா எனும் ஆறுமூலமும் நீர் பெறும் விக்டோரியா ஏரியிலிருந்து, நீரானது நைல் நதிக்கு செல்கிறது. நைல் நதி ஆல்பர்ட் ஏரியை அடையும் வரை விக்டோரியா நைல் என்றே குறிப்பிடப்படுகிறது. சராசரியாக நாற்பது மீட்டர்கள் ஆழம் கொண்டுள்ள விக்டோரியா ஏரி உள்நாட்டு மீன்பிடி தொழிலில் முக்கிய ஆதாரமாகக்

குறிப்பிடப்படுகிறது. முன்னர் மீன்வளம் நிரம்பியிருந்த ஏரியில் அதீத மீன்பிடித்தல் காரணமாக மீன்வளம் குறைந்தவிட்டதாகவும், ஏரியைச் சுற்றியுள்ள நகரங்களிலிருந்து கொட்டப்படும் கழிவுகளால் மாசடைந்துள்ளதாகவும் அதிகமான கோரைப்புற்ள் வளர்ந்துள்ளதாகவும் குறிப்படப்படுகிறது.

கென்யா நாட்டின் கென்ய மலை, ஆப்பிரிக்காவின் இரண்டாவது மிக உயரமான மலையாக புகழப்படுகிறது. நிலநடுக்கோட்டிற்குத் தெற்கில் நூற்றி ஐம்பது கிலோமீட்டர்கள் தூரத்தில் அமைந்திருக்கும் கென்ய மலையில் பாட்டியன் (17,058 அடி), நெலியோன் (17022 அடி) மற்றும் லெலானா (16,355) என மூன்று முகடுகள் அமைந்துள்ளன. யுனெஸ்கோவால் பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ள மவுண்ட் கென்யா ஒரு பாதுகாக்கப்பட்டுள்ள தேசிய புரவிடமாகவும் இருக்கிறது.

தெற்கு ஆப்பிரிக்காவின் சமவெளிப் பகுதியும், மேற்கு ஆப்பிரிக்காவின் காடுகளும், வடக்கு ஆப்பிரிக்காவின் பாலைநிலமும் சந்திக்கும் கென்ய நிலப்பகுதி பல்வேறு வரலாற்று சிறப்புகளையும் கலாச்சாரங்களையும் கொண்டுள்ளது.

1971 ஆம் ஆண்டில் கென்யாவின் முதல் பெண் முனைவர் பட்டம் பெற்றதாகக் சிறப்பிக்கப்படும் வாங்கரி மாத்தாய் (1940-2011) புகழ்பெற்ற சூற்றுச்சூழல் ஆர்வலராகவும் அரசியல்வாதியாகவும் அறியப்படுகிறார். நைரோபி பல்கலையின் முதல் பெண்பேராசிரியர் எனப் புகழப்படும் மாத்தாய் அம்மையார் 1977 இல் உயிரியல் பேராசிரியர் பணியைத் துறந்து பசுமை பட்டை இயக்கம் (கிரீன் பெல்ட் மூவ்மண்ட்) துவக்கி, ஆப்பிரிக்கக் காடுகளை மீண்டும் உருவாக்கும் செயல்களில் தம்மை அர்ப்பணித்திருக்கிறார். பல்வேறு போராட்டங்களைச் சந்தித்த மாத்தாய் மாற்றத்திற்கான பெண்கள் எனும் அமைப்பு மூலம் பெண்களின் வளர்ச்சி, கல்வி குறித்தான விழிப்புணர்வை உருவாக்கியிருக்கிறார். 2002 இல் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று சுற்றுச்சுழல் இயற்கை வளங்கள் பாதுகாப்புத் துறையின் இணையமைச்சராகப் பொறுப்பு வகித்த மாத்தாய் அவர்களின் மக்கள் சேவையைப் பெருமைப்படுத்தும் விதமாக 2004 ஆம் அண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

கென்யா, தான்சானிய, காங்கோ, எத்தியோப்பியா உள்ளிட்ட நாடுகளில் விரவியுள்ள ஆப்பிரிக்க பள்ளத்தாக்கு அமைப்பில் விக்டோரியா, தங்கான்யிகா

உள்ளிட்ட பல புகழ்பெற்ற ஏரிகள் இடம் பெற்றுள்ளன. மிகப் பழமையானவையாகவும் ஆழமானவையாவும், மீன்களின் அதீத பல்வகைமை கொண்டவையாகவும் புகழப்படும் ஏரிப் பகுதிகளில் மூதாதை மனிதர்கள் வாழ்ந்திருந்தாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

கென்யா, எத்தியோப்பியா சோமாலியா, தான்சானியா பகுதிகளின் கிழக்கு பள்ளத்தாக்கு பகுதியில், ஆதி மாந்தரின் எலும்புகள் புதைபடிமங்களாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. முப்பது லட்சம் வருடங்களுக்கு முந்தையதான ஆஸ்ட்ரோபித்திசின் புதைபடிங்கள், புகழ்பெற்ற தொல்மானுடவியல் அறிஞரான டொனால்டு கார்ல் ஜான்சனால் (பிறப்பு-1943) எத்தியோப்பியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. லூசி எனப் பெயரிடப்பட்டுள்ள புதைபடிவம் பெண்ணின் நாற்பது சதவிகித தொல்லெலும்புகளிலிருந்து கட்டமைக்கப்பட்டு, ஆஸ்ட்ரோபித்திகஸ் அ.்.பாரென்சிஸ் எனும் உயிரியில் பெயரும் இடப்பட்டிருக்கிறது.

தற்காலத்திய மனிதர்களின் நெருங்கிய உறவுகள் ஆப்பிரிக்காவிலேயே தோற்றம் பெற்றனர் என்பதைத் தெளிவாக்கும் நகலிபித்திகஸ் நகயாமை புதைபடிவம், சுமார் ஒரு கோடி ஆண்டுகள் பழமையானதாகக் கண்டறியப்பட்டுள்ளது. கென்யாவின் மனிதக் குரங்காக அடையாளம் காணப்படும் நகலிபித்திகஸ் புதைபடிவம், 2007 இல் யுடகா குனிமட்சு குழுவினரால் காணப்பட்டிருக்கிறது. நகலி மனிதக் குரங்கு, கொரில்லா, சிம்பன்சி மற்றும் மனித இனங்களின் தொடர்புறவை விளக்கும் அரிய புதைப்படிவச் சான்றாகவும் புகழப்படுகிறது.

மரபணு சான்றுகளின்படி, மனித இனம் சுமார் இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாக அறியப்படுகிறது. ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவைத் தாயகமாகக் கொண்டிருக்கும் மனிதர்களின் மூதாதை மனிதர்கள், ஆப்பிரிக்காவிலிருந்தே உருவாகியிருப்பதாகத் தொல்புதைபடிவங்கள் அறுதியிடுகின்றன. சிம்பன்சி போன்ற மனிதக்குரங்கு மூதாதையரிடமிருந்து குரங்கு மனிதர்களும், பின்னர் அவர்களிடமிருந்து மனிதர்களும் பரிணமித்ததாகக் கூறப்படுகிறது. ஆப்பிரிக்காவிலிருந்து ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரத்திலிருந்து அறுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யுரேசியாவிற்கும், நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவிற்கும், பதினைந்தாயிரம் ஆண்டுகளுக்கு

முன்னர் அமெரிக்காவிற்கும் மனிதர்கள் குடிபெயர்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

முன்பொரு காலத்தில் வாழ்ந்த விலங்குகள் மடிந்த பின்அவற்றின் உடல் உறுப்புகளின் எஞ்சிய பகுதிகள் மண்ணிலிருந்தோ, நிலக்கரி சாம்பலிலிருந்தோ, பனிக்கட்டிகளிலிருந்தோ அறிவியல் அறிஞர்களால் கண்டெடுக்கப்பட்டு, முறையான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு, அவற்றைப் பற்றிய ஆய்வு முடிவுகள் கண்டறியப்படுகின்றன. முன்னர் வாழ்ந்திருந்த உயிரினங்களின் எச்சங்கள் தொல்லுயிர் எச்சம் அல்லது புதைபடிவம் (பாஸ்ஸில்) என அழைக்கப்படுகிறது. கிழக்கு ஆப்பிரிக்காவில் மனிதக்குரங்குகள் மற்றும் ஆதிமனிதர்களின் புதைபடிவங்கள் ஏராளமாக அறியப்பட்டுள்ளன.

புதைபடிவங்கள் மனிதப் படிவளர்ச்சி தொடர்பான தகவல்களை அளிக்கின்றன. உதாரணமாக 1974 இல் அறியப்பட்ட லூசி புதைபடிவம் மூலம், அப்பெண் முதுகெலும்பை நிமிர்த்தி இரண்டு கால்களால் மட்டுமே நடந்ததாக அறியப்படுகிறது. மேலும் மனிதர்கள் மூளைத்திறன் அதிகமான பிறகே, பெரியளவிலான மூளை வளர்ச்சிக்குப் பின்னரே இருகால் கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள் எனும் கருத்திற்கு மாற்றாக, சிறிய அளவிலான மூளைபெற்றிருந்த இருபது வயது மதிக்கத்தக்க லூஸிபெண் இரு கால்களால் நடந்தவராக ஆய்வு குழுவினரால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மனித பரிணாமத்தின் ஒரு மைல்கல் போன்று புகழப்படும் லூசி புதைபடிமத்தால் மனித குல படிவளர்ச்சி கொள்கை மேலும் வலுப்பெறும் எனக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

வடகெனிய பிளவுப் பள்ளத்தாக்கின் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட காமோயாபித்திகசு புதைபடிவம் சுமார் இரண்டரைக்கோடி வருடங்களுக்கு முற்பட்டதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மேலும் காமோயாதபித்திகசின் மூதாதைகள் ஏகிப்டோபித்திகசு, புரோப்பிலியோபித்திசு, பாராபித்திகசு போன்றோருக்கு உறவுடையதாகவும் கருதப்படுகிறது. இவர்கள் சுமார் மூன்றரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்கலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றன. ஒரு கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் புரோக்கான்சல், ரங்வாபித்திகசு, டென்ட்ரோபித்திகசு, ஈக்குவட்டோரியசு, நியான் சாபித்தேக்கசு, ஆப்பிரோபித்திகசு, கென்யாபித்திகசு போன்ற கிழக்கு ஆப்ரிக்க மனிதக் குரங்களின் புதைபடிவங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆஸ்ட்ரோபித்திகஸ், ஹோமோஹேபிலிஸ், ஹோமோ எரக்டஸ், ஹோமோ நியாண்டர்தாலென்சிஸ், ஹோமோ செப்பியன்ஸ் எனும் படி நிலைகளில் மனித இனம் உருவாகி வந்ததாக புதைபடிம ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன. நியாண்டர்தால் மனிதருக்குப் பின், குரோமேக்னர் மனிதரும் பின்னர் அவரிலிருந்து புதிய கற்கால மனிதனும் தோன்றியிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

மனிதக் கூர்ப்பு அதாவது பரிணாமம் குறித்து பல்வேறு கோட்பாடுகள் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இயற்கை அறிவியலின் பல்வேறு துறைகள் வாயிலாகவும் அறியப்பட்டு வரும் பரிணாமக் கோட்பாட்டிற்கு தற்காலத்தில் மரபியலின் பங்களிப்பும் பெரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பூமியின் பல்வேறு அடுக்கமைவுகளில் கிடைக்கும் புதைபடிமங்களைக் கொண்டும், பாறைகளின் மலைகளின் வயதைக் கொண்டும் பூமியின் வயது கணிக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய அறிவியல் பூமியின் வயது ஏறக்குறைய ஐந்நூறு கோடி ஆண்டுகள் அதாவது ஐந்தாயிரம் மில்லியன் ஆண்டுகள் எனக் கணிப்பிடுகிறது. பூமியின் வயது பல்வேறு யுகங்களாகவும், காலங்களாவும் (பீரியட்), காலங்கள் சகாப்தங்களாகவும் (எபோக்) பிரிக்கப்பட்டுள்ளன. பூமி தனது வாழ்நாளில் சந்தித்த மாற்றங்களைக் கொண்டு மண்ணியல் அல்லது நிலவியல் கடிகாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

நிலவியல் கடிகாரத்தின்படி, பூமியின் வயது பழங்காலயுகம், தொல்யுகம் முதல்யுகம், பழையயுகம், நடுயுகம், நவீன யுகம் மற்றும் மனயுகம் என பிரிக்கப்பட்டுள்ளது. 450 கோடி வருடங்களுக்கு முன்னான பழங்கால யுகத்தில் பூமி தோற்றம் பெற்றதாகவும், சுமார் 300 கோடி வருடங்களுக்கு முன்பான தொல்யுகத்தல் வேதியியல் மூலக்கூறுகள் இணைந்து எளிய ஒரு செல் உயிரினங்கள் தோன்றியதாகவும், புரோட்டோ சோயிக் எனப்படும் முதல் யுகத்தில் எளிய வகை முதுகுநாண் உயிர்கள் தோற்றம் பெற்றதாகவும கருதப்படுகிறது. சுமார் 350 கோடி வருடங்களுக்கு முன் ஒளிச்சேர்க்கை ஆரம்பித்ததாகவும், 250 கோடி வருடங்களுக்கு முன் உயிர்வாயு உருவானதாகவும், 75 கோடி வருடங்களுக்கு முன் உயிர்வாழ ஏற்ற பூமி பரிணமித்ததாகவும் நிலவியல் கடிகாரம் குறிப்பிடுகிறது.

பேலயோசோயிக் எனப்படும் பழைய யுகத்தில் முன்னேறிய வகை முதுகு நாண் உயிர்களும், மீன்களும் பல்கிப் பெருகியதாகக் கருதப்படுகிறது.

மீன்களிலிருந்து இருவாழ்விகள் தோன்றி பல்கிப் பெருகியிருக்கின்றன. கேம்ப்ரியன், ஆர்டோவேசியன், சைலூரியன், டிவோனியன், பெர்மியன் மற்றும் கார்போனிபெரஸ் என பிரிக்கப்படும் சுமார் ஐம்பது கோடி ஆண்டுகளுக்கு முன்னான பழைய யுகம் முதகெலும்பற்றவை, மீன்கள் மற்றும் இருவாழ்விகளின் பொற்காலமாகப் புகழப்படுகிறது.

சுமார் நாற்பது கோடி ஆண்டுகளுக்குமுன் முதுகெலும்புடைய விலங்கினங்கள் தோன்றியிருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது. மீசோசோயிக் எனும் நடுக்காலத்தில் ஊர்வன விலங்குகளும் தொடர்ந்து பறவைகளும் தோற்றம் பெற்றிருக்கின்றன. நடுயுகத்தின் ஜுராசிக் காலத்தில் ஏறக்குறைய பத்துக்கோடியிலிருந்து ஆறரைக் கோடி ஆண்டுகள் முன்பான காலப் பகுதியில் டைனோசர்கள் பல்கிப் பெருகியதாகக் கணிக்கப்படுகிறது.

சீனோசோயிக் எனப்படும் நவீன யுகத்தில் பாலூட்டிகளின் பரிணாமம் நிகழ்ந்திருக்கிறது. பல்வேறு வகையான பாலூட்டிகள் தோன்றி கோடி ஆண்டுகளுக்கு முன் மனிதக் குரங்கும் பின்னர் மனித இனமும் உருவானதாக அறியப்படுகிறது.

ஆப்பிரிக்காவின் வட பகுதியிலும், ஐரோப்பாவின் தென்பகுதிகளிலும் ஏறக்குறைய ஒரு கோடி ஆண்டுகளுக்கு மேற்பட்ட பியெரோலாபித்திகசு, டிரையோபித்திகசு, ஓரியோபித்திகசு போன்ற மனிதக் குரங்குகளின் புதைபடிவங்கள் கிடைக்கப்பெற்றிருப்பது, கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து மனிதர் இடம்பெயர்ந்ததாகக் அறியப்படும் அண்மைய இடப்பெயர்வுக் கோட்பாட்டை கேள்விக்குட்படுத்துகிறது. மேலும் சீனா, இந்தியா, இந்தோனேசியா, மேற்கு ஆசியா, ஐரோப்பா போன்ற பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள மிகத் தொன்மையான மனிதத் குரங்கு புதைபடிவங்கள், ஆப்பிரிக்க இடப்பெயர்வு கோட்பாட்டிற்கு மாறாக, பல்லிட மாந்தர் பரிணாமக் கோட்பாட்டிற்கு வலுசேர்க்கும் விதத்தில் அமைகின்றன.

ஒரு காலத்தில் ஈரமான பகுதியாக இருந்ததாகக் கருதப்படும் சகாரா பாலை நிலப்பகுதியும் மனித இனத் தோற்றத்திலும் பரவலிலும் குறிப்பிடத்தக்க பங்கு வகித்திருக்கலாம் எனவும் கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. நவீன மனிதர்களான ஹோமோ சப்பியன்சுகளின் ஒன்று விட்ட இன மூதாதைகள்

தற்காலத்தில் காணப்படாததால், ஏராளமான யூகங்களும், கோட்பாடுகளும் உருவாகின்றன. மேலும் மனிதரது ஒன்று விட்ட, நெருங்கிய முன்னோடிகளின் புதைபடிவங்களும் பெரிய அளவில் கிடைக்கப் பெறவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. பெரும்பாலான புதைபடிமங்கள் ஒரு சில எலும்புச் சிதறல்களிலிருந்தும், மண்டையோட்டு எலும்புகளிலிருந்துமே கட்டமைக்கப்பட்டிருக்கின்றன.

கொரில்லாக்கள், சிம்பன்சிகள் மற்றும் மனிதர்களின் கடைசிப் பொது மூதாதை என அறியத்தக்கதாக, கென்யாவில் கிடைத்த நாக்காலிப்பித்தேகசும் கிரேக்கத்தில் கிடைத்த ஒரானோபித்தேகசும் அடையாளம் காணப்படுகின்றன. எண்பது லட்சம் ஆண்டுகளுக்கும் நாற்பது லட்சம் ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், முதலில் கொரில்லாக்களும், பின்னர் சிம்பன்சிகளும், மனிதரின் மரபுவழித் தோற்றக் கிளையிலிருந்து பிரிந்து சென்றதாகக் கருதப்படுகிறது. கொரில்லா, சிம்பன்சிகளுக்கு முன்பாகவே, கிப்பன் மனிதக் குரங்குகள், சுமார் ஒன்றரை கோடி ஆண்டுகளுக்கு முன்பும், ஒராங்குட்டான்கள் ஏறத்தாழ ஒரு கோடி ஆண்டுகளுக்கு முன்பும், மனித இன மரபிலிருந்து பிரித்து சென்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஹோமோ பேரினத்தில் பல்வேறு இனங்களும் துணை இனங்களும் தோன்றியதாகவும், காலப்போக்கில் மனிதர் தவிர்த்த மற்றவை அழிந்தோ அல்லது பிற இனக் கூட்டத்துடன் கலந்தோ முற்றாக காணமல் போய்விட்டதாவும் கருதப்படுகிறது. ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா பகுதிகளில் வாழ்ந்த நிமிர்ந்த மனிதரான ஓடுமா எரக்டசு, ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் வாழ்ந்த ஓமோ நியாண்டர்தால்கள் போன்ற தொடங்க நிலை மனிதர்கள் தற்காலத்தில் இல்லை. அவ்வாறே ஓமோ எய்டெல்பெர்கென்சிசு, ஓமோ ரொடெசியென்சிசு போன்ற மனித இன முன்னோர்களும் மறைந்து போய்விட்டனர். மூதாதை மனித முன்னோடிகளிலிருந்து மாற்றம் பெற்ற ஓமோ செப்பியன்சு மனிதர்கள், ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து உடற்கூறு அடிப்படையிலான மாற்றம் பெற்றும், இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து பண்பாட்டு மாற்றமடைந்தும் தற்காலத்திய மனிதராக மாற்றமடைந்ததாக படிவளர்ச்சி சான்றுகள் குறிப்பிடுகின்றன.

தற்கால மனிதரின் தோற்றம் குறித்தான அண்மை ஆப்பிரிக்கத் தோற்றக் கொள்கை அல்லது அண்மை ஓரிடத்தோற்றக் கொள்கை அல்லது ஆப்பிரிக்காவிலிருந்து அண்மைக்கால வெளியேற்ற மாதிரி என்பதற்கு மாற்றாக, சமீப காலங்களில் பல்லிடத் தோற்றக் கோட்பாடு முன்வைக்கப்படுகிறது. பல்லிடத்தோற்றக் கருதுகோளின் படி, இருபத்தைந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேறிய ஓமோ எரக்டசு மனிதர்கள், உலகின் மற்ற பகுதிகளில் இருந்த மூதாதையோடு இனக்கலப்பு அடைந்ததன் மூலம் ஓமோ செப்பியன்கள் உருவாகியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நவீன மனித பரிணாமக் கோட்பாடு மானுடவியல், விலங்கியல், தொல்லியல், தொல்லுயிரியல், கருவியல், மரபியல், மொழியியல் எனப் பல்வேறு துறைகளின் அறிவையும் ஆய்வு முடிவுகளையும் ஒப்புநோக்கி மேலும் முன்னேற்ற மடைந்து வருகிறது.

கண்டத்தட்டு இயக்கவியல் கோட்பாட்டின் படி, புவியின் மேலோடு அடிக்கள்கோளம் (லித்தோஸ்பியர்) மற்றும் உள் மென்பாறைக் (அஸ்தோனோஸ்பியர்) எனும் இரண்டு அடுக்குகளால் ஆனது. அறிஞர் ஆல்ப்ரெட் லோதர் வெய்னர் (1880-1930) வெளியிட்ட கண்டத்தட்டு பெயர்ச்சிக் கோட்பாடு பெரும்பாலான அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

1912 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கண்டத்திட்டு இயக்கவியல் கோட்பாட்டின் படி, இருபது கோடி வருடங்களுக்கு முன் பான்கையா எனப்படும் ஒரு தனிக் கண்டமாக பூமி இருந்ததாகவும். அக்கண்டம் பந்தலான்ச எனும் ஒரு சமுத்திரத்தால் சூழப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. பாங்கைய கண்டம் உடைந்து அல்லது துண்டுகளாகப் பிரிந்து தற்போதுள்ள கண்டங்கள் யாவும் தோற்றம் பெற்றதாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஒரு கண்டம், ஒரு கடலிருந்தே தற்காலத்திய அனைத்து பெருநிலப் பகுதிகளும் தோன்றியதென்பதற்கு நிலவியல், படிமவியல், உயிரினங்களின் பரவல் முறை என பல்வேறு சான்றுகள் முன்மொழியப்படுகின்றன. உதாரணமாக ஒன்றோடு ஒன்று பொருத்தக்கூடிய கரையோர அமைப்புகள். தெற்கு அமெரிக்காவின் கிழக்குக் கரையோரமும், ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரமும் ஒன்றோடு ஒன்று பொருந்தக் கூடியதாகக் காணப்படுகிறது. வெவ்வெறு கண்டங்களில்

காணப்படக்கூடிய ஒரே வகையாய மலைத்தொடர்கள் உதாரணமாக நார்வே, கிரீன்லாந்து மற்றும் வட அமெரிக்காவின் மேற்குப் பகுதி மலைகள் ஒரே வயது, கட்டமைப்பு மற்றும் அமைப்பைக் கொண்டுள்ளன. இந்தியாவின் இமயமலைப் பகுதி, தெற்கு ஆப்பிரிக்கா மற்றும் தெற்கு ஆஸ்திரேலியப் பகுதிகளின் பனிப்பாறைப் பரப்புகள் அவை மூன்றும் ஒரு காலத்தில் தென்துருவப் பகுதியில் ஒன்றாக இருந்திருக்கலாமெனச் சுட்டுவதாகக் கூறப்படுகிறது. மேலும் ஒரே மாதிரியான உயிரினங்கள் வெவ்வேறு கண்டங்களில் காணப்படுவதும் ஒரு கண்டக் கொள்கைக்கு வலு சேர்க்கிறது.

தற்போது பூமியின் பெரிய கண்டத்தட்டுகளாக ஆப்பிரிக்கா, அண்டார்டிக், யுரேசியா, வட அமெரிக்கா, தென்னமெரிக்கா, பசிபிக், இந்திய மற்றும் ஆஸ்த்ரேலிய கண்டத்திட்டுகள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் அரேபிய, கரீபியன், கோகஸ், நஸ்கா, பிலின்பைன் உட்பட பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட சிறிய கண்டத்திட்டுகள் உள்ளதாகவும் அறியப்படுகிறது. பூமியின் மென்பாறை மீது அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்படும் கண்டத்திட்டுகள் அல்லது பாறை மண்டலம் அல்லது பலகைகள் ஒன்றுடன் ஒன்று சேர்தல், பிரிதல் அல்லது உரசுதல் போன்ற நிகழ்வுகள் மூலம் அவற்றின் எல்லைகளில் பூகம்பம், எரிமலைகள், மலைகள் மற்றும் ஆழ்கடல் பள்ளத்தாக்குகள் உருவாவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பல நாடுகளைக் கொண்ட நாடாகக் குறிப்பிடப்படும் நைஜிரியாவில், ஐந்நூறுக்கும் மேற்பட்ட மொழிகளும், இனக்குழுக்களும், பல்வேறு கலாச்சார அடையாள மக்களும் வாழ்கின்றனர். தெற்குப் பகுதியில் கிறித்தவர்களும் வடக்கில் இசுலாமியர் பழங்குடியின ஹாசா, இக்போ, யோரூப போன்ற மக்களும் வாழும் நைஜிரியாவின் அதிகாரப் பூர்வ மொழியாக ஆங்கிலம் குறிப்பிடப்படுகிறது. அதிக மக்கள் தொகையும் பொருளாதார வளமும் கொண்டதாகக் குறிப்பிடப்படும் நைஜீரியா 1960 இல் பிரித்தானியத்திடமிருந்து விடுதலையடைந்து நைஜீரிய சமஷ்டி குடியரசு நாடாக மாற்றம் பெற்றிருக்கிறது. 1967 முதல் 1970 வரை உள்நாட்டுப் போரில் மோசமான பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. 2011 இல் நடந்த குடியரசுத் தலைவருக்கான தேர்தலே நியாயமாக நடந்த முதல் தேர்தலாக அறியப்படுகிறது.

நைஜிரியா, பெனின் மற்றும் டேகோ நாடுகளில் பரவியுள்ள யொருபா மக்கள் தனித்துவமிக்க மொழி, சமயம் மற்றும் பண்பாடு கொண்ட மிகப் பெரியதொரு இனக்

கூட்டமாகக் கருதப்படுகின்றனர். சுமார் ஐந்து கோடி மக்கள் தொகை கொண்ட யொருபா மக்கள் யொருபாலேந்து எனும் தனிநாடு போராட்டத்தை முன்னெடுத்தவர்களாகவும் அறியப்படுகின்றனர்.

யொருபா மக்களின் சமய நம்பிக்கையில் பல்வேறு ஓரிஸா கடவுள்களுக்கும் இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்காவிலிருந்து தென் அமெரிக்கா நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட உழைப்பாளிகள் மூலம், தென்னமெரிக்க நாடுகளிலும் ஆப்பிரிக்க கடவுளர்கள் குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பெற்றுள்ளனர். முக்கியமாக யொருபா கடவுள்களான ஓரிசாக்கள், ஆப்பிரிக்க-அமெரிக்க வழிபாட்டு முறைகளில் சன்டாரியா, கண்டோம்பில், டிரினிடாட், ஓரிஸா, உம்பாண்டா மற்றும் ஒயோடுன்ஸி போன்றவை குறிப்பிடத்தக்க அளவில் பின்பற்றப்படுவதாகக் குறிப்புகள் கூறுகின்றன.

யொருபா சமயத்தில் ஓரிஸா கடவுள், எலெடுமாரே, ஒலோருன் மற்றும் ஒலோப்பி எனும் மூன்று பெருங்கடவுள்களாக அறியப்படுகிறார். ஓரிஸா கடவுள்கள், ஒருண் எனும் அன்மீக உலகங்களிலும் பூமி போன்ற உலகங்களிலும் வாழ்வதாகக் கூறப்படுகிறது.

ஒருபா கடவுள்களில் பெருங்கடவுளாக அறியப்படும் ஒலொடுமாரே பல்வேறு உலகங்களை ஒருங்கிணைப்பவராக் குறிபிடப்படுகிறார். ஒலொடுமரேவின் கட்டளைகளை பூமிக்கு எடுத்து வருபவராக ஒடுடுவா கடவுள் குறிப்பிடப்படுகிறார். சொர்க்கத்தை ஆள்பவராகக் அறியப்படும் ஒலோருன், சொர்க்கம் மற்றும் பூமியின் இணைப்பான ஒலோபிர், புகழ்பெற்ற கடவுள்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

ஒருபா வழிபாட்டு முறையில் அமைதி, பொறுமை, பெருந்தன்மைகொண்ட ஓரிஸா கடவுள்கள் வெள்ளைக் நிறத்தவராகவும், கோபம், அவசரம், ஆத்திரம் கொண்ட ஓரிஸாக்கள் சிவப்பு அல்லது கருமை நிறத்தவராகவும் அடையாளம் காணப்படுகின்றனர்.

மனிதர் போன்றே ஓரிஸா தேவதைகளும் நிறம், உணவு, பொருட்களை அவரவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வர் எனக் குறிப்பிடப்படுகிறது. ஆப்பிரிக்காவில் வாய்மொழி வரலாறாக ஏராளமான ஓரிச கடவுளர்கள் அறியப்பட்டு வந்திருக்கின்றனர்.

எப்போதும் சவால்களை விரும்பக்கூடியவராக அறியப்படும் ஈசு கடவுள் ஓரிஸாக் கடவுளர்களின் தூதுவர் போன்று செயல்படுபவராகக் கருதப்படுகிறார். ஈசு, ஆப்பிரிக்க ஈசு, ஆப்ரோ-பிரேசிலியன் வழக்கில் எக்சு உட்பட ஏராளமான பெயர்களால் குறிப்பிடப்படுகிறார். வீடுகளைப் பாதுகாப்பவராகவும், நிலக் காவலராகவும், பனை எண்ணெய், நெருப்பு போன்றவற்றின் கடவுளாகவும் அறியப்படும் எக்சு, கருப்பு கடவுளாகவும், சேவலோடு தொடர்புடையவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

ஒகுன் கடவுள் சிறந்த போர்வீரராகவும் உலோகம் மற்றும் ரம் மதுபானத்திற்கு கடவுளாகவும் குறிப்பிடப்படுகிறார். ஒகுன் பூமிக்கு வந்த முதல் கடவுளாகவும் மற்ற ஓரிஸா கடவுள்கள் வருவதற்கு இரும்பு கோடரியால் வழியமைத்துக் கொடுத்தவராகவும் அறியப்படுகிறார். நாய் மற்றும் கருநாகம் போன்றவையோடு தொடர்புடையவரான ஒகுன் கடவுளுக்கு ஆப்பிரிக்காவிலும் ஆப்ரோ-அமெரிக்க வழிபாட்டிலும் பல்வேறு பலி சடங்குகள் நிகழ்த்தப்படுவதாக் கூறப்படுகிறது.

மேற்கு ஆப்பிரிக்க மக்களின் மிகப்பெரும் பெண்கடவுளாக நனா புருக்கு அல்லது நானா புகு போற்றப்படுகிறார். ஒருபா, பான், ஈவ் உட்பட ஏராளமான இனக்குழுக்களால் பெரிதும் வணங்கப்படும் நனா புலுக்கு கடவுள், மவு எனும் சந்திர கடவுளையும் லிசா எனும் சூரியக் கடவுளையும் படைத்தவராகக் குறிப்பிடப்படுகிறார். பான் மக்களின் வோடன் வழிபாட்டு முறையில் நனா கடவுளுக்கு மிகச் சிறந்த இடமளிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

உம்பாண்டா, கண்டோம்ளே, மார்மோன் எனப் பல்வேறு சமய நம்பிக்கைகளைக் கொண்டுள்ள ஆப்பிரிக்க மக்கள் பெரும்பாலும் எளிமையான இயற்கை வழிபாட்டு முறைகளையே பழங்காலம் முதல் கடைபிடித்து வந்திருக்கின்றனர். இசுலாம், கிறித்துவம் போன்றவற்றின் மிகப்பெரிய மதமாற்றங்களுக்குப் பின்னரும், ஏராளமான கடவுள்களும் சடங்கு முறைகளும் நம்பிக்கைகளும் ஆப்பிரிக்கா முழுவதும் பரவலாகக் காணப்படுவதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. ஆப்பிரிக்கா என்றில்லாமல் உழைப்பாளர்களாக எங்கெல்லாம் கொண்டு செல்லப்பட்டோர்களோ அங்கும் தங்களது சமய நம்பிக்கைகளை கைக்கொண்டிருப்பதாகவே பதிவுகள் எடுத்துரைக்கின்றன. பழங்குடியின மக்கள்

அவ்வளவு எளிதில் தமது தெய்வங்களையும், நம்பிக்கைகளையும் கைவிடமாட்டார்கள் என்பதே வரலாறு.

எளிய வேண்டுதல்கள், பாடல்கள், ஆடல்கள், சடங்கு முறைகள் என கொண்டாடும் மனநிலையில் வழிபட்ட ஆப்பிரிக்க மக்கள் மீது சமயம், தொடர்பான பல்வேறு அடக்கு முறைகளும் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆப்பிரிக்காவின் மம்மி வாட்டா புகழ்பெற்ற ஆப்பிரிக்க தாய் தெய்வமாகப் புகழப்படுகிறார். பாம்புகள், முத்துக்கள், தங்கம் போன்றவற்றோடு சித்தரிக்கப்படும் மம்மி வாட்டர் பெண் கடவுள் தண்ணீர், கடல், உடல்நலம், செல்வம் மற்றும் இசை போன்றவற்றோடு தொடர்புடையவராக அறியப்படுகிறார்.

ஆப்பிரிக்காவின் மிகப் பரந்துபட்ட மொழியாக நைகர்-காங்கோ மொழிகள் புகழப்படுகின்றன. உலகின் மிகப்பெரிய மொழிக்குடுபங்களில் ஒன்றான நைகர் - காங்கோ மொழியை சுமார் அறுபது கோடி மக்கள் பேசுவதாகக் குறிப்பிடப்படுகிறது. நைசர் - காங்கோ எனும் பெயரை அறிமுகப்படுத்தியவராக ஜான் தியோடர் பெந்தோர் - சாமுவேல் (1929-2011) குறிப்பிடப்படுகிறார். நைசர் குடும்பத்தின் முக்கிய மொழிகளாக வோலோப் ∴புல்புல்டே பம்பாரா, யொருபா, இக்போ, சாங்கோ, சுவாகிலி, சுவாசி, சோங்க, சோசா, தும்புக்க, துவி, தெம்னே, வேந்த, எவு, இலிங்கள, அன்யின் உட்பட ஏராளமான மொழிகள் குறிப்பிடப்படுகின்றன.

நைசர்-காங்கோவின் கிளையான மாண்டே அல்லது மாண்டென் மக்கள் நைசர், நைஜீரியா, லைபீரியா, மாலே, செனகல், கானா, கினியா, ஐவோரி கோஸ்ட் உள்ளிட்ட பல நாடுகளின் முக்கியமான இனக்குழுவாகக் கருதப்படுகிறர்கள். பெரியதும், சிறியதுமாக பல்வேறு குழுக்கள் அடங்கியுள்ள மாண்டே இனக்குழு மக்கள் பல்வேறு பண்பாடுகளையும், நம்பிக்கைகளையும் உடையவர்களாக இருக்கின்றனர்.

பிரெஞ்சு சூடான் என அழைக்கப்பட்ட மாலி நாடு, அந்நாட்டின் புகழ்பெற்ற மாலி பேரரசின் நினைவாக மாலி எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. மாலியும் செனகலும் இனைந்த மாலிக் குடியரசு 1960 இல் பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றிருக்கிறது. பின்னர் செனகல் தனியாகப் பிரிந்து விட, மாலி எனும் பெயரில் தனிநாடாக அறியப்பட்ட மாலிக் குடியரசில் இராணுவப் புரட்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

மேற்கு ஆப்பிரிக்காவில் நிலவிய மாண்டென் குருபாபா எனும் மாலிப் போரரசு (1230-1600) அக்காலத்திய சிறந்ததொரு பேரரசாக அறியப்பட்டிருக்கிறது. சூன்யத்தா கெயித்தா (1217-1255) இளவரசரால் தோற்றுவிக்கப்பட்ட மாலி பேரரசின் புகழ்பெற்ற மன்னராக மான்சா மூசா குறிப்பிடப்படுகிறார்.

பத்தாவது மூசாவாகக் குறிப்பிடப்படும் மூசா கெயிட்டா சுல்தான் (1280-1337), பேரரசர் போன்ற பல்வேறு அடைமொழிகளால் அழைக்கப்படுகிறார். மான்சா மூசா காலத்தில், உலகத்திலேயே மிக அதிக அளவிலான தங்கம் மாலி பேரரசில் வெட்டியெடுக்ப்பட்டு உலகின் மிகப்பெரும் பணக்கார சுல்தானாக புகழப்பெற்றிருக்கிறது. 1324 -1325 இல் மெக்கா புனிதப்பயணம் மேற்கொண்ட மூசா பேரரசரோடு பன்னிரென்டாயிரம் அடிமைகள் உட்பட அறுபதாயிரம் பேர் உடன் சென்றதாகக் கூறப்படுகிறது.

புகழ்பெற்ற நாடு காண் பயணியும் கல்வியாளருமான மொராக்கோவின் முகமது இப்னு பாதுதா (1304-1368 அல்லது 69) மூலம் சூன்யதா மன்னரின் வரலாறு பதியப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. முப்பது ஆண்டுகள் பயணம் செய்து மத்திய காலத்தின் இசுலாமிய நாடுகளுக்கு மேற்கொண்ட பாதுதாவின் பயணம், அக்காலத்திய பல்வேறு வரலாற்றுத் தகவல்களுக்கு மிகச்சிறந்த ஆவணமாகக் கொள்ளப்படுகிறது. சுமார் நாற்பத்து நான்கு நாடுகளுக்குப் பயணமான அறிஞர் பாதுதா, துல்லியமான நினைவாற்றல்களுடன் பயணக் குறிப்பை பதிவு செய்துள்ளதாகப் புகழப்படுகிறார். தென்னிந்திய மக்கள் வெற்றிலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதைப் பற்றி குறிப்பிட்டுள்ள பதுதா, வெற்றிலை பாக்கு தருவதை தங்கம் வெள்ளி தருவதை விட மக்கள் உயர்வாகக் கருதியதாகவும் பதிவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அறிவைத் தேடிச் செல்வதே மனிதனின் முதற்கடமையாகும் என்பதை வலியுறுத்திய பாதுதாவின் பயணக் குறிப்புகள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

மாலியின் வாழும் பம்பாரா மக்களால் இசைக்கப்படும் டிஜெம்பே தோல் இசைக்கருவி, தனித்துவமான இசையை வெளிப்படுத்தக் கூடியதாகப் புகழப்படுகிறது. லென்கே எனும் மரத்திலிருந்து செய்யப்படும் டிஜெம்பே சமாதானத்தின் ஒன்று கூடல் எனும் பெயரால் குறிப்பிடப்படுவது சிறப்பு.

முடிவற்ற சமவெளி எனும் பொருள்படும் தான்சானியாவின் செரங்கட்டி பகுதியின் செரங்கட்டி தேசியப் பூங்காவும், ஆண்டு தோறும் நிகழும் லட்சக்கணக்கான விலங்குகளின் இடப்பெயர்வும், உலகப் புகழ் பெற்றவையாக அறியப்படுகின்றன. 14,763 சதுர கி.மீ பரப்பு கொண்ட செரங்கட்டி பூங்கா, தான்சானிய-கென்ய எல்லையில் அமைந்துள்ளது.

செரங்கட்டியின் கென்ய பகுதி மசாய் மாரா எனும் பெயரில் அழைக்கப்படுகிறது. ஜீலை தொடங்கி அக்டோபர் வரை இடம்பெறும் காட்டு விலங்குகளின் பெரும் இடப்பெயர்வுக்கு புகழ்பெற்ற மசாய் மாரா தேசிய பூங்கா, காட்டுயிர் விலங்குகளுக்குப் பெயர்பெற்றதாக அறியப்படுகிறது. காட்டுமாடுகள், வரிக்குதிரைகள், ஒட்டகச் சிவிங்கிகள், சிங்கங்கள், மான்கள், காண்டா மிருகங்கள், நீர் யானைகள், சிறுத்தைகள், யானைகள் போன்ற பெரிய விலங்குகளுக்குப் பெயர் பெற்ற செரங்கட்டி-மசாய் மாரா தேசிய பூங்காங்கள் மேய்ச்சல் நிலங்களுக்கு பெயர் பெற்றவையாக அமைந்துள்ளன. செரங்கட்டி சரணாலயத்திலிருந்து மசாய் மாரா சரணாலயம் நோக்கியும் பின்னர் மசாய் மாராவிலிருந்து செரங்கட்டிக்கு பயணமாகும் மீள் பயணமும் உணவுக்காகவே நடைபெறுகிறது. ஆற்றுப்படுகை காடுகள், சதுப்பு நிலங்கள், எச்சக் குன்றுகள், புல்வெளிகள், மரக்காடுகள் உள்ளிட்ட பல்வேறு வாழ்விடங்களைப் பெற்றுள்ள தேசியப் பூங்காக்களின் கடுமையான பாதைகள் வழியே நிகழும் ஆபத்தான சிருங்கதி இடப்பெயர்வு உலகின் இயற்கை அதிசயமெனில் மிகையாகாது.

சாம்பியா, சிம்பாப்வே, சுவாசிலாந்து, தென்னாப்பிரிக்கா, நமீபியா, போட்சுவானா போன்ற நாடுகள், தெற்கு ஆப்பிரிக்க நாடுகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

வேற்றுமையில் ஒற்றுமை என்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள தென்னாப்பிரிக்கா நாடு, 1961 இல் குடியரசாகியிருக்கிறது. சுமார் முப்பது லட்சம் ஆண்டுகளுக்கு முன்பான தொல் மனிதர்களின் புதைபடிமங்களைக் கொண்டிருப்பதாக அறியப்படும் தென்னாப்பிரிக்காவில், மிகப் பழைய காலத்திலிருந்தே மனிதர்கள் வாழ்ந்து வருவதாகக் கருதப்படுகிறது.

1487 இல் போர்த்துக்கீசிய கண்டுபிடிப்பாளரான பார்டலோ-மு-டயசு ஆப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்த முதல் ஐரோப்பியராக

அறியப்படுகிறார். இந்தியாவின் செல்வ வளத்திற்கு இட்டுச் செல்கிறது எனும் பொருளில் கேபோ-டா-போவா எஸ்பரென்கோ அதாவது நன்னம்பிக்கை முனை எனப் பெயரிடப்பட்ட தெற்கு முனை, அக்காலத்திய கடற்பயணத்திற்கு மிக முக்கியமானதொரு இருப்பிடமாகக் கருதப்பட்டதால் ஐரோப்பியரிடையே நன்னம்பிக்கை முனையை கருத்தில் கொண்டு நீண்ட போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள் அடங்கிய போயர்களுக்கும், பிரித்தானியர்களுக்கும், தென்னமெரிக்காவின் தொல் குடிகளுக்கும் மிகக் கடுமையான மோதல்கள் நடந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் எடுத்துரைக்கின்றன,

முதல் போயர் போரில் (1880-1881) தோற்ற பிரித்தானியர், பின்னர் பெரும் எண்ணிக்கையில் படைகளைத் திரட்டி இரண்டாம் போயர் போரில் (1899-1902) வெற்றி பெற்றிருக்கின்றனர். 1910 ஆம் ஆண்டில் கேப் மற்றும் டிரான்ஸ்வால் குடியரசுகளிலிருந்து தென்னாப்பிரிக்க நாடு ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

1913 இல் இயற்றப்பட்ட பூர்வக்குடி நிலச்சட்டம் நாட்டின் தொல் குடிகளான கறுப்பின மக்கள் நிலம் வைத்திருப்பதை தடை செய்திருக்கிறது. நன்னம்பிக்கை முனை கண்டுபிடிக்கப்பட்டவுடனேயே டச்சுக்காரர்களால் மடகாசுகர், இந்தோனேசியா, இந்தியா போன்ற பகுதிகளிலிருந்து தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர். 1867-ல் வைரங்களும் 1884-ல் தங்கமும் கண்டுபிடிக்கப்பட்டதன் காரணமாக பெருமளவிலான ஐரோப்பியக் குடியேற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. குறிப்பாக 1795 இல் நன்னம்பிக்கை முனையை பிரித்தன் கைப்பற்றியதிலிருந்து பிரித்தானியத்தின் கிழக்கிந்திய கம்பெனி அதிகளவிலான இந்தியர்களை குறிப்பாக தமிழர்களை தென்னாப்பிரிக்கத் தொழிலாளர்களாக குடியமர்த்தியிருக்கிறது.

டச்சு மற்றும் பிரித்தானியரால் அமலாக்கப்பட்ட நிறத்தின் அடிப்படையிலான ஒதுக்கல் கொள்கையை, அடுத்து வந்த வெள்ளையர் தலைமையிலான தென்னாப்பிரிக்க அரசுகளும் கடைப்படித்து, பல்வேறு நிறவெறிச் சட்டங்களையும் இயற்றியிருக்கின்றன. நிறவெறியையும் அடக்கு முறைகளையும் பெருமளவில் முன்னெடுத்ததாக ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் அடையாளம் காணப்படுகிறது. வெள்ளையர், கருப்பினத்தவர், குடியேறியவர் என மூன்று பிரிவினராக மக்கள்

பாகுபடுத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவினருக்கும் குடியிருப்புகள், உரிமைகள், தடைகள், வரையறைகள், வாழ்க்கைத் தேவைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பான்மையான கருப்பின தொல்குடிகளைக் கட்டுப்படுத்தி, சிறு எண்ணிக்கையிலான வெள்ளையர்கள் அனைத்தையும் அனுபவித்து வந்திருக்கின்றனர். 1961 இல் தென்னப்பிரிக்க குடியரசு உருவாக்கப்பட்டாலும் அது வெள்ளையினத்தவர் மட்டுமே வாக்களித்து குடியரசானதாகக் குறிப்பிடப்படுகிறது.

நிறவெறிக்கு எதிராகப் போராடியவர்களுள் முக்கியமானவராக நெல்சன் மண்டேலா (1918-2013) பகழப்படுகிறார். ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் இராணுவப் பிரிவிற்குத் தலைமை தாங்கியவராக அறியப்படும் திரு. மண்டேலா ஆரம்பகாலத்தில் அகிம்சையின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தவராக இருந்திருக்கிறார். இருபத்தி ஏழு ஆண்டுகள் சிறை வைக்கப்பட்ட மண்டேலா அவர்கள், விடுதலைக்குப் பின் தென்னாப்பிரிக்கக் குடியரசின் மிகப்பெரும் தலைவராகவும், தென்னப்பிரிக்கா ஒரு மக்களாட்சி நாடாக மலர்வதற்கு அரும்பாடு பட்டவராகவும் அறியப்படுகிறார். நேரு சமாதான விருது, பாரதரத்னா விருது, மகாத்மா காந்தி விருது, அமைதிக்கான நோபல் விருது உட்பட பல்வேறு நாடுகளின் ஏராளமான விருதுகளைப் பெற்ற நெல்சன் மண்டேலா, ஆப்பிரிக்காவின் ஆகச் சிறந்த அடையாளமெனில் மிகையாகாது.

தென்னாப்பிரிக்கக் கரும்புத் தோட்டங்களில் ஒப்பந்தக் கூலிகளாகப் பணிபுரிய அழைத்து வரப்பட்ட இந்தியர்கள், வெள்ளைக்காரர்களின் பண்ணைகளில் சொல்லவொண்ணாக் கொடுமைகளை அனுபவித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. 1893 இல் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற வழக்கறிஞரின் டர்பன் வருகை தென்னாப்பிரிக்க வரலராற்றில் புதியதொரு திருப்பு முனையை ஏற்படுத்தியிருக்கிறது.

பிரித்தானியக் குடியேற்ற நாடுகளில் கரும்புத் தோட்டங்கள் ஏற்படுத்த 1850 முதல் கிட்டத்தட்ட பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து ஒப்பந்தக் கூலிகளாக கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர். பிஜித் தீவுகள், மொரிசியஸ், தென்னாப்பிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் கப்பல்கள் மூலமாகக் கொண்டு செல்லப்பட்ட மக்கள், வேலையின் பொருட்டு பல்வேறு துன்பங்களுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்.

1894 இல் நேடால் இந்தியக் காங்கிரசு என்ற அரசியல் கட்சியைத் தொடங்கிய காந்தி, இந்தியர்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்படவேண்டும், அநியாயச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும், இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலிகள் அழைத்து வரப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார். மேலும் பல்வேறு அறப்போராட்டங்களை முன்னெடுத்தவராகவும், சிறை சென்றவராகவும், இந்தியன் ஒப்பீனியன் பத்திரிக்கையின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தியவராகவும் அறியப்படுகிறார்.

உலக வரலாற்றில் அகிம்சைப் போராட்டம் எனப்படும் சத்தியக்கிரக அறப் போராட்டத்தை முதன் முதலில் தென்னாப்பிரிக்காவில் செயல்படுத்தி அதில் வெற்றியும் பெற்ற காந்தி, அதை இந்தியத் துணைக் கண்டத்திலும் வெள்ளையருக்கு எதிராக செயல்படுத்தியது ஆச்சரியமானது. மோகன்தாஸ் கரம் சந்த் காந்தியாகச் சென்றவர், இந்தியாவிற்குத் திரும்பும்போது மகாத்மாவாக மாற்றம் பெற்றதில் தென்னாப்பிரிக்கத் தமிழர்களின் பங்களிப்பு ஆகச் சிறந்தது எனில் மிகையாகாது.

காந்தி எனும் மகத்தான ஆளுமையை வடிவமைத்ததில் அவரது 1893-1914 வரையிலான தென்னாப்பிரிக்க வாழ்வுக்கும் அனுபவங்களுக்கும் மிகப்பெரும் பங்குள்ளதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஏராளமான வாழ்க்கைச் சோதனை முயற்சிகளில் ஈடுபட்ட காந்தி, சோதனைகளின் முடிவுகள் குறித்து அலசி ஆராய்ந்தே இந்திய சுதந்திரத்திற்கு தலைமை தாங்கும் வல்லமையைப் பெற்றிருக்கிறார். சுமார் இருபது ஆண்டுகள் தென்னாப்பிரிக்காவில் சத்திய சோதனைகள் பயின்ற காந்தி எனும் மகத்தான மனிதரால் இந்திய வரலாறே காந்திக்கு முன் காந்திக்குப் பின் என மாற்றம் கண்டிருக்கிறது.

தமது வாழ்க்கையை ஒரு திறந்த புத்தகம் எனக் குறிப்பிடும் காந்தியின் சுயசரிதை நூல், சத்திய சோதனை எனும் பெயரில் வெளியிடப்பட்டிருக்கிறது. நவஜீவன் வாரப்பத்திரிக்கையில் 1925 முதல் 1929 வரை எழுதப்பட்ட காந்தியின் சுயசரிதை, 1869 தொடங்கி 1921 ஆம் ஆண்டு வரையிலான சுமார் ஐம்பதாண்டு கால வாழ்க்கைப் பயணத்தை விவரிக்கிறது.

தமிழகத்தில் காந்தியடிகள் என்றும் உத்தமர் காந்தி என்றும் அன்புடன் அழைக்கப்படும் மோகன் தாஸ் கரம்சந்திர காந்தி, டால்ஸ்டாய் மேல் மிகுந்த மதிப்பு

வைத்திருந்தவராகவும், அவருடைய உலக அமைதி, நீதி போன்ற கருத்தாக்கங்களில் நம்பிக்கை கொண்டிருந்தவராகவும் அறியப்படுகிறார்.

பிரித்தானியப் பேரரசை அறவழிப் போராட்டத்தின் மூலம் வென்ற காந்தியடிகள், பல்வேறு இனம், மொழி எனப் பிரித்து கிடந்த இந்திய மக்களை அனைவரும் இந்தியர் எனும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்தவராகப் புகழப்படுகிறார். போயர் போரிலும், உலகப் போரிலும் பிரித்தானிய ஆதரவு நிலைப்பாட்டை மேற்கொண்டிருந்த காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம் மற்றும் வெள்ளையனே வெளியேறு போன்ற மகத்தான போராட்ட முறைகள் மூலம் இந்திய சுதந்திரத்தை வெகு தீவிரமாக முன்னெடுத்ததும் வரலாறு.

காந்தியடிகளின் தென்னாப்பிரிக்கப் போராட்டங்களிலும் பின்னர் இந்திய விடுதலைப் போராட்டங்களிலும் பங்கு கொண்ட கஸ்தூரிபாய் அம்மையார், ஐம்பதாண்டு காலங்கள் காந்தியடிகளோடு அனைத்து சுக துக்கங்களிலும் பங்கு கொண்டவராகப் போற்றப்படுகிறார்.

ஆப்கானித்தான், பாகித்தான், இந்தியா, வங்கதேசம் என பரந்து விரிந்திருந்த முகலாயப் பேரரசு (1526-1858), இந்திய வரலாற்றிலும், சமூக அமைப்பிலும், பண்பாட்டிலும், மொழி மற்றும் மதங்களிலும் செலுத்திய செல்வாக்கு அளப்பரியது. 1700களில் தென் தமிழகம் தவிர்த்து அனைத்து இந்தியப் பகுதிகளையும் ஒரு குடையின் கீழ் ஆண்ட மொகலாயப் பேரரசு ஆங்கிலேயரிடமிருந்து இந்திய மண்ணையும், மக்களையும் காக்கத் தவறியதாக வரலாற்றாசிரியர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

டில்லியிலிருந்து தொன்னூறு கிலோமீட்டர்கள் தள்ளியிருக்கும் அரியானா மாநில பானிபட் நகரம் பானிபட் போர்களால் பெரிதும் அறியப்படுகிறது. தைமூரின் வழிவந்தவராக அறியப்படும் பாபருக்கும் (1483-1530), தில்லி சுல்தானகத்தின் இப்ராகிம் லோடிக்கும் இடையே நடைபெற்றதாகக் குறிப்பிடப்படும் முதலாம் பானிபட் போர் (1526), மூன்று நூற்றாண்டுகள் முகல் எனும் மங்கோலிய இசுலாமியர்களின் ஆட்சி இந்தியாவின் நடைபெற வழிவகுத்திருக்கிறது.

மேற்கு மற்றும் மத்திய ஆசியாவின் பெரும் பகுதிகளை உள்ளடக்கிய தைமூரியப் பேரரசை உருவாக்கிய துருக்கிய - மங்கோலிய வழி வந்தவரான தைமூரின் (1336-1405) மரபினராக பாபர் கருதப்படுகிறார். துருக்கிய பண்பாட்டிற்கும்

துருக்கிய இலக்கியத்திற்கும் பெரும் சேவை செய்தவராகக் குறிப்பிடப்படும் தைமூர், முன்னர் நடந்த டில்லி ஆக்ரமிப்பின் போது (1398) மிகக் கொடூரமான போரை நிகழ்த்தியவராக அறியப்படுகிறார்.

பொது ஆண்டின் 1525 இல் ஐந்தாவது முறையாக டில்லியின் மீது படையெடுத்து வந்த சகிருதின் முகம்மத் பாபர் சிறப்பான பீரங்கிப் படையைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறார். ஆப்கானியப் பிரபுக்களின் கலகத்தால் ஏற்கனவே விழ்ச்சியுற்றிருந்த லோடி, பாபரால் வீழ்த்தப்பட்டதும் டில்லி முகலாயர் வசமாகியது குறிப்பிடத்தக்கது. பானிபட், தில்லி, ஆக்ராவை வெற்றிகொண்ட பாபார் பின்னர் இரசபுத்திர மன்னர், குசரபித் மற்றும் மாளவ இசுலாமிய மன்னர்களையும் வென்று மொகலாய் பேரரசிற்கு நல்லதொரு அடித்தளமிட்டிருக்கிறார்.

பாபரின் பேரனான ஜலாலுதீன் முகமது அக்பர் (1542-1605) பதின்முன்றாவது வயதிலேயே பேரரசராக முடி சூட்டப்பட்டவராக அறியப்படுகிறார். ஆப்கானிய இசுலாமியர்களுக்கும் மொகலாயர்களுக்குமான பிணக்குகளைக் களைந்து நிலையான மொகலாய ஆட்சியை இந்திய மண்ணில் நிறுவிய அக்பர் இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்திய பேரரசராக அறியப்படுகிறார். வலிமை மிக்க இரசபுத்திரர்களோடு மண உறவுகள் கொண்டவராகக் குறிப்பிடப்படும் பேரரசர் அக்பர், மதம் தொடர்பான சகிப்புத் தன்மை கொண்டிருந்தவராகவும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளார்.

பல்வேறு போர்கள் மூலமாக பரந்துபட்ட பேரரசை நிறுவிய அக்பர், கலைகளின் மீதும், இலக்கியத்தின் மீதும் தீராக்காதல் கொண்டிருந்தவராகப் புகழப்படுகிறார். பாரசீக மொழியில் அபுல் பாசலால் (1551-1602) எழுதப்பட்ட அக்பர் நாமா மற்றும் அயினி அக்பரி நூல்கள், மொகலாயர்களின் முந்நூறு ஆண்டுகால வரலாற்றைக் குறிப்பிடுகின்றன.

சகிப்புத்தன்னை உடையவராகப் புகழப்படும் பேரரசர் அக்பர், இந்து மதம், இசுலாம், சீக்கியம், கிறித்தவம், பார்சி, துராஸ்டிரம் உள்ளிட்ட பல்வேறு சமயக் கருத்துக்களை ஒன்றிணைத்து தெய்வீக நம்பிக்கை எனும் பொருள் கொண்ட தீன் இலாஹி மதத்தை உருவாக்கியிருக்கிறார். ஆசை, கர்வம் கொள்ளுதல் போன்றவற்றை தடுத்த தீன் இலாஹி, நல்லவைகளைச் செய்தல்,

முன்னெச்சரிக்கையாய் இருத்தல், சுயகட்டுப்பாடு மற்றும் அன்பாக இருத்தல் போன்றவற்றை முக்கியக் கொள்கைகளாக வலியுறுத்தியிருக்கிறது.

மேவார் அரசு என அறியப்பட்ட உதய்பூர் அரசின் மகாராணா பிரதாப் சிங் (1540-1597) இராஜபுத்திரர்களின் வீரம், நட்டுப்பற்று மற்றும் சுய மரியாதைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகப் புகழப்படுகிறார். மற்ற பல இராஜபுத்ர மன்னர்களை எளிதாக வென்றும் உடன்படிக்கை செய்தும் மொகலாய அரசை விரிவுபடுத்திய அக்பருக்கு, மன்னர் பிரதாப் சிங்கை வெற்றிகொள்வது மிகக் கடுமையானதாக இருந்திருக்கிறது.

அக்பரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தூது முயற்சிகளுக்கு இணங்காதா பிரதாப் சிங், ஆம்பர் எனும் ஜெய்ப்பூர் மன்னரும் அக்பரின் முக்கியமான படைத் தலைவருமான ராஜா மான் சிங் (1550-1614) தலைமையிலான படைகளை வீரத்துடன் எதிர்த்திருக்கிறார். போரில் காயம்பட்டு தப்பித்த பிரதாப் சிங், பின்னர் இழந்த நாட்டின் பெரும்பகுதிகளை மீண்டும் கைப்பற்றி கடைசி வரை துணிவுடன் மெகலாயப் பேரரசை எதிர்த்து நின்ற வீர புத்திரராக வரலாற்றில் இடம் பெற்றுள்ளார்.

ஆக்ரா அருகிலுள்ள பதேபூர் சிக்ரி கோட்டையில் பிறந்த நூருத்தின் சலீம் ஜஹாங்கிர் (1569-1627) சிறப்பான ஆட்சி நிர்வாகத்தை அளித்தவராகக் குறிப்பிடப்படுகிறார். மொகலாயர்களின் பொற்கால ஆட்சி எனப் புகழத்தக்க அளவிற்கு சிறப்பான ஆட்சி வழங்கியதாகக் குறிப்பிடப்படும் ஜஹாங்கிர் பேரரசர், ஓவியக்கலையின் மேல் தீராத பற்று கொண்டவராகவும் புகழப்படுகிறார்.

ஷாஹாபுதீன் முகம்மது ஷாஜகான் (ஆ.காலம் 1628-1658) நல்லாட்சி நடத்தியவராகவும், கட்டிடக் கலையை சிறப்பாக முன்னெடுத்தவராகவும் அறியப்படுகிறார். ஷாலிமார் கோட்டைகள், செங்கோட்டை உட்பட பல்வேறு கட்டிடங்களை உருவாக்கிய பேரரசர் ஷாஜகான், காதல் மனைவி மும்தாஜ் நினைவாக எழுப்பிய தாஜ்மகால் காலத்தால் அழியாத காதல் காவியமாக புகழ்பெற்றிருக்கிறது. ஆக்ராவில் யமுனை ஆற்றங்கரையில் கட்டப்பட்டுள்ள தாஜ்மகால் உலகின் அதிசயமாகப் புகழப்படுகிறது.

பேரரசர் ஔரங்கசீப் (1618-1707) காலத்தில் காபுல் தொடங்கி தமிழ்நாடு வரை மொகலாயப் பேரரசு பரந்து விரிந்திருந்ததாக அறியப்படுகிறது. இந்தியாவை ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்த ஔரங்கசீப், மராட்டியரோடு, இராசபுத்திரர்களோடு.

சீக்கியர்களோடு மோதல் போக்கை மேற்கொண்டவராக அறியப்படுகிறார். மேலும் மதப் பற்றாளராகக் குறிப்பிடப்படும் பேரரசர், தனிப்பட்ட வாழ்க்கையில் மிக எளிமையானவராகவும் இசுலாத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவராகவும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளார்.

ஐரோப்பா உலகின் பல்வேறு நாடுகளை வெற்றிகொண்டதற்கு அந்நாடுகளில் குறிப்பிடத்தக்க வலிமையான அரசுகள் இல்லாதிருந்ததும் மிக முக்கியமான காரணமாக சுட்டப்படுகிறது. தென்னமெரிக்கா, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளை எளிதாக ஆக்ரமித்த ஐரோப்பியர்கள் மொகலாயப் பேரரசு போன்ற பரத்துபட்டிருந்த வலிமையான பேரரசை வெற்றிகொண்டது வியப்பானதே. போர்த்துக்கீசியர், டச்சுக்காரர் போன்றோர் மதம் பரப்புதலில் தீவிரமும், வணிகத்தில் ஆர்வமும் கொண்டவராக அறியப்படும் வேளையில், ஆங்கிலேயரோ இந்தியாவைப் பிடிப்பதில் திட்டமிட்டு செயலாற்றியிருக்கின்றனர். ஔரங்கிர் காலத்தில் வில்லியம் கோட்டையில் வளர்ச்சி பெற்று, சென்னை ஜார்ஜ் கோட்டையை கட்டியெழுப்பி, தென்னக பங்காளிப் போர்களில் தலையிட்டு, மிகவும் சாமர்த்தியமாக கர்நாடகப் போர்களை வென்று, மிகக் குறுகிய காலத்திலேயே மூன்று நூற்றாண்டு மொகலாயப் பேரரசை முடிவுக்குக் கொண்டு வந்தது ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி எனில் மிகையாகாது.

பிரித்தானியப் பாரளுமன்றத்தின் செல்லப் பிள்ளையாகப் பேணி வளர்க்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஏகப்பட்ட சலுகைகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 1661 ஆம் ஆண்டின் உரிமைப் பத்திரத்தின் மூலம் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிக்கு போர்பிரகடனம் செய்யவும், சமாதான உடன்படிக்கை செய்யவும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. 1668 ஆம் ஆண்டு உரிமைப் பத்திரத்தின் மூலம் நாணயங்கள் அடிக்கவும், போர்கள், நீதிமன்றங்களை ஒழுங்கமைக்கவும் சொந்தமாக தரைப்படை, கப்பற்படை வைத்திருக்கவும் உரிமை கிடைத்திருக்கிறது. கிழக்கிந்தியக் கம்பனியை மூல கருவியாகக் கொண்டு பரந்து பட்ட இந்தியாவை ஆக்ரமித்த ஆங்கிலேயரை எதிர்த்து இந்தியாவில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டம் உலகில் எங்குமே நடைபெறாத ஒன்று.

முகலாய மன்னர்கள் வட இந்தியாவிலும் மேற்கு இந்தியாவிலும் முழுக்கவனம் செலுத்த பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் தென்னிந்திய மற்றும் கிழக்கிந்தியப் பகுதியில் சிறிது சிறிதாக முன்னேறி குறுகிய காலத்திலேயே

குறிப்பிடத்தக்க நிலப்பகுதியை பிடித்துக் கொண்டதாகத் தெரிகிறது. தென் பகுதியில் கர்நாடகப் போர்களும், கிழக்கில் பிளாசிப் போர்களும் பாக்ஸார் போர்களும் ஆங்கிலேயே ஆட்சியை பெருமளவில் நிலைப்படுத்தின எனில் மிகையாகாது. ஆங்கிலேயர் வெற்றிகளில் பெருமளவில் இடம் பெறும் பெயர் மேஜர் ஜெனரல் இராபர்ட் கிளைவ் (1725-1774), இராணுவ மற்றும் அரசியல் மேலாதிக்கம் மிகுந்தவராகக் குறிப்பிடப்படும் கிளைவ், கிழக்கிந்தியக் கம்பனியின் வங்காள ஆளநரான வாரன் ஹேன்டிங்ஸ் (1732-1818) இருவரும் ஆங்கிலேய ஆட்சியை இந்தியாவில் காலூன்ற வைத்தவர்களாக வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். வாரன் ஆட்சி காலத்திலேயே வங்காளப் பகுதிகளில் ஏற்பட்ட மிகக் கொடூரமான வங்கப் பஞ்சம் நிகழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

வரான் ஹேஸ்டிங்ஸ் தொடங்கி டல்ஹௌசி பிரபு (1848-1856) வரையிலும் கிழக்கிந்தியக் கம்பனியின் கவர்னர் ஜெனரல்களால் ஆளப்பட்ட இந்தியப் பகுதிகள், பின்னர் பிரிட்டிஷ் அரசின் நேரடி அதிகாரத்தின் கீழ் கானிங் பிரபு முதல் (1858-1862) மவுண்ட் பேட்டன் பிரபு வரை (1947) ஆதிக்கம் செலுத்தப்படிருக்கின்றன.

1857 இல் மீரட் நகரில் நடத்தப்பட்ட கிளர்ச்சி, இந்திய சுதந்திர வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகக் கருதப்படுகிறது. சிப்பாய் கலகம் என்றும் முதல் சுதந்திரப் போர் என்றும் வரலாற்றில் இடம் பெற்றுள்ள சிப்பாய் புரட்சிப் போர் தோல்வியில் முடிவுற்றாலும் அது மிகுந்த தாக்கங்களை உண்டாக்கியதாகச் குறிப்பிடப்படுகிறது.

இரண்டாம் பகதூர்-ஷா, நானா சாகிப், மிர்சா முகல், லட்சுமி பாய், பேகம் ஹஸ்ரத் மகால், கன்வர் சிங், அஜிம் உல்லாகான், தந்தியா தோபே உள்ளிட்ட பல சிற்றரசர்களும், படைவீரர்களும், குறைந்த அளவிலான பொதுமக்களும் பங்கு பெற்ற சிப்பாய் புரட்சியை ஈவு இரக்கமற்ற கொடூர முறைகளைப் பயன்படுத்தி. கிழக்கிந்திய கம்பனி அடக்கியதாகப் பதிவுகள் சுட்டுகின்றன. இந்திய அரசர்களிடையே ஒருகிணைவு இல்லாததும், சரியான தலைமை இல்லாததுமே, வீறு கொண்டெழுந்த சுதந்திரப் போர் வெற்றிபெறாமைக்கு காரணமாகக் கருதப்படுகிறது.

முதல் சுதந்திரப் போரில் பெரும்பங்காற்றியவராக ஜான்சியின் ராணி இலட்சுமிபாய் (1835-1858) புகழப்படுகிறார். ஒரு மன்னருக்கு நேரடி வாரிசு

இல்லையெனில் அந்த அரசு வெள்ளையருக்கே சொந்தம் என உரிமை கொண்டாடிய வெள்ளையர் கிழக்கிந்தியக் கம்பனியை என்னவென்பது. நாட்டை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுக்காமல் துணிவுடனும், வீரமுடனும் வெள்ளையரை எதிர்த்த வீர மங்கை ஜான்சி மகாராணி, இந்தியர் மனங்களில் நீங்காப் புகழுடையவராகத் திகழ்கிறார்.

சிப்பாய் புரட்சிக்கு முன்பே கம்பனியின் ஆட்சியை எதிர்த்து தமிழ் மண்ணில் பல்வேறு புரட்சிகள் நிகழ்ந்தும் அவை வரலாற்றில் பெரியளவில் பதியப்படாமல் விடுபட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. 1806 இல் வேலூர் கோட்டையில் நிகழ்ந்த சிப்பாய் புரட்சியும், சிவகங்கைச் சீமையில் வேலு நாச்சியாரால் (1730-1796) முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டமும் பிரித்தானியருக்கு எதிரான முன்னோடி சுதந்திரப் போர்களெனில் மிகையில்லை.

இந்தியாவின் முதல் பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனையாகப் புகழப்படும் வேலு நாச்சியார், பிரித்தானிய கம்பனிக்கு எதிராகப் படை திரட்டி, ஹைதர் அலியின் படை உதவியோடு ஆங்கிலப் படையை தோற்கடித்தவராகக் குறிப்பிடப்படுகிறார். வேலு நாச்சியாரின் கணவரும் பாளையத்தின் அரசருமான முத்து வடுகநாதரின் படையில் முக்கியத் தளபதிகளாக இருந்த பெரிய மருது, சின்ன மருது எனும் மருது சகோதரர்களின் வீரம் பெரிதாகப் புகழப்படுகிறது. காளையார் கோவிலை மையமாகக் கொண்டிருந்த மருது சகோதரர்கள் சிவகங்கை சீமையை மீட்டெடுத்ததில் பெரும்பங்காற்றியவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

பாஞ்சாலக்குறிச்சி பாளைய அரசரான வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததன் பேரில், மருது சகோதரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தார் மீது ஆங்கிலேயப் படை கடுமையான தாக்குதல்களைத் தொடுத்திருக்கிறது. 1790 முதல் வரி வசூலில் ஈடுபடத்தொடங்கிய கும்பினியாரை எதிர்த்து வீரமாகப் போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்மனை வெள்ளையர் படையிடம் பிடித்துக் கொடுத்தவராக புதுக்கோட்டை சமஸ்தானத்தின் (1680-1947) இராஜா விஜய ரகுநாதராய தொண்டைமான் பகதூர் (1759-1807) அறியப்படுகிறார்.

சிவகங்கை, நெல்லை பகுதிகளின் பாளையக்காரர்கள் ஆங்கிலேயரை தீரமாக எதிர்த்த போது, புதுக்கோட்டை தொண்டைமான் மற்றும் இராமநாதபுரம் சேதுபதி ஆட்சியாளர்கள் வெள்ளையரோடு இணக்கம் பேணியதாக வரலாறு

பதிவிட்டிருக்கிது. 1686 முதல் இராமநாதபுரம் சமஸ்தானத்தின் அதிகாரத்திலிருந்து பிரிந்து தன்னாட்சியாக விளங்கிய புதுக்கோட்டை, பின்னர் 1800 முதல் 1948 வரை பிரித்தானியா ஆளுகைக்குட்பட்ட சமஸ்தானமாக செயல்பட்டிருக்கிறது. இராகுநாத தொண்டைமான் முதல் இராஜகோபால தொண்டைமான் வரை ஆளப்பெற்ற புதுக்கோட்டை சமஸ்தானம், ஆங்கிலேய அரசுக்கு மிகுந்த நட்புக்கரம் நீட்டியதாக அறியப்படுகிறது.

புதுக்கோட்டையின் கடைசி மன்னராகவும் தொண்டைமான் அரசுரிமையின் ஒன்பதாவது மன்னராகவும் குறிப்பிடப்படும் ஸ்ரீபிரகதாம்பதாஸ் ராஜகோபாலத் தொண்டைமான் ஆட்சிக் காலத்தில் புதுக்கோட்டை நகர் முழுவதும் மின்சார வசதி (1928) செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. 1929 இல் கட்டி முடிக்கப்பட்ட புதிய அரண்மனையில் குடியேறிய மன்னர், பின்னர் புதுக்கோட்டை மாவட்டம் உருவானபோது (1972) அரண்மனையை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகமாக்க சம்மதித்திருக்கிறார்.

1911 டிசம்பர் 12ல் டில்லி மாநகரில் நடந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பெருமான் முடிசூட்டு விழாவிற்கு அழைக்கப்பட்ட ஸ்ரீபிரகதாம்பாதாள் இராஜ மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் பகதூர் ஜி.சி.ஐ.இ, பதினாறு வயதுடையவராக இருக்கும் போதே மன்னராக முடி சூடப்பட்டவராகக் (1886) குறிப்பிடப்படுகிறார். ஆங்கில அரசாங்கத்தாரின் ஆலோசனையின் பேரில் நிலவரி வசூலித்தும், தரிசு நிலங்களை பயிர் நிலங்களாக்கியும் பெரும் நிதி பெற்ற மன்னர், புதுக்கோட்டை பட்டணத்தையும், கல்லூரி, மருத்துவமனை போன்ற கட்டிடங்களையும் சீர்படுத்தியவராக அறியப்படுகிறார். முப்பது உறுப்பினர் அடங்கிய பெரு மக்கட் கழகம் (1902) அமைத்த மன்னர், நீதி மற்றும் நிர்வாகத் துறையிலும் பல சீர்திருத்தங்கள் செய்தவராகக் கருதப்படுகிறார். விதையும் உழவு மாடும் வாங்குவதற்கு குடியானவர்களுக்கு வட்டியின்றி பணம் கொடுக்க ஏற்பாடு செய்த மன்னர், நகரத்தில் வீதிதோறும் குழாய்கள் வைத்து நல்ல தண்ணீர் வரும் படியும் செய்திருக்கிறார்.

எளியவர்கள் அதிக வட்டிக்கு பணம் வாங்காது தொழில் செய்து வாழ்வதற்கு வசதியாகக் கூட்டுறவு தொழிற் சங்கங்களை ஏற்படுத்திய மன்னர், குழந்தைகள் சம்பளமின்றிப் படிக்க ஊர்தோறும் ஆரம்ப பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தியிருக்கிறார். தொண்டைமான்கள் காலத்தில் நகரத்தார் சமூகம்

பெருமளவில் வளர்ச்சி பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. வணிகம், தொழிற்சாலைகள், வட்டித் தொழில் போன்றவற்றை முன்னெடுத்த நாட்டுக்கோட்டை செட்டியார்கள், புதுக்கோட்டை, காரைக்குடி நகரங்களைச் சுற்றிய பகுதிகளில் செழிப்படைந்ததோடு, அவர்களுக்கென தனித்த பண்பாட்டு, குடும்ப, வழக்கங்களும், கட்டிடக்கலையும் ஏற்படுத்திக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பர்மா போன்ற பகுதிகளில் வட்டித்தொழில் செய்யும் பொருட்டு இடம் பெயர்ந்த நகரத்தார்கள், அங்கிருந்து பெரும் செல்வங்களை கொண்டு வந்து மிகப் பெரிய அளவிலான வீடுகளை, குறிப்பாக, பர்மா தேக்கினால் ஆன வீடுகளை உருவாக்கியிருக்கின்றனர். சைவத்தை முன்னெடுத்த நகரத்தார்கள் பல்வேறு திருக்கோவில்களுக்கும் கொடைகள் செய்தவராகவும், கல்விப் பணியில் சிறந்து விளங்கியவராகவும் புகழப்படுகின்றனர்.

அண்ணாமலை பல்கலையைத் தொடங்கிய ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் (1881-1948), கல்விக்காக அருங்கொடைகள் வழங்கியவராகப் புகழப்படும் இராம. அழகப்பச் செட்டியார் (1909-1957) போன்றோர் நகரத்தார் சமூகத்தின் குறிப்பிடத்தக்க கல்வி வள்ளல்களாக அறியப்படுகின்றனர்.

ஏ.வி.எம் திரைப்பட நிறுவனத்தை உருவாக்கியவரும் திரைப்படத்துறையின் முன்னோடிகளில் ஒருவருமான ஏ.வி மெய்யப்ப செட்டியார் (1927-1981), கவியரசு என புகழப்படும் கண்ணதாசன் (1927-1981) போன்ற நகரத்தார்கள் திரைப்படத்துறையில் பெரும் புகழ்பெற்றவர்கள். சமூகத் கருத்துக்கள் மேலோங்கிய பல்வேறு பாடல்களையும் இயற்றிய கவியரசு, அர்த்தமுள்ள இந்து மதம் போன்ற சிறந்த பல ஆக்கங்களையும் எழுதி, தமிழர் மனங்களில் நீங்காப் புகழுடையவராகக் திகழ்கிறார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்திலுள்ள திருமயம் மலைக்கோட்டை, இராமநாதபுரம் விஜயரகுநாத சேதுபதி என்னும் கிழவன் சேதுபதியால் (1671-1710) கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. சேதுபதி சமஸ்தானத்தின் வட எல்லையாகக் குறிப்பிடப்பட்ட திருமயம் கோட்டை அழகுடன் கூடிய வட்டக் கோட்டையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கோட்டையில் பல்லவர்களால் நிர்மாணிக்கப்பட்ட திருமயம் சத்திய மூர்த்தி பெருமாள் கோவில் மங்களாசாசனம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பெருமாள் கோவிலருகே சிவனுக்கும் குடைவரைக் கோவில்

அமைக்கப்பட்டு சைவ வைணவ ஒற்றுமைக்கு சான்றாக விளங்குவதாகக் கருதப்படுகிறது.

சேதுவைக் காப்பவர்கள் எனும் பொருளில் சேதுபதி எனப் பெயர் வைத்துக்கொண்டவர்களாகக் குறிப்பிடப்படும் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள், மதுரை நாயக்கர் அரசின் படைத்தலைவர்களாக இருந்தவரென்றும் 1590-1659), பின்னர் இரகுநாத சேதுபதியின் காலத்தில் தனி ஆட்சிப்பகுதியாக மாற்றம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. 1800 முதல் 1947 வரை பிரித்தானிய ஆளுகைக்கு உட்பட்ட சுதேச சமஸ்தானமாக விளங்கிய இராமநாதபுரம் சமஸ்தானம், சண்முக ராஜேஸ்வர சேதுபதி காலத்தில் (1929-1967) இந்திய அரசோடு இணைக்கப்பட்டிருக்கிறது.

சேது ஜமீனின் கிழவன் சேதுபதி எனும் ரகுநாத சேதுபதி (1671-1710) புகழ்பெற்றவராக அறியப்படுகிறார். இராமலிங்க விலாசம் எனும் பெயரிடப்பட்ட அரண்மனையைக் கட்டிய கிழவன் சேதுபதி, இராமநாதபுரம் நகரைச் சுற்றி வலிமையாக கடற்கோட்டையையும் கட்டியிருக்கிறார்.

1903-04 ஆம் ஆண்டில் 3.75 லட்ச ரூபாய் ஆங்கில அரசுக்கு கப்பம் கட்டியதாக் குறிப்பிடப்படும் இராமநாதபுரம் ஜமீனில், இராம்நாட், திருவாடானை, பரமக்குடி, திருச்சுளி, முதுகுளத்தூர் என ஐந்து வட்டங்கள் இருந்திருக்கின்றன. சுவாமி விவேகானந்தரை சிகாகோ மாநாட்டிற்கு அனுப்பியதில் பெரும்பங்கு வகித்தவராகப் புகழப்படும் பாஸ்கர சேதுபதி மன்னர் (1868- 1903), ஆங்கிலத்தில் புலமை பெற்றவராகவும் பல்வேறு திருப்பணிகள் செய்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்து கொங்குப் பகுதியில் வீரத்துடன் போரிட்டவராக தீரன் சின்னமலை (1756-1805) புகழப்படுகிறார். மைசூரின் திப்பு சுல்தானோடு இணைந்து பிரித்தானிய படைகளை எதிர்த்தவராகக் குறிப்பிடப்படும் தீரன், ஓடாநிலை எனும் ஊரில் கோட்டை கட்டி, பாளையக்காரராக விளங்கியிருக்கிறார். ஆங்கிலேயப் படைகளுடன் நடைபெற்ற போர்களில் வெற்றிகளைப் பெற்ற போதும் பிரித்தானியப் படைகளையும், பீரங்கித் தாக்குதல்களையும் தாக்குப் பிடிக்க இயலாமல், முடிவில் சங்ககிரி கோட்டையில் விசாரணை செய்யப்பட்டு கொடூரமாக முடிக்கப்பட்டதாக வரலாறு குறிப்பிடுகிறது.

அந்நியரை எதிர்த்து நடந்த தமிழக சுதந்திரப் போராட்ட வரலாற்றில் எத்தனையோ மாவீரர்களும் தியாகிகளும் ஈடுபட்டாலும் சிலரது பெயர்கள் மிக அழுத்தமாக மக்கள் மனங்களில் பதிந்திருக்கின்றன. கப்பலோட்டிய தமிழன் என அழைக்கப்படும் வ.உ.சிதம்பரம்பிள்ளை (1872-1936), சுப்பிரமணிய சிவா (1884-1925), வாஞ்சிநாதன் (1886-1911), போன்ற பலரும் மிகத் தீவிரமான சுதந்திரப் போராட்ட வீரர்களாகவும், மூதறிஞர் இராஜாஜி, சர்தார் வேதரத்தினம் பிள்ளை (1897-1961), சத்திய மூர்த்தி (1887-1943), தோழர் ஜீவானந்தம் (1907-1963), கொடிகாத்த திருப்பூர் குமரன் (1904-1932), மகாகவி சுப்ரமணிய பாரதி (1882-1921), நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை (1888-1972), விஸ்வநாத தாஸ் (1886-1940) உட்பட ஏராளமானோர் அகிம்சை முறையில் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களாகவும் புகழப்படுகின்றனர்.

வீரத்தின் மூலமும் புரட்சியின் மூலமும் வெள்ளையரை வீழ்த்திவிடலாம் என உறுதியுடன் நடந்த தமிழக சுதந்திரப் போராட்ட வரலாறு நெல்லையில் தொடங்கி (1750-1770), பஞ்சாலங்குறிச்சிக்கு இடமாறி (1790 முதல்) இறுதியாக வேலூர் புரட்சியில் (1806) முடிவுற்றதாக ஒரு வரலாற்று பின்புலம் கூறப்படுகிறது. வீரத்தை விட விவேகம் முக்கியம் என உணர்ந்த தமிழர்கள் பின்னர் இந்திய தேசியக் காங்கிரசின் தலைமையிலும், காந்தியின் அறத்திலும் தங்களை இணைத்துக் கொண்டு, வெகு தீரத்துடன் போராடி சுதந்திரம் பெற்றுத் தந்தது வரலாறு. அறவழிப் போராட்டங்களில் தமிழகப் பெண்களும் பெருமளவில் பங்கு பெற்றது சிறப்பு. காந்தியடிகள் தென்னாப்பிரிக்கப் போரட்டங்களில் மிக இளம் வயதில் பங்கு கொண்ட தில்லையாடி வள்ளியம்மை (1898-1914) முன்னோடி சுதந்திரப் போராட்ட வீராங்கனையாகப் புகழப்படுகிறார்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, நியூகினி ஆகியவற்றை உள்ளடக்கிய ஓசியானாப் பகுதியில் முன்னர் தமிழின் முந்து மொழியே பரவலாகக் காணப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஓசியானாவின் ஓர் பிரிவாகக் குறிப்பிடப்படும் பொலினீசியா எனும் பசிபிக் கடலின் நடு மற்றும் தெற்குப் பகுதிகளை உள்ளடக்கிய தீவுகளிலும் தமிழ் மொழியின் அடையாளங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. பொலினீசியாவில் தீவுகளும் தீவுக் கூட்டங்களுமான பல நாடுகள் இடம் பெற்றுள்ளன. சொலமன் தீவுகளில் அனுட்டா, பெலோனா, நியூசிலாந்து கூட்டமைப்பிலுள்ள குக் நாடு, நியூவே ஈஸ்டர் தீவு, பிரெஞ்சு பொலினிசியா, ஹவாய்,

சாமோவா, தொங்கா, துவாலு, பிஜியின் ரொட்டுமா உட்பட பல தீவுகள் பொலினிசியாவில் அடங்கியுள்ளன.

பப்புவா நியு கினிக்குக் கிழக்கே ஏறக்குறைய ஆயிரம் தீவுகளைக் கொண்டுள்ள தீவு நாடாகக் குறிப்பிடப்படும் சாலமன் தீவுகள் 1978- இல் பிரித்தானியாவிடமிருந்து விடுதலையடைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. 2005 இன் படி, 5,52,4387 பேர் கொண்ட மக்கள் தொகையில் 95 சதவிகிதம் மெலனீசியரும் 30 சதவிகிதம் பொலினிசியரும், 1 சதவிகிதம் மைக்குரோனேசியரும் உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆங்கிலம் அதிகாரப்பூர்வ மொழியாக இருக்கும் சோலமன் தீவுகளில் 74 மொழிகள் பேசப்படுவதாகக் கூறப்படுகிறது. நான்கு மொழிகள் அழிந்துவிட்டதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

97 விழுக்காட்டினர் கிறித்தவர்களாக இருக்கும் சாலமோனில் 3 விழுக்காட்டினர் பழங்குடி மற்றும் பகாய் மதத்தை பின்பற்றுவோராகக் கூறப்படுகிறது. ஈரானின் தெகரான் நகரத்து பகாவுல்லா (1817-1892) தோற்றுவித்த பகாய் சமயத்தை உலகெங்கும் சுமார் அறுபது லட்சம் மக்கள் பின்பற்றுவதாகக் கூறப்படுகிறது. இறைவனின் ஒளி எனும் அரபுச் சொல்லால் குறிப்பிடப்படும் பகாய், ஒரே கடவுள், சமயங்களின் ஒற்றுமை மற்றும் மனித குலத்தின் ஒற்றுமை எனும் மூன்று முக்கிய கருத்துக்களைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இறைத்தூதர், கடவுள் அவதாரம், கடவுள் என அறிவிப்புச் செய்த பகாவுல்லா, உலகளாவிய ஐக்கியத்திற்கான முயற்சியாக பகாய் மதத்தை தோற்றுவித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மிர்சா உசேன் அலி எனும் இயற்பெயர் கொண்ட பகாவுல்லா, 1863 இல் கடவுளின் பேரவதாரமாக, கடவுளாக அதாவது பஹா-உல்-லா வாக அறிவிப்புச் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பகாவுல்லாவிற்கு முன்னர் சையத் அலி முகம்மது சிராஜி எனும் பாப் (1819-1850), கடவுளின் அவதாரம் பூமியில் நிகழும் என முன்னறிவிப்புச் செய்ததாகவும் அந்த அவதாரமே பகவுல்லா எனவும் பகாய் நம்பிக்கையில் குறிப்பிடப்படுகிறது. பாப்பின் முக்கியச் சீடராக இருந்தவர்தான் பகாவுல்லா என்பதும் அறியத்தக்கது. பகாய்கள் ஒரு புதிய மற்றும் அமைதியான உலகமய நாகரிகத்தை உருவாக்கிட முயல்வதாகக் கூறப்படுகிறது. அனைத்துலகக் கல்வி, விஞ்ஞானம் மற்றும் சமயங்களிடையே இணக்கம், சுற்றுச் சூழல் மற்றும் தொழில் நுட்பங்களுக்கிடையே சமநிலை, சமயங்களின் அடிப்படை ஒற்றுமையைப் புரிந்து கொள்வது, கூட்டுப் பாதுகாப்பு, உலக கூட்டாச்சி முறை

போன்ற பல கருத்தாக்காங்களை முன்னெடுக்கும் பஹாய் மதத்தினர் தாமரைக் கோவில் எனும் தாமரை வடிவ வழிபாட்டுத் தலங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். உலகில் உயிர் வாழ பிராத்தனையை விட இனிமையான ஒன்று வேறில்லை எனக் குறிப்பிடும் அப்துல் பஹா, பிராத்தனையை இறைவனுடனான உரையாடலாகப் புகழ்கிறார்.

பாப் உருவாக்கிய மதம் பாப் மதம், பாயானி நம்பிக்கை, பாப்பிசம் என அழைக்கப்படுகிறது. பாப்பிசம் பகாய் மதத்தின் முன்னோடியாகவும், பகாய் மதத்தின் கொள்கைகளில் முக்கியப் பங்காற்றியதாகவும் கூறப்படுகிறது. தாமே கடவுள் என அறிவித்துக் கொண்ட பாப்பிற்கும், அவரது முதன்மைச் சீடரான பகாவுல்லாவிற்கும், ஈரானிலும், துருக்கியிலும், இசுலாமிய மக்களிடையேயும் கடுமையான எதிர்ப்பும், விமர்சனங்களும் எழுந்திருக்கின்றன.

யூதம், கிறித்தவம், சொராட்டிரம் என அனைத்து மதங்களிலும் எதிர்பார்க்கப்பட்ட கடவுளாக, இசுலாமின் மூன்றாவது இமாமாக, சன்னி இசுலாமின் ஈசாவாக, பாபிசத்தின் முழுவெளிப்பாடுடையவராக, இரண்டாம் வருகையாக பகவுல்லா அறிவித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. கல்கி மற்றும் மைத்ரேய புத்த அவதாரங்களாக நேரிடையாக அறிவிப்புச் செய்யாவிட்டாலும், அவரது எழுத்துக்களில் அத்தகைய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. ஏராளமான புத்தகங்களையும், மதம் தொடர்பான நூல்களையும் சிறு கடிதங்களையும், பிராத்தனைகளையும் அரபு மற்றும் பாரசீகத்தில் எழுதியுள்ளதாகக் குறிப்பிடப்படும் பகாவுல்லாவின் எழுத்துக்கள், பகாய் உலக மையம் போன்றவற்றால் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரலேசியா எனும் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தியவராக சார்லஸ்-டி-புரோசஸ் குறிப்பிடப்படுகிறார். ஆசியாவின் தெற்குப் பகுதி எனும் இலத்தீன சொல்லால் குறிப்பிடப்பட்ட ஆஸ்திரேலியா, முதலில் டச்சுக்காரர்களால் (1606) கண்டறியப்பட்டு, புது ஹாலந்து எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. டச்சு கடல் ஆராய்ச்சியாளரும் நாடு காண் பயணியுமான ஏபெல் டாஸ்மான் (1603-1659) தாஸ்மானியா, நியூசிலாந்து மற்றும் பிஜி தீவுகளைக் கண்ட முதல் ஐரோப்பியராகக் குறிப்பிடப்படுகிறார். பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வில்லியம் டேம்பரும் (1651-1715), பின்னர் 1770 இல் ஜேம்ஸ் குக்கும் (1728-1779)

ஆஸ்திரேலியாவை அடைந்து, பிரித்தானிய ஆதிக்கத்திற்கு வழிவகுத்திருக்கின்றனர்.

சுமார் எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆத்திரேலியாவில் மக்கள் வாழ்ந்துவந்ததற்கான சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. தென் கிழக்கு ஆசியாவோடு நிலத்தால் தொடர்பு கொண்டிருந்த ஆத்திரேலியாவில் தற்காலத்திய பழங்குடி ஆத்திரேலியர்களின் முன்னோர்கள் வேட்டைச் சமூகமாக வாழ்ந்திருந்ததாக் கூறப்படுகிறது.

பூமியின் மிகச் சிறிய கண்டமாகவும், மிகப் பெரிய தீவாகவும் அறியப்படும் ஆஸ்திரேலியா தாஸ்மானியா தீவையும், பசிபிக், இந்தியப் பெருங்கடலிலுள்ள சில சிறிய தீவுகளையும் உள்ளடக்கியுள்ள ஆஸ்திரேலியா, நியாயமான ஆஸ்திரேலியா முன்னேறட்டும் என்பதை நாட்டுப் பண்ணாகக் கொண்டிருக்கிறது.

1788 இல் முதல் முதலாக ஐரோப்பியர் குடியேறிய போது கண்டத்தில் 500 முதல் 700 வரையான தொல்குடியினர் வசித்து வந்ததாகக் கூறப்படுகிறது. சொந்த மொழிகளைக் கொண்டிருந்த முதுகுடியினர் அவரவர்க்கென்று தனித்த பண்பாட்டு அடையாளங்களையும் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. ஈயோரா, லோரா, லியோரா எனும் ஒரு தொல்குடியினர் முற்றாக அழிந்துவிட்டதாகவும், பென்னெலாங்கு எனும் பழங்குடி மனிதர், கப்பலில் வந்திறங்கிய ஐரோப்பியருக்கும், ஈயோரா மக்களுக்கும் தொடர்பாளராக இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஐரோப்பியர் வருகையின் போது சுமார் 7,50,000 முதல் 10,00,000 வரையிலான ஆஸ்த்ரேலிய தொல்குடிகள் வாழ்த்திருக்கலாம் என கணிக்கப்படுகிறது. 250 தனிநாடுகளாக, சிறு சிறு இனக்குழுக்களாக வாழ்ந்த தொல்குடியினர், சமய நம்பிக்கை சார்ந்து பல்வேறு சடங்கு கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

ஆஸ்திரேலிய பழங்குடிகள் சில தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. திராவிட மொழிகளோடு நெருங்கிய உறவுடையதாகக் குறிப்பிடப்படும் ஆஸ்திரேலிய, தாஸ்மானிய பழங்குடி மொழிகள், லெமூரியா கண்டத்தின் தொல் எச்சமாகக் குறிப்பிடப்படுகின்றன. தாஸ்மானிய பழங்குடிகள் வெள்ளையினத்தவரால் வேட்டையாடி அழிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவோடு நிலத்தொடர்பு கொண்டிருந்த தாஸ்மேனியத் தொல்குடிகள், பின்னர் நிலத்தை நீர் சூழ்ந்ததால், முற்றாகத் தனிமைப்படுத்தப்பட்டு, பிற

உலகங்களிலிருந்து தனித்து வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. விவசாயம், ஆடு, மாடு வளர்ப்பு, தற்காப்பு போன்ற எதையும் அறியாத மக்களாகக் குறிப்பிடப்படும் தாஸ்மேனிய முதல் குடிகள், பிளாக் கேட்சிங் (கருப்பனைப் பிடித்தல்) மூலம் துப்பாக்கி கொண்டு மிருகத்தனமாக வேட்டையாடப்பட்டதாக அறியப்படுகிறது. 1800 வாக்கில் 500 வரை இருந்த தாசுமானியர்கள், முப்பதே ஆண்டுகளில் வெறும் 75 பேராகச் சுருங்கியதாகக் கூறப்படுகிறது.

தென்னிந்திய மற்றும் இலங்கையைச் சார்ந்த இந்திய ஆஸ்திராலாயிட் குடியிலிருந்தோ அல்லது தாஸ்மேனியக் குடியிலிருந்தோ உருவாகியிருக்கலாம் என கருதப்படும் ஆஸ்திரேலியப் பழங்குடிகள், மொழி, பழக்கவழக்கங்கள் மற்றும் சடங்குகளின் அடிப்படையில் வேறுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. பொருளியல் வேட்கையில்லாது, இயற்கையுடன் இயைந்து வாழ்ந்து வந்த தொல்குடிகள், மனிதன், விலங்கு மற்றும் நிலத்திற்கு இடையேயுள்ள உறவினைப் பேணுபவர்களாக அறியப்படுகின்றனர். அனைத்தையும் தெய்வத்தன்மையுடன் இணைத்துப் பார்க்கும் தொல்குடிகள் தாவரங்கள், விலங்குகள், மலைகள், ஆறுகள், கடல்கள், பாறைகள், பள்ளத்தாக்குகள் என அனைத்தையும் பாதுகாத்தும் போற்றியும் வந்துள்ளனர். ஆஸ்திரேலிய முதன்மைக் குடியினர், கனவுகாலக் கதைகள் எனும் கதை சொல்லல் மூலம் இளையோர்களுக்கு, தங்களது நம்பிக்கைகள், அறிவு, பண்பாட்டு விழுமியங்களை கடத்தியும் வந்துள்ளனர்.

ஆப்பிரிக்காவிற்கு அடுத்து, அதிக எண்ணிக்கையிலான முதற்குடிகள் இந்தியாவில் வாழ்வதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆப்பிரிக்க, இந்திய மற்றும் ஆத்திரேலிய முதல் குடியினரின் பழக்கங்கள், பண்பாடுகள், சமய நம்பிக்கைகள் மற்றும் மொழிகள் ஒன்றுபடுவதோடு, அவர்களின் மரபணுவும் ஒத்துப் போவது அறிஞர்களை வியப்பிலாழ்த்துகிறது. ஆப்பிரிக்க, தென்னிந்திய மற்றும் ஆத்திரேலிய பழங்குடிகளில் மேற்கொள்ளப்பட்ட மரபணுச் சோதனைகள், குறிப்பிட்ட மரபணுக்கள் மாற்றமடையாமல் தற்போதைய தலைமுறை வரை கடத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. முன்னர் மூன்று நிலப்பகுதிகளும் இந்து மாவாரியில் இலெமுரியா எனும் ஒரே கண்டமாக இணைந்திருந்தது எனும் கருத்திற்கு வலுசேர்க்கும் விதமாகவே மரபணு ஆராய்ச்சி முடிவுகள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

இந்தியப் தீபகற்பத்திலுள்ள ஏராளமான பழங்குடியினங்கள், ஓரளவிற்கு பிற பொதுமக்களோடு கலந்து வாழப்பழகிவிட்டாலும், தற்போதும் சில பழங்குடிகள் தனித்த பாரம்பரியங்களையும், சடங்குகளையும் கொண்டிருப்பதோடு, பண்டமாற்று முறையில் பொருட்களை மாற்றிக்கொள்வதாகவும் அறியப்படுகிறது. தற்போதைய நவீன காலத்திலும், சில பழங்குடியினத்தவரில் இருபத்தைந்து, முப்பது வயதுப் பெண்ணிற்கு, பத்து வயது ஆண் மகனைத் திருமணம் செய்து வைப்பதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை ஏராளமான சடங்கு முறைகளைப் பின்பற்றும் பழங்குடியின மக்கள், தனித்துவமான அணிகள், உணவுகள் மறுறும் கடவுள் வழிபாட்டையும் கொண்டுள்ளனர்.

இந்தியாவில் பாதுகாக்கப்பட்ட பழங்குடியினராக அந்தமான் நிகோபர் தீவுகளின் சில பழங்குடிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர். உலகின் பொதுப்பகுதி மக்கள் நிலவுக்கும், புதுக் கோள்களுக்கும், அடுத்த நட்சத்திரத்திற்கும் பயணமாகத் திட்டமிடும் தற்போதைய காலத்திலும், ஒரு பகுதி மக்கள் எந்தவிதமான நாகரிக மாற்றமும் இல்லாமல், வேட்டையாடி, எளிய வாழ்க்கை வாழ்ந்து வருவது வியப்பிலும் வியப்பு.

சுமார் 28,000 பேர் தொல்குடிகளாக வாழும் அந்தமான் நிகோபர் தீவுகளில், ஐந்து தொல் குடிகளின் எண்ணிக்கை 500 க்கும் குறைவாக உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள் (பாதுகாக்கப்பட்ட பழங்குடியினர்) ஒழுங்கு முறை 1956 ஆம் ஆண்டு விதிகளின் படி ஜாரவாக்கள், ஒங்கே, சென்டிலீஸ், நிகோபாரீஸ் மற்றும் ஷோம்பென்ஸ் இனத்தவர்கள் பாதுகாக்கப்பட்ட பழங்குடிகளாகக் கருதப்படுகின்றனர். 1956, சட்டம் 7 வது பிரிவின் படி பாதுகாக்கப்பட்ட பழங்குடியினர் பகுதிக்கு வெளிநபர்கள் செல்ல தடையும், புகைப்படம், காணொளி பதிவு செய்வதற்கு தடையும், மீறுபவர்களுக்குத் தண்டனையும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

சமீப ஆண்டுகளில் பாதுகாக்கப்பட்ட பழங்குடியினத்தவர்களை அவர்களாகவே வாழவிடலாமா அல்லது மெதுவாக அவர்களை பொதுப் பகுதிக்கு ஒருங்கிணைக்கலாமா என்பது குறித்து, விவாதிக்கப்பட வேண்டுமென குரல்கள் எழத் துவங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

உலகில் அழியும் நிலையிலிருக்கும் பழங்குடி இனத்தவர்களில் ஜாரவா இனத்தவரும் ஒருவராகக் கூறப்படுகிறது. ஏறத்தாழ 20,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்பிரிக்காவிலிருந்து அந்தமான் தீவுகளில் குடியேறியதாகக் கூறப்படும் குள்ளமான அந்தமானியப் பழங்குடிகள், தென்கிழக்காசியாவின் நெகிரிட்டோ இன மக்களைப் போன்று தோற்றமளிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. அந்தமான் மூதாதையர் கூட்டாக வாழும் இயல்பினராகவும், உணவிற்கு மீன்கள் மற்றும் விலங்குகளை வேட்டையாடியும், காய் கனிகளைப் பறித்தும், கிழங்கு மற்றும் அரிய வேர்களை தோண்டித் தின்பவராகவும் கூறப்படுகின்றனர்.

2001-மக்கள் தொகை கணக்கின் படி, 240 ஜராவா மூதாதையர் வாழ்வதாக அறியப்படுகிறது. தெற்கு அந்தமானின் மேற்குப் பகுதி மற்றும் நடு அந்தமான் பகுதிகளில் வாழும் ஜாரவாக்கள், அந்தமான் மொழி பேசுவதாகவும், சமயம் அற்றோராகவும் குறிப்பிடப்படுகின்றனர். மண்ணின் மைந்தர்கள் எனும் பொருளில் ஜாரவா என அழைக்கப்படும் இவர்கள் மரபணு சோதனை மூலம், ஜாரவாக்கள் பசிபிக் தீவைத் சேர்ந்தவர்களாக இருக்கலாமெனவும் கூறப்படுகின்றனர்.

ஜாராவா மக்கள் வாழும் காட்டுப்பகுதி வழியே அமைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலை தொழிலாளர்கள் மூலம் ஜாராவர்களுக்கு தொற்று நோய்கள் பரவியதாகவும் ஜாராவாக்கள் எண்ணிக்கை குறைந்ததற்கு நோய் தொற்றும் ஒரு காரணம் எனவும் கூறப்படுகிறது. மேலாடை இன்றிக் காணப்படும் ஜாராவாக்களைக் காண்பதற்கும் புகைப்படம் எடுப்பதற்கும் விழையும் சுற்றுலாப் பயணிகள் மூலமாகவும் அவர்களது அத்துமீறல்கள் காரணமாகவும் ஜாரவாக்களின் எண்ணிக்கை குறைந்ததாகவும் கூறப்படுகிறது.

வெளி உலகத் தொடர்பின்றி, வெளி உலக மக்களைப் பார்க்கவும் விருப்பமின்றி அந்தமானின் அடர்ந்த காடுகளில் வாழும் சென்டிலை மூதாதையர், சுமார் அறுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அந்தமானில் வாழ்ந்து வருவதாக ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. ஆப்பிரிக்க மக்களைப் போல் உருவமும் நீளமும் கொண்டுள்ள சென்டினல் மக்களின் சென்டினல் மொழியும், மற்ற அந்தமான் தொல்குடிகளிலிருந்து வேறுபட்டிருப்பதாகவும் அறியப்பட்டிருக்கிறது. தெற்கு அந்தமானின வடக்கு சென்டினல் தீவின் ஒரு சிறு கிராமத்தில் வாழும் சென்டினல் முதுகுடிகளின் எண்ணிக்கை 2001-ன் படி, 39 பேர்

என குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 250 பேர் வரை இருக்கலாம் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

ஷோம்பென் மூதாதையர் பெரிய அந்தமான் தீவு, அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளின் உள் காட்டுப் பகுதிகளில் மறைந்து வாழ்வதாகக் கூறப்படுகிறது. தென்கிழக்கு ஆசியாவின் மொழியைப் பேசுபவர்களாகக் குறிப்பிடப்படும் ஷாம் பென் மக்களின் மரபணு, இந்தோனேசிய மக்களோடு ஒத்துப் போவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. கற்காலம் முதல் வாழ்ந்து வரும் முது குடிகளாக அறியப்படும் சோம்பென்கள், 2011 ம் ஆண்டின் கணக்கின் படி, 229 பேர் என அறியப்பட்டுள்ளது.

அந்தமான் தீவுகளில் வாழும் தொல்குடியினர் ஆஸ்த்ரலாய்டு இனமாகவும், நிக்கோபர் தீவுகளில் வசிக்கும் மக்கள் மங்கோலாய்டு இனமாகவும் குறப்பிடப்படுகிறன்றனர். நிக்கோபர் தீவில், சோம்பென்கள் தவிர்த்து மற்ற பழங்குடி மக்கள் ஓரளவிற்கு மற்ற மக்கள் போல் மாற்றம் பெற்றுவருவதாகவும் குறிப்புகள் சுட்டுகின்றன.

வடக்கு மற்றும் நடு அந்தமான், தெற்கு அந்தமான் மற்றும் நிக்கோபர் என மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள அந்தோமன் நிக்கோபர் யூனியன் பகுதி, அரிய வகை கடல் உயிரிகள், பவளப்பாறைகள், தென்னை மரம் சூழ்ந்த கடற்கரைகள், பசுமைக் காடுகள் என இயற்கை எழில் கொஞ்சும் இடமாகப் புகழப்படுகிறது. தமிழர், டச்சுக்காரர், பிரித்தானியர், சப்பானியர், இந்தியர் எனப் பலராலும் பயன்படுத்தப்பட்ட தீவுகள், 1956 இல் யூனியன் பகுதியாக இந்திய ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 572 தீவுகளை உள்ளடக்கியுள்ள யூனியன் பகுதியில், 36 தீவுகளில் மட்டுமே மக்கள் குடியிறுப்பதாகக் கூறப்படுகிறது.

டென்மார்க் நாட்டினரிடமிருந்து பிரித்தானியரால் 1858-ல் விலைக்கு வாங்கப்பட்ட அந்தமான் நிகோபர் தீவுகள், பிரித்தானியரால் காலனிக்கெதிரானவர்களையும், கொள்ளையர்களையும், கொடூரக் குற்றவாளிகளையும் நாடு கடத்தும் இடமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சுதந்திரப் போராளிகளை அடக்கும் விதமாகவும் அச்சுறுத்தி கொடூர தண்டனை அளிக்கும் இடமாகவும் அந்தமான் தீவுகள் மாற்றப்பட்டிருக்கின்றன. சிப்பாய்

போரில் ஈடுபட்ட விடுதலை வீரர்கள் அந்தாமானுக்கு நாடுகடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

1906 இல் சிறைக் கைதிகளைக் கொண்டே கட்டி முடிக்கப்பட்ட சிற்றறைச் சிறை எனும் செல்லுலார் சிறைச்சாலை, சுதந்திரப் போராளிகளை சிறை வைக்கவென்றே கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. 698 சிற்றறைகளாகக் கட்டப்பட்ட சிறையில், மனிதாபமானமற்ற முறையில் விடுதலை வீரர்கள் நடத்தப்பட்டதாகவும், மிகக் கொடூரமான தண்டனைகள் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சோழர்களால் நக்கவரம் எனக் குறிப்பிடப்பட்ட நிக்கோபார் தீவுகளும், அந்தமான தீவுகளும் தற்போது சுற்றுலாத் தலங்களாக மக்களை ஈர்த்து வருவதாகக் சுட்டப்படுகிறது. விலங்குக் காட்சி சாலையில் விலங்குகளைச் சென்று பார்வையிடுவது போல், அந்தமான் சுற்றுலாத்துறை சுற்றுலாப் பயணியரை பேருந்துகளில் அழைத்து சென்று ஜராவா பழங்குடிகளைக் சுற்றிக் காட்டி பணம் சம்பாதிப்பதாகக் கூறப்படுகிறது. பயணியர் போடும் போதைப் பொருட்களுக்காக, தீவின் மூதாதையர் விரைவுச் சாலையின் ஓரங்களில் நின்று கையேந்துவதாகவும், பேருந்துகளின் பின்னே ஓடித்திரிவதாகவும் கூறப்படுவது மண்ணின் மைந்தர்களுக்கு இழைக்கப்படும் அநீதியெனில் மிகையாகாது.

ஜோசப் ஹரோல்ட் கிரீன்பெர்க் (1915-2001) எனும் அமெரிக்க மொழியியல் அறிஞரின் படி, அந்தமானிய மொழிகள் குறிப்பாக பெரிய அந்தமானிய மொழிகள் பாப்புவா மொழிகளோடு நெருங்கிய தொடர்புடையவையாகக் கண்டறியப்பட்டுள்ளன. கினித் தீவின் மேற்குப் பகுதியான பப்புவா நியூகினியாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன.

உலகின் மிகப்பெரிய மொழிவளம் கொண்ட பகுதியாக அறியப்படும் பப்புவா நியு கினியா நாட்டின் மொழிகள், ஆஸ்திரேலிய, தாசுமானிய, மெலனேசிய மொழிகளிலிருந்து மாறுபட்டு, தனித்த அடையாளங்களோடு பேசப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆஸ்ட்ரோனேசியன் மொழிகள் தவிர்த்து, பப்புவன் மொழிகள் மட்டும் ஏறத்தாழ அறுபது சிறிய மொழிக் குடும்பங்களாகப் பரிக்கப்பட்டுள்ளதாகவும், மொழிக்குடும்பங்களிடையே ஒன்றுக்கொன்று தொடர்பற்று இருப்பதாகவும் கூறப்படுகிறது.

உலகின் மூன்றாவது பெரிய மொழிக் குடும்பமாகக் குறிப்பிடப்படும் டிரான்ஸ் பப்புவன் மொழிகள், சிறிதும் பெரிதுமான எண்ணிக்கையில் பேசப்படுவதாகக் கூறப்படுகிறது. அங்கன், அங்கு அல்லது துலம்பி பழங்குடிகளால் பேசப்படும் அங்கன் குடும்ப மொழிகள், மேற்கு நியுகினிய மக்களான அசுமத் மக்களால் பேசப்படும் அசமத் -கமோரு மொழிகள், இந்தோனேசிய பப்புவா மக்களான அமுங், அமுங்வே, அமு அல்லது உகுந்துனி மக்களால் பேசப்படும் தமல் மொழிகள், கொலபம் தீவில் பேசப்படும் கொலபம் மொழிகள், நியுகினியாவின் குக் ஆற்றுப் பகுதியில் பேசப்படும் கயகர் மொழிகள், மத்திய மற்றும் தெற்கு நியு கினியாவில் பேசப்படும் மோனிமா, மொனுனா எனும் சொமகை மொழிகள் போன்ற ஏராளமான மொழிக் குடும்பங்கள் பப்புவன் மொழிகளில் அறியப்பட்டுள்ளன.

மாவோரி மொழி நியூசிலாந்தின் அரச அலுவல் மொழியாகக் குறிப்பிடப்படுகிறது. ஒசானிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மாவோரி மொழியில் ஆவோதேயாரோவா (ஆதேரோ) அதாவது நீளமான வெண்ணிற முகில் நிலம் எனப் பொருள்படும் நியூசிலாந்து நாட்டில், ஐரோப்பியர் வருகைக்கு முன் மாவோரி பழங்குடிகள் செழித்திருந்ததாக அறியப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், வெள்ளையர்களால் வீழ்த்தப்பட்ட மாவோரிகளும், அவர்களது அரசுரிமைகளும், பின்னர் மிகப்பெரிய வீழ்ச்சியைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் மக்கள் தொகை அதிகரிக்கத் தொடங்கிய மாவோரிகள் பின்னர் கிறித்தவ சமயத்தவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். 2009-ன் கணக்கின் படி, நியுசிலாந்தில் ஆறரை இலட்சம் மாவோரிகளும், ஆஸ்திரேலியாவில் சுமார் ஒரு லட்சம் மாவோரிகளும் வசிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. தங்களுக்கென தனிப்பட்ட மொழி, கலாச்சார மற்றும் சமய அடையாளங்களைக் கொண்டவர்களான மாவோரிகள் பொலினேசிய இனத்தவராக அறியப்படுகின்றனர்.

வடக்கு தீவு (தேஇகா-ஆ-மாவுய் - மாவுயின் மீன்), தெற்குத் தீவு (தே-வைப்பவுனாமு பச்சைக் கல்லின் நீர்நிலைகள்) எனும் இரண்டு தீவுகளை உள்ளடக்கியிருக்கும் நியூசிலாந்து, அழகிய இயற்கை வாழிடமாகப் புகழப்படுகிறது. பிரித்தானிய அரசுப் பிரதிநிதிகளுக்கும் வடக்கு தீவின் மாவோரித் தலைவர்களுக்கும் இடையே 1840-ல் ஏற்படுத்தப்பட்ட வைத்தாங்கி ஒப்பந்தம் பிரித்தானியர்களுக்கான உரிமைகளை மாவோரிகளுக்கும் வழங்க

ஒப்புகொள்ளப்பட்டதாகக் குறிப்பிடுகிறது. ஒப்பந்தம் மூலம் பிரித்தானியர்களுக்கு நியூசிலாந்தின் மீதான உரிமை வழங்கப்பட்டதுடன், அதனை ஆளும் அதிகாரமும் கிடைத்திருக்கிறது. அன்டார்டிக்கா நியூசிலாந்து எனும் நிலையம் அமைத்து உலகின் தென்முனைமீதும் நியூசிலாந்து மிகுந்த ஆர்வம் காட்டி வருவதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன.

பூமியின் தென்முனையைச் சூழ்ந்திருக்கும் அன்டார்டிக்கா கண்டம், பூமியிலேயே மிக குளிர்ந்த பகுதியாக அறியப்படுகிறது. முழுவதும் பனிக்கட்டிகளால் சூழப்பட்டுள்ள அன்டார்டிக்கா கண்டத்தில் பல நாடுகளிலிருந்தும் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியா சார்பாக 1983-84 காலகட்டத்தில் அமைக்கப்பட்ட தட்சின் கங்கோத்ரி ஆய்வு நிலையமும், 1988-89 ல் உருவாக்கப்பட்ட மைத்ரி நிலையமும் கைவிடப்பட்டு, தற்போது பாரதி எனும் பெயரில் ஆய்வுக் கூடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. அன்டார்டிகா பென்குயின்களுக்கு புகழ்பெற்றதாக இருப்பது புகழத்தக்கது. அன்டார்டிக்காவில் வாழும் மெல்லுடலியான பெருங்கணவாய் (கலோசல் ஸ்குட்) மிகப்பெரிய மெல்லுடலியாகவும் ஆகப் பெரிய முதுகுநாணற்ற விலங்காகவும் குறிப்பிடப்படுகிறது.

ஆஸ்த்ரேலியா மிகவும் தட்டையான கண்டமாகவும், பழையதும், வளம் குறைந்த மண்ணைக் கொண்டதும், மிகவும் வறண்ட கண்டமாகவும் அறியப்படுகிறது. பெரும்பாலும் கடற்கரையோரங்களைத் தவிர்த்து மக்கள் குடியேறாத பகுதிகளைக் கொண்டுள்ள ஆஸ்திரேலியாவின் பெரும்பகுதி பாலை நிலமாகக் குறிப்பிடப்படுகிறது. மழைக்காடுகள், புல்வெளிகள், அலையாத்திக்காடுகள் மற்றும், பாலைநிலங்கள் இடம்பெற்றுள்ள ஆத்திரேலியக் கண்டத்தில், தனித்துவமான தாவர விலங்கினங்கள் வாழ்வது சிறப்பு.

புவியியல் ரீதியாக மிக நீண்ட காலம் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஆததிரேலியக் கண்டத்தில் மிகவும் தனித்துவமான தாவர, விலங்குகள் இடம் பெற்றுள்ளன. உயிரியப் பல்வகைமை கொண்ட ஆத்திரேலியாவில், முற்றிலும் அங்கு மட்டுமே காணக்கூடிய தனித்த இனங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் அதிக எண்ணிக்கையிலான ஊர்வன இனங்களும் ஆத்திரேலியக் கண்டத்தில் வாழ்கின்றன.

நான்கு கால்களைக் கொண்டிருப்பினும், பின்னங்கால்களால் மட்டுமே தத்திச் செல்லும் கங்காருகள் ஆத்திரேலியாவின் செல்லமான விலங்கு எனில் மிகையாகாது. வளரும் இளம் குட்டிகளை பையினுள் தாங்குவதற்கேற்றவாறு வயிற்றுப்புறத்தில் பையைப் பெற்றிருப்பதால் பையுடைய பாலூட்டிகள், மார்சூப்பியல்கள் (மார்சூப்பிகள், மார்சப்பிகள்) எனவும் அழைக்கப்படும் கங்காருகளின் பையுனுள்ளேயே பால்காப்புகள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்த்திரேலியாவின் குயின்சுலாந்து, வடக்கு நியூ சவுத்வேல்சு, விக்டோரியா மற்றும் தெற்கு ஆத்திரேலிய மாநிலங்களில் வாழும் கோலா பாலூட்டிகள், நாட்டின் முக்கிய அடையாளமாகக் கருதப்படுவதுடன் அருகி வரும் இனமாகவும் கூறப்படுகிறது. குடியிறுப்புகள், பயிர்செய்கை மற்றும் பண்ணைத் தொழில்களுக்காக, கோலாக்களின் நிலமும், அவை விரும்பி உண்ணும் யூக்லீப்டசு மரங்களும் அழிக்கப்படுவதால் கோவாலா இனங்கள், நல்ல யூக்கலீப்டசு இலைகள் இன்றி அழித்து வருவதாகக் கூறப்படுகிறது.

1981 இல் உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்ட பெரும் தடுப்பு பவளத்திட்டு, பூமியின் அதிசயமாகப் புகழப்படுகிறது. வடகிழக்கு ஆஸ்திரேலியாவின் குயின்சுலாந்து கரைக்கு அப்பால் பவளக் கடலில் அமைந்துள்ள பெரும் தடுப்பு பவளத்திட்டு, 2900 தனித்திட்டுகளையும், 2600 கி.மீ நீளத்தையும், 900 தீவுகளையும் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தாரஸ் நீரிணைத் தீவு மக்களாலும் குயின்லாந்து பகுதியின் பழங்குடி மக்களாலும் கலாச்சார, ஆன்மிகப் பகுதியாக அறியப்பட்டு வந்த பவளத்திட்டுகள் தற்போது சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாகக் குறிப்பிடப்படுகிறது.

வட கிழக்கு ஆத்திரேலியாவிலும் நியுகினியாவிலும் பரவலாகக் காணப்படும் காசோவரி பறவைகள் பாப்புவா மக்களின் கலாச்சாரத்தோடு தொடர்புடையவையாக அறியப்படுகின்றன. உயரமான, அதிக எடையுள்ள பறவையாக அறியப்படும் கசோவரிப் பறவைகள், நெருப்புக்கோழி, ஈமு போன்றே பறக்க இயலாதவை. பெண் காஸோவாரியால் வழிநடத்தப்படும் காஸோவாரிக் குடும்பத்தில் முட்டையிடுவது மட்டுமே பெண்பறவையின் ஒரே வேலையாகக் கூறப்படுகிறது. கூடு கட்டுதல், முட்டையை அடைகாத்தல் குஞ்சுகளை வளர்த்தல், பாதுகாத்தல் என அனைத்துப் பணிகளையும் ஆண்பறவைகளே மேற்கொள்கின்றன.

ஆஸ்திரோனேசிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த தகலாகு எனும் பிலிபீன்சு மொழி இலத்தீன் எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. பிலிப்பைன்சின் மூன்று முக்கியத் தீவுகளான லூசோன், விசயாஸ் மற்றும் மின்டனாவு தீவுகளில், லூசோன் தீவின் நடு மற்றும் தென் பகுதியில் பேசப்படும் மொழியாக பிலிப்பீன்சு மொழி அறியப்படுகிறது. பிலிப்பைன் நாட்டின் அலுவல் மொழியாக உள்ள பிலிப்பினோ மொழி, ஏராளமான பிலிப்பைன் மக்களால் இரண்டாம் மொழியாகப் பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

விசயாஸ் (விசயசு, விசயன்) தீவுகளின் மக்கள் விசயன்கள் எனப்படுகின்றனர். பிலிப்பைன் மக்களில் விசயன் மக்களே அதிகளவில் (சுமார் 33 சதவிகிதம்) உள்ளதாகக் கூறப்படுகிறது. மின்டனாவு தீவுகளில் இசுலாமிய மக்கள் அதிகமாக வாழ்வதாகக் குறிப்பிடப்படுகிறது. பிலிப்பைன்சின் வேளாண்மை ஆதாரமாகக் குறிப்பிடப்படும் மின்டனாவ் தீவுகளில் ஏராளமான வணிகப் பயிர்கள் பயிர் செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

7107 தீவுகளைக் கொண்டுள்ளதாக அறியப்படும் பிலிப்பைன் நாடு, மூன்று தீவுக் கூட்டங்களாகவும், 17 பகுதிகளாகவும், 81 மாநிலங்களாகவும், 144 நகரங்களாகவும், 1491 நகர சபைகளாகவும், 42028 பரங்கய்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

உயிரியற் பல்வகைமை அதிகம் கொண்ட பிலிப்பைன் நாடு, மிகப் பழங்காலத்திலேயே மனிதர்களின் வசிப்பிடமாக இருந்ததற்கான சான்றுகள், பாறைக் குகைகளிலிருந்தும், பாறைச் செதுக்கங்களிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. கலாவோ மனிதன், தபோன் மனிதன் எனப் பல்வேறு முன்னோடி மனிதர்கள் வாழ்ந்த பிலிப்பைனில், நெகரிட்டோக்களும், ஆஸ்திரோனேசியர்களும் வாழ்ந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது.

முதலாவது ஆயிரமாண்டுக் காலத்தில் உருவாக்கியிருந்த பிலிப்பைன் அரசுகள், இந்தியா, சீனா, இந்தோனேசியா, சப்பான் போன்ற பகுதிகளோடும், மற்ற தென்கிழக்கு ஆசியப் பகுதிகளோடும் வணிக உறவு வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

உலகைச் சுற்றி வந்த முதல் மனிதராகப் புகழப்படும் போர்த்துகீசிய மாலுமி பெர்டினன்ட் மகலன் (1480-1521) பிலிப்பைன் நாட்டிற்கு வந்த முதல் ஐரோப்பியராகக்

குறிப்பிடப்படுகிறார். உலகைச் சுற்றும் பசிபிக் கடல் பயணத்தின் போது மார் பசிபிக்கோ அதாவது அமைதியான கடல் என அழைத்த மகலன், 1522 பிலிப்பைன்சின் ஹோமோன்ஹான் தீவை அடைந்ததாகக் கூறப்படுகிறது.

1542 இல் பிலின்பைன்சுக்கு வந்த ஸ்பெயினின் நாடு காண் பயணி ருய் லேபேசு- டி- வில்லாபோசு (1500-1544) அப்போதைய ஸ்பெயின் மன்னர் இரண்டாம் பிலிப் (1527-1598) நினைவாக, பிலிப்பைன்ஸ் எனப் பெயரிட்டதாகவும், பின்னர் அந்தப் பெயரே தீவுக் கூட்டங்களுக்கு நிலைத்து விட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

எசுப்பானியாவின் குடியேற்ற நாடாக மாற்றப்பட்ட பிலிப்பைன்சு நாடு, சுமார் 300 வருடங்கள் எசுப்பானியாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்திருக்கிறது. ஸ்பெயின் ஆட்சியின் கீழ் பிலிப்பைன் மக்களின் உணவு முறை, கல்வி, சமூக, அரசியல், பொருளாதாரம், பண்பாடு, மதம் என அனைத்தும் மிகப் பெரிய அளவில் மாற்றம் கண்டிருக்கிறது. பெரும்பான்மையான பிலிப்பைன் மக்கள் கிறித்தவர்களாக மாற்றப்பட்டிருக்கின்றனர். நாட்டின் சமயமும் கத்தோலிக்க கிறித்தவமாக மாறியிருக்கிறது.

எசுப்பானிய மொழியில் தகலகு போர் எனக் குறிப்பிடப்படும் பிலிப்பைன் புரட்சி, பிலிப்பைன் மக்களுக்கும், ஸ்பெயின் அதிகாரிகளுக்கும் இடையே நிகழ்ந்த இராணுவ மோதலாகக் குறிப்பிடப்படுகிறது. ஸ்பெயினிடமிருந்து சுதந்திரம் பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு 1896 இல் நிகழ்த்தப்பட்ட புரட்சியால், 1989 இல் முதலாவது பிலிப்பைன் குடியரசு உருவாக்கப்பட்டிருக்கிறது. 1899 இல் ஏற்பட்ட ஸ்பெயின் - அமெரிக்கப் போரால், முதலாவது பிலிப்பைன் குடியரசு 1901 இல் முடிவுக்கு வந்திருக்கிறது.

போரில் தோற்ற ஸ்பெயின் குடியேற்ற நாடாக இருந்த பிலிப்பைன்சை சுமார் 20 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு அமெரிக்காவிடம் விற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. போரில் ஏற்பட்ட நட்டத்திற்கு ஒரு நாட்டையே எழுதி வாங்கிய அமெரிக்கா, பின்னர் 1945 வரை பிலிப்பைன் நாட்டை அதன் அதிகாரத்தின் கீழ் வைத்திருந்திருக்கிறது. அமெரிக்காவின் ஆக்ரமிப்பிற்கு எதிராக பல்வேறு விடுதலைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, பிலிப்பைன் - அமெரிக்கப் போர்களாக (1899-1902) வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. கடிபுனன் எனப் பெயரிடப்பட்ட புரட்சிப் படை மூலம் ஸ்பெயின் மற்றும் அமெரிக்க

ஆதிக்கத்திற்கெதிராகத் திரண்டெழுத்த பிலிப்பைன் மக்கள் சுதந்திரத்திற்காக மிகக் கடுமையாகப் போராடியவர்களாக அறியப்படுகின்றனர். ஐக்கிய அமெரிக்க குடியேற்றக் காலத்தில், ஆங்கிலக் கல்வியும், அமெரிக்க மோகமும், மேற்கத்தியக் கலாச்சாரமும் பிலிப்பைன் நாட்டில் பெருமளவில் வளர்ந்ததாகக் கூறப்படுகிறது. இரண்டாம் உலகப் போரில் சப்பான் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட மணிலா உள்ளிட்ட பிலிப்பைன், மிகக் கொடூரமான இழப்புகளைச் சந்தித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பிலிப்பைன் குடியரசின் தலைவராகவும், பிலிப்பைன் நாட்டின் தந்தை எனப் புகழத்தக்கவருமான அந்ரே பொனிப்பேசியோ (1863-1897), பிலிப்பைன்சின் முதலாவது குடியரசுத் தலைவராகக் குறிப்பிடப்படும் எமிலியோ அகுனால்டோ (1869-1964), இரணடாவது அரசுத் தலைவரானவரும் 1935 முதல் 1944 வரை பொது நல வாரியத்தின் பிலிப்பைன் தலைவராக இருந்தவரும், பிலிப்பைன் மொழியின் தந்தையாகக் குறிப்பிடப்படுபவருமான மானுவல் குவிசோன் (1878-1944) போன்றோர் குறிப்பிடத்தக்க விடுதலைப் போராட்டத் தலைவர்களாகப் புகழப்படுகின்றனர்.

பிலிப்பைன்சின் மூன்றாம் குடியரசுக் (1946-1972) கால கட்டத்தில், மூன்றாவது குடியரசுத் தலைவராக இருந்த (1953-1957) ரமோன் மகசேசே (1907-1957) நினைவாக பிலிப்பைன் நாட்டால் அளிக்கப்படும் மகசேசே விருது மதிப்புமிக்கதாகப் புகழப்படுகிறது.

1972 முதல் 1987 வரையிலான நான்காவது குடியரசுக் காலத்தில், 1965 முதல் 1986 வரை குடியரசுத் தலைவராக இருந்த பெர்டினண்ட் இம்மானுவேல் மார்க்கோஸ் (1917-1989), அவரது ஆட்சிகாலத்தில் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தவராகவும், முதல் சீமாட்டி இமெல்டா மார்க்கோசு மிக ஆடம்பரமான வாழ்க்கையை மேற்கொண்டவராகவும் குறிப்பிடப்படுகின்றனர்.

பிலிப்பைன்சின் பதினோராவது குடியரசுத் தலைவரான மரீயா கொரசோன் அக்கினோ (1933-2009), மக்களாட்சி அமைதி, பெண்ணுரிமை போன்றவற்றிற்கு குரல் கொடுத்தவராகக் குறிப்பிடப்படுகிறார். நாட்டின் முதலாவது பெண் சனாதிபதியான அக்கினோவிற்குப் பின், குளோரியா மகபகல் அர்ரொயோ, இரண்டாவது பெண் குடியரசுத் தலைவராக (2001-2010) பதவி வகித்திருக்கிறார்.

கடவுளுக்கும், மக்களுக்கும், இயற்கைக்கும், நாட்டுக்கும் (மக்கா-டியோஸ், மக்கா-டாவோ, மக்காகலிகசன் அட் மக்காபன்சா) என்பதனைக் குறிக்கோளாக் கொண்டுள்ள ரிபப்ளிகா இங் பிலிப்பினாஸ் நாட்டின் மணிலா நகரமும் குவிசோன் நகரமும் இரட்டை நகரங்களாக அறியப்படுகின்றன. அன்பு நகரம் என அழைக்கப்படும் மணிலா, பிலிப்பினோ (பினோய்) மற்றும் பிலிப்பினாக்களால் (பினாய்) நிறைந்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

நல்லதொரு உலகுக்கான நெல் அறிவியல் எனும் குறிக்கோள் உரை கொண்ட பன்னாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனம், பிலிப்பைன்சின் லொஸ் பனோஸ், லாகுனாவைத் தலைமையகமாகக் கொண்டு 1960 இல் உருவாக்கப்பட்டிருக்கிறது. வறுமை மற்றும் பட்டினியைக் குறைத்தல், நெல் விவசாயிகளின் சுகாதாரத்தை மேம்படுத்துதல், நெல் வேளாண்மையில் சுற்றுச் சுழலை மேம்படுத்துதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டிருக்கும் நெல் ஆராய்ச்சி நிறுவனம், ஆசியாவில் நிகழ்ந்த பசுமைப் புரட்சியில் சிறந்த பங்களிப்புச் செய்ததாகப் அறியப்படுகிறது. உயரமாக வளரும் நெல் வகைகள் நிலத்தில் சாய்ந்து விடுவதற்கு மாற்றாக குட்டையான ஐ-ஆர்-8 போன்ற ரகங்களை வெளியிட்டு நெல் மகசூலில் இந்தியாவை சாதனை படைக்க வைத்ததாக நெல் ஆராய்ச்சி நிறுவனம் புகழப்படுகிறது.

அவுரங்சீப் ஆட்சியின் முடிவில் முகலாயப் பேரரசு சரிவுறத் தொடங்கிய போது, சீக்கியர்கள் மிகப்பெரும் எழுச்சியுற்று பஞ்சாப் பகுதியை சீக்கிய அரசாக மாற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது. சீக்கியம் ஒரு மதமாகக் கட்டமைக்கப்பட்ட காலத்தில் முகலாய மன்னர்களோடு நிலவிய நல்லுறவு, பின்னர் சகாங்கீர் காலத்திலிருந்து சீர்கெட ஆரம்பித்திருக்கிறது. சீக்கிய பத்தாவது குருவான குரு கோவிந்த் சிங் (1666-1708) காலத்திற்குப் பின் பஞ்சாபில் எழுச்சியுற்ற சீக்கியப் பேரரசை (1780-1839) கட்டியெழுப்பியவராக மகாராஜா ரஞ்சித்சிங் (1780-1839) புகழப்படுகிறார். லாகூரை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செலுத்திய ரஞ்சித்சிங் மன்னருக்குப் பின் பிரித்தானியருடன் நடைபெற்ற ஆங்கிலேய-சீக்கியப் போர்களின் முடிவில், வடமேற்கு இந்தியாவின் பெரும்பாலான பகுதிகள் பிரித்தானியக் கம்பனியின் கட்டுப்பட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

உலகின் முக்கியமான மதங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவராக குரு நானக் (1469-1539) போற்றப்படுகிறார். சீக்கிய

மதத்தைப் பின்பற்றுபவர்கள் சீக்கியர் எனப்படுகின்றனர். பஞ்சாபின் வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடைய சீக்கிய மதத்தைப் பின்பற்றுபவர்கள் பெரும்பாலும் பஞ்சாப் மக்களாக இருக்கின்றனர்.

சீக்கியர் அல்லது சிங்கம் எனும் பொருள் தரும் சிங் என்பவர், ஒரே முடிவற்ற இறைவனையும், குருநானக் தேவ் முதல் ஸ்ரீகுரு கோவிந்த் வரையிலான பத்து குருக்களையும், ஸ்ரீகுரு கிரந்த சாஹிப்பையும், பத்து குருக்களின் சொற்களையும், போதனைகளையும், பத்தாவது குரு விட்டுச்சென்ற ஞானத்தையும், முழுமையாக நம்பும் ஒரு மனிதராகக் கருதப்படுகிறார்.

சீக்கியர்களின் முதல் குருவான குரு நானக் அவரது முப்பதாவது வயதில் அறிவு விளக்கம் பெற்றவராகவும், இந்து மதமும் இசுலாம் மதமும் அல்லாமல் கடவுளின் பாதையைப் பின்பற்ற புதிய வழிமுறையைக் கண்டடைந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். இந்து நூல்கள் மற்றும் குரான் இரண்டிலுமே உண்மைகள் இருக்கின்றன என்பதைக் கண்டடைந்த குருநானக், இந்துக்களையும் இசுலாமியர்களையும் ஒற்றுமையாக வாழவைக்க வேண்டும் என்பதிலும் கவனம் கொண்டவராக அறியப்படுகிறார்.

அனைத்து மதங்களும் குறிப்பிடும் இறைவன் ஒருவரே என்றும் அவர் அனைவரிலும் குடியிருக்கிறார் என்றும் குறிப்பிட்ட குருநானக், நீண்ட நெடிய பயணங்கள் மேற்கொண்டு பல்வேறு வகையான மக்களிடம் இறைச் செய்தியை பரப்பியிருக்கிறார்.

ஒரு கடவுள் மட்டுமே இருக்கிறார் எனவும், அவர் சத்தியம் என்றும், படைப்பாளன் என்றும், அச்சத்திலிருந்தும் வெறுப்பிலிருந்தும் அற்றவர் என்றும், இறப்படையாத நிரந்தரமானவர் என்றும், பிறப்படையாதவர் என்றும், சிறந்தவர் மற்றும் கருணையாளர் என்றும் அழைக்கப்படுவதாக சீக்கிய மதம் குறிப்பிடுகிறது.

மக்களிடையே காணப்படும் போலித்தன்மையை அகற்றி, அச்சத்தையும் அறியாமையையும் போக்கி, மக்கள் புது முறையில் வாழ வழிகள் வகுத்தவராகப் குறிப்பிடப்படும் குருநானக், இறையருள் பெற்ற குருமூலம் இறைவன் ஒருவன் இருக்கிறார் என்பதை அறிந்து அவனை அடைய முயல்வதே மனித வாழ்வின் குறிக்கோள் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்.

இசை கலந்த இனிய பாடல்கள் பாடி இறைவனை துதித்து வழிபாடு செய்யும் சீக்கியம், உருவ வழிபாட்டை அவதாரங்களை ஒப்புக் கொள்ளாத மதமாகவும் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

இறைப்பாடல்கள் அல்லது ஷபதுகளின் தொகுப்பான குரு கிரந்த சாகிப் சீக்கிய மதத்தின் புதித நூலாகவும், பதினோறாவது மற்றும் இறுதி குருவாகவும் அறியப்படுகிறது. பத்து சீக்கிய குருக்களின் வாழும் அவதாரமாகக் குறிப்பிடப்படும் குரு கிரந்த சாகிப், ஐந்தாம் குருவான குரு அர்ஜன் தேவால் (1563-1606) தொகுக்கப்பட்டிருக்கிறது. முதல் ஐந்து குருக்கள் இந்து மற்றும் இசுலாமிய ஞானியர்களது நெறிமுறைகள்இணைத்து தொகுக்கப்பட்ட ஆதி கிரந்தம், பஞ்சாபி மொழியை எழுதுவதற்குப் பயன்படும் குர்முகி எனும் எழுத்து வடிவம் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. ஆதி கிரந்த நூல், குரு கிரந்த சாகிப் என புனித நூலாக மாற்றப்பட்ட பின் (1708), அதற்கு மிகுந்த புனிதமும் முக்கியத்துவமும் மரியாதையும் வழங்கப்பட்டு வருகிறது.

உலகிலுள்ள அனைத்து மக்களும் சமமானவர்களே, பெண்கள் ஆண்களுக்குச் சமமானவர்கள், அனைவருக்கும் ஒரே கடவுளே, உண்மையைப் பேசுங்கள், உண்மையுடன் வாழுங்கள், எளிமை, கருணை, இரக்கம், அன்பு போன்ற நல்ல குணங்களைக் கொண்டிருங்கள் என வலியுறுத்தும் குரு கிரந்த சாகிப் நூல், காமம், ஆத்திரம், பேராசை, பற்று, அகந்தை என்னும் ஐந்து திருடர்களைக் கட்டுப்படுத்தி ஆன்மீக வாழ்வில் முன்னேற வேண்டுமென்பதையும் தெளிவாக்குகிறது.

குரு ராம் தாஸ் (1534-1581) அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஹர்மந்திர் சாஹிப் எனும் பொற்கோவில் சீக்கிய மக்களின் முக்கிய கலாச்சார மையமாகப் புகழப்படுகிறது. அம்ரித்சர் நகரில் அமைந்துள்ள பொற்கோவிலில் குரு கிரந்த சாகிப் நூல் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும், ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் நடைபெறும் வைசாகி நாள் விழா மிகுந்த கொண்டாட்டம் நிரம்பியதாகவும் குறிப்புகள் சுட்டுகின்றன.

மதத்திலும், உடையிலும், உணவிலும், நடத்தையிலும், பண்பாட்டிலும் தனித்த அடையாளங்களை ஏற்படுத்திக்கொண்ட சீக்கியர்கள், வீரத்திற்கும் மிகப்

புகழ்பெற்றவர்களெனில் மிகையாகாது. கலப்பை பிடித்த கைகளில் வாளேந்திய சீக்கியர்கள், துப்பாக்கி ஏந்தி இந்திய மண்ணைப் பாதுகாப்பதும் பெருமைக்குரியது.

மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு, மராத்தியர்களின் எழுச்சியும் முக்கியக் காரணமாகக் குறிப்பிடப்படுகிறது. சத்ரபதி சிவாஜியால் (1627-1680) கட்டியெழுப்பப்பட்ட மராத்தா பேரரசும் (1674-1818) பேரரசர் சிவாஜியின் காலத்திற்குப் பின் உருவான மராத்தியக் கூட்டமைப்பும், தொடர்ந்து முகலாய மன்னர்களுடன் முரண்பட்டு வந்ததாகவே வரலாறு குறிப்பிடுகிறது. மூன்றாவது பானிபட் போர் (1761) வரை தொடர்ந்து விரிவாக்கம் பெற்று வந்ததாக அறியப்படும் மராத்திய பேரரசு, பின்னர் மராத்திய தலைமை அமைச்சர்களான பேஷ்வாக்கள் மூலம் வட இந்தியப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்குடன் விளங்கியதாக அறியப்படுகிறது.

ஆப்கானிய துராணிப் பேரரசிற்கும் (1747-1826) மராத்தியப் பேரரசிற்கும் இடையே நடைபெற்ற மூன்றாவது பானிபட்போர் பல குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. பஞ்சாம், தில்லி, காஷ்மீர் போன்ற பகுதிகள் ஆப்கானியர் வசமாகியிருக்கிறது. மராத்தியப் பேரரசு சிதைவுற்று சீக்கியப் பேரரசின் எழுச்சியும், பிரித்தானிய கம்பனியின் பரவலாக்கமும் நிகழ்ந்திருக்கின்றன.

மொகலாயர்களின் தொடர் தாக்குதல்களைச் சமாளித்த மராத்திய பேரரசு, அவுரங்கசீப் காலத்திற்குப் பின், சிவாஜியின் பேரன் சத்ரபதி சாகுஜி போன்சலே (1682-1749) தலைமையில் எழுச்சியுற்று, , மராட்டிய கூட்டமைப்பை, நிறுவி மீண்டும் வடமேற்கு மற்றும் கிழக்கிந்தியாவின் பெரும் பகுதிகளை கூட்டமைப்பின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிறது. மராத்திய கூட்டமைப்பின் பேஷ்வாவாக செயல்பட்ட பாலாஜி விஸ்வநாத் (1662-1720), மகன் பேஷ்வா பாஜிராவ் (1720-1740) மற்றும் பேரன் பாலாஜி பாஜிராவ் (1720-1761) போன்றோர் புகழ் பெற்றவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

சாகுஜி மன்னரின் படைத்தலைவர்களாக இருந்த ஹோல்கர், கெயிக்வர், சிந்தியா குலத்தவர் பின்னர் தனி அரசுகளாக எழுச்சி பெற்று பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட சுதேசி சமஸ்தானங்களாக நீடித்திருக்கின்றன.

வட இந்தியாவில் முக்கியமான அரசாகவும் மராத்திய கூட்டமைப்பின் வலுமிக்க நாடாகவும் விளங்கிய குவாலியர் அரசு (1761-1948) பத்தாம் நூற்றாண்டில்

நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது. தில்லி சுல்தான்கள், முகலாய ஆட்சி என வரலாற்றில் பல மாற்றங்களை சந்தித்த குவாலியர் அரசு மராத்திய எழுச்சிக் காலத்தில் ராணோஜிராவ் சிந்தியா (ஆ.காலம் 1731-1745) மகாராஜாவால் குவாலியர் அரசாக மீட்டுருவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் முக்கிய வணிக நகராகவும் படைகளின் பாசறையாகவும் விளங்கிய இந்தூரை மையமாகக் கொண்டிருந்த இந்தூர் அரசு (1818-1948) மல்ஹர் ராவ் ஓல்கரால் (169-1766) 1732 இல் நிறுவப்பட்டிருக்கிறது.

தற்கால குஜராத்தின் பெரும் பகுதிகளை உள்ளடக்கியிருந்த கெயிக்வாட் குலத்தாரின் பரோடா அரசு (1721-1947) முதலில் கிழக்கிந்தியக் கம்பனியை எதிர்த்தாலும் பின்னர் கம்பனியின் துணைப்படைத் திட்டத்தை ஏற்று 1818 முதல் சுதேசி சமஸ்தானமாக விளங்கியதாக அறியப்படுகிறது. பாலாஜிராவ் கெயிக்வாட் (1721-1732) ஆட்சி தொடங்கி சமர்ஜித் ரஞ்சித்சிங் கெய்க்வாட் (2012 முதல்) வரை நீடித்து வரும் பரோடா மன்னர்கள், சமஸ்தானத்திற்கு உட்பட்ட பகுதிகளை சிறப்பாக நிர்வகித்தவர்களாகவும், பரோடா வங்கி, இருப்புப்பாதை வழித்தடம், கப்பல் போக்குவரத்து, கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு ஊக்கத்தொகை என பல்வேறு சிறப்புகளைச் செய்தவர்களாகவும் புகழப்படுகின்றனர்.

போன்ஸ்லே குலத்தவரால் ஆளப்பட்ட அரசுகளாக தஞ்சாவூர் மராத்திய அரசு (1674 -1855), நாக்பூர் அரசு (1818- 1853), அக்கல்கோட் அரசு (1708-1948) மற்றும் கோலாப்பூர் அரசு (1710-1948) போன்றவை குறிப்பிடப்படுகின்றன.

ஆங்கிலேயருக்கு ஆண்டு தோறும் கப்பம் செலுத்திக் கொண்டு இராணுவப்படை இல்லாத சுதேச சமஸ்தானங்களாக விளங்கிய குவாலியர், பரோடா, மைசூர், ஜம்மு காஷ்மீர், ஐதராபாத் மன்னர்களுக்கு, பிரித்தானியப் படை இருபத்தியோரு குண்டுகள் முழங்க மரியாதை செய்ததாக பதிவுகள் சுட்டுகின்றன. பெயரளவிற்கு மன்னராக ஆட்சி செய்தாலும், நிருவாக மற்றும் கொள்கை ரீதியிலான முடிவெடுக்கும் அனைத்து அதிகாரங்களும் பிரித்தானிய வைசிராயிடமே இருந்ததாக அறியப்படுகிறது.

நாடு சுதந்திரம் அடைந்த போது மைசூர், ஐதராபாத், பரோடா, திருவாங்கர் மற்றும் ஜம்மு காஷ்மீர் போன்ற பெரிய சமஸ்தானங்கள் உட்பட ஐந்நூற்றி அறுபத்தைந்து சமஸ்தானங்கள் இருந்திருக்கின்றன. பிரித்தானிய இந்திய அரசின்

ஆளுகைக்கு உட்படாத ஐநூறுக்கும் மேற்பட்ட மன்னராட்சி அரசுகளில் பெரும்பாலானவை தக்காணப் பீடபூமி, பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத், மத்திய இந்தியா, கிழக்கிந்தியா, சக்திஸ்கர் போன்ற பகுதிகளில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

1674 இல் சத்ரியர்களின் தலைவர் எனும் பொருளில் சத்ரபதியாக முடி சூட்டிக்கொண்ட சிவாஜி மகாராஜா 1676 ஆம் ஆண்டின் இறுதியில் முப்பதினாயிரம் குதிரைப்படை மற்றும் இருபதினாயிரம் காலாப்படையுடன் தெற்கத்திய இந்தியா மீது படை நடத்தியவராக அறியப்படுகிறார். தென்னிந்திய மொகலாய அரசிற்கு பெரும் பின்னடைவைக் கொடுத்த சிவாஜியின் படைகள், செஞ்சி, தஞ்சாவூர், வேலூர், கர்நாடகப் பகுதிகள் உள்ளிட்டவற்றை மராத்திய பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்திருக்கின்றன. ஔரங்சிப்போடு தொடர் போராட்டங்கள் நடத்திய மராத்திய அரசின் தலைநகராக செஞ்சியும் சில காலம் இருந்துள்ளது.

முந்நூறுக்கும் மேற்பட்ட வலிமையான தொடர் கோட்டைகளை நிறுவியவராகவும், சிறந்த கடற்படையை உருவாக்கத் திட்டமிட்டவராகவும் அறியப்படும் வீர சிவாஜி, சுதந்திரமான இந்தியா குறித்து பல்வேறு திட்டங்களை முன்னெடுக்க விரும்பியவராவும் குறிப்பிடப்படுகிறார். இந்து மதத்திற்கும் இந்துப் பண்பாட்டிற்கும் பெரியளவில் பாதுகாவலராக இருந்ததாகக அறியப்படும் சிவாஜி மத சகிப்புத் தன்மை கொண்டிருந்தவரெனவும் சுட்டப்படுகிறார்.

சிறப்பான அரசியல் நடவடிக்கைகள் மேற்கொண்ட பேரரசர் சிவாஜி சிறந்த நிர்வாகத்திறன் மிக்கவராகவும் சிறந்த ஆட்சியாளராகவும் புகழப்படுகிறார். மராத்தியரின் பெருமையையும் வீரத்தையும் நிலைநாட்டிய பேரரசர் சிவாஜி மராத்தாவின் பெருமைமிகு அடையாளம் எனில் மிகையாகாது.

தஞ்சை நாயக்கர்களை வென்று, தஞ்சை மராத்திய அரசை நிறுவியவராக, சிவாஜியன் உறவினர் வெங்கோஜி எனும் ஏகோஜி (1674-1684) அறியப்படுகிறார். 1799 முதல் 1855 வரை பிரித்தானிய அரசின் சுதேச சமசுதானமாக இருந்த தஞ்சை மராத்தியரின் இரண்டாம் சரபோஜி (1777-1832) வரலாற்றுப் புகழ்பெற்ற தஞ்சை சரசுவதி மகால் நூலக உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்தவராகக் குறிப்பிடப்படுகிறர். நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட தஞ்சாவூர் அரண்மனையை

மேம்படுத்திய மராத்திய மன்னர்கள், மராத்திய விட்டோபர் பாணியில் தஞ்சையிலும் விட்டோபர் கோவிலை எழுப்பியதாகவும் கூறப்படுகிறது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மராட்டியத்தின் பங்கு அளப்பரியது. கேசரி எனும் மராத்தி பத்திரிக்கையும், மராட்டா எனும் ஆங்கில பத்திரிக்கையும் தொடங்கிய பால கங்காதர திலகர் (1856-1920) புகழ்பெற்ற தேசியவாதியாகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும் புகழப்படுகிறார். லோகமான்ய திலகர் எனக் குறிப்பிடப்படும் திலகர், சுதந்திரம் குறித்து மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியதில் முன்னோடியாகவும் குறிப்பிடப்படுகிறார். சுதந்திரம் பிறப்புரிமை என முழங்கிய திலகர், பஞ்சாப் சிங்கம் என அழைக்கப்படும் லாலா லஜபதி ராய் (1865-1928), வங்காளத்தின் பிவின் சந்திர பால் (1858-1932) போன்றோர் சுயராஜ்ஜியத்திற்குப் பாடுபட்ட முதன்மையான தலைவர்களாகவும், சமூக மாற்றங்களுக்கும் வித்திட்ட மாமனிதர்களாகவும் புகழப்படுகின்றனர்.

ஒடுக்கப்பட்டோர் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட மகாத்மா ஜோதிபா கோவிந்த ராவ் புலே (1827-1890) மற்றும் சாவித்திரி பாய் புலே (1831-1897), சிறந்த சமூக சீர்திருந்தவாதிகளாகவும், கல்விக்காகப் பாடுபட்டவர்களாகவும் புகழப்படுகிறன்றனர். உண்மையைத் தேடுவோரின் சமூகம் எனும் சத்ய சோதத் சமாஜ் அமைப்பைத் துவங்கிய ஜோதிராவ் புலே, பெண்கல்வி, விதவை பெண்களின் நல்வாழ்வு குறித்து அதிகம் சிந்தித்தவராகக் குறிப்பிடப்படுகிறார். சமூக சீர்திருத்த இயக்கங்களின் தந்தை எனக் கருதப்படும் புலே, தீண்டாமை, பாலினப் பாகுபாடு, விவசாய இயக்கம், மூட நம்பிக்கைகளுக்கு எதிரான இயக்கம் எனப் பல்வேறு விழிப்புணர்வு போராட்டங்கள் நடத்தியும், நூல்கள் வெளியிட்டும் மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டியிருக்கிறார். நவீன இந்தியாவின் முதல் பெண் ஆசிரியராகப் புகழப்படும் சாவித்ரிபாய் புலே, சமூகப் போராளியாகவும், கவிஞராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் போற்றப்படுகிறார்.

கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்டோர் வாழ்வில் ஒளியேற்றியவராகப் புகழப்படும் பாபா சாகேப் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார் (1891-1956), இந்திய மனங்களிலிருந்து தீண்டாமை எனும் கொடிய நோயை அகற்றும் மகத்தான பணி செய்தவராகப் போற்றப்படுகிறார். பேராசிரியராகவும், இதழாளராகவும், எழுத்தாளராகவும், சமூக நீதிப் புரட்சியாளராகவும் விளங்கிய பாபா சாகிப், இந்திய

அரசியலமைப்பு உருவாக்கத்தின் தலைமைச் சிற்பியாக இருந்து, இந்தியத் திருநாட்டில் சனநாயகம் தழைத்தோங்க வழிகாட்டியவர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் இந்திய விடுதலைக்காகவும் பாடுபட்ட அம்பேத்கார், இந்து மதத்தில் நிலவும் சாதி அமைப்பையும், தீண்டாமைக் கொடுமையையும் வெறுத்து, நாக்பூரின் தீக்ஷாபூமியில் புத்த சமயத்தைத் தழுவியிருக்கிறார். உலகின் மிகச் சிறந்த அறிவுஜீவிகளில் ஒருவராகப் புகழப்படும் அண்ணல் அம்பேத்கார் இந்திய ஞானத்தின் கொடை எனில் மிகையாகாது.

வீட்டிற்குள்ளும் கோவில்களிலும் கொண்டாடப்பட்ட பிள்ளையர் சதுர்த்தி விழாவை, பொதுவிழாவாக முன்னெடுத்தவராக திலகர் அறியப்படுகிறார். மராட்டியத்தில் ஆரம்பிக்கப்பட்ட விநாயகர் விஜர்சன ஊர்வலம், பின்னர் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியதாகக் கூறப்படுகிறது.

கோவிலுக்கு வரும் பக்தர்கள் நன்கொடைகளை பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகளாகச் செலுத்தவும், பங்குகள் மட்டுமல்லாது மியூச்சுவல் பண்ட், தங்கப் பத்திரங்கள் போன்றவற்றையும் நன்கொடையாக வழங்க ஏற்பாடுகள் செய்துள்ள மும்பையின் புகழ்பெற்ற சித்தி விநாயகர் கோவில் டீமேட் கணக்கு வைத்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் மும்பை சித்தி விநாயகர் கோவில், சமீப காலங்களில் அதிக வருமானம் சேரும் கோவிலாகவும், மும்மையின் புகழ்பெற்ற கோவிலாகவும் பெருமை பெற்றிருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மராட்டியத்தில் வசித்ததாகக் குறிப்பிடப்படும் ஷிரடி சாய்பாபா, இந்தியா முழுவதும் பரப்பப்பட்டு, கடவுள் அவதாரமாகப் புகழப்படுவது குறிப்பிடத்தக்கது.

மனிதர்கள் தங்களது தோற்றம் முதலே இயற்கையைப் புரிந்து கொள்ள முயன்று வந்திருக்கிறார்கள். இயற்கையை மேலான சக்தி என்று கண்டு கொண்ட மனிதர்கள், இயற்கையை வணங்க ஆரம்பித்திருக்கின்றனர். தாம் யார், இயற்கையுடனான தமது உறவு எத்தகையது எனும் தேடலுக்கு விடையாக, கடவுள் எனும் கோட்பாட்டை உருவகித்த மனிதன், படிப்படியாக மதம் எனும் தத்துவத் சேகரிப்பை கண்டடைந்திருக்கிறான். கடவுள் எனும் தத்துவத் தேடலுக்கு விடையாக

உலகமெங்கும் பல்வேறு விடைகளும், அறிதல்களும், தெளிவுகளும், உண்மைகளும் கண்டறியப்பட்டிருக்கின்றன.

இந்திய தத்துவ மரபிலும், ஏராளமான ஞானிகளும், முனிவர்களும், ரிஷிகளும், ஆன்மீகத் தலைவர்களும், மகான்களும் தோன்றி, கடவுள் குறித்தான பல்வேறு விளக்கங்களையும், தத்துவங்களையும் வெளியிட்டிருக்கின்றனர். அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் போன்ற ஞான மரபுகள் இந்திய தத்துவ மரபில் செலுத்திய தாக்கங்கள் அளப்பரியவை.

அகம் பிரம்மாஸ்மி போன்ற குறிப்பிட்ட சில மகாவாக்கியங்களை உள்வாங்கி தாங்களே கடவுள் என அறிவித்துக் கொண்டவர்களும் இந்திய ஞான மரபில் பலருண்டு, எந்தவித தத்துவ தரிசனங்களோ, உலகம், கடவுள், உயிர்களின் தோற்றம், பிரபஞ்ச தரிசனம், முழுமைத்துவம், தேடல் போன்ற எதுவும் இல்லாத பலரும், இந்திய மரபில் மகான்களாக, கடவுள்களாக மக்களிடம் கொண்டு சேர்க்கப்படுவது காணப்படுகிறது. சிறியளவிலான மனமாற்றமோ, ஆன்மீக அனுபவமோ வாய்க்கப் பெறுபவர்கள் தங்களுக்கென பக்தகோஷ்டிகள் உருவாக்கிக்கொண்டு, பகட்டான ஆசிரமங்களை நிறுவிக்கொண்டு, பொதுச்சேவை எனும் பெயரில் மக்களிடமும், வெளிநாடுகளிலும் நன்கொடை மூலம் ஏராளமான பணம் பெற்று உலகப் பணக்காரர்கள் வரிசையில் வைக்கப்படும் அளவிற்கு உல்லாச வாழ்க்கையை வாழ்வதும் பரவலாக நடைபெறுகிறது. சொந்தமாக வானூர்திகள் வைத்திருக்கும் ஆன்மீகத் தலைவர்களுக்கும் இந்தியத் திருநாட்டில் குறைவில்லை. எந்தவித ஆடம்பரமோ, உயர்வோ, விளம்பரமோ இல்லாமல் எத்தனையோ ஞானிகள் ஆன்மீக அனுபவங்களைப் பகிர்ந்து வாழும் இந்திய நாட்டில், விளம்பரங்கள் மூலமும், பகட்டான செயல்கள் மூலமும், அரசியல்வாதிகள் மூலமும், ஆன்மீகத்தை தத்துவங்களை, உண்மைகளை விற்றுப் பிழைப்பு நடத்தும் ஆன்மீகவாதிகளை, ஆன்மீக குருக்களை, கடவுள்களை, மக்களே அடையாளம் கண்டு கொண்டு விழிப்போடு இருக்க வேண்டும் என்பது சமூக அக்கறை கொண்டோரின் கருத்தாக இருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய மண்ணில் சமூகம் மற்றும் மதம் சார்ந்து பல்வேறு இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணா இயக்கம், பிரம்ம ஞான சபை போன்றவற்றின் பணிகள் சிறப்பானவை. ஆங்கிலக் கல்வியும் அதன்

வழியாக அறியப்பட்ட மேலைநாடுகளின் சுதந்திரப் போராட்டங்களும், இலட்சியக் கனவுகளும், இந்தியாவில் நிலவிவந்த பழைமையான வைதீக சடங்கு முறைகள், மூடப்பழக்கவழக்கங்கள், தீண்டாமை, பெண்ணடிமைத்தனம் போன்றவற்றிற்கு எதிராக மிகப்பெரிய சீர்திருத்தங்களுக்கு வழிகோலியதாகக் கருதப்படுகிறது. சமூக சமய சீர்திருத்தவாத முன்னெடுப்புகள் ஆங்கிலக் கல்வி அதிகமிருந்த கொல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னையைச் சுற்றியே அதிகம் மேற்கொள்ளப்பட்டதும் ஒப்பு நோக்கத்தக்கது. வங்கத்தில் மிகச் சிறப்பாக சமூக சீர்திருத்தம் முன்னெடுக்கப்பட்டதாகப் புகழப்படுகிறது.

1828 இல் பிரம்ம சமாஜம் எனும் அமைப்பை ஏற்படுத்திய இராசாராம் மோகன் ராய் (1772-1833), புதிய மறுமலர்ச்சியைத் தொடங்கியவராகப் புகழப்படுகிறார். எல்லா மக்களும் சாதி, சமயப் பாகுபாடின்றி ஒன்றாகச் சேர்ந்து ஒரே இறைவனை வழிபட வேண்டும் எனும் உயரிய நோக்கோடு தொடங்கப்பட்ட பிரம்ம சமாசம் அவதாரங்களிலும், கர்மக் கோட்பாட்டிலும் மறுபிறவியிலும் நம்பிக்கையில்லை எனவும் தெளிவாக்கியிருக்கிறது. கடவுள் ஒருவரே என நம்பும் உருவ வழிபாட்டை ஏற்காத யாரும் பிரம்ம சமாசத்தில் சேரலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சதி எனும் உடன்கட்டை ஏறும் சமுதாயக் கொடுமையை ஒழிக்க அரும்பாடுபட்ட இராஜாராம் மோகன்ராய், சமயத் துறையில் பல்வேறு சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டிருந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

வாய்மையே வெல்லும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்ட பிரார்த்தனை சமாஜம், 1867 இல் ஆத்மாராம் பாண்டுரங் அவர்களால் (1823-1898) துவக்கப்பட்டிருக்கிறது. கடவுளுக்கும் பக்தர்களுக்கும் இடையே இடைத்தரகர்கள் தேவையில்லை என்பதை வலியுறுத்திய பிரார்த்தனை சமாஜம், உருவ வழிபாடையும், அவதாரங்களையும், அதிசய செயல்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகவாதிகளுள் ஒருவராகப் போற்றப்படும் இராமகிருஷ்ண பரமஹம்சரும் (1836-1886), புதிய இந்தியாவை எழுச்சியடையச் செய்த அவரது முக்கியச் சீடரான சுவாமி விவேகானந்தரும் (1863-1902), இந்திய ஞானத்தை சிறப்புறச் செய்தவர்களெனில் மிகையாகாது. அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை சொந்த அனுபவங்கள் மூலம் கண்டடைந்த இராமகிருஷ்ணர், தக்சிணேசுவர் காளியின் மீது பேரன்பு

கொண்டவராகவும், அன்னை சாராதா தேவியை (1853-1920) வாழக்கைத் துணையாகப் பெற்றவராகவும் அறியப்படுகிறார். இராமகிருஷ்ண இயக்கத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவராகவும், பெண் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தவராகவும் சாராதா தேவி புகழப்படுகிறார்.

சிகாகோ உலக சமயங்களின் பாராளுமன்ற உரை மூலம் உலகப்புகழ் பெற்ற நரேந்திரநாத் தத்தா எனும் விவேகானந்தர், அத்வைத வேதாந்தத் தந்துவங்ககளில் பெரும் புலமை பெற்றவராக அறியப்படுகிறார். சமூகத்தின் அனைத்து மக்களிடமும் ஆன்மீகம் பரவ வேண்டும் என விரும்பிய விவேகானந்தர், இந்து மதத்தை உளகளாவிய அளவில் கொண்டு சேர்த்தவராகப் புகழப்படுகிறார். சுவாமி விவேகானந்தரால் நிறுவப்பட்ட இராமகிருஷ்ண இயக்கம், கல்வி, ஆன்மிகம், சேவை போன்ற பல்வேறு துறைகளில் முக்கியப் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது. கொல்கத்தாவின் ஹுக்ளி நதிக்கரையில் அமைந்துள்ள பேலூர் மடம், இராமகிருஷ்ண இயக்கத்தின் தலைமையகமாகவும் அமைந்துள்ளது.

விவேகானந்தரின் முதன்மைச் சீடராகக் குறிப்பிடப்படும் சகோதரி நிவேதிதா (1867-1911) கல்விப் பணியிலும் சமூக சேவையிலும் அயராது பாடுபட்டவராகப் புகழப்படுகிறார். பல்வேறு தலைவர்களுடனும் நட்புறவு கொண்டிருந்த நிவேதிதை சுற்றுப்பயணங்கள் மூலம் இந்திய ஞானத்திற்கு உலகளவில் புகழ் சேர்த்திருக்கிறார். நிவேதிதா சகோதரி மீது மகாகவி பாரதியார் பேரன்பு கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கொல்கத்தாவில் பிறந்த ஸ்ரீஅரவிந்தர் (1872-1950) இந்திய தேசியவாதியாகவும், ஆன்மீகத்தலைவராகவும், சிறந்த மெய்யியலாளராகவும், கவிஞராகவும் போற்றப்படுகிறார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிர தேசியவாதியாகப் பங்கெடுத்து பின் பாண்டிச்சேரியில் ஆன்மிக வாழ்வு நடத்திய அரவிந்தர், சிறந்த யோகியாக மலர்ந்திருக்கிறார். இந்திய ஞானத்தின் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்த அரவிந்த மகான், மனத்தின் வலிமை குறித்தும், அதி மனம் தொடர்பாகவும், எதிர்கால மனித வாழ்வு குறித்தும், கல்வியின் மேன்மை குறித்தும் ஆழ்ந்து சிந்தித்தவராக புகழப்படுகிறார். உயர் மனம் பெறப் போகும் மனிதர்கள், தெய்வீக நிலைக்கு முன்னேறுவார்கள் என அறுதியிட்ட அரவிந்த மகான், இந்தியா உலகின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு பாடுபடும் எனவும் அறுதியிட்டிக்கிறார்.

மதர் என்றும், ஸ்ரீஅன்னை என்றும் குறிப்பிடப்படும் பிரான்சு நாட்டின் பிளாஞ்சி ராக்சேல் மிரா (1878-1973), இந்தியத் தத்துவங்களால் ஈர்க்கப்பட்டு அரவிந்தரிடம் முழுமையாகக் சரணாகதி அடைந்தவராகப் புகழப்படுகிறார். யோகம் மூலம் ஸ்ரீஅன்னை எனும் உயர்நிலையடைந்தவர் அரவிந்த ஆசிரமத்தின் வளர்ச்சியிலும் ஆரோவில் எனும் சர்வதேச நகர் அமைக்கப்பட்டதிலும், மாத்ரி எனும் அன்னை ஆலய உருவாகத்திலும் பெரும்பங்கு வகித்தவராகக் குறிப்பிடப்படுகிறார். மலர்கள் மீது மிகுந்த விரும்பம் கொண்டிருந்த அன்னை, ஆன்மீகம் குறித்து சிறந்த புத்தகங்களையும் வெளியிட்டிருக்கிறார்.

எல்லா நாடுகளையும் சேர்ந்த ஆண்களும் பெண்களும், மதக் கோட்பாடுகள், அரசியல் ஈடுபாடுகள், நாட்டுப் பற்றுகள் தாண்டி, அமைதி மேலும் மேலும் சிறப்புறும் விதத்தில், சமூகமாகச் சேர்ந்து வாழும் சர்வதேச நகரமாக உருவாக்கப்பட்ட ஆரோவில், மனித குல ஒருமைப்பாட்டை உண்மையாக்குவதை முக்கிய நோக்கமாக வலியுறுத்துகிறது. தெய்வீகத் தன்மையுடைய வாழ்கையை வாழ விரும்புகிறவர்களுக்காக ஏற்பட்ட ஆரோவில் சர்வதேச நகரம், யுனெஸ்கோ உதவியுடன் அமைக்கப்பட்டு நடுவண் அரசால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது..

வங்காள மறுமலர்சியின் குறிப்பிடத்தக்க ஆளுமைகளில் ஒருவரான ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் (1820-1891), விதவை மறுமணம் தொடர்பான சட்டமியற்றப் பாடுபட்டவராகப் புகழப்படுகிறார். கர்நாடகத்தின் பண்டித ரமாபாய் (1858-1922), பெண்ணுரிமைப் போராளியாகவும், குழந்தைத் திருமணங்களை எதிர்த்தவராகவும் விதவை மறுமணம் போன்ற பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவராகவும் புகழப்படுகிறார். ஆந்திராவின் மறுமலர்ச்சித் தந்தை எனப் போற்றப்படுமளவிற்கு மிகச் சிறந்த சமூக சீர்திருத்தவாதியாகக் குறிப்பிடப்படும் ராவ் பகதூர் கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு (1848-1919), பெண்கல்வி, விதவை மறுமணம், வரதட்சணை மறுப்பு போன்ற பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்தவராகப் புகழப்படுகிறார்.

வங்கமொழியை உலகறியச் செய்த பெருமைக்குரியவரான குருதேவ் இரவீந்திரநாத் தாகூர் (1861-1941), பன்முகத்திறமை கொண்டவராகப் புகழப்படுகிறார். கீதாஞ்சலி படைப்புக்காக இலக்கிய நோபல் பரிசு கொடுக்கப்பட்ட தாகூர், விடுதலைப் போராட்டத்தின் ஆதரவாளராகவும், காந்தியடிகள் போன்ற பல்வேறு தலைவர்களின் அன்பிற்குரியவராகவும் இருந்திருக்கிறார். புகழ்பெற்ற சாந்தி நிகேதன் பாடசாலையை நிறுவிய தாகூர், கல்வியில் மறுமலர்ச்சியைப்

புகுத்தியவராகவும் அறியப்படுகிறார். உலகின் பெரும்பாலான நாடுகளுக்கு சுற்றுப்பயணங்கள் செய்த தாகூர், இந்தியப் பண்பாட்டையும் இந்திய மெய்யியலையும் சிறப்பாக முன்னெடுத்திருக்கிறார். இந்தியத் திரு நாட்டின் நாட்டுப் பண்ணை இயற்றிய பெருங்கவிஞரான இரவீந்திரரின் புகழ் வானளாவியது எனில் மிகையாகாது.

இந்தியாவின் நாட்டுப் பாடலாகப் போற்றப்படும் வந்தே மாதாரம் பாடலை எழுதிய பங்கிம் சந்திர சட்டர்ஜி (1838-1894), வங்க மறுமலர்ச்சிக் காலகட்டத்தின் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் கவிஞராகவும் அறியப்படுகிறார். பக்கிம் சந்திர சட்டோபாத்தியாயா நீதியரசராகவும், பேராசிரியராகவும் பணியாற்றியதோடு, விடுதலைப் போராட்டத்தைக் கருப்பொருளாக வைத்து இலக்கியப் பணி செய்தவராகவும் புகழப்படுகிறார்.

பிரித்தானியர், கடவுள் ராணியைக் காக்கிறார் எனும் ஆங்கிலப் பாடலைப் பாட கட்டாயமாக்கியபோது, இந்தியத் தாயின் பெருமைகளைப் புகழும் வங்க சமஹ்கிருத சொற்கள் கலந்த, தாயே வணங்குகிறோம் எனும் பொருள் கொண்ட வந்தே மாதரம் பாடலை சட்டர்ஜி இயற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது. 1876 இல் எழுதப்பட்ட வந்தே மாதரம் பாடல், 1882 இல் வெளியிடப்பட்டு, ஆங்கில அடக்கு முறைகளுக்கு எதிரான விடுதலை முழக்கமாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. நாட்டுப் பண்ணாகக் கருதப்படும் வந்த மாதரம் பாடல் இசுலாமியர்களால் சமய சார்புள்ளதாகக் கூறப்பட்டதால், ரவீந்திரரின் ஜன கண மன பாடல் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் நாட்டுப் பண்ணாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

தாயே வணங்குகிறோம்.

இனிய நீர், இன்சுவைக் கனிகள், தென்திசைக் காற்றின் தெள்ளிய தண்மை, மரகதப்பச்சை வயல்களின் மாட்சிமை எங்கள் தாய். தாயே வணங்குகிறோம்.

ஆயுதப் படைகள் கரங்களில் அணிசெய்யும் அன்னை துர்க்கை நீயே.

செங்கமல மலர்க் கரங்களில் உறையும் செல்வத்திருமகள் நீயே.

கல்வித் திறம் அருள் கலைமகளும் நீயே.

கருமை அழகியே, எளிமை இலங்கும் ஏந்திழையே, புன்முறுவல் பூத்தவளே, பொன் அணிகள் பூண்டவளே, பெற்று வளர்த்தவளே, பெருமைகள் அனைத்தும் அளித்தவளே,

தாயே வணங்குகிறோம் !

நாட்டின் நண்பன் எனும் பொருளில் தேசபந்து என அழைக்கப்பட்ட தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் (1870-1925), இந்திய விடுதலைப் போராட்டத்தின் முக்கியத் தலைவராகவும், காந்தியவழியைப் பின்பற்றி கைத்தொழில்கள் மூலம் கிராமங்களை முன்னேற்ற விரும்பியவராகவும் புகழப்படுகிறார். சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் வெறுத்த சித்தரஞ்சன் தாஸ், பெண்கள் முன்னேற்றத்திற்காக உழைத்தவராகவும் அறியப்படுகிறார். சுயாட்சிக் கட்சியைத் தொடங்கிய ஆளுமையான தேசபந்து, நேதாஜியின் அரசியல் குரு எனவும் குறிப்பிடப்படுகிறார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தீவிரமான தலைவரான நோதாஜி சுபாஷ் சந்திரபோஸ் (1897-1945), இந்திய தேசிய இராணுவத்தைக் கட்டமைத்து, படை வலிமையால் பிரித்தானியரை இந்திய மண்ணிலிருந்து வெளியேற்றப் போராடியவராகப் புகழப்படுகிறார்.

காந்தியின் மீதும் காங்கிரசின் மீதும் மிகுந்த மதிப்பு வைத்திருந்தவராகக் குறிப்பிடப்படும் நேதாஜி, பின்னர் காந்தியின் அறப்போராட்டங்கள் மூலம் சுதந்திரம் பெறுவது இயலாதது எனும் கருத்தாக்கத்திற்கு வந்திருக்கிறார். 1939 இல் இரண்டாவது முறையாக காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்ற போஸ், பின்னர் காங்கிரசிலிருந்து வெளியேறி, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியைத் தொடங்கியிருக்கிறார்.

இரண்டாம் உலகப் போரின் போது, பிரித்தானிய எதிர்ப்பு நாடுகளான இத்தாலி மற்றும் ஜெர்மனியின் உதவியை எதிர்நோக்கிய நேதாஜி, அநநாடுகளின் உதவி கிடைக்கப்பெறாமல் ஜப்பானின் ஆதரவை பெற முயன்றதாகவும், பர்மாவிலும், மலேசியாவிலும் கைது செய்யப்பட்டிருந்த இந்தியப் போர்க் கைதிகளைக் கொண்டு இந்திய தேசிய இராணுவம் எனும் அமைப்பை நிறுவியிருந்த ராஷ் பிகாரி போஸின் (1886-1945) வேண்டுகோளின் படி, அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பர்மா வழியாக இந்தியாவின் எல்லைக்கோடு வரை முன்னேறி வந்த இந்திய தேசியப் படையை, பிரித்தானியப் படைகள் முறியடித்திருக்கின்றன. இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோற்றதும் இந்திய தேசிய இராணுவத்திற்கு பெரும் பின்னடைவாக அமைந்திருக்கிறது.

இந்தியாவை நிரந்தரமாக அடிமைத் தளையில் கட்டி வைத்திருக்கும் ஆற்றல் இந்த உலகில் எந்த சக்திக்கும் இல்லை, விரைவில் இந்தியா விடுதலை அடையும், ஜெய் ஹிந்து என முழங்கிய நேதாஜி, இந்திய வீரத்தின் பெருமைக்குரிய புதல்வர் எனில் மிகையாகாது.

விடுதலை இயக்கத்தின் முக்கியப் புரட்சியாளராகவும், இந்திய இளைஞர்களை விடுதலை நோக்கி எழுச்சியுறச் செய்தவராகவும், மார்ச்சிய சிந்தனாவாதியாகவும் தோழர் பகத்சிங் (1907-1931) புகழப்படுகிறார். லஜபத்ராயின் இறப்பிற்குக் காரணமாகக் கருதப்பட்ட வெள்ளையாரைப் பழிவாங்கும் நோக்கில், சிவராம் ராஜ்குரு மற்றும் சுக்தேவ் தபார் தோழர்களோடு இணைந்து காவல் அதிகாரியைச் சுட்டதன் பேரில், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தால் தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட தோழர்களின் வீரம், இந்திய சுதந்திர வேட்கையைப் உத்வேகம் கொள்ளச் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. தேச விடுதலைக்காக உயிர்தியாகம் செய்த எத்தனையோ தியாகிகளில், இளம் வயதில் தீவிரமான போராளியாக மாற்றம் பெற்ற தோழர் பகத்சிங், சமூக அமைப்பை மாற்றுவது குறித்தும் சிநதித்தவராகப் பாராட்டப்படுகிறார்.

சென்னை மாகாணத்தை மையமாக்கி பல்வேறு சமூக சீர்திருத்தங்களை முன்னெடுத்த தியாசாபிகல் சொனசட்டி எனும் பிரம்ம ஞானசபை, உலக சகோதரத்துவத்தை முதன்மை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. பிரம்ம ஞான சபையைச் சேர்ந்தவர்கள், சாதி வேறுபாடு பார்க்காதவர்களாகவும், பெண்குழந்தைக்கும் மனைவிக்கும் கல்வி போதிப்பவர்களாகவும், பெண்களுக்கு இருபத்தியொரு வயது வரை திருமணம் செய்யாதவர்களாகவும், விதவை மணத்தை ஆதரிப்பவர்களாகவும் இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன.

1875 இல் நியுயார்க் நகரில் தோற்றுவிக்கப்பட்ட பிரம்ம ஞான சபையின் பன்னாட்டு தலைமையகம் சென்னை அடையாறில் அமைந்திருப்பது

குறிப்பிடத்தக்கது. ரஷ்யாவின் (தற்போது உக்ரைன்) எலனா பிளாவாத்ஸ்கி அம்மையார் (1831-1891), அமெரிக்காவின் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் (1832-1907), வில்லியம் ஜட்ச் போன்றோர் சேர்ந்து உருவாக்கிய பிரம்ம ஞான சபை, இனம், மதம், பால், சாதி போன்ற வேறுபாடின்றி உலகளாவிய மனித சகோதரத்துவத்திற்குப் பாடுபடுவதாகப் புகழப்படுகிறது.

பிளாவஸ்கி அம்மையாரும், ஆல்காட்டும் புத்தமதத்திற்கு பெரும்பணியாற்றியவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். குறிப்பாக, ஆல்காட் புத்தமதத்தை உலகளாவிய நவீன மதமாக நிலைநிறுத்தியதில் அரும்பணியாற்றியவராகப் போற்றப்படுகிறார். இலங்கையின் பவுத்தத்தை நெறிப்படுத்திய ஆளுமையான ஆல்காட், மதங்களின் தத்துவங்களை அறிவியல் பூர்வமாக அணுகியவராகக் கருதப்படுகிறார்.

பெண்விடுதலைக்குப் போராடியரவராகவும், சிறந்த எழுத்தாளர் மற்றும் பேச்சாளராகவும் புகழப்படும் அன்னிவுட் பெசன்ட் அம்மையார் (1847-1933), இந்தியாவிலும் அயர்லாந்திலும் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களை ஆதரித்தவராக அறியப்படுகிறார். பெண்கள் விடுதலை, தொழிலாளர் உரிமைகள், குடும்பக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு சமூக மறுமலர்ச்சிக் கருத்துக்களுக்கும் ஆதரவளித்த பெசன்ட் அம்மையார், காங்கிரசின் மிதவாதிகளையும் தீவிரப் போக்குள்ளவர்களையும் ஒன்றிணைத்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். காங்கிரசின் தலைவராகவும், ஹோமரூல் இயக்கத்தை ஆரம்பித்தவராகவும், இந்திய விடுதலைக்கு தீவிரமாக பரப்புரை ஆற்றியவராகவும் குறிப்பிடப்படும் அம்மையார், பிரம்ம ஞான சபையின் வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றியிருக்கிறார். புகழ்பெற்ற இந்திய மெய்யியலாளரான ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியைக் கண்டறிந்த அன்னி பெசன்ட் அம்மையார், அவரை சிறந்த ஆன்மிகத் தலைவராக உருமாற்றுவதற்கும் பெருமுயற்சி எடுத்திருக்கிறார்.

ஜே.கே என அறியப்படும் ஜித்து கிருஷ்ணமூர்த்தி (1895-1986), இந்தியத் தத்துவ மரபை மேலை நாடுகளில் பெரும் வீச்சோடு அறிமுகப்படுத்தியவராகப் புகழப்படுகிறார். இந்தியத் தத்துவ ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவராக மதிக்கப்படும் திரு. கிருஷ்ணமூர்த்தி உலகம் முழுவதும் சுற்றுப்பயணங்கள் செய்து கவித்துவமான சொற்களில் மனதின் வல்லமையையும் கல்வி சீர்திருத்தங்களையும்

மனிதர்களின் மேலான வாழ்க்கை குறித்தும், காத்திரமான சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார்.

உலகின் தீர்க்க தரிசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் தீர்க்கதரிசியாகவும், உலகை வழிநடத்த வந்தவராகவும், லோக குரு என்றும் அன்னிபெசன்ட் மற்றும் பிரம்ம ஞான சபையோரால் முன்மொழியப்பட்ட ஜே.கே, பின்னர் அவ்வமைப்பிலிருந்து விலகி மனித குல மேன்மை குறித்து சிந்தித்தவராக அறியப்படுகிறார்.

சுவாமிநாராயன் சம்பிரதாயம் அமைப்பினரால் பகவான், சுவாமி நாராயண், நரநாராயணன், நாராயணின் அவதாரம் எனக் குறிப்பிடப்படும் சுவாமிநாராயண் (1781 -1830), உத்தரப் பிரதேசத்தின் சப்பையா எனும் ஊரில் பிறந்து, கண்சியாம் பாண்டே எனும் இயற்பெயர் கொண்டவராக அறியப்படுகிறார். பதினோறாவது வயதில் இந்தியாவின் பெரும் பகுதிகளை உள்ளடக்கிய யாத்திரை மேற்கொண்ட சுவாமிநாராயன், சிவன், ஈஸ்வரன், மாயை, ஆத்மா, பரப்பிரம்மா என்பது என்ன எனும் ஐந்து கேள்விகளுக்கு விடை தேடியலைந்ததாகக் கூறப்படுகிறது. 1799 இல் குஜராத் மாநிலம், சுனாகத் மாவட்டத்தில் லோச் எனுமிடத்தில் தங்கிய சுவாமிநாராயன் இராமானந்தரின் மூத்த சீடர்களுள் ஒருவரான முக்தானந்த சுவாமியிடம் விடை பெற்றதாகக் கூறப்படுகிறது.

முக்தானந்த சுவாமியின் உத்தவ் சம்பிரதாயத்தின் தலைமைச் சீடரான சுவாமிநாராயண், குருவின் மறைவிற்குப் பின் உத்தவ் சம்பிரதாயத்தை சுவாமிநாராயண் சம்பிரதாயமாக பெயர் மாற்றம் செய்ததாகக் கூறப்படுகிறது. புகழ்பெற்ற அக்ஷர்தம் எனும் கோவில்களைத் கட்டத் தொடங்கிய சுவாமிநாராயண், பரமஹம்சர்கள் எனும் சீடர் பரம்பரையை உருவாக்கி, சுவாமிநாராயண் வழிபாட்டு முறையை மக்களிடையே பரப்பியிருக்கிறார்.

நீலகண்டர் எனும் பெயரிலும், பின்னர் சகஸநாத் எனும் பெயரிலும் அறியப்பட்ட சுவாமிநாராயண், ஆங்கிலேயரோடு நல்லுறவைப் பேணியவராகக் குறிப்பிடப்படுகிறார். சுவாமி நாராயணனை மூலவராகக் கொண்டிருக்கும் சுவாமிநாராயண் அக்சர்தம்கள், இந்திய கலாச்சாரத்தையும், இந்துப் பண்பாட்டையும், கட்டிடக்கலையையும், ஆன்மீகத்தையும் வெளிப்படுத்துவதாகக் குறிப்பிடப்படுகின்றன. புதுதில்லி, காந்திநகர் உட்பட இந்தியாவில் ஏராளமான

கோவில்களைக் கட்டியுள்ள சுவாமி நாராயண் சம்பிரதாய அமைப்பு, உலகெங்கும் பல்வேறு நாடுகளிலும் பல புகழ்பெற்ற கோவல்களை உருவாக்கியிருக்கிறது.

உலகெங்கும் சுமார் ஐந்து இலட்சம் வரையிலான உறுப்பினர்கள் இருப்பதாகக் குறிப்பிடப்படும் பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலை அமைப்பு,ஆத்மா, பரமாத்மா, இராஜயோகம் போன்ற கருத்தாக்கங்களை முன் வைத்து, தியானப் பயிற்சிகளையும், தியான வகுப்புகளையும், ஆன்மிகக் கண்காட்சிகளையும் நடத்தி வருகிறது. பெண்களை சகோதரிகளாகப் பாவிக்கும்படி ஊக்குவிக்கும் பிரம்மகுமாரிகள் அமைப்பு, அன்பு, மகிழ்ச்சி, அமைதி போன்றவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பதாகவும் புகழப்படுகிறது.

பிரம்ம குமாரி பெண்கள் துறவி சங்கம் மற்றும் உலக ஆன்மீகப் பல்கலையின் தலைமையகம் அமைந்துள்ள மவுண்ட் அபு எனும் அபுமலை ராஜஸ்தான் மாநிலத்தின் ஆரவல்லி மலைத்தொடரில் அமைந்துள்ள உயரமான சிகரமாக அறியப்படுகிறது. 1722 மீட்டர் உயரமும், 22 கி.மீ நீளமும், 9 கி.மீ அகலமும் கொண்டுள்ள அபுமலை, ஆறுகளும் ஏரிகளும், நீர்வீழ்ச்சிகளும், பசுமை மாறாக் காடுகளுக்கும் பெற்று, பாலைவனச் சோலையாக அமைந்திருப்பதாகப் புகழப்படுகிறது. முன்னர் அற்புதாஞ்சல் எனும் பெயரில் அழைக்கப்பட்ட அபு, ராஜஸ்தானின் ஒரே மலை வாழிடமாகவும், சமணம், இந்து மதம் தொடர்பான பழமையான கோவில்களைக் கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பிரம்ம குமாரிகள் இயக்கத்தால் பிரம்மபாபா என அழைக்கப்படும் தாதா லேக்ராஜ் (1876-1969) தோற்றுவித்த பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகம் (1937), இராஜயோகத் தியானம் எனும் தியான முறையைப் பரப்பி வருகிறது. ஆத்மா மற்றும் பரமாத்மாவைப் (சிவ பரமாத்மா) பற்றி விளக்கும் பிரம்மகுமாரிகள் அமைப்பு, அனைத்து ஆத்மாக்களும் தியானத்தின் மூலம் உயர்வான நிலையையும், நல்ல பண்புகளையும் கொண்டதாக மாறமுடியும் என வலியுறுத்துகிறது.

ஆரம்பத்தில் ஓம் மண்டாலி எனும் பெயருடன் பாகித்தான் ஹைதராபாத்தில் நகை வணிகரான லேக்ராஜ் அவர்களால் உருவான பிரம்ம குமாரிகள் அமைப்பு, இளம் பெண்களும், இல்லறத்துப் பெண்களும், தியானம் செய்வதை, துறவு வாழ்க்கை மேற்கொள்வதை ஊக்குவித்ததால், எதிர்ப்பை சந்தித்ததாகக்

குறிப்பிடப்படுகிறது. முந்நூறு ஆதரவாளர்களுடன் இந்துாருவுக்கு இடம் மாற, அங்கும் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன. நீதிமன்றத் தடை விதிக்கப்பட்ட ஓம் மண்டலி இயக்கத்தார், பின்னர் அபு மலையில் பிரஜாபிதா பிரம்ம குமாரிஸ் ஈஸ்வர்ய விஸ்வ வித்யாலயா எனும் கல்வியமைப்பை நிறுவி, அதன் மூலம் இராஜயோகத் தியானத்தைக் கற்றுக் கொடுத்திருக்கின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டிருக்கும் பிரம்ம குமாரிகள் அமைப்பு, பெரும்பாலும் பெண்களால், பிரம்ம குமாரிகளால் நிர்வகிக்கப்பட்டும், கற்பிக்கப்பட்டும் வருவது குறிப்பிடத்தக்கது.

வள்ளலார் எனும் இராமலிங்க அடிகளார் (1823-1874), புகழ்பெற்ற ஆன்மீகவாதியாகவும்,சாதி சமயமற்ற ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டியவராகவும் அறியப்படுகிறார். நூலாசிரியர், சமூக சீர்திருத்தவாதி, அருளாளர், சொற்பொழிவாளர், சித்த மருத்துவர் எனப் பன்முகத்தன்மை கொண்டவராக் குறிப்பிடப்படும் வள்ளலார், சர்வசமய சமரச சுத்த சன்மார்க்கம் எனும் அமைப்பை நிறுவியும், பசிப்பிணியைப் போக்கும் விதமாக சத்திய தரும சாலை அமைத்தும், சமூக மற்றும் ஆன்மீக மாற்றத்திற்கு பாடுபட்டவராகப் போற்றப்படுகிறார்.

கடவுள் ஒருவரே என்றும் அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் என்றும் வலியுறுத்திய வள்ளலார், புலால் உண்ணாமை, கொல்லாமை, பலியிடாமை போன்ற அறக் கருத்துக்களையும் முன்னெடுத்திருக்கிறார். வள்ளலார் பாடிய ஐந்தாயிரத்து எந்நூற்றி பதினெட்டுப் பாடல்களின் தொகுப்பான திருவருட்பா மொழிவளம் மிக்கதாகவும், ஆன்மீகப் பெரு உணர்வை விவரிப்பதாகவும் புகழப்படுகிறது.

தண்ணீர் இன்றி வாடியிருக்கும் பயிர்களைப் பார்க்கும் போதெல்லாம் மனம் வாடுவதாகவும், பசியினால் இளைத்தவர்கள் ஒவ்வொரு வீடாக கெஞ்சிக் கேட்டும் பசி தீராமல் களைத்துப்போன ஏழைகளைப் பார்த்து உள்ளம் பதைபதைப்பதாகவும், நீங்காத நோயினால் அவதிப்படுபவர்களை நேருக்கு நேர் பார்க்கும் போது நெஞ்சம் துடிப்பதாகவும் வருந்திய சிதம்பரம் அருட்பிரகாச வள்ளலார் ஜீவ காருண்யம் மிக்கவர் எனில் மிகையாகாது.

அருட்செல்வர் என அழைக்கப்பட்ட தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் (1923- 2014), வள்ளலார் மீதான பக்தியால் சமரச சுத்த சன்மார்க்க அமைப்பிற்கு பல

வகைகளிலும் உதவி செய்தவராக அறியப்படுகிறார். தமிழ் பணிகளுக்கு, பதிப்பகங்களுக்கு, ஆன்மீக அமைப்புகளுக்கு, ஏராளமான நன்கொடைகள் அளித்தவராகக் குறிப்பிடப்படும் திரு. மகாலிங்கம், வேதாத்திரி மகாரிஷியின் ஆசிரம வளர்ச்சியிலும் பெரும் பங்கு வகித்தவராகப் புகழப்படுகிறார்.

ஆழியாறு நீர்த்தேக்கம் அருகே அருட்பெருஞ்சோதி நகர் அமைத்த (1984) வேதாத்ரி மகரிஷி (1911-2006), சமுதாயப் பணியோடு கூடிய ஆன்மீக வாழ்வை முன்னெடுத்தவராகப் போற்றப்படுகிறார். முப்பத்தைந்தாவது வயதில் இறைநிலையை உணர்ந்தவராக அறியப்படும் மகரிஷி உலக மக்களின் நல்வாழ்வு கருதி மனவளக்கலை எனும் யோக முறையை நெறிப்படுத்தியிருக்கிறார்.

பிரபஞ்சத்தைப் பற்றியும், மனித வாழ்க்கையைப் பற்றியும், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ள அருட்தந்தை வேதாத்ரி, விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஒன்றே என்றும், எல்லா மதங்களின் சாரமும் ஒன்றே என்றும் விளக்கியிருக்கிறார். மேலும் உலக அமைதி நல்லிணக்கம் குறித்து அதிகம் சிந்தித்தவராகவும் புகழப்படுகிறார்.

தனி மனித அமைதிக்காகவும் உலக சமாதானத்திற்காகவும் தொண்டாற்ற 1958 இல் மகரிஷியால் உருவாக்கப்பட்ட உலக சமுதாய சேவா சங்கம், உலக அமைதியையும் யோக வாழ்வையும் முன்னெடுத்து வருகிறது. உடல் நலத்தையும், மனநலத்தையும், சமுதாய நலத்தையும் பேணுமாறு வலியுறுத்திய வேதாத்ரி மகரிஷி, போரில்லா நல்லுலகம், பொருள் துறையில் சமநீதி, நேர்மையான நீதிமுறை, சிறப்புற்ற பெண் மதிப்பு, உணர்கல்வி, பார் முழுதும் உணவும் நீரும் பொதுவாக்கல், உண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல் போன்ற பல்வேறு கருத்தாக்கங்களை மக்கள் மனங்களில் விதைக்கவும் பெருமுயற்சி மேற்கொண்டவராப் பாராட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஓஷோ என அழைக்கப்படும் ரஜ்னிஷ் சந்திர மோகன் ஜெயின் (1931-1990), தியான குருவாகவும், சொற்பொழிவாளராகவும், டைனமிக் எனும் தியான பயிற்சியை அறிமுகம் செய்தவராகவும் அறியப்படுகிறார். தத்துவவியல் பேராசிரியராகப் பணியாற்றிய ஓஷோ, இந்தியத் தத்துவம் குறித்து ஆழமான புரிதலும், ஞானமும் கொண்டிருந்ததாகப் புகழப்படுகிறார். இருபத்தொன்றாம் வயதிலேயே விழிப்புணர்வு அடைந்தவராகக் குறிப்பிடப்படும் ஓஷோ, மனித

குலத்தின் ஆன்மீக முன்னேற்றம் குறித்தும், தியானம் மூலம் தம்மைக் கண்டறிதல் குறித்தும், ஞானத் தேடல்கள் குறித்தும் உரையாடல்கள் நிகழ்த்தியிருக்கிறார்.

சீடர்களால் பகவான் ஸ்ரீரஜனீஷ் என அழைக்கப்பட்ட ஓஷோவின் அமெரிக்க ரஜனீஷ்புர நகரம், ஆன்மீகக் குடியிறுப்பாக மாற்றமடைந்து, பின்னர் சர்ச்சைகளில் சிக்கியதாகக் கூறப்படுகிறது. புது சந்நியாசிகள் எனும் சீடர்களை உருவாக்கிய ஓஷோ, புனே ஆசிரமத்தில் தங்கிய பின் உலகின் பல்வேறு மதங்கள் குறித்தும், தத்துவங்கள் குறித்தும், ஞானிகள் குறித்தும், கிழக்கு மற்றும் மேற்கின் ஞானம் குறித்தும் நிகழ்த்திய உரையாடல்கள் பல்வேறு புத்தகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் இந்திய வரலற்றில் புதியதொரு சகாப்தமாகக் கருதப்படுகிறது. தமிழகப் பாளையக்காரர்கள், கர்நாடக நவாப்கள், மராத்திய பேஷ்வாக்கள், வேலூர் புரட்சி, பாரக்பூர் புரட்சி, முதல் சுதந்திரப் போர் என சரியான தலைமை இன்றியும், இலக்கு இல்லாமலும் முன்னெடுத்துச் செல்லப்பட்ட இந்திய சுதந்திரப் போரை, சரியான திசைக்கு சரியான முறையில் எடுத்துச் சென்றதாக இந்திய தேசியக் காங்கிரசு புகழப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் சிதறிக் கிடந்த இந்தியாவை ஒன்றிணைத்ததும் ஆங்கிலக் கல்வியின் மூலமாக இந்தியர் அனைவரும் ஒன்றிணைய முடிந்ததும் இந்திய விடுதலைக்கு சாதகமான செயல்கள். ஆங்கில அரசு உருவாக்கிய கல்விகூடங்கள் தொடர்வண்டி, தந்தி, தபால் சேவைகளும் நாம் இந்தியர் எனும் உணர்வையும் நம்நாடு எனும் சிந்தனையையும் ஊட்டி வளர்த்திருக்கிறது. ஆங்கிலக் கல்வியின் மூலமாக அறியப்பட்ட இங்கிலாந்து குடியரசுப் போராட்டங்களும் அமெரிக்க, பிரெஞ்சு புரட்சிகளும் படித்த இளைஞர்களிடையே தாய் நாட்டின் விடுதலை வேட்கைக்கு உரமிட்டிருக்கின்றன. சென்னை, மும்பாய், கொல்கத்தா நகரங்களின் பல்கலைக்கழகங்களும், இந்து சமய மறுமலர்ச்சியும், இந்திய விடுதலை வேட்கையை துரிதப்படுத்தியிருக்கின்றன.

இந்திய தாயின் நல்வினையாக, இந்தியாவின் மீதும், இந்திய ஞானத்தின் மீதும் பேரன்பு கொண்டிருந்த இங்கிலாந்து உட்பட பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்தவர்களும், இந்திய விடுதலைக்கு ஆதரவளித்தும் சமூக மறுமலர்ச்சிக்கும் அயராது பாடுபட்டிருக்கின்றனர்.

இரண்டு நூற்றாண்டுகள் நீடித்த விடுதலை இயக்கத்தை இந்திய ஐக்கியத்தின் மூலம் முழுமைபெறச் செய்தது காங்கிரசு எனில் மிகையாகாது. காந்தியடிகளின் வருகைக்குப் பின் நாடு தழுவிய மக்கள் இயக்கமாக மாறிய சுதந்திரப் போராட்டத்தை எத்தனையோ இழப்புகளுக்கு மத்தியிலும் தீவிரமாக முன்னெடுத்தவர்களாக காங்கிரஸ் தொண்டர்கள் புகழப்படுகின்றனர்.

1892 முதல் 1895 வரை பிரித்தானிய நாடாளுமன்றத்தின் உறுப்பினராக இருந்த தாதா பாய் நௌரோஜி (1825-1917), இந்திய மக்களுக்கு கல்வியறிவும் மேன்மையும் கிடைக்க வேண்டுமென விரும்பிய ஆங்கிலேய குடிமைப்பணி அதிகாரி ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (1829-1912), இந்திய மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்த விரும்பிய ஆங்கிலேய குடிமைப் பணி அதிகாரி சர் வில்லியம் வெட்டர்பன் (1838-1918), இந்திய தேசியக் காங்கிரசின் முதல் தலைவராகப் பணியாற்றிய உமேஷ் சந்திர பானர்ஜி (1844-1906), இந்திய தேசிய சங்கம் எனும் அமைப்பை நிறுவிய சர் சுரேந்திர நாத் பானர்ஜி (1848-1925) போன்ற முக்கியத் தலைவர்களால் 1885 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்டிருக்கிறது.

பம்பாயில் நடைபெற்ற முதல் கூட்டத்தில் 72 உறுப்பினர்கள் பங்கு பெற்றிருக்கின்றனர். இந்திய தேசிய காங்கிரஸ் எனும் பெயர் மாற்றத்தோடு 436 பேர் கலந்து கொண்ட இரண்டாவது கூட்டம் 1886 டிசம்பர் இருபத்தியேழிலும், மூன்றாவது கூட்டம் அதே தேதியில் சென்னையிலும் நடைபெற்றிருக்கின்றன. 1907 இல் ஆங்கிலேயருடன் நயந்து பேசி, விண்ணப்பித்து, சலுகைகள் பெற்று, படிப்படியாக சுதந்திர வேட்கையை அடையலாம் எனும் மிதமான போக்கும், தீவிரமான சுதந்திரப் போரை முன்னெடுத்து வெள்ளையருடன் மோதி விடுதலையடைய வேண்டும் எனும் தீரமான போக்கும் காங்கிரசை இருபிளவாக ஆக்கியிருக்கிறது. மிதவாதிகள் தீரமானவாதிகள் எனப் பிரிந்த இரு அணியின் லட்சியமும் தாய் நாட்டிற்கு விடுதலை பெற்றுத் தருவதாகவே இருந்திருக்கிறது. 1905 இன் வங்கப் பிரிவினையும் 1919 இன் ரௌலட் சட்டமும் சுதந்திர போராட்டங்களை மேலும் உக்கிரமாக்கியிருக்கின்றன.

1894 ஆம் ஆண்டில் நாட்டல் இந்திய காங்கிரசைத் தொடங்கியிருந்த காந்தி, இந்தியா திரும்பிய பின், கோபால கிருஷ்ண கோகலேயின் ஆலோசனைப்படி, இந்தியாவைச் சுற்றி வந்து, இந்தியர்களின் சுதந்திர தாகத்தை அனுபவப்பூர்வமாக

உள்வாங்கியிருக்கிறார். 1924 இல் நடைபொற்ற பெல்காம் காங்கிரஸ் மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காந்தியடிகள், 1915 ற்கும் 1924 ற்கும் இடைப்பட்ட காலத்தில் பல்வேறு சத்தியாகிரகப் போராட்டங்களையும் உண்ணா விரதங்களையும், சிறைச்சாலை வாழ்க்கையையும் கடந்துவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் பெரும் மாறுதல்களை நிகழ்த்தியிருந்த காந்தியும் காங்கிரசும், பின்னர் சட்ட மறுப்பு இயக்கம் வெள்ளையனே வெளியேறு போன்ற இயக்கங்கள் மூலம் மிகப் பெரியளவிலான விடுதலை வேட்கையை நிகழ்த்தியிருக்கிறது. இந்து - இசுலாமியர் ஒற்றுமைக்கும், ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்விற்கும் பெரும்பாடுபட்ட காங்கிரசும், காந்தியும், பல்வேறு இளம் தலைவர்களை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவித்ததும், எதிர்கால இந்தியாவிற்கான அடித்தளம் அமைத்ததும் பாராட்டத்தக்கது.

ராஜாஜி, படேல், நேரு உட்பட இந்தியா முழுவதிலும் ஏராளமான தலைவர்கள் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தது வரலாற்றுத் தருணம். ஒன்பது ஆண்டுகளை சிறையில் கழித்ததாக அறியப்படும் ஜவகர்லால் நேரு (1889-1964), இந்திய சுதந்திரப் போரட்டத்தின் வழியே உலகத் தலைவராக உருவாக்கி வந்திருக்கிறார். காந்தியடிகளின் பேரன்பைப் பெற்றவரான நேரு, உலக வரலாற்றை அறிந்து வைத்திருந்தது பெருமைக்குரியது.

சுதந்திரப் போராட்டத்திலும் அதற்குப் பிறகான நவீன இந்தியக் கட்டுமானத்திலும் நேருவின் பணி போற்றத்தக்கது. 1916 இன் லக்னோ மாநாட்டில் மோதிலால் நேருவுடன் சென்று காந்தியடிகளைச் சந்தித்தவராக அறியப்படும் நேரு, விரைவிலேயே காந்தியின் நம்பிக்கைகுரியவர்களில் ஒருவராக அடையாளம் பெற்றிருக்கிறார். ஒத்துழையாமை இயக்கத்திற்காக சிறை சென்ற நேரு, பின்னர் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களின் போதும் ஆங்கிலேய அரசால் சிறைவைக்கப்பட்டிருக்கிறார். சிறை வாழ்க்கையில் அன்பு மகளான இந்திரா பிரியதர்ஷினிக்கு எழுதிய உலக வரலாற்றின் காட்சிகள் நூல் அவரது அறிவுத்திறத்திற்கு சான்றாகப் புகழப்படுகிறது. நேருவின் கண்டுணர்ந்த இந்தியா நூலும் வரலாற்றின் பெரும் பண்டிதராக நேருவை அடையாப்படுத்துகிறது.

சுதந்திரம் பெற்ற பின் பண்டித நேரு முன்னெடுத்த அரசியல் சாசனப் பணிகள், இந்தியாவை சமய சார்பற்ற நாடக்கியதில் காட்டிய அக்கறை, அணி சேராக் கொள்கை, ஐந்தாண்டுத் திட்டங்கள், சோவியத் நாட்டுடனான நல்லுறவுகள், காமன்

வெல்த் நாடுகளின் கூட்டமைப்பு, விவசாய மற்றும் தொழில் திட்டங்கள், மக்கள் நலப் பணிகள், மாநிலப் பிரிவினைகள், தேர்தல் சீர்திருத்தங்கள், ஐக்கிய நாடுகள் அவைப் பணிகள் உலக நாடுகளின் தலைவர்களோடு மேற்கொண்டிருந்த நல்லுறவுகள், அவரை உலகத் தலைவர்களுள் குறிப்பிடத்தக்கவராக மாற்றியதோடு, இந்தியாவையும் உலக அரங்கில் தலைநிமிரச் செய்திருக்கிறது. சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளிலேயே வலிமைபடைத்த நாடாக இந்தியாவை மாற்றியதில் நேரு பெரு வெற்றி பெற்றதாகவே ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. நாட்டின் முதல் தேர்தலை சிறப்பாக நடத்திக் காட்டி, குடியரசு ஆட்சியை வேரூன்றச் செய்ததில் இந்தியாவின் புகழும், நேருவின் புகழும் உலகளவில் பெருகியதாகப் பாராட்டப்படுகிறது.

இந்தியாவின் நவீன சிற்பி நேரு எனில், இந்தியா எனும் தேசத்தை நிர்மாணித்த புகழுக்குரியவராக சர்தார் வல்லபாய் பட்டேல் (1875-1950) புகழப்படுகிறார். இந்திய விடுதலைப் போரின் முக்கியத் தலைவர்களுள் ஒருவரான பட்டேல், இந்திய துணைப் பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் பணியாற்றி, நாட்டின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் அரும்பணி ஆற்றியவராகப் போற்றப்படுகிறார்.

சுதந்திர இந்தியாவின் முதலாவது குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகித்த டாக்டர் இராசேந்திர பிரசாத் (1884-1963), ஒத்துழையாமை, வெள்ளையனே வெளியேறு போன்ற போராட்டங்களில் பங்கு கொண்டவராகவும், இந்திய தேசியக் காங்கிரசின் தலைவர் பதவி வகித்தவராகவும் அறியப்படுகிறார். இருமுறை குடியரசுத் தலைவராகப் பதவி வகித்த டாக்டர் பிரசாத், நாடு குடியரசாக மலர்வதற்குப் பாடுபட்டபவராகவும், அரசியலமைப்புச் சட்ட உருவாக்கத்தில் பங்கு கொண்டவராகவும் போற்றப்படுகிறார்.

1952 முதல் 1962 வரை குடியரசு துணைத் தலைவராகவும், 1962 முதல் 1967 வரை குடியரசு தலைவராகவும் பதவி வகித்த சர்வபள்ளி இராதகிருஷ்ணன் (1888-1975), சிறந்த கல்வியாளராகவும், தத்துவஞானியாகவும், சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்தவராகவும் போற்றப்படுகிறார்.

இந்தியத் தத்துவம், கிழக்கு மற்றும் மேற்கின் தத்துவ வரலாறு, இந்துக்களின் வாழ்க்கை நோக்கு, இந்திய சமயங்களின் சிந்தனை, சமயமும் கலாச்சாரமும்

உட்பட ஏராளமான நூல்கள் எழுதியுள்ள டாக்டர் இராதகிருஷ்ணன் பல்வேறு பல்கலைக்கழகங்களில் ரோசிரியராக, துணைவேந்தராகப் பணியாற்றியதோடு உலகப் பல்கலைகளில் காத்திரமான சொற்பொழிவுகள் நிகழ்த்தியவராகவும் புகழப்படுகிறார்.

கல்வியானது மனிதனை நெறிமுறைப்படுத்துவதோடு சுதந்திர சிந்தனையாளனாக்கவும் வேண்டும் என வலியுறுத்திய பேராசிரியர் ராதா கிருஷ்ணன், பல்கலைக் கழகங்கள் மனித நேயத்தையும், பொறையுடைமையையும், கருத்துப் புதுமையையும், உண்மைத் தேடலையும் நோக்கமாகக் கொண்டு கற்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியிருக்கிறார்.

சென்ற இடமெல்லாம் மாணவர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட உயர்ந்த ஆசிரியர் திரு.இராதகிருஷ்ணன் பிறந்த செப்டம்பர் ஐந்தாம் தேதி ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுவது ஆசிரியர்கள் அனைவருக்கும் உவப்பானது.

இந்திய பாகிஸ்தான் பிரிவினையைத் தடுக்க மகாத்மா காந்தி எவ்வளவோ முயன்றும் அது நிறைவேறாமல் போனதற்கு ஆங்கிலேயரின் அரசியல் நோக்கமும் ஒரு காரணமாகக் கருதப்படுகிறது. கோகலே மீது பெருமதிப்பு வைத்திருந்த காந்தியும், ஜின்னாவும் 1940 கள் வரை ஒத்த கருத்தோடு சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பாகிஸ்தான் எனும் தனி நாடு பெற்றே தீருவது என்பதில் உறுதியாக நின்ற முகம்மது அலி ஜின்னா (1876-1948) உட்பட, ஏராளமான இசுலாமியர்கள் விடுதலைப் போராட்டங்களில் பெரும் எண்ணிக்கையில் ஈடுபட்டதாக வரலாறு குறிப்பிடுகிறது.

இந்தியப் பிரிவினையை எதிர்த்தவராகவும், இந்து-முஸ்சும் ஒற்றுமைக்கு பாடுபட்டவராகவும், இந்திய விடுதலை இயக்கத்தின் மூத்த அரசியல் தலைவர்களின் ஒருவராகவும் போற்றப்படும் மௌலான அபுல் கலாம் ஆசாத் (1888-1958), சுதந்திர இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சராகப் பணியாற்றி, சிறப்பான கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவராக அறியப்படுகிறார்.

பி.ஏ பொதுத் தேர்வை எழுதாமல் காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போராட்டத்தில் பங்கு கொண்டு சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தவராகப் புகழப்படும் முகம்மது இசுமாயில் எனும் காயிதே மில்லத் (1896-1972), இந்திய முசுலிம் லீக் கட்சியின் தலைவராக இருந்து சுதந்திரப் போராட்டத்திலும் பின்னர்

சென்னை மாகாண மற்றும் கேரளா மாநிலத்தின் அரசியலிலும் பங்குகொண்டு அரசியல் பணி செய்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

1906 இல் டாக்காவில் தொடங்கப்பட்ட அகில இந்திய முசுலிம் லிக், பாகிஸ்தான் எனும் இசுலாமிய நாடு உருவாக்கப்பட்டதில் முக்கியப் பங்காற்றியதாகக் அறியப்படுகிறது. பாகிஸ்தான் மக்களால் பாபா-ஏ-கௌம் என அழைக்கப்படும் முகம்மது அலி சின்னா, முசுலீம் லீக்கின் முக்கியத் தலைவராக செயல்பட்டிருக்கிறார்.

இந்து-இசுலாமிய ஒற்றுமைக்கான தூதர் எனும் அளவிற்குப் புகழப்பட்ட ஜின்னா பாய், நாக்பூர் காங்கிரசு கூட்டத்திற்குப் பின், இசுலாமியர்கள் தங்களை கூட்டாக இணைத்துக் கொண்டு போராட வேண்டும் என பேச ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது. இட ஒதுக்கீடு, தனி மகாணம் என பல்வேறு கோரிக்கைகள் வைத்து போராடி வந்த முஸ்லிம் லீக், காங்கிரசு உருதுக்குப் பதிலாக இந்தியை மாகாண மொழியாக்கியது, வந்தே மாதரம் பாடலைப் பாடியது , பசுவதை தடுப்புப் சட்டங்கள் இயற்றியது போன்றவற்றில் முரண்பட்டதாக கூறப்படுகிறது.

இரண்டாம் உலகப் போரில் பிரித்தானியத்தை ஆதரித்த ஜின்னா, பாகிஸ்தான் கோரிக்கையும் அழுத்தமாக வைத்திருக்கிறார். ஜின்னா பாகிஸ்தானுக்காகப் போராட வேண்டுமென மக்களிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும், அதைத் தொடர்ந்து வங்கம், பஞ்சாப், பீகார் போன்ற பகுதிகளில் மதக்கலவரங்கள் மூண்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் தனித் தனி நாடுகளாக உருவாக்கம் பெற்றபோது, இரு நாடுகளிலும் நிகழ்ந்த கலவரங்களும், இரு நாடுகளுக்கும் இடம் பெயர்ந்த மக்கள் அடைந்த துயரங்களும், இழப்புகளும், இந்தியப் பண்பாட்டிற்கு கறையே.

காந்தியின் மீது பேரன்பு கொண்டவர்களும், காந்திய வாழ்க்கை முறை, வழிமுறை மீது பற்றுக் கொண்டவர்களும், காந்திய வழியிலான அறப்போராட்டங்களில் பங்குகொண்டதோடல்லாமல் காந்தியக் கொள்கைகளோடும் வாழ்ந்து புகழடைந்திருக்கிறார்கள். காந்தி தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்திலேயே அவருக்கு சிறந்த நண்பர்களும் சீடர்களும் வாய்க்கப் பெற்றிருந்ததாக அறியப்படுகிறது.

தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் ஆங்கிலேயரை எதிர்த்து பல்வேறு அறப் போராட்டங்கள் நடத்திய காந்திக்கு ஆங்கிலேயர்கள் பலரும் உறுதுணையாக இருந்ததும், காந்தியோடு போராடியதும் ஆங்கிலேய அரசோடு பேச்சு வார்த்தை நடத்தியதும் ஆச்சரியமானது.

ஆங்கிலேயரை வெறுக்காமல் ஆங்கிலேய அரசை இந்திய மண்ணிலிருந்து வெளியேற்ற விரும்பிய காந்தியின் நோக்கத்தை ஏராளமான வெள்ளையர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலேயர்களை எதிரிகளாக அல்ல நண்பர்களாகவே அனுப்பி வைப்போம் எனும் அளவிற்கு மிகுந்த அன்புடையவராக அறியப்படும் காந்திக்கும் காந்தியக் கொள்கைக்கும் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் வாழ்ந்த ஏராளமான ஆங்கிலேயர்களின் ஆதரவு இருந்திருக்கிறது.

காந்தியின் மீது பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தவராக அறியப்படும் ஹெர்மன் கலென்பேக் (1871- 1945), காந்தியின் போனிக்ஸ் குடியிருப்பில் ஒன்றாகத் தங்கிய ஹென்றி போலக் மற்றும் மிலி போலக் தம்பதியினர், காந்தியின் வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையவராகக் கருதப்படும் சார்லஸ் ப்ரீர் ஆன்ரூஸ் (1871-1940) போன்ற பலரும் தென்னாப்பிரிக்க காந்தியோடும் காந்தியப் போராட்டங்களிலும் நெருங்கிய தொடர்புடையவர்களாக அறியப்படுகின்றனர். தென்னாப்பிரிக்க காந்தியை மத சகிப்புத்தன்மை நிரம்பியவராக மாற்றியதில் யூதர், கிறித்தர், இசுலாமியர், தமிழர் என தென்னாப்பிரிக்காவில் அவருக்கு கிடைத்த நெருங்கிய தோழர்களுக்கும் தொடர்பு இருப்பதாக் குறிப்பிடப்படுகிறது.

காந்தி எனும் மனிதர் நூலை எழுதியுள்ள மிலியின் கூற்றுப்படி, காந்தியின் எழுத்து மேசை மீது இயேசுவின் படம் எப்போதும் வைக்கப்பட்டிருந்ததாக அறியப்படுகிறது. கிறித்துவின் மலைப் பிரசங்கம் பற்றி மிகுந்த மதிப்புக் கொண்டிருந்த காந்தி, அனைத்து மதங்கள் குறித்தும் மதிப்பான எண்ணங்கள் கொண்டிருந்தவராகவே கருதப்படுகிறார். ஒரு நல்ல இந்து நல்ல கிறித்தவனாகவும் இருப்பார் எனும் கருத்தும் காந்தியிடம் இருந்திருக்கிறது.

இங்கிலாந்தைச் சேர்ந்த மேடலின் ஸ்லேட், காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தில் தங்கி, மீரா பென் எனும் பெயர் மாற்றம் பெற்று, காந்தியத்தின் மீதும் இந்திய மக்கள் மீதும் பேரன்பு செலுத்தியவராகப் புகழப்படுகிறார்.

பூதான் எனும் மண்கொடை இயக்கத்திற்காகப் பெரிதும் அறியப்படும் வினோபா பாவே (1895-1982) காந்தியடிகளின் ஆன்மீக வாரிசு எனும் அளவிற்குப் போற்றப்படுகிறார். காந்தியடிகளுடன் இணைந்து விடுதலைக்குப் பாடுபட்ட வினோபா பாவே, மகாத்மா கனவு கண்ட சர்வோதய சமுதாயக் கொள்கைக்காக அயராது பாடுபட்டவராகவும், இந்தியா முழுமைக்கும் நடந்தே சென்று அதிக நிலம் வைத்திருந்தவர்களிடம் நிலதானம் பெற்று, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கியவராகவும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார்.

காந்தி மனித குல மேன்மைக்கு, மனித சமுதாய உயர்வுக்குக் கண்டடைந்த வழிமுறை சர்வோதயம் எனப்படுகிறது. ஒழுக்கமும், எளிமையும், நேர்மையும், மாறாத அன்பும், உயிரோட்டமும் நிறைந்ததான ஒரு உயரிய சமூக அமைப்பு குறித்து சிந்தித்த காந்தி, அப்படியான ஒரு சமூக மாற்றத்திற்கே தமது வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்டிருக்கிறார்.

புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் ரஸ்கினின், கடையனுக்கும் கடைத்தேற்றம் (அன்டு தி லாஸ்ட்) எனும் நூலில் காணப்படும், எல்லோருடைய நலனில்தான் தனிப்பட்டவரின் நலன் அடங்கியுள்ளது, தங்கள் உழைப்பினால் வாழ்க்கைப் பொருளைத் தேடிக் கொள்ளும் அனைவருக்கும் ஒரே மாதிரியான உரிமை உண்டு மற்றும் நிலத்தில் உழுது பாடுபடும் குடியானவரின் வாழ்க்கையும், கைத்தொழில் செய்பவரின் வாழ்க்கையுமே வாழ்வதற்கு உகந்த மேன்மையான வாழ்க்கையாகும் எனும் அறக்கருத்துகளை ஒட்டியே சர்வோதய சமுதாயக் கோட்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

உயர்ந்த சமுதாயம் எப்படி இருக்க வேண்டும், சமுதாயக் கொள்கைகள் பொருளியில் தேவைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை சர்வோதயம தெளிவாக்குகிறது. பொருளியல் கொள்கைகள், அரசியல் கொள்கைகள், சமயக் கொள்கைகள் எனப் பல்வேறு கொள்கைகளும், விளக்கங்களும் கொண்டு உருவாக்கப்பட்ட காந்தியடிகளின் சர்வோதயக் கனவு நனவாகி மானுட குலம் உயர்வடைய வேண்டும் எனும் நோக்கோடு பலரும் பாடுபட்டிருக்கினறனர்.

வல்லவனுக்கே வாழ உரிமை என்னும் விலங்கு நிலையிலிருந்து, வாழு வாழ விடு எனும் மனித நிலைக்கு உயர்ந்து, பிறர் வாழ வாழ் எனும் தெய்வ நிலைக்கு உயரும் கொள்கைகளை சர்வோதயம் கற்பிக்கிறது.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நடைபயணம் மேற்கொண்டு ஏறக்குறைய முப்பது லட்சம் ஏக்கர்கள் தானமாகப் பெறறு காந்திய ஆன்மீகத்தை முன்னெடுத்த வினோபா போல், கிராமங்களே இந்தியாவின் உயிர் எனக் கண்டடைந்த ஜோசப் கொர்னலியஸ் செல்லத்துரை குமரப்பா (1892-1960), காந்தியின் கிராம வழிப் பொருளாதாரத்தில் மிகச் சிறந்த அறிஞராகவும் காந்தியவாதியாகவும் போற்றப்படுகிறார்.

காந்தியத் தத்துவத்திற்கு பொருளாதார வடிவம் கொடுத்தவராக அறியப்படும் ஜே.சி. குமரப்பா, வேளாண்மைக்கும் உடல் நலத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளதை சுட்டிக்காட்டியவராகவும், கிராமப்புறங்களில் கிணறுகளுக்கும் மின்சார இறைப்பான்களுக்கும் மாற்றாக குளங்களையும், ஏரிகளையும் அதிகளவில் உருவாக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியிருக்கிறார்.

தமிழகத்தில் சர்க்கரை ஆலைகளை அதிகளவில் திறந்தபோது எதிர்த்துப் போராடியவராக அறியப்படும் திரு. குமரப்பா, கிராமங்கள், கைத்தொழில்கள், வேளாண்மை, சுற்றுச் சூழல் உட்பட பல்வேறு துறைகளில் காந்தியம் சார்ந்த கனவு கண்டவராகவும், நிபுணத்துவம் கொண்டிருந்தவராகவும், இயற்கை சார்ந்த அழிவற்ற பொருளாதரம் குறித்து சிந்தித்தவராகவும் புகழப்படுகிறார். இந்தியாவின் எளிய மக்களுக்கான உற்பத்தி என்பதற்கு மாற்றாக வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வெளிநாட்டவருகுமான உற்பத்தி நிலையமாக மாறிவிட்ட பொருளாதாரத்தை என்னவென்பது..

மகாத்மாவின் நெருங்கிய நண்பரும் எல்லைக் காந்தி எனப் புகழப்பட்டவருமான கான் அப்துல் க.்.பார் கான் (1890-1988), பாபா அம்தே என அறியப்பட்ட முரளிதர் தேவதாசு ஆம்தே (1914-2008), மகாதேவ தேசாய் (1892-1942) காடுகளைக் காக்கும் சிப்கோ இயக்கத்தின் முன்னோடியான சுந்தர்லால் பகுகுணா (பிறப்பு 1927), எம். பந்தவச்சலம் (1897- 1987), பசுவன்தாஸ் கிருபளானி (1888-1982), மதுரை காந்தி என அறியப்படும் ஆர். சுப்பராமன் (1905-1983), தரம்பால் (1922-2006), ஆச்சார்ய கிருபாளினி என அறியப்படும் ஜீவிதராம் ஜெயப்பிரகாஷ் நாராயணன் (1902-1979) மற்றும் பிரபாவதி தேவி (1906-1973) தம்பதியர், சங்கரலிங்கம் ஜெகந்நாதன் மற்றும் கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் தம்பதியர், காந்தியடிகளின் பேரனான கோபாலகிருஷ்ண காந்தி (பிறப்பு-1946) உட்பட ஏராளமானோர் சிறந்த காந்தியவாதிகளாகப் போற்றப்படுகின்றனர்.

சிறந்த காந்தியவாதியாக அறியப்படும் லால் பகதூர் சாஸ்திரி (1904-1966) நாட்டின் மூன்றாவது தலைமை அமைச்சராக (1964-1966) பணியாற்றியதோடு, ஆட்சியிலிருந்த குறுகிய காலத்தில் பசுமை இந்தியா போன்ற திட்டங்களையும், 1965 இல் போர் தொடுத்த பாகிஸ்தானுக்கு எதிராக பெருவெற்றி பெற்றதோடு வாழ்க விவசாயி எனும் ஜெய் ஜவான், ஜெய் கிஷாண் தாரக மந்திரத்தை விட்டுச் சென்றவராகவும் புகழப்படுகிறார்.

பல்வேறு சுதந்திரப் போராட்டங்களிலும் மிகத் தீவிரமாகப் பங்கெடுத்தவராகவும், ஒன்பது ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டவராகவும் அறியப்படும் சாஸ்திரி, நடுவண் அமைச்சராகவும் பின்னர் நாட்டின் மிக அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியில் அமர்ந்தும் கூட சொந்தமாக ஒரு வீடில்லாமல் இருந்ததாகவும், தவணை முறையில் கார் வாங்கியதாகவும் குறிப்பிடப்படுகிறது. என்னே காந்தியர்களின் உறுதியும் நேர்மையும்!

கடைசிவரை வாடகை வீட்டிலும் அரசு ஒதுக்கித் தந்த வீட்டிலும் வசித்தவராகக் குறிப்பிடப்படும் மொரார்ஜி ரன்சோதிசி தேசாய் (1896-1995), சிறந்த காந்தியவாதியாகவும், சுதந்திரப் போராட்ட வீரராகவும், இந்திய நாட்டின் ஆறாவது தலைமை அமைச்சராகவும் (1977-1979) அறியப்படுகிறார்.

சாஸ்திரிக்குப் பின் மெராஜி தேசாய் மற்றும் இந்திராகாந்தி இடையே அடுத்த பிரதமராவதற்கு போட்டி நிலவியதாகக் குறிப்பிடப்படுகிறது. அகில இந்தியக் காங்கிரசின் தலைவராக இருந்த காமராசரின் ஆதரவுடன் இந்தியாவின் பிரதமராக இந்திராவும், தேசாய் துணைப் பிரதமராகவும், நிதியமைச்சராகவும் பதவி ஏற்றிருக்கிறார்கள். நேருவிற்குப் பின்பும், சாஸ்திரிக்குப் பின்பும், புகழ்பெற்ற காந்தியவாதியான குல்சாரிலால் நந்தா (1898-1998), சில நாட்கள் இடைக்காலப் பிரதமராக இருந்திருக்கிறார்.

இந்தியாவின் முதன்மை அமைச்சராகப் பதவி வகித்த இந்திரா காந்தி, தமது தந்தையின் காலத்திலேயே இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக (1959-1960) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சாஸ்திரியின் வற்புறுத்தலால் பாராளுமன்ற மேல்சபை உறுப்பினராகவும் மத்திய தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சராகவும் இந்திராகாந்தி ஆனதாகக் குறிப்பிடப்படுகிறது.

நேரு மற்றும் கமலா நேருவின் (1899-1936) ஒரே மகளான இந்திரா, இளமையில் இருவரையும் பிரிந்தே வளர்ந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். கமலா நேருவின் ஐரோப்பிய மருத்துவ ஓய்வுக் காலத்தில் உடனிருந்தவராக அறியப்படும் இந்திரா, இலண்டன் ஆக்ஸ்போர்ட் கல்லூரியில் படித்தவராகவும், ஜகாங்கிர் லண்டன் பொருளாதாரப் பள்ளியில் படித்த ப்பெரோஜ் ஜகாங்கிர் காந்தியோடு (1912-1960) காதலாகி, 1942 இல் திருமணம் நடைபெற்றதாகவும் அறியப்படுகிறது. 1944 இல் ராஜீவ் காந்தியும் 1946 இல் சஞ்சய் காந்தியும் பிறந்திருக்கின்றனர்.

பேரன்களான ராகுல் காந்தியும், சஞ்சய் காந்தியும் முறையே இந்திய தேசியக் காங்கிரசிலும் பாரதீய ஜனதாவிலும் அரசியல்வாதிகளாகத் தொடர்வதும், ராஜிவ் காந்தி அறக்கட்டளையின் பொருளாராகவும், ராபர்ட் ராஜேந்திர வதேரவின் மனைவியாகவும் அறியப்படும் பிரியங்கா காந்தி, ராகுலின் சகோதரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேருவிற்குப் பிறகான இருபதாண்டு கால அரசியல் இந்திரா காந்தியை மையம் கொண்டே நடந்திருக்கிறது. இரும்புப் பெண்மணியாக அறியப்படும் இந்திரா காந்தி எடுத்த சில அரசியல் முடிவுகள் மிகப் பெரியளவிலான அரசியல் கொந்தளிப்புகளை உருவாக்கியிருக்கிறது.

பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி, வேளாண்மை, தொழில் வளம், பொருளாதார முன்னேற்றம், வேலை வாய்ப்புப் பெருக்கம் எனத் தொடர்ந்து செயலாற்ற வேண்டிய இந்திரா காந்திக்கு, கட்சியிலும் ஆட்சியிலும் ஏராளமான பிரச்சினைகள் வளர்ந்திருக்கின்றன. தேசாயைக் கேட்காமல் 1969 இல் வங்கிகளைப் பொதுவுடமையாக்கியதாக குறிப்பிடப்பட்டு, கட்சி இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது. பொதுவுடமைவாதிகள் போன்ற மற்ற கட்சியரின் ஆதரவுடன் ஆட்சியை தொடர்ந்த இந்திரா காந்திக்கு, 1971 இல் நடைபெற்ற பாகிஸ்தான் போர் வெற்றியும், பங்களாதேஷ் உருவாக்கமும், சிம்லா ஒப்பந்தமும், பெரும் புகழைத் தந்திருக்கின்றன. சிரிக்கும் புத்தர் எனும் பெயரில் நிகழ்த்தப்பட்ட அணு வெடிப்பும், அது தொடர்பாக எழுந்த உலக எதிர்ப்புகளும், அவற்றைச் சமாளித்த விதமும், உலக அளவிலான தலைவராக இந்திரா காந்தியை உயர்த்தியிருக்கின்றன.

பாபுஜி என அன்பாக அழைக்கப்பட்ட பாபு ஜெகஜீவன்ராம் (1908-1986), சுதந்திரப் போராட்ட வீரர், சமூகச் சீர்திருத்தவாதி, பசுமைப் புரட்சிக்கு

வழிவகுத்தவர், நீண்ட கால அரசியலாளர் எனப் பல்வேறு பரிமாணங்கள் கொண்டவராகப் புகழப்படுகிறார். ஐம்தாண்டுகளுக்கும் மேலாக சட்டமன்ற, நாடாளுமன்ற, அமைச்சரவைப் பதவிகள் வகித்த ஜெகஜீவன்ராம், உச்சமாக இந்தியக் குடியரசின் துணைப் பிரதமராக 24 மார்ச்சு 1977 முதல் 28 சூலை 1977 வரை பதவி வகித்திருக்கிறார். 1967-1970 காலத்தில் உணவு மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சராகவும், 1974-1977 ஆண்டுகளில் வேளாண்மை மற்றும் நீர்வளத் துறை அமைச்சராகவும் இருந்த பாபுஜி, நாட்டில் நிலவிய உணவுப் பற்றாக்குறையைப் போக்கி, உணவுப் பொருள்களின் உற்பத்தியில் இந்தியாவை தன்னிறைவு பெற்ற நாடாக விளங்கச் செய்ததாகப் போற்றப்படுகிறார்.

இந்தியாவின் உணவுப் புரட்சிக்கு பெரிதும் பாடுபட்டவராக சிதம்பரம் சுப்ரமணியம் (1910-2000) புகழப்படுகிறார். சுதந்திரப் போராட்ட வீரராகவும், 1952-62 காலகட்ட தமிழக அரசில் கல்வி, சட்டம், நிதி போன்ற துறைகளிலும், பின்னர் 1962 நடுவண் அமைச்சரவையில் எக்கு சுரங்க அமைச்சராகவும் பணியாற்றிய சி. சுப்ரமணியம், 1965 ல் உணவுத்துறை அமைச்சராக பசுமைப்புரட்சிக்கு வித்திடும் திட்டங்களை, எம்.எஸ் சுவாமிநாதன் போன்றவர்களோடு முன்னெடுத்திருக்கிறார். நெருக்கடி காலத்தில் நிதியமைச்சராக இருந்த சுப்ரமணியம், தொடர்ந்து நாட்டின் பல்வேறு உயர் பொறுப்புகளிலும் பதவி வகித்திருக்கிறார். எமது கனவு இந்தியா, வறுமை மீதான போர், சுயசரிதை போன்றவற்றை இலக்கியப்படுத்தியிருக்கும் சுப்ரமணியம் தமிழகத்திற்கும் பெருமை சேர்த்தவராக அறியப்படுகிறார்.

இந்திய பசுமைப் புரட்சியை நடைமுறைப்படுத்தியதின் அறிவியல் ஆளுமையாக அறியப்படும் மான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதன் (பிறப்பு-1925), தலை சிறந்த வேளாண்மை அறிஞராகவும், வேளாண்மை துறையில் பல்வேறு பொறுப்புகளில் இருந்து உணவுத்துறையில் நாடு தன்னிறைவு அடைவதற்கு பாடுபட்டவராகவும் புகழப்படுகிறார். ஜப்பானிலிருந்து கோதுமையும், சீனாவிலிருந்து நெல்லும், இந்தியாவில் அறிமுகம் செய்து உற்பத்தியைப் பெருக்கிய சுவாமிநாதன் பட்டினி இல்லா இந்தியாவை உருவாக்க வேண்டும் எனும் தமது கனவை நனவாக்கியவர் எனில் மிகையாகாது.

வறுமையை விரட்டு எனும் கரீபி ஹடாவோ கொள்கைகளை முன்னெடுத்த பிரதமருக்கு, 1971 ஆம் ஆண்டின் தேர்தல் வெற்றி தொடர்பாக அலகாபாத்

நீதிமன்றம் அளித்த தீர்ப்பும் அதனை தொடர்ந்து அரசியல் சிக்கல்களும் பெரும் பிரச்சினையாக எழுந்திருக்கின்றன.

பிரதமர் பதவி விலக வலியுறுத்தி போராட்டங்ளை முன்னெடுத்த எதிர்கட்சிகள் அவசர நிலைப் பிரகடனம் அமல்படுத்தப்படும் என எதிர்பர்க்கவில்லை போலும். இந்திய ஜனநாயக மரபில் மிகப்பெரும் கரும்புள்ளியாகக் குறிப்பிடப்படும் நெருக்கடி நிலை 1975 ஜீன் இருபத்தைந்தாம் நாளில் ஐந்தாவது குடியரசுத் தலைவராக இருந்த பக்ருதீன் அலி அகமதுவால் (1905-1977) அமல்படுத்தப்பட்டிருக்கிறது.

மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்ட நெருக்கடி நிலைக் காலத்தில் மிகக் கடுமையான சட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ் நாடு மற்றும் குஜராத் சட்டசபைகள் கலைக்கப்பட்டு, நாடு முழுமைக்கும் அடக்கு முறைகளும் கைதுகளும் நடந்திருக்கின்றன. அரசியல் கட்சியினரும், கட்சி சார அமைப்புகளின் முக்கியத் தலைவர்களும் கைது செய்யப்பட்டதோடு, ஊடகங்களும் கடுமையாக தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன.

அலகாபாத் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்த ராஜ் நாராயண் (1917-1986), ஜெய பிரகாஷ் நாராயணன், மோரார்ஜி தேசாய், சரண்சிங், அடல் பிகாரி வாஜ்பாய், லால் கிருஷ்ண அத்வானி போன்ற முக்கியமான தலைவர்கள் கிளர்த்தெழுந்து அடுத்து நடைபெற்ற தேர்தலில் ஜனதா மோர்ச்சா எனும் கூட்டணி அமைத்து பெரு வெற்றி பெற்றிருக்கின்றனர்.

முதலில் இந்திரா காந்தியை ஆதரித்தும், பின்னர் தேசாய், நிஜலிங்கம்பா (1902-2000) போன்றோரோடு இணைந்து அம்மையாருக்கு எதிராக நிறுவன காங்கிரசு (1969-1977) ஏற்படுத்தியவருமான காமராஜர், நெருக்கடி நிலை குறித்து ஆழ்ந்த கவலையும் வருத்தமும் அடைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்திராவே இந்தியா, இந்தியாவே இந்திரா என எழுந்த முழக்கத்திற்கு மாற்றாக ஜே.பி. நாராயண், தேசாய் போன்றோர் பிரிந்து கிடந்த அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஜனதா கட்சியாக ஒன்றிணைத்து 1977-ன் பொதுத் தேர்தலை சந்தித்திருக்கின்றனர்.

ஆறாவது மக்களவைக்கு நடந்த 1977 தேர்தல், இந்திய அரசியலிலும் தமிழக அரசியலிலும் பல்வேறு மாற்றங்களை உண்டாக்கியதாக வரலாற்றாய்வளர்களால்

சுட்டிக் காட்டப்படுகிறது. தொடர்ந்து ஐந்து பொதுத் தேர்தல்களிலும் வென்ற காங்கிரசு முதன் முறையாக ஆட்சியை இழந்து, காங்கிரசு அல்லாத முதல் பிரதமராக நீண்ட காலம் முயற்சித்து வந்த தேசாய் பிரதமர் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். அரசியல் சதுரங்கத்தில் அதிகாலம் தாக்குப்பிடிக்க முடியாமல் தவித்த தேசாய் பதவி விலகி, துணைப் பிரதமராக இருந்த சரண்சிங் அடுத்த பிரதமராகியிருக்கிறார். சரண்சிங்கு அளித்த ஆதரவை திரும்பப் பெற்ற இந்திரா காந்தி அம்மையாரின் முடிவால் ஜனதா கட்சியின் ஆட்சி கலைக்கப்பட்டிருக்கிறது. 1980 தேர்தலில் மீண்டும் அம்மையாரே ஆட்சியைப் பிடித்தது வரலாறு.

ஜனதா கட்சியை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியதில் பெரும்பங்கு வகித்தவராக ஜெய் பிரகாஷ் நாராயண் போற்றப்படுகிறார். சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட ஜே.பி, இரேஜேந்திரப் பிரசாத்தின் அறிமுகம் மூலம் தீவிரமான சுதந்திரப் போராளியாக மாறியிருக்கிறார். மனைவி பிரபாவதி காந்தி ஆசிரமத்தில் தங்கி கஸ்தூரிபாய் அம்மையாருக்கு பணிவிடைகள் செய்து வாழ்ந்து வர, அறிவியல் படிக்க அமெரிக்க சென்ற ஜே.பி. மார்ச்சியத் தத்துவத்தில் ஈடுபாடு கொண்டு பொதுவுடமைவாதியாகத் திரும்பி வந்திருக்கிறார்.

வசதியான வாழ்விலோ, ஆடம்பரங்களிலோ நாட்டம் இல்லாதிருந்த நாராயண், எளிய மக்களுக்கு உதவ வேண்டும், அவர்களது வாழ்க்கை நிலையை மாற்ற வேண்டும் எனும் பெருங்கனவு கொண்டிருந்ததாகக் கருதப்படுகிறது. பொதுவுடமைச் சித்தாந்தத்தில் பற்றும் கொண்டிருந்த நாராயண் இந்திய பொதுவுடமைவாதிகள் மைய நீரோட்டத்தின் இணைந்து பணியாற்றவில்லை எனும் கருத்தையும் கொண்டிருந்திருக்கிறார்.

பொதுவுடமைத் தத்துவத்தை இந்தியருக்கேற்றவாறு வடிவமைத்தவராகப் புகழப்படும் ராம் மனோகர் லோகியாவோடு (1910-1967) சிறந்த நட்புக் கொண்டிருந்த நாரயாணன், பல்வேறு அரசில் நிலைப்பாடுகளை, அரசியல் மாற்றங்களை முன்னெடுத்திருக்கிறார். பின்னர் சர்வோதய பணிகளில் ஈடுபட்டு 1970களின் முன்னெடுத்த சம்பூர்ண கிராந்தி எனும் முழுமையான புரட்சி குறித்த சிந்தனைகள், மாணவர் போராட்டமாக உருவெடுத்து இந்திய அரசியலில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதாக அறியப்படுகிறது. ஜனநாயகத்தை மீட்ட தவசீலராகப் புகழப்படும் ஜெய்பிரகாஷ் நாராயண், இந்திய மக்களின் உள்ளம் கவர்ந்த தலைவர்களில் ஒருவரெனில் மிகையாகாது.

10

எம்.ஜி.இராமச்சந்திரன்

1972 ஆம் ஆண்டில் கட்சி தொடங்கிய எம்.ஜி.ஆர், அரசியலில் சாதுர்யமாகக் செயல்பட்டு 1977 சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியைப் பிடித்தது சரித்திர சாதனை. 1973 இல் நடந்த திண்டுக்கல் நாடாளுமன்றத் தேர்தலில், உசிலம்பட்டி பகுதியில் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் பெற்றிருந்த வழக்கறிஞர் மாயத் தேவரை வேட்பாளராக நிறுத்தியது தமிழக அரசியல் போக்கை நன்றாக உணர்ந்தவராக எம்ஜிஆரை அடையாளம் காட்டுகிறது. இந்திய அரசியலை திரும்பிப் பார்க்க வைத்த திண்டுக்கல் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியும், 1974 இல் நடந்த கோயம்புத்தூர் மேற்கு சட்டசபைத் தேர்தலில் சி. அரங்கநாயகம் பெற்ற வெற்றியும், எம்.ஜி.ஆர் செல்வாக்கைப் பெரிதும் உயர்த்தியதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்திய அரசியலிலிருந்து தமிழ்நாட்டு அரசியல் வேறுபட்டு உள்ளதாக அரசியல் நோக்கர்களால் விமர்சிக்கப்படுகிறது. மிசா எனப்பட்ட உள்நாட்டு பாதுகாப்பு பராமரிப்பு சட்டத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இந்திய அரசியல்வாதிகள் ஓரணியில் திரள, தமிழ்நாடு அரசியலோ அதற்கு எதிர்மாறாக இருந்திருக்கிறது. குறிப்பாக, 1977 ஆம் ஆண்டு மார்ச்சில் நடந்த பாரளுமன்ற தேர்தலுக்கும், ஜீன் மாதம் நடந்த சட்டசபைத் தேர்தலுக்கும் இடைப்பட்ட மூன்று மாத காலத்திற்குள்ளாகவே கூட்டணிக் கணக்குகள், அரசியல் சாணக்கியத்தனங்கள், அணிமாறல்கள் நிகழ்ந்தது வியப்பானது.

1977 சட்ட மன்றத் தேர்தலில் தமிழக பார்வர்ட் பிளாக் கட்சியின் குறிப்பிடத்தக்க ஆளுமையாகவும் தேவர் சமூகத்தவரால் மதிக்கப்பட்டவருமான பி.கே. மூக்கையாத் தேவருக்கு எதிராகவும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் வாணியம்பாடி வேட்பாளர் அப்துல் லத்தீப்புக்கு எதிராகவும், எம்.ஜி.ஆர் வேட்பாளர்களை நிறுத்தவில்லை என அறியப்படுகிறது.

தேவர் சமூகத்திற்காகவும் கள்ளர் எனும் பிறமலைக் கள்ளர் கல்வியறிவுக்காகவும் பெரிதும் பாடுபட்டவராக அறியப்படும் மூக்கையாத் தேவர் (1923-1979), தேவருக்குப் பிறகான செல்வாக்கான பார்வர்ட் பிளாக் தலைவராகக் குறிப்பிடப்படுகிறார். உசிலம்பட்டி, நீலிதநல்லூர், கமுதி போன்ற இடங்களில் கல்லூரிகள் உருவாக காரணமாகக் குறிப்பிடப்படும் மூக்கையாத் தேவர், 1957 முதல் 1977 வரை தொடர்ந்து தேர்தல்களில் வெற்றி பெற்றிருக்கிறார்.

அரசியல் செல்வாக்கு மிகுந்திருந்த ராஜாஜி, பெரியார், காமராஜர் போன்றோர் மறைவும், தி.மு.க.வின் மிகப்பெரும் ஆளுமையாக வளர்ந்து வந்த அண்ணாவின் மறைவும் தமிழகத்தில் மிகப்பெரும் அரசியல் மாற்றங்களுக்கு வித்திட்டிருக்கிறது. தி.மு.க.வின் பிரசாரப் பீரங்கியாக வலம் வந்த எம்.ஜி.ஆர் செல்வாக்கும், அவர் எம்.ஆர். ராதாவால் சுடப்பட்டு வெளியிடப்பட்ட மருத்துவமனை புகைப்படங்களும், 1967-ன் தி.மு.க வெற்றிக்கு முக்கிய காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவே எதிர்த்த இந்திரா காந்தியோடு 1977 இல் தேர்தல் உடன்பாடு கண்ட அ.தி.மு.க, முதல் தேர்தலிலேயே பத்தொன்பது மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கிறது. மொத்தமுள்ள முப்பத்தொன்பது தொகுதிகளில் முப்பத்து நான்கு தொகுதிகளைப் பெற்ற காங்கிரஸ் அ.தி.மு.க. கூட்டணி, அடுத்த வந்த சட்டமன்றத் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட்டிருக்கின்றன.

மிசாக் காலத்தில் தி.மு.க ஆட்சியைக் கலைப்பதற்கு எம்.ஜி.ஆர் முயன்றதாகவும், பிரதமராக இருந்த இந்திரா காந்தியை டெல்லி சென்று சந்தித்ததாகவும் கூறப்படுகிறது. 1977 இல் பதவிக்கு வந்த அ.தி.மு.க ஆட்சியை கலைக்கச் சொல்லி தி.மு.க. அழுத்தம் கொடுத்ததும், அதை ஏற்று 1980 இல் அ.இ.அ.தி.மு.க வின் ஆட்சி இந்திரா காந்தியால் கலைக்கப்பட்டதும் தமிழக மக்கள் நன்கறிந்த வரலாறு. ஸ்டாலின் போன்ற இளம் தலைவர்கள் மிசாக் காலத்தில் சிறையிலடைக்கப்பட்டதாகவும், சிறைக்குள் கொடுமைகள் இழைக்கப்பட்டதாகவும், மேடைதோறும் முழங்கிய தி.மு.க, எப்படியாவது எம்.ஜி.ஆர் ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப, மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே இந்திராகாந்தி அம்மையாரோடு கூட்டணி வைத்ததும், ஆட்சியைக் கலைத்ததும் தமிழக அரசியலின் போக்கையும் மக்களின் மனநிலையையும் மாற்றிய நிகழ்வுகளாகச் கருதப்படுகின்றன. 1977 இல் எம்.ஜி.ஆரை தூக்கிக் கொண்டாடிய மக்கள், 1980 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க காங்கிரஸ் கூட்டணிக்கு முப்பத்தேழு இடங்களையும், அ.தி.மு.க. கூட்டணிக்கு வெறும் இரண்டு இடங்களையும் கொடுத்தது அரசியல் விமர்சகர்களை நிச்சயம் குழப்பியிருக்கும்.

மிசாவை எதிர்த்து ஒன்று திரண்ட வடமாநில மக்கள், குறிப்பாக உத்திரப்பிரதேசம், பீகார், டெல்லி, குஜராத், மத்தியப்பிரதேசம், பஞ்சாப் மக்கள் ஒட்டுமொத்தமாக ஜனதா கட்சி கூட்டணிக்கு வாக்குகளை அளிக்க, தென்னிந்திய

மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மக்கள் காங்கிரசுக்கு பெருவாரியான வாக்குகளைச் செலுத்தியிருக்கின்றனர். 345 தொகுதிகளைக் கைப்பற்றிய ஜனதா கூட்டணி, அடுத்த தேர்தலில் ஜனதா-தேசாய் அணி, ஜனதா-சரண்சிங் அணி எனப் பிளவுற்றதும், இந்திராகாந்தி சாதுர்யமாகச் செயல்பட்டு 374 தொகுதிகள் வென்றதும் குறிப்பிடத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக அட்டவணை மக்களுக்கு போதியளவு பாடுபடவில்லை எனும் குற்றச்சாட்டின் பேரில் தி.மு.க விலிருந்து விலகி, அ.தி.மு.க. வில் சேர்ந்த சத்திய வாணி முத்து (1923-1999), சரண் சிங் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க காலம் தொட்டு உறுப்பினராக இருந்த சத்தியவாணி முத்து அம்மையார், அண்ணா ஆட்சியிலும், கலைஞர் ஆட்சியிலும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார். அட்டவணையின மாணவர்களின் கல்வி உதவித்தொகை, விடுதி, பழங்குடியினர் மற்றும் பெண்கள் முன்னேற்றம் போன்றவற்றிற்கு சிறப்பாக பாடுபட்டவராகக் குறிப்பிடப்படும் அம்மையார், 1974 இல் அமைச்சரவையை விட்டு விலகி அட்டவணையினர் முன்னேற்றத்திற்காக கட்சி ஆரம்பித்து அட்டவணை மக்களுக்காகப் பாடுபட்டிருக்கிறார். பின்னர் நடந்த தேர்தல்களில் தோற்றாலும், அ.தி.மு.க.வின் சார்பாக மாநிலங்களவைக்குத் தேர்வாகி அட்டவணையினர், பழங்குடியினர் நலனுக்காக தொடர்ந்து குரல் கொடுத்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர் தமிழக முதலமைச்சராக ஆகும்முன், நீண்டகாலம் தி.மு.க வுடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவராக அறியப்படுகிறார். திரைப்படங்களில் தலைவரான அண்ணாவின் புகழ் பாடியதோடு, தி.மு.க பற்றி உயர்வாகவும் காட்சிப் படுத்தியிருக்கிறார். பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்ட எம்.ஜி.ஆருக்கு திரளான மக்கள் ஆதரவளிக்க, அண்ணாவுக்கு எம்.ஜி.ஆர் மீது மிகுந்த நல்லெண்ணம் உருவாகியிருக்கிறது. 1962 இல் தி.மு.க மேலவை உறுப்பினராக பரங்கிமலைத் தொகுதியிலிருந்த தேர்வான எம்.ஜி.ஆர், பின்னர் 1967, 1971 தேர்தல்களில் பரங்கிமலை சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

திருவாரூர்காரரான கருணாநிதியும், கும்பகோணத்தில் வளர்ந்த எம்.ஜி.ஆரும், ஆரம்பகாலங்களில் மிகுந்த நட்புறவு கொண்டிருந்திருக்கிறார்கள். மிகுந்த போராட்ட வாழ்க்கைக்குப் பின்னர் திரைப்பட கதாநாயகனாகி, புகழ்பெற்ற

நட்சத்திரமாக மின்னிய எம்.ஜி.ஆர், திரைப்பட வசனகர்த்தாவான கருணாநிதி மீது மிகுந்த மரியாதை வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

காங்கிரஸ்காரராக காதி உடுத்திக்கொண்டிருந்த எம்.ஜி.ஆர், பின்னர் 1953 இல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகி அண்ணாவின் அன்பைப் பெற்றிருக்கிறார். அண்ணாவிற்குப் பின்னர் தமது அரசியல் சாதுர்யத்தால் அனைவரையும் பின்னுக்குத்தள்ளி முதல்வரான கருணாநிதிக்கு, எம்.ஜி.ஆரின் புகழ் சற்று கலக்கத்தைக் கொடுத்ததாகத் தெரிகிறது. மகன் மு.க. முத்துவை திரைப்படங்களில் கதாநாயகனாக்கி எம்.ஜி.ஆருக்கு மாற்றாகக் களம் இறக்க, கருணாநிதியின் திட்டம் அறிந்த எம்.ஜி.ஆர், கட்சியின் பொருளாளர் எனும் முறையில் கணக்கு விவரங்கள் சரியில்லை எனப் புகார் அடுக்க, பொதுக்குழுவைக் கூட்டிய முதல்வர் கருணாநிதி, எம்.ஜி.ஆரை கட்சியை விட்டு நீக்கியிருக்கிறார். சமயம் பார்த்துக் காத்திருந்த எம்,ஜி.ஆரும், தமக்கிருந்த மக்கள் செல்வாக்கைக் கருத்தில் கொண்டு புதுக்கட்சி தொடங்கி ஆட்சியையும் பிடித்துவிட்டார்.

1977-ல் அருப்புக்கோட்டை தொகுதியில் வேட்பாளராக நின்ற எம்.ஜி.ஆர் 43065 வாக்குகள் பெற்று எதிர்த்து நின்ற ஜனதா கட்சியின் முத்துவேல் சேர்வையை எளிதாக வென்று, அடுத்து சட்டமன்றத்திற்குள் நுழைந்தால் முதல்வராகவே நுழைவோம் எனும் சூளுரைக்கு ஏற்ப, முதல்வராகவே சட்டமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்.

அ.தி.மு.க மற்றும் மார்க்சிய பொதுவுடைமைக் கட்சி, இந்திரா காங்கிரஸ் மற்றும் இந்திய பொதுவுடமைக் கட்சி, தி.மு.க, ஜனதாகட்சி என நான்கு முனைப் போட்டி நிலவிய 1977 தேர்தலில், 144 தொகுதிகளில் அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது.

நூற்றி முப்பது தொகுதிகள் வென்ற அ.தி.மு.க கட்சிக்கு 51,94,876 வாக்குகளும், நாற்பத்தியெட்டு தொகுதிகள் கைப்பற்றிய தி.மு.க.வுக்கு 42,58,771 வாக்குகளும், இருபத்தியொரு தொகுதிகள் வெற்றி பெற்ற காங்கிரசுக்கு 29,94,535 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. பத்து தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனதா கட்சிக்கு 28,51,884 பேர் ஆதரவளித்திருக்கிறார்கள்.

1977, 1980, 1984 எனத் தொடர்ந்து தமிழக முதலமைச்சராக எம்.ஜி.ஆர் வெற்றி பெற்று பல்வேறு நலத்திட்டங்களும் நிறைவேற்றியிருக்கிறார். சத்துணவு,

கறவை மாடுகள், வேளாண்மை, தொழில்வளம், கைத்தொழில்கள், கல்வி, பொருளாதாரம் என வேகமெடுத்த தமிழகத்திற்கு, எம்.ஜி.ஆரின் உடல்நலக்குறைவு பெரும் பின்னடைவாக அமைந்திருக்கிறது. 1984 தேர்தலில் அமெரிக்காவில் சிகிச்சையில் இருந்து கொண்டே வெற்றி பெற்ற எம்.ஜி.ஆர், பின்னர் உடல் நலம் தேறி 1987 வரை தமிழக மக்களின் உள்ளம் நிறைந்த முதலமைச்சராகப் பதவி ஏற்றிருக்கிறார்.

காமராசருக்குப்பின் ஸ்தாபனக் காங்கிரசை முன்னெடுத்துச் செல்ல இயலாமல் இந்திரா தலைமையை ஏற்று ஒன்றாகிய தமிழ்நாடு காங்கிரசிற்கு, கும்பகோணம் பகுதியில் பெரும்பண்ணையாராக இருந்த ஜி. ரெங்கசாமி மூப்பனார் (1931-2001) தலைவராகியிருக்கிறார். 1967க்குப்பின் மாநில அரசியலில் மிகப்பெரும் பின்னடைவைச் சந்தித்த காங்கிரசு கட்சி, அதன் டெல்லி தலைமையின் முடிவிற்கேற்ப செயல்பட்டதாகவே அறியப்படுகிறது. திராவிடக் கட்சிகள் புத்திசாலித்தனமாகச் செயல்பட்டு, நாடாளுமன்றத் தேர்தலில் எழுபது, முப்பது எனவும், சட்டமன்றத் தேர்தலில் முப்பது, எழுபது எனவும் ஒரு கணக்கீட்டை வரையறுத்துச் செயல்பட, அதிக நாடாளுமன்றத் தொகுதி கிடைத்தால் போதுமென டெல்லி காங்கிரசும் தி.முக. மற்றும் அ.தி.மு.க.வோடு மாறிமாறி கூட்டணி கண்டிருக்கிறது.

1984 நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்ற இராஜிவ் காந்தி, ஆரம்ப காலங்களில் அரசியல் ஆர்வம் இல்லாதிருந்தவராக குறிப்பிடப்படுகிறார். சகோதரர் சஞ்சய் காந்தி பல்வேறு அரசியல் தலையீடுகள் செய்தவராகவும், மிசாக் காலத்தில் கடுமையாக நடந்துகொண்டவராகவும் அறியப்படுவதற்கு மாறாக, ராஜிவ் காந்தி மென்மையான குணமும், அறிவியலில் ஈடுபாடும், விமானம் ஓட்டுவதில் மிகுந்த ஆர்வமும் நிரம்பியவராக இருந்திருக்கிறார்.

கேம்பரிட்ஜ் மாணவராக இருந்த போது, ஆங்கிலம் பயின்ற இத்தாலி நாட்டு சோனியா மைனோவுடன் காதலாகி 1968 இல் புதுடெல்லியில் திருமணம் நடந்திருக்கிறது. சஞ்சய் காந்தியின் விபத்தால் மெதுவாக அரசியலுக்குள் இழுக்கப்பட்டவராகக் குறிப்பிடப்படும் இராஜிவ் காந்தி, 1982-ன் ஆசியக் கோப்பைபோட்டிகள் சிறப்பாக நடைபெற தேவையான உதவிகள் செய்தவராகக் கூறப்படுகிறார்.

இந்திரா காந்தி அம்மையார் சுடப்படுவதற்குக் காரணமான ஆபரேசன் புளூஸ்டார் குறித்து பல்வேறு விமர்சனங்கள் பதியப்பட்டிருக்கின்றன. பிந்தரன் வாலா எனும் ஜர்னைல் சிங் பிந்தரன் வாலாவால் பாகிஸ்தான் மற்றும் இந்திய சீக்கியர்களுக்கென்று காலிஸ்தான் தனிநாடு பெறவேண்டும் எனும் நோக்கத்தோடு, பஞ்சாப் பகுதியில் நிகழ்ந்த போராட்டங்களும். பொற்கோவிலிலுள் ஆயுதங்கள் பதுக்கப்பட்டிருப்பதாகவும் போராளிகள் ஒளிந்திருப்பதாகவும் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையும், பஞ்சாப் வரலாற்றிலும் இந்திய வரலாற்றிலும் பெரும் பாதிப்புக்களை உருவாக்கிறதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்திரா காந்தி அம்மையார் சீக்கிய மெய்காப்பாளர்களாலேயே சுடப்பட்டதும் அதனைத் தொடர்ந்து சீக்கியருக்கு எதிராக நிகழ்ந்த கலவரங்களும் இந்திய வரலாற்றில் வடுவாக அமைந்துவிட்டன.

மிக இளம் வயதில் பிரதமரான ராஜிவ், இளம் தலைமுறையினருக்கான பிரதமராக சுறுசுறுப்பாக செயல்பட்டதுடன் உலகளாவிய பொருளாதார மாற்றங்களுக்கேற்றவாறு இந்தியாவிலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டவராப் புகழப்படுகிறார். ராஜீவின் ஆட்சியில் நாட்டின் கல்வி வளர்ச்சியிலும் தகவல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன.

அண்ணா மற்றும் எம்,ஜி.ஆரின் மறைவிற்குப்பின் சிறிது காலம் இடைக்கால முதலமைச்சர் பொறுப்பு வசித்த நாவலர் இரா. நெடுஞ்செழியன் (1920-2000), நீண்ட கால அரசியல்வாதியாகவும், அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா முதலமைச்சர்களாக இருந்த போது கல்வி, நிதி போன்ற முக்கியமான துறைகளைக் கவனித்தவராகவும் புகழப்படுகிறார்.

திராவிடர் கழகத்திலும், பின்னர் திராவிட முன்னேற்றக்கழகத்திலும் தொடர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும் பயணித்த நாவலர், ஜெயலலிதாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் செ. அரங்கநாயகம், க.இராசாராம், பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோருடன் இணைந்து, நால்வர் அணியை உருவாக்கியிருக்கிறார். முன்னதாக, கருணாநிதிக்கு எதிராக மக்கள் முன்னேற்றக் கழகம் எனும் கட்சியைத் தொடங்கிய சத்தியவாணி

முத்து போன்றவர்களுடன் இணைந்து பணியாற்றிய நாவலர், பின்னர் அ.தி.மு.க. வில் ஐக்கியமாகியிருக்கிறார்.

அண்ணாவிற்குப்பின் முதலமைச்சராக ஆகியிருக்க வேண்டிய நாவலரால், கருணாநிதியின் அரசியல் சாதுர்யங்களுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அதே போல் எம்.ஜி.ஆருக்குப்பின் அ.தி.மு.க.வின் தலைமைப் பொறுப்பிற்கு வந்திருக்க வேண்டியவர், ஜெயலலிதா மற்றும் ஆர்.எம்.வீரப்பன் போன்றோர்களின் அரசியல் நுட்பங்களுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை எனவும் தெரிகிறது.

அமெரிக்காவில் இருந்துகொண்டே எம்,ஜி.ஆர் வெற்றி பெற்றதற்கு முக்கியக் காரணங்களாக ஆர்.எம்.வீரப்பனின் அரசியல் நுட்பமும், ஜெயலலிதாவின் தேர்தல் பிரச்சாரமும் குறிப்பிடப்படுகின்றன. சிகிக்சைப் பெறும் புகைப்படங்களை ஊரெங்கும் ஒட்டியதும் மக்கள் மனதில் அனுதாபம் கொள்ளச் செய்ததாகக் கூறப்படுகிறது. பதின்மூன்றாண்டுகள் எவ்வளவோ முயன்றும் ஆட்சிக்கு வரமுடியாமல் தவித்த கருணாநிதி, 1989 தேர்தலில் வென்று முதல்வர் ஆனாதும் ஆட்சி இரு வருடங்களிலேயே கலைக்கப்பட்டதும் சோகமானது. ஆட்சிக்கலைப்பிற்கு, தி.மு.க.வின் விடுதலைப் புலிகள் ஆதரவு நிலைப்பாடு காரணமாகக் குறிப்பிடப்படுகிறது. ஆட்சியைக் கலைத்தவர் அப்போதைய பிரதமர் சந்திர சேகர் சிங் (1927-2007).

தமிழர்களுக்கென ஒன்றிணைந்த அகன்ற தமிழ்நாடு வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்டு 1958 இல் நாம் தமிழர் கட்சி தொடங்கிய சி.பா ஆதித்தனார் எனும் சி. பாலசுப்ரமணிய ஆதித்தன் (1905-1981), தனித்தமிழ் நாடு கோரிக்கையை வலியுறுத்திய முக்கியமான தலைவராக அடையாளம் காணப்படுகிறார்.

1942இல் தமிழ் ராஜ்யம் எனும் கட்சியைத் தொடங்கியவராகக் குறிப்பிடப்படும் ஆதித்தனார், சென்னை மாகாண மேலவை உறுப்பினராகவும் சட்டபேரவை உறுப்பினராகவும், பின்னர் தி.மு.க ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளராக 1967 தேர்தலில் வென்று தமிழக சட்டப் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். பேரவைத் தலைவர் அரசியல் பணிகளில் ஈடுபடுகிறார் எனும் குற்றச்சாட்டில் பதவி விலகி பின் கருணாநிதி ஆட்சியில் கூட்டுறவு அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார். 1942 இல் ஆதித்தனார் தொடங்கிய தினத்தந்தி நாளிதழ், அதன் எளிமையான சொற்றொடர்களுக்காகவும் தமிழ்

உணர்வுக்காகவும் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. 1976 வரையிலும் தி.மு.க சார்பு நிலைப்பாடு கொண்டதாக அறியப்படும் தினத்தந்தி நாளிதழ், பின்னர் ஓரளவிற்கு நடுநிலைகொண்ட நாளிதழாக மாற்றம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. 1977 தேர்தலில் அதிமுக வால் ஆதரிக்கப்பட்ட ஆதித்தனாரால், சாத்தன்குளம் தொகுதியில் வெற்றி பெற இயலவில்லை. 1980 தேர்தலில் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் போட்டியிட்டு மூன்றாம் இடம் பிடித்த ஆதித்தனார், 1942 முதல் மேற்கொண்ட பத்திரிக்கைப் பணிக்காக பெரிதும் பாராட்டப்படுகிறார். எளிய நடையில் ஆதித்தனார் பதிப்பித்த தினத்தந்தியும், ராணி வார இதழ், ராணிமுத்து நாவல், மாலைமலர் போன்றவையும் அவருக்கு புகழ் சேர்த்திருக்கின்றன.

1971ஆம் ஆண்டில், முதல்வர் கருணாநிதி நிதித்துறையையும், காவல் துறையையும், மற்ற பொது விவகாரங்களையும் கவனித்திருக்கிறார். வி.ஆர் நெடுஞ்செழியன் - கல்வி மற்றும் வருவாய், கே. ராஜாராம் - பிற்பட்டோர் நலம், கே. அன்பழகன் - பொது சுகாதாரம், அன்பில் பி. தர்மலிங்கம் - வேளாண்மை, எஸ். ஜே சாதிக்பாடசா- பொதுப்பணி, சத்தியவாணி முத்து - ஆதிதிராவிடர் நலம், மு. கண்ணப்பன் - அறநிலையத் துறை, எஸ். மாதவன் - தொழில், என். வி. நடராஜன் - தொழிலாளர், ஒ.பி. ராமன் - மின்சாரம், சி.பா ஆதித்தனார் - கூட்டுறவு, எஸ். இராமச்சந்திரன் - போக்குவரத்து போன்ற துறைகளின் அமைச்சர்களாகப் பணியாற்றியிருக்கின்றனர்.

தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பி. பட்வாரி அவர்களால் 1977 ஜூன் முப்பதாம் தேதி காலையில் பதவி ஏற்றுக் கொண்ட தமிழக அமைச்சரவையில் இடம் பெற்றவர்கள், எம்.ஜி. இராமச்சந்திரன் - முதல்வர், பொது நிர்வாகம், ஆட்சிப்பணி, காவல்பணி, வருவாய் பணி, கடவுசீட்டு, பொதுநலம், சுகாதாரம், மருத்துவம், அறநிலையத் துறை, ஊழல் ஒழிப்பு மற்றும் தொழில்துறை.

கே. மனோகரன் - நிதி, எஸ் . இராச்சந்திரன் - பொதுப்பணி, கே. நாராயண சாமி முதலியார் - சட்டம், ஜி.ஆர் எட்மண்ட் - உணவு மற்றும் கூட்டுறவு, ஆர்.எம். வீரப்பன் தகவல் மற்றும் ஊடகம், சி. அரங்கநாயகம் - கல்வி, க. காளிமுத்து - ஊரக நிர்வாகம், எஸ். ராகவானந்தம் - தொழில், பி. சோம சுந்தரம் - தொழிலாளர், சி. பொன்னையன் - போக்குவரத்து, செல்வி பி.டி சரஸ்வதி - சமூகநலம், பி

குழந்தைவேலு - வேளாண்மை, கே. ராஜாமுகமது - கைத்தறி மற்றும் ஜவுளி அமைச்சர்களாக இருந்திருக்கின்றனர்.

தமிழக ஏழாவது சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் 1985 பிப்ரவரி பத்தாம் நாள் காலை பதவியேற்ற மந்திரி சபையில் பழைய முகங்களோடு கே.ஏ கிருஷ்ணசாமி, ஹெச்.வி ஹண்டே, எஸ் முத்துசாமி, எஸ். திருநாவுக்கரசு, ஆர். சௌந்தர்ராஜ், கோமதி ஸ்ரீநிவாசன், விஜயலட்சுமி பழனிச்சாமி, வை.எஸ்.எம். யூசுப், டி. வீராசாமி, கே. ராஜாராம், கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன் போன்றவர்களும் அமைச்சர்களாகப் பதவியேற்றிருக்கின்றனர்.

தி.மு.க.விலிருந்து அ.தி.மு.க.விற்கு வந்த பலருக்கும் கட்சிப் பதவிகளும் அமைச்சரவைப் பொறுப்புகளும் கிடைத்திருக்கின்றன. பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன், எஸ்.டி சோமசுந்தரம் போன்றவர்கள் எம்.ஜி. ஆரின் நெருக்கத்தைப் பெற்று செல்வாக்கான தலைவர்களாக இருந்திருக்கின்றனர்.

கொள்கை பரப்புச் செயலாளர் பொறுப்பில் மீண்டும் நியமிக்கப்பட்ட செல்வி. ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். உடல்நலமில்லாத காலங்களில் டெல்லி ராஜிவ்காந்தி அரசோடு நெருக்கம் பாராட்டியதாகவும், ராஜிவ்காந்தியை சந்தித்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. மூன்றாவது முறையாக வெற்றி பெற்றும் உடனே பதவி ஏற்க இயலாத நிலையில் எம்.ஜி.ஆர் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த காலகட்டத்தில், தமிழகத்தில் பல்வேறு அரசியல் சாதுர்யங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இந்திராவின் இழப்பும், எம்.ஜி.ஆர் உடல்நலக் குறைவும் ஒரு சேர நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. எம்.ஜி.ஆரின் மூன்றாவது ஆட்சிக் காலம் இரண்டு வருடங்களிலேயே முடிவுக்கு வர, பின்னர் ஆரம்பித்தது தமிழகத்தின் மோசமான அரசியல் வரலாற்றுக் காலம்.

பெரியார், அண்ணா எனக் கொள்கைப் பிடிப்போடு பொதுச்சேவைக்கு, அரசியலுக்கு வந்த தலைமுறைகள் மாறி, கருணாநிதி, எம்,ஜி.ஆரின் பற்றின் காரணமாக அரசியல் அதிகாரத்திற்கு, பதவி ஆசைக்கு வந்த அரசியல்வாதிகளால், அடுத்த கால் நூற்றாண்டுகால தமிழக அரசியல், கருணாநிதி ஜெயலலிதா எனும் இரு ஆளுமைகளைச் சுற்றியே நிகழத் தொடங்கியது.

1982 இல் அ.தி.மு.க. வின் அடிப்படை உறுப்பினராகச் சேர்ந்த ஜெயலலிதா, 1991-ல் முதல்வர் நாற்காலியில் அமர்ந்தது வியப்பானது. சத்துணவு திட்டத்தைப் பரப்பும் நோக்கில் சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழுவில் இடம் பெற்ற ஜெயலலிதா, பின்னர் 1983-ல் கொள்கை பரப்பு செயலாளராகி தீவிரமான சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். இவை அத்தனையும் அவர் திரைப்படத் துறையிலிருந்து ஒதுங்கிய பின்னரே வரிசையாக நிகழ்ந்திருக்கின்றன.

எம்.ஜி.ஆர் போலவே மக்களிடம் அதீத செல்வாக்குப் பெற்ற ஜெயலலிதா, பின்னர் அ.தி.மு.க.வின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக்கப்படுகிறார். 1984 இல் நாடாளுமன்றத்தோடு தமிழக சட்டசபைக்கும் தேர்தல் வைக்கலாம் எனும் நோக்கோடு செல்பட்ட அ.தி.மு.க ஆட்சியைக் கலைத்துவிட்டு தேர்தலைச் சந்திக்கிறது.

ஜெயலலிதாவின் புகழும், கட்சிப் பதவியும் உயர உயர அ.தி.மு.க.வின் இரண்டாம் கட்டத் தலைவர்களுக்கு அவர் மீதான வெறுப்பு அதிகரிக்கிறது. குறிப்பாக, எம்.ஜி.ஆரின் உடல் நலக் குறைவால், முழுக்கட்சியையும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த வீரப்பனுக்கும், ஜெயலலிதாவிற்கும் மோதல் முற்றுகிறது. முன்பு ஜெயலலிதாவின் முக்கியத்துவத்தை எதிர்த்த சோமசுந்தரம் போன்றவர்கள் எம்.ஜி.ஆரால் கண்டிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பிரச்சாரத்திலிருந்து ஜெயலலிதாவை ஒதுக்கி வைக்கலாம் எனத் திட்டமிட்ட மூத்த தலைகளுக்கு மாறாக ஆண்டிபட்டியில் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கிய ஜெயலலிதா வெகு தீவிரமாக தமிழகமெங்கும் சூறாவளிப் பயணம் மேற்கொள்கிறார். அ.தி.மு.க. 132 இடங்களிலும், கூட்டணிக் கட்சியான காங்கிரசு 62 இடங்களிலும் வெற்றி பெறுகின்றன. நாடாளுமன்றத்திற்கு காங்கிரஸ் சார்பில் 25 பேரும், அ.தி.மு.க சார்பில் 12 பேரும் செல்கின்றனர்.

தேர்தல் பிரச்சாரம் மற்றும் வெற்றிகளால் ஜெயலலிதாவின் புகழ் கூடுகிறது. கூடவே அவருக்கென்று ஒரு கோஷ்டி உருவாகிறது. ராஜாராம், திருநாவுக்கரசர், கே.கே.எஸ்.எஸ்.ஆர் போன்றோர் ஜெயலலிதாவின் விசுவாசிகளாக இருக்கின்றனர். உடல் நலம் தேறிவந்த எம்.ஜி.ஆரின் மறைவுச் செய்தி தமிழக மக்களை சோகத்தில் ஆழ்த்துகிறது. மக்கள் அழுது புரண்டு தவித்துக் கொண்டிருக்க, அரசியல்வாதிகளின் கணக்கோ வேறு மாதிரியாக இருந்திருக்கிறது. எம்.ஜி.ஆர்

உடலருகே சோகமாக அமர்ந்திருந்த ஜெயலலிதா மீது ஊடகத்தின் பார்வை அதிகமாக விழுந்திருக்கிறது. இறுதி ஊர்வல வாகனத்தில் ஏற முயன்ற ஜெயலலிதா தள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அன்றைய அரசியல்வாதிகளில் மிக மூத்த தலைவராக இருந்த நாவலர் முதலமைச்சராக விரும்பியதாகவும், அதை ஏற்றுக்கொள்ளாத ஆர்.எம். வீரப்பன் எம்.ஜியாரின் மனைவி ஜானகி இராமச்சந்திரனை (1923-1996) முதல்வர் பதவிக்கு சம்மதிக்க வைத்ததாகவும் கூறப்படுகிறது. 1988 ஜனவரி ஏழாம் தேதி முதல்வராகப் பதவி ஏற்றுக் கொண்ட ஜானகியம்மாள், இரண்டு வார காலத்திற்குள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டியிருந்தது.

எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் அரசியலில், ஆட்சியில் எவ்வித தலையீடும் இல்லாதவராக அறியப்பட்ட வைக்கம் நாராயணி ஜானகி அம்மையார், அரசியல் சூழ்ச்சிகளுக்கு ஆளாகி பதவி ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படுகிறது. முப்பதிற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஜெயலலிதாவை ஆதரிக்க, அ.தி.மு.க. ஜானகி அணி, ஜெயலலிதா அணி என இரண்டாகப் பிளவுபடுகிறது. இரு அணிகளையும் ஆதரிக்க மாட்டோம் என காங்கிரஸ் தலைமை மறுத்துவிட, திமுக எந்த அணிக்கும் ஆதரவில்லை என அறிவிப்புச் செய்திருக்கிறது. இரண்டு அணி சட்டமன்ற உறுப்பினர்களும் அணி மாறிவிடக்கூடாது என்பதற்காக வெளிமாநிலங்களில் தங்கவைக்கப்படுகின்றனர். ஜெ.அணி உறுப்பினர்களை திருநாவுக்கரசர், கே.கே.எஸ்.எஸ்.ஆர் போன்றோர் பத்திரமாகப் பாதுகாக்கின்றனர். சட்ட பேரவைத் தலைவராக இருந்த பி.எச்.பாண்டியன், ஜா.அணியை ஆதரித்தவராக அறியப்பட்டதால், சட்டசபையில் நடைபெறப்போகும் வாக்கெடுப்பை தமிழ்நாடு என்றில்லாமல் இந்தியாவே உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்குகிறது. ஏனெனில் சட்டப் பேரவை உறுப்பினர்களை கடத்திப் போய் சொகுசு ஓட்டல்களில் தங்கவைப்பதும், சொகுசுக் கார்களில் ஊர் சுற்றிக் காண்பிப்பதும், இந்திய அரசியலில் அன்று புதுமையான நடைமுறைகளாக இருந்திருக்கின்றன.

எல்லோரையும் எளிதில் நம்பக்கூடியவராகவும், அன்பான கோவக்காரராகவும் அறியப்பட்ட ஜெயலலிதாவின் சாமர்த்தியமான அரசியல் காய் நகர்த்துதல்களுக்குப் பின்னால் ம.நடராஜன் பெயரும் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தின் முதல் பெண் கலெக்டராகக் குறிப்பிடப்படும் வி.எஸ் சந்திரலேகாவும் ஜெயலலிதாவும் தோழிகளாக இருந்திருக்கின்றனர். சந்திரலேகா கடலூர்

ஆட்சியராக இருந்தபோது, தமிழக அரசில் மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றிய நடராஜன் அறிமுகமாகியிருக்கிறார். நடராஜனின் மனைவி சசிகலாவோடும் நட்பு ஏற்பட்டிருக்கிறது. வீடியோ கடை வைத்திருந்த சசிகலாவுக்கும் ஜெயலலிதாவுக்கும் பழக்கம் உண்டாகியிருக்கிறது. 1980களில் அறிமுகமான சசிகலாவும் ஜெயலலிதாவும், பின்னர் போயஸ் கார்டனில் ஒன்றாகவே வசிக்கும் அளவிற்கு தோழிகளாக மாறியது வரலாறு. சசிகலா வரவிற்குப் பின்னர், நெருங்கிய தோழிகளாக இருந்த ஜெயலலிதா, சந்திரலேகா இடையே நட்பு குறைந்திருக்கிறது. பின்னாட்களில் சுப்ரமணியசாமியின் ஜனதா கட்சியில் இணைந்து பணியாற்றிய சந்திரலேகா, ஜெயலலிதாவின் ஊழல் வழக்குகளை முன்னெடுத்தது குறிப்பிடத்தக்கது.

1990-2013 காலகட்டங்களில் ஜனதா கட்சிக்காரராகவும் பின்னர் பாரதிய ஜனதா கட்சிகாரராகவும் அறியப்படும் சுப்ரமணியன் சுவாமி (பிறப்பு-1939), சந்திரசேகர் ஆட்சிக் காலத்தில் (1990-91), வணிக தொழில்துறை அமைச்சராகவும், சட்ட நீதித்துறையை கூடுதல் பொறுப்பாக கவனித்தவராகவும் அறியப்படுகிறார். ஹார்வர்டு பல்கலையில் முனைவர் பட்டம் பயின்றவராகக் குறிப்பிடப்படும் சுவாமி, சிறந்த பொருளாதார நிபுணராகவும், பேராசிரியர் மற்றும் எழுத்தாளராகவும் சுட்டப்படுகிறார்.

ஹார்வர்ட் பல்கலையில் வணிக மேலாண்மை படித்தவரான பா. சிதம்பரம் (பிறப்பு-1945) புகழ்பெற்ற பொருளாதார நிபுணராக அறியப்படுகிறார். சென்னை காங்கிரஸ் தலைவராகவும் இருந்த திரு.சிதம்பரம், 1984 ராஜிவ்காந்தி அமைச்சரவையில் சேர்ந்தது முதல் 2014 மன்மோகன் சிங் ஆட்சிக்காலம் வரை வணிகம் உள்துறை நிதியமைச்சர் எனப் பல்வேறு உயர் பொறுப்புகளிலிருந்து நாட்டின் முன்னேற்றத்தில் பங்காற்றி வருகிறார்.

1989 சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள், பல வகைகளிலும் தமிழக இந்திய வரலாற்றில் முக்கியமானவையாகப் பார்க்கப்படுகின்றன. முன்னதாக நாடே உற்றுநோக்கிய அலகாபாத் இடைத்தேர்தலில் வி.பி.சிங் எனும் விஸ்வநாதபிரதாப் சிங் (1931-2008) காங்கிரசின் அனில் சாஸ்திரியை ஒரு லட்சம் ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது ராஜிவ் காந்தி ஆட்சி மீதான மக்களின் நம்பிக்கை இழப்பாக எதிர்கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டது. இத்தனைக்கும் ராஜிவ் காந்தி அமைச்சரவையில் நிதி அமைச்சராகவும், பின்பு இராணுவ அமைச்சராகவும்

பணியாற்றியவர்தான் வி.பி சிங். அடுத்த ஓராண்டுக்குள் நாட்டின் பிரதமராகவே ஆகிவிட்ட வி.பி. சிங்கின் அரசியல் வாழ்க்கையில் பாரதீய ஜனதா கட்சி பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியதெனில் மிகையாகாது.

இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் பிறந்தவர்கள் மிசா காலத்தின் ஜனநாயக ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து புதிய தலைமுறைத் தலைவர்களாக இந்தியாவை முன்னெடுத்தது புகழத்தக்கது. குறிப்பாக மாநில உரிமைகள், மாநில வளர்ச்சி என பல மாநிலங்களிலும் காங்கிரசிற்கு மாற்றாக பல கட்சிகள் தோன்றி மக்களிடையே செல்வாக்குப் பெற்று வளர்ந்தன. தமிழகம், ஆந்திரம், ஒரியா, பஞ்சாப், காஷ்மீர் போன்ற மாநிலங்களில் மாநிலக் கட்சிகளும், கேரளம், மேற்கு வங்கம் போன்றவற்றில் பொதுவுடமைக் கட்சிகளும் செல்வாக்குப் பெற்று ஆட்சியதிகாரங்களில் இருந்தன.

1980 வரை பாரதிய ஜன சங்கமாக இருந்த கட்சியை, பின்னர் பாரதிய ஜனதா கட்சியாக வளர்த்து இந்தியாவின் மிகப்பெரும் கட்சியாகவும் இரண்டு பிரதமர்களை அளித்த கட்சியாகவும் மாற்றியக் காட்டிய பெருமைக்குரியவராக அடல் பிகாரி வாஜ்பாய் (பிறப்பு-1924) புகழப்படுகிறார். பாரதிய ஜனதாவை ஆட்சிக் கட்டிலில் அமரவைத்ததில் லால் கிருஷ்ண அத்வானிக்கும் (பிறப்பு-1927) பெரும் பங்கிருக்கிறது. இருவரும் மொராஜி தேசாயின் அமைச்சரவையிலும் பணியாற்றியிருக்கின்றனர்.

நேருவின் அமைச்சரவை சகாவாக இருந்த சியாமா பிரசாத் முகர்ஜி (1901-1953, பின்னர் கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து 1951 இல் பாரதிய ஜன சங்கத்தை நிறுவியிருக்கிறார். மேற்கு வங்கத்தின் புகழ்பெற்ற அரசியல்வாதியாக அறியப்படும் முகர்ஜி, ஜம்மு காஷ்மீருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு தகுதிகளுக்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தவராக சுட்டப்படுகிறார். 1952 தேர்தலில் மூன்று நாடாளுமன்ற இடங்களைக் கைப்பற்றிய ஜன சங் கட்சியின் கொள்கைகள் இந்து மகா சபையோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்திருக்கிறது.

இந்து மகாசபை அல்லது அகில பாரதிய இந்து மகாசபை, ஜின்னாவின் முஸ்லிக் லீக் கட்சிக்கு மாற்றாக இந்துக்களின் நலன் வேண்டி மகாமனா என அழைக்கப்பட்ட மதன் மோகன் மாளவியா, லஜபதிராய் போன்றோரால் 1915 இல் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

புகழ் பெற்ற பனாரசு இந்து பல்கலைக்கழகத்தை உருவாக்கியவராக (1916) புகழப்படும் மதன் மோகன் மாளவியா, புகழ்பெற்ற இந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழின் தலைவராக பதவி வகித்ததாகவும் இந்திய சாரணர் இயக்கத்தின் உருவாக்கத்திற்கு பங்களித்தவராகவும் புகழப்படுகிறார்.

வீர் சாவர்க்கர் எனக் குறிப்பிடப்படும் சாவர்க்கர் (1883-1960), சிப்பாய் கலகம் எனக் குறிப்பிடப்பட்டு வந்த வரலாற்றை, விடுதலை எழுச்சியாகக் குறிப்பிட்டு எழுதிய புத்தகம் பிரித்தானிய அரசால் தடை செய்யப்பட்டு, விடுதலைப் போராட்ட காலத்தில் மிகுந்த தன்னெழுச்சியை உருவாக்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆங்கிலேயரால் இரட்டை ஆயுள் தண்டனை பெற்று அந்தமான் செல்லுலார் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர், 1921 இல் நிபந்தனைகளின் பேரில் விடுவிக்கப்பட்ட சாவர்க்கர், 1937 இல் இந்து மகாசபைக்குத் தலைவராகி, இந்துத்வா எனும் சொல்லாட்சியின் கீழ் இந்து தேசியத்தைக் கட்டமைக்க முயன்றவராகக் குறிப்பிடப்படுகிறார்.

இந்து தேசியத்தை திவிரமாக முன்னெடுக்கும் அமைப்பாக அறியப்படும் ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங்கம், 1925 இல் கேசவ பலிராம் ஹெட்கேவரால் (1889-1940) நாக்பூரில் தொடங்கப்பட்டிருக்கிறது. பின்னர் அதன் தலைவரான மாதவ சதாசிவ கோல்வால்கரால் (1906- 1973) நாடு தழுவிய அமைபபாக ராஷ்ட்ரிய சுயம் சேவக் வளர்க்கப்பட்டிருக்கிறது.

சுயநலமின்றி தாய்நாட்டிற்கு சேவை செய்தல் என்பதை செயல் நோக்கமாகக் கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் வழிகாட்டுதலில் சங் பரிவர் எனும் பல்வேறு அமைப்புகள் செயல்பட்டு வருவதாகக் கருதப்படுகிறது. பாரதிய ஜனதா போன்ற அரசியல் கட்சிகள், பாரதிய கிசான் சங்கம், பாரதிய மஸ்துர் சங்கம் போன்ற தொழில் மற்றும் பணி சார்ந்த அமைப்புகள் சேவா பாரதி போன்ற தொண்டு நிறுவனங்கள், ராஷ்ட்ரிய சேவிகா சமிதி போன்ற ஏராளமான அமைப்புகளை வழிநடத்துவதாகக் குறிப்பிடப்படும் ஆர்.எஸ்.எஸ், இந்து சமயத்தை வளர்க்கும் நோக்கிலும் பல்வேறு அமைப்புகளை உருவாக்கியிருக்கிறது.

இந்து தர்மத்தைக் காப்பதற்காக 1964 இல் உருவாக்கப்பட்ட வி.எச்.பி எனப்படும் விசுவ இந்து பரிசத், 1984 உருவான பஜ்ரங்தள் (அனுமன் சேனை), 1980

இல் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்து முன்னணி போன்றவை முக்கியமான சங் பரிவார் அமைப்புகளாக அறியப்படுகின்றன.

மக்களிடையே தேசிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் 1940 இல் இராஷ்டிர தர்மா எனும் இதழை லக்னோவில் தொடங்கிய பண்டிட் தீனதயாள் உபாத்தியாயா (1916-1968), ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முக்கியத் தலைவராகப் புகழப்படுகிறார். தத்துவ அறிஞராகவும், பொருளாதார, சமூக மற்றும இதழியல் அறிஞராகவும் குறிப்பிடப்படும் உபத்யாயா, சுயம் சேவக் மற்றும் பாரதிய ஜன சங்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவராகக் குறிப்பிடப்படுகிறார்.

பாரதிய ஜன சங்கம் சார்பாக 1951-52 தேர்தலில் சியாமபிரசாத் முகர்ஜி, துர்கா சரண் பானர்ஜி, உமா சங்கர் திரிவேதி என மூன்று பேர் நாடாளுமன்றம் சென்றிருக்கின்றனர். 1957 தேர்தலில் நான்கு பேர், 1962 இல் பதினான்கு, 1967 இல் முப்பந்தைந்து என வளர்ச்சி பெற்று வந்த ஜன சங்கம், 1977 இல் ஜனதா கட்சியோடு இணைந்து போட்டியிட்டிருக்கிறது. 1984 தேர்தலில் இரண்டு இடங்கள் பெற்ற பாரதிய ஜனதா 1989 தேர்தலில் 85 இடங்கள் பெற்று மிகப்பெரும் கட்சியாக வளர்ந்ததற்கு ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் பங்களிப்பு அளப்பரியது.

1989 நாடாளுமன்றத் தேர்தலில் முப்பது இடங்கள் பெற்ற தெலுங்கு தேசம், முக்கிய எதிர்கட்சியானதோடு கட்சியின் நிறுவனரான என்.டி. இராமாராவ் (1923-1996), தேசிய அரசியலிலும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறார். எம்.ஜி.ஆரைப் பின்பற்றி 1982 இல் தெலுங்கு தேசம் கட்சியைத் தொடங்கிய இராமாராவ், ஓராண்டுக்குள்ளாகவே ஆந்திராவின் பத்தாவது முதல்வராகப் பதவி ஏற்றது அதிசயம். 1989-ல் ஏற்படுத்தப்பட்ட தேசிய முன்னணியின் தலைவராக இருந்து வி.பி. சிங் பிரதமராகத் தேர்வானதில் முக்கியப் பங்காற்றியவராகவும் ராமாராவ் புகழப்படுகிறார்.

நேருவின் நம்பிக்கைக்குரியவராகவும் கலிங்கம் எனும் பண்டைய ஒரியா மீது பேரன்பு கொண்டவராகவும் அறியப்படும் பிஜு பட்நாயக் (1916-1997), மிசாக் காலத்தில் இந்திராவின் ஒடுக்குதல்களுக்கு ஆளாகி பின்னர் ஜனதா கட்சியோடு நெருக்கமாகியிருக்கிறார். முன்பு காங்கிரஸ் சார்பாக வெற்றி பெற்று ஒரிசாவின் முதலமைச்சராகப் பணியாற்றியவர் (1961-63), பின்பு கட்சிப் பணிகளில் கவனம் செலுத்துவதற்காக முதல்வர் பதவியைத் துறந்திருக்கிறார். இந்திரவோடும் நட்புக்

கொண்டிருந்த பட்நாயக், 1969 க்கு பின்னர் கருத்து வேறுபாடு கொண்டு தேசாய் மற்றும் சரண்சிங் அமைச்சரவைகளில் பங்கெடுத்திருக்கிறார். 1989 தேர்தலில் அமைக்கப்பட்ட தேசிய முற்போக்கு அணியில் பட்நாயக் அவர்களும் முக்கியமானவராக இருந்திருக்கிறார். பிஜீபட்நாயக் மறைவிற்குப் பின், மகன் நவீன் பட்நாயக் (பிறப்பு-1946), பிஜு ஜனதா தளம் எனும் கட்சியைத் தொடங்கி, இரண்டாயிரத்திலிருந்து தொடர்ந்து ஒரிஸாவின் முதல்வராகப் பணியாற்றி வருகிறார்.

மிசா காலத்தில் உத்திரப் பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களில் வலிமையாக இருந்த ஜனதா கட்சியில் பலரும் தலைவர்களாகப் பரிணமித்து பின்வந்த காலங்களில் இந்திய அரசியலிலும் மாநில அதிகாரங்களிலும் பல்வேறு தாக்கங்களை நிகழ்த்தியிருக்கிறன்றனர். பின் வந்த காலங்களில் ஜனதா கட்சியிலும் பல்வேறு பிளவுகளும் மாநிலக் கட்சிகளும் உருவாகின. குறிப்பாக, நீண்ட கால பாராளுமன்றவாதியாகவும் புகழ்பெற்ற அரசியல் வாதியாகவும் அறியப்படும் ஐக்கிய ஜனதா தளத்தின் ஜார்ஜ் பெர்னாண்டஸ் (பிறப்பு-1930), நிதிஷ்குமார் (பிறப்பு-1951), ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் லாலு பிரசாத் யாதவ் (பிறப்பு-1948), லோக் தளம், ஜனதாதளம் கட்சிகளில் இருந்தவரும் பின்னர் சமாஜ்வாதி கட்சியன் நிறுவனத் தலைவராகவும் அறியப்படும் முலயம் சிங் யாதவ் (பிறப்பு-1933) போன்றோர், அவசரநிலைக்குப் பிறகான இந்திய அரசியலிலும் மாநில அரசுகளிலும் குறிப்பிடத்தக்க செல்வாக்குத் செலுத்தியவர்களாக அறியப்படுகின்றனர்.

1984 இல் அட்டவணையினர் மற்றும் ஒடுக்கப்பட்டோர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட கன்சிராம் (1934- 2006) அவர்களால் 1984-ல் உருவாக்கப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சி, உத்திரப் பிரதேச அரசியலிலும் நடுவண் அரசிலும் தாக்கங்களை ஏற்படுத்தியதாக அறியப்படுகிறது. பகுஜன் சமாஜின் முக்கியத் தலைவரான மாயாவதி நைனா குமாரி, உத்தரப் பிரதேசத்தின் முதல்வராகப் பணியாற்றியதோடு அட்டவணையிரின் முன்னேற்றத்திற்கு குரல் கொடுப்பவராகவும் அறியப்படுகிறார்.

ஜம்மு-காஷ்மீர் மாநில வரலாற்றோடு நெருங்கி தொடர்பு கொண்ட தேசிய மாநாட்டுக் கட்சியின் பரூக் அப்துல்லா (பிறப்பு-1936) தேசிய முன்னணி, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி போன்றவற்றோடு தொடர்பு கொண்டவராகவும் மாநில

அரசின் முதல்வராகப் பலமுறை பணியாற்றி காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றவராகவும் புகழப்படுகிறார்.

சுதந்திர கால கட்ட காஷ்மீர் மீது அதிகமான தாக்கங்களைக் கொண்டவராக அறியப்படும் ஷேக் அப்துல்லா (1905-1982) காஷ்மீரின் இரண்டாவது தலைமை அமைச்சராகவும் (1948-53) நான்காவது முதலமைச்சராகவும் (1975-77) பணியாற்றியிருக்கிறார். அப்பா, மகனைத் தொடர்ந்து பேரனான ஓமர் அப்துல்லாவும் (பிறப்பு-1970) காங்கிரஸ் கூட்டணியுடன் 2009 இல் காஷ்மீர் மாநில முதலமைச்சராகப் பணியாற்றினார்.

1999 இல் சம்மு காசுமீர் மக்களின் சனநாயகக் கட்சி தொடங்கிய முப்தி முகமது சயீத் (1936-2016) வி.பி.சிங் அமைச்சரவையின் உள்துறை அமைச்சராக இருந்தது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ்காரரான முப்தி 1987 -91 வரை ஜனதா தளத்திலும் இருந்திருக்கிறார். 2002- 2005 வரை காசுமீர் முதலமைச்சராகப் பணியாற்றிய முப்தி அவர்களின் மகள் மெகபூபா முப்தியும் அரசியல்வாதியாகப் பணியாற்றுகிறார்.

தேசாய் அமைச்சரவையில் விவசாய மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சராக இருந்த பிரகாஷ்சிங் பாதல் (பிறப்பு-1927) பஞ்சாபின் புகழ்பெற்ற அரசியல்வாதியாகவும், சிரோமணி அகாலி தளத்தின் தலைவராகவும் அறியப்படுகிறார். பஞ்சாப் முதல்வராகப் பலமுறை பணியாற்றியுள்ள பாதல், பஞ்சாப் விவசாயிகள் சார்ந்த பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

1920 களில் சீக்கியக் கோவில்களான குரத்வாராக்களின் சீர்திருத்தம் வேண்டி தொடங்கப்பட்ட குருத்வாரா சீர்திருத்த இயக்கம் அல்லது அகாலி இயக்கம் குரத்வாராக்களை சீரமைக்க உதவியதோடு சிரோமணி குருத்வரா பிரபந்த செய்றகுழு மேலாண்மையின் கீழ் அனைத்து குருத்வாராக்களும் முக்கியமான இடங்களும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. சமய வழிபாட்டுத் தலங்கள் முக்கியப் பொருட்கள், நூல்கள, ஏராளமான கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், அறக்கட்டளைகள் போன்றவற்றையும் குருத்வாரா கமிட்டி நிர்வகிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. பஞ்சாபில் அகாலி இயக்கத்தினைத் தொடர்ந்து பல இயக்கங்கள் அகாலி அகாலிதள் எனும் பெயரில் உருவாகியிருக்கின்றன.

நாட்டின் ஏழாவது குடியரசுத் தலைவராக இருந்த கியானி ஜெயில் சிங் (1986-1994) எழுபதுகள் வரை பஞ்சாப் மாநில அரசியலில் பணியாற்றியவராகவும், 1972-77 காலகட்டத்தில் காங்கிரசு சார்பாக பஞ்சாப் மாநில முதல்வராக இருந்தவராகவும் அறியப்படுகிறார். இந்திராவின் 1980 அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்த திரு ஜயல் சிங் 1982-87 வரை குடியரசுத் தலைவராகப் பதவி வகித்திருக்கிறார்.

மகாராஷ்டிரா மாநிலத்தின் முக்கிய அரசியல்வாதியாகவும், தேசிய அரசியலில் குறிப்பிடத்தக்க செல்வாக்குச் செலுத்தியவராகவும் அறியப்படும் சரத்பவார் எனும் சரத் சந்திர கோவிந்தராவ் பவார் (பிறப்பு-1940), மூன்றுமுறை மாநிலத்தின் முதலமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார். காங்கிரசிலிருந்து பிரிந்து 1959 இல் தேசியவாத காங்கிரசை உருவாக்கி ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இடம் பெற்ற சரத்பவார், வேளாண்மை, இராணும் போன்ற துறைகளின் நடுவண் அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார்.

சிவாஜியின் பெயரால் சிவசேனா எனும் கட்சியை 1966 இல் உருவாக்கிய பால் தாக்கரே (1926-2012) மகாராட்டிர மாநிலத்தின் நலன் சார்ந்து செயல்பட்ட அரசியல்வாதியாக அறியப்படுகிறார். 1989 முதல் பாரதிய ஜனதாவுடன் அரசியல் கூட்டணி வைத்திருக்கும் சிவசேனை கட்சி, மராட்டியம் மராத்தியர்களுக்கே அதாவது மைண்ணின் மைந்தர்களுக்கே எனும் அடிப்படையில் செயல்படுவதாவும் தமிழர், பீகாரிகள் போன்ற பிற மாநில மக்கள் மீது காழ்ப்புணர்வோடு நடந்து கொள்வதாகவும் பல்வேறு பதிவுகள் சுட்டுகின்றன.

மராட்டியத் தலைநகர் மும்மையில் அமைந்துள்ள தாராவி குடிசை குடியிருப்புப் பகுதியில் லட்சக்கணக்கான தமிழர்கள் தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. சுமார் ஐநூற்று முப்பது ஏக்கர் பரப்பளவு கொண்ட பகுதிக்குள் பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

மும்பைக்கு பிழைப்புத் தேடி வருபவர்களின் சரணாலயமாக விளங்கும் தாராவியை மையமாகக் கொண்டு கமல்ஹாசன் நடிப்பில் வெளியான நாயகன் படம் (1987) கமல், மணிரத்தனம், இளையராஜா, சரண்யா, பி.சி. ஸ்ரீராம், தோட்டாதரணி போன்றோருக்கு சிறப்பாக அமைந்ததோடு, கேங்ஸ்டர் எனப்படும் தாதா படங்களில் முக்கியமானதாகவும் கூறப்படுகிறது.

மராத்தியராக அறியப்படும் ராமோஜிராவ் கெய்க்வாட் எனும் காவலரின் மகனான சிவாஜி ராவ் ராமோஜி ராவ் கெய்க்வாட் (பிறப்பு-1950), ரஜினிகாந்த் எனும் பெயரில் தமிழக திரைத்துறையில் புகழ்பெற்ற நடிகராக அறியப்படுகிறார். பெங்களூருவில் பிறந்து வளர்ந்தவரான ரஜினிகாந்த், சிறிதுகாலம் பேருந்து நடத்துனராகப் பணியாற்றியிருக்கிறார்.

கைலாசம் பாலசந்தர் எனும் கே. பாலசந்தரின் (1930- 2014), ஆபூர்வ ராகங்கள் திரைப்படம் (1975), கமல், ரஜினி, ஸ்ரீதேவிக்கு முக்கியமான படமாகக் கருதப்படுகிறது. எம்.ஜி.ஆர் அரசியலில் தனிக்கட்சி தொடங்கி தீவிரமான அரசியல்வாதியாக செயல்பட்ட காலத்தில் திரைத்துறைக்குள் நுழைந்த ரஜினிகாந்த், விரைவிலேயே புகழ்பெற்ற நடிகராகி தமிழகத்தின் உச்ச நடிகராகியது வரலாறு.

மனித உறவுகளின் சிக்கல்கள், சமூகப் பிரச்சினைகள் போன்றவற்றை மையக் கருத்தாகக் கொண்ட படங்களை இயக்கியவராகப் புகழப்படும் பாலசந்தர், 1965 முதல் சுமார் ஐம்பதாண்டு காலம் திரைத்துறை, தொலைக்காட்சி ஊடகங்களில் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருந்தார்.

கிராமிய மணம் சார்ந்து திரைப்படங்களை இயக்கியவராகவும் தமிழ் சினிமாவை இயற்கை சார்ந்த படப்பிடிப்பு நோக்கி நகர்த்தியவராகவும் அறியப்படும் பாரதிராஜாவின் (பிறப்பு-1941) பதினாறு வயதினிலே படம் (1977) கிராமிய மண் சார்ந்த முக்கிமான படமாக புகழப்படுகிறது. சப்பாணியாக கமலும், பரட்டையாக ரஜினியும், மயிலுவாக ஸ்ரீதேவியும் ஏற்ற கதாபாத்திரங்கள் திரையுலக ரசிகர்களால் மறக்க முடியாதவையாகக் கூறப்படுகிறது. அலைகள் ஓய்வதில்லை படம் மூலம் கார்த்திக் (பிறப்பு-1960) மற்றும் ராதாவை (பிறப்பு-1965) அறிமுகம் செய்த பாரதிராஜா, பல்வேறு புகழ்பெற்ற நடிகைகளையும் இயக்குனர்களையும் வெளிக்கொணர்ந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். சிவாஜி கணேசன், ராதா, வடிவுக்கரசி (பிறப்பு-1962), நடிப்பில் வெளியான முதல்மரியாதை (1985) அக்காலத்திய பெரியவர்களை மிகவும் ஏங்க வைத்த படமாக கூறப்படுகிறது.

கமல், ரஜினியோடு நடித்த மூன்று முடிச்சு (1976) தொடங்கி பல்வேறு படங்களில் கதாநாயகியாக நடித்த ஸ்ரீதேவி (பிறப்பு-1963), கந்தன் கருணைப்

படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடிக்கத் தொடங்கி, இந்திய அளவில் புகழ்பெற்ற கதாநாயகியாகப் பெயர் பெற்றிருக்கிறார்.

தமிழின் முதல் திரைப்படக் கதாநாயகியாக டி.பி. ராஜலட்சுமி எனும் திருவையாறு பஞ்சாபகேச ராஜலட்சுமி (1911- 1964) புகழப்படுகிறார். 1931-1943 க்கு இடைப்பட்ட காலத்தில் பதினாங்கு படங்களில் நடித்த ராஜலட்சுமி அம்மையார் பேசாப்படம், பேசும்படம், குறும்படம் என நடித்ததோடு, இயக்குனராகவும், நாவலாசிரியராகவும் புகழ் பெற்றிருக்கிறார். மதுரை நரசிம்ம ஆச்சாரி ராஜம் எனும் எம்.என். ராஜம் (பிறப்பு-1949) முதன்மை நாயகியாகவும் குணசித்ர நடிகையாகவும் பல்வேறு படங்களில் நடித்ததுப் புகழ் பெற்றுள்ளார்.

வாயாடி (1940) மர்மயோகி (1951), நல்லதங்கை (1955) போன்ற படங்களில் நடித்த மாதுரி தேவி (பிறப்பு-1927), வேணுகானம் (1941), கிருஷ்ண விஜயம் (1950) உள்ளிட்ட படங்களில் நடித்த என்.சி. வசந்த கோகிலம் (1919- 1951) போன்றோர் தமிழ் திரையின் பழம் பெரும் நடிகையராகப் புகழப்படுகின்றனர்.

தியாகராஜ பாகவதர் போன்ற அன்றைய முன்னணிக் கதாநாயகர்களுடன் கதாநாயகியாக நடித்துப் புகழ்பெற்ற டி.ஆர் ராஜகுமாரி (1922-1999), நடிப்பு, நடனம், பாடல் என அனைத்திலும் சிறந்தவராகப் புகழப்படுகிறார். ஹரிதாஸ் (1944)எஸ்.எஸ் வாசன்(1904-1969) இயக்கத்தில் வெளியான புகழ்பெற்ற சந்திரலேகா (1948)போன்ற படங்கள் ராஜகுமாரிக்கு பெரும் புகழினை அளித்தவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

லவகுசா (1963) படத்தில் சீதையாக நடித்து புகழ்பெற்றவர் நடிகையும் தயாரிப்பாளருமான அஞ்சலிதேவி (1927-2014). நடிகை, பாடகி, எழுத்தாளர், இயக்குனர் எனப் பன்முகத்தன்மை கொண்டவராக அறியப்படும் பானுமதி (1925-2005), அலிபாபாவும் நாற்பது திருடர்களும் (1956) நாடோடிமன்னன் (1958) போன்ற படங்களைச் சிறப்பித்தவராகப் புகழப்படுகிறார்.

நாட்டியப் பேரொளி எனப் புகழப்படும் பத்மினி (1932-2006), வாழ்க்கை (1949), உத்தமபுத்திரன் (1958), வஞ்சிக்கோட்டை வாலிபன் (1958), தில்லான மோகனம்பாள் உட்பட பல்வேறு படங்களிலும் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியவராகப் புகழப்படுகிறார்.

இந்திய அளவில் திரைப்படத்துறையில் புகழ் பெற்றவராக அறியப்படும் வைஜெயந்தி மாலா (பிறப்பு-1933), அரசியலிலும் ஈடுபாடு கொண்டவராக

அறியப்படுகிறார். முந்நூறுக்கும் மேற்பட்ட தென்னிந்திய மற்றும் இந்தி படங்களில் நடித்திருக்கும் சாவித்ரி (1935-1981), வேட்டைக்காரன், (1964) திருவிளையாடல் போன்ற பல படங்களில் சிறப்பாக நடித்தவராகப் புகழப்படுகிறார்.

நால்வர் (1953) போலீஸ்காரன் மகள் (1962), சாரதா (1962) பச்சை விளக்கு (1964), பூம்பூகார் (1964) உட்பட பல புகழ்பெற்ற படங்களில் சிறப்பாக நடித்துள்ளவராக அறியப்படும் சி.ஆர். விஜயகுமாரி, பிற்காலத்திய தெனாலி (2000) போன்ற படங்களிலும் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. பூம்புகார் திரைப்படத்தில் விஜயகுமாரியின் நடிப்பு சிறப்பானதாகப் பாராட்டப்படுகிறது.

கால் நூற்றாண்டு காலம் புகழ்பெற்ற முன்னணி நடிகையாக இருந்தவராகவும் நாடோடிமன்னன் மூலம் பெரும் புகழ் பெற்றவராகவும் குறிப்பிடப்படும் சரோஜா தேவி (பிறப்பு-1938), படகோட்டி (1924), அன்பேவா (1966) உட்பட ஏராளமான படங்களில் நடித்திருக்கிறார். புன்னகை அரசி எனப் புகழப்பட்ட கே.ஆர் விஜயா (பிறப்பு-1948), நானூறுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்து புகழ்பெற்றுள்ளார். கற்பகம் தொடங்கி (1963), கந்தன் கருணை (1967), குறத்தி மகன் (1972), நல்ல நேரம் (1972), விவசாயி என ஏராளமான படங்களில் நடித்த கே.ஆர் விஜயா அம்மன் படங்களில் நடித்து பெண்களின் மனம் கவர்ந்தவராகவும் அறியப்படுகிறார்.

காதலிக்க நேரமில்லை (1963) தொடங்கி 150 க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள காஞ்சனா (பிறப்பு-1939), ஆனந்தஜோதி (1963), கர்ணன், நெஞ்சம் மறப்பதில்லை (1963), போன்ற நூற்றைப்பதிற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள தேவிகா (1943-2002) போன்றோரும் புகழ்பெற்ற நடிகையாக குறிப்பிடப்படுகின்றனர். தமிழ் தெலுங்கு உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ள சௌகார் ஜானகி (பிறப்பு-1931), எதிர்நீச்சல் (1968) புதிய பறவை போன்ற படங்களில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியவராகப் புகழப்படுகிறார்.

ஸ்ரீவள்ளி படத்தில் (1944) நடித்த குமாரி ருக்மணி (1929-2007), மகளும், தேசிய விருது பெற்ற நடிகையுமான லட்சுமி (பிறப்ப- 1952), பேத்தியும் நடிகையுமான ஐஸ்வரியா (பிறப்பு-1971) என மூன்று தலைமுறையினர் வெள்ளித்திரையில் நடித்துப் புகழ்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

லதா எனும் லதா சேதுபதி (பிறப்பு-1953) எம்.ஜி.ஆரின் பிற்காலத்தியப் படங்களில் அதிகம் நடித்துப் புகழ்பெற்றவராக அறியப்படுகிறார். மஞ்சுளா

விஜயகுமார் (1953-2013) ரிக்ஷாக்காரன் மூலம் புகழ்பெற்ற நடிகையாக அறியப்பட்டதோடு பிற்காலத்தில் குணசித்திர நடிப்பிலும் சிறந்து விளங்கினார். ஸ்ரீவள்ளியில் நடித்தவரான பஞ்சாசரம் ரங்கசாமி எனும் விஜயகுமார் (பிறப்பு- 1949) பல்வேறு பாத்திரங்களிலும் நடித்துப் பெயர் பெற்றவர் என்பதும், விஜயகுமார் - லதா விஜயகுமார் குடும்பத்திலிருந்து அடுத்த தலைமுறை நடிகர்கள் நடிப்பதும் குறிப்பிடத்தக்கது.

காதலிக்க நேரமில்லை (1964), ஊட்டி வரை உறவு (1967) போன்ற நகைச்சுவைப் படங்கள் மூலம் தமிழ் ரசிகர்களால் பெரிதும் அறியப்பட்ட டி.எஸ் பாலையா (1914-1972), நீண்டகாலம் திரைத்துறையில் இருந்தவராகவும் பல்வேறு பாத்திரங்கள் ஏற்று நடித்தவராகவும் புகழப்படுகிறார்.

சிறந்த சிரிப்பு நடிகராகவும், பாடகராகவும் அறியப்படும் சந்திர பாபு (1927-1974), அமராவதி (1947) தொடங்கி பல்வேறு படங்களில் நடித்தும், பாடியும், ஆடியும் மக்களை மகிழ்வித்தவராகப் புகழப்படுகிறார்.

நகைச்சுவையிலும், குணசித்திர நடிப்பிலும் புகழ்பெற்றவராக அறியப்படும் நாகேஷ் (1933-2009) ஆயிரம் திரைப்படங்களுக்கும் மேல் நடித்துப் புகழ் பெற்றிருக்கிறார். நீர்க்குமிழி (1965) போன்ற படங்களில் கதாநாயாகனாகவும் வேடமேற்ற நாகேஷ், நீண்ட காலம் திரைத்துறையில் பணியாற்றினார்.

பழைய நகைச்சுவை நடிகையாகவும் பிற்காலத்திய குணசித்திர நடிகையாகவும் அறியப்பட்ட ஆச்சி மனோரமா (1937-2015), பல காலம் திரைத்துறையில் புகழுடன் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

சோ - என அறியப்படும் சோ. ராமசாமி (1934-2016) நாடக ஆசிரியராகவும், நடிகராகவும், துக்ளக் (தோற்றம்-1970) வார இதழின் நிறுவன ஆசிரியராகவும், அரசியல் ஆலோசகராகவும் அறியப்படுகிறார். பதினான்கு திரைப்படங்களுக்கு கதைகள் எழுதியும், இருநூறுக்கும் மேற்பட்ட படங்களுக்கு மேல் நடித்தும் படங்கள் இயக்கியும் புகழ் பெற்ற சோ. ராமசாமி, வாஜ்பாய் ஆட்சிகாலத்தில் மாநிலங்கவை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

வில்லன் நடிகராகவும், குணச்சித்திர நடிகராகவும் அறியப்படும் எஸ்.ஏ. அசோகன் (1900-1982), கப்பலோட்டிய தமிழன் (1961), கர்ணன் போன்ற படங்களில் சிறப்பான கவனம் பெற்றவராகப் புகழப்படுகிறார்.

சிங்காரி (1951) படம் மூலம் அறிமுகமாகி ஏராளமான படங்களில் நடித்த கே.ஏ.தங்கவேலு எனும் டணால் தங்கவேலுவும் (1917-1994), காதல் மனைவி எம். சரோஜாவும் இணைந்து தமிழக மக்களை வயிறு குலுங்க சிரித்த வைத்தவர்களாகப் புகழப்படுகின்றனர். கல்யாணப் பரிசு (1959) மாயா பஜார்(1957) போன்ற படங்களின் நகைச்சுவைக்கு தங்கவேலு வெகுவாக பாராட்டப்படுகிறார்.

என்.எஸ். கிருஷ்ணனின் கூட்டாளியாக நடித்து புகழ் பெற்ற டி.எஸ். துரைராஜ் (1910-1986) ஆரம்ப கால நகைச்சுவை நடிகராக அறியப்படுகிறார். சபாபதி (1941) எனும் படத்தின் நகைச்சுவை மூலம் ரசிகர்களைக் குலுங்க வைத்த டி.ஆர். இராமச்சந்திரன் (1917-1990) ஏராளமான படங்களில் முக்கிய வேடங்களிலும், நகைச்சுவைப் பாத்திரங்களிலும் நடித்துப் புகழ்பெற்றவராக அறியப்படுகிறார்

ஏ.வி.ராஜன் 1963 தொடங்கி, கலாட்டாக் கல்யாணம் (1968) போன்ற பல படங்களில் சிறப்பாக நடித்தவராகக் புகழப்படுகிறார். மேஜர் சந்திரகாந்த் (1966) படத்தில் சிறப்பாக நடித்ததின் விளைவாக மேஜர் அடைமொழியோடு மேஜர் சுந்தர்ராஜன் என அழைக்கப்பட்ட சுந்தர்ராஜன் (1935-2003) சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியவராகவும், சிவாஜி கணேசனின் நெருங்கிய நண்பராகவும் அறியப்படுகிறார்.

ஒரு திரைப்படம் உருவாவதில் இயக்குனரின் பங்களிப்பே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஓர் திரைப்படம் உருவாக்கப்படுவதைச் செயல்படுத்துபவர் மற்றும் திரைப்படத் தயாரிப்பை வழிகாட்டுபவராகவும் இயக்குனர் பொறுப்பு வகிக்கிறார். திரைக்கதையை மன ஓவியமாகத் தீட்டி, தொழில்நுட்பக் கலைஞர்களையும் நடிகர்களையும் வழிகாட்டி, கலை நுணுக்கமுள்ள ஓவியமாக ஒரு திரைப்படத்தை வெளிக்கொணர்வதில் இயக்குனரே முன் நிற்கிறார்.

நூற்றாண்டு காணும் தமிழ் திரையுலகில் பல புகழ்பெற்ற இயக்குனர்கள் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றிருக்கின்றனர். எம்.ஜி.ஆரின் ஏராளமான படங்களை இயக்கிய ப.நீலகண்டன் (1916-1992), தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி என பல புகழ்பெற்ற படங்களை இயக்கிய கே. சங்கர் (1926 -2006), தஞ்சாவூர் ரங்கநாயகி ராமச்சந்திரன் எனும் டி.ஆர். ரமணா, டி.ஆர். சுந்தரம் (1907-1963) படத் தொகுப்பாளரும் இயக்குநருமான எம்.எ. திருமுருகன். சிவாஜியின் ஏராளமான படங்களை இயக்கிய ஏ.சி. திருலோகசந்தர் (1930-2016), பன்முகத்திறமை

கொண்டவராக அறியப்படும் ஏ.பீம்சிங் (1924-1978), பால்கே விருதுபெற்ற எல்.வி. பிரசாத் (1908-1994), நடிகரும் இயக்குனருமான பி.ஆர். பந்துலு (1910-1974) இயக்குநரும் தயாரிப்பாளருமான பி. மாதவன் (1928-2003) உட்பட ஏராளமானோர் புகழ்பெற்ற இயக்குனர்களாக அறியப்படுகின்றனர்.

கவிராயர் என அழைக்கப்பட்ட உடுமலை நாராயண கவி (1899-1981) 1940கள் முதல் 1976 வரை புகழ்பெற்ற எராளமான பாடல்களை எழுதியவராக அறியப்படுகிறார். யாவருக்கும் புரியும் வண்ணம் எளிய சொற்களால் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு பாடல்கள் எழுதியவராகப் புகழப்படும் நாராயண கவி, கலைவாணரின் நெருங்கிய தோழராகவும் குறிப்பிடப்படுகிறார்.

எளிமையான பாடல்கள் மூலம் சமுதாயக் கருத்துக்களைப் பரப்பியவராக அறியப்படும் தஞ்சை இராமையாதாஸ் (1914-1965), பல புகழ் பெற்ற பாடல்களை எழுதியதோடு வசனகர்த்தாவாகவும் திரைக்கதை ஆசியரியராகவும் பெயர் பெற்றிருக்கிறா. எத்தனை காலம்தான் ஏமாற்றுவர் இந்த நாட்டிலே போன்ற பாடல்கள் இராமையாவின் புகழை மக்கள் மத்தியில் வெகுவாகர் பரப்பியிருக்கின்றன.

ஏமல மன்மதராஜீ ராஜா எனும் ஏ.எம். ராஜா (1929-1989) தென்னிந்தியாவின் புகழ்பெற்ற திரைப்படப் பின்னணி பாடகர்களுள் ஒருவாராகவும், நடிகராகவும், இசையமைப்பாளராகவும் அறியப்படுகிறார். ஜெமினி, எம்.ஜி.ஆர், சிவாஜி, ராமாராவ், நாகேஸ்வரராவ் என பழம்பெரும் நடிகர்கள் அத்தனைபேருக்கும் பாடியுள்ள ஏ.எம். ராஜா நீண்ட கால திரையனுபவம் கொண்டவராகக் குறிப்பிடப்படுகிறார்.

1943 தொடங்கி 2002 வரை சுமார் அறுபதாண்டு காலம் திரையிசைத் துறையில் புகழ் பெற்ற பாடகியாக இருந்த கஜபதி நாயுடு கிருஷ்ணவேணி எனும் ஜிக்கி (1937-2004), தமிழ் மொழியிலும் தென்னிந்திய, இந்தி, சிங்கள மொழிகளிலும் ஏராளமான பாடல்களைப் பாடியிருக்கிறார். கணவர் ஏ.எம் ராஜாவோடு இணைந்தும் தமிழர் மனங்கவர்ந்த ஏராளமாக பாடல்களைக் கொடுத்துள்ளார்.

சிறந்த கருநாடக இசைப் பாடகரான சீர்காழி எஸ். கோவிந்தராஜன் (1933-1988), புகழ்பெற்ற பக்திப் பாடல்கள் மூலம் மக்கள் மனங்களில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

அன்னக்கிளி (7976) எனும் திரைப்படம் மூலம் இசையமைப்பாளரான இளையராஜா (பிறப்பு-1943), நாட்டுப்புற, மேற்கத்திய மற்றும் கருநாடாக இசை மரபுகளை இணைத்து உருவாக்கிய பாடல்கள் கிராமியப் பின்னணி சார்ந்து எடுக்கப்பட்ட படத்திற்கு மேலும் பெருமை சேர்த்ததோடு, தமிழக மக்களின் உள்ளங்களிலும் அழுத்தமாகப் பதிந்ததாக அறியப்படுகிறது. ஞானதேசிகன் எனும் இயற்பெயர் கொண்டவராகக் கூறப்படும் இளையராஜா, இசையின் பல்வேறு வடிவங்களில் உச்சம் தொட்டவராகவும் இசை ஞானி, மேஸ்ட்ரோ எனும் புகழுக்குரியவராகவும் விளங்குகிறார்.

இளையராஜாவின் வாரிசுகள், சகோதரர் கணேஷ்குமார் எனும் கங்கை அமரன் மற்றும் அவரது வாரிசுகள் தமிழக திரை இசைத்துறையிலும் திரைத்துறையிலும் குறிப்பிடத்தக்க ஆளுமைகளாக இருக்கின்றனர்.

சிவாஜியின் நடிப்பிற்கும் பாடல்களுக்கும் பெயர் பெற்ற முதல் மரியாதைப் படத்தின் பாடல்கள் எழுதியதற்காக வெண்தாமரை விருது பெற்ற வைரமுத்து (பிறப்பு-1953), சிறந்த திரைப்பட பாடலாசிரியராகவும், இலக்கியவாதியாகவும் அறியப்படுகிறார். 1980 இல் அறிமுகமான வைரமுத்து இளையராஜாவோடும், ரஹ்மானோடும் இணைந்து பல புகழ்பெற்ற பாடல்களை எழுதியிருக்கிறார். ஆனந்த விகடனில் கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம், மூன்றாம் உலகப்போர், தண்ணீர் தேசம் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். கவிதைகள், சிறுகதைகள் போன்ற பிற ஆக்கங்களையும் எழுதியுள்ளார்.

தொழில்நுட்பரீதியாக தமிழ் சினிமாவை உயர்த்தியவராகக் குறிப்பிடப்படும் மணிரத்னம் (பிறப்பு-1956), இந்திய அளவில் குறிப்பிடத்தக்க இயக்குனராக அறியப்படுகிறார். 1983 முதல் இயக்குனராக உள்ள மணிரத்னத்தின் அஞ்சலி, தளபதி. ரோஜா, பம்பாய் உட்பட பல படங்கள் புகழ் பெற்றவை.

தொழில் நுட்பத்திற்கும் பிரம்மாண்டத்திற்கும பெயர் பெற்ற இயக்குனரான ஷங்கர் (பிறப்பு-1963) ஜென்டில்மேன் (1993) படம் மூலம் அடையாளம் பெற்றார்.

1996-ல் வெளியான இந்தியன் திரைப்படம் ஊழலுக்கு எதிரான படமாகவும் பெரியளவில் வெற்றி பெற்ற படமாகவும் அமைந்தது.

பாரதிராஜாவிடம் உதவி இயக்குனராக இருந்து பின்னாட்களில் குறிப்பிடத்தக்க திரை ஆளுமையாக மாற்றம் பெற்ற கிருஷ்ணசாமி பாக்கியராஜ் (பிறப்பு-1953), திரைப்படம் சார்ந்த அனைத்துத் துறைகளையும் அறிந்தவரான தேசிங்கு ராஜேந்திரன் (பிறப்பு-1955), எண்பதுகளில் தொடங்கிய புதிய அலை திரைத்துறையில் முக்கியமானவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், நடிப்பு, இசை என அனைத்திலும் முத்திரை பதித்த இருவரும் பத்திரிக்கை மற்றும் அரசியலிலும் நுழைந்தனர்.

தங்கை, அம்மா, காதல் சார்ந்து உணர்ச்சிப்பூர்வமான படங்களை எடுத்த டி. ராஜேந்தர் அடுக்குமொழி வசனங்களுக்கும், பாடல்களுக்கும், செட்களுக்கும் புகழ்பெற்றவர். தி.மு.க.விலும், தாயக மறுமலர்ச்சி கழகம் எனும் தனிக்கட்சி தொடங்கியும், பின்னர் லட்சிய திராவிட முன்னேற்றக் கழகம் எனும் கட்சியை ஆரம்பித்தும் அரசியலில் ஈடுபாட்ட டி. ராஜேந்தர், மாநில உரிமைகள் சார்ந்து குரலெழுப்பியவராக அறியப்படுகிறார்.

1982 இல் வெளியான முந்தானை முடிச்சு கே. பாக்யராஜின் திரைத்துறை வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க வெற்றிப்படமாகக் கருதப்படுகிறது. முருங்கைக் காய்க்கு பெயர் பெற்ற படமாக இருந்தாலும், அன்றைய பள்ளிகள், மதிய உணவு, கிராமத்துக் குசும்பு என கிராமிய மணத்தோடு எடுத்த முந்தானை முடிச்சு படம் ஏ.வி.எம் நிறுவனத்திற்கும் புகழ் சேர்த்திருக்கிறது. எம்.ஜி.ஆர் மறைவிற்குப் பின் எம்.ஜி.ஆர் மக்கள் முன்னேற்றக் கழகம் எனும் கட்சி ஆரம்பித்து அரசியலில் ஈடுபட்ட பாக்கியராஜ், பின்னர் அரசியலிருந்து ஒதுங்கியது குறிப்பிடத்தக்கது. பாக்யா பல்சுவை இதழின் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளரான பாக்கியராஜ், குட்டிக் கதைகளோடு கூடிய கேள்வி பதிலகளுக்கு புகழ் பெற்றவராக விளங்குகிறார்.

இயக்குனராகவும், ஒளிப்பதிவாளராகவும் அறியப்படும் பாலு மகேந்திரன் (1939- 2014) குறிப்பிடத்தக் தென்னிந்திய திரைத்துறை ஆளுமையாகவும் மூன்றாம் பிறை, வீடு, வண்ண வண்ணப் பூக்கள் போன்ற தமிழ் படங்களின் நேர்த்திக்காகவும் புகழப்படுகிறார்.

முள்ளும் மலரும் (1978), உதிரிப்பூக்கள் (1979), ஜானி (1981) போன்ற படங்களின் மூலம் புகழ்பெற்றவராக அறியப்படும் இயக்குனர் மகேந்திரன் (பிறப்பு-1939), கதை, வசனம், திரைக்கதை துறைகளில் குறிப்பிடத்தக்க ஆளுமையாக அறியப்படுகிறார்.

1983 இல் வெளியான மலையூர் மம்பட்டியான் திரைப்படத்தில் சிறந்த நடிப்பை வெளிப்படுத்திய தியாகராஜன் (பிறப்பு-1945), தென்னிந்திய நடிகராகவும் இயக்குனராகவும், தயாரிப்பாளராகவும் அறியப்படுகிறார். வைகாசி பொறந்தாச்சு படத்தில் அறிமுகமான பிரசாந்த் (பிறப்பு-1973), வண்ண வண்ணப் பூக்கள், செம்பருத்தி, திருடா திருடா, ஆணழகன், ஜீன்ஸ், பொன்னர் சங்கர் உட்பட பல திரைப்படங்களில் சிறப்பாக நடித்திருக்கிறார்.

பாலு மகேந்திரவால் கோகிலா (1977) எனும் கன்னடப் படத்தில் அறிமுகமான மோகன் ராவ் எனும் மோகன் (பிறப்பு-1956), 1980கள் முதல் தமிழ்படங்களில் நடிக்கத் துவங்கி விரைவிலேயே முன்னணி கதாநாயகனாக புகழ் பெற்றிருக்கிறார். மேடைப் பாடகராக பல படங்களில் நடித்துள்ள மோகனின் படங்களில் இடம்பெற்ற பாடல்கள் சிறப்பானவை எனில் மிகையாகாது.

சண்டை காட்சிகளுக்குப் பெயர்பெற்ற நடிகரான அர்ஜுன் (பிறப்பு- 1964), ஜென்டில்மேன் (1993), ஜெய்ஹிந்த் (1994) முதல்வன் (1999) போன்ற பல புகழ்பெற்ற படங்களில் நடித்திருக்கிறார். 1984 இல் பூவிலங்கு எனும் திரைப்படம் மூலம் அறிமுகமான முரளி (1964- 2010) கீதாஞ்சலி (1983) புது வசந்தம் (1990) இதயம் (1991) பொற்காலம் (1997) போன்ற படங்கள் மூலம் தமிழ் ரசிகர்களில் மனங்கள் இடம் பெற்றவராக அறியப்படுகிறார்.

எம்.ஜி.ஆர் காலத்து திரைத்துறையினர் அவர்களின் வாரிசுகள், தொடர்ந்து அடுத்த தலைமுறை வாரிசுகள் என சில குடும்பத்து நடிகர்கள் திரைத்துறைக்குள் நுழைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. சிவாஜி, பிரபு (பிறப்பு-1956), விக்ரம்பிரபு (கும்கி-2012) எனவும், முத்துராமன், கார்த்திக், கவுதம் கார்த்திக் (கடல் - 2013) எனவும் பல உதாரணங்கள் அறியப்படுகின்றன.

அக்னி நட்சத்திரம் (1988) படத்தில் சகோதரர்களாக மோதிக்கொண்ட பிரபு, கார்த்திக் இருவரும் பல வெற்றிப்படங்களில் நடித்துள்ளனர். சிவாஜியோடு சங்கிலி (1982) படத்தில் நடித்த பிரபுக்கு, பி.வாசு (பிறப்பு-1954) இயக்கிய சின்னத்தம்பி படம்

(1992) சிறப்பாக அமைந்ததோடு, நடிகை குசுப்பூக்கும் (பிறப்பு-1970) பெயர் பெற்ற படமாக புகழ் பெற்றது.

வருசம் பதினாறு (1989), பொன்னுமணி (1993) போன்ற படங்கள் மூலம் கவனம் பெற்ற கார்த்திக், உள்ளத்தை அள்ளித் தா (1996) படத்திற்குப் பின் நகைச்சுவை சார்ந்த படங்களில் மூலம் கவனம் பெற்றார். பார்வர்டு பிளாக் கட்சியோடு நெருக்கம் காட்டிய கார்த்திக், பின்னர் 2009-ல் அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சியைத் தொடங்கினார்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் (2007) தலைவரான சரத்குமார் (பிறப்பு-1954), ஆர். கே. செல்வமணியின் இயக்கத்தில் வெளியான புலன் விசாரணை மூலம் கவனம் பெற்றார். சேரன் பாண்டியன் (1990) தொடங்கி பல புகழ்பெற்ற படங்களில் நடித்துள்ள சரத்குமார், 1996 இல் தி.மு.க.வில் இணைந்து, 2002-ல் மாநிலங்களவை உறுப்பினரானார். மனைவியும் நடிகையுமான ராதிகாவுடன் (பிறப்பு-1963) அ.தி.மு.க.வில் இணைந்தவர், பின்னர் சமத்துவ மக்கள் கட்சியைத் தொடங்கி (2007), தமிழக அரசியலில் பணியாற்றுகிறார்.

மதராஸ் ராசகோபால ராதாகிருஷ்ணன் எனும் எம்.ஆர். ராதா மகளான ராதிகா, கிழக்கே போகும் ரயில் (1978) படத்தின் மூலம் அறிமுகமாகி முன்னணி கதாநாயகியானார். இன்று போய் நாளை வா (1981), சிப்பிக்குள் முத்து (1986), பூந்தோட்டக் காவல்காரன் (1988 போன்ற பல படங்கள் மூலம் கவனம் பெற்ற ராதிகா, தொலைக்காட்சி தொடர்கள் மூலம் அதிகம் விரும்பப்படும் நடிகையாகவும் புகழ் பெற்றுள்ளார்.

1991 இல் வெளிவந்த கேப்டன் பிரபாகரன் விஜயகாந்தின் நூறாவது படமாகக் குறிப்பிடப்படுகிறது. 1978 முதல் நடித்து வரும் விஜயகாந்த் (பிறப்பு-1952) ஆரம்பத்தில் சமூக நீதி சார்ந்த படங்களில் நடித்து பெயர் பெற்றிருக்கிறார். வைதேகி காந்திருந்தாள் (1984), நானே ராஜா நானே மந்திரி (1985), அம்மன் கோவில் கிழக்காலே (1986), ஊமை விழிகள் (1986), செந்தூரப் பூவே (1988) போன்ற படங்களும், பின்னர் காவல் அதிகாரியாக ஏற்று நடித்த பல படங்களும் மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றன.

தி.மு.க. தலைவர் கருணாநிதி மேல் மரியாதை கொண்டவராக அறியப்பட்ட விஜயகாந்த், 2005 இல் தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் எனும் கட்சி

ஆரம்பித்து அரசியல்வாதியாக மாற்றம் பெற்றார். 2006 சட்ட மன்றத் தேர்தலில் அனைத்துத் தொகுதியிலும் போட்டியிட்ட தே.மு.தி.க, விஜயகாந்தின் தொகுதியான விருத்தாசலத்தில் மட்டும் வெற்றி பெற்றது.

எம்.ஜி.ஆர் காலத்து நடிகைகளைத் தொடர்ந்து சுஜதா, சரிதா, ஸ்ரீபிரியா, பூர்ணிமா, கனகா, ரேவதி, கௌதமி, மீனா, சுஹாசினி, சுகன்யா, ரோஜா, அமலா, நக்மா, தேவயானி, சௌந்தர்யா, ரம்பா, ரம்யாகிருஷ்ணன் போன்ற நடிகையரும் தொடர்ந்து, சங்கீதா, சிம்ரன் போன்ற பல நடிகையரும் தமிழ் திரைப்படங்கள் மூலம் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தவர்களாக அறியப்படுகின்றனர்.

பழைய நகைச்சுவை நடிகர்கள் சிரிப்போடு சிந்திக்கவும் வைத்தனர். தொடர்ந்து வந்த கவுண்டமணி செந்தில் இணை மக்களை கலகலப்பாக்கியதோடு. பின்னர் வந்த வடிவேலு காலத்திய சிரிப்பு நடிகர்கள் குழந்தைகளாலும் விரும்பப்படுகிறார்கள்.

எம்.ஜி.ஆர் காலம் வரை பெரும்பாலும் சாதிய அடையாளம் இல்லாதிருந்த தமிழக திரைத்துறை, பின்னர் வந்த காலங்களில் சாதியப் பெருமிதமான தலைப்புகளையும், கதைகளையும், பாடல்களையும், வசனங்களையும், இடம்பெறச் செய்திருக்கிறது. குறிப்பாக தேவர் சமூகத்தவரின் ஆதிக்கம் திரைத்துறையிலும் எதிரொலித்தது. தேவர் மற்றும் கவுண்டர் சமூகத்தவரின் பெருமை பேசும் படங்களும், பாடல்களும் தமிழர்களின் பண்டபாடாக முன்னெடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

1990 களில் திரைத்துறைக்கு வந்த கே.எஸ் ரவிக்குமார் (பிறப்பு-1958) வணிக ரீதியிலான மசாலா படங்களுக்குப் பெயர் பெற்றதோடு, கொங்கு பகுதி சார்ந்து படமெடுத்தவராகவும் அறியப்படுகிறார். பாரதி கண்ணம்மா 1997) படமெடுத்த சேரன் (பிறப்பு-1958) பின்னர் சமூக, குடும்ப உளவியல் சார்ந்து சிறப்பான படங்கள் இயக்கியவராக அறியப்படுகிறார்.

பாக்யராஜிடம் உதவி இயக்குனர்களாக இருந்து பின்னர் இயக்குனர் மற்றும் நடிகர்களான பாண்டியராஜன் (பிறப்பு-1959), ஆண்பாவம் (1985) மூலமும், ராதாகிருஷ்ண பார்த்திபன் எனும் ஆர். பார்த்திபன் புதியபாதை (1989) படம் மூலமும், சிறந்த இயக்குனர்களாகப் பெயர் பெற்றனர்.

எதிர் கதாநாயகனாகவும் பின்னர் கதாநாயகனாகவும் திப்பபடங்களில் நடித்த சத்தயராஜ் (பிறப்பு-1954), கடலோரக் கவிதைகள் (1986) மூலம் சிறப்பாக கவனம் பெற்றிருக்கிறார். இயக்குனர் மற்றும் நடிகரான மணிவண்ணனோடு (1953-2013) இணைந்து பல நையாண்டிப் படங்களில் சிறப்பாக நடித்திருக்கிறார் சத்யராஜ், மகன் சிபி சத்யராசும் 2003 முதல் நடிகராக அறியப்படுகிறார்.

இயக்குனர், தயாரிப்பாளர் மற்றும் எழுத்தாளராக அறியப்படும் எஸ்,ஏ சந்திரசேகர் 1981 இல் வெளியான சட்டம் ஒரு இருட்டறை தொடங்கி எழுபதிற்கும் மேற்பட்ட படங்களை இயக்கியிருக்கிறார். நாளைய தீர்ப்பு (1992) படம் மூலம் கதாநாயகனான விஜய் எனும் ஜோசப் விஜய் (பிறப்பு-1974), தற்கால இளைஞர்களின் புகழுக்குரிய கதாநாயகனாக விளங்குகிறார். மக்கள் மன்றம் (2009) எனும் பெயரில் ரசிகர் மன்றங்களை ஒன்றிணைத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

அமராவதி (1993) எனும் தமிழ் படத்தின் மூலம் அறிமுகமான அஜித்குமார் (1971), காதல் கோட்டை (1996) போன்ற படங்கள் மூலம் குறிப்பிடத்தக்க நடிகராக அடையாளம் பெற்று, பின் வந்த திரைத்துறை வாழ்க்கையில் விஜய் உடன் இரு துருவ அடையாளமாகக் கவனிக்கப்படுகிறார்.

தளபதி என்றும் தல என்றும் ரசிகர்களால் அழைக்கப்படும் இருவருக்கும் அடுத்து, சிலம்பரசன் (பிறப்பு-1983), தனுஷ் (பிறப்பு-1983) போட்டியாளர்களாக அடையாளம் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

புகழ் பெற்ற நடிகர் சிவகுமாரின் மகன் சரவணன் சூர்யா எனும் சூர்யா (பிறப்பு-1975), நேருக்கு நேர் (1997) எனும் படத்தில் அறிமுகமாகி சிறந்த நடிகர் எனப் பெயர் பெற்றுள்ளார். இளைய மகன் கார்த்தி, (பிறப்பு-1977) 2007 முதல் நடிகராக அறியப்படுகிறார்.

மனிதன், ராஜா சின்ன ரோஜா போன்ற ஏராளமான படங்களுக்கு இசையமைத்துள்ள இசையமைப்பாளர் சந்திரபோஸ், 1990 முதல் நூற்றுக் கணக்கான படங்களுக்கு இசையமைத்துள்ள தேவா (பிறப்பு-1950), 1984 முதல் இசைத்துறையில் இருந்து வரும் வித்திய சாகர் (பிறப்பு-1963), எஸ்.ஏ. ராஜ்குமார் போன்றோர் மனம் மகிழும் ஏராளமான பாடல்களை உருவாக்கியிருக்கின்றனர்.

இந்தியாவின் மைக்கேல் ஜாக்சன் எனக் குறிப்பிடப்படும் பிரபு தேவா (பிறப்பு-1973) சிறந்த நடனக்காரராகவும், கதாநாயகன் மற்றும் இயக்குனராகவும் அறியப்படுகிறார். தேவாவின் தந்தை சுந்தரம் மாஸ்டர், ரகுராம், பாபு, சிவசங்கர், பிருந்தா போன்றோர் தமிழக திரைத்துறையில் புகழ்பெற்ற நடன இயக்குனர்களாக அறியப்படுகின்றனர். நடனத்துறையிலருந்து நடிகரான ராகவா லாரன்சு (பிறப்பு-1976) பார்த்தேன் ரசித்தேன் படம் (2000) மூலம் கவனம் பெற்றார்.

ஸ்ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்ரமணியம் எனும் எஸ்.பி. பாலசுப்ரமணியன் (பிறப்பு-1946), சிறந்த பின்னணிப் பாடகராகவும், இசையமைப்பாளராகவும், நடிகராகவும் பன்முக அடையாளத்துடன் அறியப்படுகிறார். எம்.ஜி.ஆரின் ஆயிரம் நிலவே வா எனும் பாடல் மூலம் (1969) தமிழ் பின்னணிப் பாடகராக அறியப்பட்ட எஸ்.பி.பி, பல்வேறு மொழிகளிலும் நாற்பதாயிரம் பாடல்களுக்கும் மேல் பாடி சாதனைப் படைத்திருக்கிறார். கேளடி கண்மணி (1990) படம் மூலம் சிறந்த நடிகராகவும் பெயரெடுத்த எஸ்.பி.பி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்குபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

கொஞ்சும் குரலில் பாடி தமிழர் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றவரான எஸ். ஜானகி (பிறப்பு-1938), தேன் வழியும் குரலில் மழையென அமுத கானம் இசைத்த பி.சுசிலா (பிறப்பு-1935), தமிழர்களின் உள்ளம் நிறைந்தவர்களெனில் மிகையாகாது.

எம்.ஜி.ஆரின் நெருங்கிய நண்பராக அறியப்படும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் (1930-1959), நூற்றி எண்பது பாடல்கள் வரை எழுதி, தமிழ் திரைப்பட பாடலாசிரியராக பெரும் புகழ் பெற்றது குறிப்பிடத்தக்கது. திராவிட இயக்கத்திலும், பொதுவுடமை இயக்கத்திலும் பற்றுக் கொண்டவராக அறியப்படும் கல்யாண சுந்தரம், பல்வேறு கருப்பொருள்கள் வைத்து பாடல்கள் இயற்றி தமிழர் மனங்களில் நீங்கா இடம் பெற்றவராகத் திகழ்கிறார்.

சுமார் இருநூற்று ஐம்பதிற்கும் அதிகமான படங்களில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ள அ. மருதகாசி (1920-1989) தமிழ் திரைப்பட பாடல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆளுமையாகப் புகழப்படுகிறார்.

1968 முதல் தொடர்ந்து ஐம்பதாண்டு காலம் திரைப்படப் பாடலாசிரியராக அறியப்படும் புலமைப்பித்தன் (பிறப்பு -1935), எம்.ஜி.ஆரின் நண்பராகவும் அரசவைக்

கவிஞராக நியமிக்கப்பட்டவராகவும் அறியப்படுகிறார். தலைமுறைகள் தாண்டியும் பாடல்கள் இயற்றி வருவதாகப் புகழப்படும் புலமைப்பித்தன், பொதுவுடமை, காதல், சமூகம், வாழ்க்கை சார்ந்து ஏராளமான பாடல்களை இயற்றியவராகப் புகழப்படுகிறார். எம்.ஜி.ஆரின் மேல் பேரன்பு கொண்டவராக அறியப்படும் கவிஞர் முத்துலிங்கம் (பிறப்பு-1942), எம்.ஜி.ஆரின் படங்கள் தொடங்கி தொடர்ந்து பாடல்கள் இயற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

எம்.ஜி.ஆர் நடிப்பில் வெளியான பல புகழ்பெற்ற படங்களுக்கு மிகப் பொருத்தமான பாடல்கள் எழுதியவராக கவிஞர் வாலி (1931-2014) புகழப்படுகிறார். எங்க வீட்டுபிள்ளையின் ஏன் என்ற கேள்வி கேட்காமல் வாழ்க்கை இல்லை, ஆயிரத்தில் ஒருவனின் ஆணையிட்டால் போன்ற தமிழர் உள்ளம் நிறைந்த பாடல்கள் இயற்றிய வாலி, இராமனின் பெருமை பேசும் இராமாயணத்தை புதுக்கவிதை வடிவிலும் படைத்திருப்பது சிறப்பு.

ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக திரைத்துறையில் நடித்து புகழ் பெற்ற மாஞ்சேரி நாராயணன் நம்பியார் எனும் எம்.என். நம்பியார் (1919-2008), வில்லனாகவும் குணச்சித்திர நடிகராகவும் தமிழக மக்கள் மனங்களில் சிறந்த இடம் பெற்றவராக அறியப்படுகிறார்.

புரட்சித் தலைவர், இதய தெய்வம், மக்கள் திலகம், பொன்மனச் செம்மல் போன்ற பல்வேறு சிறப்பு பெயர்களால் அழைக்கப்படும் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் இணைந்து நடித்த ஆயிரத்தில் ஒருவன் திரைப்படம் (1965), இருவருக்குமே புகழ் சேர்த்ததோடு பாடல்களுக்கும், காட்சியமைப்பிற்கும் பேசப்பட்ட படமாக இருந்திருக்கிறது. முன்னதாக எம்.ஜி.ஆர் நடித்த மன்னாதி மன்னன் (1960), எம்.ஜி.யாருக்கு பெரும் புகழ் சேர்த்ததோடு படத்தில் நடித்த அஞ்சலி தேவி (1927-2014), நாட்டியப் பேரொளி எனும் பெயர் பெற்ற பத்மினி (1932-2006), எதிர் கதாநாயகன் பி.எஸ். வீரப்பா (1911-1998), இசையமைப்பாளர்கள் மனயங்கத் சுப்பிரமணியன் விசுவநாதன் எனும் எம்.எஸ் விஸ்வநாதன் (1928-2015), திருச்சிராப்பள்ளி கிருஷ்ணசுவாமி இராமமூர்த்தி எனும் டி.கே. ராமமூர்த்தி (1922-2013) போன்றோரோடு, அச்சம் என்பது மடமையடா பாடல் எழுதிய கண்ணதாசனுக்கும் பெரும் புகழ் சேர்த்த படமாக அமைந்திருக்கிறது.

எம்.ஜி.ஆரும், மன்னாதி மன்னன் படத்தில் கரிகால் சோழனாக நடித்த எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி. சக்கரபாணியும் (1917-1986), இணைந்து நடித்த மலைக்கள்ளன் (1950), எம்.ஜி.யாருக்கு திருப்புமுனை ஏற்படுத்திய படமாகவும், குடியரசுத் தலைவர் விருது பெற்ற முதல் தமிழ் படமாகவும் புகழப்படுகிறது. மலைக்கள்ளன் படத்திற்கு திரைக்கதை எழுதியவர் மு. கருணாநிதி.

அன்பே வா(1966), குடியிருந்த கோவில் (1968), ஒளி விளக்கு (1968), மாட்டுக்கார வேலன்(1970), ரிக்ஷாக்காரன் (1971), நீரும் நெருப்பும் (1971), உலகம் சுற்றும் வாலிபன்(1973), இதயக்கனி (1975), மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன (1978) உட்பட பல புகழ்பெற்ற பாடல்கள் மூலம் மக்களை மகிழ்வித்த எம்.ஜி.ஆர், ஆட்சிக்கு வந்தபின் நடிப்பைத் தொடராதது குறிப்பிடத்தக்கது.

ரா.கிருஷ்ணன் (1909-1997), சா.பஞ்சு (1915-1984) கூட்டாகச் சேர்ந்து இயக்கிய பராசக்தி (1952) மூலம் புகழ்பெற்ற நடிகராக மாறிய விழுப்புரம் சின்னையாப்பிள்ளை கணேசன் (1928-2001), செவாலியர் விருது போன்ற உயர்ந்த விருதுகளைப் பெற்ற நடிகர் திலகமாக புகழப்படுகிறார். தமிழில் 275 தெலுங்கில்10, இந்தியில் 2, மற்றும் ஒரு மலையாளப் படத்திலும், பத்தொன்பது படங்களில் சிறப்புத் தோற்றத்திலும் நடித்திருக்கும் சிவாஜி கணேசன், சுமார் ஐம்பதாண்டுகள் திரைத்துறையோடு பயணித்திருக்கிறார்.

மனோகரா (1954), உத்தமபுத்திரன் (1954), வீரபாண்டிய கட்டபொம்மன் (1959), பாசமலர் (1961), கர்ணன் (1964), புதியபறவை (1964), நவராத்திரி (1964), திருவிளையாடல் (1965), தில்லானா மோகனாம்பாள் (1981), தெய்வமகள் (1969), வசந்தமாளிகை (1972), ராஜராஜசோழன் (1973), தங்கப்பதக்கம் (1974), வெள்ளைரோஜா (1983), தேவர்மகன் (1992), படையப்பா (1999), உட்பட பல புகழ்பெற்ற படங்களில் நடித்து தமிழர்களை காதலிலும், வீரத்திலும், சோகத்திலும், தத்துவத்திலும், அன்பிலும் திளைக்க வைத்தவராக சிவாஜி புகழப்படுகிறார்.

ஆரம்ப காலத்தில் திராவிட இயக்க அரசியல் மீது பற்றுக் கொண்டிருந்த சிவாஜி கணேசன், பின்னர் காங்கரசு கட்சியில் (1961) இணைந்து, 1982 இல் மேலவை உறுப்பினராகப் பதவி வகித்திருக்கிறார். எம்.ஜி.ஆர் மறைவையொட்டி 1989 இல் தமிழக முன்னேற்ற முன்னணி எனும் பெயரில் கட்சி தொடங்கி அதே ஆண்டு ஜானகி அணியுடன் கூட்டணி கண்டு திருவையாறு சட்டமன்றத்

தொகுதியில் வேட்பாளராகக் களம் கண்டிருக்கிறார். எனினும் மக்கள் செல்வாக்குக் கிடைக்காததால் கட்சியைக் கலைத்துவிட்டு ஜனதா தளத்தில் இணைத்து, பின்னர் அரசியல் ஈடுபாட்டிலிருந்து முற்றிலும் விலகியவராக அறியப்படுகிறார்.

நெடுநாளைய அரசியல்வாதியான நெடுஞ்செழியன், ஆர்.எம். வீரப்பனின் ஆதரவு பெற்ற ஜானகியை எதிர்க்கும் முகமாக ஜெயலலிதாவுடன் இணைந்தது தமிழக அரசியல் வலராற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்திருக்கிறது. திருநாவுக்கரசு, சாத்தூர் ராமச்சந்திரன், பண்ருட்டியார் போன்றவர்கள் ஒன்று கூடி அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளராக ஜெயலலிதாவைத் தேர்ந்தெடுத்தது அம்மையாரின் தேர்தலரசியலில் மகத்தான சாதனை.

98 எம்.எல். ஏக்கள் ஜானகியையும், 33 பேர் ஜெயலலிதாவையும் ஆதரிக்க, ஜனவரி 28 இல் கூடிய சட்டமன்றத்தில், எம்.எல். ஏக்களின் மண்டைகள் உடைந்தது மகத்தான திருப்பம். முப்பத்து மூன்று எம்.எல்.ஏக்களின் பதவி நீக்கத்தோடு நம்பிக்கை வாக்கெடுப்பில் முதலமைச்சர் வெற்றி பெற்றதாக சபாநாயகர் அறிவித்தும் மத்திய அரசால் ஆட்சி கலைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு வருடத்திற்குப் பின் 1989 ஜனவரியில் நடந்த தேர்தலில் ஜானகி அணியோடு தமிழக முன்னேற்ற முன்னணி, இந்தியக் கம்யூனிஸ்ட்டு கட்சிகள் கூட்டணி கண்டன. தி.மு.க, ஜனதா கூட்டணி, மூப்பனார் தலைமையிலான காங்கிரசு, ஜெ அணி என நான்கு முனைத் தேர்தலில், ஐயா வெற்றி வெற்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார்.

தி.மு.க 150, மார்க்சிஸ்ட் 15, ஜனதா 4, அ.தி.மு.க. (ஜெ) 27, இந்தியக் கம்யூனிஸ்ட் 3, காங்கிரசு 26, அதிமுக (ஜா) 1 என கட்சிகள் வென்றன. ஆண்டிபட்டியில் போட்டியிட்ட ஜானகியால் வெற்றி பெற இயலவில்லை சேரன்மாதேவி தொகுதியில் போட்டியிட்ட பி.ஹெச் பண்டியன் மட்டுமே ஜா.அணி சார்பாக வெற்றி பெற்றார். எம்.ஜி.ஆர் காலத்திலிருந்தே அ.தி.மு.க.வின் விசுவாசியாக அறியப்பட்ட ஸ்ரீவில்லிப்புதூர் தொகுதி ஆர்.தாமரைக் கனி (1946-2005), சுயேட்சையாக வெற்றிபெற்றார். தேர்தலுக்கு பின் ஜானகி அம்மையார் அரசியலிருந்து விலகி விட, இரண்டு அணிகளும் ஒன்றாகி இரட்டை இலை மீட்கப்பட்டு ஜெயலலிதா தலைமையில் மார்ச்சில் நடந்த மருங்காபுரி தேர்தலில்,

அ.தி.மு.க. சாதனை படைத்தது. ஜெயலலிதாவின் தலைமையும் கட்சிக்குள் உறுதி செய்யப்பட்டது.

1989 நவம்பரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரசு கூட்டணியும், என்.டி ராமாராவ் தலைமையிலான தேசிய முன்னணியும் முக்கிய கட்சிகள். தேசிய முன்னணியில் ஜனதா கட்சியின் நீட்சியான ஜனதா தளம், பாரதிய ஜனதா, தி.மு.க, தெலுங்கு தேசம், அகாலிதளம், அசாம் கன பரிசத் கட்சிகள் இடம் பெற்றன. 143 இடங்களில் வென்ற ஜனதா தளம், கூட்டணிக் கட்சிகளுடன் ஆதரவோடு, வி.பி. சிங்கை தலைமை அமைச்சராக்கி ஆட்சிக்கு வந்தது.

தேர்தலில் இரண்டாவது பெரிய கட்சியாக வளர்ச்சி பெற்ற பா.ஜ.க 85 தொகுதிகளில் வென்று, வாஜ்பாய்க்கு பெருமை சேர்த்தது. முன்னதாக போபர்ஸ் ஊழல், அயோத்தி பிரச்சினை என பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த பா.ஜ.க. வுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு கூடிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

காங்கிரசு 197 இடங்களில் வெற்றி பெற்றும் ஆட்சியமைக்க முடியவில்லை. சி.பி.எம் 33 இடங்களிலும், சி.பி.ஐ 12 இடங்களிலும் வெற்றி பெற்றன. 1989 இல் ஆட்சியைக் கலைத்த காங்கிரசுடன் கூட்டணி கண்ட ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க, 11 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஒரு இடத்திலும் வெற்றி பெற இயலாத தி.மு.க, பின்னர் அமைத்த மத்திய அமைச்சரவையில் முரசொலி மாறனை (1935-2003), ஊரக வளர்ச்சி துறை அமைச்சராக்கிறது.

கருணாநிதியின் மருமகனாக அறியப்படும் முரசொலி மாறன், கருணாநிதியின் அரசியல் வளர்ச்சிகளில் மிக முக்கியமானவராகக் கருதப்படுகிறார். சினிமாத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் சிறந்து விளங்கிய மாறன், முப்பதாண்டுகளுக்கும் மேலாக பாராளுமன்ற நடவடிக்கைகளில் பங்காற்றியது குறிப்பிடத்தக்கது. வி.பி. சிங், தேவ கௌடா, குஜ்ரால், வாஜ்பாய் என தொடர்ந்து மத்திய அரசில் பங்கு பெற்ற மாறன், தோகா மாநாட்டில் சிறப்பாகச் செயல்பட்டதாகப் புகழப்படுகிறார். மாறனின் வாரிசுகளான கலாநிதி மாறன் (பிறப்பு - 1964) சன் குழுமம் எனும் ஊடகத் துறையிலும், தயாநிதி மாறன் (பிறப்பு-1966) அரசியலிலும் (தகவல் ஒளிபரப்பு அமைச்சர் 2004-2007) ஈடுபட்டு வருகின்றனர்.

1989 இல் ஆட்சிப்பொறுப்பேற்ற முதல்வர் மு. கருணாநிதி முன்னிலையில் நடைபெற்ற வன்முறைக் காட்சிகள், சட்ட மன்ற மாண்பிற்கு தீராத களங்கம்

ஏற்படுத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது. பின்னர் வந்த காலங்களில், திட்டமிட்டு நடத்தப்பட்டதாக அறியப்படும் அந்நிகழ்வ்வும், அதனை தொடர்ந்து அதிமுக பெற்ற நாடாளுமன்ற வெற்றியும், தி.மு.க. அரசை எப்படியாவது வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எனும் என்ணத்தை அ.தி.மு.க தலைமைக்கு ஏற்படுத்தியதன் விளைவு எனக் கூறப்படுகிறது.

1989, தி.மு.க அமைச்சரைவில் நிதியமைச்சராக இடம்பெற்ற பேரா.கே. அன்பழகன் (பிறப்பு-1929), திராவிடக் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவராகவும், தி.மு.க. தொடக்க காலத்தில் முக்கியப் பங்காற்றியவராகவும் குறிப்பிடப்படுகிறார். 1977 முதலே தி.மு.க. வின் பொது செயலாளராக இருந்து வரும் அன்பழகன் மூத்த அரசியல் ஆளுமையாகவும் கருணாநிதியின் நம்பிக்கையான தோழராகவும் அறியப்படுகிறார்.

புரசைவாக்கம் தொகுதியிலிருந்து (1989) தேர்வான ஆற்காடு வீரசாமி, 1967, 1971 தேர்தல்களில் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றிருக்கிறார். தி.மு.க. வின் பொருளராகவும், மின்சாரத்துறை அமைச்சராகவும் பணியாற்றியுள்ள என். வீராசாமி, தி.மு.க.வின் செல்வாக்கான தலைவராகவும் இருந்துள்ளார்.

சிறந்த பேச்சாளராகவும், நாடாளுமன்றவாதியாவும் அறியப்பட்ட நாஞ்சில் கி. மனோகரன் (1929-2000) தி.மு.க.வின் துணைப் பொது செயலாளராகவும் செயல்பட்டிருக்கிறார். 1972-ல் எம்.ஜி. ஆரோடு அ.தி.மு.க.வில் இணைந்த மனோகரன், பின்னர் 1980-ல் மறுபடியும் தி.மு.க.வோடு இணைந்து 1989 இல் திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். எம்.ஜி.ஆரிடம் நிதியமைச்சராகவும், கருணாநிதியிடம் வருவாய் அமைச்சராகவும் பணியாற்றியுள்ள நாஞ்சில் மனோகரன் எழுத்தாளராகவும் அறியப்படுகிறார்.

தஞ்சாவூர் கும்பகோணம் பகுதியில் தி.மு.க.வை செல்வாக்கானதாக மாற்றியவராகக் குறிப்பிடப்படும் கோ.சி. மணி (1929-2016), திராவிடக் கொள்கைகளில் பிடிப்புக் கொண்டவராகவும், கூட்டுறவு, விவசாயம் உள்ளாட்சி போன்ற துறைகளின் அமைச்சராகப் பணியாற்றியவராகவும் அறியப்படுகிறார்.

வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன், இளம் வழுதி, ரகுமான்கான், என். பெரியசாமி போன்ற திராவிட காலத்து அரசியல்வாதிகளோடு, ஸ்டாலின் காலத்தவர்களான விழுப்புரம் எஸ். பொன்முடி, திருவண்ணாமலை கு. பிச்சாண்டு,

தருமபுரி முல்லைவேந்தன், திண்டுகல் ஐ. பெரியசாமி, திருச்சி கே. என். நேரு, கன்னியகுமாரி எஸ். சுரேஷ்ராஜன், கோயம்புத்தூர் பொங்கலூர் பழனிச்சாமி, ஈரோடு சுப்புலட்சுமி ஜகதீசன், கடலூர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் போன்ற பலரும் கால் நூற்றாண்டுக்கும் மேலாக கட்சியிலும் ஆடசியிலும் செல்வாக்கானவர்களாக அறியப்படுகின்றனர்.

வை.கோபால்சாமி எனும் இயற்பெயர் கொண்ட வைகோ (பிறப்பு-1944), தி.மு.க.வின் முன்னணித் தலைவராகவும் மாநிலங்களவையில் சிறப்பாகப் பணியாற்றியவராகவும் குறிப்பிடப்படுகிறார். மாநில மாணவரணி துணைத் தலைவராகவும், தொண்டர் அணித் தலைவராகவும் செயல்பட்ட வை. கோபால் சாமி, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவராகவும் அறியப்படுகிறார். சிறந்த மேடை மற்றும் இலக்கியப் பேச்சாளரான கோபால்சாமி, ஏராளமான புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் முக்கியமானவராகக் குறிப்பிடப்படும் எல்.கணேசன் (பிறப்பு-1934), பேச்சாளரான விடுதலை விரும்பு (பிறப்பு-1939) மத்திய அமைச்சராகப் பதவி வகித்த டி.ஆர்.பாலு (பிறப்பு-1941) போன்றவர்கள் நீண்டகால அனுபவமுள்ள பாராளுமன்றவாதிகளாக அறியப்படுகின்றனர்.

சிறப்பாகச் சென்று கொண்டிருந்த வி.பி.சிங் தேசிய முன்னணி அரசுக்கு மண்டல் குழுவின் வடிவில் வந்தது சோதனை. 1979 இன் மொரார்ஜி தேசாய் அரசால் பிற்படுத்தப்படடவர்களின் இட ஒதுக்கீடு தொடர்பாக முன்னாள் பீகார் முதல்வரும், பாராளுமன்றவாதியுமான பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் (1918-1982) தலைமையில் அமைக்கப்பட்ட மண்டல் குழுவின் பரிந்துரைகள் மத்திய அரசிடம் அளிக்கப்பட்டு அதனை செயலாக்கத்திற்குக் கொண்டு வந்த பிரதமர் வி.பி. சிங்கிற்கு, அரசியலிலும், சமூக அடுக்கின் முற்பட்டவர்களிடமிருந்தும் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின.

வேலையிலும், கல்வியிலும் இதர பிற்படுத்தப்பட்டோர் (ஓ.பி.சி) எனும் நிலையை ஏற்படுத்த முயன்ற அரசுக்கு கல்விக் கூடங்களில் குறிப்பாக வடமாநிலப் பல்கலைகளில் மிகக் கடுமையான எதிர்ப்பு எழுந்தது. பாரதீய ஜனதா கட்சியும் அரசியல் ரீதியிலான லாப நோக்கோடு செயல்பட, 27 சதவித இட ஒதுக்கீட்டை

அமல்படுத்துவதில் வி.பி. சிங் முனைப்புடன் செயலாற்ற, நாடு முழுவதும் தீவிரமான கொந்தளிப்புகள் ஏற்பட்டன.

ராமர் கோவில் கட்டுவது தொடர்பான அத்வானியின் ரதயாத்திரைகளால் வட மாநிலங்களில் பதற்றம் எழ, அத்வானியைத் தடுத்து நிறுத்திய வி.பி. சிங்கிற்கு அளித்து வந்த ஆதரவை பி.ஜே.பி விலக்கிக் கொண்டது. வலதுசாரியான ப.ஜ.கா.வையும், இடதுசாரிகளான கம்யூனிஸ்ட்டுகளையும் திறமையாகக் கையாண்ட வி.பி சிங்கின் அரசு, ஓராண்டு நிறைவடைவதற்குள்ளாகவே முடிவுக்கு வந்தது. இந்திய மக்கள் மனதில் துணிவுடையவராகவும் பதவி போனாலும் பரவாயில்லை என நேர்மையாகச் செயல்பட்டவராகவும் பாராட்டப்பட்ட வீர்பிரதாப் சிங், சமூக நீதிக் காவலராகவும் வரலாற்றில் புகழ் பெற்றார்.

வி.பி சிங் பிரதமராக இருந்த காலத்தில் துணைப் பிரதமராகப் பதவி வகித்தவர் சௌத்ரி தேவிலால் (1914-2001). 1971 வரை காங்கிரசிலும் பின்னர் ஜனதா தளத்திலும் கட்சிப்பணியாற்றிய தேவிலால் அரியானா மாநில முதல்வராக இருமறை பதவியில் இருந்திருக்கிறார். தேவிலாலே அடுத்த பிரதமராவார் என எதிர்பார்ப்பு நிலவிய போது, ஜனதா தளத்தின் முக்கியத் தலைவரான சந்திர சேகருக்குப் பிரதமர் பதவி மீது ஆசை வந்து ஜனதாவிலிருந்து பிரிந்து காங்கிரசின் ஆதரவோடு இந்தியாவின் பதினோராவது பிரதமராக நவம்பர் பத்தாம் தேதி பதவி ஏற்றார்.

இளம் துருக்கியர் எனும் அடைமொழியால் அழைக்கப்பட்ட சந்திரசேகர், உத்திரப்பிரதேசம் சார்ந்து பிரஜா சோசலிஸ்ட் கட்சிப் பணி செய்தவராகவும், பின்னர் 1962 இல் மக்களவைப் பணிக்கு தேர்வானவராகவும் அறியப்படுகிறார். 1964 முதல் 75 வரை காங்கிரசில் இருந்த சந்திரசேகர் மிசாவின் போது கைது செய்யப்பட்டிருக்கிறார். காங்கிரஸ்காரராக இருந்தும் சிறைவைக்கப்பட்ட சந்திரசேகர், பின் ஜனதா மோர்ச்சாவின் முக்கியத் தலைவராகியிருக்கிறார். பிரதமர் பதவியின் காரணமாக ஜனதா தளத்தை உடைத்து 64 மக்களவை உறுப்பினர்களுடன் ஆட்சியமைத்தவர் வரவு செலவு கூட தாக்கல் செய்ய இயலாமல் ஆறுமாதங்களுக்குள்ளாகவே ராஜிவ் காந்தியினால் ஆதரவு விலக்கப்பட்டு பதவி இழந்தார்.

தமிழ்நாடு மற்றும் தமிழர்களின் முன்னேற்றத்தில் இட ஒதுக்கீட்டிற்கும் மிகப் பெரிய பங்களிப்பு இருக்கிறது. நீதிக்கட்சியாரால் முன்னெடுக்கப்பட்ட இட ஒதுக்கீடு பின்வந்த திராவிட இயக்கத்தவராலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் இந்தியாவில் வேறு எங்குமே இல்லாதவகையில் 69 சதவீத இட ஒதுக்கீடு அமலில் உள்ளது. வேலை வாய்ப்பிலும், கல்விக் கூடங்களிலும் பின்பற்றப்படும் அறுபத்தொன்பது சதமான ஒதுக்கீட்டால் பிள்ளைமார், முதலியார், நாடார் போன்ற சமூகங்கள் மிகச் சிறப்பாகப் பயனடைந்ததும் வரலாறு. தமிழகத்தில் முற்படுத்தப்பட்டோர் பிரிவினர் மூன்று சதவீகிதம் எனும் அளவிலே இருந்ததாக புள்ளி விவரங்கள் குறிப்பிடுவதிலிருந்து திறந்த ஒதுக்கீடு எனப்படும் முப்பத்து ஒன்று சதவிகிதத்திலும் அன்று கல்வி கற்றிருந்த சாதியினரே பெருவாரியாக இடம் பெற்றனர். கன்னியாகுமரி, நெல்லை போன்ற மாவட்டங்களின் மிசனரிகளால் கல்வி பெற்றிருந்த நாடார்கள், தமிழக அளவில் கல்வித் துறையிலும், அலுவலகப் பணிகளிலும் அதிகளவில் இடம் பெற்றதற்கும் 69 சதவீத இட ஒதுக்கீடு காரணமாகச் சுட்டப்படுகிறது.

மருத்துவம், வங்கிப் பணி போன்றவற்றில் பிராமணர்கள் கவனம் செலுத்த மற்ற துறைகளில் பிற சமூகத்தவர் ஆதிக்கம் செலுத்தினர். பொறியியல் கல்வியிலும், பின்னர் கணினி சார்ந்த படிப்புகளிலும் கவனம் பெற்ற பிராமணர், மேலைநாடுகளிலும், தனியார் நிறுவனங்களிலும் பணிக்குச் செல்ல, அதனால் ஏற்பட்ட பயனும் பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கே கிடைத்தது. குறிப்பாக, நிலவுடைமையாளர்களாக இருந்த பிள்ளைமாரும், முதலியாரும், கவுண்டரும், அரசுப் பணிகளில் அதிக செல்வாக்குப் பெற்று, பொருளாதார ரீதியாக சிறப்பான முன்னேற்றம் கண்டனர்.. சமீப காலங்களில் பெரும்பாலான பிற்படுத்தப்பட்ட சமூகத்தவர் பொறியியல் படிப்பைத் தேர்வு செய்ய பிற துறை சார்ந்த படிப்புகளில் மிகக் குறைவான மதிப்பெண்கள் கொண்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் இடம் கிடைத்து வருகிறது. இடஒதுக்கீட்டின் தலைகீழ் மாற்றமாக, எழுபது சதவிகித மதிப்பெண் பெற்ற அட்டவணையின மாணவருக்குக் கிடைக்காத அரசுக் கல்லூரி சேர்க்கை, அறுபது சதவிகிதம் எடுத்த பிற்படுத்தப்பட்ட மாணவருக்குக் கிடைக்கிறது.

முன்னேறிய வகுப்பினர், பிற்படுத்தப்பட்டவர், அட்டவணையினர், பழங்குடியினர் என இருந்து வந்த தமிழக இட ஒதுக்கீட்டில், மிகவும்

பிற்படுத்தப்பட்டோர் எனும் பிரிவும் நுழைந்ததற்கு மருத்துவர் ராமதாஸ் முக்கிய காரணமாகக் கூறப்படுகிறார்.

இந்திய அரசின் இட ஒதுக்கீடாக 50 சதவிகிதம் பொதுப்பிரிவிலும், மீதம் உள்ள ஐம்பது சதவிகிதத்தில் பட்டியல் வகுப்பாருக்கு 15 சதவிகிதமும், பழங்குடிகளுக்கு 7.5 சதவிகிதமும், இதர பிற்படுத்தப்பட்ட வகுபபினருக்கு 27.5 சதவிகிதமும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் பொதுப் பிரிவினருக்கு 31 சதமானம், பிற்படுத்தப்பட்டோருக்கு 26.5 சதமானம், பிற்படுத்தப்பட்ட இசுலாமியருக்கு 3.5 சதமானம், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதமானம், பட்டியல் இனத்தவருக்கு 15 சதமானம், பட்டியல் அருந்ததியருக்கு 3 சதமானம் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு 1 சதமானம் எனும் அளவில் இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டின் இடஒதுக்கீட்டை தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. என இரண்டு கட்சிகளின் அரசுகளுமே மிகச் சிறப்பாக பாதுகாத்தும், தேவைப்படும் சமயங்களில் கடுமையாகக் குரல் கொடுத்தும், போராடியும் வந்துள்ளன.

சஞ்சீவராயக் கவுண்டருக்கும், நவநீத அம்மாளுக்கும் 1939 இல் பிறந்த இராமதாசு, மருத்துவம் படித்து 1967 இல் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் மருத்துவராகப் பணியாற்றியிருக்கிறார். பிற்படுத்தப்பட்ட பட்டியலில் இடம் பெற்ற வன்னியர்கள், முதலியார், வெள்ளாளர் போன்ற முன்னேறிய சமூகங்களோடு போட்டியிட முடியாமல், வேலைவாய்ப்பு மற்றும் கல்வி ஒதுக்கீட்டில் பின்தங்கியிருப்பதைக் கண்டுணர்ந்து, வன்னியரை மிகவும் பிற்படுத்தப்பட்டோராக அறிவித்து, தனியாக இட ஒதுக்கீடு கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்னெடுத்திருக்கிறார்.

1980களில் வன்னியர் சங்கத்தை முன்னெடுத்த மருத்துவர் ராமதாசு, வன்னியர் இட ஒதுக்கீட்டிற்காக மேற்கொண்ட போராட்டங்கள் (1987 செப்டம்பர்) எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் கடுமையாக ஒடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. சாலையோர மரங்களை வெட்டிப்போட்டு போக்குவரத்தை கடுமையாகப் பாதித்ததாகவும் போராட்ட அடக்கு முறையிலும், துப்பாக்கிச் சூட்டிலும் ஏராளமானோர் பாதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1989 இல் கலைஞர் ஆட்சிக்கு வந்த பின், நூற்றி ஏழு சாதிகளை உள்ளடக்கி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எனும் சிறப்பு பிரிவை ஏற்படுத்தி, இருபது சதவிகித ஒதுக்கீட்டை சட்டப்பாதுகாப்போடு இயற்றியிருக்கிறார். வன்னியரும், மறவரும், பெருவாரியாக இடம் பெற்றுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில், மீனவர், சலவைக்காரர், முடி திருத்துவோர், நரிக்குறவர், வலையர் போன்றோரும் இடம் பெற்றுள்ளனர்.

அரசியல் இயக்கத்தை விட சமூக முன்னேற்றத்திற்கே அதிக முன்னுரிமை கொடுத்தவராக அறியப்பட்ட மருத்துவர் ராமதாசு, 1989 ஜூலை பதினாறில் சென்னை சீரணி கடற்கரை அரங்கில் வன்னியர் சங்கத்தை, பாட்டாளி மக்கள் கட்சியாகத் தொடங்கியிருக்கிறார்.

சமூக நீதி மற்றும் பகுத்தறிவை வலியுறுத்திய தந்தை பெரியார், அரசியல் சட்டத்தை உருவாக்கியதுடன் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய அண்ணல் அம்பேத்கர் மற்றும் சமத்துவத்தையும் பொதுவுடைமையையும் வலியுறுத்திய காரல் மார்க்சு ஆகியோரை கொள்கை அடையாளங்களாக்கிய பாட்டளி மக்கள் கட்சி, 1991 இல் போட்டியிட்டு ஒரு இடத்தில் வெற்றி பெற்றது. வென்ற பண்ருட்டி இராமச்சந்திரனை அப்போதைய சின்னமான யானையில் அமர வைத்து சட்டமன்றம் அழைத்துச் சென்றது.

மருத்துவர் இராமதாசு நிறுவிய பாட்டாளி மக்கள் கட்சிக்கு அட்டவணை சாதியைச் சேர்ந்த வள்ளி நாயகம் தலைவராகவும், இசுலாமியரான குணங்குடி ஹனிபா பொருளாளராகவும் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை வடிவமைப்பில் பேராசிரியர் தீரன், பேராசிரியர் கல்யாணி, பேராசிரியர் மூர்த்தி, கருணா மனோகரன், விமலா மூர்த்தி போன்றவர்களுக்குப் பங்கிருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

1991 தேர்தலில், தி.மு.க மற்றும் அ..தி.மு.க அணிகளுக்கு மாற்றாக ஒரு கூட்டணியை பா.ம.க ஏற்படுத்த முயன்றது. தொடக்க காலத்தில் அம்பேத்காரின் சிலைகளை பல்வேறு ஊர்களில் நிறுவியும் போராடியும் வந்த மருத்துவருக்கு, வட மாவட்டங்களில் கணிசமாக உள்ள ஆதிதிராவிடர் வகுப்பினரிடையே செல்வாக்கும் பெருகியது.

வன்னியர்களுக்கு பள்ளி எனும் பெயரும் இருப்பதன் அடிப்படையில் தென்மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க சமூகமான பள்ளரிடம் செல்வாக்குப் பெறும் விதமாக, இருவரும் இணைந்து செயல்பட வேண்டும் எனும் கருத்து பா.ம.க விடம் உருவாகியது. 1989 தேனி மாவட்டம் போடி, தேவாரம் பகுதியில் தேவேந்திரருக்கும் தேவர் கள்ளருக்கும் நிகழ்ந்த கலவரங்களுக்கு கண்டனம் செய்த இராமதாசு. ஆட்சியிலிருந்த கருணாநிதி தேவேந்திரருக்கு எதிராகச் செயல்படுவதாகவும் குற்றம் சாட்டினார்.

வடக்கில் பள்ளியும் தெற்கில் பள்ளரும் ஒன்று எனும் அடிப்படையில் மருத்துவருக்கு தென்தமிழக பள்ளர்களிடையே செல்வாக்கு அதிகரித்தது. தென்பகுதி சாதிய மோதல்களின்போது தெற்கே தேவேந்திருக்கு தேள் கடித்தால் வடக்கே வன்னியருக்கு நெறிகட்டும் எனும் அளவிற்கு பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. படித்த பள்ளர் இளைஞர்களிடையே செல்வாக்குப் பெற்ற மருத்துவருக்கு, அப்போது பள்ளர்களின் செல்வாக்குப் பெற்று வளர்ந்து வந்த ஜான் பாண்டியன் போன்றோரின் ஆதரவும் கிடைத்தது. 1991 தேர்தலில் பா.ம.க. சார்பாக ஜான் பாண்டியன் போட்டியிட்டார்.

மதுரை மருத்துவக் கல்லூரியில் பயின்ற கருப்புசாமி கிருஷ்ணசாமி (பிறப்பு-1952), தென்னாட்டின் பள்ளர் சமூகத்திற்காக பெருமளவு பாடுபட்டவராக அறியப்படுகிறார். உடுமலைப்பேட்டை பகுதியில் பிறந்த கிருஷ்ணசாமி பள்ளியில் படிக்கும் காலத்திலிருந்தே சாதி வேறுபாடுகளை எதிர்த்தவராகவும் மிசா காலத்தில் பொதுவுடமை அமைப்பு சார்பில் போராடியவராகவும் குறிப்பிடப்படுகிறார். இந்திய அட்டவணையின சிறுத்தைகள் (டி.பி.ஐ) அமைப்பில் இணைந்து சமுதாயப் பணியாற்றியவர், பின் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து 1984 சட்டமன்றத் தேர்தலில் பொள்ளாச்சி தனி சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டிருக்கிறார். இலங்கைத் தமிழருக்கான போரட்டத்திற்கு தி.மு.க. சார்பில் சிறை சென்றவராகக் கூறப்படும் மருத்துவர் போடி மீனாட்சிபுரம் கிராமத்திற்கு கணிசமான நிதியுதவியும் செய்திருக்கிறார்.

உடுமலைப் பகுதியில் பொது சேவை, சமூக சேவை, மருத்துவ சேவை செய்து வந்த மருத்துவர் கிருஷ்ணசாமி, 1993 இல் மதுரையில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவராகத் தேர்வாகியிருக்கிறார். 1985 இல் நிகழ்த்தப்பட்ட கொடியங்குளம் தாக்குதலுக்கு

உள்ளான மக்களுக்காக கடுமையான போராட்டங்களை முன்னெடுத்த மருத்துவர், தமிழ்நாடு முழுதும் அறியப்பட்ட தேவேந்திர குலத் தலைவராக மாற்றம் கண்டார். 1996 சட்டமன்றத் தேர்தலில் ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. கிருஷ்ணசாமியின் பயணம் 1997 திசம்பர் பதினைந்தில் தோற்றுவிக்கப்பட்ட புதிக தமிழகம் அரசியல் கட்சியிலிருந்து வேகமெடுத்தது.

தங்களை மூவேந்தர்களின் வழித்தோன்றல்களாகக் குறிப்பிடும் தேவேந்திரர்கள், தமிழகம் நாயக்கர் ஆட்சியின் கீழ் வருவதற்கு முன், ஆட்சியாளர்களாகவும், நிலவுடமையாளர்களாகவும், போர்வீரர்களாகவும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இலக்கியங்களில் மள்ளர் எனவும், வரலாற்றில் மல்லர், மாமல்லர் எனப் பல்லவரோடும் அடையாளம் காணப்படும் தேவேந்திரர்கள், நாயக்கர் ஆட்சியில் நிலமற்றவர்களாக ஆனதாகவும், ஆந்திராவிலிருந்து தென்தமிழகப் பகுதிக்கு குடியமர்த்தப்பட்ட நாயக்கர்களுக்கு, அரசின் ஆதரவோடு நிலங்களும், கிராமங்களும் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நாயக்கர், இசுலாமியர், ஆங்கிலேயர் எனத் தொடர்ந்து அந்நிய ஆக்கிரமிப்பாளர்களால் தமிழகமெங்கும் சிதறிய தேவேந்திரர்கள், பள்ளர், குரும்பர், பண்ணாடி, காலாடி, மூப்பர், தேவேந்திர குலத்தார் எனப் பல்வேறு குலங்களாக மாற்றமடைந்திருக்கின்றனர்.

1935 இல் மேற்கொள்ளப்பட்ட ஆங்கிலேய சாதிவாரிக் கணக்கெடுப்பில், ஓரளவிற்கு நிலமுள்ளவர்களாகவும், பெருமளவு விவசாயக் கூலிகளாகவும் இருந்த தேவேந்திரர்கள், ஒடுக்கப்பட்டோர் (டெப்ரஸ்டு கிளாஸ்) என வகைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். பின்னர் இந்திய அளவில் இட ஒதுக்கீடு கொண்டு வரப்பட்டபோது, அட்டவணையினர் பிரிவில் தேவேந்திரர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

பொருளாதாரத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட இட ஒதுக்கீடு, பின்னர் சாதி, சமூக அடையாளமாக மாற்றப்பட்டிருக்கிறது. சாதியை வைத்து தமிழ் நிலத்தில் அடக்குமுறைகள் கட்டவிழ்க்கப்பட்டிருக்கின்றன. ஓரளவிற்கு அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடி வந்த தேவேந்திர குலத்தவரில், கல்வியறிவு பெற்றவர்கள் தலைவர்களாக மாற்றம் பெற்று, சமூக எழுச்சிக்குப் பாடுபட்டிருக்கின்றனர்.

தேவேந்திரர்கள் தங்களை தேவேந்திரன் வழிவந்தவராகக் கருதுகின்றனர். மருத நில வேந்தன் மரபே, பிற்காலத்தில் சேர, சோழ, பாண்டிய மரபாகத் தொடாந்ததாகக் குறிப்பிடப்பிடுகின்றனர். சான்றாக பல்வேறு இலக்கியங்களும், மணிமேகலை போன்ற காப்பியங்களும் சுட்டப்படுகின்றன. தமிழ் மண்ணில் சங்க காலம் தொட்டே இந்திரனும், இந்திர விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்ததாக அறியப்படுகிறது. மற்ற சமூகத்தவர் இந்திரனை தங்கள் அடையாளமாகச் சுட்டாதபோது, தேவேந்திர குலத்தவரே தற்போதும் இந்திரனை குல அடையாளமாகக் கொண்டிருப்பதும் ஒப்புநோக்கத்தக்கது.

இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை சமஸ்தானங்களாகவும், பல்வேறு ஜமீன்களாகவும் இருந்த தேவர்கள், ஆட்சி அதிகாரத்தினாலும் ஒடுக்கு முறையினாலும் இராமநாதபுரம் பகுதியிலிருந்த பெருவாரியான தேவேந்திரர் மீது பல்வேறு கட்டுப்பாடுகள், கூடாதுகள், விதிக்க, அவற்றிற்கெதிராக தீரத்துடன் போராடியது சாதாரணமானதன்று. 1922 இல் பேரையூர் பெருமாள் பீட்டரின் தலைமையில் தேவேந்திர குலத்தார் முன்னேற்றத்திற்காக, பூவைசிய இந்திர குல சங்கம் நிறுவப்பட்டது ஒரு முன்னோடிச் செயலாகக் குறிப்பிடப்படுகிறது. சங்கத்தின் முதல் மாநாடு முதுகுளத்தூர் தாலுகா செங்கோட்டைப்பட்டியில் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இராணுவ ஹவில்தாராக இருந்த இம்மானுவேல் (1945-1952), பின்னர் பெருமாள் பீட்டரோடு இணைந்து தேவேந்திரர்களின் சமூக எழுச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார். 32 வயதில் மறவர்களால் கொலை செய்யப்பட்ட தியாகி இம்மானுவேல் சேகரனாரின் வாழ்வும் தீரமும், பின்னர் நிகழ்ந்த வரலாறு காணாத வன்முறைகளும், கொலைகளும், தேவேந்திர மக்களை பெருமளவில் விழிப்படையச் செய்தவையாகக் குறிப்பிடப்படுகிறது.

தேனி கண்டமனூரைச் சேர்ந்த தேக்கம்பட்டி பாலசுந்தரம், 1926 இல் தேவேந்திரகுல வேளாளர் சங்கத்தை நிறுவியதாகக் குறிப்பிடப்படுகிறார். 1930 களில் இராமநாதபுர மறவர்களால் விதிக்கப்பட்ட பதினோரு தடைகளை எதிர்த்து பல்வேறு போராட்டங்களையும் நடத்தியிருக்கிறார். சுதந்திரம் பெற்ற பின்னர் காங்கிரசு எம்.பி.யாக இருந்த ஆயக்குடி பாலகிருஷ்ணன், மருதையா போன்றவர்களும் தேவேந்திரர் உரிமைகளுக்குக் குரல் கொடுத்தவர்களாகக் கூறப்படுகின்றனர்.

தேவேந்திரர்களின் சமூக நலன் காக்கவும் மக்களிடம் விழிப்புணர்வு ஊட்டவும் சத்திய மூர்த்தி 1956 இல் தொடங்கிய சமத்துவமுரசு, 1957 இல் மருதையா தொடங்கிய பாட்டாளி, 1962 ஆர்.பி. கே அப்பன் தொடங்கிய இடி முழக்கம், டி.டி ராஜன் தொடங்கிய உழவன், திருச்சி சுப்ரமணியரின் இந்திரன் குரல் (1983), உமா சங்கரின் மருதமலர் இதழ்கள் சிறப்பாகப் பணியாற்றியிருக்கின்றன. 1993 இல் பெ. தங்கராசு தொடங்கிய பாட்டாளி முழக்கம், கோவை குருசாமி சித்தரின் மள்ளர் மலர் (1993) இதழ்கள் தொடர்ந்து வெளிவந்து தேவேந்திர மக்கள் எழுச்சியை உருவாக்கியிருக்கின்றன.

சென்னை நகர தேவேந்திர குல வேளாள மத்திய மாநில அரசு ஊழியர்கள் பி. சுந்தராசு தலைமையில் இணைந்து நடத்திய சகோதர சங்கம் (1973), 1992 முதல் தேவேந்திரர் பேரவை எனும் பெயரில் செயல்பட்டிருக்கிறது. தஞ்சாவூரில் தேவ ஆசிர்வாதம் அவர்களால் தொடங்கப்பட்ட மூவேந்தர் பண்பாட்டுக் கழகம், தேவேந்திரர் குறித்தான நூல்களை வெளியிட்டு விழிப்புணர்வை நிகழ்த்தியிருக்கிறது. திருச்சியில் பி. சுப்பிரமணியனைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் சங்கம் (1983), தேவகோட்டை டாக்டர் சுப்பிரமணியம் தலைமையிலான தேவேந்திர குல வேளாளர் சங்கம் (1980,) தேவேந்திரர் ஒற்றுமைக்குச் சிறப்பாகச் செயல்பட்டிருக்கின்றன.

வீரத்திற்குப் பெயர் பெற்ற நெல்லைச் சீமையின் பாளையங்கோட்டையை மையமாக்கி தலைவராக உருவாகி வந்த ஜான் பாண்டியனின் எழுச்சியும் சுற்றுப்பயணங்களும் தேவேந்திரரிடையே புதிய வேகத்தைக் கட்டியெழுப்பின. அகில இந்திய தேவேந்திர குல வேளாளர் முன்னேற்றச் சங்கத்தை நிறுவிய திரு. ஜான் பாண்டியன், எம்.ஜி.ஆர் காலத்தில் செல்வாக்கானவராக வளர்ந்திருக்கிறார்.

1989 போடி மீனாட்சிபுரம் கலவரத்தில் பாதிக்கப்பட்ட தேவேந்திரருக்கு ஆதரவாக, துடிப்பாக செயல்பட்ட ஜான் பாண்டியன் மக்களின் கவனத்தைப் பெற்று ஆதிக்க சாதியினரின் அச்சுறுத்தல்களை நேருக்குநேர் சந்தித்திருக்கிறார். ஜான் பாண்டியனின் எழுச்சி இராமநாதபுர மாவட்ட தேவேந்திரர்க்கு பெரியதொரு உத்வேகத்தைக் கொடுத்திருக்கிறது.

1991 இல் குருசாமி சித்தரை தலைவராகவும், பொறியாளர் மனோகர் மள்ளரை செயலராகவும் கொண்டு தொடங்கப்பட்ட தேவேந்திர மன்றம்,

தேவேந்திரர்களின் கல்வி, பொருளாதார, சமூக மேம்பாடுகளைக் குறிக்கோளாகக் கொண்டுடிருக்கிறது. மள்ளர் இலக்கியப் பேரவை, தமிழர் பண்பாட்டு சமூக ஆய்வு மன்றம் போன்ற பல துணை அமைப்புகளை நிறுவிய குருசாமி சித்தர், இலக்கியம் மற்றும் வரலாற்று ரீதியிலான தேவேந்திரர் பெருமைகளை மீளெடுப்புச் செய்தவராக அறியப்படுகிறார்.

தேவேந்திர குல வேளாளர் இளைஞர் அணி (1990) எனும் அமைப்பை நிறுவிய பசுபதிபாண்டியன், தூத்துக்குடி, நெல்லை பகுதிகளில் தேவேந்திரர் சமூக விழிப்புணர்வுக்குப் பாடுபட்டவராகக் குறிப்பிடப்படுகிறார். ஜான் பாண்டியன், குருசாமி சித்தர், டாக்டர் கிருஷ்ணசாமி போன்றோரால் தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பாக அணிதிரள வைக்கப்பட்ட தேவேந்திரர்கள், அரசியல் எழுச்சி பெற்று, அரசியல் கொடிகளை இறக்கி, புதிய தமிழகம் கொடிகளை ஏற்றியது நீண்ட போராட்ட வரலாறு கொண்டது. தமிழகத்தில் எவ்வளவோ போராட்டங்களும் சாதி சார்ந்த முன்னெடுப்புகள் நிகழ்ந்திருந்தாலும், ஆட்சியாளர்களாலும், காவல் துறையாலும், ஆதிக்க சாதிகளாலும் பெரிய அடக்கு முறைக்கும், உயிர் பலிக்கும் உள்ளானவர்கள் தேவேந்திரர்களே என வரலாற்றுப் பதிவுகள் சுட்டுகின்றன.

1981 இல் நெல்லை பகுதியின் தே.மீனாட்சிபுரத்தில் நிகழ்ந்த மதமாற்றம் இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. சாது இந்துக்களின் அடக்கு முறையாலும், பொதுக்கிணறு, கோவில்கள், பொது இடங்களைப் பயன்படுத்த மறுக்கப்பட்டதாலும், ஏராளமான தேவேந்திரர்கள் இசுலாம் சமயத்திற்கு மாறியிருக்கின்றனர். இந்து அமைப்புகளும், பாரதிய ஜனதா கட்சியும், வாஜ்பாய் போன்ற தலைவர்கள் நேரடியாகக் கிராமத்திற்கே வந்து மீண்டும் தாய் மதம் திரும்ப வலியுறுத்தியும், கிராம மக்கள் உறுதியாக இருந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. ஏலே என அதட்டிக் கூப்பிட்ட சாதி இந்துக்கள், மதம் மாறிய தேவேந்திரரை வாங்க பாய் எனக் கூப்பிட்டதாகவும், எவ்வளவு படித்திருந்தாலும், சொத்துக்கள் இருந்தாலும், சாதியின் பெயரால் இழிவு செய்யப்பட்ட அவல நிலை மாற ஆரம்பித்ததாகவும் பதிவுகள் சுட்டுகின்றன.

பட்டியல் சாதியினர் ரொட்டிக்காகவும் மீனுக்காகவும் போராடுகின்றனர், மதம் மாறுகின்றனர் எனச் சொல்வது வடிகட்டிய பொய். இந்த நாடு பின்பற்ற வேண்டிய சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்திற்காக அவர்கள் போராடுகிறார்கள் எனும் அண்ணலின் கூற்று உண்மையென காலம் குறித்து வைத்துள்ளது போலும்.

மதுரை மாவட்டம் மேலக்கால் கிராமத்தைச் சேர்ந்த வீரபத்திரன் (1919-2006), 1940 இல் அமெரிக்கன் கல்லூரியில் பட்டம் பெற்றவராகவும், நிலவுடையாளராகவும், கிராமத்தின் இரட்டைக் குவளை முறையை எதிர்த்துக் குரல் கொடுத்தவராகவும், அரசுப் பணியை சமூக முன்னேற்றத்திற்காக துறந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். முதுகுளத்தூர் கலவரங்களுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என அறவழிகளில் போராடியவராக அறியப்படும் வீரபத்திரனார், பின்னர் 1992-ல் முகம்மது பிலால் எனும் பெயரில் இசுலாம் மதத்திற்கு மாறியிருக்கிறார். சாதி மறுப்பிற்காகவும், சமத்துவத்திற்காகவும் தொடர்ந்து போராடியவராகப் புகழப்படும் முன்னால் இராணுவ வீரரான வீரபத்திரன் எனும் முகம்மது பிலால், சமூக நீதிப் பேரவை எனும் அமைப்பையும் தோற்றுவித்திருக்கிறார்.

தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்களைக் கலக்காமல் தனித் தமிழில் எழுத வேண்டும், பேச வேண்டும் என்பதனை வலியுறுத்தி, 1916 இல் மறைமலையடிகளால் தொடங்கப்பட்ட இயக்கமாக தனித் தமிழ் இயக்கம் அறியப்படுகிறது. ஞா. தேவநேசன் என்றும், பின்னர் தேவநேசக் கவிவாணர் என்றும், தனித்தமிழ்ப் பற்று ஏற்பட்ட பின் தேவநேயப் பாவாணர் என்றும் பெயர் மாற்றம் பெற்ற பாவாணர், மிகச் சிறந்த தமிழறிஞராகவும், சொல்லாராய்ச்சி வல்லுநராகவும், மறைமலையடிகளின் வழி நின்று தனித்தமிழ் இயக்கத்திற்கு அடிமரமாய், ஆழ்வேராய் இருந்து சிறப்பாக உழைத்தவராகவும் பாராட்டப்படுகிறார்.

தமிழ் மீது பேரன்பு பூண்டவராகப் போற்றப்படும் தேவநேயப் பாவாணர் (1902-1981) தலைமையில், பிற மொழி வல்லாண்மையிலிருந்து தமிழை மீட்டெடுக்க வேண்டும், உலகம் முழுக்கத் தமிழைப் பரப்புதல் வேண்டும், குழந்தைகளுக்கும், இல்லங்களுக்கும், நிறுவனங்களுக்கும், தமிழ்ப் பெயர் சூட்ட வேண்டும், இயன்றவரை அயல் சொற்களைக் கலவாது எழுதவும் பேசவும் வேண்டும், இல்லத்திலும் கோவில்களிலும் தமிழில் வழிபாடு நிகழ்த்த வேண்டும், அனைத்து நிலைகளிலும் தமிழில் கல்வி அமைதல் வேண்டும் போன்ற தமிழுக்குப் பெருமை சேர்க்கும் கொள்கைகளை முன்னிறுத்தி 1968, ஜூன் பதினொன்றில் உலகத் தமிழ்க் கழகம் எனும் அமைப்பு திருச்சிராப்பள்ளியில் தொடங்கப்பட்டிருக்கிறது. கழகத்தின் பொதுச் செயலாளராக புகழுக்குரிய பெருஞ்சித்திரனார் (1933-1995) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

தமிழை செழுமையாக வளர்க்கும் பொருட்டு தொடங்கப்பட்ட தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களாக மறைமலை அடிகளும் (1876-1950), பரிதிமாற் கலைஞரும் (1870-1903) போற்றப்படுகின்றனர்.

பரிதிமாற் கலைஞர் எனும் வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி சிறந்த கல்வியாளராகவும், நூல்கள் ஆக்கியவராகவும், பதிப்பித்தவராகவும் அறியப்படுகிறார். உயரிய செந்தமிழ் நடையில் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவராகக் குறிப்பிடப்படும் பரிதிமாற் கலைஞர், இள வயதிலேயே மறைந்தாலும் தமிழ்மொழி வரலாறு போன்ற ஆய்வு நூல்களை எழுதி தமிழ்ப் புலமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

வேதாச்சல சுவாமிகள் எனும் பெயரை மறைமலையடிகள் என்றும், ஞானசாகரம் மாத இதழை அறிவுக் கடல் என்றும், நடத்திவந்த சன்மார்க்க சங்கத்தை பொதுநிலைக் கழகமாகவும் மாற்றிய மறைமலை அடிகள், ஆரியத்தை நீக்கிய தமிழ்த் திருமணம், திருவள்ளுவர் ஆண்டுமுறை, தமிழர் மதம், தமிழரின் நானகு மறை போன்ற கொள்கைகளை அறிமுகப்படுத்தியிருக்கிறார். அடிகளாரின் தனித்தமிழ் கொள்கைக்கு பெரியாரிடமும் ஆதரவு கிடைத்திருக்கிறது.

தமிழ் மிகுந்த சொல்வளம் கொண்ட மொழியாகவும், எக்கருத்தையும் திறம்படச் சொல்லக்கூடிய சொல்வளம் தமிழுக்கு இருப்பதாகவும் அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். வேர்ச்சொல் வளம் மிகுந்துள்ள தமிழ்மொழியில், புதிய சொற்களை பொதுமக்களே ஆக்கும் அளவிற்கு திறம் மிகுந்திருப்பதாகவும் புகழப்படுகிறது.

1911 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட கரந்தைத் தமிழ் சங்கம் சிறப்பான தமிழ்பணி செய்து வருவதாகப் புகழப்படுகிறது. சங்கத்தின் முதல் தலைவராக இருந்த தமிழவேள் உமாமகேசுரனார் (1883-1941) சீரிய தமிழ்ப்பணி ஆற்றியவராகவும், நீராருங் கடலுடுத்த பாடலை தமிழ்த்தாய் வாழ்ந்தாக அறிமுகப்படுத்தியும், தமிழை செம்மொழியாக அறிவிக்கப் கோரியும், தமிழுக்கென்று பல்கலை அமைக்க வேண்டியும், ஸ்ரீமான், ஸ்ரீமதிக்குப் பதிலாக திருமகன், திருவாட்டி போன்ற சொற்களை அறிமுப்படுத்தியும், தமிழ் நூல்களைப் பதிப்பித்தும் தமிழ்தொண்டு, சமூகத் தொண்டு செய்தவராகப் போற்றப்படுகிறார்.

1916 முதல் தமிழ் நூல்களை வெளியிட்டு வருவதாகக் குறிப்பிடப்படும் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மலிவு விலையில் புத்தகங்களை அச்சிட்டு தமிழ்ப்பணி செய்ததாகப் புகழப்படுகிறது. திருவரங்கன் பிள்ளையும், தம்பியான சுப்பையா பிள்ளையும் நூற்பதிப்புக் கழகத்தின் மூலம் புகழ்பெற்ற பல நூல்களை வெளியிட்டவர்களாகவும், தாமரைச் செல்வர் எனக் குறிப்பிடப்படும் சுப்பையா பிள்ளை, மறைமலை அடிகளின் அனைத்து நூல்களையும் வெளியிட்டவராகவும் புகழப்படுகின்றனர்.

இந்திய தேசிய காங்கிரசின் ஒரு பிரிவாக 1917-1920 கால கட்டத்தில் செயல்பட்ட சென்னை மகாண சங்கம் மறைமலை அடிகளாரின் மகளாகிய நீலம்பரி அம்மையாரால் (1903-1945), 1942 இல் ஆரம்பிக்கப்பட்ட நாம் தமிழர் இயக்கம், 1942 இல் மு. கருணாநிதியால் தொடங்கப்பட்ட முரசொலி, 1946 இன் தமிழ் முரசுக் கழகம், 1949 இன் திராவிட முன்னேற்றக் கழகம் போன்றவை தனித் தமிழ் இயக்கத்திற்கு பாடுபட்டதாக புகழப்படுகின்றன.

1938 இல் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் வழி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், 1960 இல் பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழி கற்றல் மொழியாக அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் குறிப்புகள் சுட்டுகின்றன. 1965 இல் இந்திக்கு மாற்றாக ஆங்கிலம் கற்பித்தல் மொழியாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1968 இல் அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன், பள்ளிகளில் இந்தி மொழியை விலக்கியது குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்திருக்கிறது.

தமிழ் மொழியையும், தமிழ் தேசியத்தையும் உயர்த்திப் பிடித்தவராகக் சிறப்பிக்கப்பட்டு பாவேந்தர் பாரதிதாசன், தமிழாசிரியர், கவிஞர், அரசியலாளர், திரையுலகப் பங்களிப்பாளர் என பன்முகத்தன்மை கொண்டவராக அறியப்படுகிறார். கவிதை, நாடகம், கட்டுரை, கதை எனத் தமிழ்த்தொண்டு செய்த பாவேந்தர், தமிழ் உயிருக்கும் மேல் என முழங்கிய பெருந்தகையாகப் போற்றப்படுகிறார்.

தமிழ்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவரும், அரசியல், சமுதாயம், சமயம் என ஏராளமான தமிழ் நூல்களை இயற்றியவரும், சிறந்த மேடைப் பேச்சாளருமான திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார் எனும் திரு.வி.கா. (1883-1953) உட்பட ஏராளமான தமிழறிஞர்கள் தமிழுக்கு அருந்தொண்டாற்றியவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

மனோன்மணீயம் எனும் புகழ்பெற்ற நாடக நூலை இயற்றிய மனோன்மணீயம் பெ. சுந்தரம் பிள்ளை (1855-1897), தமிழாசிரியர், தத்துவப் பேராசிரியர், நூலாசிரியர், சமய பணி மற்றும் தமிழ்த் தொண்டு செய்தவராகப் போற்றப்படுகிறார். மனோண்மணியத்தில் இடம்பெற்ற நீராடுங்கடலுடுத்த நிலமடந்தைக் கொழிலொழுகும் பாடல் பின்னர் 1970-ல் தமிழ்தாய் வாழ்த்துப் பாடலாக ஏறறுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றை முதன் முதலில் எழுதிய தமிழறிஞராகவும், சைவசித்தாந்த வல்லுநராகவும், தமிழ் பேராசிரியர், வழக்குரைஞர், உரையாசிரியர், சொற்பொழிவாளர் எனவும் குறிப்பிடப்படும் பன்மொழிப் புலவர் பேராசிரியர் க.சு. பிள்ளை (1888-1945), தமிழறிஞர் பேச்சாளர், எழுத்தாளர், உரையாசிரியர் எனப் புகழப்படும் அவ்வை துரைசாமிப் பிள்ளை (1903-1981), சந்தோசம் எனும் பெயரை மகிழ்னன் என மாற்றிய க.ப. மகிழ்னன், தமிழும் தமிழருமே உலக மொழிகளுக்கும், மனித இனத்திற்கும் முன்னோடிகள் எனும் கோட்பாட்டை ஆய்வுகள் மூலம் முன்வைத்த பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை (1907-1989), பேராசிரியர் மற்றும் அமைச்சர் பதவி வகித்த மு. தமிழ்க்குடிமகன், தமிழறிஞர், நூலாசிரியர் மற்றும் தொலைக்காட்சி மூலம் தமிழ் பரப்பிய பேராசிரியர் நன்னன் உட்பட பலர் தனித் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்களாகப் புகழப்படுகின்றனர்.

தமிழை வடமொழி வல்லாண்மையிலிருந்து மீட்டெடுப்பதற்காகவே இறைவன் தம்மைப் படைத்ததாகக் கருதி தமிழ்த் தொண்டு செய்த பாவாணர் மிகுந்த மானமுள்ள தமிழராகவும் அறியப்படுகிறார். அண்ணாமலைப் பல்கலை தமிழ்த்துறையில் மேலாதிக்கம் செய்த சட்டர்ஜியை எதிர்த்து வேலையை உதறிய பாவாணர், தமக்கு மனைவி உண்டு, மக்களும் உண்டு, மானமும் உண்டு என மானமிகு தமிழராய் வாழ்ந்திருக்கிறார். பிள்ளைகளுக்கு நச்சினார்க்கினிய நம்பி, மடந்தவிர்த்த மங்கையர்க்கரசி, பைந்தமிழ் வளர்த்த பாண்டியன் என்றெல்லாம் பெயரிட்டழைத்த தமிழ் சான்றோரான பாவாணர் எங்கே, தம் பிள்ளைகளுக்கு நியூமராலஜிபடி நவநாகரீகப் பெயர் வைக்கும் தற்போதைய பேராசிரியர்கள் எங்கே.. தமிழில் கையொப்பமிடாத தமிழ்ப் பேராசிரியர்களும் இருக்கின்றார்தானே.

மானமிகு தமிழராய் வாழ்ந்து, வேலையை உதறி கடினமான வாழ்க்கையை மேற்கொண்டு, இலச்சக்கணக்கான உரூபா சம்பாதிப்பதையே வாழ்க்கை நோக்கமாகக் கொண்டிராமல், தமிழ், தனித்தமிழ், சொல்லாராய்ச்சி, அகராதிப் பணி

என தமது வாழ்வை மேற்கொண்ட பாவாணரின் வாழ்க்கை அறவாழ்க்கை எனில் மிகையாகாது.

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையாகக் குறிப்பிடப்படும் அடிகளாரால் தொடங்கிய பணி, அவருக்குப் பின் பாவாணரால் தலைமையேற்று நடத்தப்பட்டு பின் தமிழ் தேசியத்தின் தந்தை எனக் குறிப்பிடப்படும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரால் முன்னெடுக்கப்பட்டு, வடமொழிக் கலப்பின்றி தமிழை எழுதவும் பேசவும் முடியும் எனும் நிலை ஏற்படுத்தப்பட்டிருப்பது மிகுந்த பாராட்டுதலுக்குரியது. வடமொழியின்றும் தனித்தமிழை வெற்றிகரமாகப் பரித்தெடுத்த தனித் தமிழ் சான்றோர்கள் வழியில் தற்காலத்திய ஆங்கிலத் தாக்கத்தை அகற்றவும் தமிழ் ஆன்றோர்களால் இயலும். எனினும் மம்மி, டாடி எனக் கொஞ்சம் ஆங்கிலத் தமிழர்களை, தமிழ் பேச வைப்பது சற்று சிரமமான பணிதான். தமிழால் முடியாததுண்டோ.

தமிழகத்தில் தமிழ்மொழி அலுவலக மொழியாக இல்லை. நீதிமன்றத்தில் வழக்குரை மொழியாக இல்லை. கோவில்களில் வழிபாட்டு மொழியாக இல்லை. பள்ளிகளில் கற்கை மொழியாக இல்லை. தமிழகத்திற்கு வெளியே ஒரு கோடிக்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழகத்திலேயே தமிழ்க் கல்வி இல்லையெனில் அவர்தம் நிலையை என்னவென்பது..

தமிழ் வாழ்க வென்பதினும் தமிழ் வாழாது, தமிழ் பெயரை வைப்பதினும் தமிழ வாழாது என்பதனை எப்போது தமிழர் அறிவரோ. சாதியாய் மதமாய் பிரித்து கிடக்கும் தமிழர்கள், தமிழர்களாய் ஒன்றிணையும் போதே தமிழ் தலை நிமிரும் என்பது திண்ணம். பரிதிமால் கரைஞரால், தமிழுக்கு செம்மொழிக்கான தகுதி இருப்பதாக வரையறுக்கப்பட்டு நூறு ஆண்டுகள் கழித்தே, செம்மொழி அறிந்தேற்பு கிடைத்ததெனில், உலகின் மூத்த மொழி, இனிய மொழி, ஒப்பிலா மொழி, உயர்ந்த மொழி எனும் பெருமை பெற எவ்வளவு காலமாகுமோ..

சாதியெனும் பகை உணர்ச்சி வாழுமட்டும் தமிழ்நாட்டின் முன்னேற்றம் கானல் நீரே. நீதி முதல் நெறிமுறைகள் பிறர்க்கும் தந்து நிலைத்திருந்த பெருமையெலாம் மண்ணிற்சாயும். சாதியினால் நிம்மதியும் அழிந்தேபோகும். தலைமுறைகள் பலங்குன்றி சாயும். தமிழர் என்றைக்கு உணர்வரோ..

மேலை நாட்டுக் கிறித்தவர்கள் மறைப்பணியோடு தமிழ் வளர்ப்பிலும் ஈடுபட்டது பாராட்டுக்குரியது. ஏன்றிக்கசு எழுதி 1578 இல் வெளியிடப்பட்ட கிறித்துவ சபை போதனை நூலான தம்பிரான் வணக்கம், இந்திய மொழிகளில் முதல் முதலாக அச்சான நூலாகக் புகழப்படுகிறது. தமிழ் கற்றுக் கொண்ட முதல் ஐரோப்பியராகப் புகழப்படும் என்றிக்கசு, தமிழ் இலக்கணத்தைக் கற்றுக் கொண்டு இலக்கணம் மற்றும் அகர முதலி நூலையும் தொகுத்ததாகக் கூறப்படுகிறது. இத்தாலியின் கான்ஸ்டான்டியஸ் ஜோசப் பெஸ்கி எனும் வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கணம், தேம்பாவணி உள்ளிட்ட பல நூல்களை எழுதியவராகவும், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்தவராகவும் புகழப்படுகிறார். தமிழில் காப்பியம் படைக்குமளவிற்கு தமிழ்ப் புலமை பெற்றிருந்த மாமுனிவர் மிகுந்த போற்றுதலுக்குரியவர் எனில் மிகையாகாது.

செருமனியின் சீகன் பால்கு, புதிய ஏற்பாட்டை முதல் முறையாக தமிழில் அச்சிட்டவராகவும் இந்து சமய நம்பிக்கைகள் குறித்து ஆய்வுநூல் வெளியிட்டவராகவும், தமிழ்நாட்டுத் தெய்வங்கள் பற்றிய புத்தககம் எழுதியவராகவும், லத்தீன் மொழியில் தமிழ் இலக்கணம் எழுதியவராகவும், தமிழ் மொழி மீது உயர்ந்த மதிப்பு வைத்திருந்தவராகவும் போற்றப்படுகிறார்.

ஜார்ஜ் உக்ளோ போப் எனும் ஜி.யூ.போப் தமிழ் ஆங்கில அகராதி எழுதியதோடு, திருக்குறள், நாலடியார், திருவாசகம் போன்ற நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து விளக்கவுரைகள் அளித்தவராகவும் போற்றப்படுகிறார்.

1962-ல் இணைப் பெருங்கோவிலாகவும், 2012 இல் பெருங்கோவிலாகவும் உயர்த்தப்பட்ட வேளாங்கண்ணி தூய ஆரோக்கிய அன்னை திருத்தலம், கிறித்தவர்கள் மட்டுமின்றி பிற சமயத்தவராலும் வேண்டுதல் செய்யும் கோவிலாக புகழப்படுகிறது. போர்த்துகீசியர்களால் பெரிதாக கட்டி எழுப்பப்பட்டதாகக் குறிப்பிடப்படும் வேளாங்கண்ணி மாதா கோவில், தமிழகத்தின் உரோமன் கத்தோலிக்கப் பிரிவின் முக்கியமான கோவிலாக விளங்குகிறது.

தமிழகத்தில் உரோமன் கத்தோலிக்க வழிபாட்டு முறையைப் பின்பற்றும் ஏராளமான சர்ச்சுகள் அமைக்கப்பட்டுள்ளன. பதினாறாம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் பரவத் தொடங்கிய கிறித்துவம், ஆரம்பத்தில் கன்னியாகுமரி,

நெல்லைப் பகுதிகளிலேயே அதிகமாகப் பின்பற்றப்பட்டிருக்கிறது. முக்கியமாக, ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த ஜெசூட் பாதிரிகள் எனும் ஏசு சபை பாததிரிகள் மூலம் மதப்பரப்புரையும், மதமாற்றமும் வெகுவாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் கத்தோலிக்க கிறத்தவ சபையைச் சேர்ந்தவர்களே கிறித்தவத்தை முதலில் பரப்பியவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். தமிழகத்திலுள்ள மரபு வழி - ஆர்த்தடாக்சு சபைகள், கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதிகளில் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

புனித லயோலா இஞ்ஞாசியாரால் (1491-1556) தோற்றுவிக்கப்பட்ட இயேசு சபை எனும் கந்தோலிக்க துறவற சபை (1540), இயசுவை உலகெங்கும் கொண்டு சென்றதில் முக்கியப் பணியாற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டென்மார்க், நெதர்லாந்து. செருமனி, இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து தமிழகம் வந்த சீர்திருத்தக் கிறித்தவ பாதிரியார்களும் கிறித்தவ சமயத்தைப் பரப்பியிருக்கின்றனர். குறிப்பாக பர்த்தோலேமேயு சீகன் பால்க் (1682-1719), கால்டுவெல் (1814-1891), ஜி,யு.போப் (1820-1908) போன்றோர் கிறித்தவத்தைப் பரப்பியதோடு தமிழுக்கும் பெருந்தொண்டு செய்திருக்கின்றனர்.

தமிழகத்தில் கத்தோலிக்க திருச்சபை 18 மறை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மறை மாவட்டமும் ஓர் ஆயர்- பிஷப் அல்லது பேராயர் - ஆர்ச்பிஷப் தலைமையில் பாதிரியார்களின் நேரடி ஒத்துழைப்போடு வழிநடத்தப்படுகின்றன. மாறை மாவட்டத்திலிருக்கும் அருட்சகோதரிகள் எனும் பெண் துறவியர் கல்விப் பணியோடு, மருத்துவமனைகள், முதியோர், அனாதை இல்லங்கள் போன்ற பிறரன்புப்பணி நிறுவனங்களையும் நடத்துகின்றனர்.

ரோமன் கத்ததோலிக்கப் பிரிவிற்கு அடுத்து, தமிழகத்தின் பெரிய கிறித்தவ சபையாக தென்னிந்திய திருச்சபை குறிப்பிடப்படுகிறது. புரட்டஸ்தாந்து எனும் சீர்திருத்தச் சபையான தென்னிந்திய கிறித்தவ சபை, ஆங்கிலிக்க வழிபாட்டு மரபைப் பின்பற்றுகிறது.

தென்னிந்தியா மற்றும் இலங்கை என மொத்தம் 22 மறைமாவட்டங்களாக அறியப்படும் சி.எஸ்.ஐ எனும் தென்னிந்திய திருச்சபை, 1947 இல் ஆங்கிலிகன், புராட்டஸ்டன்ட், மெதடிசம், பிரிஸ்பிட்டேரியன் சபைகள் இணைந்து உருவானதாகக்

குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில் குமரி, நெல்லை, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் அதிகமாக உள்ள சி.எஸ்.ஐ பிரிவினர், சுமார் 14,000 பிரார்த்தனைக் கூடங்களையும், 2000 உயர்நிலைப் பள்ளிகளையும், 130 கல்லூரிகளையும், 104 மருத்துவமனைகளையும், 500 விடுதிகள், 50 பயிற்சிமையங்கள் போன்றவற்றையும் நிர்வகிக்கிறது. இந்தியப் பாரம்பரியத்தை நினைவுறுத்தும் வரையில் தாமரையோடு உள்ள சிலுவையை முத்திரையாகக் கொண்ட சி.எஸ்.ஐ, பல இறையியல் பள்ளி, கல்லூரிகளையும் நடத்தி வருகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐக்கிய அமெரிக்காவின் வில்லியம் ஜோசப் செமூர் (1870-1922) நடத்திய, அசூசா வீதி எழுப்புதல் எனும் மன்றாடல்களே பெந்தகோஸ்து சபை இயக்கம் உருவாக முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது. பெந்தேகோஸ்து பிரிவில் தூய ஆவி பெருவிழா எனும் பெயரில் தூய ஆவிக்கு முக்கியத்துவம் கொடுத்து நிகழ்த்தப்படும் மன்றாட்டுகள் மூலம், கடவுளின் நேரடி அனுபவம் கிடைக்கப்பெறுவதாகக் கூறப்படுகிறது.

அறுவடைக்கான நன்றி செலுத்தும் யூதத் திருவிழாவான பாஸ்காத், திருவிழாவின் ஐம்பதாவது நாளில், விழாவாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. ஐம்பதாவது நாள் விழா அதாவது பெந்தக்கோஸ்து எனும் கிரேக்கக் சொல்லால் குறிக்கப்பட்ட அந்த நாளில், முன்னோர் திருப்பொழிவு வேண்டி பிரார்த்தனைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. பின்னர் கிறித்தவ வழிபாட்டிலும் திருத்தூதர்கள் மீதும் கிறித்துவின் சீடர்கள் மீதும் தூய ஆவியன் வருகையை நினைவு கூறும் விதமாக ஒரு விழா எடுக்கப்பட்டிருக்கிறது. அதுவே ஐம்பதாம் நாள் எனும் பெயரில் பெந்தேகோஸ்து பிரிவாக நவ மாற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

தூய ஆவியால் அபிசேகம் செய்யப்படுவோர் வாழ்க்கையில் அதிசயமான ஆன்மீகக் கொடைகள் துலங்கும் என்வும், பன்மொழி பேசுகின்ற வரம், குணமளிக்கும் வரம் போன்றவை கிடைக்கும் எனவும் கூறப்படுவதன் அடிப்படையில் உலகமெங்கும் பெந்தகோஸ்து சபைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான சபைகளும், உட்பிரிவுகளும், ஆராதனைகளும், செபங்களுமாக, இயேசு மீட்பளிக்கிறார், தூய ஆவியால் திருமுழுக்கு வழங்குகிறார், எல்லா நோய்களையும் குணமாக்குகிறார் என அறைவைல் விடுக்கப்பட்டு பெந்தகோஸ்து சபைகள் கூட்டங்களை நடத்துகின்றன.

நெல்லை சுரண்டையைச் சேர்ந்த துரைசாமி ஜெப்ரி சாமுயேல் தினகரன் எனும் டி.ஜி.எஸ் தினகரன் (1935-2008), இந்தியாவின் முன்னோடி கிறத்தவ மறைபரப்புனராகவும், கருண்யா பல்கலைக்கழகத்தின் நிறுவனராகவும் அறியப்படுகிறார். யேசு அழைக்கிறார் எனும் நிறுவனத்தின் மூலமும், ஜெபகோபுரம் எனும் அமைப்பு மூலமும் ஏராளமான நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தவரும், தொலைக்காட்சி ஊடகத்தை மிகவும் வலிமையாகப் பயன்படுத்தியவருமான தினகரனைப் பின்பற்றி, ஏராளமான மேடை பிரசாரங்களும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் தமிழகத்தில் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

பெரம்பலூர் மாவட்டம் செந்துறை அருகேயுள்ள அங்கனூரில் 1962ஆம் ஆண்டில் பிறந்த தொல்காப்பியன் திருமாவளவன் (பிறப்பு - 1962), தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான அடையாளமாக அரசியல் எழுச்சி பெற்றுள்ளார். மதுரையில் தடய அறிவியல் துறையில் பணியாற்றிய தொல். திருமாவளவன், 1982 இல் டி.பி.ஐ இயக்கத்தில் இணைந்ததாகவும், இயக்கத்தின் தலைவர் அ.மலைச்சாமியின் மறைவையொட்டி, அமைப்பின் தலைமைப் பொறுப்பிற்கு தேர்வான திருமாவளவன், 1990-ல் அமைப்பினர் பெயரை இந்திய ஒடுக்கப்பட்ட சிறுத்தைகள் என மாற்றியதாகவும் கூறப்படுகிறது. 1991-ல் ஆண்டில் விடுதலைச் சிறுத்தைகள் எனும் பெயர் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழக அட்டவணையினர் மேம்பாடு, பஞ்சமி நில மீப்பு, இலங்கைத் தமிழர் ஆதரவு என இயக்க நடிவடிக்கைகள், பரவலான மக்கள் கவனத்தைப் பெற்று வளர்ந்திருக்கிறது.

தேர்தலில் பங்கெடுப்பதில்லை என அறிவிக்கப்பட்ட விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் 1999 இல் தேர்தல் அரசியலுக்கு வந்து குறிப்பிடத்தக்க அரசியல் கட்சியாக மாற்றம் பெற்றுள்ளது. தேர்தல் அரசியலில் காங்கிரசு, தி.மு.க, அ.தி.மு.க எனக் கூட்டணி கண்டு, ஒரு மக்களவை, மூன்று முறை சட்டமன்றத் தொகுதி என குறைவான இடங்களே பெற்றிருந்தாலும், தொல், திருமாவளவனின் நீண்ட காலப் போராட்ட வாழ்க்கை அவரை சமூகப் போராளியாகவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை குறிப்பிடத்தக்க வாங்கு வங்கி உள்ள கட்சியாகவும் அடையாளம் கண்டுள்ளது.

2004 இல் மருத்துவர் ராமதாசும், தொல். திருமாவளவனும் இணைந்து உருவாக்கிய தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம், வட மாவட்டங்களில் வன்னியர்-

ஆதிதிராவிடர் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தியதோடு, தமிழ், தமிழர் மேம்பாடு என தமிழக மக்களிடையே வரவேற்பைப் பெற்ற நிகழ்வாக அமைந்தது.

அடங்க மறு, அத்து மீறு, திமிறி எழு, திருப்பி அடி போன்ற கொள்கை முழக்கங்களை முன்னெடுத்துவரும் விடுதலைச் சிறுத்தைகள், தலை நிமிர சேரி திரளும், அன்று தலை கீழாய் நாடு புரளும், கடைசி மனிதனுக்கும் அதிகாரம், எளிய மக்களுக்கும் அதிகாரம், ஒரு நாள் நிச்சயம் விடியும் என்பதில் நம்பிக்கை கொண்டு செயல்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சாதி ஒழிப்பே மக்களின் விடுதலை என முழங்கி வரும் சிறுத்தைகள், சாதி எதிர்ப்பு, இந்துத்துவ எதிர்ப்பு, சூழியல் பாதுகாப்பு, ஒடுக்கப்பட்டோர் மறுவாழ்வு, இலங்கை தமிழர் பாதுகாப்பு போன்ற பல்வேறு சமூக பிரச்சினைகளிலும், தமிழக மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளிலும், முன்னிற்று குரல் கொடுக்கும் கட்சியாகவும் மக்கள் செல்வாக்குப் பெற்றுள்ளது.

1983-ல் இலங்கைப் பிரச்சினைக்கு ஆதரவாக மாணவர் போராட்டம் வெடித்த போது, மாணவர்களை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்ட திருமாவளவன், தொடர்ந்து இலங்கை தமிழர்க்கு ஆதரவாகப் பல போராட்டங்களில் பங்கேற்றிருக்கிறார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) தோற்றுவிப்பாளரும் தலைவருமான தோழர் கந்தசாமி பத்மநாபா (1951-1990), விடுதலைப் புலிகளால் சென்னையில் சுடப்பட்ட நிகழ்வு விடுதலைப் புலிகளின் இயக்க வரலாற்றிலும் தமிழ் ஈழப் போராட்ட வரலாற்றிலும் முக்கியத் திருப்பம் கொண்டதாகக் கருதப்படுகிறது. இந்திய அரசிற்கும் இந்திய - இலங்கை அமைதிப் படைக்கும் ஆதரவாளராக அறியப்பட்ட தோழர் பத்ப நாபாவை அமைதிப்படையை எதிர்த்த புலிகள் கொன்றது அவர்களுக்கு தமிழக மக்களிடமிருந்த நற்பெயரைக் கெடுத்ததாகக் கூறப்படுகிறது. பத்மநாபா சுடப்பட்டதை முக்கியக் காரணமாகக் காட்டி பிரதமர் சந்திரசேகரின் சட்ட அமைச்சரான சுப்ரமணியன் சாமி தமிழக அரசைக் கலைக்கும்படி பரிந்துரைத்தும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசால் ஊட்டி வளர்க்கப்பட்ட விடுதலைப் புலிகள், பின்னர் இந்தியப் படைகளை எதிர்த்துச் சண்டையிடக் காரணமாக அமைந்தது இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தம். ராஜிவ் காந்திக்கும் இலங்கையின் இரண்டாவது சனாதிபதி

ஜே.ஆர். ஜெயவர்தனாக்கும் (1906-1996) இடையில் 1987-ல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம், இலங்கையை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் இணைந்த தாயகப்பகுதியாக ஏற்று. தமிழ் மொழியை அரச மொழியாகவும் மாகாண சபையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கத்திற்கும் உட்படுத்துவதாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை ஆயுதப் படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இடையே நடந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து இலங்கையின் அமைதி ஏற்படுத்தும் நோக்கில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய அமைதி காக்கும் படை, பின்னர் இந்திய அமைதிப்படை மற்றும் விடுதலைப் புலிகள் இடையிலான போராக மாறியது இலங்கை தமிழ் மக்களின் துயர வரலாறு.

விடுதலைப் புலிகளை ஆயுத மற்றவர்களாக்கும் நோக்கில் சுமார் ஒரு லட்சம் வீரர்களைக் கொண்ட இந்தியப் படை நடவடிக்கை மேற்கொள்ள, ஆயுதங்களை ஒப்படைக்காமல் புலிகள் எதிர்த்துச் சண்டையிட, இலங்கை அரசுப் படைகளால் முடியாத யாழ்பான மீட்பை சுமார் ஒரு மாத முற்றுகைக்குப் பின் இந்தியப்படை சாதித்திருக்கிறது. போரில் கனரக வாகனங்கள், பீரங்கிகள், உலங்கு வானூர்திகள் போன்றவற்றைப் பயன்படுத்திய இந்தியப் படைகளுக்கு புலிகள் தரப்பிலிருந்து கடுமையான எதிர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

1972-ற்குப் பின் சிலோன் எனும் பெயரில் அழைக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, 1948 பிப்ரவரி நான்கில் பிரித்தானிய அரசிடமிருந்து விடுதலை பெற்று, 1972 முதல் குடியரசு நாடாக இருந்து வருகிறது. 1978 இல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் படி, ஆறு ஆண்டுகள் பதவிக்காலம் கொண்ட அதிபர் மக்களால் தேர்வு செய்யப்படுபவராகவும், நாட்டின் தலைவராகவும், அரசின் தலைவராகவும், படைகளின் கட்டளைத் தளபதியாகவும், பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவராகவும், பாராளுமன்ற அமர்வுகளைக் கூட்டவோ, நிறுத்தி வைக்கவோ அல்லது முடிவுக்குக் கொண்டுவரவோ கூடிய அதிகாரமும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் உள்ளவராகவும் அறியப்படுகிறார்.

இலங்கையில் 1978 வரை அதிகாரமிக்கவராக பிரதமரே இருந்துள்ளார். பிரித்தானிய இலங்கையில் (1798-1948), 1924 முதல் 1931 வரை மானிங்

டெவொங்சயர் அரசியலமைப்பு இருந்ததாகவும், பின்னர் 1931 முதல் 1947 வரை டொனமூர் அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. தொடர்ந்து 1947 இல் சோல்பரி பிரபு தலைமையில் உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியலமைப்புச் சட்டம் 1972 வரை நடைமுறையில் இருந்திருக்கிறது.

இலங்கையின் விடுதலை டொமினியன் அந்தஸ்தின் அடிப்படையில் இருந்ததால், பிரித்தானிய மகாராணியாரே இலங்கையின் ஆட்சியாளராக பெயரளவிற்கு இருந்துள்ளார். விடுதலைக்குப் பின்னர் மகா தேசாதிபதி ஆளுநர் அல்லது மகாதேசாதிபதியாக சர்.ஹென்றி மொங்க் மேசன் மூர் (1948-1949) இருந்துள்ளார். தேசாதிபதிகள் (1798-1948) மகாதேசாதிபதிகளாக (1948-1872) மாற்றம் பெற்று, இலங்கையின் இறுதி மகாதேசாதிபதியாக (1962-72) வில்லியம் கோபல்லவை (1897-1981), இரண்டாம் எலிசபத் மகாராணியாரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடைசி தேசாதிபதியாகவும், இலங்கையின் முதலாவது சனாதிபதியாவும் அறியப்படும் வில்லியம் கோபல்லவ, சீனாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் (1961-1962) ஐக்கிய அமெரிக்காவின் தூதுவராகவும் (1961-62) செயலாற்றியிருக்கிறார். 1978 இல் இலங்கையின் அரசியலமைப்பு மாற்றப்பட்டு ஜீனியஸ் ரிச்சட் ஜயவர்தனா இரண்டாம் மகாதிபதியாக (1978-1989) மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் வரை கோபல்லவ அதிகாரத்திலிருந்திருக்கிறார்.

இலங்கையின் அதிகாரமிக்க சனாதிபதியாக ஆவதற்கு முன் நாட்டின் பத்தாவது பிரதம மந்திரியாக (1977-1978) பதவி வகித்த ஜயவர்தனா, இலங்கையின் இரண்டு முக்கியமான கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்.

யானைச் சின்னத்தைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி 1946-ல் டொன் ஸ்டீபன் சேனநாயக்க எனும் டி.எஸ்.சேனநாயக்காவால் (1884-1952) தொடங்கப்பட்டிருக்கிறது. பிரித்தானிய இலங்கையின் சட்டவாக்க சபையான இலங்கை சட்ட சபை (1833-1931) தேர்தலின் 1924 ஆம் ஆண்டு தேர்தலில், மேற்கு மகாணம் நீர்கொழும்பு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சேனநாயக்க, 1931 இல் இலங்கை அரசாங்க சபைத் தேர்தலில் மினுவாங்கொடை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார், 1947-1952 இல் மீரிகமை தொகுதியின் நாடாளுமன்ற

உறுப்பினரான சேனநாயக்க, இலங்கையின் முதலாவது பிரதமராக 1947 முதல் 1952 வரை ஆட்சி புரிந்திருக்கிறார். அன்று இலங்கையின் அரசராக இருந்தவர் ஆறாம் ஜோர்ஜ் (ஆ.காலம் 1936-1952).

சேனநாயக்காவிற்குப் பிறகு இரண்டாவது பிரதமராகப் பதவி ஏற்றவர் அப்போதைய வேளாண் அமைச்சரும் சேனநாயக்காவின் மகனுமான டட்லி சேனநாயக்க (1911-1973).

இலங்கையில் 1833 முதல் 1910 வரை அமலிலிருந்த அரசியலமைப்பு கோல்புரூக் கேமரன் அரசியலமைப்பு எனப்படுகிறது. 1829 இல் பிரித்தானியத்தால் அமைக்கப்பட்ட கோல் ப்ரூக் -கேமரன் ஆணைக்குழுவின் பரிந்துரையில் இலங்கை சட்டசபை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் உத்தியோக சார்புள்ளோர் ஒன்பது பேரும் உத்தியோக சார்பற்றோர் ஆறு பேரும் இடம் பெற்றுள்ளனர்.

1833-ல் ஆளுநரால் நியமிக்கப்பட்ட இலங்கையின் நிறைவேற்றுப் பேரவைக்கான குழுவில் காலனித்துவச் செயலாளர், சட்டமன்ற அதிபர், கணக்காளர் நாயகம், பொருளர் மற்றும் இலங்கைக்கான படைத்துறை அதிகாரி என ஐவரோடு நான்கு அரசாங்க அதிகாரிகளும் இடம் பெற்றுள்ளனர். உத்யோகப் பூர்வமற்ற உறுப்பினர்களில், மூன்று ஐரோப்பியர், ஒரு சிங்களவர், ஒரு தமிழர், ஒரு பரங்கியர் என ஆறு பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 1889 இல் உத்யோகப் பூர்மற்ற உறுப்பினர்களில், மூன்று ஐரோபபியர், ஒரு கீழைதேய சிங்களவர், ஒரு கண்டியச் சிங்களவர், ஒரு தமிழர், ஒரு சோனகர் என எட்டுப் பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். பின் 1910 இல் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினெட்டிலிருந்து இருபத்தி ஒன்றாகவும், 1920 இல் முப்பத்தி ஏழாகவும், 1923 இல் உத்தியோக பூர்வமானவர் 12, உத்யோக மற்றவர் 37 என நாற்பத்தி ஒன்பதாக, அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

சட்டவாக்கப் பேரவையின் உத்தியோகப்பூர்வமற்ற முதலாவது பிரதிநிதியாகக் குறிப்பிடப்படும் கேட் முதலியார் எனும் ஆறுமுகம் பிள்ளை குமாரசாமியும் (1783- 1836), அவரது மகனான சர். முத்து குமாரசாமியும் (1833- 1879), பேரான ஆனந்த குமாரசாமியும் (1877-1947), மறுமகன்களான பொன்னம்பல சகோதரர்களும், இலங்கையின் ஆரம்பகால அரசியல்வாதிகளாகவும், சைவ சமயப் பற்றாளர்களாகவும், இலக்கியவாதிகளாகவும் அறியப்படுகின்றனர்.

1924இல் சட்டப்பேரவை கலைக்கப்பட்டு முப்பத்து நான்கு உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற்றிருக்கிறது. வாக்களித்தவர்கள் மொத்தம் 2,05,000 பேர். தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரப்பூர்வமற்ற உறுப்பினர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு - ஈ. ஆர். தம்பி முத்து, கிழக்கு மாகாணம் திருகோணமலை - எம்.எம். சுப்பிரமணியம், வடக்கு மகாணம் மத்தி - சு. இராசரத்தினம், வடக்கு மாகாணம் கிழக்கு - ரி.எம் சுப்புரத்தினம், வடக்கு மாகாணம் வடக்கு - சர். பொன்னம்பலம், வடக்கு மகாணம் தெற்கு - ஆறுமுகம் கனகரத்தினம், இலங்கைத் தமிழர் மேற்கு மாகாணம் - அருணாசலம் மகாதேவா, இந்தியத் தமிழர் - ஐ.எக்ஸ் பெரைரா, இந்தியத் தமிழர் - கோ. நடேசையர், சோனகர் - முகமது மார்க்கான், சோகைர் - அப்துல் காதல், சோனகர் - டி.பி ஜாயா.

இலங்கை வரலாற்றில், விடுதலைக்கு முன்னரே, விடுதலைக்கான போராட்டங்களின் போதே சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், இசுலாமியர் என வேறுபாடுகள் உண்டாகியிருக்கின்றன. 1820 முதல் 1840 வரை தமிழகத்திலிருந்து இலங்கையின் தேயிலை, காப்பி, இரப்பர் தோட்ட வேலைகளுக்கு பிரித்தானியரால் அழைத்துச் செல்லப்பட்ட இந்தியத் தமிழரின் குடியுரிமை தொடர்பாக பல்வேறு நடைமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை சிங்களப் பௌத்தர்களுக்கே எனும் கருத்து உருவாக்கப்பட்டு மிகக் கடுமையாக அடக்கு முறைகளும் சட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1948 இன் சிலோன் குடியுரிமை மசோதா தேயிலைத் தோட்டங்களில் கொடுமையான அடக்கு முறைகளில் உழன்று வந்த லட்சக்கணக்கான மலையகத் தமிழர்களுக்கு இலங்கை குடியுரிமை கிடையாது எனும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆங்கிலேயர்களால் அடிமைபோன்று நடத்தப்பட்ட மலையகத் தமிழர்கள் அதன் பின்னரும் பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கும், சுரண்டலுக்கும் உள்ளாக்கப்பட்டு தொடர்ந்து வஞ்சிக்கப்பட்ட மக்களாவே இருந்து வருகின்றனர். மிகக் கடுமையான பஞ்ச காலங்களில் நெல்லை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், இராம்நாட் பகுதிகளிலிருந்து கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் (பெரும்பாலும் பள்ளர், பறையர்) போகும் வழிகளிலும் மலைக்காடுகளிலும் பணியிடங்களிலும் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். எந்த வித அடிப்படை வசதிகளும் இல்லாத மலைக்காடுகளில் தங்கி கடும்

உழைப்பால் காடுகளை அழித்து பணப்பயிர்களான தேயிலை, காப்பித் தோட்டங்களை உருவாக்கி, பிரித்தானிய அரசிற்கு பெரும் வருவாயையும், இலங்கை அரசிற்கு சிறப்பான முன்னேற்றத்தையும் கொடுத்த மலையாகத் தமிழர்க்குக் கிடைத்ததோ அகதிகள் எனும் பரிதாப நிலையே.

நூற்றாண்டுகளுக்கு முன்பே வந்துவிட்ட மலையகத் தமிழர்களை வெளியேற்ற வேண்டுமென இலங்கை சிங்களவர்கள் மிரட்ட, ஏற்றுக்கொள்ள இயலாது என இந்திய அரசியல்வாதிகள் மறுக்க, அந்த எளிய மக்களின் நிலை உலகில் வேறெவர்க்கும் நடவாத ஒன்று. இரு தலைமுறைகளாக இலங்கையில் தங்கியிருப்பதற்கான ஆதாரங்களை இலங்கை அரசு கேட்டிருக்கிறது. போனகாலம் முதல் தோட்டங்களே வாழ்வென்று அடைத்து வைக்கப்பட்ட மக்கள் ஆதாரங்களுக்கு எங்கே போவார்கள்.. தோட்டங்களுக்குப் போனதோடு தாய் தமிழகத்தோடு இருந்த உறவு முற்றாக முடிந்து போனதாகக் கூறப்படுகிறது. கடிதப் போக்குவரத்தோ விடுமுறைக்கு தாய்நாட்டிற்கு வந்தோ, தாய் நிலத்தோடு மணஉறவோ இல்லாத மலையகத் தொழிவாளர்கள் தனித்தீவு போன்று வதைபட்டிருக்கிறார்கள்.

லட்சக்கணக்கான மக்கள் தொழிலாளர்களாகப் போனதால் அவர்களைக் கண்காணிக்க கங்காணிகளாகப் பிள்ளைமாரும், வட்டித் தொழில் செய்ய செட்டியாரும், தொழில் வாய்ப்புகளுக்கு முதலியாரும் சென்றிருக்கின்றனர். லைன் வீடுகளில், முதல் லைன் வீடுகள் கங்காணிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தூரமாக வீடுகள் ஒதுக்கப்பட்ட தொழிலாளர்கள், போன இடத்திலும் சாதிவேறுபாட்டிற்கு ஆளாகியிருக்கின்றனர். கங்காணிகளையும், அடியாட்களையும், துரைமார்களையும் பகைத்துக்கொள்ள முடியாத மலையகத் தொழிலாளர்கள், இலங்கையின் சுதந்திரதிற்குப் பின் அங்கிருந்த ஆதிக்க சாதி அரசியல்வாதிகளாலும் பெருமளவு புறக்கணிக்கப்பட்டதாகவே பதிவுகள் சுட்டுகின்றன. பின்வந்த காலங்களில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அநாதைகளாக மாட்டிக் கொண்ட மலையகத் தமிழர்களின் துயரமும் வேதனையும் கொஞ்சமல்ல.

நன்கு படித்து அரசுப் பணிகளிலும், அரசியலிலும், பல்வேறு தொழில்களிலும் நிறைந்திருந்த உயர் சாதி ஆண்கள், பல்வேறு தமிழ் அமைப்புகளாலும், விடுதலைப் புலிகளாலும் புரட்சிப் போர் தொடங்கப்பட்ட ஆரம்ப காலத்திலேயே

வெளிநாடுகளுக்குப் போய்விட்டதாகவும், பின்னர் குடும்பத்தையும் அழைத்துக் கொண்டு வெளிநாடுகளில் வாழ்க்கையை நல்லமுறையில் அமைத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. விடுதலைப் புலிகள் உக்கிரமாக அரசோடு மோதிய காலத்தில், மீதமிருந்தவர்களும் ஏதேதோ வழிகளில் இலங்கையிலிருந்து வெளியேறியதாகவும், தப்பிதால் போதுமென்ற எண்ணத்தில் ஆஸ்த்ரேலியா, இங்கிலாந்து, பிரான்சு, கனடா உள்ளிட்ட நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றவர்கள், கடினமாக உழைத்து அடுத்த தலைமுறைகளையும் நல்ல நிலைமைக்கு கொண்டு வந்துவிட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

விவரம் தெரியாத மக்களும், கள்ளத் தோணிகளில் இலட்சக்கணக்கில் பணம் கொடுத்து தூரதேசங்களுக்குப் போகமுடியாத மக்களும், பாம்பன் கடற்கரையில் ஒதுங்கி, தமிழக மற்றும் இந்திய அரசுகளிடம் வதைபட்டது பெரும் சோகமானது. சிறை வாழ்க்கையே பரவாயில்லை எனச் சொல்லுமளவிற்கு அகதி முகாம்களில் ஏகப்பட்ட கெடுபிடிகள், அத்துமீறல்கள். தாய் நிலம் அவர்களை கண்ணியக் குறைவோடு அகதிகளாகவே ஏற்றதும், யாரோ போல் நடத்தியதும், அம்மக்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகக் குறிப்பிடப்படுகிறது.

வெளிநாடுகளுக்கு தப்ப முடியாமலும், தமிழகக் கடற்கரையில் ஒதுங்க முடியாமலும், இலங்கையின் முள்வேளிகளுக்குள் மாட்டிக்கொண்ட தமிழ் மக்களின் துயரங்கள் சொல்லில் வடிக்க இயலாதவை.

1954 இல் உருவான நேரு - கொத்தலாவலை ஒப்பந்தம் மூலம் அனைத்து மலையகத் தமிழர்களையும் ஏற்றுக் கொள்ளாமல் இந்தியக் குடியுரிமைக்கு விரும்பும் தமிழர்களை மட்டுமே ஏற்றுக் கொள்வோம் என இந்தியா அறிவித்திருக்கிறது. சுதந்திரத்திற்கு முன்பே தொடங்கிவிட்ட சிங்கள இனவாதத் போராட்டங்கள் காந்தியின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அவர் நேருவை இலங்கைக்கு அனுப்பி (1939) நிலைமையை அறிய ஏற்பாடு செய்ததாகவும், நேருவின் ஆலோசனைப் படி, இலங்கை இந்திய காங்கிரசு உருவாகியதாகவும் கூறப்படுகிறது.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் (1964) நாடற்றவர்களான மலையகத் தமிழருக்காக போடப்பட்டிருக்கிறது. நாடவற்றவர்களான 9,75,000 மலையகத் தமிழர்களில், 5,25,000 தமிழர்களை இந்தியாவும் 3,00,000 பேரை இலங்கையும்

ஏற்றுக் கொள்வதென முடிவாகியிருக்கிறது. 1,50,000 மக்கள் இரு நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்படாமல் விடப்பட்டிருக்கின்றனர். மலையகத் தமிழர்களிலேயே இந்தியக் குடியுரிமை பெறுவோர், இலங்கை குடியுரிமை பெறுவோர் மற்றும் நாடற்றவர் எனும் பாகுபாடு ஏற்பட்டிருக்கிறது. 1967 இல் அமலாகத் தொடங்கிய ஒப்பந்தமும் முறையாக அமல்படுத்தப்படவில்லை எனக் கூறப்படுகிறத.

1974 இல் சிறிமாவோ - இந்திராகாந்தி ஒப்பந்தம் மூலம் ஐந்து லட்சத்திற்கும் அதிகமானோர் இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருக்கின்றனர். 1984 இல் தலைமன்னார் - இராமேஸ்வரம் படகுச் சேவை முற்றிலும் நிறுத்தப்பட்ட பின்னர், கள்ளத்தோணி மூலமாகவே பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்திருக்கின்றனர்.

சிங்களவர்கள் நலன் காக்கும் நோக்கில், சிங்கள தேசியத்தை முன்னெடுக்கும் நோக்கில், 1937 இல் சாலமன் வெஸ்ட் ரிச்சர்ட் டயஸ் பண்டாரநாயக்காவால் (1899-1959) சிங்கள மகா சபை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்திய தமிழர் எதிர்ப்புக் கருத்துக்களை முன்வைத்ததாகக் குறிப்பிடப்படும் சிங்கள மகாசபை, ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து வந்ததாகவும், பின்னர் 1951 இல் ஐ.தே.க.விலிருந்து விலகி இலங்கை சுதந்திரக் கட்சியாக மாறியதாகவும் அறியப்படுகிறது.

ஆர்.டி. பண்டாரநாயக்காவால் இலங்கை சுதந்திரக் கட்சியாக மாற்றப்பட்ட சிங்கள மகா சபை, 1956 இல் ஆட்சிக்கு வந்திருக்கிறது. நான்காவது பிரதமராகிய பண்டார நாயகே, சிங்களம் மட்டும் சட்டம் எனும் சட்டம் மூலம், அதுவரை ஆட்சி மொழியாக இருந்த ஆங்கிலத்தை அகற்றி, சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றி, தமிழர் போராட்டங்களுக்கு அச்சாரம் போட்டிருக்கிறார். 1950கள் முதலே சிங்களப் பேரினவாதத்தை முன்னிறுத்தி வந்ததாகக் குறிப்பிடப்படும் பண்டாரநாயக, அதன் மூலமே பிரதமராக வெற்றி பெற்றதாகவும் கூறப்படுகிறது.

தமிழர்களும் சிங்களம் கட்டாயம் படிக்க வேண்டும் எனும் நிலைக்கு எதிராக தந்தை செல்வா என அழைக்கப்பட்ட சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் (1898-1977) தலைமையில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. யாழ்பாணம், வவுனியா, மட்டக்களப்பு,

திருகோணமலை உள்ளிட்ட தமிழ் பகுதிகளில் தீவிரமான எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டதன் காரணமாக, 1958 ஆம் ஆண்டில் 1958 (28) எனும் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, தமிழர் வாழும் பகுதிகளில் தமிழும் பயன்படுத்தலாம் எனும் நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

சுதந்திர இலங்கையில் ஒன்றாக இருந்த தமிழர் சிங்களவர் இனங்களுக்கிடையே, பதற்றத்தையும் மன வேறுபாட்டையும் உருவாக்கிய முதல் நிகழ்வாக சிங்களம் மட்டுமே சட்டம் என அரசியல் வல்லுநர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. 1948 குடியேற்றச் சட்டத்தால் மலையகத் தமிழர்கள் மட்டும் பாதிக்கப்பட்டார்களேயொழிய, மற்ற இலங்கைத் தமிழர்களும், பாரம்பரியமாக இலங்கையில் வசித்து வந்த தமிழர்களும் பாதிக்கப்படவில்லை.

இலங்கையின் புகழ்பெற்ற வழக்கறிஞரும், அரசியல்வாதியுமான கணபதி காங்கேசர் பொன்னம்பலம் எனும் ஜி.ஜி. பொன்னம்பலத்தால் (1901-1977), 1944 ஆகஸ்ட், 29 இல் அகில இலங்கை தமிழ் காங்கிரசு எனும் கட்சி தொடங்கப்பட்டிருக்கிறது. தமிழர்களின் நலன் காக்கும் விதத்தில் தொடங்கப்பட்ட தமிழ் காங்கிரசு கட்சி, 1947 இன் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெற்றதோடு, சேனநயக்கா அமைச்சரவையிலும் ஜி.ஜி பங்கு பெற்றிருக்கிறார்.

மலையகத் தமிழரின் குடியுரிமைச் சட்டத்தை ஏற்றுக் கொண்ட இலங்கை தமிழ் காங்கிரசு கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாத செல்வநாயகம், சி. வன்னிய சிங்கம் (1911-1959), இலங்கை முருகேசு விஜயரத்தினம், நாகநாதன் போன்றோர் முக்கியத் தலைவர்களாக இருந்து 1949 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியை தோற்றுவித்திருக்கிறார்கள். எழுபதுகள் வரை சிறப்பாகச் செயல்பட்டதாகக் குறிப்பிடப்படும் தமிழரசுக் கட்சி, பின்னர் தமிழ் காங்கிரசு, தொண்டைமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரசு போன்ற கட்சிகளுடன் இணைந்து, தமிழர் ஐக்கிய முன்னணி எனும் கூட்டணியை ஏற்படுத்தியதாகவும், பின்னர் இக்கூட்டணி தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பெயர் மாற்றம் பெற்றதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மலையகத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அறியப்படும் இலங்கை இந்தியக் காங்கிரஸ் (1939), இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரசு (1954) எனும் பெயரில் தொடர்ந்து செயல்பட்டு

வரும் கட்சியாக அறியப்படுகிறது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முக்கியத் தலைவராக அறியப்படும் சௌமியமூர்த்தி தொண்டமான் (1913-1999), இலங்கையின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவராகவும், தொடர்ந்து பல காலம் இலங்கை பாராளுமன்றத்தில் அமைச்சராக இருந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார். சௌமியமூர்த்தியைத் தொடர்ந்து ஆறுமுகன் தொண்டமானும் தொழிலாளர் காங்கிரசில் அமைச்சர்ராகப் பங்குபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் சேனநாயகாவின் ஐக்கிய தேசியக் கட்சியும், நாணயக்காரபத்திரகே மார்ட்டின் பெரேரா எனும் என்.எம். பெரேராவின் (1905-1979) லங்கா சமசமாஜக் கட்சியும், பெரிய கட்சிகளாக அறியப்பட்டிருக்கின்றன. இரஷ்ய மார்க்சிய கொள்கையாளரும் ஸ்டாலின் எதிர்ப்பாளராக அறியப்பட்டவருமான லியோன் திரொட்ஸ்கி கொள்கைகளைப் பின்பற்றிய சமசமாஜக் கட்சி, 1935 இல் பெரரா, எஸ்.ஏ விக்ரமசிங்கே (1901-1981) போன்ற இடதுசாரித் தலைவர்களால் தொடங்கப்பட்டிருக்கிறது. விக்கிரம சிங்கே பின்னர் இலங்கை பொதுவுடமைக் கட்சியை (1943) ஆரம்பித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை பொதுவுடமைக் கட்சி, தமிழர் தனித்துவம் பெற்ற தேசிய இனம் என்றும், அவர்களின் பாரம்பரியதாயகம் வடக்கு, கிழக்கு பகுதிகள் என்றும், தமிழர்கள் அவர்களது தனித்துவ அரசை உருவாக்க உரிமை பெற்றவர்கள் என்றும், தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் குடியுரிமை பெறக் தகுதியுடையவர்கள் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது.

பிரித்தானிய அரசினால் இலங்கையின் முழுமையான தேசியவாதி எனும் தங்கப்பதக்கம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்ட சர். பொன்னம்பலம் இராமநாதன் (1851-1930), இலங்கைத் தீவின் முன்னோடித் தலைவராகக் குறிப்பிடப்படுகிறார். பிரித்தானிய இலங்கை அரசின் தலைமை வழக்குரைஞராகப் பணியாற்றிய இராமநாதன் (1892-1902), 1915 இல் இலங்கை சிங்கள தேசியவாதிகளால் நிகழ்த்தப்பட்ட சிங்கள - இசுலாமியர் இனக் கலவரத்திற்குக் காரணமான சேனநாயகா பண்டாரநாயகா போன்ற தலைவர்களை, ஆங்கில அரசின் கடுமையான தண்டனையிலிருந்து வாதாடி தப்பவைத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

பொன்னம்பல முதலியாரின் மற்றொரு மகனான சர். பொன்னம்பலம் அருணாச்சலம் (1853-1924), பிரித்தானிய இலங்கையில் புகழ்பெற்ற வழக்குரைஞர், நீதிபதி, சட்டவாக்க சபை உறுப்பினர் மற்றும் அரசியல்வாதியாக அறியப்பட்டிருக்கிறார். அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் அரசியலில் ஈடுபட்ட சர். அருணாசலம், 1919 இல் தொழிலாளர் நலச் சங்கத்தை உருவாக்கியிருக்கிறார். 1920 இல் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனமாகப் பெயர் மாற்றம் பெற்ற தொழிலாளர் நலச் சங்கத்தின் செயலாளராக புகழ்பெற்ற தொழிற்சங்கவாதியான பெரி. சுந்தரம் எனும் பெரியண்ணன் சுந்தரம் (1890-1957) செயல்பட்டிருக்கிறார்.

இலங்கையின் முதலாவது தேசிய இயக்கமாகக் குறிப்பிடப்படும் இலங்கை தேசியக் காங்கிரசை (1919) உருவாக்கிய சர். அருணச்சலம், அதன் தலைவராகவும் (1919-1922) செயல்பட்டிருக்கிறார். இலங்கையின் சுதந்திரத்தில் பெரும் பங்கு வகித்த இலங்கை தேசியக் கட்சியின் சிங்களப் பேரினவாதிகள் சிங்கள மகா சபையையும், தமிழ் தேசியத் தலைவர்கள் தமிழ் மகாஜன சபையையும் தனித்தனியாக நிறுவிக்கொண்டதே இலங்கை வரலாற்றை மோசமான பாதைக்கு இட்டுச் சென்றதாகக் கருதப்படுகிறது.

1921 இல் மேற்கொண்ட அரசியல் சீர்திருத்தத்தின்படி, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத சிங்கள தேசிய வாதத்திற்கு எதிராக, சர். அருணாச்சலம் உருவாக்கிய தமிழர் மகாஜன சபையே (1921), பின்னர் முன்னெடுக்கப்பட்ட தமிழ் தேசிய எழுச்சிக்கு பாதை போட்டதாகவும் அறியப்படுகிறது.

சிறந்த ஆன்மீகவாதிகளாகவும் இலக்கியவாதிகளாவும் குறிப்பிடப்படும் பொன்னம்பல சகோதரர்களுக்குப் பின், சர். அருணாச்சலம் மகாதேவா (1825-1969), சேனநாயகா அரசாங்கத்தின் உள்துறை அமைச்சராகவும், இந்தியத் தூதராகவும் பணியாற்றியதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையின் முதலாவது பிரதமர் தேர்தலில் (1947), ஐக்கிய தேசியக் கட்சி 98 இல் 42 இடங்களும் லங்க சமசமாஜக் கட்சி 28 இல் 10, அகில இந்திய தமிழ் காங்கிரசு ஒன்பதில் போட்டியிட்டு ஏழும், இலங்கை இந்தியக் காங்கிரசு ஏழில் போட்டியிட்டு ஆறும், போல்ஷ்விக் லெனினியக் கட்சி பத்தில் போட்டியிட்டு ஐந்தும்,

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பதின்மூன்றிற்கு மூன்றும், தொழிற்கட்சி ஒன்பதில் ஒன்றும், சுயேட்சைகள் இருபத்தோரு இடங்களிலும் வென்றிருக்கின்றனர்.

பதிவு செய்யப்பட்ட 30,48,145 வேட்பாளர்களில், 17,10,150 பேர் வாக்களித்திருக்கிறார்கள். பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றிய ஐக்கிய தேசிய கட்சி, தமிழ்காங்கிரசு, தொழிலாளர்கட்சி மற்றும் சுயேட்சைகளோடு இணைந்து ஆட்சி அமைத்திருக்கிறது.

1952 தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி 54-81, சிங்கள தேசியத்தை முன்னெடுத்த இலங்கை சுதந்திரக் கட்சி 9-48, லங்கா சமசமாஜக் கட்சி 9-39, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 4-19, அகில இலங்கை தமிழ் காங்கிரசு 4-7, தமிழ் தேசியத்தை முன்னெடுத்த இலங்கைத் தமிழரசு கட்சி 2-7, தொழிற்கட்சி 1-5, குடியரசுக் கட்சி 0-9, பௌத்தக்குடியரசுக் கட்சி 0-3, சுயேட்சைகள் 12-88 என வெற்றி பெற்றிருக்கிறார்கள். குடியுரிமைப் பிரச்சினையில் மலையகத் தமிழர்களின் ஓட்டுரிமை பறிக்கப்பட்டதால் அவர்களது சார்பாக இலங்கை இந்தியக் காங்கிரசு 1952 தேர்தலில் போட்டியிடவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் ஏழாவது நாடாளுமன்றத்திற்கான 151 உறுப்பினர்களைத் தேர்ந்தேடுக்க நடந்த தேர்தலில் (1970), இலங்கை சுதந்திரக் கட்சி வெற்றி பெற்று, சிறிமாவோ பண்டாரநாயக்க (1916-2000) இரண்டாம் முறையாக பிரதமராகப் பதவி வகித்திருக்கிறார். தேர்தலில் இலங்கை சுதந்திரக் கட்சி 91-108, லங்க சமசமாஜக் 19-23, ஐக்கிய தேசியக் கட்சி 17-130, இலங்கைத் தமிழரசுக் கட்சி 13-19, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 6-9, அகில இலங்கை தமிழ்க்காங்கிரசு 3-12, மகாஜன எக்சத் பெரமுன 0-4, மற்றவர் 2-136 என இடங்கள் பெற்றிருக்கின்றனர்.

இலங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிகளோடு, ஐக்கிய முன்னணி எனும் கூட்டணியை உருவாக்கி எளிதாக ஆட்சியைப் பிடித்ததாகக் கூறப்படுகிறது. ஆட்சிக்கு வந்த பின் சோல்பரிக்கு மாற்றாக குடியரசாக்கியதும், பிரித்தானியா வசமிருந்த தேயிலைத் தோட்டங்களை நாட்டுடைமையாக்கியதும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாக அமைத்திருக்கின்றன.

ஆர்.டி.பண்டாரா நாயகாவின் மறுமகனான பெலிக்ஸ் டையஸ் பண்டாரநாயகா (1930-1985), சிறிமாவோ பன்டாரநாயகாவின் அரசில் முக்கியமானவராக அடையாளம் பெற்றிருக்கிறார். மிக இளம் வயதிலேயே

அரசியலுக்குக் கொண்டுவரப்பட்ட பெலிக்ஸ் நாயகா, நீதி. நிதி உட்பட பல முக்கிய பொறுப்புகளை வகித்ததோடு, ஜனதா விமுக்தி பெரமுணா எனும் மக்கள் விடுதலை முன்னணியின் இராணுவப் புரட்சிகளையும் (1962, 1971) திறமையாகக் சமாளித்தவராகக் குறிப்பிடப்படுகிறார்.

1977 தேர்தலில், ஜே.ஆர். ஜெயவர்தனாவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று இலங்கையின் இரண்டாவது சனாதிபதியாக ஜெயவர்த்தனே பதவியேற்றிருக்கிறார். அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் (1927-1989) தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி இருபத்தி மூன்று இடங்களில் போட்டியிட்டு பதினெட்டு தொகுதிகளில் வெற்றிபெற்று, இரண்டாவது பெரிய கட்சியாக செல்வாக்குப் பெற்றிருக்கிறது. 1972 இன் கீழ் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் அமோக ஆதரவு பெற்ற தமிழர் விடுதலை முன்னணி, தமிழர் பகுதிக்கு தனிநாடு வேண்டும் எனும் கோரிக்கையை வெகுவாக முன்னெடுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

1989 இல், 225 இடங்களுக்கு நடந்த தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று ரணசிங்க பிரேமதாசா (1924-1993) சனாதிபதியாகியிருக்கிறார். தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 125, இலங்கை சுதந்திரக் கட்சி 61, ஈழ புரட்சிகர மாணவர் இயக்கம்13, தமிழர் விடுதலைக் கூட்டணி (ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி) 10, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் 4, ஐக்கிய சோசலிசக் கூட்டணி (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்க சமசமாஜக் கட்சி, நவலங்கா சமசமாஜக்) 3, மகாஜன எக்சத் பெரமுனா 3, ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி 0 , தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் 0, அகில இலங்கை தமிழ் காங்கிரசு 0 இடங்களை பெற்றிருக்கின்றனர்.

1994 தேர்தலில் ஆட்சிக்கு வந்த இலங்கை சுதந்திரக் கட்சியின் சார்பில் சனாதிபதியாக சந்திரிகா பாண்டாரநாயக குமாரதுங்கா (பிறப்பு-1945) பதவியேற்றிருக்கிறார். 1994 முதல் 2005 வரை இருமுறை பதவி வகித்த சந்திரிகா, பாரிஸ் பல்கலையில் அரசியல் அறிவியல் படித்திருக்கிறார். 1972 முதல் பல்வேறு பொறுப்புகளில் இருந்து வந்தவர் 1994 தேர்தலில் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ளார். பின் அதே ஆண்டு நடந்த சனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று

விடுதலைப்புலிகளுடன் அமைதிப் பேச்சு வார்தததையை முன்னெடுத்து அது பலனில்லாது போகவே ஆயுதபலம் கொண்டு புலிகளை ஒடுக்க கடுமையான நிலைப்பாடுகளை முன்னெடுத்திருக்கிறார். சந்திரிகாவின் கணவரான விஜய குமாரண துங்கா (1945-1988) புகழ்பெற்ற நடிகராகவும், இலங்கை மக்கள் கட்சியை (1984) ஆரம்பித்தவராகவும், தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கு முயன்றவராகவும் குறிப்பிடப்படுகிறார். 2005 முதல் 2015 வரை இலங்கையின் சனாதிபதியாக இருந்தவர் பெர்சி மகேந்திர ராஜபக்ச எனும் மகிந்த ராசபக்ச (பிறப்பு-1945).

இலங்கையில் பௌத்தத்தை மீட்டெடுத்தவராகவும், ஆசியா, வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் புத்த தர்மத்தைப் போதித்தவராகவும் அறியப்படும் அனகாரிக தர்மபால (1864-1933), இலங்கையின் நவீன வரலாற்றில் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். கர்னால் ஆல்காட்டின் புத்த மதப் பணிகளால் ஈர்க்கப்பட்டவராகக் கூறப்படும் தர்மபால, இந்தியாவின் புத்தகயா விகாரையை மேம்படுத்தியவராகவும், இலங்கை மற்றும் இந்தியாவில் பல புத்த விகாரங்களை நிறுவியவராகவும் அறியப்படுகிறார். மகா போதி சமூகம் மூலம் இந்திய பௌத்த சமயத்திற்கு அரும்பணி ஆற்றியவராகப் புகழப்படும் தர்மபால, அயோத்திதாசப் பண்டிதரின் தமிழ் பௌத்தம் எனும் சாங்கியப் பௌத்தத்திற்கு பெரும்பணி செய்தவராகவும் பாராட்டப்படுகிறார்.

பிரித்தானிய இலங்கையில் ஆங்கிலக் கல்வியும், ஆங்கிலமும், கிறித்துவமும் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. கிறித்தவ மதம் பெரிய செல்வாக்குப் பெற்று வளர்ந்து வந்த நிலையில், ஏராளமான பௌத்தர்கள் கிறித்தவர்களாக மதம் மாறியிருக்கின்றனர். மத மாற்றமடைந்த பௌத்தர்களே பின்னர் தாய் நாட்டுப் பற்றையும், தாய்மொழி, தாய்மதம் எனப் பெரியளவில் போராட்டங்கள் நடத்தியதோடு, இலங்கை விடுதலைக்கும் சிங்கள அரசியல் எழுச்சிக்கும் வித்திட்டிருக்கின்றனர்.

ஆங்கிலக் கல்வியால் பெரும் பயன் பெற்ற இலங்கைத் தமிழர்கள் பௌத்தர்களுக்கு முன்பே அரசியல் ஆதிக்கம் பெற்று, கல்விச் சாலைகளிலும், அரசுப் பணிகளிலும், வணிகத்திலும் பெரும் முன்னேற்றம் கண்டு, பொருளாதார ரீதியாகவும் நல்ல நிலைமையில் இருந்திருக்கின்றனர். கூடவே சைவ மதத்தையும் பெருமளவில் முன்னெடுத்ததோடு, கோவில்கள், மடங்கள், கல்விக் கூடங்கள் என

ஏராளமாக நிறுவியிருக்கின்றனர். சைவ சமய மாநாடுகள், திருவிழாக்கள், தேரோட்டம், ஊர்வலங்கள் முன்னெடுக்கப்பட்டு சைவ சமயத்தின் மேலாதிக்கம் பரப்பப்பட்டிருக்கிறது.

வணிகத்தின் பொருட்டு இலங்கையில் குடியேறிய இசுலாமியர்களும், வணிகத்தில் பெருவெற்றி பெற்றதோடு இசுலாம் மார்க்கமும் இலங்கைத் தீவில் நிலைகொள்ளத் தொடங்கியிருக்கிறது. அந்நிலையிலேயே கிறித்தவம், சைவம், இசுலாம் மதத்திற்கும், மதத்தவருக்கும் எதிராக, அனகாரிக தர்மபால போன்றவர்களால் மண்ணின் மைந்தர்கள் எனும் குரல் ஓங்கி ஒலிக்கப்பட்டு, படித்த இளைஞர்களிடையே பெருத்த ஆதரவைப் பெற்று, சிங்கள தேசியமாக உருமாற்றம் பெற்றிருக்கிறது. அரசியல் மற்றும் மதக் காரணங்களுக்காகவே இலங்கைத் தமிழரைப் போல், மத, அரசியல், பொருளாதார வலிமையற்று இருந்த லட்சக்கணக்கான மலையகத் தமிழர்க்கெதிராகவும் சிங்கள பேரினவாதம் கடுமையான நிலைப்பாடுகளை எடுத்திருக்கிறது.

பிரித்தானியர் வருகைக்கு முன்னரே வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையில் பெரும்பான்மையாகவும், செல்வாக்கான சமூகமாகவும் இருந்த தமிழர்கள், சுதந்திரத்திற்குப் பின்னர் உண்டாகிய ஒன்றுபட்ட இலங்கையில் சிறுபான்மையராக மாற்றம் பெற்றதே தமிழரின் அத்தனை இழப்புகளுக்கும் காரணமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. கண்டி மற்றும் காலேயில் பெருன்பான்மையாக இருந்த சிங்களவர்கள் ஒன்று பட்ட சுதந்திர இலங்கையில் ஏழுபது சதவிகித மக்கள் தொகை எனும் அடிப்படையில் ஒட்டு மொத்த இலங்கைக்கும் பெரும்பான்மையராக மாறியதும், தமிழர் பகுதியில் பெருன்பான்மையாக வாழ்ந்த தமிழர்கள், சுதந்திர இலங்கை மக்களில் 25 சதவிகிதமாக குறைந்துபோய் ஓட்டு அரசியலில் பலமிழந்து போனதும் இலங்கை உள்நாட்டுப் போர்களுக்கான காரணங்களில் முக்கியமானதாகக் குறிப்பிடப்படுகிறது.

மலையகத் தமிழர்களும், இலங்கைத் தமிழரோடு ஒன்றுபட்டால் வாங்கு வங்கி அரசியலில் தமிழர்கள் செல்வாக்குப் பெற்றுவிடுவார்கள் என்பதைக் கணித்தே, மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டு, நாடற்றவர்கள் எனும் நிலையும் சிங்கள அரசியல்வாதிகளால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

தந்தை செல்வா காலம் வரை ஓரளவிற்கு அமைதியான போராட்டமாகச் சென்று கொண்டிருந்த சிங்கள தமிழ் தேசிய முரண்பாடு, பின்னர் ஆயுதமேந்திய போராட்டமாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக எழுபதுகளில் ஏராளமான தமிழ்ப் போராளி குழுக்கள் தோன்றி இலங்கை அரசுடன் மோதியிருக்கின்றன. துரதிஷ்டவசமாக போராளிக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல்கள், வன்முறைகள், பழிவாங்கல்கள், தமிழக போராட்டங்களை வெகுவாகப் பாதித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. உதாரணமாக மிகப் பெரிய போராளி இயக்கமாக வளர்ந்து வந்த டெலோ வெகு விரைவிலேயே புலிகள் அமைப்பால் வீழ்த்தப்பட்டிருக்கிறது.

1982 இல் சென்னையில் திருமணம் செய்ததாகக் குறிப்பிடப்படும் வேலுப்பிள்ளை பிரபாகரன் (1954- 2004), பதினெட்டு வயதில் புதிய தமிழ்ப்புலிகள் (1972) எனும் அமைப்பை தொடங்கியதாகக் கூறப்படுகிறது. 1976 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் பெயர் மாற்றத்தோடு, தமிழர் விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்த பிரபாகரன், இலங்கை வரலாற்றில் மிகக் குறிப்பிடத்தக்க ஆளுமையாக அடையாளம் சுட்டப் பெறுகிறார்.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் தமிழீழம் எனும் பெயரில் தமிழருக்கான தாயகத்தை உருவாக்கும் உறுதியுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், 1976 முதல் 2009 வரை தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களில் தமிழர் விடுதலைக்குப் போராடிய அமைப்பாக அறியப்படுகிறது. 1983 முதல் பெரும்பான்மை தமிழ் மக்களால் ஆதரிக்கப்பட்டு தனி அரசாங்கம் ஒன்றை நிறுவி, முப்படைகளையும், காவல் மற்றும் நீதிமன்றம் போன்றவற்றையும் ஏற்படுத்தி, தமிழ்ப்பகுதியில் தமிழ் அரசினை நிறுவிய புலிகள் அமைப்பு, 2001 முதல் நார்வே தூதுக் குழுவின் உதவியோடு சமாதானப் பேச்சு வார்த்தைகளையும் முன்னெடுத்திருக்கிறது.

பத்மநாபாவின் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, சபாரத்தினத்தின் தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ), இரத்தின சபாபதியின் ஈழ புரட்சிகர மாணவர் இயக்கம் (ஈரஸ்) போன்ற இயக்கங்களுடன் ஈழ தேசிய விடுதலை முன்னணி எனும் பெயரில் இணைந்த விடுதலைப் புலிகள் இயக்கம், பின்னர் 1986 முதல் மற்ற இயக்கங்களோடு முரண்பட்டும், மோதியும், பிற சகோதர இயக்கங்களை பின்னுக்குத் தள்ளியும், அழித்தும், ஈழமக்களின் ஒற்றைப் பிரதிநிதி எனச் சொல்லத்தக்க அளவில் பெரிதாக வளர்ந்திருக்கிறது.

தமிழர் பகுதியில் செல்வாக்கோடு இருந்த அரசியல் இயக்கங்களுக்கும், போராளிக் குழுக்களுக்கும் இடையே சரியான ஒருங்கிணைவு அமைந்திருக்கவில்லை எனக் கூறப்படுகிறது. தமிழர் அரசியல் கட்சிகள் ஒன்றாக இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை (1972) உருவாக்கி, ஒருமித்த குரலில் வட்டுக்கோட்டை பிரகடனத்தை (1976) வெளியிட்டிருக்கின்றனர். இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தமிழர் தாயகம் வேண்டும் என்றும், அதில் ஒரு தேசிய இனமாக தமிழரின் அரசியல் இலக்கை அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்தும், போராளிக் குழுக்கள் ஒன்றிணைந்தும், பின்னர் விடுதலைப் புலிகள் தனித்துப் போராடியும் தமிழீழம் வென்றெடுக்கப்படாத ஒன்றாகவே இருக்கிறது. டெலோவுக்கும், தொடர்ந்து புலிகளுக்கும் ஆதரவு அளித்ததாகக் குறிப்பிடப்படும் இந்திய அரசு, பின்னர் இலங்கை அரசிற்கு ஆதரவு கொடுத்ததன் மூலம், இலங்கை உள்நாட்டு போரை முடிவுக்குக் கொண்டுவந்ததாக அரசியல் விமர்சர்களால் குறிப்பிடப்படுகிறது. மேலும் இலங்கை அரசுடனான அரசியல் பேரங்களுக்கு தமிழகப் போராளிக் குழுக்களை இந்திய அரசும், அரசியல்வாதிகளும், திறம்பட பயன்படுத்திக் கொண்டதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

சிங்களர் - இசுலாமியர் இடையே 1915 இல் நிகழ்ந்த வன்முறையே நவீன இலங்கை வரலாற்றின் ஆரம்பகால இன மோதலாகக் கருதப்படுகிறது. தமிழரைப் போன்றே இலங்கை வாழ் இசுலாமியர்களிலும், பூர்வீக இலங்கை முசுலீம்கள் என்றும் தமிழகத்திலிருந்து குடியேறிய இசுலாமியர்கள் என்றும் இரு தரப்பினர் உள்ளதாகக் கூறப்படுகிறது. தமிழரைப்போல் அல்லாமல், பூர்விக இலங்கை இசுலாமியரை விட, தமிழகத்திலிருந்து சென்ற தமிழ் பேசும் இசுலாமியர், வணிகத்திலும் பொருளாதாரத்திலும் சிறந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

கண்டியில் இசுலாமியர் மசூதி இருக்கும் பாதை வழியாக மேளம் அடித்துச் செல்லக் கூடாதென பௌத்தர்களின் ஊர்வலம் தடுக்கப்பட, அதனைத் தொடர்ந்து இருவருக்கும் கலவரம் மூண்டிருக்கிறது. விரைவிலேயே கொழும்புவிற்கும் பிற நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் பரவிய கலவரத்தை, பிரித்தானிய அரசு இந்திய இராணுவத்தைக் கொண்டும், படைத்துறை சட்டத்தை இயற்றியும்

அகற்றியிருக்கிறது. பௌத்தர்கள் சார்பாக முன்னின்று செயல்பட்ட இளைஞர்களே அடுத்த தலைமுறை அரசியல்வாதிகளாக, சுதந்திர இலங்கையின் அரசியல் தலைவர்களாக ஆகியிருக்கின்றனர்.

இசுலாமியருக்கு எதிரான கலவரத்தில் அன்றைக்கிருந்த தமிழ் அரசியல் செயல்பாட்டாளர்கள், சிங்களவரை ஆதரித்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் தமிழ் இயக்கங்கள் வலுப்பெற்று விடுதலைப்புலிகள் போராட்டங்களை முன்னெடுத்தபோது, யாழ்பாணம் பகுதியிலிருந்த தமிழ்பேசும் அத்தனை இசுலாமியர்களையும் வெளியேற்றியதாக அறியப்படுகிறது. வட இலங்கை முசுலீம்களின் கட்டாய வெளியேற்றமாகக் குறிப்பிடப்படும் அந்நிகழ்வு, புலிகள் இயக்கத்தின் மாபெரும் தவறாக அரசியல் வல்லுநர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. சுமார் 72 மணிநேரம் கெடு விதிக்கப்பட்டு, சாவகச்சேரி, யாழ்ப்பானம், கிளிநொச்சி போன்ற பகுதிகளிலிருந்து இசுலாம் மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

தமிழர் மகாணங்களில் இசுலாமியர் நலன் காக்க உருவாக்கப்பட்ட சிறிலங்கா முசுலிம் காங்கிரசு (1981), தமிழீழத்தை ஆதாரிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. தமிழர்க்கென்று தமிழீழம் உருவானால் அதில் இசுலாமியர் சிறுபான்மையராக ஆகக்கூடும் எனும் கருத்தில், இசுலாமிய நலனை மட்டும் முன்னிறுத்தி வந்த இசுலாமிய காங்கிரசுக்கு, இலங்கை அரசும் மறைமுகமாக ஆதரவு அளித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

சகோதரக் குழுக்களை ஒழித்தது, இந்திய அமைதிப் படையை எதிர்த்தது, இசுலாமியரை வெளியேற்றியது போன்ற பழிகளோடு, தமிழகத்தின் மாபெரும் தலைக்குனிவான ராஜிவ் படுகொலையும் புலிகள் மீதே விழுந்தது. ராஜிவ் படுகொலையும் அதன் பிறகான விடுதலைப்புலிகளின் சர்வதேசத் தடையும், இயக்கத்திற்குக் கிடைத்த வன்முறையாளர்கள் எனும் அவப்பெயரும், தமிழீழத்திற்கான மாபெரும் தடையாகிப் போனது வரலாற்று உண்மை. நார்வே தூதுக் குழுவின் பேச்சுக்களில் எட்டப்படாத அரசியல் தீர்வும் புலிகளின் பின்னடைவாகியது.

கேர்னல் கருணா அம்மான் எனும் விநாயக மூர்த்தி முரளிதரன், 2004 இல் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்ததும், புலிகளின் அமைப்பிற்கும் பெரும்

பின்னடைவாகக் கூறப்படுகிறது. நீண்ட காலம் புலிகளின் முக்கிய போர்த் தலைவராக இருந்தவரும், புலிகளின் போர்த் தந்திரங்களையும் களநிலவரங்களையும் நன்கறிந்தவருமான கருணா, கிழக்குப் பகுதிக்கு புலிகள் அமைப்பில் போதிய முக்கியத்துவமும், மதிப்பும் அளிக்கப்படுவதில்லை எனும் எளியதொரு காரணத்தை முன்வைத்துப் பிரித்ததும், பின்னர் இலங்கை அரசோடு நெருக்கம் காட்டியதும், தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் எனும் அமைப்பின் தலைவராகி அரசியல்வாதியாக மாற்றம் பெற்றதும், இலங்கை தமிழர்களின் நீண்ட காலப் போராட்டத்திற்கு வெற்றி கிடைக்காமல் போனதற்கான ஒரு காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

மாறிவந்த உலகளாவிய தீவிரவாதத்திற்கெதிரான மனநிலையை, உலக நாடுகளின் எண்ணங்களை, உலக நிகழ்வுகளை, புலிகள் கவனிக்கத் தவறியதும் தமிழீழ விடுதலைக்குப் பின்னடைவாகக் கருதப்படுகிறது. இந்திய அரசின் ஒத்துழைப்பு இல்லாமல் தமிழீழம் சாத்தியமில்லை என்பதை மறுத்து புலிகள் போராடியதும், போராளிகள் எனும் பெயர் இருட்டடிப்புச் செய்யப்பட்டு பிரிவினை வாதிகள், தீவிரவாதிகள் எனும் பெயர் ஊடகங்களால் முன்மொழியப்பட்டதும், இலங்கை இராணுவத்தின் கட்டளைத் தளபதியான சரத் பொன்கேசாவின் மனிதாபமானமற்ற கொடூர போர் முறைகளும், விடுதலை இயக்கத்தை தோல்வியை நோக்கித் தள்ளியதாகக் குறிப்பிடப்படுகிறது.

புலிகளின் எல்லைகள் மூடப்பட்டதும், உணவும் ஆயுதங்களும் உள்நுழையாமல் தடுக்கப்பட்டதும், புலித்தலைமையால் உணரப்பட்டு ஒரு நல்ல முடிவு எடுக்கப்பட்டிருந்தால், முள்ளி வாய்க்கால் போன்ற பேரவலங்களும் இன அழிப்பும் தவிர்க்கப்பட்டிருக்கலாம். இறுதிப் போரில் வெள்ளைக் கொடி ஏந்தி சரணடைய வந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டதும், அப்பாவி மக்கள் மீது கொத்துக் குண்டுகளும், நவீன ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டதும், அகிம்சையைப் போதித்த புத்தபிரானின் பெயரால் நடத்தப்பெற்ற இலங்கை அரசிற்கு தீராதி களங்கத்தை ஏற்படுத்திவிட்டது. சுதந்திரத்திற்கு முன்பான இலங்கையும், சுதந்திரத்திற்குப் பிறகான இலங்கையும் ஒன்றல்ல என்பது திண்ணம். முன்னது ஆரியப் பௌத்தம் எனில் பின்னது சிங்களப் பௌத்தம் போலும்.

மொழி, கலை, பண்பாடு, வரலாறு, பாரம்பரிய நிலப்பரப்புகள், அரசுகள் என எல்லாவற்றிலும் வேறுபட்ட தமிழர், சிங்களவர் எனும் இரண்டு தேசிய இனங்கள்

வாழும் இலங்கையில், சிங்களவர் வரலாறு மட்டுமே இலங்கையின் வரலாறாகக் கருதப்படும் நிலைக்கு மாற்றாக, கலாநிதி முருகர் குணசிங்கம் எனும் புலம்பெயர் வரலாற்று நூலாசிரியர் எழுதியுள்ள இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு எனும் நூல், இலங்கைத் தமிழர் வரலாற்றை பொது ஆண்டிற்கு முன்பான 300 தொடக்கம் முதல், பொது ஆண்டின் 2000 வரை விவரிக்கும் முழுமையான வரலாற்று ஆவணமாகப் புகழப்படுகிறது.

சைவத்தையும், தமிழையும் சிறப்பாக முன்னெடுத்தவர்களாகப் புகழப்படும் இலங்கைத் தமிழர்கள் ஏராளமான இலக்கியங்களை இயற்றியுள்ளது போற்றத்தக்கது. தொடக்க காலம் முதல் பொது ஆண்டின் பதினேழாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டம், பதினேழாம் நூற்றாண்டுக் காலகட்டம் மற்றும் விடுதலைக் காலகட்டம் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் இலக்கிய வரலாற்றில், பல குறிப்பிடத்தக்க படைப்புகள் இயற்றப்பட்டுள்ளன.

வரலாற்று ரீதியில் தனி நாடாக இல்லாமல் தமிழகத்தின் தென் கிழக்கு பகுதியாகவே அடையாளம் காணப்பட்டு வந்த இலங்கையில், பல்வேறு தல புராணங்களும், சிற்றிலக்கியங்களும் எழுதப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தட்சண கைலாச புராணம், கதிர்காம புராணம், சிவராத்திரிப் புராணம், விநாயக கட்டி புராணம் உள்ளிட்ட சுமார் நாற்பது மரபு வழி புராணங்கள் இயற்றப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

பனைமரத்தின் பெருமைபேசும் காசிநாதப் புலவரின் புராணநூல், இறைவனின் இயல்பையும், மனிதரது வாழ்வையும் விளக்கும் ராமலிங்கப் புலவரின் கோட்டுப் புராணம், வண்ணார் பண்ணை சுப்பையா எழுதிய தேவதாசி வாழ்க்கையைப் பற்றிய சனகி புராணம் போன்றவை மரபு வழியிலிருந்து மாறுபட்ட புராணங்களாகச் குறிப்பிடப்படுகின்றன.

சைவத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டு புரிந்தவராகக் புகழப்படும் ஆறுமுக நாவலர் (1824-1879), இலங்கையில் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவராகப் புகழப்படுகிறார். கல்விப் பணி, அச்சுப் பணி, சைவப் பிரச்சாரம், தமிழகத்திய சுற்றுப்பயணம் என வாழ்ந்த நாவலர், வள்ளலாரின் அருட்பாவையை கடுமையாக எதிர்த்தவராகவும் அறியப்படுகிறார்.

யாழ்பாணத்தில் பிறந்த சி.வை.தாமோதரம்பிள்ளை (1832-1901), பண்டைக்கால இலக்கியங்களைப் பதிப்பிப்பதையே வாழ்வின் நோக்கமாகக் கொண்டிருந்தவராகப் புகழப்படுகிறார். 1853 இல் பதிப்புத்துறை முன்னோடி எனும் பெருமையைப் பெற்றவராக அறியப்படும் பிள்ளை, உ.வே.சா வோடு நெருங்கிப் பழகியவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவராக சுண்ணாகம் அ.குமாரசாமிப் புலவர் (1854 - 1922) அறியப்படுகிறார். 1900 இல், ஆரம்பிக்கப்பட்ட யாழ்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் பரீட்சகராக இருந்த குமாரசாமிப் புலவர், சைவ சமய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியில் மிக முக்கியமானவராகக் குறிப்பிடப்படும் சிரோமணி சி. கணேசையர் (1878-1958), தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் விளக்கக் குறிப்புகள் எழுதியவராகவும், இலக்கியம் தொடர்பான பல்வேறு பணிகள் செய்தவராகவும் புகழப்படுகிறார். மேலும், யாழ்ப்பாணத்தில், பல தமிழறிஞர்களையும், இதழாளர்களையும், பண்டிதர்களையும் உருவாக்கிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தை நிறுவியதில் முக்கியப் பங்காற்றியவராகவும் அறியப்படுகிறார்.

கிழக்கிலங்கையில் பிறத்து தமிழ் மொழி வளர்ச்சிக்கும் இலக்கியம், சமயம், தத்துவம், இசை முதலிய பல துறைகளின் உயர்வுக்கும் பாடுபட்டவராகக் குறிப்பிடப்படும் சுவாமி விபுலானந்தர் எனும் விபுலானந்த அடிகளார் (1892-1947), தமிழறிஞராகவும், கல்வியாளராகவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க அடிகோலியவராகவும், இதழியலாளராகவும் புகழப்படும் தனிநாயகம் அடிகளார் எனும் சேவியர் தனி நாயகம் (1913-1980), தமிழ் சொல் அகராதி தொகுக்கும் பணியை மேற்கொண்ட கதிரைவேற் பிள்ளை (1829-1904), பேரகராதியை முழுமையாக்கி வெளியிட்ட பிள்ளையின் மகன் சு.பாலசிங்கம் (1876-1952) போன்ற பல இலங்கை அறிஞர்கள் சிறப்பான தமிழ்த் தொண்டிற்காக பெரிதும் அறியப்படுகின்றனர்.

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை (1899-1986), தமிழறிஞராகவும், சைவ சமயம், மெய்யியல், தமிழர் பண்பாடு போன்ற துறைகளில் சிறப்பான

உரையாற்றியவராகவும், உரைகள், கண்ணகி தோத்திரம், சைவநற் சிந்தனைகள், நாவலரும் கோவிலும், செந்தமிழ் களஞ்சியம், பத்தினி வழிபாடு போன்ற பல்வேறு நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பேராசிரியராகவும், தமிழ் வரலாற்று ஆய்வாளராகவும் அறியப்படும் பொன், பூலோக சிங்கம் (பிறப்பு-1936), இலக்கியம், இலக்கணம், பண்பாடு, சமயம், வரலாறு தொடர்பாக, தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏராளமான நூல்கள் எழுதியவராகக் குறிப்பிடப்படுகிறார்.

ஈழத்தின் ஆரம்பகால பத்திரிக்கைகளுள் மிக முக்கியமானதாகக் குறிப்பிடப்படும் ஈழகேசரி (1930) பத்திரிகையை தொடங்கிய நா.பொன்னையா (1892-1951) பதிப்பாளராகவும், பத்திரிக்கையாளர் மற்றும் சமூக சேவையாளராகவும் குறிப்பிடப்படுகிறார். ஈழகேசரி, ஈழநாடு போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றிய இராஜ. அரியரத்தினம் (1916-1998), ஈழத்தின் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவராகக் குறிப்பிடப்படுகிறார்.

ஈழத்தின் நவீன காலத்திய இலக்கிய ஆளுமைகளாக அறியப்படும் பேராசிரியர்கள் கார்த்திகேசு சிவத்தம்பி (1932-2011), மற்றும் க. கைலாசபதி (1933-1982), இலக்கிய விமர்சகர்களாகவும், சிறந்த திறனாய்வாளர்களாகவும் புகழப்படுகின்றனர். யாழ்பாணச் சமூகத்தின் குறைகளையும் சுட்டிக் காட்டியவராகக குறிப்பிடப்படும் பேரரசிரியர் சிவத்தம்பி, ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட ஆக்கங்களை உருவாக்கியவராகவும், தமிழ், சமயம், சமூகவியல், மானுடவியல், அரசியல், வரலாறு, கவின் கலைகள் போன்ற பல்வேறு துறைகளிலும் ஆர்வம் கொண்டிருந்தவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் (1954) ஈடுபாடு கொண்டிருந்தவராகக் குறிப்பிடப்படும் பேராசிரியர் கைலாசபதி, தமிழ், சமயம், பண்பாடு, சமுதாயம், அரசியல் போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டவராக அறியப்படுகிறார்.

ஈழத்து எழுத்துலகில் செல்வாக்கானவராக அறியப்படும் எஸ்போ எனும் ச. பொன்னுத்துரை (1932-2014), சிறுகதைகள், நாவல்கள், நாடகம், மொழிபெயர்ப்பு, கவிதைகள் என நாற்பதுக்கும் மேற்பட்ட ஆக்கங்களை இயற்றியுள்ளார். ஈழத்தின்

முதன்மைப் படைப்பாளிகளுள் ஒருவராகப் புகழப்படும் திரு. எஸ்போ, 2010-ல் கனடாவின் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது பெற்றிருக்கிறார்.

உலகளவில் தமிழ் மொழியறிவை வளர்ப்பதும் தமிழ் இலங்கியப் பங்களிப்புகளை ஊக்குவிப்பதும் எனும் நோக்கத்தோடு 2001 இல் உருவாக்கப்பட்ட கனடிய தமிழ் இலக்கியத் தோட்டமும் டொரான்டோ பல்கலைக்கழக தெற்காசிய கழகமும் இணைந்து இயல் விருதை வழங்குகின்றன. 2001 இல் சுந்தர ராமசாமிக்கும் (1931-2005), 2003 இல் வெங்கட் சாமிநாதனுக்கும் (1933 - 2015), 2011 இல் எஸ்.ராமகிருஷ்ணனுக்கும் (பிறப்பு - 1966), 2012 இல் நாஞ்சில் நாடனுக்கும் (பிறப்பு - 1947), 2014 இல் ஜெயமோகனுக்கும் (பிறப்பு- 1962), இயல் விருது வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியத் தோட்டத்தின் செயலாளராக அறியப்படும் அ. முத்துலிங்கம் (பிறப்பு -1937), புலம் பெயர் வாழ் ஈழத் தமிழர்களில் புகழ்பெற்ற எழுத்தாளராகவும், உலகம் முழுவதும் அறியப்பட்ட தமிழ் எழுத்து ஆளுமையாகவும் அறியப்படுகிறார். பேராசிரியர் கைலாசபதியால் எழுத்துலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டவராகக் குறிப்பிடப்படும் முத்துலிங்கம், புதினம், சிறுகதைத் தொகுப்பு, கட்டுரைத் தொகுப்பு என ஏராளமான ஆக்கங்களை வெளியிட்டு தமிழுக்குப் பெருமை சேர்த்தவராகப் பாராட்டப்படுகிறார்.

இலங்கையிலுள்ள இருபத்தைந்து மாவட்டங்களில் ஒன்றான புத்தளம் மாவட்டத்தின் சிலாபம் நகரைச் சேர்ந்த சார்லஸ் எட்கர் கோட்டை (1866-1946) மற்றும் அவரது சகோதரர் விக்டர் கோட்டை (1871-1962) அழைப்பை ஏற்று, கஸ்தூரிபாய் காந்தி, இராஜாஜி, லெட்சுமி, செயலர்கள் மகாதேவ் தேசாய், பியாரிலால் போன்றோரோடு மூன்று வாரப் பயணமாக இலங்கை சென்ற காந்தியடிகள் (1927), கொழும்பு, கண்டி, காலே, ஐப்னா, மாத்தளை, பாதுள்ளா, பெட்ரோ போன்ற பல்வேறு இடங்களுக்குச் சென்றவராகவும், ஆல்காட்டால் நிறுவப்பட்ட கொழும்புவின் ஆனந்தா கல்லூரி, காலேயின் மகிந்தா கல்லூரி (1982), கண்டியின் தர்மராஜா கல்லூரி (1887) போன்ற புகழ்பெற்ற பாட சாலைகளை பார்வையிட்டவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பாடுபட்டவர்களாகவும் சிலோன் தேசியக் காங்கிரசின் முன்னோடித் தலைவர்களாகவும் அறியப்படும் கோட்டை குடும்பத்தின்

மேல் கொண்டிருந்த நட்பின் காரணமாக காந்தி இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

காந்தியின் பயணம் இலங்கையில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை நிகழ்த்தியதாகக் கூறப்படுகிறது. காந்தியின் சத்தியாக்கிரக வழிமுறைகளைப் பின்பற்றியே செல்வநாயகம், இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அகிம்சை வழியிலான தமிழர், தமிழ் மேம்பாட்டிற்குப் பாடுபட்டிருக்கிறார். இலங்கையின் காந்தி எனப் போற்றப்படுமளவிற்கு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டிருந்த தந்தை செல்வாவின் அகிம்சை முயற்சிகள் பயனற்றுப் போனதோடு, தியாகச் சுடராக அறியப்படும் மாவீரர் திலீபனின் உண்ணாநோன்பும் சிங்களவர்களால் கவனம் பெறாமல் போனதும், புலிகளின் ஆயுதப் போரட்டத்திற்கு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

பார்த்திபன் இராசையா எனும் திலீபன் (1963-1987), இந்திய அமைதிப் படையிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து காந்திய வழியில் நீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்த நிகழ்வு இலங்கை மக்களை தனி ஈழத்திற்குப் போர்தான் ஒரே தீர்வு எனும் நிலைப்பாட்டை நோக்கித் தள்ளியதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்திய அமைதிப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்ட விடுதலைப் புலிகள், திலீபனின் தியாகம் பலனில்லாமல் போனதாலேயே இந்தியப் படையோடு வரலாறு காணாத போரை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

மீளக்குடியமர்தல் எனும் பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடும் சிங்களக் குடியேற்றங்கள் தடுக்கப்பட வேண்டும், சிறைக் கூடங்களிலும், இராணுவ, காவல் தடுப்பு முகாம்களிலுமுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்க்காவல் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழகப் பகுதிகளில் புதிதாக காவல் நிலையங்கள் திறக்கப்படக்கூடாது எனும் கோரிக்கைகளை வலியுறுத்தி, விடுதலைப் புலிகள் இயக்கத்தவரான திலீபன் மேற்கொண்ட பன்னிரெண்டு நாட்கள் உண்ணாவிரதம், ஈழ மக்களை கொதித்தெழச் செய்திருக்கிறது. சத்தியாகிரக வழிமுறைகளால் சுதந்திரம் பெற்ற இந்திய அரசிடமிருந்து எந்த ஒரு சாதகமான பதிலும் கிடைக்கப்பெறாமலேயே, மாவீரமும், மனஉறுதியும், தீரமும் காட்டிய தியாகச் செம்மல் திலீபன் கண்மூட, மக்களின்

கோபமும் ஆற்றாமையும் புலிகள் ஆதரவாகவும், இந்திய அமைதிப் படைக்கு எதிர்ப்பாகவும் திரும்பியிருக்கிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து (சீன-சார்பு) பிரித்து, ஜே.வி.பி எனும் ஜனதா விமுத்தி பெரமுனா (மக்கள் விடுதலை முன்னணி) உருவாக்கிய ரோகண வீஜயவீராவின் 1971ன் இலங்கைப் புரட்சிக்கு எதிராக இலங்கை அரசைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தியப் படைகள் இலங்கைக்கு அனுப்பப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்திய, சீனப் படைகளின் உதவியுடன் இரண்டு வார காலத்திற்குள் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டதாகவும் பின்னர் 1987 இல் மீண்டும் கிளர்ச்சி தொடங்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கில் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் போர் நடைபெற்ற அதே காலத்தில், தெற்கே இலங்கை அரசிற்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் கடுமையான சண்டை நடைபெற்று, ஒரே காலத்தில் இலங்கை முழுதும் போர்க்களமாகக் காட்சியளித்திருக்கிறது. முன்னதாக கருப்பு ஜீலை எனப்படும் 1983 இன் தமிழர்கெதிரான கொடூர வன்முறைக்கு, ஜே.வி.பி.யே காரணமாகக் கூறப்படுகிறது. கொழும்பின் அதி உயர் பாதுகாப்புச் சிறையாகக் கருதப்படும் வெலிக்கடை சிறையில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் உள்ளிட்ட பலருக்கும் இழைக்கப்பட்ட கொடூரமும், தென்கிழக்காசியாவின் மிகப்பெரிய நூலகமாக இருந்த யாழ்ப்பானம் நூலக எரிப்பும் (1981), தமிழ் மக்கள் மத்தியில் அழியாக் காயம் ஏற்படுத்திய நிகழ்வுகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக ஈழம் தொடர்பான போராட்டங்கள் தமிழ் நிலத்தில் நடைபெற்று வருவதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. கடந்த முப்பதாண்டுகளாக தீவிரமான ஈழ ஆதரவு தமிழக மக்களிடையே எழுப்பப்பட்டு வந்திருக்கிறது. எனினும் பெரிய அளவிலான தாக்கமோ பலனோ தமிழகத்தில் உண்டாகியதாகத் தெரியவில்லை. அரசியல் கட்சியினர் அரசியல் ஆதாய நோக்கோடு ஈழப் பிரச்சனைகளை அணுகியதும், அரசியலுக்கு வந்து ஆட்சிக் கட்டிலில் அமர நினைத்தவர்களும், நினைப்பவர்களும், ஈழத்தின் உண்மையான வரலாற்றையும், போராட்டங்களையும், மக்கள் நிலைகளையும் விளக்குவதற்குப் பதிலாக, புலித்தலைவர் பிரபாகரனின் வீரத்தை மட்டும் வியந்தோதி, தமிழக மக்களின் உணர்ச்சிகளை தூண்டிவிட்டதுமே நடந்துள்ளது. ஈழப்

போராட்டங்களையும், தமிழக மீனவர் பிரச்சினைகளையும், நன்கு புரிந்து, சரியான திட்டமிடல்களுடன், அரசியல்வாதிகளும், ஈழ ஆதரவு அமைப்புகளும் செயல்பட்டிருக்குமேயானால், இலங்கைத் தமிழரின் வரலாறு வேறு பாதையில் பயணித்திருக்கும்.

1991 இல் ஈழ ஆதரவுக்காக ஆட்சி போனதும், புலிகளின் பெயர் உலகளவில் கெட்டதும், தீவிரமான ஈழ ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து தி.மு.க தலைவர் கருணாநிதியை பின்னுக்குத் தள்ளியது. மாறாக, புதிதாக ஆட்சிக்கு வந்த ஜெயலலிதாவோ, ஈழப் போராட்டத்திற்கு பாரிய எதிர்ப்புத் தெரிவித்ததோடு, தமிழ் நிலத்திலும் ஈழ ஆதரவு எழாமல் பார்த்துக் கொண்டார். தமிழக கடற்கரை முழுதும் தீவிரக் கண்காணிப்பில் கொண்டு வரப்பட்டதும், அகதிகளாக வந்தவர்கள் புலண் விசாரணை அமைப்புகளால் கடுமையாக சோதிக்கப்பட்டதும், கடற்கரை அருகிலிருந்த அகதி முகாம்கள் உள்பகுதிகளுக்கு இடம் மாற்றப்பட்டதும், முகாம்களிலும் ஏராளமான கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டதும், ஈழத்தமிழர்க்கு மோசமான காலமாக அமைந்துவிட்டது. இரண்டாம் கட்டப்போரைத் துவக்கிய புலிகளுக்கு தமிழக அரசிடமிருந்து எந்த உதவியும் கிடைக்காததோடு, இந்திய அரசும் உலகளாவிய அளவில் புலி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டது. 1991 முதல் 2004 வரையிலான சுமார் பதின்மூன்றாண்டு காலம், புலிகள் எவ்வளவோ தீவிரமாக முயன்றும் தனி ஈழம் அமைக்க முடியாமல் போனதற்கு, தி.மு.க, அ.தி.மு.க மற்றும் காங்கிரஸ் இயக்கங்களின் ஆதரவை இழந்தது முக்கியக் காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

கலைஞரின் மறைமுக ஆதரவிற்கும் ஜெயலலிதாவின் கடுமையான எதிர்ப்பிற்கும் மாற்றாக, வை.கோபால்சாமி, இராமதாசு, திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்ற அரசியல் தலைவர்களும், நெடுமாறன் (பிறப்பு-1933), சு. வீரபாண்டியன் (பிறப்பு- 1952), தியாகு (பிறப்பு-1950) போன்றோரோடு, பொதுவுடமை சார்ந்த சில தலைவர்களும், பல எழுத்தாளர்களும், தீவிரமான ஈழ ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தது பாராட்டத் தக்கது. பல்வேறு கால கட்டங்களில் மாணவர் எழுச்சியும் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டும், பெரிய அளவிலான தாக்கங்கள் இல்லாமல் ஓய்ந்து போனதும் அறியத்தக்கது.

கோடிக்கணக்கான தமிழர்கள் வாழும் தமிழகத்தில், ஈழப்போராட்டம் குறித்தான சரியான புரிதலை, ஈழத்தின் வரலாற்றை படித்தவர்களுக்கும்,

மாணவர்களுக்கும், அறிவுஜீவிகளுக்கும் புரியும் வண்ணம் எடுத்துச் சொல்ல, அரசியல்வாதிகளும், தமிழ் அமைப்புகளும் தவறிவிட்டனர் என்றே கருதவேண்டியுள்ளது. குறிப்பாக, ஈழ மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கோடு போராட முனைந்த மாணவர்களுக்கு, ஈழம் பற்றிய வரலாறு தெரியவில்லை எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

சரியான புரிதல் இருந்திருக்கும் பட்சத்தில் எட்டுக்கோடி தமிழர்கள் இருக்கும் தமிழகத்திலிருந்து கூப்பிடு தூரத்திலிருக்கும் இலங்கையில் இலட்சக்கணக்கில் அப்பாவி மக்கள் கொடூரமாக இன அழிப்பு செய்யப்பட்டிருக்க முடியுமா? அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை எல்லாவற்றிலும் அரசியலைத்தான் எதிர்பார்ப்பார்கள் என்பது ஈழம் சார்ந்த நடைமுறையிலும் தெள்ளத்தெளிவாகப் புலப்பட்டிருக்கிறது. இவ்வளவு படித்த தமிழ் சமூகம், தமிழர்கள் ஆண்டாண்டு காலமாக இலங்கையில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதையாவது, தமிழக, இந்திய, உலக அளவில் தெள்ளத் தெளிவாக எடுத்து வைக்கத் தவறியது ஏனோ?

வையாபுரி கோபால்சாமி எனும் வைகோ சுமார் ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக தீவிரமான அரசியல் பணி செய்பவராகவும், சமூகத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டவராகவும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்ச்சியாக ஆதரவளித்து வருபவராகவும் அறியப்படுகிறார். ஈழத்தை ஆதரித்த எத்தனையோ பேர்கள் அடக்கு முறைகளுக்கு அஞ்சியும், அரசியல் லாபம் கருதியும் ஒதுங்கிக் கொள்ள, திரு. வைகோ தற்போதைய காலம்வரை அதே தீவிரத்தோடு ஈழ ஆதரவிற்குப் போராடி வருபவராகப் புகழப்படுகிறார். 2001 இல் பொடா சட்டத்தால் பத்தொன்பது மாதங்கள் சிறை வைக்கப்பட்ட வைகோ, பின்னர் 2006 இல் சட்டமன்றத் தேர்தலில் அதே அம்மையாரோடு தொகுதி உடன்பாடு கண்டது அரசியல் என்றே தெரிகிறது.

அண்ணா காலத்தில் (1964) அரசியலுக்கு வந்தவராகக் குறிப்பிடப்படும் கோபால்சாமி, இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு, பின்னர் தி.மு.க சார்பாக மாநிலங்களை உறுப்பினராக மூன்றுமுறை செயல்பட்டிருக்கிறார். வழக்குரைஞரான கோபால்சாமி, பேச்சுத் திறமையாலும், உலக அரசியல் அறிவாலும் திறமையான நாடாளுமன்றவாதியாகப் பெயரெடுத்து, தி.மு.க.வில் செல்வாக்கான தலைவராக வளர்ந்திருக்கிறார். கலைஞருக்குப்பின் தி.மு.க.வின் தலைவராக்கலாம் எனும் அளவிற்கு கட்சிக்குள் கோபால்சாமியின் செல்வாக்கு வளர, ஸ்டாலினை கட்சித்

தலைமைக்குக் கொண்டு வரத் திட்டமிட்ட கலைஞர், கோபால்சாமி மீது உயிருக்கு ஆபத்து எனும் பழி சுமத்தி, தி.மு.க.விலிருந்து வெளியேற்றியதாகக் கூறப்படுகிறது. பழிக்கு முகாந்திரமாக கட்சித் தலைமைக்குத் தெரிவிக்காமல் கோபால்சாமி பிரபாகரனை இலங்கை சென்று சந்தித்தார் (1989) என்பதும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

1994 இல் அண்ணா அவர்களின் கொள்கைகளைக் காப்பதற்காக மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் கட்சியைத் தொடங்கிய வைகோ, கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக தமிழக அரசியல்வாதிகளுள் குறிப்பிடத்தக்க ஆளுமையாக அடையாளம் பெற்றுள்ளார். தி.மு.க.விலிருந்து பிரிந்த வைகோ, பின்னர் அவர்களோடு தேர்தல் உடன்பாடு கண்டதும், அண்ணன் தம்பியாக கட்டி அணைத்துக் கொண்டதும், அம்மையாரோடு பயணித்ததும் ம.தி.மு.க.வின் அரசியல் வரலாறாகப் பதியப்பட்டுள்ளது.

அரசியல் தாண்டி தனிப்பட்ட முறையில் நேர்மையாளராகக் குறிப்பிடப்படும் வைகோ அவர்கள், தமிழ் மொழி, ஈழப் போராட்டம், நதிநீர் இணைப்பு, காவிரி, முல்லைப் பெரியார் பிரச்சினைகள், மது விலக்கு, சுற்றுச்சூழல், மீனவர், மீத்தேன், விவசாயம் எனப் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டவராகவும், ஏராளமான நூல்களை எழுதியவராகவும் அறியப்படுவதோடு, தமிழ் இலக்கியங்கள் குறித்தும், உலக அரசியல் குறித்தும் சிறப்பான சொற்பொழிவுகளை நிகழ்த்தக் கூடியவராகவும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார்.

எம்.ஜி.ஆர் போலவே ஜெயலலிதாவும் அடுத்து சட்டமன்றத்திற்குள் நுழைந்தால் முதல்வராகவே நுழைவோம் எனச் சூளுரைத்ததாக சொல்லப்படுகிறது. 1991 இல் பர்கூர் தொகுதியில் வெற்றி பெற்ற ஜெயலலிதா தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தேர்வானார். அ.தி.மு.க. 164 இடங்களிலும், கூட்டணிக் கட்சியான காங்கிரசு 60 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. திமுக தலைவர் துறைமுகம் தொகுதியில் வென்றார். கூடுதலாக எழும்பூர் தொகுதியில பரிதி இளம் வழுதி மட்டுமே தி.மு.க சார்பில் வெற்றி பெற்றார். டி.ராஜேந்தரின் தாயக மறுமலர்ச்சிக் கழகத்தோடு கூட்டணி வைத்துப் போட்டியிட்ட சாத்தூர் ராமச்சந்திரனும், திருநாவுக்கரசரும் வெற்றிபெற்றனர். மார்க்சிஸ்ட் ஒரு இடத்திலும், இந்திய கம்யூனிஸ்ட் ஒன்றும், ஜனதா தளம் ஒன்றும், தாமரைக்கனி ஒன்றும், பாமாக ஒன்றுமாக மொத்தமே ஒன்பது எதிர்க்கட்சிகளே சட்டசபையில் இடம்பெற்றன.

வலுவான எதிர்கட்சி இல்லாததே, முதல்வர் ஜெயலலிதா பல வகையிலும் தடம் மாறுவதற்குக் காரணமாக அமைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. முதல் ஆட்சிக் காலத்தில் (1991-96) சம்பாதித்த சொத்துக்களும் கெட்ட பெயரும், கால் நூற்றாண்டுக்கும் மேலாகத் தொடர்ந்து, இறுதியில், உச்சநீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தண்டிக்கும் அளவிற்குக் கொண்டு சென்றது. நாட்டின் முதல்வராக இருந்தவர், அத்தனை அதிகாரங்களையும் தன்கைத்தே வைத்திருந்த முதலமைச்சர், முப்பதுக்கும் மேற்பட்ட பெயரளவிலான நிறுவனங்களைத் துவக்கி பல்வேறு வகையான வணிக நடைமுறைகளில் ஈடுபட்டது எந்த வகையிலும் நியாயமாகாது.

1991-ல் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா. நிதி - வி.ஆர் நெடுஞ்செழியன், சட்டம் - கே.ஏ.கிருஷ்ணசாமி, வருவாய் - எஸ்.டி.சோமசுந்தரம், கல்வி - ஆர்.எம். வீரப்பன், உணவு - கே.ராஜாராம், தொழிலாளர் நலம் - சி. அரங்கநாயகம், சுகாதாரம் - எஸ்.முத்துச்சாமி, போக்குவரத்து - கே.ஏ. செங்கோட்டையன் , ஜவுளி - மதுசூதனன், பொதுப்பணி - கண்ணப்பன், உள்ளாட்சி அழகு - திருநாவுக்கரசு, வேளாண்மை - கு.பா.கிருஷ்ணன், நகர்ப்புறம் டி.எம். செல்வகணபதி, கிராமப்புற வளர்ச்சி - மொகம்மது ஆசிப், சமூக நலம் - இந்திரா குமாரி, மீன்வளம் - டி.ஜெயக்குமார், ஆதிதிராவிடர் நலம் - எம்.ஆனந்தன். ஐந்தாண்டு கால ஆட்சியில் பலமுறை அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டதும் வரலாறு.

இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்றத்திற்கு நடந்த தேர்தல்களில் முதல் கட்ட வாக்குப் பதிவிற்கும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவிற்கும் பெருத்த வேறுபாடுகள் இருந்தன. இராஜிவ் மீதான அனுதாபத்தில் ஜூனில் நடந்த தேர்தல்களில் அதிக இடங்களைப் பிடித்த காங்கிரசு, தனிப்பெரும்பான்மை இல்லாத நிலையிலேயே கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு ஆட்சி அமைத்தது. ராவ் தலைமையிலான காங்கிரசு, அத்வானி தலைமையிலான பாரதிய ஜனதா மற்றும் வி.பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி இடையே நடைபெற்ற மோதல்களில், காங்கிரசு 244 தொகுதிகள் வென்றது. கட்சித் தலைமையையும் பிரதமர் பதவியையும் சோனியா காந்தி மறுத்தாகவும், பிரதமர் பதவிக்கு வர விரும்பிய அர்ஜூன் சிங், சரத்பவார் போன்றோரை ஒதுக்கிவிட்டு, அரசியலிலிருந்து ஒதுங்கி

இருந்த ஆந்திராவின் பி.வி. நரசிம்மராவை (1921-2004) பிரதமர் பதவிக்கு காங்கிரஸ் தேர்ந்தெடுத்தது.

தேர்தலில் பா.ஜ.க 120 இடங்களையும், ஜனதாதளம் - 59, சி.பி.எம் - 35, சி.பி.ஐ - 14, தெலுங்கு தேசம் - 13, அதிமுக - 11, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா - 6, ஜனதா கட்சி - 5, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி - 5, சிவசேனா - 4, பார்வர்டு பிளாக் - 3, பகுஜன் சமாஜ் கட்சி - 3, இந்திய ஒன்றிய முஸ்லிம் லீக் - 2 இடங்களை கைப்பற்றின. காங்கிரசு ஆளும் கட்சியாகவும் பாஜக எதிர்க்கட்சியாகவும் செயல்பட்ட ராவ் ஆட்சிக் காலத்திலேயே, பெரியளவில் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது வரையும் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

1987 முதல் 1992 வரை இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்தவர் இரா. வெங்கட்ராமன் (1910-2009). 1984-87 காலகட்டத்தில் துணை குடியரசுத் தலைவராகவும் அதற்கு முன் காங்கிரசு அமைச்சரவையில் உள்துறை, பாதுகாப்பு, நிதித்துறை போன்ற முக்கிய துறைகளின் அமைச்சராகவும் பணியாற்றிய திரு. வெங்கட்ராமன் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவராக அறியப்படுகிறார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு இரண்டாண்டுகள் சிறை சென்றவராகக் குறிப்பிடப்படும் வெங்கட்ராமன், தொழிலாளர், தொழிற்சங்கம் சார்ந்து சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறார். வழக்கறிஞராகவும் பின்னர் அரசியல்வாதியாகவும் மாற்றம் பெற்ற வெங்கட்ராமனின் குடியரசுத் தலைவர் பதவிக் காலத்தில், நாட்டில் பல்வேறுபட்ட அரசியல் குழப்பங்கள் நிலவியதாகவும், அவற்றை சிறப்பாகச் சமாளித்தவராகவும் புகழப்படுகிறார்.

துணைக் குடியரசுத் தலைவராகவும் (1987-1992), பின்னர் குடியரசுத் தலைவராகவும் (1992-1997) பதவி வகித்த திரு. சங்கர் தயாள் சர்மா (1918-1999), நாட்டின் அதிகமான பிரதமர்களைப் பார்த்தவர் எனில் மிகையாகாது. காங்கிரசு கட்சியை சேர்ந்த திரு. சர்மா, முன்னர் ஆந்திரப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிராவின் ஆளுநராகவும் பதவி வகித்திருக்கிறார்.

பமுலப்பத்தி வெங்கட நரசிம்மாராவ் ஆந்திராவின் முதலமைச்சராகவும் (1971-73), இந்திராவிடம் உள்துறை அமைச்சராகவும், ராஜிவிடம் வெளியுறவுத் துறை அமைச்சராகவும் பதவி வகித்திருக்கிறார். ராஜிவுக்குக் பின்

கட்சித்தலைவராகவும், பின் பிரதமராகவும் பொறுப்பேற்ற திரு. ராவ், பாதுகாப்பு, வெளிவிவகாரத் துறைகளையும் கவனித்துக் கொண்டே பிரதமர் பதவியையும் சிறப்பாகக் கவனித்திருக்கிறார். இந்தியாவை புதிய பொருளாதாரக் கொள்கை நோக்கி வழிநடத்துவதற்கு கட்சிக்குள்ளேயே எதிர்ப்புகள் இருந்த போதிலும், மாறிவரும் உலகளாவிய சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு, தொழில்கள் துவங்குவதற்கு தடையாக இருந்த லைசென்ஸ் ராஜ் முறையை நீக்கி, புதிய பொருளாதாரச் சந்தையாக இந்தியாவை மாற்றியமைத்தவராக பிரதமர் ராவ் புகழப் பெற்றிருக்கிறார்.

ராவ் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த பாபர் மசூதி இடிப்பு இந்தியாவெங்கும் வன்முறைகளையும் போராட்டங்களையும் உண்டாக்கியதோடு, இந்து-இசுலாமியர் இடையே மிகப்பெரிய கசப்புணர்வை உருவாக்கிய நிகழ்வாகவும் வரலாற்றில் இடம் பெற்றது. 1989 ஆம் ஆண்டு தேர்தலிலேயே அயோத்தி இராமர் கோவில் பிரச்சினையை எழுப்பிய பாரதிய ஜனதா, அதன்மூலம் பெற்ற எழுச்சி 91,96,98 மற்றும் 99 தேர்தல்களில் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்தது வரலாறு. 84 இல் இரு உறுப்பினர்களோடு தொடங்கிய பயணம் 91 இல் 120, 96 இல் 187, 98 இல் ஆட்சியைப் பிடிக்கும் அளவிற்கு 254 மற்றும் 1999 இல் நிலையான ஆட்சியை அமைக்கும் அளவிற்கு 270 தொகுதிகள் என வளர்ச்சி கண்டது குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் ஆறாம் தேதிக்குப்பின் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும், பங்களாதேசிலும் அச்சமூட்டும் கலவரங்கள் நிகழ்ந்திருக்கின்றன. வட மாநிலங்களில் இந்து-முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட உயிரிழப்புகளும் தொடர்ந்து 1993 இல் நிகழ்ந்த குண்டு வெடிப்புகளும், மும்பை கலவரமும், இந்து-முசுலிம் ஒற்றுமையை சீர்குலைத்த நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. 1922க்குப் பின்னரே இந்தியாவில் குண்டு வெடிப்புகள் அதிகரித்ததும் குறிப்பிடத்தக்கது. மசூதி இடிப்பு, இசுலாமிய அடிப்படைவாதத்தை, பயங்கரவாதத்தை இந்திய மண்ணில் பரப்ப முற்பட்டதும், பதிலுக்கு இந்து, இந்துத்வம் எனும் கோட்பாடுகள் தலைதூக்கி இசுலாமிய வெறுப்பாக, வன்முறையாக மாற்றம் பெற்றதும், மத நல்லிணக்கம் எனும் நிலையை கேள்விக்குட்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

தென்னகத்தின் முதலாவது பிரதமரான நரசிம்ம ராவின் அமைச்சரவையிலேயே உத்தரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களிலிருந்து

குறைவான மத்திய அமைச்சர்கள் பங்குபெற்றதாக குறிப்பிடப்படுகிறது. மகாராஷ்ராவின் சரத்பவார் - இராணுவம், எஸ்.பி. சவாண் - உள்துறை, கர்நாடகாவின் ஜாபர் ஷெரிப் - இரயில்வே, குஜராத்தின் மாதவ்சிங் சோலங்கி - வெளியுறவுத்துறை, பஞ்சாபின் பல்ராம் ஜாக்கர் - வேளாண்மை, பஞ்சாபின் டாக்டர் மன்மோகன் சிங் - நிதித்துறை, மத்தியப் பிரதேசத்தின் மாதவராவ் சிந்தியா - விமானம் மற்றும் சுற்றுலா, அர்ஜின் சிங் - மனிதவள மேம்பாடு, ஆந்திராவின் விஜய பாஸ்கர ரெட்டி - நீதி, சட்டம் போன்றவர்கள் முக்கியமான அமைச்சர்களாக இடம்பெற்றிருக்கின்றனர்.

இந்திய அரசியலில் சாணக்கியர் போன்று சாதுர்யமாகச் செயல்பட்டவராகக் குறிப்பிடப்படும் நரசிம்மராவும், அவரது அமைச்சரவை சகாவும், பின்னாளைய பிரதமருமான மன்மோகன் சிங்கும் (பிறப்பு-1932), அழுத்தமானவர்கள் என்பதும் தேவையில்லாமல் வாயைத் திறக்கமாட்டார்கள் என்பதும் ஆச்சரியமான ஒற்றுமை.

1991 இல் தமிழகத்திலிருந்து தேர்வான ப. சிதம்பரம் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சராகவும், கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்து தேர்வான வழப்பாடி இராமமூர்த்தி (1940-2002) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சராகவும் பணியாற்றியிருக்கின்றனர். மேலும் சேலம் ரங்கராஜன் குமாரமங்கலம் (1952-2000) சட்டம், நீதி மற்றும் நிறுவனங்களின் இணையமைச்சராகவும், தென்காசி மூ. அருணாச்சலம் நகர்ப்புற வளர்ச்சி இணையமைச்சராகவும் பதவி ஏற்றிருக்கின்றனர்.

திரு. வாழப்பாடி இராமமூர்த்தி திராவிடர் கழகத்திலும் பின்னர் இந்தியக் காங்கிரசிலும் இணைந்து காங்கிரசின் தொழிற்சங்கமான ஐ.என்.டி.யு.சி.யின் தலைவராக சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார். ஜி.கே.மூப்பனாருக்கு எதிராக வாழப்பாடி கோஷ்டி எனச் சொல்லுமளவிற்கு தனித்துச் செயல்பட்ட வாழப்பாடியார், 1977 முதல் 1991 வரையிலும், பின்னர் 1998-ம் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். நரசிம்மராவிற்குப் பின் திவாரி காங்கிரசிலும் பின்னர் தமிழக ராஜீவ் காங்கிரசு எனும் கட்சியைத் தொடங்கியும் அரசியல் பணி செய்திருக்கிறார். 1998-99 இல் வாஜ்பாயி அமைச்சரவையில் பெட்ரோலியத்துறை அமைச்சராக இருந்தவர் பின்னர், ராஜீவ் கட்சியைக் கலைத்துவிட்டு 2002 இல் மீண்டும் காங்கிரசிலேயே இணைந்தார்.

1991 இல் தமிழ்நாட்டிலிருந்து காங்கிரசு சார்பாக மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இரா.அன்பரசு, மரகதம் சந்திரசேகர், எம்.கிருஷ்ணசாமி, தின்டிவனம் இராமமூர்த்தி, வல்லல் பெருமாள், கே.வி தங்கபாலு, ஆர்.பிரபு, அடைக்கலராஜ், மணிசங்கர் அய்யர், தனுஷ்கோடி ஆதித்தன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

96 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நரசிம்ம ராவ், ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அப்போதைய தமிழக காங்கிரசு தலைவர் மூப்பனார், காங்கிரசிலிருந்து விலகி தமிழ் மாநிலக் காங்கிரஸ் எனும் தனிக்கட்சியைத் தொடங்கினார். பெரும்பாலான முன்னணி காங்கிரசு தலைவர்கள் மூப்பனாரோடு சேர்ந்து விட, திமுக வோடு கூட்டணி கண்ட தமிழ் மாநில காங்கிரசு கட்சி 20 இடங்களில் வென்று சாதனை படைத்தது. தி.மு.க 17 இடங்களிலும், சி.பி.ஐ இரு இடங்களிலும் வென்றன.

பாராளுமன்றத் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்ற பாரதிய ஜனதா ஆட்சியமைத்து பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் பதின்மூன்று நாட்களில் கவிழ, மாநிலக் கட்சிகளும் பொதுவுடமைக் கட்சிகளும் இணைந்து ஐக்கிய முன்னணி எனும் கூட்டணியை உருவாக்கின. காங்கிரசின் ஆதரவோடு அப்போதைய கர்நாடக முதல்வராக இருந்த ஜனதா தளத்தின் எச்.டி.தேவ கவுடா (பிறப்பு-1933), இந்தியக் குடியரசின் பதினான்காவது பிரதமராகப் பதவியேற்றார்.

46 உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்த ஜனதா தளம், ஆந்திர முதல்வராக இருந்த சந்திரபாபு நாயுடு (பிறப்பு-1850) தலைமையில் உண்டான தேசிய முன்னணி, இடதுசாரிகள் அடங்கிய இடது முன்னணி மற்றும் காங்கிரசின் ஆதரவோடு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது வியப்பானது.

1996-ன் மத்திய அமைச்சரவையில் சிறப்பான இடம் வகிக்கத் தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகம், பின்னர் வந்த வாஜ்பாய், மன்மோகன் சிங் ஆட்சிகளிலும் செல்வாக்கான துறைகளில் கேபினட் மற்றும் இணை அமைச்சர்களாக இடம் பெற்றது. கௌவுடா அமைச்சரவையில் முரசொலி மாறன் (வர்த்தகம் மற்றும் தொழில் துறை), ஜி.வெங்கட்ராமன் (கடல், தரைவழிப் போக்குவரத்து மற்றும் இயற்கை எரிவாயு), எம்.வி.என் சோமு (பாதுகாப்பு) இணையமைச்சர்களாக இடம் பெற்றனர். தமிழ் மாநிலக் காங்கிரசின் ப. சிதம்பரம்

நிதியமைச்சராகவும், எம். அருணாச்சலம் தொழிலாளர் நலத்துறை கேபினைட் அமைச்சர்களகவும், தனுஷ்கோடி ஆதித்தன் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை இணையமைச்சராகவும் பதவி வகித்தனர்.

ஓராண்டு முடிவதற்குள்ளாகவே தேவ கவுடாவின் தலைமைக்கு கொடுத்து வந்த ஆதரவை காங்கிரசு விலக்கிக் கொள்ள, பின்னர் இந்திராவின் அமைச்சரவையில் தகவல் ஒளிப்பரப்புத்துறை அமைச்சராக இருந்த பழைய காங்கிரஸ்காரரும் பின்னாளைய ஜனதாதளத் தலைவருமான இந்திரகுமார் குஜ்ரால் எனும் ஐ.கே. குஜ்ரால் (1919-2012), புதிய பிரதமராகப் பதவி ஏற்றார். முக்கிய முடிவுகளை காங்கிரசின் ஆலோசனையின் பேரிலேயே எடுக்க வேண்டும் எனும் உடன்பாடுடன் குஜ்ராலை காங்கிரசு கட்சி வெளியிலிருந்து ஆதரிக்க சம்மதித்தது.

நன்றாகச் சென்றுகொண்டிருந்த குஜ்ரால் அரசிற்கு, ராஜிவ் காந்தி தொடர்பான ஜெயின் இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டதன் காரணமாக நாடாளுமன்றத்தில் புயல் வீசியது. தி.மு.க.வை அமைச்சரவையிலிருந்து விலக்குமாறு காங்கிரசு வலியுறுத்த, முடியாது என பிரதமர் குஜ்ரால் மறுதலிக்க, ஓராண்டுகுள்ளாகவே ஆட்சி முடிவுக்கு வந்தது.

ஐந்தாயிரத்து இருநூற்றி எண்பது பக்கங்களில், முன்னாள் ராஜஸ்தன் மாநில தலைமை நீதிபதியான மிலப் சந்த் ஜெயின் (1929-2015), அப்போதைய உள்துறை அமைச்சரான சி.பி.ஐ.யின் இந்திரஜித் குப்தாவிடம் (1919-2001) அளித்த ஜெயின் இடைக்கால அறிக்கை, தி.மு.க. தலைவரை புலிகளுக்கு மிக அதிகமான ஆதரவு-கொடுத்தவராகக் குறிப்பிட்டிருக்கிறது. சென்னையிலும், தமிழகத்தில் எவ்விதக் கட்டுபாடும் இல்லாமல் சுதந்திரமாகச் செயல்பட்ட புலிகளுக்கு, அனைத்து வகையிலும் தி.மு.க. அரசு ஆதரவளித்ததாகவும், புலிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் தமிழ்நாட்டிலிருந்து சென்றதாகவும், மேலும் இந்திய அமைதிப் படைக்கு எதிரான புலிகளின் யுத்தத்திற்கு அப்போதைய தி.மு.க. அரசு பெருமளவில் உதவியதாகவும் குற்றஞ்சாட்டியிருக்கிறது. ராஜீவைப் பாதுகாக்கத் தவறியதாக வி.பி.சிங் மற்றும் சந்திரசேகரைக் கடிந்து கொண்ட ஜெயின், ராஜிவ் மீதான கரும்புலி தாக்குதலுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் தமிழகத்தில் வாங்கபட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

ராஜிவ் மீதான பயங்கரவாதத் தாக்குதலுக்கு விடுதலைப்புலிகளே காரணம் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கால் நூற்றாண்டுக்கும் மேலாக ராஜிவ் தாக்குதல் பற்றிய செய்திகள், விவாதங்கள், போராட்டங்கள், தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. திட்டவட்டமாக இவர்கள்தான் செய்தார்கள் என அறிந்தும், போதுமான சாட்சிகள் மூலம் குற்றம் நிரூபிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. தொடர்புடைய கரும்புலிகள் தாக்குதலிலேயே மடிந்து போனதும், சம்பந்தப்பட்ட மற்ற புலி அமைப்பினர் சுடப்பட்டதும், விசாரணை அமைப்பிற்கு பெரும் பின்னடைவாக அமைந்திருக்கிறது. தடா நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்ட இருபத்தி ஆறு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட (1998), அதையொட்டி பல்வேறு முறையீடுகளும் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்குமூலம் மிகப்பெரிய ஆதாரமாகக் கருதப்பட்ட நிலையில், பின்னர் அவை வற்புறுத்தி வாங்கப்பட்டதாக புகார்கள் எழ, குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் பத்தொன்பது பேர் விடுவிக்கப்பட்டு, மூன்று பேருக்கு ஆயுள் தண்டணையும், நான்கு பேருக்கு மட்டும் மரண தண்டனையும் உறுதிசெய்யப்பட்டது. முருகன், பேரறிவாளன், சாந்தன், நளினி ஆகிய நான்கு பேரும் நெடுங்காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், நளினிக்கு மட்டும் சோனியா அம்மையாரின் பரிந்துரையின் பேரில் மரணதண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

2011 இல் மூவரின் கருணை மனுக்களையும் அப்போதைய குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல் நிராகரித்துவிட, தமிழக சட்டப் பேரவையில் தண்டனையைக் குறைக்கச் சொல்லி, 2011 ஆகஸ்ட் முப்பதில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2014 இல் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டதாக உச்சநீதிமன்றம் அறிவித்த உடனேயே, ஏழுபேரின் விடுதலை முன்னெடுத்த தமிழக அரசின் முயற்சிகள் பலனளிக்காமல், தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ராஜிவ் வழக்கில் சிறப்பு விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் தேவராயபுரம் ராமசாமி கார்த்திகேயன் எனும் டி.ஆர். கார்த்திகேயன். சி.பி.ஐ. எனும் மத்திய புலனாய்வு அமைப்பின் இயக்குனராக இருந்த கார்த்திகேயன், திறமையாகத் துப்புத் துலக்கி குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தவராகக்

குறிப்பிடப்படுகிறார். மேலும் ராஜிவ் வழக்குத் தொடர்பான புத்தகங்களும் எழுதியுள்ளார். விசாரணை அதிகாரியாக இருந்த ரகோத்தமனும் புத்தகம் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

1997-ல் ஜெயின் கமிசன் அறிக்கையை வைத்து மல்லுக்கட்டிய காங்கிரசும் தி.மு.க.வும், 2004 தேர்தலில் ஒன்றாகக் கூட்டணி வைத்துக் கொண்டது இந்திய அரசியல் கட்சிகளுக்கே உரிய தனித்தன்மை. தேர்தலில் சோனியா காந்தி தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கும், வாஜ்பாய் தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணிக்கும் கடும் மோதல். தேர்தல் பரப்புரைகளில் இந்தியா ஒளிர்கிறது என்ற பா.ஜ.க.விற்கு மாற்றாக, எந்தப்பகுதி இந்தியா ஒளிர்கிறது எனக் கேட்ட காங்கிரஸ் கூட்டணியையே மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். மேலும் பலமான மாநிலக் கட்சிகளோடு கூட்டணியமைத்ததும் காங்கிரசின் வெற்றிக்கு காரணமாக அமைந்தது.

145 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற காங்கிரசு, தோழமைக் கட்சிகளோடும் இடதுசாரிகளின் ஒத்துழைப்போடும் ஆட்சி அமைத்து சாதனை புரிந்தது. கூட்டணியில் இடம்பெற்ற சமாஜ்வாதி - 39, இராட்ரிய ஜனதா - 21, திராவிட முன்னேற்றக் கழகம் - 16, தேசியவாதக் காங்கிரசு - 9 , பாட்டாளி மக்கள் கட்சி - 6, தெலுங்கான ராஷ்ட்ரிய சமிதி - 5, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா - 5, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் - 4, லோக்சன சக்தி காஷ்மீர் மக்கள் சனநாயகம் கட்சி - 1, இந்தியக் குடியரசுக் கட்சி - 1, இந்திய ஒன்றிய முஸ்லிம் லீக் - 1, இடதுசாரிகள் - 60 இடங்களில் வெற்றி பெற்றனர்.

பாரதிய ஜனதாவோடு கூட்டணி கண்ட கட்சிகள் சிவசேனா, பிஜு ஜனதா தளம், அகாலிதளம், ஐக்கிய ஜனதாதளம், தேசிய வாத திரிணாமுல் காங்கிரசு, நாகலாந்து மக்கள் முன்னணி மற்றும் மிசோ தேசிய முன்னணி.

2004 இல் காங்கிரசோடு கூட்டணி கண்ட திமுக, மதிமுக, பாமக கட்சிகள், முன்னர் நடந்த 1999 தேர்தலில் அப்படியே பாரதிய ஜனதாவோடு கூட்டணி கண்டது குறிப்பிடத்தக்கது. மதிமுக, பாமக கட்சிகள், 1998 தேர்தலில் அதிமுக தலைமையில் கூட்டணி கண்டு வாஜபாய் பிரதமராவதை ஆதரித்ததும் நினைவு கூறத்தக்கது.

1996 முதல் 2014 வரையிலான சுமார் பதினெட்டாண்டு கால மத்திய அரசில் தி.மு.க முக்கியமான இடத்தைப் பிடித்ததோடு, பா.ம.க, ம.தி.மு.க போன்ற பிற

கட்சிகளும் குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பெற்றன. வாஜ்பாய் அரசிலும் தொடர்ந்து வந்த மன்மோகன் அமைச்சரவையிலும் முக்கியமான துறைகளைக் கேட்டுப் பெற்றதாகக் கூறப்படும் தமிழகக் கட்சிகள், மாநில அரசு சார்ந்த மிகக் குறைவான திட்டங்களையும் முன்னேற்றங்களையுமே மேற்கொண்டதாக அரசியல் அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும் டெல்லி அரசியலிலும் குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பெறவில்லை எனவும் கூறப்படுகிறது. ஆதாரமாக இலங்கைத் தமிழர் இன அழிப்பும் அதனைத் தொடர்ந்து இந்திய அரசு மேற்கொண்ட இலங்கை ஆதரவு நிலைப்பாடுகளும் சுட்டப்படுகின்றன.

1998 தேர்தலில் அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகம் தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணி, தமிழகத்தில் முப்பது இடங்களை வென்று முன்னிலை பெற்றது. கூட்டணியில் இடம் பெற்ற அ.தி.மு.க - 18, பாமக - 4, ம.தி.மு.க - 3, ஜனதா கட்சி - 1, தமிழக ராஜிப் காங்கிரசு 1 இடங்களைக் கைப்பற்றினர்.

திமுக கூட்டணியில் தி.மு.க - 5, த.மா.க - 3 , சிபிஐ -1 இடங்களில் வென்றும் சி.பி.எம் கூட்டணி தொகுதி ஏதும் வெல்லாமலும் தேர்தல் முடிவுகள் பெற்றன.

தேர்தலில் வென்ற அடல்பிகாரி வாஜ்பாய் அமைச்சரவையில் திருச்சி தொகுதி பாஜக வேட்பாளர் ரங்கராஜன் குமாரமங்கலம் மின்சாரம் மற்றும் நாடாளுமன்றம், கரூர் தொகுதி அதிமுக வேட்பாளர் தம்பிதுரை சட்டம் நீதி மற்றும் நிறுவனங்கள், பெரியகுளம் தொகுதி சேடப்பட்டி முத்தையா தரைவழிப் போக்குவரத்து மற்றும் சேலம் வாழப்பாடி இராமமூர்த்தி பெட்ரோலியம் இயற்கை எரிவாயு கேபினட் அமைச்சர்களாக பதவி வகித்தனர்.

இணை அமைச்சர்களாக சிதம்பரம் தொகுதி பாமக வேட்பாளர் எழில்மலை சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், திருநெல்வேலி அதிமுக கடம்பூர் ஜனார்த்தனம் ஊழியர்கள் ஓய்வூதியம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்த்தல் மாநிலங்களவை அதிமுக உறுப்பினர் ஆர்.கே குமார் நிதி பொறுப்புகளின் பதவி ஏற்றனர்.

1999 தேர்தலில் திருச்சி ரங்கராஜன் குமாரமங்கலம் (பாஜக), மின்சாரம் மற்றும் நாடாளுமன்றம், மத்திய சென்னை முரசொலிமாறன் (திமுக), வர்த்தகம் மற்றும் தொழில், தென்சென்னை டி.ஆர் பாலு (தி.மு.க) சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனங்கள் துறை மத்திய அமைச்சர்களாகவும், பெரம்பலூர் ஆ.ராசா (திமுக) கிராமப்புற வளர்ச்சி, வேலூர் என்.டி சண்முகம் (பாமக) சுகாதாரம் மற்றும் குடும்ப

நலம், சிதம்பரம் இ. பொன்னுசாமி (பாமக) பெட்ரேலியம் மற்றும் இயற்கை எரிவாயு, திருச்செங்கோடு மு. கண்ணப்பன் (மதிமுக) மரபு சாரா எரிசக்தி, திண்டிவனம் செஞ்சி ராமச்சந்திரன் (மதிமுக) நிதித் துறை இணை அமைச்சர்களாகவும் பொறுப்பு வகித்தனர்.

2004 தேர்தலில், பா. சிதம்பரம், காங்கிரசு, சிவகங்கை தொகுதி - நிதி, மணிசங்கர் அய்யர், காங்கிரசு, மயிலாடுதுறை - பஞ்சாயத்து ராஜ் மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி, அன்புமணி இராமதாசு, பாமாக, மாநிலங்களவை, சுகாதாரம், டி.ஆர்.பாலு, திமுக, தென் சென்னை – கப்பல், தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், தயாநிதிமாறன், திமுக, மத்திய சென்னை - தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்பம், ஆ. ராசா, திமுக, பெரம்பலூர் - சுற்றுப்புறச் சுழல் மற்றும் வனங்கள் போன்றோர் கேபினட் அமைச்சர்கள்.

தி.மு.க.வைச் சேர்ந்த தஞ்சாவூர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் - நிதி, புதுக்கோட்டை எஸ். ரகுபதி - சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள், கடலூர் கே. வேங்கடபதி - நீதி மற்றும் சட்டம், திருச்செங்கோடு சுப்புலட்சுமி ஜெகதீசன் சமூக நீதி, காங்கிரசின் கோபிசெட்டிபாளையம் ஈவிகே எஸ். இளங்கோவன் தொழில் மற்றும் வர்த்தகம், பாமகவின் அரக்கோணம் ஆர். வேலு ரயில்வே துறைகளின் இணையமைச்சர்கள்.

2009 நாடாளுமன்றத் தேர்தலில் கேபினட் மற்றும் இணையமைச்சர்களாகப் பதவி ஏற்றபவர்கள் பா. சிதம்பரம் - உள்துறை, மு.க அழகிரி (மதுரை) - உரங்கள் மற்றும் வேதிப்பெருட்கள், தயாநிதிமாறன் - நெசவு, ஆ. ராசா (நீலகிரி) - தகவல் மற்றும் தொழில் நுட்பம், ஜி.கே. வாசன் (மாநிலங்களவை காங்கிரசு) - கப்பல் போக்குவரத்து.

எஸ்.எஸ் பழனிமாணிக்கம் - நிதி, பெரம்பலூர், திமுக, துரைசாமி நெப்போலியன் - சமூக நீதி, அரக்கோணம், தி.மு.க, ஜெகத்ரட்சகன் - தகவல் மற்றும் தொலைத்தொடர்பு இணையமைச்சர்கள்.

2002 முதல் 2007 வரை இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு பெருமை சேர்த்தவர் ஆவுல் பக்கிர் ஜைனுலாபுதீன் அப்துல் கலாம். இந்திய ஏவுகணை நாயகன் எனக் கொண்டாடப்படும் ஆ. ப. ஜெ. அப்துல் கலாம் (1931-2015), எதிர்கால

இந்தியா குறித்தும், மாணவர் சமுதாயம் குறித்தும் மிகுந்த அக்கறை கொண்டவராகவும், பல்வேறு திட்டங்கள் முன்மொழிந்தவராகவும் புகழப்படுகிறார். மக்களின் சனாதிபதி எனப் போற்றப்பட்ட கலாம் அவர்கள், தமது எளிமையாலும், நேர்மையாலும், இந்திய மனங்களை கொள்ளை கொண்டவரெனில் மிகையாகாது.

2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகக் கூட்டணி நிலவரங்கள் முற்றிலும் மாறுபட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. தேர்தலுக்கு சில மாதங்கள் வரை ஆட்சியிலிருந்த திமுக, காங்கிரசிலிருந்து வெளியேறி, தனியாகக் கூட்டணி கண்டது. காங்கிரசோடு எந்தக் கட்சியும் கூட்டணி சேராததால் தனித்துக் களம் காணும் நிலைக்குத் தள்ளப்பட்டது. பொதுவுடமைக் கட்சிகளோடு கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தி வந்த அதிமுக, அனைத்து தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவிததுவிட வேறு வழியில்லாத இடது சாரிக் கட்சிகளும் தனித்து களம்புக வேண்டியதாயிற்கு. பாரதிய ஜனதா பிற கட்சிகளோடு கூட்டணி உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டது. இறுதியில் ஐந்து முனை போட்டிகள் கொண்டதாக தேர்தல் பரப்புரைகள் அமைந்தன.

அ.தி.மு.க, காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள் தனித்துப் போட்டியிட்டன. திமுக, விடுதலை சிறுத்தைகள், மனிதநேய மக்கள் கட்சி, புதிய தமிழகம், முஸ்லிம் லீக் இணைந்த திமுக கூட்டணி, பாஜக, தேமுதிக, பாமக, மதிமுக, கொங்கு மக்கள் தேசியக்கட்சி இந்திய ஜனநாயகக் கட்சி இணைந்த பாரதிய ஜனதாக் கூட்டணியும் புதிய நீதிக் கட்சி போன்றவற்றோடு ஆம் ஆத்மி கட்சியும் தேர்தல் களம் கண்டன.

தேர்தலில் ஜெ.ஜெயலலிதா தலைமையியலான அ.தி.மு.க மிகப் பெரும்பான்மையாக முப்பத்தேழு தொகுதிகளில் வெற்றிபெற்று பதினாறாவது நாடாளுமன்றத்தில் மூன்றாவது மிகப்பெரிய கட்சியாக இடம் பெற்றது. தருமபுரியில் அன்புமணி ராமதாசும், கன்னியாகுமரி தொகுதியில் பொன். இராதகிருஷ்ணனும் வெற்றி பெற்றனர்.

மத்தியில் அறுதிப் பெரும்பான்மை பெற்ற பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரதம வேட்பாளர் நரேந்திர மோடி, இந்தியாவின் பதினைந்தாவது பிரதமராக மேமாதம் இருபத்தியாறில் பதவி ஏற்றுக் கொண்டார். பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக பிரதம வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட

நரேந்திர மோடி (பிறப்பு-1950) குஜராத் மாநில முதல்வராக 2001 முதல் 2014 வரை பதவியிலிருந்தார். மோடியின் பதவிக் காலத்தில் நிகழ்ந்த கோத்ரா தொடருந்து எரிப்பும் (2002), அதனைத் தொடர்ந்து நடைபெற்ற குஜராத் கலகவரங்களும் மோதி தலைமையிலான குஜராத் அரசுக்கு பெரும் அவப்பெயரை ஏற்படுத்திக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நரேந்திர மோதியின் அமைச்சரவையில் சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை இணையமைச்சராக இருக்கும் திரு. பொன் இராதாகிருஷ்ணன் (பிறப்பு -1952), தமிழக பாரதிய ஜனதா கட்சியின் குறிப்பிடத்தக்க ஆளுமையாக அறியப்படுகிறார். 1999 இல் நாகர்கோவில் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ராதாகிருஷ்ணன், அப்போதைய வாஜ்பாய் அமைச்சரவையில் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை இணையமைச்சராகப் பதவி வகித்தார். 2006 முதல் 2009 வரை தமிழக பாஜகாவின் மாநிலத் துணைத் தலைவராகவும், 2009 முதல் 2014வரை மாநிலத் தலைவராகவும் இருந்து கட்சிப்பணியாற்றினார். 2014 முதல் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவராக இருந்து வருபவர் மருத்துவர் தமிழிசை சவுந்தரராஜன் (பிறப்பு-1961).

திருமதி. தமிழிசையின் தந்தை குமரி அனந்தன் (பிறப்பு-1933), தமிழ்நாட்டின் மூத்த அரசியல்வாதியாகவும் காமராஜருடன் இணைந்து பணியாற்றியவராகவும் அறியப்படுகிறார். தமிழ்நாடு காங்கிரசின் முன்னாள் தலைவரான திரு. குமரி அனந்தன் சட்டமன்ற உறுப்பினராகப் பலமுறை பணியாற்றியிருக்கிறார். நாடாளுமன்றத்திற்கு 1977 இல் காங்கிரஸ் சார்பாக வெற்றிபெற்றிருக்கிறார். காங்கிரஸ்காரராக இருந்த குமரி அனந்தன், அதன் சில கொள்கைகளில் உடன்பாடில்லாமல் 1980 இல் காந்தி காமராஜ் தேசிய காங்கிரசு கட்சியையும், பின்பு தொண்டர் காங்கிரஸையும் ஆரம்பித்திருக்கிறார். காந்தி பேரவை எனும் அமைப்பின் மூலம் காந்தியக் கொள்கைகள் பரவுவதற்கு பணியாற்றிய குமரி அனந்தன், பல்வேறு சமூக கோரிக்கைகள் தொடர்பாகவும் பல கட்ட பாதயாத்திரைகளை மேற்கொண்டவராகப் புகழப்படுகிறார். பனை மரத்தைப் பாதுகாக்க வேண்டும், புதுச்சேரி மாந்தோப்பை பாரதியின் குயில் தோப்பாக மாற்ற வேண்டும், நதிகளை இணைக்க வேண்டும், தருமபுரியில் பாரத மாதா கோவில் கட்ட வேண்டும் போன்ற நான்கு கோரிக்கைகளை முன்வைத்து இரண்டாயிரத்துப் பதினொன்றாம் ஆண்டில் திருவல்லிக்கேணி தொடங்கி புதுச்சேரி வரையிலான

நூற்றி எண்பது கிலோமீட்டர் தூரம் பாதயாத்திரை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. தமிழ் மேல் தீராதபற்றுக் கொண்டவராக அறியப்படும் திரு. அனந்தன், சிந்தனைப் பண்ணையில் பாரதியார், சிந்தனைப் பண்ணையில் பாரதிதாசன் உட்பட ஏராளமான நூல்களை எழுதி தமிழுக்கும் பெருந்தொண்டாற்றியுள்ளார்.

தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் பாரதமாதாவிற்கு கோவில் எழுப்ப வேண்டும் எனத் திட்டமிட்டு அதற்கான இடத்தைத் தேர்வு செய்தவராகவும் நிதி திரட்டியவராகவும் அறியப்படும் சுப்பிரமணிய சிவா (1884-1925), சிறந்த சுதந்திரப் போராட்ட வீரராகப் புகழப்படுகிறார்.

சிதம்பனாரோடும், பாரதியாரோடும் ஆழமான நட்புக் கொண்டிருந்தவராக குறிப்பிடப்படும் சிவா, இராஜத்துரோக குற்றச்சாட்டில் 1908 முதல் 1912 வரை சிறையிலடைக்கப்பட்டிருக்கிறார். பின்னர் எழுத்துப் பணியிலும், ஆன்மிகத்திலும் நாட்டம் கொண்டு, பாரதமாதாவிற்கு கோவில் கட்ட வேண்டும் என விழைந்திருந்கிறார். இரண்டாவது முறையாக இராஜதுரோகம் குற்றம் சாட்டிய ஆங்கில அரசு, சுப்ரமணிய சிவாவிற்கு இரண்டரை ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறது. சிறையில் நோய்க்கு ஆளான சிவா இறுதியில் பாரதமாதாவிற்கான கோவில் கட்டும் இடமாக பாப்பாரப்பட்டியை தேர்வு செய்திருக்கிறார். அடிக்கல் நாட்டப்பட்டு கோவில் திருப்பணிகளுக்கு நிதி சேகரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த சிவா, பணிமுடியும் முன்பே வாழ்வு முடியப் பெற்றுவிட்டது குறிப்பிடத்தக்கது.

1991 இல் மிகப்பெரிய வெற்றி பெற்ற ஜெயலலிதா 1996 தேர்தலில் சட்டசபைக்கே தேர்வாகாமல் போனது வியப்பானது. ஐந்து வருடங்களில் பலமுறை அமைச்சரவையை மாற்றியமைத்த முதல்வர் ஜெயலலிதா, தொடர்ந்து அதிமுக கட்சியே ஆட்சியில் அமரும் எனத் திடமாக நம்பியதாகத் தெரிகிறது. தோழமைக் கட்சியாக இருந்த காங்கிரசு விரைவிலேயே எதிரிக் கட்சியானதும், மீண்டும் 96 தேர்தலில் நரசிம்மராவின் விருப்பத்தின் பேரில் கூட்டணி அமைக்க முயற்சிகள் நடந்ததும், காங்கிரசிலிருந்து விலகிய மூப்பனார் தமிழ் மாநிலக் காங்கிரசைத் தொடங்கியதும், பெரும்பாலான தமிழக காங்கிரஸ் தலைவர்கள் மூப்பனாரை ஆதரித்தும் பின்னர் தி.மு.க.வோடு கூட்டணி கண்டு தேர்தலைக் சந்தித்ததும் ஜெயலலிதாவிற்கு பெரும் பின்னடைவாக மாறியது.

திமுக 173 இடங்களிலும், தமாக 39 இடங்களிலும் இந்திய கம்யூனிஸ்ட் எட்டு இடங்களிலும் அமோக வெற்றி பெற்று மு. கருணாநிதி நான்காம் முறையாக முதல்வரானார். அதிமுக வெறும் நான்கு தொகுதிகளில் வென்றும், காங்கிரஸ் ஒரு தொகுதியில் கூட வெற்றிபெற இயலாமலும் தேர்தல் முடிவு கண்டன. திமுகவோடு கூட்டணி பேரம் சரியாக முடியாமல் கடைசி நேரத்தில் விலகிய பா.ம.க, திவாரி காங்கிரசோடு இணைந்து நான்கு தொகுதிகளில் வென்றது. பின் வந்த தேர்தல்களில் பாட்டாளி மக்கள் கட்சி அ.தி.மு.க.வோடும் தி.மு.க.வோடும் மாறி மாறி தேர்தல் உடன்பாடு கண்டு வட மாவட்டங்களின் குறிப்பிட்ட தொகுதிகளோடு போதும் எனும் நிலை எடுத்தது வரலாறு.

96 தேர்தலின் போது ஜெயாவிற்கு எதிரான ரஜினிகாந்தின், பேட்டியும் தமிழ் மாநிலக் காங்கிரசிற்கு ஆதரவாகக் செயல்பட ரஜினியின் ரசிகர்களும், தி.மு.க.வின் மிகப்பெரிய தேர்தல் வெற்றிக்கு ஒரு காரணமாகக் குறிப்பிடப்படுகிறது. ஜெயலலிதா வீடு இருக்கும் போயசு கார்டன் பகுதியில் தங்கியிருக்கும் ரஜினிக்கு, தனிப்பட்ட முறையிலும் சினிமாத்துறையிலும் ஜெயலலிதாவோடு முரண்பாடு ஏற்பட்டதாகவும், மேலும், அவரது மோசமான ஆட்சியின் மீதிருந்த அதிருப்தியின் காரணமாகவும், இனி ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் அந்த ஆண்டவனாலும் தமிழகத்தை காப்பாற்ற முடியாது என ரஜினிகாந்தைப் பேச வைத்ததாகக் கூறப்படுகிறது.

2002 இல் பாபா திரைப்படம் வெளியானபோது படத்தில் அதிகமாக சிகெரட் பிடிக்கும் காட்சிகள் இடம்பெற்றிருப்பதாகவும் அவற்றை நீக்க வேண்டும் எனவும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக ராமதாஸ் வேண்டுகோள் விடுத்து, காட்சிகள் நீக்கப்படாமலே வெளியானதால், பா.ம.க. தொண்டர்களுக்கும் ரஜினி ரசிகர்களுக்கும் திரையரங்குகளில் மோதல்கள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ் திரைப்படங்களில் செல்வாக்கான நடிகராக விளங்கும் ரஜினி. ஆன்மீகத்தில் அதிக நாட்டமுள்ளவராகவும் அறியப்படுகிறார். ஸ்ரீராகவேந்திரர் மேல் பற்றுள்ளவராக அறியப்பட்ட ரஜனி. பின்னர் மகா அவதார் பாபா எனும் பண்டைய துறவி மீது ஈடுபாடு வந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். இமயமலைப் பகுதிகளுக்கு ஓய்வுக்குச் செல்லும் போது பாபாவைப் பற்றி தெரிந்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.

ரஜினி படங்களில் ஏராளமான அரசியல் சார்ந்த பஞ்ச் வசனங்கள் இடம்பெற்றதும் அவரது ரசிகர்கள் தொடர்ந்து அவரை அரசியலுக்கு அழைப்பதும் தமக்கு மேலே இருக்கும் ஆண்டவர் சொன்னவுடன் அரசியலுக்கு வருவதாக ரஜினி குறிப்பிடுவதும் தமிழக மக்கள் நன்கறிந்தவை.

காவிரிப் பிரச்சினையில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டும் தண்ணீர் திறந்துவிட மறுத்த கர்நாடாகத்திற்கு எதிராக பாரதிராஜா தலைமையில் திரைப்படக் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து நெய்வேலியிலிருந்து கர்நாடகத்திற்கு மின்சாரம் வழங்கக் கூடாது என வலியுறுத்தும் விதமாக அக்டோபர் 12, 2002 இல் நெய்வேலியில் போராட்டம் நடத்தினர். போராட்டத்திற்கு அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவின் ஆசியும் இருந்தது.

நெய்வேலி போராட்டத்தில் கலந்து கொள்ளாத ரஜினிகாந்த், அடுத்த நாள் சேப்பாக்கத்தில் உண்ணாவிரதம் இருந்தபோது மிகப்பெரியளவில் ஊடக வெளிச்சம் கிடைத்தது. ஏராளமான திரைத்துறையினரும் ரசிகர்களும் கலந்து கொண்ட உண்ணாவிரத்தின் முடிவில் ஆளுநரைச் சந்தித்து தென்னக நதிநீர் இணைப்பிற்கு தமது சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் பேட்டியளித்தார். ரஜினியின் உண்ணாவிரதப் போரட்டத்தில் ஒருங்கிணைப்பாளராக புதிய தமிழகம் கட்சியின் கிருஷ்ணசாமி செயல்பட்டார்.

பாட்ஷா படத்தின் வெற்றி விழாவில் தமிழகத்தில் வெடிகுண்டு கலாச்சாரம் வேகமாகப் பரவி வருகிறது எனவும், அதைக் கட்டுப்படுத்த முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பேசியது முதல்வரின் கவனத்திற்கும் சென்றதாகத் தெரிகிறது. பாட்ஷா படத்தை தயாரித்த சத்யா மூவீசின் ஆர்.எம். வீரப்பன் அதே மேடையில் இருந்ததும் அதன் பிறகான அவரின் அரசியல் வாழ்வு மாற்றம் காண ஆரம்பித்ததும் குறிப்பிடத்தக்கது.

1995-ல் வெளியான பாட்ஷா ரஜினியின் முந்தைய படங்களின் வசூல் சாதனையை முறியடித்ததாகக் கூறப்படுகிறது. மும்பையின் தாதா வாழ்க்கையை ஒட்டி எடுக்கப்பட்ட பாட்ஷாவிலிருந்தே ரஜினியின் குறிப்பிட்ட வசனங்கள் முக்கியதுவம் பெற்றன.

நடிப்பில் சிவாஜியின் வாரிசாகக் குறிப்பிடப்படும் கமலின் சண்டியர் எனும் படத்தலைப்பிற்கு புதிய தமிழகம் கிருஷ்ணசாமியிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது. படத்தின் தலைப்பை மாற்றச் சொல்லி போராட்டங்கள் நடத்தப்பட, முதல்வர் ஜெயலலிதாவின் ஆலோசனையின் பேரில் விருமாண்டி எனும் பெயர் மாற்றத்தோடு படம் வெளியாகியது .

எதிர்ப்பிற்கு முக்கியக் காரணம், முன்னதாக 1992 இல் வெளியான தேவர் மகன் திரைப்படம். சாதி கூடாது என்பதை வலியுத்துவதாகக் சொல்லி எடுக்கப்பட்ட படம், சாதிப் பற்றை ஊட்டி வளர்க்கப் பயன்பட்டது. படம் தேவர் சமூக பட்டி தொட்டிகளிளெல்லாம் திரும்பத் திரும்ப காட்டப்பட்டதோடு, படத்தில் இடம் பெற்ற போற்றிப் பாடடி பாடல், தேவர் சமூகத்தவரின் குலப்பாடல் போன்று மாற்றப்பட்டது. சாதியப் பெருமை, பிற சாதியினர் மீதான வன்முறையாக மாற்றம் பெற்றதும் தேவர் மகன் திரைப்படத்தால் வந்த பாதிப்பு.

1999 இல் பாரதிராஜா இயக்கத்தில் அவரது மகன் மனோஜ் நடிப்பில் வெளியான தாஜ்மகால் படம் விருமாண்டி படத்தின் முன்னோடிப் படம் எனில் மிகையாகாது. படத்தில் இடம்பெற்ற திருப்பாச்சி அருவாளை திட்டிகிட்டு பாடல் அப்பட்டமான சாதியப் பாடல் என்பதோடு தேவர் சமூக இளைஞர்களை வன்முறையாளர்களாக சித்தரித்ததோடு அந்தப் பாடலே தேவர் சமூக விழாக்களில் முதல் பாடலாகவும் இடம்பெற்றது.

ரஜினியும் கமலும் ஆரம்ப காலங்களில் இணைந்து நடித்திருந்தாலும் பின் வந்த காலங்களில் ஒன்றாக நடிக்கவில்லை.இருவரும் அவரவர் பாதைகளில் தெளிவானவர்களாகக் குறிப்பிடப்பட்டாலும், 1986 இல் ரஜினியும், கமலும் போட்டி போட்டு மாவீரன் படமும் விக்ரம் படமும் தயாரித்தது குறிப்பிடத்தக்கது.

சந்திரஹாசன் தயாரிப்பில் கமல்ஹாசன் நடித்து வெளியான விஸ்வரூபம் (2013) திரைப்படம், இசுலாமியர்களை தீவிரவாதிகளாகச் சித்தரிப்பதாக எதிர்ப்புக் கிளம்பி படம் தமிழக அரசால் தடை செய்யப்பட்டது. குறிப்பிட்ட சில காட்சிகள் நீக்கத்திற்குப்பின் படம் வெளியிடப்பட்டாலும், படத்திற்கான தடை கமலுக்கு மனநெருக்கடியைக் கொடுத்தது நாடறித்தது.

2014 நாடாளுமன்றத் தேர்தலில் மோடியைப் போல் நல்லவர் இல்லை எனப் பிரச்சாம் செய்த வைகோ, பதவியேற்பிற்கு ராசபசேவை அழைத்ததும் மோடிக்கு எதிரானவராக மாறியதும் வரலாறு.

1996 தேர்தலில் நான்கு இடங்கள் மட்டுமே பெற்ற அதிமுக, 2001 தேர்தலில் 141 இடங்களில் போட்டியிட்டு, 132 தொகுதிகளைக் கைப்பற்றியது. மாறாக பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்ற திமுக, 183 தொகுதிகளில் போட்டியிட்டு 31 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. தேர்தலுக்கு சில காலம் முன்பு வரை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்த பா.ம.க, ம.தி.மு.க கட்சிகள், சட்டசபைத் தேர்தலையொட்டி கூட்டணியிலிருந்து விலகின. ஜெயலலிதாவின் ஊழல்கள் தொடர்பாக கடுமையான நிலைப்பாட்டில் இருந்த பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ் மாநிலக் காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகள் மீண்டும் அம்மாவோடு கூட்டணி கண்டது வியப்பானது.

இந்திய தேசியக் காங்கிரசு 14 தொகுதியில் போட்டியிட்டு ஏழு தொகுதிகளில் வெற்றிபெற்றது. பாட்டாளி மக்கள் கட்சி 27 க்கு 20 தொகுதிகளும், இந்தியக் கம்யூனிஸ்ட் 8 க்கு 5, மார்ச்சிஸ்ட் 8க்கு 6 இடங்களும், 21 தொகுதிகளில் போட்டியிட்ட பா.ஜ.க நான்கும், தமிழ் மாநில காங்கிரசு 32க்கு 23 என மொத்தம் 196 தொகுதிகளில் வெற்றிபெற்றன.

96 இல் ஒரு தொகுதியல் மட்டுமே வென்ற பா.ஜ.க. 2001 இல் நான்கு தொகுதிளைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. தேசிய ஜனநாயக் கூட்டணியோடு தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு எட்ட இயலாத ம.தி.மு.க கடைசி நேரத்தில் தனித்து களம் காண, 96 போலவே 2001 லிலும் ஒரு தொகுதியில் கூட வெற்றிபெற இயலாமல் போனது.

டான்சி ஊழல் குற்றச்சாட்டில் ஜெயலலிதா குற்றவாளி எனத் தீர்ப்பு வந்து அவர் பதவி விலக நேரிட்டதும், அவருக்கு மாற்றாக பெரியகுளம் நகர் மன்ற தலைவராக இருந்தவரும் (1996-2001), 2001 தேர்தலில் பெரியகுளம் தொகுதியில் வெற்றி பெற்று வருவாய்துறை அமைச்சராக இருந்தவருமான ஓ.பன்னீர் செல்வம் (பிறப்பு-1951) முதலமைச்சர் நாற்காலியில் அமரவைக்கப்பட்டார். செப்டம்பர் 21 முதல் மார்ச் ஒன்று வரை தமிழக முதலமைச்சராக இருந்த பன்னீர் செல்வம், பின்னர் ஜெயலலிதா அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராகத் தொடர்ந்தார்.

செப்டம்பர் 2014 இல் சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டதற்குப் பின்பும், செப்டம்பர் 29 முதல் 2015 மே மாதம் 22 தேதி வரை ஓ.பி.எஸ் எனப்படும் ஓ.பன்னீர்செல்வமே முதல்வராக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

800 கிலோ வெள்ளி, 28 கிலோ தங்கம், விலையுயர்ந்த தங்க, வைர ஆபரணங்கள், 10,500 புடவைகள் என 1996 ஆம் ஆண்டில் ஜெயலலிதா வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள், அசையாச் சொத்துக்கள் மற்றும் போலியான நிறுவனங்கள் தொடர்பாக தொடரப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கு, மிக நீண்ட காலம் இழுத்தடிக்கப்பட்டு, இறுதியில் உச்ச நீதி மன்றத்தின் தலையீட்டால் விரைவாக விசாரித்து முடிக்கப்பட்டு, பெங்களூரு சிறப்பு நிதிமன்றத்தின் சார்பாக குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா, வி.கே. சசிகலா, இளவரசி மற்றும் வி.என். சுதாகரன் நால்வரும் கூட்டுச் சதியில் ஈடுபட்டதாக குற்றம் நீரூபிக்கப்பட்டு, நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ஜெயலலிதாவுக்கு 100 கோடியும், மற்றவர்களுக்கு 10 கோடி அபராதமும் விதிக்கப்பட்டது. சுமார் பதினெட்டாண்டுகள் நடைபெற்ற வழக்கில், அரசு அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியது, வருவாய்க்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்தது, கூட்டுச் சதி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே வழக்கு நடந்து தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

2006 தேர்தலில் கூட்டணிகள் தலைகீழாக மாறின. 2001 இல் அ.தி.மு.க கூட்டணியில் இடம் பெற்ற கட்சிகள் இம்முறை தி.மு.க கூட்டணியில் ஐக்கியமாகின. தேர்தலில் அ.தி.மு.க தலைமையிலான ஜனநாயக மக்கள்ட கூட்டணிக்கும், தி.மு.க தலைமையிலான ஜனாயக முற்போக்குக் கூட்டணிக்கும் கடும் போட்டி. கலைஞரோடு காங்கிரஸ், பா.ம.க, சி.பி.ஐ கட்சிகளும், அம்மையாரோடு ம.தி.மு.க, விடுதலை சிறுத்தைகளும் கூட்டணி கண்டன.

132 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க, 96 இடங்களை வென்று, காங்கிரஸ் 34 , பா.ம.க 18, சி.பி.ஐ 6, ஆதரவோடு மேமாதம் பதின்மூன்று அன்று பதவியேற்றது.

96 இல் ஜெயலலிதா மீது கடுமையான ஊழல் குற்றச்சாட்டு சொன்ன வைகோ, 98 நாடாளுமன்றத் தேர்தலில் அம்மையாரோடு கூட்டணி வைத்தார். வைகோ அவர்களை முதலமைச்சராக்குவதற்காக கருணாநிதியை விடுதலைப்புலிகள் முடிக்கப் போகிறார்கள் எனும் புலனாய்வு அமைப்பின் கடிதத்தால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட வைகோ, தி.மு.க.வின் கொடி,

சின்னம் கேட்டு போராடியதொல்லாம் மறந்து, 99 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க இருந்த கூட்டணியில் இடம் பெற்றார். 2001 இல் கூடுதலான இரண்டு தொகுதிகளால் பிரச்சினை வந்து தி.மு.க கூட்டணியை விடடு வெளியேறிய ம.தி.மு.க, பின் 2004 நாடாளுமன்றத் தேர்தலில் ஒரே கூட்டணியில் இணைந்தது. 2004 இல் விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறார் எனும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வைகோ, பிணைகூட கேட்காமல் தொடர்ந்து சிறையிலிருக்க, தி,மு,க அவரை விடுவிக்க வேண்டுமென குரல் எழுப்பியது. பின் 2004 நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க கூட்டணியில் இடம் பெற்ற வைகோ, 2006 தேர்தலில் கேட்ட தொகுதிகள் கிடைக்கவில்லை எனக் கூறி அ.தி.மு.க.வில் இணைந்து முப்பத்தைந்து தொகுதிகளில் போட்டியிட்டு ஆறில் வெற்றி பெற்றது.

2014 தேர்தலில் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்ட ஜெயலலிதா அம்மையாரின் அரசியல் விளையாட்டு தெரியாத வைகோ, எந்தத் தொகுதியிலும் போட்டியிடாமல் தேர்தல் களத்திலிருந்தே வெளியேறினார்.

தி.மு.க, அ.தி.மு.க கட்சிகளுக்கு மாற்று எனும் முழக்கத்தோடு செயல்பட்ட ம.தி.மு.க, 1993 லிருந்து இருபதாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து அரசியல் பயணம் செய்தும் குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பெற முடியாதது அய்யா மற்றும் அம்மாவின் அரசியல் சதுரங்கத்தின் வெற்றி எனில் மிகையாகாது. வைகோவிற்கு முன்பே அரசியல் கட்சி தொடங்கி தமிழகத்தை மிகச் சிறந்த மாநிலமாக்குவோம் எனும் பெரு முழக்கத்தோடு அரசியலில் குதித்த பா.ம.க மருத்துவரும், அன்புச் சகோதரியோடும் பாசமிகு தமிழினத் தலைவரோடும் மாறி மாறி கூட்டணி, கண்டு இருவரின் அரசியல் சித்து விளையாட்டுகளில் சிக்குண்டார்.

மருத்துவர் இராமதாஸ், வைகோ போன்றே தி.மு.க, அ.தி.மு.க கட்சிகளுக்கு மாற்று எனத் தேர்தல் அரசியலில் புகுந்த தேசிய முற்போக்குத் திராவிடர் கழகம், 2006 இல் 232 தொகுதியிலும் தனித்துப் போட்டியிட்டு, கட்சியின் நிறுவனத் தலைவரான விஜயகாந்தின் வெற்றியோடு அரசியலில் அடியெடுத்து வைத்தது.

அன்னை தமிழ்மொழி காப்போம், அனைத்து மொழிகளையும் கற்போம், அரசியலில் தூய்மை, நாணயம், மனித நேயத்தை கடைப்பிடித்து வறுமைக் கோட்டிற்கு கீழ் மக்களே இல்லை எனும் நிலையை உருவாக்குவது, ஒட்டுமொத்த

தீவிரவாதத்தையும் நாட்டில் இருந்து அடியோடு ஒழித்து எம்மதமும் சம்மதம் எனும் நிலையை உருவாக்குவது, அந்தந்த மாநிலங்களில் வீணாகும் தண்ணீரை தமிழகத்திற்கு பயன்படுத்தும் நோக்கில் நதிகளை இணைப்பதற்கு அடித்தளமிடுவது, தரமான கல்வியை தமிழகத்திற்கு அளித்து மாணவர்கள் மாணவிகளின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக மாற்றுவது, இந்தியாவிலேயே தமிழகத்தை வேலை வாய்ப்புள்ள முதல் மாநிலமாக மாற்றுவது, ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கும் மதிப்பு மரியாதையும் கொடுப்பதற்கு பாடுபடுவது. அன்பு, அறம், ஆற்றல் என்பதை லட்சிய கொள்கை முழக்கமாக எடுத்துக் கொண்டு தமிழகத்தை ஒளிமயமாக்குவது போன்ற லட்சியக் கொள்கை கொண்டதாகக் குறிப்பிடும் தே.மு.தி.க, முதல் தேர்தலில் 8.45 சதவிகித வாக்குகள் வாங்கி பிற அரசியல் கட்சிகளை ஆச்சரியப்பட வைத்தது. குறிப்பாக, பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சிகள் செல்வாக்காக உள்ள வட தமிழகத்தில் தே.மு.தி.க கணிசமான வாக்குகளைப் பெற்றது.

அருப்புக்கோட்டைக்கு அருகிலுள்ள இராமானுஜபுரம் எனும் சிற்றூரில் பிறந்த விஜயராஜ் குடும்பம் மதுரைக்கு இடம் பெயர்ந்ததாகவும், சினிமா மீதான மோகத்தால் விஜயராசுக்கு படிப்பில் ஆர்வம் வரவில்லை எனவும், திரைப்படத்தில் நடிக்கும் நோக்கத்தோடு சென்னை வந்த விஜயராஜ், தொடர் முயற்சிகளுக்கு பின்னர் 1978 ஆம் ஆண்டிலிருந்து விஜயகாந்த் எனும் பெயரில் நடிக்க ஆரம்பித்தார் எனவும் கூறப்படுகிறது.

1993 இல் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் ரசிகர் மன்றதினர் சுயேட்சையாக நின்று சில இடங்களில் வெற்றிபெற்றதும் அரசியல் ஆர்வம் வரப்பெற்ற விஜயகாந்த், தே.மு.தி.க அரசியல் கட்சியை 2005இல் ஆரம்பித்து கடசியின் தலைவராகியதோடு, ரசிகர் மன்றத் தலைவராக இருந்த ராமு வசந்தனை கட்சியின் பொதுசெயலாளராகவும் ஆக்கினார். கேப்டன் பிரபாகரன் படத்தில் நடித்ததால் கேப்டன் அடைமொழியோடு கேப்டன் விஜயகாந்த் என அழைக்கப்படும் விஜயகாந்த் நடித்த ரமணா திரைப்படம் (2002), விஜயகாந்திற்கு முக்கியப் படமாக அமைந்ததோடு அவரை சமூகத்திற்காகப் போராடக் கூடியவராகவும் சித்தரித்தது. படத்தின் கதையும் இயக்கமும் கள்ளக் குறிச்சியைச் சேர்ந்த ஏ.ஆர் முருகதாஸ் (பிறப்பு-1977). படத்தின் வெற்றிவிழா கள்ளக் குறிச்சியில் நடந்ததும் விழா

விஜயகாந்தின் அரசியல் முன்னோட்டத்திற்கான களமாக அமைந்ததும் குறிப்பிடத்தக்கது.

மத்திய தரைவழி போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் சென்னை கோயம்பேட்டில் கட்டப்பட இருந்த உயர்மட்ட மேம்பாலத்திற்காக விஜயகாந்தின் திருமணமண்டபத்தில் ஒரு பகுதி இடிக்கப்பட இருந்ததையொட்டி, பல்வேறு அரசியல் நிகழ்வுகள் நடந்தன. மண்டபத்தை இடிக்க விடாமல் எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதும், எனினும் சிறு பகுதி இடிக்கப்பட்டு மேம்பாலம் கட்டப்பட்டதும் வரலாறு.

2009 பொதுத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் தே.மு.தி.க குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்றதோடு, திருவள்ளூர் (தனி), காஞ்சிபுரம் (தனி), தர்மபுரி, ஆரணி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், திண்டுக்கல், விருதுநகர் போன்ற தொகுதிகளில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்றது. ஆரம்பத்தில் தி.மு.க, அ.தி.மு.க, பா.ம.க என அரசியல் பணி செய்து வந்த பண்ருட்டி ராமச்சந்திரன், பின்னர் மக்கள் நல உரிமைச் கழகம் ஆரம்பித்து அரசியலில் செய்துவந்த நிலையில், விஜயகாந்தின் தே.மு.தி.க கட்சியில் சேர்க்கப்பட்டு கட்சியின் அவைத்தலைவராக நியமிக்கப்பட்டதும் அவரது அரசியல் செல்வாக்கு மறுபடியும் கூடியது. பிற கட்சிகளின் இரண்டாம், மூன்றாம் கட்டத் தலைவர்கள் சேர்க்கப்பட்டதும், நாடாளுமன்றத் தேர்தலிலேயே மிகவும் வசதியுள்ளவர்களாகப் பார்த்து வேட்பாளர்களாகக் களம் இறக்கப்பட்டதும் தே.மு.தி.க.விற்கு சறுக்கல் என அரசியல் வல்லுநர்களால் சுட்டப்பட்டது. விஜயகாந்தின் மைத்துனர் சதீஷ், கட்சியின் கள்ளக்குறிச்சி வேட்பாளரானது குறிப்பிடத்தக்கது.

2011 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் காங்கிரசு, பா.ம.க, விடுதலை சிறுத்தைகள், கொங்குநாடு முன்னேற்றக்கழகம் போன்றவை இடம் பெற்றன.

அதிமுக கூட்டணியில் தே.மு.தி.க, இந்திய பொதுவுடமைக் கட்சி, மார்ச்சிஸ்ட் பொதுவுடமைக் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, சமத்துவ மக்கள் கட்சி, புதிய தமிழகம், மூவேந்தர் முன்னேற்ற முன்னணி, பார்வடு பிளாக், இந்திய குடியரசு கட்சி, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை, மூவேந்தர் முன்னணிக் கழகம் போன்ற கட்சிகள் அடக்கம்.

பா.ஜ.க, ஜனதா கட்சி மற்றும் ஐக்கிய ஜனதா தளம் இணைந்த கூட்டணியும் களம் புகுந்தது. நாடாளும் மக்கள் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, மக்கள் சக்தி, இந்திய ஜனநாயகக் கட்சி போன்ற இன்ன பிற கட்சிகளும் தேர்தல் களம் கண்டன. ம.தி.மு.க போட்டியிலிருந்து விலகிக் கொண்டது.

அ.தி.மு.க கூட்டணிக் கட்சிகள் 203 தொகுதிகளைக் (அ.தி.மு.க 146-160) கைப்பற்றின. தி.மு.க கூட்டணிக்கு கிடைத்தது 31 தொகுதிகள் (தி.மு.க 23, காங்கிரசு 5, பாமக 3).

மக்களோடும் தெய்வத்தோடும் மட்டுமே கூட்டணி எனச் சொல்லி வந்த விஜயகாந்தை, அ.தி.மு.க.வோடு கூட்டணி வைக்க வைத்தது அம்மையாரின் முதிர்ந்த அரசியல் ராஜதந்திரம். மாநாடுகள் போடுகிறோம், மக்களின் கருத்துக்கள் கேட்கிறோம் எனப் பலவாறாக தேர்தல் கால யுத்திகளை மேற்கொண்ட விஜயகாந்த், அம்மாவை சந்தித்து நாற்பத்தியொரு இடங்களுக்கு உடன்பாடு எட்டி, முதல்வர் கனவுக்கு முடிவு கட்டிக் கொண்டார். கட்சியினரின் பெரும்பாலானவர்களின் முடிவு அது என்றும், தேர்தல் செலவுக்கு பணப் பற்றாக் குறை என்றும் அப்போதைக்கு பல காரணங்கள் கூறப்பட்டன.

கூட்டணியில் இருந்தும், தேர்தல் பரப்புரைகளில் இருவரும் ஒன்றாக மேடையேறவில்லை. விஜயகாந்தின் கடுமையான பிரச்சார யுத்திகளுக்கு மாற்றாக, தி.மு.க. சார்பில் களமிறக்கப்பட்ட வைகைப்புயல் வடிவேலு (பிறப்பு-1960), விஜயகாந்த்தை மட்டுமே குறிவைத்தது பிரச்சாரம் செய்தார். மேலும், தலைக்கவசம் அணியாத தே.மு.தி.க வேட்பாளர்கள் பட்ட பாட்டை தமிழ்நாடு நன்கறியும்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்து அம்மா முதல்வராகியதும், விஜயகாந்த் எதிர்க்கட்சி தலைவராக அரியணை ஏறியதும் தமிழக மக்களின் பெறும்பேறு என்றே கூற வேண்டும். பின்னே, வறுமை ஒழிப்பையை தமது பிறந்தநாள் நோக்கமாகக் கொண்டாடும் விஜயகாந்த், எதிர்கட்சித் தலைவராக எப்படியெல்லாம் சிந்திந்து, பேசி, திட்டங்களை விளக்கி, முதலமைச்சரை கிடுக்குப்பிடி கேள்விகளால் திணறடித்து, வறுமையை எப்படியும் ஒழித்து விடுவார்தானே. விஜயகாந்தின் அதிரடி சாகசங்களை எத்தனை படங்களில் தமிழர்கள் பார்த்து களித்திருக்க மாட்டார்கள்.

முதல்வருக்கும் எதிர்கட்சித் தலைவருக்கும் சில மாதங்களிலேயே லடாய் வந்து தொலைத்தது. குடிகாரர் எனக் கமண்ட் வர, ஊற்றிக் கொடுத்தீரா என எதிர்

கேள்வி எழும்பியது. தே.மு.தி.க சட்டமன்ற உறுப்பினர்கள் வளைக்கப்பட்டனர். பொருளாளர், அவைத்தலைவர் என அடுத்தடுத்து எம்.எல்.ஏக்கள் வெளியேறி சட்டசபையில் தனி அணியாகச் செயல்பட்டனர். நாக்கைத் துருத்துகிறார் என நடவடிக்கை பாய, விஜயகாந்தும் சபைக்கு செல்வதை தவிர்த்துக் கொண்டார்.

தமிழகத்திலும் இந்திய அளவிலும் நடைபெறும் தேர்தல் கூட்டணிகள் கொள்கை அளவில் துளியும் அமைவதில்லை. வெற்றிபெற வேண்டும், அதிலும் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் எனும் அளவிலேய கூட்டணிகள் உருவாக்கப்படுகின்றன.

மூன்று தொகுதிகளில் போட்டியிட்ட மனிதநேய மக்கள் கட்சி இரு இடங்களில் வெற்றி பெற்றது. த.மு.மு.க எனப்படும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் அரசியல் பிரிவாக 2009 இல் தொடங்கப்பட்டது மனிதநேய மக்கள் கட்சி. வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியின் வணிகவியல் பேராசிரியராக இருந்த மு.ஹி. ஜவாஹிருல்லா (பிறப்பு - 1959), இசுலாமிய பேச்சாளர் பி. ஜைனுல் ஆபிநின் (பிறப்பு-1953), எம்.எஸ் பாக்கர் செ. ஹைதர் அலி போன்றவர்களால் 1995இல் உருவாக்கப்பட்டது. த.மு.மு.க முஸ்லிம்களுக்கு தனி இட ஒதுக்கீட்டிற்கு பெருமளவில் போராடிய அமைப்பாகவும், முஸ்லிம் மக்களின் நலன் மற்றும் உரிமை சார்ந்து இயங்குவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

த.மு.மு.க.விலிருந்து பிரிந்து, ஜெனுல் ஆபுதீன், பாக்கர் போன்றோர் இணைந்து 2004இல் தமிழ்நாடு தவ்ஹீவ் ஜமாஅத் எனும் அரசியல் சார்பற்ற இசுலாமிய இயக்கத்தை உருவாக்கியிருக்கின்றனர். தாவா இசுலாத்தை அனைத்து சமுதாய மக்களிடமும் முழுமையாக கொண்டு சேர்ப்பது என்பதை நோக்கமாகவும் கொண்டிருக்கும் தவ்ஹீத் ஜமாஅத், குர்ஆர் மற்றும் ஹதீஸ் அடிப்படையிலான பள்ளிவாசல்களை அதன் உறுப்பினர்களுக்காக அமைத்து பராமரித்து வருவதாகவும் குறிப்பிடுகிறது. தமிழ், உருது, கன்னடம், மலையாளம் மற்றும் சிங்களத்தை ஆட்சி மொழியாகக் குறிப்பிடும் ஜமாஅத், சமூக சேவைகள் செய்வதாகவும் குறிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன. தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்திலிருந்து வெளியேறிய எஸ்.எம். பாக்கர், இந்திய தவ்ஹித் ஜமாத் (2009) அமைப்பை நிறுவியதாகவும் கூறப்படுகிறது.

முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி பிற்படுத்தப்பட்ட, அட்டவணையின, சிறுபான்மை மற்றும் பழங்குடியினர் என அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காவும் வலிமையாகப் பாடுபடும் எனவும், முஸ்லிம்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பு மக்களும் உறுப்பினர்களாகவும் நிர்வாகிகளாகவும் செயல்படலாம் எனவும் குறிப்பிடும் மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா, 2011 தேர்தலில் இராநாதபுரம் தொகுதியிலிருந்து அதிமுக கூட்டணி சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2011 தேர்தலில் மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்ட தமீமுன் அன்சாரி, கட்சியிலிருந்து நீக்கப்பட்டு மனிதநேய ஜனநாயக கட்சியைத் துவக்கியது குறிப்பிடத்தக்கது.

மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையின் உரிமையாளரான டாக்டர் சேதுராமனால் 1998 இல் தொடங்கப்பட்ட மூவேந்தர் முன்னேற்ற முன்னணி, அனைத்திந்திய மூவேந்தர் முன்னணி கழகம், டாக்டர் சேதுராமன் கட்சி எனப் பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. தி.மு.க, பா.ச.க மற்றும் அ.தி.மு.க கட்சிகளோடு கூட்டணி வைத்த மூவேந்தர் முன்னணிக்கு. நடிகை புவனேஸ்வரி மகளிர் அணித் தலைவியாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது. மருதிருவர் பூசையை முன்னெடுத்தவராகக் கூறப்படும் டாக்டர் ஜெயராமன், அனைத்திந்திய தேவர் பேரவையை கட்சியாக மாற்றியதோடு, தேவர் சாதி சார்ந்து கட்சியை முன்னிறுத்துபவராகவும் அறியப்படுகிறார். தமிழ்நாட்டைப் பிரித்து தென் தமிழ் மாநிலம் எனும் பெயரில் தனி மாநிலமாக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல கொள்கைகளைக் கொண்டிருப்பதும், டாக்டர் கட்சி தேர்தல் காலங்களில் மட்டுமே செயல்படுவதும் அரசியல் நோக்கர்களால் விமர்சிக்கப்படுகிறது.

முதலில் முக்குலத்தோர் சங்கம் எனும் பெயரில் தொடங்கப்பட்டு பின்னர் மூவேந்தர் முன்னேற்றக் கழகமாக மாறிய பிரேம்குமார் வாண்டையாரின் கட்சி, தேவர் சமூகம் சார்ந்து செயல்படும் கட்சியாக அறியப்படுகிறது. ஓரிரு தொகுதிகளுக்காக அ.தி.மு.க, தி.மு.க என மாறி மாறி அரசியல் நிலைப்பாடு எடுக்கும் மூமுக, தேவர் சமூக மேன்மை என்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதாக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பிட்ட சாதி சார்ந்து, மதம் சார்ந்து செயல்பட்டவர்களை, வன்முறையாளர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களை, மக்களிடம் சிறு அளவிற்குக்கூட செல்வாக்குப் பெறாதவர்களை, எதற்கும் பயன்படும் எனும் ஒற்றை ஆதாயத்திற்காக அ.தி.மு.க மற்றும் தி.மு.க தலைமைகள் ஆதரித்தது ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்றாகக் கூறப்படுகிறது. சாதி சார்ந்து இயங்குபவர்களின் மேடைகளில், மாநாடுகளில், தலைவர்கள் பங்கேற்று, அவர்களை வானளாவப் புகழ்வதும், அந்தப் புகழைக் கொண்டே சாதித் தலைவர்கள் அரசியல் ஆதாயம் தேடியதும் தமிழகத்தின் அரசியல் வரலாறு.

காந்திய மக்கள் இயக்கம் (2009) எனும் அமைப்பை முன்னெடுத்த தமிழருவி மணியன், தமிழகத்தின் குறிப்பிடத்தக்க பேச்சளாராக அறியப்படுகிறார். காங்கிரசு, நிறுவன காங்கிரசு, ஜனதாகட்சி, லோக்சக்தி, மறுப்படியும் காங்கிரசு, பின்னர் காங்கிரசின் ஈழ ஆதரவு நிலைப்பாட்டின் காரணமாக அதிலிருந்து விலகி காந்தியக் கொள்கைகளை மக்களிடையே விதைக்கும் முகமாக காந்திய மக்கள் இயக்கம் என திரு.மணியனின் அரசியல் நிலைப்பாடு அறியப்படுகிறது. அரசியல் தேர்தலில் மாற்றத்தை முன்னெடுக்கும் விதமாக காந்திய இயக்கத்தை, கந்திய மக்கள் கட்சியாக (2014) மாற்றிய திரு. தமிழருவி மணியன், தேர்தல் அரசியலிலும் பங்கேற்றார். எனினும் கட்சிக்கு மக்களிடையே செல்வாக்கு கிடைக்கப்பெறாததால் வைகோவை முதலமைச்சராக முன்னிருத்தி அரசியல் பேசினார். சமீபமாக ரஜினிகாந்தை முதல்வராக்க தீவிரமாக முயன்று வருவது குறிப்படத்தக்கது..

மதுவற்ற மாநிலம், ஊழலற்ற நிர்வாகம் என்பதை முன்னிலைப்படுத்தும் தமிழருவி மணியன், தமிழ்நாட்டிற்கு மாற்று அரசியல் தேவை எனவும் மக்கள் நலனில் முழுமையான அக்கறை காட்டும் தரமான அரசியல் தமிழ்நாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதிலும் விருப்பம் கொண்டிருக்கிறார். அன்பிற்சிறந்த தவமில்லை, மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், கனவு மெய்ப்பட வேண்டும், எங்கே போகிறோம் நாம் உள்ளிட்ட ஏராளமான நூல்கள் வெளியிட்டிருக்கும் மணியன், பேசினால் தமிழ் அருவியாய் கொட்டும் எனப் புகழப்படுகிறார்.

கொங்கு பகுதியின் வளர்ச்சியையும், நலத்தையும் குறிக்கோளாகக் கொண்ட கொங்கு நாடு முன்னேற்றக் கழகம், அதன் நிறுவனத் தலைவர் பெசுட்டு (பெஸ்ட்) செ. இராசாமியால் (பிறப்பு-1946) 2009 இல் தொடங்கப்பட்டது. கொங்கு வேளாளர்

பேரவையை பின்னர் கொங்கு நாடு முன்னேற்றக் கழகமாக மாற்றம் பெற்றது. கட்சி தொடங்கி நான்கு மாதங்களுக்குள்ளாகவே, 2009 மக்களவைத் தேர்தலில் பன்னிரெண்டு இடங்களில் போட்டியிட்ட கொ.மு.க, கோவை, பொள்ளாச்சி, ஈரோடு தொகுதிகளில் லட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் வாங்கியது. 2011 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் ஏழு தொகுதியில் போட்டியிட்டும் ஒன்றிலும் வெற்றிபெறவில்லை.

கொங்குநாடு முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து ஈ.ஆர்.ஈஸ்வரனால் தொடங்கப்பட்டது கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி (2013). 2014 மக்களவைத் தேர்தலில் பி.ஜே.பி தலைமையில் பொள்ளாட்சி தொகுதியில் போட்டியிட்ட ஈஸ்வரன். 2,76,118 வாக்குகள் பெற்றார். 2016 தேர்தலில் எழுபத்தியிரண்டு தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டது கொ.ம.தே.க.

கொங்கு பகுதி கவுண்டர் சமூக மக்களின் நலனை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு உ. தனியரசு (பிறப்பு-1967) உருவாக்கியது தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை (2001). 2011 மற்றும் 2016 தேர்தல்களில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி கண்டு, பரமத்தி வேலூர் மற்றும் காங்கேயம் தொகுதி சார்பாக த.கொ.இ பேரவையின் நிறுவன தலைவர் வெற்றி பெற்றார்.

அறுபது தமிழ் தேசிய அமைப்புகள் ஒன்று சேர்ந்து துவங்கப்பட்டதாகக் கூறப்படும் தமிழர் தேசிய முன்னணி (2014), பழ. நெடுமாறனைத் தலைவராக கொண்டு செயல்படுகிறது. தமிழகத்தின் நீண்ட கால தமிழ் தேசியவாதியாக அறியப்படும் திரு. நெடுமாறன், அண்ணாமலைப் பல்கலையில் படிக்கும் காலத்திலேயே (1958) அரசியல் ஈடுபாடு கொண்டிருந்தவராக அறியப்படுகிறார். 1962 இல் மதுரை மாவட்ட தமிழ்ச் தேசிய கட்சியின் அமைப்பாளராக இருந்தவர், காங்கிரசில் இணைந்து 1973-79 வரையிலான காலகட்டத்தில், தமிழ்நாடு காங்கிரசு பொதுச் செயலாளராக செயல்பட்டிருக்கிறார். உலகத் தமிழ் பேரமைப்பை நிறுவி தமிழீழப் போராட்டங்களுக்கு ஆதரவாளராக மாறிய நெடுமாறன், ஈழப்பகுதிகளுக்கு மறைமுகப் பயணம் செய்தவராகவும் அறியப்படுகிறார். தமிழ் சார்ந்தும், ஈழம் சார்ந்தும், பல்வேறு வழக்குகளைச் சந்தித்த நெடுமாறன் தடா, பொடா போன்ற சட்டங்களையும் எதிர்கொண்டார். அரசியல் சார்ந்தும், ஈழத்தமிழர் மற்றும் இலக்கியம் குறித்தும் ஏராளமான நூல்கள் எழுதியுள்ளவராகவும் பழ. நெடுமாறன் குறிப்பிடப்படுகிறார்.

பதினெட்டாவது வயதிலேயே இந்திய பொதுவுடமைக் கட்சியில் இணைந்தவராகக் குறிப்பிடப்படும் நல்லகண்ணு (பிறப்பு-1925), தமிழகத்தில் மூத்த அரசியல்வாதிளுள் ஒருவராகக் குறிப்பிடப்படுகிறார். கால் நூற்றாண்டும் மேலாக விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்த தோழர் நல்லகண்ணு, பதின்மூன்றாண்டு காலம் கட்சியின் மாநிலச் செயலாளராகவும் இருந்துள்ளார்.

வெள்ளையனே வெளியேறு தொடங்கி ஏராளமான போராட்ட வாழ்க்கையை மேற்கொண்ட நல்லகண்ணு, எளிமையான, நேர்மையான அரசியல்வாதியென மக்களால் புகழப்படுகிறார். இரண்டு முறை சட்டசபைக்கும், ஒரு முறை மக்களவைக்கும் தேர்தலில் போட்டியிட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத இரா. நல்லகண்ணு, தமிழக நலன் சார்ந்தும் சூற்றுச் சூழல் குறித்தும் நெடுங்காலமாக தீரமாக செயல்பட்ட களப்பணியாளராக பாராட்டப்படுவது தேர்தல் வெற்றியிலும் சிறப்பானது. தொன்னூறு வயதிற்கு மேலாகியும் போராட்டம், பொதுக் கூட்டம் எனச் சுழன்றுவரும் தோழர் மாமனிதர் எனில் மிகையாகாது.

நல்ல கண்ணுவிற்குப்பின் தமிழகத் தலைவரானவர் தா. பாண்டியன் (பிறப்பு - 1932). நீண்ட கால அரசியல்வாதியாக அறியப்படும் தா. பாண்டியன், 1989,91 மக்களவைத் தேர்தல்களில ஐக்கிய இந்திய பொதுவுடமைக் கட்சியின் மூலம் காங்கிரசின் ஆதரவோடு வெற்றி பெற்றிருக்கிறார். அ.தி.மு.க தலைமையோடு நெருக்கம் மிக்கவராகக் குறிப்பிடப்படும் தா. பாண்டியன், ஈழ ஆதரவாளராகவும் சிறந்த பேச்சாளராகவும் பாராட்டப்படுகிறார்.

சுதந்திரப் போராட்ட வீரராகவும், காங்கிரஸ்காராகவும், திராவிட இயக்கப் பிடிப்புள்ளவராகவும், சுயமரியாதைக்காரராகவும், தமிழ் பற்றாளராகவும், மிகச் சிறந்த பொதுவுடமையாளராகவும் குறிப்பிடப்படும் ப. ஜீவானந்தம் (1907-1963), தமிழகத்தில் பொதுவுடமை வளரப் பாடுபட்ட முன்னோடித் தலைவராக போற்றப்படுகிறார். சிறந்த தொழிற்சங்கவாதியாக அறியப்படும் தோழர் ஜீவா, ஜனசக்தி, தாமரை போன்ற இதழ்களைத் தொடங்கி, பொதுவுடமை சார்ந்த சித்தாந்தங்களையும் மார்க்சிய கோட்பாடுகளையும் தமிழகத்தில் பரவலாக்கியிருக்கிறார். 1952 தேர்தலில் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர், சிறப்பான விவாதங்களை மேற்கொண்டதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. நேர்மையான அரசியலின் அடையாளம், பாட்டாளி மக்களின் தோழன் எனப்

புகழப்படும் தோழர் ஜீவானந்தம் மறைவிற்குப் பின்னர் பொதுவுடமை இயக்கங்கள் பிரிந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

அன்பும் அரசியலும் வேறு வேறல்ல, உலகம் முழுமைக்கும் அன்பும் சகோதரத்துவம் நிலவ வேண்டும் என்பதே உண்மையான அரசியல் தத்துவமாகும், ஆகவே அன்பினை அழிக்கக் கூடிய எதுவும் அரசியலாக இருக்க முடியாது, கூடாது என அரசியல் தத்துவ நிலைப்பாடு கொண்டிருந்த ஜீவா, தமிழகத்தின் ஒப்பற்ற பொதுவுடமைத் தலைவர் எனில் மிகையாகாது.

1952இல் சட்ட மன்ற எதிர்கட்சி தலைவராக இருந்த பி. இராமமூர்த்தி (1908-1987) மிகச் சிறந்த தொழிற்சங்கவாதியாகவும், மார்சியவாதியாகவும் புகழப்படுகிறார். சுதந்திரப் போராட்ட வீரராகவும், காந்தி மீது பேரன்பு கொண்டவராகவும் இருந்த தோழர் பி.ஆர், பின்னர் பொதுவுடமை இயக்கத்தின் மீது நாட்டம் கொண்டு போராட்ட வாழ்க்கையை அமைத்துக் கொண்டவராக அறியப்படுகிறார். ஜீவாவோடும் அன்றைய பொதுவுடமைத் தோழர்களோடு இணைந்தும் தமிழகத்தில் பொதுவுடமை இயக்கம் ஆழமாக வேரூன்ற பாடுபட்டவர்களில் முக்கியமான ஒருவராக இராமமூர்த்தி பாராட்டப்படுகிறார்.

இந்திய பொதுவுடமைக் கட்சியின் சார்பாக திருச்சி வடக்கு சட்டமன்றத்திற்கான 1952,57,62 தேர்தல்களில் வெற்றி பெற்ற எம். கல்யாண சுந்தரம் (1909-1988), 1971-75, 77-80 காலகட்டங்களில் நாடாளுமன்ற மக்களவைக்கும், 80-86 இல் மாநிலங்களவைக்கும் தேர்தெடுக்கப்பட்டிருக்கிறார். தொடக்க கம்யூனிஸ்ட்வாதியான கல்யாண சுந்தரம், எம்.ஜி.யாரோடு சிறந்த நட்பு கொண்டிருந்ததாகவும், அ.தி.மு.க ஆரம்பிக்கப்பட்ட போது. அதன் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தியவராகவும் கூறப்படுகிறது. அமைப்பு சாராத தொழிலாளர்களுக்காகக் குரலெழுப்பியவராகவும், திருச்சி சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களின் உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியவராகவும் கல்யாண சுந்தரம் பாராட்டப்படுகிறார்.

இந்திய பொதுவுடமை இயக்கத்தின் மூத்த தோழரும் மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக இருந்தவருமான தோழர் என். சங்கரய்யா (பிறப்பு-1922), தமிழகத்தின் மூத்த பொதுவுடமைவாதியாகப் புகழப்படுகிறார். சுதந்திரப் போராட்ட வீரராகவும் மாணவப் பருவத்திலேயே

பொதுவுடமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவராகவும் அறியப்படும் சங்கரய்யா, மதுரை-மேற்கு, கிழக்கு சட்டமன்றத் தொகுதிகள் மூலம் 1967, 77, 80 சட்ட சபைக்குத் தேர்வாகி சிறப்பான விவாதங்களை முன்னெடுத்தவராகவும், பொதுவாழ்கையிலும் மக்கள் போராட்டங்களிலும் தொடர்ந்து சளைக்காமல் பங்குபெற்று வருபவராகவும் அறியப்படுகிறார்.

1995 முதல் 2002 வரை மார்க்சிஸ்ட் மாநிலக் குழு செயலாளராக இருந்த சங்கரய்யாவிற்கு முன், அப்பதவியில் இருந்தவர் தோழர் ஏ. நல்லசிவன். பின் வந்தவர் தோழர் என். வரதராஜன் (2001-2010). தமிழக பொதுவுடமை மார்ச்சிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவர்களுள் ஒருவராகக் குறிப்பிடப்படும் தோழர் என். வரதராஜன் (1924-2012), நீண்ட கால அரசியல் பயணத்தில் ஏழை எளிய மக்களுக்காகவும், சாதிய ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும், பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தியது பாராட்டத்தக்கது.

2010 முதல் தமிழக மார்க்சிஸ்டு பொதுவுடமைக் கட்சியின் மாநிலக் குழு செயலாளராக இருக்கும் ஜி. இராமகிருஷ்ணன் (பிறப்பு-1949), 1969 இல் கட்சியின் உறுப்பினராக ஆகியுள்ளார். இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தில் பணியாற்றிய திரு. இராமகிருஷ்ணன், 1981 முதல் கட்சியின் முழநேரப் பணியாளராக செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் முனைப்பாகச் செயலாற்றியவராகவும், தோழர் ஜி.ஆர். தமிழக சாதிய அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடியவராகவும் தோழர் ஜி.ஆர். பாராட்டப்படுகிறார்.

மார்க்சிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் மாநிலங்களவை உறுப்பினராகவும் தொழிற்சங்கவாதியாகவும் பணியாற்றும் டி.கே ரங்கராஜன் (பிறப்பு-1941), இந்திய பொதுவுடமைக் கட்சியின் தேசியச் செயலாளராகவும் மாநிலங்களவை உறுப்பினராகவும், மக்கள் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் அதிகம் குரலெழுப்புபவராகவும் அறியப்படும் டி. ராஜா (பிறப்பு - 1949), டெல்லி அரசியலில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றுபவர்களாக அறியப்படுகின்றனர். தமிழக பொதுவுடமைக் கட்சியன் தலைவராக 2015 முதல் பணியாற்றி வரும் இரா. முத்தரசன் (பிறப்பு-1950), மக்கள் சார்ந்த பல போராட்டங்களில் ஈடுபட்டவராகவும் விவசாயத் தொழிலாளர் நலச் சங்கத்தின் மாநிலச் செயலராக பல ஆண்டுகள் பணியாற்றியவராகவும் குறிப்பிடப்படுகிறார்.

80களில் இளைஞர்களின் உள்ளத்தில் தன்னம்பிக்கை, முன்னேற்றம், மக்கள் சேவை போன்ற கருத்துக்களை விதைத்தவராக டாக்டர் எம்.எஸ் சுவாமிநாதன் (1928-2013) அறியப்படுகிறார். அமெரிக்காவில் வேதியல் முனைவர் பட்டமும், அங்கேயே கால் நூற்றாண்டு காலம் தொழிலதிபராகவும் இருந்த எம்.எஸ். சுவாமிநாதன் இந்திய நாட்டின் மீது கொண்ட பற்றின் காரணமாக இளைஞர்கள் மனதில் மாற்றத்தை விதைத்து சமூகத்தை சீர்படுத்த வேண்டும் எனும் உயரிய நோக்கோடு செயல்பட்டவராகப் போற்றப்படுகிறார். சுய முன்னேற்றம், எண்ணங்கள், சமூக ஒழுங்கு, அரசியல் போன்றவை குறித்து பல நூல்களை எழுதியும், பொது சேவை செய்தும், அரசியலில் ஈடுபட்டும் வந்த சுவாமிநாதன், இந்தியாவின் எதிர்காலம் இளைஞர்கள் கையில்தான் என்பதனை தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறார். மக்களை அதிகாரப்படுத்தும் நோக்கோடும் மாற்று அரசியலை முன்னெடுக்கும் நோக்கத்திலும் 1982 சுவாமிநாதன் உருவாக்கிய மக்கள் சக்தி இயக்கம், நதிநீர் இணைப்பு, மாணவர் விழிப்புணர்வு, தேர்தல் அரசியல் போன்றவற்றிலும் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

ஊழலையும் சமூக எதிர் செயல்களையும் ஒழிப்பதையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கும் இந்திய ஜனநாயகக் கட்சியை 2010 இல் துவக்கியவர் தாண்டவராயுபுரம் ராமசாமி பச்சமுத்து எனும் டி.ஆர் பச்சமுத்து (பிறப்பு-1941). பாரிவேந்தர் என அழைக்கப்படும் பச்சமுத்து, திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம் எனும் எஸ்.ஆர்.எம் பல்கலையின் நிறுவனராக அறியப்படுகிறார். இளநிலையில் 40,000 மாணவர்களும், முதநிலையில் 10,000 மாணவர்களும் படிப்பதாகக் குறிப்பிடும் எஸ்ஆர்எம் பல்கலையின் வளாகங்கள் டில்லி, அரியானா, சிக்கிம் மாநிலங்களிலும் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஏராளமான கல்வி கூடங்களையும், தொழில்களையும், நிறுவனங்களையும் நிர்வகிக்கும் எஸ்.ஆர்.எம் குழுமத்தின் தலைவர், ஆரம்பத்தில் பள்ளி ஆசிரியராக இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. 2011 சட்டமன்றத் தேர்தலில், இந்திய ஜனநாயகக் கட்சி, தேவநாதனின் யாதவ மகாசபை, சிவகாமியின் சமூக சமத்துவ படை, ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், பன்னீர் செல்வத்தின் தமிழ்நாடு வாணிக செட்டியார் பேரவை போன்றவை கூட்டணி அமைத்து, இந்திய ஜனநாயக முன்னணி எனும் பெயரில் போட்டியிட்டன. 123 தொகுதிகளில் போட்டியிட்ட இந்திய ஜனநாயகக் கட்சி அனைத்திலும் தோல்வி கண்டது. 2014 தேர்தலில் பா.ஜ.க

கூட்டணியில் இடம் பெற்ற ஐ.ஜே.கே, 2016 சட்டமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா கூட்டணியில் நாற்பத்தைந்து இடங்களில் போட்டியிட்டது.

தமிழகத்தின் குடிமைப் பணியில் மூத்த அதிகாரியாக இருந்த பழனிமுத்து சிவகாமி (பிறப்பு-1957), சமூக சேவை செய்யும் நோக்கோடு விருப்ப ஓய்வில் வேலையை விட்டு விலகி (2008), பகுஜன் சமாஜ் கட்சியில் இணைந்தார். 2009 தேர்தலில் பகுஜன் சமாஜ் சார்பாக கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிட்டார். பின்னர் சமூக சமத்துவப் படை எனும் அரசியல் கட்சியைத் தொடங்கி அட்டவணையினருக்கும் பழங்குடிகளுக்கும் சமத்துவம் கிடைக்கப் பாடுபட்டு வரும் சிவகாமி அம்மையார், அட்டவணையினருக்காக ஒதுக்கப்பட்ட பஞ்சமி நிலங்களை மீட்கும் விதமாக பல போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறார். இலக்கியத்திலும், எழுத்திலும் ஆர்வம் கொண்டவரான ப. சிவகாமி ஐ.ஏ.எஸ், கடைசி மாந்தர் (1995), பழையன கழிதலும் (1998), குறுக்கு வெட்டு (1999) உட்பட பல நூல்களையும் எழுதியும், புதிய கோடங்கி எனும் இதழை வெளியிட்டும் இலக்கியப் பணி செய்திருப்பது பாராட்டத்தக்கது.

பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த தி. வேல்முருகன், 2011 இல் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு, பின்னர் 2012 இல் தமிழக வாழ்வுரிமைக் கட்சியைத் தொடங்கினார். தமிழ், தமிழர், இலங்கை தமிழர் ஆதரவு போன்ற நிலைப்பாடுள்ள கட்சியாக த.வா.கட்சி செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தின் பதினைந்தாவது சட்டமன்றத் தேர்தல் 16.05.2016 அன்று நடைபெற்றது. 1969-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான கலைஞருக்கும், 1989-ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவியான அம்மாவுக்கும், அடுத்த முதல்வராவது யார் என்பதில் கடும் போட்டி.

கலைஞர் மற்றும் அம்மாவோடு விஜயகாந்த், அன்புமணி ராமதாஸ், சீமான், தமிழிசை சௌந்தர்ராஜன் போன்றோரும் முதல்வர் வேட்பாளர்களாகக் களம் புகுந்தனர். கட்சியினர் அவரவர் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டு அனல் பரப்பும் பிரச்சாங்களை மேற்கொண்டனர்.

2011 தேர்தலில் திமுக கூட்டணியிலிருந்த திருமாவளவன், 2016 தேர்தலில் ஆட்சியில் பங்கு எனும் உத்தியை முன்னெடுத்தார். ஆட்சியில் பங்கு கொடுப்பவர்களோடு மட்டுமே கூட்டணி என பரப்புரை செய்ய, தி.மு.க, அ.தி.மு.க கட்சிகள் அதை ரசிக்கவில்லை. மாறாக, பொதுவுடமைத் தோழர்களோடு ஒன்றாக இணைந்து விடுதலை சிறுத்தைகள் கட்சி செயல்பட்டது. தேர்தல் நெருக்கத்தில் ம.தி.மு.க.வும் ஒன்றாக இணைந்து மக்கள் நலக் கூட்டணியாக மாற்றம் பெற்றன. கூட்டணிக்கு விஜயகாந்தை இழுக்கும் வேலைகள் மும்முரமாகின.

விஜயகாந்த் வழக்கம் போல் கட்சியினரிடம் கருத்துக் கேட்க ஆரம்பித்தார். ஒரே சமயத்தில் மக்கள் நலக் கூட்டணி, தி.மு.க, பா.ச.க. கட்சிகளோடு பேச்சு வார்த்தை நடைபெற்றதாகக் செய்திகள் குறிப்பிட்டன. தி.மு.க தலைமை எப்படியாவது விஜயகாந்தை கூட்டணியில் சேர்ந்துவிட முயற்சி செய்து, அதில் வெற்றி பெற்றுவிடும் எனும் நிலையில், அதாவது பழம் நழுவி பாலில் விழும் நிலையில் கூட்டணி பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. சட்டென மாறிய அரசியல் சூழலில், விஜயகாந்த் மக்கள் நலக் கூட்டணியில் சேர்ந்து, முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார். முதல்வர் வேட்பாளர் குறித்து கூட்டணிக்குள்ளேயே சிறு சலசலப்பு வெளியானது. பின்னர் தமிழ் மாநிலக் காங்கிரசும் மக்கள் நலக் கூட்டணியில் இணைய, தமிழகத்தில் அரசியல் புரட்சி நிகழ்ந்து விட்டதாகவும், அடுத்த முதல்வர் விஜயகாந்த்தான் என்றும் பிரச்சாரங்கள் நிகழ்ந்தன. அனேகமாக அமைச்சரவை முடிவு செய்யப்பட்டு, பதவி ஏற்பு நாளும் குறித்துவிட்டதாகச் செய்திகள் கசிந்தன. விஜயகாந்த்தும் அம்மா போலவே சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை உள்ளவர் என்பது அனைவருக்கும் தெரிந்த செய்தி தானே.

மாநாடுகள் போடுவதும், தைராய்டு பிரச்சினையால் பேச முடியாமல் இருந்த விஜயகாந்திற்குப் பதிலாக, அதாவது வருங்கால முதல்வருக்குப் பதிலாக, மற்ற தலைவர்கள் ஆவேசமாகப் பேசியதும், கண்கொள்ளாக் காட்சிகள். அமைதியான அரசியல்வாதி எனப் பெயரெடுத்த வாசன் கூட அதிரடியாகப் பேசினார் எனில், அதிரடி ஆக்ஷன்களுக்குப் பெயர் பெற்ற வைகோ எப்படியெல்லாம் பேசமாட்டார்?

தமிழகத்தின் மூத்த அரசியல்வாதி என்று பாராமல் கலைஞர் குறித்து வைகோ பேசிய பேச்சு தமிழகத்தின் தேர்தல் சூட்டிற்கு பெட்ரோலை ஊற்றியது. தொண்டர்கள் கொடும்பாவி எரிப்பதும், காவல் துறையினர் பறிமுதல் செய்வதும் தண்ணீர் ஊற்றி அணைப்பதும் மிகவும் பரபரப்பான காட்சிகளாக அமைந்தன.

மாற்றம், முன்னேற்றம், அன்புமணி எனும் பரப்புரையோடு கிளம்பிய பாட்டாளி மக்கள் கட்சி, இனிமேல் திராவிடக் கட்சிகளோடு ஒட்டும் இல்லை உறவும் இல்லை எனும் உறுதிமொழியோடு தேர்தலைச் சந்தித்தது. பா.ம.க.வின் அரசியல் நுட்பமறிந்த அரசியல் நோக்கர்கள், தேர்தல் நெருங்கும்போது எப்பவும் போல் எதாவது ஒரு திராவிடக் கட்சியோடு ஐக்கியமாகி விடும் எனும் கணிப்பு பொய்யாகும் விதமாக, பா.ம.க தனித்தே களம் கண்டது வியப்பளித்தது. அன்புமணியை முதல்வராக ஏற்றுக்கொள்ளும் எந்தக்கட்சியோடும் கூட்டணி வைக்கத் தயார் என பா.ம.க அறிவித்தும், வேறு எந்தக் கட்சியும் கூட்டணிக்கு முன்வரவில்லை. அன்புமணி பார் சி.எம் எனும் பரப்புரையோடு மிகப் பெரியளவில் பிரச்சாரங்களை முன்னெடுத்த பா.ம.க, ஏராளமான மாநாடுகள் போட்டும், பத்திரிக்கைகளில் முழுப்பக்க விளம்பரங்கள் கொடுத்தும், ஊடகத்தை சிறப்பாகப் பயன்படுத்தியும் நவீன தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டது. தமிழக வளர்ச்சி, முன்னேற்றம் குறித்து நேருக்கு நேர் விவாதிக்கத் தயாரா என ஸ்டாலின், விஜயகாந்த் போன்ற பிற தலைவர்களுக்கு சவால் விட்டும், ஒருவரும் வரவில்லை என்பது அன்புமணிக்கான மாபெரும் வெற்றி என்றே அரசியல் நோக்கர்கள் பதிவிட்டனர். சின்ன ஐயா தேர்தல் பரப்புரைகளும் மற்ற அரசியல் கட்சியினரை விட சிறப்பாக இருந்தது கண்கூடு.

திரு.மோடி தமிழகம் வந்தால் போதும், அத்தனை ஓட்டுகளையும் அள்ளிவிடலாம் எனும் நினைப்பில் பாரதிய ஜனதாவின் தமிழக தலைமை செயல்பட்டது. அதற்கேற்றவாறு மோதியை முன்னிறுத்தியே பா.ஜ.க தேர்தல் பரப்புகளை மேற்கொண்டது.

சீமானின் நாம் தமிழர் கட்சி அனைத்துக் தொகுதிகளிலும் தனியாகக் களமிறங்கியது. முதல் தேர்தல் என்பதால் சீமானின் தம்பிகள் சுறுசுறுப்பாக தேர்தல் பணியாற்றினர். முதல்வர் என்பதை விட கணிசமான வாக்குகள் வாங்கிவிட வேண்டும் எனும் முனைப்பு, சீமான் கட்சிக்காரர்களிடம் தெரிந்ததாகப் பொதுவில் பேச்சு இருந்தது.

ஆதித்தனாரின் நாம் தமிழர் கட்சியின் நீட்சியாகக் குறிப்பிடப்படும் நாம் தமிழர் கட்சி, 2009 இல் நாம் தமிழர் இயக்கமாக இருந்து ஒரு வருடத்திற்குள் அரசியல் கட்சியாக மாறியது. மேதரு பிரபாகரனை தலைவராகக் குறிப்பிடும் நாம் தமிழர் கட்சி, விடுதலைப் புலிகளின் புலிக்கொடியையே கட்சியின் கொடியாக

வைத்திருக்கிறது. 2009-ன் ஈழப்போருக்கு நீதி கேட்கும் போராட்டம் மூலமாக மதுரையில் ஒருங்கிணைக்கப்பட்ட நாம் தமிழர் இயக்கம், தஞ்சையில் 10.05.2010 இல் நாம் தமிழர் கட்சியாக மாற்றம் பெற்றது.

ஈழ ஆதரவாளராகவும், விடுதலைப் புலிகளின் பற்றாளராகவும் அறியப்படும் சீமான் (பிறப்பு-1970), நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராகவும், பிரபாகரனின் தமிழ் தேசியத்தை தமிழ் மண்ணில் முன்னெடுப்பவராகவும் அறியப்படுகிறார். 1991 இல் சினிமா வாய்ப்பு தேடி சென்னை வந்த சீமானுக்கு அமைதிப்படை (1994) உள்ளிட்ட சில படங்களில் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இயக்குனர் மணிவண்ணனோடு நெருக்கம் பாராட்டியவராக அறியப்படும் சீமான், 1996-ல் வெளியான பாஞ்சாலங்குறிச்சி படத்தை இயக்கும் வாய்ப்பு பெற்றிருக்கிறார். தொடர்ந்து சில படங்களை இயக்கிய சீமானுக்கு 2006 இல் இயக்கிய தம்பி படம் சிறப்பாக அமைந்ததும், பின்னர் படங்களில் நடித்ததும் குறிப்பிடத்தக்கது.

திராவிட இயக்கம், பெரியார், சேகுவேரா எனப் பேசி வந்த சீமான், பின்னர் புலிகளின் ஆதரவாளராகவும், தமிழ் தேசியத்தை முன்னெடுப்பவராகவும் மாற்றம் பெற்றார். ஆவேசமான பேச்சுகள், போராட்டங்கள் மூலம் ஊடகத்தின் கவனம் பெற்று வந்த சீமான், 2008 இல் இராமேசுவரத்தில் நடைபெற்ற ஈழப்போர் ஆதரவு பொதுக்கூட்டத்தில் அனல் பரப்பும் பேச்சு மூலம் தொலைக்காட்சி ஊடகத்தில் பரபரப்பு செய்தியானார். தமிழர், தமிழர் எழுச்சி, தமிழர் தேசியம், புலிகள் ஆதரவு என கடுமையான பரப்புரைகள் நிகழ்த்திய சீமான் மீது வழக்குகளும் காங்கிரசாரின் எதிர்ப்பும் கிளம்பின.

மீனவர் பிரச்சினை தொடர்பாக பேசிய சீமான், தமிழக மீனவனை அடித்தால் சிங்கள மாணவனை அடிப்போம் எனப் பேச, கைது செய்யப்பட்டு சிறையிலிருந்த காலத்தில், வென்றது ஆரியம் துணைநின்றது திராவிடம் எனும் நூலை எழுதியிருக்கிறார்.

2011, 2014 தேர்தல்களில் தி.மு.க, காங்கிரசு கட்சிகளுக்கு எதிராகவும், அ.தி.மு.க.விற்கு ஆதரவாகவும் தேர்தல் பரப்புரை செய்த சீமான், பின்னர், தமிழ், தமிழர், ஈழம் தொடர்பாக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தார். நவீன ஊடகத்தை சிறப்பான முறையில் பயன்படுத்தி, சீமானும் அவரது தம்பிகளும் கட்சியை இளைஞர்களிடம் பரப்ப வெகுவாக முயன்றது குறிப்பிடத்தக்கது.

பழ. நெடுமாறன் தலைமையில், 2013-ல் அ.தி.மு.க.வின் முன்னால் சபாநாயகர் காளிமுத்துவின் மகள் கயல்விழியை தமிழ் முறைப்படி திருமணம் செய்தார். அரசியல் புரட்சியோடு பண்பாட்டுப் புரட்சியும் முக்கியம் என்பதை அறிந்து, வீரத் தமிழர் முன்னணி எனும் அமைப்பினை 2015 இல் தொடங்கி, திருமுருகப் பெருவிழா, மாயோன் பெருவிழா, கண்ணகிப் பெருவிழா, கிராம பூசாரி மாநாடு, மரபுவழி உழவு போன்றவற்றை முன்னெடுத்தார். குறிப்பாக, முருகனை முப்பாட்டனாகக் கருதி, மீசையில்லாத சிவந்த கொழுகொழு முருகனுக்கு மாற்றாக, முறுக்கிய மீசையோடும், சிக்ஸ் பேக்ஸ் வயிற்றோடும், கருமை நிறத்தோடும், தலைப்பாகையோடும், கம்பீரமாக வேல் பிடித்து நிற்கும் வகையில் வடிவமைத்தும், விழாக்கள் கொண்டாடியும் மகிழ்ந்தார்.

தமிழ் தேசியத்தை கொள்கையாகவும், அப்துல் ரகூப் மாணவர் பாசறை, முத்துக்குமார் இளைஞர் பாசறை, செங்கொடி மகளிர் பாசறை போன்ற அமைப்புகளுடனும் செயல்பட்டு வரும் நாம் தமிழர் கட்சி, தமிழின மீட்சியே நாம் தமிழர் இலட்சியம் என்கிறது. தமிழீழத் தனியரசு அமைக்கப் போராடுவது, மாநில தன்னுரிமைக்கு போராடுவது, நிலச்சீர்திருத்தம் செய்வது, சமனியத் தமிழரசை நிலைநாட்டுவது, பொருளியல் ஏற்ற தாழ்வு அகற்றுவது, வருணாசிரம சனாதனக் கொள்கையை அழிப்பது, சாதி சமய ஆதிக்கத்தை ஒழிப்பது, மகளிருக்கு சமபங்கு அளிக்க போராடுவது, தமிழ் வழியில் கற்றோருக்கு தமிழகத்தில் வேலை வாய்ப்பு, பண்பாட்டு சுற்றுலாவை மேம்படுத்தி உலகத் தமிழரை ஒருங்கிணைப்பது, உட்பட பல்வேறு கூறுகளை கட்சியின் முக்கியக் கொள்கையாக வெளியிட்டிருக்கிறது.

பொருத்தமான நேரத்தில் சரியான முடிவெடுக்கப்படும் என அறிவித்த அ.தி.மு.க தலைமை, மக்கள் நலக் கூட்டணியில் விஜயகாந்த் சேருவதை அறிந்து தனித்துப் போட்டி எனும் நிலையை எடுத்தது. கூட்டணிக் கட்சிகளுக்கு ஏழு தொகுதிகள் ஒதுக்கப்பட்டு, அவையும் இரட்டை இலைச் சின்னத்தில் நிற்குமாறு பார்த்துக் கொண்டது. அ.தி.மு.க - 227, மனிதநேய ஜனநாயகக் கட்சி - 2 ,இந்திய குடியரசு கட்சி - 1 சமத்துவ மக்கள் கட்சி - 1 , கொங்குநாடு இளைஞர் பேரவை - 1, முக்குலத்தோர் புலிப்படை - 1, தமிழ் மாநில முஸ்லிம் லீக் - 1 தொகுதிகள் என போட்டியிட்டன.

தி.மு.க கூட்டணியில், திமுக - 174, காங்கிரசு - 41, இந்தியன் முஸ்லிம் லீக் - 5, மனிதநேய மக்கள் கட்சி - 4, புதிய தமிழகம் - 4, மக்கள் தேமுதிக - 3,

பெருந்தலைவர் மக்கள் கட்சி - 1, சமூக சமத்துவப் படை - 1, விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி - 1 தொகுதிகளில் களம் கண்டன.

மக்கள் நலக் கூட்டணி சார்பில், தே.மு.தி.க - 104, ம.தி.மு.க - 29, தமிழ் மாநில காங்கிரசு - 26, மார்க்சிய கம்யூனிஸ்ட் - 25, இந்திய கம்யூனிஸ்ட் - 25, விடுதலைச் சிறுத்தை - 25 தொகுதிகளில் களம் புகுந்தன.

பா.ஜ.க கூட்டில் பா.ஜ.க - 141, இந்திய ஜனநாயகக் கட்சி - 45, இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம் - 24, கொங்கு ஜனநாயக கட்சி - 4 இடங்களில் களமிறங்கின.

பாட்டாளி மக்கள், நாம் தமிழர் அனைத்துத் தொகுதிகளிலும், சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா - 30, சமாஜ்வாடி கட்சி - 50, தொகுதிகளிலும், தமிழக வாழ்வுரிமை கட்சி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி போன்றவை தனியாகவும் தேர்தலைச் சந்தித்தன.

பரபரப்பாக நடந்த தேர்தலில் 134 தொகுதியில் வெற்றி பெற்ற ஜெயலலிதா அம்மையார், தொடர்ந்து இரண்டாவது முறையாக வென்று முதல்வர் நாற்காலியில் அமர்ந்தார். 89 தொகுதிகளில் வென்ற தி.மு.க. ஸ்டாலினை எதிர்கட்சித் தலைவராக்கியது. காங்கிரசு 8 தொகுதிகளிலும், முஸ்லிம் லீக் ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றன. மக்கள் நலக் கூட்டணி, பா.ம.க, பா.ஜ.க, நாம் தமிழர் கட்சிகள் ஒரு இடத்தில் கூட வெற்றிபெறவில்லை.

நாற்பது தொகுதிகளில் நேருக்கு நேர் களம் கண்ட அதிமுக - காங்கிரசு போட்டியில், பெரும்பாலான தொகுதிகளில் அ.இ.அ.தி.முக வென்றதே தேர்தல் முடிவில் பெரும் திருப்பமாக அமைந்ததாக அரசியல் நோக்கர்கள் சுட்டினர்.

234 தொகுதிகளில் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி, இருபத்து மூன்று லட்சம் வாக்குகள் பெற்று (5.36 சதவீதம்) தமிழத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக இடம் பெற்றது. நாம் தமிழர் கட்சிக்கு 1.07 சதவிகித வாக்குகளும், யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை எனும் நோட்டாவுக்கு 5,61,244 பதிவுகள் அதாவது 1.31 சதவீத வாக்குகளும் போடப்பட்டன.

1991 லிருந்து ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மாறி மாறி வந்த முதல்வர் பதவியை மாற்றி, எம்.ஜி.ஆருக்குப்பின் தொடர்ந்து இரண்டாம் முறையாக பதவிக்கு

வந்தவரான புரச்சித்தலைவி செல்வி ஜெ.ஜெயலலிதா, 23.05.2016 அன்று ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்.

சொத்துக்குவிப்பு வழக்கில் தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேரையும் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி சி.ஆர். குமாரசாமி விடுவித்ததன் அடிப்படையிலேயே ஜெயலலிதா அம்மையார் தேர்தலில் நின்று முதல்வரானார்.

செப்டம்பர் இருபத்தியிரண்டில் உடல்நலக் குறைவால் அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முதல்வர், தீவிரமான சிகிச்சைகளுக்குப் பின்னும் உடல்நலம் தேறாமல், டிசம்பர் ஐந்தாம் தேதி மறைந்தது தமிழக மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. உரிய மரியாதைகளோடு எம்.ஜி.ஆர் சமாதியருகே நல்லடக்கம் செய்யப்பட்ட ஜெயலலிதா அம்மா, முப்பதாண்டுகள் தமிழக அரசியலில் மாபெரும் ஆளுமையாகத் திழ்ந்தார்.

நன்றாகப் பேசியும், எழுதியும் செயல்பட்டு வந்த கலைஞர் அவர்களும் மூப்பின் காரணமாக உடல்நிலை முடியாமல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைகள் எடுத்து வருகிறார். இருப்பினும், தொண்டையில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சையால் பேச முடியாமலும், முன்போல் அரசியல் செய்ய இயலாமலும் இருப்பது, தி.மு.க தொண்டர்களை மட்டுமல்லாது, தமிழக அரசியலையும் வெகுவாகப் பாதித்திருப்பதாக அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

சுமார் ஐம்பதாண்டு காலம் தமிழக, இந்திய அரசியலில் முக்கியத்துவம் நிறைந்தவராக அறியப்பட்ட அய்யாவும், முப்பதாண்டு காலம் தமிழக அரசியலில் மையமாகத் திகழ்ந்த அம்மாவும், அரசியலில் இடம்பெறாத நிலையில், தமிழக அரசியலில் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்வதற்குரிய காலம் கனிந்துள்ளது.

(காலம் தொடரும்)

நன்மையும் செல்வமும் நாளும் வளருமே...

விக்ரமயூர்ஜிதசாஸனம்

அனைத்து உயிர்களுக்கும்

அனைத்து உலகங்களுக்கும்

அனைத்து உள்ளங்களுக்கும்

அனைத்து உறவுகளுக்கும்

அனைத்து உணர்வுகளுக்கும்

அனைத்து உரிமைகளுக்கும்

அனைத்து உண்மைகளுக்கும்

அனைத்து உயர்வுகளுக்கும்

அனைத்து உவப்புகளுக்கும்

அனைத்து உழைப்புகளுக்கும்

கிருஷ்ணார்ப்பணம்!